# பாஸ்டர் ரசல் என்ன சொன்னார்?



## கேள்வி பதில் புத்தகம்

# WHAT PASTOR RUSSELL SAID - QUESTIONS & ANSWERS

# பாஸ்டர் ரசல் அவர்கள் கூறியவை - கேள்விகள் & பதில்கள்

# பொருளடக்கம் [INDEX]

## WHAT PASTOR RUSSELL SAID - QUESTIONS & ANSWERS

## பாஸ்டர் ரசல் அவர்கள் கூறியவை -


| கேள்வி எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 5:1 | ஆரோன் - ஆசீர்வதிக்கும் போது நிஜம். | |
| 5:1 | ஆரோனின் ஆசாரியத்துவம் - நிஜமாகப் பிரயோகப்படுத்தப்பட வேண்டும் | |
| 5:1 | விபத்துகள் - ஆயிர வருஷ யுகத்தில். | |
| 5:1 | ஆதாம் - ஜீவ விருட்சம், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம். | |
| 5:1 | ஆதாம் - இரண்டாம் சோதனை ஏன் கொடுக்கப்படுகிறது? | |
| 7:1 | சுவீகாரம் - சுவிகாரத்தின் ஆவி யாருக்கு பிரயோகப் படுத்தப்படுகிறது? | |
| 7:2 | விளம்பரம் செய்தல் - எந்த பெயரைப் பயன்படுத்துவது? | |
| 8:1 | விளம்பரம் செய்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் மனப்பாங்கு. | |
| 8:2 | விளம்பரம் செய்தல் - முறையானதும் முறையற்றதும். | |
| 9:1 | ஆசைகள் - மாம்சத்தின் ஆசைகளை சிலுவையிலறைதல். | |
| 10:1 | உபத்திரவங்கள் - கிறிஸ்துவினுடையவைகள் யாருக்கு பிரயோகிக்கப் படுகிறது? | |
| 11:1 | முற்பிதாக்கள் - இரண்டாம் மரணம். | |
| 11.2 | முற்பிதாக்கள் - ஆவிக்குரிய ஜீவனை எப்படி பெறுவார்கள்? | |
| 11:3 | முற்பிதாக்கள் - அவர்களுடைய சோதனை. | |
| 12:1 | முற்பிதாக்கள் - ஜீவனுக்கான சோதனை? | |
| 13:1 | முற்பிதாக்கள் - ஆயிர வருஷ யுகத்தில் தேவனுடன் உறவு. | |
| 14:1 | முற்பிதாக்கள் - ஆவிக்குரிய சுபாவம். | |
| 14:2 | முற்பிதாக்கள் - ஆவிக்குரிய தளம் Vs இரண்டாம் மரணம். | |
| 14:3 | முற்பிதாக்கள் - உடன்படிக்கை உறவுமுறை. | |
| 14:4 | முற்பிதாக்கள் - அவர்களுடைய உயிர்த்தெழுதல். | |
| 15:1 | முற்பிதாக்கள் - பிரகாரத்தில் அடையாளப்படுத்தப்படவில்லை. | |
| 15:2 | முற்பிதாக்கள் - பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள். | |
| 15:3 | முற்பிதாக்கள் - உயிர்த்தெழுதல் பற்றி. | |
| 16:1 | முற்பிதாக்கள் - உயிர்த்தெழுதல் பற்றி. | |
| 16:2 | தூதர்கள் - தூதர்களின் கீழ் முதலாம் யுகம். | |
| 16:3 | தூதர்கள் - சோதனையில் இருத்தல், மாம்சீக உருவத்தோற்றம் எடுத்தலுக்கான சாட்சியம். | |
| 19:1 | தூதர்கள் - குமாரர்களாக தூதர்கள். | |
| 19:2 | தூதர்கள் - விழுந்துபோனவர்களை சீரமைத்தல். | |
| 20:1 | தூதர்கள் - பேதுருவை தூதனாக நினைத்தல். | |
| 20:2 | தூதர்கள் - சோதனையில் விழுந்து போன தூதர்கள். | |
| 21:1 | தூதர்கள் - மாம்சீக உருவத்தோற்றங்கள் ஆண்களாக மட்டுமே இருக்குமா? | |
| 22:1 | தூதர்கள் - விழுந்து போனவர்கள் எப்பொழுது அழிக்கப்படுவார்கள்? | |
| 22:2 | அபிஷேகம் பண்ணுதல் - முத்திரையிடுதல். | |

| | | |
|---|---|---|
| 23:1 | பிரதான தூதன் - மற்றவர்கள் இருக்கிறார்களா? | |
| 23:2 | சேனை - தேவனுடைய சேனையாக யார் உள்ளடக்கப்படுகிறார்கள்? | |
| 24:1 | பிரயோகப்படுத்துதல் - ஆதாம்? மற்றும் அவனுடைய சந்ததி. | |
| 25:1 | பிரயோகப்படுத்துதல் - மீண்டும் மீண்டும். | |
| 25:2 | பாவநிவாரணம் - சிறையிருப்பில் எப்படி செயற்படுத்தப்பட்டது? | |
| 25:3 | பாவநிவாரணம் - லேவி 9ம் அதிகாரத்தின் பலிகள் எவ்வளவு தடவைகள் இருந்தன? | |
| 26:1 | பாவநிவாரணம் - அடுத்த வருஷத்திற்காக பலிகள். | |
| 26:2 | பாவநிவாரணம் - சிறையிருப்பில் பலிகள். | |
| 26:3 | பாவநிவாரணம் - முதற்-பேறானவர்களின் இரட்சிப்பு. | |
| 26:4 | பாவநிவாரணம் - இதனுடைய மூடப்படுதல். | |
| 27:1 | பாவநிவாரணம் - புண்ணியம். | |
| 27:2 | பாவநிவாரணம் - பிரதான ஆசாரியன் - - தூபகலசம் - - மகா பரிசுத்த ஸ்தலம். | |
| 29:1 | பாவநிவாரணம் - எந்த வருஷத்திற்கு சுத்திகரிக்கப்படும். | |
| 29:2 | பாவநிவாரணம் - எதன் அடிப்படையில். | |
| 29:3 | பாபிலோன் - ஐபிராத்து நதி. | |
| 30:1 | பின்வாங்குகிறவர்கள் - எந்த விதத்தில் வரவேற்பது? | |
| 31:1 | ஞானஸ்நானம் - பரிசுத்த ஆவியின் நாமத்தில். | |
| 31:2 | ஞானஸ்நானம் - ஆராதனையில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள். | |
| 31:3 | ஞானஸ்நானம் - பாவங்களின் மன்னிப்பு. | |
| 32:1 | ஞானஸ்நானம் - ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்று யூதர்களுக்கு கட்டளையிடப்பட்டதா? | |
| 33:1 | ஞானஸ்நானம் - யாருடைய நாமத்தில்? | |
| 33:2 | ஞானஸ்நானம் - யோவானுடையதை எல்லா அப்போஸ்தலர்களும் பெற்றார்களா? | |
| 34:1 | ஞானஸ்நானம்- யோவானுடைய ஞானஸ்நானத்தினால் மன்னிக்கப்பட்ட பாவங்களின் வகை. | |
| 34:2 | ஞானஸ்நானம் - தண்ணீர் ஏன் நிழலாக இருக்கிறது? | |
| 35:1 | ஞானஸ்நானம் - இயேசுவின் ஞானஸ்நானத்தில் தண்ணீரா, அல்லது ஆவியா, எது முதலாவது இருந்தது? | |
| 35:2 | ஞானஸ்நானம் - இஸ்ரயேலர்கள் - யோவானுடைய ஞானஸ்நானம். | |
| 35:3 | ஞானஸ்நானம் - ஞானஸ்நானம் எடுக்க முன்வந்திருப்பவர்களிடம் கேட்கப்படும் கேள்விகள். | |
| 36:1 | ஞானஸ்நானம் - தண்ணீர் முழுக்கு - நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள். | |
| 36:2 | ஞானஸ்நானம் - நம்முடைய கர்த்தருடையது. | |
| 36:3 | ஞானஸ்நானம் - அர்ப்பணிப்பு பற்றி உறுதி இல்லை. | |
| 37:1 | மிருகம் - இதனுடைய இலக்கம். | |
| 37:2 | ஜெநிப்பிக்கப்படுதல் - தெய்வீக சுபாவத்திற்கு. | |
| 37:3 | ஜெநிப்பிக்கப்படுதல் மற்றும் உயிர்ப்பிக்கப்படுதல் - வெளிப்பாடுகள் பற்றி. | |
| 38:1 | ஜெநிப்பிக்கப்படுதல் - ஆவிக்குரிய, உண்மையான அல்லது எண்ணப்படுகிறதான. | |
| 38:2 | ஜெநிப்பிக்கப்படுதல் - தெய்வீக சுபாவத்திற்கு. | |
| 39:1 | ஜெநிப்பிக்கப்படுதல் - பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு. | |

| | | |
|---|---|---|
| 39:2 | ஜெநிப்பிக்கப்படுதல் - இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. | |
| 40:1 | ஜெநிப்பிக்கப்படுதல் - ஜெநிப்பிக்கப்பட்டு, உயிர்ப்பிக்கபடுதலை தொடராமல் இருக்கும் நிலை. | |
| 40:2 | ஜெநிப்பிக்கப்படுதல் - யார் மூலமாக? | |
| 40:3 | ஆதி - லோகோஸ். | |
| 41:1 | வேதாகமம் - ஒரு பெண், அல்லது கிறிஸ்துவின் மணவாட்டி - யாருக்கு முகவரியிடப்பட்டது? | |
| 41:2 | வேதாகமம் - பூமியின் சிருஷ்டிப்பு. | |
| 41:3 | வேதாகமம் - இதனுடைய ஏவப்படுதல். | |
| 41:4 | வேதாகமம் - தவறாநிலை. | |
| 42:1 | வேதாகமம் - தவறு இல்லாமல் இருப்பது. | |
| 42:2 | வேதாகமம் - போதிக்கிறவரின் மிகப்பெரிய கஷ்டங்கள். | |
| 42:3 | வேதாகம படிப்பு - வழிமுறையைப் பற்றி. | |
| 43:1 | வேதாகமம் - ஆயிர வருஷ யுகத்தில். | |
| 43:3 | வேதாகமம் - பரலோகத்தில். | |
| 43:1 | வேதாகமம் - ஆயிர வருஷ யுகத்தில் யாரால் பயன்படுத்தப்படும்? | |
| 44:1 | பாவ சரீரம் – “பழைய மனுஷன்” | |
| 45:1 | ஊதினார் – கர்த்தர் அவர்கள் மேல் ஊதினார். | |
| 45:2 | மணவாட்டி – மணவாட்டி முழுமை அடைந்துள்ளதா? | |
| 45:3 | வீண் அலுவற்காரர் – நீதிமொழி 16:28. | |
| 46:1 | காயீன் மற்றும் ஆபேல் – எந்த தேசத்தில் இருந்தார்கள்? | |
| 46:2 | பாளயம் - - எத்தனை பாளயங்கள். | |
| 47:1 | கானான் – இது எதற்கு நிழலாக இருக்கிறது? | |
| 48:1 | சிறையிருப்பு – சிறைப்பட்டவர்களை சிறையாக்கி. | |
| 48:2 | குணலட்சணம் – ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலுக்கு முன் வளர்ச்சி. | |
| 48:3 | குணலட்சணம் – வெளிப்புற பளபளப்பு Vs உள்ளான கிருபை. | |
| 50:1 | குணலட்சணம் – கிரீடம் எப்போது நம்முடையதாகும்? | |
| 51:1 | குணலட்சணம் – திரைக்கு இந்தப் பக்கத்தில் பரிபூரணம். | |
| 51:2 | குணலட்சணம் – கனி கொடுத்தல் Vs இயேசுவை பின்பற்றுதல். | |
| 52:1 | குணலட்சணம்–வளர்ச்சிக்கான காப்புரிமை முறைமை இருக்கவில்லை. | |
| 53:1 | விளக்கப்படம் – தளம் “L”ன் மேல் திரள் கூட்டம். | |
| 53:2 | விளக்கப்படம் – விளக்கப்படத்தில் L மற்றும் K தளங்களின் முக்கியத்துவம். | |
| 53:3 | பிள்ளைப்பேறு – இரட்சிக்கப்படுதல். | |
| 54:1 | பிள்ளைகள் – உபத்திரவ காலத்தின்போது பிள்ளைகள் மீது மேற்பார்வை. | |
| 54:2 | பிள்ளைகள் – நடக்க வேண்டிய வழியில் நடத்தப்படுதல். | |
| 55:1 | பிள்ளைகள் – பிள்ளைகளுக்கான ஆயிர வருஷ காலத்தின் ஆசீர்வாதங்கள். | |
| 55:2 | பிள்ளைகள் – காலம் குறைவாயிருக்கையில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கல்வியின் அளவு. | |
| 56:1 | பிள்ளைகள் – ஆயிர வருஷ யுகத்தில். | |
| 57:1 | பிள்ளைகள் – கல்வி. | |
| 58:1 | பிள்ளைகள் – பிள்ளைகளுக்கான உயிர்த்தெழுதலின் தளம். | |
| 59:1 | பிள்ளைகள் – அர்ப்பணம்பண்ணியுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் ஆவிக்குரிய சுபாவம் அடைதல் என்பது தொடர்பாக. | |
| 59:2 | பிள்ளைகள் – முற்பிதாக்கள் மற்றும் உருவெடுத்துவரும் பிசாசுகள். | |
| 59:3 | பிள்ளைகள் – முதலாம் ஆதாமின் பிள்ளைகளா? அல்லது, இரண்டாம் ஆதாமின் பிள்ளைகளா? | |
| 61:1 | கிறிஸ்து – உண்மையாக ஒரு புது சிருஷ்டி. | |

| | | |
|---|---|---|
| 61:2 | கிறிஸ்து – கிறிஸ்துவின் சரீரத்தின் பகுதியாயிருக்கும் பேர்ச்சபைகளின் அங்கங்கள். | |
| 65:1 | கிறிஸ்து – சகலத்திலும் சகலமுமாக. | |
| 66:1 | கிறிஸ்து – சரீரத்தின். | |
| 69:1 | கிறிஸ்து – அவர் தம்முடைய பணியை நிறைவு செய்திருக்கும்போது முழு அதிகாரம். | |
| 70:1 | கிறிஸ்தவன் – சிலாக்கியங்களுக்கு ஏற்றவகையில் ஜீவிக்கத் தவறிவிடுதல். | |
| 70:2 | கிறிஸ்தவ விஞ்ஞானம் – பாஸ்டர் ரசல், மேரி பேகர் எட்டியின் மாணவரா? | |
| 70:3 | காலக்கணக்கு - கிபி1914ல் உபத்திரவம் ஆரம்பம். | |
| 71:1 | காலக்கணக்கு - கிபி1914ம் வருஷம் உபத்திரவத்தின் ஆரம்பமா? அல்லது முடிவா? ஏன்? | |
| 71:2 | காலக்கணக்கு - கிபி 1874ல் நமது கர்த்தரின் சொந்த பிரசன்னம். | |
| 72:1 | காலக்கணக்கு - கதவு அடைக்கப்படுதல். | |
| 74:1 | காலக்கணக்கு - உழுகிறவனும் அறுக்கிறவனும். | |
| 74:2 | காலக்கணக்கு - கதவு அடைக்கப்படுதல். | |
| 75:1 | காலக்கணக்கு - பதினோராம் மணிவேளை. | |
| 75:2 | காலக்கணக்கு - பதினோராம் மணிவேளை. | |
| 75:3 | காலக்கணக்கு - கிபி. 1874ம் வருஷத்திலிருந்து சபைக்கு பரிந்து பேசுகிறவர் இருக்கிறாரா? | |
| 75:4 | காலக்கணக்கு - சிதேக்கியாவின் வீழ்ச்சி - புறஜாதிகளின் காலங்கள். | |
| 75:5 | காலக்கணக்கு - புறஜாதிகளின் காலங்கள் முடிவு.. | |
| 76:1 | காலக்கணக்கு - முக்கியமான தேதிகள். | |
| 77:1 | காலக்கணக்கு - பிரமீடு. 191 | |
| 77:2 | காலக்கணக்கு - 1914க்கு முன் உள்ள தேதிகள். | |
| 78:1 | காலக்கணக்கு - புது திராட்சப் பழரசத்தை எப்பொழுது பானம் பண்ணுவார்? | |
| 78:2 | காலக்கணக்கு - அறுவடையின் முடிவு எப்போது? | |
| 79:1 | காலக்கணக்கு - பரிசுத்தவான்கள் முத்திரை போடப்படுதல். 1914 | |
| 79:2 | காலக்கணக்கு - அக்டோபர், 1914. பெரிதான அழைப்பு. | |
| 89:1 | காலக்கணக்கு - அக்டோபர், 1914. பெரிதான அழைப்பு. | |
| 99:1 | சபை - மத்தியஸ்தர் தேவை. | |
| 100:1 | சபை - வற்புறுத்தும் பொருத்தனை - திக்குமுக்காடச் செய்யும் மனசாட்சி. | |
| 101:1 | சபை - மனசாட்சியைத் தூண்டுவது - கீழ்ப்படிவது. | |
| 102:1 | சபை - மூப்பர்களுக்கு கீழ்ப்படிதல். | |
| 102:2 | சபை - ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய். | |
| 103:1 | சபை - தேவன் அங்கங்களை நியமிக்கிறார். | |
| 103:2 | சபை - வகுப்பில் தொந்தரவு. | |
| 104:1 | சபை - எதிர்ப்பு. | |
| 105:1 | சபை - கிறிஸ்துவின் சரீர அங்கங்கள். | |
| 106:1 | சபை - பிதாவிடம் நிலைநிறுத்தும் போது. | |
| 106:2 | சபை - 1910ம் வருஷத்திற்கு முன்பு நீதிமான்களாக்கப்பட்டவர்கள். | |
| 107:1 | சபை - எந்த உடன்படிக்கையின் பிள்ளைகள்? | |
| 108:1 | சபை - பலியிடப்படுவதற்கு முன்பு இரத்தம் பெறுதல். | |
| 108:2 | சபை - மத்தியஸ்தர். | |
| 109:1 | சபை - ஏற்றுக்கொள்ளப்படுதல். 1914 | |
| 110:1 | சபை - முதற்பேறானவர்கள் Vs அவருடைய சரீர அங்கங்கள். | |
| 110:2 | சபை - இப்போது ராஜரீக ஆசாரியக்கூட்டமாக இருக்கிறோமா? | |

| | | |
|---|---|---|
| 111:1 | சபை - கிறிஸ்துவுடன் சபையின் பங்கு. | |
| 112:1 | சபை - இயேசுவுக்கு பெயரளவிலான, ஏற்றுக்கொள்ளத்தகாத ஊழியக்காரர்கள். | |
| 113:1 | சபை - மத்தியஸ்தர் Vs பரிந்து பேசுகிறவர். | |
| 114:1 | சபை - உயிர்த்தெழுப்பப்பட்ட சுபாவம். | |
| 115:1 | சபை - எந்த அடிப்படையில்? | |
| 115:2 | சபை - மறுரூபமாகுதல் - மகா உபத்திரவ காலம். | |
| 116:1 | சபை - கிறிஸ்துவின் சரீரம். | |
| 116:2 | சபை - அதே வேதாகமப் பார்வையை இன்னும் தக்கவைத்திருக்கிறீர்களா? - சபையின் மறுரூபம். | |
| 117:1 | சபை - பிதாவிடம் ஒப்படைக்கப்படும் போது. | |
| 117:2 | சபை - இப்பொழுது ஆட்சிபுரிவது வேதவாக்கியங்களின்படி அல்ல. | |
| 119:1 | சபை - சரீரத்தில் அங்கங்களாக வைத்தல். | |
| 119:2 | சபை - கனத்திற்கான சரியான அடிப்படை. | |
| 121:1 | சபை - அபிஷேகம் பண்ணப்படுவது எப்போது? | |
| 122:1 | சபை - பாத அங்கங்கள் ஒவ்வொருவரும் மறுரூபமாகுதல். | |
| 122:2 | சபை - பிரதான ஆசாரியனால் செலுத்தப்படும் பாவ நிவாரண பலி. | |
| 123:1 | சபை - நம்மில் எல்லாமுமாக கிறிஸ்து. | |
| 125:1 | சபை - சில சபையார் தனிப்பட்டவிதமாக செயல்படுதல். | |
| 125:2 | சபை - இராஜாக்களைக் கட்டுவதில் சபையின் பங்கு. | |
| 125:3 | சபை - மகிமையடைந்தோர் ஜீவன்-அளிக்கும் வல்லமை உடையவர்களாக இருப்பார்களா? | |
| 126:1 | சபை எதை கிரயத்துக்குக் கொள்கிறது? | |
| 127:1 | சபை - புண்ணியம் குறித்து. | |
| 127:2 | விருத்தசேதனம் - சபை. | |
| 128:1 | நிதி திரட்டுகள். (COLLECTIONS) - அதிகம் செலவழித்தல், கேட்பது கொஞ்சம். | |
| 128:2 | நிதி திரட்டுகள். - தன்னார்வ பங்களிப்பவர்களின் அர்த்தம். | |
| 129:1 | நிதி திரட்டுகள் - அ. வே. மா. ச. மற்றும் நிதி திரட்டுகள். | |
| 129:2 | தொகுதி விற்பனையாளர் (COLPORTEUR) பணி - துண்டு பிரதிகள் விநியோகித்தல். | |
| 129:3 | தொகுதி விநியோகிக்கும் பணி - தொகுதி விற்பனை செய்யும் போது, துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கலாமா? | |
| 129:4 | தொகுதி விநியோகிக்கும் வேலை - தன்னார்வ தொண்டு புரிதல், மற்றும் தொகுதி விற்பனை செய்தல். | |
| 129:5 | தொகுதி விநியோகிக்கும் வேலை - தொகுதி நூல் விற்பனையை தன்னார்வமாக செய்தல். | |
| 129:6 | தொகுதி விநியோகிக்கும் வேலை - ஆதரவை எதிர்பார்த்து வாழ்கிற குடும்பத்தை எப்படி நிர்வகிப்பது? | |
| 130:1 | தொகுதி விநியோகிக்கும் வேலை - விவாகம் புரிந்த துணைவரிடம் விட்டுக் கொடுத்தல். | |
| 130:2 | தொகுதி விநியோகிக்கும் வேலை மற்றும் தன்னார்வ தொண்டு - அறிமுகப்படுத்தும் வழிமுறை. | |
| 130:3 | தொகுதி விநியோகிக்கும் வேலை - விற்பனை உத்தரவுகளை மறுப்பவரிடம் எப்படி நடந்து கொள்வது? | |
| 131:1 | தொகுதி விநியோகிக்கும் வேலை - விற்பனை உத்தரவு மறுக்கப்படும்போது நேரம் செலவழித்தற்கு பணம் கேட்டல். | |
| 131:2 | தொகுதி விநியோகிக்கும் வேலை - விலைப்பட்டியலை விட அதிக விலைக்கு விற்பனை செய்தல். | |

| | | |
|---|---|---|
| 131:3 | தொகுதி விநியோகிக்கும் வேலை - வேதாகம பாடங்கள் மில்லியினியல் டாண் (MILLENNIAL DAWN) வெளியீடுகளா? | |
| 132:1 | தொகுதி விநியோகிக்கும் வேலை - பதிலளிப்பது குறித்து மில்லியனில் டாண். | |
| 132:2 | தொகுதி விநியோகிக்கும் வேலை - விற்பனை உத்தரவின் அளவு. | |
| 132:3 | தொகுதி விநியோகிக்கும் வேலை - நாம் ஊழியக்காரர்களா? | |
| 132:4 | தொகுதி விநியோகிக்கும் வேலை - தொகுதி விற்பனையாளர் பணி - துண்டுப்பிரதிகள் விநியோகித்தல். | |
| 133:1 | தொகுதி விநியோகிக்கும் பணி - எல்லையைத் தாண்டிப்போகுதல் | |
| 133:2 | தொகுதி விநியோகிக்கும் வேலை - சுறுசுறுப்பான பணிக்கு நேரம். | |
| 133:3 | தொகுதி விநியோகிக்கும் வேலை - வேதாகம பாடங்கள் சபை பிரிவுகளைச் சார்ந்திருப்பதில்லை. | |
| 133:4 | தொகுதி விநியோகிக்கும் வேலை - ஒருவருடைய நேரத்தின் மேல் அடமானம் | |
| 133:5 | கற்பனைகள் - இயேசுவை சிக்க வைப்பதற்கு முயற்சி. | |
| 134:1 | கற்பனைகள் - அவைகள் சிலுவையில் அறையப்பட்டதா? | |
| 135:1 | பொது அறிவு - விருப்புரிமை மற்றும் ஞானத்தை பயன்படுத்துதல். | |
| 135:2 | பொது அறிவு - வேலையைப் பற்றிக்கொள்ளுதல். | |
| 136:1 | ஆக்கினைத்தீர்ப்பு - இதனுடைய தடயங்கள் மற்றும் உயிர்த்தெழுதலில் நீக்கப்படுதல் | |
| 136:2 | ஆக்கினைத்தீர்ப்பு - உலகத்தாரின் நீதிமானாக்கப்படுதல் | |
| 136:3 | ஆக்கினைத்தீர்ப்பு - விசுவாசத்தின் மூலமாக விடுதலையாக்கப்படுதல். | |
| 137:1 | ஆக்கினைத்தீர்ப்பு - யூதர்கள் இரட்டிப்பாக ஆக்கினைத்தீர்ப்பு அடைந்தார் களா? | |
| 138:1 | ஜெயங்கொள்ளுகிறவர்கள் - ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலாக. | |
| 142:1 | அர்ப்பணிப்பு - தனக்காக செய்துகொள்ளும் ஏற்பாடு. | |
| 143:1 | அர்ப்பணிப்பு - கடனாக வாங்கிய பணம். | |
| 144:1 | அர்ப்பணிப்பு - சொத்து மற்றும் குழந்தைகள். | |
| 144:2 | அர்ப்பணிப்பு - காலத்தை சரியாக உபயோகித்தல். | |
| 145:1 | அர்ப்பணிப்பு - யேகோவா அனைவரையும் ஏற்றுக்கொள்வாரா? | |
| 147:1 | அர்ப்பணிப்பு - எப்பொழுது ஒழுங்குமுறை. | |
| 147:2 | அர்ப்பணிப்பு - சொத்தை அடமானம் வைத்த பிறகு. | |
| 148:1 | அர்ப்பணிப்பு - பின்னர் அயலார்களுடன் ஐக்கியம் கொள்ளுதல். | |
| 148:2 | அர்ப்பணிப்பு - கதவு சாத்தப்படுதல். | |
| 149:1 | அர்ப்பணிப்பு - ஞானஸ்நானம் எடுக்கும் போது புரிவதில்லை. | |
| 149:2 | அர்ப்பணிப்பு - எல்லாவற்றையும் விற்றுவிடுதல். | |
| 150:1 | அர்ப்பணிப்பு - கி.பி. 1881ம் வருஷத்துக்கு முன்பு. | |
| 151:1 | அர்ப்பணிப்பு - ஜெநிப்பிக்கப்படுதலின் தொடர்ச்சியாக அர்ப்பணிப்பு உள்ளதா? | |
| 152:1 | அர்ப்பணிப்பு - பரம அழைப்பு முடிந்த பிறகு. | |
| 152:2 | அர்ப்பணிப்பு - ஆவியின் சரீரத்திற்கு பின்னர் வாய்ப்பு உள்ளதா? | |
| 152:3 | அர்ப்பணிப்பு - ஜெநிப்பிக்கப்படாதவர்களுக்கு வெகுமதி. | |
| 152:4 | அர்ப்பணிப்பு - மன நிலை மற்றும் கிரீடத்தை இழத்தல். | |
| 154:1 | அர்ப்பணிப்பு - இன்னும் ஜெநிப்பிக்கப்படாமல் இருத்தல். | |
| 154:2 | அர்ப்பணிப்பு - மணவாட்டி வகுப்பாராக இருப்பதற்கான உத்தரவாதம். | |
| 155:1 | அர்ப்பணிப்பு - சத்தியத்தை கேட்டிராதவர் யாரும் உண்டா? | |
| 155:2 | அர்ப்பணிப்பு - ரோமர் 12:1. | |

| | | |
|---|---|---|
| 155:3 | அர்ப்பணிப்பு – ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆனால் ஓட்டத்தில் பங்கு பெறவில்லை. | |
| 155:4 | அர்ப்பணிப்பு - கிபி 1881. | |
| 156:1 | அர்ப்பணிப்பு - இரண்டு வகுப்பாருக்கும் பொருந்தும். | |
| 156:2 | அர்ப்பணிப்பு - எல்லோருக்கும் கிரீடங்கள் உள்ளதா? | |
| 158:1 | அர்ப்பணிப்பு - சரியான விதத்தில் நேரத்தை செலவிடுவது. | |
| 161:1 | மாநாடுகள் - ஐந்தாம் ஞாயிறு மாநாடுகளுக்கு ஒப்புதல் அளிக்கிறீர்களா? | |
| 162:1 | திருத்தங்கள் - எப்படிச் செய்யப்பட வேண்டும்? | |
| 163:1 | கடித தொடர்பு - கடித குழுக்கள். | |
| 164:1 | உடன்படிக்கைகள் - பிள்ளை பெறாத மலடி, அவளுடைய நாயகர். | |
| 165:1 | உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கை யூதர்களை மட்டுமே ஆசீர்வதிக்குமா? | |
| 165:2 | உடன்படிக்கைகள் - எவற்றின் கீழ் உலகம் ஆசீர்வதிக்கப்படும்? | |
| 166:1 | உடன்படிக்கைகள் - மரணத்துடன். | |
| 166:2 | உடன்படிக்கைகள்- புதிய உடன்படிக்கை Vs நியாயப்பிரமாண உடன்படிக்கை | |
| 167:1 | உடன்படிக்கைகள் - மத்தியஸ்தம் பண்ணும் புதிய உடன்படிக்கைகள். | |
| 168:1 | உடன்படிக்கைகள் - நித்தியமானது. | |
| 169:1 | உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணம் Vs புதிய உடன்படிக்கை. | |
| 169:2 | உடன்படிக்கைகள் - சாராள் உடன்படிக்கை முடிவு பெறுதல். | |
| 170:1 | உடன்படிக்கைகள் - சபை - சாராள் மற்றும் ரெபேக்காள். | |
| 170:2 | உடன்படிக்கைகள் - சாராள் Vs ஆபிரகாம் உடன்படிக்கைகள். | |
| 170:3 | உடன்படிக்கைகள் - சந்ததிகளை வெளிக்கொணருதல். | |
| 171:1 | உடன்படிக்கைகள் - பாவங்கள் நீக்கப்படுதல் | |
| 171:2 | உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையின் கீழ் பிரமாணங்கள். | |
| 172:1 | உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையும் ஒலிவ மரமும். | |
| 173:1 | உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணம் - யூதர்கள். | |
| 173:2 | உடன்படிக்கைகள் - யூதர்களுக்கு நியாயப்பிரமாணம் அளிப்பது. | |
| 173:3 | உடன்படிக்கைகள் - பழைய பிரமாணத்தின் கீழ் உள்ள யூதர்களின் ஜெபங்கள் கேட்கப்படுமா? | |
| 174:1 | உடன்படிக்கைகள் - மோசேயும் நியாயப்பிரமாண உடன்படிக்கையும். | |
| 175:1 | உடன்படிக்கைகள் - கலந்தாய்விற்குப் பின் கருத்துப்பிரிவினை. | |
| 176:1 | உடன்படிக்கைகள் - கையெழுத்தைக் கலைத்துப் போடுதல். | |
| 176:2 | உடன்படிக்கைகள் - இயேசுவின் வளர்ச்சி. | |
| 177:1 | உடன்படிக்கைகள் - பல்வேறு கேள்விகள். | |
| 181:1 | உடன்படிக்கைகள் - ஆபிரகாமின், சாராளின், பலியின் உடன்படிக்கைகள். | |
| 184:1 | உடன்படிக்கைகள் - ஆபிரகாமின் உடன்படிக்கை - மத்தியஸ்த உடன்படிக்கை. | |
| 186:1 | உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கை எப்பொழுது நடைமுறைக்கு வரும்? | |
| 187:1 | உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கை நிபந்தனைக்குட்பட்டதா அல்லது நிபந்தனையற்றதா? | |
| 187:2 | உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்த காலம். | |
| 189:1 | உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்த காலம். | |
| 190:1 | உடன்படிக்கைகள் - இதை முத்திரிக்கிறவர்களின் எண்ணிக்கை. | |
| 191:1 | உடன்படிக்கைகள் - தேவன் ஆதாமுடன் செயல்பட முடியுமா? | |
| 191:2 | உடன்படிக்கைகள் - ஆபிரகாமின் உடன்படிக்கையை கிறிஸ்துவின் முத்திரித்தல் | |

| | | |
|---|---|---|
| 192:1 | உடன்படிக்கைகள் - தாவீதின் நிச்சயமான கிருபைகள். | |
| 192:2 | உடன்படிக்கைகள் - மோசே நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தாரா? | |
| 192:3 | உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாண உடன்படிக்கை கூடுதலாக சேர்க்கப்பட்டதா? | |
| 193:1 | உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணத்துடன் நாம் பிணைக்கப் பட்டிருக்கிறோமா? | |
| 194:1 | உடன்படிக்கைகள் - இயேசு, நியாயப்பிரமாண உடன்படிக்கை மற்றும் ஜீவ உரிமைகள். | |
| 194:2 | உடன்படிக்கைகள் - சபை எதின் கீழ் உருவாக்கம் பெறுகிறது? | |
| 195:1 | உடன்படிக்கைகள் - தானியேல் 9:27ம் வசனம் எதைக் குறிக்கிறது? | |
| 195:2 | உடன்படிக்கைகள் - சபை புதிய உடன்படிக்கையாக இருக்கிறதா? | |
| 195:3 | உடன்படிக்கைகள் - ஆபிரகாமின் உடன்படிக்கையின் குறியிலக்கு. | |
| 196:1 | உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணமும் இயேசுவின் மரணமும். | |
| 197:1 | சிருஷ்டிப்பு - மோசேயின் பதிவு. | |
| 197:2 | சிருஷ்டிப்பு - சூரியன் இல்லாமல் தாவர வளர்ச்சி. | |
| 197:3 | சிருஷ்டிப்பு - அழிக்கப்படுவான் என்று தெரிந்திருந்தும் மனுஷன் சிருஷ்டிக்கப்படுதல். | |
| 198:1 | சிருஷ்டிப்பு - Vs ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். | |
| 198:2 | சிலுவைகள் - காவற்கோபுரத்திலுள்ள 'மூன்று' என்பதின் அர்த்தம். | |
| 198:3 | கிரீடம் - கிரீடங்கள் இழக்கப்படுவது குறித்து. | |
| 199:1 | டாண்டே, மற்றும் தோர் (DANTE AND DORE) - அவர்கள் யார்? | |
| 199:2 | இருள் - புறம்பான இருளில் தள்ளப்படுதல். | |
| 199:3 | தாவீது - தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன். | |
| 200:1 | பெண் உதவியாளர்கள் - தேர்ந்தெடுத்தல். | |
| 200:2 | மரணமடைந்தவர் - மற்றவர்கள் ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. | |
| 201:1 | மரணம் - நூறு வருஷங்களான வயதில் இறக்கும் பாவிகள். | |
| 201:2 | மரணம் - பிள்ளைகளின் மாற்ற முடியாத முடிவு. | |
| 202:1 | மரணம் - பெரும் பயத்தை மேற்கொள்ளுதல்.. | |
| 202:1(2) | மரணம் - தூதர்களைப் போன்று இருப்பதால் சாத்தியமில்லை. | |
| 203:1 | மரணம் - ஆயிர வருஷ யுகத்தில் விலங்குகள். | |
| 204:1 | மரணம் - பிந்தைய நிலைமை. | |
| 204:2 | மரணம் - மரணத்தில் முகபாவம். | |
| 204:3 | மரணம் - ஆவிக்குரிய மரணம். | |
| 204:4 | மரணம் - ஆதாமின் வழியில் - உபத்திரவ காலத்திற்குப் பின்பு பிறப்புக்கள். | |
| 206:1 | மரணம் - உபத்திரவ காலத்திற்குப் பிறகு ஆதாமுக்குள்ளான மரணம். | |
| 206:2 | மரணம் - சரீரம் மண்ணுக்கும், ஆவி தேவனிடத்திற்கும். | |
| 208:1 | மரணம் - இது உலகளாவியதா? | |
| 208:2 | மரணம் - தீமையில் இறப்பவர்கள். | |
| 209:1 | மரணம் - ஆதாமிற்குள்ளான மரணம் எப்போது மறையும்?. | |
| 210:1 | மரணம் - ஏசாயா 26:14ல் செத்தவர்கள் யார்? | |
| 211:1 | மரணம் - அகராதி சொற்பொருள் விளக்கம். | |
| 212:1 | மரணம் - நம்முடைய ஜீவனை ஒப்படைத்து, நாம் அனுதினமும் சாகிறோம். | |
| 212:2 | மரணம் - ஆதாமிற்குள்ளானதா, அல்லது பலியினாலா? | |
| 212:3 | மரணம் - மரண பயம். | |
| 213:1 | மரணம் - இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு ஆதாமுக்குள்ளான மரணம். | |
| 214:1 | மரணம் - நமது கர்த்தரின் மரணம் பலியின் மரணமா? | |
| 215:1 | மரணம் - சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள். | |

| | | |
|---|---|---|
| 215:2 | மரணம் - புதிய உடன்படிக்கை. | |
| 216:1 | மரணம் - மனுக்குலம் முழுவதும் கல்லறைக்குள் கண்டிப்பாக செல்ல வேண்டுமா? | |
| 216:2 | மரணம் - எல்லோரும் மரணத்திற்குள் போவார்களா? | |
| 221:1 | மரணம் - பலியினாலா, அல்லது உண்மையாகவா? | |
| 221:2 | கடன்கள் - மற்றவர்களுக்கு கடன்பட்டிருத்தல். | |
| 221:3 | பத்திரங்கள் - ஆயிர வருஷ யுகத்தில் சொத்துக்களுக்கான பதிவுகள். | |
| 222:1 | பேய்கள் - நியாயந்தீர்ப்பதற்கான காலம். | |
| 222:2 | வைப்புத்தொகை - பழைய ஏற்பாட்டில் எங்கே காண்பிக்கப்பட்டுள்ளது? | |
| 222:3 | வைப்புத்தொகை - இது யாருடைய பெயரில் மற்றும் வரவில் வைக்கப்படும்? | |
| 223:1 | வைப்புத்தொகை - அர்த்தம். | |
| 223:2 | வைப்புத்தொகை - எப்பொழுது வைக்கப்பட்டுள்ளது? | |
| 223:3 | வைப்புத்தொகை - இதன் மதிப்பு. | |
| 224:1 | வைப்புத்தொகை - இயேசுவின் மூலமாக மதிப்பு. | |
| 224:2 | வைப்புத்தொகை - புதிய ஏற்பாட்டின் உபதேசம். | |
| 224:3 | அழிவு - இயல்பாக புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல. | |
| 225:1 | பிசாசு - இறுதி வசிப்பிடம். | |
| 225:2 | பிசாசு - வெளிப்படுத்தின ஆகமத்தின் அடையாளங்கள். | |
| 226:1 | டைவ்ஸ் DIVES) - அர்த்தம் என்ன? | |
| 226:2 | தெய்வீகத்தன்மை - பாஸ்டர் ரசல் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை மறுக்கிறாரா? | |
| 226:3 | பிரிவினைகள் - ஒழுங்கில்லாதவர்கள் மற்றும் குழம்பியிருப்பவர்கள். | |
| 227:1 | நாய்கள் - உங்களுடைய சுற்றுப்புறத்தில் நாய்கள். | |
| 227:2 | பூமியின் ஆளுகை - யாருடைய உரிமை? | |
| 229:1 | கதவு மூடப்பட்டது - அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது. | |
| 229:2 | கதவு - இன்னும் அநேகமாக மூடப்பட்டிருக்கவில்லை. | |
| 229:3 | கதவு - மூடப்படுதல். | |
| 231:1 | பூமி - எப்போதும் நிலையானதாயிருத்தல். | |
| 232:1 | பூமி - ஆதாம் விழுவதற்கு பூமி பூரணமாயிருந்ததா? | |
| 232:2 | ஏதேன் - தோட்டத்தின் இருப்பிடம். | |
| 232:3 | மூப்பர்கள் - சபையில் அதிகாரம். | |
| 233:1 | மூப்பர்கள் - சபையின் நலன்களுக்கடுத்தவைகளைக் குறித்துப் பேசுவதற்குக் கூட்டம் நடத்துதல். | |
| 234:1 | மூப்பர்கள் - (Presiding Elder) தலைமை மூப்பரின் வேலை. | |
| 234:2 | மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படாததால், ஒருவர் வேறு இடங்களுக்கும் தகுதியற்றவராகிவிடுவாரா? | |
| 235:1 | மூப்பர்கள் - ஏன் மூப்பர்கள் கவனமாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்? | |
| 235:2 | மூப்பர்கள் - தேர்ந்தெடுத்தல் - சபையில் பெண் போதகர்கள். | |
| 236:1 | தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவர் / CHAIRMAN | |
| 236:2 | தேர்ந்தெடுத்தல் - வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள். | |
| 236:3 | தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கை. | |
| 237:1 | தேர்ந்தெடுத்தல் - கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்படுகின்றது. | |
| 237:2 | தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவியைத் நியமித்தல். | |
| 238:1 | தேர்ந்தெடுத்தல் - அர்ப்பணம் பண்ணினவர்களும், நீதிமான்களாக்கப் பட்டவர்களும் வாக்குகள் (vote) அளிக்கலாமா? | |
| 238:2 | தேர்ந்தெடுத்தல் - தொகுதிகள் (VOLUMES) விநியோகம் பண்ணுபவர்கள் வாக்களித்தல் (VOTE). | |
| 238:3 | தேர்ந்தெடுத்தல் - சபையைச் சந்திக்க வரும் சகோதர சகோதரிகள் வாக்கு (VOTE) அளித்தல். | |
| 239:1 | தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களின் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்படாத பட்சத்தில். | |
| 239:2 | தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல். | |
| 240:1 | தேர்ந்தெடுத்தல் - சீட்டு மூலம் வாக்களித்தல். | |

| | | |
|---|---|---|
| 240:2 | தேர்ந்தெடுத்தல் - முன்மொழியப்பட்டவரைக் குறித்துக் கருத்துப் பரிமாறுதல் (discuss). | |
| 242:1 | தேர்ந்தெடுத்தல் - வாக்களிக்காதவர்கள் குறித்துப் பதிவு செய்தல். | |
| 242:2 | தேர்ந்தெடுத்தல் - ஏழு பேரைத் தேர்ந்தெடுக்கும் அப்போஸ்தலர்களின் வழக்கத்தைப் பின்பற்றுதல்.. | |
| 242:3 | தேர்ந்தெடுத்தல் - தகுதியுடையவர், ஆனால் ஞானஸ்நானம் பெறாதவர். | |
| 243:1 | தேர்ந்தெடுத்தல் - எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படலாம். விசேஷமான நாளென்று ஒன்றில்லை. | |
| 243:2 | தேர்ந்தெடுத்தல் - நியமிக்காமல் ஊழியம் செய்தல். | |
| 244:1 | தேர்ந்தெடுத்தல் - மீண்டும் வாக்கு (VOTE) செலுத்துதல். | |
| 245:1 | தேர்ந்தெடுத்தல் - (ஏகமன நியதி) ஜூரி விதி. | |
| 245:2 | தேர்ந்தெடுத்தல் - வர இயலாதிருக்கும் அங்கத்தினர்கள் கடிதம் மூலம் வாக்குப்பதிவு செய்தல். | |
| 246:1 | தேர்ந்தெடுத்தல் - ஆங்கில மொழிக் கூடுகைகளுக்காக வெளிநாட்டுச் சகோதரர்கள் | |
| 246:2 | தேர்ந்தெடுத்தல் - தகுதியற்றவர்கள் தொடர்பாக. | |
| 247:1 | தேர்ந்தெடுத்தல் - யார் வாக்களிக்கலாம்? | |
| 247:2 | தேர்ந்தெடுத்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல். | |
| 248:1 | தேர்ந்தெடுத்தல் - பதிலாள் மூலம் வாக்கு. | |
| 249:1 | தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுத்தலுக்கான சதவீதம். | |
| 250:1 | தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்களை நிறைவுசெய்தல். | |
| 253:1 | தேர்ந்தெடுத்தல் - கூட்டங்களில் கலந்துகொள்ளாத மூப்பர்களின் தேர்ந்தெடுத்தல். | |
| 253:2 | தேர்ந்தெடுத்தல் - குழப்பத்திலிருக்கும்போது வாக்களிக்காமல் இருப்பது தவறா? | |
| 253:3 | தேர்ந்தெடுத்தல் - சபைக்கான தகுதியான ஊழியர்கள். | |
| 254:1 | தேர்ந்தெடுத்தல் - வாக்குறுதி (VOW) தொடர்பாக. | |
| 255:1 | தேர்ந்தெடுத்தல் - குழப்பத்திலிருக்கும்போது வாக்களிக்காமல் இருப்பது தவறா? | |
| 256:1 | தேர்ந்தெடுத்தல் - மற்றச் சபையார் மத்தியிலிருந்து மூப்பர்களைத் தேர்ந்தெடுத்தல். | |
| 256:2 | தேர்ந்தெடுத்தல் - சதவீதம் தொடர்பாக. | |
| 258:1 | பதினோராம் மணிவேளை - இதனுடைய செயல்விளக்கம். | |
| 259:1 | எலியா வகுப்பார் - ஜெயங்கொள்ளுகிற - - Vs. எலிசா. | |
| 259:2 | எலியா - - ஒரு நிழலான பாத்திரம். | |
| 259:3 | எலியா - - Vs. மலையின்மேல் மோசே. | |
| 260:1 | எலிசா - - யாரை உள்ளடக்கியவர்? | |
| 260:2 | சத்துருக்கள் - - உங்களைப் போல அன்புகூருங்கள். | |
| 260:3 | சத்துருக்கள் - - கடைசியாகப் பரிகரிக்கப்படும். | |
| 261:1 | ஏனோக்கு - - எங்கே எடுத்துக்கொள்ளப்பட்டார்? | |
| 262:1 | ஏனோக்கு - - எடுத்துக்கொள்ளப்பட்டார், எப்போது, எங்கே, ஏன்? | |
| 262:2 | நித்தியம் - - சோதோமியருக்குப் பிரயோகப்படுத்தப்பட்டது. | |
| 262:3 | நித்திய ஜீவன் - - இப்போது, உண்மையாகவா, அல்லது எண்ணப்படுகிறதா? | |
| 263:1 | ஐபிராத்து - - இரண்டாம் மரணம். | |
| 263:2 | ஏவாள் - மீட்பு. | |
| 263:3 | ஏவாள் - ஆதாமுக்குள் எல்லோரும். | |
| 264:1 | ஏவாள் - தேவனுடன் அவளுடைய நிலைப்பாடு. | |
| 265:1 | தீமை - - மனுஷனுடைய விழுந்துபோன நிலைமையின் சில தீமைகள். | |
| 266:1 | விசுவாசம் - ஆயிரவருஷ யுகத்தில் உலகத்தாரினால் செயற்படுத்தப் படுதல். | |
| 266:2 | விசுவாசம் - தேவனுடைய ஈவு. | |
| 267:1 | விசுவாசம் - கர்த்தருடைய சித்தத்தை உட்கிரகித்தல். | |
| 268:1 | விழுந்துபோன மனுஷர்கள் - யேகோவாவுடன் உடன்படிக்கை பண்ண இயலாது. | |
| 268:2 | விழுந்து போகுதல் - ஒருதரம் பிரகாசிக்கப்பட்ட பின்பு. | |

| | | |
|---|---|---|
| 269:1 | பஞ்சம் - -ஆமோஸ் 8:11,12ம் வசனங்களைப் பிரயோகப்படுத்துதல். | |
| 269:2 | பஞ்சம் - - இது இரண்டு பிரயோகங்களைக் கொண்டதாக இருக்கலாம். | |
| 270:1 | பிதா - - பரலோக பிதா தம்முடைய பிள்ளைகளின் பேரில் கொண்டுள்ள அக்கறை. | |
| 270:2 | பயம் - - அன்பு பயத்தை எந்த வகையில் புறம்பாக்கிப் போடுகிறது? | |
| 271:1 | பயம் - - மரணத்திற்குப் பயப்படுதல் தவறானதா? | |
| 272:1 | கூட்டமைப்பு - - எப்போது நிறுவப்பட்டது? | |
| 273:1 | கூட்டமைப்பு - - இயேசுவின் நாளில். | |
| 274:1 | போராட்டம் - - நல்ல போராட்டத்தைப் போராடினேன். | |
| 275:1 | நிதி உதவி - - எளிய சகோதரர்களுக்கு உதவுவதில் வரம்பு. | |
| 276:1 | விரல் - அவருடைய விரலினால் இரத்தத்தைத் தெளிப்பதின் முக்கியத்துவம். | |
| 277:1 | முடிந்தது - - தெய்வீகத் திட்டம் முடியவில்லை. | |
| 277:2 | நெருப்பு - பலிபீடத்திலிருந்து எடுத்த நெருப்புத்தணலின் முக்கியத்துவம் | |
| 278:1 | முதற்-பேறானவர்கள் - - சபை அடையாளப்படுத்தப்படுகிறது. | |
| 279:1 | மாம்சம் - - இயேசுவின் மாம்சத்தைப் புசித்தல். | |
| 279:2 | ஜலப்பிரளயம் - - யேகோவாவின் முறைகளை வினவுதல். | |
| 279:3 | ஜலப்பிரளயம் - - நம்பிக்கைக் கொள்வது. | |
| 279:4 | மற்றவர்களைத் தடைபண்ணுதல் - - தேவனுடைய ஊழியத்தை ஏன் தடைபண்ணினார்கள்? | |
| 280:1 | முன்னறிவு. | |
| 280:2 | மன்னிப்பு - - எவ்வளவு விரிவானதாக இருக்கிறது. | |
| 281:1 | இலவச கிருபை - சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்றுகிற எவருக்கும். | |
| 283:1 | கனி - யேகோவா. மற்றும் ஏதேன் தோட்டம். | |
| 283:2 | வஸ்திரங்கள் - வஸ்திரங்கள் கறைபடாமல் காத்துக்கொள்ளுதல். | |
| 285:1 | வஸ்திரங்கள் - மகிமையும் நேர்த்தியுமான வஸ்திரங்களின் முக்கியத்துவம். | |
| 286:1 | புறஜாதியார் Vs யூதர்கள். | |
| 286:2 | தேவன் - சாயல் - விழுந்துபோன மனுஷன். | |
| 286:3 | பொன்னான பிரமாணம்: தவறான விளக்கம். | |
| 286:4 | ஆஸ்திகள்; அவனுடைய எல்லாவற்றின் மேலும் விசாரணைக்காரன். | |
| 287:1 | சுவிசேஷம் - எத்தனை பேர் கேட்டனர். | |
| 287:2 | சுவிசேஷம்: மரித்தவர்களுக்கு முதலில் பிரசங்கிக்கப்பட்டது. | |
| 288:1 | கிருபை: விருதாவாய் பெறுதல். | |
| 288:2 | கிருபை: - முன்பு கிருபை இருந்தால், எப்போதும் கிருபையில் இருத்தல். | |
| 289:1 | கல்லறைகள் திறந்தன - இது முதலாம் உயிர்த்தெழுதலா? | |
| 289:2 | திரள் கூட்டம் - கட்டாயப்படுத்தலினால் ஜெயங்கொள்ளுதல். | |
| 289:3 | திரள் கூட்டம் - ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து. | |
| 296:1 | திரள் கூட்டம் - கடந்த காலத்தவர் - மகாஉபத்திரவம். | |
| 297:1 | திரள் கூட்டம் - ஜீவனை பெறுதல். | |
| 297:2 | திரள் கூட்டம் - ஜீவனை அளிப்பவர்கள் | |
| 297:3 | திரள் கூட்டம் - ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல். ஆசரிப்பு கூடாரம். | |
| 298:1 | திரள் கூட்டம் - உலகத்தின் பாவங்களை ரத்து செய்தல். | |
| 299:1 | திரள் கூட்டம் - ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம். | |
| 300:1 | திரள் கூட்டம் - பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பார்கள். | |
| 300:2 | திரள் கூட்டம் - நிழலாக அபியூ. | |
| 301:1 | திரள் கூட்டம் - அர்ப்பணிப்பு. | |
| 303:1 | திரள் கூட்டம்: பதவியிலிருந்து விலக்கிக் கொள்ளுதல். | |
| 303:2 | திரள் கூட்டம் - உலகத்தாரின் அல்லது ஜனங்களின் பாவங்களுக்காக உபத்திரவப்படுதல். | |
| 304:1 | திரள் கூட்டம் - ஆபிரகாமின் வித்து. | |
| 305:1 | திரள் கூட்டம் - சிறு மந்தையிலிருந்து பிரித்தெடுத்தல். | |
| 305:2 | திரள் கூட்டத்தினர் - பூரண அன்பிற்கான இலக்கினின்று விழுந்து போகுதல். | |
| 306:1 | திரள் கூட்டம் - ஆசாரியர்களாக பணிபுரிதல். | |

| | | |
|---|---|---|
| 306:2 | திரள் கூட்டம் - கிரீடத்தை இழந்து போகுதல். | |
| 306:3 | திரள் கூட்டம் - திரள் கூட்டத்தை எழுப்புதல். | |
| 307:1 | திரள் கூட்டம் - பரிசை பெற ஓடி, அதை இழந்தவர்கள். | |
| 307:2 | திரள் கூட்டம் - அர்ப்பணிப்பு - ஆனால் ஓடுவதில்லை. | |
| 307:3 | திரள் கூட்டம் - ஜெநிப்பிக்கப்படுதல். | |
| 308:1 | திரள் கூட்டம் - முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு. | |
| 309:1 | திரள் கூட்டம் - பிரமீடில் காண்பிக்கப்படவில்லை. | |
| 310:1 | திரள் கூட்டம் - ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், லேவியர், பிராகாரம். | |
| 312:1 | திரள் கூட்டம் - பரிசுத்த ஸ்தலத்திலா அல்லது பிராகாரத்திலா? | |
| 312:2 | திரள் கூட்டம் - பரிசுத்த ஸ்தலம். | |
| 312:3 | திரள் கூட்டம் - நாம் அதில் இருக்கிறோம் என்று பயப்படுகிறோமா? | |
| 313:1 | திரள் கூட்டம் - அவர்களின் வளர்ச்சி. | |
| 313:2 | திரள் கூட்டம் - 1914 | |
| 313:3 | திரள் கூட்டம் - பாவத்திற்கு நிவிர்த்தி செய்வது. | |
| 314:1 | திரள் கூட்டம் - அவர்கள் முறுரூபமாகுதல். | |
| 314:2 | திரள் கூட்டம் - அவர்கள் மறுரூபமாகுதல். | |
| 314:3 | திரள் கூட்டம் - திரைக்கு இந்த பக்கம். | |
| 315:1 | திரள் கூட்டம் - சர்வ சங்கத்தில் இதன் பங்கு என்ன? | |
| 315:2 | திரள் கூட்டம் - யுகங்களின் வரைபடம் மற்றும் ஆசரிப்பு கூடாரம். | |
| 315:3 | திரள் கூட்டம் - புரிந்துள்ளவற்றை உபதேசித்தல். | |
| 316:1 | திரள் கூட்டம் - அவர்களின் மறுரூபமாகுதல். | |
| 316:2 | திரள் கூட்டம் - அவர்களின் தெய்வீக சுபாவம். | |
| 317:1 | கைகள் - - பலிகளின் தலைகளில் கை வைத்தல். | |
| 317:2 | அறுவடை - பிரித்தெடுப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் இடையே உள்ள வித்தியாசம். | |
| 319:1 | அறுவடை - அறுவடை மிகுதி - சிறுமந்தை. | |
| 320:1 | அறுவடை - 1910ம் வருஷ வசந்த காலத்தில் முடிவு. | |
| 320:2 | அறுவடை - ஊழியத்திற்கான வாய்ப்புகளின் எல்லை. | |
| 321:1 | அறுவடை - உவமைகளில் கால அளவு. மத் 13:30. & மத் 20: 1-16. | |
| 321:2 | பகை. உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது - - யாரிடம் சொல்லப்பட்டது? | |
| 321:3 | பகை - சாத்தானும் அவனைப் பின்பற்றுகிறவர்களும். | |
| 322:1 | தலைக்கு முக்காடிடுதல் - - எந்த வகையில். | |
| 323:1 | தலை முக்காடு - - எந்த அதிகாரத்தில். | |
| 323:2 | தலைமை - - மன்னா போன்ற கூடுகைகளில் எழுதுதல். | |
| 323:3 | குணமாக்குதல் - மூப்பர்களை அழைத்தல், ஜெபம் பண்ணுதல், எண்ணெய் பூசுதல். | |
| 324:1 | குணமாக்குதல் - இயேசுவின் கட்டளை. | |
| 325:1 | குணமாக்கப்படுதல் - ஜெபத்தின் விளைவு. | |
| 325:2 | கேட்கும் காது - இது அற்புதமானதா? | |
| 326:1 | பரலோகமும் நரகமும் - பாஸ்டர் ரசல் எதுவும் இல்லை என்று கூறினாரா? | |
| 326:2 | பரலோகமும் நரகமும் - - இப்படிப்பட்ட இடங்கள் உள்ளதா? | |
| 327:1 | நரகம் - - இதற்கு எதிரானது. | |
| 327:2 | நரகம் - பாஸ்டர் ரசல் அவர்களால் அழிக்கப்பட்டது. | |
| 327:3 | நரகம் - பரலோகத்திற்கு எதிராக உள்ளது. | |
| 329:1 | மரணம் - துன்மார்க்கர் தள்ளப்படுதல். | |
| 330:1 | மேலான அழைப்பு - - மற்றவர்களின் கிரீடங்களுக்குப் பேராசைப்படுதல். | |
| 330:2 | மேலான அழைப்பு - - நம்முடைய குடும்பங்கள் நம்மைப் பற்றி அறிந்து கொள்வார்களா? | |
| 330:3 | பெரும்பாதை - கட்டாயப்படுத்தப்படுமா? | |
| 331:1 | பெரும்பாதை - இருப்புக்கோல் உபயோகப்படுத்துதல். | |
| 332:1 | பரிசுத்த ஆவி - பெந்தகோஸ்தே நாளுக்கு முன்னதாக எந்த அர்த்தத்தில் பெற்றார்கள்? | |
| 332:2 | மனுக்குலத்தார் - உரிமைகளும் சலுகைகளும் - உரித்தானவை. | |
| 334:1 | மனுஷ சுபாவம் - - இது அனுதாபத்தை ஆசைப்படுகிறதா? | |
| 335:1 | தனித்துவம் - ஆயிர வருஷத்தில். | |

| | | |
|---|---|---|
| 335:2 | அழியாமை - - வெளிச்சத்துக்கு எப்பொழுது கொண்டுவரப்படும்? | |
| 336:1 | அழியாமை - இதில் விசுவாசம் உள்ளவருக்கு கிறிஸ்துவில் அங்கமாயிருக்கும் எதிர்பார்ப்பு இருக்குமா? | |
| 337:1 | அழியாமை - யார் மட்டும் அழியாமையை பெறுவார்கள்? | |
| 337:2 | அபூரணம் - - மன்னிப்பு கூறுதல். | |
| 338:1 | சாற்றப்படுதல் (IMPUTATION) - - நீதி. | |
| 338:2 | சாற்றப்படுதல் - கிறிஸ்துவின் பலன். | |
| 339:1 | பலன் சாற்றப்படுதல் - சாற்றப்படும் பலியின் மேன்மை (பலன்) எதை விடுவிக்கிறது? | |
| 339:2 | பலன் சாற்றப்படுதல் - பாஸ்டர் ரசலின் பார்வை. | |
| 340:1 | பலன் சாற்றப்படுதல் - யாரால்? | |
| 340:2 | பலன் சாற்றப்படுதல் - பழைய ஏற்பாட்டு போதனை. | |
| 340:3 | பலன் சாற்றப்படுதல் - அர்த்தம். | |
| 342:1 | அவதாரம் - நம்பிக்கை. | |
| 342:2 | தூபவர்க்கம். - தேவனுக்கு சுகந்த வாசனையாக நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். | |
| 343:1 | தூபவர்க்கம் - கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா. | |
| 343:2 | மனநிலை பாதிப்பு - சகோதரர்கள். | |
| 343:3 | மனநிலை பாதிப்பு - சத்தியம். | |
| 344:1 | காப்பீடு - குறுகிய கால காப்பீடு ஆவணங்களை எடுத்துக்கொள்வது சரியானதா? | |
| 344:2 | காப்பீடு - குறுகிய கால காப்பீடு ஆவணம் நல்ல முதலீடா? | |
| 345:1 | ச.வே.மா.ச. - சுய பாணியில் சத்திய ஜனங்கள். | |
| 345:2 | ச.வே.மா.ச. - சபை பிரிவு இணைப்புகள் (DENOMINATIONAL AFFILIATIONS). | |
| 345:3 | ச.வே.மா.ச. - விசேஷமான வேதாகமம். | |
| 346:1 | ச.வே.மா.ச. - இது எவ்விதம் சர்வ தேச சங்கம்? | |
| 346:2 | ச.வே.மா.ச. - மற்ற வகுப்புகளுடன் உறவு. | |
| 346:3 | ச.வே.மா.ச. - இதன் அலுவலர்களின் தேர்தல். | |
| 347:1 | ச.வே.மா.ச. - நம்முடன் கற்றுக்கொள்ளும் மற்றவர்கள். | |
| 347:2 | ச.வே.மா.ச. - அங்கத்தினர் பட்டியல். | |
| 347:3 | ச.வே.மா.ச. - அமைப்பின் விரிவு. | |
| 347:4 | ச.வே.மா.ச. - இணைப்பிற்கான தொடர்பு. | |
| 348:1 | ச.வே.மா.ச. - எல்லா சபை பிரிவுகளிலிருந்தும் தனித்து உள்ளது. | |
| 348:2 | ச.வே.மா.ச. - புதிய பிரிவு. | |
| 348:3 | ச.வே.மா.ச. - பேர்ச்சபையை விட்டு இதில் ஏன் சேர வேண்டும்? | |
| 349:1 | ச.தே.மா.ச. - வேண்டிக்கேட்பது, ஜெபிப்பது, நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல். | |
| 350:1 | ச.தே.வே.ச. - பாபிலோனின் ஆவி. | |
| 350:1(2) | ச.தே.வே.ச. - பாபிலோனைப் பற்றிய உண்மையான பொருள் விளக்கம். | |
| 353:1 | இஸ்ரவேல் - எகிப்து மற்றும் அசீரியாவுடன் மூன்றாவதாக. | |
| 353:2 | இஸ்ரவேல் - துரத்துண்டவர்கள். | |
| 354:1 | இஸ்ரவேல் - கூட்டிச் சேர்க்கப்படுதல். | |
| 355:1 | இஸ்ரவேல் - அவர்கள் விழுகை புறஜாதிகளின் ஐசுவரியம். | |
| 355:2 | இஸ்ரவேல் - இயேசுவை அடித்தல். | |
| 355:3 | இஸ்ரவேல் மற்றும் யூதா - உடன்படிக்கை தொடர்பு. | |
| 355:4 | இஸ்ரவேல் - "ஏழத்தனை" சிட்சை - ஆசீர்வாதம். | |
| 358:1 | யேகோவா - - அல்பாவும் ஒமெகாவும். | |
| 358:2 | யேகோவா - அவருடைய ஆவி என்றைக்கும் போராடுவதில்லை. | |
| 358:3 | யேகோவா - அவருடைய சுதந்தரம். | |
| 359:1 | யேகோவா - அவருடைய முறைமைகளைக் கேள்வி கேட்டல். | |
| 359:2 | யேகோவா - எல்லாவற்றிற்கும் ஆக்கியோன். | |
| 360:1 | யேகோவா - தேவனைப் பார்த்தல். | |
| 360:2 | யேகோவா - - பூமியிலே சிருஷ்டிப்புக்கு முன்பு தேவனுடைய பணி. | |
| 360:3 | யேகோவா - ஆதியும் அந்தமும். | |
| 361:1 | யேகோவா - - சத்தம் என்பதின் அர்த்தம். | |
| 361:2 | யேகோவா - - முன்பாக நம்முடைய நிலைப்பாட்டை உறுதி செய்வது. | |

| | | |
|---|---|---|
| 361:3 | எருசலேம் - - நம்மெல்லோருக்கும் எப்படி தாயானவள்? | |
| 362:1 | எருசலேம் - நம்மெல்லோருக்கும் தாய். | |
| 362:2 | இயேசு - - யோசேப்பின் குமாரன் அல்ல. | |
| 363:1 | இயேசு - உயிர்த்தெழுதலிலிருந்து மனுஷ சுபாவமா அல்லது தேவ சுபாவமா? | |
| 363:2 | இயேசு - கிறிஸ்துவானார். | |
| 364:1 | இயேசு - மனுஷீகத்துக்கு முன் நிலைமை. | |
| 364:2 | இயேசு - மீட்பாக மனுஷன் மற்றும் மத்தியஸ்தர். | |
| 365:1 | இயேசு நியாயப்பிரமாணம் கைக்கொண்டது அல்லாமல், பூரண மனுஷ ஜீவன். | |
| 365:2 | இயேசு - பிறகு இயேசு கேள்வி கேட்பவராக மாறினார். | |
| 366:1 | இயேசு - ஓய்வு நாளில் கல்லறையில் இளைப்பாறினார். | |
| 366:2 | இயேசு - பிரிக்கப்படுவதற்கு முன்பு ஆதாமும் ஏவாளும். | |
| 366:3 | இயேசு - நமது கர்த்தர் பிதாவின் தற்சொரூபம். | |
| 367:1 | இயேசு - அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல். | |
| 367:2 | இயேசு - அவருடைய மரணத்திற்கு பொறுப்பு. | |
| 368:1 | இயேசு - மனுஷ குமாரன் என்று அழைக்கப்படுதல். | |
| 368:2 | இயேசு - மனுஷனும் மத்தியஸ்தரும். | |
| 369:1 | இயேசு - இதே இயேசு. | |
| 369:2 | இயேசு - இன்றும், நேற்றும், என்றைக்கும் மாறாதவர். | |
| 370:1 | இயேசு - மனுஷனாக என்றைக்கும் வாழ முடியுமா? | |
| 370:2 | இயேசு - பரிபூரண மனுஷனாக குறைபாடுள்ள பூமியில் வாழ்வது. | |
| 371:1 | இயேசு - அவருக்கு பரதீசைக் கொடுப்பதற்கான பிதாவின் கடமையுணர்வு. | |
| 371:2 | இயேசு - மனுஷீகத்திற்கு முன்பாக இருந்த நிலை. | |
| 371:3 | இயேசு - ஒரே பேறானவர் (ஜநிப்பிக்கப்பட்டவர்) மற்றும் முதல் சிருஷ்டிப்பு. | |
| 372:1 | இயேசு - மோசேக்குள் மூழ்குதல். | |
| 372:2 | இயேசு - ஜீவ உரிமைகள். | |
| 373:1 | இயேசு ஜீவ உரிமைகளைக் கொடுத்தல். | |
| 374:1 | இயேசு - அவர் மூன்று தடவைகள் பிறந்தாரா? | |
| 374:2 | இயேசு - அவர் பிராகாரத்தில் ஜநிப்பிக்கப்பட்டாரா? | |
| 375:1 | இயேசு - நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தது. | |
| 376:1 | இயேசு - நித்திய ஜீவன். | |
| 377:1 | இயேசு - பூரணராய் இருந்த போது. | |
| 377:2 | இயேசு - அவருடைய பூரணத்துவம். | |
| 377:3 | இயேசு - அவருடைய பெயர்களில் ஒன்று. | |
| 378:1 | இயேசு - - மனுஷீக ஜீவ உரிமைகளுக்கு சோதனை. | |
| 378:2 | இயேசு - மீட்கும் விலைக்கிரயம். | |
| 379:1 | யூதர்கள் - - அவர்களுடன் தேவன் எப்படி செயல்தொடர்பு கொள்வார்? | |
| 379:2 | யூதர்கள் - - அவர்களுடன் தேவன் எப்படி செயல்தொடர்பு கொள்வார்? | |
| 379:3 | யூதர்கள் - அவர்களிடம் முதலாவது இயேசு அனுப்பப்பட்டார். | |
| 380:1 | யூதர்கள் - பவுலின் நாட்களில் எண்ணிக்கை. | |
| 380:2 | யூதர்கள் - - மீட்பு இல்லாமல் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டால், நித்திய ஜீவன் பெறுவது எப்படி? | |
| 380:3 | யோசேப்பு - நிழல்களாக அவருடைய சகோதரர்கள். | |
| 381:1 | யூபிலி - ஆயிர வருஷ யுகம் மற்றும் பூமியின் மேன்மை. | |
| 381:2 | யூபிலி - தேசம் தன்னுடைய ஓய்வு நாட்களைக் கைக்கொள்ள வற்புறுத்தப்பட்டது. | |
| 382:1 | யூதாஸ் - இயேசுவைக் காட்டிக் கொடுத்தல் கடமையா? | |
| 382:2 | யூதாஸ் - இறுதி சோதனை. | |
| 382:3 | நியாயத்தீர்ப்பு - கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக எல்லாரும் வெளிப்படுதல். | |
| 383:1 | நியாயத்தீர்ப்பு - மரித்தோர் நியாயந்தீர்க்கப்படுதல். | |
| 383:2 | நியாயத்தீர்ப்பு - பயத்தோடே எதிர்பார்க்குதல். | |
| 383:3 | நியாயத்தீர்ப்பு - என்னை நியாயந்தீர்க்கிறவர் கர்த்தரே. | |

| | | |
|---|---|---|
| 384:1 | நியாயத்தீர்ப்பு - இதற்கும் விமரிசனத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம். | |
| 385:1 | நியாயத்தீர்ப்பு - நீதி மற்றும் விமரிசனம். | |
| 385:2 | நியாயத்தீர்ப்பு - - இஸ்ரவேலரின் ஆசாரியர்கள் நிழலாக மரித்தார்கள். | |
| 386:1 | நியாயத்தீர்ப்புகள் - ராஜாக்களையும் மேன்மக்களையும் கட்டுதல். | |
| 387:1 | நீதி - - எப்பொழுது திருப்தியுறும்? | |
| 391:1 | நீதி - எப்பொழுது திருப்தி அடையும்? | |
| 392:1 | நீதி - திருப்தி Vs கிறிஸ்துவின் மரணம். | |
| 392:2 | நீதி - ஒரு பகுதிக்கு மட்டும் பலன் பிரயோகிக்கப்படுதல். | |
| 392:3 | நீதி - சுவிசேஷ யுகத்திலும் ஆயிர வருஷ யுகத்திலும் அனுபவம். | |
| 393:1 | நீதி - இது கோரப்பட்டதா? | |
| 393:2 | நீதி - அநீதிக்காக நீதி. | |
| 394:1 | நீதி - உடன்சுதந்தரவாளியாவதற்கு அடிப்படை. | |
| 394:2 | நீதி - திருப்தி அடைதல். | |
| 395:1 | நீதி - திருப்தி அடைதல். | |
| 395:2 | நீதிமானாக்கப்படுதல்- ஆயிரவருஷ யுகமுடிவில் உலகத்தார் நீதிமானாக் கப்படுதல். | |
| 395:3 | நீதிமானாக்கப்படுதல் - Vs இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கப்படுதல். | |
| 396:1 | நீதிமானாக்கப்படுதல் - அர்ப்பணிக்க மறுத்தல். | |
| 397:1 | நீதிமானாக்கப்படுதல் - விசுவாசம் மூலமாக. | |
| 398:1 | நீதிமானாக்கப்படுதல் - முற்பிதாக்கள் மற்றும் சுவிசேஷ யுகத்தில் நீதிமான்களாக்கப்பட்டவர்கள். | |
| 398:2 | நீதிமானாக்கப்படுதல் - கடந்த காலத்தில் குமாரத்துவத்தின் (SONSHIP) அடிப்படை. | |
| 400:1 | நீதிமானாக்கப்படுதல் - தற்காலிகமாயுள்ளது பற்றி எடுத்துக்காட்டு. | |
| 403:1 | நீதிமானாக்கப்படுதல் – கிபி 1881க்கு முன்பு. சுவிசேஷ யுக கிருபை படிப்படியாக முடிவடைதல். | |
| 403:2 | நீதிமானாக்கப்படுதல் - அர்ப்பணிப்பில் முழுமை பெறுகிறது. | |
| 404:1 | நீதிமானாக்கப்படுதல் - தற்காலத்திய பார்வை. | |
| 406:1 | நீதிமானாக்கப்படுதல் - வீணாக பெறுவது. | |
| 408:1 | நீதிமானாக்கப்படுதல் - கிறிஸ்துவின் அங்கி. | |
| 410:1 | நீதிமானாக்கப்படுதல் - யாரால்? | |
| 410:2 | நீதிமானாக்கப்படுதல் - சட்ட அடிப்படையில். | |
| 411:1 | நீதிமானாக்கப்படுதல் - அர்ப்பணிப்புடன் உள்ள தொடர்பு. | |
| 412:1 | நீதிமானாக்கப்படுதல் - பிராகாரம். | |
| 415:1 | நீதிமானாக்கப்படுதல் - அடிப்படை. | |
| 415:2 | நீதிமானாக்கப்படுதல் - ஒழுங்குமுறை - அர்ப்பணிப்பு. | |
| 416:1 | நீதிமானாக்கப்படுதல் - பழைய பாவங்களுக்காக. | |
| 417:1 | நீதிமானாக்கப்படுதல் - சட்டப்பூர்வமாகவும் உண்மையாகவும். | |
| 418:1 | நீதிமானாக்கப்படுதல் - பாஸ்டர் ரசலின் பார்வைகள் மாற்றம் அடையவில்லை. | |
| 421:1 | இராஜ்யம் - இராஜ்யத்தின் புத்திரர் புறம்பாக்கப்படுதல். | |
| 421:2 | இராஜ்யம் - ஆவிக்குரியதா அல்லது பூமிக்குரியதா? | |
| 422:1 | இராஜ்யம் - மேசியாவிடம் தொடர்புள்ளது. | |
| 422:2 | இராஜ்யம் - கற்பனைகளில் சிறிதான ஒன்றை மீறுதல். | |
| 423:1 | இராஜ்யம் - பிதாவின் பக்கம் திரும்புதல். | |
| 425:1 | இராஜ்யம் - மேசியாவின் இராஜ்யம் ஆவிக்குரியது. | |
| 426:1 | இராஜ்யம் - பலன் தருவது. | |
| 426:2 | இராஜ்யம் - ஆயிர வருஷ ஆட்சியில் பிள்ளைகள் பிறப்பார்களா? | |
| 426:3 | இராஜ்யம் - இன்னும் சந்தேககத்திற்கிடமாக கருத்து. | |
| 427:1 | இராஜ்யம் - விலையுயர்ந்த முத்து. | |
| 429:1 | இராஜ்யம் - இராஜ்யத்தின் சுதந்திரர்கள். | |
| 429:2 | முத்தமிடுதல் - வரைமுறையற்ற முத்தம். | |
| 430:1 | பாஷை - சுத்தமான பாஷை என்பது என்ன? | |
| 430:2 | கடைசி நாட்கள் - இந்த யுகத்தின் முடிவு. | |
| 430:3 | நியாயப்பிரமாணம் - நெருங்குண்டு செத்தவைகளுக்கு விலகியிருத்தல். | |

| | | |
|---|---|---|
| 431:1 | நியாயப்பிரமாணம் - தானாய் இறந்து போனதைப் புசித்தல். | |
| 431:2 | நியாயப்பிரமாணம் - எப்போது முடிவுக்கு வந்தது? | |
| 432:1 | நியாயப்பிரமாணம் - சாசனம் எழுதியவர். | |
| 435:1 | லாசரஸ் - உவமை, இதன் அடிப்படை. | |
| 435:2 | லேவியர் - திரள் கூட்டத்தாரால் குறிக்கப்படுதல். | |
| 435:3 | லேவியர்கள் - பரலோக சுதந்தரம் அவர்களுடையது. | |
| 436:1 | லேவியர்கள் - பாவநிவாரண நாளில் பிராகாரத்தில் இருப்பது. | |
| 436:2 | லேவியர் - பொருளான லேவியர்களும் அவர்களுடைய பணியும். | |
| 438:1 | ஜீவன் - எப்படி பூரணத்துவம் பெறுவர்? | |
| 440:1 | ஜீவன் - ஆயிர வருஷ முடிவில். | |
| 440:2 | ஜீவன் - மனுஷனாகிய இயேசுவினால் மற்றும் இயேசு கிறிஸ்துவினால் பெறப்பட்டது. | |
| 441:1 | நித்திய ஜீவன் - கடைசி சோதனை இதை முடிவு செய்யும். | |
| 441:2 | ஜீவன் அளிப்பவர் - ஆவிக்குரிய தகப்பனும் தாயும் பூமிக்குரிய பிள்ளைகளுடன். | |
| 441:3 | ஜீவன்-உரிமைகள் - எப்போது ஒப்புக்கொடுக்கபட்டது? | |
| 442:1 | ஜீவ உரிமைகள் - அவைகள் பலியிடப்பட்டதா? | |
| 442:2 | ஜீவனுக்குரிய உரிமைகள் Vs மீட்பின் பலன். | |
| 443:1 | ஜீவ-உரிமைகள் - நாம் அவைகளை உண்மையாகவே பலியிடுகிறோமா? | |
| 443:2 | ஜீவ-உரிமைகள்: புதிய உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படுவது. | |
| 444:1 | ஜீவ-உரிமைகளுக்கான - தேவை. | |
| 444:2 | ஜீவ-உரிமைகள் - மீட்பின் பலனுடன் ஒப்பிடுதல். | |
| 445:1 | ஜீவ-உரிமைகளானது இயேசுவினால் சபைக்குச் சாற்றப்பட்டுள்ளதா? | |
| 446:1 | ஜீவ-உரிமைகள் - ஆதாமுக்கு ஏதேனும் உள்ளதா? | |
| 446:2 | ஜீவ-உரிமைகள் - ஆதாமினுடையது சபைக்கு சுமத்தப்படுகிறதா? | |
| 446:3 | ஜீவ-உரிமைகள் Vs ஜீவன். | |
| 446:4 | ஜீவ-உரிமைகள் - ஜீவிப்பதற்கான உரிமை. | |
| 447:1 | லாகோஸ் - லாகோசின் சுபாவம். | |
| 448:1 | அரைகள் - உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு. | |
| 448:2 | அன்பு - அகேப் (AGAPE) Vs பிலதெல்பியா. | |
| 449:1 | அன்பு - பூரண அன்பாகிய குறியீட்டை அடைதல். | |
| 449:2 | அன்பு - அன்பை எப்படி வெளிப்படுத்துவது? | |
| 450:1 | அன்பு - என்ன ஆதாரம்? | |
| 450:2 | அன்பு - பூரணமானது, பயத்தை புறம்பே தள்ளும். | |
| 451:1 | லூசி·:பர் - அவனுடைய முந்தைய வேலை. | |
| 451:2 | இச்சை - அர்த்தம் மாறியுள்ளது. | |
| 451:3 | மனுஷன் - மனுஷனாகிய கிறிஸ்து இயேசு. | |
| 452:1 | வெளிப்பாடுகள் - தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். | |
| 452:2 | வாசஸ்தலம் - ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுதல் அல்லது ஸ்தலத்திற்கு சீஷர்களை ஆயத்தம் பண்ணுதல். | |
| 453:1 | வாசஸ்தலங்கள் - பிதாவின் வீட்டில் அநேகம் உள்ளன. | |
| 453:2 | மாரா - மாராவின் தண்ணீர் மதுரமாதல். | |
| 454:1 | இலக்கு: திரள் கூட்டம் மற்றும் சிறுமந்தை. | |
| 455:1 | இலக்கினின்று விழுந்துபோய்த் திரள்கூட்டத்தினராகுதல். | |
| 455:2 | இலக்கு அல்லது பந்தய சாலை – போராடுவதற்கு முன்னதாகவே முடித்தல். | |
| 459:1 | விவாகம் - கணவனின் பணத்தை செலவு செய்தல்? | |
| 459:2 | விசுவாசிகளுக்கு - திருமணத்தில் ஏற்புடைமை. | |
| 460:1 | விவாகம் - இது மனுஷனை கொடுங்கோலன் என்று உள்ளடக்குகிறதா? | |
| 460:2 | விவாகம் - எல்லாவற்றிலும் கனமுள்ளது. | |
| 461:1 | விவாகம் - உயிர்த்தெழுதலில். | |
| 462:1 | விவாகம் - ஆயிர வருஷ யுகத்தில். | |
| 462:2 | கலியாண விருந்து - எப்பொழுது மற்றும் இது என்ன? | |
| 463:1 | விவாகம்: தடை பண்ணுதல், மாமிசம் விலக்குதல். | |
| 463:2 | மரியாள் - மரியாளுக்கு அதிக கனம் ஏன் காண்பிக்கப்படவில்லை. | |
| 464:1 | மனுஷ ரூபமெடுத்தல் - கெட்ட ஆவிகள் Vs பரிசுத்தவான்கள். | |

| | | |
|---|---|---|
| 465:1 | மத்தியஸ்தர் - செம்மறியாடுகள் அல்லது வெள்ளாடுகள் | |
| 466:1 | மத்தியஸ்தர் Vs பரிந்து பேசுகிறவர். | |
| 467:1 | மத்தியஸ்தர் Vs மகிமையடைந்த கிறிஸ்து. | |
| 467:2 | மத்தியஸ்தர் - மனுஷனாகிய கிறிஸ்து இயேசு. | |
| 468:1 | மத்தியஸ்தர் - - யார்? | |
| 469:1 | சாந்தம் - Vs தாழ்மை. | |
| 469:2 | கூட்டங்கள் - பயண ஊழியர்களின் கூட்டங்கள், விளம்பரங்கள் செய்தல் போன்றவை. | |
| 470:1 | கூட்டங்கள் - சிறு எண்ணிக்கையுள்ள வகுப்பு தொடர்பாக. | |
| 471:1 | கூட்டங்களுக்கான ஒழுங்கு. | |
| 471:2 | கூட்டங்கள் - சாட்சிக்கூட்டங்கள். | |
| 472:1 | கூட்டங்கள் - சகோதரர்கள் இல்லாதபோது நடத்துவதற்கான வழிமுறை. | |
| 472:2 | கூட்டங்கள் - சந்திக்க வந்திருக்கும் சகோதரர் சபையாருக்குக் கூட்டத்தை நடத்துதல். | |
| 473:1 | கூட்டங்கள் - மூப்பர்கள் அல்லாமல், மற்றவர்கள் கூட்டங்களை நடத்துதல். | |
| 473:2 | சிறிய எண்ணிக்கையுள்ள சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டங்கள். | |
| 476:1 | கூட்டங்கள் - புதிய வகுப்புகள் (EXTENSION WORK) உருவாக்கிடும் வேலைக்கான எண்ணிக்கை. | |
| 477:1 | கூட்டங்கள் - புருக்கிளினிலுள்ள மூப்பர்கள் கூட்டங்களை நடத்துவதற்கென உதவிக்காரர்களை நியமித்தல் தொடர்பாக. | |
| 477:2 | உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா? | |
| 478:1 | கூட்டங்கள் - போதகர்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கப்படுதல். | |
| 478:2 | கூட்டங்கள் - உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா? | |
| 479:1 | கூட்டங்கள் - மூப்பர்கள் விசாரணை சங்கத்தில் அமர்தல். | |
| 480:1 | கூட்டங்கள் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கடமைகள். | |
| 480:2 | கூட்டங்களுக்கான ஏற்பாடுகள். | |
| 482:1 | கூட்டங்கள் - உதவிக்காரர்கள் வாக்களித்தல். | |
| 482:2 | கூட்டங்கள் - துணைவிதிகளைப் பயன்படுத்தல். | |
| 483:1 | கூட்டங்களின் வகை. | |
| 483:2 | கூட்டங்களின் எண்ணிக்கை. | |
| 484:1 | மெல்கிசேதேக்கு - யார்? | |
| 486:1 | நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்க வேண்டும்? | |
| 486:2 | நினைவுகூருதல் இராப்போஜனம் - புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துதல். | |
| 486:3 | நினைவாற்றல் - வேதவாக்கியங்களில் பொறுப்புணர்வு கொள்ளுதல் - ஜெயங்கொள்ளுதல். | |
| 487:1 | பலன் - பலியிடப்படும் ஜீவன் அல்லது கீழ்ப்படிதல். | |
| 487:2 | பலன் - எல்லோருக்கும் பிரயோகிக்கப்படுதல். | |
| 488:1 | பலன் - ஆதாமுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது? | |
| 489:1 | பலன் - Vs நீதி | |
| 489:2 | பலன் - திரைக்கு கீழே பிரவேசிக்கும் போது சபை எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளுமா? | |
| 490:1 | பலன். Vs அங்கி அல்லது வஸ்திரம். | |
| 490:2 | பலன் - பங்குபோடப்படுகிறதா? | |
| 491:1 | இராணுவ பணி - இது சம்பந்தமான நமது நிலைப்பாடு. | |
| 492:1 | அற்புதங்கள் - இயேசுவின் நாமத்தினால். | |
| 492:2 | அற்புதங்கள் - இயேசுவின் நாமத்தினால். | |
| 495:1 | அற்புதங்கள் - கிறிஸ்தவம் வல்லமையின் மூல ஸ்தானம். | |
| 496:1 | தவறுகள் - அற்பமானவைகளைத் திருத்திக்கொள்வது. | |
| 497:1 | பணம் - வங்கி பாதுகாப்பு. | |
| 497:2 | பணம் - எப்படி முதலீடு செய்வது? | |
| 497:3 | மோசே - சர்ப்ப வடிவத்தை தேர்ந்தெடுத்தற்கான காரணம். | |
| 498:1 | மோசே - மத்தியஸ்தர் பதவியின் காலம். | |
| 498:2 | மோசே - யேகோவாவின் நிழல். | |

| | | |
|---|---|---|
| 498:3 | துக்கங்கொண்டாடுதல் - ஆரோனுடைய இரண்டு குமாரர்களுக்காக. | |
| 499:1 | துக்கங்கொண்டாடுதல் - ஆரோன் மற்றும் எலெயாசார். | |
| 499:2 | கொலைகாரன் - காயீனுக்கான பிரமாணம். | |
| 500:1 | முறுமுறுத்தல் - உவமையில் யார்? | |

*********************************************************************************************************************

# WHAT PASTOR RUSSELL SAID - QUESTIONS & ANSWERS

# பாஸ்டர் ரசல் அவர்கள் கூறியவை:

# கேள்விகள் & பதில்கள்

## ஆரோன் - ஆசீர்வதிக்கும் போது நிஜம்.

### கே: 5:1 :: கேள்வி (1911) -

மோசேயும், ஆரோனும் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கு வெளியே வந்த போது, ஆரோன் யாரை அடையாளப்படுத்தினார்?

**பதில்:** தேவனுடைய தெய்வீக பிரமாணத்தை அடையாளப்படுத்துகிறவராக இருந்து, ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கு, மோசே அங்கே நிற்கிறவராக இருந்தார் என்றும், மற்றும் ஆரோன் அங்கே நிற்கிறவராக இருந்தார், அல்லது பலியை செலுத்தியிருந்த பிரதான ஆசாரியரைக் குறிக்கிறதாக இருந்தார் என்றும் நான் அனுமானிக்கிறேன். நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த மோசே அங்கே நீதியின் பிரதிநிதியாக நின்றிருந்தார், மற்றும் பலியை செலுத்தியிருந்த ஆசாரியன் ஆசீர்வதிப்பற்கு கூட இருந்தார். ஆகவே ஆயிர வருஷங்களின் காலத்தில் உலகத்தை ஆசீர்வதிக்கும் அந்த காட்சியில் ஆரோனுடைய நிஜமாக கிறிஸ்து நிற்பார், மற்றும் அவருக்குப் பக்கத்தில் மோசேயினால் அடையாளப்படுத்தப்படும் தெய்வீக பிரமாணம் இருக்கும். தேவனுடைய முழுமையான பிரமாணம் மற்றும் தேவனுடைய வல்லமை ஒவ்வொன்றும் ஆசீர்வதிப்பதற்கும், மற்றும் இவ்விதமாக செயற்படுத்தப்பட்டிருக்கிற ஏற்பாடுகளை செயல்முறைக்கு கொண்டுவதற்கும் அங்கே இருக்கும்.

## ஆரோனின் ஆசாரியத்துவம் - நிஜமாகப் பிரயோகப்படுத்தப்பட வேண்டும்.

### கே: 5:2 :: கேள்வி (1911 - Z) - 2

ஆரோனுடைய ஆசாரியத்துவம் தங்களுடைய ஆசாரிய ஊழியத்தை ஆயிர வருஷ யுகத்தில் செயற்படுத்தும் என்று காண்பிப்பதற்கு வேதவாக்கியம் ஏதும் நாம் பெற்றிருக்கிறோமா?

**பதில்:** இவ்விதமாக போதிக்கிறதாக நாம் புரிந்து கொண்டிருக்கிற ஒரு வேத வாக்கியம் மல்கியாவின் புத்தகத்தில் காணப்படுகிறது, இந்த வசனம் கூறுகிறது, கர்த்தர் தம்முடைய ஆலயத்திற்குள் வரும்போது, "அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்து கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களா யிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும்,வெள்ளியைப்போலவும் புடமிடுவார்." - - மல்கியா 3:3.

சிலர் இந்த வேத வாக்கியத்தை சொல்லர்த்தமான முறையில் லேவியின் புத்திரருக்கு உரித்தாக்குவார்கள். ஆனால் இது நிஜமானதாக, சபை லேவித்துவ அமைப்பை உள்ளடக்கியதாக இருக்கிறது என்றும், மற்றும் இவர்கள் ஆவிக்குரிய லேவியர்களாக இருக்கின்றனர் மற்றும் அவர்கள் நிஜமான லேவியர்களாகவும், இராஜரீக ஆசாரியத்துவமாக, பிரியமான பலியை தேவனுக்கு செலுத்துவதற்கு, சுத்திகரிக்கிறவர் அவர்களை ஆயத்தம் பண்ணுவார்.

## விபத்துகள் - ஆயிர வருஷ யுகத்தில்.

### கே: 5:3 :: கேள்வி (1912 - Z) - 3

இரண்டாம் மரணத்திற்குள்ளாகப் போகிற பாவிகளைத் தவிர, ஆயிர வருஷ யுகத்தில் விபத்துகளும் மரணமும் இருக்குமா?

**பதில்:** கிறிஸ்துவின் ஆளுகை ஜீவனுக்குள்ளான நீதியின் ஆளுகையாக இருக்கும் போது, மேசியா தம்முடைய ஆளுகையை ஆரம்பித்திருக்கிற உடனேயே, ஆதாமின் மரணம் முடிவுக்கு வந்துவிடும் என்று நாம் புரிந்துகொள்வது இல்லை, ஏனெனில் எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுகிறது. (1கொரி. 15:25,26.) ஜனங்கள் ஆயிரம் வருஷங்களின் காலத்தில் கிட்டத்தட்ட ஆதாமின் மரணத்திற்குள்ளாக இருப்பார்கள், மற்றும் ஆதாமின் குறைபாடு மற்றும் மரணத்திலிருந்து படிப்படியாக வெளியேறி, மனுஷீக சுபாவத்தின் பரிபூரணத்திற்குள்ளாக வருவார்கள் என்று புரிந்துகொள்ளப்படுகிறது. ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில் ஸ்தாபிக்கப்படப்போகும் போது, இராஜ்யம் புதிய எருசலேமை - - அதாவது, கிறிஸ்து தலையானவராக இருக்கும் மகிமையடைந்த சபையை உள்ளடக்கியதாய் இருக்கின்றது. (வெளி. 21: 1-8.) ஆயிர வருஷங்கள் காலத்தில் இந்த ஏற்பாட்டிற்கு இணக்கமாக உலகத்தார் வருவார்கள். இவ்விதம் இணக்கமாக வரும் எல்லோருக்கும், குறைபாடுகளுக்கான அபராதம் எதிலிருந்தும் அவர்கள் காப்பாற்றப்படக்கூடிய வகையில், ஆசீர்வாதமான ஏற்பாடு இருக்கும். பரலோகத்தில் அறுவை சிகிச்சை நிபுணர்கள், மருத்துவர்கள், மருத்துவ அவசர ஊர்திகள் போன்றவைக்கான அவசியம் இருக்காது என்று நாம் அனுமானிப்பதற்கு நியாயம் இருப்பது போன்று, பரிபூரணம் அடையப் பெற்றவுடன், இனிமேல் விபத்துகள் இருக்காது என்று நியாயமாக நாம் அனுமானிக்கலாம், “என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை, கேடுசெய்வாருமில்லை.” (ஏசாயா 11:9.) தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல, பூமியிலும் செய்யப்படும். இனி துக்கமில்லை, இனி அலறுதலுமில்லை, மற்றும் மரணமுமில்லை என்று நாம் வாசிக்கிறோம்.

## ஆதாம் - ஜீவ விருட்சம், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்.

### கே: 6:1 :: கேள்வி (1907) - 1

ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கு முன், ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்தானா? அப்படியானால், அவன் என்றென்றைக்கும் ஏன் வாழவில்லை?

**பதில்:** ”ஜீவ விருட்சம்” என்ற வார்த்தை பன்மையில் இருக்கிறது என்று நான் பதிலளிக்கிறேன். ஏதேனின் எல்லா விருட்சங்களும் ஜீவ விருட்சங்களாக இருந்தன. அவைகள் எல்லாம் புசிப்புக்கு நல்லதாகவும், பார்வைக்கு அழகாகவும் இருந்தன. தேவன் ஆதாமுக்கு அளித்திருந்த ஜீவனைத் தக்க வைத்துக்கொண்டிருப்பதற்கு புசிப்பதற்குரிய விருட்சங்களாக அவைகள் இருந்தன. சாவிலிருந்து எப்போதும் அவனை தடைபண்ணும் விதத்தில், சில வகையான வசீகரத்தை அவனுக்கு அளிக்கக்கூடிய விருட்சங்களாக அவைகள் இருக்கவில்லை. அது கருத்தாக இருக்கிறதில்லை. ஜீவ விருட்சங்களின் கனியைப் புரிந்து கொள்பவர்களாக இருந்து, நம்முடைய ஆதி பெற்றோர்கள் தொடர்ந்து புசிக்கிறவர்களாக இருந்திருந்தால், அவர்களை வாழ அனுமதித்ததற்கும், மற்றும் அவர்கள் ஒருபோதும் மரணமடையத் தேவை இல்லாத அளவுக்கு அவர்களுடைய அமைப்புகளின் பராமரிப்புகளுக்குத் தேவையான எல்லாவற்றையும் அளித்திருக்கும் என்ற பார்வையில் இந்த ஜீவ விருட்சங்கள் இருந்தன. வேதாகமத்தின் நம்முடைய புரிந்துகொள்ளுதலின்படி, அவர்கள் எதிராளியின் சோதனைக்குள் வழிநடத்தப்பட்டு, மற்றும் தடைபண்ணப்பட்ட விருட்ச வகைகளை புசித்ததற்கு ஒரு வருஷத்திற்கு முன்னிலிருந்து அந்த ஜீவ விருட்சங்களின் கனிகளை அவர்கள் புசித்துக் கொண்டிருந்தனர். நன்மை தீமை

அறியத்தக்க இந்த விருட்சம் ஒரு விருட்சமாக இருக்கவில்லை, ஆனால் ஒருவகை விருட்சங்களாக இருந்தன, மற்றும் இந்த குறிப்பிட்ட வகையான விருட்சங்களிலிருந்து புசிக்க வேண்டாதவர்களாக இருந்தனர். ஆகவே, தேவன் அவர்களை மரணமடையக்கூடியவர்களாக்கி, ஜீவ விருட்சங்களிலிருந்து விலக்கி, அவர்களை தோட்டத்திலிருந்து வெளியேற்றினார், மற்றும் பண்படுத்தப்படாத பூமிக்குள்ளாக அனுப்பினார். பூமியிலிருந்து எடுக்கப்பட்ட அவர்கள், இந்த பூமிக்குத் திரும்புமட்டும், இங்கே அவர்கள் நிலத்தை உழுகிறவர்களாகவும், முள்ளும் குருக்குகளுடன் போராட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மரணம் தண்டனையாக இருந்தது, மற்றும் கர்த்தர் அவர்களை ஏதேனில் இருக்க அனுமதித்திருந்தால், அவர்கள் பாவிகளாக இருந்திருந்தாலும் கூட, மரணமடையும் நிலைமைக்குள்ளாக வந்திருக்கமாட்டார்கள், ஆனால் மனுஷீக சுபாவத்தின் வீரியம் மற்றும் பலத்தோடு இருந்திருப்பார்கள்.

## ஆதாம் - இரண்டாம் சோதனை ஏன் கொடுக்கப்படுகிறது?

### கே: 6:2 :: கேள்வி (1909) - 2

ஆதாம் ஒரு சோதனையை உடையவராயிருந்து, தோல்வி அடைந்திருந்தால், அவருக்கு மற்றொரு சோதனை இருக்குமா? மற்றும் அப்படி இருந்தால், அது எதற்காக? அவர் முதலாம் சோதனையில் தோல்வி அடைந்தால், அவர் ஏன் உயிர்த்தெழுப்பப்பட வேண்டும்?

**பதில்:** ஆதாம் உயிர்த்தெழுதல் அடையப் போகிறதும், அவனுக்கு மற்றுமொரு சோதனை இருக்கிறது என்பதற்கான காரணம், தேவன் அவ்விதம் சித்தம் உடையவராயிருக்கிற காரணத்தினால் தான் இருக்கும், மற்றும் இது தான் மிகச் சிறந்த காரணமாக இருக்கிறது. இப்போது, ஏன் என்று நீங்கள் அறிய விரும்பினால், ஒருவேளை, நமக்கு சாதகமாக, நாம் சிலவற்றை யூகிக்கலாம். ஆதாமுடைய சோதனை வெறும் சோதனையாக இருந்தாலும், தேவன் ஏற்பாடு செய்ய முடிந்திருக்கிற மிகவும் சாதகமான நிலைமைகளின் கீழ் சில விஷயங்களில் ஆதாம் சோதனையை உடையவனாக இருக்கவில்லை என்பதால், தேவன் இவ்வாறு சித்தம் கொண்டிருப்பதற்கான காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஆதாம் மனதளவில் முழுமையாக திறன்கொண்டவராக இருந்தார், ஆனால் பெரும் சோதனை அவரிடம் வந்தது, மற்றும் அனுபவத்தில் குறைவு காரணமாக அவர் தோல்வி அடைந்தார். பரீட்சை, அல்லது சோதனை எதுவாக இருந்தது?

ஆதாம் வஞ்சிக்கப்பட்டவில்லை என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுவது உங்களுக்கு ஞாபகமிருக்கும்; தான் செய்தது, என்னவென்று அவர் அறிந்திருந்தார், அதாவது, தேவனுடைய கட்டளையை மீறி, விலக்கப்பட்ட கனியை அவன் புசித்தான் மற்றும் இது மரணத்தை அர்த்தப்படுத்தியது. இது குறித்த அறியாமை எதுவும் இருக்கவில்லை. பிறகு அவன் இதை ஏன் செய்தான்? அவன் அனுதாபம் கொண்ட அன்பின் காரணமாக, அவன் இதைச் செய்தான் என்ற கருத்து தான் இந்த விவரிப்பு உள்ளடக்கியதாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அவன் மனைவி இல்லாதவனாக இருந்திருந்தான், மற்றும் பல்வேறு வகைகளான பறவைகள் கீச்சிடுவதையும், மற்றும் மற்ற மிருகங்கள் சில சலசலசப்புகளை உண்டாக்கும் போது, இவைகளெல்லாம் மனுஷனுக்கு திருப்திகரமாக இல்லை. ஆகவே அவனுடைய எலும்பில் எலும்புமாக அவனுடைய மாம்சத்தில் மாம்சமுமாக தேவன் அவனுக்கு மனைவியைக் கொடுத்தார், மற்றும் அந்த இனிமையான தோழமையை அவன் அனுபவித்திருந்தான், மற்றும் அவள் கீழ்ப்படியால் இருந்ததற்கு பின்பு, அவன் அவளை இழக்கப்போவதையும், மற்றும் அவன் மறுபடியும் தனிமையா இருக்கப்போவதையும் உணர்ந்த போது, அவன் கூறினான், நான் அவளுடன் இதை புசிப்பேன் மற்றும் அவளுடன் இறப்பேன். அவள் வெளியே சென்று, பண்படுத்தப்படாத பூமியில் இருந்து மரித்தால், நாம் அவ்விதம் மரிப்பேன். ஆகவே, இது உண்மையில் முதல் மனுஷனுடைய பண்பின் மிகவும் உன்னதமான அம்சமாக இருந்தது, மற்றும் நீங்கள் பார்க்கலாம், அவனுடைய சோதனையின் நிபந்தனை, இதை மிகவும் கடுமையான சோதனையாக்கியது. இப்போது, நமது பரலோக பிதா இந்த மாதிரி கூறுவதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்: ஆதாம், நீ அதைச் செய்த அந்த நேரத்தில், நான் உனக்கு

என்ன செய்ய முடியும், அல்லது என்ன செய்யப் போகிறேன் என்பதையும், மற்றும் நீ கீழ்ப்படிந்திருந்தால், அந்த சமயத்தில் நீ என்ன பெற்றிருக்கலாம் என்பதையும் நீ முழுமையாக அறியவில்லை. இப்பொழுது, ஆதாம், நான் உன்னையும், மற்றும் உன் சந்ததி எல்லோரையும் மீட்கும் நோக்கத்தில் உள்ளேன். என்னுடைய அன்பின் செயல்விளக்கத்தை நீ பெறுவாய், மற்றும் என்னுடைய அன்பின் உயரம், ஆழம், நீளம் மற்றும் அகலத்தை நீ கற்றுக்கொண்ட பின்பு, என்னுடைய பிரமாணத்தை முழுமையாகவும் மற்றும் பூரணமாகவும் கைக்கொள்ளவும், மற்றும் என்றென்றைக்கும் வாழ்வதற்கும் நான் உன்னிடம் எதிர்பார்க்கிறேன். ஆனால் நீ கீழ்ப்படியாவிட்டால், அப்போது நீ இரண்டாம் மரணத்தில் மரிப்பாய் மற்றும் சீர்பொருந்துதலுக்கு மற்றுமொரு வாய்ப்பு ஒருபோதும் இருக்காது.

## சுவீகாரம் - சுவிகாரத்தின் ஆவி யாருக்கு பிரயோகப்படுத்தப்படுகிறது?

### கே: 7:1 :: கேள்வி (1912) - 1

"அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்." "புத்திர சுவிகாரத்தின் ஆவி" என்ற இந்த சொற்றொடர் நம்முடைய கர்த்தர் இயேசுவுக்கு உரித்தாகுமா?

**பதில்:** இல்லை. நம்முடைய கர்த்தர் குமாரன் என்பதைத் தவிர வேறு எவ்விதத்திலும் அவர் ஒருபோதும் இருந்ததில்லை. எந்த பார்வையிலும், அவர் சுவிகாரம் பண்ணப்பட்ட குமாரனாக இருந்ததில்லை. தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்குள் அனுப்பினார். அவர் குமாரனாக உலகத்தில் இருந்த போது, அவருடைய குமாரத்துவம் ஒருபோதும் மறைந்துவிடவில்லை. அவர் சிலுவையின் மரணபரியந்தம், உண்மையுள்ளவராக, குமாரனாக இருந்தார். தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பிய போது, அவர் மேலான மகிமைக்கு உயர்த்தப்பட்டவராக, இன்னும் குமாரனாகவே இருந்தார். "சுவிகாரம்" என்ற வார்த்தை சபையின் அனுபவத்திற்கும் நன்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. தேவன் நம்மை மாம்சத்தில் சுவிகாரம் பண்ணவில்லை. அவர் நம்மை புதிய சிருஷ்டிகளாக மட்டுமே செய்கிறவராயிருக்கிறார். மற்றும் நாம் சுவிகாரத்தினால் புதிய சிருஷ்டிகளாகிறதில்லை, ஆனால் பரிசுத்தஆவியில் ஜெநிப்பப்படுகிறதினால் ஆகிறோம். டயக்லட் சிறந்த மொழிபெயர்ப்பை அளிக்கின்றது.

## விளம்பரம் செய்தல் - எந்த பெயரைப் பயன்படுத்துவது?

### கே: 7:2 :: கேள்வி (1909) - 2

"மில்லியனியல் டாண்", "பாவநிவாரணத்தின் விசுவாசிகள்", "விலையேறப்பெற்ற இரத்தத்தின் விசுவாசிகள்", "வேத மாணவர்கள்" போன்ற பலவகையான தலைப்புகளின் குழப்பத்தைத் தவிர்ப்பதற்கு, உள்ளூர் வகுப்புகள் தங்கள் கூடுகைகளை விளம்பரம் செய்வதற்கு எந்த பெயரை நீங்கள் பரிந்துரை செய்கிறீர்கள்?

**பதில்:** எப்படி விளம்பரம் செய்ய வேண்டும் என்பதை அறிவது மிகவும் கடினமான விஷயமாக இருக்கிறது, இது நமக்கு அல்ல, ஆனால், ஜனங்களால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதிலிருந்து அவர்களைக் காத்துக்கொள்வது கடினமானதாக இருக்கிறது. "தேவனுடைய சபை"; "ஜீவனுள்ள தேவனுடைய சபை"; "கிறிஸ்துவின் சபை". இந்த பெயர்களில் எதுவும் நமக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும், மற்றும் அவைகளுக்கு நமக்கு ஆட்சேபனைகள் எதுவும் இருக்காது, ஆனால் அந்த தலைப்புகளை ஒதுக்கீடு செய்து வைத்திருக்கும் பல்வேறு சபை பிரிவுகள் இருக்கின்றன என்பதை நாம் காண்கிறோம், அவைகளை அவர்கள் தங்களுக்காக பயன்படுத்தும் உரிமை உடையவர்கள் என்று நாம் நினைப்பதற்காக இல்லாமல், நாம் சமாதானத்துடன் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். தீர்மானிப்பதற்கு இது கடினமான விஷயமாக இருக்கிறது, மற்றும் ஒவ்வொரு வகுப்பும் தாங்களாகவே இதைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## விளம்பரம் செய்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் மனப்பாங்கு.

### கே: 8:1 :: கேள்வி (1910) - 1

சிறிய மாநாடுகள் மற்றும் பயணப் பிரசங்க கூடுகைகளுக்கு விளம்பரம் செய்வதற்கு, மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கு இடையில் சரியான உறவுமுறை எப்படி இருக்க வேண்டும்?

**பதில்:** விளம்பரம் செய்வதற்கு, இந்த விஷயத்தில் யார் மேற்பார்வை செய்ய வேண்டும் - எங்கு கவனிக்கப்பட வேண்டும்? விளம்பரம் குறித்தான கட்டளைகள் தலைமை அலுவலகத்திலிருந்து வருவது தான் சரியான வழிமுறையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது, ஏனெனில் அங்கே நாம் அதிக அளவிலான அனுபவத்தை உடையவர்களாக இருக்கிறோம்; மற்ற ஜனங்களை விட நாம் அறிவுள்ளவர்கள் என்ற காரணத்தினால் அல்ல. ஆனால், அங்கே அந்த பணியைச் செய்வதற்கு ஒப்படைக்கப்பட்டவர்கள் தனிச்சிறப்பு வாய்ந்த திறனும், மற்றும் பரந்த அனுபவமும் கொண்ட நபர்களாக கருதப்படுகிறவர்களாகவும், மற்றும் கண்டிப்பாக அப்படி இருக்கிறவர்களாக இருக்கிற காரணத்தினால் தான். மற்றும் உலகத்தின் அநேக பகுதிகளில் மிக அதிகமான விளம்பரத் திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டியவர்களாயிருப்பதால், அந்த ஜனங்களைக் கணிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை இது நமக்கு அளிக்கிறது, இல்லயெனில் இதை அனுபவிக்க இயலாது. ஆகவே, இந்த விஷயத்தில் ப்ரூக்ளினிலிருந்து விசேஷித்த அறிவுரையை அவர்கள் நன்கு எதிர்பார்த்திருப்பார்கள் என்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது. இதற்கு பொறுப்பாக யார் இருப்பார்கள்: ஆவிக்குரிய விஷயங்களுக்கும் மற்றும் சபையின் ஆவிக்குரிய நலன்களைக் கவனித்துக் கொள்வதற்கும் பிரத்யேகமாக ஒரு மூப்பர் தேர்வு செய்யப்படுகிறார். இருப்பினும், விளம்பரம் செய்வது, சபையின் ஆவிக்குரிய நலன்களின் ஒரு பகுதியாக இருக்கிறது; எந்த வகுப்பிலும் மிகச் சிறந்த திறனுக்கு தகுதியாயிருப்பவரை நீங்கள் பெற்றிருக்கும்படி, இது சபையின் ஆவிக்குரிய நலன்களுடன் மிகவும் உன்னிப்பாக அடையாளம் காணப்பட வேண்டும். நீங்கள் இதை மிகவும் நல்ல கரங்களிடம் அளிக்க முடியாது; மற்றும் உண்மையில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் சரியான ஆவி இருக்க வேண்டும், மற்றும் மூப்பர்கள் மத்தியில் இல்லமால், ஆனால் உதவிக்காரர்களின் மத்தியில் சிறந்த திறனுடையவர் இருப்பது காணப்பட்டால், அப்போது இந்த பணி தொடர்பான காரியத்தில் மிக முக்கியமான பங்கை அவர் எடுத்துக்கொள்வதில் சாதகமாக இருந்து, எல்லோரும் மகிழ்ச்சி அடைய வேண்டும். வேறு வார்த்தைகளில் சொன்னால், சத்திய ஊழியம் ஒவ்வொன்றிலும் நாம் எல்லா தனித்தன்மையையும் மூழ்கடிப்பவர்களாக இருக்க வேண்டும், மற்றும் நம்முடைய கணிப்பு, நாம் முடிந்த வரையில் நம்மை இயக்கவும், மற்றும் நம்மை வழிநடத்தவும் கூடிய விதத்தில், குறுகியதும் மற்றும் திருப்திகரமுமான வழியிலும் மற்றும் சிறந்த முறைமைகளைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும், மற்றும் ஞானத்தை வேண்டுகிறவர்களாக இருக்க வேண்டும்.

## விளம்பரம் செய்தல் - முறையானதும் முறையற்றதும்.

### கே: 8:2 :: கேள்வி (1915) -

புகைப்பட நாடக சிருஷ்டிப்பு (PHOTO DRAMA CREATION) அறிவிப்பு பிரசுரங்களின் இடத்தில் விளம்பரம் செய்வதற்கான ஒப்பந்தங்களை வணிகர்களிடம் கோருவது பாபிலோனின் ஆவியைக் காண்பிக்கிறதா?

**பதில்:** "எங்களுடன் விளம்பரம் செய்யுங்கள் மற்றும் இவ்விதமாக நல்ல நோக்கத்திற்காக ஏதாவது பங்களியுங்கள்." என்று ஒரு வணிகரிடம் கூறுவது சரியானதாக இருக்காது. அவ்வாறு செய்யக்கூடாது. இது கர்த்தருடைய நோக்கத்திற்காக பிச்சையெடுப்பதாக இருக்கும், இந்த காரியத்தைச் செய்வதற்கு நமக்கு அதிகாரமளிக்கப்படவில்லை. ஆனால், நான் ஒரு வணிகராக

இருந்தால், மற்றும் சிருஷ்டிப்பின் புகைப்பட நாடக அறிவிப்பில் ஒரு விளம்பரம் செய்வதற்கான வாய்ப்பை நான் பெற்றிருந்தால், நான் எப்போதும் பெற்றிருந்த விளம்பரம் செய்வதற்கான சிறந்த வாய்ப்புகளில் ஒன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் ஆதாயம் பெறுகிறேன் என்று நான் நினைக்கிறேன். 1 டாலர் அல்லது 2 டாலருக்கு, என்னுடைய வணிக அட்டை சுற்றுப்புறம் எங்கும் விநியோகிக்கப்பட முடிந்தால், நான் கூறுவேன், "நாடகம் பற்றிக் காண்பிக்கிற இந்த சிறிய துண்டுபிரசுரங்கள் ஜனங்களுக்கு ஆவலைத் தூண்டுவதாய் இருக்கும்; மற்றும் படங்களைப் பற்றிய குறிப்புரைகளை வாசிக்கும் போது, என்னுடைய வியாபாரம் பற்றியும் அவர்கள் வாசிப்பார்கள்." என்னுடைய பணத்திற்கு நல்ல மதிப்பு எனக்கு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். எந்த மனுஷனாவது, தான் நல்ல மதிப்பை பெறுகிறதில்லை என்று நினைப்பானாகில், அவர் தன்னுடைய விளம்பரத்தை அதில் போட வேண்டியதில்லை. இது முற்றிலும் வியாபார நடவடிக்கையாகும்.

விளம்பரத்தைக் கோரும்போது, ஒருவர் மதம் சம்பந்தமான அம்சத்தைக் குறிப்பிடக்கூடாது. நாங்கள் இதை செய்வதே இல்லை. வணிகர்களைப் பொருத்த வரையில், இது முற்றிலும் வியாபாரம் ஆகும்; அவர்கள் தேர்வு செய்கிற எல்லாவற்றையும் விளம்பரம் செய்வதற்கு நான் அவர்களை விட்டு விடுவேன். காவற் கோபுரத்தில் விளம்பரங்களை நான் அனுமதிக்கிறதில்லை என்பது, அவ்வாறு செய்வது தவறு என்று சுட்டிக்காட்டுகிறதில்லை. வணிகர் தன்னுடைய பொருட்களை விளம்பரம் செய்வதில் தவறு எதையும் நான் பார்க்கவில்லை. நான் தினசரி செய்தித்தாள் பிரசுரிக்கிறவராக இருந்தால், விளம்பரம் செய்வதற்கான இடத்தை விற்பதற்கு நான் எதிர்பார்ப்பேன்.

ஒரு செய்தித்தாளை சொந்தமாக வைத்திருக்கும் ஒரு சகோதரர் தன்னுடைய விளம்பரம் செய்வது தொடர்பாக என்னிடம் கொஞ்சம் ஆலோசனை செய்தார். அவருக்கு அருகாமையில் வணிகர்கள் விளம்பரம் செய்யும் வழக்கம் உடையவர்களாக இருந்தனர், மற்றும் சிறப்பாக விளம்பரம் செய்கிறவர்களில் சிலர் மது மற்றும் புகையிலை வியாபாரம் செய்கிறவர்களாக இருந்தனர் என்று கூறினார். நான் மது சம்பந்தமான விளம்பரங்களை நான் போடுவதில்லை என்று நான் அவரிடம் கூறினேன். நான் செய்தித்தாள் நடத்துகிறவராக இருந்தால், காலணிகள், அல்லது ஆடைகள், அல்லது மளிகை சாமாண்கள், அல்லது வன்பொருள்கள் தொடர்பான விளம்பரங்களைப் போடுவேன், மற்றும் இப்படிப்பட்ட விளம்பரங்களைக் கோருவேன். செய்தித்தாள்களில் விளம்பரங்கள் இருப்பதில் தவறு எதுவும் இருப்பதாக நான் பார்க்கவில்லை. விளம்பரப்படுத்தப்படும் பொருட்கள், ஒவ்வொருவரும் வாங்க விரும்புகிற தேவையான பொருள்களாக இருந்தால், காவற் கோபுரத்தில் விளம்பரங்களின் ஆறு அல்லது எட்டு பக்கங்களை வைப்பதில் தவறு ஏதும் இருப்பதாக நான் பார்க்கவில்லை. ஆனால், காவற் கோபுரம் வீட்டிற்குள் செல்வதாகவும், மற்றும் விசேஷமான முறையில் என்னை அடையாளப்படுத்துகிறதினால், எல்லா இடத்தையும் மதம் தொடர்பான விஷயத்திற்கு பயன்படுத்துவதற்கு நான் விரும்புகிறேன் - இருப்பினும், விளம்பரங்கள் தவறு என்ற காரணத்திற்காக அல்ல.

ஒரு சமயம் காவற் கோபுரத்தில் அற்புத கோதுமை (MIRACLE WHEAT) பற்றிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டோம். உங்களில் அநேகர் இதை பார்த்தீர்கள், அந்த அறிவிப்பை போடுவதில் நாங்கள் சரியாக செய்தோம் என்று நாங்கள் நம்புகிறோம். சில வகையான அவரை விதைகள் பற்றிய அறிவிப்பும் மற்றும் விசேஷமான பஞ்சு பற்றியும் கூட, ஒரு அறிவிப்பில் நாங்கள் போட்டோம். இந்த அறிவிப்புகள் ஒவ்வொன்றினாலும் நண்பர்களில் சிலர் பயன் பெற்றனர். சமீப காலத்தில், புற்று நோய் குணப்படுத்துதல் பற்றி ஒரு அறிவிப்பு கூட நாங்கள் வெளிட்டோம். நூற்றுக்கணக்கான கடிதங்களை சத்தியத்திலுள்ள நண்பர்களிடமிருந்தும், மற்றும் நூற்றுக்கணக்கானவைகளை மற்றவர்களிடமிருந்தும் நாங்கள் பெற்றிருக்கிறோம்; மேலும் திரளானவர்கள் நல்ல விளைவுகளை சொல்லியிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, இது சத்தியத்தை முன்னோக்கி நகர்த்துவதில் உதவி புரிந்திருக்கிறது. நாம் அவர்களுடைய பணத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கவில்லை என்பதை ஜனங்கள் பார்த்தார்கள், அவர்களுக்கு

நாம் அவர்களுக்கு நன்மை செய்ய முயற்சிக்கிறோம் என்று பார்த்தார்கள், மற்றும் ஆர்வமுடையவர்களானார்கள்.

## ஆசைகள் - மாம்சத்தின் ஆசைகளை சிலுவையிலறைதல்.

### கே: 9:1 :: கேள்வி (1907) - 1

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்." இது அர்ப்பணிக்கப்பட்ட சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இடையே அவசியமற்ற ஆசைகளையும் உள்ளடக்கியதாக இருக்கின்றனவா? இது நமது பலியின் ஒரு பங்காக இருக்கிறதா?

**பதில்:** இப்படிப்பட்ட பத்தியை இந்த வகையில் புரிந்துகொண்டால், இத்துடன் வேதாகமத்தின் மற்ற பத்திகளையும் புரிந்துகொள்வதற்கு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், ஆகவே நாம் சரியான வரம்புக்குள் இருக்கிறோம் என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். வேதாகமத்தின் ஒரு பத்தி, தேவனுடைய முழு செய்தியையும் உள்ளடக்க முடிந்தால், நாம் முழு வேதாகமத்தையும் பெற்றிருக்கமாட்டோம். ஆகவே இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை, கர்த்தருடைய வழியில், மற்றும் அநேக விஷயங்களில் கர்த்தருடைய சித்தத்தையும் புரிந்துகொண்டால், இந்த பாடத்தை உள்ளடக்கியிருக்கக்கூடிய வேத வாக்கியங்கள் எல்லாவற்றின் விரிவான பார்வையை நாம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

இப்போது, அப்போஸ்தலர் கொரிந்தியருக்கு எழுதின தம்முடைய நிருபத்தில், புருஷர்களுக்கும் மனைவிகளுக்கும் இடையே இருக்க வேண்டிய சில குறிப்பிட்ட உறவுகளைக் குறித்து விவரிக்கிறார். அங்கே அவர் ஒருவர் மற்றவரை ஏமாற்றக்கூடாது என்று குறிப்பிடுகிறார், மற்றும் பின்பு, கர்த்தருக்குள், புருஷன் மற்றும் மனைவிக்கு இடையே உறவுமுறை தொடர்பான இரண்டு தரப்பிலும் இருக்க வேண்டிய குறிப்பிட்ட வரம்புகளைப் பற்றிய விஷயத்தை அவர் சொல்கிறார். இயல்பான மனுஷன் மற்றும் இயல்பான ஸ்திரீக்குச் சொந்தமாக இருக்கின்ற ஒவ்வொன்றையும் முழுமையாக நீக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டாமல், , இவைகளை சிலுவையில் அறைந்து, மாம்சத்தின் ஆசைகள் மற்றும் இச்சைகளையும் ஒப்புக்கொடுத்து, உயர்வான தளத்தில் அவர்கள் வாழ்வதற்கு நாடுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துகிறது, , மற்றும் தங்களுக்கும், மற்றும் எல்லாவற்றையும் கர்த்தருடைய மகிமைக்கும், மற்றும் அவர்கள் தொடர்புகொள்ளக்கூடிய மற்றவர்களின் பெரிதான நன்மைக்காகவும், அவர்களுடைய நேரத்தையும், ஆற்றலையும் செலவழிக்க வேண்டும் என்று கூறுவது போதுமான அளவு சரியான கருத்தாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, நம்முடைய ஆசைகளையும் மற்றும் நம்மையும் கர்த்தருக்கு இவ்விதம் ஒப்புக்கொடுப்பது என்பது, நம்முடைய வரம்புகளின்படி இருக்கிறது என்று அர்த்தப்படுத்துகிறது - - இந்த வரம்புகள் எந்த இரண்டு நபர்களுடன் ஒரே மாதிரி இருப்பதில்லை, ஆனால் ஒவ்வொருவரும் தன் சொந்த மாம்சத்தின் வரம்புகளின்படி - - ஒவ்வொருவரும் தன்னுடைய மனதின் எண்ணங்கள் கர்த்தருடனும், அத்துடன் ஜீவியத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் இணக்கமாக இருக்கும் விதத்தில், ஒவ்வொருவரும் தன்னை அந்த அளவுக்கு அடிபணியச் செய்ய நாட வேண்டும். இது ஒரு பொதுவான கொள்கை ஆகும். நீங்கள் மற்ற சகோதரன் அல்லது சகோதரிக்கு பிரயோகப்படுத்த முடியும் என்ற விதத்திலான கொள்கையாக இது இருப்பதில்லை; அவர்கள் அதை தங்களுக்காக பிரயோகப்படுத்திக் கொள்ள வேண்டும், மற்றும் இதை நீங்கள் உங்களுக்கு பிரயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்; ஒவ்வொருவரும் தான் நம்புகிறதை, கர்த்தருடைய மகிமைக்காகவும், மற்றும் தன்னுடைய நன்மைக்காகவும், மற்றும் மற்றவர்களுக்காகவும் தன்னுடைய திறமைக்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும். இது தான் வேதாகமம் சொல்லுகிற நிதானமான அளவாக இருக்கிறது.

## உபத்திரவங்கள் - கிறிஸ்துவினுடையவைகள் யாருக்கு பிரயோகிக்கப் படுகிறது?

## கே: 10:1 :: கேள்வி (1910) - 1

கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காக, பரிசுத்த. பவுலின் நிறைவேற்றுதல் சபையின் சார்பாக இருந்தால், இந்த வேத வாக்கியத்தை கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடாவின் நிஜமாக, உலகத்தின் சார்பாக, சபை பாடுபடுகிறது என்று அர்த்தப்படுத்துவதாக எப்படி பயன்படுத்த முடியும்? பவுல் தம்முடைய பாடுகள் சபைக்காக இருந்தன என்று கூறுகிறாரே? இந்தப் வசனப்பகுதி சபைக்காக பிரயோகப்படுத்துகிறதா, அல்லது பவுலுக்காக மட்டுமா?

**பதில்:** சபையும் மற்றும் கிறிஸ்து எல்லோரும் அதே பாடுகளை, அதே நோக்கத்திற்காக அனுபவிக்கிறார்கள். கிறிஸ்துவின் பாடுகளில் பங்காளிகளாகப் போகிறோம், மற்றும் வேறு எந்த வகையான பாடுகளில் அல்ல. நீங்கள் உலகத்தாருக்காக பாடனுபவிக்கிறதில்லை, மற்றும் வெள்ளாட்டுக்கடா உலகத்தாருக்காக பாடனுபவிக்கவில்லை - இல்லவே இல்லை. வெறுமனே கொல்வது பாடுகளாக இருக்கின்றன. இரத்தத்துடன் செய்யப்பட்டதுடன், வெள்ளாட்டுக்கடா செய்வதற்கு ஒன்றுமில்லை. சிலர் அதை மறந்துவிடுகின்றனர். காளையை கொல்வது மற்றும் வெள்ளாட்டுக்கடாவை கொல்வது எல்லாம் நிழலாக இருந்தன என்பதை மறப்பதற்கு நாம் தகுந்தவர்களாக இருக்கிறோம். காளையை யார் கொன்றார்? பிரதான ஆசாரியன். வெள்ளாட்டுக்கடாவைக் கொன்றது யார்? பிரதான ஆசாரியன். பிறகு வெள்ளாட்டுக்கடா தன்னைத் தானே கொல்லவில்லை. இது செய்ததா? இல்லை. இங்கு கவனிக்கத்தக்க விஷயம் இதுவே: கர்த்தருடைய ஜனங்களுக்காகவும், மற்றும் கர்த்தருடைய நோக்கத்தின் விருப்பத்தில், அவருடைய ஜீவனை ஒப்படைக்கச் செய்வதில் அவர் பிரியமுடன் இருந்தார் என்று நம்முடைய பரலோக பிதா இயேசுவிடம் கூறினார், மற்றும் அவ்வாறு செய்வதில் இயேசு தம்முடைய உண்மைத்தன்மையைக் காண்பித்தார்; நாம் போய், அதே மாதிரி செய்ய வேண்டும், மற்றும் சகோதரர்களுக்காக நம்முடைய உண்மைத் தன்மையை காண்பிப்பதில் நம்முடைய ஜீவனை ஒப்படைக்க வேண்டும் என்று இயேசு உங்களுக்கும் எனக்கும் கூறினார். இப்போது, நீங்கள் இதனுடன் செய்வது எல்லாம் இதுவாகவே இருக்கிறது. தேவன் அதற்கு எப்படி வெகுமதி அளிப்பார் என்பதைப் பார்க்கும் போது, நாம் செய்வதற்கு எதுவும் இல்லை. சகோதரர்களுக்காக நீங்கள் உங்கள் ஜீவனை ஒப்படைத்தால், தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற வெகுமதி என்னவெனில், சபையாகிய, கிறிஸ்துவின் சரீர அங்கமாக நீங்கள் இருப்பீர்கள். இயேசு சகோதரர்களுக்காக தம்முடைய ஜீவனை ஒப்படைத்தால், அவர் மகிமையின் இராஜாவாக, மாபெரும் மேசியாவாக இருப்பார் என்பது இயேசுவுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெகுமதியாக இருந்தது. உங்களுக்கும், எனக்கும் உள்ள வாக்குத்தத்தம், அவருடைய சரீரத்தில் அங்கங்களாக இருப்போம் என்பதாகும். உலகத்தாருக்கு சில காரியங்கள் விளைவாக வர வேண்டும் என்பது அவரிடம் தேவனுடைய வாக்குத்தத்தமாக இருக்கவில்லை. இயேசுவின் இரத்தம் உலகத்தின் பாவத்திற்கான மன்னிப்பைக் கொண்டு வரப்போகிறது, மற்றும் உங்களுடைய பலியினால் செய்யப்படுகிற எதுவும் உண்மையில் உலகத்தாருக்காக அவரால் எண்ணப்படுகிறதாக இருக்கின்றது, ஆனால் அதனுடன் செய்வதற்கு ஒன்றும் இல்லை; அது உங்களுடைய பங்கு இல்லை; நீங்கள் உங்களுடைய ஜீவனை ஒப்படைப்பது, கர்த்தர் கட்டளைட்டபடி உங்களுடைய ஜீவனை பலியாக்குகிறீர்கள் என்ற பார்வையில் உள்ளது; அவர் இரத்தத்துடன் பிற்பாடு செய்யப் போவதில் நீங்கள் செய்வதற்கு ஒன்றும் இல்லை; அது உங்களுக்கு சம்பந்தம் இல்லை. உங்களுடைய பங்கு உங்களுடைய பங்கை செய்வதாயிருக்கிறது, மற்றும் என்னுடைய பங்கு என்னுடையதை செய்வதாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுகிறோம், அவர் கொண்டிருந்ததும், மற்றும் அதே நோக்கத்திற்கானதுமான அதே பாடுகளாக இருக்கின்றன.; அவைகள் எல்லாம் சபையாகிய, கிறிஸ்துவின் சரீரத்திற்காக செல்கிறது.

நீங்களும் நானும் சபைக்கு ஊழியம் செய்கிறோம்; நாம் உலகத்துக்கு ஊழியம் செய்கிறதில்லை. அந்த பலியின் புண்ணியத்துடன் தேவன் என்ன செய்யப் போகிறார் என்பது ஒட்டுமொத்தமாக வேறு விஷயமாக இருக்கிறது.

## முற்பிதாக்கள் - இரண்டாம் மரணம்.

### கே: 11:1 :: கேள்வி (1907) - 1

முற்பிதாக்களில் எவரேனும் இரண்டாம் மரணத்திற்குள் சென்றிருக்கும் சாத்தியம் இருந்திருக்கிறதா?

**பதில்:** நான் நினைக்கவில்லை. முற்பிதாக்களின் காலத்தில், தேவன் உலகத்தாருக்கு சலுகை எதையும் கொடுத்திருந்ததில்லை. மற்றும் அவர்கள் ஆதாமின் மரணத்திலிருந்து விடுவிக்கப்படாததால், அவர்கள் இரண்டாம் மரணத்திற்குள்ளாக சென்றிருக்க முடியாது. ஆகவே, நீங்கள் பார்க்கலாம், ஆதாமின் பாவத்திற்காக கிறிஸ்து மரித்திராத வரைக்கும், உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோருக்கும் நியாயாதிபதியாவதற்கு மரித்தோரிலிருந்து அவர் எழுந்திராத வரைக்கும், ஆதாமின் மரணத்திலிருந்து எவரும் வெளியே வருவதற்கான சாத்தியம் அப்போது இல்லாத வரைக்கும், மற்றும் அவர்கள் ஆதாமின் மரணத்திலிருந்து வெளியே வரும் வரைக்கும், அவர்கள் இரண்டாம் மரணத்திற்குள் போகமாட்டார்கள்.

## முற்பிதாக்கள் - ஆவிக்குரிய ஜீவனை எப்படி பெறுவார்கள்?

### கே: 11:2 :: கேள்வி (1908) - 2

சுவிசேஷ யுகத்தில் வாழக்கூடியவர்கள், மற்றும் இந்த யுகப்பகுதியில் ஜெநிப்பிக்கப்பட்டும், மற்றும் அதன் விளைவாக புதிய சிருஷ்டியாக பிறக்கிறவர்களாகிய, ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறவர்கள் மட்டும் என்பது உண்மையானால்; ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறவர்கள் மட்டுமே ஆவிக்குரிய சரீரங்களையும், மற்றும் ஆவிக்குரிய ஜீவனையும் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்க முடியும் என்பது உண்மையானால், சுவிசேஷ யுகத்திற்கு முன் வாழ்ந்து, மற்றும் மரித்தவர்கள் மனுஷீக பூரணத்துவத்தை விட மேலாக எதையும் எப்போதும் எப்படி பெற முடியும்? ஆயிர வருஷ யுகத்தில், அல்லது அந்த யுகத்தின் முடிவைத் தொடர்ந்து, அவர்களுக்கு எப்படி ஆவிக்குரிய சுபாவம் எப்போதும் அளிக்கப்பட முடியும்?

**பதில்:** ஒரு வருஷத்திற்கு முன்பு, சகோதரர் உட்வொர்த் அவர்களுக்கு கடிதம் எழுதும் போது, முற்பிதாக்கள் ஆயிர வருஷ யுகத்தின் முடிவில் ஆவிக்குரிய சுபாவங்களைப் பெறுவார்கள் என்ற இந்த முடிவுக்கு என்னைக் கொண்டுவந்த ஏதோ ஒன்றை நான் தற்செயலாகக் குறிப்பிட்டேன்; இது திட்டமானதாக இல்லை, ஆனால் நான் நினைப்பது நியாயமானதாக இருக்கிறது, மற்றும் இது ஒவ்வொருவருக்கும் அப்படி இல்லாமல் இருந்தாலும், என் மனதுக்கு திருப்திகரமாக இருந்தது; நான் இந்த விஷயத்தை சகோதரர் உட்வொர்த்திடம் விவாதிக்க முயற்சி செய்யவில்லை, மற்றும் இதை அழுத்தமாக முன்வைக்கவில்லை. ஆனால் அவர் அந்த கருத்தைப் பற்றிக்கொண்டார் மற்றும் அவர் எனக்குத் திரும்ப எழுதிய கடிதத்தில், அவர் அந்த விஷயத்தை தற்செயலாகக் குறிப்பிட்டார், மற்றும் அந்த கடிதம் பிரசுரிக்கப்பட்டது, மற்றும் அந்த பகுதியை நான் நீக்க மறந்து விட்டேன். இப்போது நான் கூறுகிறேன், அந்த பாடத்தைப் பற்றிய ஒரு கட்டுரையை காவற்கோபுரத்தில் எழுதப் போவது என் நோக்கமாக இருக்கின்றது. கொஞ்ச காலத்திற்கு பின்பு, நான் இதைச் செய்ய நோக்கமாயிருக்கிறேன்; இதற்கான சான்று கேட்டு, அதிகளவில் அநேக கடிதங்களை நான் பெற்றிருக்கிறேன், மற்றும் இந்த கேள்விக்கான பதிலை இப்போது நான் கொடுக்க முடிவதைக் காட்டிலும்,, சீக்கிரத்தில் இதை சிறந்த முறையில் நீங்கள் பெறுவீர்கள். ஆகவே இது திருப்தியாக்கும் என்று நான் நம்புகிறேன்.

## முற்பிதாக்கள் - அவர்களுடைய சோதனை.

### கே: 11:3 :: கேள்வி (1910) - 3

முற்பிதாக்களில் எவரும் இரண்டாம் மரணத்திற்குள்ளாகப் போகமாட்டார்கள் என்று நமக்கு உறுதிப்படுத்தும் விதமாக, அவர்கள் போதுமான அளவுக்கு சோதிக்கப்பட்டிருக் கிறார்களா? அவர்கள் மனதளவிலும் மற்றும் உடலளவிலும் மட்டும் பூரணமாக இருப்பார்களா?

**பதில்:** குணம் பற்றியவற்றில் அவர்கள் போதுமான அளவிற்கு சோதிக்கப்பட்டிருக்கிறார்களா என்பது பற்றி நான் அறியவில்லை. எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் பரிசுத்த, பவுலின் அறிவிப்பின்படி, வெளிப்படையாக கர்த்தர் இந்த முற்பிதாக்கள் மற்றும் அவர்களின் உண்மைத்தன்மை பற்றி மிக உயர்வான மதிப்பு கொண்டவராக இருக்கிறார், மற்றும் அவர்கள் தமக்குப் பிரியமானவர்கள் என்று தேவன் சுட்டிக்காட்டியிருக்கிறார். இப்போது நீங்களும் நானும் நம்முடைய கணிப்பை உபயோகப்படுத்த வேண்டும் - இதை நாம் செய்யக்கூடியவர்களாக இருக்கவில்லை - ஆனால் நம்முடைய கணிப்பை நாம் உபயோகப்படுத்துகிறவர்களாக இருந்தால், உதாரணமாக, சிம்சோனைப் போன்ற விஷயத்தில், மேற்கொண்டு சோதிக்கும் தேவைக்கு அப்பால் இருக்கும் விதத்தில், சிம்சோன் தெய்வீக குணத்திற்கு போதுமான சாயலின் குணத்தை ஏற்கனவே வளர்ச்சிபெறச் செய்திருக்கிறாரா என்பது நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குவதாக இருக்கிறது. அவனுடைய வாழ்க்கை பற்றிய குறைவான விவரம், கழுதையின் தாடையெலும்பினால் பல ஆயிரம் பேர்களை சங்கரித்தது, மற்றும் அவனுடைய தலை மயிர் சிரைக்கப்பட்டது, போன்றவை அவன் நற்குணம் உடையவன் என்று நமக்கு சான்றாக இருக்கவில்லை; இருப்பினும், கர்த்தரைப் பிரியப்படுத்தும் விதத்தில் சிம்சோனுடைய குணம் பற்றி ஏதோ ஒன்றை கர்த்தர் பார்த்தார் என்பதற்கான பதிவு இருக்கிறது, மற்றும் நீங்களும் நானும் இந்த விஷயத்தில் வெளிப்படையாகத் தகுதியுடையவர்கள் இல்லை. ஆனால் நாம் பார்ப்பது இதுவே: தேவன் தம்முடைய ஏற்பாட்டில் முற்பிதாக்களின் முழு எண்ணிகையினரையும் புதிய உடன்படிக்கையின் கீழ் வைத்திருக்கிறார். மற்றும் இது அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக உள்ளது என்று நாங்கள் எண்ணுகிறோம், ஏனெனில் அவர்கள் பங்கில் பின்னடைவுகள் ஏதும் இருந்தாலும், அவர்கள் இன்னும் புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தரின் மறைக்கும் வல்லமையின் கீழ் இருப்பார்கள், மற்றும் ஒவ்வொரு விஷயத்திலும் சரியான ஆவியை சரியான முறையில் செயற்படுத்துவதில் அவர்களுடைய புத்தியீனங்கள், அல்லது குறைபாடுகள்: அல்லது தோல்விகள் அனைத்தும் மாபெரும் மத்தியஸ்தரின் கண்காணிப்பின் கீழ் வரும். ஆகவே, முற்பிதாக்கள் புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டின் கீழ், மற்றும் மாபெரும் மத்தியஸ்தரின் கீழ் இருப்பார்கள் இது மிகச் சிறந்ததாகவும் மற்றும் மிக நேர்த்தியானதாகவும் இருக்கிறது என்று நாங்கள் நினைக்கிறோம்.

## முற்பிதாக்கள் - ஜீவனுக்கான சோதனை?

### கே: 12:1 :: கேள்வி (1910 - Z) - 2

முற்பிதாக்கள் ஜீவனுக்கான சோதனையில் இருந்தார்களா?

**பதில்:** முற்பிதாக்கள் ஜீவன், அல்லது மரணத்திற்கான சோதனையில் இருக்கவில்லை; அவர்களை மரண தண்டனையிலிருந்து மீளுகிறவர்களாகச் செய்யும் நித்திய ஜீவனுக்கான விவேகமான வாய்ப்பின் நிலைமைக்குள் அவர்கள் ஒருபோதும் கொண்டுவரப்படவில்லை. நம்முடைய கர்த்தர் வரும் வரைக்கும், இப்படிப்பட்ட அறிவு, மற்றும் வாய்ப்புக்கான நிலைமை உலகத்தாருக்குக் கிடைக்கவில்லை. “கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.” “அவர் ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்.” இவைகள் கர்த்தருடைய காலத்திற்கு முன் ஒருபோதும் வெளிப்படுத்தப்படவில்லை, மற்றும் இதன் விளைவாக இப்படிப்பட்ட பொறுப்பு, இப்பொழுது இருக்கிறபடி, வந்திருக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட பார்வையில், யூத ஜாதி நிழலாக நீதிமான்களாக்கப்பட்டிருந்தது, மற்றும் ஜீவன் மற்றும் மரணத்திற்கான சோதனையில் நிழலாக்கப்பட்டிருந்தது, நித்திய ஜீவன் மற்றும் மரணத்தைப் பொருத்தவரையில் இது ஒரு நிஜமாக இருக்கவில்லை, ஏனெனில் அவர்கள்

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாது, மற்றும் இதன் கீழ் நித்திய ஜீவனை அவர்கள் ஒருபோதும் அடைய முடியாது என்பதை தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார்; இந்த விஷயத்தில் அவர்கள் தாங்களாக செய்த எதையும் பொருட்படுத்தாமல், அவர்கள் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்கப்பட வேண்டும் என்று அவர் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தார். ஆகவே, இது, அவர்கள் ஜீவன், அல்லது மரணத்திற்கான சோதனையில் அவர்கள் நிழலாக, அல்லது உருவகமான பார்வையில் மட்டுமே இருந்தனர்.

முற்பிதாக்கள் "தேவனுக்கு பிரியமானவர்களென்று நற்சாட்சிப் பெற்றார்கள்." அவர்கள் தேவனுடைய சித்தத்தை உறுதி செய்த போது, அவர் இதை அவர்களுக்கு ஒரு பிரமாணமாக, அல்லது கடமையாக அளிப்பதற்கு முன்பாகவே, அவருக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று அவர்களைக் கேட்பதற்கு முன்பாகவே, மற்றும் அவர்களுடைய கீழ்ப்படிதலுக்காக, நித்திய ஜீவனை வாக்குத்தத்தம் பண்ணுவதற்கு முன்பாகவே, அவர்கள் இதில் தேவனை பிரியப்படுத்தினார்கள். உலகத்தில் மீட்பு இன்னும் நிறைவேற்றப்படாமல் இருந்த போதும், ஆபிரகாம் தேவனிடத்தில் அவருடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினார். கிறிஸ்து இன்னும் வந்திருக்கவில்லை. மற்றும் ஆபிரகாம் ஜீவன் மற்றும் மரணத்திற்கான சோதனையில் இல்லாமல் இருந்தாலும். தேவன் தம்முடைய சலுகையை ஆபிரகாமுக்கு அளித்தார், மற்றும் அவர் தமக்கு பிரியமானவர் என்று அறிவித்தார். மற்றும் அவருடைய வார்த்தை நமக்குச் சொல்கிறது, "மேன்மையான உயிர்த்தெழுதல்" ஆபிரகாமுக்கு மட்டும் இல்லாமல், இந்த முற்பிதாக்கள் அனைவருக்கும் உள்ளது - - மனுஷீக பூரணத்திற்கான உயிர்த்தெழுதல். ஆனால் மனுஷீக பூரணம் கிறிஸ்துவின் மத்தியஸ்த ஆட்சியின் கீழ் மட்டும் வரக்கூடியதாக இருக்கிற காரணத்தால், ஆயிர வருஷ யுகத்தின் முடிவு வரையில் முழுமையான பார்வையில் முற்பிதாக்கள் பிதாவிடம் அறிமுகப்படுத்தப்படமாட்டார்கள்.

ஆகவே, அந்த காலம் வரைக்கும், ஆயிர வருஷ யுகத்தின் முடிவில், இராஜ்யம் பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படும் வரையிலும், இந்த முழுமையான பார்வையில், அவர்கள் ஜீவனைப் பெறமாட்டார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் மனுஷீக சுபாவத்தின் பூரணத்தையும், மற்றும் மாபெரும் மத்தியஸ்தர் மூலமாக மனுக்குலத்திற்கு அளிக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் உடையவர்களாக இருப்பார்கள்., ஆனால் அவர்கள் ஆயிர வருஷ யுகத்தின் முடிவு வரையில், நித்திய ஜீவனுக்கு தகுதியாகத் தீர்மானிக்கப்படப்போகிற வரைக்கும், அவர்கள் தேவனுக்குள்ளாக உண்மையான, மற்றும் சொந்த உறவுமுறைக்குள் வரமாட்டார்கள். ஏனெனில் தற்காலத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறவர்களைத் தவிர, அந்த யுகம் மனுக்குலம் அனைத்திலிருந்து நித்திய ஜீவனைப் பெறத்தகுதியானவர்களைத் தீர்மானிக்கும் அதே நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டு இருக்கிறது. ஆயிர வருஷ யுகத்தின் முடிவில், மனுக்குலம் முழுவதும் பூரணமுள்ளவர்களாக இருக்கும் போது, நித்திய ஜீவனுக்கான அவர்களின் தகுதி, அல்லது தகுதியின்மைக்காக அவர்கள் பிதாவினால் சோதனைக்குட்படுவார்கள் - ஆதாமைப் போல, பூரணத்தை அனுபவித்த சமயத்தில், நிரந்தரமான, அல்லது நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அவன் தகுதியுள்ளவனா, அல்லது இல்லையா என்று சோதிக்கப்பட்டான்.

புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் முற்பிதாக்கள் உலகத்தாரின் ஒரு பகுதியாக இருப்பதால், ஆயிர வருஷ யுகம் முடிவு பெறும் வரைக்கும், அந்த யுகத்தின் முடிவில் சோதனை முடிவுபெறும் வரைக்கும், நித்திய ஜீவனுக்கான அவர்களுடைய தகுதி தொடர்பாக, தெய்வீக நீதி, தெய்வீக நீதிமன்றத்தின் இந்த முடிவை அவர்கள் பெறமாட்டார்கள். இந்த சோதனையின் முடிவு, மாபெரும் வெகுமதியான நித்திய ஜீவனை உண்மையுள்ளவர்களாக இருக்கிற மற்றவர்களுக்குக் கொண்டுவருவது போன்று, முற்பிதாக்களுக்கும் கொண்டுவரும்.

## முற்பிதாக்கள் - ஆயிர வருஷ யுகத்தில் தேவனுடன் உறவு.

### கே: 13:1 :: கேள்வி (1911) - 1

ஆயிர வருஷ யுகத்தில் முற்பிதாக்கள் தேவனுடன் உறவுமுறைக்குள் இருப்பார்களா?

**பதில்:** ஆம், நாங்கள் பதிலளிக்கிறோம், புதிய உடன்படிக்கையின் மூலமாக புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மூலமாக, ஆயிர வருஷ யுகம் முழுமைக்கும் முற்பிதாக்கள் தேவனுடன் உடன்படிக்கை உறவுக்குள் இருப்பார்கள்; ஆனால் ஆயிர வருஷ யுகத்தின் முடிவு வரையில் அவர்கள் தேவனுடன் சொந்தமான எந்த முறையில், நேரிடையான உறவுக்குள் இருக்கமாட்டார்கள். ஆயிர வருஷ இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பெறுகிற எல்லோரும், மாபெரும் மத்தியஸ்தர் மூலமாகவும், மற்றும் சகல கோத்திரங்கள், பாஷைக்காரர்கள், ஜனங்கள் மற்றும் ஜாதிகளின் சார்பாக அவர் தமது இரத்தத்தினால் முத்திரிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் மூலமாகவும் அவைகளைப் பெறுவார்கள். தேவனிடத்தில் தங்களின் உண்மைத்தன்மையை ஏற்கனவே எடுத்துக்காட்டியிருக்கிற முற்பிதாக்கள் விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெறுகிறவர்களாய், அவர்கள் பூரணத்துவத்தை படிப்படியாக செயல்முறைகளினால் அடையாமல், மாம்சத்தில் பூரணமுள்ளவர்களாக வெளிவருவார்கள்; அவர்கள் பூரணமுள்ள மாம்சீக சரீரங்களுடன் வெளிவருவார்கள்; அவர்களுடைய மனங்கள் ஏற்கனவே தேவனுடன் முழுமையாக இணக்கம் கொண்டிருந்ததால், அப்படியே அவர்களுடைய சரீரங்கள் ஆரம்பத்திலேயே தெய்வீக பிரமாணத்திற்கு முழுமையான இணக்கமுள்ளதாக இருக்கும். இருப்பினும், நாம் நம்புகிறோம், அந்த முற்பிதாக்கள் நல்வாய்ப்புடையவர்களாக இருப்பார்கள், மற்றும் அவர்கள் இன்னும் புதிய உடன்படிக்கையின் கீழ் இருப்பார்கள், மற்றும் இன்னும் அந்த மத்தியஸ்தரின் கீழ் இருப்பார்கள்; ஏனெனில் அவர்களுடைய கடந்த கால அனுபவங்கள் எல்லாவாற்றுடன் அவர்கள் சில தோல்விகளை அடைகின்றனர். ஏன்? எப்படி? ஏனெனில் நம்முடைய கணிப்பைப் பொருத்த வரையில், அவர்கள் கணிசமான அளவு அனுபவங்களைப் பெற்றிருந்த நிலையில், சபைக்கு வரக்கூடிய முழுமையான அனுபவத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை. வேத வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற அந்த முற்பிதாக்களின் மத்தியில், சிம்சோனுடைய பெயரை நாம் கவனிக்கிறோம். தேவனிடத்தில் சிம்சோன் உண்மைத்தன்மையாக இருக்கவில்லை என்று அனுமானிப்பதற்கு, வார்த்தையின் எந்த பார்வையிலும்,, நாம் எந்த காரணத்தையும் உடையவர்களாக இருக்கவில்லை; அவர் உண்மையுள்ளவராக இருந்தார், அவர் கீழ்படிந்தவராக இருந்தார், அவர் தேவனிடத்தில் முழுமையான விசுவாசம் கொண்டிருந்தார். இந்த குணங்களின் காரணமாக, அவர் ஜெயங்கொண்டவராக எண்ணப்பட்டார், மற்றும் அந்த காலத்தின் விசேஷித்த ஆசீர்வாதங்களில் பங்கடைகிறவர்களில் ஒருவராக இருப்பார்; ஆனால், ஒரு பரிபூரண மனுஷனுக்குத் தேவைப்படுகின்ற இந்த எல்லா விஷயங்களின் முழுமையான, பரந்த, பலதரப்பட்ட அறிவை சிம்சோன் பெற்றிந்தார் என்று சொல்வது, முற்றிலும் வேறொரு முன்மொழிவு ஆகும். இந்த முற்பிதாக்களில் சிலர் தங்களுடைய வரம்புக்குட்பட்ட அனுபவங்களுடன், மேசியாவின் ஆட்சியின் காலத்தில் உள்நோக்கமின்றி சில தவறுகளை செய்யலாம் என்பதற்கு முற்றிலும் சாத்தியம் உள்ளது என்று நாங்கள் நினைக்கிறோம். அப்படி இருந்தால், உடன்படிக்கையின் இரத்தத்தின் கீழ் இருப்பதால், அவர்களுக்கும் மற்றும் தெய்வீக நீதிக்கும் இடையே மத்தியஸ்தருடன், இதற்கான தேவை அவர்களுக்கு இருக்கும், மற்றும் இந்த நிலைமையிலிருந்து ஆசீர்வாதம் பெறுவார்கள்.

## முற்பிதாக்கள் - ஆவிக்குரிய சுபாவம்.

### கே: 14:1 :: கேள்வி (1911) - 1

முற்பிதாக்கள் ஆவிக்குரிய சுபாவத்தைப் பெறுவார்கள் என்பது உங்கள் கருத்தாக இருக்கிறதா? அப்படியானால், அவர்கள் திரள்கூட்டத்தாரை விட மேலான சுபாவத்தை பெற்றுக்கொள்வார்களா?

**பதில்:** அருமை நண்பர்களே, இதைப் பற்றி தனிப்பட்ட செய்தி எதையும் நான் பெற்றிருக்கவில்லை. இதைப் பற்றி கர்த்தர் எதுவும் என்னிடம் கூறவில்லை. கர்த்தர் சில ஜனங்களிடத்தில் எப்போதும் மிக அதிகமாக பேசுகிறது போலத் தோன்றும் என்பதை நீங்கள் அறிவீர்கள், மற்றும் அதன் காரணமாக, மற்ற எல்லாவற்றையும் கிட்டத்தட்ட அவர்கள்

புறக்கணித்து விடுவார்கள். நான் அந்த வகையைச் சார்ந்தவன் அல்ல. எழுதப்பட்டிருக்கிறதை அறிந்து கொள்கிற ஒரு எளிய மனுஷனாக நான் இருக்கிறேன். இந்த பாடத்தைப் பற்றி நான் அறிந்திருக்கிற எல்லாவற்றையும் நான் உங்களுக்கு சொல்லியிருக்கிறேன், அதாவது, நான் பார்க்க முடிந்த வரையில், மேசியாவின் ஆட்சியின் ஆயிரம் வருஷங்களில் பூமி அனைத்திலும் பிரபுக்களாக, மனுஷீக சுபாவத்தில் பூரணமாக்கப்பட்டவர்களாக, முற்பிதாக்கள் மனுஷீக சிருஷ்டிகளாக வெளிவருவார்கள், மற்றும் அந்த காலத்தின் இறுதியில், நான் ஏற்கனவே உங்களுக்குக் குறிப்பிட்டிருக்கிற சில விஷயங்கள், என் மனதுக்கு சுட்டிக்காட்டுவது போலத் தோன்றுகிறது; ஆனால் நான் நிச்சயமாக இருக்கவில்லை. இது குறித்துக்காட்டுவது போன்று தோன்றுகிறது, நான் நினைக்கிறேன், அதாவது, தேவன் பிற்பாடு அவர்களுக்கு உயர்வான சுபாவத்தின் வெகுமதியை அளிப்பார். இது தான் நான் சொல்ல முடிகிறதாக இருக்கிறது. மற்றும் இது திரள்கூட்டத்தாரைக் காட்டிலும் உயர்வானதாக இருக்குமா என்பது பற்றி நான் அறியவில்லை., ஆனால் நான் நினைக்கவில்லை. நீங்கள் பாருங்கள், சில சமயங்களில், உங்களுக்குத் தெரியாது என்று சொல்ல முடிவது நல்லது. நான் தவறிழைக்காதவன், மற்றும் நான் எல்லாவற்றையும் அறிந்தவன் என்று கோருகிறவர்களாக, சில ஜனங்கள் சரி செய்வதற்கு முயற்சிப்பார்கள். அது உண்மையல்ல என்பதற்கு நீங்கள் எல்லாரும் சாட்சிகளாக இருக்கிறீர்கள்.

## முற்பிதாக்கள் - ஆவிக்குரிய தளம் Vs இரண்டாம் மரணம்.

### கே: 14:2 :: கேள்வி (1911) - 2

ஆயிரவருஷ யுகத்தின் முடிவில் இரண்டாம் மரணத்திற்குள்ளாக செல்லாமல், முற்பிதாக்கள் எப்படி ஆவிக்குரிய தளத்தில் இருப்பார்கள்?

**பதில்:** நல்லது, சகோதரன் இதை புரிந்துகொள்ளவில்லை. ஒரு செய்தி, ஒரு சாடைக்குறிப்பு உள்ளதாக நாங்கள் நம்புகிறோம், கடந்த காலத்தின் அந்த முற்பிதாக்கள், பரலோக இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாக, பூமியெங்கும் பிரபுக்களாக, மாம்சத்தில் பூரணமுள்ளவர்களாக ஆயிரம் வருஷங்கள் ஊழியம் செய்த பிறகு, பரலோக நிலையில் ஒரு பங்கு வழங்கப்படும், மற்றும் பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரலோக சுபாவத்திற்கு ஒரு மாற்றம் அளிக்கப்படும் என்ற அனுமானம் உள்ளது. இதை விட மிக எளிய முறையில் எப்படிச் சொல்வது என்று நான் அறியவில்லை, மற்றும் நான் இதை அங்கே அப்படியே விட்டு விடுகிறேன்.

## முற்பிதாக்கள் - உடன்படிக்கை உறவுமுறை.

### கே: 14:3 :: கேள்வி (1911) - 3

முற்பிதாக்கள் எப்பொழுது தேவனுடன் உடன்படிக்கையின் உறவுமுறைக்குள்ளாக இருப்பார்கள்?

**பதில்:** புதிய உடன்படிக்கை ஏற்பாட்டின் கீழ் அவர்கள் உயிர்தெழுப்பப்பட்ட உடனேயே, புதிய உடன்படிக்கை மூலமாக அவர்கள் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள்ளாக இருப்பார்கள்; ஆனால் அவர்கள் ஆயிரம் வருஷங்களின் முடிவு வரைக்கும், அந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் எல்லாவற்றையும் சீரமைத்து பிதாவிடம் ஒப்படைத்து, மற்றும் புதிய உடன்படிக்கை இனிமேல் இல்லாத வரைக்கும், அவர்கள் பிதாவுடன் நேரிடையான, மற்றும் தனிப்பட்ட எந்த உறவுமுறைக்குள் இருக்கமாட்டார்கள். பின்பு, அவர்கள் தேவனுடன் தனிப்பட்ட உடன்படிக்கை உறவுக்குள் இருப்பார்கள் - நீங்களும் நானும் இப்போது கிறிஸ்துவின் மூலமாக தேவனுடன் தனிப்பட்ட உறவுக்குள் பிரவேசிப்பது போன்று இருப்பார்கள்.

## முற்பிதாக்கள் - அவர்களுடைய உயிர்த்தெழுதல்.

### கே: 14:4 :: கேள்வி (1911) - 4

முற்பிதாக்கள் அவர்களுடைய உயிர்த்தெழுதலை எப்பொழுது பெறுவார்கள்?

**பதில்:** அவர்களுடைய உயிர்த்தெழுதல் உலகத்தாரின் மத்தியில் முதலாவது இருக்கும் - - பூமிக்குரிய சுபாவத்தில் உயிர்த்தெழுதலை முதலாவது பெறுவார்கள். சபை தன் கர்த்தரைப் போன்று, ஆவிக்குரிய தளத்தில், ஆவிக்குரிய சுபாவத்திற்கு, பரலோக நிலைமைக்கு, தன்னுடைய உயிர்த்தெழுதலைப் பெறும்; பின்பு, இரட்சிப்பின் மற்ற பகுதியாக, உலகத்தின் இரட்சிப்பு வரும்; மற்றும் முற்பிதாக்கள் தங்களுடைய ஆசீர்வாதத்தை முதலாவது பெறக்கூடியவர்களாக இருப்பார்கள்; அவர்களுடைய உயிர்த்தெழுதல் அந்த தளத்தில் இருக்கும்; மற்றும் அது இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு இருக்கும், ஏனெனில் உலகத்தை ஆசீர்வதிக்கவும், மற்றும் அவர்களை மேம்படுத்தவும் அந்த இராஜ்யம் இருக்கிறது.

## முற்பிதாக்கள் - பிரகாரத்தில் அடையாளப்படுத்தப்படவில்லை.

### கே: 15:1 :: கேள்வி (1911 - Z) - 1

முற்பிதாக்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலைமையில் இருந்தார்களா?

**பதில்:** ஆவர்களுடைய நாட்களில் நிஜமான ஆசாரியர் வந்திருக்கவில்லை. மற்றும் நிஜமான ஆசரிப்புக்கூடாரம் மற்றும் பிராகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை; ஆகவே, அவர்கள் இதில் இருக்க முடியாது. ஆனால் அவர்களுடைய இருதயங்களின்படி, அவர்களுடைய நடத்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற விதமாக, அவர்கள் விசுவாசக் குடும்பத்தாரின் அங்கங்களாக இருந்திருப்பார்கள். நம்முடைய புரிந்துகொள்ளுதலின்படி, இறுதியாக, அவர்களுக்கு ஒரு இடம் வழங்கப்படலாம், மற்றும் நிஜமான பிராகார நிலைமையின் நிஜமான லேவியர்களாக, திரள்கூட்டத்துடன், மற்றும் அதின் ஒரு பகுதியாக இருப்பார்கள்.

## முற்பிதாக்கள் - பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்.

### கே: 15:2 :: கேள்வி (1913) - 2

எபி. 12:23. "- - பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கு." பவுல் இங்கே எந்த வகுப்பாரைக் குறிப்பிடுகிறார்?

**பதில்:** இந்த விஷயத்தைப் பார்வையிடுவதற்கு இரண்டு வழிகள் இருக்கலாம், ஆனால் சரியான பார்வையாக இருக்கின்ற ஒன்றை மட்டும் நாங்கள் குறிப்பிடுகிறோம். அப்போஸ்தலர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை, அவர் விளக்கிக் கூறாத காரணத்தினால், வித்தியாசமான பார்வை கொண்டிருக்கும் ஒருவருடன் நாங்கள் சச்சரவு செய்கிறதில்லை., ஆனால் அப்போஸ்தலர் முற்பிதாக்கள் வகுப்பாரை அர்த்தப்படுத்தினார் என்று நாங்கள் நினைக்கிறோம், மற்றும் இந்த வசனத்தில் அவர்களைக் குறிப்பிடுகிறார் என்று நாங்கள் நினைப்பதற்குக் காரணம் என்னவெனில், அவர் சபை வகுப்பாரை வேறொரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது. "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்கள்" என்று அவர் சபையைக் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. லேவி கோத்திரத்தார், ஆசாரியர்களை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக இஸ்ரயேலின் முதற்பேறானவர்களை அடையாளப்படுத்துகிறதாக எண்ணப்பட்டது போன்று, இது முதற்பேறானவர்களாகிய சபை வகுப்பார் எல்லோரையும் கணக்கில் எடுத்துக்கொள்வதாகத் தோன்றுகிறது. ஆகவே, "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்கள்" என்ற அறிக்கை, சபை மற்றும் திரள்கூட்டம் என்ற இரண்டையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு வகுப்பாரும் உள்ளடக்கப்பட்டிருந்தால், மற்ற எந்த வகுப்பார் குறிப்பிடப்படக்கூடும்? எங்களுடைய கருத்து என்னவெனில், அவர் முற்பிதாக்களைக் குறிப்பிடுகிறார், மற்றும் அவர்களுடைய ஜீவியம், அவர்களுடைய ஜீவியத்தின் ஆவி, உயிர்த்தெழுதலில் பூரணமாக்கப்படும், அவர்கள்

அபூரண சிருஷ்டிகளாக கீழே சென்றது போல் இல்லாமல், பூரண சிருஷ்டிகளாக வெளிவருவார்கள். மனுக்குலத்தின் பெரும்பான்மையினர் படிப்படியாக பூரணமடைவார்கள், ஆனால் பூரணமாயிருக்கிற ஜீவியம் உடைய நீதிமான்கள், தங்களுடைய மாபெரும் பங்கை பெறுவார்கள், ஏனென்றால் அவர்களுடைய இருதயங்கள் முந்தைய காலத்தில் ஏற்கனவே சோதிக்கப்பட்டன.

## முற்பிதாக்கள் உயிர்த்தெழுதல் பற்றி.

### கே: 15:3 :: கேள்வி (1914) - 3

சகோதரர் ரசல், திரள்கூட்டத்தின் கடைசி அங்கம் திரைக்கு அப்பால் கடந்திருக்கிறதற்கு முன்னால், முற்பிதாக்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்களா?

**பதில்:** நான் ஒருவேளை அப்படி நினைப்பதற்கு சாய்ந்திருக்கவில்லை. ஆனால் நான் உறுதியாக இல்லை. திரள்கூட்டம் திரைக்கு அப்பால் சென்றிருப்பதற்கு முன்பு அவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவதை நான் ஏன் எதிரப்பார்க்கவில்லை என்பதற்கான காரணம் இதுவே: சிறுமந்தை, ஆசாரிய வகுப்பார், மற்றும் திரள்கூட்டம் ஆகியோரை உள்ளடக்கிய முதற்பேறானவர்களின் சபை முழுமையும், இவர்கள் எல்லோரும் முதற் பலன்கள் ஆவர் மற்றும் கிறிஸ்துவின் புண்ணியம் சுமத்தப்பட்டிருக்கிறார்கள், மற்றும் என்னுடைய கணிப்பைப் பொருத்தவரைக்கும், சபை முழுமைக்கும் புண்ணியத்தின் விசேஷித்த சுமத்தப்படுதலின் விளைவு அடையப்பெறும் வரைக்கும், மற்றும் திரைக்கு அப்பால் கூட்டிச்சேர்க்கப்பட வேண்டிய எல்லோரும் கடந்து போவதற்கு முன்னால்,, உலகத்தின் பாவங்களுக்கான கிறிஸ்துவின் புண்ணியம் அளிக்கப்படுவது நடைபெறாது. இது என்னுடைய கருத்து ஆகும்..

## முற்பிதாக்கள் - உயிர்த்தெழுதல் பற்றி.

### கே: 16:1 :: கேள்வி (1915) - 1

சபையின் உயிர்த்தெழுதலுக்கு முன்னால் முற்பிதாக்களில் எவருடைய உயிர்த்தெழுதலையாவது, உடன்படிக்கை ஏற்பாடு அனுமதிக்குமா?

**பதில்:** சபை முழுமையடையும் வரைக்கும் முற்பிதாக்கள் பூரணமடையமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். முற்பிதாக்களில் எவரேனும் எழுப்பப்படுவதற்கு முன்னால், கிறிஸ்துவின் சரீரம் அவசியமாக திரைக்கு அப்பால் கடந்திருக்க வேண்டும். இது குறித்து அப்போஸ்தலரின் வார்த்தைகள் மிகவும் அழுத்தமாக இருக்கின்றன: “அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு.” (எபி. 11:40) என்பது, சபையின் பூரணப்படுதல் முதலாவது இருக்கும் என்று உணர்த்துகிறது. அதே கருத்து தான் வேறொரு இடத்தில் நம்முடைய கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது. கிறிஸ்துவின் சரீரத்தின் உயிர்தெழுதல் முதலாவதாகவும், அல்லது முதன்மையாகவும் (1 கொரி. 15:23; வெளி. 20:4-6) இருப்பார்கள், தரவரிசையில் மட்டும் அல்ல, ஆனால் கால வரிசை முறையிலும் கூட முதலாவது இருப்பார்கள் - “கிறிஸ்து, முதற்பலன்கள்” கிறிஸ்துவின் புண்ணியம் இப்போது சுமத்தப்பட்டிருக்கின்ற எல்லோரும் (சபையின் இருவகுப்பார்களும்) தங்களுடைய ஓட்டத்தை முடித்திருக்கிற வரைக்கும், அவருடைய புண்ணியம் மற்ற எவர்களுக்கும் பிரயோகிக்கப்படுவதற்கு விடுவிக்கப்பட முடியாது.

## தூதர்கள் - தூதர்களின் கீழ் முதலாம் யுகம்.

### கே: 16:2 :: கேள்வி (1906) - 2

முதலாம் யுகத்தில் மனுக்குலத்தின் மேம்பாடு தூதர்களிடம் விடப்பட்டிருந்தது என்று தேவனுடைய திருவசனம் எங்கேயாவது சொல்கிறதா?

**பதில்:** இது அவ்வாறு எங்கேயும் சொல்கிறதில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இது வெறுமனே இரண்டு உண்மைகளிலிருந்து நாங்கள் ஈர்க்கின்ற ஒரு அனுமானமாக இருக்கிறது. முதலாவது, அந்த காலத்தில் மனுக்குலம் தொடர்பாக தூதர்கள் இருந்தனர் என்று நாம் பார்க்கிறோம், மற்றும் தேவன் அவர்களை அங்கே வைத்திருக்க வேண்டும், அல்லது மனுக்குல சந்ததிக்கான சில பொறுப்புகளை அவர்களுக்கு அளித்திருக்க வேண்டும், இல்லையென்றால், அவர்கள் அங்கே இருந்திருக்கமாட்டார்கள் என்ற உண்மையிலிருந்து நாங்கள் அனுமானிக்கிறோம். இரண்டாவதாக, புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலரின் அறிக்கையில், அவர் நம்முடைய கர்த்தர் இயேசு வரக்கூடிய இராஜ்யம் பற்றிக் குறிப்பிடும் போது, தேவன் அந்த இராஜ்யத்தை தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை என்று கூறுகிறார். ஆகவே, தேவன் அந்த இராஜ்யத்தை தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை என்று அவர் கூறும் போது, உலகம் ஒரு காலத்தில் தூதர்களின் கீழ் இருந்தது என்ற அனுமானத்தை இது நமக்கு அளிக்கிறது. பின்னாகத் திரும்பிப் பார்க்கும் போது, உலகம் தூதர்களுக்குக் கீழ் இருந்த போதும், மற்றும் அந்த தூதர்கள் தங்களுடைய முதலில் இருந்த நிலையைக் காத்துக்கொள்ளாத போதும் இருந்த காலத்தை நாம் பார்க்கிறோம், ஆனால் அவர்கள் மனுக்குலத்தின் அக்கிரமத்தினால் கிட்டத்தட்ட அடிபணிந்திருந்தனர்.

## தூதர்கள் - சோதனையில் இருத்தல், மாம்சீக உருவத்தோற்றம் எடுத்தலுக்கான சாட்சியம்.

### கே: 16:3 :: கேள்வி (1908) - 3

விழுந்து போன தூதர்கள் இப்போது சோதனைக்குட்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்திற்கு எந்த வேத வாக்கியத்தை நாம் சார்ந்திருக்கிறோம்? முதலாவது, "தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று நீங்கள் அறியீர்களா?" என்று 1கொரி. 6:3ல் உள்ள குறிப்புடன் இது எப்படி இணக்கமாகிறது? இரண்டாவது, சரீரம் முழுமை அடைவதற்கு முன்னால், எந்த உணர்விலும் பரிசுத்தவான்கள் நியாயந்தீர்ப்பார்களா? அப்படி இருந்தால், அவர்கள் எந்த உணர்வில் நியாயந்தீர்ப்பார்கள்?

**பதில்:** இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டுள்ளது, மற்றும் ஒரு வருஷத்திற்கு முன்பு, காவற்கோபுர இதழின் எந்த மாதத்தில் இது எப்படி குறிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம்; இது 1907ம் வருஷத்தின் அக்டோபர் மாதத்தில் இருந்தது என்று நான் நினைக்கிறேன், இதில் விழுந்து போன தூதர்கள், எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இப்போது நியாயத்தீர்ப்பில், சோதனையில் இருக்கிறார்கள் என்று கருத்து தெரிவித்திருந்தோம், மற்றும் சுருக்கமாக கூறினோம், இந்த விஷயத்தில் எங்களுடைய கணிப்பு என்ன என்பதை அங்கே முன் வைத்தோம், அதாவது, விழுந்து போன தூதர்களின் இந்த சோதனை, நியாயந்தீர்க்கப்படுதல், அல்லது பரீட்சை, ஆதியாகமம், 6ம் அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி, ஒருவேளை அவர்களுடைய முந்தைய சோதனை அல்லது பரீட்சையின் முறையிலேயே இருக்கும். அந்த வசனங்களில், தூதர்கள் மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டார்கள் என்றிருக்கிறது. அந்த நடவடிக்கையின் காரணமாக, அவர்கள் கீழே தள்ளப்பட்டார்கள், மற்றும் இப்போது இந்த இடைப்பட்ட நாற்பது நூற்றாண்டுகளாக அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இப்போது, அவர்கள் மறுபடியும் சோதனைக்குட்படுத்தப்படப் போகிறார்கள் என்ற உண்மை உணர்த்துவது என்னவெனில், இந்த நாலாயிரம் வருஷங்கள் அல்லது அதற்கு மேல் உள்ள காலப்பகுதியில் அவர்களில் சிலர் தாங்கள் எடுத்திருந்த தவறான பாதையின் பாடத்தை சந்தேகமில்லாமல் கற்றுக்கொண்டிருப்பார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்; அதாவது, தேவனிடமிருந்தும், மற்றும் பரிசுத்தமுள்ளவர்களிடமிருந்தும் அவர்களுடைய தனிப்பட்ட பிரிவினைப்படுத்தப் பட்டிருத்தல் தொடர்பான பெரும் பாடத்தை அவர்கள் கற்றுக்கொண்டிருப்பார்கள், மற்றும் மனுக்குலத்தின் மேல் பாவத்தின் பாதிப்பு சம்பந்தமான பெரும் பாடத்தையும் கூட அவர்கள் கற்றுக் கொண்டிருப்பார்கள், மற்றும் தேவனுடைய கிருபையினால் கிறிஸ்து மனுக்குலத்திற்காக

மரணத்தை ருசி பார்த்தார், மற்றும் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பிய தேவனுடைய வல்லமையையும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் ஆசீர்வாதம் உடையவர்களாகவும், தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் சாபம் உடையவர்களாகவும் இருப்பார்கள் என்ற உண்மையைப் பற்றிய பெரும் பாடத்தையும் அவர்கள் கற்றிருப்பார்கள். அவர்கள் இந்த நாலாயிரம் வருஷங்களில் இந்த பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கான நல்ல வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த நீண்ட இடைவெளியில் அவர்கள் நீதியை எந்த அளவுக்கு கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் ஒரு சோதனையாக, அல்லது சான்றாக, அவர்களுடைய நியாயத்தீர்ப்பாக இருக்கும் என்பது தான் கருத்தாக இருக்கிறது. அந்த விழுந்து போன தூதர்களின் மத்தியில் சிலர் விஷயங்களை தங்களின் உண்மையான வெளிச்சத்தில் பார்வையிடும் நிலைக்கு வந்திருப்பார்கள், மற்றும் தேவனுடனும், பரிசுத்த தூதர்களுடனும் ஐக்கியமாக இருக்க விரும்புவார்கள், மற்றும் அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய நிலையிலும் கூட, தீமையானவர்களிடத்திலிருந்து ஓரளவுக்கு பிரிந்திருக்கிறவர்களாக இருக்கிறார்கள், மற்றும் அவர்கள் மனுக்குலத்தாருடன் தொடர்பு எதுவும் கொள்ளக்கூடாது என்ற தேவனுடைய பிரமாணத்தை அறிந்தவர்களாய், எல்லா தொடர்புகளிலிருந்து விலகியிருக்கிறார்கள்; அதாவது, அவர்கள் ஆவி ஊடகங்கள், தட்டுதல், பலமாக அடித்தல், மற்றும் கையெழுத்துக்கள் போன்றவை வழியாக தொடர்புகொள்ள முயற்சி செய்யாதவர்களாக இருக்கின்றனர்; மற்றும் அவர்கள் தேவனுடன் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இணக்கமாக வந்திருக்கிறார்கள், மற்றும் அவர்கள் மேல் கீழ்ப்படிதலின் கட்டுப்பாட்டை உணருகிறார்கள். இப்போது, நான் என்னையே கேட்கிறேன், ஆயிர வருஷ யுகத்தில் அந்த தூதர்கள் எந்த முறையில் சோதிக்கப்படுவார்கள்? எந்த முறையில் அங்கே அவர்கள் சோதனையை உடையவர்களாக இருக்க முடியும்? நான் ஒரு வழியையும் பார்க்கவில்லை, ஏனெனில் இது நாள்வரையில் காத்துக்கொண்டு இருக்கிற தண்டனை இல்லை; அவர்கள் தங்களுடைய தண்டனையின் கீழ் நாலாயிரம் வருஷங்களாக இருக்கிறார்கள். அவர்கள் காத்துக்கொண்டிருக்கிற நியாயத்தீர்ப்பு, உலகம் காத்துக் கொண்டிருக்கிற நியாயத்தீர்ப்புக்கு ஒத்தவிதமான நியாயத்தீர்ப்பாக இருக்கின்றது - அதாவது, புதிய சோதனை; மற்றும் அந்த புதிய சோதனை பாவத்திற்கான ஒரு வாய்ப்பை சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது, மற்றும் நாலாயிரம் வருஷங்களாக அவர்கள் மேல் இருந்து வருகின்ற இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கிறது. நம்முடைய புரிந்து கொள்ளுதலின்படி, ஆயிர வருஷ யுகத்தில் இப்படிப்பட்ட ஒவ்வொரு தீமையின் பாதிப்பிலிருந்து மனுக்குல உலகம் பாதுகாக்கப்படும். சாத்தான் ஆயிரம் வருஷங்களுக்கு ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு கட்டப்படுவான். என் மனதின்படி, சாத்தான் தானே உலகத்தை சோதிக்க, அல்லது வஞ்சிக்க திறனற்றவனாக இருப்பான் என்பது மட்டுமல்லாமல், ஆயிர வருஷ யுகத்தில் விழுந்து போன தூதர்களும் அதிகாரம் இல்லாதவர்களாக இருப்பார்கள் என்பதற்கான உத்தரவாதமாக இது இருக்கிறது. அப்போது, அவர்கள் எப்பொழுது அதிகாரம் உள்ளவர்களாக இருக்க முடியும்? அந்த அதிகாரம், சிலாக்கியம் அல்லது சுதத்திரம் தற்காலத்திற்கு உரியதாக தோன்றுகிறது என்று நான் பதிலளிக்கிறேன். பெரிதான சோதனை காலம் வர இருக்கிறது என்று கர்த்தர் சொல்லும் போது, நாம் யுக மாற்றத்திற்குள்ளாகச் சென்று கொண்டிருக்கும் போது தான், இது சரியான காலமாக இருக்கிறது. “பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலம்.” அவர்கள் மேல் இருந்த தெய்வீக தண்டனையின் கட்டுப்பாட்டை வெளிப்படையாகத் தவிர்க்கவும், மற்றும் தெய்வீக நோக்கத்திற்கு மாறாக, வெளிப்படையாக, மாம்சீக உருவத்தோற்றம் கொள்வதற்கான, அதிகாரம், அல்லது சிலாக்கியத்தைப் பெறக்கூடிய வழியில் இந்த தூதர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று, நீங்கள் நினைப்பது, இப்பொழுது எவ்வளவு பொருத்தமானதாக இருக்கிறது? இந்த விஷயத்தில் தேவனுடைய சித்தத்திற்கு மாறாக எதுவும் செய்ய முடியாது என்பதும், அதைத் தடுப்பதற்கு முழு அதிகாரம் உடையவராக இருக்கிறார் என்பதையும், ஆனால் அவர் அவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொள்ளும் வகையில், தெய்வீக திட்டத்தைத் தவிர்த்திருப்பதாக எண்ணிக்கொள்ளும் விதத்தில் அவர்களை அனுமதிக்கிறார். ஆகவே, அவர்கள் செய்ய விரும்புகிற இந்த காரியங்களைச் செய்வதில், மகிழ்ச்சி அடைதல், அருமை நண்பர்களே, இவை நமக்கு எதை அர்த்தப்படுத்திகின்றன? மற்றும் மனுக்குல உலகத்துக்கு எப்படி அர்த்தப்படுத்துகின்றன? வேதாகமம் சொல்கிற, பெரிதான

சோதனை காலம், அல்லது பரீட்சையை அர்த்தப்படுத்துகின்றன. இது ஆச்சரியமான உபத்திரவ காலத்தை அர்த்தப்படுத்துகிறது, நாலாயிரம் வருஷங்களுக்கு மேலாக தேவனுடைய கிருபையின் கட்டுப்பாடு இருந்து கொண்டிருந்த இந்த தீமையின் அதிகாரத்திலிருந்து ஒரு மகத்தான தலையீட்டை இது அர்த்தப்படுத்துகிறது. இந்த தூதர்களுடைய அதிகாரத்திற்கு சில உணர்வில் எவரேனும் தன்னுடைய மனதை வேண்டுமென்றே கொடுக்கிறவர்களைத் தவிர, உலகம் இந்த தீமையான சிருஷ்டிகளிடமிருந்து பெரும்பாலும் காப்பாற்றப்படும். அவர்கள் முன்னாளில் பெற்றிருந்ததைக் காட்டிலும், இப்போது அவர்கள் அதிக சுதந்திரத்தையும், மற்றும் அதிக சிலாக்கியத்தையும் பெறுகிறவர்களாக இருந்தால், இது மனுக்குலத்திற்கு மாபெரும் சோதனையாக இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்க முடியும். மற்றும் அதே நேரத்தில் அவர்கள் மீது மாபெரும் பரீட்சை, அல்லது நியாயத்தீர்ப்பு, அல்லது சோதனை காலமாக இருக்கிறதல்லவா? இது அவ்விதம் இருக்கிறது என்று நினைக்கிறேன். மற்றும் ஒருவர் பின் ஒருவராக தெய்வீகத் திட்டத்தை தவிர்த்துவிடும் சுதந்திரம் பெறுவதாகத் தோன்றும் நிலையில், இது பாவத்திற்கு விருப்பம் உடைய எல்லா தூதர்களையும் சோதிக்கிறது. நல்லது, இப்போது, நீங்கள் கூறுங்கள், எந்த முறையில் பரிசுத்தவான்கள் தூதர்களை நியாயந்தீர்ப்பார்கள்? “தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?” விழுந்து போன இந்த தூதர்களைத் தான் பரிசுத்தவான்கள் நியாயந்தீர்க்கப் போகிறார்களா/ ஆம். அப்படியானால், இதை எப்படிச் செய்வதற்கு நாம் எதையாவது உடையவர்களாயிருக்கிறோமா? நான் நிச்சயமாக இருக்கிறேன், அருமை நண்பர்களே, அதாவது, அவர்கள் மேல் சோதனையை வைப்பதைச் பொருத்த விஷயத்தில், இது எப்படி இருக்கும் என்று நான் அறியவில்லை, ஆனால் யோசிக்க முயற்சிக்கிறேன், மற்றும் இது என் மனதிற்கு இவ்விதமாக வருகிறது: நாம் அவர்களை நியாயந்தீர்க்கிறது, அல்லது அவர்கள் மேல் சோதனையைக் கொண்டுவருவது எப்படி நடைபெற முடியும்? அவர்கள், நிச்சயமாக, சபையிடமிருந்து கற்றுக்கொண்டு வருகிறார்கள் என்ற விதத்தில், நாம் அவர்கள் மீது சோதனையை வைக்கிறோம் என்ற பார்வையில், நாம் இப்பொழுது தூதர்களை நியாயந்தீர்க்கிறோம் என்று நான் அனுமானிக்கிறேன். என்னுடைய புரிந்துகொள்ளுதல் என்னவென்றால், தேவன் மற்றும் பரிசுத்த ஆவியிடமிருந்து அல்லது வேதாகமத்திடமிருந்து, இந்த விழுந்து போன தூதர்களுக்கு கற்றுக்கொள்ளும் வாய்ப்பு எதுவும் பெற்றிருக்கவில்லை; மற்றும் தேவனுடைய சித்தத்தையும், தெய்வீக திட்டத்தையும் உலகத்தாரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கான வழிமுறை அவர்களுக்கு இல்லை. தேவனுடைய சித்தம் தொடர்பான அவர்களின் செய்தியை அவர்கள் எங்கே பெறுவார்கள்? இந்த காலத்தில், எங்கே, மற்றும் எங்கே மட்டும், எதிர்காலம் தொடர்பான செய்தி எதையும் அவர்கள் பெற முடியும் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன், அதாவது: கிறிஸ்துவின் சபையிடமிருந்து; ஆகவே, அவர்கள் ஏதேனும் கண்டுபிடிக்க நாடுகிறவர்களாக, விழுந்து போன தூதர்கள் எந்த அளவிலாவது இந்த மாநாட்டில் நம்முடன் இருக்கிறார்கள் என்பதில் ஒரு நிமிஷம் கூட நான் சந்தேகம் கொள்ளவில்லை. இதைத் தான் நான் எதிர்பார்க்கிறேன். விஷயங்களுக்காக எங்கே போக வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் செய்திகளுக்காக பேர்ச்சபைகளுக்கு செல்கிறதில்லை; அவர்கள் மிகவும் நன்றாக விஷயம் அறிந்தவர்களாக இருக்கின்றனர், நீங்கள் அங்கே செல்வதினால் எந்த பயனும் இல்லை என்று நீங்கள் அறிகிறது போலவே, அங்கே செல்வதில் பயன் இல்லை என்று அவர்கள் அறிகிறார்கள், சத்தியத்தை எங்கே கவனிக்கலாம் என்பதை அவர்கள் அறிகிறார்கள்; அவர்கள் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள், மற்றும் இந்த கடைசி நாட்களில் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவி மற்றும் தம்முடைய திருவசனத்தின் மூலமாக, தம்முடையவர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்கின்ற விஷயங்களை அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே, நீங்களும் நானும் பார்க்கின்ற, மற்றும் புரிந்து கொள்கிற, மற்றும் தெரிவிக்கின்ற இந்த விஷயங்கள், அவர்களை நியாயந்தீர்த்துக்கொண்டு இருக்கின்றன, அல்லது அவர்களுக்கு சோதனையாக இருக்கின்றன. அவர்கள் இந்த விஷயங்களை அறிந்துகொள்ள வந்திருக்கும்போது, அவைகளால் அவர்கள் சோதிக்கப்படுகிறார்கள். இப்பொழுது இந்த வகையான நியாயந்தீர்த்தல் தான், தூதர்களின் மேல் இந்த சோதனைகள் வைக்கப்படுகின்றன. கர்த்தருடைய சித்தம் தொடர்பானதும், மற்றும் நாம் வாழ்கின்ற இந்த

காலம் தொடர்பானதுமான இந்த செய்தி, இந்த உலகத்தில் இருக்கின்ற பரிசுத்தவான்களிடமிருந்து, தற்கால வாழ்க்கையிலிருக்கும் பரிசுத்தவான்களிடமிருந்து, வருகின்றது, மற்றும் நாம் எந்த காலத்திலும் வெறுமனே பரிசுத்தவான்களின் பிரதிநிதிகளாக இருக்கிறோம், ஏனெனில் இந்த உலகத்தில் நாம் நம்முடைய கர்த்தர் இயேசுவை அடையாளப்படுத்துகிறோம். ஆகவே நாம் அவருடைய பிரதிநிதிகளாக, அல்லது தூதுவர்களாக இருக்கிறோம், மற்றும் திரைக்கு அப்பால் சென்றிருக்கிற மற்ற அங்கங்கள் எல்லோருக்கும் கூட நிச்சயமாகவே நாம் பிரதிநிதித்துவமாக இருக்கிறோம். கர்த்தருடைய சித்தம் மற்றும் இந்த முழு விஷயத்தின் தொடர்பான சத்தியம், தேவனுடைய கிருபையினால், ஒவ்வொருவரின் கவனத்துக்கு மட்டும் கொண்டுவரப்படுதாய் இல்லாமல், இந்த விழுந்து போன தூதர்களுக்கும் இருக்கிறது. மற்றும் பின்பு, தேவனுடைய சித்தம் என்ன என்று அவர்கள் பார்க்கிறதாகவும், மற்றும் எது சரியானது என்பதையும், மற்றும் இந்த நேரத்தில் கூட எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதையும் குறித்த சோதனை அவர்கள் மீது வருவதாக இருக்கிறது. இதே மாதிரி நீங்களும் நானும் இப்பொழுது ஒரு குறிப்பிட்ட அளவு நியாயத்தீர்ப்பு, ஒரு குறிப்பிட்ட அளவு சோதனையின் கீழ் கொண்டுவரப்படுவது போன்று இருக்கிறது, - - "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நியாயந்தீர்க்கிறார், உன்னை சோதிக்கிறார்." மற்றும் உன்னை சோதிக்கிற தேவன் பரலோகத்திலிருந்து பேசுகிறவராக இல்லை, அவருடைய திருவசனத்தின் மூலமாக பேசுகிற தேவனாயிருக்கிறார்; நம்முடைய நியாயந்தீர்த்தல் தற்காலத்தில் இந்த முறையில் வருகின்றது. ஆச்சரியம் அடைய வேண்டாம், ஆகவே, தூதர்களுடைய நியாயந்தீர்த்தல், நம்முடைய நியாயத்தீர்ப்பு நமக்கு வருகின்ற அதே முறையிலே வரக்கூடியதாக இருக்கிறது.. நாம் நியாயந்தீர்க்கப்பட்டுக் கொண்டு இருக்கிறோம் - - "என் வசனமே அந்த நாளில் உன்னை நியாயந்தீர்க்கும்." கர்த்தருடைய திருவசனம் இப்பொழுது பேர்ச்சபைக்கு சோதனையாக இருக்கின்றது. அவருடைய திருவசனத்தை பெற்றுக்கொண்டிருக்கிறவர்கள் இதில் நிலைநிற்கிறார்கள், மற்றும் இதிலிருந்து ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். கர்த்தருடைய திருவசனத்திற்கு உண்மையாக இல்லாதவர்கள், மற்றும் தந்திரமாக உருவாக்கப்பட்ட கட்டுக்கதைகளையும், மனுஷர்களின் கோட்பாடுகளையும் பின்பற்றுகிறவர்கள் உண்மையில்லாதவர்களாக நிரூபிக்கப்படுகிறார்கள், மற்றும் திருவசனம் அவர்களை நியாயந்தீர்க்கின்றது, எங்கே சரியான வழிமுறை உள்ளது என்று சொல்கின்றது, - - உங்களுக்கும் எனக்கும் மட்டும் சொல்கிறது மட்டுமல்லாமல், ஆனால் நம் மூலமாக இந்த விழுந்து போன தூதர்களுக்கும் சொல்கிறது.

## தூதர்கள் - குமாரர்களாக தூதர்கள்.

### கே: 19:1 :: கேள்வி (1909) - 1

நம்முடைய இரட்சகர் இயேசு தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று கூறப்படும்போது, தூதர்கள் தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படுவது எப்படி?

**பதில்:** இந்த முறையில் தான்: "ஒரே பேறான" என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். நம்முடைய கர்த்தர் மனுஷீகத்திற்கு முந்தைய இருப்பில் பிதாவினால் நேரிடையாக ஒரே பேறானவராக அவர் மட்டும் இருந்தார். தூதர்கள் தேவனுடைய குமாரர்களாக இருக்கும் நிலையில், அவர்கள் தேவனால் நேரிடையாக ஜெநிப்பிக்கப்படவில்லை, ஆனால் அவர்கள் நம்முடைய கர்த்தர் இயேசு கிறிஸ்துவினால் சிருஷ்டிக்கப்பட்டார்கள், ஏனெனில் சகலமும் அவரால் உண்டாக்கப்பட்டது, ஆகவே அவர் தூதர்களை தம்முடைய வல்லமை அல்லது தம்முடைய அதிகாரத்தில் உண்டாக்கவில்லை. ஆனால் பிதாவின் வல்லமை மற்றும் அதிகாரத்தினால் உண்டாக்கப்பட்டார்கள். ஐந்தாம் வால்யூமைப் பாருங்கள்.

## தூதர்கள் - விழுந்துபோனவர்களை சீரமைத்தல்.

### கே: 19:2 :: கேள்வி (1909) - 2

விழுந்து போன தூதர்களில் எவரேனும் சீரமைக்கப்படுவார்களா, மற்றும் அப்படி இருந்தால், மீட்பின் பலி இல்லாமல் இது எவ்வாறு செய்ய முடியும்"

**பதில்:** "தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று நீங்கள் அறியீர்களா?" என்று அப்போஸ்தர் கூறுவதைத் தவிர, விழுந்து போன தூதர்கள் தொடர்பாக, திட்டவட்டமான செய்தி எதையும் நாம் உடையவர்களாக இல்லை. வேதவாக்கியங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற "நியாயந்தீர்த்தல்" என்ற வார்த்தை சோதனையைக் குறிக்கின்றது. அப்போது, அவர்கள் மேலும் ஒரு சோதனையைப் பெறப் போகிறார்கள் என்றால், பின்பு அவர்களில் சிலர் அந்த சோதனையினால் பயன்பெறக்கூடிய வாய்ப்பு உடையவர்களாக இருக்கின்றார்கள் என்பது அனுமானமாக இருக்கின்றது.

அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு சோதனையின் வாயிலாக, அவர்களுடைய பரிசுத்த நிலையிலிருந்து விழுந்துபோனார்கள், அவர்களின் விழுகையிலிருந்து நீண்ட காலப்பகுதியில், தங்களுடைய தவறின் பாதையை பார்க்கும் திரளான வாய்ப்பை அவர்கள் பெற்றிருக்கிறார்கள், மற்றும் அவர்கள் விரும்பினால், சீர்பொருந்துவதற்கான வாய்ப்பு உள்ளது. மேலும், அப்போஸ்தலர் பேதுரு நமக்குச் சொல்கிறதை நாம் கவனிக்கிறோம், அதாவது, நம்முடைய கர்த்தர் தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார், இவ்விதம் தங்களுடைய பூர்வ நிலையைக் காத்துக்கொள்ளாத விழுந்து போன தூதர்களை நேரிடையாகக் குறிப்பிடுகிறார். அவர்களை அந்தகார சங்கிலிகளினாலே கட்டி, கட்டுப்படுத்தப்பட்ட இடத்திலே (கிரேக்க மொழியில் Tartarus என்ற மூல வார்த்தை} (தமிழில் 'நரகத்திலே') தள்ளி வைக்கப்பட்டனர். பேதுரு அப்போஸ்தலரின் அறிக்கை இதைக் குறிக்கிறது: இப்போது பேய்கள் என்று அழைக்கப்படுகின்ற, விழுந்து போன தூதர்கள் அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட மாபெரும் பாடத்தைப் பெற்றார்கள்; மனுக்குலத்தின் மீட்புக்காக செய்யப்பட்ட ஏற்பாட்டில் மனுக்குலத்தாருக்கு தேவனுடைய மாபெரும் இரக்கத்தின் வெளிப்பாடாக இது இருந்தது, மற்றும் மனுக்குலத்திற்கு கர்த்தர் இரக்கமாக இருந்தால், அவர்களுக்கும் கூட ஒருகாலத்தில் அவர் இரக்கம் காண்பிப்பார் என்பதற்கான வாய்ப்பு இருப்பதை விழுந்து போன தூதர்கள் பார்க்க முடியும். விழுந்து போன தூதர்களுக்காக நம்பிக்கை உள்ளது என்பது எங்களுடைய பதில் ஆகும். அருமை நண்பர்களே, எங்கள் அனுமானம் இவ்வாறு இருக்கிறது, அதாவது, இயேசு தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் சமயத்தில். தூதர்களுக்கு, பரிசுத்த தூதர்கள், அத்துடன் விழுந்து போன தூதர்களுக்கு பிரசங்கம் பண்ணிய காலம் முதற்கொண்டு, சிலர் சீர்திருத்தம் அடைவார்கள் மற்றும் அவர்களுடைய சீர்திருத்தத்தை வெளிப்படுத்துவார்கள், மற்றும் இப்படிப்பட்டவர்கள் இனிமேல் கீழ்ப்படியாமை எதிலிருந்தும் விலகியிருப்பார்கள் என்று நாம் நியாயமாக அனுமானிக்கலாம்; ஆகவே, கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளில், இந்த விழுந்து போன தூதர்களின் இரண்டு பொதுவான வகுப்பார்கள் இருந்து வருகிறார்கள், சிலர் உண்மையுள்ளவர்களும் மற்றும் நீதிக்கு திரும்புகிறவர்களாகவும் , மற்றவர்கள் இன்னும் தேவனுடன் இணக்கமில்லாமல், பாவத்தை நடப்பித்து, சாத்தானைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள்.

இதற்கு மீட்பின் பலி தேவைப்படுகிறதா? நாங்கள் பதிலளிக்கிறோம், இல்லை. தூதர்கள் மரண ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டிருந்தால், அப்போது மரணத்திலிருந்து மீட்பு தேவைப்பட்டிருக்கும். அவர்கள் வெறுமனே இருளில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், மற்றும் அவர்களுடைய அதிகாரங்களை பயன்படுத்துவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது மரண தண்டனையாக இருந்திருக்குமேயானால், அப்போது ஒவ்வொரு விழுந்து போன தூதனுக்கும் ஒரு பரிசுத்த தூதன் மீட்பாக வேண்டியது தேவைப்பட்டிருக்கும், ஏனெனில் அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்களாக ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் வந்திருப்பார்கள். ஆனால் மனுக்குலத்துடன் இது வித்தியாசமாய் இருக்கிறது; நீங்களும் நானும் தனிப்பட்டவர்களாக ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கப்படவில்லை. ஆனால் தகப்பனாகிய ஆதாம் மூலமாக ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் வந்தோம், ஆகவே தகப்பனாகிய ஆதாமின் மீட்பு என்பது அவனுடைய மீட்பு மட்டும் இல்லாமல், அவனுடைய சந்ததி முழுமைக்கும் உள்ளதை அர்த்தப்படுத்துகிறது.

இவ்விதமாக, ஒருவருக்கான மீட்பாக இருந்து, எல்லோருக்குமான மீட்பாக கிறிஸ்து இருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருக்கிறது; ஆனால் விழுந்து போன தூதர்களுக்கு இப்படிப்பட்ட ஏற்பாடு சாத்தியமாக இருக்கவில்லை, ஆனால் அவர்கள் தங்களின் சொந்த தனிப்பட்ட தண்டனையின் கீழ் இருக்கிறார்கள்.

## தூதர்கள் - பேதுருவை தூதனாக நினைத்தல்.

### கே: 20:1 :: கேள்வி (1911) - 1

அப் 12:15ம் வசனத்தின் உங்களுடைய விளக்கம் என்ன? "அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள், அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள். அப்பொழுது அவர்கள்: அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள்."

**பதில்:** உங்களுக்கு சூழ்நிலைகள் நினைவிருக்கும். சிறைச்சாலையில் இருந்தவர் பேதுரு; மற்றும் தூதன் அவரை சிறைச்சாலையை விட்டு வெளியே கூட்டி வந்தான், ஒரு குறிப்பிட்ட தூரம் வரைக்கும் கூட்டி வந்தான், மற்றும் பேதுரு ஜெபம்பண்ணிக் கொண்டிருந்த வீட்டிற்கு சென்றான்; இது இராத்திரியின் நடுவில் இருந்தது, மற்றும் பேதுரு வாசற்கதவை தட்டிய போது, அவர்கள் இன்னும் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தனர். உங்களுக்கு ஞாபகம் இருக்கும், சிறு பெண் ரோதை கதவருகில் வந்தாள், பின் அவள் திரும்பி ஓடி, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று அவர்களிடம் கூறினாள், மற்றும் அவர்கள் பின்பு கூறினார்கள், "ஓ, இது அவராக இருக்க முடியாது."

"ஓ, இது அவர் தான்." என்று ரோதை கூறினாள்.

"நல்லது, இது அவருடைய தூதனாக இருக்க வேண்டும்" என்றார்கள்.

இது அவருடைய தூதனாக இருக்கலாம் என்று அவர்கள் ஏன் கூற வேண்டும்? நல்லது, என் அருமை நண்பர்களே, இது அவருடைய தூதன் என்று சொல்வதற்கு அவர்கள் ஏவப்பட்டிருக்கவில்லை., அந்த இரவில் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்த ஜனங்களில் எவரும் ஆவியினால் ஏவப்பட்டிருந்தார்கள் என்று நாம் அறியவில்லை, ஆகவே நீங்கள் இந்த பாடத்தின் மேல் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை, நீங்கள் இதைக் குறித்து என்ன சொல்லுகிறீர்கள் என்பதைக் காட்டிலும் ஒரு இம்மியளவு கூட, அதிகமாக நான் கவனம் செலுத்த மாட்டேன். இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் சொன்னவைகளிலிருந்து நாம் அறிவுரைகளை எடுத்துக்கொள்வோம். அப்போஸ்தலர் தான் தூதனாக இருந்ததாக தன்னைப் பற்றி எதுவும் கூறவில்லை. யூகிப்பதற்கான என்னுடைய முழு சுதந்தரத்தை தயவுகூர்ந்து நீங்கள் எல்லோரும் உடையவர்களாக இருக்கிறீர்கள். நான் என்ன யூகிக்கிறேன் என்று நீங்கள் அறிய விரும்பினால், இது ஒரு வகையான ஆள்மாறாட்டமாக இருக்கலாம், அல்லது அது போன்று ஏதாவது இருக்கும் என்று அவர்கள் சாதாரணமான சில எண்ணங்களைக் கொண்டிருந்தார்கள் என்று நான் அனுமானிக்கிறேன். அவர்கள் மனதில் என்ன கொண்டிருந்தார்கள் என்பதை நான் அறியவில்லை; வேறு எவரும் அறிகிறதில்லை.

## தூதர்கள் - சோதனையில் விழுந்து போன தூதர்கள்.

### கே: 20:2 :: கேள்வி (1911) - 2

விழுந்து போன தூதர்கள் இப்பொழுது சோதனைக்குட்பட்டிருக்கிறார்களா? மற்றும் அவர்கள் நியாயத்தீர்ப்பு பெறுவார்களா?

**பதில்:** வார்த்தையின் ஒரு பார்வையில் நாம் அனுமானிக்கலாம், அவர்கள் அந்தகார சங்கிலிகளினால் கட்டப்பட்ட சமயத்திலிருந்து, விழுந்து போன தூதர்கள் கிட்டத்தட்ட சோதனையில் இருந்து வந்திருக்கலாம். அவர்கள் எல்லோரும் மீறினவர்களாக இருந்தனர்,

மற்றும் அவர்களுக்கு எதிராக தெய்வீக ஏற்பாடு செயற்படுத்தப்பட்டு, மற்றும் அவர்கள் அந்தகார சங்கிலிகளினால் கட்டப்பட்ட உடனேயே, அவர்கள் தீவிரமாக தெய்வீக சித்தத்திற்கு குறுக்கீடு செய்திருந்ததும், மற்றும் ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் இருந்ததும் எல்லோருடைய கவனத்திற்கு வந்தது. மற்றும் அவர்களில் சிலர் சீர்திருந்துவதற்கு விரும்பும் உணர்வு கொண்டிருந்தார்கள் என்றால், நான் ஆச்சரியப்படமாட்டேன். பாவம் மற்றும் மரணத்திலிருந்து மனுஷனுடைய சீரமைப்புக்கு ஏற்பாடு செய்வதில், மனுக்குலத்திற்கு தெய்வீக அன்பு மற்றும் தெய்வீக இரக்கம் தொடர்பாக, நமது கர்த்தரின் மரணம் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலின் போது விழுந்து போன தூதர்களுக்கு மாபெரும் பிரசங்கம் பண்ணிய அந்த குறிப்பிட்ட தருணம் தான், இந்த வகையான ஏதோ ஒன்று அவர்கள் மனம் திருந்த விரும்புவது பற்றிய உண்மையாக இருந்திருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்; அவர்கள் தங்களுக்கு நம்பிக்கையாக இருக்கும் விதத்தில், அவர்கள் பேரில் தெய்வீக இரக்கத்துக்குரிய இப்படிப்பட்ட பிரசங்கமாக இது இருக்கிறது என்பதை தூதர்கள் இதைப் பார்ப்பார்கள். தேவனுடைய பிரமாணத்தின் மேல் மரியாதை கொண்டிருந்து, மற்றும் தேவனுடைய இரக்கத்தில் நம்பிக்கை ஏதும் கொண்டிக்கும் தூதர்களில் எவரேனும், பாவத்திற்கு மாறாக வாழ்வதையும், மற்றும் தெய்வீக நீதியில் இணக்கமாக இருப்பதையும் தொடருவதினால், தங்களுடைய விசுவாசத்தையும் மற்றும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறவர்களாய் இருந்தால், அவர்கள் பயங்கரமான சோதனையை உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதில் நான் நிச்சயமாக இருக்கிறேன்; இவர்களுக்கு விழுந்து போன தூதர்கள் எல்லா வகையான துன்புறுத்தல்களையும் கொடுத்திருப்பார்கள், மற்றும் ஒருவேளை நாம் பெற்றிருக்கிற துன்புறுத்தல் எதுவும் அவர்கள் பெற்றிருக்கக்கூடிய அவ்விதமான துன்புறுத்தலை விட, தாழ்வாக இருக்கும், ஏனெனில் நீதியை நேசிக்கின்ற தூதர்களின் மேல், விழுந்து போன தூதர்கள் தாங்கள் விரும்புகிறதைச் செய்வதற்கு அனுமதிக்கப் பட்டிருந்தார்களானால், இதைச் சிறப்பாக செய்ய வேண்டும் என்று விரும்புகிற நீதியை நேசிக்கும் தூதர்களுக்கு இது மிகவும் கடினமான காரியமாக இருக்கும் என்பதை நாம் நன்கு கற்பனை செய்ய முடியும். ஆகவே வார்த்தையின் இந்த பார்வையில் பார்த்தால், நாம் நீதியை நேசித்து, மற்றும் அக்கிரமத்தை வெறுக்கிறோமா, அல்லது இல்லையா, நீதியினிமித்தம் நான் என்ன சகிக்கிறோம் என்பதைப் பார்ப்பதற்கு, சபையின் நியாயத்தீர்ப்பு மற்றும் சோதனை செயல்பட்டுக் கொண்டிருப்பது போலவே, அதே மாதிரி விழுந்து போன தூதர்களின் நியாயத்தீர்ப்பு மற்றும் சோதனை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே தேவன் பேரிலும் மற்றும் நீதியின் பேரிலும் மரியாதை உடையவர்களாகவும், மற்றும் தேவனுடைய இரக்கம் தங்களுக்கு நீட்டிக்கப்படும் என்ற நம்பிக்கை எதையும் உடையவர்களாகவும் இருக்கின்ற விழுந்து போன தூதர்களில் எவரும் இந்த பார்வையில், சந்தேகத்திற்கிடமின்றி அவர்களுடைய உண்மைத்தன்மையை சோதிக்கும் விதத்தில், சோதனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு எதிராக வரும் ஒவ்வொன்றும், தேவனிடத்தில் அவர்களுடைய உண்மைத்தன்மை பற்றிய விஷயத்தில், சோதிக்கிறதாக, அல்லது நிரூபிக்கிறதாக, அல்லது நியாயந்தீர்க்கிறதாக இருக்கும். ஆனால் இந்த யுகத்தின் இறுதியில், அல்லது புதிய யுகம் துவங்கும் போது, அவர்கள் மேல் சில விசேஷமான, சோதனை, அல்லது பரீட்சை வரும் என்று தோன்றுகிறது. இது சம்பந்தமாக நாம் மிக குறைவாக அறிகிறோம். நியாயத்தீர்ப்பின் அந்த மகா நாள் வரைக்கும் அவர்கள் அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டப்பட்டிருக்கிறார்கள் என்று நமக்குச் சொல்லப்பட்டிருப்பது மட்டுமே, நாம் அறிகிறதாக இருக்கிறது. இது எதைச் சுட்டிக்காட்டுகிறது என்பது சிக்கலாக இருக்கிறது. நியாயத்தீர்ப்பின் மகா நாள் உலகத்தில் நமக்கு மிகவும் குறிப்பிட்டு சொல்லியிருப்பது போன்று அவர்களுக்கு குறிக்கப்படாமல் இருக்கலாம். தற்போதைய அமைப்புகள் எல்லாம் சோதனையின் கீழ் கொண்டுவரப்படும் போது, இந்த உலகத்தின் ராஜ்யங்கள் எல்லாம் நியாயந்தீர்க்கப்படும் போது, இந்த மகா நாளின் விசேஷமான நியாயத்தீர்ப்பு வெளிப்படப் போகிறது, மற்றும் அந்த நாளின் சோதனை அவைகளை சோதிக்கும், அந்த நாளின் அக்கினி சபையில் எல்லோரையும் சோதிக்கும், மற்றும் அந்த நேரம் வரைக்கும் இந்த விழுந்து போன தூதர்கள் அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டப்பட்டிருப்பார்கள். அப்போது பிடித்து வைக்கப்பட்டிருந்த நான்கு காற்றுகளும் தளர்த்தப்படும் என்பது தான் இதன் கருத்து ஆகும். மற்றும் அவர்கள் இனிமேல் அந்தகாரச் சங்கிலிகள் அல்லது கட்டுப்பாடு எதின் கீழும் இருக்கமாட்டார்கள், ஆனால் தங்களை

வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருப்பார்கள். நாம் கொஞ்சக் காலத்திற்கு பின் பார்ப்போம். 1915 பற்றி சிலவற்றை, என்னைக் கேளுங்கள், மற்றும் நான் அதிகம் அறிவேன் என்று நினைக்கிறேன்.

## தூதர்கள் - மாம்சீக உருவத்தோற்றங்கள் ஆண்களாக மட்டுமே இருக்குமா?

### கே: 21:1 :: கேள்வி (1913) - 1

விழுந்து போன தூதர்கள் ஆண்களாக மட்டுமே மாம்சீக உருவத்தோற்றங்கள் எடுக்க அனுமதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்குமா?

**பதில்:** இல்லை; சகோதரனே, எனக்குத் தெரிந்த வரையில், பெண்களின் வடிவத்தில் மாம்சீக உருவத்தோற்றங்களின் வெளிப்பாடுகள் இருந்திருக்கின்றன. எங்களுக்கு நேரம் இல்லை, மற்றும் இந்த விஷயத்தில் எடுத்துக்காட்டுகள் கொடுப்பதற்கு அவசியம் என்று நான் அறியவில்லை, ஆனால் வெறுமனே கேள்விக்கு பதிலளிக்கிறேன்.

## தூதர்கள் - விழுந்து போனவர்கள் எப்பொழுது அழிக்கப்படுவார்கள்?

### கே: 22:1 :: கேள்வி (1909) - 1

விழுந்து போன தூதர்கள் இந்த அறுவடை காலப்பகுதியின் இறுதியில் அழிக்கப்படுவார்களா, அல்லது ஆயிர வருஷ யுகத்தின் இறுதியில் சாத்தானுடன் கட்டப்பட்டு, மற்றும் அவனுடன் அழிக்கப்படுவார்களா?

**பதில்:** நிச்சயமாக, நான் அறியவில்லை, ஆனால் நான் என்னுடைய யூகத்தையும் மற்றும் என்னுடைய காரணத்தையும் கொடுக்க முடியும். அவர்களுடைய சோதனையும் மற்றும் சாத்தானுடைய சோதனையும் வித்தியாசமான விஷயங்களாகத் தோன்றுகின்றன. அவன் தன்னுடைய சொந்த பேராசையினால் தவிர, அவன் சோதிக்கப்படவில்லை, மற்றும் நமக்குத் தெரிந்த வரைக்கும் தவறு செய்ததற்கான மனம் வருந்துதலை அவன் வெளிப்படுத்தி யிருக்கவில்லை, மற்றும் அவனுக்கு இரக்கம் எதுவும் அளிக்கப்படும் என்று வேத வாக்கியங்கள் காண்பிக்கிறதில்லை, ஆனால் அவன் அழிக்கப்படுவான்.

தூதர்கள் நீண்ட காலமாக சாத்தானுடைய வளமையையும், வெற்றியையும், மற்றும் அவனைக் கட்டுப்படுத்துவதில் தேவனுடைய வல்லமையில் குறைவு போன்று தோன்றுகிறதையும் கண்டு வந்திருக்கிறார்கள். பின்பு அவர்கள் மனுஷக் குடும்பத்தாருடன் அவர்களுடைய உறவு இருந்தது. சாத்தான் முழுமையாக சுயநலம் கொண்டவனாகவும், மற்றும் அதிகாரத்தை அடைவதற்கு முயற்சி உடையவனாகவும் இருந்தான். இந்த தூதர்களைப் பொருத்தவரையில், தங்களுடைய வாசஸ்தலத்தை அல்லது பூர்வீக நிலைமையை விட்டுவிட்டவர்களானார்கள்; அவர்கள் மகாநாளின் தீர்ப்புக்கென்று அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று யூதா மற்றும் பேதுரு நிருபங்களில் விசேஷமாக குறிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது, அது ஆயிர வருஷ நாளின் நியாயத்தீர்ப்பைக் குறிப்பிடுகிறதா? அல்லது தற்காலத்தைக் குறிப்பிடுகிறதா? இது தற்காலத்தின் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது எனறு நாங்கள் நினைக்கிறோம், ஏனெனில் அவர்கள் அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டப்பட்டு வைக்கப்பட்டார்கள், வெளிப்படையாக, அவர்கள் இப்போது அந்த அந்தகாரச் சங்கிலிகளிலிருந்து விடுவிக்கப்படும் அதிகாரம் உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் இப்பொழுது விடுவிக்கப்படுகிற போது, தேவன் அவர்களைப் பிடித்து வைப்பதற்கு திறன் இல்லாதவராக இருக்கிறார் என்று அவர்கள் கற்பனை செய்வார்கள் என்று நாங்கள் யூகிக்கிறோம். உலகத்தின் உபத்திரவ காலத்தின் ஒரு பகுதியாக, அவர்கள் தங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள், இது மனுஷீக ஏற்பாடாக மட்டும் இல்லாமல், கெட்ட தூதர்கள் முலமாகக் கூட வரும். ஆகவே, இந்த நூற்றாண்டுகளின் காலத்தில் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்திருக்கிற போது, அவர்களில் சிலர், வேதாகமம் உணர்த்துகிறபடி, கர்த்தருக்காகக் காத்துக்

கொண்டிருப்பதைக் கற்றுக்கொண்டும், மற்றும் மனந்திரும்பியும் இருந்திருக்கிறார்கள் என்றால், இந்த தூதர்கள் தீமை செய்வதற்கு சபலம் உடையவர்களாக மற்ற தூதர்கள் இருக்கும் இந்த காலத்தில் இந்த தூதர்கள் தங்களின் உண்மைத்தன்மையைக் காண்பிக்க இப்பொழுது தான் சரியான நேரமாக அவர்களுக்கு இருக்கும். “நியாயத்தீர்ப்பு” என்று உபயோகப்படுத்தியிருக்கும் வார்த்தை தண்டனை என்பதைக் குறிக்காமல், சோதனை என்ற அர்த்தத்தில் உள்ளது என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். மகாநாளின் சோதனை காலம் வரைக்கும் அவர்கள் அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டப்பட்டு வைக்கப்பட்டிருப்பார்கள். ஒரு கேள்வி கேட்கப்படலாம், இந்த சோதனை காலத்தில் தகுதியற்றவர்களாகக் காணப்படுகிறவர்கள் இப்பொழுது அழிக்கப் படுவார்களா? அல்லது சாத்தானுடன் ஆயிரம் வருஷங்கள் இருப்பார்களா? அவர்களுடைய சோதனை முழுவதும் முடிந்த பிறகு, அவர்கள் இப்போது அழிக்கப்படுவார்கள் என்பது எங்களுடைய கருத்தாக இருக்கிறது. அவர்களைத் தக்க வைத்திருப்பதில் குறிப்பிடத்தக்க நோக்கம் எதையும் தேவன் கொண்டிருக்கவில்லை. நாங்கள் அறியவில்லை; இது வெறுமனே எங்களுடைய யூகமாக இருக்கும். நீங்கள் வித்தியாசமாக யூகிக்கலாம்., மற்றும் நீங்கள் அப்படிச் செய்தால், நாங்கள் சண்டையிடமாட்டோம். கர்த்தருடைய திருவசனம் எங்கே திட்டவட்டமாகக் கூறுகிறதோ, நாங்கள் அதை பேசுவோம். என்னுடைய கருத்தை நீங்கள் விரும்பினால், நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் உங்களுடைய சொந்தக் கருத்தை விரும்பினால், அதை வைத்துக்கொள்ளுங்கள்.

## அபிஷேகம் பண்ணுதல் - முத்திரையிடுதல்.

### கே: 22:2 :: கேள்வி (1911) - 2

பின்வரும் வேத வாக்கியங்களில், அபிஷேகம் பண்ணுதலுக்கும், மற்றும் முத்திரிப்பதற்கும் என்ன வித்தியாசம் உள்ளது: “உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்”

**பதில்:** அபிஷேகம் பண்ணப்படுதல் ஒரு உருவகமாக இருக்கிறது. வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் உருவகத்திற்கு உங்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன். தலையாகிய இயேசு, மற்றும் அவருடைய சரீரமாகிய சபை, கிறிஸ்துவைப் பற்றி நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன், மற்றும் இந்த உருவகம் நிழலான ஆசாரியத்துவத்தின் விஷயத்தில் பயன்படுத்தப்பட்டது. நாம் ஆசாரியனாக ஆரோனைப் பற்றி வாசிக்கிறோம். அவர் தன் தனிப்பட்ட ஆள்தன்மையில் இயேசுவை அடையாளப்படுத்தினார், மற்றும் இராஜரீக ஆசாரியத்துவமாகிய முழு சபையையும் அடையாளப்படுத்தினார்., அவருடைய தலையில் ஊற்றப்பட்ட பரிசுத்த அபிஷேக தைலம் அவருடைய வஸ்திரங்களின் தொங்கல்களிலும் வழிந்தோடியது. அது எதை அர்த்தப்படுத்துகிறது? இது முழுமையாக ஆரோனின் அபிஷேகத்தையும், மற்றும் நீங்களும் நானும் வரக்கூடியது பற்றி அப்போஸ்தலர் பேசும் அபிஷேகத்தையும் அடையாளப்படுத்துகிறது. நாம் கிறிஸ்துவுக்குள்ளாக வரும்போது, நாம் அபிஷேகத்திற்குள்ளாக வருகிறோம். இந்த அபிஷேகம் தேவன் முன்னறிந்துருக்கிறதும், மற்றும் முன்னறிவித்திருக்கிறதுமான முழு சரீரத்திற்கு சொந்தமானதாயிருக்கிறது, மற்றும் நீங்களும் நானும் அந்த சரீரத்தின் அங்கத்திற்குள்ளாக வருகிறவர்களாகவும், மற்றும் நம்முடைய உறுப்பினர் நிலையை பராமரித்துக்கொண்டால், நாம் அபிஷேகம் பண்ணப்பட்டவரின் அங்கங்களாக இருப்போம், மற்றும் அந்த அபிஷேகத்தின் கீழ் இருப்போம்; அப்போஸ்தலர் கூறும்விதமாக, “நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது.”

ஆனால் முத்திரித்தல் என்பது அதைத் தாண்டி போவதாக இருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறார், நீங்கள் பரிசுத்த ஆவியால் முத்திரைபோடப்பட்டீர்கள், மற்றும் நீங்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டது மட்டுமல்லாமல், முத்திரைபோடப்பட்டும் இருக்கிறீர்கள். உங்களுடைய விஷயத்திலும், மற்றும் என்னுடைய விஷயத்திலும் முத்திரிக்கப்படுதல் இன்னும் நடந்து கொண்டு இருக்கின்றது. இது எதை அடையாளப்படுத்துகிறது? இது உங்கள் மேல்

கர்த்தருடைய குணத்தின் அடையாள முத்திரையாக இருக்கிறது; அவர் உங்கள் மேல் அதிகமதிகமாக முத்திரை பதிய வைக்கிறார்; நீங்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரைபோடப்படுகிறீர்கள். இது எவ்வளவு காலத்திற்குத் தொடரும்? மீட்பின் நாள் வரைக்கும். உங்கள் மேல் முத்திரையிடப்படுதல் தொடர்வதற்கு நீங்கள் அனுமதித்தால், நீங்கள் தேவனுடைய அருமை குமாரனுடைய நகலாக அதிகமதிகமாக ஆவீர்கள், மற்றும் அந்த நிபந்தனையின் மேல் தான் நீங்களும் நானும் அவரில் நிலைத்திருப்போம்; நாம் ஆரம்பத்தில் அபிஷேகம் பெறுவது மட்டுமல்லாமல், நாம் ஆவியையும் பெறுகிறோம், மற்றும் பரிசுத்தவான்கள் மற்றும் சீஷத்துவ தன்மையின் அடையாளக்குறிகளை உடையவர்களாக இருப்போம்.

## பிரதான தூதன் - மற்றவர்கள் இருக்கிறார்களா?

### கே: 23:1 :: கேள்வி (1911) - 1

வேத வாக்கியங்களிலிருந்து நான் தீர்மானிக்க முடிந்த வரையில், மிகாவேல் மட்டும் ஒரே பிரதான தூதனாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவர்கள் இருக்கிறார்கள் என்று உங்களுடைய கருத்தாக இருக்கிறதா?

**பதில்:** நான் அதே கருத்தை கொண்டிருக்கிறேன்.

## சேனை - தேவனுடைய சேனையாக யார் உள்ளடக்கப்படுகிறார்கள்?

### கே: 23:2 :: கேள்வி (1909) - 2

தேவனுடைய சேனை எந்த அதிகாரத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது என்ற கேள்வி குறித்து, டாண் பிரசுரமான காலத்திலிருந்து உங்களுடைய பார்வைகளை எந்த அளவுக்கு நீங்கள் மாற்றிக்கொண்டு இருக்கிறீர்கள்? “பணியாளர்களே, ஒற்றுமையாயிருங்கள், உங்களுடைய சங்கிலிகளைத் தவிர, இழப்பதற்கு உங்களிடம் ஒன்றும் இல்லை; நீங்கள் பலனடைவதற்கான ஒரு உலகம் இருக்கிறது.” என்ற இந்த பழமொழி இந்த விஷயம் தொடர்பாக, நம்முடைய மனங்களுக்கு ஏதாவது ஆலோசனையைத் தெரிவிக்கிறதா?

**பதில்:** இல்லை, எங்களுடைய பார்வைகளை மாற்றிக்கொள்ள முடியாதவாறு நாங்கள் பற்றிக்கொண்டிருக்கிறோம் என்ற அர்த்தத்தில் அல்ல, என்னுடைய பார்வைகளை மாற்றிக்கொள்வதற்கான காரணத்தை நான் அறியவில்லை; மற்ற எவரையும் போலவே, எங்களுடைய பார்வைகளை மாற்றிக்கொள்ளும் அதே உரிமையை நாங்கள் உடையவர்களாக இருக்கிறோம். மாற்றிக்கொள்வதற்கான அவசியம் எதையும் நாங்கள் பார்க்கவில்லை. பரிசுத்தவான்களாக இல்லாதவர்களையும், மற்றும் கர்த்தருக்கு ஊழியம் செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை அறியாமல் இருக்கிறவர்களையும் கொண்ட அவருடைய சேனையாக, கர்த்தர் லட்சக்கணக்கானவர்களைப் பயன்படுத்தப்போகிறார் என்று நாங்கள் நினைக்கிறோம். தமது மகிமையை விளங்கப்பண்ண, அவர் மனுஷனுடைய கடுங்கோபத்தை பயன்படுத்துவார் என்று நாம் வாசிக்கிறோம். இந்த சுவிசேஷ யுகத்தில் கர்த்தருடைய இரத்தினக்கற்களை மெருகூட்டுவதற்கு சாணைக்கல்லை அவர்கள் மேல் திருப்புவதற்கு கர்த்தர் சாத்தானை தம்முடைய ஊழியக்காரானாகப் பயன்படுத்த முடிகிறது போல, கர்த்தருடைய மகிமை விளங்கும் பணியை அவர்கள் செய்வார்கள், மற்றும் இந்த உண்மையை அவர்கள் அறியாமல் இருப்பார்கள். நம்மை அரைத்து தூளாக்குகிறதாக சாத்தான் நினைக்கிறான், ஆனால் இரத்தினக்கற்களை அவன் மெருகூட்டவே செய்கிறான்.

பணியாட்கள் ஒன்றுசேருகிறது தொடர்பான கேள்வியின் இரண்டாம் பகுதியைப் பற்றிய விஷயத்தில், ஆம், அதே முறையில் தான் அனுமானம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன், அதாவது, மனுக்குலத்தின் பெருங்கூட்டத்தார் கர்த்தருடைய மாபெரும் சேனையை அநேகமாக

உள்ளடக்குகிறவர்களாக இருப்பதற்கு அவர் ஒருவேளை அவர்களை பயன்படுத்துவார். ஒரு பக்கத்தில், பூமியின் பிரபுக்கள், தொழில் தலைவர்கள், நிதி தலைவர்கள், இவர்கள் தங்கள் செல்வாக்கினால் கூட்டிச்சேர்க்கிற முடிகிற அநேகமானவர்களுடன், ஒன்றாக கூடுவார்கள். பின்பு மறு பக்கத்தில், சோஷலிச முறையில், இது தேவனுடைய தீர்வாக இருக்கிறது என்று கோரி, அதிருப்தியாளர்களின் மாபெரும் சேனை இருக்கிறது. அவர்களுடைய இருதயங்கள் மற்றும் நோக்கங்களின் நேர்மையைப் பற்றி நாம் சந்தேகம் கொள்கிறதில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம், ஆனால் தாங்கள் விரும்புகிறதை நிறைவேற்றி முடிக்கும் திறனுடையவர்களாக இருப்பார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை, ஆனால் இந்த விஷயத்தில் தோல்வி அடைவார்கள். தங்கள் பிடிமானத்திற்குள் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்கள் நினைக்கின்ற இடத்திற்கு வந்த பின்பு, அவர்கள் செய்ய விரும்புகிறதை பண அதிகாரங்கள் செய்யவிடுகிறதில்லை என்பதைக் காண்பார்கள். தங்களுடைய நிலைமைக்கு எதிராக, அவர்கள் கிளர்ச்சி செய்யும் உணர்வுகொள்ளும்போது, அது சோஷலிசத்திற்குள் செல்வதற்குப் பதிலாக அராஜகத்தை நோக்கிச் செல்லும் அப்போது, உலகத்தார் தங்களுடைய அழிவை ஏற்படுத்திக்கொள்வதற்கு, தேவன் விட்டு விடுவார், மற்றும் அதன் பிறகு தேவன் உள்ளே வருவார் மற்றும் தம்முடைய சொந்த அதிகாரத்தில் குழப்பத்திலிருந்து சமாதானம் மற்றும் ஒழுங்குமுறையைக் கொண்டு வருவார், மற்றும் தம்முடைய குமாரன், மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார்.

## பிரயோகப்படுத்துதல் - ஆதாம்? மற்றும் அவனுடைய சந்ததி.

### கே: 24:1 :: கேள்வி (1916) - 1

கிறிஸ்துவின் பலியின் புண்ணியம், அல்லது மீட்பின் விலைக்கிரயம் ஆதாமுக்கு எப்போது பிரயோகப்படுத்தப்படும்? இது ஆதாமின் சந்ததி முழுமையையும் உள்ளடக்கி யிருக்குமா?

**பதில்:** சபை முழுமையும் எடுத்துக்கொள்ளப்படும் வரைக்கும், கர்த்தர் தம்முடைய புண்ணியத்தை ஆதாமுக்கு செலுத்த இயலாது, இந்த தடை ஆணை ஆதாமுக்கும் அவனுடைய சந்ததியாருக்கும் இருப்பதால், அந்த புண்ணியம் ஆதாமுக்கும் மற்றும் அவன் சந்ததியாருக்கும் சுமத்தப்படுவதற்கு முன்னால், நாம் முதலாவது நம்முடைய சோதனையின் வழியாக கடக்க வேண்டும்.

ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததிக்குமான இந்த மீட்பின் கிரயம் பற்றி, நாம் மேலும் கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்: சபைக்காக இந்த தடை ஆணை ஏன்? சபை முழுமை அடைவதற்கு முன்பாகவே, சபைக்கு வெளியே ஆதாமுடன் இந்த புண்ணியம் ஏன் சுமத்தப்பட வேண்டும்? சபையுடன் செய்யப்பட்ட இந்த சுமத்தப்படுதலினால் அடமானம் வைக்கப்பட்டிருப்பது போன்று, இது பிதாவாகிய தேவனிடம் ஒரு வைப்புத்தொகையாக இருக்கின்றது. இது எப்படி செயற்படுத்தப்படுகிறது? இந்த வழியில்: முழு சபையினரும், தாங்கள் மாம்சத்தின்படி மரிக்கிறவர்களாயிருக்கிறோம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வேறு எவரும சபைக்குள்ளாக ஏற்றுக்கொள்ளபடவில்லை.. கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்காத எவரும் சபைக்குள் பிரவேசித்திருக்கவில்லை. எல்லோரும் மரணத்திற்குள்ளாகப் போக வேண்டும் என்று நீதி கோருகின்றது; முதலாவது, அவருடைய பாத அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்கள்; அவர்கள் தங்கள் ஜீவன்களை மன விருப்பத்துடன், சந்தோஷமாக, பலியாக ஒப்படைப்பார்கள் மற்றும் உன்னதமான - பரலோக மகிமைக்குள் பிரவேசிப்பார்கள். பின்பு, திரள்கூட்ட வகுப்பார். பூமிக்குரிய ஜீவியத்தைப் பற்றிக்கொள்ள நாடுகிறவர்கள், மற்றும் மரண பயத்தின் மூலமாக அவர்களுடைய ஜீவிய கால முழுமையும் அடிமைத்தனத்திற்கு கீழ் இருக்கிறவர்கள். இந்த வழியில் செல்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவார்களா? அப்படியானால், அவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிவார்கள்., ஏனெனில் அவர்கள் தங்கள் ஜீவனை ஒப்படைத்திருக்கவில்லை. இவர்களுக்கு இயேசு என்ன செய்வார்? வேதாகமத்தில் இந்த போக்காடு வகுப்பாரை கர்த்தர் இயேசு தம்

பிடியில் கொண்டுவருவதும், மற்றும் தகுதியான ஒருவரின் கரங்களினால் வழிநடத்தப்படுவதும் குறிக்கப்படுகிறது, இது மாம்சத்தின் அழிவுக்காக திரள் கூட்டத்தாரை எவ்விதம் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறதை அடையாளப்படுத்துகிறது. ஏன்? ஏனெனில் அது உடன்படிக்கையின் பகுதியாக இருக்கிறது, அவர்களுடைய மாம்சம், ஒன்று, மனவிருப்பத்துடன் பலியிடப்பட வேண்டும், அல்லது, மற்றொன்று, அழிக்கப்பட வேண்டும். இப்பொழுது, அவர்களுடைய சரீரங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டும், மற்றும் அவர்கள் தங்களுடைய அங்கிகளை தோய்த்து வெளுத்திருக்கும் போது, மற்றும் உபத்திரவப்பட்டிருக்கும் போது, அவர்கள் தங்களுடைய பாடத்தைக் கற்றுக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பலியிடும் வகுப்பாராவதில் தவறிவிட்டனர். ஆனால் அவர்கள் சோதனைக்குள்ளாகக் கொண்டுவரப்படும் போது, அவர்கள் தேவனிடம் உண்மையாக இருந்தார்கள் என்ற காரணத்தால், அவர்கள் ஆவியின் தளத்தில் ஜீவனுக்கு தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுகிறார்கள். உயர்வான தளத்தில் தெய்வீக சுபாவத்திற்கு அல்ல, ஆனால் தாழ்வான தளத்தில் தூதர்களைப் போல இருப்பார்கள். நித்திய ஜீவனைப் பெறுகிறவர்கள் எல்லோரும் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுகிறார்கள், ஆனால் சோதனைக்குள்ளாக்கப்படும் போது, கர்த்தரை மறுதலிக்காதவர்களாகவும், மற்றும் மாறாக உபத்திரவப்படுகிறவர்கள் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுகிறார்கள். வெளி 7ல் உருவகம் இவ்வாறு இருக்கிறது, "ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்." சிறுமந்தை வகுப்பார் வெறுமனே ஜெயங்கொள்ளுகிறவர்களைக் காட்டிலும் மேலானவர்களாக இருக்கிறார்கள்; வெறுமனே ஜெயம் பெறுகிறவர்களை விட மேலானவர்கள். அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களைவிட மேலானவர்களாக இருக்கிறார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அவர்கள் கர்த்தருடன் அவருடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்கள் மற்றும் அவருடைய உடன் சுதந்தரர்களாகவும், மற்றும் தெய்வீக சுபாவத்தில் பங்குடையவர்களாகவும் இருப்பார்கள். தேவனிடம் உண்மையில்லாமல் இருப்பதற்கு மாறாக, மன அழுத்தம் மற்றும் உபத்திரவங்களின் கீழ் இறுதியாக வெளிவருகிறவர்கள், நல்ல வெகுமதியை அடைவார்கள், கர்த்தருக்கு நன்றி. அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் விருப்பமுடன், தாங்களாக முன்வந்து உபத்திரவப்படுதலை, பலியின் ஆவியை உடையவர்களாக இருக்கவில்லை. போராடுவதில் அவர்கள் தள்ளிவிடப்படுகிறவர்களாக இருந்தனர். தள்ளிவிடப்படும் போது, அவர்கள் நன்கு போராடினர், ஆனால் தாமாகவே போராடுவதற்குள் சென்ற அவர்களுடைய அதிபதியைப் போன்று அவர்கள் இருக்கவில்லை.

இப்போது மூன்றாவது வகுப்பார் இருக்கிறார்கள், எபி. 6 மற்றும் 10. இவர்கள் வழி விலகிப் போனவர்களும், மற்றும் உடன்படிக்கையின் இரத்தத்திற்கு தங்கள் முதுகைத் திருப்பிக்கொண்டு, இதை சாதாரண விஷயமாக எண்ணிக்கொள்கிறவர்களுமாக இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்; அவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள். இதன் காரணமாகவே இயேசு கூறினார், இவர்கள் எல்லாரும் மரணத்9இற்குள் செல்வார்கள் என்று உறுதியாக கூறுகிறேன். இந்த ஒரு வகுப்பார் இரண்டாம் மரணத்திற்குள்ளானவர்கள், ஏனெனில் அவர்கள் தகுதியில்லாதவர்களாக இருக்கிறார்கள். மற்ற வகுப்பார் சரியான, அல்லது தவறான இடத்திற்கான இடத்தை எடுத்துக்கொள்வதற்காகத் தள்ளப்படுகிறார்கள் - - மற்றும் எல்லோரும் மரித்திருக்கும் போது, பின்பு அடமானம் முழுவதும் மீட்கப்படும், ஏனெனில் கிரய பணம் செலுத்தப்பட்டிருக்கின்றன; அவர்கள் எல்லோரும் மரித்திருக்கிறார்கள், அவர்களில் எவரும் பூமிக்குரிய ஜீவியத்தை உடையவர்களாக இருக்கவில்லை. ஒரு வகுப்பார் தெய்வீக தளத்தில் புதிய ஜீவனைப் பெறுகிறார்கள், மற்ற வகுப்பார் ஆவிக்குரிய தளத்தில் புதிய ஜீவனைப் பெறுகிறார்கள், மற்ற வகுப்பார், இரண்டாம் மரணத்தில் மரிக்கிறார்கள்.

## பிரயோகப்படுத்துதல் - மீண்டும் மீண்டும்.

### கே: 25:1 :: கேள்வி (1916) - 1

கிறிஸ்துவின் புண்ணியம் மீண்டும் மீண்டும் பிரயோகப்படுத்தப்படும் தேவை இருக்குமா?

**பதில்:** இது மீண்டும் மீண்டும் செய்வதற்கான தேவை ஒருபோதும் இருக்காது. உலகத்தின் அஸ்திபாரத்திற்கு முன்பே பிதா திட்டமிட்டு, முடிவுற்ற பணியாக இது இருக்கிறது. இந்த நோக்கத்திற்காகவே அவர் பிதாவிடம் தமக்கு இருந்த மகிமையை விட்டு வந்தார்; இதைத் தான் சுவிசேஷ யுகத்தின் இந்த 1900 வருஷங்களாக அவர் செயற்படுத்தி வந்திருக்கிறார், மற்றும் இதை நிறைவேற்றுவதற்கு மேலும் 1000 வருஷங்கள் அவசியமாக இருக்கின்றது. தேவனுக்கு நன்றி, அல்லேலுயா, எத்தகைய இரட்சகர். அல்லேலுயா. எத்தகைய திட்டம்! இதை எண்ணிப் பாருங்கள்! இதற்கு மேலாக, என் அருமை நண்பர்களே, நீங்கள் உங்களுடைய பரலோக பிதாவைப் போலாவீர்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் போது நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறீர்கள். ஒரு பிள்ளை நன்கு ஜெநிப்பிக்கப்பட்டு, மற்றும் நல்ல தாய் மற்றும் தகப்பனை உடையதாக இருந்தால், பிள்ளை ஒவ்வொரு நேரமும் தகப்பனைப் போன்று இருக்கும். ஆதாமும் மற்றும் ஏவாளும் தங்களுடைய பூரணத்துவத்தைத் தக்க வைந்திருந்தால், அவர்களுடைய பிள்ளைகள் எல்லோரும் ஆதாமைப் போன்று, பூரணமான, சிறப்பான குணங்களை உடையவர்களாக இருந்திருப்பார்கள். இப்பொழுது தேவன் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய சிருஷ்டிகளின் ஒரு புதிய சந்ததியைத் துவங்கியிருக்கிறார். பிற்பாடு நாம் பிதாவுக்குள்ளான சாயலில் இருப்போம். ஒரே தாய், ஒரே உடன்படிக்கையின் கீழ் எல்லோரும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், மற்றும் இது நம்மை வளர்ச்சியடையச் செய்வதாயும், மற்றும் நம்முடைய கர்த்தரின் மகிமையின் சுதந்தரத்திற்குள் நம்மை கொண்டு வருவதாகவும் இருக்கும்., மற்றும் நாம் நம்முடைய பிதாவைப் போன்றே இருப்போம். அவர் நன்றியில்லாதவர்கள் மேல் அன்பாயிருக்கிறார். நாம் நம்முடைய மாபெரும் மீட்பரைப் போன்று அதிகமாகவும், மற்றும் நம்முடைய பரலோக பிதாவைப் போன்று அதிகமாகவும் இருப்போம். நம்முடைய ஜீவனுடைய, நம்முடைய விசுவாசத்தினுடைய முழுமையான நோக்கம், குணத்தின் சாயலை வளர்ச்சி அடையச் செய்வதாக இருக்க வேண்டும்.

## பாவநிவாரணம் - சிறையிருப்பில் எப்படி செயற்படுத்தப்பட்டது?

### கே: 25:2 :: கேள்வி (1908) - 2

நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்றால், யூதர்கள் சிறையிருப்பில் இருந்த போது, அல்லது பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டி இல்லாத போது, நிழலான பாவ நிவாரண நாளின் பலி எப்படி செயற்படுத்தப்பட்டிருக்கும்? இந்த நிழல் எப்போது மறைகிறது?

**பதில்:** அந்த கேள்வியை நான் ஒருபோதும் நினைத்திருந்ததில்லை. இதற்கு நான் பதிலளிப்பதற்கு முன், நான் கொஞ்சம் அதிகம் யோசனை செய்ய வேண்டியிருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

## பாவநிவாரணம் - லேவி 9ம் அதிகாரத்தின் பலிகள் எவ்வளவு தடவைகள் இருந்தன?

### கே: 25:3 :: கேள்வி (1910) - 3

லேவி 9ம் அதிகாரத்தில், காளையின் இரத்தம் மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்டதா? இல்லை என்றால், ஏன் இல்லை? லேவி 9ல் குறிக்கப்பட்டுள்ள பலிகள், லேவி 16ல் குறிக்கப்பட்டுள்ள பலிகளும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவா? மற்றும் லேவி 9ல் செலுத்தப்பட்ட பலி எவ்வளவு தடவை அடிக்கடி இருந்தது?

**பதில்:** லேவி 9ம் அதிகாரத்தில் பாவநிவரண பலியாகிய காளை மற்றும் பாவநிவாரண பலியாகிய வெள்ளாட்டுக்கடா கொல்லப்படுவதின் விவரிப்பு, ஆசாரியனுடைய அர்ப்பணிப்பு தொடர்பானதாக இருந்த நிலையில், லேவி 16ம் அதிகாரத்தின் விவரிப்பு ஜனங்கள் எல்லோருடைய பாவங்களுக்கு பாவ நிவாரணம் தொடர்பானதாக இருக்கின்றது - உலகத்தார் -

பாவநிவாரண நாளின் பலிகள். ஆகவே அவைகள் அநேக விஷயங்களில் ஒரே மாதிரி நுட்பங்களைக் கொண்டிருந்தாலும், அவைகள் துல்லியமாக ஒன்றே அல்ல. உதாரணமாக, நமது கர்த்தருடைய அர்ப்பணிப்பு பாவநிவாரண பணியுடன் அடையாளம் காணப்படவில்லையா? ஆம், வெள்ளாட்டுக்கடாவாக மரணத்திற்குள் உங்களுடைய அர்ப்பணிப்பு, பாவநிவாரண பணியுடன் நெருக்கமாக அடையாளம் காணப்படுகிறது. ஆகவே இந்த இரண்டு நிழல்களில், ஆசாரியத்துவத்தின் அர்ப்பணிப்பு தொடர்பானதாக ஒன்றும், மற்றும் பாவநிவாரண பணியுடன் தொடர்புடையதாக மற்றொன்றும், துல்லியமாக ஒன்றாக இல்லையென்றாலும், நெருக்கமாக சம்பந்தமுடையதாக இருக்கின்றன. லேவி 9ம் அதிகாரம் பற்றிய விஷயத்தில், இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே எடுத்து செல்லப்படவில்லை என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும், ஏனெனில் அது பாவநிவாரணத்தின் உருவகமாக இருக்கவில்லை; பணியின் அந்த அம்சத்திற்கான உருவகமாக அது இருந்ததில்லை; அது அர்ப்பணிப்பின் உருவகமாக இருந்தது, மற்றும் காளை கண்டிப்பாக எப்படி சாக வேண்டும், மற்றும் வெள்ளாட்டுக்கடா கண்டிப்பாக எப்படி சாகவேண்டும் என்பதைக் காண்பித்தது; ஆனால் லேவி 16ம் அதிகாரத்தில் இருந்த ஒன்று, பாவநிவாரண நாளை உருவகப்படுத்தி, பாவத்திற்கு பிராயச்சித்தம் உண்டுபண்ணி, பாவங்களுக்கு நிவாரணம் செய்வதற்கு, மகா பரிசுத்த ஸ்தலத்தில் இரத்தம் தெளிக்கப்படுதலை சரியான முறையில் உள்ளடக்கியிருந்தது.

## பாவநிவாரணம் - அடுத்த வருஷத்திற்காக பலிகள்.

### கே: 26:1 :: கேள்வி (1910) - 1

பாவநிவாரண நாளின் பாவ-பலிகள் முந்தைய வருஷத்திற்காக இருந்ததா, அல்லது அடுத்த வருஷத்திற்காக இருந்ததா? மற்றும் இதை நாம் எப்படி அறிந்துகொள்ள முடியும்?

**பதில்:** அவைகள் அடுத்த வருஷத்திற்காக இருந்தன என்று நான் பதிலளிக்கிறேன். நாம் அறிவோம், ஏனெனில் வருஷத்தின் இறுதியில் அவர்கள் எல்லோரும் அவர்களுடைய பாவங்களின் கீழ் இருந்தனர், மற்றும் பாவ நிவாரண நாளின் பலிகள் செலுத்தப்பட்டு, இரத்தம் தெளிக்கப்பட்டு, மற்றும் ஆசாரியன் வெளியே வந்து, பின்வரும் வருஷத்தில் தேவனுடன் இணக்கமாயிருக்கச் செய்யும் ஆசீர்வாதங்களை அளிக்கும் வரையிலும், அவர்கள் புலம்பிக் கொண்டு, இரட்டு உடுத்திக்கொண்டு, மற்றும் உபவாசம் பண்ணிக்கொண்டு இருந்தனர்.

## பாவநிவாரணம் - சிறையிருப்பில் பலிகள்.

### கே: 26:2 :: கேள்வி (1911) - 2

யூதர்கள் பாபிலோனின் சிறையிருப்பில் இருந்த போது, அவர்கள் தங்களின் வருடாந்தர பாவநிவாரண பலிகளை எப்படி அனுசரித்தனர்?

**பதில்:** இந்த பலிகள் நியமிக்கப்பட்ட இடம் அல்லாமல், வேறு எங்கேயும் செலுத்த முடியாது என்ற எளிய காரணத்தினால், அவர்கள் அனுசரிக்கவில்லை. சரியான இடம் மற்றும் ஏற்பாடுகள் இல்லாமல் இப்படிப்பட்ட பாவநிவாரண பலிகளை செலுத்த முடியாது. ஆகவே சிறையிருப்பின் அந்த வருஷங்களில் பாவநிவாரண நாளின் பலிகள் அவர்களுக்கு இருக்கவில்லை.

## பாவநிவாரணம் - முதற்-பேறானவர்களின் இரட்சிப்பு.

### கே: 26:3 :: கேள்வி (1911) - 3

இந்த நாள் முடிவடைவதற்கு முன்பே, முதற்பேறானவர்கள் எல்லோரும் முழுமையாக இரட்சிக்கப்பட்டிருப்பார்களா?

**பதில்:** கேள்விக்கான பதிலை நீங்கள் ஏற்கனவே உடையவராயிருக்கிறீர்கள்; பலியிடுதல் முடிடைகிற போது, மற்றும் அந்த நாள் முடிவுக்கு வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் அவர்களுடைய மகிமைக்குள் பிரவேசித்திருப்பார்கள், ஏனெனில் உலகத்தாருக்கான செயல்தொடர்புகளை இந்த நாள் எடுத்துக்கொள்ளும்.

## பாவநிவாரணம் - இதனுடைய மூடப்படுதல்.

### கே: 26:4 :: கேள்வி (1911) - 4

பாவநிவாரண நாள் எப்போது முடிவுக்கு வரும்?

**பதில்:** யூத நியாயப்பிரமாணத்தின் கீழ் பாவநிவாரண நாள் ஒவ்வொரு வருஷமும் மீண்டும் மீண்டும் வருகிற இருபத்து நான்கு மணிநேர நாளாக, அந்த நிழலான அமைப்பு முறையில் இருந்தது. நம்முடைய கர்த்தர் இயேசு கிறிஸ்துவுடன் ஆரம்பமான தேவனுடைய ஆசீர்வாதத்தின் காலப்பகுதியாக, அந்த பாவநிவாரண நாளின் நிஜமாக இருக்கின்றது என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம். அது தான் பாவநிவாரண நாளின் துவக்கமாக இருந்தது. இப்பொழுது, மற்ற பலியாகிய வெள்ளாட்டுக்கடாவின் பலி இந்த பாவநிவாரண நாளில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. வேறு வார்த்தைகளில் சொன்னால்: சபை கிறிஸ்துவுடன் அவருடைய பலியில் பங்குபெறுவதற்கு அழைக்கப்படுகிறது, மற்றும் அந்த மாபெரும் பாவநிவாரண நாள் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது; பாவநிவாரண பணி இன்னும் முடிவுபெறவில்லை. பாவநிவாரண நாளின் பலியிடும் அம்சம் சீக்கிரத்தில் முற்றுபெறும் என்று நாங்கள் நம்புகிறோம். அதாவது: கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளப்படும் சரீரத்தின் கடைசி அங்கம் மரணத்திற்குள் கடந்து போயிருக்கும் போது, அது பலியிடுதலின் முடிவாக இருக்கப்போகிறது, ஆனால் இது பாவநிவாரணத்தின் முடிவாக இருக்கப்போவதில்லை. ஏனெனில் பாவநிவாரண நாள் பலியிடும் நாளை மட்டும் உள்ளடக்கியதாயிராமல், ஆசீர்வதிக்கும் பணியில் அந்த பலியை உபயோகப்படுத்தும் நாளாகக் கூட இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், கிறிஸ்துவின் அரசாட்சியின் முழுமையான ஆயிரம் வருஷங்கள் கூட இந்த பாவநிவாரண பணியைச் சேர்ந்ததாக இருக்கிறது, ஏனெனில் பாவநிவாரணம் (ATONEMENT) என்ற வார்த்தையின் அமைப்பு AT-ONE-MENT என்று அர்த்தப்படுத்துகிறது. இப்பொழுது, இந்த தற்காலத்தின் பலியிடுதல் அந்த பாவநிவாரணத்தை பிறப்பிக்கும் நோக்கத்திற்காக இருக்கிறது, மற்றும் பலிகள் முடிவு பெற்று, கர்த்தருக்கு முன்பாக ஒப்படைக்கப்படும்போது, இது பாவநிவாரணத்தின் அடிப்படையாக இருக்கும், ஆனால் உலகத்தாருக்கு இதைப் பிரயோகப்படுத்துவதற்கும், மற்றும் உலகத்தாரை தேவனுடன் இணக்கமாகக் கொண்டு வருவதற்கும் முழுமையாக ஆயிரம் வருஷங்கள் எடுத்துக் கொள்ளப்படும். வார்த்தையின் சரியான மற்றும் முழுமையான பார்வையில் சொன்னால், பாவநிவாரண நாள் 2800 வருஷங்கள் அல்லது அதிகமான காலப்பகுதியாக இருக்கிறது, மற்றும் நாம் இப்பொழுது இதில் பாதியை கடந்திருக்கிறோம்; இல்லை; மற்றும் இதனுடைய பிற்பகுதி வெகு நேர்த்தியாக இருக்கப்போகிறது.

## பாவநிவாரணம் - புண்ணியம்.

### கே: 27:1 :: கேள்வி (1912 - Z) - 1

வேதாகமத்தின்படி ஒருவர் விசுவாசியாகும் போது, நம்முடைய கர்த்தரின் பலியின் புண்ணியம் முழுவதும் ஒவ்வொரு தனிநபருக்கும் சுமத்தப்படும் என்று சொல்வது சரியானதாக இருக்குமா?

**பதில்:** இயேசு உன்னதத்திற்கு ஏறிப்போன போது, நம்முடைய கர்த்தருடைய மரணத்தின் புண்ணியம் முழுவதும் நீதியின் கரங்களில் ஏற்கனவே இருந்தது, ஆனால் இது எந்த அளவிலும், அல்லது எந்த நபருக்கும் பிரயோகப்படுத்தப்படவில்லை. தெய்வீக நோக்கத்தின்படி மூலமுதலான பாவத்தின் நேரிடையான, அல்லது மறைமுகமான விளைவாக இருக்கின்ற,

ஆதாமின் முதல் பாவம் மற்றும் அவனுடைய பிள்ளைகளின் பாவங்கள் எல்லாவற்றிற்கும் புண்ணியம் பிரயோகப்படுத்தப்படப் போகிறது. இப்படியாக, ஆதாமின் சந்ததியின் ஒவ்வொரு அங்கமும், தெய்வீக ஏற்பாட்டினால் தனக்கு வரக்கூடிய, அந்த மீட்பின் புண்ணியத்தில், சொந்த, ஆர்வம் அல்லது பங்கு உடையவராக இருக்கிறார் என்று நாங்கள் கூறுகிறோம்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காக எருசலேமில் தங்கியிருங்கள் என்று நம்முடைய கர்த்தர் ஆதி சபையை விட்டுப் போகும்போது, கட்டளையிட்டார். இது அவர்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பும், மற்றும் தேவனுடைய பிள்ளைகளாக அவர்களுடைய சுவீகாரத்திற்கான சாட்சியமாக இருந்தது. அவர் உன்னதத்திற்கு ஏறிப்போனார், மற்றும் பிதாவிற்கு முன்பாகத் தோன்றினார் - - முதற்பேறானவர்களின் சபை முழுமைக்காக. அவருடைய புண்ணியம் சுமத்தப்படுதல் அவர்கள் எல்லோருக்காகவும், அத்துடன் "மேல் அறையில்" ஆசீர்வாதத்திற்காகக் காத்துக்கொண்டிருந்த கர்த்தரின் பின்னடியார்களை பிரதிநித்துவப்படுத்திய சிலருக்காகவும் இருந்தது.

## பாவநிவாரணம் - பிரதான ஆசாரியன் - - தூபகலசம் - - மகா பரிசுத்த ஸ்தலம்.

### கே: 27:2 :: கேள்வி (1913) - 2

பிரதான ஆசாரியன் நெருப்புத்தணல் உள்ள தூபகலசத்தை எடுத்துக்கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றான் என்பது சரியான கருத்தாக இருக்கிறதா? அப்படியானால், இதற்கான நிஜம் என்ன?

**பதில்:** பிரதான ஆசாரியன் தூபகலசத்தை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் எப்போதாவது எடுத்து சென்றான் என்ற எந்த பதிவு குறித்தும் எந்த அறிவையும் நாங்கள் பெற்றிருக்கவில்லை. உங்களுக்கு ஞாபகம் இருக்கும், பாவநிவாரண நாளின் ஒழுங்குமுறை இவ்வாறு இருந்தது, அதாவது, பிரதான ஆசாரியன் காளையைக் கொன்றான்; பின்பு அவன் காளையின் இரத்தத்தையும், மற்றும் வெண்கல பலிபீடத்திலிருந்து நெருப்புத்தணலையும் எடுத்துக்கொண்டான், மற்றும் திரைக்கு முன்னால் அக்கினியின் மேல் தூபவர்க்கத்தை செலுத்துவதற்காக, அவன் இந்த இரண்டுடன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றான். திரைக்கு பின்னால் அல்ல; பரிசுத்த ஸ்தலத்தில், மகா பரிசுத்த ஸ்தலத்தில் அல்ல. பரலோகத்தில் பலியிடுதல் எதுவும் செய்யப்பட போவதாக நாங்கள் அறியவில்லை, மற்றும் அக்கினி என்பது சோதனைகளைக் குறிக்கின்றது; நம்முடைய எஜமானர் பரலோகத்தில் சோதனைகள் எதையும் பெறவில்லை; அவருடைய சோதனைகள் பூமியில் இருந்தன. ஆகவே இது நிழலின் மேல் வைக்கக்கூடிய சரியான விளக்கமாக உள்ளது என்பது வெளிப்படையாகிறது. உங்களுக்கு ஞாபகம் இருக்கும், நெருப்புத்தணலுடன் உள்ள தூபகலசம் பொன்தூபபீடத்தின் மேல் வைக்கப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலத்தின் பொருட்கள் பற்றி அறிவிக்கும் போது, இந்த பீடம், பொன் தூபபீடம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தது என்று அப்போஸ்தலர் பவுல் தெரிவிக்கிறார். ஆனால் இது அப்போஸ்தலரினால், அல்லது நகல் எடுத்தவரினால் இந்த தவறு இருந்தது என்று நாம் நினைக்கிறோம்; அவர் அதை சொல்லியிருந்திருக்கமாட்டார், ஏனெனில் பீடம் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறது என்று பழைய ஏற்பாட்டில் அறிக்கை மிகவும் தெளிவாக இருக்கிறது; மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த ஒரே அறைகலனாக உடன்படிக்கை பெட்டி மட்டும் இருந்தது; உங்களுக்கு ஞாபகம் இருக்கும், அந்த பெட்டியில் நியாயப்பிரமாணம், ஆரோனின் துளிர்த்த கோல் மற்றும் மன்னா அடங்கிய பொற்பாத்திரம் இருந்தன; அதனுடைய மூடியில் இரண்டு கேருபீன்கள்; கிருபாசனத்தின் மீதும், சிலுவை வடிவத்தில், கிருபாசனத்திற்கு முன்பும் இரத்தம் தெளிக்கப்படுவதாக இருந்தது. நெருப்பு என்ற வார்த்தை எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறதோ, அது சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் பரீட்சைகளை அடையாளப்படுத்துகிறது. பரிசுத்த ஸ்தலத்தில் நெருப்புத்தணலின் மேல் தூபவர்க்கம் நொறுங்கப்படுகிற இடமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் இங்கே குறிக்கப்படுகின்ற நெருப்பு

நம்முடைய கர்த்தருடைய மூன்றரை வருஷங்களின் ஊழியத்தை அடையாளப்படுத்துகிறது; சத்தியம், சகோதரர்கள் மற்றும் கர்த்தரின் ஊழியத்தில் அவர் தம்முடைய பூரண சக்திகள் எல்லாவற்றையும் உபயோகப்படுத்தி வந்தார். ஒவ்வொரு தடவையும் தூபவர்க்கங்கள் நெருப்பைத் தொடும் போது, இது தூபவர்க்க புகையை உண்டாக்கியது, மற்றும் அவ்விதமாகவே, இயேசுவின் ஜீவியம் இந்த தூபவர்க்கத்தின் தொடர்ச்சியான காணிக்கையாக கர்த்தருக்கு முன்பாக இருந்தது, மற்றும் இவ்விதமாக நிறைவேற்றப்பட்ட கிறிஸ்துவின் பலியின் விளைவாக, திரைக்கு அப்பால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போவதற்கு தகுதியுள்ளவராக எண்ணப்பட்டார்.

அவர் தம்முடைய பலியை நிறைவேற்றுகிற வரைக்கும் அவர் மாபெரும் பிரதான ஆசாரியராவதற்கு தகுதி உடையவராக இருக்கவில்லை. யோர்தானில் செய்யப்பட்ட பலி கல்வாரி வரைக்கும் முடியவில்லை. நெருப்பின் மேல் தூபவர்க்கம் நொறுங்கப்படும் இந்த பணி முடிவடைவதற்கு மூன்றரை வருஷங்கள் முழுவதும் ஆனது, மற்றும் இந்த நிழலில் நாம் வாசிப்பது உங்களுக்கு நினைவிருக்கும், அதாவது, பிரதான ஆசாரியன், தான் சாகாமலிருப்பதற்கு, பீடத்தின் மேல் இந்த தூபவர்க்கத்தை, அதின் புகை திரைக்கு அப்பால் ஊடுருவி செல்லும்வகையில் செலுத்த வேண்டும், ஆகவே, அவன் இரண்டாம் திரையின் கீழ் கடந்து போவதற்கு முயற்சிக்கும் போது, தூபவர்க்கத்தின் புகை கிருபாசனத்தை மூடியிருக்கும், மற்றும் அவன் சாக மாட்டான். தூபவர்க்கத்தின் புகை கிருபாசனத்தை மூடியிருக்காவிட்டால், அவன் சாவான், மற்றும் கர்த்தர் இயேசு கிறிஸ்து தம்முடைய பலி மற்றும் காணிக்கைகளை செலுத்தி முடித்திருக்காவிட்டால், அவர் திரைக்கு அப்பால் மகிமைக்குள் பிரவேசித்திருக்க முடியாது.

இந்த விஷயம் தொடர்பாக மூன்று நெருப்புகள் இருந்தன என்பதை நீங்கள் ஞாபகத்தில் கொள்ளுங்கள். பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள இந்த ஒரு நெருப்பு நம்முடைய எஜமானரின் பலியைக் குறித்த தேவனுடைய பார்வையை அடையாளப்படுத்துகிறது, மற்றும் பின்பு அதே பலியைக் குறித்த மற்றுமொரு பார்வை இருந்தது; அவர் பிராகாரத்தில் கொழுப்பு தகனிக்கப்படுதலினால் அடையாளப்படுத்தப்படுகிறார், இந்த பிராகார நிலைமை, மனுஷீக சுபாவம் இந்த விஷயத்தை புரிந்துகொள்வதை அடையாளப்படுத்துகிறது; நீதிமானாக்கப் படுதலின் பிராகார நிலைமைக்குள் இருக்கிற எல்லோரும், கொழுப்பு தகனிக்கப்படுதலினால் அடையாளப்படுத்தப்பட்டபடி, அவர் உண்மையில் தேவனுடைய குமாரனாக இருந்தார் என்று கண்டுணர்ந்து கொண்டனர், இது ஒரு தெளிவான வெளிச்சத்தை உண்டாக்குகிறது; மற்றும், பிறகு, உங்களுக்கு ஞாபகம் இருக்கும், பாளயத்திற்கு புறம்பே எரிந்துகொண்டிருக்கும் நெருப்பு இருந்தது, இதன் மேல் காளையின் தோல், கொம்புகள் போன்றவை தகனிக்கப்பட்டன, மற்றும் கர்த்தருடைய பலி உலகத்திற்கு எப்படி காட்சியளித்தது என்பதை அது அடையாளப்படுத்தியது; உலகத்தாருக்கு இது ஒரு நாற்றமாக இருந்தது; அவர் ஒரு தவறு செய்து கொண்டிருந்தார், மற்றும் இந்த ஏழையான சீஷர்களுடன் சுற்றித் திரிந்து, இராஜ்யத்தைக் குறித்து பேசுவதினால் ஒரு நல்ல, மதிப்புமிக்க ஜீவியத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார், இந்த மூன்று உருவகங்களும் மூன்று நிலைப்பாடுகளில் நமது கர்த்தரை விவரிக்கின்றன, முதலாவது, உலகத்தாரின் நிலைப்பாட்டில், கிறிஸ்துவின் பலி உலகத்தாரின் ஆவிக்கு ஒத்த விதமாக இல்லை; இரண்டாவது, இயேசுவின் சீஷர்களின் பிராகாரத்தில், அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாகிய இரட்சகராக இருந்தார் என்ற பார்வை; மற்றும், மூன்றாவது, இந்த கேள்வியில் குறிக்கப்பட்டுள்ள தேவனுடைய பார்வை, பரிசுத்த ஸ்தலத்தில் தூபவர்க்கம் தகனிக்கப்படுதல் ஆகும், மூன்று நெருப்புகள் அனைத்தும், கர்த்தருடைய பலியின் மூன்று கட்டங்களில் கடந்து போகும் வரைக்கும், அவர் திரைக்கு அப்பால் கடந்து போவதற்கு தயாராக முடியாது.

## பாவநிவாரணம் - எந்த வருஷத்திற்கு சுத்திகரிக்கப்படும்.

**கே: 29:1 :: கேள்வி (1913) - 1**

பாவநிவாரண நாளின் பலிகள் நிழலாக ஜனங்களை முந்தின வருஷத்திற்கு சுத்திகரிப்பு செய்ததா? அல்லது அதைத் தொடர்ந்த வருஷத்திற்கு சுத்திகரிப்பு செய்ததா?

**பதில்:** அதைத் தொடர்ந்த வருஷத்திற்கு.

## பாவநிவாரணம் - எதன் அடிப்படையில்.

### கே: 29:2 :: கேள்வி (1916) - 2

பாவநிவாரணத்தின் அடிப்படை என்னவாக இருக்கிறது?

**பதில்:** இது பாவத்திற்கான பலிகளாக இருந்தன என்று வேதாகமம் கூறுகிறது, மற்றும் சீனாயில் இஸ்ரயேலுடன் தேவன் பண்ணின உடன்படிக்கையில் இது எல்லாம் உறுதியாக்கப்பட்டுள்ளது, இது விசேஷித்த உடன்படிக்கையின் பிரதிநிதித்துவமாக இருந்தது. மோசேயைவிட பெரியவரை அடையாளப்படுத்தி, அங்கே மோசே நின்றார். அவர் என்ன செய்தார்? முதலாவது, அவர் பாவ பலியாக, பலியை சங்கரித்தார், மற்றும் இந்த பலியின் அடிப்படையில், ஒரு உடன்படிக்கை இருக்க முடிந்தது, அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு, இது அந்த பலிகளின் தெளிக்கப்பட்ட இரத்தமாக இருந்தது; ஆகவே இங்கே நாம் அவைகளை விட விசேஷித்த பலிகளை உடையவர்களாக இருக்கிறோம். இந்த நிழலான பலிகள் வெறுமனே பூமிக்குரிய தளத்தில் இருந்தன, ஆனால் இங்கே நாம் விசேஷித்த பலியை உடையவர்களாக இருக்கிறோம், நிஜமான காளையாக இயேசு மற்றும் நிஜமான வெள்ளாட்டுக்கடாவாக சபை. சபையின் இந்த பலியிடுதல் 1800 வருஷங்களுக்கு மேலாக நடந்து கொண்டு இருக்கின்றது மற்றும் விரைவில் இது எல்லாம் முடிவு பெறும் மற்றும் இரத்தம் மாபெரும் மத்தியஸ்தரின் கரங்களில் இருக்கும். நிழலில் திரும்பிப் பாருங்கள், மற்றும் இரத்தத்துடன் அவர் என்ன செய்யப்போகிறார் என்று பாருங்கள். நியாயப்பிரமாண பலகையில் முதலாவது தெளித்தல். மோசே நியாயப்பிரமாண பலகைகளின் மேல் தெளித்திருந்த போது, அவர் பின்பு அதே இரத்தத்துடன் ஜனங்களின் மேல் தெளிப்பதற்கு தயாராக இருந்தார். இப்போது இரத்தம் அடிப்படையாக இருந்தது. இயேசுவின் இரத்தம் அடிப்படையானதும், முக்கியமான விஷயமுமாக இருக்கும் நிலையில், அவருடைய பரிசுத்தவான்களின் இரத்தம் அவருடன் எப்படி கணக்கிடப்படும் என்பதை இது உருவகப்படுத்துகிறது. - - இயேசுவின் பாத அடிச்சுவடுகளில் பின்பற்றுகிறவர்கள் எல்லோரும் கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள், அவர்களுடைய இரத்தம் பலியிடப்பட்டு வருகிறது, மற்றும் நிழலில் அந்த இரத்தம், காலப்போக்கில் உலகத்தாருடைய நல்லிணக்கத்திற்காக இருக்கிறது. இதனுடைய மதிப்புக்கு நாம் எதையும் சேர்க்கிறோம் என்று அர்த்தமல்ல, ஆனால் தற்காலத்தில் இயேசுவுடன் நாம் எப்படி தொடர்புடையவர் களாயிருக்கிறோம் என்பதையும், மற்றும் சபை முழுமை பெற்ற உடனேயே தொடரக்கூடிய மகிமையில் பங்கு பெறுவதையும் காண்பிக்கின்றது. பின்பு, உலகத்தை ஏற்றுக்கொள்வதற்கும், மற்றும் உலகத்தின் இராஜாவாகிறதற்கும், மற்றும் அவருடைய இராஜ்யம் ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும் ஸ்தாபிக்கப்படுவதற்குமான சரியான நேரம் இயேசுவுக்கு வந்திருக்கும் என்று நாம் புரிந்து கொள்கிறோம். பிறகு அவர் உலகத்துக்காக பிதாவைக் கேட்பதற்கு அவர் தயாராக இருப்பார், மற்றும் அப்போது உலகத்தாருக்காக தம்முடைய பலியை உரியதாக்க தயாராவார். அந்த சமயத்தில் உலகத்தாரின் சார்பாக இது முற்றிலும், மற்றும் முழுவதுமாக அளிக்கப்பட இருக்கிறது, மற்றும் சபை முழுமை பெற்ற நேரத்தில் நாம் எல்லோரும் மகிமையில் கர்த்தருடன் இருக்கும் போது தான், அவர் இதை உலகத்துக்காகச் செய்ய தயாராக இருப்பார். 2ம் சங்கீதம் கூறுகிறது, “என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்கு சுதந்தரமாகக் கொடுப்பேன்” போன்றவை. தேவனுடைய நிலைப்பாட்டில் உலகம் முழுவதும் புறமதஸ்தர்களாக இருக்கின்றனர். புறமதஸ்தர் (HEATHEN) என்ற வார்த்தை புறஜாதிகள் (GENTILE) என்று மொழிபெயர்க்கப்படும் அதே வார்த்தையாக இருக்கிறது. தேவன் ஒரு ஜனத்தை உடையவராயிருந்தார், மற்றும் தேவனுடைய ஜனமாயிராமல் வெளியே மற்ற ஜனங்கள் இருந்தனர். அவர்கள் புறமதஸ்தர்களாக இருந்தனர்,

மற்றும் தேவனுடன் இணக்கமாயிருந்தவர்கள் மட்டுமே அவருடைய ஜனங்களாக இருந்தனர், மற்றும் அவர்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாக இருந்தனர். "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்."

## பாபிலோன் - - ஐபிராத்து நதி.

### கே: 29:3 :: கேள்வி (1911) - 3

இரகசிய பாபிலோன் இரகசிய ஐபிராத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் போது, சொல்லர்த்தமான பாபிலோன் சொல்லர்த்தமான ஐபிராத்து நதியின் மேல் கட்டப்பட்டது. அப்படியானால் இரகசிய நதி எதுவாக இருக்கிறது?

**பதில்:** அந்த பாடத்தின் பேரிலேயே கூடிய விரைவில் நாம் ஒரு பிரசங்கத்தைப் பெறுகிறவர்களாக இருப்போம், மற்றும் நீங்கள் அங்கே பதிலை அநேகமாக பெற்றுக்கொள்வீர்கள். ஆனால் நான் சுருக்கமாகக் கூறுகிறேன், வேதாகமத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றபடி, ஐபிராத்து ஜனங்களை அடையாளப்படுத்துகின்றது. இவ்விதமாக ஸ்திரீ தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிறாள், இந்த தண்ணீர்கள் ஜனங்கள், ஜாதிகள், மற்றும் பாஷைக்காரர்களாக இருக்கின்றனர், மற்றும் இரகசிய பாபிலோனிலிருந்து, அல்லது நிஜமான பாபிலோனிலிருந்து இரகசிய ஐபிராத்தின் தண்ணீர்கள் விலகிப் போவது, ஜனங்களின் விலகிப்போவதைச் சுட்டிக்காட்டுகிறது. செய்தித்தாள்களில் நாம் வாசிக்கும் விதமாக, அவர்கள் பெருமளவில் இப்பொழுது விலகிப் போகின்றனர். மிகவும் சிறிய சபைபிரிவுகள் எங்கும் இருக்கப் போகின்றன. ,மேலும் நான் மூன்று வாரங்களுக்கு முன்பு பாஸ்டனில் இருந்த போது, நம்முடைய பிரசங்கங்கள் ஞாயிற்று கிழமை முடிந்த பின்பு, பாஸ்டன் காங்கிரகேஷனல் சபையின் உதவி பதிப்பாசிரியர் திங்கள் கிழமை என்னிடம் வந்தார் மற்றும் கூறினார், "பாஸ்டர் ரசல், நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?" "ஆம்." என்றேன்.

அவர் கூறினார், "காங்கிரகேஷனல் சபையின் உதவி பதிப்பாசிரியராக இருக்கிறேன், மற்றும் நான் ஞாயிறு அன்று பாஸ்டன் அரங்கில் வெளியே இருந்தேன், மற்றும் அது உஷ்ணமான நாளாக இருந்தது, மற்றும் நான் அந்த பார்வையாளர்களைக் கவனித்தேன், அந்த உஷ்ணமான நாளில், அவ்வளவு நீண்ட நேரத்திற்கு அந்த கூரையின் கீழ் உட்கார்ந்திருந்த நாலாயிரம் ஜனங்களைப் பார்த்தேன். பாஸ்டனில் இங்கே எங்களுடைய மிக பெரிய சபைகள், எங்களுடைய பேச்சாற்றல் மிக்க பிரசங்கிமார்கள் மற்றும் நன்றாக பணம் செலுத்தப்படும் பாடகர் குழுக்கள் இருந்தாலும், கூடுகையில் இருபதிலிருந்து நாற்பது பேர்கள், அல்லது ஐம்பதிலிருந்து எழுபது பேர்கள் மட்டும் உடையவர்களாக இருப்பது ஏன் என்று ஆச்சரியப்படலானேன். இது எப்படி? இது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதை எனக்குக் கூறமுடியுமா?

நான் கூறினேன், "நான் நினைக்கிறேன், அருமை நண்பரே, தேசத்தின் மேல் பஞ்சம் இருந்தது, ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சம் அல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமல்ல., கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம் என்று சொல்லி, வேதாகமம் விளக்குகிறது." நான் சொன்னேன், அந்த ஜனங்கள் கர்த்தருடைய திருவசனத்தைப் பற்றி ஏதோ ஒன்றைக் கேட்க விரும்பினார்கள் என்று நினைக்கிறேன்."

## பின்வாங்குகிறவர்கள் - எந்த விதத்தில் வரவேற்பது?.

### கே: 30:1 :: கேள்வி (1909) - 1

பாபிலோனை விட மோசமானவர்களென்று எங்களைப் பெயரிட்டு, சபையை விட்டு விலகிப்போனவர்களை நாங்கள் எப்படி வரவேற்க வேண்டும்? அவர்கள் எங்களுடைய கூடுகைகளுக்கு வரும்போது, நாங்கள் அவர்களுக்கு இதயப்பூர்வமான வரவேற்பை அளிக்கலாமா?

**பதில்:** நான் நினைக்கவில்லை, நீங்கள் ஏன் செய்ய வேண்டும்? என்னுடைய மீட்பரின் குண சாயல் குறிக்கப்பட்டவர்களாக, என்னுடைய அருமை மீட்பரைப் போல விசேஷமாக இருப்பவர்களிடம் நாம் விசேஷித்த விதமாக மனப்பூர்வமாக இருப்பேன். சபை வகுப்பை விட்டு விலகியவர்களுடன் நான் அவ்வளவு மனமுவந்து இருக்காமல், வித்தியாசம் இருக்கிறது என்று அவர்கள் பார்ப்பதற்கு விட்டு விடுங்கள், இல்லையென்றால் அவர்கள் வகுப்பில் இருக்கிறவர்களை விட அவர்கள் சிறந்தவர்கள் என்று அவர்கள் சிந்திக்கக்கூடும்; இல்லையெனில் அவர்கள் சில வழிகளில் கட்டுப்பாடற்று, ஆரவாரமுள்ளவர்களாவார்கள்; அப்போஸ்தலரின் வார்த்தைகளின்படி, அவர்கள் வரவேற்கப்பட வேண்டும், “பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.” பிரிவினை நோக்கிய சுபாவம் கொண்டிருப்பவர்களை அடையாளம் காணுங்கள், மற்றும் அவர்களை உங்களுடைய ஆத்துமார்த்த தோழர்களாக்காதீர்கள், அவர்களை மூப்பர்களாகத் தேர்வு செய்யாதீர்கள், போன்றவைகள். ஏனெனில் அது தான் தவறான காரியமாக இருக்கும். சச்சரவு மனநிலை கொண்டிருக்கும் எவரையும் உற்சாகப்படுத்தாதீர்கள். அவரை அலமாரிக்குள் இருத்தி விடுங்கள் மற்றும் தனக்குள்ளே சச்சரவு செய்திட விட்டு விடுங்கள். அவர்களுடைய ஆவியில் எதையும் நம்முடைய இருதயங்களில் வளர்த்துக்கொள்ளக்கூடாது என்பதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் கனிவாக, ஆனால் உறுதியாக இருப்போம். அப்படிப்பட்டவர் எவரேனும் என்னை அணுகினால், நான் அவரிடம் கை குலுக்கிக்கொள்வேன். இல்லை, நான் உங்களுடன் கை குலுக்க மாட்டேன் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் நான் அவர்களை என்னுடைய ஆத்மார்த்த தோழர்களாக்கிக் கொள்ளமாட்டேன். ஆதி சபையில் அப்போஸ்தலர்களைப் பற்றி அவர்கள் சொன்னதை நாம் நினைவில்கொள்ள விரும்புகிறோம், “அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று அறிந்துகொண்டார்கள்.” நாம் நம்முடைய கர்த்தர் இயேசுவை நம்முடைய ஆத்மார்த்த தோழராக்கிக் கொள்ள விரும்புகிறோம். நாம் இயேசுவுடன் இருக்க விரும்புகிறோம், மற்றும் அவருடைய குண சாயலை மிக அதிகம் உடையவர்கள் அவரைப் போன்று அதிகம் இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக இருக்கிறார்கள். அவருடைய ஆவி அதிகம் உடையவர்களாயிருந்தவர்களின் மத்தியில், தமக்கு அருகில் இருக்க வேண்டுமென்று பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை அவர் தேர்வு செய்தார். இந்த மூன்று பேர் மறுரூப மலையில் அவருடன் இருந்தனர்., மற்றும் கெத்சமனே தோட்டத்தில் அவர் அருகில் இருந்தனர். **கர்த்தரின் ஆவியுடையவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.**

## ஞானஸ்நானம் - பரிசுத்த ஆவியின் நாமத்தில்..

### கே: 31:1 :: கேள்வி (1907) - 1

பரிசுத்த ஆவி ஒரு ஆளாக இல்லையென்றால், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் நாம் ஏன் ஞானஸ்நானம் பெறுகிறோம் என்று சிலர் கேட்கின்றனர்.

**பதில்:** முதலாவது, வேத வாக்கியங்களில் கொடுக்கப்பட்ட விதிமுறையாக இது உள்ளது, மற்றும் இரண்டாவது, இது சரியான கருத்து என்ற காரணத்தில் உள்ளது. நாம் நம்முடைய சொந்த பெயரினால், அல்லது பாப்டிஸ்ட் சபையின் பெயரினால், அல்லது வேறு எந்த சபையின் பெயரினால் ஞானஸ்நானம் பெறுகிறதில்லை. நாம் எந்த அதிகாரத்தை கண்டுணர்கிறோம்? ஞானஸ்நானம் பண்ணுவதற்கு பிதாவின் அதிகாரம் மற்றும் அனுமதியை நாம் கண்டுணர்கிறோமா? ஆம், உண்மை. ஞானஸ்நானம் பண்ணுவதற்கு குமாரனுடைய அதிகாரம் மற்றும் அனுமதியை நாம் கண்டுணர்கிறோமா? ஆம், உண்மை. ஆவி இந்த ஞானஸ்நானம் விஷயத்தை அனுமதிக்கிறது என்பதை நாம் கண்டுணர்கிறோமா? ஆம், உண்மை. நல்லது, பின்பு, இது பிதாவின் சித்தமாக இருக்கிறது என்பதையும், மற்றும் கர்த்தரின் விருப்பம் மற்றும் போதனையின் ஆவியின் ஒவ்வொரு உணர்வையும் அடையாளப்படுத்துகிறதாகவும் இருப்பதால், நாம் ஞானஸ்நானத்தை பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தில், நாம் ஞானஸ்நானத்தை செயற்படுத்துகிறோம். ஞானஸ்நானம் பற்றிய விஷயம் கர்த்தர்

இயேசுவினால் அங்கீகரிக்கப்படுகிறது, பரலோக பிதாவினால் அங்கீகரிக்கப்படுகிறது, மற்றும் பரிசுத்த ஆவியினால், தேவனுடைய ஆவியினால், சத்திய ஆவியினால் அங்கீகரிக்கப்படுகிறது என்பது தான் கருத்தாக இருக்கிறது.

## ஞானஸ்நானம் - ஆராதனையில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள்.

### கே: 31:2 :: கேள்வி (1909) - 2

திரித்துவக் கொள்கை வேத வாக்கியங்களுக்கு புறம்பாக இருக்கும் நிலையில், ஞானஸ்நானத்தில், நாம் ஏன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறோம்?

**பதில்:** ஏனென்றால், "பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தில்" என்று கர்த்தர் இயேசு கூறும்போது, அவர் இந்த விதிமுறையை அளிப்பதாகத் தோன்றுகிறது.

எந்த நாமம்?

அதிகாரத்தில், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் மரணத்தின் சாயலில் ஏன் இருக்கவில்லை? ஏனென்றால் பிதாவும் பரிசுத்த ஆவியும் மரணமடையவில்லை. மற்றும் நாம் பிதா மற்றும் பரிசுத்த ஆவிக்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதில்லை. நாம் **கிறிஸ்துவுக்குள்** ஞானஸ்நானம் பெறுகிறோம், ஆனால் பிதா மற்றும் பரிசுத்த ஆவியின் **நாமத்தில்.** நம்முடைய கர்த்தர் நிறுவியதும், மற்றும் நம்மை அனுசரிக்குமாறு விரும்பியதும் வெறுமனே ஏதோ ஒரு விஷயமாக இருக்கவில்லை. நாம் இதைச் செய்யும் போது, பிதாவின் சித்தத்திற்கு இணக்கமாகவும், பரிசுத்த ஆவியின் விருப்பத்திற்கும், மற்றும் நமது கர்த்தரின் சொந்த ஆவிக்கும் இணக்கமாக நாம் இதை செய்துகொண்டு இருக்கிறோம் என்பதை நாம் அறிவதற்கு இயேசு நம்மிடம் விருப்பமாயிருக்கிறார்.

## ஞானஸ்நானம் - பாவங்களின் மன்னிப்பு.

### கே: 31:3 :: கேள்வி (1909) - 3

(அப். 2:38,39), "பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது." பேதுருவின் கட்டளையின்படி, பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு, அழைக்கப்படுகிற எல்லாரும் பாவமன்னிப்புக்கென்று கண்டிப்பாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்றால், யூதர்கள் மட்டுமே அவர்களுடைய பாவங்களின் மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றனர் என்ற வேத வாக்கியத்துடன் இதை நீங்கள் எப்படி இணக்கம் பெறச்செய்வீர்கள்?

**பதில்:** அவர்கள் இங்கே என்ன செய்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறதை வேதாகமம் சொல்லுகிறதில்லை என்று நான் பதிலளிக்கிறேன். இதை ஒரு டஜன் தடவைகளுக்கு மேல் படியுங்கள். பெரும்பாலான ஜனங்கள் அரை டஜன் தடவைகளுக்கு மேல் எதையும் படிக்க வேண்டியிருக்கிறது. இதற்காக நீங்கள் மனம் புண்பட வேண்டாம், ஏனெனில் மற்றவர்கள் அதையே செய்ய வேண்டியிருக்கிறது. எத்தனை வேதவாக்கியங்களை நூறு தடவைகளுக்கு மேல் வாசித்திருப்பீர்கள்? மிக அதிகமாக.

இப்போது, பேதுரு சொல்வது இது தான். அதாவது, தனக்கு முன்பு இருந்தவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்களுடைய பாவங்களின் மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற வேண்டும், மற்றும் பிறகு அவர் தன் அறிக்கையில் சரியானவராக

இருக்கிறார் என்பதை நிரூபிக்க முற்படுகிறார், ஏனெனில் வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று கூறுகிறார். தூரத்திலுள்ளவர்கள் அவர்களுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பண்ணுவது தேவை என்று அவர் கூறவில்லை, ஏனெனில் அவர்கள் புறஜாதிகளாயிருந்தார்கள். **வாக்குத்தத்தங்கள்** உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே இருக்கவில்லை. பேதுரு, தேவனுடைய வாய்க்கருவியாக, பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசுகையில், "தூரத்திலுள்ள யாவருக்கும்" என்று குறிப்பிடுகிறார். ஆனால் தூரத்திலுள்ள அவர்கள் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள், அல்லது அவர்களுக்கு எந்த வகையான ஞானஸ்நானம் தேவைப்படுகிறது என்பதைப் பற்றி கூறவில்லை.

## ஞானஸ்நானம் - ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்று யூதர்களுக்கு கட்டளையிடப்பட்டதா?

**கே:** 32:1 :: **கேள்வி (1911) - 1** (பார்வையாளர்களிடமிருந்து) ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டுமென்று யேகோவாவிடமிருந்து யூதர்களுக்கு கட்டளை ஏதும் இருந்ததா?

**பதில்:** நியாயப்பிரமாணத்தில் இது போன்று எதுவும் இருந்ததில்லை என்று சற்று முன்பு நான் கூறினேன். யோவான் அந்த சமயத்தில் செய்தது ஏதோ ஒரு விதத்தில் விசேஷமாக இருந்தது, மற்றும் இயேசு கூறுகையில், அவர்கள் யோவானை விசுவாசித்திருந்து, அவர் சொன்னதை ஏற்றுக்கொண்டிருந்தார்களானால், அவர்கள் தயாராக இருந்திருப்பார்கள் மற்றும் தம்மை விசுவாசித்திருப்பார்கள். யோவானுடையது, ஒரு விசேஷித்த செய்தியாக, ஒரு விசேஷித்த நோக்கத்திற்கு ஒரு விசேஷமான ஞானஸ்நானமாக இருந்தது, மற்றும் வெளிப்புறத்தார்களை உள்ளே கொண்டுவருவதற்கு சிந்தனை செய்த விஷயமாக இருக்கவில்லை, ஏனெனில் யோவான் வேறு எவரையும் உள்ளே கொண்டுவர வேண்டுமென்று கருதவில்லை. இயேசு யோவானிடம் வந்த போது, இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் மற்றும் பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார் என்பதை யோவான் அறிந்திருந்தார். யோவான் அவரை தடை செய்து, கூறினார், "அப்படி இல்லை, ஆண்டவரே, நம்மில் ஒருவர் ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமென்றால், நம்மில் ஒருவர் பாவியாக இருந்தால், நான் தான் பாவியாக இருக்கிறேன், மற்றும் நான் உமக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு மாறாக, நீர் தான் எனக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்." ஆனால் இயேசு அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை, மற்றும் அவர் இந்த தத்துவத்தை எல்லாம் யோவானுக்கு விளக்கவில்லை. அவர் வெறுமனே கூறினார், "யோவான், இப்பொழுது இடங்கொடு; ஏன் என்று நான் உனக்கு விளக்க மாட்டேன்." ஏன் என்பதை நாம் இப்போது அறியலாம். இயேசு சுத்திகரிப்பதற்கு பாவங்கள் எதையும் உடையவராக இருக்கவில்லை, ஆகவே, இது பாவிகள் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது, அவர்கள் தங்களுடைய பாவங்களை கழுவ வேண்டும் என்ற விதத்தில் நம்முடைய நண்பர் அனுமானித்தபடி இது இருக்கவில்லை. ஏனெனில் பாவமில்லாதவரான இயேசு பாவிகள் எல்லோருக்கும் அவர்களுடைய பாவங்களைக் கழுவுவதற்கு எப்படி முன்மாதிரியாக இருக்க முடியும்? நாம் சொல்லக்கூடிய பதில் என்னவென்றால், இயேசு செய்தது ஏதோ ஒரு விதத்தில் புதியதாகவும், அசாதாரணமானதாகவும், மற்றும் விசேஷமானதும், யோவான் அந்த சமயத்தில், முன்பு, அல்லது பின்பு செய்திருந்த எதிலிருந்தும் வித்தியாசமானதாக இருந்தது. யோவான் புரிந்துகொள்ளாத ஒன்றை அவர் செய்துகொண்டிருந்தார். இயேசு புதிய ஒழுங்குமுறைக்கான காரியங்களுக்கு அடித்தளம் அமைத்துக்கொண்டிருந்தார், மற்றும் அவருடைய ஞானஸ்நானத்தினால், மாம்சீகத்தின் அழுக்கை அகற்றுவதற்கோ, அல்லது பாவத்தை அகற்றிப்பொடுவதற்கோ அவர் அடையாளப்படுத்தவில்லை. ஏனெனில் அவர் பாவம் இல்லாதவராயிருந்தார், ஆனால் அவர் மரணபரியந்தம் தம்முடைய ஜீவனின் முழுமையான அர்ப்பணிப்பை அடையாளப்படுத்திக் கொண்டிருந்தார். மற்றும் அவர் இப்படியாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார், உருவகத்தில், மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தினால், அடையாளப்படுத்தினார், பாவங்களை கழுவுவதினால் அல்ல, பரிசுத்த பவுல் கூறுகிறபடி, பாவங்கள் மன்னிக்கப்பட்ட விசுவாசிகள்

எல்லோரும் கிறிஸ்துவுடன் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் பெறுவதற்கு சிலாக்கியம் உடையவர்களாக இருக்கிறார்கள், ஏனெனில் அவர்களிடத்தில் கழுவி, அகற்றிப்போடுவதற்கு பாவங்கள் இல்லை, ஆனால் அவர்கள் அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் பெற வேண்டும்.. பரிசுத்த பவுல் ரோமர் 6ம் அதிகாரத்தில் தெரிவிக்கிறபடி, "நம்மில் அநேகர் கிறிஸ்துவுக்குள்ளாக,, தலையாகிய மேசியாவின் இந்த மகிமையான சரீரத்திற்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றோம் - - கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நம்மில் அநேகர் அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் பெற்றோம் - - பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவில்லை, தண்ணீருக்குள்ளாக ஞானஸ்நானம் பெறவில்லை, ஆனால் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்" பின்பு, கிறிஸ்துவுடன் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நம்மில் அநேகர், அவர் செய்தது போன்று, மரணபரியந்தம், பிதாவின் சித்தத்தை செய்வதற்கு நம்முடைய விருப்பங்களை ஒப்புக்கொடுத்தோம் - நம்மில் அநேகர் இந்த நிலையை எடுத்திருக்கிறார்கள், இது தேவனுடைய பார்வைக்கு பிரியமானதாக இருக்கிறது என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன, மற்றும் இந்த விஷயத்தை நாம் அடையாளப்படுத்துகிறோம், இந்த அர்ப்பணிப்பை அடையாளப்படுத்துகிறோம், இயேசு அவருடைய அர்ப்பணிப்பை தண்ணீர் முழுக்கினால் அடையாளப்படுத்தினது போல, தண்ணீர் முழுக்கினால் நாம் அடையாளப்படுத்துகிறோம். ஆகவே நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றுகிறோம்.

## ஞானஸ்நானம் - யாருடைய நாமத்தில்?

### கே: 33:1 :: கேள்வி (1911) - 1

"பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து," இது ஒன்றில் மூன்று ஞானஸ்நானங்களை சுட்டிக்காட்டுகிறது என்று சொல்வது சரியாக இருக்குமா? - அதாவது: நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்காக பிதாவின் நாமத்தில், நம்முடைய பலிக்காக குமாரனுடைய நாமத்தில், மற்றும் நம்முடைய ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலுக்காக, பரிசுத்த ஆவியின் நாமத்தில்?

**பதில்:** நாங்கள் பதிலளிக்கிறோம், இல்லை. என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, அது கருத்தாக இருக்கிறதில்லை. நாமத்தினால் - - அதிகாரத்தினால் நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம்; நான் உங்களுக்கு அளிக்கிற என்னுடைய ஏதோ ஒன்றாக இது இருக்கின்றது என்று வெறுமனே இயேசு கூறுகிறதில்லை, ஆனால் அவர் சபைக்கு ஆணையிடுகிற ஞானஸ்நானம், நாமத்தினால், அதாவது, பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் அதிகாரத்தினால் இருந்தது என்ற புரிந்துகொள்ளுதலை அவர் நமக்குக் கொடுக்கிறார்; அவர் நிறுவனத்தின் பெயரை, ஸ்மித், ஜோன்ஸ், மற்றும் பிரௌன் என்று உபயோகப்படுத்துவது போன்று, அதே மாதிரி உள்ளது, மற்றும் இந்த விஷயம் பற்றி ஸ்மித் பேசும் போது, "போங்கள் மற்றும் என்னுடைய நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுங்கள்." என்று அவர் வெறுமனே இப்படிச் சொல்ல மாட்டார், ஆனால் ஸ்மித், ஜோன்ஸ், மற்றும் பிரௌன் என்ற முழு நிறுவனத்தின் முழுமையான அதிகாரத்தில் இதைச் செய்யுங்கள் என்று கூறுவார். அப்படியே இயேசு கூறுகிறார், போங்கள் மற்றும் பி\தா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் அதிகாரத்தினால், என்னுடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெறுங்கள்.

## ஞானஸ்நானம் - யோவானுடையதை எல்லா அப்போஸ்தலர்களும் பெற்றார்களா?

### கே: 33:2 :: கேள்வி (1911) - 2

அப்போஸ்தலர்கள் மற்றும் உத்தம இஸ்ரயேலர் எல்லோரும் யோவானுடைய தண்ணீர் முழுக்கைப் பெற்றார்களா? அல்லது நம்முடைய அடையாள முழுக்கைப் பெற்றார்களா?

**பதில்:** அப்போஸ்தலர் பவுல் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றார் என்று அவரைப் பற்றி நாம் அறிகிறோம், ஆனால் மதமாறிய புறஜாதிகள் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்ற அதே பார்வையில் அவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெறவில்லை. அவர் யூதனாக இருந்தார் மற்றும் யூதர்களுக்கு வித்தியாசமான நிபந்தனைகள் இருந்தன. புறஜாதிகளுக்கு இல்லாமல், நியாயப்பிரமாண உடன்படிக்கை யூதர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்த காரணத்தினால், அவர்கள் ஏற்கனவே தேவனுடன் உறவுமுறைக்குள் இருந்தனர், மற்றும் ஆகவே ஒரு யூதன் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் போது, அவனுடைய மனதைப் பொருத்தவரையில், கிறிஸ்து மோசேயின் இடத்தை எடுத்துக்கொண்டார், இயேசுவில் விசுவாசம் கொண்டவனும், மற்றும் யூதனாக இருந்தவனுக்கு, அவர் மோசேக்குப் பதிலாக நின்றார். மற்றும் அவன் ஒரு யூதனாக மோசேக்குள்ளாக இருந்தால், அப்போது ஒரு யூதனாக, அவன் கிறிஸ்துவை நிஜமான மோசேயாக கண்டுணர்ந்து கொண்டால், அவன் விசுவாசத்தினால், நிஜமான மோசேக்குள்ளாக இருந்திருக்கிறான். ஆகவே ஒரு புறஜாதிக்குத் தேவைப்படுகிற கிறிஸ்துவுக்குள்ளான அதே வகையான ஞானஸ்நானம் யூதனுக்கு தேவைப்படவில்லை. மற்றும் யூதர்களில் எவரும் அந்த காலத்தில் இப்படிப்பட்ட ஞானஸ்நானத்தைப் பெறவில்லை. யூதர்கள் அனுசரித்த ஞானஸ்நானம் யூதர்கள் என்ற முறையில் அவர்களுடைய அசுத்தங்களை அடையாளமாகக் கழுவிப் போடுகிறதாக இருந்தது. அதாவது, மாம்சீகத்தின் அழுக்கை அகற்றிப்போட்டு, மற்றும் தெய்வீக பிரமாணத்திற்கு இணக்கமாக திரும்பவும் வந்தவர்களாய், அவர்களுடைய மாம்சீகத்தின் சுத்திகரிக்கப்படுதலை இது வெறுமனே அடையாளப்படுத்தியது.

நீங்களும் நானும் இப்போது அனுசரிக்கிற ஞானஸ்நானத்தை யோவான் பிரசங்கிக்கவில்லை. "மனந்திரும்புங்கள், சீர் பெறுங்கள், மற்றும் ஞானஸ்நானம் பெறுங்கள்." என்று சொல்லி, அவர் குறிப்பாக யூதர்களுக்கு, குறிப்பாக அவர்கள் பாவிகள் என்ற முறையில், ஒரு ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். அவர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் கொடுத்ததாகக் கூறினாரா? ஓ, இல்லை. அவர்கள் ஏற்கனவே மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். ஆனால், மனந்திரும்புங்கள் மற்றும் ஞானஸ்நானம் பெறுங்கள் மற்றும் உங்களுடைய பாவங்களை சுத்திகரியுங்கள். எந்த பாவங்களை அவர்கள் சுத்திகரித்தனர்? மோசேயின் உடன்படிக்கைக்கு எதிராக செய்த எல்லாவற்றையும், நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு எதிரானவை, அவர்கள் தவிர்த்திருக்கக்கூடியவைகளில் அவர்கள் புரிந்திருந்த வெளிப்புற மீறுதல்கள் எல்லாவற்றையும் அவர்கள் அகற்றினர். இவ்வாறாக, அவர்கள் அவைகளிலிருந்து விலகினர், அவைகளுக்காக மனந்திரும்பினர், மற்றும் அவைகளைப் பின்னாக தள்ளி வைத்தனர். அவர்கள் தங்களால் முடிந்த திறனளவுக்கு இப்போது சுத்தமான, தூய்மையான ஜீவியத்தில் நடக்க முற்பட்டார்கள். ஞானஸ்நானத்திற்காக யோவானிடன் வந்த யூதர்கள் எல்லோரும் அதைத் தான் செய்தனர், அப்போஸ்தலர்களில் எவரும் அந்த ஞானஸ்நானத்தில் பங்கு பெற்றார்கள், அல்லது யோவான் ஸ்நானகன் தானே செய்த அதில் பெற்றார்கள் என்று நினைப்பதற்கு நமக்கு காரணம் எதுவும் இருக்கவில்லை. ஏன் இல்லை? ஏனெனில் அவர்கள் அந்த சமயத்தில் பாவிகள் என்று அழைக்கப்பட்ட வகுப்பாரைச் சார்ந்தவர்களாக இருக்கவில்லை. யோவான் ஸ்நானகன் பாவியாக இருக்கவில்லை. அவர் கர்த்தருடன் இணக்கமாக அவரால் முடிந்த அளவு சிறப்பாக நடப்பதற்கு நாடினார். சீஷர்களும் பாவிகளாக இருக்கவில்லை. அவர்கள் நியாயயப்பிரமாணத்தின் தரநிலைகளுக்கு இணங்கி நடக்கிறவர்களாய், அவர்கள் எல்லாரும் கிட்டத்தட்ட தங்களால் முடிந்த வரைக்கும் பரிசுத்த மனுஷர்களாக நடப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர்; அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக மனவிருப்பத்துடன் எந்த பாவத்தையும் செய்யவில்லை; ஆகவே பரிசுத்த பவுலைத் தவிர, அப்போஸ்தலர்களில் எவரும் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்ததற்கான பதிவு ஏதும் ஏன் இல்லை என்பதை நாம் பார்க்கிறோம். யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் எடுத்தார் என்று பதிவு இருக்கவில்லை. இயேசு ஞானஸ்நானம் எடுப்பதற்கு யோவானிடம் வந்த போது, யோவான் கூறினார், "ஏன் நான் உமக்கு ஞானஸ்நானம் கொடுப்பதாக நினைத்துப் பார்க்க முடியாது; நீர் பாவி அல்ல, நீர் சுத்திகரிக்கப்படுவதற்கு உம்மிடத்தில் பாவம் ஏதும் இல்லை. நீர் நியாயப்பிரமாணத்தின் வெளிப்படையான மீறுதலுடன் ஜீவித்து வருகிறதில்லை; உம்மைப்

போன்றவரை நான் அழைக்கிறதில்லை. நம்மில் எவராவது ஒருவர் ஞானஸ்நானம் எடுக்கும் தேவை இருந்தால், உமக்கு மாறாக நான் தான் இருக்க வேண்டும். நீர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், மற்றும் பாவிகளுக்கு விலகினவருமாயிருக்கிறீர். நான் அது போன்று அவ்வளவு பூரணமாக இருக்கவில்லை, ஆனால் இருப்பினும் நான் ஞாஸ்நானம் எடுப்பதற்கான தேவை எனக்கு இல்லை.

ஆகவே யூதர்கள் அனைவரும் மற்ற எவர்களைக் காட்டிலும், ஒரு விசித்திரமான நிலைமையில் இருந்தார்கள். ஆனால், புறஜாதிகள் தேவனுடன் உறவுமுறைக்கு முற்றிலும் வெளியே இருந்தார்கள்; அவர்கள் தேவனுடன் உறவுமுறைக்குள்ளாக கொண்டுவரப்பட வேண்டும் என்பது அவசியமாக இருந்தது. அவர்கள் மோசேக்குள்ளாக போகாமல், மற்றும் மோசேயிலிருந்து கிறிஸ்துவுக்குள் மாறாத வரைக்கும், மோசேயின் வழியாகச் செல்வதற்குப் பதிலாக, அவர்கள் கீழ்ப்படிதல், விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தினால் நேரிடையாக கிறிஸ்துவுக்குள்ளாக கொண்டுவரப்பட்டார்கள். இதை நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் என்று நான் நினைக்கவில்லை. ஞானஸ்நானத்தைப் பற்றி விவாதிப்பதற்கு குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் பிடிக்கும். இந்த விஷயம் பற்றி கேள்வி எதுவும் இருந்தால், நான் பதிலளிப்பேன், நீங்கள் எல்லோரும் தெளிவாக இருந்தால், இந்த விஷயம் குறித்து மேற்கொண்டு நான் தொடரும் தேவை இல்லை.

## ஞானஸ்நானம் - யோவானுடைய ஞானஸ்நானத்தினால் மன்னிக்கப்பட்ட பாவங்களின் வகை.

### கே: 34:1 :: கேள்வி (1911) - 1

யோவானுடைய ஞானஸ்நானம் அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு எதிரான தவிர்க்கக்கூடிய, அல்லது தவிர்க்க முடியாத பாவங்களின் மன்னிப்புக்காக இருந்ததா?

**பதில்:** இது தவிர்க்கக்கூடிய பாவங்களின், வேண்டுமென்று செய்த பாவங்களின் மன்னிப்புக்காக இருந்தது மற்றும் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள, தெய்வ பக்தியுள்ள யூதர்கள் நோக்கமாக இருந்ததில்லை, அல்லது எதிர்பார்க்கப்பட்டதில்லை. இது பாவிகளின் வகுப்பாருக்காக இருந்தது - - தேவனுடன் இணக்கமாக இல்லை என்று உணருகின்ற வகுப்பாருக்காக இருந்தது. அவர் கூறினார், “மேசியாவின் இராஜ்யத்திற்கும், மற்றும் உங்களால் முடிந்த வரைக்கும் சிறந்த முறையில் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முயற்சிக்கவும், மற்றும் இந்த தண்ணீர் ஞானஸ்நானத்தை எடுப்பதற்கும், இது உங்களுடைய பாவம் அகற்றிப்போடப்படுவதற்கான அடையாளமாக ஏற்றுக்கொள்வதற்கு, மற்றும் ஜீவியத்தின் புதிய பாதையை துவங்குவதற்கும் தயாராக இருப்பதற்கு நீங்கள் விரும்பினால், இப்பொழுது வாருங்கள்.” இவைகள் எல்லாம் யூதருக்கான ஞானஸ்நானத்தை அர்த்தப்படுத்தியது. இது வழக்கமான அமைப்புமுறையாக இருக்கவில்லை. இது யுகத்தின் முடிவு வரைக்கும் மட்டுமே சொந்தமாயிருந்த ஒரு விசித்திரமான காரியமாக இருந்தது, மற்றும் பரிசுத்தம் மற்றும் பாவம் அகற்றிப்போடுதலின் இந்த உபதேசத்தினால் மேசியாவுக்காக, ஜனங்களை குறிப்பாக ஆயத்தப்படுத்துவதற்கு யோவான் அங்கே முயன்றார்; அவர்கள் யோவானை விசுவாசித்திருந்தால், அவர்கள் இயேசுவை விசுவாசித்திருப்பார்கள் என்பது சாட்சியமாக இருந்தது. அவர்கள் அவிசுவாசமாக இருந்து, அவர் சொன்னதை பொருட்படுத்தாமல் இருந்து, மற்றும் தேவனுடன் இணக்கமாகத் திரும்ப வருவதில் ஜாக்கிரதையில்லாமல் இருந்தார்களானால், மற்றும் அவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு பரிசுத்தமுள்ளவர்களாக இருந்தால், அப்போது தேவன் கொடுக்க வேண்டியிருந்த செய்தியைப் பெற்றுக்கொள்வதற்குரிய நிலைமையில் அவர்கள் இருக்கவில்லை.

## ஞானஸ்நானம் - தண்ணீர் ஏன் நிழலாக இருக்கிறது?

### கே: 34:2 :: கேள்வி (1912) - 2

இயேசு பேசிய இந்த தண்ணீர் ஞானஸ்நானம் ஏன் நிழலாக இருக்கிறது? நம்மில் இருப்பது போன்று இது அவரிலும் ஒரு அடையாளமாக இருக்கின்றதா?

**பதில்:** ஆம், நம் விஷயத்தில் இருப்பதைப் போன்றே உள்ளது - - அவருடைய அர்ப்பணிப்பின் அடையாளம், மரணத்திற்குள்ளாக அவர் போவதின், மற்றும் மரித்தோரிலிருந்து அவருடைய உயிர்த்தெழுதலின் அடையாளமாக இருக்கின்றது. இவையெல்லாம் நம்முடையதில் இருப்பதைப் போன்றே துல்லியமாக அவருடைய விஷயத்திலும் அடையாளப்படுத்தப்பட்டது.

சில சமயங்களில் நிழலாகப் பேசப்பட்டாலும், கண்டிப்பாகச் சொன்னால், இது ஒரு நிழல் இல்லை. சில நேரங்களில் வார்த்தைகள் தளர்வான விதத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இது ஒரு அடையாளமாக இருந்தது, நிழலாக இல்லை. இது சம்பந்தமாக நிழல் என்ற வார்த்தையை எப்போதாவது பயன்படுத்தினால், சரியான வார்த்தை என்னை விட்டு நழுவிப்போனது, மற்றும் தவறான வார்த்தை வந்து விட்டது என்ற காரணத்தினாலேயாகும்.

## ஞானஸ்நானம் - இயேசுவின் ஞானஸ்நானத்தில் தண்ணீரா, அல்லது ஆவியா, எது முதலாவது இருந்தது?

### கே: 35:1 :: கேள்வி (1912) - 1

இயேசு ஆவியில் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பு தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்தாரா? எது முதலில் இருந்தது?

**பதில்:** அவருடைய ஞானஸ்நானத்திற்கு பிறகு தான், இயேசுவின் மேல் ஆவி இறங்குதலின் வெளிப்பாட்டை தேவன் ஏற்படுத்தினார் என்று அறிக்கை உணர்த்துவதாகத் தோன்றுகிறது. அவர் தம் சொந்த விருப்பத்தை ஒப்படைத்திருந்தார் என்ற பார்வையில் "இதோ, நான் வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது, என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்." என்று பழைய ஏற்பாட்டிலிருந்து அப்போஸ்தலர் மேற்கோள் காட்டுகிற பார்வையில், இயேசு தண்ணீருக்குள் போவதற்கு முன்பு, அவர் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருந்தார். அவருடைய விருப்பத்தில் அவர் ஏற்கனவே மரித்திருந்தார், இல்லையெனில் அவர் யோவானிடத்தில் வந்திருக்கமாட்டார். ஆனால் அந்த அடையாளத்தை இயேசு செயற்படுத்தியிருக்கிற வரைக்கும், இயேசுவின் பலியை தேவன் ஏற்றுக்கொள்ளுதலின் அவருடைய வெளிப்பாடு வெளிப்படையாகக் காத்திருந்தது. அவர் தண்ணீரை விட்டு வெளியே வந்த பிறகு, ஆவி வந்தது என்று நாம் வாசிக்கிறோம், மற்றும் தேவன் அந்த வெளிப்புற அடையாளத்தைக் கொடுத்தார். இந்த வெளிப்புற அடையாளம் எல்லாருக்கும் இருக்கவில்லை, ஆனால் யோவானுக்கு மட்டுமே - யோவான் பார்த்தார், யோவான் சான்றை பதிவுசெய்து கொண்டார் போன்றவை.

## ஞானஸ்நானம் - இஸ்ரயேலர்கள் - யோவானுடைய ஞானஸ்நானம்.

### கே: 35:2 :: கேள்வி (1913) - 2

நிழலில் உத்தம இஸ்ரயேலர்களுக்கு யோவானுடைய ஞானஸ்நானம் தேவைப்பட்டதா?

**பதில்:** உத்தம இஸ்ரயேலருக்கு யோவானுடைய தண்ணீர் முழுக்கு எதுவும் தேவைப்பட்டது என்று நாங்கள் புரிந்துகொள்ளுகிறதில்லை, ஏனெனில் யோவான் தன்னுடைய தண்ணீர் முழுக்கு எடுக்க வருவதற்கு இஸ்ரயேலர்களின் பரிசுத்த தன்மையைப் பற்றி எதுவும் தெரியப்படுத்தவில்லை. பாவ நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களை வருமாறு யோவான் அழைத்துக்கொண்டிருந்தார். யோவான் ஸ்நானகன் தன்னுடைய சொந்த ஞானஸ்நானத்தினால் எப்போதாவது முழுக்கு எடுத்தார் என்று எந்த சாட்சியமும் இருக்கவில்லை, மற்றும் இயேசு வந்த போது, அவர் தடைபண்ணினார், மற்றும் கூறினார், "நீர்

பாவமில்லாதவராக இருக்கையில், நீர் என்னிடத்தில் ஏன் வரவேண்டும்? நான் பாவிகளிடம் கீழ்ப்படியாமையிலிருந்து வெளியே வரவேண்டும் என்றும், மற்றும் மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் இணக்கமாகத் திரும்பி வரவேண்டும் என்றும் கூறிக் கொண்டிருக்கிறேன். இயேசு இந்த விஷயம் குறித்து யோவானுடன் விவாதிப்பதற்காக நிறுத்தவில்லை, ஏனெனில் யோவான் புரிந்துகொண்டிருக்க இயலாது; யோவான் புரிந்து கொள்வதற்கான உரிய நேரம் இது இல்லை, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களைச் சார்ந்தவராக அவர் இல்லை; பெந்தெகொஸ்தே வரைக்கும் எவரும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, இயேசு இந்த விஷயம் குறித்து அவரிடம் விவாதிக்கவில்லை, ஆனால் வெறுமனே கூறினார், யோவான், இப்பொழுது இடங்கொடு; நான் செய்கிறது என்னவென்று நான் அறிவேன். இயேசு ஒரு புதிய காரியத்திற்கான நிழலை உருவாக்கிக்கொண்டு இருந்தார். அவர் யோவானுடைய ஞானஸ்நானத்தில் இணையவே இல்லை. நியாயப்பிரமாணத்துடன் இணக்கமாகத் திரும்பி வருவதற்காக, அவர் தம்முடைய பாவங்களை சுத்திகரிக்கவில்லை, ஏனெனில் அவர் ஒருபோதும் நியாயப்பிரமாணத்துடன் இணக்கமில்லாமல் இருந்ததில்லை.

## ஞானஸ்நானம் - ஞானஸ்நானம் எடுக்க முன்வந்திருப்பவர்களிடம் கேட்கப்படும் கேள்விகள்.

### கே: 35:3 :: கேள்வி (1913 - Z) - 3

தண்ணீர் முழுக்கு பெறுவதற்கு முன்வந்திருப்பவர்களிடம் சகோ. ரசல் அவர்களினால் வழக்கமாகக் கேட்கப்படும் கேள்விகள் என்ன?

**பதில்:** அவைகள் பரந்த அளவில் இருக்கின்றன என்பதை நீங்கள் கவனிப்பீர்கள் - எந்த கிறிஸ்தவனும், அவருடைய வாக்குமூலம் எதுவாயிருந்தாலும், கிறிஸ்துவின் சபையின் அங்கமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அவர் தகுதியுடையவர் என்றால், அவர் எவ்வித தயக்கம் இல்லாமல் கேள்விகளுக்கு தெளிவான முறையில் பதிலளிக்கத் திறனுள்ளவர்களாக இருக்க வேண்டும்:

(1) உங்களால் முடிந்த விதத்தில் இப்படிப்பட்ட சீர்பொருந்துதலுடன், பாவத்திலிருந்து மனந்திரும்பியிருக்கிறீரா? மற்றும் உங்களுடைய நீதிமானாக்கப்படுதலுக்கான அடிப்படையாகவும், மற்றும் உங்களுடைய பாவங்களின் மன்னிப்புக்காகவும் கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தில் நீங்கள் நம்பிக்கை கொள்கிறீரா?

(2) நீங்கள் பெற்றிருக்கிற எல்லா ஆற்றல்களுடன் உங்களையே முழு அர்ப்பணிப்பு செய்திருக்கிறீரா - - திறமை, பணம், நேரம், செல்வாக்கு - - எல்லாவற்றையும் கர்த்தருக்கு, அவருடைய ஊழியத்தில் மரணபரியந்தம் பயன்படுத்தப்படுவதற்கு அர்ப்பணித்தி ருக்கிறீரா?

(3) இந்த வாக்குமூலங்களின் அடிப்படையில், நாங்கள் உங்களை விசுவாசக் குடும்பத்தின் அங்கமாக ஒப்புக்கொள்கிறோம், மற்றும் எந்த பிரிவு, கட்சி அல்லது கோட்பாட்டின் பெயரில் இல்லாமல், மீட்பர், மகிமையடைந்த நமது கர்த்தர் மற்றும் அவருடைய உண்மையுள்ள பின்னடியார்களின் பெயரில், நாங்கள் இப்படிப்பட்ட ஐக்கியத்தின் வலதுகரத்தை உங்களுக்கு அளிக்கிறோம்.

## ஞானஸ்நானம் - தண்ணீர் முழுக்கு - நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள்.

### கே: 36:1 :: கேள்வி (1913) - 1

நம்முடைய கர்த்தர் தண்ணீர் முழுக்கினால் தம்முடைய அர்ப்பணிப்பை அடையாளப்படுத்தியதைப் பார்த்து, அப்போஸ்தலர்கள் அவ்வாறு செய்யாதது எப்படி?

**பதில்:** நான் அறியவில்லை. (F466ம் பக்கத்தைப் பார்க்கவும்)

## ஞானஸ்நானம் - நம்முடைய கர்த்தருடையது.

### கே: 36:2 :: கேள்வி (1913-Z) - 2

நம்முடைய கர்த்தர் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதற்கு முன்பு, அவர் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றாரா?

**பதில்:** தண்ணீரில் இயேசுவின் ஞானஸ்நானத்திற்கு பிறகு தான், இயேசுவின் மேல் ஆவி இறங்குதலின் வெளிப்பாட்டை தேவன் ஏற்படுத்தினார் என்று யோர்தானில் நம்முடைய கர்த்தரின் ஞானஸ்நானம் மற்றிய வேதாகம விவரிப்பு உணர்த்துவதாகத் தோன்றுகிறது. அவர் தம் சொந்த விருப்பத்தை ஒப்படைத்திருந்தார் என்ற பார்வையில் “இதோ, நான் வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது, என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.” (எபி. 10:7; சங். 40:7,8.) என்று பழைய ஏற்பாட்டிலிருந்து அப்போஸ்தலர் மேற்கோள் காட்டுகிற பார்வையில், இயேசு தண்ணீருக்குள் போவதற்கு முன்பு, அவர் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருந்தார்.. அவரைப் பற்றி புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் செய்வதற்கு நம்முடைய கர்த்தர் வந்தார், அவருடைய விருப்பத்தில் அவர் ஏற்கனவே மரித்திருந்தார், இல்லையெனில் அவர் யோவானிடத்தில் வந்திருக்கமாட்டார். ஆனால் அந்த அடையாளத்தை இயேசு செயற்படுத்தியிருக்கிற வரைக்கும், இயேசுவின் பலியை தேவன் ஏற்றுக்கொள்ளுதலின் அவருடைய வெளிப்பாடு வெளிப்படையாகக் காத்திருந்தது ஆகவே அவர் தண்ணீரை விட்டு வெளியே வந்த பின்பு, பரிசுத்த ஆவி புறாவைப் போல இறங்கியது என்று நாம் வாசிக்கிறோம். தேவன் அந்த வெளிப்புற அடையாளத்தைக் கொடுத்தார். இந்த வெளிப்புற அடையாளம் எல்லாருக்கும் கொடுக்கவில்லை, ஆனால் யோவானுக்கு மட்டுமே - வேத வாக்கியங்கள் தெரிவிக்கிறபடி, “யோவான் பார்த்தார், யோவான் சான்றை பதிவுசெய்து கொண்டார்.” - - (யோவான் 1:32-34).

## ஞானஸ்நானம் - அர்ப்பணிப்பு பற்றி உறுதி இல்லை.

### கே: 36:3 :: கேள்வி (1916) - 3

கொஞ்ச காலத்திற்கு முன் அடையாளமாக்கப்பட்ட அர்ப்பணிப்பு முழுமையானது என்பதில் ஒரு இளைய சகோதரன் உறுதியாக இருக்கவில்லை, மற்றும் அவர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவரா, அல்லது இல்லையா என்பது குறித்து நிச்சயம் கொண்டவராக இருக்கவில்லை என்ற விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இப்படிப்பட்ட விஷயத்தில் உங்களுடைய அறிவுரை என்னவாயிருக்கும்?

**பதில்:** உறுதி உடையவராக இருக்கச்செய்ய வேண்டும் என்று நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். இந்த வகையான விஷயத்தில் எவரேனும் உறுதிகொண்டவராக இல்லையென்றால்,, இதில் அவரை உறுதிகொண்டவராக்குவது தான் சிறந்த காரியம் என்று நான் நினைக்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றிலும் இது தான் என்னுடைய அறிவுரையாக இருக்கின்றது. இந்த விஷயத்தில், என்னுடைய முழு ஆத்துமா, சிந்தை மற்றும் பலத்தை கர்த்தரிடம் முழுமையாக அர்ப்பணிப்பு செய்வேன், மற்றும் கிறிஸ்துவின் மூலம் இதை இரக்கத்துடன் பெற்றுக்கொள்ள அவரை வேண்டிக்கொள்வேன், மற்றும் அவர் அவ்வாறே செய்வார் என்று நான் நம்புகிறேன். எதையும் விட்டு வைக்கவில்லை என்றால், தேவனுக்கு தேவைப்படுகிறது துல்லியமாக இது தான் என்பதை நான் அறிகிறேன், மற்றும் விசுவாசத்தினால் அந்த மனநிலையைப் பற்றிக்கொள்வேன் மற்றும் கூறுவேன், நான் கர்த்தருடையவனாக இருக்கிறேன், மற்றும் அவர் என்னுடைய பிதாவாக இருக்கிறார். நான் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறேன் என்ற சாட்சியங்களின் தொடர்பாக, நான் பல்வேறு வழிகளில் அவைகளைக் கவனிப்பேன்: கர்த்தரைப் பற்றி அறிந்துகொள்வதில் என்னிடத்தில் ஆர்வம் வளர்ந்து வருவதில்,

அவரிடத்தில் பரிச்சயமாகுதல், மற்றும் அதனால் அவருடைய திருவசனத்தைப் படிப்பதில் நான் பரிச்சயம் அடைதல்; மற்றும் அவருக்கு ஊழியம் செய்வதில் என்னுடைய ஆர்வம், மற்றும் அவருக்கு ஊழியம் செய்வதற்கு வாய்ப்புக்களை நாடுவதில்; இவைகள் எல்லாம், கிறிஸ்து இயேசுவில் இருந்த அதே ஆவி, அவரைத் தூண்டிய, மற்றும் இயக்கிய அதே ஆவி, பிதாவின் சித்தத்தைச் செய்வதில் அவரை வழிநடத்திய அதே ஆவியை நான் உடையவனாக இருக்கிறேன் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. தேவனுடைய மாபெரும் அன்பு மற்றும் திட்டத்தின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழங்களை நான் பரிசுத்தவான்கள் எல்லோருடன் புரிந்துகொள்ளும் திறனுடையவனாக இருக்கும் விதத்தில், என்னுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் தெளிவுக்கு மேல் தெளிவு பெறுவதை நான் எதிர்பார்ப்பேன். மற்றும் அந்த வழியில் நான் செல்வேன், மற்றும் அப்படிச் செய்வதில் நான் பரிசு பெறுவேன் என்று நம்புகிறேன்.

## மிருகம் - இதனுடைய இலக்கம்.

### கே: 37:1 :: கேள்வி (1911) - 1

மிருகத்தின் இலக்கம் 666 பற்றி என்ன?

**பதில்:** இதற்கு அளிக்கப்பட்ட பல்வேறு விளக்கங்கள் இருக்கின்றன. இது போப்பாதிக்கத்தின் பதவியை அடையாளப்படுத்துகிறது என்று நான் நம்புகிறதைத் தவிர, இந்த விஷயத்தின் என்னுடைய பார்வையைப் பற்றி எல்லாவற்றையும் நான் சொல்வதற்கு விசேஷமாக தயாராக இருக்கவில்லை. போப்புவின் கிரீடத்தில் மூன்று லத்தீன் வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன, விகாரியஸ் ஃபெலி டெய் (VICARIUS FELII DEI), தேவனுடைய குமாரனின் பிரதிநிதி. போப்புவுடன் இணைக்கப்பட்ட இந்த பெயர் இந்த பதவி முறைகேடான ஒன்றாகத் தோன்றுகிறது. அவர் தேவனுடைய குமாரனுக்குப் பதிலாக செயலாற்றுகிறவர் அல்ல; அவர் கிறிஸ்துவுக்கு பதிலாள் அல்ல; கிறிஸ்துவுக்கு பதிலாக அவர் ஆட்சி செய்கிறதில்லை; ஆகவே ஆட்சி புரியும் அதிகாரத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதியாக, அல்லது மாற்றாக அவர் இருக்கிறார் என்று அர்த்தப்படுத்துகிற ஒவ்வொரு தகவலும் தேவதூஷணம் நிறைந்ததாகத் தோன்றுகிறது. அவர்கள் தேவதூஷணம் சொல்கிறார்கள் என்பதை போப்புவும் கத்தோலிக்கர்களும் புரிந்து கொள்ளுகிறதில்லை. இது அனைத்தும் அவரைப் பற்றி மிகவும் உண்மையாக இருக்கின்றது என்று முற்றிலும் நம்பிக்கையுடன் உணருகிறார்கள் என்று நான் அனுமானிக்கிறேன். ஆனால் எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இது உண்மை அல்ல, மற்றும் அவர் பொய்யான நிலையில் இருக்கிறார், மற்றும் வேதாகமம் இந்த விஷயம் பற்றி தெரிவிக்கிறபடி, அவர் உண்மையாக, அந்திக்கிறிஸ்துவாக, அல்லது போலி கிறிஸ்துவாக இருக்கிறார்.

## ஜெநிப்பிக்கப்படுதல் - தெய்வீக சுபாவத்திற்கு.

### கே: 37:2 :: கேள்வி (1907) - 2

நாம் தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுகிறோமா, அல்லது ஆவிக்குரிய சுபாவத்திற்கு மட்டுமா?

**பதில்:** ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது ஆவிக்குரிய சுபாவத்திற்காக இருக்கிறது என்று நான் பதிலளிக்கிறேன், ஆனால் நம்முடைய கர்த்தரின் விஷயத்தில், இது தெய்வீக சுபாவத்திற்காக இருக்கிறது, கண்டிப்பாக இருக்க வேண்டும், அல்லது ஒன்றுமில்லை. ஏனெனில், தெய்வீக திட்டத்தின்படி, தெய்வீக சுபாவத்திற்கு தகுதியானவராகவும், மற்றும் ஜெயங்கொள்ளுகிறவருக்கு மேலானவராகவும் இருப்பதில் கர்த்தர் தவறியிருந்தால், அப்போது அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவே முடியாது. அவர் இரண்டாம் தரமான எந்த இடத்திற்கும் ஒருபோதும் வந்திருக்க முடியாது. அவருடைய ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதல் இறுதியில் தெய்வீக சுபாவத்தில் வந்து முடியும், அல்லது ஒன்றும் இருக்காது. ஆனால் சபையைப் பற்றிய

விஷயத்தில், இது சிறிது வித்தியாசமாக இருக்கிறது என்று நாம் சொல்லலாம்; நம்முடைய ஜெநிப்பிக்கப்படுதல் ஆவிக்குரியதாக இருக்கும் நிலையில், மற்றும் நாம் கர்த்தருடைய பாத அடிச்சுவடுகளைப் பின்பற்றியும், மற்றும் உண்மையுள்ளவர்களாக இருந்தால், இது ஆவிக்குரிய சுபாவத்தின் மிக உயர்வான வடிவமாக இருக்கும், இருப்பினும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த வகுப்பாரில் சிலர் கூட தெய்வீக சுபாவத்தை ஒருபோதும் அடையமாட்டார்கள், மற்றும், சொல்லப்போனால், தெய்வீக சுபாவத்திலிருந்து விலக்கப்படுவார்கள்; ஆகவே இதை நாம் இவ்வாறு முன் வைக்க விரும்புகிறோம், சபை ஆவிக்குரிய சுபாவத்தில் ஜெநிப்பிக்கப்படுகிறது, மற்றும் அவர்களில் சிலர் இதைத் தாண்டி, தெய்வீக சுபாவத்தைப் பெறுகிறார்கள். திரள் கூட்டத்தார் தெய்வீக சுபாவத்தைச் சார்ந்தவர்களாயிராமல், ஆவிக்குரிய தளத்தை அடைவார்கள்.

## ஜெநிப்பிக்கப்படுதல் மற்றும் உயிர்ப்பிக்கப்படுதல் - வெளிப்பாடுகள் பற்றி.

### கே: 37:3 :: கேள்வி (1907) - 3

இயற்கையான பிறப்புடன் ஆவிக்குரியதை ஒப்பிட்டு, ஜெநிப்பிக்கப்படுதலின் போதும், மற்றும் உயிர்ப்பிக்கும் போதும் என்ன வெளிப்பாடுகளை நாம் எதிர்பாக்க முடியும்?

**பதில்:** இயற்கையான ஜெநிப்பிக்கப்படுதலுடன் ஆவிக்குரிய ஜெநிப்பிக்கப்படுதலை ஒப்பிட்டு, ஜெநிப்பிக்கப்படுதலின் போது, எந்த வகையான வெளிப்பாட்டையும் நாம் அதிகம் எதிர்பார்க்கிறதில்லை. இது நிகழ்கிறது என்பது உண்மையாக இருக்கிறது, மற்றும் இதனுடைய செயற்பாடு பின்னர் வெளிப்படும், ஆகவே, நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறவர்களாக இருந்தால், இது பற்றிய ஏதோ உள்ளுணர்வை நாம் பெறுகிறவர்களாய் இருப்போம், ஆனால் வெளிப்புற எடுத்துக்காட்டு எவருக்கும் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் இருக்காது; இது உயிர்ப்பிக்கிறதாகவும், ஆற்றல் அளிக்கும் இயக்கம் கொண்டதாக இருப்பது தான் சொந்த ஜீவியத்தின் அறிகுறியாக இருக்கும். ஆகவே நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறவர்களாக இருக்கும் போது, இது அழிவுக்கேதுவான நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிக்கின்றது, கர்த்தருடைய ஊழியத்தில் நம்மை ஆற்றல் உள்ளவர்களாக்குகிறது, மற்றும் தேவனுக்கும் சகோதரர்களுக்கும் ஊழியம் செய்யவும், மற்றும் வாய்ப்பு இருக்கும் போது மனுஷர் எல்லோருக்கும் நன்மை செய்ய விரும்புகிறதும், மற்றும் இயங்கச் செய்கிறதுமான அன்பை பெற்றுக்கொள்ளத் துவங்குவோம்

## ஜெநிப்பிக்கப்படுதல் - ஆவிக்குரிய, உண்மையான அல்லது எண்ணப்படுகிறதான.

### கே: 38:1 :: கேள்வி (1909) - 1

ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் உண்மையாக, அல்லது எண்ணப்படுகின்ற நிலைமையில் இருக்கிறதா? தனிப்பட்டவர்களாக சில நேரத்தில் சிறுமந்தையில் ஒரு இடத்திற்கு நியமிக்கப்பட்டிருக்காத திரள்கூட்டத்தாரில் எவரேனும் எப்போதாவது இருப்பார்களா?

**பதில்:** நாங்கள் பதிலளிக்கிறோம், எங்களுக்குத் தெரிந்த வரைக்கும், தங்களுடைய அர்ப்பணிப்பின் உறுதிமொழிகளை நிறைவேற்றாத காரணத்தினால், சிறுமந்தைக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு பெறாதவர்களும், மற்றும் அதற்குள் நுழைவதில் தோல்வியடைந்த எவரும் திரள் கூட்டத்தில் ஒருபோதும் இருக்கமாட்டார்கள்.

இதற்கு ஒரே விதிவிலக்காக நாங்கள் புரிந்துகொள்வது என்னவெனில், முற்பிதாக்கள் உண்மையில் அதே வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள், மற்றும் வார்த்தையின் இந்த அர்த்தத்தில், அவர்கள் ஒருபோதும் இந்த மேலான அழைப்புக்கு அழைக்கப்படவில்லை. அவர்கள் தாங்களாகவே முன்வந்து பலியிட்டார்கள் மற்றும் மிகவும் உபத்திரவப்பட்டார்கள், மற்றும் அவர்கள் பிதாவினுடைய பெரும் மரியாதை கொண்டவர்களாக இருந்தார்கள், மற்றும் இது தான்

சிறுமந்தைக்குள் வரும் வாய்ப்பைப் பெற்றிருக்காத நிஜமான லேவி வகுப்பார், அல்லது திரள் கூட்டத்தின் ஒரே பகுதியாக இது இருக்கிறது.

ஆவிக்குரிய ஜெநிப்பிக்கப்படுதல் உண்மையாக இருக்கிறதா, அல்லது எண்ணப்படுகிற நிலையில் இருக்கிறதா? இது உண்மையாக இருக்கிறது என்று நான் கூறுகிறேன். உண்மையாக இருக்கிறது என்பதை நீங்கள் எப்படி அர்த்தப்படுத்துகிறீர்கள்? நீங்கள் உங்கள் கைகளை மேலே வைக்கவும், மற்றும் பார்க்கவும் முடியும் ஒரு விஷயமாக இருக்கும் என்பது தான் உண்மையானது என்று சில ஜனங்கள் நினைக்கின்றனர். இது தொட்டுணரக்கூடிய அர்த்தத்தில் இது உண்மையானதாக இருக்கிறதில்லை, ஆனால் நேர்மையாக இருப்பதின் பார்வையில் இது உண்மையாக இருக்கின்றது, மற்றும் இது கோட்பாடு இல்லை - - ஒரு உண்மை. இதை நாம் எப்படி அறிய முடியும்? இந்த வழியில் தான், அன்புள்ள நண்பரே: பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறவர்களில் எவரும் ஆவியினால் பிறக்க வேண்டும் அல்லது இரண்டாம் மரணத்தில் சாக வேண்டும் என்பது கர்த்தருடைய ஏற்பாடாக இருக்கிறது. நீங்கள் உண்மையில் பூமிக்குரிய சுபாவத்தை ஒப்படைத்து விட்டீர்கள், நீங்கள் எண்ணப்படுவதற்கு முன்பு நீங்கள் கண்டிப்பாக அதைச் செய்ய வேண்டும் சீர்பொருந்துதலின் உரிமைகளை ஒப்படைக்கின்ற எவரும் தேவனுடன் செயல்தொடர்பு கொள்கின்றனர் மற்றும் இது குறித்து அவரிடத்தில் அலட்சியமாக இருக்கக்கூடாது. நீங்கள் பூமிக்குரிய உரிமைகளை ஒப்படைத்துவிட்டால், அவற்றை மறுபடியும் நீங்கள் திரும்பப் பெற முடியாது.

## ஜெநிப்பிக்கப்படுதல் - தெய்வீக சுபாவத்திற்கு.

### கே: 38:2 :: கேள்வி (1909) - 2

நாம் தெய்வீக சுபாவத்திற்கு, அல்லது ஆவிக்குரிய சுபாவத்திற்கு, எதற்கு ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம்?

**பதில்:** தெய்வீக சுபாவம் ஆவிக்குரிய சுபாவமாக இருக்கிறது. வேதாகம பாடங்கள் முதல் வால்யூமில், நாம் தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என்று நாங்கள் முதலில் எழுதியிருந்தோம், ஆனால் கர்த்தருடைய அருமையான ஜனங்களில் மிக அதிகமானவர்கள் இந்த விஷயம் பற்றி உணர்வதில் கடினமாக இருப்பதாகத் தோன்றியதைக் கண்டு, "தெய்வீக" என்பதற்குப் பதிலாக "ஆவிக்குரிய சுபாவம்" என்று மாற்றினால், இந்த விஷயத்தில் இது எளிதாகும் என்று நாங்கள் நினைத்தோம். உண்மையான மாற்றம் ஏதோ இருந்திருக்கிறது என்று நாங்கள் செய்த அந்த மாற்றம் அர்த்தப்படுத்துகிறதில்லை. நாம் தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுகிறோம், மற்றும் அது ஆவிக்குரிய சுபாவமாக இருக்கிறது என்பது தான் சரியான அறிக்கையாக இருந்தது என்று நாங்கள் நம்புகிறோம். நாம் தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுகிறோம் என்பதை வேத வாக்கியங்கள் நிரூபிக்கிறது. பேதுரு கூறினார், "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." மகிமை, கனம், மற்றும் அழியாமையாகிய தெய்வீக சுபாவத்தின் அருமையான வாக்குத்தத்தங்கள் நம்முடைய இருதயங்களில் ஊடுருவும் ஜெநிப்பிக்கப்படும் ஆற்றலாக இருக்கின்றன, மற்றும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியின் மூலமாக நம்மில் அவருக்கு அருமையானதில் விருப்பங்கொள்ளவும், மற்றும் அதைச் செய்யும் பணிக்குப் பயன்படுத்துகிறார். நாம் நம்முடைய அழைப்பையும் மற்றும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக்கொள்ளும் விதத்தில் எல்லா வகையிலும் அவர் நமக்கு உதவி செய்கிறார். நாம் தெய்வீக சுபாவத்துக்கு அழைக்கப்படுகிறோம். நாம் அதே மாதிரி ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோமா? ஆம், உங்களுடைய அழைப்பின் அதே நம்பிக்கையில் நீங்கள் எல்லோரும் அழைக்கப்படுகிறீர்கள் - நீங்கள் இதைப் பெறுகிறீர்களா, அல்லது இல்லையா, இது தான் ஒரே நம்பிக்கை.

மிகவும் நல்லது, சகோ. ரசல், இரு திறத்தாரும் இதில் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாலும், திரள்கூட்டம் அந்த சுபாவத்தை எப்படி அடையாமல் இருக்கிறது? இது இந்த வழியில்

இருக்கக்கூடும், அருமை நண்பர்களே. இயற்கையிலிருந்த ஒரு விளக்கத்தை எடுத்துக்கொள்வோம்: பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலாகிய இந்த விஷயம் மாம்சீக சிருஷ்டியின் ஜெநிப்பிக்கப்படுதலின் மேல் நிறுவப்பட்டதாக இருக்கிறது. இயற்கையான பிறப்பின் விஷயத்தில், பிறக்கிறது ஆண், அல்லது பெண் எதுவாக இருந்தாலும், ஜெநிப்பிக்கப்படுதல் ஒரே,மாதிரி இருக்கின்றது. இங்கே கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள் மற்றும் திரள்கூட்டம் என்ற இரண்டு வகுப்பார்களை தேவன் ஒரே ஜெநிப்பிக்கப்படுதலிலிருந்து வளர்ச்சி அடையச் செய்கிறார். இந்த விஷயத்தை மேலும் தொடர்வதற்கு, பிள்ளை ஆண், அல்லது பெண் எதுவாக இருந்தாலும், ஜெநிப்பிக்கப்படுதலிருந்து மூன்று மாதங்கள் வரைக்கும், உணரத்தக்க வேறுபாடு இருப்பதில்லை என்று இதை ஆய்வு செய்திருக்கிறவர்கள் கூறுகின்றனர். அப்படியே ஆவிக்குரிய விஷயத்திலும் இருக்கிறது; ஜெநிப்பிக்கப்பட்ட பின்பு, தெய்வீக சுபாவத்தை அடையப்போகிறவராக அவர் இருப்பார் அல்லது இல்லை என்பதை கொஞ்ச காலத்திற்கு எவரும் சொல்ல முடியாது. இந்த விஷயம் தராசில் இருக்கிறது; அவர் ஒட்டவைக்கப்பட்ட வார்த்தையை எப்படி பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பதைப் பொருத்து இது உள்ளது. இது உங்களை விருப்பப்படவும் மற்றும் செய்யவும் தூண்டினால் அப்போது நீங்கள் சிறுமந்தையைச் சார்ந்தவராக இருப்பீர்கள்.

## ஜெநிப்பிக்கப்படுதல் - பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு.

### கே: 39:1 :: கேள்வி (1907) - 2

ஆசரிப்புக்கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு ஒருவர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட முடியுமா? அப்படியானால், ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் எங்கே மற்றும் எப்போது நிகழ்கிறது என்பதை தயவுசெய்து விளக்கவும்.

**பதில்:** ஆசரிப்புக்கூடாரத்தில் பிரவேசிப்பது தொடர்பான விஷயத்தில், ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் அபிஷேக தைலத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருந்த போதிலும், அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியர்கள் மட்டுமே ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டார்கள் என்பது உண்மையாயிருக்கிறது. ஆசரிப்புக்கூடார பரிசுத்த ஸ்தலம் நீங்களும் நானும் இப்பொழுது பிரவேசித்திருக்கிற அர்ப்பணிப்பின் நிலைமைக்கு மாதிரியாகவும் மற்றும் அடையாளப்படுத்துவதாகவும் இருக்கிறது. நாம் ஆசாரியர்களான நேரத்தில், மற்றும் அதிலிருந்து, பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட நேரம், அந்த கணத்தில், அந்த க்ஷணத்தில், நாம் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு, பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே கடந்துள்ளோம் - மற்றும் இப்போது ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதிலிருந்து நாம் பரிசுத்த ஸ்தலங்களில், பரலோகங்களில், ஆசரிப்புக்கூடாரத்திலே அடையாளப்படுத்தப்பட்ட இந்த உயர்வான நிலையில் கிறிஸ்துவுடன் உட்கார்ந்திருப்பதாக சொல்லப்படுகிறோம்.

## ஜெநிப்பிக்கப்படுதல் - இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### கே: 39:2 :: கேள்வி (1911) - 2

ஒருவர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட ஜீவியத்தை உடையவராயிருக்கிறார் என்றும், இருப்பினும் அவர் பரிசுக்காக ஓடுவதற்கு கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றும் சொல்வது, நாம் அவரைக் குறித்து இவ்விதம் பேசுவது சரியானதாக இருக்குமா?

**பதில்:** இல்லை. அழைக்கப்படுகிற எல்லோரும் அவர்களின் அழைப்பின் ஒரே நம்பிக்கையில் தான் அழைக்கப்படுகிறார்கள். பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்படுகிற எல்லோருமே அவர்கள் ஆசாரியர்களாவதற்குரிய பார்வையில் தான் ஜெநிப்பிக்கப்படுகிறார்கள். லேவியர்களால் அடையாளப்படுத்தப்படும் திரள் கூட்ட வகுப்பாரில் நுழைகிறவர்கள் எல்லோரும் ஆசாரியராகும் இந்த வாய்ப்பை பெற்றிருந்தார்கள், மற்றும் அந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்துவதில்

தவறவிட்டிருக்கிறார்கள், ஆகவே பரிசைப் பொருத்த வரையில் அவர்கள் புறம்பாக்கப்படுகிறார்கள், அல்லது ஆசாரியத்துவ ஊழியத்திற்கு தகுதியுள்ளவர்களாகக் காணப்படவில்லை. ஆகவே அவர்களுக்கு லேவியருக்கான ஊழியத்தில் ஒரு பங்கை வெறுமனே ஒரு சிலாக்கியமாக வழங்கப்படும்.

## ஜெநிப்பிக்கப்படுதல் - ஜெநிப்பிக்கப்பட்டு, உயிர்ப்பிக்கபடுதலை தொடராமல் இருக்கும் நிலை.

### கே: 40:1 :: கேள்வி (1915) - 1

ஒருவர் பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தும், மற்றும் அந்த நபர் தேவனுடைய ஊழியத்தில் செயல்பாட்டிற்கு ஒருபோதும் உயிர்ப்பிக்கப்படாமல் இருந்தால், இதன் விளைவு என்னவாயிருக்கும்?

**பதில்:** அருமை நண்பர்களே, இதன் விளைவு என்னவாயிருக்கும் என்பதைக் கூறுவதற்கு போதிய விவேகம் உள்ளவர்களாக நாங்கள் இருக்கவில்லை. இது இயற்கையான நிலைமைகளிலிருந்து ஈர்க்கக்கூடிய ஆவிக்குரிய தளத்தின் உருவகமாக இருக்கிறது என்று நாங்கள் அறிகிறோம். ஜெநிப்பிக்கப்பட்டும் மற்றும் ஒருபோதும் உயிர்ப்பிக்கப்படாத எந்த பிள்ளையும் ஒருபோதும் முதிர்ச்சி அடையாது; அது இறந்து விடும். ஆவிக்குரிய தளத்திலும் அப்படியே இருக்கும்; பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டும், மற்றும் செயல்படக்கூடிய, அல்லது உயிர்ப்பிக்கும் நிலையை எட்டாத எவரும், ஆவிக்குரிய ஜீவனை ஒருபோதும் தற்காலத்திலும் அல்லது எதிர்காலத்திலும் பெற முடியாது. மற்றும் ஆவியின் பிறப்பில் தவறி விடுகிறது. ஆனால் இப்படிப்பட்டவர்களுடன் கர்த்தர் செயல்தொடர்பு கொள்வதற்கான சாத்தியம் இருக்கின்றது; ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தும், மற்றும் உயிர்ப்பிக்கப்படுதலில் தவறினால், அந்த நபர் மாம்சீக தளத்திற்கு வரலாம். ஆனால் உருவகம் இதற்கு எதிரானதாக இருக்கிறது. ஆகவே இதை ஒரு கொள்கையாக அல்லது உபதேசமாக நாங்கள் முன்னிருத்த விரும்புகிறதில்லை.

## ஜெநிப்பிக்கப்படுதல் - யார் மூலமாக?

### கே: 40:2 :: கேள்வி (1916) - 2

இயேசுவின் மூலமாக பரிசுத்த ஆவியினால் நாம் ஜெநிப்பிக்கப்படுகிறோமா?

**பதில்:** இந்த கேள்வி எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நான் அறியவில்லை. இயேசு சபையின் ஜெநிப்பிக்கப்படுதலை செய்கிறதில்லை, இருப்பினும் ஜெநிப்பிக்கப்படுதல் இயேசுவின் வழியாக வருகிறது. நான் இரட்டை பதிலை கூறுகிறேன். அப்போஸ்தலர் கூறுகிறது போன்று, நம்முடைய ஜெநிப்பிக்கப்படுதல் பிதாவைச் சார்ந்ததாயிருக்கின்றது, “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் நம்மை ஜெநிப்பித்தார்.” இது நம்மை ஜெநிப்பித்தது யார் என்பதை நமக்குச் சொல்கிறது; எந்த நிபந்தனையின் மேல் பிதாவினால் நாம் ஜெநிப்பிக்கப்பட்டோம் என்பது இயேசுவின் பணியாக இருக்கிறது - அவருடைய மரணத்தின் மூலமாக, மற்றும் அவருடைய புண்ணியத்தில் பிரயோகப்படுத்தலினால் (சாற்றப்படுதலினால்), நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு தகுதியானவர்களாக எண்ணப்பட்டோம். நாம் ஜெநிப்பிக்கப்படக்கூடிய நிலைக்கு நம்மைக் கொண்டுவரும் விதத்தில் இயேசு இதனுடன் சிலவற்றை செய்யவேண்டியிருக்கிறது, ஆனால் ஜெநிப்பிக்கிற ஒருவராக அவர் இருக்கவில்லை; இருப்பினும், “சகலமும் பிதாவினால், மற்றும் குமாரன் மூலமாய், மற்றும் அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.” பெந்தெகொஸ்தே நாள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ளதை நான் பார்க்கிறதுடன் இது ஒத்திருக்கின்றது. அப்போஸ்தலர்கள் மேல்வீட்டில் இருந்த போது, இயேசு அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்ததற்காகக் காத்திருந்தனர், மற்றும் இது பிதாவிடத்திலிருந்து வந்த வாக்குத்தத்தம் என்று இயேசு கூறினார், பின்பு பிதா இதை

இயேசுவுக்கு அளித்தார் மற்றும் இயேசு அந்த நேரத்தில் அதை சபையின் மேல் பொழிந்தருளினார் என்று பின்பு பேதுரு கூறினார்; ஆகவே, அது தான் ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலாக இருந்தது. நாம் இந்த விஷயத்தின் முழுமையான கருத்தில் எடுத்துக்கொள்ள விரும்புகிறோம்.

## ஆதி - லோகோஸ்.

### கே: 40:3 :: கேள்வி (1909) - 3 (யோவான் 1:2)

"அவர் (லோகோஸ்) ஆதியிலே தேவனோடிருந்தார்." இங்கே எந்த ஆதி குறிக்கப் படுகிறது? லோகோஸினால் உண்டாக்கப்பட்ட சகலத்தின் ஆதியை இது குறிக்கிறதா, அல்லது லோகோஸின் ஆதியையே குறிக்கிறதா? இது லோகோஸின் ஆதியைக் குறிக்கிறதாயிருந்தால், அவர் இருந்ததற்கு முன்னமே பிதாவுடன் எப்படி இருந்திருக்க முடியும்?

**பதில்:** "ஆதி" என்ற வார்த்தை அநேகமாக ஒரு தெளிவற்ற வார்த்தையாக உள்ளது. நம்முடைய பரலோக பிதாவைப் பற்றி நாம் நினைக்கும் போது, அவருக்கு ஆதி எதுவும் இருந்ததில்லை என்று திருவசனம் நமக்குத் தெரிவிக்கிறது. அவருக்கு ஒரு ஆதி (தொடக்கம்) இருந்தது என்று கற்பனை செய்வது கஷ்டமாயிருக்கிறது, மற்றும் அவருக்கு ஆதி (தொடக்கம்) இருந்ததில்லை என்று கற்பனை செய்வது கஷ்டமாயிருக்கிறது. இதன் கஷ்டம் என்னவென்றால், நம்முடைய மனங்கள் ஒரு வரம்புக்குட்பட்டதாக இருக்கிறது. நம்முடைய மனதிற்கும், நாயின் மனதிற்கும் இடையே வித்தியாசம் இருப்பது போன்று, தேவனுடைய மனதிற்கும் நம்முடைய மனங்களுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது. நான் புத்திசாலித்தனமுள்ள ஒரு நாய் வைத்திருக்கலாம், மற்றும், ஜேக், போ, ஆடுகளைக் கொண்டு வா என்று நான் சொல்லும் போது, அந்த நாய் ஆடுகளில் ஒவ்வொன்றையும் கொண்டு வருகிறது.. ஆனால், ஜேக், நான் உன்னிடம் வானசாஸ்திரம் பற்றி, அல்லது தேவனைப் பற்றி பேச விரும்புகிறேன் என்று நான் பேசுவதாக அனுமானிக்கவும். ஜேக் தேவனைப் பற்றி எதுவும் அறியாது, ஏனெனில் இதைப் புரிந்து கொள்ளும் திறன் கொண்டதாக அதனுடைய மூளை இருக்கிறதில்லை. ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி புரிந்துகொள்ளும் திறனை தேவன் நாய்க்கு கொடுத்திருக்கவில்லை. தார்மீகம் பற்றிய கேள்விகள் மற்றும் விஞ்ஞானம் பற்றிய கேள்விகளை நாம் புரிந்து கொள்ள முடிகிற விதத்தில், தேவன் நமக்கு பரந்த அளவிலான புரிந்துகொள்ளும் திறனை அளித்திருக்கிறார். ஆனால் நம்மில் எவரும் நித்தியமானதைக் கிரகித்துக்கொள்ளும் இப்படிப்பட்ட மனதை பெறவில்லை. தேவன் தொடக்கம் உடையவராயிருக்கிறார் என்று நீங்கள் நினைக்க முயற்சித்தால், நீங்கள் கஷ்டமாக உணருவீர்கள்; இது நம்முடைய திறனளவைத் தாண்டியுள்ளதாக இருக்கிறது. ஒரு விளக்கத்தை எடுத்துக்கொள்வோம்: உங்களிடம் ஒரு பீரங்கி உள்ளது என்றும் அது ஆயிரமாயிரம் மைல்களுக்கு மாபெரும் வேகத்தில் பீரங்கி குண்டை எறியக்கூடியது மற்றும் அது ஒருபோது நிற்காது என்று அனுமானியுங்கள். ஓ, நீங்கள் சொல்வீர்கள், அது நிற்க வேண்டியிருக்கும், ஏன்? இது விண்வெளியின் முடிவுக்கு வரும். விண்வெளியின் முடிவு என்னவாயிருக்கும்? விண்வெளியின் முடிவு என்னவாயிருக்கும் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடியாது. மற்றும் ஒரு பீரங்கி குண்டு எப்போதும் போய்க்கொண்டிருக்கும், மற்றும் விண்வெளியின் முடிவுக்கு ஒருபோதும் வராது என்பதை உங்களால் கற்பனை செய்ய முடியாது. ஆகவே நம்முடைய மூளைகளுக்கு நாம் வரம்பு எல்லைகள் உடையவர்களாயிருக்கிறோம் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கிறது. தேவனுக்கு ஆதி இல்லை என்று வேத வாக்கியங்கள் கூறுகிறதால், தேவனுடைய துவக்கத்தை நான் விளக்க முடியாது.

அப்படியானால், ஆதி என்பது இங்கே எதை அர்த்தப்படுத்துகிறது? கர்த்தருடைய ஆதி, யேகோவா அவரை சிருஷ்டித்த போது இருந்தது என்பதால், அந்த ஆதியிலிருந்து, அதாவது, யேகோவா அவரை சிருஷ்டித்த நேரத்திலிருந்து, அவர் பிதாவுடன் இருந்து வருகிறார்.

## வேதாகமம் - ஒரு பெண், அல்லது கிறிஸ்துவின் மணவாட்டி - யாருக்கு முகவரியிடப்பட்டது?

### கே: 41:1 :: கேள்வி (1909) - 1

யோவானுடைய இரண்டாம் நிருபத்தை, யோவானிடமிருந்து ஒரு தனிப்பட்ட நபருக்கான கடிதமாக, அல்லது கிறிஸ்துவிடமிருந்து அவருக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிகைக்கு எழுதப்பட்ட கடிதமாக நாம் புரிந்து கொள்ள வேண்டுமா?

**பதில்:** இது யோவானிடமிருந்து ஒரு தனிப்பட்ட நபருக்கான கடிதமாக இருக்கும் என்று நான் புரிந்துகொள்ளுகிறேன். எனினும், ஒரு தனிப்பட்ட நபர் பற்றிய உண்மை எதுவோ, அது கிறிஸ்துவின் சபையில் தனிப்பட்டவர்களின் எண்ணிக்கைக்கும் உண்மையாகவே இருக்கிறது, ஏனென்றால் நாம் ஒரே சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறோம். கொரிந்தியருக்கு எழுதின நிருபம் சரடோகா ஸ்ப்ரிங்கிலுள்ள சபைக்கு எழுதப்படவில்லை. ஆனால் கொரிந்துவிலுள்ள சபையும் மற்றும் சரகோடா ஸ்பிரிங்கில் இருக்கும் சபையும் ஒரே விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் இருப்பதால், இந்த நிருபம் இரு சபைகளுக்கும் உரியதாக இருக்கிறது. இதைப் போன்றே யோவானுடைய இரண்டாம் நிருபம் இருக்கிறது.

## வேதாகமம் - பூமியின் சிருஷ்டிப்பு.

### கே: 41:2 :: கேள்வி (1911) - 2

வேதாகமம் சிருஷ்டிப்பை பற்றி சொல்கிறது. பூமி எதிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டது?

**பதில்:** பூமியின் மூலப்பொருட்களின் சிருஷ்டிப்பை பற்றி வேதாகமம் சொல்கிறதில்லை. வேதாகமம் "பூமியானது - - இருந்தது" என்று சொல்லி, துவங்குகிறது. இது ஏற்கனவே இருந்தது, ஆனால் இது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது, மற்றும் ஆழத்தின் மேல் இருள் இருந்தது; ஆறு நாட்களுக்குக் குறிப்பிடப்படுகின்ற சிருஷ்டிப்பு மூலப்பொருட்களின் சிருஷ்டிப்பைக் குறிப்பிடுகிறதில்லை, ஆனால் மூலப்பொருட்களிலிருந்து ஒழுங்கைக் கொண்டுவருவதைப் பற்றியதாக இருக்கிறது.

## வேதாகமம் - இதனுடைய ஏவப்படுதல்.

### கே: 41:3 :: கேள்வி (1911) - 3

வேதாகமத்தின் ஏவப்படுதலில் நீங்கள் நம்பிக்கை கொள்கிறீர்களா?

**பதில்:** வேதாகமத்தின் ஏவப்படுதலில் நான் நம்பிக்கை கொள்கிறேன்.

## வேதாகமம் - தவறாநிலை.

### கே: 41:4 :: கேள்வி (1911) - 4

வேதாகமம் தவறாநிலை உடையது என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்:** தேவன் வேதாகமத்தை பிழையற்றதாகக் கொடுத்திருப்பதால், நான் வேதாகமத்தை நம்புகிறேன். வேதாகமம் தவறாநிலை உடையது என்று சொல்வது இலக்கண ரீதியாக இருக்காது. வேதாகமம் தவறிழைக்காதது என்று நான் கூறுகிறேன். நீங்கள் அறிவீர்கள், ஒரு நபர் மட்டுமே தவறாநிலை உடையவராக இருக்க முடியும், மற்றும் நான் இங்கே விளக்கம் அளிக்கிறேன், அதாவது, வேதாகமத்தின் பொதுவான மொழிபெயர்ப்பில் (Common Version) வேதாகம

பழைய மூலப்பிரதிகள் இல்லாத பத்திகள் இருக்கின்றன, மற்றும் இவைகளில் சில பத்திகள் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

## வேதாகமம் - தவறு இல்லாமல் இருப்பது.

### கே: 42:1 :: கேள்வி (1911) - 1

வேதாகமம் முற்றிலும் தவறு இல்லாமல் இருக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்:** வேதாகமத்தில் சில பகுதிகள் முற்றிலும் வரலாறு தொடர்புடையதாக இருக்கின்றன. இராஜாக்கள் மற்றும் நாளாகமம் புஸ்தகங்கள் மற்றும் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் புஸ்தகங்கள் முற்றிலும் வரலாறு தொடர்பானவைகளாக இருக்கின்றன, மற்றும் இவைகளில் எது இருக்க வேண்டுமோ, அதை விட்டு விடாதபடிக்கு தெய்வீக கிருபை அவர்களை வழிநடத்துகிறதை தவிர, இவைகள் சம்பந்தமானவற்றில் ஏவப்படுதலின் குறிப்பிட்ட தேவை இருக்கவில்லை. ஆனால் ஒரு வரலாறு எழுதப்படும் போது, அது ஏவப்பட்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கிறதில்லை, ஏனென்றால் எல்லா உண்மையும் நன்றாக இருக்கின்றன. உதாரணமாக, இயேசு இவ்விதம் சொன்னார் என்று மத்தேயு எழுதினார் என்றால், அவர் எதைக் கேள்விப்பட்டாரோ, எவை உண்மைகள் என்று அவர் அறிந்திருந்தாரோ, அவர் வெறுமனே அவைகளைச் சொல்கிறார். இந்த உண்மையைச் சொல்வதற்கு அவர் ஏவப்பட்டிருக்க வேண்டும் அவசியம் இல்லை. இங்கேயிருந்து நீங்கள் வெளியே போய், நான் சொல்லியிருக்கிறதைச் சொல்வதற்கு நீங்கள் ஏவப்படுவதற்கான தேவை வேண்டும் என்றால், நீங்கள் இதை நேரிடையாகச் சொல்லுங்கள்; ஆகவே இதற்கு ஏவப்படுவதற்கான தேவை எதுவும் இருப்பதில்லை. இப்போது, இராஜாக்கள் மற்றும் நாளாகமம் புஸ்தகங்களில் சில பத்திகளில் வெளிப்படையாக ஒரு தவறு ஏற்பட்டிருக்கிறது. இவைகள் வரலாற்று புஸ்தகங்களாக இருக்கின்றன, மற்றும் இவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கும் முறையில் சில இடத்தில் சிறிய தவறுகள் இருக்கின்றன. இரண்டு புஸ்தகங்களும் ஒரே காலப்பகுதியைச் சார்ந்ததாக இருக்கின்றன, ஆனால் ஒன்று இதை மற்றதிலிருந்து சற்று வித்தியாசமாக அளிக்கின்றன. இவைகள் எப்படி இணக்கமடைய முடியும் என்பதை வேறொரு நாளில் நாம் பார்க்கலாம், ஆனால் தற்போது நாம் செய்ய வேண்டாம்.

## வேதாகமம் - போதிக்கிறவரின் மிகப்பெரிய கஷ்டங்கள்.

### கே: 42:2 :: கேள்வி (1912 - Z) - 2

முக்கியமான விஷயங்கள் பலவற்றில் வேதாகமம் தவறாக விளக்கமளிக்கப்பட்டால், நாம் அந்த விஷயங்களை அறிந்துகொள்வதற்குப் போதுமான படிப்பறிவில்லாதவர்களாக நாம் இருந்தால், நாம் எப்படி வேதாகமத்தை புரிந்துகொள்ள முடியும்?

**பதில்:** போதகர்கள் வேதாகமத்தின் விளக்கம் அளிப்பதில், உலகத்தில் ஜனங்களின் மற்ற வகுப்பாரைக் காட்டிலும் குறைவான திறனுள்ளவர்களாக இருக்கிறார்கள். இறையியல் கல்விப்பயிற்சிசாலைகள் (Theological Seminaries) வேதாகம விளக்கங்களைக் கற்றுக்கொடுக்கிற தில்லை. ஆனால் பல்வேறு கோட்பாடுகளை எப்படி தற்காத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள்., மற்றும் விசாரணையை எப்படித் தடுக்க வேண்டும், மற்றும் விசாரணை செய்பவரை மடமை கொண்டவராக எப்படி உணரச்செய்ய வேண்டும் என்பதைக் கற்பிக்கின்றனர். ஒரு போதகருக்கு வேதாகம கேள்விகளைக் காட்டிலும் அதிகம் கஷ்டம் கொடுப்பது ஒன்றும் இல்லை.

சத்தியத்தை அறிய விரும்புகிறவர்கள் வேத வாக்கியங்களை ஆராய வேண்டும் மற்றும் சொல் அகராதிகளைப் (CONCORDANCES) பயன்படுத்த வேண்டும் என்பது எங்களுடைய அறிவுரையாக இருக்கின்றது, மற்றும் ஒவ்வொரு வேதாகம வழிகாட்டியும் அவர்களை சரியான,

மற்றும் வேத வாக்கியங்களின் சரியான, மற்றும் பகுத்தறிவுடன் புரிந்து கொள்ளுதலுக்கு உதவிபுரியும். ஆனால், பிரிவினை பாரபட்சங்கள் இல்லாமல், மற்றும் சத்தியத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பமுடன், பாடம் நேர்மையுடனும், மற்றும் ஜெபசிந்தனையுடன் அணுக வேண்டும் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். போதகரின் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள், "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்."

## வேதாகம படிப்பு - வழிமுறையைப் பற்றி.

### கே: 42:3 :: கேள்வி (1911) - 3

வேதாகம படிப்பு பற்றி நீங்கள் என்ன அறிவுரை கூறுகிறீர்கள்? இதை முதலில் நீங்களே எண்ணிப்பார்க்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறீர்களா, அல்லது இதைப் பகுத்தறிய முயற்சிப்பதற்கு முன்பு விளக்கவுரைகளைப் படிக்க வேண்டும் என்கிறீர்களா?

**பதில்:** கேள்வி கேட்டவரின் அர்த்தத்தை நான் புரிந்துகொள்கிறேன் என்பதில் நான் நிச்சயமாக உறுதிகொண்டிருக்கவில்லை, ஆனால் நான் கூறுகிறேன், என் அருமை நண்பரே, நம்முடைய கர்த்தர் இயேசு உன்னதத்திற்கு ஏறின போது, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று தேவன் தெரிவிக்கிறார். பின்பு அந்த வரங்கள் என்னவென்று நமக்குக் கூறுகிறார்: "அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் ஏற்படுத்தினார், மற்றும் சிலருக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியையும் கொடுத்தார். இப்பொழுது, இந்த வரங்கள் இன்று நம்மிடம் உள்ளன. இயற்கையாகவே போதிக்கும் திறனுடையவர்களாக சிலர் இருக்கின்றனர், ஆனால் எல்லோரும் போதகர்களாக அதே திறமை உடையவர்களாக இருக்கிறதில்லை. ஆகவே அப்போஸ்தலர்கள் கேட்கிறார்கள், "எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா?, எல்லாரும் போதகர்களா?" இல்லை. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தேவன் இவைகளை சபைக்கு அளித்திருக்கிறார். என்ன நோக்கம்? பரிசுத்தவான்களின் பக்திவிருத்திக்காக., சமய பணிக்காக, கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் செய்யும் பணி செய்வதற்காக, "கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாக இருக்கும் வரைக்கும்." இது சொல்வது என்னவென்றால், ஏற்கனவே மகிமையடைந்த, தலையானவராக இயேசு இருக்கிறார்; கிறிஸ்துவின் சரீரம் முழுமை பெறும் வரைக்கும், அவருடைய சரீர அங்கங்களாக அவர்கள் ஒருவர் மற்றவரை வளர்ச்சியடையச் செய்வதற்கு அவர் இப்பொழுது அந்த வரங்களை அளித்திருக்கிறார். இப்போது, தேவன், கிறிஸ்துவின் மூலமாக இந்த வரங்களை சபைக்கு அளித்தார் என்றால், இந்த வரங்களை எங்கெல்லாம் காண்கிறீர்களோ, அவைகளை பயன்படுத்துவது சபையின் கடமையின் ஒரு பகுதியாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். ஆகவே அப்போது ஒரு வேத மாணவர் தானே வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்பது ஒரு விவேகமான காரியமாக இருக்கிறதில்லை. வேதாகமத்தை வருஷக்கணக்கில் படிக்கிறவர்களாக இருந்து, அதிலிருந்து அதிகம் கிரகிக்க முடியாதவர்களாக இருந்தால், கர்த்தர் எப்படி வழிநடத்துகிறார், கர்த்தருடைய கிருபை என்ன என்பதை நாம் உற்றுக்கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த விஷயத்தில் மற்ற எவருடைய வார்த்தை, அல்லது தீர்ப்பை எடுத்துக்கொள்பவர்களாக நாம் இருக்கக்கூடாது; நமக்கு நிரூபிக்கப்படும் விதத்தில் நாம் இருக்க வேண்டும், மற்றும் நாம் பெற்றுக்கொள்கிற எல்லாவற்றிற்கும் தேவனுடைய திருவசனமே நமக்கு தர அளவாக இருக்கின்றது; ஆனால் வேறு எவர் மூலமாக சில மணித்துளிகளில் இது உங்களிடம் வருகிறதாயிருந்தால், அது வேறு விஷயமாக இருக்கிறது. எப்போதெல்லாம் இது உங்களிடம் வருகிறதோ, நீங்கள் பெறுகிறதையும், மற்றும் இது தேவனுடைய திருவசனத்திற்கு இணக்கமாக இருக்கிறது என்பதைப் பார்த்து, நிரூபிப்பது உங்களுடைய காரியமாக இருக்கிறது,

## வேதாகமம் - ஆயிர வருஷ யுகத்தில்.

### கே: 43:1 :: கேள்வி (1908) - 1

மனுக்குல உலகத்திற்கு ஆயிர வருஷ யுகத்தில் வேதாகமம் தேவைப்படுமா?

**பதில்:** “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.” வேதாகமம் நமக்கு இப்போது ஒரு தீபமாகவும், ஒரு விளக்காகவும் தேவைப்படுவதற்கு காரணம் என்னவென்றால், நாளின் விடியல் வரைக்கும், மற்றும் விடிவெள்ளி எழும்பும் வரைக்கும் நாம் இருளின் நேரத்தில் இருக்கிறோம். விடிவெள்ளி எழும்பியதற்கு பின்பு, உங்களுக்கு விளக்கு தேவைப்படுவதில்லை. உலகம் விளக்கைக்காட்டிலும் சிறந்த ஒன்றைப் பெறும். நீங்கள் பிரான்ஸின் வரலாற்றை உடையவராயிருப்பது போன்று, வேதாகமம் உலகத்தாரோடு எப்போதும் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். உங்களுக்கு பிரான்ஸின் வரலாறு தேவைப்படுகிறதா? நீங்கள் கடந்த காலத்தில் நூறு வருஷங்களுக்கு வாழப்போகிறதில்லை, ஆனால் பிரான்ஸின் வரலாற்றைப் படிப்பதற்கு உங்களுக்கு ஆர்வம் இருக்கின்றது. உங்களுக்கு யூதர்களின் வரலாறு தேவைப்படுகிறதா? நீங்கள் யூதராகப் போகிறதில்லை, அப்படித் தானே, ஆனால் யூதர்களுடன் தேவனுடைய செயல்தொடர்புகள் மற்றும் அவருடைய கிருபைகள் மற்றும் அந்த காரியங்கள் எவ்விதம் செயற்படுகின்றன என்பவைகளின் வரலாற்றை அறியவேண்டுமென்று ஆர்வம் உங்களுக்கு இருக்கின்றது. ஆகவே உலகத்தார் இந்த தீர்க்கதரிசனங்கள் முன்னாட்களில் எப்படி எழுதப்பட்டன, மற்றும் அவைகள் எப்படி நிறைவேறின என்பதைப் பார்க்கும் போது, அவர்கள் வேதாகமத்திலிருந்து மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்று நான் நினைக்கிறேன். இது கற்றுக்கொள்வதற்கான மாபெரும் பாட-புஸ்தகமாக அவர்களுக்கு இருக்கும் என்று நான் நினைக்கிறேன், ஆனால் அவர்கள் வேதாகமத்தைச் சார்ந்திருக்கமாட்டார்கள்; இது இப்போது இருப்பது போல, அப்போது அவர்களுடைய பயிற்றுவிப்பாளராக இருக்காது. இது ஒரு வகையான பக்க-வெளிச்சமாக அல்லது, கடந்துபோன காலங்களின் ஒரு வரைபடமாக இருக்கும், அது கர்த்தர் மீதும், அவருடைய வாக்குத்தத்தங்களின் மீதும், மற்றும் கடந்த காலத்தின் அவருடைய செயல்தொடர்புகள் எல்லாவற்றின் மீதும், அவர்களை பெரிதான பயபக்தி உடையவர்களாகச் செய்வதில் உதவிபுரியும்.

## வேதாகமம் - பரலோகத்தில்.

### கே: 43:2 :: கேள்வி (1908) - 2

உலகத்தாரைத் தவிர மற்ற எவராலும் வேதாகமம் பயன்படுத்தப்படும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? சபை திரைக்கு அப்பால் கடந்த பின்பு வேதாகமத்தைப் பயன்படுத்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்:** இல்லை, நாம் பரலோகத்திற்குப் போகும் போது, நாம் ஆவிக்குரிய வேதாகமங்கள் எதையும் உடையவர்களாக இருக்கமாட்டோம்.

## வேதாகமம் - ஆயிர வருஷ யுகத்தில் யாரால் பயன்படுத்தப்படும்?

### கே: 43:3 :: கேள்வி (1908) - 3

உலகத்தாரைத் தவிர வேறு எவரும் வேதாகமத்தை பயன்படுத்துவார்களா?

**பதில்:** இங்கே இதைப் பயன்படுத்துவதற்கு வேறு எவரும் இருக்கமாட்டார்கள்; முற்பிதாக்களைத் தவிர அவர்கள் எல்லாரும் உலகத்தாராயிருப்பார்கள். அவர்கள் இதை எப்போதாவது பார்ப்பார்கள் மற்றும் டாண் புத்தகங்களையும் பார்ப்பார்கள், ஆனால் இது அவர்களுடைய வழிகாட்டியாக இருக்காது, ஏனெனில் முற்பிதாக்கள் ஆவிக்குரிய சபையின் நேரடியான மேற்பார்வையின் கீழ் இருப்பார்கள்; எல்லா கட்டளைகளும் சபையிடமிருந்து முற்பிதாக்களுக்கு நேரிடையாக வரும், மற்றும் அவர்கள் வேதாகமத்தைச் சார்ந்திருக்க மாட்டார்கள். ஆனால் நீங்கள் அனுமானிக்க முடியும், உதாரணத்திற்கு, ஆபிரகாம்

ஆதியாகமத்தில் விவரிப்புகளையும், மற்றும் தீர்க்கதரிசனங்களையும் வாசிப்பதற்கு அதிகம் மகிழ்ச்சி அடைவார், மற்றும் இயேசு தாம் ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று கூறியதை புதிய ஏற்பாட்டில் வாசிப்பதில் பெருமகிழ்ச்சி அடைவார். ஆபிரகாம் அதைப் பார்த்து, கூறுவார், இயேசு அதை கூறினார்; இது எவ்வளவு உண்மையாயிருந்தது; மற்றும் நான் அதைப் போன்ற எதையும் நான் எவ்வளவு குறைவாக நான் எதிர்பார்த்தேன்! மற்றும் நான் அறிந்த வரைக்கும், ஆபிரகாம் டாண் புத்தகங்களையும் மற்றும் திரளான மற்ற புத்தகங்களையும் படிப்பதில் - அநேகமாக பிரான்ஸின் வரலாற்றைப் படிப்பதில் ஆர்வம் கொள்வார், மற்றும் ஒருவரையொருவர் வெட்டிக்கொல்வது மகிமையான காரியமாக இருந்தது என்று அவர்கள் வழக்கமாக எண்ணியிருந்ததை அவர் பார்ப்பார்; மற்றும் அவர் சென்று, சில சிலைகளையும், மற்றும் போர் நினைவுச்சின்னங்களையும் கவனிப்பார் மற்றும் சொல்லுவார்,

அவர்கள் எதற்காக அந்த சிலையை உண்டுபண்ணினார்கள்?

அவர் ஒரு மாபெரும் மனுஷனாக இருந்தார்.

அவர் என்ன செய்தார்?

ஓ, அவர் மனுஷர்களின் ஒரு பெரிய படையை வழிநடத்தினார்; அவர்கள் துப்பாக்கிகள், வெடி மருந்துகள், மற்றும் தோட்டாக்களை உடையவர்களாக இருந்தனர் மற்றும் மிகத் திரளான ஜனங்களைக் கொன்றனர்.

அவர்கள் அவரை ஒரு மாபெரும் மனுஷன் என்று அழைத்ததற்கு இது தான் காரணமா?

ஆம்.

ஆகவே வருங்காலத்தில், போர்களின் இந்த வரலாறுகளை மிகவும் விசித்திரமான ஆர்வத்துடன் அவர்கள் உற்றுநோக்குவார்கள், மற்றும் மனுக்குல குடும்பத்தில் எந்த வகையான பைத்தியக்காரத்தனம் வந்திருக்கிறதைக் காண்பார்கள், ஜனங்கள் எவ்வளவு வெறித்தனம் கொண்டவர்களாக, ஒருவர் மற்றவரைக் கொல்வதற்கு --- சில அற்பமான விஷயங்களுக்காக, — அவர்கள் ஜனநாயகவாதிகள், அல்லது குடியரசுக் கட்சியினர் எதுவாக இருந்தாலும்; அல்லது அவர்கள் மெதடிஸ்டுகள் அல்லது பிரெஸ்பைடேரியன்களாக எவராக இருந்தாலும். நாம் தெளிந்த சிந்தையின் ஆவியைப் பெற்றுக்கொள்ள துவங்குகிறவர்களாக மட்டும் இருக்கிறோம்; நாம் இன்னும் தெளிந்த சிந்தையைப் பெறவில்லை. தெளிந்த சிந்தையின் ஆவியை, இதன் மனநிலையை, நாம் பெற்றுக்கொண்டு இருக்கிறோம், மற்றும் இது ஒவ்வொருநாளும் அதிகமதிகமாக நம்மிடம் வந்துகொண்டிருக்கிறது. இதற்காக தேவனுக்கு நன்றி.

## பாவ சரீரம் – “பழைய மனுஷன்”

### கே: 44:1 :: கேள்வி (1911) - 1

”நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.” “பழைய மனுஷன்” மற்றும் “பாவ சரீரம்” ஒன்றையே, ஒரே விஷயத்தையே குறிப்பிடுகிறதா?

**பதில்:** இல்லை. அப்போஸ்தலர் இங்கே “பழைய மனுஷன்” என்று கூறும்போது, உங்களுடைய விஷயத்தில் உங்களுடைய “பழைய மனுஷன்”. அல்லது உங்களுடைய “பழைய மனுஷி” என்று அர்த்தப்படுத்துகிறார் என்பது என்னுடைய புரிந்துகொள்ளுதலாக இருக்கிறது. அதாவது இவ்விதம் கூறலாம், உங்களுடைய பழைய மனுஷீக சுபாவம் -- அது நீங்கள் கர்த்தரிடம் வந்த போது நீங்கள் ஒப்படைத்தது, அது உங்களுடைய அர்ப்பணிப்பாகவும், மற்றும் இதை கர்த்தர் ஏற்றுக்கொண்டால், அது சரீரமாகவும் இருக்கிறது. இது தான் நம்முடைய “பழைய

மனுஷன்.” இது மனுஷனாக இருக்கப்போகிறது, ஆனால் நாம் புதிய சிருஷ்டிகளாகியிருக்கிறோம். இப்பொழுது, இந்த பழைய சரீரம், மாம்சீகத்தின் எல்லா விருப்பங்களும் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படுகின்றது. நாம் அவைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்திருக்கிறோம். இயேசுவின் மாம்சம் சிலுவையில் தொங்கியது போன்று, அப்படியே உங்களுடைய மாம்சம் அர்ப்பணிப்பில் ஒப்படைக்கப்பட்டது, அதை கர்த்தர் தமக்குப் பிரியமான வழியில் பயன்படுத்துவார் - சிலுவையின் மேல், அல்லது வேறு எந்த வழியிலும் பயன்படுத்துவார், இதைப் பற்றிய கவலை உங்களுக்குரியது இல்லை, ஏனெனில் உங்களுடைய மனுஷீக விருப்பம் முற்றிலும் மரணத்திற்குள்ளாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. “என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது.” -- இது தான் “சிலுவையின்” சித்தம். இது தான் மரித்திருக்கிற சித்தம்; இந்த சித்தம் தான் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது, மற்றும் சரீரத்தின் விருப்பங்கள் எல்லாம் அந்த சித்தத்துடன் ஒப்படைக்கப்பட்டது; இந்த விருப்பங்கள் எல்லாம் அப்படியே சிலுவையில் அறையப்படுகிறது. ஆனால் இப்போது, எதற்காக? கிறிஸ்து எதற்காக மரித்தார்? நல்லது, பாவ சரீரம் அழிக்கப்படுவதற்காக, அவர் மரித்தார். நீங்கள் எதற்காக மரிக்கிறீர்கள்? பாவ சரீரம் அழிக்கப்படுவதற்காக. அங்கே பாவ சரீரங்கள் எத்தனை இருக்கின்றன? ஒன்றே ஒன்று. பாவ சரீரம் ஒன்று மட்டுமே. இதற்கு நீங்கள் என்ன அர்த்தப்படுத்துகிறீர்கள்? பாவம் ஆளுமையாக உருவகப்படுத்தப்படுகிறது என்று நான் அர்த்தங்கொள்கிறேன். நாம் பாவத்தின் ஆளுகையின் கீழ் வாழ்ந்து வருகிறோம். இது ஒரு நபர் அல்ல. இது ஒரு மனுஷன் அல்ல. ஆளுகை செய்துகொண்டிருக்கின்ற பாவம் இங்கே உருவக பாணியில் பயன்படுத்தப்படுகிறது, மற்றும் உலகத்தில் இந்த பாவ சரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, கிறிஸ்து மரித்தார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மற்றும் உங்கள் ஜீவனை எதற்காகக் கொடுக்கிறீர்கள்? உங்களுடைய ஜீவன் எங்கே வருகிறது? நாம் செய்யவேண்டியிருக்கிற இந்த மாபெரும் பாவ அமைப்பை, இந்த பாவ சரீரத்தை, நீங்களும் அழிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறீர்கள். அப்போஸ்தலர் கூறும்விதமாக, மனுக்குலத்தின் மேல் மாபெரும் ராஜாவாக ஆளுகை செய்துகொண்டிருக்கின்ற இந்த மாபெரும் பாவ சரீரத்தை அழிப்பதில் கிறிஸ்துவுடன் நீங்கள் பங்குகொள்ளும் பொருட்டு, நீங்கள் கிறிஸ்துவுடன் உங்களுடைய ஜீவனையே ஒப்படைத்திருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் ஜீவனை ஒப்புக்கொடுத்து, மற்றும் உங்களையே அர்ப்பணிப்புக்குள்ளாக்கியிருந்தால், நீங்கள் இனிமேல் பாவத்துடன் இணக்கமாக எப்படி வாழ முடியும்? ஒருபோதும் முடியாது. நீங்கள் பாவத்தைக் கண்டுபிடிக்கிற ஒவ்வொரு வடிவத்திலும், அதற்கு எதிராக நீங்கள் இருக்க வேண்டும்; அது உங்களுடைய உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது; அது உங்கள் சரீரத்துடன் நீங்கள் செய்திருக்கிறதின் ஒரு பகுதியாக இருக்கிறது. இப்பொழுது ஆளுகை செய்துகொண்டிருக்கின்ற இந்த மாபெரும் கோட்பாட்டின் பணியாளனாக, பாவத்தின் பணியாளனாக இருப்பதிலிருந்து இது வெளியே எடுக்கப்பட்டிருக்கிறது, மற்றும் நீதிமானாகவும் மற்றும் தேவனுடைய ஊழியக்காரராகவும் ஆகியிருக்கிறோம்; மற்றும் இந்த போராட்டம் நீதிக்கும் மற்றும் பாவத்திற்கும் இடையே இருக்கின்றது. நீதி என்பது, கர்த்தரையும் மற்றும் அவருடைய இராஜ்யத்தையும் குறிக்கின்ற ஒரு உருவகமாகவும், பாவம் என்பது சாத்தானையும் மற்றும் அவனுடைய ராஜ்யத்தையும் குறிக்கின்ற வேறொரு உருவகமாகவும் இருக்கின்றது, மற்றும் இந்த இரண்டிற்கும் இடையில் முரண்பாடு இருக்கிறது; இந்த பாவ சரீரமாகிய இந்த மாபெரும் ஆட்சியாளர் கடந்த ஆறாயிரம் வருஷங்களாக இந்த உலகத்தை ஆளுகை புரிந்து வந்திருக்கிறது, இந்த பாவத்தின் அழிவுக்காக நாம் கிறிஸ்துவுடன் இருக்கிறோம்; இந்த சண்டை இன்னும் கொஞ்சக் காலத்திற்கு இருக்கும், மற்றும் சிறிய அளவுக்கு, இந்த சண்டை ஆயிரம் வருஷங்கள் வரைக்கும் இருக்கும், ஏனெனில் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், நீங்களும், நானும் கிறிஸ்துவுடன் அந்த ஆயிர வருஷங்கள் முழுமையிலும் மரணம் என்னும் கடைசி சத்துரு அழிக்கப்படும் வரைக்கும், எல்லாவற்றையும் கீழாக்கி, அடிபணியச் செய்வோம். பாவ சரீரமாகிய இந்த பாவ அமைப்பு முழுமையும் அப்போது ஒட்டுமொத்தமாக வீழ்த்தப்படும், முற்றிலும் அழிக்கப்படும்.

## ஊதினார் – கர்த்தர் அவர்கள் மேல் ஊதினார்.

## கே: 45:1 :: கேள்வி (1905) - 1

"நம்முடைய கர்த்தர் அவர்கள் மேல் ஊதினார் என்று யோவான் 20:22ம் வசனம் கூறுவது எதை அர்த்தப்படுத்துகிறது?

**பதில்:** நம்முடைய கர்த்தர் அபிநய ஊமைக்கூத்து பாணியில் அவர்களுக்கு போதனை செய்தார். அவர்களை வெளியே அனுப்பும் போது, அவர்கள் தங்களுக்குச் சொந்தமான ஆற்றலைப் பயன்படுத்துகிறவர்களாக இருக்காமல், அவர்கள் மூலமாக தேவனுடைய வல்லமை செயற்படுத்தப்படும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார், ஆகவே அவர் சுவாசத்தின் எடுத்துக்காட்டை, அல்லது அவருடைய ஆவியை அவர்களுக்குள் அளித்தார். அவருடைய ஆவியின் வல்லமை, செல்வாக்கு அல்லது சிந்தையின் ஒரு மாதிரியாக அவர்களில் இதை அவர் செய்தார், மற்றும் இதன் மூலமாக அவர்கள் அவருடைய நாமத்தினால் பிசாசுகளைத் துரத்தவும், நோயாளிகளை சொஸ்தப்படுத்துதல் போன்றவற்றைச் செய்வதற்காகவும் இருந்தது.

# மணவாட்டி – மணவாட்டி முழுமை அடைந்துள்ளதா?

## கே: 45:2 :: கேள்வி (1913) - 2

மணவாட்டி வகுப்பார் எல்லாரும் திரைக்கு அப்பால் கடந்து போய்விட்டார்களா? மற்றும் திரள்கூட்டத்தார் மட்டும் பூமியில் விடப்பட்டிருக்கிறார்களா?

**பதில்:** அருமை நண்பர்களே, நான் அப்படி நம்பவில்லை. நான் உள்ளான செய்தி எதையும் வைத்திருக்கவில்லை, ஆனால் நான் நம்புகிறேன், நாம் இயேசுவின் பாத அடிச்சுவடுகளில் நடப்பதினால் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்கிறோம் என்று நம்பிக்கைக்கொள்வதில் நாம் இன்னும் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். மணவாட்டி வகுப்பார் முழுமை அடைந்திருக்கிறது என்று நினைப்பதற்கு எனக்கு ஒரு காரணமும் இருக்கவில்லை.

# வீண் அலுவற்காரர் – நீதிமொழி 16:28.

## கே: 45:3 :: கேள்வி (1916) - 3

நீதிமொழி.16:28ம் வசனத்தை தயவுசெய்து விளக்கவும்: "மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான்; கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான்."

**பதில்:** இது ஒரு மனுஷனுடைய முகத்தில் மூக்கு இருப்பது போன்று வெளிப்படையாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இதைப் போன்ற ஒரு நீதிமொழியை எப்படி உருவாக்க வேண்டுமென்று நான் அறிந்திருந்தால், இதற்கு விளக்கம் கூற வேண்டுமென்று யாரேனும் என்னைக் கேட்டால், நான் அவமதிக்கப்பட்டதாக உணருவேன். இதை உருவாக்குவதற்கு போதுமான அளவு அறிவுக்கூர்மை எனக்கு இல்லை, மற்றும் இந்த உரை பகுதியின் வழக்கற்றுப்போன வார்த்தைகளை விளக்குவதைத் தவிர, இதை விளக்க முயற்சிப்பதற்கு நான் போதுமான அளவு மதியற்றும் இருக்கவில்லை. மாறுபாடுள்ள மனுஷன் கெட்டவனாயிருக்கிறான், இவனுடைய செயல்கள், மற்றும் வார்த்தைகள், பொறாமை, கசப்புணர்வு, தவறான புரிதல், சண்டை ஆகியவற்றை விளைவிக்கின்றன. கோள் சொல்லுகிறவன் வீண் அலுவற்காரனாக, அல்லது அவதூறு பேசுகிறவனாக இருக்கிறான்.

# காயீன் மற்றும் ஆபேல் – எந்த தேசத்தில் இருந்தார்கள்?

## கே: 46:1 :: கேள்வி (1909) - 1

ஆதாம், ஏவாள், மற்றும் காயீன், ஆபேலைத் தவிர பூமியில் குடியிருந்தவர்கள் மற்ற எவரும் இல்லாத போது, காயீன் மற்றும் ஆபேல் தங்களுக்கு பெண் கொள்வதற்கு வேத வாக்கியங்களின்படி, பூமியில் நான்கு பேர்கள் (பெயரிடப்பட்டவர்கள்) மட்டும் இருந்த போது, எந்த தேசத்திற்கு சென்றிருப்பார்கள்?

**பதில்:** பூமியின் மேல் நான்கு பேர்களுக்கு அதிகமாக யாரும் இருக்கவில்லை என்று வேதாகமம் சொல்லுகிறதில்லை. ஆதாமின் குமாரத்திகளைப் பற்றி வேதாகமம் குறிப்பிடுகிறதில்லை, மற்றும் காயீன் மனைவியை தேர்ந்தெடுத்த போது, அவனுடைய சகோதரிகளில் ஒருவரை தேர்ந்தெடுத்தான் என்ற அனுமானம் பதிவுக்கு இணக்கமுடையதாக இருக்கிறது. அப்போது சகோதரனும் சகோதரியும் மணந்து கொள்வதற்கு ஆட்சேபணை எதுவும் இருந்ததில்லை, மேலும், அநேக விஷயங்களில் அவர்கள் நன்கு ஏற்புடையதாக இருந்திருக்கும். இன்று அந்த உறவில் மணந்துகொள்ளாமல் இருப்பதற்கான காரணம் என்னவென்றால், சகோதரனும் சகோதரியும் மணந்து கொள்ளும்போது, அவர்களுடைய பிள்ளைகள் குடும்பத்தின் மரபுவழி குணலட்சணங்களை அவர்கள் பைத்தியமாகக்கூடிய அளவுக்கு கூட சுதந்தரித்துக் கொள்வார்கள், ஆகவே இதை, பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள், அல்லது இரண்டாம் உறவினரையும் கூட சட்டம் தடைபண்ணுகிறது,

இது பரிணாமக் கொள்கைக்கு முரண்பாடாக இருக்கிறதை நீங்கள் பார்க்கலாம்.

## பாளயம் - - எத்தனை பாளயங்கள்.

## கே: 46:2 :: கேள்வி (1913) - 2

"பாளயத்துக்குப் புறம்பே (WITHOUT CAMP) அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்." - - இது இரண்டாம் பாளயத்துக்குப் போவதைக் குறிக்கிறதா? அல்லது இரண்டு பாளயங்கள் உள்ளனவா?

**பதில்:** அப்போஸ்தலர் கூறுகிறார், பாளயத்துக்குப் புறம்பே (WITHOUT CAMP) அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம். இன்றைய ஆங்கிலத்தில் நாம் கூறுவோம், பாளயத்துக்கு புறம்பே (OUTSIDE CAMP) புறப்பட்டுப் போகக்கடவோம். WITHOUT CAMP என்ற வார்த்தையை அதே முறையில் இன்று நாம் உபயோகப்படுத்துகிறதில்லை. பாளயத்துக்குப் புறம்பே புறப்பட்டுப் போகக்கடவோம் - - இது எதை அர்த்தப்படுத்துகிறது? நல்லது, பாளயம் என்பது தேவனுடன் இணக்கமாக இருக்கிறதாகக் கோருகிற காரியங்களின் அந்த நிலைமையைக் குறிக்கின்றது. இயேசுவின் நாட்களுக்குத் திரும்பிப் பாருங்கள்: இயேசு பாளயத்துக்குப் புறம்பே போனார். இது புறஜாதிகளின் பாளயமாக இருந்ததா? இல்லை. அவருடன் எந்த பாளயம் இருந்தது? இயேசுவின் காலத்தில் இருந்த பாளயம் தேவனுடைய ஜனங்களாக, பரிசுத்த ஜனங்களாகத் தங்களை வெளிக்காட்டிக்கொள்கிறவர்கள் எல்லாரையும், - - கர்த்தருடன் இணக்கமாக இருப்பதாக வெளிக்காட்டிக்கொள்ளும் யூத ஜனங்கள் எல்லாரையும் உள்ளடக்கியதாயிருந்தது. அவர் பாளயத்துக்குப் புறம்பே போனார் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? முழுமையான உத்தம இஸ்ரயேலர்களாக இல்லாதவர்களின் உறவு மற்றும் அனுதாபத்திற்கு வெளியே அவரைக் கொண்டு போகும் அவருடைய நிலைப்பாட்டை எடுப்பதற்கு அவர் தேவனிடத்தில் அவருடைய உண்மை மற்றும் விசுவாசத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார் - - கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாயிருந்த யூதர்கள எல்லோரும் இதை புரிந்துணர்ந்து கொண்டார்கள், மற்றும் அவர்கள், சீஷர்களைப் போன்று, பரிசுத்த ஸ்தலத்தை நெருங்கிக்கொண்டிருந்தவர்களாகவும், மற்றும் கர்த்தரின் அருகில் ஈர்க்கப்படுகிறவர்களாகவும், லேவியரின் மனப்பாங்கில் இருந்தனர், மற்றும் அவர்கள், லேவியர்களைப் போல பிராகாரத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்தனர். இது அந்த வெண் திரையின் உள்ளே இருக்கும் விசுவாசிகள் எல்லோரின் மனப்பாங்கை அடையாளப்படுத்துகிறது. ஆனால் அந்த சமயத்தில் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் பெயரளவில் வெளிக்காட்டிக் கொண்டிருந்தவர்களை பாளயம் உள்ளடக்கியதாய் இருந்தது, மற்றும் பிதாவிடம் உண்மையாயிருக்கவும், மற்றும் அவருடைய செய்தி சத்தியத்திற்காக

நிலைநிற்க வேண்டும் என்பதற்காகவும், அது சரியானதாக இருப்பதாலும்,, மற்றும் அது மாபெரும் பெயரளவிலான திரளான யூத ஜனங்களுடன் இணக்கம், மற்றும் அனுதாபத்திற்கு வெளியே அவரைக் கொண்டு சென்றது. இப்பொழுது, அப்போஸ்தலர் கூறுகிறார், நாம் பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம். இதற்கு என்ன அர்த்தம்? இயேசு நியாயப்பிரமாணம் குறித்த நிலைப்பாட்டை எடுத்ததைப் போன்று, அதே நிலைப்பாட்டை, பழைய அப்போஸ்தலர்களும் நியாயப்பிரமாணம் குறித்து அப்படியே எடுக்க வேண்டும் என்பதை அர்த்தப்படுத்துகிறது; பரிசேயர்கள், வேதபாரகர்கள் மற்றும் நியாயப்பிரமாண பண்டிதர்கள் பற்றிய விஷயத்தில் இயேசு எடுத்த அதே நிலைப்பாட்டை அர்த்தப்படுத்துகிறது. பின்பு புறஜாதியாருடன் தொடர்புடையவர்களுக்கு, உதாரணமாக, புறஜாதியாருக்கு ஊழியம் செய்த பவுல், சீலா, மற்றும் பர்னபா போன்றவர்களுக்கு, பாளயத்துக்குப் புறம்பே என்பது, யூதர்களின் ஜெப ஆலயத்திற்கு புறம்பே உள்ளவர்களையும், மற்றும் ரோமாபுரியில், அல்லது வேறெங்கிலும் வாழ்ந்து கொண்டிருந்த தேவனுடைய இணக்கமாயிருப்பதாக வெளிக்காட்டிக்கொள்கிற எல்லாரையும் அர்த்தப்படுத்துகிறது. இன்று இது எதை அர்த்தப்படுத்துகிறது? இன்று பாளயம் என்பது, கிறிஸ்தவ மண்டலம் அனைத்தையும், தங்களை ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் என்று, அதாவது, தேவனுடைய பாளயம் என்று உரிமைகோருகிற அருமையான ஜனங்கள் அனைவரையும், அர்த்தப்படுத்துகிறது. இது முக்கியமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் காணப்படுகிறது. இயேசுவின் பாத அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற நேர்மையான தேவ ஜனங்கள், இந்த பொதுவான பாளயத்தினால் தாங்கள் புரிந்துணரப்படாமல் இருக்கிறதைக் காண்பார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், பெயர்ச்சபை கர்த்தருடைய ஆவியையும், மற்றும் கர்த்தருடைய போதனைகளையும் பொதுவாக புரிந்துணரமாட்டார்கள். ஆகவே இயேசுவிடத்தில் உண்மையாயிருந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற எல்லாரும் இன்றைய \பாளயத்துடன் இணக்கமாக இல்லாமல் அவர்கள் இருப்பதைக் காண்பார்கள், இது இயேசுவும் மற்றும் அப்போஸ்தலர்களும் அவர்களுடைய நாளின் பாளயத்துடன் இணக்கமாக அவர்கள் இல்லாமல் இருந்ததைக் கண்டது போன்றே உள்ளது. இன்று பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் போவது என்பது இதை அர்த்தப்படுத்துகிறது: நாம் நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, உங்களுக்கும் எனக்கும் இது எந்தவிதமான பலியை குறித்தாலும், மெதடிஸ்டுகள் அல்லது பிரெஸ்பைடேரியன்கள், போன்ற அருமையான சக கிறிஸ்தவர்களுடன் மென்மையான உறவுகளை முறிக்கிறவர்களாய், மற்றவர்கள் இதை எந்த கண்ணோட்டத்தில் பார்த்தாலும், நாம் எதையும் பொருட்படுத்தாமல், கர்த்தரிடத்திற்குப் போவதற்கு விருப்பமுள்ளவர்களாகவும், அவரிடத்தில் உண்மையும் விசுவாசமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். மேலும், உண்மையான விஷயம் என்னவென்றால், இயேசுவையும் அப்போஸ்தலர்களையும் துன்பப்படுத்தினவர்கள் அந்த பாளயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்; மேலும், அந்த நாளிலிருந்து இந்நாள் வரைக்கும் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிற சபையைத் துன்பப்படுத்தியிருக்கிறவர்கள் இந்த பாளயத்தை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

## கானான் – இது எதற்கு நிழலாக இருக்கிறது?

### கே: 47:1 :: கேள்வி (1915) - 1

பாஸ்டர் ரசல் கூறுகிறார், "கானான் தேசத்தை நோக்கி வனாந்திரம் வழியாக இஸ்ரயேல் புத்திரர்களின் பயணம், இந்த பாவ உலகத்தின் வழியாக பரலோக கானானை நோக்கி கிறிஸ்தவனின் பயணத்திற்கு நிழலாக இருந்தது." நிழலான இஸ்ரயேலர் கானான் தேசத்திற்குள்ளாகச் சென்றடைந்த பிறகு, அவர்கள் தங்களின் எல்லா யுத்தங்களையும் புரிந்தனர். நிஜமான கானான் எங்கே இருக்கிறது, மற்றும் நிழலான கானானியர்கள் யார், மற்றும் அவர்கள் நிஜமான இஸ்ரயேலர்களால் எவ்விதம் போரிடப்படுகின்றனர்?

**பதில்:** இஸ்ரயேலருடைய வரலாற்றின் முழுமையான இந்த விஷயம் கிறிஸ்தவர்களின் அனுபவத்திற்கு நிழலாக இருந்தன என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். (1கொரி.10:11, ஓரக்குறிப்பு). ஆனால் நாம் மிகவும் எச்சரிப்புடன் இருக்க வேண்டிய தேவை உள்ளது; ஏனெனில்,

சில தருணங்களில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் நம்முடைய கணிப்பைச் சார்ந்தவர்களாயிருக்கிறோம். கானானை நோக்கிய இந்த பயணம் தேவனுடன் சரியான உறவுக்குள் நுழைவதற்கான முயற்சிக்கு நிழலாயிருக்கிறது என்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது. இஸ்ரயேலர் செல்ல முடிந்திருக்கிற விதத்தில் அவர்கள் அவ்வளவு விரைவாக கானானுக்குள் பிரவேசிக்கவில்லை. அவர்கள் சரியான விசுவாசம் கொண்டவர்களாக இருந்திருந்தால், அவர்கள் மிக விரைவில் சென்றிருப்பார்கள். அவர்கள் சீனாய் மலையிலிருந்து கானான் தேசத்திற்குள் உடனடியாக சென்றிருக்க முடியும். மற்றும் தேவனுடைய ஆசீர்வாதம் அவர்களுடன் இருந்தது. அவிசுவாசம் காரணமாக, அவர்கள் செல்ல முடியவில்லை. அப்படியே, தேவனுடைய குடும்பத்திற்குள் வருவதற்கு முன் வனாந்தர நிலையின் வழியாக அலைந்து திரிந்த நம்மில் எவரும் அப்படிச் செய்தால், இது அவசியமாக இருந்தது என்ற காரணத்தினால் அல்ல, ஆனால் நாம் போதுமான விசுவாசத்தை செயற்படுத்தாத காரணத்தினாலே ஆகும். நாம் நாற்பது வருஷங்களுக்கு, அல்லது எந்த ஒரு காலப்பகுதி வரைக்கும் காத்திருக்கும் தேவை இல்லை, ஆனால் விரைவாகவே வந்திருக்க முடியும்; அர்ப்பணிப்பின் மூலமாக நாம் உடனடியாக வந்திருக்க முடியும்.

ஆனால் பெரும்பான்மையினர் தாமதம் செய்தனர். யூதர்களைப் போன்றே, அவர்கள் விரைவாக பிரவேசிக்கவில்லை. அதிகமான விசுவாசத்தை செயற்படுத்துதலின் மூலமாக அவர்கள் பெற்றிருக்கக்கூடிய ஆசீர்வாதங்களுக்குள் உடனடியாகப் பிரவேசிப்பதற்குப் பதிலாக, அநேகர் நிறைய வருஷங்கள் அலைந்து திரிந்தனர். யோசுவா அங்கே நிழலில் இயேசுவை அடையாளப்படுத்தினார். யூதர்கள் யோசுவாவையும், அவருடைய தலைமையையும் எவ்வளவு சீக்கிரம் அங்கீகரித்திருந்தால், அவர்கள் அவ்வளவு சீக்கிரம் யோர்தானைக் கடந்திருப்பார்கள், மற்றும் கானான் தேசத்திற்குள் நுழைந்திருப்பார்கள். நியாயப்பிரமாணம் நமக்கு ஒன்றும் நிறைவேற்ற இயலாது என்பதை நாம் எவ்வளவு சீக்கிரம் கண்டுணருகிறோமோ, அவ்வளவு சீக்கிரம் யோசுவாவின் (இயேசுவின் கீழ்) கானானை அடைவோம். இஸ்ரயேலர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்த போது, கானானியர்கள், பெரிசியர்கள், அமோரியர்கள், ஏத்தியர்கள், கிர்காசியர்கள், ஏவியர் மற்றும் எபூசியர்களுடன் போரிடத் துவங்கினர். இவர்கள் நம்முடைய மனுஷீக சுபாவத்தின் பெலவீனங்களை அடையாளப்படுத்துகின்றனர்., இவர்களுக்கு எதிராக போரிடுகிறவர்களாகவும், மற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகவும் இருக்கிறோம், இவ்விதமாக வாக்குத்தத்தம்பண்னப்பட்ட முழுமையான தேசத்தை, தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் நமக்கு இருக்கும் சிலாக்கியங்களை நம் வசம் எடுத்துக்கொள்கிறோம்.

## சிறையிருப்பு – சிறைப்பட்டவர்களை சிறையாக்கி.

### கே: 48:1 :: கேள்வி (1906) - 1

வேதாகமத்தில் இரட்சகரைப் பற்றிக் குறிப்பிடும் போது, அவர் சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருப்பதில், சிறையாக்குதல் என்ற வார்த்தை குறிப்பாக எதை அர்த்தப்படுத்துகிறது?

**பதில்:** உலகத்தாரின் மேல் உள்ள சிறையிருப்பு பாவம் மற்றும் மரண அடிமைத்தனத்தின் சிறையிருப்பாக இருக்கின்றது. அது மாபெரும் சிறையிருப்பாக இருக்கின்றது. நாம் ஒரு சந்ததியாக பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டோம், மற்றும் பாவத்தின் சம்பளமாகிய மரணம் சந்ததி முழுமையின் மீது வந்தது; நாம் எல்லோரும் பாவிகளாக இருக்கிறோம்; மற்றும் நாம் எல்லோரும் மரணமடைகிறோம். அது தான் சிறையிருப்பு ஆகும். தீர்க்கதரிசிகள் மற்றும் நமது கர்த்தர் கூட கல்லறையைப் பற்றி பேசுகையில், அது மாபெரும் சிறைச்சாலையாக எப்படி இருக்கிறது என்றும், மற்றும் முழு உலகத்தாரும் தங்களுடைய வரம்பு எல்லைகளுக்குட்பட்டு, மனதளவிலும், ஒழுக்கரீதியிலும், மற்றும் உடலளவிலும் சிறைப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றும் கூறுகிறார்கள். இப்பொழுது, நம்முடைய கர்த்தர், தாம் மரித்த போது, மாபெரும் பரிகாரம் அளிப்பவராக, முழு சந்ததியின் மீட்பராக அவ்வாறு செய்தார். அவர் சிறைச்சாலையையும்,

மற்றும் சிறைப்பட்டவர்கள் அனைவரையும், மற்றும் மரிக்கும் நிலைமையில் இருக்கும் அனைவரையும் விலைக்கிரயம் செய்தார், மற்றும் இப்போது, அவர் இவ்விதமாக சிறைப்பட்டவர்களை சிறையாக்கினார். அவர் சிறைப்பட்டவர்களைச் தமக்கு சொந்தமாக்கியிருக்கிறார், மற்றும் அவர் தமக்கு ஏற்ற காலத்தில் சிறைச்சாலைக் கதவுகளைத் திறக்கப் போகிறார், மற்றும் கூறுவார், "புறப்பட்டுப் போங்கள், வெளிப்படுங்கள்."

## குணலட்சணம் – ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலுக்கு முன் வளர்ச்சி.

### கே: 48:2 :: கேள்வி (1909) - 2

ஆவியில் ஜெநிப்பிக்கப்படுவதற்கு முன்பு உண்மையான குண வளர்ச்சி பெறுதல் இருக்குமா?

**பதில்:** \உலகத்தாரில் சில ஜனங்கள் குணம் வளர்ச்சிபெறச் செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன், மற்றும் அப்படிப்பட்ட அநேக ஜனங்களை நான் பார்த்திருக்கிறேன், அந்த முறையில் வளர்ச்சி பெறும் எதுவும், தேவனுடைய அழைப்பின் நிலைப்பாட்டில் அவைகள் எந்த நோக்கம் கொண்டதாக, அல்லது எந்த முக்கியத்துவமும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் எதைச் செய்தாலும், சீர்பொருந்துதலின் காலங்களுக்கு எதிராக எவ்வளவு வளர்ச்சி பெற்றிருப்பினும், மற்றும் சீர்கேடு மற்றும் ஏமாற்றத்தின் காரணமாகவும், ஏணியின் ஏற்றத்தில் தூரமாக இருந்தாலும், அவர்கள் அந்த அளவை விரைவில் பெறுவார்கள். ஆகவே, கீழ்நோக்கிய ஒவ்வொரு படியும் அந்த அளவுக்கு பேரழிவை அர்த்தப்படுத்துகிறதாக இருக்கும், மற்றும் தேவனுடைய நேரம் வரும்போது, ஒவ்வொரு முயற்சியும் அதற்குரிய வெகுமதியை பெறக்கூடியதாயிருக்கும். ஆனால் கிறிஸ்துவுக்காக குணம் வளர்ச்சியடையச் செய்வதில் நிச்சயமாக, சபைக்கு மட்டுமே உரியதாக இருக்கிறது, ஏனெனில் வேதாகமம் சபைக்காக, கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கிறவர்களுக்காக, அவருடைய சித்தத்தை நாடுகிறவர்களுக்காக எழுதப்பட்டது.

## குணலட்சணம் – வெளிப்புற பளபளப்பு Vs உள்ளான கிருபை.

### கே: 48:3 :: கேள்வி (1910 Z) - 3

சுபாவ மனுஷர்கள் சிலரின் வெளிப்புற பளபளப்பு மற்றும் பணிவுக்கும், மற்றும் புதிய சிருஷ்டிகளுக்கு சரியாகச் சொந்தமாயிருக்கிற பளபளப்பு மற்றும் பணிவுக்கு இடையே உள்ள வேறுபாடு எதை உள்ளடக்குகிறது?

**பதில்:** சாந்தம், தயவு, பொறுமை போன்ற குணங்கள், தேவனுடைய ரூபத்தின்படியும் சாயலின்படியும் ஆதி மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட போது சொந்தமாயிருந்தவைகளாக இருந்தன. ஆகவே எந்த மனுஷனும் இந்த மனுஷீக குணங்களை ஒரு குறிப்பிட்ட அளவு மேம்படுத்தலாம், மற்றும் எல்லோராலும் முயற்சிக்கப்பட வேண்டும். ஆனால், உண்மையில், விழுகையின் விளைவாக, சுயநலம் மற்றும் பொதுவான கயமை மனுக்குலத்தார் அனைவரின் வேட்கைகள் மற்றும் வழிகளை பெரும் அளவுக்கு, வேதாகமம் கூறுகிறது போன்று, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என்ற அளவுக்குச் சீரழியச் செய்திருக்கின்றன, "உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும்" எல்லாரும் குறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். சிலருடைய வளர்ச்சிக்கும், மற்றவர்களின் வளர்ச்சிக்கும் இடையே வேறுபாடு நிச்சயமாக இருந்தாலும், இந்த மகிமை பொருந்திய நற்குண பண்புகளை சுபாவ மனுஷன் எவனும் பெரிய அளவிலும், முழுமையாககவும் வளர்ச்சியடையச் செய்ய முடியாது.

எனினும், நாம் பார்க்கிறோம், இந்த இயற்கையான கிருபைகள் ஒரு புறம் இருக்க, உலகத்தைச் சார்ந்த சில ஜனங்கள் ஆவியின் பல்வேறு கிருபைகளில் சிலவற்றை பெற்றிருப்பதாகக் கருதுகிறார்கள், அவர்கள் தங்களின் வணிக வழிமுறைகளில்

தயவுள்ளவர்களாக இருக்க முயற்சிக்கிறார்கள், மற்றும் அப்படியே சரியாகச் செய்கிறார்கள். எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக்கூடாது, விஷயங்களை எப்படிச் சொல்ல வேண்டும், மற்றும் விஷயங்களை எப்படிச் சொல்லக்கூடாது என்பவைகளை இளையவர்களுக்கு பணிவுடன் அறிவுறுத்துவது, கல்லூரிகள் மற்றும் முக்கியமாக பெண்களின் பாடசாலைகளின் சரியான நடத்தையின் ஒரு பகுதியாக இது கருதப்படுகிறது. மற்றும் இவைகள் எல்லாம் அந்த நபர்களுக்கு அவர்களின் பொதுவான ஒழுக்கநெறியில் ஒரு வெளிப்புற மென்மையைக் கொண்டு வருகிறது. இருப்பினும், இப்படிப்பட்ட விஷயங்களில், இது “நல்லதைப் பெருகச் செய்யும்” என்ற கருத்தைக் கொண்டிருப்பதின் காரணமாக, மென்மைத்தன்மை வளர்க்கப்படுகிறது; அதாவது, இதைத் தான் எந்த பெண் அல்லது ஆண் கண்டிப்பாக செய்ய வேண்டியது, அல்லது சொல்லவேண்டியதாக இருக்கிறது; இவ்விதமாக, இது உண்மையாக இருதயத்தின் உணர்வுகளைப் பாதிக்காமல், வெறுமனே ஒட்டவைக்கப்படும் மரத்தகடாக இருக்கிறது. அந்த நபர் வெளிப்புறத்தில் மிகவும் அமைதி, மென்மை கொண்டவராகவும், மற்றும் இனிமையானவராகவும் இருப்பார், ஆனால் இருதயத்தில் வெடுவெடுப்பும், பொறாமையும் மற்றும் இழிவானதை உணருகிறவராக இருப்பார். அந்த மனுஷன் அல்லது ஸ்திரீ சரியான ஆவியில் இயக்கப்படுகிறாரா, அல்லது இல்லையா என்பதை உறுதிப்படுத்திகொள்ளும் வெறுமனே வெளிப்புறமாக கவனிக்கிறவர்கள் திறனுடையவர்களாக இருக்க முடியாது. இந்த மாற்றங்கள் “ஆவியின் கனிகளாக” இருந்தனவா, அல்லது நற்கல்வியின் கனிகளாக இருந்தனவா என்பதை அறிவதற்கு திறனற்றவர்களாக அவர்கள் இருக்கின்றனர், ஆனால் அப்படிப்பட்ட நபர்களின் சொந்த வாழ்க்கையை நன்கு அறிகிறவர்கள் உண்மையான விஷயங்களை உறுதியாக நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும், ஏனெனில், ஒரு பழமொழி கூறுவதைப் போன்று, “கொலை எப்போதும் கண்டுபிடிக்கப்படும்”; அந்த நபர்கள் மென்மையான வெளிப்புற நடத்தையைத் தக்கவைத்துக் கொள்ளும் நிலையில், எப்போதாவது, தனிப்பட்ட முறையில், அவர்கள் வெளிப்புற நடத்தையுடன் அனுதாபம் கொண்டவர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டுவார்கள். ஆனால் இது வெறுமனே ஒட்டவைக்கப்படும் மரத்தகடாகவும், மற்றும் அந்த அளவுக்கு பாசாங்குத்தனமாகவும் இருந்தது. அந்த பார்வையில் ஒருவேளை ஒரு குறிப்பிட்ட அளவு பாசாங்குத்தனம் சில ஜனங்களுக்கு தேவைப்படலாம்; உண்மையான பொருளைப் பெற முடியாதவர்களாக இருந்தால், அதன் மேல் கொஞ்சம் மேல் தகடு ஒட்டவைக்கப்படுவது அவர்களுக்கு சிறந்ததாக இருக்கலாம்.; கரடுமுரடாகத் தோன்றுவதைக் காட்டிலும் மென்மையாக அவர்கள் காட்சியளிப்பது சிறந்தது; இது குறைந்த பட்சம் உலகத்தாருக்கு கொஞ்சம் உதவிசெய்வதில், அவர்கள் தங்களுடைய பொதுவான செயல்தொடர்புகளில் அவர்களால் முடிந்த வரையில் மென்மையாக இருக்க திறனுள்ளவர்களாக்குகிறது.

வியாபாரி விற்பனை பொருட்களின் பெரிய கையிருப்புகளை கீழே இழுத்துப்போட்டு விட்டு, பொருட்களைக் காண்பிப்பதில் எந்த சிரமமும் இல்லை என்றும், இவ்வாறு செய்வதற்கான வாய்ப்பு இருப்பது குறித்து அவர் மகிழ்ச்சி அடைவதாகவும், இந்த விஷயத்தில் எந்த பொறுப்புணர்வும் இருக்கவில்லை என்று வாடிக்கையாளரிடம் சொல்லி, பணிவின் மிகுதியான சாரத்தை வெளிக்காட்டிய பின்பு, அந்த ஸ்திரீ கடையை விட்டு வெளியேறின பிறகு, வியாபாரி தன்னுடைய பாதத்தை தரையில் மோதி,, குறை சொல்கிறவராகவும், மற்றும் இவ்வாறாக அவருடைய நிறுவனத்தில் உள்ள எல்லோரிடமும் வெளிப்படுத்துகிறவராகவும் இருக்கிறார், அதாவது, அவருடைய பணிவு வியாபாரத்தில் வெறுமனே ஒரு தேவையாகக் கருதப்படுகிறது. அவர் அந்த விற்பனை நிலையத்தின் முதலாளியாக இருந்தால், அவர் இதை தன்னிமித்தம் செய்கிறார், அல்லது, அவர் ஒரு பணியாளராக இருந்தால், அவருடைய நிலையினிமித்தம் அவ்வாறு செய்கிறார்.

கிறிஸ்தவனோடு, இந்த கிருபைகள் உள்ளாகவே வளர்ச்சியடைகிறது. அவர் இயல்பாக, மென்மையானவரா, அல்ல்து முரடானவராக எப்படி இருந்தாலும், புதிய சிருஷ்டி இந்த கிருபைகளை **இருதயத்தில்** வளர்ச்சியடையச் செய்கிறது மற்றும் அங்கீகரிக்கிறது, மற்றும் அவைகள் இருதயத்திலிருந்து நேர்வழியில் மேற்பரப்பை அடைகின்றன. இது தான் புதிய சிந்தையாக, புதிய சிருஷ்டியை சீராக்குகின்றது, மற்றும் வெறுமனே வெளிப்புறமாக

மென்மையாயிருப்பதற்குப் பதிலாக, புதிய சிருஷ்டி மைய பாகத்தின் விதையிலிருந்து தெளிவாக வெளிவருகிறதாயிருக்கின்றது.

இவ்விதமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் புதிய சிருஷ்டி, பணத்திற்காக, அல்லது மற்ற காரணங்களுக்காக மேல் தகடைக் கொண்டிருக்கும் பழைய மனுஷ சுபாவ சுபாவங்கள் இருப்பதால், வெளிப்புற மென்மை எல்லா நேரங்களிலும் இருக்கிறதில்லை. அவர்கள் மோசமான மாம்சீக மனநிலைகளை உடையவர்களாக இருப்பார்கள்; அவர்கள் இயல்பாகவே பொறுமை குறைவாக இருப்பார்கள், அல்லது அனுதாபம் குறைவாக இருப்பார்கள், அல்லது தங்களுடைய உணர்வுகளாக இருக்கும் எதிலிருந்தும் வேறுபடுகிறதை, தாங்கள் உணருகிற எதிலிருந்தும் வித்தியாசமாகப் பேசுகிறதைத் தவிர்ப்பதற்கு அவர்களை வழிநடத்தும் அப்படிப்பட்ட நேர்மையிலிருந்து விலகிப்போவார்கள்; மற்றும் அவர்களுடைய உணர்வுகள், சரியான புள்ளியை இன்னும் அடைந்திராத நிலையில், சில சமயங்களில் தவறான விஷயத்தைச் சொல்வதற்கு அவர்களைத் தூண்டிவிடுகிறது. இவைகள், நிச்சயமாக, அவர்களுடைய உணர்வுகள் எல்லாம் கர்த்தருடைய ஆவியுடன் முழுமையான அனுதாபத்திற்குள்ளாக வருவதற்கு முன்பாகவே, புறம்பான மனுஷனைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்கிறது. அவர்கள் புறம்பான இயல்புகளைக் கண்டுணர்ந்து கொள்ள வேண்டும், மற்றும் இந்த இயல்புகளை விரைவாகப் புரிந்து, ஒவ்வொரு உணர்வையும் கர்த்தருடைய ஆவியுடன் எவ்வளவு மிக விரைவாக முடிகிறதோ, அவ்வளவு விரைவில் முற்றிலும் இணக்கத்திற்குள்ளாகக் கொண்டுவர வேண்டும், இப்படியாக அவர்கள் அதிகமதிகமாக மற்றவர்களிடம் இரக்கம், அன்பு மற்றும் உதவும் மனப்பான்மை கொண்டவர்களாவார்கள், மற்றும் இவ்விதமாக, “உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாக” இருப்பார்கள்.

## குணலட்சணம் – கிரீடம் எப்போது நம்முடையதாகும்?

### கே: 50:1 :: கேள்வி (1910) - 1

குணலட்சண வளர்ச்சியினுடைய எந்த ஒரு கட்டத்தில், கிரீடம் நம்முடையது என்றும், நாம் ஜெயங்கொண்டவர்களாய் இருக்கின்றோம் என்றும் சொல்லலாம்?

**பதில்:** அருமை நண்பர்களே, பூரண அன்பினுடைய இலக்கை நாம் அடையும் போது, நாம் இப்படிச் சொல்ல முடிகின்ற சரியான கட்டமாய் இருக்கும் என்று நான் கருதுகின்றேன். இதோ அதை விவரிக்கிறேன்: நீங்கள் கர்த்தரிடத்திற்கு வந்தீர்கள், மற்றும் உங்களை அர்ப்பணம் பண்ணினீர்கள்; கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்து, அவரைக் குறித்துக் கற்றுக்கொள்ளத் துவங்கினீர்கள். அப்போது தான் உரிய, தகுதியினுடைய அளவின் விஷயத்தில் நீங்கள் எவ்வளவு குறைவுபட்டிருக்கின்றீர்கள் என்று கண்டுகொண்டீர்கள். உங்களில் கர்த்தர் எதையேனும் வளர்த்திடக் கூடுமா? என்று எண்ணினீர்கள். கர்த்தரோ உங்களுடைய மனதின் அடிப்படையில் உங்களை அளவிடப்போகின்றார் மற்றும் பூரண குணலட்சணத்திற்கான தரநிலையாகிய பூரண அன்பு என்னும் இலக்கை நீங்கள் அடையும்படிக்குக் கர்த்தர் காத்துக்கொண்டிருக்கின்றார்; ஏனெனில் இப்பொழுதும் சரி, ஆயிர வருட யுகத்திலும் சரி, இந்த இலக்கை அடைபவர்களைத் தவிர, மற்றபடி எவரும் இராஜ்யத்திற்கோ, அல்லது நித்திய ஜீவனுக்கோ தகுதியானவர்களாய் இருக்க முடியாது. தன் மனதிலும், இருதயத்திலும் அந்த தரநிலையை/அளவுகோலை அடைந்தவனுக்கேத் தவிர, மற்றபடி வேறு யாருக்கும் தேவன் எதையும் வைத்திருக்கிறதில்லை. ஒருவனிடம் பெலவீனங்கள் முதலியவைகள் இருக்கலாம் மற்றும் நீங்கள் பின்பு மனஸ்தாபம் அடையவும், மன்னிப்புக் கேட்க அவசியமாகும் அளவுக்கும் ஏதேனும் காரியங்களைப் பேசியிருக்கலாம்; ஆனால் உங்கள் இருதயமானது பூரண அன்பிற்கான இலக்கில் காணப்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள் - மேலும் பூரண அன்பின் இலக்கினை நீங்கள் அடைந்திருப்பதினால் நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இருக்கின்றீர்கள். நீங்கள் தேவனையும் மனுக்குலம் முழுவதையும் அன்புகூருகின்றீர்கள் மற்றும் உங்களுக்கு வாய்ப்பு கிடைப்பதற்கு ஏற்ப அனைவருக்கும் நன்மை செய்யவேண்டும் என்று

விரும்புகின்றீர்கள். தன் சத்துருக்களை மன்னிக்கக்கூடிய நிலைமைக்கு ஒருவன் வருவானானால், அவன் பூரண அன்பின் இலக்கில் காணப்படுபவனாய் இருப்பான். அவன் மாம்சத்தில் பூரணமாய் இருப்பதில்லை. ஏனெனில் இது இந்த யுகத்தில் கூடாத காரியமாகும். இன்னமும் அநேகர் தங்கள் நாவுகளுக்குக் கடிவாளம் போடவேண்டியவர்களாய் இருக்கின்றனர். நீங்கள் பழைய சுபாவத்தை அடக்கி வைக்க வேண்டும். இதை நான் எப்பொழுதும் - புதுசிருஷ்டிக்குக் கட்டுப்பட வேண்டியதான பழைய சுபாவத்தை ஒரு மோசமான நாயைக்கொண்டு அடையாளப்படுத்தி, உதாரணப்படுத்தி விவரிப்பதுண்டு. பழைய மனுஷனை நாம் அடக்கி வைக்க வேண்டும். சோதனையினுடைய அழுத்தமும், பரபரப்பும் தணிகையில், நம் இருதயமானது நீதியின் கொள்கையினிடத்திற்குத் திரும்பி, பிதாவினிடத்தில் மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளும் காரியத்திலிருந்து, நம்முடைய நோக்கங்கள் நல்லவைகளாகவே இருந்துள்ளது என்பது வெளியாகின்றது; செய்யப்பட்ட எதற்கும் மன்னிப்பு கேட்பீர்கள். தவற்றை செய்யாமல் இருப்பதைவிட, செய்த தவற்றைச் சரிப்படுத்துவதே கடினமான காரியமாய் இருக்கின்றது என்று நீங்கள் சொல்லலாம். அது உண்மை தான். எனினும் உங்கள் இருதயம் நீதியின் மேல் அன்பு கொண்டு இருக்கின்றது என்று கர்த்தரிடத்தில் நீங்கள் நிரூபிக்க விரும்புவீர்களானால், இப்படித்தான் நீங்கள் செய்ய வேண்டும்; நீங்கள் தவறு செய்துள்ளீர்கள் என்று காணும்போதெல்லாம், நீங்கள் அதைச் சரிசெய்ய வேண்டும்; நீங்கள் இப்படியான நிலைமைக்கு வந்திருப்பீர்களானால், என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, தேவன் பேரிலும் மனுஷர் பேரிலும் பூரண அன்பு கொண்டிருக்கும் இலக்கில் நீங்கள் வந்துள்ளீர்கள். நீங்கள் அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்றும், யாருக்கும் தீமை செய்யக்கூடாது என்றும் விரும்புகின்றீர்கள். அதுமுதல் என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி நீங்கள் கிரீடம் கொடுக்கப்பட்டவராகக் கர்த்தரால் கருதப்படுவீர்கள். இது ஒரு காரியமாகவும், உன் கிரீடத்தை ஒருவனும் எடுத்துப்போடாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு என்பது இன்னொரு காரியமாகவும் இருக்கின்றது. கிரீடம் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பின்னரும்கூட ஒருவேளை இலக்கினின்று விலகிப்போய்விடுவீர்களானால் - - நீங்கள் இப்பரீட்சையில் நிலைநிற்காதவர்களாய் இருப்பீர்கள் மற்றும் ஜெயம் கொண்டவராய் இருப்பதற்கு அபாத்திரராகிவிடுவீர்கள். ஆகவே குணலட்சணத்திற்கு ஓர் இலக்கு இருக்கின்றது என்பதைக் கவனியுங்கள் மற்றும் இதை அடையாமல் யாரும் ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இப்பொழுது நம் அன்பையும், அர்ப்பணிப்பையும் நாம் நிரூபித்தாக வேண்டும் மற்றும் இதற்காகவே நாம் இன்றைக்கும், நாளைக்கும், கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசித்தது முதற்கொண்டுள்ள நம் கிறிஸ்தவ அனுபவ காலங்கள் முழுவதும் ஜீவித்துக்கொண்டு வருகின்றோம்; கூடுமானமட்டும் விரைவாக நாம் அவரிடம் கற்றுக்கொண்டு அனைவர் மீதமுள்ள பூரண அன்பிற்கான இலக்கில் வந்துவிட வேண்டும்.

## குணலட்சணம் – திரைக்கு இந்தப் பக்கத்தில் பரிபூரணம்.

### கே: 51:1 :: கேள்வி (1913 - Z) - 1

திரைக்கு அந்த பக்கத்தில் தெரிந்துகொள்ளப்படுபவராக இருக்கும் நல்ல நம்பிக்கை உடையதாக இருப்பதற்கு, ஒருவர் திரைக்கு இந்த பக்கத்தில் நமது கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் குண சாயலை எவ்வளவு நெருக்கமாக அடைய வேண்டும்?

**பதில்:** யேகோவா தேவன் குறைபாடுள்ள எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார். பிரதான ஆசாரியரால் நம்முடைய மனுஷீக சுபாவம்கூட அவரிடம் பலியாக ஒப்படைக்கப்படுவதற்கு முன்பே ஆசாரியருடைய புண்ணியத்தினால் முதலில் மூடப்படவேண்டிய தேவை இருக்கின்றது மற்றும் இப்படியாக தெய்வீகமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னால் பூரணப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. இருப்பினும், நம்மைப் பற்றி எண்ணும்போது, மண்பாண்டத்தில் நாம் புது சிருஷ்டியைப் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள

வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த புது சிருஷ்டி தான் கிறிஸ்துவின் சாயலை உடையதாக இருக்க வேண்டும்.

மாம்சத்தில் நாம் உலகம், மாம்சம் மற்றும் பிசாசினால் சூழப்பட்டிருக்கின்றோம். இவைகள் எல்லாம் இந்த பழைய சரீரத்தில் புது சிருஷ்டி பூரணமாக செயல்படுவதிலிருந்து தடைபண்ணுவதற்கு சதி செய்கின்றன. உள்நோக்கம், சித்தம் கண்டிப்பாக பூரணத்தைவிட சிறிதும் குறைவில்லாமல் இருக்க வேண்டும். இயேசு கூறியது போன்று, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்." (மத். 5:8) இருதயத்தின் சுத்தம் முற்றிலுமாக இருக்க வேண்டும்.

எவருடைய எண்ணங்கள் சுத்தமுள்ளவையாக இருக்கிறதோ, எவருடைய உள்நோக்கங்கள் சுத்தமுள்ளவையாக இருக்கின்றதோ, யார் சிறந்தவற்றை ஆசைப்படுகிறார்களோ, - சிறந்தவற்றின் மேல் ஏக்கம் கொள்கிறார்களோ, அவர்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மகிமையான காரியங்கள் தொடர்பானவற்றில் இவர்கள் வலிமையான ஆறுதல் கொண்டவர்களாக இருப்பார்கள், தேவன்பேரில் முழுமையான நம்பிக்கை உடையவர்களாக இருப்பார்கள்; மாம்சீக சரீரத்தில் அவர்கள் சிறப்பாகச் செய்ய முடிகிற அளவுக்கு செய்வார்கள் - - மற்றும் இப்படியாக தங்களுடைய பக்தியைக் காண்பிப்பார்கள்.

## குணலட்சணம் – கனி கொடுத்தல் Vs இயேசுவை பின்பற்றுதல்.

### கே: 51:2 :: கேள்வி (1913) - 2

இயேசுவின் பாத அடிச்சுவடுகளில் நடக்கும்போது, ஆவியின் கனிகள் வளர்ச்சி அடையுமா?

**பதில்:** இல்லை. நாம் அடையாளங்களைக் கலக்கக்கூடாது. இயேசுவின் பாத அடிச்சுவடுகளில் நடப்பது ஒரு அடையாளம் ஆகும், மற்றும் ஆவியின் கனிகளை வளர்ச்சியடையச் செய்வது வேறொரு அடையாளம் ஆகும். அவைகள் ஒரே விஷயத்தைக் குறிப்பனவாக இருக்கலாம், ஆனால் இவைகளை நாம் குழப்பிக் கொள்ளக்கூடாது. இரக்கம், சாந்தம், பொறுமை, சகோதர அன்பு, அன்பு என்று ஆவியின் கனிகளை அப்போஸ்தலர் எண்ணிக்கையிடுகிறார். இது இயேசுவின் பாத அடிச்சுவடுகளில் நடப்பதாக இருக்குமா? இல்லை, துல்லியமாக இல்லை. ஆனால் இயேசு செய்தது போன்று நாம் செய்வதற்கு நாடினால், இது அந்த கனிகளின் அல்லது கிருபைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். கர்த்தருடைய ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படிதல் இந்த கனிகளை நம்முடைய குணலட்சணங்களில் வளர்க்கின்றன.

## குணலட்சணம்–வளர்ச்சிக்கான காப்புரிமை முறைமை இருக்கவில்லை.

### கே: 52:1 :: கேள்வி (1915) - 1

கிறிஸ்து -- போன்ற ஜீவன் - - தேவனுடைய ஜீவன் - - சாயலை வளர்ப்பதற்கு, சிறந்ததும், மற்றும் அதிக நிச்சயம் உடையதாகவு,ம், விரைவானதும் மற்றும் வேதாகம முறைமை உடையதாக என்ன இருக்கின்றது?

**பதில்:** காப்புரிமை கொண்ட வழி எதுவும் இல்லை, என் அருமை நண்பர்களே (சிரிப்பு). இது விடாமுயற்சியை அர்த்தப்படுத்துகின்றது; இது உண்மைத்தன்மையை அர்த்தப்படுத்துகின்றது; இது விசுவாசத்தை அர்த்தப்படுத்துகின்றது. ராஜரீக பாதை எதுவும் இருக்கிறதில்லை; நீங்கள் "திடீர்-மாற்றம்" (presto-change) அடைவதற்கும் மற்றும் எந்த பிரயாசத்தையும் மேற்கொள்ளாமல் கிறிஸ்து - போல ஆவதற்கும் வழி ஏதும் இருக்கவில்லை.

நம்முடைய கர்த்தர் இயேசுவின் விஷயத்தில், பிதாவினுடைய ஏற்பாட்டில், பிதாவின் திட்டத்தின்படி, பொறுமையை வளரச்செய்யவும் மற்றும் அவசியமான எல்லா கிரமங்களின்படி

சோதிக்கப்படுவதற்கும் சிறிது காலம் தேவைப்பட்டது, அதே அடிப்படையில் அவருடைய சபையும்கூட சோதிக்கப்பட வேண்டியிருந்தது. (எபி. 4:15). ஆகவே, குறுக்கு வழி எதுவும் கிடையாது! கர்த்தர் அவருடைய ஜனங்களை சோதிப்பார், நியாயந்தீர்ப்பார் மற்றும் அவருடைய ஜனங்களை நிரூபிப்பார். தேர்வு செய்யப்படும் கூட்டத்தில் அவர் நிரூபிக்கப்பட்ட ஜனங்களைத் தவிர வேறு எவரையும் உடையவராக இருக்கமாட்டார். அவர்கள் சோதனையில் நிலைநிற்காவிட்டால், மற்றும் உண்மையுள்ளவர்களாக நிரூபிக்காவிட்டால், தேவன் அவர்களை இராஜ்யத்திற்குள் அனுமதிக்கமாட்டார்.

ஆகவே, நான் பரிந்துரை செய்கிற ஒரே வழி, வேதாகமத்தின் வெளிப்படையான ஒரே வழியாக இருக்கிறது. இயல்பாகவே, கர்த்தரிடம் முழுமையாக தங்களை ஒப்புக்கொடுப்பது தான் முதலாவது காரியமாக இருக்கின்றது. இரண்டாவதாக, அவருடைய வழிகளில் நடப்பதற்கு நாம் நாட வேண்டும். என்ன விலை கொடுத்தாகிலும், நம்முடைய ஒளியை நாம் பிரகாசிக்கப்பண்ண வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் திருவசனத்தை கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்; நாம் ஜெபத்தில் தொடர்ந்து தரித்திருக்கின்றவர்களாக இருக்கவேண்டும்; தேவனுடைய அன்பில் நம்மை வைத்துக்கொண்டு, நாம் நம்மையும் மற்றும் கர்த்தருடைய கிருபைகளையும் கவனிக்கிறவர்களாய் இருக்கவேண்டும். சரியான முறையில் வளர்ச்சியடையவும் மற்றும் நம்மை நிரூபிப்பதற்கும் நம்முடைய பாதை முழுவதிலும் போதுமான எதிர்ப்பு இருக்கின்றது என்பதை கர்த்தர் கவனிப்பார்., மற்றும் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், இது கிட்டத்தட்ட பாடுகளை அர்த்தப்படுத்துகிறதாக இருக்கும். இவைகள் கிறிஸ்துவின் பாடுகளாய் இருக்கும் மற்றும் நாம் மரணபரியந்தம் மனமகிழ்ச்சியுடன் சகித்துக்கொள்வோமானால், அப்போது, வெகுமதிக்கு - இராஜ்யம், மகிமை மற்றும் கனம் - தகுதியானவர்களாக எண்ணப்படுவோம் என்பதை நாம் அறிவோம். கர்த்தர் நம்மை கனத்திற்காக மட்டும் அழைக்கவில்லை, ஆனால் நீதிக்காகவும், பரிசுத்தத்திற்காகவும் அழைத்திருக்கிறார். ஆகவே நீதியுள்ளவர்களாக, நிதானமுள்ளவர்களாக, சுய-பலியிடுகிறவர்களாக வாழ்வதற்கு நாடுவோம்.

நமது குணலட்சணங்களில் தேவனுக்கு எது பிரியமானது, மற்றும் ஏற்றுக்கொள்ளத் தக்கது மற்றும் அவருக்கு எது பிரியமில்லாதது என்ற புரிந்துணருதலை தேவன் நமக்கு அளித்திருக்கிறார். நாம் அவருடைய பரிசுத்த ஆவியின் பெரும் அளவை நாம் பெற வேண்டும் என்று தாம் பிரியப்படுவதாக அவர் கூறுகிறார். நாம் கிறிஸ்துவின் சாந்தம், தயவினை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். நாம் பொறுமையிலும், சுய-கட்டுப்பாட்டிலும், நீடிய உபத்திரவத்திலும், சகோதர அன்பிலும், அன்பிலும் நிறைந்திருக்கிறவர்களாய் இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்தக் கனிகள் நம்மில் இருந்தால், மற்றும் அவைகள் நிறைந்த நிலைமையை அல்லது அளவினை அடைந்தால், நாம் கர்த்தரின் அறிவில் வெறுமையானவர்களாகவோ, அல்லது கனி கொடுக்காதவர்களாகவோ இருக்கமாட்டோம்; நம்முடைய கர்த்தராகிய இரட்சகரின் நித்திய இராஜ்யத்திற்குள் நிறைந்த அளவில் ஒரு வாசல் நமக்காக செயற்படுத்தப்படும். ஆனால், அப்போஸ்தலர் கூறுகிற விதமாக, இதன் அவசியத்தைக் கண்டுணராதவன் குருடனாயிருக்கிறான்; அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து, கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்.

ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டி எஜமானருடைய ஆவியை - - பரிசுத்தத்தின் ஆவியை வளர்ச்சியடையச் செய்யும் சிலாக்கியத்தை காண்பதற்குத் தவறுகிறவராய் இருந்தால், அவர் முன்னேற்றம் எதையும் செய்யவில்லை என்பது தான் இதன் காரணம் ஆகும். அவர் புதிதாய்ப் பிறந்த குழந்தையைப் போன்று, தன் கண்களை கவனம் செலுத்துவதற்கு கற்றுக்கொள்ளாதிருக்கிறது போல அவர் இருக்கிறார். ஒரு பூனைக்குட்டி ஒன்பதாம் நாள் வரைக்கும் தன் கண்களைத் திறக்கிறதில்லை என்பதையும் மற்றும் இது தன்னுடைய கண்களைப் படிப்படியாக சரியான முறையில் பயன்படுத்தும் நிலைக்கு வருகிறதை நீங்கள் அறிவீர்கள். அவ்விதமாகவே, புது சிருஷ்டிகளாக நம்முடைய அனுபவத்தின் ஆரம்பத்தில் நம்முடன் இருக்கின்றது; முதன் முதலில் நமது ஆவிக்குரிய பார்வையை எப்படி கவனம்

செலுத்த வேண்டுமென்பதை நாம் அறிகிறதில்லை. ஆனால், நிச்சயமாக, முதிர்ச்சியை நோக்கி அதிகமதிகமாய் நாம் வளரும்போது, ஜீவியத்தின் எல்லா காரியங்களிலும் சரியான கவனம் செலுத்துதலை உடையவர்களாக கண்டிப்பாக வரவேண்டும். "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று' நாம் கண்டிப்பாகப் பார்க்கவேண்டும். (ரோமர் 12:2). மற்றும், ஆரம்பம் முதலாகவே, அந்த சித்தத்தைச் செய்வதற்கும் மற்றும் பரிபூரணத்திகுள்ளாகப் போவதற்கும் நாம் விருப்பமுடையவர்களாய் இருந்தால், நாம் இதைச் சிறப்பாகச் செய்ய புரிந்து கொள்வோம் மற்றும் அதிகமதிகமாகச் செயற்படுத்தும் திறனுள்ளவர்களாக இருப்போம்.

## விளக்கப்படம் – தளம் "L"ன் மேல் திரள் கூட்டம்.

### கே: 53:1 :: கேள்வி (1909) - 1

முதலாம் உயிர்த்தெழுதலில் "L" தளத்தை அடைதல், முழுமையான தனிப்பட்ட மகிமை, அழியாமை, தெய்வீக சுபாவத்தைக் கொண்டு வருமா? அப்படி இருந்தால், மகா உபத்திரவத்தின் வழியாக அந்த தளத்திற்கு உயர்த்தப்படுகின்ற திரள் கூட்டம் அழியாமையை அடையமாட்டார்கள் என்று நாம் எப்படி புரிந்துகொள்ள முடியும்? "L" தளம் ஒரு வகுப்பாருக்கு அழியாமையைக் கொண்டுவருகின்றதாகவும், மற்ற வகுப்பாருக்கு கொண்டுவராததாக ஏன் இருக்க வேண்டும்?

**பதில்:** வரைபட விளக்கத்தை உருவாக்கும்போது, ஒவ்வொன்றையும் காண்பிப்பது சாத்தியமாக இருக்கவில்லை, மற்றும் இது செய்கிறதில் இது மிக அதிகமாகக் காண்பிக்கின்றது என்பதை நாங்கள் ஆச்சரியப்படுகிறோம். "L" தளம் ஆவிக்குரிய பரிபூரணத்தை அடையாளப்படுத்துகிறது மற்றும் இது திரள் கூட்டம் மற்றும் சிறுமந்தை இரண்டு வகுப்பார்களும் இந்த தளத்திற்கு வரப்போவதை அடையாளப்படுத்துகிறது, ஆனால் சிறுமந்தை திரள் கூட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு மற்றும் வேறுபடுத்தப்பட்டு, சிறுமந்தை தெய்வீக சுபாவம் அல்லது "அழியாமை" என்று அழைக்கப்படுகின்ற கூடுதலான மகிமை மற்றும் உயந்த ஸ்தானத்தை பெற்றுக்கொள்ளும். வரைபடவிளக்கத்தில் இது குறிக்கப்பட்டிருக்கின்ற முறை உண்மைநிலைக் குறித்த விஷயத்தைப் பாதிக்காது.

## விளக்கப்படம் – விளக்கப்படத்தில் L மற்றும் K தளங்களின் முக்கியத்துவம்.

### கே: 53:2 :: கேள்வி (1912 -Z) - 2

வரைபடத்தை நீங்கள் விவரிக்கும்போது, வால்யூம்-1, 263ம் பக்கம்: "இவர்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, தெய்வீகச் சாயலையும் மற்றும் வடிவத்தையும் பெற்றுக்கொள்வார்கள்." என்று கூறுகிறீர்கள். இந்த அறிக்கையினை 295ம் பக்கத்தில் "அவர்கள் மறுரூபமடைந்த பிறகு அல்லது ஆவிக்குரிய ஜீவிகளாகப் பூரணப்படுத்தப்பட்ட பிறகு, (L தளம்) அந்த வகுப்பாரின் முழு எண்ணிக்கையும் நிறைவடைந்தவுடன் கர்த்தருடைய வல்லமையிலும், மாபெரும் மகிமையிலும் (K தளம்) ஒன்றாக இணைக்கப்படுவதற்கு முன்பாக எவ்வளவு காலம் L தளத்தில் நிலைத்திருப்பார்கள் என்று கூறமுடியாது." என்ற விதத்தில் வாசிக்கின்ற இந்த அறிக்கையுடன் தயவுகூர்ந்து இணக்கப்படுத்திக் கூறுங்கள்.

**பதில்:** இந்த இரண்டு மேற்கோள்களும் பூரணமான இணக்கத்துடன் இருக்கின்றன. வரைபடத்தில் தளம் "L" மற்றும் தளம் "K" என்பதில் எவை அடையாளப்படுத்திக் காட்டப்படுகிறது என்ற விஷயத்தில் கேள்வி கேட்டவருக்கு சிரமம் இருக்கின்றது. தளம் "L" மனுஷ சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு, முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நம்முடைய கர்த்தர் மற்றும் சபையின் சொந்த மகிமையைக் குறிக்கின்றது. "K" தளத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்ற வல்லமை மற்றும் ஆளுகையின் மகிமைக்குள் பிரவேசிக்கிறதற்கு முன்னால், அழிவுக்கேதுவான நிலமைகளிருந்து அழியாமைக்குரியதற்கும், மனுஷீகத்திலிருந்து

தெய்வீக சுபாவத்திற்கும், பெலவீனத்திலிருந்து பலத்திற்கும், கனவீனத்திலிருந்து மகிமைக்கும், ஜென்ம நிலைமைகளிலிருந்து ஆவிக்குரிய நிலமைகளுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் அங்கங்கள் அனைவரும் இப்படிப்பட்ட மாற்றத்தின் அனுபவத்தினைப் பெறுவார்கள், (1கொரி. 15:44) வேறு வார்த்தைகளில் சொன்னால், முதலாம் அறிக்கை முதலாம் உயிர்த்தெழுதலில் ஜெயங்கொள்ளுகிற வகுப்பார், ஆவியில்-ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் எல்லோரும் "L" தளத்திற்கு தனிப்பட்ட உயர்வுபெறுதலைக் குறிப்பிடுகிறது. மற்றும் இரண்டாம் அறிக்கை "K" தளத்திற்கு அவர்களுடைய உயர்வுபெறுதலைக் குறிக்கின்றது. இது 45ம் சங்கீதத்தில் உருவகப்படுத்தியிருக்கிறபடி, பரலோக மணவாளன் குற்றமற்ற, மாசில்லாத, முழுமை அடைந்த தம்முடைய மணவாட்டியை பரலோக பிதாவிற்கு முன்பாக ஒப்படைக்கும் போது இந்த உயர்வு வரும்.

## பிள்ளைப்பேறு – இரட்சிக்கப்படுதல்.

### கே: 53:3 :: கேள்வி (1911) - 3

"அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்." என்று வாசிக்கிற 1தீமோ. 2:15ம் வசனத்தை நாம் எவ்விதம் புரிந்து கொள்ளுகிறோம்?

**பதில்:** இது ஒரு அசாதாரணமான உரைப்பகுதியாக இருக்கின்றது. இதனுடைய சரியான புரிந்துகொள்ளுதலை நான் பெற்றிருக்கின்றேன் என்பதில் நான் நிச்சயம் கொண்டிருக்கவில்லை மற்றும் கர்த்தருடைய அர்த்தம் எதுவாயிருக்கின்றது என்பதில் நாம் நிச்சயம் இல்லாத இடங்களில், மிக ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் என்பது என்னுடைய விதிமுறையாக இருக்கின்றது.

## பிள்ளைகள் – உபத்திரவ காலத்தின்போது பிள்ளைகள் மீது மேற்பார்வை.

### கே: 54:1 :: கேள்வி (1906) - 1

அர்ப்பணம் பண்ணியுள்ள பெற்றோர்களை உடையவர்களாகவும், உபத்திரவ காலத்திற்குள் பிரவேசிக்கப் போகிறவர்களாகவும், பொறுப்பாய் நடந்துகொள்ளும் வயதை அடையாதவர்களுமான பிள்ளைகள் விஷயத்தில், தேவ வசனத்தில் ஏதேனும் அறிவுரையாகவும், ஆறுதலாகவும் விசேஷமாகக் காணப்படுகின்றதா?

**பதில்:** இத்தகைய பிள்ளைகளைக் குறித்து நேரடியாக பேசப்பட்டுள்ள எந்த வார்த்தைகளையும் நாங்கள் அறியோம் என்ற போதிலும், நாம் பின்வருபவற்றை அறிவோம்: அதாவது கர்த்தருடைய கண்ணோட்டத்தில் அவருடைய ஜனங்கள் அனைவரும் விலையேறப்பெற்றவர்கள் ஆவார்கள்; அவர்களுடைய நலனுக்கடுத்தவைகள் அனைத்தும் விலையேறப்பெற்றவையாகும்; இவர்கள் மாத்திரமல்லாமல், இவர்களது சிறுபிள்ளைகளுக்கும், இவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்துமே கர்த்தருடைய பார்வையில் நிச்சயமாய் விலையேறப்பெற்றதாகக் காணப்படும். இது நிதரிசனமான உண்மை மற்றும் இதற்கான வேத ஆதாரங்கள் ஏதும் உண்மையில் அவசியப்படுகிறதில்லை. விசுவாசிகளினுடைய பிள்ளைகள் அனைவரும், பிள்ளைகள் தனிப்பட்ட பொறுப்புணர்வினை அடையும்வரையிலும், அதாவது தங்களுக்கென்று பொறுப்பினை பெற்றவர்களாகும் வரையிலும் கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் கீழ் காணப்படுகின்றனர் என்று நான் சொல்கிறேன்; இப்படியான சிறுபிள்ளைகள் அனைவரும் கர்த்தருடைய தூதனின் விசேஷித்த மேற்பார்வையின் கீழ் காணப்படுவார்கள் என்று நாம் நிச்சயமாக எண்ணிக்கொள்ளலாம்.

## பிள்ளைகள் – நடக்க வேண்டிய வழியில் நடத்தப்படுதல்.

## கே: 54:2 :: கேள்வி (1907) - 2

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." பிள்ளைகள் ஏன் அடிக்கடி சரியான வழியினின்று விலகுகின்றனர்?

**பதில்:** அவர்கள் நடக்க வேண்டிய வழியில் நடத்தப்படவில்லை என்பதே பிரதான காரணம் என்று நான் எண்ணுகிறேன். சத்தியத்திலுள்ள ஜனங்களுக்குப் பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் விஷயத்தில் ஒரு சிறிய படிப்பினை அவசியம் என்று நான் எண்ணுகிறேன். அநேகமாக இவ்விஷயத்தில் சில சாதகமின்மைகள் நமக்குக் காணப்படவே செய்யும். உங்கள் இருதயமானது எவ்வளவுக்கு அதிகம் பெரிதாகியும், மன்னிக்கிறதாகியும், தயவுள்ளதாகியும் உள்ளதோ, அவ்வளவுக்கு அதிகமாய் உங்கள் நண்பர்களையும், உங்கள் பிள்ளைகளையும் மன்னிக்கிறவர்களாகுவீர்கள்; ஆனாலும் உங்கள் பிள்ளைகளைக் கையாளும்போது, நீங்கள் அவர்களை மற்ற ஒரு புருஷனையோ அல்லது ஸ்திரீயையோ கையாளுகிறது போல கையாளக்கூடாது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் உருவாகிவரும் குணலட்சணத்தைக் கண்ணோக்க வேண்டும் மற்றும் கர்த்தருடைய ஒழுங்குகளுக்கு இசைவாக, கர்த்தர் நடத்தப் பிரியப்படும் வழியில் அக்குணலட்சணத்தை வனையத்தக்கதாகப் பயிற்றுவித்திட வேண்டும். ஒருவேளை குணமானது, வளைந்த சிறு கிளையாக இருக்குமானால், வளைந்துள்ள பகுதிகளில் (splints) கட்டைகளை நீங்கள் கட்டி, அது நிமிரத்தக்கதாக உதவிட வேண்டும்; ஏனெனில் இந்த வளைந்த கிளைகளுடன் அதைப் பெரிய மரமாக வளர்வதற்கு நீங்கள் விட்டுவிடுவீர்களானால், பிற்பாடு அது நேராய் நிமிரத்தக்கதாக உங்களால் ஒருபோதும் அதற்குக் கட்டைகளைக் கட்ட முடியாது. நண்பர்களில் சிலர் பிரம்பினைத் தவிர்த்து, வேதவாக்கியங்கள் கூறுவதைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர் என்று நான் எண்ணுகிறேன். பிரம்பு தேவைப்படும் போது, அதை நாம் தவிர்த்திடக்கூடாது. இவ்விஷயத்தில் நாம் தேவனுடைய வழிமுறையினைப் பின்பற்றிட வேண்டும். உங்கள் விஷயத்தில் பிரம்பு தேவைப்படுகையில், அதைத் தேவன் தவிர்த்துக்கொள்கின்றாரா? இல்லவேயில்லை. "உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்." தேவன் தம் ஜனங்களுக்காக ஒரு கோலையும், ஒரு தடியையும் வைத்திருப்பதற்காக நான் மகிழ்கின்றேன்; நாம் திருத்தப்பட வேண்டியபோது, நம்மைத் திருத்தாமல் அப்படியே அவர் நம்மை விட்டுவிடாமல் இருப்பதற்காய் நான் மகிழ்கின்றேன். ஆனால் இது விஷயத்தில் சரியான ஆவியை உடையவர்களாய் இருப்போமானால், - - சிட்சையைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, சிட்சைக்கான அவசியம் நமக்கு ஏற்படுவதைக் குறித்தே நாம் மிகவும் வருத்தம் அடைகிறவர்களாய் இருப்போம். "நான் சிட்சிக்கப்பட அவசியம் ஏற்பட்டுள்ளபடியாலும், நான் என்னைத் தானே சரிபண்ணிக்கொள்ளாததினாலும் அல்லது என்னை நான் சரியான கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளாததினாலும், நான் மிகவும் வருந்துகிறேன்." என்பதே பிரம்பின் காரியமாகும். இதைத் தான் நீங்களும் பிள்ளையினிடத்தில் வளர்த்திட வேண்டும் - பிள்ளையானவன் சில அடிகள் பெற்றுக்கொள்வதற்கல்ல, மாறாக தேவனுடைய பிள்ளையென நீங்கள் (அடிகளைக் கொடுப்பதை) இதைச் செய்வதை உங்களது கடமையாகவும், பொறுப்பாகவும் பெற்றிருக்கின்றீர்கள் மற்றும் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு அடிகளைக் கொடுத்தாக வேண்டும். என்னுடைய ஜீவியத்தில் என் கைகளில் நான் எத்தனை அடிகள் வாங்கினேன் என்று என்னால் சொல்ல முடியும்; ஐந்து முறை அடிகள் வாங்கியிருக்கிறேன்; மேலும் அவற்றையும், அந்த சம்பவங்களையும் நினைவில் வைத்திருக்கின்றேன்; மூன்று அடிகளை என் தாயாரிடமிருந்து பெற்றுக்கொண்டேன். அவைகளில் ஒன்றைக்குறித்துச் சொல்ல விரும்புகின்றேன். எனக்கு அப்போது ஐந்து வயதிருக்கும். நான் மிகச் சிறுபிள்ளையாக இருந்தபோது, இடுப்பின்கீழ், அதாவது பிட்டத்தில் சில அடிகள் பெற்றிருந்திருப்பேன், எனக்கு அது குறித்து ஞாபகமில்லை; ஆனால் ஐந்து வயது இருக்கையில், நான் அடி வாங்கினது எனக்கு ஞாபகம் இருக்கின்றது. என் தாயார், அவர்களால் முடிந்தவரை என்னைப் பயிற்றுவித்தார்கள். என் தாயார் ஒரு ஜோடி கோலிகுண்டு முனைகளை உடைய தோல் சாட்டையைப் பெற்றிருந்தார்கள்; அதன் முனைகள் வலியை உண்டாக்கும், ஆனாலும் உண்மையான சேதம் ஏதும் செய்யாது. அவைகளுக்குக் கிட்டத்தட்ட ஆறு அல்லது எட்டு வால் பகுதிகள் உண்டு - "அவைகளின் வால் முனைகளே வலியை உண்டாக்கும்." "சார்லஸ் (ரசல்), தோல் சாட்டையை எடுத்துக்கொண்டு மாடிக்கு வா." ஆகவே

தோல் சாட்டையை எடுத்துக்கொண்டு மாடிக்கு சென்றேன். தாயார் என்னை நோக்கி: “இங்கே உட்காரு; நான் உனக்கு வேதத்திலிருந்து சிலவற்றை வாசிக்க வேண்டும்” என்றார்கள். நான் அச்சம்பவத்தில் ஓர் உண்மையைப் புரட்டினதாக அல்லது திரித்துப்பேசினதாக என் தாயார் எண்ணினார்கள்; நான் முழுமையாக பொய் பேசினேன் என்றல்ல, மாறாக உண்மையினைக் கொஞ்சம் திரித்துப் பேசினதாக அவர்கள் எண்ணினார்கள்; அதாவது விசேஷமாக ஒருவேளை பிள்ளை பேசுவதைக் கேட்டு சில வயதானவர்கள் சிரிக்கவும், பேசினது புத்திசாலித்தனமானது என்று எண்ணுவதற்கும் வாய்ப்புள்ள தருணங்களில் பெரும்பான்மையான பிள்ளைகள் இப்படி உண்மையைக் கொஞ்சம் திரித்துப் பேசுவது போன்று நான் பேசினதாக எண்ணினார்கள்; ஆனால் அப்படியாக நான் எண்ணி ஒருவேளை பேசியிருந்தாலும், பேசுவதைக் கேட்டுச் சிரிப்பதற்கும், பேசினது புத்திசாலித்தனமானது என்று எண்ணுவதற்கும் அங்கு யாரும் இருக்கவில்லை. இப்படியாகச் செய்யக்கூடாது என்று நான் கற்றிருந்தேன். நான் இப்படி பேசினதாக என் தாயார் எண்ணினபடியால், வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து, பொய் பேசுபவர்கள் அக்கினியிலும், கந்தகத்திலும் எரிக்கப்படுவார்கள் என்று காணப்படும் வசனங்களை எனக்கு வாசித்துக் காண்பித்துவிட்டு, “சார்லஸ் (ரசல்), அக்கினியிலும் கந்தகத்திலும் சுட்டெரிக்கப்படப் போகிறவர்களோடுகூட நீயும் காணப்பட நான் விரும்பவில்லை; மேலும் உன் தாய் என்ற முறையில் உன்னைச் சிட்சிப்பது என் கடமையாக இருக்கிறது மற்றும் நான் இதைச் செய்தாக வேண்டும். உன்னை சாட்டையினால் அடிக்க எனக்கு விருப்பமில்லை, ஆனாலும் உன்னுடைய நன்மைக்காக இதை நான் செய்தாக வேண்டும். இதுவே கர்த்தருடைய வசனத்தின் போதனையாகும் மற்றும் நீ ஒருவேளை வளர்ந்து பொய்யனாய்க் காணப்பட்டாயானால், ஒருவேளை வளர்ந்து பொல்லாத மனுஷனாய்க் காணப்பட்டாயானால், இப்படியே சம்பவிக்கும்” என்று கூறினார்கள். வேதவாக்கியங்களிலிருந்துள்ள சிறுசிறு அந்த அறிவுரைகளானது என் மனதில் அதிகமாய்த் தாக்கத்தினை ஏற்படுத்தினது. ஒருவேளை காரியங்கள் குறித்து என் தாயார் புரிந்திருப்பார்களானால், அவர்கள் அப்படியாக அவ்வசனங்களைப் பொருத்திக் கூறியிருந்திருக்கமாட்டார்கள்; மாறாக அதற்கொத்த ஆற்றலுள்ள மற்றும் மிக அதிக ஆற்றலுள்ள வேறு ஏதேனும் வேதவாக்கியத்தினைக் கண்டுபிடித்து, எடுத்துக் கூறியிருந்திருப்பார்கள். தேவன் பொய்யர்களைப் பயன்படுத்துவதில்லை எனும் உண்மையானது மிகச் சுலபமாகப் பிள்ளையினுடைய மனதில் பதியவைக்கப்படலாம்.

## பிள்ளைகள் – பிள்ளைகளுக்கான ஆயிர வருஷ காலத்தின் ஆசீர்வாதங்கள்.

### கே: 55:1 :: கேள்வி (1909) - 1

ஆயிர வருஷ யுகத்தின்போது பிள்ளைகள் எந்த ஸ்தானங்களில் காணப்படுவார்கள் மற்றும் அவர்கள் என்ன ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்?

**பதில்:** பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் மடியில் காணப்படுவார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஒருவேளை அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாரேனும் பிள்ளைகள் உடையவர்களாய் இருப்பார்களானால் அவர்களின் பிள்ளைகளின் நிலைமை என்ன என்று கேட்கின்றீர்கள் என்று நான் எண்ணுகிறேன். ஐயத்திற்கிடமின்றி அப்போது அநேகம் அன்புள்ள இருதயம்கொண்ட ஜனங்கள் ஜீவிப்பார்கள்; மேலும் இப்பிள்ளைகள் மகிமையடைந்து போனவர்களின் பிள்ளைகள் என்று இவர்கள் அறியும் போது, அப்பிள்ளைகளை பாரமரித்திடுவதில் இவர்கள் மகிழ்வார்கள். இன்னுமாகத் திரைக்கு அப்பக்கத்தில் காணப்படும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை இப்பக்கத்தில் இங்கு இருந்து பராமரிப்பதைப் பார்க்கிலும், மிக அதிகமாய்ப் பராமரிக்க முடிபவர்களாய் இருப்பார்கள் என்பதிலும் நமக்கு நிச்சயமே.

பிள்ளைகள் என்ன ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்? கிறிஸ்து யாருக்காக மரித்து, தேவன் தம்மைக்குறித்து அறியப்பண்ணுவதற்காய் யாருக்காக திரளான ஏற்பாடுகள் பண்ணினாரோ, அந்தப் பூமியின் குடிகளிலுள்ள மீதமானவர்களோடுகூட, இந்தப் பிள்ளைகளும் ஒரே ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

## பிள்ளைகள் – காலம் குறைவாயிருக்கையில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கல்வியின் அளவு.

### கே: 55:2 :: கேள்வி (1910) - 2

இக்காலத்திற்கும், உபத்திரவக் காலத்திற்கும் இடையிலான காலம் குறைவாய் இருக்கின்றது என்பதை அறிந்திருக்கும் நிலைமையிலும், இன்னுமாக எந்தவிதமான மேற்கல்வியிலும் தேவன்மீது நம்பிக்கையின்மை ஏற்படுவதற்கு, வேதத்தின் மீது சந்தேகம் ஏற்படுவதற்கு, எதிர்ப்பதற்கு ஏதுவான இயல்பு உருவாகிவிடும் நிலைமையிலும் - சத்தியத்திலுள்ள ஜனங்கள், அதாவது வேதமாணவர்கள் எந்தமட்டிலும் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்க வைக்க வேண்டும்? இசைக்கலையின் அடிப்படைகளைக் கற்பிப்பதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா>

**பதில்:** என் அருமையான நண்பர்களே, பெரும்பான்மையான பிள்ளைகள் பொதுக்கல்வி படிப்பைத் தாண்டி அல்லது இதற்கும் அதிகமாய்த் தாண்டிச் செல்லாமல் இருந்தால் நலமாயிருக்கும் என்பது என் கருத்தாய் இருக்கின்றது. உண்மையில் ஏதேனும் நன்மையினை உண்டுபண்ணும் விதத்திலுள்ள எந்த ஒரு கல்லூரியும் நான் அறியேன். இந்தியாவிலிருந்து வந்திருந்த ஒர் இளைஞனைக் குறித்து நான் உங்களுக்குக்க் கூறவேண்டும். அந்த இளைஞனின் தகப்பன் இந்தியாவைச் சேர்ந்தவரும், கிறிஸ்தவத்தை நேசித்தவருமாவார்; மேலும் இந்த இளைஞன் அமெரிக்காவிற்கு வந்து, தனது படிப்பைப் படிக்க மிகவும் ஆசை கொண்டிருந்தான். அவரது தந்தைக்கு இந்தியாவிலுள்ள மெதடிஸ்டு சபை மிஷனுடன் தொடர்பு இருந்தது. அந்த இளைஞன் இங்குள்ள மெதடிஸ்ட் கல்லூரியில் சேர்ந்தான். படிப்பைப் படித்துக்கொண்டிருந்த நான்கு வருஷங்களில் அந்த இளைஞன் தனது கிறிஸ்துவத்தின் ஒவ்வொரு காரியத்தையும் இழந்து போனான்; வேதத்தின்மீதான தன் ஒவ்வொரு விசுவாசத்தையும் இழந்து போனான்; மெதடிஸ்ட் கல்லூரியில் படிப்பை முடித்த போதோ, வேதத்தைச் சந்தேகிக்கிறவனாய், முற்றிலும் ஒரு அவிசுவாசியாய் வெளியேறினான். பிற்பாடு ஒருமுறை இந்த இளைஞனை வேத மாணவர்களில் ஒருவர் சந்தித்தார் மற்றும் வேத மாநாடுகள் ஒன்றில் கலந்துகொள்ளுமாறு இளைஞன் அழைக்கப்பட்டான். தன்னிடம் பணம் இல்லை என்று இளைஞன் கூறியுள்ளான். அச்சகோதரர்கள் இளைஞனின் மாநாட்டிற்கு வருவதற்கான பயண செலவுக்குப் பணம் கொடுத்திருக்கின்றனர். இளைஞன் மாநாட்டில் கலந்து கொண்டான் மற்றும் மிகவும் கவரப்பட்டிருக்கின்றான் - - ஆனாலும் இளைஞன் முழுமையாகத் திருப்தியாகிவிடவில்லை, காரணம் அந்த அளவுக்குத் தன் விசுவாசத்தினை இளைஞன் இழந்துபோயிருந்தான். இளைஞன் இன்னுமாகப் படிக்க வேண்டும் என்றும், வேதாகமப் பாடங்களினுடைய ஆறு தொகுதிகளையும் வாசித்திட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. இளைஞன் ஆறு தொகுதிகளையும் வாசித்தான் மற்றும் வாசித்து முடிக்கையில், தான் மறுபடியுமாகத் தேவனையும், வேதாகமத்தையும் கண்டுபிடித்ததற்காகவும், கர்த்தர் இயேசு கிறிஸ்துவைத் தன் இரட்சகராகப் பெற்றதற்காகவும் களிகூருவதாகத் தெரிவித்தான். இளைஞன் இந்தியாவிற்குத் திரும்பிப் போய், அங்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தான்; உண்மையான கண்ணோட்டத்திலிருந்து அவரைக்குறித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தான். இப்பொழுதும் நான் அன்புகூர்ந்திடும் எந்தப் பிள்ளையையும் இழக்க நான் தயாராக இல்லை. - என்னுடைய எந்த பிள்ளையையும் நான் அன்புகூர்ந்திடுவேன்; ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளையை அன்புகூர்ந்திட வேண்டும் - பிள்ளைப் பெற்றிருக்கும் சிறந்த காரியமாகிய அவனது விசுவாசத்தை இழந்துபோகச் செய்திடும் எதையும் பிள்ளைக்குச் செய்திட நான் விரும்பமாட்டேன். என்னுடைய பிள்ளை உயர்நிலை பள்ளிக்குக்கூடச் செல்வதற்கு நான் சம்மதம் தெரிவிக்க மாட்டேன்; ஏனெனில் கல்லூரிகளில் மாத்திரம் இல்லாமல், சாதாரண உயர்நிலைப் பள்ளிகளிலும்கூட இப்பொழுதெல்லாம் வேத விமர்சனங்கள் காணப்படுகின்றது. மனுஷன் குரங்காய் இருந்தான், பின்னர் அவனுக்கு வால் போய்விட்டது என்பது போன்றவைகள் அறிவியல் பாட நூல்கள் என்று அழைக்கப்படும் புத்தகங்களில் காணப்படுகின்றது.

இசைக் கற்கும் விஷயமானது, பெற்றோரின் சூழ்நிலையினையும், பிள்ளையினுடைய திறமையையும் சார்ந்துள்ளது என்று நான் எண்ணிடுவேன். பிள்ளைக்கு இசை தொடர்பான திறமை இல்லையெனில், அப்பிள்ளையை இசை கற்க வைக்க முயற்சிப்பது என்பது நேரத்தை வீணடிப்பதாக இருக்கும்; ஆனால் ஒருவேளை பிள்ளைக்கு இசை தொடர்பான விஷயங்களில் நல்ல திறமைகள் இருக்குமானால் - - மேலாக இசை விஷயத்தில் அதிகம் கற்றுக்கொடுப்பது தகுதியாய் இருக்குமா அல்லது இல்லையா என்று நீங்கள் சிந்தித்துக்கொண்டிருந்தாலும், திறமையிருக்கும் காரியமானது, பிள்ளைக்கு இசை தொடர்பான அடிப்படைகளையாகிலும் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்ற காரணமாய் இருக்கும். ஆனால் ஒருவேளை பிள்ளைக்கு இசையில் உண்மையாய்த் திறமையிருக்குமானால், மற்றும் நீங்களும் அடிப்படைகளைக் கற்றுக்கொடுத்திருக்கின்றீர்கள் என்றால், - - பிள்ளையின் திறமையானது மீதியைப் பார்த்துக்கொள்ளும். அநேக ஜனங்களின் பிரச்சனை என்னவெனில், அவர்களிடம் தாலந்து/ திறமை ஏதும் இருப்பதில்லை; மேலும் திறமையை உற்பத்தி செய்வது என்பது மிகவும் பயிற்சி எடுக்கப்பட வேண்டிய காரியமாய் இருக்கும் மற்றும் இப்படி பயிற்சி எடுப்பது பெரும்பாலும் அயலார்களுக்கு மிகவும் தொந்தரவாக இருக்கும்.

## பிள்ளைகள் – ஆயிர வருஷ யுகத்தில்.

### கே: 56:1 :: கேள்வி (1910) - Part 1

ஆண் மற்றும் பெண் பூமியை நிரப்புவதற்காக உண்டாக்கப்பட்டனர் மற்றும் அந்த வேலைக்கான கால வரம்பு ஆயிரவருஷ நாள் (சகாப்தம்), மற்றும் ஏழாம் ஆயிரவருஷ நாள், ஆதாம் பிரிக்கப்பட்டு, பாலினம் உண்டாக்கப்படுவதற்கு முன்பிருந்த ஆதாமின் சாயலுக்கு அவர்களைத் திரும்பக் கொண்டுவருவதற்காக இருந்தது என்று உங்களுடைய எழுத்துக்களில் குறிக்கப்படவில்லையா?

**பதில்:** அது ஒரு பகுதி உண்மையாக இருக்கின்றது என்று நான் பதிலளிக்கிறேன், ஆனால் துல்லியமாகக் குறிக்கப்படவில்லை. தேவன் ஆண் மற்றும் பெண்ணை பூமியை நிரப்பும் நோக்கத்திற்காக உண்டாக்கினார் என்று நாங்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர் மனுஷனை உண்டாக்கினார், ஏனெனில் மனுஷனை உண்டாக்க அவர் விரும்பினார், பின்பு பூமி நிரப்பப்படுவதற்கு மனுஷனை இரண்டு தனிப்பட்ட பகுதிகளாகப் பிரித்தார்.

**Part 2:** - - பின்பு, ஏன், ஆயிரவருஷ யுகத்தில் பிள்ளைகள் பிறப்பார்கள் என்று ஒரு பயண பிரசங்கி உபதேசித்து, இவ்வாறாக அநேகரை விலகி வழிநடத்தி, மற்றும் நீங்கள் இதை போதிக்கிறீர்கள் என்று சொல்கின்றனர், மேலும், 144,000 பேர்களின் இடங்களை எடுத்துக்கொள்வதற்கு ஆசீர்வதிக்கப்பட்டவர்களால் பிறக்கும் பிள்ளைகளை தேவன் உடையவராக இருக்க வேண்டியிருக்கிறது.

**பதில்-** - எந்த பிரசங்கியைக் குறிக்கிறது என்பதை நான் அறியவில்லை. ஒவ்வொரு பயணபிரசங்கியினால் கூறப்படும் ஒவ்வொரு வார்த்தைக்கும் சொசைட்டி பொறுப்பாக இருக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் நியாயமாகத் தோன்றும் விதத்தில், மற்றும் கூடுமான வரையில் அதிக அளவில் கருத்து மற்றும் பேச்சு சுதந்தரத்தை அளிப்பதற்கு சொசைட்டி முயற்சிக்கிறது, மற்றும் சொசைட்டியின் ஊழியத்தில் தங்களுடைய நோக்கங்களில் தூய்மையும் மற்றும் நேர்மையாகவும் இருக்கிறவர்கள், சத்தியத்தை வெளிப்படுத்துவதிலும் மற்றும் அவர்களுடைய புரிதலிலும் தெளிவுள்ளவர்களாக இருக்கிறவர்களை மட்டும் உடையதாக இருக்க சொசைட்டி முயற்சிக்கிறது. சொசைட்டியின் தலைவர் சத்தியம் என்று நம்புகிறதை ஒவ்வொரு பயணபிரசங்கியும் துல்லியமாகப் பேசுவார்கள் என்று சொசைட்டி உத்தரவாதம் அளிக்க இயலாது.

துரதிஷ்டவசமாக, கொஞ்ச நாளைக்கு முன் வாட்ச் டவரில் வெளியான ஒரு கட்டுரை இந்த கேள்விக்கு ஒத்தவிதமாக இருப்பதாக நான் நினைக்கிறேன். இந்த கட்டுரை என்னிடம்

கொடுக்கப்பட்டபோது, இது சத்தியத்தில் மிக தெளிவாயிருக்கும் சகோதரரிடமிருந்து வந்திருந்ததை நான் கண்டுணர்ந்தேன், ஆகவே அந்த கடிதத்தை நுட்பமாக சோதிக்கவில்லை, இல்லையெனில் நான் ஜாக்கிரதையாகச் செய்திருப்பேன் மற்றும் இந்த சிறிய அம்சத்தைக் காணத்தவறிவிட்டேன். 144,000 பேர்களின் இடங்களை எடுத்துக்கொள்வதற்கு ஆயிரவருஷ யுகத்தில் பிள்ளைகள் பிறப்பார்கள் என்பது என்னுடைய கருத்தாக இருக்கவில்லை. இப்படிப்பட்ட எந்த கேள்விகளுக்கும் உங்களில் எவரும் உங்கள் தலைகளை தொந்தரவுக்குள்ளாக்க வேண்டாம் என்று நான் அறிவுறுத்துகிறேன். அடுத்த யுகத்தின் இப்படிப்பட்ட விவரங்களுக்காக கவலைப்படாமல், நம்முடைய அழைப்பையும் மற்றும் தெரிந்ர்துகொள்ளுதலையும் உறுதிசெய்து கொள்வதின் நம்முடைய ஆர்வங்களைத் தாங்கி நிற்கிறவைகளைக் குறித்து சிந்திப்பதற்கு நமக்கு திரளானவைகளை நாம் உடையவர்களாயிருக்கிறோம். இந்த கடிதத்தின் குறிப்பிட்ட அம்சத்தை நான் கவனித்திருந்தால், இது பிரசுரமாகியிருக்காது. நான் இருக்கவேண்டியிருக்கும் விதத்தில் நான் ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் ஜீவனோடிக்கும் காலம் வரைக்கும் கற்றுக்கொள்வதை நான் தொடருவேன் என்று எண்ணுகிறேன். வாட்ச் டவருக்குள் செல்லும் ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் நாங்கள் ஜாக்கிரதையாயிருக்க முயற்சிப்போம், ஆனால் நாங்கள் தவறிழைக்காதவர்கள் என்று கோருவதில்லை; நாங்கள் எங்களால் முடிந்தவரை சிறப்பாகச் செய்து வருகிறோம்.

இது அந்த கட்டுரையைப் பிரசுரிப்பது தவறாக இருந்தது, ஆனால் இதைக் குறித்து எவரும் கவலைப்பட வேண்டாம், எனெனில், எப்படியும், இது மிக முக்கியமானதாக இருக்கிறதில்லை. உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் உள்ளது? அந்த பார்வையைக் கொண்டிருந்த இப்படிப்பட்ட ஒரு சகோதரர் கர்த்தரைச் சார்ந்தவராக இருக்கவில்லை என்று சொல்வதற்கான போதிய முக்கியத்துவம் உள்ளதாக இருக்கவில்லை; இது சத்தியத்தின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. இந்த கேள்வியின் வரிசையில், அல்லது இப்படிப்பட்ட மற்ற கேள்வியைப் பற்றிய விஷயத்தில் பயணபிரசங்கி சகோதரர் எவருக்கும் என்னுடைய பரிந்துரை என்னவென்றால், அவைகளை தனியாக விட்டுவிடுவது மேலானதாகும். இப்படிப்பட்ட கேள்விகளினால் ஆதாயம் அடையப்போவது ஒன்றுமில்லை.

## பிள்ளைகள் – கல்வி.

### கே: 57:1 :: கேள்வி (1910) - 1

இந்த யுகத்தில் தங்கள் பிள்ளைகள் பூமிக்குரிய ஸ்தானங்களை அடைய முடியாது என்பதை பரிசுத்தவான்கள் அறிந்திருக்கிற நிலைமையில், இந்த காலங்களில் தங்கள் பிள்ளைகளைப் பூமிக்குரிய ஸ்தானங்களுக்கென்று முயன்று, படிக்க வைக்க வேண்டுமா? இத்தகைய (கல்லூரியிலோ அல்லது பல்கலைக்கழகத்திலோ) பெறப்படும்) கல்விக்கு, ஆயிர வருஷ யுகத்தில் மதிப்பு ஏதேனும் இருக்குமா?

**பதில்:** கல்வி என்பது மிகவும் அருமையான காரியம் என்று நான் பதிலளிக்கிறேன்; மேலும் மேசியாவினுடைய இராஜ்யத்தின்போது சந்தேகத்திற்கிடமின்றி ஒட்டுமொத்த உலகத்திற்கும் அருமையான கல்வி வசதிகள் அருளப்பட்டிருக்கும்; ஆனால் அந்தக் கல்வி ஏற்பாடுகளானது வேறே மேற்பார்வையின்கீழ் காணப்படும் மற்றும் இப்பொழுது கொடுக்கப்படுகின்றதான கல்வியிலிருந்து அநேக விதங்களில் மிகவும் வேறுபட்டிருக்கும்.

கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளுக்கு அல்லது பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப வேண்டாம் என்றுள்ள எனது அறிவுரையானது வாட்ச் டவர் பத்திரிக்கையின் வாயிலாகத் தெரிவிக்கப்படுகின்றது; ஏனெனில் பிள்ளைகளை அனுப்பி வைப்பார்களானால், அது பெருமளவில் பிள்ளைகளுக்கு அவநம்பிக்கையையும், நாத்தீகத்தையும் கொண்டுவந்திடும் மற்றும் அது பிள்ளைகளுக்கு நிச்சியமாய் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

ஐந்து வருஷங்களுக்கு முன்னதாகத் தன் மகளை பெண்கள் கல்லூரிக்கு அனுப்புவது தொடர்பாக என்னிடம் விசாரித்த ஓர் அருமையான கிறிஸ்தவ சகோதரன் குறித்து எனக்கு ஞாபகம் வருகின்றது. மகளோ வேதத்தின் மீதான அவளது விசுவாசத்தினை அநேகமாக இழக்க நேரிடும் என்று நான் எதிர்மறையாய் அறிவுரை வழங்கினேன். தகப்பனோ நல்லதொரு கல்லூரியைத் தேர்வு செய்ய வேண்டும் என்று எண்ணி, சிறந்த ஒன்றைத் தேர்வு செய்தார். அது ஒரு மத ஸ்தாபனமாகவும், சபை பிரிவு சார்ந்த கல்லூரியாகவும் இருந்தது. கொஞ்சக் காலத்திற்குப் பிற்பாடு அவர் என்னிடம் தன் மகள் கல்வி பெற்றுக்கொண்டாள் என்றார்; ஆனால் அந்த மகளோ கிறிஸ்தவ மார்க்கமற்றவளாகவும், வேதத்தின் மீதோ அல்லது இயேசு கிறிஸ்துவின்மீதோ விசுவாசமற்றவளாகவும் போய்விட்டாள்.; தேவன்மீது கொஞ்சமாகிலும் அவளுக்கு விசுவாசம் இருக்கின்றதா என்பது உண்மையில் சந்தேகமே.

இந்தியாவிலிருந்து இந்த நாட்டிற்கு வந்த ஓர் இளைஞனைக் குறித்த மற்றுமொரு சம்பவம் வாட்ச் டவர் பத்திரிகையில் சமீபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இளைஞன் முன்னிலை வகிக்கும் பல்கலைக்கழகங்கள் ஒன்றில் பயின்று, நாத்தீகனாகவும், அவிசுவாசியாகவும் வெளியே வந்தான். வேதாகமப் பாடங்களின் ஆறு தொகுதிகளையும் வாசித்ததின் மூலமாக தன் அவநம்பிக்கையிலிருந்து மீண்டுவந்த அந்த இளைஞன் இப்பொழுது இந்தியாவில் காணப்படுகின்றார் மற்றும் இப்பொழுது வேதத்தை முழுமையாய் விசுவாசிக்கும் விசுவாசியாகக் காணப்படுகின்றார். ஆகையால் உங்கள் பிள்ளைகளுக்குத் பொது பள்ளி (PUBLIC SCHOOL) கல்வியைக் கொடுங்கள் - - - அவர்களை உயர்நிலைப் பள்ளிக் கூடத்திற்குக்குக்கூட எடுத்துச்செல்ல முயற்சிக்காதீர்கள் என்பதே என் அறிவுரையாகும்; ஏனெனில் உயர்நிலை பள்ளிகளில் பிள்ளைகளுக்கு உயர்நிலை விமரிசனங்கள் அநேகம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன மற்றும் சீக்கிரத்தில் இப்படியாகத் பொது பள்ளிகளிலும்கூட கற்றுக்கொடுக்கப்படும்

## பிள்ளைகள் – பிள்ளைகளுக்கான உயிர்த்தெழுதலின் தளம்.

### கே: 58:1 :: கேள்வி (1911) - 1

பொறுப்புணர்வு வரும் வயதை அடைவதற்கு முன்னதாக மரித்துப்போகும் அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளானவர்கள், முற்பிதாக்கள் வரும் அதே தளத்திற்கு வருவார்களா - - அதாவது உடனேயே பரிபூரணத்திற்கு வருவார்களா?

**பதில்:** இல்லவே இல்லை. முற்பிதாக்கள் தாங்கள் இருக்கப்போகிற தளத்திற்கு வருவதற்கு அநேக அனுபவங்கள் வாயிலாகவே கடந்துவருவார்கள். ஆபிரகாமின் விஷயத்தில், அது அவரது விசுவாசத்திற்கான பரீட்சையாக, அவரது நேர்மையினை நிரூபிப்பதற்கான அனுபவமாய் இருந்தது! தீர்க்கதரிசிகளுக்கு அந்த அனுபவங்கள் என்னவாக இருந்தது மற்றும் இதற்காக எத்தனை பாடுபட்டார்கள் என்று சிந்தித்துப்பாருங்கள்! ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகள் மற்றும் இராஜ்யத்தின் பூலோக பிரதிநிதிகளுடன், மனித பூரணத்தில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாய்க் கருதப்படத்தக்கதாக, உங்கள் பிள்ளைகள் எந்த அனுபவங்களுக்குள்ளும் கடந்து செல்லவில்லை.. குழந்தை குற்றமற்று (innocent) இருக்கும் காரியம் மிகவும் நலமே, ஆனால் இது பிள்ளைகளுக்குப் பலனாக எந்த ஒரு ஸ்தானத்தையும் கொடுத்திடாது. பிள்ளை ஏதேனும் பலன் அடைய வேண்டுமெனில், அது குணலட்சணத்தினை வளர்த்திடுவது அவசியமாகும். சிறுமந்தைக்குள் வருபவர்கள் குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் விளைவாகவே அங்கு வருவார்கள். முற்பிதாக்கள் வகுப்பாரில் இடம்பெறுபவர்கள், குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் காரணமாகவே அந்த வகுப்பில் காணப்படுவார்கள். அப்படியானால் விசுவாசிகளினுடைய பிள்ளைகளின் நிலைமை என்ன? விசுவாசிகளினுடைய பிள்ளைகள் விசேஷித்த திவ்விய பராமரிப்பின்கீழ் காணப்படுகின்றனர் என்று வேத வாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன என்று நான் பதிலளிக்கின்றேன். அது எப்படியிருக்கும் என்று என்னால் உங்களுக்குச் சொல்ல முடியாது. நான் அதை நம்புகிறேன், காரணம் தேவ வசனமானது அப்படியாகச் சொல்லுகின்றது. இதோ அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை உங்களுக்கு மேற்கோள் காட்டுகின்றேன்: “அவிசுவாசியான மனைவி தன்

விசுவாசியான புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகின்றாள்" - அதாவது திவ்விய மேற்பார்வையின்கீழ் காணப்படுவதற்கென்று பிள்ளையின் பெற்றோர் இருவரும் கர்த்தருக்குள் காணப்பட வேண்டும் என்று அவசியமில்லை. பெற்றோரில் ஒருவர் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணியிருந்தால், பிள்ளையானது அந்த அர்ப்பணம் பண்ணின பெற்றோருடையதாகக் கருதப்படுகின்றது மற்றும் தேவ ஆசீர்வாதமும் கடந்துவரும். இதுபோலவே அவிசுவாசியான கணவனும், விசுவாசியான மனைவியினால் பரிசுத்தமாக்கப்படுகின்றான்; இல்லையேல் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாய் இருப்பார்கள். ஆனால் அதற்கென்று பிள்ளைகளைக் கர்த்தர் பரலோகத்திற்கு எடுத்துச்செல்வார் என்று அர்த்தமில்லை.. பிள்ளைகள் வளர்கையில், அவர்கள் சிறுமந்தைக்குள் அடங்கத்தக்கதாகக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று அர்த்தமில்லை. பிள்ளைகளுடைய ஜீவியத்தின் காரியங்களானது, அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக நடத்தப்படும் எனும் விதத்தில் தயவு பாராட்டப்படுவார்கள். ஆனாலும் பிள்ளையினுடைய உள்நோக்கம் அப்படியே இருக்கும். தேவன் தம்முடைய எந்த சிருஷ்டிகளுடைய விருப்பமான நோக்கத்திலும் ஒருபோதும் ஊடுருவதில்லை.. அந்த பிள்ளை விருப்பமான நோக்கம் இல்லாமல் இருக்கும் வரையிலும், பகுத்தறிவில் முதிர்ச்சியடையாமல் இருக்கும் வரையிலும், பிள்ளை திவ்விய மேற்பார்வையின்கீழ் காணப்படும். இதையே நான் - யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் உண்டாயிராத உபத்திரவ காலம் வருவதை வேதாகமம் நமக்குக் கூறுவதைக் குறித்துக் கொஞ்சம் பயத்துடன் காணப்படும் பெற்றோர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒருவேளை உங்கள் பிள்ளைகளோடு காணப்பட்டால் உங்களால் அவர்களைப் பராமரிக்கிறதைக் காட்டிலும் கர்த்தர் அவர்களைப் பராமரிக்க முடிகிறவராக இருக்கிறார் என்ற முழு நம்பிக்கையுடன் அந்தப் பிள்ளைகளைக் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிடுங்கள்.

## பிள்ளைகள் – அர்ப்பணம்பண்ணியுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் ஆவிக்குரிய சுபாவம் அடைதல் என்பது தொடர்பாக.

### கே: 59:1 :: கேள்வி (1911) - 1

அர்ப்பணம்பண்ணியுள்ளதான ஜனங்களின் பிள்ளைகள் இறுதியில் ஆவிக்குரிய சுபாவத்தினை அடைவார்கள் என்பது உங்கள் கருத்தாக இருக்கின்றதா?

**பதில்:** இல்லை; அவிசுவாசியான கணவன் விசுவாசியான மனைவியினால் பரிசுத்தமாக்கப்படுகின்றான். அவிசுவாசியான மனைவி விசுவாசியான கணவனால் பரிசுத்தமாக்கப்படுகின்றாள், இல்லையெனில் அவர்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருப்பார்கள்; ஆனால் அவர்கள் இப்பொழுது சுத்தமாயிருக்கின்றார்கள் என்று அப்போஸ்தலன் பேசுகையில், அவர் ஆவிக்குரிய சுபாவத்தைக் குறித்துப் பேசிடாமல், மாறாக பெற்றோரினால் தன் பிள்ளைக்குக் கொடுக்க முடிகிற அந்தக் காரியத்தைக் குறித்து மாத்திரமே குறிப்பிடுகின்றார் - அதாவது பிள்ளையானவன் சிந்திக்கும் பருவமடைந்து, தானாய்ச் செயல்படும் வயதை அடையும் வரையிலும், தற்காலிகமாய் நீதிமானாக்கப்பட்டுத் தேவனுடன் பெற்றிருக்கும் உறவு குறித்து மாத்திரமே குறிப்பிடுகின்றார். ஆகையால் அர்ப்பணம் பண்ணாதவர்களின் பிள்ளைகள் பெற்றிராத விசேஷித்த மேற்பார்வையினையும், திவ்விய பராமரிப்பினையும் விசுவாசிகளான பெற்றோர்களின் பிள்ளைகள் அனைவரும் பெற்றிருப்பார்கள். ஆனால் இது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதாகாது. தேவனால் நியமிக்கப்பட்ட படிகள் மூலமே அல்லாமல், மற்ற விதத்தில் ஒருவராலும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை அடையமுடியாது; மேலும் அந்த படிகள் பலியின் படிகளாக, உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலிகளாக ஏறெடுப்பதாகும். அனுக்கிரக காலங்கள் முடிவடைவதற்கு முன்னதாகத் தங்களையே இப்படியாக இயேசுவின் நாமத்தில் அல்லது புண்ணியத்தில் பலியாகச் சமர்ப்பிக்கும் பிள்ளைகள் அனைவரும் - ஒருவேளை அவர்கள் தங்களையே இப்படி அர்ப்பணிப்பதற்குப் போதுமான வயதுள்ளவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவார்கள். தான் என்ன செய்கிறோம் என்பதை முழுமையாய் அறிந்துகொள்ள

முடிவதற்குரிய போதுமான வயதில் பிள்ளைக் காணப்படுவானானால், அப்பிள்ளையைத் தேவன் மறுப்பார் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

## பிள்ளைகள் – முற்பிதாக்கள் மற்றும் உருவெடுத்துவரும் பிசாசுகள்.

### கே: 59:2 :: கேள்வி (1911) - 2

முற்பிதாக்கள் உயிர்த்தெழுந்துவிட்டார்கள் என்றும், அவர்கள் உருவெடுத்துவரும் பிசாசுகள் அல்ல என்றும் எப்போது நம் பிள்ளைகள் நிச்சயமாக அறிந்து கொள்வார்கள்?

**பதில்:** இக்கேள்விக்கு என்னால் பதிலளிக்க முடியாது என்று நான் எண்ணுகிறேன். இது சம்பந்தமாக நான் சிலவற்றைச் சொல்லுவேன், ஆனாலும் அது இக்கேள்விக்கான துல்லியமான பதிலாய் இராது. என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாராகிய - பூரண மனுஷர்களென உயிர்த்தெழும்பிடும் முற்பிதாக்கள் வாயிலான திவ்விய வல்லமையின் வெளிப்பாடானது, மிகவும் முழுமையானதாக இருக்கும் - - திவ்விய வல்லமையின் மிகவும் அற்புதமான வெளிப்படுத்துதலாக இருக்கும் என்பதினால், இது கர்த்தருடன் இசைவிற்குள் காணப்படும் அனைவருக்கும் போதுமான நிரூபணத்தினைக் கொடுத்திடும்; குறிப்பாக யூதர்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். இப்படியே இக்கேள்விக்கு நான் பதிலளிக்கிறேன்.

## பிள்ளைகள் – முதலாம் ஆதாமின் பிள்ளைகளா? அல்லது, இரண்டாம் ஆதாமின் பிள்ளைகளா?

### கே: 59:3 :: கேள்வி (1914 Z) - 3

புதிய யுகத்தின் காலையில் உலகத்தார் விழித்தெழும்போது, அவர்கள் யாருடைய பிள்ளைகளாக இருப்பார்கள் - - ஆதாமின் பிள்ளைகளாகவா, அல்லது இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் பிள்ளைகளாகவா?

**பதில்:** அவர்கள் இன்னமும் ஆதாமின் பிள்ளைகளாக இருப்பார்கள் என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம். உலகத்தாருக்கு ஜீவன்-அளிப்பவராக நம்முடைய கர்த்தரை நாம் புரிந்துகொள்ளும்போது, அவர் மூலமாக பிதாவினிடத்திற்கு வருகிறவர்களுக்கு மட்டும் அவர் ஜீவன்-அளிக்கிறவராக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

மனுக்குல வெகுஜனங்கள் அடுத்த யுகத்தில் விழித்தெழும்போது, அவர்கள் எந்த மாற்றத்திற்கும் வந்திருக்கமாட்டார்கள், அவர்களை ஆதாமின் மரணத்திற்குள்ளான ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து வெளியே எடுத்து, கிறிஸ்துவுக்குள் மற்றும் ஜீவனின் நீதிமானாக்கப்படுதலுக்குள்ளாகக் கொண்டுவரும் மாற்றமாக இருக்கும்.

கிறிஸ்துவின் விலையேற்றப்பெற்ற இரத்தத்தினால் தேவன் முத்திரிக்கப்போகிற புது உடன்படிக்கை முதன்மையாக இஸ்ரயேலுடன் இருக்கப்போகிற உடன்படிக்கையாகும் - - அவருடைய ஜனங்களாக இருக்கும் யூதர்களுக்கு, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு. இந்த உடன்படிக்கை இருக்கும். கர்த்தரையும் மற்றும் மத்தியஸ்தர் மூலமாக உடன்படிக்கையின் உறவையும் ஏற்றுக்கொள்கிற உண்மையுள்ள இஸ்ரயேலர்களின் நன்மைக்காக இது இவ்விதமாக துவக்கி வைக்கப்படுகிறது. மற்றும் அவர்கள் இதை செய்த உடனேயே, இந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களின் கீழ் வருவார்கள். ஆனால் மத்தியஸ்தரை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு இன்னும் வந்திருக்காத பொதுவான மனுக்குலத்தார் - - அந்நியர்களாக, பரதேசிகளாக, அந்நியமானவர்களாக - - இன்றைய மனநிலையிலேயே இன்னும் இருப்பார்கள். அந்த காலத்தில் சபையின் பணி வெளி. 22:17ல் விவரிக்கப்படுகிறது, “ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்.” ஆனால் அவர்கள் **ஜீவத்தண்ணிரில் பங்குபெறுகிற** வரைக்கும் எவரும் ஜீவனோடிருக்கத் துவங்கமாட்டார்கள்.

மனுக்குல உலகத்தார் இப்பொழுது தேவனிடமிருந்து அந்நியர்களாக, பரதேசிகளாக மரணத்திற்குள்ளாக இறங்குகிறார்கள், மற்றும் இது அவர்களுக்கு அந்த காலத்தின் சிலாக்கியங்களைப் பெறுவதற்கு அவர்களின் உயிர்ப்பிக்கப்படுதலுக்குப் பின்பு இருக்கும் என்று அப்போஸ்தலர் யோவான் தெரிவிக்கிறார், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்." உயிர்ப்பிக்கப்படுகிறவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான உறவுக்குள் வந்திருக்காத வரைக்கும், இந்த ஜீவனைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். அடுத்த யுகத்தில் அவர்களிடத்தில் அவருடைய உறவுமுறை வெளிப்படையாக இரக்க மனப்பான்மை கொண்ட ஆட்சியாளராக இருக்கும், மற்றும் அவர் அவர்களை அறிவொளி அளிக்க விருப்பமுள்ளவராக, அவர்கள் விரும்பினால், அவர்களை பிள்ளைகளாக சுவிகாரம் பண்ணுகிறவராகவும், அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் நிலைமைக்கு மேம்படுத்திக் கொண்டுவருவதற்கு விருப்பமுள்ளவராகவும் இருக்கின்றார். அவர்களை பூரணத்திற்குக் கொண்டுவருவதற்கு - - முற்றிலும் பூரண சந்ததியாகக் கொண்டுவருவதற்கு ஆயிரம் வருஷங்கள் முழுமையாக எடுக்கும்.

"இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நற்செய்திகளை உலகமனைத்திற்கும் கூறுங்கள்; சமீபமாயிருக்கிற இளைப்பாறுதலின் காலத்தைப் பற்றிப் பேசுங்கள்; 'யூபிலி ஆயிரம் வருஷங்கள் கொண்டதாயிருக்கின்றது' என்று ஒவ்வொரு ஜாதியின் ஒடுக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள்."

தேவைப்படுகின்ற நியமங்களுக்கு அவர்கள் இணக்கம் கொண்ட உடனேயே, கர்த்தர் இயேசு எல்லோருக்கும் பிதாவாயிருப்பார். அவர் முதலில் அவர்களுக்கு அறிவொளி மற்றும் அறிவை அளிப்பார். பிறகு, அவர்கள் இந்த அறிவு, மற்றும் வாய்ப்பைப் பயன்படுத்தி, மற்றும் அவருடன் இணக்கமாக வருவதற்கு விருப்பம் கொண்டால், அவர் அவர்களை தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்வார், மற்றும் புதிய உடன்படிக்கையின் கீழ் அவர்களுக்கு ஆசீர்வாதங்களை வழங்குவார்.

சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் என்று சொல்கின்ற வேதவாக்கியத்தை நாம் நினைவுகூருவோம். "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்;"

இந்த ஜனங்கள், உடன்படிக்கையின் நியமங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களைக் குறிக்காமல், வெளியே பொதுவாக இருக்கிற உலகத்தாரைக் குறிக்கின்றனர். இது பாடத்தைக் கற்றுக்கொள்ளவும் மற்றும் தேவனுடன் இணக்கத்திற்குள்ளாக வருவதற்கு விருப்பமுள்ளவர்களைக் குறிக்கின்றது. அவர்கள் ஒருவர் மற்றவரிடம் கூறுவார்கள், கர்த்தருடைய வீட்டின் பர்வதத்திற்குப் போவோம், மற்றும் அவருடைய பாதைகளில் நடப்போம் என்று கூறுவார்கள். அவர்கள் இதைச் செய்கிற வரைக்கும், அல்லது அவர்கள் நித்திய ஜீவனுக்கான தகுதிகாண் பருவத்தில் இருக்கிறவரைக்கும் என்று இல்லாமல், சொல்லர்த்தமான எந்த பார்வையிலும் மத்தியஸ்தர் அவர்களை அங்கீகரிப்பார். பரிசுத்த வழியில் நடப்பதற்கு அவர்கள் தயாரான உடனேயே, அவர்கள் அவருடைய பிள்ளைகளாக எண்ண்ப்படுவார்கள்.

## கிறிஸ்து – உண்மையாக ஒரு புது சிருஷ்டி.

### கே: 61:1 :: கேள்வி (1910) - 1

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்." என்று 2 கொரி.5:17ம் வசனத்தில் வாசிக்கிறோம். கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒருவர் உண்மையாகவே ஒரு புதுசிருஷ்டியாக இருக்கின்றாரா, அல்லது வெறுமனே தேவனுடைய பார்வையில் அப்படி எண்ணப்படுகிறாரா? மற்றும் பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்படும்போது, அவர் புதுசிருஷ்டியாகிறாரா, அல்லது ஆவியின் உயிர்ப்புக்காகக் காத்துக்கொண்டிருப்பாரா?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன், என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, நாம் உண்மையாகவே கிறிஸ்து இயேசுவுக்குள் புதுசிருஷ்டிகளாகிறோம், எண்ணப்படுகிறவர்களாக அல்ல. கிறிஸ்து தம்முடைய புண்ணியத்தை உங்களுக்கு அளிக்கிறபோது, அந்த எண்ணப்படுகின்ற அம்சம் நடந்திருக்கிறது. நீங்கள் இருக்கிற வண்ணமாகவே அங்கே நிலைநிற்கிறீர்கள், உங்களால் செய்ய முடிகிறதைச் சிறப்பாக செய்யுங்கள், மற்றும் தேவனுக்கு உங்களையே ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்; ஆனால் அவர் கூறுகிறார், இது பலிக்கு தகுதியாக இருக்கிறதில்லை. ஆகவே இயேசு தம்முடைய புண்ணியத்தை இதன் மேல் சுமத்துகிறார். பிறகு நீங்கள் பூரணமுள்ளவர்களாக எண்ணப்படுகிறீர்கள். அது எண்ணப்படுகிறதாக மட்டும் இருக்கிறது. தேவன் இதை அவ்விதமே எண்ணுகிறார். இதன் கீழ் இது பூரணமான பலியாக இருந்ததைப் போன்று, இந்த பலியை தேவன் ஏற்றுக்கொள்கிறார். தேவன் உங்களை புதுசிருஷ்டியாக உண்டாக்குகிறார், மற்றும் அந்த கணம் முதல் பழையவைகள் கடந்து போய்விட்டன. ஒருவேளை, நீங்கள் ஒருவனுக்கு கடனாளியாக இருந்தால், உங்களால் முடிகிற பட்சத்தில், நீங்கள் கடனை செலுத்துவதற்கான கட்டாயத்திற்குள்ளாக இருக்கிறீர்கள், ஆனால் இதை நீங்கள் செலுத்தும் திறனில்லாதவராக இருந்தால், இதை புதுசிருஷ்டி செலுத்த வேண்டியதில்லை. பொதுவான வழிமுறையில் கடன்களுக்கான ஒப்பந்தம் செய்வதற்கான உரிமை எதுவும் புதுசிருஷ்டிக்கு இல்லை. “ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்.” ஒவ்வொருவரும் தாம் எப்படி கடனுக்குள்ளாகிறோம் என்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கடன் பெறுவதற்கான பொறுப்புக்குள்ளாக்கப்பட்டால், அவர் ஏதாவது காப்புறுதி அளிக்க வேண்டும், இல்லையெனில் கர்த்தர் இதற்கு வேறு வழி ஏதாவது ஏற்பாடு செய்யும்வரைக் காத்திருப்பது உங்களுக்கு நல்லது.

## கிறிஸ்து – கிறிஸ்துவின் சரீரத்தின் பகுதியாயிருக்கும் பேர்ச்சபைகளின் அங்கங்கள்.

**கே: 61:2 :: கேள்வி (1911) - 2 -** (வெளி. 14:4): “

“ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே.” இங்கே “ஸ்திரீகள்” என்ற வார்த்தை சபையைக் குறிக்கிறதாக இருந்தால், சபைபிரிவில் தொடர்புடையவராக இருக்கும் ஒருவர் மூன்றாம் வசனத்தில் உள்ள இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் பேர்களில் ஒரு பகுதியாக இருக்கும் வாய்ப்பு உடையவராக இருப்பாரா?

**பதில்:** இந்த கேள்வி இங்கே கூட்டத்தில் இருக்கும் மெதடிஸ்ட் போதகரால் குறிப்பாக அனுப்பப்பட்டது என்று நான் புரிந்து கொள்ளுகிறேன். இந்த அனுமானம் சரியான ஒன்று என்று நான் புரிந்து கொள்கிறேன். “ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள்” என்பது பெண் பாலினத்தைக் குறிக்கிறதில்லை, ஆனால் இது வெளிப்படுத்தல் ஆகமத்தில் குறிப்பிடப்பட்ட சபையைச் சார்ந்த ஸ்திரீகளைக் குறிக்கின்றது. வெளிப்படுத்தல் ஆகமத்தில் விசேஷமாக இரண்டு ஸ்திரீகள் குறிக்கப்பட்டிருக்கின்றனர் என்று புரோட்டஸ்டாண்ட் வகையிலான வேதாகமக் கொள்கை குறியீடுகளில் எல்லாம் கண்டுணரப்படுகின்றன: ஒன்று, உண்மையான ஸ்திரீகள், மணவாட்டி வகுப்பார், மற்றொன்று பொய்யான ஸ்திரீ, மற்றும் இந்த பொய்யான ஸ்திரீ போப்பாதிக்கத்தைக் குறிப்பதாக புரோட்டஸ்டாண்டுகள் பொதுவாகப் புரிந்து கொள்கின்றனர். மேலும், மறுபடியும் மற்ற புரோட்டஸ்டாண்டுகள் புரிந்துகொள்வது என்னவென்றால், தாய் மற்றும் குமாரத்திகளைக் குறிக்கின்ற வேத வாக்கியங்கள், தாயாகிய போப்பாதிக்கத்தையும் மற்றும் அவளிடமிருந்து முளைத்து வந்த இந்த சபை பிரிவுகளாக குமாரத்திகள், அல்லது அமைப்புகளைக் குறிக்கின்றன. இந்த அமைப்புகள் கிட்டத்தட்ட தாயினுடைய சுபாவம், மனப்பாங்கு மற்றும் குணங்களை உடையதாக இருக்கின்றன. சபை என்பது, கன்னிகையான சபையாக இருக்கின்றது, அதாவது,: உலகத்தோடு ஐக்கியம் இல்லாமல் இருக்கிறது, மற்றும் ஆதிச்சபை வருங்கால மணவாளனாகிய கிறிஸ்துவை விட்டு விலகி, ரோம தேசத்துடன் இணைந்துவிட்ட தவறைச் செய்தது. இது தகாத உறவை உள்ளடக்கியதாய் இருந்தது; ஏனெனில் கிறிஸ்துவின் மணவாட்டி என்ற முறையில், பூமிக்குரிய எந்த

ஆளுகையுடனும் தொடர்புகொள்ளும் எந்த விதமான உரிமையும் சபைக்கு இருக்கவில்லை, மற்றும் ரோம பேரரசனுடன் இணைந்துவிட்டதால், அவள் தன்னுடைய நிலைப்பாட்டை இழந்தாள். இந்த விஷயத்தை விவரமாகப் பேசுவதற்கு இப்பொழுது நேரம் இல்லை, ஏனெனில் அப்படிச் செய்வதற்கு இந்த காலப்பொழுதைவிட அதிக நேரம் எடுக்கும், ஆனால் நாங்கள் இந்த கேள்விக்குரிய பதிலில் சிலவற்றை வெறுமனே சுருக்கமாகக் கோடிட்டுக் காண்பிக்கிறோம். இருண்ட யுகங்கள் என்று நாம் அழைக்கின்ற நீண்ட இருண்ட காலப்பகுதிக்குப் பின்னர், பொதுவான குழப்ப மனநிலை முளைவிட்டது; பல்வேறு சீர்திருத்த இயக்கங்கள் துவங்கப்பட்டன மற்றும் அவைகளில் ஒன்றாக லூத்தர் முதன்மையான நபர்களில் ஒருவராக இருந்த ஜெர்மானிய சீர்திருத்த இயக்கம் இருந்தது. மற்றும் சுவிங்கிலி, மெலங்க்தான் போன்ற மற்றவர்கள் இருந்தனர். இந்த நல்ல மனுஷர்கள் தேவனுடைய வார்த்தையின் சரியான புரிந்துகொள்ளுதல் மற்றும் அதிகமான சத்தியத்திற்காக விடாமுயற்சி செய்தனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு வெற்றி பெற்றனர், ஆனால் அது ஒரு ஒரு பகுதியளவாக இருந்தது; தேவனுடைய வார்த்தையின் முழுமையான, தெளிவான வெளிச்சத்தைக் காண்பிப்பதற்கு அப்போது தேவனுக்கு ஏற்ற காலமாக இருக்கவில்லை, ஆனால் அவர் ஏற்ற காலம் வரைக்கும் ஜனங்களை கணிசமான அளவுக்கு இருளில் வைத்திருக்க அனுமதிக்கும் நோக்கம் கொண்டிருக்கிறார். அந்த காலத்தில் இருந்தவர்களில் சிலர் தேவனிடம் மிகவும் உண்மையுள்ளவர்களாகவும் மற்றும் இந்த உலகத்தின் காரியங்களிலிருந்து விலகி இருந்தும் மற்றும் தனியாகவும் இருந்தனர், இப்படியாக அவர்கள் கன்னிகைக்குரிய குணலட்சணத்தை தக்க வைத்திருந்தனர். அவர்களில் மற்றவர்கள் உலக அரசாங்கத்தினால் வசீகரிக்கப்பட்டார்கள், மற்றும் இதன் விளைவாக, பல்வேறு புரோட்டஸ்டாண்ட் சபை பிரிவுகளின் மத்தியில் ரோம சபை மற்றும் ரோம அரசாங்கத்திற்கு இடையே நிலவியிருந்த அதே மாதிரியான நிலைமைகள் அவர்களிடம் பரவியிருந்தன. சபைக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இருந்த அந்த ஐக்கியத்தின் நிலைமை ரோமன் கத்தோலிக்க சபையை ஒரு வேசி அமைப்பாக, கர்த்தரிடம் அவளுடைய உறுதிமொழிக்கு முற்றிலும் இணக்கமாக வாழாமல் இருப்பதை உருவகமாக உள்ளடக்கியிருந்தது. அப்படியே இதே விதியைப் பிரயோகம் பண்ணி, ஜெர்மானிய சபையை சமமாக ஒரு வேசி அமைப்பாக உண்டுபண்ணுகிறது, மற்றும் ருஷ்ய சபையை அதே முறையில் வேசி அமைப்பாகவும், மற்றும் இங்கிலாந்து சபையையும் அதே முறையில் வேசி அமைப்பாகவும் மற்றும் சுவீடன், நார்வே மற்றும் டென்மார்க் சபைகளும் அதே முறையில் வேசி அமைப்பாகவும் உண்டுபண்ணுகிறது. வெளிப்படுத்தல் ஆகமத்தில் உபயோகப்படுத்தப்படும் விதமாக, "வேசித்தனம்" என்ற சொல் வெறுமனே ஒரு அடையாளமான பதம் ஆகும் என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்; இதைப் புரிந்துகொள்வதற்கு வேறு ஒன்றும் அதிகம் இருக்கவில்லை, அல்லது, இங்கிலாந்து சபையின் ஜனங்கள் வேசிகள் என்றோ, அல்லது, அந்த வகையைச் சார்ந்த வேறு எதையும் குறிக்கிறதில்லை, தேவனைக் குறித்தும் மற்றும் அவருடைய திட்டத்தைக் குறித்தும் அந்த அமைப்பின் தவறான மனப்போக்கை அடையாளப்படுத்துகிற ஒரு உருவகமாக இருக்கின்றது.

தேவன் தம்முடைய நாமத்திற்காக உலகத்திலிருந்து ஒரு ஜனங்களை வெளியே எடுப்பதற்கு உத்தேசித்தார்,. மற்றும் இப்பொழுது ஜீவனுள்ள தேவனுடைய இந்த சபை கிறிஸ்துவாகிய ஒரே புருஷனுக்கு ஒரு கற்புள்ள கன்னிகையாக நியமிக்கப்பட்டிருக்கிறதாக பரிசுத்த பவுல் நமக்குத் தெரிவிக்கிறார், மற்றும் மணவாளன் வரும் வரைக்கும் மற்றும் கலியாணம் நடக்கும் வரைக்கும் அவள் கலியாணம் பண்ணாமலும், அல்லது கலியாணம் பண்ணுவதற்கு எதிர்பார்க்காமலும் இருக்க வேண்டியுள்ளது. அதற்கு மாறாக கலியாணம் பண்ணுதல் சரியானதாக இருந்தது என்று ரோம சபை உரிமை கோருகிறது. அவள் கலியாணமானவள் என்று உரிமைகோருகிறாள், மற்றும் அவள் பிள்ளைகள் உடையவளாயிருக்கிறாள் என்று உரிமைகோருகிறாள். வேறு வார்த்தைகளில் சொன்னால், ரோம சபை குறிப்பாக அதிகார படிநிலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதிகார படிநிலை என்பது, அதிகாரம் சார்ந்த சபை கத்தோலிக்க சபையின் சாதாரண அங்கத்தினர்களிலிருந்து உயர்ந்த ஸ்தானம் கொண்டதாகவும் மற்றும் தனிப்பிரிவாகவும் இருக்கின்றதை அர்த்தப்படுத்துகின்றது. அதாவது, சாதாரண கத்தோலிக்கன் கத்தோலிக்க சபையின் அங்கமாகவே

இருக்கிறதில்லை. அவர்களின் சம்பாஷனையில் பாதிரியார்கள் எல்லோரையும் தந்தையாகவும் மற்றும் எல்லா ஜனங்களையும் பிள்ளைகளாகவும் பேசுகிறதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்; அவர்கள் சபையின் பிள்ளைகளாக இருக்கின்றனர். ஆகவே சபை பிள்ளைகளைப் பெற்றெடுத்திருப்பதாக வெளிக்காட்டிக்கொள்கிறது. ரோமன் கத்தோலிக்க சபை இந்த பிள்ளைகளைப் பெற்றெடுத்திருப்பதாக உரிமை கோருகின்றது மற்றும் அந்த சபை தன் பிள்ளைகளை நூற்றுக்கணக்கான மில்லியன்களில் எண்ணிக்கையிடுகிறது. மற்றும் புரோட்டஸ்டாண்டுகளும் இதைப் போன்ற தவறுக்குள்ளாக விழுந்து, மில்லியன்கள் அளவில் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர்; ஒவ்வொரு பிரிவும் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இது தவறான எண்ணம் ஆகும். கலியாணம் வரைக்கும், பிள்ளைகள் பெற்றுக்கொள்வது இருக்காது. கிறிஸ்துவின் மணவாட்டி அவருடன் மட்டும் இணைந்திருக்கும் ஒரு கற்புள்ள கன்னிகையாக இருக்க வேண்டியுள்ளது. தேவனுடைய ஒழுங்கின்படி, பிள்ளைகள் வெளிவருவது கலியாணத்திற்குப் பின்பு இருக்கக்கூடியதாக உள்ளது. கிறிஸ்துவின் அரசாட்சியின் ஆயிரம் வருஷங்கள் முழுவதிலும் கிறிஸ்து மனுக்குல உலகத்தாருக்கு தகப்பனாகவும், அல்லது ஜீவன்-அளிப்பவராகவும் மற்றும் சபை மனுக்குல உலகத்தாருக்கு தாயாகவும், அல்லது ஜீவன்-தக்கவைப்பவராகவும் இருக்கும், மற்றும் மனுக்குல உலகத்தார் விருப்பப்பட்டால், சீர்பொருந்தும் சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு வந்தவர்களாய், மற்றும் இப்படியாக கிறிஸ்துவின் பிள்ளைகளாகவும் மற்றும் சபையின் பிள்ளைகளாகவும் ஆவார்கள். ஆகவே நம்முடைய கர்த்தர் கிறிஸ்து நித்திய பிதாவாக இருப்பவராக வேத வாக்கியங்களில் அடையாளப்பூர்வமாகக் குறிக்கப்படுகிறார். அவர் பரலோக பிதாவாகிறார் என்று இதற்கு அர்த்தமில்லை, ஆனால் அவர் மனுக்குல குடும்பத்தாருக்கு நித்திய ஜீவனின் தகப்பனாக இருக்கிறார். அவர் சபைக்கு தகப்பனாக இருக்கிறதில்லை; அவர் நம்முடைய மூத்த சகோதரர். அவர் நம்முடைய மணவாளனாயிருக்கிறார், ஆனால் சபைக்கு தகப்பனாக ஒருபோதும் குறிக்கப்படவில்லை. ஆகவே அப்போஸ்தலர் கூறுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் - நம்மை ஜெநிப்பித்திருக்கிறார்." அவரை ஜெநிப்பித்த அவரே நம்மை ஜெநிப்பித்திருக்கின்றார், மற்றும் அவர் வருங்கால சீர்பொருந்தும் வகுப்பாருக்கு தகப்பனாகப் போகிறார் மற்றும் இப்போது வளர்ச்சியடைந்து வருகின்ற சபை இன்னும் தன்னுடைய கன்னிகைத்தன்மையை தக்க வைத்துக்கொண்டிருக்கின்றது மற்றும் அந்த சீர்பொருந்தும் வகுப்பாருக்கு தாயாகப் போகிறது. ஆகவே என் அருமை நண்பர்களே, ஆகவே 'வேசித்தனம்' என்ற வார்த்தையை வேதாகமம் எப்படி பயன்படுத்துகின்றது மற்றும் இதனுடைய துல்லியமான அர்த்தம் என்ன என்பதை நீங்கள் பார்க்கலாம்.

இப்போது மிகவும் குறிப்பாக நம்முடைய கேள்விக்கு வருவோம், ஸ்திரீகளால் கறைபட்டிருப்பதின் முக்கியத்துவம் என்ன? இது கிட்டத்தட்ட யூகமான விஷயமாக இருக்கலாம்; இது எதை அர்த்தப்படுத்துகின்றது என்பதில் சில வேறுபாடுகளுக்கு இடம் இருக்கலாம். எங்களுடைய எண்ணம் இதுவாக இருக்கின்றது, மெதடிஸ்ட் சபையின் அங்கமாக, அல்லது இங்கிலாந்து சபையின் அங்கமாக, அல்லது ரோம சபையின் அங்கமாகியிருக்கிறதினால் ஒருவர் அவசியம் கறைபடுகிறார் என்று அல்ல; இந்த சபைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தமானவர்களும் மற்றும் தூய்மையானவர்களும் இருந்து வந்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன், ஆனால் அந்த பரிசுத்தமானவர்கள் கறைப்பட்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அவளிடத்தில் இருந்தார்கள், ஆனால் அவர்களைச் சார்ந்தவர்களாக இருக்கவில்லை. ஒரு வித்தியாசம் இருக்கின்றது என்பதை நீங்கள் கவனிக்கலாம். தேவன் தம்முடைய சில பிள்ளைகள் பாபிலோனில் இருக்கின்றதைப் பற்றிப் பேசுகிறார். வேதாகமத்தின்படி இயேவின் வார்த்தைகளின்படி, இந்த காரியங்களின் முழு அமைப்பு பாபிலோன் ஆகும். பாபிலோன் போப்பாதிக்க அமைப்பாகிய தாயின் பெயராக இருக்கின்றது மற்றும் குமாரத்திகள்கூட பாபிலோன் என்ற அதே பெயரை உடையதாக இருக்கின்றது. மற்றும் பாபிலோன் எதை அர்த்தப்படுத்துகிறது? இதற்கு குழப்பம், கலவை மற்றும் தகாத உறவை அர்த்தப்படுத்துகின்றது. இது தான் பாபிலோன் என்ற வார்த்தையில் உள்ளடக்கியிருக்கின்றது. இஸ்ரயேலின் பிள்ளைகள் பாபிலோனுக்குக் கூட்டிச்சென்ற போதிலும், அவர்கள் பாபிலோனியர்களாக இருந்ததில்லை,

அதைப் போன்றே இப்போது சிலர் பாபிலோனில் இருக்கின்றனர் மற்றும் பாபிலோனைச் சார்ந்தவர்களாக இருக்கிறதில்லை. அங்கே ஒரு வேறுபாடு இருந்தது. பாபிலோனுக்கு சிறையிருப்பில் கொண்டுபோகப்பட்ட மாம்சீக இஸ்ரயேலர்களில் அவர்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்கும் மற்றும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு திரும்பவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருந்தால், அவர்கள் அப்படிச் செய்யலாம் என்று ஏற்ற காலத்தில் மாம்சீக இஸ்ரயேலர் எல்லாருக்கும் செய்தி அனுப்பினார், மற்றும் கோரேஸ் அந்த ஆணையைப் பிறப்பித்தார் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும் மற்றும் அவர்களில் அநேகர் திரும்பினர். மற்றும் ஆகவே பாபிலோனில் இருக்கின்ற அவருடைய ஜனங்கள் எல்லோருக்கும் ஒரு அழைப்பை அளித்திருக்கின்றார், அதாவது, அவர்கள் உண்மையில் அவருடைய ஜனங்களாக இருப்பார்களானால், அவர்கள் பாபிலோனை விட்டு வெளியே வர வேண்டும். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்காத வரைக்கும் எவர் ஒருவரும் பாபிலோனை விட்டு வெளியே வர அழைக்கப்படமாட்டார்கள். சொல்லப்படுகின்ற எதையும் அவர்கள் கேள்விப்படவில்லையெனில், அவற்றுக்கும் ஜனங்கள் பொறுப்புடையவர்களாக இருக்கமாட்டார்கள். ஆகவே நீங்களும் நானும் பல வருஷங்களாக பாபிலோனில் இருந்திருக்கலாம் மற்றும் எந்த பொறுப்பு அல்லது தூய்மையின்மையை உடையவர்களாக இல்லாமலிருக்கலாம், ஏனெனில் சிறந்த எதையும் நாம் அறியவில்லை. தேவனை நோக்கியும் மற்றும் தேவனுடைய திருவசனத்தின் விஷயங்களை நோக்கியும் நம்முடைய இருதயத்தின் சொந்த மனப்பாங்கு தூய்மையான கன்னிகைத்தன்மை வாய்ந்த மனப்போக்காக இருந்தது. ஆகவே அப்போது தேவன் பாபிலோனில் அவருடைய சில ஜனங்களாக அவர்களைக் குறித்துப் பேசுகிறார். அவர்கள் தூய்மை உள்ளவர்களாக, அவர்கள் கன்னிகைகளாக இருந்தால் தவிர, மற்றபடி, அவர்கள் அவருடைய ஜனங்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் அசுத்தமான அந்த கணமே, அவருடைய ஜனங்களாக அவர்களைப் பிரித்தெடுக்கமாட்டார். ஆனால் அவர் கூறுகிறார், “நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமல், அவளைவிட்டு வெளியே வாருங்கள்.” நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு இன்னும் உடன்படவில்லை என்பதை அது உணர்த்துகின்றது; அவளிடத்தில் இருக்கிறீர்கள், ஆனால் இன்னும் உடன்படாமல், என்னுடைய ஜனங்களாக இருக்கிறீர்கள். அது எப்படி? ஏனெனில் நீங்கள் சிறந்த எதையும் அறிந்திருக்கவில்லை. நீங்கள் சிறந்த எதையும் பார்க்கவில்லை; நீங்கள் பார்த்திராத எதற்கும் மற்றும் புரிந்துகொண்டிராத எதற்கும் பொறுப்புடையவர்களாக இருக்கவில்லை. நல்லது, பின்பு, நாம் எப்போது பொறுப்புடையவர்களாவோம்? நமக்கு எப்பொழுது பொறுப்பு வரும்? பொறுப்பு எதை உள்ளடக்கியதாய் இருக்கின்றது? இது, என் அருமை நண்பரே: நான் எப்படி பிறந்தேன் மற்றும் பிள்ளைப்பருவம் முதற்கொண்டு என் தலையில் என்ன இருந்தது என்பதற்கு நான் பொறுப்புடையவனாக இருந்ததில்லை; மற்றும் தேவன் என்னை, அல்லது உங்களை, அல்லது வேறு எவரையும் பொறுப்புள்ளவராகப் பிடித்து வைத்திருக்கவில்லை; மனுஷர்களின் இந்த அமைப்புகளுக்குள் இருக்கும் இந்த தவறுகளை நாம் பார்த்த பிறகு, சத்தியத்தை நாம் பார்க்கத் துவங்கிய பிறகு, தேவனுடைய பரிசுத்த நாமம் தூஷிக்கப்படுவதை நாம் பார்க்கத் துவங்கிய பிறகு, அதாவது அவருடைய பரிசுத்த குணலட்சணம் தவறாகச் சித்தரிக்கப்படுவதைப் பார்த்த பிறகு, நம்முடைய பரலோக பிதாவைப் பற்றி நாம் சொல்லியிருக்கிறவைகளைக் குறித்து, நாம் நம்மையும் அல்லது நம்முடைய பூமிக்குரிய பெற்றோர்களைப் பற்றி பேசுவதற்கு வெட்கப்படுகிறவர்களாக இருப்போம், அவர்கள் எல்லாரும் குறைபாடு உள்ளவர்களும் மற்றும் விழுந்துபோனவர்களுமாய் இருக்கிறார்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம் - - நம்முடைய பரலோக பிதாவைப் பற்றி நாம் கூறியிருக்கிற விஷயங்கள் அவதூறானவைகளாக இருந்தன, நாம் அவரை மிகவும் கொடூரமான செயல்களாகவும் மற்றும் மிகவும் கொடூரமான நோக்கங்களாகவும் குற்றம் சுமத்தியிருக்கிறோம், அவர் நம்முடைய மனுக்குல உலககத்தைப் படைத்தார், மற்றும் தாம் என்ன செய்துகொண்டிருந்தார் என்பதை அறிந்தவராக, முழுமையான வல்லமை மற்றும் முழுமையான ஞானம் உடையவராக இருந்தார், மற்றும் ஆரம்பம் முதற்கொண்டு ஒவ்வொரு ஆயிரம்பேர்களில் தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது பேர்களைக் கண்டனம் செய்யும் நோக்கமுடையவராக இருந்து, மற்றும் அவர்களை நித்திய காலம் முழுவதும் வறுத்தெடுக்கின்றார் மற்றும் அவர்களைக் கையாளுவதற்கு தீயினால்

பாதிக்கப்படாத பிசாசுகளை உருவாக்கியிருக்கிறார்; மற்றும் நரகம் என்று அழைக்கப்படும் ஒரு மாபெரும் இடத்தை அவர் படைத்தார், மற்றும் இதில் அவருடைய கொடூரமான செயல்கள் எல்லாம் நடைபெற்று வந்தன - - இவ்வாறு நம்முடைய பரலோக பிதாவை அவதூறாகப் பேசினால். உங்களைப் பற்றி, அல்லது என்னைப் பற்றி எவராவது பேசினால், நாம் கோபம் அடையாமல் இருப்போமா? நாம் உண்மையில் இருப்போம். நீங்கள் ஒரு எலியுடன் அப்படி நடந்துகொண்டீர்கள் என்று அவர்கள் சொன்னால், நீங்கள் கோபம் அடைவீர்கள், மற்றும் நீங்கள் கோபம் கொள்வதற்கு தகுதியுள்ளவர்களாயிருப்பீர்கள். ஒரு எலியிடம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிற மனுஷன் ஒரு கனமுள்ள மனுஷன் இல்லை. கனமுள்ள மனுஷன் எவனும் பரிதாபமான ஒரு எலியை - - இது பிறப்பதற்கு முன்கூட்டியே குறிக்கப்படுவது, இதை முன்னரே நித்திய வேதனைக்கு தீர்மானிப்பது - - அந்த முறையில் நடத்தமாட்டான். இதைத் தான் நம்முடைய பரலோக பிதாவிடம் குற்றம் சுமத்திவருகிறவர்களாக இருக்கிறோம். இது மிகவும் மோசமானது, இது மிகவும் பயங்கரமானது, தேவன் நம்மை மன்னிக்கிறார்! அவர் செய்வார் என்பதில் நான் நிச்சயமாக இருக்கிறேன்; இதைக் குறித்து நாம் வெட்கப்படுகிறவர்களாக இருக்கிறோம். ஆனால் இப்போது பொய் கொள்கையின் ஒரு கருத்தை மட்டும் எடுத்துக்கொள்வோம் - - மற்ற கருத்துக்களும் இருக்கின்றன; மற்றும் நல்ல கொள்கையின் மற்ற கருத்துக்களும் இருக்கின்றன. நாம் விசுவாசித்திருக்கிறவைகள் எல்லாம், மற்றும் நம்முடைய முன்னோர்கள் விசுவாசித்தவைகள் எல்லாம், தவறானவை என்று ஒரு கணம் நான் உரிமைகோரவில்லை - - இல்லவே இல்லை. நாம் பாபிலோனில் இருந்தபோது, நாம் பரிசுத்தவான்களாக இருந்தோம், மற்றும் நம்முடைய பரிசுத்தத் தன்மையை தக்கவைப்பதற்கு விரும்பினோம்; ஆனால் இந்த யுகத்தின் முடிவில் இப்போது வந்திருக்கும் போது, தேவன் திரையை விலக்கிக்கொண்டு இருக்கிறார், மற்றும் அவர் இந்த நாளில் அவருடைய திட்டங்கள், அவருடைய நோக்கங்கள், அவருடைய ஏற்பாடு, மற்றும் அவருடைய திருவசனத்தின் உண்மையான போதனை தொடர்பானவற்றை அதிக அளவில் தெளிவாக நமக்குக் காண்பிக்கின்றார். மற்றும் இப்போது, இந்த கொள்கை தேவனுக்கு விரோதமான தூஷணமாக இருக்கின்றது என்று நாம் பார்த்த பிறகு, இது மனுஷீக சிந்தையினால் இட்டுக்கட்டப்பட்டது, வெளிப்படையாக இது நம்முடைய எதிராளியாகிய பிசாசினால் தூண்டப்பட்டது என்று நாம் பார்த்த பின்பு - - இது எவ்வளவு மோசமானதாக இருக்கின்றது என்பதை நாம் பார்த்த பின்பு, அப்போது, நாம் பூமிக்குரிய அமைப்புகளைக் கடைப்பிடிப்பதற்கும், மற்றும் நம்முடைய ஜீவன், ஆற்றல், தாலந்துகள் மற்றும் பொருட்களை அளிப்பதற்கு விருப்பங்கொண்டும், இந்த கொடூரமான போதனைகளை நிலைநிறுத்துகிறவர்களாயிருந்தால், நாம் அங்கே மற்றவர்களைவிட மோசமானவர்களாய் இருக்கிறோம்; அந்த முழுக் கூட்டத்தில் மோசமானவர்களாக நாம் இருக்கிறோம். இதை முழுமையாக அறிந்து மற்றும் வேண்டுமென்றே செய்கிற மனுஷன் தான் குறை கூறத்தக்க ஒரே மனுஷனாக இருப்பான். நீங்களும் மற்றும் நானும் இதில் தங்கியிருந்து, மற்றும் இந்த காரியங்களைப் பற்றிக்கொண்டு நிலைத்திருந்தால், அங்கே இருக்கிற சிலரில், மற்றும் இன்னல் என்ன என்பதைப் பற்றிய உணர்வில்லாதவர்களைக் காட்டிலும் குற்றஞ் சாட்டப்படுவதற்கு அதிகம் தகுதியுள்ளவர்களாக இருப்போம்.

ஆகவே, இந்த ஸ்திரீகளால் - இந்த பூமிக்குரிய அமைப்புகளினால் - கறைபடுகிறவர்களாக சிலர் இருக்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது. அவைகளை பூமிக்குரிய அமைப்புகளாக ஏன் கூறுகிறீர்கள்? நீங்கள் அவைகளை பரலோக அமைப்பிற்கு முரண்பாடாக ஏன் காண்பிக்கிறீர்கள்? தேவன் ஒரே ஒரு சபையை மட்டும் உடையவராயிருக்கிறார்; இதை மறுக்கக்கூடிய மனுஷன் எவனும் உலகத்தில் இருக்கவில்லை. பரலோகத்தில் பேரெழுதப்படுகின்ற முதற்-பேறானவர்களின் சபை, ஜீவனுள்ள தேவனுடைய சபை, ஒரே சபை மட்டும் இருப்பதாக வேதாகமம் போதிக்கிறதை, தன் வேதாகமத்தில் விசுவாசம் எதையும் வைத்திருக்கின்ற நல்லுணர்வு உடைய எவனும் மறுக்கவே மாட்டான். அப்படியானால், எங்கிருந்து, நூற்றுக்கணக்கில் எண்ணிக்கையுள்ள கத்தோலிக்கர் மற்றும் புரோட்டஸ்டாண்டுகளின் இந்த வித்தியாசமான சபைபிரிவுகள் வருகின்றன? நல்லது, அவைகள் மனுஷர்களிடமிருந்து வருகின்றன. அவைகள் தவறுகளிலிருந்து வருகின்றன. அவைகள் அறியாமையிலிருந்து வருகின்றன. அவைகள் மூடநம்பிக்கையிலிருந்து வருகின்றன. இவைகள்

வெளிச்சத்தைப் பெறுவதற்கான முயற்சிகளின் விளைவுகளாகவும் மற்றும் வெளிச்சத்தை எப்படி பெறவேண்டும் என்பது குறித்த தவறான எண்ணங்களாகவும் இருக்கின்றன, அந்த ஜனங்களை நீங்கள் குறை கூறுகிறீர்களா? இல்லவே இல்லை. நாம் யாரையும் குற்றஞ்சாட்டுகிறதில்லை விஷயத்தின் உண்மை விவரங்களைப் பார்த்த பிறகு, இந்த அமைப்புகளில் நிலைநின்று, மற்றும் ஏற்றுக்கொண்டு, அவைகளைப் பற்றிக்கொண்டிருக்கின்ற நபரிடம் குற்றம் வருகிறது. இப்போது அவர் குறைபடுகிறார். அவர் எப்படி கறைபடுவார்? அவருடைய முழு மனசாட்சியும் ஏன் கறைபட வேண்டும்? ஏனெனில் அந்த அமைப்பு தவறானது என்று அவர் அறிகிறார்; தவறானதாக இருக்கின்றது என்பதை அவர் கண்டுணர்ந்து, மற்றும் தேவனிடம் உண்மையாயிருக்கவில்லை என்றும் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கு உண்மையாயிருக்கவில்லை என்றும் உணர்ந்த பின்பு, அதனுடன் அவர் தொடர்பு வைத்துக்கொண்ட உடனேயே, அவர் கறைபடுகிறார்; அவர் தன்னுடைய மனசாட்சியை மட்டும் கறைபடுத்தவில்லை, ஆனால் அவர் தேவனை அவமரியாதை செய்கிறார், மற்றும் சபை பிரிவுக்கும் மற்றும் எல்லாவற்றிற்கும் அவமதிப்பு செய்கிறார். எந்த மனுஷனும் சபைக்குள்ளாக இருக்கிறவராகவும், மற்றும் அந்த சபைபிரிவின் போதனைகளை மறுக்கிறவராகவும் இருப்பதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கின்றது? அப்படிச் செய்வதற்கு அவர் தன்னையே பயனற்றவராக்கிக் கொள்கிறார், அப்படி இல்லையா? தான் விசுவாசிக்கவில்லை என்று அவர் அறிகிறதை, விசுவாசிக்கிறதாக வெளிக்காட்டிக்கொண்டு, தான் போதிக்கவில்லை என்று அவர் அறிகிற எதையும் போதிக்கிறதாக உரிமைகோருகிறவராய், அல்லது, வேறு வரிசையில், தவறு என்று அவர் அறிந்திருக்கிறதைப் போதிக்கிறவராய், மற்றும் தான் விசுவாசிக்காததை விசுவாசிக்கிறதாக வெளிக்காட்டிக் கொள்கிறவராய், தன்னையே ஒரு ஏமாற்றுக்காரராக அவர் அடையாளப்படுத்திக் கொள்கிறார்; அனைத்து விஷயமும் தவறானதாக இருக்கின்றது; இப்படிப்பட்டவர்கள் ஸ்திரீகளால் கறைபடுகிறார்கள். ஆனால், கேள்வியில் சரியானதையும் மற்றும் தவறானதையும் பார்க்கும்போது, வெளியே வருகிறவர்கள், சரியானவற்றிற்குத் தங்களின் நிலைப்பாட்டை எடுக்கிறவர்களாகும்போது, அவர்கள் தங்களின் ஆத்துமாக்களை பாபிலோனிலிருந்து விடுவித்துக்கொள்கிறார்கள். "நீங்கள் பாபிலோனின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாக்களைத் தப்புவியுங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்." இப்போது, இது பாபிலோன் என்று ஒருவர் பார்க்காத வரைக்கும், அதை விட்டு வெளியே வருவதற்கான பொறுப்பு எவருக்கும் இல்லை, ஒவ்வொரு நேர்மையான நபருக்கு இது பாபிலோனாக இருக்கின்றது என்ற பரிந்துரை, அவர் ஒரு ஆய்வை மேற்கொள்ள வேண்டும், மற்றும் முழுமையாக, அவர் பாபிலோனில் இருக்கிறாரா,, அல்லது இல்லையா என்பதை அவர் அறிந்துகொள்ள வேண்டும் என்பதையே அர்த்தப்படுத்துகிறது. "நல்லது, தேவனுடைய சத்தம் சொல்கிறது, 'பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்' மற்றும் இந்த அமைப்பு பாபிலோனாக இருக்கின்றது என்று நான் நம்புகின்றேன், ஆனால் இது உண்மை என்று நான் காண்பதில் பயம் கொள்வதினால், நான் இதற்குள்ளாக உற்றுநோக்க விரும்பவில்லை." என்று அவர் சொல்வாரானால், அவர் தனக்குத் தானே நேர்மையற்றவராக இருக்கிறார் என்று அர்த்தமாகிறது; அவர் தன்னையே கறைபடுத்திக் கொள்கிறார். முற்றிலும் நேர்மையுள்ளவராக இருப்பதற்கு ஒரே வழி இருக்கின்றது, மற்றும் அது நேர்மையாக இருப்பது தான்.

## கிறிஸ்து – சகலத்திலும் சகலமுமாக.

### கே: 65:1 :: கேள்வி (1912 - Z) - 1

நம்முடைய கர்த்தர் நமக்கு எந்த முறையில் ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்? - - (1 கொரி. 1:31).

**பதில்:** மாபெரும் பல்வேறு வழிகளில் நமது கர்த்தர் நமக்கு ஞானமானார். அவருடைய சரீரமாகிய சபைக்கு அவர் தலையானவராக இருக்கிறார். மற்றும் தலை அறிவின் மையமாக இருப்பதால், அப்படியே கர்த்தர் இயேசு அவருடைய சபைக்கு தலையானவராக இருக்கிறார். ஆனால் இந்த உரைப்பகுதியின் கருத்து, வளர்ச்சிபெறும் ஒழுங்குவரிசையைச் சார்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. அப்போது, இயேசு நமக்கு நீதியளிப்பவராகவும் பரிசுத்தமாக்குகிறவராகவும்

ஆவதற்கு முன், அவர் நமக்கு எப்படி ஞானமானார் என்பதை கவனித்துப் பார்க்கையில், நம்முடைய கர்த்தரையல்லாமல், “ஒருவனும் பிதாவிடத்தில் வரான்” என்ற வேதாகம அறிக்கையை நாம் தெரிந்துகொள்கிறோம்.

பரிசுத்தமாக்கப்படுதலுக்கு முன் பிதா இழுத்துக்கொள்கிறார், ஏனெனில் பிதாவின் வழியாகத் தவிர, எவரும் கிறிஸ்துவிடம் வர முடியாது. பிதா இழுத்துக்கொண்ட பிறகு, பிதாவிடம் **எப்படி வர வேண்டும்** என்று நமக்கு அறிவுறுத்துகின்ற கிறிஸ்துவிடமிருந்து **ஞானம்** வருகிறது. சீஷர்கள் நம்முடைய கர்த்தரால் அறிவுறுத்தப்பட்ட அதே மாதிரியாக, இது சுவிசேஷ யுகம் முழுமைக்கும் அப்படியே இருக்கின்றது. வேறு எந்த வழியிலும் மனுஷர்கள் இரட்சிக்கப்பட முடியாது - - “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.”

பிதா ஏற்பாடு செய்திருக்கின்ற விதமான பரிசுத்தமாக்கப்படுதலின் வழியைத் தவிர, பாவிகள் பிதாவிடத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. இந்த பரிசுத்தமாக்கப்படுதல் அவர்களின் ஆசீர்வாதத்தை அர்த்தப்படுத்துகின்றது. “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; **நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்**.” (மத்.11:28.) என்று அறிவுறுத்தப்படுவதற்கான தேவை நமக்கு இருக்கின்றது. **அவர் ஒளியாயிருக்கிறார்** என்று நாம் வாசிக்கிறபடியால், ஒளியானது இயேசுவுக்கு **முன்பு** இருந்ததில்லை. அந்த அறிக்கையை அவரே கூறுகிறார், “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்.” - - யோவான் 1:9; 8:12.

இந்த ஞானம் நம்முடைய கர்த்தரால் முதலில் பிரகடனப்படுத்தப்பட்டது. அவருடைய சீஷர்களுக்கு அறிவுறுத்திய அதே ஞானம் மனுஷர்களை பிதாவினிடத்தில் திரும்புவதற்கு வழிநடத்துகின்றது, சீஷத்துவம் எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை அவர்களுக்கு அறிவுறுத்துகின்றது, சீஷத்துவத்தை ஆதாயப்படுத்திக்கொள்ள எந்த படிகளை எடுக்க வேண்டும் என்று அவர்களை அறிவுகூர்மையாக்குகின்றது. அவருடைய சீஷர்களாயிருக்கிறவர்கள் **தங்களுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்ற வேண்டும்.** ஒருவர் ஞானத்தை எந்த வழியில் பெற்றிருந்தாலும், இது அவருக்கு நம்முடைய கர்த்தர் இயேசு கிறிஸ்துவிடமிருந்து தான் வருகிறது; இந்த ஞானம் இல்லாமல், தேவனிடம் எப்படி வர வேண்டும் என்பதை நாம் அறிய இயலாது. இந்த ஞானம் இல்லாமல் ஒருவரும் எப்போதும் வர முடியாது. ஆகவே அவருடைய ஞானம் சீஷத்துவத்திற்கு என்ன வெகுமதி இருக்கும் என்பதை அறிவுறுத்துகிறது.

நம்முடைய கர்த்தர் நமக்காக - - நம்முடைய சார்பாக தேவனுக்கு முன்பாகத் தோன்றினார். இப்படியாக, பிதாவின் திட்டம் மற்றும் ஏற்பாட்டிற்கு இணங்க, அவரால் பிதாவிடத்திற்கு வருகிறவர்களுக்கு அவர் நீதியானர், மற்றும் ஜீவனின் அர்ப்பணிப்பினால் தவிர, எவரும் நீதிமானாக்கப்படுதலை பெற முடியாது. பிறகு அவர்களுடைய பரிசுத்தமாக்கப்படுதலுக்கு அவசியமான ஒவ்வொன்றிலும் அவர்களுக்கு துணைபுரிவதினால் அவர் அவர்களின் பரிசுத்தமானார். அவர்கள் செய்வதற்கு சித்தம் உடையவர்களாக இருக்கிறார்கள், மற்றும் அவர்கள் இந்த சித்தம் உடையவர்களாயிருப்பதினால், அப்படியே இப்போது அவர்களுக்குள் ஜீவியத்தின் பரிசுத்தப்படுத்தப்பட்ட குணலட்சணத்தை அவர் செயறப்படுத்துகின்றார்.

## கிறிஸ்து – சரீரத்தின்.

### கே: 66:1 :: கேள்வி (1912 - Z) - 1

“சரீரம்” என்று எபி.10:5; மற்றும் எபி. 7:27ல் குறிக்கப்பட்டிருப்பது ஒரே சரீரத்தைக் குறிக்கிறதா?

**பதில்:** பலிக்காக தேவன் ஆயத்தம் பண்ணியிருந்த சரீரம் இரண்டு நிலைப்பாடுகளிலிருந்து சரியான முறையில் பார்வையிடப்படலாம்: முதலாவது, பிதா இயேசுவின் சரீரத்தை ஆயத்தம் பண்ணினார், அதில் இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் மற்றும் பாவிகளுக்கு விலகினவருமாகவும் அவருடைய தாயாரின் மூலமாக மனுஷ குடும்பத்தைச் சார்ந்தவராகப் பிறந்தார் இதுவே எல்லா விஷயத்திற்கும் அடிப்படையாக இருக்கின்றது. ஆனால் அப்போஸ்தலர் பேதுரு மற்றும் அப்போஸ்தலர் பவுலும்கூட நமக்குத் தெரிவிக்கிறார், "கிறிஸ்துவின் சரீரமாகிய" சபையை தேவன் முன்னறிந்திருந்தார், மற்றும், ஆகவே தலையானவரின் பாடுகளை முன்னறிந்திருந்தார் - - அந்த பாடுகளில் மற்றும் அவருடைய மகிமையிலும்கூட நம்முடைய பங்கை முன்னறிந்திருந்தார்.

ஆகவே, தேவன் ஆயத்தம் பண்ணியிருந்த அந்த சரீரத்தைக் குறித்துப் பேசுகையில், ஆதாமின் சரீரத்திற்கு ஒத்தவிதமாகவும் மற்றும் உண்மையாக, உடல்ரீதியாகவும் பரிபூரணமாயிருந்த ஒரு சரீரத்தை தேவன் இயேசுவுக்காக எப்படி ஆயத்தம் பண்ணினார் என்பதை சரியான முறையில் போதுமான அளவிற்கு எண்ண வேண்டியவர்களாக இருக்க வேண்டும். ஆதாமின் சரீரம் பின்பு ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டது மற்றும் மாம்சத்தின் பாவத்திலிருந்து "கிறிஸ்துவின் சரீரம்" நீதியுள்ளதாக்கப்படுவதற்கு ஏதுவான வழியைகூட ஆயத்தம் பண்ணி.யது, இவ்வாறாக கிறிஸ்து, தலையாக, தம்மை மட்டுமே ஒப்புக்கொடுக்காமல், "அவருடைய சரீரமாகிய சபையை", "பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக" ஒப்புக்கொடுக்கிறார்.

## பாவநிவாரண நாளின் பலிகளில், நிழலான பலிகள் மற்றும் நிஜமான பலிகள் வேறுபடுகின்றன.

பாவநிவாரண நாளின் நிழலான பிரதான ஆசாரியனுடைய பலியுடன், நிஜமான பிரதான ஆசாரியராகிய இயேசுவின் பாவநிவாரண நாளின் பலியை அப்போஸ்தலர் வேறுபடுத்துகிறார். நிழலான பிரதான ஆசாரியனுக்கு ஒவ்வொரு வருஷமும் ஒரு தடவை, திரும்பத் திரும்ப (நாள்தோறும் அல்ல) பலிகளைச் செலுத்தும் தேவை இருந்தது. பலியின் முதல் பகுதி, அவனுடைய சொந்த பாவத்திற்காக இருந்தது மற்றும் பலியின் இரண்டாவது பகுதி ஜனங்களின் பாவங்களுக்காக இருந்தது. இந்த இரண்டு காணிக்கைகளும் பாவநிவாரண நாளின் ஒரே பலியை உள்ளடக்கியிருந்தன. ஆகவே, நிஜத்தில், நம்முடைய கர்த்தர் இயேசு தம்மையே பலி செலுத்திய போது, அந்த பலி "அவருக்காக" இருந்தது, அதாவது, அவருடைய சரீரத்திற்காக, விசுவாசக் குடும்பத்தாராகிய அவருடைய சபையாகப் போகிறவர்களுக்காக இருக்கின்றது. பின்பு, அவருடைய பலியின் அடுத்த பகுதியாக அவருடைய சரீரத்தின் இந்த அங்கங்களின் பலியாக, அவர்களின் விருப்பங்களுக்கு இணக்கமானதாகவும் மற்றும் தெய்வீக ஏற்பாட்டிற்கு இணக்கமாகவும் செலுத்தப்பட்டு வருகின்றது.

இவ்விதமாக பாவத்திற்கான நிஜமான பாவநிவாரண நாளின் பலிகள் பதினெட்டு நூற்றாண்டுகளாக முன்னேற்றமடைந்து வருகின்றன. பலியின் விசேஷமான புண்ணியமாக நம்முடைய கர்த்தர் தம்மையே பலி செலுத்தியதாக இருந்து, இதன் மூலமாக நம்முடைய பலிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இது எல்லாம் ஒரே ஆசாரியரின் ஒரே சரீரமாகப் பலியிடப்படுகின்றது என்ற பார்வையில் தான் இது ஒரே பலியாக இருக்கின்றது. "அபிஷேகம் பண்ணப்பட்டவரின் பாடுகளுக்குப் பங்காளிகளாக இருக்கிறோம்." "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்." "ஒரு அவயவம் பாடுபட்டால், எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

## எல்லா பலிகளும் ஆசாரியனால் செலுத்தப்பட வேண்டும்.

எபி. 7:27ம் வசனத்தில் அப்போஸ்தலர் கூறினார், "ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார்," கேள்வி எழும்புகிறது, இது யாரைக் குறிப்பிடுகிறது? இது இயேசு மற்றும் அவருடைய சரீர அங்கங்கள் தம்மையே பலி

செலுத்துகிறதை அர்த்தப்படுத்துகிறதா? இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். சரீர அங்கங்கள் தாங்களே பலிசெலுத்துகிறதில்லை; அவர்கள் தங்களை ஒப்படைக்கிறார்கள்; ஆனால், தேவனைப் பொருத்தவரையில், ஆசாரியரினால், "நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியர்" இயேசுவினால் மட்டுமே பலி செலுத்தப்பட வேண்டும், இதை அவர் ஒரே தரம் செலுத்தினார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார், மற்றும் நாங்கள் பதிலளிக்கிறோம், ஒரு நிழலின் ஒரு நிறைவேறுதலாக இருக்கிறது என்பது இங்கே கருத்தாக இருக்கிறது. நிழலில் இரண்டு பலிகள் செலுத்தப்பட்டன, மற்றும் இது இங்கே அவருடைய பலியாக அழைக்கப்படுகின்றது.

யோர்தானில் நம்முடைய கர்த்தர் தம்மை ஒப்படைத்தார், மற்றும் சபையாகிய அவருடைய சரீர அங்கங்கள் எல்லோரையும் பெந்தகொஸ்தேயில் ஒப்படைத்தார். யோர்தானில் சொந்தமாக தம்மை ஒப்புக்கொடுத்தது, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது, மற்றும் கிறிஸ்துவின் பலியின் மீதமானவை வெறுமனே பலியின் நியமங்களை நிறைவேற்றுவதாக இருக்கின்றன. இந்த பலியை முழுமையாக்குவதற்கு இதற்கு சுவிசேஷ யுகம் முழுவதும் தேவைப்படுவதாக இருப்பினும், பிதாவுக்கு முன்பாக சபையின் ஒப்படைத்தல் பெந்தகொஸ்தேயில் செயற்படுத்தப்பட்டது.

இதுகூட பாவநிவாரண நாளின் நிழலில் காண்பிக்கப்பட்டது: காளையை பலி செலுத்திய பிறகு, பிரதான ஆசாரியன் இரத்தத்தை எடுத்துக்கொண்டு பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் சென்றான் மற்றும் தன் சார்பாகவும் மற்றும் தன்னுடைய குடும்பத்தார் சார்பாகவும் இதைத் தெளித்தான் - - அவனுடைய சரீரத்தின் அங்கங்கள் மற்றும் விசுவாசக் குடும்பத்தார் - - ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள்.

அடுத்து பிரதான ஆசாரியன் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு வந்து, அவருடைய (கிறிஸ்துவின்) சரீரமாக நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளை ஏற்றுக்கொள்ளப்படுவதை அடையாளப்படுத்தி, வெள்ளாட்டுக்கடாவை சங்கரித்தான். நிழலில், இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அடையாளப்படுத்தவில்லை., ஆனால் வெறுமனே சபையாகிய சரீரத்தின் பலியுடன் தொடர்பு கொண்டுள்ளதின் அவருடைய வெளிப்பாட்டைக் குறிக்கிறதாய் இருக்கின்றது. நிஜத்தில் பிரதான ஆசாரியராக நம்முடைய கர்த்தர், பெந்தகொஸ்தேயில் அவர்களின் மேல் பரிசுத்த ஆவியை அனுப்பி, மற்றும் அவர்களுடைய பலி செலுத்தப்பட்டது மற்றும் பிதாவின் பார்வையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற செய்தியை அளித்து, இவ்விதமாக, சபையில் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். அப்போதிலிருந்து வந்திருக்கிற சபையினர் எல்லோரும் அங்கே கணக்கிடப்பட்டனர் - - நம்முடைய கர்த்தரின் ஜெபத்தில் அவர் கூறியதைப் போன்று, "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன்." பெந்தகொஸ்தேயில் உடன்-பலியிடுகிறவர்களாக, கிறிஸ்துவின் பலியின் ஒரு பகுதியாக, சபையின் ஏற்றுக்கொள்ளப்படுதலைப் போன்றே, அப்பொழுதிலிருந்து தொடர்ந்து வருகின்றது மற்றும் நாம் அவருடைய சரீர அங்கங்களாயிருக்கிறோம், மாபெரும் பிரதான ஆசாரியரின் முழுமையான பலி முற்றிலுமாக நிறைவேற்றப்பட்டு முடிகிற வரைக்கும், ஒவ்வொருவரும் தன் தன் வரிசையில் பலியிட்டுக்கொண்டு இருக்கின்றனர் மற்றும் அந்த நிறைவேறுதல் சமீபத்தில் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

"கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்" (1கொரி.12:26) என்ற அறிக்கை, சபையின் மரித்த அங்கங்கள், வாழ்ந்துகொண்டிருக்கின்ற அங்கங்களோடு பாடுபடுவார்கள் என்பதையோ, அல்லது ஆவியினால் இன்னும் ஜெநிப்பிக்கப்படாதவர்கள் அப்போஸ்தலர்களுடனோ, அல்லது உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள அங்கங்களுடன் அவர்கள் அறியாதிருக்கின்ற மற்ற அங்கங்களோடு பாடுபடுவார்கள் என்று, நிச்சயமாகக் குறிக்கிறதில்லை. ஒவ்வொரு அங்கமும் மற்ற ஒவ்வொரு அங்கங்களுடன் நெருக்கமாகவும் மற்றும் ஆழமாகவும் ஆர்வம் கொண்டவர்களாய், இவ்விதமாக ஒருவரின் ஆர்வங்கள் மற்ற எல்லோருடைய ஆர்வங்களாக இருக்கும் விதத்தில், கிறிஸ்துவின் சரீரத்தில் இப்படிப்பட்ட அனுதாபம் மற்றும் ஐக்கியம் மற்றும் உறவு இருக்கின்றது என்பதை

வெறுமனே இது அர்த்தப்படுத்துகின்றது. உதாரணமாக, ஒரு சிறிய சபை அல்லது வகுப்பாக, கர்த்தருடைய ஜனங்கள் இரண்டு அல்லது மூன்று பேர்களாக இருக்கிற இடத்தில், வார்த்தையின் இந்த அர்த்தத்தில், அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறார்கள் மற்றும் ஒருவர் மற்றவருடன் ஆர்வம் கொண்டிருக்கின்றார்கள் மற்றும் ஜீவியத்தின் உபத்திரவங்கள், துன்புறுத்தல்கள் மற்றும் இன்னல்களில் ஒருவர் மற்றவருடன் பாடுபடுகிறார்கள். மேலும், வார்த்தையின் பெரிதான கண்ணோட்டத்தில், கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் எவரும், உலகத்தின் எந்த பகுதியிலும், சரீரத்தின் மற்ற அங்கங்களின் உபத்திரவங்களைக் கேள்விப்பட்டு, அவர்களுடைய உபத்திரவங்களில், அல்லது அவர்களுடைய சந்தோஷங்களில் ஆர்வத்தையும், அனுதாபத்தையும் மற்றும் உறவையும் இணையாக உணருகிறவர்களாக இருப்பார்கள்.

## மீட்பில் ஒரு பகுதியாக இல்லை.

“ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்.” என்ற அறிக்கையில், குறிப்பிடாத எதையும் நாம் வாசிப்பதில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். “மீட்கும் பொருளாக ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்.” என்று குறிக்கப்படவில்லை, ஆனால், “ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்.” என்று இருக்கிறது (எபி. 10:5), “மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு.” (எபி 2:9) நம்முடைய கர்த்தரின் பங்காயிருந்த மரணத்தின் பாடு உலகம் முழுமையின் பாவத்திற்கான மீட்கும் பொருளை உள்ளடக்கியதாய் இருந்தது. ஆனால், “மரணத்தின் பாடுகளில்” இயேசுவுடன் தொடர்புகொள்வதற்கு நீதிமானாக்கப்படுதலின் மூலமாக பிதா சபையாகிய சரீரத்தை ஆயத்தம்பண்ணினார், ஆனால் இது மீட்கும் பொருளில் பங்காளிகளாக சபையை உள்ளடக்குகிறதில்லை. ஒரே ஒரு மீட்கும்-பொருள் அவசியமாயிருந்தது, மற்றும் அது ஒரு பரிபூரண மனுஷனுடைய மரணமாக இருந்தது, மற்றும் அது இரட்சகருடன் அவருடைய அங்கங்களாக உடன்-பாடனுபவிக்கிறவர்களாவதற்கும் மற்றும் உடன்-சுதந்தரர்களாவதற்கும் சபை அழைக்கப்படுவதற்கு முன்பு, அந்த மீட்கும் பொருள் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

“பலி” என்ற வார்த்தை சிலருக்கு குழப்பம் உண்டாக்குவதாகத் தோன்றுகிறது. ஆனால் கர்த்தரிடம் நம்முடைய சரீரங்களை நாம் ஒப்படைப்பதை, கர்த்தர் நம்மை ஒப்படைப்பதோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. நிழலைத் திரும்பிப் பார்க்கும்போது, ஆசரிப்புக்கூடாரத்தில் இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள் கர்த்தரிடம் ஒப்படைக்கப்பட்டதை நாம் பார்க்கிறோம். அவைகள் பலியிடுவதற்கு ஒப்படைக்கப்பட்டன, மற்றும் அப்படியே, அவைகளைப் பற்றி பேசும்போது, ஒருவர் சரியான முறையில் சொல்ல முடியும், அவைகள் பலியிடும் ஆடுகளாக இருக்கின்றன; வார்த்தையின் ஒரு பார்வையில், வெள்ளாட்டுக்கடாக்களை ஒப்படைக்கிறவர் பலியிடுகிறவராகக் கூறப்படலாம்.

ஆனால் பலி என்ற வார்த்தை, பக்தியின் கண்ணோட்டத்தில் பயன்படுத்தப்படும் போது, அல்லது பலிக்காகப் பிரித்து வைக்கப்படுதல், பிரதான ஆசாரியரால் பலியிடும் பணியோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. அந்த வெள்ளாட்டுக்கடாக்கள் வெறுமனே பலியிடப்படவில்லை, ஏனெனில் அவர்கள் ஒப்படைக்கப்பட்டவர்களாக, அல்லது அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருந்தனர். தேவன் ஜனங்களுடன் செயல்தொடர்பு கொள்ளுகிறதில்லை, ஆனால் ஆசாரியருடன் மட்டுமே, மற்றும் ஆசாரியன் அந்த மிருகத்தை சங்கரித்த போது, தெய்வீகப் பார்வையில் இது பலியிடப்பட்டதாய் இருந்தது, அப்போது, மற்றும் அப்போது மட்டும், இது பலியாக, தேவனிடம் உண்மையில் ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தது.

இதைப் பிரயோகப்படுத்தி, அப்போது, தேவனிடம் வருவதற்கு நாம் விருப்ப முடையவர்களாக இருக்கிறோம் மற்றும் இப்போது ஏற்றுக்கொள்ளத்தக்க நாளாயிருக்கின்றது என்பதைக் கற்றுக்கொள்கிறோம், கிறிஸ்துவின் சரீரம் கர்த்தரிடம் அர்ப்பணிக்கப்படுவதற்கு, அல்லது ஒப்படைக்கப்படுவதற்கான காலம் இப்போது இருக்கின்றது. ஆனால் நம்முடைய ஒப்படைத்தலைவிட மற்றொன்று அதிகம் அவசியமாக இருக்கின்றது மற்றும் பிரதான ஆசாரியராகிய இயேசுவினால் நமக்காக நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்ற மேலும் ஒரு

பணி உள்ளது, அதாவது, அவருடைய ஏற்பு, அல்லது நம்முடைய அர்ப்பணிப்பின் ஏற்பிசைவு, மற்றும் அவருடைய பலியின் ஒரு பகுதியாக நம்முடைய பலியின் ஒப்படைப்பு ஆகும். பிரதான ஆசாரியர் தம்முடைய புண்ணியம் சுமத்தப்படுதலுடன் நம்மை ஒப்படைக்கும்போது, அப்போது, மற்றும் அது வரைக்கும், நம்முடைய காணிக்கை “தேவனிடம் பலியாக, பரிசுத்தமானதாக, மற்றும் பிரியமானதாக” இருக்காது.

## கிறிஸ்து – அவர் தம்முடைய பணியை நிறைவு செய்திருக்கும்போது முழு அதிகாரம்.

### கே: 69:1 :: கேள்வி (1912 - Z) - 1

கிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்ட பணியை - - அவருடைய ஆயிரவருஷ இராஜ்யம் மற்றும் ஆளுகையின் பணியை நிறைவேற்றி முடிந்திருக்கிறபோது - எல்லாச் சத்துருக்களையும் கீழாக்கிப்போடும்வரைக்கும் (பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம்), சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தியிருக்கும் பிதாவுக்கு, குமாரன் தாமும் கீழ்ப்பட்டிருப்பார் என்று 1 கொரி. 15:28ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆயிர வருஷத்தின்போது இருந்ததைவிட எந்த பார்வையில் அவர் அப்போது கீழ்ப்பட்டிருப்பார்?

**பதில்:** மேசியாவின் ஆளுகையில் கர்த்தர் இயேசுவுக்கு உலகத்தைக் கட்டுப்படுத்தும் சகல வல்லமையும் மற்றும் அதிகாரமும் அளிக்கப்படும் என்பது மிகவும் வெளிப்படையான விசேஷித்த கருத்தாக இருக்கின்றது. அது தான் அவருக்கு நியமிக்கப்பட்ட பிரத்தியேகமான பணியாக இருக்கிறது. உங்களுக்கு ஞாபகம் இருக்கும், பிதா, அந்தக் காலத்தைக் குறித்து பேசுகையில், “என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்”; மற்றும் இருப்புக்கோலால் அவர்கள் ஆளுகை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கிறார்.. - - (சங். 2:8,9).

ஆயிரவருஷ யுகம் என்று அறியப்படுகிற, இந்த ஆயிரம் வருஷங்கள் கொண்ட காலப்பகுதி, இந்த பணிக்காகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. தேசம் அல்லது அரசாங்கத்தினால், ஒரு குறிப்பிட்ட காரியத்தை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் செய்வதற்கான கட்டளையுடன், அதை நீங்கள் நிறைவேற்றி முடிக்கும்போது, அதைச் செய்ததற்காக உங்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்ற புரிதலுடன், உங்களுக்கு ஒரு பதவி அளிக்கப்படுவதாக அனுமானியுங்கள். நீங்கள் கட்டளையிடப்படுகிறீர்கள்: “சகலமும் உங்கள் கையில் இருக்கின்றது. வேலையைச் செய்யுங்கள், நீங்கள் செய்வதற்கு 1912ம் வருஷம் முழுவதும் உங்களுக்கு இருக்கிறது. காரியத்தைச் செய்யுங்கள்.” பிறகு என்ன? அந்த வேலையை செய்து முடித்த பிறகு, இந்த விசேஷித்த பொறுப்பை, உங்கள் மேல் வழங்கப்பட்ட அந்த விசேஷித்த பதவியை விட்டு விலகுகிறீர்கள். நீங்கள் இனிமேல் இதைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளமாட்டீர்கள்.

ஆகவே, நம்முடைய கர்த்தர் இயேசு ஆயிரம் வருஷங்களுக்குச் செய்து முடிக்கப்போகிறவராக, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக வகித்திருந்த பதவியை, ஆயிரவருஷ யுகத்தின் இறுதியில் இனி வைத்துக்கொள்ளமாட்டார். அந்த விசேஷித்த பணி முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கும்.

## கிறிஸ்தவன் – சிலாக்கியங்களுக்கு ஏற்றவகையில் ஜீவிக்கத் தவறிவிடுதல்.

### கே: 70:1 :: கேள்வி (1911) - 1

“ஒரு கிறிஸ்தவனாக, ஒருவருக்கு இருக்கும் சிலாக்கியத்திற்கு ஏற்ப ஜீவிப்பதில் தோல்வி”? என்ற பதத்தில் கிரகித்துக் கொள்வதற்கு பொதுவான வழியில் நாம் என்ன புரிந்துகொள்கிறோம்? இது வேதாகமத்தைக் கற்றுக்கொள்வதில் தோல்வியை உள்ளடக்குகிறதா,

அல்லது வேதாகமத்தைக் கற்றுக்கொள்வதற்கு மட்டும் இயலாமையின் வரம்பு வரைக்கும் உள்ள ஒருவரின் நேரம் மற்றும் ஆற்றலைப் போன்று, இயந்திரமான முறையில் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கான வாய்ப்பில் தோல்வியுறுவதை உள்ளடக்குகின்றதா?

**பதில்:** நல்லது, இது மிகவும் சிக்கலான கேள்வியாக இருக்கின்றது. பொதுவான கிரம முறைகளைத் தவிர, இந்த கேள்விகளுக்கு சரியாக எவரும் பதில் சொல்ல இயலாது., மற்றும் இந்த பொதுவான வழிமுறைகளில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இது பிரயோகப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இது தேவனுடைய சித்தமாகவும் இருக்கின்றது, இது தேவனுடைய வழியாக இருக்கின்றது; இதைச் செய், அதைச் செய்ய வேண்டாம், மற்றதைச் செய் என்று, தேவன் இயேசு மூலமாக அல்லது அப்போஸ்தலர்கள் மூலமாக சொல்லியிருப்பார்; ஆனால் அது போன்ற, இவ்விதமான பிணைப்புக்குள் அவர் நம்மை வைத்திருக்கவில்லை, மற்றும் இப்படியாக நம்மை வரம்புக்குட்படுத்தவில்லை. சில குறிப்பிட்ட கொள்கைகளை அறிந்து கொள்ளவும் மற்றும் அந்த வழிகளில் நம்முடைய எண்ணங்களை அப்பியாசப்படுத்திக் கொள்ளவும் தேவன் நமக்கு சில பொதுவான வழிமுறைகளை விட்டுவைத்திருக்கின்றார், மற்றும் இவ்வாறாக உங்கள் நடத்தைக்கு உங்கள் மீதும், என்னுடைய நடத்தைக்கு என் மீதும் அவர் பொறுப்பை வைத்துள்ளார், மற்றும் இது வெவ்வேறான மன நிலை கொண்ட வெவ்வேறான ஜனங்கள் ஒவ்வொருவரும் சரியானக் கட்டுப்பாட்டை தன் மேல் வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கக்கூடிய ஒரு நெகிழுந்தன்மை (elastic) கொண்ட அமைப்பாக இருக்கின்றது, மற்றும் அவரைக் கட்டுப்பாட்டிற்குள்ளாக கொண்டுவருவதில் மற்ற ஜனங்களை இது வைத்துக்கொள்கிறது. இப்படியாக கிறிஸ்துவின் சபை முழுமையான சுதந்தரத்தை உடையதாக இருக்க முடியும். கர்த்தர் சொல்லியிக்கிற அனைத்தும் கடமையாக இருக்கின்றது, ஆனால் கர்த்தர் மிகவும் நிறையக் கடமைகளை உண்டாக்கவில்லை. புருஷர்களால் பொதுவாகச் செய்யப்படுகின்ற கடமைகளை நாம் காண்கிறோம். இந்த சபைபிரிவு சொல்கிறது, நீங்கள் புகையிலையை மெல்லக்கூடாது, வேறொரு சபைபிரிவு, நீங்கள் விஸ்கி குடிக்கக்கூடாது என்று சொல்கிறது, மற்றொன்று சொல்கிறது, நீங்கள் அந்த வடிவமுள்ள மேல் உடுப்பை அணியவேண்டும், மற்றொன்று கூறுகிறது, நீங்கள் தலை முடியை இந்த முறையில் வெட்ட வேண்டும், மற்றொரு சபைபிரிவு கூறுகிறது, நீங்கள் இப்படிப்பட்ட வழியில் நடக்க வேண்டும். இவைகள் எல்லாம் மனுஷருடைய காரியங்களாக இருக்கின்றன. இந்த வகையில் வேதாகமத்தில் ஒன்றும் இருக்கவில்லை. வேதாகமம் பரந்த அளவில் பொதுவான கொள்கைகளை வகுத்துக்கூறுகிறது மற்றும் ஒவ்வொரு புருஷனும் மற்றும் ஒவ்வொரு ஸ்திரீயும் இந்த பாடத்தின்மேல் அவனுடைய அல்லது அவளுடைய சொந்த மனதைப் பயன்படுத்துவதற்கான உரிமையை அளிக்கின்றது. உதாரணமாக, ஒருவர் என்னிடம் கூறினார், “சகோதரர் ரசல், ஒருவர் புகையிலை மெல்லுகிறவராகவும் மற்றும் கிறிஸ்தவனாக இருக்க முடியுமா? புகை பிடிப்பது சரியானதாக இருக்குமா? மற்றும் காப்பி குடிப்பது சரியானதா? இறகுகளுடன் கூடிய தொப்பியை அணிந்து கொள்வது சரியானதா? மற்றும் அகன்ற தொப்பி, போன்றவைகளை அணிந்து கொள்வது சரியானதா?” நான் கூறுவேன், “என் அருமை சகோதரனே, தேவனை மகிமைப்படுத்துகிறதாகவும், உங்களுக்கும் மற்றும் உங்கள் அயலாருக்கும் நன்மை செய்கிறதாகவும் இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்ற, நீங்கள் விரும்புகின்ற எதையும் செய்வதற்கான உரிமையை நீங்கள் உடையவர்களாக இருக்கிறீர்கள். தேவனை மகிமைப்படுத்துவதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்ற விஸ்கி எல்லாவற்றையும் குடியுங்கள். இதைத் துண்டித்து விடு, மற்றும் அதைத் துண்டித்து விடு என்று தேவன் கூறுகிறதில்லை; கர்த்தர் கூறுகிறார், உங்களுடைய முழு இருதயத்தையும் எனக்கு அளித்து, முழுமையான அர்ப்பணிப்புச் செய்யுங்கள்; ஒவ்வொன்றும் கீழே செல்கின்றது; உங்களுக்கு பூமிக்குரிய உரிமைகள் எதுவும் கிடையாது. கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் புது சிருஷ்டிகளாக இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொண்டு, தேவன் கூறுகின்ற, அங்கீகரிக்கின்ற எதையும் நீங்கள் வெறுமனே அன்புகூருங்கள்.”

## கிறிஸ்தவ விஞ்ஞானம் – பாஸ்டர் ரசல், மேரி பேகர் எட்டியின் மாணவரா?

## கே: 70:2 :: கேள்வி (1912) - 2

பாஸ்டர் ரசல், மேரி பேகர் எட்டியின் மாணவரா? (சிரிப்பு)

**பதில்:** நான் அறிந்த வரையில் இல்லை. (சிரிப்பு - கைத்தட்டல்)

## காலக்கணக்கு - கிபி1914ல் உபத்திரவம் ஆரம்பம்.

## கே: 70:3 :: கேள்வி (1905) - 3

கிபி 1914ல் உபத்திரவம் ஏன் துவங்க வேண்டும்?

**பதில்:** இந்த முழு உலகத்தின் திட்டத்தைப் பிதா அமைத்திருக்கிறார் என்ற முழுமையான உணர்வினால், அது அப்பொழுது துவங்கும் என்று நாங்கள் எதிர்பார்ப்பதற்குரிய காரணம் ஆகும் என்று நான் பதிலளிக்கிறேன். (இங்கு சகோ. ரசல் "புறஜாதிகள் காலங்கள்" பற்றி நீண்ட பிரசங்கம் செய்தார்.) புறஜாதிகளின் ஆளுகையின் குத்தகை காலம் கிமு 606ல் ஆரம்பித்தது. இது 1914ம் வருஷத்தில் முடிவடையும். இது பற்றிய விபரங்கள் 2ம் வால்யூமில் பார்க்கலாம்.

## காலக்கணக்கு - கிபி1914ம் வருஷம் உபத்திரவத்தின் ஆரம்பமா? அல்லது முடிவா? ஏன்?

## கே: 71:1 :: கேள்வி (1905) - 1

உபத்திரவ காலம் கிபி 1914ல் ஆரம்பமாகுமா? அல்லது முடிவடையுமா?

**பதில்:** உபத்திரவ காலங்கள் நிறையவே இருந்து வந்துள்ளன என்று நாங்கள் பதில் கூறுகிறோம், (சகோ. ரசல் அவர்கள் தம்முடைய சிறிய அலுவல் அறையைச் சுட்டிக்காட்டி, சிரித்துக்கொண்டு, உபத்திரவமுள்ள இடம் எங்களுக்கு உள்ளது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள் என்றார்.) சபையைப் பொருத்தவரையில் உபத்திரவ காலங்கள் இருந்து வருகின்றதும், இனியும் வரப்போவதாய் இருக்கிறது. துன்புறுத்தல்களை கவனியுங்கள். ஆனால் இங்கு சொல்லப்படும் குறிப்பு சரியாகச் சொன்னால் தானியேல் 12ம் அதிகாரத்தில் குறிக்கப்படும் "மகா உபத்திரவ காலம்" ஆகும் தானியேல் கூறுகிறார், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்." நமது கர்த்தர் கூடுதலாக சொல்கிறார், "இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்." நல்லது, நமது மனங்களில் நாம் நினைக்கும் உபத்திரவ காலம் இதுவே. இது கிபி 1914ல் ஆரம்பித்து முடிவது கிடையாது. உபத்திரவ காலம் இப்பொழுது ஆரம்பமாக இருக்கலாம். ஆனால் இந்த ஆரம்பங்கள் எல்லாம் உண்மையான உபத்திரவம் வரைக்கும் வழிகாட்டுகிறது. சுழற்காற்று வரும் சமயத்தில், வீடுகள் வீசியடிப்பதற்கு முன்பு, தூசியும் பதட்டமும் முதலில் காணுவதே நமது எதிர்பார்ப்பாக இருக்கும். அவ்விதமாக, ரஷ்யாவில் நாம் பார்க்கிறோம். அங்கு சுழற்காற்றின் தூசியைப் போல, மோசமான அராஜகத்திற்கு முன்னதாக இப்பொழுது உபத்திரவம் இருந்தாலும், நாங்கள் புரிந்துகொண்டுள்ளபடி, உபத்திரவ காலம், அராஜகத்தின் மோசமான காலம் உண்மையில் அங்கு தான் ஆரம்பிக்கிறது. இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை <u>நான் அறியேன்</u>. ஆனால் அது வெகுகாலம் நீடிக்கும் என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. பிட்ஸ்பர்க் அல்லது அலெகெனி நகரங்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், ரயில் பாதைகளிலிருந்து துண்டிக்கப்பட்டால், எந்த மனுஷனுக்கும் சமாதானமான காரியம் எதுவும் உள்ளேயும் வெளியேயும் நடைபெறாது. குறுகிய காலத்திலேயே ஓடி ஒளிந்துவிடும். அலெகெனியிலும், பிட்ஸ்பெர்கிலும் நிறைவாகவே சாப்பிடுகிறோம். ஆனால் முற்காலங்களில் ஆர்தர் துறைமுகத்தைப் போல, மாதக் கணக்கிலும், வருஷக் கணக்கிலும் நீண்ட காலத்திற்கு முற்றுகைகளைத் தாங்கும் அளவுக்கு நகரங்கள் அவர்களுக்குள் இருந்தன. அக்காலத்தில் அவர்கள் பெருமளவில் விநியோகப் பொருட்களை வைத்திருந்தனர். இப்பொழுது

நமது நகரங்களில் பெருமளவில் விநியோகத்திற்கான பொருள் சேகரிப்பு அக்கால நிலைமையில் இல்லை. வாயும் வயிறுமாகவே வாழ்கிறோம். அராஜகம் வரும்போது, அது பயங்கரமான நிலைமைகளை கொண்டுவரும். இது எப்படி வெகுகாலத்திற்கு நீடிக்க முடியும் என்று நான் கணிக்க இயலாது. ஒரு வருஷத்திற்குள்ளாகவே இவைகள் திடீரென்று முடிவுக்கு வரும் என்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட காலங்களில், ஜனங்கள் தங்களுக்குக் கிடைக்கும் எந்த பொருள்களையும் அபகரித்துக் கொள்ளும்போது, விவசாயிகள் மற்றவர்கள் எடுத்துக் கொள்வதற்காக கோதுமையை விவசாயம் செய்யமாட்டார்கள்.

## காலக்கணக்கு - கிபி 1874ல் நமது கர்த்தரின் சொந்த பிரசன்னம்.

### கே: 71:2 :: கேள்வி (1907) - 2

நமது கர்த்தரின் சொந்த பிரசன்னம் கிபி 1874ல் துவங்கி, ஆயிர வருஷ யுகத்தின் முடிவு வரைக்கும் தொடரும் என்று எந்த காரணங்களின் அடிப்படையில் நிச்சயமாக சொல்லப்படுகிறது?

**பதில்:** இந்த காரணத்தின் அடிப்படையில் தான் என்பதை நான் பதில் கூறுகிறேன்: ஒரு பணியை நிறைவேற்றுவதற்காக அவர் வருகிறார். அந்த பணி இருக்கிறது. சகல அதிகாரத்தையும், கீழ்ப்படியாமையையும் கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியுள்ளது. அவர் எல்லாவற்றையும் தேவனுடன் நல்லிணக்கமாகும் வகையில் கொண்டுவந்து, பிதாவாகிய தேவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். அவர் ஆயிரம் வருஷங்கள் அரசாட்சி செய்வார் என்று வேதவாக்கியம் சொல்கிறது. ஆகவே கிபி 1874ல் அவருடைய பிரசன்னம் வந்த போது, ஆயிரம் முழு வருஷங்கள் அவருடைய பிரசன்னம் நீடிப்பது நோக்கமாயிருந்தது. இப்பொழுது இதைப் பற்றி நாம் பேசும்போது, கர்த்தர் பூமியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்க வேண்டுமா? அல்லது பூமியில் நிற்க வேண்டியிருக்குமா என்ற அர்த்தத்தில் நாம் நினைக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஆவி சிருஷ்டிகள் நிற்பதற்கு மேடை போன்றவைகள் எதுவும் தேவையில்லை. கர்த்தருக்கு ஒரு நிலையான இடம் இருக்கும் என்றும், பூமியிலிருந்து அவர் வெளியேற முடியாது என்ற அர்த்தத்தில் நாம் நினைக்க வேண்டியதில்லை. இது போன்ற கருத்தை நாம் அளிக்க விரும்பவில்லை. இது நம்முடைய கருத்து அல்ல. நமது கர்த்தர் ஆளுகிற நோக்கத்துடன் வந்தார் என்றும், அந்த நோக்கத்தையோ, அல்லது, அந்த பணியையோ அவர் விட்டுவிடவில்லை என்பதே நம்முடைய கருத்து ஆகும். சபையும் பரலோக பிதாவின் சந்நிதானத்திற்கு அவர் போகிறவராக, அல்லது அங்கிருந்து வருகிறவராகவோ இருக்கலாம். சபையும் பரலோக பிதாவின் பிரசன்னத்திற்கு போகிறதாகவும், அல்லது அங்கிருந்து வருகிறதாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய பணி பூமியுடன் தொடர்பு கொண்டதாயிருக்கிறது. இது அவர்களுடைய இராஜ்யம். ரூஸ்வெல்ட் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் போது, அவர் சில சமயங்களில் கியூபாவுக்கு பிரயாணங்கள் செய்யலாம், அல்லது பனாமாவுக்கு, அல்லது வேறு இடங்களுக்கும் போகலாம். உண்மையில் அவர் நாட்டை விட்டு வெளியே சென்றிருக்கிறார் - இருப்பினும் அவர் இன்னும் நாட்டிலேயே இருக்கிறார் என்று தான் உணரப்படுகிறது.. ஏனெனில், அவர் பனாமாவுக்கு சென்றிருந்தால், வாஷிங்டனில் ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதிநிதிகளாக குறிப்பிட்ட சிலரை ஏற்படுத்தியிருப்பார். இருப்பினும், அவர் வாஷிங்டனில் இருந்தாலும், அல்லது ஆய்ஸ்டர் பே என்ற இடத்தில் இருந்தாலும், அவர் தான் ஜனாதிபதி. அதைப் போலவே, நமது கர்த்தர் இயேசுவும் ஆயிர வருஷ யுகம் முழுவதிலும் இருப்பார். அவர் உன்னதத்தில் ஏறிப்போய், நமக்காக பிதாவின் முன்னிலையில் தோன்றுவார் என்று இப்பொழுது நாம் சொல்லும்போது, இன்னும் அவர் பூமியில் ஆளுகை செய்யும் இராஜாவாகவே இருக்கிறார். மகத்துவமுள்ள பிதாவின் வலதுகரத்தில் அவர் வீற்றிருக்கிறார்; ஆனால் இதை வேறுவிதமாக புரிந்து கொள்ளக்கூடாது; தேவன் உன்னதமான இடத்தில் உட்கார்ந்திருப்பது போலவும், அங்கிருந்து எப்பொழுதும் நகர மாட்டார் என்றும், அல்லது, இயேசு மகத்துவமுள்ள பிதாவின் வலது கரத்தில் இருந்து கொண்டிருக்கும் போது, எல்லா நேரத்திலும் அதை விட்டு வெளியே போகமாட்டார் என்றும், அங்கேயே உட்கார்ந்திருக்கிறார் என்றும் புரிந்து கொள்ளக்கூடாது. ஆனால் அவர் பிதாவுக்கு அடுத்த நிலையில் இருக்கிறார் என்று தான் உணர

வேண்டும். அவர் கௌரவத்திலும் கண்ணியத்திலும் பிதாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கிறார். அவர் அதை எப்பொழுதும் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வார்; பூமியில் அவர் இராஜாவாக ஆளுகை செய்யும் போது, அவர் பிதாவின் வலது கரத்தில் இருப்பார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி பேசும் போது, பிதாவின் வலது கரத்தில், மனுஷ குமாரன் மகிமையுடன் வருவார் என்று நாம் சொல்லுகிறோம். அவர் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும், மேகங்களின் மீது வரும்போது, பிதாவின் வலது கரத்தில் எல்லா காலத்திலும் அவர் இருப்பார்.

## காலக்கணக்கு - கதவு அடைக்கப்படுதல்.

### கே: 72:1 :: கேள்வி (1907) - 1

அர்ப்பணிப்புக்கான வாய்ப்பின் கதவு அடைக்கப்படுகிறது என்ற பிரகடனம் உரிய காலத்தில் காவற் கோபுரம் மூலமாக வெளிவரும் என்பதை நாங்கள் எதிர்பார்க்கலாம் என்று அனுமானிப்பது நியாயமானதல்லவா?

**பதில்:** நான் அப்படி நினைக்கவில்லை. அன்புள்ள நண்பர்களே, பல்வேறு இடங்களிலிருந்து எனக்கு வரும் பலவிதமான கேள்விகளில் அவ்விதமான கருத்து நிலவுகின்றது. எனக்குத் தெரிந்த வரையில், இதை துவக்கி வைத்தது குறித்து குற்ற உணர்வு கொண்டிருக்கிறேன். கதவு அடைக்கப்படுவது குறித்தான விஷயம் தான் அது. இப்பொழுது ஒவ்வொருவரும் தமது சொந்த முறையில் மொழியை உபயோகப்படுத்துவதற்காக உரிமை உள்ளது. குறிப்பிட்ட எல்லைகளுக்குள் அவர் அதை கையாளும் வரையில், அவர் தவறுதலாக பேசுகிறார் என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே, வாய்ப்பின் கதவு அடைக்கப்படுவது குறித்து வேதாகமம் எதுவும் சொல்லவில்லை என்பதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். சந்தேகத்துக்கிடமின்றி, சத்தியத்தை பரப்புவதற்கான வாய்ப்புக்கு பெருமளவில் இடையூறு ஏற்படும் காலம் வரும். அப்பொழுது பல விஷயங்கள் பெருமளவில் தடைபண்ணப்படும். மேலும் நமக்கு விரோதமாக இருக்கும் ஜனங்கள், நாம் ஏதோ ஒருவிதத்தில் அராஜவாதிகள் என்று கண்டுபிடிக்க முயற்சிக்கலாம். அராஜகம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. நாம் அதற்கு முழு பரிவுடன் உள்ளோம். அராஜவாதிகள் நியாயமற்றவர்களாகவும், ஆபத்தான ஜனங்களாகவும் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் ஒடுக்கப்பட வேண்டும் என்றும் எண்ணுகிறோம். ஆனால், காலம் வர இருக்கிறது, அதுவும் இப்பொழுதிலிருந்து வெகு வருஷங்கள் அல்ல என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்பொழுது, நம்மைப் பற்றி சிலர் கூறுவார்கள், “நீங்கள் அரசாங்கத்திற்கும் சபைகளுக்கும் எதிரான அராஜகவாதிகள்.” மேலும் அரசாங்கத்துடன் அவர்களுக்கு பலம் உள்ளதால், அராஜவாதிகளை நசுக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டு, பிறகு அவர்களுடன் நாமும் முடிந்த வரையில் ஒழிக்கப்படுவதற்காக நசுக்கப்படுவோம். சத்தியத்தை பிரகடனப்படுத்துவதற்கான வாய்ப்பின் கதவு மூடப்படுகிறது என்று ஒருவிதத்தில் நீங்கள் இந்த நிலைமையைம் அழைக்கலாம். தேவன் தயாராகும் வரையில் அந்நிலைமை வராது என்று நாங்கள் அறிகிறோம். இதற்கிடையில், சத்தியம் மிகப் பெருமளவில் சுற்றோட்டம் அடையும் என்று நாம் எதிர்பார்க்க முடியும்.

அன்புள்ள நண்பர்களே, என்னுடைய எதிர்பார்ப்பு பெரும்பாலான மற்றவர்களிடமிருந்து வேறுபடுகிறது. கர்த்தருடைய ஜனங்களில் சிலர், அறுவடை பணி இப்பொழுது முடிகிறது என்று நினைத்துக்கொண்டிருப்பதை நான் அறிவேன். இன்னும் செய்யவேண்டிய பணி நிறைய உள்ளது. மூன்று வருஷங்களுக்கு முன்பு, காவற் கோபுர அலுவலகத்தில், புத்தகங்களில் பாதுகாத்து வைத்திருந்த காவற் கோபுர சந்தாதாரர்களின் பெயர் பட்டியலை ‘அட்டை முறைக்கு’ மாற்றம் கொண்டு வந்தோம். இந்த அட்டைகளைப் பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டினை வைத்திருந்தோம். அப்பொழுது, இதை எவ்வளவு பெரிதாகச் செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுந்தது. ஐம்பத்தைந்து ஆயிரம் கார்டுகளை பிடிக்கும் அளவுக்கு பெரிதாக நாம் அமைக்கலாம் என்று நான் கூறினேன். சிலர் சொன்னார்கள், இது மிகவும் பெரிது. அல்ல என்று நான் கூறினேன். காவற் கோபுரத்திற்கு 55,000 சந்தாதாரர்களுக்காக மிக அதிகமான இடங்கள் நமக்கு தேவைப்படும்

என்று நினைக்கிறேன் என்று நான் கூறினேன். சத்தியத்திலும் இரக்கத்திலும் திரளான எண்ணிக்கையில் ஜனங்கள் வருவார்கள் என்பது நமது எதிர்பார்ப்பாக இருக்கிறது. எல்லா சபை பிரிவுகளிலும் இருதயத்தில் உண்மையான பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். இவர்கள் சபைகளின் சமய பண்புகளினால் குழப்பமுற்று, குருடர்களாகவே ஆகிவிட்டார்கள். அவர்கள் வெளிப்புறமாகப் பார்த்தவைகள் போலவே, அந்த விஷயங்களை அப்படியே எண்ணுகிறார்கள். இயேசு வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் பற்றிக் கூறும் போது, ஜனங்கள் அவர்களின் வெளிப்புறத்தைக் கண்டு, அவர்கள் அலங்காரமானவர்கள் என்றும், வெள்ளையடிக்கப்பட்டவர்கள் என்றும் பார்த்தனர். ஆனால் உள்ளேயோ, சகலவித அசுத்தத்தினால் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள் என்று கூறினார். ஆகவே, சபை பிரிவுகளில் உள்ள ஜனங்கள் விழித்துக்கொள்ள ஆரம்பித்து, அவர்களை அவ்விதமே பார்த்து சொல்கிறார்கள். இதன் பொருள் என்ன? நான் தவறாகச் சொல்லுகிறேனா? மற்ற ஜனங்களின் மேல் இரக்கம் கொள்ள முடியாத அளவுக்கு நான் வெறித்தனம் கொண்டுள்ளேனா? ஜனங்கள் தவறானவர்கள் இல்லை. அமைப்புகளே தவறானவைகள். அவர்களுடைய இருதயங்கள் கர்த்தரைத் தேடுகின்றன. ஏனெனில் இப்பொழுது நிலவும் பஞ்சம் அப்பத்திற்காகவும், தண்ணீருக்காகவும் அல்ல. கர்த்தருடைய வசனத்தைக் கேட்பதற்காக இருக்கிறது. இந்த வகுப்பாரைச் சேர்ந்த சிலர், தாங்கள் சபையாக இருப்பதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது இந்த வகுப்பார் உங்களுக்கும் எனக்கும் அருகாமையில் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்களை வேட்டையாடுவதற்கான பெரிதான உரிமையை கர்த்தர் நமக்கு அளித்துகொண்டு இருக்கிறார்.

கதவு மூடப்படுவது குறித்து ஒரு இடத்தில் மட்டுமே வேதாகமம் குறிப்பிடுகிறதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அது புத்தியுள்ள, மற்றும் புத்தியில்லாத கன்னிகைகளின் உவமை ஆகும். அதை கிபி 1874ம் வருஷம் என்று நாம் சொல்லுகிறோம். புத்தியுள்ள கன்னிகைகளின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. “இதோ, மணவாளன்” - இதோ மணவாளன் வருகிறார் என்று அல்ல. ஆனால் “இதோ, மணவாளன்” என்பது அவருடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்துகிறது. பிறகு, எல்லா கன்னிகைகளும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் பண்ணினார்கள். அவர்களில் சிலர் தங்கள் பாத்திரங்களில் எண்ணையையும், தீவட்டிகளையும் வைத்திருந்தார்கள். இப்பொழுது தீவட்டி என்ன என்பதையும், பாத்திரம் என்ன என்பதையும், பரிசுத்த ஆவியை சுமந்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். நீங்கள் இரண்டையும் பெற வேண்டும். நீங்கள் எண்ணையை வைத்திராவிட்டால், பிறகு ஏதோ தவறு ஏற்படுகிறது.. நீங்கள் எண்ணையை கண்டிப்பாக பெற வேண்டும், அல்லது நீங்கள் புத்தியுள்ள கன்னிகைகளில் ஒருவராக இருக்கமாட்டீர்கள். புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளனுடன் கலியாணத்திற்கு சென்றார்கள். கதவு அடைக்கப்பட்டது. இப்பொழுது, உவமையின் கதவு அதுவே. எப்பொழுது கதவு அடைக்கப்பட்டது? புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே சென்ற பின்பு தான். இதற்கு அர்த்தம் என்ன? சிறுமந்தையின் கடைசி அங்கம் தன்னுடைய அழைப்பையும், தேர்ந்தெடுக்கப் படுதலையும் நிச்சயப்படுத்திக் கொண்ட பிறகு, போதுமான அளவுக்கு சோதிக்கப்பட்ட பிறகு, ஜெயங்கொண்டவராக, தேர்ச்சி பெற்ற பிறகு, பெரிதான அழைப்பு முடிவடைந்து, கடைசி அங்கம் திரைக்கு அப்பால் போன பிறகு, கதவு அடைக்கப்படுகிறது. இது தான் உவமை. பிறகு, இதற்கிடையில் எண்ணையைப் பெற்றுக்கொண்ட பிறகு, மற்ற கன்னிகைகள் - புத்தியில்லாத கன்னிகைகள் வருகிறார்கள். ஆமாம், அவர்கள் அனுபவத்தையும், வளர்ச்சியையும், அறிவையும், வெளிச்சத்தையும் பெற்றுக்கொண்டு, பிறகு வந்து, கதவைத் தட்டி, சொன்னார்கள், “நாங்கள் சிறிது கால தாமதமாக வந்துள்ளோம், ஆனால் எங்களை உள்ளே அனுமதியுங்கள். இதைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டோம். ஆனால் எங்கள் தீவட்டிகளில் எண்ணெய் இல்லை.” ஆனால், பதில் வெளிப்படுகிறது, “நான் உங்களை அறியேன். முழு வகுப்பார் - தேர்தெடுக்கப்பட்ட வகுப்பார் எல்லோரும் உள்ளே இருக்கிறார்கள். நான் உங்களை அறிய முடியவில்லை.” அவர்கள் என்ன செய்வார்கள்? உவமை காண்பிக்கும் விதமாக, அவர்கள் மகா உபத்திரவ காலத்தில் பிரவேசிப்பார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும். உலக முழுவதிலும் வரக்கூடிய உபத்திரவ காலம் பெருமளவில் மன வேதனையும், ஏமாற்றமும், துக்கமும் வரும். இந்த

முறைகளைத் தான், அழுகை மற்றும் பற்கடிப்பு போன்ற பரிச்சயமான வார்த்தைகள் அடையாளப்படுத்துகின்றன.

## காலக்கணக்கு - உழுகிறவனும் அறுக்கிறவனும்.

### கே: 74:1 :: கேள்வி (1908) - 1

“இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், - - தொடர்ந்து பிடித்து, - - நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” ஆமோஸ் 9:13. இது எப்பொழுது நடக்கும்?

**பதில்:** நல்லது, இது இந்த யுகத்தின் முடிவை சுட்டிக்காட்டும் உருவகப் பேச்சாகத் தோன்றுகிறது. உதாரணமாக, யூத யுகத்தைக் கவனியுங்கள். யூத யுகம் முடிவுக்கு வந்து, அந்த யுகத்தின் அறுவடை முற்றியிருந்த போது, அதை “அறுவடை” என்று கர்த்தர் அழைத்தார். அவர் தாமே அறுவடை செய்வார் என்று கூறி, தாமே வெளியே போய், அப்போதிருந்த யூதர்களின் மத்தியில் அறுவடை பணியைத் துவக்கினார். பின்பு, அறுவடை நடப்பதற்கு முன்பாக, அறுவடை எல்லாம் முடிவடையும் முன்பாக, உழுகிறவன் வந்தான். யார் இந்த உழுபவன்? மகிமைக்குரிய செய்தியை பிரசங்கிக்கிற கர்த்தரும் அப்போஸ்தலர்களும் தான். இரட்டையான வேலைகள் நடந்து கொண்டு இருந்தன - யூத ஜனங்களின் அறுவடை மட்டும் அல்ல. ஆனால் இதைத் தொடர்ந்து, புதிய யுகம், சுவிசேஷ யுகத்திற்கான ஆயத்த பணி துவங்கியது. முற்றிலும் புதியதான இந்த யுகம் அறிமுகமானது ஒன்றின் மேல் ஒன்று கவிந்திருந்தது. அப்படியே இந்த யுகத்தின் முடிவிலும், அறுப்பு வேலை என்பது முடிவுக்கு வருவதைக் குறிக்கிறது. அறுவடை என்பது யுக முடிவு ஆகும். அறுவடையின் காலத்தில் கர்த்தர் அறுவடையாளர்களை அனுப்புகிறார். அறுவடை பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தேவனுடைய திட்டத்தின் முடிவு அதுவல்ல. வேறு ஒரு யுகப்பகுதியை அவர் அறிமுகப்படுத்தியுள்ளார். இது தான் பெரும் வயலில் உண்மையான விதைகளை விதைப்பதற்குரிய காலம் ஆகும். இப்பொழுது அறுவடையின் காலத்தில், உழுகிறவன் தன் வேலையை ஏற்கனவே துவங்கி, அறுவடையாளர்களை முந்திக்கொள்கிறான். உழுகிறவன் வருகிறதற்கு முன்பே, அறுவடையாளன் தன் பணியிலிருந்து வெளியேறமாட்டான். இதன் அர்த்தம் என்ன? அறுவடை பணி, அதன் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றி, உபத்திரவமாகிய உழுகிறவன் உலகம் முழுவதும் தன் வரப்புகளை உழுகிற வரையிலும், அறுவடை பணி அதன் நோக்கத்தை முழுவதுமாக நிறைவேற்றி, கர்த்தருடைய பெரும் களஞ்சியத்தில் சிறுமந்தையையும் திரள்கூட்டத்தையும் சேகரித்திருக்க முடியாது. திரள்கூட்டத்தை சேகரிக்கும் சமயத்தில், உலகத்தில் உபத்திரவ காலம் இருக்கும்.

## காலக்கணக்கு - கதவு அடைக்கப்படுதல்.

### கே : 74:2 :: கேள்வி (1909) - 2

கதவு அடைக்கப்படுவது குறித்து உங்களுடைய கருத்தை எங்களுக்கு தயவுசெய்து சொல்லுங்கள்; இது சீக்கிரத்தில் அடைக்கப்படும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

**பதில்:** ‘கதவு அடைக்கப்படுதல்’ என்ற சொற்றொடரை இரண்டு விதமாக கவனக்குறைவாக நாங்கள் உபயோகித்திருக்கிறோம். உவமையில் உபயோகப்படுத்தப்பட்ட விதமாக, ஊழியக்காரர்கள் இனிமேல் அனுமதிக்கப்படாமல், ஊழியம் செய்வதற்கான வாய்ப்பு அடைக்கப்படும் வரையில், இந்த யுகம் முடிவடையும் வரையில் செய்ய வேண்டிய பணியைக் குறிக்கும் விதத்தில், “கதவு அடைக்கப்படுதல்” என்ற சொற்றொடரை சில சமயங்களில் நாங்கள் உபயோகித்திருக்கிறோம். பன்னிரெண்டாம் மணி வேளையில் மற்றவர்கள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை என்பது வெளிப்படையாகும். ஆனால் கதவு எப்பொழுது அடைக்கப்படும் என்பதை நாங்கள் அறியவில்லை. அது இப்பொழுது திறந்திருக்கிறது. இந்த வருஷம் முழுவதும் திறந்தே இருக்கும், இது எவ்வளவு காலம் திறந்திருக்கும், இந்த

பதினோராம் மணிவேளை எவ்வளவு சீக்கிரத்தில் முடிவடையும், பன்னிரெண்டாம் மணீவேளை எப்பொழுது துவங்கும் என்பதை நான் சொல்ல இயலாது. காவற் கோபுரத்தில் இந்த பாடம் குறித்து நாங்கள் சிலவற்றை சொல்லியிருக்கலாம். இப்பொழுது நிலவுகிற கருத்துக்களில் அதுவும் ஒன்றாகும். ஆனால் அது இன்னும் திருப்திகரமான விதத்தில் நடக்கவில்லை.

பிறகு, மற்றொரு கதவு பற்றிய விஷயத்தில், "புத்தியுள்ள கன்னிகைகள் அவரைப் பின்தொடர்ந்து, அவருடன் உள்ளே சென்றவுடன், கதவு அடைக்கப்பட்டது. பிறகு புத்தியில்லாத கன்னிகைகள் பின்னாக வந்து கதவைத் தட்டி, "கர்த்தாவே, கர்த்தாவே, எங்களுக்கு கதவைத் திறவும்" என்று கூறினார்கள். ஆனால் கதவு அடைக்கப்பட்டுவிட்டது. மணவாட்டி வகுப்பார் நுழையக்கூடிய கதவு அதுவே. இது அடைக்கப்பட்ட பிறகு, மறுபடியும் திறக்காது. என்னுடைய அறிவின்படி, கதவும் கதவுக்கான ஊழியமும் தனித்தனியாக மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கம் தன்னுடைய பலியை நிறைவேற்றி, திரைக்கு அப்பால் சென்று, முழுமையான எண்ணிக்கை கூட்டிச்சேர்க்கப்பட்டு மகிமையில் பிரவேசித்த பின்பு, இராஜா அடைக்கும் கதவு இதுவே. இது எப்பொழுது நடக்கும் என்பதை நான் அறியேன். கதவிற்கான ஊழியம் முடிந்த பிறகு, ஒருவேளை ஒரு வருஷத்திற்குள் இல்லாமல் இருக்கலாம், அல்லது அதிகமாகவும் இருக்கலாம். கதவிற்கான ஊழியத்தில் ஏற்கனவே தங்களை இணைத்துக்கொண்டவர்கள் தங்களை நிரூபிக்க வேண்டிய சோதனைக் காலம் இருக்கும்.

## காலக்கணக்கு - பதினோராம் மணிவேளை.

### கே : 75:1 :: கேள்வி (1909) - 1

ஒருவனும் வேலைசெய்ய முடியாத இரவுக்கு முன் உள்ள கடைசி மணிவேளை தான் பதினோராம் மணிவேளையா?

**பதில்:** இதைக் குறித்து நான் இப்பொழுது எதுவும் சொல்வதற்கில்லை என்று நினைக்கிறேன். பிற்காலத்தில் நான் சொல்வதற்கு ஏதேனும் இருக்கலாம். நான் முன்பு சொன்னது போல, இது பற்றிய எண்ணம் சிந்தையில் உள்ளது.

## காலக்கணக்கு - பதினோராம் மணிவேளை.

### கே : 75:2 :: கேள்வி (1909) - 2

பதினோராம் மணிவேளை துவங்குவதிலிருந்து முடியும் வரை எவ்வளவு காலம் பிடிக்கும் என்று நாம் புரிந்துகொள்கிறோம்?

**பதில்:** இது குறித்து நானே நிச்சயமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

## காலக்கணக்கு - கிபி. 1874ம் வருஷத்திலிருந்து சபைக்கு பரிந்து பேசுகிறவர் இருக்கிறாரா?

### கே : 75:3 :: கேள்வி (1909) - 3

நமது கர்த்தர் கி.பி.1874ல் வந்தார் என்றால், அந்த நேரத்திலிருந்து பரிந்து பேசுகிறவர் இல்லாமல் சபை இருக்கிறதா?

**பதில்:** இல்லை. அவர் பிரசன்னமாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர் நமக்கு பரிந்து பேசுகிறவர் தான். அவர் எப்பொழுதும் பிதாவிடம் நெருக்கம் உள்ளவராயிருக்கிறார். நாம் தனித்திருக்கவில்லை; சரீரத்தின் தலை என்ற முறையில் அவர் சரீரத்தைக் குறித்து அடையாளப்படுத்துகிறார். உங்களுடைய சரீரத்தை உங்கள் தலை அடையாளப்படுத்துமா? அல்லது உங்கள் கையா? எப்போதும் உங்கள் தலையானவரே.

## காலக்கணக்கு - சிதேக்கியாவின் வீழ்ச்சி - புறஜாதிகளின் காலங்கள்.

### கே : 75:4 :: கேள்வி (1909) - 4

2 இராஜா 25:3-6; எரே: 39:2-5; எரே: 52:6-9ம் வசனங்களில் சிதேக்கியாவின் வீழ்ச்சி 4ம் மாதம் 9ம் தேதி அன்று நடந்தது என்று சொல்லப்படுகிறது. இராஜாக்களின் புத்தகத்தில் குறிக்கப்படும் வருஷம் எல்லாம் பரிசுத்த வருஷமாக இருப்பதால், அந்த வருஷம் நமது காலண்டரில் ஏப்ரல் மாதம் துவங்குகிறது. ஆகவே, 4ம் மாதம் 9ம் தேதி என்பது ஜூலை 1ம் தேதிக்கு இணையாக உள்ளது. சிதேக்கியாவின் வீழ்ச்சி புறஜாதி காலங்களின் ஆரம்பமாகக் குறிக்கப்படுகிறது. இது ஜூலையில் நடந்ததானால், புறஜாதிகளின் காலங்கள் ஜூலை மாதத்தில் முடிவதாக இருக்கும். இது ஜூலை 1914ம் வருஷம் அல்லது ஜூலை 1915ம் வருஷமா?

**பதில்:** நல்லது, எனக்குத் தெரியாது. குறிப்பாக இந்த விதத்தில் நான் நினைத்திருக்கவில்லை. சில மாதங்கள் வித்தியாசத்திற்கு, நீங்கள் பழைய தேதியை எடுத்து நிச்சயப்படுத்திக்கொள்வது நல்லது.

## காலக்கணக்கு - புறஜாதிகளின் காலங்கள் முடிவு..

### கே : 75:5 :: கேள்வி (1909) - 5

"புறஜாதிகளின் காலங்கள்" அக்டோபர் கி.மு. 606ல் துவங்கினால், அக்டோபர் கி.பி.. 1914க்கு பதிலாக அக்டோபர் கிபி. 1915ல் அவைகள் முடிவடையுமா?

**பதில்:** நாங்கள் அப்படி நினைக்கவில்லை. இந்த கேள்வியை எழுதிய சகோதரனோ அல்லது சகோதரியோ காலக்கணக்கை உன்னிப்பாகக் கவனித்தால், அந்த காலங்கள் அக்டோபர் 1914ல் முடிவடையும் என்பதை கண்டுபிடிப்பார்கள். காலக்கணக்கை கணிக்கும் போது, கி.மு.. 606ம் வருஷத்தை அடைவதற்கு கி.பி.யிலிருந்து பின்னோக்கி கணக்கிட வேண்டும். 1914ம் வருஷத்தை அடைவதற்கு கி.பி.யிலிருந்து முன்னோக்கி கணக்கிட வேண்டும்.

## காலக்கணக்கு - முக்கியமான தேதிகள்.

### கே : 76:1 :: கேள்வி (1910) - 1

1874, 1878, 1881 அல்லது 1914ம் வருஷங்களைத் தவிர, மற்ற முக்கியமான வருஷங்களைக் கவனத்தில் கொள்வது தேவை என்று நாம் கருதலாமா? கிபி. 1911ம் வருஷத்தை அதில் சேர்க்கலாமா?

**பதில்:** என் அன்பு சகோதர, சகோதரிகளே, கேள்வி அங்கே இருப்பது குறித்து எனக்கு மகிழ்ச்சியே. என்னுடைய சொந்த எழுத்துக்களிலும், போதனைகளிலும் இவைகளைத் தவிர வேறு எந்த தேதிகளையும் தவிர்ப்பதில் ஜாக்கிரதையாய் இருக்கிறேன் என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். மற்ற தேதிகளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

வேதாகம பாடத்தின் மூன்றாம் வால்யூமில் ஒரு ஆலோசனை உள்ளது. பிரமீடில் உள்ள ஒரு குறிப்பிட்ட அளவு (தேவனுடைய வசனத்தில் அல்ல), 1910 அல்லது 1911ம் வருஷத்தைச் சுட்டிக்காட்டுவது போல காணப்படுவதை ஒரு ஆலோசனையாக மாத்திரமே புத்தகத்தில் கொடுக்கப்படுகிறது. ஆனால் அர்த்தம் எதையும் குறிப்பதாக நாங்கள் சொல்லவில்லை. ஆனால் வெறும் ஆலோசனையாகவே தெரிவித்திருந்தோம். விஷயங்கள் எதுவும் நடக்க இருக்கிறது என சொல்லவும் வேண்டாம், எதிர்பார்க்க வேண்டாம். ஏனெனில் இது குறித்து நாங்கள் அறியவில்லை, குறைந்தபட்சம், நான் அறியவில்லை. வேறு யார் சொல்வதையும் நம்ப வேண்டாம். "நாங்கள் அறிந்தவைகளையே பேசுகிறோம்" என்று அப்போஸ்தலர் கூறியதைப் பின்பற்ற வேண்டும் என்பது என்னுடைய அறிவுரை ஆகும். உங்களுக்குத் தெரியாத

விஷயங்களைப் பற்றி நீங்கள் எதுவும் பேச வேண்டாம். சற்று நேரத்திற்கு முன்பு நீங்கள் விரும்பாததை இப்பொழுது நீங்கள் விரும்புவது சாத்தியம் ஆகும். “புறஜாதிகளின் காலங்கள்” முடிவடையும் காலம் ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினான்கு ஆகும். அதற்கு அர்த்தம் என்ன? நான் அறியவில்லை. ஆனால் வசனத்தின் பொதுவான உணர்வில் போகவிட்டு, விஷயங்களை அவற்றின் வழியில் முன்னேறிச் செல்ல தேவன் அனுமதிக்கிறார். அப்போஸ்தலர் வேறு விதமாக, சக்கரங்களினால் ஆயுள் சக்கரம் அக்கினியினால் கொளுத்தப்படுகிறது என்பதை நாம் உடனடியாக யூகிக்கலாம். மனுஷ உலகத்தில் மகா உபத்திரவ காலத்தை நான் எதிர்பார்க்கிறேன். இதன் துவக்கம் அக்டோபர் 1914ம் வருஷம் என்று வேதாகமம் குறிக்கின்றது. அன்புள்ள நண்பர்களே, உபத்திரவ காலம் பற்றி நாம் சொல்லிக் கொண்டிராமல், நற்செய்திகளைச் சொல்வது தான் மிக முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். இந்த உபத்திரவ காலத்திற்குள் பிரவேசிக்கும் ஏழை ஜனங்கள் தாங்கள் விரும்பிய எல்லாவற்றையும் அப்பொழுது பெறுவார்கள். எனக்கு இப்பொழுது போதுமான அளவு உள்ளது. அப்படியே உங்களுக்கும் உள்ளது. மிகுந்த சோதனை மூலமாகவே நாம் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறதாக வேதாகமம் குறிப்பிடுகிறது. உபத்திரவ காலம் பற்றி அவர்களுக்குச் சொல்வதில் நேரம் எடுத்துக்கொள்ளாமல், நமது கடமைகளில் நாம் கவனம் செலுத்தினால், நாம் போதுமானவற்றைப் பெற்றுக்கொள்வோம். நாம் இவ்விதம் சொல்வதால் உலகத்தார் பயனடையமாட்டார்கள். நாம் யாரையும் பயமுறுத்த விரும்ப வேண்டாம். கடந்த காலங்களில் இந்த பயமுறுத்தல் - மதம் காரணமாக கெட்ட விளைவுகளை நாம் பார்க்கிறோம். ஒரு புயல் வருகிறது என்று நாம் அவர்களுக்குச் சொல்லும் போது, தேவன் இதை ஒரு ஆசீர்வாதமாக செய்யப்போகிறார் என்பதையும் சொல்ல முடியும். இந்த இளைப்பாறுதலின் காலம் அருகில் உள்ளதால், அனைத்து உலக மனுக்குலத்திற்காக நாம் சந்தோஷமடைகிறோம். “நெருங்கிவரும் இளைப்பாறுதலின் காலத்தைப் பற்றி உரைப்போம்.” அவர்கள் போதுமான அளவு சோதனைகளைக் கொண்டிருக்கிறார்கள். சோதனையைப் பற்றி அதிகம் பேச வேண்டம் என்று நான் அறிவுரை கூறுகிறேன்.

மிதமிஞ்சிய கற்பனைத் திறனால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரனை நினைத்துப் பார்க்கிறேன். அவர் உபத்திரவ காலத்தைப் பற்றி தன் மனைவியுடன் கூறும்போது, அந்த உபத்திரவத்தில் தான் ஏற்கனவே இருப்பது போல் பேசியுள்ளார். அந்த சமயத்தில் ஒரு பீப்பாய் மாவு விலை எப்படி இருக்கும், போன்ற பல விஷயங்களைப் பேசிய காரணத்தால், அவருடைய பரிதாபமான மனைவிக்கு சத்தியத்தைப் பற்றி மிகுந்த பயம் உண்டானது. அவர் தன் மனைவியைப் பார்த்து, “அன்புள்ளவளே, உபத்திரவ காலம் வருகிறது; கர்த்தரைத் தங்கள் அடைக்கலமாகக் கொண்டவர்களுக்கு, அவர்கள் மேல் மேற்பார்வையின் பாதுகாப்பைக் கொண்டிருப்பார்” என்று சொல்லியிருப்பாரேயானால், அது நல்லதொரு விளைவை ஏற்படுத்தியிருக்கும் என்று நான் நினைக்கிறேன். பயமுறுத்தும் எந்த மதத்தின் மேலும் நான் நம்பிக்கைக் கொள்ளவில்லை; இது நன்மை ஏதும் பிறப்பிக்காது.

வேறு ஒரு விஷயத்தைக் குறித்துப் பார்க்கலாம். இது இந்த கேள்வியைச் சார்ந்திராது. ஆனால் இந்த கேள்விக்கு சற்று தொலைவான தொடர்பு உள்ளதாகும்.

பயண பிரசங்கிகளும் மற்ற சகோதரர்களும் “சகோதரர் ரசல்” பற்றி எந்த அளவுக்கு பிரசங்கிக்கிறார்கள்?

நான் சொல்கிறேன், இல்லவே இல்லை. அன்புள்ள நண்பர்களே, நீங்கள் பிரசங்கம் பண்ணுவதற்கு திரளாக உள்ளது. அப்போஸ்தலர் கூறுகிறார், “நாங்கள் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்.” உங்கள் கண்களை சரியான பாதைக்கு சுட்டிக்காட்டும் ‘கை காட்டி பெயர் பலகை’ போல கர்த்தர் அவரை உபயோகப்படுத்தியிருக்கிறார் என்றால், சகோதரர் ரசல் பெரிதும் மகிழ்ச்சி அடைவார். தேவனுடைய வார்த்தையில் அற்புதமான விஷயங்களை நீங்கள் பார்க்க முடியும். ஆனால் இது சகோதரர் ரசல் அல்ல. ஆனால் இது அவரை உபயோகப்படுத்தியிருக்கிற கர்த்தர். ஜேம்ஸ் டவுனுக்கு பல மைல்கள் அப்பாலிருக்கும் கை காட்டி பெயர் பலகை அந்த நகரத்தைச் சுட்டிக்காட்டுவதை நாம் பார்க்கும் போது, அந்த பெயர் பலகையை அல்ல, அதை வரைந்து அந்த இடத்தில் அமைத்தவர் தான் பாராட்டப்பட வேண்டும். ஆகவே சகோதரர் ரசலைப்

பற்றி ஏதேனும் கண்டுபிடிக்க வேதாகமத்தை ஆராய வேண்டாம் என்பதே என்னுடைய அறிவுரை ஆகும். ஆனால் நாம் அனைவரும் பயபக்தி செலுத்தும் “மகிமையுள்ள ஒருவர்” பற்றிய விஷயங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்ய வேண்டும். இதை ஏற்கனவே 15 வருஷங்களுக்கு முன்பு சுட்டிக்காட்டியது உங்களுக்கு நினைவில் இருக்கும். அது இந்த அறிக்கைக்கு பொருந்துவதாக உள்ளது. வெளிப்படுத்தல் ஆகம ஆசிரியர் யோவான் பல்வேறு விஷயங்களை தரிசனமாகப் பார்த்தார். “இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்.” என்று யோவான் தெரிவிக்கிறார். அதற்கு தூதன் “நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்” என்றான்.

இது தான் சரியான எண்ணம். ஆனால் வேறு திசையில் மனப்போக்கு உள்ளது. கருவியை உபயோகப்படுத்தும் சிருஷ்டிகருக்குப் பதிலாக, சிருஷ்டி அல்லது கருவியை வணங்கும் ஆபத்து உள்ளது. நாம் அந்த தவறைச் செய்யக்கூடாது. என் பங்கிலுள்ள கவனக்குறைவு மூலமாக யாரும் அந்த தவறைச் செய்வதை நான் விரும்பவில்லை.

## காலக்கணக்கு - பிரமீடு. 1910

### கே: 77:1 :: கேள்வி (1910) - 1

பிரமீடில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 1910ம் வருஷத்தில் என்ன சம்பவம் நடக்க இருக்கிறது?.

**பதில்:** நான் அறியவில்லை. என்னால் சொல்ல முடிவதைவிட, நிறைய பேர்கள் 1910, 1911, 1912 மற்றும் 1913ம் வருஷங்களைப் பற்றி பெருமளவில் உங்களுக்குச் சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் வேதாகமத்தைப் புரிந்துகொண்டுள்ளபடி, சில குறிப்பிட்ட தேதிகள் மட்டுமே நிலையானதாக உள்ளது. என்று எனக்குத் தெரிகிறது. இதற்கிடையில் உள்ள எதைப் பற்றியும் எனக்குத் தெரியாது. மற்றவர்கள் அதைச் செய்வார்களானால், அதைப் பற்றி பேச அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் 1910ம் வருஷத்தைப் பற்றி வேதாகம பாடங்கள் மூன்றாம் வால்யூமில் ஏதாவது நீங்கள் சொல்லவில்லையா? ஆம். அந்த படிக்கட்டின் மேல் பகுதியில் அளவு எடுக்கலாம் என்று கூறினேன். அந்த முறையில் அளவு ஏதும் எடுக்க வேண்டுமா என்பது குறித்து எங்களுக்குத் தெரியாது. ஆனால் அந்த படிக்கட்டின் மேலே உள்ள பகுதியை நாங்களும் அளவு எடுப்பதாக இருப்பின், அது 1910ம் வருஷத்தைச் சுட்டிக்காட்டியிருக்கும். ஆனால் தேவன் 1910ம் வருஷத்திற்கு ஏதாவது ஒன்றைக் குறித்து வைக்க நினைத்தாரா அல்லது இல்லையா? அந்த வருஷத்தை நாம் கடந்து செல்லும் காலத்தில், 1910ம் வருஷத்திற்கு ஒருவேளை நாம் ஏதாவது ஒன்றை பார்க்கலாம். எனக்கு தெரிந்தவரை அந்த படிக்கட்டை நாம் ஒருவேளை இப்பொழுதே அடைந்திருப்போம். அன்புள்ள நண்பர்களே, விஷயங்கள் அதிவேகமாக இப்பொழுதே நடந்து வருகின்றன.

## காலக்கணக்கு - 1914க்கு முன் உள்ள தேதிகள்.

### கே : 77.2 :: கேள்வி (1909) - 2

1910 மற்றும் 1912ம் வருஷத்தைப் பற்றி பயண பிரசங்கிமார்கள் பேசுவதற்கு சொசைட்டி தடை செய்கிறதா? இந்த தேதிகளைப் பற்றி பிரசங்கிமார்கள் பேசுவதை ஏற்றுக்கொள்ளாத மூப்பர்கள், சொசைட்டியுடன் இணக்கமாக இல்லாதவர்கள் என்று அவர்களைப் பற்றி நினைப்பதை நம்முடைய சபையில் நினைத்திருக்கிறேன். இது தொடர்பாக எவ்விதத்தில் நல்விதமாக சரி செய்யமுடியும்?

**பதில்:** 1915ம் வருஷத்தில் யூத காலண்டர் துவங்கும் அக்டோபர் 1914க்கு முன்னுள்ள எந்த காலப்பகுதி பற்றிய உபதேசமும் செய்ய வேண்டாம் என்று பயண பிரசங்கிகளான சகோதரர்கள்

அனைவரின் மேலும் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறேன், வேறு எதையாவது உபதேசம் செய்வது மிகவும் விவேகமற்றது என்று நினைக்கிறேன். இப்பொழுது இந்த விஷயங்களை எளிதான வழியில் செய்ய முயற்சிக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நல்ல பணியை நிறைவேற்றுபவராகவும், நல்ல ஒழுக்கம் உள்ளவராகவும், சாத்தியமாக எது இயலுமோ, அதை பேசும் விதமாக, அவர்கள் மீது சிறிய அளவு பிடிமானத்தை செலுத்த முயற்சிக்கிறோம், ஆனால்; எந்த சகோதரனாகிய பிரசங்கியாவது அக்டோபர் 1914ம் வருஷத்திற்கு முன் உள்ள எந்த தேதிகள் சம்பந்தமாக உபதேசித்தால், அது என்னுடைய ஒப்புதலின் பேரிலோ, அல்லது என்னுடைய வற்புறுத்தலின் பேரிலோ, அல்லது நான் தலைமை பொறுப்பைக் கொண்டுள்ள சொசைட்டியின் பேரிலோ கிடையாது. நீங்கள் வெறும் ஊகங்கள் சிலவற்றையும் சில அனுமானங்களையும் மனதில் கொண்டு, அதில் ஈடுபடுவதால் ஆக்கப்பூர்வமாக எதுவும் கிடைக்காது. இது போன்ற ஊகங்களையும் அனுமானங்களையும் தவிர்த்து, நான் அறிந்து கொண்டுள்ளவற்றில் உறுதியாக நிற்பதே விவேகம் ஆகும். இது தான் பாதுகாப்பான திட்டம் என்று நான் நினைக்கிறேன். அன்புள்ள பயண பிரசங்கிகள், மூப்பர்கள் மற்றும் எல்லோரும் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருப்பதற்கு நாங்கள் அவர்களை நிச்சயமாகத் தூண்டுகிறோம். இதை நான் சொல்வதற்கு கவலைப்படமாட்டேன். இது உபதேசிக்கும் நேரமே இல்லை. ஒருவர் என்னிடம் கூறினார், “சகோதரர் ரசல், நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கும் கூட்டமைப்பு குழு (Federation) அடுத்த வருஷம் அமையப்போகிறது என்ற அறிகுறியை நான் பார்க்கும் சில விஷயங்கள் மூலமாகத் தெரிகிறது என்று நினைக்கிறேன்” என்றார்.

நல்லது, நான் கூறுகிறேன், ஒருவேளை நீங்கள் அறிந்திருக்கலாம், ஒருவேளை நீங்கள் அறியாமலும் இருக்கலாம். அதை நான் எதிர்பார்க்கிறேன். சில காலமாகவே அதை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். அவர்கள் கூட்டமைப்பு இந்த வருஷத்தில் அல்லது அடுத்த வருஷத்தில் ஏற்படுத்துவதில் எனக்கு எந்த குறிப்பிட்ட வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை. தேவனுடைய கரங்களில் இதை நான் விட்டு விடுகிறேன். அவர்கள் இந்த வருஷத்தில் அமைக்கிறார்களா, அல்லது அடுத்த வருஷத்திலா, அல்லது அதற்கடுத்த வருஷத்திலா என்பதில் ஒரு துகள் அளவு கூட வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த விஷயம் முழுவதையும் கர்த்தர் தம்முடைய மேற்பார்வையில் வைத்துள்ளார். நீங்களும் நானும் செய்ய வேண்டியது நிறைய உள்ளது. ஊகமான விஷயங்கள் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. ஆக்கப்பூர்வமான விஷயங்கள் நிறையவே நமக்கு உண்டு. நம் மீதும், மற்றவர்கள் மீதும் ஈர்ப்பு உண்டாகும் விதத்தில் நாம் நன்கு செயலாற்ற வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

## காலக்கணக்கு - புது திராட்சப் பழ ரசத்தை எப்பொழுது பானம் பண்ணுவார்?.

### கே : 78:1 :: கேள்வி (1913) - 1

நமது கர்த்தர் மத்.26:29ல் பதிவு செய்யப்பட்டிருக்கும் வார்த்தைகளைப் பிரயோகிக்கும் போது, தம்முடைய மனதில் ஏதாவது திட்டமான காலத்தைக் கொண்டிருந்தாரா? “இதுமுதல் இந்தத் திராட்சப் பழரசத்தை நவமானதாய் உங்களுடனேகூட என் பிதாவின் ராஜ்யத்தில் நான் பானம் பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.”

**பதில்:** ”நாள்” என்று போதகர் குறிப்பிட்டது, அதே சொல் “நாள்” என்பது, ஆறு நாட்கள் என்பதற்கு மாறாக, விசேஷித்த ஏழாம் நாள், ஆயிர வருஷ நாள், அவருடைய ராஜ்யத்தின் ஆயிர வருஷ நாள் என்று அடிக்கடி அடையாளப்படுத்தப்படுகிறது. அந்த நாளில் நாம் சந்தோஷம் அடைவோம்.

## காலக்கணக்கு - அறுவடையின் முடிவு எப்போது?

### கே : 78:2 :: கேள்வி (1913) - 2

அறுவடை 40 வருஷங்களடங்கிய காலப்பகுதி என்றால், “காவற் கோபுரம்” கிபி 1881ம் வருஷத்தில் துவங்கியதைத் தொடர்ந்து, அறுவடை செய்தி வெளிப்பட்டதைக் கருத்தில் கொண்டு, கி.பி. 1921ம் வருஷத்தில் அறுவடை முடிவு பெறுமா?

**பதில்.** ”காவற்கோபுரத்திற்கு” அதைப் போன்று அவ்வளவு முக்கியமான இடம் கொடுப்பதைப் பற்றி நாங்கள் எப்போதும் நினைத்ததில்லை. எப்படியிருந்தாலும், “காவற்கோபுரம்” கிபி 1879ல் துவங்கப் பெற்றது. “காவற்கோபுர பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டி” கிபி 1889ல் துவங்கப்பெற்றது. அதற்கு ஆவண வரைவு பெறுவது, இதற்கு முன்னால் இப்படியொன்றும் நடைமுறையில் இல்லை என்று அடையாளப்படுத்துவது கிடையாது. ஒரு சொசைட்டியை உருவாக்காது. ஆவண வரைவு பெறாமல் நீங்கள் சொசைட்டியை அமைக்கலாம், ஆனால் அது வரம்பிற்குட்பட்டது. ஆவண வரைவு இல்லாமல், இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து சொசைட்டியை ஏற்படுத்தினாலும், ஆவண வரைவுடன் ஐந்நூறு பேர்கள் சேர்ந்து அமைத்தாலும்,, சொசைட்டி என்பது சொசைட்டி தான். இந்த சொசைட்டி ஒரு சங்கம் போலவே உள்ளது. எப்படியிருந்தாலும், இது நம்முடைய விஷயத்திற்கு சம்பந்தமில்லை. அறுவடை கர்த்தருடைய பிரசன்னத்தினால் குறிக்கப்படுகிறது என்பதும், அறுவடையாளரின் பிரசன்னம் அறுவடைக் காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. தீர்க்கதரிசனங்கள் வாயிலாக, கர்த்தர் அறுவடையாளராக கிபி 1874ல் பிரசன்னமானார் என்பதை நாம் நம்புகிறோம். மற்ற வேறுவிஷயத்திற்கு மாறாக, அறுவடையின் துவக்கத்தை தீர்க்கதரிசனங்கள் தான் குறியிடுகின்றன என்று நாங்கள் நினைக்கின்றோம்.

## காலக்கணக்கு - பரிசுத்தவான்கள் முத்திரை போடப்படுதல். 1914

### கே : 79:1 :: கேள்வி (1914) - 1

பரிசுத்தவான்கள் இங்கே இருந்தாலும், அல்லது, இல்லாவிட்டாலும், அவர்கள் எல்லாரும் அக்டோபர் 1914ம் வருஷத்தில் முத்திரை போடப்படுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்:** இதுவரையிலான எங்கள் அனுமானம் - இதை நாங்கள் வேதாகம கண்ணோட்டத்திலேயே பார்த்து, நாங்கள் அனுமானித்தோம். “புறஜாதிகளின் காலங்கள்” என்று நாங்கள் அழைக்கும் காலப்பகுதியில், சபை தேர்ந்தெடுக்கப்படுவதில் தேவனுடைய முழு பணியும் நிறைவேற்றப்படும். இந்த இடைவெளியில், அல்லது காலப்பகுதியில் எவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, மேலும் எவைகள் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றன என்பதையும், திட்டவட்டமாகக் குறிக்கப்படும் தேதியாக கிபி 1914ம் வருஷத்தை நாங்கள் ஏன் நினைக்கிறோம் என்பதை சுருக்கமாக உங்களுக்கு தெரிவிப்பது எனக்கு நியாயமாகத் தோன்றுகிறது. நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன், அக்காலத்தில், தேவனுக்கு இந்த உலகத்தில் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிற ஜனங்கள் இருந்தார்கள். இந்த ஜனங்களை இஸ்ரயேல் இராஜ்யமாக, ஒரு நிழலான ராஜ்யத்தை தேவன் ஒழுங்குபடுத்தினார். அந்த நிழலான ராஜ்யத்தின் சிங்காசனத்தில் நிழலான ஒரு ராஜாவை அமரச் செய்தார். அந்த ராஜவம்சத்தின் பிரதிநிதியாக இருந்த தாவீதிடம், அவனுடைய வம்சம் குறித்து தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். “இஸ்ரயேலின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற் போவதில்லை.” ஆகவே, தாவீதின் குமாரனான சாலொமோனையும், அவன் எவ்விதம் கர்த்தருடைய இராஜ்யத்தின் சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தான் - தாவீதின் சிங்காசனத்தின் மேல் அல்ல - கர்த்தருடைய இராஜ்யத்தின் சிங்காசனத்தின்மேல் அமர்ந்தான் என்பதைப் பற்றி படிக்கிறோம். இது தேவனுடைய சிங்காசனம் - நிழலின் அடிப்படையில் இது தேவனுடைய இராஜ்யம். இது தாவீதைத் தொடந்து சாலொமோனும் சாலொமோனைத் தொடர்ந்து அவனுடைய குமாரனும், இப்படியாக ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தாவீதின் வம்சாவளி தொடந்து வந்தது. பிறகு, அந்த ஒழுங்குமுறையில் தேவன் தடைபண்ணும் நேரம் வந்தது. இஸ்ரயேல் ஜனங்களை ஆளுகை செய்த தாவீது வம்சத்தின் கடைசி ராஜா சிதேக்கியா. அந்த சமயத்தில் தேவன் அவனுக்கும் அவனைப் பற்றியும் சொன்னார்! “இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ள

அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவுவருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; இனி முன்போலிராது; (இந்த வரிசை முறையை நிறுத்தி விடுவேன்) தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." இப்பொழுது பாருங்கள், அன்று தாவீதின் வம்சம் இருந்தது. "இஸ்ரயேலின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற் போவதில்லை" இதுவரையில் எல்லா வருஷங்களிலும் யூதாவின் கோத்திரத்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக தேவன் வைத்திருந்தார். இது தொடர்ந்த வரையில் தாவீதின் சந்ததி சிங்காசனத்தில் வீற்றிருந்தது. ஆனால் பூமிக்குரிய இராஜ்யத்தை சிதேக்கியா காலத்தில் நிறுத்தி விட்டார். அந்த காலம் முதல் தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யம் இருக்கவில்லை. தாவீதின் வரிசையில் சிதேக்கியா தான் கடைசி ராஜா. இஸ்ரயேல் ஜனங்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து பிறகு அவர்கள் திரும்பி வந்தார்கள். ஆனால் தாவீதின் வம்சாவளியில் எந்த ராஜாவும் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு சொந்தமான வேறு எந்த ராஜாவும் இல்லை. மக்காபியர்கள் ராஜ்யத்தைப் பெறுவதற்கு பெருமுயற்சி செய்தனர் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். ஆனால் வெற்றி பெறவில்லை. ஆனால் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தாவீதின் வம்சாவளி அல்ல. பிறகு முதலாம் வருகை மட்டும் ஏரோதிய வம்சாவளியில் சில குறிப்பிட்ட ராஜாக்கள் இருந்தனர். ஆனால் ஏரோதிய வம்சாவளி தாவீதின் வம்சாவளி அல்ல. உண்மையில், ஏரோதின் ராஜ்யம் யூதாவின் வம்சாவளியைச் சேர்ந்தது அல்ல. அவர்கள் ஏசாவின் வம்சத்தை சேர்ந்தவர்கள். யூதர்களே அல்ல! ஆகவே கர்த்தருடைய இராஜ்யத்தின் சிங்காசனத்தில் உட்கார்ந்த சிதேக்கியா, தாவீதின் வழியில் வந்த கடைசி ராஜா ஆவார். பிறகு நடந்தது என்ன? நல்லது, சிதேக்கியாவின் காலம் முதல், தேவன் நிழலான ராஜ்யத்தை எதுவரைக்கும் கொண்டிருக்கவில்லை? இந்த காலப்பகுதி முழுவதும் அவருக்கு பூமியில் இராஜ்யம் இல்லை. "நல்லது, ஆனால் நீங்கள் சொல்லுகிறீர்கள், சகோதரர் ரசல், சிலர் தங்களை தேவனுடைய இராஜ்யம் என்று உரிமை கொண்டாடியுள்ளார்களே.: ஆம், என் சகோதரர்களே, இந்த உலகத்தின் ராஜ்யங்களைப் பற்றி வேதாகமம் நமக்கு சொல்கிறது, ஆனால் அவையெல்லாம் தேவனுடைய இராஜ்யம் கிடையாது. நாம் இன்னும் ஜெபிக்கிறோம், "உம்முடைய ராஜ்யம் வருவதாக." அப்பொழுது வரக்கூடிய மேசியாவின் இராஜ்யம் அதுவே. இதற்கு இடைப்பட்ட காலத்தில் தாழ்ந்த பதிலீடு ஒன்றும் கிடையாது. இதற்கு மாறாக, ஆபிரகாமின் சந்ததியான தமது சொந்த ஜாதியிலிருந்து தேவன் ராஜ்யத்தை எடுத்துக்கொண்ட போது, அவர் ஒருவகை குத்தகை அடிப்படையில் புறஜாதிகளுக்கு உலகத்தை ஆளும் உரிமையைக் கொடுத்தார். "புறஜாதிகளின் காலங்கள்" பற்றி பேசும்போது, இயேசு இதைக் குறிப்பிட்டது உங்களுக்கு நினைவிருக்கும். புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும், புறஜாதிகளின் காலங்கள் அல்லது வருஷங்கள் தொடரும் என்பதைத் தான் இயேசு கூறுகிறார். இந்த வார்த்தைகளைக் கூறும்போது, கிபி 70ல் எருசலேம் அழிக்கப்பட்டபடியே, எருசலேம் முழுமையாக நசுக்கப்பட்டு, அழிக்கப்படும் என்ற உண்மையை மனதில் நினைத்துக் கொண்டிருந்தார். புறஜாதிகளின் காலங்கள் நிறைவேறும் வரைக்கும் அழிவு தொடரும் என்று இயேசு கூறினார்.

நல்லது, புறஜாதிகளின் காலங்கள் எப்பொழுது துவங்கியது? சிதேக்கியாவிடமிருந்து கிரீடம் நீக்கப்பட்ட போது, தேவனுடைய நிழலான ராஜ்யம் முடிவடைந்ததிலிருந்து புறஜாதிகளின் ராஜ்யம் ஆரம்பமானது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். நல்லது, புறஜாதிகள் காலங்கள் அப்பொழுது துவங்கியது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, அந்த சமயத்தில் என்ன நடந்தது? ஆம், மிக முக்கியமானது நடந்தது. அந்த சமயத்தில் இஸ்ரயேல் ஜனங்களைவிட, உலகத்தில் பெரிய அளவில் பல்வேறு தேசங்கள் இருந்தன. எகிப்து, பாபிலோனியர்கள் மற்றும் பல தேசங்கள். ஆனால் மற்ற தேசங்களில் இவை இரண்டு தேசங்கள் மட்டுமே இஸ்ரயேலுக்கு அருகாமையில் இருந்தன. பாபிலோனியா மிகவும் பெரிதாகியது. இஸ்ரயேலை வீழ்த்திய சமயத்திலிருந்து தான் பாபிலோனியாவின் மேன்மை விசேஷமாகக் குறிக்கப்படுகிறது. அந்த சமயத்தில், தேவன் உலகத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் புறஜாதி ராஜ்யங்களில் முதலாவதாக தேவன் பாபிலோனியாவை அடையாளம் கண்டுகொண்டார். இது உலகளாவிய

சாம்ராஜ்யமாக மாறியது. இந்த தருணத்தில் தான், நேபுகாத்நேச்சார் மிகவும் விசித்திரமான சொப்பனம் கண்டான். அந்த சொப்பனம் தூக்கத்தில் அவனை மிகவும் பாதித்திருந்ததால், அவன் விழித்தெழுந்த போது, அது மிக முக்கியமான சொப்பனம் என்று மட்டுமே அவனுடைய நினைவில் இருந்தது. ஆனால் அது என்ன என்பதை அவனால் நினைக்க முடியவில்லை. பிறகு அவன் சாஸ்திரிகளை அழைத்து கூறினான், ஒரு சொப்பனம் கண்டேன், அது என்னவென்று உங்களுக்கு இப்பொழுது சொல்லமாட்டேன். சொப்பனத்தையும், அதின் அர்த்தத்தையும் எனக்கு சொல்லுங்கள்.: அதற்கு அவர்கள். "ராஜாவே, இது மிக அரிதான காரியம். சொப்பனத்தை எங்களுக்கு சொல்லுங்கள். அதின் அர்த்தத்தை நாங்கள் சொல்லுவோம். ஆனால் சொப்பனம் என்ன என்பதை நாங்கள் சொல்லமாட்டோம். எந்த ராஜாவும் அவனுடைய சாஸ்திரிகளிடத்தில் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் கேட்டதில்லை." என்று சொன்னார்கள். ஆனால் ராஜ சொன்னார், "நல்லது, நீங்கள் சொப்பனத்தை எனக்கு சொல்ல முடியாவிட்டால், அதற்கு சரியான அர்த்தத்தையும் நீங்கள் அறியவில்லை. நான் உங்களுக்கு சொப்பனத்தை சொன்னால், அதற்கு ஒரு அர்த்தத்தை பொருத்துவது உங்களுக்கு எளிதாயிருக்கும். இதை யாரும் செய்யலாம். நீங்கள் சொப்பனத்தையும், அர்த்தத்தையும் சொன்னால் நல்லது. நீங்கள் தேவர்களிடமிருந்து உண்மையான ஞானம் பெற்றிருந்தால், சொப்பனம் என்ன என்பதை எளிதாக சொல்லிவிட முடியும். இப்பொழுது சொல்லுங்கள். சொப்பனம் என்ன என்பதை நீங்கள் சொல்ல முடியாவிட்டால், நீங்கள் ஏமாற்றுபவர்கள் என்பதை நான் அறிவேன். உங்கள் ஒவ்வொருவரையும் மரணத்திற்குள்ளாக்குவேன். ஆகவே மிகுந்த பயம் உண்டாயிற்று, உங்களுக்கு நினைவிருக்கும், இறுதியாக அந்த சாஸ்திரிகளின் நடுவில் தானியேல் இருந்தார். இவர் சிதேக்கியா தன் கிரீடத்தை இழப்பதற்கு பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த யுத்த காலத்தில் ஒரு வாலிபனாக சிறைபிடிக்கப்பட்டு ஒரு கைதியாக பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டார். தீர்க்கதரிசியாகிய தானியேல் முன்பாக வந்து, நேபுகாத்நேச்சாரிடம் கூறினார், "ராஜாவே, நீர் வாழ்க, இந்த விஷயத்தில் ராஜா அவசரப்பட வேண்டாம். தவணை கொடுக்க வேண்டினார். பரலோகத்தின் தேவன் ராஜாவின் கேள்விக்கு பதில் அளிப்பார். சொப்பனம் என்ன என்பதை நாங்கள் ராஜாவுக்கு தெரிவிப்போம். என்றார். ராஜா தன்னுடைய சொப்பனம் விளக்கப்பட வேண்டும் என்றும், அது என்ன என்று அறியும் மிகுந்த பதட்டத்துடன் இருந்தான். ஆகவே, அவன் கூறினான். "மிக நல்லது, நான் உனக்கு தவணை கொடுக்கிறேன்.." குறிக்கப்பட்ட நேரத்தில் ராஜாவுக்கு முன்பு தானியேல் நின்று கூறினார், "ராஜாவே, இது தான் சொப்பனம். பரலோகத்தின் தேவன் அதை எனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். உமது படுக்கையின் மேல் உம்முடைய தலையின் தரிசனத்தைக் கண்டீர். அதன் ரூபம் பயங்கரமாயிருந்தது. சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் இரும்பும் களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத கல் சிலையின் பாதங்களில் மோதியது. பிறகு இரும்பு, களிமண், வெண்கலம், வெள்ளி, மற்றும் பொன் எல்லாம் கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போலாயிற்று. காற்று அவைகளை அடித்துக் கொண்டு போயிற்று. சிலையின் பாதங்களில் மோதின கல்லோவென்றால் பெரிதாகி, ஒரு பெரிய பர்வதமாகி, பூமியையெல்லாம் நிரப்பிற்று." ராஜா கூறினான். "என் சொப்பனம் அப்படியே இருந்தது. நீ அதை சரியாகச் சொன்னாய். நீ அந்த சொப்பனம் பற்றிச் சொல்லும் வழிமுறையை நீ பெற்றிருக்கிறாய் என்பதை இப்பொழுது நான் அறிகிறேன். நீ இப்பொழுது வந்து, அதன் பொருள் விளக்கத்தை எனக்கு சொல்." ஆகவே தானியேல் பொருள் விளக்கத்தை சொல்லத் தொடங்கினார். "ராஜாவே, பொன்னான அந்த தலை நீரே. சிலையில் முதலாவது உமது ராஜ்யம் ஆகும். ஏன்? இதற்கு முன் மற்ற ராஜ்யங்கள் இல்லையா? ஏனெனில், இந்த காலத்துக்கு முன்பு தேவன் தம்முடைய சொந்த ராஜ்யத்தை இந்த உலகத்தில் வைத்திருந்தார். தேவனுடைய சொந்த இராஜ்யம் இந்த உலகத்தில் இருந்த வரையில், உலகளாவிய எந்த சாம்ராஜ்யமும் இங்கு இருக்க முடியாது. ஆகவே, இப்பொழுது தான் ஆரம்பமாகிறது. நீங்கள் பார்க்கலாம்: நேபுகாத்நேச்சாரின் ராஜ்யம் தலையாக இருந்தது. தேவன் தீர்க்கதரிசி மூலம் சொல்லியிருந்தார். "பாகையை கழற்று, (சிதேக்கியாவிடமிருந்து), கிரீடத்தை எடுத்துப் போடு.; - - அதைக் கவிழ்ப்பேன்.." இந்த சமயத்திலிருந்து தான்,

நேபுகாத்நேச்சாரின் ராஜ்யம் அங்கீகரிக்கப்பட்டது. சிதேக்கியாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு, தேவன் ஆளுகையை இந்த சிலையில் அடையாளப்படுத்தப்பட்ட தேசங்களுக்கு ஆளுகையை கொடுத்தார். தலை - பாபிலோன். வெள்ளியிலான மார்பும், புயங்கள் - மேதியா, பெர்சியா; வெண்கல வயிறும், தொடைகளும் - கிரீஸ் சாம்ராஜ்யமாக இருந்த போது, கிரீஸின் அரசாங்கம்; இரும்பாலான கால்கள் - மேன்மையும் வல்லமையுமாயிருந்த நாட்களில் ரோம சாம்ராஜ்யத்தை அடையாளப்படுத்தியது. பிறகு புனித ரோம சாம்ராஜ்யத்தை இரும்பும் களிமண்ணும் சேர்ந்த கலவையான பாதங்களை அடையாளப்படுத்தியது. அதாவது, இது மதமும் சிவில் அதிகாரமும் இணைந்த கலவை ஆகும். இந்த பாதங்களிலுள்ள இரும்பு மற்றும் களிமண் கலவை ஒரு கல்லின் சாயலைப் பெற்றிருந்தது. இப்பொழுது, அந்த பாதங்களை கற்பனை செய்து பாருங்கள். இரும்பும் களிமண்ணும் சேர்ந்த கலவையின் பாதங்கள் முழுவதும் பூசப்பட்டிருப்பது, பாதங்களைத் தகர்த்தெறிந்த அந்த கல்லைப் போலவே, தோற்றமளித்தது. அப்படி இல்லையா? அதைத் தான் கர்த்தர் அடையாளப்படுத்தினார். தற்கால சிவில் அதிகாரத்துடன் ஒன்றிணைந்த தற்கால மத அமைப்புக்களை களிமண் அடையாளப்படுத்தியது. உதாரணமாக இங்கிலாந்து ஒருவிதத்தில் தான் சிவில் அதிகாரம் என்று உரிமை கோருகிறது. ,மற்றொரு விதத்தில், இங்கிலாந்து திருச்சபை அதிகாரம் கொண்டது என்று உரிமை கோருகிறது. இங்கிலாந்து சபையின் பிஷப், இங்கிலாந்து பாராளுமன்றத்தில் பிரபுக்களின் மன்றத்தில் சிவில் பிரபுக்களுடன் அமர்கிறார். இப்படியாக மதச்சார்பற்ற சிவில் அதிகாரத்துடன் பூமிக்குரிய மத அமைப்புகள் இணைவது தான் இரும்பும் களிமண்ணும் கலந்து விடுவதாகும். இதனால் சிவில் அதிகாரத்தில் இருக்கும் வலிமையுடன் ஒன்று சேர்ந்து தேவனுடைய இராஜ்யம் என்று உரிமை கோருகிறது. இதைப் போன்ற நிலை தான் கத்தோலிக்கரிடமும் உள்ளது என்பது உண்மை. ரஷ்யாவில் கிரேக்க கத்தோலிக்க சர்ச் போன்றவைகளின் விஷயத்திலும் இதுவே உண்மை. இவர்கள் எல்லோரும் உரிமை கோருகிறார்கள். சிவில் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வெளிப்புறத் தோற்றத்தில் மத அமைப்பை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதற்குள்ள வலிமை சிவில் அதிகாரம் தான். இது மதமாக தோற்றமளிக்கும். ஆனால் அவைகளின் வலிமை சிவில் அதிகாரம் தான். இது தேவ ராஜ்யத்தின் வெறும் போலி ஆகும். இது உண்மையான ராஜ்யம் அல்ல. இது உலக ராஜ்யங்களைச் சேர்ந்தது. ஆகும். தேவனுடைய ராஜ்யங்கள் என்று அழைத்துக்கொள்ளும். தற்கால பூமிக்குரிய ராஜ்யங்கள் எப்போதும் இருந்ததைப் போல வெறும் சிவில் அதிகாரங்களே ஆகும். அவைகள் நேர்மையாக இருக்கிறதில்லை. ஜனங்கள் நேர்மையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது அவசியமில்லை. ஆனால் அவர்கள் தங்கள் மனதில் தவறான யோசனைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே தவறான வழிகளில் அவர்கள் முழுவதுமாக நம்பிக்கை கொள்கிறார்கள்.

அந்த பெரும் சிலை எதைக் குறித்த அடையாளமாய் இருக்கிறது? அந்த புறஜாதி அரசாங்கங்கள் உலகம் முழுவதிலும் ஆளுகை செய்ய வேண்டும், எவ்வளவு காலத்திற்கு? தலையாகிய நேபுகாத்நேச்சர் மற்றும் பாபிலோனிய சாம்ராஜ்யம் காலம் முதற்கொண்டு, பாதங்கள் மற்றும் விரல்களாகிய தற்கால ராஜ்யம் வரைக்கும் உள்ள சிலையின் முழு காலம் ஆகும். அந்த சிலை முழுவதும் புறஜாதி ராஜ்யங்களையே குறிக்கிறது. “புறஜாதிகள் காலங்கள்” என்பது, அந்த சிலை நிர்மாணிக்கப்பட்டதிலிருந்து, அல்லது பாபிலோன் அதிகாரத்துக்கு வந்தது முதல், அந்த கல் சிலையின் பாதங்களில் மோதி அதனுடைய வல்லமையை நசுக்கியது வரைக்கும் உள்ள காலப்பகுதி ஆகும்.

அன்புள்ள நண்பர்களே, நீங்களும் நானும் அந்த சிலையை மோதப்போகிறோம் என்று ஒரு கணம் நான் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம், இல்லை, தேவன் நமக்கு அப்படியொரு அதிகாரம் கொடுக்கவில்லை. பரலோக பிதா தாமே இந்த மோதுகிற வேலையைச் செய்வார். நீங்களும் நானும் இந்த காரியத்தில் செய்ய ஒன்றுமில்லை. ஆனால், இந்த பல்வேறு சிவில் அரசாங்கங்கள் அதிகாரம் பெற்றிருக்கும் வரையில், தேவன் இந்த அதிகாரத்தை இந்த புறஜாதி அரசாங்கங்களுக்கு கொடுத்திருக்கிறதை நீங்களும் அங்கீகரிக்க வேண்டும். அந்த அதிகாரத்திற்கு நாம் இடையூறு செய்யக்கூடாது. இந்த அரசாங்கங்களுடன் நாம் போராட வேண்டியதில்லை. இந்த அரசாங்கங்களை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஏனெனில் பவுல்

அப்போஸ்தலன் சொல்லும் விதமாக, "உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது." அப்படியிருக்க தேவன் அதிகாரம் அளித்திருக்கிறார். அவைகள் அவருடைய ராஜ்யங்கள் என்று அவர் சொல்லவில்லை. எப்பொழுது இந்த ராஜ்யங்களில் எதுவும் தேவனுடைய ராஜ்யம் என்று சொல்கிறதோ, அது மோசடியும், தவறானதுமாகும். அவைகள் தேவனுடைய இராஜ்யத்திற்கு அப்பாற்பட்ட புறஜாதிகள் ராஜ்யங்கள். தேவனுடைய ஜனங்களாக இல்லாமல், புறம்பாக இருப்பவர்களை வேதாகமம் "புறஜாதிகள்" என்று குறிக்கிறது. 'புறஜாதி' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அந்த மூல வார்த்தை, 'புறமதஸ்தர்" (heathen) என்று மாற்றியும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த ராஜ்யங்கள் அனைத்தும் புறஜாதி உருவகமாக, புறஜாதிகள் அல்லது புறமதஸ்தர்களின் ராஜ்யமாகவே அடையாளப்படுத்தப்படுகிறது. தேவனுடைய இராஜ்யமாக அல்ல.

தேவனுடைய இராஜ்யம் எங்கிருந்தது? வெளிப்படையாக இல்லை. ஆனால் அடிமையாக இருந்தது. பாபிலோனிலிருந்து திரும்பி வந்த பிறகு, யூதர்கள் விடுதலையான ஜனங்களாய் இருந்தனர். அவர்கள் சிவில் அதிகாரங்களில் ஒன்று மாற்றி ஒன்றின் அடிமைகளாகவே இருந்தனர். பெரிய தேசங்களில் ஒன்று அல்லது மற்றொன்று உலகத்தையும் யூதர்களையும் ஆட்சி செய்தன. மேதியா-பெர்சியா ராஜ்யத்தின் கீழும், கிரேக்கர்களின் கீழும், ரோமர்களின் கீழும் இருந்தனர். இப்பொழுது அவர்கள் "புனித ரோம ராஜ்யத்தின்" கட்டுப்பாட்டில் கிட்டத்தட்ட இருக்கின்றனர். யூதர்கள் மற்ற ராஜ்யங்களால் துன்பப்பட்டது போலவே, புனித ரோம சாம்ராஜ்யத்தின் கரங்களிலும், ஒருவேளை, அதைப் போன்றே துன்பப்பட்டிருக்கிறார்கள்.

இவ்விதமாக, இந்த காலப்பகுதியில் தேவன் உலகத்தை ஆளுவதற்கு புறஜாதிகளை அனுமதித்திருக்கிறார் என்பதை பார்க்கும் போது, தேவன் வேறு ஒரு பணியைச் செய்துகொண்டு இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ஒரு இராஜரீக வகுப்பாரை உலகத்திலிருந்து பிரித்தெடுப்பது ஆகும். இதைப் பற்றி பேதுரு அப்போஸ்தலன் சபையிடம் சொல்வதை நீங்கள் நினைவுகூர வேண்டும்: "நீங்கள் இராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்த ஜனமாயும் இருக்கிறீர்கள்." நீங்களும் நானும் அதைச் சார்ந்தவர்கள் தான். - ஆனால் இன்னும் முழுமையாக்கப்பட்ட ஆசாரியத்துவத்தை உடையவர்கள் அல்ல. கிறிஸ்துவின் மரணத்தில் முழுவதுமாக ஞானஸ்நானம் எடுத்து, நமது அழைப்பையும், தேர்ந்தெடுக்கப்படுதலையும் நிச்சயப்படுத்தி, பரலோக மகிமையில் நமது கர்த்தருடன் உடன்-சுதந்தரவாளிகளாக, முதலாம் உயிர்த்தெழுதலை அடையும் நிலையிலான ஆசாரியத்துவம் அல்லது நமக்குரிய அந்த பங்கு தான் உண்மையான இராஜரீக ஆசாரியத்துவம் ஆகும். அந்த மகிமையின் நாளில் அவருடன்கூட நாமும் எழுந்திருப்போம். ஆனால் சபையின் நம்பிக்கையாக அது இருந்தாலும். முழுமையான பார்வையில் நாம் இன்னும் இராஜ்யத்திற்குள் இருக்கவில்லை. சரியான விதத்தில் நாம் இன்னும் இராஜ்யத்திற்குள் கொண்டுவரப்படவில்லை. கர்த்தரிடத்தில் நாம் விசுவாசமாக இருப்பது காணப்பட்டால், இராஜரீக வகுப்பாராய் இருக்கப்போவது நாம் தான். இராஜ்யத்தின் மகிமைக்குள்ளாக நம்மை அழைத்தவராகிய தேவன் அதைச் செய்து முடிப்பார். இயேசு கூறினார், "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." ஆனால் அவர் உங்களுக்கு இன்னும் அதைச் கொடுக்கவில்லை. இந்த யுகத்தின் முடிவில் அவர் உங்களுக்கு அதைக் கொடுப்பார். கர்த்தாதி கர்த்தாவும், ராஜாதி ராஜாவுமாக, மிகுந்த வல்லமையுடன் நமது எஜமான் தாமே வரும்போது, அவர் உங்களுக்கு கொடுப்பார். பிறகு நாம் அவருடனே கூட ஆளுகை செய்து அவருடைய மகிமையில் பங்குபெறுவோம்.

கிறிஸ்துவின் இராஜ்யம் எப்பொழுது வரும்? நல்லது, நாங்கள் பதில் கூறுகிறோம், இந்த பெரிய ராஜ்யங்கள் அவற்றின் உச்ச நிலையை அடைகிற வரைக்கும் வராது. அப்பொழுது என்ன நடக்கும்? அது தான் புறஜாதிகள் காலங்களின் முடிவு ஆகும். ஆகவே சிதேக்கியாவிடம் தேவன் உரிமைக்காரரானவர் வருமட்டும், இந்த கிரீடத்தையும், இந்த ராஜ்யத்தையும் கவிழ்ப்பேன்." என்று சொன்னார். தேவனுடைய ராஜ்யம் இல்லாமல் ஒரு இடைப்பட்ட காலப்பகுதி இருக்கும் என்பதை இது குறிக்கிறது. சிதேக்கியாவின் நாட்களில் துவங்கி, பூமி அனைத்தின் மேலும்

மேன்மையான இராஜாவாகிய கிறிஸ்துவின் உண்மையான தேவ இராஜ்யம் அமைக்கப்படும் வரைக்கும் இந்த இடைவெளி உள்ளது. கிறிஸ்து தம்முடைய மகிமையில் வெளிப்படும் போது, நாமும் அவருடன் மகிமையிலே வெளிப்படுவோம் என்று அவர் கூறுகிறார். ஆனால் இன்னும் இல்லை.

இப்பொழுது, அன்புள்ள நண்பர்களே, இந்த “புறஜாதிகள் காலங்கள்” இன்றைய 1914ம் வருஷத்துடன் முடிவடையும் என்பது நம்முடைய எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது. இந்த புறஜாதிகள் காலங்கள் உடனடியாக முடிவடைந்து, தேவனுடைய இராஜ்யம் வெளிப்படத் துவங்கும். ஆனால் இது உண்மை அல்ல என்று நான் இன்னும் அறியவில்லை. இது காண்பிக்கப்பட வேண்டியிருக்கும். இது உண்மை இல்லை என்று ஒருவேளை யாராவது நிருபிக்க முடியும், ஆனால் இது உண்மை இல்லை என்று யாரும் இன்னும் நிருபிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. 1914ம் வருஷத்தின் முழுமையாக முடிவுக்கு நாம் வந்து, அதைத் தொடர்ந்த காலத்தில் மனுக்குலத்தார் மத்தியில் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஸ்தாபிக்கப்படுதலைச் சுட்டிக்காட்டும் விதமாக ஏதும் வெளிப்படவில்லையானால், அப்பொழுது ஒருவேளை நாம் விஷயங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். இது இல்லை என்று மற்ற கட்சிக்காரர்கள் தான் நிருபிக்க வேண்டும்.

அக்டோபர் 1914ல் இது நடக்கும் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்? (இந்த கேள்வியிலிருந்து கணிசமான பங்கை நாம் பெறலாம். ஆனால் கேள்விகளில் மற்ற ஏதாவது பகுதி போல சுவராசியமாக இருக்கும் என்று நான் உணருகிறேன்.) புறஜாதிகள் காலங்கள் முடிவு பெறுவது 1914ம் வருஷம் என்று நாம் ஏன் நினைக்கிறோம்? கி.பி. 1910 அல்லது 1920ம் வருஷங்களுக்கு மேலாக, இது 1914ம் வருஷம் வரும் என்று நினைப்பதற்கு நீங்கள் என்ன காரணம் வைத்திருக்கிறீர்கள்? இது தான் காரணம்: இஸ்ரயேலிலிருந்து ராஜ்யம் எடுக்கப்பட்ட தேதி, சிதேக்கியாவிடமிருந்து கிரீடம் எடுக்கப்பட்ட தேதி, அங்கே இஸ்ரயேல் மறைந்த தேதி, யூதாவின் ராஜ்யம் மறைந்து முழுமையான சிறையிருப்பில் சென்றது, எருசலேம் நகரம் அழிவுக்குள் சென்றது ஆகியவற்றை கண்டுபிடிக்க முயற்சித்தோம். இப்பொழுது, அந்த வருஷம் எது? நாங்கள் அதை ஏறத்தாழ கணக்கிட முடிவதை நாங்கள் அறிகிறோம்; இது தவறில்லாத் தன்மை உடையது என்று நாங்கள் உரிமை கோரவில்லை.. ஆனால், அறியப்பட்டுள்ள எல்லா வரலாற்றிலிருந்து நாம் ஏறத்தாழ கணக்கிட முடிகிறது. அது கி.மு. 606ம் வருஷம் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கான எல்லா நிரூபணங்களை நாங்கள் இப்பொழுது சொல்லவில்லை. அதற்கு ஒரு பிற்பகல் முழுமையும் செலவிட வேண்டும். அது ஏற்கனவே அச்சடிக்கப்பட்டுள்ளது, அதை நீங்கள் படித்திருப்பீர்கள். நீங்கள் அதை நம்புகிறீர்களா, அல்லது நம்பாமலிருக்கிறீர்களா என்பதை நீங்கள் அறிவீர்கள். இதை நீங்கள் நம்ப வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்தப்படவில்லை. நான் அங்கு எதைப் பார்த்தேனோ, இந்த விஷயத்தில் மிகப் பொருத்தமாக எது இருந்ததோ, அதை உங்களுக்கு முன்பாக எளிமையுடன் வைத்திருக்கிறேன். உங்கள் இருதயத்தைக் கவரும் விதத்தில், மிக அதிகமாக, அல்லது மிக குறைவாக அதை நாங்கள் நம்பியிருக்கலாம்.

இப்பொழுது, இது கி.மு. 606ம் வருஷம் என்று அனுமானித்தால், அது கி.பி. 1914ம் வருஷத்துடன் இதன் தொடர்பு என்ன? ஏன்? என் அன்புள்ள நண்பர்களே, மாம்சீக இஸ்ரயேலர்கள் பற்றியதான ஒரு விஷயமும், புறஜாதிகள் காலங்கள் பற்றிய மற்றுமொரு விஷயமும் என்று இரண்டு விஷயங்கள் வேதாகமத்தில் காணப்படுவதை நாங்கள் பார்த்தோம். மாம்சீக இஸ்ரயேலர்களைப் பொருத்த வரையில், “ஏழத்தனை” மடங்கு கடுமையான சோதனை அனுபவங்களும், தேவனிடமிருந்து ஒழுங்கு, ஒழுங்கு சம்பந்தமான தண்டனைகளும் அவர்கள் பெறுவார்கள் என்பது மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இஸ்ரயேலைத் திருத்துவதற்கான இந்த ஏழத்தனை தண்டனைகள், லேவியராகமத்தில் தேவனால் முன்னறிவிக்கப்பட்டபடியே, சொல்லர்த்தமான ஏழு வருஷங்களை குறிக்கவில்லை. ஏனெனில் சொல்லர்த்தமான ஏழு வருஷங்களை விட, அவர்களுக்கு அதிகமான தண்டனைகள் இருந்தன. ஆகவே அவைகள் ஏழு அடையாளப்பூர்வமான வருஷங்கள் என்று நாங்கள் நம்புகிறோம். வேதாகம வழக்கப்படி, ஒரு அடையாள வருஷம் முந்நூற்று அறுபது வருஷங்கள்

ஆகும். சந்திர மாதத்திற்கு தொடர்புடையதாய் பார்க்கும் போது, ஒரு சந்திர வருஷம் - முந்நூற்று அறுபது நாட்கள். ஆகவே ஒரு நாளைக்கு ஒரு வருஷம் என்ற கணக்கில் முந்நூற்று அறுபது வருஷங்கள். ஆகவே, ஏழு வருஷங்கள் அல்லது ஏழு மடங்குகள் என்பது, ஏழு மடங்குகள் முந்நூற்று அறுபது, அதாவது, இரண்டாயிரத்து ஐநூற்று இருபது வருஷங்கள்; ஆகவே, அதே மாதிரி, இரண்டாயிரத்து ஐநூற்று இருபது வருஷங்கள் என்பது புறஜாதி அரசாங்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இஸ்ரயேலர்கள் இருந்ததின் கால அளவு ஆகும்; 2520 வருஷங்கள். நல்லது, முதலாம் ராஜ்யத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார்களா? ஆம், யாரிடத்தில்? நேபுகாத்நேச்சாரிடம். அவர்கள் மேதியா-பெர்சியாவின் கீழ் இருந்தார்களா? ஆம். வெண்கலத்தால் அடையாளப்படுத்தப்பட்ட கிரேக்கர்களின் கீழ் அவர்கள் இருந்தார்களா? ஆம், இரும்பினால் அடையாளப்படுத்தப்பட்ட ரோமர்களின் கீழ் இருந்தார்களா? ஆம், அதைத் தொடர்ந்து இஸ்ரயேலர் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார்களா? அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். கிட்டத்தட்ட நாம் கணிக்க முடிந்தபடி, இரண்டாயிரத்து ஐநூற்று இருபது வருஷங்கள் இந்த இலையுதிர் காலத்தில் வருகிறது. இதற்கு அர்த்தம் என்ன? ஏன்? புறஜாதிகளின் அரசாட்சிலிருந்து விடுதலை அடைவதற்கான காலம், இந்த வருஷ முடிவில் இருக்கும் என்பது தான் இதன் அர்த்தம் ஆகும்., நல்லது, இது எதைக் குறிக்கும்? இது எதைக் குறிக்கிறது என்பது இன்னும் நமக்கு தெரியாது. ஆனால் சிலையில் அடையாளப்படுத்தியபடி, இந்த ராஜ்யங்களின் வீழ்ச்சியின் மூலமாகவோ, அல்லது வேறெந்த வழியிலாவது தேவனுடைய கிருபை திரும்ப வருகிறது, அல்லது விசேஷித்த முறையில் கிருபை திரும்ப வந்திருக்கிறது என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த பார்வையில் ஏதேனும் அறிகுறிகள் இருக்கின்றனவா? ஆம், சில அறிகுறிகள் உள்ளன. உதாரணமாக, வெகு சமீப காலத்தில், ஆரம்பிக்கப்பட்ட சீயோன் அமைப்பு நமக்கு உள்ளது. யூத ஜனங்களுக்கு தேசீய அதிகாரத்தை மறுபடியும் திரும்ப பெறுவதற்கான நம்பிக்கை, அதற்காக ஆசைப்படுவது, அதற்காக உழைப்பது, போன்ற சரியான பாதையில் சீயோனிசம் தன் பார்வையை செலுத்துகிறது. யூதர்களுக்கு இந்த ஆலோசனை எப்படி கிடைத்தது? நான் அதற்கு பதிலளிக்கும் போதிய விவேகம் நமக்கு இல்லை. அவர்களின் தேசீய தனித்தன்மையை சரியான நேரத்தில் திரும்பப் பெறுவதற்காக, அதை நோக்கிப் பார்த்து, காத்திருந்து, அதற்காக உழைக்க வேண்டி, கர்த்தருடைய ஆவி அவர்களை அதற்கான சமயத்தில் தூண்டியது ஆகியவைகளைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டாம் நாங்கள் அவ்விதமாகவே நம்புகிறோம்.

நல்லது, மற்ற விஷயங்களைப் பற்றி என்ன சொல்வோம்? சபையைப் பற்றி என்ன? இந்த புறஜாதிகளைப் பற்றி என்ன? நல்லது, நாங்கள் பதில் கூறுகிறோம், அதைப் போலவே, புறஜாதிகளுக்கு ஏழு காலங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய காலங்கள் அதே காலப்பகுதியில், அதே நேரத்தில் நாம் நம்புகிறபடி, கி.மு. 606ம் வருஷம் ஆரம்பமானது. புறஜாதிகளின் ஏழு காலங்கள் அதே 2520 வருஷங்கள் நீட்சி பெற்று, கி.பி. 1914ம் வருஷத்தின் முடிவில், கி.பி.1915ம் வருஷ துவக்கத்தில் முடிவடைகிறது. ஏன், கி.பி. 1914ம் வருஷத்தின் முடிவில், தேவன் புறஜாதிகளுக்கு கொடுத்த குறிப்பிட்ட கால ஒப்பந்தம், இந்த குத்தகை, புறஜாதிகளின் காலங்கள் காலாவதியாகிறது என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டும். இதற்கு என்ன அர்த்தம்? ஏன், நீங்கள் ஒரு வீட்டில் வாழ்ந்து இருக்கிறீர்கள். ஒருவேளை, உங்கள் ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்தது. இந்த ஒப்பந்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, வீட்டு உரிமையாளர் நீங்கள் வெளியேறிப் போக அறிவிப்பு அனுப்புகிறார்.

ஆகவே, வெளியேறுவதற்கான அறிவிப்பு புறஜாதிகளுக்கு கொடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன். புறஜாதிகளுக்கு இதன் அர்த்தம் என்னவென்று தெரியுமா என்பதை அறிய எனக்கு போதிய விவேகம் இல்லை. நீங்கள் வீட்டை விட்டு வெளியேறி, உங்களுடைய ஒப்பந்தப்படி உங்கள் வசமுள்ள வீட்டைக் கொடுத்து விட வேண்டும். நீங்கள் சமாதானமாகவும், அமைதியாகவும் அவ்விதம் செய்யாவிட்டால், அதிகாரி அங்கு வந்து, உங்களை வெளியே தெருவில் தள்ளி விடுவார் என்பதற்கு அதிக வாய்ப்பு உண்டு. புறஜாதிகள் வெளியேறுவதற்கான இந்த அறிவிப்பு சம்பந்தமாக ஏதாவது அவர்களுக்குத் தெரியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் வெளியேறுவது குறித்த எந்த நினைப்பும் இல்லை. எட்வர்ட் அரசர் இவ்விதம்

சொல்லுவதற்கு எந்த எண்ணமும் அவருக்கு இல்லை. “கர்த்தாவே, இதோ இங்கே என்னுடைய கிரீடம் இருக்கிறது, தயவுகூர்ந்து எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் ஆட்சியைத் துவங்குங்கள்.” அவருடைய உறவினர் ரஷ்யாவின் சார் மன்னன் (CZAR) அதைச் செய்வதற்கான எந்த எண்ணமும் இல்லை. உலகத்தில் உள்ள மற்ற பெரிய ராஜாக்கள் மேசியாவையும் அவருடைய இராஜ்யத்தைப் பற்றியும் அறிந்திருக்கவில்லை. இந்த விஷயத்தில் உள்ள உண்மைகளை அவர்கள் உணரவில்லை. நாம் அவர்களை குறை சொல்லவில்லை. ஆனால் வெளியேறுவதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை நாம் கவனிக்கிறோம். ஆனால் அவர்கள் வெளியேறுவதற்கான அறிவிப்பை பெறப்போகிறார்கள் என்பதை நாங்கள் நம்புகிறோம். அவர்கள் அதற்கு சிறிதும் தயாராக இல்லை. இது எதைக் குறிக்கிறது என்று நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஏன், இது நேரம் பற்றிய விஷயம் என்று நான் நினைக்கிறேன். நல்லது, இது எப்படி நடக்கும்? இப்பொழுது, எனக்கு இருப்பதை விட, அதிகமான ஞானம் இதற்கு தேவைப்படுகிறது. நல்லது, தேவன் சில நல்ல மனுஷர்களைப் பயன்படுத்தி அவர்களை வெளியேற்றுவார் என்று தான் இதற்கு அர்த்தம் என்று நீங்கள் கூறலாம். அப்படி அவசியமில்லை. வீட்டிலிருந்து உன்னை வெளியேற்றுவதற்கு வரக்கூடிய அதிகாரி நல்ல மனுஷனாக இல்லாமல் இருக்கலாம். அவன் கரடுமுரடானவனும், தலைகீழாக செயல்படுகிறவனாகவும் இருந்து, உங்கள் பொருளை தூக்கி எறிகிறவனாக இருக்கலாம். அப்படியே, தேவன் சில சமயங்களில் மனுஷனுடைய கடுங்கோபத்தையும் பிசாசினுடைய கடுங்கோபத்தையும், தேவனை புகழ்வதையும், மற்றும் சில அதிகாரத்தையும் பயன்படுத்துகிறார். இந்த ராஜ்யங்களை எவ்வாறேனும் வெளியேற்ற தேவன் அராஜகத்தையும் பயன்படுத்தலாம். இதைப் பற்றி சொல்வது எனக்கு அடுத்தது அல்ல. எனக்குத் தெரியாது. நீங்களும் நானும் மனுஷர்களின் மேல் சமாதானத்தை செயல்படுத்தவே நியமிக்கப்பட்டிருக்கிறோம். அவர்களை வெளியேற்றுபவர்கள் நாம் அல்ல. ஆகவே, நாம் அசைவற்று அமர்ந்து, வேறுபாடில்லாத நல்மனதோடு சொல்வோம்: தேவனுடைய நேரம் எப்பொழுது வருகிறதோ, எப்பொழுது வந்தாலும், புறஜாதிகளின் குத்தகை காலம் முடிவுக்கு வரும். தேவன் அவர்களுடைய பதவிகளிலிருந்து விலக்கிப் போடுவார். அவர்கள் எவ்வளவு தான் வலிமையுள்ளவர்களாகக் காணப்பட்டாலும், தேவன் அவர்களை அவர்களுடைய பதவிகளிலிருந்து விலக்கிப் போடுவார். வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் என்று தானியேல் விவரிக்கிறார். உன்னதமான தேவனுடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்கள் பெற்றுக்கொண்டு, நித்திய காலமாக, சதாகாலங்களிலும் தங்கள் வசப்படுத்திக் கொள்வார்கள். இதன் பொருள் நீண்ட காலத்தைக் குறிப்பதாக உள்ளது. புறஜாதிகளுக்கு மற்றுமொரு குத்தகை காலம் கொடுக்கப்படும் என்று நாங்கள் நம்பவில்லை. அவர்களுக்கு வெறுமனே இந்த இடைப்பட்ட காலத்தில் மட்டுமே குத்தகை ஒப்பந்த காலம் கொடுக்கப்பட்டது. அவருடைய இராஜ்யம் நிலைநாட்டப்படுவதற்கான தேவனுடைய நேரம் இன்னும் வந்திருக்கவில்லை.

இப்பொழுது, சபையைப் பற்றி பார்ப்போம்: இந்த கேள்வியின் சாராம்சமே இது தான். மற்றதெல்லாம் விளிம்பு நிலையில் உள்ளது தான். சபையைப் பற்றி: இந்த காலத்திற்கு முன்பாகவே சபை கூட்டிச் சேர்க்கப்பட வேண்டும் என்று புரிந்துகொண்டுள்ளோம். ஏனெனில் இயேசு தம்முடைய அறிக்கைகளில் உணர்த்தியுள்ளதைப் பார்க்கிறோம். உதாரணமாக, உலக ராஜ்யங்களைப் பற்றி பேசும்போது, இயேசு கூறினார், “ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.” இவைகளெல்லாம் உலகத்தின் மீது வருகிறதாக அறிவிக்கப்பட்டு, புறஜாதிகள் காலங்கள் காலாவதியான போது, இவைகளெல்லாம் மகா உபத்திரவ காலத்தில் நடக்க இருக்கும் சம்பவங்கள் என்றால், வேதாகமம் குறிப்பிடும் விதத்தில், “யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்” என்பதால், இவற்றிலிருந்து நாம் தப்பிக்கப் போகிறோம் என்றால், அந்த காலத்திற்கு முன்பே, உயிர்த்தெழுதலில் மாற்றமடைந்து மறுரூபம் அடைவோம் அல்லது மாற்றம், அல்லது ஏதோ ஒன்றை அடைவோம் என்று நாம் ஏன் அனுமானிக்கக் கூடாது? ஆகவே, இப்பொழுது இது மோசமான காரண ஆய்வு இல்லை அல்லவா? முடிவில் இது

தவறாகக் காணப்பட்டாலும், இது பொருந்தாத வாதம், என் தலைக்குத் தோன்றாது. இது குறித்து நான் வெட்கமும் அடையமாட்டேன். மற்றவர்கள் விரும்பினால் அப்படியே அவர்கள் இருக்கலாம். ஆனால் நான் அப்படி அல்ல. நல்லது, உபத்திரவ காலத்தில் நாம் அங்கே இல்லாமல் இருப்பது சாத்தியமா? ஆம், அதற்கு வாய்ப்பு இருக்கிறது. உபத்திரவத்திலிருந்து தப்பிக்க இரண்டு வழிகள் உண்டு. நீங்கள் உபத்திரவத்திற்கு அதிலே இருந்து கொண்டு தப்பிக்கலாம். அப்படி இருக்காதா? ஆம், அப்படியும் இருக்கும். கடந்த பல வருஷங்களாக நான் உபத்திரவத்திற்கு நடுவில் இருந்து வருகிறேன் என்று நிறைய ஜனங்கள் நினைக்கிறார்கள். என் அன்புள்ள நண்பர்களே, அவைகளிலிருந்து நான் தப்பித்து வந்திருக்கிறேன். நான் மிகவும் உபத்திரவத்திற்குள்ளாகக் காணப்பட்டால், என் உணர்ச்சிகளை நான் ஏன் மறைக்க வேண்டும்? நான் சிறிதும் உபத்திரவப்படவில்லை. என்னுடைய எதிரிகள் அது போல நல்ல நேரத்தை உடையவர்களாக இருக்க முடியும் என்று விரும்புகிறேன். விசேஷமாக, என்னுடைய எல்லா நண்பர்களும் கூட. (சிரிப்பும், கைத்தட்டலும்). நல்லது, இப்பொழுது, கர்த்தர் நமக்காக அது போன்ற குணத்தைக் கொடுக்க சித்தமாயிருக்கலாம். அந்த உபத்திரவ காலத்தின் ஒரு பகுதியில் கூட இங்கு இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். புறஜாதிகள் காலங்கள் முடிவுற்ற உடனேயே, சபை முழுவதும் மகிமை அடையும் என்று வேதத்தில் எதுவும் இல்லை. உபத்திரவம் துவங்கியதற்குப் பிறகு சபை ஒருவேளை இங்கு இருக்கலாம். ஒருவேளை இது சாத்தியமே. நாம் பார்ப்போம். எதை நாம் பார்த்தாலும், திருப்தியுறுவோம். இல்லையா? அன்புள்ள நண்பர்களே, இது தான் அந்த நிலைமை ஆகும். நான் எதைப் பார்ப்பினும், திருப்தி தான். ஏனெனில் என் தேவன் தான் என்னை வழிநடத்துகிறார். தேவனுடைய வழிநடத்துதலில் திருப்தி, அல்லது வேறு விதத்தில் நாம் இருக்க முடியுமா? நமது பரலோக பிதா மற்றும் நமது பரலோக கர்த்தரின் எல்லா வழிநடத்துதல்களும் நல்ல விதத்தில் இருக்கும்போது நாம் நிச்சயமாக நம்பலாம். அவருடைய வழிநடத்துதல்களை நாம் உணர்ந்து மகிழ பல காரணங்கள் உள்ளன. அவர் எல்லாவற்றையும் நன்றாகச் செய்வார்.

நல்லது, இது எப்படி இருக்கும்? இந்த உபத்திரவ காலத்தில் நாம் இருக்கலாம். சகோதரர் ரசல் அவர்களே, எல்லா பரிசுத்தவான்களும் முத்திரையிடப்படுவார்களா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அன்புள்ள நண்பர்களே, நாம் தேவனுடைய விருப்பத்தைச் செய்ய துவங்கிய உடனேயே, நம்முடைய இருதயங்களில் பரிசுத்த ஆவி செயல்பட ஆரம்பிக்கும் பணியைத் தான் முத்திரையிடப்படுதல் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்படுவதைக் குறித்தும அப்போஸ்தலர் கூறுகிறார். நீங்கள் அறிந்துள்ளபடி, பழங்காலங்களில் செய்த விதமாக, முத்திரை என்ற கடின உலோகம் அல்லது கல், வழக்கமாக கல்லினால் ஆன ஒரு கருவியினால் "முத்திரையிடுதல்" செய்யப்படுகிறது. இந்த முத்திரையை மிருதுவான மெழுகில் ஆழமாக பதிய வைத்தால், அந்த குறிப்பிட்ட பதிவு வித்தியாசமாய் இருக்கும். ஆகவே, தேவன் தம்முடைய ஜனங்களாக நம்மை ஏற்றுக்கொண்ட பிறகு, நம்முடைய இருதயங்கள் மிகவும் மிருதுவாகி, அவருக்கு நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கும் புதிய சிருஷ்டிகளாக அவர் தம்முடைய குணத்தையும், சாயலையும் நம் மேல் பதிய வைக்கும் பணியைத் துவங்கியிருக்கிறார். பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் செயல்முறைக்குள்ளாக நாம் இருக்கிறோம். இந்த முத்திரையிடப்படும் பணி இப்பொழுது நடந்து கொண்டு இருக்கின்றது. அவ்வாறு இல்லையா? இதைப் பற்றி சிலவற்றை நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஆம், நீங்கள் அறிந்துள்ளதற்காக தேவனுக்கு நன்றி! நல்லது, முத்திரையிடப்படுவது குறித்து கூடுதலாக வெளிப்படுத்தல் ஆகமத்தில் குறிக்கப்பட்டுள்ளது உங்களுக்கு நினைவிருக்கும். அவர்களுடைய நெற்றிகளில் முத்திரை போடப்பட்டிருக்கும். வெளிப்படுத்தல் ஆகமத்தில் குறிக்கப்பட்டிருக்கும் இந்த விஷயம் தேவனுடைய ஜனங்களுக்கு வழக்கமானதாக இருந்தது இல்லை. ஆனால் இது இந்த யுக முடிவின் தறுவாய்க்கு ஏற்றதாகவும், வெளிப்படைத்தன்மை படைத்ததாகவும் இருக்கிறது.. உங்களுக்கு நினைவிருக்கும், நாம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் படிக்கிறோம், "நான்கு தூதர்கள் நான்கு காற்றுகளைப் பிடித்து வைத்திருக்கிறார்கள்." மகா உபத்திரவ காலம் (நான் சரியான வார்த்தைகளை உங்களுக்கு இப்போது பிரயோகிக்கவில்லை.), ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைகள் போடப்படாத வரையிலும் அந்த உபத்திரவ காலம் உலகத்தின் மேல் அவிழ்த்துவிடப்படாது. இப்பொழுது இந்த

வித்தியாசமான முத்திரையிடப்படுதலைப் பார்க்கிறோம். கிறிஸ்தவர்களாக, நம்முடைய அனுபவங்களின் துவக்கத்தில், நம்முடைய இருதயங்களில் முத்திரையிடப்படும் செயல்முறைக்கு உட்பட்டோம். நமது கர்த்தரின் குணசாயல் நாளுக்கு நாள் அதிகமாக வெளிப்படுகின்றது. அப்படியே நமது பிதாக்களும், நமது முற்பிதாக்களும், கிறிஸ்துவின் சபை அனைத்தும் இருதயங்களில் முத்திரையிடும் பணி நடந்து வருகிறது. ஆனால் இப்பொழுது நெற்றிகளில் போடப்படும் முத்திரை அறிவுசார்ந்து கொடுக்கப்படுகிறது, அல்லது பதிக்கப்படுகிறது. இது சில காலமாக நடந்து வருகிறதா? ஆம், என் அன்புள்ள சகோதரனே, நீங்களும் இதை அறிவீர்கள். உங்களுடைய நெற்றியில் இந்த முத்திரை ஒன்றை நிச்சயமாகப் பெற்றிருந்தால், உங்கள் அறிவு கூர்மையாகவும், பிரகாசமாகவும், தெளிவாகவும் இருப்பதை நீங்கள் உணர முடியும். நீங்கள் தேவனுடைய குணத்தை அறிகிறீர்கள். நீங்கள் இதற்கு முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு தேவனுடைய வார்த்தைகளை அறிகிறீர்கள். இந்த முத்திரை போடப்படும் செயல்முறை எதுவரைக்கும் தொடரும்? தேர்ந்தெடுக்கப்படும் சபையைச் சேர்ந்த எல்லா அங்கங்களும் அவர்களுடைய நெற்றிகளில் முத்திரை போடப்படும் வரையிலும் தொடரும். அறியாமையினால் விட்டுப் போகும் தேவனுடைய ஜனங்களாகிய பரிசுத்தவான்களில் பலர் இருக்கமாட்டார்களா? ஒருவரும் இருக்காது! சீயோன் பர்வதத்தில் ஆட்டுக்குட்டியானவருடன் நிற்கும் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் அனைவருடைய நெற்றிகளிலும் முத்திரை போடப்படும். மாம்சத்தில் இருக்கும் 144,000 பேர்கள் அனைவருக்கும் அவசியமில்லை. ஏனெனில் இந்த யுகம் முழுவதிலிருந்து தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், இந்த யுகத்தின் முடிவில் வாழ்ந்து கொண்டு இருக்கும் அந்த வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இந்த முறையில் தான் முத்திரை போடப்படுவார்கள். இந்த வகுப்பாரைச் சேர்ந்த மற்றவர்கள், உயிர்த்தெழுதலின் அனுபவத்திற்குள்ளாகி, நீங்கள் விரும்பினால், இன்னும் முழுமையான வகையில் அவர்கள் முத்திரை போடப்படுவார்கள். ஆனால், 144000 பேர்கள் அனைவரும் அவர்கள் நெற்றிகளில் முத்திரை போடப்படுவார்கள். இது அறிவுசார்ந்த நிலைக்கு அடையாளமாய் உள்ளது. ஆகவே நாங்களும் அப்படியே நினைக்கிறோம். ஆகவே இது இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தேவனுடைய குணத்தையும், திட்டத்தையும் பற்றிய அறிவை மற்றவர்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் உதவும் இந்த பணியில் ஒரு பங்காக இருக்கும் உரிமையைப் பெற்றிருப்பதால், நீங்களும் நானும் மகிழ்ச்சி அடைகிறோம். தேவனுடைய திட்டத்தின் அறிவுசார்ந்த புரிந்துகொள்ளுதலைத் தெளிவாகப் பெறுவதற்கு, நம்முடைய சக கிறிஸ்தவர்கள் அவர்கள் நெற்றிகளில் இந்த முத்திரை போடப்படுவதற்கு உதவும் நோக்கத்தில், பயண பிரசங்க ஊழியம், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல், சிருஷ்டிப்பின் புகைப்பட நாடகம் மற்றும் வேதாகமப் பாடங்களை திரிந்து விற்பனை செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிலர் இவற்றையெல்லாம் பார்க்க முடியாது. ஏன் இல்லை? ஏனெனில் அதைப் பெற்றுக்கொள்ள தேவனால் அவர்கள் இழுத்துக்கொள்ளப்படவில்லை. மற்றவர்கள் இதைப் பெறுகிறார்கள். ஆம், ஏனெனில் அவர்கள் இதைப் பெறுவதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, கிறிஸ்து சிலருக்கு இதைச் சொன்னார். தமது யுகத்தின் முடிவில் “தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருளப்பட்டது, மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராவதவர்களாகவும் இருக்கத்தக்கதாக, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது.” இது புரிந்து கொள்ளுவதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால், தேவன் தம்முடைய திட்டத்தை ஒவ்வொருவரும் அறியவேண்டும் என்று விரும்புகிறதில்லை. அவருடைய பிரதிஷ்டைக்குட்பட்ட ஜனங்கள் அறிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். “கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது, அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.” இப்பொழுது, இந்த யுகத்தின் முடிவாகிய இந்த காலப்பகுதியில் தான், இந்த வகுப்பாருக்கு விசேஷித்த விதமாக, வெளிச்சமும் அறிவும் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். “நீதிமானுக்காக வெளிச்சம் விதைக்கப்பட்டிருக்கிறது.” இதே பாடத்தைக் குறித்து பேசும்போது, இந்த உலகத்தின் மீது வரும் மகா உபத்திரவ காலத்தைப் பற்றி பேசிய பிறகு பவுல் அப்போஸ்தலன், அது அவர்கள் மேல்

ஒரு திருடனைப் போலவும், கண்ணியைப் போலவும், அவர்கள் அறியாத நேரத்தில் வரும் என்று கூறுகிறார். "சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்." எதிர்பார்ப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை அறியாமலும், எதிர்பாராதவைகளால் அலைக்கழிக்கப்படும் உலகத்தாரைப் போல நீங்கள் இல்லாமல், தேவன் இது குறித்த பாடத்தில் போதிய அளவு உங்களுக்குக் காண்பிப்பார். ஆகவே இது முழு உலகத்தின் மேல்வரும். புறஜாதிகள் என்ன வருகிறது என்று அறியமாட்டார்கள். அவர்கள் இன்னல்களைப் பார்த்து, வெவ்வேறுவிதமான விஷயங்களைப் பற்றி ஆச்சரியப்படுவார்கள். ஆனால் என்ன வருகிறது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

இப்பொழுது, கேள்வியில் இது இல்லாமலிருந்தாலும், கேள்வியின் ஒரு பகுதியாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இது இங்கே இருக்கும் மற்றவர்களுக்கும் ஒருவேளை ஆர்வமாக இருக்கும் என்று நினைத்து, நான் இப்பொழுது பேச்சைத் தொடருகிறேன். இங்கே நாம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். கர்த்தர் என்னை இங்கே தொடர்ந்து இருக்க விரும்பினால், நான் இங்கு தங்குவேன் என்பதில் நான் முழுமையாகத் திருப்தி அடைவேன். அவர் விரும்பாவிட்டால், நான் போக முடியாது. ஆனால், இது கர்த்தரின் விருப்பமாக இருந்தால், நான் இங்கு தங்க மகிழ்ச்சி அடைகிறேன். "போவதா அல்லது தங்குவதா என்பதை நீ தேர்வு செய்." என்று கர்த்தர் என்னிடம் சொல்வதாக இருந்தால், நான் கண்டிப்பாகச் சொல்லுவேன். "அன்புள்ள கர்த்தாவே, நீங்கள் என்னை இங்கே தங்க விரும்பினால், நான் தங்குவேன்." நீங்கள் அவ்விதமா? ஆம், நீங்களும் அப்படியே.

சபை முழுமை பெறுமா அல்லது இல்லையா என்பதும், இங்கேயே மனுஷர்கள் மத்தியில் எப்படியோ, அல்லது ஏதோ விதத்தில் கர்த்தருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாம்சீகத்தில் இங்கேயே இருப்பவர்கள், ஆனால் அவர்களுக்கு இனி நடக்க இருக்கும் விஷயம் எப்படி இருக்கும் என்று இன்னும் கணிக்க முடியாத நிலையில், நாம் இறக்க மாட்டோமா, அல்லது இன்னும் உயிர்த்தெழுதலை அப்படியே அடைவோமா? என்ற கேள்வி தொடர்பாக, சமீபத்தில் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்கு முன்பு காவற்கோபுரத்தில் வேதாகம வசனம் ஒன்றின் மேல் உங்கள் கவனத்தை நாங்கள் கோரியிருந்தோம். வேதாகமம் கூறுகிறது, "பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள் - - - எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்." இப்பொழுது, இந்த வசனம் பற்றிய நமது சிந்தனைக்கு இடமிருக்கிறதை நாம் பார்க்கிறோம். ஏன்? எப்படி? இந்த பரிசுத்தவான்கள் பெறப்போகிற மகிமையைக் கவனித்துப் பாருங்கள். தேவனுடைய ஜனங்களில் சிலர் இளைப்பாறுதலில் இருக்கிறார்கள். மற்றவர்கள் சிறிய படுக்கைகளில் - சொல்லப் போனால், அடிச்செருகு கட்டில்களில் இருக்கிறார்கள். முழு அளவில் வளர்ச்சி பெற்றவர்கள் முழு அளவிலான பெரிய படுக்கைகளை உடையவர்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். இருபுறமும் கருக்குள்ள பட்டயம் - அது என்ன? தேவனுடைய வார்த்தை என்பது ஆவியின் பட்டயம் ஆகும். திரைக்குப் பின்னால் நாம் மகிமைக்குள் பிரவேசித்த பிறகு, தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம் நம் கைகளில் தேவையில்லை. நமக்குத் தேவைப்படுமா? நாம் அப்படி நினைக்கவில்லை. நாம் மறுரூபமாக்கப்பட்ட பின்பு, தேவனுடைய வார்த்தையை ஆவியின் பட்டயமாக நாம் பயன்படுத்துவோமா என்பது குறித்து நான் மிகவும் சந்தேகப்படுகிறேன். தேவனுடைய ஆவிக்குரிய வார்த்தையை விட, அதிகமான ஆவியின் ஆயுதங்களை, அதிக சக்தி வாய்ந்த ஆயுதங்களை நாம் பெறுவோம் என்று நினைக்கிறேன். இதற்கு மேலாக என்ன? "நம்முடைய உதடுகளில் தேவனை உயர்த்தும் முழுமையான துதிகள்" திரைக்கு இந்தப் பக்கத்திலும் கூட இப்படி இருக்க முடியும். ஆகவே, "படுக்கை" என்பது, இந்தப் பக்கத்தில் இருக்கும் திரையையும், பட்டயத்தையும் சுட்டிக்காட்டுவது தெரிகிறது. பிறகு வசனம் கூறுகிறது, "எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை செலுத்தவும்/" ஏன்? மாம்சத்தில் நாம் நியாயத்தீர்ப்பு செலுத்த இருக்கிறோமா? எனக்கு தெரியாது. எனக்கு எந்த கருத்தும் இல்லை. எனது அருமை சகோதரர்களே, நான் நியாயத்தீர்ப்பை செலுத்த முயற்சிக்கவில்லை. கர்த்தர் நான் செய்ய

வேண்டும் என்று என்னிடம் மிகவும் திட்டமாக உறுதிப்படுத்தும் வரையில் நான் அப்படி செய்ய மாட்டேன். நான் அதைச் செய்ய வேண்டும் என்றால், அவர் என்னை வெளியே தள்ளிவிட்டு, அதை எனக்கு வெளிப்படையாகத் தெரிய வைக்க வேண்டும். அவர் எனக்கு வெளிப்படையாக தெரியப்படுத்தும் வரைக்கும், நான் யாரிடமும் என்னுடைய வலிமையை பிரயோகிப்பேன் என்று நான் அனுமானிக்க மாட்டேன். அப்படி இருந்தால், அதற்கான நேரம் வருமாயின், நமக்கு அதை எப்படி வெளிப்படுத்துவார் என்பதை தேவன் அறிவார். பிறகு, நாம் நமது கடமையை செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் அப்படியே செய்ய வேண்டும் என நாம் நம்புகிறோம். ஆனால்;, நாம் பார்க்கும் வரை, நாம் காத்திருப்போம். நான் இந்த கருத்துக்களை எளிமையாக உங்களுக்கு ஆலோசனையாக பரிந்துரைக்கிறேன். ஏனெனில், நாம் 1914ம் வருஷத்தின் முடிவை நெருங்குகிறோம். இந்த கருத்தை உங்கள் மனதில் இருத்தி வைக்க விரும்புகிறேன். இந்த வருஷம் நாம் மறுரூபம் அடையாமல் இருப்பதற்கான சாத்தியம் உண்டு. சபை முழுமை பெறுவதற்கான வாய்ப்பு இருக்கலாம். புறஜாதிகள் காலங்கள் எதிர்பார்த்தபடியே, சரியான நேரத்தில் முடிவடைவதற்கு வாய்ப்பு உண்டு. இருப்பினும் சபை மறுரூபம் ஆகாமலிருக்கலாம்.

மற்றுமொரு கேள்வியை நான் எதிர்பார்க்கிறேன்: புறஜாதிகள் காலங்கள் அக்டோபர், 1914ல் முடிவடைய வேண்டும் என்று அனுமானித்தால், நாம் பொருத்தமான முறையில் எதை எதிர்பார்க்கலாம்? நல்லது, என்ன எதிர்பார்ப்பது என்று எனக்கு உறுதியாகத் தெரியாது. நாம் உறுதியாக கூற முடியாது. இந்த உலக ராஜ்யங்களை அழிக்க கர்த்தர் பதினைந்து நிமிடங்கள், அல்லது பதினைந்து நாட்கள், அல்லது பதினைந்து வருஷங்கள் எடுத்துக்கொள்வாரா என்பது பற்றி நாம் அறியவில்லை. இது வெறும் யூகம் மட்டுமே. ஆனால் வேதாகம அடிப்படையில் ஒரு சிறு பகுதியை யூகமாக நாம் கொடுக்க இயலும். நாம் யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுகம் இடையில் இணைகளைப் பார்த்திருக்கிறோம். யூத யுகத்தின் முடிவில் அறுவடையின் நாற்பது வருஷங்கள் கிறிஸ்தவ யுகத்தின் முடிவில் அறுவடையின் நாற்பது வருஷங்களுக்கு இணையாக இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இஸ்ரயேல் அறுவடையின் நாற்பது வருஷங்களின் முடிவில், அவர்களின் அறுவடை முடிந்த பிறகு, சுமார் ஆறு அல்லது ஏழு மாதங்களுக்குள் - ஆறு மாதங்களுக்கு சற்று அதிகமாக - இஸ்ரயேல் தேசம் அழிக்கப்பட்டது. ஆகவே, அதே இணையைப் பயன்படுத்தி, இது இணை என்றால், (இது இணை என உறுதியாக நான் சொல்ல முடியாது), இது இணை என்றால், அக்டோபர் 1914ம் வருஷத்தைத் தொடர்ந்து ஆறு மாதங்களில் மகா உபத்திரவம் இந்த உலகத்தின் மீது வர எதிர்பார்க்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக உள்ளது. நல்லது, இப்பொழுது, அடுத்த வருஷம் இந்த நேரம் வரையில் நீங்கள் காத்திருந்தால், அது எப்படி இருக்கும் என்பதைப் பார்க்கலாம். நமக்கு இன்னொரு மகாநாடு (CONVENTION) உள்ளது. அப்பொழுது, ஒருவேளை, விவேகமாய் இருப்போம். ஆனால், கர்த்தரிடத்தில் அவருடைய வார்த்தையிலும், எந்த சூழ்நிலைகள் அல்லது நிலைமைகள் இருந்தாலும், நமக்குள்ள விசுவாசம் எந்த அளவிலும் குறைவுள்ளதாய் இருக்காது என்று நான் நம்புகிறேன். புறஜாதிகள் காலங்கள் முடிவு வரை நாம் அர்ப்பணிப்புக்குட்படவில்லை. 1914ம் வருஷ முடிவு வரையிலோ, அல்லது 1915ம் வருஷ முடிவு வரையிலோ, நாம் அர்ப்பணிப்புக்குட்படவில்லை. ஆனால், நாம் சரியான முறையில் அர்ப்பணிப்புக்கு உட்பட்டிருந்தால், நாம் மரணம் வரைக்கும் அர்ப்பணிப்புக்குட்பட்டிருப்போம்.

## காலக்கணக்கு - அக்டோபர், 1914. பெரிதான அழைப்பு.

## கே : 89:1 :: கேள்வி (1914) - 1

அருமை சகோதரர் ரசல், இந்த வருஷத்தில் அக்டோபர் மாதம் தொடங்கி, பிறகு முடிந்து விடும் போது, நாம் இன்னும் மாம்சத்தில் இருந்தால், பெரிதான அழைப்புக்குரிய வகுப்பாரிலிருந்து கர்த்தர் உங்களை கைவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்று நீங்கள் நினைப்பீர்களா?

**பதில்:** நான் அவ்விதத்தில் இல்லை, அருமை நண்பர்களே, அக்டோபர் 1914ம் வருஷத்தைப் பற்றி சொல்லும்போது, எங்களுடைய சிறந்த மதிப்பீட்டின்படி, வேதாகம சாட்சியத்தின்

அடிப்படையிலான மதிப்பீட்டின்படி, வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள காலக்கணக்கை எவ்விதம் ஆழ்ந்து படிப்பதினால், எங்களுடைய சிறந்த கருத்து முடிவின்படி, புறஜாதிகள் காலங்களின் முடிவு அக்டோபர் மாதம் 1914ம் வருஷத்தைக் குறிப்பிடுகிறது.

இப்பொழுது, அப்படி இருக்கும் என்று நாங்கள் அறியவில்லை. ஏனெனில் விசுவாசத்திற்கும் அறிவுக்கும் வித்தியாசம் உள்ளது. இப்பொழுது, எந்த பாடத்திலும் ஒரு பகுதியை கிட்டத்தட்ட தனித்துவமாக நாங்கள் அறிகிறோம். சிலருக்கு மிகவும் துல்லியமான மதிப்பீடு இருக்கும். சிலருக்கு குறைவாக இருக்கும். ஆனால் தேவனுடைய ஜனங்கள் தற்காலத்தில் பார்வையின் அடிப்படையில் நடக்க வேண்டும் என்று தேவன் முன்மொழியவில்லை. இது தான் அவருடைய உள்நோக்கம் ஆகும். ஆகவே தான், பார்வையின் அடிப்படையில் நாம் நடக்கும் விதத்தில், திட்டமான சாட்சியங்களை நான் காணும்படியாக, சில வழிமுறைகளின் மூலம் தேவன் நமக்குக் கொடுக்கவில்லை. உதாரணமாக, நமக்காக "ஜீவ கிரீடம்" வைக்கப்பட்டிருக்கிறது. என்று தேவன் நமக்குச் சொல்லியிருக்கிறார். ஆனால், அதை விசுவாசக் கண்களால் மட்டுமே தவிர, நீங்கள் பார்த்திருக்கவில்லை. இருப்பினும், அந்த பொருளுக்காகவே நீங்கள் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள், உங்கள் ஜீவனை செலவழிக்கிறீர்கள், அந்த ஜீவ கிரீடத்தின் மேல் உங்களுக்கு முழுமையான விசுவாசம் இல்லாவிட்டால், உங்களின் தற்கால ஜீவனை ஒப்புக்கொடுக்கமாட்டீர்கள்., எதிர்காலத்தில் வாழ்வதற்கு நாடமாட்டீர்கள்.

காலக்கணக்கைப் பற்றிய விஷயத்தில், வேதாகம பாடங்களில் நாங்கள் சொன்னதை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறோம். திட்டவட்டமாக அறிந்து கொள்ளும் விஷயமாக இது இருக்கவில்லை. நாங்கள் இரண்டாம் வால்யூமில் சுட்டிக்காட்டியுள்ளபடி, அதில் அமைக்கப்பட்டிருக்கும் காலக்கணக்கு வேதாகமத்தின்படி சிறந்ததாகவும், மிக துல்லியமானதாகவும் இருக்கிறதாக நாங்கள் தீர்மானிக்க முடிகிறது. நாள், வாரம், மாதம் என்று காலக்கணிப்பு முறையில் கொடுக்க வேதாகமம் பாசாங்கு செய்வதில்லை. அது ஒட்டுமொத்தமாக சில குறிப்பிட்ட காலப்பகுதிகளைக் கொடுக்கிறது. ஆகவே, காலக்கணக்கைப் பொருத்த வரையில், விசுவாசத்தைக் கையாளுவதற்கான சந்தர்ப்பம் எப்பொழுதும் இருக்கிறது. எங்களுடைய கணிப்பில் இந்த காலக்கணக்கு சரியானது என்று முன்பே சொல்லியிருந்தோம். இருந்தாலும், இதில் பிழை இருக்கலாம் என்றும், ஒருவேளை ஒரு வருஷம் அல்லது சில வருஷங்கள் வேறுபாடு இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. வேதாகமத்தின் சில குறிப்பிட்ட தீர்க்கதரிசனங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து பின்னப்பட்டு இருக்கும். இதனால் தேவன் இவற்றை உபயோகப்படுத்தக் கருதுகிறார் என்று வேதாகம காலக்கணக்கு நமக்கு தோற்றமளிக்கிறது. நான் என் விசுவாசத்தில் இதை உபயோகப்படுத்துகிறேன். இந்த காலக்கணக்கின்படியே நான் செயல்படுகிறேன். இந்த தீர்க்கதரிசன பகுதிகள் ஒருங்கிணைகிறது என்றும், தேவனுடைய கிரியைகள் எல்லாவற்றுடனும் இது இணைக்கப்படுகிறது என்று நான் நம்புகிறேன். துவக்கத்திலிருந்து ஒரு பொருத்தம் இருப்பது தெரிகிறது. தேவனுடைய நோக்கமாயிராவிட்டால், இவைகள் எப்படி ஒன்றாக பொருந்தி வர முடியும் என்பதை என்னால் பார்க்க முடியவில்லை. அப்படியிருந்தால், இந்த விஷயங்கள் எல்லாம் நமக்கு எச்சரிப்பாகவும், நமக்கு அறிவுறுத்தலாகவும் உள்ளன. ஆகவே, இந்த விஷயம் குறித்து ஒவ்வொரு வாசகரும் யோசித்துப் பார்க்கும் கடமையை அவர்கள் மேலேயே வைக்கிறேன். நாம் எப்பொழுதும் பெற்றிருப்பது போல, வேதாகமத்தில் நமக்கு நிறைய உள்ளது. இந்த விஷயம் எனக்கு எப்படி எனக்குத் தோன்றுகிறது என்பதை நான் வெறுமனே சுட்டிக்காட்டி, உங்கள் கருத்தின் முடிவை உபயோகப்படுத்துங்கள் என்று உங்களை கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

காலக்கணக்கு பற்றிய விஷயத்தில் நான் எப்பொழுதும் என்ன நினைத்தேனோ, அதையே இப்பொழுதும் நினைக்கிறேன். நான் எந்த இடத்திலும் குறைபாடு எதுவும் காணவில்லை. நான் அங்கே எந்த ஒரு பொருளைக் குறித்தாகிலும் என்னுடைய விரலைச் சுட்டிக்காட்டி, அது தான் தவறான பகுதி என்று சொல்ல எனக்குத் தெரியாது. அது போன்ற இடத்தை நான் அறியவில்லை. இது முப்பது வருஷங்களுக்கும் முன்பு எப்படி இருந்ததோ, அப்படியே தான் இப்பொழுதும் எனக்குத் தெரிகிறது.

பிறகு ஏன் 1914ம் வருஷம் பற்றிய விஷயம் இங்கே உள்ளது? சகோ. ரசல் அவர்களே, நீங்கள் நடக்கும் என்று நினைத்த விஷயங்கள் எல்லாம் இந்த காலத்தில் நடக்குமா?

இல்லை, அது தான் உண்மை. அவைகள் எல்லாம் நடக்கவில்லை.

அதற்கு நீங்கள் என்ன விளக்கம் சொல்கிறீர்கள்?

நான் எதிர்பார்க்க வேண்டியதை விட, ஒருவேளை அதிகமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நமது எதிர்பார்ப்புகள் தவறானவை என்றும், காலக்கணக்கில் பிழை உள்ளது என்றும் ஏதாவது சுட்டிக்காட்டுவதற்கு நான் ஒன்றையும் காணவில்லை. யுகங்களைப் பற்றிய இந்த மாபெரும் திட்டம் தான் ஒரே திட்டமாக, தெய்வீகத் திட்டமாக உள்ளது என்பதை நான் வாழும் ஒவ்வொரு நாளும் பெரிதும் நம்புகிறேன். மனுஷர் யாரும் அந்த திட்டத்தை தயாரித்திருக்க முடியாது. மனுஷருடைய திட்டங்கள் மற்றும் கோட்பாடுகளுடன் வேதாகமத்திலுள்ள இந்த தெய்வீக திட்டத்தை ஒப்பிடும்போது. அரைகுறையாகவும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகவும் இருப்பதைப் பார்க்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்படுதல் குறித்த உபதேசம் பற்றி இந்நாள் வரை கொடுக்கப்பட்டுள்ளதை எண்ணிப் பாருங்கள். நான் எதையும் தனியாக குறிப்பிட்டுச் சொல்லத் தேவையில்லை. இந்த காலம் வரை நம்மை வந்தடைந்திருக்கும் எல்லா மதக்கொள்கைகளையும் எடுத்துக்கொண்டால், இந்த கொள்கைகளில் எதையாவது பாதுகாக்க எண்ணுவதற்கு, இந்த உலகத்தில் புத்திசாலியான மனுஷன் ஒருவனும் நினைக்கிறதில்லை. இன்றைய கால வெளிச்சத்தில் அவைகள் எல்லாம் மிகவும் முட்டாள்தனமாகவே இருக்கின்றன. யுகங்களைப் பற்றிய தேவத்திட்டத்தின்படி, நாம் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்போது, பூமியிலுள்ள ஒவ்வொன்றும் அவமானத்திற்கு உள்ளாக்கப்பட்டும், இருளில் போய்ச் சேர விரும்புவதாகவும் இருக்கிறது. அவர்கள் அதை விரும்பினாலும், அல்லது விரும்பாவிட்டாலும், உண்மை நிலை அப்படித்தான் இருக்கின்றது. மேன்மையான திட்டம்; உலகளாவிய விஷயங்களில் தேவனுடைய அறிவைக் காண்பிக்கிறது. “உலகத் தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியானவரை” தேவன் கொடுத்திருந்தார். தேவன் பாவத்தை, விழுகையை அனுமதித்திருந்தார். பாவத்தை அவர் ஏன் அனுமதித்தார்? விழுந்துபோன ஜனங்கள் குறிக்கப்பட்ட காலம் வரும்போது, இளைப்பாறுதலின் காலத்தில், உரிய காலத்தில் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாய் இருக்கிறது. இதற்கிடையில் இராஜ்யத்தின் பணியில் கிறிஸ்துவின் உடன்-சுதந்தரவாளிகளாவதற்கு தேவன் சபையைத் தேர்ந்தடுப்பது போன்றவைகள் எல்லாம் இந்த மகத்தான திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. எந்த மனுஷனும் அப்படிப்பட்ட திட்டத்தை செய்ய முடியும் என்று நீங்கள் என்னை நம்ப வைக்க முடியாது. சில நேரங்களில் திட்டங்களை உருவாக்குவதற்கு 6000 வருஷங்களுக்கு மேலாக மனுஷர்கள் தேவனுக்காக திட்டங்களை தயாரித்து வருகின்றனர். அவையெல்லாம் மடமையாக உள்ளன. மடமை இல்லாத பகுதி பிசாசினுடையதாய் இருக்கிறது.

ஆகவே, 1914ம் வருஷத்தில், அல்லது வேறு எந்த சமயத்தில் எதுவும் ந\டக்க முடியாது என்பது, யுகங்களைப் பற்றிய மாபெரும் தேவத்திட்டத்தைப் பொருத்த வரையில், என் மனதை ஒரு இம்மியளவும் மாற்ற முடியாது.

இராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட இருக்கும் போது, காலம் சமீபித்திருக்கிறது என்பது பற்றி என்ன சொல்லலாம்?

ஒவ்வொரு கூடுதலான அறிகுறியும், அது சமீபமாயிருக்கிறது, அதுவும் வாசலருகே சமீபமாயிருக்கிறது என்று நான் பல தடவைகள் நினைத்திருக்கிறேன். அதனுடைய உச்சக்கட்டம் 1914, 1915 அல்லது வேறு எந்த வருஷத்தில் வந்தாலும், நான் சந்தேகம் அடையமாட்டேன். இது சமீபமாயிருக்கிறது, வாசலருகே இருக்கிறது. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வேதாகம பதிவுகளிலிருந்து நான் பார்க்கும் போது, 1874ம் வருஷத்திலிருந்தே நாம் அறுவடை காலத்தில் இருந்து கொண்டு இருக்கிறோம் என்பதும், இது கிறிஸ்தவத்தின் அறுவடையாகும் என்பதும்

ஏற்கனவே உங்களுக்கு அறிமுகப்படுத்தியதும், நீங்கள் படித்ததுமான விஷயம் என்பதை நான் அறிவேன், நாம் அறுவடையில் இருக்கிறோம் என்பதையும், அந்த பணி இப்பொழுது நடந்து கொண்டு இருக்கிறது என்பதையும் மெய்ப்பித்துக்காட்டும் வகையில்,, பணியின் ஒவ்வொரு அம்சமும் உண்மையாக விளங்குவதைப் பார்த்து, நான் ஆச்சரியப்படுகிறேன். இந்த அறுவடையின் நாற்பது வருஷங்களை, அல்லது இன்னும் சில மாதங்களில் நாற்பது வருஷங்களை நாம் பெற்றிருக்கிறோம். நாம் என்ன பார்த்திருக்கிறோம்? வேதாகமத்தின்படி, இந்த அறுவடை காலத்தில், மாபெரும் தலைமை அறுவடையாளரின் பிரசன்னம் இருக்கும் என்றும், இது உலகத்தார் அறிந்துகொள்ளமாட்டார்கள், என்றும், ஆனால் அவருடைய பிரசன்னம் பற்றிய அறிவு அவருடைய ஆடுகளுக்கு ஒன்றன்பின் ஒன்றாக படிப்படியாக வெளிப்படும் என்பதையும், வேதாகமத்தின்படி நாம் அறிந்துள்ளோம். இயேசு அவருடைய வருகையைப் பற்றி, “இரவில் திருடன் வருகிறவிதமாய்” இருக்கும் என்று நமக்குச் சொல்லும்போது, இந்த “பரோசியா”, இந்த பிரசன்னம் உலகத்தாருக்கு தெரியாது என்று முன்னறிவித்திருந்தார். இதைக் குறித்து அப்போஸ்தலர் கூறும்போது, உலகத்தார் ஆச்சரியப்படுவார்கள். என்றும், அவர் எந்த வேளையில் வருவார் என்பதை அறியமாட்டார்கள் என்றும் சொல்கிறார். “சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிற வர்களல்லவே.” ஏனெனில், நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும், பகலின் பிள்ளைகளாகவும் இருப்பதால், கர்த்தரின் வருகையைப் பற்றிய விஷயத்தில், உலகத்தாருடன் நாம் இருளில் இருக்காதபடி, இந்த விஷயத்தில் போதுமான வெளிச்சம் பெறக்கூடிய வகையில் தகவலை நமக்கு அறிவிப்பார். இதற்கான சில சாட்சியங்கள் என்ன?

உலகத்தாருக்கு அவருடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவருடைய இரண்டாம் வருகையில் எந்தவிதமான விசேஷித்த பணியை செய்வார் என்பதை இயேசுவே நமக்கு சொன்னார் நான் பதில் கூறுகிறேன். உலகத்தாருக்கு தம்மை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவர் பிரசன்னமாயிருந்து சபைக்குரிய பணியை அவர் செய்கிறார். இது தான் அந்த பணி. தாலந்து, மற்றும் ராத்தல் உவமைகளில், அவர் தம்முடைய ஊழியக்காரருக்கு குறிப்பிட்ட தாலந்துகளையும் ராத்தல்களையும் கொடுத்து, ராஜரீக வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ள, தூர தேசத்துக்கு, பரலோகத்திற்கு சென்றார். அவர் திரும்பி வந்த பிறகு, தம்முடைய சொந்த ஊழியக்காரர்களை முதலில் அழைத்து, கணக்கிடும் வேலையை செய்கிறார். கடந்த நாற்பது வருஷங்களாக இது தான் நடந்து கொண்டு இருக்கிறாதா? ஆம், கர்த்தருடைய ஊழியக்காரர்களிடத்தில் கணக்கிடும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. தங்களுடைய தாலந்துகளையும், ஆசீர்வாதங்களையும் அவர்களுக்கு வரும் வாய்ப்புகளயும் எப்படி உபயோகித்திருக்கிறார்கள் என்ற கணக்கை கொடுக்க வேண்டும். அவர்கள் எந்த அளவு விகிதத்திற்கு தாங்கள் பெற்றிருந்தவைகளை உபயோகப்படுத்தியிருக்கிறகளோ, அதே அளவு விகிதத்தில் அவர்களுடைய கர்த்தரின் மகிழ்ச்சிக்குள் பிரவேசிக்கிறார்கள். நீங்களும் நானும் நமது கர்த்தரின் மகிழ்ச்சிக்குள் முழுவதுமாக இன்னும் பிரவேசித்திருக்கிறோம் என்று நான் சொல்ல விரும்பவில்லை. இல்லை, இதற்கு மேலாக இருக்கிறது. இரண்டு பட்டணங்களுக்கு அதிபதி, ஐந்து பட்டணங்களுக்கு அதிபதி போன்றவைகளைப் பெறப்போகும் அந்த பங்கிற்கு, முழுமையான அளவில் அவருடைய மகிழ்ச்சிக்குள் நாம் பிரவேசிக்கப் போகிறோம். எஜமான் அவர்களைப் பெயர் சொல்லி அழைக்கும் போது, அவர்களுக்கு கிடைத்த தாலந்துகளுக்கு சரியாக விசுவாசமுள்ளவர்களாய்க் காணப்பட்டால், இந்த அறுவடையில் விசுவாசிகளாய்க் காணப்படும் அனைவரும் உயர்த்தப்பட்டு, கிறிஸ்துவின் உடன்-சுதந்தரவாளிகளாய் இருக்கும் உயர்ந்த பரிசு கொடுக்கப்படும். புரிந்து கொள்வதற்கு ஏதுவான தேவனுடைய அன்பை அறிந்து கொள்ள இப்பொழுது அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். இது கடந்த நாற்பது வருஷங்களாக நடந்து கொண்டிருக்கிறது.

கர்த்தருடைய விசுவாசிகளுக்கு இத்தகைய ஆசீர்வாதம் கிடைக்கும் சமயத்தில், மற்றுமொரு வகுப்பார் - பெயரளவில் இருக்கும் வகுப்பார் உள்ளனர். இவர்களுக்கு எதுவும் சாதகமாயிருப்பதில்லை. இது அப்படித் தான் இருந்து வருகிறது என்று நான் நம்புகிறேன். நம்முடைய கர்த்தருக்கு விசுவாசமாக இருந்திராத சில குறிப்பிட்ட நபர்களைப் பற்றிச்

சொல்லும்போது, கர்த்தர் தமது வாயினின்று வாந்திப்பண்ணிப் போடுவார் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. களைகளிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுக்கும் பணி நடந்து வருகிறது. இந்த களைகள் கட்டுகளாகக் கட்டப்பட்டு சுட்டெரிக்கப்படும்.

நான் விரிவான முறையில் சொல்ல முயற்சிக்காமல், நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்த புள்ளிவிவரங்களை மேலோட்டமாக வெறுமனே சொல்ல விரும்புகிறேன். புதிதாக எதையும் சொல்லாமல், உங்களுக்கு ஞாபகமூட்டும் விதத்தில் உங்கள் தூய்மையான மனங்களை வெறுமனே தூண்டிவிடுவதற்காகவே இதை நான் செய்கிறேன். இவையெல்லாவற்றையும் நான் அச்சுவடிவிலேயே சொல்லியிருக்கிறேன். அகை நீங்கள் முன்பே படித்து இருக்கிறீர்கள். இதை நான் உங்களுக்கு வெறுமனே நினைவூட்டுகிறேன். இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் நான் நாற்பது வருஷங்களுக்கு மேலாக நம்பியிருக்கிறேன். இன்னும் நான் நம்புவேன்.

கிரம ஒழுங்கில் அடுத்து செய்யப்போவது என்ன? இயேசுவின் வெளிப்பாடு என்று வேதாகமம் சொல்கிறது. அது என்ன? பிரகாசமாகிறது. என்ன வெளிப்படுத்தப் போகிறது? நாம் ஏற்கனவே கண்டுணர்ந்த அவர், தற்போது பிரசன்னமாயிருக்கும் மாபெரும் அறுவடையாளராகிய நமது இரட்சகரின் பிரசன்னத்தை நாம் ஏற்கனவே கண்டுணர்ந்திருக்கிறோம். ஆனால் அவரை உலகம் அறியவில்லை. முதலாம் வருகையில் நடந்தது போலவே, இதுவும் இருக்கிறது. இயேசு பிரசன்னமாய் இருந்தார், ஆனால் யூதர்கள் அவரை அறியவில்லை. அவரைப் பற்றி யோவான் ஸ்நானகன் கூறினார், “நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்.” இந்த நாற்பது வருஷங்களாக இங்கே நம்முடன் இருந்து கொண்டிருக்கும் அவர் - தேவன் நியமித்திருக்கும் இராஜா இவர் என்பதை நாம் நம்புகிறோம். உலகம் அவரை அறியவில்லை. அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தப்படவில்லை. தமக்கு விசேஷமான ஜனங்களை கூட்டிச்சேர்க்க, மணவாட்டி வகுப்பாரை ஆயத்தம் பண்ண, “இரவிலே திருடனைப் போல” வந்திருக்கிறார். தேவனுடைய கரத்தில் உள்ள மேன்மையான பாகையில் வைப்பதற்கு தயாராக, அவர்களுடைய மெருகூட்டுதலின் இறுதிக்கட்ட பணிகளைப் பார்த்து, அவர் நவரத்திரக் கற்களை சேகரிக்கிறார். தேவன் இந்த கற்களை ஆயத்தப்படுத்துகிறார். இந்த கற்களை பாகையின் கட்டமைப்பில் பொருத்துவது என்பது, இராஜ்யத்தில் சபையை ஸ்தாபிப்பது ஆகும். கர்த்தருடைய ஜனங்களுக்கு உயிர்த்தெழுதலில் மாற்றம் சீக்கிரம் வரும் என்ற நம்பிக்கையும், அதில் நாமெல்லாரும் பங்குபெறும் நம்பிக்கையிலும் இருக்கிறோம்.

மேலும் இப்பொழுது, யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு திரும்பப் போவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். மேலும் எதிரபார்த்திருக்கிறோம். இந்த அறுவடை காலத்தின் துவக்கத்தில், உலகத்திலுள்ள எந்த யூதனும் பாலஸ்தீனத்திற்கு திரும்பிப் போவது குறித்து நினைத்திருக்கவில்லை. அவர்கள் எல்லோரும் தங்களுடைய சொந்த காலக்கணக்கைக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களுடைய காலக்கணக்கு நமது காலக்கணக்கிலிருந்து பல நூறு வருஷங்கள் வித்தியாசம் உள்ளது. 6000 வருஷங்கள் முடியும் வரை எதுவும் எதிர்பார்ப்பதற்கில்லை. அவர்களுடைய காலக்கணக்கின்படி, இன்னும் 350 வருஷங்கள் உள்ளன என்று நான் நினைக்கிறேன். கடந்த இருபது வருஷங்களாக யூதர்கள் விழித்துக்கொண்டு, அவர்களுடைய காலக்கணக்கை கவனத்தில் கொள்ளாமல், இஸ்ரயேலுக்கான மறுசீரமைப்பையும், தேவன் அவர்களுக்கு மறுபடியும் தேசீய வாழ்வைத் திரும்பக் கொடுப்பார் என்றும் நம்புகிறார்கள். வேதாகமத்தின்படி இந்த விஷயம் நிறைவேற்றப்படுவதற்கான உரிய காலம் இதுவே. நாம் இதுகாறும் பார்த்திருக்கிறதை விட, ஒருவேளை அவர்களின் பெரிதான அறிவொளியை நாம் எதிர்பார்க்கலாம். இருப்பதை விட அதிகமான யூதர்கள் செல்வார்கள் என்று நாம் நினைத்தோம். எவ்வளவு பேர் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியும் போதுமான விவேகம் இருக்கவில்லை. தேவனுடைய வார்த்தை நிறைவேறும் வகையில் போதுமான எண்ணிக்கையை நாம் பார்க்கிறோம். உலகத்தின் பல பகுதிகளிலிருந்து அதிக ஆர்வமுள்ள சில யூதர்கள் கூட்டிச்சேர்க்கப்படுவதைப் பார்க்கிறோம். பணக்கார யூதர்கள் எப்பொழுதும் அல்ல. ஆனால் எருசலேமில் இப்பொழுது பதினெட்டு கோடீஸ்வரர்கள் வாழ்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

இந்த காலப்பகுதியில், கணிசமான, அல்லது பல வருஷங்களாகக் கூட சாத்தியமில்லா திருக்கலாம், அளவுக்கு செல்வங்களுடன் அங்கே யூதர்கள் எப்படி கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் என்பதை தேவன் கூறுகிறார், இது இந்த வருஷத்தில், அல்லது பல வருஷங்களுக்குக் கூட சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த எல்லா விஷயங்களும் நம் வழியில் வருகின்றன. இந்த அனைத்து விஷயங்களும் இறுதியில் செயற்படுத்தப்படுவது, எப்போதும் இருந்ததைப் போலவே இப்பொழுதும் இருக்கிறது.

மற்றுமொரு விஷயம் உள்ளது. அக்டோபர் 1914ம் வருஷத்தில் எது நழுவிவிடப் போகிறது? புறஜாதிகள் காலங்கள் அப்பொழுது முடிவடையாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று நான் யூகிக்கிறேன்.

இது போன்ற விஷயம் எதுவும் எனக்குத் தெரியாது.

அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது.

உங்களுக்கு தெரியாது.

அவைகள் அங்கே முடிவடையவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. நாம் காத்திருந்து பார்ப்போம்.

ஒருவர் சொல்கிறார், எப்படி இருந்தாலும், அதன் பொருள் என்ன?

நான் பதிலளிக்கிறேன், அன்புள்ள நண்பர்களே, “புறஜாதிகள் காலங்கள்” என்ற சொற்றொடர் எதைக் குறிக்கிறது என்பதை இங்குள்ள பார்வையாளர்கள் முக்கால் வாசி பேர்கள், ஒருவேளை, துல்லியமாக, அல்லது, விவரமான விளக்கத்தை நான் அளித்த பிறகு, இப்பொழுது அறிவார்கள். ஆனால் மீதமுள்ள கால் வாசி பேர்களுக்காக நான் சொல்கிறேன்.: தேவன் இஸ்ரயேலுக்கு கடந்த காலங்களில் ஒரு ராஜ்யத்தைக் கொடுத்திருந்தார். அது மேசியாவின் இராஜ்யத்தின் நிழலாக இருந்து, தாவீது ராஜாவிடத்தில் முதன் முதலாக அங்கீகரிக்கப்பட்டது. கர்த்தருடைய சிங்காசனத்தில் அவன் உட்கார்ந்தான் என்று அவரைப் பற்றி படிக்கிறோம். இப்பொழுது, பெருமளவில் மற்ற ராஜ்யங்கள் கர்த்தருடைய ராஜ்யங்களாக தங்களுடையதை உரிமை கோருகின்றன. ஆனால், வேதாகம அதிகாரமில்லாமல். அவர்கள் அப்படி உரிமை கோருகின்றனர். தாவீது ராஜா கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்தான். அவனுடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லும் போது, அந்த சிங்காசனத்தில் யாரோ ஒருவர் எப்பொழுதும் உட்காருவார் என்றும், இஸ்ரயேலின் சிங்காசனம் - தேவனுடைய சிங்காசனத்தில் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற் போவதில்லை என்று தேவன் அறிவித்தார். அப்படி நடக்கவில்லை. சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில், கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்தான். பிறகு சாலொமோனுடைய குமாரர் வழியாக கடைசி ராஜாவாகிய சிதேக்கியா என்னும் பெயர் உடையவன் வரையிலும் தொடர்ந்தது. தேவனுடைய ராஜ்யத்தின் பிரதிநிதியாக, தேவனுடைய ஜனங்களின் மேல் யூதாவின் சிங்காசனத்தில் தாவீது வம்சத்தில் கடைசி ராஜாவாக சிதேக்கியா உட்கார்ந்தான். பிறகு என்ன நடந்தது? அவனுடைய நாட்களில் தேவன் அவனிடம் கூறினார்: “இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரரானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்.” என்றார்.

இதன் கருத்து உங்களுக்குப் புரிந்ததா? தாவீதிலிருந்து சிதேக்கியா வரைக்கும் நிழலான ராஜ்யம் தொடர்ந்தது. பிறகு அது பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு, மேசியா தம்முடைய ஆட்சியில் தேவனுடைய மெய்யான இராஜ்யமாக அதை மாற்றியமைக்கும் வரைக்கும் அந்த ராஜ்யம் மாற்றியமைக்கப்படாது. அப்படியே இது நடந்து வருகிறது. அந்த தீர்க்கதரிசனம் தோல்வி அடையவில்லை. அது முதல் யூதர்களுக்கு ராஜ்யம் கிடைத்திருந்ததா? தேவனால்

அங்கீகரிக்கப்பட்டது ஒன்றுமில்லை. மக்காபியர், ஏரோது போன்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? தேவன் அங்கீகரித்த வம்ச வரிசையில் மக்காபியர்கள் வரவில்லை. ஏரோதின் குடும்பம் தாவீதின் வம்சாவளியில் வராதது மட்டுமல்ல, அவர்கள் ஏசாவின் குமாரர்கள்; சிதேக்கியாவிலிருந்து தற்காலம் வரை, தாவீதின் வம்சாவளியில் ராஜா எவரும் இருந்ததில்லை.. அடுத்து ஆட்சி செய்யப்போகிறவர் மேசியா. அதைப் பற்றி என்ன சொல்வது? இஸ்ரயேலர்களை எப்படி முறியடித்து, ஏழத்தனையாக - ஏழு வருஷங்களாக - தண்டிப்பார் என்று மோசே மூலமாக தேவனால் குறிப்பிட்ட காலப்பகுதி, அவர்களுடைய ராஜ்யம் சிதறுண்டதிலிருந்து மேசியா வரும் வரைக்கும் உள்ளன காலம் ஆகும். இது வெறும் சொல்லர்த்தமான ஏழு வருஷங்கள் அல்ல. ஏனெனில் சொல்லர்த்தமான ஏழு வருஷங்களுக்கு மேலாக, பல மடங்குகள் அதிகமாக அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். இதற்கு என்ன அர்த்தம்? ஏழத்தனை அளவு மட்டும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியிருந்ததா? இல்லை. பிறகு இதற்கு என்ன அர்த்தம்? தேவன் அவர்களுடைய பாவங்களுக்காக ஒரு அடையாளப்பூர்வமான வருஷங்கள் தண்டிப்பார் என்பது தான் அவருடைய நோக்கம் என்று நாம் நம்புகிறோம். அது எவ்வளவு காலம்?

வேதாகமத்தின்படி, ஒரு அடையாளப்பூர்வமான வருஷம் என்பது 360 வருஷங்களைக் குறிக்கிறது. ஒரு சந்திர வருஷத்திற்கு நாட்கள். ஒரு நாள் என்பது ஒரு வருஷத்தைக் குறிக்கிறது. ஆகவே ஒரு அடையாள வருஷம் என்பது 360 வருஷங்கள். அப்படியானால் என்ன? ஏழத்தனை என்பது, ஏழு மடங்கு 360 வருஷங்கள், அல்லது 2520 வருஷங்கள். இந்த காலப்பகுதி எப்பொழுது ஆரம்பிக்கிறது? சிதேக்கியாவிடமிருந்து கிரீடத்தையும், பாகையையும் தேவன் எடுத்துப்போட்ட அந்த சமயத்திலிருந்து தான் துவங்குகிறது. இந்த அளவு எதுவரைக்கும் நீடிக்கிறது? மேசியா தம்முடைய இராஜ்யத்தை பொறுப்பேற்கும் காலம் வரைக்கும் நீடிக்கும். அது எப்போது? அன்புள்ள சகோதர, சகோதரிகளே, நாம் புரிந்துகொண்டபடி, சிதேக்கியா கிரீடத்தை கி.மு. 606ம் வருஷத்தில் இழந்தான். நாம் அறிந்தவரையிலும், நம்பிக்கையிலும், இது கி.மு. 606ம் வருஷத்திலிருந்து 2520 வருஷங்களைக் கணக்கிட்டால், அது கி.பி. 1914 அக்டோபரில் முடிவடைகிறது. இப்பொழுது யாரேனும் அதை மாற்ற விரும்பினால், அப்படியே செய்யட்டும். அப்படி யாரும் செய்ய முடிவதை நாம் கண்டுபிடிக்க முடியவில்லை. இது பிழையற்ற உண்மை என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இதில் தவறு எதையும் நாங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் இந்த உலகத்தில் அவருடைய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவருக்கு சரியான காலம் கி.பி. 1914 அக்டோபர் ஆகும். ஒருவேளை இது தவறாக இருக்கலாம். ஆனால் இது தவறாகவே இருக்கிறது என்று நான் நினைக்கவில்லை. அப்படியிருக்க வாய்ப்பில்லை. அவர்களுடைய பாவங்களுக்கான யூத தண்டனை வருஷங்கள் ஆகும். இந்த வருஷங்கள் மற்ற தண்டனையோடு சம்பந்தமில்லை. யூதர்கள் பெரும் தண்டனையை எப்படி பெற்றார்கள்? இயேசுவை அவர்கள் நிராகரித்த போது, அவர்களுடைய தேசீய அந்தஸ்து எடுக்கப்பட்டு, கி.பி. 70ம் வருஷத்திலிருந்து விலக்கப்பட்டது. “கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்” என்று அவர்கள் மகிழ்ச்சியுடன் சொல்லும்போது, அவர்களுக்கு தண்டனை எதுவும் இருக்காது. அவர்கள் அவரைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். அப்படிச் செய்வார்கள் என்று நீங்கள் எப்படி அறிவீர்கள்? வேதாகமம் அப்படியே சொல்கிறது. உபத்திரவங்களுக்கு அடையாளமாக, அவர்கள் மேல் அக்கினியை அவர் ஊற்றுவார் என்று வேதாகமம் கூறுகிறது. “நான் அவர்கள் மீது கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின அவரைப் பார்ப்பார்கள்.” என்று வேதம் கூறுகிறது. நீங்கள் பெற்றிருப்பது போல, அவர்கள் புரிந்துகொள்ளுதலின் கண்ணால் அவரைப் பார்ப்பார்கள். நீங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்களா? ஆம். யூதனும் பார்ப்பாரா? ஆம். யூதனும் பார்க்கப் போகிறார் என்று நாங்கள் நம்புகிறோம். புதிய ஒழுங்குமுறைகள் குறித்த விஷயங்களில் முதலாவதாக, அவர்களுடைய ஆசீர்வாதங்களின் பங்கு இஸ்ரயேல் மீது ஊற்றப்படப்போகிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆயிரத்து எண்ணூறு வருஷங்களுக்கு முன்னதாக அவர்கள் நிராகரித்த இயேசுவை அங்கீகரிக்க அவர்கள் கண்கள் திறக்கப்படும்.

வேறு ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, தீர்க்கதரிசனமாக இயேசு கூறினார், "புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்." அவருடைய நாளில் இது மிதிக்கப்பட்டதா? ஆமாம். அவர்கள் ரோமர்களால் அடக்கியாளப்பட்டார்கள் அல்லவா? ஆம், நிச்சயமாக. இப்பொழுது புறஜாதிகளின் காலங்கள் நிறைவேறும் வரைக்கும், புறஜாதிகளால் எருசலேம் மிதிக்கப்படும். இது புறஜாதிகளுக்கு குறிப்பிட்ட காலங்கள் இருப்பதை உணர்த்துகிறது அல்லவா? ஆம், இதற்கு என்ன அர்த்தம்? ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்த உலகத்தை புறஜாதிகளுக்கு தேவன் கொடுத்தாரா? ஆம், இதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? இயேசு அப்படித் தான் சொன்னார். அதற்கான சாட்சியத்தைப் பார்க்க, வேதாகமத்தைப் பாருங்கள். தேவன் சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யத்தை எடுத்துக்கொண்டார். அவனிடமிருந்து கிரீடமும் எடுத்துக்கொள்ளப்பட்டது. பிறகு, முதன் முதலாக, புறஜாதிகளின் அரசாங்கங்களை அங்கீகரித்தார். இது நிரூபணமாகிறது. இது போதுமான அளவு எளிதான விஷயம். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை நீங்கள் நினைவுகொண்டால், அவன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி சிதேக்கியாவை வீழ்த்தி, எருசலேமை முற்றிலும் அழித்து, பலரை சிறைபிடித்துக் கொண்டு போன அந்த காலப்பகுதியின் துவக்கம் தான், கிரீடம் பறிக்கப்பட்டு, தேவனுடைய பார்வையின்படி, அதிகாரம் எங்கு மாற்றப்பட்டது என்பதை நமக்கு தெளிவாகக் காண்பிக்கிறது. தேவன் ஒரு தரிசனம் கொடுத்ததையும், அதன் விளக்கத்தையும் நான் உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். சிதேக்கியாவின் ராஜ்யம் அவனிடமிருந்து எடுக்கப்படுவதற்கு பதினெட்டு வருஷங்களுக்கு முன்பாக, யூதர்களின் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் மற்றவர்களுடன் சிறைபிடிக்கப்பட்டான். அந்த வாலிபன் தான் தானியேல். இவர் பாபிலோன் தேசத்தில் இருந்த அறிவில் சிறந்தவர்களின் மத்தியில் பெற்றுக்கொள்வதற்கு அங்கே தங்க வைக்கப்பட்டார். பதினெட்டு வருஷங்கள் பாபிலோனில் இருந்தார். சொப்பனத்தில் அடையாளப்படுத்தப்பட்ட அந்த நேரம் வந்தபோது, ராஜா இரவில் சொப்பனம் மிகவும் சுவராசியமாகவும், புதிராகவும் இருந்ததாகவும், அந்த சொப்பனம் அவனை விட்டு விலகியது என்றும் அதைத் திரும்ப நினைவில் கொண்டுவர முடியவில்லை என்றும் ஞானிகளிடம் கூறினான். அந்த சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெரிவிக்க வேண்டும் என்று அவன் ஞானிகளிடம் கேட்டான். அதற்கு ஞானிகள் அவனிடம் கூறினர்: எந்த ராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை அவனுடைய ஞானிகளிடம் கேட்டதில்லை என்றும், ராஜா சொப்பனத்தை சொல்வாரானால், அதற்கான அர்த்தத்தைக் கொடுப்போம் என்று தெரிவித்தார்கள். சொப்பனம் தெரிவிக்கப்பட்டால், ஒரு மனுஷன் அதன் அர்த்தத்தை ஏதோ ஒருவகையில் புனைந்து விட முடியும் என்பதை நான் மிக எளிதாக கண்டுபிடிக்க முடியும் என்றும், அவர்களுக்கு தெய்வீக வல்லமை இருந்தால், அவர்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் கூட சொல்ல முடியும் என்று ராஜா ஞானிகளிடம் பதிலுரைத்தான். "நீங்கள் அதைச் செய்ய முடியாவிட்டால், நீங்கள் தேவர்களிடம் தொடர்பில்லாவிட்டாலும், தொடர்புள்ளவர்களாகக் காண்பித்து மோசம் பண்ணுபவர்கள் என்று தீர்மானித்து உங்களை மரணத்திற்குள்ளாக்குவேன்." அவர்கள் பயந்தார்கள். ஆனால் தானியேல் அதைக் கேள்விப்பட்ட போது, (அப்போது, ராஜாவின் முன்னிலையில் அவர்களுடன் தானியேல் இருக்கவில்லை என்று தெரிகிறது.) ராஜாவிடம் கூறினார், "ஏன் இவ்வளவு அவசரம்? நீர் எனக்கு ஒரு குறிப்பிட்ட காலம் தவணை கொடுத்தால், உமக்கு சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் வெளிப்படுத்தி, உமக்கு பதிலளிக்கக்கூடிய ஒருவர் இருக்கிறார். அவர் தான் நான் ஆராதிக்கிற தேவன்." ராஜா கூறினான். "நல்லது, உனக்கு தவணை கொடுக்கப்படுகிறது." குறிக்கப்பட்ட நேரத்தில் ராஜாவின் முன்னிலையில் தானியேல் வந்து, அவனிடம் சொப்பனத்தைக் கூறி, அது உமக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது என்றார்.

"ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர். அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது; அது அந்த சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது. அப்பொழுது

அந்த இரும்பும், களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப் போலாயிற்று. அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக் கொண்டு போயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று." ராஜா கூறினான், "நீ சரியாகச் சொன்னாய். சொப்பனம் சரியாகவே உள்ளது. இப்பொழுது அர்த்தத்தைச் சொல்." தானியேல் சொல்ல ஆரம்பித்தார்: பரலோகத்தின் தேவன் ராஜாவுக்கு இந்த விஷயத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அது தேவனிடமிருந்து வந்தது. "பொன்னான அந்த தலை நீரே." நீர் ராஜாதி ராஜாவாயுமாயிருக்கிறீர். அந்த பெரும் சிலையில் முதலாவதாக அடையாளப்ப டுத்தப்படுபவர் நீரே; இந்த சிலை பூமியின் மீது ஆளுகை செய்யும் புறஜாதி அரசாங்கங்கள் அனைத்தையும் குறிக்கின்றது. இது தேவன் நிழலான ராஜ்யத்தை எடுத்துக்கொண்டதிலிருந்து, அவர் அதை திருப்பிக் கொடுக்கும் வரையிலான காலத்தைக் குறிக்கின்றது. தலை பாபிலோன் ராஜ்யத்தையும், அதற்கு அடுத்தது மேதிய-பெர்சியா ராஜ்யத்தையும், அடுத்தது கிரேக்கத்தையும், அடுத்தது கால்களைக் குறிக்கும் ரோம ராஜ்யத்தையும், அந்த வரிசையில் அடுத்தது, இரும்பும் களிமண்ணுமாகிய பாதங்களைக் குறிக்கும் புனித ரோம சாம்ராஜ்யத்தையும் அடையாளப் படுத்துகிறதாக அந்த விவரிப்பு நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நாம் புரிந்து கொண்டுள்ள விதமாக, பாதங்களிலுள்ள இரும்பு அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குறிக்கிறது. ஆரம்ப காலத்தில் காணப்பட்ட வடிவத்தில் இல்லாமல், ரோம சாம்ராஜ்யம் இன்றும் இயங்கி வருகிறது. உண்மையில் இது சபையும், சிவில் அதிகாரமும் சேர்ந்த வகையில் இருக்கிறது. ஐரோப்பா முழுவதையும் உலகத்தையும் ஆளுகை செய்ய இவை இரண்டும் முயற்சிக்கின்றன. இரும்பு (சிவில் அதிகாரம்) மற்றும் களிமண் மதம்) இவை இரண்டின் அதிகாரங்களுக்கு இடையில் சிதைவுகளும் பொதுவாக இருந்து வந்திருக்கின்றன. சில இடங்களில் இரும்பு முக்கியத்துவம் பெற்றதாகவும், சில இடங்களில் களிமண் முக்கியத்துவம் பெற்றும் இருக்கின்றன. வலிமையுள்ள இரும்பு தான் வழக்கமாக அதிகம் முக்கியத்துவம் பெறுகிறது, இரும்பு-களிமண் கலவையில் மதத்தைக் குறிக்கும் களிமண், கல்லுக்கு போலியாக உள்ளது என்று நான் சொல்லலாமா? வேறுவிதமாகச் சொன்னால், இந்த மத அதிகாரம் சிவில் அதிகாரத்துடன் சேர்ந்து கொண்டு, இது தேவனுடைய இராஜ்யம் என்று உரிமை கோருகிறது. இது உண்மையில் சிலையை மோதி, அழித்துப் போடுவதற்குப் பதிலாக, இந்த கல் தேவ சுபாவத்தைத் தரித்துக்கொண்டு ஆட்சிபுரிகிறது.

ஐரோப்பாவின் பெரும் அரசர்கள் இன்று, நடைமுறையில் எல்லோரும் தங்களை தேவனுடைய ராஜ்யமாக உரிமை கோருகிறார்கள். இருப்பினும் அவர்கள் சிவில் அதிகாரங்களாகவே இருக்கிறார்கள். ஒருவிதத்தில் பூமிக்குரிய ராஜாக்களுடன் அதிகாரத்தைத் திரட்டுகிறார்கள். அதே சமயத்தில், மற்றொரு விதத்தில், அவர்கள் தேவனுடைய ராஜ்யம் என்று உரிமை கோருகிறார்கள். தெய்வீக அதிகாரத்துடன் பேரரசர் ஜோசப் ஆட்சி செய்கிறார் என்றும், மேலும் ரஷ்யாவின் சக்கரவர்த்தியான பேரரசர் வில்லியம் போன்றோரும் அப்படியே ஆளுகின்றனர் என்று அந்த ராஜ்யங்கள் உரிமை கோருகின்றன.

இந்த பாதங்கள், அதிலும் குறிப்பாக கால் விரல்களால் அடையாளப்படுத்தப்படும் இந்த ராஜாக்களின் காலத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த வரிசையில் அடுத்து என்ன நடக்கப்போகிறது?

வேதாகமத்தின்படி, இந்த முழு சிலையும் சிறு துண்டுகளாக உடைந்து, "கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போல மாறி, முழுவதுமாக அகற்றப்படும் என்பது தான் அடுத்து நடக்கப் போகிற விஷயம் ஆகும். நீங்கள் மட்டும் ஊழியம் செய்ய வேண்டும் என்பதையும், யாரை நம்ப வேண்டும் என்பதையும் தேர்ந்தெடுங்கள் என்று வேதாகமம் கூறுகிறது. நாம் தேவனுடைய வார்த்தையின் மேல் நாம் நம்முடைய நம்பிக்கையை வைக்க வேண்டும் என்று நாம் கற்றிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். இது மற்றவருக்கு என்ன சொல்கிறதோ, அதைப் பொருட்படுத்தாமல், நமக்கு என்ன சொல்கிறது என்பதில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அந்த கல் சிலையை மோத வேண்டும் என்பதும், பிறகு, மோதிய கல் பூமி முழுவதையும் நிரப்ப வேண்டும் என்ற வரிசைக் கிரமத்தில் தான் அடுத்த விஷயம் நடக்கும் என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. வேதாகமம் சொல்வதை மட்டுமே நான் நம்புகிறேன். நான் என்ன நம்புகிறேன் என்பதில் உங்களுக்கு எந்த வித்தியாசமும் உருவாகத் தேவையில்லை. ஆனால் வேதாகமம் என்ன சொல்கிறது என்பது தான் முக்கியம் ஆகும். நாம் ஒருவருக்கு ஒருவர் என்ன சொல்கிறோம் என்று இல்லாமல், தேவனுடைய வார்த்தையையே பின்பற்றுகிறோம். நாம் மனுஷர்களைப் பின்பற்றி, போதுமான அளவுக்கு கெடுதியான அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம், **நாம் மனுஷர்களைப் பின்பற்றுகிறவர்கள் அல்ல, ஆனால் தேவனையே பின்பற்றுகிறோம்**. இந்த விஷயங்கள் நிச்சயமானவைகள். கர்த்தர் அவ்விதமாகவே சொன்னார். சிலையை மோதுவது 1915ல் நடக்கும், அல்லது இல்லை என்பது ஒரு விஷயமே அல்ல. தேவன் ஒருவரே அறிகிறார். ஆனால் வேதாகமத்தில் நான் பெற்றிருக்கும் சிறந்த அறிவின்படி, சிலை அதனுடைய பாதத்தில் மோதப்படுவது எப்பொழுது என்று நாம் எதிர் பார்ப்பது இந்த காலம் தான். 1914ம் வருஷம் அல்ல என்றும், 1915ம் வருஷம் என்றும் ஏன் சொல்கிறோம்? ஏனெனில், சிலையினால் அடையாளப்படுத்தப்பட்ட பாபிலோன், மேதியா-பெர்சியா போன்ற இந்த புறஜாதி அரசாங்கங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி வரையில் அவர்களுடைய இடங்களை தம் வசப்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இது சிதேக்கியாவின் கிரீடம் ஆகும். இந்த காலப்பகுதி முழுவதும் அவர்கள் வைத்திருக்க வேண்டும். இது உங்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்படுவது போல ஆகும். அக்டோபர் 1914ம் வருஷத்தில் காலாவதியாகும் குத்தகையை நீங்கள் பெற்றிருக்கிறீர்களானால், குத்தகை காலம் முடிந்த உடனேயே, இடங்களை விட்டு நீங்கள் வெளியே போக வேண்டிய காலம் ஆகும். உங்களுடைய குத்தகை முடிவடைந்ததை நீங்கள் அறியவில்லை என்றால், இது காலம் கடந்தது ஆகும். அக்டோபர் 1ம் தேதி, 1914 என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். நீங்கள் இங்கே எக்காலமும் தங்கப் போவதாக எதிர்பார்த்து, கட்டுவது, நடுவது, வீட்டை நிலைநிறுத்துவதை செய்து கொண்டு இருந்தீர்கள். இப்பொழுது உங்கள் குத்தகை ஓடிப்போய் விட்டது, பிறகு நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? நீங்கள் வெளியேற ஏதோ ஒரு எச்சரிப்பை பெறுவீர்கள். ஒருவேளை நீங்கள் போகாவிட்டால், **நீங்கள் வெளியேற்றப்படுவீர்கள்.**

புறஜாதிகள் காலங்கள் பற்றி நாம் பார்ப்பது என்னவென்றால், நிழலான இஸ்ரயேலிடமிருந்து தேவன் ராஜ்யத்தை எடுத்துக்கொண்ட போது, அவர் புறஜாதிகளுக்கு அதை குத்தகை முறையில் கொடுத்தார். "உலக விவகாரங்களில் நாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, அப்படிப்பட்ட விஷயங்களில் நீங்கள் சமாதானத்தை கொண்டுவர முடியுமா என்று உங்களுக்கு குத்தகை, அல்லது வாய்ப்பை நான் கொடுக்கிறேன்" என்று தேவன் புறஜாதிகளிடம் கூறினார்.

நாங்கள் இங்கே சொல்ல விரும்புகிறோம், சில புறஜாதி தேசங்கள் ஆச்சரியப்படத்தக்க முறையில் நன்றாக இயங்கின. அவைகளில் பல தேசங்கள் பிரமாதமாக இயங்கியதை நான் வாழ்த்துகிறேன். நாம் எதிர்பார்க்கக்கூடியது, மிருகத்தன்மை வாய்ந்த எல்லா அரசாங்கங்களும், அவைகளால் முடிந்த வரையில் நன்றாகச் செய்தன. அசுத்தமானவற்றிலிருந்து பரிபூரணத்தை நாம் எப்படி கொண்டுவர இயலும்? கி.மு. 606ல் துவங்கி, அக்டோபர் 1914ல் முடிவடையும் 2520 வருஷங்களடங்கிய புறஜாதிகள் காலங்கள் முடிவடையும் காலத்தை நெருங்கி வரும் நேரத்தில், இன்று நாம் என்ன நினைக்கிறோம்? நித்தியமான நீதியை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களா? இல்லை. அவர்கள் உலகத்தாருக்கு சந்தோஷத்தைக் கொண்டுவந்தார்களா? எல்லா ஜாதியாரும் விரும்புகிறதை அவர்கள் கொண்டு வந்தார்களா? இல்லை. நாம் எதன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்? தேவன் அறிவித்திருக்கிறதை, அவர் கொண்டு வருவார், மற்றும் "எல்லா ஜாதியாரும் விரும்புகிறதை", மேசியாவின் இராஜ்யம் மனுக்குலத்துக்கு கொண்டு வரும்.

எந்த தேசங்களாவது அகன்று போவதற்கு தயாராக இருக்கின்றனவா? இதைக் குறித்து நான் கேள்விப்படவில்லை. புறஜாதிகள் காலங்கள் காலாவதியாகி விட்டன என்று அவர்கள் அறிந்திருக்கிறார்களா? நான் யூகிக்கவில்லை. சத்தியம் உலகம் முழுவதும் சென்றடைந்து விட்டதா? ஆம், ஆனால் அது அவர்களுக்கு முட்டாள்தனமாக உள்ளது. பேரரசர் புறஜாதிகள்

காலங்களைப் பற்றி கேள்வியுற்றால், அவர் நகைப்பார். அப்படியே, இங்கிலாந்து அரசர் அல்லது ரஷ்ய அதிபதி (CZAR). பேரரசர் வில்லியம் கூட, தன்னுடையதை விட மேலான அரசாங்கத்துடன் தேவன் ஏதும் செயல்படுவாரா என்று நினைப்பதே, வில்லியம் பேரரசருக்கு நல்ல சிரிப்பை வரவழைக்கும். மேலான ஒன்றை தேவன் எப்படி பெற முடியும்? பதவியில் இருக்கும் தன்னை விட மேலான ராஜாவையோ, அல்லது ஆட்சியாளரையோ தேவனால் தேர்ந்தெடுக்க முடியாது என்று இந்த பெரிய மனுஷர்களுக்கு இயற்கையாகவே இந்த எண்ணம் இருக்கும். இந்த மனுஷர்கள் எல்லோரும் கடந்த கால தவறான நம்பிக்கை மற்றும் பொய்யான கோட்பாடுகளின் கீழ் பெரும்பாலும் செயல்படுகிறார்கள்/ சிறந்த முறையில் செய்ய முடியாத போது, அது எப்படி என்பதை அறியாத நிலையில் குழப்பமும் பெலவீனமும் அடைகிறார்கள்.

அவர்களுடைய குத்தகை முடிவடையும் போது, தேவன் அவர்களிடம் கொடுத்தவற்றை தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் திரும்ப எடுத்துக்கொண்டு, மேசியாவின் கரங்களில் இராஜ்யத்தை அமைப்பார். இதைத் தான் இயேசு ஜெபம் பண்ணக் கற்றுக்கொடுக்கும் போது, “உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று கூறினார்.

சகோதரர் ரசல் அவர்களே, பிறகு அக்டோபர் 1914ல் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அக்டோபர் மாதம் வரும், பூமியின் ராஜாக்கள் - புறஜாதிகள் தங்களுடைய குத்தகை காலம் முடிவடைகிறதை அறியமாட்டார்கள். பிறகு என்ன? புதிய இராஜா உலகத்தை தம் வசம் எடுத்துக்கொள்ளும் போது, தெளிவான வானத்திலிருந்து இடியுடன் கூடிய கைத்தட்டல் இந்த ராஜாக்களுக்குத் தெரிய வரும். அது எப்படி வரும்? அந்த விவரங்களை நான் அறியவில்லை. எனக்கு வெறும் மேலோட்டமாகத் தெரியும். இந்த ஒழுங்கு கிரமத்தில் தேவனுடைய இராஜ்யம் வெளிப்படுவது முதலாவது நடக்கக்கூடியதாக உள்ளது. எப்படி? வெளிப்படுத்துவது - அறியப்படுத்துவது. இதற்கு என்ன அர்த்தம்? “எபிஃபானியா” (EPIPHANIA) கிறிஸ்து இங்கே இருக்கிறார். இது ஆயிரம் வருஷங்களுக்குத் தொடரும். அவருடைய பிரசன்னம் இந்த நாற்பது வருஷங்களில் முடிவடையாது.

மற்றவர்கள் யாருக்கும் இந்த விஷயங்கள் இன்னும் அறிந்துகொள்ள இயலாது. “சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களைப் பற்றிக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலுள்ளவர்களல்லவே.”

இந்த ஒழுங்கின் வரிசையில் அடுத்து வருவது “வெளிப்பாடு” (THE APOKALUPSIS). இது எப்படி? எவராவது ஒருவர் சொல்லுவார், “எனக்கு எந்த யோசனையும் இல்லை; அவர் வருவார், பரலோக வட்டாரத்தில் உட்காருவார்; ஒவ்வொரு கண்ணும் அவரை நோக்கிப் பார்க்கும்; எல்லோரும் பணிந்துகொண்டு, அழுது புலம்புவார்கள்.” இம்மியளவும் உண்மை அல்ல. அன்புள்ள நண்பர்களே, இந்த விஷயம் பற்றி வேதாகமம் கூறும் முறை இப்படியாகத் தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன், “நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு அவர் வெளிப்படுத்தப்படுவார்.” இது அக்டோபர் 1914க்கு பிறகு நடக்குமா? ஆம். இது எவ்வளவு காலம் பிடிக்கும்? எனக்குத் தெரியாது. உங்களுக்கு ஏதேனும் யூகம் உண்டா? இந்த விஷயத்தில் யூத யுகம் முடிவடைவதில் உள்ள இணையை நாம் பார்த்திருக்கிறோம். கி.பி. 70ல் நகரம் அழிவடைந்தது. சுவிசேஷ யுகத்தின் முடிவும், உபத்திரவத்தின் முழுக்கும் வரும்; பூதங்கள் வெந்து உருகிப் போம்; முதலாளித்துவ கூறுகளும் உலகம் முழுமையும் சூளையைப் போல மாறும்; ஒவ்வொரு மனுஷனுடைய கையும் அவனுடைய அயலானுக்கு விரோதமாக இருக்கும். இது குறித்த வேதாகம விவரிப்பு இதுவே. மனுஷர் மேல் அக்கினி இயற்கையான முறையிலே வரும். இது அவர்கள் கட்டிய அவர்களுடைய சொந்த அக்கினி ஆகும். இது ஏனென்றால், அவர்கள் தங்களுக்குரியதோடு வாழ்வதில்லை. தேவன் இதைத் தடுத்து வைத்திரா விட்டால், இந்த நிலைமை வெகுகாலத்திற்கு முன்பே வந்திருக்கும். சரியான நேரம் வரும்பொழுது, தேவன் நான்கு காற்றுகளையும் பிடித்து வைக்கமாட்டார். அப்பொழுது பெரும் தீ முழுமையாகவும், துரிதமாகவும், பயங்கரமானதாகவும் இருக்கும். இந்த காலத்தைப் பற்றி பேசும்

போது, "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை. தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" என்று இயேசு கூறினார்.

தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தம் என்ன? அவர்களைப் பற்றி என்ன? தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இராஜ்யத்தை அமைத்து, அந்த பெருங்குழப்பத்தை தடுப்பார்கள். அவர்கள் குறுக்கிட்டு, குழப்பத்திலிருந்து ஒழுங்கை திரும்பக் கொண்டு வருவார்கள்.

யூதர்களை அழிப்பதற்காக அவர்கள் மேல் வந்த உபத்திரவம் எவ்வளவு காலம் இருக்கும்? சுமாராக ஒரு வருஷம், நாற்பது வருஷங்கள் முடிவடைகிற போது, இங்கே என்ன எதிர்பார்க்கலாம்? இந்த உபத்திரவத்திற்கு ஒருவேளை இங்கே ஒரு வருஷம் போதுமானதாயிருக்கும். தேவன் ஒருவரே அறிவார். நாம் வெறும் யோசனையை சொல்லுகிறோம். ஆகவே, 1915ம் வருஷம் மிகவும் கடுமையானதாக இருக்கும்.

அப்போது சபை எங்கே இருக்கும்? கேள்வியின் பாதி இங்கே உள்ளது. இந்த கேள்வி பற்றிய தாராளமான விளக்கத்தை நான் கொடுக்கிறேன். அதே சமயத்தில் கேட்கப்படும் அரை டஜன் மற்ற கேள்விகளுக்கும் நான் பதிலளிக்கிறேன். சபையைப் பற்றி என்ன? எனக்குத் தெரியாது. வெறுமனே நான் யூகிக்கலாம். நான் முன்பு சொன்னவிதமாக, யூகங்கள் எல்லாம் மிகவும் பாதுகாப்பற்றவையாகும். அவர் எப்பொழுது தோன்றுவாரோ, எப்பொழுது ஜுவாலிக்கிற அக்கினியில் வெளிப்படுவாரோ, நாம் அவருடனே கூட இருக்கலாம் என்பது நாம் எப்பொழுதும் புரிந்துகொண்டிருக்கிற நம்முடைய அனுமானம் ஆகும். நாம் இங்கிருந்து போய்விடுவோம் என்பதை இது உணர்த்துகிறது..

"இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி" இருக்க விழித்திருங்கள் என்று வேதாகமம் கூறுகிறது. நாம் போயிருப்போம் என்பதை இது உணர்த்துகிறது என்று நாம் நினைக்கிறோம். இது ஒரு உள்ளுணர்வு ஆகும். ஆனால் நமக்கு நிச்சயமாகத் தெரியாது. புறஜாதிகள் காலங்களின் முடிவில், அல்லது முடிவுக்கு முன்பு சபை கூட்டிச் சேர்க்கப்படும் என்று நாம் இயற்கையாக அனுமானிக்கிறோம். ஆனால் இது நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. சங்கீதங்களில் ஒன்றையும், அதில் சொல்லப்பட்ட அறிவிப்பையும் குறித்து உங்களுடைய கவனத்தை நாங்கள் ஈர்க்கிறோம் "பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள். ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும், அல்லேலூயா."

அன்புள்ள நண்பர்களே, சமீபத்தில் காவற்கோபுரத்தில் நாங்கள் சுட்டிக்காட்டியபடி, பரிசுத்தவான்கள் திரைக்கு இப்பக்கத்தில் ஏதோ ஒருவித மகிமையில் பிரவேசிப்பார்கள் என்பதை இவற்றிலுள்ள சில விஷயங்கள் உணர்த்துவதாகத் தோன்றுகின்றன. நமக்கு நிச்சயமாகத் தோன்றவில்லை. நாங்கள் தீர்க்கதரிசனம் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் தீர்க்கதரிசனத்தை படிக்கவே முயற்சி செய்கிறோம். நாம் திரைக்கு அப்பால் சென்றிருக்கும் வரையில், உலகத்தாரின் நியாயத்தீர்ப்புக்கு நாம் ஏதும் செய்வதற்கு இல்லை என்பது தான் நம்முடைய கருத்தாக எப்போதும் இருந்து வருகிறது. ஆனால் சில பணிகள் இப்பக்கத்தில் செய்யப்படும் என்பதை இது உணர்த்துவதாகத் தெரிகிறது. ஏனெனில் "படுக்கை" என்பது தொல்லையில்லாத ஓய்வை அடையாளப்படுத்துகிறது. தேவனுடைய வார்த்தை தான் வேதாகமத்தில் பட்டயமாகக் குறிக்கப்படுகிறது. திரைக்கு அப்பால் தேவனை உயர்த்தும் துதியை நாம் வாயில் கொண்டிருக்கும் போது, ஓய்வின் படுக்கையில் இருக்கவோ, அல்லது ஆவியின் பட்டயத்தைக் கொண்டிருக்கவோ தேவையில்லை என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்வோம். மறுபக்கத்தில் அதிகமான பூரணத்துவத்தை நாம் பெறுவோம். தற்காலத்திய நிலைகளில் இங்கு இவைகள் உபயோகப்படும். ஆகவே, அந்த சங்கீதத்தில் குறிப்பிடப்படும் வெகுமதி இங்கே உள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது அது என்ன? எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில்

செலுத்துவதில் எல்லா பரிசுத்தவான்களும் பங்குகொள்வார்கள் என்று அடுத்த வசனம் வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. இதற்கு என்ன அர்த்தம்? தேவனுடைய ஜனங்களில் சிலர் திரைக்கு இந்த பக்கத்தில் இருப்பார்கள் என்றும், மற்றவர்கள் திரைக்கு அப்பால் இருப்பார்கள் என்றும் தோன்றுகிறது.. அவர்கள் அங்கேயும், நாம் இங்கேயும் இருந்து, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தில், முழுமையான ஒரே சரீரமாக இரண்டு பக்கங்களிலும் இருப்பவர்கள், கூட்டாக சில பணிகளைச் செய்ய ஈடுபடுவோம். இந்தக் கருத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம். அதற்கு வாய்ப்பும் உள்ளது. நான் புரிந்துகொள்ளுதலோடு, என்னுடைய விசுவாசக் கண்ணைத் திறந்தே பார்க்கிறேன். இது அப்படியே இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் நாம் அறியாத இடத்தில் இருக்கிறோம், நம்முடைய விசுவாசம் வலுவானது; ஆனால் இந்த மாறுதல்கள் குறித்தான நம்முடைய எதிர்பார்ப்புகள் அனைத்தும் அக்டோபர் 1ம் தேதியில், அல்லது ஒரு வருஷத்திற்குப் பிறகு நிறைவேறுமா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் தேவனுடைய விருப்பம் உங்களுக்கு எதுவாயிருக்கிறதோ, அதுவே உங்கள் விருப்பம். நான் நம்புகிறேன், தேவனுடைய விருப்பம் எனக்கு எதுவாயிருக்கிறதோ, அதுவே என் விருப்பம். நான் நினைத்திருந்ததற்கு அப்பால் வேறு ஏதேனும் தேவன் வைத்திருந்தால், அவருடைய விருப்பம் செய்யப்படுவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்களும் அப்படித் தானே? நீங்களும் அப்படியே என்று நிச்சயிக்கிறேன்.

மாநாட்டிலுள்ள அருமை நண்பர்களில் சிலர் விசுவாசத்தில் தடுமாற்றமுள்ளவர்களாய், அதை விற்றுப்போடுவது போன்ற உணர்வில் இருப்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அவர்களைக் கண்டுபிடிக்க விரும்புகிறேன். நீங்கள் பெற்றிருப்பதற்கு எவ்வளவு வாங்க விரும்புகிறீர்கள்? நீங்கள் பெற்றிருப்பதை எல்லாம் தொகையிட்டுப் பாருங்கள். இதற்காக நீங்கள் எவ்வளவு எடுத்துக் கொள்வீர்கள்? 1000 டாலர்கள் எடுத்துக் கொள்வீர்களா?

பார்வையாளர்களிடமிருந்து: “இல்லை”.

நீங்கள் 10,00,000 டாலர்களை எடுத்துக் கொள்வீர்களா? - “இல்லை”.

உலகம் முழுவதும் எடுத்துக் கொள்வீர்களா? - “இல்லை”.

எப்படியிருந்தாலும் உங்களுக்கு போதிய பேரம் இருக்கிறது. எது வந்தாலும், உங்களுக்கு எப்படியும் நல்ல பேரமாக இருக்கும். விலையுயர்ந்த முத்து - விலை மதிப்பற்ற முத்தைப் பற்றி நமக்குச் சொன்னதை நீங்கள் பிடித்துக் கொண்டு, அதைப் பாராட்டுகிறீர்கள். இந்த முத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, உங்களிடம் உள்ள எல்லாவற்றையும் விற்று விடுங்கள். நீங்கள் ஒரு தடவை உங்கள் சொந்த விருப்பத்தை விற்றுப் போட்டீர்கள். தேவனுடைய திட்டம் அக்டோபர் 1914 அல்லது 1940 என்று நீங்கள் சொல்வதற்கு எதுவும் இல்லை. இது நம்முடைய காரியம் அல்ல. நீங்கள் கர்த்தருக்கு எல்லாவற்றையும் கொடுத்து விட்டீர்கள். இது அவருடையது.

நான் எந்த அளவிற்குப் பார்த்தாலும், திருப்தி தான். ஏனெனில் என்னை வழி நடத்துகிறவர் என்னுடைய தேவன்.

## சபை - மத்தியஸ்தர் தேவை.

### கே : 99:1 :: கேள்வி (1907) - 1

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாவதற்கு முன்னர், அவர் நம்முடைய மத்தியஸ்தராக இருக்கும் தேவை, தனிப்பட்டவர்களாயிருக்கும் நமக்கு இருக்குமா?

**பதில்:** கிறிஸ்து நமக்கு மத்தியஸ்தராக இருப்பதற்கு நமக்கு தேவைப்பட்டிருக்குமானால், அப்பொழுது தேவன் அவரை நமக்கு மத்தியஸ்தராகவே கொடுத்திருப்பார். தேவன் அவரை நம்முடைய மத்தியஸ்தராக கொடுக்கவில்லை என்ற உண்மையே, நமக்கு அந்த முறையில் அவர் தேவையில்லை என்பது நிரூபணமாகிறது. உடன்படிக்கை என்ற நிலைப்பாட்டைத் தவிர, வேதாகமம் மத்தியஸ்தரைப் பற்றி எதுவும் பேசுகிறதில்லை. மத்தியஸ்தரைப் பற்றி

பேசும்போதெல்லாம, உடன்படிக்கையுடன் தொடர்புபடுத்தியே வேதாகமம் எப்பொழுதும் பேசுகிறது. உதாரணமாக, நியாயப்பிரமாணத்தின் மத்தியஸ்தராக மோசே இருந்தார். புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து இருக்கிறார். ஆபிரகாமுக்கு மத்தியஸ்தர் இல்லை, ஏன்? முதல் உடன்படிக்கை எல்லாம் தேவனைச் சார்ந்ததாகவே இருந்தது. தேவன் **ஒருவரே**. எங்கு ஒரே நபர் இருக்கிறாரோ, அங்கே மத்தியஸ்தர் தேவை இல்லை. தேவன் இதை எவ்விதம் பொருள் கொள்கிறார்? மூல உடன்படிக்கையை தேவன் முற்பிதாவாகிய ஆபிரகாமுடன் செய்யும் போது, எந்த நிபந்தனைகளுமே குறிப்பிடப்படவில்லை. தேவன் தான் இதை செய்கிறேன் என்றார். அப்படியே ஆயிற்று. நான் இப்படி செய்கிறேன், ஆகவே நீயும் இப்படி செய் என்று தேவன் சொல்லவில்லை. இது வெறுமனே நிபந்தனையற்ற வாக்குத்த்தமாக இருந்ததால், அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், இரண்டு நபர்களும் ஒருவருக்கொருவர் சரியாக செய்கிறார்களா என்று பார்ப்பதற்கு உங்களுக்கு மத்தியஸ்தர் தேவை இல்லை. அந்த உடன்படிக்கைக்கு இரண்டு நபர்கள் இல்லை. அந்த உடன்படிக்கைக்கு தேவன் மட்டுமே ஒரே நபர். நியாயப்பிரமாண உடன்படிக்கை இஸ்ரயேல் ஜாதியுடன் செய்யப்பட்டது. நாம் புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோமா? இல்லை. ஏனெனில் புதிய உடன்படிக்கை இன்னும் வரவில்லை. புதிய உடன்படிக்கை எதிர்காலத்திற்கு உரியது. இது எப்படிச் சொல்லுகிறது? “இஸ்ரயேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் வருகிறது.” நீங்கள் இஸ்ரயேல் குடும்பத்தைச் சார்ந்தவரா, அல்லது யூதா குடும்பத்தையா? இல்லை. ஆகவே, புதிய உடன்படிக்கை உங்களுக்கு அல்ல. நாம் விசுவாசமுள்ளவர் களாயிருந்தால், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்த வகுப்பாரின் அங்கங்களாக இருப்போம். வேறுவிதமாகச் சொன்னால், நீங்களும் நானும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரின் அங்கங்களாவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து மத்தியஸ்தர் ஆவார். ஆனால் அவர் மணவாட்டியை உடையவராகப் போகிறார். சிலர் கூறலாம், நாம் எங்கிருந்து வருகிறோம்? நாம் எந்த உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோம்? நாம் மூல உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோம். இதற்கு மத்தியஸ்தர் தேவை இல்ல. சபைக்கு மத்தியஸ்தர் தேவை இல்லை. இதற்கு எது தேவைப்படும்? அவர்கள் பிதாவிடம் நேரடியாக வர முடியுமா? இல்லை. நல்லது, அவர்களுக்கு எது தேவைப்படுகிறது? வேதாகமம் நமக்காக பிதாவுடன் பரிந்து பேசுகிறவர் இருக்கிறார் என்று வேதாகமம் சொல்லுகிற அவர் தாம் நமக்குத் தேவை

## சபை - வற்புறுத்தும் பொருத்தனை - திக்குமுக்காடச் செய்யும் மனசாட்சி.

### கே : 100:1 :: கேள்வி (1909) - 1

தூண்டிவிடும் பொருத்தனை இந்த முறையில் இருக்கிறதல்லவா?

**பதில்:** இது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நான் தெளிவாகப் பார்க்கவில்லை. தவறான முறையில் தூண்டி விடும் பொருத்தனை அந்த முறையில் இருக்கலாம். ஒருவருடைய மனசாட்சிக்கு விரோதமாக யாரையும் பொருத்தனை செய்யத் தூண்டுவது தவறானதாகும். ஆனால் அவர்களுடைய நலனுக்காகச் செய்யும் எண்ணத்தில், ஒருவர் பொருத்தனை செய்ய வற்புறுத்துவது சரியானது. அந்த விஷயத்திலுள்ள நன்மைகளைப் பற்றி அவர் என்ன நினைத்தாரோ, அதை அவர்களுக்குத் தெரியப்படுத்துவது அவருக்கு சரியானதாகும். வேதாகம பார்வையைத் தவிர, அந்த விஷயத்தை வற்புறுத்துவதாக இருக்காது. பவுல் அப்போஸ்தலன் சொன்னது போல, “நான் உங்களை **வேண்டிக் கொள்கிறேன்,** ஆகவே”. ஆனால் நீங்கள் சொல்வீர்கள், “பவுல், நீங்கள் அதிகமாக வற்புறுத்துகிறீர்கள். இல்லை. இது உங்களுடைய மனசாட்சிக்கு விரோதமாக இருந்தால், உங்களுடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்காதீர்கள். நீங்கள் உங்களை ஜீவபலியாக **கண்டிப்பாக** ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று வேதாகமத்தில் எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா? நாம் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தால், கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்வதில் சந்தோஷமடைவார் என்று அவர் நம்மிடத்தில் கூறுகிறார்: “இப்பொழுது தான் ஏற்றுக்கொள்ளத்தக்க காலம்.” சிறப்புரிமைகள் என்னவென்றும், வெகுமதிகள் என்னவென்றும் நீங்களும் நானும் அறிவோம். ஆகவே, தம்மை

ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு என்ன வெகுமதி வர இருக்கிறது என்பதை உணர்ந்த பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." ஆகவே, பொருத்தனையைப் பற்றிய விஷயத்தில், நீங்கள் அந்த பொருத்தனையை, அல்லது ஏதாவது பொருத்தனையை நீங்கள் செய்ய வேண்டும் என்று வேதாகமத்தில் கட்டளை ஏதும் இல்லை. ஆனால், கர்த்தருடைய ஜனங்களாக இருப்பவர்கள் தங்களுடைய உறுதியை அடையாளப்படுத்தும் பொருத்தனைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று வேதாகமே சுட்டிக்காட்டுகிறது. பொருத்தனை என்பது உங்களுடைய சொந்த பங்கிலான மனமார்ந்த செயல் ஆகும். ஆனால் நீங்கள் கேட்கலாம்: "சகோதரனே, நீங்கள் எப்போதாவது பொருத்தனை எடுத்திருக்கிறீர்களா?" "ஆம், ஐயா, எண்ணிக்கைகளில் நான் அவற்றை எடுத்திருக்கிறேன்" "அவைகள் உங்களுக்கு நன்மையான விஷயமாக இருந்ததா?". ஆம், மிகவும் நன்மையாக அவற்றை நான் பார்த்திருக்கிறேன். நான் கர்த்தருக்கு அர்ப்பணிப்பின் பொருத்தனையை எடுத்தேன். - என்னுடைய எல்லா செயல்களும், வார்த்தைகளும் அவருக்கு மகிழ்வளிக்கும். நீங்கள் சொல்லலாம்: "அது ஒரு விரிவான பரந்த பொருத்தனை. நீங்கள் அந்த பொருத்தனைக்கு அடிமையாக இருக்கிறீர்கள்." ஆம், ஐயா. பாவம் மற்றும் மரணம் என்னும் பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டு, நீதியின் பிரமாணத்தின் ஊழியக்காரராகி யிருக்கிறோம் - நாங்கள் கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் கட்டுண்ட அடிமையாக இருக்கிறோம். எனக்கு எந்த சுதந்தரமும் இல்லை. கர்த்தருடைய விருப்பம் எது என்று நான் நம்புகிறேனோ, அதை நான் செய்ய.கடமைப்பட்டுள்ளேன். நீதிபரருக்கு அடிமையாக இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் உங்களுக்கோ, அல்லது எந்த அரசாங்கத்திற்கோ, அல்லது அமைப்பிற்கோ அடிமை இல்லை. நான் ஒன்றைத் தவிர, வேறு எந்த சபையிலும் இருந்ததில்லை - அது காங்கிரகேஷனல் சபை. (CONGREGATIONAL CHURCH) ஆகும். அதிலிருந்து நான் வெளியேறி விட்டேன். இப்பொழுது நாம் உலக முழுவதிலும் உள்ள எந்த விஷயத்திற்கும், அல்லது எந்த நபருக்கும் அடிமைத்தனமாக இருக்கவில்லை. கர்த்தர் ஒருவருக்கே. நான் உங்களுக்கு எழுதும் எந்த விஷயத்திலும் சரியான புரிந்துணரலைப் பெற்றிருப்பீர்களானால், எந்த மனுஷனுக்கும், அல்லது எந்த விஷயத்திற்கும் அடிமையாக இருக்க நான் உங்களைக் கேட்டுக்கொண்டதில்லை. என்பதையும், ஆனால் கர்த்தர் ஒருவருக்கே என்பதையும் புரிந்து கொள்வீர்கள். நீங்கள் சரியான முறையில் செய்யக்கூடிய ஒரு பொருத்தனை இருக்கிறது. அது புருஷனுக்கும் மனைவிக்கும் இடையிலான கலியாண பொருத்தனை ஆகும். ஆனால் மற்ற எல்லா பொருத்தனைகளையும் நான் கர்த்தருக்கு செலுத்த விரும்புகிறேன். அவைகளெல்லாம் கர்த்தருடைய விருப்பத்திற்கு என்னை அதிகமாகக் கீழ்ப்படியத்தக்க அளவில் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன். நான் குழந்தையாக இருக்கும் போது, "தன்னடக்கம் உறுதிமொழி" கூட நான் எப்போதும் கையெழுத்திட்டதில்லை. ஏனெனில், இது என்னை யாரோ ஒருவருக்கு கட்டுப்படுத்துவது போல உணர்ந்தேன். நான் கர்த்தருக்கு இதைச் செய்ய வேண்டும் என்று நான் எப்போதாவது கண்டால், அது கர்த்தருக்கென்று செய்வது என்று உணர்ந்து, அதை என் கடமையாகச் செய்வேன். நான் ஒருவருடைய முடிவை மூச்சுத் திணற வைக்கும் விதத்தில், அவரை பொருத்தனை செய்ய வற்புறுத்துகிறேன் என்ற எண்ணத்தை இந்த கேள்வியை எழுதியவர் கொண்டிருந்தார் என்பது செய்தியாக இருக்கலாம். இல்லை. அவர்கள் விஷயத்தை ஜாக்கிரதையாகவும், ஜெபத்துடனும் கவனிக்க வேண்டும் என்றே ஆலோசனை சொல்கிறேன். அவர்களுடைய நன்மையாகவோ, அல்லது தீமையாகவோ ஏதாவது இருக்குமோ என்று பார்க்க வேண்டும். உங்களுக்கு ஏதாவது நன்மையாக இருக்கும் என்று நீங்கள் பார்த்தால், பொருத்தனை செய்யுங்கள். இல்லையென்றால், பொருத்தனை செய்ய வேண்டாம். சில வருஷங்களுக்கு முன், நான் செய்த ஒரு பொருத்தனையை நினைக்கிறேன். அது, எல்லா நகரங்களிலும் பொதுமக்கள் முன்னிலையில் காட்டுவதற்கு வந்த சுழலும் படக்காட்சிகள் - சலன படங்கள் சிலவற்றைப் பற்றியதாகும். இவைகளில் சிலவற்றை நான் பார்த்தேன், வெளியே வந்த பிறகு, இந்த விஷயம் பற்றி யோசித்துப் பார்த்து, கூறினேன்: அந்த காட்சி பெட்டிகள் வழியாகப் பார்த்ததில், எனக்கு நன்மை இருப்பதாக நான் நம்பவில்லை. நான் மறுபடியும் ஒன்றை எப்போதும் பார்க்க மாட்டேன் என்று

ஒரு பொருத்தனை பண்ணினேன். நீங்கள் கேட்கலாம்: அதைப் பார்ப்பதில் பாவம் ஏதும் உண்டா? இல்லவே இல்லை. நான் இதை இப்பொழுது செய்தால், எனக்கு இது பாவமாகும்.

## சபை - மனசாட்சியைத் தூண்டுவது - கீழ்ப்படிவது.

### கே : 101:1 :: கேள்வி (1909) - 1

கீழ்ப்படிதல் என்ற கோட்பாட்டின் தொடர்பாக நம்முடைய முடிவை எந்த அளவுக்கு வலுக்கட்டாயப்படுத்தலாம்?

**பதில்** நம்முடைய முடிவை. வலுக்கட்டாயப்படுத்துவது ஒரு விஷயம், நம்முடைய மனசாட்சியை வலுக்கட்டாயப்படுத்துவது வேறு ஒரு விஷயம். நமது **மனசாட்சியை**, அல்லது நமது முடிவை திக்குமுக்காடச் செய்யும் கேள்வி எழும்போது, நம்முடைய முடிவை திணறச் செய்வதே மேலானதாகும் என்று நான் சொல்கிறேன். ஏனெனில் **நாம் நம்முடைய மனசாட்சியை வலுக்கட்டாயப்படுத்தக் கூடாது.** இது வெறும் முடிவு குறித்த விஷயமாகவும், இந்த முடிவின் பொறுப்பு நம்மேல் சுமத்தப்படாததாகவும் இருந்தால், அதை சபையாரிடம் விட்டு விட வேண்டும். உங்களுடைய முடிவை மற்றவர்களுக்கு சமர்ப்பித்து விடுங்கள். உங்களுடைய எண்ணத்தை மற்றவர்களின் முடிவுக்கும் சமர்ப்பித்து விடுங்கள். உங்களுடைய முடிவு மற்றவர்களுடையதை விட சிறந்ததாக இருந்தால், அதை மற்றவர்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறீர்கள். பிறகு மௌனமாயிருந்து விடுங்கள். இல்லாவிட்டால், நடுவர் குழுவில் ஒருவராக நீங்கள் இருப்பது போல, மற்ற பதினொன்று நபர்கள் நான் இந்த விஷயத்தை எப்படி பார்க்கிறேன் என்று பார்க்காமல், அவர்கள் உணர்வே இல்லாமல் இருக்கிறார்கள் என்று கூறுபவராக இருக்க வேண்டியிருக்கும்.

## சபை - மூப்பர்களுக்கு கீழ்ப்படிதல்.

### கே : 102:1 :: கேள்வி (1909) - 1

ஒரு மூப்பர், உதாரணமாக, ஜெபம் பண்ணும் விதம் பற்றி ஆலோசனை சொன்னால், கீழ்ப்படிதலின் கொள்கையானது அதை ஏற்றுக்கொள்ள நம்மை வழிநடத்துகிறதா?

**பதில்:** நாம் ஒருமித்து தொழுது கொள்ளும் போது, சபையின் ஏற்பாடுகளுக்கு நாம் பணிந்து நடந்து கொள்வது, சபையின் ஒழுங்குமுறையில் நமக்கு மிகவும் சரியானதாகும். கர்த்தருக்குள் அர்ப்பணிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ள ஜனங்களாக நாம் இருப்போமானால், உதாரணத்திற்கு, இப்படிப்பட்ட ஒரு மூப்பர் சபைக்கு வராத சமயத்தில், ஒருமித்து தொழுது கொள்பவர்களுக்கு ஏற்ற வகையில், சபை. சந்திப்பின் ஒழுங்குமுறை எப்படி இருக்க வேண்டும் என்று நாம் சொல்ல வேண்டும். ஒரு மூப்பர் தான் சபைக்கு வராத போது, சபை கூடுதலை யார் வழிநடத்த வேண்டும் என்பதை அவர் சொல்வதும் சரியான முறை ஆகும். அந்த மூப்பரால் நியமிக்கப்பட்ட ஒருவர் அவருடைய ஆலோசனைகளுக்கு அன்பாக, முடிந்த வரை கீழ்ப்படிந்து நடப்பது, "நீங்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுவது போல சரியானதாகும். உதாரணமாக, சகோதரர் ஷெர்மன் கூடுகையை ஆரம்பித்து, "நாம் எல்லோரும் எழுந்து நின்று இந்த பாட்டை பாடுவோம்" என்று சொன்னால், நாங்கள் எழுந்திருக்க வேண்டுமென்று அறிவுறுத்த உங்களுக்கு யார் உரிமை கொடுத்தார்" என்று சொல்வதற்குப் பதிலாக, உடல் பெலவீனர்களைத் தவிர்த்து, நாம் எல்லோரும் எழுந்திருக்க வேண்டும். அல்லது, ஒரு எடுத்துக்காட்டாக, "ஜெபம் பண்ணும் போது நாங்கள் தலை வணங்க வேண்டுமா?" என்று சிலர் சொல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். "நல்லது, நான் ஜெபம் பண்ணும் சமயத்தில் எழுந்து நிற்பது என்னுடைய வழக்கமாக இருக்கிறது. நான் எழுந்து நிற்கப் போகிறேன்: என்று சிலர் கூறலாம். மனசாட்சி சம்பந்தமான விஷயம் இல்லாத பட்சத்தில், ஒவ்வொரு காரியத்திலும் ஒன்றாக மற்றவர்களுடன் ஒத்துப்போகும் விதமான குறிப்பிட்ட அளவு விருப்பத்தை நாம் கொண்டிருப்பது நல்ல விஷயமாகும். கர்த்தருடைய ஜனங்கள் போர்க்குணம் உடையவர்களாக

இருக்கிறார்கள். இந்த குணம் இல்லாவிட்டால், நாம் ஜெயங்கொள்கிறவர்களாக இருக்க மாட்டோம். ஆனால், இதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால், அது நம்மை சச்சரவுக்குரியவர்களாகவும், மற்றவர்களுடன் ஒத்துப்போவதில் கஷ்டமுள்ளவர்களாகவும், வாழ்வதற்கு கடினமாகவும் இருக்க நேரிடும். ஒவ்வொரு நியாயமான விதிமுறைக்கு நாம் கூடியவரையில் நாம் நம்மை பணிவுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கு சொந்தமாக உரிமை கொண்டாடினால், எல்லா சமயங்களிலும் குழப்பமே இருக்கும். நாம் ஒருவருக்கொருவர் பணிந்து நடந்து கொள்வது நல்ல விஷயமாகும். ஆனால், இது மனசாட்சியைப் பொருத்த விஷயமாக இருக்கும் போது, மனசாட்சியை மீறாதபடிக்கு அந்த மனசாட்சியின் பக்கத்தில் போதிய தைரியமும், ஆண்மையும் உடையவர்களாய் நிற்க வேண்டும். இந்த உலகத்தில் மனசாட்சியுடன் தொடர்பில்லாத திரளான விஷயங்கள் உள்ளன.

## சபை - ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்.

### கே : 102:2 :: கேள்வி (1909) - 2

இந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் என்ன? "ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்." *வெளி. 2:4)

**பதில்:** உங்களுக்கு நினைவிருக்கும், இந்த வார்த்தையும் சபையின் முதல் படியைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. பிதாவின் மேலும், இயேசுவின் மேலும், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் நாட்களில், முதலாம் நூற்றாண்டின் கொஞ்சக் காலப்பகுதியில் வெளிப்பட்ட இரட்சிப்பின் மாபெரும் திட்டத்தின் மீது சபை அன்பு கொண்டிருந்ததை இந்த வசனம் அர்த்தப்படுத்துகிறது. இந்த அன்பு மற்றும் பக்தி வைராக்கியத்தின் பெரும்பகுதி படிப்படியாகக் குறைந்து, குறைந்து, ஆதியிலிருந்த அவர்களின் அன்பை விட்டு விட்டார்கள். இந்த விஷயத்தை பொதுவான முறையில் ஒவ்வொருவருக்கும் பயன்படுத்தலாம். தேவனுடைய சத்தியத்தை மிகவும் விலையேறப்பெற்றதாகவும், இனிமையானதாகவும் முதலில் அவர்கள் பார்ப்பதை நான் சிலரிடம் கவனித்திருக்கிறேன். ஆனாலும், துன்புறுத்தலும் எதிர்ப்பும் இறுதியாக வரும்போது, இது அவர்களை எவ்வளவு பாதிக்கிறது என்பதை அவர்கள் காண்கிறார்கள். இவைகளெல்லாம் அவர்கள் தகுதியுள்ளவர்களாக நிரூபிக்கப்படுவதற்கு தேவையாக இருக்கிறது என்பதையும், அவர்களுடைய சிறப்புரிமைகளையும் உணர்ந்து கொள்ளாமல், அவர்களில் சிலர் தங்களுடைய ஆதி அன்பை இழந்து போனார்கள். இவர்கள் சத்தியத்தின் பேரில் உள்ள அணுகுமுறையில் வெதுவெதுப்பாகிப் போனார்கள். நீங்கள் வெதுவெதுப்பாயிராதீர்கள், மிகுந்த பக்தி வைராக்கியமாக இருங்கள். **நீங்களும் நானும் செய்ய முடிந்த அளவுக்கு பக்தி வைராக்கியத்தையும், பெலத்தையும் இந்த பரலோக பந்தயம் கோருகின்றது.** நம்முடைய அருமை இரட்சகருடன் ஆட்சிபுரியக்கூடிய சிறப்புரிமையை உள்ளடக்கிய இந்த தெய்வீக திட்டத்தின் அழகை நீங்களும் நானும் அதிகமாகப் பார்க்க, பார்க்க, நாம் செலுத்தக்கூடிய பலி எவ்வளவு சிறியது என்பதை அறியும் போது, நம்முடைய கரங்கள் செய்வதற்குக் காண்பதை நம்முடைய ஆற்றலுடன் செய்யும் சிலாக்கியத்தை நாம் அதிகதிமாகப் பாராட்ட வேண்டும்.

## சபை - தேவன் அங்கங்களை நியமிக்கிறார்.

### கே : 103:1 :: கேள்வி (1909) - 1

தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், - - ஊழியங்களையும், ஆளுகைகளையும், ஏற்படுத்தினார்" என்று 1கொரி. 12:28ல் படிக்கிறோம். "ஆளுநர்கள்" என்பவர் யார்? அவர்கள் எந்த அளவுக்கு ஆளுகை செய்வார்கள்.?

**பதில்:** இது ஆளுநர்களைச் சொல்லவில்லை. ஆனால் இது நிர்வாக விதி, ஒழுங்கு அல்லது சட்டத்தைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில், கூடுகைகள்

நடத்துதலின் ஒழுங்கு முறை பற்றிய சில குறிப்பிட்ட விதிகளை முழு சபையும் அங்கீகரிக்கிறது. கர்த்தருடைய வழியில் எந்த வளர்ச்சியையும் மேற்கொள்ளும் தேவனுடைய பிள்ளைகள், கிறிஸ்துவின் சபையில் உள்ள சில குறிப்பிட்ட விதிமுறைகளின் ஞானத்தைக் காண முடியும் விதமாக அந்த இடத்திற்கு வர வேண்டும். சபைக்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களையும் விதிமுறைகளையும் அங்கீகரிக்க விருப்பமில்லாமல் யாரேனும் இருந்தால், அந்த அளவுக்கு அவர் அராஜகம் செய்பவர் ஆவார். தேசம் அல்லது நகரத்தின் சட்டத்தை நாம் நம்புகிறோம். சில விதிகள், அல்லது சட்டங்கள் இல்லாமல் இருப்பதை விட, குறைகள் உள்ளதாக இருந்தாலும். அவைகள் இருப்பது நல்லதாகும். நிறைய சட்டங்களும், விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் இருக்கலாம் என்று ஒத்துக்கொள்கிறோம். ஆனால் கர்த்தருடைய சபை தேவன் கொடுக்கும் உரிமையை அறிந்து, அதைப் பாராட்டி, பயன்படுத்த வேண்டும் - ஒவ்வொன்றும் கண்ணியமாகவும் ஒழுங்குமுறையாகவும் நடக்க வேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் நன்மை பயக்கும் அளவுக்கு எவ்வளவு அதிகமாக சுதந்திரம் வேண்டுமோ, அதை வைத்திருப்பதே ஒவ்வொரு வகுப்பின் நோக்கமாகும். சபையில் ஒழுங்குமுறையை ஸ்தாபித்திருக்கிற ஒருவராக தேவன் இருப்பதை நாம் கண்டுணர வேண்டும்.

## சபை - வகுப்பில் தொந்தரவு.

## கே : 103:2 :: கேள்வி (1910) - 2

சபையில் இரண்டு சகோதரர்களுக்கு இடையில் சில சிறிய கசப்புணர்வுகள் முளைத்து, ஒருவருடன் ஒருவர் பேச மறுத்து, அதனால் அவர்களிடையே நல்ல உறவு இல்லை என்பது வகுப்பு முழுமைக்கும் தெரிய வந்தால், இந்த விஷயத்தில் மூப்பர்களின் அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்? முக்கியமாக, சபையில் பொதுவான முறையில் இதன் குறுக்கீடு எதுவும் இல்லை என்றால், இந்த விஷயத்தை ஏதோ ஒரு வழியில் பகிரங்கப்படுத்த வேண்டுமா, அல்லது அந்த விஷயத்தை அலைந்து திரிய அனுமதிப்பதா?

**பதில்:** சகோதரனே, என்னுடைய கருத்து என்னவென்றால், சில குறிப்பிட்ட விஷயங்கள் தனிப்பட்டவர்களுக்குரியதாக இருக்கலாம். இதை சபை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருப்பதே சிறந்தது. ஆனால் தேவன் சில விஷயங்களில் செய்தவற்றை வேதாகமம் சொல்லும் வழியில் செய்ய வேண்டும்..சில குறிப்பிட்ட விஷயங்களில் தேவன் கண் சிமிட்டுவதை நாம் படிக்கிறோம். அப்படியே சில குறிப்பிட்ட விஷயங்களில் சபை கண் இமைக்கத் தேவைப்படுகிறது - அதாவது அவற்றை கவனத்தில் கொள்ளாமல் இருக்க வேண்டும். இப்பொழுது, இரண்டு நபர்களுக்கு இடையில் ஒரு சிறிய வேறுபாடு தோன்றினால், சபை இதில் குறுக்கிட முயற்சி செய்தால், ஒருவேளை எல்லா நேரமும் மும்முரமாக இருக்க வேண்டியிருக்கும். ஆனால் இதை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு செல்வது சரியானது என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு நபர்களில் ஒருவர் அல்லது இருவருமே பிரிவினைகளை உண்டாக்குகிறார்கள் என்றால், அவர்கள் மற்றவர்களால் கவனத்தில் கொள்ளப்பட்டு, குறிக்கப்பட வேண்டும். அவர்களை சுமூகமாக நடத்த வேண்டியதில்லை. சகோதரர்களை உதறித் தள்ள வேண்டாம். ஆனால் வகுப்பில் பதவி அல்லது ஊழியம் எதிலும் அவர்களை அமர்த்த வேண்டாம். சற்று அதிகமான நிதானத்துடன் நடத்த வேண்டும். ஏனெனில் அவர்கள் எச்சரிக்கையுடனே, வெளிப்படையாக நடந்து கொண்டிருக்கவில்லை. ஆனால் சில பிரிவினைகளை உண்டாக்குகிறார்கள். இந்த சகோதரர்களில் ஒவ்வொருவரையும் தனிமையில் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான நல்ல சந்தர்ப்பம் இருப்பதாக, மூப்பர்களில் யாரேனும் நினைத்தால் அதுவும் சரியான முறையாகும். மூப்பர் பேசும் போது, “சகோதரனே, நான் உங்களுக்கு உதவும் வகையில் உங்களுடைய விஷயம் ஏதும் இருக்கிறதா? நீங்களும் சகோதரர் பிரவுனும் நல்லவிதமாக பழகவில்லை என்பதை நான் கவனிக்கிறேன். சபையின் மூப்பர் என்ற முறையில் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவெனில், மத். 18:15ம் வசனத்தை மறந்து விடாதீர்கள்; சகோதரர் பிரௌன் உங்களுக்கு

தீமை ஏதும் விளைவித்திருந்தால், இந்த வேதாகம வசனத்தை மறக்காதீர்கள். உங்களுக்கு நான் செய்ய வேண்டிய சேவை ஏதும் இருந்தால், நான் தயாராக இருக்கிறேன்."

"நல்லது, அதைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்."

"இல்லை, சகோதரனே, இதைப் பற்றி நீங்கள் சொல்லுவதை நான் விரும்பவில்லை. அந்த விஷயம் பற்றி நான் கேட்பது எனக்கு தவறு என்று நான் நினைக்கிறேன். இது வழக்கமாக வேதாகமம் வழியாக எனக்கு வர வேண்டும். உங்களுக்கும் சகோ. பிரெளனுக்கும் வேறுபாடு இருந்தால், அதை நான் காதினால் கேட்க விருப்பமில்லை. அதை நீங்கள் சொல்வதற்கு உங்களை ஊக்குவிப்பது எனக்கு தவறு ஆகும். மத். 18:15-17ல் இயேசு கூறியது போல, தேவன் ஒரு வழியை கொடுத்திருக்கிறார். நான் எப்படி செயல்பட வேண்டும் என்று அவர் சொல்லுகிறார் - முதலில் அவரிடம் செல்லுங்கள். சகோதரர் பிரெளனிடம் சமரசமாய் இருக்க முயற்சி செய்யுங்கள்; நீங்கள் அப்படி செய்வதில் தோல்வியுற்றால், சில தீமைகளை அவர் உங்களுக்கு செய்து கொண்டிருந்து, அவருக்கு நீங்கள் அன்புள்ள சகோதரராக இருக்க முடியாது என்று உங்களை உணரும்படி செய்தால், அப்பொழுது நீங்கள் வந்து, சில சகோதரர்களை உங்களுடன் அழைத்து செல்லுங்கள். நீங்கள் என்னை உங்களுடன் போவதற்காக அழைக்க விரும்பினால், நான் உங்களுக்கு ஊழியம் செய்ய மிக்க மகிழ்ச்சி அடைந்து, சமாதானத்தையும் நல்லுறவையும் கொண்டுவர முடியுமளவிற்கு ஒவ்வொன்றையும் செய்வேன். ஆனால் முன்னதாகவே எதையும் கேட்பதற்கு நான் விரும்பமாட்டேன். அது சரியாக இருக்காது. நீங்கள் சொல்ல வேண்டிய எதையும் நான் செவிகொடுத்தால், நான் தகுதியுள்ளவனாக இருக்க முடியாது. சகோதரர் பிரெளன் உங்களுக்கு தீமை செய்திருந்தால், அவரிடம் செல்லுங்கள். பிறகு அதில் வெற்றி அடையாவிட்டால், உங்களுக்கும் அவருக்கும் இடையில் பிளவு உண்டாக்கும் விஷயம் உங்கள் மனதில் இன்னும் போதுமான அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமானால், வேதாகமம் சொல்லுகிறபடி, ஒன்று அல்லது இரண்டு சகோதரர்களைக் கூட்டிக்கொண்டு சென்று, ஒரு ஆலோசனை கூட்டம் நடத்துங்கள். இன்னும் இது கவனிக்கப்படாதிருந்தால், நீங்களோ, அல்லது அவரோ நல்லுறவைக் காண முடியாதிருந்தால், பிறகு, நீங்கள் விரும்பினால், இந்த விஷயத்தை சபைக்கு கொண்டு போகலாம். ஆனால் அதற்கு முன்பாக செய்யக்கூடாது.

## சபை - எதிர்ப்பு.

## கே : 104:1 :: கேள்வி (1910) - 1

நமது சபையில் வலிமையாக இருப்பவர்கள் தற்கால சத்தியத்தை எதிர்க்கிறார்கள். அதிக விசுவாசமாயிருப்பவர்கள் போதகர்களாக இல்லை. அவர்கள் சத்தியத்தில் இளமையாக இருக்கிறார்கள். எதிர்ப்பவர்கள் மூப்பர்களாக இருப்பதால், கூடுகைகளை நடத்துகிறார்கள். விசுவாசமுள்ளவர்களாயும், பெலனற்றும் இருக்கிறவர்களான பெரும்பான்மையானவர்கள் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** நல்லது, இந்த கேள்வி யாரிடமிருந்து வருகிறது என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆகவே நான் அதிக சுதந்தரத்துடன் இதற்கு பதில் சொல்ல முடியும். கர்த்தர் தம்முடைய ஜனங்களைப் பொருத்த வரையில், இது போன்ற விஷயங்களில் சில கொள்கைகளை அமைத்திருக்கிறார் என்பதை நான் பார்க்க முடிகிறது. சபையினர் அவர்களுக்கு மத்தியில் உள்ளவர்களாயிருந்து, மூப்பர்களையும், அல்லது வயதான சகோதரர்களையும், சபையில் நமது போதகரை அடையாளப்படுத்தும் விதமாக, சிறப்பாக தகுதிபெற்றவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. சத்தியத்தில் வெகு காலமாக இருக்கும் சகோதரரில் இயற்கையாக திறமை பெற்றவர்களில், இந்த சகோதரன் அது போன்றிருப்பதை சில சகோதரர்கள் தெளிவாக நினைக்கிறது போன்றவராக யாரேனும் இருந்தால், அப்போஸ்தலர் நோக்கும் விதமாக, அவர்கள் தலைமையாளராவதற்கு சபை ஆலோசிக்க வேண்டும். இவர்களைத் தேர்ந்தெடுப்பதா, அல்லது அடுத்த முறை தேர்ந்தெடுக்காமலிருப்பதா என்பது கர்த்தருடைய விருப்பம் என்று நம்பினால், சபை இதைப் பின்பற்றுவது சரியாயிருக்கும். முக்கியத்துவம் வாய்ந்த பதவிக்கு அவர்களைத்

தேர்ந்தெடுப்பது, இந்த நிலையில் உண்மையாகவே இருக்கும் சகோதரர்களில் எவரையும் இது காயப்படுத்துவதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து ஆகும். சபை கூடுகைகளின் வளமைக்கு பங்கம் விளைவிக்கும் விதமாக தலையீடு இருப்பதாகத் தோன்றினாலும், அவர்களை போதகம் செய்யும் நிலையிலிருந்து கொஞ்ச காலத்திற்கு தள்ளி வைப்பது அவர்களுக்கு நன்மையாகவும், சிறந்த உதவியாகவும் கூட இருக்கும். கூடுகைக்கு ஒருவேளை குறுக்கீடு இல்லாமலிருக்கலாம். மேற்கண்ட கேள்வி தெரிவிப்பது போல, தவறான மனப்போக்கு உடையவர்களாய் யாரேனும் இருந்தால், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கூடுகையிலும் நன்மையை விட, அதிக தீமையே செய்வதற்கு கண்டிப்பாக வாய்ப்பு உண்டு. இப்படியாக தங்களுக்கு நல்லதை விட தீமையை வருவித்துக் கொள்வார்கள். ஆனால் இப்பொழுது, இந்த கேள்வியை எழுதிய சகோதரர் இந்த விஷயத்தில் சரியான கவனம் கொண்டிருந்தாரா என்பது புரியவில்லை. ஒருவேளை அவர் சில தவறான கருத்துப்பதிவை கொண்டிருக்கலாம். நான் தீர்ப்பளிக்க தகுதியானவன் அல்ல. இந்த விஷயத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மூப்பர்களைப் பற்றியோ, இந்த குறிப்பை எழுதியவர் பற்றியோ எதுவும் தெரியாது. ஆனால் இவர் நிதானமாகவும், பொறுமையாகவும், நல்லெண்ணத்துடனும் ஊழியம் செய்து வருகிற மூப்பர்களை கவனித்துப் பார்க்க முயற்சி செய்வது அவருடைய கடமை ஆகும். இந்த சகோதரர், சரியானவராக இல்லை என்று நினைக்கும் மூப்பர்களில் ஒவ்வொருவரையும், ஒரு சமயத்தில் ஒருவரை மட்டும் அழைத்து, தான் பயப்படுவது குறித்து அவர்களிடம் அன்பாக சொல்ல வேண்டும். அவர்களிடம் தான் தீர்ப்பு செய்ய விரும்பவில்லை என்பதையும் ஆலோசனையாக சொல்ல வேண்டும். ஆனால் அவர் சில விஷயங்களைக் கவனித்தாரானால், அவர்களைப் பார்த்து, இந்த விஷயங்களை யோசனை செய்து பாருங்கள் என்று கேட்கலாம். அவர்கள் மேல் ஏதாவது நன்மையை எதிராளி ஆதாயம் அடையாமல் இருக்க வேண்டும். அவர்களுடன் சகோதர, சகோதரிகள் அன்புடன் இனிமையாக பேச வேண்டும். பொதுவாக இது நல்ல திட்டம் ஆகும். அவர்கள் இதனால் கோபம் அடைந்தால், அவர்களுடன் இந்த விஷயத்தை மிகவும் அன்பாகவும், பரிவுடனும் அறிமுகப்படுத்தியிருக்கும் நிலையில், தவறு ஏதோ இருக்கிறது என்பதைக் காணலாம். அவர்கள் இதை ஒத்துக்கொள்வார்கள் என்று அவசியம் இல்லை. அவர்கள் கூறலாம், “என், சகோதரனே, நீங்கள் என்னை தவறாகப் புரிந்து கொண்டுள்ளீர்கள். நான் அதை அவ்விதம் அர்த்தப்படுத்திக் கொள்ளவில்லை. நீங்கள் அதை ஆழ்ந்த விமரிசனக் கண்ணோட்டத்தில் பார்க்கிறீர்கள். நான் இதை இப்படித் தான் அர்த்தப்படுத்திக் கொள்கிறேன்.”

இது எப்படியிருந்தாலும், இதுபோன்று தவறான நிலையில் இருக்கிறவர்களுக்கு இது உதவும் வழியாக இருக்க வேண்டும். இது போன்ற நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு முன்பு, ஒரு சகோதரனையாவது, ஒரு சகோதரியையாவது திருத்தும் வகையில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளவோ, அல்லது எவருக்கும் ஆலோசனை கொடுக்கவோ விரும்பும் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை முதலில் ஒரு ஜெப பாடமாக நினைத்து, தங்களுக்கு கசப்புணர்வு ஏதும் இல்லை என்றும், தங்கள் சொந்த இருதயமும் மனதும் சரியாக இருக்கிறது என்றும், முடிந்த வரையில் தாராள மனதுடன் விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்றும் நான் அறிவுரை கூறுகிறேன். முதலில் நாம் நம்மை சரிசெய்து கொள்வோம் - கர்த்தர் கூறுவது போல, நீ உன் கண்களில் எது இருக்கிறதோ, உத்திரமோ, அல்லது துரும்போ, அதை முதலில் எடுத்துப் போடு, பிறகு தெளிந்த பார்வையுடன், துரும்பு அல்லது உத்திரம் உள்ள மற்ற சகோதரனுக்கு நீங்கள் ஆசீர்வாதமாயிருக்க முடியும்.

## சபை - கிறிஸ்துவின் சரீர அங்கங்கள்.

### கே : 105:1 :: கேள்வி (1910) - 1

நீதிமான்களாக்கப்படும் மனுஷர்களாக, மற்றும் புதிய சிருஷ்டிகளாக இரண்டு நிலைகளிலும் நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கிறோம் என்று சொல்வது சரியா? சென்ற காவற்கோபுர இதழில், மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் அங்கமாக இல்லாமல், ஆவியின்படி கிறிஸ்துவின் அங்கங்களாக, புது சிருஷ்டிகளாக, அவருடைய அங்கங்களாக நாம்

இருக்கிறோம் என்று நீங்கள் சொல்லியிருந்தது இந்த கேள்வியை கேட்கத் தூண்டியது. மற்றொரு இடத்தில் 6ம் வால்யூமில், சுவிசேஷ யுகத்தில் சிறுமந்தை மாம்சத்தில் கிறிஸ்துவாக இருந்து வருகிறோம்.

**பதில்:** கேள்வி கேட்டவரின் எண்ணத்தை நான் புரிந்துள்ளேன் என்று என்னால் நிச்சயப்படுத்த முடியவில்லை. காவற்கோபுர இதழிலும், 6ம் வால்யூமிலும் (DAWN) உள்ள அறிக்கைகளில் முரண்பாடு இல்லை என்று என்னுடைய சொந்த மனதில் தோன்றுகிறது. ஆகவே, இந்த பாடத்தின் மேல் மறுபடியும் என்னுடைய கருத்தை சொல்லப்போகிறேன். இது ஒருவேளை கேள்வி கேட்டவரைத் தெளிவடையச் செய்யும்.

நாம் அர்ப்பணிப்பு செய்யும் வரையில், நம்முடைய குறைவுகளை நிறைவு செய்வதற்காக, தம்முடைய பலியின் பலனை அவர் ஒதுக்கீடு செய்யும் வரைக்கும் பிதா நம்மை ஏற்றுக்கொண்டு, அவருடைய பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் வரைக்கும், இது பற்றிய எந்த எழுத்துக்களின் பார்வையிலும், நாம் கிறிஸ்துவின் அங்கங்களாகவே இல்லை என்பது என்னுடைய கருத்து ஆகும். பிறகு, நாம் புது சிருஷ்டிகளாக இருக்கிறோம். நாம் அர்ப்பணிப்புக்குள்ளானதிலிருந்து கிறிஸ்துவின் சரீரமாகவும், இராஜரீக ஆசாரியத்துவமாகவும் நாம் அழைக்கப்படுகிறோம். நாம் தோல்வியுற்றால், மேன்மை பொருந்திய பிரதான ஆசாரியரின் சரீர அங்கங்களிலிருந்து விடுபடுகிறோம். நாம் வெறுமனே விசுவாசக் குடும்பத்தின் அங்கங்களாக, அல்லது திரள்கூட்டத்தைச் சார்ந்த அங்கங்களாக, அல்லது புத்தியில்லாத கன்னிகை வகுப்பாரின் அங்கங்களாக இருக்கிறோம், ஆனால் நாம் நம்முடைய அர்ப்பணிப்பைச் செய்திருக்காத வரைக்கும், நாம் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகிறதில்லை. ஒருவர் அர்ப்பணிப்புக்குட்பட்ட நிலையிலிருந்து விலகிப் போனார் என்று மற்றவரைப் பற்றிச் சொல்வதற்கு யாரும் தகுதி வாய்ந்தவர் இல்லை. அவர் அப்படிப்பட்டவர், அவர் அப்படிப்பட்டவர் இல்லை என்று தீர்மானிக்க நமக்கு எதுவும் கொடுக்கப்படவில்லை. யார் சரீரத்தில் இருப்பார், யார் தங்கியிருப்பார் என்பதைத் தீர்மானிப்பது கர்த்தருடையது. இது அவருடைய சொந்த பணி ஆகும். "என்னில் கனி (அன்பு, ஆவியின் கனிகள்) கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்."

## சபை - பிதாவிடம் நிலைநிறுத்தும் போது.

### கே : 106:1 :: கேள்வி (1910) - 1

"வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும்". சபை பிதாவின் முன்னிலையில் நிறுத்தப்படுவது, ஆயிர வருஷத்தின் துவக்கத்திலா, அல்லது முடிவிலா?

**பதில்:** சந்தேகத்திற்கிடமின்றி, இது ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில் தான்; அது தான் என் அபிப்பிராயம். நாம் ஏற்கனவே தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். "விருந்து" என்று வேதாகமம் குறிப்பிடுவது, ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்து ஆகும். இது மகிமையின் தளத்தில் கர்த்தருடன் நாம் சேர்வதையும், பிதாவிடம் நம்மை மாசற்றவர்களாக அவர் நிறுத்துவதையும் இது அடையாளப்பூர்வமாகக் காட்டுகிறது, அல்லது குறிக்கிறது. எதற்காக ஆயிரம் வருஷங்கள் தாமதமாக வேண்டும்? இதற்கு எந்த காரணத்தையும் நான் நினைக்க முடியவில்லை. நான் மறுரூபமாக்கப்பட்ட பிறகு, அதிக நாட்கள் ஆவதற்கு முன்னதாகவே, நான் பிதாவைப் பார்க்க எதிர்பார்க்கிறேன். இருப்பினும், சிறிதளவு தாமதம் ஆகுமென்று நான் புரிந்து கொள்கிறேன். ஏனெனில் வெளிப்படையாக முதலில் சபை மறுரூபமடைய வேண்டும். பிறகு, திரள்கூட்டத்தாருக்காகக் காத்திருக்க கொஞ்சம் தாமதம் ஆகும். ஏனெனில், உங்களுக்கு நினைவிருக்கும், வெளிப்படுத்தல் ஆகமத்தில், பாபிலோனின் விழுகையையும், பாபிலோனை விட்டு வெளியே வராதவர்களையும். குறித்து 18ம் அதிகாரத்தில் விவரித்த பிறகு, 19ம்

அதிகாரத்தில் திரள்கூட்டம் பற்றியும்,, பாபிலோன் விழுகையும், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று படிக்கிறோம். இதைச் சொல்லுபவர்கள் அந்த மகிழ்ச்சியான வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால் அவர்கள் சொல்கிறார்கள்: இது நடந்திருக்கிறதால் நாம் மகிழ்ச்சி அடைவோம், மணவாட்டி வகுப்பார் உள்ளே சென்றது குறித்து நாம் மகிழ்வோம். கலியாணம் என்பது ஒரு விஷயம், விருந்து என்பது வேறொரு விஷயம். ஆகவே திரள் கூட்டத்தாருக்கு ஒரு செய்தி வருகிறது.: "கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்." இந்த திரள் கூட்டத்தார் சபையுடன் இந்த சிறப்பான விழாவிற்கு வருவதற்கான மகிமையுள்ள சிறப்பு அதிகாரம் பெறப் போகிறார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். முதல் நிலையில் இது சபைக்காக உள்ளது. ஆனால் திரள் கூட்டத்தாருக்கு ஒரு பங்கு உள்ளது. ஆகவே, இவைகள் சங்கீதம் 45ல் மணவாட்டி பூரண மகிமையுள்ளவளாய், சித்திரத்தையலாடை தரித்தவளாய், இராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள் என்று வர்ணிக்கப்படுகிறது. இது சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தார் என்ற இரண்டு வகுப்பார்களை அடையாளப்படுத்துகிறது.

## சபை - 1910ம் வருஷத்திற்கு முன்பு நீதிமான்களாக்கப்பட்டவர்கள்.

### கே : 106:2 :: கேள்வி (1910) - 2

1910ம் வருஷம், அக்டோபர் இறுதிக்குள்ளாக நீதிமான்களாக்கப்பட்ட அனைவரும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மீதமுள்ள வருஷங்கள் திரள்கூட்டத்தாரை சேகரிப்பதற்கு கொடுக்கப்படுமா?

**பதில்:** திரள் கூட்டத்தார் ஏற்கனவே இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் விசேஷித்த விதமாக கூட்டிச் சேர்க்கப்படமாட்டார்கள். ஆனால் அவர்கள் வெளிப்படுவார்கள். பாபிலோனின் விழுகை அவர்களை அசையப் பண்ணி, விடுதலையாவார்கள். ஏனெனில் அவர்கள் அதை விட்டு வெளியே வர போதிய தைரியம் இல்லை. பாபிலோனிய மதில்கள் விழுந்த உடன், அவர்கள் விடுதலை பெற்று நிற்பார்கள், ஆனால் விசேஷ வெகுமதி பெறுவதற்கு அதிக கால தாமதமாகி விடும். சபை 1914 அக்டோபர் வரை இங்கே இருக்கும் என்றும், திரள் கூட்டமும் கூட என்பதும் என் கருத்து ஆகும். அந்த சமயத்தில் பாபிலோன் விழுந்து அது எல்லா தடைகளையும் உடைத்தெறியும் என்றும், திரள் கூட்டத்தார் விடுதலை அடைவார்கள் என்றும் நினைக்கிறேன். அதற்குள்ளாக, சிறுமந்தை மறுரூபமடைவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

## சபை - எந்த உடன்படிக்கையின் பிள்ளைகள்?

### கே : 107:1 :: கேள்வி (1910) - 1

"உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்" என்று பேதுரு யூதர்களிடம் சொல்லும் போது, அவர் எந்த உடன்படிக்கையைக் குறித்து சொன்னார் - சாராள் உடன்படிக்கையையா? அல்லது ஆயிர வருஷ யுகத்தின் புதிய உடன்படிக்கையையா?

**பதில்:** நல்லது. நம் முன்னோர்களுடன் தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கை விசேஷமாக ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன் பண்ணப்பட்ட உடன்படிக்கையைக் குறிக்கிறது. அவர்கள் முற்பிதாக்களாக இருந்தனர்; முற்பிதா ஆபிரகாம், முற்பிதா ஈசாக்கு, முற்பிதா யாக்கோபு. தேவன் முதலாவது ஆபிரகாமுடன் நேரிடையாக பண்ணினார், இதை ஈசாக்குடன் புதுப்பித்தார், மற்றும் பின்பு யாக்கோபுடன் பண்ணினார், இப்படியாக இது உடன்படிக்கையாக இருந்தது. பின்பு இஸ்ரயேலர் மாம்சீக கிரம ஒழுங்கில் முதலாவது ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக இருந்தனர், ஆனால் ஒரு ஜாதியாக அவர்கள் தேவனைப் புறக்கணித்திருந்தனர் மற்றும் மேசியாவை சிலுவையில் அறைந்தனர், இருப்பினும் இது அவர்களுக்கு எதிராக நிலை

கொண்டிருக்கவில்லை, ஏனெனில் அவர்கள் ஒரு ஜாதியாக இருந்திருந்தாலும், அவர்கள் தனிப்பட்ட நபர்களாக புறம்பாக்கப்படவில்லை - - அவர்கள் இன்னும் கிருபையின் விசேஷித்த வரிசையில் இருந்தனர். யூத ஜனங்கள் அவர்களுடைய மூப்பர்கள் மூலமாக இயேசுவைப் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தார்கள். அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, “நாங்கள் என்ன செய்யவேண்டும்” என்று சொன்னார்கள். அவர்களுடைய மேசியா, மனுஷ குமாரனுடைய கொலையுடன் பெருமளவிலான ஆக்கினைத்தீர்ப்பு இணைக்கப்பட்டிருக்கிறதை அவர்கள் கண்டார்கள். நாங்கள் என்ன செய்யவேண்டும்? அப்போஸ்தலருடைய வார்த்தைகள் இவ்விதமாக இருந்தன, “ஆபிரகாமின் பிள்ளகளாகிய உங்கள் மேல், மற்றும் தீர்க்கதரிசிகளின் வழிகாட்டுதலைப் பின்பற்றுகிறவர்கள் மேல் தேவன் இரக்கம் கொள்வார். தேவனிடம் இணக்கமாய் வாருங்கள் மற்றும் மனம் வருந்துதலின் பெருமுயற்சிகளைச் செய்யுங்கள். இந்த விஷயத்தை நான் பொழிப்புரையாகச் சொல்கிறேன். சிலுவை மரணத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு, இயேசு கூறினார், உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும். நீங்கள் இனிமேல் அந்த நாள் வரைக்கும், ஆயிர வருஷ நாள் வரைக்கும் காணமாட்டீர்கள், அப்போது நீங்கள் சொல்வீர்கள், கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர். ஆனால், அவர்கள் இன்னும் சிதறடிக்கப்பட்டிருக்கவில்லை என்று பேதுரு சுட்டிக்காட்ட விரும்புகிறார். யூதஜாதி சிதறடிக்கப்பட்ட போது, தனிப்பட்டவர்கள் சிதறடிக்கப்படவில்லை. அந்த ஜாதிக்கு விசேஷித்த முறையில் எழுபது வாரங்களின் வருஷங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அறுபத்து ஒன்பது வாரங்களில், அதன் இறுதியில், அதிபதியாகிய மோசே வருவார், அறுபத்து ஒன்பது வாரங்களின் இறுதியில், இயேசு ஞானஸ்நானம் பெற்றது நிர்ணயிக்கப்பட்ட காலமாக இருந்தது. பின்பு எழுபதாம் வாரத்தின் ஏழு வருஷங்கள், ஒரு வாரம் மீதியாயிருந்தது. இதன் முதல் பாதியில், மூன்றரை வருஷங்களில் இயேசு தம்முடைய ஊழியம் எல்லாவற்றையும் செய்தார் மற்றும் தீர்க்கதரிசி முன்னறிவித்தபடி, அந்த வாரத்தின் மத்தியில் மரித்தார், “அவர் வாரத்தின் மத்தியில் சங்கரிக்கப்படுவார், ஆனாலும் தமக்காக அல்ல.” ஆனால் இப்பொழுது, நீங்கள் பார்க்கலாம், இயேசு மரித்த பின்பு, அவர்களுக்கு உரித்தான எழுபது வருஷங்களின் கிருபையின் காலத்தில், இன்னும் மூன்றரை வருஷங்கள் மீதி இருந்தன. தேவன் அவர்களுக்கு முழுமையான எழுபது வாரங்கள் கொடுப்பார் என்ற தேவனுடைய உடன்படிக்கை அல்லது வாக்குத்தத்தத்தின்படி, அவர்களுக்கு இன்னும் கடைசி வாரத்தின் ஒரு பாதி இருந்தது. எழுபதாம் வாரத்தின் இந்த இறுதி பாதியில் தான், சிலுவை மரணத்திற்கு பிறகு மூன்றரை வருஷங்களில் தான், யூதர்களின் மத்தியில் மாபெரும் பணி நடைபெற்றது. அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார். அவர் இதை எப்படி சீக்கிரமாய் நிறைவேற்றினார்? அதில் அவர் யூத ஜாதியை, அவர் மரணமடையும் போது விட்டு விட்டார். இதை சீக்கிரமாய் நிறைவேற்ற அவருக்கு உரிமை இருந்ததா? ஆம், அவர் நீதியோடே இதை சீக்கிரமாய் நிறைவேற்றுவார். தேவன் அவர்களுக்கு அநீதி செய்யவில்லை என்ற பார்வையில் இது நீதியாக இருந்தது. ஆனால், அங்கே வாரத்தின் மத்தியில் ஜாதியைப் புறம்பாக்கிப் போடுவதினாலும், மற்றும் ஊழியத்தை முடிவுறச் செய்வதினாலும் மாபெரும் கிருபை இருந்தது. இது அவர் உன்னதத்தில் ஏறிப்போவதற்கும், பிதாவின் முன்பு தோன்றுவதற்கும், கிருபாசனத்தின்மேல் பாவநிவாரணத்தின் இரத்தத்தைத் தெளிப்பதற்கும் அவரை அனுமதித்தது, மற்றும் பிறகு காத்துக்கொண்டிருந்த சபையின் மீது பெந்தெகொஸ்தே நாளில் தேவனுடைய ஆசீர்வாதம் வந்தது. ஆகவே இந்த இறுதி பாதியாகிய மூன்றரை வருஷங்களில் எளிமையான போதனை, செவிகொடுத்தல் போன்றவற்றிற்குப் பதிலாக, அவர்கள் ஆவியின் ஊழியத்தின் கீழ் இருந்தனர். அவர் மரணமடைவதற்கு முன்பு, அவர் கூறினார், “இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.” ஆனால் பரிசுத்த ஆவி அவர்கள் மேல் ஊற்றப்பட்ட போது, அவர்கள் பெரிதாக ஆசீர்வதிக்கப்பட்டனர். ஆகவே, அப்போது, அந்த எழுபதாம் வாரத்தின் மத்தியில், அவர்களுடைய கிருபை முடிவடைவதற்கு மூன்றரை வருஷங்களுக்கு முன்னதாக, கர்த்தர் மரித்தார் என்ற உண்மை அவர்களுக்கு நன்மையாக இருந்தது. இது அவர்களுடைய கிருபையில், நீதியோடு இருந்தது. ஆகவே,

அப்போது, அவர்கள் இன்னும் வாக்குத்தத்தத்துக்கு உரியவர்களாக இருந்தனர், அவர்கள் புறம்பாக்கப்பட்டிருக்கவில்லை. பின்னாளில் அப்போஸ்தலர் பேசும்போது, அந்த கிளைகளில் சில முறிக்கப்பட்டன என்று கூறினார், ஆனால் கிளைகள் எதுவும் முறிக்கப்படாததற்கு முன் இருந்த காலத்தில் பேதுரு பேசியிருந்தார். உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படுகிறது என்று சிலுவை மரணத்திற்கு முன் இயேசு கூறினார். தனிப்பட்டவர்களாக அவர்கள் தேவனுடைய கிருபைக்குள்ளானவர்களாக நிச்சயமாக இருந்தனர், மற்றும் ஆகவே பேதுரு சொல்வதில் சரியானவராக இருந்தார், நீங்கள் இன்னும் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக இருக்கிறீர்கள், நீங்கள் இன்னும் சுபாவ மரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள், நீங்கள் இன்னும் முறித்துப்போடப்படவில்லை; ஆகவே, மனந்திரும்புங்கள், மற்றும் தேவனுடன் இணக்கமாகத் திரும்ப வாருங்கள்.

## சபை - பலியிடப்படுவதற்கு முன்பு இரத்தம் பெறுதல்.

### கே : 108:1 :: கேள்வி (1910) - 1

சபையினர் தாம் பலி செலுத்துவதற்கு முன்பாக இயேசுவின் இரத்தத்தைப் பெறுவது, வெள்ளாட்டுக்கடா தான் பலியிடப்படுவதற்கு முன்பாக காளையின் இரத்தத்தைப் பெற்றிருப்பது பொருத்தமாக இருக்காது அல்லவா?

**பதில்:** இல்லை. ஜனங்கள் ஒரு காரியத்தைப் பார்க்க முடியாத போது, இது நிழல்களாக இருக்கும்போது, இதைப் பற்றி பேசுவது பிரயோஜனமாக இருக்காது. நிழல்களைப் பற்றிய விஷயம் மனதால் பார்க்கப்பட வேண்டும். அந்த நிழல் மிகவும் அநேக வார்த்தைகளில் சொல்லியிருந்தால், இது வித்தியாசமாக இருக்கும். ஒரு நபர் இதைப் பார்க்க முடியாவிட்டால், இதைப் பற்றி பேசுவதில் பிரயோஜனம் இல்லை. இது குருட்டுத்தனமான விஷயமாகும். இந்த கெடிகாரத்தை நாம் பார்க்கமுடியவில்லை என்று நீங்கள் சொன்னால், நான் வருத்தப்படுகிறேன்; ஏனெனில் நான் அந்த கெடிகாரத்தைப் பார்க்க முடிகிறது.

## சபை - மத்தியஸ்தர்.

### கே : 108:2 :: கேள்வி (1910) - 2

சபையாரை பிதாவிடம் அறிமுகப்படுத்துவது, அல்லது இணக்கமுறச் செய்வதற்கு ஒரு மத்தியஸ்தர் சபைக்கு ஒருபோதும் தேவைப்படுவதில்லை என்ற கருத்தில் நீங்கள் இன்னும் நீடிக்கிறீர்களா?

**பதில்:** ஆம், அதுவே என்னுடைய புரிந்துகொள்ளுதல் ஆகும். (கேளுங்கள், கேளுங்கள்). தகப்பனாகிய ஆபிரகாம் பிதாவிடம் அறிமுகப்படுத்தப்பட்டார், அல்லது பிதா தாமே தகப்பனாகிய ஆபிரகாமுக்கு அறிமுகமாகி, அவனுடன் உடன்படிக்கை செய்து கொண்டார் மற்றும் நாம் ஒருபோதும் கேள்விப்படாத, மத்தியஸ்தர் எவரும் இருந்ததில்லை மற்றும் தேவனுடன் சஞ்சரித்தவரும், தேவன் எடுத்துக்கொண்டவருமாகிய ஏனோக்கோடும் கூட அப்படியே இருந்தது. இந்த விஷயத்தில் மத்தியஸ்தர் இருந்ததில்லை. அந்த மனுஷர்களில் ஒருவருக்கும் நித்திய ஜீவனை அளிக்கும் பார்வையில், அவர்களுக்கு சாதகமாக முழுமையான திரும்பப் பெறுதலை தேவன் கொடுக்கவில்லை. மத்தியஸ்தர் என்பதின் அர்த்தம், "இடையில் இருப்பவர்". வேறுபாடு கொண்ட இரண்டு தரப்பினரையும் இடைவெளியில் வைத்து, ஒரு தரப்பினரை மற்ற தரப்பினரோடு இணக்கம் பெறச் செய்பவர் ஆவார். ஆனால் பரிந்து பேசுகிறவர் என்பவர், ஒரு தரப்பினர் சார்பாகப் பேசும் பிரதிநியாக, இந்த விஷயத்தில் உதவிபுரியக்கூடியவராக இருக்கிறார்; ஆகவேதான் அப்போஸ்தலர், நமக்கு மத்தியஸ்தர் ஒருவர் இருக்கிறார் என்று கூறவில்லை. ஆனால் பிதாவுடன் பரிந்து பேசுகிற ஒருவர் நமக்கு இருக்கிறார் என்று சொல்கிறார். சபை பரிந்து பேசுகிறவரை உடையதாய் இருக்கிறது. பிறகு ஏன்? சிலருக்கு பரிந்து பேசுகிறவரையும், மற்றும் வேறு சிலருக்கு மத்தியஸ்தரையும் உடையவர்களாக இருக்கும் விதமாக, இந்த வித்தியாசம்

இருக்கிறது? ஏனெனில் மனுஷீகத்திலுள்ள அந்த பகுதியினரான உலகத்தார் இன்னும் இணக்கமடையவில்லை. மற்றும் இந்த தரப்பினருக்கு மத்தியஸ்தர் ஒருவர் வரவும், அறிவுறுத்தவும், சரியாகக் கொண்டுவரவும் தேவைப்படுகிறது; ஆனால் தற்காலத்தில் தேவன் ஏற்றுக்கொள்கிற அந்த வகுப்பார் ஆபிரகாம், அல்லது ஈசாக்கு, அல்லது யாக்கோபு, அல்லது ஏனோக்கு போன்றவர்களின் மனோபாவம் உடையவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் எப்படிப்பட்ட சுபாவமுடையவர்களாக இருந்தாலும், அவர்கள் கர்த்தருடையவர்களாக இருக்க விருப்பம் கொண்ட உணர்வில், அவரிடம் தங்களுடைய விருப்பங்களை ஒப்படைப் பவர்களாகவும், அவரிடம் வந்திருக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால், அவர் அவர்களை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு, இயேசு வருவதற்கு முன்பு, பரிந்து பேசுகிறவர் ஒருவரும் இருக்கவில்லை மற்றும் இதன் காரணமாக அவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தேவனுடன் உறவை மட்டும் அவர்கள் எல்லோரும் பெற முடிந்தது - பிதாவிடம் தெய்வீக உறவுக்குள்ளாக வரக்கூடிய பார்வையில் அவர்கள் அறிமுகப்படுத்தப்படக் கூடியவர்களாக இருந்ததில்லை. ஆனால் பாவத்திலிருந்து விலகினால், நாம் அப்படி செய்யக்கூடியவர்களாகிறோம்; இரண்டாவதாக, நாம் அருகாமையில் செல்லவும், மற்றும் அவர் நம்முடைய அருகில் வரவும், மற்றும் பிறகு அவர் இரட்சகரை நமக்குச் சுட்டிக்காட்டுகிறார்; மற்றும் பிறகு நாம் இரட்சகரிடம் அறிமுகப்படுத்தப்படுகிறோம் மற்றும் அவர் நம்முடைய சார்புரிமை பேச்சாளராக, நமக்கு பரிந்து பேசுகிறவராகிறார். தேவன் அங்கீகரிக்கும்படி, ஏற்றுக்கொள்ளத்தக்க பலியை நாம் செலுத்தும் விதமாக, உடலளவிலும், மற்றும் ஒவ்வொரு விதத்திலும் குறைவாயிருக்கும் நம்மை சரிபண்ணுவதற்கு, நம்முடைய குறைகளை மூடுவதற்கு அவர் தம்முடைய புண்ணியத்தை நமக்காக ஒதுக்கி வைப்பதற்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நாம் குறைவு பெற்றிருக்கிறதை அவர் சரிசெய்து இருக்கிறார்; ஆனால் அவர் நமக்கு இடையில் நிற்கவில்லை, ஏனெனில் தேவன் தம் அருகில் என்னை ஏற்கனவே சேர்த்துக்கொண்டார் மற்றும் உங்களை சேர்த்துக்கொண்டார்; வேத வாக்கியங்கள் சொல்கிறபடி, என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரமாட்டான் மற்றும் என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான், இது தற்காலத்தில் நடக்கின்றது. இனி வரும் காலத்தில் இது அப்படி இருக்காது. ஏனெனில் ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில், உலகம் முழுவதையும் பிதா இரட்சகரின் கரங்களில் ஒப்படைப்பார். இந்த இரட்சகர் ஒட்டுமொத்த உலக ஜனங்களுக்காக தம்முடைய புண்ணியத்தை பிரயோகப்படுத்தப்போகிறார். ஆயிர வருஷ யுகத்தில், இந்த மாபெரும் மத்தியஸ்தர் அவர்களை மேலே, மேலே எழும்பப்பண்ணுவார் மற்றும் அவர்கள் விருப்பம் கொண்டால், அவர்களை மேம்படுத்துவதற்குத் தேவையான தண்டனைகளையும், ஊக்குவிப்புகளையும் கொடுப்பார். ஆனால் அவர்கள் அப்படியிராவிட்டால், பிறகு இரண்டாம் மரணத்தில் அவர்கள் அழிக்கப்படுவார்கள். அவர்களை எழுப்பியபிறகு, ஆயிர வருஷ யுகத்தின் முடிவில், கிறிஸ்து ஒட்டுமொத்த உலகம் முழுவதையும் பூரண நிலையில் பிதாவிடம், பிதாவின் கரங்களில் ஒப்படைப்பார்.

## சபை - ஏற்றுக்கொள்ளப்படுதல். 1914

## கே : 109:1 :: கேள்வி (1910) - 1

சபையாராகிய நாம் கிபி. 1914ன் முடிவிற்கு முன்பு ஏற்றுக்கொள்ளப்படுவோமா?

**பதில்:** சபையாராகிய நாம் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் என்று நான் நம்புகிறேன். அப்போஸ்தலர் கூறுகிறார், “பிரியமானவருக்குள் சுவிகாரப்புத்திரராகும்படி முன்குறித்திருக் கிறார்,” கேள்வி கேட்டவர் எதை அர்த்தப்படுத்துகிறார் என்பதை இப்போது நான் அனுமானிக்கிறேன். அந்த காலத்திற்கு முன்னதாக நாம் மறுரூபமாக்கப்படுவோமா? இதைச் சொல்வதாக வேத வாக்கியம் எதையும் நாம் அறியவில்லை. மற்றும் டாண் புத்தகங்களிலும் இந்த அர்த்தத்தில் எதுவும் இல்லை. ‘பெரிய பிரமீடு’ குறித்த விவரிப்பு தொடர்பான விஷயத்தில் இது ஆரம்பமானது. 1910ல் ஏதேனும் எதிர்பாக்கப்படுவதை பிரமீடில் உள்ள ஒரு அளவு

உணர்த்துவதாகத் தோன்றுகிறது; அதைப் பற்றிச் சொன்னால், அந்த அளவு ஏதேனும் நோக்கமுடையதாக இருந்தால், கம்பீரமான நீண்ட தாழ்வாரத்தின் (Grand Gallery) உச்சியில் உள்ள படிக்கட்டின் அளவாகக் கருதப்படுகிறது. மற்றும் இது அதைக் குறிப்பதற்கான விசேஷ நோக்கமுடையதாக நாங்கள் அறியவில்லை; அந்த படிக்கட்டின் குறியீட்டை எடுத்துக்கொண்டால், அந்த படிக்கட்டே ஒரு தடுப்பை, அல்லது படிநிலையை உணர்த்துவது போலத் தோன்றுகிறது. நாம் எதிர்பார்ப்பது நம்முடைய மறுரூபமாகுவதை அல்ல, ஆனால் ஒரு பெரும் சோதனையைக் குறிக்கிறது, ஏனெனில் அந்த படிக்கட்டு முழுவதுமே சோதனையைப் பற்றிப் பேசுகிறது; இதைத் தாண்டி செல்வது சிரமமாக இருக்கிறது. அந்த முழுவதுமான பாதை - வழி கடினமானதாக இருக்கிறது, அதிலும் விசேஷமாக, படிக்கட்டு கஷ்டமானதாகும். நாம், இப்பொழுது, 1910ம் வருஷத்தில் இருக்கிறோம் மற்றும் சபைக்கு மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் சோதனை வந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது மற்றும் அந்தப் பிரகாரமாகவே, இந்த விஷயத்தை அர்த்தங்கொள்வதற்கு நாம் மேல்விளக்கம் சொல்கிறவர்களாக இருக்கிறோம். தேவனுடைய கிருபையினால் நாம் இன்னும் நிற்கிறோம் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன், மற்றும் அப்போஸ்தலர் கூறுகிறபடி, நாம் நிலைநிற்கிறவர்களாக இருக்கும் பொருட்டு தாழ்மையுள்ளவர்களாக இருப்போம், ஏனெனில் அப்படிப்பட்டவர்களே நிலைநிற்க முடியும். வேத வாக்கியங்களின்படி, மனத்தாழ்மை, தயவு, நீடிய பொறுமை போன்றவை முதலாவது தகுதி ஆகும் மற்றும் இந்த தாழ்மை அல்லது பணிவு என்பது எல்லா வழிநெடுகிலும் நற்பண்பின் சோதனையாக இருக்கிறது. சத்தியத்தைப் பெறுவதில் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள் மற்றும் இதைப் பிடித்துக்கொள்ளுங்கள் மற்றும் தாழ்மையாக இருக்காதவர்களைத் தவிர, வேறு எவரிடமிருந்தும் கர்த்தர் இதை எடுத்துப்போட மாட்டார். அப்போஸ்தலர் கூறுகிறார், ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

## சபை - முதற்பேறானவர்கள் Vs அவருடைய சரீர அங்கங்கள்.

### கே : 110:1 :: கேள்வி (1910) - 1

சபையின் முதற்பேறானவர்களுக்கும், அவருடைய சரீரமான சபைக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறதா?

**பதில்:** ஆம் என்று நான் பதிலளிக்கிறேன். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, முதற்பேறானவர்களின் சபை சிறுமந்தையைப் போலவே, திரள்கூட்டத்தாரையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது, மற்றொரு சொற்றொடரான 'சபை' என்பது அவருடைய சபை ஆகும்; இது திரள்கூட்டத்தை உள்ளடக்கவில்லை, இது இவர்களை விலக்குகிறது. அவருடைய சரீரமாகிய சபை இராஜரீக ஆசாரியக் கூட்டமாய் இருக்கிறது; இதன் தலையாகவும், பிரதான ஆசாரியராகவும் கிறிஸ்து இருக்கிறார் மற்றும் அந்த குறிப்பிட்ட கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகிய சபையாக நாம் இருக்கிறோம்.

## சபை - இப்போது ராஜரீக ஆசாரியக்கூட்டமாக இருக்கிறோமா?

### கே : 110:2 :: கேள்வி (1910 - Z) - 2

மாம்சத்தில் சபை ராஜரீக ஆசாரியத்துவத்தில் இருக்கிறதா?

**பதில்:** வார்த்தையின் முழுமையான பார்வையில், நாம் ராஜரீக ஆசாரியத்துவமாக இருக்கிறதில்லை என்பதை நாம் கண்டுணருகிறோம், ஏனெனில் நாம் இறுதியில் ஆசாரியத்துவத்தில் இருப்போம் என்ற நிச்சயத்தன்மையில் இன்னும் இருக்கவில்லை. நாம் முதலில் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் “சிறுமந்தையாக” அல்லது “திரள்கூட்டமாக” இருக்கப்போகிறோமா என்பது இன்னும் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கிறது - ஆசாரியர்களாக, அல்லது லேவியர்களாக - அல்லது ஜீவனுக்கே தகுதியுள்ளவர்களாக இருப்போமா என்று உறுதிசெய்யப்பட வேண்டியுள்ளது. இந்த விஷயம் இன்னும் முடிவு செய்யப்படும் செயல்முறையில் இருந்து கொண்டிருப்பதாலும், நம்முடைய மரணம் வரைக்கும் இது முற்றிலுமாகத் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதாலும், பணியாற்றும் ஆசாரியர்கள் என்ற வார்த்தையின் முழுமையான பார்வையில் நாம் இருக்கவில்லை என்று தெரிகிறது. ஆனால் இந்த ஆசாரியத்துவத்திற்கான வேட்பாளர்களாகவும், ஆசாரியர்களாக தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் மற்றும் ஆசாரியர்களாக எண்ணப்படுகிறோம். ஆளுநர் தேர்தலுக்காக முன்மொழியப்பட்டிருக்கும் ஒரு பண்பாளரை நீங்கள் ஒருசமயம் சந்திக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அவரைப் பாராட்டும் விதத்தில், நீங்கள் கூறலாம், “ஆளுநர் அவர்களே, காலை வணக்கம்.” அவர் உண்மையில் இன்னும் ஆளுநராகவில்லை. அது தேர்தலில் தீர்மானிக்கப்படும், ஆனால் அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னதாக, அவரை ஆளுநர் என்று அழைப்பது முறையானது அல்லது பண்புடைய வழக்கமாக இருக்கலாம். அப்படியே இது நம்மிடம் உள்ளது. முழுமையான பார்வையில் அந்த ராஜரீக ஆசாரியத்தைச் சேர்ந்தவராகவும், மற்றொரு பார்வையில் சரீரத்தின் அங்கங்களாக நாம் இப்போது இருக்கிறோம் என்பதற்கு நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்து கொள்வோம் என்று நாம் எதிர்பார்ப்போம். தேவனுடைய தூதுவர்கள் என்ற அங்கீகரிப்பிற்கு நாம் ஆவியினால் ஏற்கனவே ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஆசாரியத்துவ உத்தியோகத்திற்கு ஒரு பார்வையில் இது ஒரு அங்கீகரிப்பாக இருக்கிறது. ஏனெனில் இந்த ஆசாரியர்கள் “தூதுவர்களாக” இருக்கிறார்கள் மற்றும் தேவனுடைய தூதுவர்களாக நாம் எந்த அளவுக்கு நடந்து கொள்கிறோம், எந்த அளவுக்கு நாம் தேவனுடைய ஆசாரியர்களாக இருக்கிறோம் - தேர்வுமுறைக்கு உட்பட்ட வகையில் இருக்கிறோம் மற்றும் மெல்கிசேதேக்கு முறைமையில் முழுமையான விதத்தில் இருக்கிறதில்லை, ஆனால் நாம் மறுரூபம் அடையும்போது, அப்படி இருக்கலாம் மற்றும் நம்முடைய கர்த்தரைப் போல இருப்போம்.

## சபை - கிறிஸ்துவுடன் சபையின் பங்கு.

### கே : 111:1 :: கேள்வி (1910 - Z) - 1

கிறிஸ்துவுடன் சபை பங்கு பெறுமா?

**பதில்:** சுருக்கமாகச் சொன்னால், ஒரு உயரிய ஸ்தானத்திற்கு, “மேலான அழைப்புக்கு” - சபை விசேஷித்த விதமாக அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவுடன் இவ்விதம் பாடுபடுவது நாம் செய்யும் பாவத்திற்காக உபத்திரவப்படுவதல்ல, அவர் இந்த மாதிரியானப் பார்வையில் ஒருபோதும் பாடுபட்டவர் அல்ல. நாம் அவருடன் பாடுபட்டால், அநியாயத்தை அனுபவிக்கும் விதத்திலும் மற்றும் நீதிக்கான ஊழியத்தில் நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கிறதிலும் நம்முடைய பாடுகள் இருக்க வேண்டும். அவருடைய பாடுகள் பலியின் பாடுகளாக இருந்தன, ஆகவே நாம் அவருடைய பாடுகளில் பங்குபெற்றால், நம்முடைய பாடுகள் பலியின் பாடுகளாக இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, நாம் அவருடன் பங்கு பெறுகிறோம், மற்றும் அப்போஸ்தலர் கூறுகிறபடி, நாம் அவருடன் பாடுகளில் உண்மையுள்ளவர்களாயிருந்தால், அவருடைய மரணத்திற்குள் பங்குகொள்ளும் விஷயத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தால், நாம் அவருடன் அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவோம்; “நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூட பாடுகளை சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்.”

இந்த விஷயத்தை வேத வாக்கியங்களின் நிலைப்பாட்டிலிருந்து உற்றுநோக்கினால், அவைகள் சில சமயங்களில் கிறிஸ்துவைப் பற்றியும், அர்ப்பணிக்கப்பட்டு தங்களையே பலி

செலுத்தும் அங்கங்களாகிய, அவருடைய சரீரமாகிய சபையைப் பற்றியும் மற்றும் ஆசாரியரின் ஊழியக்காரர்களாக, நிழலாக்கப்பட்ட லேவிக்குடும்பத்தாரான "திரள்கூட்டத்தை" பற்றியும் பேசுகின்றன. சில சமயங்களில் வேத வாக்கியங்கள் நம்மை ஆசாரியத்துவத்தின் கீழ் பணிபுரிகிறவர்களாகவும், மற்றும் இந்த ஆசாரியத்துவத்தில் தலையைக் குறிப்பவராக கிறிஸ்து இயேசுவைப் பற்றியும் பேசுகின்றன. இந்த எல்லா உருவகங்களிலும் காணப்படக்கூடிய கருத்து என்னவெனில், ஒரு பார்வையில் நமது கர்த்தரின் ஊழியத்தில் நாம் அவருடன் பங்கு பெறுகிறவர்களாக இருக்கிறோம். அப்போஸ்தலர் இதை வெளிப்படுத்துகிறபடி, "நாம் ஒரே அப்பமாயிருக்கிறோம்;" அந்த ஒரே அப்பத்தில் எல்லாரும் அங்கங்களாக, அல்லது பங்கு பெறுகிறவர்களாயிருக்கிறார்கள். நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவில் முதன்மையாக நிறைவேற்றப்பட்ட அந்த ஒரே அப்பம் பிட்கப்படுகிறது, அவருடைய அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களில் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. சகலவித ஜாக்கிரதையுடன் தங்களுடைய இருதயங்களில் கைக்கொள்ளுகிறவர்களில் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

பாவ நிவாரணம் பற்றிய விஷயத்தில், நாம் "மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்." ஆகவே மீட்பை நாமோ அல்லது மற்ற எவரும் சம்பாதிக்க முடிவதற்கு நம்மிடம் ஒன்றும் இல்லை. "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த" - மீட்கும் பொருளான நம்முடைய கர்த்தர் கிறிஸ்து இயேசுவில் உள்ள தேவனுடைய ஏற்பாட்டின் மேல் தான் முழுவதும் சார்ந்தவர்களாக இருக்கிரோம். ஆகவே இந்த மீட்பின் புண்ணியம் நம்மில் ஒன்றும் இருக்கவில்லை; ஆனால் இதனுடைய பங்கை அவர் நமக்கு அளிக்கும் போது, அல்லது நம் மேல் சுமத்தும்போது, மற்றும் அப்போது நம்முடைய அர்ப்பணிப்பின் காரணமாகவும், அவர் நமக்கு பரிந்து பேசுகிறவராக இருப்பதாலும், பிதா நம்மை கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஏற்றுக்கொள்கிறார். இப்படியாக நாம் மீட்பரின் அங்கங்களாகியிருக்கிறோம், ஏனெனில் மீட்கும் பணி இன்னும் முழுமை அடையவில்லை. அவர் உண்மையில் மீட்பின் கிரயத்தை கொடுத்திருக்கிறார், ஆனால் அந்த கிரயத்தை எல்லோருக்கும் இன்னும் பிரயோகிக்கவில்லை. அந்த விலைக்கிரயம் ஒப்படைக்கப்பட்ட போது, இந்த விஷயத்தில் நாம் ஏதேனும் செய்வதற்கு நம்மிடம் ஒன்றும் இல்லை. ஆனால் அந்த விலைக்கிரயம் உலகத்தாருக்குப் பிரயோகிக்கப்படுவதற்கு முன்பு, நாம் அவருடன் அடையாளம் காணப்படுகிறவர்களாகி விடுவோம். ஆகவே இந்த மீட்பு-பணியில் அந்த அளவுள்ள பங்கை நாம் பெறுகிறோம்; ஆகவே "மீட்பு" என்ற வார்த்தை, இயேசு கடந்த காலத்தில் செய்த ஊழியத்தை மட்டுமே கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாமல், ஆயிர வருஷ யுகத்தின் முடிவு வரையிலும் உள்ள அனைத்து காரியங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. "மீட்பு" என்பதின் அர்த்தம் வெறுமனே கிரயத்திற்கு வாங்குவதை மட்டுமே குறிக்கிறதாக இல்லை, ஆனால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட அந்த விஷயத்தைப் பெறுவது, அல்லது இழந்ததைத் திரும்பப் பெறுவதாகும். மீட்பைப் பத்திரப்படுத்திக் கொள்வதற்கான விலைக்கிரயத்தை செலுத்துவதில் நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் நாம் செய்வதற்கு சில விஷயங்கள் உண்டு - அவருடைய புண்ணியத்தினால் பெறப்பட்ட இழந்ததைத் திரும்பப் பெறும் பணியில் - நாம் அவருடன் எண்ணப்படுகிறோம்.

"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்." என்று நாம் வாசிக்கிறபடி, முழுமையான பார்வையில் நோக்கும் போது, மனுக்குலத்தை மீட்பதற்கும், அல்லது அவர்களைத் திரும்பக் கொண்டுவருவதற்கும், மனுக்குலம் இழந்ததைத் திரும்பப் பெறுவதற்கு ஆயிர வருஷ யுகம் முழுமையும் எடுத்துக்கொள்ளப்படும். அந்த நோக்கத்திற்காக மீட்பின் விலைக்கிரயம் சுமார் 1900 வருஷங்களுக்கு முன்பாக செலுத்தப்பட்டது, ஆனால் அவர்கள் பாதாளத்திலிருந்து இன்னும் மீட்கப்படவில்லை மற்றும் ஆயிர வருஷ அரசாட்சியில் விழித்தெழுப்பப்படும் நேரம் வரைக்கும் இது நடக்காது. பிறகு அவர்கள் பாவம் மற்றும் மரண நிலைமையிலிருந்து படிப்படியாக வெளியே வரும்போது, அந்த மீட்பின் முழுமையான உள்நோக்கமும், எண்ணமும் நிறைவேறுகிற செயல்முறையில் இருக்கும் மற்றும் ஆயிர வருஷ இராஜ்யத்தின் அனைத்து பணியிலும் சபை கிறிஸ்துவுடன் இணைந்திருக்கப்போகிறபடியால்,

முழுமையான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, சபையானது மீட்கும் பணியுடன், அல்லது விடுதலை செய்யும் பணியுடன் அடையாளம் காணப்படுகிறது.

"பாவ நிவாரண பலியில்" குறிப்பிட்டபடியே, இயேசுவாகிய மேன்மையான பிரதான ஆசாரியரிடமிருந்து முதலாவதாக புண்ணியம் தொடருகிறது மற்றும் அந்த புண்ணியம் அவருடைய சரீரமாகிய சபையின் மீது, தம்மிடமிருந்து பிரிந்த நிலையில் இல்லாமல், தம்முடைய அங்கங்கள் என்ற முறையில் பிரயோகிக்கப்படுகிறது. அவர் வெறுமனே தம்முடன் இந்த அங்கங்களை சேர்த்துக்கொள்கிறார்; மற்றும் அவருடைய புண்ணியத்தின் மூலமாக நாம் நீதிமான்களான உடனே, மற்றும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனே, மகத்தான பணியைச் செய்யப்போகிறவரான மேன்மையான பிரதான ஆசாரியரின் அங்கங்களாக நாம் இருக்கிறோம்.; அந்த புண்ணியம் நம்மிடம், விசுவாசக் குடும்பத்தின் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொரு அங்கத்திற்கும் சுமத்தப்பட்டிருக்கும் போது, அந்த புண்ணியம் இரண்டாம் தடவை பிரயோகிக்கப்படுவதற்கு தயாராக இருக்கும்போது, புதிய உடன்படிக்கையின் தெளித்தலில், அவருடைய பலியைப் பிரயோகிப்பதில் அவருடைய சரீரத்தின் எல்லா அங்கங்களும் பங்கடைவார்கள்.

அவருடைய "பாத்திரத்தில்" அவருடன் பானம் பண்ணுவதற்காக, இதில் பங்கு கொள்வதற்காக, நம்முடைய கர்த்தரின் தற்காலத்திய அழைப்பாக இருக்கிறது. "பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற" புது உடன்படிக்கைக்குரிய அவருடைய இரத்தமாயிருக்கிறது. இதில் நாம் எல்லோரும் பானம் பண்ணக்கூடியவர்களாக இருக்கிறோம் மற்றும் தேவனுடைய ஏற்பாட்டிற்கு இணங்க இவ்விதம் அழைக்கப்படுகிறவர்கள் மற்றும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஸ்நானம் பண்ண, இந்த பாத்திரத்தில் பானம் பண்ண விருப்பமாயிருக்கிறவர்களின் சரியான எண்ணிக்கையினரைக் கண்டுபிடிக்க சுவிசேஷ யுகம் முழுமையும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## சபை - இயேசுவுக்கு பெயரளவிலான, ஏற்றுக்கொள்ளத்தகாத ஊழியக்காரர்கள்.

### கே : 112:1 :: கேள்வி (1910 - Z) - 1

"கர்த்தாவே!, கர்த்தாவே!, உமது நாமத்தினால் தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினால் பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினால் அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் என்று அநேகர் கூறுவார்கள்" என்று நமது கர்த்தர் கூறினார். "அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்வேன்? என்று கர்த்தரின் அறிவிப்பு தொடர்ந்தது. (மத். 7:22,23) ஒருவர் கர்த்தருடைய நாமத்தினால் பிசாசுகளைத் துரத்தினாலும், அத்தகைய நபர்கள் தங்களைப் பின்பற்றாதவர்களாயிருக்கும் போது, அவரை கர்த்தரின் சீஷர்கள் மன்னிக்கக்கூடாது என்பது நமது கர்த்தரின் மேற்குறிப்பிட்ட அறிக்கையுடன் இணக்கமாயிருக்கிறதாக நாம் எப்படி புரிந்துகொள்ள முடியும்?

**பதில்:** இராஜரீக வகுப்பாருக்குத் தகுதியில்லாதவர்களை கர்த்தர் இயேசு மற்றும் அவருடைய தலைமைக்கு முழுமையாகக் கீழ்ப்படியாதவர்களை, அவரால் முழுவதும் கற்பிக்கப்படாத வர்களும், உபயோகப்படுத்தப்படாதவர்களுமாக இருப்பவர்களை தேவன் சில நல்ல பணிகளைச் செய்ய அனுமதிக்கலாம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு விசுவாசத்தை செயற்படுத்துகிறவர்களாக இருக்கலாம். மற்றும் கர்த்தர் அவர்களை அந்த அளவுக்கு அங்கீகரிக்கலாம், ஆனால் அற்புதங்களைச் செய்யும் வல்லமை உடையவருக்கும், பொதுவில் பிரசங்கம் பண்ணுகிறவருக்கும் இராஜ்யத்தில் ஒரு இடம் அளிக்கப்படும் என்று அவர் உத்திரவாதம் கொடுப்பதில்லை. ஆகவே சமயப் பணி மற்றும் குடிசை சேரி மேம்பாட்டு பணியில் ஈடுபடுபவர் ஒவ்வொருவரும் இராஜ்யத்தில் இருப்பார்கள் என்று சொல்லக்கூடிய உரிமை நமக்குக் கிடையாது. அவர் நற்பணி செய்பவராக இருக்கலாம், ஆனால் கர்த்தர் இப்போது

தேடிக்கொண்டிருக்கும் அந்த விசேஷ வகுப்பாரைச் சார்ந்தவராக அவர் இருக்கவில்லை. அது நல்ல பணியாக இருந்தால், அவருடைய பணியை நாம் ஆட்சேபிப்பதில்லை. நாம் அவருடன் குறுக்கிடுவது நம்முடைய காரியமல்ல, ஏனெனில் கர்த்தர் தமது சொந்த பணியைக் கவனித்துக் கொள்ளக்கூடியவராக இருக்கிறார். நற்பணிகளும் கூட தவறு பிணைந்திருப்பதாக நாம் நம்புகிற அவர்களுடன் ஒத்துழைப்பு செய்கிறவர்களாக, அல்லது அங்கீகரிக்கிறவர்களாக நாம் இல்லாமலிருந்தாலும், நம்முடைய பணியை நாமே கவனித்துக் கொள்ளக்கூடியவர்களாக இருக்க வேண்டும். தீமைக்கு உதவும் வகையில் நமது செல்வாக்கை எந்த கோணத்திலும் நாம் அளிக்கக்கூடாது.

நமது கர்த்தரின் சொந்த பணிகளை நிர்வாகம் பண்ணுவதை அவரிடமே விட்டுவிட வேண்டும் என்ற நிலைப்பாட்டினை உடையவர்களாக இருக்க வேண்டும். அவர் காரியங்கள் முழுமையையும் செய்வதற்கான திறனை அபரிமிதமாக உடையவராயிருக்கிறார். நம்முடைய இருதயங்கள் முழுமையான பணிவுடன் இருக்கவும், நம்முடைய தலையும், நம்முடைய விருப்பங்களும் கர்த்தரின் தலையின் கீழ், தலைமையின் கீழ் இருக்குமாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அவருடைய சித்தம் நம்மில் செயல்பட வேண்டும் மற்றும் நம்முடைய பலிகள் மனுஷர்களால் காணப்படாமல், தேவனிடம் காணப்படும் வகையில் இருக்க வேண்டும்; இவ்விதமாக அவருடைய அங்கீகரிப்பை <u>அந்த நாளில்</u> பெறுகிறவர்களாக இருப்போம். அப்படிப்பட்டவர்களுக்கு அங்கீகரிப்பை அளிப்பதற்கும், பிதா மற்றும் அவருடைய பரிசுத்த தூதர்களுக்கு முன்பாக அறிக்கையிடுவதற்கு அவர் மகிழ்ச்சி கொள்வார் என்று கூறுகிறார்.

## சபை - மத்தியஸ்தர் Vs பரிந்து பேசுகிறவர்.

## கே : 113:1 :: கேள்வி (1911) - 1

நமக்கு மத்தியஸ்தர் தேவையில்லை என்றால், நமக்குப் பரிந்து பேசுகிறவர் தேவையா? வேறு வார்த்தைகளில் சொன்னால், நமக்கு நீதிமன்றத்தில் வழக்கு ஏதுமில்லை என்றால், வக்கீல் எதற்கு?

**பதில்:** நல்லது, நாம் என்ன அர்த்தம் கொள்கிறோம் என்பதை இந்த கேள்வியை எழுதுகிற சகோதரன் புரிந்து கொள்ளவில்லை. பரிந்து பேசுகிறவர் என்பது என்ன, மற்றும் மத்தியஸ்தர் என்பது என்ன என்பதைப் பற்றி நாங்கள் எழுதியிருக்கிறவைகளை பன்னிரெண்டு தடவைகளுக்கு மேலாக படித்திருக்க வேண்டும். இந்த பாடம் பற்றி நாங்கள் சுமார் நாற்பது தடவைகள் எழுதியிருக்கிறோம். நீங்கள் பன்னிரெண்டு தடவைகளுக்கு மேல் படித்தால், இதை நீங்கள் நன்றாக கிரகிக்க முடியும். இந்த விஷயங்களின் மேல் சில சமயங்களில் நாங்கள் மோசமாகக் குழப்பிக்கொள்கிற கஷ்டத்தை நீங்கள் பாருங்கள். இப்போது முயற்சி செய்து, இந்த முறை சரியாக கிரகித்துக் கொள்ளுங்கள். இடையில் இருப்பவர் தான் மத்தியஸ்தர். பரிந்து பேசுகிறவர் ஒரு தரப்பின் பக்கமாக நிற்பவராக இருக்கிறார். - முழுவதும் வித்தியாசமான கருத்துக்கள். தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில், தேவனுக்கும் உலகத்துக்கும் இடையில் ஆயிரம் வருஷங்களுக்கு தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் நிற்கும்போது, கிறிஸ்து மத்தியஸ்தராக இருப்பார். உலகத்துடன் செய்வதற்கு தேவனிடம் ஒன்றுமில்லை. எல்லா உறவையும் முழுவதும் துண்டித்தவராக இடையில் மத்தியஸ்தராக இருப்பவராக, கிறிஸ்து இருப்பார். மற்றும் ஆயிரம் வருஷங்களின் முடிவு வரையில் எவ்விதத்திலும் பிதாவுடன் செய்வதற்கு உலகத்துக்கு ஒன்றும் இராது. பிறகு மத்தியஸ்தர் வழியிலிருந்து வெளியே வருவார் மற்றும் கூறுவார், இப்போது, பிதாவே, உலகத்தை உம்மிடம் ஒப்படைக்கிறேன்." இதற்கு இடைப்பட்ட காலத்தில, கிறிஸ்துவின் மத்தியஸ்தத்தின் கீழ் உலகம் கற்பிக்கப்படும், தண்டித்து திருத்தப்படும் மற்றும் உதவியளிக்கப்படும்; அவர்களை பூரணத்துக்குக் கொண்டுவருவதற்காக அவர்களுக்கு செய்ய முடியும் ஒவ்வொன்றும் செய்யப்படும். அவர்கள் பூரணம் பெற்றிருக்கும் நிலையில், பிறகு கிறிஸ்துவின் ஆட்சியின் இறுதியில், பிதாவினிடத்திற்கு அவர்கள் திருப்பப்படுவார்கள். இப்பொழுது உங்களுக்கும் எனக்கும் கிறிஸ்து செய்யப்போவது அது இல்லை. அவர் உங்களுக்கும் பிதாவுக்கும் இடையில் நிற்கவில்லை. மாறாக, அவர் நம்மை பிதாவின்

அருகாமையில் கொண்டு வருகிறார் - "நீங்கள் இப்போது - - சமீபமானீர்கள்." - தூரமாக வைக்கப்படவில்லை. இது அப்படியே எதிர்மாறாக இருக்கிறது. பாவிகளுடன் செயல்தொடர்பு கொள்வதில் இரண்டு வழிகள் உள்ளன; நாங்கள் பாவிகளாய் இருந்தோம் மற்றும் அவர்கள் பாவிகளாய் இருக்கிறார்கள். ஆனால் அந்த பாவிகளுடன் செயல்தொடர்பு கொள்வதில், நாம் வந்து கொண்டிருக்கும் அதே வழியில் வருவதற்கான நிலைமையில் அவர்கள் இருக்க மாட்டார்கள். நாம் தேவனிடம் வந்து கொண்டிருக்கிறோம். ஏனெனில் நாம் வருவதற்கு விரும்புகிறோம். உலகத்தில் மீதியானவர்கள் வருவதற்கு விரும்புகிறவர்களாக இருக்கிற தில்லை; அவர்களை நையப்புடைக்கிற இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது அவர்களுக்கு தேவையாக உள்ளது. அவர்களுக்கு முதலாவது நையப்புடைக்கப்படுவது தேவைப்படுகிறது மற்றும் அவர்கள் நீதியைக் கற்றுக்கொள்ளும் வரையில், எல்லா வழிகளிலிருந்தும் பெரிதும் மாறுவதற்கு அவர்களுக்கு இது தேவையாக இருக்கிறது. ஆனால் தேவன் அழைத்துக்கொண்டிருக்கிற சபை முதலாவது நீதியை நேசிக்கிறது மற்றும் அக்கிரமத்தை வெறுக்கிறது மற்றும் இந்த தர நிலைக்கு அவர்கள் போராடுகிறார்கள்; அவர்களுக்கு மாம்சீகத்தின் பெலவீனம் இருக்கலாம், பரிசுத்த பவுல் கூறுவது போன்று, அவர்கள் எதை விரும்புகிறார்களோ, அதை எப்போதும் செய்கிறதில்லை, இருப்பினும் அவர்களுடைய இருதயங்களின் விருப்பங்கள் தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் இருக்கின்றது; இப்படியாக, தேவன் இந்த வகுப்பாரை இழுத்துக் கொள்கிறார் மற்றும் அவர்களைத் தம்மிடமே இழுத்துக் கொள்கிறார், அவர் தம்மிடம் அவர்களை இழுத்துக் கொள்ளும்போது, அவர்களுடைய அபூரண நிலையில் அவர்களை ஏற்றுக்கொள்ள அவர் விரும்புகிறதில்லை, ஆகவே அவர்கள் அவரிடம் அருகில் வரும்போது, தேவன் அவர்களுக்கு இயேசுவை சுட்டிக்காட்டுகிறார். இயேசுவினுடைய புண்ணியமான பலி இப்போதிருக்கிற சபைக்கு, அல்லது காலப்போக்கில் உலகத்திற்கு, இரண்டிற்கும் எல்லா இணக்கத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது. மேலும் சபையினர் இயேசுவிடம் வரும்போது, அவர் அவர்களின் பரிந்து பேசுகிறவராக, அவர்களுக்கு வழக்கறிஞராக, "பரலோக பிதாவே, உம்மிடம் இணக்கமாகத் திரும்ப வர விருப்பமாயிருக்கும் இவருக்காக நான் நிற்கிறேன்" என்று கூறும்விதமாக, அவர்களுடைய நோக்கத்திற்காக வாதாடுகிறவராக அவர் செயல்படுகிறார். பிதா இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார் மற்றும் அவர்களை ஏற்றுக்கொள்ள பிரியமாயிருக்கிறார்.

ஆகவே இந்த பரிந்து பேசுகிறவர், ஒருவரை தேவனுக்கு சமீபமாகக் கொண்டுவருகிறார் மற்றும் தேவன் நம்மிடம் குமாரர்களாக செயல்தொடர்பு கொள்கிறார் மற்றும் அவருடைய சுதந்தரவாளிகளாக நம்மை அழைக்கிறார்; ஏனெனில் நாம் தேவனுடைய பிள்ளைகளானால், தேவனுடைய சுதந்தரரும், நமக்கு பரிந்து பேசுகிறவராயிருக்கிற நமது கர்த்தர் இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக இருக்கிறோம். ஆனால் அடுத்த யுகத்தில் உலகத்தாருடன் இது ஒட்டுமொத்தமாக, வேறுவிதமாக இருக்கும். மத்தியஸ்தர் இடையில் நிற்பார் மற்றும் அவர்களுடன் செயல்தொடர்பு கொள்வதற்கு அவருடைய இராஜ்யத்தை உடையவரா யிருக்கிறார். இது மத்தியஸ்த இராஜ்யமாக இருந்து, தேவனிடமிருந்து அவர்களைப் பிரிக்கும் மற்றும் அவர்களின் நலனுக்காக அவர்களைப் பிரித்து வைக்கும். சபை தேவனிடத்திற்கு சமீபமாய் கொண்டுவரப்படும். அந்த பார்வையில் உலகத்தார் தேவனுக்கு சமீபமாகக் கொண்டுவரப்படுவது அனுகூலமாயிருக்காது.

இருப்பினும், அருமை நண்பர்களே, நான் சொல்வது என்னவெனில், சில வார்த்தைகளின் அர்த்தத்தை ஒருபோதும் புரிந்து கொள்ளாதவர்களாக சிலர் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதாவது, வார்த்தைகளைப் பற்றிய விஷயத்தில் கூர்ந்து கவனிக்கும் தன்மையில்லாதவர்களாக சில ஜனங்கள் இருக்கிறார்கள் என்ற கருத்து எனக்கு இருக்கிறது மற்றும் அப்படிப்பட்ட ஜனங்களுக்கு நான் சொல்வது இதுவே. இதை நீங்கள் புரிந்துகொள்ள முடியவில்லையெனில், அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். பிதா உங்களை ஏற்றுக்கொள்ள விரும்புகிறதற்கான அடிப்படை அல்லது நிபந்தனையாக இருக்கும் வழி, கிறிஸ்துவின் மரணமாக இருக்கும் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா? ஆம், மிகவும் நல்லது, அந்த நிபந்தனைகளுக்கு வாருங்கள். இந்த வழியில் தான் கடந்த நூற்றாண்டுகளின் சபை வந்துகொண்டிருக்கிறது. மற்றும் மத்தியஸ்தருக்கும், பரிந்து பேசுகிறவருக்கும் இடையே உள்ள

வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளவே இல்லை; ஒரு நூற்றாண்டுக்கு முன்பு மத்தியஸ்தர் மற்றும் பரிந்து பேசுகிறவர் என்ற அந்த இரண்டு பதங்களுக்கான வித்தியாசத்தை கண்டிப்பாக புரிந்துகொள்ள வேண்டும் என்று இருந்ததைவிட, ஒவ்வொருவரும் இதை புரிந்துகொள்ள வேண்டும் என்று இனிமேல் ஒருவேளை அவசியமாக இருக்காது. இங்கு நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய கருத்து என்னவெனில், கிறிஸ்து நமது இரட்சகராக இருக்கிறார் மற்றும் அவர் இல்லாமல் பரலோக பிதாவிடம் நமக்கு எந்த நிலைத்தன்மையும் கிடையாது. உங்களுக்குத் தெளிவாகவோ, அல்லது தெளிவில்லாமலோ, எப்படி இருந்தாலும், இந்த கருத்தில் மட்டும் தெளிவாக இருங்கள். இந்த விஷயத்தின் தத்துவத்தை நீங்கள் புரிந்துகொள்ள முடியுமானால், மிகவும் நல்லது; அந்த அளவுக்கு மேலாக நீங்கள் ஆசீர்வாதம் பெறுவீர்கள்; உங்களால் புரிந்துகொள்ள இயலாவிட்டால், இதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இது இவ்விதமாக காலக்கணக்கு போன்றே உள்ளது. காலக்கணக்கு அனுமானத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய மனதின் தரம் கொண்டவர்களாக, நண்பர்களில் பாதி பேர்கள் கூட இருக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் வேதாகம பாடங்களின் இரண்டாம் வால்யூமில் எழுதப்பட்டிருக்கும் எல்லாவற்றையும் புரிந்துகொள்ள இயலாத காரணத்தினால் அவர்கள் பரிசுத்தவான்களாக இருக்க இயலாது என்று அவர்களில் சிலர் உணரலாம். அப்படி இல்லை, அருமை நண்பர்களே, காலக்கணக்கு விஷயங்களைப் புரிந்துகொள்ளக்கூடியவர்கள், அந்த சந்தோஷம் பெற்றவர்களாக இருக்கட்டும். இதைப் புரிந்துகொள்ள இயலாதவர்கள் இதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

## சபை - உயிர்த்தெழுப்பப்பட்ட சுபாவம்.

## கே : 114:1 :: கேள்வி (1911) - 1

சபை தெய்வீக சுபாவத்துக்கு விழித்தெழுப்பப்படுமா, அல்லது கர்த்தர் இருந்ததைப் போல, தூதர்களைப் போன்று ஆவியின் தளத்தில் சபை விழித்தெழுப்பப்படுமா? மற்றும் பிறகு, கலியாண விருந்தின் போது அவர்களுடைய வெகுமதியாகிய தெய்வீக சுபாவத்தைப் பெறுவார்களா?

**பதில்:** நான் அறிந்துள்ளதைவிட, இதைப் பற்றி இந்த கேள்வியைக் கேட்ட நபர் அதிகம் அறிந்துள்ளது வெளிப்படையாகிறது. நமது கர்த்தர் தெய்வீக சுபாவமில்லாமல் ஆவிக்குரிய தளத்தில் எழுப்பப்பட்டார் என்று அவர் எப்படி அறிகிறார்? இது போன்று எதையும் நான் அறியவில்லை. நம்முடைய கர்த்தர் மரித்தோரிலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு எழுப்பப்பட்டார் என்று நான் நம்புகிறேன் - மாம்சத்தில் கொலையுண்டு ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார் மற்றும் ஆவிக்குரிய சிருஷ்டியாக தெய்வீக சுபாவத்தில் அவர் இருந்தார். அவர் பிதாவாக இருந்தார் என்று நான் அர்த்தங்கொள்வதாக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டாம். நாம் மிகவும் திருகப்பட்ட மனங்களைப் பெற்றிருப்பது போலவும், நமது மொழி நம்முடைய பரிதாபமான தலைகளில் திருகப்பட்டிருக்கும் அபாயம் கொண்டதாக இருப்பது போன்றும், இந்த விஷயங்களைப் போதிய அளவில் எளிதாக்க முடியாதவர்களாக நாம் இருப்பது போலத் தோன்றுகிறது. நமது கர்த்தர் இயேசு ஒருபோதும் பரலோக பிதாவாக இருந்ததில்லை மற்றும் பரலோக பிதாவாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை என்பதை நம்பவும், கற்பிக்கவும் என்னை புரிந்து கொள்ளுங்கள். ஸ்திரீக்கு தலையாக புருஷன் இருக்கிறான், அப்படியே கிறிஸ்து சபைக்கு தலையாக இருக்கிறார் மற்றும் கிறிஸ்துவின் தலையாக தேவன் இருக்கிறார் என்பதை வேதாகம் மூலமாகச் சொல்வதற்கு என்னை புரிந்து கொள்ளுங்கள். அதுவே வேத வாக்கியங்களின் ஒழுங்கு முறையாகும். ஆனால் இந்த திரித்துவக் கொள்கை ஜனங்களுடைய மனங்களில் ஊடுருவி குழப்படையச் செய்கிறது மற்றும் அவர்களுடைய சிந்திக்கும் திறன்கள் அனைத்தையும் குருடாக்கி விடுகிறது. ஆகவே நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து பிதாவினுடைய மகிமைக்கு எழுப்பப்பட்டார் - பிதாவின் ஒரு பங்காக அல்ல, பிதாவின் மகிமையில் பங்கு பெறுகிறவராக - மிக உயர்வான வெகுமதியாக மகிமை, கனம், அழியாமை இருந்தன - சபையினுடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய அப்போஸ்தலரின் அறிக்கையினால்,

உறுதிப்படுத்தப்படுகிறது. (1கொரி.15) “கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.” மேலும் அவர் சொல்கிறார், “அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்.” மற்றும் இந்த வாக்கியத்தின் அமைப்பிலிருந்து, உயிர்த்தெழுதலின் கணப்பொழுது, அழியாமையாகிய தெய்வீக சுபாவத்தின் கணப்பொழுதையே அவர் கூறுகிறார் என்பது தெளிவாகிறது.

## சபை - எந்த அடிப்படையில்?

### கே : 115:1 :: கேள்வி (1911) - 1

பரிசுத்த பவுல் கூறுகிறார், “அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள், அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.” இங்கு குறிக்கப்படும் “தீர்க்கதரிசிகள்” என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை மட்டும் குறிக்கிறதாகவும், புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிகளைக் குறிப்பதாக இல்லை அல்லவா?

**பதில்:** பழைய ஏற்பாட்டு காலங்களில் இருந்த தீர்க்கதரிசிகளையே அப்போஸ்தலர் இங்கு குறிப்பிடுகிறார் என்று நான் நினைக்கிறேன், ஆனால் இது, அவர்களுடைய தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்டிருந்த விசுவாசத்தின் அடிப்படையாகவே இருக்கிறது. இப்பொழுது, வேத வாக்கியங்களில் குறிக்கப்பட்டிருக்கிற மற்ற தீர்க்கதரிசிகள் இருக்கின்றனர், உதாரணமாக, கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மேலும் அந்த வரங்கள் என்னவென்று கூறுகிறார்; அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை போதகராகவும் மற்றும் சிலரை சுவிசேஷகராகவும் அளித்தார். அவர் இங்கே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் பற்றி பேசவில்லை.. இந்த வசன உரைப்பகுதியில் அவர் பிரசங்கிமார்களைப் பற்றி பேசுகிறார், ஏனெனில் கிரேக்க மொழியில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் “தீர்க்கதரிசி” என்ற வார்த்தை, பொதுவிடத்தில் பலரறியப் போதிப்பவரை, பொதுவிடத்தில் அறிக்கையிடுபவரை, பொதுவிடத்தில் பிரசித்தப்படுத்துபவரை - அதாவது ஒரு தீர்க்கதரிசியை, அல்லது சொல்லர்த்தமாக, வருவதுரைப்போரைக் குறிப்பதாக உள்ளது.

## சபை - மறுரூபமாகுதல் - மகா உபத்திரவ காலம்.

### கே : 115:2 :: கேள்வி (1912) - 2

“கர்ப்பவேதனை வருமுன் ஆண் பிள்ளையைப் பெற்றாள்.” உபத்திரவ காலத்துக்கு முன்பாகவே, சபை தெய்வீக சுபாவத்திற்கு மறுரூபமடைந்து முழுமை பெறுவதை இது உணர்த்துகிறதா?

**பதில்:** ஆம், மற்றும் இது ராகேலின் இரண்டு குமாரர்களில் அடையாளப்படுத்தப்படுகிறது; ராகேல் சீயோனுக்கு நிழலாக இருப்பதால், அவளுக்கு முதலாவதாகப் பிறந்த குமாரன், சிங்காசனத்தை அடையப்பெற்றவனான யோசேப்பு மற்றும் அவளுடைய இரண்டாவது குமாரன் பென்யமீன். ‘பென்யமீன்’ என்ற பெயர், ‘என்னுடைய வலியின் குமாரன்’ என்பதைக் குறிக்கிறது. மற்றும் பென்யமீனைப் பெற்றெடுத்தபின்பு அவள் இறந்தாள். இதை ஒரு நிழலாக நாம் புரிந்துகொள்கிறோம். இங்கே இரண்டு வகுப்பார் எப்படி வெளிப்படுகிறார்கள் என்பதை தேவன் நிழலாகக் காண்பிக்கும் நோக்கங்கொண்டார் - ஆவியின் தளத்தில் இரண்டு வகுப்பார் - மணவாட்டி வகுப்பாராகும் சிறுமந்தை மற்றும் பிறகு அவர்களைப் பின்தொடர்ந்து போகக்கூடிய, வேத வாக்கியங்களில் அழைக்கப்படுபவர்களாகிய திரள்கூட்டத்தார், அல்லது வேறொரு பார்வையில், புத்தியில்லாத கன்னிகை வகுப்பார். அவர்கள் எல்லோரும் கன்னிகைகள், ஆனால்

ஒரு வகுப்பார் கட்டளைகளைப் பின்பற்றி தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்ளும் புத்தியுள்ள கன்னிகைகள் மற்றும், மற்ற வகுப்பார் தங்களுடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதில் தவறிவிடுகிறவர்களாகவும், மற்றும் மகா உபத்திரவத்தின் வழியாக மேலே வருகிற புத்தியில்லாத கன்னிகைகள். இந்த இரண்டு வகுப்பார்களும் ராகேலின் இரண்டு குமாரர்களில் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். முதலாம் குமாரன் யோசேப்பு சிங்காசனத்தை அடைந்தவனாக இருந்தான். யோசேப்பு ஒரு குறிப்பிட்ட வகையிலான மகா உபத்திரவத்தின் வழியாக, எகிப்தின் ஆட்சியாளரானான் மற்றும் எல்லா தேசத்தையும் கிரயம் கொள்ளுகிறவனாக இருந்தான். இவன் மேசியாவையும், அவருடைய மகிமையின் இராஜ்யத்திற்கு நிழலாக இருந்தான் மற்றும் பென்யமீன் சிங்காசனத்தைப் பெற்றுக்கொள்ளாத திரள்கூட்ட வகுப்பாருக்கு நிழலாக இருந்தான்.

## சபை - கிறிஸ்துவின் சரீரம்.

## கே : 116:1 :: கேள்வி (1911 - Z) - 1

சபை எப்பொழுது கிறிஸ்துவின் சரீரமாகும்?

**பதில்:** வேதாகமத்தின்படி, இரண்டு நிலைப்பாடுகளில் சபையைப் பற்றிய பார்வை உள்ளது;

(1) மகிமையில் இருக்கும் சபை பிரத்தியேகமாக இரட்சகர் மற்றும் அவருடைய மணவாட்டி வகுப்பார், அவருடைய உடன்-சுதந்தரர், அல்லது மற்றொரு உருவகத்தில், “தலையாகிய இயேசு மற்றும் சபை, அவருடைய சரீரம்” - “கிறிஸ்துவின் சரீரத்தின் தனிப்பட்ட அங்கங்களை” உள்ளடக்கியதாய் இருக்கிறது. இவர்கள் மட்டுமே “முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுவார்கள்; இவர்கள் மட்டுமே கிறிஸ்துவுடன் ஆயிரம் வருஷங்கள் அரசாளுவார்கள்.

(2) இருப்பினும், தற்காலத்தில், கிறிஸ்துவுடன் திருமணம்புரிய நிச்சயிக்கப்பட்ட, உருவாக்கம் பெறுகின்ற, அல்லது, வளரும் நிலையில் உள்ள கிறிஸ்துவின் மணவாட்டியாக சபை பேசப்படுகின்றது. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் போது, இயேசுவின் புண்ணியத்தில் நம்பிக்கைக் கொண்டு, கர்த்தருக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணிப்பு செய்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீர அங்கமாக எண்ணப்படுகின்றனர். அங்கம் என்ற முறையில், அவர் மாம்சீகத்திற்கான பழைய காரியங்களைக் களைந்து விட்டு, பரிசுத்த ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் தரித்துக்கொண்டு, கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ச்சி பெற வேண்டும். இருப்பினும், அவர்கள் மூன்று வெவ்வேறு வகுப்பார்களாக வளர்ச்சி பெறுகின்றனர்.

(a) “முதலாம் உயிர்த்தெழுதலில்” பங்கு பெறுவதின் மூலம் பிரத்தியேகமாக, கிறிஸ்துவின் சரீரமாகிறவர்களாகிய ராஜரீக ஆசாரியர்களான “சிறுமந்தை”.

(b) தேவனுக்கு உண்மையுள்ளவர்களாகவும், இறுதியில் விசுவாசம் கொண்டவர்களாகவும், ஆனால் பலியிடும் ஆசாரியர்களாக எண்ணப்படுவதற்குரிய போதுமான அளவு பக்தி வைராக்கியம் இல்லாதவர்களாக, “ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலானவர்களான” கூட்டத்தில் எண்ணப்படுவதற்கு தகுதியில்லாதவர்களாகிய “திரள்கூட்ட வகுப்பார்”. இவர்கள் இறுதியில் ஜெயங்கொள்ளுகிறவர்களாக வெளிவருவார்கள் மற்றும் அவர்களுடைய அர்ப்பணிப்பின் சமயத்தில் ஜெநிப்பிக்கப்பட்ட அந்த ஆவியின் தளத்தை அடைகிறவர்களாயிருப்பார்கள். இவர்கள் ஆலயத்தில் பணிவிடைபுரிபவர்களாக, மணவாட்டியின் “கன்னிகைத் தோழிகளாக” இருப்பார்கள்.

© மூன்றாவது வகுப்பார், பரிசுத்த பவுல் கூறுகிறபடி, விழுந்துபோகிறவர்களாகவும்

தங்களை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணி, கிருபையின் ஆவியையும், நீதிமானாக்கப்படுதல் வாயிலாக பரிசுத்தமாக்கப்படும் சிலாக்கியத்தையும் நிந்திக்கிறவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் "கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது போல" என்று பரிசுத்த பேதுருவினாலும் விவரிக்கப்படுகிறார்கள் - ஆவிக்குரிய நம்பிக்கைகளிலிருந்தும், பூமிக்குரிய வாக்குத்தத்தங்களிலிருந்தும் விலகிப் போகிறவர்கள் - கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஒரு தரம் எண்ணப்பட்டவர்கள், புத்தியில்லாத மிருகங்களைப் போல இரண்டாம் மரணத்தில் மரணமடைவார்கள்.

## சபை - அதே வேதாகமப் பார்வையை இன்னும் தக்கவைத்திருக்கிறீர்களா? - சபையின் மறுரூபம்.

### கே : 116:2 :: கேள்வி (1911 - Z ) - 2

சபையின் மறுரூபமாகும் விஷயத்தில் உங்களுடைய கருத்து மாறியிருக்கிறது என்பதை காவற்கோபுர இதழ் - ஏப்ரல் 1, 1911, பக்கம் 102, பத்தி 2, பாரா 2&3 தொடர்பான உங்களுடைய குறிப்புரைகளிலிருந்து நாங்கள் புரிந்து கொள்ளலாமா?

**பதில்:** இல்லை; இதற்கு முன்பாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தவைகளிலிருந்து வேறுபாடான கருத்தை நாங்கள் கொண்டிருக்கவில்லை. "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது, அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடேகூடப் போகும்." என்ற அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காலத்தில், 1878லிருந்து நாம் இருக்கிறோம் என்பதை இன்னும் நாங்கள் நம்புகிறோம். - - வெளி. 14:13.

நாம் எல்லோரும் கண்டிப்பாக மரணமடைய வேண்டும், ஆனால் "நாம் எல்லோரும் நித்திரை அடைவதில்லை." நமது கர்த்தரின் இரண்டாவது பிரசன்ன காலத்தில் வாழும் மீதியானவர்களைப் பொருத்தமட்டில், அவர்கள் நித்திரையடைவதற்கான தேவை இருக்காது - மரணத்தின் இமைப்பொழுதிலே, உயிர்த்தெழுதலின் மறுரூபத்திற்கான இமைப்பொழுதாக இருக்கும் - சங். 82:7; 1 கொரி. 15:51,52.)

## சபை - பிதாவிடம் ஒப்படைக்கப்படும் போது.

### கே : 117:1 :: கேள்வி (1912) - 1

கர்த்தர் சபையை பரலோகத்திற்குக் கூட்டிச் செல்வார் மற்றும் திரும்ப வந்து, தம்முடைய 'மகிமையில் பிரசன்னமாவார்' (Epiphania) அல்லது 'வெளிப்படுவார்' (Apokalupsis) என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது என்றும், ஏனெனில் இது மூன்றாவது வருகையாக இருக்கும் என்றும், இது குறித்து வேத வாக்கியங்களில் 'எங்கும்' தடயக்குறிப்பு இருக்கவில்லை என்றும் நீங்கள் 1902ம் வருஷம், மார்ச் 15ம் தேதி விசேஷ பிரசன்ன கோபுர இதழில் (Special Parousia Tower) சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் 1911 மாநாட்டு அறிக்கையில் (Convention Report) சபை ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில் பிதாவிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறியிருப்பதை தயவுசெய்து நீங்கள் இணக்கமாக விளக்கவும்.

**பதில்:** சபை முழுமை அடைந்து, திரைக்கு அப்பால் கடந்தவுடன், எவ்வளவு நாட்கள் அல்லது மாதங்கள் கூட செல்லும் என்பதை நான் அறியவில்லை, ஆனால் சிறிது காலம் குறுக்கிடுவதாக இருக்கும் மற்றும் பிறகு சபை பிதாவிடம் ஒப்படைக்கப்படும் மற்றும் பிறகு திரள்கூட்டத்தார் இராஜாவிற்கு முன்பாக ஒப்படைப்பதற்கு அவரைப் பின்பற்றிச் செல்வார்கள். இது பரலோகத்திலிருந்து வருவதும் போவதுமாய் இருக்காது. கர்த்தர் பரலோகத்தில் தம்முடைய பிதாவின் வலதுகரத்தில் வீற்றிருப்பார் மற்றும் கர்த்தர் இயேசு கிறிஸ்து அந்த நிலையில் எப்போதும் இருப்பார். அவர் ஒரு இமைப்பொழுதும் தம்முடைய இடத்தை காலியாக இருக்க

விடமாட்டார். அவருடைய மணவாட்டியாகிய சபையும் அவர் பெற்றிருக்கிறது போல அதே சிலாக்கியம் உடையதாயிருக்கும். இது போவதும், வருவதுமாக மறுபடியும் இருக்காது. நாம் அங்கே இருப்போம் மற்றும் தூதர் சேனைகளின் அனைத்து உரிமைகளையும் மற்றும் இன்னும் உயர்வான உரிமைகளையும், அதிகாரங்களையும் உடையவர்களாக கர்த்தருடன் எப்பொழுதும் அமர்ந்திருப்போம்.

## சபை - இப்பொழுது ஆட்சிபுரிவது வேதவாக்கியங்களின்படி அல்ல.

### கே : 117:2 :: கேள்வி (1912 - Z ) - 2

சபையின் மகிமையடைந்த அங்கங்கள் எந்த காலத்திலிருந்தாவது தற்காலம் வரைக்கும் ஆளுகை புரிந்திருக்கிறார்கள் என்பது வேதவாக்கியங்களின்படி இருக்கிறதா?

**பதில்:** இல்லை. அவர்கள் எந்த காலத்திலும் ஆளுகை புரிந்திருக்கவில்லை. குறைந்த பட்சமாக, அவர்கள் ஆட்சிபுரிந்திருந்தால், நாம் இதைக் கண்டுபிடித்திருக்க முடியாது மற்றும் அவர்கள் இதுவரையிலும் குறைபாடுடன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். நாம் இந்த உலகத்தில் இதுவரை பார்த்திருக்கும் எல்லா ஆட்சிகளும் குறைபாடு கொண்டவைகளாகவே இருந்திருக்கின்றன. இருப்பினும், செய்ய முடிந்த அளவுக்கு பூமியின் இராஜ்யங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்; சூழ்நிலைகள் மற்றும் வரையறைகளின் கீழ் எப்படி செய்ய வேண்டுமென்று தெரிந்ததற்கு ஏற்ப அவர்கள் ஞானமாக செயல்படுகிறார்கள் என்று நாம் கூறுவோம். நாம் அவர்களை குறிப்பாகக் குற்றம் கண்டுபிடிப்பதில்லை.

உதாரணத்திற்கு, ருஷ்யாவின் சார் (CZAR) மன்னரை எடுத்துக்கொள்ளுங்கள், இந்த பரிதாபமான மனுஷனுக்கு, தான் செய்துகொண்டிருப்பதைக் காட்டிலும் சிறப்பாக செயல்படத் தெரியாது. ஆஸ்திரியா பேரரசர், பிரெஞ்சு ஜனாதிபதி, பிரிட்டனின் ஜார்ஜ் மன்னர், ஜெர்மனியின் வில்லியம் பேரரசர் போன்றவர்கள் விஷயத்திலும் இதுவே ஒருவேளை உண்மையாக இருக்கிறது. அவர்கள் தங்களுடைய ஜனங்கள் ஓரளவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று பார்க்கிறார்கள்; ஆனால் குறைபாடுகள் கொண்ட குடிமக்களுடனும், அவர்கள் குறைபாடுள்ளவர்களாக இருக்கிறார்கள் மற்றும் மேற்கொள்ள முற்றிலும் முடியாத அவ்விதமான நிலைமைகளால் சூழப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய ஆட்சி பூரணமாக இல்லை என்று அவர்களை நாம் குற்றப்படுத்துகிறதில்லை. அவர்கள் பூரணமான குடிமக்களை உடையவர்களாக இருந்தால், இந்த உலகத்தின் நிலைமை சந்தேகத்திற்கிடமின்றி சிறப்பாகவே இருந்திருக்கும்.

கிறிஸ்துவின் அரசாட்சி எந்த பார்வையிலும் கடந்த காலத்தில் ஆரம்பித்திருக்கவில்லை. கிறிஸ்து தம்முடைய ஆட்சியை சில காலத்திற்கு முன்பு துவக்கினார் என்றும், மற்றும் பூமியின் இராஜாவாக கிறிஸ்துவின் பிரதிநிதியாக ஆயிரம் வருஷங்களுக்கும் மேலாக போப் இருந்து வருகிறார் என்றும் நமது கத்தோலிக்க நண்பர்கள் உரிமை கோருகின்றனர். மற்றும் ஆட்சி செய்பவராக கிறிஸ்து தாமே இருக்கவில்லை, ஆனால் அவருடைய பதில் அதிகாரியாக (VICEGERENT - பிரதிநிதி) போப்பு ஆட்சி செய்பவராயிருக்கிறார். கிறிஸ்துவுக்குப் பதிலாக ஆட்சி செய்கிறவர் என்ற பதவியை அவர்கள் போப்புவிற்கு கொடுக்கிறார்கள்.

### கிறிஸ்துவின் இராஜ்யம் இன்னும் எதிர்காலத்தைச் சார்ந்தது.

நமது கத்தோலிக்க நண்பர்கள் ஒரு தவறான புரிந்துகொள்ளுதலில் இருக்கிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். அவர்கள் சரியான எண்ணத்தைப் பெறவில்லை. அப்போஸ்தலர் சிலரைப் பற்றி பேசுவது உங்களுக்கு நினைவிருக்கும். நீங்கள் பூமியில் ராஜாக்களைப் போல ஆளுகை செய்திருக்கிறீர்கள்; நீங்கள் மிகவும் செழுமையாக இருக்கிறீர்கள்.; உங்களுக்கு எந்தவிதமான உபத்திரவமோ, அல்லது துன்புறுத்தலோ கிடையாது. இவ்விதம் அவர்களை சிறிது கேலியாகப் பேசிய பிறகு, அவர் கூறுகிறார், "தேவனால் தான் நீங்கள் ஆளுகை செய்தீர்கள் என்று

நான் கூறுகிறேன், ஏனெனில் நீங்கள் ஆளுகை செய்திருந்தால், நாங்களும் ஆளுகை செய்திருப்போமே."

இது இன்னும் உண்மையாகவே இருக்கிறது என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். கிறிஸ்துவின் இராஜ்யம் துவங்கும்போது, அவருடைய சரீர அங்கங்கள் எல்லோரும் இதில் கொஞ்சம் பங்குகொள்ளும் விதமாக, இது முழுமையான ஆட்சியாக இருக்கப் போவதை நீங்கள் பார்ப்பீர்கள். நமது கர்த்தரின் இராஜ்யம் அதனுடைய ஆட்சியைத் துவக்கும்போது, உலக முழுமையின் நிலைமைகள் பெருமளவில் மாற்றம் அடையும் என்று நாங்கள் அனுமானிக்கிறோம். இன்று கிறிஸ்துவின் ஆட்சி துவங்குமானால், பரிசுத்தவான்கள் அவருடன் இருப்பார்கள், ஏனெனில் அவர் மாபெரும் நியாயாதிபதியாக இருப்பார், பரிசுத்தவான்கள் அவருக்குக் கீழ்ப்பட்ட நியாயாதிபதிகளாக இருப்பார்கள்; அவர் மாபெரும் இராஜாவாக இருப்பார், பரிசுத்தவான்கள் அவருக்குக் கீழ்ப்பட்ட இராஜாக்களாக இருப்பார்கள் - "ஆசாரியக்கூட்டம்", "தேவனுக்கு இராஜாக்களும் ஆசாரியர்களுமாக", கிறிஸ்துவுடன் ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

அவருடைய அரசாட்சி நீதியின் அரசாட்சியைத் துவக்கும், ஏனெனில் பாவம் உடனடியாக அடக்கப்படும் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. தேவனுடைய பரிசுத்த இராஜ்யத்தில் எதுவும் தீங்கு செய்யாது, அல்லது புண்படுத்தாது, அல்லது கேடு செய்யாது. (ஏசாயா 11:9). அவ்வாறு செய்வதற்கு எதுவும் அனுமதிக்கப்படாது. தீமையான ஆட்சியை உடனடியாக தடுக்கும் விதத்தில், அப்படிப்பட்ட தண்டனைகளை எவ்விதம் சுமத்துவது என்பதை மாபெரும் நியாயாதிபதி அறிவார். பிறகு பூமியில் குடியிருக்கிறவர்கள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்; உதாரணமாக யாரேனும் ஒருவர் தன்னுடைய அயலானை தீமையாகப் பேச விரும்பினால், அவர் <u>தீமையைப் பேசுவதற்கு முன்பாகவே</u>, வெறுமனே <u>அந்த எண்ணம்</u> காரணமாகவே, நாவு முடக்குவாதம் கொண்டு அசைக்க முடியாதபடி தண்டனை அவர்கள் மேல் வருவதாயிருந்தால், அவர் <u>தீமையை கண்டிப்பாக நினைக்கக்கூடாது</u> என்ற பாடத்தை அவர் கற்றுக்கொள்வார் என்று நீங்கள் அனுமானிக்கமாட்டீர்களா? அவர் வார்த்தையைப் பேசுவதற்கு முன்னதாகவே, அவருடைய நாவு முடக்கப்படும் என்பதால், அவர் தீமையை <u>பேசமாட்டார்.</u> அவர் பாடத்தைக் கற்றுக்கொள்வார் என்று வேதாகமம் கூறுகிறது. "உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது,, பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (ஏசாயா 26:9) இதைக் கற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு நீண்ட காலம் பிடிக்காது. தவறு செய்யாமலிருப்பது நல்லது என்று அவர்கள் கற்றுக்கொள்வதற்கு முன்பாக, பேரிடர்கள் பலதடவைகள் அவர்களை மேற்கொள்வதற்கான தேவை ஏதும் அவர்களுக்கு இராது,

இது ஒருவேளை இருதயத்தைப் பாதிக்காமலிருக்கும், ஆனால் இதை நல்லதைச் செய்யக் கற்றுக்கொள்ளவும், உலகத்தில் நீதியின் பாதிப்பை பார்க்கக்கூடியவர்களாக அவர்களை மாற்றுவிக்கும். இவ்விதமாக அந்த நிலைமையை நேசிப்பதற்கு, அல்லது வெறுப்பதற்கான வாய்ப்பை அவர்கள் பெறுவார்கள். அந்த நிலைமையை அவர்கள் நேசிப்பதற்குக் கற்றுக்கொண்டால், தேவனுக்குப் பிரியமானதும், ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான சரியான மனப்பாங்கை அவர்கள் பெறுவார்கள்; மற்றும் கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியின் இறுதியில், நித்திய ஜீவனுக்குரிய முழுமையான ஆசீர்வாதத்தை அடைவதற்கு தயாராக இருப்பார்கள்; ஆனால் தவறான காரியத்தைச் <u>செய்வதற்கு</u> அவர்கள் அனுமதிக்கப்படா விட்டாலும், அவர்கள் தங்களுக்கு முன்பாக அனைத்து அறிவையும், பின்னாக அனுபவங்களையும் உடையவர்களாய் இருந்தும், நீதியை நேசிக்கவும் அக்கிரமத்தை வெறுக்கவும் கற்றுக் கொள்ளமலிருந்தால், அவர்கள் திரும்பவும் குணப்படுவதற்கு எதுவும் இல்லாமல், இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவதற்கு தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள்.

## சபை - சரீரத்தில் அங்கங்களாக வைத்தல்.

### கே : 119:1 :: கேள்வி (1913 - Z) - 1

"தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே" தேவன் வைப்பது எதை அர்த்தப்படுத்துகிறது? - 1 கொரி. 12:18.

**பதில்:** தற்காலத்தில் கிறிஸ்துவின் சபை தகுதிகாண் பருவத்தில் (Probation) இருக்கிறது. போராடும் சபையின் அங்கங்களாக நாம் இருக்கிறோம் என்று சில சமயங்களில் நாம் சொல்லிக் கொள்கிறோம்; ஆனால் போராடும் சபையின் அங்கமாக இருப்பதினால், நாம் ஜெயங்கொள்ளுகிற சபையில் இருப்போம் என்று நிரூபிக்காது. "**மரணபரியந்தம்** உண்மையாயிருக்கிறவர்கள்" மட்டுமே ஜெயங்கொள்ளுகிற சபையில் இருப்பார்கள். சபையில் மிகவும் உயர்ந்த ஸ்தானத்திற்கு நியமித்திருந்த பரிசுத்த பவுல் அவர்கள், தான் ஆகாதவனாய் போகாதபடிக்கு அவர் பயப்பட்டார். "மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்று கூறுகிறார். (1கொரி.9:27.) பல்வேறு சிலாக்கியங்களும் வாய்ப்புகளும் மாம்சத்திலிருக்கும் போது நமக்கு அளிக்கப்படுகிறது மற்றும் இறுதியில் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதும், மகிமையில் நாம் பங்குபெறுவதும் இங்கே நம்முடைய உண்மைத்தன்மையைச் சார்ந்தே உள்ளது.

பல்வேறு அங்கங்களும் "அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது." என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (எபே. 2:21.) இந்த உருவகத்தை நாம் மிகவும் சொல்லர்த்தமாக உபயோகப்படுத்துவதில்லை, அல்லது நாம் குழப்பத்திற்குள்ளாவோம். ஆலயத்தில் உள்ள கற்கள் ஒரளவுக்கு ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கும். "சீரற்ற இடைவெளி பணி" (Random Range Work) அமைந்த கட்டிடத்தில் சிறு கற்களுக்கு இடங்களும், பெருங்கற்களுக்கு இடங்களும் இருக்கும். சில விஷயங்களைப் பொருத்தமட்டில். இது ஆலயத்தில் நாம் பெரிய அல்லது சிறிய கல்லாக இருப்பதைக் குறிப்பதாய் இருக்கிறது - திரைக்கு அப்பால் நாம் பெறக்கூடிய சிலாக்கியங்கள் அல்லது கனத்தைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

இனிவரும் பணியில் பெரும் பங்கு அடைவதற்காக, சோதனைகள் மற்றும் சுயத்தை வெறுத்தலும் பெரும் பங்கை அடைய தான் முயற்சி செய்துகொண்டு இருக்கிறேன், அதை மிகவும் அதிகமாகச் செய்ய முயற்சிக்கிறேன் என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். இது அவர் சுய-உயர்வு புகழ்ச்சியை விரும்பினார் என்றும், அல்லது அவர் **<u>பெருமை</u> அல்லது <u>தன்னல நாட்டத்தை</u>** உடையவராயிருந்தார் என்றும் நாம் அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது. மகிமையான சுபாவம் - நமது போதகரின் சாயல் - நாம் அடைவதற்கு தேவன் வைத்திருப்பதை நாம் அடைய வேண்டுமானால், நாம் அப்படி இருக்க மாட்டோம்.

## சபை - கனத்திற்கான சரியான அடிப்படை.

## கே : 119:2 :: கேள்வி (1915 Z) - 2

மத்.20:27ம் வசனம் கூறுகிறது, "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்." கர்த்தருடைய ஜனங்களில் முதன்மையாக இருப்பது சரியான விருப்பமாயிருக்குமா? மேலும் நாம் இங்கு புரியும் ஊழியத்தின் அளவை, அடிப்படையை முழுமையாகக் கொண்டு தான், பரலோக இராஜ்யத்தில் இடங்கள் ஒதுக்கப்படும் என்று நாங்கள் புரிந்து கொள்ளலாமா?

**பதில்:** கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு அவர்கள் பேரில் உள்ள குறிப்பிட்ட பெலவீனத்தைச் சுட்டிக்காட்டுகிறார் - பெரியவராயிருக்கும் ஆசை - மனுக்குலக் குடும்பத்தில் பொதுவாக இருக்கும் ஆசை - உயர்வடைய விரும்பும் ஆவி. புறஜாதிகளின் மத்தியில் சிலர் மேலாண்மையை நடப்பிப்பது, மற்றவர்களை இழிவான முறையில் ஊழியம் செய்ய வைப்பவர்களைச் சுட்டிக்காட்டும் சூழ்நிலைப் பொருத்தத்தை இது சொல்கிறது; ஆனால் இது இயேசுவின் சீஷர்களின் மத்தியில் இருந்திருக்கக்கூடிய விஷயமாக இல்லை. அவர்கள் வேறுவிதமான ஆவியினால் ஏவப்பட்டவர்களாக இருந்தனர், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்

களிடத்தில் அதிகாரம் செலுத்துகிற, மற்றவர்களை ஆளுகிற ஆவியுடையவர்களாக இருப்பதில்லை, ஆனால் மற்றவர்களுக்காக செயல்படும் விதத்திலும், மற்றவர்களுக்கு ஊழியம் புரிய நாடும் அன்பின் ஆவியாக இருக்கிறது, மற்றவர்களுக்கு ஊழியம் புரிவதில் தங்களுடைய சொந்த விருப்பத்தைப் பலியிட விரும்புகிற ஆவியாக இருக்கிறது.

இந்த அடிப்படையில், இந்த உரைப்பகுதியின் வார்த்தைகளை மேலும் எண்ணிப் பார்ப்போம். கர்த்தருடைய ஜனங்களுக்கு மத்தியில் சிலர் முதன்மையானவர்களாக இருப்பார்கள். தொழில் நிறுவனம் அல்லது வகுப்பு, அல்லது சங்கம் எதிலும் ஜனங்கள் திறமைகளில் சமமாக இருக்கிறதில்லை - சிலர் பிறப்பில் அதிக திறமைகள் உடையவர்களாயும், சிலர் குறைவாகவும் இருப்பார்கள். யாராவது ஒருவர் முதன்மையாக இருக்க வேண்டியிருக்கும். முற்றிலும் சமத்தன்மைக்கு சாத்தியமே இல்லை..

சபையை வழிநடத்துவதற்கு தேவனுடைய பரிசுத்தவான்களில் சிலர் இருப்பதும் கூட பொருத்தமானதாக இருக்கும், அப்போது, யார் முதன்மையாக இருப்பதற்குரிய தர நிலை ஏதுவாயிருக்கும்? மற்றவர்களை வாயால் உருட்டி மிரட்டுகிறவராக இருப்பவரா? இல்லை, இது தர நிலை அல்ல. வெறுமனே சில திறமைகள் காரணமாக மேலாதிக்கம் செலுத்துபவராக, அல்லது மேலான படிப்பு அல்லது செல்வம் - இது போன்ற விஷயம் காரணமாக, ஆதிக்க மனப்பான்மையின் செல்வாக்கு அல்லது இனிமையான வார்த்தைகளுடைய ஒருவராக இருக்க வேண்டுமா? இல்லை. இது தர நிலையாக இருக்க முடியாது. சபையின் மத்தியில் முதன்மையானவர்களாக அங்கீகரிக்கப்படுகிறவர்களுக்காக தர நிலை எதுவாயிருக்கும்?

## சொந்த மகிமைக்காக பேராவல் கொள்ளாமல் இருத்தல்.

நாங்கள் பதிலளிக்கிறோம், ஊழியத்தின் ஆவியை மிக அதிகமாக உடையவர்களை நாம் கவனிக்க வேண்டும். பெருமளவில் ஊழியம் செய்கிறவரும், வகுப்புக்கு பெரிதான ஆவியின் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறவரும் - மிகவும் உண்மையாக ஊழியம் செய்ய முயற்சிக்கிறவரையே நீங்கள் உங்களுக்கு முதன்மையானவராக இருக்க எண்ண வேண்டும். நம்முடைய கர்த்தரின் வார்த்தைகள் எல்லா அப்போஸ்தலர்களைப் பார்த்து உரைக்கப் பட்டதாகவும், வெறுமனே தனிப்பட்ட ஒருவருக்காகச் சொல்லப்படாததாக இருந்தாலும், அவைகள் தனி நபருக்கும் கூட உரியதாகவே இருக்கிறது. நம்மில் எவருக்காவது சில விசேஷித்த செயலாற்றலில் ஊழியம் புரியும் பேராவல் இருக்குமானால், உலக ஜனங்களைப் போல நடக்கிறவர்களாக நாம் இருக்கக்கூடாது என்ற எண்ணம் நம் ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் வர வேண்டும். உலகத்தார் போன்று இரண்டு எதிர்மறையான பாதையை எடுத்துக்கொண்டு, மனுஷருக்கான எந்த கனத்தையும் முழுவதுமாக விட்டுவிட வேண்டும். தேவனுக்கு எது சிறந்தது என்று தோன்றுகிறதோ, அந்த விஷயத்தை செய்வதற்கு அவரிடமே நாம் விட்டுவிட வேண்டும், மற்றும் சகோதரர்களுக்கு வெறுமனே ஊழியக்காரனாக இருப்பதில் திருப்தி அடைய வேண்டும். எந்த முறையிலும் நீங்கள் எப்படி ஊழியம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை கர்த்தர் பார்க்கட்டும்.

இலட்சியம் இல்லாத நபர் ஒன்றுக்கும் பிரயோஜனம் அல்ல. நாம் விதைக்கிறவர்களாக அல்லது உழுகிறவர்களாக அல்லது ஏதேனும் செய்கிறவர்களாக இருந்தால், நாம் இலட்சியம் உடையவர்களாயிருக்கும் தேவை ஏற்படுகிறது. நாம் எதையும் திருப்திகரமான முறையில் செய்வதற்கு நமக்கு இலட்சியம் தூண்டுதலாக இருக்கும் தேவை ஏற்படுகிறது. ஆகவே சத்திய ஊழியம் செய்யும் வாய்ப்பை உடையவர்களாக நாம் இருந்தால், இதை முடிந்தவரை மிகவும் திறமையான முறையில் ஊழியம் செய்ய நாட வேண்டும். இல்லையெனில் நாம் கர்த்தருடைய திறமை மிக்க ஊழியர்களாக இருக்க முடியாது.

ஆனால் சொந்த மகிமைக்கான இலட்சியத்தைப் பொருத்த வரையில், முதன்மையாளராகும் எந்த ஆவலையும் நாம் தூரமாய் ஒதுக்கிவிட வேண்டியவர்களா யிருக்கிறோம். நமக்குத் தெரிந்த வரையில், **கர்த்தருக்கு** சிறப்புடன் ஊழியம் செய்ய

நாடுகிறவர்களாய் இருக்க வேண்டும். சில விஷயங்களில் என்னைக் காட்டிலும் மேலான விதத்தில் நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடிகிறவராக இருந்தால், மற்றும் உங்களிடமிருந்து சிலவற்றை நான் கற்றுக்கொள்ள முடியுமானால், அது மிகவும் நல்லது. மேலும் இதற்குப் பிறகு என்னிடமிருந்து நீங்கள் ஏதாகிலும் கற்றுக்கொள்ள முடியுமானால், அப்படியே நல்லது. உண்மை தான், அதிலும் போற்றத்தக்க விதமாக கர்த்தருடைய குறிக்கோளை மேற்கொண்டு நிறைவேற்றி முடிக்கிற எல்லாவற்றையும் செய்வதற்கான ஒரு மாதிரியை வடிவமைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் மற்றும் இந்த ஊழியம் அன்பினால் தூண்டப்படுகிறது. அன்பினால் தூண்டப்படாத எந்த ஊழியமும் கர்த்தருடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பதில்லை.

## பிரதான இன்றியமையாத தேவையாக பணிவு.

கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான் என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். இது மிகவும் உயர்வான ஊழியம். இன்றைய பேர்கிறிஸ்தவ அமைப்புகளில் புரிந்துகொள்ளப்படுகிற விதமாக, உயர்வான பதவி நிலையாக, அப்போஸ்தலர்களின் காலத்தில் அந்த பதவி இருந்ததில்லை. ஆடுகளின் நலன்களைப் பாதுகாக்கக்கூடியவராக, சபையின் பதவிப்பெயர் இல்லாத ஊழியக்காரராக, கண்காணி (BISHOP) அக்காலத்தில் பணிபுரிகிறவராக இருந்தார். சபையின் ஒவ்வொரு ஊழியக்காரரும் திறமையுள்ளவராக இருக்க நாட வேண்டும். அவரால் முடிந்த அளவுக்கு அன்பாயிருக்கிறவராகவும், தேவனுடைய மந்தையின் காப்பாளராக இருக்க வேண்டும். இந்த மூத்த சகோதரர்கள், சபைக்கூட்டத்தின் பிரசங்கிமார்களின் மத்தியில், வெவ்வேறு வகையில் இயற்கையான திறமையுள்ளவர்களாக இருப்பார்கள். கர்த்தர், சகோதரர்கள் மற்றும் சத்தியம் தொடர்பான ஊழியத்தில் தங்களுடைய திறமைகளையும், தங்களுடைய வாய்ப்புகளையும் ஒவ்வொருவரும் பயன்படுத்த நாட வேண்டும்.

நமது போதகர் இங்கே நியமித்திருக்கிற தர நிலையை இன்றைய கர்த்தருடைய ஜனங்களில் எவரும் மறந்துள்ளனர் என்பது பரிதாபம் ஆகும்.. கர்த்தருடைய ஜனங்களாகிய சபையாரின் வாக்கினால் இந்த மூப்பர் பதவிக்கு நியமனமானதை உணருவதற்குப் பதிலாக, மூப்பர் பதவி உரிமையாக தங்களுடையதாயிருக்கிறது என்று இவர்கள் நினைப்பதாகத் தோன்றுகிறது. இது **சபையின் குரலாக** இருக்கிறது. ஒவ்வொருவருடைய மனப்பாங்கும் சபையின், சபையாரின் குரலை உள்ளடக்கமாக ஏற்றுக்கொள்ள விருப்பம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர் மற்றவர்களை விட அதிகமாக வாக்கு பெற்று அந்த சபையாரின் அங்கமானால், ஒன்று அல்லது அதிகமான சதவீத பெரும்பான்மையாக இருந்தாலும், அவர் **கட்டுப்பாடு செய்யும் பெரும்பான்மையை** அடையாளப்படுத்தும் வழிமுறைகளுக்கு இவ்விதம் கீழ்ப்படிபவராக இருக்கிறார். இதைச் செய்த பிறகு, அவர் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அல்லது மற்ற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர் இந்த மனப்பான்மையிலேயே தொடருவதற்கு நாட வேண்டும்.

சரியான தகுதிகளை உடையவராக இல்லாத ஒரு சகோதரனை மூப்பராகத் தேர்ந்தெடுக்கும் தவற்றை சபையார் அடிக்கடி செய்கின்றனர். இது சில சமயங்களில் சபை வகுப்பாரில் சிலருக்கு ஏற்படும் அதிருப்தியைக் குறிப்பதாய் இருக்கிறது மற்றும் இது சிலர் பிரிந்து போய், வேறொரு வகுப்பைத் தோற்றுவிப்பதற்கு வழிவகுக்கின்றது. இது ஒரு ஞானமான போக்கு இல்லை என்று நாங்கள் நினைக்கிறோம். வகுப்பார் தவறு செய்தால், கர்த்தர் இதை நல்லதாகச் செய்ய, அதை ஒதுக்கித் தள்ளிவிட வல்லவராயிருக்கிறார்; ஆகவே இவ்விதம் பின்வாங்குபவர்கள், அவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கக்கூடிய சில அனுபவங்களை இழக்கிறார்கள்.

இருப்பினும், வகுப்பார் தவறு செய்திருக்கிறார்கள் என்று நாம் எப்பொழுதும் நிச்சயமாக இருப்பதில்லை. கர்த்தர் இந்த விஷயத்தில் சில பாடங்களை வைத்திருக்கிறார் என்பதை நாம் எப்படி அறிய முடியும்? எவர் தேர்வு செய்யப்படக்கூடியவராக இருந்தாலும், கர்த்தருடைய ஆசீர்வாதத்தை நாம் வேண்டியிருக்கிறவர்களாய் இருந்தால், அந்த தேர்வுக்கு நாம் கீழ்ப்படிய

வேண்டும். தேர்வு செய்யப்படாத ஒருவர் சரியான முறையில் சத்தியத்தைப் பிரசங்கிக்கிற திறமை கொண்டவராகவும் மற்றும் அவர் பிரயோஜனமாக உபயோகப்படும் விதமாக பல இடங்களை அறிகிறவராகவும், இருந்தால், எந்த விதமான வாய்ப்புகள் அவருக்கு வருகிறதாய் இருந்தால், அந்த சகோதரன் அவைகளைப் பிரயோஜனப்படுத்திகொள்ள வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். எனினும், அவர் வகுப்பை விட்டு வெளியேறக்கூடாது. அவர் கைக்கு எப்படிப்பட்ட ஊழியம் வந்தாலும் அவர் செயலாற்றக்கூடியவராக இருக்க வேண்டும். அவர் ஒருவேளை தன்னுடைய நேரத்தையும் திறமையையும் சபை விரிவாக்க ஊழியத்திற்கு உபயோகப்படுத்த முடியும் - அவர் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால், இந்த திக்கில் செல்வதைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் உணர்வுடன் இருக்கக்கூடாது. அவர் வெளியே சென்று, ஊழியத்திற்கான வாய்ப்புகளைக் கண்டுபிடிக்க வேண்டும். மூப்பர்களில் மாற்றம் ஏற்படுவது, தேர்வு செய்யப்படாத, அல்லது மறுபடியும் தேர்வு செய்யப்படாத சகோதரனுக்கு வேறொரு களத்தைச் சுட்டிக்காட்டுகிறார் என்று அர்த்தமாகிறது. தேவனுடைய கிருபைகள் அந்த சகோதரனுக்கு விரிவான செல்வாக்கையும் பிரயோஜனத்தையும் வழிகாட்டுவதாக இருக்கலாம்.

உலக மனுஷர்கள் நம்மைப் பற்றி என்ன சொல்கிறார்கள் அல்லது நினைக்கிறார்கள் என்பதினால் நாம் பாதிப்படையக்கூடாது. இது பொருட்டல்ல, மற்றும் சபை என்ன நினைக்கிறது என்பது பொருட்டல்ல. நாம் கர்த்தரை மகிழ்விக்க நாட வேண்டும். நாம் நம்மைப் பற்றி மிகவும் உயர்வாக மதிப்புக் கொள்ளக்கூடாது. மாறாக, நம்முடைய மதிப்பீட்டில் மற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் கனிகளின் வளர்ச்சியின் அளவுக்குத் தக்கவாறு, பரலோக இராஜ்யத்தில் பதவிகள் பரிசளிக்கப்படும் என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம்; இதற்கு அர்த்தம் என்னவெனில், கர்த்தருடைய ஊழியத்தில் பக்திவைராக்கியத்திற்கு அன்பு தான் வழிவகுக்கிறது.

## சபை - அபிஷேகம் பண்ணப்படுவது எப்போது?

## கே : 121:1 :: கேள்வி (1915) - 1

சபையாகிய நாம் நம்முடைய முழு பங்கை, அபிஷேகத்தில் உடனடியாக, அல்லது படிப்படியாகப் பெறுவோமா?

**பதில்:** ‘ஆவியில் அபிஷேகம் பண்ணப்படுதல்’ என்ற சொற்றொடர், “ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல்” என்ற சொற்றொடரிலிருந்து சிறிது வித்தியாசப்படுகிறது. “ஜெநிப்பிக்கப்படுதல்” என்ற வார்த்தை, உண்மையான ஒரு வேலையைத் தொடர்புபடுத்தும் கருத்தை குறிப்பதாக இருக்கிறது. “அபிஷேகம் பண்ணப்படுதல்” என்பது, கூடுதலாக படிப்படையான வேலையுடன் தொடர்புடைய கருத்தைக் குறிப்பதாக உள்ளது. கிறிஸ்துவின் அங்கத்தினர்களாக நாம் அங்கீகரிக்கப்படும் நேரத்திலிருந்து, மற்றும் இராஜரீக ஆசாரியத்துவத்தின் மகிமையில் இடம் பெற்றிருந்து, கர்த்தருடைய குடும்பத்தில் நாம் பிரவேசித்ததிலிருந்து, நாம் அபிஷேகம் பண்ணப்படும் செயல்பாட்டில் இருக்கிறோம். சிலர் தங்களுடைய முழுமையான அபிஷேகம் பண்ணப்படுதலை பெறுவதில் தவறியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருப்பவர்கள், முழுமையாக அபிஷேகம் பண்ணப்படுவதில் தவறுகிறார்கள், ஆகவே இராஜரீக ஆசாரிய வகுப்பாராக இருப்பதற்கு தவறி விடுகிறார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் திரள்கூட்டத்தாராகிறார்கள். ஆகவே “ஆவியில் அபிஷேகம் பண்ணப்படுதல்” என்ற சொற்றொடர், நாம் கிருபையிலும், அறிவிலும் வளரும்போது வெளிப்படக்கூடிய சாந்த குணம் மற்றும் கனிவு ததும்பிய வளர்ச்சியை கண்டிப்பாக உள்ளடக்கியதாய் இருக்க வேண்டும் மற்றும் இது வெறுமனே தேவனுடைய குடும்பத்திற்குள் வருவதற்கு அபிஷேகம் பண்ணப்பட்ட (ஜெநிப்பிக்கப்பட்ட) நேரமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நாங்கள் நினைக்கிறோம்.

## சபை - பாத அங்கங்கள் ஒவ்வொருவரும் மறுரூபமாகுதல்.

### கே : 122:1 :: கேள்வி (1915) - 1

கிறிஸ்துவின் பாத அங்கங்கள் அனைவரும் ஒரே சமயத்தில் மறுரூபமாவார்கள் என்று காண்பிக்கக்கூடிய வேதவாக்கியங்கள் எதுவும் இருக்கிறதா?

**பதில்:** இதற்கு மாறாக நாங்கள் நம்புகிறோம் - - பாத அங்கங்கள் அனைவரும் ஒரே சமயத்தில் மறுரூபமாவதற்குப் பதிலாக, இது படிப்படியாக நடக்கும் பணி ஆகும். ஒருவர் இன்று இரவு மறுரூபமாகலாம், வேறு ஒருவர் நாளைக்கு - என்பது போன்று இருக்கலாம்; இருப்பினும், இவையெல்லாம் இந்த யுகத்தின் இறுதியில், இவையெல்லாம் அறுவடை காலத்தில் நடக்கிறது என்ற பார்வையில் அவர்களுடைய மறுரூபமாகுதல் எல்லாம் ஒரே சமயத்தில் நடக்கிறது என்று சொல்லலாம். சிலருடைய மறுரூபமாகுதல் அறுவடை காலப்பகுதியின் இறுதியில் இருக்கும். தனிப்பட்டவரின் விஷயம் போல, இது ஒரு நபருக்குப் பிறகு, அடுத்த நபர் என்று இருக்கும். அப்போஸ்தலர் கூறுகிறார், “நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆகிலும் - - நாமெல்லாரும் மறுரூபமாகுவோம். ஏனெனில் “மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது.” நம்முடைய மறுரூபமாகுதல், “ஓரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே இருக்கும்.” இது தனிப்பட்டவருக்கு படிப்படியான மறுரூபமாகுதலாக இருப்பதில்லை, ஆனால் உடனடியான மறுரூபமாகுதலாக இருக்கும். கடந்த கால பரிசுத்தவான்கள் செய்திருப்பது போல, நித்திரையடைந்தவர்களாக இருந்ததற்குப் பதிலாக, மரிப்பதற்கான நேரம் நமக்கு வரும்போது, நம்முடையது உடனடியாக நடக்கக்கூடிய மறுரூபமாயிருக்கும். சங்கீதக்காரன் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறான், “நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் சொல்லியிருந்தேன், ஆனால் நீங்கள் மனுஷரைப் போல செத்துப் போவீர்கள்.” பொதுவாக மனுஷருக்கு வரக்கூடிய மாதிரியே, இந்த மரணமடையும் நடைமுறை சபையினர் எல்லாருக்கும் வருவதாயிருக்கிறது என்பதைக் குறிப்பதாக இந்த வேதவாக்கியத்தை நாம் புரிந்துகொள்ளுகிறோம். நாம் புது சிருஷ்டிகளாக இருக்கிறோம். ஆகவே “மனுஷரைப் போல நாம் செத்துப் போவோம்” என்று சொற்றொடர் உள்ளது. மனுஷர் சாகிறது போல நாமும் அப்படியே சாவோம். மனுஷர்கள் பொதுவாக கொத்து கொத்தாக சாகிறதில்லை; ஆகவே நம்மில் அநேகர் ஒரே சமயத்தில் செத்தால், அது புதுமையாக இருப்பதாக நாம் நினைப்போம். நம்முடைய மரணத்திற்கும் மற்ற மனுஷருடைய மரணத்திற்கும் இடையில் வித்தியாசம் எதையும் உலகம் உணராது.

## சபை - பிரதான ஆசாரியனால் செலுத்தப்படும் பாவ நிவாரண பலி.

### கே : 122:2 :: கேள்வி (1915) - 2

எந்த பாவங்களுக்காக சபை பாடநுபவிக்கும்?

**பதில்:** சபையின் அங்கங்கள் சரியான முறையில் அறிக்கையிடாமலும், மற்றும் சரியான முறையில் திருத்திக்கொள்ளாமலும் இருக்கிற தங்களுடைய மாம்சீக பாவங்களுக்காக பாடு அனுபவிப்பார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால், நம்மை நாமே திருத்திக் கொண்டு, தம்மையே தண்டிப்பவர்களாயிருந்தால், நாம் கர்த்தரால் நியாயந்தீர்க்கப்படோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த விஷயங்களை முழுமையாக நாமே கவனித்து சரி செய்து கொண்டால், கர்த்தரால் நாம் சிட்சிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படாது. அவர் நம்முடன் செயல்தொடர்பு கொள்வதற்கான அவசியத்தைக் காணும்போது, உலகத்தாருடன் நாம் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாகாதபடிக்கு இருக்க வேண்டியவர்களாகிறோம்.

உலகம் முழுவதும் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளான நிலைமையில் இருக்கிறது. தேவன் நித்திய ஜீவனை ஆவியின் தளத்திற்கு நீதிமான்களாக்கப்படுவதற்காக சிலரை தேர்ந்தெடுத்துக் கொண்டு இருக்கிறார். நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், தேவன் நம்மை சிட்சிக்க

வேண்டிய அவசியம் இருக்காது, மாறாக நம்மை ஊக்குவித்து, நமக்கு உதவிபுரிவார். நாம் சோதனைகளையும், கஷ்டங்களையும் பெறமாட்டோம் என்று இதற்கு அர்த்தங் கொள்ளக்கூடாது; நாம் தவிர்த்திருக்கக்கூடியதும், நாம் அதற்கு சிறிதளவு காரணமாயிருக்கக் கூடியதுமான நம்முடைய மாம்சீக பெலவீனங்களுக்காக, நம்மை நாமே தண்டித்துத் திருத்திக்கொண்டால், நம்முடைய பாவங்களுக்காக கர்த்தரால் நாம் சிட்சிக்கப்படமாட்டோம் என்பதை இது அர்த்தப்படுத்துகிறது.

புதிய சிருஷ்டி வேண்டுமென்றே பாவம் செய்யும் என்று நாம் அனுமானிக்கக்கூடாது. அவர் அவ்விதம் பாவம் செய்திருந்தால், அவர் புது சிருஷ்டியாக இனிமேல் இருப்பதில்லை. கழுவப்பட்ட பன்றி போல, அவர் சேற்றில் புரளுவதற்கு சென்றிருப்பார். அவர் தவிர்த்திருக்கக்கூடியதும், அவர் திருத்திக்கொள்ளத் தவறியதுமான அந்த மாம்சீக பாவங்கள் தான், புது சிருஷ்டி பாடனுபவிக்கக்கூடிய பாவங்களாக இருக்கின்றன. இந்த பாடுகள் அவருடைய கடமைகளின் நுட்பமாகக் கிரகிக்கும் தன்மையை அவருக்கு அளிக்கும்; அவருடைய நன்மைக்காக அவைகள் ஒழுங்குபடுத்தக்கூடியவைகளாக இருக்கின்றன.

ஆனால் கேள்வி கேட்டவருடைய கருத்து இதுவாக இருக்கவில்லை. “பாவ நிவாரண பலியுடன் சபை செய்வதற்கு என்ன இருக்கிறது?” என்பதை அவர் அர்த்தப்படுத்தியிருக்கலாம். சபை என்ற முறையில், பாவ - நிவாரண பலியுடன் சபை செய்வதற்கு ஒன்றும் இல்லை. இந்த விஷயம் முழுமைக்கும் பொறுப்பாக இருக்கிறவர் கர்த்தர். இயேசுவே. நிழலில், இந்த பலியை செலுத்தியவர்கள் ஆசாரியர்கள் அல்ல, பிரதான ஆசாரியனே. ஆகவே கர்த்தர் இயேசு தாமே பலியை செலுத்தியவராய் இருந்தார். அவர் நம்மை அவருடைய அங்கங்களாக பலி செலுத்தினார். ஆனால் இதை நம்முடைய விருப்பங்களுக்கு மாறாக செய்யவில்லை. “கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகள், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளில்” நாம் இவ்விதம் பங்கு பெறுவதற்காக, அவர் தம்முடைய பங்குகளாக நம்மை பலியிட்டார் என்பதில் நாம் விருப்பம் கொள்கிறோம். அவருடைய பலியின் புண்ணியம் மட்டுமே நம்முடைய பலிக்கு மேன்மையை அளிக்கிறது.

ஆகவே நமது கர்த்தர், மாபெரும் பிரதான ஆசாரியரின் கரங்களில் பொறுப்பு முழுவதும் உள்ளது. உலகத்தாருடைய பாவ நிவாரண பலியில், **அவருடைய** அங்கங்களாக, நாம் அவருடன் பங்கு கொள்கிறோம். **அவருடைய** பாடுகளாகக் கணக்கிடப்படுகிற பாடுகளில் நாம் பங்கு கொள்கிறோம். நம்முடைய சொந்த பாவங்களுக்காக, அல்லது மற்றவர்களுடைய பாவங்களுக்காக நீங்களும் நானும் நம்முடைய பாடுகளினால் பாவங்களுக்காக நிவிர்த்தி செய்ய முடியாது.

## சபை - நம்மில் எல்லாமுமாக கிறிஸ்து.

### கே : 123:1 :: கேள்வி (1915) - 1

”அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்.” (1கொரி. 1:30) கிறிஸ்து எப்படி நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்?

**பதில்:** சபைக்காக இந்த எல்லா விஷயங்களையும் உடையவராக கிறிஸ்துவை தேவன் உருவாக்கினார், அதாவது, இந்த பல்வேறு விஷயங்கள் எல்லாவற்றையும் இயேசுவின் மூலம் சபை பெற வேண்டியிருக்கிறது. இந்த விஷயங்களில் நீங்கள் எதையும் நீங்களாகவே அடைவதற்கு இயலாது. நான் அவைகளை என் மூலம் அடைய முடியாது. உண்மையில், எவருக்கும் முடியாது. ஆகவே இந்த எல்லா நற்பண்புகளும், ஆசீர்வாதங்களும் கர்த்தராகிய இயேசு மூலமாக நமக்கு வருவதற்கான தேவனுடைய ஏற்பாடாக இது இருக்கிறது.

முதலாவது, கிறிஸ்து நமக்காக ஞானமானார். நாம் தேவனிடம் வருவதற்குத் தேவையான அறிவை அவர் நமக்குக் கொடுக்கிறார். இது முதலாவது படியாகும். "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான் 14:6.) நீங்கள் இன்னும் தேவனுடைய பிள்ளையாக மாறவில்லை, ஆனால் நீங்கள் பிதாவிடம் வருவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஞானம் உங்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே இயேசு நமக்காக ஞானமானார்; மேலும் அவர் எல்லா வழியிலும் நம்முடைய ஞானமாகத் தொடருகிறார்.

பிறகு கிறிஸ்து "நமக்கு நீதியுமானார்" - நீதிமானாக்கப்படுதல். அவர் நமக்காக முதலில் ஞானமான போது, நாம் முழுவதும் நீதிமான்களாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஞானம் நமக்குக் கற்றுக்கொடுத்த விதிமுறைகளை நாம் ஏற்றுக்கொண்ட போது, நாம் நீதிமான்களாக்கப்பட்டோம். மற்றும் அதன்படியே நம்முடைய அர்ப்பணிப்பைச் செய்தோம். அப்பொழுது கிறிஸ்து நம்முடைய நீதியானார். எப்படி? அவருடைய பலியின் புண்ணியத்தை நம் மேல் சுமத்தியதால்; இது சட்டப்பூர்வமாக நம்மை நீதிமான்களாக்கியது. நமக்கு எவ்வளவு புண்ணியம் தேவைப்படும்? ஒருவர் பூரணத்தில் எவ்வளவு குறைவுள்ளவராயிருக்கிறாரோ, அந்த அளவு ஒவ்வொருவருக்கும் தேவைப்படும். நாம் அனைவரும் பூரணத்தில் கொஞ்சம் குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். சிலர் அதிகமாகவும், சிலர் கொஞ்சமாகவும் குறைவுள்ளவர்களாக இருப்பார்கள். எவரும் நீதியுள்ளவராக - பூரணமுள்ளவராக இருப்பதில்லை.

பூரணத்தின் தர நிலையை நூறு சதவீதமாக வைக்கலாம். சிலர் 50 சதவீத நிலையை அடைவார்கள். (மனுஷன் அல்லது மனுஷியின் தார்மீக நற்பண்பில் பாதியளவு). ஒருவேளை சிலர் 25 சதவீதம் மட்டுமே உடையவர்களாயிருப்பார்கள். (ஒரு மனுஷன் அல்லது மனுஷியின் கால் பங்கு அளவு). ஒரு மனுஷன் அல்லது மனுஷியின் கால் பங்கு அளவு எதை அர்த்தப்படுத்துகிறது? அவர்கள் முக்கால் பங்கு அளவுக்கு சீர்கேடு அடைந்தவர்களாய், விழுந்துபோனவர்களாக இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்டவர் ஒரு பரிபூரண மனுஷனாவதற்குத் தேவைப்படுவதில் வெறும் கால் பங்கு மட்டுமே உடையவராயிருக்கிறார். ஒரு சராசரி மனுஷன் 25 சதவீத குறியீட்டிற்கு மேலாக, அல்லது ஒரு இயல்பான மனுஷன் கால் பங்கு அளவுக்கு அடையமாட்டான் என்று நான் நம்புகிறேன். இது விகிதம் சம்பந்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன். நான் எந்த ஒரு தனிப்பட்டவரையும் தீர்ப்பளிக்கிறதில்லை. இது குறித்தான விஷயத்தில் உங்கள் சொந்த மதிப்பீட்டை நீங்கள் நிதானித்து அறிந்து கொள்ளுங்கள்.

இப்போது, பூரண மனுஷனுடைய அளவில் கால் பங்கு உடைய ஒரு நபர் முக்கால் பங்கு குறைவுபடுகிறார். மற்றும் அவரை நீதிமானாக்குவதற்கு இயேசு அவர் மீது முக்கால் பங்கு புண்ணியத்தை சுமத்துகிறார் என்று கருதப்படுகிறது; 'நீதிமானாக்கப்படுதல்' என்ற வார்த்தையின் அர்த்தம், **சரி செய்தல், பூரணமாக்குதல்** ஆகும். உதாரணமாக, உங்களுக்கு ஒரு டாலர் தேவைப்படுகிறது மற்றும் இருபத்து ஐந்து செண்ட்கள் (cents) மட்டும் வைத்திருக்கிறீர்கள் என்றால், வேறு ஒருவர் இதை சரி செய்வதற்கு எழுபத்து ஐந்து செண்ட்கள் தேவைப்படுகிறது. எடை தொடர்பானவற்றிலும் இதே மாதிரி தான் உள்ளது. நீங்கள் வெறும் நான்கு அவுன்சுகள் மட்டும் வைத்திருக்கிறீர்கள் மற்றும் ஒரு பவுண்டு உங்களுக்குத் தேவைப்பட்டால், வேறு ஒருவர் இதை சரி செய்வதற்கு பன்னிரெண்டு அவுன்சுகள் தேவைப்படும். ஆகவே நீதிமானாக்கப்படுதல் விஷயத்தில், நூறு சதவீதம் என்பது தர நிலை ஆகும். நீங்கள் நற்பண்பு மற்றும் உடல் ஆரோக்கிய நிலையில் 25 சதவீதம் மட்டும் உடையவராயிருந்தால், உங்கள் மேல் 75 சதவீதம் புண்ணியம் சுமத்தப்பட வேண்டிய தேவை உங்களுக்கு உள்ளது. நீங்கள் 50 சதவீதம் உடையவராயிருந்தால், கர்த்தர் மீதமுள்ள 50 சதவீதத்தை சரிபண்ணுவார். ஒரு நபர் வெறும் பத்து சதவீத நற்பண்பு மட்டும் உடையவரானால், கர்த்தர் மீதமுள்ள 90 சதவீதத்தை சரிபண்ண கர்த்தர் உத்தேசிப்பார். ஆகவே நீங்கள் இயற்கையாகவே மேலானவராய் இருந்தால், கர்த்தர் உங்களுக்குக் குறைவாகச் செய்வார். இந்த விகிதம் உங்களுக்கு விசித்திரமாகத் தோன்றும், ஆனால் இது தான் உண்மை நிலையாகும். உங்களுக்குக் குறைவாகச் செய்யும் <u>தேவை</u> அவருக்கு உள்ளது. உங்களை சரிபண்ணுவதற்கு நீதிமானாக்கப்படுதலின் விகிதம் இதுவாக

இருக்கிறது. நீதியாயிருப்பதற்கு மேல் எவருக்கும் தேவை ஏற்படாது, நீதியாயிருப்பது மட்டும் போதும்.

கிறிஸ்து நமது போதகராயிருக்கிறார் என்ற பார்வையில், அவர் நமக்கு பரிசுத்தமானார். நாம் கிறிஸ்துவின் பாடசாலையில் மாணவர்களாக நுழைகிறோம் மற்றும் நமக்கு பரிசுத்தமாகுதல் தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவியை நமக்கு அளித்து, நம்மை தேவனுடைய பிள்ளைகளாகப் பிரித்தெடுத்து, நமது பரலோக பிதாவுடன் உடன்படிக்கையின் ஐக்கியத்துக்குள்ளாக நம்மைக் கொண்டுவரும் பார்வையில், கிறிஸ்து நம்மை பரிசுத்தமாக்குவது மட்டுமல்லாமல், “உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.” (யோவான் 17:17.) என்று அவர் சபைக்காக ஜெபம்பண்ணிய விதமாக, அவர் சத்தியத்தில் நம்மை போதித்து, நம்மை அதிகதிகமாக முழுவதும் பிரித்தெடுக்கப்பட்டவர்களாக நம்மை உருவாக்கி, அவர் நம்முடைய பரிசுத்தராகவும், நம்முடைய போதகராகவும் இறுதிவரையிலும் தொடர்ந்து இருக்கிறார். நமது கர்த்தர் கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபைக்கு சத்தியத்தைப் பிரயோகப்படுத்துகிறவராக இருக்கிறார். சத்தியத்தை நமக்குப் போதிப்பது மற்றும் நீதியின் வழியில் நம்மை வழிநடத்துவதுமான இந்த பிரயோகப்படுத்துதல் - பரிசுத்தமாக்குதலின் அவருடைய வழியாக இருக்கிறது.

பரிசுத்தம் பண்ணுகிறவர் பிதா என்று கூறலாம். இது அவ்விதமாகவும் இருக்கிறது. நீதிமானாக்குகிறவரும், நியாயப்பிரமாணத்துக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்டவர்களாகச் செய்கிறவருமாக பிதா இருக்கிறார் என்று சரிசமமாகக் கூறலாம்., ஆனால் இவை எல்லாவற்றையும் அவர் குமாரன் மூலமாக செய்கிறார். பிதா ஞானத்தை அளிக்கிறார், ஆனால் குமாரன் மூலமாகவே செய்கிறார் என்பதும், அதைப் போன்றே உண்மையாகும். தேவன் குமாரனை எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாக நியமித்து அவரை கனப்படுத்தியிருக்கிறார்.

மீட்பைப் பொருத்தும் அப்படியே உள்ளது. மீட்பை நம்மிடம் கொண்டுவரக்கூடிய மாபெரும் உயிர்த்தெழுதலின் “மறுரூபமாக” மீட்பு உள்ளது மற்றும் நம்மை மீட்கிறவராக இயேசு இருக்கிறார். உங்களுக்கு நினைவு இருக்கும், “பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்” (யோவான் 5:28.) என்று கிறிஸ்து அறிவித்தபடி, மரண நித்திரையிலிருந்து பரிசுத்தவான்கள் எல்லோரையும் அவரே அழைக்கிறவராய் இருக்கிறார், மேலும் உயிரோடு இருக்கிறவர்களாக, அவருடைய வருகையின்போது மீந்திருக்கிற நாம் அவரால் மறுரூபமாக்கப்படுவோம். அவரே தம்முடைய சபையார் அனைவருடைய மீட்பராக இருக்கிறார். பிதா யாவருக்கும் மீட்பராயிருக்கிறார் என்று வேதாகமம் கூறினாலும், நம்முடைய கர்த்தர் இயேசுவை எழுப்பியவரும், மற்றும் கல்லறையிலிருந்து நம்மையும் கூட எழுப்பப்போகிறவருமாக பிதா இருந்தாலும், இது இயேசுவினால் நடைபெறக்கூடியதாக இருக்கிறது. எல்லா விஷயங்களும் பிதாவுக்குரியதாகவும் மற்றும் குமாரன் மூலமாகவும் இருக்கிறது.

## சபை - சில சபையார் தனிப்பட்டவிதமாக செயல்படுதல்.

### கே : 125:1 :: கேள்வி (1916) - 1

ஒரு வட்டாரத்திலுள்ள சபையின் அங்கங்களாயிருப்பவர்கள், சபையிலிருந்து தனிப்பட்டு, வேத மாணவர்கள் ஒரு குழுவாக ஊழியம் செய்யலாமா?

**பதில்:** கர்த்தர் சந்தோஷப்படும் விதமாக, ஒரு குறிப்பிட்ட அளவு கிறிஸ்தவ சுதந்தரத்தை எப்போதும் செயற்படுத்துகிறவர்களான ஜனங்களாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். உதாரணமாக, ஒரு சகோதரன் வேறொரு சகோதரன் வீட்டிற்குப் போவதாகவும், மற்றும் இரண்டு அல்லது மூன்று அயலார்கள் மாலைப்பொழுதைக் கழிக்க வருகிறார்கள் என்று அனுமானிக்கலாம். அப்போது ஒருவர் “சதுரங்க ஆட்டத்தை (CHESS) விளையாடுவோம்” என்று சொல்வதாக அனுமானிக்கவும். மற்றவர் கூறுகிறார், “இல்லை, நாம் வேதாகம பாடத்தை

நடத்தலாம்.” “இல்லை, நாம் வேதாகம பாட வகுப்பை நடத்த முடியாது, ஏனெனில் இது நம்முடைய சபையினால் அங்கீகரிக்கப்படாததாக இருக்கிறது, ஆகவே நாம் சதுரங்க ஆட்டத்தை ஆடுவோம்” என்று சொல்வது கர்த்தருடைய விருப்பமாக இருக்கும் என்று நாம் நினைக்க மாட்டோம். சபையினால் அங்கே எந்த கூடுகையும் ஏற்பாடு செய்யப்படாத நிலையில், வேதாகம பாடத்தை நடத்துவதற்கு, அல்லது வேதாகம விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது. “நாம் அடுத்த வாரம் வேறொரு கூடுகைக்கு அயலார்களில் மேலும் அதிகமாக சிலரைக் கேட்கலாம். இந்த விஷயங்களைப் பற்றி நான் அவர்களிடம் சொல்ல முயற்சித்தேன் மற்றும் நீங்கள் பேசுகிறதை அவர்கள் கேட்பதில் மகிழ்ச்சியாயிருக்கிறேன்” என்று விருந்தோம்புகிறவர் கூறலாம். இந்த முறையைப் பின்பற்றுவதில் தவறு ஏதும் இருப்பதாக என்னால் பார்க்க முடியவில்லை. அவ்வாறு கலந்து கொள்பவர்கள் ஒரு வழக்கமான கூடுகையை விரும்பினால், அ.வே.மா.ச. (I.B.S.A.) அங்கத்தின் அப்பகுதியிலுள்ள சபையை அணுக வேண்டும் மற்றும் சபை வழிநடத்துதல்களை வழங்கும்.

ஆனால் இப்போது, “நாங்கள் வேறொரு கூடுகையை துவக்குவோம்” என்று வகுப்பாரில் சிலர் கூறுவதாக இருந்தால், இது முழுமையாக வித்தியாசமான விஷயம் ஆகும். ஒரு புதிய சபையை உருவாக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது, ஆனால் இப்படிச் செய்வதால், அவர்கள் அசல் சபையிலிருந்து பிரிந்து போகிறதாய் இருக்கும் என்றும் கூறுவார்கள், “இங்கே நாம் வாக்கு எடுப்போம்.” நாம் செய்யும் எதிலும் நிலைத்தன்மை இருக்க வேண்டும். ஒரு சபையின் அங்கங்களாயிருக்கிற எல்லோரும், ஒத்துழைப்பின் பயன்களை உடையவர்களாயிருக்கும் பொருட்டு, தங்களுடைய **<u>சொந்த</u>** தன்னுரிமைகளை கிட்டத்தட்ட விட்டுக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் நாம் வேதாகம பாட வகுப்பை நடத்த முடியாததாகவும், அதற்குப் பதிலாக விளையாட்டுக்கள் விளையாடுவதற்காக மாலை நேரத்தைக் கழிக்க வேண்டும் என்ற விதத்தில் இந்த பிணைப்பு இருப்பதாக இதற்கு அர்த்தங்கொள்ளக்கூடாது.

## சபை - இராஜாக்களைக் கட்டுவதில் சபையின் பங்கு.

### கே : 125:2 :: கேள்வி (1916) - 2

இராஜாக்களைக் கட்டுவதில் சபைக்குரிய பங்கு என்னவாயிருக்கும்?

**பதில்:** என்னுடைய அருமை நண்பர்களே, இப்பொழுது இராஜாக்களைக் கட்டுவதற்கான எந்த பங்கும் சபைக்கு இல்லை என்பது வெளிப்படையாகும். இந்த பணியில் நீங்களும் நானும் எந்த அளவுக்கு பங்குடையவர்களாக இருக்கிறோம் என்பதை குறைந்த பட்சம் இன்னும் நாம் பார்க்கவில்லை; இராஜாக்கள் கட்டப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் பார்க்கவில்லை. வருங்காலத்தில் அந்த பணியில் சபையின் பங்கு என்ன என்பதை நாம் அறியவில்லை. அவர்கள் ஒரு முக்கியமான பங்கை வகிப்பார்கள் என்று வேதாகமம் காண்பிக்கிறது. ஆனால் காலம் வரும்போது அவர்கள் அந்த சிலாக்கியத்தை எப்படி கையாளுவார்கள் என்பது இனி பார்க்கப்படும் விஷயமாகும். தேவன் தம்முடைய திட்டத்தை எப்படி செயல்படுத்துவாரென்பதை அவர் காண்பித்திருக்கவில்லை. காலம் வரும்போது நம்முடைய பங்கை செய்ய வேண்டிய நிலைமையில் நாம் இருக்கும் தேவை உள்ளது. ஆனால் இந்த விஷயத்தை கர்த்தருடைய கரங்களில் விட்டுவிடுவதில் நாம் திருப்தியடைய வேண்டும். உலகத்தாரின் இராணுவங்களில், முன்னேறுவதற்கான கட்டளைப் பிறப்பிக்கப்படும் நேரம் வரைக்கும், எப்பொழுது தாக்குதல் நடத்த வேண்டும் என்பதை பதவி வரிசையிலுள்ள மனுஷர் அறிவதில்லை. உரிய காலத்தில் நீங்களும் நானும் நம்முடையக் கட்டளைகளைப் பெறுவோம். அதற்கு இடைப்பட்ட காலத்தில், நாம் நம்முடைய கவசத்தைக் காத்துக்கொள்வோம்; நாம் இதை தூய்மையாகவும் பிரகாசமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்; நாம் சிறப்பாக பணியாற்றுவதில் நித்திரை மயக்கத்திலோ, அல்லது சோர்வாகவோ இருக்கக்கூடாது, கர்த்தரிடத்தில் வலிமையுடையவராகவும், அவருடைய வல்லமையில் பலமுள்ளவர்களாகவும் வளர வேண்டும்.

## சபை - மகிமையடைந்தோர் ஜீவன்-அளிக்கும் வல்லமை உடையவர்களாக இருப்பார்களா?

### கே : 125:3 :: கேள்வி (1916 - Z) - 3

ஆயிர வருஷ யுகத்தில் இயேசு மட்டும் உலகத்தாருக்கு ஜீவன்-அளிப்பவராக இருப்பாரா, அல்லது ஜீவன்-அளிப்பவரின் அங்கங்களாக, அவருடன் இணைந்தவர்களாக சபையும் இருக்குமா? மற்றும் மரித்தோரிலிருந்து எழுப்புவதற்கான அதிகாரம் சபைக்கு இருக்குமா?

**பதில்:** ஜீவனை அளிக்கும் பாடத்தை பல்வேறு கோணங்களில் ஆராயலாம். ஒரு பார்வையில் நோக்கும்போது, பிள்ளையின் தந்தையைப் போலவே, தாயும் இதனுடைய ஜீவன்_அளிப்பவராக இருக்கிறாள் - தாய் இல்லாமல் அந்த பிள்ளை தனிப்பட்ட உயிர்வாழும் நிலையை அடைந்திருக்க முடியாது என்ற கண்ணோட்டத்தில் பார்க்கலாம். இருப்பினும், கண்டிப்பாகச் சொன்னால், தந்தை மட்டுமே ஜீவன்-அளிப்பவராக இருக்கிறார். ஏனெனில் உயிரணு தந்தையிடமிருந்து வருகிறது.

ஆகவே பூமிக்குரிய தந்தை, அல்லது ஜீவன்-அளிப்பவரின் இந்த இயற்கையான எடுத்துக்காட்டை உபயோகப்படுத்தி, வேதாகமத்தின் மாபெரும் ஆவிக்குரிய சத்தியத்தை அடையாளப்படுத்துகிறது. மரண தண்டனையின் கீழ் உலகத்தார் ஆதாமில் மரித்தவர்களாக இருக்கின்றனர். இந்த தண்டனையை நீக்கும் வகையில் இயேசு மீட்பின் பொருளை ஒப்படைத்திருக்கிறார். இப்படிச் செய்த காரணத்தினால், கிறிஸ்து தம்முடைய பலியின் புண்ணியத்தை உலகத்தாருக்கும் பிரயோகம் பண்ணினவுடனே, அவர் ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததிக்கு ஜீவன் அளிப்பவராகும் உரிமையை அவர் பெறுவார். கிறிஸ்து மரணத்தில் தாமே ஒப்படைத்த மனுஷீக ஜீவ உரிமைகளை அவர் உலகத்தாருக்குக் கொடுப்பார்.

ஆனால் கிறிஸ்து தேவனுடைய சித்தத்தின்படி, தற்காலத்தின் பாடுகளிலும், இதைத் தொடர்ந்து இனிவரும் மகிமையிலும் சபையைத் தம்முடன் இணைத்துக்கொண்டிருப்பதால், சபை உலகத்தாருக்கு ஜீவனை அளிப்பதில் செயல்பட வேண்டியிருக்கிறது. சபையின் ஊழியம் தாயாகிய சாராளிலும் மற்றும் பொதுவாக பெண்மையிலும் எடுத்துக்காட்டப்படுகிறது. மனுக்குல உலகத்துக்கு ஊட்டமளிப்பது சபையின் பணியாக இருக்கும் - அவர்கள் மீட்பரிடமிருந்து பெறும் ஜீவ தீப்பொறியை உலகத்துக்கு சபை ஊட்டமளிக்கும். இந்த ஊட்டமளித்தல் மற்றும் பராமரிப்பினால் உலகத்தாரில் ஒத்துழைக்கும் அநேகர் பாவம் மற்றும் மரண நிலைமைகளிலிருந்து வெளி வந்து, பூரணத்துவத்துக்கு எழும்புவார்கள்.

இவ்விதமாக கிறிஸ்துவின் மணவாட்டி ஜீவன்-அளிப்பதில் செயல்படும், அதாவது, மாபெரும் ஜீவன்-அளிப்பவருடன் இணைத்திருக்கக்கூடியவர்களாக மட்டும் இருக்கும். மீட்பராகிய இயேசு மட்டுமே தம்முடைய சொந்த ஜீவ-உரிமைகளை வழங்க முடியும். மேலும் கிறிஸ்து தாமே கூறினார், 'பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்." (யோவான் 5:25,29.) மகிமையடைந்த சபை உலகத்தின் சீர்பொருந்துதல் தொடர்பான எந்த பணியைச் செய்வதானாலும், கிறிஸ்துவின் உதவியாளர்கள் என்ற முறையிலேயே இருக்கும்.

## சபை எதை கிரயத்துக்குக் கொள்கிறது?

### கே : 126:1 :: கேள்வி (1916) - 1

தெரிந்துகொள்ளப்படும் சபை இந்த சுவிசேஷ யுகத்தில் உலகத்தை கிரயத்துக்குக் கொள்ளுமா? ஆசரிப்புக்கூடார நிழல்கள் புத்தகம், பக்கம் 99ல் இதைச் சுட்டிக்காட்டுவது போல் தோன்றுகிறதே?

**பதில்:** இது போன்று எதையும் சுட்டிக்காட்டுவதாக ஆசரிப்புக்கூடார புத்தகத்தில் எந்த பாராவின் நோக்கமாக இருந்ததில்லை. பதினாயிரம் தடவைகள் இதை திரும்பச் சொல்வதற்கு

விரும்புகிறேன், ஒருவரைத் தவிர எவரும் உலகத்தை கிரயத்துக்குக் கொள்ள முடியாது, ஏனெனில் ஒரே மனுஷன் தான் பாவம் செய்தான். ஆகவே ஒரே மனுஷன் தான் மீட்கிறவராக இருந்தார். மீட்பு என்பது சரிசமமான விலைக்கிரயம். அவர் தம்மையே மீட்கும் பொருளாக ஒப்படைத்தார், அவர் சபை மூலமாகத் தொடர்ந்து செய்து வருகிறார் என்று ஏதோ இருப்பது போன்று, சபையுடன் எதையும் செய்கிறதில்லை. அவர் அதை கல்வாரியில் நிறைவேற்றி விட்டார். அவர் இன்னும் அதை உண்மையில் பிரயோகம் பண்ணவில்லை. ஆனால் நாம் தேவனுடைய திட்டத்திற்குள்ளாக வருவதற்கு முன்பாகவே, அந்த மீட்கும் பொருளை அளிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இயேசு தம்முடைய பணியை கல்வாரியில் முடித்திருந்த வரைக்கும் நாம் வரவில்லை. பிறகு சபையின் தேர்வுக்குள்ளாக வந்தோம். முதலாவது, நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாக இருந்தார் மற்றும் பிறகு அவருக்குக் கீழ் படைவீரர்களின் கூட்டம் இருக்க முடிந்தது. அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு அவர் தலையானவராக இருந்தார். அவருடைய பலி முடிவடைந்த பிறகு, இந்த நபர்களின் தேர்வு துவங்கியது. இயேசு மாத்திரமே மரித்தார் மற்றும் உன்னதத்திற்கு ஏறிப்போனார் மற்றும் நீதியைத் திருப்திப்படுத்துதலையும், புண்ணியத்தை ஒப்படைத்தலையும் செய்தார். (தேவன் சபை எதையும் அங்கீகரிக்கவே இல்லை.) பிறகு அது செய்யப்பட்ட பிறகு - - சபை இதில் இருக்கவே இல்லை - தேவன் இயேசு மூலமாக பரிசுத்த ஆவியை பொழிந்தருளினார். அந்த விலைக்கிரயத்தைச் செலுத்துவதற்கு நமக்கும் ஒன்றுமில்லை. அவைகள் அனைத்தும் இயேசுவின் பணியாகவே இருக்கிறது.

## சபை - புண்ணியம் குறித்து.

### கே : 127:1 :: கேள்வி (1916) - 1

சபை தனிப்பட்டோ, அல்லது கூட்டாகவோ, தன்னுடைய சொந்த புண்ணியம் எதையும், எந்த பார்வையிலாவது பெற்றிருக்கிறதா?

**பதில்:** அந்த கேள்வியைக் கேட்டவருடைய மனதில் என்ன இருந்தது என்பதை நாம் அறியவில்லை. மாம்சீகத்தின்படி சபை புண்ணியம் எதையும் வைத்திருக்கவில்லை.; ஆனால் சபை மாம்சத்தில் இருக்கவில்லை. "நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருக்கிறீர்கள்." கிறிஸ்துவின் சரீரம் புதிய சிருஷ்டியாக இருக்கிறது மற்றும் இதற்கு ஏற்கனவே அதிக அளவு புண்ணியம் இருக்கிறது. தேவன் நம்மை புதிய சிருஷ்டிகளாக உண்டுபண்ணியபோது, நாம் கொஞ்சம் புண்ணியம் பெற்றோம். தேவன் தம்முடைய பிள்ளைகளாயிருப்பதற்கு, அவர்களுக்கு அளிக்கும் புண்ணியத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும் என்று நான் நம்புகிறேன். ஒவ்வொருவரும் கொஞ்சம் புண்ணியத்தை கண்டிப்பாக உடையவர்களாயிருக்க வேண்டும், இல்லையேல் தேவன் அவர்களை அங்கீகரிக்கமாட்டார். நாம் வேண்டிக்கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்று எபேசியர் நிருபத்தில் வாசிக்கிறோம். அங்கே கொஞ்சம் புண்ணியம் கண்டிப்பாக இருக்கும். பிறகு நாம் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டியதைப் பற்றிப் படிக்கிறோம். ஏனெனில் சபை தகுதியாகக் காணப்படும் சில ஆசீர்வாதங்கள் சபைக்கு வரக்கூடியதாக இருக்கின்றன,

உலகத்துக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில், ஆவிக்குரிய புண்ணியம் எதையும் சபை உடையதாக இருக்கிறதா? புது சிருஷ்டியின் புண்ணியம் என்பது ஒரு விஷயம், ஆனால் நாம் கொடுக்கக்கூடிய விதமாக மாம்சத்தின்படி எந்த புண்ணியமும் நமக்கு இருக்கவில்லை. ஆனால் அந்த வகையிலான எதையும் நாம் கற்றிருக்கிறோமா? ஆம் - நீங்கள் மாம்சத்தில் நீதியினிமித்தம் பாடுபட்டால், உங்களைப் பொருத்தவரையில், அப்போது பரிசு பெறுவதற்குரிய காரியம் நிறைவேற்றப்படும். நீங்கள் இவ்விதமாக உங்களுடைய உரிமைகளை இழந்து பாடுபட்டிருக்கிறீர்கள். நீங்கள் இழந்த அந்த உரிமைகளுக்குச் சொந்தமான ஒரு குறிப்பிட்ட அளவு பலன் இருக்கிறது மற்றும் இந்த இழப்பை உண்டாக்கியவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு குறைபாடு இருக்கும். உலகத்தாருக்கு சுமத்தப்படக்கூடிய ஒரு முறையை தேவன் அடையாளப்படுத்துகிறார். லேவியராகமம் 16ம் அதிகாரத்தை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்,

பாவ நிவாரண நாளின் பலிகளால் நீக்கப்படும் சாதாரண பாவங்களுக்கு அப்பால், சில குறிப்பிட்ட பாவங்களை வேறு வழியில் பாவ நிவாரணம் செய்யப்பட வேண்டியிருந்தது. அப்படியே ஆதாமின் பாவங்கள் எல்லாவற்றிற்குமான மன்னிப்பு இயேசுவைச் சார்ந்ததாக இருக்கிறது, இருப்பினும், நீதியினிமித்தம் நாம் என்ன பாடுபடுகிறோமோ, இந்த பாடுகள் அனைத்தும் வேறு ஒருவருக்கு வரவு வைக்கப்படும் வகையில் சென்றடையும். மற்றும் தகப்பனாகிய ஆதாமைச் சார்ந்த பாவங்களுக்கு அப்பால் தவறு செய்திருக்கக்கூடியவர்களுக்கு இழப்பை சரிபண்ணுவதற்கு பயன்படும் இது ஒரு சமநிலையை உண்டுபண்ணும். புதிய யுகம் வருவதற்கு முன்பாக இவையெல்லாம் சமநிலைப்படுத்தப்படும். வரவிருக்கிற உபத்திரவத்திற்கான காரணம் இதுவாகும்., ஏனெனில் தேவன் இந்த கணக்கை சமநிலைப்படுத்துவார். லேவி. 16ம் அதிகாரத்தின் உருவகத்தின் ஒரு பகுதியின்படி, சபை தன்னுடைய வரவில் கொஞ்சம் வைத்திருக்கும்..

## விருத்தசேதனம் - சபை.

### கே : 127:2 :: கேள்வி (1909) - 2

ஆபிரகாமின் உடன்படிக்கையின் அடையாளமாக மாம்சீக விருத்தசேதனம் இருந்தது. நாம் அந்த உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோம் என்றால், அதே அடையாளத்தை நாம் ஏன் உடையவர்களாக இருக்கவில்லை?

**பதில்:** நாமும் அந்த அடையாளத்தை உடையவர்களாக இருக்கிறோம் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கிறார்; ஆனால் இது இருதயத்தினால் உண்டாகும் விருத்தசேதனமாக இருக்கிறது மற்றும் மாம்சத்தின்படி அல்ல. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு இது ஆவிக்குரிய விருத்தசேதனமாக இருக்கிறது. நாம் இந்த காரியங்களை விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் நம்மிடம் கூறுகிறார் - கோபம், வெறுப்பு, குரோதம், பொறாமை, பகைமை, மாம்சத்தின் கிரியைகள் மற்றும் பிசாசின் கிரியைகள் இவைகளைத் துண்டித்து விடுங்கள், அப்போது நீங்கள் இருதயத்தின் விருத்தசேதனம் உள்ளவர்களாக இருப்பீர்கள். கோபமான எண்ணம் எதையும் நீங்கள் கொண்டிருப்பவர்களாக இருக்கக்கூடாது என்று அதற்கு அர்த்தமல்ல. இது உங்களுடைய மாம்சம் அல்ல, ஆம், நீங்கள் புது சிருஷ்டியாக, கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருக்கிறீர்கள். புது சிருஷ்டியின் ஊழியக்காரராக மட்டுமே மாம்சம் இருக்கின்றது மற்றும் புது சிருஷ்டி தனக்குள்ள திறனுக்குத் தக்கவிதமாக சரீரத்தை அடக்கி வைக்கிறது.

## நிதி திரட்டுகள். (COLLECTIONS) - அதிகம் செலவழித்தல், கேட்பது கொஞ்சம்.

### கே : 128:1 :: கேள்வி (1913) - 1

அகில உலக வேத மாணவர் சங்கம் யாரிடமும் பணம் கேட்காமலேயே, பெருமளவில் செலவழிப்பது எப்படி சாத்தியமாகிறது?

**பதில்:** அருமையான நண்பர்களே, சில வருஷங்களுக்கு முன்பு, காங்கிரகேஷனல் சபையைச் (CONGREGATIONAL) சேர்ந்த ஒருவரிடம் என்னுடைய அனுபவத்தைப் பெற்றேன். விழாக்கூட்டம் மற்றும் ஓட்டெடுப்பு நடந்து கொண்டு இருந்தது மற்றும் ஒரு நபரிடம் வேண்டுகோள் விடுத்தது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது மற்றும் அவர் உடனடியாக என்னிடம் இரண்டு டாலர்களை ஒப்படைத்தார். இதை அளிப்பதில் மகிழ்ச்சி அடைந்தவராகத் தோன்றியது. அந்த இரண்டு டாலர்களை வாங்கியவுடன், நான் வெட்கமடைந்தேன். நான் சொல்லிக்கொண்டேன், நீ கெஞ்சினாய், என்னுடைய பதில் இதுவாக இருந்தது: 'நீ சபைக்காக கெஞ்சினாய். வெட்கப்பட வேண்டும். ஆம், நான் அப்படியே. ஆனால் இது கர்த்தருக்காக இருந்தது. நீ உனக்காக கெஞ்சுவதற்கு வெட்கப்பட்டால், கர்த்தருக்காக கெஞ்சுவதற்கு அதிகம் வெட்கப்பட வேண்டும் அல்லவா? கர்த்தர் ஏழையானவரா?" நான் சொல்லிக்கொண்டேன்: "இல்லை. நான் இனி ஒருபோதும் கெஞ்சவோ, அல்லது வேண்டுகோள் விடுக்கவோ மாட்டேன்." அந்த சமயத்திலிருந்து நான் அப்படியே இருக்கிறேன்.

நாங்கள் யாரிடமும் வேண்டுகோள் விடுக்காமல் இருக்கும்போது, அதிகமான பணத்தை நாங்கள் எப்படி செலவழிக்க முடிகிறது? இது தான் கேள்வி. ஜனங்கள் மனமுவந்து எங்கள் மேல் திணிக்கிறார்கள். இது வேடிக்கை அல்ல. ஜனங்கள் உண்மையாகவே கூறுகிறார்கள், “சகோதரர் ரசல், இந்த காரியங்களில் நான் ஆழ்ந்த விருப்பம் உடையவராயிருக்கிறேன். மற்றும் கொஞ்சம் பணத்தைக் கொடுக்க விரும்புகிறேன். எனக்கு வாய்ப்பு கிடைக்குமா?” நாங்கள் கூறுகிறோம், “சகோதரனே, இந்த உலகத்தில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. குறைந்த பட்ச எதிர்பார்ப்பு என்னிடம் இல்லாத நிலையில், சில சமயங்களில் ஜனங்கள் என்னிடம் பணம் ஒப்படைக்கிறார்கள். உதாரணமாக, கேள்விக்கூட்டத்திற்கு ஒரு பிற்பகலில் நான் சென்றுகொண்டிருக்கும் போது, பண்பாளர் ஒருவர் என்னிடம் வந்து, ஒரு காகித உறையை ஒப்படைத்தார். இது ஒரு கேள்வி என்று நினைத்து, நான் அதை என்னுடைய சட்டைப் பையில் வைத்துக்கொண்டேன். நான் மேடையை அடைந்து, இதை வெளியே எடுத்த போது, 1000 டாலர்களுக்கான காசோலையைப் பார்த்தேன். அந்த காசோலையை எனக்குக் கொடுத்திருந்த பண்பாளர், தான் எவ்வளவு மிகவும் பொல்லாத மனுஷனாக இருந்திருந்தேன் என்று என்னிடம் சொல்லியிருந்தது எனக்கு ஞாபகம் வந்தது. அவர் மேற்கத்திய நாட்டில் வாழ்ந்தார், மற்றும் ப்ரெஸ்பைடேரியன் சபையின் அங்கமாக இருந்த போது, அவர் ஒரு கிறிஸ்தவனாகவே இருந்ததில்லை என்று தன்னைப் பற்றி என்னிடம் கூறினார். அவர் சூதாடினார், புகை பிடித்தார், மது அருந்தினார் மற்றும் ஒரு கிறிஸ்தவன் செய்யக்கூடாத கிட்டத்தட்ட எல்லாவற்றையும் அவர் செய்தார் ப்ரெஸ்பைடேரியன் சபை இந்த விஷயத்தில் அவரை ஊக்குவித்தது என்று அவரோ, அல்லது, நானோ சொல்லவில்லை. அவர் வேதாகம ஆராய்ச்சிப்பாடங்களைப் படிக்கிற வரையில், கிறிஸ்தவம் என்பது என்ன என்று அவர் அறிந்திருக்கவில்லை என்று என்னிடம் கூறினார். தேவனுடைய திட்டத்தின் நியாயத்தன்மை மற்றும் நன்மையை கற்றுக்கொண்ட பிறகு, தான் மிகவும் புரிந்துணர்ந்த அறிவை பரப்புவதற்கு உதவும் வகையில் அவருடைய பணத்தை பயன்படுத்த அவர் விரும்பினார், ஆகவே காசோலையை என்னிடம் கொடுத்தார். இந்த முறையில் தான் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த பணி தொடர்ந்து முன்னேறுவதற்கு கர்த்தர் விரும்புகிற வரையில், அவர் நிதிகள் வழங்குவதை அவர் கவனத்தில் கொள்வார் என்பது எங்களுடைய எண்ணமாக இருந்து வருகின்றது. அவர் எவ்வளவு அனுப்ப வேண்டும் என்பதைக் கவனிப்பது அவருடைய அலுவலாக இருக்கிறது. கர்த்தர் வழங்குவதை எப்போது நிறுத்து வைக்கிறாரோ, அந்த அளவு விகிதத்தில் பணி குறைவடையும்.

## நிதி திரட்டுகள். - தன்னார்வ பங்களிப்பவர்களின் அர்த்தம்.

## கே : 128:2 :: கேள்வி (1912) - 2

அனைத்துலக வேதமாணவ சங்கத்தின் பிரதிநிதிகள், தங்களுடைய பிரசங்கம் மற்றும் ஊழியத்தைச் செய்வதற்கான முழு செலவும் தன்னார்வ பங்களிப்பவர்களினால் மேற்கொள்ளப்படுகிறது என்று ஸ்பிரிங் ஃபீல்டில் ஒரு அறிக்கையில் சொல்லியிருக்கின்றனர். “தன்னார்வ பங்களிப்புகள்” என்ற பதத்திற்கான துல்லியமான அர்த்தத்தை தயவு செய்து விளக்கவும்.

**பதில்:** எந்த முறையிலும் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுப் பெறும் பங்களிப்பு அல்ல. சரியாகத் தோன்றுகிறபடி, எங்கள் ஊழியத்தின் பயன்முடிவுகளை ஒவ்வொரு வருஷமும் வருடாந்தர அறிக்கையாக வெளிப்படுத்துகிறோம். ஆனால் பங்களிப்பவர்களின் பெயர்கள் கொடுக்கப்படுவதில்லை. அவருடைய பெயரை சபைக்கு முன்பாகவோ, அல்லது மற்ற பங்களிப்பவர்களிடமிருந்தோ பெறுவதற்கான வாய்ப்பு எவருக்கு இருக்காது. எது கொடுக்கப்பட்டாலும், அது கர்த்தருக்காகக் கொடுக்கப்படுகிறது மற்றும் மனுஷீக நன்கொடைகளைக் குறித்து வீண் ஆர்ப்பாட்டத்திற்கான முயற்சி ஏதும் செய்வதில்லை. தன்னார்வமாக ஒப்படைக்கப்படுகிற எதையும் நாங்கள் எளிமையாகப் பயன்படுத்துகிறோம்.

## நிதி திரட்டுகள் - அ. வே. மா. ச. மற்றும் நிதி திரட்டுகள்.

**கே : 129:1 :: கேள்வி (1913) - 1**

அனைத்துலக வேதமாணவர் சபை, பணத்திற்காக வேண்டுகோள் செய்வதை மறுப்பதற்கு வேதாகமத்தில் காரணம் ஏதும் உள்ளதா?

**பதில்:** பணம் பெறுவதற்கு வேண்டுகோள் விடுகின்ற இந்த விஷயம் பெரும்பாலானவர்களின் பார்வையில் அருவருப்பாகியிருக்கிறது மற்றும் நாங்கள் பணம் பெறுவதற்கு வேண்டுகோள் விடுக்காமலிருந்தால், கர்த்தருடைய நாமம், ஒருவேளை அதிகமாக மகிமைப்படும் என்பது எங்களுடைய பொதுவான கருத்தாக இருக்கிறது. மேலும், நம்முடைய பரலோக பிதா மிகவும் ஐசுவரியமுள்ளவராக இருக்கிறார் என்ற உண்மையை நாங்கள் கண்டுணருகிறோம். பொன் மற்றும் வெள்ளி அனைத்தும், மற்றும் ஆயிரம் பர்வதங்களிலுள்ள மந்தைகள் அனைத்தும் அவருடையவை. அவருக்கு பணம் தேவைப்பட்டால், அவர் நம்மைக் கேட்கும் தேவை இல்லை மற்றும் அவருடைய நாமத்தினால் எந்த முறையிலாவது கேட்கவோ, அல்லது வேண்டுகோள் விடுக்கவோ நாம் அறிகிறவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் ஒருபோதும் நம்மை நியமிக்கவில்லை. அவர் இதை அப்படிச் செய்வதற்காக நம்மை நியமிக்காததால், நாம் அவ்விதம் செய்வது சரியானது அல்ல. வேறொரு பார்வை கொண்டிருக்கும் மற்றவர்களின் மேல் இது பிரதிபலிப்பாக இருக்காது. அவர்கள் தங்களின் உரிமைகளை உடையவர்களாக இருக்கிறார்கள்.

## தொகுதி விற்பனையாளர் (COLPORTEUR) பணி - துண்டு பிரதிகள் விநியோகித்தல்.

**கே : 129:2 :: கேள்வி (1906) - 2**

துண்டு பிரதிகளை விநியோகிப்பதற்கு சரியான முறையை தயவு செய்து சுட்டிக்காட்டவும்.

**பதில்:** இரண்டு துண்டு பிரதிகள் இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம், மற்றும் இந்த இரண்டு பிரதிகளை மட்டுமே தொகுதி விற்பனையாளர்கள் கொடுக்க வேண்டும். மற்ற துண்டு பிரதிகளுக்கு விரோதமாக இப்படி குறிப்பிடவில்லை. ஒரு பிரதி எண்: 54, "இருண்ட மேகமும் வெள்ளி ஒளிக்கீற்றும்", மற்றும், "உங்களுக்குத் தெரியுமா?" என்பதும் சிறந்தவையாகும். தொகுதி விற்பனையாளர் மற்ற துண்டு பிரதிகளை எடுத்து செல்ல வேண்டாம் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம், ஆனால் மற்றவைகளை தன்னார்வ தொண்டர்கள் விநியோகம் செய்யட்டும்.

## தொகுதி விநியோகிக்கும் பணி - தொகுதி விற்பனை செய்யும் போது, துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கலாமா?

**கே : 129:3 :: கேள்வி (1906) - 3**

நாங்கள் தொகுதி விற்பனை செய்யும் போது, துண்டு பிரதிகளைக் கொடுக்கலாமா என்பது குறித்து நீங்கள் அறிவுரை கூற முடியுமா?

**பதில்:** புத்தகங்கள் அனுப்பும் உத்தரவு எதுவும் எனக்கு இல்லாத போது, நான் அவர்களை துண்டு பிரதிகள் விநியோகிக்க அனுப்பினேன் என்று நான் நினைக்கிறேன். நான் புத்தகங்கள் அனுப்பச் சொல்லும் உத்தரவு பெற்றால், பிரதிகளை அனுப்பச் சொல்ல மாட்டேன்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - தன்னார்வ தொண்டு புரிதல், மற்றும் தொகுதி விற்பனை செய்தல்.

**கே: 129:4 :: கேள்வி (1906) - 4**

தொகுதி விநியோகிக்கும் பணியாளர்கள் தன்னார்வ பணி செய்ய வேண்டுமா?

**பதில்:** அவர்கள் ஏன் செய்யக்கூடாது என்பதற்கான காரணம் நான் அறியவில்லை. ஆனால் என்னுடைய கருத்து இதுவே: தொகுதி விநியோகிக்கும் பணியாளர்கள் தன்னார்வ தொண்டு புரிவதைத் தவிர்த்துவிடவும், மற்றும் அவருடைய நேரத்தை சிறிது வித்தியாசமான வழியில் உபயோகப்படுத்துவதும் நல்லது. உதாரணமாக, தொகுதி விற்பனையை வாரத்தில் செய்து, மற்றும் அவர்கள் வசம் உள்ள அனைத்து ஆற்றலையும் செலவழித்திருப்பதாக அனுமானித்தால், ஞாயிற்றுக்கிழமை வரும்போது, பெயர்கள் அடங்கிய அவர்களுடைய புத்தகத்தைப் பார்வையிட்டு, அதில் விருப்பமுள்ளவர்களாகக் குறியிடப்பட்டிருக்கிறவர்களைப் பார்த்து, மற்றும் அவர்களை சந்திப்பதில் அவர்களுடைய நேரத்தை உபயோகப்படுத்த வேண்டும்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - தொகுதி நூல் விற்பனையை தன்னார்வமாக செய்தல்.

### கே: 129:5 :: கேள்வி (1906) - 5

தொகுதி விநியோகிக்கும் பணியாளர் நகரம் முழுவதும் துண்டு பிரதிகளை விநியோகித்திருக்கும் போது, அவர்கள் தன்னார்வ பணியைச் செய்திருக்கிறார்கள் என்று கருதலாமா?

**பதில்:** அவர்கள் தங்களுடைய எல்லா விற்பனைகளையும் இழந்து விட்டார்கள் என்றால், இது நல்லது தான்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - ஆதரவை எதிர்பார்த்து வாழ்கிற குடும்பத்தை எப்படி நிர்வகிப்பது?

### கே : 129:6 :: கேள்வி (1906) -

ஒருவரைச் சார்ந்து குடும்பம் இருக்கும் நிலையில், ஏற்பாடுகள் செய்ய முடிகிறதாயிருந்தால், தொகுதி விற்பனை பணிக்கு அவர் செல்வது சரியானதாக இருக்குமா?

**பதில்:** உதாரணமாக, தன்னுடைய வீட்டையும், கணவனையும் எந்த அளவிலாவது புறக்கணிப்பு செய்து, ஒரு மனைவி இந்த பணிக்கு வருவது சரி என்று நான் நினைக்கவில்லை. அவள் தன்னுடைய கணவன் மற்றும் வீட்டின் மேல் மனைவி என்ற முறையில் அவளுக்கு கடமை இருக்கிறது. ஆனால் இந்த கணவன் சத்தியத்தில் இருந்தவராய், இதற்கு சம்மதித்திருந்தால் இது சரியானதே. அவர் உலகத்தாரான கணவனாக இருந்தால், தன்னுடைய குடும்பம் பராமரிக்கப்பட வேண்டும். மற்றும் இது மனைவியினுடைய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாயிருக்கிறது என்றும், அவள் இதை மீறக்கூடாது என்றும் உரிமை கோர முடியும்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - விவாகம் புரிந்த துணைவரிடம் விட்டுக் கொடுத்தல்.

### கே : 130:1 :: கேள்வி (1906) - 1

ஒரு கணவர் உலகத்தாராயிருந்து, ஆனால் அவருடைய மனைவியை பணிக்கு அனுப்ப விருப்பமுள்ளவராக இருந்தால், அப்போது என்ன செய்யலாம்?

**பதில்:** அவர் விருப்பமுள்ளவராக இருந்தால், நல்லது, சகோதரி. ஆனால் விஷயத்தை கட்டுக்கடங்காத அளவுக்கு நீடிக்காமல் இருப்பதில் நான் கவனம் செலுத்துவேன். துணைவர் நியாயமாகக் கேட்பது, அல்லது எதிர்பார்ப்பது, மற்றும் அவருடைய விருப்பங்கள் ஆகியவற்றை எப்போதும் கவனமாய் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை மற்றும் தன்னார்வ தொண்டு - அறிமுகப்படுத்தும் வழிமுறை.

### கே : 130:2 :: கேள்வி (1906) - 2

தன்னார்வ தொண்டு செய்யும் பணியாளர்கள் துண்டு பிரதியை அறிமுகப்படுத்துவதற்கான சரியான வழி ஏது?

**பதில்:** துண்டு பிரதிக்கு வழக்கமாக அறிமுகம் ஏதும் தேவைப்படுவதில்லை, ஆனால் குறிப்பாக, ஒரு நபர் முன் தாழ்வாரத்தில் இருக்க நேர்ந்தால், அப்போது இது போன்ற விஷயத்தை நான் வெறுமனே கூறுவேன், "இலவசமாக படிக்கும் விஷயத்தை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்களா?" இது ஏதோ விற்பனைக்கு உள்ள விஷயம் என்று அவர்கள் நினைக்காதபடி, "இலவசம்" என்ற வார்த்தையை மிகவும் அழுத்தமாக கூற வேண்டும், மற்றும் அவர்கள் இதைக் கேட்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - விற்பனை உத்தரவுகளை மறுப்பவரிடம் எப்படி நடந்து கொள்வது?

### கே : 130:3 :: கேள்வி (1906) - 3

புத்தகங்களை அனுப்பச் சொல்லி உத்தரவு பிறப்பித்த பிறகு, அவைகளை ஏற்க மறுப்பவர்களுடன் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

**பதில்:** கிறிஸ்தவனுக்குரிய வழிகளிலிருந்து மாறான வழியில் நடக்கவோ, அல்லது முரட்டுத்தனமாகவோ, நாம் எந்த சூழ்நிலைகளிலும் இருக்கக்கூடாது என்று நான் கூறுகிறேன்; இந்த ஒரு டஜன் புத்தகங்களின் விலைக்காக, மாபெரும் போதகரின் சார்பாளராக இருக்கும் நாம், அவருக்கு அவமதிப்பை வரவழைக்கக்கூடாது. இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறவரின் தூதர்களாக நாம் இருக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே கீழ்த்தரமான காரியங்கள் எதையும் செய்யவும், அல்லது நாம் நம்முடன் பேசக்கூடியவர்கள் கீழ்த்தரமான நோக்கம் கொண்டவர்களாயிருந்தால், அவர்கள் நிலைக்கு நாம் இறங்கிப் போகவும் நினைக்கக்கூடாது. அப்போது நாம் எப்படி செயல்பட வேண்டும்? நான் இவ்விதம் பதிலளிக்கிறேன்: நாம் மிகவும் சரியான விதமாகக் கூற வேண்டும், "நல்லது, சகோதரியே, (அல்லது, சகோதரனே) நீங்கள் முழுமையாக அறிந்து தான் புத்தகங்களை அனுப்ப உத்தரவிட்டீர்கள், மற்றும் இவைகளை நீங்கள் வாங்க மறுக்கும் போது, என்னுடைய சூழ்நிலைகளை சரியான முறையில் நீங்கள் எண்ணிப்பார்க்கவில்லை என்று நான் உண்மையில் நினைக்கிறேன். இந்த விஷயத்தைக் குறித்து உங்களைக் கூப்பிடுவதற்கும், மற்றும் உங்களிடம் பேசுவதற்கும் என்னுடைய நேரத்தின் கணிசமான அளவை இது எடுத்திருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள், மற்றும் இதற்காக எனக்கு பணம் எதுவும் செலுத்தப்படுகிறதில்லை; இது சத்தியத்தின் பேரில் உள்ள அன்பாகவும், மற்றும் உங்களுக்கு ஊழியம் செய்வதில் விருப்பமாகவும் இது இருக்கின்றது. உங்களிடம் புத்தகத்தைக் கொண்டுவருவதற்கு எனக்கு நேரம் எடுக்கிறது மற்றும் இந்த பிரயாசம் நிச்சயமாக கொஞ்சம் மதிப்புள்ளது என்பதை நீங்கள் கருத்தில் கொள்ளுங்கள். இப்பொழுது இந்த விஷயத்தில் நான் பெறுவது எல்லாம், சொசைட்டியினால் வழங்கப்படும் ஒரு அளவு தொகையாக இருக்கிறது, இது உற்பத்தி செலவின் கிரயத்தில் விற்கப்படுகின்ற இந்த புத்தகங்களிலிருந்து வரக்கூடியவற்றில் ஒரு விகிதத்தை நான் பெறுவதாக இருக்கிறது. ஒரு டாலருக்கு மூன்று புத்தகங்கள் ஒரு தொகையாக எதுவும் இருப்பதில்லை. உங்களுடைய மனதில் தவறான கருத்து இருந்தால் தவிர, இந்த விஷயத்தை விட்டு நீங்கள் பின்வாங்குவீர்கள் என்று நான் நினைக்கமாட்டேன். உங்களை தவறான அபிப்பிராயம் கொள்ளுமாறு செய்வதற்கு உங்களிடம் எவராவது ஏதேனும் ஒன்றை சொல்லியிருந்திருப்பார்கள் என்று கண்டிப்பாக எனக்குத் தோன்றுகிறது. நான் உங்களுடைய

விற்பனை உத்திரவை எடுக்கும் போது, இந்த புத்தகங்களைப் பற்றி நான் உங்களுக்குச் சொன்னதை ஒருவேளை நீங்கள் மறந்திருப்பீர்கள். இப்போது, என் நண்பரே, இந்த புத்தகத்திற்கு எதிரிகள் இருக்கின்றனர் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல அனுமதியுங்கள், ஆனால், வழக்கப்படி, இவைகளை ஒருபோதும் படித்திருக்காதவர்கள் இதற்கு எதிரிஎடுத்துக்கொள்கிறேன்களாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் அறிவுக்கூர்மையுள்ள மனுஷன் என்று . (அல்லது, மனுஷியாக இருக்கலாம் - - புத்தகத்திற்கு விற்பனை உத்திரவு அளிக்கும் ஒவ்வொருவறையும் கிட்டத்தட்ட இப்படிக் குறிப்பிடலாம்.); நீங்கள் திரளான அறிவுக்கூர்மை உடையவராக தோன்றுகிறது, மற்றும் இது குறித்து நீங்களாகவே எண்ணிப் பார்ப்பீகள் என்று நான் அனுமானிக்கிறேன். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லப்போகிறேன், நீங்கள் இந்த புத்தகங்களை எடுத்துக் கொண்டு, ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் வைத்துக்கொண்டால், நான் எங்கே இருப்பேன் என்று நான் உங்களுக்குச் சொல்வேன், மற்றும் அந்த புத்தகங்களைப் படித்த பிறகு, அவைகள் உங்களுக்கு உதவிகரமாக இல்லை என்றும், ஒரு டாலருக்கு மேல் அதிகமான மதிப்பு கொண்டதாக இல்லை என்று அப்போது நீங்கள் என்னிடம் சொல்வீர்களானால், நான் அவைகளைத் திரும்ப எடுத்துக்கொண்டு, உங்கள் பணத்தைத் திரும்பக் கொடுத்து விடுவேன். “ஆகவே நான் மிகவும் கண்ணியமான விவாதம் செய்வேன், மற்றும் நியாயமான முறையில் நான் சொல்ல முடிந்த எல்லாவற்றையும் சொல்லிய பிறகு, அவர்கள் அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று முடிவெடுத்தால், நான் வெறுமனே கூறுவேன், “நல்லது, எல்லாம் சரி; நாம் இந்த வழியிலேயே விட்டு விடுவோம்; நான் அவைகளைத் திரும்ப எடுத்துக்கொள்வேன்”.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - விற்பனை உத்தரவு மறுக்கப்படும்போது நேரம் செலவழித்தற்கு பணம் கேட்டல்.

### கே : 131:1 :: கேள்வி (1906) - 1

ஒரு சகோதரன் தன்னுடைய நேரத்திற்காக ஒருவரை பணம் செலுத்துவதற்கு கேட்டதாக அவர் சொன்னதை நான் கேள்விப்பட்டேன். அவர்கள் புத்தகங்களை எடுத்துக்கொள்வதற்கு மறுக்கும் சமயத்தில் அது சரியானது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** இது மாதிரியான விஷயமாக இருந்தால் தவிர, என்னுடைய நேரத்திற்கு அந்த நபரை எனக்கு பணம் செலுத்தச் சொல்லிக் கேட்பேன் என்று நான் நினைக்கவில்லை: புத்தகங்களை வாங்கியிருந்து, மற்றும் அவைகளுக்குப் பணம் செலுத்தியிருந்த நபராக இருந்து, அவைகளை வாசிக்க விரும்பவில்லை என்று கூறி, மற்றும் அந்த பணத்தை மறுபடியும் திரும்ப அளிக்க வேண்டும் என்று அவர் என்னைக் கேட்டால், அவரிடம் இவ்விதம் சொல்வது சரியானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்: “நல்லது, இப்போது, என் நண்பனே, அவைகளைத் திரும்ப நான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உண்மையில் நீங்கள் வலியுறுத்தினால், என்னுடைய நேரத்திற்கு ஏதாவது நான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் நிச்சயமாக விரும்புவீர்கள், மற்றும் ஆதரவு திரட்டுவதற்கு வந்து, உங்களுடன் நான் செலவழித்த நேரத்திற்கு 25 செண்ட் (One Quarter), மற்றும் புத்தகங்களை உங்களிடம் கொண்டுவந்ததற்கு 25 செண்ட் அளவில் குறைவாகவே இருக்கும் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நான் புத்தகங்களை திரும்பப் பெறுவதற்கு விரும்பவில்லை; அவைகளால் நீங்கள் பயன் அடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்; நான் இந்த பணியில் இருப்பதற்கு இதுவே காரணம் ஆகும்.” இவையெல்லாவற்றையும் அவர் பகுத்துணரும் இந்த நேரத்திற்குள், நீங்கள் அவரை புத்தகங்கள் எடுத்துகொள்வதற்கு இணங்க வைப்பதற்கு உங்களை அவர் அனுமதிக்கும் வாய்ப்பு இருக்கும்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - விலைப்பட்டியலை விட அதிக விலைக்கு விற்பனை செய்தல்.

## கே : 131:2 :: கேள்வி (1906) - 2

மற்றவைகளை நான் விற்க முடியாத இடங்களில், ஐந்து செண்ட் வால்யூம்களை அதிக எண்ணிக்கையில் விற்றிருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட நிகழ்வில், ஒரு பண்பாளர் கூறுகிறார், “நீங்கள் அவைகளை பத்து செண்ட்டுகளுக்கு விற்கிறீர்கள், மற்றும் அவைகளின் முன்பக்கத்தில் ஐந்து செண்ட்டுகள் என்று குறிக்கப்படுகின்றன.” அவைகளை ஐந்து செண்ட்டுகளுக்கு விற்பது, மற்றும் வரவு பெறாமல் இருப்பது சிறந்ததா? அல்லது எவரும் தப்பெண்ணம் கொள்வதற்கு சாய்ந்து விடாதபடிக்கு விலையை மாற்றி விடுவது சிறந்ததா?

**பதில்:** அங்கே ஐந்து செண்ட்டுகள் என்றிருப்பது சரியானதாக இருப்பதாக நான் வெறுமனே சொல்கிறேன். ஒரு பிரதி ஐந்து செண்ட்டுகள் என்று விரும்புகிறவர்களில் அநேகருக்கு நீங்கள் அனுப்ப முடியும். அவைகள் விலைக்கிரயத்திலேயே பிரசுரிக்கப்படுகின்றன. “அவைகளைக் கொண்டு வருவதற்கான என்னுடைய நேரத்திற்காக நான் ஐந்து செண்ட்டுகளை பெற்றுக்கொள்கிறேன். நீங்கள் ஒரு கணம் நிறுத்தி, இதைப் பற்றி நினைத்துப் பார்த்தால், நான் அவைகளை ஐந்து செண்ட்டுகளுக்கு குறைந்த விலையில் விற்க முடியாதவனாகவே இருக்கிறேன் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்.”

# தொகுதி விநியோகிக்கும் வேலை - வேதாகம பாடங்கள் மில்லியினியல் டாண் (MILLENNIAL DAWN) வெளியீடுகளா?

## கே : 131:3 :: கேள்வி (1906) - 3

ஒரு பெண்ணால் உத்தரவிடப்பட்ட புத்தகங்களின் ஒரு தொகுப்பை விநியோகிப்பதற்கு, நான் அவளுடைய கணவனிடம் புத்தகங்களை ஒப்படைத்தேன், மற்றும் அவருடைய மனைவி பணம் எடுப்பதற்கு உள்ளே சென்ற போது, அவர் கூறுகிறார், “இந்த புத்தகங்கள் மில்லியனியல் டாண் வெளியீடு போன்றதாக இருக்கிறதா?” நான் கூறினேன், “காலக்கணக்கு போன்ற தொடர்பானவைகளை இந்த புத்தக தொகுதி கையாளுகிறது.” அந்த பாதையிலிருந்து அவரைத் திசை திருப்பி விட்டு, பணத்தைப் பெற்றுக்கொண்டேன் மற்றும் அவ்விடத்தை விட்டு அகன்று போனேன். நான் அப்பால் சென்ற பிறகு, நான் சரியான போக்கை எடுத்திருந்திருக்க வேண்டும் என்று திகைப்புற்று, அது கொஞ்சம் மோசமானது என்று உணர்ந்தேன்.

**பதில்:** நாம் அனுமானிக்கிற எதிலும் ஒரு பகுதியை நம்முடைய மனங்களில் நாம் அளிக்க வேண்டியிருக்கின்றது என்று நான் ஒருவேளை நினைக்கிறேன். அந்த மனுஷன் மில்லியனியல் டாண் வெளியீட்டிற்கு எதிரான சில தவறான அபிப்பிராயம் கொண்டவராக இருக்கிறார் என்பதை, அவருடைய கேள்வியிலிருந்து நாம் அனுமானிக்கிறோம் மற்றும் அவருடைய தப்பெண்ணம் ஆதாரமற்றதாக இருக்கின்றது. அதைப் பற்றி சொன்னால், மில்லியனியல் டாண் என்பது என்ன என்பதைப் பற்றிய சில தவறான விளக்கம் அல்லது தவறான புரிந்துகொள்ளுதலின் அடிப்படையை இது கொண்டுள்ளதாக இருக்கிறது. நமக்கு தெரிந்த வரையில், மில்லியனியல் டாண் என்னவாக இருக்கின்றது என்று அவர் நினைக்கிற விதத்தில் இது இல்லை; ஆகவே, நீங்கள் இந்த முறையில் இதைச் செய்ததில் நீங்கள் சரியாக செயல்பட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

# தொகுதி விநியோகிக்கும் வேலை - பதிலளிப்பது குறித்து மில்லியனில் டாண்.

## கே : 132:1 :: கேள்வி (1906) - 1 -

அந்த புத்தகங்கள் மில்லியனியல் டாண் புத்தககங்களாக இருக்கின்றனவா என்று ஜனங்கள் வினவும் போது, சகோதரர் இங்கே குறிப்பிட்டிருக்கிற முறையைப் பின்பற்றலாமா என்று நீங்கள் எப்போதும் அறிவுறுத்துகிறீர்களா? `சில சமயங்களில் அவர்கள் வீட்டில்

மில்லியனியல் டாண் புத்தகங்களை வைத்திருக்கிறார்கள், மற்றும் நாங்கள் அவர்களுக்கு அந்த பாடங்களை அனுப்பினால், மற்றும் நாங்கள் சென்ற அரை மணி நேரத்திற்குப் பிறகு, அதே புத்தகங்களை அவர்கள் உடையவர்களாக இருப்பதைக் கண்டுபிடித்து, மற்றும் அதே புத்தகங்கள் தான் என்பதை நாம் அறிந்திருந்தோம் என்று அவர்கள் கண்டிப்பாக உணரும்போது, இது அவர்களை தப்பெண்ணம் கொள்ளுமாறு செய்யாதா? இது எப்பொழுதும் விவேகமானதாக இருக்குமா?

**பதில்:** நான் கூற விரும்புவது, மில்லியனியல் டாணில் இருந்தவற்றை அறிந்த நபர், அவைகளை எதிர்க்கிறவராக இருப்பது பற்றி நீங்கள் இவ்விதம் குறிப்பிடுகிற இந்த விஷயம் ஓராயிரம் தடவைகளில் ஒரு தடவை நிகழக்கூடியதாக இருக்கும் இதைக் குறித்து அவர்கள் தவறான கருத்து கொண்டிருக்கும் போது, அவர்கள் இதை எதிர்க்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட கேள்வியை நீங்கள் உடையவராக இருக்கும்போது, அவர்களின் மனங்களில் தவறான பார்வையுடன் கொண்டுள்ள கேள்வியை நீங்கள் வெறுமனே பெற்றிருக்கிறீர்கள். வேறொரு சகோதரன் இந்த வழியில் செயல்பட்டார்: அவர் கூறினார், “சில விஷயங்களில் இந்த புத்தகம் மில்லியனியல் டாணைப் போன்றே மிக அதிகமாக இருக்கின்றது, மற்றும் அத்துடன், மில்லியனியல் டாண் மிக அதிகமாக அநேக விஷயங்களை உடையதாய் இருக்கின்றது.” அந்த நபர் இதை விலைக்கு வாங்கினார், ஆனால் மில்லியனியல் டாணை விலைக்கு வாங்கவில்லை. இருப்பினும், எவர் ஒருவரும் இந்த விஷயத்தில் அவருடைய, அல்லது அவளுடைய மனசாட்சியை மீற வேண்டும் என்று நான் அறிவுறுத்துகிறதில்லை.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - விற்பனை உத்தரவின் அளவு.

### கே : 132:2 :: கேள்வி (1906) - 2

மூன்று, அல்லது ஐந்து அல்லது ஆறு புத்தகங்களடங்கிய தொகுதிகளில், இப்போது, நீங்கள் எதை அறிவுறுத்துகிறீர்கள்?

**பதில்:** தொகுதி விற்பனையாளர் ஐந்து அல்லது ஆறு அல்லது மூன்று புத்தகங்களை நன்கு விற்க முடியும் என்பது, பெருமளவில் அவரைச் சார்ந்ததாக இருக்கின்றது என்று நான் நினைக்கிறேன். எங்களுடைய அனுபவத்தைப் பொருத்த வரையில், பெரும்பாலோர் ஒரு பிரதியை எளிதாக விற்க முடிகிறதைப் போலவே, அவர்கள் மூன்று பிரதிகளை விற்க முடியும் என்று சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகிறது. ஜனங்கள் இந்த புத்தகங்களில் ஆர்வம் கொண்டவர்களாக இருந்தாலும், அல்லது இல்லாவிட்டாலும், 98 செண்ட்டுகளுக்கு மூன்று புத்தகங்களின் விற்பனை, குறிப்பிடத்தக்க வகையில் மலிவாக இருப்பது ஜனங்களைக் கவருவதாகத் தோன்றுகிறது. நீங்கள் சொல்ல முடியும், “இந்த பாடங்களின் இரண்டு தொகுப்புகள் இருக்கின்றன; முதல் தொகுதிக்கு 98 செண்ட்டுகள்; மற்ற தொகுதியின் புத்தகங்கள் தடிமனாக இருக்கின்றன, மற்றும் அவைகள் ஒவ்வொன்றையும் இப்பொழுது, அல்லது எதிர்காலத்தில் வாங்க விரும்பினால், நீங்கள் அவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.” ஆகவே, இரண்டு தொகுப்புகள் இருக்கின்றன என்பதை அவர்களை அறிந்துகொள்ளச் செய்ய வேண்டும்., ஆனால் அவைகள் வெவ்வேறான தொகுப்புகள் என்று பேசும்பொழுது, அவர்கள் ஒரு முழுமையான தொகுதியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று அவர்கள் எண்ணுவதிலிருந்து அவர்களுடைய மனதை இவ்விதமாக வெறுமையாக வைக்கிறீர்கள். ஒவ்வொரு புத்தகமும் உண்மையில் தன்னில் தானே முழுமையுடையதாக இருக்கின்றது.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - நாம் ஊழியக்காரர்களா?

### கே : 132:3 :: கேள்வி (1906) - 3

நாம் ஊழியக்காரர்களா, அல்லது இல்லையா என்று நாம் வினவப்பட்டால்?

**பதில்:** “ஆம், ஜனங்களின் கரங்களில் இந்த சுவிசேஷத்தைக் கொண்டுசெல்வதில் மிகச் சிறந்த வழியாக இருக்கும் இந்த ஊழியத்தைச் செய்யும் ஊழியக்காரனாக நான் இருக்கிறேன்.”

“நீங்கள் எந்த சபை பிரிவைச் சார்ந்திருக்கிறீர்கள்?”

கண்டிப்பாக எந்த சபை பிரிவையும் சார்ந்திராத காவற் கோபுர வேதாகமம் & பிரசுர சங்கத்தின் (Watch Tower Bbile & Society) வழிகாட்டுதலின் கீழ் நான் பணிபுரிகிறேன்.”

## தொகுதி விநியோகிக்கும் வேலை - தொகுதி விற்பனையாளர் பணி - துண்டுப்பிரதிகள் விநியோகித்தல்

### கே : 132:4 :: கேள்வி (1906) - 4

உத்தரவு பெறப்பட்ட புத்தகங்களை அவர்களிடம் ஒப்படைக்க நீங்கள் வரும் சமயத்தில், கணவன் அவைகளை வீட்டில் பெற்றுக்கொள்ள ஆட்சேபிக்கிறார், மற்றும் உங்களுக்கு தொந்தரவு ஏற்பட்டதற்கு, மனைவி உங்களுக்கு பணம் செலுத்த விரும்புகிறார், ஆனால் இறுதியில் தயக்கத்துடன் அவைகளை எடுத்துக்கொள்கிறார், இது எல்லாம் சரியானதாக இருக்கிறதா?

**பதில்:** அவர்கள் புத்தகங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையே நான் எப்பொழுதும் விரும்புகிறேன். நான் சொல்லுவேன், “அவைகள் மத சம்பந்தமான புத்தகங்கள் என்று உங்கள் கணவனிடம் நீங்கள் விவரிக்க முடியுமானால், மற்றும் அவர் அவைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், மற்றும் அவர் அந்த புத்தகங்களில் தவறு ஏதாவது கண்டுபிடித்தால், அது வேறு விஷயமாக இருக்கும்; ஆனால் அவர் அவைகளை வாசிக்கும் போது, அவைகளை வீட்டில் வைத்துக்கொள்ள அவர் சந்தோஷப்படுவார என்பதில் நான் நிச்சயமாக இருக்கிறேன்.”

## தொகுதி விநியோகிக்கும் பணி - எல்லையைத் தாண்டிப்போகுதல்

### கே : 133:1 :: கேள்வி (1906) - 1

ஆதரவு திரட்டுவதற்கு ஒருவர் தன்னுடைய எல்லைக்கு வெளியே எப்போதாவது செல்வதற்கு, இது ஆற்றைக் கடந்து அப்பால் இருந்தாலும்கூட, இது சரியானதாக இருக்குமா?

**பதில்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள எல்லைக்கு வெளியே நீங்கள் போகக்கூடாது; அவ்வாறு செய்வதற்கு உங்களுக்கு உரிமை இல்லை.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - சுறுசுறுப்பான பணிக்கு நேரம்.

### கே : 133:2 :: கேள்வி (1909) - 2

சுறுசுறுப்பான பணியைச் செய்வதற்கு தொகுதி விற்பனையாளர்கள் எவ்வளவு காலம் அனுமதிக்கப்படலாம்?

**பதில்:** நாளை வரைக்கும். ஆனால் இதற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது, ஆனால் நாளைக்கு நீங்கள் பணி உடையவர்களாக இருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - வேதாகம பாடங்கள் சபை பிரிவுகளைச் சார்ந்திருப்பதில்லை.

### கே : 133:3 :: கேள்வி (1911) - 3

தொகுதி விற்பனையாளர்களாகிய நாங்கள் வேதாகம பாடங்கள் சபை பிரிவுகளைச் சார்ந்ததில்லை என்பதை ஜனங்களுக்கு நாம் எப்படி நிரூபிக்க முடியும்?

**பதில்:** நல்லது, சில ஜனங்களிடம் நீங்கள் எதையும் நிரூபிக்க இயலாது. ஆனால் அவைகள் எந்த சபை பிரிவையும் சார்ந்ததில்லை என்று நிரூபிப்பதற்கான ஒரு வழி, அவைகள் எந்த சபை பிரிவிலிருந்தும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் காண்பிக்கிறதாக இருக்கிறது; எந்த சபை பிரிவும் அவைகளை ஆதரிக்கிறதில்லை; அவர்கள் அவற்றை வாசிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கும் வரைக்கும், அவர்கள் இந்த விஷயத்தில் எப்படியும் உங்கள் வார்த்தையை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். சபை பிரிவு ஏதேனும் அவைகளுக்கு ஒப்புதல் அளிக்கத் தயாராகும் பட்சத்தில், எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

## தொகுதி விநியோகிக்கும் வேலை - ஒருவருடைய நேரத்தின் மேல் அடமானம்

### கே : 133:4 :: கேள்வி (1916) - 4

ஒரு குறிப்பிட்ட சகோதரன் தொகுதி விற்பனையாளரின் பணியில் இருக்கிறார்; அவருக்கு தகப்பனாரும் மற்றும் இரண்டு சகோதரர்கள் இருக்கின்றனர். அவருடைய சகோதரர்கள் அவருடைய தகப்பனாரைக் கவனித்துக் கொள்ள முடியும், மற்றும் அவர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அவர் அவருடைய தகப்பனாருக்குச் செய்யும் தேவை அவருக்கு இருக்கின்றதா?

**பதில்:** இந்த விஷயம் குறித்த எல்லா விவரங்களையும் நாம் ஒருவேளை அறியாமல் இருக்கலாம், அன்புள்ள நண்பர்களே, ஆகவே இந்த வகையான கேள்விக்குரிய பதில், நாம் எல்லா விவரங்களையும் அறிந்திருப்போமானால், அப்போது இருக்கும் பதிலாக இது இருக்காது. ஆனால், இந்தப் கேள்வியைப் பொருத்தமட்டில் - இந்த கேள்வியை நாம் புரிந்துகொள்ள முடிகிற வரையில் - இந்த சகோதரன் அவருடைய தகப்பனை மற்றவர்கள் பராமரிக்கின்ற காரணத்தினால், சமயநூல் விற்பனையாளார் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் சுதந்திரத்தைக் கருத்தில் கொள்வது போன்று காணப்படுகிறது.

## கற்பனைகள் - இயேசுவை சிக்க வைப்பதற்கு முயற்சி.

### கே : 133:5 :: கேள்வி (1910 - Z) - 5

எது சிறந்த கற்பனை?

**பதில்:** தெய்வீக கற்பனைகளை ஒப்பீட்டளவில் முக்கியத்துவமுள்ளதைப் பற்றிய கேள்வியில், எல்லாவற்றிலும் சிறந்த ஒன்றாக இயேசு எதைக் கருதுகிறார் என்று அவரைக் கேட்டு, நியாயப்பிரமாண பண்டிதர்களில் ஒருவர் கர்த்தரை சிக்க வைப்பதற்கு முயற்சி செய்தார். மாபெரும் போதகர் உடனடியாக நியாயப்பிரமாணத்தின்படி, பத்துக் கற்பனைகளை இரண்டாகப் பிரித்தார் (உபா.6:5), மற்றும் பதிலளித்தார், “நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக.” இது தான் முதலாவதும், பெரிதான (முதன்மையான) கற்பனையாக இருக்கிறது. மற்றும் இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் - - “உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.” இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் இப்படிப்பட்ட சுருக்கத்திற்கு வழக்கறிஞர் என்ன சொல்ல முடியும்? அவர் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. முன்பு ஒருபோதும் இல்லாதவாறு அவர் பதிலளிக்கப்பட்டார்.

## கற்பனைகள் - அவைகள் சிலுவையில் அறையப்பட்டதா?

## கே : 134:1 :: கேள்வி (1916) - 1

பத்துக் கற்பனைகள் நிரந்தரமான பிரமாணமா, அல்லது அவைகள் சிலுவையில் அறையப்பட்டதா?

**பதில்:** பத்துக் கற்பனைகள் சிலுவையில் அறையப்படவே இல்லை. அவைகள் யூதருக்கு அளிக்கப்பட்டன, மற்றும் அவைகள் இந்நாள் வரைக்கும் அவர்கள் மேல் இன்னும் இருக்கின்றன. தேவன் இஸ்ரயேல் மீது ஏற்படுத்தின உடன்படிக்கையை, அவர் நிராகரிக்கவில்லை. அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கை இறுதியில் புதிய உடன்படிக்கையுடன் இணைக்கப்படும். தீர்க்கரிசிகளின் மூலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவர்களுடைய ஆசீர்வாதங்கள் அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின் வாயிலாக அவர்களுக்கு வரப்போவதில்லை. கர்த்தர் கூறினார், "உன்னுடைய உடன்படிக்கையைப் பார்த்துக் கொடுப்பதில்லை." (எசேக். 16:61.) இஸ்ரயேலர் புதிய உடன்படிக்கையின் புதிய மத்தியஸ்தர் தலையானவராகிய கிறிஸ்து இயேசு மற்றும் அவருடைய சரீரமாகிய சபையின் கீழ் கொண்டுவரப்படும் வரைக்கும், இஸ்ரயேலின் பழைய உடன்படிக்கை அவர்களுக்கு உரித்தாயிருக்கும். பத்துக் கற்பனைகளின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதில் யூதர்களின் விடாமுயற்சியின் விகிதத்தில் அவர்கள் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்கள் பெற்றிருந்தனர், மற்றும் பெறப் போகிறார்கள்.

சீனாயில் இஸ்ரயேலுக்கு மட்டும் அளிக்கப்பட்ட பத்துக் கட்டளைகளின் நியாயப்பிரமாணத்தின் கீழ் கிறிஸ்தவர்கள் இருக்கவில்லை. ஆனால் எங்கும் உள்ள தேவனுடைய சிருஷ்டிகள் எல்லோரும், அவர்கள் அறிந்த அளவுக்குத் தக்கதாக, பத்துக் கற்பனைகளின் ஆவிக்கு கீழ் இருக்கிறார்கள், மற்றும் நாம் எப்போதும் இருந்து வருகிறோம். நியாயப்பிரமாணத்தின் இந்த ஆவியை கர்த்தர் இயேசு வெளிப்படுத்தும் போது, இந்த நியாயப்பிரமாணம் சுருக்கமாக இரண்டு கற்பனைகளில் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது என்று கூறினார்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக." ஒவ்வொரு கிறிஸ்தவனும் அந்த கற்பனையின் கீழ் இருக்கிறான். தூதர்கள் அந்த கற்பனையின் கீழ் இருக்கிறார்கள். தேவனோடு இணக்கமாக வாழ்கிற அவருடைய சிருஷ்டிகள் எல்லாரும் தேவனை அறிய வேண்டும் மற்றும் அவர்களுடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும் மற்றும் முழுப் பலத்தோடும் அன்புகூர வேண்டும். இரண்டாம் கற்பனை, உன்னிடத்தில் நீ அன்புகூருவது போப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று இயேசு கூறினார். எல்லா கிறிஸ்தவர்களும் அந்த கற்பனையின் கீழ் இருக்கின்றனர். இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் இதன் கீழ் இருந்தனர் மற்றும் ஒவ்வொரு தூதரும் இதன் கீழ் இருக்கிறார்கள். தேவனுடைய சிருஷ்டிகள் எல்லோருக்குமான தெய்வீக சித்தம் இஸ்ரயேலின் அந்த நியாயப்பிரமாணத்தின் ஆவியாக இருந்தது, இது ஒருபோதும் கடந்து போகாது.

ஆனால் சபைக்கு மூன்றாவது கற்பனை அளிக்கப்பட்டிருக்கின்றது. இயேசு கூறினார், நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." இது சபைக்கு மட்டுமே உரியதாக இருக்கிறது. இந்த கட்டளை உலகளாவியதான பிரயோகத்துக்குரியதல்ல. இது சபைக்கு மட்டும், மற்றும் சுவிசேஷ யுகத்தில் அளிக்கப்படுகிறது. நாம் இந்த முறையில் உலகத்தையோ, அல்லது தூதர்களையோ அன்புகூருகிறவர்களாக இருக்கிறதில்லை, ஆனால் வெறுமனே ஒருவர் மற்றவரிடம் அன்புகூர வேண்டும். நாம் எந்த அளவுக்கு சகோதரர்களிடம் அன்புகூர வேண்டும்? இயேசு தம்முடைய ஜீவனை நமக்காக ஒப்புக்கொடுத்தது போன்று, அந்த அளவுக்கு அவர்களுக்காக நம்முடைய ஜீவனை கொடுக்கிறவர்களாக இருக்கிறோம். நாம் தேவனுடைய உயர்வான, மகாமேன்மையான ஆசீர்வாதங்களை உடையவர்களாக இருக்க வேண்டுமானால், நாம் அத்தகைய அன்பை வளர்த்திட வேண்டும். சிலர் இந்த அளவு அன்பு இல்லாமல் திரள்கூட்டத்திற்குள்ளாக

செல்வார்கள்., ஆனால் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாகப் போகிறவர்கள் எல்லாரும் இயேசு அவர்களை அன்புகூர்ந்தது போல, ஒருவர் மற்றவரை அன்புகூர வேண்டும். கிறிஸ்து நமக்காக எப்படி மரித்தார் என்பதைப் பற்றி பேசும்போது, அப்போஸ்தலர் கூறுகிறார், “நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்.” “ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலாக” இருக்கிற எல்லாரும் இந்த மூன்றாவது கட்டளையைக் கைக்கொள்ள வேண்டும். இவ்விதமாக மட்டுமே நாம் நம்முடைய “பலியிலான உடன்படிக்கையை” நிறைவேற்ற முடியும். இயேசு சிலுவையில் அறைந்தது என்னவாக இருந்தது? இது நியாயப்பிரமாண உடன்படிக்கையாக இருந்தது. யூதர்களுடன் தேவன் ஏற்படுத்தின **உடன்படிக்கை** அல்லது **ஒப்பந்தம்** ஆகும, இதன் கீழ் தெரிந்துகொள்ளப்படும் சபையின் ஒரு பகுதியாவதற்கான சில நம்பிக்கையை. அவர்கள் உடையவர்களாக இருந்தனர். அவர்கள் தேவனுடைய பூரண நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள முடிந்திருந்தால், அவர்கள் பூரண மனுஷர்கள் என்று மெய்ப்பித்திருக்க முடியும். அப்படியிருந்தால், மீட்கப்படுகிறவர்களாயிராமல், அவர்கள் “பலியிலான உடன்படிக்கைக்கு” மாற்றப்பட்டிருக்கக்கூடும். நிச்சயமாக, அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையை கைக்கொள்ள முடியவில்லை - - ஒரு பூரண மனுஷன் செய்யமுடிகிற எல்லா பணிகளும் அந்த உடன்படிக்கைக்குத் தேவைப்பட்டது. தேவன் இதை அறிவார், ஆனால் இஸ்ரயேலர் அறியவில்லை. அவர்கள் அவைகளை கைக்கொள்ள முடிந்தால், அவர்கள் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கலாம் மற்றும் மீட்கப்படும் தேவை இருக்காது. இயேசு வந்து, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் எல்லா தேவைகளையும் கடைப்பிடித்த போது, அந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரரானார். இப்படியாக அந்த உடன்படிக்கையின் கீழ் எல்லா நம்பிக்கைகளும் மற்றவர்களுக்கு ஒரு முடிவில் இருந்தன. அந்த உடன்படிக்கையின் கீழ் எந்த ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவின் வழியாக மட்டுமே வரக்கூடியதாக இருக்கிறது - - வேறு எந்த வழிலும் இல்லை. அந்த உடன்படிக்கை தான் சிலுவையில் அறையப்பட்டது. சீனாய் நியாயப்பிரமாணம் அளித்த இந்த ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கான அவர்களுடைய ஒரே வழி, கிறிஸ்துவிடம் வருவதினாலும், மற்றும் அவருடன் மரிக்கிறவர்களாவதினாலும் - அவருடன் பாடுபடுவதினால் மட்டுமே என்பதை சில யூதர்கள், அப்போஸ்தலர்கள் மற்றும் மற்றவர்கள் இறுதியாக உணர்ந்துகொள்ளும் நிலைக்கு வந்தனர்.

மாம்சீக இஸ்ரயேலர் பெறுவதற்கு எதிர்பார்த்திருந்தப் ஆசீர்வாதங்களில் புறஜாதிகளாக இருந்த நாம் பங்குகொள்வதற்கும், மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலில் ஒரு பகுதியாகிறவர் களாகிறோம்; ஆனால் இதை நாம் கிறிஸ்துவின் பலியிலான உடன்படிக்கையின் நியமங்களின் கீழ் அவர் மூலமாகப் பெறுகிறோம்: “பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்.” (சங். 50:5.)

## பொது அறிவு - விருப்புரிமை மற்றும் ஞானத்தைப் பயன்படுத்துதல்.

### கே : 135:1 :: கேள்வி (1912-Z) - 1

உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. (மத். 5:42.) இதை நாம் எப்படி புரிந்துகொள்ள வேண்டும்?

**பதில்:** பொருட்கள் அல்லது பணம் தொடர்பான கடன் கேட்க விரும்புகிற ஒவ்வொருவருக்கும் நாம் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறவிதமாக எதுவும் இந்த வேதவாக்கியத்தில் இருக்கவில்லை; ஆனால் தேவையில் இருக்கிறவர்களிடம் செவிடன் காதுள்ளவராக, முகங்கோணக்கூடாது. வேதவாக்கியங்கள் கூறுகின்றன, “நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்.” (லூக். 6:35) எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கு நன்மை செய்ய விருப்பங்கொள்ளும் தன்மையுடையவர்களாக நாம் இருக்க வேண்டும். ஆனால் விருப்புரிமையையும் மற்றும் ஞானத்தையும் நாம் பயன்படுத்த வேண்டும். ஒரு நபருக்கு அடிக்கடிச் செய்வதற்கான மிகச் சிறந்த காரியமாக இருப்பது, அவர் இதை திருப்பிச் செலுத்தமாட்டார் என்ற நிச்சயத்திலும்கூட, அவருக்கு கடன் கொடுப்பது தான்; இப்படியாக,

அவருடைய வருகை இனிமேல் வருவதற்கான வழி குறைந்த பட்சம் ஓரளவுக்குத் தடைபண்ணப்படுகிறது.

## பொது அறிவு - வேலையைப் பற்றிக்கொள்ளுதல்.

### கே : 135:2 :: கேள்வி (1914) - 2

சத்தியத்திற்கு புதியவரும் மற்றும் நன்கு நேசிக்கப்பப்பட்டவருமான ஒரு சகோதரன் வணிக கொள்கையினால் தன்னுடைய அந்தஸ்தை இழக்கும் ஆபத்துக்குள் இருக்க வேண்டும், அல்லது “கிறிஸ்டியன் அட்வகேட்” என்ற தலைப்பு கொண்ட இதழுக்கு சந்தாதாரராக இருக்க வேண்டும் என்று அவர் கட்டாயப்படுத்தப்பட்டார். இந்த இதழ் சத்திய ஊழியக்காரனை பழித்துரைக்கும் கட்டுரைகளை மீண்டும் மீண்டும் பிரசுரித்திருக்கிறது. இந்த சகோதரனுடைய குடும்ப அங்கங்களில் பலருக்கு தீவிரமான வியாதி காரணமாக மிகவும் அதிகமான செலவுகளை உடையவராக இருந்து, ஒரு விசித்திரமான நிலையில் வைக்கப்பட்டார். இந்த சகோதரன் எப்படி அறிவுறுத்தப்பட வேண்டும், மற்றும் அவர் மூப்பராக மறுபடியும் தேர்வு செய்யப்படலாமா?

**பதில்:** நான் அந்த சகோதரனின் இடத்தில் இருந்தால், அவசியம் ஏற்பட்டால், நான் அரை டஜன் பிரதிகளுக்கு மேல் சந்தா செலுத்துவேன். என்னுடைய வேலைக்கு நான் 6 டாலர்களை கொடுக்கலாமா? ஆம், அல்லது இது தகுதியானது என்று நான் நினைத்தால் 12 டாலர்கள் கொடுப்பேன். அந்த இதழ் சகோதரர் ரசலை பழித்துரைத்தாலும், அந்த இதழுக்கு சந்தா செலுத்தியதில் அவர் தவறு செய்தார் என்று நான் நினைக்கவில்லை. நான் அவரை மன்னிப்பேன். அந்த சகோதரன் நல்ல பொது அறிவு உடையவராயிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். மூப்பர்கள் மத்தியிலும்கூட, நமக்கு பொது அறிவு தேவைப்படுகிறது.

## ஆக்கினைத்தீர்ப்பு - இதனுடைய தடயங்கள் மற்றும் இவைகள் உயிர்த்தெழுதலில் நீக்கப்படுதல்

### கே : 136:1 :: கேள்வி (1906) - 2

மனுக்குலத்தார் உயிர்த்தெழுதலில் ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் இருப்பார்களா?

**பதில்:** சாபத்தின் கீழ் இருக்கும் பார்வையில் அவர்கள் ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் இருக்க மாட்டார்கள், ஏனெனில் நம்முடைய கர்த்தர் அவர்களுக்கான தண்டனையை செலுத்தி யிருக்கிறார், மற்றும் இதன் காரணமாக, அவர்கள் தெய்வீக தண்டனையின் கீழிருந்து, சாபத்தின் கீழிருந்து வெளியே கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மரணமாகிய தெய்வீக தண்டனையின் கீழ் இனிமேல் இருக்கமாட்டார்கள், ஆனால் அவர்கள் சாபத்தின் விளைவுகளில் சிலவற்றின் கீழ் இன்னும் இருப்பார்கள். அவர்கள் ஆக்கினைத்தீர்ப்பின் விளைவுகளின் கீழ் இருப்பார்கள், ஆனால் ஆக்கினைத்தீர்ப்பின் கீழே இருக்கமாட்டார்கள். நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியர் பாவநிவாரண நாளின் பணியை செய்து முடித்திருக்கும்போது, மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இரத்தத்தை தெளித்திருக்கும்போது, சட்டப்பூர்வமான ஆக்கினித்தீர்ப்பு கடந்து போகிறது. சந்ததியினரின் கறைகளில் காணப்படுகின்ற, ஆக்கினைத்தீர்ப்பின் தடயங்கள் இன்னும் தொடரும், மற்றும் ஆயிர வருஷ யுகத்தில் அந்த பூரணமற்ற நிலைமையிலிருந்து, இழந்துபோன எல்லாவற்றையும் முழுமையான பரிபூரணத்திற்கு மனுக்குலத்தைக் கொண்டுவருவதற்கு, சீர்பொருந்துதலின் பணி தேவைப்படுகின்றது.

## ஆக்கினைத்தீர்ப்பு - உலகத்தாரின் நீதிமானாக்கப்படுதல்

### கே : 136:2 :: கேள்வி (1909) - 2

ஆதாமின் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து மனுக்குல உலகத்தார் இப்பொழுது நீதிமான்களாக்கப்படுகிறார்களா, அல்லது அவர்கள் முதலாவது விழித்தெழுப்பப்படவும், மற்றும் அவர்கள் நீதிமான்களாக்கப்படுவதற்கு முன்பாக விசுவாசத்தை செயற்படுத்தவும் வேண்டுமா?

**பதில்:** வார்த்தையின் எந்த பார்வையிலும், உலகம் நீதிமானாக்கப்படுகிறதில்லை என்று நான் பதிலளிக்கிறேன்; அவர்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறதில்லை. தம்முடைய ஜீவனை மீட்கும் பொருளாகக் கொடுத்தவர், உன்னதத்திற்கு ஏறிப்போன போது, உலகத்தாரின் சார்பாக அவர் தம்முடைய புண்ணியத்தை ஒப்படைக்கவில்லை, ஆனால் விசுவாசக் குடும்பத்தாருக்கு, அவருடைய சரீரமாகிய அங்கங்களுக்கு ஒப்படைத்தார், மற்றும் அவர்களுக்கு மட்டுமே. இந்த புண்ணியம் சபையின் வழியாகக் கடந்து வந்திருக்கும் போது, இந்த அதே புண்ணியம் இஸ்ரயேலுடன் புதிய உடன்படிக்கையை முத்திரிக்கும், மற்றும் அப்போது இஸ்ரயேல் ஆசீர்வாதத்தையும், மற்றும் தேவனுடைய கிருபையையும் பெற்றுக்கொள்ளும், மற்றும் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வருகிற எல்லோரும் அந்த ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள், மற்றும் ஒவ்வொரு ஜாதியும், கோத்திரமும் மற்றும் பாஷைக்காரரும் தேவனிடம் வர முடிகிறவர்களாக இருப்பார்கள். அவர்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுவதில்லை; அவர்கள் உண்மையில் ஆயிர வருஷயுகத்தின் இறுதியில் நீதிமான்களாக்கப்படும் வரைக்கும், அவர்கள் எந்த சமயத்திலும் நீதிமான்களாக்கப்படுவதில்லை. நீதிமானாக்கப்படுதல் எதை அர்த்தப்படுத்துகிறது? இதற்கு சரி செய்வது என்று அர்த்தமாகும். இதற்கு ஆயிர வருஷ யுகத்தில் முழுமையான சீர்பொருந்துதலின் பணியை அர்த்தப்படுத்துகிறது, இதனுடைய இறுதியில் உலகத்தார் அனைவரும் சரிபண்ணப்படுவார்கள், மற்றும் தேவனுடன் இணக்கமாக, அவர்கள் ஆதாமினால் இழந்த எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள்.

விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படும் இந்த விஷயம் சுவிசேஷ யுகத்திற்கு மட்டுமே உரியதாயிருக்கின்றது. உலகத்திலிருந்து இந்த வித்தியாசத்தை நாம் ஏன் உடையவர் களாயிருக்கிறோம்? ஏனெனில் தேவன் இந்த தெரிந்துகொள்ளப்படும் வகுப்பாரை அழைக்கின்றார், மற்றும் நாம் ஏதோ ஒன்றை ஒப்படைக்கும் விதத்தில் அவர் நமக்கு இந்த நீதிமானாக்கப்படுதலை அளிக்கின்றார். இவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் பலியில் ஒரு பங்கைப் பெறப்போகிறார்கள், இவர்கள் மட்டுமே அவருடன் மகிமை அடையப்போகிறார்கள். இந்த நீதிமானாக்கப்படுதல் உங்களுக்கும், எனக்கும் மற்றும் விசுவாசக் குடும்பத்தார் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது, ஏனெனில் நாம் இந்த உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல, நாம் வித்தியாசமான ஆவி உடையவர்களாக இருக்கிறோம், உலகத்திலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக, குமாரனிடத்திற்கு பிதாவினால் இழுத்துக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். குமாரன் ஏற்றுக்கொள்கிறார், மற்றும் பிறகு அவர் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலை பிரயோகிக்கிறார், ஆகவே அவர்கள் அதையே பலிபீடத்தில் ஒப்படைக்கிறார்கள், மற்றும் இப்படியாக, மேலான அழைப்பில் பங்குபெறுகிறார்கள். உலகத்தில் மீதியானவர்களுக்கு, ஆயிர வருஷ யுகத்தில் இறுதியில் இருக்குமே தவிர, இப்போது நீதிமானாக்கப்படுதல் இருக்கிறதில்லை.

## ஆக்கினைத்தீர்ப்பு - விசுவாசத்தின் மூலமாக விடுதலையாக்கப்படுதல்.

### கே : 136:3 :: கேள்வி (1911) - 3

(யோவான் 5:24), “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”

**பதில்:** அது இதை அர்த்தப்படுத்துகிறது: கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் உறவுக்குள் இப்பொழுது வருகிறவர்கள் உலகத்தாருடன் அந்த வருங்கால ஆக்கினைத்தீர்ப்புக்குள் இருக்கமாட்டார்கள். மேசியாவின் ஆட்சியாகிய ஆயிர வருஷங்களின் போது உலகம் அனைத்தும் ஆக்கினைத்தீர்ப்புக்குள் இருக்கும் மற்றும் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து வெளியே வரவும்,

இதிலிருந்து வெளியே மேம்பட்டு வரவும், மற்றும் தேவனுடன் இணக்கமாகத் திரும்ப வருவதற்கான வாய்ப்பும் உடையவர்களாக இருப்பார்கள். ஆனால் இப்பொழுது இயேசுவை ஏற்றுக்கொள்கிறவர்கள் அவருடன் உறவுமுறைக்குள் வருவார்கள், மற்றும் மாபெரும் ஜீவன்-அளிப்பவருடன் முன்னதாகவே இப்போது ஐக்கியத்தில் இருக்கிறதாக எண்ணப்படுகிறார்கள் மற்றும் கருதப்படுகிறார்கள்; மற்றும் அவர்கள் அவருடன் இப்போது அந்த ஏற்பாட்டை செய்கிறவர்களாகவும், மற்றும் அவருடைய சீஷர்களாக அவருடையப் பாத அடிச்சுவடுகளில் விசுவாசத்தினால் நடக்கிறவர்களாக இருந்தால், அவர்கள் உலகத்தின் ஆக்கினைத்தீர்ப்புக்குள், உலகத்தின் நியாயத்தீர்ப்புக்குள், சோதனைக்குள்ளாக வரக்கூடிய தேவை இருக்காது. ஏனெனில் அவர்கள் உடனடியாக மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடக்கிறார்கள். அதை இவ்வாறு கூறலாம், அவர்கள் ஏற்கனவே மரணத்திலிருந்து ஜீவனுக்குள்ளாக கடந்திருக்கிறதாக எண்ணப்படுகிறார்கள்; அவர்கள் ஏற்கனவே புது சிருஷ்டிகளாகியிருப்பதாக எண்ணப்படுகிறார்கள் மற்றும் அவர்கள் ஒரு கண நேரத்தில் ஒரு இமைப்பொழுதில், முதலாம் உயிர்த்தெழுதலில், அவர்களுடைய பயணம் நிறைவு பெறும் மற்றும் அவர்கள் அவர்களுடைய கர்த்தரைப் போன்று இருப்பார்கள் மற்றும் அவருடைய மகிமையில் பங்குவார்கள்; இந்த நேரத்திற்காக அவர்கள் வெறுமனே காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

## ஆக்கினைத்தீர்ப்பு - யூதர்கள் இரட்டிப்பாக ஆக்கினைத்தீர்ப்பு அடைந்தார் களா?

### கே : 137:1 :: கேள்வி (1914) - 1

எல்லாரும் ஆதாமுக்குள் ஆக்கினைத்தீர்ப்புக்குள் இருப்பதால், யூதர்கள் இரட்டிப்பாக ஆக்கினைத்தீர்ப்பு அடைந்தார்கள் என்று சொல்வது சரியா, அல்லது அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதில் அவர்களின் தோல்வி, அவர்களுடைய ஆக்கினைத் தீர்ப்பின் கூடுதலான ஒரு நிரூபணமாக இருக்கிறது என்று நாம் சொல்ல முடியுமா?

**பதில்:** தேவனுடைய திருவசனம் இதைச் சொல்லும் முறையில் நாம் தெரிவிப்பது தான் சரியாக இருக்கும், ஏனெனில் இதைப் பற்றி நாம் மிகவும் அதிகமாக அறியவில்லை. அப்போஸ்தலர் நியாயப்பிரமாணத்தைப் பற்றி பேசுகையில், இது யூதருக்கு ஒரு விசேஷமான ஆக்கினைத்தீர்ப்பாக இருக்கிறது என்கிறார், மற்றும் அவர் புறஜாதிகளாகிய நம்மிடம் கூறுகிறார், யூதனைப் போன்று அதே ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் நாம் பெறுகிறவர்களாயிருந்தால், நாம் இரட்டிப்பான ஆக்கினைத்தீர்ப்புக்குள் பெறுகிறவர்களாக இருப்போம், இது யூதர்களைக் குறித்த விஷயத்தில் கூடுதலாக ஏதோ இருந்தது என்பதை அர்த்தப்படுத்துகிறது. அவர் கூறுகிறார், “நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா?” நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டிராத ஒவ்வொருவரும், அப்படிச் செய்யாததால் எப்படி ஆக்கினைத்தீர்ப்பு அடைந்தனர் மற்றும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாத காரணத்தினால், யூத ஜாதி முழுமையும் ஆக்கினைத்தீர்ப்பு அடைந்தனர் என்பதை அவர் சுட்டிக்காட்டுகின்றார் பிறகு அவர் காண்பிக்க முற்படுகிறார், அதாவது, யூதன் நியாயப்பிரமாணத்திற்கு மரிப்பதனால் மட்டுமே அவன் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெறுகிறான், ஆனால் சுபாவத்தில் புறஜாதிகளாக இருக்கின்ற நாம் கிறிஸ்துவுக்குள் பெற முடியும், ஏனெனில் நாம் ஏற்கனவே ஆதாமுக்குள் ஆக்கினைத்தீர்ப்பு அடைந்திருக்கிறோம். நாம் நியாயப்பிரமாணத்திற்கு மரிக்க வேண்டியதில்லை ஆனால் ஒவ்வொரு யூதனும் கிறிஸ்துவுக்குள்ளாக வருவதற்கு முன், அவன் நியாயப் பிரமாணத்திற்கு மரிக்க வேண்டியிருந்தது. ஆகவே வார்த்தையின் ஒரு பார்வையில், யூதர்கள் ஒரு மூலையைச் சுற்றி இருப்பது போல் இருந்தனர், மற்றும் கிறிஸ்துவுக்குள் வருவதற்கான வழி அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. அது எப்படி வந்தது? இந்த வழி: மனுக்குல சந்ததி முழுவதும் ஆதாமுக்குள் ஆக்கினைத்தீர்ப்பு அடைந்தனர். நாம் எல்லாரும் ஒரே சந்ததியைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம். தகப்பனாகிய ஆதாமிலிருந்து, ஒரே தண்டனை எல்லோரின் மீதும் இருந்து, நாம் அனைவரும் ஒரே மாதிரி பாவிகளாய் இருந்தோம். ஆனால்

தேவன் யூதர்களுக்கு இந்த விசேஷித்த முன்மொழிவைச் செய்தார்: இப்பொழுது நான் உங்களுக்கு ஒரு விசேஷமான காரியத்தை பரிந்துரைக்கிறேன், மனுக்குலத்தின் பொதுவான ஓட்டத்திலிருந்து நான் உங்களைத் தனியாக எண்ணுகிறேன், மற்றும் உங்களை ஒரு விசேஷித்த ஜனங்களாக நான் எண்ணுகிறேன், மற்றும் உங்களுடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் மற்றும் நான் உங்களுக்கு விசேஷமான மத்தியஸ்தர், மோசேயைக் கொடுப்பேன். இப்போது நீங்கள் ஜனங்கள் என்ற முறையில் இந்த நியமங்களின் கீழ் வருவதற்கு விரும்பினால், அப்போது இந்த நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படிதலுக்கான வாய்ப்பை நீங்கள் பெறுவீர்கள், நான் உங்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பேன், மற்றும் கீழ்ப்படியாமையினால் நான் உங்களை மரணத்திற்குள் தண்டிப்பேன் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். மற்றும் அவர்கள் கூறினாரகள், “இது ஒப்புக்கொள்ளப்படுகிறது.” மற்றும் நீங்கள் பார்க்கும் விதமாக, அவர்கள் ஆதாமின் வழியாக மரணத்திற்குள்ளான தண்டனையின் கீழ் ஏற்கனவே இருந்தார்கள், மற்றும் இப்போது முழு உலகமும் இருந்த அந்த ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து தேவன் அவர்களை நிழலாக, மற்றும் காளைகள் மற்றும் ஆட்டுக்கடாக்கள் மற்றும் கிடாரியின் இரத்தத்தின் மூலமாக, நிழலாக, அவர்களை வெளியே தூக்கி விடுகிறார். அவர் அவர்களை ஒரு புதிய மேடையில் நிழலாக இருத்தி வைக்கிறார் மற்றும் அவர் அவர்களுக்கு ஒரு புதிய நிலைமையையும், மற்றும் ஒரு விசேஷித்த உடன்படிக்கையையும் அளித்தார் மற்றும் அவர்களுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார், மற்றும் அவர்கள் அந்த உடன்படிக்கையில் அவர்களுடைய எல்லா உரிமைகளையும் பண்டமாற்றம் செய்தனர். ஆகவே, அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறிய போது, அவர்கள் அவர்களுடைய இரண்டாவது சோதனையை அடைந்தனர். அவர்கள் எதிர்கால சோதனைக்குப் பதிலாக, முன்னுரிமையாக இதை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் தங்களுடைய ஆக்கினைத்தீர்ப்பை அடைந்தனர். ஆகவே, இயேசு உலகத்துக்காக மட்டும் மரிக்கவில்லை, ஆனால் அவர் குறிப்பாக யூதர்களுக்காகவும் மரித்தார் என்பதைக் காண்பிக்க வேதாகமம் முற்படுகிறது, மற்றும் வேதாகமம் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவது என்னவெனில், “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்” என்று நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, யூதர்கள் மீது இருந்த தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் சில குறிப்பிட்ட அம்சங்கள், கிறிஸ்து குறிப்பாக அவர்களுக்காக மரிக்க வேண்டும் என்பதை அவசியமாக்கியது. “ஆகவே”, பவுல் கூறுகிறார், “அவர் நமக்காக சாபமானார் (யூதர்களுக்காக),” அவர் புறஜாதிகளுக்காக **மரத்திலே** மரிக்கும் தேவை இருக்கவில்லை. ஆதாமுக்கான தேவனுடைய சட்டத்தில், அவன் மரத்தில் மரிக்க வேண்டும் என்ற தேவை எதுவும் இருக்கவில்லை. இயேசு மரத்திலே மரிக்க வேண்டும், அதாவது அவர் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்ற தேவை தேவனுடைய சட்டத்தில் எதுவும் இருந்ததில்லை, அதாவது, ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட அசலான சட்டத்தில் எதுவும் இருக்கவில்லை; சிலுவையில் அறையப்பட்டதான, அப்படிப்பட்ட பலியிலான மரணத்தினால் ஏன் இயேசு மரித்திருக்க வேண்டியதற்கு காரணம் இல்லை; ஆனால் இது யூதனுக்கு அவசியமாயிருந்தது, ஏனெனில் அது யூத பிரமாணத்தின் உச்சக்கட்ட, உயர்வான, சாபமாக, இருந்தது, அது “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்” என்று நியாயப்பிரமாணம் சொல்கிறபடி, அந்த சாபம் விசேஷமான நிறையும் மற்றும் அழுத்தமும் கொண்டதாக, மிகவும் அறுதியான சாபமாக இருந்தது. ஆகவே பரிசுத்த. பவுல் கூறுகிறார், “நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.”

## ஜெயங்கொள்ளுகிறவர்கள் - ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலாக.

### கே : 138:1 :: கேள்வி (1916) - 1

“இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.” இந்த உரைப்பகுதியை தயவுசெய்து விளக்கவும்.

**பதில்:** இறுதியில் வெற்றி அடைகிறவர் ஜெயங்கொள்ளுகிறவராயிருக்கிறார். திரள்கூட்ட வகுப்பார் எல்லாரும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருப்பார்கள், மற்றும் இரண்டாம் மரணத்தில்

மரிக்கப் போகிறவர்களைத் தவிர, ஆயிர வருஷ யுகத்தில் மனுக்குலத்தார் அனைவரும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருப்பார்கள். ஒருவர் ஜெயிக்கிறவராக, ஜெயங்கொள்ளுகிறவரானால் தவிர, எவரும் நித்திய ஜீவனுக்குரிய ஆசீர்வாதத்தை கர்த்தரிடமிருந்து பெற மாட்டார். ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலானவர்களாக இருக்க வேண்டுமானால், பற்களை மூட கொஞ்சம் தோல் மாத்திரம் தப்பியதினால் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதைக் காட்டிலும், அதிகமான ஒன்றை,, பெரிய ஒன்றை செய்ய வேண்டியிருக்கின்றது. ஜெயங்கொள்ளுகிறவருக்கு மேலானவர் விசேஷமானதைச் செய்கிறார். உதாரணமாக, கர்த்தர் இயேசு நியாயப்பிரமாணத்தை வெறுமனே கைக்கொள்ளவில்லை, ஆனால் கூடுதலாக அவர் பலியினால், தம்முடைய ஜீவனையே ஒப்படைத்தார். ஆகவே அவர் வெறும் ஜெயங்கொள்ளுகிறவராக இருப்பதைக் காட்டிலும் மேலானவராக இருந்தார். அப்படியே இது கர்த்தர் இயேசுவின் பாத அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற எல்லோரோடும்கூட இருக்கும். நம்முடைய மனுஷீக முன்னுரிமைகள் மற்றும் இப்படிப்பட்ட எல்லா விஷயங்களையும் ஒப்படைத்து, தற்காலத்திய உரிமைகளைப் பலியிடும் பார்வையில் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நம்முடைய எஜமானரைப் போன்று, நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கும் மேலானவர்களாக இருப்போம். நம்முடைய எஜமானரின் முன்மாதிரியுடன் இணக்கமாக இருக்கும் சுய-மறுப்பு மற்றும் சுய-பலியின் இந்தப் போக்கு, வெறுமனே பாவமுள்ள காரியங்களைத் தவிர்ப்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட எல்லோரும் அவருடன் அவருடைய சரீர அங்கங்களாக, அவருடைய மகிமையில் பங்குகொள்வார்கள்.

"பாவம் பெறுகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று." (ரோமர் 5:20.) நம்முடைய கர்த்தர் இயேசுவின் புண்ணியம் விகித அளவில் சுமத்தப்படுவது தேவனுடைய கிருபையாக இருக்கிறதா? அல்லது இது தேவனுடைய பொறுமை, மன்னிப்பு, கட்டளைகள், சோதனைகள் மற்றும் சிட்சைகளாக இருக்கிறதா? இது நம்முடைய கர்த்தரின் வழியாக தேவனிடம் வருகின்ற எந்த தனிநபருக்கும் தற்காலிகமாக நீதிமானாக்கப்படுவதற்கு புண்ணியத்தின் விகித அளவாக மட்டும் தேவைப்படுகிறதா? அல்லது முழுமையாகத் தேவைப்படுகிறதா?

பெருமளவிலான தர்க்க அறிவினால் நாம் பாடங்களை நம்முடைய மனங்களில் அடிக்கடி சிக்கலாக்கி விடுகிறோம். நம்முடைய மனங்களின் செயல்முறைகளை அதிக அளவு எளிதாக்க முடியுமோ, அது சிறந்ததாக இருக்கும். வார்த்தையின் ஒரு பார்வையில், பாவம் எங்கும், மனுக்குலக் குடும்பம் முழுவதிலும் பெருகி இருக்கின்றது. ஆனால் அப்போஸ்தலருடைய எண்ணம் இதுவாக இருக்கிறது, சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினரிடமும் பாவம் பெருகியிருக்கிற நிலையில், இது மனுக்குலக் குடும்பத்தின் சில அங்கங்களில், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகப் பெருகுகிறது. சபைக்கு நீதிமானாக்கப்படுதலின் புண்ணியத்தை சுமத்துவதில், தேவன் ஒவ்வொரு நபருக்கும் ஒரே அளவு கொண்ட கிருபையை அளித்தவராயிருந்தால், சிலர் தேவைப்பட்டதை விட அதிகம் உடையவர்களாக இருந்திருப்பார்கள், மற்றவர்கள் போதுமான அளவு இல்லாமல் இருப்பார்கள். ஆகவே இந்த அறிக்கை நமக்கு இருக்கின்றது, "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று." தவறுக்கு மனம்வருந்துகிற ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளின் விகிதத்திற்கு ஏற்ப, தேவன் தம்முடைய கிருபையை கிறிஸ்துவுக்குள் வழங்குகிறார்.

பாவம் அதிகமாக இருந்தால், அப்போது கிருபையும்கூட அதிகமாக இருந்தது.; சீர்கேடு அதிகமாக இருந்தால், அதை ஈடுசெய்வதற்கு அதைப்போன்று அதிக அளவில் கிருபை இருந்தது. வேறு வார்த்தைகளில் சொன்னால், ஒவ்வொரு நபருக்கும் மிக அதிகமாக அளிக்கும் பார்வையில் தேவனுடைய கிருபை கிறிஸ்துவின் மூலமாக சமமாகப் பங்கிடப்படுகிறதில்லை, ஆனால் அவசியத்திற்கு ஏற்ப, இது ஒவ்வொருவருக்கும் சுமத்தப்படுகின்றது.

இப்பொழுது, இரண்டாவது கேள்வி: "இது நம்முடைய கர்த்தரின் வழியாக தேவனிடம் வருகின்ற எந்த தனிநபருக்கும் தற்காலிகமாக நீதிமானாக்கப்படுவதற்கு புண்ணியத்தின் விகித அளவாக மட்டும் தேவைப்படுகிறதா? அல்லது முழுமையாகத் தேவைப்படுகிறதா?" கிறிஸ்துவின் புண்ணியம் தற்காலிகமாக நீதிமானாக்குகிறதில்லை. ஒருவர் கர்த்தர் இயேசுவின் கிருபையின்

தொடர்புக்குள்ளாக வருவதற்கு முன்னால், தேவனுடைய ஏற்பாட்டில் ஒரு மனுஷனுக்கு வரக்கூடிய தெய்வீக கிருபையின் அளவைக் குறிப்பதற்கு, நாம் தற்காலிக நீதிமானாக்கப்படுதல் என்ற பதத்தைப் பயன்படுத்துகிறோம். ஒருவர் தன்னை பாவி என்று பார்க்கத் துவங்கும் போது, மற்றும் தேவனை நாடவும், மற்றும் நீதியை நாடவும், பாவத்திலிருந்து விலகும் போது, தற்காலிக நீதிமானாக்கப்படுதலின் போக்கு என்று நாம் கூறக்கூடிய பாதையை அவர் எடுத்துக்கொண்டிருக்கிறார். தேவன் ஏற்படுத்தியிருக்கிற அந்த நிலைமையை அவர் **நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்**, இது அவருக்கு இனிதாக அனுபவிக்கும்படியானதாக இருக்கலாம். ஆனால் அவர் இதை இன்னும் அடைந்திருக்கவில்லை. அவரிடம் வருகிறவர்களுக்குத் தவிர, அவருக்கு ஆசீர்வாதங்கள் இருக்கிறதில்லை, ஏனெனில் தேவன் அங்கீகரிக்கிறதை நோக்கித் திரும்பி வருகிறதில், அவர் சரியான பாதையை எடுத்திருக்கிறார். அவர் நீதியை நோக்கி முன்னேறிச் செல்கிறார் என்ற பார்வையில், அவர் தேவனுக்கு மிகவும் பிரியமாயிருக்கின்றார். அவர் தேவனிடத்தில் நம்பிக்கைக் கொள்ளும்போது, மற்றும் அவரைப் பிரியப்படுத்த நாடும் போது, அதன் விளைவாக அவர் ஒரு குறிப்பிட்ட அளவு சமாதானம் உடையவராக இருக்கிறார். ஆனால் அவர் தேவனுடைய குடும்பத்திற்குள் வந்திருக்கவில்லை, மற்றும் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படவில்லை. நீதியின் பிரமாணத்திற்கான விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் பாதையை அவர் எடுத்திருப்பதிலிருந்து, அவர் அனுபவிக்கிற ஆசீர்வாதம் அவருக்கு வந்திருக்கிறது - - அதிகமாக அல்லது கொஞ்சமாக.

இது ஆசரிப்புக்கூடாரத்தில் விரித்துரைக்கப்படுகிறது. பிராகாரத்திற்குள்ளே வரும் நபர் நீதிமானாக்கப்படுகிறதில்லை, ஆனால் நீதிமானாக்கப்படும் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறார். அவர் பலிபீடத்தைப் பார்க்கிறார், மற்றும் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்ற புரிந்துணர்வின் மூலமாக ஆசீர்வாதம் உடையவராயிருக்கிறார். அவர் இன்னும் நீதிமானாக்கப்படவில்லை. ஆனால் வெறுமனே தெய்வீக ஏற்பாட்டைப் பார்க்கிறார். அவர் கூறுகிறார், "நான் இதை நம்புகிறேன்", மற்றும் அதற்கேற்ப ஆசீர்வாதம் பெறுகிறார். அடுத்தபடியாக, தண்ணீர் தொட்டியில் கழுவுகிறதினால் சுத்திகரிக்கப்படுவதாக இருக்கிறது. அது மாம்சத்தின் அழுக்கை அகற்றிப்போடுதலை, அல்லது அவ்வாறு செய்வதற்கு முயற்சிப்பதைக் குறிக்கின்றது. அவர் இப்பொழுது நீதிமானாக்கப்படுகிறார் என்று இது அர்த்தப்படுத்துகிறதில்லை. ஒருவர் நல்லொழுக்கமில்லாத ஜீவனை வாழ்ந்து கொண்டிருக்கிறவராக இருந்தால், மற்றும் அந்த பாவங்களை அகற்றிப்போடவும், சரியான முறையில் வாழவும் முயற்சித்தால், அவர் தேவனுக்கு அருகாமையில் வந்துகொண்டு இருக்கிறார், மற்றும் அவர் மன சமாதானத்தை தானே கொண்டுவரக்கூடியவராக இருக்கிறார். அவர் சரியான மனநிலையைக் கொண்டிருந்தால், அவர் தொடர்ந்து முன்னேறிச் செல்வார், இல்லையெனில் அவர் பின்னே திரும்புவார். ஆனால் அவர் முன்னேறிச் சென்றால், அவர் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு வருவார். அவர் தன்னுடைய சொந்த திறன் எதினாலும் மேற்கொண்டு போக முடியாது. அவர் இங்கே ஆசரிப்புக்கூடார வாசலில் இணைக்கப்பட்டிருக்கிற, அல்லது கட்டப்பட்டிருக்கிற கர்த்தருடைய வெள்ளாட்டுக் கடாவினால் குறிக்கப்படுகிறார். அவர் ஒரு விசுவாசியாக நெருங்கி வந்துகொண்டிருக்கிறார்; அவர் புறம்பான பாவங்களிலிருந்து தன்னை சுத்திகரித்திருக்கிறார்; மற்றும் அவர் இப்போது **பலியின்** சிலாக்கியத்தைப் பார்க்கிற போது, அவர் வாசலில் தன்னையே கட்டிக்கொள்கிறார். இது அவர் பக்தியுள்ளவராக இருப்பதை அர்த்தப்படுத்துகிறது, அல்லது கர்த்தரிடம் தன்னையே அர்ப்பணிக்கிறார். அவர் தன்னுடைய சொந்த விருப்பத்தை ஒப்படைக்கிறார். ஆனால் இன்னும் அவர் நீதிமானாக்கப்படவில்லை. அவர் வெறுமனே நீதிமானாக்கப்படுதலை நாடுகிறார். எனினும், அவர் சரியான பாதையை எடுத்துக்கொண்டிருக்கிறார், இதை நாம் "தற்காலிக நீதிமானாக்கப்படுதல்" என்று அழைக்கிறோம், ஏனெனில் அவர் அந்த வழியில் இருக்கிறார், மற்றும் அவரை நீதிமானாக்கப்படுதலுக்கு கொண்டு வருவதற்கு அவசியமுள்ள அதிக அனுபவங்களைப் பெறுகிறார். அவர் தன்னையே நீதிமானாக்கிக் கொள்ள முடியாது. அவர் வாசலில் தன்னைக் கட்டிக்கொள்ள முடியும். அவரை எது நீதிமானாக்கும்? இங்கே ஆசாரியன் அவரை ஏற்றுக்கொள்கிறார், ஆனால் இது கூட அவரை நீதிமானாக்க முடியாது. "தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்." பிரதான ஆசாரியர் வருகிறார் மற்றும் தம்முடைய புண்ணியத்தை சுமத்துகிறார், மற்றும் பிறகு பரிசுத்த

ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் தெய்வீக ஏற்றுக்கொள்ளுதலைச் சுட்டிக்காட்டுகிறது. பலியை செலுத்தும் நோக்கத்துடன் வாசலில் தன்னையேக் கட்டிக்கொள்வதற்கு சம்மதித்த வெள்ளாட்டுக்கடாவின் பலியை ஆசாரியர் ஏற்றுக்கொள்கிறார்; அதாவது, மேலான ஜீவன் - ஆவிக்குரிய ஜீவனுக்கு பரிமாற்றம் செய்வதற்கு தற்கால ஜீவனை ஒப்படைப்பதாகும்.

நிழலில் பிரதான ஆசாரியர் வெள்ளாட்டுக்கடாவைக் கொல்லும் போது, அது பலியின் ஏற்றுக்கொள்ளுதலைக் குறிக்கின்றது. பிரதான ஆசாரியர் வெள்ளாட்டுக்கடாவுக்கு தம்முடைய புண்ணியத்தை சுமத்தியதை இது அடையாளப்படுத்தியது, ஆகவே, இது நீதிமானாக்கப்படுகிறது, பரிசுத்தமாக்கப்படுகிறது, மற்றும் தேவனால் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இப்போது, கேள்வியின் கடைசி பகுதி: “இது நீதிமானாக்குவதற்கு கிறிஸ்துவின் புண்ணியம் முழுவதுமாக, அல்லது விகித அளவிலான ஒரு பகுதி மட்டும் தேவைப்படுகிறதா?” கிறிஸ்துவின் முழு புண்ணியமும் ஒரு தனி மனுஷ சிருஷ்டிக்குத் தேவைப்படுகிறது. இருபதாயிரம் மில்லியன்கள் ஜனங்களுக்கு மத்தியில் இயேசு தம்முடைய ஜீவனை பங்கு பிரிக்கவும், மற்றும் ஒவ்வொரு தனி நபருக்கும் தம்முடைய பலியின் புண்ணியத்தின் சிறிய துண்டுகளை அவர் அளிக்க முடியாது, இதனுடைய கருத்து என்னவென்றால், **பாவம் செய்த ஒரு மனுஷனாகிய** ஆதாமை நீதிமானாக்க இயேசு பலியின் புண்ணியத்தை போதுமான அளவு உடையவராக இருந்தார், மற்றும் ஒரே மனுஷனாலே சந்ததி முழுமையும் பாவிகளானதால், கர்த்தர் இயேசுவினால் ஒப்படைக்கப்பட்ட ஜீவன், மூல பாவியையும்,, மற்றும் ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாக பாவத்திலும், மற்றும் ஆக்கினைத்தீர்ப்பிலும் பிறந்த எல்லாரையும் நீதிமானாக்குவதற்கு போதுமான அளவின் புண்ணியத்தை அளித்திருக்கிறது, இது அனைத்தும் ஒரே நடவடிக்கையாக இருக்கிறது. அந்த நடவடிக்கை இன்னும் முழுமை அடையவில்லை; ஆனால் இது இந்த யுகத்தின் இறுதியில் முழுமை பெறும். அது நடைபெற்ற உடனே, உலகத்தார் அனைவரும் இயேசுவின் பக்கம் திரும்புவார்கள், மற்றும் அவர் கர்த்தாதி கர்த்தராவார். தற்காலம் வரைக்கும் அவர் வெறுமனே தம்முடைய ஜீவனை ஒப்படைத்திருக்கிறார்; அவர் வெறுமனே அவருடைய பிதாவின் கரங்களில் வைத்திருக்கிறார். அதிகமாக எதுவும் தேவைப்படுகிறதில்லை. ஒரே பாவிக்கும், அவருடைய பாவத்தினால் மரிக்கும் அவருடைய சந்ததி முழுமைக்கும் இது போதுமானதாய் இருக்கின்றது. நீதியின் கரங்களில் ஏற்கனவே இருக்கின்ற புண்ணியம் இன்னும் சட்டப்பூர்வமாக உரியதாக்கப்படவில்லை. ஆதாமின் பாவம் மற்றும் ,மரணத்திலிருந்து எல்லா மனுஷரும் மீட்கப்படுவதற்கான முழுமையான ஏற்பாட்டுடன், இந்த புண்ணியம் இவ்விதமாக புதிய உடன்படிக்கையின் முத்திரிக்கப்படுதலில் சட்டப்பூர்வமாக பிரயோகப்படுத்தப்படும்.

கிறிஸ்துவின் புண்ணியம் சுமத்தப்படுதல் என்பதை நாம் எப்படி அர்த்தப்படுத்துகிறோம்? சபைக்கு சீர்பொருந்துதல் தேவைப்படுகிறதில்லை, ஏனெனில் கர்த்தரிடத்தில் நான் வரும்போது, தேவன் தம்முடைய குமாரன் மூலமாக சாத்தியமாக்கியிருக்கின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் இயேசுவுடன் ஒரு பங்கை நாம் பெறுவதற்காக, நாம் நம்முடைய பூமிக்குரிய உரிமைகளை ஒப்படைப்பதற்கு சம்மதித்திருக்கிறோம். நாம் அவருடைய ஆவியை உடையவர்களாயிருந்தால், நம்முடைய ஜீவனைக் கொடுத்து பிதாவின் சித்தத்தைச் செய்வதில் அர்ப்பணிக்கிறவர்களாக இருந்தால், அப்போது, தேவன் இயேசுவுக்கு அளித்தது போன்று, தெய்வீக சுபாவத்தை நமக்கு அளிப்பதற்கு பிதா பிரியமுள்ளவராக இருப்பார். (2 பேதுரு.1:4)

நம்முடைய இரட்சகரின் பாத அடிச்சுவடுகளில் நடப்பதற்கும், மற்றும் பிதாவின் சித்தத்தைச் செய்வதில் நம்முடைய பூமிக்குரிய விருப்பங்களை பலியிடுவதற்கும் விருப்பமுள்ளவர்களாயிருக்கிற நாம் சுபாவத்தில் பாவிகளாக இருக்கின்ற காரணத்தினால், நாம் எற்றுக்கொள்ளப்படாதவர்களாக இருக்கிறோம். பூரணமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய பலிபீடத்திற்கு வர முடியும். பிதா இயேசுவுடன் செயல்தொடர்பு கொண்டது போன்று நம்முடன் அவ்விதம் செயல்தொடர்பு கொள்ள முடியாது, ஏனெனில் நாம் மரண தண்டனையின் கீழ் பாவிகளாக இருக்கிறோம். தேவன் நமக்காக என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்? நாம் ஒவ்வொருவரும் ஏறத்தாழ உடல் வலிமை, ஏறத்தாழ உடல்ரீதியான ஜீவியம், ஏறத்தாழ திறன் அல்லது திறமை, ஏறத்தாழ பணம் மற்றும் ஒருவேளை வேறு சில விஷயங்களை

உடையவர்களாக இருக்கிறோம். இவைகள் நம்முடைய எல்லாமுமாக இருக்கின்றன - - எல்லாவற்றையும் நாம் கர்த்தரிடத்தில் அர்ப்பணிக்கிறவர்களாக, அல்லது ஒப்படைக்கிறவர்களாக இருக்கிறோம். நித்திய ஜீவனுக்குரிய உரிமையை நாம் கொண்டிருக்கவில்லை. - - இது வெறுமனே தகப்பனாகிய ஆதாமிடமிருந்து பெறப்பட்ட ஜீவனுடைய காலாவதியாகாத ஒரு சிறிய துண்டு. இயேசுவின் பலியின் மூலமாக நம்முடைய ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கு தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், நாம் நம்முடைய ஜீவனின் சிறிய துண்டு, மற்றும் திறனை தேவனிடம் ஒப்படைக்கிறோம், நீதிபரராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பரிந்து பேசுகிறவராகத் தம்மை ஒப்படைக்கிறார். அவர் ஒருவரே ஜீவனுக்கான உரிமை உடையவராக இருந்தார், ஆனால் மனுக்குலத்திற்காக இதை பலியாக ஒப்படைத்தார். அந்த பலியினால், அவர் காலப்போக்கில் உலகத்தாருக்கு நித்திய ஜீவனை அளிக்கும் அதிகாரம் பெற்றவராகிறார். ஆனால் உலகத்தின் சீர்பொருந்துதலின் ஏற்பாட்டில் நம்முடைய விருப்பத்தைத் துறந்தால், அவர் நமக்காக என்ன செய்வார்? அவர் நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு நம்மை திறனுள்ளவராக்குகிறார். (ரோமர் 12:1)

நாம் புரிந்துகொண்டாலும், அல்லது இல்லாவிட்டாலும், நாம் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய முற்பிதாக்களில் சிலர் புரிந்துகொள்ள முடித்ததைவிட, இப்போது சிறந்த முறையில் இந்த விஷயத்தின் தத்துவத்தை புரிந்து கொள்வது நம்முடைய சிலாக்கியமாக இருக்கின்றது, ஏனெனில் இது "புத்திமான் புரிந்துகொள்வதற்கான" தேவனுடைய ஏற்ற வேளையாக இருக்கின்றது.

நம்முடைய சரீரங்களை மரணத்துக்கு ஒப்படைப்பதற்கு நாம் விரும்புகிறபடியால், நமக்குள்ள எல்லாவற்றையும் பலிடுவதற்கு நம்முடைய ஒப்புதலை நாம் வெறுமனே அளிக்கிறோம் என்று வேதாகமம் நமக்கு சொல்கிறது. இனிவரும் யுகத்தில் உலகத்தார் எல்லாருடன், நமக்கு ஜீவன் அளித்திருக்கூடியவரான இயேசு கூறுகிறார், "**உங்களுக்கு உள்ள எல்லாவற்றையும்** அளிப்பதற்கு நீங்கள் விருப்பமுள்ளவர்களாயிருந்தால், சீர்பொருந்துதல் காலங்களில் நான் உங்களுக்கு கொடுத்திருக்க வேண்டியதை, உங்கள் சார்பாக நான் ஒதுக்கி வைப்பேன், இப்படியாக உங்களுடைய பலி பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருக்கும். அவர் காலப்போக்கில் நமக்கு அளிக்க வேண்டியதை, இப்பொழுது நம் மீது **சுமத்துகிறார்.**

அவர் ஒவ்வொருவருக்கும் ஒரே அளவில் நீதியை சுமத்துகிறதில்லை, ஏனெனில் சிலருக்கு அதிகம் தேவைப்படும், மற்றவர்களுக்குக் குறைவாகத் தேவைப்படும். காலப்போக்கில் சீர்பொருந்துதலின் காலங்களில் இதை அளிப்பதற்குப் பதிலாக, நாம் பரிபூரணத்தில் குறைவுபடும் எதையும் அவர் இப்பொழுது நமக்கு சுமத்துகிறார். கேள்வியில் உணரப்படுகின்ற சுமத்தப்படுதல், இன்று கொஞ்சம், நாளைக்கு கொஞ்சம், மற்றும் அப்படிப்பட்ட விதமாக இருக்கிறதில்லை. பிதாவினால் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னால், இந்த சுமத்தப்படுதல் எல்லாம் உடனடியாக செயற்படுத்தப்படுகிறது.

ஒருவர் விசாரிக்கிறார்: "நாம் கிருபையில் தினந்தோறும் வளரும் போது, அதற்கேற்ப இரட்சகரின் சுமத்தப்படுகின்ற புண்ணியம் குறைவாக, மற்றும் மேலும் குறைவாக நமக்குத் தேவைப்படுவதாக இருக்காதா?" இல்லை! இப்படிப்பட்ட கேள்வி, பாடம் பற்றிய தவறான எண்ணத்தைக் காண்பிக்கிறது. நம்மை ஏற்றுகொள்ளப்படத்தக்க பலிகளாக்கக்கூடிய முதலாம் சுமத்தப்படுதலுக்குப் பின்பு, வேறு சுமத்தப்படுதல் இருக்கிறதில்லை. புது சிருஷ்டிக்கு புண்ணியத்தின் சுமத்தப்படுதல் எதுவும் தேவைப்படுகிறதில்லை: ஏனெனில் புது சிருஷ்டி பாவமற்றதாக இருக்கிறது. தேவன் பலியை ஏற்றுக்கொள்ளவும், மற்றும் நம்மை புது சிருஷ்டிகளாக ஜெநிப்பிக்கவும் பழைய சிருஷ்டிக்கு சுமத்தப்படுதல் தேவைப்பட்டது. நாம் புது சிருஷ்டிகளான அந்த கணமே, பழையவை கடந்து போயின, மற்றும் எல்லாம் புதிதாயின. அந்த கணம் முதல் பழைய சிருஷ்டி மரித்ததாக எண்ணப்படுகிறது, மற்றும் நம்மால் அங்கீகரிக்கப்படுகிறதில்லை; பிதாவும் இதை அங்கீகரிக்கிறதில்லை. நாம் பழைய சிருஷ்டிகளாக

இல்லாதவர்களாகிறோம். புது சிருஷ்டிக்கு நீதிமானாக்கப்படுதல் தேவையில்லை, ஏனெனில் இது பாவம் செய்கிறதில்லை.

புது சிருஷ்டி இதனுடைய ஜெநிப்பிக்கப்படுதலின் சமயத்தில் பூரணமாக இருக்கிறதா? இல்லை! இதனுடைய உயிர்த்தெழுதலின் "மறுரூபம்" வரைக்கும், இது பூரணப்படுகிறதில்லை. ஆனால் இது குறைபாடுள்ளதாக இருப்பினும், இது பரிசுத்தமாக இருக்கிறது. பாவம் செய்வது என்பது, ஏதோ ஒன்றை உள்நோக்கத்துடன், மனதார செய்வதாகும். அறியாமை பாவம் அல்ல. நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட மாம்சத்தின் பெலவீனம் புது சிருஷ்டியின் பங்கில் பாவம் இல்லை. "தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான்." புது சிருஷ்டி இளமையாகவும், வளர்ச்சி பெறாததாகவும் இருக்கின்றது, ஆனால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர் கிருபையிலும், அறிவிலும் மற்றும் பரிசுத்த ஆவியின் கனிகள் எல்லாவற்றிலும் வளர்ச்சி பெறுவதற்கு விரும்புவார்; அவர் தன்னுடைய மாபெரும் கர்த்தரும் மற்றும் தலையானவரின் முன்மாதிரியையும், மற்றும் போதனைகளையும் பின்பற்றுவதற்கு விரும்புவார், மற்றும் பரலோக பிதாவின் சாயலில் அதிகமாக இருக்க விரும்புவார். தேவன் புது சிருஷ்டிகளாக ஜெநிப்பித்திருக்கும் எல்லாருக்கும் சகலமும் நன்மையாக செயல்படுவதற்கு தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். தேவன் அவர்களுடைய ஒவ்வொரு சோதனையையும் மற்றும் அனுபவத்தையும் ஆசீர்வதிப்பார். அவர்கள் குருட்டுத்தனமாக அல்லது பெலவீனத்தில், அவர்களுடைய பலியிடப்பட்ட மாம்சத்தைச் சார்ந்த எதுவானாலும், அவர்கள் உண்டாக்குகின்ற சறுக்கல்களையும்கூட, அவைகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் மற்றும் அதினால் வலிமை அடையும்படி, தேவன் ஆசீர்வதிக்க விருப்பமாயிருக்கிறார்.

மீறுதல் அல்லது பாவத்திற்கு மனம் வருந்துகிறவர்களை கர்த்தர் மன்னிப்பாரா? மற்றும் எந்த அடிப்படையில்? நாங்கள் பதிலளிக்கிறோம், பாவம் வெறுமனே மாம்சத்தின் பெலவீனமாக இருந்தால், அல்லது புது சிருஷ்டி ஆதரவற்ற நிலையில் உள்ள விஷயமாக இருந்தால் மட்டுமே, தேவன் இதை மாம்சத்தின் காரணமாக இருக்கிறது என்று கருதுவார் மற்றும் செய்த தவறுக்கு மனம் வருந்துகிற புது சிருஷ்டிக்கு எதிராக இதைப் பற்றிக்கொள்ள மாட்டார். ஆனால் இதிலிருந்து நீங்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பார். புது சிருஷ்டி என்ற முறையில் நீங்கள் குற்றஞ்சாட்டப்படுவதில்லை. பிதாவிடமும் மற்றும் கர்த்தர் இயேசுவிடமும் நீங்கள் போவதற்கும், மற்றும் உங்களுடைய மாம்சத்தின் பெலவீனத்திற்கு மன்னிப்பு கேட்பதற்குமான தேவை, உங்களுக்கு இருக்கின்றது. குற்றத்தை மீண்டும் மீண்டும் செய்வதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் கிருபையை நாட வேண்டும். முதலாவதாக சுமத்தப்படுதலின் அடிப்படையின் மீது தான் மன்னிப்பு அளிக்கப்படும். அது நீங்கள் மாம்சம் உடையவர்களாக இருக்கும் வரையில் உங்களுடைய பாவங்களை மூடுகிறது. இருப்பினும், நீதியில் இதனுடைய திருத்தம் பெறுவதற்கு உங்களுடைய மாம்சத்திற்கு "சிட்சைகள்" அளிக்கப்படும்.

நம்முடைய பாவங்களில் மனதார செய்யும் அளவு இருந்தால் என்னவாகும்? மனதாரச் செய்யும் கலவையின் விகிதத்திற்கேற்ப, இது பாவமாக இருக்கும். பாவத்திற்கான நம்முடைய சம்மதத்தின் அளவு எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அந்த அளவுக்கு நாம் எதிராளியுடன் இணக்கமாக இருக்கிறோம். நாம் கர்த்தருடைய பக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறோம், மற்றும் அநீதி அல்லது பாவத்தை நோக்கி அனுதாபம் எதையும் நாம் காண்பித்தால், இது ஒரு தவறான நிலைமையை உணர்த்துகின்றது. அந்த புது சிருஷ்டியின் பேரில் கர்த்தர் புண்படுத்தப்படுவார். அவர் பாவம் செய்தாரா? இல்லை, முழுமையான, மனதார வேண்டுமென்றே பாவம் செய்ததான வேதாகம பார்வையில் இது இருக்கிறதில்லை. - - அவர் மீறியிருக்கிறார். அவர் வேண்டுமென்றே பாவம் செய்தால், இது புதிய சிந்தையின் மரணத்தை அர்த்தப்படுத்துகிறது. - - புது சிருஷ்டி இனிமேல் இருப்பதில்லை. ஜீவனுக்குள்ளாக வரும் பழைய சிருஷ்டி இரண்டாம் மரணத்தின் கீழ் இருக்கும். அவர் பாவத்துடன் இணக்கமாக இருக்கவில்லை என்று புது சிருஷ்டி கர்த்தரிடம் காண்பிக்கிறவராக இருந்தால், மன்னிப்பு அளிக்கப்படும். கர்த்தர் அவருடைய நோக்கங்களை ஏற்றுக்கொள்கிறார், மற்றும் அவருடைய பரிசுத்த ஆவியை அவரிடமிருந்து எடுக்கமாட்டார். இருப்பினும், அவர் தன்னுடைய மாம்சத்தில் சிட்சைகளைப் பெறுவார்.

புது சிருஷ்டியின் மீறுதலை மன்னிப்பதில் இயேசுவின் புண்ணியம் ஈடுபடுத்தப்படுமா? இல்லை! **புது சிருஷ்டிகளின் பங்கில் பாவத்திற்கான நிவாரணம் செய்வதில்** இயேசு செய்வதற்கு ஒன்றும் இல்லை. அவருடைய பாவ நிவாரண பலி ஆதாம் மற்றும் அவருடைய சந்ததிக்காக இருந்தது, மற்றும் புது சிருஷ்டிகளுக்காக இல்லை. புது சிருஷ்டி கர்த்தரிடம் உண்மையுள்ளவராக இருப்பதில் தவறினால், அவருடைய கால்களை நேரான வழிகளில் செலுத்துவதற்கு அவருக்கு உதவியாக இருப்பதற்கு, அவர் மாம்சத்தில் சிட்சைகளை கண்டிப்பாக பெற வேண்டும். புது சிருஷ்டிகளுக்கு பாவ நிவாரணம் இருக்கிறதில்லை.

## அர்ப்பணிப்பு - தனக்காக செய்துகொள்ளும் ஏற்பாடு.

### கே : 142:1 :: கேள்வி (1909) - 1

நாம் நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் கர்த்தருக்காக ஒப்படைத்து விட்டு, நம்மைத் தவிர, கொடுப்பதற்கு வேறெதும் இயலாத நிலையில், இந்த யுகத்தின் இறுதி இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு நமக்குத் தேவையானதை சேர்த்து வைத்துக்கொள்வது தவறானதா? அல்லது நம் கைவசம் வந்த உடனேயே, நமக்குச் சொந்தமான ஒவ்வொரு நாணயத்தையும் கர்த்தர், சகோதரர்கள், மற்றும் சத்தியத்தின் ஆதாயங்களுக்காக நாம் தியாகம் செய்துவிட வேண்டுமா?

**பதில்:** சூழ்நிலைகள் வித்தியாசப்படும் என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொரு நாணயத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்பது அறிவுப்பூர்வமானதாய் இல்லை என்றும், இது கர்த்தருக்கு விருப்பமாக இருக்காது என்றே எனக்குத் தோன்றுகிறது. தேவைப்படுகிறவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று அப்போஸ்தலர் சிலருக்கு அறிவுரை கூறும் போது, சொல்கிறார். இதையே நீங்களும் கடைபிடிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். உங்கள் தேவைகளுக்காக நீங்கள் வெளியே போய் பிச்சை கேட்க வேண்டியதில்லை. உங்கள் அயலானுடைய குழந்தை இறந்து விட்டது, --- போன்ற சந்தர்ப்பங்களில் அவனுடைய தேவைக்கு நீங்கள் ஏதாவது செய்ய வேண்டுமெனில், மற்றவர்களுக்கு உதவிபுரிய வேண்டிய நிலைமையில் நீங்கள் இருக்க வேண்டும். இந்த கேள்வியைக் கேட்டவருடைய எண்ணத்தை நான் கிரகித்து, புரிந்து கொண்டேனா என்று தெரியவில்லை. ஆனால் இதைப் போன்று என்னிடம் விசாரிக்கப்பட்ட வேறொரு விஷயத்தை நான் குறிப்பிடுகிறேன், "சகோ. ரசல் அவர்களே, எனக்கு கொஞ்சம் பணம் இருக்கிறது. அதை கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுக்க விரும்புகிறேன். ஆனால் அது எனக்கு பிறகு தேவைப்படக்கூடும். இந்த பணம் இவ்வித முறையில் உபயோகப்படுத்தப்படுவதற்கு வேறு வழிமுறை, அல்லது ஏற்பாடு உங்கள் வேதாகம இல்லம் (BIBLE HOUSE) அல்லது ஆசரிப்பு கூடாரத்தில் உள்ளதா?

அதற்கு பதில் அளிக்கும் விதத்தில், நான் "ஆம்: என்று கூறினேன். இதைப் போன்று பல நண்பர்களுடன் ஒரு ஏற்பாட்டை நாங்கள் செய்திருக்கிறோம். தற்சமயம் தங்களுக்குத் தேவைப்படும் என்று நிச்சமாய் சொல்ல முடியாத நிலையில், தங்களிடம் உள்ள கொஞ்சம் பணத்தை, ஊழியத்திற்காக கொடுக்க விரும்பும் போது, பணம் பெற்றுக்கொண்டதற்கான இரசீதை அவர்களுக்குக் கொடுத்து விடுவோம். அந்த இரசீதில், பிற்காலத்தில் அந்த பணத்தில் ஒரு பகுதியோ, அல்லது முழுவதுமாக அவர்களுக்குத் தேவைப்பட்டால், அந்த பணம் திரும்ப அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். நான் பணம் கேட்கிறேன் என்று தவறாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டாம். ஆனால் உங்கள் கேள்விக்குரிய பதிலை மட்டும் இங்கு கூறுகிறேன்.

## அர்ப்பணிப்பு - கடனாக வாங்கிய பணம்.

### கே : 143:1 :: கேள்வி (1909) - (மத். 5:23,24)

"ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின்

முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடேகூட ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து." அர்ப்பணிப்புக்கு முன் உன் கடன்கள் எல்லாம் திருப்பி செலுத்தப்பட வேண்டும். என்று அர்த்தம் கொள்ளலாமா?

**பதில்:** இல்லை. அந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை. கடன் வாங்கியதால், உன் அயலானிடத்தில் நீ ஏதேனும் செலுத்த வேண்டியிருந்தால், அல்லது அவனிடமிருந்து உனக்கு வரவு ஏதும் கொடுக்கப்பட வேண்டியிருந்தால், அது வரவு-செலவு குறித்த பேரம் என்பதால், நீ அவனை ஏமாற்றவில்லை. அவன் சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, அவன் உனக்குரிய வரவை செலுத்தும் போது, அல்லது கடனை அடைக்கும் போது, அவன் சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, செயல்படுகிறான். நீ அவனை ஏமாற்றவில்லை. நீ வரவு பெறுவதை நான் ஊக்குவிக்கவில்லை. ஆனால் வேதாகம வசனத்தைக் கொண்டு ஞாபகமூட்டுகிறேன். "ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்." நான் கடன்படுவதை விட, உருளைக்கிழங்குகளையும் உப்பையும் உட்கொண்டு வாழ்வேன். உங்களுக்கு கொஞ்சம் பணம் வீட்டிலோ, அல்லது வங்கியிலோ இருக்கும் பட்சத்தில், தற்காலிக உடனடி தேவைக்கு மற்றவரிடம் பணம் பெற்றால், அதை கடன் என்று சொல்ல முடியாது. ஏனெனில் வங்கி புத்தகம் உங்களிடம் கிடைக்கும் போது, நீங்கள் அந்த பணத்தை உடனடியாக செலுத்தி விடுகிறீர்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் கடனாளியாவதை தவிர்க்க வேண்டும் என்று நான் அறிவுரை கூறுகிறேன்.

ஆனால் உன் விருப்பத்திற்கு மாறாக நீ கடன்பட்டிருக்கும் போது, நீ மற்றவரிடம் கொஞ்சம் பணத்திற்கு கடனாளியாக இருப்பதினால். பரலோக பிதாவிடம் நீ வர இயலாது என்று அர்த்தங்கொள்ள வேண்டியதில்லை. தேவனுடைய சிங்காசனத்தை அணுகும் போது, கடனாளியாயிருப்பதற்கு மன்னிப்பு கோரி, இந்த அனுபவத்திலிருந்து ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டேன் என்று உறுதி கூற வேண்டும். ஆனால், கிருபையினால் அவருடைய சிங்காசனத்தை நெருங்கி வருவதிலிருந்து கர்த்தர் நம்மை தடங்கல் செய்கிறார் என்று நான் நினைக்கவில்லை. அவருடைய கிருபையினால், நாம் நல்ல ஆரோக்கியத்துடனும், வாய்ப்புகளுடனும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போமேயானால், நாம் பிரயாசப்பட்டு கடன்களை செலுத்தித்தீர்வோம்.

ஆனால், என்னுடைய சில நண்பர்கள் தங்களை சரியான முறையில் தயார் செய்வதில் பின்வாங்கிப் போய், சகோதரர்கள் அல்லது அவர்களுடைய அயலார்களிடம் கடனாளியாகி, கடனைப் பற்றிய அனைத்து கடமையையும் மறந்து, கர்த்தருடைய நோக்கத்திற்கும், கிறிஸ்தவன் என்ற பெயருக்கும் அவமானத்தையும், அவமதிப்பையும் ஏற்படுத்துகிறார்கள். அன்புள்ள நண்பர்களே, இது போன்ற நடத்தையை மிக முழுமையாக கண்டனம் செய்ய முடியாது என்று நான் உணருகிறேன். நான் நிறைய பேர்களுடன் பேசியிருக்கிறேன். அவர்களில் சிலர் ஓரளவு நல்ல சம்பளம் வாங்குகிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் கடன்களை திருப்பி செலுத்த முயற்சிகள் ஏதும் செய்கிறதில்லை. கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார், அல்லது அவர்கள் இழப்பினை சந்திப்பார்கள் என பயப்படுகிறேன். இது ஆபத்தான நிலையைக் கொண்டுள்ளது என்று நினைக்கிறேன். மிக அதிகமான கடனைப் பெற்ற ஒருவரை நான் அறிவேன். மாதம் நூறு டாலர்கள் சம்பாதிக்கும் அளவுக்கு கர்த்தர் அவரை அனுமதித்தார். ஆனால் பணத்தை சேமித்து, தன் கடன்களை செலுத்தித் தீர்ப்பதற்கான வழிமுறையை அவர் கண்டறியவில்லை. அவருடன் ஏதோ தவறு இருந்தது என்று நினைத்தேன். ஆனால் நான் அவருடைய நியாயாதிபதி அல்ல. ஆனால் இந்த விஷயத்தை என்னுடையதாக பாவித்து, உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்: "அவர்கள் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது எவ்வளவு அரிதானது; நியாயத்தையும் நீதியையும் அயலார்களுடன் சரியான முறையில் கையாளுவதையும் தேவன் விரும்புகிறார். நீங்கள் அயலானுடன் நீதிமானாக நடக்க விருப்பமாயிருக்காவிட்டால், நீங்கள் பரிபூரண அன்பு, அல்லது நீதியின் குறியீட்டிற்கு வந்தடையமாட்டீர்கள் என்று பயப்படுகிறேன். தேவையான பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் துரதிஷ்டவசமாக கடனாளியாகி விட்டால், அதை செலுத்தித் தீர்ப்பதற்கு நமது சக்திக்குள்ளாக எல்லா முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். அந்த சகோதரன் மாதம்

ஒன்றுக்கு நூறு டாலர்கள் பெறும் பொழுது, ஐம்பது, நாற்பது அல்லது இருபது டாலர்களை ஒதுக்கி வைத்து, அந்த கடன்களைத் தீர்த்திருக்க முடியும். இது அவருக்கு நன்மையாக முடிந்திருக்கும். இது கர்த்தரை சமாதானப்படுத்தியிருக்கும் என்று நம்புகிறேன். அந்த சகோதரன் கர்த்தருக்கு மரியாதை அளிப்பவராக இருந்திருந்தால், கர்த்தர் மேல் உள்ள மரியாதை அவரை அவ்வாறு செய்ய வழிநடத்தி இருக்கும்.

## அர்ப்பணிப்பு - சொத்து மற்றும் குழந்தைகள்.

### கே : 144:1 :: கேள்வி (1909) - 1

அர்ப்பணிக்குட்பட்ட ஒருவர், தன்னுடைய பிள்ளைகளுக்கு அல்லது வாரிசுகளுக்கு அர்ப்பணிப்புக்குட்பட்ட சொத்தின் எந்த பகுதியையும் பத்திரம் எழுதிக் கொடுக்கும் உரிமை உள்ளதா?

**பதில்:** ஒவ்வொரு பெற்றோரும். தம்முடையவர்களுக்கு வழங்குவது கடமையாகும் என்று நான் நினைக்கிறேன். உதாரணமாக, உங்களுக்கு ஆறு பிள்ளைகள் உண்டென்றும், அவர்களில் சிலர் சிறியவர்களாக இருந்தால், பெற்றோர் என்ற முறையில் அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டுய கடமை உள்ளது. அவர்களை உலகத்திற்குக் கொண்டு வர சித்தமாயிருந்தீர்கள். அவர்களுக்கு முக்கியமாக, தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத அவர்களின் வாழ்க்கைப் பகுதியில், அவர்களுக்கு ஆற்ற வேண்டிய சில கடமைகள் உங்களுக்கு உள்ளன. நான் குழந்தைகளுக்கு தகப்பனாயிருக்கும் பட்சத்தில், நான் சம்பாதித்திருக்கும் சொத்தில், சில பங்கை அவர்களுக்குக் கொடுத்து, பொறுப்பாளராக இருப்பேன். பத்து வருஷங்களுக்குப் பிறகு, இதனால் எந்த மதிப்பும் இல்லை என்று நான் உணர்ந்தாலும், ஒரு குறிப்பிட்ட பகுதியை ஒதுக்கி வைப்பது சரியானது என்று நான் நினைப்பேன். நான் என்னை நிர்வகித்துக்கொள்ளும் அதே நிலையிலிருந்து அவர்களை நடத்தமாட்டேன். அவர்களுடைய சொந்த நிலையிலிருந்து தான் நான் அவர்களை நடத்துவேன்.

கேள்விக்கான பதில் எல்லாம் இவ்வளவு தான் என்று நான் நினைக்கவில்லை. ஒரு தகப்பனுக்கு நிறைய பணம் இருக்குமானால், அது தன்னுடைய பிள்ளைக்கு உரியது என்று நினைத்து, அவர்களுக்குள் பணத்தை பங்கிடலாமா? இது வேறு விதமான கேள்வி ஆகும். தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய இயலாதவர்களுக்கு வழங்குவது என்பது ஒரு விஷயம் ஆகும். தங்களிடம் இருப்பதை பங்கிட்டுக் கொடுப்பது வேறு விஷயம் ஆகும். நாம் தேவனுக்கு கணக்கு கொடுப்பவர்களாக இருக்கிறோம். நம்முடைய பிள்ளைகளுக்கு அல்ல. இவைகள் இரண்டும் வெவ்வேறு கருத்துக்கள் ஆகும். தங்கள் பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவதற்கான கடமையை தேவன் உங்களிடம் ஏற்படுத்தியுள்ளார். அவர்களுக்கு கொஞ்சம் பங்கை நீங்கள் சேர்த்து வைக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

## அர்ப்பணிப்பு - காலத்தை சரியாக உபயோகித்தல்.

### கே : 144:2 :: கேள்வி (1909) - 2

அழகானவற்றின் மீது தங்களுக்குள்ள நேசத்தை தாங்கள் திருப்திபடுத்தும் நோக்கத்தில், அர்ப்பணிப்புக்குள்ளானவர்கள் கண்காட்சிக்கு சென்றால், அது அர்ப்பணிப்பின் நேரத்தையும், பணத்தையும் வீணாக செலவழிப்பதாகுமா? அப்படி இல்லையென்றால், கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களிடமிருந்தோ, அல்லது முன்மாதிரிகளாகவோ வேத வசனக் குறிப்புகளை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பதில்:** கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் கண்காட்சிக்கு எப்போதாவது சென்றார்களா என்பது குறித்து எனக்குத் தெரியாது. சியாட்டில் நகரத்திலுள்ள கண்காட்சிக்கு அவர்கள் சென்றதாக புதிய ஏற்பாட்டில் எந்த பதிவும் இல்லை. ஆகவே, சகோதரன் எனக்கு கொடுத்த கேள்விக்கு நான் பதில்

சொல்லவும் இயலாது. நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் நடத்தையின் அடிப்படையில், இந்த பொருளுக்கு ஒரு அபிப்பிராயத்தை மட்டும் என்னால் சொல்ல முடியும். கடமையும், கர்த்தருடைய ஊழியமும், சத்தியமும் எல்லா காரியங்களையும் விட முதலிடம் வகிக்கின்றன என்பதை நாம் நம்முடைய கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள் மூலமாக தெளிவான முடிவுக்கு வரலாம். கடமை, அல்லது பொறுப்பு, அல்லது சத்திய ஊழியம் செய்யும் வாய்ப்பு ஆகியவற்றை மீறாமல், நீங்கள் கண்காட்சிக்கு போக முடியாது என்ற நிலையில், நீங்கள் அங்கு சென்றால், நீங்கள் அதிருப்தி அடைவீர்கள் என்று நான் நினைக்கிறேன். அதற்கு மாற்றாக, நமது கர்த்தர் அழகை நேசித்தார் என்று நாம் பார்க்கிறோம். லீலி புஷ்பங்கள் வளருவதைப் பார்ப்பதற்கு அவர் கண்காட்சிக்கு போகாவிட்டாலும், அவைகள் வளருவதை அவர் கண்ணுற்று, அவற்றிலிருந்து ஒரு பாடமும் கற்பித்தார். “காட்டு புஷ்பங்கள் எப்படி வளருகின்றதென்று கவனித்துப் பாருங்கள்.”

ஆவிக்குரிய பிரகாரமாக எடுத்துக்கொண்டால், அவருடைய வார்த்தைக்காக நாம் பசியும் தாகமுமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்று நான் நினைக்கிறேன். இந்த கொள்கைகளை நமக்குரியதாக்கிக் கொண்டால், நம்மில் எவரும் தங்களுடைய நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ கண்காட்சிக்கு போகலாம். அங்கு நாம் பார்க்கும், அல்லது செய்யும் ஒவ்வொரு விஷயங்களிலிருந்தும், நாம் சில நன்மை, அல்லது தீமையைப் பார்க்க முடியும். அவற்றிலிருந்து நல்ல, அல்லது கெட்ட பாடங்களைப் பெற முடியும். அங்கு நீங்கள் பார்க்கும் பொழுது, நீங்கள் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் ஏதாவது மதிப்பு மிக்க விஷயம் இருந்தால், நீங்கள் உங்கள் நேரத்தையோ, அல்லது பணத்தையோ புத்திசாலித்தனமாக உபயோகப்படுத்தினீர்கள் என்று நான் எண்ணுகிறேன். இதைப் போன்று தான், கல்வி கற்கும் போது, உங்களுக்குக் கிடைக்கும் விஷயங்களுக்காக நீங்கள் உங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கிறீர்கள். சரியான விதத்தில் இணக்கமாயிருப்பவர்களுக்கு, கண்காட்சிகள் மூலமாக சில பாடங்கள் கிடைக்கப் பெறலாம். இந்த கண்காட்சியை நான் பார்த்திருக்கிறேன் என்று அல்ல; ஆனால் மற்ற கண்காட்சிகளைப் பார்த்திருக்கிறேன், விசேஷித்த ஆயிர வருஷ யுகத்தைக் குறித்து கர்த்தர் எப்படி ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார் என்பதைக் காணும் வண்ணம், கண்காட்சியின் மூலமாக பல பாடங்களைப் பெற்றிருக்கிறேன். கடந்த சில வருஷங்களாக ஆச்சரியத்தக்க முன்னேற்றங்களைப் பார்த்து, இவைகளெல்லாம் நமக்காக எதிர்நோக்கி வருவதைப் பார்க்கிறோம். நம்முடைய இதயங்கள் சரியான முறையில் இசைவாயிருந்தால், நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள இயலும், அல்லது, ஒரு குரங்கைப் பார்ப்பதினால், அல்லது குரங்கைப் போன்று காட்சி அளிக்கவும், நடிக்கவும் சில மனுஷர்கள் முயற்சிப்பதைக் காண்பதற்கு உங்களுடைய நேரத்தையும், பணத்தையும் செலவழிக்க முடியும். அதன் பிறகு, ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சேதத்தைப் பெற்றவர்களாய், ஆபத்தான பாவத்திற்கு உள்ளாக்கப்படுவோம். தேவன் உங்களுக்காக என்னை பொறுப்பாக நியமிக்கவில்லை. எனக்காக உங்களையும் இல்லை. ஆனால் ஒவ்வொருவரும் தன்னால் இயன்றவரை பரம பிதாவை மகிமைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

## அர்ப்பணிப்பு - யேகோவா அனைவரையும் ஏற்றுக்கொள்வாரா?

### கே : 145:1 :: கேள்வி (1909) - 1

முழுமையான அர்ப்பணிப்பை கர்த்தருக்கு நாம் செலுத்த முடியுமா? கர்த்தர் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பாரா?

**பதில்:** நான் பதில் அளிக்கிறேன், ஆம். நாம் அறிந்துணர்ந்தபடி, தேவன் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி வரையில் சுவிசேஷ யுகத்தில் பொதுவான அழைப்பை நியமித்திருந்தார். இந்த அழைப்புக்கான வாசல் திறந்திருந்த வரைக்கும், எவரும் அர்ப்பணிப்புக்குட்பட்டு தேவனால் ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆனால் அந்த அழைப்பு நின்றவுடனே, அந்த நேரத்திலிருந்து காரியங்கள் வேறுவிதமாக உள்ளன. அதன் பிறகு, அர்ப்பணிப்பு என்பதற்கான அர்த்தம், தேவன் அவரை ஏற்றுகொள்கிறார் என்று கட்டாயம் இல்லை. தேவன் அவருடைய அர்ப்பணிப்பை ஏற்றுக்கொள்ளலாம், அல்லது ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம். அது எப்படி ஆகும்? கி.பி.

1881ல் கர்த்தருடைய விருப்பத்தின் முழுமையான எண்ணிக்கை அடைந்தது என்பது நமது கருத்தாகும். ஆகவே அழைப்பு முடிவுக்கு வந்து விட்டது. நாம் இங்கு ஒரு விருந்து பண்ணி, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட ஜனங்களுக்குரிய மேஜையில் இருக்கைகளை ஏற்படுத்திக் கொடுப்பது போல் அழைப்பு உள்ளது. எப்பொழுது பணியாளர் வெளியே போய், மணி அடித்துக் கூறுவான்: "இருக்கைகள் நிரப்பப்படும் வரையில் யாரும் உள்ளே வரலாம்." இருக்கைகள் நிரம்பிய பிறகு, யாரும் உள்ளே வர முடியாது. உவமைகளில் ஒன்றில் கூறப்பட்டது போல, கலியாண வஸ்திரம் தரித்தவர்கள் போன்ற உணர்வுடன் சிலர் இருப்பார்கள் என்று அனுமானித்தால், அல்லது அப்படிப்பட்டவர்கள் "நான் விருந்தில் பங்கு கொள்வேன் என்று நினைக்கவில்லை, ஆனால் சில பயிற்சிகளை மேற்கொள்வேன். நான் வெளியே போக வேண்டும்." என்று சொல்லலாம். எப்போதாகிலும் ஒருவர் விருந்தில் கலந்து கொள்ளாமல் வெளியே சென்றால், காத்திருப்பவர்களில் ஒருவரை உள்ளே அனுமதிக்குமாறு வாசலில் உள்ள பணியாளர் அறிவுறுத்தப்படுவார். கி.பி. 1881ம் வருஷத்திலிருந்து தற்காலம் வரையிலும் இதே கருத்து தான் கொண்டிருக்கிறோம்.

நினைவில் கொள்ளுங்கள், தேர்ந்தெடுக்கப்படும் வகுப்பார் என்பது சிறுமந்தை ஆவர். இவர்களுடன் திரள் கூட்டத்தாரும் இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சிறுமந்தை முன்னேறி, சந்தோஷத்துடன் விருப்பமாக தங்கள் அர்ப்பணிப்புக்குரிய விதிமுறைகளை நிறைவேற்றுகிறார்கள். ஆனால் திரள் கூட்டத்தார் பின்வாங்கிப் போகிறார்கள். சத்தியத்திலும், தேவனுடைய ஊழியத்திலும் விருப்பமான பலிகளாகும் வரையிலும் கிறிஸ்துவின் ஆவியில் இவர்கள் வளர்ச்சியைக் காணாதவர்கள்.

இத்துடன், கி.பி. 1881ம் வருஷத்தில், அதைத் தொடர்ந்த காலப்பகுதியில் மோடி, சாங்கே, விட்டல், பிளிஸ் ஆகியோர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஆச்சரியமான ஊழியங்கள் செய்து கொண்டிருந்தனர் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் நல்ல விதமாகவும், நுண்ணுணர்வு திறனுடனும் அர்ப்பணிப்பு பற்றியும், கர்த்தரின் இரண்டாம் வருகையைப் பற்றியும் பேசி, உலகத்தின் அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களைத் தூண்டினர். நான் அப்பொழுது ஆச்சரியப்பட்டேன். ஆனால் அதற்கான காரணம் புரியவில்லை.

இதற்கிடையில் நான் கேள்விப்பட்ட ஒரு விஷயத்தை சொல்கிறேன். "மில்லியனியல் டான்" என்ற புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களில் தனக்கு அளவுகடந்த நம்பிக்கை இருந்ததாக மோடி அவர்கள் மரணமடையும் தருவாயில் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார். அவருடைய மரண வேளையை இந்த புத்தகம் மகிழ்ச்சி அடையச் செய்தது குறித்து நான் கேள்வியுற்று சந்தோஷம் அடைந்தேன்.

நான் வேறு ஒரு நபரைப் பற்றியும் கேள்விப்பட்டேன். அவர் சாப்ளின் மெகேப் என்று முன்பு அறியப்பட்டுள்ள பிஷப் மெகேப் ஆவார். மிக உன்னதமான கிறிஸ்தவ மனுஷன் என்று கூறப்படுபவர். அவர் மோடி உரைத்தது போல, அதே மாதிரியான செய்தியை இவரும் சொன்னார் என்று வெளிப்படையாக, நம்பிக்கைக்குரிய ஆதாரங்கள் வழியாக நான் கேள்விப்பட்டேன். ஒரு நண்பர் வாயிலாக இந்த புத்தகங்கள் அவருடைய கவனத்தை ஈர்த்தது என்பதை நான் அறிவேன். ஆனால் இந்த இரண்டு விஷயங்களும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இவற்றைப் பிரசுரிக்காதவர்கள், இவற்றை ஒதுக்கி விடுவதால், தேவனுக்கு ஊழியம் செய்கிறதாக அவர்கள் நினைத்திருப்பார்கள் என்பது வெளிப்படையாகும்.

இப்பொழுது, நான் முன்பு சொல்லிய பிரகாரமாக, கி.பி. 1881ல் மோடி, சாங்கே, விட்டல், மற்றும் பிளிஸ் ஆகியோர் உலகம் அனைத்தையும் அர்ப்பணிப்பு பற்றிய பாடத்தின் மேல் பெரும் தூண்டுதலை எழுப்பினார்கள். வெளிப்படையாகவே திரளான எண்ணிக்கையில் கர்த்தருக்குள் அர்ப்பணிக்கப்பட்டனர். அந்த காலப்பகுதியில், அர்ப்பணிப்புக்குள்ளானவர்கள் நாற்பதாயிரம் பேர்கள் என்று ஒரு விளக்கத்துக்காகக் குறிக்கலாம். அது மிகவும் சிறிய எண்ணிக்கை என்று நீங்கள் கூறலாம். அன்புள்ள நண்பர்களே, கர்த்தர் இந்த எண்ணிக்கையிலுள்ள நபர்களைக் கண்டுபிடிக்கும் இந்த விஷயத்தை அதிகமாய் நான் நினைக்கும் போதெல்லாம். அதிகம்

அதிகமாய் ஆச்சரியப்படுகிறேன். 144,000 என்ற எண்ணிக்கை எவ்வளவு குறைவானது என்று நான் வழக்கமாக நினைத்துக் கொள்வேன். ஆனால், தேவையான இந்த எண்ணிக்கையை கண்டுபிடிப்பது எப்படி சாத்தியமாகும் என்று இக்காலத்தில் நான் ஆச்சரியமடைகிறேன். கி.பி. 1881ல் அழைப்பு முடிவு பெற்ற காலத்தில், நாற்பதாயிரம் பேர் வாழ்ந்து கொண்டிருந்தனர் என்று அனுமானம் செய்வோம். இவர்கள் கர்த்தருடைய வழியைப் பற்றிக்கொண்டார்களா, அல்லது இல்லையா, அவர்களுடைய பலியின் உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருந்தார்களா, என்பது குறித்து அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு சிறுமந்தையைத் தவிர, நாற்பதாயிரம் பேர்களில் பெரும்பாலானவர்கள் விருப்பமான பலிகளை செலுத்தியிருக்கமாட்டார்கள். நாற்பதாயிரம் பேர்கள் விஷயம் போலவே, கடந்த காலத்தில் இருந்த அனைவருடைய விஷயமும் அப்படியே இருந்திருக்கும். இந்த நாற்பதாயிரம் பேர்களில், எந்த விகிதத்தில் விசுவாசிகளாகத் தங்களை நிரூபித்திருப்பார்கள் ஒரு எடுத்துக்காட்டாக, தாராளமாக அனுமானித்து, பத்தாயிரம் பேர்கள் என்று சொல்வோம். இவர்கள் சிறுமந்தையை குறிப்பவர்களாகவும், முப்பதாயிரம் பேர்கள் திரள் கூட்டத்தைக் குறிப்பவர்கள் ஆவர். இதன் பொருள் என்ன? அவர்கள் சோதிக்கப்பட்டு, சிட்சிக்கப்படும் நிலைக்கு வரும் போது, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கை கிடைக்கிறது. தேவனுடைய நேச குமாரனுடைய நகல்களாக தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் அனைவருடைய இடங்களும் காலியாக வைக்கப்படுகின்றன. கர்த்தர் மற்றுமொரு அழைப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால் மற்றவர்கள் அந்த இடத்தை எடுத்துக்கொள்ள வருகிறார்கள்.

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது., நிரப்பப்பட வேண்டியதற்கு ஒரே ஒரு இடம் மட்டும் இருக்கும் நிலை ஏற்படும்போது, அதை யார் பெறுவார்? கிறிஸ்துவின் பண்பின் சாயலில் பெரும் பகுதியை யாருடைய இருதயத்தில் தேவன் பார்க்கிறாரோ, அவர் தான் அந்த இடத்தைப் பெறுவார் என்று நினைக்கிறேன். இது இரண்டு பேர்களுக்கு இடையே உள்ள விஷயம் அல்ல என்பதே என் கருத்தாகும். ஆனால் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் இடங்களிலிருந்து தேவைப்படும் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டியிருந்தால், கடந்த காலத்தை விட இப்பொழுது கர்த்தர் கதவுகள் மற்றும் இருதயங்களை பலருக்கு திறந்து வைப்பதாகத் தோன்றுகிறது. சத்திய அறிவு வெளிநாடுகளில் கடந்த காலத்தை விட அதிகமாக பரவி வருகிறதையும், கொஞ்ச காலத்துக்கு முன் வந்ததைப் போல, கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கான காட்சியினை அளிக்க வருபவர்கள் இருக்கிறார்கள். ஆகவே நம்மில் சிலர் சிறிது காலத்திற்கு முன்பு வந்து, தேவனால் நாம் ஏற்றுக்கொண்டதற்கான சாட்சியைப் பெற்றிருக்கிறோம். **தேவனுக்கு நன்றி**, “ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் **பற்றிக்கொண்டிரு**.” நீ அழைப்புக்குள் இருந்தது எதையும் நிரூபிப்பதில்லை என்பது தான் உண்மை. ஏனெனில் நீ வளர்ச்சி அடையாமல் கர்த்தரிடம் தொடர்ந்து அர்ப்பணிப்பிற்கு உட்படாவிட்டால், **நீ வெளியேற்றப்படுவாய்.** நாம் முழு பலத்துடன் கிரியை செய்து, நம்முடைய சொந்த இருதயங்களிலும், ஜீவியத்திலும் சத்தியத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

## அர்ப்பணிப்பு - எப்பொழுது ஒழுங்குமுறை.

### கே : 147:1 :: கேள்வி (1909 -

அர்ப்பணிப்பு எல்லா காலங்களிலும் ஒரே ஒழுங்குமுறையோடு இருந்ததா?

**பதில்:** ஒரு மனுஷன் அர்ப்பணிப்புக்குள்ளாக்கப்படுவது எப்பொழுதும் சரியானதேயாகும். யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுகம் முழுவதிலும் அர்ப்பணிப்புக்குள்ளாக்கப்படும் ஜனங்களுக்கு ஒரே ஒழுங்குமுறையாகவே இருந்து வந்திருக்கிறது. ஆபிரகாமை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்: யூத யுகத்தில் அர்ப்பணிப்புக்குள்ளானவர்களுக்கு பரம அழைப்பிற்கான பரிசு கொடுக்கப்படவில்லை. ஆனால் தேவன் அவர்களுக்கு உகந்த பரிசை அளிப்பார். சிறுமந்தை முழுமையாகி இருந்தால், வெகுமதி, அல்லது பரிசை கருத்தில் கொள்ளாமல். உங்களுக்கான எல்லாவற்றையும் கர்த்தருக்கு அர்ப்பணித்து, கர்த்தருடைய பரிசுத்தவானாவதற்கு, உங்களால் முடிந்த அளவுக்கு அதிகம் பிரயாசைப்பட்டு, அவருடைய நல்ல இரக்கம் உங்களில் நிறைவேற

செயல்பட வேண்டுமென்று நான் சொல்கிறேன். உங்கள் ஜீவனையே தியாகம் செய்யும் அளவுக்கு நீங்கள் நியாயமான ஊழியம் செய்யலாம். நம்மை அழைத்தவர் தகுதியான பரிசை அளிப்பார் என்று நாம் உறுதியாக நம்பலாம். ஒரு மகாராஜாவைப் பற்றி நீங்கள் நினைக்கையில், அவர் உங்களுக்கு மட்டமான பரிசைக் கொடுப்பாரா? இல்லை. ஆனால் அவருடைய ஐசுவரியங்கள் மற்றும் அவருடைய இராஜ்யத்தின் நிலைத்தன்மைக்கு ஒத்தவிதமாகவே இருக்கும்.

## அர்ப்பணிப்பு - சொத்தை அடமானம் வைத்த பிறகு.

### கே : 147:2 :: கேள்வி (1910) - 2

தேவனுடைய அர்ப்பணிப்புக்குள்ளான பிள்ளைகளான நாம் பெற்றிருக்கும் வெளிச்சத்துடன், இருளில் இருப்பவர்களிடமிருந்து லாபம் அடையலாமா? உதாரணமாக, சொத்தை அடமானம் வைப்பதும், அந்த சொத்துக்கு எந்த மதிப்பும் இல்லாத போது, அடமானம் முடிவுறுவது, அல்லது கடன் வாங்கி விட்டு, சொத்து ஒரு மதிப்பு இல்லாத வரைக்கும் வட்டி கட்டுவது போன்ற செயல்கள் சரியானதா?

**பதில்:** இது போன்ற விஷயத்தில், அவர் பெற்றிருக்கும் வெளிச்சத்தின் அளவு, மற்றும் அவருடைய சொந்த மனசாட்சியின்படியே ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என்பது என்னுடைய பதிலாக இருக்கிறது. என்னுடைய இந்த கேள்வி, அப்போஸ்தலர் கொண்டிருந்த கேள்வியைப் போன்றே உள்ளது. அதாவது, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போஜனங்களை சாப்பிடுவதைப் பற்றியதாகும். ஒருவன் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போஜனம் அவனுக்கு தீங்காக இருந்தது என்று அவன் நினைத்தால், அவன் அதை சாப்பிட வேண்டாம். ஆகவே, ஒருவன் இது தவறு என்று நினைத்தால், அது அவனைப் பொருத்த வரையில் தவறு ஆகும். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, அவன் எந்த தவறும் செய்யவில்லை. அவன் தன்னுடைய நம்பிக்கையின் அடிப்படையில் நடந்து கொள்கிறான். மற்ற ஜனங்கள் அவர்களுடைய நம்பிக்கையின் அடிப்படையில் நடந்து கொள்கிறார்கள். நீ உனக்குத் தெரிந்த யாவற்றையும் ஒருவனுக்கு சொன்னால், அவன் அதை அப்படியே செய்வான் மற்றும் ரகசியமாக தனக்குள்ளாக சிரித்துக்கொள்வான், மற்றும் அநேகமாக தன் நிலையிலிருந்து கீழே இறங்குவான். இதை நீங்கள் அறியவில்லை, இதை நீங்கள் அப்படியே வெறுமனே **நம்புவீர்கள்.** உங்களுடைய சொந்த நம்பிக்கையினால் உங்களின் சொந்த நடத்தையை அளவிடுங்கள், அந்த நம்பிக்கையின்படியே, இதை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

## அர்ப்பணிப்பு - பின்னர் அயலார்களுடன் ஐக்கியம் கொள்ளுதல்.

### கே : 148:1 :: கேள்வி (1909) - 1

சத்தியத்தின் கோட்பாடுகள் அனைத்திலும் இணக்கமாக இருப்பது போன்று தோன்றுகிறவர்களின் பேரில் நம்முடைய மனப்பாங்கு எப்படி இருக்க வேண்டும்? பொருத்தனை, உடன்படிக்கை போன்ற விஷயங்களில் சபை வகுப்பாருடைய நிலைக்கு எட்ட முடியாதவர்களிடத்தில், இன்னும் அவர்களுடன் நாம் கூட்டுறவைத் தொடரலாமா? சத்தியத்தை எதிர்பார்க்கிறவர்களிடத்தில் நாங்கள் அனுதாபம் கொண்டிருக்கிறோம் என்று ஏற்பு தெரிவிக்கலாமா?

**பதில்:** அவர்களிடத்தில் நமக்குள்ள மனப்பாங்கு, பவுல் அப்போஸ்தலர் ரோமர்.16:17ல் விவரித்தபடி இருக்க. வேண்டும் என்று நான் நினைக்கிறேன். **“அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.”** இதன் பொருள் என்னவெனில், வேறுவிதமான ஆவியை அவர்கள் வெளிப்படுத்தினால், சபையாரிடம் காண்பிக்கும் அதே இதயப்பூர்வமான கூட்டுறவுடன் நாம் அவர்களுடன் நடந்து கொள்ளக்கூடாது.

நாம் அவர்களிடம் கோபத்தின் எந்த ஆவியையோ, அல்லது தவறான எந்த காரியத்தை, அல்லது யாரைப் பற்றியும் எவ்விதமான தீங்கையும் பேசக்கூடாது. அவர்களுடைய மனப்பாங்குக்காக நாம் அனுதாபம் கொள்ளாமல். அவர்கள் ஆர்வத்தையும் அதைப் போன்றே நம்முடைய சொந்த ஆர்வத்தையும், மற்றவர்களின் ஆர்வத்தையும் கவனத்தில் கொண்டு, சரியான மனப்பாங்கை நாம் அவர்களிடத்தில் வெளிப்படுத்த வேண்டும். நாம் அவர்களைத் தவிர்த்து விட்டு, ஆவியிலும், சத்தியத்தின் கூட்டுறவிலும் இருப்பவர்களின் தோழமைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

இந்த கேள்வியில் 'பொருத்தனை' என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளதால், தோழமையில் நாம் யாருக்கும் எதிராக வேறுபாடு கொண்டு நடந்து கொள்வது சரியானதும், முறையானதும் இல்லை என்பது என் கருத்து ஆகும். ஏனெனில் அவனோ, அல்லது அவளோ பொருத்தனை செய்திருக்கவில்லை. "பொருத்தனை" என்பது சட்டமல்ல; இது தனிப்பட்டவரின் உரிமையாகும். நாம் பொருத்தனை பண்ணிக்கொண்டு, அதனால் ஆசீர்வாதம் பெற்றால். தேவனுக்கு நன்றி செலுத்துவோம், அவர்கள் அவ்விதம் செய்யத் தவறி ஆசீவாதத்தை இழந்தால், அதன் காரணமாக துன்புறுபவர்கள் அவர்களே. சபையில் மூப்பராகவோ, அல்லது போதகராகவோ இருக்கும் பட்சத்தில், ஒரு சிறிய வித்தியாசம் உள்ளதாக நான் நினைக்கிறேன். சபையில் வழிகாட்டியாக காணப்படுகிறவராகவோ, அல்லது மூப்பராகவோ இருந்தால், அவர் பொருத்தனை செய்து கொள்வது நியாயமாக எதிர்பார்க்க வேண்டிய ஒன்றாகும். இல்லையெனில், அவர் ஏன் பொருத்தனை செய்யவில்லை என்பதைக் கூறலாம். அப்படிப்பட்ட தலைமை பொறுப்பாளர் தன் ஜீவியத்திலோ, அல்லது நடத்தையிலோ பொருத்தனையுடன் முரண்பாடாக உள்ளார் என்று சபையார் நினைப்பதற்கு காரணமாயிருக்கும். ஏதோ சில விஷயத்தில் தன் மனதிலோ, அல்லது நடத்தையிலோ பொருத்தனையுடன் முரண்பாடு கொண்டவராக இருக்கும் எந்த மூப்பரும், அல்லது சகோதரரும் சபையின் பிரதிநிதியாக இருக்க தகுதியானவராக இல்லை என்பது என்னுடைய கருத்து ஆகும். என்னைப் பொருத்த வரையில், நியாயமான மனம் கொண்ட எந்த சகோதரரும் பொருத்தனைக்கு விரோதமாக இருக்க முடியும் என்று நான் பார்க்க முடியாது. இது கட்டுப்படுத்தக்கூடிய கடமை அல்ல என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் மூப்பர்களாக இருக்கிறவர்களிடத்தில் பெருமளவில் நமது எதிர்பார்ப்பு உள்ளது. அவர்களிடத்தில் பெருமளவில் முன்மாதிரியாகப் பின்பற்றும் விதத்திலான நடத்தையைக் காண்பது, நமக்கு நியாயமானதாகத் தெரிகிறது. ஒருவர் தலைமை பொறுப்பாளராக, அல்லது சபையின் பிரதிநிதியாக இருப்பார்கள், அப்போஸ்தலர் கூறுவது போல, சராசரிக்கு மேலாக இருக்க வேண்டும். சராசரிக்கு மேலாக இருப்பவர் யாரும் பொருத்தனைக்கு மறுப்பு தெரிவிப்பவராக இருப்பார்கள் என்று நான் பார்க்க முடியாது. அப்படி யாரும் ஏதேனும் கண்டால், அதை என்னிடம் காண்பிக்கும்படியாக அவரை என்னிடத்தில் வரவழைப்பேன்.

## அர்ப்பணிப்பு - கதவு சாத்தப்படுதல்.

### கே : 148:2 :: கேள்வி (1910) - 2

பரம அழைப்புக்காக யாரும் அர்ப்பணிப்புக்குட்பட, இன்னும் காலம் திறந்த நிலையில் உள்ளதா?

**பதில்:** அன்புள்ள நண்பர்களே, இதற்கான என்னுடைய பதில் இதுவே. தேவனுடைய அழைப்பு இந்த யுகத்தைச் சார்ந்ததாகும். நாம் புரிந்துகொண்டபடி. ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டபடி, அழைப்புக்கான காலம் முற்றியிருக்கிறது. யாரும் இப்பொழுது அழைக்கப்படவில்லை. ஏனெனில் போதுமான எண்ணிக்கையினர் ஏற்கனவே அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தையே நாம் கொண்டிருக்கிறோம். அதாவது, 1881ம் வருஷத்தில் போதுமான எண்ணிக்கையினர் அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கான ஆதாரத்தை வேதாகம பாடங்களின் இரண்டாம், மற்றும் மூன்றாம் வால்யூம்களில் காண்பித்திருக்கிறோம் என்பது உங்களுக்கு நினைவில் இருக்கும். ஒருவர் வெளியேறுவது, அல்லது ஆசாரியரில் ஒருவராவதற்கான இடத்திற்கு தகுதியுள்ளவராகக் கணக்கிடப்படுவதில் தோல்வியுறுவது, அல்லது திரள் கூட்டத்தைச் சார்ந்த லேவியரில் ஒருவர் அவருடைய இடத்தை

எடுத்துக்கொள்வற்கு, இவருடைய இடத்தை வேறு ஒருவர் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவது ஆகிய விஷயங்களை நமது கர்த்தர் அடையாளப்படுத்துகிறார் என்பது நமது எண்ணமாகும். வேதாகமம் சொல்கிறபடி, “ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.” தங்களுக்கு கிரீடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இந்த அர்ப்பணிக்குட்பட்டுள்ளவர்கள் விசுவாசத்தில் நிலைக்காவிட்டால், தனக்கான கிரீடத்தை இழந்து, விசேஷித்த அழைப்பு பெறாமல், பசியோடும் தாகத்தோடும் காத்திருக்கும் அர்ப்பணிக்குட் பட்டுள்ள ஒருவர் அதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார். ஆகவே, கேள்விக்குரிய சுருக்கமான நம்முடைய பதில் இதுவே; நீங்கள் கிறிஸ்துவுக்குள் அர்ப்பணிப்புக்குள்ளாக விரும்பினால், தேடி விசாரிப்பதை நிறுத்தக் கூடாது. இந்த விஷயத்தைப் பற்றிய உண்மையான ஆவியை உடையவராயிருந்தால். எந்த அளவுக்கு நீங்கள் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள் என்பதைக் குறித்து தேடி விசாரிப்பதை தடைபண்ணக்கூடாது. இந்த விஷயத்தில் உண்மையான ஆவி உங்களுக்குள் இருந்தால், கர்த்தருக்கு உங்கள் இருதயத்தைக் கொடுக்க விரும்பி, உங்களுடைய எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்து, நீங்கள் எவ்வளவு பெறுகிறீர்கள் என்பது எதுவாயிருந்தாலும், நீங்கள் கொடுப்பதைப் போல பத்து மடங்கு பெற விரும்புவீர்கள். நீங்கள் பூமிக்குரிய ஜீவனை மட்டும் பெறுவதானால், நீங்கள் உங்களை அர்ப்பணிப்புக்குள்ளாக்க வேண்டும், வேறு எந்த ஆவியும் தவறான ஆவி ஆகும். ஆகவே உங்களுடைய அர்ப்பணிப்பைச் செய்து, அவர் என்ன பரிசை உங்களுக்குக் கொடுக்கப் போகிறார் என்பதை கர்த்தருக்கு விட்டு விட வேண்டும். பூமியில் உயரிய மனுஷன் செய்வதைப் போல, ஆவியின் தளத்தில் மகத்துவமுள்ள தேவன் மிக அதிகமாய் செய்வார். நீ ஒரு ராஜாவுடன் செயல்தொடர்பு கொண்டு, அவனுக்கு சிறிய சேவை செய்தால், அவன் ஒரு பைசாவை கொடுப்பான் என்று நீங்கள் எதிர்பார்க்கமாட்டீர்கள். அவன் பணக்கார ராஜாவாயிருந்தால், உங்களுக்கு ஏதாவது செய்வானாகில், உங்களுக்கு ஒரு டாலர் கொடுக்கலாம். நமது பரலோக பிதாவினுடைய விஷயத்தில், அவர் வெகுமதிகளைக் கொடுக்கும் போதெல்லாம், அவருடைய இரக்கத்தின் ஐசுவரியங்களின்படி, நீங்கள் கேட்கவோ, நினைக்கவோ முடியாத அளவுக்கு, மிகவும் அதிகமாக இருக்கும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

## அர்ப்பணிப்பு - ஞானஸ்நானம் எடுக்கும் போது புரிவதில்லை.

### கே : 149:1 :: கேள்வி (1910) - 1

ஞானஸ்நானம் எடுக்கும் சமயத்தில் முழுமையான முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளாதவர்களைப் பற்றிய தங்களுடைய கருத்து என்ன?

**பதில்:** அன்புள்ள நண்பர்களே, அர்ப்பணிப்பை புரிந்து கொள்ளாமல், அவர்கள் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தால், அவர்கள் “முழுக்கு”, வெறும் குளியல் மட்டுமே. இது அவர்களைப் பாதிக்கவும் இல்லை. சிறிதும் உதவி செய்யவும் இல்லை. அர்ப்பணிப்பை புரிந்து கொள்ளாத எவரும் ஞானஸ்நானத்தை புரிந்து கொள்வதில்லை. நமக்கு இருக்கும் அர்ப்பணிப்பின் பொருத்தனை தான் முதலாவது ஆகும். அது தான் உண்மையான ஞானஸ்நானம். வெறும் அடையாளமாகவே இருக்கக்கூடிய “தண்ணீரில் அடையாளம்” என்பது, அதைப் பின்தொடர வேண்டுமே தவிர, அதற்கு முன்பாக அது போகக்கூடாது.

## அர்ப்பணிப்பு - எல்லாவற்றையும் விற்றுவிடுதல்.

### கே : 149:2 :: கேள்வி (1910-Z) - 2

தயவு செய்து பின்வரும் வசனப்பகுதிகளை விளக்கவும்: “போய், உனக்கு உண்டானவைகளை விற்று - தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். - அப்பொழுது, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்.” நாம் இதைப் பின்பற்றி, போதகரின் ஆலோசனையின்படி செய்யலாமா?

**பதில்:** நமது கர்த்தரின் கருத்துரைக்கு ஒப்புதல் அளித்திருந்து, இது குறித்தான விவரங்களை மேற்கொண்டு அந்த வாலிபன் விசாரித்திருந்தால், விற்றுப்போடுவதும், ஏழைகளுக்குக் கொடுப்பதும் உடனடியாக செய்து முடிக்க வேண்டியதில்லை என்றும், தேவைகள் ஏற்படும் சமயத்தில் படிப்படியாக இதை செய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கும் அளவிற்கு கர்த்தர் தம் கூற்றை மாற்றியிருப்பார். அப்போஸ்தலருடைய வாக்கின்படி, "உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக." தேவையை சரிசெய்யும் விதமாக, நாம் நம்முடைய பூமிக்குரிய பொருள்களையும், பூமிக்குரிய வாய்ப்புகளையும், உலகியல் தன்மைகளையும் மிகுந்த சாந்தத்துடனும், சுயத்தை வெறுத்தும், ஏற்படுகின்ற தேவையை சரிசெய்யும் விதமாக உபயோகிக்க வேண்டும்.

கருணை, இரக்கம், அனுதாபம், அன்பு ஆகியவற்றை நாம் அபரிமிதமாகக் கொண்டிருக்க வேண்டும். தம்முடைய சிரசையும், பாதங்களையும் கூட தைல அபிஷேகம் பண்ணுவதற்கு மரியாளை நமது கர்த்தர் அனுமதித்ததும். இந்த சீராட்டுகளும், வெளிப்பாடுகளும் இவ்வுலகத் தன்மை கொண்டதல்லவா? லாசரு, மார்த்தாள், மரியாள், யாக்கோபு, யோவான், மற்றும் தம்முடைய தாய் ஆகியோர் மீது நமது கர்த்தர் கொண்டிருந்த விசேஷித்த அன்பை தெரியப்படுத்த பல்வேறு விஷயங்கள் உள்ளன. இதே முறையைப் பின்பற்ற இவைகளெல்லாம் அடித்தளமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தம்முடைய பிதாவின் ஊழியத்திலிருந்து பூமிக்குரிய பாச நேசங்கள் தம்மை தடைபண்ணுவதற்கு இயேசு அனுமதிக்கவில்லை. அப்படியே, நாமும் கூட பிதாவின் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## அர்ப்பணிப்பு - கி.பி. 1881ம் வருஷத்துக்கு முன்பு.

### கே : 150:1 :: கேள்வி (1911 - Z) - 1

சிறுமந்தையாக வேண்டுமானால், கிபி 1881 அக்டோபரில், அல்லது அதற்கு முன்பாக அர்ப்பணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமா?

**பதில்:** இல்லை. இந்த விஷயத்தை நாங்கள் அப்படி புரிந்துகொள்ளவில்லை. யூத மற்றும் கிறிஸ்தவ யுகங்களுக்கு இடையே உள்ள இணைகளைக் காண்பிக்கும் வேதாகம பாடங்கள், 2ம் வால்யூமின் அதிகாரத்தில் முக்கியமான தேதிகள் குறிக்கப்படுகின்றன. (1) அக்டோபர், 1874. (2) ஏப்ரல், 1878. (3) அக்டோபர், 1881. (4) அக்டோபர், 1914. இந்த தேதிகள் யூத அறுவடையில் நான்கு இணைகளாக உள்ளன. அதாவது, (1) நம்முடைய கர்த்தருடைய ஊழியத்தின் துவக்கம்; யூத ஜாதியினரின் சோதனை துவக்கம், அல்லது அறுவடை காலத் துவக்கம் - அக்டோபர், கி.பி. 29ம் வருஷம். (2) நமது கர்த்தருடைய ஊழியத்தின் முடிவு, அவருடைய சிலுவை மரணம் மற்றும் ஒரு 'ஜாதி' என்ற நிலையிலிருந்து யூத ஜாதி புறம்பாக்கிப் போடப்படுதல் - ஏப்ரல், கி.பி. 33ம் வருஷம். (வேதாகம பாடங்கள் - வால்யூம் 2, 7ம் அதிகாரத்தைப் பார்க்கவும்) (3) யூத ஜாதியின் மேல் இருந்த கிருபையின் காலம் "70 வாரங்கள்" (தானி. 9:20-22.) முடிவுக்கு வந்தது - அக்டோபர், கி.பி. 36ம் வருஷம். இதற்குப் பிறகு புற ஜாதிகளுக்கு சுவிசேஷ சலுகைகள் திறக்கப்பட்டன. புற ஜாதிகளில் முதன்முதலாக மாறியவர் கொர்நெலியு. (4) இஸ்ரயேல் ஒரு தேசமாக இருந்த அமைப்பின் மீது வந்த உபத்திரவம் மற்றும் அழிவின் முழுமையான முடிவு. - அக்டோபர், கி.பி. 69ம் வருஷம்.

யூத மற்றும் சுவிசேஷ யுகங்களுக்கு இடையில் உள்ள இணைகள் **முந்தைய மற்றும் தற்போதைய பேர்ச்சபை அமைப்புகளுக்குரியவை** என்பதை தெளிவாக கண்டுணர வேண்டும். இதை மனதில் இருத்திக் கொள்வோமானால், சுவிசேஷ சபையிலிருந்து கூட்டிச் சேர்ப்பதையோ, அல்லது இப்பொழுது பாபிலோனிலிருந்து கர்த்தருடைய ஜனங்களைப் பிரித்தெடுப்பதற்கோ, இந்த இணைகளை நாம் கையாளுவதிலிருந்து நம்மைத் தடுக்கும்.

இந்த இணைகளைப் பார்க்கும் போது, இந்த “அறுவடையின்” ஆரம்பமாகவும், நான்கு காற்றுகளிலிருந்து “தெரிந்துகொள்ளப்பட்டவர்களை” கூட்டிச் சேர்ப்பதின் ஆரம்பமாகவும் கி.பி. 1874ம் வருஷம் இருப்பதை நாம் காண்கிறோம்; கி.பி. 1878ம் வருஷம் பாபிலோன் பொதுவாகப் புறம்பாக்கிப் போடப்படும் காலமாயிருந்தது., லவோதேக்கியா வாந்திப்பண்ணிப் போடப்பட்டது. - இந்த காலப்பகுதியிலிருந்து தான், தேவ கிருபையிலிருந்து விழுந்து போய், “பாபிலோன் விழுந்தது, விழுந்தது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. 1881ம் வருஷத்தின் இணையானது, இந்த அமைப்பு புறம்பாக்கிப் போடப்பட்டாலும், பாபிலோனில் இருப்பவர்களுக்கு சில குறிப்பிட்ட கிருபைகள் இன்னும் அந்த வருஷம் வரையில் நீட்டிக்கப்பட்டது என்பதை உணர்த்துவதாய் உள்ளது. இந்த வருஷத்திலிருந்து ‘உறவு’ என்பது எந்த கோணத்திலும் சுமூகமாயிருந்து வருகிறதில்லை. ‘உறவு’ என்பது பல கோணங்களில் தெளிவாக அனுகூலமின்மையாகவே இருந்து வருகிறதையும், இவற்றிலிருந்து கர்த்தரின் கருணையினாலும், சத்தியத்தின் துணையினாலும் மிகுந்த கஷ்டத்துடனே யாவரும் தங்களை விடுவித்துக்கொள்ள முடிகிறது. இந்த இணைக்கு இசைவாக, “பெரிய எந்திரக்கல் சமுத்திரத்திலே எறிந்து விடப்பட்டது” போல, பாபிலோன் ஒரு அமைப்பாக, முழுவதுமாக அழிந்து முடிவுக்கு வந்ததை அக்டோபர் 1914ம் வருஷம் சாட்சியிடும்.

மாம்சீக இஸ்ரயேலர் மேல் இருந்த கிருபைகளின் முடிவு, இந்த சுவிசேஷ யுகத்தின் விசேஷித்த கிருபை, அதாவது, பரம அழைப்பிற்கான அழைப்பின் முடிவை அடையாளப்படுத்துகிறது. இதன்படியே, இராஜ்யத்தின் மகிமைக்கான இந்த யுகத்தின் ‘திறந்த’ அல்லது ‘பொதுவான’ அழைப்பு அக்டோபர், 1881ல் முடிவடைந்தது. இருப்பினும், வேதாகம பாடங்களில் காண்பித்தது போன்று, ‘அழைப்பின்’ முடிவுக்கும், ‘கதவு’ மூடப்படுவதற்கும் ஒரு வித்தியாசத்தை நாங்கள் சொல்கிறோம். இராஜ்ய வகுப்பாருக்கான கதவு இன்னும் மூடப்படவில்லை என்று நம்புகிறோம். ஏற்கனவே அழைப்பை ஏற்றுக்கொண்டவர்களை அனுமதிப்பதும், தங்களை தியாகம் செய்வதற்கான சலுகைகளையும், வாய்ப்புக்களையும் உபயோகப்படுத்துவதில் தவற விட்டவர்கள் வெளியேற்றப்படுவதும், வெளி. 3:11ம் வசனத்திற்கு இணங்க, தங்கள் கிரீடங்களை எடுத்துக்கொள்ள நுழையும் மற்றவர்களை அனுமதிப்பதும் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் தொடரும். கி.பி. 1881ம் வருஷம் முதல் கர்த்தருடைய ஊழியத்தில் தியாகம் செய்வதற்கான வாய்ப்புகளின் கதவு முழுவதுமாக மூடப்படும் வரைக்குமான இந்த தற்காலம், தேவனோடு உடன்படிக்கை பண்ணி, தேவ கிருபையில் ஏற்கனவே இருப்பவர்களைப் பற்றிய விஷயத்தில், அறுவடையில் மீந்தவற்றை பொறுக்கும் காலம் ஆகும். “கதவின்” வழியாக “விருந்துக்குள்” சென்றவர்கள், அழைக்கப்பட்ட எல்லோரையும் அடையாளப்படுத்துகிறார்கள். (பிற்பாடு தள்ளுண்டு வெளியேற்றப்படுகிறவர்களைத் தவிர). இதிலிருந்து தெரிவது என்னவென்றால், முன்பு அழைக்கப்பட்டவர்கள், அர்ப்பணிப்புக்குட்பட்டவர்களிடையே இல்லாத சிலர், இப்படி வெளியேற்றப்பட்டவர்களின் இடங்களை எடுத்துக் கொள்கிறார்கள். இது, உங்கள் கேள்விக்கான தெளிவான பதிலாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஏற்கனவே அர்ப்பணிப்புக்குட்படாத சிலர் பதினொன்றாம் மணிவேளையில், திராட்சத் தோட்ட பணிகளுக்காகவும், விசுவாசத்தின் வெகுமதிகளுக்காகவும் அனுமதிக்கப்படுவார்கள். இது, அழைப்பு முடிவுபெற்றதற்குப் பிறகும், கதவு மூடப்படுவதற்கு முன்பும் நடக்கிறது.

இந்த அறுவடை காலத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவது குறித்து பேசுகையில், தெளிவாக நினைவில் கொள்ள வேண்டியது:

நமக்கு கர்த்தர் மற்றவர்களிடையே வயலில் (உலகத்தில்) இருக்கிறவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஏற்கனவே சத்தியத்தின் வழியாக நீதிமான்களாக்கப்பட்டவர்களாக, அல்லது பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவே இல்லாத வகுப்பாரைத் தான் இயேசு குறிப்பிடுகிறார் என்பது வெளிப்படை. வேதாகம பாடங்கள், வால்யூம் 3, 6ம் அதிகாரம் பார்க்கவும்.

## அர்ப்பணிப்பு - ஜெநிப்பிக்கப்படுதலின் தொடர்ச்சியாக அர்ப்பணிப்பு உள்ளதா?

## கே: 151:1:: கேள்வி (1911) - 1

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமல், யாரும் அர்ப்பணிப்புக்குள்ளாக முடியுமா?

**பதில்:** இன்னும் இடம் உள்ளது என்று நாங்கள் நம்புகிறோம். அதாவது, தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களின் முழு எண்ணிக்கை இன்னும் காணப்படவோ, அல்லது சோதிக்கப்படவோ இல்லை. ஆகவே, கர்த்தருக்குள் தம்மை முழுமையாக அர்ப்பணிப்புக்கு உட்படுத்தியிருப்பவர்கள் எவரும் பரிசுத்த ஆவியினால் இன்னும் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பார்கள் என்பதே நம்முடைய எதிர்பார்ப்பு ஆகும். ஆனால் அந்த கேள்வியை இந்த முறையில் குறிப்பிடப்பட்டால், அதாவது, "ஒருவர் அர்ப்பணிப்புக்குட்பட முடியுமா? பரிசுத்த ஆவியினாலே ஜெநிப்பிக்கப்படாதிருக்க முடியுமா?" நாம் கூறலாம்: "ஆம், அவருடைய பங்கை பொருத்த வரையில், அவர் அர்ப்பணிப்புக்கு உட்படலாம். உங்களுடைய அர்ப்பணிப்பையும், என்னுடைய அர்ப்பணிப்பையும் நம்முடைய பங்கு, தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது மட்டுமே. அந்த அர்ப்பணிப்பை தேவன் ஏற்றுக்கொள்கிறாரா என்பது தேவனுக்குரியது. இந்த காலத்தையும், இந்த சுவிசேஷ யுகத்தையும் குறித்து, வேதாகமம் குறிப்பிடும் போது, இது கர்த்தர் ஏற்றுக்கொள்ளக்கூடிய நாள் என்றும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வருஷம் என்றும், ஏற்றுக்கொள்ளக்கூடிய காலம் என்றும் சொல்கிறது. அவர் தயாராக இருந்து, கிறிஸ்து மூலமாக பிதாவினிடத்திற்கு வருகிறவர்கள் எல்லோரையும் ஏற்றுக்கொள்ள விரும்புகிறார் என்று நாம் நம்புகிறோம். அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவார்கள். நாம் முன்பு சொன்ன விதமாக, மறுபடியும் சொல்கிறோம், எதிர்காலத்தில் கூடிய விரைவில், அர்ப்பணிப்பு செய்யக்கூடியவர்களாகவும், தேவனுக்கு தங்களை ஒப்புக்கொடுக்க கூடியவர்களாகவும் ஜனங்கள் இருப்பார்கள். அவர்களுக்கு இடம் ஏதும் மீதியாக இருக்காது. ஏனெனில், உவமை சொல்வது போல, புத்தியுள்ள கன்னிகை வகுப்பார் கலியாணத்திற்குள் பிரவேசித்திருப்பார்கள்; கதவு மூடப்படும். பிறகு உள்ளே போவதற்கு யாரும் இருப்பது இல்லை. ஏனெனில் அந்த வகுப்பார் தொகை முடிவுற்றவுடன், கூடுதல் சேர்க்கை கிடையாது. பிறகு தங்களை ஒப்படைப்பவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படமாட்டார்கள். இவர்களுடைய காணிக்கையை தேவன் விரும்பவில்லை என்று அர்த்தமில்லை. மாறாக, அவர்கள் தங்களை காணிக்கையாக ஒப்படைப்பதை தேவன் மிகவும் விரும்புவார். இது தேவன் அவர்களை விரும்பி ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகள் தங்களை தயக்கமில்லாமல் ஒப்புக்கொடுத்து, தேவ சித்தத்தை அறியவும், அதன்படி நடக்கவும் இருந்ததால், தேவன் அவர்கள் மேல் சந்தேகத்திற்கிடமின்றி பிரியமாக இருந்தார். அவர்கள் பெரிதான ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள். அப்படியே நாமும் எவர் மீது செல்வாக்கு கொண்டுள்ளோமோ, அவர்கள் ஒவ்வொருவருடனும், நாம் அவர்களை சரியான பாதையில் வழிநடத்தி, ஒவ்வொரு மனுஷனும் சரியான கடமை செய்ய வாதாட வேண்டும். பரிசுத்தமும் தேவனுக்கு ஏற்புடையதாய், அவர்களுடைய சரீரங்களை ஜீவ பலிகளாக ஒப்புக்கொடுக்கச் செய்வது தான் நியாயமான ஊழியம் ஆகும். அவர் பலியை உதறித் தள்ளமாட்டார். ஆனால், அவர் உங்களை பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிப்பது என்பது, உங்களுடைய பலி சரியான நேரத்திற்குள் கதவு மூடப்படுவதற்கு முன்பு, தேர்ந்தெடுக்கப்படும் வகுப்பாரின் கடைசி அங்கம் கூட்டிச் சேர்க்கப்படுவதற்கு முன்பாக இருக்க வேண்டும்.

# அர்ப்பணிப்பு - பரம அழைப்பு முடிந்த பிறகு.

## கே : 152:1 :: கேள்வி (1911) - 1

பரம அழைப்பிற்கான கதவு மூடப்பட்ட பிறகு அர்ப்பணிப்புக்குள்ளானவர்கள் ஆவியின் மேனியில் உயிர்த்தெழுவார்கள் என்பது உங்களுடைய கருத்தாகுமா?

**பதில்:** இல்லை. நாங்கள் அறிந்த வரைக்கும், பரம அழைப்பு முடிவுற்றவுடன் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவது இல்லை. ஆவியில் ஜெநிப்பிக்கப்படுவது இல்லை என்றால், பிறகு

ஆவியினால் பிறப்பும் கிடையாது. இந்த விஷயம் பற்றி, சற்று முன்பு நாங்கள் சொன்ன விதமாக, ஒரே கருத்து தான் நாங்கள் கொண்டிருக்கிறோம், அதாவது, உபத்திர காலத்தில் தங்கள் ஜீவனை விசுவாசமுள்ளவர்களாய் கர்த்தருக்கு ஒப்படைத்தால், முற்பிதாக்கள் வகுப்பார்கள் போல சிலர் ஏற்றுக்கொள்ளப்படலாம். பிறகு, ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் முற்பிதாக்கள் வகுப்பாருக்கு ஆவியின் சரீரம் கொடுக்கப்படக்கூடும். அதைப் போல, அந்த வகுப்பாரும் ஆவியின் சரீரத்தைப் பெற்றுகொள்ள வாய்ப்பு இருக்கலாம்.

## அர்ப்பணிப்பு - ஆவியின் சரீரத்திற்கு பின்னர் வாய்ப்பு உள்ளதா?

### கே : 152:2 :: கேள்வி (1911) - 2

அர்ப்பணிப்புக்குட்பட்டு ஜெநிப்பிக்கப்படாதவர்கள் ஆவியின் சரீரத்தைப் பெற்றுக்கொள்ள எப்பொழுதாவது வாய்ப்பு உள்ளதா?

**பதில்:** முற்பிதாக்களுக்கு அவர்களின் விசுவாசத்திற்காகவும், ஆயிர வருஷ யுகத்தில் அவர்களின் ஊழியத்திற்காகவும், ஆயிர வருஷ முடிவில், மேனியில் மாற்றம் பெறுவது தேவ திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது என்பது எங்கள் கருத்தாகும். ஆயிர வருஷ முடிவில் அவர்கள் ஆவியின் சரீரத்தைப் பெற்றுக்கொள்ள சாத்தியம் உண்டு. இது ஓரளவு ஊகத்தின் அடிப்படையிலும், ஓரளவு வேதாகமத்தின் குறிப்பிட்ட வசனப்பகுதிகளின் அடிப்படையிலும் கணிக்கப்பட்டது. காவற்கோபுர இதழில் ஏற்கனவே இது பற்றிய கருத்தை விவரித்திருப்பதால், இங்கு மேலும் தொடர்வதற்கு தேவை இல்லை

## அர்ப்பணிப்பு - ஜெநிப்பிக்கப்படாதவர்களுக்கு வெகுமதி.

### கே : 152:3 :: கேள்வி (1911) - 3

யாரும் இப்பொழுது அர்ப்பணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு, பிறகு பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்படுபவர்களாகத் தவறினால், அவர்களுக்கு கர்த்தர் எங்கே இடம் கொடுப்பார்?

**பதில்:** பழைய தீர்க்கதரிசிகள் விசுவாசமாய் இருந்ததைப் போல, இவர்கள் விசுவாசமுள்ளவர்களாய் நீதியினிமித்தமும், சத்தியத்தினிமித்தமும் ஊழியம் செய்து, தங்கள் ஜீவனை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கும் அளவுக்கு உள்ளவர்கள் என்று நாம் யூகித்தால், முற்பிதாக்களுக்குக் கொடுப்பது போல, இவர்களுக்குரிய பங்கை ஏதாவது ஒரு வழியில் கொடுப்பார். வேறு விதமாகச் சொன்னால், இப்படிப்பட்டவர்கள் உபத்திரவ காலத்தில் கணிசமான அளவிற்கு உட்புகுந்து, கர்த்தர் மேல் கொண்ட விசுவாசம் காரணமாக, தங்கள் ஜீவனை இழந்தார்களேயானால், கர்த்தர் முற்பிதாக்களுக்கு செய்யப்போவது போல, அவர்களுக்கு அதையே செய்வார்.

## அர்ப்பணிப்பு - மன நிலை மற்றும் கிரீடத்தை இழத்தல்.

### கே : 152:4 :: கேள்வி (1911) - 4

எந்த சகோதரன், அல்லது சகோதரி யாராவது தற்கால சத்தியத்திற்குள் வந்த பிறகு, கர்த்தருக்குள் முழுமையான அர்ப்பணிப்புக்குட்பட்டு, கொஞ்ச காலத்திற்கு அவரைப் பின்பற்றி, பிறகு தங்கள் மனநிலையை இழந்து கிரியை செய்து, பிறகு அதற்காக வருத்தம் அடைந்தால், அவர்கள் கிரீடங்களை இழக்கும் அபாயத்துக்குள்ளாவார்களா?

**பதில்:** மனநிலையை இழப்பது போன்ற சிறிய செயல்களுக்காக கர்த்தர் நம்மை நியாயந்தீர்க்கிறார் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. மனநிலையை ஒரு சமயம் இழப்பது, ஒப்பிட்டுப் பார்க்கையில் சிறிய விளைவை ஏற்படுத்தும். இதனுடைய உண்மையான மதிப்பு, வேறு ஒரு சமயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி, தவறான நடத்தையின் வளர்ச்சிக்கு

வழிவகுக்கும். பொறுப்பற்ற மனநிலையைக் கொண்டிருப்பவர், தவறான மனப்பாங்கு உடையவராகிறார். பொறுமையைப் பொருத்த விஷயத்தில் இயற்கையாகவே பெலவீனம் கொண்டவர்களாய் இருக்கிற காரணத்தினால், பெரும்பாலோனார் தங்கள் மனநிலையை இழக்க நேரிடுகிறது. ஆனால் பொறுமையை இழக்கும் ஒரு செயல் நமக்கு கிரீடத்தை இழக்கச் செய்வதாக நாம் நினைக்க வேண்டியதில்லை. நமக்கு விரோதமாக ஏதாவது கர்த்தர் கண்டுபிடிக்க முடியுமானால், அவர் அதை கண்ணோக்க விரும்பமாட்டார். மாறாக, நமது அழைப்பையும் தேர்ந்தெடுத்தலையும் உறுதிப்படுத்தவே கர்த்தர் விரும்புகிறார். இது போன்று தவறி விடுவது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயமாகும். இதை நாம் ஜெபத்தில் கர்த்தரிடம் கொண்டுபோக வேண்டும். இதை நம்முடைய கலியாண வஸ்திரத்தில் ஏற்பட்ட கறை, அல்லது சுருக்கம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால், வஸ்திரத்தைக் களைந்து விட்டோம் என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. இந்த வஸ்திரத்தை அணிந்திருப்பவர்கள் அனைவரும் பூரணத்துவத்தினால் போர்த்தப்பட்டிருக்கும். ஸ்திரத்தில் கறை வந்தால், ஜெபத்தில் கர்த்தரிடம் அதைக் கொண்டு போய், மன்னிப்பு கேட்டு யாரேனும் புண்படுத்தப்பட்டிருந்தால், புண்படுத்தப்பட்டவரிடம் அதை சரி செய்து, ஏதாவது தவறு செய்திருந்தால், கூடிய வரை சரிசெய்வது அவருடைய கடமையாகும். எவருடைய உணர்வுகளை எப்பொழுதாவது காயப்படுத்தி இருந்தால், அவற்றைத் தணிக்க வேண்டும். யாருக்கு சரியாக செய்ய வேண்டுமோ, அவரிடம் தவறை ஒப்புக்கொள்ள வேண்டும். கர்த்தர் மற்றும் சகோதரனுடைய மன்னிப்பை நாம் உணர்ந்த பிறகு, அதை சதா காலமும் விரோதமாக மனதில் இருத்திக்கொள்ளாத வகையில் நம்மை நாம் மன்னிக்க வேண்டும். ஆனால் அந்த படிப்பினையை நாம் கவனித்து, நிகழ்ந்தவற்றைக் கடந்து போகவிட வேண்டும். கிறிஸ்தவ பாதையில் சில அருமையான படிப்பினைகள், தங்களுடைய சொந்த தோல்விகள் வாயிலாகவே கிடைத்தன. என்று பல கிறிஸ்தவர்கள் சொல்ல முடியும் என்றே நான் உண்மையில் நினைக்கிறேன். ஒரு விஷயத்தில் அவர்கள் தோல்வியடையும் போது, எங்கே பலவீனமாயிருக்கிறார்கள் என்பதை அது அவர்களுக்குக் காண்பிப்பதாய் உள்ளது. ஆகவே பொறுமையின்மை அல்லது, அது போன்றவை, தீமையைப் பேசும் நாவு அல்லது கர்த்தருடைய வார்த்தைக்கு மாறான திசையில் உள்ளவை போன்ற பல்வேறுவிதமான பெலவீனமான அம்சங்களை நாம் நமது வாழ்க்கையில் பார்க்கையில், நமது நடத்தையின் அந்த பகுதியை நாம் பலப்படுத்த வேண்டும். ஆனால் இத்தகைய நடத்தை நம்முடைய கிரீடத்தை நமக்கு இழந்துவிடச் செய்தது என்று தேவையில்லாத உணர்வு கொள்ள வேண்டாம். அப்படி இருக்கும் பட்சத்தில், சிறிது காலத்திற்குப் பிறகு நம்மில் மிகச் சிலர் மட்டுமே கிரீடத்திற்காக உரிமை தங்களுக்கு இருந்தது என்று சொல்லக்கூடியவர்களாக இருப்பார்கள். விசேஷித்த தலையாகிய அவரைத் தவிர, கிறிஸ்தவ சபை முழுவதில் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களான பிறகு, எண்ணம் வார்த்தை மற்றும் கிரியைகளில் பூரணமாயிருந்தேன் என்று யார் சொல்ல முடியும்? யாரும் முடியாது. அப்படி நாம் செய்ய முடிந்தால், நமக்கு உண்மையில் வஸ்திரம் ஏதும் தேவையில்லை: நாம் செம்மையாக நடக்க முடிந்தால், நமக்கு "மூடல்" தேவையில்லை. நாம் பூரணராயிருந்தால், எந்த இரட்சகரும் நமக்குத் தேவையில்லை. நம்முடைய அபூரணத்தின் காரணத்தினால் தான் இரட்சகர் நமக்குத் தேவைப்படுகிறது. நாம் பாவம் அல்லது பலவீனத்தின் மீது அனுதாபம் கொண்டுள்ளோம் என்று அர்த்தமில்லை. ஆனால் அவற்றிற்கு விரோதமாக நம்மால் முடிந்த வரை கடின முயற்சி செய்து அவற்றை ஜெயிக்க வேண்டும். சிலர் மற்றவர்களைவிட வெகு சுலபமாக ஜெயிக்கக்கூடிய வர்களாயிருப்பார்கள். இதற்கு நேர்மாறான விதத்தில் சிக்கல் உடையவர்களாயிருக்கும் சிலரை அறிவேன். அவர்கள் பொறுமையின்மையின் பக்கம் சிறிதும் தலைசாய்க்க மாட்டார்கள். அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் தங்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். காலப்போக்கில் போதுமான அளவு இல்லாமல் நடத்தையில் குறைவுள்ளவர்களாவார்கள். பொறுமையில்லாத மனுஷன் கிட்டத்திட்ட வலுமிக்க நல்நடத்தையை கொண்டவனாயிருப்பான். அவன் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பொறுமை இல்லாதவனாயிருப்பான். ஆனால் அவன் அதை நீடிக்கவிடாமல் தடைபண்ணுவதை கற்றுக்கொள்ள விருப்பமாயிருப்பான்.

## அர்ப்பணிப்பு - இன்னும் ஜெநிப்பிக்கப்படாமல் இருத்தல்.

### கே : 154:1 :: கேள்வி (1911) - 1

ஒருவர் இப்பொழுது தனக்கு உள்ள எல்லாவற்றையும் கர்த்தருக்கு அர்ப்பணிப்பு பண்ணுபவர், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமலிருக்க சாத்தியமா?

**பதில்:** ஒருவர் தம்மை முழுவதுமாக அர்ப்பணிப்புக்கு உட்படுத்திய பிறகும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமலிருப்பதற்கு நிச்சயமாக சாத்தியம் தான். நமது கர்த்தருடைய காலத்திற்கு முன்பு - பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு - ஆபிரகாம் மற்றும் மற்ற முற்பிதாக்களுடனும் இதே நிலை தான் இருந்தது. இதே போன்ற நிலை தான் சபை முழுமையாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பின்பும் இருக்கும். ஆனால் இது எப்பொழுது, யாருடன் துவங்கப் போகிறது என்பது, இப்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பவர் எவரும் தெரிய வாய்ப்பில்லை. அந்த குறிப்பிட்ட காலத்தை நாம் அடைந்து விட்டோம் என்று நினைக்க காரணம் ஏதும் இல்லை. ஏனெனில் சமீபத்தில் அர்ப்பணிப்புக்கு உட்பட்ட சிலர் பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதற்கான நல்ல சாட்சியத்தைக் கொடுத்திருப்பதை நாங்கள் பார்க்கிறோம். இது தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் சொல்லப் போனால், இன்னும் குறைவு உள்ளது என்பதையும், ஆகவே இந்த வகுப்பாராய் ஆவதற்கான வாய்ப்புகள் இன்னும் இருக்கிறது என்பதையும் எங்களுக்கு உணர்த்துகிறது.

## அர்ப்பணிப்பு - மணவாட்டி வகுப்பாராக இருப்பதற்கான உத்தரவாதம்.

### கே: 154:2 :: கேள்வி (1911 ) -

மணவாட்டி வகுப்பாராய் ஆவதற்கான உத்தரவாதம் - அர்ப்பணிக்குட்பட்டவர்கள் எல்லோரும் மணவாட்டி வகுப்பாராய் ஆவார்கள் என்ற உத்திரவாதம் பற்றிய நிச்சயமின்மை கோட்டினை எந்த காலத்தில் தாண்டுவோம்?

**பதில்:** நான் புரிந்து கொண்டபடி, அந்த கோட்டை 1881ம் வருஷத்தில் கடந்து விட்டோம், அதாவது, வேதாகம பாடங்களில் சொல்லிய விதமாக, அந்த வருஷத்தில் அழைப்பு நின்றுவிட்டது. ஆனால் கதவு இன்னும் மூடப்படவில்லை. அந்த நேரத்தில் போதுமான எண்ணிக்கையில் தங்கள் அர்ப்பணிப்புக்கு உட்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் விசுவாசத்தை நிரூபித்திருந்திருந்தால், சிறுமந்தை முழுமை அடைந்திருக்கும். ஆனால் அவர்கள் எல்லோரும் விசுவாசத்தை நிரூபிக்கும் வாய்ப்பு இல்லை. எவ்வளவு பேர் விசுவாசத்தை நிரூபிக்காதவர்களோ, அவர்கள் இரண்டாம் மரணம் என்ற மிகத் தீவிரமான நிலைக்கு உள்ளவர்கள் அல்லது போதுமான பக்தி வைராக்கியம் காட்டாததால், சற்றுக் குறைவான நிலையில், அதாவது திரள் கூட்டம் என்ற வகுப்பாரில் சேருவார்கள். இந்த விலகல் காரணமாக, மற்றவர்கள் நுழைவதற்கான திறப்புகள் அல்லது வாய்ப்புகள் மேலும் பலருக்கு கிடைத்துள்ளன. அதன் பிறகு, கர்த்தருடைய ஜனங்கள் பலர் பெரும் எண்ணிக்கையில் வந்துள்ளனர். இது சம்பந்தமான ஒரு கேள்வி இப்பொழுது எழுகிறது. கர்த்தருக்குள் இணக்கமாக இப்பொழுது வந்துள்ளவர்கள் பற்றிய விஷயத்தில, தோராயமாக, நாம் நமக்குள்ளே எப்படி உறுதி செய்ய முடியும்? அவர்கள் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றும், பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், சிறுமந்தை வகுப்புக்குத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள் என்பதற்கு நமக்கு என்ன என்ன சாட்சியம் இருக்கிறது?

பல சாட்சியங்களும் நிரூபணங்களும் உள்ளன என்று நான் பதிலளிக்கிறேன். சகோதரரகள்மேல் கொண்டுள்ள அன்போடுகூட, பரிசுத்த ஆவியின் கனிகளை அவர்கள் வெளிப்படுத்துவது இவற்றில் ஒன்றாகும். சத்திய அறிவின் வெளிப்பாடு மற்றொரு சாட்சியமாகும். ஏனெனில் அப்போஸ்தலன் கூறும்விதமாக, தேவனுடைய ஆவியின் துணையின்றி, ஒருவரும் தேவனுடைய ஆழ்ந்த விஷயங்களைத் தெளிவாக கிரகித்து, புரிந்து

கொள்ள முடிந்தால் அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார் என்பது அவருக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வலுவான பாதிப்பளிக்கக்கூடிய சாட்சியமாகிறது. ஆகவே அவர் தன்னுடைய அழைப்பையும் தேர்ந்தெடுக்கப்படுவதையும் நிச்சயப்படுத்திக் கொள்கிறார். மேலும் அப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவினிமித்தம் பாடு அனுபவிக்கிறதற்கான வாய்ப்பு அளிக்கப்படுவது, உபத்திரவங்களை சகித்து, கர்த்தருடைய ஊழியத்தில் தன் ஜீவனை மரணத்திற்குள்ளாக்குவது, தேவன் அவர்மேல் கொண்டுள்ள கிருபைக்கான மற்றுமொரு சாட்சியம் ஆகும். வேறுவிதமாகச் சொன்னால், இது பலி செலுத்தும் உரிமை என்று கூறலாம். ஏனெனில் பலி என்பது ஒரு விசேஷித்த உரிமை என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். நாம் அவருடனேகூட பாடுகளைச் சகிக்காவிட்டால், நாம் அவருடனேகூட ஆளுகை செய்ய மாட்டோம். ஆகவே அந்த வாய்ப்பை மகிழ்ச்சிப்பூர்வமாக அனுபவிப்பது என்பது, தேவன் நம்மை ஏற்றுக்கொண்டார் என்பதற்கான சிறந்த சாட்சியங்களில் ஒன்றாகும்.

## அர்ப்பணிப்பு - சத்தியத்தை கேட்டிராதவர் யாரும் உண்டா?

### கே: 155:1 : :: கேள்வி (1911) - 1

தேவனுக்குள் அர்ப்பணிக்குட்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், தற்கால சத்தியத்தை இன்னும் கேட்டிராதவர்களாய் இருக்கிறார்கள் என்பது உங்கள் கருத்தா?

**பதில்:** அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய கருத்து ஆகும். வேதாகமம் இந்த வகுப்பாரையே குறித்துச் சொல்லுவதை, பாபிலோனில் இருக்கும் அவருடைய ஜனங்களுடன் தேவன் பேசுவதை வெளிப்படுத்தல் ஆகமம் 18ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்". அவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படாமலிருந்தால், தேவனுடைய ஜனங்களாய் இருக்க முடியாது. அவர்கள் பாபிலோனில் இருந்தால் ஒழிய அதைவிட்டு வெளியே வரமுடியாது.

## அர்ப்பணிப்பு - ரோமர் 12:1.

### கே: 155:2 :: கேள்வி (1911) - 2.

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று". இந்த வசனத்தை மேற்கோள் காட்டும் போது, சரீரம் என்பதற்குப் பதிலாக, சரீரங்கள் என்று பன்மையில் நீங்கள் ஏன் குறிப்பிடுகிறீர்கள்?

**பதில்:** இது சொல்லக்கூடிய விதத்தைப் பொருத்து உள்ளது. சகோதரர்கள் எல்லோரும் தங்களுடைய சரீரங்களை ஒரே பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் அர்த்தங்கொள்ளவில்லை என்பது வெளிப்படையாகும். ஆனால் ஒவ்வொருவரும் தன்னுடைய சொந்த சரீரத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் எந்த வகையில் பிரயோகப்படுத்துகிறோம் என்பது வாக்கியத்தின் அமைப்பைச் சார்ந்திருக்கிறது. "உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று சகோதரர்களாகிய உங்கள் எல்லோரையும் வேண்டிக் கொள்கிறேன்" என்று சொல்லலாம், அல்லது, "உங்கள் சொந்த சரீரத்தை சகோதர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்" என்றும் சொல்லலாம். ஒரே கருத்து தான் இதில் உள்ளது. இது எவ்விதத்திலும் மாறாது.

## அர்ப்பணிப்பு – ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆனால் ஓட்டத்தில் பங்கு பெறவில்லை.

## கே : 155:3 :: கேள்வி (1911) - 3.

அர்ப்பணிப்புக்குட்பட்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரத்தின்படி, ஒருவருடைய பலி ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, அவர் பந்தய ஓட்டத்தில் பங்கு பெறாதிருக்கக்கூடுமா?

**பதில்:** “இல்லை” என்று நான் சொல்கிறேன். ஒருவர் தன்னுடைய அர்ப்பணிப்புக்குட்பட்டு, பிறகு குறிப்பிட்ட ஆதாரங்களைக் கொண்டிருப்பவரானால், தேவன் அவரை ஏற்றுக்கொண்டு, ஓட்டத்தில் உள்ளார் என்றும், அவருடன் தான் அழைப்பும் தேர்ந்தெடுக்கப்படுதலும் நிச்சயமாகிறது என்று ஊகிப்பது அவருக்கு நியாயமானதாக இருக்கிறது. அந்த ஆதாரங்களில் சில என்னவாயிருக்கும்? சகோதரர்கள் மேல் அவருடைய அன்பு ஒரு ஆதாரமாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. தேவன் மேலும் அவருடைய வார்த்தையின் மேலும் அவர் கொண்டிருக்கும் அன்பு மற்றுமொரு ஆதாரமாயிருக்கிறது. தேவனுக்கும் சகோதரருக்கும் ஊழியம் செய்யவும், நீதிக்காக ஊழியம் செய்யவும் அவருடைய விருப்பம் இன்னொரு ஆதாரமாக இருக்கிறது. தேவன் அவரை ஏற்றுக்கொண்டார் என்பதும், அவர் புதிய மன நிலையும், புதிய பண்பும் கொண்டவராய், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருக்கிறார் என்பதற்கு இவைகளெல்லாம் ஆதாரங்களும் நிரூபணங்களுமாய் இருக்கின்றன. அப்படிப்பட்டவர் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கான வாய்ப்புக்களை ஒருவேளை தேடுபவராகவும் இருப்பது மற்றுமொரு ஆதாரமாய் உள்ளது. சத்தியத்தின் மீது ஆழமான மதிப்பும் அதை நன்முறையில் புரிந்துகொள்ளத் துவங்குவதும் மேலும் ஒரு ஆதாரமாக உள்ளது. இந்த பல்வேறு ஆதாரங்களை அல்லது நிரூபணங்களைப் பெற்றிருக்கும் எவரும் கிறிஸ்துவின் தகுதியின் மூலமாக தேவன் அவருடைய காணிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளார் என்று நினைக்க ஊக்குவிக்கிறது.

## அர்ப்பணிப்பு - கிபி 1881.

## கே: 155:4 :: கேள்வி (1912-Z) - 1

அக்டோபர் 1881ம் வருஷத்தில், அல்லது அதற்கு முன்பு, “சிறுமந்தையை” சார்ந்த எல்லோரும் தங்களுடைய அர்ப்பணிப்பை செய்திருக்க வேண்டும் என்பது அவசியமா?

**பதில்:** இல்லை. இந்த விஷயத்தை நாம் அவ்விதத்தில் புரிந்துகொள்ளவில்லை.

யூத மற்றும் கிறிஸ்தவ யுகங்களுக்கு இடையே உள்ள இணைகளைக் காண்பிக்கும் வேதாகம பாடங்கள், 2ம் வால்யூமின் அதிகாரத்தில் முக்கியமான தேதிகள் குறிக்கப்படுகின்றன. (1) அக்டோபர், 1914. (2) ஏப்ரல், 1878. (3) அக்டோபர், 1881. (4) அக்டோபர், 1914. இந்த தேதிகள் யூத அறுவடையில் நான்கு இணைகளாக உள்ளன. அதாவது, (1) நம்முடைய கர்த்தருடைய ஊழியத்தின் துவக்கம்; யூத ஜாதியினரின் சோதனை துவக்கம், அல்லது அறுவடை காலத் துவக்கம் - அக்டோபர், கி.பி. 29ம் வருஷம். (2) நமது கர்த்தருடைய ஊழியத்தின் முடிவு, அவருடைய சிலுவை மரணம் மற்றும் ஒரு ‘ஜாதி’ என்ற நிலையிலிருந்து யூத ஜாதி புறம்பாக்கிப் போடப்படுதல் - ஏப்ரல், கி.பி. 33ம் வருஷம். (வேதாகம பாடங்கள் - வால்யூம் 2, 7ம் அதிகாரத்தைப் பார்க்கவும்) (3) யூத ஜாதியின் மேல் இருந்த கிருபையின் காலம் “70 வாரங்கள்” (தானி. 9:20-22.) முடிவுக்கு வந்தது - அக்டோபர், கி.பி. 36ம் வருஷம். இதற்குப் பிறகு புற ஜாதிகளுக்கு சுவிசேஷ சலுகைகள் திறக்கப்பட்டன. புற ஜாதிகளில் முதன்முதலாக மாறியவர் கொர்நெலியு. (4) இஸ்ரயேல் ஒரு தேசமாக இருந்த அமைப்பின் மீது வந்த உபத்திரவம் மற்றும் அழிவின் முழுமையான முடிவு. - அக்டோபர், கி.பி. 69ம் வருஷம்.

யூத மற்றும் சுவிசேஷ யுகங்களுக்கு இடையில் உள்ள இணைகள் முந்தைய மற்றும் தற்போதைய பேர்ச்சபை அமைப்புகளுக்குரியவை என்பதை தெளிவாக கண்டுணர வேண்டும். இதை மனதில் இருத்திக் கொள்வோமானால், சுவிசேஷ சபையிலிருந்து கூட்டிச் சேர்ப்பதையோ,

அல்லது இப்பொழுது பாபிலோனிலிருந்து கர்த்தருடைய ஜனங்களைப் பிரித்தெடுப்பதற்கோ, இந்த இணைகளை நாம் கையாளுவதிலிருந்து நம்மைத் தடுக்கும்.

இந்த இணைகளைப் பார்க்கும் போது, இந்த "அறுவடையின்" ஆரம்பமாகவும், பரலோகத்தின் நான்கு காற்றுகளிலிருந்து "தெரிந்துகொள்ளப்பட்டவர்களை" கூட்டிச் சேர்ப்பதின் ஆரம்பமாகவும் கி.பி. 1874ம் வருஷம் இருப்பதை நாம் காண்கிறோம்; பாபிலோன் பொதுவாகப் புறம்பாகிப் போடப்படும் போது, கி.பி. 1878ம் வருஷம் லவோதேக்கியா காலப்பகுதியாயிருந்தது.,

## அர்ப்பணிப்பு - இரண்டு வகுப்பாருக்கும் பொருந்தும்.

### கே: 156:1 :: கேள்வி (1912-Z) - 1

"சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்". ரோமர் 12:1.

இந்த வசனத்தைச் சொல்லும்போது, அப்போஸ்தலர் யாரிடம் பேசுகிறார்?

**பதில்:** இந்த வார்த்தைகள் இரண்டு வகுப்பாருக்கும் சரியாகப் பொருந்தக்கூடியவையாக உள்ளன. முதலாவதாக, அவர்கள் இனி எதிரிகளாக இல்லை என்ற உணர்வில், "சகோதரர்" என்று குறிக்கப்படும் வகுப்பாருக்குப் பொருந்துபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் அர்ப்பணிப்புக்குட்பட்டவர்களுடன் இணக்கமாய் இருப்பவர்கள். இவர்கள் ஏற்கனவே துவங்கிய இரக்கத்தின் வேலையை முடிக்க அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார். இரண்டாவதாக, அர்ப்பணிப்புக்குட்பட்டவர்களுக்கு மேற்குறிப்பிட்ட வசனம் பொருந்துகிறது. இவர்கள் அந்த பணியை முடிக்க வேண்டுமாய் இவர்களைத் துரிதப்படுத்துகிறார். "சகோதரரே, நான் உங்களைத் துரிதப்படுத்துகிறேன், இந்த பணி நிறைவேற்றப்படும் வரைக்கும், உங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கும் இந்த விஷயத்தில் நாளுக்கு நாள் நோக்கமாய் செயல்படுங்கள். இது தான் தேவன் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் உள்ள நியாயமான ஊழியம் ஆகும். மேன்மையுள்ள பரிந்துரையாளர் இந்த பலியை ஏற்புடையதாக்குவார் என்பதை பவுல் அப்போஸ்தலன் சொல்லாவிட்டாலும், அன்புக்குரியவரில் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பதை கிறிஸ்தவர்களால் அறிந்து கொள்ளப்பட வேண்டும். அந்த வகுப்பார் தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுத்த பிறகு, தங்களுடைய எல்லாவற்றையும் கர்த்தருடைய கரங்களில் ஒப்படைத்த பிறகு, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக தினம் சாக வேண்டும் என்பதை அவர்கள் தாங்களே அறிந்து கொள்கிறார்கள். ஆகவே கர்த்தருடைய ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கும் வாய்ப்பு தினந்தோறும் நமக்கு வருகிறது. இது நாள்தோறும் சாகும் விதமாக இருக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், ஜீவன் முடிவதற்கான பலி ஆகும். நமது கர்த்தர் கூறினார்: "ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்." லூக் 12:50. அவருடைய பலி யோர்தானில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று ஒரு பார்வையில் சொல்லலாம். இன்னொரு பார்வையில், அந்த பலி நாளுக்கு நாள் செலுத்தப்பட்டு, சிலுவையில் அந்த ஞானஸ்நானம் நிறைவேற்றப்படும் வரைக்கும் தொடர்ந்தது. அவர் சத்தமிட்டு "எல்லாம் முடிந்தது" என்றார்.

## அர்ப்பணிப்பு - எல்லோருக்கும் கிரீடங்கள் உள்ளதா?

### கே. 156:2 :: கேள்வி (1912) - 2

இந்த கடைசி நாளில் ஒருவர் அர்ப்பணிப்புக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும், அப்படிப்பட்டவருக்கு கிரீடம் ஒதுக்கப்படமாட்டாது என்பது சாத்தியமா?

**பதில்:** ஒருவர் அர்ப்பணிப்புக்குள்ளாக்கப்படுவது என்பது கண்டிப்பாக சாத்தியம் தான். ஏனெனில் அர்ப்பணிப்புக்குள்ளாவது என்பது எப்பொழுதும் சரியானது ஆகும். சுவிசேஷ யுகம்

துவங்குவதற்கு வெகுகாலத்துக்கு முன்பே அர்ப்பணிப்புக்குள்ளாவது சரியானதாய் இருந்தது. ஆபிரகாம் மற்றும் தீர்க்கதரிசிகள் தங்கள் ஜீவனை அர்ப்பணிப்புக்கு உட்படுத்தினார்கள். அதை நிறைவேற்றிக் காண்பித்தார்கள். அப்போஸ்தலன் இந்த விஷயத்தை எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் எப்படி தெரிவிக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்: "கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், - - - "இவர்களைப் பற்றிச் சொல்லுகிறார்: உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்களுடைய ஜீவன் தேவனுக்கும் நீதிக்கும் அர்ப்பணிப்புக் குள்ளாக்கப்பட்டிருந்தன. அர்ப்பணிப்புக்குட்படுவது அவர்களுக்கு சரியானது என்றால், இது இன்றும் ஒவ்வொருவருக்கும் சரியானதாகவே உள்ளது.

ஆனால் ஒவ்வொருவருடைய அர்ப்பணிப்பையும் எவ்விதத்திலாவது ஏற்றுக் கொள்ளக்கூடிய கட்டாயம் தேவனுக்கு உள்ளதா?

இதற்கான பதில்: இல்லை. எந்த பலியையும் தேவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பொதுவான முறையில் சொன்னால், தேவன் மனுஷர்களை மதிப்பதில்லை. அவருடைய கிருபை எல்லா யூதர்களுக்கும் கிடைக்கப்பெறத் திறக்கப்பட்டது. இரண்டாவதாக, எல்லா புறஜாதிகளுக்கும் கிடைத்தது - - நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக வரலாம். இது போதுமான எண்ணிக்கையில் நபர்கள் கண்டுபிடிக்கப்படும் வரையிலும், முன்குறிக்கப்பட்ட எண்ணிக்கையில் நபர்கள் அர்ப்பணிப்புக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களுடைய அழைப்பும், தெரிந்தெடுக்கப்படுதலும் நிச்சயமாகும் வரையிலும் தொடரும்.

அர்ப்பணிப்புக்குள்ளாக்கப்படும் முழுமையான எண்ணிக்கை எப்பொழுது நிறைவு பெறும் என்பதை நாம் எப்படி அறியமுடியும்? இதை அறிந்து கொள்வது நமக்குரியதல்ல! பொதுவான முறையில், இந்த வெளிப்படையான அழைப்பு கிபி1881ல் முடிவடைந்தது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிற அனைவரும், இராஜ்யத்தில் திட்டவட்டமான இடம் ஒதுக்கப்படுவதற்கு முன்பாக, விசுவாசத்தின் சோதனைகளை அனுபவிக்க வேண்டும். மனதார மீறுகிறவர்கள் இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரராகிறார்கள். மற்றவர்கள் திரள் கூட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கங்கள் இல்லாமல் கணக்கிடப்படுபவர்கள். தகுதியில்லாதவராக வெளியேற்றப்படும் ஒவ்வொருவரும், காலி இடத்தையும், கிரீடத்தையும் விட்டுச் செல்கிறார்கள். பொதுவான அழைப்பு முடிவுற்ற பிறகு, இந்த காலி இடங்கள் இப்போது நிரப்பப்பட்டு வருகின்றன - - - தங்களை காணிக்கையாக ஒப்புக்கொடுப்பவர்களிலிருந்து; ஒரே ஒரு காலி இடம் இருக்கும் சமயத்தில் அர்ப்பணிப்புக்கு உட்பட்டவர்கள் பத்து பேர்கள் இருந்தால், முற்றிலும் வளர்ச்சியடைந்து, கர்த்தருடன் முழுமையாக இணக்கம் கொண்டிருப்பவருக்கு அந்த ஒரு இடமும், மீதமுள்ள கிரீடமும் கொடுக்கப்படலாம்.

கிபி1878ல் நிறைய பேர்கள் தங்களுடைய சோதனைகளில் முழுவதுமாக தேர்ச்சி பெறாதிருந்தார்கள் என்பது நமது கருத்தாகும். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க, தங்களை முழு அர்ப்பணிப்புக்கு உட்படுத்தியவர்கள் பல ஆயிரம் பேர்கள் பேர்ச்சபைகளில் இருந்தார்கள். சுவிசேஷகராகிய மோடியின் பிரச்சாரத்தை நான் நினைகூருகிறேன். அந்த சமயத்தில் பெரும்பாலான சுவிசேஷகர்களிலிருந்து வேறுபடும் விதமாக அவருடைய பிரசங்கம் இருந்த காரணத்தால், பெருமளவில் பலர் உண்மையாக மாற்றம் பெற்றவர்களாயிருந்தனர். கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக மன்னிப்பு பெறுவதையும், தேவனுக்கு முழுமையாக அர்ப்பணிப்புக்குட்பட வேண்டியது குறித்தும் மோடி பிரசங்கித்தார். அந்த சமயத்தில் பலர் முழு அர்ப்பணிப்புக்குட்பட்டு, தங்களுடைய பெயர்கள் தற்காலிகமாக எழுதப்படவும், காலி இடங்கள் நிரப்பப்படக்கூடிய நிலையில் இருந்தனர். ஆனால் சோதனைகள் வந்த போது, திரள் கூட்டத்தாருடைய தகுதியைவிட மேலான வெகுமதிக்கு தகுதியற்றவர்களாகக் காணப்பட்டனர். இந்த தோல்விகளின் வெற்றிடங்களை மற்றவர்கள் பிடித்துக் கொண்டு, அவர்களும் சோதனைக்குள்ளாகி சலித்தெடுக்கப்பட்டனர். காலி இடங்கள் உருவாகி இன்னும் மற்றவர்கள் வாய்ப்பு பெறுவதற்கு வந்தனர். இது கடந்த முப்பது வருஷங்களாக நடந்து வருவதற்கான

சாட்சியங்களை நாம் பார்க்கிறோம். இது இன்னும் நடைபெற்று வருகிறது என்பதையும், சில பெயர்கள் இன்னும் குறிக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்களுக்கு கிரீடங்கள் தயாராக உள்ளன என்றும் நாம் நம்புகிறோம்.

நமது கருத்து இதுவே: தேவபக்தியில்லாத ஜனங்களாயிருந்து, தேவனுக்கு எந்த அர்ப்பணிப்பும் செய்யாதவர்கள், தற்போது முழுமையான அர்ப்பணிப்பு செய்வதை நாம் பார்க்கையில், இந்த சாட்சியமானது, தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டுவதாகவே உள்ளது. என்ன சாட்சியம்? பகுத்துணரும் அறிவின் கண்கள் அவர்களுக்குத் திறக்கப்பட்டு, தேவனுடைய ஆவிக்குரிய அல்லது ஆழ்ந்த விஷயங்களை அவர்கள் காணமுடிகிறது. மேலும், பலியிடுவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு இப்பொழுது உள்ளன என்பது மேலும் ஒரு சாட்சியமாகும். நாம் பலியிடுவோம் என்று உடன்படிக்கை செய்து கொள்ளுகிறோம். ஆனால் கர்த்தர் தாமே நமக்கு வாய்ப்பைக் கொடுக்கிறார். இவர்களில் சிலர் அந்த வாய்ப்புகளைப் பெற்று உபயோகப்படுத்துகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் தங்களை அர்ப்பணிப்புக்கு உட்படுத்திக் கொண்ட போது, இடம் காலியாக இருந்தது என்பதையும், அவர்கள் அதை நிரப்புகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

கிபி1878ம் வருஷத்திலிருந்து நிறைய பேர்கள் இவ்விதம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது, வரிசைப்பட்டியலில் கணிசமான அளவிற்கு காலி இடம் இருப்பதை உணர்த்துகிறது. எவ்வளவு காலி இடம் மீதியாக உள்ளது என்பதையோ அல்லது இது எப்பொழுது நிரப்பப்படும் என்பதைச் சொல்வது நமக்கு உரியதல்ல. இருப்பினும், நாம் நிச்சயமாக நம்புகிறோம், அக்டோபர் 1914ல் இது நிரப்பப்படும் என்று நினைக்கிறோம். இதுவரை அர்ப்பணிப்புக்குட்படாத மற்றவர்களைப் பற்றிய விஷயத்தில், பவுல் அப்போஸ்தலனுடன் நாம் சொல்ல முடியும்: “சகோதரரே, உங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கும்படி உங்களை வேண்டுகிறேன்” - உன்னால் முடிந்ததை நன்றாய் செய். வாய்ப்பு இருக்கும் நிலையில் நீ உள்ளே பிரவேசிக்கலாம். நாம் அவர்கள் இடத்தில் இருந்தால், அவர்கள் நமக்கு என்ன சொல்வார்களோ, அதாவது அவர்களுடைய நேரம், தாலந்து மற்றும் எல்லாவற்றையும் தேவனுக்கு அர்ப்பணிப்பு செய்யவேண்டும் என்பதை நாம் அவர்களுக்கு சொல்கிறோம். தேவன் நல்ல பலன் அளிப்பார். தேவன் எப்பொழுதும் செய்வார் - எந்தவிதமான வெகுமதி இருந்தாலும் அது பரிசு தான்.

## அர்ப்பணிப்பு - சரியான விதத்தில் நேரத்தை செலவிடுவது.

### கே: 158:1 :: கேள்வி (1913) - 1

லௌகீக பத்திரிகைகளையும், செய்தித்தாள்களையும் படிப்பதில் கிறிஸ்தவர்கள் தங்கள் நேரத்தை செலவிடலாமா?

**பதில்:** லௌகீக பத்திரிகைகளையும், செய்தித்தாள்களையும் படிப்பதால் ஆக்கிரமிக்கப்படும் நமது மனதைக் குறித்த விஷயத்தில் நாம் எப்படி செயல்பட வேண்டும் என்பதை அறியவே இந்த கேள்வி கேட்கும் சகோதரர் விரும்புகிறார்; அவர் உலகப் பிரகாரமான எட்டு இதழ்களையும், செய்தித்தாள்களையும் வைத்திருக்கிறார். அந்த விஷயங்களைக் குறித்தே அவருடைய மனம் திரிகிறது. ஒரே திசையை நோக்கி எந்த ஒரு விஷயமும் எவ்வளவுக்கு அதிகமாக நமது மனதுக்கு ஊட்டுகிறோமோ, அதை நோக்கியே அதிகமாய் நமது மனது திரியும். ஆகவே ஆவிக்குரிய நல்ல உணவை நாம் ஊட்டி, அதை சரியான திசையில் திரிய வைக்கிறேன். நமக்கு இருக்கும் பசுவிற்கு களஞ்சியத்திலுள்ள மிக அருமையான புல் மற்றும் மிக அருமையான இடத்தையே நாம் வழக்கமாகக் கொடுக்கிறோம். ஆனால் அந்த பசு வேலிக்கு அப்பாலுள்ள புல் நன்றாயிருக்கும் என்று அது எப்போதும் நினைக்கும். அதை அடைவதற்கு கயிறுகளையும் மற்ற எதையும் விடுவித்துக் கொள்கிறது. நம்முடைய இயற்கை பண்புகளும் அதே முறையில் தான் உள்ளன. நமக்குத் தூரமாயிருக்கிற சிறிய பொருள் எதுவாயினும் அதை விரும்பி அதன் பக்கம் சாய்வோம். அந்த பொருள்களை இனி ஒருபோதும் ஆசைப்படாதபடி, உலகத்திலிருந்து நம்மைச் சுற்றி வேலி அமைக்கப்பட நாம் விரும்புகிறோம். ஆனால் அப்போஸ்தலர் கூறும்விதமாக,

“பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்”. “நாடுதல்” என்ற வார்த்தை, தொடர்ந்து நாடுவதையே சுட்டிக்காட்டுகிறது. நமது தேடலுக்கான அளவினைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும். இன்றைக்கு அதைச் செய்யவேண்டும். நாளைக் காலையில் முன்கூட்டியே செய்வதற்கான இலக்கை நிலைநிறுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறினால், மறுபடியும் இலக்கை அமைக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக, வெறுமனே திரிவதற்கான நேரம் இல்லாத அளவிற்கு நீங்கள் அதை சுறுசுறுப்பாக்கி விடுவீர்கள். நான் உங்களுக்குக் கொடுக்க முடிந்த நல்ல ஆலோசனை இதுவே. நமது கவனத்திற்கு வரத் தகுதியற்ற மிகச் சிறிதான அற்ப காரியங்களினால் இந்த வாழ்க்கையின் விவகாரங்களில் அதிகப்படியாக அமிழ்ந்து போவோம். மற்ற மனுஷன் கற்பனை செய்து உருவாக்கியதில் நமது மனதைப் பறிகொடுத்தால், இது புத்தியீனம் ஆகும். நான் நினைப்பதை உங்களுக்கு சொல்லுகிறேன்: வேதாகமத்தில் எப்போதும் அறியப்பட்ட, மிகவும் அதிசயிக்கத்தக்க கதை, மிகவும் அதிசயிக்கத்தக்க நாடகம் உள்ளது. நாடக அரங்குகள் மற்றும் நாவல்கள் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஒரு நாவல் எப்படி இருக்கும் என்று நான் கற்பனை செய்ய முடியும். நாவல்களில் சதிகள், திட்டங்கள் போன்றவைகள் இருக்கும் என்பதை அறிவேன். நானும் முயற்சி செய்திருந்தால் ஒரு நாவல் எழுத முடியும் என்று நினைக்கிறேன். ஆனால் இங்கு நான் குறிப்பிட வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், வேதாகமம் மிகவும் அதிசயக்கத்தக்க அளவில் திட்டத்தைக் கொண்டுள்ளது. இதை பின்னோக்கும் போது, கம்பீரமும் அழகும் ஒருங்கிணைந்த ஏதேன் தோட்டம், பிறகு சர்ப்பத்தின் வருகை, நமது முதல் பெற்றோர்களின் சபலம், ஆதி தகப்பன் ஆதாம் மனக்கலக்கம் அடைதல், ஏவாள் இல்லாமல் தான் வாழமுடியாது என்ற நினைப்பு, இதன் காரணமாக தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக மனதார பாவம் செய்தல், தன் மனைவிக்காக தன் ஜீவனையே இழத்தல் ஆகிய நிகழ்வுகளை வேதாகமம் காண்பிக்கிறது. இதில் இருப்பவை உங்களுக்குப் போதுமா? போதுமென்றே நான் நினைக்கிறேன். இதன் விளைவுகள் என்ன? பாவத்தின் விளைவாக உலகத்திற்குள் எது வந்தது என்பதைப் பாருங்கள். இந்தக் காலம் முழுமையிலும் விரோதியானவனும், விழுந்துபோன தூதர்களும் ஜனங்களுக்கு எதிராக சதி செய்து, அவர்களை குருடாக்கிப் போட்டு, எவ்விதம் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைவிட ஆழமான சதித்திட்டம் எதையும் நீங்கள் பார்க்க முடியாது. மகா சிருஷ்டிகர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து கீழே பார்த்து, பாவத்திலும் சீரழிவிலும் உள்ள நமது நிலைமையைக் கண்ணுற்று, கைதிகளின் பெருமூச்சைக் கவனித்துக் கொண்டு, நம்மில் அன்புகூர்ந்து தம்முடைய சொந்த குமாரனையே நமக்காக ஒப்புக்கொடுத்த தேவனுடைய திட்டத்தை நாம் எண்ணிப்பார்க்கலாம். என்ன கைதிகள்? கைகளும் பாதங்களும் கட்டிப் போடப்பட்டுள்ள - பாவத்தின் கைதிகள். சிலர் மற்றவர்களைவிட இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறார்கள். சிலர் தங்களுடைய பூட்டு விலங்குகளில் கோள உருண்டையையும், சங்கிலியையும் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். பாவத்தினால் பீடிக்கப்பட்ட இந்த கைதிகள் எல்லோரும் மரண சிறைச்சாலைக்குப் போய்க் கொண்டு இருக்கிறார்கள். நாவலை மிஞ்சுமளவிற்குள்ள இதைவிட மேலும் எதையாவது நீங்கள் விரும்புகிறீர்களா? மனுஷனுடைய உபத்திரவத்திலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு உதவி செய்ய யாராலும் முடியவில்லை. அவனை யாரும் விடுதலை பண்ணக்கூடியவன் யாருமில்லை என்பதை தேவன் கண்ணுற்றார். இந்த சிறைச்சாலை தன்னுடைய கதவுகளை மூடும்போது, ஸ்டீல் அல்லது இரும்பினால் செய்யப்பட்ட எந்த குறுக்குச் சட்டங்களும் இந்த மரணத்தின் குறுக்குச் சட்டங்களுக்கு இணையாகாது. ஒரு தனிப்பட்டவனுக்கு இந்த கதவு மூடப்பட்டால், தேவனைத் தவிர வேறெந்த சக்தியும் அந்த குறுக்குச் சட்டங்களைத் திறக்கவும், கைதியை வெளியே கொண்டு வரவும் முடியாது. தேவன் இந்த சூழ்நிலையை நோக்கும் போது, தம்மால் மட்டுமே உதவ முடியும் என்பதை உணர்ந்தார். நாம் இந்த நிலைமையைக் கவனிக்க அவர் விரும்பினார். பிறகு மனுஷர்பேரில் இரக்கம் கொண்டு, அவருடைய சொந்த கரம் இரட்சிப்பைக் கொண்டு வந்தது. இன்னும் அது கொண்டுவரப்படவில்லை. தம்முடைய கரத்தை வெறுமனே நீட்டியிருக்கிறார். கர்த்தருடைய கரத்தை நாம் பார்த்திருக்கிறோம். இதன் அர்த்தம் என்ன? இயேசு அந்த கரம் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். அவர் இன்னும் விடுதலைப் பண்ணிவிட்டாரா? இல்லை. அவர் மீட்டுள்ளார். அநீதிக்காக அவர் நீதியாய் மரணமடைந்தார். நீதியைத் திருப்திபடுத்தியுள்ளார்.

ஆகவே சரியான நேரம் வரும்போது, மரண தண்டனை அல்லது சாபத்தின் பிடியிலுள்ள மனுஷர்கள் அவற்றிலிருந்து வெளியே வருவார்கள்.

ஆனால் நமது நாவலுக்கு இது போதுமானதாயில்லை. நாம் அதிகம் வேண்டுகிறோம். இப்பொழுது நமக்கு என்ன உள்ளது? பிதா தம் குமாரனுக்கு மணவாட்டியைக் கொடுப்பார். அவள் எப்படி இருப்பாள்? அவள் எப்படி அழைக்கப்படுவாள்? அவள் பாவமும் அபூரணமும் கொண்ட அழுக்கான கந்தல் ஆடையை உடையவள். அவளைப் பற்றி மெச்சிக்கொள்ள வேண்டுமானால். தேவனுடன் இணக்கமாக இருப்பதற்கான அவளுடைய ஆசை தான். பிறகு அவளுடைய சுத்திகரிப்பு, தூய்மை செய்தல், நீதிமானாக்கப்படுதல், கலியாண வஸ்திரம் வழங்குதல் போன்றவைகளை மணவாளனாகப் போகிறவர் செய்கிறார்? இது ஒரு நல்ல திட்டமாய் இருக்கிறதல்லவா? பிறகு அவள் என்ன செய்ய வேண்டும்? கலியாண வஸ்திரமாகக் கட்டிய கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை அவள் பெற வேண்டும். கலியாணம் நடைபெறப் போகிறது. மணவாளனிடமிருந்து வஸ்திரத்தைப் பெற்று, மணவாட்டி ஆயத்தமாகிறாள். பிறகு அவள் அதை என்ன செய்ய வேண்டும்? தையல் வேலைப்பாடு செய்ய வேண்டும். அவள் வஸ்திரத்தை இலவசமாகப் பெறுகிறாள். பொறிக்கப்பட்ட வடிவம் அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன வடிவம்? கிறிஸ்துவே அந்த வடிவம். தையல் வேலைப்பாட்டை அவள் தானே செய்ய வேண்டும். கர்த்தர் அவளுக்குக் கொடுத்த வடிவத்திற்கு ஒத்திருக்கும் விதமாக வஸ்திரத்தில் ஒவ்வொரு தையலையும் ஜாக்கிரதையாக செய்து முடிக்க வேண்டும். அதாவது, அவள் பயத்துடனும் நடுக்கத்துடனும் தன் சொந்த இரட்சிப்புக்கான பணிகளைச் செய்ய வேண்டும். தையல் வேலைப்பாடு என்பது எதை அடையாளப்படுத்துகிறது? அது பரிசுத்த ஆவியின் கிருபைகளையும் கனிகளையும் அடையாளப்படுத்துகிறது. இந்த கிருபைகளையும் கனிகளையும் நீங்கள் கொண்டிராவிட்டால், இராஜ்யத்தில் உடன்சுதந்தரராகும் தகுதிக்கு எப்போதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. பரிசுத்த ஆவியின் கிருபைகளும் கனிகளும் என்ன? அடக்கம், மென்மை, பொறுமை, நீடிய சகிப்புத்தன்மை, சகோதர பாசம், அன்பு. இவைகளை தையல் வேலைப்பாடு செய்ய எவ்வளவு காலம் பிடிக்கும்? இது சிலருக்கு அதிக காலம் பிடிக்கும். மற்றவர்களுக்குக் குறைவாக இருக்கும். சிலர் இந்த மகிமையுள்ள வடிவத்தின்மேல் தங்கள் இதயங்களை நிலைநிறுத்தி, பரிசுத்த ஆவியின் இந்த கிருபைகளை தம்மில் பயிரிட்டு வளர்ப்பதே தங்கள் ஜீவியத்தின் பெரும் விருப்பம் என்ற அளவில் பாராட்டும் உணர்வு வேண்டும். ஏன்? நான் மணவாளனுக்கு பிரியமுள்ளவளாயிருக்க விரும்புகிறேன். அவர் தம்முடைய மணவாட்டியை உரிமைகோர வரும்போது, மணவாட்டி வகுப்பாரில் அங்கமாகச் சேருவதற்கு தகுதியுள்ள வளாகும்படி நான் ஆயத்தமாயிருக்க வேண்டும். பிறகு மணவாட்டி வகுப்பார் எல்லா சோதனைகளிலும் கஷ்டங்களிலும் பிரவேசிக்கும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுவதை மணவாளன் அறிந்திருக்கிறார். அவர் சோதிக்கப்பட்டது போலவே, எல்லா விஷயங்களிலும் சோதிக்கப்பட நம்மை அனுமதிக்கிறார். எதற்காக அப்படி? அவர்கள் பெயரளவிற்கு வெறும் கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படுத்தப்படாமல், மணவாட்டி வகுப்பார் சோதனைகளையும் கஷ்டங்களையும் சகித்துக் கொள்பவர்களாய், விசுவாசத்தைக் காண்பிப்பவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் உண்மையில் ஜெயங்கொள்கிறவர்கள், தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதன்படி நடக்கும் வாஞ்சை உள்ளவர்களாக, நீதியின் மேலும், சத்தியத்தின் மேலும், ஆவியில் அன்பு கொண்டவர்களாகவும் இருக்கும் காரணத்தினால், சொற்ப காலத்திற்கு பாவத்தினால் வரும் இன்பங்களை பெறுவதை விட, சத்திய ஊழியத்திற்காக தங்கள் ஜீவனை மரணத்திற்குள்ளாக்கப்படும் நிலையை எய்துவர். இந்த காரணத்திற்காகவே, கிறிஸ்து 1800 வருஷங்களுக்கு மேலான காலப்பகுதியை எடுத்துள்ளார். பாவம் செய்வதை கொள்கையாக நினைப்பவர்கள் மத்தியில் கிறிஸ்துவை நேசித்து, தங்கள் ஜீவனை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கிறவர்கள் அதிகமாயிருக்கமாட்டார்கள் என்பதை அவர் அறிவார். அவர் மற்றவர்களுக்கு துயரம் கொடுத்து, அவர்களை வாதிப்பார் என்று நான் கூறவில்லை. யாரும் அவர்களை வதைக்க விரும்பமாட்டார்கள். கருத்து அதுவல்ல. ஆனால் மணவாட்டி வகுப்பாரைக் கண்டுபிடிக்க அவர் எப்பொழுது விரும்புகிறாரோ, பிதா அதை அங்கீகரிப்பார். அவர் சரியான வகுப்பாரைப் பெறுவதை நிச்சயப்படுத்திக் கொள்வார். பிதாவினால் அவர்களில் ஒவ்வொருவரும் அங்கீகரிக்கப்படுவார்கள். அவர்கள் எல்லா சோதனைகளையும் பெற்றதற்குப் பின்பு,

மாசில்லாதவர்களாகவும், பழிசொல்லப்படாதவர்களாகவும் அன்புடன் பிதாவிற்கு முன்பு அவர்களை முன்னிறுத்துவார். அதற்குப் பிறகு அவர்கள் என்ன செய்வார்கள்? குறித்துக்கொள்ளுங்கள்! இது தான் அந்த நாடகம்! மனுக்குலத்தின் விழுகையில் ஆரம்பமான இந்த நாடகம் தொடர்ந்து, கிறிஸ்துவின் திருமண நிச்சயம் வரைக்கும் வந்திருக்கிறது. திருச்சபைக்கு இப்பொழுது கலியாணம் நடப்பதில்லையா? இல்லை, சகோதரனே, நீங்கள் அந்த கலியாண வகுப்பாரைச் சேர்ந்தவரோ, அல்லது இல்லையோ என்பதை நீங்கள் அறிய இயலாது. நாம் இப்பொழுது கலியாணத்திற்கு நிச்சயிக்கப்பட்டவர்கள் மட்டுமே. அவருக்கு நாம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறோம். நமது நடத்தையில் வளர்ச்சி பெறுவது, நாம் இந்த வஸ்திரத்தை அணிந்து கொள்வது, ஆவியின் கனிகளாலும், கிருபைகளினாலும் நமது வஸ்திரத்தில் தையல் வேலைப்பாடு செய்து, கர்த்தருக்கு பிரியமானது என்னெவென்று அது சுட்டிக்காட்டிய வண்ணம் நமது அன்பையும் பக்திவைராக்கியத்தையும் வெளிப்படுத்துவது போன்றவைகளைப் பொறுத்தே எல்லாம் அமையும். பிறகு என்ன? மணவாட்டி தன்னை ஆயத்தம் செய்திருக்கும் போது, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வருகிறது. கலியாணம் என்பது என்ன? கர்த்தருடன் நாம் இணைவது தான் கலியாணம் ஆகும். இது எப்படி நடைமுறைப்படுத்தப்படும்? கண்ணிமைக்கும் நேரத்தில், ஒருகணத்தில் அபூரண மனுஷ சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு மாற்றம் அடைவது ஆகும். பிறகு எப்பொழுதும் நாம் கர்த்தருடன் இருப்போம். உணவு உண்டா? வேறெதுவும் உண்டா? ஆம், அல்லது, நீங்கள் விரும்பினால், இதை நாம் காலை உணவு என்று அழைக்கலாம். இது காலையில் நடக்கிறது. இரவு உணவு (supper) என்பது, இதன் பொதுவான “உண்” (sup) என்ற மூல வார்த்தையிலிருந்து வருகிறது. நீங்கள் உணவை காலை, மதியம் அல்லது மாலையிலும் உண்ணலாம். ‘சாப்பிடுதல்’ என்பது தான் இதன் அர்த்தமாகும். ஆகவே இந்த உணவு தான் திரைக்கு அப்பால் நாம் சாப்பிடக்கூடிய முதல் விசேஷித்த விருந்து ஆகும். இந்த நாடக காட்சி எல்லாம் வேதாகமத்தில் உள்ளது என்பதை யாரும் நினைத்திருப்பார்களா? இது ஆச்சரியப்படத்தக்க வகையில் உள்ளது.

பிறகு என்ன? பந்தி துவங்குவதற்கு முன், சிறிது நேரம் அவர்கள் காத்திருக்க வேண்டும். எதற்காக? மணவாட்டியின் தோழிகள். இவர்கள் யார்? ஆம், இரண்டாவது கூட்டத்தார் உள்ளனர். அவர்கள் ஒரு காலத்தில் சபையின் பங்காக இருந்தனர். அவர்கள் பிரதிஷ்டைக்குள்ளாகி, மணவாட்டி வகுப்பாரைப் போலவே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். ஆனால் அவர்கள் எதற்காக அழைக்கப்பட்டார்களோ, அந்த உன்னத இடத்திற்கு தங்களுடைய அழைப்பையும், தேந்தெடுக்கப்படுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்வதில் தவறிவிட்டார்கள். அவர்கள் போதுமான அளவுக்கு விசுவாசமும் பக்தி வைராக்கியமும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் அவிசுவாசிகளாக இருந்தார்களா? இல்லை! அவிசுவாசிகள் யாருக்கும் தேவனுடைய கரங்களிலிருந்து எதுவும் பெற முடியாது. நாளுக்கு நாள் அவர்கள் மிகுந்த உபத்திரவங்கள் வழியாக வெளிவந்து, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே வெண்மையாக்கப்பட்டு, சிங்காசனத்தின் மேல் இல்லாமல், சிங்காசனத்திற்கு முன்பாக இருப்பார்கள். இவர்கள் மகிமையின் கிரீடங்களுக்குப் பதிலாக, வெற்றிக் குருத்தோலைகளை வைத்திருப்பவர்கள். ஆனால் சங்கீதத்தில் படிக்கும் விதமாக, பிதாவிற்கு முன்பாக ராஜாவாகிய இயேசு மணவாட்டியை அறிமுகப்படுத்துவார். பிறகு அவளைப் பின்பற்றி வரும் அவளுடைய தோழிகளான கன்னிகைகள் ராஜாவுக்கு முன்பாகக் கொண்டுவரப்படுவார்கள். வேதாகமம் வெளிப்படுத்தும் மகத்தான நாடக காட்சி இதுவே!

மேலும் நமக்கு ஏதும் உண்டா? ஆம். ராஜாவும் ராணியும் ஆயிரம் வருஷங்களுக்கு அரசாளப் போகிறார்கள். ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இந்த சாம்ராஜ்யத்தில் ஜனங்களிடமிருந்து அவர்களுடைய உரிமைகளை பறிக்கிறதும், ராஜாவுக்கு அடிமைத்தனமாக இருப்பதும் ஜனங்களை ஏழ்மையாக்கும் எந்த முயற்சியும் நடக்காது. ராஜா ஜனங்களை மேல்நோக்கி உயர்த்துவதில் மகிழ்ச்சி அடைவார். அவர்களைப் புதுப்பித்து பூரண நிலைக்கு கொண்டுவருவார். பிறகு ஆயிரம் வருஷங்களின் முடிவில் ஜனங்கள் நடுவிலிருந்து தகுதியற்றவர்கள் அழிக்கப்பட்டவுடன், இந்த பெருமையான ஜனங்கள் எல்லோரும் தேவனைப் போற்றுவார்கள்.

மேலும் ஏதேனும் உண்டா? எல்லா நட்சத்திரங்களும் நமது சூரியனைப் போல சூரியன்கள் என்று வானசாஸ்திரிகள் நமக்கு சொல்கின்றனர். நம்முடைய சொந்த சூரியனைச் சுற்றி கிரகங்கள் இருப்பது போலவே, எல்லா சூரியன்களைச் சுற்றி கிரகங்கள் உள்ளன என்று கூறுகிறார்கள். இந்த உலகங்கள் எல்லாம் இன்னும் குடியேற்றப்படவில்லையா? தேவன் பூமியை வீணாக இருக்கவிடாமல், அதை குடியேற்றும்படி செய்தார் என்றால், இந்த மற்ற உலகங்கள் எல்லாம் குடியேற்றப்படாமல்,வீணாக இருக்கவிடாமல், அவைகளும் குடியேற்றப்பட வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? நாங்களும் அப்படியே நினைக்கிறோம். இந்த மாபெரும் பணியை யார் செய்வார்? எல்லாவற்றிற்கும் முதலாக கிறிஸ்து இருக்கிறார் என்று தேவன் கூறுகிறார். ஆனால் அந்த பணியைச் செய்ய அவரையே நியமிப்பார். தேவனுடைய ஏற்பாட்டில் அடுத்து வருவது யார்? தமக்கு அடுத்தபடியாக சபை இருக்கும் என்று கர்த்தர் கூறுகிறார். இந்த உலகங்கள் அனைத்திலும் ஜனங்கள் குடியேற்றப்படுவதற்கு. கிறிஸ்துவும் சபையும் இப்போது இருக்கிறபடியால், இந்த உலகங்கள் அனைத்திலும் ஜனங்களைக் குடியேற்றுவதற்கான நித்திய காலமாய் செய்யும் மாபெரும் பணி உள்ளது. எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? ஆயிரம் மில்லியன்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

நான் பார்க்க விரும்புவதைவிட, மாபெரும் நாடகத்தை யாரேனும் இப்பொழுது செய்ய முடியுமா? என்னுடைய இரட்சகர் இயேசுகிறிஸ்துவுடன் உடன்-சுதந்தரவாளியாகவும் தேவனுடைய சுதந்தரவாளியாகவும் மாறக்கூடிய சந்தர்ப்பமாகிய சலுகைக்காக, என்னுடைய இருதயம் சந்தோஷத்தினாலும், தேவனுக்கு செலுத்தும் நன்றியினாலும் நிரம்பி வழிகிறது. அழைப்பின் ஒரே நம்பிக்கையில் நாம் எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய அழைப்பின் நம்பிக்கை இதுவே. இது உங்களுக்கு போதுமான அளவுக்கு மகத்தானதாய் உள்ளதா? இதைப் போன்று ஐசுவரியவானாகக்கூடிய வேறுவகையான வர்த்தகம் எதுவும் உங்களுக்குத் தெரியுமா? தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களைப் பற்றி வேதாகமம் சரியாகப் பகர்கிறது என்பதை உங்களுக்கு சொல்கிறேன். அது விலையேறப்பெற்ற முத்து என்று இயேசு கூறும்போது, யாதொருவன் அதன்மேல் தன் பார்வையை செலுத்தி, இராஜ்யத்தின் மதிப்பை உணர்ந்து பாராட்டினால், அந்த பரிசை பெறுவதற்காக தனக்குண்டான எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி விடுவான்.

## மாநாடுகள் - ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளுக்கு ஒப்புதல் அளிக்கிறீர்களா?.

### கே: 161:1 :: கேள்வி (1912) - 1

ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளுக்கு நீங்கள் முழுவதுமாக ஒப்புதல் அளிக்கிறீர்களா?

**பதில்:** ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளைப் பற்றி நான் சிறிது குழப்பமடைந் திருக்கிறேன். ஆனால் என்னுடைய சட்டம் இதுவாக இருக்கிறது, நிச்சயமில்லாத போது, மேற்சொல்லாமல் இருக்க வேண்டும். அவைகள் நன்மையா, அல்லது பாதகமா என்ற விஷயம் என்னிடத்தில் கிட்டத்தட்ட ஒரு சமநிலையாக இருக்கின்றது, ஆனால், நிச்சயமில்லாமல் இருப்பதினால், இது குறித்து நான் எதுவும் கூறியிருக்கவில்லை. நான் காவற் கோபுரத்தில் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்ட ஒரு கடிதத்தை நான் பிரசுரித்ததாக நினைக்கிறேன். அது சிலரால் ஒரு ஒப்புதலாக புரிந்துகொள்ளப்பட்டது. நான் அதைக் கவனித்திருந்தால், கடிதத்தின் அந்த பகுதியை நான் பிரசுரித்திருக்கமாட்டேன். இருப்பினும், நான் இப்பொழுது பார்க்க முடிகிற வரைக்கும், என்னுடைய ஆலோசனை இதுவாக இருக்கின்றது, இந்த பாடத்தின் பேரில் ஒவ்வொரு வகுப்பாரும் மேலேயிருந்து ஞானத்தை நாட வேண்டும். அவைகள் ஆவிக்குரிய வகையில் ஆதாயம் அளிப்பதாக நிரூபித்தால், அவற்றைத் தொடருங்கள். அவற்றின் ஆதாயம் குறித்து நீங்கள் சந்தேகப்பட்டால், அவைகளை நிறுத்தி விடுங்கள். நான் ஏதேனும் திட்டவட்டமான ஆலோசனை அளிக்க வேண்டியிருந்தால், இது

அவைகளுக்கு எதிரானதாகவே இருக்கும், போதுமான அளவு விவரங்கள் தெரிவிக்கப்படாத நிலையில், நான் பாதகமான ஆலோசனையை அளிக்கத் தயாராக இல்லை.

வெகு சிலர் மட்டுமே கலந்து கொள்ள முடிகிற மிக அதிகமான கூடுகைகளை வைத்துக்கொள்கிறதைக் குறித்த விஷயத்தில்: வகுப்பார் பொதுவாக கலந்து கொள்கிற கூடுகைகளில் பாடங்களின் ஆய்வுகளை வைத்துக்கொள்வது விரும்பத்தக்கது என்று நான் நினைக்கிறேன். வழக்கமாக வேதாகம பாட ஆய்வு வகுப்புகள் மிகவும் பெரிதாக இருக்கிறதில்லை, ஞாயிறு கூட்டங்கள் தவிர, புதன் கிழமை இரவில் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் எப்போதும் நண்பர்களை ஊக்குவிக்கிறேன். அதைத் தொடர்ந்த வியாழக்கிழமையில் அடுத்த கூடுகைக்கான மையக் கருத்தாக மன்னா உரைப்பகுதியை உபயோகப்படுத்துவதில் அவர்கள் பெரும் ஆசீர்வாதம் பெறுகிறார்கள் என்று அவர்கள் என்னிடம் கூறுகிறார்கள். தொடரக்கூடிய புதன் கிழமையில் இந்த வாரத்தின் அனுபவங்கள் ஏராளமான, மற்றும் உதவிகரமான சாட்சியங்களை வழங்குகின்றன. இந்த வார-நடுவில் உள்ள கூடுகைகளை மிக பொதுவான முறையில் நண்பர்கள் அனுசரிக்கிறார்கள் என்பதைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

மற்ற கூடுகைகளைப் பொருத்த வரையில், பொதுக் கூட்டங்களில் வேதாகம பாடங்களை வாசிப்பதற்கு நான் ஆலோசனை கூறுகிறதில்லை. ஒவ்வொருவரும் அவருடைய வாசிப்பை முதலில் வீட்டில், அல்லது தெரு வாகனம், போன்றவற்றில் செய்ய வேண்டும். வகுப்பு பாட ஆய்வு முற்றிலும் வித்தியாசமான விஷயமாக இருக்கின்றது. நிச்சயமாக உங்களுடைய தனிப்பட்ட பாட ஆய்வில் நீங்கள் கேள்விகளை உபயோகப்படுத்த முடியும், மற்றும் அவைகளிலிருந்து பெருமளவு நன்மையை பெறலாம், ஆனால் சபை வகுப்பில் உபயோகப்படுத்தும் போது, கேள்விகள் மிகவும் உதவியாயிருக்கும். நம்முடைய பாத்திரங்கள் கசிவு உள்ளதாக இருப்பதால், வேதாகமத்தை திரும்பத் திரும்ப வாசிப்பதற்கு நமக்கு வாய்ப்பு உள்ளது. வேதாகம பாடங்கள் வெறுமனே வகைப்படுத்தப்பட்ட வடிவில், சொல்லப் போனால், தலைப்புச் சார்ந்த ஏற்பாடு கொண்ட வேதாகமமாக இருக்கின்றது. “டாண் புத்தகங்களை” வாசிக்கும் போது, நீங்கள் வேதாகமத்தை வாசிக்கிறீர்கள். நிலையில்லாத வேதாகம வாசிப்பு, தலைப்பு சார்ந்த பாட ஆய்வைப் போன்று அதிகமான தகவல்களை அளிக்கிறதில்லை.

சில சகோதரர்கள் தங்களுடைய பல்வேறு வகுப்புகளில் டாண் பாட ஆய்வுக் குழு (DAWN BIBLE STUDY LEAGUE) ஒன்றை ஏற்படுத்தியிருப்பதாக என்னிடம் கூறுகிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களால் முடிந்தால் ஒவ்வொரு நாளும் மிக அதிகமான பக்கங்களை வாசிப்போம் என்று ஒப்புக்கொள்கிறார்கள். இது மிகவும் நன்றாக செயல்படுகிறது என்று நான் புரிந்து கொள்கிறேன். காவற் கோபுரத்தில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கடிதத்தில் அதை ஒருவர் பரிந்துரைத்தார் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இது பெரும்பாலானவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இவர்கள் ஆறிலிருந்து பன்னிரண்டு மாதங்களில் ஆறு வால்யூம்களைப் படிக்கிறார்கள் - - ஒரு நாளைக்கு இருபத்து நான்கு அல்லது பன்னிரண்டு பக்கங்களை முறையே படிக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் இந்த தொடர் புத்தகங்களின் வாசிப்பு சத்தியத்தை புதிதாகவும் மற்றும் தெளிவுடையதாகவும் ஞாபகத்திலும் - - மற்றும் இருதயத்திலும் வைத்திருக்கின்றது. அநேக தனிநபர்களால் பின்பற்றப்படுகிற இந்த திட்டம் சந்தேகத்திற்கிடமின்றி, வகுப்பு குழுவில் நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

## திருத்தங்கள் - எப்படிச் செய்யப்பட வேண்டும்?.

### கே: 162:1 :: கேள்வி (1908) - 1

பெரோயா வகுப்புகளிலோ அல்லது வேறு ஏதேனும் வேதாகம வகுப்புகளிலோ, வழிநடத்துபவரிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தோ வேதவாக்கியங்களுக்கு முரணானது என்று அறியப்பட்டிருக்கிற குழப்பமான கருத்துக்கள் வருகையில் மற்றும் அவைகள் கிறிஸ்துவுக்குள்ளான குழந்தைகளினால் சத்தியமென ஏற்றுக்கொள்ளப்படும்போது - சத்தியத்தில்

உறுதியடைந்திருப்பவர்கள், ஆனால் நியாயந்தீர்க்கவோ அல்லது விமர்சிக்கவோ விருப்பமில்லாதவர்களாய் இருப்பவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவர்கள் அமைதியுடன் காணப்பட வேண்டுமா? அல்லது சத்தியத்தினை வெளிக்கொண்டுவரத்தக்கதாக ஏதேனும் சில கேள்விகள் கேட்க வேண்டுமா? ஒருவேளை சத்தியமானது, யாரேனும் ஐக்கியத்தினின்று ஒதுங்கிவிடுவதற்குக் காரணமாகும் பட்சத்தில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் எப்படி அணுகிட வேண்டும்?

**பதில்:** அன்பான நண்பர்களே, என்னுடைய பதில் என்னெவெனில் - - - சில முக்கியத்துவமற்ற காரியங்கள் இருக்கின்றன - ஒருவிதத்தில் பார்க்கும்போது, எந்த சத்தியமும் முக்கியத்துவ மற்றதல்ல - ஆனாலும் சில சத்தியங்களானது, வேறு சில சத்தியங்களின் அளவுக்கு முக்கியமானவைகளல்ல மற்றும் அவைகள் ஒருவேளை கொஞ்சம் மீறப்பட்டாலும், கண்டுகொள்ளாமல் விடப்படலாம். சபையார் மத்தியில் பேசிக்கொண்டிருக்கும் சகோதரனோ அல்லது சகோதரியோ அல்லது பேசுவது யாராயினும், சத்தியம் தொடர்பான அவனது அல்லது அவளது கண்ணோட்டத்தினை முன்வைப்பவர்களாய் இருப்பார்கள் மற்றும் அது அவன் அல்லது அவள் கண்ணோட்டமெனச் சபையாரால் புரிந்து கொள்ளப்பட வேண்டும் மற்றும் பேசும் நபரும், தான் தேவ ஏவுதலால் பேசுவதாகவோ அல்லது தவறிழைக்காத தன்மையுடையவராக இருப்பதாகவோ உரிமைப்பாராட்டுவதில்லை; மாறாக அவன் அக்காரியம் தொடர்பான தனது கண்ணோட்டத்தினைத் தெரிவிப்பதாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்; மேலும் ஒவ்வொருவனும் அக்காரியம் தொடர்பான அவனது அல்லது அவளது கண்ணோட்டத்தினைத் தெரிவித்திடலாம் என்று சபையாரால் புரிந்து கொள்ளப்பட வேண்டும்; ஒருவேளை இங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது போன்றதொரு சந்தர்ப்பத்தில் நான் காணப்படுவேனாகில், அக்காரியத்தினை சரியான விதத்தில் கேள்வியாக வைக்கத்தக்கதான நிலைமையில் சபையார் காணப்படுவார்கள் என்று நான் நம்புவேன் மற்றும் நான் எதிர்த்துப் போராடும் விதத்தில், “இல்லை, நீங்கள் கூறும் கருத்திற்கு எனக்கு உடன்பாடில்லை” என்று கூறிடுவதற்கு முயலமாட்டேன். காரியங்களைக் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குப் பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. நீங்கள்: “சகோதரனே, அக்காரியத்தினை இந்த ஒரு கண்ணோட்டத்தில் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா? கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு இது முரண்பாடற்ற கண்ணோட்டமாய் இருக்கின்றதல்லவா? சரியாய் இருக்குமென நான் எண்ணுகின்ற கண்ணோட்டத்தினை இதோ விவரிக்கின்றேன்” என்று கூறிடலாம். பின்னர் உங்கள் கண்ணோட்டத்தினைத் தெரிவியுங்கள்; அவர் தனது கண்ணோட்டத்தினைக் கூறிவிட்டார் மற்றும் உங்களது கண்ணோட்டமானது சுருக்கமாயும், அன்பான விதத்திலும் கொடுப்பட்டிருந்தால், உங்கள் கண்ணோட்டத்தினை நீங்கள் கூறிடுவதற்கு அவர் மறுப்புத்தெரிவிக்க முடியாது. நீங்கள் உங்கள் கடமையினைச் செய்து முடித்துவிட்டீர்கள் மற்றும் அக்காரியத்தில் நீங்கள் சண்டையிட அவசியமில்லை மற்றும் கருத்தில் சில வேறுபாடு இருப்பதின் நிமித்தம் ஒருவர் ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென முடிவெடுப்பதற்கும் அவசியமில்லை. அவர் காரியம் குறித்த தன்னுடைய புரிந்துகொள்ளுதலைத் தெரிவித்திடுவதற்குரிய தனது வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டு அதைத் தெரிவித்துள்ளார். சத்தியமானது, அதிலும் விசேஷமாக ஒருவேளை அது ஏதேனும் முக்கியமான காரியமாய் இருக்கும் பட்சத்தில், சத்தியமானது எப்போதும் தெரிவிக்கப்படுகின்றதா என்று பார்த்துக்கொள்ளுங்கள்; ஆனால் ஒருவேளை அது அதிகம் வித்தியாசமற்றவைகளாக இருக்குமானால், அதைக் கவனித்திட வேண்டாம். இப்பொழுது எனக்கு ஒரு சகோதரன் ஞாபகத்திற்கு வருகின்றார்; அவர் மிகவும் நல்ல இருதயம் கொண்ட சகோதரன் ஆவார் என்பதில் எனக்கு நிச்சயமே; ஆனால் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டால், அக்கருத்தோ அல்லது மற்றக் கருத்தோ, இரண்டில் ஒன்று உறுதியற்றுப் போகுமளவும் போராடிட வேண்டும் எனும் தவறான எண்ணம் கொண்டவராய் இருந்தார். அன்புக்குரிய நண்பர்களே, இது தவறான எண்ணமாகும். நண்பர்கள் அனைவருமே தங்கள் சொந்த மனதில் பகுத்தறிந்திட வேண்டும் மற்றும் நீங்களும் சரி, நானும் சரி, நம்முடைய கண்ணோட்டத்தைக் குறித்துத் தெரிவித்ததில் மிக்க மனநிறைவு கொள்ள வேண்டும் மற்றும் மற்றவர்கள் எதை விரும்புகின்றார்களோ, அக்கண்ணோட்டத்தினை அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும். இதைத்தானே நாம் நடைமுறையில்

செய்துகொண்டிருக்கிறோம்? வாட்ச் டவர் வெளியீட்டில் நீங்கள் சில கண்ணோட்டத்தினைப் பெற்றுக்கொள்கின்றீர்கள்; நீங்கள் அதை நம்பவேண்டும் என்ற கட்டாயம் உங்களுக்கில்லை; மேலும் நீங்கள் அதை நம்பவில்லை என்றால், அதற்காக நான் உங்களிடத்தில் கோபம் கொள்வதில்லை. அது உங்கள் சார்பிலான காரியமாய் இருக்கின்றது. அடுத்த வாட்ச் டவர் வெளியீட்டில் நான் தொடர்ந்து, மறுபடியுமாக எண்ணுவதை நான் தெரிவித்திடுவேன் மற்றும் நீங்கள் எனக்குக் கடிதம் எழுதிடுவதற்கும், நீங்கள் அதை நம்பவில்லை என்று கடிதத்தில் குறிப்பிடுவதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு மற்றும் நானும், "சரி, நீங்கள் நம்பவேண்டிய கட்டாயம் உங்களுக்கு இல்லை" என்று சொல்லிடுவேன்.

## கடித தொடர்பு - கடித குழுக்கள்.

### கே: 163:1 :: கேள்வி (1906) - 1

கடித குழுக்கள் சம்பந்தமாக என் மனதில் கேள்வி இருக்கின்றது. நீங்கள் அதற்கு ஒப்புதல் அளிக்கிறீர்களா?

**பதில்:** அன்புள்ள நண்பர்களே, ஒவ்வொரு நபரும் எல்லா விஷயங்களிலும் தன்னுடைய சொந்த மனசாட்சிக்கு பொறுப்புள்ளவராக இருக்கிறார் என்பது என்னுடைய எண்ணமாக இருக்கிறது. இந்த விஷயம் குறித்து எந்த நியமமும் விதிக்கப்பட்டிருக்கவில்லை, ஆனால் அநேக விஷயங்களில் நல்ல ஆலோசனை இருக்கின்றது, மற்றும் நீங்களும் நானும் கர்த்தருடைய சித்தத்தை நம்முடைய திறமையில் சிறந்த அளவுக்கு நீங்களும் செய்ய வேண்டும் என்பது தான் பொதுவான சட்டமாக இருக்கிறது. நீங்களும் நானும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை, மற்றும் உங்களுடைய மனசாட்சி தான் உங்களுக்கு முடிவு செய்கிறது, மற்றும் என்னுடைய மனசாட்சி தான் எனக்கு முடிவு செய்கிறது. என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இந்த கடித குழுக்கள் விசேஷித்த விதமாக நன்மை செய்கிறதில்லை; ஏனெனில் அந்த கடிதங்களை எழுதுவதில் செலவழிக்கப்படும் நேரத்தை மிகவும் நன்மை பயக்கும் விதத்தில் செலவழிக்கப்படலாம். அது எப்பொழுதும் உண்மையாயிருப்பதில்லை, ஆனால் பல சமயங்களில் இது உண்மையாயிருக்கிறது, மற்றும் இந்த கடிதங்களுக்கு கொடுக்கப்படும் நேரத்தை அவ்வாறு அளிக்காதிருந்தால், நீங்கள் தனிப்பட்ட ஆய்வு மற்றும் சபையுடன் தொடர்பு கொள்வதற்கு பெரிதான வாய்ப்புக்களை உடையவர்களாக இருக்கலாம். இதை ஒவ்வொருவருக்கும் பிரயோகப்படுத்த முடியாது, ஏனெனில் சிலர் மற்ற வாய்ப்பை உடையவர்களாக இருக்கலாம். ஆனால், சிலர் சபையை, அல்லது அவர்களுடைய குடும்பங்களை புறக்கணிக்கிறவர்களாக இருப்பதை நான் அறிகிறேன் என்று நினைக்கிறேன், மற்றும் இந்த குழுவின் கடிதம் எழுதுவதில் தங்களுடைய நேரத்தை செலவழிப்பதினால், அவர்களுடைய சொந்த தனிப்பட்ட மேம்பாட்டிற்கான வாய்ப்புக்களை புறக்கணிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஆரம்பத்தில் நான் சொல்லியிருந்தபடி, இது உங்கள் மனசாட்சி செயல்படுவதற்கான விஷயமாக இருக்கிறது, மற்றும் உங்களுக்காக முடிவெடுப்பதற்கு இது என்னுடைய காரியமாக இருக்கிறதில்லை.

## உடன்படிக்கைகள் - பிள்ளை பெறாத மலடி, அவளுடைய நாயகர்.

### கே: 164:1 :: கேள்வி (1906) - 1

ஏசாயா 54ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் பிள்ளை பெறாத மலடியை, என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, கலா 4:27ல் பவுல் அப்போஸ்தலன் சபையுடன் அடையாளப் படுத்துகிறார். இந்த அதிகாரம் சபையைக் குறிக்கிறதா? என்ற பார்வையில் அவளுடைய நாயகராக யேகோவா இருக்கிறார்? "உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்."

**பதில்:** இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் உருவகம் உடன்படிக்கையைக் குறித்ததாயிருக்கிறது என்று நான் புரிந்து கொள்கின்றேன். தேவன் ஏற்படுத்தின இரண்டு விசேஷித்த

உடன்படிக்கைகளைப் பற்றி அப்போஸ்தலன் விவரிக்கின்றார். அவர் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார் என்பதும், அதற்குப் பிற்பாடு வேறொரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார் என்பதும், மேலும் அதற்குப் பிறகும்கூட ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கான வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். 430 வருஷங்களுக்குப் பிறகு ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் நியாயப்பிரமாண உடன்படிக்கை சேர்த்துக்கொள்ளப்பட்டது. புதிய உடன்படிக்கை இன்னும் எதிர்காலத்துக்குரியதாய் இருக்கிறது. இப்போது, இந்த மூன்று உடன்படிக்கைகளும் ஆபிரகாமின் மூன்று மனைவிகளில் நிழலாக்கப்பட்டன, அல்லது, முன்மாதிரியாக உருப்படுத்திக் காட்டப்பட்டன. ஆபிரகாம் பரலோக பிதாவை அடையாளப்படுத்துகிறார், ஈசாக்கு இயேசுவை அடையாளப்படுத்துகிறார்; ஈசாக்கின் மனைவி ரெபேக்காள் சபையை அடையாளப்படுத்துகிறாள். இப்போது, பிதாவைப் போன்று ஆபிரகாம் இந்த மூன்று உடன்படிக்கைகளை ஏற்படுத்துகிறார்; முதலாம் உடன்படிக்கை சாராளினால் அடையாளப்படுத்தப்பட்ட ஆபிரகாமின் உடன்படிக்கையாக இருந்தது. இந்த முதலாம் உடன்படிக்கையின் விளைவாக, ஈசாக்கு பிறந்தார். இந்த முதலாம் உடன்படிக்கையின் கீழ் அவருக்கு ஈசாக்கின் மனைவி கொடுக்கப்பட்டார். பிறகு இரண்டாம் உடன்படிக்கையான நியாயப்பிரமாண உடன்படிக்கை, ஆபிரகாமின் இரண்டாம் மனைவியான ஆகார் என்பவளால் அடையாளப்படுத்தப்பட்டது என்று அப்போஸ்தலர் கூறுவது உங்களுக்கு நினைவிருக்கும். ஆகாரின் குமாரன் முதலாவது பிறந்தவனாக இருந்தான். இந்த ஏற்பாட்டிற்கு இசைவாக தேவ கிருபையின் கீழ், இந்த சுதந்தரத்துக்குள் - முதலாவதாக யூத ஜனங்கள் எப்படி வந்தார்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது என்று அப்போஸ்தலன் கூறுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இருப்பினும், அவன் அடிமையானவளின் மகனாக இருந்தான்.. "அடிமையானவளின் மகன் (மாம்சத்தின்படியான ஆபிரகாமின் மகன்) சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை, ஆகையால் அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு." சுயாதீனமுள்ளவள் யார்? சுயாதீனமுள்ளவளாக இருந்தவள் தான் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு அடையாளமாயிருந்தாள். அடிமையானவள் யார்? நியாயப்பிரமாண உடன்படிக்கை. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் பிள்ளைகள் யார்? மாம்சீகப் பிரகாரமான யூதர்களே ஆவர். சுயாதீனமுள்ளவளின் பிள்ளைகள் யார்? கிறிஸ்துவும் சபையும். "சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிளைகளாயிருக்கிறோம்." - ஆபிரகாமின் உடன்படிக்கையின் பிள்ளைகளாயிருக்கிறோம். இப்போது, ஆபிரகாம் விவாகம் பண்ணின மனைவியாக சாராள் இருந்தாள். ஆபிரகாம் தேவனை அடையாளப்படுத்தியவராக, அல்லது, நிழலாக்கப்பட்டவராக இருந்ததால், அவ்விதமே ஆபிரகாமின் மனைவி தேவனுடைய உடன்படிக்கையை அடையாளப்படுத்தியவளாய் இருந்தாள். இந்த உடன்படிக்கை தான் பலுகிப் பெருகவும், வாக்குத்தத்தத்தின் சந்ததியைப் பெறப்போகிறதாகவும் இருக்கிறது. இந்த சந்ததி தான் பூமியிலுள்ள எல்லா வம்சங்களையும் ஆசீர்வதிக்கப் போகிறது. ஆகார் அல்லது நியாயப்பிரமாண உடன்படிக்கை அந்த சந்ததியை ஒருபோதும் பெறவில்லை மற்றும் அவ்வாறு செய்வதற்கான நோக்கம் எப்போதும் இருந்ததில்லை; ஆனால் அபோஸ்தலர் கூறும்விதமாக, இந்த விஷயம் உருவகமாக, ஒரு வடிவம் அல்லது காட்சியாக தேவன் கொடுத்தார். ஆகவே புதிய உடன்படிக்கையானது ஆபிரகாமின் மூன்றவது மனைவியாகிய கேத்தூராளால் நிழலாக உருவகப்படுத்தப்படுகிறது. மற்றும் ஆபிரகாமுக்கு கேத்தூராள் மூலமாக அநேக பிள்ளைகள் இருந்தனர் என்று நாம் வாசிக்கிறோம். புதிய உடன்படிக்கையின் கீழ், உரிய காலத்தில் ஆபிரகாம் அநேக குமாரர்களைப் பெறுவார் என்று தேவன் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்; புதிய உடன்படிக்கையின் கீழ் தேவனுடைய அநேக பிள்ளைகள் அவருடன் இணக்கமாக வருவார்கள்; ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தில் அவர் ஈசாக்கின் சந்ததியை விருத்தியாக்குகிறார், "அந்த சந்ததி கிறிஸ்துவே; . . . நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள். ஒவ்வொன்றின்படியும் சுதந்தரர்களாவதும் மற்றும் பூமியிலுள்ள வம்சங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கும் சிலாக்கியமும் ஆபிரகாமின் உடன்படிக்கை மூலமாகவே வருவதாயிருக்கின்றது. ஆபிரகாமுக்கு அநேக பிள்ளைகள் இருந்தாலும், அவர்கள் அனைவரும் ஈசாக்கின் மூலமாகவே அவர்களுடைய ஆசீர்வாதங்களைப்

பெற்றார்கள். அப்படியே தேவனுடைய குமாரர்களாகப் போகிற எல்லோரும் அவர்களுடைய ஆசீர்வாதங்களை கிறிஸ்து மற்றும் சபையாகிய நிஜமான ஈசாக்கின் மூலமாகவே பெற முடியும்.

## உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கை யூதர்களை மட்டுமே ஆசீர்வதிக்குமா?

### கே: 165:1 :: கேள்வி (1908) - 1

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் யூதர்கள் மட்டுமே இருந்ததால், புதிய உடன்படிக்கையினால் அவர்கள் மட்டுமே ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று தோன்றுகிறது அல்லவா?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன்: இது முதலாவது யூதருக்காகவும், பிறகு கிரேக்கர்களுக்கும்கூட இருக்கிறது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். வேறு வார்த்தைகளில் சொன்னால், தேவனுடைய ஒவ்வொருவிதமான ஆசீர்வாதங்களும் யூதர்களிடமிருந்து துவங்குகிறது என்பதை ஒரு காட்சியாக நமக்கு அளிக்கிறார். கிறிஸ்து தமக்குச் சொந்தமானதிலே வந்து, அவருக்குச் சொந்தமானவர்கள் ஏற்றுக்கொள்ளாத சமயத்தில், ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் தேவன் யூதனுக்கு முதலாவது வாய்ப்பினை அளித்தார். மற்றும், புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் வருகிற போது, முதலாவது யூதனுக்கு வாய்ப்பு வருவதாயும், அவன் தன் நிலைப்பாட்டை கண்டிப்பாக எடுக்க வேண்டும்; ஆனால் இந்த ஆசீர்வாதங்கள் பூமியிலுள்ள வம்சங்கள் அனைத்திற்கும் இறுதியாக வந்தடையும். இந்த மகிமை பொருந்திய நற்செய்தியை மற்ற ஜாதிகளுக்கும், ஜனங்களுக்கும், கோத்திரங்களுக்கும், பாஷைக்காரருக்கும் கொண்டு செல்லும் இந்த காரியத்தில், சபையுடனும், முற்பிதாக்களுடனும் யூதர்கள் வந்து பங்கு பெறுவார்கள். அவர்கள் எந்த அளவிற்குப் இருதயத்தின் சரியான மனப்பாங்கினைக் கொண்டிருக்கிறார்களோ, அந்த வாய்ப்பை அவர்கள் தழுவிக்கொள்வார்கள்; இது முதலாவது யூதருக்கும், பிறகு புறஜாதிகளுக்கும் கூட உரியதாயிருக்கும்; மற்றும், அப்போஸ்தலர் கூறுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும், “அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்கு தலாயிருக்க, அவர்களை அங்கீகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது; மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போலிருக்குமல்லவா?” - இது பொதுவாக மனுக்குல உலகம் முழுமைக்கு மாயிருக்கும்.

## உடன்படிக்கைகள் - எவற்றின் கீழ் உலகம் ஆசீர்வதிக்கப்படும்?

### கே: 165:2 :: கேள்வி (1908) - 2

உலகம் புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வதிக்கப்படுமா? அல்லது, ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வதிக்கப்படுமா?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன், அருமையான நண்பர்களே, தேவனுடைய ஆசீர்வாதங்கள் அனைத்தும் நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ ஆபிரகாமின் உடன்படிக்கையின் மூலமாக வருகின்றன. ஆபிரகாமின் உடன்படிக்கை சொல்லுகிறது: “உன் சந்ததிக்குள்ளாக பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.” இதில் சந்ததி மற்றும் உலகத்தின் ஆசீர்வாதங்கள் என்று இரண்டு பகுதிகள் உள்ளன. இந்த ஆசீர்வாதத்தின் முதல் பகுதி தான், ஆபிரகாமின் சந்ததியாக கிறிஸ்துவுடன் அங்கங்களாக வந்துகொண்டிருக்கிற நம்மில் நிறைவேறுகிறது. - - “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.” அந்த வாக்குத்தத்தம் என்ன? ஆபிரகாமின் சந்ததியாக, நீங்கள் பூமியிலுள்ள வம்சங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப் போகிறீர்கள் என்பது தான் அந்த வாக்குத்தத்தம் ஆகும். இரண்டாவதாக, இந்த ஆபிரகாமின் வாக்குத்தத்தமானது, சுவிசேஷ யுகத்தில் வருகின்ற விசேஷித்த ஆசீர்வாதம் போலவே, ஆயிர வருஷ யுகத்தின் முழுமையான ஆசீர்வாதத்தையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஆனால் இந்த ஆபிரகாமின்

உடன்படிக்கையின் கீழ், தேவன் இஸ்ரயேல் குடும்பத்தாரோடும், யூதாவின் குடும்பத்தாரோடும் இந்த புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார்; அதாவது, அவர்களுடைய அக்கிரமங்களின் மீது அவர் இரக்கம் காண்பிக்கப்போகிறார். இப்போது இந்த உடன்படிக்கை பழைய உடன்படிக்கையுடன் முரண்பாடு கொள்வதே இல்லை. ஆசீர்வாதம் வரும் என்று பழைய உடன்படிக்கை எளிமையாகக் கூறியது. இது நல்ல ஆசீர்வாதமென்றும், இது வெறும் பெயரளவிலான ஆசீர்வாதமாக இல்லாமல், உண்மையிலேயே ஆசீர்வாதமாக இருக்கும் என்ற வகையில், நமது விசுவாசத்திற்கு போதுமான உத்திரவாதமாய் இருந்தது. இப்போது, இரண்டாவதாக, புதிய உடன்படிக்கை வருகை புரிந்து, ஆபிரகாமின் உடன்படிக்கையின் இந்த ஆசீர்வாதம் மனுக்குலத்திற்கு எவ்விதம் வரப்போகிறது என்பதை நமக்கு விளக்குகிறது; தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகும் பெரும் தீர்க்கதரிசியும், ஆசாரியரும், இராஜாவுமாகிய கிறிஸ்துவின் மூலமாக இந்த ஆசீர்வாதம் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதின் வழியாக அவர்களை வந்தடையும். பூமி முழுமையும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிரம்பப் பண்ணி, ஒவ்வொரு தனி மனுஷனுக்கும் மன்னிப்பு கிடைக்கப்பெற்று, சீரழிவிலிருந்து வெளியே வருவதற்கு அவருடைய உதவி கிடைக்கும். அவைகள் எல்லாம் எவ்விதத்திலும் முரண்பாடாய் இருக்கிறதில்லை.

## உடன்படிக்கைகள் - மரணத்துடன்.

### கே: 166:1 :: கேள்வி (1908) - 1

"நீங்கள் மரணத்தோடு செய்த உடன்படிக்கை விருதாவாகி, நீங்கள் பாதாளத்தோடு (சீயோல், கல்லறை) செய்த ஒப்பந்தம் நிற்காதே போம்; வாதை புரண்டு வரும்போது, அதின் கீழ் மிதிக்கப்படுவீர்கள்." அந்த வாதை என்ன என்பதையும், அதின் கீழ் யார் மிதிக்கப்படுவார்கள் என்பது பற்றியும் தயவு செய்து விளக்கவும்.

**பதில்:** ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு வாராந்திர பிரசங்கத்தில் அதை ஒரு பாடமாக நாங்கள் பெற்றிருந்தோம். நமக்கு எதிரில் உடனடியாக இருக்கிற மகா உபத்திரவ காலம் தான் இந்த புரண்டு வரும் வாதை என்று காண்பிக்க நாங்கள் முயற்சித்தோம். இது விழுந்து போன தூதர்களின் உரிமை திரும்பப் பெறப்படுவது போன்றவைகள் மூலம் இந்த உபத்திரவ காலம் ஒரு பகுதியை உள்ளடக்கியதாய் இருக்கிறது; மற்றும், இது தான் புரண்டு வரும் வாதையாக இருக்கும்; இது ஒரு மாபெரும் பணி; இது ஒரு விசித்திரமான பணி; தேவன் இதை அனுமதிப்பார் என்று இதைப் பற்றி கர்த்தர் கூறுகிறார். மேலும் அப்போஸ்தலர் மூலமாக தெசலோனிக்கேயர்களுக்கு அவர் கூறுகிறார்: "ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாகக் கட்டப்படும்படிக்கும், கண்டனம் பண்ணப்படும்படிக்கும், அவர் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்." எப்படி கண்டனம் பண்ணப்படுவார்கள்? யூத யுகத்தின் முடிவில் கர்த்தர் யூதர்களிலிருந்து அவருடையவர்களாவதற்குத் தகுதியாயிருந்தவர்களை, "சிறுமந்தை" வகுப்பாரைக் கூட்டிச் சேர்த்துக்கொண்டு, அந்த ஜாதியில் மீதியானவர்கள் அனைவரும் கண்டனம் பண்ணப்பட்டு, கடந்து போகப்பட்டு அவர்கள் மேல் தேவ கோபாக்கினை வந்திருக்கிறது என்று அப்போஸ்தலன் கூறுகிறார். இதைப் போன்றே, மணவாட்டி வகுப்பாராவதற்கு தகுதியில்லாதவர்களாக கண்டனம் பண்ணப்படுவார்கள். ஆகவே, இங்கு இப்போது சபையைக் கூட்டிச் சேர்த்துக்கொண்டிருக்கிறார். மீதியானவர்கள் எல்லோரும் கண்டனம் பண்ணப்படுகிறார்கள். ஏனெனில் இந்த ஒரு வகுப்பாரை மட்டுமே அவர் கூட்டிச் சேர்க்க நோக்கமாயிருக்கிறார். இந்த பூரண வகுப்பாரைக் கண்டுபிடித்த பிறகு, மற்றவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளபடாதவர்கள், அல்லது, கண்டனம் பண்ணப்பட்டவர்களாகிறார்கள். இவர்கள் எல்லோரும் மகா உபத்திரவத்திற்குள் பிரவேசிப்பார்கள். அந்த மேகத்தின் ஒளிக்கீற்றுக்காகவும், இருதயத்தின் சரியான மனப்பாங்கில் உடனடியாகப் பின்பற்றுகிறவர் களாகிய அநேகருக்கான மகிமையின் ஆசீர்வாதத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

## உடன்படிக்கைகள்- புதிய உடன்படிக்கை Vs நியாயப்பிரமாண உடன்படிக்கை

**கே: 166:2 :: கேள்வி (1909) - 2 -**

நிழல் மற்றும் நிஜம் குறித்த பிரமாணத்தில், நிழல் கடந்துபோன பிற்பாடு, எவ்வித இடைவெளியும் இல்லாமல் உடனடியாக நிஜம் இயங்கத் துவங்குகிற தேவை உள்ளதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே, பழைய (நியாயப்பிரமாண) உடன்படிக்கை கடந்து போன உடனேயே, புதிய உடன்படிக்கை துவங்கியிருக்க வேண்டும். இந்த வாதத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை; நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**பதில்:** பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிஜமாக புதிய உடன்படிக்கை இருக்கிறது என்று நாங்கள் அறியவில்லை என்று நான் சொல்கிறேன். இது இவ்விதம் இருந்தது என்று யார் சொன்னார்? மற்றும் அதை அவர் எப்படி கண்டுபிடித்தார்? பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிஜமாக புதிய உடன்படிக்கை இருக்கிறது என்று வேதாகம வாக்கியங்களில் ஏதேனும் உள்ளதா? அப்படியிருந்தால், தயவு செய்து எனக்குத் தெரிவியுங்கள். மாறாக, பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையில் பெருமளவிலான விஷயங்கள் இன்னும் நிறைவேறாமல் உள்ளன. உங்களுக்கு நினைவிருக்கும், ஆரோன் மற்றும் அவனுடைய குமாரர்களின் தேர்ந்தெடுத்தலின் நிழலை இது உள்ளடக்கியிருக்கிறது. இதனுடைய நிஜம் இந்த சுவிசேஷ யுகத்தில் உள்ளது. இது இன்னும் முழுவதுமாக நிறைவேறவில்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கை பாவ நிவாரண நாளை உள்ளடக்கியதாய் இருக்கிறது. அந்நாளில் ஆசாரியனுக்கும், லேவியர்களுக்கும், விசுவாச வீட்டாருக்கும், மற்றும் பிறகு ஜனங்களுக்காகவும் பலிகள் செலுத்தப்பட்டன. அவைகள் நிஜத்தில் இன்னும் நிறைவேற்றப்படவில்லை, அதன் நிஜமானது இந்த சுவிசேஷ யுக முழுமைக்கும் உரியதாக நாம் காண்கிறோம். பாவ நிவாரண நாளில் இரண்டாவது பலிக்குப் பிறகு, பிரதான ஆசாரியன் வெளியே வந்து, ஜனங்களுக்கு அவனுடைய ஆசீர்வாதத்தை செலுத்தியதை நாம் பார்க்கிறோம். அவர்கள் எழும்பி, கர்த்தருக்கு முன்பாக ஆரவாரித்தார்கள். சபையும் கிறிஸ்துவும் மகிமையடைந்த பிறகு, புதிய யுகம் ஆரம்பமான பிறகு உள்ள காலத்தை இது அடையாளப்படுத்துகிறது. இவையெல்லாம் எதிர்காலத்தில் உள்ளது. இவற்றுக்கு மேலாக, எல்லா ஜனங்களும் தங்களுடைய மீறுதலின்-காணிக்கைகளை வருஷம் முழுவதிலும் ஆசாரியர்களிடம் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை நியாயப்பிரமாண உடன்படிக்கை உள்ளடக்கியிருந்தது. இவைகள் ஆயிர வருஷ யுகம் முழுமையிலும் மனுக்குலம் கர்த்தரிடத்தில் தங்களுடைய காணிக்கைகளை செலுத்துவதற்கு பிரதான ஆசாரியரிடத்திற்கும், அவருக்குக் கீழுள்ள ஆசாரியர்களிடத்திற்கும் வரப்போவதை அடையாளப்படுத்துகின்றன.

வேறொரு அம்சம், நியாயப்பிரமாண உடன்படிக்கை இன்னும் முடிவடையவில்லை, ஆகவே புதிய உடன்படிக்கை எப்பொழுது துவங்குகிறது என்று யாரேனும் கண்டுபிடிக்க விரும்பினால், பழைய உடன்படிக்கை எப்பொழுது முடியும் என்பதை கண்டுபிடிக்க வேண்டும். இது உங்களுடனோ, அல்லது என்னுடனோ ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே இது நம்முடன் முடிவடைகிறதில்லை. இது யூதர்களுடன் ஏற்படுத்தப்பட்டது. இந்த பிணைப்பு யூத ஜாதியின் மீது இன்னும் இருக்கிறது, மற்றும் அந்த ஜனங்கள் கொண்டுள்ள குருட்டுத்தன்மை இன்னும் அகற்றிப் போடப்படவில்லை. நமது கர்த்தர் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து, நித்திய ஜீவனுடைய பரிசை கைப்பற்றிக் கொண்ட போது, அதன் பலன் அனைத்தையும் எடுத்துக்கொண்டார். ஆனால் அவருடைய மரணத்திற்குப் பிறகு நியாயப்பிரமாண உடன்படிக்கை யூதர்கள் மேல் தங்கியிருந்தது. இயேசு மரித்ததிலிருந்து இந்த 1800 வருஷங்கள் முழுவதுமாக யூத ஜாதியினர் அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இருந்து வருகின்றனர். மாபெரும் மத்தியஸ்தராகிய நிழலான மோசேயின் நிஜமான இயேசுவை ஏற்றுக்கொண்டால் தவிர, அந்த உடன்படிக்கையிலிருந்து அவர்கள் வெளியேறுவதற்கு வழி ஏதுமில்லை. மரணம் வரையிலும் இது ஆளுகிறது என்று அப்போஸ்தலர் கூறினார். அவர் இதை மரணம் வரைக்கும் ஆளுகிற விவாக ஒப்பந்தத்திற்கு அடையாளப்படுத்துகிறார். ஒரு யூதன்

நியாயப்பிரமாணத்துக்கு மரித்தால் மட்டுமே அவன் அதிலிருந்து விடுதலையாகி, கிறிஸ்துவுடன் விவாகம் பண்ண முடியும். நியாயப்பிரமாணத்துக்கு மரிக்காத யூதன் இன்னும் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கிறான்; ஏனெனில் இயேசு ஒவ்வொருவருக்கும் நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். - நீதிக்கான நியாயப்பிரமாணத்தின் முடிவாக வேறு யாருக்கும் இருக்கிறதில்லை. விசுவாசிக்காத எல்லா யூதர்களும் இன்னமும் நியாயப் பிரமாணத்தின் ஆக்கினைத்தீர்ப்புக்குள் இருக்கின்றார்கள். அவர்கள் இன்று மற்ற எல்லா ஜாதிகளிலிருந்தும் பிரிந்திருக்கிறதற்கு இதுவே காரணம் ஆகும். தேவன் எல்லோரையும் அவிசுவாசத்திற்குள்ளாக சேர்த்திருக்கிறார்; உரிய காலத்தில் எல்லோர் மேலும் இரக்கம் கொள்வார்.

## உடன்படிக்கைகள் - மத்தியஸ்தம் பண்ணும் புதிய உடன்படிக்கைகள்.

### கே: 167:1 :: கேள்வி (1909) - 1 -

வாட்ச் டவர் 1909, பக்கம் 110, முதல் பத்தி, பாரா-2 இந்த கருத்தை வெளிப்படுத்துகின்றது: “சுவிசேஷ யுகத்திற்குப் பிறகு அதைத் தொடர்ந்து, கிறிஸ்துவின் நிமித்தமாக அவர்கள் இலவசமாக மன்னிக்கப்பட்டு, பாவமற்ற பூரண மனுஷீக நிலைமையை திரும்பப் பெறும் போது, புதிய உடன்படிக்கை நடைமுறைக்கு வருகிறது.” இது சரியான அறிக்கையாக இல்லையா? பூமிக்குரிய ஒவ்வொரு உடன்படிக்கையும் மத்தியஸ்தர் தம்முடைய பணியை முடித்த பிறகு தான் நடவடிக்கைக்கு வருகிறது. உதாரணமாக, பழைய ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள் செய்த ரஷ்யாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான மத்தியஸ்த பணியின் உடன்படிக்கை இன்னும் நடைமுறையில் உள்ளது. ஆயிர வருஷ யுகத்தில் செய்து கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற புதிய உடன்படிக்கையானது, அந்த யுகத்திற்குப் பிறகு, தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் முழுமையான வீச்சில் நடைமுறைக்கு வரும் என்பது உண்மை இல்லையா?

**பதில்:** இல்லை, நான் அப்படி நினைக்கவில்லை. இது சரியான மேற்கோள் என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. இங்கு எழுதப்பட்டிருப்பது போன்று நான் அதை எழுதினேன் என்று நான் நினைக்கவில்லை. வாட்ச் டவர் பத்திகளில் இந்த வடிவத்தில் இது காணப்பட்டால், அலுவலகத்தில் யாரோ ஒருவர் ஒரு வார்த்தை அல்லது எதையோ விட்டு விட்டிருப்பார் என்று நான் நினைக்கிறேன்.

இந்த கருத்தை இப்பொழுது வெளிப்படுத்துகையில், புதிய உடன்படிக்கையின் இந்த மத்தியஸ்தம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாயிருக்கிறது.; ஒரு பகுதி தேவனுக்காகவும், ஒரு பகுதி மனுஷருக்காகவும் உள்ளது. தேவனை நோக்கியுள்ள பகுதி 1800 வருஷங்களுக்கு மேலாக நமது கர்த்தரிடத்தில் ஆரம்பமானது. இது அவருடைய பலி மற்றும் அது சபைக்காகப் பிரயோகப்படுத்துவதை அடையாளப்படுத்துகிறது. இந்த முழு ஏற்பாடு சுவிசேஷ யுகம் முழுவதுமாக நடைபெற்று வருகின்றது. ஏனெனில் கிறிஸ்துவின் சரீரமாக ஏற்றுக்கொள்ளப் பட்டுவருகிறது, மற்றும் அவருடைய பலியில் பங்குபெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக சுவிசேஷ யுக முடிவில் நிஜமான காளையின் புண்ணியம் சபையின் வழியாக கடந்து, புதிய உடன்படிக்கை முத்திரிக்கப்படுவதற்காகப் பிரயோகப் படுத்தப்படும். இது பொதுவாக மனுக்குல உலகத்தாரைப் பொருத்த வரையில் உடனடியாக நடைறைப்படுத்தப்படும். சுவிசேஷ யுக முடிவில் இந்த செயல்முறை, “ஜனங்களின் பாவங்களுக்காக” வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் தெளிக்கப்படுவதை ஆசரிப்பு கூடார நிழல்களில் நமது கர்த்தரால் அடையாளப்படுத்தப்படுகிறது. அதன் பிறகு புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகள் இஸ்ரயேல் மூலமாக அனைத்து உலகத்திற்கும் உரியதாக பிரயோகப்படுத்தப்படும். பிறகு தேவன் அனைத்து உலகத்தின் பாவங்கள் குறித்த விஷயத்தில் திருப்தி அடைவார் மற்றும் இதன் தொடர்ச்சியாக, மத்தியஸ்தர் என்ற முறையில் இயேசுவிடம் அனைத்து உலகமும் திரும்பும். இந்த மத்தியஸ்த ஆட்சியின் ஆயிரம் வருஷங்கள் முழுவதுமாக அவருடைய இராஜ்யம் மட்டுமே ஆளுகை புரியும். ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில் புதிய உடன்படிக்கை தனது பணியைத் துவங்கும் மற்றும், உலகத்தை இணக்கமுறச்

செய்யும் இதன் பணி தொடரும். இந்த ஏற்பாடுகளுடன் இணக்கமாய் வராதவர்கள் மரணத்தில் அழிவார்கள் ஆகவே ஆயிர வருஷ யுகத்தின் இறுதியில் அகில உலகமும் பிதாவிற்கு முன்பாக குற்றமற்றவர்களாக ஒப்படைக்கப்பட முடியும்.

## உடன்படிக்கைகள் - நித்தியமானது.

### கே: 168:1 :: கேள்வி (1909) - 1 -

எபி 11:21ல் எந்த உடன்படிக்கை குறிப்பிடப்படுகிறது என்பதை தயவு செய்து விளக்கவும், “நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன்.”

**பதில்:** இந்த கேள்வியை எழுதிய நபர் வேதாகமத்தை அறிந்து கொண்டிருக்கவில்லை என்பதை நீங்கள் பார்க்கலாம். இயேசு நித்திய உடன்படிக்கையினால் மரித்தோரிலிருந்து திரும்பக் கொண்டுவரப்பட்டார் என்று அர்த்தம் கொள்ளும் வகையிலேயே இந்த வசனம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த கேள்வியுடன் நாம் சில வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளும் தேவை உள்ளது. அதாவது, “நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தின் மூலமாக நீங்கள் பூரணராக்கப்படுகிறீர்கள்.” அது இவ்விதமாக “நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தின் மூலமாக நீங்கள் பூரணராக்கப்படுகிறீர்கள்.” என்று சொல்லுவதில்லை. நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினால் உங்கள் பாவங்களிலிருந்து நீதிமானாக்கப்படுகிறீர்கள்; ஏனெனில் அவ்விதமாக ஏற்கனவே நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு, பரிசுத்தவான்களுக்கு அப்போஸ்தலன் எழுதுகிறார்: நம்முடைய ஜீவனை அர்ப்பணித்து, நமது போதகருடன் அவருடைய மரணத்தில் பங்குகொள்வதினால், நமது இரட்சகரை மரணத்திலிருந்து திரும்பிக் கொண்டுவந்த அதே வல்லமை, நம்மையும் புதிய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே பூரணராக்க முடியும் என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

## உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணம் Vs புதிய உடன்படிக்கை.

### கே: 169:1 :: கேள்வி (1909) - 1 -

எரே 31ல் நமது பரலோக பிதா கூறுகிறார், அவர் இஸ்ரயேலுடன் செய்யப்போகும் புதிய உடன்படிக்கை, “அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல.” நீங்கள் உடன்படிக்கைகளைக் குறித்து தெளிவுபடுத்தினீர்கள், மற்றும் இவைகளுக்கு இடையிலான வித்தியாசம், மத்தியஸ்தர்களுக்கு இடையிலான வித்தியாசமே என்று கூறினீர்கள். கடந்த கால நியாயப்பிரமாண உடன்படிக்கை மற்றும் எதிர்கால உடன்படிக்கை ஆகிய இரண்டும் நியாயப்பிரமாண உடன்படிக்கைகள் தான் என்றால், முதலாம் உடன்படிக்கையின்படி இரண்டாம் உடன்படிக்கை இருக்காதா?

**பதில்:** புதிய உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கை ஆகும், மற்றும் இது ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டதின்படியே உள்ளது என்று நான் தெரிவிப்பது போலத் தோன்றுகிறது. இதற்கான எங்களுடைய பதில் இதுவே: நியாயப்பிரமாண உடன்படிக்கை இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்டது - இதன் ஒரு பகுதியாக, அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தரை உள்ளடக்கியதாயிருந்தது. ஏனெனில் அந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தர் இதை நிறைவேற்ற முடிந்த அளவுக்கு மேலாக எதையும் இந்த முழுவதுமான உடன்படிக்கை அவர்களுக்குச் செய்ய இயலாது; மத்தியஸ்தரின் வரம்புகள் தான் உடன்படிக்கையின் வரம்புகள் ஆகும் - இந்த கருத்தைப் புரிந்து கொண்டீர்களா? புதிய உடன்படிக்கையின் நன்மை என்னவென்றால், இது மேலான மத்தியஸ்தரை கொண்டிருக்கும். அவர் பூரணமான மனுஷீக ஜீவனை உடையவராயும், மனுக்குல சந்ததியின் மீட்பின் விலைக்கிரயமாக அவர் தம்மையே கொடுத்தார். மற்றும், இது இறுதியில் உலகமனைத்தையும் விலைக்கிரயமாக்கும் விளைவுகளை

ஏற்படுத்தும். ஆகவே உலகம் அனைத்தின் பாவங்களுக்காக ஏற்கனவே செய்யப்பட்டிருக்கும் இந்த ஏற்பாட்டினை புதிய உடன்படிக்கை நிறைவேற்ற முடிகிறதாய் இருக்கிறது. மேலான மத்தியஸ்தரை உடையவர்களாயிருக்கிற காரணத்தினால், அவர்களுடைய பாவங்கள் அறவே அகற்றப்படும். ஆகவே இது ஒரு மேலான உடன்படிக்கையாக இருக்கும்.

யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதை விட மேலான பிரமாணத்தை நீங்கள் கற்பனை செய்ய இயலாது, “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடு முழு முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக.” அன்புள்ள நண்பர்களே, அவர் இதைவிட உயர்வான பிரமாணத்தை உபயோகப்படுத்தியிருக்க முடியாது; ஆதாமின் காலத்தில் வாழ்ந்தவராயிருந்தாலும், அல்லது ஆயிர வருஷ யுகத்தின் இறுதியில் இருப்பவராயிருந்தாலும், ஒரு பூரண மனுஷனுடைய திறனின் முழு அளவைக் குறிப்பதாய் உள்ளது; அவர் இதைவிட உய்ர்வான தர நிலை கொண்ட பிரமாணத்தைக் கொண்டிருக்க முடியாது - - தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல், தேவனிடம் முழுமையாக அன்பு செலுத்துதல், மற்றும் தன்னைப் போலவே பிறனையும் அன்பு செலுத்துதல். இந்த வார்த்தையின் அர்த்தத்தில் தான், பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையும், புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையும் ஒரே மாதிரியாக இருக்கின்றன, ஆனால் இவற்றில் உள்ள வித்தியாசம் என்னவெனில், ஒரு உடன்படிக்கை இஸ்ரயேல் மற்றும் உலகத்தின் ஆசீர்வாதத்தை நிறைவேற்றவில்லை; மற்ற உடன்படிக்கை ஆசீர்வாதத்தை நிறைவேற்றப்போகிறதாய் இருக்கிறது. ஆகவே புதிய உடன்படிக்கை மேலான உடன்படிக்கையாக இருக்கும் என்பதற்கான காரணம் என்னவென்றால், இது மேலான மத்தியஸ்தரை உடையவராய், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை நிறைவேற்றக்கூடியதாய் இருக்கிறது.

## உடன்படிக்கைகள் - சாராள் உடன்படிக்கை முடிவு பெறுதல்..

### கே: 169:2 :: கேள்வி (1909) - 2 -

ஆவிக்குரிய வித்து பிறக்கும் போது, சாராளின் உடன்படிக்கை முடிவுக்கு வருமா?

**பதில்:** ஆம், என்னுடைய புரிதலின்படி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி முழுமைக்கு வரக்கூடிய சமயத்தில், உடன்படிக்கையின் சாராள் அம்சம் முடிவுக்கு வரும். அடையாளமாக ஈசாக்கினால் குறிக்கப்பட்ட இயேசு ஆவிக்குரிய மகிமையின் தளத்தை அடைந்த போது, சாராள் உடன்படிக்கை முடிவுக்கு வந்துவிடவில்லை; ஆனால் ஈசாக்கு ரெபேக்காளுடன் ஒன்று சேர்வதற்கு முன்பாக சாராள் உடன்படிக்கை முடிவுக்கு வரும். ரெபேக்காள் சபை வகுப்பாரை அடையாளப்படுத்துகிறாள், மற்றும் அவர்களின் ஒன்றுசேருதல் கிறிஸ்துவும் சபையும் இணைவதை அடையாளப்படுத்துகிறது. ஈசாக்கும் ரெபேக்காளும் இணைந்த போது, சாராள் மரித்து விட்டாள். ஏனெனில் ஈசாக்கு ரெபேக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்குள் அழைத்துக்கொண்டு போவதை நாம் வாசிக்கிறோம். இது ரெபேக்காளால் நிழலாக்கப்பட்ட சபை சாராளின் உடன்படிக்கைக்குப் பதிலாக அந்த இடத்தை எடுத்துக் கொள்கிறது. பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாவற்றையும் ஆசீர்வதிக்கப்போகும் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை கர்த்தர் மூலம் கொண்டுவரப்படும் வல்லமையாக சபை விளங்கும். சாராள் உடன்படிக்கை, சந்ததியைக் கொண்டு வருகிறது, மற்றும் சபை இதன் தொடர்பாக இயங்கி, பூமியிலுள்ள எல்லா வம்சங்களையும் ஆசீர்வதிக்கும்.

## உடன்படிக்கைகள் - சபை - சாராள் மற்றும் ரெபேக்காள்.

### கே: 170:1 :: கேள்வி (1909) - 1 -

ஈசாக்கின் மணவாட்டியாக ரெபேக்காள் அழைக்கப்படுவதற்கு முன்பாக சாராள் மரித்த நிலையில், அவளால் நிழலாக்கப்படும் உடன்படிக்கையின் கீழ் சபை எவ்வாறு இருக்க முடியும்?

**பதில்:** சாராள் மரிப்பதற்கு முன்னதாகவோ அல்லது பிறகோ ஈசாக்கின் மனைவியாக ரெபேக்காள் அழைக்கப்பட்டது பற்றி எனக்குத் தெரியாது; ஆபிரகாம் ஈசாக்குக்காக பெண் கொள்ள போவதற்காக தன்னுடைய ஊழியக்காரனை அனுப்பிய போது, சாராள் மரித்திருந்தாள் என்று சொல்லும்விதமாக வசனப்பகுதி இருப்பதாக என்னால் எதையும் நினைவுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. மணவாட்டி வந்த போது, அவளை ஈசாக்கு சாராளின் கூடாரத்துக்கு அழைத்துச் சென்றான் என்பது தான் என்னுடைய நினைவில் உள்ளது.

## உடன்படிக்கைகள் - சாராள் Vs ஆபிரகாம் உடன்படிக்கைகள்.

### கே: 170:2 :: கேள்வி (1909) - 2 -

ஆபிரகாமின் உடன்படிக்கையைப் போல சாராள் உடன்படிக்கை முழுமையானதா?

**பதில்:** உயர்வும், விசேஷித்ததுமான பார்வையில், ஆபிரகாமின் உடன்படிக்கையாகவே சாராள் உடன்படிக்கை இருக்கிறது; இது ஆபிரகாமின் உடன்படிக்கையாக இருந்தது. மற்றது வெறுமனே கூடுதலான ஏற்பாடாய் இருந்தது.

## உடன்படிக்கைகள் - சந்ததிகளை வெளிக்கொணருதல்.

### கே: 170:3 :: கேள்வி (1909) - 3 -

சாராள் உடன்படிக்கை ஆவிக்குரிய சந்ததியை வெளிக்கொணருகிறது என்றால், ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் இரண்டு சந்ததிகளும் வெளிக்கொணரப்படுகிறது என்று எப்படி சொல்ல முடியும்?

**பதில்:** ஆபிரகாமின் உடன்படிக்கை ஆவிக்குரிய சந்ததியைக் குறிப்பிடத்தக்க விதமாக உள்ளடக்கியிருந்தது என்று இந்த முறையில் சொல்ல முடியும்; ஆனால் இது பூமிக்குரிய் சந்ததியையும் மறைமுகமாகக் கொண்டிருந்து, இது நிறைவேறப்போகும் விதமாக அடையாளப்படுத்தப்பட்டது; கிறிஸ்துவும் சபையும் ஆவிக்குரிய சந்ததியாக இருந்து, இவர்கள் மூலமாகவே ஆசீர்வாதம் அனைத்தும் வருவதாகவும், முதலில் பூமிக்குரிய சந்ததிக்கும், பிறகு ஆபிரகாமின் சந்ததியாக மாறக்கூடிய பூமியிலுள்ள எல்லா வம்சங்களுக்கும் ஆசீர்வாதம் வரும்.

புதிய உடன்படிக்கையின் கீழ், தேவனுடைய ஆசீர்வாதம் எல்லா ஜாதிகளுக்கும் வரப்போவதில்லை, எரே 31:31ல் சொல்வது போல, வெறுமனே ஒரு ஜாதிக்கு, ஆபிரகாமின் சந்ததிக்கு வருகிறதாய் இருக்கிறது: “இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும், யூத குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.” எகிப்து, பெர்சியா போன்றவைகளோடு அல்ல, ஆனால் இஸ்ரயேலுடன் மட்டுமே; மற்றும் இஸ்ரயேலுடனான இந்த புதிய உடன்படிக்கை மற்ற ஜாதிகளுக்கு உரித்தானது அல்ல, இஸ்ரயேலுக்கு மட்டுமே; ஏனெனில் மாம்சீகத்தின்படி இது ஆபிரகாமின் சந்ததி. கிறிஸ்துவின் விருப்பம் அல்லது மரணத்தின் வாயிலாக, புதிய உடன்படிக்கையின் மூலமாக வெளிச்சத்தையும் ஆசீர்வாதத்தையும் பிரதிபலிக்கின்ற ஆபிரகாமின் உடன்படிக்கை, சீர்பொருந்துதலின் ஆசீர்வாதத்தை இஸ்ரயேல் ஜாதிக்கும், பிறகு இஸ்ரயேல் ஜாதியின் மூலமாக, இதனுள்ளே வரவிருக்கும் அநேகருக்கும் இது உரித்தாயிருக்கும்.

ஆயிர வருஷ காலத்தின் துவக்கத்தைப் பற்றி வேதாகமம் நமக்கு என்ன சொல்கிறது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்; அந்த காலத்தில் இஸ்ரயேலையும், மற்றும் இஸ்ரயேலுக்குள்ள தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதங்களையும் கூர்ந்து கவனிப்பார்கள். “சீயோனிலிருந்து வேதமும் (ஆவிக்குரிய இஸ்ரயேல்), எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் (மாம்சீக இஸ்ரயேல்) வெளிப்படும்.” உலகத்தின் ஜாதிகள் கூர்ந்து நோக்கியும், இஸ்ரயேலுடனான தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பார்த்து, “நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம், வாருங்கள்.” என்று சொல்வார்கள். தேவனுடைய

ஆசீர்வாதங்கள் எல்லாம் இஸ்ரயேல் ஜாதிக்கு வருகின்றன என்பதை உலகத்தின் ஜாதிகள் பார்ப்பார்கள், மற்றும் அவற்றில் ஒரு பங்கையும் பெற விரும்புவார்கள். மற்றும், கர்த்தருடைய வழியில் நடக்க முன்வராமல், அவருடைய வார்த்தையைக் கேளாமல் இருக்கும் ஜாதியின் மேல் மழை வருஷிக்கப்படுவதில்லை. “மழை” என்ற வார்த்தை, தேவனுடைய இரக்கங்கள், ஆரோக்கியம், வலிமை மற்றும் பூமியின் பூச்சிகள், முட்கள், நெருஞ்சில்களிலிருந்து விடுதலை ஆகியவற்றின் புத்துணர்ச்சி மிக்க மழைத்தூறல்கள் வழியாக வரும் சீர்பொருந்துதலின் எல்லா ஆசீர்வாதங்களையும் அடையாளப்படுத்துகிறது. ஜாதிகளின் மேல் வியாதி வருவதில்லை.. இந்த புதிய ஏற்பாடு முற்பிதாக்களின் ஆளுகையின் கீழ் இருக்கும். நடைமுறை உண்மைகளுக்கு மேலாக, ஜனங்களுக்கு வேறு ஒன்றும் கவர்ச்சிகரமாக இராது. அவர்கள் இன்னும் மரித்துக் கொண்டே இருப்பார்கள், மற்றும் புதிய உடன்படிக்கை நடைமுறைக்கு வரும் இடத்தில் மட்டுமே ஜீவன் இருக்கும். இந்த புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டின் கீழ் வருபவர்களுக்கு மட்டுமே ஜீவன் கிடைக்கும். அநேக ஜாதிகள் புதிய உடன்படிக்கையின் கீழ் அவர்களின் ஆசீர்வாதங்களைப் பார்ப்பதால், அவர்கள் அதற்குள் வர விரும்புவார்கள், மற்றும் இதுவே தேவனுடைய ஏற்பாடு ஆகும். இந்த ஏற்பாட்டிற்குள் யாரெல்லாம் வருகிறார்களோ, அவர்கள் அனைவரும் இஸ்ரயேலர்களாகிறார்கள்; ஆகவே, ஆயிர வருஷ யுக முடிவில், அனைத்து உலகத்தாரும் இஸ்ரயேலர்களாக இருப்பார்கள், மற்றும் “திரளான ஜாதிகளுக்கு தகப்பன்” என்று எழுதியிருக்கிறபடி, அனைத்து உலகத்தாரும் அப்போது ஆபிரகாமின் சந்ததியாக இருப்பார்கள்.

## உடன்படிக்கைகள் - பாவங்கள் நீக்கப்படுதல்.

### கே: 171:1 :: கேள்வி (1909) - 1

(ரோமர் 11:27,28) “நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும் போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. சுவிசேஷத்தைக் குறித்து, அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.” ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில் உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படுமானால், உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படும்போது, பாவங்கள் நீக்கிப்போடப்படும் என்றால், ஆயிர வருஷ யுகத்தில் வாழும் தனிநபர்களின் பாவங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமலேயே நீக்கப்படுமா?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன், இல்லை. ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில் செய்யப்படுவது என்னவென்றால், அந்த புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் உள்ள அந்த ஜனங்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யப்படுகிறது. அது அவர்களுடைய விருப்பங்களுக்கு தடங்கலாய் இராது; அவர்கள் விரும்பினால், அவர்கள் தடுக்க முடியும். அந்த புதிய உடன்படிக்கையுடன் இணக்கமாய் வந்தால் மட்டுமே, அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்களுடைய குருட்டுத்தன்மையை நீக்குவதே, கர்த்தர் செய்யப்போகும் முதலாவது காரியம் ஆகும். அதாவது, அவர்கள் காண்பார்கள், மற்றும் அவரைக் குத்தினவர்கள் அவரை நோக்கிப் பார்க்கும் பொழுது, ஜெபத்தின் ஆவியும், இரந்து வேண்டுதலும் அவர்கள் மேல் இருந்து, அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பும் போது, அவர்கள் அவ்விதம் செய்வார்கள் என்று அப்போஸ்தலர் குறித்துக்காட்டுவது போன்று, புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டுகளுடன் இணக்கமாய் வருகிறவர்களின் பாவங்களை தேவன் மன்னிப்பார், மற்றும் அவர்கள் அக்கிரமங்களை இனி ஒருபோதும் நினைவில் கொள்ளமாட்டார. அவர்கள் தேவனுடைய குமாரனை சிலுவையில் அறையாதவர்கள் போல, அவர்களுடன் கருணையுடன் செயல்படுவார். அவர்கள் அதிகமதிகமாக பதில் கொடுக்கும் போது, அவர் அவர்களுடைய கடினமான இருதயங்களை எடுத்து விட்டு, அவர்களுக்கு சதையுள்ள இருதயத்தைக் கொடுப்பார். அது உடனடியாக செய்யப்படுவதில்லை; ஏனெனில் இதற்கு சில காலம் பிடிக்கும். தேவன் கிறிஸ்துவின் நிமித்தம் அவர்களை மன்னித்தது போன்று, ஒருவரையொருவர் மன்னித்து, மென்மையான இருதய நிலைக்கு அவர்கள் வருவதற்கு முன்பு, அவர்கள் தேவனிடத்தில் வந்ததற்குப் பின் பல வருஷங்கள் ஆகுமென்றால் நான் ஆச்சரிப்பப்படமாட்டேன்.

## உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையின் கீழ் பிரமாணங்கள்.

### கே: 171:2 :: கேள்வி (1909) - 2

புதிய உடன்படிக்கை நியாயப்பிரமாண உடன்படிக்கையாக இருக்க வேண்டுமானால், எந்த வகையான பிரமாணங்கள் நடைமுறையில் இருக்கும்? அவைகள் மோசேயின் பிரமாணங்களைப் போல இருக்குமா?

**பதில்:** மோசேயின் நியாயப்பிரமாணம் முழு எண்ணிக்கை கொண்ட பிரமாணமாக உள்ளது. தேவனால் கொடுக்க முடிந்த மிகவும் எளிமையான பிரமாணமாக மோசேயின் பிரமாணம் இருக்கிறது என்று நாம் அனுமானிக்கலாம். தேவன் அதிகமான தேவைகளைக் கொண்டதாக பிரமாணத்தைக் கொடுத்திருக்க முடியும், ஆனால் தம்முடைய பிரமாணத்தை ஏதாவது எளிமையான அறிக்கைகள் உள்ள அளவிற்கு எப்படி குறுகியதாய் செய்திருக்க முடியும் என்று நான் அறியவில்லை. நமது கர்த்தர் உபாகமத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார், "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக." முழுமையான பிரமாணம் இதுவே, மற்றும் இதற்குக் குறைந்தவாறு இதை நீங்கள் சுருக்க முடியாது; மற்றும் இதை நீங்கள் இதைக் காட்டிலும் அதிகமாக நீங்கள் செய்ய முடியும் என்று நான் பார்க்கவில்லை. ஆயிர வருஷ யுகத்தில், அனைத்து உலகமும் இந்த பிரமாணத்தின் கீழ் தான் இருக்கும்; ஆயிர வருஷ யுகத்தின் இறுதியில், அவர்கள் எல்லோரும் அந்த தர நிலைக்கு கண்டிப்பாக வந்தடைய வேண்டும், அல்லது அவர்கள் நித்திய ஜீவனுக்குத் தயாராக இருக்கமாட்டார்கள்.

## உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையும் ஒலிவ மரமும்.

### கே: 172:1 :: கேள்வி (1910) - 1

நல்ல ஒலிவ மரத்திலிருந்து முறித்துப்போடப்பட்டிருந்த மாம்சீக இஸ்ரயேலர், அதில் ஒட்டவைக்கப்பட வேண்டியிருப்பதானால், புதிய உடன்படிக்கை இயேசுவில் முழுமை அடைந்து விட்டது என்பதை இது நிரூபிக்கிறதாய் இருக்கிறதல்லவா? அப்படியில்லை என்றால், அவர்களுடைய குருட்டுத்தன்மை அகற்றப்படுவதற்கு முன்பாக நடைமுறையில் இல்லாத ஏதோ ஒன்றிற்குள் அவர்கள் எப்படி ஒட்டவைக்கப்பட முடியும்?

**பதில்:** இயேசு இந்த உலகத்திற்கு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்பதாகவே, இந்த நல்ல ஒலிவமரம் இருந்தது என்று நான் பதிலளிக்கிறேன். ஆகவே இந்த நல்ல ஒலிவமரம் புதிய உடன்படிக்கை ஏற்பாடாக இருந்திருக்கவில்லை. ஆனால் ஆபிரகாமின் சந்ததியாக இஸ்ரயேலுக்கான தேவனுடைய கிருபையை அடையாளப்படுத்தியதாய் இருந்தது. தேவனுடைய வாக்குத்தத்தம் மரத்தில் வேராய் இருந்தது, மற்றும் இது ஆபிரகாமுக்கு சொல்லப்பட்டது, "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." ஆபிரகாமின் இந்த மாம்சீக சந்ததி பரிசுத்த ஜாதியாகும். இந்த சந்ததி கர்த்தரையும் சத்தியத்தையும் பெற்றுக் கொள்வதற்குரிய சரியான மனதும் இருதயமும் கொண்டவர்களாய் இருந்திருந்தால், அவர் அவர்களை அரவணைத்துக் கொண்டிருப்பார், மற்றும் இந்த ஒலிவ மரத்தில் தங்கியிருப்பதினால் அவர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக இருந்திருப்பார்கள். நாம் முன்பு எடுத்துக்காட்ட முயற்சித்த பிராகாரம், அவர்கள் ஏற்கனவே அதில் இருந்தார்கள். ஆபிரகாமுடன் பண்ணப்பட்ட உடன்படிக்கையில் இந்த விஷயத்தின் வேர் இருந்தது. இதன் விளைவாக, யூத ஜாதி முளைத்து வெளிவந்தது, மற்றும் அந்த ஜாதி, பரிசுத்த ஜாதியாக, உலகத்தாரை ஆசீர்வதிப்பதற்கான அவருடைய வல்லமையாக இருக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார். அவிசுவாசத்தின் காரணமாக, அவர்களில் அநேகர் முறித்துப் போடப்பட்டார்கள் என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். அவர்கள் எப்போதும் புறம்பாக்கிப் போடப்படுவதில்லை; புறஜாதியாருடைய காலம் நிறைவு உண்டாகும் வரைக்கும் மட்டுமே; சிலர் இணைந்திருக்க அனுமதிக்கப்பட்டனர். யோவான் அப்போஸ்தலர் தன்னுடைய சுவிசேஷத்தில் கூறினார், "அவரை

ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." அவர்கள் ஆபிரகாமின் இயற்கை வழி வந்த பிள்ளைகளாக இன்னும் இருந்து, ஒலிவமரத்தில் இன்னும் ஒட்டப்பட்டிருக்கிறவர்களாக இருந்தனர். கிறிஸ்துவுக்குள் வந்தவுடன், அவர்கள் இடமாற்றம் அடைந்து, ஆவிக்குரிய இஸ்ரயேலின் அங்கங்களானார்கள். நாம் எல்லோரும் இயற்கையாக புறஜாதிகளாக இருந்தோம்; 12 கோத்திரங்களின் ஒவ்வொன்றிலிருந்து 12,000 பேர்களாக மொத்தம் 144,000 பேர்களைப் பற்றி வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் வண்ணமாக, இங்கு குறிப்பிட்ட நிஜமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக நாம் இருந்து, அதே ஆவிக்குரிய சந்ததியில் நாம் எல்லோரும் ஒட்டவைக்கப்படுகிறோம். மூன்றரை வருஷங்களில் நமது கர்த்தருடைய ஊழியத்தில் வெவ்வேறு கோத்திரங்களைச் சார்ந்த எவ்வளவு பேர் அவரை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நாம் அறியவில்லை. பெந்தேகொஸ்தேயில் பல ஆயிரங்கள் இருந்தனர், மற்றும் ஒவ்வொருவரும் 12 கோத்திரங்களில் ஒவ்வொன்றையும் சார்ந்தவர்களாய் இருந்தனர். உங்களுக்கு நினைவு இருக்கும், பவுல் தம்மைப் பற்றி விவரிக்கும் போது, பென்யமீன் கோத்திரத்தைச் சார்ந்தவராகக் கூறினார். ஆனால் ஒருவேளை அதிகமானவர்கள் யூதா கோத்திரத்தை சார்ந்தவர்களாயிருக்கலாம்; அவர்கள் எதைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், 144,000 பேர்கள் முழுமையாக்கப்பட வேண்டும், மற்றும் இதை நிறைவேற்றுவதற்கோ, அல்லது முழுமையாக்குவதற்கோ, புறஜாதிகள் இதற்குள் கொண்டுவரப்படுகிறார்கள். இப்பொழுது மாம்சீக இஸ்ரயேலர்கள் அவிசுவாசத்தில் தரித்திருக்காவிட்டால், மறுபடியும் அவர்களை ஒட்ட வைக்கப்படுவதற்கு தேவனால் முடியும். ஆனால் புறஜாதிகள் இதற்குள் வந்த பிரகாரமாகவே, அதே முறையில் தான் அவர்கள் வர வேண்டும்; ஏனெனில் அவர்களுக்கு காப்புரிமை, அல்லது உள்ளான வழி ஏதும் பெற்றிருக்கவில்லை. இஸ்ரயேலின் பெருந்திரளானவர்கள் புறம்பாக்கப்படுவத்ற்கு முன்பாக, அப்போது மீதியானவர்கள் உரிய காலத்தில் கிறிஸ்துவினிடத்திற்கு மாற்றம் செய்யப்படுவார்கள், அவர்கள் தரித்திருப்பார்கள். ஆனால் முறித்துப் போடப்படுகிறவர்களானால், அவர்கள் புறஜாதிகள் என்ற கணக்கிலேயே ஒட்டவைக்கப்படும். அதே செயல்முறையில் அவர்களுக்கு இருக்கும். வேறு வார்த்தைகளில் சொன்னால். அவர்கள் புறஜாதிகளைக் காட்டிலும், மேலாக எந்த அனுகூலமும் பெறவில்லை, மற்றும் அவர்கள் முறித்துப்போடப்பட்டதால், அவர்கள் நன்மை எதையும் பெற்ற்ருக்கவில்லை. ஆனால் அவர்கள் முறித்துப்போடப்பட்டதற்கு முன்னதாக, அவர்கள் நன்மை பெற்றிருந்தார்கள்.

## உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணம் - யூதர்கள்.

### கே: 173:1 :: கேள்வி (1910) - 1

நியாயப்பிரமாணம் சிலுவையில் முடிவடைந்ததா, அல்லது, இது யூதர்களின் மேல் இன்னும் இயங்கி வருகிறதா?

**பதில்:** இது சிலுவையில் முடிவடையவில்லை என்று நான் பதிலளிக்கிறேன். இது இன்னும் முடிவடையவில்லை. இது புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கை தன்னுடைய மேலான மத்தியஸ்தருடன் மேலோங்கியதாக, அல்லது பழைய நியாயப்பிரமாணத்தின் இடத்தைப் பிடித்துக்கொள்ளும். யூதன் தன்னுடைய உடன்படிக்கையின் காவலிலிருந்து வெளியே வர வேண்டும், அது தான் ஒரே வழி ஆகும். ஆகவே, அவர்கள் இதில் அடைக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இதன் கீழேயிருந்து வெளியே வருவதற்கு வேறு வழி ஏதுமில்லை. இப்பொழுது பாருங்கள், நியாயப்பிரமாணத்துக்கு மரிப்பதினால் மட்டுமே கிறிஸ்துவுக்குள் எந்த யூதனும் வந்தடைவதற்கான வழியாக இருந்தது; அவன் வேறொருவருடன், அதாவது கிறிஸ்துவுடன் விவாகம் செய்து ஐக்கியமாவதற்கு ஏதுவாக, நியாயப்பிரமாணத்தின் மீதான எல்லா நம்பிக்கையையும் கைவிட வேண்டும், மற்றும் இதனுடன் மரிக்க வேண்டும். ஆகவே இதைச் செய்யாத யூதர்கள், மற்றும் செய்திருக்காதவர்கள் இன்றும் நியாயப்பிரமாணத்தின் கீழேயே இருக்கிறார்கள். இதன் கீழிருந்து வெளியே வர வேண்டுவதற்கான ஒரே வழி, இதற்கு மரித்திட வேண்டும். மேலான மத்தியஸ்தர் நிழலின்

இடத்தைப் பெறுகிற வரையிலும், மற்றும் மற்ற நிஜமான அம்சங்கள் கொண்டுவரப்படும் வரையிலும், அவர்கள் இதன் கீழே தங்கியிருக்க வேண்டியிருக்கிறது.

## உடன்படிக்கைகள் - யூதர்களுக்கு நியாயப்பிரமாணம் அளிப்பது.

### கே: 173:2 :: கேள்வி (1910) - 2

கிறிஸ்து தம்முடைய கீழ்ப்படிதலினால் பரிசைக் கைப்பற்றியதைக் கண்ட நியாயப்பிரமாணம் இப்பொழுது யூதர்களுக்கு என்ன அளிக்கிறது?

**பதில்:** பரிசு போய்விட்டது, பந்தயத்திடல் திறந்திருந்தது போலவும், நீங்கள் ஒடுகிறவர் போல இருந்தால், ஒரே ஒரு பரிசு இருந்தது; நீங்கள் அந்த பந்தயத்தில் ஓடினீர்கள்; அந்த பரிசை வென்றவர் நீங்கள் ஒருவரே; மற்றவர்கள் வருஷம் முழுவதும் சுற்றி ஓடினாலும், அவர்கள் பரிசை பெறவில்லை. அப்படித் தான் யூதர்களும் இருந்தனர். அவர்கள் ஓடிக்கொண்டும் மற்றும் ஓடிக்கொண்டே இருந்தனர். ஆனால் நியாயப்பிரமாணத்தைப் பொருத்த வரையில் பரிசு போய்விட்டது.

ஒரு சகோதரன்: "சகோதரர் ரசல், பிரசங்க மேடையில் நீங்கள் உயர்வான இடத்தில் இருந்தால், நண்பர்கள் நல்ல விதமாக உங்களைப் பார்க்க முடியும் என்று நினைக்கிறார்கள் என்று தோன்றுகிறது. (சகோதரர் ரசல் பிரசங்க மேடைக்கு முன்பாக தரையில் நின்று கொண்டிருந்தார். அந்த பிரசங்க மேடை பழங்காலத்தவைகளில் ஒன்றாக இருந்தது. உண்மையில், ஒயிட்ஃபீல்டு முன்னாளில் உபயோகப்படுத்தியிருந்ததற்கு இணையான பிரசங்க மேடை என்று புகழ் பெற்றிருந்த மேடை ஆகும்.)

சகோதரர் ரசல்: நண்பர்களே, உயரத்திற்கு வாருங்கள்.

(பெரிதான கைத்தட்டல்கள்.)

சகோதரர் ரசல்: நாங்கள் உங்கள் எல்லோரையும் குனிந்து பார்க்க முடியாது.

(எங்களில் சிலர் அரங்கத்தின் (GALLERY) கீழே இருந்தனர். ஆகவே அவர் எங்களைப் பார்க்க முடியவில்லை. பிரசங்க மேடை மிக உயரமாக இருந்ததால், அவர் மீதமுள்ளவர்களைப் பார்க்க முடியும்,)

## உடன்படிக்கைகள் - பழைய பிரமாணத்தின் கீழ் உள்ள யூதர்களின் ஜெபங்கள் கேட்கப்படுமா?

### கே: 173:3 :: கேள்வி (1910) - 3

பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருக்கும் எந்த யூதனும் ஜெபத்தில் கர்த்தருடன் நேரிடையாகத் தொடர்பு கொள்ள முடியுமா? யோவான் தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார்,

**பதில்:** ஆம், நியாயப்பிரமாணத்தையும், அதன் மத்தியஸ்தர் மோசேயையும் அங்கீகரித்தவர்கள், அல்லது மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தவர்களும் மோசே ஏற்படுத்தியதும், ஸ்தாபித்ததுமாகிய அமைப்பு முறைகளை அடையாளப்படுத்துகிறவர்களும், ஆலயத்தை உள்ளடக்கியவர்களும், பாவ நிவாரண நாள், மற்றும் அதைத் தொடர்ந்த வருஷத்தில் யூதர்களுக்குரிய அனைத்து சிலாக்கியங்களின் கண்ணோட்டத்தில் பார்த்தால், மேற்கண்ட கேள்விக்கு ஆம், என்றே பதிலளிக்கிறேன். இந்த நிழலான பார்வையில் தான், அவர்கள் தேவனிடத்தில் நெருக்கமாகக் கொண்டுவரப்பட்டார்கள், மற்றும் அவர்கள் முழுவதுமாக இணக்கமாகியுள்ளது போன்று நடத்தப்பட்டார்கள். இருப்பினும், வருஷத்தின் முடிவில் அவருடன் இணக்கமாக இல்லை என்று கண்டுணரப்பட்டு, அந்த நிழலான காரியம் மறுபடியும்

தொடரப்பட்டது. இரண்டு மனுஷர்கள் ஜெபிப்பதற்கு ஆலயத்திற்கு சென்றார்கள் என்பதை நம்முடைய கர்த்தர் நமக்குச் சொல்கிறார்: இயேசு கூறுகிறார், ஆயக்காரனும், பாவியுமானவன் மற்ற மனுஷனுக்கு மாறாக நீதிமானாக்கப்பட்டு தன் வீட்டுக்கு சென்றான், ஆகவே, நீங்கள் பாருங்கள், வார்த்தையின் இந்த பார்வையில், அனைத்து யூத ஜனங்கள் கர்த்தருடன் ஜெபத்துடனான உறவு கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாரும் அர்ப்பணிக்கப்பட்டவர்கள்; “எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள்.” அவர்கள் சார்பாக இருந்த அந்த அமைப்பு முறைகளின் நன்மைகளை அவர்கள் பெற்றிருந்தனர். மற்றவர்கள், யூதரல்லாதவர்கள் அவர்களுடைய ஜெபங்களை தேவன் செவிகொடுப்பதற்குரிய சிலாக்கியத்தைப் பெறவில்லை. நீதிமானாகிய கொர்நெலியுவைப் பற்றி நாம் நினைவில் கொள்வோம். அவன் எப்பொழுதும் ஜெபம்பண்ணுகிறவனாயும், ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தவனாயும் இருந்தான் - மூன்று மிக முக்கியமான நுட்பங்கள் - ஆனால் அவனுடைய ஜெபங்கள் யூத யுகம் முடிவடைந்து, “தடுப்புச் சுவர்” நீக்கப்படும் வரைக்கும் தேவனிடத்திற்கு வர முடியவில்லை. பிறகு அவனுடைய ஜெபங்களும் தர்மங்களும் தேவனுடைய சந்நிதியில் வந்தெட்டியது. அதன் விளைவாக, கர்த்தர் அவனிடத்திற்கு ஒரு தூதனை அனுப்பி, கூறினார், உன்னுடைய ஜெபங்களும் தர்மங்களும் வந்தெட்டியுள்ளன; பேதுரு என்பவனை அழைப்பி. அவன் வரும்பொழுது, உன்னையும், உன் ஜனங்களையும் இரட்சிப்பதற்கான வார்த்தைகளை அவன் உனக்கு சொல்லுவான்.

## உடன்படிக்கைகள் - மோசேயும் நியாயப்பிரமாண உடன்படிக்கையும்.

### கே: 174:1 :: கேள்வி (1910 - Z) - 1

ஆதாமின் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து மோசே விலக்கப்பட்டிருந்தாரா?

**பதில்:** அவர் யூத ஜாதியின் ஒரு அங்கமாக இருந்தார் என்றால், அப்பொழுது அவர் தேவனுடனான இந்த விசேஷித்த உடன்படிக்கை - உறவுக்குள்ளாக இருந்தார். .ஆதாம் பாவம் செய்த போது, தேவனுடனான அவனுடைய உடன்படிக்கையின் நிலைப்பாட்டை இழந்து விட்டான். மரணத்திற்குள்ளாகத் தண்டிக்கப்பட்டான். ஆபிரகாமின் சந்ததியுடன் ஒரு புதிய ஏற்பாட்டை தேவன் உண்டுபண்ணினார். அவர்கள் பூரணர்களை போன்று அவர்களுடன் உடன்படிக்கைக்குள்ளாக தேவன் செயல்பட்டார். இதன் ஒரு முனையில் மோசே அவர்களுடைய மத்தியஸ்தராக ஆனார். இந்த ஏற்பாட்டில் ஓரே மத்தியஸ்தராகவும், இதில் பங்கு கொள்கிறவராகவும் இருந்தார், ஆகவே இந்த நியாயப்பிரமாணத்தின் கீழ் மோசேயும், அதைப் போன்றே அவருக்குப் பின் வந்தவர்களும் இருந்தார்கள் என்று நாம் அனுமானிக்கிறோம். வருஷந்தோறும் தொடர்ச்சியாக இருக்கும் ஏற்பாட்டினால், இந்த உடன்படிக்கை முதலாவதாக, நிழலான நீதிமானாக்கப்படுதல், அல்லது தேவனுடன் உடன்படிக்கை - உறவு என்ற இந்த நிலைமையில் அவர்களை இருக்க வைத்தது, மற்றும் இது ஒரு வருஷம் முழுவதற்கு சாதகமான நிலையை அவர்களுக்குக் கொடுத்தது; வருஷத்தின் முடிவில் தான், ஏற்கனவே செலுத்தப்பட்ட பலியின் காலப்பகுதி காலாவதியான உடனே, அவர்கள் தேவனுடனான உடன்படிக்கை - உறவு இருக்கவில்லை. பிறகு அவர்கள் சாம்பல் பூசி, சணல் நூல் வஸ்திரம் தரித்து, ஆக்கினைத்தீர்ப்பில் கீழ் இருந்த மீதியான உலகத்தாரைப் போன்று, அவர்கள் பாவிகளாக இருந்தனர். ஆனால். மீதியான உலகத்தாரை விட, அதிகமான ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் இருந்தனர்; ஏனெனில் அவர்கள் நியாயப்பிரமாணத்தின் தீர்ப்பையும் கூடுதலாகப் பெற்றிருந்தார்கள். நாம் புரிந்து கொள்கிறோம், மோசே அந்த உடன்படிக்கையின் கீழ் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள முடிந்திருந்தால், வாக்குத்தத்தத்தின்படி தேவன் அவருக்கு நித்திய ஜீவனைக் கொடுத்திருக்க வேண்டும். - - “அவைகளைச் செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்,” கிறிஸ்துவைப் பற்றியோ, அல்லது கிறிஸ்துவில் விசுவாசிப்பது, அல்லது அது போன்று தேவன் எதையும் கூறவில்லை. வெறுமனே, இவைகளின்படி செய்கிறவன் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வான். ஆகவே, இந்த வாக்குத்தத்தம் நியாயப்பிரமாணத்தின் கீழ் மோசேக்கும் இஸ்ரயேலர் எல்லாருக்கும் உரித்தானதாகும் என்று

நாம் நினைக்கிறோம், மற்றும் யூதர்களுக்கு இன்றும் உரித்தாயிருக்கிறது. தற்காலிகப் பார்வையில் அவர்கள் ஆதாமின் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து வெளியே வந்தார்கள், அவர்கள் தப்பி விட்டார்கள் என்ற விதமாக இல்லை. ஏனெனில் ஆதாமின் மீதியுள்ள பிள்ளைகளைப் போலவே அவர்கள் குறைபாடுகளிலிருந்து மாறுபடாமல். இன்றும் அதையே தரித்தவர்களாயிருந்தார்கள். அவர்கள் தாங்கள் விரும்பியதைச் செய்ய முடியவில்லை. அப்போஸ்தலர் கூறுவது போல, "நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையைச் செய்கிறேன். ஆகவே அவர்கள் ஒரு ஜாதியாக தீர்ப்பை பெற்றார்கள். மற்ற ஜாதிகள் அவ்விதம் பெறவில்லை. ஆதாம், தனி நபராக, மரணத்திற்குள்ளாகத் தண்டிக்கப்பட்டான். அவனுடைய பிள்ளைகள் தனி நபர்களாக அந்த தீர்ப்பை பெறவில்லை. அவர்கள் "காவலில்" பிறந்தார்கள் - இந்த மரண நிலைமையில். ஆனால் யூதர்களைப் பற்றிய விஷயத்தில், அவர்கள் மீதியான உலகத்தினரிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தவர்கள் போல, தேவன் அவர்களை நடத்தினார்.

அவர்கள் சொல்லியிருந்ததைப் போன்று இது இருந்தது, "கர்த்தாவே, நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை; நீங்கள் எங்களுக்கு ஒரு வாய்ப்பு ஏன் கொடுக்கவில்லை?"

"நான் உங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பேன்; நான் உங்களுக்கு என்னுடைய நியாயப்பிரமாணத்தை நீங்கள் கைக்கொள்வதற்காகக் கொடுப்பேன்."

"நாங்கள் உங்களுடைய நியாயப்பிரமாணத்தை பூரணமாகக் கைக்கொண்டால், எங்களுக்கு நீர் என்ன தருவீர்?"

"நான் உங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பேன்."

"நாங்கள் இதை கடைபிடிப்போம்.

நாங்கள் உங்களுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள சம்மதிக்கிறோம், மற்றும் நீர் எங்களுக்கு ஜீவனை அளிக்க சம்மதிகிகிறீர்,"

ஆகவே, பிறகு, ஆதாமின் இந்த பிள்ளைகள், யூதர்கள், மீதியுள்ள உலகத்தாரைப் போன்று, தனி நபருக்கான பரீட்சை உள்ளவர்களாக இதற்கு முன்பு இருந்ததில்லை. தனி நபர்களாக தண்டிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் ஆதாமின் ஆக்கினைத் தீர்ப்பின் விளைவில் வெறுமனே பங்கு கொண்டிருந்தனர் - இந்த எல்லா யூதர்களும் இப்பொழுது ஜீவனுக்கான பரீட்சையில் வைக்கப்பட்டிருந்தார்கள்; மற்றும் அவர்கள் தோல்வி அடையும் போது, இது அவர்கள் மேல் வரும் விசேஷமான அபராதத்தை அர்த்தப்படுத்தும்; ஏனெனில் அவர்கள் ஒரு தனி நபருக்கான பரீட்சையைக் கொண்டிருந்து ஒவ்வொருவரும் தோல்வியடைந்தார்கள். ஆகவே இந்த இரண்டாவது தீர்ப்பில், அல்லது இந்த தனி நபர் பரீட்சை மற்றும் தனி நபர் தீர்ப்பின் கீழ் ஒவ்வொரு யூதனும் மத்தியஸ்தரான மோசேயின் கீழ் இருக்க வேண்டும் என்பது அவசியமாகிறது. என்று நாம் பார்க்கிறோம். ஆகவே இந்த மத்தியஸ்தரின் இடத்தை கிறிஸ்து எடுத்துக் கொள்ள முடிந்து, அந்த ஜாதிக்கு ஏதேனும் செய்ய முடியும். மேலான மத்தியஸ்தரின் நிழலாக வெறுமனே மோசே இருந்தார். ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் வெறும் நிழலாக இருந்த அந்த மத்தியஸ்தரில் அவர்கள் இருந்தபடியால், அவர்களுடைய புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து இனி இருக்கும் போது, தேவன் அவர்களுக்கு நிழலான முறையில் காலப்போக்கில் என்ன செய்யப்போகிறார் என்பதை வெறுமனே காண்பித்துக் கொண்டிருந்தார். எரே 31:31.

## உடன்படிக்கைகள் - கலந்தாய்விற்குப் பின் கருத்துப்பிரிவினை.

### கே: 175:1 :: கேள்வி (1910) - 1

வாட்ச் டவர் வெளியீட்டிலிருந்து நாங்கள் பெற்றுக்கொண்ட கருத்தின் அடிப்படையில் உடன்படிக்கைகளைக் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டபோது, மத்தியஸ்தர் குறித்துப் பார்க்கையில், குறிப்பிட்ட சில விஷயங்களானது வகுப்பில் கருத்துப்பிரிவினையைக்

கொண்டுவருவதாக இருக்கின்றது. எதன் காரணமாக கருத்துப்பிரிவினைகள் வந்ததோ அதைத் தொடர்வதா? அல்லது அந்த ஆராய்ச்சியினை விட்டுவிட்டு, வேறு எதையாகிலும் ஆராய்வதா? இதில் எது ஞானமானதாய் இருக்குமென நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

**பதில்:** கலந்தாய்விற்கு உடன்படிக்கைகள் எனும் தலைப்பு மிகவும் பொருத்தமானது என்று நான் எண்ணுகின்றேன் மற்றும் சபையில் வழக்கமாய் கலந்து கொள்ளும் சகோதரன் ஒருவர் கலந்தாய்வின்போது காணப்பட்டு, சில வேறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பாரெனில், அவர் தான் சொல்ல விரும்புகிறதை தொடர்ச்சியாகத் தெரிவித்துக் கொண்டிருப்பதற்குரிய கண்ணோட்டத்தில் இல்லாமல் மற்றும் ஒவ்வொரு கலந்தாய்விலும் வகுப்பைத் தொடர்ச்சியாய் குறுக்கிடுவதற்குரிய கண்ணோட்டத்தில் இல்லாமல், மாறாக அதைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுவது மிகவும் சரியே என்று நான் எண்ணுகின்றேன். ஒருவேளை அவர் எடுத்துக் கூறுவதற்கு ஏதேனும் இருக்கிறதென்றால் மற்றும் அதை சுவாரசியமான விதத்தில் அவரால் எடுத்துக் கூற முடியுமானால், கூறுவதற்கு அவரை விட்டுவிடுங்கள்; ஏனெனில் அவருக்கு அந்த உரிமை இருக்கின்றது; சபையாரில் ஒரு அங்கத்தினராக, அவர் பேசுவதற்கான உரிமையினை உடையவராவார்; ஆனால் ஒருவேளை சபையாரில் பெரும்பான்மையானவர்கள், அவர் முன்வைத்திட்டவைகளுக்கு ஆதரவாக இல்லையெனில் மற்றும் அவர் அதைத் தொடர்ந்து முன்வைப்பதில் அவர்களுக்கு விருப்பமில்லையெனில், அச்சகோதரனிடம், “சகோதரனே, நாங்கள் உங்களுக்கு ஒரு நல்வாய்ப்பினைக் கொடுத்தோம் மற்றும் நீங்கள் சொல்ல விரும்பியவற்றைச் சபையாரும் கேட்டார்கள் மற்றும் அதைத் தொடர்ந்து சிந்தித்திடுவதற்குச் சபையார் விரும்பவில்லை. ஆகையால் தயவாய் இனிமேல் அத்தலைப்பின் பேரிலான எங்களது ஆராய்ச்சியினைக் குறுக்கிட வேண்டாம்” என்று கூறி, அச்சகோதரன் தன் வாதத்தினை நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். மேலும் சபையாருடைய விருப்பத்திற்கு இசைவாக, அத்தலைப்புப் பற்றின கலந்தாய்வு தொடரப்படலாம். ஒருவேளை சபையார் யாவரும், அத்தலைப்பின் பேரிலான கலந்தாய்வை நிறுத்திட விரும்புவார்களானால், ஒவ்வொரு விஷயத்திலும் சபையாரிடமே தீர்மானிப்பதற்கான உரிமை காணப்படுகின்றது என்ற புரிந்துகொள்ளுதலின் காரணமாக, சபையாருடைய அறிவுறுத்தலின்படி செய்வதைத் தவிர வேறு எதையும் நான் அறியேன்.

## உடன்படிக்கைகள் - கையெழுத்தைக் கலைத்துப் போடுதல்.

### கே: 176:1 :: கேள்வி (1910) - 1

நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, இது நியாயப்பிரமாண உடன்படிக்கையை இப்பொழுது முடிவடைந்திருக்கிறது என்று அர்த்தப்படுத்துகிறதா?

**பதில்:** இந்த கட்டளையான கையெழுத்து நமக்கு விரோதமாக இருந்தது. “நாம் என்பது யார்? கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் தாம் “நாம்” என்பவர்கள். இந்த கட்டளையின் கையெழுத்து இன்னும் யூதர்களின் மேல் உள்ளது, மற்றும் இது அவர்களை கடமையாகக் கட்டியிருக்கின்றது. நியாயப்பிரமாணம் எதைப் பற்றிச் சொன்னாலும், நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ள அவர்களுக்கு இது சொல்லுகிறது. அவர்கள் இதன் கீழ் அடைக்கப்பட்டுள்ளார்கள். இந்த யுகத்தின் முடிவில் பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையை விழுங்கப்போகும் புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையை அவர் கொண்டுவருவார்.

## உடன்படிக்கைகள் - இயேசுவின் வளர்ச்சி.

### கே: 176:2 :: கேள்வி (1910) - 2

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இயேசு வளர்ந்தாரா? அல்லது ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழா, அல்லது இரண்டின் கீழா?

**பதில்:** நியாயப்பிரமாணத்தின் கீழ் இயேசு பிறந்தார், ஆகவே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும் கடமைக்குள்ளாக்கப்பட்டார் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவர் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டார். ஆனால் இந்த நியாயப்பிரமாணம் அவரை ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக ஒருபோதும் உருவாக்கவில்லை. ஆபிரகாமின் பிள்ளையாக மரியாள் இருக்கும் தகுதியினால், இயேசு ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாக இருந்தார். ஆகவே ஆபிரகாமுக்கு உறவினராக இருந்தார்.

ஆனால் பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் சந்ததியாக இருப்பதற்கு அவர் மாம்சீகத்தின்படி ஆபிரகாமின் சுபாவ சந்ததியைக் காட்டிலும் மேலாக அவர் இருக்கவேண்டியிருந்தது. ஏனெனில் மாம்சத்தின்படி அவர் நித்திய ஜீவனை ஒருபோதும் கொடுக்க முடிந்திருக்க இயலாது. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, தமக்கு மட்டும் நித்திய ஜீவனைப் பெறுவது தான் இயேசு அதிகபட்சமாக செய்ய முடிந்திருக்கும். பிறகு அவர் மற்றவர்களுக்கு உதவியிருப்பார். அப்படி இருந்தால், நியாயப்பிரமாணத்தின் கீழ் பூரண மனுஷனாக, நித்திய ஜீவனுக்கு தகுதியென நியாயப்பிரமாணத்தினால் அங்கீகரிக்கப்பட்டவராக, மனுஷனாகிய இயேசு என்ற முறையில் அவர் உரிமை கொண்டவராக, ஆதாம் பெற்றிருந்த எல்லா உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களை கூடுதலாகவும் இல்லை, மற்றும் குறைவாகவும் இல்லை என்ற விதத்தில் உரிமையுடையவராக அவர் இருந்தார். அப்படி இருப்பினும், அது ஆவியின் தளத்தில் ஆபிரகாமின் விசேஷித்த சந்ததியாவதற்கு அவரை அனுமதித்திருக்காது. ஆசீர்வாதங்களை அவர் அளிக்க முடிவதற்கு முன்பாக, அவர் ஆவியின் மேனியை பெற வேண்டும். அவர் அந்த மேனியை எப்படி அடைய முடியும்? ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் என்று நான் பதிலளிக்கிறேன். மாம்சத்தின்படி இயேசுவுக்கு தேவனுடைய பரிசு என்னவென்றால், அவர் தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்ததால், அப்பொழுது அவருடைய பூமிக்குரிய உரிமைகள் ஒரு சொத்தாக அமையப்பெறும். இது விலைமதிப்புடைய பொருளாகவும், அவருக்குச் சொந்தமானதாகவும், அதை அவர் உபயோகப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். ஆகவே இயேசு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, அவருடைய ஜீவனை வெறுமனே ஒப்புக்கொடுத்தபோது, அந்த பலி அவருடைய வரவுகணக்கில் இருந்தது, மற்றும் பிதா புதிய சுபாவத்தை அவருக்குக் கொடுத்து, அவருடைய கீழ்ப்படிதலுக்கு வெகுமதி அளித்தார். மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்ததற்கு முன்பாக, அவர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட உடனேயே, அவர் யோர்தானில் தம்முடைய பூமிக்குரிய சுபாவத்தின் அர்ப்பணிப்பைச் செய்த உடனேயே, "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது." என்று சொன்னபோது, அவர் புது சிருஷ்டியாக மாறினார். பிதா அந்த இடத்தில் அவரை அங்கீகரித்தார் மற்றும் அவர் புதிய இராஜ்யத்தின் ராஜரீக ஆசாரியரானார். ஆகவே அவர் தம்முடைய உயிர்த்தெழுதலில் பரிபூரணமானார் மற்றும் உங்களையும், என்னையும், மனுக்குலம் முழுவதையும் ஆசீர்வதிக்கும் மகிமையின் கர்த்தரானார். இந்த பிரதான ஆசாரியர் ஜனங்களுக்கு என்ன செய்வார்? அவர் இப்போது சிலவற்றை செய்ய வேண்டியவராயிருக்கின்றார். அது என்ன? அவருடைய பூமிக்குரிய சுபாவம் அவருக்கு இருக்கின்றது. எப்படி? இது அவருக்குச் சொந்தமானது. அவர் இதை யோர்தானில் ஒப்புக்கொடுத்தார் மற்றும் "எல்லாம் முடிந்தது." என்று அவர் சத்தமிட்டபோது, கல்வாரியில் தம்முடைய பலியை நிறைவேற்றினார். இது முழுமையாகி, அவருடைய வரவில் இருக்கின்றது மற்றும் இது பிதாவின் கரங்களில் உள்ளது. இதனுடைய விலைமதிப்பு என்ன? உலகமனைத்தின் பாவங்களுக்கான மீட்பின் விலைக்கிரயமாக இருக்கிறது. அவர் இதை உலகத்தாருக்காக செலுத்திவிட்டாரா? ஓ, இல்லை, உலகத்தாருக்கு செலுத்தவில்லை. இது நீதியின் கரங்களில் உள்ளது மற்றும் இது எப்போது செலுத்தப்பட வேண்டும் என்பதை அவர் தீர்மானிக்க முடியும். இது கொஞ்சம் பணத்தை நீங்கள் வங்கியில் வைத்திருப்பதைப் போல, அதே மாதிரியாக இருக்கிறது. வங்கியில் இதை நீங்கள் வைத்திருக்கும் போது, நீங்கள் எவருக்கும் பணம் செலுத்துகிறதில்லை. ஆனால் நீங்கள் காசோலை அனுப்பி, வங்கியாளரிடம் இதை செலுத்தச் சொன்னால், அப்பொழுது இது செலுத்தப்படுகிறது. இதற்கிடையில் இது உங்கள் வரவில் வங்கியாளர்களின் கரங்களில் இருக்கின்றது. ஆகவே பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு

மேலாக, கிறிஸ்துவின் பலி பிதாவின் கரங்களில் இருக்கின்றது. அவர் இதை எப்போது உபயோகப்படுத்துவார்? இந்த யுகத்தின் முடிவில், மனுக்குலத்தார் அனைவரின் பாவங்களுக்காக அவர் இதை பிரயோகம்பண்ணுவார் மற்றும் இதை தேவன் ஏற்றுக்கொள்வார். அதன்பிறகு மனுக்குல அனைத்து உலகத்தாரும் இயேசுவிடம் மனந்திரும்புவார்கள். மற்றும் பூமி தொடர்பான ஒவ்வொன்றிலும் அவர்கள் அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள். உலகத்தை சீர்பொருந்தச் செய்யும் நோக்கத்திற்காக, அவருடைய இராஜ்யம் ஆரம்பமாகும். இதற்காகவே கிறிஸ்து மரித்திருக்கிறார் மற்றும் அவருடைய பலியின் புண்ணியத்தை உரிய காலத்தில் அவர் பிரயோகம்பண்ணுவார். இதற்கிடையில் அவர் தம்முடைய பலியுடன் என்ன செய்துகொண்டு இருக்கிறார்? அவர் இதை வேறு வழியில் உபயோகப்படுத்திக் கொண்டு இருக்கிறார். அவர் கூறுகிறார், உங்களுடைய பலி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கப்போவதில்லை; ஏனெனில் பிதா இதை ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் போதுமான அளவில் புண்ணியத்தை வைத்திருக்கவில்லை. அவர் கூறுகிறார், பிதா உங்களுடைய பலியை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக, பிதாவின் கரங்களில் ஏற்கனவே இருக்கின்ற என்னுடைய புண்ணியத்தில் தேவையானதை உங்களுடைய பலியுடன் கூடுதலாக்குவேன். உங்களுடைய பலியை ஏற்றுக்கொண்ட உடனேயே, மனுஷனாக நீங்கள் மரித்தவர்களாக எண்ணப்படுகிறீர்கள் மற்றும் நீங்கள் புது சிருஷ்டியாக இருக்கிறீர்கள். ஆகவே இது இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் நடந்து வருகிறது. அர்ப்பணிப்பு செய்கிற சிறுமந்தை மற்றும் திரள்கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு வகுப்பார்களாகிய சபையாரின் பலி அனைத்தும் தேவனுடைய பார்வையில் இது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகச் செய்கிறது. நம்முடைய பலிகளில் எதையும் பிதா ஏற்றுக்கொள்வதற்கான ஒரே நிபந்தனை இதுவே. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரே நிபந்தனை இதுவே. யாராவது பலி செலுத்தத் தவறினால், இது பலியை விட, மாம்சத்தின் அழிவு சம்பந்தமான விஷயமாக இருக்கிறது. மனுஷனாகிய கிறிஸ்து இயேசு என்ற முறையில், இயேசு நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் வளர்ச்சி அடைந்தார். ஆனால் அவர் தம்முடைய சுதந்தரத்தை ஜீவபலியாக ஒப்படைத்ததின் தகுதியால், புது சிருஷ்டியாக வளர்ச்சி பெற்று ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் அந்த ஸ்தானத்தை அவர் பெற்றார். சபையைக் குறித்து பேசும்போது, வேதாகமம் கூறுவதைக் கவனியுங்கள், "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்." அவர்கள் யார்? "பரிசுத்தவான்" என்ற வார்த்தைக்கு "புனிதத்தன்மையுள்ளவர்" என்று அர்த்தமாகும். இந்த பரிசுத்தவான்கள் யார்? முதலாவதாக, மகா பரிசுத்தவான் இயேசு, எல்லோரிலும் பரிசுத்தமானவர். பூரணமுள்ளவராக உண்மையில் தொடங்கி, அவருடைய பலியின் தகுதியினால் தெய்வீக சுபாவத்தில் பிரதான ஆசாரியரானார். பின்பு அவருடைய பாத அடிச்சுவடுகளில் நடந்து வருகின்ற மற்ற பரிசுத்தமானவர்கள் எல்லோரும் அவர் பலியிட்டது போன்று பலியிட்டு, அவருடைய பாத அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருடையவராவார்கள். இவர்கள் எல்லாரும் பரிசுத்தமுள்ளவர்கள், கர்த்தரின் விலையேறப்பெற்ற கற்களாக இருக்கிறார்கள் மற்றும் அவர் இப்பொழுது அவர்களை மேம்படுத்துகின்றார். இயேசு தம்முடைய பூமிக்குரிய சுபாவத்தை பலியிட்டதினால், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாவதற்கு இயேசுவுக்கு இந்த ஒரு வழி தான் இருந்தது. நீங்களும் நானும் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியின் அங்கங்களாவதற்கு இந்த ஒரு வழி தான் உண்டு. மற்றவர்கள் ஆவிக்குரிய வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்க முடியாது.

## உடன்படிக்கைகள் - பல்வேறு கேள்விகள்.

### கே: 177:1 :: கேள்வி (1910 - Z)) - 1

**(1)** எபி. 9:15ம் வசனத்தை (திருத்திய மொழிபெயர்ப்பு) - தயவு செய்து விளக்கவும்: "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தைப் அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்."

**(2)** மனுஷனாகிய கிறிஸ்து இயேசு தம்முடைய மனுஷ ஜீவனைப் பலியிட்டதினால், முழு உலகத்துக்குமான மீட்பின் விலைக்கிரயத்தை செலுத்தினார் என்று நான் புரிந்து கொள்கிறேன்.

**(3)** பிறகு அவர் தம்முடைய "பாதஅடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களுக்கு" அந்த பலியில் ஒரு பங்கை அவர் அளிக்க முடியும்.

**(4)** அவர் தம்முடைய மரணத்தின் போது அவருடைய இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையை முத்திரித்து, அந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக ஆகவில்லையெனில், அவருடைய மத்தியஸ்தர் பணியில் ஒரு பங்கை அவர் சபைக்கு அளிக்க முடியுமா?

**(5)** புது உடன்படிக்கை அன்பின் பிரமாணம் (Law of Love) என்று நான் புரிந்து கொள்கிறேன்; நான் சொல்வது சரியா?

**(6)** யோவான் 13:3ம் வசனத்தை தயவு செய்து விளக்கவும் - "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." இது அவர்களுக்கு முத்திரிக்கப்போகிற புது உடன்படிக்கையின் முன்னோடியாக இருந்ததா?

**பதில்:** வசதியை முன்னிட்டு, மேற்கண்ட விஷயங்களை எண்களால் வரிசைப்படுத்தி யிருக்கிறோம் மற்றும் எங்களுடைய பதில்கள் இசைவாயிருக்குமாறு எண்களால் இப்போது குறிக்கிறோம்.

**(1)** இந்த வசனப்பகுதி பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும் புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காண்பிக்கிறது; மூல உடன்படிக்கை அல்லது ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக கிறிஸ்து மற்றும் அவருடைய சரீரம் வளர்ச்சி பெற்றுக்கொண்டு இருக்கிறது. இது இந்த விவாதத்தில் இருக்கவில்லை. நியாயப்பிரமாணத்தில் இன்னும் விசுவாசம் கொண்டிருப்பவர்களுக்கு அப்போஸ்தலர் எழுதினார். அவர்கள் தேவனுடைய தயவைப் பெறுவதற்கு, கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பதோடு மட்டுமல்லாமல், நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் மற்றும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று அறிவித்தார்கள். இதைத் தான் அப்போஸ்தலர் உண்மை இல்லை என்று மறுத்துச் சொல்கிறார். மேசியா மத்தியஸ்தராக இருக்கும் மேலான புது உடன்படிக்கைக்கு மோசேயினால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கை நிழலாய் இருந்தது என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார்.

மோசேயின் உடன்படிக்கை அளித்த பரிசை இயேசு வென்றுவிட்ட நிலையில், இந்த உடன்படிக்கை <u>ஏற்கனவே மரித்துவிட்டது</u>. இருப்பினும், இது யூதர்கள் அனைவரையும் அடிமைப்படுத்தி, <u>இன்னும் உயிருள்ளதாகவே</u> இருக்கிறது. அவர்கள் இரண்டு வழிகளில் ஒன்றின் வழியாக மட்டுமே விடுதலை பெற முடியும்; நியாயப்பிரமாணத்திற்கும், அதனுடைய எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் மற்றும் வாய்ப்புகளுக்கும் மரித்து, பூமிக்குரிய சீர்பொருந்துதலின் உரிமைகள் அனைத்தையும் நிராகரித்து, இவ்விதமாக சுவிசேஷ யுகத்தில் மேசியாவின் சரீர அங்கமாக கிறிஸ்துவுடன் உடன்-சுதந்தரர்களாக வேண்டும்; அல்லது, வேறு வழியை ஏற்றுக்கொள்ள வேண்டும். பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கை யிலிருந்து விடுதலையாகி, அதற்கு பதிலீடாக, ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில் புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கை நடைமுறைக்கு வரும்போது, இதனிடத்திற்கு மாற வேண்டும். பிறகு எல்லா யூதர்களும் மற்றும் அவர்களுடைய உடைமைகளும் தகுதியற்ற மத்தியஸ்தராகிய மோசேயிடமிருந்து, மேலான உடன்படிக்கையின் தகுதிமிக்க மத்தியஸ்தராகிய மகிமையின் மேசியாவினிடத்திற்கு மாற்றம் பெறும். இவருடைய இரக்கமான ஏற்பாடுகளின் கீழ் வருவதற்கு விருப்பம் உள்ள இஸ்ரயேலர் மற்றும் பூமியின் வம்சங்கள் அனைவரையும் இவருடைய ஏற்பாடுகள் ஆசீர்வதிக்கும்.

பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருந்த யூதர்களைத் தவிர வேறு யாரையும் மேற்கண்ட வசனப்பகுதி குறிக்கவில்லை. இது புறஜாதிகளைக் குறிக்கவே இல்லை. இஸ்ரயேலின் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக மேசியா இருக்கிறார் மற்றும் அவருடைய மரணம் பிரயோகப்படுத்தும் போது, யூதர்களுடைய பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேலின் அக்கிரமங்களை நீக்குவதற்கு போதுமானதாக இருக்கும். கடற்கரை மணலத்தனையாக ஆவதற்கு, ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததிக்கு பூமிக்குரிய பகுதியாகிய ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஏற்பாட்டினை, அவர்கள் ஒரு பகுதியாக அடையப் போவதை இது சாத்தியமாக்குகிறது. இவ்விதமாக, இறுதியில் இஸ்ரயேல் தேவனுடைய அழைக்கப்பட்ட ஜாதியாக, அவர்கள் எப்போதும் எதிர்பார்த்த எல்லாவற்றையும், மற்றும் அதிகமானதையும் பெற்றுக்கொள்வார்கள். இஸ்ரயேலுடைய வாக்குத்தத்தங்கள் பரலோகத்துக்குரியதாகவோ, அல்லது ஆவிக்குரியதாகவோ இல்லாமல், பூமிக்குரியதாகவே இருந்தது: “நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் (ஆபிரகாம்) உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து.” பூமியின் முதன்மையான ஜாதியாக, அவர்கள் எல்லா ஜாதிகளுக்கும் கற்பிப்பவர்களாக இருந்தார்கள். “அவனவன் தன் தன் திராட்சச் செடியின் நிழலிலும், தன் தன் அத்தி மரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்.”

அந்த வாக்குத்தத்தங்கள் தேவனுடைய வார்த்தைகளாக, நிச்சயமுள்ளவையாக இருக்கின்றன. பெரும் அளவு கொண்ட மத்தியஸ்தரைப் பற்றிய “இரகசியம்” முடிவுக்கு வரும் வரைக்கும் (பலியிலும் மகிமையின் உயிர்த்தெழுதலிலும்) அவர்கள் வெறுமனே காத்திருக்கிறார்கள். பிறகு இந்த “இரகசியம்” மசத்தியஸ்தர் இஸ்ரயேலின் புதிய உடன்படிக்கையை அவருடைய மரணத்தினால் சாசனம் எழுதி முத்திரிப்பார். பிறகு “அழைக்கப்பட்ட” இஸ்ரயேல் ஜாதியார் நித்திய சுதந்தரத்தைப் பெறுவார்கள். இதற்காக முப்பத்தைந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக அவர்கள் காத்து வந்திருக்கிறார்கள். பரிசுத்தவானாகிய பவுல் இதை மேலும் ரோமர் 11:17-29,31ம் வசனங்க|ளில் விவரிக்கிறார்.

**(2)** வேறொரு இடத்தில் காண்பித்தபடி, நமது கர்த்தருடைய பலி உலகத்தின் பாவங்களுக்காக செலுத்தப்படவில்லை, ஆனால் இது மீட்பின் விலைக்கிரயமாக அளிக்கப்படுகின்றது. கர்த்தர் உலகத்தின் பாவங்களின் சார்பில் பின்னர் நீதிக்கு ஒப்படைப்பார்.

**(3)** உங்களுடைய வாதம் தர்க்கரீதியாக பொருத்தமற்றதாய் இருக்கிறது. நமது கர்த்தர் பலியின் பணியை முடித்திருந்தாரானால், அவர் தம்முடைய பாத அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களுக்கு அதில் ஒரு பங்கைக் கொடுக்க இயலாது.

**(4)** நமது கர்த்தர் புதிய உடன்படிக்கையை தம்முடைய இரத்தத்தினால் முத்திரித்தார் என்று வேதாகமம் எங்கேயும் சொல்லுகிறதில்லை. அவர் இதனுடைய மத்தியஸ்தராக ஆவதற்கு முன்பு, புதிய உடன்படிக்கையை அவர் முத்திரிப்பதற்கு அவசியம் ஏதும் இருந்ததில்லை. அவர் மனுஷனாகிய கிறி\ஸ்து இயேசுவாகிறதற்கு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே, தேவ நோக்கம் மற்றும் வாக்குத்தத்தத்தில் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக அவர் இருந்தார். பெத்லகேமில் பிறந்த போது உலகத்தின் இரட்சகராக இருந்தார் என்ற அதே உணர்வில் தான், அவர் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருந்தார். அவர் புதிய உடன்படிக்கையை முத்திரித்திருந்தார் என்பதாலோ, அல்லது அவர் உலகத்தை இரட்சித்திருந்தார் என்ற காரணத்தினாலோ அல்ல; உலகத்தின் இரட்சிப்பு மற்றும் இதன் ஆசீர்வாதத்திற்கான புதிய உடன்படிக்கை இறுதியாக இவர் மூலமாக நிறைவேறப்படக்கூடியதாக இருக்கிற காரணத்திலேயே ஆகும்.

நமது கர்த்தர் இன்னும் உலகத்தை இரட்சிக்கவோ, அல்லது புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக செயல்படவோ இல்லை; ஆனால் ஆயிர வருஷ யுகத்தில் இரண்டு நோக்கங்களையும் அவர் நிறைவேற்றப்போகிறார்; இதன் முடிவில்

தீர்க்கதரிசனம் நிறைவேறும். “அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு, திருப்தியாவார்.”

அவருடைய <u>பாடுகளின்</u> <u>பாத்திரத்திலும்</u> மற்றும் தம்முடைய பலி கொடுத்ததிலும், --<u>அவருடைய மரணத்திற்குள்ளான அவருடைய ஞானஸ்நானத்திலும்</u> சபை பங்குபெறுவதற்கான நிபந்தனையின் பேரில் நமது கர்த்தர் தம்முடைய மத்தியஸ்த இராஜ்யத்தில் அவருடன் பங்கு பெறுவதற்கு தம்முடைய சபைக்கு சிலாக்கியம் கொடுத்திருக்கிறார். அவ்விதம் செய்தால், சபை அவருடைய “உயிர்த்தெழுதலில்” மகிமை, கனம், மற்றும் அழியாமை என்ற அவருடைய பரிசை பெறுவதில் பங்கடைவார்கள். (பிலி.3:10). அவருடைய உடன்-பலி செலுத்துபவராகவும், வாக்குத்தத்தத்தின் உடன்-சுதந்தரவாளிகளாகவும் அவருடைய மகிமை மற்றும் சிங்காசனத்தில் பங்கு பெறுகிறவர்களாய், ஆயிர வருஷ யுகத்தில் தேவனுக்கும் மனுஷருக்கும் - உலகத்தாருக்கும் இடையில் அவருடன் கூட்டாக - மத்தியஸ்தராக இருக்கும் - இது உலகத்தாரை அல்லது மறு உருவாக்கத்தின் (REGENERATION) ஆசீர்வாதத்தைப் பெற விரும்புகிறதில் நிரூபணம் செய்தவர்களை இணக்கமுறச் செய்யும் பணியாக இருக்கும்.

**(5)** நீங்கள் சொல்வது சரியே. உடன்படிக்கைக்கும் உடன்படிக்கையின் பிரமாணத்திற்கும் வித்தியாசம் உள்ளது. இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் சுருக்கம் இதுவே, “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக.” அந்த நியாயப்பிரமாணம் பூரணமானது மற்றும் புதிய உடன்படிக்கைக்கு அடிப்படையாக அல்லது பிரமாணமாக உள்ளது.. மோசே அவருடைய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருந்து, அந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கு இஸ்ரயேலுக்கு உதவிபுரியும் நோக்கமாயிருந்தார். அவர்கள் அப்படிச் செய்தால், அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்க தேவன் உடன்படிக்கை செய்தார். ஆனால் அவர்கள் செயல், எண்ணம், மற்றும் வார்த்தையில் அந்த நியாயப் பிரமாணத்தை பூரணமாகக் கைக்கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்கள் முன்பாக வைக்கப்பட்ட ஜீவனுக்குரிய ஆசீர்வாதம் இல்லாமல், மரணத்தின் ஆக்கினைத்தீர்ப்பை அறுவடை செய்தார்கள். அந்த உடன்படிக்கையின் கீழ் பாவத்திற்காக மோசே பலிகளையும், காணிக்கைகளையும், ஏற்பாடு செய்யும் சிலாக்கியத்தைப் பெற்றார். இவ்விதமாக, வருஷந்தோறும் ஜனங்களை அவர்களுடைய ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து ஒரு வருஷத்திற்காக ஒரு தடவை சுத்திகரித்தார். ஆனால் அவர் அவர்களுடைய பாவங்களை உண்மையில் துடைத்துப் போடுவதற்கான வழிமுறை எதையும் பெற்றிருக்கவில்லை. அவர்களை பூரண நிலைக்கு உண்மையாகவே திரும்பக் கொண்டுவருவதற்கான ஆற்றல் அல்லது உரிமையும், அந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கான திறமையும் மோசே பெற்றிருக்கவில்லை.

புதிய உடன்படிக்கை அதே நியாயப்பிரமாணத்தைத் துல்லியமாகப் பெறும், ஆனால் அவர் தமது சொந்த மரண பலியினால் அடையப்பெற்ற, உலகத்தாரின் மீட்பின் விலைக்கிரயத்தை அப்பொழுது நீதியிடம் செலுத்திவிடுவதல், மனுக்குலத்தாரின் முழுப்பொறுப்பை அப்போது அவர் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய குறைபாடுகளுடன் இரக்கமாக செயல்படுவதற்கு முழுவதும் அதிகாரம் பெற்றவராயிருப்பார். அவர்களுடைய பாவம் மற்றும் மரண நிலையிலிருந்து படிப்படியாக வெளியேறி, பூரண நிலைக்குத் திரும்பக் கொண்டுவருவதற்கு அவர்களுக்கு உதவுவார். எதிர்த்து கலகம் புரிபவர்களை இரண்டாம் மரணத்தில் சங்கரிப்பார். ஆயிர வருஷ யுக இறுதியில் அவர் உண்மையில் பூரணமானவர்களாக, விருப்பமும் கீழ்ப்படிதலுமாயிருப்பவர்களை பிதாவிடம் ஒப்படைப்பார். இவ்விதமாக, நிழலான

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழும், அதனுடைய நிஜமான புதிய உடன்படிக்கையின் கீழும் மனுக்குலத்துடனான தேவனுடைய செயல்பாடுகள், தெய்வீக பிரமாணத்திற்கு உண்மையான கீழ்ப்படிதலின் அடிப்படையிலேயே இருப்பதும், விசுவாசத்தின் மூலமாக எண்ணப்படுகின்ற அடிப்படையில் இல்லை என்பதையும் பார்க்க முடிகிறது. பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிவது, மனுஷீக பூரணத்துவம் மற்றும் ஜீவனாகிய பரிசைப் பிடித்து வைத்துக்கொண்டிருந்தது. ஆகவே புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையும் அதே மாதிரி உள்ளது - நித்திய ஜீவன் அல்லது நித்திய மரணம்.

இந்த இரண்டு ஏற்பாடுகளுக்கு மாறாக, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரை உள்ளடக்கியதாக, கிறிஸ்துவை தங்களுடைய தலையாகவும், அவருடைய சரீரத்தின் அங்கங்களாகவும் இருப்பவர்களுக்கு - ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் இப்பொழுது சபையானது "பரலோக அழைப்பிற்கு" அழைக்கப்படுகிறார்கள். சபையானது மாம்சீகம் மற்றும் பூமிக்குரிய சீர்பொருந்துதலின்படி நியாயந்தீர்க்கப்படாமல், இருதயம் மற்றும் நோக்கத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுகிறது. சபை நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லாமல், இரக்கத்தின் கீழ் உள்ளது. புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரின் அங்கங்களாக, பரம அழைப்பாகிய ஜீவன் மற்றும் மகிமையை ஆவிக்குரிய தளத்தில் பெறுவதற்கு சீர்பொருந்துதலின் உரிமைகளைப் பலியிடுவது தேவைப்படுகின்றது.

**(6)** இல்லை, நியாயப்பிரமாணத்தின் கீழ் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதைவிட உயர்வான பிரமாணத்தை "புதிதான கட்டளை" (New Commandment) அடையாளப் படுத்துகிறது; ஆகவே இது இஸ்ரயேலுக்கும், புதிய உடன்படிக்கையின் கீழ் மனுக்குலத்தாருக்கும் கொடுக்க இருப்பதைவிட உயர்வானதாக இருக்கும். நமது கர்த்தர் சொல்லிய புதிதான கட்டளை பிதாவினுடைய கட்டளையே அல்ல. இது புது யுகத்தின் மத்தியஸ்தர், தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் ராஜாவின் அங்கங்களாக - அபிஷேகம் பண்ணப்பட்டவரின் "அங்கங்களாக" மாறுவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறவர்களும், கிறிஸ்துவின் பள்ளியில் பிரவேசித்திருக்கிற எல்லோருக்கும், நமது தலையும் நமது போதகருமாயிருக்கிறவருடைய கட்டளையாக இருக்கிறது. நீதி இந்த புதிய கட்டளையைக் கொடுக்க இயலாது; நீதி கட்டளையிட முடிந்த அனைத்தும் இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, தேவனிடம் மேலான அன்பும், தன்னைப் போல பிறனிடம் அன்பும் கொள்ள வேண்டும். கர்த்தர் கொடுத்த இந்த புதிதான கட்டளை இந்த சுவிசேஷ யுகத்தின் சபைக்கு மட்டுமே உரித்தாகிறது. இதனுடைய விளைவு இதுவே: நீங்கள் எனக்கு சீஷர்களாக இருக்கவேண்டுமானால், நீங்கள் என்னுடைய சிங்காசனம், மகிமை, அழியாமையில் பங்குகொள்ள வேண்டுமானால், நீங்கள் என்னுடைய ஆவியை உடையவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதைவிட அதிகமாக செய்ய வேண்டும். நீங்கள் நீதிக்கு மேலாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களையே பலி கொடுக்க வேண்டும். நீங்கள் என் மகிமையில் பங்குகொள்ள வேண்டுமானால், நான் உங்களில் அன்பாய் இருக்கிறது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனை யாயிருக்கிறது. (யோவான் 15:12) நான் உங்களுக்கு பலியாக, என்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுக்குமளவுக்கு நான் உங்களை அன்புகூர்ந்தேன். இதே மாதிரியான ஆவியை நீங்கள் உடையவர்களாய், தன்னையே பலி செலுத்துவதில் என்னுடன் உங்கள் பங்கை செலுத்துங்கள்; இல்லையெனில் நீங்கள் என்னுடைய சீஷர்களாகவோ அல்லது என்னுடைய மகிமையில் பங்குகொள்ளவோ, அல்லது, இஸ்ரயேலையும் மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கு மத்தியஸ்தராக என்னுடைய பணியில் உடன் இருப்பவராகவோ இருக்க முடியாது. நான் எங்கு இருக்கிறேனோ, அங்கே என்னுடைய சீஷர் இருக்கும் விதத்தில் என்னுடைய சீஷர்களாக இருப்பவர் எவரும் தன்னுடைய

சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்ற வேண்டும். இரட்சகர் சொல்வதின் அர்த்தத்தை எவரும் நிச்சயமாக சந்தேகம் கொள்ளக்கூடாது - என்னுடைய சீஷர்கள் என்னுடன் மரிக்க வேண்டும்.

## உடன்படிக்கைகள் - ஆபிரகாமின், சாராளின், பலியின் உடன்படிக்கைகள்.

### கே: 181:1 :: கேள்வி (1910) - 1

ஆபிரகாமின் உடன்படிக்கை, சாராள் உடன்படிக்கை மற்றும் பலியின் உடன்படிக்கை ஆகியவற்றின் இடையே என்ன வித்தியாசம் உள்ளது?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன், ஆபிரகாமின் உடன்படிக்கை என்ற பதம், மற்ற பதங்களைவிட பரந்த, விரிவான அர்த்தம் கொண்டதாக உள்ளது. உங்களுக்கு நினைவிருக்கும், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமின் உடன்படிக்கை அறிவிக்கிறது, ஆனால் ஆபிரகாமின் சந்ததி வழியாக அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இப்பொழுது இரண்டு அம்சங்கள் உள்ளன. இது ஆசீர்வதிக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததியையும், மற்றும் அந்த சந்ததி மூலமாக பூமிக்குரிய வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவதையும்கூட உணர்த்துகிறது. இப்படியாக தேவன் செய்ய நோக்கமாயிருக்கும் ஒவ்வொன்றையும், ஆவிக்குரிய தளத்தில் புது சிருஷ்டி, மற்றும் பூமிக்குரிய தளத்தில் மனுக்குல குடும்பத்தார் ஆகிய இரண்டு வகுப்பாரையும் உண்மையாகப் பாதுகாக்கும் வகையில் ஆபிரகாமின் வாக்குத்தத்தம் உள்ளது. ஆனால் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் அவர் விவரித்த விதமாக, இந்த விஷயத்தில் அப்போஸ்தலனின் வழிகாட்டுதலைப் பின்பற்றும்போது, இந்த ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பல்வேறு அம்சங்கள் அல்லது பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. அப்போஸ்தலர் விவரிக்கும் வண்ணமாக, ஆபிரகாமின் உடன்படிக்கையின் மூலமாக, முதலாவதாக இஸ்ரயேலர்களுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கை அளிக்கப்பட்டது; இது ஆபிரகாமின் உடன்படிக்கை ஆகும்; ஏனெனில் இஸ்மயேலைப் பெற்றவர் ஆபிரகாம் ஆவார்; ஈசாக்கைப் பெற்றவர் ஆபிரகாம் ஆவார். ஆகவே இந்த இரண்டு வகுப்பாரையும் வெளியே கொண்டு வந்தது ஆபிரகாமின் உடன்படிக்கையே. ஆபிரகாமின் வித்தில் ஒரு பகுதியான இஸ்மயேலுடைய தாயும், ஆபிரகாமின் மனைவியுமான ஆகாரும், யூத சட்டத்தின் கீழ் முதலாவது யூத ஜாதியாராக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்; ஆனால் இது ஆபிரகாமின் <u>வித்து</u> அல்ல. ஏனெனில் ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்" என்று சொல்லப்பட்டது. விசேஷித்த ஒருவராகிய ஈசாக்கின் வழியாக பூமியிலுள்ள வம்சங்களுக்கெல்லாம் ஆசீர்வாதம் இருக்கிறது. இஸ்மயேலின் வழியாக அல்ல.

ஈசாக்கின் தாய் சாராள். ஈசாக்கு வகுப்பாரை தேவனால் நமது உடன்படிக்கையின் மூலமாக வெளிக்கொண்டு வருவதின் நிழலாக சாராள் இருக்கிறாள் என்று அப்போஸ்தலர் கலாத்தியர் நிருபத்தில் சுட்டிக்காட்டுகிறார். பிறகு சொல்கிறார், "சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்." நாம் ஈசாக்கின் இடத்தை எடுத்துக்கொள்கிறோம். இப்போது நாம் யாராக இருக்கிறோம்? நல்லது, கர்த்தர் இயேசுவின் சரீரமாயிருக்கிற சபைக்கு தலையாக இருக்கிறவரோடு நாம் பங்கு கொள்கிறோம். முழு சபையும் ஆபிரகாமின் வித்தாகிய ஈசாக்கு போன்று உருவாக்கப்படுகிறோம். இதன் மூலம் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படப் போகிறது. முதலாவதாக ஆபிரகாமின் வித்து மற்றும் தொடர்ச்சியாக மற்ற ஜாதிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

இப்பொழுது, பலிகளின் உடன்படிக்கையுடன் இதன் தொடர்பு என்னவாக இருக்கிறது? நான் பதிலளிக்கிறேன், பலியின் உடன்படிக்கை சாராளின் உடன்படிக்கையைப் போலவே உள்ளது. உங்களுக்கு நினைவிருக்கும், பலிபீடத்தின் மேல் காணிக்கையாகச் செலுத்தப்பட்டவர் ஈசாக்கு; இந்த ஈசாக்கு தான் உருவகமாக மரித்தோரிலிருந்து பெறப்பட்டார்! ஆகவே நிஜமான முழு ஈசாக்கு (தலையாகிய கிறிஸ்து மற்றும் அவருடைய சரீரமாகிய சபை) பலிபீடத்தில் காணிக்கைகளாகச் செலுத்தப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் மரித்தோரிலிருந்து மறுபடியும்

திரும்பப் பெறப்படுகிறார்கள். இவர்கள் தான், பின்பு, ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாக அமையப்பெற்று, இவர்கள் மூலமாக மாம்சீக இஸ்ரயேலர் மற்றும் உலகத்தார் அனைவருக்கும் ஆசீர்வாதம் கிடைக்கும். பலியிலான உடன்படிக்கையாக இது ஏன் இருக்கின்றது? ஏனெனில் இதற்கு தேவனுடைய ஏற்பாட்டில் வேறு மற்ற வழிமுறை ஏதும் இருக்க சாத்தியமில்லை. நீங்கள் கவனியுங்கள்? நமது கர்த்தர் இயேசு மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாக இருந்தார் மற்றும் மாம்சத்தின்படி அவர் நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்தார். நியாயப்பிரமாணத்திற்கும், ஒரு மனுஷன் என்ற முறையில் அவர் செய்ய முடிந்த எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்திருந்தார். ஆனால் தேவன் தெரிவித்திருந்து, நிறைவேற்ற முடியாத காரியங்கள் ஆபிரகாமின் வித்தினால் நிறைவேற்றப்படும்.

தேவனுக்கும் நீதிக்கும் முழுமையாக விசுவாசம் கொண்டவராக, பூரணம் என்ற வார்த்தையின் ஒவ்வொரு பார்வையிலும், இயேசு ஒரு மனுஷனாக, பூரணமாக மாசில்லாதவருமாக இருந்தார் என்று நாம் கற்பனை செய்வதாக அனுமானிப்போம்; அந்த நிலையில் அவர் மனுஷ சுபாவத்தைப் பலியிடாமல், அப்படியே தக்க வைத்திருந்து, நீதியற்றவர்களுக்காக அவர் நீதிமானாக மரித்தார் என்று அனுமானித்தால், அவர் ஜீவனைப் பெறுவதற்கான உரிமையைப் பெற்றிருப்பார். ஏனெனில் தேவனுடைய பிரமாணம் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளது, “இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்.” ஆகவே தெய்வீக பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தவராய், இயேசு அந்த கீழ்ப்படிதலைத் தக்கவைத்திருக்கும் வரைக்கும் நித்திய ஜீவனுடைய உரிமைக்கு உரியவராக இருந்திருப்பார். அவர் எல்லோருக்கும் மேலானவராக, அனைத்து உலகத்தாரையும்விட மேன்மையானவராக இருந்திருப்பார். சாலொமோனைக் காட்டிலும் பெரியவராக, பெரிய இராஜாவாக இருந்திருப்பார். ஏனெனில் சாலொமோன் பெற்றிருந்ததைக் காட்டிலும் பெருமளவில் ஞானத்தையும் வல்லமையையும் அவர் பெற்றிருந்தார். ஆதாம் தன் வசம் வைத்திருந்ததும், இழந்ததுமாகிய அனைத்திற்கும் உரிமை உடையவராக இருந்தார். “மந்தையின் துருக்கமே, - - முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்.” ஆதாம் முன்பு பெற்றிருந்ததும், இழந்ததுமாகிய “ஆளுகை”. இது பிரமாணத்தைக் கைக்கொண்டதற்காக வந்தது. தேவன் முதலில் மனுக்குலத்துக்கு கொடுத்த எல்லா ஆசீர்வாதங்களுக்குமான உரிமையைப் பெற்றிருப்பார். ஆனால் முழு மனுக்குலத்துடன் அவர் என்ன செய்திருக்க முடியும்? உண்மையில், இந்த மாதிரியான உணவை சாப்பிட வேண்டும் என்றும், எப்படி தூங்க வேண்டும் என்ற எச்சரிப்பையும் இதை எப்படி செய்ய வேண்டும், அதை எப்படி செய்ய வேண்டும் என்ற காரியங்களை அவர் அவர்களுக்கு சொல்லியிருக்கலாம்; படித்த நமது வைத்தியர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்களிடமிருந்து நாம் பெறக்கூடிய எதையும்விட ஞானமாக, மிகவும் ஞானமுள்ள ஆலோசனையை அவர் கொடுத்திருக்கலாம். சில குறிப்பிட்ட சட்டங்களை இயற்றவும், அந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் வல்லமை பெற்றவராய் இருந்திருக்கலாம். ஆனால், இதனால் என்ன இருக்கும்? அதிகபட்சமாக, மனுஷீகம் ஒரு சிறிதளவு முன்னேற்றமடைந்திருக்கலாம், ஆனால் இது ஒருபோதும் நித்திய ஜீவனைப் பெற்றிருக்க இயலாது. ஏனெனில் எல்லாரும் மரணத்திற்கு தண்டிக்கப்பட்டிருந்தார்கள்; ஏனென்றால், “நீங்கள் சாகவே சாவீர்கள்.” மனுக்குலம் இதிலிருந்து விடுதலை பெற முடிவதற்கு முன்பாக, மரண தண்டனை நீக்கப்பட வேண்டும். ஆகவே இயேசு, மனுஷனாகிய இயேசு என்ற முறையில் தம் சக்தியைப் பிரயோகப்படுத்தி, பூமியின் இராஜாவாக ஆளுகையை அடைந்திருந்தால், ஆபிரகாமின் சந்ததி என்ற முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தேவன் முன்னறிவித்திருந்ததை அவர் நிறைவேற்றுவதில் தோல்வி அடைந்திருப்பார். அவர் ஆபிரகாமின் சந்ததியாக இருந்திருக்க முடியாது மற்றும் அந்த வாக்குத்தத்தை நிறைவேற்ற முடிந்திருக்காது. பிறகு என்ன? தேவன் இந்த விஷயத்தைக் கையாண்டு, இயேசு பூமிக்குரிய இராஜாவாக மட்டும் இல்லாமல், மேலான தளத்திலும் இராஜாவாக இருக்கும் விதத்தில், பரம அழைப்பின் பெரிதும் மகிமையுமான பரிசை அவருக்கு முன்பாக வைத்திருந்தார்; மனுஷர்களுக்குள்ளாக ஆசாரியர் மற்றும் இராஜாவாக மட்டும் இல்லாமல், மெல்கிசேதேக்கின் முறைமையின்படி அல்லது மெல்கிசேதேக்கினால் நிழலாக்கப்பட்டவராக, இராஜரீகம் மற்றும் ஆசாரியத்துவத்தை ஒருங்கிணைத்து, ஆவிக்குரிய தளத்தில் மகிமையுள்ள ஆசாரியராக தேவன் நிர்ணயித்திருந்தார். ஆகவே அவர் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் வாக்குத்தத்தை மட்டும் அவர்

வைத்திருக்கவில்லை. ஆனால் இறுதியாக தேவ சுபாவத்தில் பங்குபெறுபவராக உயர்த்தப்பட்டு, பிதாவுடன் நித்தியத்திற்கும் இணைந்திருப்பார் என்ற வாக்குத்தத்தம் தான் அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தது.

இயேசு இந்த கருத்தை ஏற்றுக்கொண்டார். அந்த சமயத்தில் இது என்னவெல்லாம் மதிப்பு பெறும் என்பதை அறியாமல், "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய வந்திருக்கிறேன். என்ன புஸ்தகச் சுருள்? ஓ, தேவ சித்தம் அடங்கிய புஸ்தகச்சுருள் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் குறிக்கப்படுகிறது. தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு அவர் வந்தார். உலகத்தின் அஸ்திபாரத்திற்கு முன்பாக தேவ சித்தம் ஏற்கனவே அமையப்பெற்றிருந்தது. புஸ்தகத்தில் எழுதப்பட்டுக் காணப்பட்ட ஒவ்வொன்றையும், அது எதுவாயிருந்தாலும், பிதாவின் சித்தத்தைச் செய்வதற்காக இயேசு வந்தார். பிறகு, இநத விஷயங்கள் எல்லாம் எழுதப்பட்டிருந்த வேறொரு புஸ்தகம் இருந்தது, பழைய ஏற்பாட்டு புஸ்தகங்கள், ஆதியாகமம், தீர்க்கதரிசிகள், சங்கீதங்கள், மற்ற பல்வேறு புஸ்தகங்கள் போன்றவை. இவைகள் எல்லாம் தேவன் தீர்க்கதரிசிகளுக்குச் சொல்லிய பெரும் புஸ்தகத்தின் ஒரு பகுதி ஆகும். இந்த தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள் மற்றும் அவைகளின் அர்த்தத்தை எந்த மனுஷனும் அறியவில்லை. பேதுரு அப்போஸ்தலன் நமக்கு கூறும்விதமாக, இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதர்களும் ஆசையாயிருக்கிறார்கள். அந்த தீர்க்கதரிசனங்களின் அர்த்தத்தை அவர்களும் அறியவில்லை. நமது கர்த்தர் இயேசு மாம்சத்தில் வந்த போது, அவைகளின் அர்த்தத்தை அறியவில்லை, ஏன்? ஏனெனில் பரிசுத்த பவுல் இதை விவரிக்கும் விதமாக, பரிசுத்த ஆவியினால் விசேஷமாக வெளிச்சம் பெற்றவர்களைத் தவிர, வேறு யாரும் இதை அறிவது சாத்தியமில்லை. நமது கர்த்தர் இயேசு பூரண மனுஷனாக, பரலோக மகிமையை விட்டு, மனுஷனாகி, நமது மீட்பின் விலைக்கிரயமானதால், அந்த விஷயங்களை அவர் அறிவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் பரிசுத்த பவுல் கூறுகிறார், "ஜென்மசுபாவமுள்ள மனுஷனோ (பூரணமாக இருந்தாலும்கூட) தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியமாட்டான்." ஆகவே நமது கர்த்தர் இயேசு முப்பது வருஷங்களைக் கடந்து, யோர்தானில் தம்மையே, தம்முடைய ஜீவனை ஒப்படைத்து, தேவனே, உமக்குப் பிரியமானதை, எழுதியிருக்கிற ஒவ்வொன்றையும் செய்ய விரும்புகிறேன். அவர் தாம் அறிந்திராத விஷயங்களைப் பற்றிப் பேசினார், ஏனெனில் அவைகளின் அர்த்தத்தை அவர் அறியவில்லை. அவர் பாவ நிவாரண பலி, போக்காடு மற்றும் வெள்ளாடு, செம்மறியாட்டுக்குட்டி ஆகியவற்றின் நிழல்கள், அதைச் சாப்பிடுவது, மற்றும் அதனுடைய இரத்தம் தெளிக்கப்படுதல், தேவ சமூகத்தப்பம் மற்றும் அவையெல்லாவற்றின் அதிசயத்தக்க நிழல்கள் ஆகியவற்றின் நோக்கத்தை அவர் அறிந்திருக்கவில்லை. அறியவில்லை மற்றும் அறிய இயலாது. ஏனெனில் அவைகள் எல்லாம் முத்திரிக்கப்பட்டு, பிதாவின் கரங்களில் இருந்தன. புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் ஒவ்வொன்றையும் பிதாவின் சித்தத்தின்படி செய்ய எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து, பரலோக பிதாவாகிய மாபெரும் சிருஷ்டிகரிடத்தில் இயேசு தம்முடைய முற்றிலுமான நம்பிக்கையை முதலில் காண்பிக்கும் வரையிலும், அவைகள் அவருக்கு அறியப்படுபவைகளாக இருக்கவில்லை. உங்களுக்கு ஞாபகம் இருக்கும், அவர் யோர்தானில் யோவானிடம் வந்து, தமக்குரிய எல்லாவற்றையும் அர்ப்பணிப்பு செய்யும்விதமாக அடையாளப்படுத்தி, பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு, மரணத்துக்குள்ளாக, அவர் தம்முடைய மனுஷீகத்தை முழுவதுமாக ஒப்புக்கொடுப்பதைச் சுட்டிக்காட்டும்படி, தண்ணீரில் அடையாளப்பூர்வமாக எழுப்பப்படுவது, அவர் திரும்ப வருவதற்கு, தேவன் தெரிவித்திருந்த அந்த புதிய சுபாவத்திற்கு அவர் எழுப்பப்படுவதைக் குறிக்கிறதாய் இருந்தது. பிறகு என்ன? உங்களுக்கு நினைவு இருக்கும், அவர் தண்ணீரை விட்டு வெளியே வந்த போது, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது, மேலான விஷயங்களின் பெரும் வெளிச்சம் வெளிப்பட்டது. "வானம்" என்ற வார்த்தை கிரேக்க மொழி மற்றும் எபிரேய மொழியில் "மேலான விஷயங்களைக்" குறிக்கிறது. இந்த விஷயத்தில், மேலான விஷயங்கள் ஆவிக்குரிய சத்தியங்களாக உள்ளன. இந்த மேலான விஷயங்களை அவர் இதற்கு முன்பாகப் பார்த்ததில்லை. இந்த விஷயங்களை கண்ணும் காதும்

பார்த்ததும் கேட்டதுமில்லை, மனுஷனுடைய இருதயத்திற்குள் நுழைந்ததுமில்லை. இந்த விஷயங்கள் நூற்றாண்டுகளுக்கு மேல், நூற்றாண்டுகளுக்கு முன்பாக தேவன் அந்த புஸ்தகத்தில் எழுதியிருந்தார் மற்றும் இயேசு அந்தக் காரியங்களைச் செய்வதற்கு சம்மதித்திருந்தார். இப்போது, அவைகள் அவருக்கு முன்பாகத் திறக்கப்பட்டன. இதன் விளைவு என்ன? ஆச்சரியமான வெளிச்சம்! அதே முறையில் அந்த வெளிச்சத்தை நீங்கள் பெற்றிருக்கிறது போல, பவுல் கூறும்விதமாக, "நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே, போன்றவை." நீங்கள் எந்த மாதிரியாகப் பெற்றீர்கள்? மற்றும் எப்போது? நான் பதிலளிக்கிறேன், நமது அருமை இரட்சகரிடத்தில் உங்களுடைய மற்றும் என்னுடைய பிரகாசம் எப்படியிருந்தாலும், அவைகள் உங்களுடைய அர்ப்பணிப்பின் விளைவாக வந்தன. புத்திர சுவீகாரத்தினால் பரிசுத்த ஆவியை நாம் பெறும்போது, தேவன் தம்முடைய ஆவியை உங்களுக்கும் எனக்கும் அளவாகக் கொடுக்கிறார் என்று வேதாகமம் சொல்கிறதைக் கவனியுங்கள். நாம் ஒரு குறிப்பிட்ட அளவு திறன் உடையவர்களாக இருக்கிறோம் மற்றும் நாம் நம்முடைய திறனுக்குத் தக்கபடியே நாம் பெற முடியும். நாம் உலகத்தின் ஆவியிலிருந்து விடுதலையானால் மட்டுமே, பரிசுத்த ஆவியினால் நாம் நிரப்பப்பட முடியும். ஆகவே நம்மைப் பொருத்தவரையில், இது அதிகரிக்கும் திறன் உடையது. ஆனால் நமது இரட்சகரைப் பொருத்தவரையில், அவர் பூரணமுள்ளவராக இருந்தார், மற்றும் முழுமையான திறனுடையவராக இருந்தார். ஆவியை அளவில்லாமல் பெறுவதிலிருந்து அவரை அங்கே எதுவும் தடைபண்ணவில்லை. இயேசு ஆவியினால் வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டது எப்படி நடந்தது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். எந்த ஆவி அவரை வழிநடத்தியது? கெட்ட ஆவிகளில் ஒன்றா? இல்லை! பரிசுத்த ஆவிகளில் ஒன்றா? இல்லை! அவருடைய சொந்த ஆவி, அவருக்குச் சொந்தமான ஆவி அவரை வனாந்தரத்துக்கு வழிநடத்திச் சென்றது. அவருடைய அர்ப்பணிப்பில், புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் அவர் செய்வதாக தெரிவித்திருந்தார் மற்றும் இப்போது வெளிச்சம் அவர் மேல் வந்தது மற்றும் அந்த விஷயங்களை அவர் புரிந்துகொள்ள ஆரம்பித்தார். ஒவ்வொரு விஷயமும் அவருக்கு தெளிவாகத் தெரியத் துவங்கியது - ஆட்டுக்குட்டி சங்கரிக்கப்படுவது, இரத்தம் தெளிக்கப்படுவது, ஆட்டின் மாமிசம் சாப்பிடுவது, பாவநிவாரண பலி, காளை மற்றும் வெள்ளாட்டின் இரத்தம், போக்காடு, போன்றவை - இந்த எல்லா விஷயங்களும், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய எல்லா விஷயங்களும் அவர்மேல் பொழிந்தன. இந்த விஷயங்களைப் பற்றியே அவர் தமது சீஷர்களுக்குக் கூறினார், "நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகள் எழுதின வேதவாக்கியங்கள் எல்லாவற்றையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே!" அவருடைய மனது வெளிச்சமடைந்த போது, இப்போது எல்லா விஷயங்களும் அவர் மேல் பொழிய ஆரம்பித்தன.

அங்கே ஆதியாகமம் முதல் மல்கியா புஸ்தகம் வரைக்குமுள்ளவைகளில், தேவனுடைய திட்டத்தைப் பார்ப்பதற்கான வாய்ப்பைப் பெறுவதற்காக, அவர் வனாந்தரத்திற்கு செல்ல முற்பட்டார். அவர் ஒரு பிள்ளையாக, ஒவ்வொரு ஓய்வுநாளிலும் யூத ஜெப ஆலயத்தில் (Synagogue) நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுவதைக் கேட்டிருந்தார் மற்றும் பழைய ஏற்பாட்டின் ஆதியாகமத்திலிருந்து மல்கியா வரைக்குமுள்ளவைகளை சந்தேகத்திற்கிடமின்றி மேற்கோள் காட்டவும், இதன் ஒவ்வொரு வார்த்தையையும் தம்முடைய பூரண மூளையுடன் நினைவில் வைத்துக்கொள்ள முடிந்தது, ஆனால் இதைப் புரிந்துகொள்வது வேறு விஷயம் ஆகும். இப்போது வெளிச்சத்தின் கீழ் அவர் புரிந்து கொள்ள முடியும் மற்றும் அவர் தம்முடைய ஊழியத்தைத் துவங்குவதற்கு முன்பு, இவற்றையெல்லாம் நேரடியாகப் பெற்றுக்கொள்ள விரும்பினார். அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை பிதா அவருக்குக் காண்பித்துக் கொண்டிருந்தார். புஸ்தகத்தில் என்ன உள்ளது என்பதை அவர் கண்டுபிடித்துக் கொண்டு இருந்தார் - இது அவருக்கு ஒரு பரீட்சையாக இருந்தது. அவர் விசுவாசமாக இருந்தாரா? அல்லது தோல்வி அடைவாரா? தேவன் அவருக்கு மிகவும் குறுகலான பாதையை உண்டாக்கி, அந்த பாதை செல்வதற்கு அதிக கடினமாக இருந்தது. இரட்சகராவதில் அவர் தோல்வி அடைவாரா?

போதகர் இந்த விஷயத்தில் எவ்வளவு விருப்பமுடையவராக இருந்தார் என்பது உங்களுக்கு நினைவு இருக்கும். அவர் வனாந்தரத்தில் இரவும் பகலும் நாற்பது நாட்கள் இருந்தார் மற்றும் பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தினால் அந்த ஆச்சரியமான விஷயங்கள் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைக் கருத்தில் கொள்வதில் அதிக நோக்கமுடையவராக இருந்ததால், அவர் சாப்பிடவோ அல்லது குடிக்கவோ இல்லை மற்றும் உணவு பற்றிய சிந்தனை முழுமையாக இல்லாதவராக இருந்தார். ஏனெனில் நாம் வாசிக்கிறோம், "அந்த நாட்கள் முடிந்த பின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று," சாத்தான் அவருடன் இருந்ததாகவும், அவரை நாற்பது நாட்கள் சோதித்ததாகவும் தவறான எண்ணத்தை நாம் கொண்டிருக்கிறோம். ஆனால் அப்படியல்ல, நாற்பது நாட்கள் முடிவடைந்த பிறகு, சாத்தான் வந்தான். இயேசு இந்த பலவீனமான நிலையில் இருந்த போது, அவருடைய பலியின் அர்த்தம் என்ன என்பதை அவன் பார்த்த போது, இது அவனுக்கு எவ்விதத்தில் தொடர்புள்ளது என்றும், குறிக்கப்பட்ட அவருடைய அனுபவத்தின் முழுமையான போக்கையும் சாத்தான் பார்த்த போது, இயேசு உபவாசத்தினால் பலவீனமாக இருந்த போது, மனதளவில் பலவீனமாக இருந்த போது, அவரிடத்தில் வந்து அவரை சோதிக்க அனுமதிக்கப்பட்டான் - கர்த்தருடைய இருதயத்தின் விசுவாசம் காண்பிக்கப்பட்டது - "அப்பாலே போ சாத்தானே," என்பது அவருடைய பதிலாக இருந்தது. "தேவனுடைய திட்டத்துடன் ஒப்பிடும்போது, உன்னுடைய திட்டங்கள் எதுவும் தகுதியானது அல்ல, இருப்பினும், மேலான திட்டம் வைத்திருக்கிறேன் என்று நீ சொல்லலாம். நான் உனக்கு சொல்கிறேன், நான் உன்னுடன் செயல்படுவதற்கு ஒன்றுமில்லை. நான் கர்த்தருடைய ஊழியத்திலும், அவருடைய சித்தத்தைச் செய்வதற்காக, அவரிடம் என்னுடைய ஜீவனை அர்ப்பணித்திருக்கிறேன்." அருமையான நண்பர்களே, அது நமது கவனத்திற்கு தகுதியானது ஆகும். நாம் இதைப் பற்றி பேசுவோம் மற்றும் இதைப் பற்றி சிறிது கலந்தாய்வு செய்வோம் என்று அவர் சொல்லவில்லை. இல்லை, அது ஆபத்தானதாக இருந்திருக்கும். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உன்னை விட்டு ஓடிப்போவான்." அவன் மறுபடியும் திரும்ப வருவதில் பயன் ஏதும் உண்டு என்று அவன் எப்போதாவது நினைத்தான் என்று நாம் கேள்விப்படவே இல்லை, அந்த அளவுக்கு இயேசு முழுவதுமாக அவனைத் தடுத்தார்.

## உடன்படிக்கைகள் - ஆபிரகாமின் உடன்படிக்கை - மத்தியஸ்த உடன்படிக்கை.

### கே: 184:1 :: கேள்வி (1910) - 1

ஆபிரகாமின் உடன்படிக்கை மத்தியஸ்தரைப் பெற்றிருக்கவில்லை என்று சொல்வதற்கு வேதவாக்கியங்களில் ஏதேனும் அறிவிப்பு உள்ளதாக நீங்கள் மேற்கோள் ஏதும் காட்ட முடியுமா?

**பதில்:** மேற்குறிப்பிட்ட வார்த்தைகளில் நேரடியான அறிவிப்பு ஏதும் இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இது அவசியமானதும் இல்லை. அறிவிக்கப்படாதவை புரிந்துகொள்ளக் கூடாததாய் இருக்கிறது. அது தான் எல்லா நியாயத்திற்கும், தர்க்கத்திற்குமான விதி ஆகும். அறிவிக்கப்பட்டிருப்பது எதுவோ அதை கருத்தில் கொள்ள வேண்டும். மத்தியஸ்தர் யாரும் குறிப்பிடப்படவில்லை. ஆபிரகாமின் உடன்படிக்கை மத்தியஸ்தரை உடையதாக இருக்கிறது என்று கோருபவர்கள் தான் இதை நிரூபிக்க வேண்டும். அப்போஸ்தலர் பவுல் எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் (6ம் அதிகாரம்) ஆபிரகாமின் உடன்படிக்கையின் திறனையும் வலிமையையும் காண்பிப்பதற்கு முயற்சித்தார்; ஆனால் இதன் பொறுப்பேற்றுக்கொண்டிருந்த எந்த மத்தியஸ்தரையும் அவர் சுட்டிக்காட்டவில்லை. அல்லது நமக்குச் சொல்லவில்லை., மாறாக, அந்த உடன்படிக்கையின் அஸ்திபாரமாக தேவனுடைய வார்த்தையையும், தேவனுடைய ஆணையையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். மாற்ற முடியாத இரண்டு விஷயங்களினால் நமக்கு அந்த ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று பவுல் கூறுகிறார் - அதாவது, தேவனால் பொய் சொல்ல முடியாது மற்றும் தம்முடைய ஆணையை முறிக்க முடியாது. ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் நியாயப்பிரமாண உடன்படிக்கை சேர்க்கப்பட்டது மற்றும் 430

வருஷங்களுக்குப் பிறகு இது மத்தியஸ்தரை உடையதாயிருந்தது என்பதை அப்போஸ்தலர் மிகவும் குறிப்பிட்டுக் காண்பிக்கிறார்.

ஆகவே அந்த மூல முதல் உடன்படிக்கையைப் பற்றி பரிசுத்த பவுல் விவரிக்க முற்படுகையில், இந்த உடன்படிக்கைக்கு ஒரு தரப்பினர் (Party) மட்டுமே இருந்ததால், அதற்கு மத்தியஸ்தர் தேவையில்லாமல் இருந்தது. மத்தியஸ்தர் என்பவர் இரண்டு தரப்பினருக்கு மத்தியில் நின்று, ஒவ்வொரு தரப்பினரும் தன்னுடைய பங்கைச் செய்வதைப் பார்க்கிறவராய் இருக்கிறார், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராக மோசே இருந்தார். அவர் தேவனுக்கும் இஸ்ரயேலுக்கும் நடுவில் நின்றார். (உபா. 5:5) ஒரு பக்கத்தில் அவர் தேவனைக் குறிக்கிறதாகவும், மற்ற தரப்பில் இஸ்ரயேலைக் குறிக்கிறதாகவும் இருந்தது. ஆனால் ஆபிரகாமின் உடன்படிக்கையைப் பொருத்தவரையில், ஒரே ஒரு தரப்பினர் மட்டும் இருந்தார். தேவனே அந்த ஒருவர். ஆகவே மத்தியஸ்தருக்கான தேவை இல்லை. ஏன் இல்லை? ஏனெனில் ஆபிரகாமின் சந்ததி இணக்கமாயிருப்பதற்கான எந்த நிபந்தனையையும் தேவன் உண்டாக்கவில்லை. அவர் மத்தியஸ்தருக்குப் பதிலாக, தேவன் தம்முடைய ஆணையை இந்த உடன்படிக்கைக்குக் கொடுத்தார். தேவன் தாமே இதைச் செய்வதாகக் கூறினார்; ஆகவே மத்தியஸ்தருக்கான இடம் ஏதும் அங்கே இல்லை. மத்தியஸ்தர் யாரும் கிடையாது. கூடுதலாக எத்தனை உடன்படிக்கைகள் அல்லது துணை உடன்படிக்கைகள் செய்யப்படும் என்று முதல் உடன்படிக்கை கூறவில்லை.

ஆபிரகாமின் வாக்குத்த்தம் பண்ணப்பட்ட சந்ததியைப் பொருத்தவரையில், பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கப்போகும் ஆச்சரியமான வித்தை ஆபிரகாமுக்கு எப்படி பத்திரப்படுத்துவார் என்பதை தேவன் விவரிக்கவில்லை. இது எப்படி செயற்படுத்தப்படும் என்று ஆபிரகாம் அறியவில்லை. இந்த ஆச்சரியமான வித்தை ஆபிரகாமுக்கு தேவன் எப்படி பத்திரப்படுத்துகிறார் என்பதை நாம் அறிகிறோம். தேவன் தம்முடைய குமாரனுக்கு முன்பாக மகத்தான வெகுமதியின் வாக்குத்தத்தத்தை வைத்திருந்தார். தமக்கு முன் வைக்கப்பட்டிருந்த மகிமையினிமித்தம் அவர் மனுஷனாகி தம்மையே தாழ்த்தினார். அவர் பரலோக மகிமையை விட்ட பிறகு, அவர் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு வெறுமனே ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவர் இன்னும் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கவில்லை. பிள்ளையாகிய இயேசு மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாக இருந்தார்; ஆனால் உடன்படிக்கையில் குறிக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததியாக இருக்கவில்லை. இயேசு முப்பது வயதுள்ளவராயிருந்த போதும் கூட அவர் அந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருந்த ஆபிரகாமின் சந்ததியாக அவர் இருக்கவில்லை. அவர் யோர்தானில் தாமே முன் வந்து அவர் தம்மை அர்ப்பணிப்புக்குள் ஒப்படைக்கும் வரையிலும், அவர் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கவில்லை. பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலை அவர் பெற்ற உடனே - அந்த கணத்திலேயே - ஆபிரகாமின் சந்ததி அவரிடத்தில் அடையாளப்படுத்தப்படத் துவங்கியது. அவர் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து ஆவிக்குரிய நிலைக்கு எழுந்த போது, அந்த <u>வித்தின்</u> தலையாக அவர் முழுமை அடைந்தார். வேறு வார்த்தைகளில் சொன்னால், தேவன் ஆபிரகாமுக்கு அந்த வாக்குத்தத்தத்தை அல்லது உடன்படிக்கையை செய்த போது, ஆபிரகாமின் <u>வித்து இன்னும் உருவாயிருக்கவில்லை.</u>

பிறகு இயேசு அதே மகிழ்ச்சியை தம்முடைய சீஷர்களுக்கு முன்பாக வைத்தார்; நாம் அர்ப்பணிக்கும் போது, அதே மாதிரியாக நாம் அபிஷேகம் பண்ணப்பட்டவரின் “அங்கங்களாக” பலியினால் தேவனுடன் உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கிறோம். இவ்விதமாக நாம் நம்முடைய ஜீவனை மரணத்திற்குள்ளாக்குவதற்கு நம்முடைய சரீரங்களை ஒப்படைக்க சம்மதிக்கிறோம். தேவன் நமது இரட்சகராகிய போதகரை பரலோக மகிமையாக உயர்த்திய அதே நிலைக்கு நம்மையும் இயேசுவின் சரீரமாக எழுப்புவார் என்ற வாக்குத்தத்தை நாம் பெற்றிருக்கிறோம். “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத் தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.” (கலா. 3:29) ஒரு குறிப்பிட்ட பார்வையில், நாம் ஏற்கனவே ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறோம். முழுமையான பார்வையில், “அவருடைய

(இயேசுவின்) உயிர்த்தெழுதலில்" நாம் பங்கு பெறாத வரைக்கும், நாம் அந்த சந்ததியாக முழுமையான பார்வையில் இருப்பதில்லை.

தேவன் உண்டாக்கின இந்த மேலான வாக்குத்தத்தத்தை உலகமனைத்திற்கும் விரிவாக்குவதே அந்த சந்ததியின் முதல் பணியாகும். மனுஷீக தளத்தில் இஸ்ரயேல் நித்திய ஜீவனை அடைவதற்கும், இஸ்ரயேலுடன் ஒரு புதிய உடன்படிக்கையை அமைப்பதால், தேவனுடைய வாக்குத்தத்தம் முழுமையான அளவில் விரிவாக்கம் பெறுகிறது.

ஒப்பந்தம் செய்து கொள்கிற இருவருக்கும், அதாவது இரு தரப்பினருக்கும் இடையிலுள்ள உடன்படிக்கைக்கு ஒரு மத்தியஸ்தர் தேவைப்படுகிறது. உதாரணமாக, வாழ்க்கையின் சாதாரண விஷயங்களில், ஒப்பந்தம் செய்து கொள்கிற எல்லா தரப்பினர்களுக்கும் இடையில், அரசாங்கத்தின் பொதுவான சட்டம் தலையிட்டு, மத்தியஸ்தராக செயல்படுகிறது. அதைப் போன்று, தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் உள்ள ஒப்பந்தங்களில் ஒரு மத்தியஸ்தரைப் பெறுவது அவசியமாகிறது. நீங்கள் என்னிடம் சொன்னதாக அனுமானிக்கவும், "நான் உங்களுக்கு இந்த வைர மோதிரத்தை நாளைக்குத் தரும் நோக்கத்தில் இருக்கிறேன்." நான் கேட்க வேண்டும், மத்தியஸ்தர் எங்கே? நீங்கள் அந்த மோதிரத்தைக் கொடுப்பீர்கள் என்பதற்கு எனக்கு யார் உத்திரவாதம் கொடுப்பார்?" அநேகமாக, நீங்கள் பதிலளிக்கலாம், "இதற்கு மத்தியஸ்தர் தேவையில்லை; இது தன்னார்வமாக மனமுவந்து அளிக்கும் பரிசு," அப்படியே நமது பலியின் உடன்படிக்கையும் இருக்கிறது. இது தன்னார்வமான செயல். தேவன் ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்; "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்." நம்முடைய பலியை மனமுவந்து செலுத்துவதற்கு சம்மதிக்கிறோம் மற்றும் நம்முடைய பரிந்துபேசுகிறவர் நமக்கு உதவிபுரிய சம்மதிக்கிறார். நாம் செய்வதாக சம்மதித்திருக்கிற இந்த விஷயங்களையெல்லாம் நாம் செய்தால், நாம் பரிசை பெறுகிறோம் - மகிமை, கனம், மற்றும் அழியாமை.

## மத்தியஸ்தருக்குப் பதிலாக "ஆணை"

ஆபிரகாமின் உடன்படிக்கையில் தேவனுடைய வார்த்தையைச் சான்று கூறிய அவருடைய ஆணை இந்த உடன்படிக்கையை ஊர்ஜிதப்படுத்தி, இதை கட்டுக்குள் வைத்து, இதை நிச்சயத்தன்மை வாய்ந்ததாக பிடிமானத்துக்குள் இருக்குமாறு செயல்பட்டது, இவ்விதமாக தேவன் மீதும், அவருடைய சில ஜனங்கள் மீதும் உள்ள பரஸ்பர பிணைப்பு குறித்த நிபந்தனைகள் இருந்திருக்கும் பட்சத்தில், மத்தியஸ்தரால் பணி மேற்கொள்ளப் பட்டிருந்திருக்கும் இடத்தை தேவனுடைய ஆணை எடுத்துக்கொண்டது. மத்தியஸ்தர் யாரும் இல்லை, ஏனெனில் ஏற்கனவே சொன்ன விதமாக, இந்த வாக்குத்தத்தம் நிபந்தனையற்ற ஒன்றாகும்; உலகத்தாரை ஆசீர்வதிக்கும் திறன் வாய்ந்த ஒரு வித்தை ஆபிரகாமின் வம்சாவளியின் வழியாக ஏற்படுத்துவதற்கு - தேவன் சில காரியங்களை செய்ய விரும்பினார். ஆகவே மத்தியஸ்தர் அவசியம் இல்லாதிருந்தது.

ஆனால் கவனியுங்கள், இந்த ஆபிரகாமின் உடன்படிக்கையைப் பற்றி பரிசுத்த பவுல் (பி. 6:17) பேசுகையில், தேவன் இதை "ஓர் ஆணையினாலே ஸ்திரப்படுத்தினார்" என்று தெரிவிக்கிறார். இங்கு "ஸ்திரப்படுத்தினார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த வார்த்தை, ஸ்ட்ராங் அகராதியில் <u>குறுக்கிடுபவர்</u> (நடுவர்) என்று சொற்பொருள் விளக்கமளிக்கிறது. நம்முடைய வசனப்பகுதியில் "ஸ்திரப்படுத்தினார்? என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் மெசிடியோ (mesiteus) என்ற கிரேக்க வார்த்தைக்கு யங் அகராதி (YOUNG) "மத்தியஸ்தராக செயல்படுபவர்" என்று விவரிக்கிறது.

## உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கை எப்பொழுது நடைமுறைக்கு வரும்?.

### கே: 186:1 :: கேள்வி (1911) - 1

புதிய உடன்படிக்கை எப்பொழுது நடைமுறைக்கு வரும் மற்றும் எப்பொழுது முடிவு பெறும்?

**பதில்:** மத்தியஸ்தர் முழுமை அடைந்த உடனே, இது நடைமுறைக்கு வரும் - இயேசு தலை மற்றும் சபை சரீரம் - முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவேறி முடிந்த உடனேயே; இந்த காரியம் இறுதியாக அற்முகப்படுத்தப்படுவதற்கு முன்னதாக எவ்வளவு நாட்கள் அல்லது வாரங்கள் இடைப்பட்டு இருக்கும் என்பதை நாம் அறியவில்லை; ஆனால் நடைமுறையில் இது எதற்காகக் காத்துக்கொண்டு இருக்கின்றது என்றால், மத்தியஸ்தராகிய சரீரம் முழுமை பெறவும், பலிகளின் முழுமை பெறுதலும், பிறகு அவருடைய பெரும் வல்லமையை எடுத்துக்கொண்டு, அவருடைய இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையை முத்திரித்தலும், நடைபெற்று, உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்துதல் துவக்கம் பெறும். சபையின் கடைசி அங்கம் பலியிட்டு தன்னுடைய பங்கை முடித்திருந்து, அவர்களுடைய இரட்சகருடன் மகிமையடைந்த பிறகு, இது வெகு சீக்கிரத்தில் நடைபெறும் என்று நாங்கள் சொல்கிறோம்.

இது எப்போது முடிவடையும்? மத்தியஸ்தர் பணியை நிறைவேற்றிய பின்பு - விருப்பமாயிருக்கும் எல்லா ஜனங்களையும் பூரண நிலைக்குக் கொண்டுவந்த பிறகு, மற்றும் விருப்பமில்லாதவர்களை அழித்த பிறகு, பரிபூரண நிலைக்குக் கொண்டுவரப்படும் உலகத்தார் பிதாவின் சமுகத்துக்குத் திரும்புவார்கள் மற்றும் மத்தியஸ்தர் தம்முடைய மத்தியஸ்தர் பொறுப்பிலிருந்து விலகிவிடுவார். பிதா இந்த புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டின் கீழ் அவர்களை ஏற்றுக்கொள்ள சம்மதித்திருக்கிறார், அவர்களை ஏற்றுக்கொள்வார்.

இந்த புதிய உடன்படிக்கை ஏற்பாட்டைப் பொருத்தவரையில், இதுவே இதன் முடிவு ஆகும். ஆனால் வேறு ஒரு பார்வையில், அதற்குப் பிறகு நித்திய காலத்திற்கும் வேறு ஒரு உடன்படிக்கை தொடரும். மனுக்குலத்தாருடனும், தூதர்களுடனும் தேவனுடைய உடன்படிக்கை எவ்விதம் இருக்கிறது என்றால், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து இருப்பார்களானால், அவர்கள் நித்திய ஜீவனை அனுபவிப்பார்கள் மற்றும் அவர் ஏற்படுத்தியிருக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் உடையவர்களாயிருப்பார்கள். ஆகவே இயேசு உலகத்தாரை பிதாவின் பக்கம் திருப்பிய உடனேயே, இரக்கத்தின் இந்த விசேஷித்த உடன்படிக்கை முடிவு பெறுகிறது. இது தன்னுடைய பணியை நிறைவேற்றி முடித்திருக்கும் போது, இது முடிவு பெறுகிறது. பிறகு அவர் மத்தியஸ்தர் பொறுப்பிலிருந்து விலகுவார் மற்றும் புதிய உடன்படிக்கை தன்னுடைய பணியை செய்து முடித்ததால், இது முடிவடைகிறது.. உலகத்தில் பாவம் நுழைவதற்கு முன்பு இருந்த விதமாக, உலகம் பிதாவின் கரங்களில் திரும்ப வரும். பிதா ஆதாமை நடத்தியது போலவே உலகத்தாரை நடத்துவார். அவர் ஆதாமை சோதனைக்குட்படுத்தினார் மற்றும் அது ஆதாம் தேவனுடன் உடன்படிக்கையின் உறவில் இருந்தார் என்பதை அர்த்தப்படுத்தியது. அப்படியே பிதா உலகத்தாரை சோதனைக்குள் உட்படுத்துவார் மற்றும் இது உலகத்தார் தேவனுடன் உடன்படிக்கையின் உறவில் இருக்கிறார்கள் என்று அர்த்தமாகிறது.

அவர்கள் நிலையாக இருந்து, கீழ்ப்படிதலின் நிபந்தனைகளுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்களா என்று பார்ப்பதற்கு அவர்கள் சோதனைக்கு உட்படுவார்கள்; அவர்கள் அப்படி இல்லாவிட்டால், இரண்டாம் மரணத்தில் அவர்கள் மரிப்பார்கள். உங்களுக்கு நினைவு இருக்கும், இது வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. சாத்தான் விடுதலையாக்கப்படுவான் மற்றும் அந்த சோதனை மனுக்குல உலகத்தார் அனைவரையும் பாதிக்கும். கீழ்ப்படியாத அநேகர் விரோதியானவனுடைய ஆவியைப் பெற்றிருப்பதாகக் கணக்கிடப்பட்டு, அவனுடன் அழிக்கப்படுவார்கள். கீழ்ப்படிதலின் ஆவியை உடையவர்களாகவும், தேவனுடன் அவர்களுடைய உடன்படிக்கையின் உறவைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிற எல்லாரும் நித்திய ஜீவனையும், தேவனுடன் முழுமையாக இணக்கமாயிருப்பவர்களுக்கு தேவன் வைத்திருக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள்/.

## உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கை நிபந்தனைக்குட்பட்டதா அல்லது நிபந்தனையற்றதா?

### கே: 187:1 :: கேள்வி (1911) - 1

புதிய உடன்படிக்கை நிபந்தனைக்கு உட்பட்டதா அல்லது நிபந்தனை ஏதும் இல்லாததா?

**பதில்:** புதிய உடன்படிக்கை நிபந்தனைக்கு உட்பட்ட ஒன்றாகும். இது மத்தியஸ்தரை உடையதாயிருக்கிறது என்ற உண்மையினால் அது காண்பிக்கப்பட்டுள்ளது. இது நிபந்தனையற்ற உடன்படிக்கையாக இருந்திருந்தால், இதற்கு மத்தியஸ்தர் தேவை இல்லை. உதாரணத்திற்கு, அப்போஸ்தலர் சுட்டிக்காட்டும் விதமாக, ஆபிரகாமின் உடன்படிக்கை நிபந்தனை இல்லாததாய் இருக்கிறது மற்றும் மத்தியஸ்தரை உடையதாக இல்லை. இது ஒரு தரப்பைச் சார்ந்த உடன்படிக்கையாகவே இருக்கிறது; அல்லது, வழக்கறிஞர்கள் கூறுவது போல, இது ஒருதலைப்பட்சமான உடன்படிக்கையாகும். வேறு எந்த நிபந்தனையும் உடையதாயிராமலும், வேறு எந்த தேவையையும் ஏற்படுத்தாமலும், வெறுமனே தேவன் தாமே என்ன செய்யப் போகிறார் என்ற பார்வையிலேயே இது ஒரு தரப்பைச் சார்ந்ததாக அல்லது ஒருதலைப்பட்சமாக இருக்கிறது. இருப்பினும், புதிய உடன்படிக்கை நிபந்தனையைக் கொண்டதாக இருக்கிறது. இது இரண்டு பகுதிகளை உடையதாயிருக்கிறது. தேவன் கூறுகிறார், "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்." மத்தியஸ்தர் இதற்குள் வருகிறார். அந்த மத்தியஸ்தரை தேவன் இப்பொழுது ஆயத்தப்படுத்துகிறார். இந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து இருக்கிறார் - கிறிஸ்துவின் தலையாக இயேசு மற்றும் கிறிஸ்துவின் சரீரமாக சபையும் பெரும் மத்தியஸ்தராக, தேவனுக்கும் இஸ்ரயேலுக்கும், இஸ்ரயேல் மூலமாக ஆசீர்வாதங்களைப் பெறப்போகிற எல்லோருக்கும் இடையில் இருப்பார்கள்.

## உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்த காலம்.

### கே: 187:2 :: கேள்வி (1908) - 2

தேவனை நோக்கிய புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தம் எவ்வளவு காலத்திற்குத் தேவைப்படும், மற்றும் மனுஷனை நோக்கி மத்தியஸ்தம் எவ்வளவு காலத்திற்குத் தேவைப்படும்?

**பதில்:** நான் சொல்கிறேன், அன்புள்ள நண்பர்களே, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தம் தேவனை நோக்கி இந்த சுவிசேஷ யுகம் முழுமையிலும் தேவைப்படுகின்றது. நம்முடைய கர்த்தர் இயேசு அந்த பணியை தம்முடைய ஊழியத்தில் துவக்கினார். அவர் செய்தவற்றில் அவைகள் அனைத்தும் உள்ளடக்கியிருந்தது; அவர் தம்மை அர்ப்பணித்த போது, இது சாக வேண்டியிருந்தது, மற்றும் அந்த மரணமானது, தேவனுக்கும் மற்றும் இஸ்ரயேல் மற்றும் மனுக்குலத்திற்கும் இடையே புதிய உடன்படிக்கையின் முத்திரிக்கப்படுதலாக இருந்தது. தேவனை நோக்கிய புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தம், சொல்லப் போனால், புதிய உடன்படிக்கைத் தொடர்பானவற்றில், தேவனுக்கு திருப்தியாகக் காரியங்களைச் செய்வதற்கு இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. எல்லாவற்றுக்கும் முதலாவதாக, இயேசு தம்முடைய சொந்த ஜீவனைக் கொடுத்தார், மற்றும் அவர் இந்த உலகத்தை விடும்போது, அவர் காரியங்களை முடிக்கும் தருவாயில், அவர் தம்முடைய இரத்தம் மற்றும் தம்முடைய சொந்த பலியை நினைவுகூருதலின் பாத்திரத்தினால் அடையாளப்படுத்தினார் மற்றும் தம்முடைய சீஷர்களிடம் கூறினார், "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." அது கிறிஸ்துவின் பாடுகளில் பங்காளிகளாவதற்கு, உங்களுக்கும் எனக்கும் மற்றும் அவருடைய சீஷர்களாக இருக்கும் எல்லோருக்கும் ஒரு அழைப்பாக

இருக்கிறது, மற்றும் இதே கருத்து தான், இரண்டு சீஷர்கள் அவரிடம் கேட்ட போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும், "உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலதுபாரிசத்திலும், ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும் என்றார்கள்" இயேசு அவர்களை நோக்கி, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும் கூடுமா?" நீங்கள் விரும்புகிறீர்களா? ஒரு நிபந்தனை இருந்தது; அவர்கள் பாத்திரத்தில் பானம்பண்ணினால் அவர்கள் சிங்காசனத்தில் உட்காரலாம்; அவர்கள் பாத்திரத்தில் பானம்பண்ணாவிட்டால், அவர்கள் சிங்காசனத்தில் உட்கார முடியாது. இப்போது இந்த காரியம் தான் நடந்துகொண்டிருக்கிறது; நீங்களும் நானும் பலியிடும் வகுப்பாரில் கிறிஸ்துவுடன் பங்குபெறுகிறவர்களானால், அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார், நம்மை நீதிமான்களாக்குகிறார், நாம் பெறுகிற எல்லா புண்ணியத்தையும் நமக்கு அளிக்கிறார், நாம் அவரிடத்தில் முழுமையான அர்ப்பணிப்பைச் செய்கிறோம், மற்றும் அந்த அர்ப்பணிப்புக்கு இசைவாக நம்முடைய திறனில் எல்லாவற்றையும் செய்கிறோம். இந்த காரியம் முழுவதையும் தாம் மேற்கொள்வதாக அவர் கூறுகிறார், மற்றும் அந்த மகிமைபொருந்திய சரீரத்தில் நாம் அங்கங்களாகப் போகிறோம், மற்றும் நம்முடைய பலிகளை அவர் இப்பொழுது தம்முடைய சொந்த பலியாகவே கணக்கிடுகிறார், மற்றும் இது அவருடைய பலியின் ஒரு பகுதியாகப் போகிறது; மற்றும் கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நாம் நிரப்புகிறோம் என்று நாம் வாசிக்கிறோம். இது பதினெட்டு நூற்றாண்டுகளாக இப்பொழுது நடந்துகொண்டிருக்கின்றது, மற்றும் இன்னும் அவர்கள் எல்லாரும் நிரப்பப்படவில்லை; கிறிஸ்துவின் பாடுகள் முழுமையடையாத வரைக்கும், அந்த பலி முழுமையடையாத வரைக்கும் நிரப்பப்படாது, இந்த யுகத்தின் முடிவில் புது உடன்படிக்கை முத்திரிக்கப்படுதலுக்கு, அதை இயங்கச் செய்வதற்கு, புது உடன்படிக்கையின் அந்த இரத்தம் அப்போது பிரயோகிக்கப்படுவதற்கு தயாராகும். இது எப்படி முத்திரிக்கப்படும்? இது தேவனை நோக்கி முத்திரிக்கப்படும். இது நாள் வரைக்கும் நடந்து வந்திருக்கிற அனைத்தும், இந்த முத்திரித்தலுக்கான வெறும் ஆயத்தமாக இருந்து வருகிறது; சபையின் கடைசி அங்கம் அவருடைய `பயணத்தை முடித்த உடனேயே, மற்றும் பலி அனைத்தும் முடிவுற்ற உடனேயே, அப்போது இது பிரயோகப்படுத்தப்படும். இதை யார் பிரயோகிப்பார்? நீங்களா? இல்லை. நானா? இல்லை. யார்? எப்படி? ஏனெனில் நீங்கள் அந்த சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறீர்கள். அப்போது இது அவருக்கு சொந்தமானதாக இல்லையா? "என்னாலேயல்லாமல் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது." என்னுடைய கை, இது செய்ய முடிகிறதை பற்றிப் பேசுவதாக அனுமானித்தால், நான் சொல்வேன், கை, இதைச் செய்வதற்கு உனக்கு ஒன்றுமில்லை. தலை தான் எல்லாவற்றையும் செய்கின்றது.

உள்ளே வருவதற்கும் மற்றும் அந்த சரீரத்தின் அங்கங்களாவதற்கும் அவர் நமக்கு அனுமதி, அல்லது சிலாக்கியத்தை அளித்திருக்கிறார், ஆனால் அவர் எப்போதும் சபையாகிய சரீரத்தின் தலையாக இருக்கிறார். இப்பொழுது, இந்த யுகத்தின் முடிவின் போது மனுக்குலத்தின் சார்பில் அவர் தம்முடைய இரத்தத்தைப் பிரயோகப்படுத்துவார், மற்றும் இப்படியாக மனுக்குல உலகத்திற்கு எதிரான நீதியின் கோரிக்கைகளுக்குத் தீர்வு செய்வார்., இது அவருடைய சொந்த இரத்தமாக இருக்கிறது, ஏனெனில் அவர் உங்களையும், என்னையும் அவருடைய அங்கங்களாக சுவிகாரம் செய்திருக்கிறார், ஆகவே நீங்கள் பலியிடுகின்ற எதுவும் அவருடைய பலியின் பகுதியாக இருக்கின்றது, மற்றும் ஏனெனில் அவருடைய ஆவி நம்மில் வாசம்பண்ணுகிறது. ஆகவே இது எல்லாம் அவருடைய பலியின் பகுதியாக இருக்கின்றது. கிறிஸ்துவின் சரீரம் முழுமை அடைந்த உடனேயே, மற்றும் பலியிடுதல் முடிந்த உடனேயே, புது உடன்படிக்கையின் இரத்தம் பிரயோகிக்கப்படுகிறது, மற்றும் இது பிரயோகப்படுத்தப்பட்டு, இந்த யுகத்தின் முடிவில், நிழலின்படி, மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனிடம் செலுத்தப்பட்ட உடனே, உலகத்தின் பாவங்களின் மன்னிப்பு நிறைவேற்றப்படுகிறது, - ஆதாமின் பாவங்கள் எல்லாம் நீக்கப்படுகின்றன, மற்றும் உடனடியாக, கிறிஸ்து உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக, மகிமையின் மாபெரும் இராஜாவாக உலகத்தை தம் வசம் எடுத்துக்கொள்கிறார். இப்பொழுது அவர்கள் சோதனைக்குள்ளாக இருக்க வேண்டியுள்ளது; அவர்களுடைய பாவங்கள் ஒதுக்கிவைக்கப் படாமல் இருக்கும் வரைக்கும், அவர்கள் சோதனைக்குள்ளாக இருக்க முடியாது, ஆனால் அவர்களுடைய பாவங்கள் ஒதுக்கிவைக்கப்பட்ட உடனே, அவர்கள் சோதனைக்குள்ளாக

இருப்பார்கள். புது உடன்படிக்கை இன்னும் நடைமுறைக்கு வந்திருக்கவில்லை என்பதற்கு, நமக்கு என்ன சான்று உள்ளது என்று நாம் பார்க்கிறதில்லை. அது உலகத்தாருக்கானதாகும், மற்றும் இது அவ்விதமே கூறுகிறது, "அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே. நானும் அவர்களைப் புறக்கணித்தேனென்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப்பின்பு, நான் இஸ்ரயேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்."

## உடன்படிக்கைகள் - புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்த காலம்.

### கே: 189:1 :: கேள்வி (1911) - 1

புதிய உடன்படிக்கை மனுஷனை நோக்கி எவ்வளவு காலம் மத்தியஸ்தம் பண்ணப்படும் மற்றும் எவ்வளவு காலம் தேவனை நோக்கி மத்தியஸ்தம் பண்ணப்படும்?

**பதில்:** தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலான உடன்படிக்கை முதலில் தேவனை நோக்கியே மத்தியஸ்தம் பண்ணப்பட வேண்டிய அவசியமான தேவை இருக்கிறது, ஏனெனில் தேவனுடைய நீதி திருப்திப்படுத்தப்படும் வரையிலும், மனுக்குலத்திற்கு எதுவும் செய்யப்பட இயலாது. ஆகவே இந்த புதிய உடன்படிக்கை இன்னும் தேவனை நோக்கி மத்தியஸ்தம் பண்ணப்படவே இல்லை. மாபெரும் பிரதான ஆசாரியர் இந்த புதிய உடன்படிக்கையை மத்தியஸ்தம் பண்ணுவதற்கான ஆயத்தப் பணியில் இருக்கிறார். அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? நல்லது, அவர் தம்மைத் தாமே ஆயத்தம் பண்ணிக்கொண்டு இருக்கிறார். அவர் அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியராக இருக்க வேண்டும். தலை 1800 வருஷங்களுக்கு முன்பாக அபிஷேகம் பண்ணப்பட்டது, சரீரத்தின் அபிஷேகம் இன்னும் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது; இது இன்னும் முடிவு பெறவில்லை; மாபெரும் பிரதான ஆசாரியர் தம்முடைய பணியைச் செய்வதற்கு தயாராவதற்கு முன்பு, சபையின் கடைசி அங்கங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக, இந்த மாபெரும் பிரதான ஆசாரியரும் பலிகளைச் செலுத்துகிறார். அவர் தம்மையே பலியிட்டு இதைத் துவக்கினார். இந்த யுகத்தின் 1800 வருஷங்களாக அவர் தம்முடைய பலியிடும் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்; அவருடைய நிஜமான பலிகளை செலுத்தும் பணி இன்னும் நிறைவு பெறவில்லை. அது நிறைவுபெறும் வரையில், அவர் இரத்தத்தைக் காணிக்கையாக்குவதற்கு தயாராக இல்லை மற்றும் இந்த இரத்தம் ஆத்துமாவிற்கு பாவநிவாரணத்தை உண்டுபண்ணுகிறது. இப்பொழுது இங்கு கிறிஸ்துவின் இரத்தம் அடையாளப்பூர்வமாக உபயோகப்படுத்தப்படுகிறது. கர்த்தர் இயேசு சொல்லர்த்தமான இரத்தத்தை பிதாவின் சமூகத்திற்கு எடுத்துச் செல்லப் போகிறார் என்று ஒரு கணம் நான் நினைக்கக்கூடாது. இரத்தம் எதை அடையாளப்படுத்துகிறதோ, அவர் அதை எடுத்துக் கொண்டு போவார். அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவரால் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜீவனின் புண்ணியத்தை இரத்தம் அடையாளப்படுத்துகிறது. அவர் நீதிக்காக அந்த பலியை பிதாவினிடத்தில் உரித்தாக்குவார். நீதியின் திருப்தியை உள்ளடக்கியதாக, பாவநிவாரண நாளின் பலிகள் கிருபாசனத்தின் மீது அவர் இரத்தத்தைத் தெளித்த இந்த காட்சி உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இது தேவனை நோக்கிச் செய்யப்படும் பாவநிவாரணம் ஆகும். கிருபாசனத்தின் மீது இரத்தம் தெளிக்கப்படுவது நிறைவேறியிருக்கும் போது, தேவன் திருப்தி அடைவார், நீதி திருப்தி அடையும். அது தான் முத்திரிக்கப்படுதலை உள்ளடக்கி, புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தர் அப்போது முழுமையாக அங்கீகாரம் பெற்றவராயும், புதிய உடன்படிக்கையை

செயற்படுத்துவதற்கும், ஜனங்களுக்கு எல்லா ஆசீர்வாதங்களையும் கொண்டு வருவதற்காக அதிகாரம் வழங்கப்படுகிறவராகவும் இருப்பார். பிறகு ஆயிரம் வருஷங்களுக்கு புதிய உடன்படிக்கையின் இந்த மாபெரும் மத்தியஸ்தர் ஜனங்களை சுத்திகரிக்கவும், தம்முடைய சொந்த பலியின் புண்ணியத்தினால் ஜனங்களைப் பரிசுத்தம் பண்ணவும் ஜனங்களின் மீது இரத்தத்தைத் தெளிப்பார். அவர்களுக்குத் தேவையானவற்றை அவர் அளிப்பார் மற்றும் குறைபாடுகளிலிருந்து அவர்களை வெளிக்கொண்டு வருவதில் உதவி செய்வார். இப்படியாக, உண்மையில் மிகவும் குறைந்த காலத்தில் தேவனை நோக்கிய இந்த பணி நிறைவேறுதல் அடையும் மற்றும் மனுக்குலம் சம்பந்தப்பட்ட பணி முற்றிலும் நிறைவேற ஆயிரம் வருஷங்கள் முழுமையாகத் தேவைப்படும்.

## உடன்படிக்கைகள் - இதை முத்திரிக்கிறவர்களின் எண்ணிக்கை.

### கே: 190:1 :: கேள்வி (1911) - 1

புதிய உடன்படிக்கையின் தொடர்பாக, ஒரு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஒன்று பேர்களால் முத்திரிக்கப்படும் என்று எந்த கண்ணோட்டத்திலுமிருந்தாவது சொல்ல முடியுமா? அதாவது, கிறிஸ்து இயேசு மற்றும் மனுஷர்களிலிருந்து இரட்சிக்கப்பட்ட 1,44,000 பேர்களால் முத்திரிக்கப்படும் என்று சொல்லலாமா?

**பதில்:** இது ஒரு சரியான பார்வை என்று நான் நினைக்கவில்லை. இந்த புதிய உடன்படிக்கையை முத்திரிக்கும் விஷயத்தில், நீங்களும் நானும், கிறிஸ்துவின் சரீரமாகிய மற்ற அங்கங்கள் ஏதாகிலும் செய்வதற்கு இருப்பதாக நான் புரிந்துகொள்ளவில்லை; இதை முத்திரிக்கிறவர் கிறிஸ்துவே. இதை விளக்கமாகச் சொன்னால்: கையெழுத்துப் போட வேண்டியிருந்த ஒரு ஆவணம் இருந்ததாகவும், அதில் நான் கையெழுத்திட்டேன் என்று அனுமானித்தால், "நல்லது, இந்த ஆவணத்தை உங்கள் கட்டைவிரல் கையெழுத்திட்டது, மற்றும் முதல் விரல் இதை கையெழுத்திட்டது" என்று நீங்கள் சொல்லமாட்டீர்கள். இல்லை, ஒரு உடன்படிக்கையை நான் கையெழுத்திட்டேன்; நான் ஒரு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டேன். இதை கையெழுத்திட்டவர் யார்? என்னுடைய விரல்கள் அல்ல, ஆனால் இதைக் கையெழுத்திட்டது என்னுடைய தலை. இதைக் கையெழுத்திட்டது "நான்" தான்; "நான்" என்று நீங்கள் நினைக்கும் போது, நீங்கள் ஒரு தனி மனிதனையே நினைக்கிறீர்கள். தலையை நீங்கள் நினைக்கிறீர்கள். இந்த விஷயத்தில் என்னுடைய கை ஏதேனும் செய்திருந்தது போல, நீங்கள் என்னுடைய கையைப் பார்த்து சொல்லமாட்டீர்கள். "அருமையான கையே, நான் உன்னை அதிகம் பாராட்டுகிறேன், இவ்விதமாக நீ செய்தாய்." ஆனால் கை எந்த பொறுப்பையும் கொண்டிருக்கவில்லை; "தலை" தான் முழு பொறுப்பையும் உடையதாய் இருக்கிறது. இந்த விஷயத்தில் கிறிஸ்துவினுடைய சரீரத்தில் நம்முடைய தனித்தன்மையை நாம் இழக்கிறோம்; வேதாகம மொழியில் சொன்னால், நாம் தலைகள் சங்கரிக்கப்பட்டவர்களாக, ஒரு தலையின் கீழ் நாம் எல்லோரும் அங்கங்களாக இருக்கிறோம். ஆகவே நீங்கள் உங்களுக்குச் சொந்தமான தலை உடையவர்களாயிருக்கவில்லை மற்றும் நானும் எனக்குச் சொந்தமான தலையை உடையவராக இல்லை. இந்த பார்வையில் தான், சபையை அடையாளப்படுத்தும் விதமாக, வேதாகமம் பெண்ணாக உபயோகப்படுத்துகிறது மற்றும் கிறிஸ்து இயேசுவை ஆணாக அடையாளப் படுத்துகிறது. மனைவியின் தலையாக புருஷனும், அப்படியே சபைக்குத் தலையாக கிறிஸ்துவும் இருக்கிறார் என்று வேதாகமம் காண்பிக்கின்றது. இப்போது, ஒரு தனி நபராக இங்கு எண்ணப்படுகிறது. நம்முடைய கர்த்தர் தான் புதிய உடன்படிக்கையை முத்திரிக்கிறார். அவர் நம்மையல்லாமல் இதை முத்திரித்திருக்கலாம், ஆனால் நாம் சிலாக்கியமுள்ளவர்களாக உள்ளே வந்து, அவருடைய அங்கங்களாகிறோம். அவர் அந்த தனித்தன்மையை உடையவராயிருக்கிறார் மற்றும் எல்லா காலத்திலும் அந்த தலையை உடையவராயிருக்கிறார் மற்றும் உடன்படிக்கையைக் குறித்தான அதே பொறுப்பை உடையவராயிருக்கிறார். அதாவது, தேவைப்படக்கூடிய அனைத்து புண்ணியம், அந்த உடன்படிக்கையை செவ்வனே

செயற்படுத்துவதற்கான அனைத்து புண்ணியமும் நமது அருமை இரட்சகரின் மரணத்திலிருந்து வந்தது. இதனுடன் நாம் சேர்க்கக்கூடியது வேறு எதிலிருந்தும் அல்ல

## உடன்படிக்கைகள் - தேவன் ஆதாமுடன் செயல்பட முடியுமா?

### கே: 191:1 :: கேள்வி (1911) - 1

ஆதாம் பாவம் செய்த பிறகு, தேவன் யூதர்களிடம் நியாயப்பிரமாண உடன்படிக்கையை ஏற்படுத்தின மாதிரியாக - பிரமாணத்தை நிறைவேற்றும் நிபந்தனையின் பேரில் அவனுக்கு ஜீவனை அளிப்பதற்கான உடன்படிக்கையை ஆதாமுடன் தேவன் செய்திருக்க முடியுமா?

**பதில்:** ஆதாம் முற்றிலும் முழுவதுமான சோதனையைப் பெற்ற பிறகு, அந்த சோதனையில் அவன் தோல்வி அடைந்த பிறகு, அதன் காரணமாக அவன் மரண தண்டனையைப் பெற்ற பிறகு, அவன் கிட்டத்திட்ட விழுந்துபோன நிலைமையை அவன் அடைந்த பிறகு, தேவன் தம்முடைய நிர்வாகத்தைக் குறைவுப்படுத்தி, அவனுக்காக வேறொரு திட்டத்தை முன்னிறுத்த முடிவு செய்து, தெய்வீக கொள்கைகளுக்கு இசைவாக இருக்கும் என்று நாம் அனுமானிப்பது நியாயமாக இருக்காது என்று நாங்கள் நினைக்கிறோம். ஏற்கனவே இழைக்கப்பட்ட மீறுதலுக்கு முழுமையான திருப்தி முதலில் செய்யப்பட்டிராத வரையில், ஒரு சோதனையைப் பரிந்துரைப்பது கூட தெய்வீக கொள்கைகளுக்கு உடன்பாடாக இருந்திருக்காது. ஆதாமிற்கும், குறைவுள்ளவர்களாகப் பிறந்த ஆதாமின் பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை நாம் காண முடியும். ஆதாமின் பிள்ளைகள் விரும்பியும், வேண்டுமென்றே தேவனுக்கு விரோதமாக ஒருபோதும் பாவம் செய்திருக்கவில்லை. மேலும் அந்த தெய்வீக சட்டத்தை கைக்கொள்ள முடியுமா என்பதைப் பார்ப்பதற்கான எந்த சலுகையோ அல்லது வாய்ப்போ அவர்களுக்கு ஒருபோதும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

மனுக்குலத்தார் அனைவருக்கும் இறுதியாக நித்திய ஜீவனுக்கும், தேவனுடைய கிருபைக்கும் திரும்ப வருவதற்கான வாய்ப்பை கொடுக்க - இந்த மாபெரும் ஆசீர்வாதத்தின் நிழலாக இருக்கும் பொதுவான கட்டளைகளை கற்பிக்கும் நோக்கத்திற்காக, தேவன் இஸ்ரயேலுக்கு நிழலான நீதிமானாக்கப்படுதல் மற்றும் நிழலான பரிசுத்தமாக்கப்படுதல் போன்றவற்றின் சூழ்நிலைகளைக் கொடுத்தார்.

## உடன்படிக்கைகள் - ஆபிரகாமின் உடன்படிக்கையை கிறிஸ்துவின் முத்திரித்தல்

### கே: 191:2 :: கேள்வி (1911) - 2

கிறிஸ்துவின் இரத்தம் ஆபிரகாமின் உடன்படிக்கையை முத்திரிக்கிறதா அல்லது செயற்படுத்துகிறதா?

**பதில்:** இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம், இது செய்வதில்லை. தேவன் தாமே இதை முத்திரித்த முறையைத் தவிர, ஆபிரகாமின் உடன்படிக்கை முத்திரிக்கப்படத் தேவை இல்லை என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். ஒருவரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் உடன்படிக்கைக்கு மத்தியஸ்தர் தேவைப்படாது என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். இப்போது, இது இந்த முதலாவது, அல்லது ஆபிரகாமின் உடன்படிக்கையில் ஒரு தரப்பு மட்டுமே இணைக்கப்பட்டிருந்தது. "ஆபிரகாம், நீ இதைச் செய்தால், நீ இவ்விதமாக இருந்தால், நான் அவ்விதமாகச் செய்வேன்" என்று தேவன் கூறவில்லை.. அப்போது உடன்படிக்கையில் இரண்டு பிரிவுகள் இருந்திருக்கும்., அப்படி இருந்தால், இரண்டு தரப்பினரும் அவர்களுடைய ஒப்பந்தத்தை முற்றிலுமாக செயற்படுத்தினார்களா என்று பார்ப்பதற்கு ஒரு மத்தியஸ்தர் இருப்பது சரியானதாய் இருக்கும். ஆனால் ஆபிரகாமின் உடன்படிக்கை எந்த நிபந்தனையையும் உடையதாயிருக்கவில்லை. தேவன் ஆபிரகாமிடம் வெறுமனே கூறினார், "ஆபிரகாம்,

பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கும் நோக்கங்கொண்டு, நான் உனக்கு சிலவற்றைக் கூறுவேன்; மேலும் இன்னும் அதிகமாகச் சொல்லப்போகிறேன்! உன்னுடைய சந்ததியின் மூலமாக அவர்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்க நோக்கமாயிருக்கிறேன்." இதைப் பற்றியவை எல்லாம் அதுவே. இப்போது, இதை முத்திரிப்பதற்குப் பதிலாக, இதை மத்தியஸ்தர் வழியாக இரத்தத்தின் மூலமாக உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக, தேவன் வெறுமனே கூறினார், "நான் வேறு வழியில் இதை நிச்சயமாய் நடப்பிக்கப் போகிறேன் என்பதற்கு, என்னுடைய வார்த்தையை நீ பெற்றிருக்கிறாய்; என்னுடைய வார்த்தைக்கு ஆதரவாக நான் உனக்கு என்னுடைய உறுதிமொழியை (ஆணை) கொடுக்கிறேன்." இந்த ஆபிரகாமின் உடன்படிக்கை துரிதமாக ஏற்படுத்தப்பட்டது, அல்லது நிச்சயிக்கப்பட்டது. மேலும், அப்படியே இந்நாளில் இது நிலைபெற்றிருக்கிறது.

முதலில், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும், மற்றும் இரண்டாவது, ஆபிரகாமின் சந்ததி மூலமாக அவர்கள் எல்லோரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமின் சந்ததி, முதலாவது, சபை வகுப்பார் என்பதை நாம் பார்க்கிறோம் - பரிசுத்தவான்களாகிய சிலர், சிறுமந்தை, வானத்து நட்சத்திரங்களைப் போல இருப்பார்கள். கலாத்தியர் 3:29ம் வசனத்தில் பரிசுத்த பவுல் கூறுகிறார், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." ஆனால் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாராக முற்பிதாக்களும் மற்றும் அவருக்குப் பிறகு வரப்போகிறவர்களும் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி மூலமாகவும், ஆபிரகாமின் மாம்சீக சந்ததி மூலமாகவும் உலகத்தாரை ஆசீர்வதிக்கும் கால்வாயாக இவைகள் இருக்கின்றன. பூமியின் வம்சங்கள் அனைத்தும் இன்னும் ஆசீர்வாதத்தைப் பெறவில்லை.

## உடன்படிக்கைகள் - தாவீதின் நிச்சயமான கிருபைகள்.

### கே: 192:1 :: கேள்வி (1911) - 1

"தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்." இது எந்த உடன்படிக்கையை அர்த்தப்படுத்துகிறது? மற்றும் இது யாருடன் செய்யப்படப் போகிறது?

**பதில்:** இந்த வார்த்தைகள் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததிக்கு உரியனவாக இருக்கின்றன என்று காண்பிப்பது போல இந்த வசனப்பகுதி தோன்றுகிறது - சபை வகுப்பார், சிறுமந்தை. தாவீதின் வம்சாவளியிலிருந்து வரக்கூடிய ஒருவர் இஸ்ரயேலின் மாபெரும் இராஜாவாகவும், மாபெரும் மேசியாகவும் இருப்பார் என்று அவனுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தத்தில் தாவீதுக்கு அருளப்பட்ட கிருபைகளை உள்ளடக்கியவைகளாக இருந்தன. இந்த ஒருவர் முதன்மையாக, நமது கர்த்தர் இயேசு கிறிஸ்துவாகவும், இரண்டாவதாக, இந்த ஒருவர் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகப் போகிற அனைவரும் ஆவர் - சபை. கலா. 3:29ல் அப்போஸ்தலர் கூறுகிறார், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராய் இருக்கிறீர்கள்." நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், நீங்கள் தாவீதின் சந்ததியாராய் இருக்கிறீர்கள் என்பது சமமான உண்மையாயிருக்கின்றது. அவனுடைய சந்ததியில், மேசியா சிங்காசனத்தில் உட்காருவார் என்பது தான் தாவீதுக்கு அருளப்பட்ட கிருபைகளின் நிச்சயம் ஆகும்; ஆகவே இயேசு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார், "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன் - மேசியாவின் சிங்காசனம்."

## உடன்படிக்கைகள் - மோசே நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தாரா?

### கே: 192:2 :: கேள்வி (1912) - 2

மோசேயினால் அடையாளப்படுத்தப்பட்டு, யூத ஜாதியுடன் நியாயப்பிரமாண உடன்படிக்கை பண்ணப்பட்டதால், மோசே ஒரே சமயத்தில் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருந்ததாகவும், அந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் இருந்தாரா?

**பதில்:** ஆம்! அவர் மத்தியஸ்தம் பண்ணின உடன்படிக்கையின் கீழ் தான் அவரே இருந்தார். உடன்படிக்கையை மத்தியஸ்தம் பண்ணுவது வெறுமனே அதை செயல்முறைக்கு கொண்டுவரச் செய்வது தான். உடன்படிக்கையைப் பற்றிய இந்த விஷயத்தில், மோசே தேவனுடைய முகவராக வெறுமனே செயல்பட்டார். இந்த விஷயத்தில் எல்லா ஏற்பாடுகளையும் செய்வதற்கு கட்டளையிடப்பட்டார். இந்த ஏற்பாடுகள் எல்லாம் யாருக்காக செய்யப்பட்டதோ, அந்த ஜாதியாரில் ஒருவராக மோசே இருந்தார் மற்றும் அந்த ஜாதியின் மீதியான மற்றவர்களைப் போலவே, அவர் அந்த உடன்படிக்கையுடன் பிணைக்கப்பட்டிருந்தார். க்ளாஸ்கோ நகர மாநகராட்சியின் அங்கத்தினர், ஒவ்வொரு குடிமகனும் தன் வீட்டிற்கு முன்னுள்ள நடைபாதையைப் பெருக்க வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வந்தார் என்று சொல்வோமானால், அந்த நகரத்தின் குடிமகனாக அவரே இருக்கிறவரானால், அந்த நபர் அந்த சட்டத்தின் நடைமுறைப்படுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படமாட்டார். அப்படியே, உடன்படிக்கை மற்றும் மோசேயின் விஷயத்திலும் நான் சொன்னதாகவே இருக்கிறது.

## உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாண உடன்படிக்கை கூடுதலாக சேர்க்கப்பட்டதா?

### கே: 192:3 :: கேள்வி (1912) - 3

ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் நியாயப்பிரமாணம் கூடுதலாகச் சேர்க்கப்பட்டதா? அப்படி இருந்தால், இந்த கருத்தை கலா. 3:15ம் வசனத்துடன் எப்படி இணக்கமுறச் செய்ய முடியும்? “மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை.”

**பதில்:** ஒரு பார்வையில் நியாயப்பிரமாண உடன்படிக்கை கூடுதலாகச் சேர்க்கப்பட்டது; இருப்பினும் வேறொரு பார்வையில், இது கூடுதலாகச் சேர்க்கப்படவில்லை. ஆபிரகாமின் உடன்படிக்கை நிலைத்திருக்க வேண்டியதாயிருந்தது மற்றும் இரத்து செய்யப்படவோ அல்லது தள்ளிவைக்கவோ முடியாது. மேலும் இதனுடைய விதிமுறைகளை எவ்விதத்திலும் யாரும் மாற்ற முடியாது. ஆபிரகாமின் உடன்படிக்கையில், ஆபிரகாமுக்கு ஒரு வித்தை அளிப்பேன் என்றும், அந்த வித்தின் மூலம் அனைத்து ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். அந்த உடன்படிக்கையின் சாராம்சம் இதுவே. தேவன் யூத ஜாதிக்கு அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கொடுத்தார். இது இந்த மாதிரி இருந்தது: இந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, யூதன் ஆவிக்குரிய சந்ததியாக இருக்க முடியாது. இயேசு பூரணமுள்ளவராக இருந்தார் மற்றும் அவர் மட்டுமே அந்த உடன்படிக்கையை கைக்கொள்ள முடிந்தது. இது அவரை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவிக்குரிய சந்ததியாக்க முடிந்தது. இது ஜீவபலியாகத் தம்மையே ஒப்புக்கொடுக்கத் தகுதியானவராக அவரை நிரூபிக்கச் செய்தது மற்றும் அந்த உடன்படிக்கையின் காரணமாகவும், அந்த உடன்படிக்கையைக் கைக்கொள்வதற்கான அவருடைய திறமையின் காரணமாகவும், அவர் மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றார் மற்றும் இப்படியாக அவர் ஆவிக்குரிய சந்ததியானார். அவர் பலியின் உடன்படிக்கைக்குள்ளாக பிரவேசித்தார். இதில் எதுவும் ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் குறுக்கிடவில்லை; இது இன்னும் அதே மாதிரி நிலைத்திருக்கின்றது. ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்கு இயேசு சுதந்தரவாளியாகவில்லை. அவர் தாம் பலியிடுவதற்கு தகுதியானவர் என்று காண்பித்தார், மற்றும் அவர் பலியின் உடன்படிக்கையை உண்டாக்கினார். இந்த உடன்படிக்கையை செய்கிறவர்கள் “சந்ததியாக” இருக்கிறார்கள். இவர்கள் தான் பலியின் உடன்படிக்கையை செய்கிறவர்கள், இவர்களில் முதலானவர் இயேசு ஆவார்.

அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவுடன், அவர் ஆவிக்குரிய சந்ததியாக ஆக்கப்பட்டார். அந்த "மனுஷன்" ஆவிக்குரிய சந்ததி அல்ல மற்றும் பூரண மனுஷனாக இருந்தும் கூட, இயேசு மனுக்குலத்துக்கு ஜீவனைக் கொடுக்க முடியவில்லை. அவர் நியாயப்பிரமாண உடன்படிக்கையை இரத்து செய்யவோ அல்லது விருதாவாக்கவோ இல்லை.

## உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணத்துடன் நாம் பிணைக்கப் பட்டிருக்கிறோமா?

### கே: 193:1 :: கேள்வி (1912) - 1

நியாயப்பிரமாணம் இன்னும் இயங்கி வருகிறது என்றும், நீங்கள் கூறும் விதமாக, இது ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்குமானால், நாம் இப்போது நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் பிணைக்கப்பட்டிருக்கிறோம் என்று உணர்த்தப்படுகிறது அல்லவா?

**பதில்:** அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இன்னும் நடைமுறையில் இயங்கி வருகிறது மற்றும் இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியுடன் செய்யப்பட்டது. ஈசாக்கின் வழியாக ஒரு வம்சாவளி உள்ளது மற்றும் அந்த வம்சாவளியை இந்நாள்வரைக்கும் அந்த உடன்படிக்கை கண்டனம் பண்ணுகிறது. புதிய உடன்படிக்கையின் கீழ் வருவதற்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. இயேசுவின் நாளில் திறக்கப்பட்ட ஒரு வழி திறந்திருக்கிறது, அதாவது: நியாயப் பிரமாணத்திற்குள் மரித்து, மற்றவருடன் விவாகம் செய்து கொள்வது. இவ்வாறாக, நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாக எண்ணப்படுவது ஒரு வழி ஆகும். அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு மரிக்கவேண்டும் மற்றும் வேறொரு நம்பிக்கையில் ஜீவனுடை யவர்களாக இருக்க வேண்டும். இவ்விதமாக அவர்கள் "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாகிறார்கள்." அவர்கள் இனிமுதற்கொண்டு கிறிஸ்துவுடன் பங்கு பெறுகிறவர்களாவதற்காக அவருக்குள் மரிக்க வேண்டும்.

வேறொரு வழி இதுவே: புதிய உடன்படிக்கையின் நிழலாக நியாயப்பிரமாணம் இருக்கிறது. நியாயப்பிரமாண உடன்படிக்கை புதிய உடன்படிக்கையின் நிழலாக இருக்கிறது மற்றும் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தர், தலையும் சரீரமுமான கிறிஸ்துவாகிய மாபெரும் மத்தியஸ்தரின் நிழலாக இருந்தார். இந்த அநேக வருஷங்கள் அனைத்திலும் தேவன் ஒரு தீர்க்கதரிசியை எழுப்பிக்கொண்டு இருக்கிறார். இயேசு தலை: சபை சரீரம்: இதுவே ஒழுங்குமுறை ஆகும். பிறகு இந்த மாபெரும் தீர்க்கதரிசி, மோசேயின் நிஜமானவர் முழுமை அடைவார். தேவன் இப்போது அவருடைய குமாரன் மூலமாக நம்மிடம் பேசியிருக்கிறார். ஆனால் கிறிஸ்துவின் பேச்சு இன்னும் துவக்கம் பெறவில்லை. பிதா இப்பொழுது மணவாட்டியை அழைத்துக் கொண்டு இருக்கிறார். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்." ஆயிர வருஷ பணி குமாரனால் செயற்படுத்தப்படப் போகிறது. நிழலான மோசே இந்த நிஜமான மோசேயை இங்கு எவ்விதம் அடையாளப்படுத்துகிறார் என்பதையும், நியாயப்பிரமாணத்தின் ஏற்பாடு எவ்விதம் இந்த புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டிற்கு அடையாளமாய் இருக்கிறது என்பதையும் கவனியுங்கள். நிழல் எப்போதெல்லாம் மறைகிறதோ, அப்போது நிஜம் துவங்குகிறது. ஆகவே புதிய உடன்படிக்கை நியாயப்பிரமாண உடன்படிக்கையின் இடத்தை எடுத்துக்கொள்ளும் வரையில், இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும். புதிய உடன்படிக்கை பிறகு முத்திரிக்கப்படும். புதிய உடன்படிக்கை நியாயப்பிரமாண உடன்படிக்கையின் இடத்தை எடுத்துக் கொள்ளும். மற்றும், பழைய உடன்படிக்கை என்னவாகும்? என் அருமையான சகோதரர்களே, புதன் கிழமை செவ்வாய் கிழமையின் இடத்தை எடுத்துக் கொள்ளும் போது, செவ்வாய் கிழமை என்னவாகும்?

மத்தியஸ்தர் தயாராகும் போது, புதிய உடன்படிக்கை ஆரம்பமாகும். இது தலை மற்றும் சரீரத்தில் கிறிஸ்து முழுமை பெறும்போது, இது நடக்கும். நாம் இந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தருடைய சரீர அங்கங்களாக இருப்போமானால், நாம் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருக்க முடியாது. உங்கள் எல்லோருக்கும் நான் தெளிவுபடுத்தியுள்ளேன் என்று நம்புகிறேன்.

## உடன்படிக்கைகள் - இயேசு, நியாயப்பிரமாண உடன்படிக்கை மற்றும் ஜீவ உரிமைகள்.

### கே: 194:1 :: கேள்வி (1913) - 1

இயேசு தம்முடைய மனுஷீக உரிமைகளை பலியிடாமல், நியாயப்பிரமாண உடன்படிக்கையை நிறைவேற்றியிருக்க முடியுமா?

**பதில்:** அவர் தம்முடைய மனுஷீக உரிமைகளை பலியிடாமல், நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியிருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். அடுத்த யுகத்தில் முழு உலகத்தாரும் நியாயப்பிரமாண உடன்படிக்கையை நிறைவேற்றுவார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை, புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கை நடைமுறைக்கு வரப்போகிறது என்றும், மனுக்குலம் பூரண நிலையை அடைந்திருக்கும் போது, இது நித்தியமாக நடைமுறையில் இருக்கும் என்று நான் புரிந்து கொள்கிறேன். எல்லா மனுஷரும் புதிய உடன்படிக்கையைக் கைக்கொள்வார்கள் மற்றும் கண்டிப்பாகக் கைக்கொள்ள வேண்டும், இல்லையெனில் அவர்கள் நித்திய ஜீவன் மற்றும் அது தொடர்பானவைகளைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்கள் பலியிடும் விதத்தில் மரிப்பார்கள் என்று அர்த்தங்கொள்ள வேண்டியதில்லை. இதே மாதிரி நம்முடைய கர்த்தருடனும், நியாயப்பிரமாணம் அவரை பலியினால் மரிக்கச் சொல்லவில்லை. ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் அவரை பலியினால் மரணமடையத் தூண்டியது; நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, அவர் ஜீவனுக்குரிய தம்முடைய சொந்த தனித்துவ உரிமையை நிரூபித்தார்; ஆனால் அவர் அந்த பூரண ஜீவனை ஒப்புக்கொடுத்திராவிட்டால், மனுக்குலத்திற்கு அவர் அளிப்பதற்கு எதுவுமில்லை.

## உடன்படிக்கைகள் - சபை எதின் கீழ் உருவாக்கம் பெறுகிறது?

### கே: 194:2 :: கேள்வி (1913) - 2

ஆபிரகாமின் உடன்படிக்கை அல்லது பலியின் உடன்படிக்கை, இவற்றில் எதின் கீழ் சபை உருவாக்கம் பெறுகிறது?

**பதில்:** இரண்டின் கீழும் என்று நாங்கள் சொல்கிறோம் ஆபிரகாமின் உடன்படிக்கை ஆபிரகாமுக்கு ஒரு சந்ததியை வாக்குத்தத்தம் பண்ணியது மற்றும் அந்த சந்ததி பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிப்பதற்கான முகவராக இருக்கும். அந்த சந்ததி கிறிஸ்து என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். நமது கர்த்தர் இயேசு மாம்சீகத்தின்படி ஆபிரகாமின் பிள்ளையாக, ஆபிரகாமின் சந்ததியாக இருந்தார். .ஆனால் தம்மை மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாக, அவர் உலகத்தை விடுவிக்க முடியாதவராய் இருந்தார். உலகத்திற்காக அவர் ஏதேனும் செய்ய முடிவதற்கு முன், அவர் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாக கண்டிப்பாக மரணம் அடைய வேண்டியிருந்தது; ஈசாக்கின் விஷயத்தில் ஏற்கனவே அடையாளமாகக் குறிக்கப்பட்டது போன்று, ஆபிரகாமின் சந்ததி மரணம் அடைய வேண்டியிருந்தது. நமது கர்த்தர் தம்மை உண்மையாகவே ஒப்புக்கொடுத்து, தம்மையே பலியிட்டார். ஆனால் அவரை மரித்தோரிலிருந்து ஒரு புது சிருஷ்டியாக தேவன் எழுப்பினார். மற்றும் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக நம்முடைய கர்த்தர் இயேசுவின் புது சிருஷ்டி இருந்தது. இந்த ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி தான், ஆபிரகாமின் மாம்சீக சந்ததி அல்ல, பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கப் போகிறது. ஆகவே ஈசாக்கின் நிஜமாக கிறிஸ்து இருக்கிறார்; ஆவிக்குரிய சந்ததியாக அவர்

மரித்தோரிலிருந்ர்து எழுப்பப்பட்டார். நாம் மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாக இல்லாவிட்டாலும், நீங்களும் நானும் அவருடைய அங்கங்களாவதற்கு அழைக்கப்பட்டோம்; நாம் ஆவியின்படி ஆபிரகாமின் சந்ததிக்குள்ளாக வெறுமனே கொண்டுவரப்பட்டிருக்கிறோம் மற்றும் நாம் ஆவியின் தளத்தில் ஆபிரகாமின் சந்ததியாகிறோம், ஏனெனில் நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிறோம். பலியின் வாசல் வழியில் இல்லாமல், ஒருவரும் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்குள்ளாக பிரவேசிக்க முடியாது. மாம்சீகத்தைப் பலியிடாமல், யூதர்கள் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகியிருக்க முடியுமா? இல்லை. மாம்சீகத்தைப் பலியிடாமல் எவரும் ஆவிக்குரிய சந்ததியாவதற்கு முடியாது. ஆகவே இந்த இரண்டின் கீழும் நாம் வருகிறோம் என்பது பூரணமான இணக்கம் உடையதாக இருக்கிறது. நமது கர்த்தர் கூறுகிறார், "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்." இயேசு முதலாவது பரிசுத்தவானாக இருந்தார் மற்றும் அவர் தேவனுடன் உடன்படிக்கை பண்ணி, தம்முடைய பலியை செய்தார். அவர் ஆபிரகாமின் சந்ததியின் ஆவிக்குரிய தளத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியின் அங்கங்களாவதற்கும், ஆவிக்குரிய தளத்தில் பிரவேசித்து, அவருடன் சுதந்தரவாளிகளாவதற்கும், அவர் நம்மை, யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இரு வகுப்பாரையும் வரச்சொல்லி அழைப்பு விடுத்திருக்கிறார். ஆகவே அப்போஸ்தலர் கூறுகிறார், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." ஆனால் அவருடைய பலியில் பங்கு கொள்ளாமல், நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாக முடியாது.

## உடன்படிக்கைகள் - தானியேல் 9:27ம் வசனம் எதைக் குறிக்கிறது?

### கே: 195:1 :: கேள்வி (1913) - 1

அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி". இங்கு எந்த உடன்படிக்கை குறிக்கப்படுகிறது?

**பதில்:** ஏழுபது வாரங்கள் பற்றி தேவன் இஸ்ரயேலர்களுடன் ஏற்படுத்தின உடன்படிக்கையை இது குறிக்கிறது. ஏனெனில் அது தொடர்பான சூழல் இதைக் காண்பிப்பதாக உள்ளது. இந்த காலத்தில் தேவன் சில விஷயங்களை நிறைவேற்றுவார் - - தரிசனத்தையும் தீர்க்க தரிசனத்தையும் முத்திரிப்பது, மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுவது போன்றவைகள். இவைகள் எல்லாம் வாரங்களின் எழுபது வருஷங்களில், நானூற்று தொண்ணூறு வருஷங்களில் நடக்கும் மற்றும் எழுபதாம் வாரத்தில், அறுபத்து ஒன்பதாம் வார இறுதியில் மேசியா வெளிப்படுவார் மற்றும் எழுபதாம் வாரத்தின் மத்தியில் மேசியா சங்கரிக்கப்படுவார், ஆனால் தமக்காக அல்ல. மேசியாவின் சங்கரிப்புக்குப் பின்பு மூன்றரை வருஷங்கள் சென்று, எழுபதாம் வாரம் முடிவடையும் மற்றும் அந்த எழுபதாம் வாரம் அல்லது மாம்சீக இஸ்ரயேலர்களுக்கான கிருபையின் காலம் அவர்களுடன் தொடர்ந்தது. இயேசுவின் மரணத்தில் அந்த நாட்கள் குறைக்கப்பட்டது என்று ஒரு பார்வையில் சொன்னாலும், "உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்பட்டது என்று அப்போஸ்தலர்கள் சுட்டிக்காட்டினாலும், இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பிறகு மூன்றரை வருஷங்கள் வரைக்கும், எழுபதாம் வாரம் முழுமை காணும் வரைக்கும் தேவனுடைய கிருபை அவர்களுடன் தொடர்ந்தது. இது அநீதி இல்லை. இதை குறைவாகச் செய்ததால், எந்த அநீதியும் செய்யப்படவில்லை. ஏனெனில் இது அவர்களுக்கு உண்மையில் நன்மை பயக்கும் விதத்திலேயே இருந்தது. எழுபதாம் வாரத்தின் மத்தியில் கிறிஸ்து மரித்ததால், யூதர்கள் மேலான சிலவற்றைப் பெறுவார்கள் - - அவர்கள் புதிய உடன்படிக்கையைப் பெறுவார்கள். முழுமையான காலப்பகுதியாகிய எழுபது வாரங்களின் வருஷங்களை தேவன் அவர்களுக்கு உறுதிப்படுத்தினார், நிலையானதாகப் பொருத்தினார், நிர்ணயித்தார். சுவிசேஷ அழைப்பில் ஏதேனும் பங்கு பெறுவதற்கான வாய்ப்பை முதல் புறஜாதிக்குக் கொடுக்கும் வரைக்கும் இது முடிவுக்கு வராது. அந்த முதலாவது நபர் கொர்நெலியு என்பதை நாம் நினைவில் வைக்கிறோம்.

## உடன்படிக்கைகள் - சபை புதிய உடன்படிக்கையாக இருக்கிறதா?

### கே: 195:2 :: கேள்வி (1916) - 2

ஏசாயா 42:7ம் வசனம் கூறுகிறது: “கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும் ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்.” இந்த புதிய உடன்படிக்கை சபையைக் குறிக்கிறது என்று நாங்கள் புரிந்து கொள்ளலாமா?

**பதில்:** இந்த வேத வாக்கியம் தலையாகிய இயேசுவையும், அவருடைய சரீரமாகிய சபையையும் வெளிப்படையாகக் குறிக்கிறது. “உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாக வைக்கிறேன்” என்பது, இயேசு அல்லது சபை உடன்படிக்கையாகிறது என்று அர்த்தமல்ல. ஆனால் இந்த உடன்படிக்கையைச் செய்வதற்குத் தொடர்பான காரியங்களுக்கு தேவன் கிறிஸ்துவையும் சபையையும் கொடுக்கிறார். கிறிஸ்துவும் சபையும் இல்லாமல் உடன்படிக்கை இருக்க முடியாது, ஏனெனில் புதிய உடன்படிக்கையை முத்திரிக்கும் புண்ணியத்தை உள்ளடக்கியதாக கிறிஸ்துவின் இரத்தம் தான் இருக்கிறது. அந்த உடன்படிக்கை முத்திரிக்கப்பட வேண்டும் மற்றும் இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் முத்திரிக்கப்பட வேண்டும். மீட்பின் அம்சம் அனைத்தும் கர்த்தர் இயேசுவிலும் அவருடைய மரணத்திலும் இருக்கும் நிலையில், இருப்பினும், அவருடைய சரீரமாக சபை எண்ணப்படுகிறது. மற்றும் புதிய உடன்படிக்கையை முத்திரிக்கவும், அல்லது இதை இயங்கச் செய்யவும், அந்த இரத்தத்தின் ஒரு பகுதியாக முழுமையான சபையின் இரத்தம் எண்ணப்படுகிறது.

## உடன்படிக்கைகள் - ஆபிரகாமின் உடன்படிக்கையின் குறியிலக்கு.

### கே: 195:3 :: கேள்வி (Z -1916) - 3

ஆபிரகாமின் உடன்படிக்கை, அல்லது, புதிய உடன்படிக்கை, இவற்றில் எது மேலானது?

**பதில்:** ஆபிரகாமின் உடன்படிக்கை ஏற்பாடு முழுவதையும் தழுவியதாகும். தேவன் நமது மனுக்குலத்திற்கு இதுவரை செய்திருக்கிறதும், செய்யப்போவதுமான ஒவ்வொன்றையும் ஆபிரகாமின் உடன்படிக்கை உள்ளடக்கியிருக்கிறது. “மீறுதலின் காரணமாக”, இந்த உடன்படிக்கையுடன் இஸ்ரயேலின் நியாயப்பிரமாண உடன்படிக்கை சேர்த்துக்கொள்ளப்பட்டது. இது ஒரு நிழலான ஏற்பாடாக மட்டும் இருந்ததாலும், ஆயிர வருஷ யுகத்தில், “பூமியெங்கும் பிரபுக்களாக” செய்வதற்கு, சில விசுவாச வகுப்பாரை நியாயப்பிரமாணம் உருவாக்கியது. இந்த உடன்படிக்கை ஆகாரினால் அடையாளப்படுத்தப்படுகிறது; அவளுடைய குமாரன் இஸ்மவேல் இஸ்ரயேல் ஜாதியை அடையாளப்படுத்துகிறான். (கலா.4:21-31) சாராளின் குமாரனாகிய ஈசாக்கினால் கிறிஸ்து, புது சிருஷ்டி வகுப்பார் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். ஆபிரகாமின் உடன்படிக்கையைச் சார்ந்த பகுதியான புது சிருஷ்டி வகுப்பாராகிய ஆவிக்குரிய சந்ததியை ஆபிரகாமின் முதல் மனைவியான சாராள் அடையாளப்படுத்துகிறாள். என்று சொல்லுகிறோம். இந்த சாராள் உடன்படிக்கை - - கிருபையின் உடன்படிக்கை, பலியின் உடன்படிக்கை (சங். 50:5). இது ஈசாக்கின் வகுப்பாரை, சபையை, தலை மற்றும் சரீரத்தை பிறப்பிக்கின்றது.

சாதாரண கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, ஈசாக்கு கூட மாம்சத்தின்படி பிறந்தவரில்லை (ஆபிரகாமும் சாராளும் இயற்கையாகவே மிகவும் வயதானவர்கள்). ஆனால் ஈசாக்கு ஒரு விசேஷித்த சிருஷ்டி; அவ்விதமே இயேசுவின் கூட்டத்தார் - சபை இருக்கிறது. இந்த “ஈசாக்கு” வகுப்பார் விழுந்துபோன மனுக்குல சந்ததியிலிருந்து உண்டாக்கப்பட்டு, தனித்துவமான புது சிருஷ்டிகளாக உருவாகிறார்கள். இவர்கள் தங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது தெய்வீக அழைப்பாக இருக்கிறது. அவர்கள் தங்களின் மனுஷீக சுபாவத்தை பலியிட்டு, தங்களுடைய தலையாகிய நிஜமான “ஈசாக்குடன்” தெய்வீக சுபாவத்தைப் பெறுவார்கள் - இதற்கு முன் கொடுக்கப்படாத சிலாக்கியம் இதுவே. இந்த புது

சிருஷ்டி முழுமை பெற்றவுடன், ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தத்தில் சுட்டிக்காட்டப்பட்ட ஆசீர்வாதம் பூமியிலுள்ள வம்சங்களெல்லாருக்கும் வந்து சேரும். தேவனுடைய நிழலான ஏற்பாடுகளின் கீழ், இந்த ஆசீர்வாதம் முதலாவதாக புதிய சிருஷ்டியான ஈசாக்கின் சந்ததியின் மூலமாகவும், இரண்டாவதாக, இந்த யுகத்திற்கு முன்னான யுகங்களின் விருத்தியாக்கப்பட்ட முற்பிதாக்களின் மூலமாகவும் வந்து சேரும்.

ஆபிரகாமினால் உருவகமாக தேவன் அடையாளப்படுத்தப்பட்டார். தேவனுடைய குமாரர்களாக - ஆபிரகாமின் குமாரர்களாவதற்கான சிலாக்கியத்தினால், அல்லது வாய்ப்பினால் பூமியிலுள்ள எல்லா இனத்தாரும் வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும். அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன்." (ஆதி. 17:5; ரோமர் 4:17) என்று தேவன் ஆபிரகாமிடம் கூறினார் - - "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." இஸ்ரயேலர் மற்றும் எல்லோரையும் பொருத்தவரையிலான ஆபிரகாமின் உடன்படிக்கை நிறைவேறப் போகின்ற ஏற்பாடாகிய இந்த புதிய உடன்படிக்கையின் கீழ் இவர்களெல்லாரும் ஆசீர்வதிக்கப் படுவார்கள்.

ஆபிரகாமின் உடன்படிக்கை, அப்போது மற்ற உடன்படிக்கைகளையும் அரவணைத்துக் கொள்கிறது. மற்ற உடன்படிக்கைகள் அனைத்தும், மாபெரும் ஆபிரகாமின் உடன்படிக்கை அல்லது வாக்குத்தத்தத்தில் குறிக்கப்பட்டுள்ள பணியை செயற்படுத்துவதற்கான தேவனுடைய ஏற்பாடுகளின் பல்வேறு அம்சங்களையே வெறுமனே குறிக்கின்றன.

நாம் ஏற்கனவே வேறு இடத்தில் காண்பித்திருக்கிறபடி, சாராளின் மரணத்திற்குப் பிறகு ஆபிரகாம் வேறொரு மனைவியை சேர்த்துக்கொண்டார் - கேத்தூராள். அவள் மூலமாக அநேக குமாரர்களையும் குமாரத்திகளையும் அவர் பெற்றிருந்தார். இவ்விதமாக, புதிய உடன்படிக்கை நிழலாக அடையாளப்படுத்தப்பட்டு, "தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தை - அநேகருக்கு ஜீவன் கொண்டுவருவதற்கான மாபெரும் பணியைக் குறிப்பதாக இருக்கின்றது. ரோமர் 8:19,21.

## உடன்படிக்கைகள் - நியாயப்பிரமாணமும் இயேசுவின் மரணமும்.

### கே: 196:1 :: கேள்வி (1916) - 1

நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கைக்கொள்வதற்கு இயேசுவின் மரணம் தேவைப்பட்டதா?

**பதில்:** "இல்லை" என்று நான் சொல்கிறேன். நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள இயேசுவின் மரணம் தேவைப்படுவதாக இருந்ததில்லை. இந்த விஷயத்தை தெளிவாகவும், வெளிப்படையாகவும் செய்வதற்கு, நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில். ஜீவனுக்கான நிபந்தனையாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது மற்றும் மரணத்திற்கான நிபந்தனையாக அல்ல. "அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்." அவைகளைச் செய்தால் அவர்கள் மரிக்கமாட்டார்கள். தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்கிற எவரும் பிழைப்பார்கள் மற்றும் நித்திய ஜீவனுக்கான உரிமையைப் பெறுகிறார்கள். ஆகவே இயேசு அந்த பிரமாணத்தைக் கைக்கொண்டதால் எப்போதும் ஜீவனுடையவராயிருக்கும் உரிமையைப் பெற்றார். அந்த பிரமாணம் இயேசுவின் மரணத்தைக் கோரவில்லை. புது சிருஷ்டியாக வேண்டும் என்ற தேவனுடைய நோக்கத்தை ஏற்றுக்கொள்வதே இயேசுவின் விருப்பமாயிருந்தது மற்றும் புது சிருஷ்டியாவதற்காக, பிரமணத்தின் தேவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு - எவ்விதத்திலாகிலும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு அவர் உடன்படிக்கை செய்தார். அவர் தம்முடைய ஜீவனை தம்மிடமிருந்து எடுத்துவிடுவதற்கு அனுமதித்தார், ஆனால் பிரமாணம் அவருடையதை வேண்டுமென்று கோரவில்லை. ஜீவனுக்கான உரிமையை அவர் பெற்றார் மற்றும் இதைத் தொடர்ந்துதக்க வைத்துக்கொள்ள ஜெபம் பண்ணியிருக்கலாம், ஆனால் அப்படிச் செய்யாமல், அவரிடமிருந்து

ஜீவன் எடுத்துப்போடப்படுவதற்கு அவர் அனுமதித்தார். இவ்விதமாக, தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் மாபெரும் மத்தியஸ்தராகி, அனைத்துலகத்தின் சார்பில் ஒப்புக்கொடுத்த மனுஷீக ஜீவ உரிமையை இனிவரும் யுகத்தில் ஆதாமின் சந்ததியின் கீழ்ப்படிதலுள்ளவர்கள் எல்லோருக்கும் கொடுப்பதற்காக, "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" அவர் மரித்தார்.

## சிருஷ்டிப்பு - மோசேயின் பதிவு.

### கே: 197:1 :: கேள்வி (1911) - 1

மோசேயின் சிருஷ்டிப்பு பற்றிய பதிவை நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்:** தேவனுடைய வெளிப்படுத்தலை நாம் நம்புகிறோம் மற்றும் நாம் வேதாகமத்தைப் பெற்றிராவிட்டால், ஒன்றைப் பார்ப்பதற்கு சரியானதாயிருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம். மாபெரும் அன்பான சிருஷ்டிகர் தம்முடைய சிருஷ்டிகளுக்காக அவர்களை உயிரோடு வாழ்வதற்குத் திரும்ப கொண்டுவருவதற்கான ஒரு திட்டம் வைத்திருந்து, அவர்களைக் குறித்தான தம் சித்தத்தை கொஞ்சம் வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடு ஏதும் இல்லை என்று நாம் கற்பனை செய்ய இயலாது. நான் என்னுடைய வேதாகமத்தை எறிந்துவிட்டிருந்த போது, இதனுடைய மகிமையை நான் அறியாத போது, வேறு எங்கேயோ நான் வேதாகமத்தைப் பார்க்க நேர்ந்தது மற்றும் இதை அறிந்துணர்ந்த போது, வேதாகமத்தைப் போல ஏறத்தாழ அறிவுப்பூர்வமாக, ஏறத்தாழ முரண்பாடற்றதாக வேறு எதுவும் இல்லை. வேதாகமத்தின் சிருஷ்டிப்பின் பதிவு மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட பதிவாக இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

## சிருஷ்டிப்பு - சூரியன் இல்லாமல் தாவர வளர்ச்சி.

### கே: 197:2 :: கேள்வி (1911) - 2

சூரியன் உருவாக்கப்படுவதறகு வெகுகாலத்துக்கு முன்பாகவே, மூன்றாம் நாளில் தேவன் தாவரங்களை சிருஷ்டித்தார். சூரியன் இல்லாமல் தாவரங்கள் எப்படி வளர்ந்தன?

**பதில்:** இந்த விஷயத்தைக் கேள்வி கேட்டவர் சிந்தித்த முறையில் நான் புரிந்து கொள்ளவில்லை. சூரியனுக்கு முன்னதாக பூமியை தேவன் உண்டுபண்ணினார் என்று நான் புரிந்து கொள்ளவில்லை. நீடித்த காலத்திற்கு முன்பே சூரியன் இருந்தது மற்றும் பூமி சூரியனைச் சுற்றிக்கொண்டிருந்தது, ஆனால் நான்காம் நாள் வரையிலும் சூரியன் பூமியின் வெளிச்சமாக இருந்திருக்கவில்லை. வேத வாக்கியங்களின்படி, விஞ்ஞானத்தின்படியும் கூட, பூமி பெரும் மூடுபனியிலான மேகத்தினால் சூழப்பட்டிருந்தது. இந்த மேக மூட்டம் நிலத்திலிருந்தும், தண்ணீரிலிருந்தும் மேல் நோக்கிச் சென்று, சூரியனை முழுவதுமாக மறைக்கும் விதத்தில், சனி கிரத்தைச் சுற்றி வட்டங்கள் இருப்பது போல, பூமியைச் சுற்றி ஒரு வட்டத்தை உருவாக்கியிருந்தது. கீழே உள்ள தண்ணீர்களைப் போன்று, மேலே உள்ள தண்ணீர்களாலான இந்த வட்டமும் நான்காம் நாள் வரைக்கும் வெளிச்சம் ஊடுருவதைத் தடை பண்ணியது.

## சிருஷ்டிப்பு - அழிக்கப்படுவான் என்று தெரிந்திருந்தும் மனுஷன் சிருஷ்டிக்கப்படுதல்.

### கே: 197:3 :: கேள்வி (1911) - 3

மனுஷர்கள் மூழ்கடிப்படுவார்கள் என்று அறிந்தும், தேவன் இந்த ஜனங்களை ஏன் உண்டாக்கினார்?

**பதில்:** இவையெல்லாம் மிக அதிகமானவற்றை உள்ளடக்கியது. கேள்வி கேட்டவர் உண்மையில் பதில் விரும்புவார் என்றால், அவர் புத்தகங்களை நன்றாகப் படித்திருக்க வேண்டும். இப்பொழுது நமக்கு ஆறு வால்யூம்கள் உள்ளன மற்றும் இவற்றிலிருந்து நான் ஒரு பைசா கூட சம்பாதிப்பதில்லை. ஒவ்வொருவரும் இவைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில், எல்லா ஜனங்களின் கரங்களுக்கும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும் நோக்கத்தினால், அடக்க விலையிலேயே விற்கப்படுகின்றன. தேவன் ஏன் உலகத்தைப் படைத்தார், அவர் மனுஷனை ஏன் உண்டாக்கினார், அவர் பாவத்தை ஏன் அனுமதித்தார் போன்ற எல்லா கேள்விகளுக்கும் இவைகள் பதிலளிக்கின்றன. இந்த கேள்விகளுக்கு ஒரு சில நிமிஷங்களில் நியாயமாகப் பதிலளிக்க முடியும் என்றும், எனக்கு முன் இருக்கும் மற்ற கேள்விகளுக்கு நேரம் இருக்கும் என்றும் நான் நினைக்கவில்லை. ஒருவர் எழுதிய பத்தொன்பது கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதிலளிக்கப்பட வேண்டும் என்றும், மற்றவர்களின் கேள்விகள் பதிலளிக்கப்படாமலிருப்பதும் சரியானதாக இல்லை. அவைகள் எல்லாவற்றையும் பிரித்து விட்டு, இதை இத்துடன் முடிவுக்கு கொண்டு வந்து, வரிசையிலுள்ள மீதியான மற்ற கேள்விகளுக்கு நேரம் இருக்கும் வரையில் பதிலளிக்க நாம் முயற்சி செய்வோம். இதற்கு நீங்கள் எல்லோரும் சம்மதிப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

## சிருஷ்டிப்பு - Vs ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்.

### கே: 198:1 :: கேள்வி (1916) - 1

சிருஷ்டிக்கப்படுவதற்கும், ஜெநிப்பிக்கப்படுவதற்கும் இடையே என்ன வித்தியாசம் இருக்கிறது?

**பதில்:** இந்த இரண்டில் சிருஷ்டிப்பு என்பது பெரிதான வார்த்தையாக இருக்கிறது மற்றும் இது முழுமையான செயல்முறையை உள்ளடக்கியதாய் இருக்கிறது. உதாரணத்திற்கு, பரிசுத்த ஆவியினால் நாம் ஜெநிப்பிக்கப்பட்டதிலிருந்து, மாம்சத்தின்படி கருத்தரித்த நிலையில் இருப்பதையும், பிறகு இந்த கரு வளர்ச்சியடைந்து பிறப்பு அடைவதற்கு ஒத்தவிதமாக, நாம் இதே முறையில் ஜெநிப்பிக்கப்பட்டு வளர்ச்சி அடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் பிறக்கிறோம் என்ற கண்ணோட்டத்தில் நாம் புதிய சிருஷ்டிகளாக இருக்கிறோம், அல்லது வேதாகமத்திலிருந்து வேறொரு காட்சியை எடுத்துக்கொள்ளலாம். நாம் முதலில் பிள்ளைகளாக இருக்கிறோம் மற்றும் பிறகு வளர்ச்சி பெற்று பெரியவர்களாக முழுமை அடைகிறோம். இது தான் துவக்கத்திற்கும், பிறகு முழுமையான நிலை எட்டுவதற்கும் உள்ள வித்தியாசம் ஆகும். துவக்கத்தில் நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுகிறோம் - இது பணியைத் தூண்டுகிறது - பிறகு நாம் உயிர்ப்பிக்கும் வரையில் வளர்ச்சி பெறுகிறோம். இந்த செயல்முறையின் உரிய தருணத்தில் நாம் பிறக்கிறோம். ஆவியின் சிருஷ்டிகளாக, இப்பொழுது வளர்ச்சி பெறும் இந்த செயல்முறையில் நாம் இருக்கிறோம். புது சிருஷ்டியானது முதலாம் உயிர்த்தெழுதலில் மாபெரும் முழுமை எட்டுவதற்குக் காத்திருக்கிறது.

## சிலுவைகள் - காவற்கோபுரத்திலுள்ள 'மூன்று' என்பதின் அர்த்தம்.

### கே: 198:2 :: கேள்வி (1910) - 2

காவ$ற்கோபுர பத்திரிகையின் அட்டை பக்கத்தின் கோபுரத்திலுள்ள மூன்று சிலுவைகள் எதைக் குறிக்கின்றன?

**பதில்:** அதைப் பற்றி நான் ஒருபோதும் சிந்தித்தது கிடையாது. ஜன்னல்களைக் குறிப்பதற்காக கலைஞரால் இவைகள் அங்கே வெறுமனே செய்யப்பட்டிருக்கிறது. நான் தோராயமாக முதலில் வரைந்தேன் மற்றும் அந்த கருத்தை அவர் பின்பற்றினார். வேறு எந்த உருவத்திற்குப் பதிலாக, ஒரு ஜன்னல் சிலுவையை அடையாளப்படுத்துகிறது. இதனுடன் மூன்று என்பதற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை - இது திருத்துவத்தை நிரூபிக்கிறதில்லை.

## கிரீடம் - கிரீடங்கள் இழக்கப்படுவது குறித்து.

### கே: 198:3 :: கேள்வி (1908) - 3

ஒரு நபருக்கு கிரீடம் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில், அவர் முழுவதாக சோதிக்கப்படுவதற்கு முன்பு, இதை எறிந்துவிடும் பட்சத்தில், இது மாதிரியான சூழ்நிலையில் வேறொருவர் கிரீடத்தைப் பெறுகிறாரா?

**பதில்:** ஒரு குறிப்பிட்ட நபர் கிரீடத்தைப் பெற வேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமாக இருக்கிறதில்லை. உங்களைப் பற்றி இப்போது நான் விருப்பம் கொண்டிருக்கிறேன் மற்றும் அதை நீங்கள் பெறாவிட்டால், நித்திய காலத்திற்கும் இது என்னை வருத்தப்படச் செய்வதாக இருக்கும் என்று கர்த்தர் சொல்வது போன்று, ஒரு குறிப்பிட்ட நபர் கிரீடத்தைப் பெற வேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமாய் இருப்பதில்லை. மாறாக கர்த்தர் அதைவிட மேலான தளத்தில் செயல்படுகிறார். உங்களுடைய முகத்தின் தோற்றத்தையோ, அல்லது வடிவத்தையோ கர்த்தர் உங்களிடத்தில் பாராட்டுவதில்லை, உங்களுடைய இருதயத்தின் குணத்தையே பார்க்கிறார்; கர்த்தர் மேல் உள்ள அன்பு மற்றும் நீதியின் மேல் உள்ள உண்மையும் உள்ள வர்களாக இருக்கும் பண்பை உங்கள் இருதயம் இழந்துவிட்டால், அந்த அளவுக்கு கர்த்தருடைய கிருபையை நீங்கள் இழந்திருக்கிறீர்கள் மற்றும் பரிசைப் பெறுவதற்கு அவர் விரும்பும் நபராக நீங்கள் இருப்பதில்லை. இதை நீங்கள் பெற்றாக வேண்டும் என்று அவருடைய விருப்பமாய் இருக்கப்போவதில்லை. ஆனால் அவர் கூறுவார், நான் உங்களை விரும்பவில்லை, நான் உங்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆனால் நீங்கள் அவருடைய அன்பில் தரித்திருந்தால், இந்த நிபந்தனைகளில் கீழ்ப்படிந்திருந்தால், நீங்கள் திருப்திப்படுத்துகிறவராக நிரூபித்தால், உங்களுடைய அழைப்பின்படி உங்களுக்கு வரவேண்டிய அனைத்தையும் நீங்கள் பெறுவதற்கு அவர் மிகுந்த விருப்பமுள்ளவராக இருக்கிறார்; ஆனால் எந்த காரியத்திலும் அவருடைய விருப்பம் செயல்படுத்தப்படும்.

## டாண்டே, மற்றும் தோர் (DANTE AND DORE) - அவர்கள் யார்?

### கே: 199:1 :: கேள்வி (1911) - 1

டாண்டே மற்றும் தோர் என்பவர்கள் யார்? அவர்கள் எப்போது வாழ்ந்தனர்?

**பதில்:** டாண்டே பெரிய கவிஞராக இருந்தார், ஆனால் அவருடைய பிறப்பு மற்றும் மரண நாள் குறித்து துல்லியமாக நான் அறியவில்லை - இது சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக இருந்தது. தோர் என்பவர் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்த பெரிய கத்தோலிக்க கலைஞர். அவர்கள் இருவரும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கத்தோலிக்கர்களாக இருந்தனர் அவர்கள் மிக நேர்மையானவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

## இருள் - புறம்பான இருளில் தள்ளப்படுதல்.

### கே: 199:2 :: கேள்வி (1911) - 2

தயவு செய்து மத். 8:12ம் வசனத்தை விளக்கவும், "ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்கு சொல்லுகிறேன். "அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி, "இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்." என்றான். இதற்கு என்ன அர்த்தம்?

**பதில்:** இந்த இரண்டு வசனப்பகுதிகளும் மிகவும் ஒரே மாதிரியாக இருப்பதால், இவற்றை நாம் ஒன்றாகவே பார்ப்போம். நாங்கள் பதிலளிக்கிறோம், இது உத்தரிக்கும் ஸ்தலம் போன்று இருக்கவில்லை., ஏனெனில் உத்தரிக்கும் ஸ்தலம் முழுவதுமாக அக்கினியாக இருக்கிறது,

மற்றும் அதிகமான இருள் இருக்க முடியாது. இது புறம்பான இருளாக இருக்கிறது., மற்றும் உத்தரிக்கும் ஸ்தலம் உள்ளான ஒளியும், உள்ளான அக்கினியுமாக இருக்கிறது. அப்படித் தானே? இது நமது புரோட்டஸ்டாண்டு பார்வையிலுள்ள நரக அக்கினியாகவும் இருக்க முடியாது; ஏனெனில் நமது புரோட்டஸ்டாண்டு பார்வையிலுள்ள மரண அக்கினி மிகவும் ஒளியாகவும், பிரகாசமாகவும், வெப்பமாகவும் இருக்கிறது. இது புறம்பான இருளாக இருப்பதில்லை, இது உள்ளான ஒளியாக இருக்கவில்லை. அப்படித் தானே? அப்படித்தான் நிச்சயமாக இருக்கும். நாம் நம்முடைய வேதாகமங்களைப் படிக்கும் போது, நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்தவர்களாய் இருக்கிறோம். இதன் அர்த்தம் என்ன? இது இதைத் தான் அர்த்தப்படுத்துகிறது, கர்த்தர் உலகத்தைப் பற்றி இங்கு பேசவே இல்லை;; அவர் அவருடைய சபையைப் பற்றியே பேசுகிறார்; விசுவாசமாய் இருக்கிறவர்கள் ஒளியிலும், அறிவின் ஒளியிலும், புரிந்துகொள்ளுதலின் ஒளியிலும் தேவனுடைய திட்டத்தை பகுத்துணரும் ஒளியிலும் இருப்பார்கள்; வேதாகமம் அறிவிக்கிறபடி, துன்மார்க்கரில் எவரும் புரிந்து கொள்ளமாட்டார்கள்; ஞானவான்கள் அறிந்து கொள்வார்கள்; வேதாகமம் மேலும் கூறுகிறது,. “கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர் அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.” அவர்கள் வெளிச்சத்தில் இருப்பார்கள், மற்றும் அவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக வேதாகமத்தில் அழைக்கப்படுகிறார்கள். இந்த யுகத்தின் இறுதியில் தங்களுடைய சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு உண்மையுள்ளவர்களாயிராத சிலரைப் பற்றி இப்பொழுது கர்த்தர் இந்த உவமைகளில் பேசுகிறார். இவர்கள் வெளிச்சத்திலிருந்து மறுக்கப்பட்டு, புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள். புறம்பான இருள் எங்கே உள்ளது? ஏன்? புறம்பான இருள் எல்லா இடத்திலேயும் உள்ளது. புறஜாதி மதத்தில் பெருமளவில் உள்ளது, மற்றும் இங்கே போர்ட்லேண்டில் (PORTLAND) திரளாக உள்ளது; தேவனுடைய ஜனங்களாயிருக்கிற நம்மில் எவரேனும் ஜாக்கிரதையாகவும், எச்சரிக்கையாகவும், அவருடைய வார்த்தைக்கு இணக்கமாகவும் நடக்கவில்லையெனில், வெளிச்சத்தின் பிள்ளைகளாகத் தொடர்ந்து இருக்க முடியாது, மற்றும் அவருடைய வார்த்தையின் மேல் அதிகப்படியான வெளிச்சத்துடன் கர்த்தரினால் கிருபை பெற்றவர்களாகத் தொடர முடியாது. ஆனால் இந்த கிருபையுள்ள நிலையிலிருந்து புறம்பாக்கப்படுவோம். கையும் காலும் கட்டப்பட்டிருப்பது, நாம் நம்மை அடக்க முடியாதவர்களாய் இருப்பதை உணர்த்துகிறது; நாம் ஒளியில் நிற்கிறோமா, அல்லது இல்லையா என்பது நமது விருப்பத்திற்கு விடப்படக்கூடியதாக இல்லை; ஏனெனில் அப்படிப்பட்டவரை கர்த்தர் வெளிச்சத்திலிருந்து வெளியேற்றி விடுவார்; அவர் வெளிச்சத்தில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

## தாவீது - தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்.

### கே: 199:3 :: கேள்வி (1909) - 3

தேவனுடைய சொந்த இருதயத்துக்கு ஏற்றவனாக எந்த பார்வையில் தாவீது இருந்தார்?

**பதில்:** தேவனுடைய சொந்த இருதயத்துக்கு ஏற்ற மனிதனாக இல்லாமல் மிகவும் அநேக வழிகளில் இருந்ததை நாம் பார்க்க முடிகிறது. ஆனால் அவர் எந்த பார்வையில் அப்படி இருந்தார்? நான் பதில் கூறுகிறேன், இந்த பார்வையில் தான்: அவருடைய எல்லா பெலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் இருந்தாலும், அவருடைய இருதயம் தேவனை நோக்கி உண்மையும் விசுவாசமும் நிரம்பியதாக இருந்தது மற்றும் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதில் எல்லா நேரத்திலும் அவருடைய விருப்பம் இருந்தது. அப்போஸ்தலர் பவுல் கூறுவதைப் போன்று, அவர் தன்னுடைய மனதில் தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொண்டார். தாவீது மிகவும் கடுமையான, பெரும் தீங்கான சில தவறுகளைச் செய்தார் என்பதை நாம் அறிவோம். மற்றும் அவர் மனங்கசந்து வருத்தப்பட்டார். அவர் தேவனை இன்னும் நேசித்தார் மற்றும் தேவனுடைய குறிக்கோள்களை அடைவதில் தொடர்ச்சியாகப் கடும் முயற்சி செய்தார். அருமை நண்பர்களே, நீங்களும் நானும் இதே மனநிலையை உடையவர்களாயிருக்க விரும்புகிறோம்; இருப்பினும், நாம் தாவீதைப் போல இருக்க வேண்டும் என்பது அல்ல. நம்மில் எந்த இருவரும் ஒரே மாதிரி

இருப்பதில்லை; நாம் எல்லோரும் வித்தியாசமானவர்கள். தேவனிடம் உண்மையாக இருப்பதும், தேவனிடத்தில் விசுவாசமாக இருப்பதும், அவருக்கு ஊழியம் செய்யும் சிந்தையுமே தேவனை சந்தோஷப்படுத்துவதாக இருக்கின்றன. தாவீதைவிட அனுகூலங்களை பெற்றவர்களா யிருக்கிறோம் என்பதை நீங்களும் நானும் கண்டிப்பாக ஞாபகத்தில் கொள்ள வேண்டும். குமாரர்களின் வீட்டைச் சார்ந்தவராயிராமல், ஊழியக்காரரின் வீட்டின் அங்கமாக தாவீது வேறு யுகத்தில் வாழ்ந்தராக இருந்தார். அதற்கு மாறாக, நாம் புது யுகத்தைச் சார்ந்தவர்களாக, ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக, மற்றும் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருக்கிற காரணத்தினால், நாம் எல்லா இடங்களிலும் அதிகமான அனுகூலத்தை உடையவர் களாயிருக்கிறோம். நாம் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவர்களாய் இன்னும் அதிகமாக இருக்க வேண்டும். தாவீது கொண்டிருந்ததை, அல்லது நடைமுறைப்படுத்தியதைக் காட்டிலும் இன்னும் உயர்வான தரநிலைகளைக் கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும்.

## பெண் உதவியாளர்கள் - தேர்ந்தெடுத்தல்.

### கே: 200:1 :: கேள்வி (1908) - 3

பெண் உதவியாளர்களின் தேர்ந்தெடுத்தலையும், நியமனத்தையும் எந்த விதமான சூழ்நிலைகளிலும் நீங்கள் சிபாரிசு செய்கிறீர்கள்? அப்படி இருந்தால், எந்த மாதிரி சூழ்நிலைகள் என்பதை தயவுசெய்து தெரிவிக்கவும்?

**பதில்:** தற்காலத்தில் ப்ரூக்ளின் ஆசரிப்புக்கூடாரத்தில் பெண் உதவியாளர்களாக யாரையும் நாங்கள் வைத்திருக்கவில்லை. ஏனெனில் ஏற்கனவே நாங்கள் பெண் உதவியாளர்களை வைத்திருந்தாலும் மற்றும் அவர்கள் இருந்ததால் சில நல்ல காரியங்கள் செயற்படுத்தப்படும் என்று நினைத்தோம். அவர்கள் செய்வதற்கு ஏதும் இருந்தால், அல்லது அந்த நபர்கள் அந்த வேலையை செய்வதற்கு தகுதியானவர்களாக இருந்தால் தவிர, பெண் உதவியாளர்களை வைத்துக்கொள்வதில் பயன் ஏதும் இல்லை. உதவிக்காரிகள் (Deaconess) என்பது பெண் ஊழியக்காரர்களைக் குறிக்கிறது. வகுப்பிலுள்ள சகோதரிகளுக்கு நடுவில் சுகவீனம் ஏற்படும்போது, அவர்களைக் கவனித்துக் கொள்ளவும், உதவிபுரியவும் சிலர் போவது அவசியமாயிருக்கிறது, அல்லது துயரத்தில் இருக்கும் சிலரை சந்திப்பதற்கும் தேவைப்படுகிறது. அந்த பணியைச் செய்வதற்குரிய நேரம் இல்லாமல் சகோதரர்கள் இருக்கலாம். பெண் உதவியாளர்களாய் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், இது போன்ற பணிகளை பெண்கள் செய்ய முடியும். பெண் உதவியாளர்களைத் தேர்வு செய்வது கர்த்தருடைய வார்த்தைக்கு மாறாக இல்லை. இப்படிப்பட்ட ஊழியக்காரர்களின் தேவையை சபை கவனித்தால், அவர்களைத் தேர்வு செய்வதற்கான முழு அதிகாரமும் வேதாகமத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது, ஆனால் அவர்கள் தங்களுடைய மதிப்பீட்டில் நிதானமாகவும், நடத்தை மற்றும் ஆடையிலும் சகோதர்கள் நடுவில் கர்த்தருடைய ஆவியில் குறிப்பிடத்தக்க முன்மாதிரிகளாகவும், நியாயமாகவும் சாதகமாகவும் சபையைக் குறிக்கிறவர்களாக இருக்கும் விதமாக, அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்கள் பணியாற்றுவதற்கு அழைக்கப்படும் எதிலும் சபையின் பொதுவான நலன்களை தகுந்த முறையில் குறிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

## மரணமடைந்தவர் - மற்றவர்கள் ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை.

### கே: 200:2 :: கேள்வி (1911) - 2

மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை." என்று சொல்லுகிற வேதாகமப் பகுதியைக் குறித்து கேள்வி கேட்டால், நீங்கள் என்ன பதிலளிப்பீர்கள்?

**பதில்:** இதில் எழுதப்பட்டிருக்கிற விதமாக, நான் அந்த கேள்வியைப் படிக்கவில்லை. இந்த வசனத்தை நான் விவரித்துக் கூறுவது என்னவெனில், இந்த விஷயங்களைப் பற்றிய தேவனுடைய பார்வையில், ஆதாம் தேவனுடன் இணக்கமாயிருந்த போது, ஆதாம் உயிரோடு இருந்தார் மற்றும் அவர் தெய்வீக தண்டனையின் கீழ் ஏதேனை விட்டு வெளியேற்றப்பட்டவுடன், ஆதாமின் மரணம் உடனே துவங்கியது - - "சாகவே சாவாய்", அதாவது ஆதாம் 930 வருஷங்களாக மரித்துக் கொண்டு இருந்தார் மற்றும் அதைப் போன்றே, பின்னோக்கிய செயல்முறை இயங்கும் போது, 930 வருஷங்கள் மரித்துக்கொண்டு இருப்பதற்குப் பதிலாக, 930 வருஷங்களுக்கு அவர் அதிகமான அளவுக்கு உயிர் பெற்றுக்கொண்டிருப்பார்; ஏனெனில் மேசியாவின் ஆட்சியின் முழு காலப்பகுதியிலும், உலகம் அதிக அளவு உயிரடையும் மற்றும் அதிக அளவு உயிரடையும் மற்றும் அதிக அளவு உயிரடையும், ஆனால் அவர்கள் பூரணராகும் வரையில், அவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள். ஒரு பார்வையில் சொல்ல வேண்டுமானால், மத்தியஸ்தராகிய கிறிஸ்து அவர்களை பிதாவினிடத்தில் சேர்க்கவும் மற்றும் பிதா அவர்களை நித்திய ஜீவனுக்குத் தகுதியுள்ளவர்களா, அல்லது தகுதியில்லாதவர்களா என்பது பற்றி சோதிக்கும் வரைக்கும் அவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது,, இந்த வசனம் அசல் பிரதியிலோ அல்லது மிக பழைய பிரதியிலோ இருக்கவில்லை என்று நான் சொல்ல முடியும். ஆனால் நாம் அறிந்த அவரையில், இது ஒரு இடைச்சொருகல் ஆகும். நீங்கள் ஏதோ ஏமாற்ற முயற்சிக்கிறீர்கள் மற்றும் இதைப் பற்றி மற்ற அநேக பகுதிகளுடன் இருப்பதைப் போல இதில் பொருத்தமாக இருக்கிறது என்று ஜனங்கள் ஏதோ ஒரு எண்ணத்தில் இருக்கிறபடியால், உலகத்தார் ஆயிரவருஷங்களின் முடிவு வரையில் எவ்விதம் ஜீவனைப் பெற்றுக்கொண்டு இருப்பார்கள் மற்றும் முழுவதுமாக உயிரோடு இருக்கமாட்டார்கள் என்பதைத் தவிர மற்ற எந்த விளக்கத்தையும் நான் கூறப்போவதில்லை.

## மரணம் - நூறு வருஷங்களான வயதில் இறக்கும் பாவிகள்.

### கே: 201:1 :: கேள்வி (1907) - 1

திருத்த முடியாதவர்கள் நூறு வருஷங்களுக்கு மேல் வாழ்வார்களா? அல்லது நூறு வயதில் அவர்கள் இறப்பார்களா?

**பதில்:** ஏசாயாவின் சாட்சியங்களடங்கிய அறிவிப்பில் நாம் புரிந்து கொள்வது என்னவெனில், அந்த காலத்தில் பாவியாக இருப்பவன், தேவனையும் அவருடைய இராஜ்யத்தையும் மனதார வேண்டுமென்றே எதிர்ப்பவனாக இருந்தால், அவன் நூறு வருஷங்களுக்கு மேலாக உயிரோடிருக்க அனுமதிக்கப்படமாட்டான். அவன் நூறு வருஷங்கள் வாழ வேண்டும் என்பதற்கான உத்திரவாதம் இல்லை, ஆனால் அவன் நூறு வருஷங்களில் கண்டிப்பாக இறப்பான். அவன் போதுமான அளவுக்கு வேண்டுமென்றே செய்யும் மனப்பாங்கையும் கீழ்ப்படியாமையையும் உடையவனாய் இருந்தால், அவன் நூறு வருஷங்களுக்கு முன்பதாகவே இறப்பான், ஆனால் அவன் ஓரளவுக்கு கீழ்ப்படியாதவனாக இருந்தாலும், அவன் நூறு வருஷங்களுக்கு தன்னுடைய ஜீவனை நீடித்திருக்க முடியும், ஆனால் அதற்கு மேல் அல்ல.

## மரணம் - பிள்ளைகளின் எதிர்கால நிலைமை.

### கே: 201:2 :: கேள்வி (1907) - 2

அறிவுடைமை பெறுவதற்கு முன்பாக இறக்கும் கைக்குழந்தைகள் மற்றும் பிள்ளைகளுக்கு தேவனுடைய திட்டத்தில் எத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? அவர்கள் பூமிக்குரிய இராஜ்யத்தில் கட்டுப்படுத்தப்படுவார்களா?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன், அருமை நண்பர்களே, மறுபடியும் பிறக்காமல் பரலோக இராஜ்யத்திற்குப் போகும் வழி கிடையாது. பிள்ளைகள் மறுபடியும் பிறப்பார்களா? பரிசுத்த ஆவியினால் பிள்ளைகள் ஜெநிப்பிக்கப்படுவார்களா? அவர்கள் பரிசுத்த ஆவியினால்

ஜெநிப்பிக்கப்ப\ட முடியாவிட்டால், அவர்கள் பரிசுத்த ஆவியினால் பிறக்க முடியாது; இந்த முழு விஷயமும் மிகவும் எளிதான ஒன்று என்பதை நீங்கள் கவனிக்கலாம். பிள்ளை பூமிக்குச் சொந்தமானது. இது ஆதாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் சொந்தமானது; இது அவனுடைய இனத்தின் ஒரு அங்கமாக இருக்கிறது. தேவன் தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள் வாய்ப்புக்களை உடையவர்களாயிருக்க தேவன் விரும்பியிருந்தால், அவர் பிள்ளையை வாழ அனுமதித்து, சத்திய அறிவுக்குக் கொண்டுவரச் செய்து, இப்படியாக நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலுக்கு உள்ளாக்கியிருப்பார். ஆனால் கர்த்தர் குழந்தை பிராயத்திலேயே இந்த பிள்ளையை இறக்க அனுமதித்திருக்கும் போது, மேலான அழைப்பின் அறிவுடன் கிருபை பெற்றவராக தேவன் விருப்பம் கொண்டிருந்தவர்களில் ஒருவராக இந்த பிள்ளை இல்லை என்பதை நீங்கள் கவனியுங்கள். இப்போது, அவர்களுடைய நிலைமை என்ன? அவர்கள் பூமிக்குரிய பிரகாரமாக பூமியில் இறங்கியிருந்த விதமாகவே, அவர்கள் திரும்ப வருவார்கள். ஆனால் சிலர் கூறலாம், "நான் ஆவிக்குரிய வகுப்பைச் சார்ந்தவராகவும், மற்றும் ஆவிக்குரிய தளத்தில் சிறுமந்தையாகவோ, அல்லது திரள்கூட்டத்திலோ பங்கு பெறுகிறவராய் இருந்தால், என்னுடைய சிறு குழந்தையை அக்கறையுடன் கவனிப்பதற்கு என்ன வாய்ப்பு உள்ளது? நல்லது, என் அருமை சகோதர, சகோதரிகளே, நீங்கள் பூமிக்குரிய பெற்றோர்களாக இருக்கும் பட்சத்தில், உங்களுடைய சிறு குழந்தைகளை இன்னும் உங்கள் மேற்பார்வையில் இருப்பார்கள் என்று அனுமானிக்கமாட்டீர்களா? இயேசுவுடன் இராஜாக்களும் ஆசாரியர்களு மாயிருந்து, பரலோகத்திலும் பூமியிலும் எல்லா வல்லமையை உடையவர்களாயிருக்கும் பரலோகத்தைச் சார்ந்தவர்கள், பூமியிலுள்ள தங்களுடைய சிறு குழந்தைகளைக் காத்துக்கொள்ளும் வல்லமை உடையவர்களாக இருப்பார்கள் என்பதை நீங்கள் அனுமானிக்க மாட்டீர்களா? உங்களுடைய சிறு குழந்தைகளைப் பாதுகாப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்களாக அநேகர் இருப்பார்கள், அவர்கள் முன்னதாகச் சென்றிருப்பவர்கள் மற்றும் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு பணிபுரிவார்கள்.

நம்முடைய புரிந்துகொள்ளுதலின்படி, கல்லறையிலிருந்து திரும்ப வரும் இவர்கள், எந்த நிலைமையில் இறந்தார்களோ, அதே நிலைமைக்கு, குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இல்லாமல் வருவார்கள். ஆகவே, தற்கால உலகத்தில் இருப்பதைவிட, மிகவும் அதிகமான, சாதகமுள்ள நிலைமையில் இந்த சிறு குழந்தைகள் திரும்ப வருவார்கள்.

## மரணம் - பெரும் பயத்தை மேற்கொள்ளுதல்..

### கே: 202:1 :: கேள்வி (1907) - 1

மரணத்தின் திகிலை நாம் எவ்விதம் மேற்கொள்ளலாம்?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன், அருமை நண்பர்களே, நமக்கு மரணம் சந்தோஷகரமான விஷயமாக இருக்க வேண்டும் என்று தேவன் ஒருபோதும் நோக்கம் கொண்டதில்லை. மேலும், நீங்கள் எவ்வளவுக்கு புத்திமான்களாக இருக்கிறீர்களோ, நீங்கள் மரணத்தை குறைவாகவே விரும்புவீர்கள்; இது உலகத்துக்கு மிகுந்த திகில் உடையதாக இருக்கும். கர்த்தரிடத்தில் நம்முடைய சிந்தைகளை முழுவதுமாக ஒப்படைப்பது தான் இதை மேற்கொள்வதற்கான வழி ஆகும். நம்முடைய ஜீவிய காலம் முழுவதிலும் நாம் ஒருபோதும் விரும்பாத சில விஷயங்கள் இருக்கின்றன. இது சரியானதும் முறையான காரியம் என்று உங்கள் மனதில் இருத்திக்கொண்டால், முகம் சுழிக்காமல் மிகவும் கசப்பான மருந்தை எடுத்துக் கொள்கிறீர்கள். நீங்கள் சொல்வீர்கள், நல்லது, நான் இதைச் செய்யப்போகிறேன் மற்றும் இதை நீங்கள் செய்கிறீர்கள், ஆனால் நீங்கள் இதன் மீது உங்கள் பார்வையை செலுத்தி, இதை நீண்ட நேரம் பார்த்து, மற்றும் இதை இரண்டு அல்லது மூன்று தடவைகள் விழுங்க முயற்சி செய்தால், நீங்கள் இந்த விஷயத்தின் மீது அதிகமாகப் பாதிக்கப்படுவீர்கள். "இது கர்த்தருடைய ஏற்பாடு மற்றும் கர்த்தருடைய ஊழியத்திற்காக என்னுடைய ஜீவனை, மரணம் வரைக்கும்கூட ஒப்படைப்பது, என்னுடைய உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது; ஆகவே, கர்த்தாவே, நான் எல்லா விஷயத்தையும் உம்மிடம் கொடுத்து விடுகிறேன்; நான் எல்லா விஷயத்தையும் முழுவதுமாக

என்னுடைய கரங்களிலிருந்து எடுத்துவிடுகிறேன் மற்றும் இப்பொழுது நான் என்னை மரித்தவனாக எண்ணுகிறேன்; ஆகவே கர்த்தாவே, நீர் என்னைப் புதைப்பதற்காகவும் மற்றும் நீர் என்னை உயிர்த்தெழுப்புவதற்காகவும் நான் எல்லா விஷயத்தையும் விட்டுவிடுகிறேன். எல்லா விஷயமும் உம்முடைய கரங்களில் உள்ளது" என்று சொல்லுவதே நீங்கள் செய்யக்கூடிய சரியான வழி ஆகும். நீங்கள் உங்கள் வழியைக் கர்த்தரிடம் ஒப்படைத்த பிறகு, இது சுவையாகவும், கசப்பு மிகவும் குறைந்திருப்பதாக உணரும்படி இருக்கும். மரணம் மற்றும் சாவின் போக்குகளும் களிப்படையும் வகையில் இல்லாத போது, இருப்பினும் கர்த்தருடைய கிருபையின் பாதுகாப்பை நீங்கள் தெளிவாக உணருகிறீர்கள். மற்றும் அவரிடத்தில் நாம் ஒப்படைத்திருப்பதை வைத்துக் கொள்ளக்கூடியவராக இருக்கிறார்; நம்பிக்கையில்லாதவர்களைப் போல் நாம் வருத்தப்படக்கூடாது. மரணத்திற்கு நாம் சிறிது வருத்தப்படலாம், ஆனால் மற்றவைகளுக்கு அல்ல; ஏனெனில் ஆசீர்வாதங்களுக்கான நம்பிக்கையை நாம் உடையவர்களாக இருக்கிறோம்; உங்கள் விசுவாசம் வலிமை பெற்று வளர்ச்சியுற்றால், மரணம் பற்றிய உங்கள் பயம் குறைவாக இருக்கும்; உங்களுடைய அர்ப்பணிப்பின் அறிவு நம்பிக்கையடையும் போது, உங்கள் விசுவாசம் வலிமை பெறும்.

## மரணம் - தூதர்களைப் போன்று இருப்பதால் சாத்தியமில்லை.

### கே: 202:1 :: கேள்வி (1907) - 2

லூக்கா 20:35,36ம் வசனங்களை தயவுசெய்து விளக்கவும், "மறுமையையும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை, பெண் கொடுப்பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால், தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்." தயவு செய்து இந்த வசனப்பகுதியை விளக்கவும், "அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள், ஏனெனில் அவர்கள் தேவதூதர்களுக்கு ஒப்பானவர்கள்."

**பதில்:** இந்த வசனங்கள் பொதுவான மொழிபெயர்ப்பாகும், (Common Verson Translation) மற்றும் இந்த வசனத்தைப் பொருத்தவரையில் இந்த மொழிபெயர்ப்பு விரும்பப்படுகிறது. நாம் இந்த பொதுவான மொழிபெயர்ப்பை ஒவ்வொரு சமயத்திலும் விரும்புவதில்லை, ஆனால் நமக்குத் தெரிந்த வேறு எந்த மொழிபெயர்ப்பைவிட இதை வழக்கமாக விரும்புகிறோம். சில வேதவாக்கியங்களின் மேல் டயக்லட் (DIAGLETT) மொழிபெயர்ப்பும், சில வேதவாக்கியங்களின் மேல் திருத்திய மொழிபெயர்ப்பும் (REVISED VERSION) அதிக வெளிச்சத்தை நமக்குத் தருகின்றன. பொதுவான மொழிபெயர்ப்பு கூறுகிறது, அவர்கள் தேவதூதர்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள். இந்த முறையில் தான் இது படிக்கப்பட வேண்டியதாகவும், புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகவும் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இது சபை மற்றும் உலகத்தார் இருவருக்கும் உரியதாக இருக்கிறது. முதலாவது இது சபைக்கு உரியதாக இருக்கிறது. ஏனெனில் இது முதலாவதாக சபைக்கு செயல்படுத்தப்படப்போகிறது. இந்த முறையில் தான் இது சபைக்கு உரியதாகிறது, அதாவது, நம்முடைய மறுரூபத்திற்கான நேரம் வரும்போது, மற்றும் நாம் நம்முடைய உயிர்த்தெழுதலின் மாற்றத்தை, முதலாம் உயிர்த்தெழுதலை, மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான உயிர்த்தெழுதலைப் பெற்றிருக்கும்போது, மற்ற எவர்களைக் காட்டிலும் விசேஷித்த விதமாக இது நம்மை உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக உருவாக்குகிறது. ஏனெனில் இது தான் மிகவும் உயர்வானதாகவும், உயிர்த்தெழுதலின் சுபாவமுடைய எந்த ஒன்றும் இதற்குக் கீழானதாக இருப்பது அவசியமாயிருக்கிறது. தேவன் தமது நோக்கங் கொண்டிருந்த எல்லா உயிர்த்தெழுதல்களிலும் மிகவும் ஆச்சரியமானதும், உயர்வானதுமாக இது தான் இருந்தது. பூரணமடைவதற்கு சபையின் ஒரு உயிர்த்தெழுதலும், முற்பிதாக்களின் வேறொரு உயிர்த்தெழுதலும் இருக்கின்றது. மற்றும் பிறகு, நேற்று இரவு நாம் பார்த்த விதமாக, உலகத்தார் கர்த்தருடன் படிப்படியாக இணக்கமாக வரும் விதத்தில், அவர்களின் நியாயத்தீர்ப்புக்கான ஒரு உயிர்த்தெழுதல் உள்ளது, ஆனால் இப்போது நாம் இதை

முதலாவது சபைக்கு பிரயோகப்படுத்துவோம். நாம் மறுரூபம் அடைந்து, ஆவியின் சிருஷ்டிகளாயிருக்கும் போது, நாம் இனி மரிக்கப்போவதில்லை; நாம் அழியாமையைப் பெறுவோமானால், நாம் இனி சாக முடியாது. நாம் தேவதூதர்களைப் போல இருப்போம்; தேவதூதர்கள் கலியாணம் செய்வதில்லை. ஆகவே இந்த வகையில், உயிர்த்தெழுதலில் சிறுமந்தை ஆண் மற்றும் பெண்ணாக இருப்பதில்லை.. கிறிஸ்துவின் மணவாட்டி என்று கூறப்படும் போது, அவர்கள் பெண் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை நாம் பெறக்கூடாது ஆனால் இது மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் இடையே உள்ள அழகான உறவைக் குறிக்கும். ஒப்புமையாக மட்டுமே இருக்கிறது. மேலும், சரீரத்தின் மேல் உள்ள தலை, என்று கிறிஸ்துவைப் பற்றி நாம் நினைக்கிறோம் மற்றும் நாம் சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறோம் - இது வேறொரு அழகான ஒப்புமை. இவை அனைத்தும் தலைமையாக இருக்கிற நமது கர்த்தரைக் குறிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். தேவதூதர்கள் ஆண் அல்லது பெண்ணாக இல்லை, மற்றும் அவர்களைப் பற்றி பேசும்போது, அந்த பதங்களை நாம் உபயோகப்படுத்துவதில்லை; அவர்கள் பாலினம் இல்லாதவர்களானதால், அவ்விதமாக நாம் அவர்களைப் பற்றி பேச விரும்புகிறதில்லை.. சபையைப் பொருத்த காரியத்திலும் இது போதுமான அளவு எளிதாகவே இருக்கிறது.

இப்போது, உலகத்தாரைப் பொருத்தவரையில், ஆயிர வருஷ யுகத்தின் இறுதியில், சீர்கேடு மற்றும் பாவத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வந்து, ஆதாம் முதலில் இருந்த அந்த இடத்திற்கு திரும்ப வரும்போது, வம்ச விருத்திக்கான ஆண் மற்றும் பெண் நிலைகளின் அவசியம் அனைத்தும் மறைந்த பிறகு, இந்த விஷயத்தைப் பொருத்தமட்டில், அவர்கள் தேவதூதர்களைப் போல இருப்பார்கள். ஆதியில் ஆதாம் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இல்லை, ஆனால் அவனுடைய பக்கத்திலிருந்து தேவன் பெண்ணைப் பிரித்தெடுத்தார் மற்றும் நமது இனத்தை ஆண் மற்றும் பெண்ணாக உண்டுபண்ணினார்; ஆனால் தேவனுடைய முழு நோக்கமும் நிறைவேறி, மற்றும் அந்த ஒரு மனுஷனுடைய இடத்தை கிறிஸ்து எடுத்துக்கொண்டு, ஆதாமை விட்டு வெளியே வந்த எல்லாவற்றையும் மீட்டுக்கொண்ட பிறகு, பாலின வேறுபாடு தன் நோக்கத்தை நிறைவேற்றிய பின்பு மறைந்து விடும். இந்த வகையில், அப்போது மனுஷ இனம் தேவதூதர்களைப் போல இருப்பார்கள் என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதல் ஆகும். மேலும் அவர்கள் யாரும் இனி மரிப்பதில்லை; அவர்கள் பூரணமடைவார்கள். ஆகவே மனுஷ இனம் பூரணத்துவத்திற்குத் திரும்பக் கொண்டுவரப்படும் போது, மற்றும் ஆயிர வருஷ யுக முடிவில், எல்லோரும் சோதிக்கப்பட்ட பிறகு, நீதியை நேசிக்கிற அனைவரும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள் மற்றும் மீதியானவர்கள் ஜனங்களின் நடுவிலிருந்து அழிக்கப்படுவார்கள். நீதியுள்ளவர்கள் எப்போதும் ஜீவனுடையவர்களாய், நித்திய காலம் முழுவதும் அவருடைய எல்லா ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள். தேவன் சந்தோஷப்படுவார்.

## மரணம் - ஆயிர வருஷ யுகத்தில் விலங்குகள்.

### கே: 203:1 :: கேள்வி (1909) - 1

கீழான விலங்குகள் அடுத்த யுகத்தில் இறக்குமா?

**பதில்:** அவைகள் இறக்கும் என்று நான் புரிந்து கொள்கிறேன். மனுஷன் தேவனுடைய சாயலின்படி இருக்கிறபடியால், மனுஷனைத் தவிர வேறு எந்த பூமிக்குரிய சிருஷ்டிக்கும் நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தம் ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. மனுஷன் பூமியில் ராஜாவாக இருந்தான். கீழான மிருகங்கள் எல்லாம் கடந்த காலத்தில் இருந்ததைப் போன்றே, ஆயிர வருஷ முழுவதிலும் இறப்பது தொடரும் என்று நான் புரிந்து கொள்கிறேன். சிருஷ்டி அனைத்தும் விடுவிக்கப்படும் என்று சகோதரர் வெஸ்லி தவறாக கூறினார். நாய்கள், பூனைகள் மற்றும் குதிரைகளைப் பற்றி சகோதரர் வெஸ்லி நினைக்கும் போது, அவர் ஒரு விஷயத்தை மறந்துவிட்டார். தேவன் அவைகளை பகுத்தறிவற்ற மிருகங்களாக உண்டுபண்ணினார். அவைகள் அவைகளுடைய குறுகிய ஆயுள் காலத்தில் வாழ்கின்றன. மற்றும் அவைகள்

இறக்கின்றன, ஆனால் மனுஷனைப் பொருத்தவரையில், அவன் பகுத்தறிவற்றவைகளைவிட மிகவும் மேலானவனாக இருக்கிறபடியால், தேவன் அவனை அழிவிலிருந்து எப்படி மீட்டிருக்கிறார் என்பதை நாம் பார்க்கிறோம். பகுத்தறிவில்லாத சிருஷ்டியின் பேரில் அனுதாபப்படும் மனுஷன், லட்சக்கணக்கான மனுஷர்களை நித்திய வாதைக்குள் தேவன் ஒப்படைப்பார் என்று நம்ப முடியும் என்பது விந்தையாக இருக்கும் என்று நான் அடிக்கடி எண்ணியிருக்கிறேன்.

## மரணம் - பிந்தைய நிலைமை.

### கே: 204:1 :: கேள்வி (1909) - 1

மரணத்திற்குப் பிறகு மனுஷனுடைய நிலைமை, மற்றும் நிலை எப்படியிருக்கும்?

**பதில்:** அவனுடைய மரணத்திற்குப் பிறகு, அவன் மரித்தவனாகிறான். தேவன் கிறிஸ்துவின் மூலமாக அவனையும், கீழே இறங்கின எல்லோரையும் மரித்தோரிலிருந்து எழுப்புவதற்கான தேவனுடைய நேரத்திற்காக, அவன் காத்துக்கொண்டு இருக்கிறான். நீங்களும் நானும் இரவில் நித்திரைக்குள்ளாகும் போது இருப்பதைவிட, அவன் வேறு ஏதும் அதிக உணர்வுள்ளவனாக இருக்கிறான் என்ற அர்த்தத்தில் அல்ல. உலகம் இதற்கிடையில் எதையும் அறிகிறதில்லை. அவர்களுடைய குமாரர்கள் கீழாக கொண்டுவரப்படுகிறார்கள் மற்றும் இதை அவர்கள் அறிந்துகொள்வதில்லை மற்றும் அவர்கள் கனப்படுத்தப்படுகிறார்கள் மற்றும் இதைப் பற்றி அவர்கள் கிரகிக்க முடிவதில்லை. கல்லறையில் (SHEOL) நீங்கள் எங்கே போனாலும், ஞானம், அறிவு அல்லது சாதனம் இருப்பதில்லை.

## மரணம் - மரணத்தில் முகபாவம்.

### கே: 204:2 :: கேள்வி (1906) - 2

மயக்க நிலைக்குப் போயிருக்கும் ஜனங்களின் முகத்தில் இருக்கும் புன்சிரிப்பு குறித்து நீங்கள் என்ன விளக்கம் கூறுகிறீர்கள்?

**பதில்:** இதற்கான காரணத்தை நான் கூறுகிறதாயில்லை; நீங்கள் எச்சமயத்திலும் புன்முறுவல் செய்ய முடியும். முகபாவம் போன்றவற்றைப் பற்றிய மரணபடுக்கை காட்சிகள் பலவற்றை ஒரு பேராசிரியர் பரிசோதனை செய்தார். சில முகங்கள் மகிழ்ச்சியையும், சில முகங்கள் வேதனைகளையும் வெளிப்படுத்தின, ஆனால் மிகப் பெரும்பான்மையான முகங்கள் எவ்விதமான அறிகுறியையும் கொடுக்கவில்லை. இது எதைப் பற்றியும் ஒரு நிரூபணமாக இருக்கவில்லை; ஏனெனில் ஜனங்கள் மரணமடையும் சமயத்தில் அவர்களுடைய உடல் உறுப்புகள் விசேஷித்த விதமாக எழுச்சி பெறுகின்றன. காய்ச்சல் உள்ள சிலருடைய மனங்கள் மிக அதிகமாக தூண்டப்படுகின்றன மற்றும் தரிசனங்கள் போன்றவைகளை உங்களுக்குச் சொல்வார்கள். தந்திரமாகப் புனையப்படும் கட்டுக்கதைகளை நாம் பின்பற்றுகிறதில்லை, மாறாக நாம் தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றுகிறோம். உலகத்தின் மிகச் சிறந்தவர்களில் சிலர் புன்சிரிப்பில்லாமல் இறக்கிறார்கள். புன்சிரிப்பில்லாமல் மரித்த ஒருவரை நான் உங்களுக்குச் சொல்வேன்; அவருடைய நாமம் இயேசு.

## மரணம் - ஆவிக்குரிய மரணம்.

### கே: 204:3 :: கேள்வி (1909) - 3

ஆவிக்குரிய மரணம் பற்றி என்ன சொல்லலாம்?

**பதில்:** வேதாகமம் கூறுகின்ற ஒரே மரணம் மனுஷீக மரணம் மட்டுமே. வேதாகமம் அறிவிப்பது என்னவெனில், தேவன் ஆதியில் ஆதாமுக்கு ஒரு சோதனையைக் கொடுத்தார்,

ஆனால் அவன் அதில் தோல்வி அடையும்போது, அவன் உங்களுக்காகவும் எனக்காகவும் தோல்வி அடைந்தான். நித்திய ஜீவனுக்குரிய ஒரு வாய்ப்பை எவரேனும் அடைய வேண்டுமானால், அது இரண்டாம் வாய்ப்பு மூலமாகவே நடக்க வேண்டும், ஏனெனில் முதலாம் வாய்ப்பு ஆதாமின் மூலமாக இழக்கப்பட்டது. இரண்டாம் வாய்ப்பு சபையுடன் துவங்குகிறது. ஏனெனில் நாம் கேட்கிற செவியுள்ளவர்களாக இருக்கிறோம்.

## மரணம் - ஆதாமின் வழியில் - உபத்திரவ காலத்திற்குப் பின்பு பிறப்புக்கள்.

### கே: 204:4 :: கேள்வி (1909) - 4

ஆதாமின் மரணம் எப்பொழுது மறையும்? உபத்திரவ காலத்திற்கு பின்பு பிறப்புக்கள் இருக்குமா?

**பதில்:** அருமை நண்பர்களே, என்னுடைய புரிந்துகொள்ளுதல் இதுவே: அந்த உபத்திரவத்தின் காலம், சொல்லப் போனால், உலகம் அனைத்தையும் முடக்கிவிடும் மற்றும் இந்த காலம் தான் 46ம் சங்கீதத்தில் குறிக்கப்படுகிறது. இங்கு கர்த்தர் இந்த உபத்திரவ காலத்தைப் பற்றி பேசிய பிறகு, வில்லை ஒடித்து, ஈட்டியை அவர் முறிக்கிறார் என்றும், நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள் என்றும் கூறுகிறார். உலகம் கற்றுக்கொள்ளப் போகிற முதலாவது பெரிய பாடம் இதுவே - “நீங்கள் அமர்ந்திருங்கள்!” அவர்கள் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்து, பரிணாம வளர்ச்சியைப் பற்றியும், கர்த்தருடைய வார்த்தையைத் தவிர எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு இருக்கின்றனர். “கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்” என்பதையும், அவர் தான் தேவன் என்பதையும் இந்த பாடத்தை அவர்கள் வெகு காலத்திற்கு முன்பே கற்றிருக்க வேண்டும். அவர்கள் சலனமற்று இருப்பதற்கு சிறிது காலம் பிடிக்கும். அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பும் வரைக்கும் தேவன் காத்திருப்பதில்லை, ஆனால் புதிய ஒழுங்கின் முறைமைகளைத் துவக்குகிறார். முற்பிதாக்கள் வெளிப்படுவார்கள் மற்றும் புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் இஸ்ரயேலும், மற்றும் அவர்கள் நிலைபெறும் போது, தேவனுடைய மேற்பார்வையில் அவர்களுடைய ஆசீர்வாதங்களையும், வளமையையும் மற்ற ஜாதிகள் பார்ப்பார்கள். இஸ்ரயேலர்கள் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்ற முற்பிதாக்களை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, மற்ற ஜாதியினர் கூறுவார்கள், “நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம், வாருங்கள்.” அவர் யூதர்களுக்கு எப்படி கற்பிக்கிறார் என்பதைப் பாருங்கள், “அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.” மற்றும் “சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்” இதை தான் அவர்கள் எப்பொழுதும் விரும்பி இருக்கிறார்கள் என்பதை அவர்கள் பார்க்க ஆரம்பிப்பார்கள் - தேவனுடைய அரசாங்கம், சமாதானம், செழிப்பு, ஜீவனை அனுபவிப்பது போன்றவை. இஸ்ரயேல் மூலமாக புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் வருவது தான் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கான ஒரே வழி என்பதை அவர்கள் பார்ப்பார்கள்.. அவர்கள் அப்படிச் செய்யாவிட்டால், தேவன் அவர்களை அங்கீகரிக்கமாட்டார் மற்றும் தீர்க்கதரிசி கூறுகிறார், அவர்கள் மேல் மழை வருஷிப்பதில்லை. இது சொல்லர்த்தமான மழையா? அல்லது ஆசீர்வாதத்தைக் குறிக்கிறதா? ஒருவேளை இரண்டுமே இருக்கலாம். கர்த்தர் அவர்களுக்கு பாடங்களையும் கட்டளைகளையும் கொடுப்பதற்கு இயற்கையின் அனைத்து வலிமைகளையும் திறன்களையும் பிரயோகிப்பார். அவர் கதிர்களைப் பெருகச்செய்யவும், வனாந்தரம் ரோஜாவைப் போல மலரவும் அழைப்பு விடுவார். பூமியனைத்தும் கர்த்தருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் மற்றும் நீதியைச் செய்கிற ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்படுவர் மற்றும் அப்படிச் செய்யாதவர் தண்டிக்கப்படுவார்கள். மேலும் நீதி பலனளிக்கிறது என்பதை உலகம் அனைத்தும் கற்றுக்கொள்ளும். நேர்மையாக இருப்பதினால் பலன் ஏதும் இல்லையென்று இப்போது சில ஜனங்கள் எண்ணுகிறார்கள், ஆனால் அவர்கள் அப்போது அப்படியிருக்க மாட்டார்கள், ஏனெனில் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் மற்றும் தேவனுடன் இணக்கமாயிருப்பார்கள். சில வகையான

தண்டனையைப் பெற்று, எல்லோரும் தேவனிடம் கொண்டுவரப்படுவார்கள் மற்றும் அவர்களுடைய மன நிலைகளிலிருந்து வெளியே கொண்டுவரப்படுவார்கள்.

ஆதாமின் மரணம் எப்போது மறையும்? இது விழுந்துபோன இந்த சுபாவங்களில் நீடித்துக் கொண்டிருக்கிறது. புதிய உடன்படிக்கையின் விளைவாக தேவனுடைய ஆசீர்வாதம் வரும் மற்றும் புதிய உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்கள் மட்டுமே தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள், இது இஸ்ரயேலர்களுடன் துவக்கம் பெறும் மற்றும் பிறகு மற்ற ஜாதிகள் இஸ்ரயேலர்களின் ஆசீர்வாதங்களைப் பார்த்து, தேவனுடன் அவர்களுடைய உறவின் காரணமாகவே அந்த ஆசீர்வாதங்கள் வந்தன என்பதை உணருவார்கள். அவர்களும்கூட அந்த ஆசீர்வாதங்களைப் பெற விரும்புவார்கள் மற்றும் புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் வருவதற்கு விரும்புவார்கள். இது உபத்திரவத்திற்குப் பிறகு எவ்வளவு சீக்கிரம் வரும்? இது தேவனைப் பற்றிய அறிவிற்கு அந்த ஜாதிகள் எவ்வளவு சீக்கிரம் வருவதைப் பொருத்து இருக்கிறது. ஏனெனில் குமாரன் மூலமாக இல்லாமல் ஜீவனைப் பெறுவதற்கான வழி ஏதும் இல்லை - இப்போது இதுவே பிரமாணம் மற்றும் அப்போதும் அப்படியே இருக்கும் - "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்."

உபத்திரவத்திற்குப் பிறகு பிறப்புக்கள் இருக்குமா?

காரியங்கள் இயற்கையான முறையிலேயே நடக்கும் என்று நான் புரிந்து கொள்கிறேன். முதலாவதாக, புதிய உடன்படிக்கை ஏற்பாட்டின் கீழ் இருப்பவர்கள், இந்த எல்லைக்கோட்டிற்கு வர ஆரம்பித்தவுடன், அவர்கள் உயர்வான பேரார்வங்களையும், சிந்தையில் மேன்மை மிகுந்த குணலட்சணங்களையும் உடையவர்களாக இருப்பார்கள். மற்றும் பிறப்புக்கள் குறைவாகி, ஆயிர வருஷ யுகத்தின் இறுதியில் பிறப்புக்கள் முழுவதுமாக மறைந்துவிடும். ஆதியில் இருந்த மாற்றத்திற்கு எதிர் திசையில், அதாவது, ஆதாமின் பக்கத்திலிருந்து தாயாகிய ஏவாளை தேவன் பிரித்தெடுத்தபோது இருந்த நிலைக்கு, மனுஷீக குடும்பத்தில் படிப்படியாக மாற்றம் ஏற்படும். மனுக்குல குடும்பத்தார் அனைவரும் ஏவாளைப் பிரித்தெடுத்த நிலைக்கு முன்னதாக ஆதாம் இருந்த நிலையில் இருப்பார்கள் என்பது எங்களுடைய புரிந்துகொள்ளுதல் ஆகும். சகோதரிகள் அகற்றப்படுவார்கள் என்று இதற்கு அர்த்தமல்ல, ஆனால் அவர்கள் மற்ற குணங்களைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் ஆண்கள் அதிக அளவில் மென்மையான குணங்களைப் பெற்றுக்கொள்வார்கள். பரிபூரண ஜீவன் வலிமையுள்ள குணங்களைப் போலவே, மென்மையான குணங்களையும் அடையாளப்படுத்துகிறது. இப்படியாக ஆயிர வருஷ யுகத்தின் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும், ஏவாள் கொண்டுவரப்படுவதற்கு முன் இருந்த ஆதாமைப் போல பூரணமாக இருப்பார்கள்.

## மரணம் - உபத்திரவ காலத்திற்குப் பிறகு ஆதாமுக்குள்ளான மரணம்.

### கே: 206:1 :: கேள்வி (1911) - 1

உபத்திரவ காலத்திற்குப் பிறகு ஆதாமுக்குள்ளாக யாரேனும் மரிப்பார்களா?

**பதில்:** ஆம், அவர்கள் மரிப்பார்கள்; அதாவது, சுவிசேஷ யுகம் முடிவுக்கு வந்து, புதிய யுகத்தின் துவக்கத்தில், இது ஆதாமுக்குள்ளான மரணத்திலிருந்து வெளியே வந்து, திரும்பப் பெறுவதற்கான ஜீவனுக்கு உலகத்தார் வருவதற்குரிய வாய்ப்பின் ஆரம்பமாக இருக்கிறது. ஆனால் உலகத்தார் முதலில் பொதுவாக நம்பமாட்டார்கள்; இந்த அறிவு அவர்களுக்கு வருவதற்கு முன், இது கொஞ்சக் காலம் பிடிக்கும். இது மின்னலைப் போன்று நடக்காது. வேதவாக்கியங்களின்படி, இது இஸ்ரயேலுடன் ஆரம்பமாகும் மற்றும் புதிய யுகத்தின் உணர்வுக்கு இஸ்ரயேலர்கள் வரும்போது, மற்றும் முற்பிதாக்கள் அவர்களிடம் திரும்ப வரும்போது - ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் அனைவரும் - மனுக்குலத்தின் பூரண முன்மாதிரிகளாகவும், பூமியெங்கும் கர்த்தரின் பிரபுக்களாகவும், மனுஷர்கள் நடுவில் மகிமையின் மேசியாவை அடையாளப்படுத்துகிறவர்களாகத்

தோன்றுவார்கள். இந்த விஷயத்தை யூதர்கள் முதலாவதாக அங்கீகரித்து, உள்ளுணர்வை வெளிப்படுத்துவார்கள். மற்றும் திரும்பப் பெறுதலின் ஆசீர்வாதங்கள், ஜீவன் மற்றும் வலிமை படிப்படியாக அவர்களிடத்தில் வந்துசேரும். மேலும் இதை மற்ற ஜாதிகள் அனைவரும் பார்க்கத் துவங்கும் போது, அவர்கள் இந்த ஆசீர்வாதங்களில் சிலவற்றை விரும்புவார்கள். ஆகவே, இதை தீர்க்கதரிசி எப்படி வெளிப்படுத்துகிறார் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அவர் கூறுகிறார், "சீயோனிலிருந்து வேதம் வெளிப்படும்." - அதாவது, இயேசுவாகிய மேசியா மற்றும் மகிமையிலுள்ள சபை - "எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனம்." இது இஸ்ரயேல் தேவனுடைய கிருபையில் இருக்கும் போது நடக்கும். "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து, நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம், வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போமாக என்பார்கள்." யூதர்கள் கர்த்தருடைய பாதைகளில் எப்படி நடக்கத் துவங்குகிறார்கள் என்பதை அவர்கள் பார்ப்பார்கள் மற்றும் அவர் அவர்களுக்கு அளிக்கும் ஆசீர்வாதங்களையும் பார்ப்பார்கள். அவர்கள் சொல்வார்கள், "நாம் அவருடைய வழிகளில் நடந்தால், புறஜாதிகளாகிய நமக்குக்கூட சிலவற்றைக் கொடுப்பதற்கு கர்த்தர் பிரியமாயிருக்கமாட்டாரா? கர்த்தர் எல்லா ஜாதிகளுக்கும் அவ்விதமே ஆசீர்வாதங்களை அளிக்க தேவன் விருப்பமாகவே இருக்கிறார். இந்த ஆசீர்வாதங்கள் முதலில் இஸ்ரயேலுக்கும், பிறகு எல்லா ஜாதிகளுக்கும் தொடருவதற்காக தேவன் வெறுமனே இந்த விதமாக ஏற்பாடு செய்திருக்கிறார். கடந்த காலத்தில், நூற்றாண்டுகளாக எல்லாவற்றிலும் யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது இதுவே. யூதர்கள் பரலோக அல்லது ஆவிக்குரிய வகுப்பினவராவதற்கான எதிர்பார்ப்பில் யூதர்களை வழிநடத்தும் விதத்தில் யூதர்களின் பிரமாணத்திலும் மற்றும் தீர்க்கதரிசனங்களிலும் எதுவுமே இல்லை.

அவர்கள் எப்போதும் எதிர்பார்த்த, அல்லது தேவன் எப்போதும் வாக்குத்தத்தம் செய்த எல்லா ஆசீர்வாதங்களும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களாகவே இருந்தன; மேலும் அவர்கள் இந்த ஆசீர்வாதங்களையே பெறப்போகிறார்கள்.

## மரணம் - சரீரம் மண்ணுக்கும், ஆவி தேவனிடத்திற்கும்.

### கே: 206:2 :: கேள்வி (1911) - 2

பிரசங்கி 12:7. "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும்."

**பதில்:** முதலாவது, ஆவி எதை அர்த்தப்படுத்துகிறது? எபிரேய மொழியில் 'ஆவி' என்ற வார்த்தை 'ருவாக்' (ruach) என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இது சுவாசம், ஜீவ சுவாசத்தை அர்த்தப்படுத்துகிறது. தேவன் மனுஷனை உண்டாக்கிய போது, அவர் ஜீவன்களின் சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் என்று வாசிக்கிறோம் - பன்மை - சுவாசம் என்பது எல்லா ஜீவன்களுக்கும் பொதுவானது. வேறு வார்த்தைகளில் சொன்னால், குதிரைக்கு இருக்கின்றது போலவே, அதே மாதிரியான சுவாசத்தை துல்லியமாக மனுஷம் பெற்றிருக்கிறான். மனுஷனுக்கும் மிருகத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம், மனுஷன் வேறுவகையான சுவாசம், அல்லது ஆவியைப் பெற்றிருக்கிறான் என்பதில் அல்ல, ஆனால் மனுஷன் வேறு வகையான சரீரத்தைப் பெற்றிருக்கிறான் மற்றும் மனுஷ சரீரங்களுக்கு இடையில் வித்தியாசத்தை நாம் பார்க்க முடியும். இங்கே ஒரு மனுஷன் ஒரு வடிவத்திலான தலையும், வேறொரு மனுஷன் வேறொரு வடிவத்திலான தலையையும் உடையவனாயிருக்கிறான். மனுஷனுடைய தலையின் அளவு மற்றும் வடிவ நிபுணர் (Phremologist) இரண்டு மனுஷர்களைப் பற்றி அவர்களுடைய தலைகளின் வடிவத்தைக் கொண்டு மிகவும் துல்லியமாக விவரிப்பார்கள்; அவர் இரண்டு மனுஷர்களிடையே உள்ள வித்தியாசத்தை சுவாசத்தைக் கொண்டு விவரிக்கமாட்டார்கள்; சுவாசம் எதையும் நிச்சயிக்க முடியாது. சரீரம் எல்லா விஷயத்தையும் நிச்சயிக்கும். ஒரு மனுஷன் நாய் தலையுடன் இருப்பதாக கற்பனை செய்வோம், அந்த மனுஷன் நாம் யோசிப்பதைப் போலவே அப்படியே யோசிப்பான் என்று மனுஷ தலை வடிவ நிபுணர் நம்மிடம் கூறுவார். எவ்வளவுக்கு அதிகமாக நாயின் தலையைப் போன்ற வடிவம் இருக்கிறதோ,

அவ்வளவுக்கு அதிகமாக அவனுடைய சிந்திக்கும் அறிவு நாயின் யோசனையைப் போலவே இருக்கும்; ஏனெனில் ஒரு மனுஷன் தன்னுடைய கால்களினால் சிந்திப்பதில்லை - அப்படி வேண்டும் என்பதில்லை - ஆனால் அவன் தன்னுடைய தலையைக் கொண்டு சிந்திக்கிறான் மற்றும் அவனுடைய தலையின் வடிவத்தின்படி, அவனுடைய சிந்திக்கும் திறன் பிணைக்கப்படுகிறது. ஆகவே தேவன் நாய்க்கு ஜீவனை அல்லது சுவாசத்தைக் கொடுத்தபோது, நாய் ஜீவனோடு இருந்தது மற்றும் மற்ற நாய்களைப் பிறப்பித்தது மற்றும் அவைகள் வாழ்ந்தன. தேவன் மனுஷனுக்கு ஜீவனைக் கொடுத்தபோது, மனுஷன் வாழ்ந்தான். நாம் வாசிக்கிறோம் - தேவன் அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் - சுவாசம் என்பது எல்லா ஜீவன்களுக்கும் பொதுவானது, மனுஷன் ஜீவனுள்ள ஆத்துமாவாக, ஜீவனுள்ள மனுஷனாக ஆனான். ஆகவே பிறகு மனுஷன் தன்னைப் போன்றே மனுஷர்களைப் பிறப்பித்தான் மற்றும் நீங்களும் நானும் முதல் மனுஷனின் பிள்ளைகளாக இருக்கிறோம். அவன் அந்த ஜீவ பொறியை, அவனுடைய நாள் முதற்கொண்டு நாம் இருக்கும் இந்நாள்வரை கொடுத்திருக்கிறான் மற்றும் தேவன் முதலாவதாக தகப்பனாகிய ஆதாமுக்குக் கொடுத்த அந்த அதே ஜீவ சுவாசத்தின் பங்கை நீங்கள் உடையவர்களாயிருக்கிறீர்கள். அவர் இப்போது அந்த பொறியை புதுப்பித்திருக்கிறார்., அவர் யாருக்கும் புத்தம் புதிய பொறியைக் கொடுத்திருக்கவில்லை. மனுஷன் மரண தண்டனையின் கீழ் வந்திருக்கிறான் மற்றும் அந்த ஜீவ பொறி மேலே போய்விடுகிறது என்பதை அது அர்த்தப்படுத்துகிறது. ஆதாம் மரணமடைந்த போது, அவனிடம் தேவன் கொடுத்திருந்த சுவாசம் அப்போது என்னவாயிற்று? சரீரம் மண்ணுக்குத் திரும்பியது, அவனுடைய ஜீவன், ஜீவனோடு இருப்பதற்கான அவனுடைய உரிமை, அவனுடைய சுவாசம் என்னவாயிற்று? அவன் அதன் மேல் இனி எந்த கட்டுப்பாட்டையும் உடையவனாக இருக்கவில்லை, இது தேவனுடைய கரங்களுக்குத் திரும்பி வந்துவிட்டது. இதன் சிறிதளவுகூட ஆதாமின் மகன் பெறவில்லை. மற்றும் ஆதாம் இறந்த உடனேயே, இதன் மீதான எந்த உரிமை கோருதலும் அவனுக்கு இருக்கவில்லை. இது தேவனுடைய கரங்களுக்குத் திரும்ப வந்துவிட்டது. ஆகவே ஆதாமின் வழியாக வந்த நாம் எல்லோரும் மரணமடையும் போது, ஜீவனுக்கான நம்முடைய உரிமைகளை ஒப்படைத்து விடுகிறோம். நான் ஜீவனோடிருக்கும் உரிமை உடையவனாயிருக்கிறேன் என்றும், நான் இழந்தவற்றில் சிலவற்றை உடையவனாயிருக்கிறேன் என்றும் மற்றும் மறுபடியும் திரும்பப் பெறுவேன் என்றும் நம்மில் யாரும் சொல்லமுடியாது. என் அருமை சகோதரனே, நீங்கள் ஜீவனை எப்போதாவது திரும்பப் பெறுகிறதாயிருந்தால், ஜீவன்-அளிப்பவர் மூலமாகவே இது கிடைக்கும். முதலாம் ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நாம் எல்லோரும் எல்லாவற்றையும் இழந்திருக்கிறோம் மற்றும் மாபெரும் ஜீவன்-அளிப்பவர் மூலமாக மட்டுமே ஜீவனைத் திரும்பப் பெறுவதற்கான ஒரே வழி ஆகும்; அந்த மாபெரும் ஜீவன்-அளிப்பவராக இயேசுவை தேவன் நியமித்திருக்கிறார். இந்த யுகத்தின் மேலான அழைப்பின் விசேஷித்த நியமங்களின் கீழ் சபை இப்பொழுது ஜீவனைப் பெற்றுக்கொண்டு இருக்கின்றது. ஆனால் அடுத்த யுகத்தில் மாபெரும் நித்திய பிதாவாக இயேசு இருப்பார். ஏசாயா தீர்க்கதரிசி இதை வெளிப்படுத்துகிறார், “அவர் நித்திய பிதா என்று அழைக்கப்படுவார்.” அவர் யேகோவா என்று அழைக்கப்படுவார் என்று இது அர்த்தப்படுத்துகிறதில்லை. ஓ, இல்லை, ‘பிதா’ என்ற. சொல்லுக்கு ‘ஜீவன்-அளிப்பவர்’ என்று அர்த்தம் ஆகும் மற்றும் கிறிஸ்து மனுக்குல உலகம் அனைத்திற்கும் ஜீவன்-அளிப்பவராக இருப்பார். பல்வேறு மாறுபாடுகள் மற்றும் மரணத்திற்குட்பட்டு, தகப்பனாகிய ஆதாம் வெறுமனே தற்காலிக ஜீவனைக் கொடுத்ததற்கு மாறாக, மனுக்குல உலகத்தார் அனைவருக்கும் நித்திய ஜீவனை அளிப்பவராக கிறிஸ்து இருப்பார். நீதியின் கோட்பாடுகள் மற்றும் தேவனிடம் உண்மையான கீழ்ப்படிதலின் விதிமுறைகளின் அடிப்படையில் மனுக்குல உலகத்தார் அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்கும் மாபெரும் ஜீவன்-அளிப்பவராக கிறிஸ்து இருப்பார். ஆகவே ஆயிர வருஷ யுகம் முழுவதும் கிறிஸ்து உலகத்தாருக்கு புத்துயிர் அளிப்பார். அவர்கள் தகப்பனாகிய ஆதாமினால் ஒருசமயம் உருவாக்கப்பட்டார்கள் மற்றும் ஆக்கினைத்தீர்ப்பினால் அதை இழந்து, அவர்கள் போதுமான ஜீவனைப் பெறவில்லை. கிறிஸ்து தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற ஜீவன் மூலமாக உலகத்தைக் கிரயம் கொண்ட காரணத்தினால், மனுக்குலத்தின் உரிமையாளரானார். மேலும்

உலகத்தாருக்கு பிதாவாக, அல்லது ஜீவன்-அளிப்பவராக, அல்லது பிறப்பிப்பவராக நோக்கங் கொண்டிருக்கிறார்.

இந்த பணியில் அவருடன் சபை ஐக்கியமாகப் போகிறது. மனுக்குல உலகத்தைப் பிறப்பிக்கும் முதல் கலையைச் செய்வதில் முதல் மனுஷனாகிய ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளுடன் எப்படி இணைக்கப்பட்டிருந்தானோ, அப்படியே இந்த உலகத்தை மறுஜென்மம் பெறச் செய்வதில் இரண்டாம் ஆதாம் தம் மணவாட்டியாகிய மனைவியுடன் இணைக்கப்பட்டிருப்பார். சீஷர்களுக்குச் சொல்லிய இயேசுவின் வார்த்தைகளை உங்களுக்கு நினவூட்டுகிறேன். பரிசுத்த பேதுரு பல்வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார் மற்றும் இயேசு தம்மைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் எப்படி பரிசு பெறப்போகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இருந்தார். பேதுரு கூறினார், “கர்த்தரே, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும்?” இயேசு அவரிடமும், மற்ற அப்போஸ்தலர்களிடமும் கூறினார், “என்னைப் பின்பற்றுகிறவன் - இந்த மறுஜென்மம் பெறுவதில், என்னை உண்மையாய்ப் பின்பற்றுகிற நீங்கள் - - இந்த மனுக்குலம் பெறுவது எப்பொழுது நடக்கும்? இன்னும் இல்லை. இந்த புத்துயிர் பெறுவது மேசியாவின் ஆட்சியின் ஆயிரம் வருஷங்களுக்குள்; “என்னைப் பின்பற்றுகிற நீங்கள் மறுஜென்ம காலத்திலே இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க் கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள்.” எவ்விதம் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதை நீங்கள் பார்ப்பதற்காக, “காலத்திலே” என்ற சொல்லை நான் குறித்திருக்கிறேன். இந்த ஆசீர்வாதம் இஸ்ரயேலிலிருந்து புறப்பட்டு பூமியிலுள்ள வம்சங்கள் அனைத்திற்கும் சென்றடையும்.

## மரணம் - இது உலகளாவியதா?

### கே: 208:1 :: கேள்வி (1911) - 1

மரணம் பற்றிய விஷயத்தில், எல்லோரும் மரணமடைவார்களா? யோவான் 8:51ம் வசனம் கூறுகிறது, “ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.”

**பதில்:** மனுஷனுக்கு மரணம் என்பது, முழுமையான பார்வையில் மரணம் என்பது அழிவைக் குறிக்கிறது, அதாவது ஆதாமின் மரணம் - முதல் மரணத்திலிருந்து மீட்பு பெறுவதற்கான ஒரு ஏற்பாட்டை தேவன் இரக்கமாகவும், தயவாகவும் செய்திருக்காவிட்டால், முதலாம் மரணமும் இரண்டாம் மரணத்திற்கு ஒப்பானதாகவே இருந்திருக்கும். ஆதாமின் மரணத்திலிருந்து எல்லோரையும் மீட்ட பிறகு, தேவன் மரணத்தை முழுமையான பார்வையில் பேசமாட்டார்; இயேசு கூறியபடி, மற்றும் தேவனுடைய வார்த்தை பொதுவாக அவர்கள் நித்திரையி லிருக்கிறார்கள் என்ற எண்ணத்தையே. அளிக்கிறது. லாசருவைப் பற்றி இயேசு கூறுகையில், நமது சிநேகிதன் லாசரு நித்திரையிலிருக்கிறான் என்றார். உயிர்த்தெழுதலின் காலையில் ஒரு விழிப்பு உண்டாயிருக்கும், லாசரு நசுக்கப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்டு, முற்றிலும் அழிந்து போனான் என்ற பார்வையில் அவன் உண்மையில் மரணமடையவில்லை; அவன் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொண்டால், நித்திய ஜீவனைப் பெறுவதற்கான வாய்ப்பு அவனுக்கு கிடைக்கும். இது மீட்பினாலும், மரித்தோரின் உயிர்த்தெழுதலினாலும் ஆதிகாலந்தொட்டு அவனுக்காக தேவனுடைய ஏற்பாடாக இருக்கிறது. இயேசு சீஷர்களிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, அவர்கள் கூறினார்கள், “லாசரு நித்திரையடைந்திருந்தால், சுகமடைவான்.” பிறகு இயேசு அவர்களிடம் வெளிப்படையாகச் சொன்னார், “லாசரு மரித்துப் போனான்.” ஆனால் அவர் மரணத்தைப் பற்றி அவர்கள் பேசும் பாணிக்கு இறங்குவரும் விதத்தில், இயேசு வெளிப்படையான சொற்றொடரை மட்டும் உபயோகப்படுத்தினார். மரணத்தைப் பற்றிப் பேசும் அவருடைய சொந்த பாணியில்,, லாசரு வெறுமனே தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்; அவன் மரிக்கவில்லை, ஒரு நாய் இறக்கும்போது எப்படி இருக்கிறதோ, அதே மாதிரி தான், அழிவினக் கொண்டுள்ள மரணத்தின் நிலையும் உள்ளது. இப்போது மனுஷனை மரணத்திலிருந்து

மீட்பதற்காக தேவன் ஏற்பாடு செய்திருக்காவிட்டால், மனுஷனுடைய மரணமும் மற்றும் நாயினுடைய மரணமும் ஒரே மாதிரியான நிலைமையிலேயே இந்த இரண்டு சிருஷ்டிகளும் விடப்பட்டிருக்கும். தேவன் நாயை மீட்பதற்கும் அல்லது நாய்க்கு எதிர்கால ஜீவன் எதையும் தேவன் ஏற்பாடு செய்திருக்கவில்லை. ஆகவே இயேசு கூறினார், "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை." அவன் நித்திரை அடைவான். ஆனால் அவன் நிச்சயமாக விழித்தெழுப்பப்படுவான். மற்றும் பிறகு அவன் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொண்டு, அந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நித்திய ஜீவனை அவன் பெறுவான்.

## மரணம் - தீமையில் இறப்பவர்கள்.

### கே: 208:2 :: கேள்வி (1911) - 2

கர்த்தருடைய அறிவை ஒருபோதும் பெற்றிருக்காமல், அவர்களுடைய தீமையில் இறக்கிற ஜனங்களுக்கு என்னவாகும்?

**பதில்:** நல்லது, என் அருமை நண்பர்களே, ஒருவன் தன்னுடைய தீமையில் மரிக்கும் போது என்ன நடக்கும்? தன்னுடைய தீமையில் மரிக்காதவன் யார்? உலகம் முழுவதிலும் நீதியுள்ளவர் எவரேனும் இருக்கிறாரா? நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என்று வேத வாக்கியங்கள் சொல்லவில்லையா? இதையே அடிப்படையாகக் கொண்டு நாம் சொல்லலாம்: தேவனைப் பற்றிய அறிவில் வந்தடைந்து, தெய்வீக கிருபை மற்றும் சிலாக்கியத்தின் பகுத்துணர்வைப் பெற்று, கர்த்தரிடத்தில் தங்களுடைய முழு அர்ப்பணிப்பைச் செய்து, புதிதான ஜீவனுக்கு, கர்த்தருடைய பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிற இந்த ஒரு சிறு வகுப்பார் மட்டுமே தேவனுடன் இப்போது இணக்கமாகக் கொண்டுவரப்பட்டு, அவர்கள் மரிக்கும்போது, இவ்விதமாக இப்போது இரட்சிக்கப்படுகிறவர்களாகக் குறிக்கப்படுகிறார்கள். அவர்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து வந்திருக்கிறார்கள் மற்றும் அவர்கள் அதில் தரித்திருந்தால், உலகத்தாரின் மீதியான மற்றவர்கள் எல்லோரிடமிருந்து வித்தியாசமான நிலையில் அவர்கள் இருப்பார்கள். ஆனால் உலத்தின் மீதியான மற்ற அனைவரும், அவர்கள் எப்போதும் இருக்கிறபடியே சாகும் நிலைமையிலேயே இருக்கிறார்கள்.

இப்போது, தீமை எதை உள்ளடக்கியுள்ளது?

இது வெறுமனே உங்களுக்குள்ளே இருக்கின்ற தீமையின் கூறு அல்ல, ஏனெனில் நீங்கள் அதனுடன் பிறந்திருக்கின்றீர்கள். நாம் பாவத்தில் பிறந்தோம், நாம் துர்க்குணத்தில் உருவானோம். நம்முடைய தாய்மார்கள நம்மை பாவத்தில் கர்ப்பந்தரித்தார்கள். இந்த வழியில் பிறப்பது தீமை இல்லை, இது சரி தானே? நீங்கள் பூரணமற்ற நிலையில் பிறந்தீர்கள். ஆனால், ஒரு தனி மனுஷன் கொண்டிருக்கும் பொல்லாங்கானவற்றை, ஒரு நபரின் நடத்தை மற்றும் மனநிலையில் வேண்டுமென்றே செய்தல் மற்றும் மூர்க்கத்தன்மையை, தேவனுக்கு விரோதமாக போராடுவது, சத்தியத்திற்கு விரோதமாக போராடுவது மற்றும் நீதிக்கு விரோதமாக போராடுவது ஆகியவற்றையும் குறிப்பிடும் விதமாகவே தீமை என்ற பதம் பொதுவாக உபயோகப்படுத்தப் படுகிறது. இது தான் தீமை ஆகும். கிறிஸ்துவின் உறவுக்குள் இப்போது எந்த நபராவது வந்தால், அவருடைய பகுத்தறியும் கண்கள் திறக்கப்பட்டால், மற்றும் பின்பு அவர் கெட்ட மனுஷனாக மாறினால், கர்த்தரிடமிருந்து விலகி பாவத்திற்குள் சென்றால், "நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது" என்று பேதுரு அப்போஸ்தலர் கூறும்விதமாக, எந்த ஒரு மனுஷனும், வேத வாக்கியங்கள் சொல்கின்றன, தேவனிடமிருந்து இனிமேல் எந்த கிருபையையும் பெற முடியாது மற்றும் எந்த வழிவகையினாலும் எந்த காலத்திலும், எந்த முறையிலும் திரும்பப் பெறாதபடி, அவனுடைய மரணம் இரண்டாம் மரணமாக இருக்கும். பரிசுத்த பேதுரு கூறுவது போன்று, ஒரு மிருகம் எப்படி அழிந்து போகிறதோ, அதே பார்வையில் தான் அவனும் மரித்தவனாகிறான்.

கர்த்தரிடத்தில் இப்போது வரக்கூடியவர்களும், கேட்கிறதற்குக் காதுள்ளவர்களும், பார்க்கிறதற்கு கண்கள் உடையவர்களும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறவர்களுமாகிய வகுப்பாருக்கு மட்டுமே அது இப்போது உரித்தாகிறது. இது மற்ற எவருக்கும் உரியது அல்ல. மனுக்குல உலகத்தாருக்கு என்னவாகும்? நல்லது, ஆயிர வருஷ யுகத்தில், மேசியாவின் காலப்பகுதியில், கர்த்தரைப் பற்றிய அறிவினால் பூமி நிரம்பியிருக்கும் போது, மற்றும் மனுக்குலம் அனைத்தும் தேவனுடன் இணக்கமாகத் திரும்ப வருவதற்கான முழுமையான வாய்ப்பைப் பெறும்போது, யாரேனும் அப்போது தீமையை நேசிப்பவராக மற்றும் நீதியை வெறுப்பவராக இருப்பவர் - எல்லாவற்றிற்கும் மேலாக, யாரேனும் நீதியை நேசிக்காமல் மற்றும் பாவத்தை வெறுக்காமல் இருப்பவர்கள் - இரண்டாம் மரணத்தில் இறப்பதற்குத் தகுதியானவராகக் கணக்கிடப்படுவார்கள். அவர்களுக்கு இது போன்ற வாய்ப்பு இனிமேல் இருக்காது. ஆகவே நீதியும் பூரணத்துவமும் நித்திய ஜீவனுக்கான தேவனுடைய தரநிலை ஆகும், மற்றபடி எதுவுமில்லை. தற்காலத்தில் விசுவாசத்தினாலும் மற்றும் கிறிஸ்துவின் புண்ணியம் செலுத்தப்படுவதாக எண்ணப்படுவதினாலும் பெறப்படுகிற நீதி, அல்லது கிறிஸ்துவின் ஆட்சியின் ஆயிர வருஷங்களில், உலகத்தார் தம்முடைய அசுத்தம் மற்றும் பூரணமற்ற நிலையிலிருந்து படிப்படியாக வெளியே வந்து, பெறக்கூடிய உண்மையான நீதியாக இருப்பினும், இதில் எதுவாயினும் சரி - இப்படிப்பட்ட நீதிக்கு எதிராக யாரேனும் பாவம் செய்பவர், வேண்டுமென்றே செய்யும் பாவியாகவும், கெடுதியான வன்மம் கொண்ட பாவியாகவும் இருப்பார் மற்றும் இவர் இரண்டாம் மரணத்தில் இறப்பார்.

## மரணம் - ஆதாமிற்குள்ளான மரணம் எப்போது மறையும்?.

### கே: 209:1 :: கேள்வி (1912) - 1

மகா உபத்திரவ காலத்திற்குப் பின்னர், ஜனங்கள் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து மரிப்பார்கள்?

**பதில்:** சிலர் சொற்ப காலத்திற்கு தொடர்ந்து மரிப்பார்கள். இது எவ்வளவு காலம் என்பதை நான் துல்லியமாக அறியவில்லை. இந்த விஷயம் எந்த முறையில் தெரிய வருகிறது என்பது இப்படி உள்ளது: இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது, அந்த இராஜ்யத்தைப் போற்றுபவர்களில் முதன்மையானவர்களாக முற்பிதாக்கள் இருப்பார்கள். அவர்கள் தேவனுடன் முழுமையான இணக்கத்தில் இருப்பார்கள் மற்றும் கல்லறையிலிருந்து பூரண நிலையில் வெளிக்கொண்டு வரப்படுவார்கள். இராஜ்யத்தைச் சார்ந்த எல்லா விஷயங்களைப் பற்றி அவர்கள் முழுவதுமாக அறிவுறுத்தப்படுவார்கள் மற்றும் போதிக்கப்படுவார்கள். அவர்கள் மனுஷர்களின் மத்தியில் எவ்வளவு காலம் இருப்பார்கள் என்பதை நான் அறியவில்லை. முற்பிதாக்கள் விஷயங்களைப் புரிந்து கொள்ளவும், பாராட்டவும் முற்பிதாக்களுக்கு மிகவும் குறைந்த காலம் மட்டும் தேவைப்படுகிறது என்று நாம் அனுமானிக்க வேண்டியிருக்கிறது. ஆயினும், நமக்குள் உள்ள குறைபாடுகள் போன்று, அவர்களுக்கு அவ்வித தடங்கல்கள் இருக்காது. ஆகவே ஒப்பிட்டுப் பார்க்கையில், விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கு குறைந்த காலமே அவர்களுக்குத் தேவைப்படும். மகா உபத்திரவ காலத்தில், "யாக்கோபின் இக்கட்டுக்காலத்தில், "அவன் அதற்கு நீங்கலாகி, இரட்சிக்கப்படுவான்." மிகுந்த புலம்பல் உண்டாகும், ஆனால் உலகம் அனைத்தும் மிருதுவான - இதயம் கொண்ட நிலைமையிலிருக்கும்; அதிலும் குறிப்பாக யூதர்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பார்கள் மற்றும் அவர்கள் சூழ்நிலையை வெகு சீக்கிரமாக கிரகித்துக் கொள்வார்கள் மற்றும் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தின் உட்கருவாக அமைந்திருப்பார்கள். இராஜ்யம் இஸ்ரயேல் தன்மையில் கொஞ்ச காலத்திற்கு இருக்கும்; இந்த வரிசையில் வரும் முதலாவது ஜாதி, மற்ற ஜாதிகள் அனுபவித்திருந்ததற்கு மேலாக பெரும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், கிருபையையும் பெற்றுக்கொள்ளும். மற்றும் தேவனுடைய இராஜ்யம் என்று அழைக்கப்படும் இந்த இராஜ்யம் என்னவாயிருக்கும் என்பதைத் துவக்கத்தில் பார்க்க அவர்களுக்கு அதிகமான காலம் பிடிக்காது. யூத ஜாதியின் மேல் உள்ள ஆசீர்வாதங்களை இந்த ஜாதிகள் பார்க்கும் போது, அவர்கள் கூக்குரலிடுவார்கள்: "நாம் கர்த்தரின்

பர்வதத்துக்குப் போவோம், வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்." அப்போது செயல்பாட்டில் இருக்கும் புதிய உடன்படிக்கை மூலமாக தேவனுடன் முழு இணக்கமாக வரும் எல்லோருக்கும், ஆதாமின் நிலைமைகள் அனைத்தும் விலகிப்போக ஆரம்பிக்கும். அவர்கள் நோயிலிருந்து சொஸ்தமாகத் துவங்குவார்கள். ஆரோக்கியம் மற்றும் வலிமையின் பூரணத்துவத்தை அவர்கள் லாபமாகப் பெறுவார்கள். நித்திய ஜீவன் அவர்களுக்கு சாதகமான நிலைமைகளில் வரத் தொடங்கும். இந்த சாதகமான நிலைமைகளுக்குள்ளாக அவர்கள் வர முடிவதற்கான ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது, அவர்கள் "இஸ்ரயேலர்களாக" மாற வேண்டும். புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் ஆபிரகாமின் பிள்ளைகளுக்கு உரியது. விசுவாசிகள் எல்லோருக்கும் அவர் தகப்பன். ஆகவே தேவனிடத்தில் விசுவாசம் கொள்ளும்போது, அவர்கள் உண்மையாகவே ஆபிரகாமின் பிள்ளைகளாகிறார்கள். ஆபிரகாமின் குடும்பம் ஆயிரம் வருஷங்களின் இறுதி வரையிலும் வளர்ந்து கொண்டே இருக்கும். பிறகு அவர்கள் "கடற்கரை மணலத்தனையாக" எண்ணிக்கையில் இருப்பார்கள். அந்த குடும்பத்தோடு இணக்கமாக வருவதற்கு மறுப்பவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். எல்லோரும் "ஆபிரகாமின் பிள்ளைகளாக இருக்க வேண்டும்", இதன் பொருள் என்னெவெனில், அவர்கள் எல்லோரும் "தேவனுடைய பிள்ளைகளாக" இருக்க வேண்டும். இராஜ்யத்தில் இந்த உட்கருவில் இருக்கிறவர்களைத் தவிர, உலகத்திலுள்ள மற்ற அனைவரிடத்திலும் மரணம் தொடர்ந்து செயல்படும். இந்த பூமியின்மேல் அப்போது மனுஷர்களிடத்தில் நிலவும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இந்த ஆசீர்வாதங்கள் அந்த உட்கருவிலிருந்து இறுதியாக விரிவடையும்.

## மரணம் - ஏசாயா 26:14ல் செத்தவர்கள் யார்?

### கே: 210:1 :: கேள்வி (1912) - 1

தயவுசெய்து ஏசாயா 26:14ம் வசனத்தை விளக்கவும்: அவர்கள் செத்தவர்கள், ஜீவிக்கமாட்டார்கள்; மாண்ட ராட்சதர் திரும்ப எழுந்திரார்கள்; நீர் அவர்களை விசாரித்துச் சங்கரித்து, அவர்கள் பேரையும் அழியப்பண்ணினீர்."

**பதில்:** இந்த வசனம் மனுக்குலத்தைக் குறிக்கின்றது என்று எண்ணுகிற சிலர் உள்ளனர். அவர்கள் இந்த வசனத்தை உபயோகப்படுத்தி மற்ற வசனங்களை எறிந்துவிடுகின்றனர். ஒரு வசனத்தினால் மற்ற வசனங்களைத் தூக்கியெறிய நாம் முயற்சிக்கக்கூடாது. வேதாகம வசனங்கள் ஒவ்வொன்றையும் ஒன்றுக்கொன்றுடன் முழுமையான அளவில் முற்றிலும் இணக்கமாகக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிறவர்களாகவே இருக்க வேண்டும். இங்குள்ள ஒரு வசனம் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகளுடன் முரணாக இருப்பது போன்று தோன்றுகிறது. ஒரு கணம் இந்த வசனத்தைக் கவனியுங்கள். இங்கே குறிக்கப்பட்டுள்ள வகுப்பாரின் மிகவும் விசேஷித்தமான விவரிப்பை இங்கு நாம் பார்க்கிறோம். இந்த விவரிப்பு உலகத்தில் தற்காலத்தைச் சேர்ந்த "ராட்சதர்களுக்கு" பிரயோகப்படுத்தப்படுகிறது. அதிசயத்தக்க வல்லமை உடையதாய் இருக்கும் மாபெரும் ராட்சத அறக்கட்டளைகள் மற்றும் நிறுனங்களை இது குறிக்கின்றது. இவைகள் எல்லாம் ஒன்றாக வருகின்றன. இவைகள் தற்காலத்தில் எப்படிப்பட்ட வல்லமையைக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டாலும், அவைகள் தாழ்வடையப் போகின்றன. அவைகள் செத்துப்போகும், அவைகள் அழிந்து போகும். இந்த வசனம் இத்தகைய வகுப்பைக் குறிக்கின்றது.

## மரணம் - அகராதி சொற்பொருள் விளக்கம்.

### கே: 211:1 :: கேள்வி (1912 - Z) - 1

மரணம்" மற்றும் "அழிவு: - இவைகளுக்கு இடையே என்ன வித்தியாசம் உள்ளது?

**பதில்:** இது போன்ற விஷயங்களில் நம்முடைய சிறந்த அதிகாரப்பூர்வமான அகராதி (The Standard Dictionary), "அழிவு" என்ற பதத்திற்கு கீழ்கண்ட சொற்பொருள் விளக்கம் தருகின்றது. (1)

தொடர்ந்து வாழ்வதை எடுத்துப் போடுதல்; முற்றிலும் அழித்துப் போடுதல்; ஒன்றுமில்லாததாக்கி விடுதல்; (2) அடையாளத்தை அழித்தல். இதற்கான இணைச்சொல், "நிர்மூலமாக்குதல்", அதாவது, முழுவதுமாக நாசமாக்குதல்; சொற்கள் எண்ணத்தைக் கொண்டுசெல்லும் ஊர்திகளாக மட்டுமே இருக்கின்றன மற்றும் கேள்வியிலுள்ள உங்களுடைய அர்த்தத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஊர்தியைச் சார்ந்து இது இருக்கிறது. தேவன் ஆதாமுக்கு விலங்கின் ஆற்றலின் சுடர்பொறியை (sperm) கொடுத்தார் மற்றும் அவன் இதை தன்னுடைய பிள்ளைகளுக்கு வழங்கிவிட்டான். ஆனால் அவனுடைய கீழ்ப்படியாமையினால், இது அவனிடமிருந்தும், அவனுடைய சந்ததியாரிடமிருந்தும் பறிமுதல் செய்யப்பட்டு, மூர்க்கமான விலங்கிடம் நடப்பதைப் போலவே, தனிப்பட்ட மனிதரிடமிருந்து அவருடைய மரணத்தில் இது கடந்து போகிறது. இருப்பினும். "ஜீவன்" என்ற சொல், பெரும்பாலான தருணங்களில் உபயோகப்படுத்தப்படுவது போல, வெறும் விலங்கின் ஆற்றலின் சுடற்பொறியை (sperm) மட்டும் குறிக்காமல், <u>ஆத்துமா, அல்லது உயிரோடு இருத்தலுக்கு</u> உள்ள இணைச்சொல்லாக இருக்கின்றது.

தேவனுடைய நோக்கம், அல்லது ஏற்பாட்டில், இந்த <u>உயிரோடிக்கும் தன்மை</u> (BEING) மரணத்தில் அணைந்து போவதோ, அடியோடு களைந்து போவதோ, முற்றிலும் அழிக்கப்படுவதோ இல்லை; ஏனெனில் தேவன் இதை எதிர்காலத்திற்காக ஏற்பாடு செய்திருக்கிறார். எனினும், மனசாட்சியின் உணர்வு அல்லது அறிவு அல்லது வலி மற்றும் சந்தோஷத்தை உணர்வது, அல்லது வேறு எந்த அனுபவம் சார்ந்த புலனறிவு எதுவும் இருப்பதில்லை. ஆனால் இந்த உயிரோடிருக்கும் தன்மையை முதலில் கொடுத்த தெய்வீக சிருஷ்டிகர், ஆதாம் மற்றும் அவனுடைய பிள்ளைகளின் விஷயத்தில், அவர்கள் மரண தண்டனைக்குள்ளாக வருவதற்கு முன்னர் இருந்த அந்த நிலையை ஒரு மீட்பர் மூலமாக அனைத்தையும் முழுவதுமாகத் திரும்பவும் பெறுவதற்கான ஏற்பாடு செய்வது அவருடைய நோக்கமாயிருந்தது என்று தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தேவன் மற்றும் அவருடைய வல்லமையை அங்கீகரிக்காதவர்கள், கிறிஸ்துவின் மீட்பின் பணியாகிய புண்ணியத்தின் வாயிலாக இருக்கும் உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தத்தைப் பற்றி அறிவு இல்லாதவர்கள், ஒருவர் மரணத்தைப் பற்றி பேசும்போது, செத்துப்போன மிருகத்தைப் போலவே, மனுஷன் முற்றிலுமாக அழிந்து போவதாக கூறுகிறார்கள். இது தேவன் உண்டு என்பதைக் கண்டறிய முடியாது என்ற கொள்கை உடையவர்களின் நிலைப்பாடு இதுவே. ஆனால் தேவன் தம்முடைய நோக்கத்தை கிறிஸ்துவிலும், இதன் விளைவாக மரித்தோரின் உயிர்த்தெழுதலிலும் மற்றும் ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனுக்கான வாய்ப்பிலும் வைத்திருக்கிறதைப் பற்றி தேவனால் போதிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளினால், இந்த விஷயத்தை நம்முடைய கர்த்தர் எவ்விதமான கண்ணோட்டத்தில் இருந்தாரோ, அதே நிலைப்பாட்டில் தான் இது உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். இயேசு கூறினார், "அவர் <u>மரித்தோரின்</u> தேவனாயிராமல், <u>ஜீவனுள்ளோரின்</u> தேவனாயிருக்கிறார்; எல்லோரும் அவருக்குள் <u>பிழைத்திருக்கிறார்கள்.</u> (லூக்கா 20:38); இதைப் பற்றி பவுல் அப்போஸ்தலர் பேசும்போது, கூறுகிறார், "மரித்தோரை உயிர்ப்பித்து, <u>இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல்</u> அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்." (ரோமர் 4:17.) அதாவது, தேவன் அவர்களுடைய உயிர்ப்பில் நோக்கமுடையவராய் இருக்கிறார் மற்றும் ஆதாமின் மரணத்தில், தற்போதைய நிலைமை வெறுமனே ஜீவன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், இது முற்றிலும் அழிக்கப்படுவதோ, அடியோடு களைந்து போவதோ, மறைந்து போவதோ <u>கிடையாது</u>.

நீங்கள் உங்கள் லைப்ரரியில் யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு என்ற சிறு வால்யூமை ஏற்கனவே வைத்திருப்பீர்கள். இப்போது நான்காவது மில்லியன் பிரதிகள் அச்சில் இருக்கின்றது. இந்தப் பத்தியில் வரையறுக்கப்பட்ட அளவான இடம் அனுமதிப்பதைக் காட்டிலும், உங்கள் கேள்விக்கு மிகவும் முழுமையான பதிலை வால்யூம் உங்களுக்கு அதிகமாகக் கொடுக்க இயலும்.

## மரணம் - நம்முடைய ஜீவனை ஒப்படைத்து, நாம் அனுதினமும் சாகிறோம்.

## கே: 2012:1 :: கேள்வி (1912 - Z) - 1

"இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது" - 2 கொரி. 4:12. இந்த அறிவிப்பில் அப்போஸ்தலரின் கருத்து என்னவாயிருக்கிறது?

**பதில்:** சத்தியத்தின் மீதான ஈடுபாடு காரணமாக, பரிசுத்த பவுலும் அவருடைய உடனாளிகளும் பிரயாணம் பண்ணிய போது அனுபவித்த உபத்திரவங்களை பரிசுத்த பவுல் குறிக்கிறார் என்று நாம் புரிந்து கொள்கிறோம். அடக்குமுறைகள், துன்பங்கள், சோதனைகள் உட்பட, இவைகள் எல்லாம், தேவன் அவர்களுடைய பலியை ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதற்கான சாட்சியங்களாக இருந்தன. இப்படியாக, "நான் அநுதினமும் சாகிறேன்" என்று அவர் ஒரு இடத்தில் கூறும்விதமாக, அவர்களுடைய மரணம் நடந்து கொண்டு இருக்கிறது. இந்த அறிவிப்பில் அவர் குறிக்கோளை, அதாவது, உள்நோக்கத்தை வெளிப்படுத்தியது, அவரையும் அவருடைய உடனாளிகளையும் செயல்படுத்துவதற்குத் தூண்டியது. அவர்கள் செய்தவை, சிரத்தையற்ற முறையில் செய்யப்பட்டவை அல்ல, ஏனெனில் அவர்கள் பொதுவான குறிக்கோள் கொண்ட பணித்திட்டத்தை உடையவர்களாக இருந்தனர், அவர்கள் சபைக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதற்கான இதயப்பூர்வமான குறிக்கோளுடன், தேவனுடைய சித்தத்திற்கு இணக்கமாக இருந்தனர். அப்போஸ்தலர்கள் சத்திய ஊழியத்தில் மிகவும் செயல்திறனுடையவர்களாக இருந்தனர் என்பதை ஆதிச்சபை உணர்ந்திருந்தது; அவர்களுடைய குறிக்கோள் தன்னலமற்ற ஒன்றாக இருந்தது என்று பரிசுத்த பவுல் விவரித்தார். தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ள வேண்டாம் என்றும், அவரும் அவருடைய உடனாளிகளும் செய்துகொண்டிருந்தது போல, மந்தைக்கு முன்மாதிரிகளாக, ஒவ்வொருவருக்காகவும், தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று சபையினருக்கு அவர் அறிவுரை கூறினார். இராஜரீகமான ஆசாரியத்தவத்தின் அங்கங்களாக இருக்கிறவர்கள் இந்த ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கிறவர்களாக இருக்கிறார்கள். இப்படியாக நாம் புதிய எருசலேமுக்கு வரும் வரையிலும், "மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதிப்படுத்திக் கொள்கிறவர்களாக" இருக்கிறோம்! - அபிஷேகம் பண்ணப்பட்டவரும், மாபெரும் தீர்க்கதரிசியும், ஆசாரியரும் இராஜாவுமாகிய இந்த உத்தியோகத்தின் மாபெரும் பிரதான ஆசாரியராக இருக்கிறவராகிய இயேசுவின் மகிமை பொருந்திய இராஜ்யமே இந்த புதிய எருசலேம்!

நமது கர்த்தர் அறிவித்தார், "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்"; "உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்." (எபி. 10:9; சங். 40:8). ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியார் எல்லோரின் சார்பாக, கர்த்தர் இறுதியில் கொடுப்பதற்காக, தம்முடைய ஜீவனை ஒப்படைப்பதும், தம்முடைய பலியை நிறைவேற்றுவதும் தெய்வீக சித்தத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

## மரணம் - ஆதாமிற்குள்ளானதா, அல்லது பலியினாலா?

## கே: 212:2 :: கேள்வி (1913 - Z) - 2

ஜலப்பிரளயம், அக்கினி போன்ற இயற்கையின் சில அமளிகளினால் தேவனுடைய அர்ப்பணிப்புக்குள்ளான பரிசுத்தவான்களில் ஒருவர் மரித்தால் - இப்படிப்பட்ட மரணம் பலியினால் ஆனதா? அல்லது ஆதாமிற்குள்ளான மரணமா?

**பதில்:** தேவனுடைய அர்ப்பணிப்புக்குள்ளான பிள்ளை ஆதாமின் மரணத்தை அடைய முடியாது. அவருடைய மரணம் பலியின் மரணமாகவோ, அல்லது இரண்டாம் மரணமாகவோ இருக்கும். அவர் இறந்த போது தேவனுடைய அர்ப்பணிப்புக்குள்ளான பிள்ளையாக இருந்தால், அவர் தான் ஏற்கனவே ஆற்றியிருந்த அர்ப்பணிப்பின் நிறைவாகவே இருக்கும். மரணம் எந்த முறையில் வந்தாலும், நம்முடைய ஜீவன் மாபெரும் பிரதான ஆசாரியரால் பரிசுத்தமாக்கப்பட்டதாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கிறது. ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில், தேவனுடைய அர்ப்பணிப்புக்குள்ளான இந்த பிள்ளை அவரிடமிருந்து

விலகிப் போனால், அப்பொழுது இது இரண்டாம் மரணமாக இருக்கும். அவர் ஆழ்ந்து ஆராய்ந்து, வேண்டுமென்றே பாவம் செய்தால், அவர் “மரணத்துக்கு ஏதுவான பாவம்” செய்தவராகிறார். 1யோவான் 5:16,

## மரணம் - மரண பயம்.

### கே: 212:3 :: கேள்வி (1913) - 3

இனிவரும் யுகத்தில் பூரணராக்கப்படும் போது, மனுக்குல குடும்பத்தில் இரண்டாம் மரணம் பற்றிய பயம் வெளிப்படையாக இருக்குமா, அல்லது, பாவத்தை நடைமுறை வழக்கமாகக் கொள்வது சாத்தியமா?

**பதில்:** ஆயிர வருஷ யுகத்தின் முடிவில், சாத்தான் அழிக்கப்பட்ட பின்பு, பாவம் நடைமுறைப்படுத்தப்படாது என்பது கர்த்தரின் நோக்கமாக இருக்கும் என்பது எங்களுடைய புரிந்துகொள்ளுதல் ஆகும். இது முற்றிலுமாக பாவத்தின் முடிவையும், முற்றிலுமாக மரணத்தின் முடிவையும் அர்த்தப்படுத்துகிறது - குறைந்த பட்சம் மனுஷீகம் மற்றும் பூமியைப் பொருத்த வரையில், தேவன் காரியங்களை உச்சக்கட்டத்திற்குக் கொண்டுபோவதற்குமுன், நித்திய ஜீவனை யார் பெற்றுக்கொள்வார்கள் என்பதை முடிவு செய்வதற்கு முன், அவர்கள் ஏதாவது பாவத்தின் மேல் நேசம் கொண்டிருக்கிறார்களா, அல்லது இல்லையா என்பதை நடத்திக்காட்டுவதற்கான இப்படிப்பட்ட ஆய்வை மேற்கொள்ள தேவன் விருப்பமாயிருக்கிறார். பாவத்தின் மேல் ஏதேனும் நேசம் கொண்டிருக்கிற எவரும் அவர்கள் விரும்பும் எல்லா பாவத்தையும், அவர்கள் விரும்புகிற எல்லா தண்டனையையும் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் தேவன் அவர்களை விரும்புகிறதில்லை. நீதியை நேசிக்கிறவர்களையும், அக்கிரமத்தை வெறுக்கிறவர்களையும் தேவன் விரும்புகிறார்; அந்த வகுப்பாருக்கு மட்டுமே ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. பாவங்கள் கண்டுபிடிக்கப்பட்ட எல்லோரும் இரண்டாம் மரணத்தில் தண்டிக்கப்படுவார்கள்; ஆகவே தேவனிடம் முழுமையாக இணக்கமாய் இருப்பவர்களைத் தவிர, வேறு எவரும் அந்த காலத்திற்கு அப்பால் ஜீவனோடு இருக்க முடியாது என்பதும், ஆகவே இரண்டாம் மரணம் பற்றிய பயம் இருக்காது என்று இது உத்திரவாதம் அளிக்கிறது.

## மரணம் - இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு ஆதாமுக்குள்ளான மரணம்.

### கே: 213:1 :: கேள்வி (1913) - 1

மேசியாவின் இராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, ஆதாமின் மரணத்துக்குள்ளாக மேலும் சாவு ஏதும் இருக்குமா?

**பதில்:** “பூமியில் ஸ்தாபிக்கப்படும்” என்ற சொற்றொடருக்கு நாங்கள் சொல்லும் அர்த்தத்தின் நிறையைச் சார்ந்ததாக சில விஷயம் இருக்கின்றது என்று நான் நினைக்கிறேன். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டு இருப்பது சில காலம் ஆகும். இதனுடைய நிலைநாட்டுதலுக்கு காலம் பிடிக்கும். ஏனெனில், இந்த விஷயத்தை நான் புரிந்துகொண்டபடி, ஜனங்கள் இராஜ்யத்தை ஏற்றுக்கொள்வதற்கு தயாராகும் போது, அவர் இதை ஸ்தாபிக்க விரும்புவார். அந்த கணம் வரும்போது, உலகத்தை ஆதிக்கம் செலுத்தி, அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது, திரளான ஜனங்கள் இருப்பார்கள்; ஆயிரமானவர்களும், பதினாயிரமானவர்களும் உண்மையான அறிவைப் பெற்றிருக்கமாட்டார்கள், மற்றும் அந்த அறிவு அவர்களிடம் வந்துசேருவதற்கு ஒருவேளை சிறிது காலம் பிடிக்கும். வாரங்கள், மாதங்கள், ஒருவேளை வருஷங்கள் - வருஷங்களை சொல்லும் விதமாக நான் அறியவில்லை, ஆனால் மிகுதியான அளவு காலம் பிடிக்கும் - தெளிவாக, நான் வேதாகமத்தை வாசிக்கும் போது, இது ஒழுங்குமுறையாக செயற்படுத்தப்படும். எஜமானரையும், இராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு சில வகுப்பார்கள் இருப்பார்கள்; உதாரணமாக, ஒரு வகுப்பாராக முற்பிதாக்களும், இராஜ்யத்துடன் இணக்கமான உணர்வு கொண்டு, கர்த்தரைப் பற்றிய அறிவு பெற்றிருக்கும் சில

மற்ற நபர்களும், இவர்களுடன் யூதர்களும், விரும்பி வரும் யூதர்களும் இருப்பார்கள். அவர்களில் அநேகர் தயாராக ஒருங்கிணைந்த நிலையில் இருப்பார்கள். இவர்கள் கூறுவார்கள், "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் எல்லா தீர்க்கதரிசிகளும் இங்கே இருக்கிறார்கள் மற்றும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது, நாம் ஒருங்கிணைந்து நிற்போம்; மேசியாவின் இராஜ்யம் வரும்போது, நாம் இதனுடன் இணக்கமாயிருக்க நாடுவோம்." யூதர்கள் மேல் ஆசீர்வாதம் வரும்போது, கட்டுப்பாடு செயல்படுவதால், அவர்களை மேம்பட்டவர்களாக, மென்மேலும் மேம்பட்டவர்களாக்கப்பட்டு, அவர்களுடைய அறுவடையில் ஆசீர்வாதமும், அவர்கள் மீது எல்லாவிதமான நற்காரியங்களும் வரும்போது, மற்றவர்கள் கூறுவார்கள், "ஏன், இந்த யூதர்கள் இதையெல்லாம் பெற்றிருக்கிறார்கள்." மற்றும் அவர்கள் கூறுவார்கள், "நாம் கர்த்தரின் பர்வதத்துக்குப் போவோம், வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்." யூதர்களைப் போன்றே, ஏனெனில், "சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." மற்றும் இது பூமியின் கடையாந்தரங்களுக்கு சென்றடையும். ஆனால் வேதாகமம் சுட்டிக்காட்டுகின்ற, அவர்களை மனமேற்கும்படி செய்ததற்கு, இந்த அறுவடையின் ஆசீர்வாதங்கள் போன்றவை வர சில காலம் பிடிக்கும்; ஒரு மோசமான அறுவடை அவர்களை மனமேற்கும்படி செய்யாது. ஒருவேளை அவர்கள் இரண்டு அல்லது மூன்றை பெற்றிருக்கும்போது, அவர்கள் கூறுவார்கள், "யூதர்கள் அவர்களின் வளத்திற்குக் காரணம், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த அவர்களுடைய தீர்க்கதரிசிகளில் சிலர் பின்னனியில் இருக்கிறார்கள் என்று இந்த யூதர்கள் சொல்கின்றனர். இது மூடத்தனம் ஆகும்." ஆனால் காலம் கடந்து போகும் போது மற்றும் ஆசீர்வாதங்கள் இன்னும் தொடரும் போது, அவர்கள் கூறுவார்கள், "மடமை, அல்லது அவ்வாறு இல்லாமல் இருந்தாலும், அவர்கள் முதல்தரமாகப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள்." அதற்குப் பின்னர், இது அவர்களுடைய ஜீவனைப் பாதிக்கும் போது, ஜனங்கள் மிகவும் தெளிவாக உணரத் தொடங்குவார்கள் மற்றும் இணக்கமாய் வருவார்கள். அவர்கள் இஸ்ரயேலர்களாக அடையாளப்படுத்தப்படுவார்கள்; அவர்கள் எல்லோரும் ஆபிரகாமின் சந்ததியாராக, இஸ்ரயேலர்களாவார்கள், ஏனெனில் ஆபிரகாமின் சந்ததியாராக பூமி அனைத்தையும் நிரப்புவார்கள். மற்றும் ஆபிரகாமின் சந்ததியாராக மாறாத ஒவ்வொருவரும் இரண்டாம் மரணத்திற்கு உட்படுபவர்களாக இருப்பார்கள். ஆகவே இது படிப்படியாக நடக்கும் பணியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்; இது பத்து வருஷங்கள் அல்லது அதற்கு அதிகமாக இருக்குமா என்பது பற்றி நான் அறியவில்லை. ஆனால் ஐந்து வருஷங்கள் என்பது நீண்ட காலமாக இருக்கும் என்று எண்ணக்கூடியவராக உள்ளேன். மேலும் அந்த நேரத்தில் உலகத்தில் மரணம் செயல்பட்டுக் கொண்டு இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்; பெலவீனத்தினாலும், வியாதியினாலும் இப்போது சாகிறது போலவே, ஜனங்கள் அப்போது சாவார்கள் மற்றும் இணக்கமாக வருபவர்களுக்கு மட்டுமே, இந்த மரணமடையும் நடைமுறையும், பெலவீனமும் கடந்துபோகத் துவங்கும். மற்றவர்கள் ஆதாமுக்குள்ளான மரணத்தில் இன்னும் மரித்துக்கொண்டு இருப்பார்கள்; அவர்கள் மரிக்கும் மரணத்திற்கும், அவர்களுடைய மூதாதையர் மரணமடைந்ததற்கும் வித்தியாசம் எதுவும் இருப்பதில்லை; பாவத்தின் விளைவாக வரக்கூடிய எல்லா மரணமும், எப்போது வரும்போதும், ஆதாமுக்குள்ளான மரணமாகவே இருக்கும். ஆகவே இது நூற்றாண்டுகளுக்கு இடையே வந்தாலும், இது இன்னமும் ஆதாமுக்குள்ளான மரணமாகவே இருக்கின்றது. பாவத்திலிருந்து விலகிப் போகிறவர்கள் எவருக்கும் கர்த்தரின் வாக்குத்தத்தம் உள்ளது, பிறகு அவர்கள் ஜீவனோடு இருப்பார்கள்; ஆனால் அவர்கள் பாவத்தை மேலானது என்று விரும்புவார்களானால், அவர்கள் மரணமடைவார்கள். இது அவர்களுக்கு இரண்டாம் மரணத்தைக் குறித்துக்காட்டுகிறது, ஏனெனில் அவர்கள் இராஜ்யத்துடன் ஒருங்கிணைந்து வருவதற்கு தவறிவிட்டார்கள் என்பதை இது அர்த்தப்படுத்துகிறது. இருப்பினும், இவர்களுக்கு நூறு வருஷங்கள் கொடுக்கப்படுகின்றன, உங்களுக்கு நினைவு இருக்கும், இதில் இவர்கள் வரம்பு மீறுகிறவர்களாயும், இருப்பினும் இரண்டாம் மரணத்திற்கு தகுதியுள்ளவர்களாக ஒப்புக்கொடுக்கப்படாதவர்களாக இருப்பார்கள்.

## மரணம் - நமது கர்த்தரின் மரணம் பலியின் மரணமா?

### கே: 214:1 :: கேள்வி (1913) - 1

நமது கர்த்தரின் மரணம் முழுவதுமாக பலியின் மரணமாயிருந்ததா? அல்லது அவர் மரணமடைய வேண்டும் என்று அவர் மீது பாவத்தை சுமத்தும் தேவை தேவனுக்கு இருந்ததா?

**பதில்:** நமது கர்த்தரின் மரணம் முற்றிலும் பலியினாலான ஒன்றாகும். பிதா அவர் மீது பாவத்தை சுமத்தினார் என்று வேதாகமம் சொல்வதாக நாங்கள் எதுவும் பார்க்கவில்லை; இது போன்று பாவம் சுமத்தப்படுதல் செய்ய வேண்டும் என்பதற்கான காரணம் எதையும் நாங்கள் பார்க்க இயலவில்லை. அவரைக் கொன்றவர் பிதா அல்ல; அவர் பாவி என்று பிதா கூறவில்லை; அவர் பாவி என்று சொன்னவர் ரோம ஆளுநர் ஆவார்; யூதர்கள் தான் அவருக்கு எதிராக முதலில் அறிவித்தார்கள் மற்றும் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற ஆளுநரை வற்புறுத்தினார்கள்; இந்த கண்டனம் எல்லாம் யூதர்களிடமிருந்தே வந்தது, தேவனிடமிருந்து எந்த கண்டனமும் வரவில்லை. தேவனுடைய பார்வையில் அவர் அப்போதும், எப்போதும் பரிசுத்தமானவரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் இருந்தார். அவர் வேறு விதமாக இருந்தால், தேவனுடைய பலிபீடத்தில் அவர் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவராக இருந்திருக்க முடியாது என்று வேத வாக்கியங்கள் காண்பிக்கின்றன; தேவன் அவர் மீது பாவத்தை சுமத்தியிருந்தார் என்று அனுமானித்தால், தேவனுடைய பலிபீடத்தில் அவருக்கு இடம் இருந்திருக்காது என்பதை வெளிப்படுத்தும். ஏனெனில் தேவனுடைய பலிபீடத்திற்கு தீட்டுப்பட்ட எதுவும் வருவதற்கு அனுமதிக்கப்படாது. நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டது என்றும், அவருடைய நீதி நமக்கு சுமத்தப்படுகிறது என்றும் சில சமயங்களில் நாம் சொல்கிறோம். இந்த அறிவிப்பில் ஓரளவு உண்மை உள்ளது மற்றும் இத்தகைய கருத்து ஓரளவு சரியானதாகவும் உள்ளது. அதாவது, அவருடைய நீதி நம் மேல் எப்படி சுமத்தப்படுகிறது என்பதை நாம் பார்க்கலாம்; இது மிகவும் வெளிப்படையாக உள்ளது; அவர் பண்ணின பலியின் காரணமாக, அவருடைய புண்ணியம் அல்லது நீதியை சபைக்கு சுமத்துகிறார்., அல்லது அளிக்கிறார். நம்முடைய பாவங்கள் அவரிடத்திற்கு சுமத்தப்பட்டது என்ற கருத்து எதை அர்த்தப்படுத்துகிறது என்பதைகூட நாம் பார்க்க முடியும்; அவர் தமது சொந்த ஒப்புதலினால், அவர் பாவியின் இடத்தை எடுத்துக்கொண்டார். அவர் “பிரியமான பலியாக” தேவனிடத்தில் தம்மையே ஒப்புக்கொடுத்தார். ஆரோன் காளையை பலி செலுத்தியதின் நிழலாக, அவர் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார்; காளை பழுதற்றதும், பூரணமானதாகவும் இருந்தது. ஆசாரியனாக, ஆரோன் காளையை சங்கரித்தார் மற்றும் ஆசாரியன் என்ற முறையில் அதை பிறகு தேவனுக்கு செலுத்தினார். உண்மையில் கிறிஸ்து இன்னும் இதை உலகத்தாருக்காக தேவனிடத்தில் செலுத்தவில்லை, இன்னும் இல்லை. 1800 வருஷங்களுக்கு மேலாக கடந்து விட்டது. ஆசாரியர் வெறுமனே காளையின் இரத்தத்தை எடுத்து, பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று, பிறகு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று, மற்றும் அவர் தமக்காகவும் தம் வீட்டாருக்காகவும், அதாவது, அவருடைய சரீரம் மற்றும் விசுவாச வீட்டார், சிறுமந்தை வகுப்பார், அவருடைய சரீரத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட ஆசாரிய வகுப்பார், அவருக்குக் கீழ் உள்ள ஆசாரியர்கள் மற்றும் திரள்கூட்டத்தாரை அடையாளப்படுத்தும் விசுவாசக் கூட்டத்தாருக்காக மட்டும் இரத்தத்தை அங்கு தெளித்தார். எந்த பார்வையிலும் உலகத்தாரின் பாவங்கள் அவர் மேல் சுமத்தப்படவில்லை, இன்னும் சுமத்தப்பட்டிருக்கவில்லை. அவருடைய சரீரமாகிய சபையினுடைய பலியை அவர் நிறைவேற்றும் போது, அவர் பிதாவிடம் நம்மை ஒப்புவிப்பார்; சபை அவருடன் ஒப்புக்கொடுக்கப்படுவது இந்த யுகத்தின் இறுதியில் நடக்கும். அப்போது அவர் மனுக்குல உலகத்தார் அனைவரும், ஜனங்கள் எல்லோருடைய பாவங்களின் சார்பாக அவர் தம்முடைய பலியின் முழுமையான புண்ணியத்தை ஒப்படைப்பார். அந்த சமயத்தின் போது தான், உலகத்தாரின் பாவங்கள் நீக்கப்படும், ஆனால் தற்காலத்தில் அவர் தம்முடைய நீதியை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார், மற்றும் நம்முடைய பாவங்கள் அவர் மேல் சுமத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அவர் ஒருபோதும் பாவம் செய்தவர் அல்ல, ஆனால் அவர் வெறுமனே இதுவரையிலும் தம்முடைய நீதியை சபையின் மீது சுமத்தியிருக்கிறார் மற்றும் காலப்போக்கில் உலகத்தார் மீதும் சுமத்துவார்.

## மரணம் - சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள்..

## கே: 215:1 :: கேள்வி (1913) - 1

அந்நாட்கள் மனுஷர்கள் சாவைத் தேடியும் காணாதிருப்பார்கள், சாக வேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்." (வெளி. 9:6) தயவு செய்து விளக்கவும்.

**பதில்:** வெளிப்படுத்தல் ஆகமம் ஒரு அடையாள புஸ்தகம் ஆகும். மற்றும் இதை முழுமையாக அல்லாமல், சரியான முறையில் புரிந்துகொள்ள இயலாது என்று நான் நம்புகிறேன். இதை முழுமையான அளவில் விளக்குவதற்கு இந்த மாலை நேரத்தில் நாங்கள் தயாராக இல்லை; ஆகவே இந்த சிறிய பகுதியை எதிர்காலத்தில் விளக்கம் அளிப்பது சிறந்தது என்று விட்டுவிட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## மரணம் - புதிய உடன்படிக்கை.

## கே: 215:2 :: கேள்வி (1913) - 2

இந்த மத்தியான வேளையில் நீங்கள் சொல்லியிருந்த விதமாக, புதிய யுகம் சீக்கிரத்தில் துவங்கும் போது, புதிய ஜீவனை எட்டுவதற்காக ஒவ்வொரு மனுஷனும் சாவது அவசியமாக இருக்குமா? அல்லது, மரணம் அடையாமலேயே, புதிய உடன்படிக்கையின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வது சாத்தியமா?

**பதில்:** மேசியாவின் இராஜ்யம் துவங்கும் போது, இது உபத்திரவ காலத்தின் மத்தியில் இருக்கப்போவதாக வேதவாக்கியங்கள் போதிக்கிறதாக நாங்கள் புரிந்து கொள்ளுகிறோம். வேத வாக்கியங்கள் தெரிவிக்கிற விதமாக, உலகம் எப்போதும் கொண்டிராத மகா உபத்திரவமாக இருக்குமானல், சந்தேகத்திற்கிடமின்றி, இது மிகவும் அபாயகரமான காலம் ஆகும். அநேக ஜனங்கள் தங்கள் உயிரை இழப்பார்கள் என்பதை நாம் எண்ணுகிறோம். அவர்கள் தங்கள் ஜீவனை இழந்தால், அவர்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பெறும் தேவை அவர்களுக்கு உள்ளது. பெருமளவில் அநேகர் தற்காலத்திலிருந்து புதிய யுகத்திற்கு கடந்து போவார்கள் மற்றும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுக் கொண்டிருக்கும் போது, அவர்கள் சாவதற்கான தேவை இல்லை. அவர்கள் அதிக அதிகமாக பூரண நிலையை நோக்கி மேலே எழும்புவார்கள் மற்றும் கல்லறைக்குள் செல்லாதவாறு, இறுதியில் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

ஆனால் நான் வேறொரு பகுதியைப் பற்றி சிந்திக்கிறேன். சிலர் சொல்லலாம், "மனுக்குலம் அனைத்தின் மேலும் மரண தண்டனை கடந்திருக்க வேண்டுமல்லவா? மற்றும் அவர்கள் மரணத்திற்குள்ளாக கண்டிப்பாக போயிருக்க வேண்டும் என்பதை அர்த்தப்படுக்கிறது அல்லவா? அவர்கள் எல்லோரும் மரண தண்டனையின் கீழ் பிறக்கிறார்கள். மரண தண்டனை நிறைவேற்றுக் கால ஒத்திவைப்புக்குள்ளாக இருப்பார்கள், உயிர்ப்பு பெறுவதற்காக முழு ஆயுளுக்குள்ளும் போவது அவசியமில்லை. இந்த விஷயத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குவோம். இந்த அரங்கில் உள்ள பார்வையாளர்கள் எல்லோரும் ஆயுட்கால சிறைத்தண்டனைக்குள்ளாக கொண்டுவரப்பட்டிருப்பதாக அனுமானிப்போம்; மரணச் சிறைக்குப் பதிலாக, இது ஸ்பிரிங் ஃபீல்ட் சிறைக்காவல் ஊர்தி வந்து, ஒரு வண்டி பளுவை சிறைச்சாலைக்கு எடுத்து சென்றதாகவும், பிறகு வேறொன்றும் வந்ததாகவும், ஆனால் கடைசியில் மீதியானவர்களில் சிலர் இன்னும் இங்கு இருக்கிறார்கள் என்று அனுமானிப்போம். ஆளுநர் அல்லது மேயர், அல்லது அதிகாரத்தில் உள்ள ஒருவர், தண்டனைக்கால நிறைவேற்ற ஒத்திவைப்பை அளித்து, இந்த தண்டனையை தள்ளி வைத்தார் என்று அனுமானிப்போம். நாம் சிறைக்குள் சென்று, மறுபடியும் வெளியே வரவேண்டியது நமக்கு அவசியமா? அந்த தண்டனை ஒத்திவைப்பு அதை உள்ளடக்கியுள்ளது. ஆகவே சிலர் ஏற்கனவே மரண சிறைக்குள் சென்றிருக்கிறார்கள், மற்றவர்கள் தங்களுடைய நோய் படுக்கைகளில் இருக்கிறார்கள் மற்றும் மரணத்திற்குள்ளாகும் நிலையிலும் உள்ளார்கள். நம்மில் சிலர் இன்னும் ஓரளவு ஆரோக்கியமாகவும், வலிமையாகவும் இருக்கிறோம். புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படும்

போது, உயிரோடிருக்கும் இப்படிப்பட்டவர்கள் சிறைக்குள்ளாகப் போவது அவசியமில்லாததாக இருக்கிறது.

## மரணம் - மனுக்குலம் முழுவதும் கல்லறைக்குள் கண்டிப்பாக செல்ல வேண்டுமா?

### கே: 216:1 :: கேள்வி (1915) - 1

இப்போது வாழ்ந்து கொண்டு இருக்கும் மனுக்குல குடும்பத்தாரில் சிலர் மரணத்திற்குள் போகவேண்டியதில்லை என்ற கருத்துக்கான வேதாகம வாக்கியங்களை தயவுசெய்து தெரியப்படுத்தவும்,

**பதில்:** இந்த கேள்வி தவறான முறையில் வைக்கப்பட்டுள்ளதாக நான் கூறுகிறேன். இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிற 160,00, 00, 000 பேர்கள் அனைவரும், அவர்கள் எல்லோரும் சாவார்கள் என்பதற்கு சிலர் சான்று விளக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேள்வி கேட்டவர் நினைத்தால், இது அவசியமில்லை. சரியாகச் சொன்னால், அவர்கள் எல்லோரும் மரிப்பதில்லை என்று இது தோன்றுகிறது. இருளின் அதிபதி மரணத்தின் வல்லமையை உடையவனாயிருக்கிறான் மற்றும் அவன் வெகு விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, கட்டப்படுவான் மற்றும் உலகத்தாரின் சார்பாக மரணமடைந்திருக்கும் ஜீவன் - அளிப்பவர், அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார் மற்றும் அந்த இராஜ்யம் முழுமையான வல்லமையுள்ளதாகவும், இதனுடைய இராஜா மரணத்தை எதிர்ப்பவராகவும் இருக்கிறார். இராஜ்யம் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் போது, மரணம் மறைந்து விடும். புதிய இராஜா மரித்த நிலையிலிருக்கும் ஏற்கனவே மரணமடைந்த ஜனங்களின் மரணத்தை மட்டுமே எதிர்ப்பவராக இல்லாமல், சட்டப்பூர்வமாக அப்போது மீட்கப்பட்டிருக்கும் எவருடைய மரணத்தையும் எதிர்ப்பவராக இருப்பார். இது ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது.

வேதாகம ஆராய்ச்சிப் பாடங்கள் இந்த விஷயத்தை விவரிக்கும் விதத்தில் ஒரு எடுத்துக்காட்டாக நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் அந்த வேதாகம ஆராய்ச்சிப் பாடங்களை அதிகதிகமாகப் படிப்பது நமக்குத் தேவையாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும். அங்கே உள்ள எடுத்துக்காட்டு இவ்விதமாக இருக்கின்றது: முழுமையான கூட்டமாக ஒன்றாகக் கூடியிருக்கும் நாம் கைது செய்யப்பட்டிருக்கிறோம் என்று அனுமானித்துக் கொள்வோம்; அரசாங்க அதிகாரி ஒருவர் வாசலுக்கு வந்து, கூறுகிறார், “நான் விரும்பத்தகாத அறிவிப்பை வைத்திருக்கிறேன்; நீங்கள் எல்லோரும் கைதாகியிருக்கிறீர்கள்.” அதன் பிறகு, வெளியே அவர்கள் ஒரு ஊர்தியை நிறுத்தி வைத்திருப்பதாகவும், நம்மை சிறைக்காவலுக்கு எடுத்துச் செல்லப்போகிறார்கள் என்று அனுமானிப்போம். ஊர்தி முதல் பளுவை எடுத்துச் சென்ற பிறகு, அவர்கள் திரும்ப வந்து, மற்றொரு ஊர்தி-பளுவையும், பிறகு வேறொன்றையும் மற்றும் பிறகு வேறொன்றையும் எடுத்துச் சென்றார்கள். பிறகு அந்த ஊர்தி காவல் நிலையத்துக்கு செல்லும் வழியில்,, மற்றும் மற்றவர்கள் தங்கள் முறைக்காக இங்கே காத்துக்கொண்டிருக்கும் போது, யாரோ ஒருவர் அதிகாரிகளைப் பார்க்கச் சென்றார் மற்றும் அவர்கள் கூறுகிறார்கள், “இதில் சில தவறு இருக்கினறது, ஆனால் மிக அதிகமாக பணம் செலுத்த வேண்டியிருக்கும்.” மிகவும் நல்லது, நான் உங்களுக்கு காசோலை கொடுக்கிறேன்.” பிறகு அந்த தலைமை அதிகாரி சொல்வார், “கைது செய்யும் காரியத்தை உடனே நிறுத்துங்கள்.” ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெளியே போய், இந்த கட்டளையை செயற்படுத்துகிறார்கள். அவர்கள் ஊர்தி ஓட்டுநரை சந்தித்து, சொல்வார்கள், “நீங்கள் இந்த ஜனங்களை இனிமேல் கூட்டிச் செல்ல தேவையில்லை; அவர்கள் தற்போது கைதாகவில்லை, அவர்கள் போகட்டும்.” பிறகு காவலில் இருப்பதற்காக மீதியானவர்கள் காத்துக்கொண்டிருந்த அந்த அரங்கத்திற்கு அவர் வந்து, கூறுகிறார், “நீங்கள் எல்லோரும் இப்போது விடுதலையாயிருக்கிறீர்கள்.” பிறகு அவர்

சிறைச்சாலைக்கு விரைவாக சென்று, அங்கே அடைக்கப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியைக் கொடுத்து, அவர்களை விடுவிப்பார்.

இப்போது, சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படாதவர்கள் எல்லோரும் தண்டனையின் கீழ் தான் இருந்தனர். ஆனால் எப்போது அந்த உரிமை கோருதல் சரிசெய்யப்பட்டதா, இனிமேல் சிறைச்சாலைக்குள் நுழையத் தேவையில்லை. ஆகவே இது நம்முடைய கர்த்தரின் மரணத்தின் விளைவுகளாய் இருக்கிறது. இது மரணத்தின் மாபெரும் சிறை.- இருப்பிற்குள் சென்றிருப்பவர்களை மட்டும் விடுவிக்காமல், இந்த சிறை-இருப்பிற்குள் போவதற்குக் காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு எதிராகத் தொடரும் உத்திரவுகளையும் தடுக்கப்போவதாக இருக்கிறது. வேத வாக்கியங்களில் இதுவே உணர்த்தப்படுகிறது. செப். 3:8,9; வெளி. 14:6,7.

## மரணம் - எல்லோரும் மரணத்திற்குள் போவார்களா? .

## கே: 216:2 :: கேள்வி (1908) - 2

சபை முத்திரிக்கப்படும்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சீர்பொருந்துதலைப் பெறும் வகுப்பார் மரணத்திற்குள் பிரவேசிப்பார்களா, அல்லது சீர்பொருந்துதல் உடனே அவர்களுடன் துவங்குமா?

**பதில்:** நான் புரிந்துகொள்வது என்னவெனில், இந்த யுகம் முடிவடையும் போது, - - அல்லது ஓரளவுக்கு நான் சொல்ல விரும்புவது, இந்த யுகத்தின் முடிவுடன் சபை முழுமை அடையும் மற்றும் அந்த நேரத்தில் உலகத்தின் மேல் மகா உபத்திரவ காலம் வரும். இதில் வெகு திரளான ஜனங்கள் தங்கள் ஜீவனை இழப்பார்கள். இந்த விதமாக உபத்திரவ காலம் - யூதர்களின் யுக முடிவில், இஸ்ரயேலின் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் எருசலேமின் முற்றுகையில் அழிந்துபோனபோது, யூதர்கள் மேல் வந்த உபத்திரவத்தினால் நிழலாக அடையாளப் படுத்தப்பட்டது. அது வேதாகமத்தில் இந்த யுகத்தின் முடிவிற்கும் மற்றும் திரளான அநேகர் இங்கே அழிவதற்கும் நிழலாகக் கொடுக்கப்பட்டது. இதைப் போலவே, இந்த யுகத்தின் முடிவில் வரும் காலத்தைப் பற்றிய அடையாளமாக வெளிப்படுத்தல் ஆகமத்தில் பிரெஞ்சு புரட்சி குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே நான் எதிர்பார்ப்பது அராஜகத்தின் ஒரு குறுகிய காலப்பகுதி ஆகும். மற்றும் அந்த அராஜகம் ஆரம்பமாவதற்கு முன்பு சபை எடுத்துக்கொள்ளப்படும். நமது கர்த்தர் சொன்னபடி இது முழுமை அடையும். பூமியின் மேல் வரக்கூடிய அந்த காரியங்களை உலகம் திகிலுடன் கவனிக்கும், ஆனால் அவர் கூறினார், “இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.” சபைக்கு அதன் மேல் வருவதற்கு சில காரியங்கள் இருக்கும், மற்றும் இது பெருமளவில் அநேக சோதனைகளையும் அடக்குமுறைகளையும் மற்றும் இந்த யுகத்தின் முடிவில், ஒருவேளை பல்வேறு வழிகளில் பெரும்பாடுகளையும் உள்ளடக்கியதாய் இருக்கும்; ஆனால் இந்த அராஜகமான உபத்திரவம் உலகத்தின் மீது வந்திருப்பதற்கு முன்பாகவே, அவர்கள் எல்லாரும் திரைக்கு அப்பால் கடந்து சென்றுவிடுவார்கள் மற்றும் உலகத்தின் மீது வரக்கூடிய இந்த உபத்திரவத்தில், பெரும்பாலானவர்களின் ஜீவன்கள் இழக்கப்படும்; ஆனால் உலகத்தின் ஜனத்தொகையான ஆயிரத்து அறுநூறு மில்லியன் பேர்களில் விடுபட்டவர்களாக பெருமளவில் அநேகர் இன்னும் இருப்பார்கள். ஏறத்தாழ பாதி பேர் மரணமடைவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. எந்த வழியிலும் இல்லாமல், மேலும் சரியான அளவு விகித எண்ணிக்கையில் யூகிக்க முயற்சி செய்யாமல், அந்த நேரத்தில் அவர்களில் பெரும் எண்னிக்கையினர் சந்தேகத்திற்கிடமின்றி உயிரோடு விடப்படுவார்கள் மற்றும் அவர்களுக்கே கர்த்தரின் முதல் செய்தியும், அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலும் வரும். இது யூதர்களுடன் துவங்கும் என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறது. அந்த சீர்பொருந்துதலின் காலத்தில் அவர்கள் தான் முதலாவதாக சகாயம் பெறுவார்கள். முற்பிதாக்கள் மூலமாக தேவனுடைய கிருபை முதலில் அவர்களுக்கு வரும்

மற்றும் பிறகு அவர்கள் மூலமாக எல்லா ஜாதிகளுக்கும், கோத்திரங்களுக்கும், பாஷைக்காரருக்கும் வரும். இப்படியாக உயிரோடிருக்கும் எல்லா ஜாதிகளும் கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் மற்றும் அவர்களுடைய ஆசீர்வாதம் ஆயிர வருஷ யுகத்தின் அதிகாலையின் துவக்கத்திலேயே வரும்; அவர்கள் முதலில், அதாவது முதல் நிலையில் ஆசீர்வாதம் அடைவார்கள். மற்றும் அவர்கள் இராஜ்யத்தின் காரியங்களின் ஒழுங்கு முறைகளில் இசைவாக வரும்போது, பூமியில் நீதி ஸ்தாபிக்கப்படத் துவங்குகிறது; மேலும் மனுக்குலம் இணக்கமாகும்போது, கல்லறையிலிருந்து எவரும் எழும்புவதற்கு முன்பு, இவையெல்லாம் ஓரளவிற்கு ஸ்தாபிக்கப்படும். இப்போது, இந்த கேள்வியின் ஒரு பகுதி எப்படியிருக்கும் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்; அவர்கள் எல்லோரும் கல்லறைக்குள் போக வேண்டியிருக்குமோ? ஆதாமின் சந்ததியின் ஒவ்வொரு அங்கமும் போக வேண்டியதில்லை. ஏனெனில் தண்டனை மரணம் என்பதால், கல்லறைக்குள் போக வேண்டுமா? இல்லை, நான் பதிலளிக்கிறேன்; தேவ சித்தத்திற்கு இது அவசியமில்லை. தேவனுடைய நிலைப்பாட்டில், இயேசு கூறியபடி, முழு உலகம் மரித்தோரின் உலகமாக இருக்கின்றது, உங்களுக்கு நினைவிருக்கும். ஒரு வாலிபன், “கர்த்தாவே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண வேண்டும், பிறகு நான் போய் உம்முடைய சீஷர்களில் ஒருவனாவேன்.” அந்த வயதான மனுஷன் உயிரோடு இருக்கும் போது, நான் அவருடன் தங்குவது நலமாயிருக்கும். ஆனால் அவர் இறந்த பிறகு, நாம் உம்முடைய சீஷர்களில் ஒருவனாவேன். இயேசு பதிலளித்து, அவனிடம் கூறினார், “மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய் சுவிசேஷத்தைக் குறித்துப் பிரசங்கி.” இங்கே சொல்ல வருவது என்னவெனில், தேவனுடைய பார்வையில் உலகம் முழுவதும் மரித்ததாயிருக்கின்றது. வியாதியும் மரணமும் மனுக்குலம் அனைத்தின் மீதும் கடந்து வந்திருக்கிறது. தேவனுடைய பார்வையில் எவரும் ஜீவனை உடையவராக, அல்லது ஜீவனுக்கான உரிமை உடையவராக இல்லை. மேலும் கர்த்தர் இயேசு சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கும், “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன், உலகம் முழுவதிலும், அப்போது, கிறிஸ்துவை உடையவராயிராதவர்கள் ஜீவனை உடையவர்களாக இருக்கமாட்டார்கள். கிறிஸ்து ஜீவன் அளிப்பவராக இருக்கிறார் மற்றும் கிறிஸ்துவை உடையவர் எவரும் ஜீவனைப் பெறுவர். ஆகவே உலகம் முழுவதும் ஏற்கனவே மரித்த உலகமாக இருக்கிறது. இப்போது, ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்தில், தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உலகம் முழுவதையும் வாங்கியுள்ள கர்த்தர், சீர்பொருந்துதலில் காரியங்கள் குறித்த பணியை, உலகத்தை மேம்படுத்தி ஆசீர்வாதங்களையும் ஆரம்பிப்பார். உலகம் இந்த மேம்பாட்டைப் பெறும் போது, அவர்களுடைய மரிக்கும் நிலையிலிருந்து வெளியே வர இது அவர்களுக்கு உதவிபிரியும். உதாரணமாக, மரணத்திற்குள்ளாகச் சென்றிருந்த மனுக்குல உலகம் திரும்ப வரும்போது, அவர்கள் ஜீவனுக்குள்ளாக வரமாட்டார்கள். முதலாம் உயிர்த்தெழுதலின் வகுப்பார் மட்டுமே ஜீவனுக்குள் வருவார்கள் என்று வேதாகமம் சொல்வது உங்களுக்கு நினைவிருக்கும். ஆகவே நமது கர்த்தர் கூறுகிறார், “நன்மை செய்தவர்கள்” பிதாவை பிரியப்படுத்தினவர்கள், அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றவர்கள் ஜீவனுக்கான உயிர்த்தெழுதலுக்குள்ளாக வருவார்கள், மற்றவர்கள் நியாயத்தீர்ப்புக்கான உயிர்த்தெழுதலுக்குள்ளாக வருவார்கள் - - மரணத்திலிருந்து படிப்படியாக வெளியே வருவது, ஆயிர வருஷ இராஜ்யத்தின் நியாயத்தீர்ப்புகளின் கீழ், ஆயிர வருஷ நாளில், அவர்களுடைய சீர்கேடு மற்றும் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் வெளியே வந்து, மேலே, மேலே, மேலே மேம்படுவார்கள் மற்றும் ஜீவனின் முழுமையான பூரணத்துவத்துக்குக் கொண்டுவரப்படுவார்கள். தேவன் ஆதாமை உண்டாக்கிய போது, அவன் ஜீவன் உடையவனாயிருந்தான் என்பதை நீங்கள் பார்க்கலாம், ஆனால் அவன் பாவம் செய்த போது, அவன் மரண தண்டனையின் கீழ் வந்தான். “நீங்கள் சாகவே சாவீர்கள்.” மரணமடைவது உடனடியாக ஆரம்பமானது. அவன் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். அவன் மரணமடையும் மனிதனாக துவக்கம் பெற்றான். அவன் ஜீவனோடிருக்கும் மனுஷனாகவும், மற்றும் மரிக்கும் மனிதனாகவும், இரண்டிலும் இருக்க முடியாது. அவன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அந்த கணமே, ஜீவனுக்கான பூரணத்துவத்துவம் வெளியேறத் துவங்கியது. மரண தண்டனைக்குப் பிறகு, அவன் முற்றிலுமாக மரித்துப் போக 930 வருஷங்கள் பிடித்தன.

இப்படியாக இந்த உலகத்துடனான சீர்பொருந்தலின் விஷயம் உள்ளது.; கல்லறையிலிருந்து விழிப்படைவது அவர்களுக்கு ஜீவன் கொடுக்கிறதில்லை., ஜீவன் என்பது பூரணத்துவமானது; இது ஜீவன் இல்லாமல் இன்னும் குறைபாடுள்ள நிலைமையிலிருக்கும் அவர்களை வெளியே கொண்டு வருவதாகும். பாவத்தின் மூலமாக மனதளவிலும், நடத்தையிலும், உடலளவிலும் சீர்கேட்டினால் அமிழ்ந்திருந்த அவர்களை வெளியே எடுத்து, மேலும் மேலும் உயர்வாக அவர்கள் மேம்படுத்தப்படுவார்கள். ஆகவே ஆயிர வருஷ யுகத்தின் இறுதி வரையிலும், மனுக்குல உலகம் மரணத்திலிருந்து விடுதலையாகப் போவதில்லை. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் என்று மறுபடியும் வேதாகமம் சொல்வது இதுவே. அது கிறிஸ்துவின் ஆயிர வருஷ இராஜ்யத்தைப் பற்றியே பேசுகிறது. ஏனெனில் இது அந்த தொடர்பான விஷயத்தில் சரியாகவே உள்ளது. 1கொரி. 15ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர் காண்பிக்கிறார்: சகல அதிகாரத்தையும், எல்லா கீழ்ப்படியாமையும் கீழாக்கும் வரைக்கும் அவர் ஆளுகை செய்வார். கடைசி சத்துரு தேவனுக்கும் நீதிக்கும் மற்றும் மனுஷனுக்கும் எதிரியாக இருப்பது மரணம் ஆகும். ஆகவே மரணத்தை முடிவுக்கு கொண்டுவர முழுமையாக ஆயிரம் வருஷங்கள் பிடிக்கும். ஏனெனில் மனுஷனை மரணத்திலிருந்து வெளியே கொண்டுவருவதற்கு முழுமையாக ஆயிரம் வருஷங்கள் பிடிக்கும். மனுக்குலத்தின் மேல் மரணம் பிடிப்பு ஏதும் வைத்திருக்கும் வரையில், மரணம் அழிக்கப்படுவதில்லை. மரணத்தை அழிப்பதற்கும், மனுக்குலத்தை விடுவிப்பதற்கும் முழுமையாக ஆயிரம் வருஷங்கள் பிடிக்கும்.

சிலர் கூறலாம், “சகோதரர் ரசல், எவரும் இரண்டாம் மரணத்தில் சாவது குறித்து எதையும் நீங்கள் சொல்லியிருக்கவில்லை.” இல்லை, ஆனால் இது உண்மை ஆகும். தேவனுடைய எல்லா கிருபைகளிலிருந்தும் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டு, மற்றும் அந்த ஜீவனை அடைவதில் தோல்வியுற்று, இதிலிருந்து வெளியே எழும்பி வருவதில் தோல்வியடைகிறவர்களாக சிலர் இருப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. இந்த தோல்வி, தேவனுடைய ஏற்பாட்டில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் அல்ல, அவர்களுக்கு தேவன் எந்த ஏற்பாடும் செய்திருக்கவில்லை என்ற காரணத்தினால் அல்ல, அவர்களுக்கு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால் அல்ல, ஆயிர வருஷ யுகத்தின் வாய்ப்புக்கள் போதுமானவையாக இருக்கவில்லை என்ற காரணத்தினால் அல்ல. இல்லை, ஆயிர வருஷ ஆட்சியின் இந்த ஆசீர்வாதத்துக்கு உட்பட்டதும், சாதகமுமான நிலைகளின் கீழ் தேவனுடைய கிருபைகளை ஏற்றுக்கொள்வதற்கு வெறுமனே அவர்களுடைய மறுப்பு தான் காரணமாகும். தேவன் ஒவ்வொரு மனுஷனுக்கும் தனக்கே உரித்தான மனவிருப்பத்தைக் கொடுத்திருக்கிறார் மற்றும் அவர் எந்த மனுஷனுடைய மனவிருப்பத்தையும் கட்டாயப்படுத்தும் நோக்கம் அவருக்கு இல்லை, ஆனால் அதற்கு மாறாக, ஆவியினாலும், உண்மையினாலும் தொழுதுகொள்ளும் விதமாக, அவரை இப்படி தொழுதுகொள்ள அவர் நாடுவார் மற்றும் எவரேனும் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளாவிட்டால், அவர் மரணத்திற்குள்ளாக சாவார். தேவனுக்கு உண்மையுடனும் கீழ்ப்படிதலுடனும் இருப்பதற்கான நியமங்கள் - இந்த நியமங்களை நேசிப்பவர்களுக்கும், நித்திய ஜீவனை விரும்புகிறவர்களுக்குக் தவிர, வேறு எவருக்கும் நித்திய ஜீவனை அளிப்பது தேவனுடைய திட்டத்தில் இல்லை. - மற்றும் நாம் எல்லோரும் கூறுவோம், ஆமென். எதிர்க்கக்கூடிய ஆத்துமா எதுவும் ஜீவனோடு இருக்கக்கூடாது என்று தேவன் உறுதிகொண்டிருக்கிறார் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆகவே ஆயிர வருஷ யுகம் முடிவுக்கு வரும்போது, அவர் இதை பூரணத்துவமாக மாற்றக்கூடியவராயிருப்பார்; ஏனெனில் இந்த இடைக்காலத்தில், முன்னோக்கிச் செல்ல மறுப்பவர்களையும், அவருடைய இராஜ்யத்தின் சட்டங்களுக்குப் கீழ்ப்படிய மறுப்பவர்களையும் அவர் அழிப்பார். ஒரு பாவி எப்படி நூறு வயது சென்று மரிப்பான் என்ற தீர்க்கதரிசனம் உங்களுக்கு நினைவு இருக்கும். இராஜ்யத்தின் சட்டங்களுக்கு இணக்கமாய் வருவதற்கு அவனுடைய மறுப்பின் காரணமாக அவன் சங்கரிக்கப்படுவான். கிறிஸ்துவின் ஆயிர வருஷ இராஜ்யத்தைச் சுட்டிக்காட்டி அப்போஸ்தலர் பேதுரு பேசும்போது, அப்போஸ்தலர் நடபடிகள் 3ம் அதிகாரத்தில் பேதுருவின் அறிக்கை உங்களுக்கு ஞாபகமிருக்கும்: “மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து

எழும்பப்பண்ணுவார்." மோசே இஸ்ரயேலின் மாபெரும் தலைவராக இருந்ததைப் போன்று, இங்கே, நிஜமாக, மோசேயைவிட பெரியவராக இருக்கிறார்; மற்றும் இது கூறுகிறது, "அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்." தேவனுக்கு நன்றி, அவன் வாதைக்கு உள்ளாக்கப்படமாட்டான். தேவன் துன்மார்க்கர் எல்லோரையும் அழிப்பார் - "கர்த்தர் துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்," அது நீதியாகும், தேவனுடைய கிருபையையும், அவருடைய நீதியையும் நியாயமான அன்பின் நியமங்களையும் மறுதலிக்கிறவர்களுக்கான தண்டனை ஆகும்.

சகோதரன் ஹாரிசன்: அந்த பாடத்தைக் குறித்து சில முக்கியமான விஷயங்களின் மேல் கூடுதலாக ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகளை எங்களுக்கு தயவுகூர்ந்து தெரிவிக்க முடியுமா? ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களில் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்கள் மட்டுமே அடங்குவார்கள் என்று நீங்கள் சொல்வதாக நான் புரிந்துகொண்டேன். விசுவாசத்தினால் மரித்த முற்பிதாக்களும்கூட இதில் அடங்குவார்களா? மற்றும் இரண்டாவதாக, அராஜக காலத்திலோ, அல்லது அந்த காலப்பகுதியின் முடிவில் உடனே முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலை நாம் எதிர்பார்க்கலாமா?

பதில்: நான் ஏற்றுக்கொள்கிறேன். "நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி <u>எழுந்திருக்கிறவர்களாகவும்"</u> என்று யோவான் 5:29ம் வசனத்திலுள்ள நமது கர்த்தரின் அறிவிப்பு, முதலாம் உயிர்த்தெழுதலையும், அதற்கு அதிகமான பேர்களையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது. "முதலாம்" என்ற வார்த்தை காலக்கிரம ஒழுங்கில் உபயோகப்படுத்தப்படுவதை ஒரு கண்ணோட்டத்தில் நீங்கள் பார்க்கலாம் - கால வரிசையில் முதலாவது ஆகும். இப்போது அங்கே குறிக்கப்பட்ட கால வரிசையில் அது முதலாவது ஆகும். ஆனால் மூலப்பிரதியில் இந்த வார்த்தை கண்டிப்பாக பண்பின் வரிசையில் முதலாவதாக இருப்பதை அர்த்தப்படுத்துகிறது முதல்-தரமான உயிர்த்தெழுதல். அவர்கள் எல்லோரும் முதல்-தரமான உயிர்த்தெழுதலில் எழுந்திருக்கிறவர்களாக வருவார்கள் என்று கர்த்தர் சொல்கிறதில்லை. மற்றொரு வேத வாக்கியம் கூறுகிறது, "<u>முதலாம்</u> உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான், - - இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்." நீங்கள் பார்க்கவும், அதுவே சிறுமந்தை. இப்போது, இந்த விஷயத்தை நமது கர்த்தர் குறிப்பிடும்போது, இந்த முதலாம் உயிர்த்தெழுதலையோ, அல்லது நன்மை செய்த அவர்களுடைய உயிர்த்தெழுதலையோ பிரிவுபடுத்தவில்லை; அவர் வெவ்வேறு பகுதிகளைப் பற்றி நமக்கு கூறவில்லை. ஆனால் நன்மை செய்திருக்கிற அவர்கள் எல்லோருடைய உயிர்த்தெழுதலைச் சார்ந்த அனைவரையும் ஒன்றாக இணைத்துக் குறிப்பிடுகிறார். அவர்கள் எல்லோரும் ஜீவனை அடையும்படி எழுந்து வருவார்கள். ஆகவே இது கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையால் அமையப்பெற்ற சிறுமந்தையை மட்டும் உள்ளடக்கியதாயிராமல், திரள்கூட்டத்தாரையும் உள்ளடக்குகிறது. ஏனெனில் அவர்கள் நன்மை செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்களின் அர்ப்பணிப்பைச் செய்தார்கள்; வேத வாக்கியங்களின்படி, அவர்கள் கர்த்தருடைய சிங்காசனத்தில் பங்குபெறத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுவதற்கும், அந்த இராஜரீக ஆசாரிய வகுப்பின் ஆசாரியர்களாவதற்கும் மற்றும் அவருடன் உடன்-சுதந்தரவாளிகளாவதற்கும் போதுமான அளவு உண்மையில்லாதவர்களாக இருந்தாலும், அவர்கள் மேல் கொண்டுவரப்பட்ட சோதனைகளினால் அவர்கள் தங்கள் ஜீவனையும் பொருட்படுத்தாமல், தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக தங்களை இறுதியாக நிரூபிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் நன்மை செய்தவர்கள், இந்த வகுப்பாரை அடையாளப்படுத்தும் போது, வெளிப்படுத்தல் ஆகமத்தில் காண்பிக்கும் விதமாக, அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள். நாம் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் பேர்களாகிய சிறுமந்தையைப் பற்றி வாசிக்கிறோம் மற்றும் பிறகு, சகல ஜாதிகளிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரள்கூட்டத்தைப் பற்றி வாசிக்கிறோம். இவர்கள் யார்? இவர்கள் மிகுந்த உபத்திரவங்களிலிருந்து வந்தவர்கள். மிகுந்த உபத்திரவங்களின் வழியாக வந்தவர்கள். உபத்திரவம் இல்லாமல் நீங்கள் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க மாட்டீர்கள். பிறகு இவர்கள் யார்?

விசேஷித்த காரணத்துக்காக, அவர்கள் ஒரு விசேஷித்த வகுப்பார்; ஆகவே இறுதியாக அவர்களுக்கு குருத்தோலைகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு கிரீடங்கள் வழங்கப்படவில்லை. கிரீடங்கள் சிறுமந்தைக்கு உரியது ஆகும். ஆனால் குருத்தோலைகள் திரள்கூட்டத்துக்கு உரியதாகும். ஏனெனில் அவர்கள் ஜெயங்கொள்ளுதலை அடையாளப்படுத்துகிறார்கள். திரள்கூட்டம் வெற்றியைப் பெறுகிறார்கள். ஏனெனில் அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள் என்று வேத வாக்கியங்கள் சொல்லுகின்றன. ஆனால் சிறுமந்தை வகுப்பார் எப்படி? அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கும் மேலானவர்கள், திரள்கூட்டத்தார் அனைவரும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருப்பார்கள்; அவர்கள் எல்லோரும் ஜெயங்கொள்ள வேண்டும் அல்லது அவர்கள் இரண்டாம் மரணத்தில் சாவார்கள். இந்த சுவிசேஷ யுகத்தில் ஆவியின் வல்லமையின் கீழ் வரக்கூடிய ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஜெயங்கொள்ளுகிறவர்களாக வெளிவர வேண்டும்; இல்லாவிட்டால், இரண்டாம் மரணத்தில் சாவார்கள்; இதற்கு வேறு எதுவும் இல்லை. ஆகவே நன்மை செய்திருக்கிறவர்களாக இரண்டு வகுப்பார் உள்ளனர்; ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலானவர்களான சிறுமந்தை மற்றும் ஜெயங்கொள்ளு கிறவர்களான திரள்கூட்டம் மற்றும் எபிரேயருக்கு எழுதின பவுலின் நிருபத்தில் குறிக்கப்பட்டுள்ளவர்களான முற்பிதாக்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் எவ்விதம் விசுவாசிகளாகக் காணப்பட்டார்கள், துன்பங்களை அனுபவித்தார்கள் என்றும் பவுல் அப்போஸ்தலர் விவரிக்கிறார். மற்றும் அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தி, இந்த நற்சாட்சியைப் பெற்றார்கள் என்று அவர்களைப் பற்றித் தொடர்ந்து சொல்லுகிறார். நமது கர்த்தர் குறிப்பிடக்கூடிய அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பதை அது காண்பிக்கிறது என்பதை நீங்கள் பார்க்கலாம். அவர்கள் நன்மையானவைகளைச் செய்திருக்கிறார்கள் என்று அங்கு அவர் கூறுகிறார். எந்த அடைப்படையில்? விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல். அப்போது, அவர்கள் உயிர்த்தெழுதலின் வகுப்பாராக இருப்பார்கள். இது உண்மையில் மூன்று வகுப்பார்களை உள்ளடக்கியிருக்கிறது. ஆனால் நமது கர்த்தர் அவைகளை ஒன்றாகக் குறிப்பிடுகிறார், “நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக இருப்பார்கள்.” இந்த மூன்று வகுப்பாரும் மூன்று வெவ்வேறு <u>தளங்களில்</u> ஜீவனுடையவர்களாக எழுந்திருப்பார்கள் - <u>சொல்லர்த்தமாகச் சொன்னால், மூன்று வெவ்வேறு உயிர்த்தெழுதல்கள்.</u> முதலாவது, தெய்வீக சுபாவத்தின் தளத்திற்கு எழுந்திருக்கும் பரிசுத்தவான்கள்; இரண்டாவது, தூதர்களைப் போல ஆவியின் சுபாவத்தின் தளத்திற்கு வரும் திரள்கூட்டத்தார்; மற்றும், மூன்றாவது, மனுஷர்களாக மனுஷீக தளத்தில் எழுந்திருக்கும் முற்பிதாக்கள். அவர்கள் எல்லோரும் ஜீவனுடையவர்களாகவும், பூரணமுள்ளவர்களாகவும் ஏன் எழுந்திருப்பார்கள்? அவர்கள் தங்கள் சோதனைகளைத் தாங்கி, நிலைத்து நின்று, மற்றும் அவர்களுடைய சோதனையில் தேவனைப் பிரியப்படுத்தி, ஜெயங்கொள்ளுகிறவர்களாக வெளிவந்து, நற்சாட்சிப் பெற்றிருக்கிறார்கள்; ஆகவே தேவன் அவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கப்போகிறார். தேவனுடைய ஈவு நித்திய ஜீவன் ஆகும். தேவனுடைய ஈவாகிய நித்திய ஜீவன், சபைக்கு ஒரு விசேஷித்த விதமாகப் பிரயோகப்படுத்தப்படுகிறது; இந்த நித்திய ஜீவன் தெய்வீக சுபாவம் ஆகும். திரள் கூட்டத்திற்குரிய நித்திய ஜீவன் தூதர்களின் தளத்திலுள்ள ஆவியின் சிருஷ்டிகளுக்கு ஒத்தவிதமாக இருக்கிறது. தேவனுடைய ஈவு, நித்திய ஜீவன் முற்பிதாக்களுக்கு சீர்பொருந்துதலாக இருக்கும் - - மனுஷீக பூரணத்துவம். அவர்கள் இதற்கு அதிகமான எதற்கும் ஒருபோதும் அழைக்கப்படவில்லை. பிறகு, அப்போஸ்தலர் கூறுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும், “அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.” வேத வாக்கியங்கள் எவ்வளவு ஆச்சரியத்தக்கவிதமாக ஒன்றாக பொருத்தமாய் உள்ளது! ஆனால் மனுக்குலத்தின் மற்றவர்களைப் பற்றி என்ன உள்ளது? அவர்கள் நியாயத்தீர்ப்படைய எழுந்திருப்பார்கள். இந்த ‘தீர்ப்பு’ (judgement) என்ற வார்த்தை ‘சோதனை’ (trial) என்பதை அர்த்தப்படுத்துகிறது. உரிய நேரம் வரும்வரைக்கும், உலகம் சோதனைக்குள்ளாக்கப்படாது. உங்களில் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பீர்கள்; ஒரு வழக்கு விசாரணையில் இருக்கும் மற்றும் எல்லா வழக்குகளும் ஒரே சமயத்தில் விசாரணையில் இருக்காது, அப்படி விசாரணையில் இருக்குமா? இல்லை. இங்கே ஒரு வழக்கு விசாரணையில் இருக்கிறது மற்றும் இந்த ஒரு வழக்கு விசாரிக்கப்படும்

வரையிலும் மற்ற வழக்குகள் விசாரணைக்கு வராது. இப்போது, தேவன் முதலாவதாக சபை முழுமைக்கும் விசாரணை செய்து வருகிறார்; இந்த சுவிசேஷ யுகத்தில் சபை சோதனையில் இருக்கிறது. சபையின் சோதனை முடிவு பெற்ற பின்பு, தேவனைப் பிரியப்படுத்தும் குறியீட்டை அடைந்தவர்கள், உயிர்த்தெழுதலின் மறுரூபம் வழியாக, ஒரு கணத்தில், கண்ணிமைக்கும் நேரத்தில், கர்த்தரின் ஆசீர்வாதமான மகிமைகளுக்குள் பிரவேசிப்பார்கள். ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும்படி தூரதேசத்துக்குப் புறப்பட்ட பிரபு பற்றிய உவமையில் நமது கர்த்தர் அடையாளப்படுத்தியபடி, அவர்களுடைய சோதனை அப்போது கடந்து போயிருக்கும்.

## மரணம் - பலியினாலா, அல்லது உண்மையாகவா?

### கே: 221:1 :: கேள்வி (1916) - 1

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது." சங். 116:15. இது பலியின் மரணத்தினால் தினமும் சாவதை அர்த்தப்படுத்துகிறதா, அல்லது பரிசுத்தவான்களின் உண்மையான மரணத்தையா?

**பதில்:** இந்த வசனப்பகுதியைக் குறித்து நான் சண்டை போட நமக்குத் தேவையில்லை. பரிசுத்தவான்களைச் சார்ந்த ஒவ்வொன்றும் தேவனுக்கு விலையேறப் பெற்றதாகும். அர்ப்பணிப்பின் சமயத்தில், அது அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றது. முதலாம் பரிசுத்தவானாகிய இயேசு இதைச் செய்த போது, தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாய் இருந்தது. அந்த நேரத்தில் இயேசுவின் மேல் பரிசுத்த ஆவியை வரும்படி தேவன் செய்தார். மற்றும் அவரை தேவனுடைய குமாரன் என்று அந்த சத்தம் பிரகடனப்படுத்தியது. நம்முடைய ஒவ்வொரு அடுத்த படியிலும் தெய்வீக கிருபையையும் ஆசீர்வாதத்தையும் நாம் பெறுவோம்; ஏனெனில் பரிசுத்தவானைச் சார்ந்த ஒவ்வொன்றும் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாகும். அர்ப்பணிப்பு, தினமும் மரணமடைதல் மற்றும் இறுதியாக உண்மையான மரணம் - அவைகள் அனைத்தும் பிதாவுக்கு விலையேறப்பெற்றதாகும். அப்படிப்பட்டவர்களுக்கு அவர் அந்த மகத்தான பரிசைக் கொடுக்கப் போகிறார். ஆகவே அவர்கள் அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்கள்.

## கடன்கள் - மற்றவர்களுக்கு கடன்பட்டிருத்தல்.

### கே: 221:2 :: கேள்வி (1910) - 2

தயவுசெய்து விளக்கவும், "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்."

**பதில்:** நல்லது, நான் இதைப் பற்றி சொல்ல முடிவதைவிட, அது கிட்டத்தட்ட நேர்த்தியாகவும் தெளிவாகவும் உள்ளது.

## பத்திரங்கள் - ஆயிர வருஷ யுகத்தில் சொத்துக்களுக்கான பதிவுகள்.

### கே: 221:3 :: கேள்வி (1909) - 3

உபத்திரவ காலத்திற்குப் பிறகு, ஆயிர வருஷ யுகத்தில் சொத்துக்களுக்கான பத்திரங்களுடைய பூமிக்குரிய ஆவணங்கள் அங்கீகரிக்கப்படுமா?

**பதில்:** உபத்திரவ காலத்திற்குப் பிறகு சொத்துக்களுக்குரிய உரிமைப் பத்திரம் எந்த அளவுக்கு மதிப்பு கொண்டதாயிருக்கும் என்பதை உறுதிசெய்வது மிகவும் கஷ்டமானதாகும்; ஏனெனில் எந்த அளவுக்கு ஆவணங்கள் அழிக்கப்படும் என்பதை நாம் அறியவில்லை. மிகவும் தெளிவற்ற ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவது மிகவும் கஷ்டம் ஆகும் மற்றும் இதைப் பற்றி வேதாகமத்தில் எந்த பதிவும் இல்லை. நம்முடைய ஆயிர வருஷ யுகம் அறிமுகமான பிறகு,

முன்பு இருந்த அதே வழியிலேயே விஷயங்கள் நடைபெறும் என்பதே நமது அனுமானம் ஆகும். ஆனால் மகா உபத்திரவம் காரணமாக, அடிக்கப்பட்டும், புண்பட்டும் உலகம் முடங்கிப்போன நிலைமையிலிருக்கும். நமது கர்த்தர் தீர்க்கதரிசியின் மூலமாக இதைப் பற்றி பேசுகிறார், "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்." உலகம் கற்றுக்கொள்வதற்கு இதுவே முதல் பாடமாக இருக்கும். இது கடினமாக இருக்கும், ஆனால் புறஜாதிகளுக்கு இது மிகவும் மதிப்பு வாய்ந்த பாடம் ஆகும். மரணம் ஓரளவு தொடர்ந்து ஆட்சி செய்யும் மற்றும் புதிய உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேல் ஜாதியினரின் ஜீவன்களில் தான் ஜீவன் மற்றும் இழந்ததைத் திரும்பப் பெறுதல் உலகத்தில், வெளிப்படையாகத் தெரியும் ஒரே இடம் ஆகும். இது இன்னும் உண்மையாக இருக்கிறது. மற்றும் இது எப்போதும் உண்மையாகவே இருக்கிறது. "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." பரலோக இராஜ்யத்துடன் இணக்கமாய் வராத புறமத ஜாதியினர், இஸ்ரயேலின் உடன்படிக்கை செய்யப்பட்ட ஜனங்களிடத்திற்கு புதிய உடன்படிக்கையின் கீழ் வருகின்ற விசேஷித்த ஆசீர்வாதங்களுக்கு பரலோக இராஜ்யத்துடன் இணக்கமாய் வராத புறமத ஜாதியினர் தடைபண்ணப்படுவார்கள்.

இஸ்ரயேல் ஜாதிக்கு வரக்கூடிய ஆசீர்வாதங்களை மற்ற ஜாதிகள் பார்க்கும் போது, அவர்கள் எல்லோரும் ஒரு பங்கைப் பெறுவதற்கு விரும்புவார்கள் மற்றும் இது அவர்களை இவ்விதம் செய்வதற்கு வழிகாட்டும், "யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்."

உபத்திரவ காலத்திற்குப் பிறகு, அப்போது உரிமைப்பத்திரத்தின் மதிப்பை பொருத்தவரையில், இந்த கேள்வியை விவாதிப்பது மிகவும் தெளிவற்றதாகும் என்று நான் நினைக்கிறேன். சொத்துக்கு சொந்தக்காரனான ஒருவன் மற்ற எவரையும் போலவே, அதிக உரிமை பெறுகிறவனாக இருப்பான் என்று நான் சொல்கிறேன்.

## பேய்கள் - நியாயந்தீர்ப்பதற்கான காலம்.

### கே: 222:1 :: கேள்வி (1911) - 1

"அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்."

**பதில்:** அருமை நண்பர்களே, இது பேய்களுடைய மொழி என்பது உங்களுக்கு நினைவிருக்கும். முதலாம் வருகையில் கர்த்தர் இந்த பேய்களில் சிலவற்றை துரத்திவிடும் போது, மற்றும் மனுஷனை விட்டு வெளியே வரும்படி அவைகளுக்கு அவர் கட்டளையிடும் போது, அவைகள் மறுத்தன; அவைகளுடைய கால வரம்புகளுக்குள் அவைகள் இன்னும் இருப்பதாக அவைகள் நினைப்பது போலத் தோன்றின. இந்த நிலைமைகளின் கீழ் தொடர்வதற்கான உரிமையை நாங்கள் பெற்றிருக்கிறோம் அல்லவா? நீர் இவ்வளவு சீக்கிரம் வரவில்லையா? காலம் வருமுன்னே நீர் எங்களை வேதனைப்படுத்தப் போகிறீரா? நல்லது, நான் இந்த கருத்தைத் தெரிவிக்கிறேன்: அங்கே உள்ள 'வேதனை' என்ற வார்த்தை, நமது வழக்கிலுள்ள 'வேதனை' என்ற வார்த்தைக்கு நாம் கொண்டிருக்கும் அதே கருத்தை துல்லியமாகக் கொண்டிருக்கவில்லை. இது "நமக்கு துன்பம் செய்தல்" என்பதை அர்த்தப்படுத்துகிறது; இது வீட்டு உரிமையாளரின் உத்தரவாதம் போன்று, வீட்டு உரிமையாளர் தம்முடைய வாடகைக்காக குடியிருப்பவரைத் துன்பத்திற்குட்படுத்துபவராக சொல்லப்படுவதைப் போல இருக்கிறது. அதாவது, அவர் வாடகையைச் செலுத்தத் தவறினால், அந்த வளாகத்தைவிட்டு அவர் வெளியேற்றப்படுவார் மற்றும் இங்கே இருக்கும் இந்த கருத்து தான் அதுவாக இருக்கிறது. எங்களுக்குத் துன்பம் தருவதற்காக நீர் வந்திருக்கிறீரா, அல்லது காலம் வருவதற்கு முன்னரே எங்களை வெளியேற்ற வந்திருக்கிறீரா? ஆனால் எப்படி இருந்தாலும், விழுந்துபோன ஆவிகள் சொல்லும் எதுவும் எந்த நல்ல கிறிஸ்தவனுக்கும் இறைமையியலாக இருக்காது. பேய்கள் சொல்லுகிற எதின் மேலும் நாம் நம்முடைய இறைமையியலை உருவாக்குகிறதில்லை. இயேசுவும் அப்போஸ்தலர்களும்

மற்றும் தீர்க்கதரிசிகளும் சொல்வதையே நாம் விரும்புகிறோம். பேய்கள் சொல்கிற எதுவும் என்னுடன் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.

இது பண்பாளர் ஒருவர் ஒருசமயம் என்னிடம் முக்கியமான விஷயம் பற்றி விவாதம் செய்தது எனக்கு ஞாபகம் வருகிறது, "அது எங்கே இருக்கிறது?" மேலும் நாங்கள் அந்த வசனத்தைப் பார்த்தோம் மற்றும் அப்போது இது ஏன் அசாதாரணமாக இருந்தது என்பதை நான் கண்டுபிடித்தேன். இது யோபு புஸ்தகத்தில் இருந்தது. இது பேய் சொன்னதாக இருந்தது. நான் கூறினேன், "சகோதரரே, பேய் சொன்னதை இப்போது நீங்கள் மேற்கோள் காட்டுகிறீர்கள்." மேலும் அவருக்கு அதிகமாக சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆகவே, இங்கு இந்த பேய்கள் கூறியதை நாம் மேற்கொண்டு கவனத்தில் கொள்வது சரியாகாது.

## வைப்புத்தொகை - பழைய ஏற்பாட்டில் எங்கே காண்பிக்கப்பட்டுள்ளது?

### கே: 222:2 :: கேள்வி (1916) - 2

மீட்பின் விலைக்கிரயம் வைப்புத்தொகையாக அடையாளங்களாகவும் மற்றும் நிழல்களாகவும், அல்லது பழைய ஏற்பாட்டின் உபதேசங்களில் எந்த இடத்திலாவது காண்பிக்கப்பட்டுள்ளதா?

**பதில்:** மீட்பின் வைப்புத்தொகையைப் பற்றி பழைய ஏற்பாட்டில் எதுவும் உபதேசிப்பதாக நான் நினைக்கவில்லை. மீட்பு என்ற வார்த்தை குறிப்பாக இந்த கண்ணோட்டத்தில் பழைய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தாத வார்த்தை ஆகும். ஒரே ஒரு வசனம் உள்ளது. "தன் சகோதரர்நிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்கவும்கூடாதே." பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலால், இந்த புதிய ஏற்பாட்டின் கருத்து நமது கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது மற்றும் தேவனுடைய வார்த்தையில் மிகவும் ஆழமான உபதேசத்தை அடையாளப்படுத்துகிறது.

## வைப்புத்தொகை - இது யாருடைய பெயரில் மற்றும் வரவில் வைக்கப்படும்?

### கே: 222:3 :: கேள்வி (1916) - 3

இந்த வைப்புத்தொகை யாருடைய பெயரில் மற்றும் யாருடைய வரவில் வைக்கப்படும்?

**பதில்:** ஒரு மனுஷனுடைய பெயரிலும், வரவிலும் நான் இதை வைப்பு நிதியாக வைக்கிறேன். இது நீங்கள் வங்கியில் 1000 டாலர்களை வைத்தால், இது உங்கள் பெயரில் இருக்கிறது போலவே உள்ளது. இயேசு இதை வேறு எவருக்கும் கொடுக்கவில்லை. அவர் இதை பிதாவின் கரங்களில் பத்திரப்படுத்தி வைத்தார். "நான் ஒப்படைக்கிறேன்." மாற்றம், இடமாற்றம் கிடையாது. நான் இதை தகப்பனாகிய ஆதாம் அல்லது உலகத்துக்காக உம்முடைய பாதுகாப்பில் ஒப்படைக்கவில்லை. நான் இதை எளிமையாக உம்முடைய பாதுகாப்பிலும், பொறுப்பிலும் வைத்திருக்கிறேன். என்னுடைய ஆவியை - "என்னுடைய" என்ற வார்த்தையினால் அங்கே இது காண்பிக்கப்பட்டுள்ளது.

## வைப்புத்தொகை - அர்த்தம்.

### கே: 223:1 :: கேள்வி (1916) - 1

தயவுசெய்து, "வைப்புத்தொகை" என்ற வார்த்தையின் பொருளைக் கூறவும்.

**பதில்:** "வைப்புத்தொகை" என்ற வார்த்தை, "ஒப்படைத்தல்" என்ற வார்த்தையைக் குறித்துக்காட்டுகிறது. வைப்புத்தொகையாக 1000 டாலர்களை வங்கியில் வைத்திருந்தால், நீங்கள் ஒரு சிறு புத்தகத்தைப் பெறுவீர்கள் மற்றும் அங்கே இது வரவை காண்பிக்கும். இதை நீங்கள்

வங்கியாளரிடம் கொடுத்தீர்கள் என்று உங்கள் வைப்புத்தொகை எதையும் காண்பிக்காது. இது வங்கியாளரின் பாதுகாப்பில் உள்ளது. ஏனெனில் நீங்கள் இதை அவருடைய பாதுகாப்பில் வைத்துள்ளீர்கள் மற்றும் நீங்கள் விரும்பும்போது, இதை எடுப்பதற்கு இது உங்களுடையதாகும். இயேசு தம்முடைய மரணம் அடையும் தருணத்தில், பிதாவே, உம்முடைய கரங்களில் பொறுப்பை உறுதிசெய்கிறேன், என்னுடைய ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூறின போது, இயேசு அந்த மீட்பை ஒப்படைத்தார். மனுஷ ஜீவனின் ஆவியை, பிசாசிடம் அல்ல, பிதாவின் கரங்களில் அளித்தார். மனுக்குலத்துக்கு செய்வதற்கு பிசாசிடம் ஒன்றுமில்லை. இயேசு தம்முடைய ஜீவனின் உரிமையைப் பெற்றிருந்தார். அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும் மற்றும் பிதாவின் சித்தத்தை முழுவதுமாக செய்தவராக, தெய்வீக பிரமாணத்தை அவர் கைக்கொண்டு இருந்தார். சொல்லர்த்தமான எந்த பார்வையிலும் அவர் வைத்திருந்த ஜீவ உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை. மற்றும் இதை அவர் ஒப்படைத்திருந்தார். “பிதாவே, உம்முடைய கரங்களில் என்னுடைய ஆவியை ஒப்புவிக்கிறேன்.” இது இன்னும் பிதாவின் கரங்களில் இருக்கின்றது; இயேசு ஒருபோதும் இதை எடுத்துவிடவில்லை. ஆனால் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த போது, இதை எடுத்துக்கொள்ளவில்லையா? இல்லை, பிதா அவருக்கு இதைவிட மேலான ஜீவ சுபாவத்தை வெகுமதியாக அளித்தார். அவர் மாம்சத்திலே கொலையுண்டார், ஆனால் ஆவியிலே எழுப்பப்பட்டார், அல்லது, தெய்வீக சுபாவத்தில் ஜீவனுடையவராக்கப்பட்டார். உயிர்த்தெழுதலில் அவர் பெற்றிருந்த ஆவியின் ஜீவன் கீழ்ப்படிதலுக்கான வெகுமதி ஆகும்; அவருடைய மற்ற ஜீவனுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. அவர் இன்னும் பூமிக்குரிய உரிமையை உடையவராயிருக்கிறார், ஆனால் இதை அவர் உபயோகப்படுத்தவில்லை. அவர் உயர்வானதும், மேலானதுமான ஜீவனை உடையவராயிருக்கிறார். ஆனால் அவருடைய மற்ற ஜீவன் அவர் பயன்படுத்துவதற்காக உள்ளது.

## வைப்புத்தொகை - எப்பொழுது வைக்கப்பட்டுள்ளது?

### கே: 223:2 :: கேள்வி (1916) - 2

இயேசு தம்முடைய வைப்புத்தொகையை அவருடைய மரண நேரத்தில் ஒப்படைத்தாரா? அல்லது யோர்தான் நதியிலா?

**பதில்:** அவர் யோர்தானில் அவருடைய அர்ப்பணிப்பின் போது தம்முடைய வைப்புத்தொகையை ஒப்படைக்கவில்லை என்று நான் சொல்லுகிறேன். தெய்வீக பிரமாணத்தைக் கைக்கொள்வதாகவும், அடையாளங்கள் மற்றும் நிழல்களாகவும் குறிக்கப்பட்ட எல்லா காரியங்களும் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்ததையும் பார்த்து, அவைகள் ஒவ்வொன்றையும் செயற்படுத்துவதாக இயேசு பிதாவிடம் உடன்படிக்கை செய்தார் என்பதாகவே என்னுடைய பார்வை இருக்கிறது. மேலும் இது தேவனுடைய ஏற்பாடாக இருந்தது. மற்றும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, இந்த எல்லா காரியங்களையும் முழுவதுமாக செய்து, அவர் ஜீவ உரிமையைப் பெற்றார் மற்றும் அவருடைய உரிமையைப் பலியிட்டதினால், அவர் மகிமை, கனம், அழியாமையாகிய வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரவாளியானார். இது அவர் தம்முடைய உரிமையை முழுவதுமாக, “பிதாவே, உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்” என்று ஒப்படைத்த போது நடந்தது.

## வைப்புத்தொகை - இதன் மதிப்பு.

### கே: 223:3 :: கேள்வி (1916) - 3

இந்த வைப்புத்தொகையின் மீதான உண்மையான பெலன், அல்லது வரவு அல்லது கிரயம் என்ன?

**பதில்:** இந்த வைப்புத்தொகையின் மேல் இருப்பது வெறுமனே பூரண மனுஷனுடைய ஜீவனுடைய மதிப்பு ஆகும். இது அதிகமாக அல்லது குறைவாக இல்லை. வைப்புத்தொகையின் மேல் உள்ள அந்த மீட்பு, ஆதாமினால் இழக்கப்பட்ட சமமான கிரயம் ஆகும். அந்த ஜீவன் தேவனுடன் இருக்கும் உறவின் உரிமை, பூமிக்குரிய குடியிருப்பு மற்றும் தேவன் மனுஷனுக்கு அசலாகக் கொடுத்திருந்த அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியதாகும். (சங்கீதம் - 8.) மனுஷன் என்பது என்ன? "நீர் அவனைத் தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; - - சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்." இது அந்த உரிமைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி இருக்கிறது. மற்றும் இயேசு தம்முடைய ஜீவனை சரியாக ஒப்படைத்த போது, எந்த ஒரு மனுஷனும் எப்போதும் வைத்திருந்ததும், அல்லது வைத்திருக்க முடிந்திருந்துமான அவ்வளவையும் அவர் ஒப்படைத்தார். ஒரு பூரண மனுஷனாக ஆதாம் வைத்திருந்த ஒவ்வொன்றின் உரிமை - இவை எல்லாவற்றையும் பிதாவின் கரங்களில், தெய்வீக நீதியின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது.

## வைப்புத்தொகை - இயேசுவின் மூலமாக மதிப்பு.

### கே: 224:1 :: கேள்வி (1916) - 1

வைப்புத்தொகையின் மதிப்பு மகிமையடைந்த கிறிஸ்துவின் மூலமாக ஏன் உள்ளது?

**பதில்:** அதில் தான், மாபெரும் பணியின் அடிப்படை இருக்கிறது. அநேக குமாரர்களை மகிமைக்குள் கொண்டு வரும் பணியின் முதல் பகுதி உள்ளது மற்றும் நீதியின் கரங்களில் உள்ள அதே மீட்பின் பலி, மரணத்திலிருந்து முழு உலகத்தின் மீட்பை உண்டுபண்ணும் விலைக்கிரயமாக உள்ளது. தலையும் சரீரமுமாகிய மகிமையடைந்த மத்தியஸ்தரை அடியெடுத்து வைக்கும் உரிமையையும், மற்றும் ஏதேனில் இழந்த யாவற்றையும், அவர்களுடைய விழுந்துபோன நிலைமையிலிருந்து மேலே வர உதவிபுரிவதற்காக, ஆயிரம் வருஷங்களுக்கு மனுக்குலத்தின் மேல் இரக்கத்தை செயற்படுத்துவதற்கான உரிமையையும் மீட்பின் இந்த விலைக்கிரயம் கொடுக்கிறது.

## வைப்புத்தொகை - புதிய ஏற்பாட்டின் உபதேசம்.

### கே: 224:2 :: கேள்வி (1916) - 2

மீட்பின் கிரயத்தின் வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்வது பற்றி புதிய ஏற்பாட்டில் எந்த வேத வாக்கியங்கள் தெளிவாகப் போதிக்கிறது?

**பதில்:** தெய்வீக நீதியின் கரங்களில் இயேசு வைத்திருக்கும் ஒரு விஷயம் தான் பிதாவுடன் இணக்கமாயிருக்கும் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கிறது என்பது புதிய ஏற்பாட்டின் பொதுவான போதனை ஆகும். நமக்கு நேரிடையாகச் சொல்லக்கூடிய ஒரு விஷயம் என்னவெனில், அவர் தம்மை மீட்பின் பலியாக ஒப்புக்கொடுத்தது மட்டுமல்லாமல், அவர் மரணமடையும் போது கூறினார், "உம்முடைய கரங்களில் என்னுடைய ஆவியை ஒப்புவிக்கிறேன். இதை நான் உம்மிடம் விட்டு வைத்திருக்கிறேன்." இது எப்படி பிரயோகப்படுத்தப்படுகிறது என்பதை அநேக வேத வாக்கியங்கள் காண்பிக்கின்றன. புண்ணியம் செலுத்தப்படுவது குறித்து நாம் படிக்கிறோம். அங்கே புண்ணியம் இருக்கிறது என்பதை இது உணர்த்துகிறது. புண்ணியம் ஏதும் இருந்தால் ஒழிய, நாம் எப்படி நீதியின் வஸ்திரத்தைப் பெற முடியும் என்று உருவகமாகக் குறிக்கப்படுகிறது..

## அழிவு - இயல்பாக புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல.

### கே: 224:3 :: கேள்வி (1907) - 3

பிடிபட்டு அழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல இருக்கும் சில நபர்களைப் பற்றி பேசக்கூடிய வசனத்தை தயவுசெய்து விளக்கவும்.

**பதில்:** கர்த்தரின் கரங்களில் அழிவை சந்திக்க இருக்கும் சிலரைப் பற்றி அப்போஸ்தலர் பேசுகிறார் மற்றும் அவர்கள் பிடிபட்டு, அழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருக ஜீவன்கள் என்று அவர் கூறுகிறார். ஒரு சிங்கத்தை அழிப்பது குற்றம் என்று நீங்கள் நினைக்கமாட்டீர்கள், ஏன்? ஏனெனில் அது குரூரமானதாக இருக்கிறது மற்றும் அது தீங்கு இழைக்கும் பாங்குடையது. இது ஒரு பறந்து கொண்டு தீங்கற்ற புறாவாக இருந்தால், இதைத் தொட வேண்டாம், அதைப் போகவிடுங்கள் என்று நான் சொல்லுவேன், அல்லது இது அழகான இறக்கைகள் உடைய பறவை ஏதும் பறந்து கொண்டு, தீங்கு எதுவும் செய்யாமலிருந்தால், அழகான அதிரொலியை மட்டும் எழுப்பிக் கொண்டிருந்தால், அந்த பறவையைத் தொட வேண்டாம் என்று நான் சொல்லுவேன். இப்படிப்பட்ட தீங்கற்றதும் அழகானதுமான சிருஷ்டியின் ஜீவனை நாம் ஏன் அழிக்க வேண்டும்? ஆனால் இது ஒரு சிங்கம் அல்லது ஒரு புலியாக இருந்தால், மற்றும் அந்த கிராமம் அல்லது நகரம் முழுவதும் இதன் காரணமாக கடுந்துன்பத்துடன் இருந்தால், மற்றும் இது தீங்கு ஏதும் செய்யப்போகிறது என்றால், இதை நாம் அழிப்பது நலமாயிருக்கும் என்று நாம் சொல்வோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், ஒவ்வொரு காவலரும் தன்னுடைய சுழல்துப்பாக்கியை எடுத்து, உடனடியாக சுடுவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இது அழிவுக்கு தகுதியுடையது ஆகும்; மேலும் இதை சுதந்திரமாகப் போக விடுவது சரியான காரியம் அல்ல, ஆகவே கர்த்தர் இரண்டாம் மரணத்தில் அழிக்கக்கூடிய ஒரு வகுப்பாரைப் பற்றிய விஷயத்தில் இந்த பார்வையை உடையவராயிருக்கிறார். அவர்கள் ஜீவனுக்குத் தகுதியுள்ளவர்கள் அல்ல. அதன் காரணமாகவே அவர்கள் அழிக்கப்படுவார்கள். புத்தியுள்ள மிருக ஜீவன்கள் ஜீவனோடிருப்பதற்கு தகுதியாயிருப்பதைக் காட்டிலும் அவர்கள் ஜீவனுக்கு இனிமேல் தகுதியானவர்களாக இருக்கிறதில்லை. மற்றவர்களுக்குத் தீங்கு செய்திருக்கிற ஒரு சீர்கெட்ட நபரை அழித்து, தீமையை நீடித்திருக்கச் செய்யும் அவனுடைய வாய்ப்பைத் துண்டித்து விடுவது எப்படி சரியானதாக இருக்குமோ, அதைப் போன்றே ஒரு புத்தியற்ற மிருக ஜீவனை அழிப்பதாக இருக்கும். துன்மார்க்கர் அனைவரையும் தேவன் அழிக்க நோக்கமாயிருக்கிறார் - முழுமையான அறிவைப் பெற்றிருப்பவர்களாக, தேவன், கிறிஸ்து மற்றும் முற்பிதாக்களால் அவர்களுக்கு உதவிபுரிய முடிந்த அளவுக்கு ஒவ்வொரு வழியிலும் உதவி செய்யப்படும் - அவைகள் எல்லாவற்றையும் பெற்ற பிறகும், அவர்கள் இன்னும் இதயத்தில் நீதிக்குப் பகைஞராக இருந்தால், அக்கிரமத்தை இன்னும் நேசிக்கிறவராயிருந்தால், அவர்கள் புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல சாகட்டும். ஆனால் அவர்களை இம்சை செய்வது சரியானதல்ல. தேவன் அல்லது மனுஷர் புத்தியற்ற மிருகன் ஜீவன்களைக்கூட, அல்லது மனுஷ சிருஷ்டிகளைத் துன்புறுத்தும் உரிமை இருக்கிறது என்று யார் சொல்வார்கள்? ஆனால் மிருக ஜீவனை அழிப்பது சரியானதாகும் மற்றும் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கக்கூடியவர்களாக இருப்பவர்களை, புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல அவர்களை இறுதியாக அழித்துவிடுவது தேவனுக்கு நியாயமாயிருக்கும்.

## பிசாசு - இறுதி வசிப்பிடம்.

### கே: 225:1 :: கேள்வி (1911) - 1

பிசாசு மற்றும் அவனுடைய தூதர்களின் இறுதி வசிப்பிடமும், முடிவும் எதுவாக இருக்கும்?

**பதில்:** அவர்களுக்கு இறுதியான வசிப்பிடம் எதுவும் இருக்கப்போவதாக நான் நினைக்கவில்லை. அவர்கள் துன்மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் துன்மார்க்கர்கள் எல்லோரையும் தேவன் அழிப்பார்; துன்மார்க்கமான மனுஷரை மட்டுமல்ல, துன்மார்க்கமான ஆவியின் சிருஷ்டிகளையும் அழிப்பார். நித்திய ஜீவன் தேவனுடைய பரிசு; மற்றும் இதை தேவனுடன் இணக்கமாய் உபயோகப்படுத்தாதவர்கள், இதை அடைவதற்கு அனுமதிக்கப்பட

மாட்டார்கள். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

## பிசாசு - வெளிப்படுத்தின ஆகமத்தின் அடையாளங்கள்.

### கே: 225:2 :: கேள்வி (1911) - 2

"மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசி யுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்." "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்கிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது."

**பதில்:** இந்த பத்திகள் வெளிப்படுத்தல் ஆகமத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன மற்றும் வெளிப்படுத்தல் ஆகமம் ஒரு அடையாள புஸ்தகம் ஆகும்; இதனுடைய உட்கருத்து என்னவென்பது துல்லியமாகத் தெரிகிறது. இயேசு தம்முடைய தூதனை அனுப்பினார் மற்றும் சில விஷயங்களின் அடையாளங்களைத் தெரிவித்தார் அல்லது உருவாக்கினார் மற்றும் அந்த அறிகுறிகள் (signs) அல்லது அடையாளங்கள் நம்மிடம் இருந்து கொண்டிருக்கின்றன மற்றும் 1800 வருஷங்களாக ஆராயப்பட்டு வருகின்றன. இப்போது, இந்த நேரத்தில் வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதையும் ஆய்வு செய்வதை நான் மேற்கொள்ளவில்லை. ஆனால் வெளிப்படுத்தல் ஆகமத்தில் காணப்படும் வேத வாக்கியத்தின் உரைப்பகுதி, தேவனுடைய வார்த்தையின் மற்ற பகுதிகளில் சில அடிப்படையானவைகளைக் கொண்டிராவிட்டால், இது எந்தக் கோட்பாட்டையும் முழுமையான அளவில் அடிப்படையாகக் கொண்டதில்லை என்பதை எல்லா போதகர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை, முதலாவது சுருக்கமாகச் சொல்லிக்கொள்வதில் மனநிறைவு பெறுகிறோம்; வெளிப்படுத்தல் ஆகமத்தில் உள்ள வேதாகம உரைப்பகுதியை மட்டும் வெறுமனே அடிப்படையாகக் கொண்டு எந்த ஒரு கோட்பாட்டையும் கட்டமைக்க முடியாது, ஏனெனில் இது ஒரு அடையாள புத்தகமாக இருப்பதால், இதில் உள்ள ஏறக்குறைய எல்லா கூற்றுகளும் அடையாளப்பூர்வமாகவே இருக்கின்றன. இப்போது, இந்த விஷயத்தில், அது மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசியைப் பற்றிய மேற்கோளை நீங்கள் கவனிக்க முடியும் - ஒரு மிருகம் மற்றும் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. அந்த மிருகம் யார்? அந்த மிருகத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அந்த மிருகத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? இப்போது, நீங்கள் பாருங்கள், அந்த மிருகம் எதை அடையாளப்படுத்துகிறது மற்றும் அந்த கள்ளத் தீர்க்கதரிசி எதை அடையாளப்படுத்துகிறது என்பதை விவாதிக்கவும், அந்த விஷயத்திற்குள்ளாகப் போவதற்கு நான் நேரம் எடுத்துக்கொள்ளாமல், இதற்கு அர்த்தம் என்ன என்றும், அவைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை பற்றி விவாதிப்பது சரியானதாய் இருக்காது. அந்த மிருகம் ஒரு பெரும் அமைப்பின் அடையாளமாய் இருக்கிறது. ஆனால் இந்த பாடம் பற்றிய விவாதத்திற்குள்ளாகச் செல்வதற்கு நேரம் நம்மை அனுமதிக்காது. இது இப்போது உலகத்தில் இருக்கக்கூடிய மதத்தின் பெரும் அமைப்பை அடையாளப்படுத்துகிறது என்று நான் நம்புகிறேன். மற்றும் அந்த கள்ளத்தீர்க்கதரிசி மதத்தின் வேறொரு அமைப்பைக் குறிக்கிறது என்று நான் புரிந்து கொள்கிறேன் - மனுஷன் அல்ல, மனுஷர்களை அல்ல, ஆனால் ஒரு அமைப்பு. மற்றும் அந்த அமைப்பு அழிக்கப்பட இருக்கின்றது; அந்த அமைப்பு வாதையை அடையப்போகிறது மற்றும் இது வீழ்ச்சி அடையப்போகிறது. - மக்கள் அல்ல. நேற்று இரவு நாங்கள் கொடுத்த இந்த பாடம் குறித்த ஒரு துண்டு வெளியீட்டில் நீங்கள் சில வடிவங்களைக் காண முடியும்.

## டைவ்ஸ் DIVES) - அர்த்தம் என்ன?

### கே: 226:1 :: கேள்வி (1905) -

"டைவ்ஸ்" (DIVES - Latin word) என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது?

**பதில்:** லாசரு "ஏழையை" குறிப்பது போல், இது "ஐசுவரியவானை" குறிக்கிறது.

## தெய்வீகத்தன்மை - பாஸ்டர் ரசல் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை மறுக்கிறாரா?

### கே: 226:2 :: கேள்வி (1913) - 2

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை நீங்கள் மறுக்கிறீர்களா?

**பதில்:** ஒருபோதும் இல்லை, அருமை நண்பர்களே, நாங்கள் சொல்லவேண்டியவைகளை சிலர் பெருமளவில் தவறாகப் புரிந்துகொண்டுள்ளதாகக் காணப்படுகிறார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம் ஆகும். இயேசு கன்னிகையான தாயை உடையவராக இருந்தார் என்பதை மறுக்கக்கூடியவர்கள், இயேசு இதற்கு முன்னதாக வேறு இருப்பு (EXIISTENCE) இருந்தது என்பதை மறுக்கக்கூடியவர்கள் இந்த நகரத்திலும் மற்றும் ஒவ்வொரு பெரிய நகரத்திலும் பெரும் எண்ணிக்கையில் இருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள் என்று நான் அனுமானிக்கிறேன். அவர்களுடைய இயேசுவின் தெய்வீகத்தன்மையை மறுப்பது பற்றி யாரும் எதுவும் கூறுகிறதில்லை. நான் அவர்களைக் குறைகூறுவதில்லை. யேகோவா அவருடைய தந்தை என்பதை நாங்கள் கோருகிறதில்லையா? யோசேப்பு அவருடைய தந்தை என்பதை நாங்கள் மறுக்கவில்லையா? நாங்கள் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை குறித்து நிச்சயமாகக் கோருகிறோம்; தெய்வீக பிதா தான் அவருடைய தந்தை. அவர் ஜெநிப்பிக்கப்பட்டார் மற்றும் கன்னிகையிடம் விசேஷமாகப் பிறந்தார்; ஆகவே அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்." அவர் மனுஷனாக இருந்த போது, அவர் பரலோக பிதா என்று நாங்கள் கோருகிறோமா? இல்லை. அவர் அவருடைய சொந்த தந்தையாக இருந்தார் என்று நாங்கள் கோரவில்லை. அது வேதாகமத்தின்படியாக இல்லை. அவர் அவருடைய சொந்த தந்தையாக இருந்தார் என்றும், அவருடைய சொந்த மகனாக இருந்தார் என்றும் யாரேனும் நினைத்தால், அவர் என்ன பேசுகிறார் என்பதை அவர் அறியவில்லை.

அவர் இப்பொழுது எப்படி இருக்கிறார்? அவர் இப்போது தெய்வீகத்தன்மையில் இருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம். வேதாகமம் அப்படியே சொல்கிறது. "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியில் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், (பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக) இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." மேலும் சபை தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுகிறது என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். இயேசு தெய்வீக சுபாவத்திற்கு பங்காளியாயிருக்கிறார் என்று இது சொல்லவில்லை என்றால், அந்த கருத்தைப் போதிப்பதாகவே நாம் அவரைப் புரிந்து கொள்கிறோம்.

## பிரிவினைகள் - ஒழுங்கில்லாதவர்கள் மற்றும் குழம்பியிருப்பவர்கள்.

### கே : 226:3: :: கேள்வி (1910) - 3

ரோமர் 16:17ம் வசனத்தில் பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இத்தகையவர்களுக்கும் மற்றும் வெறுமனே குழம்பிக் காணப்படுகிறவர்களுக்கும் அல்லது சத்தியத்தினுடைய ஏதோ சில மேலான கருத்தினை உடனடியாகப் பார்க்க முடியாதவர்களாகக் காணப்படுகிறவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அறிந்திட எக்காரியங்கள் நமக்கு உதவிடும்? தங்களுடைய கருத்து வேறுபாட்டைக்குறித்து தெரிவிக்கும் விஷயத்தில் வழக்கத்திற்கு மாறாக ஆவல் உள்ளவர்களாக ஒருவேளை இந்த இரண்டாம் வகுப்பார் காணப்படுவார்களானால், அவர்களை நாம் எப்படிக் கையாள வேண்டும்?

**பதில்:** அது ஒரு பகுத்துணரும் காரியம் என்றும், கர்த்தருடைய வழிநடத்துதலை வேண்டிக்கொண்டு நீங்கள் உங்கள் சொந்த பகுத்துணர்தலைப் பயன்படுத்திட வேண்டும் என்றும், சகோதாரர்கள் யாவரோடும் ஞானமாய் நடந்து கொள்ளுங்கள் மற்றும் எப்போதும் இரக்கத்துடனும், அன்புடனும் நடந்துகொள்ளுங்கள் என்றும் நான் சொல்லுவேன்.

பிரிவினைகளை உண்டுபண்ணுகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி அப்போஸ்தலன் கூறினதற்கான அர்த்தமானது, யாரேனும் நம்மிலிருந்து வேறுபட்டுப் பேசுகிறார்கள் என்றால், நாம் அவரோடு பிரச்சனைகளைப் பண்ணி, அவரை வெளியேற்றக்கூடாது என்று நான் புரிந்துகொள்ளுகிறேன். அவர்கள் தங்கள் கருத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டு அதை முன்வைத்த பிற்பாடும், போராடிக்கொண்டிருக்கும் மனப்பான்மையில் காணப்பட்டு, தொடர்ந்து மோதிக்கொண்டும், பிரிவினையை உண்டாக்கத்தக்கதாகச் செயல்பட்டுக்கொண்டும் காணப்படுவார்களானால், அவர்களை விட்டு விலகிட வேண்டும் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் கூறியுள்ளார். விட்டு விலக வேண்டுமென்று அவர் சொல்கையில், அவர்களை காட்டு விலங்குகளைப் போன்றோ, எதிர்ப்பவர்களைப் போன்றோ கருதி விட்டுவிலக வேண்டும் என்று நான் புரிந்துகொள்ளவில்லை. மாறாக இசைவான நிலையில் காணப்படுபவர்களோடு நாம் முழுமையாயும், சுதந்தரமாயும் நம் உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புவது போன்று நாம் யாரிடத்தில் வெளிப்படுத்திட விரும்பாமல் இருப்போமோ, அத்தகைய நபர்களென அவர்களைக் கருதவேண்டியதைக் குறிப்பதாக புரிந்துகொள்கின்றேன். உதாரணத்திற்கு, ஏதோ ஒரு வேதவாக்கியப் பகுதியின் மீது, ஏதோ சில வேறுபட்ட கருத்தினை ஒரு சகோதரன் கொண்டிருப்பதற்காக, நாம் அவரைவிட்டு விலகிடுவதற்கும், அவரைச் சகோதரன் என்பதை மறுத்திடுவதற்கும் நாம் அனுமதிக்கப் படவில்லை. கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினனாகக் கருதப்பட்டிருக்கும் ஒருவரை ஐக்கியத்தினின்று ஒதுக்கிவைத்திடுவதற்கு ஒரு செயல்முறை, ஒரே ஒரு வழிமுறை காணப்படுகின்றது. முதலாவது சம்பந்தப்பட்டவரிடத்திற்குத் தனிமையில் செல்லவேண்டும். ஒருவேளை காரியத்தினைக் குறித்த சரியான புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வரமுடியவில்லை யெனில், உங்களோடுகூட வேறு இரண்டு அல்லது மூன்று பேரை அழைத்துச் செல்லுங்கள். ஒருவேளை இன்னமும் ஒருமனப்பாட்டிற்குள் வரமுடியவில்லையெனில், விஷயமானது முறையாக பிரதிநிதிகள் வாயிலாகச் சபையினிடத்திற்குத் தெரிவிக்கப்படலாம். இரண்டு அல்லது மூன்று பேரை அழைத்துச் செல்லும் விஷயத்தில், நீங்கள் சபையினுடைய இரண்டு அல்லது மூன்று மூப்பர்களை அழைத்துச் செல்லலாம்; ஏனெனில் அழைத்துச் செல்லப்படுவதற்கு அவர்கள் மிகப் பொருத்தமான நபர்களாய் இருப்பார்கள். ஒருவேளை அச்கோதரன் இவர்களுக்குச் செவிகொடுக்க மறுப்பாரானால், பின்னர் அது சபையாருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படலாம்; மற்றும் இந்த ஒரு வழியினால் மாத்திரமே மற்றும் ஒன்றுகூடி வரும் தேவனுடைய ஜனங்கள் அடங்கின முழுச்சபையாரின் வாக்குரிமையினால், அதாவது இவ்விஷயத்தில் அவர்களது வாக்கின் (VOTE/VOICE) மூலமாக மாத்திரமே, ஒரு சகோதரனை ஐக்கியத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட முடியும். சகோதரர்களென நீங்கள் அடையாளம் கண்டுகொள்பவர்களின் மத்தியில், மற்றவர்களைக் காட்டிலும் சிலரிடத்தில் நீங்கள் மிகவும் நெருக்கமான ஐக்கியம் கொண்டிருப்பீர்கள் மற்றும் இவர்களுக்கு நீங்கள் விசேஷித்த கவனம் செலுத்துவீர்கள்; இதற்குக் காரணம் அவர்களது கல்வியோ அல்லது சமுதாய அந்தஸ்தோ அல்லது ஐசுவரியமோ இல்லாமல், மாறாக கர்த்தரிடத்திலான அவர்களது உறவேயாகும்; மற்றும் பிரிவினையை உண்டுபண்ணுகிற ஒருவரிடத்தில், உங்களது ஐக்கியத்தினை அதிகமாய்க் கொடாதிருங்கள்; மேலும் ஒருவேளை அவர் முழுமையான ஐக்கியத்தில் காணப்பட்டும், பிரிவினைகளை உண்டுபண்ணாமலும் இருந்திருந்தால், நீங்கள் அவரிடத்தில் எப்படி நடந்திருப்பீகளோ அப்படி நடந்து கொள்வதற்குப் பதிலாக, இப்பொழுது கொஞ்சம் அதிகமாகவே முகம் கொடுத்துப் பேசாதீர்கள். அவர் 'முரண் கோட்பாடுடையவர்' (HERETICS) என்று அவருக்குக் கெட்டப் பெயர் உண்டாக்கிட வேண்டுமென அப்போஸ்தலன் கூறிடவில்லை. அந்நபர் ஆபத்தான நிலையில் இருப்பதை நீங்கள் காணும் பட்சத்தில், அவரை எந்த ஒரு ஊழியத்திற்கும் அல்லது அவருக்கு விசேஷமாய் ஆதரவாகக் காணப்பட வாய்ப்புள்ள எதற்கும் நியமிப்பதைத்

தவிர்த்திடுங்கள். அவரைத் தள்ளிவிடாதிருங்கள்; அவருக்கு உதவிசெய்ய ஆயத்தமாய் இருங்கள் மற்றும் அவருக்குப் பாதகம் செய்யாதிருங்கள்; இதுவே அப்போஸ்தலனின் கருத்தென்று நான் எண்ணுகின்றேன்.

## நாய்கள் - உங்களுடைய சுற்றுப்புறத்தில் நாய்கள்.

### கே: 227:1 :: கேள்வி (1905) - 1

பிலி.3:2ல் உள்ள மூன்று சொற்றொடர்களைப் பற்றி தயவுசெய்து விளக்கவும். "நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்."

**பதில்:** ஓநாய்கள் யார்? நல்லது, ஒவ்வொருவரும் அவரவர்களுடைய சொந்த சுற்றுப்புறத்தை நோக்கிப் பாருங்கள் மற்றும் உங்கள்மேல் சடக்கென்று கடித்தல் மற்றும் குரைப்பது போன்ற நாயின் தன்மைகளையுடைய எவரையும் காண முடியுமா என்று பாருங்கள். இது சொல்லர்த்தமான நாய்களை அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் அடையாளப்பூர்வமான நாய்கள். நீங்கள் யாரையாவது பார்த்தால், அவர்களைத் தவறான முறையில் உரசிக்கொள்ளாதீர்கள். பொல்லாத வேலையாட்கள் என்பது பொல்லாதவைகளைச் செய்யும் எவரையும் அர்த்தப்படுத்துகிறது; நமக்கு இருளுடன் எவ்விதமான பங்கோ, அல்லது தொடர்போ கிடையாது. மற்றவர்களுக்கு தீங்கு செய்கிறவர்களுடன் நீங்கள் எவ்வித ஐக்கியமும் கொள்ள வேண்டாம், ஏனெனில் சமயம் வரும்போது, அவர்கள் உங்களுக்கு தீமை செய்வார்கள். நீதியை நேசிக்கிறவர்களின் தோழமை மற்றும் ஐக்கியத்தை நாங்கள் நல்லதாகவும், நீதியுள்ளதாகவும், மேன்மை பொருந்தியவற்றில் உயர்மதிப்பு வையுங்கள்.

அப்போஸ்தலர்களின் காலத்தில் சுன்னத்துக்காரர்கள் விருத்தசேதனத்துக்கு எதிரானவர்களைக் குறிக்கிறதாயிருந்தது, விருத்தசேதனம் ஒரு அடையாளம் ஆகும். நமக்கு தீங்கு விளைவிக்கும் பாதிப்புக்களை துண்டித்து எறியும் இருதயத்தின் விருத்தசேதனம் நம்முடையது ஆகும். மாம்சத்தின்படி நாம் யூதர்கள் அல்ல, ஆனால் இருதயத்தில் விருத்த சேதனம் பெற்றிருக்கிறோம்.

## பூமியின் ஆளுகை - யாருடைய உரிமை?

### கே: 227:2 :: கேள்வி (1908) - 2

பாவம் செய்ததற்கு முன்பு ஆதாமுக்கு இருந்தது போல, இயேசு தம்முடைய அர்ப்பணிப்பைச் செய்ததற்கு முன் பூமியின் ஆளுகைக்குரிய உரிமை பெற்றிருந்தாரா? மற்றும் இதை மனுஷனுக்குத் திரும்பக் கொடுப்பதற்காக இயேசு இந்த உரிமையை பலியிட்டாரா?

**பதில்:** இந்த வார்த்தையின் ஒரு பார்வையில் இது உண்மையாக இருக்கலாம். அதாவது, அவர் பரிசுத்தமாக இருந்த காரணத்தினால், மற்றும் இந்த உலகத்தில் அவர் ஒருவர் மட்டுமே பரிசுத்தமாக இருந்த காரணத்தினால், மற்ற மனுஷர்கள் பெற முடியாத சில உரிமைகளை அவர் பெற முடிந்தது. ஆனால் நினைவில் கொள்ளுங்கள், இது அவருக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்பு, அவர் பரிசுத்தமுள்ளவராய் இருந்தாரா என்று பார்ப்பதற்கு, அவர் சோதனைக்குள்ளாக்கப்பட வேண்டியிருந்தது. ஆதாமுக்கு இது கொடுக்கப்பட்டிருந்தது மற்றும் பிறகு அவர் இதைக் கைக்கொள்கிறாரா, அல்லது இல்லையா என்பதை பார்க்க அவர் சோதிக்கப்பட்டார்; அவர் சோதனையில் தோல்வி அடைந்தார்; ஆகவே மற்ற ஒவ்வொன்றையும் இழந்தது போல, ஜீவனுடைய ஆளுகையையும் இழந்தார்.. ஆனால் நமது கர்த்தர் இயேசு கிறிஸ்துவைப் பொருத்தவரையில், அவருடைய சோதனை முதலில் வந்தது மற்றும் ஆளுகையின் உரிமை அவருக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்பு அவர் சோதிக்கப்பட்டார் மற்றும் அந்த சோதனையில் அவர் உண்மையுள்ளவராக நிரூபித்தார் மற்றும் அவருடைய

உண்மைத்தன்மை அவருடைய ஜீவன் முழுவதும் கல்வாரியில் அவர் ஜீவன் முடியும் வரைக்கும் செயற்படுத்திக் காட்டப்பட்டது. ஆகவே அந்த நேரத்தில், தம்மை பலியிட்டதினால், அவர் தேவனிடம் தம்முடைய விசுவாசத்தையும், தேவனுடைய பிரதிநிதியாகும் உரிமையையும் நிரூபித்தார். மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அனைத்து காரியங்களில் சுதந்தரவாளி யாவதற்கான உரிமையை பொதுவான முறையில் இப்போது உடையவரானார்; “மந்தையின் துருக்கமே - - முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்.” என்று தீர்க்கதரிசனத்தில் நாம் படிப்பது போல, தேவனிடம் தம்முடைய விசுவாசத்தை செயற்படுத்திக்காட்டிய காரணத்தினால், இந்த உரிமையை உடையவராயிருக்கிறார். பிதாவிடம் அவருடைய விசுவாசமும், கீழ்ப்படிதலும் மரணம் வரைக்கும் இருந்த காரணத்தினால், ஆதாமிடம் முதலில் இருந்த ஆளுகை, சிறுமந்தையின் துருக்கமாகிய கிறிஸ்துவினிடத்திற்கு வந்தது. அவர் தம்மையே அர்ப்பணித்ததால், இதை ஒப்படைத்தார். அவர் ஒரே சமயத்தில் ஜெயங்கொள்ளுகிறவராகவும், ஒப்படைப்பவராகவும் இருந்தார். இஸ்ரயேலின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்ததினால், பூமியின் ஆளுகைக்குரிய உரிமையை பெற்றுக்கொண்டார். மற்றும் அவர் தம்மையே பலியிட்டு, இதை ஒப்படைத்ததினால், இதை ஆதாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுப்பதற்கான உரிமையை அவர் பெற்றிருந்தார். ஒரே சமயத்தில் அவர் இரண்டு காரியங்களைச் செய்துகொண்டு இருந்தார். இது நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலும், தம்மையே பலியிடுதலும் என்று இரண்டும் இருந்தன. இந்த இரண்டு காரியங்களும் ஒருசேர நடக்ககூடியதாக இருந்தன மற்றும் இந்த இரண்டு காரியங்களும் கல்வாரியில் முடிவடைந்தன. ஆகவே அவர் ஆளுகை உடையவராயிருக்கிறார் மற்றும் அவருடைய மணவாட்டியான சபையைக் கூட்டிச்சேர்த்த உடனேயே, அவர் ஆதாமின் சந்ததிக்கு, மனுக்குலத்திற்கு அந்த ஆளுகையைக் கொடுக்க உத்தேசித்துள்ளார். இந்த மனுக்குலத்துக்கு அவரே பிதாவாகவும், ஜீவன்-அளிப்பவராகவும் மற்றும் அவரிடமிருந்து ஜீவன் ஏற்றுக்கொள்ளுகிற அனைவரும் இதைப் பெற்றுக்கொள்வார்கள். ஆயிர வருஷ யுகம் முழுவதிலும் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருந்தால் ஜீவன் பெறப்படும் என்பதையும், இதை அளிப்பதற்கான உரிமையைப் பெற்றிருக்கிறவர் இவர் ஒருவர் மட்டுமே என்பதையும், இதன் காரணமாக, அவர் நித்திய பிதா, அல்லது நித்திய ஜீவனுடைய பிதா என்று அழைக்கப்படுகிறார் என்பதையும் அவர்கள் அறிவார்கள். அவருடைய பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு அவர் நித்திய ஜீவனை அளிப்பார். வேறு வார்த்தைகளில் சொன்னால், ஆதாமையும் அவருடைய சந்ததியாரையும் கிரயத்திற்கு வாங்கிய பிறகு, ஆதாமின் பிள்ளைகளாக இருந்த எல்லோரையும் அவர் தம்முடைய பிள்ளைகளாக சுவீகாரம் செய்து கொள்வார்.

<u>சகோதரர் ஹாரிசன்:</u> சகோதரர் ரசல், “அவன் சிறுபிள்ளையாயிருக்கும் காலமளவும், அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசம் இல்லை.” என்று சொல்லுகிற உரைப்பகுதியை எந்த உணர்வில் நாம் கருத்தில் கொள்ளலாம், அது அங்கே உரியதாயிருக்குமா?

நான் அப்படி நினைக்கவில்லை. அது ஒட்டுமொத்தமாக வேறொரு பார்வையைக் கொண்ட கருத்து என்று நான் நினைக்கிறேன். அங்கே அப்போஸ்தலன் யூதர்களிடம் பேசிக்கொண்டு இருந்தார் மற்றும் தேவனுடைய பிள்ளையாக ஒரு யூதர் எவ்வித சிலாக்கியங்களும் பெற முடியாது என்பதற்கான காரணம், அவர்கள் காரியக்காரர்கள் போன்றவர்களின் கீழ் இருந்தனர். தேவன் அவர்களிடம் கிருபையுள்ளவராக இருந்தபோதிலும், மற்ற விஷயங்களில் உலகத்தின் மற்றவர்களைப் போலவே அவர்கள் நடத்தப்பட்டார்கள்; அவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்படவில்லை, ஆனால் குமாரர்களுடைய வீடு ஆரம்பமான உடனேயே, நாம் இனிமேல் அடிமையானவர்களின் வீட்டைச் சார்ந்தவர் களாயிராமல், இப்போது குமாரர்களுடைய வீட்டுக்கு வரக்கூடியவர்களாக, அந்த நியாயப்பிரமாணத்திலிருந்து நம்மை விடுதலை பண்ணினார். நீங்கள், ஒருவேளை இதை கிறிஸ்துவுக்குப் பிரயோகப்படுத்தலாம்; அவர் அடிமையானவர்களின் வீட்டின் அங்கமாயிருந்த வரைக்கும், அவர் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தார். பிறகு, கிறிஸ்து குமாரனாக, அவர் குமாரனாக ஏற்கனவே இருந்தும், இந்த செயல்முறை நிரூபணத்தை அவர் அடைந்திராத வரைக்கும், அவர் அதே அடிமையானவர்களன் வீட்டைச் சார்ந்தவராகவே நடத்தப்பட்டார். எல்லா

யூதர்களும் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்ததைப் போலவே, அவரும் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தார்.

## கதவு மூடப்பட்டது - அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது.

### கே: 229:1 :: கேள்வி (1910) - 1

"அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை" இது யாருக்கு உரித்தாகிறது?

**பதில்:** மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டாள் என்பதையும், அவர்கள் சென்றுவிட்டார்கள் என்பதையும் உணரக்கூடிய வகுப்பாரைக் குறிப்பதாகத் தோன்றுகிறது என்று நான் புரிந்துகொள்ளுகிறேன். இந்த வகுப்பாரைப் பற்றி வெளிப்படுத்தல் ஆகமத்தில் விவரிக்கப்படுகிறது. இது பாபிலோனின் விழுகையின் சமயத்தில் திரள்கூட்டத்தாராக அடையாளப்படுத்தப்படுகிறது. பாபிலோனின் விழுகையின் சமயத்தில் அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்." (நாங்கள் விடுபட்டிருக்கிறோம் மற்றும் ஏமாற்றம் அடைந்தோம். இருப்பினும் நாம் களிகூருவோம், ஏனெனில் தேவனுடைய திட்டத்தை நாம் பார்க்கிறோம்.) அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை என்ற நேரம் அதுவே, ஆனால் நாம் விடுபட்டிருக்கிறோம் மற்றும் நாம் மணவாட்டிக்குப் பதிலாக ஊழியக்காரர்களின் வகுப்பாராக இருக்கிறோம். பிறகு அந்த வகுப்பாருக்கு ஒரு செய்தி வருகிறது மற்றும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் செய்தி அனுப்புகிறார். அவர்கள் கலியாணத்திற்கு வருவதற்கு, சங்கீதம் 45ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கு அழைக்கப்படுகிறார்கள்.

## கதவு - இன்னும் அநேகமாக மூடப்பட்டிருக்கவில்லை.

### கே: 229:2 :: கேள்வி (1915 - Z) - 2

இந்த காலத்தில் அர்ப்பணிப்புக்குள்ளாகும் ஒருவருக்கு, "மணவாட்டி" வகுப்பாராவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? அல்லது இப்போது அழைப்பு நின்றுவிட்டதா?

**பதில்:** பொதுவான அழைப்பின் முடிவுக்கும், கதவு மூடப்படுவதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாங்கள் குறிக்கிறோம். போதுமான எண்ணிக்கையினர் அழைக்கப்பட்டு, அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட போது - 1881ல் - பொதுவான அழைப்பு முடிவுற்றது என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆனால் அழைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இவர்களில், சோதனை இன்னும் நடைபெறக்கூடியதாக இருக்கிறது. இறுதிவரைக்கும் விசுவாசமாக நிலைத்திருப்பவர்கள் மட்டுமே ஜெயங்கொள்ளுகிறவர்களாக கடைசியில் எண்ணப்படுவார்கள். மற்றவர்கள் தங்களுடைய அனுதின வாழ்க்கையில் அவர்களுடைய உடன்படிக்கைக்கு முற்றிலும் உண்மையாயிருப்பதை நிரூபிக்காதவர்கள், இந்த வரிசையிலிருந்து குறித்த காலத்தில் விடப்படுவார்கள். அவர்கள் விசுவாசமாக ஓடியிருக்கவில்லை என்பதை இது அர்த்தப்படுத்துகிறது. இது தொடர்ச்சியாக நிரப்பப்படுவதற்கான காலி இடங்களை தோற்றுவிக்கிறது. ஆகவே இவ்விதம் காலி இடங்களை நிரப்புவதற்கு ஒரு புது அழைப்பு தேவையில்லை, ஆனால் இது ஒருவர் வெளியே சென்றவுடன், ஒருவர் நுழைவதற்கான வெறும் அனுமதி மட்டுமே.

1881ம் வருஷத்திற்கு முன்னர் அர்ப்பணிப்புக்குள்ளானவர்களின் பெரும் எண்ணிக்கையில் 'உண்மையாயிருப்பதில் தோல்வியுற்றனர் என்பது எங்களுடைய கருத்து ஆகும். பரலோகத்துக்கடுத்தவைகளுக்கு சாதகமாக பூமிக்குரிய பற்றுகளைப் பலியிடுவதில் ஆர்வமிக்க

விசுவாசத்தினால் உங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்வதற்குரிய எதிர்பார்ப்புக்கான ஒவ்வொரு காரணத்துடனும் உங்களுடைய அர்ப்பணிப்பைச் செய்வதற்கான நேரம் இன்னும் உங்களுக்கு உள்ளது என்பதே எங்களுடைய கருத்து ஆகும். கர்த்தருடைய நிறைவையும், நம்முடைய குறைபாட்டையும் நாம் உணர்ந்த உடனேயே, கர்த்தருக்கு நம்மை முழுமையாகக் கொடுப்பது தான், எது நிகழ்ந்தாலும், நம்மில் எவரும் செய்யக்கூடிய அறிவுக்குப் பொருத்தமான காரியங்கள் இருக்கிறது. கர்த்தர் கொடுக்கும் வெகுமதி எப்படி இருந்தாலும், நம்முடைய பராமரிப்பாளராக அவரை நாம் பெற்றிருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். மேன்மை பொருந்தியவரும், மிகவும் தாராள மனம் உடைய இராஜாவாகிய தேவன் தம்முடையவர்கள் எல்லோருக்கும் சிறந்த பரிசினைக் கொடுப்பார் என்பதில் நாம் நிச்சயமாயிருக்கிறோம். வேறு வார்த்தைகளில் சொன்னால், சிறுமந்தை நிறைவு பெற்ற பிறகு, கீழ்ப்படிதல் மற்றும் பலியின் ஆவியை உடைய மற்றவர்களுக்கு வேறுவிதமான முறையில் கர்த்தர் ஆசீர்வதிக்கப்போவதில் மகிழ்ச்சியுடையவராக இருப்பார்.

## கதவு - மூடப்படுதல்.

## கே: 229:3 :: கேள்வி (1908) - 3

மாம்சத்திலிருப்பவர்கள் மேலும் சோதனையில் நீடித்திருக்கும் போது கதவு அடைக்கப்படுமா, அல்லது சரீரத்தின் கடைசி அங்கம் மறுரூபமான பிறகு கதவு அடைக்கப்படுமா?

**பதில்:** 'புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள்' உவமை உங்களுக்கு நினைவிருக்கும். இவர்கள் எல்லோரும் கன்னிகைகள் என்று கர்த்தர் நமக்கு கூறுகிறார். இந்த உவமை உலகத்தாரைப் பற்றி பேசுவதில்லை. இது மணவாளனுக்காகக் காத்திருப்பவர்களை மட்டுமே பேசுகிறது. கலியாணத்திற்கு தயாராகிக்கொண்டிருப்பவர்கள் - கன்னிகை வகுப்பாரைத் தவிர்த்து, மனுக்குலத்தின் மற்ற எல்லோரையும் பற்றி உவமை பேசுகிறதில்லை. மணவாளனுக்குக் காத்திருப்பவர்கள், அவரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் மற்றும் கலியாணத்திற்குள்ளாகச் செல்லும் நம்பிக்கை கொண்டிருப்பவர்களில் புத்தியுள்ளவர்கள் மற்றும் புத்தியில்லாதவர்கள் என்ற இரண்டு வகுப்பார்கள் உள்ளனர் என்று புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகளின் இந்த உவமை காண்பிக்கின்றது; மேலும் அந்த புத்தியுள்ள கன்னிகைகளுக்கு அந்த நேரத்தில் உண்மை நிகழ்வை தெளிவாக உய்த்துணர முடியும்; மணவாளன் கதவைத் தட்டும் சத்தத்தை அவர்கள் கேட்க முடியும் மற்றும் அந்த சத்தத்தினால் விழித்துக்கொள்வார்கள். மணவாளன் வந்திருக்கிறார் என்று அவர்கள் புரிந்து கொள்வார்கள் மற்றும் அவர்கள் தங்களுடைய தீவட்டிகளில் எண்ணெயை உடையவர்களாக இருப்பார்கள்; திருடனைப் போல அந்த நாள் அவர்களை மேற்கொள்ளும் விதமாக அவர்கள் இருளில் இருப்பதில்லை; இந்த அறிவின் ஒளியுடன் அவர்கள் முன்னேறிச் செல்வார்கள் மற்றும் இந்த சமயத்தில் கர்த்தரைப் பின்பற்றிப் போவார்கள் மற்றும் அவருடன் கலியாணத்திற்குச் செல்வார்கள். நான் இதைப் புரிந்துள்ளபடி, இந்த உவமை இப்பொழுது நிறைவேறுதலின் நடைமுறையில் உள்ளது மற்றும் அநேகர் ஏற்கனவே கலியாணத்திற்குள்ளாகச் சென்றிருப்பார்கள். மற்றவர்களும் கலியாணத்திற்குள் செல்வதற்காக அதே முறையில் முன்னேற்றம் அடைவதற்கான எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். குறித்துக் கொள்ளுங்கள், நாம் அங்கே செல்வதற்கு முன், எந்த நேரத்திலும் விழுவதற்கான வாய்ப்பு உள்ளது மற்றும் விலகிப் போகவும், புத்தியில்லாத கன்னிகையாகும் வாய்ப்பும் உள்ளது. மற்றும் புத்தியில்லாத கன்னிகையாயிருந்த ஒருவர், அந்த புத்தியுள்ள கன்னிகைகளுக்கு மத்தியில் வருவதற்கும், அங்கே அவருடைய இடத்தை எடுத்துக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை அளிக்கிறது. இந்த உவமை படிப்படியாக முன்னோக்கி நகருவதாய் இருக்கிறது. ஒருவர் இந்த எண்ணிக்கையிலிருந்து விழுந்துபோய், புத்தியில்லாதவர்களாகலாம், அல்லது புத்தியில்லாத வராக இருந்த வேறொருவர் இதற்குள் வந்து, கலியாணத்துக்குள்ளாக அவர் வருவதற்கு முன்பாக எந்த நேரத்திலும் புத்தியுள்ளவர்களாகலாம். ஆனால் இறுதியாக, கடைசியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் சென்ற உடனே, வேறு யாரும் உள்ளே வர இயலாது; இதனுடைய முடிவு

இதுவே. கடைசி நபர் சோதனைக்குள்ளாக்கப்பட்டு, பூரணராக்கப்பட்டு உள்ளே சென்றால், கதவு அடைக்கப்பட்டுவிடும், ஏனெனில் அந்த வகுப்பாரில் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் மட்டுமே இருப்பார்கள், அல்லது இந்த எண்ணிக்கையைக் குறித்து எவரேனும் கருத்து வேறுபாடு கொண்டவராய் இருந்து, இது அடையாளமானதாக உள்ளது என்று நினைத்தால், அந்த எண்ணிக்கை எதுவாக இருந்தாலும் சரி. இது சொல்லர்த்தமான எண்ணிக்கை என்று நான் அறியவில்லை; இப்படித்தான் இருக்கும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறேன். ஆனால் இது சொல்லர்த்தமானதா அல்லது உருவகமானதா, எப்படி இருந்தாலும்; தேர்ந்தெடுக்கப்படும் வகுப்பாரை உள்ளடக்கும் ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையை தேவன் முன்குறித்திருக்கிறார் மற்றும் அந்த தேர்ந்தெடுக்கப்படும் வகுப்பாருக்குள் நுழைவதற்கு நம்முடைய அழைப்பையும், தேர்ந்தெடுக்கப்படுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்வது உங்களுக்கும் எனக்கும் அவசியமாயுள்ளது. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் கிரீடங்கள் உள்ளன; "ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு." உங்களுக்கு ஒரு கிரீடம் ஒதுக்கப்பட்டிருக்குமானால், மற்றும் கர்த்தர் இதை கொடுக்க விரும்பும் ஒருவராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அப்போது அதைப் பற்றிக்கொண்டிராமல், படிவரிசையிலிருந்து வெளியேறாமல் இருங்கள், முன்னேறிச் செல்லுங்கள், உங்களுடைய எண்ணெயை குறைவாக்கிட அனுமதிக்காதீர்கள்; இறுதிவரையில் விசுவாசத்தைக் கைக்கொள்பவராக இருப்பதற்கு கவனமாயிருங்கள் மற்றும் கிரீடத்தைப் பெறுவீர்கள்; ஆனால் நீங்கள் அவிசுவாசமுள்ளவர்களாக நிரூபிக்கப்பட்டால், அந்த கிரீடம் இனிமேல் உங்களுடையதாக இருக்காது; மற்றும் வேறு ஒரு நபர் உங்களுடைய இடத்தை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்; கிரீடம் நிரப்பப்பட வேண்டியிருக்கிறது. கடைசி நபர் உள்ளே வரும்வரைக்கும் கதவு அடைக்கப்படாது, ஏனெனில் அங்கே ஒரு எண்ணிக்கை இருக்க வேண்டும், கடைசி நபர் உள்ளே போகும்போது, கதவு அடைக்கப்படும், ஏனெனில் அந்த எண்ணிக்கையைவிட கூடுதலாக ஒருவர்கூட அங்கே இருக்கமாட்டார்கள். இதே விஷயம் தான் வேறொரு இடத்தில் உருவகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. அங்கே இயேசுவினுடைய சரீரமாகிய சபைக்குத் தலையாக இருப்பதாக அவர் குறிக்கப்படுகிறார் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக பிரத்தியேகமாக நாம் இருக்கிறோம், மற்றும் சரீரத்தில் வெவ்வேறு அங்கங்களாக இவர்கள் எல்லோரும் முழுமையாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் கூறுவது உங்களுக்கு நினைவில் இருக்கும், நீ கால்களை நோக்கி, நீங்கள் வேண்டுவதில்லையென்றும், கையைப் பார்த்து, நீ எனக்குத் தேவையில்லை என்றும், இது போன்று சொல்ல முடியாது; ஏனெனில் சரீரத்தில் ஒவ்வொரு பகுதியும் அவசியம் ஆகும். இந்த முறையில் தான், கர்த்தர் தம்முடைய சரீரத்தின் முழுமையை உருவகப்படுத்திக் காண்பிக்கிறார். நிழலில், எந்த மனுஷனும் கூடுதலாக ஒரு கைவிரல் அல்லது கால்விரலை உடையவனாயிருந்தால், அல்லது அவன் ஒரு கை விரல் அல்லது கால் விரல் இல்லாதவனாக இருந்தால், அவன் பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்ய முடியாது. ஏன்? ஏனெனில் நிழலான பிரதான ஆசாரியன் மகிமையடைந்த மற்றும் பூரணமாக்கப்பட்ட சபைக்கு அடையாளமாயிருக்கிறார். சரீரத்தின் முழுமைக்குத் தேவைப்படும் துல்லியமான எண்ணிக்கையில் ஒன்று கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்காது.

## பூமி - எப்போதும் நிலையானதாயிருத்தல்.

### கே : 231:1: :: கேள்வி (1911) - 1

பூமி எப்போதும் நிலையானதாய் இருக்குமென்று நாம் எப்படி புரிந்துகொள்ள முடியும்? வெளி. 21:1ல் நாம் வாசிக்கிறோம், "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமல் போயிற்று."

**பதில்:** வேதாகமத்தின்படி இரண்டு உலகங்கள் ஏற்கனவே இருந்திருக்கின்றன என்றும், மூன்றாவது உலகம் வரப்போகிறது என்றும், மற்றும் இவைகள் எல்லாவற்றின் நிகழ்விடமாக

பூமி இருந்து வருகிறது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். உதாரணமாக, ஜலப்பிரளயத்துக்கு முன்பு இருந்த உலகத்தைப் பற்றியும், தற்போது உள்ள அக்கிரமமான உலகத்தைப் பற்றியும் அப்போஸ்தலர் பேசுகிறார்: ஏனெனில் தற்காலம் உலகத்தில் பாவம் ஆளுகிறது மற்றும் இனி வரப்போகும் உலகத்தில் நீதி வாசமாயிருக்கும். இது மூன்று பூமிகளை அடையாளப்படுத்தவில்லை, ஆனால் பூமியில் உள்ள காரியங்கள் மூன்று வித்தியாசமான ஒழுங்குமுறைகள் அல்லது நிலைமைகளைக் குறிப்பனவாக இருக்கின்றன. ஜலப்பிரயத்துக்கு முன்பு இருந்த காரியங்களின் நிலைமை, தற்கால காரியங்களின் ஒழுங்குமுறைகளிலிருந்து வேறுபாடாக உள்ளது. ஜலப்பிரளயத்துக்கு முன்பாக, 1656 வருஷங்களுக்கு முன்பாக, காரியங்கள் தூதர்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்தன; தற்காலத்தில், ஜலப்பிரளயத்திலிருந்து கிறிஸ்துவின் வருகை வரையிலும் அவருடைய இரண்டாம் வருகையில், மனுக்குலம் வசம் உலகம் விடப்படும் மற்றும் இந்த உலகத்திற்கு அதிபதி, மனுஷர்களை சாதகமாகப் பயன்படுத்தி மற்றும் அவர்களின் அறியாமையையும், மூடநம்பிக்கைகளின் அம்சங்களையும் பயன்படுத்திக் கொண்டு, எவ்வித தெய்வீக அதிகாரமும் இல்லாமல் இந்த உலகத்தின் அதிபதியாக இருக்கிறான்; ஏனெனில் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் இருதயங்களில் அவன் கிரியை செய்கிறான் மற்றும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் கீழ்ப்படிதலிலுள்ள பிள்ளைகளைக் காட்டிலும் மிகவும் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள்; ஆகவே இது தற்காலத்திய தீமையான உலகமாக இருக்கிறது. கிறிஸ்துவின் புதிய வானம் மற்றும் புதிய பூமி என்று பேசுகிறார். ஆனால் இது அதே பௌதீக பூமியாக உள்ளது, அதே பாறைகள், இரண்டாம் வருகையின் போது, தேவன் புதிய யுகம் அல்லது புதிய ஒழுங்குமுறை காரியங்களை அறிமுகப்படுத்தப்படும்போதும் அதே அடையாள பாறைகள், அதே பொருட்கூறுகள் இங்கே இருக்கும்; ஜலப்பிரளயத்திற்கு முன்பு இருந்ததைப் போன்று, இன்று நமக்கு இப்பொழுது இருக்கும் வானம் இனிமேல் இருக்கும். ஒரு உலகம் கடந்து விட்டது, மற்றொரு உலகம் அல்லது யுகம் அறிமுகப்படுத்தப்படப் போகிறது. புதிய யுகம் மற்றவைகளை விட வித்தியாசமுள்ளதாக இருக்கும், ஏனெனில் அந்த உலகத்தின் அதிபதியாக, சமாதான - பிரபுவாக கிறிஸ்து இருப்பார்; ஆவிக்குரிய அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் வானங்கள் அடையாளமாக பிரயோகப்படுத்தப்படுகின்றன; அந்த யுகத்தின் ஆட்சி முற்றிலும் நீதியுள்ளதாக இருக்கும்; சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் கூறுகிறார், "நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்." அருமையான நண்பர்களே, அவைகள் அனைத்தும் புதிதாக்கப்படும்; மறுபடியும், மதம் சார்ந்த அல்லது ஆவிக்குரிய அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் வானங்கள் அடையாளமாகப் பிரயோகப்படுத்தப்படுகின்றதை, வேதாகம அடையாள பாஷையில் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உதாரணமாக, இனிவரும் யுகத்தின் வானங்கள் மகிமையடைந்த சபையாக இருக்கப் போகிறதைப் போன்று, வேதாகமத்தின் இந்த அடையாள பாஷையில் தற்கால வானங்கள் தற்கால மத அமைப்புகளாக இருக்கின்றன. தற்காலத்தில், பூமி இக்காலத்தின் சமுதாய ஒழுங்குமுறைகளை உடையதாக இருக்கிறது, தற்காலத்திய சமுதாயம் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. மலைகள் இந்த உலகத்தின் இராஜ்யங்களைக் குறிக்கின்றன, நதிகள் சத்தியத்தைக் குறிக்கின்றன மற்றும் சமுத்திரங்கள் நிலையற்ற, அமைதியற்ற மனுக்குலக் கூட்டத்தாரைக் குறிக்கின்றது. இது தொடர்பானவைகளில் ஒரு மாற்றத்தை கர்த்தர் உருவகப்படுத்துகிறார். இந்த காரியங்கள் அனைத்தும் புதிதாக்கப்படும் - மேசியாவின் ஆளுகையின் கீழ் ஒரு புதிய ஒழுங்குமுறை கொண்ட சமுதாயம் மற்றும் அதிருப்தி கொண்ட, அமைதியற்ற நிலையில் உள்ள ஜனங்கள் இனி இருக்கமாட்டார்கள் என்ற பார்வையில் இனி சமுத்திரம் இருக்காது. அவரிடம் முழங்கால் யாவும் முடங்கும் மற்றும் ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும். தற்காலத்திய இந்த ஒழுங்குமுறையான காரியங்கள் கடந்து போகும் மற்றும் புதிய கிரம ஒழுங்குமுறைகளுக்கு வழி வகுக்கும்; "உலகம்" என்ற வார்த்தை வெவ்வேறான மூன்று கிரேக்க வார்த்தைகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் இந்த வார்த்தையைப் பற்றிய நம்முடைய புரிந்துகொள்ளும் திறன் அதற்கு ஏற்றவிதமாக குழப்பமாகவே இருந்து வந்துள்ளது.

## பூமி - ஆதாம் விழுவதற்கு பூமி பூரணமாயிருந்ததா?

**கே : 232:1: :: கேள்வி (1913) - 1**

ஆதாம் விழுவதற்கு முன்பு பூமி பூரணமாயிருந்ததா? தேவன் அது நல்லது என்று கண்டார் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?

**பதில்:** கர்த்தர் தாம் திருப்தியுறும் நிலைமைக்கு பூமியைக் கொண்டுவந்த உடன், “அது நல்லது: என்று கூறினார். இது எல்லாம் சரியாக இருந்தது மற்றும் நாங்கள் புரிந்துள்ளபடி, பூமியின் ஒரு மூலையில் ஏதேன் தோட்டம் என்று அழைக்கப்படும் ஒரு சிறிய இடம் முழுமையான பூரணத்துவத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலைமையில் இருந்தது. நமது பரலோக பிதா பூமி முழுமையையும், அவர் அப்படித் தேர்ந்தெடுத்திருந்தால், ஏதேன் தோட்டத்தைப் போல உருவாக்கியிருக்க முடியும், ஆனால் பூமி முழுவதையும் ஏதேன் தோட்டத்தைப் போன்று உண்டாக்கி, பிறகு இதை சபிப்பது தேவனுக்கு உகந்ததாக இருக்காது. ஆகவே, மனுஷனுக்கு வெறுமனே தோட்டம் ஆயத்தமாக்கப்பட்டது மற்றும் மீதியான பூமி தேவனுடைய பார்வையில் மிகவும் நன்றாக இருந்தது என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். ஏனெனில் தேவன் நோக்கங்கொண்டிருந்த நிலைமை அப்படி இருந்தது. தோட்டத்தைப் போல பூமி முழுவதையும் உருவாக்கவும், இதை ஒரு மனுஷன் பராமரிக்கச் சொல்வதும் தேவன் விரும்பவில்லை. அவர் பூமி முழுவதும் பண்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கமாட்டார்; ஆனால் இந்த ஒரு மனுஷனிடம் அவர் கூறினார், “நீங்கள் பலுகி, பிள்ளைகளைப் பெறுங்கள், உங்கள் பிள்ளைகளைப் பெருகச் செய்யுங்கள்.” இது இப்படிச் சொல்வது போல இருக்கிறது: “ஏதேன் தோட்டத்தைத் தவிர, இது கட்டுப்படுத்தக்கூடிய நிலைமையில் இருக்கவில்லை; உங்களுடைய பிள்ளைகள் எண்ணிக்கையில் பெருகி, உங்களுக்கு அதிகமான நிலம் தேவைப்படும் போது, வெளியே சென்று, மிகவும் அதிகமாக எடுத்துக்கொள்ளுங்கள்.” ஆதாமின் குடும்பம் பெரிதாக வளர்ந்த போது, அதற்குத் தகுந்தவாறு ஒத்த அளவில் அவர்கள் நிலத்தை எடுத்துக்கொள்வார்கள். மற்றும் இப்படியாக பூமியைக் கீழ்ப்படுத்துவார்கள். மற்றும் அவர்கள் ஒரே சமயத்தில் பராமரிக்க முடிகிறதைவிட அதிகமாக நிலத்தை எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

## ஏதேன் - தோட்டத்தின் இருப்பிடம்.

### கே : 232:2: :: கேள்வி (1911) - 2

ஏதேன் தோட்டம் எங்கே இருந்தது? ஒரு நதி பிரிந்து, நான்கு ஆறுகளாக வந்த இடத்தை எப்போதாவது அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்களா?

**பதில்:** மக்கதோனியாவுக்கு அருகில் அப்படிப்பட்ட இடம் இருப்பதாக அவர்கள் உரிமை கோருகிறார்கள்; நான் இதை எப்போதும் பார்த்ததில்லை. இந்த கோரிக்கை எப்படி ஆதாரம் உடையது என்பதை நான் அறியவில்லை; ஆனால் அப்படிப்பட்ட இடம் இருந்தால், இது ஒரு புதிய ஒழுங்குமுறை கொண்ட சமுதாயம் ஜலப்பிரளயத்தின் பேரழிவுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் எஞ்சியிருக்கும். ஜலப்பிரளயத்தை நான் நம்பினால், ஏதேன் தோட்டத்தின் தடயங்கள் எதையும் நான் எதிர்பார்க்கமாட்டேன் மற்றும் நான் ஜலப்பிரளயத்தை நம்புகிறேன். வேறு எந்த தோட்டமாக இருக்கலாம் என்பதையும், இது ஏதேன் தோட்டத்தின் தடயங்கள் எதையும் விட்டுவைத்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

## மூப்பர்கள் - சபையில் அதிகாரம்.

### கே : 232:3: :: கேள்வி (1909) - 3

சபையாரை நடத்துவதற்கும் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கும் மாத்திரமே ஒரு மூப்பர் தேர்ந்தெடுக்கப்படுகின்றாரா? அல்லது அவருக்கு இன்னும் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றதா?

**பதில்:** அதிகாரத்தை அருளியுள்ளவர்களுக்கு இருப்பதைக்காட்டிலும், அதிகாரமானது மூப்பருக்கு அதிகமாய் இருக்க முடியாது. இன்னும் வேறு வார்த்தைகளில் சொல்ல

வேண்டுமெனில், ஒருவேளை சபையார், ஒருவரைத் தேர்ந்தெடுப்பதின் மூலம் அவரிடம் மூப்பருக்குரிய பொறுப்பை அளிப்பார்களானால், இது முதலில் சபையிடமே அந்த பொறுப்பு இருந்தது என்பதையும், இல்லையேல் சபையானது அப்பொறுப்பினை மூப்பருக்கு அளித்திருக்க முடியாது என்பதையும் மற்றும் இதன் காரணமாகச் சபையார் அனுமதியளிக்கும் அதிகாரத்தையே அந்த மூப்பர் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் தெரியப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை அவருடைய மனசாட்சியானது, சில குறிப்பிட்ட விஷயங்களைச் செய்வதற்கு சம்மதிக்கவில்லையெனில், சபையாரிடம் தனது மனநிலையைப் பற்றி எடுத்து விவரித்துக் கூறுவது தகுதியாகவே இருக்கும் மற்றும் ஒருவேளை அவர்கள் விரும்பும் பட்சத்தில் இவ்வூழியத்திலிருந்து விலகிக்கொள்ளும்படிக்குத் தன்னிடம் கூறப்படலாம் என்றும், தானும் மகிழ்ச்சியோடு விலகிக்கொள்கிறேன் என்றும் கூறுவது தகுதியாகவே இருக்கும். சபையாருக்கு ஊழியம் செய்யும் விஷயத்தில் மூப்பர் தனது மனசாட்சியை மீறிச் செயலபடவும் வேண்டாம். சபையாரின் விருப்பங்களுக்கு இசைவாக, அதிலும் தன்னுடைய மனசாட்சி தன்னைத் தடை செய்யாத எல்லை வரையிலும், ஒரு மூப்பர் சபைக்கு ஊழியம் புரிந்திடலாம்.

இன்னுமாகக் கரங்களை தூக்குவதன் மூலம் மூப்பர், மேற்பார்வையாளராக **(OVERSEER)** பரிசுத்த ஆவியினால் ஏற்படுத்தப்படுகின்றார் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுவதை நான் தெரிவிக்கின்றேன்; இவ்விதமாக, பரிசுத்த ஆவியானது சபையாரின் மூலமாகவே செயல்படுகின்றது.

## மூப்பர்கள்-சபையின் நலன்களுக்கடுத்தவைகளைக் குறித்துப் பேசுவதற்குக் கூட்டம் நடத்துதல்.

### கே: 233:1: :: கேள்வி (1910) - 1

ஒவ்வொரு சபையிலும் அல்லது பல்வேறு சபைகளிலும் உள்ள மூப்பர்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள சபைகளின் நலன்களுக்கடுத்தவைகளைக் குறித்துப் பேசுவதற்கு ஒன்று கூடுவது சரியான காரியமாக இருக்கும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? மற்றும் இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றனவா?

**பதில்:** இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றன என்றும், இது பரிந்துரைக்கப்பட வேண்டியது என்றும் நான் எண்ணுகின்றேன். அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களை ஒன்றுகூட அழைத்தது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. சபையின் நலனுக்கடுத்த விஷயங்களைக் கலந்து ஆலோசிக்கும்படிக்கு அவர் மூப்பர்களை ஒன்றுகூடும்படி அழைத்தார். அவர் ஒரு மூப்பருக்கான அல்லது பாஸ்டருக்கான பொறுப்பை உடையவராய் இருந்து, சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களை அங்கே அவர்களோடு கலந்து பேசிக்கொண்டிருந்தார். ஒருவேளை சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்கள் பற்றி கலந்துபேச மூப்பர்கள் ஒன்றுகூடுவது தவறாக இருக்குமாயின், என்னுடைய கணிப்பின்படி இப்படியானதொரு கூட்டத்தை அப்போஸ்தலனாகிய பவுல் நடத்தினதும் தவறாய் இருந்திருக்கும். சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களைக் கலந்து ஆலோசிப்பதற்கு மூப்பர்கள் ஒன்றுகூடுவது சரியென்று நான் எண்ணுகின்றேன். ஆனாலும் ஒரு விஷயத்தைக் குறித்து நான் உங்களை எச்சரிக்க வேண்டும். சபையை நடத்துவதற்கடுத்த கருத்துக்களைத் தெரிவிப்பது அல்லது இது சம்பந்தமாக முடிவு எடுப்பது தொடர்பானவிதத்தில் ஒருவேளை மூப்பர்கள் ஒன்றுகூடுவார்களானால், இது கெடுதலான காரியமாக இருக்கும் என்றே நான் எண்ணுகின்றேன். இது வேறே காரியமாகும். சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்கள் முதலானவைகள் குறித்துச் சிந்திப்பதற்கு ஒன்றுகூடுவதும் மற்றும் பின்னர் சபையை நடத்துவதற்கடுத்தவைகளை மேற்கொள்ள முற்படும் விஷயமும், இரு வேறுபட்ட காரியங்களாகும். மூப்பர்கள் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்பு வருகின்றது என வைத்துக்கொள்ளுங்கள், மேலும் மூப்பர்களின் கணிப்பின்படி சபையாருக்கு நலமாயிருக்கும் ஏதோ ஒரு காரியத்தை அவர்கள் மனதில்

வைத்திருக்கின்றார்கள் என வைத்துக்கொள்ளுங்கள். சபையாரால் முழுமையாகப் புரிந்துகொண்டு வாக்கெடுப்பின் மூலம், மூப்பர்களிடம் விசேஷமாக ஒப்படைக்கப்பட்ட காரியமாக இருந்தால் ஒழிய மற்றபடி - ஒருவேளை சந்தேகம் அல்லது கேள்விகள் எழும்புவதற்கு ஏதுவான புதிதான திட்டமாக இருக்கும் பட்சத்தில், இந்த மூப்பர்கள் அக்காரியத்தை சபையார் முன்வைத்து: "நாங்கள் சபையாரின் நலன்கருதி, இப்படிப்பட்ட ஒரு கருத்தை மனதில் கொண்டுள்ளோம், இப்பொழுது அதை உங்கள் முன் வைத்து, இதற்கான உங்கள் வாக்கை கேட்கின்றோம்" எனப் பரிந்துரைப்பது சரியான மற்றும் தகுதியான வழிமுறையாகக் காணப்படும் என்று நான் கருதுகின்றேன். இதுவே பாதுகாப்பான திட்டமாக இருக்கும். மிகச் சிறந்த நோக்கங்களையும், மிக நல்ல யோசனைகளையும் உடைய மிகச் சிறந்த சகோதரர்களில் சிலர், சபையாரிடம் கலந்து ஆலோசிக்காமலேயே அந்த ஆலோசனைகளைச் செயல்படுத்த முற்பட்டபோது, அது சபையாருடைய விருப்பத்திற்கு மாறாக இருந்துள்ளதை நான் பார்த்திருக்கின்றேன். உதாரணத்திற்கு நீங்கள் நாயினுடைய மயிரை எதிர்திசையில் கோதிவிட முயற்சிப்பீர்களாகில், அப்படிச்செய்வது மென்மையாக இருக்காததால், நாய்க்கு அது பிடிக்காது. இதுபோலவே சபையாரும் இப்படியாகச் செய்யப்படுவதை விரும்புவதில்லை. ஏனெனில் இப்படிச் செய்வது என்பது, அவர்களை ஆளுவது போன்றும், இன்னுமாக அவர்கள் விசேஷமாக அங்கீகாரம் கொடுக்காத ஒன்றைச் செய்வதுபோலவும் அவர்களுக்குத் தோன்றும். ஒருவேளை நீங்கள் நாயின் மயிரைக் கோதிவிட வேண்டுமானால், மயிர் வளர்கின்ற திசையில் அதற்குக் கோதிவிடுவது எப்போதும் ஞானமான காரியமாய் இருக்கும் என்பதே என்னுடைய கருத்தாகும். அதுபோலச் சபையாரைக் கையாளும் விஷயத்தில், மனித சுபாவம் ஒரு குறிப்பிட்ட நடைமுறையைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொண்டு, அந்நடைமுறைக்கு இசைவாகவே நடக்க முயற்சியுங்கள் மற்றும் தேவைக்கு மிஞ்சி மனித சுபாவத்தைத் தொல்லைக்குள்ளாக்காதீர்கள். சபையின் ஒவ்வொரு அங்கத்திற்கும் மனித சுபாவம் உள்ளது; அவனுக்கு அழியக்கூடிய சரீரமுள்ளது; மேலும் கொஞ்சம் அல்லது மிகுதியாக எதிர்த்துப்போரிடும் மனப்பாண்மையைக் கொண்டிருப்பான்; தான் அலட்சியம் பண்ணப்படக் கூடாது எனும் விருப்பத்தைக் கொஞ்சமாகவோ அல்லது மிகுதியாகவோ கொண்டிருப்பான்; சத்தியத்தில் இருக்கும் அனைவரிடமும் விசேஷமாக, அதிக அளவில் இக்குணங்கள் காணப்படுவதை உங்களால் பார்க்க முடியும். இவர்கள் ஆற்றல்மிக்க குணநலன்கள் கொண்டிருக்க வேண்டும், இல்லையேல் இவர்கள் ஒருபோதும் ஜெயங்கொண்டவர்களாக ஆக முடியாது. மேலும் இன்று அவர்கள் காணப்படும் நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளதும் மற்றும் பாபிலோனிலிருந்து வெளியேறுவதற்கு அவர்களுக்கு உதவியதுமான இந்த பண்பு தான் - கொஞ்சம் வாதாடவும், சில சமயம் கொஞ்சம் போராடவும் விரும்புகின்றது. ஒருவேளை நீங்கள் பின்வருமாறு: "இப்பொழுது நாம் ஒரு புதிய திட்டம்/காரியம் வைத்திருக்கின்றோம்; அதற்கு வாக்குகள் இன்னமும் பெறப்படவில்லை. சபையார் இதை விரும்புவார்கள் என்று எங்களுக்கு நிச்சயம் உள்ளது; அதை எங்களுடைய பரிந்துரையுடன் கூடச் சபையார் முன் வைக்கின்றோம்" என்று சொல்வீர்களானால் - இப்பொழுது சபையார் உங்களுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.

## மூப்பர்கள் - (Presiding Elder) தலைமை மூப்பரின் வேலை.

### கே : 234:1: :: கேள்வி (1913) - 1

தலைமை மூப்பரின் வேலை என்ன?

**பதில்:** தலைமை மூப்பருக்கான பணி குறித்து வேதாகமத்தில் விவரிக்கப்படவில்லை. தலைமை மூப்பர் என்ற ஒன்று வேதவாக்கியங்களில் குறிப்பிடவே இல்லை.

## மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படாததால், ஒருவர் வேறு இடங்களுக்கும் தகுதியற்றவராகிவிடுவாரா?

## கே: 234:2: :: கேள்வி (1914) - 2

ஒரு சபையில் அநேக வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட மூப்பராக இருந்து வந்துள்ள சகோதரன் ஒருவர், சபையில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையின் காரணமாக, தேர்ந்தெடுத்தலில் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு சந்தர்ப்பத்தில் - அவர் அறிமுகமானவராகக் காணப்படும் அருகாமையிலுள்ள சபையார் - ஒருவேளை அவரது தேவச் செய்திகள் பயனுள்ளதாய் இருக்கின்றதெனக் கூறி, அவர் தங்களிடத்தில் வருகை தருவதை விரும்பும் பட்சத்தில், அவர் தேர்ந்தெடுக்கப்படாத காரியமானது அச்சபையாருக்குத் தேவச் செய்திகள் கொடுப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்கிடுமா? அவர் புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலைக்கு (Class Extension Work) தகுதியற்றவராகிவிடுவாரா? இதோடுகூட அவர் உபதேசத்தில் ஆரோக்கியமாயும் இல்லாதிருக்கையில், அவரது சொந்த சபையாரின் சில குறிப்பிட்ட அங்கத்தினர்கள் இத்தகைய ஊழியத்தினைத் தடுப்பதற்குத் தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்துவது நியாயமாய் இருக்குமா?

**பதில்:** தான் ஊழியம் புரிந்துகொண்டிருந்த சபையின் தேர்ந்தெடுத்தலில் தேர்ந்தெடுக்கப் படாமல்போன அந்த மூப்பர் - ஒருவேளை மற்ற இடங்களிலுள்ள நண்பர்கள், அந்நபர் தங்களுக்கு மூப்பராக ஊழியம் புரிந்திட தகுதியான நபர் என்று நன்கு பகுத்துணர்ந்து எண்ணும்பட்சத்தில் - அவர் மற்ற இடங்களில் ஊழியம் புரிந்திடுவதற்குத் தகுதியற்றவராகிவிடுவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் பகுத்துணர்தலைப் பயன்படுத்திடுவதற்கு உரிமை கொண்டி ருக்கின்றனர். ஒருவேளை இச்சகோதரனை மறுத்திட்டதான சபையார், அவர் ஒழுக்க ரீதியிலான குணலட்சணத்திலோ அல்லது போதனையிலோ குறைவுற்றிருப்பதின் காரணமாக, அவரை இப்படிச் செய்திருக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவரைத் தேர்ந்தெடுத்த மற்றச் சபையாரின் கவனத்திற்குக் காரியத்தினைக் கொண்டுவருவது இந்தச் சொந்த சபையாரின் கடமையாகவும், சகோதர சிறப்புரிமையாகவும் இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். மற்றச் சபையார் அவரைத் தேர்ந்தெடுத்துள்ளார்களானால், முதலாம் சபையார் பின்வரும் வார்த்தையினை: “அச்சகோதரனுக்கு எதிராக இப்படி ஒரு காரியம் இருக்கின்றது என்று சகோதரர்கள் என உங்களுக்கு நாங்கள் முன்னெச்சரிக்கைத் தர விரும்புகின்றோம் மற்றும் இதுகுறித்து உங்களுக்குத் தகவல் கொடுப்பது எங்களுடைய கடமையாக இருக்கின்றது என்று நாங்கள் சிந்தித்தோம்” என்று தகவலாக அனுப்பிட வேண்டும்.

புதிய வகுப்புகளை உருவாக்கிடும் வேலையைப் பொறுத்தமட்டில், மூப்பராய் இல்லாத எவரும் சபையாருக்கு, புதிய வகுப்புகளை உருவாக்கிடும் ஊழியத்தினைப் புரிதல் என்பது முறையாய் இராது; ஏனெனில் சொசைட்டியினுடைய ஒத்துழைப்போடு, மூப்பர்களாய் இருப்பவர்களை மாத்திரமே சபையார் இவ்வேலைக்கு அனுப்பி வைக்கின்றனர். இப்படி இல்லாவிடில் சொசைட்டியானது, இவ்விதத்தில் அவர்கள் கடந்து செல்வதற்கு ஒத்துழைப்புக்கொடுக்க விரும்புகிறதில்லை. ஒருவேளை அவர் வேறொரு சபையாரிடத்திற்குச் சென்று, அவர்கள் அவரை மூப்பராய்த் தேர்ந்தெடுத்து, புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலைக்கென அவரை அனுப்பிடுவதற்கு அச்சபையார் முடிவெடுத்தார்களானால், அது அவர்களது மற்றும் அவரது காரியமாக இருக்கும், அல்லது அவர் சபையார் அல்லது சொசைட்டியின் பொறுப்பேற்காமல் கடந்துபோக முடிவெடுத்தாரானால், அது அவரது காரியமாக இருக்கும். அவர் அவரது சொந்த பொறுப்பில்தான் வேலை புரிகிறவராக இருப்பார். அந்த உரிமையினைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். ஒருவேளை அவர் செல்வம் மற்றும் பேசுவதற்கான தாலந்தைப் பெற்றிருந்து, அவற்றைப் பயன்படுத்த விரும்புவாரானால், அப்படிச் செய்திடுவதற்கு அவருக்கு முழுமையான உரிமை இருக்கிறதென நாம் நம்புகின்றோம். அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாரானால், **“நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்”** என்ற அழைப்பினை அவர் பெற்றவராய் இருப்பார்.

## மூப்பர்கள் - ஏன் மூப்பர்கள் கவனமாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?

## கே : 235:1: :: கேள்வி (1916-z) - 1

ஏன் மூப்பர்கள் கவனமாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?.

**பதில்:** ஏனெனில் ஊழியம் புரிவதற்கான ஆவி, கிறிஸ்துவின் சபையினுடைய மூப்பர்களின் அல்லது பயண ஊழியர்களின் ஆவியாக மாத்திரம் இராமல், சபையின் ஒவ்வொரு அங்கத்தினருடைய ஆவியாகவும் கூட இருக்கின்றது; காரணம், நம்மில் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய கிருபையைக் குறித்த செய்தியை எழுதும் விஷயத்தில், ஊழியக்காரனாக அல்லது வேலைக்காரனாக இருப்பதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

நம்முடைய சொந்த இருதயங்களில் ஏற்கனவே எழுதப்படாத விஷயங்களை, மற்றவருடைய இருதயங்களில் எப்படி எழுத வேண்டும் என்பதை நாம் அறியாதவர்களாய் இருப்போம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். எனவே தான், மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் - ஏற்கனவே தங்களுடைய இருதயங்களில் கர்த்தருடைய காரியங்களை எழுதப்பெற்றவர்களைக் கண்டுபிடிப்பதில் மற்றும் இதன் காரணமாக வளர்ந்துவரும் சகோதர சகோதரிகளுடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலினால் கர்த்தருக்கு ஒத்த குணலட்சணங்களை எழுதுவதற்குத் தகுதியுள்ள உதவியாளர்களாக இருக்கக் கூடியவர்களைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த கவனம் அவசியமாயுள்ளது.

நம்முடைய இருதயங்களில் பல்வேறு பிரதிநிதிகள் மூலம் பரிசுத்த ஆவியினால் எழுதப்பட வேண்டிய செய்தி யாது? நிருபம் யாது? அது காலக்கணக்குப் பற்றிய சத்தியமா? அது நிழல்கள் குறித்த தெளிவான காரியங்களா? அது வேறுவிதமாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள வேதவாக்கியப் பதிவுகள் தொடர்பான விஷயத்தில், கடினமான இறையியல் கோட்பாடுகளை உடைக்கும் காரியமா? அது யூதர்களின் வரலாறு, உலகத்தின் வரலாறு, சபையின் வரலாறு குறித்த அறிவா? அது கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் வரவிருக்கின்ற காலத்தில் இருக்கும் பல்வேறு உடன்படிக்கைகள் குறித்த புரிந்துகொள்ளுதல் மற்றும் உணர்ந்துகொள்ளுதலா? இல்லை, அது இவைகளில் ஒன்றுமேயில்லை. ஆண்டவருடைய பண்பு இயல்புகளை நம்முடைய இருதயங்களில் ஆழமாகப் பதியப் பெற்றிருப்போமாகில், “நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு நிறைவாக அருளப்படும்” 2பேதுரு 1:8,11.

இந்த அனைத்துப் பாடங்களும் ஏறக்குறைய முக்கியத்துவம் வாய்ந்தவைகள்தான். மேலும் இப்பாடங்கள், கர்த்தர் தம்முடைய ஜனங்களுடைய இருதயங்களில் எழுதப்பட வேண்டியவைகள் தொடர்பாக ஏறக்குறைய பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்துவின் நிருபத்தை எழுதுவது என்பது - அதாவது அவருடைய சாந்தம், அவருடைய நற்பண்புகள், அவருடைய நற்பண்புகள், அவருடைய பொறுமை, அவருடைய நீடிய பொறுமை, அவருடைய சகோதர சிநேகம், அவருடைய அன்பு, அவருடைய சந்தோஷம், அவருடைய சமாதானம் குறித்து எழுதுவது என்பது வித்தியாசமான காரியமாகும்.

காலக்கணக்கு மற்றும் வரலாறு தொடர்பான அறிவை நாம் அனைவரும் பெற்றிருக்கலாம்; வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்தையும் நம்மால் மேற்கோளிட்டுக் கூறமுடியலாம் மற்றும் வசனம் எங்குள்ளது என்றும்கூடக் கூறமுடியலாம்; ஆனாலும் கிறிஸ்துவின் நிருபத்தை நம்முடைய இருதயங்களில் எழுதப்பெறாமலும்கூட இருக்க வாய்ப்புண்டு. இந்த நிருபத்தைக் குறித்துதான் அப்போஸ்தலனாகிய பேதுரு, “இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் (**சோம்பேறி, பயனற்றவர்**) கனியற்றவர்களுமாய் இருக்கவொட்டாது” என்று கூறியுள்ளார்; ஏனெனில் அறிவானது அது செய்யவேண்டியதைச் செய்திடும்.

## மூப்பர்கள் - தேர்ந்தெடுத்தல் - சபையில் பெண் போதகர்கள்.

### கே : 235:2: :: கேள்வி (1905) - 2

அலிகெனியில். (Allegheny) உள்ள சபையில் ஸ்திரீகள் வழிநடத்துபவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களா என்பதை எனக்குத் தயவுகூர்ந்து தெரிவிக்கவும்? ஒருவேளை இல்லையெனில் ஏன் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது? ஸ்திரீகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று சொல்லப்படுகின்றதே.

**பதில்:** இல்லை, இப்படியாக நடந்ததில்லை. அலிகெனியிலுள்ள சபையில் எந்தச் சகோதரிகளும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சகோதரிகளை அப்போஸ்தலர்களாகவோ அல்லது எழுபது சீஷர்களாகவோ கர்த்தர் தேர்ந்தெடுக்கவில்லை. மேலும் இயேசு, சகோதரிகளை நேசித்தார். அவர் மார்த்தாளையும், மரியாளையும் நேசித்தார். அவர்களுடைய சகோதரனாகிய லாசருவையும் நேசித்தார். கர்த்தர் ஒருபோதும் சகோதரிகளைச் சபையில் பேச்சாளர்களாக (Speakers) நியமிக்கவில்லை மற்றும் இதற்கு மாறாய் வித்தியாசமாகப் பேசுவதற்கு நமக்கு அதிகாரமும் இல்லை. கர்த்தருடைய திட்டம் சிறப்பானதென நான் எப்போதும் எண்ணுகின்றேன். இங்குள்ள சபையை நடத்துவதற்கான கர்த்தருடைய திறமையை நான் சந்தேகிக்க ஆரம்பிப்பேனாகில், பரலோகத்தை நடத்துவதற்கான அவருடைய திறமையையும் நான் சந்தேகிப்பவனாகிவிடுவேன். அவருடைய வழியிலேயே நாம் நடக்க வேண்டும். மாறாக நமக்குரிய சொந்த வழியைத் தெரிந்து கொண்டு, கர்த்தரை நம்முடைய வழியில் நடக்க வரும்படி கேட்கக்கூடாது.

## தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவர் / CHAIRMAN

### கே : 236:1: :: கேள்வி (1909) - 1

மூன்று முதல் ஏழு மூப்பர்கள் இருக்கும் ஒரு சபையில் அதிக வேலைகள் குவிந்துக் காணப்படும் தருணங்களில் மூப்பர்களால், கூட்டத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிராக, வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்கள் ஏதேனும் உள்ளதா?

**பதில்:** இல்லை. உண்மை என்னவெனில், ஒழுங்குக் காணப்பட வேண்டும். யார் கூட்டத்தலைவராக இருக்க வேண்டும் என்பதைச் சபையார் தீர்மானிக்காத பட்சத்தில், மூப்பர்கள் தாங்களே கூட்டத்தலைவரைத் தெரிவு செய்து கொள்ளலாம்..

## தேர்ந்தெடுத்தல் - வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள்.

### கே : 236:2: :: கேள்வி (1909) - 2

மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் தேர்ந்தெடுப்பதற்கான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகளைக் கூறவும்..

**பதில்:** ஆறாம் தொகுதியைப் (Volume) பார்க்கவும். அதில் இப்பாடம் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட பக்கங்கள் உள்ளன. தேர்ந்தெடுத்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன்னரே வழிநடத்துபவர், இவ்விஷயத்தை கவனத்திற்கு கொண்டுவருவதும் மற்றும் அனைவரும் இக்காரியத்தை முழுமையாய் மனதில் புரிந்துகொள்ளத்தக்கதாக ஆறாம் தொகுதியில் காணப்படும் இக்காரியங்களை வாசிக்கும்படி யோசனை தெரிவிப்பதும் நல்லது என்று எண்ணுகின்றேன்.

## தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கை.

### கே: 236:3: :: கேள்வி (1910) - 3

நாங்கள் சபையாராக ஆறாம் தொகுதியின் காரியங்களின்படி தேர்ந்தெடுத்தல் செய்ய முற்பட்டுள்ளோம். ஆனால் எங்கள் அனைவராலும் ஒன்றுபோல் புரிந்துகொள்ள முடியவில்லை. மூப்பர்களுக்குத் தகுதியுள்ள அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது போல் ஓரிடத்திலும், வேறொரு இடத்தில் சபையின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது போலவும் காணப்படுகின்றது. எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது; மேலும் அதைக் குறித்து உங்களுக்கு நாங்கள் எழுதினோம். ஏன் பிரச்சனை எழும்பினது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்தீர்கள். சிலர் புரிந்துகொண்டவிதமே பிரச்சனையாகும்; அது என்னவெனில்: சபையில் மூப்பருக்கான சமநிலை தகுதியுடன் ஆறு பேர் காணப்படுகின்றார்கள் என்றால், அனைவரையும் நாம் தேர்ந்தெடுக்கலாம்; ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பன்னிரெண்டாக அல்லது இருபத்திநான்காகக் காணப்படுமாயின், சபையாரின் எண்ணிக்கையைப் பொறுத்து மாத்திரம் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சிலர் புரிந்திருக்கின்றனர். உதாரணத்திற்கு, ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பத்து என்றால், நாம் ஒரு மூப்பரைத் தேர்ந்தெடுக்கலாம். ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை இருபத்தைந்து என்றால், நாம் இருவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சிலர் புரிந்திருக்கின்றனர்.

**பதில்:** மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் இவ்விஷயத்தைக் குறித்து என்ன சொல்லலாம்? மூப்பருக்கான தகுதிகளுடைய அனைவரும் தேர்ந்தெடுக்கப்படலாமா அல்லது சபையாரின் எண்ணிக்கையில் பத்து சதவிகிதமாகத் தேர்ந்தெடுக்கப்படலாமா? ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை ஐம்பது என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்து சதவிகிதம் என்பது ஐந்து பேர்களாக இருக்கும். மேலும் ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை நூறு என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்து சதவிகிதம் என்பது பத்து பேர்களாக இருக்கும். என்னுடைய பதில் இதுவே: நான் புரிந்துகொண்ட வரையிலும், மூப்பருக்கான தகுதிகளை வெளிப்படுத்தும் அனைவரும் மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆகவே ஒருவேளை ஆறு என்ற எண்ணிக்கையைக் கொண்டுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பர்களாகப் பணிபுரிய சமநிலையான தகுதியுடையவர்களாக இருப்பார்களானால், நான் அவர்கள் ஆறு பேரையும் தேர்ந்தெடுப்பேன். பின்னர் அவர்கள் பணிபுரிவதற்கு turns/ சுழற்சி முறையில் செயல்படும்போது, வெளியே செல்வதற்கும், கூட்டங்கள் நடத்துவதற்கும் வாய்ப்புகள் உண்டாகும். தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும் - அதிகமான மூப்பர்கள் இருக்கும் இடம் சிறப்பாய் இருக்கும்! ஆனால் ஆறு பேர் எண்ணிக்கையுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பருக்கான தகுதியோடு இருப்பார்கள் என்று சொல்ல முடியாது என்று நான் எண்ணுகின்றேன். ஆனால் தகுதியுடையவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் ஆறு பேரும் ஊழியம் புரிவதையே நான் விரும்புகின்றேன். பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றுள்ள ஒவ்வொருவரும், போதிப்பதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளனர் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது என்று நான் புரிந்திருக்கின்றேன். நமது கர்த்தர் இயேசு குறித்த தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகளை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள் - கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இப்பொழுது யாரெல்லாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கின்றார்களோ, அவர்கள் போதிப்பதற்கெனப் பிதாவிடமிருந்து அபிஷேகம் பெற்றிருக்கின்றனர். இதற்காகவே அபிஷேகம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே போதகம் பண்ணுவதற்கென அவர் கொடுத்த அதிகாரமாகும். இதுவே போதிப்பதற்கான, அவரது Ordnation /ஏற்படுத்தலாகும். ஒருவேளை அவனுக்கு நல்ல குரல் வளம் இருக்கின்றது என்றால், அதுவும் இன்னொரு நல்ல விஷயந்தான். ஒருவேளை அவனுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கின்றது என்றால், அதுவும் இன்னொரு நல்ல விஷயந்தான். ஒருவேளை இவைகளுக்கு இசைவாக அவனிடத்தில் இன்னும் வேறே விஷயங்கள் இருக்குமாயின், இவைகள் அனைத்தும் அவனுக்கு உதவியாக இருக்கும். மேலும் அவனுடைய தாலந்திற்கேற்ப போதகம் பண்ண அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது சகோதரிகளின் விஷயத்தில் பார்க்கும்போது, சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஒரு சகோதரி பொதுவில் போதிக்கக்கூடாது. ஆயினும்

போதிப்பதற்கான மற்றப் பல்வேறு வழிகள் ஒரு சகோதரிக்கு உண்டு. நற்செய்தியை அறிவிப்பதற்கும், உதவிகரமாய் இருப்பதற்குமான அநேக வாய்ப்புகள் அவளுக்கு இருக்கின்றன. மேடைகளில் பிரசங்கம் பண்ணுவதற்கான வாய்ப்புடையவர்கள் மாத்திரமல்ல - நாம் அனைவருமே நம்முடைய அன்றாட ஜீவியத்தின் வாயிலாகப் பிரசங்கிக்க முடியும்; ஏனெனில் நாம் அனைவரும் பிரசங்கிமார்களாய் இருக்கின்றோம் மற்றும் அனைவரும் பிரசங்கிக் கின்றார்கள் என நான் நம்புகின்றேன்.

"உங்களிடம் எத்தனை பிரசங்கிமார்கள் இருக்கின்றனர்?" என்று ஒருமுறை ஒருவர் என்னிடம் கேட்டார். நானோ" "இருபதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நம்மிடத்தில் இருக்கின்றார்கள்" என்று கூறினேன். அவரோ: "ஆச்சரியமாயிருக்கே!" என்றார். நானோ: "சகோதரரே, நீர் தவறாய் புரிந்துகொள்ள வேண்டாம். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பிரசங்கங்கள் பண்ணும்படி அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளனர். சிலசமயம் நாங்கள் பொதுவில் பிரசங்கிப்போம் மற்றும் சிலசமயம் தனியே சந்தித்துப் பிரசங்கம் பண்ணுவோம். சிலசமயம் நாங்கள் ஒரு நபருக்கு மாத்திரமே பிரசங்கம் பண்ணுவோம். மேலும் சிலசமயம் இருநூறு பேரைக் கொண்ட சபையாருக்குப் பிரசங்கம் பண்ணுவோம். மேலும் சிலசமயம் பத்தாயிரம் பேரைக் கொண்ட சபையாருக்கும் பிரசங்கம் பண்ணுவோம்" என்றேன்.

## தேர்ந்தெடுத்தல் - கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்படுகின்றது.

### கே : 237:1: :: கேள்வி (1910) - 1

ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சபையார் கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றார்கள் என்று நாம் புரிந்துள்ளோம். நாங்கள் ஒரு சகோதரனை எங்களுக்கு மூப்பராக ஊழியம் புரிவதற்கெனத் தேர்ந்தெடுத்த பின்னர், நாங்கள் அவரைக்குறித்து கருதினவைகளுக்கு ஏற்ப அவர் இல்லை என்று பின்நாட்களில் கண்டுபிடிக்கும்போது, அது சபையாரின் தவறு என்றா? அல்லது கர்த்தருடைய தவறு என்றா? அதை நாங்கள் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும்?

**பதில்:** யாரிடத்தில் தவறு உள்ளது என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. சபையார் போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதே தெரிகின்றது. சபையார் யாரையாவது மூப்பராகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாகவே அவரைக் குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும். நூதன சீஷனைத் (சபையில் புதிதாகச் சேர்ந்த ஒருவரை) தேர்ந்தெடுக்கக்கூடாது என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். ஒரு நூதன சீஷனைத் தேர்ந்தெடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை. ஒருவேளை இப்படிச் செய்திருப்பீரானால், இப்பிரச்சனைகள் வேண்டியதே. ஒருவேளை குறிப்பிட்ட காலம் ஒரு நூதன சீஷனை மூப்பராகப் பெற்றிருப்பதின் வாயிலாக நீர் நல்ல படிப்பினையையும் பெற்றுக்கொள்வீர். மேலும் ஒருவேளை சபையிலுள்ள நண்பர்கள் இப்படியானதொரு காரியத்தைச் செய்திருப்பார்களானால், அநேகமாக இது முடிவில் நன்மையாகக் காணப்படும் மற்றும் அவர்களும் அடுத்தமுறை மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் இவ்விதத்தின் மூலம் அவர்கள் படிப்பினை பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கர்த்தர் அனுமதிக்கும் காரியமானது, கர்த்தரும் அறியாமல் செய்துவிட்டார் என்பதைக் குறிக்காமல், மாறாக தமது கட்டளையைப் பின்பற்றாமல், ஒரு நூதன சீஷனைத் தேர்ந்தெடுத்ததற்காக வருங்காரியங்களை அவர்கள் அனுபவிக்கத்தக்கதாக அவர் அனுமதித்து விட்டார் என்பதாகவே இருக்கும். நூதன சீஷன் என்பவன் சபையின் விஷயங்களில் புதிதானவன் ஆவான். மேலும் ஒருவேளை அவன் இவ்விஷயங்களில், புதிதாய் இருப்பானானால், இதைக் குறித்துச் சபையார் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள். ஏனெனில் அவனுக்காக வாக்களிப்பதற்கு முன்னதாகவே அவன் எப்படிப்பட்டவன் என்பதை அவர்கள் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள்.

## தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவியைத் நியமித்தல்

## கே : 237:2: :: கேள்வி (1910) - 2

தேர்ந்தெடுத்தல் நடைபெறும்போது, தேர்ந்தெடுத்தலை நடத்தித்தருமாறு எவரையேனும் கூட்டத்தலைவராக வைக்க ஒரு மூப்பர் விரும்பினார் என்றால், இந்நோக்கத்திற்காக ஒரு சகோதரியை அந்த ஸ்தானத்தில் வைப்பது முறையாக இருக்குமா?

**பதில்:** சபையில் சில தவறான புரிந்துகொள்ளுதல் காணப்பட்டு, மேலும் அங்குச் சகோதரன் அல்லது சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் இருக்கும் ஒருநிலை காணப்பட்டாலொழிய, மற்றபடி ஒரு சகோதரியை நியமனம் செய்யமாட்டேன் என்று நான் எண்ணுகின்றேன். இப்படியான மிக விநோதமான சூழ்நிலைகள் காணப்படும்பட்சத்தில் மாத்திரமே, தேர்ந்தெடுத்தல் கூட்டத்தில் ஒரு சகோதரியைக் கூட்டத்தலைவராகச் (CHAIRMAN) செயல்படக் கேட்பதற்கு நான் இணங்குவேன். இப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலை ஒருபோதும் வராது என்று நான் கூறமாட்டேன். ஆயினும் அது அபூர்வமாய்ச் சம்பவிக்கும் சம்பவமாகத்தான் இருக்கும் என நான் எண்ணுகின்றேன்.

# தேர்ந்தெடுத்தல் - அர்ப்பணம் பண்ணினவர்களும், நீதிமான்களாக்கப் பட்டவர்களும் வாக்குகள் (vote) அளிக்கலாமா?

## கே : 238:1: :: கேள்வி (1910) - 1

சபையில் நடக்கும் தேர்ந்தெடுத்தலில், அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் மாத்திரமே வாக்குகள் (vote) செலுத்த வேண்டும் என்று எப்போதும் புரிந்துகொள்ளப்பட வேண்டுமா அல்லது நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளும்கூட வாக்குகள் செலுத்தலாமா?

**பதில்:** கொஞ்சம் முன்புதான் இதைக் குறித்து நாம் பேசினோம். வாக்குகள் அளிக்கப்படுவதற்கு முன்பு, அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே, சபை தொடர்பான எக்கேள்விகளுக்கும் அனைத்துத் தருணங்களிலும் வாக்குகள் செலுத்த உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர் என்பது தெளிவாய் அறிவிக்கப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஏனெனில் மற்றவர்கள் எவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கங்கள் அல்ல. ஒருவேளை எவ்விடத்தில் கூட்டம் நடத்தலாம் என்பது தொடர்பான சில கேள்விகளைச் சபையார் கேட்க விரும்புவது என்பது வேறுபட்ட காரியமாகும்; இவ்விஷயம் தொடர்பாகக் கேள்விக் கேட்கப்படும்போது, நீங்கள்: "கூட்டத்திற்கான இந்த இடத்தை மாற்றி, வேறொரு இடத்தில் கூட்டத்தை நடத்தலாமென நாம் எண்ணுகின்றோம். மேலும் நாம் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களிடம் மாத்திரம் இல்லாமல், அனைத்து நண்பர்களிடமும் கேட்கின்றோம்; ஏனெனில் இவ்விஷயத்தில் அனைவரும் விருப்பம் கொண்டுள்ளனர்; நேரம் மற்றும் இடம் குறித்த தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி முழு விசுவாச வீட்டாரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்" என்று கூறலாம். ஆனால் சபைக்கான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயம் அல்லது இவ்விஷயம் தொடர்பான எதுவும் அர்ப்பணம் பண்ணினவர்களுக்கு மாத்திரமே உரியதாகும்.

# தேர்ந்தெடுத்தல் - தொகுதிகள் (VOLUMES) விநியோகம் பண்ணுபவர்கள் வாக்களித்தல் (VOTE).

## கே : 238:2: :: கேள்வி (1910) - 2

ஒரு நகரத்தில் குறிப்பிட்ட சில காலம் தொகுதிகள் விநியோகிப்பவர்களாகக் (Colporteurs) காணப்பட்டு, அந்த நகரத்திலுள்ள சபைக்குச் சென்றுகொண்டிருப்பார்களானால், அவர்கள் வாக்குகள் (Vote) அளிக்கலாமா?

**பதில்:** ஒருவேளை அவருக்கு அச்சபையாரின் சூழ்நிலைகள் குறித்தெல்லாம் எவ்விதமான விஷயமும் தெரியாமல் இருக்கும் பட்சத்தில் அவர் அவர்களை நோக்கி: "சகோதரரே, என்னுடைய வாக்கை நான் அளிக்கத்தக்கதாக இங்குள்ள எவரையும் பற்றி எனக்குப் போதுமான அளவு தெரியாது. ஆகவே வாக்கு அளிக்க நான் மறுக்கின்றேன்' என்று கூறுவாரானால், அவர் ஞானமாய் நடந்துகொண்டவராய் இருப்பாரென நான் எண்ணுகின்றேன். ஆனால் ஒருவேளை அவர் அவ்விடத்தில் சில நாட்கள் அல்லது சில வாரங்கள் தங்கியிருந்தாரானால், மேலும் சில வாரங்கள் அல்லது மாதங்கள் அவ்விடத்தில் தங்கும் வாய்ப்பு அவருக்கு இருக்கும் பட்சத்தில், மற்றவர்களைப் போன்று அவருக்கும் அங்கு வாக்குச் செலுத்த உரிமையுண்டு என்று நான் எண்ணுகின்றேன். அவர் தொகுதிகள் விநியோகிப்பவராய் இருப்பதினால் அவர் தடைப்பண்ணப்படக்கூடாது. மாறாக அவருக்கும் நன்மை உண்டாக்கத்தக்கதாக, அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படலாம். அவர் தனது ஜீவியத்தைத் தத்தம் பண்ணினதின் மூலம், தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டுபவராக இருக்கின்றார்.

## தேர்ந்தெடுத்தல் - சபையைச் சந்திக்க வரும் சகோதர சகோதரிகள் வாக்கு (VOTE) அளித்தல்.

### கே : 238:3: :: கேள்வி (1910) - 3

வாக்காளருக்கான தகுதி தொடர்பான விஷயத்தில், அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களே வாக்களிக்க வேண்டுமென்று நீங்கள் கூறினீர்கள். சபையைச் சந்திக்க வருபவர்கள் குறித்து என்ன சொல்கின்றீர்கள்? அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வந்து கொண்டிருப்பதோ அல்லது அவர்கள் அங்கேயே தொடர்ந்து வரும்படியான தங்களுடைய நோக்கத்தைத் தெரியப்படுத்துவதோ - அவர்கள் வாக்கு அளிப்பதற்கு அவர்களைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குமா?

**பதில்:** வாக்குகள் செலுத்தும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படும்போது, "இன்று இங்குக் கூடியிருக்கும் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவரும் இச்சபையில் கூடி வருவதற்கான விருப்பம் கொண்டுள்ளவர்கள், வாக்குகள் செலுத்தும்படிக்கு ஆவலுடன் அழைக்கப்படுகின்றார்கள் மற்றும் இச்சபையில் தொடர்ந்து கூடுவதற்கு வர வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்கள், வாக்குகள் செலுத்த வேண்டாம் மற்றும் முழுமையான அர்ப்பணம் பண்ணாத எவரும் வாக்குகள் செலுத்த வேண்டாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இதுவே இக்காரியம் தொடர்பான கர்த்தருடைய சித்தமாக இருக்கின்றது" என்று கூறுவது சரியாயிருக்கும் என்பது நமது எண்ணமாக இருக்கின்றது. வாக்கு என்பது ஓர்/ஒவ்வொரு இடத்தில் காணப்படும் சபையாரால் வெளிப்படுத்தப்படும் தேவசித்தமாக இருக்கின்றது. மேலும் அந்தந்த இடங்களில் அர்ப்பணம் பண்ணினவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்களோ, அவர்களே சபையாராய் இருக்கின்றனர். என்னுடைய கணிப்பின்படி, அப்பட்டணத்தில் வாழும்படிக்குப் புதிதாய் வந்துள்ள ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் விஷயம் எவ்விதமான வித்தியாசத்தையும் காட்டுவதில்லை. ஏனெனில் நாம் ஜேம்ஸ் டவுனில் அல்லது ப்ரூக்ளின் அல்லது பிட்ஸ்பர்க் அல்லது நியூ ஆர்லியன் அல்லது வேறு ஏதாகிலும் இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, நாம் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றாய் இருக்கின்றோம்.

## தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களின் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்படாத பட்சத்தில்.

### கே : 239:1: :: கேள்வி (1910) - 1

மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சகோதரனிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கப் பட்டதெனில், அவருடைய மூப்பருக்கான பணிக்காலம் நிறைவடையும்போது, மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர் மறுப்புத் தெரிவிப்பது என்பது ஞானமான முறையாக இருக்குமா என்று அறிய விரும்புகின்றேன்?

**பதில்:** ஒருவேளை நான் இப்படிப்பட்டதான சூழ்நிலையில் காணப்பட்டால், நான் இவ்வாறாகவே நடந்துகொள்வேன் என்று நம்புகின்றேன். சபையிலுள்ள வேறொரு சகோதரனை என் மனதில் நான் கொண்டு, அவரை முன்மொழிவேன். ஆனால் ஒருவேளை நான் முன்மொழியப்பட்டால், நான் பின்வருமறு: "சகோதர சகோதரிகளே, என்னால் முடிந்த மட்டும் உங்களுக்கு ஊழியம் புரிந்துள்ளேன் மற்றும் உங்களைத் திருப்திப்படுத்துவதில் குறைவுபட்டுள்ளேன் என்பதையும் அறிவேன். ஆனால் என்னால் முடிந்ததை உங்களுக்குச் செய்தேன் என்பதை நீங்கள் அறியவேண்டும் என்று விரும்புகின்றேன். எனினும் நான் உங்களை திருப்திப்படுத்தவில்லை என்று அறிவேன். ஏனெனில் நான் திருப்தியாய் நடந்துகொள்ளவில்லை என்பதை உங்களில் அநேகர் என்னிடம் தெரிவித்தீர்கள். மேலும் என்னால் முடிந்தமட்டும் சீர்த்திருத்திக்கொள்ள முயற்சித்தேன். ஆனாலும் போதுமான அளவு நான் முன்னேற்றம் அடையவில்லை. இதனால் உங்களில் சிலர் என்னிடத்தில் இன்னமும் குற்றத்தைக் கண்டீர்கள். நான் உங்களைக்குறித்து இப்பொழுது குற்றம் சாட்ட வரவில்லை - குற்றம் என்னிடத்தில் இருக்கின்றது என ஏற்றுக்கொள்கிறேன். இன்னின்னபடி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறபடியெல்லாம் என்னால் இருக்க முடியவில்லை மற்றும் நான் உங்களுக்கு எப்படி ஊழியம் புரிய விரும்புகின்றேனோ அப்படி என்னால் ஊழியம் புரியமுடியவில்லை. ஆகவே என்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வது உங்களுக்கு நலமாய் இருக்குமென நான் எண்ணுகின்றேன். நான் இன்னின்ன சகோதரரை முன்மொழிந்துள்ளேன். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு - மூன்று மாதங்கள் அல்லது ஆறு மாதங்கள் அல்லது உங்கள் விருப்பத்திற்கேற்ப இச்சகோதரனை நீங்கள் தேர்ந்தெடுக்க உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றேன். "அநேகமாக இவர் நம் அனைவரையும் நன்கு திருப்திப்படுத்தலாம். நான் இவருக்கு உதவி செய்ய முயற்சிப்பேன் என்றும், இவருடைய கரங்களைத் தாங்கிப்பிடிப்பதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்றும் நான் வாக்களிக்கின்றேன்" என்று கூறிடுவேன். மேலும் மற்றச் சகோதரன் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாக நான் உண்மையாய் முயலுவேன். ஆனால் இப்படியெல்லாம் கூறின பிற்பாடும் சபையார் என்னிடம் - "இல்லை. உம்மிடத்தில் நாங்கள் குறைவுகள் கண்டுபிடித்திருந்தாலும் கூட உம்மைதான் நாங்கள் தேர்ந்தெடுக்கப் போகின்றோம்" என்று கூறுவார்களேயானால், நான் அவர்களிடம் பின்வருமாறு: "ஒருவேளை கடந்த காலத்தில் நான் செய்தவைகளைக் காட்டிலும் அடுத்தமுறை என்னால் செய்யமுடியாமல் கூட இருக்கலாம். அதற்கான பொறுப்பு உங்களிடத்திலேயே உள்ளது. காரணம் என்னால் முடிந்தவைகளையே நான் இப்பொழுது செய்து கொண்டிருக்கின்றேன் என்று நான் உங்களிடத்தில் தெரிவிக்கின்றேன். ஆகையால் ஒருவேளை நான் உங்கள் அனைவரையும் திருப்திப்படுத்தாமல் காணப்படும்போது, என்னைக் குறித்து மனஸ்தாபத்திற்குள்ளாகாதீர்கள்" என்று கூறுவேன். இவைகளை நான் சபையாரிடம் உறுதியாகப் பேசிவிடுவேன். இதனால் அவர்கள் என்னைக் குறித்த முடிவிற்கு வரமுடியும். ஆனால் ஒருவேளை அவர்களில் பெரும்பான்மையானவர்கள், உதாரணத்திற்கு, தொண்ணூறு சதவிகிதம் அல்லது சபையாரின் ஓரளவு எண்ணிக்கையானவர்கள் என்னைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; நான் அதைக் கர்த்தருடைய சத்தமாகக் கருதி, இப்பொழுது நான் மறுப்புத் தெரிவிக்கமாட்டேன் என்று கூறுவேன். எந்தவிதத்திலும் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் நான் நிச்சமாய் மறுப்புத் தெரிவிக்கவுமாட்டேன் என்று கூறுவேன். மற்றும் நான்: "இல்லை. நீங்கள் என்னிடத்தில் குற்றம் கண்டுபிடித்தீர்கள், ஆகையால் இப்பொழுது மூப்பர் ஊழியத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்" என்று கூறவுமாட்டேன். இப்படிக் கூறுவது தவறாயிருக்கும். இப்படிப்பட்டதான ஆவி நம்மிடத்தில் இருக்க வேண்டாம். இச்சூழ்நிலையில் காணப்படும் சகோதரன் குற்றஞ்சாட்டுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றது என நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வப்போது ஏதாகிலும் விதத்தில் குற்றம் காணப்படாமல் இருப்பதற்கு நம்மில் எவரும் பூரணர்கள் இல்லை. மேலும் ஒருவேளை சகோதரர்கள் குற்றம் கண்டுபிடிப்பார்களானால், நாம் அதைச் சகிப்போமாக மற்றும் அதன் மூலம் நன்மை பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். மேலும் அவ்விஷயத்தில் தாழ்மையாயிருப்போம். ஒருவேளை இது நாம் இறுமாப்பு அடையாதபடிக்கும், வீழ்ச்சிக்குள்ளாகப் போகாதபடிக்கும் நம்மைக் காத்துக்கொள்ளும்.

## தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்.

### கே : 239:2: :: கேள்வி (1910) - 2

மூப்பர்களுடைய தேர்ந்தெடுத்தலின்போது, அச்சபையாரில் ஒருவர் முன்மொழிவதற்குப் பதிலாக, தற்போது மூப்பராகக் காணப்படும் ஒருவர், முன்மொழிவது சரியாக இருக்குமென்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

**பதில்:** தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பருக்கான காலப்பகுதி முடிவடைந்த பிற்பாடு, அவர் மூப்பர் அல்ல என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே அவரும் சபையாரிலுள்ள மற்றவர்களைப் போன்றவராகவே காணப்படுகின்றார். மேலும் மற்றவர்களைப் போன்று அவரும் முன்மொழியலாம். ஏனெனில் அவரும் மற்றவர்களைப் போன்றவரே ஆவார். அவருக்கான காலம் முடிந்த பிறகு, அவர் மூப்பர் இல்லை. மேலும் தேர்ந்தெடுத்தலின்போது வேறொருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருக்க வாய்ப்பு இருக்கும் பட்சத்தில், முன்பு மூப்பராய் இருந்த ஒருவர் கூட்டத்தலைவராய்ச் செயல்பட்டு, தேர்ந்தெடுத்தலை நடத்துவது என்ற காரியம் மிகவும் ஞானமற்றது என நான் எண்ணுவதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அறிவுகூர்மைமிக்க ஒரு சகோதரனை - நேர்மையுடனும், நியாயத்துடனும் நடந்து கொள்ளும் ஒரு சகோதரனை - மூப்பருக்கான தகுதியில்லாதவர் அல்லது தகுதியுடையவராகக் கருதப்படாத ஒரு சகோதரனை - கூடுமானமட்டும் கூட்டத்தலைவராகச் (CHAIRMAN) செயல்படும்படிக்குக் கேட்டுக்கொள்வது எப்போதும் விரும்புவதற்கு ஏதுவாய்க் காணப்படும். இவ்விதமாய்ச் செய்யப்படும்போது, கூட்டத்தலைவராக இருந்ததின் மூலம் ஒருவர் தனக்கு ஆதரவு சேர்த்துக்கொண்டார் என்று எழும்ப வாய்ப்புள்ள குற்றச்சாட்டிலிருந்து (மூப்பர் தகுதியுள்ள) ஒருவர் தப்பித்துக்கொள்ளலாம்; மற்றும் சபையாரும்கூட முன்மொழியப் பட்டவராகவும், கூட்டத்தலைவராகவும் தங்களுக்கு முன்பு நின்றுகொண்டிருக்கும் ஒருவருக்கு, தங்களுடைய வாக்குகளைச் செலுத்தாத சூழ்நிலையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம் மற்றும் அச்சகோதரனும்கூடச் சபையார் முன் நின்று, முன்மொழியப்பட்டிருக்கும் தனக்கு வாக்களிக்கும்படிக்குக் கேட்க வேண்டிய தர்மச்சங்கடமான நிலைமையினின்றும் தப்பித்துக் கொள்ளலாம்; மற்றும் ஒருவேளை அவர் தேர்ந்தெடுக்கப்படாமல், பெரும்பான்மையானவர்கள் தனக்கு எதிராகக் காணப்படுவதைப் பார்க்க வேண்டிய தர்மசங்கடமான நிலைமையினின்றும் தப்பித்துக்கொள்ளலாம். எப்போதும் சாத்தியமாய் இராவிட்டாலும், ஒருவேளை சாத்தியமாய் இருக்கும்பட்சத்தில் மூப்பராக முன்மொழியப்படுவதற்கான வாய்ப்புள்ள ஒருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருப்பதைப் பார்க்கிலும், வேறொருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருப்பது விரும்பப்படுவதற்கு ஏதுவாகக் காணப்படும் என்று நான் எண்ணுகின்றேன்.

## தேர்ந்தெடுத்தல் - சீட்டு மூலம் வாக்களித்தல்.

### கே: 240:1: :: கேள்வி (1910) - 1

முன்மொழிதல் எதுவும் பண்ணாமலேயே சீட்டு மூலம் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதும் மற்றும் இதில் பெரும்பான்மையான வாக்குகளை உடையவர்களைத் தேர்ந்தெடுப்பதும் மிகவும் இணக்கமான நிலைக்கு வழிநடத்துவதாய் இருக்குமா?

**பதில்:** நம்முடைய கருத்து அநேகமாகக் கொஞ்சம் குழப்பமாய்க் காணப்படலாம். இரண்டுவிதத்தில் ஏதாகிலும் ஒன்றிற்கு ஆதரவாக என்னால் கூறமுடியும். ஆனாலும் சீட்டு மூலம் வாக்கு அளிக்கும் முறையை கர்த்தர் ஏற்படுத்தவில்லை என்பதே என் மனதில் உள்ளது. கைகளை மேலே உயர்த்துவதின் மூலமே வாக்குகள் அளிக்கப்படும்படிக்குக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். சீட்டுகள் மூலம் வாக்குகள் அளிப்பது, அதாவது ஒன்றும் கூறாமலும், நீங்கள் வாக்குகள் அளித்தவிதம் குறித்து எவருக்கும் தெரியாமலும் இருப்பது என்பது எளிமையாக இருக்கும் என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். ஆனாலும் கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ள வழியை

விட்டுவிடுவது ஞானமான காரியமாக இருக்குமா? ஒருவேளை ஓர் இடத்திலிருக்கும் சபை அங்கங்கள் சீட்டு மூலம் வாக்குகள் செலுத்த முடிவெடுத்திருந்தால், அவர்கள் விஷயத்தில் தலையிடுவது எனக்கடுத்தக் காரியமல்ல. ஒருவேளை நான் அவர்களுக்கு ஆலோசனை கொடுத்த பிற்பாடும்கூட அவர்கள் ஆலோசனையை ஏற்க மறுத்தால், அவர்கள் விஷயத்தில் தலையிடுவது இன்னமும் எனக்கடுத்த காரியமல்ல. மீதி பதினொரு JURORS/ஜூரி உறுப்பினர்களும் மிகவும் பிடிவாதக்காரர்கள் என்று நினைக்கும் முறைக்கான JURIMAN/ஜூரி உறுப்பினன் போல் இருக்க நான் விரும்பவில்லை. நாம் நினைப்பது போன்று மற்றவர்கள் நினைக்கவில்லை என்ற காரணத்திற்காக, மற்றவர்கள் அனைவரும் பிடிவாதக்காரர்கள் என்று நாம் எண்ணக்கூடாது. ஆகவே எல்லாவற்றையும் விளக்கின பிற்பாடு, காரியத்தை சபையார் பகுத்தறிவதற்கும் மற்றும் சபையார் வாக்களிப்பதற்கும் விட்டுவிடுவோமாக மற்றும் முடிவைக் கர்த்தரிடத்தில் விட்டுவிடுவோம். ஒருவேளை தாங்கள் தவறு செய்துள்ளதை அவர்கள் கண்டுகொண்டால், அதை அடுத்த முறை நினைவுகூர்ந்து, ஜாக்கிரதையாய் இருப்பார்கள் மற்றும் பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டவர்களாக இருப்பார்கள். ஒருவேளை நாம் ஞானமாகச் செய்தால், நாம் ஒரு படிப்பினையைக் கற்றுக்கொள்வோம். சகோதர சகோதரிகளே, வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு ஆதரவாகவே என்னுடைய செல்வாக்கை நான் எப்பொழுதும் பயன்படுத்துவேன். மேலும் இம்முறையானது, சபையார் சரியான தைரியம் கொண்டிருக்க வேண்டுமென்பதைப் போதிக்கின்றது என்ற இதன் நன்மையும் எடுத்துரைக்கப்பட வேண்டும். ஒரு நபர் ஊழியத்திற்குப் பொருத்தமற்றவராய் இருந்தும்கூட, அவர் எனக்கு உறவினராக இருப்பதினால், அவருக்கு என் கரங்களை உயர்த்துவேனா? இல்லை, என்னுடைய தேவனுக்கு நான் உண்மையாய் இருக்க வேண்டும்.

## தேர்ந்தெடுத்தல் - முன்மொழியப்பட்டவரைக் குறித்துக் கருத்துப் பரிமாறுதல் (discussing).

## கே : 240:2: :: கேள்வி (1910) - 2

ஒரு சகோதரன் மூப்பராக முன்மொழியப்பட்டிருக்கும் போது, தேர்ந்தெடுத்தலுக்கு முன் அச்சகோதரனைக் குறித்து எவ்வளவுக்குக் கருத்துப்பரிமாறப்படலாம்? எதுவரை வரம்பு உள்ளது?

**பதில்:** சபையில் ஊழியம் புரிபவர்களுக்கான தேர்ந்தெடுத்தலுக்காய் முன்மொழியப் படுவர்களைக் குறித்து அதிகமாய்க் கருத்துப்பரிமாறுவது சரியென்பது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். நாம் ஒருவேளை ஒருவரையொருவர் கடிந்துப் பட்சிப்போமானால், ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவோமென்று அப்போஸ்தலர் கொடுக்கும் எச்சரிப்பை நீங்கள் நினைவுகூரலாம். நீங்கள் என் சகோதரனுக்கு எதிராக, அவர் தலையை சீவுகிற விதத்தில் அல்லது அவர் அணியும் வஸ்திரங்களின் நிறத்தில் மற்றும் அவர் குடும்பத்தில் அவருக்கு எத்தனை குழந்தைகள் இருக்கின்றார்கள் மற்றும் இது, அது என்று குற்றங்கண்டுபிடிக்கத் தொடங்கினால், ஆராய்வதற்கு/கருத்துப்பரிமாறுவதற்கு உங்களுக்கு அநேக காரியங்கள் இருக்கும். மேலும் நீங்கள் அவரைக் குறித்து முற்றும் முழுமையாய் கருத்துப்பரிமாறி முடியும்போது, அவர் அடுத்து, உங்களைக் குறித்து கருத்துப்பரிமாற ஆரம்பிப்பார். சபையார் அனைவரும் இப்படியான அனுபவம் பெற்றிருக்கக்கூடும்; இதனால் நன்மை உண்டாகுவதில்லை. என்னுடைய கருத்து பின்வருமாறு: சகோதரருடைய குணநலன்களைக் குறித்து அதிகம் கருத்துப்பரிமாறிடுவதற்கான அவசியமில்லை. ஏனெனில், சபைக்கு ஏதோவிதமான ஊழியம் புரிவதற்கென ஒரு சகோதரனுக்கு வாக்களிக்கும் ஒவ்வொருவரும், அவரைப் பற்றிக் கொஞ்சமாகிலும் அறிந்திருக்க வேண்டுமென்பதே ஆலோசனையாக வழங்கப்படுகின்றது. மேலும் ஒருவேளை தனிப்பட்ட பழக்கத்தின் வாயிலாக ஒருவருக்கு அவரைப்பற்றித் தெரியவில்லையென்றால், மற்றொரு சகோதரனுடைய கணிப்பை வழிக்காட்டியாகத் தனக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, நான் சமீபத்தில் ஓர் இடத்திலுள்ள சபையாருடன் சேர்ந்துள்ளேன் மற்றும் அவர்களுடைய எண்ணிக்கை பன்னிரண்டு என்று வைத்துக்கொள்ளுங்கள். மேலும் அச்சபையிலுள்ள நண்பர்களுடன் கொஞ்சம் பழக்கமே எனக்கு

ஏற்பட்டுள்ளது. மேலும் அவர்களில் எவருடைய குறைவுகளும் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் அனைவருடைய நற்குணங்கள் சிலவற்றை நான் அறிவேன். ஒருவேளை தேர்ந்தெடுத்தலுக்கான (election) வேளை வந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் ஒன்று அல்லது இரண்டு சகோதரர்கள் மிகவும் தெளிவுள்ளவர்களாகவும், மிகவும் ஒளிவுமறைவு அற்றவர்களாகவும் இருப்பதைக் கவனித்து வந்திருக்கிறேன். மேலும் அவர்கள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கையும் காணப்படுகின்றது. ஒருவேளை இந்தச் சகோதரன் இன்னொரு சகோதரனை முன்மொழிந்தால், மேலும் முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்குப் பழக்கமும் இல்லை மற்றும் முன்மொழியப்பட்டவருக்கு எதிரான எந்தக் குறைவும் எனக்குத் தெரியாமலும் இருக்கும்போது, முன்மொழியப்பட்டவருக்கு நான் வாக்குகள் செலுத்துவதில் தவறில்லை என்று எண்ணுகின்றேன்; ஏனெனில் இவரை முன்மொழிந்த சகோதரன் இவருடைய நற்பண்பைப் பற்றி ஏதோ அறிந்தவராக இருக்கின்றார். ஒருவேளை இவரை முன்மொழிந்தச் சகோதரனோடு எனக்குப் பழக்கமிருக்குமாயின், முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்கும் மறைமுகமான/நேரடியற்ற பழக்கமுள்ளது. நான் சொல்வது புரிந்திருக்குமென்று நம்புகின்றேன். ஆகவே எவருடைய குணநலன்கள் குறித்து விசேஷமாகக் கருத்துப்பரிமாறப்படாமலேயே, வாக்குகள் செலுத்தப்படுவதற்கு முன்பு ஒருவரால் பின்வருபவைகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும் - அதாவது வாக்குகள் அளிக்கும் உரிமையைச் செயல்படுத்தப் போகிற ஒவ்வொருவரும் முதலாவதாகக் கர்த்தருடைய விசுவாசியாக இருந்து, பாவத்திலிருந்து திரும்பித் தன்னை முழுமையாக அர்ப்பணம் பண்ணினவனாக இருக்க வேண்டுமென்பதும், அச்சபையாரின் அங்கங்கள் மாத்திரமே வாக்குகள் செலுத்த வேண்டுமென்பதும் மற்றும் வாக்குகள் செலுத்துபவர்கள் தாங்கள் எவ்விதமாய் வாக்குகள் செலுத்த கர்த்தர் விரும்புவார் என்று நம்புகின்றார்களோ அவ்விதத்திலேயே அல்லாமல் வேறுவிதத்தில் செலுத்தக்கூடாது என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இவைகள் போதுமானதென்று நான் நம்புகின்றேன். மேலும் சபையார் ஒரு சகோதரன் குறித்து ஒன்றையும் அறியாமல் அவருக்கு நிர்விசாரமாய் வாக்குகள் செலுத்திவிடாமல், மாறாக தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருக்கும் ஒருவருடைய கணிப்பு அல்லது ஆலோசனையின்படி வழிநடத்தப்படுவதற்கு நாடத்தக்கதாக, மேற்கூறிய காரியங்களானது அவர்கள் மீது போதுமான பொறுப்பை ஏற்படுத்தும் என்றும் நான் நம்புகின்றேன். ஒருவேளை தவறு செய்யப்பட்டால், ஒருவேளை தவறான நபர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் என்ன சொல்வது? தவறான காரியம் நடந்துவிட்டது என்ற முடிவிற்கு நான் வருவேன். யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற படிப்பினையை அச்சபையார் கற்றுக்கொள்ளப் போகின்றார்களென்று எண்ணுவதே சரியான விஷயமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே ஒருவேளை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அவர்கள் கண்மூடித்தனமாகச் செயல்பட்டிருந்திருப்பார்களானால், இதனால் அவர்களுக்கு நல்லதொரு பாடம் உண்டாகும். அடுத்தமுறை தேர்ந்தெடுத்தல் வரும்போது, அநேகமாக அவர்கள் மிகவும் கவனமாய் இருப்பதற்குக் கற்றுக்கொள்வார்கள். அநேகமாக இச்சபையின் அங்கங்கள் மிகவும் கவனமாய் இருக்கத்தக்கதாக அவர்கள் இவ்விதத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமாகக் கூட இருக்கலாம். எந்தச் சூழ்நிலையிலும் சரி, கர்த்தருடைய ஜனங்களில் யாரையேனும் நார்நாராகக் கிழித்துப்போடப்படக் கூடியதான எத்தகைய காரியத்திற்கும் எதிராக என்னுடைய முழுச்செல்வாக்கை எந்தச் சபையிலும் செலுத்துவேன். சகோதர சகோதரிகளுக்கு உண்மையில் குறைச்சல் உண்டாக்கும் காரியங்கள் பேசப்பட வாய்ப்புள்ள சில சம்பவங்களையும் நான் அறிவேன்; இக்குறைகள் அவர்களுடைய கடந்த கால ஜீவியத்தில் காணப்பட்டது அநேகமாக உண்மைதான்; மேலும் இவைகளை உணர்ந்த மாத்திரத்தில் அவர்கள் தங்களை முற்றிலும் மாற்றிக்கொண்டார்கள். இவ்விஷயத்திலும் சரி, வேறு விஷயத்திலும் சரி, என்னுடைய கருத்து ஒன்றுதான். மேலும் கர்த்தருடைய ஆடுகளுக்கு எதிரான இத்தகைய அடிகளுக்கும், பீறிப்போடுதலுக்கும் எதிராக என்னுடைய செல்வாக்கை நான் செலுத்துவேன். இக்காரியங்கள் ஆடுகளில் ஓநாயின் ஆவியை விதைத்து, விருத்தியாக்கும் என நான் எண்ணுகின்றேன்; ஆகவே இவைகள் தடுக்கப்பட வேண்டும். ஒருவேளை சபையார் மத்தியில் முக்கியமானவராகக் காணப்படும் ஒரு

சகோதரனிடம் இந்த முன்மொழிதல் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று மற்றவரகளால் கேட்கப்பட்டால் அல்லது அவர் ஏதோ விதத்தில் அதனைக் குறிப்பிட வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தாரானால், அவர் பின்வருமாறு: "என் அன்பு சகோதரரே, நீங்கள் கேட்ட முன்மொழிதல் குறித்து சில ஆலோசனைகளைக் கொடுக்க நான் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளேன். இதைக்குறித்து நான் சொல்ல விரும்புவது என்னவெனில், நான் இப்படியாக, அப்படியாக வாக்கு செலுத்த வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கின்றது என நான் எண்ணுகின்றேன்" என்று கூறுவது சரியாக இருக்கும். மேலும் இவ்வார்த்தைகள் இவருடைய செல்வாக்குச் செலுத்தப்படும் சகோதரர்களுக்கு ஓரளவுக்கு உதவியாக இருக்கும். மேலும் ஒருவேளை இவருக்குச் செல்வாக்கு இல்லையெனில், இவ்வார்த்தைகள் உதவியாய் இராது.

## தேர்ந்தெடுத்தல் - வாக்களிக்காதவர்கள் குறித்துப் பதிவு செய்தல்.

### கே : 242:1: :: கேள்வி (1910) - 1

வாக்களிக்கத் தவறுகிறவர்கள் குறித்து ஏதேனும் பதிவுகள் நாம் பதித்து வைத்திருக்க வேண்டுமா?

**பதில்:** வாக்குகள் அளிக்கப்படுவதற்கு முன்னதாகவே, கூடியிருக்கும் ஒவ்வொரு சகோதரனும், சகோதரியும் தங்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது என்று உணரத்தக்கதாக அவர்களைத் தெளிவுபடுத்துவது என்னுடைய வழக்கமாகும். அதென்னவெனில், முன்மொழியப் பட்டிருக்கிறவருக்கு (CANDIDATE) எதிராக அல்லது ஆதரவாக வாக்கு விஷயத்தில் செயல்படுவதற்குரிய பொறுப்புத் தங்களுக்கு இருக்கின்றது என்று அவர்கள் உணர வேண்டும். மேலும் வாக்குகள் செலுத்தத்தக்கதாக ஒருவருக்கு போதுமான அறிவு இருக்கிறதென்றால், அல்லது அவர் அர்ப்பணம் பண்ணினவராக இருந்து, அச்சபையாரோடு தொடர்ந்து கூடுகைகளில் கலந்துகொள்ள நோக்கம் கொண்டிருந்தால், அவர் வாக்குச் செலுத்துவதற்கான பொறுப்பை உடையவராய் இருக்கின்றார் என்று உணரவேண்டும். மேலும் அவர் வாக்குச் செலுத்துவாரா அல்லது இல்லையா என்பது விருப்பத்திற்கு விடப்பட்ட காரியமாக இல்லாமல், மாறாக வாக்குச் செலுத்துவது அவருக்குரிய கடமையாகும் என்று உணரவேண்டும். இக்காரியங்கள் வாக்குகள் செலுத்தப்படுவதற்கு முன்னதாகவே வலியுறுத்தப்பட்டால், அனைத்து அன்புக்குரிய நண்பர்களும் பொறுப்பை உணர்ந்து கொள்ள முடியும். வெகுசிலரே பின்வாங்குவதற்கு முயற்சிப்பார்கள். இது முன்னதாகவே மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

## தேர்ந்தெடுத்தல் - ஏழு பேரைத் தேர்ந்தெடுக்கும் அப்போஸ்தலர்களின் வழக்கத்தைப் பின்பற்றுதல்.

### கே : 242:2: :: கேள்வி (1911) - 2

சபைக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் நாம் அப்போஸ்தலர்களின் மாதிரியைப் பின்பற்றி ஏழு பேரை நியமிக்கலாமா? ஒருவேளை கூடாது என்றால் ஏன் செய்யக்கூடாது?

**பதில்:** ஏழு பேரை நியமிக்கும் அப்போஸ்தலனின் எந்த மாதிரியையும் நான் அறியேன். ஒருவேளை அப்படிப்பட்டதான ஏதாகிலும் மாதிரி இருக்குமாயின் அதைக்குறித்த அனைத்தையும் கண்டுபிடிக்கும் விஷயத்தில் மிகவும் மகிழ்ச்சிக்கொள்பவர்கள் மத்தியில் நானும் ஒருவராய் இருப்பேன். ஏழு உதவிக்காரர்களை அப்போஸ்தலர் நியமித்ததைக் குறித்து எனக்கு ஞாபகமுள்ளது. ஏழு மூப்பர்கள் தொடர்பாக நான் ஒருபோதும் கேட்டதில்லை. இது எனக்குப் புதிதாக இருக்கின்றது. ஒருவேளை நாம் உதவிக்காரர்களைக் குறித்துச் சிந்திக்கும்போது அதுவும் ஒவ்வாது. ஏனெனில் சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப அவர்கள் அன்று அவ்வளவு உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரு சபையின் எண்ணிக்கை ஆறு என்று

வைத்துக்கொள்ளுங்கள், அவர்களால் எப்படி ஏழு மூப்பர்களையும், ஏழு உதவிக்காரர்களையும் நியமிக்க முடியும்? சபையார் இரண்டு அல்லது மூன்று பேரையுடைய சிறு கூட்டமாக இருப்பார்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். "எங்கே என் நாமத்தினிமித்தம் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருப்பேன்." இவ்விஷயம் குறித்தான நமது கருத்துக்கள் வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியில் மிகவும் குறிப்பாக முன்வைக்கப்படுவதை நீங்கள் பார்க்கலாம்.

## தேர்ந்தெடுத்தல் - தகுதியுடையவர், ஆனால் ஞானஸ்நானம் பெறாதவர்.

### கே : 242:3: :: கேள்வி (1911) - 3

ஒருவேளை மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு சகோதரன் புதிய ஏற்பாட்டின் காரியங்களுக்கு இசைவாகத் தகுதியுடன் காணப்பட்ட போதிலும், அவர் எவர் மூலமாகவும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவில்லையெனில், இப்படிப்பட்ட சகோதரன் மூப்பராக நியமிக்கப்படாமல் இருப்பதற்கு இதுவே போதுமான காரணமாக இருக்கும் என்பது உங்கள் கணிப்பாக இருக்குமா?

**பதில்:** அப்படித்தான் இருக்கும். நம்முடைய பேப்டிஸ்ட் சபைபிரிவு (BAPTIST) நண்பர்கள் நினைக்கும் அதே கண்ணோட்டத்தில் நாம் தண்ணீர் ஞானஸ்நானம் முக்கியமானது என்று எண்ணுவதில்லை - அதனை ஓர் அடையாளமாகத் தவிர மற்றபடி நாம் எதுவும் எண்ணுவதில்லை. ஆனால் ஞானஸ்நானமாகிய மிக எளிமையான ஒரு அடையாளத்தை இதுவரையிலும் பார்க்க/உணர்ந்துகொள்ள முடியாத சகோதரன் இவ்விஷயத்தில் குருடனாகவே இருக்க வேண்டும். ஒருவேளை அவர் ஒரு விஷயத்தில் குருடனாக இருப்பாரானால், வேறு எத்தனை விஷயங்களில் அவர் குருடராக இருக்கக்கூடும்? இவரை மற்றவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு, அதாவது ஒருவேளை இவரைக்காட்டிலும் அதிகமாக ஏற்கனவே கண்டிருக்கும் ஒருவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு - அவர் ஞானஸ்நானம் காரியத்தைப் பார்க்க ஆரம்பிப்பது வரையிலும் காத்திருப்பேன். சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தை ஆக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாத ஒரு சகோதரன், நாம் புரிந்துகொண்டவரைக் கர்த்தருடைய பந்தியில் வரவேற்கப்பட வேண்டும் அல்லது எல்லாவிதத்திலும் கர்த்தருக்குள் சகோதரனாக வரவேற்கப்பட வேண்டும். ஆனால் ஒருவரைக் கர்த்தருடைய சகோதரனாகவும், சரீரத்தினுடைய அங்கமாகவும் எல்லாவிதத்திலும் அடையாளம் கண்டுகொள்வது என்பது ஒரு காரியமாகவும் மற்றும் அவர் போதிப்பதற்கான தகுதியுடையவர் என்று அடையாளம் கண்டுகொள்வது என்பது வேறுகாரியமாகவும் உள்ளது. என்னைப்பொறுத்த வரையில் புதிய ஏற்பாட்டின் மிகவும் எளிமையான விஷயத்தை - கர்த்தரும், அனைத்து அப்போஸ்தலர்களும் உண்மையான முழுகுதலாகிய அர்ப்பணிப்பிற்கான அடையாளமாகத் தண்ணீர் ஞானஸ்நானத்தில் பங்குகொண்டதுமான விஷயத்தை - ஏற்கனவே உணர்ந்தவனே போதிப்பதற்குத் தகுதி உடையவனாவான்.

## தேர்ந்தெடுத்தல் - எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படலாம். விசேஷமான நாளென்று ஒன்றில்லை.

### கே : 243:1: :: கேள்வி (1911) - 1

மூப்பராகத் தேர்தெடுக்கப்படாமலும் மற்றும் ஆவிக்குரிய தகுதிகளையுடையவராய் இருந்தும், சில பூமிக்குரிய சந்தர்ப்ப சூழ்நிலைகளினிமித்தம் தேர்ந்தெடுக்கப்படுவது தடங்கல்பட்டுள்ள நிலையிலும் சகோதரன் ஒருவர் இருக்க, திறமைமிக்க இச்சகோதரன் விசேஷித்த தருணங்களில் ஒழுங்குச் செய்யப்பட்டிருக்கும் ஒரு கூடுகை நிகழ்ச்சியில் தூது கொடுக்க வாய்ப்பளிக்கப்படுவது குறித்த உங்களது கருத்தென்ன?

**பதில்:** ஒருவேளை சபையாரும் அவரைத் தேர்ந்தெடுக்க விரும்பினால், அவரைத் தேர்ந்தெடுக்கும் காரியத்தை மிகச் சுலபமாக நடத்தலாம் என்று நான் எண்ணுகின்றேன். இதனைப் பற்றிய யோசனையை முன்வைத்து, வாக்கு எடுங்கள்; இப்படிச் செய்வது, காரியத்தை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரும். அவர் எப்போது வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படலாம். குறிப்பிட்ட நாட்களில்தான் மூப்பரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எதுவுமில்லை. அவரைச் சபையார் தகுதியான நபர் என்று ஒருவேளை கருதினால், மேலும் அவசியம் இருக்கும் பட்சத்தில் அவர் வருடத்தின் நடுவில் அல்லது அடுத்த மாதம் அல்லது வேறு எந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்படலாம். இது போன்றதான சூழ்நிலைகளில், காரியத்தைச் சபையாரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதைக்குறித்து, ஒருமாத காலமாக அல்லது இன்னும் அதிகக்காலமாகச் சிந்தித்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை அன்று, இதற்காகச் சபையாரை வாக்கு செலுத்தும்படி கேட்டுக்கொள்வது நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். இது சபையாருக்கு முழுவாய்ப்பை அளிக்கின்றது மற்றும் ஒருவேளை அவர்கள் வாக்குச் செலுத்தினார்களெனில், அவ்வாக்கின்படி தீர்மானம் எடுக்கப்படும்.

## தேர்ந்தெடுத்தல் - நியமிக்காமல் ஊழியம் செய்தல்.

### கே : 243:2: :: கேள்வி (1911) - 2

ஒருவேளை தான் ஏற்றுக்கொள்ளப்படும் விஷயத்தில் எவ்விதமான மறுப்புமிராது என்று எந்த ஒரு சகோதரனுக்கு உறுதி இருப்பினும், தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் அவர் சபையில் வழிநடத்துபவராக, போதகராக, பிரதிநிதியாகப் பொதுப் பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நாம் சில இடங்களில் வாசித்துள்ளோம். மற்ற இடங்களிலும் கூட இப்படியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படியாக இருக்குமானால், சபையில் பத்தொன்பது உதவிக்காரர்களையும் மற்றும் சபையாரையும் சேர்க்காமல், நம்முடைய மூப்பர்கள், கூட்டங்கூடி ஓர் உதவிக்காரரைச் சபையின் மூப்பராக அல்லது போதகராக அல்லது பிரதிநிதியாக நியமிப்பது - அதாவது முறையான விதத்தில் ஏற்படுத்தப்பட்ட மூப்பர் காணப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறும் மூப்பர் ஸ்தானத்திற்கு நியமிப்பது என்பது தவறுதானே?

**பதில்:** இக்கேள்வியைக் கருத்தில் எடுத்துக்கொள்ளும்போது, நாம் அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும், கொடுக்கப்பட்டுள்ள வேதாகம உதாரணத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். பரிசுத்தவானாகிய ஸ்தேவானின் சம்பவம் உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திலுள்ள பதிவின்படி அவர் சபையில் உதவிக்காரராகத் தெரிந்து கொள்ளப்பட்டார். மேலும் பரிசுத்தவானாகிய ஸ்தேவானுக்குப் பிரசங்கம் பண்ணுவதற்கான நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. வாய்ப்புக் கிடைத்தபோது அவர்: "சகோதரரே, நான் மூப்பனாகத் தெரிவு செய்யப்படவில்லை. அதனால் என்னால் உங்களுக்குப் பதில் தெரிவிக்க முடியாது" என்று கூறவில்லை. மாறாக அவர் நேரே சென்று பிரசங்கம் பண்ணினார் மற்றும் கர்த்தரும் அவரை அதிகளவில் ஆசீர்வதித்தார்; அவருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தது மற்றும் பிற்பாடு கல்லெறிந்து கொல்லப்பட்டார். இன்னுமாக இவர் தனது கர்த்தருக்கு அடுத்தபடியாக, முதலில் இரத்தசாட்சியாக மரித்து, கிறிஸ்தவன் என்ற நற்சான்றும் வாங்கினார். அப்போஸ்தலர் கூறுகின்ற காரியங்களை நாம் மீண்டும் நினைவில் கொள்வோமாக - அவர் கூறின வார்த்தைகளில் கொஞ்சத்தை நான் இங்குக் குறிப்பிடுகிறேன் - யாரொருவர் உதவிக்காரராக இருந்து, தனக்கான ஸ்தானத்தின்படி ஊழியம் புரிந்து, தன்னுடைய ஊழியத்தில் தாழ்மை காட்டுகின்றாரோ, அவர் தனக்கு நல்ல நிலையைப் பெறுவார் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (1தீமோத்தேயு 3:13). அதாவது, சுயாதீனம், சிலாக்கியம் மற்றும் வாய்ப்பாகிய நல்ல நிலையைப் பெறுவார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், யார் மூப்பர்களாக ஊழியம் புரியலாம் என்பதற்கு வாக்கு செலுத்தும்போது, சபையார் தாங்கள் முந்தின முறை உதவிக்காரர்களாக தேர்ந்தெடுத்தவர்களையும், அந்த உதவிக்காரர்கள் எவ்வளவு கவனமாய் இருந்தார்கள் என்பதையும் மற்றும் அந்த உதவிக்காரர்கள் எவ்வளவு உண்மையுடன் இருந்தார்கள் என்பதையும் கவனித்தவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் இவர்கள்

உதவிக்காரர்கள் என்ற விதத்தில், temporal/ஆவிக்குரியல்லாத சில வேலைகளைச் செய்வதிலேயே ஒருவேளை உண்மையற்றவர்களாக இருப்பார்களானால், இவர்கள் மூப்பர்களுக்குரிய ஊழியங்களில் உண்மையுடன் இருப்பார்களென்று எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இவ்விதமாக இந்த உதவிக்காரர்கள் தங்களுடைய உதவிக்காருக்குரிய ஸ்தானத்தில் உண்மையாய் இருந்ததினிமித்தம் சபையில் கனமும், முன்னுரிமையுமாகிய நல்ல நிலையைத் தங்களுக்கென்று பெற்றுக்கொள்வார்கள் என்பதே அப்போஸ்தலனுடைய கருத்தாகும். என்னுடைய கருத்து என்னவெனில், ஆதிசபையில் உதவிக்காரர்கள் எனும் வகுப்பார் படிப்படியாக மூப்பர் ஸ்தானத்திற்கும் மற்றும் சத்தியத்திற்கு மிக முக்கியமான ஊழியம் புரியும் ஸ்தானத்திற்கும் முன்னேறுவதற்கு ஏதுவாக ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆகவே உதவிக்காரர்கள் ஆரம்பத்தில் சில விதமான வேலைகளுக்கென்று தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனால் இவர்கள் தேவைப்படும் சமயங்களில் பயன்படுத்தப்படுபவர்களாக வைக்கப் பட்டிருப்பார்கள். ஆகையால் ஏதேனும் வேலை புரிவதற்கு ஒரு மூப்பர் இல்லாமல் இருந்தாரானால், Committee/மூப்பர் குழுவினர் உதவிக்காரர்களைப் பற்றி: "இன்றைய இரவிலுள்ள கூட்டத்தில் இந்தச் சகோதரனை நாம் பயன்படுத்திப் பார்ப்போமா?" என்றும், வேறொரு தருணத்தில் இதே குழுவினர் (COMMITTEE): "இன்றைய இரவில் நடக்கும் கூட்டத்திற்கு நாம் அந்த இன்னொரு உதவிக்காரரைப் பயன்படுத்திப் பார்க்கலாமா? இன்றைய இரவு கூட்டத்தில் நமக்கு ஒருவர் அவசியம், இவருக்கு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம்" என்பார்கள். இவ்விதமாக உதவிக்காரர்களின் ஆற்றலைக் காணத்தக்கதாக அவர்களைப் பயன்படுத்திப் பார்த்து அறிந்துகொள்வார்கள். இல்லையேல், உதவிக்காரர்கள் வளர்வதற்கோ அல்லது சபைக்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் தங்களுடைய திறமை என்னவென்பதை வெளிக்காட்டுவதற்கோ வாய்ப்புகள் இல்லாமல் இருப்பார்கள். இக்கருத்துக்கு எதிரான ஒன்றும் வேதாகம ஆராய்ச்சிப் பாடங்களில் (VOLUMES) எழுதப்படவில்லை. ஏனெனில் இக்கருத்தையே நாம் எப்போதும் கூறி வருகின்றோம். மேலும் இக்கருத்து வேதவாக்கியங்களின் அடிப்படையிலானது என்றும் நாம் நம்புகின்றோம். இது ப்ரூக்ளினிலும், மற்ற இடங்களிலும் செயல்படுத்தப்பட்டும் வருகின்றது.

சகோதரன் கேள்வியில் என்ன கேட்க வருகின்றார் என்பதை என்னால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும் என்னுடைய பதில் பின்வருமாறு உள்ளது: ஒருவேளை சபையார் தங்களுக்கு நான்கு அல்லது ஐந்து மூப்பர்களைத் தேர்ந்தெடுத்திருக்க, அந்த நான்கு அல்லது ஐந்து மூப்பர்கள் ஊழியத்திற்கு வந்த பிற்பாடு, உதவிக்காரர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அந்த உதவிக்காரரை மூப்பராக்குவது என்பது, சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவதில்லை. இப்படிச் செய்வது அவர்களுக்கடுத்த அதிகாரம் இல்லை என்று எண்ணுகின்றேன். ஒருவேளை சபையார் அந்த உதவிக்காரர் சகோதரனை மூப்பராகவும், முறையான ஊழியனாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவார்களானால், அவரை நியமிப்பது அவர்களுடைய பொறுப்பாய் இருக்கும். ஒருவேளை மூப்பர்கள் தங்களுக்குள் போதுமான மூப்பர்கள் இல்லையென்று எண்ணினால், அவர்கள் சபையார் கூடிவரும் ஒரு நாளில் இன்னொரு மூப்பர் தேவையாக இருப்பதினால், இன்னொரு மூப்பரைக் கூடுதலாகத் தேர்ந்தெடுப்பதில் சபையார் பிரியம் கொள்வார்களா? என்று கேட்கலாம். ஆனால் ஒருவேளை தேவையானது தற்காலிகமானத் தேவையாகத்தான் இருக்கும் பட்சத்தில், தற்காலிகமான அத்தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கு ஏதாவது சில திறமைகளை வெளிப்படுத்தும் உதவிக்காரர்களை அவ்வப்போது மாத்திரமே இந்த மூப்பர்கள் தெரிவு செய்யச் சபையார் விரும்புகின்றார்கள் என்றால், இது சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவேன். ஆனால் சபையார் ஓர் உதவிக்காரனை மூப்பராகத் தெரிந்தெடுக்காத பட்சத்தில், அவரை மூப்பராக நியமிப்பது சரியான காரியமாக இராது.

## தேர்ந்தெடுத்தல் - மீண்டும் வாக்கு (VOTE) செலுத்துதல்.

**கே : 244:1: :: கேள்வி (1911) - 1** (அவையோரிடமிருந்து எழும்பினது)

ஒரு சகோதரன் எழுபத்தைந்து சதவிகிதமான வாக்குகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்குகள் குறைவாகப் பெற்றிருப்பாரானால், அவர் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாகப் போதுமான அளவு வாக்குகள் பெற்றுக்கொள்ளும்படிக்கு, இரண்டாம் விசை அவர் சார்பாக வாக்கெடுப்பது ஞானமான காரியமாக இருக்குமா?

**பதில்:** இந்தச் சபையார் ஏகமனதுடன் செய்தால் கூட, இதற்கு நாம் மறுப்புத் தெரிவிப்பதில்லை. காரியம் நடந்தால் போதும் என்று நாம் எண்ணாமல், சபையாரின் கருத்தைப் பெற்றுக்கொள்வதும், சபையாருடைய விருப்பத்தைப் பூர்த்திச் செய்ய வேண்டும் என்பதும் தான் நமக்கு வேண்டிய காரியமாகும். பிணக்கு உண்டு பண்ணுவதற்கு மாத்திரமே ஏதுவான எவ்விஷயமும் கூடுமானமட்டும் தவிர்க்கப்பட வேண்டும். ஒருவேளை ஒரு சபையார் தங்களுடைய தேர்ந்தெடுத்தலில் எழுபத்தைந்து சதவிகிதமான விதியை நியமித்தார்களானால், இதே சதவிகிதமான விதிதான் அடுத்த தேர்ந்தெடுத்தலுக்கும் காணப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை. மாறாக, அவ்விதி அந்த ஒருமுறைக்கு மாத்திரமே கட்டளையாக இருக்கும். ஒருவேளை அடுத்த தேர்தலிலும் சபையார் அதே எழுபத்தைந்து சதவிகிதம் விதியைத் தெரிந்துகொண்டார்களானால், இன்னுமாக ஒருவர் இந்தச் சதவிகிதமான விதிக்குக் கொஞ்சம் கிட்ட எட்டியும் முழுமைக்கு வரவில்லையெனில், அவர் அடைந்த வாக்குச் சதவிகிதத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு மீண்டும் வாக்கெடுங்கள். மேலும் பின்னர் நியமிக்கப்பட்ட சதவிகிதம் விதி அளவைக்காட்டிலும் அவருக்கு வாக்குகள் அதிகம் கிடைத்திருக்குமாயின், சபையாரின் விருப்பத்திற்கு ஏற்ப சபையார் காரியங்களை முடிவு செய்ய முழு அதிகாரம் உடையவர்களாய் இருக்கின்றார்கள்.

## தேர்ந்தெடுத்தல் - (ஏகமன நியதி) ஜூரி விதி.

## கே : 245:1: :: கேள்வி (1911) - 1

வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில், சபையில் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திற்குப் பெரும்பான்மையானது போதுமாயிராது, மாறாக (ஏகமன நியதி/JURY RULE) ஜூரி விதி நிலவ வேண்டுமென்று நாம் வாசிக்கின்றோம். அப்படியானால், அதுவே உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையிலும் பின்பற்றப்பட வேண்டிய ஞானமான வழிமுறையாய் இருக்குமல்லவா? மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் இருவரை தேர்ந்தெடுத்தலில் ஒரே ஒழுங்குமுறை நிலவ வேண்டுமென நாம் தொகுதியில்/VOLUME வாசிக்கின்றோமே.

**பதில்:** இந்தக் காரியத்தில், சட்டம் ஒன்றை முன்வைத்திட நாம் நாடுகிறதில்லை; சட்டம் ஒன்றினை இயற்ற நமக்கு உரிமை இல்லை; சபைக்கு ஞானமான வழிமுறையாகக் காணப்படும் என்று நாம் நம்புகிறவற்றை நாம் யோசனையாக வழங்க மாத்திரமே செய்கின்றோம். உதாரணத்திற்கு ஒரு சபையில் **(bare majority)** குறைந்தளவு எண்ணிக்கையில்/வித்தியாசத்தில் பெரும்பான்மையினரானவர்கள், காரியங்களை நிர்ணயிக்க அனுமதிக்கப்படுவார்களாகில், மிகப் பெரிய எண்ணிக்கையிலுள்ள, அதாவது பெரும்பான்மையினரைப் போன்று கிட்டத்திட்ட எண்ணிக்கையில் பெரியதாகக் காணப்படும் சிறுபான்மையினர் முழுக்க அதிருப்திக்குள்ளாவார்கள்; மற்றும் ஒரு எண்ணிக்கையில் பெரும்பான்மையினரானவர்கள் அச்சபையை மிகவும் நியாயமற்ற விதத்தில் நடத்துபவர்களாய் இருப்பார்கள். ஆகையால் சபையார் தங்கள் வாக்குகளைச் சரிப்படுத்த முயற்சித்திட வேண்டும் மற்றும் கூடுமானால் சபையிலுள்ள அனைவரையும் பிரியப்படுத்தவும், திருப்திப்படுத்தவும் தக்கதாக மூப்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது எங்கள் யோசனையாக இருக்கின்றது. இப்படியாக முடிந்தமட்டும் **mere majority rule**/வெறும் பெரும்பான்மை விதியானது புறக்கணிக்கப்பட வேண்டும் மற்றும் முடிந்த மட்டும் (ஏகமன நியதியானது) ஜூரி விதியானது அடையப்பெற வேண்டும். அது ஏகமன நியதியாக இருக்க வேண்டும் என்று நாம் சொல்லாமல், மாறாக முடிந்தமட்டும் சபையில் கருத்து வேறுபாடின்மையானது அடையப்பெற வேண்டும் என்று சொல்லுகின்றோம். ஒரு சபையில் யார்

உதவிக்காரராக அல்லது மூப்பராக இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், முழுச்சபையாரும் ஒன்றையே சிந்திக்கும் நிலையினை அடைவது எப்போதும் சாத்தியமல்ல.; ஆனால் என்ன விதி கைக்கொள்ளப்பட்டாலும், அது மூப்பர்கள் விஷயத்தில் கைக்கொள்ளப்படுவது பொருத்தமாய் இருப்பதுபோன்று, உதவிக்காரர் விஷயத்திலும் கைக்கொள்ளப்படுவது பொருத்தமானதாகவே இருக்கும். எந்த ஓர் ஊழியத்திற்கும், யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், சபையாருக்கு ஊழியக்காரர்களாய்க் காணப்படப்போகிறவர்களிடத்தில், சபையார் அனைவரையும் திருப்தியும், பிரியமும் கொண்ட நிலையில் பெற்றிருக்க நாடும்படியாக, கொள்கைகள் சம்பந்தப்படாதவைகளில் சபையார் ஒருவருக்கொருவர் சிறு சிறு காரியங்களில் முடிந்த மட்டும் விட்டுக்கொடுக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## தேர்ந்தெடுத்தல் - வர இயலாதிருக்கும் அங்கத்தினர்கள் கடிதம் மூலம் வாக்குப்பதிவு செய்தல்.

### கே : 245:2: :: கேள்வி (1912) - 2

இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்னரே தேர்தலுக்கான முன்மொழிதல் இடம்பெற்றிருக்க, கைகளை நீட்டுவதன் மூலம், மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, வகுப்பின் இரண்டு அல்லது மூன்று அங்கங்கள், நேரில் வர இயலாதிருக்கும் தருவாயில், தங்கள் வாக்குப்பதிவை கூட்டத்தலைவருக்குக் கடிதத்தின் மூலம் அனுப்புவது அனுமதிக்கத்தகுந்ததா?

**பதில்:** இதில் மறுப்புக்கிடமானது ஒன்றுமே இல்லை. அரசியலில் ஒரு கட்சி, மற்ற கட்சிக்கு எதிராக சூழலைச் சாதகமாக்கிக் கொள்ளுகிற கட்சி மனப்பான்மை காணப்படுகிறது. எனினும், இது உங்களிடத்தில் இருக்கலாகாது. மூப்பருக்கான தேர்ந்தெடுத்தலுக்கென்று நீங்கள் ஒன்றுகூடும் போது, ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரியும் தனது கருத்தை வெளிப்படுத்தக்கூடிய முழுமையான வாய்ப்பைப் பெறவேண்டும் என்று நீங்கள் எண்ணிட வேண்டும். இப்படி விரும்புவது மாத்திரமல்லாமல், ஒவ்வொருவரும் தங்கள் கருத்தினை வெளிப்படுத்திட வேண்டும் என்று நீங்கள் காணப்பட வேண்டும். நமக்கு அவர்களுடைய சொந்தக் கருத்து மட்டுமே அவசியமானது அல்ல, மாறாக சபைக்கான தேவனுடைய சித்தம் இன்னது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்விஷயத்தில், தேவனுடைய சித்தமாக இருக்குமென நாம் நினைப்பது எதுவோ அதை நாம் அனைவரும் வெளிப்படுத்துவோமாக. வர இயலாதிருப்பவர்கள், கூட்டத்தின் கூட்டத்தலைவரிடத்தில் தங்களின் வாக்குப்பதிவை அனுப்பிவைப்பதற்கு எந்தத் தடையும் இருப்பதாக நான் காணவில்லை. நீங்கள் வந்திருப்பீகளேயானால், நீங்கள் எண்ணியிருப்பவருக்கு உங்கள் வாக்குப்பதிவைக் கொடுக்கலாம். ஆனால் உங்களுக்காக வேறொரு சகோதரன் அல்லது சகோதரி பதிலாளாக இருந்து, தாங்கள் சிறந்தவர்கள் என்று கருதக்கூடியவர்களுக்கு வாக்களிப்பதற்குரிய உரிமைக் கொடுக்கப் படலாகாது. இவ்விஷயத்தில், அதவே என் கருத்தாகும்.

## தேர்ந்தெடுத்தல் - ஆங்கில மொழிக் கூடுகைகளுக்காக வெளிநாட்டுச் சகோதரர்கள்.

### கே : 246:1: :: கேள்வி (1913) - 1

குறைவுகளோடு ஆங்கில மொழியைப் பேசுகின்றதான ஜெர்மனிய அல்லது ஸ்வீடிஷ் மொழி பேசும் வெளிநாட்டுச் சகோதரர்களைப் பொதுப்பேச்சாளர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

**பதில்:** ஒருவேளை வகுப்பில் அந்த வெளிநாட்டு மொழியைப் பேசுபவர்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பார்களானால், அத்தகைய ஒரு பேச்சாளர் விரும்பப்படத்தக்கவராக இருப்பார் மற்றும் அவரைத் தேர்ந்தெடுப்பது முறையாய் இருக்குமென நான் கருத்துத் தெரிவிக்கின்றேன். உதாரணத்திற்கு, புரூக்கிளின் சபையாரில் பிரெஞ்சு மொழியில் வகுப்பினை

நடத்துவதற்கு நன்கு தகுதி வாய்ந்த பிரெஞ்சு சகோதரன் ஒருவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். இத்தாலிய மொழியில் வகுப்பினை நடத்திடுவதற்கு நன்கு தகுதி வாய்ந்த இத்தாலிய சகோதரன் ஒருவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். ஸ்வீடிஷ் சகோதரன் ஒருவரையும் நாங்கள் பெற்றிருக்கின்றோம். வகுப்பிலுள்ள நண்பர்கள் ஆங்கிலம் புரிந்துகொள்ள முடியாதவர்கள் என்றல்ல, மாறாக இவர்கள் தங்கள் மொழியினைக் கொஞ்சம் விரும்புவதினால், இவர்களது சொந்த மொழியினை நன்கு தெரிந்த ஒருவரைப் பெற்றிருக்க விரும்புகின்றனர். இது மிகவும் சரியே என்று நாம் எண்ணுகின்றோம். இப்படியாகவே ஐரோப்பிய இனமில்லாத சகோதரர்கள் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாங்கள் வெவ்வேறு தேச வகுப்புகளைப் பெற்றிருக்கிறோம். சபையார் மத்தியில் எத்தனை வெவ்வேறு இன வகைகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

## தேர்ந்தெடுத்தல் - தகுதியற்றவர்கள் தொடர்பாக.

### கே : 246:2: :: கேள்வி (1913) - 2

ஓர் இடத்தில் மூப்பருக்கான தகுதிகளைப் பூர்த்திச் செய்திடுவதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் இல்லாததாகத் தோன்றுகையில், மூப்பர்களைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பதற்கும் மற்றும் பாஸ்டர் ரசல் அவர்களை மூப்பராகத் தேர்ந்தெடுப்பதற்கும் நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

**பதில்:** இம்மாதிரியான கேள்விகள் விவாதிக்கப்படுகையில் கவனமாகக் கையாளப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன மற்றும் எதை அறிவுறுத்துவது சிறந்ததாயிருக்குமென அறிந்து கொள்ளுவதற்கும் கடினமாய்க் காணப்படுகின்றது. நண்பர்களே, கூடுமானமட்டும் ஞானத்தோடும் விவேகத்தோடும் நடந்து கொள்ளுங்கள் என்பதே என் பொதுவான பரிந்துரையாக இருக்கின்றது. இம்மாதிரியான விஷயங்களில் கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துக் கர்த்தருடைய ஜனங்கள் முழுமையாய் உணர்ந்துகொள்ளாததே, ஒரு பிரச்சனையாகக் காணப்பட்டு வந்தது மற்றும் அநேகமாக இன்னமும் காணப்பட்டு வருகின்றது. தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு எழுதுகையில் அப்போஸ்தலன் ஒரு மூப்பனுக்கான தகுதிகளை முன்வைக்கையில், அவர் திட்டவட்டமான விதிகளை முன்வைத்திடுவதாகவும் மற்றும் அந்த நிபந்தனைகள் அனைத்திலும் ஒவ்வொரு மூப்பனும் மிக உயர்ந்த நிலையில் காணப்பட வேண்டும் என்பதாகவும் கர்த்தருடைய ஜனங்கள் எண்ணம் கொண்டிருக்கின்றனர். இப்படியான நிலையில் காணப்படுபவர் பூரண மனுஷனாக, மிகவும் நல்லதொரு மூப்பராகக் காணப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. இப்படியாகவே - அதாவது அப்போஸ்தலன் அங்கு எழுதியுள்ள வைகள் யாவற்றின் நிலையினை மற்றக் கிறிஸ்தவர்களும் அடைவார்களானால், இந்தக் கிறிஸ்தவர்கள் யாவரும்கூட இப்படியாகவே காணப்படுவார்கள். அப்போஸ்தலன் உண்மையில் தன்னுடைய வார்த்தைகளானது, நேரடியான விதத்தில் அப்படியே புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று எழுதவில்லையெனில், பின் ஏன் அவர் இப்படித் திட்டவட்டமான வார்த்தைகளைப் பேசியுள்ளார் என்று நீங்கள் கேட்கலாம்? சபை யாவரிடமும் இயேசு வேறொரு தருணத்தில், “பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப் போன்று நீங்களும் இருக்கக்கடவீர்கள்” என்று கூறின விதத்தைப் போலவே அப்போஸ்தலனும் காரியத்தினை முன்வைக்கின்றார் என்று நாம் பதிலளிக்கின்றோம். நீங்கள் உங்கள் பிதாவைப் போன்று இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? “நான் முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன்” என்று நீங்கள் சொல்லுவீர்கள். என் அன்பு சகோதரனே, நீங்கள் சொல்வது சரிதான். சரி, உங்கள் பிதாவைப் போன்று இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? சில விதங்களில் நீங்கள் இருக்கின்றீர்கள் - அதாவது உங்கள் மனதில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று சொல்லுவீர்கள். சரி, வார்த்தைகள் மற்றும் கிரியைகள் மற்றும் சிந்தனைகள் யாவற்றிலும் நீங்கள் இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? இல்லை; நான் பிதாவைப் போன்று அனைத்திலும் இருக்கிறதில்லை; ஆனால் தேவனுக்கு ஒத்த குணலட்சணத்தை அதிகதிகமாய் அடைந்திட நான் முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன் என்று சொல்லுவீர்கள். நல்லது. இதுபோலத்தான் அப்போஸ்தலன் இங்கு ஒரு மூப்பருக்கானா தராதரத்தினை/அளவுகோலினைச் சபைக்கு முன்வைக்கின்றார்; அதாவது ஒரு மூப்பர் எப்படி

இருக்கவேண்டும் என்று சபைக்கு முன்வைக்கின்றார். நீங்கள் மூப்பர்களைக் குறித்துச் சிந்திக்கையில், அதைப் பாருங்கள் மற்றும் சகோதரரை நீங்கள் மதிப்பிடுகையில் அதை மனதில் கொண்டிருங்கள் மற்றும் இந்தத் தகுதிகளைக் கொஞ்சம் கொண்டிராதவர்கள், பொருத்தமானவர்களாய் இருக்கமாட்டார்கள் மற்றும் உங்களால் முடிந்தவரைத் தகுதியான வரைத் தேர்ந்தெடுங்கள். பூரணமான மூப்பர்கள் கிடைக்கும்வரை காத்திருப்போமானால், நாம் எந்த மூப்பர்களையும் ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டோம். ஆகையால் சகோதரர் ரசலும் சரி, வேறு எந்த நபரும் சரி, பரிபூரண மூப்பராய் இருந்திடமுடியாது என்று நான் சொல்லுவேன். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் மூப்பராக எவரையும் தேர்ந்தெடுக்காமல் இருப்பது நலமாயிருக்கும் என்ற நிலைமையிலுள்ள சந்தர்ப்பங்களும் காணப்படக்கூடும் என்று நான் நம்புகிறேன். அப்படியான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் மிகவும் அரிதாகவே இருக்கின்றன. அப்படித்தான் என்று நான் நம்புகின்றேன். இது அறிவுரை கூறுவதற்கு மிகக் கடினமான சந்தர்ப்பங்களாய் இருப்பவைகளில் ஒன்றாய் இருக்கின்றது. இவ்விஷயத்தில் அநேகக் காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு சிறுசபையாரும், சபையாரிலுள்ள அங்கத்தினனும், முடிந்த மட்டும் ஞானமாயும், முடிந்த மட்டும் முன்யோசனையுடனும், ஜாக்கிரதையோடும், முடிந்தமட்டும் தேவனுக்கும், அவரது நீதியின் கொள்கைகளுக்கும் நேர்மையாயும் காணப்பட்டு, தெய்வீக வழிநடத்துதலின்படி செய்திடுவதற்கு ஜெபத்தோடு நாடுவார்களாக. ஒருவேளை முழுச்சபையாரும் அல்லது சபையாரில் பெரும்பான்மையினர், ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையினைத் தீர்மானித்திடுவார்களானால், சபையார் வாக்குகள் செலுத்திட்டாலும், உங்கள் சித்தமே செய்யப்படவேண்டும் என்று எண்ணாதீர்கள்; மாறாக பின்வருமாறு கூறிவிடுங்கள்: “சரி, பரவாயில்லை; சபையார் வாக்குகள் அளித்துள்ளனர் மற்றும் நியாயமாய்க் காரியம் தெரிவிக்கப்பட்டுள்ளது; நான் என் கருத்தைச் சொல்லியுள்ளேன் மற்றும் நான் சிந்தித்தது போன்று, அவர்கள் சிந்திக்கவில்லை; மற்றும் சபையாரை நான் வற்புறுத்திடக்கூடாது; நான் சிறுபான்மையாய் இருப்பவர்களில் ஒருவனாய் இருக்கின்றேன் மற்றும் சபையார் மத்தியிலுள்ள மற்றவர்களுக்கு நான் பணிந்திடுவேன் மற்றும் நான் அவர்களோடுகூட ஒத்துழைப்பேன் மற்றும் நான் சொன்ன வழிதான் சரியான வழி என்றும், ஒருவேளை சபையார் என் வழியில் வரவில்லையெனில் காரியங்கள் அனைத்தும் தவறாகிவிடும் என்றும் காண்பிப்பதற்கென, அவர்களுக்கு எதிராய் நான் காரியங்களைச் செய்திடமாட்டேன். இல்லை, நான் தேவனுக்கு இசைவாய்க் காணப்பட வேண்டும் மற்றும் சபையாரால் எது தீர்மானிக்கப்படுகின்றதோ, அதற்கு என்னுடைய பங்கினைச் சிறந்த விதத்தில் நான் செய்திட வேண்டும்; சமாதானமும், நீதியும் நிலவும்படி அனுமதிக்கத்தக்கதாகவும் மற்றும் சத்தியத்தின் காரணங்களை முன்னேற்றத்தக்கதாகவும் மற்றும் சமாதானம் பண்ணுகிறவராகிடத் தக்கதாகவும் என்னால் இயன்ற மட்டும் சிறப்பாய் இப்பொழுது உழைத்திடுவேன்” என்பதாகும். இதை மறந்துவிட வேண்டாம். தேவனுடைய ஜனங்கள் யாவரும், “சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்” என்று இயேசு கூறியதைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெயங்கொள்பவர்களாகிவிடுவதற்கு, எதிர்த்துப்போராடும் மனப்பான்மையினைக் கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் ஓரளவுக்குப் பெற்றிருப்பது அவசியம் என்பதை நினைவில் கொள்வோமாக; இதைக் கொஞ்சமேனும் பெற்றிருக்கவில்லையெனில், உங்களால் ஜெயங்கொண்டவராகிட முடியாது. உலகத்தினை ஜெயங்கொள்வதற்குப் போதுமான அளவுக்கு நீங்கள் எதிர்த்துப் போராடுகிறவராயும் மற்றும் சகோதரரோடு சண்டை பண்ணாமல் இருப்பதற்குப் போதுமான அளவுக்கு நீங்கள் சமாதானம் பண்ணுகிறவராயும் இருத்தல் வேண்டும். சகோதரரோடு போராடிக்கொண்டிராதீர்கள்; மாறாக உங்களால் முடிகிற அளவுக்குப் பரிவாகவும், அனுதாபம் உடையவர்களாயும், உதவிகரமாயும் இருங்கள்.

## தேர்ந்தெடுத்தல் - யார் வாக்களிக்கலாம்?

### கே : 247:1: :: கேள்வி (1913-Z) - 1

சபையில் வாக்களிக்க யார் உரிமைப் பெற்றுள்ளனர்?

**பதில்:** முழு அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணி மற்றும் அதை வெளிப்படையான அடையாளமாகிய - தண்ணீரில் மூழ்குதல் மூலம் வெளிப்படுத்தியவர்கள் தவிர வேறு யாரும் வாக்களிக்கக்கூடாது என்பதை எப்பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பை அடையாளத்தில் காட்டாதவர்கள் சகோதரர்கள் அல்ல என்று தள்ளிவிடாமல், மாறாக சபைக்கு ஊழியம் செய்யத் தகுதியானவர்கள் யார் என்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்கப் போதிய வளர்ச்சியற்றவர்கள் என்றும், சபையின் ஊழியக்காரர்களாக ஆகுவதற்குத் தகுதி பெறாதவர்கள் என்றும் கருதப்பட வேண்டும்.

## தேர்ந்தெடுத்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல்.

### கே : 247:2: :: கேள்வி (1913-Z) - 2

குறைந்த அளவு எண்ணிக்கையில் (bare majority) பெரும்பான்மை என்பது தேர்ந்தெடுத்தலின் விதியாக இருக்கமுடியுமா?

**பதில்:** சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்படவேண்டும் என்பதும் ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (VOTE) பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனக்கடுத்தக் காரியங்களும் மாத்திரம் தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதாக வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக் கொள்ளலாம். A,B,C,D,E,F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A- அவர்களுக்கு 100 வாக்குகளும், B- அவர்களுக்கு 90 வாக்குகளும், C- அவர்களுக்கு 80 வாக்குகளும், D- அவர்களுக்கு 70 வாக்குகளும், E- அவர்களுக்கு

60 வாக்குகளும், F- அவர்களுக்கு 50 வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலுள்ள வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறு பேரும் சபையார் பெற்றிருப்பதற்கான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில், மற்றும் அவர்களது நல்லொழுக்கக் குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் கொடுக்கப்பட்டுள்ளதான தகுதி நிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில், வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை /கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே அடைய வேண்டிய ஒரு பரிபூரணமான நிலையினை, “பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்” என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார். (மத்தேயு 5:48) தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? “நீதிமான் ஒருவனாகிலும் இல்லை” (ரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

## தேர்ந்தெடுத்தல் - பதிலாள் மூலம் வாக்கு.

### கே : 248:1: :: கேள்வி (1913) - 1

சபையிலுள்ள அர்ப்பணிக்கப்பட்ட சகோதரன் ஒருவர், மூப்பர் தேர்ந்தெடுக்கப்படும் கூட்டம் ஒன்றில், நோயுற்றிருப்பதன் காரணமாகக் கலந்துகொள்ள முடியாதபோது, மூப்பர் ஊழியத்திற்காக, தான் தேர்ந்தெடுப்பவரைக் குறித்து அச்சபைக்கு எழுதிக்கொடுத்திடலாமா? அல்லது பதிலாள் வாயிலாக வாக்குக் செலுத்திடலாமா?

**பதில்:** ஒருவன் இதைச் செய்யலாம் என்று கூறும் எதுவும் வேதாகமத்தில் இல்லை மற்றும் ஒருவன் இதைச் செய்ய இயலாது என்று கூறும் எதுவும் வேதாகமத்தில் இல்லை. நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? அதைச் சபையாரிடம் விட்டுவிடுங்கள். சபையார் முடிவெடுக்கட்டும்.

## தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுத்தலுக்கான சதவீதம்.

### கே : 249:1: :: கேள்வி (1913) - 1

சபையின் தேர்ந்தெடுத்தல் விஷயத்தில், தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றதற்கான வாக்குச் சதவீதத்தில், சபையாரால் பின்பற்றப்படும் அந்த விதிகளானது, உதவிக்காரராக முன்மொழியப்பட்டிருக்கின்ற சகோதரனுடைய வாக்குகள் விஷயத்திலும் பொருந்துமென நாம் புரிந்துகொள்ள வேண்டுமா?

**பதில்:** நிச்சயமாக, சபையின் காரியங்களை நிர்வகிப்பது தொடர்புடையதான வேதாகம ஏற்பாடானது, அனைத்துப் பொறுப்பினையும் சபையார் மீதே வைக்கின்றது. நான் பொதுவான அர்த்தத்திலுள்ள சபையாரைக் குறிப்பிடவில்லை. மாறாக சபையை, கிறிஸ்துவின் சரீரமாகிய கூட்டத்தாரை, அதாவது அர்ப்பணிக்கப்பட்டவர்களைக் குறிப்பிடுகின்றேன். ஒவ்வொரு காரியத்தினையும் நிர்வகிக்கும் திட்டவட்டமான விதிகளைக் கர்த்தர் கொடுக்காததால், கர்த்தருடைய திருவசனத்தைக் கொண்டும் மற்றும் வேதவாக்கியங்களிலுள்ள மாதிரிகள் மற்றும் உதாரணங்களையும் கொண்டும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்படும்படி நாடிடுவதற்கான பொறுப்பு ஒட்டுமொத்த சபையின் மீது விடப்பட்டுள்ளது. ஒருவேளை கர்த்தர் காரியத்தினை மிக எளிமையாயும் மற்றும் தெளிவாயும், அவரது ஜனங்களுடைய கைகளில் விட்டிருப்பாரானால், அதை ஏதோ ஒரு தனிப்பட்ட நபரின் அல்லது குருமார் வகுப்பாரின் கைகளுக்குத் திசைமாற்றிட நீங்களோ அல்லது நானோ முற்படுவது என்பது முற்றிலும் தவறான காரியமாய் இருக்கும். இதற்கு வேதாகமத்தில் எந்த அதிகாரமும் இல்லை. நிர்வாகங்கள் தவறிடுவது போல, ஜனங்களும் தவறிடுவது சாதாரண காரியமாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு, சில தீவுகளில் காணப்படும் ஜனங்கள் தாங்களாகவே நிர்வகித்துக்கொள்வதற்குப் பதிலாக, சில நிர்வாகங்களானது தங்களால் அத்தீவுகளை நன்கு நிர்வகிக்க முடியும் என்று எண்ணுகின்றனர். ஆகையால் ஒருவேளை ஜனங்கள், அதற்கு அடிபணிந்திடுவார்களானால், குருமார் என்று அழைக்கப்படுகின்றதான ஒரு குறிப்பிட்ட வகுப்பார், தங்களுக்கென அதிகாரத்தினை தகாத விதத்தில் உரிமைகொண்டாடி, சட்டங்களையும், விதிகளையும் இயற்றிவிடுகின்றனர். ஆனால் இதற்கான எளிமையான காரணம் - சபையார் தங்கள் கைகளில் கர்த்தர் அதிகாரத்தைக் கொடுத்துள்ளார் என்பதையும், ஒருபோதும் எந்த ஒரு குருமார் வகுப்பாரை அவர் அங்கீகரித்ததில்லை என்பதையும் அறியாமல் இருப்பதேயாகும். கர்த்தர் தாமே போதகராய் இருப்பார் - நீங்கள் அனைவரும் சகோதரராய் இருக்கின்றீர்கள். கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒரு கூட்டத்தாரெனச் சபையாரால் அடையாளம் கண்டுகொள்ளப்படும் வேற்றுமை தவிர, மற்றபடி சகோதரர்கள் மத்தியில் எந்த வேற்றுமையும் காணப்படக்கூடாது மற்றும் சில குறிப்பிட்ட நபர்களை மூப்பர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்களெனில், பொறுப்பு சபையாரிடத்திலேயே இருக்கும். சபையாரிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், மிகுந்த பகுத்துணர்தலையும் மற்றும் விவேகத்தினையும் பயன்படுத்திட வேண்டும் மற்றும் இவ்விஷயத்தில் தாங்கள் கர்த்தருக்காக வாக்களிப்பதாகவும், செயல்படுவதாகவும் நினைவில்கொள்ள வேண்டும். சபையார் தங்களது வழிநடத்துபவர்கள் முதலானவைகள் தொடர்பாக எடுக்கும் தீர்மானம், அக்காரியத்தில் இறுதி தீர்மானமாக இருக்கும் என்பதினால் சபையில் ஒழுங்குமுறைக்குரிய சரியான முறைமை தொடர்பாக, வேதவாக்கியங்களினால் முன்வைக்கப்படுபவைகளை ஆறாம் தொகுதியில் - பிரமாணமாக இல்லாமல், யோசனைகளாகச் சுட்டிக்காட்டுவதற்கு நாங்கள் முயற்சித்துள்ளோம். சதவீதங்கள் குறித்து எதுவும் வேதவாக்கியங்களில் கூறப்படவில்லை; எனினும் உலக ஜனங்களுடைய ஒரு சாதாரணமான கூட்டத்தில், உதாரணத்திற்கு ஒரு விஷயத்திற்கென வாக்கெடுக்கப்படுகிறதெனில், ஓர் எண்ணிக்கையில் பெரும்பான்மையாய் இருப்பவர்கள், காரியத்தைத் தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள்.; 100 பேர்கள் கொண்ட சபையார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இதில் 51-பேர்கள் தீர்மானிப்பவர்களாய் இருப்பார்களானால், மற்ற 49-பேர்களும் பிரதிநிதி என்று யாரும் இல்லாமல் விடப்படுவார்கள்; இது கர்த்தருடைய ஆவியல்ல என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. முழுச்சபையுமே நலனுக்கடுத்த விருப்பங்களில் ஏகத்துவத்தினை/ஒற்றுமையினை உணர்வதே கர்த்தருடைய ஆவியாய் இருக்கின்றது. ஆனால் ஒருவேளை பெரும்பான்மையினராய்க் காணப்படும் 51-பேர்களும் பின்வருமாறு: "ஆம், இது எங்கள் விருப்பம்; இந்தச் சகோதரனை மூப்பராய்ப் பார்த்திடுவதற்கு நாங்கள் விரும்புகின்றோம்; இவர் நன்கு தகுதியுடையவராகக் காணப்படுகின்றார் என்று நாங்கள் எண்ணுகின்றோம்; மேலும் எங்கள் சகோதரரிலுள்ள 49-பேர்களின் விருப்பங்கள் என்னவாக இருப்பினும், அதற்கு நாங்கள் கவனம் கொடுக்கமாட்டோம்" என்று கூறுவார்களானால், இது அன்பின் ஆவியாய்க் காணப்படாது. 51-பேர்களுக்கு மாத்திரமல்லாமல், சிறுபான்மையினராகக் காணப்படும் 49- பேர்களுக்கும் பொருத்தமான பிரயாசம் எடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் யோசனை கூறுகின்றோம்; ஒவ்வொருவனும்

தனக்கு விருப்பமானதை மாத்திரம் செய்கிறவனாய் இராமல், மாறாக ஒருவர் இன்னொருவரின் உணர்வுகளை மதிக்கவும், ஒருவரையொருவர் மதிக்கவும், ஒருவரிலொருவர் அக்கறை கொள்ளவும் முயற்சித்திட வேண்டும். ஒருவேளை 100 பேர்கள் எண்ணிக்கையுள்ள சபையாரில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானது, உதவிக்காரர்களின் ஸ்தானத்திற்கு ஒருவரைத் தகுதியாக்கிடும் என்று தீர்மானிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம். சகோதரர்கள் A,B மற்றும் C என்பவர்கள், சகோதரர்கள் D,E மற்றும் F-ஐ விட நன்கு தகுதியானவர்கள் என்ற மிகவும் தெளிவான கருத்தினை, சபையாரில் ஒருவனாகிய நான் கொண்டிருக்கலாம் மற்றும் அந்த மூவருக்கும் வாக்கு அளிப்பதற்கு எனக்கு உரிமையும் காணப்படுகின்றது; பின்னர் ஒருவேளை யாரோ ஒருவர் சகோதரர்கள் D,E மற்றும் F-ஐ குறித்து நல்லெண்ணம் கொண்டுள்ளாரெனில், நானோ: “ஆம், அந்தச் சகோதரன் இந்த மற்றச் சகோதரர்களை விரும்புகின்றார்; இச்சகோதரர்களுக்கு எதிராக உண்மையில் ஏதாகிலும் எனக்குத் தெரியுமா? என்று எனக்குள்ளாகக் கேட்டிடுவேன். ஒருவேளை இவர்களுக்கு எதிராய் நான் எதையும் அறியேனாகில் மற்றும் மற்றச் சகோதரர்கள் இச்சகோதரர்களைப் பெற்றுக்கொள்வதை நான் காண விரும்பிடுவதற்கு நல்ல காரணமாய் அமைந்திடும். ஒருவேளை நான் மூப்பனாகப் போகிறேன் என்றால், mere majority/வெறும் பெரும்பான்மையினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பதைக் காட்டிலும், முழுச்சபையாரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பதே நலமாயிருக்கும். சபையார் யாவரும் தங்கள் மனங்களில் திருப்தியும், மன நிறைவும், மனரம்மியமும் அடைந்திட நான் விரும்பிடுவேன். நான் என்னை அவர்களுடைய இடங்களில் வைத்துப் பார்த்திட விரும்புகின்றேன். எனக்குச் சிறுபான்மையினர் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகின்றேனோ, அதையே நானும் சிறுபான்மையினருக்குச் செய்திட வேண்டுமெனப் பொன்னான பிரமாணமானது எதிர்பார்க்கின்றது. ஒருவேளை நான் சிறுபான்மையினரில் ஒருவராகக் காணப்பட்டு, அவர்கள் பெரும்பான்மையானவர்களாகக் காணப்பட்டிருந்திருப் பார்களானால், என்னைக் குறித்து அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளும்படிக்கு நான் எவ்வளவாய் விரும்பிடுவேன்! நான் கவனிக்கப்படும்படிக்கும்கூட விரும்பிடுவேன். அப்படியானால் நாம் மற்றவர்களைப் போன்று சமமாய்ப் பெருந்தன்மையுடன் காணப்பட வேண்டும். இது உண்மையில் முக்கியமாயுள்ள ஏதாகிலும் காரியத்தைக் குறித்து நாம் கவனம் குறைவாகவோ அல்லது அக்கறையற்றோ காணப்படவேண்டும் என்று குறிப்பதாய் இராது. ஒருவேளை ஒருவர் மோசமான மனுஷனாகவோ அல்லது அர்ப்பணிக்கப்படாத மனுஷனாகவோ அல்லது ஏதேனும் விதத்தில் மூப்பனாகுவதற்கு முற்றிலுமாய்த் தகுதியற்றவராய் இருப்பாரெனில், அப்பொழுது நான் முகமுகமாய் எதிர்த்துநின்று, குறிப்பிட்ட காரணங்களினால் என்னால் இந்தச் சகோதரனுக்கு வாக்களிக்க முடியாது என்று கூறிடுவேன். காரணங்களைத் தெரிவிப்பதை என்னால் முடிந்தமட்டும் நான் தவிர்த்துக்கொள்வேன்; ஆனால் ஒருவேளை காரணங்களைத் தெரிவிப்பது அவசியமாகுமானால், அதை என்னால் முடிந்த மட்டிலுமான அன்பான விதத்தில் செய்திடுவேன். நான் எந்தச் சகோதரனைக் குறித்துமான அன்பற்ற வார்த்தையைக் கூறிடவோ அல்லது தீமை பேசவோ மாட்டேன் என்று சகோதர சகோதரிகள் அறிந்திருக்குமளவுக்கும் மற்றும் முழுமையான அவசியம் காரணமாகத்தான் ஒரு சகோதரனை எதிர்க்கும் கடமையினை - அதாவது தேவனுக்கான மற்றும் சபையிடத்திலுமுள்ள இப்படிப்பட்ட கடமையினை நான் செய்கின்றேன் என்று சகோதர சகோதரிகள் அறிந்திருக்குமளவுக்கும், அனைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலைமையினை நான் அடைந்திட முற்காலங்களில் பிரயாசம் எடுத்திடுவேன். நாம் ஒருவரிலொருவர் அந்த நம்பிக்கையினை அடைவோமானால், நாம் சொல்லுகிற எதற்கும், அனைத்து மதிப்பும், முக்கியத்துவமும் இருக்கும்.

## தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்களை நிறைவுசெய்தல்.

### கே : 250:1: :: கேள்வி (1913) - 1

ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சி வகுப்பினை நடத்தும்படிக்கு மூப்பர் ஒருவரை நியமித்தல் - தொடர்புடைய விஷயத்தில், ஒருவர் முன்மொழியப்பட்ட பிற்பாடு, இன்னும் முன்மொழியப்படுவதற்கு நேரம் கொடுக்காமல், முன்மொழிதலை நிறைவு செய்வது சரியான

காரியமாய் இருக்குமா? இது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சகோதரர்களால் மூப்பர்களாக ஊழியம் புரியப்படும் ஒரு சபைக்குப் பொருந்துமா?

**பதில்:** பாராளுமன்ற விதிகள் என்று அழைக்கப்படுகின்ற விதிகள் காணப்படுகின்றன. அதாவது பாராளுமன்ற அவை போன்ற குழுவினுடைய செயல்பாடுகளுக்குப் பொருந்தும் விதிகளாகும் மற்றும் இந்த விதிகளானது மகாசட்டசபைக் கூட்டங்கள் தொடர்பாகவும், சிறு கூட்டங்கள் மற்றும் பெரிய கூட்டங்கள் தொடர்பாகவும் கூடப் பயன்படுத்தப்படுகின்றது. இவைகள் மிகவும் நல்ல விதிகளாகவும், பொதுவாய் மறுப்புத் தெரிவிக்கப்படக் கூடாதவைகளாகவும் காணப்படுகின்றன. இவைகள் பொதுவாகவே நியாயத்திற்குரிய மிகவும் ஞானமான மற்றும் பரிவுள்ள விதிகளாகக் காணப்படுகின்றன. அதே வேளையில் தேர்ந்தெடுத்தலின் விஷயத்திலும் மற்றும் கூட்டங்களுக்கான விதிகளின் விஷயத்திலும், நீதிக்கும் அதிகமாய்க் கடந்துசென்று, அன்பிற்கேற்ப நிர்வகிக்க வேண்டியவர்களாகவும் மற்றும் அன்பே நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது என்று அறிய வேண்டியவர்களாகவும், இக்காரியங்கள் தொடர்பான நீதியான மற்றும் நியாயமானவைகளுக்கும் மேலாக செய்ய வேண்டியவர்களாகவும் கர்த்தருடைய ஜனங்கள் இருப்பதினால், அவர்கள் வேறுவகையான பொதுக்கூட்டங்களுக்குப் பொருந்தக்கூடிய பிரமாணத்தின் விஷயத்தில், பிரமாணத்தினுடைய எழுத்தினைக் கடைபிடிக்க வேண்டுமென ஒருவரையொருவர் மிகவும் கடுமையாய் வற்புறுத்துகிறவர்களாய்க் காணப்படக்கூடாது. அவர்களுடைய அன்பின் அனுதாப கட்டுகளானது, அவர்கள் அனைவரையும் பிரியப்படுத்துவதற்கு விரும்புமளவுக்குக் காணப்பட வேண்டும். ஒருவேளை இது ஒரு கூட்டம் என்று வைத்துக் கொள்வோம் மற்றும் இங்கு மூப்பர்கள் சிலரை நாம் தேர்ந்தெடுக்கப் போகின்றோம். இங்கு இருப்பவர்களில் சிலர் சகோதரர் “A”-க்கும், மற்றும் சில சகோதரர் “B”-க்கும் மற்றும் சில சகோதரர் “C”-க்கும் மற்றும் சிலர் சகோதரர் “D”-க்கும் மிகுந்த மதிப்பு வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நான் அறிவேன் என்று வைத்துக்கொள்வோம்; மற்றும் இவர்களில் சகோதரர் “A” மற்றும் “C” எனது விருப்பத்தின்படியானவர்களாய் இருக்கின்றனர்; சகோதரர்கள் “B” மற்றும் “D” குறித்து நான் அவ்வளவுக்கு எண்ணுகிறதில்லை. சகோதரர் “A” மற்றும் “C”-ஐ நான் முன்மொழிந்து, முன்மொழிதலை நிறைவு பண்ணிடுவேன் என்று நான் சொல்லிடலாம். இதனால் மிகவும் துணிவற்றவர்கள் வாய்ப்பில்லாதவர்களாய்ப் போவார்கள். இது அன்பானதாய் இருக்குமா? இல்லை. அன்பே நம்முடைய விதியாய் இருக்கின்றது மற்றும் அன்பானது உலகத்திலுள்ள பாராளுமன்ற விதிகள் அனைத்திற்கும் முன்னதாகக் கடந்துவந்து செயல்படுகின்றது. அன்பானது - இதோ அங்குக் காணப்படும் சகோதரனுக்கும், இதோ அங்குக் காணப்படும் சகோதரிக்கும் மற்றும் அனைத்துச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் நல்ல மற்றும் நியாயமான/பாரபட்சமற்ற வாய்ப்புக் கிடைக்கவேண்டும் மற்றும் இவ்விஷயத்தில் அவர்களது கருத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்று கூறிடும். கர்த்தருடைய ஏற்பாட்டின் கீழ் அவர்களுக்கு உரியதான உரிமைகளை நான் அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ள விரும்புகிறதில்லை. ஒருவேளை நான் நுணுக்கமாக ஆராய்பவராகவும், மிகவும் அனுபவமுடையவராகவும் காணப்பட்டு, எனக்குத் தகுந்தாற்போல் அனைத்தையும் மாற்றமுடிபவராகக் காணப்படலாம்; ஆனால் இளைய சகோதரர்களை மனதில் குழப்பி, அவர்களது சித்தங்களைச் செய்ய விடாமல் ஆக்கிடுவதும், அவர்களை ஏதோ ஒன்றிற்கு வாக்களிக்கப்பண்ணுவதும் மற்றும் இப்படிச் செய்ததை அவர்கள் அறியாமலிருந்து, ஆனால் பிற்பாடு அதிருப்தியடைந்து, “\அக்காரியத்தினை நான் சரியாய்ப் புரிந்திருப்பேனாகில், நான் வேறு மாதிரி செயல்பட்டிருப்பேனே” என்று கூறிடுவதற்கு ஏதுவான நிலையில் இளைய சகோதரர்களை ஆளாக்குவதும், ஒரு மூத்த சகோதரனான எனக்குத் தகுதியாய் இராது. இது திருப்திகரமான கூட்டமேயல்ல. ஒரு சபையார் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கெனக் கொண்டிருக்கும் கூட்டமானது, எல்லாருடைய உரிமைகளும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றும் முடிவுகளில் அனைவருமே மகிழ்ச்சியும், திருப்தியும் உணரத்தக்கதாய் மிகவும் வெளிப்படையாயும் மற்றும் நியாயமாயும் நடைபெறும் ஒரு கூட்டமாகக் காணப்பட வேண்டும். நம் அனைவருக்குமே நம்முடைய வாய்ப்புகள் கிடைத்தது மற்றும் நான் விரும்பத்தக்க விதம் என்று எண்ணின விதத்தில் ஒருவேளை நடைபெறவில்லை என்றாலும், அது நல்லதொரு

விதத்தில் செய்யப்பட்டுள்ளது என்று எண்ணிடுவேன்; ஏனெனில் எல்லாருக்கும் நியாயமான பங்கு கிடைத்தது - அது ஒருவரையொருவர் கிழித்தெறிவதற்கான பிரயாசமாக இருக்கவில்லை. நாம் ஒருவரையொருவர் கிழித்தெறியக் கூடாது. ஒருவேளை ஒருவரை நீங்கள் அறிந்திருக்கவில்லையெனில் மற்றும் நீங்கள் அறிந்திருக்கும் எவராலும் அவருக்குச் சான்று பகிரப்படவில்லையெனில், அவருக்கு வாக்குச் செலுத்திடாமல் இருந்துவிடுங்கள். ஒருவேளை நீங்கள் மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருக்கும் யாரோ ஒருவர் அங்கிருந்து, இச்சகோதரனுக்குச் சான்று பகர்ந்து, நான் அச்சகோதரரை முன்மொழிகின்றேன் என்று கூறுவாரானால், பின்னர் நீங்களோ: "சகோதரர் ரசல் அவர்கள் சகோதரர் "W" அவர்களை முன்மொழிந்துள்ள காரியமானது, அவர் இவரைக்குறித்து அறிந்திருக்கின்றார், இல்லையேல் அவர் இவரை முன்மொழிந்திருக்க மாட்டார். எனக்குச் சகோதரர் "W" அவர்கள் பரிட்சயமானவரல்ல, ஆனாலும் சகோதரர் ரசல் அவர்கள் இவரை முன்மொழிந்தும் மற்றும் சகோதரர் ஹிரிஷ் அவர்கள் வழிமொழிந்தும் இருக்கின்றனர் மற்றும் அவர்கள் இருவரையும் குறித்து நான் அறிந்திருப்பதினால், சகோதரர் "W" அவர்கள் சரியானவர் என்று அறிந்துகொள்வேன்" என்று எண்ணிட வேண்டும். பிறர் வழியான கூற்றினால் (indirect) பெறப்படும் அறிவின் மீது சார்ந்திருக்கும் ஓர் உரிமையினை நாம் பெற்றிருக்கின்றோம். சகோதரர் "W"-ஐ நமக்கு நன்கு பரிட்சயமில்லை மற்றும் அவருக்கு வாக்களிக்க அவரது காரியங்கள் அனைத்தும் போதுமாய் நமக்குத் தெரியாது; அவருக்கு வாக்களிப்பதற்கு ஏதுவாகச் சுட்டிக்காட்டுவதற்கு ஏதாகிலும் நமக்குக் காணப்பட வேண்டும். ஆனால் ஒருவேளை யாரேனும் அவருக்குச் சான்று பகருவார்களானால், அது வங்கியில் நடைபெறுவது போன்றே காணப்படும்; அதாவது நீங்கள் வங்கிக்குச் செல்கின்றீரகள் மற்றும் உங்களது பெயர் ஸ்மித் என்று வைத்துக்கொள்ளலாம்.

வங்கியில்: "திரு. ஸ்மித் அவர்களே, இந்த வங்கியில் எங்களுக்கு உங்களைத் தெரியாது; மற்றும் நாங்கள் உங்கள் தரப்பினர்களை அறிந்து கொள்ளாதது வரையிலும் எங்களால் உங்களுக்கு எந்தத் தொகைகளையும் செலுத்திட முடியாது. உங்களுக்கு திரு.ஹிரிஷ் அவர்களைத் தெரியுமா? என்று கேட்கப்படுகின்றது.

நீங்களோ: "ஆம், அவர் எனக்கு உறுதிச் சீட்டு அளிப்பார்" என்று சொல்கின்றீர்கள்.

வங்கியோ: "திரு.ஹிரிஷ் அவர்களே, நீங்கள் திரு.ஸ்மித் அவர்களுக்கு உறுதிச் சீட்டு அளிக்கின்றீர்களா? என்று கேட்கின்றது.

திரு.ஹிரிஷ் அவர்கள்: "ஓ! ஆம், இது திரு.ஸ்மித் ஆவார். அவருக்கு நான் உறுதிச் சீட்டு அளிக்கின்றேன்; அவருக்கு உத்தரவாதம் அளிக்கின்றேன்" என்று சொல்கின்றார்.

பின்னர் வங்கியானது: "சரி, திரு.ஸ்மித் அவர்களே, உங்களை திரு.ஹிரிஷ் அவர்கள் அறிவார் என்று கூறுகின்றார்; ஆகையால் நாமும் அறிமுகமாகிக் கொள்கிறோம்" என்று கூறிடும்.

இப்படியே சபையாரிலும்கூடக் காணப்படுகின்றது. யாரோ ஒருவர் சகோதரர் ஸ்மித் அவர்களுக்குச் சான்று பகரப்போகிறவர்களையும் அறிவேன் என்பீர்கள். நீங்கள் அறியாத ஒருவரை நீங்கள் ஒருபோதும் முன்மொழியக்கூடாது. யாரோ ஒருவர் ஸ்மித் என்று கூறினதற்காக மாத்திரம் நீங்கள் அவரை ஒருபோதும் முன்மொழியக்கூடாது. யாரோ ஒருவர் சொல்லிவிட்டார் என்பதற்காக விவேகமற்று, ஸ்மித்தையோ அல்லது பிரவுண் அவர்களையோ கூறிவிடாதீர்கள். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்று அறிந்து செயல்படுங்கள் அல்லது அதைச் செய்யாதீர்கள்.

இன்னொரு காரியம்: மூப்பர்களுக்கான இத்தகைய தேர்ந்தெடுத்தலை நாம் பெற்றிருக்கும்போது, நான் பின்வருமாறு: "எனக்குச் சகோதரர் "A" அவர்களையும், சகோதரர் "C" அவர்களையும் பிடிக்கும் மற்றும் என்னைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு சகோதரர்களே மற்றச் சகோதரரைக் காட்டிலும் மிகவும் சிறப்பானவர்களாகத் தெரிகின்றனர் மற்றும் சகோதரர்கள் "A" மற்றும் "C" மூப்பர்களாக இருந்தால் தான் மற்றும் சகோதரர்கள் "B" மற்றும் "D" மூப்பர்களாக இல்லாமலும் இருந்தால் தான், சபையாருக்கு நன்கு ஊழியம் புரியப்படலாம் என்று

நான் எண்ணுகின்றேன்" என்று வைத்துக்கொள்வோம். இதை நான் திணிக்க முற்பட்டு, முகஸ்துதி செய்து பணிய வைத்திடலாம் மற்றும் நயமாய்ப் பேசி அவர்களது வாக்கினைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இப்படிச் செய்வது சரியாய் இருக்காது. மாறாக நான் பின்வருமாறு: "அநேகர் சகோதரர் "B" அவர்களையும் மற்றும் வேறு சிலர் சகோதரர் "D" அவர்களையும் மிகவும் விரும்புகின்றனர் என்று நான் நன்கு அறிவேன். இவர்கள் இருவருக்குமே, சகோதரர்கள் "A" மற்றும் "C" போன்று நல்ல தகுதிகள் காணப்படுவதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் சிலர் இவர்களை விரும்புகின்றனர் மற்றும் தங்களுக்கு இவர்களால் பிரயோஜனம் உண்டாகும் என்று கூறுகின்றனர் மற்றும் அவர்களது குணங்களுக்கு எதிராய்ச் சொல்லிடுவதற்கு நான் எதையும் அறியேன் மற்றும் மற்றவர்கள் அவர்களுடைய ஊழியத்தினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்பவர்களாக இருப்பதினால், அவர்களும் ஊழியம் புரிவதில் நான் மகிழ்ச்சிக் கொள்ள வேண்டும்" என்று எண்ணிட வேண்டும். அவர்கள் நல்ல குணலட்சணமுடைய மனிதர்கள் என்று அறிந்து, அவர்களில் யாருக்கேனும் மற்றும் அனைவருக்குமே முன்மொழிவதில் நான் பிரியம் கொள்வேன். இது அவர்கள் சிறந்தவர்கள் என்று நான் எண்ணுவதாகாது, மாறாக நான் விரும்புகிறவர்களையே நான் முன்மொழிந்திடுவேன் மற்றும் ஒருவேளை மற்றவர்களும் முன்மொழியப்பட்டிருக்க மற்றும் வழிமொழிய ஆள் இல்லாமல் இருந்தால், "நான் சகோதரர்கள் "B" மற்றும் "D" அவர்களை வழிமொழிகிறேன்" என்று கூறிடுவேன். ஏன்? அவர்கள் நீங்கள் விரும்பினவர்கள் இல்லையே என்று நீங்கள் என்னிடம் கேள்விக் கேட்கலாம். இல்லைதான், ஆனாலும் அவர்களை மற்றச் சில சகோதரர்கள் விரும்புகின்றனர் என்று நான் அறிவேன் மற்றும் சபையார் யாவரும் ஊழியம்புரியப்பட நான் விரும்புகின்றேன். நான் சிறந்தவர்கள் என்று எண்ணியவர்களை மாத்திரம் பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை, மாறாக மற்றவர்களாலும் சிறந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்; நான் திருப்திக்கொள்வது மாத்திரமல்லாமல், சகோதரர்கள் யாவரும் திருப்தியடைய விரும்பும் அளவுக்குப் போதுமான அன்புடையவனாக நான் இருக்க வேண்டும். இந்த ஆவியே ஒவ்வொரு சபையாரிடத்திலும், ஒவ்வொரு தேர்ந்தெடுத்தலிலும் காணப்பட வேண்டும் மற்றும் அங்குக் குழப்பம் குறைவாகவே காணப்படும் என்று நான் கருதுகிறேன்.

ஒருவேளை வேறு யாரையாகிலும் பெற்றுக்கொள்வதற்குப் பிரியப்படுகின்ற சிலர் காணப்படுகின்றனர் என்று வைத்துக்கொள்வோம். முற்றிலுமாகப் பொருத்தமற்றவர்கள் என்று நான் கருதிடும் சிலர் முன்மொழியப்பட்டிருக்கின்றனர் என்று வைத்துக் கொள்ளலாம்; அவருக்காய் யாராகிலும் வாக்களித்து விடுவார்கள் என்று நான் அச்சமடைவேன். நானோ: "அருமையான நண்பர்களே, சகோதரர் "W" அவர்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றார். அவருக்கு எதிராய் ஒரு வார்த்தைச் சொல்லிடுவதற்கோ அல்லது அவரைச் சத்துரு போன்று காண்பித்திடுவதற்கோ நான் விரும்பவில்லை; எனினும் என்னுடைய கணிப்பின்படி, அவரை நாம் மூப்பர்களில் ஒருவராகப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதே சிறந்தது என்று நான் எண்ணினேன். ஆகையால் தேர்வு செய்வது குறித்த காரியங்கள் நடந்து கொண்டிருக்கையில், நான் அவருக்கு வாக்களிப்பதில்லை என்று தெரியப்படுத்துகின்றேன். சகோதரர் "W" அவர்களே நீங்கள் மூப்பராக ஊழியம் புரியாமலிருப்பது நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகிறதினாலேயே நான் உங்களை எதிர்க்க வேண்டியிருக்கிறதேயொழிய, மற்றபடி நான் எந்த விதத்திலும் உங்களை எதிர்க்கவில்லை" என்பேன். நான் அவரிடத்தில் முழுமையாய் ஒளிவுமறைவின்றிக் காணப்படுவேன் மற்றும் அவருக்கு எதிராய் ஒரு வார்த்தைக்கூடச் சொல்லமாட்டேன் மற்றும் "அவர் பட்டணத்தில் அநேகம் கடன்பட்டிருக்கின்றார் என்பதினால் நான் அவரை எதிர்க்கிறேன் மற்றும் பட்டணம் எங்கும் இவர் கடன்பட்டிருக்கின்றார் என்பதை அறிவார்கள் மற்றும் அவரால் நம்முடைய சபைக்கு அவமானம் காணப்படுகின்றது" என்று சொல்லமாட்டேன். சகோதரர் "W" அவர்களைக் குறித்து நான் எதுவுமே பேசவேண்டியதில்லை. நானோ: "சகோதரர் "W" அவர்கள் மூப்பராகிடுவதற்கு என்னால் வாக்கு அளித்திட முடியாது மற்றும் அவரை மூப்பராகக் காண நான் விரும்பவில்லை; மற்றவர்களால் கர்த்தருடைய காரணங்களானது நன்கு ஊழியம்புரியப்படும் என்று நான் நம்புகின்றேன்" என்று மாத்திரம் கூறிடுவேன். நாம் ஒருவரையொருவர் துண்டுத்துண்டாகக் கிழித்துப்பொட அவசியமில்லை. சகோதரர் "W" அவர்கள் பட்டணத்தில் கடன்பட்டிருக்கின்றார் என்பது உண்மையாக இருக்கலாம்

அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஒருவேளை நாம் அவரிடத்தில் கேட்டால், அவர் சில நல்ல காரணங்களைக் கொடுக்க முடிபவராகக் காணப்படலாம்.

## தேர்ந்தெடுத்தல் - கூட்டங்களில் கலந்துகொள்ளாத மூப்பர்களின் தேர்ந்தெடுத்தல்..

### கே : 253:1: :: கேள்வி (1913) - 1

வாரநாட்களில் பிற்பகல் நடக்கும் கூட்டத்திலோ, அனைத்து மாலை கூட்டங்களிலோ மற்றும் பயண ஊழியர் சபைக்கு வரும்போதுகூட கலந்துகொள்ளாத மூப்பரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்/

**பதில்:** ஏதோ சில வேலையின் நிமித்தமாக மதிய கூட்டத்திற்கு அவரால் வரமுடியாமல் போயிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சகோதரன், அவர் பேசக்கூடிய கூட்டத்திற்கு மாத்திரம் வருவாரானால், அவர் அனைத்துக் கூட்டத்திற்கும் வரும்வரை, அவர் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்படவேண்டும் என்று நினைக்கிறேன். மற்றக் கூட்டத்திற்கு வராமல், தான் பேசக்கூடிய கூட்டத்திற்கு மாத்திரம் வருவது என்பது - அவர் மூப்பருக்குத் தகுதியானவர் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; இன்னுமாக மற்றவர்களால் போதிக்கப்படுவதற்கும், மற்றவர்களின் வார்த்தைகளைக் கேட்பதற்கும் விருப்பம் தெரிவிக்காமல், தான் மாத்திரமே பேச வேண்டும் என்றும், சபையிலுள்ள யாவரையும் காட்டிலும் தான் மேன்மையாக இருப்பவர் என்றும் அவர் எண்ணுவதைச் சுட்டிக்காட்டுவதாக நான் நினைக்கிறேன். "நாம் அனைவரும் சகோதரர்கள்". ஒருவர் "நான் சகோதரர்களில் ஒருவரல்ல" என்றும், "தனக்குப் பேசும் வாய்ப்பு இருக்கும்போது மாத்திரமே சபைக்கு வரவேண்டும்" என்று நினைக்கின்ற ஒரு சகோதரனுக்காக நான் அஞ்சுகிறேன். அவருடைய நன்மைக்காக அவரைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பது நல்லது என்று நான் கருகிறேன். அந்தச் சகோதரனை இராஜ்யத்திற்குத் தகுதியற்றவராக மாற்றக்கூடிய வேலையை நாம் செய்ய வேண்டாம். நாம் அந்தச் சகோதரனையும், அவருடைய நலனையும், சபை மற்றும் அதன் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## தேர்ந்தெடுத்தல் - குழப்பத்திலிருக்கும்போது வாக்களிக்காமல் இருப்பது தவறா?

### கே : 253:2: :: கேள்வி (1914) - 2

சபையின் காரியங்களினிமித்தமாக வருத்தத்திலும், குழப்பமடைந்த நிலையிலும் காணப்பட்ட ஒரு சகோதரி, தேர்ந்தெடுத்தல், கூட்டத்தில் கலந்துகொண்டும் வாக்களிப்பதில் பங்குகொள்ளவில்லை. அச்சகோதரி வாக்குகள் ஒருவேளை செலுத்தியிருந்தால், யாருக்குச் செலுத்தியிருப்பார்களோ, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் விட்டார்கள். இந்தச் சகோதரி வாக்குச் செலுத்தாதது தவறா? இது பாவமா?

**பதில்:** அச்சகோதரி தனது சிறந்த பகுத்தறிதலின்படி இதைச் செய்திருக்கிறாள் என்று நான் அனுமானிக்கிறேன். ஆகையால் இது பாவமல்ல என்று நாம் அறிவோம். உங்கள் மனசாட்சி உங்களை வழித்தவற செய்யக்கூடியதாய் ஒருவேளை இருந்தாலும்கூட, உங்களுடைய மனசாட்சியின்படி நடப்பதினால் ஒருபோதும் நீங்கள் குற்றவாளிகளல்ல. எத்தகைய பிரச்சனைகள் வந்தாலும், உங்கள் மனசாட்சியின்படி நீங்கள் செய்தால், நீங்கள் சரியானவைகளைச் செய்பவர்களாகவே இருப்பீர்கள். ஆகவே, தான் அறிந்துகொண்டதற்கு ஏற்ப, தன்னால் முடிந்ததைச் செய்யும் ஒருவனை அல்லது ஒருத்தியைத் தேவன் பாவஞ் செய்ததற்கான பொறுப்பாளியாகக் கருதுவதில்லை. இதை இப்படியாகக் கருதி விட்டுவிடுங்கள்.

## தேர்ந்தெடுத்தல் - சபைக்கான தகுதியான ஊழியர்கள்.

### கே : 253:3: :: கேள்வி (1915) - 3

உயர்வான சமுதாய அந்தஸ்துடைய மனுஷன் ஒருவர் சத்தியத்தின் மீது ஆர்வம் அடைந்தவரானார். ஆனால் அவர் அர்ப்பணம் பண்ணிடவில்லை. போதிய வசதி வாய்ப்புள்ளவர்களும் மற்றும் இப்போது சத்தியத்தில் இல்லாதவர்களுமான ஒரு சகோதரி மற்றும் அவளது கணவனின் செல்வாக்கினால் இம்மனுஷன் எங்களது சபையின் வழிநடத்துனனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வேறொரு சகோதரன் அவ்வளவுக்கு அறிவுடையவராக இராதபடியினால், அவரைச் சபையார் தேர்ந்தெடுக்கவில்லை. எங்கள் சபையில் இதன் தாக்கமானது அடிக்கடி உணரப்படுகின்றது மற்றும் எங்கள் சபையின் ஒழுங்கானது, வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியினுடைய காரியங்கள்படியாக இல்லை. இதற்கு உங்களது ஆலோசனை என்ன?

**பதில்:** அன்பார்ந்த நண்பர்களே, ஆறாம் தொகுதியானது, வேதாகமத்திற்கு முழு இசைவாகவே உள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். அது வேதாகமத்திற்கு இசைவாய்க் காணப்படுகின்றது என்று நீங்கள் நம்புகிறீர்கள் என்றால், வேதவசனத்தின் அடிப்படையிலான அந்த யோசனைகளை நடைமுறைப்படுத்துவது உங்களது கடமையாக இருக்கும். கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணித்துள்ளதாகத் தன்னைக் குறித்து அறிக்கைப் பண்ணிக் கொள்ளாத ஒரு நபரைப் போதிக்கும் பொறுப்புடைய எந்த ஓர் ஊழியத்திற்கும், மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ தேர்ந்தெடுப்பது என்பது சரியான ஒழுங்காய் நிச்சயமாக இருக்காது என்பது என்னுடைய கணிப்பாய் இருக்கின்றது. அவர் கிறிஸ்துவினுடைய சபையின் அங்கத்தினனே அல்ல; ஆகையால் அவரால் சபையில் எந்த மேற்பார்வை ஊழியத்தினையும் செய்திட முடியாது மற்றும் அவரை இத்தகைய ஊழியத்தில் வைப்பது என்பது வசனத்தினுடைய ஆவிக்கு முரணான காரியமாய் இருக்கும் மற்றும் சபையாரும் இப்படிச் செய்வது தவறாகும். அடுத்த தேர்ந்தெடுத்தலின்போது சபையார் என்ன செய்திட வேண்டும்? அவர்கள் இம்மனுஷனுக்கு வாக்குக் (vote)) கொடுத்திடக்கூடாது.

யாரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியாது; ஆனால் ஒருவேளை அது நானாக இருந்தாலும் சரி, எனக்கும் இப்படியேச் செய்யப்படவேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், நான் எவ்வளவு தான் செல்வாக்குடையவனாக இருப்பினும், சபையார் என்னைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று நான் எண்ணிடுவேன். இவ்விஷயமானது வேறொரு மூப்பனைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏதுவாய் சபையாருக்குக் கருத்து வேறுபாட்டினை உண்டாக்குகிறதென வைத்துக்கொள்ளுங்கள். அப்படியென்றால் இவ்விஷயம் சபையாரை கருத்து வேறுபாட்டிற்குள்ளாக்கட்டும். சபையானது கருத்து வேறுபாட்டிற்குள்ளாவதைக் குறித்து நாம் அக்கறையற்று இருக்க வேண்டுமென்றும், மற்றவர்களுடைய உணர்வுகளைக் குறித்து நாம் அக்கறையற்று இருக்கவேண்டுமென்றும் நான் சொல்லவில்லை; மாறாக காரியம் முழுமையாகச் சபையாருக்கு முன்வைக்கப்பட்ட பிற்பாடு, சரியான வழிமுறையைக் காண்பவர்கள், தேவனுடைய பிள்ளை என்று தன்னைக் குறித்து அறிக்கைப்பண்ணுகின்ற ஒருவரைத்தவிர, வேறு எவரும் எந்த ஊழியமும் செய்திடக்கூடாது என்றும், முழுமையாய் அர்ப்பணம் பண்ணாதவர்கள் தவிர மற்றபடி யாரும் வாக்களிக்கக்கூடாது என்றுமுள்ள உண்மைக்காக நின்றிட வேண்டும். ஒருவேளை இக்கருத்தானது சபையாருடைய கருத்தாகக் கொண்டுவரப்பட முடியவில்லை, உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்கள் பின்வாங்கிட வேண்டும் மற்றும் வேதாகம ஏற்பாட்டின்படி, அவர்கள் ஒரு மகத்தான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நான் எண்ணுகின்றேன்.

## தேர்ந்தெடுத்தல் - வாக்குறுதி (VOW) தொடர்பாக.

### கே : 254:1: :: கேள்வி (1915 - Z) - 1

நம்மில் அநேகர் மிகவும் உதவிகரமாக உள்ளது என்று கண்டுகொண்டுள்ளதும் மற்றும் அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட்டதுமான விசேஷித்த வாக்குறுதியை (VOW) எடுத்துக் கொள்ளாதவர்கள் சபைக்கான ஊழியக்காரராகத் தேர்ந்தெடுக்கப்படலாமா?

**பதில்:** கர்த்தர் தாமே விசேஷமாய் அதை இந்தக் காலக்கட்டத்தில் கொண்டு வந்துள்ளார் என்றும், அது ஓரளவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் பரீட்சையாக விளங்கும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார் என்றும் நாம் நம்பினாலும், வாக்குறுதியைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் ஆக்கிவிட முடியாது; அதைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக்குவதற்கு வேதமும் நமக்கு அதிகாரம் வழங்கிடவில்லை. மூப்பர்களுக்கான தகுதிகளின் மத்தியில் குறிப்பிடப்படவில்லை என்கிற போதிலும், முன்மொழியப்படும் சகோதரனுடைய விநோதமான பாணிகள் அல்லது சரியற்ற ஆங்கில மொழிப்பேச்சானது கவனிக்கப்படப் பாத்திரமானவைகளாய் இருப்பதுபோன்று, வாக்குறுதியும் தெய்வீகக் கட்டளையின் காரியமாய் இராமல், மாறாக பகுத்துணரும் காரியமாய்க் காணப்படுகின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள அன்புக்குரிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவருமே - வாக்குறுதி நியாயமான ஒன்று என்றும், அது தெய்வீக வார்த்தைகளுடனும், நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியுடனும் இசைவாய் இருப்பதையும் மற்றும் இவைகளை நிறைவுபடுத்தும் இளநீல தொங்கல்களாக அது இருக்கின்றது என்றுமுள்ள ஒருமிக்கக் கருத்தில் பார்க்கின்றார்கள் என்று நாம் அறிவோமானால், இதினிமித்தம் நாம் பெரிதும் களிகூருவோம். அந்த வாக்குறுதிக்குக் கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி என்ன மறுப்புத் தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவர்களின் மறுப்பானது, அவர்களின் இருதயத்தினுடைய நோக்கங்களில் ஏதேனும் தவறு காணப்படக்கூடும் அல்லது அவர்களது புரிந்துகொள்ளுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டுகின்றது என்று நம்மில் சிலருக்குத் தோன்றலாம். எனினும் மிகவும் நன்றாய் நியாயம் தீர்ப்பதற்கு நாம் வல்லவர்களல்ல. “மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்” என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

வாக்குறுதியை எடுத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், அதுகுறித்த ஒருமித்தக் கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முன்னுரிமைக் கொடுக்கப்படலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. எனினும் ஒருவேளை சபையாரை வழிநடத்துவதற்குத் திறமிக்கவர்களாய் இருக்கும் சகோதரர்கள், மற்ற அனைத்து விதங்களிலும் ஏற்கத் தகுந்தவர்களாகவும், வாக்குறுதியினை எதிர்க்காதவர்களாகவும் இருப்பார்களானால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாகவே, தங்களால் முடிந்த மட்டும், வாக்குறுதி உள்ளடக்கியுள்ள காரியங்கள் அனைத்திற்கும் இசைவாக தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொண்டு, அந்த எளிமையான வாக்குறுதி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க, அந்த வாக்குறுதியை தாங்கள் எடுப்பது என்பது ஏதேனும் விதத்தில் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தினால், அதை எடுக்க மறுக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுபவர்களுக்கும் பொருந்தும். நம்மால் ஒருவேளை அவர்கள் இருதயங்களினுடைய எண்ணத்தினையோ, அவர்களது மனதின் விவாதங்களையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், எனினும் இம்மாதிரியான தருணங்களில் நம்மால் புரிந்து கொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாதவைகளை விட்டுவிடலாம்.

## தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுப்ப தற்குரிய விதிமுறைகள்.

### கே : 255:1: :: கேள்வி (1915-Z) - 1

மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுப்பதற்குரிய விதிமுறைகள் எவை.?

**பதில்:** சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும் தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துகொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (VOTE) பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில் 51-பேர்கள், சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மை யானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரம் தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதாக வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A,B,C,D,E,F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A- அவர்களுக்கு 100-வாக்குகளும், B- அவர்களுக்கு 90 வாக்குகளும், C- அவர்களுக்கு 80 வாக்குகளும், D- அவர்களுக்கு 70 வாக்குகளும், E- அவர்களுக்கு 60 வாக்குகளும், F- அவர்களுக்கு 50 வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும். ஆனால் ஒருவேளை அந்த ஆறு பேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்கக் குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் கொடுக்கப்பட்டுள்ளதான தகுதிநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும். ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/ கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால்

கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார். (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

முழுமையான அர்ப்பணம் பண்ணி, அதை தண்ணீர் முழுக்கு எனும் வழக்கமான அடையாளத்தின் மூலம் தெரிவித்துள்ளவர்கள் யாவரும் தவிர, மற்றபடி எவரும் வாக்களிக்கக்கூடாது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். இப்படியாகத் தங்களது அர்ப்பணத்தினை அடையாளத்தின் மூலமாகத் தெரிவித்திடாதவர்கள், சகோதரர்கள் அல்ல என்று புறக்கணிக்கப்படக்கூடாது. மாறாக சபையாருக்கு ஊழியம் புரிவதற்கு யார் தகுதியுள்ளவர்களாகப் இருப்பார்கள் என்பதில் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆற்றலற்றவர்களாய் இருப்பதினால் மிகவும் வளர்ச்சியற்றவர்களாய் இருப்பவர்களெனக் கருதப்பட வேண்டும் மற்றும் இவர்கள் ஊழியக்காரர்களாகுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள்.

## தேர்ந்தெடுத்தல் - மற்றச் சபையார் மத்தியிலிருந்து மூப்பர்களைத் தேர்ந்தெடுத்தல்.

### கே : 256:1: :: கேள்வி (1916) - 1

மூப்பர்களுக்கான தகுதியுடையவர்கள் சபையில் போதுமான எண்ணிக்கையில் இருக்க, சபையாருடைய மேலான நன்மைக்காக மற்றச் சபையார்கள் மத்தியில் காணப்படும் சகோதரர்களிலிருந்து தங்களுக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமா?

**பதில்:** மூப்பர்களுக்கான தகுதியுடையவர்கள் சபையார் மத்தியில் போதுமான எண்ணிக்கையில் இருக்க, சபையார் வெளியிலிருந்து மற்ற மூப்பர்களைத் தேர்ந்தெடுக்க முற்படுவது என்பது ஞானமானதாய் இராது. இதைச் சொல்லாமலேயே புரிந்து கொள்ளலாம். ஆனால் சபையார் மத்தியில் போதுமானவர்கள் இருக்கின்றார்களா என்று தீர்மானிப்பவர்கள் யார்? சபையாரே தங்களுக்காக அதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சபையார் மத்தியில் தங்களுக்குப் போதுமானவர்கள் இருக்கின்றார்களென யாரால் தெரிவித்திட முடியும்? சபையாரே அதைத் தீர்மானித்திட வேண்டுமேயொழிய, சகோதரர் ரசல் அவர்களோ அல்லது வேறொருவரோ அல்ல. ஒருவேளை தங்களிடத்தில் தகுதி வாய்ந்த மூப்பர்கள் இல்லையென்று சபையார் கருதுவார்களானால், அப்படி இருக்கும் பட்சத்தில் வெளியிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்வார்களாக. ஒருவேளை தகுதிவாய்ந்த மூப்பர்கள் அநேகரை அவர்கள் பெற்றிருப்பார் களாகில், தேவன் அருளியுள்ளவைகளை அவர்கள் பயன்படுத்தி கொள்வார்களாக மற்றும் வீட்டில் - சொந்த சபையில் இருக்கும் சகோதரரை ஊக்குவிப்பார்களாக.

## தேர்ந்தெடுத்தல் - சதவீதம் தொடர்பாக.

### கே : 256:2: :: கேள்வி (1916) - 2

ஒரு குறிப்பிட்ட வாட்ச் டவர் வெளியீட்டில் (அதன் தேதி எனக்கு ஞாபகமில்லை) ஐம்பது சதவீத (nominating vote) முன்மொழிதலின் வாக்கினையாகிலும் பெற்றிருக்கும் முன்மொழியப் பட்டவர்கள் யாவரும் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனும், ஒரு தேர்ந்தெடுத்தல் வழிமுறையினை நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். பிரச்சனைகளும், பிணக்குகளும் உள்ள ஒரு சபையில் இந்த வழிமுறையைக் கையாளுவது நலமாய் இருக்குமா? அல்லது மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் 75 சதவீத வாக்குகள் வேண்டுமென்று வலியுறுத்துவது நலமாய் இருக்குமா?

**பதில்:** என்ன செய்யப்படலாம் என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கிறதில்லை என்று முதலாவதாக நாம் நினைவில்கொள்ள வேண்டும். இப்படியிருப்பதினால் இதைச் செய்வதில் மிகவும் அனுகூலமிக்க வழிமுறையாக எது காணப்படும் என்று கண்டுபிடிப்பதில் பகுத்தறிவே காரியமாகும். எது சிறந்த வழி என்று கண்டுகொள்வதில் பகுத்தறிதலே காரியமாய் இருக்கின்றது. உங்களுடைய பகுத்தறிதலின் அளவிற்கு என்னுடைய பகுத்தறிதலானது நலமாய்க் காணப்படாமல் இருக்கலாம். இதுபோன்ற எந்த ஒருதலைப்பின் விஷயத்திலும் வாட்ச் டவர் வெளியீட்டில் எந்தவொரு ஆலோசனைகளையும் முன்வைக்கையில், அவைகள் என் அபிப்பிராயங்களாக மாத்திரமே இருக்கின்றன. சகோதரர் ரசல் கட்டளையிடுவதற்கோ அல்லது எவ்விதத்திலும் சர்வாதிகாரியாகக் காணப்படுவதற்கோ விரும்புகிறது இல்ல. வேதாகமம் எதுவும் பேசிடாத இம்மாதிரியான விஷயங்களில் அவர் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முயற்சித்திட மாத்திரமே செய்கின்றார். நான் அறிந்திருக்கிறதைவிடச் சபையார் சில சிறந்த வழியை அறிந்திருப்பார்களாகில் அதில் எனக்குத் திருப்தியே. தேவனுடைய சித்தமானது சபையாரினால் தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் சபையாருடைய சித்தத்தைத் தள்ளி விடுகிறவன் தவறு செய்கிறவனாகவும், கர்த்தருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக் கொள்ளாதவனுமாய் இருப்பான். விரும்பியதை அடையத்தக்கதாக இரகசியமாய்ச் சிலர் தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்துவதுக் குறித்தும், இப்படியாகத் தற்போதைக்குச் சபையாருடைய நலனுக்கடுத்தவைகள் குறுக்கிடப்படுகிறதைக் குறித்தும் மற்றும் இது நிச்சயமாய்ச் சரியற்றது என்பது குறித்தும் நான் அறிந்திருக்கின்றேன். கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளவைகளுக்கு மிஞ்சி செல்வதற்கு நாம் முயற்சித்திடக்கூடாது. இப்படியான எதிலும் கர்த்தர் பிரியப்படுகிறது இல்லை. நாம் கர்த்தருக்கும், சகோதரருக்கும் நேர்மையாகக் காணப்பட்டு, சகோதரர் அனைவரும் பின்வரும் சரியான எண்ணத்தினைப் பெற்றுக்கொள்ள உதவிட வேண்டும்; அதென்னவெனில், “நான் மூப்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதோ, அல்லது தெரிந்தெடுக்கப்படாமலிருப்பதோ என்னுடைய காரியமல்ல. சபையாருக்கு நலமாய்த் தோன்றுகிறதை அவர்கள் செய்யட்டும். ஒருவேளை அவர்கள் என்னைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்களானால், என்னால் முடிந்த மட்டும் அவர்களுக்கு நன்றாய் ஊழியம் புரிந்திடுவதற்கு நான் முயற்சித்திடுவேன்; ஆனால் ஒருவேளை அவர்கள் என்னைத் தேர்ந்தெடுக்காவிட்டாலும், எந்தவிதத்திலும் என்னால் முடிந்த மட்டும் அவர்களுக்கு நன்கு ஊழியம்புரிந்திட முயற்சித்திடுவேன்” என்பதேயாகும். ஒருவேளை நாம் இத்தகைய ஓர் ஆவியினைப் பெற்றிருப்போமானால், அதை நிச்சமாய்ச் சபையார் ஏற்றகாலத்தில் காண்பார்கள். கர்த்தர் அதை எப்போதுமே கண்ணோக்கிக் கொண்டிருக்கின்றார் மற்றும் தேவனிடத்தில் நீங்கள் சரியாயக் காணப்பட்டீர்கள் என்றால், மற்றவர்களிடத்தில் உங்களது நிலைப்பாடு எப்படிக் காணப்படுகின்றது என்பது ஒரு பொருட்டல்ல. ஒருவேளை நாம் 80 அல்லது 75 சதவீதத்தை அல்லது வேறு எதையாகிலும் வைத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் சொல்வீர்களானால், சதவீதம் தொடர்புடைய விஷயத்தில், அதை விதிக்குட்படுத்த எதுவுமில்லை - வேதாகமத்தில் எதுவுமில்லை. வாக்கு விஷயத்தில் 75 அல்லது 80 சதமானவர்களைப் பிரியப்படுத்துவதைக் காட்டிலும், உங்கள் மனசாட்சியினால் முடிந்த மட்டும் சபையாரிலுள்ள அனைத்து சகோதரர்களையும் பிரியப்படுத்துவதற்கும், அனைவருக்கும் திருப்திகரமாய் இருக்கும் ஓர் தேர்ந்தெடுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கும் விரும்புவது நலமாயிருக்கும் என்று நாங்கள் யோசனை கூறுவோம். சபையாரிலுள்ள ஒவ்வொருவருக்காகவும் அக்கறை கொள்ள வேண்டும் மற்றும் ஒவ்வொருவனும் சரி என்று, தான் கருதுபவைகளைச் செய்திடவும் வேண்டும். அனைவருமே முழுமையாய்த் திருப்தி அடையமாட்டார்கள் என்று அறிந்த நிலையில்,

சிறுபான்மையினரின் எண்ணங்களைப் பொருட்படுத்தாமல், பெரும்பான்மையினர் தங்கள் எண்ணங்களின்படி நடந்தேற்றுவது என்பது நிச்சயமாய்ச் சரியாய் இராது. ஒருவேளை ஒரு குறிப்பிட்ட சகோதரன் மூப்பராகிட வேண்டுமென்று நீங்கள் எண்ணுகின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் அச்சகோதரனிடத்தில் எக்குறையினையும் நான் காண்கிறது இல்லை என்று வைத்துக்கொள்ளலாம். நீங்கள் அவர் மூப்பராகிட வேண்டுமென்று விரும்புகின்றீர்கள் என்ற காரியமே, நான் அவருக்காக வாக்களிப்பதற்கு ஒரு காரணமாக அமைகின்றது; எனினும் அவரைத் தகுதியற்றவர் என்று கருதிடுவதற்கு ஏதுவாய் அவரது குணலட்சணம் குறித்து நான் எதையேனும் அறிந்திருப்பேனானால், இச்சூழ்நிலையில் அவருக்கு நான் வாக்களிப்பது என்பது கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக இருக்கும். அப்படியானால் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக என்னால் அவருக்கு வாக்களித்திட முடியாது. (வாக்களித்தல் தொடர்புடைய விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க மாத்திரமே செய்கின்றேன்). முடிந்தமட்டும் நம்முடைய தேர்ந்தெடுத்தலை ஏகமனதுடன் பெற்றிருக்க விரும்புகின்றேன். எனினும் ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் என்னால் அவருக்கு வாக்களிக்க இயலவில்லை. அச்சகோதரனும் இதைச் சரியாய் எடுத்துக்கொண்டு, அவர் பின்வருமாறு: “உங்களது நேர்மையினையும், யதார்த்தத்தையும் நான் பாராட்டுகின்றேன். நான் ஓர் உயர் தரத்திற்கு என்னையே கொண்டுவந்திடுவதற்கு முயற்சித்திடுவேன்” என்று கூறிடவேண்டும். இதுவே சரியாய் இருக்கும்; அதாவது சரியாய்ச் செயல்பட்டு, பின் முழுச்சபையாரையுமே பிரியப்படுத்துவதாயிருக்கும் என்று எதிர்பார்ப்பதாகும்; அதுவும் அவர்களைப் பிரியப்படுத்து கிறதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், சரியானவற்றைச் செய்வதாகும். அதுவும் எவ்வித சுயேட்சையான ஆவியினால் இல்லாமல், மாறாக ஒவ்வொருவரின் மற்றும் அனைவரின் கருத்துக்களையும் முறையே கருத்தில் எடுத்துக்கொள்வதற்குரிய பெருந்தன்மையின் ஆவியினால் செய்யப்பட வேண்டும். 85 சதமான விதியானது நிலைநாட்டப்பட்டும், சபையாருடைய சித்தம் உண்மையில் நிறைவேற்றப்படாத நிலையில் காணப்பட்ட சில சந்தர்ப்பங்களை நான் அறிவேன். அது எப்படி? 85 சதவீதம் அடையப்பெற்றிருக்குமானால், ஏன் அது சபையாருடைய சித்தமாகக் காணப்பட முடியவில்லை? ஏனெனில் 15 சதமானவர்கள் கட்டுக்கடங்காதாவர்களாகிடுவதற்கு தீர்மானிக்கக்கூடும் மற்றும் 85 சதமானவர்களின் விருப்பத்தினை அடையவிடக் கூடாது என்று தீர்மானிக்கக்கூடும். பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினர் ஆள முயல்கின்றனர் மற்றும் இணங்கி விட்டுக்கொடுப்பதில்லை. எனினும் சபையாரினுடைய விருப்பத்தைத் தீர்மானிப்பதற்குப் பெரும்பான்மை மாத்திரமே தேவையாய் இருக்கின்றது. 51 சதவீதம் என்பது பெரும்பான்மையாகும். ஒருவேளை 85 சதவீதம் வேண்டுமென்று முன்வைக்கப்படுகிறதென்றால், அது சிறுபான்மையினரைப் பிரியப்படுத்து வதற்கென்றுள்ள பெரும்பான்மையினரின் சார்பிலான சலுகையேயாகும். 51 சதமானவர்கள் நாங்கள் தீர்மானிப்போம் என்றும், எங்கள் வழியின்படி செய்வோம் என்றும் சொல்ல முடியும். ஆனால் அது மற்றவர்களைப் புறக்கணிக்கிற காரியமாய் இருந்து பிரிவினையை உண்டுபண்ணிடலாம். இப்படிச் செய்வது ஞானமான அல்லது அன்பான காரியமாய் இராது. பெரும்பான்மையானவர்கள் சிறுபான்மையினரைக் குறித்துக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; கூடுமானால் ஒவ்வொருவரையும் உள்ளடக்கிய நிலையில் 100 சதவீதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம் என்று தெரிவித்திட வேண்டும். ஆனால் பெரும்பான் மையினர் சிறுபான்மையினரைக் கவனத்தில் கொள்ளாமல் இருந்து, இதனால் சிறுபான்மையினர் சபையாருடைய வேலைக்குத் தடங்கலும், இடர்ப்பாடும் உண்டுபண்ணுவதும், இந்த 85 சதமானவர்களுக்கு இடையூறு உண்டுபண்ணத்தக்கதாக, தங்களால் முடிந்த யாவற்றையும் செய்வோம் என்று கூறுவதும், இவர்கள் - நல்நோக்கங்களை முன்னிலையிலிருந்து நிறைவேற்றுபவர்களைத் தடைச்செய்கிற நோக்கோடு அரசியலில் பயன்படுத்தப்படும் தந்திரமான முறைமைகளை எடுத்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். இது முற்றிலும் தவறாக இருக்கும். இந்தக் காரியங்கள் குறித்த சரியான கண்ணோட்டங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். புரூக்கிளினிலும், நியூயார்க்கிலும் உள்ள சபைகளில் ஏகமனதுடன் கூடிய வாக்கை எப்போதும் நாம் பெற்றிருப்போம். ஏனெனில் வேலை தொடர்புடைய விஷயத்தில் நாம் அறிந்திருக்கிற எல்லாவற்றையும் செய்திடுவதற்கு நாங்கள்

ஒப்புக்கொண்டிருக்கின்றோம். ஒருவேளை யாரேனும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட சகோதரனை மூப்பனாகவோ அல்லது உதவிக்காரனாகவோ பெற்றிருக்க விரும்பினால், அவரைப் பெற்றிருப்பதற்கு நாமும் மகிழ்வோம். இப்படியாகவே கிட்டத்திட்ட எல்லாவிடங்களிலும் காணப்படும் சபையார்களின் மனநிலையாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம்; ஆனால் சில சமயங்களில் நம்முடைய மனங்களானது திரித்துக் காணப்படுகின்றது. 85 சதவீதம் பெற்றுக்கொள்ளாதது வரையிலும், எங்களால் எதுவும் செய்ய முடியாது என்று சிறுபான்மையினர் கூறும்போது, நான் ஒரு மாற்றத்தை முன்வைத்து, அதை 51 சதவீதமாக்கிடுவேன் மற்றும் 51 சதமானவர்கள் தங்களால் முடிந்தமட்டும் மற்றவர்களிடத்தில் அன்பாய் இருப்பார்களாக; ஆனால் கர்த்தருடைய வேலைக்குத் தடங்கல் உண்டுபண்ணும் எந்தவொரு வழிமுறையையும் நாங்கள் அனுமதிப்பது இல்லையென்று மற்றவர்கள் தெரிந்து கொள்வார்களாக. சபையாரிலுள்ள பெரும்பான்மையானவர்கள் சபையாரை நடத்திடவும், அதன் நடைமுறைகளைத் தீர்மானித்திடவும் வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்; எனினும் பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மையானவர்களிடத்தில் மிகவும் அன்பாய்க் காணப்படவும் கர்த்தர் விரும்புகின்றார்; அவர்கள் ஒருமித்த மனதில் காணப்படமுடியுமென்றால் அது இன்னும் சிறப்பாக இருக்கும்..

## பதினோராம் மணிவேளை - இதனுடைய செயல்விளக்கம்.

### கே : 258:1: :: கேள்வி (1911) - 1

ஒரு மத்தேயு 20ல் குறிக்கப்பட்டிருக்கும் பதினோராம் மணிவேளை உவமையை தயவுகூர்ந்து விளக்கவும்.

**பதில்:** இந்த உவமை இந்த யுகத்தின் முடிவில் நடக்கப்போகும் ஒன்றை எடுத்துக்காட்டுவதற்காக கொடுக்கப்படுகிறது. திராட்சத் தோட்டத்தில் வேலையாட்களுக்கு பல்வேறு நேரங்களில் பல்வேறு அழைப்புகள் இருந்தன என்பதை இந்த உவமை சொல்ல முற்படுகிறது. திராட்சத் தோட்டத்தில் வேலையாட்களுக்கான இந்த அழைப்பு முந்தைய காலத்தில் இயேசு மற்றும் அப்போஸ்தலர் நாட்களில் ஆரம்பமானது என்றும், மற்றும் இந்த பல்வேறு அழைப்புகள் சுவிசேஷ யுகத்தின் பல்வேறு காலப்பகுதிகளைச் சார்ந்தது என்று சிலர் இப்போது சொல்லக்கூடும். மற்றும் இதற்கு எதிராக விவாதம் எதையும் நாம் காண்கிறதில்லை; அது போதுமான அளவு நன்றாக இருப்பதாகத் தோன்றுகிறது. திராட்சத் தோட்டத்திற்கு வேலையாட்களை இவ்வாறு அனுப்புதல் யுகத்தின் ஆரம்பத்தில் இருந்ததில்லை. ஏனெனில் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள் துவக்கத்தில் திராட்சச் செடியை நட்டார்கள் மற்றும் அதைப் பராமரித்தார்கள். மற்றும் திராட்சத் தோட்டத்தில் வேலையாட்களுக்கான இந்த அழைப்பு, கனி பழுத்திருந்த போது, மற்றும் அவர்கள் உள்ளே போய்,, சேகரிக்கிறவர்களாகவும், மற்றும் குலைகளை சேகரித்தற்கான கூலியைப் பெற வேண்டியவர்களாக யுகத்தின் முடிவில், அறுவடை காலத்தில் இருந்தது. இந்த விளக்கம்கூட சில நியாயமான தன்மைகளைக் கொண்டிருக்கிறது. எந்த நிகழ்விலும், பதினோராம் மணிவேளை, இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவடையும் காலத்தையே அடையாளப்படுத்துகிறது. அந்த சமயத்தில் தான் திராட்சத் தோட்ட பணிக்குள் - அறுவடை பணிக்குள் நுழையும் வாய்ப்புக்காக சிலர் காத்துக்கொண்டிருப்பார்கள் மற்றும் சிந்தை மற்றும் இருதயத்தின் சரியான நிலையில் இருப்பவர்கள், அறுவடை பணி கிட்டத்தட்ட முடிவுக்கு வந்திருந்தாலும் கூட, அங்கே அறுவடை பணி செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள் என்பது தான் விளக்கக் காட்சியாக இருக்கிறது. உதாரணத்திற்கு, இன்று, ஒருவேளை சிலர் கூறலாம், “நல்லது, சகோ. ரசல், அறுவடை பணி கிட்டத்தட்ட முடிவடைகிறது என்று நான் அனுமானிக்கிறேன், மற்றும் அறுவடை களத்திற்குள் செல்வதற்கு நான் விரும்பினால், இது இப்போது மதிப்பு இல்லாததாயிருக்கும், அப்படித் தானே?” நல்லது, என் அருமை சகோதரனே, நான் உங்கள் இடத்தில் இருந்தால், அது பதினோராம் மணிவேளையாக இருந்தாலும்கூட, - என்னுடைய காரியங்களை அப்படி ஏற்பாடு செய்வதற்கு எனக்கு இது சாத்தியமுள்ளதாக இருந்தால் - நான் உடனடியாக கர்த்தரிடம் செல்வேன் மற்றும் கூறுவேன்,

“கர்த்தாவே, நான் உங்களுக்கும் மற்றும் அறுவடை பணியின் ஊழியத்திற்கும் மிக அதிக அளவில் சரியான முறையில் நேரத்தை அளிக்க முடியும். அந்த ஊழியன் ஒழுங்குமுறை மற்றும் அறுவடையாளர்களின் இணைப்பு காரணமாக, விசேஷித்த ஆசீர்வாதத்தைப் பெறப்போகிறவர்களில் ஒருவராக நான் இருப்பதற்காக, நான் அறுவடைக்குள்ளாக அனுப்பப்பட வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன்.”

இந்த உவமைக் குறித்தான சில விஷயங்கள் விளக்கம் அளிப்பதில் அவ்வளவு எளிதாக இருக்கிறதில்லை; நாம் சில யூகங்களைக் கொடுக்கலாம் மற்றும் அவைகள் எல்லாம் தவறான தாக இருக்கலாம். பணம் என்னவாக இருக்கும், அந்த பணத்தைப் பெறுகிற வேலையாள் யார் மற்றும் சிலர் முறுப்பார்கள் மற்றும் அவர்கள் இந்த பணத்துடன் திருப்தி அடையவில்லை. என்று கூறுவார்கள் மற்றும் அவர்கள் அதிகமாகப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுவார்கள் என்பதெல்லாம் எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நான் அறியவில்லை. நான் இதைப்பற்றி உறுதியாக இல்லை. ஒருவேளை காலப்போக்கில் நாம் அதிகம் தெளிவாகப் பார்ப்போம்; ஆனால் இதைக் கண்டிப்பாக நம்புகிறோம்: திரைக்கு அப்பால் நம்முடைய முறுமுறுப்பு எதுவும் இருக்காது; ஆகவே, பணம் கொடுத்தல் மற்றும் முறுமுறுத்தல், இது எதை அடையாளப்படுத்தினாலும், திரைக்கு அப்பால் நாம் கடந்து போவதற்கு முன்னால் இது சபையில் இன்னும் இருக்கப்போகிற ஒன்றாக இருக்கிறது. நித்திய ஜீவன் மற்றும் அழியாமையின் பார்வையில், முறுமுறுக்கிறவர்களில் எவரும் அந்த பணங்கள் எதையும் உடையவர்களாக இருக்கமாட்டார்கள். கர்த்தர் தம்முடைய மணவாட்டி வகுப்பாரில் எந்த முறுமுறுப்பார்களையும் உடையவராக இருக்கமாட்டார்; நான் இதை சரியாகப் புரிந்துகொண்டிருந்தால், அவர்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள், அவர்கள் தங்கள் தகுதியை காட்டிலும் பெற்றிருக்கிறார்கள் மற்றும் கர்த்தர் அளிக்கக்கூடியதைப் பெற்றுக்கொள்வதற்கு மிக்க மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்ற உண்மையை அவர்கள் புரிந்துணருவார்கள்

## எலியா வகுப்பார் - - Vs. எலிசா.

### கே : 259:1: :: கேள்வி (1907) - 1

எலிசா வகுப்பாரை எலியா வகுப்பாரிலிருந்து எவ்வாறு வேறுபடுத்தலாம்?

**பதில்:** ஜெயங்கொள்ளுகிற சபையின் நிழலாக எலியா மிகவும் தனித்துவமாக இருந்தார் என்று நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆனால் எலிசாவைப் பொருத்தவரையில், அவர் ஒரு நிழலாக இருந்தாரா என்பதற்குத் தெளிவான ஆதாரம் வேதாகமத்தில் நாம் பெற்றிருக்கவில்லை. அவர் ஒரு நிழலாக இருந்தார் என்று சிலர் ஊகிக்கலாம் மற்றும் மற்றவர்கள் அவர் நிழலாகவே இருந்ததில்லை என்று ஊகிக்கின்றனர். ஆனால் இது சந்தேகத்துக்குள்ளான விஷயமாக இருப்பதால், இதனுடன் மிக அதிகமான பாரத்தைக் கட்டி இறுக்காமலிருப்பது நமக்கு ஏற்புடையதாயிருக்கிறது.

## எலியா - - ஒரு நிழலான பாத்திரம்.

### கே : 259:2: :: கேள்வி (1909) - 2

எலியாவைப் பற்றி எப்படி?

**பதில்:** நல்லது, எலியா ஒரு நிழலான பாத்திரமாக இருந்தார், ஏனெனில் அவர் அவ்வாறு இருந்தார் என்று வேதாகமம் கூறுகிறது. எலியாவின் உருமாற்றம், இந்த யுகத்தின் முடிவில் சபையின் மாற்றத்திற்கான உருவக காட்சி அல்லது தரிசனமாக இருந்தது மற்றும் அவர் சுழற்காற்றில் எடுத்துக்கொள்ளப்பட்டதும், மற்றும் அக்கினி இரதமும் சபையின் அனுபவங்களை அடையாளப்படுத்துகின்றன, மற்றும் இவற்றின் வாயிலாக திரைக்கு அப்பால் நாம் கடந்து போவோம் - - உபத்திரவமான சுழல்காற்று மற்றும் தீவிரமான சோதனைகள். தலை சங்கரிக்கப்பட்ட யோவான் ஸ்நானகனை மறுபடியும் நீங்கள் ஞாபகத்தில் கொள்ளவும்.

ஜீவியத்தைப் பொருத்தவரையில், தேவன் மோசேயைப் புதைத்தார் மற்றும் அதைப் போன்றே தேவன் எலியாவையும் புதைத்தார் என்று நான் கருதுகிறேன். யூதர்களைப் பொருத்தமட்டில், அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் மற்றும் அவர்கள் ஒருபோதும் அவரைப் பார்க்கவில்லை. ஆனால் அப்போஸ்தலர் கூறுகிறார், "அவர்கள் எல்லோரும் விசுவாசத்தினாலே மரித்தார்கள்." அவர் பிற்பாடு மரித்தார் மற்றும் மற்ற மனுஷர்களைப் போன்று புதைக்கப்பட்டார் என்று நாங்கள் கருதுகிறோம்.

## எலியா - - Vs. மலையின்மேல் மோசே.

## கே : 259:3: :: கேள்வி (1909) - 3

மலையின் மேல் எலியா மோசேயுடன் மகிமையடைந்தார் என்பது உண்மையில்லையா?

**பதில்:** நாங்கள் பதிலளிக்கிறோம், இல்லை. மோசே மரித்தார் மற்றும் அடக்கம்பண்ணப்பட்டார் என்ற பதிவு இருக்கிறது, ஆகவே மோசே மரிக்கவில்லை மற்றும் அடக்கம் பண்ணப்படவில்லை என்று கூறுவதற்கு எவருக்கும் அதிகாரம் இருக்கிறதில்லை. மற்றும் சபை தன்னுடைய உயிர்த்தெழுதலை முதலில் பெற்றிருக்கிற பின்பு வரைக்கும் மோசே ஜீவனை அல்லது அறிவைப் பெற இயலாது, ஏனெனில் ஊழியக்காரர்களின் வகுப்பைச் சார்ந்தவராயிருந்தார், மற்றும் அவர்கள் நம்மையல்லாமல் பூரணமடைய முடியாது.

நல்லது, மோசேயும் மற்றும் எலியாவும் மறுரூப மலையின் மேல் தோன்றியதைப் பற்றி என்ன? நல்லது, நான் அங்கே இருக்கவில்லை, ஆனால் ஒரு பிரதிநிதி, அந்த ஸ்தலத்திலேயே பிரசன்னமாயிருந்த ஒரு நிருபர் எனக்கு இருந்தார், மற்றும் அந்த விஷயத்தைப் பற்றி எங்களுக்கு கூறினார். அவர் எங்களுக்கு என்ன கூறினார்? அவர்கள் மலையிலிருந்து கீழே இறங்கி வருகையில், இயேசு தம்முடைய சீஷர்களுடன் பேசிக்கொண்டிருந்தார் - - மற்றும் இது எல்லாவற்றையும் அவர் அறிந்திருந்தார், நீங்களும் மற்றும் நானும் அல்ல - - அவர்கள் ஒரு தரிசனத்தைப் பார்த்திருந்ததாக அவர்களிடம் அவர் கூறினார், "மனுஷ குமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம்" என்று தெரிவித்தார். மற்றும் அதே மாதிரி, அங்கே மலையின் மேல் இருந்த யோவான் தரிசனங்களின் புஸ்தகமாகிய, வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் பிற்பாடு இதை விவரித்தார். தலைகள், கொம்புகள், போன்றவைகளுடன், இந்த மிருகம் மற்றும் அந்த மிருகத்தைப் பற்றியும், மற்றும் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கும் ஸ்திரீ, போன்றவைகளைப் பற்றி யோவான் நம்மிடம் சொல்கிறார். அவர் அவைகளை உண்மையாகப் பார்த்தாரா? அவர் கூறினார், நான் பார்த்தேன், மற்றும் நான் பார்த்தேன், நான் கேட்டேன் மற்றும் பார்த்தேன் - - அவர் அவையெல்லாவற்றையும் தரிசனத்தில் பார்த்தார், ஏனெனில் அந்த மிருகங்கள் ஒருபோதும் துள்ளிக்கொண்டு சுற்றித்திரியவில்லை. தேவன் அங்கே ஒரு மிருக காட்சிசாலையை உருவாக்கியிருக்க முடியும், ஆனால் இது அவசியமாயிருக்கவில்லை. இவைகள் தரிசனங்கள் என்பதை துவக்க அதிகாரத்தில், இவைகள் வெளிப்படுத்தப்பட்டன - - அடையாளங்களால் குறிக்கப்பட்டன என்று யோவான் நமக்குக் கூறுகிறார், மற்றும் அங்கே அவர் தரிசனங்களில் பார்த்ததைப் போன்றே, அவர் மலையின் மேல் தரிசனத்தில் பார்த்தார்.

மலையின் மேல் இருந்த மற்றொருவர் தம்முடைய சாட்சியை நமக்குக் கொடுத்தார். பேதுரு கூறினார், "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கண்டதையும் மகிமையையும் பெற்றபோது, **அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில்**, வானத்திலிருந்து பிறந்த அந்த சத்தத்தைக் கேட்டோம்." இதைத் தான் அந்த தரிசனம் எடுத்துக்காட்டுவதாக இருந்தது. நீங்கள் விரும்பினால், பூமியில் ஜீவிக்கின்ற

வகுப்பாரை மோசே அடையாளப்படுத்தினார், ஏனெனில் அவர் இஸ்ரயேலின் பிரதிநிதியாக, அல்லது மத்தியஸ்தராக இருந்தார், மற்றும் அவர் மிகவும் சரியான விதத்தில் அந்த தரிசனக்காட்சியில் அவர்களை அடையாளப்படுத்துகிறவராக இருக்கிறார். அங்கே இருந்த எலியா சபையை எடுத்துக்காட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டார். கிறிஸ்து நிஜமான எலியாவின் தலையானவராக இருக்கின்றார், மற்றும் நீங்களும், நானும் அந்த நிஜமான எலியாவின் சரீர அங்கங்களாக இருக்கிறோம், மற்றும் ஜனங்களின் மத்தியிலிருந்து தேவன் எழுப்புகின்றவராக, இந்த மாபெரும் தீர்க்கதரிசி இருக்கிறார், மற்றும் இந்த எலியா ஆயிர வருஷ யுகத்தில் சகலத்தையும் சீர்பொருந்தப்பண்ணுகிறவராக இருப்பார்.

## எலிசா - - யாரை உள்ளடக்கியவர்?

### கே : 260:1: :: கேள்வி (1909) - 1

எலிசா வகுப்பாரை யார் உள்ளடக்குவார்கள்?

**பதில்:** முதலாவதாக, எலிசா வகுப்பார் என்பவர்கள் இருக்கப்போகிறார்கள் என்பதை நாங்கள் அறியவில்லை, ஏனெனில் அப்படி ஒரு வகுப்பார் இருப்பார்கள் என்று வேதாகமம் உறுதியாக எதுவும் கூறவில்லை. நாம் இதை உணருகிறோமா? ஆம். எந்த அடிப்படையில்? ஏனெனில் ஒரு எலியா வகுப்பார் இருக்கிறார்கள் மற்றும் வெளிப்படுத்தல் ஆகமத்தில் குறிக்கப்பட்டுள்ளதும், மற்றும் நம்முடைய கர்த்தரால் குறிக்கப்பட்டதுமான ஒரு எலிசா வகுப்பார் இருக்கிறார்கள் என்பதை வேதாகமம் உணர்த்துகின்றது. எலியாவின் ஊழியத்தின் இறுதியின் போது, எலிசா தன்னை எலியாவுடன் சேர்ந்துகொண்டவராக இருந்தார் - - தான் ஒரு ஊழியக்காரனாக சேர்ந்து கொண்டார் மற்றும் முடிவில் பெரிதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் ஒரு வகுப்பாருக்கு நிழலாக இருக்கிறார் என்று நாம் அனுமானித்தால், அப்போது அவர் இரண்டு வகுப்பார்களுக்கு நிழலாக இருப்பார். முதலாவது, திரள்கூட்ட வகுப்பாருக்கு, ஏனெனில் எலியாவின் சால்வை அவனிடத்திற்கு விழுந்தது, மற்றும் எலியா வகுப்பார் எடுத்துக்கொண்ட பிறகு, எலியாவின் ஆற்றல் அல்லது ஊழியம் எலிசா வகுப்பாரின் மேல் விழுவதாக இருக்கும் என்று உணர்த்துவதாகத் தோன்றுகிறது. அந்த சால்வையுடன் எலிசா செய்த ஒரே காரியமாக, இருந்தது எதுவென்றால், எலிசா யோர்தானுக்குப் போய், தண்ணீரை அடித்தார் மற்றும் கடந்து போனார். எலியா வகுப்பாரைப் போன்று அதே முறையில் தான் எலிசா வகுப்பார் மரணத்தின் வழியாகக் கடந்து போவார்கள் என்பதை இது வெறுமனே உணர்த்துவதாக இருக்கிறது - - யோர்தான் மரணத்தை அடையாளப்படுத்துகின்றது. யோர்தானைக் கடந்த பின்பு, எலிசா ஒரு குறிப்பிட்ட புரட்சிகரமான ஊழியத்தை செய்யத் துவங்கினார். இது திரள்கூட்டத்தை அடையாளப்படுத்துவதாக இருக்கவில்லை, ஆனால் வேறொரு வகுப்பாரைக் குறிக்கின்றதாகத் தோன்றுகிறது - - முற்பிதாக்களின் பணியைக் குறிக்கின்றது, இவர்கள் இந்த பணியைத் துவங்குவார்கள் மற்றும் ஆயிரவருஷ யுகத்தில் தொடருவார்கள். முற்பிதாக்கள் இறுதியில் திரள்கூட்டத்தாரைப் போன்று அதே தளத்தில் இருப்பார்கள் மற்றும் அதே மகிமையை அடைவார்கள் என்று வேதாகமம் காண்பிக்கிறதாக நாங்கள் நம்புகிறோம்.

## சத்துருக்கள் - - உங்களைப் போல அன்புகூருங்கள்.

### கே : 260:2: :: கேள்வி (1905) - 2

நாம் அன்புகூர வேண்டியிருக்கின்ற சத்துருக்கள் யார்?

**பதில்:** எங்களுடைய சத்துருக்கள். நீங்கள் என்னுடைய சத்துருக்களை அன்புகூர வேண்டிய தேவையில்லை. அதை நானே செய்வேன்.

## சத்துரு - - கடைசியாகப் பரிகரிக்கப்படும்.

## கே : 260:3: :: கேள்வி (1911) - 3

ஒரு பரிகரிக்கப்படும் கடைசி சத்துருவாக மரணம் இருக்கின்றது என்று இது சொல்கிறது. ஆதாமின் மரணம் எவ்விதம் அப்படி இருக்கும், அல்லது எப்படி?

**பதில்:** பரிகரிக்கப்படும் கடைசி சத்துருவாக இருக்கிறது - அதற்கு என்ன அர்த்தம்? அது மரணத்தை அர்த்தப்படுத்துகின்றது, சத்துருவாக இருக்கின்ற மரணம் அழிக்கப்படப்போகிறது. இப்போது இரண்டாம் மரணம் தேவனுக்கு எதிரியாக, அல்லது தேவனுடன் இணக்கமாக இருக்கின்ற எவருக்கும் எதிரியாக இருப்பதில்லை. இரண்டாம் மரணம் தேவனுடன் இணக்கமாக இருக்க முடியாதவர்களின் அழிவுக்காக இருக்கிறது. சிருஷ்டிப்பு முழுமைக்கும் இது கெடுதியாக இருப்பதற்குப் பதிலாக, இது ஆசீர்வாதமாக இருக்கும்; ஆனால் ஆதாமுக்குள்ளான மரணம் ஒரு சத்துருவாக இருக்கின்றது. இது ஒரு எதிரியாக இருந்து வருகின்றது, ஏனெனில் யுகம் முழுவதிலும் இன்றுவரையில், ஜனங்கள் ஆதாமின் மரணத்தின்கீழ் உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், இவர்கள் உண்மையில், வாய்ப்பு, அறிவு, போன்றவைகளைப் பெற்றிருந்தார்களானால், தேவனுடன் இணக்கமாயிருப்பதற்கும், மற்றும் அவருக்கு ஊழியம் செய்வதற்கும் விரும்பியிருப்பார்கள். ஆதாம்கூட, சந்தேகத்திற்கிடமின்றி, அவன் பாவம் செய்ததற்குப் பின்பு, “நல்லது இப்போது, ஆதாம், நான் உனக்கு மற்றொரு சோதனையைக் கொடுப்பேன்; நீ ஏதேனுக்குள் திரும்பவும் செல்; ஆனால் இதை நீ மறுபடியும் செய்தால், இது இரண்டாம் மரணமாக இருக்கும் மற்றும் அதுவே இதனுடைய முடிவாக இருக்கும்.” என்று தேவன் கூறியிருந்தால், சந்தோஷமடைந்திருப்பான். நிச்சயமாக, இது குறித்து அவன் மகிழ்ச்சி அடைந்திருப்பான்.

# ஏனோக்கு - - எங்கே எடுத்துக்கொள்ளப்பட்டார்?

## கே : 261:1: :: கேள்வி (1908) - 1

விசுவாசத்தினால் ஏனோக்கு மரணத்தைக் காணாமல் எடுத்துக்கொள்ளப்பட்டார், போன்றவை. இந்த பூமியிலிருந்து அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பது இதனால் அறியப்படுகிறதா? மற்றும் அவர் எந்த வகுப்பாரை அடையாளப்படுத்துகிறார்?

**பதில்:** ஏனோக்கைப் பற்றி நாம் அறிகிறதெல்லாம், எல்லாவற்றிலும் முதலாவது, ஆதியாகமத்தில் இருக்கின்றது என்று நான் பதிலளிக்கிறேன், மற்றும், இரண்டாவது, எபிரேயர் நிருபத்தில் அப்போஸ்தலரின் அறிக்கையிலும், மற்றும், மூன்றாவதாக, கர்த்தர் ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட வருகிறார் என்று சொல்லி, கர்த்தருடைய வருகையைக் குறித்து ஏனோக்கு தீர்க்கதரிசனம் கூறியதை, யூதாவின் அறிக்கையில் அறிகிறோம். ஆனால் ஆதியாகமத்தில், தேவன் அவரை எடுத்துக்கொண்டதினால், அவர் காணப்படாமற் போனார், அவர் இல்லாமலிருந்தது உணரப்பட்டது; அவர் மாற்றப்பட்டார், அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார் - - ஒரு நிலை அல்லது இடத்திலிருந்து வேறொன்றுக்கு உயர்த்தப்பட்டார் என்பது அப்போஸ்தலர் எபிரேயர் நிருபத்தில் நமக்குச் சொல்கிறதின் கருத்தாக இருக்கின்றது; அவர் மரணத்தைக் காணாமல் அல்லது அனுபவத்திற்குள்ளாமல் அவர் மாற்றமடைந்தார். அவர் இதை தன் கண்களில் பார்க்கக்கூடாது என்ற அர்த்தத்தில் அல்ல, ஆனால் மரண அனுபவத்திற்குள்ளாகும் பார்வையில் அவர் காணக்கூடாததாயிருந்தது. உலகத்தில் அந்த காலத்தில் மரணம் இருந்ததினால், அவர் சந்தேகத்திற்கிடமின்றி தன் கண்களில் மரணத்தைப் பார்த்திருந்தார், ஆனால் அவர் மரணத்தின் அனுபவத்திற்குள் ளாகவில்லை; அவர் மாற்றமடைந்ததால், அவர் மரணத்தின் அனுபவத்திற்கு உள்ளாகவில்லை. இது இப்போது, ஏனோக்கு மரணமடையவில்லை என்று புரிந்துகொள்வதற்கு நம்மை வழிநடத்துகின்றது. இப்போது, தேவன் ஏனோக்குடன் என்ன செய்தார், அல்லது அவரை எங்கே எடுத்துக்கொண்டார் என்பதைக் குறித்து வேதவாக்கியங்கள் மௌனமாயிருக்கின்றன, மற்றும் ஆகவே, அவர் எங்கே இருக்கிறார் என்பது பற்றிய தெளிவான எந்த அறிக்கை, அல்லது எந்த

அடிப்படையும் இல்லாத நிலைக்கு இது நம்மை விட்டு விடுகின்றது. அவர் எங்கே **இருக்கவில்லை** என்பதை நாம் சொல்ல முடியும் அவர் பரலோகத்தில் இருக்கவில்லை என்று நாம் சொல்ல முடியும்; ஏனெனில் நம்முடைய கர்த்தர் கூறினார், "பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல், பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை." ஆகவே அந்த வார்த்தையின் அர்த்தத்தில், ஏனோக்கு பரலோகத்திற்குப் போகவில்லை. அவர் எங்கே சென்றார்? ஏன், எனக்குத் தெரிந்தவரைக்கும், கர்த்தர் அவரை வேறு ஒரு கிரகத்திற்கு எடுத்திருக்கலாம். எனக்குத் தெரியாது; இது வெறுமனே ஒரு ஊகமாக இருக்கிறது. நான் கர்த்தருடைய திருவசனத்தை, அது கூறும் விதமாக, அவர் மரணத்தைக் காணாதபடிக்கு, அவர் மாற்றப்பட்டார் மற்றும் அவர் மரணமடையவில்லை என்று வெறுமனே எடுத்துக்கொள்கிறேன். அப்போஸ்தலர் அதை அதே அதிகாரத்தில் பின்னர் தெளிவாக்குகின்றார். அவர் கூறுகிறார், இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே மரித்தார்கள்." இருப்பினும், அவர் ஏற்கனவே ஏனோக்கை ஒரு விதிவிலக்காக செய்திருக்கிறார் என்பதை அப்போஸ்தலர் வெளிப்படையாகப் புரிந்திருக்கிறார் மற்றும் ஆகவே ஏனோக்கு மற்றவர்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவர் எங்கே இருக்கிறார் என்பதை தேவன் ஒருவரே அறிவார்; நான் அறிகிறதில்லை; மற்ற எவரும் அறியவில்லை. ஆகவே நீங்களும், நானும் மற்றும் மீதியான எல்லாரும் அதே நிலையில் இருக்கிறோம். அப்படி இருப்பினும், தேவனுடைய திருவசனத்தில் நாம் அவ்வளவு நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறவர்களாய், ஏனோக்கு எங்கேயோ ஜீவிக்கிறார் என்றும், மற்றும் தேவனுடைய ஏற்ற காலத்தில் ஏனோக்கு இந்த முறையில் ஒரு விதிவிலக்காக்கப்பட்டார் என்பதை நாம் காண்போம் என்று நம்புகிறோம்.

இப்போது, அவர் ஒரு நிழலாக இருக்கிறாரா? அவர் ஒரு நிழலாக இருக்கிறார் என்று நமக்குச் சொல்லப்படவில்லை, ஆகவே அவர் ஒரு நிழலாக இருந்தார் என்று சொல்வது கவனக்குறைவானதாக இருக்கும். இது ஒரு நிழல் என்று கூறுவதற்கு நாம் ஏவப்படவில்லை, மற்றும் இது ஒரு நிழலாக இருக்கிறதில்லை. ஏனோக்கு ஒரு நிழலாக இருந்தார் என்று சொல்வதற்கு வேத வாக்கியங்களில் ஏதேனும் காண முடிந்தால், அவர் நிழலாக இருந்தார் என்று சொல்வதில் நாம் நியாயப்படுத்தப்பட்டிருப்போம். ஆனால் ஒரு நிழலாக இருப்பதாக வேத வாக்கியங்களில் எதுவும் குறிக்கப்படாத நிலையில், நாம் அதை ஒரு நிழலாகப் பார்ப்பதிலும், மற்றும் நமக்கு தொந்தரவு செய்யும் விதத்தில் இதிலிருந்து எதையாவது உருவாக்குவதிலும் நாம் மிகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர் ஒரு நிழலாக இருந்தார் என்று அனுமானம் அளிக்கும் வகையில், வெறும் அனுமானமாக மட்டும் இருக்கக்கூடிய இது தொடர்பான ஒரு அறிக்கை இருக்கின்றது, மற்றும் அது ஆதாமுக்கு ஏழாம்தலைமுறையாக ஏனோக்கு இருந்தார் என்று குறிப்பிடும் அறிக்கையாக உள்ளது. அங்கே "ஆதாமிலிருந்து ஏழாவது" என்பது முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது - - ஏழு, ஏழாம் தலைமுறையானவர். இப்போது, இதன் மீது ஒரு சிறிதளவான யூகத்தை உருவாக்கும் ஒரு வெற்று வாய்ப்பு இருக்கிறது. நான் இதை "ஊகம்" - என்று இதனுடைய எளிமையான பெயரால் இதை அழைக்கிறேன். ஏழு என்பது வேதாகமத்தில் பூரணத்துவத்தைச் சுட்டிக்காட்டுவதாகவும் மற்றும் ஒரு பூரண எண் என்று கண்டுணரப்படுகிற காரணத்தால், ஆதாமிலிருந்து ஏழாம் தலைமுறையான ஏனோக்கு அந்த பூரண மனுஷனை - அவருடைய எதிர்கால நிலையில் மனுஷனாக, அவர் பூரணமாக இருக்கும் பொழுது மற்றும் அவர் மரிக்காத போது, மனுஷ பூரணத்தை அடையாளப்படுத்துகிறவராக இருக்கிறார். மற்றும் வார்த்தையின் இந்த பார்வையில், எதிர்காலத்தில் தேவனுடன் இணக்கமாகவும் மற்றும் நித்திய ஜீவனைப் பெறுகிற - - ஆயிர வருஷ யுகத்தில் பூரணத்துவத்துக்குக் கொண்டுவரப்படுகிறவர்களான மனுக்குல வகுப்பாரின் பிரதிநிதியாக ஏனோக்கு கருதப்படுகிறார்.

## ஏனோக்கு - - எடுத்துக்கொள்ளப்பட்டார், எப்போது, எங்கே, ஏன்?

### கே : 262:1: :: கேள்வி (1913) - 1

ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இதற்கு என்ன அர்த்தம்? இது எதைக் குறிக்கிறது?

**பதில்:** வேதாகமம் விளக்கவில்லை; நானும் அவ்விதமே செய்யமாட்டேன். நான் அறியவில்லை.

## நித்தியம் - - சோதோமியருக்குப் பிரயோகப்படுத்தப்பட்டது.

### கே : 262:2: :: கேள்வி (1907) - 2

சோதோம் பட்டணத்தாரைப் பற்றிக் குறிப்பிடுகையில், யூதா 7ம் வசனத்தில், "நித்திய" என்ற வார்த்தை, உதாரணமாக, அக்கினி, அல்லது பழிவாங்குதல், அல்லது உபத்திரவத்தை சரியான முறையில் குறிப்பிடுவதற்கு தகுதியாக உள்ளதா?

**பதில்:** நான் பதிலளிக்கிறேன், இது அக்கினி - நித்திய அக்கினி என்பதற்கு தகுதியாக இருக்கின்றது; நித்திய அக்கினியின் பழிவாங்குதலில் உபத்திரவப்படுவது. மொழிபெயர்ப்பு இந்த முறையில் தான் அர்த்தத்தை அளிக்கிறது. இது சரியானதாயிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இது எந்த வகையான அக்கினியாக இருந்தது? இது அங்கே எரிந்துகொண்டிருப்பதைத் தக்கவைத்துக் கொண்டதா? மற்றும் நீங்கள் சோதோம் எங்கே இருந்ததோ, அங்கே போக முடியுமானால், இது இப்பொழுது எரிந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்க்க முடியுமா? இல்லை, நல்லது, இது எந்த வகையான நித்திய அக்கினியாக இருந்தது? இதனுடைய விளைவுகள் நித்தியமானவைகளாக இருந்த வகையிலான அக்கினியாக இது இருந்தது; இது வெறுமனே கொஞ்சக் காலத்திற்கு எரிந்து, மற்றும் பின்பு அகன்று விட்ட அக்கினியாக இருக்கவில்லை, ஆனால் இது எல்லாவற்றையும் எரிந்து தீர்க்கும்வரைக்கும் எரிந்ததாக இருந்தது. ஆகவே, கர்த்தர் முழுமையானவர்களை அழிக்கப்போகும்போது, அவர் அவர்களை நித்திய அக்கினியினால் அழிப்பார், அதாவது, முழுமையானதாக அந்த அக்கினி இருக்கும், மற்றும் அந்த பணியை நிறைவேற்றும். இது கொஞ்சக் காலத்திற்கான அழிவாக இருந்து, பின்பு அவர்கள் அதிலிருந்து மீட்கப்படுவதாக இருக்காது, ஆனால் இது முற்றிலுமான பழிவாங்குதலாக, முழுமையான அழிவாக இருக்கும். ஒவ்வொரு நாளும் நீங்கள் பேசுகிறபோது, இதைப் பற்றி நீங்கள் நினைத்தால், மிக அதிகமாக உருவகப் பேச்சுக்களைப் பயன்படுத்துகின்றீர்கள். உரையாடுகின்ற ஒவ்வொரு நபரும் மிக அதிகமாக உருவகப் பேச்சுக்களைப் பயன்படுத்துகின்றனர்; மற்றும் பழங்காலத்தில், நாம் இன்று செய்கிறதைக் காட்டிலும் அதிகமாக அவர்கள் பயன்படுத்தியிருந்ததாகத் தோன்றுகிறது. அவர்கள் எல்லா மொழிகளையும் சித்திரங்களில் உருவாக்கினார்கள். மிகப் பழமையான சில மொழிகள் எல்லாம் சித்திரங்களாக இருந்தன, மற்றும் அனைத்து உச்சரிப்புக்கள்கூட சித்திரங்களில் இருந்தன. எகிப்து மற்றும் சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற பழமையான எழுத்துக்குறியீடுகள் எல்லாம் சித்திரங்களாக இருந்தன. ஆகவே நம்முடைய வார்த்தைகள் எல்லாம் சித்திரங்களாக இருக்கின்றன.

## நித்திய ஜீவன் - - இப்போது, உண்மையாகவா, அல்லது எண்ணப்படுகிறதா?

### கே : 262:3: :: கேள்வி (1906) - 3

அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் இப்பொழுது நித்திய ஜீவனைப் பெறுக்கிறார்களா, அல்லது எண்ணப்படுகிறவர்களாக மட்டுமே இருக்கிறார்களா? எண்ணப்படுகிறவர்களாக இருந்தால், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு." என்று கூறுகிற யோவான் 5:24ம் வசனத்திற்கு விளக்கம் கூறவும்.

**பதில்:** இந்த கேள்வியை, நீங்கள் கிரகித்தால், இதற்கு முந்தைய கேள்வியைப் போன்று அதே மாதிரி இருக்கின்றது மற்றும் அதே முறையில் பதிலளிக்கக்கூடியதாக இருக்கின்றது. விவாதிப்பதைக் காட்டிலும் சரியான எண்ணத்தைப் பெறுவது தான் அதிகமாக இருக்கிறது, இது தான் அந்த சத்தியத்தைத் தெரிவிப்பதற்கான சிறந்த வழியாக இருக்கும். எண்ணத்தைத் தெரிவிக்கும் இரண்டு வழிகளும் உண்மையில் சரியானதாக இருக்கின்றன. நாம் இப்பொழுது

நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறோம் என்று நீங்கள் சொல்லலாம் மற்றும் இந்த வழியில் இதை நிரூபிக்க முற்படலாம்; அதாவது, கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு நித்திய ஜீவனை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார், மற்றும் தேவனுடைய வார்த்தை நிச்சயமுள்ளதாக இருக்கின்றது மற்றும் அவர் இதை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறதால், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் அந்த நிலைப்பாட்டிலிருந்து, விசுவாசத்தினாலே பேசும்போது, நான் சொல்ல முடியும், ஆம், நான் நித்திய ஜீவன் உடையவனாக இருக்கிறேன். மற்றும் நான் சில சமயங்களில் ஒரு காசோலையின் மூலமாக எடுத்துக்காட்டியிருக்கிற விஷயம் மாதிரியே இது இன்னும் இருக்கின்றது. நீங்கள் என்னிடம் ஒப்படைத்திருந்தீர்கள், அல்லது நான் எங்கிருந்தோ ஒரு காசோலையைப் பெற்றிருந்தேன், மற்றும் அந்த காசோலை என்னுடைய சட்டைப்பையில் இருந்தது என்று அனுமானியுங்கள். அந்த காசோலை நூறு டாலர்கள் மதிப்புள்ளதாக, மற்றும் அந்த பணம் மட்டுமே என்னிடம் இருந்தது அனுமானியுங்கள், மற்றும் ஒருவர் என்னிடம் வந்து, கேட்கிறார், “சகோதரர் ரசல், உங்களிடம் பணம் ஏதும் இருக்கிறதா?” நான் உண்டு, அல்லது இல்லை என்று சொல்ல முடியும் என்பதை நீங்கள் பார்க்கலாம், ஏனெனில் காசோலை பணம் அல்ல, ஆனால் பண மதிப்புடைய ஒரு காசோலை எனக்கு இருக்கின்றது. அது போன்று, தேவன் நமக்கு நித்திய ஜீவன் அளித்திருக்கிறார், மற்றும் இந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது. அது ஒரு தெளிவான அறிக்கையாக இருக்கிறது. அவர் நமக்கு நித்திய ஜீவனை அளித்திருக்கிறார், மற்றும் இந்த ஜீவன் குமாரனில் இருக்கிறது என்பது பதிவாக இருக்கின்றது. மற்றும் நம்முடைய ஜீவனாக இருக்கிறவர் தோன்றும் போது, நம்முடைய சட்டைப்பையில் காசோலையை நாம் உடையவர்களாக இருக்கும் அதே உணர்வில் நாம் நித்திய ஜீவனுடையவர்களாக இருக்கிறோம் என்பதை நீங்கள் பாருங்கள். இது வேண்டுகிற அனைத்தையும் அளிப்பதற்கான மதிப்புடையதாக இருக்கின்றதும் இருப்பினும் இதுவே ஜீவனாக இருக்கிறதில்லை. ஜீவனைப் பொருத்தமட்டில், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுதலில் நமக்குள்ளே கொண்டுவரப்படக்கூடிய இரட்சிப்பாக அது இருக்கிறது.

## ஐபிராத்து - - இரண்டாம் மரணம்.

**கே : 263:1: :: கேள்வி (1911) - 1**

”நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பெயர்” இந்த வசனத்தில் இந்த ஆறு இரண்டாம் மரணத்தைக் குறிக்கிறதா?

**பதில்:** - - நான் அறியவில்லை.

## ஏவாள் - மீட்பு.

**கே : 263:2 :: கேள்வி (1910) - 2**

இது மிகவும் நீண்ட நேரம் எடுக்காவிட்டால், தயவுசெய்து ஏவாளின் மீட்பு பற்றி விளக்கம் அளிக்கவும்.

**பதில்:** இது நீண்ட நேரம் எடுக்காது. ஆதாமின் சந்ததி அனைத்தும் ஆதாமைச் சேர்ந்ததாக இருந்ததைப் போன்றே, ஏவாளும் ஆதாமைச் சேர்ந்தவளாக இருந்தாள். தேவன் ஆதாமிலிருந்து ஏவாளை எடுத்த பிறகு, தேவன் ஏவாளை ஆதாமுக்குக் கொடுத்தார். அப்போது, என் அருமை நண்பர்களே, இதைப் பார்ப்பது வெகு எளிதாக இருக்கிறது, அதாவது, கிறிஸ்து ஆதாமையும் மற்றும் அவன் பெற்றிருந்த எல்லாவற்றையும் மீட்டார் என்றால், அவர் ஏவாளையும் மீட்டார்.

## ஏவாள் - - ஆதாமுக்குள் எல்லோரும்.

**கே : 263:3: :: கேள்வி (1910) - 3**

"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல" - - இது தாயாகிய ஏவாளை அர்த்தப் படுத்துகிறது என்று நாம் புரிந்துகொள்ளலாமா?

**பதில்:** ஆம், இது தாயாகிய ஏவாளை உள்ளடக்குகிறது என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம் என்று நான் பதிலளிக்கிறேன்; ஏவாள் ஆதாமின் குடும்பத்தில் ஒரு பகுதியாக இருந்தாள் என்ற பார்வையில் அவள் ஆதாமுக்குள் இருந்தாள்; அதாவது, முழு விஷயமும் ஆதாமுக்குள் மையப்படுத்தப்பட்டிருந்தது; மற்றும் தேவன் இதை அவ்வாறே ஏற்படுத்தினார் மற்றும் ஆதாமின் பாவம் மரண நிலைமையைக் கொண்டுவந்தது. ஆதாம் பாவம் செய்திருந்து, மற்றும் ஏவாள் பாவம் செய்திருக்காவிட்டால், ஒருவேளை ஒரு அனுமானத்தை அளிக்க நமக்கு மிகவும் அரிதாகவே சரியானதாக இருக்கும். ஆனால் ஆதாம் பாவம் செய்திருந்தால், என்னுடைய கருத்து இப்படியிருக்கும், அதாவது, ஆதாம் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பான் மற்றும் அவள் அவனுடன் வெளியேற்றப்பட்டிருப்பாள், எனெனில் அவன் சந்ததியின் பிரதிநிதியாக இருந்தான், மற்றும் அவனுடைய மீறுதல் இரண்டு பேர்களின் மீறுதலை அர்த்தப்படுத்தும்; அதாவது, அவள் மீறுதலில் அவனுடன் அவள் ஒரு உடந்தையாளராக எண்ணப்படுவாள்.

## ஏவாள் - - தேவனுடன் அவளுடைய நிலைப்பாடு.

### கே : 264:1: :: கேள்வி (1915 - Z) - 1

தேவனுடன் ஏவாளின் நிலைப்பாடு எதுவாக இருந்தது?

**பதில்:** ஏவாள் ஆதாமின் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்டபடியால், ஆதாமின் சரீரத்தின் ஒரு பகுதி என்பதைத் தவிர, தாயாகிய ஏவாள் தேவனுடன் எந்த நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. சபை தன்னுடைய கர்த்தருடைய பலிக்குத் தேவையானதைத் தானே உண்டாக்கும் விதத்தில், சபை தேவனுடன் எந்த நிலைப்பாட்டிலும் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். வேறு வார்த்தைகளில் சொன்னால், சபை கர்த்தரின் பக்கத்திலிருந்து வந்தது. இரண்டாம் ஆதாம் பரலோக கர்த்தராயிருக்கிறார் - - மரித்தோரிலிருந்து முதற்பேறானவர், நீதிமானாக்குகிறவர், உலகத்துக்கு ஜீவன்-அளிப்பவர். இந்த சுவிசேஷ யுகத்தில், கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதற்கு, தேவன் சபையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார், மற்றும் மணவாட்டி வளர்ச்சியின் செயல்முறையில் இருந்து வருகிறாள். மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, அவள் இரண்டாம் ஏவாளாக இருப்பதற்கு கருதப்படுகிறாள்; மற்றும் இனிவரும் யுகத்தில் அவளுடைய பணி, இரண்டாம் ஆதாமாகிய "வானத்திலிருந்து வந்த கர்த்தரினால்" மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுபவர்களாக, ஆதாமின் சந்ததியினருக்கு தாயாக செயல்படவும், அல்லது அக்கறையுடன் கவனிக்கிறதாகவும் இருக்கும். - - 1 கொரி. 15:45-47.

விழுகையின் பொறுப்பு ஆதாமுக்குள் இருந்தது என்று இந்த. விரித்துரைத்தல் முழுவதும் நமக்குக் காண்பிக்கிறது. தாயாகிய ஏவாள் தான் வஞ்சிக்கப்பட்டவளாக இருந்தாள் மற்றும் மீறுதலில் முதலாவதாக இருந்தாள் என்று பரிசுத்த பவுல் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாகவே பாவம் உலகத்திற்குள் பிரவேசித்தது எனறு அவர் கூடவே சுட்டிக்காட்டுகிறார்; இப்படியாக "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால்", மரணம் எல்லாரின் மேலும் கடந்து வந்தது. பரம்பரை வழியாக, ஆதாமின் விழுகையின் விளைவு அவனுடைய சந்ததியின் மேல் இருந்ததைக் காண்பிக்கிறது. "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதாலும், மற்றும் மரணத்தைக் கொண்டுவந்த பாவம் ஆதாமின் பாவமாக இருந்தது என்பதால், மீட்கும்-பொருள் ஆதாமுக்கு சரிநிகராக இருக்க வேண்டும் மற்றும் ஏவாளுக்கு சரிநிகராக இருப்பதில்லை என்பது தெரிகிறது.

**பலியின் சரீரம்**

பலியாக “ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்.” என்று நாம் படிக்கும் போது, பலிக்காக ஆயத்தம்பண்ணின, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அர்த்தப்படுத்துவதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது. பலிக்காக ஆயத்தப்பண்ணப்பட்ட சரீரம் இயேசுவின் **மனுஷீக சரீரமாக** இருந்தது. இந்த சரீரம் அவருக்கு அற்புதமாக அளிக்கப்பட்டது மற்றும் அது பரிசுத்தமும், குற்றமற்றதும், மாசில்லாததும், பாவிகளுக்கு விலகினதுமாக இருந்தது என்ற பார்வையில் தான் சரீரம் ஆயத்தம்பண்ணப்பட்டது. அவருக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட அப்படிப்பட்ட சரீரத்தை இயேசு மட்டுமே உடையவராய் இருந்தார்.

நம்முடைய கர்த்தர் இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராக தேவனால் நியமிக்கப்பட்டார்; ஆனால் பலியிடும் விதத்தில் அவர் நிழலாகிய ஆரோனின் நிஜமாக இருந்தார் மற்றும் தம்மையே ஒப்புக்கொடுப்பதில் முதன்மையானவராக இருந்தார், மற்றும் அதைத் தொடர்ந்து அவருடைய சீஷர்களை ஏற்றுக்கொண்டார், அவருடைய பலியின் மூலமாக அவர்களை நீதிமான்களாக்கினார் மற்றும் பின்பு அவர் தம்முடைய சொந்த பலியின் பகுதிகளாக, அல்லது அங்கங்களாக அவர்களை அமைத்தார். நிழலில் பிரதான ஆசாரியன் மட்டுமே பாவ நிவாரண நாளின் பாவ நிவாரண பலியைச் செலுத்துவதற்கு நியமிக்கப்பட்டான் என்பது வெளிப்படையாக இருக்கிறது. கீழ்நிலை ஆசாரியர்களுக்கு அப்படிப்பட்ட உரிமை இருந்ததில்லை. ஆகவே கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய நிஜமான கீழ்நிலை ஆசாரியர்கள் தாங்களே பலி செலுத்துவதற்கான தகுதியுள்ளவர்களாக இருக்கிறதில்லை. நம்மால் செய்ய முடிவது எல்லாம் நம்மை மரணத்துக்கு ஒப்படைக்கிறதாக மட்டுமே இருக்கிறது. அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார், தம்முடைய புண்ணியத்தை நம் மேல் சுமத்துகிறார், மற்றும் அவருடைய மாமீக சரீரத்தின் அங்கங்களாக நம்மை எண்ணுகிறார்; பின்பு, கிறிஸ்துவின் மூலமாக, தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால், “தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும்” தேவன் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார், மற்றும் இது சுய-பலியின் பணியை மரணம் வரைக்கும் கூட செயற்படுத்துவதாக இருக்கிறது. ஆனால் இவை எல்லாம் பிரதான ஆசாரியரைப் போன்று பலியிடாமல் இருக்கும் போது, மற்றும் நம்முடைய பெயரில் பிதாவிடம் செலுத்தப்படாத போதும் நடக்கிறது. பிதாவின் செயல்தொடர்பு நம்முடைய பரிந்து பேசுகிறவரிடம் மட்டுமே இருக்கின்றது, மற்றும் நாம் அவருடையவர்களாக இருக்கும் காரணத்தினால், நாம் வெறுமனே ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். பாவநிவாரண பலியின் பாவநிவாரண நாளின் நிழலில் இவை எல்லாம் காண்பிக்கப்படுகிறது. பிரதான ஆசாரியன் தன்னுடைய சொந்த பலியை - - தனக்கும், தன் வீட்டாரின் தனிநபர்களின் பிரதிநிதியாக தன்னைக் குறிக்கிறவனாக - காளையை முதலில் பலியிட்டான். பின்பு பிரதான ஆசாரியன், கீழ்நிலை ஆசாரியர்கள் அல்ல, பிற்பாடு **ஒரு வெள்ளாட்டுக்கடாவை,** அநேக வெள்ளாட்டுக்கடாக்களை அல்ல - கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடாவை பலி செலுத்தினான். இந்த வெள்ளாட்டுக்கடா பலியிடப்பட்டது, கீழ்நிலை ஆசாரியர்களின் பலியாக **அல்ல,** ஆனால் பிரதான ஆசாரியனின் பலியாக செலுத்தப்பட்டது. நிஜத்திலும் அப்படியே இருக்கிறது. இயேசு தம்முடைய சொந்த மாம்சத்தின் ஒரு பகுதியாக நம்மை சுவிகாரம் பண்ணிய போது, அவருடைய அங்கங்களாக அவருடைய புண்ணியத்தை நம் மேல் சுமத்தியதால், நம்முடைய அர்ப்பணிப்பு பிதாவிடம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

## தீமை - - மனுஷனுடைய விழுந்துபோன நிலைமையின் சில தீமைகள்.

### கே : 265:1: :: கேள்வி (1915) - 1

எல்லா ஜீவனும் தேவனிடமிருந்து வருகின்றது என்றால், நோய் கிருமிகள், பூச்சிகள் போன்றவைகளுக்கு நீங்கள் எப்படி விளக்கம் அளிக்க முடியும்?

**பதில்:** மாபெரும் ஜீவன்-அளிப்பவர் மற்றும் அவருடைய ஏற்பாடுகளை அல்லாமல், ஜீவன் எதுவும் இருக்க முடியாது. உலகத்தில் இன்று நமக்கு இருக்கும் நிலைமைகள், தேவன் ஆதாமில் வைத்திருந்த ஏற்பாடுகளாக இருக்கவில்லை. அவர் மனுஷனை தம்முடைய சொந்த சாயலில் சிருஷ்டித்த போது, அவர் ஒவ்வொன்றையும் அவனுக்கு சாதகமாக உண்டாக்கினார், மற்றும்

பூச்சிகள் எதுவும் இல்லாத இடமாக ஏதேன் இருந்தது. கொசுக்களினால் ஆதாம் கடிக்கப்பட்டிருந்ததாக வேதாகமத்தில் ஒரு வார்த்தையும் இல்லை. அப்படியே மற்ற பூச்சிகளும் இல்லை - - அங்கே களைகள் இல்லை. நீங்கள் பார்க்கலாம், களைகள் சாபத்தின் ஒரு பகுதியாக இருந்தன, மற்றும் இந்த காரியங்கள் எல்லாம் மனுஷனுடைய நன்மைக்காக, சந்தேகமின்றி, "உன்நிமித்தம்", உன் நலனுக்காக, கர்த்தரால் இப்போது அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. என் அருமை சகோதரர்களே, தற்காலத்தின் இந்த பல்வேறு இன்னல்கள் மரணத்தின் மாபெரும் சாபத்தை செயற்படுத்த வழிவகுக்கின்றன, மற்றும் இது தேவனுடைய உறவுக்கு வெளியே இருப்பது, அவருடைய பாதுகாக்கும் பராமரிப்பிலிருந்து வெளியே இருப்பது எப்படி இருக்கும் என்பதை அவர்கள் உணரும்படி செய்கின்றன. உலகம் இப்போது தேவனுடைய பாதுகாப்பின் கீழ் இருக்கவில்லை, ஆனால் மனுஷன் ஆதியில் அவருடைய விசேஷித்த பராமரிப்பின் கீழ் இருந்தான். ஆகவே, மேசியாவின் இராஜ்யம் உலகத்தின் கட்டுப்பாட்டை எடுத்துகொள்ளும் போது, ஒவ்வொரு வகையான இந்த பல்வேறு பூச்சிகள் அனைத்தும் அகற்றப்படும் என்பதை நாம் புரிந்து கொள்ளக்கூடியவரகளாக இருக்கிறோம். விரும்பத்தகாத எல்லாம் துடைத்துப் போடப்படும்.

இப்போது இந்த பூச்சிகள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன: நான் முழுமையான, தீர்க்கமான பதிலை அளிக்க முடியாதவனாக இருக்கிறேன், ஆனால் சில அனுமானங்களை அளிப்பேன். ஜலப்பிரளயத்திற்கு முன்னால் நிலவிய நிலைமை, ஜலப்பிரளயத்திற்குப் பிறகு மாற்றமடைந்தது. நீங்கள் சிருஷ்டிப்பின் புகைப்பட-நாடகத்தைப் பாருங்கள்: நோவாவின் குடிமயக்க விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஜலப்பிரளயத்திற்கு முன்பு திராட்சப் பழங்கள் ஒருபோதும் புளிக்கவில்லை. பூமியைச் சூழ்ந்திருந்த விதானம் காரணமாக, தட்ப வெப்ப நிலைகள் மிகவும் வித்தியாசமாக இருந்திருந்தன. ஆகவே திராட்ச ரசம் உறைப்பான சுவை கொண்டதாக இருந்தாலும், இப்படிப்பட்ட மாற்றம் நிகழ்ந்திருந்தது என்பதை உணராமல், நோவா குடிமயக்கத்துக்கு உள்ளானார். ஜலப்பிரளயத்துக்கு முன்னால், இது போன்ற நிலைமை இருந்ததில்லை. அவர் புரிந்துகொண்டிராத ஏதோ ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டார். இப்போது மதுபானங்களின் புளிப்புத்தன்மை மற்றும் அமிலத்தன்மை புதிய வளிமண்டல நிலைமைகளின் வாயிலாக வந்துள்ளது, மற்றும் திராட்ச ரசத்தின் மீது இந்த விளைவை ஏற்படுத்தியுள்ளது. வானிலை அல்லது சுற்றுப்புற சூழ்நிலையின் சில குறிப்பிட்ட நிலைமைகள் உங்களுடைய சொந்த மாம்சத்தைப் பாதிக்கின்றன, உதாரணமாக: உங்களுடைய சதையில் ஒரு காயம் இருந்தால், சில குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ், சீழ்ப்புண்களை உண்டாக்கும் போக்கு உடையதாக இருக்கும், மற்றும் அது விஷமுள்ள உயிருள்ள-கிருமிகளைக் கொண்டு வரும்.

சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களுக்கு, பூச்சிகளையும் நோய்க்கிருமிகளையும் உருவாக்கும் சில வல்லமை அனுமதிக்கப்பட்டிருக்கலாம். எங்களுடைய 'ஆவியுலகம்' (SPIRITISM) என்ற துண்டுப்பிரதி, பக்கம் 79 மற்றும் யாத். 8:6,7ம் வசனங்களைப் பார்க்கவும். இன்று நமக்கு இருக்கும் வியாதிகளில் அநேகம் ஜலப்பிரளயத்துக்கு முன்னால் இருக்கவில்லை என்று நான் கருதுகிறேன். மற்றும் நிச்சயமாக, ஏதேனில் பூச்சிகள் அல்லது நோய்க்கிருமிகள் எதுவும் இருந்ததில்லை. கர்த்தர் இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் எப்படி வெல்வார் என்பதை நான் அறியவில்லை, ஆனால் சாத்தானின் அதிகாரம் அனைத்தும் அகற்றிப்போடப்படும் என்று நாங்கள் நம்புகிறோம், மற்றும் கெடுதியான எதையும் கர்த்தர் அழிப்பார் என்ற நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறோம்.

## விசுவாசம் - ஆயிரவருஷ யுகத்தில் உலகத்தாரினால் செயற்படுத்தப்படுதல்.

### கே : 266:1: :: கேள்வி (1907) - 1

ஆயிரவருஷ யுகத்தில் உலகத்தாரிடம் தேவைப்படக்கூடிய விசுவாசம் எந்த விதத்தில் இருக்கும்?

**பதில்:** நல்லது, விசுவாசம் என்றால் என்ன என்பது பற்றி அதிகமாக அநேக வித்தியாசமான எண்ணங்கள் இருக்கின்ற காரணத்தினால், அதை விளக்குவது மிகவும் கடினமாக இருக்கிறது. இப்பொழுது, நீங்கள் பார்க்காத விஷயங்களில் மற்றும் நீங்கள் அறியாத விஷயங்களில், மற்றும் தேவனுடைய திருவசனத்தில் அவர் வெறுமனே நமக்கு வெளிப்படுத்தியிருக்கின்ற விஷயங்களில், ஒரு நம்பிக்கை என்ற அர்த்தத்தில் விசுவாசத்தை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்றால், அந்த வகையான விசுவாசம் ஆயிரவருஷ யுகத்தில் உண்மையில் மிகவும் வரம்புக்குட்பட்டதாக இருக்கும். ஏன்? ஏனெனில் எல்லா காரியங்களும் மிகவும் தெளிவாகவும், மற்றும் பகிரங்கமாகவும் செய்யப்படும் என்ற காரணத்தினால், இது விசுவாசத்தைச் சேர்ந்ததாக இருக்காது. ஆனால் அப்போது இது காட்சியாக இருக்கும். தேவன் ஒரு தனித்துவமான ஜனங்களைத் தேர்வுசெய்து கொண்டு இருக்கின்றார் மற்றும் இவர்கள் பார்வையில் இல்லாமல், விசுவாசத்தினால் நடக்க முடிகிறவர்களாக, கேட்கிறதற்கு செவியும் விசுவாசக் கண்ணும் உடையவர்களாக இருக்கிறவர்களை அவர் சோதித்துக்கொண்டு இருக்கிறார் என்ற காரணத்தால், இது இப்பொழுது விசுவாசமாக இருக்கின்றது. ஆகவே, நாம் நெருக்கமான பாதையில் நடக்கிறோம், மற்றும் நம்முடைய பாதையில் வெளிச்சம் இருக்கிறது, மற்றும் காலப்போக்கில், நாம் இந்த காலடிகளை எடுத்துவைக்கும்போது, வெறுமனே வெளிச்சமாக்கப்படுகிற, மற்றும் இருள் கொண்ட பாதைக்குப் பதிலாக, நீதியின் சூரியன் தம்முடைய ஒளிக்கதிர்களில் குணமாக் குதலுடன் எழும்புவார் என்று அவர் அறிக்கையிடுகிறார். சூரிய-ஒளி பிரகாசிக்கும் போது மனுஷன் விளக்கை சுமந்து செல்லும் தேவை இருக்காது. இப்பொழுது, தேவனுடைய திருவசனத்தின் விளக்கு மற்றும் இதைச் சுமந்து செல்வது, இதன் மூலமாக வருகின்ற நமது விசுவாசத்தைக் குறிக்கின்றது. ஆனால் ஆயிரவருஷ யுகத்தில் இதனுடைய தேவை அவர்களுக்கு இருக்காது, ஏனெனில் எல்லா இடங்களிலும் அறிவு இருக்கும் மற்றும் விசுவாசத்திற்குப் பதிலாக, அறிவு தேவைப்படும், மற்றும் தேவனையும் மற்றும் அவருடைய திட்டத்தையும் பற்றி ஜனங்கள் அறிந்துகொள்ளும் சாத்தியம் இருக்கப்போகிறது. விசுவாசத்தை விட அறிவு சிறந்ததா? ஆம், உண்மை. இதை நீங்கள் பெற முடிந்தால், முற்றிலுமான அறிவை நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பமாட்டீர்களா? ஆம், உண்மை தான். ஆனால் இப்பொழுது நீங்கள் விசுவாசத்தினால் நடக்கிறீர்கள், அப்படித் தானே. ஆம். இந்த முறையில் தான் இப்போது நாம் செய்ய வேண்டும் என்று அவர் நம்மை விரும்புகிறார் என்று தேவன் கூறுகிறார், மற்றும் அவர் இப்போது அதை விட அதிகமான எதையும் வழங்கமாட்டார். அவர் நம்முடைய விசுவாசத்திற்கு ஒரு அடிப்படையாக இருக்கும் போதுமான அறிவை நமக்கு அளிக்கிறார் மற்றும் விசுவாசத்திற்கு அடிப்படையாக இருப்பதைக் காட்டிலும் வலிமையுள்ள எதையும் அவர் நமக்கு அளிக்கமாட்டார்.

## விசுவாசம் - தேவனுடைய ஈவு.

### கே : 266:2: :: கேள்வி (1910 Z) - 2

விசுவாசம் தேவனுடைய ஈவாக இருக்கின்றதா?

**பதில்:** "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு." கிருபை என்பது தேவனுடைய தயவு என்று அப்போஸ்தலர் தெரிவிப்பதாகத் தோன்றுகிறது. உண்மையில், "கிருபை" என்ற வார்த்தை **வரம்** என்பதின் முக்கியத்துவதை உடையதாக இருக்கிறது, அல்லது, அது 'தயவு' என்பதாக இருக்கிறது. நம்முடைய இரட்சிப்பு தேவனுடைய தயவாக இருக்கிறது தேவனுடைய பங்கில் அவசியம் ஏதும் இருக்கவில்லை. நீதிக்கு இது தேவைப்பட்டது என்ற காரணத்திற்காக அல்ல, அவரிடமிருந்து இதை எவராவது கோரியிருக்கக்கூடும் என்ற காரணத்திற்காக அல்ல, ஆனால் அவருடைய சொந்த இரக்கமுள்ள, கிருபை நிறைந்த ஏற்பாடாக இருக்கின்றது, மற்றும் நம்முடைய விஷயத்தில் இந்த இரட்சிப்பு விசுவாசத்தின் மூலமாக இருக்கிறது. மற்றும் இந்த விசுவாசம், வழக்கமான முறையின்படி, நம்மால் உண்டானாதாக இருக்கவில்லை. ஆகவே, "இது நம்மால் உண்டானதல்லை" என்று அப்போஸ்தலர் கூறும்போது, அவர் விசுவாசத்தைக் குறித்தே சொல்கிறார் என்று நாம் நினைக்கிறோம். இருப்பினும், விசுவாசம், மிகவும் முக்கியமான

பார்வையில், தனிப்பட்டவரைச் சார்ந்ததாக இருக்கிறது. “தேவனிடத்தில் விசுவாசமாயிருக்க வேண்டும்” என்று நாம் வலியுறுத்தப்படுகிறோம். ஒருவர் மற்றவருக்காக விசுவாசமாயிருக்க முடியாது. தேவனிடத்தில் தனிநபர் தன்னுடைய சொந்த விசுவாசத்தை கண்டிப்பாக செயற்படுத்த வேண்டும்; இருப்பினும் இந்த உரைப்பகுதியில், நம்முடைய விசுவாசம் தேவனுடையதாக இருக்கிறது என்று நாம் கூறப்படுகிறோம்.

எந்த உணர்வில், இது தேவனுடையதாக இருக்க முடியும்? ஒவ்வொரு நன்மையும் மற்றும் ஒவ்வொரு பூரணமான ஈவும் பிதாவிடமிருந்து வருகின்றது என்ற உணர்வில் இது தேவனுடையதாக இருக்கின்றது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். நம்முடைய விசுவாசம் கண்டிப்பாக அடித்தளம் கொண்டதாக இருக்க வேண்டும், ஒரு அடிப்படை கொண்டதாக இருக்க வேண்டும். இதில் விசுவாசம் கொள்வதற்கு, விஷயத்தின் அறிவை நாம் உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் தேவனுடைய அறிவு உடையவர்களாக இருக்கிறோம், மற்றும் நமக்கு ஒரு கிருபையாக, அல்லது தயவாக வழங்கப்பட்ட இந்த அறிவு, விசுவாசத்தை செயற்படுவதற்கு நம்மை திறனுள்ளவர்களாக்கக்கூடிய இடத்திற்கு நம்மை கொண்டுசெல்கிறது. இந்த விசுவாசம் பெரும் அளவில் அறிவின் மேல் அமையப்பெறுகிறது. அறிவு தேவனுடைய குணத்தை வெளிப்படுத்துகிறது; தேவனுடைய நோக்கங்கள் தொடர்பான சில குறிப்பிட்ட உண்மைகளை தெய்வீக வெளிப்படுத்தல் நமக்கு அறியும்படிச் செய்கிறது. இப்படியாகக் கோடிட்டுக் காண்பிக்கப்படுகிற நோக்கங்கள் தேவனுடைய குணத்துடன் இணக்கமாயிருப்பதை நாம் பார்க்கிறோம், மற்றும் இது ஒருவரை வாக்குத்தத்தங்களில் நம்பிக்கைக் கொள்ளும் திறனுடையவராக்குகிறது, மற்றும் அவைகளில் நம்பிக்கைக் கொண்டு, அவைகளின் மேல் நாம் செயல்படும் திறனுடையவர்களாகிறோம்; மற்றும் இதுவே விசுவாசம்.

ஆகவே, நம்முடைய விசுவாசம், இது நம்மைச் சார்ந்ததாக இருக்கிறது என்ற பார்வையில், நாம் இதை கண்டிப்பாக செயற்படுத்த வேண்டும்; இது தேவனைச் சார்ந்தது என்ற பார்வையில், அவர் தேவையான கூறுகளை அளிக்கிறார், மற்றும் இதன் வாயிலாக விசுவாசம் ஒருங்கிணைக்கப்படுகிறது.

## விசுவாசம் - கர்த்தருடைய சித்தத்தை உட்கிரகித்தல்.

### கே : 267:1: :: கேள்வி (1912) - 1

எல்லா சூழ்நிலைகளிலும், நான் கர்த்தருடைய சித்தத்தை எப்போதும் கிரகிக்க முடியவில்லை. (பாஸ்டர் ரசல், வேறு எவராவது அப்படி இருக்க முடியவில்லையா?} இது என்னுடைய இருதய நிலைமையில் ஏதோ தவறு இருப்பதற்கான அறிகுறியாக இருக்குமா?

**பதில்:** இல்லை. காண்கிறதினால் நடக்க வேண்டும் மற்றும் அவருடைய சித்தத்தைக் கிரகிப்பதில் கஷ்டம் இருக்கக்கூடாது என்று கர்த்தர் நம்மிடத்தில் விரும்புகிறதில்லை. நம்முடைய கீழ்ப்படிதல் மற்றும் விடாமுயற்சியின் சோதனை இருக்கும் என்ற விதத்திலான வழியில் தான் தேவன் விஷயத்தை நமக்கு முன்வைக்கிறார் - நாம் விசுவாசத்தினால் நடக்கிறவர்களாக இருக்கிறோம் மற்றும் காண்கிறதினால் அல்ல. எப்படி?

இதை எப்படிச் செய்ய வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒவ்வொரு நாளும், நிச்சயமாக, மற்றும் குறிப்பிட்ட எல்லா விஷயங்களிலும், நான் எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் கொண்டுபோக முயற்சிக்கிறேன். இது தொடர்பான கர்த்தருடைய சித்தத்தை அறிய நாடாமல், நான் எதையும் மேற்கொள்ள விரும்பமாட்டேன். ஆனால், நான் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளும் திறன் கொண்டிருப்பதில்லை. தேவனுடைய சித்தத்தை அறியும் அற்புதமான நுண்ணறிவை நான் பெற்றிருக்கவில்லை. என்னுடைய கணிப்பு போதுமானதாக இருக்கிறதில்லை. நான் அந்த வழியில் என்னுடைய மனதிற்கு தொல்லை கொடுக்கமாட்டேன், இது என் மனதின் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. நான் இதை கர்த்தரிடம் விட்டு விடுகிறேன். இந்த வழியில், அல்லது அந்த வழியில் நான் போக வேண்டும் என்று அவர்

விரும்பினால், அவர் அந்த போக்கை வழிகாட்ட முடியும். அப்படியே, நாளின் துவக்கத்தில், நான் கூறுகிறேன், கர்த்தரே, நான் இங்கே இருக்கிறேன் என்று சொன்னால், என்னுடைய மனதும், இருதயமும் திருப்தி அடைகிறது.; மற்றொரு நாளின் சிலாக்கியத்திற்காக நான் உமக்கு நன்றி கூறுகிறேன் மற்றும் சத்தியத்திற்கும், சகோதரர்களுக்கும் ஊழியம் செய்கிற முழுமையான வாய்ப்புக்கள் என்னுடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. என்னுடைய எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் நடத்தை எல்லாவற்றையும் நான் உமக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்கு, வழிகாட்ட வேண்டும் என்று நான் உம்மை வேண்டுகிறேன். பிறகு நான் முன் செல்வேன் மற்றும் என்னுடைய சிறந்த கணிப்பை உபயோகப்படுத்துவேன். ஒரு வழியில், அல்லது மற்றதில் என்னை வழிநடத்துவதற்கு அவர் விரும்பினால், அது அவருடைய பங்காக இருக்கிறது, என்னுடைய பங்கு அல்ல. நான் அவருடைய வழிகாட்டுதலைக் கோரியிருக்கிறேன். அவருடைய சித்தத்தை அறியவும் மற்றும் எப்படியும் செய்யவும் என்னுடைய கண் எச்சரிக்கையாயிருக்கும். அவருடைய மகிமைக்காகவும் மற்றும் என்னுடைய பயனுக்காகவும் எல்லா காரியங்களையும் ஒதுக்கித்தள்ள திறனுள்ளவராகவும், விருப்பமுள்ளவராகவும் தேவன் இருக்கிறார் என்பதை அறிந்து, நான் இந்த நுகத்தில் இளைப்பாறுகிறேன்.

சில ஜனங்கள் தங்களுடைய காரியங்களுக்குக் கர்த்தரிடம் போகக்கூடிய ஒரு குறிப்பிட்ட வழியை, நான் பிள்ளையாயிருக்கும் போது கவனித்திருக்கிறேன். அவர்கள் தங்களுடைய வேதாகமங்களை வரிசைமுறையின்றி திறப்பார்கள் மற்றும் அவர்களின் கட்டைவிரலுக்கு எந்த வசனம் அடுத்ததாக இருக்கின்றதோ, அது தான் கர்த்தருடைய செய்தி என்று அவர்கள் கூறுவார்கள் மற்றும் அதையே அவர்கள் பின்பற்றுவார்கள். அது குறித்து நான் தவறு கண்டுபிடிக்கிறதில்லை. அவர்கள் சில சமயங்களில் திறக்கக்கக்கூடிய உரைப்பகுதிகள் குறிப்பிடத்தக்கவைகளாகத் தோன்றின மற்றும் அவர்கள் ஜெபங்களுக்கு அப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க பதில்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், நான் கூறினேன், கர்த்தரே, நான் எண்ணுவதற்கு உண்மையாக வருந்துகிறேன், மற்றும் இது உமக்கு விருப்பமாயிருந்தால், இந்த முறையைக் காட்டிலும், மாறாக, என்னுடைய கணிப்பினால் நான் வழிகாட்டப்பட வேண்டும், ஏனெனில் இதை ஏற்றுக்கொள்ளும் திறனுடையதாக என்னுடைய மனம் தோன்றவில்லை. அந்த ஜெபத்தில் கர்த்தர் என்னுடையதை ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. திருவசனத்தைக் கற்பதில், எல்லா வசனங்களையும் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு பாடத்திலும் தேவனுடைய செயல்தொடர்புகளின் கொள்கைகள் மற்றும் போதனைகளைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதில், நான் கர்த்தருடைய வழிகாட்டுதலை நாடுவேன். ஒவ்வொரு விஷயத்திலும் சரியானது சரியானதாகவே இருக்கின்றது என்பதற்கு நிச்சயமான காரணம் இருக்கிறது, மற்றும் நான் இதை அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறேன். தேவன் ஒரு விஷயத்தை இந்த வழியில், அல்லது அந்த வழியில் இருக்க தேவன் விரும்புகிறார் - - நான் அவருடைய ஞானத்தை சந்தேகப்படுகிறேன் என்ற அர்த்தத்தில் அல்ல, ஆனால் அந்த விதத்தில் நான் தெய்வீக நியமங்களின் ஆவிக்குள்ளாக பிரவேசிக்க முடியும். நான் மற்ற வகையில் பெறுவதை விட, நான் மிக அதிகமான சந்தோஷத்தைப் பெறுகிறேன். அந்த மற்றொரு வழியில் தேவன், பிசாசு அல்லது தற்செயல் நிகழ்வினால் வேதாகமம் திறக்கிறது என்பதை நான் அறிய முடியுமா? நான் வேதாகம போதனையை மிக அதிகமாக விரும்புகிறேன் மற்றும் இதை நம்புகிறேன், நான் எல்லாவற்றையும் தேவனிடம் ஒப்படைக்கிறேன், என்னுடைய கணிப்புக்கும், பகுத்தறிவுக்கும் வழிகாட்டும்படி அவரை வேண்டுகிறேன் மற்றும் பிறகு வெளியே செல்கிறேன் மற்றும் அந்த கணிப்பு மற்றும் பகுத்தறிவை எனக்குத் தெரிந்த சிறந்த முறையில் பயன்படுத்துகிறேன். பிற்பாடு மிகச் சிறந்ததாய் இல்லாததாகத் தோன்றினதை ஏதோ சில வழியில் என்னுடைய கணிப்பைப் பயன்படுத்துவதற்கு கர்த்தர் என்னை அனுமதிக்கிறார்; ஆனால், அப்படி இருக்குமானால், சில பெரிதான ஆசீர்வாதம் அல்லது அறிவுறுத்தலைக் கொண்டு வருவதற்கு தேவன் இதைப் பயன்படுத்துவார். நம்முடைய கணிப்பு, நிச்சயமாக, நம்முடைய பிதாவின் திருவசனத்தின் நம்முடைய புரிந்துகொள்ளுதலையும் மற்றும் அவருடைய கிருபையான வழிநடத்துதல்களையும் அர்த்தப்படுத்துகிறது. இப்படிச் செய்வது, எல்லா காரியங்களும் நம்முடைய நன்மைக்காக ஒருங்கிணைந்து செய்ல்படுகின்றன என்பதை நாம் அறிகிறோம்.

## விழுந்துபோன மனுஷர்கள் - யேகோவாவுடன் உடன்படிக்கை பண்ண இயலாது.

### கே : 268:1: :: கேள்வி (1913) - 1

விழுந்துபோன மனுஷன் தேவனுடைய உடன்படிக்கைக்குள் பிரவேசிக்க முடியாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். எந்த அடிப்படையின் மேல் தேவன் இஸ்ரயேலுடன் தேவன் உடன்படிக்கை செய்தார்? இப்படிப்பட்டக் கட்டுப்பாடு, விழுந்துபோனவராகிய மோசேக்குக் கூட உரித்தாகுமா?

**பதில்:** மோசே பூரணமற்றவராக இருந்தார், ஏனெனில் பூரண மனுஷன் எவரும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை என்று வேதாகமம் கூறுகிறது. தேவன் விழுந்துபோன மனுஷருடன் உடன்படிக்கை செய்ய முடியாது என்று நாம் சொல்லும்போது, அவரால் இயலாது என்ற எண்ணத்தில் அல்ல, ஆனால் அவர் செய்யமாட்டார். விழுந்துபோன மனுஷனுடன் உடன்படிக்கை செய்வது பயனற்ற விஷயமாக இருக்கும், ஏனெனில் அவர்கள் இதை கடைபிடிக்க முடியாது. இஸ்ரயேலின் விஷயத்தில், நான் ஆபிரகாமின் வித்தை ஆசீர்வதிக்கப் போகிறேன் என்று தேவன் கூறினார், மற்றும் நீங்கள் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியினராக இருக்கிறீர்கள். என்னுடைய ஜனங்களாக நான் உங்களை எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் விரும்புகிறீர்களா? அப்போது, நீங்கள் அப்படிச் செய்தால், நீங்கள் அப்படி நினைத்தால், இதை முயற்சி செய்வதற்கு நான் உங்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பேன். நான் உங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பேன், அதை நீங்கள் கடைபிடிக்க முடிந்தால், இதைக் கைக்கொள்ளுவதின் காரணமாக, நீங்கள் பூரணமுள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்று நான் சம்மதிக்கிறேன, மற்றும் நீங்கள் பூரணமுள்ளவர்களாயிருந்தால், நீங்கள் இதைத் தொடர்ச்சியாகக் கைக்கொள்ளும் திறனுள்ளவர்களாக இருக்க முடியும், மற்றும் எக்காலத்திலும் ஜீவனோடிருப்பீர்கள், ஆனால் நீங்கள் தவறிவிட்டால், நீங்கள் சாவீர்கள். ஆகவே ஒரு தற்காலிக ஒப்பந்தம், தற்போதைக்கான ஒரு ஒப்பந்தம் இருந்தது. அதைச் செய்வதற்கு தேவன் உரிமையுடையவராக இருந்தார். மோசே பூரணமுள்ளவராக இருந்தார் என்று இல்லை. நீங்கள் இதை முயற்சி செய்ய விரும்பினால், நீங்கள் பூரணமுள்ளவர்களாக இருந்தது போன்று நான் உங்களை நடத்துவேன். நிஜமான பலிகளை அடையாளப்படுவதற்கு நான் உங்களுக்கு பலிகளைக் கொடுப்பேன், வருஷந்தோறும் செலுத்தப்படும் இவைகள் உங்களை நிழலாக மூடுகின்றன; நீங்கள் ஒரு வருஷத்திற்கு நீதிமான்களாக இருந்ததைப் போன்று எண்ணப்படுகிறீர்கள் மற்றும் அந்த வருஷத்தில் என்னுடைய நியாயப்பிரமாணத்தை நீங்கள் எப்படிக் கைக்கொள்ள முடியும் என்பதை நீங்கள் எனக்கு காண்பிக்கலாம். நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடிந்தால், நான் மீதியான அனைத்தையும் சரிபண்ணுவேன்.

## விழுந்து போகுதல் - ஒருதரம் பிரகாசிக்கப்பட்ட பின்பு.

### கே : 268:2: :: கேள்வி (1907) - 1

ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டு, பரம ஈவை ருசிபார்த்து, பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறவர்களில் எவரேனும் விழுந்து போனால், கிரீடத்தைப் பெறுவதில் அவர்களின் தோல்வி இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்துமா? அல்லது திரள்கூட்டத்தாரின் மத்தியில் ஒரு இடம் காணப்படுவதற்கான வாய்ப்பு இருக்குமா?

**பதில்:** அந்த கேள்விக்கு பதிலளிக்கும் திறமையுள்ளவராக எவரும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இது நம்முடைய ஆழத்திற்கு அப்பாற்பட்டது. தேவனிடத்தில், அல்லது நீதியின் பேரில் இன்னும் அன்புள்ளவர்களுக்கான சான்றினைக் கொடுக்கும் எவர் மீதும் தீர்ப்பளிப்பதற்கு நாம் பயப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் சிலருக்குப் பயப்படாமல் இருக்கலாம் என்று நாம் அர்த்தப்படுத்துகிறதில்லை. அப்போஸ்தலர் கூறும்விதமாக, நாம்

பயப்பட வேண்டும், மற்றும் அவர்களை அக்கினியிலிருந்து இழுப்பதற்குப் பாடுபட வேண்டும் - - பரீட்சைகள் மற்றும் சோதனைகளின் இடங்களிலிருந்து அவர்களை இழுத்துவிட வேண்டும், மற்றும் எதிராளியானவனின் கண்ணியிலிருந்து மீட்கப் பாடுபட வேண்டும். அந்த பயம் போதுமான அளவு ஏற்றதாக இருக்கிறது, ஆனால் அப்படிப்பட்ட ஒருவர் கர்த்தரால் கைவிடப்பட்டிருக்கிறவராகவும், மற்றும் அவர் இரண்டாம் மரணத்திற்குத் தண்டிக்கப் பட்டிருக்கிறவராகவும் இருக்கிறார் என்று நாம் முடிவு செய்வது, தீர்ப்பளிப்பது நம்முடையதாக இல்லை, மற்றும் நாம் மற்றவர்கள் மேல் தீர்ப்பு அளிப்பதை தவிர்க்க நாடுவதற்கு நாம் நன்கு செயல்பட வேண்டும்.

## பஞ்சம் - -ஆமோஸ் 8:11,12ம் வசனங்களைப் பிரயோகப்படுத்துதல்.

### கே : 269:1: :: கேள்வி (1909) - 1

"இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந் தொடங்கி, மறு சமுத்திரமட்டும், வடதிசைதொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள்." தயவுசெய்து விளக்கவும் மற்றும் இந்த வார்த்தைகளை பொருந்துமாறு பிரயோகம்பண்ணவும்.

**பதில்:** நல்லது, முதலாவது, இந்த வார்த்தைகள் பிரத்தியேகமாக யூதர்களுக்கு எழுதப்பட்டன, மற்றும் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அவர்கள் ஒரு தீர்க்கதரிசியோ, அல்லது போதகரோ இல்லாமல் இருந்தார்கள் மற்றும் அவர்கள் மிகவும் குருடாக்கப்பட்டிருந்து, போதகரே இல்லாமல் இருந்தார்கள், மற்றும் பெருமளவில் அநேக யூதர்கள் கர்த்தரைத் தேடினார்கள், ஆனால் அவர்கள் கர்த்தராக அவரைப் பார்க்க முடியாமல் இருந்தார்கள் மற்றும் ஐசுவரியவான் தண்ணீர் துளிக்காகக் கெஞ்சியது உவமையில் அடையாளப்படுத்தப்பட்டது. தேவனுடைய வல்லமையான கிரியைகள் நிறைவேற்றப்படுவதற்காக, அவர்கள் அந்த நிலைமையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இஸ்ரயேல் ஜாதியே மிகவும் ஆச்சரியமான ஒன்றாக இருக்கிறது. உலகத்தில் இன்னும் ஆபிரகாமின் வித்தாகவும் மற்றும் பங்காகவும் இருக்கிற சிலரைப் பற்றி நினைக்கையில், இது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது; எல்லா ஜாதிகளும் கலந்திருக்கின்றன. ஆனால் யூதர்கள் தனிப்பட்ட இயல்பு கொண்டவர்களாக இருக்கின்றனர். ஆகவே, தேவன் அவர்களுடனான செயல்தொடர்புகளில் அவர் பின்னர் செய்யப்போகிறதை காண்பிக்க முடியும். அவர்கள் எவ்வளவு காலத்திற்கு பசியுடனும், தாகத்துடனும் இருப்பார்கள் என்பதை நான் அறியவில்லை. சமீபத்தில் நான் யூதர்களுடன் பெற்ற சில அனுபவங்களை நான் உங்களுக்கு கண்டிப்பாகச் சொல்ல வேண்டும். நான் கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒரு சாதாரண மேல்உடுப்பை (coat) விலைக்கு வாங்கினேன் மற்றும் இதை எனக்கு விற்ற மனுஷன் ஒரு யூதனாயிருந்தார், மற்றும் நான் அதை வாங்கிய பின்பு, அவர் கூறினார், "நான் உங்களுடைய பிரசங்கங்களை ஒவ்வொரு திங்கட்கிழமை காலையில் வாசிப்பேன் மற்றும் நான் அவைகளில் மகிழ்ச்சி அடைகிறேன், நான் அவைகளை ஒரு வருஷத்திற்கு மேலாக வாசித்து வருகிறேன்."

பின்னர், நான் பிட்ஸ்பெர்க் நகரத்தின் வீதியில் ஒரு பண்பாளரை சந்தித்தேன்; அவர் ஒரு எபிரேயன், மற்றும் அவர் கூறினார், "திரு. ரசல், நான் உங்களைக் கவனித்து வருகிறேன், நான் செய்தித்தாளில் உங்களுடைய பிரசங்கங்களை வாசிக்கிறேன்."

யூதர்கள் பசியாக இருக்கிறார்கள் மற்றும் விளிம்பைச் சுற்றி சிறுக சிறுக கடிக்கிறார்கள், ஆனால் அவர்கள் இன்னும் கொஞ்சக் காலத்திற்கு காத்திருக்க வேண்டும்.

## பஞ்சம் - - இது இரண்டு பிரயோகங்களைக் கொண்டதாக இருக்கலாம்.

### கே : 269:2: :: கேள்வி (1912 - Z) - 2

“இதோ, சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமிலிருந்தும் யூதாவிலிருந்தும் சகலவிதமான ஆதரவுகளாகிய அப்பமென்கிற எல்லா ஆதரவையும், தண்ணீரென்கிற எல்லா ஆதரவையும் - விலக்குவார்.” (ஏசாயா 3:1.) இதற்கு என்ன அர்த்தம்?

**பதில்:** ஒரு பஞ்சம் யூதேயாவின் மேல் வந்தது. ஜனங்கள் புசிக்க அல்லது குடிக்க போதுமானவற்றைக் கொண்டிருக்கவில்லை. ஆகார் இஸ்மவேலை சாவதற்குக் கீழே கிடத்திய போது, அந்த நேரத்தில் அவன் இருந்த அதே நிலைமையைப் போன்று, அவர்கள் இன்னும் இருக்கிறார்கள். சுவிசேஷ யுகத்தில் ஏழ்மையான யூதர்கள் பட்டினியாக இருந்து வருகிறார்கள். அவர்கள் தேவனுடன் எந்தவிதமான தொடர்பின்றி இருந்து வருகிறார்கள்.

:மேற்கண்ட உரைப்பகுதி எடுக்கப்பட்ட ஆவியில் ஏவப்பட்ட எழுத்துக்களை எழுதிய அதே தீர்க்கதரிசி வேறொரு வகுப்பாரைப் பற்றி நமக்குச் சொல்கிறார், “அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாகக் கிடைக்கும்.” அவர்கள் நன்கு பராமரிக்கப்படுவார்கள், நன்கு பாதுகாக்கப்படுவார்கள், மற்றும் அவர்கள் அப்பம் மற்றும் தண்ணீர் இரண்டையும் உடையவர்களாய் இருப்பார்கள். இந்த உரைப்பகுதி எருசலேமின் அழிவின் காலத்தில் இருந்த யூதர்களுக்கு பிரயோகப்படுத்தப்படலாம், மற்றும் அந்த சமயத்திலிருந்து, கர்த்தரிடத்தில் தங்களுடைய நம்பிக்கையை வைத்திருக்கிற யூதர்கள் எவருக்கும், மற்றவர்களுக்கும் இந்த உரைப்பகுதியைப் பிரயோகப்படுத்தலாம். அவர்களுடைய ஜீவியங்களை வலுப்படுத்துவதற்கு தேவைப்பட்டவைகளை கர்த்தர் அளித்திருக்கிறார். இன்று நாம் நம்மைப் பற்றிக் கவனிக்கையில், மாம்சீக இஸ்ரயேலர்களில் அநேகர் பசியுடனும் தாகத்துடனும் இருப்பதை நாம் காண்கிறோம். அவர்கள் நன்கு போஷிக்கப்படுகிறார்கள் என்று தங்களை எண்ணிக்கொள்வதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள்; அவர்கள் ஏழ்மையாகவும், நிர்வாணமாகவும், போஷிக்கப்படாதவர்களாகவும் மற்றும் குருடர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அவர்களில் பெரும்பான்மையினர் உணருகிறதில்லை. அவர்களுடைய அப்பம் மற்றும் தண்ணீர் நிச்சயமாகக் கிடைக்கும். “உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்”; “சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிப்பார்.

## பிதா - - பரலோக பிதா தம்முடைய பிள்ளைகளின் பேரில் கொண்டுள்ள அக்கறை.

### கே : 270:1: :: கேள்வி (1909) - 1

தயவுசெய்து மத். 18:10ம் வசனத்தை விளக்கவும் “இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.”

**பதில்:** திரைக்கு அப்பால் உள்ள நிலைமைகள் திரைக்கு இந்தப் பக்கத்தில் இருக்கும் நிலைமைகளிலிருந்து மிகவும் வித்தியாசமாக இருக்கும் மற்றும் அந்த நிலைமைகளை விளக்குவது கடினமாக இருக்கும். நம்முடைய கர்த்தர் நிக்கொதேமுடன் கூறினார், “பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லை. பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?” அவர் அவனிடம் பரலோக காரியங்களை அதிகம் சொல்லவில்லை. இந்த விஷயத்தில் நான் புரிந்துகொள்ளும் எண்ணமாக அனுமானிப்பது என்னவெனில், நம்முடைய பரலோக பிதாவிடம் ஜெபம்பண்ணும்போது, அவருடைய பிள்ளகளில் பெலவீனமானவர்கள் மற்றும் மிகவும் அறியாமையுள்ளவர்களின் எல்லா காரியங்களில் அவருடைய ஜாக்கிரதையான கவனிப்பை நாம் உணருகிறவர்களாக இருக்கிறோம். அவர்கள் அவருடையவராக இருக்கிறார்கள் என்றால், அது அவர்கள் ஒவ்வொருவரின் மீதும் கிருபையான பராமரிப்பு இருக்கிறது என்பதை அர்த்தப்படுத்துகிறது.

அவருடைய தூதர்கள் அவருடைய சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்பதற்கான அனுமானம், அவர் எப்போதும் அவர்களுடைய செய்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. அவர் செவிகொடுப்பதற்கும், கவனம் அளிப்பதற்கும் எப்போதும் தயாராக இருக்கிறார் மற்றும் இது அவருடைய சிறியவர்களில் ஒவ்வொருவருக்கும் சார்ந்ததாக இருக்கிறது. இந்த வேத வாக்கியத்தின் அடிப்படையில், தேவனுடைய ஒவ்வொரு தனிப்பட்ட பிள்ளைக்கு, அந்த பிள்ளையை விசேஷமாகக் கவனித்துக்கொள்ளுகிற தனி பாதுகாவலராக தூதர் இருக்கிறார் என்ற எண்ணம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு கோட்பாடு என்று நான் கூறுகிறேன், மற்றும் இது சரியானதாக இருக்கிறது என்பதை நான் அறியவில்லை, ஆனால் ஜீவனுள்ள ஆவிக்குரிய சிருஷ்டி நமக்காக இடையில் இருப்பவரும் மற்றும் நம்மை பாதுகாப்பவராகவும் இருக்கலாம், அல்லது தேவனுடைய தாக்கங்கள் அல்லது வல்லமைகளாகவும் இருக்கலாம், இது உங்களுக்கும் எனக்கும் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறதில்லை, ஏனெனில் நம்மை பாதுகாப்பதற்கு பயன்படுத்த தேவன் விருப்பப்படுகிற எதுவும், நாம் பாதுகாப்பை உடையவர்களாக இருக்கிறோம் மற்றும் நாம் தேவனுடன் ஐக்கியமாய் இருக்கிறோம் என்று நாம் உறுதிப்படுத்தப்பட்டவர்களாக இருக்கும் வரைக்கும், அது நமக்கு எந்த வித்தியாசத்தையும் உண்டாக்குகிறதில்லை

## பயம் - - அன்பு பயத்தை எந்த வகையில் புறம்பாக்கிப் போடுகிறது?

## கே : 270:2: :: கேள்வி (1912) - 2

"அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல." என்ன பயம் இங்கே குறிப்பிடப்படுகிறது, மற்றும் பூரண அன்பு பயத்தை எப்படி புறம்பே தள்ளுகிறது?

**பதில்:** பயம் என்பது நிச்சயமற்ற தன்மையியினால் பொதுவாகப் பிறக்கிற மனதின் பண்பாக இருக்கின்றது. குறிப்பிட்ட சில விஷயங்களுக்கு நாம் கண்டிப்பாக பயப்பட வேண்டும் மற்றும் சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு நாம் பயப்படத் தேவை இல்லை. எதிராளியானவன் பாவ நிலைமையை, நம்முடைய விழுந்து போன நிலைமையை சாதகமாக எடுத்துக்கொள்வதாகத் தோன்றுகிறது, மற்றும் நம்முடைய பரலோக பிதாவிடம் நாம் பயப்படும்படி செய்துவிடுகிறான்; ஏனெனில் நாம் பயப்படுகிற எவரையும் விட்டு தூரமாய் நாம் விலகியிருப்போம். சுபாவத்தின்படி நாம் எல்லோரும் பாவிகளாக இருக்கிறோம் என்பதை நாமெல்லாரும் உணருகிறோம். நாம் இதை உள்ளுணர்வினால் அறிகிறதாகத் தோன்றுகிறது மற்றும் இயல்பாகவே பயம் உடையவர்களாக இருக்கிறோம். நீ பாவியாக இருக்கிறாய் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. நீ பாவியாகப் இருக்கிறாய் மற்றும் பாவத்திற்கு தண்டனை இருக்கிறது. பயம் வருகிறது - - அந்த தண்டனை எந்த மாதிரி இருக்கும் மற்றும் அது எவ்வளவு கடுமையாக இருக்கும்? சாத்தான் தன்னுடைய பல்வேறு கோட்பாடுகளின் மூலமாக, நமக்கு தேவனைப் பற்றிய அச்சம் அல்லது பயம் மற்றும் சித்திரவதையை அளிக்க முயற்சிப்பான். தேவன் அநீதியுள்ளவராக, பாவி மற்றும் பாவியுடன் அவருடைய செயல்தொடர்புகளில் மிகவும் கடுமையானவர் என்று நம்முடைய பூரணமற்ற மனங்களுக்கு முன்பாக அவன் சித்திரிக்கிறான். தேவனைப் பற்றியும் மற்றும் அவருடையப் பிரபஞ்சத்தின் ஒழுங்குமுறைக்கான அவருடைய கொள்கைகளையும் பற்றிய தெளிவான அறிவுக்கு, படிப்படியாக நாம் வரும்போது, அந்த பயம் நம்மைவிட்டுப் புறம்பாக்கப்படும். பதிலாக நாம் தேவனிடம் அன்பு கொள்கிறோம், மற்றும் அவர் நம்மிடம் அன்பு கொள்கிறார் என்பதை உணருகிறோம். நாம் அவரில் அன்புகூருகிறோம் மற்றும் அந்த விகிதத்தில் அவர் உலகத்தை நேசிக்கிறார் மற்றும் நமக்காகவும் உலகத்துக்காகவும் ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை நாம் உணருகிறோம். காலப்போக்கில், நாம் தேவனை பூரணமாக அன்புகூரும் இடத்தை அடையும் போது, பயம் அனைத்தும் புறப்பாக்கிப் போடப்படுகிறது.

ஆனால் இந்த அறிவு மற்றும் அன்பு தேவனை அதிருப்திப்படுத்துகிற பயத்தை புறம்பாக்காது; ஏனெனில் அது முறையான பயபக்தியாக இருக்கிறது, மற்றும் அது ஒருபோதும்

புறம்பாக்கிப்படக்கூடாது. நாம் அதிகமாக பயபக்திகொண்ட அன்புடையவர்களாக இருந்தால், அந்த பயத்தை நாம் அதிகமான அளவு கொண்டிருப்போம். - - ஒருவர் தான் அன்புகூர்ந்த, மற்றும் புரிந்துணர்ந்த சகோதரனின் அல்லது அயலாரின் உள்ளத்தைப் புண்படுத்துவதற்கு யார் பயம் கொள்ளாமல் இருப்பார்கள்? இதே கொள்கை, கிட்டத்தட்ட, தந்தை மற்றும் பிள்ளைகளுக்கு இடையில், கணவன் மற்றும் மனைவிக்கு இடையில் நிலவுகிறது. தன்னுடைய கணவனிடம் பயம் கொண்டிருக்கும் மனைவி, அவர்களிடையே பூரணமான அன்பு இருந்த போது இருந்த அந்த சந்தோஷகரமான நிலைமையைப் போன்று அவள் இருக்கமாட்டாள், மற்றும் எதிரெதிர் மாறாக; பிள்ளைகளுடனும் அப்படியே இருக்கும். இருப்பினும், ஒவ்வொருவரும் மற்றவரை காயப்படுத்துவதற்கு, அல்லது புண்படுத்துவதற்கு பயப்பட வேண்டும்.

## பயம் - - மரணத்திற்குப் பயப்படுதல் தவறானதா?

## கே : 271:1: :: கேள்வி (1915) - 1

நாம் மரணத்தை அச்சங்கொள்ளும் விதத்தில் எதிர்நோக்கும் போது, இது விசுவாசத்தில் குறைபாட்டைக் குறிக்கிறதா, அல்லது யேகோவாவுக்கு மகிழ்ச்சியிராத நிலைமையில் ஒன்றைக் குறிக்கிறதா?

**பதில்:** நம்முடைய உடல் நிலை நமது உணர்வுகளுடன் அதிகம் செயல்படக்கூடியதாக இருக்கிறது மற்றும் ஒரு அற்பமான சத்தம் நரம்புகளைப் பாதிக்கும் அளவுக்கு ஒருவரை இப்படிப்பட்ட பதட்ட நிலைமையில் இருக்கச் செய்கிறது. ஒரு சிறிய விஷயம் கூட உங்களுடைய நரம்புகளைப் பாதிக்கும் மற்றும் மிகவும் அசௌகரியமாக இருக்கும்படி செய்யும் நிலைமையில் ஒருவேளை நீங்கள் இருந்திருப்பீர்கள். சில நபர்கள் இவ்விதமாக பெரும் பயம் கொண்டிருப்பதை நீங்கள் பார்க்க முடியும். ஆனால் அந்த மேலான-உணர்ச்சிவயப்படுகிற நிலைமை, அவர்கள் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இல்லை என்று நிரூபிக்காது. ஆகவே மரண பயம் கொண்டிருப்பது ஒரு பாவம் அல்லது தீமை என்று நினைக்க வேண்டும் என்று நான் அறியவில்லை. சில ஜனங்கள் இயல்பாகவே மற்றவர்களைக் காட்டிலும் மரணத்தின் பயம் மற்றும் அச்சம், அதிகம் உடையவர்களாக இருக்கிறார்கள். உயிர்த்திறன் உறுப்பு - வாழ்வின் அன்பு மற்றவர்களை விட, சிலரிடம் மிக வலிமையாக இருக்கிறது.

நித்திய வேதனையின் கொள்கையைக் கற்பிக்கப்பட்டிருக்கிற சிலர் கூட மரணம் பற்றிய சிறிய பயம் உடையவர்களாகத் தோன்றுகிறது. பதுங்குகுழிகளுக்குள்ளாகச் சென்ற ஐரோப்பாவின் படைவீரர்களின் அறிக்கைகளை நாங்கள் வாசிக்கும் போது, அங்கே அவர்களில் முழுமையாக பாதி பேர்கள் திரும்ப உயிரோடு திரும்ப வருகிறதில்லை, இருப்பினும் வெளிப்படையாக, அவர்கள் மரண பயமின்றி, அவர்கள் பெரும் தைரியத்துடன் கீழே செல்கிறார்கள். நான் இதை சரியாக புரிந்துகொள்ளவில்லை. மனுக்குலத்தின் சுபாவ நிலைமை மரண பயத்திற்குள்ளாக இருக்கின்றது என்று நான் நினைக்கிறேன். நம்முடைய இயேவினிடத்தில் இது உண்மையாக இருந்தது என்று நாம் காண்கிறோம். அவர் மரணத்தின் பயம் மற்றும் அச்சங்கொண்டவராக இருந்தார், மற்றும் அவர் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருந்தார் மற்றும் உயிர்த்தெழுதலைப் பெறுவார் என்ற விதத்தில் தேவனிடமிருந்து அவர் செய்தியைப் பெறும்வரைக்கும், இந்த பயம் மற்றும் அச்சம் நீடித்தது.

அவர் பூமியில் தம்முடைய இறுதி இராத்திரியை நெருங்கிய போது, அவர் காட்டிக்கொடுக்கப்பட்டு, மற்றும் கைதுசெய்யப்பட்ட இராத்திரி, கெத்செமெனே தோட்டத்தில் அவர் மிகவும் வியாகுலப்படத் துவங்கினார். "இப்போது, நாளை நான் சிலுவையில் அறையப்படப் போகிறேன். நான் ஒரு தீமை-செய்கிறவனாக நான் பாடுபட வேண்டியிருக்கிறது போல, இது தோற்றமளிக்கின்றது. இது தேவையில்லாமல் இருக்குமானால், நான் மகிழ்ச்சி அடைவேன். எந்த நிலைமைகளின் கீழும் சாவது ஒரு பயங்கரமான காரியமாக இருக்கிறது. ஆனால், நீதியுள்ள ஜீவியம் வாழ்ந்த பின்பு, தேவனுக்கு எதிராக தேவதூஷணம் சொல்பவராக சாகிறது, மிகவும் மோசமான காரியமாக இருக்கிறது! ஓ, இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால்,

நீங்கும்படி செய்யும்! என்று எண்ணியவராய், அவர் மிகவும் அதிகமான துக்கமும், கனத்த-இருதயமும், யோசனையும் கொண்டவரானார். பின்பு அந்த எண்ணம் வந்தது, “ஒருவேளை அந்த அனுபவத்திற்கு நான் தகுதியாய் இருப்பேன். அநேகமாய் நான் சில பாவம் செய்திருக்கிறேன். தவறாக இருக்கிற எதையாவது செய்திருக்கிறேன் என்று நான் அறியவில்லை, ஆனால் ஒருவேளை சில முறையில் நான் மீறுதல் செய்திருக்கிறேன். அப்படியிருந்தால், எனக்கு எதிர்கால ஜீவன் எனக்கு இருக்காது!” இந்த உலகத்திற்கு வருவதற்கு முன்பு ஜீவனுடைய பூரணத்துவத்தை அறிந்தவருக்கு, மற்றும் எதிர்கால மகிமை, கனம் மற்றும் அழியாமையைப் பெறுவதின் சாத்தியத்தின் முழுமையான புரிந்துகொள்ளுதலை உடையவருக்கு இந்த எண்ணம் மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

ஆகவே இயேசுவைப் பற்றி நாம் வாசிக்கிறோம், “அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு.” (எபி.5:7.) அவர் **சாவதிலிருந்து** காப்பாற்றப்படுவதற்கு அவர் ஜெபம் பண்ணவில்லை; ஏனெனில் அவர் தம்முடைய ஜீவனை மரணத்திற்குள்ளாக அர்ப்பணித்திருந்தார்; ஆனால் **உயிர்த்தெழுதலினால்**, மரணத்திற்கு **வெளியே** காப்பாற்றப் படுவதற்காக இருந்தது; **மற்றும் அவர் கேட்கப்பட்டார்.** பிதா அவருக்கு சில செய்தி அல்லது உறுதியை அனுப்பினார், அது அவரை வலுவூட்டியதாக இருந்தது, அது அவர் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறவராக இருந்தார் என்று புரிந்துகொள்ளும்படி உறுதி அளித்தது. நம்முடைய கர்த்தரிடம் தூதன் தோன்றியது குறித்த பத்தி பழைய கிரேக்க கையெழுத்துப் பிரதிகளில் உள்ளடக்கியிருக்கவில்லை; ஆனால் பிதா அவருடைய விண்ணப்பத்தை ஏதோ ஒரு முறையில் கேட்டார் என்பது எபிரேயர் நிருபத்தில் மேற்கோள் காட்டப்பட்ட வேதவாக்கியம் நிரூபிக்கின்றது. முழு அழிவின் பயம் நீக்கப்பட்டவுடன், போதகர் எல்லோரைக் காட்டிலும் மிகவும் அமைதியாகவும் மற்றும் தைரியமாகவும் இருந்தார். அவர் பிதாவுக்கு பிரியமானவராக இருந்தார் என்ற உறுதிமொழியை அவர் பெற்ற உடனேயே அவருடைய ஆத்துமாவின் அமைதி திரும்பி வந்தது.

நாம் மரண பயம் கொண்டிருக்கும் சமயத்தில், ஜெபத்தில் பிதாவை நாட வேண்டும், பிதாவின் அங்கீகாரத்தை உடையவனாக இருக்கிறேன் என்ற உறுதிமொழியை நாட வேண்டும். நாம் எப்போது தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் என்று அறிந்துகொள்ள, வேதாகமம் நம்மை திறனுள்ளவர்களாக்குகிறது, கிறிஸ்தவர்கள் என்ற முறையில், தேவனுடைய திருவசனத்திற்கு செவிகொடுத்து, இதை நம்முடைய சிந்தைகளுக்கு முன்னால் வைத்துக் கொண்டு, மற்றும் தேவைப்படும் ஒவ்வொரு சமயத்திலும் கர்த்தருடைய அன்பு, பராமரிப்பு மற்றும் தாங்கிப்பிடிக்கிற கிருபை தொடர்பான அருமையான வாக்குத்தத்தங்களை கருத்தில் கொண்டு, நாம் நம்முடைய பயங்களைத் துரத்தி விடுவதற்கு நாட வேண்டும். நாம் இதைச் செய்யும் போது, நம்முடைய இருதயங்களில் அதிகமதிகமாக உண்மைத்தன்மையையும் மற்றும் இறுதி வரைக்கும் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க எந்த பலியிலும் விருப்பத்தையும் நாம் காண்போம். மற்றும் நாம் சொல்ல முடியும், “நான் பயப்படமாட்டேன்; எனக்கு “சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்” என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நான் எதற்கு பயப்பட வேண்டும்? எதற்கு, அல்லது யாருக்கு நான் பயப்பட வேண்டும்? “உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.” ரோமர் 8:28; சங். 23:4.

## கூட்டமைப்பு - - எப்போது நிறுவப்பட்டது?

### கே : 272:1: :: கேள்வி (1910) - 1

சபைகளின் கூட்டமைப்பு எப்பொழுது நிறுவப்பட்ட உண்மையாகும், 1911 அல்லது 1913ம் வருஷத்திலா, மற்றும் எப்போது கள்ளத்தீர்க்கதரிசியாகும்?

**பதில்:** நான் அறியவில்லை. எனக்கு எப்படி முடியும்? நான் தீர்க்கதரிசி இல்லை. அருமை நண்பர்களே, நான் அதிக பட்சம் செய்ய முயற்சிப்பது, தீர்க்கதரிசனத்திற்கு விளக்கம் அளிப்பது தான், மற்றும் இந்த கேள்விக்கு ஜாடைக் குறிப்பு கொடுக்கும் எந்த தீர்க்கதரிசனத்தையும் நான் அறியவில்லை.

என்னுடைய எதிர்பார்ப்பாக இருந்ததைப் பொருத்தவரையில், இது பல வருஷங்களுக்கு முன்பு இருக்கும் என்று நான் நினைத்தேன். இது மிகவும் மெதுவாக இருந்து வருகின்றது என்று நான் ஆச்சரியப்படுகிறேன். இந்த விஷயத்தில் நான் முதலில் கவனம் ஈர்க்கும் போது, சபைகளில் எதுவும் எண்ணம் கொண்டிருக்கவில்லை, ஆனால் 1880ம் வருஷத்தின் போது, நாங்கள் இதை தெளிவாகப் பார்த்தோம் மற்றும் காரியங்கள் நடைமுறையில் இருப்பதைவிட, மிக விரைவாக வரும் என்று நினைக்கும் நிலையில் இயல்பாக இருந்தோம். இருப்பினும், இது மெதுவாக வளர்ச்சி அடைந்திருக்கிறது, மற்றும் இப்போது இங்கே சரியாகவே உள்ளது. இது மிக விரைவாக வளர்ச்சி அடைந்திருக்குமானால், வேறு ஏதாவது தவறாக ஆகியிருக்கும். கர்த்தருடைய பங்கை நிர்வகிக்கும் விஷயத்தில் நீங்களும் மற்றும் நானும் அவரிடத்தில் நம்பிக்கைக் கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டும் மற்றும் நம்முடைய பங்கை நிர்வகிக்க முயற்சிப்பது நம்முடையதாக இருக்கிறது. அருமை நண்பர்களே,, இது எல்லாம் சுற்றி வருகின்றது மற்றும் சரியான நேரத்தில் இது இங்கே இருக்கும்., ஆனால் அடுத்த வருஷம் அல்லது அதற்குப் பிறகு இரண்டு வருஷங்கள் என்று நான் சொல்லத் தொடங்கமாட்டேன்.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்த அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருத்துரை கூறுகிறேன்; அதாவது, எபிஸ்கோபல் சபை தன் சபையின் மேடையிலிருந்து மற்ற போதகர்களை பிரசங்கம் பண்ணுவதற்கு தடைபண்ணியிருந்ததை, அவர்களுடைய சமயக் கோட்பாட்டின் அம்சத்தை இரண்டு வருஷங்களுக்கு முன்பு ரத்து பண்ணிவிட்டது. வேறு சபையைச் சேர்ந்த போதகர் எவரேனும் எபிஸ்கோபல் சபையின் பிரசங்க மேடையை பயன்படுத்தினால், இது நடைமுறையில் புகையூட்டி தூய்மைப்படுத்தும் காரியமாக இருந்தது. இது புத்தியீனமாக இருக்கின்றது என்று இப்போது நம்முடைய எபிஸ்கோபல் சபை நண்பர்கள், நினைக்கின்றனர், ஆகவே அந்த அம்சத்தை கைவிட்டு விட்டது, கூட்டமைப்பை நோக்கி ஒரு படி முன்னோக்கி வைக்கும் அம்சமாக இருக்கிறது. அவர்கள் மற்ற சபையினரை தங்களுடைய பிரசங்க மேடையில் பேசுவதற்கு அனுமதித்து, இவ்வாறாக இன்று மற்ற எல்லா சபை பிரிவைகளை நடைமுறையில் அங்கீகரித்திருக்கின்றனர்

## கூட்டமைப்பு - - இயேசுவின் நாளில்.

## கே : 273:1: :: கேள்வி (1910 - Z) - 1

நம்முடைய கர்த்தருடைய நாளில் இருந்த பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் மதத்தின் தலைவர்களாக இருந்தது ஏன்?

**பதில்:** அவர்கள் நம்பகத்தன்மை கொண்ட அமைப்பு அல்லது கூட்டமைப்பை உருவாக்கியிருந்தார்கள், மற்றும் அவர்களுடைய கொள்கைகள் நேரிடையாக எதிர்மறையில் இருந்தாலும், அவர்கள் ஒருவர் மற்றவரின் மேல் வெகு அரிதாகவே தாக்குதல் நடத்தினர். பரிசேயர்கள் தேவனையும், தீர்க்கதரிசிகளையும் மற்றும் நியாயப்பிரமாணத்தையும் அங்கீகரித்தனர் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலினால் எதிர்கால ஜீவனை நம்பினார்கள் மற்றும் அவர்களுடைய ஜாதியை உயர்த்துவதற்கு வரப்போகிற மேசியாவை நம்பினார்கள். இந்த வகையான எதிலும் சதுசேயர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. அவர்கள் கடவுளின் இருப்பு அல்லது தன்மையின் உறுதியான நிலைப்பாடு இல்லாதவர்கள் (AGNOSTICS) மற்றும் உயர்ரக விமர்சகர்களாக இருந்தனர். (HIGHER CRITICS) இவர்கள் எதிர்கால இருப்பு எதைப் பற்றியும் சந்தேகம் கொண்டவர்களாய், தற்கால ஜீவியத்தில் சிறந்ததைச் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். பரிசேயர்கள் இயேசுவை எதிர்த்தனர். ஏனெனில் இயேசு அவர்களை ஒப்புக்கொள்ளவில்லை, ஆனால் அவர்களை விமர்சித்தார் மற்றும் நியாயப்பிரமாணத்தைக்

கைக்கொள்வதில் பூரணமும் மற்றும் பரிசுத்தமுமாக இருப்பதாக அவர்களின் உரிமைக் கூற்றுகளின் போலித்தனத்தைக் காண்பித்தார், மற்றும் அவர்களின் பாசாங்குத்தனங்கள் மற்றும் எளியவர்கள் மேல் அவர்களின் அனுதாபக் குறைவுக்காக அவர்களைக் கண்டித்தார்.

சதுசேயர்கள் இயேசுவை எதிர்த்தார்கள், ஏனெனில் அவர்களுடைய அவநம்பிக்கையின் நிலைப்பாட்டில், அவர் ஒரு ஏமாற்றுக்காரராக இருந்தார். ஆனால் அவர் ஒரு ஏமாற்றுக்காரர் என்ற விதத்தில் கூட, அவர்கள் அவரை எதிர்ப்பதற்குத் தங்களை சிரமப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் ஜனங்களிடத்தில் செல்வாக்கு அடைந்து வருகிறார் என்பதை மட்டுமே மனதில் உணர்ந்தார்கள் - சீக்கிரமாக, அல்லது பின்னர், இந்த செல்வாக்கு சமாதானத்தை சில தொந்தரவுக்கு வழிநடத்தக்கூடியதாக இருக்கும், மற்றும் யூதர்களின் மேல் ரோம சாம்ராஜ்யத்தின் நடவடிக்கை சாதகமற்ற பாதிப்பை ஏற்படுத்தும் என்று சதுசேயர்கள் பயந்தார்கள். ஆகவே, சதுசேயர்கள் மற்றும் பரிசேயர்கள் இருவரும் இயேசுவை எதிர்க்கும் நிலையில், அவர்களுடைய எதிர்ப்பு வித்தியாசமான காரணங்களுக்காக இருந்தன.

எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிகரமான பிரவேசம், மற்றும் "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா", மேசியா! என்று ஜனத்திரளின் ஆர்ப்பரிப்பும் பரிசேயர்களின் மனங்களில் பொறாமையை விழித்தெழுப்பியது. ஆனால் சதுசேயர்களிடத்தில். அவர்களுடைய தேசம் ரோம சாம்ராஜ்யத்துடன் சில மோதல் நிலையை ஈடுபடுத்துவதற்கு பொது ஜனங்களைத் தூண்டிவிடச் செய்யும் என்ற பயத்தை ஏற்படுத்தியது. மாபெரும் போதகரிடமிருந்து ஜனங்களின் அனுதாபத்தை அகற்றிப் போட பரிசேயர்கள் கடும் முயற்சி செய்தனர், மற்றும் இந்தப் பக்கத்தில், "இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ" என்ற கேள்வியைக் கேட்டு, அவருடைய வார்த்தைகளில் அவரைப் பிடிப்பதற்கு நாடினார்கள்.

இது நியாயம் இல்லை என்று இயேசு கூறுவாரானால், தேசத்துரோகத்தின் தலைவராக அவரை கைது செய்வதில், மற்றும் இவ்விதமாக அவரை மரணத்திற்குள்ளாக்குவதற்கு பிலாத்துவைக் கட்டாயப்படுத்துவதில் அவர்களுக்கு சிரமம் இருக்காது என்று அவர்கள் எண்ணங்கொண்டார்கள். மேலும், இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயம் என்று இயேசு பதிலளித்தால், அவரைப் பின்தொடர்ந்து "ஓசன்னா" என்று ஆர்ப்பரித்த ஜனத்திரளின் அனுதாபத்திலிருந்து அவர் அந்நியப்படுத்தப்படுவார் என்று அவர்கள் எண்ணம் கொண்டனர்; அவர்கள், தேவனுடைய இராஜ்யம் என்ற முறையில் பூமிக்குரிய இராஜ்யம் எதற்கும் தசமபாகங்கள் செலுத்தக்கூடாது என்ற எண்ணத்தை, யூதர்கள் கிட்டத்தட்ட மூடநம்பிக்கையின் காரணமாக, பற்றிக்கொண்டிருந்தனர் - கட்டாயப்படுத்தப்படுதலைத் தவிர, இதை அப்படிச் செய்வது பக்தியற்றது என்று எண்ணினர். "போதகரே, நீர் சத்தியமுள்ளவர்." என்று சொல்லி, அவருடைய உண்மைத்தன்மைக் குறித்து அவரைப் பாராட்டும் விதத்தில் அவர்கள் போதகரை எவ்வளவு சூழ்ச்சித்திறனுடன் சிக்க வைப்பதற்கு முயற்சித்தனர் என்பதாய் நாம் கவனிக்கிறோம். அது மட்டுமன்றி, நீர் சத்திய ஒளியை எவ்வாறேனும் போதிக்கிறீர் - என்று ஒரு போதகராக அவரை அவர்களுடைய பாராட்டுதலினால் அவரை ஈர்ப்பதற்கு அவர்கள் நாடினார்கள். ஆகவே அவர்கள் கூறினார்கள், "நீர் தேவனுடைய மார்க்கத்தை சத்தியமாய்ப் போதிக்கிறவராக இருக்கிறீர்". மேலும், "எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக் கிறோம்" என்று சொல்லி, அவர்கள் தங்களுடைய நிலையைப் பெலப்படுத்திக் கொண்டார்கள்.

இந்த துரோகமான பாராட்டுக்கள் அவரை சிக்க வைப்பதற்கான நோக்கங்களாக இருந்தன. ஆனால் அவர் உடனடியாக பதிலளித்தார், "மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?" சத்தியத்திற்காக பேசுவது போன்று வேஷமிட்டு, உங்களுடைய அடிப்படைத் திட்டங்களை மூடி மறைக்கிறீர்கள். "வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள்." இது, உண்மையில், வரி செலுத்தக்கூடிய மக்கள்தொகை கணக்கெடுப்பு நாணயமாக இருந்தது. அவர்கள் ஒரு ரோம வெள்ளி நாணயத்தை (denarius) அவரிடம் கொடுத்தார்கள், அது வேலையாட்களின் வழக்கமான ஒரு நாள் கூலியாக இருந்தது, இது நம்முடைய பதினேழு செண்ட்களுக்கு சமமான மதிப்பு கொண்டதாக இருந்தது. "இந்தச் சுருபமும் மேலெழுத்தும் யாருடையது" என்று இயேசு கேட்டார். "இராயனுடையது" என்று அவர்கள் பதில் கூறினார்கள். "அப்படியானால், இராயனுடையதை

இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்று இயேசு பதிலளித்தார். அவருடைய வார்த்தைகளில் எப்படி அவரைப் பிடிப்பது என்று அறிய பரிசேயர்கள் ஏன் கலக்கமடைந்தார்கள் என்பதில் ஆச்சரியமில்லை! அதற்கு மாறாக, அவர்கள் அகப்பட்டார்கள்; பொது ஜனங்களின் மனங்களில் அவர்களுடைய பாராட்டுக்களடங்கிய குறிப்புரைகள் அவருக்கு புகழ் சேர்ப்பதாக இருந்தன.

## போராட்டம் - - நல்ல போராட்டத்தைப் போராடினேன்.

## கே : 274:1: :: கேள்வி (1909) - 1

(2தீமோ.4:6,7,8.) "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார், எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." கிறிஸ்தவனுடைய அனுபவத்தில் எந்த நேரத்தில் அவன் தன்னுடைய சாட்சியத்தை அளிக்க முடியும்?

**பதில்:** நல்லது, அருமை நண்பர்களே, நான் நினைக்கிறேன், நாம் சில சமயங்களில் அழைக்கின்ற குறியிடுதலை நாம் அடையும் நேரத்திலிருந்து நாம் நல்ல சாட்சியத்தைக் கொடுக்க முடிகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் குறியிடுதலைப் பேசும்போது, நாம் வெறுமனே அடையாளக் குறியைப் பற்றி பேசுகிறோம், இதை தேவனுடைய பிரமாணம் அவர் ஏற்றுக்கொள்ளுவதற்கான சிறிய நிபந்தனையாக வைக்கிறது, மற்றும் குறைந்த பட்சம், அதாவது, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக." என்பதில் அவர் உங்களை அல்லது என்னை, அல்லது எவரையும் இப்பொழுது, அல்லது ஆயிர வருஷ யுகத்தில் ஏற்றுக்கொள்வார், அந்த குறியை நீங்கள் அடைந்திருக்கும் போது, பூரண அன்பின் குறியை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் சரியான விதத்தில் சொல்லலாம். இதற்குக் குறைவாக இதை நீங்கள் செய்ய முடியாது.

இதை உங்களுடைய சரீரத்தில் அடைந்திருக்கமாட்டீர்கள், ஏனெனில் உங்களுடைய சரீரம் குறைபாடுள்ளதாக இருக்கிறது. இது இருதயத்தின் குறியாக இருக்கின்றது. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் யூதர்கள் சரீரத்தில் அந்த குறியளவுக்கு மேம்படுவதற்கான கடமைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களான நாம் அந்த பிரமாணத்தை நம்முடைய சிந்தைகளிலும் மற்றும் இருதயங்களிலும் மேம்படுத்திக்கொள்ளும் தேவையில் இருக்கிறோம். உங்களுடைய மாம்சத்தில் நீங்கள் கறைகள் உடையவர்களாக இருப்பதைக் கண்டால், உங்களை மன்னிப்பதற்கு நீங்கள் கர்த்தரை வேண்டிக்கொள்கிறவர்களாக இருக்க வேண்டும், ஆனால் உங்களுடைய இருதயம் எப்போதும் பூரணமாக இருக்க வேண்டும். திசைகாட்டியின் முள் போன்று, நீங்கள் திசையை மாற்றினால், அது திரும்பவும் துருவத்திற்கு வந்து விடும். அப்படியே உங்களுடைய இருதயம் எப்போதும் விசுவாசமாக இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் அயலாரைப் பொருத்தமட்டில், நீங்கள் உங்களைப் போன்றே அவரையும் அன்புகூர வேண்டும்., அவரை உங்களுக்கு நன்மை செய்ய வைக்கின்றது போல, நீங்கள் அவருக்கு நன்மை செய்ய வேண்டும்; நீங்கள் உங்கள் அயலாருக்கு நியாயமாக, பெருந்தன்மையாக, நீதியாக இருக்க வேண்டும். நீங்கள் நடத்தப்படுவதற்கு விரும்புகிற விதமாக, சில சோதனையின் மூலமாக நீங்கள் செயல்படாமல் இருந்திருக்கலாம், நீங்கள் அவரை சரியாக இல்லாத எந்த முறையிலாவது அவரை நீங்கள் நடத்தியிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் கண்ட உடனேயே, அவருக்கு உரிய திருத்தங்களை செய்வதோடு மட்டுமில்லாமல், தேவனுக்கும் செய்ய வேண்டும், ஏனெனில் இந்த அளவுக்கு அவரைக் காயப்படுத்தியிருக்கிறீர்கள். ஆயிரவருஷ யுகத்தில் ஒரு நபர் பூரணமாக செயல்படக்கூடிய தேவை அவருக்கு இருக்கும், ஆனால் இந்த காலத்தில், சுவிசேஷ யுகத்தில், கர்த்தர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தது போல, நாம் சகோதரர்களிடம் அன்புகூர வேண்டும், மற்றும்

நாம் அவர்களுக்காக நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் சபைக்கு உயர்வான தேவையை ஏற்படுத்தியிருக்கிறார். அவருடைய சீஷர்களாக இருக்கும் எல்லோரின் மீதும் இந்த தேவையை கிறிஸ்து ஏற்படுத்தியிருக்கிறார். எவருக்கும் நன்மை செய்யத் தயாராக இருக்கும் அளவிற்கு, அவர்கள் தங்களுடைய சத்துருக்களையும் கூட அன்புகூர வேண்டும். நீங்கள் பூரணமான அன்பின் பிரமாணத்தை உடையவராக இருக்கிறீர்கள் என்று உங்கள் இருதயத்தில் நீங்கள் கண்ட உடனேயே, அப்போது பூரண அன்பின் குறியில் நீங்கள் இருக்கிறீர்கள், மற்றும் அந்த நிலைமையில் நீங்கள் மரித்தால், நீங்கள் கர்த்தருக்குள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாக இருக்கிறீர்கள் என்று எண்ணுவதற்கு அனைத்து கரமும் உடையவராக இருக்கிறீர்கள். நீங்கள் அந்த நிலையை அடைந்த உடனே அவர் உங்களை எடுத்துக்கொள்ளாமல் இருக்கலாம், ஏனெனில் நீங்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்யவும் மற்றும் உங்களை பரீட்சிக்கப்படவும், மற்றும் சோதிக்கப்படவும் அவர் இங்கே விடக்கூடியவராக இருக்கலாம். ஆனால் இருதயம் மற்றும் சிந்தையின் அந்த நிலையில் நீங்கள் இருக்கும் போது, மற்றும் உங்கள் ஜீவியம் ஆபத்தில் இருக்கிறது என்று எவரேனும் சொன்னால், நான் பூரண அன்பின் குறியை அடைந்திருக்கிறேன், மற்றும் நான் என்னை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறேன் என்று நீங்கள் சொல்ல முடியும்.

ஒரு இரவு கூடுகையிலிருந்து வீட்டிற்கு நீண்ட தூரம் நடந்து கொண்டிருந்த ஒரு வெல்ஸ் சகோதரரைப் பற்றிய ஞாபகம் எனக்கு வருகிறது. அவர் சென்ற வழியில் அவருடைய பணம், அல்லது ஜீவனைக் கோரிய நெடுஞ்சாலை கொள்ளைக்காரன் ஒருவனை சந்தித்தார் மற்றும் அவர் பதிலளித்தார், என் ஜீவனை எடுத்துக்கொள், என் ஜீவனை எடுத்துக்கொள், நான் பணம் வைத்திருக்கவில்லை. அந்த கொள்ளைக்காரன் திரும்பி, ஓடி விட்டான்; சாவதற்குத் தயாராக இருந்த ஒரு மனுஷனின் அருகில் இருப்பதற்கு அவன் பயம் அடைந்தான். இந்த நிமிஷத்தில் ஜீவனைக் கோரும் ஏதாவது நிகழ்ந்தால், நீங்கள் சொல்ல முடிகிறவர்களாக இருக்க வேண்டும், **“நான் ஒப்படைக்கப்படுவதற்கு தயாராக இருக்கிறேன்”** என்ற விதத்தில், உங்களுடைய இருதய நிலைமையும் மற்றும் என்னுடைய இருதய நிலைமையும் இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். கர்த்தர் என்னை இப்போது திரைக்கு அப்பால் கடப்பதற்கு விரும்பினால், நான் மிகவும் மகிழ்ச்சி உடையவனாக இருப்பேன். நாம் இருதயத்தின் அந்த நிலைமையில் ஒவ்வொரு நாளும் மற்றும் மணிநேரமும் நாம் வாழ வேண்டும், மற்றும் அதற்குக் குறைவாக எந்த விஷயத்திலும் நாம் திருப்தி அடையக்கூடாது.

## நிதி உதவி - - எளிய சகோதரர்களுக்கு உதவுவதில் வரம்பு.

### கே : 275:1: :: கேள்வி (1910) - 1

எளிய சகோதரர்களுக்கு நிதி உதவியை நீட்டிப்பதற்கு எந்த அளவு செல்ல வேண்டும்? அதற்கு என்ன வரம்பு உள்ளது?

**பதில்:** நல்லது, நீங்கள் பெற்றிருப்பதைத் தாண்டி நீங்கள் செல்லக்கூடாது. அது தான் முதல் வரம்பாக இருக்கின்றது.

**உதாரணமாக, துன்பத்திலிருக்கும் சகோதரன் தான் திருப்பிச் செலுத்த முடியாத பணத்தை கடனாகப் பெற்றிருக்கிறார்; அவர் கடந்த கால உதவிகளில் நம்மிடம் கடன்பட்டுள்ள போது, அவருக்கு நாம் மறுபடியும் உதவிபுரியலாமா?**

நல்லது, முதலில், அவர் திருப்பிச் செலுத்த முடியாதவராக இருந்து வருகிறார், மற்றும் கடந்த கால உதவிகளை சரிசெய்ய அவரால் முடியவில்லை என்ற விஷயம், ஆட்சேபனைக்கு அடித்தளமாக அமைவதற்கு அவசியமில்லை. ஏனெனில் கடந்த காலங்களில் கர்த்தரிடமிருந்து சகாயங்களைப் பெற்றிருக்கிறீர்கள் மற்றும் நீங்கள் திருப்பி செலுத்துவதற்கு திறனற்றவர் களாயிருக்கிறீர்கள், மற்றும் அவர் உங்களுக்கு இனிமேல் அளிப்பதை நிறுத்திவிட்டால், இது உங்கள் மேல் மிகவும் கடினமாய் இருக்கும். அப்படித் தானே? இருப்பினும், அருமை நண்பர்களே,

எளிய சகோதரர்களுக்கு அளிக்கும் விஷயத்தில், கணிப்பையும் மற்றும் ஜெபத்தையும் செயற்படுத்துவதற்கான வாய்ப்பாக இருக்கிறது. விவேகமற்ற முறையில் அளிப்பது, ஒருவரை தவறான போக்கில் ஊக்குவிப்பதாக இருக்கும், மற்றும் விவேகமாகக் கொடுப்பது, ஒருவர் சரியான போக்கைக் காண்பதற்கு உதவியளிக்கக்கூடிய முறையாக இருக்கும். நீங்கள் எவருக்கும் ஏதாவது அறிவுரை கூற விரும்பினால், அது வழக்கமாக இடையீட்டு ரொட்டி (SANDWICH) வடிவத்தில் இருப்பது சிறந்த ஒன்றாகும், மற்றும் நீங்கள் பணம் அளிக்க மறுக்கும் சமயத்தைக் காட்டிலும், பணத்தை நீங்கள் கொடுக்கும் போது, அறிவுரை அளிக்க வேண்டும், சகோதரன் அல்லது சகோதரிக்கு, அன்பாக ஆலோசனை கூறுகையில், அறிவுரையை பணத்துடன் வையுங்கள். என் சகோதரனே, இப்பொழுது நான் உங்களை விமர்சிக்க விரும்பவில்லை, ஆனால் நீங்கள் இதைச் செய்யலாம் அல்லது நீங்கள் அதைச் செய்யலாம்; நான் அப்படிப்பட்ட ஒரு வரம்புக்குள் உங்களுக்கு உதவிசெய்யப் போகிறேன், ஆனால் இவ்வாறு செய்வீர்கள் மற்றும் இதனுடன் அப்படிச் செய்வீர்கள், ஏனெனில் நான் என் வசம் பெற்றிருக்கின்ற எதற்கும் நான் ஒரு உக்கிராணக்காரனாக இருப்பது போன்று உணர்கிறேன், மற்றும் இது கர்த்தருக்கு மகிழ்ச்சியாயிருக்கும் என்று நான் உணரும் விதத்தில் இதை கண்டிப்பாக உபயோகப்படுத்த வேண்டும் மற்றும் வெறுமனே இதை நீங்கள் பெறுகிறீர்கள் என்ற காரணத்திற்காக அல்ல. ஆனால் பரிசுத்த யாக்கோபு கூறுகிறதை நாம் மறக்கக்கூடாதவர்களாக இருக்கிறோம், அதாவது, ஒரு சகோதரன் அல்லது சகோதரி வறுமையில் துன்பப்படுவதைப் பார்த்தால், அவர்கள் கடந்த காலத்தில் சில காரியங்களில் மதியீனமாய் இருந்தவர்களாக இருந்தாலும் பரவாயில்லை, அவர்களுக்கு நம்முடைய பங்கில் உதவிசெய்ய மறுப்பது கிறிஸ்தவ பாதை இல்லாமையாக இருக்கும். ஒருவேளை அவர்கள் நீங்கள் இருந்திருக்கிறது போன்று சமநிலை அளவுகளுடன் பிறந்திருக்கமாட்டார்கள். ஆனால் ஜனங்களில் பெரும்பாலோர் பணம் உபயோகப்படுத்தும் விஷயத்தில் சமநிலை உள்ளவர்களாக இருக்கிறதில்லை என்பது உண்மையாயிருக்கிறது. அது என் அனுபவமாயிருக்கிறது - நான் எல்லா நேரங்களிலும் ஜனங்களுடன் பிரச்சினையில் இருக்கிறேன். ஒருவேளை என்னுடைய தலை இறுக்கமாகவும், கஞ்சத்தனமாகவும் உருவாக்கப்பட்டிருக்கலாம். நான் அறியவில்லை. கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரன் உண்மையில் ஜீவியத்தின் தேவைகளில் குறைவுபட்டு, துன்பப்படுகிறவராக நாம் கண்டுணருகிற எவரையும் அப்படியிருக்க நாம் அனுமதிப்பது நமக்கு முற்றிலும் தவறானதாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். இப்பொழுது, அதனுடன் எத்தனை ஆடம்பரப்பொருட்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பது மற்றொரு கேள்வியாக இருக்கின்றது. என்னுடைய கணிப்பில், சில நபர்களுக்கு விவேகமான பாதையாக இருந்திருக்க வேண்டியதை விட அதிகமாக செய்ய, நண்பர்கள் ஒருவேளை மேற்கொண்டிருந்தார்கள் என்று நான் நினைக்கும் விதத்தில் நிகழ்வுகளை நான் அறிந்திருக்கிறேன்; ஆனால் நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன், இது உன்னுடைய காரியம் அல்ல, உன் சொந்த காரியத்தைப் பார்த்துக்கொள், மற்றும் அவர்களுடைய காரியங்களைச் செய்வதற்கு அவர்களை விட்டு விடுங்கள்; மற்றும் ஒருவேளை கர்த்தர் உங்களுடையதைக் காட்டிலும் அவர்களுடைய போக்கைக் குறித்து அதிகம் மகிழ்ச்சி அடைவார் கொஞ்சக் காலத்திற்கு முன்பு அவசியம் என்று கருதப்பட்டிராத விஷயங்கள்,, நாம் வாழ்கின்ற இந்த நாளில், நீங்கள் அறிவீர்கள், அவசியமானதாகக் கருதப்படுகின்றன. நம்முடைய தாத்தாக்கள் பெற்றிருந்ததைக் காட்டிலும், உலகத்தைச் சார்ந்த அதிகமான வசதிகள் மற்றும் ஆசீர்வாதங்களை நாமெல்லாரும் உடையவர்களாயிருக்கிறோம். நான் நிச்சயமாக இருக்கிறேன், மற்றும் இந்த ஆசீர்வாதங்கள் ஜனங்களுக்கு முற்றிலும் அவசியமானவைகளாகப் போகின்ற - குறைந்த பட்சம் சிலருக்கு அப்படியிருக்கும். இது அவசியம் என்ற நிலைக்கு இறங்கும் போது, ஒரு நபர் உண்மையில் மிகவும் குறைந்தவற்றைக் கொண்டு வாழ முடியும். உருளைக்கிழங்குகள் எப்போதும் மலிவானவை; அப்படியே உப்பு இருக்கிறது; அப்படியே ஓட்ஸ் (OATS) தானியங்கள் இருக்கின்றன; வாழ்வதற்கான அத்தியாவசியமானத் தேவைகள் பெரிய அளவில் செலவுத்தொகை உடையதாக இருக்கிறதில்லை. நாம் விரும்புகிற விதமாக விஷயங்களை பரந்த வெளிச்சத்தில் நான் எண்ணிப்பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும், மற்றும் நம்முடைய நாளின் நாகரீகம், பழங்காலங்களில் ஜனங்களிடம் செயற்படுத்தியிராத வழிமுறைகளை இப்போது பின்பற்றியிருக்கிறோம் என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்,

மற்றும் மிகவும் சிறந்த வழிமுறைகள் என்று நான் நினைக்கிறேன். நம்முடைய கார்த்தரின் நாளில் இருந்ததைப் போன்று, சாலையோரத்தில் குருடரான பிச்சைக்காரர்களை உட்கார வைப்பதற்குப் பதிலாக, நாகரீகம் சொல்கிறது, இல்லை, இந்த குருட்டு பிச்சைக்காரர்களை நாம் கூட்டிச் சென்று, ஒரு நேர்த்தியான இல்லத்தில் வசதியாக வைத்து விடுவோம், மற்றும் இங்கே அவர்கள் பிச்சையெடுக்க வேண்டியதில்லை, இங்கே வெயிலில் நாள் முழுவதும் உட்கார்ந்திருக்கத் தேவையில்லை, இங்கே சரியான சத்துள்ள உணவு மற்றும் பராமரிப்பு இல்லாமல் இருக்கவேண்டியதில்லை;. நாம் நேர்த்தியான தகுதியுள்ள புகலிடத்தில் அவர்களை வைப்போம். நான் அவர்களுடைய இடத்தில் இருந்தால், நடைபாதை கல்லின் விளிம்பில் உட்காருவது, அல்லது பிச்சை எடுப்பதற்கு வேறு எந்த இடத்தில் இருப்பதை விட, எனக்கு பிரத்தியேகமாக தயார் செய்யப்படிருக்கும் அந்த வகையான ஒரு அமைப்புக்கு நான் செல்வதற்கு விருப்பம் கொண்டிருப்பேன் என்று நம்புகிறேன். நண்பன் அல்லது எதிரி யாராக இருந்தாலும், எவரும் பட்டினியாக இருப்பதை நாம் பார்க்கக்கூடாது என்பது தான் கர்த்தருடைய உபதேசத்தின் பரந்த கொள்கைகளாக இருக்கின்றன. உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனம் கொடு; மற்றும் அவன் நிர்வாணமாயிருந்தால், அவனுடைய நிர்வாணத்தை மறைக்க ஏதாவது ஒன்றை அவனுக்குக் கொடு. ஆனால் உன்னுடைய சிறந்த வஸ்திரத்தை, அல்லது அந்த மாதிரியான எதையும் கொடுக்க வேண்டும் என்று அது அர்த்தப்படுத்துகிறதில்லை.

## விரல் - அவருடைய விரலினால் இரத்தத்தைத் தெளிப்பதின் முக்கியத்துவம்..

### கே : 276:1: :: கேள்வி (1907) - 1

லேவி. 16:14; “பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தில் தெளித்து” - இந்த வசனத்தில் பிரதான ஆசாரியனின் விரலைக் குறித்து விசேஷித்த நிழலான முக்கியத்துவம் ஏதேனும் உள்ளதா?

**பதில்:** இது பயன்படுத்தப்படுகிற போது, “விரல்” என்ற இந்த வார்த்தையில் விசேஷித்த முக்கியத்துவம் எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. அவனுடைய கை முழுவதையும் உபயோகப்படுத்துவதைவிட, அவனுடைய விரலினால் தெளிப்பது அதிக வசதியாக இருக்கும். “விரல்” என்ற வார்த்தைக்கு சில அழுத்தம் அல்லது முக்கியத்துவம் இருக்கலாம், ஆனால் இதைப் பற்றி சிந்தித்ததில்லை. உங்களில் எவரேனும் இதைப் பற்றி எண்ணினால், அதை என்னிடம் தெரிவித்தால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

## முடிந்தது - - தெய்வீகத் திட்டம் முடியவில்லை.

### கே : 277:1: :: கேள்வி (1912) - 1

கல்வாரியில் நமது கர்த்தர் “முடிந்தது” என்று சொன்ன போது, அவர் எதைப் பற்றி முடிவடைந்தது என்று குறிப்பிட்டார்?

**பதில்:** நமது கர்த்தர் தெய்வீகத் திட்டத்தின் பணி முழுவதையும் நிறைவேற்றியிருந்தார் என்று இது அர்த்தப்படுகிறதில்லை, ஏனெனில் மணவாட்டியை அழைக்கும் பணி மற்றும் அவளை குற்றமற்றவளாக ஒப்படைப்பது, மற்றும் ஆயிர வருஷ யுக பணி இரண்டும் இன்னும் எதிர்காலத்திற்கு உரியதாக இருந்தன. நம்முடைய கர்த்தர் **சொந்த பலியின்** பணியைச் செய்வதற்கு உலகத்திற்குள் வந்திருந்தார். அவர் முப்பது வயதாயிருக்கும் போது, யோர்தானில் அவர் தம்மையே அர்ப்பணிப்புக்குள் ஒப்படைத்தார். அவருடைய மூன்றரை வருஷ ஊழியத்தின் போது, அவர் தம்மை ஒப்படைப்பதை தொடந்துகொண்டு இருந்தார், மற்றும் இந்த போக்கு, உருவகமாக, திரைக்கு அப்பால் தேவனுக்கு முன்பாக உயர எழும்புகிற சுகந்த வாசனையாக இருந்தது. இந்த பணி ஒரு நாளில் நிறைவேற்றப்பட முடியாததாக இருந்தது. இதற்கு மூன்றரை வருஷங்கள் தேவைப்பட்டன. அவர் கூறும் போது, இதைப் பற்றிக் குறிப்பிட்டார், “ஆகிலும் நான்

முழுகவேண்டிய ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்." (லூக்கா 12:50.) அவர் இதனுடைய நிறைவுக்கு ஆர்வமுடன் காத்துக்கொண்டிருந்தார், மற்றும் அது கல்வாரியில் முடிவடைந்தது.

## நெருப்பு - - பலிபீடத்திலிருந்து எடுத்த நெருப்புத்தணலின் முக்கியத்துவம்

### கே : 277:2: :: கேள்வி (1910) - 2

பிரதான ஆசாரியன் பலிபீடத்திலிருந்து எடுக்கும் நெருப்புத்தணல் மற்றும் அதை பரிசுத்த ஸ்தலத்தில் தூபம் செலுத்துவதற்கு பயன்படுத்துதல் எதை அடையாளப்படுத்துகிறது?

**பதில்:** இந்த வெவ்வேறான மூன்று இடங்கள் எல்லாவற்றிலும் பயன்படுத்தப்பட்ட நெருப்பு நம்முடைய கர்த்தரின் மரணமடைதலை, அல்லது மரண நடைமுறையை அடையாளப் படுத்தினது. பாளயத்திற்கு புறம்பே நெருப்பு, உலகத்தாரின் நிலைப்பாட்டில் பார்வையிடும் போது, கர்த்தருக்கு விரோதமாக வந்ததும், மற்றும் அவருடைய மரணத்தை விளைவித்ததுமான அழிவின் பாதிப்புகளை அடையாளப்படுத்தியது. பிராகாரத்தில் நெருப்பு, விசுவாசிகளின் நிலைப்பாட்டில் பார்க்கும்போது, அவருக்கு எதிராகவும் மற்றும் மரணத்தை விளைவித்ததுமான அதே அழிவின் பாதிப்புகளை அடையாளப்படுத்தியது. பாளயத்திற்கு புறம்பே இருப்பவர்களுக்கு, மாம்சம், தோல், கொம்புகள் மற்றும் குளம்புகளை சுட்டெரிப்பதினால் தீய வாசனை, கெட்ட வாசனை இருந்தது. பிராகாரத்தின் உள்ளே இருந்தவர்களுக்கு, கொழுப்பைத் தகனிப்பது - இந்த சமயத்தில் பலிபீடத்தில் செலுத்தப்பட்ட பாவநிவாரண பலியில் இருந்த கிட்டத்தட்ட எல்லா கொழுப்பும் இருந்தது - இது கெட்ட வாசனையாக இருக்கவில்லை, ஏனெனில் இது சரியான நிலைமைகளிலும், சூழ்நிலைகளிலும் தகனிக்கப்படும் போது, இது பெரும்பாலும் சுத்தமான கரிபொருளாக இருப்பதால், கெட்ட வாசனை கொண்டிராது. ஏற்கனவே அனுமானித்தபடி, பலியின் தனித்தன்மையை விளக்கும் அன்பு மற்றும் வைராக்கியத்தை கொழுப்பு அடையாளப்படுத்துகிறது. ஒல்லியான மிருகத்தில் கொழுப்பு மிகவும் குறைவாக இருக்கும்; பருமனான மிருகத்தில், பலிபீடத்தில் வைக்கப்படுவதற்கு அதிகமான கொழுப்பு இருக்கும் மற்றும் அதற்கேற்ப இது தகனிக்கப்படும் போது, இது தீச்சுடரை, வைராக்கியத்தை அதிகப்படுத்தும். கொழுப்பு மற்றும் பாளயத்திற்கு புறம்பே மிருகத்தினுடையவைகள் எரிக்கப்படுவது ஒருபுறம் முழுவதும் இருக்க, தூய்மையான அன்பு மற்றும் சுய-பலியின் தீச்சுடரை துவக்குவதற்கு நெருப்பு பயன்படுத்தப்பட்டது என்பது உண்மையாக இருக்கின்றது.

கொழுப்பைத் தகனிப்பதற்குக் காரணமாயிருந்த பலிபீடத்தின் மேல் இருந்த நெருப்புத்தணல்,, நம்முடைய கர்த்தர் பெற்றிருந்த, அல்லது செய்திருந்த எதையும் அடையாளப்படுவதாகத் தோன்றவில்லை. ஆனால் மாறாக, வாழ்க்கையின் சாதாரணமாக காரியங்களிலிருந்து வரும் அனுபவங்களைக் குறிப்பதாக இருக்கலாம். நாம் சில இடங்களில் வாசிக்கும் விதமாக, பலிபீடத்தின் மேல் மரம் சந்தேகத்திற்கிடமின்றி உபயோகப்படுத்தப்பட்டது, மற்றும் தூப பலியை, பொன் தூபபீடத்தில் செலுத்துவதற்கான அடிப்படையாக, பலிபீடத்தின் மேல் இருந்த ஒளிரும் கரித்துண்டுகள் திரைக்குள்ளே எடுத்துச்செல்லப்பட்டன. ஆகவே, இந்த மூன்று காட்சி விவரிப்புகள் எல்லாவற்றிலும் ஒரே வகையான நெருப்பு இருந்ததைக் காண்பிக்கின்றது - - மிருகத்தினுடையவைகளை வெளியே எரித்த மர-நெருப்பு;; பிராகாரத்தில் கொழுப்பை எரித்த மர-நெருப்பு; பொன் தூப பீடத்தின் மேல் தூபத்தை எரித்த நிலக்கரி நெருப்பு அல்லது மர-நெருப்பு

இங்கே நெருப்பு எதை அர்த்தப்படுத்துகிறது? வழக்கமாக, நெருப்பு அழிவின் பாதிப்புகளைக் குறிக்கிறது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இந்த அழிவின் பாதிப்புகள், மற்ற அநேக அழிவின் பாதிப்புகளிலிருந்து பிரிக்கப்பட்டதாகவும் மற்றும் வித்தியாசமானதாகவும் குறிக்கப்படும் விதத்தில் ஏதாவது தனித்துவம் இருக்கிறதா? அவைகள் பலிபீடத்துடன் தொடர்புள்ளவைகளாக இருக்கின்றன மற்றும் அவைகள் பலிபீடத்தில் மட்டும் எரிக்கப்படுகிற நெருப்பினால் நிழலாக்கப்படுகின்றன, இது பலியிடுதலுடன் தொடர்புள்ள அழிவின்

பாதிப்புகளாக இருக்கின்றன என்பதை உணர்த்துகின்றது; வியாதி, அல்லது போர், அல்லது பஞ்சம், அல்லது கொள்ளை நோய், அல்லது நெருப்பினால் பொதுவாக வரும் இப்படிப்பட்ட வேறு விளைவுகள், தொந்தரவு, அழிவு போன்று மனுக்குலத்திற்கு பொதுவாக வரக்கூடிய அழிவின் பாதிப்புகள் அல்ல, ஆனால் மாறாக, பலி செலுத்தப்படுகிறதுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக, பலியிடுதலின் பாதிப்பாக, பலியிடுதலின் நெருப்பாக இருக்கிறது.; இப்படிப்பட்ட பாதகமான பாதிப்புகள் பிதாவினால் முன்குறிக்கப்பட்டவைகளாகவும், மற்றும் இந்த சோதனை அல்லது பலியை நிறைவேற்றும் நோக்கமாகவே இருக்கின்றன; வேறொரு உருவகத்தைப் பயன்படுத்தி, இதை நம்முடைய கர்த்தர் வெளிப்படுத்துகிறார்: “பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?”அவருக்காக அந்த பாத்திரத்தில் ஊற்றினவர்கள் யூதர்கள் அல்ல, அந்த பாத்திரத்தில் ஊற்றினவர்கள் பரிசேயர்கள் அல்ல; இது ரோமர்கள் அல்ல; இது ஜனங்கள் அல்லது வேஷதாரிகள் அல்ல; அந்த பாத்திரத்தில் ஊற்றினவர்கள் வேதபாரகர்கள் அல்ல; ஆனால் அந்த பாத்திரத்தை அளித்தவர் பிதா தாமே.

நம்முடைய பக்தியின் உண்மைத்தன்மை மற்றும் விசுவாசம் மற்றும் பண்பை நிரூபிக்கும் நோக்கத்திற்காகவே பிதா ஏற்படுத்துகின்ற நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகளை இந்த நெருப்புத்தணல்கள் எல்லாம் அடையாளப்படுத்துகின்றன என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். பரிசுத்த ஸ்தலத்திற்குள் நெருப்புத் தணலைகளை எடுத்துச் செல்வது இவ்விதமாக அந்த இரண்டு பலிபீடங்கள் நமக்கு அடையாளத்தில் அல்லது நிழலில் வெளிப்படுத்துவதைச் சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகிறது, அதாவது, நீதிக்கு இணக்கமாகவும், ஏற்புடையதாகவும் இருக்கிறதும், மற்றும் கர்த்தருக்கு தாமாகவே முன்வந்து செலுத்துகிற பலி தகனிக்கப்படுகிறதை விசுவாசிகள் காண்கின்ற பக்தியின் ஆவி தெய்வீக பிரமாணத்தினால் கட்டளையிடப்படுகிறதில்லை, மற்றும் இதுவே தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்க பலியிடுதலின் கொள்கையாக இருக்கிறது. ஆகவே, நெருப்புத்தணல்களின் மேல் உள்ள தூபவர்க்கம் நொறுக்கப்படுதலின் உணர்வில், நமது கர்த்தர் தம்மையே ஒப்புக்கொடுத்தார் என்பது இதனுடன் இணக்கமாக இருக்கின்றது. இவ்விதமாக நாளுக்கு நாள் அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார், இந்த அனுபவங்களின் தொடர்புக்குள் வருவதற்கு தம்மை அனுமதித்தார், மற்றும் இது அவருடைய பூமிக்குரிய சுபாவத்தை அழிக்க உதவியது மற்றும் தேவனிடம் சுகந்த வாசனையை அனுப்பியது. முன்பு தெரிவித்தபடி, இது எந்த விதமான, அல்லது ஒவ்வொரு உபத்திரவமாக இருந்ததில்லை. ஆனால் தேவன் ஏற்படுத்தியிருந்ததும், மற்றும் இயேசுவின் பலியின் அனுபவத்துடன் தொடர்புள்ளவைகளாக மட்டுமே இருந்தன.

## முதற்-பேறானவர்கள் - - சபை அடையாளப்படுத்தப்படுகிறது.

### கே : 278:1: :: கேள்வி (1913) - 1

எகிப்தின் முதற்-பேறானவர்கள் யாரை அடையாளப்படுத்துகிறது?

**பதில்:** அப்போஸ்தலர் இந்த விஷயத்தை நம்முடைய கவனத்திற்கு கொண்டுவரும் விதமாக, எகிப்தின் முதற்-பேறானவர்கள் சபையின் முதற்-பேறானவர்களைக் குறிக்கிறது. - சபையின் முதற்-பேறானவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்படுகின்றன. இப்போது சபையின் முதற்-பேறானவர்கள் சிறுமந்தை வகுப்பாராகிய மணவாட்டி வகுப்பார் மற்றும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் - திரள்கூட்ட வகுப்பார் என்ற இரண்டு வகுப்பார்களை உள்ளடக்கியிருக்கிறது. சபையின் முதற்-பேறானவர்களில் அவர்கள் எல்லோரும் எப்படி இருக்க முடியும்? ஏனெனில் இந்த முதற்-பேறானவரின் சபை, தேவனுடைய சிருஷ்டிகளில் அவருக்கு முதற்பலன்களாக இருக்கின்றது; இது இந்த தற்காலத்தில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட எல்லோரையும் குறிக்கின்றது. இப்பொழுது ஜெநிப்பிக்கப்படுகிற ஒவ்வொருவரும் உலகத்தாரோடு ஒப்பிடுகையில் முதற் பலனாக இருக்கிறார்கள், ஏனெனில் உலகத்தார் மேசியாவின் இராஜ்யத்தில் சீரமைக்கப்படுவார்கள் தேவனுடைய நியமங்களை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு, மற்றும் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலை பெறுகிற எல்லோருக்கும், உலகத்தாருக்கான பணி துவக்கம் பெறுவதற்கு முன்பு, அவர்களுடைய பிறப்பு

கண்டிப்பாக நடக்க வேண்டும். ஆகவே நாம் எல்லாரும் சிறுமந்தை மற்றும் திரள்கூட்டமாக ,இருக்கிறோம்; அதாவது, கிறிஸ்துவின் வழியாக பிதாவினிடத்திற்கு வந்திருக்கிற எல்லாரும், ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், ஆவியில் ஜெநிப்பிக்கப்படுகின்ற எல்லாரும் முதற்-பேறானவர்களின் இந்த சபையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். பிறகு இரண்டு வகுப்பார்களாக இருக்கிறார்கள், சிலர் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலாக இருப்பார்கள், மற்றும் சிலர் வெறுமனே ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருப்பார்கள், ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே சபையாக இருக்கிறார்கள். நிழலிலும் அப்படியே இருக்கிறது, இஸ்ரயேலின் முதற்-பேறானவர்கள் லேவி கோத்திரம் முழுமையினால் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்; முழு கோத்திரத்தாரும் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் அந்த கோத்திரத்திலிருந்து இராஜரீக, ஆசாரியக் கூட்டம் தெரிந்துகொள்ளப்பட்டது, மற்றும் இவர்கள் விசேஷமாக ஊழியம் செய்ய வேண்டும் மற்றும் தேவனிடம் விசேஷமான அருகாமையை உடையவர்களாக இருக்கிறார்கள் - தேவனிடம் விசேஷித்த ஊழியம். ஆனால் முழு கோத்திரமும் பரிசுத்தமுள்ள கோத்திரமாக இருந்தது, அவர்கள் எல்லோரும் அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருந்தனர், மற்றும் லேவி கோத்திரம் முழுமையும் முதற்-பேறானவர்களின் சபையை அடையாளப்படுத்தியது.

## மாம்சம் - - இயேசுவின் மாம்சத்தைப் புசித்தல்

### கே : 279:1: :: கேள்வி (1913) - 1

தயவு செய்து யோவான் 6:53ம் வசனத்தை விளக்கவும், "அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால், உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

**பதில்:** நமக்கு சிறிது நேரம் மட்டுமே உள்ளது, மற்றும் இவ்வளவு பெரிதான வசனப்பகுதிக்கு இது மிகவும் குறுகிய நேரமாயிருக்கின்றது. சுருக்கமாக சொல்லப்பட்டிருப்பதை நாம் புரிந்துகொள்வது என்னவெனில், கர்த்தர் இங்கே தம்முடைய சீஷர்களைப் பார்த்து கூறினார் மற்றும் தங்களுக்குள்ளே ஜீவனை, உள்ளார்ந்த ஜீவனை, அழியாமையைப் பெற்றுக்கொள்ளப் போகிற வகுப்பாரிடத்தில், அங்கே இயேசு பேசிக்கொண்டிருந்தார், மற்றும் இவர்கள் மட்டுமே அவருடைய மாம்சத்தை புசிப்பார்கள், அதாவது, அவருடைய நீதிமானாக்கப்படுதலில் பங்குபெறுவார்கள் மற்றும் அவருடைய பாத்திரத்திலும் பானம் பண்ணுவார்கள், அதாவது, அவருடைய பலியில் பங்குபெறுவார்கள், மற்றும் இதைச் செய்கிறவர்கள் மட்டுமே தங்களில் வெளிச்சம் உடையவர்களாக இருப்பார்கள் மற்றும் அழியாமையுள்ள ஜீவனைப் பெறும் வகுப்பாராக இருப்பார்கள் மற்றும் மகிமை, கனம் மற்றும் அழியாமையையும் அடைவார்கள். இது வெறுமனே சபையைக் குறிக்கின்றது; உலகத்தார் மனுஷகுமாரனுடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறவர்களாக இருக்கிறதில்லை. இது சபைக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. உலகத்தார் நீதிமான்களாக்கப்படுவார்கள் மற்றும் அவருடைய பலியின் புண்ணியத்தை புசிப்பார்கள் என்ற பார்வையில் தான் உலகத்தார் உண்மையில் இந்த மாம்சத்தைப் புசிப்பார்கள், மற்றும் வானத்தின் அப்பம் உலகத்தாருக்கு உணவாக இருக்கும், ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தில் பானம் பண்ணுகிறவர்களைத் தவிர வேறு எவரும் இந்த பாத்திரத்தில் பானம் பண்ண முடியாது. எஜமானர் இதை தம்முடைய சீஷர்களுக்கு அளித்தார் மற்றும் கூறினார், "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்." இதில் எதுவும் விட்டு வைக்கப்படுவதில்லை.

## ஜலப்பிரளயம் - - யேகோவாவின் முறைகளை வினவுதல்.

### கே : 279:2: :: கேள்வி (1911) - 2

மீதியான எட்டு பேர்களை தேவன் மூழ்கடித்து, ஒரு புது ஜோடியுடன் மறுபடியும் ஏன் துவங்கவில்லை?

**பதில்:** அந்த கேள்வியை சர்வவல்லவரிடம் கேட்கப்பட்டிருந்தால் சிறந்ததாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அருமை நண்பர்களே, இந்த சண்டையிடும் முறையில் வேதாகமத்தை அணுகும் நபர், எந்த ஆசீர்வாதத்தையும் பெறுவதற்கு சாத்தியமில்லை என்று நான் உங்களுக்கு சொல்லுகிறேன். அனுபவத்தில் நான் அறிகிறேன், ஏனெனில் வேதாகமத்துடன் போராடுவதில், மற்றும் இதை மடமையாக்கும் முயற்சியில் நான் என்னுடைய அனுபவத்தைப் பெற்றிருக் கிறேன்; ஆனால் அந்த புத்தகம் மதியீனமானதல்ல, மற்றும் உலகத்தின் புத்திசாலிகளான ஜனங்கள் எல்லாரும் இது மடமை என்று நிரூபித்திருக்கவில்லை. நமக்கு நிறைய நேரம் இருந்தால், இந்த எல்லா கேள்விகளுக்கும் மிகவும் விரிவாகப் போக முடியும், மற்றும் கேள்வி கேட்டவர் புஸ்தகத்தைவிட அதிகமாக மதியீனமாக இருப்பதாகத் தோன்றுகிறது.

## ஜலப்பிரளயம் - - நம்பிக்கைக் கொள்வது.

### கே : 279:3: :: கேள்வி (1911) - 3

ஜலப்பிரளயத்தில் உங்களுக்கு நம்பிக்கை உள்ளதா"

**பதில்:** ஆம், ஜலப்பிரளயத்தை நான் நம்புகிறேன்.

## மற்றவர்களைத் தடைபண்ணுதல் - - தேவனுடைய ஊழியத்தை ஏன் தடைபண்ணினார்கள்?.

### கே : 279:4: :: கேள்வி (1910 - Z) - 4

பிசாசுகளைத் துரத்தின ஒருவனை சீஷர்கள் கண்டபோது அவர்கள் அவனை ஏன் தடுத்தார்கள்? அவனை அவ்வாறு செய்வதற்கும், மற்றும் அவைகளைத் துரத்துவதில் அவன் சிறப்பாக செய்ய முடிந்ததையும் அவர்கள் ஏன் அனுமதிக்கவில்லை? அவர்களுடைய ஆட்சேபனைக்கு எது அடிப்படையாக இருந்தது?

**பதில்:** அப்போஸ்தலர்கள் அனுப்பப்பட்ட போது, இன்று நிலவுகிற அதே மாதிரியான உணர்வுகளை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்பது வெளிப்படையாகும். உதாரணமாக, நம்முடைய கத்தோலிக்க நண்பர்கள் கூறுவார்கள், நீங்கள் அப்போஸ்தலிக்க நியமனம் (Apostalic Ordination) உடையவராக இருக்கவில்லை; ஆகவே நீங்கள் பிரசங்கிக்க முடியாது. நீங்கள் மத சம்பந்தமான பதவி எதிலும் ஊழியம் செய்ய முடியாது. நம்முடைய எபிஸ்கோபலியன் நண்பர்கள் சொல்வதாகத் தோன்றும், இல்லை, எபிஸ்கோபல் பிஷப்பின் பரிசுத்த கரங்கள் உங்கள் மேல் வைக்கப்பட்டிருக்கவில்லை.

அதே சுபாவத்தின் சிறிய மனநிலை தான் பெரும்பாலும் சபை பிரிவுகள் எல்லாவற்றிலும் வெளிப்படுத்தப்படுகிறது. - - நீங்கள் என்ன அதிகாரம் உடையவராக இருக்கிறீர்கள்? ஆகவே சீஷர்கள், இயேசுவின் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்திக்கொண்டிருந்த ஒருவனைக் கண்டு, கூறினார்கள், பிசாசுகளைத் துரத்துவதற்கு உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இயேசு பன்னிருவரில் ஒருவராக உன்னை அனுப்பவில்லை; அவர் எழுபது பேர்களில் ஒருவராக அவர் உன்னை அனுப்பவில்லை. உனக்கு இந்த பணியில் எந்த வேலையும் கிடையாது.

சீஷர்களிடம் இயேசுவின் பதில், அவர்கள் தவறான பார்வையில் பிரயாசப்படுகிறார்கள் என்பதைக் காண்பித்தது. அவர்கள் அற்புதங்களை செயற்படுத்துவதற்கு விசேஷமாக ஆணையிடப்பட்டிருந்த போது, இருப்பினும், வேறு எவராவது ஒருவர் அதே காரியங்களைச் செய்தால், வார்த்தையின் எந்த பார்வையிலும், தடைபண்ணுவது, அல்லது ஆட்சேபிப்பது, அவர்களுடைய எல்லைக்குள் இருக்கவில்லை, ஆனால் மாறாக, அவர்கள் பரந்த, அனுதாபமான பார்வையை கொண்டிருக்க வேண்டும், மற்றும் சொல்லியிருக்க வேண்டும், என் அருமை நண்பனே, நீ பிசாசுகளைத் துரத்துவதை நான் பார்க்கின்றேன், நீ நல்ல பணியை செய்கிறாய். நீ

பிசாசுகளைத் துரத்த முடிகிறதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம், ஏனெனில் எளிய ஜனங்கள் எல்லாரையும் நீ விடுவிக்க முடிகிறது. நீ எங்களைப் பின்பற்றியிருக்கவிலை என்ற விஷயம், நீ எங்களுடைய போதகரை நீ அறியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது, மற்றும் நீ வரவும், மற்றும் அவருடன்கூட அறிமுகமாகிக் கொண்டால், நாங்கள் சந்தோஷப்படுவோம்.

ஆகவே, இது தான் நம்மிடம் இருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஒருவர் நற்பணியைச் செய்கிறதைக் காணும்போதெல்லாம், வார்த்தையின் எந்த பார்வையிலும் உலகத்தாருக்கு உதவி செய்யும் போது, அது ஒரு குறிக்கோள் பணித்திட்டமாக இருக்கலாம், அல்லது புறமதஸ்தருக்கு உதவலாம், அல்லது செய்தித்தாள் கூவி விற்கும் பையனுக்கு உதவலாம், அல்லது பாவத்தை எதிர்க்கும், அல்லது உபத்திரவப்படுகிறவர்களை விடுவிப்பது போன்ற வேறு வேலை செய்யலாம்; இவைகளைச் செய்கிறவர்களைப் பார்க்கும் போது, அவர்கள் நல்ல இதயம் கொண்டவர்கள், நல்ல நோக்கங்கள், நல்ல விருப்பங்கள் கொண்டவர்கள் என்று நாம் காணும் அளவுக்கு ஏற்ப, நாம் அனுதாபம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு எதிராக செயல்படுவதற்குப் பதிலாக, மற்றும் வேறு வழியில் அவர்களைத் தடைபண்ணுவதற்குப் பதிலாக, நாம் ஊக்குவிக்கும் வார்த்தைகளைப் பேச வேண்டும் மற்றும் அவர்களை முழுமையான வெளிச்சத்திற்கு வழிநடத்த விடாமுயற்சி செய்ய வேண்டும். நாம் அவர்களைப் பின்பற்ற வேண்டும் மற்றும் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கின்ற சத்தியத்தைப் போதிக்கும் நம்முடைய விசேஷித்த பணியை விட்டு விட வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துகிறதில்லை. ஆனால் கர்த்தர் தம்முடைய பணியை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தும் பல்வேறு செயலாண்மைகளை நாம் ஆட்சேபிக்கக்கூடாது. அவருடைய பணியில் நாம் மட்டுமே ஈடுபடும் சிலாக்கியம் உடையவர்கள் என்று நாம் நினைக்கக்கூடாது; அவருடைய பணியின் மேல் நாம் காப்புரிமை உடையவர்கள், என்றும், மற்றும் அவர்கள் செய்வதற்கு திறனுள்ள எதையும் செய்வதிலிருந்தும், மற்றும் செய்வதில் சந்தோஷம் கொள்வதிலிருந்தும் மற்றவர்களைத் தடைபண்ண முடியும் என்று நாம் நினைக்கக்கூடாது.

## முன்னறிவு.

### கே : 280:1: :: கேள்வி (1913) - 1

அர்ப்பணிக்கின்ற ஒருவர் உண்மையுள்ளவராக இருக்கவில்லை என்று அவருடைய அர்ப்பணிப்பின் சமயத்தில் தேவன் அறிகிறார் என்று தேவனுடைய திருவசனம் எங்கேயாவது சொல்லுகிறதா?

**பதில்:** அந்த வகையில் எதுவும் சுட்டிக்காட்டுகிறதாக வேதாகமத்தில் ஒன்றும் இருக்கவில்லை.

## மன்னிப்பு - - எவ்வளவு விரிவானதாக இருக்கிறது.

### கே : 280:2: :: கேள்வி (1912 - Z) - 2

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9.) இங்கே "எல்லா" என்று உபயோகப்படுத்தப்பட்டிருகின்ற வார்த்தை எவ்வளவு விரிவான அர்த்தத்தைக் கொண்டுள்ளது?

**பதில்:** இந்த யுகத்தில் அல்லது இனிவரும் யுகத்தில், பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவத்தைத் தவிர (மத். 12:31,32) மனுஷ குமாரர்களின் மத்தியில் எல்லா வகையான பாவமும் மன்னிக்கப்படும். இங்கே பரிசுத்த ஆவி தேவனுடைய நோக்கம் தொடர்பான வெளிச்சம் நுண்ணறிவைக் குறிக்கிறது. இயேசுவுக்கு எதிராக மனதார வேண்டுமென்றும், புத்திசாலித்தனமாகவும் செய்கின்ற பாவம் எதுவும், பரிசுத்த ஆவிக்கு விரோதமாக தேவதூஷணக் குற்றமாக இருக்கிறது. ஏதோ ஒரு வழியில் ஏமாற்றப்பட்டு, ஒருவர் இயேசுவின்

நாமத்தை தூஷணம் செய்தால், அப்போது அந்த பாவம் பரிசுத்த ஆவிக்கு விரோதமான தேவதூஷணமாக இருக்கிறதில்லை, மற்றும் மன்னிக்கப்படலாம். சபையைப் பொருத்த விஷயத்தில், இந்த மன்னிக்கப்படக்கூடிய பாவங்கள், பரலோக நீதிமன்றத்தில் நமக்காகத் தோன்றியிருக்கிற பரிந்துபேசுகிறவரின் மூலமாக மன்னிக்கப்படும், மற்றும் முழுமையான வெளிச்சம் மற்றும் அறிவுடன் செய்தால் தவிர, அவர் நம்மை பிதாவிடம் சகாயம் பெறுவதற்கு முன்னிலைமைக்கு திரும்பக் கொண்டுவருவார். இப்படி பாவத்தை செய்வது, அவருடைய கரங்களிலிருந்து நம்மை வெளியே எடுத்துக்கொள்வதாக இருக்கும்.

ஆனால் ஓரளவு வேண்டுமென்றே செய்யும் பாவம் இருக்கலாம் - - இந்த பாவத்தில் மூட நம்பிக்கை அல்லது பெலவீனம் மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவு வேண்டுமேன்றே செய்வது ஒரு பகுதி இருக்கும். இது எப்படி சாத்தியமாகும் என்பதற்கு, ஒழுக்க சரிவு மன்னிக்கப்படுதலுக்கும் மற்றும் பாவம் மன்னிக்கப்படுதலுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்று நாங்கள் பதிலளிக்கிறோம், உதாரணமாக, ஒரு பிள்ளை அத்துமீறி நடந்து விடுகிறது, மற்றும் பெற்றோர் கூறுகின்றனர், “நீ செய்திருப்பதற்கு நான் உனக்கு தண்டனை கொடுக்கப் போகிறேன்.” தண்டனையில் இரண்டு பகுதிகள் இருக்கலாம். ஒன்று உடல்ரீதியான தண்டனை மற்றொன்று, பெற்றோரின் அதிருப்தி.

சில பிள்ளைகளுடன் பெற்றோரின் அதிருப்தியாகிய தண்டனை, பிள்ளைக்கும் மற்றும் பெற்றோருக்கும் இடையில் உள்ள மேகம், தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கும். அப்போது பெற்றோர் கூறுவார்கள், “நீ வருத்தப்படுகிறாய் என்றும், நீ இதை மறுபடியும் ஒருபோதும் செய்யமாட்டேன் என்று சொல்கிறபடியால், நான் உன்னை மன்னிக்கிறேன். ஆனால் இந்த கீழ்ப்படியாமைக்கு ஒரு தண்டனை இணைக்கப்பட்டிருக்கும். என்னுடைய தீர்ப்பில் சிறந்ததாகத் தோன்றுகிறபடி, நான் லேசான தண்டனையை அளிக்கிறேன், ஆனால் நீ தண்டனையை இன்னும் தாங்கிக்கொள்ள வேண்டும்.” இது பூமிக்குரிய பெற்றோருக்கு சரியாக இருக்கும் போது, பரலோக பிதாவினால் இது செய்யப்படும் என்று நாம் கருத்தில் கொள்ள முடியும்.

தீர்க்கதரிசியாகிய தாவீதின் விஷயத்தில், அவர் தீவிரமான, கொடூரமான பாவங்களைச் செய்தார் - - ஒன்று உரியா மற்றும் உரியாவின் மனைவி பற்றிய விஷயத்தில், மற்றொன்று, உரியாவின் மரணம் பற்றிய விஷயத்தில். கர்த்தரிடத்தில் எவ்வளவு விடாமுயற்சியுடன் தாவீது கெஞ்சினார் என்பது நமக்கு ஞாபகம் இருக்கும்; கர்த்தர் அவருடைய மன்னிப்பைச் சுட்டிக்காட்டினாலும், இருப்பினும் தண்டனை கண்டிப்பாக இருந்தது. தாவீதின் பிள்ளை செத்துப்போயிற்று. - - 2 சாமுவேல் 12:15-22.

மறுபடியும், கர்த்தருடைய கட்டளைக்கு மாறாக, சாத்தான் இஸ்ரயேலைத் தொகையிடும்படி தாவீதைத் தூண்டினான்; தேவன் அதிருப்தி அடந்தார் மற்றும் இஸ்ரயேலை அடித்தார். மறுபடியும் தாவீது மனம்வருந்தினார் மற்றும் மன்னிப்புக்காக உளமார வேண்டினார். கர்த்தர் மூன்று காரியங்களை அவருக்கு முன்பாக வைத்தார், அவருடைய பாவத்திற்கு தண்டனையாக அவற்றில் ஒன்றை அவர் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. கர்த்தர் கூறினார், “மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்றுமாத சங்காரமோ? அல்லது மூன்று நாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரயேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளைநோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள்.” (1 கொரி. 21:10 -14.) தாவீது தன்னுடைய சொந்த பலவீனத்தை உணர்ந்து, தாழ்மையாக, தேர்வு செய்வதை மறுத்துவிட்டார். மூன்று நாள் கொள்ளைநோய் இஸ்ரயேல் மேல் அனுப்பப்பட்டது, மற்றும் அங்கே எழுபதினாயிரம்பேர் மடிந்தார்கள்; ஆனால் இதற்கிடையில் தண்டனை தாவீதை அடைவதற்கு முன்னே, அவருடைய பாவத்திற்கான கர்த்தருடைய மன்னிப்பை அவர் பெற்றிருந்தார்.

ஆகவே தேவனுடைய ஜனங்களின் பாவங்களைப் பற்றிய விஷயத்தில், கிட்டத்தட்ட அறியாமையாக இருக்குமானால், அப்போது மனதார செய்த அளவின் விகிதத்தில் தண்டனை

இருக்கும். சோதனைகள் நமக்கும் மற்றும் மனுக்குலத்தார் அனைவருக்கும் வரும. கிறிஸ்து மனுஷனுடைய பாவத்திற்காக மரித்தார், மற்றும் இதினால் அவர் மனுக்குல குடும்பத்தார் எல்லோரையும் தாராளமாக மன்னிக்கிறார் - சபையை இப்போதும் மற்றும் உலகத்தாரை அவர்களுடைய சோதனையின் நாளிலும் மன்னிக்கிறார்..

## இலவச கிருபை - சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்றுகிற எவருக்கும்.

### கே : 281:1: :: கேள்வி (1911) - 1

சுவிசேஷ யுகத்தில் "இலவச கிருபை" இல்லாவிட்டால், இயேசு ஏன் கூறினார், "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்."

**பதில்:** இயேசு கூறினார், "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால்". அவர் ஒரு விசேஷித்த வகுப்பாரை அழைக்கின்றார். தற்காலத்தில் சுவிசேஷம் நற்செய்தியாக இருக்கின்றது, அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தெரிந்துகொள்ளப்படும் வகுப்பாருக்கு வருகின்ற மிகச் சிறந்த நற்செய்திகளாக இருக்கின்றன. தேவன் எவரையும் கட்டாயப் படுத்துகிறதில்லை, அவர் அவர்களை வெறுமனே அழைக்கிறார். "அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்." என்று இயேசு கூறும் போது, இது நெருக்கமான வழியாக இருக்கிறது, எவர் ஒருவர் அவருடைய சீஷனாக, அவருடைய பின்னடியாராக, இந்த நெருக்கமான வழியில் நடப்பதற்கு விருப்பமுள்ளவராக இருப்பவரையே இயேசு அழைக்கின்றார் மற்றும் அவர் கூறினார், "நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" உங்களுக்கு ஞாபகம் இருக்கும், இயேசு சிலுவையை எடுத்துக் கொண்டார், அவர் எல்லா பாரங்களையும் ஒதுக்கி வைத்து விட்டார், மற்றும் உண்மையுடன் தம்முடைய ஜீவனை ஒப்படைத்தார், மற்றும் பிதா அவரை மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கு எழுப்பினார். ஆகவே, நம்மில் எவரும் இவைகளைச் செய்வதற்கு விரும்பி வந்தால், அப்படி செய்ய முடியும், ஆனால் அவன் முதலில் இவைகளுக்கு செவிகொடுத்தால் தவிர, அவன் அவைகளைச் செய்ய முடியாது என்று இயேசு கூறினார் "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்." என்று இயேசு கூறினார். இழுத்துக்கொள்வது தேவனைச் சார்ந்ததாகவும் மற்றும் அவருடைய திருவசனம் மூலமாகவும் இருக்கிறதை நீங்கள் பார்க்கவும். கேட்கிறதற்கு செவி இல்லாத மனுக்குலத்தார், அல்லது இந்த செய்தியை ஒருபோதும் கேட்காதவர்கள் இழுத்துக்கொள்ளப்பட மாட்டார்கள், அவர்கள் அழைக்கப்படுகிறதில்லை; அங்கே கதவிற்கு வெளியே இருபது பேர்களுக்கு மிகைப்படாமல் இருந்தால், மற்றும் நான் கதவுக்கு அருகே சென்றேன் மற்றும் அந்த இருபது பேர்களில் பத்து பேர் செவிடாக இருந்தார்கள் என்று அனுமானித்தால், மற்றும் நான் உரக்க சத்தமிட்டேன், "உங்களில் உள்ளே வருகிற ஒவ்வொருவருக்கும் நான் பத்து டாலர் கொடுப்பேன்." நான் எத்தனை பேர்களை அழைத்தேன்? செவியுள்ளவர்களை மட்டுமே. செவி இல்லாத மற்ற மனுஷர்கள், செவிடர்களாக இருந்தவர்கள், அழைக்கப்படவில்லை. அவர்கள் எல்லாரும் அழைக்கப்பட்டார்கள் என்று சொல்வது எனக்கு மதியீனமாக இருக்கிறது. செவியுள்ளவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டனர். இப்பொழுது, உண்மையில் ஜனங்களில் பாதி பேர்கள் கேட்பதற்கு காதுள்ளவர்களாக இருப்பதில்லை. மனுக்குலத்தார்களின் காதுகளை நிரப்பும் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. சிலருக்கு இது உல்லாசம், சிலருக்கு இது பணம், சிலருக்கு இது மாம்சத்தின் பெலவீனம், போன்றவை, தேவனுடைய குரலை விட மற்றவை எல்லாம். தேவனுடன் நடப்பதற்கும் மற்றும் கிறிஸ்துவோடு உடன்-சுதந்தராளிகளாக, அவருடைய மகிமை பொருந்திய இராஜ்யத்தில் அவருடன் இணைந்திருப்பதற்கு தேவனுடைய குரல் சிறுமந்தையை அழைக்கின்றது. நீங்கள் அறிவீர்கள்,

யூதர்கள் மிகவும் புத்திசாலியான ஜனங்கள், அவர்கள் அந்த காலத்தில் மத சம்பந்தமான தேர்ச்சியில் மேலானவர்களாக இருந்தார்கள். வேறு எந்த ஜாதியும் அவ்வளவு நன்கு முன்னேறியிருந்ததில்லை. தேவன் அவர்களுக்கு பல நூற்றாண்டுகளாகக் கொடுத்திருந்த நியாயப்பிரமாணம் யூத ஜனங்களை மிக உயந்த வளர்ச்சிக்குக் கொண்டு வந்திருந்தது, மற்றும் வேறு எந்த வகுப்பினரை விட, விகிதாச்சாரத்தில் அதிகமான யூதர்கள் சிறுமந்தையில் இருந்தால், நான் ஆச்சரியப்படமாட்டேன். ஆனால் இப்போது முதலாவது அழைப்பைப் பெற்றார்கள் - - யூதருக்கு முதலாவது - - அப்படியே அடுத்த யுகத்தில் , அப்போது சீர்பொருந்துதல் வருகிறது, மற்றும் இது முதலாவது யூதருக்கு இருக்கிறது. இந்த சுவிசேஷ யுகம் முடிவடைந்த பிறகு, உடனடியாக ஆசீர்வாதம் யூதர்களுக்கு வரும் என்று வேதவாக்கியங்கள் தெளிவாகத் தெரிவிக்கின்றன; மேசியாவிடமிருந்து ஆசீர்வாதங்கள், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினவைகள் அனைத்தும் அவர்களுக்கு முதலில் வரும். அவர் இஸ்ரயேலுக்கு ஒருபோதும் ஆவிக்குரிய வைகளை வாக்குத்தத்தம் பண்ணவில்லை. நீங்கள் ஆதியாகமம் முதல் மல்கியா வரையில் வேதாகமம் முழுவதையும் படித்தீர்களானால், பரலோகம் தொடர்பான எதையும் யூதர்களுக்கு தேவன் ஒருபோதும் குறிப்பால் உணர்த்தவில்லை. மாறாக, அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் எல்லாம் பூமிக்குரியவைகளாக இருந்தன. உதாரணமாக, மேசியாவின் ஆளுகை துவங்கிய பிறகு, புதுப்பிக்கப்படும் பூமியைப் பற்றி சொல்லிய பிறகு, தேவன் தீர்க்கதரிசி மூலமாகக் கூறினார், “வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். - தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அனுபவிப்பார்கள்.” இவைகள் பூமிக்குரிய ஆசீர்வாதங்களாக இருக்கின்றன, மற்றும் நமக்குச் சொந்தமானவைகள் அல்ல. அவைகள் சீர்பொருந்துதல் காலங்களைச் சார்ந்ததாக இருக்கின்றன, கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் யூதர்களிடம் துவங்கி மற்றும் எல்லா ஜாதிகளுக்கும், கோத்திரங்களுக்கும் மற்றும் பாஷைக்காரர்களுக்கும் விரிவடைந்து, மனுக்குலத்தார் அனைவருக்கும் இருக்கும்.

## கனி - யேகோவா. மற்றும் ஏதேன் தோட்டம்

### கே : 283:1: :: கேள்வி (1905) - 1

தோட்டத்தின் கனிகள் நன்றாக இருந்தன என்று தேவன் பார்த்த போது, யேகோவா அவைகளை ருசித்தாரா?

**பதில்:** அது எனக்கு மிகவும் ஆழமானதாக இருக்கின்றது. கர்த்தர் என்ன செய்தார் என்பதை நான் சொல்லமாட்டேன்; வேதாகமம் சொல்லுகிறதில்லை.

## வஸ்திரங்கள்-வஸ்திரங்கள் கறைபடாமல் காத்துக்கொள்ளுதல்.

**கே 283:2:: கேள்வி (1908) - 2 -** “உங்கள் வஸ்திரங்களை உலகத்தால் கறைபடாதபடிக்கு காத்துக்கொள்ளுங்கள்”. இது எதைத் தெரிவிக்கிறது?

**பதில்:** நான் நினைப்பது இதுவே. கர்த்தருடைய ஜனங்கள் நிர்வாணமாய் நடக்காதபடிக்கு தங்கள் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளும்படிக்கு வெளிப்படுத்தலின் ஆகமத்தின் மூன்றாம் அதிகாரத்தில் அறிவுறுத்தப்படுகிறார்கள். கர்த்தர் நமக்கு அளிக்கக்கூடிய வஸ்திரம் நமது பூமிக்குரிய வஸ்திரத்தைக் குறிப்பிடுகிறதில்லை. இது அவருடைய நீதியின் வஸ்திரத்தைக் குறிப்பிடுகின்றது. நமது நீதியின் வஸ்திரத்தை நாம் பாதுகாத்து வைத்துக்கொண்டு, அதை பூத்தையல் வேலைப்பாடு செய்வோமானால், அது நம்முடைய கலியாண வஸ்திரமாகிறது; இந்த வஸ்திரத்தைத் தான் நாம் கர்த்தரிடமிருந்து பெறுகிறோம். இதுவே கிறிஸ்துவின் நீதியாகிய கலியாண வஸ்திரமாகும். நமது கறைகள் மறைக்கப்பட்டு நாம் நீதிமான்களாகும்படி கிறிஸ்துவின் நீதி சுமத்தப்படுகிறது. இப்பொழுது, உலகத்தால் கறைபடாதபடிக்கு நமது வஸ்திரத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். அதாவது, இந்த இதயப்பூர்வமான சுபாவத்தையும், பிதா மற்றும் குமாரனுடன் கொண்ட களங்கமில்லாத பரிசுத்த

உறவையும் நீடித்திருக்கச்செய்யும் விதத்தில் நாம் நமது முழு பலத்துடன் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். இது நமது நீதியினால் அல்ல. ஆனால் கிறிஸ்துவின் நீதியினால் மட்டுமே சாத்தியம் ஆகும். உலகத்திடமிருந்து அசுசிப்படாத வகையில், இதைக் காத்துக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். நாம் உலகத்தில் இருக்கிறோம். ஆனால் உலகத்தைச் சார்ந்தவர்களாக அல்ல. நமது வஸ்திரத்தைக் கவனமாய் பார்த்துக் கொள்ள வேண்டும். இது பற்றிய செய்தி என்னவெனில், அவர்கள் தங்களுடைய வஸ்திரங்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்காவிட்டால், அவைகள் கறைபட்டுப் போகும். அவர்கள் தங்களுடைய வஸ்திரங்களைத் தோய்த்து, ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் வெளுக்க வேண்டும்.

இது குறித்தான உங்களுக்கும் எனக்கும் உள்ள அறிவுரை என்னவென்றால், உலகத்தின் தொடர்பினால், சில அஜாக்கிரதையான சந்தர்ப்பங்களில், வார்த்தையினாலோ அல்லது எண்ணத்தினாலோ அல்லது நடக்கையினாலோ, பாவத்தினால் கறைபட்டவர்களாய் இருக்கும் அபாயத்திற்குள்ளாகும் நிலை ஏற்படும். அதனால் வஸ்திரத்தில் புள்ளி அல்லது கறை ஏற்பட ஏதுவாகிறது. நமது வஸ்திரத்தைப் பற்றிய விஷயத்தில், கறை அல்லது கசங்கல் அல்லது இது போன்ற ஏதேனும் இல்லாமலிருக்க எப்படி நம்மில் யாரும் இருக்க முடியும்? பல்வேறு வகையான தீமைகள் - எச்சம் போன்ற அசுசியான தீமைகள், நிலவும் உலகத்தில், வருஷக் கணக்கில் வாழும் எந்த கிறிஸ்தவனும் தன்னுடைய வஸ்திரத்தை கறைபடாதபடிக்கு காத்துகொண்டு எப்படி வாழ முடியும்? நான் பதிலுரைக்கிறேன்: தன்னுடைய வஸ்திரங்களில் ஒரு கறையோ அல்லது கசங்கலோ இல்லாமல் இந்த உலகத்தை கடந்து வர முடியும் என்பது வேதாகமத்தின் கருத்து அல்ல. ஆனால், ஒரு கறையைப் பெற்றிருப்பதைக் காண்பதாக வைத்துக் கொள்வோம்? அப்பொழுது, இதயப்பூர்வமாய் சரியான மனப்பாங்கில் இருப்பவர்கள், தெய்வீக சட்டத்தை தாங்கள் மீறிவிட்டோம் என்று கண்டுணர்பவர்கள், சுத்திகரிக்கப்படும்படி மறுபடியும் இரத்தத்திடம் தீவிரித்துச் செல்ல வேண்டும். நீங்கள் எப்போதாவது தவறு செய்யும் பட்சத்தில், கர்த்தரிடத்தில் ஜெபம் மூலம் அணுகி, பாவத்தை ஒத்துக்கொண்டு தவறாய் இருந்ததைக் களைவதற்கு நாடினால், இந்த மனப்பாங்கில் நீங்கள் வந்திருப்பதைக் குறித்து அவர் சந்தோஷமாய், எல்லா பாவங்களிலுமிருந்து உங்களை சுத்திகரிப்பார் என்ற கர்த்தருடைய வார்த்தையின் உத்திரவாதம் உங்களுக்கு உண்டு. காலப்போக்கில் இந்த பாவங்களின் எண்ணிக்கை குறைவுபடும். உலகத்தின் தீமையை எப்படி தவிர்ப்பது என்ற ஞானத்தை வருஷங்கள் வருவிக்க வேண்டும். பல வருஷங்கள் கிறிஸ்தவனாயிருப்பவன் தன் வஸ்திரத்தில் குறைவான கறைகளையே காணக்கூடியவனாக இருக்கிறான். ஆகவே, அவனுடைய தவறுகளுக்காக வருந்தி, அவற்றிற்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் வேண்டி கர்த்தரிடம் செல்வதற்கான தேவைகள் குறைவானதாகவே இருக்கும். ஆகவே, அருமையான நண்பர்களே, நீங்கள் அநேக தவறுகளையோ அல்லது குறைவான தவறுகளையோ உடையவர்களாக எப்படி இருந்தாலும், இந்த விஷயத்தில் நம்மில் எவருக்கும் உள்ள நிலைப்பாடு இதுவே. இத்தகைய கறைகளை நம் வஸ்திரங்களில் உடையவர்களாய், சில தவறுதலான செயல்களுக்கான கடமைகளைக் கொண்டிருந்தோ அல்லது தவறான எண்ணம் காரணமாகவோ அல்லது எதுவாயிருப்பினும், தேவனுடன் நாம் சரியான உறவை கொண்டிருக்க முடியாது. இவைகள் உங்களுக்கும் தேவனுக்கும் இடையில் தடுப்பாக வந்து நிற்கும். அஜாக்கிரதையான மனப்போக்குள்ளவர்கள், ஒரே ஒரு கறையை மட்டும் கொண்டிருக்கும் போது, அவர்கள்: “ஆ! என்னுடைய அங்கியில் ஒரு கறை உள்ளது” என்று கூறி, அதற்காக மிகவும் வேதனை கொள்ளும் உணர்வை அடைவார்கள். ஆனால், முப்பது, நாற்பது, ஐம்பது அல்லது அறுபது என்ற அளவில் கறைகள் இருக்கும் போது, அவர்கள் கூறுவார்கள்: “ஆ! அவைகள் இருப்பது எனக்குத் தெரியும், அவற்றை நான் விரும்புவது இல்லை; அவைகள் வரும் என்று நீங்கள் அறிவீர்கள்”. அவர்கள் இதற்குப் பழக்கமாகி விடுகிறார்கள். அருமையான நண்பர்களே, நீங்கள் அதைச் செய்ய விரும்புகிறதில்லை. அது மாதிரியான ஆவிக்கு நீங்கள் காவல் கொண்டிருப்பதை விரும்புகிறீர்கள். இந்த ஆவியை உடையவர்கள் தான் திரள் கூட்டத்தாராகி, உபத்திரவக் காலத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி, தங்கள் அங்கிகளைத் தோய்த்து ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் வெண்மையாக்குகிறார்கள். நாம் இதயப்பூர்வமாக சரியான மனப்பாங்கை உடையவர்களாய் இருந்தால், முதன் முதலாக வரும் கறை, நமக்கு

வலியையும் வருத்தத்தையும் உண்டாக்கி, கர்த்தரை சென்றடைவோம். அன்றைய தினமே அவரைச் சென்றடைவதிலிருந்து நம்மை எதுவும் தடைபண்ண முடியாது. இது பற்றிய முழுமையான விஷயத்தை கர்த்தரிடத்தில் கொண்டுசேர்க்கும் வரையில் இந்த விஷயத்தின் கடமையிலிருந்து அவர் உங்களை சுத்திகரிக்கும் வரையில், உங்கள் கண்களிலே தூக்கம் வருவதை அனுமதிக்காதீர்கள். ஒவ்வொரு புது நாளையும் புதிய தீர்மானங்களுடன் ஆரம்பியுங்கள். தேவகிருபையினால் நீங்கள் கவனமாகப் பார்த்து, உலகத்தின் சுயநலத்தினின்றும், அதின் இழிவினின்றும், அதின் பொய்யான ஆவியிடமிருந்தும் உங்கள் வஸ்திரங்களைக் கறைபடியாத வண்ணம் காத்துக் கொள்ளுங்கள். மாம்சீகமும், எதிராளியுமான உலகத்தின் மாசுகளடங்கிய பாதிப்புகளிலிருந்து கறைபடாதவர்களாய் இருந்து, இவ்விதமாக கர்த்தர் விரும்புகிற வண்ணமாக நாம் இருந்து அவரிடத்தில் நெருங்குவோம். நாம் அதிகமாய் கூர்ந்து நோக்கினால், அதிகமாய் நாம் கண்டுணரலாம். பாவம் பற்றிய விஷயத்தில், கர்த்தரிடத்தில் செல்லாமலிருக்கும் மனநிலையே ஒவ்வொருவரிடத்திலும் காணப்படும். "இன்று இரவு ஜெபத்தில் கர்த்தரிடத்தில் செல்ல இயலாதவனாக இருக்கிறேன்; கர்த்தருக்கும் எனக்கும் இடையில் ஒரு மேகம் வருகிறதை நான் உணருகிறேன். இன்று இரவு நான் ஜெபத்தில் அணுக முடியாது". நல்லது, நீங்கள் உன்னிப்பாக கவனியுங்கள்; அந்த இரவு நீங்கள் செல்ல இயலாவிட்டால், அடுத்த இரவு இன்னும் மோசமானதாய் இருக்கும். இந்த மோசமான நிலை தொடர்ந்து பெருகி, கறைகள் தொடர்ந்து எண்ணிக்கையில் பெருகி, நாம் விடைபெறும் வரையில் கர்த்தரிடமிருந்து வெகுதூரம் விலகியிருப்பதை நாம் காண்போம். கர்த்தருடைய ஜனங்கள் எல்லாருக்கும் என்னுடைய அறிவுரை என்னவெனில், கவனமாய் உங்களுடைய வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் இதைத் தீவிரமாய் செய்யுங்கள். ஒவ்வொரு நாள் முடிவிலும் இந்த விஷயத்தைப் பற்றி நீங்கள் கர்த்தரிடத்தில் என்ன சொல்லப் போகிறோம் என்பதைப் பாருங்கள்; உங்களுடைய கணக்கு எவ்வித நிலை கொண்டுள்ளதென்று பார்த்து, கணக்கை முடிவுக்குக் கொண்டுவர முயற்சியுங்கள். எல்லா அநீதியிடமிருந்து நம்மை சுத்திகரித்து, நமது பாவங்களை நமக்கு மன்னிக்க அவர் விருப்பமாய் உள்ளார். இது ஜென்ம பாவத்தைக் குறிக்கவில்லை என்பதை கவனியுங்கள். இதற்கானதை உண்மையில் அவர் ஏற்கனவே செய்துவிட்டார். அது நாம் சுத்திகரிக்கப்பட்டு அவருடையவர்களான பிறகு, நம்மை வந்தடையும் பாவங்களைக் குறிப்பதாக உள்ளது. நீதியாக இருக்காத விதத்தில் நாம் நடப்பித்த ஒவ்வொன்றிலிருந்தும், எல்லா அநீதியிலிருந்தும் நம்மை சுத்திகரிக்க அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். மறுபடியும் குறித்துக் கொள்ளுங்கள்: இந்த விஷயத்திலிருந்து விடுவிக்கப்படும் விதமாக, சில வலிகள் அல்லது உபத்திரவம் அல்லது சில கஷ்டங்களை நாம் பெற்றுக்கொள்ள செய்வார். நாம் அலட்சியமாக இருந்தால், இந்த விஷயத்தில் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அதிகமான ஜாக்கிரதையாக இருப்பதற்காக, அவர் தம்முடைய முகத்தை ஒருவேளை விலக்கிக் கொள்ளலாம். தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் விதமாக நீங்கள் பாவம் செய்து பாதிரியாரிடம் சென்று, உடனடியாக பாவங்கள் அகற்றப்பட்டு, வெளியே வந்த பிறகு, மறுபடியும் பாவம் செய்யலாம் என்று நினைக்காதீர்கள்? இது வழிமுறை அல்ல. பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கான நமது கர்த்தரின் வழிமுறை அந்த வழிமுறையிலிருந்து வேறுபட்டதாகும். பாவத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

"மண்ணுலகில் தோன்றி வெளிப்படும் எவ்வித மேகமும் உம்முடைய ஊழியக்காரரின் கண்களிலிருந்து உம்மை மறைக்காது." இந்த கவிஞனின் கூற்றுப்படியும், உங்களுடைய எல்லா உணர்வுகளுக்கும் இசைவாகவும், நான் நம்புவதும் என்னுடையதும் இதுவே.

## வஸ்திரங்கள் - மகிமையும் நேர்த்தியுமான வஸ்திரங்களின் முக்கியத்துவம்.

**கே.** 285:1:: **கேள்வி** **(1910-Z) - 1 -** பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளின் பணிகளை செய்து முடித்த பிறகு, பரிசுத்த ஸ்தலத்தில் தன்னுடைய சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு, ஜனங்களை ஆசீர்வதிக்கும் சமயத்தில் மகிமையும் நேர்த்தியுமான

வஸ்திரங்களை பிரதான ஆசாரியன் அணிந்து கொள்ளும் விஷயத்தில் முக்கியத்துவம் ஏதேனும் உண்டா?

**பதில்** பிரதான ஆசாரியர் இந்த சுவிசேஷ யுக முழுமையிலும் பலியின் பணியை மேற்கொண்டு வருகிறார். அவர் தம்மை பலியாக ஒப்புவித்த பொழுது மட்டுமல்ல, ஆனால் இந்த யுகம் முழுமையிலும் பலி செலுத்தும் ஆசாரியராகவே இருக்கிறார். அவர் திரைக்கு அப்பால் பிரவேசித்திருந்தாலும், சொல்லப் போனால், அவர் இன்னும் பலியின் சணல்நூல் வஸ்திரங்களையே அணிந்திருக்கிறார். இந்த நிழலான பாவநிவாரண நாளின் முடிவில் கிறிஸ்துவின் பலியில் சபை தன்னுடைய பங்கை நிறைவேற்றி முடியும் சமயத்தில், அவருடைய இரண்டாவது பலி செலுத்துதலில், அதாவது, நிழலான வெள்ளாட்டுக்கடா பலி செலுத்தப்படும் போது, சணல்நூல் வஸ்திரங்களை அணிந்து கொண்ட நிலையில், திரைக்கு அப்பால் பிரவேசித்து, தம்முடைய சரீரத்தின் இரத்தத்தை அளிக்கிறார். பிரதான ஆசாரியராகிய நமது கர்த்தர், இரண்டாம் முறையாக, கிருபாசனத்தின் மேல் பலனாகிய இரத்தத்தைத் தெளித்து, இவ்விதமாக புதிய உடன்படிக்கையை முத்திரித்து, எல்லா ஜனங்களின் சார்பாகவும் தம்முடைய பலியின் பலனை உரித்தாக்குகிறார்.

இதைச் செய்து முடித்த பிறகு, கிறிஸ்து ஜனங்களை ஆசீர்வதிக்க வருகிறார்; ஆனால், பலியின் சணல்நூல் வஸ்திரங்களில் அவர் மறுபடியும் காணப்படமாட்டார். இந்த மாற்றம் உலகத்தாருக்குக் காணமுடியாதபடி நடக்கும். தற்காலத்திய பலியின் பணியை நிறைவேற்றிய பிறகு மரணத்திற்குள்ளாகும் ஆசாரியர்களை சுவிசேஷ யுகத்தில் உலகத்தார் இறுதியாக பார்க்க முடியும். “மகிமையின் வஸ்திரங்களில்” மகிமையும் நேர்த்தியுமாக பிரதான ஆசாரியரின் தோற்றத்தைத் தான் புதிய யுகத்தில் உலகத்தார் முதன் முதலாக காணக்கூடியது ஆகும். இவற்றை தங்களுடைய மாம்சீக கண்களில் காண்பார்கள் என்று அர்த்தம் கொள்ள வேண்டியதில்லை. இஸ்ரவேலுக்கும் உலகத்தாருக்கும் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை செயற்படுத்துவதின் மூலமாக அவருடைய மகிமை வெளிப்படும். பிரதான ஆசாரியரின் பல்வேறு வஸ்திரங்கள், மகிமை பொருந்திய எல்லா விஷயங்களையும் வெளிப்படுத்துவதாக இருந்து, ஆயிர வருஷ யுகம் முழுமையிலும் இந்த வெளிப்பாடு நிலவும். அபிஷேகம்பண்ணப்பட்டவரின் மகிமைபொருந்திய பணியில், பல்வேறு அங்கிகள், ஏபோத் போன்றவைகளால் அடையாளப்படுத்தப்பட்ட எல்லாவற்றின் நிறைவேறுதலும் அப்பொழுது நடக்கும்.

மகிமையின் இந்த வெளிப்பாட்டின் ஆரம்பம் உபத்திரவ காலத்தில் உள்ளது. இந்த காலம் பற்றி நாம் படிக்கிறோம், “அவரைப் பார்த்து புலம்புவார்கள்”. வல்லமை பொருந்திய அவருடைய இந்த வெளிப்பாட்டில் தான் தற்கால ஒழுங்குமுறைகள் எல்லாம் சிதறடிக்கப்பட்டு, வேதாகமம் பறைசாற்றும் மகா உபத்திரவ காலத்திற்கு வழி வகுக்கும். இதுவே இந்த யுகத்தின் முடிவும், ஆயிர வருஷ யுகத்தின் தொடக்கமும் ஆகும். இப்படியாக, மகிமையின் தோற்றம் பல்வேறு நிலைகளைக் கொண்டதாய் உள்ளது. ஆனால் இவையனைத்தும் மகிமையின் ஆவியின் தளத்தில் நடைபெறுவதாகும். இந்த யுகத்தின் பலி செலுத்தும் தளத்தில் வேறு எதுவும் இராது.

ஆசாரியரின் அங்கிகள் பற்றிய விஷயத்தில், தலையும் ஆசாரியர்களும் அடங்கிய முழுமையான ஆசாரியத்துவத்தை அடையாளப்படுத்துவதாக பிரதான ஆசாரியன் இருப்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். தலைக்கு எந்த மூடலும் தேவையில்லை. ஆனால் சணல்நூல் வஸ்திரங்களால் உடல் மறைக்கப்படுவது, அவருடைய சரீரத்தின் அங்கங்களாகிய நம் மீது கிறிஸ்துவின் மீட்பின் பலன் செலுத்தப்படுவதை அடையாளப்படுத்துகிறது. இவர்களைப் பிதா ஏற்றுக்கொண்டு நீதிக்குள்ளாக்குகிறார். இவர்களுடைய பலவீனங்கள் எல்லாம் கிறிஸ்துவின் மூலமாக மறைக்கப்படுகிறது. இந்த நிழலில் வெள்ளை அங்கி குறிப்பாக நம்முடைய பங்கை அடையாளப்படுத்துகிறது. அதாவது, சபை தன்னுடைய தலையுடன் இணைவதால் அபரிதமான மகிமையைக் கொண்டிருக்கும் விதமாக, மகிமையில் வெளிப்படும் பிரதான ஆசாரியர் அடையாளப்படுத்தப்படுகிறார். இதைத் தான் நாம் படிக்கிறோம், “இனி எவ்விதமாயிருப் போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற

வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.” நாம் அவருடைய மகிமை பொருந்திய சரீரமாக இருப்போம், அல்லது மகிமையில் அவருடைய சரீரமாய் இருப்போம் என்று வேதாகமம் வேறொரு வசனத்தில் “கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு” என்று குறிப்பிடுகிறது.

## <u>புறஜாதியார்</u> Vs யூதர்கள்

**கே 286:1 :: கேள்வி (1911) - 1 -** மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒரு புறஜாதி யூதனாக மாறினால், அவன் ஆதாமின் சாபத்திலிருந்து விடுதலை அடைவானா? அப்படியானால், மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறிய பிறகு, அவன் எப்படி இரண்டு சாபங்களின் கீழ் இருப்பான்?

**பதில் :** நான் இந்த கேள்வியை புரிந்து கொள்ளவில்லை. ஆனால் நான் வேறொரு கேள்வியை மனதில் இருத்தி, அதற்குரிய பதிலை கூறுகிறேன். எந்த புறஜாதியானவனும் நியாயப்பிரமாணத்தின் கீழ் யூதன் ஆகலாம். அவர்கள் யூதர்களாவதற்கு குறிப்பிட்ட முறைமை உள்ளது. சில புறஜாதியினர் யூதர்களாக மாறினர். வேதாகமத்தில் நிறைய இடங்களில் அவர்களைப் பற்றிய பதிவு உள்ளது. அவர்கள் யூதர்களான போது, நாம் அறிந்த வரையில், யூதர்களின் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருந்தார்கள்.

## தேவன் - சாயல் - விழுந்துபோன மனுஷன்.

**கே 286:2 :: கேள்வி (1909) - 2 -** முந்தைய தேவ சாயலில் ஏதாவது, விழுந்துபோன மனுஷர்களிடம் உள்ளதா? அப்படி இருந்தால், அதன் காரணமாக பரிசுத்த ஆவி நம் மீது செயற்பட்டு, நாம் சத்தியத்தைக் கண்டுணரச் செய்கிறதா?

**பதில் :** அப்படி இருக்கும் என்று நான் நினைக்கிறேன். தேவ சாயலில் பல்வேறு கூறுகள் உள்ளன. ஆனால், தேவ சுபாவத்தின் ஒரு குறிப்பிட்ட கூறு, நான் கிரகிக்க முடிந்த வரையில், தேவன் நம்மை நெருங்கும் போது, அவர் முதலாவதாக செயல்படுத்தக்கூடியது **<u>நேர்மை</u>** என்றே நினைக்கிறேன். நான் புரிந்து கொண்டபடி, ஒரு மனுஷன் தன்னைப் பொறுத்தவரையில் நேர்மையாக இல்லாவிட்டால், அவர் அழைக்கப்படவே வாய்ப்பு இல்லை. ஒரு வேளை அவர் சிறிது செவி கொடுத்தால், அதன் பாதிப்பினால் அவர் நீண்ட காலத்திற்கு தரித்திருக்க மாட்டார். எவர் ஒருவர் இதயப்பூர்வமாக அல்லது மனதளவில் நேர்மையுள்ளவராய் இருந்தால், தற்காலத்தின் நெருக்கத்திற்கும் பாதிப்பிற்கும் உள்ளாகும் விஷயத்தில் ஒவ்வொரு வழியிலும் அதிகமாய் அனுகூலம் பெறுவார்.

## பொன்னான பிரமாணம்: தவறான விளக்கம்

**கே 286:3 :: கேள்வி (1909) - 3 -** ஒருவன் தனக்குத் தன் சகோதரன் என்ன செய்யக்கூடாது என்பானோ, அதையே அவன் தன் சகோதரனுக்குச் செய்யக்கூடாது என்பதாகப் பொன்னான பிரமாணத்திற்கு விளக்கம் கொடுக்கப்படலாமா?

**பதில்:** இல்லை. பொன்னான பிரமாணமானது எதிர்ப்பார்ப்பவைகளுக்கும் அதிகமாய்ச் செய்வதற்கு அது தடைவிதிக்கும் என்று நான் கருதுகிறதில்லை. ஒருவேளை தாங்கள் ஒரு கிறிஸ்தவன் என்றால், நீங்கள் அதிகமாகவே செய்ய வேண்டும். பொன்னான பிரமாணம் என்பது அனைவருக்கும் பொருந்தும், ஆனால் கிறிஸ்தவனுக்கு வேறொரு பிரமாணம் காணப்படுகின்றது. ”புதிதான கட்டளையைக் கொடுக்கிறேன்” என்று இயேசு உலகத்தாரிடமோ, யூதர்களிடமோ சொல்லாமல், சீஷர்களிடமே சொன்னார்; “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்” என்று சீஷர்களிடமே சொன்னார். ஒருவேளை இயேசு நம்மைப் பொன்னான பிரமாணத்தினுடைய அடிப்படையில் மாத்திரம் அன்புகூர்ந்திருந்தாரானால், அவர் நமக்காக மரித்திருக்கவே மாட்டார்;

ஆனால் அவர் அதிகமாகவே செய்திட்டார் மற்றும் அவரது பின்னடியார்களென நீங்களும், நானும் இன்னொருவருக்காய் அதிகமாய்ச் செய்திட வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கிறார்.

## ஆஸ்திகள்; அவனுடைய எல்லாவற்றின் மேலும் விசாரணைக்காரன்.

**கே. 286:4 :: கேள்வி (1916) - 4 --** "தன் ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மத் 24:47ல் கூறும்போது, நமது கர்த்தராகிய இயேசுவினால் சொல்லப்பட்ட "ஆஸ்திகள்" என்பது எவைகளைக் குறிக்கின்றன?

**பதில்:** இது தனிப்பட்ட ஒவ்வொருவருடைய தீர்ப்பின் மீது சிறிதளவு சார்ந்திருப்பதாய் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். "ஆஸ்திகள்" என்று அவர் குறிப்பிடுவது எவைகள் என்று நமது கர்த்தர் கூறவில்லை. ஆகவே இதை உங்களுக்கும், எனக்கும், கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் விட்டு விடுகிறார். எந்த வகையான ஆஸ்திகளைக் குறிக்கின்றன என்பதை சபை முடிவு பண்ணும். கர்த்தர் ஏற்கனவே சொல்லியிருந்தாரானால், இந்த விஷயத்தில் நமக்கு எந்த சுதந்திரமும் இல்லை. அதுவே முடிவாய் அமைந்திருக்கும். ஆனால் அவர் நமக்குச் சொல்லவில்லை என்பதால், இது குறித்து நாம் சிந்தித்து அனுமானிப்பதற்கான நல்ல வாய்ப்பு நமக்கு உள்ளது. இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தம்முடைய சொந்த அபிப்பிராயத்திற்கு உரிமை உள்ளவராகிறார்.

## சுவிசேஷம் - எத்தனை பேர் கேட்டனர்.

**கே. 287:1 :: கேள்வி (1909) - 1 --** கொலோ 1:23,24.ம் வசனங்களுக்கு விளக்கம் கூறவும். வசனத்தின் முதற் பகுதியில் அப்போஸ்தலரின் நாட்களில் வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு மனுஷனும் சுவிசேஷத்தைக் கேட்டிருந்தான் என்று அப்போஸ்தலன் கூறுவதாக அர்த்தங் கொள்ளலாமா?

**பதில்:** யூதர்களுக்கான செய்தியை கர்த்தர் 1600 அல்லது அதற்கு அதிகமான வருஷங்களாக வைத்திருந்தார். இந்த சுவிசேஷம் அல்லது செய்தி யூதர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டது. நமது கர்த்தரின் முதலாம் வருகைக்குப் பிறகு, யூத ஜாதியைப் பார்த்து சொல்லக்கூடிய தருணம் வந்தது, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" கொர்நெலியுவின் மாற்றத்திற்குப் பின், இந்த செய்தி யூதர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இனி இருக்கவில்லை. காதுள்ளவன் கேட்கும் விதமாக, "ஒவ்வொரு சிருஷ்டிக்கும்" இது பிரசங்கிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு எப்போதும் வாய்ப்பு இல்லையா? ஆம், உண்டு. அவர்கள் பார்க்கவும் கேட்கவும் கூடுமா? ஆம், குருடரின் கண்கள் அனைத்தும் திறக்கப்படும். செவிடான காதுகள் அனைத்தும் கேட்கும். இந்த சுவிசேஷத்தின் ஊழியனாக பவுல் இருந்தார். "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து ----." இந்த சுவிசேஷ செய்தியின் ஊழியக்காரனாக தாம் இருந்தது குறித்து பவுல் சந்தோஷம் கொண்டார். கர்த்தரால் கிருபை பெற்றவர்கள் எவர்களோ, அவர்கள் மட்டுமே இத்தகைய சலுகையைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை பவுல் அறிந்திருந்தார். அவர் கூறினார், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை – நிறைவேற்றுகிறேன்." நீங்களும் நானும் அதே சலுகையைப் பெற்றிருக்கிறோம். பவுல் அப்போஸ்தலனைப் போல உயர்ந்த நிலையை நாம் அடையவில்லை. இன்று நாம் அவருடைய வார்த்தைகளைப் படிக்கிறோம். பவுலின் முன் உதாரணமும், வார்த்தைகளும் நமக்கு பெறும் ஆறுதலைக் கொண்டு வருகின்றன. நாம் இந்த பானத்தில் பானம் பண்ணாவிட்டால், நாம் கர்த்தருடைய சீஷர்களாக முடியாது. நம்மால் முடிந்த வரையில் நீங்களும் நானும் அனைத்தையும் செய்வதில் மகிழ்ச்சியுற வேண்டும்.

## சுவிசேஷம்: மரித்தவர்களுக்கு முதலில் பிரசங்கிக்கப்பட்டது.

**கே** 287:2 :: **கேள்வி** (1911) - 2 - "இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர் முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும் படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது." தயவு செய்து விளக்கவும்?

**பதில்** : கேள்வியில் குறிக்கப்பட்டுள்ள மரித்தோரானவர்கள் யார்? "என்னுடைய தகப்பன் இறக்கும்போது நான் உம்முடைய சீஷனாவேன்" என்று ஒருவன் வந்து கூறியபோது, இயேசு குறிப்பிட்ட மரித்தவர்கள் போலவே, இவர்களும் அதே மாதிரியான மரித்தவர்களாக இருக்கிறார்கள். இயேசு கூறினார், "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீ போய் சுவிசேஷத்தைப் பிரசங்கி." இதற்கு என்ன அர்த்தம்? மரண தண்டனைக்கு உட்பட்ட எல்லா மனுக்குலமும் தேவனுடைய நிலைப்பாட்டில் மரித்தவர்களாகவே எண்ணப்படுகிறார்கள். தேவனுடைய குமாரன் உங்களுக்கு இல்லாவிட்டால், உங்களுக்கு ஜீவன் இல்லை. ஜீவன் அளிக்கும் மகத்தானவராகிய கர்த்தர் இயேசுவுடன் எவரும் இணைந்திராவிட்டால், ஒருவரும் ஜீவனைப் பற்றி எண்ணிப் பார்க்கவே முடியாது. "குமாரனையுடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." ஆகவே, இவ்விதமாக அனைத்து உலகத்தாரும் மரித்தவர்களாய் இருக்கிறார்கள். அப்போஸ்தலர் கூறுகிறார், "இதன் காரணமாகவே, மரித்தோரானவர்கள், மனுஷர் முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப் பட்டிருந்தும், தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது." அதாவது, நீங்களும் நானும் சுபாவமாகவே உலகத்தில் மரிக்கிறவர் களாயிருந்தாலும், உயிருள்ளவர்களாக எண்ணப்பட்டு, மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசித்திருப்பதாக கணக்கிடப்படுகிறோம். பிறகு, நித்திய ஜீவனுக்காக நமது சோதனைகளைப் பெறுகிறோம். சோதனைகளை நாம் எப்படி பெறுகிறோம்? மனுஷர் முன்பாக நாம் இன்னும் மாம்சத்தில் இருக்கிறோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், தேவனுக்கு முன்பாக நாம் புது சிருஷ்டிகளாகக் கருதப்படுகிறோம். ஆகவே நாம் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்கிறோம். ஆனால் உலகம் நம்மை அறிவதில்லை. நம்மை இந்த உலகத்தின் ஒரு பகுதியாகவே இன்னும் உலகம் நினைக்கிறது. மாம்சீகத்தின்படியே நம்மை இன்னும் தீர்ப்பளிக்கிறது. ஆனால், ஆவியின்படியே கர்த்தரினால் நாம் தீர்ப்பளிக்கப்படுகிறோம். இப்போது அப்போஸ்தலர் கூறுகிறார், இதன் காரணமாகவே மரித்தவர்கள் மனுஷர் முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்து, தேவன் முன்பாக ஆவியினால் பிழைக்கும்படியாக அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது."

## கிருபை: விருதாவாய் பெறுதல்.

**கே** 288:1 :: **கேள்வி** (1911) - 1 -- **2கொரி 6:1.** "தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப்பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்." கிருபை அல்லது சகாயம் என்பது என்ன? அதை விருதாவாய்ப்பெறுவது எப்படி?

**பதில்** : இங்கு அப்போஸ்தலர் கிறிஸ்தவர்களைப் பார்த்து சொல்வதால், சிலர் தங்களை ஏற்கனவே அர்ப்பணித்து பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில், தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெற்றிருப்பதையே பவுல் குறிக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

இப்பொழுது, தேவ கிருபையானது இந்த பெரிதான அழைப்பை முன்னிட்டு உள்ளது என்பதும், தற்கால நிலைமைகளின் கீழ் இரண்டாம் மரணத்திற்கு செல்பவர்கள், தேவனுடைய சகாயத்தை அல்லது கிருபையை கண்டிப்பாக விருதாவாய்ப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் செய்ய வேண்டியதை விட்டு விட்டு, தங்களின் ஓட்டத்தில் தோல்வியுற்று, கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரராவதற்கான சகாயம் அல்லது கிருபையை விருதாவாய்ப் பெறுகிறார்கள் என்பதும் மெய். ஏனெனில் அந்த மகத்தான ஆசீர்வாதத்தைப் பெறுவதில் தோல்வி அடைகிறார்கள். இரண்டாவதான ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றிருந்தாலும், தாங்கள் அழைக்கப்பட்டதற்கான

ஆசீர்வாதத்தைப் பெறுவதில் தோல்வியுறுகிறார்கள். எல்லாவற்றையும் கேட்டு, அதற்குரிய அறிவு அல்லது விசுவாசத்தை அல்லது தேவகிருபையை வீணாக பெற்றிருப்பவர்களாய் அவர்கள் இருக்கிறார்கள் என்பதும் உண்மையே. தேவனால் நெருங்கி வரப்பெற்று அல்லது அழைக்கப்பட்டு, அவரை ஏற்றுகொள்ளாமல் இருப்பவர்களும் தேவ கிருபையை விருதாவாகப் பெறுகிறார்கள். ஏனெனில் அவர்கள் இதன் மூலம் பலன் ஏதும் பெறுகிறதில்லை. அதனால் எந்த விளைவுகள் அல்லது ஆசீர்வாதங்கள் இல்லை. இந்த உலகத்தாரின் மீதமுள்ளவர்களுடன் அவர்கள் வெறுமனே வந்து, தற்காலத்தில் விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெறாமல் இருக்கிறார்கள்.

## கிருபை: - முன்பு கிருபை இருந்தால், எப்போதும் கிருபையில் இருத்தல்.

**கே 288:2 :: கேள்வி (1912-Z) - -** “அவன் தன் நீதியை நம்பி அநியாயஞ் செய்தால், அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப்படுவதில்லை. அவன் செய்த தன்னுடைய அநியாயத்திலே சாவான். மேலும், துன்மார்க்கனாக இருந்தவன், தன் அநியாயத்தை விட்டு மனந்திரும்பினால் அவன் காப்பாற்றப்படுவான் என்று வேதாகமம் சொல்வதற்கு என்ன அர்த்தம்? எசேக் 33:13-16.

**பதில்:** சில கிறிஸ்தவ ஜனங்கள் கொண்டிருக்கும் கொள்கைக்கு முரண்பாடாக வேதாகமம் வலியுறுத்துகிறது, “முன்பு கிருபையில் இருந்தால், எப்பொழுதுமே கிருபையில் இருப்போம்”, அதாவது, தேவனால் கிருபை பெற்ற ஒருவன், தேவ கிருபையை எப்போதும் இழக்க மாட்டான். வேதாகமத்தில் இந்த கொள்கையை, தற்காலத்தில் மரணத்திலிருந்து புதிய சிருஷ்டிகளாக ஜீவனுக்குள் பிரவேசிக்கிறவர்களைப் பற்றிய விஷயத்தில் பிரயோகிக்கலாம். அவர்கள் ஜீவன் அல்லது மரணத்திற்கான சோதனையில் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய விஷயங்களில் ஆதாமின் பாவம் இனி எண்ணப்படுவதில்லை. கர்த்தரிடத்தில் அவர்கள் விசுவாசமாய் தரித்திருந்தால், நித்தியமான ஆசீர்வாதத்தை அவர்கள் பெறுவார்கள். விசுவாசமாய் இராவிட்டால், அவர்கள் மரணம் அடைவார்கள். ஒருவன் தேவனுடன் உடன்படிக்கை செய்து கொண்டு, பிறகு அந்த உடன்படிக்கையைக் காத்துக் கொள்வதில் தோல்வி அடைந்தால், அந்த ஒப்பந்தத்தை மீறிய உடனேயே, தேவனுடன் கொண்ட உடன்படிக்கையின் உறவை அவன் இழந்து விடுகிறான். நாம் விசுவாசமாய் இருந்தால், நமக்கு அழியாமையை அளிக்க அவர் சித்தமாயிருப்பார்.

ஆனால் இந்த வேத வசனம் விசேஷமாக ஆயிர வருஷ யுகத்தைச் சார்ந்ததாகக் குறிக்கப்படுகிறது. அந்த யுகத்தில் நித்திய ஜீவனுக்கான வாய்ப்புக்கு எல்லோரும் கொண்டுவரப்படுவார்கள். அப்பொழுது தான், “பாவத்தின் சம்பளம் மரணம்” என்பதை ஜனங்கள் உணருவார்கள். அப்பொழுது பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்ற பழமொழி இனி இருப்பதில்லை. ஆனால் “அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்.” (எரே 31:29; எசே 18:2.) சபைக்கு இப்பொழுது இருப்பதைப் போலவே, ஜீவன் அல்லது மரணத்திற்கான சோதனை அப்பொழுது இருக்கும். இந்த இரண்டு பிரிவினர்களிலும், தங்களுடைய சோதனைகளில் உண்மையாயிருப்பவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும். மற்றவர்கள் அனைவரும் மரணத்திற்குள்ளாவார்கள்.

## கல்லறைகள் திறந்தன - இது முதலாம் உயிர்த்தெழுதலா?

**கே 289:1:: கேள்வி (1911) - 1 --** “கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது.” இது முதலாம் உயிர்த்தெழுதலா?

**பதில்:** இல்லை, நாம் பதிலுரைக்கிறோம், இது முதலாம் உயிர்தெழுதல் அல்ல, ஏன்? பெரும் பூமியதிர்ச்சியையும், நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது என்றும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பரிசுத்த நகரத்தில் பிரவேசித்தனர் என்றும் நாம் படிக்கிறோம். இந்த அறிக்கை மிகவும் வெளிப்படையாக இல்லை.

ஆனால் அங்கே எழுந்திருந்த எவரும் முதலாம் உயிர்த்தெழுதலை பல்வேறு காரணங்களினிமித்தம் சந்தித்திருக்க இயலாது. முதலாவதாக, கிறிஸ்து ஒருவரே மரித்தோரிலிருந்து முதலாவது உயிர்த்தெழுந்தவர். இயேசுவுக்கு முன்பாக யாரும் உயிர்த்தெழுதல் அடையவில்லை. மரித்தோரிலிருந்து அவரே முதற் பேறானவர். ஏன்? இயேசு லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பவில்லையா? இல்லை. அவன் விழித்த பிறகும் மரித்த நிலையிலேயே இருந்தான். மரணத்திலிருந்து யாரும் முழுவதுமாக உயிர்த்தெழப்படவில்லை. அவர்கள் சிறிது காலத்திற்கு விழிக்கப்பட்டு, மறுபடியும் மரணத்திற்குள்ளானார்கள். அவர்கள் உயிர்த்தெழுதல் அடையவில்லை. உயிர்த்தெழுதல் என்பது மரணத்திலிருந்து முற்றிலுமாக வெளிவருவதாகும். கிறிஸ்து முதலாவதாக உயிர்த்தெழுந்தவர். மரணத்திலிருந்து பூரணமான ஜீவனுக்கு முதலில் வெளிக்கொணரப்பட்டவர் இவர் ஒருவரே. அந்த சமயத்தில் விழித்தெழுந்தவர்கள் இதைப் போன்று இருந்திருக்க முடியாது. ஏனெனில் நமது கர்த்தருடைய மரண நேரத்தில் தான் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. மூன்று நாட்கள் வரை இது இல்லை. இதன் பிறகு இயேசு மரணத்திலிருந்து எழுந்தார். இரண்டாவதாக, மரணத்திலிருந்து உயிர்த்தெழ வேண்டியவர்கள் சபையினர் ஆவர். ஆவியின் தளத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதலானது, சபையின் உயிர்த்தெழுதலுக்கு துவக்கமாக இருந்தது. இது அவருடைய உயிர்த்தெழுதல் என்று அப்போஸ்தலன் கூறுகிறார், “நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், - - அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்கொப்பாகி” என்று கூறுகிறார். இதை வேறுவிதமாகச் சொன்னால், இந்த 1800 வருஷங்களில் நடந்த ஒரே உயிர்த்தெழுதல், இயேசுவின் உயிர்த்தெழுதல் மட்டுமே. ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கு கொள்கிறது. இதைத் தவிர வேறு யாருக்கும் ஆசீர்வாதங்கள் வர இயலாது. ஆகவே, எபிரேயருக்கு எழுதின நிருபம் 11ம் அதிகாரத்தில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமல் விசுவாசத்தில் மரித்துப் போன முற்பிதாக்களைப் பற்றி நாம் படிக்கிறோம். அவர்கள் சபையாகிய நம்மையல்லாமல் பூரணராகாதப்படிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார். நாம் நம்முடையதைப் பெறும் வரையில் அவர்கள் தங்களுடைய உயிர்த்தெழுதலைப் பெற முடியாது. லாசரு எப்படி விழித்தெழப்பப்பட்டானோ, அதே முறையில் தான் சிலர் விழித்தெழப்பட்டிருக்கலாம்; வேறு எந்த முறையிலும் அல்ல. அதிகபட்சம் இந்த முறையில் தான் நடந்திருக்க முடியும்.

## திரள் கூட்டம் - கட்டாயப்படுத்தலினால் ஜெயங்கொள்ளுதல்.

**கே289:2:: கேள்வி (1905) - 2 -** திரள் கூட்டத்தார் “ஜெயங்கொண்டவர்களை” உள்ளடக்கியிருந்தால், வெளி 3:21ம் வசனம் அவர்களைக் குறிக்கிறதா?

**பதில் :** இல்லை. ஏனெனில் இந்த வசனத்தில் ஒரு வரையறை தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் கட்டாயத்தின்பேரில் ஜெயங்கொள்ளுகிறவர் அல்ல. “நான் ஜெயங்கொண்டு”, அதாவது, கிறிஸ்து ஜெயங்கொண்டது போல யார் ஜெயங்கொள்கிறார்களோ, அவர்கள் தாம் சிங்காசனத்தில் உட்காரப்போகிறவர்கள்.

## திரள் கூட்டம் - ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்.

**கே289:3:: கேள்வி (1907) - 3 -** திரள் கூட்டத்தார் மகா உபத்திரவத்தில் எப்பொழுது உபத்திரவப்படுவார்கள்? அவர்கள் ஆட்டுக்குட்டியானவைரின் கலியாண விருந்தில் இருப்பார்களா?

**பதில்:** சபை முழுமையும் கூட்டிச் சேர்க்கப்பட்ட உடனேயே, திரள் கூட்டத்தாரின் உபத்திரவத்திற்கு பிரத்தியேகமான காலப்பகுதியாக இந்த யுகம் முடிவடையும் சமயம் இருக்கிறது என்பதை, திரள் கூட்டத்தாரைப் பற்றிக் குறிப்பிடும் வேதாகம பகுதிகள் பெரும்பாலானவை சுட்டிக்காட்டுகின்றன என்று நான் பதிலளிக்கிறேன். இதற்கு உதாரணமாக,

புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகளின் உவமையைக் கூறலாம். புத்தியுள்ள கன்னிகைகள், “ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும்” என்று சொல்லி, புத்தியுள்ள கன்னிகைகள் எல்லோரும் உள்ளே சென்ற பிறகு, புத்தியில்லாத கன்னிகைகளும் வந்து, “ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும்” என்று சொன்னார்கள். கர்த்தர் அவர்களை மணவாட்டி வகுப்பாராக அறியவில்லை என்றும், அவர்கள் உபத்திரவத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்றும் சொல்லப்பட்டது. சிறுமந்தை முழுவதும் திரைக்கு அப்பால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்ற பிறகு பிரத்தியேகமான உபத்திரவம் திரள் கூட்ட பிரிவினர் மேல் வருவதை சுட்டிகாட்டுவது போல் உள்ளது. அது இப்பொழுது வெறும் உவமையாக உள்ளது. அந்த உவமையின் வாயிலாக நமக்குத் தெரிந்த வரையில் அறிவுப்பூர்வமாக நாம் விளக்கம் பெறுகிறோம். பிறகு, லேவியராகமத்தில் கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா பற்றிய விஷயம் முடிவுற்ற பிறகு, போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடா பற்றிய விஷயம் காண்பிக்கப்படுகிறது. கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா சங்கரிக்கப்பட்டு, அதன் இரத்தம் தெளிக்கப்படுவது முற்றிலும் முடிவுற்ற பிறகு தான், போக்காடு சம்பந்தப்பட்ட விஷயம் நடைபெறுகிறது என்பதற்கு இது நிச்சயமான நிரூபணமாக இருக்கிறதில்லை. ஏனெனில், இந்த நிழலான காரியங்கள் எல்லாம் ஒரே நேரத்தில் நடைபெற இயலாது. இது முதலாவது, அடுத்து இரண்டாவது, என்று இதற்கு ஒரு ஒழுங்கு முறை இருந்திருக்கும். காளையைப் பற்றிய காரியம் முதலாவதாக நடக்கிறது; கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா பற்றிய காரியம் இரண்டாவதாக நடக்கிறது. பிறகு போக்காடாக விடப்படும் ஆட்டுக்கடா பற்றிய காரியம் மூன்றாவதாக நடக்கிறது. மகாஉபத்திரவ வகுப்பாரில் சிலர் யுகம் முழுமையிலிருந்தும் இருப்பார்கள் என்றும், தற்போது நிலவும் வித்தியாசமான சூழ்நிலைகள் காரணமாக இவ்வகுப்பாரில் பெரும்பாலோர் ஒருவேளை, முடிவின் காலத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள் என்று அனுமானிக்க வேதாகமத்தில் இடம் உண்டு என்று நம்பினாலும், இந்த வகுப்பாரின் உபத்திரவம் பிரத்தியேகமாக சுவிசேஷ யுகத்தின் முடிவிலேயே நடக்கும் என்பதும், இது தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பார் அனைவரும் சென்ற பிறகு நடக்கும் என்பதையும் இது உணர்த்துவதாய் உள்ளது. முந்தைய காலத்தில் எச்சமயத்திலும் இல்லாத அளவுக்கு தற்காலத்தில் வாழும் திரள் கூட்டத்தின் பெரும்பாலான வகுப்பார் இருப்பதற்கு காரணமாக, இப்பொழுது வித்தியாசமான சூழ்நிலைகள் எவ்விதத்தில் உள்ளது என்று சிலர் வினவலாம்? இப்பொழுது அவர்களுக்கு சாதகமாக உள்ள சூழ்நிலைகள்: கிறிஸ்தவம் இப்போது ஓரளவிற்கு பிரபலமாகி உள்ளது. பெரும்பாலான ஜனங்கள் கிறிஸ்துவைப் பற்றி கேள்வியுற்று கர்த்தரிடம் ஒருவிதத்தில் அர்ப்பணிக்கப்படுகிறார்கள். கூர்மையாகவும் வேறுபட்டதாகவும், வெளிப்படையானதாகவும் உள்ள துன்புறுத்தல் இப்பொழுது இல்லை. ஆகவே, இப்பொழுது கர்த்தரிடத்தில் முழுவதுமான அர்ப்பணிப்பைச் செய்ய ஜனங்களுக்கு அதிகளவில் வாய்ப்பு உள்ளது. இது எளிதான காரியம் என்று அனுமானிக்கின்றனர். அவர்கள் உள்ளே வந்த பிறகு, தாங்கள் நினைத்த விதத்திலிருந்து அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்று கண்டவுடன், சிலர் சிறிது பின்வாங்கிப் போகிறார்கள். இவர்கள் தான் திரள் கூட்டத்தாராகிறார்கள். ஆனால் முற்காலங்களில் விஷயங்கள் கூர்மையாக வரையறுக்கப்பட்டு அதிக கொந்தளிப்புடன் இருந்ததால், ஒரு முடிவுக்கு வருவது எளிதாக இல்லை. நமது கர்த்தர் குறிப்பிட்டபடி, அவன் உட்கார்ந்து, செல்லுஞ் செலவைக் கணக்கு பார்ப்பான். நமது காலத்தில் செலவு கணக்குப் பார்த்து, முடிவெடுப்பதில்லை. இது எளிதான காரியம் என்று பிரசங்கிமார்கள் அவர்களுக்குச் சொல்வதைக் கேட்கிறார்கள். இதன் விளைவாக, “நீங்கள் இப்பொழுது வாருங்கள், சில நிமிடங்களிலேயே ஒவ்வொன்றையும் நீங்கள் பெறுவீர்கள்” என்று அவர்கள் சொல்லுகின்றனர். நீங்கள் வியாபாரத்தில் செழிப்படைவீர்கள், துரிதமாக செல்வந்தர் ஆவீர்கள், வசதியான வீடுகளைப் பெறுவீர்கள், உங்கள் அயலாரிடம் பெரும் மதிப்பு பெறுவீர்கள்.” ஆகவே, இது வசீகரிக்கும் நேரம் ஆகும். இடுக்கமான வழியைப் பற்றி இவ்விதமான தவறான திரித்துரைத்தல் காரணமாக இந்த ஜனங்கள் வசீகரிக்கப்படுகிறார்கள். அவர்கள் உள்ளே வந்த பிறகு, நமது கர்த்தர் அவ்வப்போது காண்பிப்பதற்கு ஏற்ப, இது இடுக்கமான வழி என்பதை அவர்கள் கண்டு கொள்கிறார்கள். ஆகவே தான், முற்காலத்தை விட இன்று இந்த வகுப்பார் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

இப்பொழுது, ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தைப் பற்றிய விஷயத்தில், திரள் கூட்ட வகுப்பினரைப் பற்றி கர்த்தர் விவரிப்பதை நாம் பார்க்கிறோம். அந்த வகுப்பினர் கூறுகிறார்கள், "நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து, அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்." அவள் தயாராக இருந்து கலியாணத்திற்கு சென்றாள். நாம் விடுபட்டு விட்டோம் என்பது தான் உட்கருத்தாகும். பிறகு அவர்கள் கூறுகிறார்கள், "நாம் சந்தோஷப்பட்டு களிகூருவோம்". அவர்கள் ஏன் களிகூர வேண்டும்? ஏனெனில், அந்த தருணத்தில் அவர்களுடைய கண்கள் உண்மையாகவே திறக்கப்படுகின்றன. அவர்கள் முன்பு பார்த்திராத விதத்தில் பாபிலோனைப் பார்க்கிறார்கள். அவர்கள் இதற்கு முன்பு பார்த்திராத வண்ணம், தேவனுடையத் திட்டத்தை காண்கிறார்கள். கேட்கக் கூடிய செவியும், மெச்சத்தக்க இதயமும் இருக்கக்கூடிய சரியான மனப்பாங்கு உள்ள இருதயத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. ஆகவே தான், ஆழமான விஷயங்களை அவர்கள் காண இயலாதிருந்தது. நாம் சரியான இதய சுபாவத்தில் வரும்போது, தேவன் மட்டுமே நமக்கு அவருடைய வார்த்தையை ஆழமாக புரிந்து கொள்ளுதலை அளிக்கிறார்.

பிறகு இப்பொழுது, வெளி 19ம் அதிகாரத்தின் திரள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் சொல்வதாக விவரிக்கப்படுகிறது "நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து, அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்." அவர்கள் இதைக் குறிந்து மிகுந்த சந்தோஷம் அடைகிறார்கள். பிறகு அவர்கள், "பாபிலோன் விழுந்தது, பரலோகங்களே! அவளுடைய விழுகையைக் குறித்து களிகூருங்கள், களிகூருங்கள்." பாபிலோன் உண்மையில் முன்பு எப்படி இருந்தது என்பதையும், அவர்கள் அதனால் எப்படி கட்டுண்டு இருந்தார்கள் என்பதையும், அந்த உற்பத்தி ஸ்தானத்திலிருந்து கண்மூடித்தனமான செல்வாக்கு எப்படி இருந்தது என்பதை உணராததையும் இப்பொழுது பார்க்கும் போது, பாபிலோன் விழுந்திருப்பதைக் கண்டு அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

நான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன், ஏனெனில் இந்த கோணத்தில் சிலருடைய பார்வை இல்லாமலிருக்கலாம், அல்லது, இந்த வெளிச்சத்தில் அவர்களின் பார்வை இருந்திருக்கலாம். என்னுடைய கூர்ந்து நோக்குதல் மற்றும் அனுபவத்தைப் பொருத்த வரையில், இக்காலத்தில் தேவனுடைய பணிக்கு மாபெரும் தடையாக இருப்பது - இப்பொழுது குறித்துக் கொள்ளுங்கள், தற்காலத்தில் தேவ பணி "கிறிஸ்தவ ஊழியம்" (CHRISTIAN MINISTRY) என்று அறியப்படுகிறது. ஏன்? சிலர் கூறுகின்றனர், சகோதரர் ரசல், அதை நீங்கள் நம்புவதில்லையா? ஆம், நானும் நம்புகிறேன். ஏன், ஒழுக்க பண்பு குறித்து பெருமளவில் பிரசங்கம் பண்ணி, அவர்கள் இவ்விதம் அப்படிச் செய்கிறதில்லையா? ஆம், ஆனால் தற்காலத்திற்குரிய தேவனுடைய பணியாக இது இப்போது இருக்கிறதில்லை. அவருடைய நாமத்திற்காக ஜனங்களைப் பிரித்தெடுப்பது தான் இந்த யுகத்தின் தேவனுடைய பணியாக இருக்கிறது. கோதுமை மணிகளைக் கண்டு பிடிப்பது தான் தேவனுடைய குறிப்பிட்ட பணியாக இருக்கிறது. இப்பொழுது அவர்கள் செய்யும் பணி எல்லாம் அதனுடைய வழியில் நல்லதாக உள்ளது. அவற்றுள் பெரும்பாலானவை பிறர் நலம் விரும்பும் நற்பணிகள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். மற்றவர்கள் செய்வது போலவே நானும் அவற்றை மெச்சிக்கொள்கிறேன். தீமைகளைச் செய்யாமல் அவர்கள் இவ்வாறு செய்வதை நான் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அவர்களை நான் வாழ்த்துகிறேன். ஆனாலும், இந்த ஊழியத்திலிருந்து தான் தற்கால சத்தியத்திற்கு கிட்டத்தட்ட எல்லா இடைஞ்சல்களும் வருவதை நீங்கள் காண்கிறீர்கள். இந்த நாகரீக உலகத்தின் எல்லா பிரிவுகளிலுமுள்ள ஊழியஞ்செய்கிறவர்களிடமிருந்து தடைகள் வராவிட்டால், தேவனுடைய ஜனங்கள் மத்தியில் காட்டுத்தீயைப் போல சத்தியம் பெருகும். இது முதலாம் வருகையின் போது நடந்ததைப் போன்று இருக்கும். அந்த நாளில், கர்த்தராகிய இயேசுவை விசுவாசிப்பதிலிருந்து ஜனங்களைத் தடுத்தவர்கள் யார்? இது வேதபாரகர்களும், பரிசேயர்களுமே. இயேசு அவர்களிடம் கூறினார், "மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதில்லை, பிரவேசிக்கப்

போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை - - அறிவாகிய திறவுகோலை ஜனங்களிடமிருந்து எடுத்துக் கொண்டீர்கள்." ஆகவே இது இன்றைய நாளில் கிறிஸ்தவ ஊழியம் செய்பவர்களிடம் உள்ளது. அருமையான நண்பர்களே, இது 1800 வருஷங்களுக்கு முன்பான இணையாகவே உள்ளது. வழியில் குறுக்காக அவர்கள் நிற்கிறார்கள். இதை அவர்கள் முழுவதுமாக உணரவில்லை என்பதை நான் மகிழ்வுடன் சொல்கிறேன். அவர்கள் இதை முழுவதுமாக உணர்ந்திருந்தாலும், அந்த அளவுக்கு அவர்கள் பொறுப்பேற்பவர்களாக இருக்க மாட்டார்கள். அதற்கான முழுமையான பொறுப்பு அவர்களுக்கு இல்லை என்று நான் நினைக்கவில்லை. கல்வி கற்று, சீயோல் மற்றும் ஹாதேஸ் (பாதாளம்) ஆகியவற்றை அறிந்து, வருஷந்தோறும் தங்களுடைய பிரசங்கத்தின் கீழ் தக்கவைத்து, நித்திய வாதை, அக்கினி போன்றவைகளில் ஜனங்கள் நம்பிக்கை வைக்கிறார்கள் என்று அனுமானித்து, இது போன்றவற்றை தாங்கள் நம்பாமல், தேவனை உண்மையாக தொழுது கொள்வதிலிருந்து ஜனங்களை தடை பண்ணி, அபத்தமான கொள்கைகளை அனுமதிக்கும் அந்த மனுஷர்கள் மன்னிக்கப்படத்தக்கவர்கள் அல்ல என்று நான் நினைக்கவில்லை. ஆனால், இது அவர்கள் சொந்த மனசாட்சியுடனும் கர்த்தருடனுமான விஷயமாதலால், அவர்களுக்கு எதிராக எனக்கு எந்த சண்டையும் இல்லை. நான் அவர்களிடம் சொல்வதைவிட, உங்களுக்கு வெறுமனே எடுத்துரைக்கிறேன். ஏனென்றால், யாரையும் தேவையில்லாமல் நாம் ஏன் புண்படுத்த வேண்டும்? நல்ல இதயம் கொண்ட ஒரு சகோதரனிடம் நான் சொல்வது, "சகோதரனே, நீங்கள் உங்கள் கடமையைச் செய்யும்போது, நீங்கள் சத்தியமும் நீதியுமான வார்த்தையும் தேவனுடைய உண்மையான சுபாவத்தையும் கண்டிப்பாக தெளிவுறுத்த வேண்டும் என்று நீங்கள் நினைக்க வேண்டும் அல்லவா? இது உங்கள் உரிமை என்று நீங்கள் நினைக்கவில்லையா? இந்த முறையில் நான் பேச முடிந்த ஒவ்வொருவரிடத்திலும், இந்த முறையிலேயே நான் பேசுகிறேன். ஆனால் அவர்கள் தங்கள் கண்ணியத்தை மேலாக முன்னிறுத்தி நம்மை அவர்களிடம் நெருங்க விடாமல் பண்ணினால், நீங்கள் எந்த கேள்விகளைக் கேட்டாலும், அந்த கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்ல இயலாது என்பதை நீங்கள் காண்பீர்கள். வேதாகம கேள்வி எதற்கும் சரியான பதில் சொல்ல அவர்களால் முடியாது. இதை நீங்கள் முயற்சி செய்து பாருங்கள்.

என்னிடம் வந்த ஒரு சகோதரனைப் பற்றி எனக்கு நினைவு வருகிறது. அவர் கூறினார், "சகோ. ரசல், நான் தவறு செய்து வருகிறேன் என்று நினைக்கிறேன். தற்கால சத்தியம் பற்றிய இந்த கொள்கைகளை நான் ஏற்றுக்கொண்டு அவற்றை விசுவாசிக்கிறேன். ஆனால் அவற்றைப் பற்றி சபைகளிலுள்ள எந்த ஊழியக்காரரிடமும் போய் இதைக் கேட்டதில்லை - நான் அப்படிச் செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான் தவறு செய்து வருகிறேன் என்று நினைக்கிறேன். ஏனெனில் நான் ஒரு கிரேக்க அறிஞனோ அல்லது எபிரேய அறிஞனோ அல்ல. பெரிதான கல்வி கற்றவனும் அல்ல. எனக்கு பரிச்சயமான இந்த மனுஷர்கள் படித்தவர்களும் நல்லவர்களுமாயிருக்கிறார்கள். இங்கு பிட்ஸ்பர்க் அல்லது அல்லகெனி நகரத்தில் முன்னனி போதகர்கள் சிலரிடம், விசேஷமாக யுனைடெட் பிரஸ்பைடீரியன் சபையினரிடம் எனக்கு பரிச்சயம் உண்டு. அவர்களுடைய பல்வேறு ஞாயிறு பள்ளிகளிலும் மது அருந்துவதை தடுக்கும் சேனைகளை அமைத்தல் போன்ற பணிகளை நானே செய்து வந்திருக்கிறேன். அவர்கள் எல்லோருக்கும் என்னை நன்றாகத் தெரியும். அவர்கள் நல்ல மனிதர்கள் என்பதை நான் அறிவேன். இப்போது, நான் சரியாக செயல்படவில்லை என்று என்னுடைய மனசாட்சி என்னிடம் சொல்லுகிறது. நான் அவர்களிடம் சென்று சொல்லியிருக்க வேண்டும், "டாக்டர் . . . அவர்களே, இது உண்மையா அல்லது இல்லையா என்று இந்த விஷயத்தைப் பற்றி எனக்கு சொல்ல முடியுமா?" சகோ. ரசல் அவர்களே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அவர் போக விரும்பினார் என்பதை நான் கவனித்தேன். அவர் அப்படிச் செய்வது நல்ல விஷயம் தான். ஆகவே நான் கூறினேன், "சகோதரனே, நான் போய் அதைச் செய்திருப்பேன். இதை சரியான முறையில் நீங்கள் செய்தால், இது நன்றாயிருக்கும்."

"சகோ. ரசல், சரியான முறை என்று நீங்கள் சொல்வதற்கு என்ன அர்த்தம்?

நான் என்ன நினைக்கிறேனோ அதை உங்களுக்குச் சொல்கிறேன் என்பது தான் சரியான முறை ஆகும். உதாரணமாக, நீங்கள் டாக்டர் 'A' என்பவரின் இல்லத்திற்கு செல்லும்போது, மணி அடித்து, அவரைப் பார்க்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். அவர் கதவருகில் வந்தவுடன், உங்களது வழக்கமான வாழ்த்துக்களைப் பெறுகிறீர்கள். அவரிடம் இவ்விதமாக சிலவற்றை சொல்லுகிறீர்கள், "டாக்டர், கொள்கை சம்பந்தமான சில விஷயங்கள் என்னை குழப்பத்திற்கு உள்ளாக்குகின்றன. உங்களுக்கு நேரம் இருக்கும் போது, அதைப் பற்றிய உங்களது அறிவுரையை கேட்க நினைத்தேன். இப்பொழுது உங்களை தொந்தரவு பண்ண விரும்பவில்லை. நீங்கள் வேலையாயிருக்கலாம். இதற்கு ஒரு மணி நேரம் ஆகும். உங்களுக்கு நேரம் இருந்து, நேரம் ஒதுக்கும் போது நான் அச்சமயம் வர விரும்புகிறேன். எனக்காக ஒரு நேரத்தை முன்னேற்பாடு செய்ய முடியுமா?" "சகோதரனே, நேரே உள்ளே வாருங்கள். இந்த நேரம் எனக்கு போதுமானதாயுள்ளது" என்று சொல்ல வாய்ப்பு உண்டு.

சகோதரன் கூறினார், "சகோ. ரசல், நான் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடத்தக்க முறையில் நீங்கள் ஏன் சொல்கிறீரகள்?" நான் கூறினேன், 'இது தான் காரணம். அவர் உங்களுக்கு ஒரு மணி நேரம் கொடுக்க வேண்டும் என்று அவரைச் சொல்ல வைப்பதற்கு இந்த வழி முறையை நீங்கள் எடுக்காவிட்டால், உங்களுடைய கேள்வி என்ன என்பதை அந்த நேரத்தில் நீங்கள் கூறியிருந்தால், அவர் கூறியிருப்பார், "நல்லது, சகோதரனே, வியாதியுள்ள ஒரு சகோதரியைப் பார்க்க நான் கண்டிப்பாக போக வேண்டும். தயவு செய்து என்னை நீங்கள் மன்னியுங்கள். மறுபடியும் வேறொரு சமயத்தில் வாருங்கள்".

"சகோ. ரசல், இப்போதும் உங்களுக்குத் தெரியாது. நான் சொல்ல விழைவது, டாக்டர் - - - மற்றும் டாக்டர் - - - இவர்கள் மிகவும் நல்ல மனிதர்கள்."

"ஆம், அந்த பண்பாளர்களை நான் ஓரளவுக்கு அறிவேன். அவர்கள் சராசரிக்கு மேலானவர்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், சகோதரனே, இந்த கேள்விகளில் ஒன்றை நீங்கள் கேட்கும் போது, அவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். தங்களுக்கு முன்பாக சில கருத்துரையை அவர்கள் கொண்டிருப்பார்கள். இது போன்ற கேள்வியை தங்களுடைய வாழ்க்கையில் இதற்கு முன்னால் சந்தித்திருக்கமாட்டார்கள். என்ன சொல்வது என்று அவர்களுக்கு தெரியாது. அதிலிருந்து வெளியே வருவதற்கு இதுவே எளிதான வழி ஆகும். ஒவ்வொரு பெரிய சபைக்கூட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு வியாதியுள்ள சகோதரர் அல்லது சகோதரிகள் எந்த நேரத்திலும் இருப்பார்கள். அவர்கள் உண்மையாகவே சொல்ல முடியும், நான் அவர்களை கண்டிப்பாக பார்க்க வேண்டும் - உங்களிடமிருந்தும், உங்கள் கேள்விகளிடமிருந்தும் வெளியே போக வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள். கேள்விக்கு பதில் சொல்ல முடியாது என்பதை அவர்கள் அறிவதால், அவர்கள் உங்களுக்கு நன்மை செய்கிறோம் என்று நினைக்கிறார்கள். இது தான் செய்வதற்கு விரைவானதும், சிறந்த வழியாகவும் உள்ளது என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு சமயத்திலும் தவிர்ப்பதால், நீங்கள் மறுபடியும் வாய்ப்பு எப்பொழுதும் பெறமாட்டீர்கள் என்று அவர்கள் நினைப்பார்கள்.

"சகோ. ரசல், நீங்கள் அவர்களுக்கு நன்மதிப்பு கொடுக்கவில்லை"'

"நான் மதிப்பு கொடுக்கிறேன், சகோதரனே, ஆனால் நிலைமையை நீங்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை. நான் மதிப்பு கொடுக்கவே செய்கிறேன். ஆனால், போதகர் சொல்லுவார், "ஆம், உங்களுக்கு ஒரு மணி நேரம் கொடுக்க முடியும். நேராக வந்து பாடம் பயில உட்காருங்கள்." நீங்கள் வந்தவுடன், அவர் கூறுகிறார், "நல்லது, உங்களுடைய கேள்வி என்ன?"

நான் சகோதரனிடம் கூறினேன், "அவர்களிடம் நீங்கள் என்ன கேள்வி கேட்கப் போகிறீர்கள்? அதற்கு அவர் கூறினார், "நல்லது, கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து - - எல்லாம் நிறைவேறித்தீரும் காலங்கள் வருவதைப் பற்றி பேதுரு அப்போஸ்தலன் கூறியதில் உள்ள "நிறைவேறித்தீரும் காலம்" (RESTITUTION) பற்றி நான் ஆர்வம் கொண்டிருப்பதால்,

விசேஷமாக அதைப் பற்றிய ஒரு கேள்வியை அவரிடம் கேட்க நினைத்தேன். இப்போது அவர்களிடம் கேட்க வேண்டுமென்று நான் நினைத்தது இதே கேள்வி தான்". நான் கூறினேன், "அது மிகவும் நல்ல கேள்வி. நீங்கள் அந்த கேள்வியையே பற்றிக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் போய் உட்கார்ந்தவுடன், அவர், "உங்கள் கேள்வி என்ன" என்று கேட்கிறார். நீங்கள் அவரிடம் வேதாகம பகுதியைச் சொல்லுகிறீர்கள். உங்கள் நிலையை எச்சரிக்கையுடன் காத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அந்த மனிதர் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொள்வார், "என் மனசாட்சியே, சந்திரன் மேல் எப்படி குதிப்பது என்று நான் அறிந்துள்ளதைக் காட்டிலும், இந்த கேள்விக்குரிய பதிலை நான் எவ்வளவும் ஏன் அறியவில்லை? நான் என்ன செய்வேன்? நான் இந்த மனிதனிடம் ஒரு மணி நேரம் எடுத்துக் கொள்ளலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன். என் மனசாட்சியே! நான் என்ன செய்வேன்?" நல்லது, அவர் என்ன செய்வார்? "சகோதரனே, அவர் என்ன செய்வார் என்று நான் உங்களுக்கு சொல்லுகிறேன். அவர் தனக்குள்ளே சொல்லிக் கொள்வார், "முடிவு என்ன என்பதை அவர் அறியாத வண்ணம் அவரை குழப்பிவிட வேண்டும். உடல், ஆத்துமா, ஆவி, நரகம், ஹாதேஸ், சீயோல் என்று எல்லாவற்றிலும் அவரைக் குழப்பி, அவருடைய மனதை தெளிவாகப் புரிந்து கொள்ளவிடாமல் செய்து விடுவேன். அதை என்னால் செய்ய முடியும். அவருக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. அவர் படித்த மனிதர் இல்லை என்பதை நான் அறிவேன்".

"சகோ. ரசல், டாக்டர் - - - அவ்விதம் செய்யக்கூடியவர் அல்ல.."

"சகோதரனே, அவர்கள் அப்படி செய்வார்கள் என்பதை நான் அறிவேன். ஏனெனில் அது ஒன்றை மட்டும் தான் அவர்களால் செய்ய முடியும். அதை அப்படிச் செய்வார்கள் அல்லது மதிகெட்டு வெளிப்படையாக, இந்த வேத வசனத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சகோதரனிடம் சொல்லுவார்கள். "நான் பதிலளிக்க விரும்பினேன். இதற்கான விளக்கத்தை நீங்கள் எப்போதாவது கண்டுபிடித்தால், அதை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்." அவர்கள் முற்றிலும் நேர்மையுள்ளவர்களாக இருந்தால், இதைத் தான் அவர்கள் செய்ய வேண்டும். ஆனால், சில பெரிய சபை அமைப்புகள் அவர்களிடம் சொல்லியிருக்கலாம், "நீங்கள் இறையியலில் பட்டம் வாங்கியவர். நீங்கள் தெய்வீகத்தையே இப்போது திருத்தம் செய்யக்கூடிய தகுதி வாய்ந்தவர்." இப்படியெல்லாம் பாராட்டு பெற்ற பிறகு, ஒரு சிறிய மனுஷன் வந்து, பதில் கூறுவதற்கு ஒரு தெளிவான கேள்வி இங்கே உள்ளது என்று சொல்லும் போது, அதற்கு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருந்தால், அந்த உண்மையை ஒப்புக்கொள்வதற்கு பெருமளவில் பணிவு தேவைப்படுகிறது.

நான் சகோதரனிடம் சொன்னேன், "இப்பொழுது, இந்த முறையில் அவர் பேச்சை ஆரம்பிக்கும் போது, உங்களிடம் அதையும், இதையும் கேள்வி கேட்டு உங்களை குழப்பத்தில் ஆழ்த்த முயற்சிக்கும் போது, நீங்கள் சொல்வீர்கள், "டாக்டர், நான் என்னுடைய கேள்வியை சரியான முறையில் உங்களிடம் தெரிவிக்கவில்லை என்று தோன்றுகிறது." குற்றத்தை உங்கள் மேலேயே சுமத்திக் கொள்ளுங்கள்; இதை நீங்கள் நேர்மையாகவே செய்ய முடியும். ஏனெனில் உங்கள் கேள்வியை அவர் தவிர்க்க முயற்சி செய்கிறார் என்று நீங்கள் அனுமானிக்க வேண்டியதில்லை. நீங்கள் அவரிடம் வெறுமனே இதை மட்டும் சொல்கிறீர்கள், "என்னுடைய கேள்வியை நான் சரியான விதத்தில் தெரிவிக்கவில்லை." அவரிடம் சொல்லுங்கள், "டாக்டர், என்னுடைய கேள்வியை சரியான முறையில் தெரிவிக்கவில்லை என்று தோன்றுகிறது. நீங்கள் பதிலுரைக்கிறதற்கான கேள்வி அதுவல்ல. எல்லாம் நிறைவேறித் தீரும் காலங்கள் பற்றிய கேள்வியை நான் உங்களிடம் கேட்க விரும்பினேன். இதன் பொருள் என்ன? நீங்கள் அவரைத் திரும்ப இதற்கு கொண்டு வர வேண்டும்; அவர் மறுபடியும் உங்களை குழப்ப முயற்சிப்பார்; ஆனால் நீங்கள் சொல்வீர்கள், "டாக்டர், நான் என்னுடைய கேள்வியை நேரிடையாக பெறவில்லை. என்னுடைய கேள்வியை சரியான முறையில் எப்படித் தெரிவிக்க வேண்டும் என்பதை நான் அறிந்துள்ளேன்; நிறைவேறித்தீரும் காலங்கள் பற்றி நான் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்."

சகோதரனே, நீங்கள் அந்த கேள்வியில் அவரை சரியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவில் உங்களுடன் ஒப்புநோக்க இந்த நாட்டில் அல்லது மாநிலத்தில் தெய்வீகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற எவரும் இருக்கவில்லை. நீங்கள் சத்தியத்தில் மூன்று மாதங்களாக மட்டும் இருக்கிறீர்கள்.

அவர் கூறினார், "சகோ. ரசல், அவரை ஒரு மணி நேரம் பிடிப்பில் வைத்துக் கொள்வதற்குப் பதிலாக, நான் என்னை தளர்ச்சியாக இருக்க முயற்சி செய்து, அவர்கள் என்னைப் பிடித்துக் கொள்வதிலிருந்து தடை பண்ணலாம் என்று நினைத்தேன்." நான் கூறினேன், "அப்படியல்ல, சகோதரனே, உங்களுக்கு சிந்தனை இல்லை; அந்த கேள்வியில் அவர்களை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள நீங்கள் முயற்சிக்க வேண்டும்; ஏனெனில் அவர்களால் அதற்கு பதில் சொல்ல முடியாது. தங்களால் முடியாது என்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள் உங்களை குழப்பமடைய முயற்சிப்பார்கள். தங்களால் பதில் சொல்ல முடியாது என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

வேறொரு பண்பாளரைப் பற்றி எனக்கு ஞாபகம் வருகிறது. வேதாகம இல்லத்திற்கு (BIBLE HOUSE) அருகில் தெருவில் சென்று கொண்டிருக்கும் போது, வழக்கத்திற்கு மாறாக அதிவேகமாக நடக்கும் போது, நான் அவரை கடந்து போனேன். அவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார் என்று நினைக்கிறேன். அவர் கூறினார், "சகோ. ரசல், ஒரு நிமிஷம்"; அவர் என்னைப் பிடித்துக் கொண்டார்; என் வாழ்க்கையில் அந்த நபருடன் ஒருபோதும் பேசியதே இல்லை. நன்றாக ஆடை அணிந்து, பார்வைக்கு அழகான தோற்றமுடையவராக அவர் இருந்தார். அவர் யார் என்று எனக்குத் தெரியாது. அவருடைய பெயரை எனக்கு கொடுத்தார். ஆனால் நான் அதை மறந்து விட்டேன். அவர் சொன்னார், "ஒரு உவமையைப் பற்றி ஒரு கேள்வியை உங்களிடம் கேட்க நான் விரும்புகிறேன்." ஒரு மனுஷன் தெருவிலே உங்களை சந்தித்து இந்த மாதிரியான கேள்வியை உங்களிடம் கேட்பது மிகவும் விசித்திரமான ஒன்றாயிருந்தது என்று நான் நினைத்தேன். நான் கூறினேன், "சகோதரனே, அது என்ன உவமை?" அவர் அந்த உவமையை என்னிடம் சொன்னார். அது எதுவென்று நான் இப்போது மறந்து விட்டேன். ஆனால் அது மிகவும் எளிதானதும், தெளிவானதுமான உவமை. அந்த கேள்விக்கு நான் பதிலுரைத்து, அதை வெகு எளிதாக இரண்டு நிமிட நேரத்திலேயே விளக்கினேன் என்று நினைக்கிறேன். அவர் கூறினார், "அது ஏன் மிக எளிதாகவும், மிகவும் திருப்திகரமானதாகவும் இருக்கிறது?" மேலும், திரும்பக் கூறினார், "மிகவும் திருப்தியாக உள்ளது."

நான் கூறினேன், "இது போன்ற சிறிய விஷயத்திற்கு நீங்கள் பதட்டப்படும் அளவுக்கு என்ன நடந்தது?. அவர் கூறினார், "என்னுடைய பிரசங்கியார் இதை ஏன் சொல்ல முடியவில்லை என்று நான் ஆச்சரியப்படுகிறேன். வேதாகம இல்லத்திற்கு நேர் எதிரில் அலெகினி நகரத்தின் பிரதான பிரஸ்பைடீரியன் சர்ச் - டாக்டர் கென்னடி அவர்களின் சர்ச் தான் நான் சார்ந்திருக்கும் சர்ச்; அவரிடம் சென்று அதே கேள்வியை நான் கேட்டிருக்கிறேன்."

"இப்பொழுது", அந்த நபர் கூறினார், "இந்த பூமியில் மிகவும் மதிகெட்ட மனுஷன் நான் என்று நீங்கள் நினைத்திருக்கலாம். டாக்டர் கென்னடி யதார்த்தமாக என்னிடம் கூறினார், "உங்களுக்கு இதை விரித்துரைத்தால், அதைப் புரிந்து கொள்ளக்கூடிய உணர்வு உங்களுக்கு கிடையாது." ஒரு சிறிய உருளைக்கிழங்கு போல என்னை உணரும்படி செய்தார். நான் ஒரு பெரிய மனுஷன் என்று எப்போதும் நினைத்தது இல்லை. நான் குறைந்தபட்சம் நியாயமான நடத்துதலுக்கு தகுதி உள்ளவனாய் இருக்கும் விதமாக, அவர் என்னிடம் கேள்விக்கு பதில் சொல்ல முயற்சித்திருக்கலாம். பிறகு நான் அதைப் புரிந்து கொள்ள முடியாவிட்டால், அது என்னுடைய தவறு ஆகும். அவர் அதைப் பற்றி என்னிடம் சொல்லாமல் என் மேல் உட்கார்ந்து கொண்டார். நான் கேட்ட கேள்வியைப் பற்றி என்னிடம் எதுவுமே சொல்லவில்லை. இப்பொழுது, நீங்கள் அனுமானித்த காரணம் இதுவே." நான் கூறினேன், "சகோதரனே, அவர் ஏன் சொல்லவில்லை என்பதற்கான காரணத்தை நான் ஊகிக்கிறேன்; ஏனெனில் அதற்கு எப்படி பதில் சொல்லுவது என்று அறியவில்லை. ஆகவே அதிலிருந்து வெளியே வருவதற்கு அது தான்

சிறந்த வழி என்று அவர் நினைத்திருக்கிறார்." சகோதரன் கூறினார், "இப்படி இருந்தது என்று ஆச்சரியப்படுகிறேன்."

அருமையான நண்பர்களே, எங்களுக்கு தெரியும்; இத்தகைய அனுபவத்தை நம்மில் பெற்றிருப்போருக்கு இது ஒரு கஷ்டமான விஷயம் தான். டாக்டர் கென்னடி மிகவும் திறமையான நபர்; பல விஷயங்களில் அவர் மிகவும் நல்லவர்; ஒரு மனுஷனாக அவரை அவமதிக்கும் விதத்தில் நான் பேசுகிறதில்லை; அல்லது, அவருடைய நன்னடத்தைக்கு விரோதமாக ஒரு வார்த்தை கூட சொல்லமாட்டேன். எனக்கு தெரிந்த வரையில், அவர் மிகவும் படித்த போதகர். பெரும்பாலான விஷயங்களைப் பற்றி அவருக்கு நிச்சயமாகத் தெரியும். சீயோல் என்பது என்ன என்று அவர் அறிவார்; அவர் அறிந்து கொள்வதற்கான எல்லா வாய்ப்புகளையும் பெற்ற பிறகு, அவர் இதை அறிந்து கொள்ளாத மதி கெட்டவர் என்றும், அறியாமை கொண்டவர் என்றும் நான் அனுமானிக்க முடியாது.

அந்த நபர் தொடர்ந்து சொன்னார், "நல்லது, அந்த சபையில் அதிகமாக மதிகெட்டவனாய் நான் இருந்திருந்தால், அதிகமாக மதிகெட்டவராய் இருக்கும் நபரை ஒரு மூப்பராகத் தேர்ந்திருக்க மாட்டார்கள் என்று என்னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை." நான் சொன்னேன், "சகோதரனே, இது முற்றிலும் உங்களுடைய மதிகேடு என்று நான் நினைக்கவில்லை." அவர் கூறினார், "நீங்கள் அதை விரித்துரைத்த போது அதை புரிந்து கொள்ள போதுமான மூளை எனக்கு உள்ளது."

இப்பொழுது, பொருளை எளிதில் புரிந்து கொள்ளுவதற்காக, இந்த விஷயங்களை நான் வெறுமனே குறிப்பிட்டேன். ஆனால், வெளி 19ம் அதிகாரத்திற்கு திரும்பி வருவோம். வசனம் கூறுகிறது, "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது - -"தேவன் அவர்களை விடுவித்திருக்கிறார் என்பதையும், மத அமைப்பு பல தொடர்புகளில் தேவனுடைய திட்டத்திற்கு இடையூறாக இருக்கிறது. ஆஸ்பத்திரிகளைக் கட்டுவது போன்ற காரியத்திலும், சில நெறிமுறைகளைக் கற்பிப்பதிலும், கேளிக்கை விடுதிகளிலிருந்து சில பேர்களை வெளிக்கொணர்வதும், கேளிக்கை விடுதி சட்டத்தை சில சமயங்களில் ஏற்படுத்துவதும், மட்டரகமான விடுதிகளிலிருந்து ஜனங்களை வெளிக்கொண்டு வரும் விதமாக, சில சமயங்களில் நிலப்பரப்பிற்கு கீழே இரகசியமான விடுதிகளை ஏற்படுத்துவதும், விஸ்கி (மது) விற்பனையாகும் பந்து வீச்சு இடங்களுக்கு (BOWLING ALLEY) போகாமலிருக்க, வெறும் பந்து வீச்சு நடக்கும் இடங்களை சில சமயங்களில் ஏற்படுத்துதல் போன்ற நற்காரியங்களை செய்து, இவைகளினால் நல்ல நெறிமுறைகளை நடத்திட முயற்சிக்கிறார்கள். தாங்கள் உரிமை கோரும் இவை எல்லாவற்றிற்காகவும் அவர்களை நான் மதிப்பதாக நினைக்கிறேன். கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் ஆவி மற்றும் விசுவாசத்தைப் பற்றிய போதனை விஷயத்தில், அவர்களில் பலர் அதைச் செய்வதில் பாசாங்கு செய்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்களின் உண்மையாக மேற்கொள்ளும் பணி அது என்றும், அதைத் தான் அவர்கள் செய்ய நினைக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் சொல்வது: அவர்கள் ஜனங்களைப் பின்தொடர்ந்து, பெருந்திரளானோரைக் காப்பாற்ற வேண்டும் என்றும், அவர்களுடைய இருதயங்களில் எவ்வித மாறுதலையும் கொண்டு வராமல், சில விஷயங்களிலிருந்து பெருந்திரளானோரைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும் என்றும் சொல்கின்றனர். "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று நம்மிடம் தேவன் சொல்லும் விதமாக, இந்த மேய்ச்சல் தேவைப்படக்கூடிய தேவனுடைய உண்மையான ஜனங்களை அவர்கள் புறக்கணிக்கிறார்கள். வெளியே சென்று சில ஓநாய்களைப் பிடித்து, அவற்றின் மேல் செம்மறியாட்டு மயிரைப் போர்த்தி, சில நச்சுப் பாம்பு செடிகளை (Rattlesnake Plants) எடுத்து, அவைகளை சரி செய்து, அவைகளின் மேல் வைத்து, ஆடு போன்ற தோற்றத்தை உருவாக்க வேண்டும் என்று நமது கர்த்தர் பேதுரு அப்போஸ்தலனிடம் பேசும்போது எதையும் சொல்லவில்லை. நீங்கள் செம்மறி ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் பார்த்துக் கொள்ளுங்கள். கர்த்தர் செம்மறி ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் எப்படி இருக்க வேண்டும்

என்பதை கவனமாகப் பார்த்துக் கொள்வார். தம் பக்கம் இழுத்துக் கொள்வதை அவர் செய்கிறார். பிதா தம் பக்கம் யாரை இழுத்துக் கொள்கிறாரோ, அவன் அவரிடம் வருகிறான். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." நீங்களும் நானும் ஜனங்களுடைய இதயங்களையாவது அல்லது அவர்களுடைய தலைகளையாவது நொறுக்கக்கூடியவர்களாக இருக்கக்கூடாது. இதயங்களை உடையச் செய்யும் எல்லாவற்றையும் தேவனுடைய கிருபைகள் செய்யட்டும். அவர் நமக்குக் கொடுத்திருக்கிற சுவிசேஷம் நொறுங்கிய இதயங்களை கட்டுவிக்கிறதாகவும், செம்மறி ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் பிடிப்பில் வைத்துக் கொண்டு அவைகளுக்கு ஆகாரம் அளிக்கிறதாகவும் இருக்கிறது. அதுவே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. நமது கர்த்தருடைய வார்த்தையில் நிலைநிற்க விரும்புவோம். கர்த்தரை விட நாம் விவேகம் உள்ளவர்கள் என்று நம்முடைய சொந்த இதயங்களில் நமக்கு நம்பிக்கை இல்லை. ஒரு கற்றை முட்செடிகளை எடுத்து, அவற்றுடன் சில கொத்துகள் திராட்சை கிளைகளைச் சேர்த்துக் கட்டி, இவைகள் உண்மையான திராட்சை செடிகள் என்று சொல்ல மாட்டேன்.

ஆனால், பாபிலோனின் விழுகை, மனுஷீக ஒழுங்குமுறைகள் முழுவதுமாகக் கவிழ்க்கப்படுவது உண்மையில் நன்மையாக இருக்கிறது என்பதை இவர்கள் கண்டு கொள்வார்கள். பிறகு, "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்" என்று தேவனிடத்திலிருந்து விசேஷித்த செய்தியை பெறுகிறவர்களாக அவர்கள் குறிக்கப்படுகிறார்கள். கலியாணத்தில் இருப்பதற்கும், கலியாண விருந்தை சாப்பிடுவதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே சென்று கதவு அடைக்கப்படுவது, கலியாணம் நடைபெறுவதைக் குறிக்கிறது. ஆனால், அதற்குப் பிறகு சிறிது காலம் வரை கலியாண விருந்து நடைபெறவில்லை. நமது மனங்களுக்கு முன்பாக, கலியாண விருந்து ஒரு விசேஷித்த நிகழ்வாகத் தெரிகிறது எனலாம். இது உண்மையில் பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவதோ அல்லது குடிப்பதோ அல்ல. இது கலியாணத்தைத் தொடர்ந்து நிகழும் மகிழ்ச்சியான சந்தர்ப்பம் ஆகும். இந்த மகத்தான கோலாகலங்களுக்கு திரள் கூட்டத்தார் வருவதற்கும், பங்கு பெறவும் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் ஜீவனை மரணத்திற்கு ஒப்புகொடுக்குமளவிற்கு போதுமான விசுவாசமுள்ளவர்களாக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தார்கள். ஏனெனில், அவர்கள் விலையேறப்பெற்ற நாமத்தையும் இரத்தத்தையும் மறுதலிக்கவில்லை. ஆகவே தேவன் அவர்களை மறுதலிக்க மாட்டார். அவர்களுக்கென்று ஒரு இடம் உண்டு. அந்த மகிழ்ச்சியில் அவர்களுக்கு பங்கு உண்டு. 45ம் சங்கீதத்தில் உள்ளவிதமாக, மணவாட்டி உள்ளாக பூரண மகிமையுள்ளவள். அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. சித்திரத்தையலாடை தரித்தவளாய் அவள் ராஜாவிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள். இது சபை முழுவதும் இந்த யுகத்தின் முடிவில் பிதாவின் பிரசன்னத்திற்குள் செல்வதை அடையாளப்படுத்துகிறது. பிறகு, நாம் அடுத்த வசனத்தில் படிக்கிறோம், "அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்." இவர்கள் புத்தியில்லாத கன்னிகைகள். இவர்கள் மணவாட்டியைப் பின்தொடர்கிறார்கள். ராஜாவின் பிரசன்னத்திற்கு முன்பாக அவர்களும் கொண்டுவரப்படுவார்கள். அவர்களுக்காகவும் நாம் மகிழ்ச்சி அடைகிறோம். தேவனுடைய அன்பில் சுயநலம் இல்லை. சத்திய அறிவினிடத்தில் வந்து, கர்த்தருடன் இணக்கமாக இருக்க விரும்புகிற எல்லோருக்கும் - சிறுமந்தை, திரள் கூட்டம், முற்பிதாக்கள் மற்றும் உலக மனுக்குலம் முழுவதிற்கும் கர்த்தர் ஏற்பாடு செய்து வைத்திருப்பதைப் பார்த்து நாம் சந்தோஷப்படுகிறோம்.

## திரள் கூட்டம் - கடந்த காலத்தவர் - மகாஉபத்திரவம்.

**கே 296:1:: கேள்வி (1907) - 1 -** சென்ற யுகங்களில் மரித்த திரள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், உபத்திரவங்கள் வருவதற்கு முன்பே அவர்கள் இறந்து விட்ட நிலையில், மகா உபத்திரவத்திலிருந்து எப்படி வெளியே வருவார்கள்?

**பதில்:** நாம் புரிந்து கொண்டுள்ளபடி, சுவிசேஷம் துவங்கி யுகம் முழுவதிலிருந்து இந்த வகுப்பாரில் சிலர் இருப்பவர்களாய் உள்ளனர். இருப்பினும் இந்த வகுப்பாரில் பெரும்பாலோர் தற்காலத்தில் வாழ்கின்றவர்களாய் இருக்கிறார்கள். கடந்த காலத்தில் இப்படி பலர் இல்லாமல் இருந்ததற்கு காரணங்கள் உள்ளன. உதாரணமாக, இயேசுவின் நாமத்தை உச்சரித்தவர்கள் அனைவருக்கும் எதிராக கூர்மையான துன்புறுத்தல் நிலவிய போது, இது வெறும் சோதனையாக மட்டுமே இருந்தது. பலர் தங்களை முழுவதுமாக அர்ப்பணிக்கத் தயாராக இல்லை. அதன் விளைவாக, அவ்விதம் தங்களை அர்ப்பணித்தவர்கள் அதை மிகுந்த உள்ளார்வத்துடன் நிறைவேற்ற விருப்பங்கொண்டு இந்த வகுப்பினராக இருந்தனர். ஆனால் இன்று, எல்லா விஷயமும் வெளிப்படையாக, அதிக சாதகமானவையாக இருக்கும் காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மிக அதிகமான ஜனங்கள் தாங்கள் அவ்விதம் இருக்கிறார்களோ அல்லது இல்லையோ, தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறார்கள். இது இன்று பிரபலமாக உள்ளது. ஆகவே தற்காலத்திய சாதகமான நிலைமைகளின் கீழ் சில ஜனங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி தங்களை அர்ப்பணிப்பு செய்கிறார்கள் இவர்கள் இதை கடந்த காலத்தில் செய்திருக்கமாட்டார்கள். ஆகவே மிக அதிகமானவர்கள் இந்த நிலையில் இருக்கிறவர்களாய், கர்த்தரிடத்தில் அர்ப்பணிப்பு செய்திருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் வேறொரு கண்ணோட்டத்தில் பார்த்தால், சாதகமான சூழ்நிலைகள் இருக்கின்ற காரணத்தினால், தங்களுடைய அர்ப்பணிப்புக்குத் தக்க விதமாக, அவர்கள் வாழ்கிறதில்லை. அவர்கள் ஜெயங்கொண்டவர்களாவதில்லை. அவர்கள் பாபிலோனில் கட்டுண்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்த காலத்தில் தான், திரள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் விசேஷமாக முக்கியத்துவமாக இருக்கிறார்கள். இந்த பலதரப்பட்ட சர்ச்சுகளிலிருப்பவர்களில் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக யார் இருப்பார்கள் என்று சொல்வதற்கு நாம் தகுதியுள்ளவர்கள் அல்ல. ஆனால், இந்த வகுப்பாரில் பெரும் பங்கினர் நம்முடைய காலத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பதை நாம் பார்க்கிறோம். தாங்கள் செய்வதாக ஏற்கனவே ஒப்புக்கொண்ட பிறகு, அவர்கள் ஓரளவு விசுவாசம் இல்லாதவர்களாய் தன்னார்வமில்லாமல், விருப்பமில்லாமல் மகிழ்ச்சியற்று, தங்களை அர்ப்பணிக்காத சிலர் யுகம் முழுமையிலும் இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். கர்த்தர் அவர்களில் சிலரை கட்டை விரல் திருகி (THUMB-SCREW), அடுக்குத் தட்டு (RACK) போன்ற சித்திரவதை உபகரணங்களினால் துன்புறுத்துதல்களுக்கு கர்த்தர் எப்படி அனுமதித்திருக்கலாம் என்பதையும், பிறகு பெரும் உபத்திரவங்களினூடே அவர்கள் எப்படி இருந்து வந்திருக்கலாம் என்பதை நாம் பார்க்க முடியும். மரத்தில் எரிக்கப்படுவது போன்று துன்பத்தை அனுபவித்த அந்த ஜனங்கள் எல்லோரும் பரிசுத்தவான்களா என்பது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அவர்களை மதிப்பிடவில்லை. ஆனால் வரலாற்று வரிகளுக்கிடையில் படிக்கும் போது, பரிசுத்தவான்கள் என்ற சொல்லுக்குரிய உயர்வான பொருளை வேதாகமம் உணர்த்துவதை நாம் அறியும் போது, அவர்களில் பெருபாலானோர் பரிசுத்தவான்கள் அல்ல என்பதை நான் உய்த்துணர்கிறேன்.

## திரள் கூட்டம் - ஜீவனை பெறுதல்.

**கே 297:1:: கேள்வி (1909) - 1 -** ஆவியின் தளத்தில் தேவனிடமிருந்து நேரடியாக ஜீவனை திரள் கூட்டம் பெறுகிறதா?

**பதில்.** ஆம். அவர்கள் பரிசுத்த ஆவியினாலே ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஜீவனை நேரடியாகப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் ஜெநிப்பிக்கப்படும் போதும் சிறுமந்தையைப் போலவே அவர்கள் அதே முறையில் தான் இருக்கிறார்கள். ஏனெனில் நம்முடைய அழைப்பின் **ஒரே** நம்பிக்கையில் தான் நாம் எல்லோரும் அழைக்கப்படுகிறோம். அவர்கள் தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் இரண்டாம் மரணத்திற்கு தகுதியுள்ளவர்களாக அல்ல. ஆகவே, ஆவியின் தளத்தில் ஜீவனைப் பெறுகிறார்கள்.

## திரள் கூட்டம் - ஜீவனை அளிப்பவர்கள்.

**கே 297:2 :: கேள்வி (1909) - 2 -** திரள் கூட்டத்திற்கு ஜீவனை அளிப்பவர் யார்?

**பதில்.** கர்த்தராகிய இயேசு அல்ல. ஆனால், பரலோக பிதா. இந்த தற்கால யுகத்தில் பிதாவின் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறீர்கள். அதைத் தான் கர்த்தராகிய இயேசுவும், அப்போஸ்தலரும் கூறுகின்றனர். நமது கர்த்தர் இயேசு திரும்பப் பெறும் ஜீவனை மட்டும் கொடுக்கிறார். கர்த்தரின் சரீர அங்கங்களாகும்படி பிதாவின் கீழ் வரவழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இப்பொழுது கர்த்தர் ஜீவனை அளிக்கிறார். அவர்கள், அவர்கள் மட்டுமே இந்த புதிய ஜீவனுக்குள் ஜெநிப்பிக்கப்பட பரிசுத்த ஆவியைப் பெறுகிறார்கள். உலகத்தார் இப்பொழுது இதில் கையாளப்படவில்லை. சீர்பொருந்துதல் (RESTITUTION) இன்னும் வழங்கப்படவில்லை. சீர்பொருந்துதல் இனி கிடைக்கப்பெறும் என்ற அறிவுடன் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுவது மட்டுமே இப்போது வழங்கப்படும் சீர்பொருந்துதல் ஆகும்.

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு நீங்கள் அவிசுவாசமாயிருந்தால், உங்களுக்கு வேறு ஒரு ஜீவன் இருப்பதில்லை. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, நீங்கள் புதிய சிருஷ்டியாக இருக்கும் இடத்திற்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் முன்னேறிப் போவதில் தோல்வியுற்றால், நீங்கள் திரள் கூட்ட வகுப்பினருக்குள் சென்றாலும், நீங்கள் இன்னும் புதிய சிருஷ்டியாகத் தான் இருக்கிறீர்கள்.

ஏனெனில், ஜெநிப்பிக்கப்படுதலை செய்கிறவர் பிதா என்பதால், பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாயிருக்கிற காரணத்தால், அவர்கள் எல்லோரும் ஆவியின் மேனி உடையவர்கள்.

## திரள் கூட்டம் - ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல். ஆசரிப்பு கூடாரம்.

**கே 297:3 :: கேள்வி (1909) - 3 -** திரள் கூட்டத்தார் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறார்கள் என்பதை ஆசரிப்புக் கூடார நிழல்கள் எப்படி எடுத்துக் காட்டுகின்றன அல்லது காண்பிக்கின்றன.?

**பதில்.** வேதாகமத்தில் திரள் கூட்டம் பற்றி மிகவும் தனிப்பட்ட முறையில் தேவன் குறிப்பிடவில்லை. இதற்கான காரணத்தை நாம் கண்டிருக்கிறோம். திரள் கூட்டம் சிறுமந்தையைப் போல அதே தளத்திலும், அதே அளவு ஆர்வமும், வெளிப்பாடான தன்மையும் உள்ளவாறு நடத்தப்பட்டால், தேவன் இரண்டு பிரிவுகளையும் கொடுத்து, உங்கள் விருப்பப்படி எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வது போன்ற உணர்வு ஏற்படும். ஆனால், அப்படி ஏதும் இல்லை. கர்த்தருடைய அறிக்கை இதுவே. அபிஷேகம்பண்ணப்பட்டவருடைய சரீரத்தின் அங்கங்களாவதற்காக “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்”. இவ்வாறாக சிலர் திரள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும், சிலர் மகத்தான ஆசீர்வாதத்தைப் பெறுகிறவர்களாகவும், எப்போதும் அவ்விதமான அழைப்பு இருந்ததில்லை என்பதை வேதாகமம் வெறுமனே சாடையாகக் குறிக்கிறது. அவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்பட வேண்டும் என்பதற்கு மாறாக உள்ளது. சிறுமந்தையைப் போலவே, திரள் கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் தேவனுடைய கிருபையைப் பெறுகிறார்கள். ஆனால், அவர்கள் தங்களுடைய ஜீவனை கர்த்தராகிய கிறிஸ்துவுடன் ஒப்புக்கொடுக்க வேண்டியதை சரியான முறையில் நடைமுறைப்படுத்துகிறதில்லை. ஏனெனில், **திட்டத்தை** நிறைவேற்று வதற்கு, மரணத்திற்குள்ளாக எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து, புதிய உடன்படிக்கையை முத்திரிக்கிறதற்கு எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டும். ஆகவே, திரள் கூட்டத்தைப் பொருத்தவரையில், அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நகல்களா, அல்லது, மகா உபத்திரவத்திற்கு உட்பட்டு, இறுதியாக ஆவிக்குரிய ஜீவனைப் பெறுகிறார்களா என்பது கேள்வியாக உள்ளது,

## திரள் கூட்டம் - உலகத்தின் பாவங்களை ரத்து செய்தல்.

**கே 298:1 :: கேள்வி (1909) - 1 -** குறிப்பாக, மனதார இழைக்கப்படும் உலகத்தாரின் பாவங்களுக்கான தண்டனையை திரள் கூட்டத்தார் எப்படி ரத்து செய்ய முடியும்.? தேவனுடைய போக்காடு எப்படி பாவ நிவாரணம் பெறுகிறது.?

**பதில்.** பாவம் ரத்து செய்யப்படுதல் குறித்து சிறுமந்தை எதுவும் செய்வதற்கு இல்லை என்பது போல, திரள் கூட்டத்தாரும் இதனுடன் எதுவும் செய்வதற்கு இல்லை. இந்த பணியை செய்வது பிரதான ஆசாரியரே. அவர் தமது பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக பல்வேறு காரியங்களை பிரயோகம் பண்ணுவார். ஆனால் அதைக் கையாளுவது அவர் ஒருவரே. **போக்காடு திரள் கூட்டத்தாரைக் குறித்துக் காட்டுக்கிறது என்பதை நாம் ஏற்கனவே ஆசரிப்பு கூடார நிழல்கள் புத்தகத்தில் சொல்லியிருக்கிறோம். இப்பொழுதும் அதை ஏற்றுக் கொள்ளுகிறோம்.** நல்லது, திரள் கூட்டத்தார் அல்லது போக்காடு பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்வதில்லை என்று பலர் கூறுன்றனர். காளையோ அல்லது கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடாவோ போவதில்லை என்று பதிலளிக்கிறேன். அங்கே போனது என்ன? பலியின் மேன்மையை அடையாளப்படுத்தும் காளை மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் பாவ நிவாரணம் செய்வதற்காக கொண்டு போகப்பட்டது. ஆசாரியத்துவ குடும்பமாகிய பிரதான ஆசாரியரின் வீடு அல்லது சரீரம் என்று அழைக்கப்படும் ஆசாரியர்களை உள்ளடக்கிய லேவி கோத்திரத்தின் பாவங்களுக்காக, பாவநிவாரணம் செய்வதற்கு காளையின் இரத்தம் இருந்தது. ஆசாரியர்கள் அல்லது சரீர அங்கங்களாக, அவர்கள் எல்லோருடைய பாவங்களுக்காக காளையின் இரத்தம் தக்கவைக்கப்பட்டது. பிறகு, ஆசாரியர்களாகக் குறிக்கப்பட்ட வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம், வெள்ளாட்டுக்கடாவினால் தெளிக்கப்படாமல், பிரதான ஆசாரியனால் தெளிக்கப்பட்டது. இது ஜனங்கள் எல்லோருக்காகவும் பிரயோகப்படுத்தப்பட்டது. முழுமையாக எல்லாவற்றையும் செய்பவர் பிரதான ஆசாரியர் ஆவார். நாம் ஏதேனும் செய்வதற்கு இருக்கிறது என்று நினைத்தால், தலையை சரியான விதத்தில் நாம் பிடித்துக் கொள்ளவில்லை என்று அர்த்தமாகிறது. நாம் **அவருடைய** சரீரத்தின் அங்கங்களாக வெறுமனே **எண்ணப்படுகிறவர்களாய்** இருக்கிறோம்.

விசுவாசக் குடும்பத்தாரின் பாவங்களை காளையின் இரத்தம் நீக்குவதாலும், வெளியே இருக்கும் எல்லோருடைய பாவங்களை வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் நீக்குவதாலும், பிறகு, போக்காடு பற்றிய விஷயத்தில் என்ன பாவங்கள் விடுபட்டுள்ளன? பிரதான ஆசாரியன் சபைகளின் பாவங்களை எடுத்து, போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவின் தலையின் மேல் அறிக்கையிட்டார் என்பது தான் இதற்கு பதில் ஆகும். ஏற்கனவே குறிக்கப்பட்ட பாவங்களுக்காக இரத்தம் தெளிக்கப்பட்டதை அல்லாமல், வேறு என்ன பாவங்கள் உள்ளன? ஆதாமின் காரணமாக வந்த அசல் பாவங்களுக்காகவும், அவன் வழியில் தொடர்ந்து வந்த குறைபாடுகளுக்காகவும் பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பாவ நிவாரணம் செய்யப்பட்டது என்பதே என்னுடைய பதில் ஆகும். தம்முடைய சரீரத்தின் வழியாக செலுத்தப்படும் கிறிஸ்துவின் பலன், இந்த பாவங்கள் அனைத்திற்கும் பிரயோகிக்கப்படுகிறது. அங்கு மற்ற பாவங்கள் என்ன உள்ளன? அந்த பாவங்கள் **ஆதாமின் பலவீனத்தின் காரணமாக உண்டானவை அல்ல.** உலகத்தார் தங்களால் இயன்ற அளவுக்கு நல்லதைச் செய்கிறதில்லை. ஆகவே ஆதாமின் பலவீனம் காரணமாக இல்லாத பல பாவங்களை உலகத்தார் செய்கிறார்கள். சில மனுஷர்களின் பாவங்கள் முன்னேறிச் செல்வதாகவும், சிலருடையவை அவற்றைப் பின்பற்றுவதாகவும் உள்ளன. ஆனால், எல்லா பாவங்களும் சீரமைக்கப்படுவதற்கு கர்த்தர் அதைப் பார்த்துக் கொள்வார். ஒவ்வொரு அறிவுக்கூர்மையுடைய பாவமும் இந்த வகையைச் சேர்ந்த பாவம் ஆகும். இந்த பாவங்கள் தான் போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவின் தலையில் அறிக்கை இடப்படுகிறது. நாங்கள் உங்களுக்கு எடுத்துக்காட்டாக ஒன்று தருகிறோம்: இந்த வசனம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும், "நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் சகரியாவின் இரத்தம் வரைக்கும் பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தபழியெல்லாம் இந்த சந்ததியினிடத்தில் கேட்கப்படும்....". நீதிமான்களின் இரத்தம் என்று குறிக்கப்படுவது என்ன? மனுக்குலத்தாரால் நடப்பிக்கப்படும் தவறான செயல்கள் ஆதாமின் பலவீனம் காரணமாக உண்டானவை அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. மனுஷீகத்தின் அறிவுக்கூர்மையான

பாவங்களை ரத்து செய்வதற்கு கர்த்தர் சில வழிகளைக் கண்டுள்ளார். நீங்களும் நானும் இந்த தத்துவத்தைப் பார்க்கும் போது, இவையெல்லாம் சரியானதே என்று நாம் சொல்லுவோம். ஆகவே, உலகத்தாருடன் வேறொரு கணக்கீடு உள்ளது என்று வேதாகமம் சுட்டிக்காட்டுவது போலத் தெரிகிறது. பலிபீடத்தின் கீழே உள்ள ஆத்துமாக்கள் சத்தமிடுவது பற்றி வேதாகமம் கூறுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும்: "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்." கர்த்தர் வரவு செலவு கணக்கியலில் துல்லியமான முறையைக் கொண்டுள்ளார். அவர்கள் சரியாகவோ அல்லது தவறாகவோ செய்ததற்குத் தகுந்தாற் போல் அவர் ஒவ்வொருவருக்கும் பரிசளிப்பார் அல்லது ஒவ்வொருவரையும் தண்டிப்பார். நுண்ணறிவுடன் பாவம் செய்திருக்கிறவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தண்டனை அவர்களுக்கு வந்து சேரும். இது வரவுசெலவு கணக்கு புத்தகங்கள் முடிவுக்கு வருவதற்கு முன்பாக கண்டிப்பாக வரும். நாம் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், "இருண்ட யுகங்களை" பின்னாகத் திரும்பிப் பார்க்கிறோம் என்ற உண்மையின் அடிப்படையில், நாம் நடக்க இருக்கும் விஷயங்களில் நாம் எதிர்ப்பின்றி இணங்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த யுக முடிவில் மகா உபத்திரவ காலம் வருகிறது; அந்த உபத்திரவத்தில் பங்கு கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட இருக்கிறார்கள். தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும் அளவுக்கு அதில் பங்கு பெற அவர்கள் அனுமதிக்கப்பட இருக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் சாகாவிட்டால், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் அவர்கள் பங்கு பெற இயலாது.

## திரள் கூட்டம் - ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்.

**கே 299:1 :: கேள்வி (1909) - - 1 - -** நமக்கு சொல்லப்பட்ட விதமாக, மணவாட்டி முழுமை அடைந்த பிறகு, சிறிது காலத்தில், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தில் திரள் கூட்டம் கலந்து கொள்ளுமா?

**பதில்.** ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் ஒரு குறிப்பிட்ட சம்பவம் என்பதும், நமது இன்றைய வழக்கம் இந்த விஷயத்திற்கு சரியான எடுத்துக்காட்டாக இராது என்று நான் பதிலளிக்கிறேன். ஆனால், யூதர்கள் மத்தியில் நிலவிய கலியாண வழக்கம் இந்த விஷயத்தில் சரியாக அடையாளப்படுத்துவதாக உள்ளது. இது வரலாற்று காலந்தொடங்கி இருந்து வந்திருப்பதால், எடுத்துக்காட்டிற்கு அங்கே நாம் கவனத்தை செலுத்த வேண்டும். கலியாண ஒப்பந்தம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த கலியாண பொருத்தனை, மணவாளனாக இருக்கப்போகிறவருக்கும், மணவாட்டியாக இருக்கப்போகிறவருக்கும் இடையே வழக்கமாக எழுத்துப்பூர்வமான வடிவில் உள்ள ஒரு ஒப்பந்தம் ஆகும். இவ்வாறாக, இந்த இரண்டு பேரும் மணம் புரிகிறார்கள் அல்லது இருவருக்கும் திருமணம் நிச்சயமாகிறது. இது வழக்கமாக ஒரு வருஷத்திற்கு நீடிக்கிறது. இது அவர்கள் உண்மையில் திருமணம் ஆனவர்கள் போல ஒரு பிணைப்பாக இருந்தது. இந்த இருவரில் யாரிடமாவது முறையற்ற செயல் காணப்பட்டால், அவர்கள் ஏற்கனவே திருமணம் ஆனவர்கள் என்ற விதத்திலேயே கருதப்படுவார்கள். அந்த வருஷத்தின் போது, அவள் விவாக நிச்சயதார்த்தத்துக்குள்ளானவளாக அறியப்படுகிறாள். அது சரியானதும் கூட. அந்த வருஷத்தின் இறுதியில் அந்த மனுஷன் வந்து, அவளைத் தனக்காகச் சேர்த்துக் கொள்கிறான். அது முதற்கொண்டு, அவள் அவனுடைய மனைவியாகிறாள். இதைத் தொடர்ந்து, ஒரு கணிசமான காலப்பகுதிக்கு ஆடம்பரமான விருந்து நடைபெறும். இது கலியாணமாக அறியப்படவில்லை. ஆனால், இது கலியாண கொண்டாட்டம்; கலியாண விருந்து; இதே வழியில் தான் கர்த்தர் சபையுடன் கையாளும் முறைகள் இருந்தன. முதலாவதாக, தேவனுடைய குமாரனுடன் சபை திருமண நிச்சயம் 1800 வருஷங்களுக்கு முன்பு நடந்தது. பிறகு அவர் தூர தேசத்துக்குச் சென்றார். அவர் திரும்ப வந்தவுடன், நிச்சயம் பண்ணப்பட்ட சபையை தனதாக்கிக் கொள்வார் என்று முதலில் வாக்குத்தத்தம் பண்ணினார். இந்த சுவிசேஷ யுகம் முழுமையிலும் அவருக்காக சபை காத்துக் கொண்டிருக்கிறது. திருமண ஒப்பந்தத்திற்கான அடையாளமாக பரிசுத்த ஆவியை சபை பெற்றிருக்கிறது. அவர் எப்பொழுது வந்து, தமக்காக

சபையைச் சேர்த்துக் கொள்கிறாரோ, நிழலில் இருப்பதைப் போலவே, அப்பொழுது சபை அவருடைய மனைவி ஆகிறாள். இதற்கு எந்த சடங்கும் தேவை இல்லை.

நிழலுக்கான பொருள் என்ன? கர்த்தரின் இரண்டாம் வருகையில் நித்திரை அடைந்த சபையின் விசுவாசிகள் எழுப்பப்பட்டு, கர்த்தரால் உடனே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அவரால் சேர்த்துக்கொள்ளப்பட்ட உடனேயே, சபையின் அந்த ஒரு பகுதியினருடன் கர்த்தருடைய திருமணம் நடக்கிறது. இதற்கும் முன்பே அவர்கள் வெறுமனே திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது அவர் தம்மிடம் சேர்த்துக் கொண்டுள்ளார். நாம் உள்ளே சென்று, கண் இமைக்கும் நேரத்தில் மறுரூபமாக்கப்படுகிறோம். இது புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளால் குறிக்கப்படுகிறது. அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் உள்ளே செல்லவில்லை. ஆனால், ஒருவர் பின் ஒருவராக பின்தொடர்ந்தனர். ஆகவே, நாம் இறந்த மறுகணமே மறுரூபமாகுவோம். ஆகவே நாம் கர்த்தருடன் என்றென்றும் இருப்போம். ஆட்டுக்குட்டியானவருடனான கலியாணம் இதுவே. இதற்குப் பிறகு தான், திரள் கூட்டத்திற்கு செய்தி அனுப்பிச் சொல்லுகிறார், “ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் அல்லது வரும்படி கூப்பிடப்பட்டவர்கள் பாக்கியவான்கள். இந்த ஆடம்பரமான விருந்துக்கு பல நாட்கள் அல்லது ஒரு வருஷம் அல்லது அதற்கு மேல் பிடிக்கும்.” 45ம் சங்கீதத்தில் நாம் படிப்பது போல், மணவாட்டியைப் பின்பற்றிச் செல்லும் கன்னிகைகளாகிய திரள் கூட்டத்தார் அந்த கலியாண விருந்தில் இருப்பார்கள்.

## திரள் கூட்டத்தார் - பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பார்கள்.

**கே 300:1 :: கேள்வி (1909) - 1 -** திரள் கூட்ட வகுப்பார் பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதாகச் சொல்லலாமா?

**பதில்.** நல்லது, நான் பதில் கூறுகிறேன், “திரள் கூட்ட வகுப்பார் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியேற்றப்படும் வரையிலும் அவர்கள் திரள் கூட்ட வகுப்பார் அல்ல. நான் என்ன பொருள் கொள்கிறேன் என்பதைக் கவனியுங்கள். இந்த யுகத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிற அவர்கள் அனைவரும், தாங்கள் ஆசாரியர்களாகப் போகிறோம் என்பதை ஒத்துக்கொண்டு, மரணத்திற்குள்ளான அர்ப்பணிப்பைச் செய்கிற காரணத்தினால், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுகிறார்கள். இயேசு அவர்களை அனுமதிக்கிறார். ஆனால் அந்த நிபந்தனைகளுக்கு இணங்கி நடப்பதில் தவறிப் போனால், அவர்கள் ஆசாரியர்களாக நீடிக்க தகுதியற்றவர்களாகிறார்கள். அவர்கள் வெளியேற்றப்பட்டு, பிராகாரத்திற்குப் போகிறார்கள். ஆகவே, திரள் கூட்ட வகுப்பாராக மட்டும் இருக்கக்கூடியவராகவும், ராஜரீக ஆசாரியத்துவத்தைச் சார்ந்து இல்லாதவராய் இருக்கும் இடத்திற்கு ஒருவர் வரும்போது, அவர் ஸ்தலத்தை விட்டு வெளியேறிவிட்டார் என்று அர்த்தமாகிறது. ஆனால், முடிவில் அவர் தம்மை அர்ப்பணிக்கும் போது, ஆசாரியராக அர்ப்பணிப்பு செய்து, அவருடைய அர்ப்பணிப்பை நன்றாக செயல்படுத்துவதில் தவறிப்போகும் வரைக்கும் எல்லா எண்ணங்களையும், உள் நோக்கங்களையும் பொருத்த வரையில், அவர்கள் மற்ற ஆசாரியர்கள் போலவே நடத்தப்படுகிறார்கள்.

## திரள் கூட்டம் - நிழலாக அபியூ.

**கே 300:2 :: கேள்வி (1909) - - 2 - -** திரள் கூட்ட வகுப்பாராக அபியூ எந்த முறையில் அடையாளப்படுத்தப்படுகிறார்?

**பதில்.** ஆரோனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். அவர்கள் ஆசாரியப் பணிகளைச் செய்தனர். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக அந்நிய அக்கினியை காணிக்கையாக செலுத்த வந்தார்கள் என்று நாம் படிக்கிறோம். கூறப்பட்டதற்கு மிஞ்சி வேறு எதுவும் இல்லை. இதற்கான அர்த்தம் என்னவென்று நாம் அனுமானிக்க வேண்டியிருக்கிறது. யாரும் அறியவில்லை. ஆனால் இது ஒரு நிழல் என்று நம்புகிறோம். ஏனெனில், நமது கர்த்தராகிய இயேசுவுக்கு நிழலாக ஆரோன் இருக்கிறார். அவ்விதமே அவருக்கு கீழ் உள்ள ஆசாரியர்கள் சபைக்கு நிழலாய்

இருக்கிறார்கள். ஆகவே, அந்நிய அக்கினியை காணிக்கையாக்கி, அப்படிச் செய்ததால் அழிந்து போன அந்த இருவரும் ஒரு வகுப்பாரை அடையாளப்படுத்துவதாகத் தெரிகிறது. இரண்டாம் மரணத்திற்குப் போகும் வகுப்பாரோ என்பது எனக்குத் தெரியாது; அல்லது ஒருவர் அந்த வகுப்பின் பிரதிநிதியாக இருக்கிறவராகவும், ஒருவர் வேறு வகுப்பாராகவும் இருக்கிறாரோ? அதை நான் அறியவில்லை. இரண்டாம் மரணத்திற்குள் போகிறவர்களைக் குறிக்கும் விதமாக இந்த இரண்டு பேர்களும் இருக்கமாட்டார்கள் என்று ஒரு சமயத்தில் நினைத்தேன். ஏன், முழு ஆசாரியத்துவத்தில் இது ஐந்தில் இரண்டு பங்காக இருக்கிறது என்பதால், தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களில் ஐந்தில் இரண்டு பங்கினர் தேர்ச்சி பெறாமல், இரண்டாம் மரணத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்பதை உணர்த்துவதாய் இருக்கிறது. ஆனால், அருமையான நண்பர்களே, அந்த விஷயத்தில் ஒருவேளை சரியான கண்ணோட்டம் கொள்ளவில்லை என்று தாமதமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். நான் அனுமானித்திருந்ததைவிட, இரண்டாம் மரணத்தில் பெருமளவில் பலர் பிரவேசிக்கலாம். எனக்கு நினைவு இருக்கிறது, செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் ஜனங்களில் இரண்டு வகுப்பார்களைக் குறிக்கின்றன என்று என்னை நானே பாராட்டிக்கொண்டேன். செம்மறியாடுகள் அவருடைய ஜனங்கள்; மற்றவர்கள் வெள்ளாடுகள். மிக குறைந்த அளவில் வெள்ளாடுகள் இருந்தன என்று நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் நான் பாலஸ்தீனாவுக்கு சென்ற போது, செம்மறியாடுகளைப் போலவே கிட்டத்திட்ட அதே அளவு வெள்ளாடுகள் மந்தைகளில் இருப்பதைக் கவனித்தேன். இந்த எடுத்துக்காட்டைப் பற்றிக்கொண்டிருப்பது சந்தேகத்திற்கிடமாய் உள்ளதை நான் உணர்ந்தேன்.

தேவனை தன் முழு ஆத்துமாவோடும், மனதோடும் பெலத்தோடும் நேசித்து, தன்னைப் போலவே அயலானையும் நேசித்து, தேவனுடைய பூரணமான கற்பனையைக் கைக்கொண்டிருக்காவிட்டால், ராஜரீக ஆசாரியத்தையோ அல்லது நித்திய ஜீவனையோ பெற முடியாது என்பதே இப்பொழுது என்னுடைய கருத்து ஆகும். “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களிலே அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் எங்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.” இது தான் தேவை என்றால், எத்தனை பேர்கள் அந்த தேவையைப் பூர்த்தி செய்வார்கள் என்று நான் உண்மையில் வியப்படைகிறேன். நான் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாய் இருப்பது போன்ற உணர்வுடையவனாய், **“என் ஆத்துமாவே, உன்னை காத்துக்கொள்”** என்று சொல்லிக் கொள்வேன்.

இவர்கள் இரண்டு பேரும் இரண்டாம் மரணத்திற்குப் போகிறவர்களைக் குறிப்பதாய் இருந்தால், நீங்கள் உங்களைக் காத்துக் கொள்வதில், உங்களை இது காயப்படுத்தாது. உங்களுடைய சொந்த இதயம், ஜீவனுக்காக, தெய்வீக தரத்திலிருந்து எவ்விதத்திலும் குறைவு படுவதில் திருப்தி அடைய வேண்டாம்.

## திரள் கூட்டம் - அர்ப்பணிப்பு.

**கே 301:1 :: கேள்வி (1909) - 1 -** தங்களுடைய அர்ப்பணிப்பின் பொருத்தனையைக் கடைபிடிப்பதில் தவறியவர்களை அல்லாமல் திரள் கூட்டத்தைச் சார்ந்திருப்பவர்கள் யார்? அதாவது உபத்திரவ காலத்துக்கு முன்பாக மரிப்பவர்கள் யார்?

**பதில்.** கேள்வியை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நம்முடைய மனுஷ ஜீவனை தாமாக முன் வந்து ஒப்புக்கொடுக்கும் தங்களுடைய அர்ப்பணிப்பு பொருத்தனையை கைகொள்வதில் தேர்ச்சி பெறாதவர்களை அல்லாமல், வேறு யாரும் திரள் கூட்டத்தில் இருக்கப் போகிறவர்களா என்பது பற்றி எனக்குத் தெரியாது. இதை தாமாக முன்வந்து செய்யாவிட்டால் ஜீவன் எடுத்துப்போட வேண்டியிருக்கும்.

நமது கர்த்தர் உன்னதத்திற்கு ஏறிப்போனார் என்பதையும், தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், தாம் விலைக்கு வாங்கிய மனுஷீக உரிமைகளை விசுவாசக் குடும்பத்தாருக்கு எப்படி அளித்தார்

என்பதையும் இன்று காலையில் நாம் சுட்டிக்காட்டியதை நீங்கள் கவனித்தீர்களா? ஆம், நல்லது, இப்படியாக அவர்கள் தாமாக முன் வந்து அப்படிச் செய்பவர்களாய், நல்ல இருதயமுள்ளவர் களாகவும், தன்னார்வம் கொண்டவர்களுமாக இருந்தால், அவர்கள் ஜெயங்கொள்ளு கிறவர்களுக்கும் மேலானவர்கள். மற்றவர்கள் குறித்து என்ன? அவர்களிடமிருந்து இது எடுத்துக் கொள்ளப்படும். ஏனெனில், இது புதிய உடன்படிக்கையை முத்திரிக்கிறதற்கு கடந்து செல்ல வேண்டும். ஆனால், அந்த மேலான வெகுமதியைப் பெறுவதில் தேர்ச்சி பெறமாட்டார்கள்.

## திரள் கூட்டம் - - அதற்கு வழி வகுக்கக்கூடிய காரியங்கள்.

**கே 301:2 :: கேள்வி (1910) - 2 -** சிறுமந்தையிலிருந்து திரள் கூட்ட வகுப்பாருக்கு நம்மை நெருங்கச் செய்யும் முதன்மையான காரியங்கள் என்ன?

**பதில்.** என்னுடைய பதில் இது தான். பக்தி வைராக்கியத்தில் குறைவு, தேவன் பேரில் அன்பு குறைவுபடுதல், சகோதரர்கள் பேரில் அன்பு குறைவு; அதாவது, உங்கள் இதயம் இரக்கமற்றிருப்பது ஆகும். ஆனால், கேள்வியின் அடிப்படைக் காரணத்தை நோக்குவோமானால், இதற்கான பதில் இப்படித் தான் இருக்கும்: சிறுமந்தையிலிருந்து உங்களைப் பிரித்தெடுத்து, உங்கள் பங்கினை திரள் கூட்டத்தாருடன் அளிப்பதற்கு வாய்ப்பு அதிகம் உள்ள விஷயங்களாக நீங்கள் இழைக்கும் சிறு பாவங்கள் இருக்கின்றன. இந்தக் கருத்து வெளிப்படுத்தல் ஆகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. வசனம் சொல்லுகிறது: “இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.” இப்பொழுது அங்கிகள் தோய்க்கப்படுவது ஒரு தடயத்தைக் கொடுக்கிறது. அவர்கள் தோய்ப்பதற்கு என்ன தேவை இருந்தது? ஏனெனில் அவைகள் கறைபடிந்திருந்தன.....; நாம் நம்மை களங்கமில்லாமல் அல்லது கசங்கல் இல்லாமல் அல்லது வேறு எதுவும் இல்லாமல் ஒப்படைக்க வேண்டும் என்ற முறையில், நாம் நம்முடைய அங்கிகளைக் கறைபடியாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. சிறுமந்தை கறைபடியாத வகுப்பார்; மணவாட்டி வகுப்பாராக இருக்கத் தகுதி இல்லாமல் கறை படிந்து, கசங்கி இருக்கும் அங்கிகளைக் கொண்ட வகுப்பார் தான் திரள் கூட்டத்தார் ஆவார்கள். இதை தனிப்பட்ட முறையில் உங்களுடைய விஷயங்களுக்கும், என்னுடையவற்றிற்கும் பிரயோகப்படுத்துவோம்: ஒரு கிறிஸ்தவ நபர் அங்கியில் கறை ஏதும் படாத அளவுக்கு வாழ்வது சாத்தியமா? வேதாகமத்தின் போதனை இதுவா? இல்லை. வேதாகமத்தின் போதனை இதுவல்ல. குறைபாடுள்ள சரீரத்தில் நீங்கள், புதிய சிருஷ்டியாக தேவனுக்கு விசுவாசமாய், அவருடைய சித்தத்தைச் செய்ய விருப்பமுள்ளவர்களாய், நீங்கள் செய்ய வேண்டியவற்றில், எல்லா காரியங்களையும் செய்ய இயலாதிருப்பதைக் காண்கிறீர்கள். கிறிஸ்துவில் புதிய சிருஷ்டியாக தேவன் உங்களை ஏற்றுக்கொண்ட போது, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட உங்களுடைய வெள்ளை அங்கியில் எப்போதாவது கறை அல்லது கசங்கல் ஏற்படலாம். பூரண நிலை இல்லாத காரணத்தால், சில புள்ளிகள் அல்லது கறைகள் இல்லாமல் காத்துக்கொள்ள இயலாது. ஏனெனில் இந்த குறைபாடுள்ள சரீரத்தை நீங்கள் உபயோகப்படுத்த வேண்டியுள்ளது. உங்களுக்கு உள்ளதை நீங்கள் கண்டிப்பாக உபயோகப்படுத்த வேண்டும். ஆகவே, நீங்கள் செய்ய விரும்பாத அந்த விஷயங்களை நீங்கள் நிச்சயமாக செய்கிறீர்கள், அல்லது நம்முடைய சமய குரு நண்பர்கள் சொல்வதை போலச் செய்கிறீர்கள். சரியாகச் சொன்னால், “நாம் செய்திருக்கக் கூடாத அந்த விஷயங்களை நாம் செய்திருக்கிறோம்; நாம் கண்டிப்பாக செய்யவேண்டியிருந்த விஷயங்களை நாம் செய்யாமல் தவற விட்டிருக்கிறோம். நமக்குள் எந்த உதவியும் இல்லை.” நம்மில் ஒவ்வொருவரைப் பொருத்த வரையில் இது உண்மையே என்று நான் நம்புகிறேன். நாம் செய்ய வேண்டியவைகள் எல்லாவற்றையும் செய்ய முடியவில்லை. இதை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால், அதற்கான முயற்சி எடுக்காமலிருப்பதற்கு மன்னிப்பு கிடையாது. நமது முயற்சியை தேவன் கவனிக்கிறார். நம்முடைய முயற்சியின்படி தான் அவர் நம்மை நியாயம் தீர்ப்பார். அவர் மாம்சத்தை அல்ல, புதிய சிந்தையை நியாயந்தீர்க்கிறார். ஏனெனில் புதிய சிந்தை தான் சோதனைக்குள்ளாக்கப்படுகிறது. இப்பொழுது, மாம்சீகம் அல்லது அறியாமை காரணமாக, ஒரு தவறு உங்களை மேற்கொள்ளுகிறது என்று அனுமானித்தால், நீங்கள் ஒரு கறையைப்

பெறுகிறீர்கள். நீங்கள் செய்யப்போவது என்ன? அது தான் கேள்வி? நல்லது, இங்கு கர்த்தர் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார். சுத்திகரிப்பு செய்யும் ஒரு திரவம் உள்ளது. “அவருடைய இரத்தம் எனக்கு பிரயோஜனமாக உள்ளது” என்று நாம் சில சமயங்களில் பாடுவதைப் போல, அதை உபயோகப்படுத்தினால் அது சுத்திகரிக்கிறது. ஆகவே வேதாகமம் சொல்கிறது, “இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி **நம்மை** சுத்திகரிக்கும்.” அவர் ஜென்ம பாவத்தைக் குறித்துப் பேசவில்லை. இரத்தத்தின் கீழ் நீங்கள் வருகிற வரைக்கும், “நாம்” வகுப்பாரைச் சார்ந்தவராக நீங்கள் ஆகிறதில்லை. இது ஜென்ம பாவத்தின் பொறுப்பிலிருந்து நீக்கி விட்டது. கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை நீங்கள் பெற்றிருந்த பிறகு, என்ன? நமக்கு கறை உண்டாயிருந்தால், நாம் படிக்கிற வண்ணம், “ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராக இருக்கிறார்.” நாம் உடனடியாக பரிந்துபேசுகிறவரிடம் வருகிறவர்களாக இருக்கிறோம். பிதாவுடன் நமக்கு மத்தியஸ்தர் யாரும் கிடையாது. இதைப் பற்றி வேதாகமம் முழுவதிலும் ஒரு வார்த்தை கூட காணப்படுகிறதில்லை. நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். பாவத்தின் மன்னிப்பிற்காக அவரை வேண்டிக் கொண்டு, அவர் மூலமாக நாம் பிதாவிடத்தில் வருகிறவர்களாயிருக்கிறோம்.

பரிந்துபேசுகிற இவர் நமக்காக பரிந்து பேசுகிறவராக இருக்கிறார். நம் மேல் செலுத்த முடியும் விதத்தில், அவருடைய சொந்த மீட்பின் பலனை அவர் பெற்றிருப்பதின் காரணமாக, நம்முடைய கடந்த கால பாவங்களுக்காக முதலில் செலுத்தி, தற்போதைய ஒவ்வொரு குறைபாடு மற்றும் பலவீனத்திற்காகக் கூட அதை அவர் செலுத்தியிருப்பதால், அவர் நம்மை பிதாவிற்கு முன்பாக பரிசுத்தமும் களங்கமும் இல்லாமல் காணிக்கையாக்குகிறார். ஆனால், இது இந்த வகுப்பார் என்பதை நீங்கள் பார்க்கலாம். தங்களுடைய அங்கிகளை தூய்மையாக வைத்துக் கொள்ள விரும்பும் இந்த வகுப்பார், தங்கள் அங்கியில் ஒரு கறை கூட இருப்பது குறித்து விசனப்படுவார்கள். இப்படிப்பட்ட வகுப்பாருக்காகவே, பரிந்துபேசுகிறவர் சுத்திகரிப்பு பணியைச் செய்வார்.

இப்பொழுது உங்கள் சொந்த அனுபவத்தைக் குறித்து பேசலாம். ஒரு விஷயத்துடன் பரிந்துபேசுகிறவரிடம் செல்லும் போது, “கர்த்தாவே, கர்த்தாவே, என்னுடைய குறைபாட்டினாலோ அல்லது பலவீனத்தினாலோ, நான் இந்த விஷயத்தில் தோல்வியுற்றுள்ளேன்; நான் வருத்தப்படுகிறேன், மன்னிப்பு கேட்கிறேன்; எனக்கு விரோதமாக குற்றம் சாட்டப்படாதபடிக்கு கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் என்னுடைய உண்மையான உள்நோக்கம் சரியானதே. நான் என்னுடைய இருதயத்தில் உமது சித்தத்தைச் செய்வதையே உண்மையில் விரும்புகிறேன்.” நீங்கள் இதற்காக மன்னிப்பு கேட்டால், அவர் மன்னிப்பார். நீங்கள் சொல்லுகிறீர்கள், “கர்த்தாவே, நான் இதை மறுபடியும் செய்ய மாட்டேன்.” பிறகு, ஒரு வேளை சிறிது காலத்திற்குப் பிறகு, ஒரு வருஷம் அல்லது ஆறு மாதங்கள் கழித்து இருக்கலாம், நீங்கள் அதை மறுபடியும் செய்கிறீர்கள். நீங்கள் சொல்லுகிறீர்கள், இதை மறுபடியும் நான் எப்போதும் செய்யமாட்டேன் என்று பிரிதொரு சமயத்தில் நான் சொன்னேன்; இப்பொழுது கர்த்தரிடம் சென்று நான் அலட்சியமாக இருக்கிறேன் என்று சொல்ல வெட்கப்படுகிறேன். நான் என்ன செய்வேன்? நான் செய்ய வேண்டியது இது ஒன்று தான்; இரக்கத்தைப் பெறுவதற்கு கிருபையின் சிங்காசனத்திடம் சென்று, கர்த்தருடைய சகாயம் மற்றும் புன்சிரிப்பிற்கு மிகுந்த ஆவல் உள்ளவனாயிருக்கிறேன். ஆனால், சிலர் இவ்விதம் செய்யாதவர்களாயிருக்கிறார்கள். சிலர் சொல்கிறார்கள், “ஓ, இன்று இரவு அல்ல, இன்று இரவு அல்ல, இன்றிரவு நான் ஜெபிக்க மாட்டேன்” பிறகு அவர்கள் படுக்கைக்குச் சென்று தூங்குகிறார்கள்; அடுத்த நாளும் அதைப் போன்றே உள்ளது. அவர்கள் கர்த்தரிடமிருந்து சிறிது அப்பால் விலகுகிறார்கள். மேகம் சற்று பெரிதாக இருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள், நான் முதலில் இந்த விஷயத்தை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டேன் என்று ஊகிக்கிறேன். அந்த கறைகள் ஒவ்வொருவருக்கும் உள்ளது என்று காண்கிறேன். நாம் அவற்றை விரும்புவதில்லை. ஆகவே அவர்கள் கவனக்குறைவுள்ள வாழ்க்கையை அடைகிறார்கள். திரள் கூட்டத்தார் களாவதற்கு அவர்கள் தயாராகிறார்கள். பரலோகத்துக்குரிய நிலைக்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பு, அவர்கள் தங்களுடைய அங்கிகளைத் தோய்க்க வேண்டியிருப்பதை

நீங்கள் கவனியுங்கள். பரலோக கிருபையின் சிங்காசனத்துடன் தொடர்ந்து விண்ணப்பித்து, உங்களுடைய அங்கிகளைத் தூய்மையாக வைத்திருக்காவிட்டால், கறைகள் குவிந்து விடும். உங்களுடைய அங்கிகளைத் தோய்ப்பதற்கு ஒரே வழி மகா உபத்திரவத்தில் பங்கு பெறுவது தான்.

## திரள் கூட்டம்: பதவியிலிருந்து விலக்கிக் கொள்ளுதல்.

**கே 303:1:: கேள்வி (1910) - 1 -** திரள் கூட்ட வகுப்பார் கிறிஸ்துவிடமிருந்து தங்களை விலக்கிக் கொள்ளுகிறார்கள் என்று ஆசரிப்பு கூடார நிழல்கள் புத்தகம் 69ம் பக்கம் தெரிவிக்கிறது. யோவான் 15:2. “என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்.” என்ற வசனம் தேவனுடைய பங்கில் கூடுதலான சில செயல்கள் இருப்பதைச் சுட்டி காட்டுவது போல் தெரிகிறது. தயவு செய்து இரண்டு செயல்களை விவரிக்கவும்.

**பதில;.** நல்லது, மற்றவர்கள் செயல்படுகிற காரணத்தினால் தான் தேவன் செயல்படுகிறார். உதாரணமாக, இயேசு கூறுகிறார்: “நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள், கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்.” சுத்தம் பண்ணுவது என்பது, வாழ்வின் சோதனைகளும் கஷ்டங்களும் என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், இவை எல்லாம் கிறிஸ்துவில் கொடிகளாய் இருப்பவர்களுக்கு மட்டுமே உள்ளன. இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவில் எப்படி இணைகிறார்கள்? அர்ப்பணிப்பு செய்வதின் மூலம் தான்; உங்களுடைய அர்ப்பணிப்பின் முறைப்படியான உட்கருத்தும் நோக்கமும் என்ன? கனி கொடுப்பதற்காகவே; கிறிஸ்துவின் சரீரத்தில், திராட்சச் செடியின் அங்கமாக அவரிடத்தில் நீங்கள் வருவதின் முக்கிய நோக்கம் அதுவே. ஆகவே, நீங்கள் கனி கொடுக்காமலிருந்தால், நீங்கள் ஆவியின் கனியை பயிர் செய்யாவிட்டால், தேவன் எதிர்பார்க்கும் கனிகளைக் கொடுப்பதில் தோல்வி அடைந்தால், நீங்கள் உங்களையே குறியிட்டுக் கொள்கிறீர்கள். பிறகு, கிறிஸ்துவின் தெரிந்து கொள்ளப்பட்ட சரீரமாகிய அவருடைய சபையிலிருந்து அவர் அவர்களைப் பிரித்து விடுகிறார்.

## திரள் கூட்டம் - உலகத்தாரின் அல்லது ஜனங்களின் பாவங்களுக்காக உபத்திரவப்படுதல்.

**கே 303:2 :: கேள்வி (1910) - 2 -** ஜூன் 15 காவற் கோபுர பத்திரிகை உலகத்துக்கும் ஜனங்களுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்று தெரிவிக்கிறது. திரள் கூட்டம் ஜனங்களின் பாவங்களுக்காக மட்டும் உபத்திரவப்படுகிறதா? அல்லது திரள் கூட்டம் உலகத்தின் பாவங்களுக்காக உபத்திரவப்படுகிறதா?

**பதில்.** இவ்வித வித்தியாசத்தை செய்வதாக காவற் கோபுரத்திற்குத் தெரியாது. வேதாகமத்தில் குறிக்கப்படும் ஜனங்கள் உலகத்தைக் குறிக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அந்த வகையிலான வித்தியாசத்தை நாங்கள் செய்திருந்தால், இதற்கு உள்நோக்கம் ஏதுமில்லை. உங்களுடைய எழுத்தில் எங்கேயாவது மற்றவர்களால் மிதிக்கப்படுவதிலிருந்து காத்துக் கொண்டு, இந்த கோணத்தில் சிலர், அந்த கோணத்தில் சிலர், வேறொரு கோணத்தில் அதை சிலர் எப்படி பார்க்கிறார்கள் என்றும், மனதின் எல்லா வித்தியாசமான மனப்பாங்குகளையும் ஞாபகத்தில் இருத்தி எழுதுவது மிகவும் கடினமான காரியம் ஆகும். நீங்கள் மிக ஜாக்கிரதையாகப் படிக்க வேண்டியிருக்கிறது; நான் மிக ஜாக்கிரதையாக எழுத வேண்டியிருக்கிறது. ஆகவே, நாம் இருவரும் சேர்ந்து பங்கு கொள்வோம்.

## திரள் கூட்டம் - ஆபிரகாமின் வித்து.

**கே 304:1 :: கேள்வி (1910) - 1 -** உடன்படிக்கைகள் என்ற கேள்வியிலுள்ள ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தில் திரள் கூட்டத்தார் ஒரு பங்காக இருக்கிறார்களா? பிப்ரவரி 15, கோபுரம், 1909 ஐ பார்க்கவும்.

**பதில்.** மேற்கோள் குறிப்பு எது என்பது எனக்குத் தெரியவில்லை. கேள்விகள் எதிலும் சார்ந்திராமல் எப்பொழுதும் தனித்து இருக்க வேண்டும். அப்பொழுது, காவற் கோபுரம் இணக்கமாய் இருக்காவிட்டால், அதை நீங்கள் கவனிப்பீர்கள். ஆனால், காவற் கோபுரத்தைக் குறிப்பிடாமல், கேள்விக்கு நான் பதில் சொல்லுகிறேன். "ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தின் ஒரு பங்காக திரள் கூட்ட வகுப்பார் இருக்கிறார்களா?" நான் பதிலளிக்கிறேன். ஆம், நான் புரிந்து கொண்டபடி, அவர்கள் அப்படியே. ஆனால், இந்த விஷயத்தை இரண்டு வழிகளில் பார்க்கலாம். ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தின் நிழலாக ஈசாக்கும் ரெபேக்காளும் இருந்தார்கள். ஈசாக்கு கர்த்தரைக் குறிப்பவராகவும், ரெபேக்காள் சிறு மந்தை, மணவாட்டி வகுப்பு, சபையைக் குறிப்பவராகவும் இருந்தார்கள். பிறகு, ரெபேக்காள் எவ்விதம் அழைக்கப்பட்டாள் என்று விவரிக்கப்படும் போது, சில குறிப்பிட்ட வேலைக்காரிகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டனர் என்பதையும் ,அவளுடன் அவர்கள் சென்றார்கள் என்பதையும் நாம் படிப்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இந்த வேலைக்காரிகள் திரள் கூட்ட வகுப்பாரை அடையாளப்படுத்துகிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கலாம். அவர்கள் ரெபேக்காளுடனே பயணம் போனார்கள். அவர்கள் மணவாட்டி அல்ல. ஆனால், "கன்னிகைகள், அவளுடைய தோழிகள்" அவளுடன் சென்றார்கள். மணவாட்டியைப் பற்றி எங்கு குறிக்கப்படுகிறதோ, அவளுடன் கூடச் செல்லும் வேலைக்காரியைப் பற்றிக் குறிக்கப்படுவது, பழைய ஏற்பாட்டின் எல்லா சம்பவங்களிலும் இருப்பது வழக்கமாயிருந்தது. யாக்கோபுக்கு மனைவிகள் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு வேலைக்காரி இருந்தாள். அது அக்காலத்திய வழக்கமாக இருந்தது. ஆகவே, அதிகம் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் இரண்டு பேர் ரெபேக்காளுக்கு இருந்தனர் என்று படிக்கிறோம். 45ம் சங்கீதத்தில், கிறிஸ்துவின் மணவாட்டியாக சபை உருவகப்படுத்தப்படும் போது, மணவாட்டி உள்ளாக பூரண மகிமை உள்ளவள் என்றும், சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள் என்றும் வாசிக்கிறோம். பிறகு, கன்னிகைகளாகிய அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளைப் பற்றி படிக்கிறோம். மணவாட்டியின் தோழிகள் குடும்பத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். ஆகவே, திரள் கூட்ட வகுப்பார் குடும்பத்தின் ஒரு பகுதியாகவே உள்ளனர். ஆனால், வேறு ஒரு எடுத்துக்காட்டு, லேவியின் கோத்திரம் பற்றி சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் கொள்வோம். பின்னோக்கிச் சென்று, இந்த கோத்திரம் எங்கிருந்து வந்தது என்பதைப் பார்ப்போம். பஸ்காவின் இரவு உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்த இரவில் இஸ்ரவேலில் கர்த்தர் முதற்பேறானவர்களைக் கடந்து சென்றார். பிறகு, உங்களுக்கு ஞாபகம் இருக்கும், அடுத்ததாக கர்த்தர் மோசேயிடம் கூறினார், "நான் கடந்து சென்றேன், இஸ்ரவேலில் முதற்பேறானவர்களை விட்டு வைத்தேன்; ஆனால் இப்பொழுது இவர்களுக்குப் பதிலாக லேவியின் கோத்திரத்தாரை எடுத்துக் கொண்டேன்." அப்போதிலிருந்து, முதற்பேறானவர்களின் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் லேவியின் கோத்திரத்தாரைக் குறிக்கிறார்கள். அந்த முதற்பேறானவர்களின் வகுப்பார் சபையை குறிக்கிறார்கள். நம்முடைய சபை, பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபை என்று அழைக்கப்படுகிறது. இந்த முதற்பேறானவர்களின் சபை, அதாவது இந்த முதற்பேறான வகுப்பாரின் பிரதிநிதியாக லேவி குடும்பம் முழுவதும் இப்பொழுது உள்ளது. ஆனால், இந்த லேவியரில் இரண்டு வகுப்பார் உள்ளனர். லேவியர்களிடமிருந்து ஒரு சிறு மந்தையாக ஆசாரியர்கள் - ஆரோனும் அவனுடைய குடும்பமும் - தெரிந்தெடுக்கப்பட்டனர். மீதியானவர்கள் இந்த ஆசாரிய குடும்பத்தின் ஊழியக்காரர்களாக இருந்தனர். இங்கே, பொதுவான உண்மையாக வேறொரு எடுத்துக்காட்டைப் பெற்றிருக்கிறோம். விசுவாசக் குடும்பத்தார் இயேசுவையும், தேர்ந்தெடுக்கப்பட்ட மணவாட்டி வகுப்பார் மற்றும் திரள் கூட்ட வகுப்பாரை உள்ளடக்கியதாய் இருக்கிறார்கள். இவர்கள் தாம் பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையாக இருக்கிறார்கள். இந்த இரவு நேரத்தில், ஆயிர வருஷ காலை நேரம் துவங்குவதற்கு முன்பாக இவர்கள் எல்லாரும் காப்பாற்றப்படுகிறார்கள் அல்லது கடந்து

போகப்படுகிறார்கள். அந்த இரவு, சுவிசேஷ யுகம் முழுமையையும் எடுத்துக் கொள்ளுகிறது. அந்த இரவில் பாதுகாக்கப்படும் எல்லோரும் முழுமையான லேவி கோத்திரத்தால் குறிக்கப் படுகிறார்கள். ஆகவே, லேவி கோத்திரம் முழுவதும் முதற்பேறானவர்களின் சபையைக் குறிக்கிறது. இந்த இரண்டு வகுப்பாரும் கிறிஸ்துவின் மணவாட்டியாக அல்லது கிறிஸ்துவின் தேர்ந்தெடுக்கப்படும் சரீரமாகவும், இந்த சபையின் ஆவிக்குரிய ஊழியக்காரர்களாக திரள் கூட்ட வகுப்பாராகவும் இருக்கிறார்கள்.

## திரள் கூட்டம் - சிறு மந்தையிலிருந்து பிரித்தெடுத்தல்.

**கே** 305:1 :: **கேள்வி** **(1910) - 1 -** சிறு மந்தையிலிருந்து திரள் கூட்டத்தார் வெளிப்படையாக பிரித்தெடுக்கப்படுகிறார்களா?, அல்லது ஆவியில் மட்டும் பிரித்தெடுக்கப்படுகிறார்களா? அல்லது இந்த அறுவடை காலத்தின் முடிவில் இரண்டு வகுப்பாரும் ஒரே கூடுகையாக பொதுவான இணைப்பில் இருப்பதாக நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

**பதில்.** அவர்களை இரண்டு பிரிவினராகப் பிரிக்கும் விஷயத்தைப் பொருத்த வரையில், சிறு மந்தைக்கும், திரள் கூட்டத்தாருக்கும் இடையில் கர்த்தர் பிரிவை ஏற்படுத்திக்காட்டுகிறார் என்பதைச் சுட்டிக்காட்ட எனக்கு எதுவும் தெரியாது. எலியா சபைக்கு நிழலாகவும், எலிசா திரள் கூட்ட வகுப்பாருக்கு நிழலாக இருக்க **வாய்ப்பு உண்டு** என்றும், பிறகு முற்பிதாக்கள் வகுப்பாராகவும் இருக்கலாம் என்று வேதாகம பாடங்களில் நாங்கள் சுட்டிக்காட்டியிருப்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். எலிசாவைப் பற்றி நாங்கள் நிச்சயமாக சொல்வதற்கில்லை. ஆனால், எலியாவைப் பற்றி நாங்கள் நிச்சயமாக சொல்கிறோம். ஏனெனில், சபை வகுப்பாருக்கு எலியா நிழலாக இருக்கிறார் என்பதற்கு திட்டமான நிரூபணம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் நமக்கு உள்ளது. ஆனால், திரள் கூட்ட வகுப்பாருக்கு எலிசா நிழலாக இருந்தால், பிரிவு எதுவும் இருக்கக்கூடாது என்று அந்த நிழல் நிரூபிப்பதாகத் தெரிகிறது. ஏனெனில், அவர்களைப் பிரிக்கும் விதத்தில் பல சோதனைகளும் பயிற்சிகளும் குறிக்கப்பட்டு, அவர்களைப் பிரிக்க அடிக்கடி நிகழ்வுகள் இருந்தன. உதாரணமாக, எலியா எலிசாவிடம் கூறுகிறார், “இப்பொழுது நீ இங்கே இரு; கர்த்தர் என்னை அங்கே அனுப்புகிறார்.” ஆனால், எலிசா கூறுகிறார், “இல்லை, நான் தங்க மாட்டேன்; நீர் எங்கே போனாலும், நான் உம்முடனே வருவேன்.” ஆகவே எலிசா சென்றான். பிறகு, வேறொரு சமயத்தில், எலியா கூறுகிறார், “இங்கே இரு; கர்த்தர் என்னை அங்கே அனுப்புகிறார்.” ஆனால் எலிசா எல்லா இடத்திற்கும் எலியாவுடன் சென்றான். பிறகு இறுதியாக, தன்னுடன் எலிசா கடைசி மட்டும் இருப்பதைப் பொருத்து தான், எலிசாவுக்கு விசேஷ ஆசீர்வாதம் கிடைப்பது உள்ளது என்று எலியா கூறுகிறார். எலிசா விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கேட்கிறார் - விசேஷித்த ஆசீர்வாதத்தை நான் பெற முடியாதா - உம்முடைய ஆசீர்வாதத்தை எனக்கு கொடும்? எலியா பதிலளிக்கிறார், “**உன்னை விட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால்,** அப்பொழுது உனக்கு ஆசீர்வாதம் கிடைக்கும்.” வேறுவிதமாக சொன்னால், “நீ என்னை விட்டு இணைபிரியாமல் என்னை பின்பற்றினால், வழியில் உண்டாகும் சோதனைகளால் பிரியாமல் இருந்தால், எலியா வகுப்பார் எடுத்துக்கொண்ட பிறகு, நீங்கள் விசேஷித்த ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.” இது மாதிரி தான் நாம் எதிர்பார்க்கலாம். எலியா எடுத்துக்கொண்ட பிறகு, அவனுடைய சால்வை அவனிடமிருந்து எலிசாவுக்காக கீழே விழுந்ததை, எலிசா சென்று எடுத்துக்கொண்டான் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். சால்வை வல்லமையின் அடையாளமாக உள்ளது. எலிசா எலியாவின் சால்வையை அணிந்தான் என்பதும், எலியாவுடைய சில வல்லமைகளைப் பெற்றான் என்பதும் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அவன் யோர்தானுக்கு வந்த போது, அந்த சால்வையினால் நதியை அடித்தான். தண்ணீர் இருபக்கமாகப் பிரிந்ததினால், அவன் உலர்ந்த தரையின் வழியாக நடந்தான். இவை எல்லாம் திரள் கூட்ட வகுப்பார் மரணத்திற்கான அடையாளமாயிருக்கிறது. அதாவது, அவர்கள் எலியாவின் சால்வையை தங்களுடன் வைத்திருந்ததற்குப் பிறகு, யோர்தானால் அடையாளப்படுத்தப்படும் மரணத்தின் வழியாக, ஜெயங்கொண்டவர்களாக கடந்து வருகிறார்கள். யோர்தானைக் கடந்த பிறகு, அப்பால் நடக்கக்கூடிய எதுவும் நிழலாகக் குறிக்கப்பட்டால்,

யோர்தானின் மரணம் வழியாக திரள் கூட்டம் கடந்துவிட்ட பிறகு, முற்பிதாக்கள் நேரம் வரும்போது, அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைக் குறிக்கும் நிழலாக இருக்கிறது.

## திரள் கூட்டத்தினர் - பூரண அன்பிற்கான இலக்கினின்று விழுந்துபோகுதல்.

**கே 305:2 :: கேள்வி (1910) - 2 -** பூரண அன்பிற்கான இலக்கினை அடைந்திட்ட யாரேனும் திரள் கூட்டத்தினராக விழுந்துபோகக்கூடுமா?

**பதில்.** கூடும் என்று நான் எண்ணுகின்றேன்; ஒருவன் இப்படித் திரள்கூட்டத்திற்குள்ளாக வீழ்ந்து போவது மாத்திரமல்லாமல், அவன் முற்றிலுமாய் வீழ்ந்து போவதற்கும் வாய்ப்புள்ளது என்று நான் எண்ணுகிறேன். ஒருவேளை ஒருவன் பூரண அன்பிற்கான இலக்கினை அடைந்தவனாகவும், அவன் மற்றவர்களுக்குப் போதிப்பவனாகவும் இருப்பானாகையில், அவன் கர்த்தருடனான தன் உறவையும், கர்த்தருடைய அங்கீகரிப்பையும் தக்கவைத்து/ காத்துக்கொள்ளவில்லையெனில், அவன் ஆகாதவனாய் வீழ்ந்துபோவான்.

## திரள் கூட்டம் - ஆசாரியர்களாக பணிபுரிதல்.

**கே 306:1 :: கேள்வி (1910) - 1 -** பரிசுத்த காரியங்களின் ஊழியத்தில் திரள் கூட்டத்தார் ஆசாரியர்களாக இருந்தார்களா?

**பதில்.** இல்லை. அவர்கள் ஆசாரியர்கள் அல்ல. அவர்கள் ஆசாரியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். இதன் உருவகம் இரட்டையாக உள்ளது. தேவன் அளிக்கும் ஆசாரியத்துவம் எதிர்காலத்துக்குரியது. அதாவது, ஆவிக்குரிய ஆசாரியத்துவம், ராஜரீக ஆசாரியத்துவம் எதிர்காலத்திற்கு உரியது. ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கங்களாக நாம் இப்பொழுது நம்மைக் குறித்து பேசுகிறோம். ஆனால், இது உண்மையான உணர்வில் அல்ல. ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கங்களாக இருக்கும் தகுதி உள்ளவரா அல்லது இல்லையா என்பதைப் பார்க்கும் தகுதிகாண் நிலையிலுள்ள அங்கங்களாக நீங்கள் இப்போது இருக்கிறீர்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலுடன், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்கள் தாம் ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கங்களாயிருக்கிறார்கள். “முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.” ஆனால், அர்ப்பணிப்பு செய்த பிறகு, ஆசாரியர்களாக அழைக்கப்பட்டதற்குரிய சரியான முயற்சிகளை எடுக்க முன்மொழிந்த பிறகு, அந்த முயற்சிகளை எடுப்பதில் தோல்வியுற்றவர்கள் தாம் திரள் கூட்டத்தாராகிறார்கள். ஆகவே அவர்கள் எதிர்காலத்தில் ஆசாரியர்களாகமாட்டார்கள். அவர்கள் நம்முடன் இருக்கிறார்கள். ஆசாரியர்கள் யார் என்பதையும், தங்களுடைய பலிகளை சரியாக நிறைவேற்றுகிறவர்கள் யார் என்பதையும் தீர்மானிப்பது நீங்களோ அல்லது நானோ இல்லை, அதை கர்த்தர் தான் தீர்மானிப்பார். இந்தக் கூட்டத்தில் சிலர் ஆசாரியர் ஆவார்கள்; சிலர் லேவியர் ஆவார்கள்; ஆசாரியத்துவத்துக்காக தகுதி அடையமாட்டார்கள். ஆனால், இந்த வித்தியாசத்தை உண்டாக்கி, “நீங்கள் ஆசாரியர் இல்லை; ஆனால், நீங்கள் லேவியர்” என்று சொல்வது எனக்கோ அல்லது உங்களுக்கோ உரியது அல்ல. கர்த்தர் அப்படிப்பட்ட எந்த அதிகாரத்தையும் நமக்குக் கொடுக்கவில்லை. ஆகவே, நம்மைப் பற்றி இப்பொழுது ஒன்றாகவே பேசுகிறோம். நீங்கள் அர்ப்பணித்து முன்னேறிச் செல்கிறீர்கள். ஆனால், உங்களுடைய பலியை சரியாகச் செய்கிறீர்களா அல்லது இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.

## திரள் கூட்டம் - கிரீடத்தை இழந்து போகுதல்.

**கே 306:2 :: கேள்வி 91910) - 2 -** “ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.” என்ற வார்த்தைகள் கண்டிப்பாக திரள் கூட்ட வகுப்பாருக்கு உரியதா? இவர்கள் ஜீவ கிரீடத்தை உடையவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**பதில்.** துவக்கத்தில் திரள் கூட்ட வகுப்பார் என்று யாரும் இல்லை என்று நான் பதிலளிக்கிறேன். திரள் கூட்ட அங்கமாக யாரும் அழைக்கப்படவில்லை. அவர் அர்ப்பணிக்கும் ஆசாரியனாகவே அழைக்கப்படுகிறார். அர்ப்பணிக்கும் சமயத்தில் ஒவ்வொருவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் கிரீடம் பங்கீடு செய்யப்படுகிறது. அவரை அழைப்பதின் நோக்கமே, அவர் கிரீடத்தை உடையவராக வேண்டும் என்பது தான். ஆனால், ஒரு கேள்வி எழுகிறது, ஜெயங்கொள்ளுகிறவராக இருந்து, அந்த கிரீடத்துக்கு, அவர் தன்னுடைய உரிமையை தக்க வைத்துக் கொள்ளுகிறாரா? அவர் அதை செய்கிறார் என்றால், தான் அழைக்கப்பட்ட ஆசாரிய வகுப்பில் ஒருவராக அவர் தொடருகிறார் என்று அர்த்தம் ஆகும். ஏனெனில், நம்முடைய அழைப்பின் ஒரே நம்பிக்கையில் நாம் எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், அவர் ஜெயங்கொள்ளுகிறதில் தோல்வி அடைந்தால், பிறகு அவர் கிறிஸ்துவின் சரீர வகுப்பிலிருந்து மறைந்து போகிறார். அந்த வகுப்பாரிலிருந்து அவர் மறைந்து போனால், கிரீடத்திற்கான உரிமையை அவர் இழக்கிறார். ஆனால் அவர் அர்ப்பணிக்கும் போது கிரீடம் அங்கே இருந்தது. ஏனெனில், கிரீடம் இல்லாமல் யாரும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

## திரள் கூட்டம் - திரள் கூட்டத்தை எழுப்புதல்.

**கே 306:3 :: கேள்வி (1910) - 3 -** 1878ம் வருஷத்திலிருந்து விசுவாசிகளாயிருக்கும் அர்ப்பணித்தவர்கள் அனைவரும் மரணத்தில் உடனடியாக ஆவிக்குரிய தளத்திற்கு அப்பால் சென்று விடுகிறார்கள் என்பதும், இதில் திரள் கூட்டத்தாரும் அடங்குவார்கள் என்பதும் நீங்கள் புரிந்து கொண்டுள்ளதா? தற்போதைய அறுவடை காலத்திற்கு முன் மரணம் அடைந்த திரள் கூட்டத்தாரில் யாரும் அந்த நாளில் எழுப்பப்பட்டிருக்கிறார்களா? இது உண்மை என்றால், புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் உவமையுடன் இது எப்படி இசைவாக இருக்கும்?

**பதில்.** நான் பதிலளிக்கிறேன்; ஒரு முடிவை அடைவதற்கான சரியான அடித்தளத்தை வேதாகமம் நமக்குக் கொடுப்பதாக, வேதாகமத்தில் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இது குறித்து ஒரு முடிவை நீங்கள் அடைவது மிக முக்கியமானது என்று நான் நினைக்கவில்லை. நாம் நம்முடைய அழைப்பையும், தேர்ந்தெடுக்கப்படுதலையும் நிச்சயப்படுத்திக் கொண்டு, திரள் கூட்ட வகுப்பாரிலிருந்து நாம் விலகியிருக்க முயற்சிப்பதும், சிறு மந்தையுடன் சேர முயற்சிப்பதும் தான் நாம் தீர்மானிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். கிபி. 1878ல் திரள் கூட்டத்தார் எழுப்பப்பட்டார்களா அல்லது இல்லையா என்பது பற்றி நம்மில் யாரிடமும் வித்தியாசமான கருத்து ஒன்றையும் என்னால் பார்க்க முடியாது. இது சிறு மந்தையைக் குறித்து நமது கருத்து ஆகும். அந்த வருஷத்திலிருந்து, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாயிருக்கிற எல்லோரும் மறுரூபமாகிறார்கள். ஆனால், திரள் கூட்டத்தாரைப் பொருத்த வரையில் பதில் சொல்ல நாம் உத்திரவாதம் கொடுப்பதில்லை. நமக்குத் தெரியாது, அந்த வகையில் எண்ணங்கொள்ள சாய்வதில்லை. ஆனால், நாம் பதிலளிக்கும் விதமாக எந்த அடிப்படையும் இல்லை.

## திரள் கூட்டம் - பரிசை பெற ஓடி, அதை இழந்தவர்கள்.

**கே 307:1 :: கேள்வி (1911) - 1 -** திரள்கூட்ட வகுப்பாரின் மத்தியில் பரிசுக்காக ஓடி, பிறகு இழந்தவர்களாக இருப்பவர்கள் எவரேனும் பிறகு திரள் கூட்டத்திற்குள் செல்வார்களா?

**பதில்.** ஆம் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஓட்டத்தை ஆரம்பித்த அவர்கள் எல்லோரும் இந்த வகுப்பாரில் தான் இருப்பார்கள் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். அவர்களில் சிலர் ஒன்று அல்லது இரண்டு படிகள் மட்டுமே ஓடி இருப்பார்கள். ஆனால், பரிசுக்காக ஓடுவது நுழை வாயிலிலேயே ஆரம்பிக்கிறது என்று தான் எனக்குத் தோன்றுகிறது. நுழைவாயிலில் நாம் நுழையும் அடுத்த நிமிஷமே, நாம் ஓட்டத்தை ஆரம்பிக்கிறோம். நீங்கள் ஓடும் பந்தயத்திடலில் இருக்கிறீர்கள். எல்லோரும் அந்த இடத்திலிருந்து ஓடுகிறார்கள். நீங்கள் வேகமாக அல்லது மெதுவாக ஓடினாலும், நீங்கள் பந்தயத்திடலில் இருக்கிறீர்கள். எல்லோரும் அதே வாயிலிலிருந்து நுழைகின்றனர். அப்போஸ்தலர் கூறும் வண்ணம், "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்." தேவன் யாரையும் திரள் கூட்ட வகுப்பார் ஆவதற்காக கூப்பிடவில்லை. இந்த யுகத்தில் அழைக்கப்படும் ஒவ்வொருவரும் சிறு மந்தை வகுப்பார் ஆவதற்காகவே அழைக்கப்படுகிறார்கள். அர்ப்பணிக்கும் வகுப்பினராக ஆரம்பித்த பின்னர், எல்லாவற்றையும் தியாகம் செய்ய அர்ப்பணித்த பிறகு, பந்தயத்திடலில் ஆரம்பித்த பிறகு, தோல்வி அடைந்தால், அவர்கள் திரள் கூட்ட வகுப்பாருக்குள் செல்ல வேண்டும் அல்லது மோசமாக, இரண்டாம் மரணத்திற்குள் செல்ல வேண்டும்.

## திரள் கூட்டம் - அர்ப்பணிப்பு - ஆனால் ஓடுவதில்லை.

**கே 307:2 :: கேள்வி (1911) - 2 -** அர்ப்பணிப்பு செய்து, பரிசுக்காக எப்போதும் ஓடாத யாராவது திரள் கூட்டத்தாருக்குள் இருப்பார்களா?

**பதில்.** கர்த்தரைத் தவிர யாரும் இந்த கேள்விக்கு பதிலளிக்க முடியுமா என்பதை நான் அறியவில்லை. ஆனால், ஓட்டத்தை துவங்காமலிருந்த யாரும் திரள் கூட்ட வகுப்பாரில் இருப்பதில்லை என்று நான் அனுமானிக்கிறேன்.

## திரள் கூட்டம் - ஜெநிப்பிக்கப்படுதல்.

**கே 307:3 :: கேள்வி (1911) - 3 -** சிறுமந்தை மட்டுமே அழியாமையின் சுபாவத்தில் தெய்வீகமாகப் பிறந்தவர்கள் என்பதைப் பார்க்கும் போது, திரள் கூட்ட வகுப்பார் தேவ சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் என்று சொல்வது சரியா? பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் பற்றிய வேதாகம உபதேசங்களை தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** "தேவ சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுதல்" என்ற சொற்றொடரை உபயோகப்படுத்துவது முற்றிலும் சரியே என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும், "டாண்" வேத பாடத்தில், "ஆவியின் சுபாவத்தில் ஜெநிப்பிக்கப்படுதல்" என்று வாசிக்கும்படியாக மாற்றினேன். இவ்வாறு செய்வது தேவை என்று நான் நினைத்தேன் என்ற காரணத்தினால் நான் செய்யவில்லை. ஆனால், இந்த கருத்தை சிலர் எளிதாக புரிந்து கொள்ள வேண்டி நான் எண்ணியதால் அப்படிச் செய்தேன். "ஜெநிப்பிக்கப்படுதல்" ஒரு குறிப்பிட்ட சுபாவத்திற்காக இருக்கிறது. நம்முடைய அழைப்பின் ஒரே நம்பிக்கையினாலே நாம் எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் போலவே, "ஜெநிப்பிக்கப்படுதல்" என்பது ஒரு குறிக்கப்பட்ட சுபாவத்திற்கு மாறுவது ஆகும்.

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது ஒவ்வொரு வகையிலும் ஒரே மாதிரியான ஜெநிப்பிக்கப்படுதலாகத் தான் இருக்கிறது. ஆனால், இது ஒரு சுழற்சியில் அல்லது வளர்ச்சியில் இதன் விளைவு தேவ சுபாவமாக இருக்கிறது. இது வேறு சுழற்சி எடுத்தால் அல்லது வேறுவிதமாக வளர்ச்சியடைந்தால், இதன் விளைவு, தேவ தூதர்களைப் போன்ற சுபாவத்திற்கு மாறுவது ஆகும். மாம்சத்தில் ஜெநிப்பிக்கப்படுகிறவர்கள் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறக்கலாம் என்ற உண்மை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். ஒரே ஜெநிப்பிக்கப்படுதலின் விளைவாகத் தான், ஆண் குழந்தையாகவோ அல்லது பெண் குழந்தையாகவோ பிறக்கிறது. ஆகவே, அப்பொழுது இது தெரிவதில்லை. அது பெண்ணாகப் பிறக்கிறது அல்லது ஆணாகப் பிறக்கிறது என்று நாம் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு வகையிலும் ஜெநிப்பிக்கப்படுதல் ஒன்றே. ஆகவே, பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலைப் பொருத்த வரையில், அவைகள் எல்லாம் ஒரே பிதாவினாலே, எல்லாம் ஒரே வகையிலே ஒரே ஜெநிப்பிக்கப்படுதலாக இருக்கிறது. ஜெநிப்பிக்கப்படுதலின் செயல்முறை முடிவுற்ற பிறகு, மனுஷீகத்தில் சில விஷயங்களை, இது ஆணா அல்லது பெண்ணா என்று உறுதிப்படுத்துவது போல, அதே மாதிரி ஆவிக்குரிய விஷயத்திலும் உள்ளது. ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதல் முடிவுற்ற பிறகு, ஒருவர் மரித்தோரிலிருந்து தேவ சுபாவத்திற்குள் பிறக்கிறாரோ அல்லது ஆவிக்குரிய சுபாவத்தில் தேவ தூதர்களைப் போல இருப்பார்களா என்பது போன்ற சில நிலைகளைத் தீர்மானிக்கிறது. இவ்வாறு தீர்மானிக்கும் காரணி நம்மிடம் தான் இருக்கிறது என்பது வேதாகமத்தில் எளிதாக சொல்லப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். நீங்களும் நானும் நம்மை அழைத்தவரிடமும், விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் எந்த அளவுக்கு விசுவாசமாயிருக்கிறோமோ, நமது அழைப்பையும் தேர்ந்தெடுத்தலையும் நிச்சயப்படுத்திக் கொள்கிறோம். நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளக்கூடிய அந்த அழைப்பு, அந்த தேர்ந்தெடுக்கப்படுதல், அந்த ஜெநிப்பிக்கப்படுதல் அனைத்தும் தேவ சுபாவத்திற்காக மட்டுமே. அந்த வார்த்தையின் மேலான பொருளின் அடிப்படையில், நாம் அதை நிச்சயப்படுத்திக் கொள்வதில் தவறினால், அதே ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலினால், தாழ்வான சுபாவத்தில் பிறப்பதற்கான சாத்தியம் இன்னும் உள்ளது, அல்லது, இரண்டாம் மரணத்திற்குள் முழுமையாகப் புறம்பாக்கிப் போடப்படுவதற்கான சாத்தியம் இன்னும் உள்ளது.

தேனீக்களைப் பற்றிய வேறொரு எடுத்துக்காட்டு காவற் கோபுரத்தில் நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். தேனீக்கள் கலாச்சாரத்தில், தேனீக்களில் மூன்று பிரிவுகள் உள்ளதாகத் தெரிகிறது. வேலைக்கார தேனீ, ஆண் தேனீ, மற்றும் ராணி தேனீ; இவை மூன்றும் துவக்கத்தில் ஒரே மாதிரியாகவே பிறக்கின்றன. ஆனால், பின்னாக நடக்கும் சில நடத்துதலைப் பொருத்து, ஒவ்வொரு அணுவும் ஒன்று அல்லது மற்றொன்று விதமாக மாறுகிறது. ராணி தேனீயை உண்டாக்க, தேனீக்கள் விரும்பினால், மற்ற தேனீக்களிலிருந்து முழுவதும் வித்தியாசமாக இருக்கும் விதமாக, பெரிய பரிமாணத்தில் ராணி தேனியாக மாறும் வரைக்கும் அந்த இளம் புழுவிற்கு (LARVA) அவைகள் வெளிப்படையாக அதிக சத்துள்ள உணவை ஊட்டுகின்றன. அதிலிருந்து நாம் ஒரு பாடத்தை ஒருவேளை கற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஆவிக்குரிய ஆகாரத்தினால் அதிகமாய் போஷிக்கப்படுகிறவர்களுக்கு ராஜரீக அந்தஸ்து அடைவதற்கான நல்வாய்ப்பு உள்ளது.

கர்த்தர் நமக்கு பெருமளவில் கொடுத்திருக்கிறார். நாம் எல்லோரும் இந்த ராஜா தேனீ, ராணி தேனீ வகுப்பினராக அழைக்கப்பட்டிருக்கிறோம். ராணி வகுப்பார் நமக்கு மிகவும் பொருந்துவதாக உள்ளது. ஏனெனில், நமது கர்த்தரே ராஜாவாக இருக்கிறார். நாம் அவருடைய ராணியாக இருக்கப் போகிறோம். ஆகவே, கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற சத்தியங்களை நாம் எப்படி கிரகிக்கிறோம் என்பதைப் பொருத்து தான், நாம் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களா என்பது உள்ளது. இந்த உட்கிரகித்தல், நம்மை வந்தடைகிற ஆசீர்வாதங்களையும், சகாயங்களையும் நாம் எப்படி உபயோகப்படுத்துகிறோம் என்பதை உள்ளடக்கியது ஆகும். ஆகவே, நாம் எல்லோரும் ஒரே ஜெநிப்பிக்கப்படுதலை உடையவர்களாதலால், பலதரப்பட்ட வாய்ப்புகளையும், ஆசீர்வாதங்களையும் நாம் எப்படி உபயோகப்படுத்துகிறோம் என்பதைச் சார்ந்து தான் பெரும்பாலானவை உள்ளது.

## திரள் கூட்டம் - முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு.

**கே 308:1 :: கேள்வி (1912-Z) - 1 -** திரள் கூட்டத்திற்கு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு உள்ளதா?

**பதில்.** முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்கள் வாழ்ந்து, கிறிஸ்துவுடனே ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். ஆகவே, திரள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதலாம் உயிர்த்தெழுதலில் எந்தவிதமான பங்கும் இருக்கப்போவதில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி பேசுகிறார், “இப்படி நான் அவரையும் அவருடைய

உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி" (பிலி 3:10.) இது தான் முதலாம் உயிர்த்தெழுதல்.

இருப்பினும், திரள் கூட்டத்தாரை உள்ளடக்கிய வேறு இரண்டு வேதாகம வசனங்கள் உள்ளன. பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையைப் பற்றி அப்போஸ்தலர் எபி.12:23ல் பேசுகிறார். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்களைக் குறித்து வெளி.2:27ல் குறிக்கப்படுகிறது. ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டவர்கள் எல்லோரும் ஆவியின் தளத்தில் ஜீவனைப் பெறுவார்கள். **ஜெயங்கொள்ளுவர்களின்** நாமங்களை கிறுக்கிப் போடமாட்டேன் என்று கர்த்தர் சொன்னார். வெளி.3:5.

திரள் கூட்டத்தார் ஜெயங்கொள்ளுகிறார்களா? ஆம், ஜெயங்கொள்ளாதவர்கள் யாருக்கும் கொடுப்பதற்கு தேவனிடத்தில் ஆசீர்வாதங்கள் இல்லை. திரள் கூட்டத்திற்கும் சிறு மந்தைக்கும் இடையில் என்ன வித்தியாசம் உள்ளது? சிறுமந்தை வகுப்பார் தேவனிடத்தில் அதிகமான அளவு விசுவாசமாயிருப்பவர்கள் என்பது தான் வித்தியாசம் ஆகும். சோதனை வரும்போது தங்கள் ஜீவனைத் தள்ளிவைக்காதவாறு, திரள் கூட்டத்தார் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பார்கள். தேவனை மறுதலிப்பதற்கு மாறாக, அவர்கள் அழிவார்கள்; இவ்வாறாக அவர்கள் மாம்சத்தின் அழிவினை அனுபவிப்பார்கள். ஆனால் தங்களுடைய அர்ப்பணிப்பை போதுமான பக்தி வைராக்கியத்துடன் நிறைவேற்ற முயற்சிக்கமாட்டார்கள். அவர்கள் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பார்கள். ஆனால் தங்கள் விசுவாசத்தை தக்க வைத்துக் கொள்வதைத் தவிர, அவர்கள் அதற்கு மேலாக ஒன்றும் செய்கிறதில்லை.

பிறகு, யோவான் 5:28,29ல் பதிவு செய்யப்பட்டுள்ள நமது கர்த்தரின் அறிக்கை நமக்கு உள்ளது. "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகப் புறப்படுவார்கள்" இது சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தார் என்ற இருவகுப்பாரையும் உள்ளடக்கியது. இரண்டு வகுப்பார்களும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். இந்த அறிக்கை முற்பிதாக்களையும் உள்ளடக்கினால், பிறகு இது மூன்று வகுப்பார்களைக் குறிக்கும்: சிறு மந்தை, திரள் கூட்டம் மற்றும் முற்பிதாக்கள். பூரணத்துவத்தின் வித்தியாசமுள்ள தளங்கள் இருந்தாலும் - மனுஷீக பூரணத்துவம், தூதர்களைப் போன்று பூரணத்துவம், மற்றும் கடைசியாக, தெய்வீக, அதாவது, கிறிஸ்துவைப் போல உள்ளவர்களுக்கு வரும் பூரணத்துவம் என்று மூன்று தளங்கள் உள்ளன.

## திரள் கூட்டம் - பிரமீடில் காண்பிக்கப்படவில்லை.

**கே 309:1 :: கேள்வி (1912 - Z) - 1 -** மணவாட்டியைப் பின்பற்றிச் செல்கிற அவளுடைய கன்னிகை தோழிகளாகிய திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்தும் விதமாக பெரிய பிரமீடில் எதுவும் இல்லையா? (சங் 45:14.) மனுஷீக தளத்தில் பூரணத்துவம் பெறுபவர்களை ராணியின் அறை அடையாளப்படுத்துகின்றது என்றும், ராஜாவின் அறை தெய்வீக சுபாவத்தைப் பெறுபவர்களை அடையாளப்படுத்துகிறது என்றும் உங்களுடைய பொருள் விளக்கம் போதிக்கிறது என்று நாங்கள் அறிகிறோம். பிரமீடில் திரள் கூட்டம் காண்பிக்கப்படவில்லையா? அல்லது, இது அடையாளப்படுத்தும் அம்சத்தை கவனத்திற்கு கொண்டு வராமல் வெறுமனே நீங்கள் ஒதுக்கி விட்டீர்களா?

**பதில்.** மகிமை, கனம், அழியாமையைக் கொடுப்பதற்காக இந்த சுவிசேஷ யுகத்தில் சுமாராக பத்தொன்பது நூற்றாண்டுகளாக தேவன் சபையை அழைத்துக் கொண்டு இருக்கிறார். அடுத்த யுகத்தில், மேசியாவின் ராஜ்யத்தில், சீர்பொருந்துதலின் வழியை தேவன் திறந்து, விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ள மனுக்குலம் அனைத்திற்கும் பூமிக்குரிய பூரணத்துவத்தை திரும்ப அளிப்பார். தேவன் யாரையும் **திரள் கூட்ட வகுப்பார் ஆவதற்கு அழைக்கவில்லை.**

“அக்கினியிலகப்பட்டு தப்பினது போல” அவர்கள் இறுதியாக திரள் கூட்டத்தாராகிறவர்கள்; தாங்கள் எப்போதும் கூப்பிடப்படாத அல்லது **அழைக்கப்படாத** ஒன்றிற்கு வெகுமதியைப் பெறுகிறார்கள். நாம் படிக்கும் விதமாக, “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல” (எபேசி 4:4.), இந்த யுகத்தில் ஒரே ஒரு அழைப்பு தான் உள்ளது. அது இயேசுவின் பாதபடிகளில் நடந்து, **தன்னை பலி செலுத்துவதற்கான** அழைப்பு ஆகும். அந்த பலியின் உடன்படிக்கையை செய்தால் மட்டுமே, நம்மில் உள்ள எவரும் பரிசுத்த ஆவியினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள் அல்லது, ஜெநிப்பிக்கப்படுகிறார்கள் அல்லது தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று நாம் நம்மை அழைத்துக் கொள்ளுவதற்கு சலுகை பெற்றவர்களாகிறோம்.

இந்த விஷயங்களின் பார்வையில், திரள் கூட்டத்தார் அந்த இடத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் என்பது போல், பெரிய பிரமீடு திரள் கூட்டத்தாருக்காக இடம் எதையும் காண்பிக்கவில்லை என்பது மிகவும் சரியானதாகவே இருக்கிறது நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, கிறிஸ்துவின் பள்ளியில் சபையின் அனுபவங்களைக் குறிப்பதாக முன் அறை (ANTE-CHAMBER) உள்ளது. முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையால், ராஜாவின் அறையினால் (KING'S CHAMBER) அடையாளப்படுத்தப்படும் தெய்வீக பூரணத்துவத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, இந்த அனுபவங்கள் தேவையாக உள்ளன. ஆகவே, இந்த பள்ளி அல்லது முன் அறைக்குள் திரள் கூட்டத்தார் அனைவரும் வருகிறார்கள் என்பதை நாம் அனுமானிக்கிறோம். ஆனால், “மரணம் வரைக்கும் விசுவாசமாயிருப்பவர்” மட்டுமே இதைத் தாண்டி கருங்கல் இலையின் (GRANITE LEAF) கீழ் வந்து ராஜாவின் அறைக்குள் நுழைகின்றனர்.

## திரள் கூட்டம் - ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், லேவியர், பிராகாரம்.

**கே 310:1 :: கேள்வி (1912) - 1 -** நீதிமானாக்கப்படும் நிலைமையிலுள்ள பிராகாரத்திற்கு மாறாக, நிழலாக இருக்கும் லேவியர்கள் ....”ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகிய” திரள் கூட்டத்தாரைப் பற்றி தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** தற்காலத்தில் இன்னும் முழுமை பெறாத அல்லது பூரணமாகாத நிலைமையை ஆசரிப்புக்கூடாரத்தில் பிராகாரம் அடையாளப்படுத்துகிறது. நம்முடைய ஆவியின் அனுபவத்தில் இந்த விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாம் பாளயத்தைச் சேர்ந்தவர்கள் என்று நாம் அனுமானிக்கும் போது, அவ்விடத்திலிருந்து பின்னணியில் திரைச்சீலைகளுடன் கூடிய ஆசரிப்புக் கூடாரம் மற்றும் ஒவ்வொன்றைப் பற்றியும் வேதமாணவ வகுப்பாருக்கு நான் விவரிக்கத் தேவையில்லை. கடந்து செல்லும் விருப்பமுள்ளவர்களாய் இருக்கிறோம் என்று நீண்ட நாட்களுக்கு முன்பாகவே நமக்கு நாமே சொல்லிக் கொள்கிறோம். அவ்விடத்தில் விசேஷமான ஊழியம் செய்பவர்கள் இருக்கிறார்கள் என்று நாம் அறிந்து கொள்கிறோம். ஆசரிப்புக் கூடாரத்தின் தொடர்புடன், தேவனுடைய ஊழியக்காரரில் ஒருவராக இருக்க நீண்ட காலமாக ஆசைப்படுகிறோம். எனினும், நாம் பாவிகளாகையால் குறைபாடு உள்ளவர்கள் என்பதை உணருகிறோம். ஆனாலும் நாம் தேவனிடத்திற்குத் திரும்பி, ஆசரிப்புக் கூடாரத்தை நோக்கி நடக்கிறோம். நாம் ஆசரிப்புக் கூடாரத்தை நோக்கித் திரும்பிய அந்த கணத்திலிருந்து நம்முடைய நீதிமானாக்கப்படுதல் தன்னுடைய துவக்கத்தை உடையதாக இருக்கிறது என்று சொல்லலாம். “எது சரியானது” என்பதைத் தேடுவதற்காக நாம் கட்டளையிடப்படுகிறோம். தேவனை நோக்கும் இந்த மனப்பாங்கை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது உண்மையும் சரியானதுமாய் உள்ளது. ஆகவே, சரியான மார்க்கத்தில் அல்லது நீதிமானாக்கப்படும் மார்க்கத்தில் முன்னேறுகிறோம். தேவன் நம்மில் ஒவ்வொருவருக்கும் தூரமானவர் அல்ல என்று உலகத்தின் ஜனங்களில் பலர் கூறுகின்றனர். ஆனால், “தேவனைத் தடவியாகிலும்” ஒருவேளை அவரைக் கண்டுபிடிக்கத்தக்கதாக பலர் இருக்கிறார்கள் என்று ஆவியில் ஏவப்பட்டு ஆசிரியர் எழுதுகிறார். பாளயத்தை விட்டு ஆசரிப்புக் கூடாரத்திற்குள் வருகிறவர்கள், “தடவியாகிலும் தேவனைக் கண்டுபிடிக்க விரும்புகிறார்கள்” அவர்கள் ஆசரிப்புக் கூடார சுற்றடைப்பு மட்டும் வரும்போது, ஒரே ஒரு வாயில் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம்) மட்டும்

இருக்கிறதைக் காண்கிறார்கள். ஆசரிப்புக் கூடாரத்தை அடைவதற்கு இந்த ஒரே வழி மட்டும் தான் உள்ளது. அவர்கள் நுழைந்து, சுற்றடைப்பிலிருந்து வெகு தூரம் செல்வதற்குள், வெண்கல பலிபீடத்தை கண்டிப்பாகக் கடந்தாக வேண்டும். அந்த அளவுக்குப் பார்க்கும் நபர் இதற்கு முன்னால் இது பற்றி எப்போதும் இல்லாதவாறு அவர் பார்க்கிறார். ஆனால், அவரோ அல்லது அவளோ ஆசரிப்பு கூடாரத்திற்கு இன்னும் வரவில்லை. இதுவரைக்கும் வந்திருக்கும் அவர்கள், இன்னும் கொஞ்சம் தூரம் போக வேண்டும் என்பதைக் கண்டிப்பாக ஞாபகத்தில் கொள்ள வேண்டும். பாவத்திலிருந்து விடுபட ஒரு வழியை தேவன் கொடுத்திருக்கிறார் என்ற உண்மையை அவர்கள் அந்த பலிபீடத்தில் பார்க்கிறார்கள். இதை அடையாளம் கண்டு, அவர்கள் அங்கே நீண்ட காலத்திற்கோ அல்லது குறுகிய காலத்திற்கோ நிற்கிறார்கள். சிலர் அந்த இடத்தில் நின்றுவிடுவதில் மிகவும் சந்தோஷம் அடைந்து அங்கேயே திருப்தியுடன் உட்கார்ந்து விடுகிறது ஆபத்தானதாயிருக்கிறது. இரட்சிப்பிற்கான ஒரு ஏற்பாட்டை தேவன் ஏற்படுத்தியிருக்கிறதற்கு தேவனுக்கு நன்றி சொல்வது நல்லது தான். ஆனால், இன்னும் தூரமாக முன்னோக்கி அவசியம் செல்ல வேண்டும். இந்த பலிபீடத்தைப் பார்த்த பிறகு, அங்கே என்ன இருக்கிறது, அதன் பொருள் என்ன? தண்ணீர் தொட்டி இருக்கும் அவ்விடத்திற்கு செல்வது அடுத்த படியாகும். அவ்விடம் தண்ணீர் தொட்டி நோக்கிச் செல்லும் போது, அவர்கள் என்ன பார்க்கிறார்கள்? தண்ணீர். இது நிச்சயமாக சுத்திகரித்தலைக் குறிக்கிறது. ஓ! இந்த மாம்சத்தின் அசுத்தத்தைக் களைந்து, கிட்டத்தட்ட தேவனுடன் இருக்கும் வாய்ப்பிற்கு நம்மை தயார்ப்படுத்துகிறோம் அல்லது தயார்ப்படுத்துகிறதற்கு அனுமதிக்கப்படுகிறோம்! “நான் யாருக்கும் தீங்கிழைத்திருக்கிறேனா?” இது போன்ற கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொண்டு, நாமே பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்க வேண்டும். சுத்திகரிப்பிற்காக தண்ணீர் தொட்டியை அடைந்திருக் கிறவர்களுடைய மனப்பாங்கு இப்படித் தான் இருக்க வேண்டும். தண்ணீர் தொட்டியில் நாம் நம்மை சுத்திகரித்திருக்கலாம்; ஆனாலும், தேவனிடம் முழுமையாக இன்னும் வந்திருக்க முடியாது. நான் செய்ய வேண்டியது வேறு ஏதாவது இருக்கிறதா? தண்ணீர் தொட்டியை அடைந்திருப்பவர்களுடைய மனதில் சுழலும் அடுத்தக் கேள்வி இது தான். நாம் நமது வழியில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் வரையில் நீதிமானாக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே நாம் தரித்திருப்போம். முன்னேறிச் செல்லும் ஒவ்வொரு படியிலும், நாம் தேவனிடத்தில் அதிகம் நெருங்கியும், அதிகமாக நீதிமானாக்கப்பட்டும் இருக்கிறோம் என்று சொல்ல முடியும். இப்பொழுது நாம் ஆசரிப்பு கூடாரத்தின் வாசலுக்கு வந்திருக்கிறோம். உதாரணமாக, வெள்ளாட்டுக்கடாவினால் குறிக்கப்படும் பலிகளாக நாம் நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். “உங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுங்கள்” என்ற உத்தரவு இப்பொழுது நமக்கு வருகிறது. எப்பொழுது நாம் அதைச் செய்து முடிக்கிறோமோ, நமது வல்லமையில் நாம் செய்ய வேண்டிய ஒவ்வொன்றையும் செய்து முடித்திருக்கிறோம். இந்த அர்த்தத்தில் நம்முடைய சரீரங்களை பலிகளாக ஒப்படைத்த பிறகு, மேலும் அதிகமாக நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பது தான் இதன் பொருள் ஆகும். ஆனால், இந்த செயலினால் நாம் நீதிமானாக்கப்படுகிறதில்லை. நம்முடைய நீதிமானாக்கப்படுதல், செயல்களினால் இல்லை என்ற காரணத்தினால் நம்மைச் சார்ந்த எதுவும் நம்மை நீதிமானாக்க இயலாது. இதற்கு ஒரே வழி மட்டும் தான் உள்ளது. அதாவது, **வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற அவர் மூலமாகவே** அந்த வழி உள்ளது. நமக்கு பரிந்துபேசுகிறவராக அவர் இருக்க வேண்டும். நாம் ஆசரிப்புக் கூடார வாசலில் நம்மை ஒப்புக்கொடுத்து, “இதோ, கர்த்தாவே, நான் என்னை கொடுக்கிறேன்.” என்று சொல்லும்போது, தேவன் முன்பு செய்திருக்கும் கிருபையிலான ஏற்பாட்டினை செயற்படுத்தும் நேரம் இதுவாக இருக்கிறது. அங்கேயும், பிறகும், பிரதான ஆசாரியர் நமக்குப் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். கிறிஸ்து தம்முடைய மீட்பின் பலனை பிரயோகிக்கும் போது, பலி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அந்தக் கணமே நாம் நீதிமானாக்கப்படுகிறோம். பிறகு அதன் விளைவாக, பரலோக பிதா பரிசுத்த ஆவியின் மூலமாக நம்மை ஏற்றுக்கொள்கிறார். அந்த பரிசுத்த ஆவியினால் நாம் புதிய சிருஷ்டிகளாக ஜெனிப்பிக்கப்படுகிறோம். புதிய சிருஷ்டிகள் இப்பொழுது ஆசரிப்புக் கூடாரத்தில் இருக்கிறார்கள்; முதல் திரைச்சீலையின் கீழே கடந்து சென்றுள்ளார்கள். குத்து விளக்கின் வெளிச்சத்தையும், சமூகத்தப்பத்தையும், பொற்பீடத்தையும் அவர்கள் அனுபவிக்க வேண்டும். பிறகு, ஜீவன் முடிவுற்ற பிறகு, இரண்டாம் திரைச்சீலைக்கு அப்பால் - உயிர்த்தெழுதல் - கடந்து

செல்ல வேண்டும். திரைச்சீலையின் அந்தப் பக்கத்தில் பாதுகாப்பாக தரை இறங்க வேண்டும். இவை எல்லாம் தற்காலத்திய வாழ்க்கையில் உள்ளவையாகும். இயேசுவின் விலையேறப்பெற்ற பலியை விசுவாசித்து, அவருடைய பணியின் மேல் நம்பிக்கை வைத்து, தேவனிடத்தில் யார் நெருங்கி வருகிறார்களோ அவர்கள் நீதிமானாக்கப்படும் நிலையில் தற்காலிகமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கர்த்தரிடம் முழு அர்ப்பணிப்பு செய்திருந்தால் மட்டுமே நீதிமானாக்கப்படுகிறார்கள். அணுகுவதற்காக சலுகையைப் பெறுவதற்கு அவர்கள் நீதிமான் களாகிறார்கள். ஆனால் அவர்கள் ஆசாரியர்கள் ஆவதற்கான சலுகையைப் பெறவில்லை. இன்னும் முன்னேறி மேலே சென்றால் ஒழிய, தேவனுடைய முழுமையான தயவிற்குள் அவர்கள் வர இயலாது. ஒருவர் தண்ணீர் தொட்டி வரை சென்று, பிறகு தான் அதிவேகமாக முன்னேறிச் செல்கிறேன் என்று நினைக்கத் துவங்கி, விஷயங்களை தாமதப்படுத்தி, இந்த அதிவேக முன்னேற்றத்தைத் தானே நிறுத்தி, ஆசாரியத்துவதற்குள் செல்லுவதற்கு முன்பு, கொஞ்ச காலத்திற்கு அங்கேயே தரித்திருக்க விரும்பி, இன்னும் வாதம் செய்து கொண்டு நின்றிருந்தால், அவருடைய நீதிமானாக்கப்படுதல் எப்போதும் நிறைவு பெறுவதில்லை. அவருடைய நீதிமானாக்கப்படுதல் முழுவதுமாக முடிவடையவில்லை. ஏனெனில், அந்த நீதிமானாக்கப்படுதல் ஆற்றல் உண்டாக்கப்படுவதற்கான இறுதி படியை அவர் எடுக்கவில்லை. அது தான் **முழுமையான அர்ப்பணிப்பின்** படி ஆகும். அந்த பாதையில் செல்வதற்கான எந்த அறிகுறியும் இல்லாமல், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இவ்விதமாக அலைந்து திரிந்த பிறகு, சிலர் தயக்கமுற்று பாதையிலிருந்து விலகிப் போகிறார்கள். ஒருவேளை பிராகாரத்தை விட்டு ஒட்டுமொத்தமாக வெளியே போகிறார்கள். பிராகாரத்தின் உபயோகம் இதனால் அடையாளப் படுத்தப்படுகிறது. இந்த யுகம் முடிவடையும் போது அந்த சமயத்தில் பரிசுத்தவான்கள் எண்ணிக்கை முடிவடையும் போது, இந்த யுகத்தில் உண்மையாக தேவனிடத்தில் அணுகி, அந்த பாதை முழுதும் பயணித்து வந்து சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். மீதமுள்ளவர்கள் இந்த முறையில் நீதிமான்களாக்கப்படுவதில்லை. ஆனால், அடுத்த யுகத்திற்கான ஆசீர்வாதங் களுக்காக காத்திருக்கும் மீதமுள்ள உலகத்தாருடன் இருப்பார்கள். சொல்லப்போனால் பிராகாரம் வெறுமையாக இருக்கும். மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் முழுவதுமாக நுழைந்தவர்கள், பிறகு கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருப்பார்கள். அந்த சமயத்தின் முடிவில், தகுதி யுள்ளவர்களாகக் காணப்பட்டவர்களுக்கும், தகுதியில்லாதவர்களாகக் காணப்பட்டவர்களுக்கும் இடையே ஒரு வித்தியாசம் உண்டாக்கப்படுகிறது. தகுதியுள்ளவர்களாகக் காணப்பட்டவர்கள் கர்த்தருடன் எப்போதும் இருப்பதற்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார்கள். ஆனால் தகுதியுள்ளவர்களாகக் காணப்படாத மற்றவர்கள் அதிலிருந்து தவிர்க்கப்பட்டு, இரண்டாம் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். நீதிமானாக்கப்படும் நிலை அவர்களுக்கு இன்னும் உள்ளது. அர்ப்பணிப்பின் முதல் திரைச்சீலையை அவர்கள் கடந்த அந்தக் கணமே, அவர்களுக்காக இயேசு கிறிஸ்து உத்திரவாதம் கொடுத்த அந்தக் கணமே, நீதிமானக்கப்படும் நிலையை அவர்கள் பெற்றார்கள். அவர்கள் எல்லோரும் லேவியரே. அவர்களுடைய ஸ்தானங்கள் அந்த இரண்டு வகுப்பார்களின் மனப்பாங்கை அடையாளப்படுத்துகின்றன. லேவி வகுப்பார் அனைவரும் பிராகார நிலையைக் குறிக்கிறார்கள். ஆசாரிய வகுப்பார் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையைச் சார்ந்தவர்கள்.

## திரள் கூட்டம் - பரிசுத்த ஸ்தலத்திலா அல்லது பிராகாரத்திலா?

**கே** 312:1 :: **கேள்வி** **(1912) - 1 -** இந்த சுவிசேஷ யுகத்தில் ஆசாரியராக பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்த ஒருவர், திரள் கூட்டத்தாருக்குள்ளாகவோ அல்லது பிராகார நிலையிலோ கீழே தள்ளப்பட முடியுமா?

**பதில்.** இது ஒரு தவறான புரிந்து கொள்ளுதல் ஆகும். திரள் கூட்டத்தார் பிராகாரத்திலுள்ளவர்கள் அல்ல. **தற்காலிகமாக நீதிமான்களாக்கப்பட்ட நிலையிலுள்ளவர்கள் மட்டுமே இப்பொழுது பிராகாரத்தில் இருப்பவர்கள். திரள் கூட்டத்தார் பிராகாரத்தில் இருக்கிறவர்கள் அல்ல. இந்த யுகத்தின் முடிவில், தற்காலிக நீதிமான்களாக்கப்படுதல் இனி மேல் இராது**. உண்மையில் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் தவிர பிராகார நிலையில் யாரும்

இருக்க மாட்டார்கள். இந்த யுகத்தின் முடிவில், திரள் கூட்டத்தார் ஆசாரிய ஊழியத்தின் மகிமையிலிருந்து தவிர்க்கப்பட்டால், பிறகு, அடுத்த யுகத்தில் லேவியரைப் போல, பிராகாரத்தில் ஊழியம் செய்வது அவர்களுக்கு உரியது ஆகும். ஆனால், இந்த யுகத்தில், இப்பொழுது தற்காலிகமாக நீதிமான்களாக்கப்பட்டவர்கள் மட்டுமே பிராகாரத்தில் இருக்கிறார்கள்.

## திரள் கூட்டம் - பரிசுத்த ஸ்தலம்.

**கே** 312:2 :: **கேள்வி** (1912) - 2 - ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தினால் குறிக்கப்படும் நிலையில் எப்பொழுதும் இருந்திராதவர்கள், திரள் கூட்ட வகுப்பாரைச் சேர்ந்தவர்களாக யாரேனும் இருக்க முடியுமா?

**பதில்.** இல்லை. ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசித்திராவிட்டால், அவர்கள் திரள் கூட்ட வகுப்பாராக இருக்க முடியாது. அர்ப்பணிப்பு செய்கிறவர்களாகவும், அந்த அர்ப்பணிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளாகவும் இருந்தால், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக தற்காலிகமாக எண்ணப்படுவார்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்த பிறகு, கிறிஸ்துவின் ஆவியைப் பெறத் தவறி விட்டால், அவருடைய ஆவியினால் பயிற்றுவிக்கப்படத் தவறினால், கிறிஸ்துவின் சரீரத்தில் தங்களுடைய ஸ்தானத்தை அவர்கள் தக்க வைத்திருக்கவில்லை என்பதை முடிவு காண்பிக்கும். ஆனால் அந்த விஷயத்தை இப்பொழுது முடிவு செய்ய யாருக்கும் அதிகாரம் இல்லை. உயிர்த்தெழுதல் எஜமானரின் முடிவை வெளிப்படுத்தும்.

## திரள் கூட்டம் - நாம் அதில் இருக்கிறோம் என்று பயப்படுகிறோமா?

**கே** 312:3 :: **கேள்வி** (1913) - 3 - பயம் என்பது எதிராளியைச் சார்ந்தது என்று நாம் உணரும் நிலையில், நம்முடைய சொந்த இருதயங்களில், நாம் தவறியதால் திரள் கூட்டத்திற்குள் இருக்கிறோம் அல்லது அறுவடையின் இந்த இறுதி காலக்கட்டத்தில் நம்முடைய அழைப்பையும் தேர்ந்தெடுக்கப்படுதலையும் நிச்சயப்படுத்துகிறோம் என்று நம்முடைய சொந்த இருதயங்களில் ஒரு நிச்சயமான அறிகுறி நமக்கு வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா?

**பதில்.** என்னுடையதைப் போலவே உங்களுடைய தலை வெறுமையும் குறைபாடுள்ள தாகவும் இருக்கிறது என்பதே என் கருத்து ஆகும். நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்று அறிந்து கொள்வதற்கு போதுமான அளவில் உங்களுடைய எல்லா எண்ணங்களிலும் வித்தைக் காட்டுவது இயலாது. இவ்விதமாக மயிரளவு நுண்ணியமாக உங்கள் முயற்சியை மேற்கொள்ளுவீர் களானால், இப்படிச் சொல்வது தான் சிறந்ததாகும்: “விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் நான் அறிவேன்; இந்த விதிமுறைகளுக்கு ஏற்றவாறு, என் திறனுக்கு முடிந்த வகையில் நான் வாழ்கின்றேனா? என் அர்ப்பணிப்பின் பொருத்தனையை நிறைவேற்றுவதில் என்னால் முடிந்த அளவிற்கு நான் செய்து கொண்டு இருக்கிறேன்.” என்று நீங்கள் உங்களுக்குள்ளே சொல்ல முடிந்தால், மேலும் உங்களுக்கு எதுவும் அதிகமாக செய்ய முடியவில்லை என்பதால், முடிந்த அளவுக்கு செய்து அப்படியே தொடருங்கள். உங்களுக்குள் நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள், “உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.” நீங்கள் உங்கள் பங்கை செய்தால், கர்த்தர் தம்முடைய பங்கை செய்வார். இதனுடைய முடிவு இதுவே. இதற்கு மேல் விவாதிப்பதில் பலன் இல்லை. நீங்கள் திரள் கூட்ட வகுப்பாரில் இருந்தால், இதைக் குறித்து ஒருவேளை உணர்ந்திருக்கமாட்டீர்கள். இதை நான் எளிதாக சொல்லுகிறேன், “கர்த்தரிடத்தில் நீங்கள் அர்ப்பணிப்பு செய்தீர்களா? ஆம். உங்களால் முடிந்த அளவு சிறப்பாக செய்கிறீர்களா? ஆம், இதற்கு மேலாக இன்னும் சிறப்பாக செய்ய முடியும் என்று நினைக் கிறீர்களா? ஆம், நல்லது, முயற்சி செய்து, சிறிது நன்றாக செய்யுங்கள்.

## திரள் கூட்டம் - அவர்களின் வளர்ச்சி.

**கே 313:1 :: கேள்வி (1913) - 1 -** சுவிசேஷ யுகம் முழுவதிலும் திரள் கூட்டத்தார் வளர்ச்சி பெற்று வருகிறார்களா? அல்லது உபத்திரவ காலம் வழியாக அவர்கள் வெளியில் வருவார்களா?

**பதில்.** இதைப் பற்றி வேதாகம பாடங்களில் ஏற்கனவே நாங்கள் பதிலளித்திருக்கிறோம். மறுபடியும் படித்தால் ஒருவேளை நல்ல வெளிச்சத்தைத் தரும். திரள் கூட்டத்தார் யார் என்பது உங்களுக்கோ அல்லது எனக்கோ அல்லது வேறு எந்த நபருக்கோ தெரியாது. உவமையில் குறிக்கப்பட்டபடி, கர்த்தர் தீர்மானம் செய்யும் வரையில், இப்படிப்பட்ட வகுப்பார் யாரும் இல்லை. அவருடைய ஊழியக்காரர்களுக்கு குறிப்பிட்ட தாலந்துகளைக் கொடுத்திருக்கிறதாக அவர் குறிக்கிறார். அவர் திரும்பி வருகையில், அவருடைய ஊழியக்காரர்களுடன் வரவு செலவு கணக்கை சரி பார்க்கிறார். அதாவது, சபையாரிடம் இதைச் செய்வதாக பொருள்படும். சிலர் ஒரு வகுப்பாரில் இருப்பார்கள். மற்றவர்கள் வேறு வகுப்பாரில் இருப்பார்கள். இந்த வகைப்படுத்துதல், உயிரோடிருப்பவர்களைப் போலவே மரித்தவர்களையும் பாதிக்கிறது. தேவனுடைய கிருபையினால், சுவிசேஷ யுகத்தில் சிலர் உபத்திரவத்தை அனுபவிக்கிறவர்களாயிருப்பார்கள். இவர்கள் இரண்டாம் வகுப்பாரைச் சேர்ந்தவர்கள். சிறுமந்தையைச் சேர்ந்தவர்களாக யார் இருப்பார்கள் என்பதை நான் தீர்மானிக்க முடியாது.

## திரள் கூட்டம் - 1914

**கே 313:2 :: கேள்வி (1913) - 2 -** 1914ம் வருஷத்தை தாண்டியுள்ளவர்கள் திரள் கூட்ட வகுப்பாருக்குள் செல்வார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்.** எனக்கு தெரியாது. என்னுடைய எண்ணம் அல்லது அனுமானம் எதற்கும் மதிப்பு கிடையாது. குறைவாக அனுமானித்தால், நாம் நன்றாக செயல்படுகிறோம் என்று நான் நினைக்கிறேன். 1914ம் வருஷத்தைப் பொருத்த வரையில், அது மிகவும் முக்கியமான வருஷம் என்று நம்புவதற்கு நமக்கு சில காரணங்கள் உள்ளன. இந்த விஷயத்தில் நம்முடைய பார்வை பிழையற்றது என்று சுட்டிக்காட்டும் விதமாக நாம் எப்பொழுதும் தெளிவுறுத்தவில்லை. புறஜாதியாரின் காலங்கள் அக்டோபர் 1914ல் முடிவுறும் என்று நான் திட்டமாக அறியவில்லை. வேறு எந்த குறிப்பிட்ட நேரத்திலும் அறியவில்லை. புற ஜாதியாரின் காலங்கள் அக்டோபர் 1914ல் முடிவடையும் என்று நம்புவதற்கு வலுவான காரணம் உண்டு என்று நாங்கள் நினைக்கிறோம். எங்களுடைய அபிப்பிராயமாக இதை உங்களுக்கு கொடுக்கிறோம். அதற்கான வேதாகம காரணத்தை உங்கள் முன்பாக வைக்கிறோம். சிலர் நம்பலாம்; சிலர் நம்புவதில்லை; இது தான் எங்கள் கருத்து. இது சரியாக இருந்தால், அந்த நேரத்திலோ அல்லது அதன் பிறகு சிறிது காலத்திலோ, இந்த உலகத்தின் மேல் மகா உபத்திரவ காலம் வரும். சொல்லர்த்தமான அக்கினி எரிவது அல்ல, ஆனால், அடையாளமான அக்கினியில், பயங்கரமான அனுபவங்களை இந்த உலகம் கடந்து வரும். இவற்றின் மத்தியில் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

## திரள் கூட்டம் - பாவத்திற்கு நிவிர்த்தி செய்வது.

**கே 313:3 :: கேள்வி (1913)** திரள் கூட்டத்தார் கல்லறையிலிருந்து எழுந்து வருவதற்காக, நியாயத்தைப் பொருத்த வரையில் சபைக்கு விரோதமாக வேண்டுமென்றே ஓரளவு இழைக்கப்பட்ட பாவங்களுக்கு திரள் கூட்டத்தார் நிவிர்த்தி செய்கிறார்கள் என்பது உங்கள் கருத்து ஆகுமா?

**பதில்.** நான் அந்த வடிவில் இதை வைக்க மாட்டேன். இதை காவற் கோபுரம் அல்லது டாண் புத்தகங்களில் இருக்கும் வடிவிலேயே வைப்பேன்.; இது தான் நல்லது என்று நான் நினைக்கிறேன். இந்த சகோதரன் சொல்வது சரியே. ஆனால், அவர் இந்த விதத்தில் சொல்வதை நான் விரும்பவில்லை. காவற் கோபுர பத்திரிகையில் என்ன இருக்கிறதோ, அதை நீங்கள் மறுபடியும் படித்தால், அதைத் தான் நான் விரும்புகிறேன். இந்த கொள்கை சம்பந்தமான பெரும்பாலான கேள்விகள் மேல், காவற் கோபுரத்தில் என்ன உள்ளதோ, அதையல்லாமல்,

மாநாடுகளிலோ அல்லது வேறு ஏதாவது தனிப்பட்ட கடிதங்களிலோ சொல்வதை நான் விரும்புகிறதில்லை. ஏனெனில், சில அருமையான நண்பர்கள் இதைச் சொல்ல முற்படுவதை நான் பார்க்கிறேன்: ஓ! நல்லது, சகோ. ரசல் இதைத் தான் வழக்கமாக நம்புவார்; இது தான் **டாண் புத்தகங்களிலும், காவற் கோபுரத்திலும்** உள்ளது; நான் அறிவேன், ஆனால், அதன் பிறகு அவர் தன் மனதை மாற்றிக்கொண்டிருக்கிறார். அவர் எனக்கு ஒரு விசேஷமான கடிதம் எழுதினார். ஆனால், இந்த வருஷம் இதைப் பற்றி இவ்வாறு மாநாட்டில் பேசுவதைக் கேட்டேன். சகோ. ரசல் தன் மனதை மாற்றிக் கொண்டது பற்றி பிரயாண ஊழியர் கூட சொல்லிக் கொண்டிருப்பதை நான் புரிந்து கொள்ளுகிறேன்.

நான் சொல்ல விரும்புவது: சகோ. ரசல் தன் மனதை மாற்றி கொள்ளும் போது, அவர் அதை **காவற் கோபுரத்தில்** பதிவு பண்ணி விடுவார். நீங்கள் எல்லோரும் இதை அறிய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நீங்கள் அதை **காவற் கோபுரத்திலிருந்து** வெறுமனே எடுத்துக் கொள்ளலாம். நான் அதில் எந்த அளவுக்கு எளிதாக இருக்க வேண்டுமோ அதைச் செய்வேன். நான் அதில் போதுமான அளவுக்கு எளிதாகப் புரியும்படி செய்ய முடியாவிட்டால், நான் இங்கும் அப்படிச் செய்ய முடியாது என்று அச்சம் அடைகிறேன்.

## திரள் கூட்டம் - அவர்கள் முறுரூபமாகுதல்.

**கே** 314:1 :: **கேள்வி** (1913) - 1 - தற்காலத்தில் மரணமடைந்த அந்தக் கணமே, திரள் கூட்ட வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் மறுரூபமாகிறார்களா?

**பதில்.** திரள் கூட்ட வகுப்பார் தாங்கள் மரணமடைந்த அந்தக் கணமே மறுரூபமடைகிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோமா? நான் நினைக்கவில்லை. நான் புரிந்து கொண்டபடி, நாம் படிக்கும் விதமாக, சிறுமந்தை வகுப்பார் முதலாம் உயிர்த்தெழுதலைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள்; முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிற எல்லோரும் ஆசீர்வதிக்கப் பட்டவர்களும், பரிசுத்தமானவர்களுமாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுடன் ஆயிரம் வருஷங்கள் அரசாளுவார்கள். இது தான் முதலாம் உயிர்த்தெழுதல். சபை வகுப்பாராகிய சிறுமந்தையினர் எல்லோரும் திரைக்கு அப்பால் முழுமை பெறும் வரைக்கும், திரள் கூட்ட வகுப்பார் மறுரூபம் அடையமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

## திரள் கூட்டம் - - அவர்கள் மறுரூபமாகுதல்.

**கே** 314:2 :: **கேள்வி** (1913) - 2 - திரள் கூட்டத்தார் எந்த நேரத்தில் மகிமைப்படுவார்கள்?

**பதில்.** சிறுமந்தை மகிமை அடைந்த சிறிது காலத்திற்குப் பிறகு நடக்கும் என்று நான் நினைக்கிறேன். மகா உபத்திரவ காலம் இந்த உலகத்தின் மீது பொதுவாக வரும் பொழுது, இதில் முதலாவது பங்கு பெறுகிறவர்கள் திரள் கூட்ட வகுப்பார் ஆவார்கள். எல்லோரும் நிறைவேற்றி முடித்த பிறகு, அவர்கள் மகிமை அடைந்து, 45ம் சங்கீதத்தில் விவரிக்கப்பட்டபடி, மகா ராஜாவினிடத்திற்கு அழைத்துக் கொண்டுவரப்படுவார்கள்.

## திரள் கூட்டம் - - திரைக்கு இந்த பக்கம்.

**கே** 314:3 :: (1913) - 3 - திரள் கூட்ட வகுப்பாரில் யாரேனும் திரைக்கு இந்தப் பக்கத்தில் இருக்கிறார்களா? சிறுமந்தைக்கும் திரள் கூட்டத்திற்கும் இடையில் திரைக்கு இந்தப் பக்கத்தில் பிரிவு ஏதும் உள்ளதா?

**பதில்**. தற்காலத்தில் இரண்டு வகுப்பார்கள் இல்லை என்றும், அதில் பிரிவு ஏதும் இல்லை என்றும் நேற்று மாலையில் நாம் சொல்ல முயற்சித்தோம். இவர் திரள் கூட்டத்தைச் சார்ந்தவர் என்றும், அவர் சிறுமந்தையைச் சார்ந்தவர் என்றும், நீங்களோ அல்லது நானோ அல்லது

தேவனுடைய ஜனங்களில் மற்றவர்களில் யாரேனும் சொல்ல முயற்சிப்பது மிகவும் தவறானதாகும். கர்த்தர் ஒருவரைத் தவிர, வேறு யாரும் தீர்மானிக்கிறதில்லை. ஆகவே, இது வெளிப்படையாக முடிவுக்கு வந்துள்ள விஷயம் ஆகும். ஆகவே, சபையில் இரண்டு வகுப்பார்களைப் பற்றி பேசுவது மிகவும் தவறு என்று நாங்கள் நினைக்கிறோம். "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்." எல்லோரும் ஒரே நாமத்தின் கீழ் வருகிறோம். உங்களின் அழைப்பையும், தேர்ந்தெடுக்கப்படுதலையும் நிச்சயப்படுத்துவதற்கு நாடுங்கள். இந்த பந்தயத்தில் எந்த அளவுக்கு நன்றாக ஓடுகின்றீர்கள் என்பது எந்த மனுஷனும் அறிந்து கொள்ளவோ அல்லது சொல்லவோ முடியாது. நீங்கள் எந்த அளவிற்கு உண்மையாக இருக்கிறீர்கள் என்பதை நீங்களும் தேவனும் மட்டுமே அறிகிறீர்கள். நாம் எந்த அளவுக்கு செயல்படுகிறோம் என்பதில் நாம் முழுநம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கிறார். "நான் உங்களாலேயாவது, மனுஷருடைய நியாயநாளின் விசாரணை யினாலேயாவது தீர்ப்பைப்பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது.; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை" என்று அவர் கூறுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஆம், நான் என்னைத் தானே தீர்ப்புச் செய்கிறதில்லை. நீ சிறுமந்தையைச் சேர்ந்தவனில்லை, அல்லது நீ கண்டிப்பாக சிறுமந்தையைச் சேர்ந்தவன் என்று நான் எனக்குத் தானே தவறான தீர்ப்பைச் செலுத்தக்கூடியவனாகலாம்; ஆகவே, நாம் ஒருவரை மற்றவர் தீர்ப்புச் செய்வதோ அல்லது நம்மை நாமே தீர்ப்புச் செய்து கொள்வதோ அற்பமான காரியமாயிருக்கிறது. தேவன் ஒருவரே தீர்ப்புச் செய்கிறவர். அவர் இந்த விஷயம் குறித்துத் தீர்மானிப்பார். வேறு யாரும் இதைச் செய்வதற்கு அதிகாரம் இல்லை. இது போன்ற தீர்ப்புச் செய்வதை நாம் தவிர்ப்பதே நல்லது. ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்; ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துங்கள்; விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் சுட்டிக்காட்டுங்கள்; ஆனால் ஒருவரை மற்றவர் தீர்ப்புச் செய்யாதிருங்கள்.

## திரள் கூட்டம் - - சர்வ சங்கத்தில் இதன் பங்கு என்ன?

**கே 315:1 :: கேள்வி (1913) - 1 -** "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கு" - இந்த வசனப் பகுதியில் உள்ள "சபை", திரள் கூட்டத்தாரை உள்ளடக்கியதா? இந்த வசனம் எந்த சமயத்திற்கு உரியதாகக் கொள்ளலாம்?

**பதில்.** நமது சபை கூடுதலில் இந்த கேள்வியை நாம் ஏற்கனவே பெற்றிருக்கிறோம். நாம் அப்போது காண்பித்த விதமாக, அது திரள் கூட்டத்தை உள்ளடக்கியதும், தற்காலத்திற்கு உரியதும் ஆகும், அதாவது, சபை கூட்டிச் சேர்க்கப்படுவதைப் பற்றி அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த மாநாடு இரண்டு நாட்களுக்கு இப்பொழுது நடந்து கொண்டிருப்பதைப் போல, அது சர்வ சங்கம், நாம் நம்புகிறபடி இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது; சிலர் சனிக்கிழமை காலையில் வந்தார்கள், சிலர் மாலையில் வந்தார்கள். சிலர் இப்பொழுது தான் வந்திருக்கிறார்கள். சிலர் தங்கள் பயணப் பெட்டிகளுடன் இப்பொழுது வந்து கொண்டிருப்பதை நான் பார்த்தேன். ஆகவே, இங்கு ஒரு கூடுகை உள்ளது. இங்கு படிப்படியாக ஒன்றாக கூட்டிச் சேர்க்கப்படுகின்றனர். அவ்விதமாகவே, முதற்பேறானவர்களின் சபையை முதலாம் உயிர்த்தெழுதலில் தேவன் சேர்த்துக்கொண்டு இருக்கிறார். 1800 வருஷங்களுக்கு முன்னதாக, சபையின் முதற்பேறானவரான தலையாகிய கிறிஸ்து மகிமைக்குள் சென்றார். ஆனால், அவருடைய சரீரமாகிய சபை சேர்க்கப்படுவது, நாம் புரிந்து கொண்டபடி இந்த அறுவடை காலத்தில் நடக்கின்றது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவதாக மறுரூபமாவார்கள். பிறகு, உயிரோடிருக்கிற நாமும், மற்றும் மீதமுள்ளவர்கள் படிப்படியாக மறுரூபமாவார்கள். சபை முழுவதும் மறுரூபமாகும் அனுபவம் முடிவடையும் வரையில் அவனவன் தன் தன் முறைமையின்படியே மறுரூபமாவான். முதற்பேறானவர்களின் சபை கூட்டிச்சேர்க்கப்படுவதற்கான இதே நடைமுறை தான் திரள் கூட்டத்தாருக்கும் உள்ளது. பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறான வர்களின் சர்வ சங்கமாகிய சபையோடு கூட, கூட்டிச் சேர்க்கப்படுகிறவர்களின் பகுதியாக அவர்கள் எல்லோரும் வருவார்கள். அவர்களுடைய பெயர்கள் எல்லாம் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. ஏனெனில் யாருடைய பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறதோ,

அவர்கள் விசேஷித்த வகுப்பாராகிய மணவாட்டி வகுப்பார். அவர்கள் தங்கள் அர்ப்பணிப்பை முதலாவதாக செய்த நேரத்திலிருந்தே அவர்களுடைய பெயர்கள் எழுதப்படுகின்றன. அவர்கள் கிறிஸ்துவுக்கும் அவருடைய ஏற்பாடுகளுக்கும் எதிராக திரும்பாத வரையிலும், அவர்கள் துரோகிகளாக நிரூபிக்கப்படாத வரையிலும், அவர்களுடைய பெயர்களை அவர் நீக்கிப் போட மாட்டார் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆகவே, கர்த்தர் மிகவும் அன்புடன் நடத்துகிறார் என்பதையும், சிலரை மகா உபத்திரவம் மூலமாகவும் கொண்டு வரவும் செய்கிறார் என்று நாம் பார்க்கிறோம்.

## திரள் கூட்டம் - யுகங்களின் வரைபடம் மற்றும் ஆசரிப்பு கூடாரம்.

**கே** 315:2 :: **கேள்வி** (1913) - 2 - வரைபடத்தில் திரள் கூட்டத்தார் ஆவியில் ஜெநிப்பிக்கப் படுதலின் M தளத்திற்கு மேலாகக் குறிக்கப்படுகிறார்கள். ஆனாலும், அவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலுக்கு கீழாக, பிராகார நிலையில் இருப்பார்கள் என்று ஆசரிப்பு கூடார நிழலில் முடிவான வரைபடத்தில் நமக்கு கூறப்படுகிறது...... இதை இணக்கமாக தயவு செய்து தெரிவிக்கவும்.

**பதில்.** மேலான அழைப்பை அடைவதற்காக மேல்நோக்கியவாறு உள்ள சபையின் முன்னேற்றத்தை வரைபடம் நமக்கு விளக்குகிறது. பிறகு, வரைபடத்தின் இறுதியில் பெரிய பிரமீடில், ஒன்றுடன் மற்றதற்கான இவைகளின் பல்வேறு தொடர்புகள் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவருடைய மனதிற்கு ஏற்றவாறு, நாம் இதை இணக்கமாக்க முடியும் என்று நாம் சொல்ல முடியாது. உங்களால் இதில் முடிந்த அளவுக்கு எடுத்துக் கொண்டு, மற்றதை விட்டு விடுங்கள்; சிலர் அர்ப்பணிப்பிலிருந்து அதிக அளவு சத்தை மற்றவர்களைக் காட்டிலும் பெற்றுக்கொள்ள முடியும். அப்பத்தை சாப்பிடுவதில் சிறிதளவே சத்தைப் பெறுபவரைத் தடங்கல் செய்யக்கூடாது. அவருக்கு அது தேவைப்பட்டால் அதிகம் சாப்பிடுவார்.

## திரள் கூட்டம் - புரிந்துள்ளவற்றை உபதேசித்தல்.

**கே** 315:3 :: **கேள்வி** (1915) - 3 - வெளி.7:9-17ம் வசனங்கள், திரள் கூட்ட வகுப்பாரைக் காட்டிலும், மனுக்குலத்தில் காப்பாற்றப்பட்ட உலகத்தாரைக் குறிப்பதாகக் கொள்ளலாமா? ஆவியின் தளத்தில் திரள் கூட்டத்தார் இருப்பார்கள் என்றும், மேலான அழைப்பையும் அதற்கான அர்ப்பணிப்பையும் முழுவதுமாக மதிப்பீடு செய்வதில் பின்தங்கியவர்களாயிருந்தாலும், அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற உபதேசத்தில் தீவிரமான ஆபத்து இருக்கிறதல்லவா?

**பதில்.** ஒரு விஷயத்தை உண்மையெனப் பார்க்காமல் உபதேசிப்பது எந்த மனுஷருக்கும் மிகவும் ஆபத்தான ஒன்றாகும். இந்த கேள்வி கேட்டவர் பாடத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகவே, இது பதிலை குறுகியதாக்குகிறது. பாடத்தை விட்டு விட்டால், கர்த்தர் செய்வது போல, நாம் அதைச் சரியாகக் கொண்டிருப்பதாகிறது. "சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக." நாங்கள் அறிகிறதையே, நாங்கள் பேசுகிறோம். இந்த சலுகையைத் தான் நாங்கள் சாகும் வரையில் பெற்றிருக்க விரும்புகிறோம். அப்படி இல்லையா?

## திரள் கூட்டம் - - அவர்களின் மறுரூபமாகுதல்.

**கே** 316:1 :: **கேள்வி** (1915) - 1 - இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக, திரள் கூட்டத்தார் வீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்களா?

**பதில்.** நான் அப்படி நினைக்கவில்லை. திரள் கூட்டம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று நான் நினைக்கிறேன். இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, மகா உபத்திரவம் இருக்கிறதற்குப் பிறகு, அராஜகக் காலக்கட்டத்தில்

திரள் கூட்டத்தார் தங்கள் அங்கிகளைத் தோய்த்து, தங்களின் பாதையை முடித்துக் கொண்டு, பிறகு கலியாண விருந்தில் இருப்பார்கள். அவர்கள் மணவாட்டியின் ஒரு பகுதியாக இருப்பதில்லை. ஆனாலும், அந்த விசேஷித்த விருந்தில் இருப்பதற்கான கௌரவத்தை உடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் மணவாட்டியுடன் கூட இருந்து, அவளுடைய கௌரவமான ஊழியக்காரர்களாக, சொல்லப்போனால், அவளுடைய மணவாட்டி தோழிகளாக இருப்பார்கள்.

## திரள் கூட்டம் - - அவர்களின் தெய்வீக சுபாவம்.

**கே 316:2 :: கேள்வி (1916) - 2 -** திரள் கூட்டத்தார் தெய்வீக சுபாவத்தைப் பெறமாட்டார்கள் என்று நிரூபிக்க வேதாகம வசனங்கள் ஏதேனும் உண்டா?

**பதில்**. திரள் கூட்டத்தார் தெய்வீக சுபாவத்தைப் பெறுவார்கள் என்று நிரூபிக்க வேதாகம வசனங்கள் ஒன்றுமில்லை. அவர்கள் தெய்வீக சுபாவத்தைப் பெறமாட்டார்கள் என்று நிரூபிப்பதற்கு பல வேதாகம வசனங்கள் உள்ளன. ஏனெனில், ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மேலாக இருப்பவர்களுக்கு மட்டுமே தெய்வீக சுபாவம் அளிக்கப்படும் என்று வேதாகமம் கூறுகிறது. திரள் கூட்டத்தார் இறுதியாக ஜெயங்கொள்ளுகிறவர்களாகிறார்கள். ஆனால், சிறு மந்தை வகுப்பார் ஜெயங்கொள்ளுகிறவர்களை விட மேலானவர்களாக, ஆட்டுக்குட்டியானவரை முழுவதுமாகப் பின்பற்றி, பெரும் வெற்றி பெறுகிறவர்களை உள்ளடக்கியவர்களாய் இருப்பவர்கள். இயேசு தம்முடைய சரீரத்தை தாமாகவே முன் வந்து ஜீவ பலியாக அளித்தார். மனமார்ந்த பலிகளாக சிறுமந்தை இருக்கிறது. ஆனால் திரள் கூட்டத்தார் மனமார்ந்த பலிகளாக இருப்பதில்லை. ஆகவே, அவர்கள் தங்களுடைய மாமிச அழிவிற்காக உபத்திரவமாகிய வனாந்தரத்திற்குள் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

பலியிடுகிற ஆசாரியராகிய கர்த்தர் இயேசுவுடன் மனப்பூர்வமாகவும், மகிழ்ச்சியாகவும் ஒத்துழைக்கக்கூடிய பலியிடுகிறவர்கள் மட்டுமே, மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களாகிறார்கள். இவர்கள் மகிமை, கனம், அழியாமை - தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுகிறவர்களாகிறார்கள். முதலில் பிதா மட்டுமே அழியாமை உடையவராய் இருந்தார். பிறகு, குமாரன் தம்முடைய உண்மையினால் வெகுமதியாக அழியாமையைப் பெற்றார். பிறகு மணவாட்டி வகுப்பார் அவருடைய சிங்காசனத்தில் அவருடனே உட்கார்ந்து, அவருடைய மகிமையில் பங்கு பெறுகிறார்கள். அப்போஸ்தலர் பேதுரு கூறுகிறார், "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர் களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே (நம்முடைய மனங்களிலும் இருதயங்களிலும் செயல்படுகிறதினால்) நமக்கு அருளப் பட்டிருக்கிறது. அவர் சிறுமந்தை வகுப்பாரிடம் பேசுகிறார், திரள் கூட்டத்தாரிடம் அல்ல. ஏன் இல்லை? ஏனெனில் கர்த்தருடைய வார்த்தை திரள் கூட்டத்தாருக்கு அல்ல. அவர்கள் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் முன்னேறிச் செல்ல மறுக்கிறார்கள். ஆகவே, கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு அனுப்பப்படவில்லை. அவர்கள் உள்ளே தள்ளப்பட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் காண்கிறீர்கள்; ஆனால், தேவ வார்த்தையின்படி செல்ல விருப்பமாய் உள்ளவர்கள் தெய்வீக சுபாவத்தில் பங்கு கொள்ளுகிறார்கள். மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவனை அளிப்பார் என்று பவுல் கூறுகிறார். இது செய்ய வேண்டிய காரியம் ஆகும். இதைத் தேடுகிறவர்கள் தாம் தகுதி உள்ளவர்கள். நாம் முதலில் பலியின் உடன்படிக்கைக்குள் பிரவேசித்து, அந்த வாக்குத்தத்தத்தைப் பிரயோகப்படுத்த வேண்டும். பிறகு, நாம் சரியாக ஓடினால், அந்த பரிசை நாம் பெறமுடியும். மற்றவர்கள் குறைவான வெகுமதியைப் பெறுவார்கள்.

## கைகள் - - பலிகளின் தலைகளில் கை வைத்தல்.

**கே 317:1 :: கேள்வி (1909) - 1 -** பிரதான ஆசாரியன் பலிகளின் தலைகளில் தன்னுடைய கைகளை எப்போதும் வைத்ததின் முக்கியத்துவம் என்ன?

**பதில்.** அவைகளுடைய தலைகளில் தன்னுடைய கைகளை எப்போதும் வைத்தான் என்பது பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், அவன் செய்த போது, அவன் அதை ஏற்றுக்கொண்டான் என்றும், அது அவனுடைய பலி என்பதால் அது அவனை அடையாளப்படுத்துகிறது என்பதும் உணர்த்தப்படுகிறது. அதே போன்று, பாவி தன் கைகளை பலியின் மேல் வைக்கும் போது, அது தனக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறதாயும், அது அவனை அடையாளப்படுத்துகிறதாயும் இருக்கிறது. சபையார் தங்கள் கைகளை பவுல் மற்றும் பர்னபா மேல் வைத்தார்கள் என்ற விஷயத்திலும் அப்போஸ்தலர் நடபடிகள் கூறும் உட்கருத்தும் இது தான்: நாங்கள் அவர்களை எங்களுடைய பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்." அவர்கள் வெளியே போகும் போது, இந்த அந்தியோகியா சபையை அவர்கள் அடையாளப்படுத்துகிறார்கள் என்றும், அவர்களுடைய செலவுகள் போன்றவற்றை அவர்களே தாங்கிக் கொள்வார்கள் என்பதும் உணர்த்தப்படுகிறது.

## அறுவடை - பிரித்தெடுப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் இடையே உள்ள வித்தியாசம்.

**கே 317:2 :: கேள்வி (1908) - 2 -** களைகளிலிருந்து கோதுமை மணிகளைப் பிரித்தெடுப் பதற்கும், அறுவடை செய்கிறதற்கும் இடையே பணியின் தன்மையில் உள்ள வித்தியாசம் என்ன?

**பதில்.** நல்லது, அருமையான நண்பர்களே, அறுவடையைப் பற்றிய இந்த எடுத்துக்காட்டு முழுமையானதல்ல என்று அனுமானிக்கிறேன். இது ஒரு முழுமையான எடுத்துக்காட்டு என்பதை நான் அபூர்வமாகவே நினைக்கிறேன். நாம் அந்த வழியில் சிந்திக்க முற்பட்டால், நாம் முதலாவதாக அனுமானிக்க வேண்டியது, கதிர்களை அறுக்க வேண்டும், பிறகு பிரிக்க வேண்டும், பிறகு கதிரடிக்க வேண்டும். பிறகு அவற்றை களஞ்சியங்களில் சேர்க்க வேண்டும். இவைகளை நாம் பிரயோகப்படுத்தினால், அதை அறுப்பதற்கு நமக்கு பல்வேறு முறைகள் உள்ளன, பிரித்தெடுப்பதற்கு பல்வேறு முறைகள் உள்ளன. கதிரடிப்பதற்கு பல்வேறு முறைகள் உள்ளன. இவைகள் உண்மைகளுக்குப் பொருத்தமாயிராது. நான் புரிந்து கொண்டபடி, இந்த அறுவடை பணி இந்த நாற்பது வருஷங்களாக நடைபெற்று வருகிறது. சிலர் 1881ம் வருஷத்திலேயே களஞ்சியத்திற்கு உடனடியாகச் சென்று விட்டனர். அதிலிருந்து இன்று வரை சிலர் களஞ்சியத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றனர். ஆகவே, இந்த அறுவடை பணியின் அழகான காட்சியில், ஒவ்வொரு சிறிய விஷயங்களின் நிறைவேறுதலை நாம் எதிர்பார்க்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. இதன் பிரதான அம்சங்கள் உவமையிலேயே கொடுக்கப்பட்டுள்ளன, அதாவது, யுகத்தின் முடிவில் அறுவடை நடக்கும் என்றும், களைகளைச் சுட்டெரிப்பதற்காக கட்டுகளாகக் கட்டுவதற்குச் சேகரிக்க, தம்முடைய அறுவடையாளர்களை அனுப்புவார் என்று கர்த்தர் உபதேசித்துள்ளார். இப்பொழுது நான் புரிந்து கொண்டபடி, களைகளைக் கட்டுகளாகக் கட்டச் சேகரிப்பது என்பது, அமைப்புகளைக் கூட்டி, இறுக்கமாகக் கட்டுவதை அடையாளப்படுத்துகிறது. இது இரகசிய அமைப்புகள் என்று அழைக்கப்படுபவைகளுக்கு மட்டும் என்ற வரம்பிற்கு உட்படுத்த மாட்டேன், அவைகள் அதன் ஒரு பகுதியாக இருக்கலாம் என்றே நினைக்கிறேன். பலதரப்பட்ட சபை பிரிவுகள் அனைத்தும் அந்த பெரும் கட்டுகளாகும் அமைப்பின் பகுதியாக உள்ளன. விளைவு ஒரே மாதிரி தான் இருக்கும். ஆட்ஃபெல்லோஸ் (ODD FELLOWS) அல்லது மேசன்ஸ் (MASONS) என்ற அமைப்புகளின் அங்கமாக இருப்பவரை சாதாரண சபை பிரிவிலிருக்கிறவர் ஏன் ஆட்சேபிக்க வேண்டும் என்று உண்மையில் நான் அறியவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் அவர்களும் சபை போன்ற வகையைச் சார்ந்தவர்களாக அல்லது அவர்கள் கோரும் விதமாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று வழக்கமான சடங்கு வழிபாட்டு முறைகளை உடையவர்களாயிருக்கின்றனர். அவர்கள் இறக்கும் போது, பரிசுத்த

நிலைக்குச் செல்வதாகச் சொல்கின்றனர். சில நாட்களுக்கு முன்பு தான், இந்த மாதிரி ஒரு சிறிய விளக்கவுரையை நான் கேட்டேன். அவர்களுடைய தோழர்கள் மரணமடைந்து அந்த சிறப்பான நிலைக்கு இனி மேல் செல்லும் போது, அவர்கள் எல்லோரும் அங்கே வரவேற்கப்படுகிறார்கள் என்று அனுமானிக்கின்றனர். வேறு எந்த பேர்ச்சபை ஜனங்கள் செய்வது போலவே அவர்களும் இவற்றை மென்மையாக, மிகுந்த அதிகாரத்துடனும், மிகுந்த நேர்மையுடனும் சொல்லுகின்றனர் என்று நான் சொல்ல முடியும். நான் தீர்ப்பளிக்கவில்லை. நான் சொல்ல முடிந்த அளவுக்கு, நான் வெறுமனே சொல்கிறேன். ஆனால், என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இவைகள் எல்லாம் கட்டுகள். ஒவ்வொரு கட்டும் இறுக்கமடைந்து வருகின்றன. உங்களில் சிலர் "ஃப்ரீ மேசன்" (FREE MASONRY) பற்றி என்னை விட அதிகமாக தெரிந்திருக்கிறீர்கள். அதற்கு விரோதமாக நான் எதையும் சொல்வதற்கு இல்லை. ஏனென்றால் நான் எதுவும் சொல்வதற்கு அறியவில்லை. நான் அதை அறிந்திருந்தால், அதைச் சொல்வேன் என்று நான் அறியவில்லை. மேசன்ரி அல்லது ஆட் ஃபெல்லோஷிப் அல்லது பிரஸ்பைடேரியன் அல்லது மெதடிஸ்டுக்கு எதிராக பிரசங்கம் பண்ண கர்த்தர் என்னை அனுப்பவில்லை. சத்தியத்தை சொல்வதும், கிறிஸ்துவின் மெய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும் நம்முடைய வாய்ப்பு ஆகும். இந்த செய்தி பலதரப்பட்ட இருதயங்களில் இதன் விளைவுகளை உண்டாக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எந்த வகையான கட்டில் நீங்கள் இருப்பதைக் கண்டால், அந்த கட்டிலிருந்து வெளியே வருவது நல்லது. கர்த்தரிடம் நம்பிக்கை கொண்டு அவருடன் இணக்கமாய் இருங்கள். இது எல்லா வகையான கட்டுகள் மற்றும் மனுஷீக அமைப்புகளிலுமிருந்து உங்களை வெளியே கொண்டு வரும் என்று நான் நம்புகிறேன். இதன் பொருளை நான் அறிந்து கொள்ளும்விதமாக, நான் ஜாக்கிரதையான வார்த்தையை சொல்லலாம்.: உதாரணமாக, நான் ஒரு தச்சனாக இருந்தால், நான் சுதந்தரமாக இருப்பதையே விரும்புவேன். ஆனால், எனக்கு வேலை கிடைப்பதற்கு முன்னதாக, சங்கத்தில் சேர வேண்டும் என்றும், அந்த சங்கத்தின் பணப்பெட்டிகளில் என்னுடைய பணத்தை அதிக அளவில் செலுத்த வேண்டும் என்றும் எனக்கு கோரிக்கை விடப்பட்டால், நான் சங்கத்தில் சேர வேண்டியிருக்கும். தச்சர்களின் பொதுநலத்திற்காக,, அவ்வளவு அதிகமான நன்கொடையை அளித்திருக்கிறேன் என்று நான் உணருகிறேன். இந்த விஷயத்தில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. ஏனெனில், மதம் சம்பந்தமான எதுவும் இங்கே இல்லை. என்னுடைய இதயத்தை அல்லது மனதை எதுவும் கட்டுப்படுத்துவது இல்லை. ஆனால், நான் அங்கீகரிக்க முடியாத எதையாவது சங்கம் செய்ய முற்பட்டால், நான் அதை விட்டு எந்த நேரத்திலும் விலகுவதற்கு நான் முழுமையான சுதந்தரம் உடையவனாக உணருகிறேன். ஆகவே, நான் அந்த வரம்பை ஏற்படுத்தி கொள்கிறேன். ஆனால், கோதுமை மணிகளையும் களைகளையும் பொருத்த வரையில், உங்களைச் சுற்றிலும் ஏராளமான கட்டுகள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். இந்த பலதரப்பட்ட உலக அமைப்புகள், அதாவது, சபை அமைப்புகளிலிருந்து வேறுபட்ட அமைப்புகளாக நாம் இவைகளைக் குறித்தால், இந்த அமைப்புகளும் சபை ஜனங்கள் செய்கின்ற விதமாகவே அதே வழிமுறையில் செயல்படுகின்றனர். சபை பிரிவுகளில் ஒன்றிலிருந்து வெகு எளிதாக விலகிக் கொள்வது வழக்கமாக உள்ளது. நீங்கள் சொல்ல முடியும், "இந்த கடிதத்திற்கு உங்களுக்கு நன்றி கூறுகிறேன்." பிறகு, அவர்கள் அந்த கடிதத்தை வாங்கி, அதை வைத்துக் கொள்ளமாட்டார்கள். ஆனால், அவர்கள் விரும்பினால், அதை எரித்து விடுவார்கள். மேசன்களிடமும் இதைப் போன்றே உள்ளது. யாரேனும் அவர்கள் அமைப்பிலிருந்து விலகிப் போக விரும்பினால், வெளியேறுவதற்கான கடிதத்தைக் கேட்கலாம். எவ்விதமான குறிப்பிட்ட கேள்வி ஏதுமில்லாமல் அவர் பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது இதில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. என்று நான் கேள்விப்படுகிறேன். நீங்கள் பிரஸ்பைடேரியன் சபையைச் சேர்ந்தவராயிருந்து கடிதம் வேண்டினால், அவர்கள் சொல்வார்கள், "அந்த கடிதம் எந்த சபைக்கு விலாசமிடப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்." நீங்கள் சொல்கிறீரகள், "ஓ, எப்படியாவது செய்யுங்கள்." அவர்கள் கூறுவார்கள், "ஓ, இப்பொழுது அதை நாங்கள் செய்ய இயலாது. ஒரு குறிப்பிட்ட, தனிப்பட்ட சபைக்குத் தான் நாங்கள் உங்களுக்கு கடிதம் விலாசமிட்டுத் தர முடியும், அதை நீங்கள் அங்கு சேர்த்துவிட வேண்டும் - அங்கு எப்போது சேர்க்கப்படுகிறதோ, அதுவே நல்லது." ஆகவே, நம்முடைய ஃப்ரீ மேசன் நண்பர்களும் அதே மாதிரி செய்கிறார்கள் என்று நான் அறிந்துள்ளேன். அவர்கள் இப்பொழுது ராஜினாமா

கடிதங்களைக் கொடுக்கிறதில்லை. நீங்கள் வேறு எந்த பிரிவுக்கு (LODGE) மாற்றம் செய்யப்பட விரும்பினால், அவர்கள் உங்களை அந்த பிரிவுக்கு மாற்றி விடுவார்கள். அவர்கள் முன்பு செய்து வந்த அதே முறையில் இப்பொழுது ராஜினாமா கடிதங்களைக் கொடுக்கிறதில்லை. ஒரு சகோதரன்: "சகோ. ரசல், நான் ஒரு மேசன். அந்த அமைப்பில் துரதிஷ்டவசமாக உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறேன். நான் அதில் ஒரு சிறிய திருத்தம் செய்ய விரும்புகிறேன். மேசன் தான் விலக வேண்டும் என்று எப்பொழுது விரும்பினாலும் அவருக்கு அதை விட்டு விலக பூரண சுதந்திரம் உண்டு. அவர் மீது எவ்வித தடையும் மேற்கொள்ளப்படுவதில்லை." சகோ. ரசல்: "எனக்கு இதைப் பற்றி தெரியாது என்று நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஒரு சகோதரன் என்னிடம் சொல்லியதை மட்டுமே நான் தொடர்புபடுத்திச் சொன்னேன். வேறொரு சகோதரன்: "நான் அந்த சகோதரனுடையதல்லாத வேறு எல்லையைச் சார்ந்த பிரிவில் மேசனாக இருக்கிறேன். அவருடைய குறிப்பிட்ட எல்லையில் எல்லாம் சரியாக இருக்கலாம்; ஆனால், நான் அறிந்த வரையில், மற்ற எல்லைகளில் அந்த மாதிரி இல்லை." சகோ. ரசல்: "இவற்றில் எதற்கும் விரோதமாக நாம் சொல்வதற்கு எப்போதும் எதுவுமில்லை. ஃப்ரீ மேசன் வகுப்பாரைப் பற்றி அன்பில்லாத வார்த்தை எதுவும் நாம் சொல்லியிருக்கவில்லை. இதைப் பற்றி நாங்கள் எப்போதாவது சொல்லியிருக்கிறோம் என்று அன்பில்லாத எந்த விஷயத்தையும் நீங்கள் படித்திருக்கமாட்டீர்கள். பிரெஸ்பைடேரியன் அல்லது மெதடிஸ்டு பிரினரைப் பற்றி அன்பில்லாத எதையும் நாங்கள் சொல்ல விரும்புகிறதில்லை. இந்த சமயப் பிரிவுகளிலுள்ள பல அன்பான நண்பர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள். என்று நான் நினைக்கிறேன். நான் அவர்களுடைய நன்னடத்தைகளைப் பாராட்டுகிறேன். பிரெஸ்பைடெரியன் பிரிவின் கொள்கையைப் பற்றி சில சமயங்களில் நான் பேசியிருக்கிறேன். அவர்களும் கூட இதைப் பற்றி பேசுகிறார்கள். பிரெஸ்பைடேரியன் கொள்கைகளைப் பற்றி நான் எப்போதாவது நான் பேசியிருக்கிறதை விட, மிகக் கடுமையாக அவர்கள் பேசியிருக்கிறதை நான் படித்திருக்கிறேன். பிரஸ்பைடேரியன் தங்களுடைய சொந்த கொள்கைகளைப் பற்றி கூறும் சில விஷயங்களை நான் காவற் கோபுரத்தில் சில சமயங்களில் மேற்கோள் காட்டியிருக்கிறேன். மெதடிஸ்டுகள் தங்களுடைய கொள்கைகளைப் பற்றி பேசுவதில் சிலவற்றை நான் எப்போதாவது மேற்கோள் காட்டியிருக்கிறேன். ஏனெனில், அதைப் பற்றி நான் சொல்ல விரும்பியதை விட, அவர்கள் அதை அழுத்தமாகச் சொல்கிறார்கள்.

## அறுவடை - அறுவடை மிகுதி - சிறுமந்தை

**கே 319:1 :: கேள்வி (1910) - 1 -** "அறுவடை உண்மையில் மிகுதியாக உள்ளது." இது வெளியே வரும் "சிறுமந்தை" என்றால், அறுவடை மிகுதி அல்லது ஏராளமானது என்பது எப்படி?

**பதில்.** கர்த்தருடைய எடுத்துக்காட்டை நாம் மனதில் கொள்ள வேண்டும். அவர் யூத யுகத்தின் அறுவடை காலத்தில் இருந்தார். அந்த சமயத்தில் யூத ஜாதி முழுமையும் அறுவடை நிலமாக இருந்தது. ஆகவே, நாம் கர்த்தரிடத்தில் தவறை கண்டுபிடிக்க வேண்டியிருக்கும். தவறு ஏதும் இருப்பதாக இருந்தால், அவர் தவறு செய்தார். ஏனெனில் இயேசு கூறினார், "அறுவடை மிகுதி, வேலையாட்கள் குறைவு." அப்போது, இயேசுவைப் பொருத்தமட்டில், அந்த அறுவடையில் 500 சகோதரர்கள் அந்த சமயத்தில் சேர்க்கப்பட்டனர். ஆனால், அது முழுவதுமான யூத அறுவடை அல்ல. ஏனெனில், பிறகு அதிகமானவர்கள் சேர்க்கப்பட்டனர். இயேசு ஒப்பீட்டளவில் குறிப்பிட்டவிதமாக, இப்போது தயாராக இருப்பவர்களும், இதைச் செய்ய விரும்புகிறவர்களும் குறைவாயிருப்பதை ஒப்பிடும் போது, செய்ய வேண்டிய பணி மிகுதியாக உள்ளது என்பதை நாம் அனுமானிக்கிறோம். மேலும் அவர்கள் நிழலான ஜனங்களாக இருந்தனர். அப்போது அது உண்மையாயிருந்தது. ஆகவே, இப்பொழுது அது உண்மையாக உள்ளது. அப்போது, யூதர்கள் அனைவரும் கூட்டிச் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் லட்சக்கணக்கானவர்கள் கூட்டிச் சேர்க்கப்படவில்லை. கூட்டிச்சேர்க்கப்பட்ட மிகுதியானவர்களில் எல்லோரும் நன்னடைத்தை மிக்கவர்களாக இருப்பதைக் குறித்து கர்த்தர் பேசினார். அவர் திருப்தியும் அடைந்தார். புற ஜாதிகளிடமிருந்து அவர் பெறப்போகிறவர்களுடனும் அவர் திருப்தி அடைவார். ஆனால், வேலையாட்கள் குறைவாக இருக்கிறார்கள் என்றும், வேலையாட்கள் செய்ய முடிவதை விட

பணி அதிகமாக இருக்கிறது என்பது தான் விவாதத்திற்குரிய விஷயமாக உள்ளது. எல்லோருக்கும் அதிகமாக இருக்கிறது. அதிகமான பணி இருக்கிறது. ஆகவே, அவர் கூறினார், “எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.” கர்த்தர் அவர்களை அனுப்புவார் என்று அப்படி எதிர்பார்க்க வேண்டும். அதை அப்படியே இப்பொழுது பிரயோகியுங்கள் - இங்கே அறுவடை வேலை லட்சக்கணக்கானவர்களை உள்ளடக்கியது என்று எதிர்பார்க்க வேண்டாம். ஆனால், கணிசமான அளவுக்கு இருக்கும். இன்னும் மிகுதியான பணி செய்ய வேண்டியுள்ளது என்பது என்னுடைய எண்ணம் ஆகும். கர்த்தருடைய உண்மையான ஜனங்களில் அதிகமானவர்கள் பலர் கர்த்தருடைய பணியில் உபயோகப்படுத்த முடிவதை எங்கும் நான் பார்க்க முடிகிறது. புத்தக விற்பனையாளர்கள் (COLPORTEURS) பெருமளவில் பலர் இருக்க வேண்டும் என்று லண்டன் அலுவலகத்திற்கு என் கவனத்தை ஈர்க்கிறேன். பணி செய்வதற்கு அங்கு பெருமளவில் நிலம் உள்ளது. இதை புத்தக விற்பனையாளர்கள் செய்யாவிட்டால், கர்த்தர் வேறு சில வழிகளை கையாளுவார் என்று நான் ஊகிக்கிறேன். ஆனால் வாய்ப்பு இழக்கப்படும்.

எடுத்துக்காட்டாக, புத்தக கடைகளில் புத்தகங்கள் விற்கப்படுவதிலிருந்து கர்த்தர் தடை பண்ணினார். இது நண்பர்கள் புத்தகங்கள் விற்பதற்கான வழியை அமைத்து கொடுத்தது என்று நான் ஊகிக்கிறேன். வெகு காலமாக, நாளிதழ்களில் கர்த்தர் வழியை திறக்காமல் இருந்தார். ஆகவே நண்பர்கள் பிரதிகளைக் கொடுக்க முடிந்தது. ஆனால், இப்பொழுது உலக நாளிதழ்களுக்கான வழியைத் திறந்து விட்டு, லட்சக்கணக்கான ஜனங்களுக்கு அவைகளை அனுப்புகிறார். போதுமான அறுவடையாளர்கள் இல்லை. ஜெபிக்கும் போது உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள், நான் என்ன செய்ய வேண்டும்? பணி நடைபெற்றுக் கொண்டிருந்தால், உங்கள் பங்கை பெற நீங்கள் விரும்புகிறீர்கள். அப்படியே ஒவ்வொருவருக்கும் உள்ளது.

## அறுவடை - 1910ம் வருஷ வசந்த காலத்தில் முடிவு.

**கே 320:1 :: கேள்வி (1910) - 1 -** அடுத்த வசந்தகாலத்தில் பணி முடிவுக்கு வரும் என்று நண்பர்களுக்கு மத்தியில் ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கருத்துக்கு வேதாகம சாட்சியம் ஏதும் நீங்கள் காண்கிறீர்களா? இத்தகைய கோட்பாடு முன்னிறுத்தப்படுவதற்கு உங்கள் ஆதரவு உள்ளதா?

**பதில்.** இத்தகைய கருத்துக்கு எவ்விதமான அடிப்படையையும் நான் பார்க்கவில்லை. இத்தகைய கோட்பாட்டை முன்னிலைப்படுத்துவதில் என்னுடைய ஆதரவு இல்லை. தங்களுக்கு அறிவு இல்லாத விஷயங்களைப் பற்றி அனுமானிப்பது அருமையான நண்பர்களுக்கு நல்லதல்ல என்று நான் நினைக்கிறேன். நான் அறிவு பெற்றிராத விஷயங்களைப் பற்றி அனுமானிக்காமல் இருப்பதில் தான் நான் நல்லது செய்கிறேன் என்று குறைந்த பட்சம் நான் சொல்வேன். அவர்கள் இந்தப் பாடத்தைக் குறித்து ஏதேனும் அறிவுடையவர்களாய் இருந்தால், நான் பெற்றிராதவற்றில் அவர்கள் கொஞ்சம் அறிவுடையவர்களாயிருந்தால், தாங்கள் அறிவுடையவர்களாயிருக்கிறோம் என்பதில் அவர்கள் நிச்சயமுள்ளவர்களாக இருந்தால், அதை உபயோகப்படுத்துவதற்காக, அவர்களுடைய சொந்த எஜமானிடம் அவர்கள் ஒருவேளை கடமைப்பட்டவர்களாகிறார்கள். ஆனால், நான் பார்க்க முடிந்த வரையில், அருமையான நண்பர்களே, இது போன்று விவாதிப்பதினால், பிரயோஜனமான வாய்ப்புகள் நண்பர்களிடமிருந்து எடுத்து போடப்படுகிறது. அடுத்த வசந்த காலத்தில் இது முடிவடையப் போகிறதா அல்லது இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், இது போன்ற விஷயங்களைப் பற்றி பேசுவதை நிறுத்தி விட்டு, அறுவடை பணியில் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டு, நம்மால் முடிந்தவரை செய்ய வேண்டும். அதற்கு இடையில், நான் பார்க்க முடிந்தவரை, நான் செய்வதற்கு ஏராளமாக உள்ளன. வேலையின்மைக்காக யாரையும் தடை பண்ணாதீர்கள்.

## அறுவடை - ஊழியத்திற்கான வாய்ப்புகளின் எல்லை.

**கே 320:2 :: கேள்வி (1910) - 2 -** தற்கால கண்ணோட்டத்தின்படி, பிரசங்க ஊழியம், புத்தக விற்பனையாளர் ஊழியம், தன்னார்வ ஊழியம் போன்ற ஊழியங்களுக்கான வாய்ப்புகள் எவ்வளவு காலத்திற்குத் தொடரும் என்பது பற்றிய ஏதேனும் கருத்தை எங்களுக்கு நீங்கள் சொல்ல முடியுமா?

**பதில்.** நான் சொல்ல இயலாது. அருமையான நண்பர்களில் சிலர், தாங்கள் இவையெல்லாவற்றையும் மிக அழகாகக் கண்டு பிடித்திருக்கிறோம் என்று நினைப்பது போல் தோன்றுகிறது. நல்லது, நான் அவர்களுடன் சச்சரவு கொள்ள முடியாது. ஏனெனில் நான் அதைப் பார்க்கவில்லை. தாங்கள் பார்ப்பதாக அவர்கள் கூறினால், நான் பார்ப்பதைக் காட்டிலும் அவர்கள் ஏன் பார்க்கிறார்கள்? நான் இப்பொழுது பார்க்க முடிந்த வரையில், அருமையான நண்பர்களே, புத்தக விற்பனை ஊழியம் அல்லது ஊழியத்தின் மற்ற பகுதிகள் உடனடியாக முடிவுக்கு வரும் என்று நினைப்பதற்கு எனக்கு எந்த காரணமும் இல்லை. இந்த பணி இக்காலத்தில் இருப்பது போல, அதிக வளம் பொருந்திய தோற்றத்தை எப்பொழுதும் அடைந்ததில்லை என்று தான் எனக்குத் தென்படுகிறது. நீங்களும், நானும் இந்த ஊழியத்தில் விருப்பமாயிருப்பவர்கள் எல்லோரும், இது எப்பொழுது முடிவடையும் என்று நம் தலைகள் கவலை கொள்ளாமல் இருப்பது தான் நல்லது என்பதே என்னுடைய எண்ணம் ஆகும். இது சரியாக முடிவடையும் போது, அதை நீங்கள் கண்டு பிடிப்பீர்கள், அப்படித் தானே? ஆம், அப்படியே. உங்கள் கைகளால் செய்யத் தோன்றுவது எதுவோ, அவற்றை முழு பலத்தோடு செய்யுங்கள். நீங்கள் செய்வதற்கு இப்பொழுது நீங்கள் நிறைய காண்பீர்கள். இந்த பலதரப்பட்ட திசைகளில் எல்லாம் ஒவ்வொரு நாளும் திரளான வாய்ப்புகள் உள்ளன. நீங்கள் முன்னோக்கிச் செல்லுங்கள் என்பது என்னுடைய அறிவுரை ஆகும். நீங்கள் முன்னோக்கிச் செல்ல முடியாத போது, மற்றவர் சொல்வது எதையும் பற்றி எப்பொழுதும் கருத்தில் கொள்ளாதீர்கள். உரிய நேரத்தில் நீங்களே கண்டு கொள்வீர்கள்.

## அறுவடை - உவமைகளில் கால அளவு. மத் 13:30. & மத் 20: 1-16.

**கே 321:1 :: கேள்வி (1916) - 1 -** மத்.13:30ல் களைகள் பற்றிய உவமையில் குறிக்கப்படும் உவமையைப் போல, மத்.20:1-16ல் உள்ள திராட்சத் தோட்ட ஊழியம் அதே கால அளவைக் கொண்டதாயிருக்குமோ?

**பதில்.** நான் அறியவில்லை.

## பகை. உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது - - யாரிடம் சொல்லப்பட்டது?

**கே 321:2 :: கேள்வி (19107) - 2 -** தயவு செய்து இந்த வசனங்களை இணக்கமுறச் சொல்லுங்கள்: "உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சி கொடுக்கிறபடியினால் அது என்னைப் பகைக்கிறது." மற்றொரு வசனம் சொல்லுகிறது: "நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." குறிப்பாக, உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது." மற்றும் "உலகம் உங்களைப் பகைக்கிறது." என்ற இந்த இரண்டு தனிப்பட்ட வசனப் பகுதிகளைத் தயவு செய்து இணக்கமுறச் சொல்லுங்கள்.

**பதில்.** ஒரு வசனப்பகுதி ஜனங்களில் கலவையான பார்வையாளர்களிடம் பேசப்பட்டதாகும். மற்றொன்று, யூத ஜனங்களிலிருந்து அவர் சேகரித்த அவருடைய சீஷர்களிடம் பேசப்பட்டதாகும். அவர் கூறினார், "நீர் அவர்களை எனக்கு தந்தீர், அவர்கள் என்னுடைய வசனத்தைப் பெற்றிருக்கிறார்கள். என்னுடைய வசனத்தைப் பெற்று, என்னுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றினவர்கள் என்பதால், என்னைப் பகைத்தது போன்று, உலகம் அவர்களைப் பகைக்கிறது. ஆரம்பத்தில் உலகம் அவர்களைப் பகைக்கவில்லை; உலகம் அவர்களை எதிர்க்கவில்லை. அது அவர்களைப் பொருட்படுத்தாமல் விட்டிருக்கலாம். ஆகவே, உலகம் அவர்களைப்

பகைக்கவில்லை. ஆனால், கிறிஸ்து வெளிச்சத்தை ஏந்திக் கொண்டு இருந்தார். அந்த வெளிச்சம் இருளைக் கடிந்து கொண்டது. ஆகவே, அவர்கள் வெளிச்சத்தைப் பகைத்தார்கள். வெளிச்சம் ஏந்திக்கொண்டிருந்தவரையும் பகைத்தார்கள். அந்த வெளிச்சத்தைப் பிடித்துக் கொண்டிருப்பதில், இப்பொழுது நீங்கள் என்னுடன் பங்காளிகளாகியிருக்கிறீர்கள்..." "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." நீங்கள் செயல்படும் அளவுக்குத் தக்கதாக உலகம் என்னைப் பகைத்தது போலவே உங்களைப் பகைக்கும்.

## பகை - சாத்தானும் அவனைப் பின்பற்றுகிறவர்களும்.

**கே 321:3 :: கேள்வி (1915) - 3 -** "கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும் - - - முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்." (சங் 139.21,22.) என்ற வேத வசனத்தை விளக்கவும்.

**பதில்.** இந்த பத்தியில் சங்கீதக்காரனின் வார்த்தைகளின் முழு சாராம்சத்தையும் நாம் பெறுகிறோமா என்பது பற்றி நாம் உறுதியாக நம்ப முடியாது. ஆனால், இந்த விஷயத்தை நமக்கு பிரயோகப்படுத்த முடியும். தீமையாக உள்ளதை கர்த்தருடைய ஜனங்கள் எல்லோரும் பகைப்பார்கள் என்று நாம் சொல்லமுடியும். தீமையானவற்றின் மீது நாம் சரியான முறையில் இரக்கம் கொள்ள முடியாது. ஆகவே தான், நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் பற்றி இவ்வாறு சொல்லப்பட்டது, "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உம்முடைய தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்." (எபி 1:9.) இப்பொழுது, சபையின் மேன்மையான தலையாக இருக்கிறவர் நீதியை விரும்பினார். நீதியின் மேல் உள்ள அந்த விருப்பத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர் அக்கிரமத்தையும் பாவத்தையும் பகைத்தார். அதே பகைமையை நாமும் உடையவராயிருக்க வேண்டும்.

பலவீனத்துடன் பிறந்த காரணத்தால், அக்கிரமத்தின் பாவத்தினால் ஜனங்கள் இருக்கிறார்கள். இருந்தும், அக்கிரமத்தை நாம் கண்டிப்பாக பகைக்க வேண்டும். ஆனால், தேவன் இரக்கம் கொண்டது போல, பரிதாபத்துக்குரிய மனுக்குலத்திற்காக இரக்கம் கொள்வதற்கு அதிகம் அதிகமாய் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தேவனுடைய நியாயப்பிரமாணத்துடன் இணக்கமாயிராத அநீதியுள்ளவர்களுக்காக "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து" தேவனுடைய நியாயப்பிரமாணத்துடன் இணக்கமாயிராத அநீதியுள்ளவர்களுக்காக மரித்ததினால், தேவனுடைய இரக்கம் பெரிதாயிருக்கிறது. (ரோமர் 5:8.) நாம் கர்த்தருடைய சிந்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால், தீமைக்கு இரக்கம் கொள்ளக்கூடாது. அக்கிரமத்துடன் முழு இரக்கங்கொண்டவர்கள் இருக்கும் இடத்திற்கு யாரேனும் வந்திருக்கிறவர்களாயிருந்தால், வேதாகமம் நமக்கு நிச்சயப்படுத்துவது என்னவெனில், அப்படிப்பட்டவர்கள் தாங்களே அக்கிரமக்காரராய் இருக்கிறவர்கள் என்றும், அவர்கள் சாத்தானுடன் சரியாக வகைப்படுத்தப்படுவார்கள்.

சாத்தான் சர்வவல்லவரை முதலில் மீறி மனுக்குலத்தை ஏமாற்றி, நம்முடைய இனத்தின் கொலை பாதகனாய் இருந்த அவனுடைய மார்க்கத்திலிருந்த அக்கிரமத்தின் ஆவியை வெளிப்படுத்தியிருப்பது அல்லாமல், தற்காலம் வரையிலும் அது தொடருகிறது. சாத்தானைப் பற்றி இயேசு கூறினார், "அவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறபடியால், அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்." (யோவான் 8:44.) இப்பொழுது சாத்தான் தன் அக்கிரமத்திலிருந்து மனந்திரும்பினால், சாத்தானைக் குறித்த விஷயத்தில் கூட அவன் தேவனிடம் திரும்ப வருவதற்கு சில வழி முறையை தேவன் சந்தேகத்திற்கிடமின்றி கண்டுபிடிப்பார். அவன் மனந்திரும்புதலுக்கான அல்லது நீதியின் மேல் உள்ள இரக்கத்திற்கான வெளிப்பாடு எதுவும் எப்போதும் செய்யாத காரணத்தினால், அக்கிரமம் என்பதற்கான இணைச்சொல்லாக வேதாகமத்தில் அவனுடைய பெயர் சரியாக உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது.

விழுந்து போன தூதர்களைப் பற்றி என்ன? அவர்கள் எல்லோரையும் பற்றி நாம் தீர்ப்பு செய்ய இயலாது. பிசாசு மற்றும் அவனுடைய தூதர்கள் - அவனைப் போலவே திருத்த முடியாதவர்களாக தங்களை நிரூபிப்பவர்கள் - இவர்களுடைய இறுதி அழிவைக் குறித்து வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. இப்படிப்பட்டவர்கள் எல்லோரும் அக்கிரமம் உடையவர்கள். இது வெறுமனே மற்றவர்களின் தீமையான பாதிப்பினால் அல்ல; ஆனால், அவர்கள் பிரிக்க முடியாதபடி தங்களையே அக்கிரமத்துடன் அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இது அவர்களுடைய சொந்த விருப்பத்தின்படியும், தன்னிச்சையாக செயலாற்றும் காரணமாக உள்ளது. இந்தப் பிரிவினர் தாம் தீமையான மனிதர்களையும், தீமையான தூதர்களையும் உள்ளடக்கியவர்கள். கேள்வி கேட்ட சகோதரனால் மேற்கோள் காட்டப்பட்ட வசனப்பகுதியில் குறிக்கப்படும் தேவனுடைய பகையாளர்கள் இப்படிப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். “கர்த்தாவே, உம்மை பகைக்கிறவர்களை நான் பகையாமலும், - - -இருப்பேனோ? முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்.”

நான் சாத்தானைப் பகைக்கிறேனா? கண்டிப்பாக நான் பகைக்கிறேன்! இது முழுப்பகையா? இது முழுப்பகை என்றே நான் நம்புகிறேன். அது எந்த அளவுக்கு என்றால், சாத்தானுடைய வழி முறைகள் எதிலும் உள்ள தொடர்புக்குள் நான் சமரசம் செய்து கொள்ளவோ அல்லது என்னை ஈடுபடுத்திக் கொள்ளவோ மாட்டேன். ஒருவர் நமது எஜமான், மற்றவர் அவருடைய எதிராளி என்று இரண்டு எஜமானர்களை மனதிற் கொண்டு, மறைவானவை ஒவ்வொன்றிலும் நாம் பிரிந்திருக்கவே விரும்புகிறோம். அவனுடன் நமக்கு தோழமை ஏதுமில்லை. நமது விருப்பம் எல்லாம் கர்த்தரின் பக்கமே உள்ளது. எதிராளியான சாத்தானாகிய இருளின் அதிபதியை நாம் முழுப்பகையுடன் பகைக்கிறோம். பூரணமான வெளிச்சத்தில் அவனைப் பின்பற்றுகிறவர்களாக நிரூபிக்கும் எவரும், அல்லது அவன் மேல் இரக்கம் கொள்ளுகிற எவரும் அதே பகைமைக்கு தகுதியானவர்கள் ஆவர்.

ஆனால், அவர்களை நித்திய காலம் முழுவதும் வதைப்பது போன்ற எவ்வித இன்பமும் நம்முடைய பங்கில் நாம் கொள்வதாக அந்த பகைக்கு நாம் அர்த்தம் கொள்ள வேண்டியதில்லை. தேவன் கொண்டிருக்கும் அதே வகையிலான பகையாகவே அது இருக்க வேண்டும். தேவன் ஒட்டு மொத்தமாக நீதிபரராகவே இருக்கிறார். உரிய காலத்தில் சாத்தானும், அவனுடைய ஆவியிலுள்ள எல்லோரின் அழிவையும் தான் தேவனுடைய பகைமை அர்த்தப்படுத்துகிறது. தேவனுக்கு எதிரானவர்கள் அழிக்கப்படுவதை காண விரும்பும் வகையிலான பகைமையை நாம் உடையவர்களாயிருப்பது தான் சரியான பகைமை ஆகும்.

## தலைக்கு முக்காடிடுதல் - - எந்த வகையில்.

**கே** 322:1 :: **கேள்வி** **(1906) - 1 -** பார்வையாளர் மத்தியில் தற்கால தொப்பி கண்டிப்பாக வசதியான ஒன்று தான். தொழுகையின் போது ஆட்சேபனைக்குரிய அந்த தொப்பியை அணியாமல், இந்த விஷயத்தில் தேவையற்ற கவனத்தை ஈர்க்காமல் எதேனும் இருக்கும்படி, பெண்கள் தங்கள் தலை முக்காடு இடுவதற்கு வேறு ஏதேனும் முறையை எடுத்துரைக்க முடியுமா என்று அறிய சில சகோதரிகள் விரும்புகிறார்கள்?

**பதில்.** இது போன்ற கேள்விகளை தீர்மானிக்கும் ஞானம் எனக்கு இருப்பதற்கு நான் என்ன சாலொமோனா? உங்களுக்கு நான் சொல்லுகிறேன், அருமையான நண்பர்களே, சில சகோதரிகள் என்ன செய்கிறார்கள் என்பதை நான் கவனித்திருக்கிறேன். இதைப் பற்றி நான் குறிப்பிடுவது, நான் நம்புகிறபடி, இது தான் முதல் தடவையாக இருந்தாலும், நான் ஒரு சகோதரியாக இருந்தால், அதை நான் ஏற்றுக்கொள்வதற்கு அதிக சாத்தியமுள்ளதென்று நான் நினைத்தேன். சில சகோதரிகள் சிறிய பின்னல் முக்காட்டை (LACE) அணிந்திருப்பதை நான் கவனித்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரை, அப்போஸ்தலர் தன் மனதில் கொண்டிருந்த விதமாக, எல்லாவற்றையும் மறைக்கும்படியாக, அது மிகவும் நேர்த்தியாக இப்பொழுது காணப்படுகிறதாக நான் நினைத்தேன். இது வெறுமனே ஒரு அடையாளம் ஆகும். அது ஏன்

சரியாக இருக்கிறது என்று எந்த காரணமும் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் நீங்கள் கவனியுங்கள், நான் எந்த விதிமுறையையும் வகுத்துக் கூறவில்லை.

## தலை முக்காடு - - எந்த அதிகாரத்தில்.

**கே** 323:1 :: **கேள்வி** (1906) - 1 - கூடுகைகளின் போது பெண்கள் தொப்பிகளை அல்லது வேறு முக்காடுகளை அணிவது தேவையா?

**பதில்.** நல்லது, பவுல் அப்போஸ்தனைக் கேளுங்கள். இந்த விஷயத்தில் அவர் தான் அதிகாரமுள்ளவர்., நான் அல்ல.

## தலைமை - - மன்னா போன்ற கூடுகைகளில் எழுதுதல்.

**கே** 323:2 :: **கேள்வி** (1911) - 2 - மன்னா போன்ற கூடுகைகளின் போது சகோதரி தன்னுடைய பெயரை எழுதும் பொழுது, தன்னுடைய கணவரின் முழுப் பெயரை, உதாரணமாக, திருமதி. ஜோசப் டாட்ஸ் என்பதற்குப் பதிலாக, திருமதி. மேரி டாட்ஸ் என்று எழுதினால்,அந்த சகோதரி தலைமையை மறுக்கிறாரா?

**பதில்.** நல்லது, அருமையான நண்பர்களே, இது தலைமையை மறுப்பதாக எடுத்துக் கொள்ளும் அவசியம் இல்லை. நான் அதைச் சொல்லவில்லை. ஆனால், இது சமுதாய ஆச்சாரம் சம்பந்தப்பட்ட விஷயமாகும். சரியான படிவம் என்ன என்பது கேள்வியாகிறது. விதி முறையின்படி, ஒரு பெண் தன் பெயருடன் “திருமதி” என்று கையெழுத்திடும் போது, அவள் தன் கணவனுடைய பெயரின் முதல் எழுத்தையோ அல்லது பெயரையோ எழுதுகிறாள் என்று அறிகிறோம். ஆனல், அவள் தன்னுடைய சொந்த பெயரை எழுத விரும்பினால், “திருமதி” என்பதை எழுதாமல் விட்டு விடுகிறாள். அல்லது “திருமதி” என்பதை அடைப்புக் குறியில் போடுகிறாள்.

## குணமாக்குதல் - மூப்பர்களை அழைத்தல், ஜெபம் பண்ணுதல், எண்ணெய் பூசுதல்.

**கே** 323:3 :: (1909) - 3 - யாக்கோபு 5:14ல் கூறப்பட்டுள்ள கண்டிப்பான வார்த்தைகளை கிறிஸ்தவர்கள் எப்படி பின்பற்ற வேண்டும்? “உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்; . . . அவன் பாவஞ்செய்தானானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.”

**பதில்.** “அவன் பாவஞ்செய்தானானால்” என்பதைத் தான் இதனுடைய சாராம்சமாக கருதுகிறேன். இப்படி ஒருவன் பாவஞ்செய்திருந்தால், அவன் தேவனை விட்டு விலகி, அவரிடத்தில் செல்ல முடியாதவனாகிறான். ஆகவே, பிரிவும், வருத்தமுமான நிலைமையில், “அவன் பாவஞ்செய்தவனாயிருந்தாலும்”அவன் சபையின் மூப்பர்களை வரவழைத்து, தன்னுடைய தவறை அறிக்கையிட்டு, அப்போஸ்தலர் சொல்லும் விதமாக, “உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்.” இதை நான் ஆவிக்குரிய சொஸ்தப்படுத்தலாகவே புரிந்து கொள்கிறேன். மாம்சீக சொஸ்தப்படுத்துதல் ஏன் இருக்காதா? இதை புரிந்து கொள்ள வேண்டுமானால், முழு வேதாகமத்துடன் இது இணக்கமாயிருக்க வேண்டியதை புரிந்து கொள்ள வேண்டும். மாம்சீக முறையில் குணப்படுத்துதலை எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, நாம் நம்முடைய ஜீவனை பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. நமது கர்த்தருடைய சீஷர்கள் அவரால் குணமாக்கப்பட்டார்கள் என்று எங்கேயும் குறிக்கப்படவில்லை. இயேசு மற்றவர்களைக் குணப்படுத்துவதற்கு தம் சீஷர்களை அனுப்பும் போது, அவர்கள் தங்களைக் குணப்படுத்திக் கொள்வதற்கு அவர் ஒருபோதும் அவர்களிடம் சொன்னதில்லை. அவர்கள்

ஒருபோதும் செய்ததில்லை. இயேசுவும் அவர்களை ஒருபோதும் குணப்படுத்தியதில்லை. பவுலைப் பொருத்தவரையில், வியாதியாயிருந்த பல சகோதரர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கர்த்தர் கிருபை கொண்டிருந்து இறுதியாக அவர்களைக் குணப்படுத்தினார். ஆனால், சகோதரர்களுக்காக, அப்போஸ்தலன் மாயவித்தையான கிரியை எதுவும் செய்யப்பட கட்டளையிடவில்லை. அவர்களுக்கு மேலங்கிகளையோ அல்லது கைக்குட்டைகளையோ, எதையும் அவர் கொடுக்கவில்லை. ஆனால், அவர் மற்றவர்களுக்குச் செய்தார். பேதுருவின் மனைவியின் தாயார் காய்ச்சலினால் வியாதியாக இருந்த போது, அப்பொழுது அவள் குணமாக்கப்பட்டாள். ஆனால் பேதுருவுக்கோ அல்லது சீஷர்களுக்கோ இல்லை. ஆகவே, யாக்கோபின் அறிக்கையை சபைக்குப் பொதுவாகச் சொல்லப்படுவதாக எண்ணினால், வேதாகமத்தின் ஒவ்வொரு விஷயத்திற்கும் மாறுபட்டு இருக்கும்.

நீங்களும் நானும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, சீர்பொருந்துதல் அல்லது ஜீவனை அடைந்தவர்களாக எண்ணப்படுகிறோம். நம்முடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று எச்சரிக்கப்படுகிறோம். நம்முடைய கர்த்தர் பிரசங்கம் மற்றும் போதனை செய்த உழைப்பினிமித்தம் அசதியுற்று களைப்படைந்த போது, அவர் தாம் குணப்பட வேண்டுமென்று ஜெபித்தாரா? அவர் என்ன செய்தார்? நாம் களைப்படைந்தால் நீங்களும் நானும் செய்யும் விதமாகவே, அவர் கிணற்றின் விளிம்பில் உட்கார்ந்து, ஓய்வு எடுத்தார். அவர் பசியாயிருந்த போது, கற்களை அப்பமாக்குவதற்கு கட்டளையிட்டாரா? இல்லை, இது வல்லமையை தவறாக உபயோகப்படுத்துவதாகும் என்று அவர் கூறினார். ஆனால், திரளான ஜனங்களுக்கு உணவளிக்க அந்த வல்லமையை அவர் பிரயோகித்தார். திரளான ஜனங்களுக்கு அளிக்கப்பட்டவைகளில் சிலவற்றை அவர் சாப்பிட்டிருக்கலாம். ஆனால், இது தமக்காக தம்முடைய சொந்த வல்லமையை விசேஷமாகப் பயன்படுத்தியதாக இருந்திருக்காது. **நாம்** பலியிடுவதற்காக அழைக்கப்படுகிறோம். சீர்பொருந்துதலுக்காக அழைக்கப்படவில்லை. இது அடுத்த யுகத்தைச் சார்ந்தது.

தற்கால சத்தியத்தில் நம்பிக்கையுள்ள என்னுடைய நண்பர் ஒரு நாள் என்னைப் பார்க்க வந்து, தனக்கு சளி பிடித்திருப்பதாகக் கூறினார். நான் அலமாரியைத் திறந்து, அவருக்கு உதவும் பொருட்டு சிலவற்றைக் கொடுப்பதற்காக, அவரிடம் கூறினேன். அவர் கூறினார், “இல்லை, கர்த்தரே என்னைக் குணப்படுத்துவார்; நான் இரண்டு அல்லது மூன்று நாட்களில் இதிலிருந்து சரியாகி விடுவேன்.” நான் கூறினேன், “ஓ! இதிலிருந்து நீங்கள் சீக்கிரம் சரியாவதற்கு உதவி புரியலாம் என்று நினைத்தேன்.” அவர் தனக்கு பல் வலி அல்லது காது வலி அல்லது காலில் ஆணி இருந்தால், தேவன் குணப்படுத்துவார் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது பற்றி அப்பொழுது எனக்கு ஞாபகம் வந்தது. அவர் ஒரு சகோதரனைக் குறித்து விசாரித்து, அவர் மிகவும் வியாதி அடைந்து, அவருடைய ஜீவன் விரக்தியுற்று இருப்பதாகவும், அவரும் இதே முறையில் தான் நம்பிக்கைக் கொண்டிருப்பதாகவும் என்னிடம் கூறினார். நான் கூறினேன், ‘சகோதரனே, இந்த சந்தர்ப்பத்தை எடுத்துக் கொண்டு உங்களிடம் ஒன்று சொல்லுகிறேன். நீங்கள் உங்கள் வலிகளையும் வேதனைகளையும் கர்த்தரிடத்தில் எடுத்துச் சென்ற பிறகு காத்திருக்க வேண்டும் என்று நீங்கள் நம்புகிறீர்கள். இப்பொழுது, சகோதரனே, கர்த்தரை தமது குணமளிப்பவராகக் கொண்டிருந்தும், இந்த சகோதரன் இப்பொழுது நீங்கள் அவரைப் பார்க்கக்கூட முடியாதபடி மிகவும் அதிகமாக வியாதிப்பட்டு, வியாதியாயிருந்த நீண்ட நாட்களுக்குப் பிறகு, அவர் மருத்துவரை அணுகி சொஸ்தமாகி விடுகிறார் என்ற உண்மையை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது நீங்கள் வியாதியாக இருக்கிறீர்கள். நீங்கள் வியாதியாக இருந்த பல சந்தர்ப்பங்களை நான் நினைவுகூர்கிறேன். இப்பொழுது, கர்த்தர் என்னை குணப்படுத்துகிறவர் என்று தற்புகழ்ச்சி கொள்வது அல்லது என்னுடைய ஆலோசனைகள் எதுவும் இல்லாத நிலையில் நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்: கர்த்தர் தம்முடைய கிருபைகளினால் என் வாழ்க்கையில் மேலோங்கியிருந்து, நாற்பத்து ஐந்து வருஷங்களில் ஒரு நாள் கூட படுக்கையில் நான் வியாதியாய் இருந்ததில்லை. இப்பொழுது, சகோதரனே, கர்த்தர் உங்களை நல்லவிதமாகப் பார்த்துக் கொள்வதால் அல்லது உங்களை வியாதியாக இருக்கச் செய்து, பிறகு குணப்படுத்துவதா? எது நல்லதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? கர்த்தர் என்னை

நன்றாக வைத்துக் கொள்ள முடியும் என்று அவர் பார்ப்பதாகத் தெரிந்தது. நம்முடைய மாம்சீக உடல் நலத்திற்காக எதையும் உபயோகப்படுத்தவும், எதையும் சரியாகச் செய்யவும், தேவனுடைய ஏற்பாடுகளின்படி, நீங்களும் நானும் பூரணமான உரிமையைப் பெற்றிருக்கிறோம் என்பதே என்னுடைய கருத்து ஆகும். நீங்கள் பசியாக இருக்கும் போது, மாமிசம், அப்பம், உருளைக்கிழங்குகளைச் சாப்பிடுங்கள். அவைகளில் மிகவும் நல்ல மருந்துகளாக சில உள்ளன. சிறிய துக்கம் கூட நல்லது. இப்பொழுது இவைகள் இல்லாமல் செய்வதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. ஒரு சிட்டிகை கற்பூரம் அல்லது வேறு ஏதேனும் ஒன்று கல்லீரலைத் தூண்டி, வயிற்றை சமநிலைப்படுத்தும் என்று நான் நினைத்தால், அப்பம் அல்லது உருளைக்கிழங்குகளுக்குப் பதிலாக, அதை எடுத்துக் கொள்வதில் நான் தயக்கம் காட்ட மாட்டேன். என்னுடைய உடலைக் காத்துக் கொள்வதில் அதே பொது அறிவை உபயோகப்படுத்திக் கொள்வேன் என்று நினைக்கிறேன். நாம் படிக்கிறோம், “பூமியின் மேல் உள்ள சகலவித பூண்டுகளையும் நீங்கள் புசிக்கலாம்.” உங்களால் முடிந்த வரை செய்யுங்கள். நீங்கள் வேதனைப்படுகிற சிருஷ்டி. உங்களுடைய சுமை தணிவதற்கு எதையாவது செய்யுங்கள். நான் சில மருந்துகளை எடுத்துக் கொள்ளும் போது, எல்லா மனுஷர்களுக்கும் கிடைப்பதாகவும், பொதுவாகவும் உள்ளதை அல்லாமல், வேறு எதையும் செய்ய மாட்டேன். நான் கர்த்தரிடத்தில் எல்லாவற்றையும் அர்ப்பணித்திருக்கிறேன். ஆனால் என்னுடைய வயிற்றுக்கு நல்லதா யிருந்தால், அப்பம் மற்றும் மாமிசம் சாப்பிடுவதையோ அல்லது சிறிதளவு கற்பூரம் எடுத்துக் கொள்வதையோ விட்டு விட வேண்டுமென்று கர்த்தர் ஒருபோதும் என்னிடம் எதிர்பார்க்கவில்லை.

## குணமாக்குதல் - இயேசுவின் கட்டளை.

**கே 324:1 :: கேள்வி** **(1911) - 1 -** இதற்கு என்ன அர்த்தம்? வியாதியாயிருப்பவர்களை சொஸ்தப்படுத்தவும், மரித்தோரை எழுப்பவும், குஷ்டரோகிகளை சுத்திகரிக்கவும் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு எங்கே கட்டளையிட்டார்?

**பதில்.** அவருடைய சீஷர்கள் வெளியே சென்று, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதே வேலையைச் செய்தனர்; ஆனால், இந்த சகோதரன் குறிப்பிடுகிற வேதாகம பத்தி ஒன்று உள்ளது. அது இவ்விதமாக கூறுகிறது, “விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், வியாதியஸ்தரை சொஸ்தமாக்குவார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது - - - “ போன்றவை. இதனுடைய விஷயம் என்ன? உண்மை நிலவரப்படி, மூலமுதலான சுவிசேஷத்தின் பகுதியாக இந்த பத்தி இல்லை. அந்த அதிகாரம் ஒன்பதாம் வசனத்துடன் முடிவடைகிறது; ஒன்பதாம் வசனத்திற்குப் பிறகு உள்ள ஒவ்வொன்றும் இடைச்செருகல் ஆகும். நமக்குத் தெரிந்தபடி எட்டாம் நூற்றாண்டிற்கு நெருக்கமாக எங்கேயாவது சேர்க்கப் பட்டிருக்கலாம். அறிஞர்கள் அனைவரும் அறிந்தபடி, கிரேக்க மொழியில் பழங்காலத்திய கையெழுத்துப் பிரதிகளில் இது இல்லை. வேதாகமத்தில் எது சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு ஒன்று உங்களுக்கு அளிக்க வேண்டுமானால், யோவான் சுவிசேஷத்தின் கடைசி வசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது ஒரு இடைச்செருகல் என்று யாரும் பார்க்க முடியும். இது பழைய கைப்பிரதிகள் எதிலும் இல்லை. இது இவ்விதமாகச் சொல்லுகிறது, “இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.” அளவுக்கு மீறி பெரிதாகச் சொல்லப்படுகிறது! இதைப் பெருமளவில் செய்ய விரும்பிய சிலர், எந்த அதிகாரமும் இல்லாமல் அந்த வசனத்தைச் சேர்ப்பதற்கான சுதந்திரத்தை உணர்ந்தவர்களாய் இருந்தார்கள். தேவனுடைய வார்த்தையுடன் சேர்க்கப்பட்ட எல்லாவற்றையும் பற்றி நான் சொல்லவில்லை. அப்போஸ்தலர்கள் எழுதியிருக்கிறபடி, தேவன் என்ன சொன்னார் என்பதில் மட்டுமே நான் நிலைநிற்கிறேன். அதற்கு மேல் ஒன்றுமில்லை.

## குணமாக்கப்படுதல் - ஜெபத்தின் விளைவு.

**கே 325:1 :: கேள்வி (1913) - 1 -** குழந்தைகளிடத்தில் உள்ள மனது அல்லது உடல் சம்பந்தப்பட்ட குறைபாடுகளை களைவதற்கு, அர்ப்பணித்தவர்கள் ஜெபம் பண்ணுவதற்கு, தேவனுடைய திட்டத்தில் உரிய காலம் வந்திருக்கிறதா?

**பதில்.** சீர்பொருந்துதலுக்கான ஆசீர்வாதங்கள் உலகத்திற்கு இன்னும் வந்துள்ளதாக நான் நினைக்கவில்லை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதற்குப் பின்பு, தேவனுடைய ஏற்பாடாகிய சீர்பொருந்துதல் தொடங்கி வைக்கப்படும் என்று நான் புரிந்து கொள்கிறேன். இயேசு முதலாம் வருகையில் சீர்பொருந்துதலின் வழியில் என்ன செய்தாரோ, அந்த சமயத்தில் அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்களோ, அவற்றை தேவனுடைய திட்டத்திற்கு விரோதமாக நாம் கருதுவதில்லை. சீர்பொருந்துதலுக்கு முன்பாகவே, அங்கே கர்த்தர் அற்புதங்களை செய்ய முடிந்தவராகவும், செய்தவராயும் இருந்தால், இது தேவனுடைய சட்டத்தின் மீறுதல் என்று காண்பிக்கும். ஆகவே, தேவன் அதிக அளவில் சீர்பொருந்துதல் ஆசீர்வாதங்களை இப்பொழுது அளித்தால், இயேசுவும் அப்போஸ்தலர்களும் சீர்பொருந்துதல் ஆசீர்வாதங்களை செயற்படுத்துவதிலிருந்து தடங்கலாக எந்த சட்டமும் இல்லாதது போல, இதைத் தடங்கல் பண்ண எந்த சட்டமும் இப்பொழுது இல்லை. ஆனால், அவற்றுக்கான காலம் எதிர்காலத்துக்குரியது ஆகும். ஆகவே, இப்படிப்பட்டவைகள் மற்றும் அவர்களுடைய பெலவீனங்கள் தொடர்பானவைகள் குறித்து நினைக்கவோ அல்லது ஜெபிப்பதாகவோ இருந்தால், என்னுடைய எண்ணம் இது போன்று தான் இருக்கும். என்னுடைய குழந்தைகள், மற்ற குழந்தைகள், மற்றும் அனைத்து மனுஷ குடும்பங்களின் சீர்பொருந்துதலுக்காக, தேவன் முழுமையான ஏற்பாட்டை செய்திருக்கிறார் என்பதை நான் அறிவேன். இந்த முறையில், தேவன் இப்பொழுது விசேஷித்த வெளிப்பாடுகளைக் கொடுக்க தயாராக இருக்கிறாரா என்பது பற்றி நான் நிச்சயிக்க முடியவில்லை. இந்த பாடத்தைக் குறித்து நான் ஜெபம் பண்ணுவதாயிருந்தால், என்னுடைய மனதிலும், என்னுடைய சொல் வெளிப்பாட்டிலும் குறிப்பிட்ட வரையறையுடன் ஜெபிப்பேன். நான் கூறுவேன், “கர்த்தாவே, இதை நான் கேட்கிறதாயிருந்தாலும், என் விருப்பத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே நடக்கட்டும்.” இது போன்ற நிலைமைகளில் இது போன்ற ஜெபத்தைச் செய்வதில் ஒரு தவறும் இல்லை என்று பார்க்கிறேன். நான் கூறுவேன், “என்னுடைய குழந்தைக்கு குறிப்பிட்ட அளவிலான சீர்பொருந்துதலை அளிக்க விரும்புகிறதற்கான சமயம் வந்திருக்கிறதா என்பதை நான் அறியேன். ஆகவே இந்த விஷயத்தை உம்முடைய கைகளில் விட்டு விடுகிறேன். நான் ஜெபிக்கிறேன். இது உம்முடைய சித்தத்திற்கு இணக்கமாய் இருந்தால் அவ்வித ஆசீர்வாதங்கள் வரட்டும். பிதாவே, சீர்பொருந்துதலின் உரிமைகளை நான் எனக்காகக் கேட்கவில்லை. ஏனெனில் இந்த பூமிக்குரிய எல்லாவற்றையும், சீர்பொருந்துதலின் உரிமைகளையும் நான் பலியாக ஒப்புக்கொடுத்து விட்டேன். ஆகவே, எனக்காக நான் எதையும் கேட்கவில்லை.” என்னுடைய விண்ணப்பம் இந்த குழந்தைக்காக மட்டுமே உள்ளது. இந்த ஜெபத்தின் மையமாக இந்த குழந்தை உள்ளது

## கேட்கும் காது - இது அற்புதமானதா?

**கே 325:2 :: கேள்வி (1909) - 2 -** தேவனிடத்திலிருந்து அற்புதமான வெகுமதியாக கேட்கும் காதை நாம் பெறுகிறோமா? அல்லது தேவசாயல் முழுவதுமாக அழிக்கப்பட்டிருக்கவில்லை என்ற காரணத்தினாலா?

**பதில்.** “கேட்கும் காது” என்ற இந்த சொற்றொடரை பல்வேறு நிலைப்பாடுகளில் பார்க்கலாம் என்று நான் புரிந்து கொள்கிறேன். ஒரு சுபாவ மனுஷனை நீங்கள் குறிப்பிட்டால், அதற்கு ஒரு அர்த்தம் உண்டு. ஆனால், அது ஒரு புதிய சிருஷ்டியைக் குறித்தால், அதற்கு வேறு ஒரு அர்த்தம் உண்டு. உதாரணமாக, நான் கிறிஸ்தவர்களுடன் பேசுகிறவனாக, நம்முடைய கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, நம்முடைய கண்களும் நம்முடைய காதுகளும் திறக்கப்படுவது பற்றி பேசுகிறவனாயிருந்தால், கர்த்தருடைய ஆவியை பாராட்டக்கூடிய விதத்தில் நம்முடைய ஆவிக்குரிய கண்களையும் காதுகளையும் பற்றி நான் பேசுகிறவனாகவே இருக்கிறேன்.

வேறொரு எடுத்துக்காட்டு, கர்த்தரிடம் நீங்கள் முதன் முதலாக வந்த போது, கர்த்தரிடத்தில் நீங்கள் இழுக்கப்பட்டீர்கள் அல்லது அவருடைய சத்தத்தைக் கேட்டீர்கள். அது உங்களை ஈர்த்தது. நீங்கள் அவரிடத்திற்கு வந்தீர்கள். இங்கு தான், மாம்சீக காது விழுகையினால் முழுவதுமாகப் பழுதடைந்திருக்கவில்லை. நீங்கள் கொஞ்சம் பயபக்தியுடன் பிறந்திருப்பதால், "நீங்கள் கர்த்தருக்கு காணிக்கையை கொண்டுவரவேண்டும். நீங்கள் அவருக்கு நன்றிசொல்ல வேண்டும்" என்று அது சொல்கிறதாய் இருக்கிறது. இது உங்களை தேவனுக்குப் பின்பற்றிச்செல்லும் உணர்வுக்கு வழி வகுத்தது. அவர் உங்களைக் காண்பதில் மகிழ்ச்சியுற்றார். அவர் உன் கைகளைப் பிடித்துக் கொண்டு, சொல்கிறார், "இந்த வழி, என் நேர்மையான மனுஷனே, இவர் தான் இயேசு, என்னிடத்தில் வருகிறவர்கள் எல்லோரும் இவர் வழியாக வந்திருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், மனுஷ சுபாவத்தில் கேட்கும் காதை, புதிய சிருஷ்டியினுடய கேட்கும் காதுடன் குழப்பிக்கொள்ளும் தவறைச் செய்யாதீர்கள்."

## பரலோகமும் நரகமும் - பாஸ்டர் ரசல் எதுவும் இல்லை என்று கூறினாரா?

**கே 326:1 :: கேள்வி (1909) - 1 -** பரலோகம் அல்லது நரகம் இல்லையென்றால், நீங்கள் அதை எப்படி கண்டுபிடித்தீர்கள் என்பதை நீங்கள் தயவு செய்து எங்களுக்கு சொல்லுங்கள்.

**பதில்.** பரலோகம் இருக்கிறது என்றும், எல்லா தூதர்களுக்கும் பரிசுத்தவான்களுக்கும் போதுமான இடம் உள்ளதென்றும் நாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். நம்முடைய கர்த்தர் சொன்னார், "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்." ஆனால், அவர் மனுக்குலத்திற்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவது பற்றி அவர் எதையும் பொதுவாகச் சொல்லவில்லை. அவர்களுக்காக ஆயத்தம் பண்ணுகிற காலம் ஆயிர வருஷ அரசாட்சியாகும்.

## பரலோகமும் நரகமும் - - இப்படிப்பட்ட இடங்கள் உள்ளதா?

**கே 326:2 :: கேள்வி (1909) - 2 -** இப்படிப்பட்ட இடங்கள் இல்லையென்றால், பரலோகமும் நரகமும் வேதாகமத்தில் ஏன் குறிக்கப்படுகிறது?

**பதில்.** அப்படிப்பட்ட இடங்கள் உள்ளன என்று நாங்கள் நம்புகிறோம். பரலோகம் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். வேதாகமம் சொல்லுகிறது, "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி."

இந்த உலகத்தில் பிறக்கிற ஒவ்வொருவரும் இறுதியாக பரலோகம் செல்வார்கள் என்று அனுமானிப்பது, நாம் விழுந்திருக்கிற பல தவறுகளில் இதுவும் ஒன்றாகும். மேன்மை பொருந்திய அவருடைய ஞானம் மற்றும் வல்லமையில், தேவன் தேவதூதர்களைப் படைத்ததில் மகிழ்ச்சியுற்றார். பிறகு தொடர்ந்து, அவருடைய திட்டத்தின் முன்னேற்றத்தில் அடுத்ததாக, இந்த பூமியை உண்டாக்கி, பிறகு மனுக்குலத்தை சிருஷ்டித்ததில் மகிழ்ச்சி கொண்டார். அவர் மனுஷர்களை தேவதூதர்களிலும் சற்று குறைவாகவே உண்டாக்கினார். மனுஷன் ஒருபோதும் தேவதூதனாக இருக்கவில்லை. அவன் தேவதூதனாயிருப்பதிலிருந்து ஒருபோதும் விழவில்லை. அவன் தேவதூதனாயிருப்பதற்கான நோக்கம் ஒருபோதும் இல்லை. மனது மற்றும் விருப்பம் போன்ற தெய்வீக பண்புகளைப் பொருத்த வரையில் தேவதூதர்களைப் போலவும், தேவதூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவனாகவும் மனுஷன் படைக்கப்பட்டான். சில விஷயங்களில் தேவதூதர்களை விட உயர்வாக மனுஷனை தேவன் உண்டாக்கினார் என்பதை, பூமியின் மேல் ஆண்டு கொள்ளும் உரிமையை மனுஷர்களுக்கு தேவன் அளித்ததினால் அறியலாம். ஆனால் அவர் தேவதூதர்களுக்கு எவ்வித ஆளுகையையும் ஒருபோதும் கொடுத்ததில்லை. இந்த விஷயங்கள் அனைத்தையும் அவர் மனுஷர் காலடியிலேயே வைத்தார். பரலோகம் தேவதூதர்களுக்கும் அவருக்கும் உரியதாக இருந்தது. இந்த தற்காலத்தில், தேவன் புதிய சிருஷ்டியை வளர்ச்சி பெறச் செய்து கொண்டிருக்கிறார். அவர்கள் பரலோகம் செல்லப் போகிறார்கள். வேதாகமம் சொல்லுகிறது போல, அவர்கள் தேவதூதர்களைப் போன்ற மேனியைக்

கொண்டிருப்பது மட்டும் அல்லாமல், சில விஷயங்களில் அவர்களை விட மேலானவர்களாக, தேவ சுபாவத்தைப் பெற்றுகொள்வார்கள்.

ஆவியின் சிருஷ்டிகளில் எத்தனை விதமான வரிசை முறைகள் உள்ளன என்பது நமக்குத் தெரியாது. ஆனால் கேரூபீன்கள் மற்றும் சேராபீன்களைப் பற்றி தேவன் சொல்லும்போது, தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளுங்கள் என்றார். ஆனால், பூமியை வசிப்பதற்காக தேவன் வடிவமைத்த நிலையில், இது தேவனுடைய திட்டத்தை குறுக்கிடுவதில்லை. தேவன் இந்த உலகத்தைப் பயிற்றுவிக்க ஆறாயிரம் வருஷங்கள் செலவழித்து, பிறகு அவர்களை நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவர்களாவதற்கு ஆயிரம் வருஷங்கள் செலவழித்த பிறகு, அவர் அவர்களை அழித்து விடுவார் என்று நினைப்பது மிகவும் அபத்தமானது.

நரகத்தைப் பொருத்தவரையில், அதைப் பற்றி மற்றவர்களை விட **நாங்கள்** கண்டிப்பாக அதிகம் நம்புகிறோம். நாங்கள் புரிந்து கொண்டபடி, **எல்லோரும்** அங்கே போகிறார்கள். ஆனால், ஜனங்களில் ஒரு பகுதி மட்டும் அங்கே போகிறார்கள் என்று மற்றவர்கள் சொல்கின்றனர். ஆனால் இது வித்தியாசமான நரகம் ஆகும். இது மரித்தவர்களின் நிலையைக் குறிக்கும் சீயோல் (SHEOL) என்ற வேதாகம நரகம் ஆகும். அகில உலகத்தாரும் சீயோலுக்குப் போகிறார்கள். இந்த வார்த்தை பழைய ஏற்பாடு முழுவதிலும் எப்படி உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை உங்கள் வேதாமத்தை எடுத்து ஒப்பிட்டுப் பாருங்கள். நல்லவர், கெட்டவர் எல்லோரும் அங்கே போகின்றனர். அவர்கள் எல்லோரும் அவர்களுடைய பிதாக்களுடன் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் நல்லவர் அல்லது கெட்டவர் என எப்படி இருந்தாலும் அவர்களுடன் தூங்குகின்றனர். அவர்களுடைய பிதாக்கள் நரகத்தில் இருந்தால், அவர்களுடைய பிதாக்களுடன் அவர்கள் தூங்கினார்கள் என்று சொல்வது மிகவும் விசித்திரமாயிருக்கும். ஏனெனில், மத ரீதியான நரகத்தில் அவர்கள் விழித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நரகமும் பரலோகமும் இருக்கிறது என்பதை நாங்கள் மறுக்கிறதில்லை. ஆனால், இருண்ட யுகத்திலிருந்து நம்மை வந்தடைந்திருக்கும் இரவுக்குரிய பிரமைத் தோற்றங்களையே நாங்கள் மறுக்கிறோம்.

## நரகம் - - இதற்கு எதிரானது.

**கே** **327:1 ::** **கேள்வி** **(1909) - 1 -** ஒவ்வொன்றிற்கும் எதிர்மறை உள்ளது என்று நாம் சொல்லுகிறோம். அப்படியானால், தண்டனைக்குரிய இடம் எதுவும் இல்லையா?

**பதில்.** நல்லது, ஒவ்வொன்றுக்கும் எதிர்மறை உள்ளது என்று நான் சொல்லி அதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. நமது கர்த்தர் அப்படிச் சொன்னதும் இல்லை. அப்படி யார் சொன்னாரோ, அவரிடம் தான் நீங்கள் இந்த கேள்வியை கேட்க வேண்டும். மலை எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கே பள்ளத்தாக்கு நிச்சயமாக இருக்கும் என்பது உண்மை. ஆனால், கடலிலிருந்து வெளியே எழும்பி வரும் மலைகளும் உள்ளன. அவற்றுக்கு பள்ளத்தாக்கு இருப்பதில்லை. நல்ல விஷயங்களுக்கு எதிர்மறையாக இழிவானவை இருக்கும். இனிப்பான பொருட்களுக்கு எதிர்மறையாக புளிப்பானவை உள்ளன.

வேதாகமம் ஜீவனையும் மரணத்தையும் எதிர்மறையாக வைக்கிறது. தேவனுக்கு ஊழியம் செய்யாதவருக்கு மரணத்தை தவிர ஜீவன் கிடையாது. ஆனால், ஊழியம் செய்து அவரைக் கீழ்ப்படிந்து நடப்பவருக்கு ஜீவன் உண்டு. இது தான் எதிர்மறைக்கான சரியான வகை ஆகும். இதற்கு கர்த்தருடைய வார்த்தை நமக்கு உண்டு, “நான் ஜீவனையும் மரணத்தையும் உனக்கு முன் வைத்தேன், நீ பிழைக்கும்படி ஜீவனைத் தெரிந்து கொள்.” ஆகவே, கீழ்ப்படிதல் மற்று ஜீவன், கீழ்ப்படியாமை மற்றும் மரணம் என்பது தான் ஆயிர வருஷ யுகத்தின் மையக்கருத்து ஆகும். இவைகள் தான் நேர்மாறானவை அல்லது எதிர்மறை ஆகும்.

## நரகம் - பாஸ்டர் ரசல் அவர்களால் அழிக்கப்பட்டது.

**கே 327:2 :: கேள்வி (1911) - 2 -** நீங்கள் நரகமும், அதின் சித்தரவதையும் இல்லை என்று சொன்னால், பிசாசை ஏன் இல்லை என்று சொல்லுகிறதில்லை?

**பதில்.** நான் நரகம் இல்லை என்று சொல்லுகிறதில்லை, அருமையான நண்பர்களே, இதற்கு முன் ஒருபோதும் கேட்டிராத வண்ணம், நான் நரகத்தைப் பற்றி அதிகமாய் பிரசங்கம் பண்ணி சாட்சியிட்டதை இந்த மத்தியான வேளையில் இங்கே இருந்த நீங்கள் எல்லோரும் கேட்டிருப்பீர்கள். ஒவ்வொருவரும் நரகத்திற்குச் செல்கிறார்கள் - - வேதாகம நரகம் என்று கூறினேன். ஆனால், வேதாகம நரகத்தில் பேய்கள் ஏதும் இல்லை. நரகத்தில் பேய்களைப் பற்றி எதையும் வேதாகமம் ஒருபோதும் சொல்கிறதில்லை. யாரை விழுங்கலாமோ என்று கர்ஜிக்கிற சிங்கம் போல் சாத்தான் வகை தேடி சுற்றித் திரிகிறான் என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. விண்வெளி அல்லது காலப்பரிமாணத்திற்கு அப்பால் ஏதோ ஒரு இடத்தில் அக்கினியைத் தூண்டிக்கொண்டிருந்தால், வின்னிபெக் (WINNIPEG) நகரத்தில் அந்த காரியங்களை அவனால் எப்படி செய்ய இயலும்?

## நரகம் - பரலோகத்திற்கு எதிராக உள்ளது.

**கே 327:3 :: கேள்வி (1911) - 3 -** பரிசுத்தவான்களுக்கு நித்திய சந்தோஷமான பரலோகம் இருக்கிறது என்றால், அக்கிரமக்காரருக்கு நித்திய சித்தரவதையான நரகம் கூட கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று அறிவிப்பவர்களுக்கு நான் என்ன பதிலளிக்க வேண்டும்?

**பதில்.** நல்லது, இந்த கேள்வியின் தர்க்கத்தின்படி உண்மையில் இது போன்ற நபருக்கு பதிலளிக்க நாம் விரும்புகிறதில்லை. ஏனெனில் இது மூர்க்கமாகத் தோன்றுகிறது. கிறிஸ்தவம் ஒருபோதும் மூர்க்கமாக இருப்பதில்லை. இது போன்ற கேள்வியைக் கேட்கும் நபருக்கு பகுத்தறியும் நல்ல மனத்திறன் இல்லை என்பதை நமக்கு உணர்த்துகிறது. சந்தோஷத்தில் நித்திய ஜீவனுக்கும், சித்திரவதையில் நித்திய ஜீவனுக்கும் இடையே எந்த ஒப்பிடுதலும் கிடையாது. இப்படிப்பட்ட உட்கருத்து வேதாகமத்தில் நமக்கு முன் வைக்கப்படுகிறதில்லை. ஜீவனுக்கு எதிர்மாறாக மரணம் உள்ளது. நீங்கள் ஜீவனோடிருப்பீர்கள் அல்லது நீங்கள் மரணமடைவீர்கள். ஆகவே, தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கும். “நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன்; நீ பிழைக்கும்படி ஜீவனைத் தெரிந்து கொள்.” நாம் ஜீவனோடிருப்பதற்கான சுவிசேஷத்தின் முழுமையான அழைப்பு இதுவே. தேவன் ஜீவன் அளிக்கிறார். நமது கர்த்தராகிய இயேசுவின் வழியாக இல்லாமல் யாருக்கும் நித்திய ஜீவன் இல்லை என்று அவர் அறிவிக்கிறார். “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். ஆனால் தேவனுடைய கோபம் அவன் மேல் நிற்கும்.” தேவனுடைய கோபம் மரண தண்டனை ஆகும் - நீங்களும் நானும் இன்றைய உலகத்தை கண்ணோக்கும் போது, நாம் பார்க்கும் ஒவ்வொரு சவ அடக்கமும், துயர் குறித்து முக்காடாக அணியப்படும் கறுமையான பட்டுத்துணியைப் பார்க்கும்போது, ஒவ்வொன்றும் வியாதியையும் மரணத்தையும் சுட்டிக் காட்டுவதாகவும், தேவனுடைய கோபத்தை தெரிவிப்பதாகவும் உள்ளது. வேதாகமம் குறிப்பிடும் விதமாக, இது தேவனுடைய தண்டனை ஆகும். மற்றதெல்லாம் தவறான கருத்து ஆகும். நாம் பின்னாகத் திரும்பி, தகப்பனாகிய ஆதாமின் மேல் தேவன் கொடுத்த சாபம் என்ன என்பதைப் பார்க்கிறோம். ஆதாம் ஏதேன் தோட்டத்தில் வைக்கப்படும் போது, அவன் தேவனுக்கு கீழ்ப்படிந்து இருந்தால், அவன் ஜீவனோடிருந்து மகிழ்ச்சியாக வாழ்வான் என்றும் பூலோக ஏதேனில் வாழ்வான் என்றும், தேவனுக்கு கீழ்ப்படியாவிட்டால் அவன் மரணமடைவான் என்ற நிபந்தனை இருந்தது. “பாவத்தின் சம்பளம் மரணம்.” “பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும்.” இது தேவனுடைய தண்டனை ஆகும். ஆகவே தான், பிறகு, தகப்பனாகிய ஆதாம் கீழ்ப்படியாத போது, இந்த தண்டனை அல்லது மரண சாபம் அவன் மேல் வந்தது. அவனுடைய பிள்ளைகளாகிய நீங்களும் நானும் இந்த மரண சாபத்தினால் உபத்திரவப்படுகிறோம். வலிகள், வேதனைகள் மற்றும் நீங்கள் அறிந்ததும், தன்னகத்தே கொண்டிருக்கிறதுமான எல்லாவிதமான மனது மற்றும் தார்மீக குறைபாடுகள் ஆகிய இவையெல்லாவற்றிலும் நாம் செய்ய வேண்டியவைகளில் மரணம் தான்

நம்மில் அதிகமாக வேலை செய்கிறது. இந்த மூலமுதலான தண்டனை தான் மனுக்குடும்பத்தை கல்லறை வரைக்கும் தாங்கிச் செல்கிறது. வேதாகமத்தின் மாபெரும் நரகம் இது தான், **சீயோல்** (SHEOL), **ஹாதேஸ்** (HADES). பாவத்திற்கு தண்டனை மரணம். இதற்கு இடையிலுள்ள எல்லா வலிகளும், வேதனைகளும் அந்த தண்டனையின் உச்சக்கட்ட நிலைக்கு கொண்டு செல்வதற்கு இடையிலுள்ள நிகழ்வுகளாகவே இருக்கின்றன. ஆகவே, இதைத் தான் ஆதாமின் ஜீவனுக்கும் மரணத்திற்கும் முன்பாக தேவன் முன்னமைத்தார்; பரலோகத்தையும் நரகத்தையும் அல்ல; கீழ்ப்படிகிறவனாயிருந்தால், அவன் ஏதேனில் தொடர்ந்து ஜீவனோடு இருந்திருக்கலாம். கீழ்ப்படியாதவனாய் இருந்தால் அவன் மரணமடைய வேண்டும். அவன் கீழ்ப்படியாமல் இருந்தான், அவன் மரணம் அடைந்தான். முழுமையான மனுக்குலமும் மரணத்திற்குள் இருக்கிறது என்பதற்கு நாம் எல்லோரும் சாட்சிகள். பரிசுத்தவானாகிய பவுல் இந்த விஷயத்தை மிகவும் தெளிவாக ரோமர் 5:12ல் வெளிப்படுத்துகிறார். "இப்படியாக, ஒரே மனுஷனால் பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுமாயிற்று." யார் மீதும் நித்திய வாதை செலுத்தப்படும் என்று ஒரு வார்த்தை கூட சொல்லுகிறதில்லை; அப்படிப்பட்ட வாக்கியம் ஏதும் இல்லை. நித்திய வாதையில் தேவனுடைய கோபம் வெளிப்படுகிறதில்லை. ஆறாயிரம் வருஷங்களாக நமது மனுக்குலத்தின் மேல் இருந்து வரும் மரண தண்டனையில் தான் தேவனுடைய கோபம் வெளிப்படுத்தப்படுகிறது. ஆகவே, எல்லாவித அநியாயத்துக்கும் விரோதமாக தேவனுடைய கோபம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று வேறொரு இடத்தில் அப்போஸ்தலர் தெரிவிக்கிறார். நரக அக்கினியில் தேவ கோபம் வெளிப்படுத்தப்படுகிறது என்று யார் கூறுவார்? இதை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? இல்லவே இல்லை. இது யாருக்கேனும் எப்போதாவது வெளிப்படுத்தப்பட்டுள்ளதா? தேவ கோபம் எப்படி வெளிப்படுத்தப்படும்? நான் பதில் கூறுகிறேன், நீங்கள் இதை உணருவீர்கள். உங்களைச் சுற்றி நமது மனுக்குலம் சாகிறதை நீங்கள் பார்க்கிறீர்கள். ஆகவே, தேவனுடைய உரிய காலத்தில், நமது இனம் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். யார் உதவி செய்யக்கூடியவரோ, காப்பாற்ற வல்லமை பொருந்தியவரோ, அவர் மேல், இயேசுவின் மேல் தேவன் நம்பிக்கை வைத்திருக்கிறார்; இயேசு வெளிப்பட்டிருக்கிறார். அவர் தேவனுடைய இரக்கத்தின் வெளிப்பாடாக இருந்தார். தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திருக்கிறார்! அவர் நமக்காக நித்திய வாதைக்குள் செல்லவில்லை; அவர் நித்திய வாதைக்கான அபராதத்தை செலுத்தவில்லை. நீங்களும் நானும் ஏதாவது நித்திய வாதை தண்டனைக்கு கீழே இருந்திருந்தால், அதன் கீழேயே இன்னும் இருந்திருப்போம். நம்முடைய கர்த்தரால் இதற்கான அபராதம் எப்போதும் செலுத்தப்படவில்லை. யாராலும் இது எப்பொதும் செலுத்தப் பட்டிருக்கவில்லை. வேதாகமம் என்ன சொல்கிறது? நமக்கு எதிரான தண்டனை மரண தண்டனை என்று வேதாகமம் சொல்கிறது. நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதிபரராகிய இயேசு மரணமடைந்தார். ஆகவே, அவர் செலுத்திய தண்டனை மரண தண்டனை ஆகும். "அவர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்." "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார்." "அவருடைய ஆத்துமா தன்னை குற்ற நிவாரண பலியாக ஒப்புகொடுத்தது." "அவர் தம்முடைய ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்" என்று வேதாகமம் மேலும் சொல்லுகிறது. நான் மகிழ்ச்சி அடைகிறேன், மகிமையில் பரிசுத்தவான்களின் சபையை முதன் முதலாக பார்ப்பதில் நான் திருப்தி அடைவேன். தேவனைப் பற்றிய முழுமையான அறிவு மனுக்குல குடும்பம் அனைத்திற்கும் வந்தடைந்து, தேவனுடைய கிருபையும் நித்திய ஜீவனும் திரும்ப வருவதற்கான வாய்ப்பை நமது மனுக்குலத்தின் ஒவ்வொரு தனிப்பட்டவரும் பெற்றுக்கொண்டிருக்கும் போது, ஊழியம் முடிவடைவதுடன் நான் முழுவதுமாக திருப்தி அடைவேன். மனுக்குலத்தின் பெருந்திரளான கூட்டம் ஆயிரம் வருஷங்களில் கிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் பூரணமான மனுஷீக ஜீவனுக்குள் திரும்ப வருவதற்கான சலுகையை பெறுவார்கள். எக்காலத்திலும் இழந்திராத பரலோக நிலைமைக்கு, இந்த மேலான அழைப்புக்கு பரிசுத்தவான்கள் வருவார்கள். நீங்கள் எப்போதும் பரலோக நிலைமையை இழக்கவில்லை. நீங்கள் ஜீவனை இழந்தீர்கள். நீங்கள் இயேசுவின் காலடிகளில் நடக்கிறவர்களானால், நமக்கு ஜீவனை மட்டும் கொடுக்காமல், மிகவும்

அபரிமிதமான அளவில் ஜீவனைக் கொடுப்பதாக தேவன் கூறுகிறார். ஆகவே, அந்த வசனத்தை மறுபடியும் மேற்கோள் காட்டுகிறேன், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். ஆனால் தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்." மரண தண்டனை அவன் மேல் தொடரும். அவன் இரண்டாம் மரணத்திற்குள் செல்வான். போதுமான அளவுக்கு தெளிவாக இருக்கிறது! ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நாம் முதலாம் மரணத்தில் இருக்கிறோம். இப்பொழுது தேவன் தம்முடைய குமாரனை ஜீவனை அளிப்பவராகவும், மரணத்திலிருந்து காப்பாற்றுகிறவராகவும் அனுப்பின போது, ஒருவன் குமாரனை புறக்கணித்து அல்லது மறுத்தால், அவன் தன்னுடைய சொந்த பாவத்திற்காக மரணம் அடைவான். இது தான் இரண்டாம் மரணம் ஆகும்.

## மரணம் - துன்மார்க்கர் தள்ளப்படுதல்.

**கே** 329:1 :: **கேள்வி** **(1913) - 1 -** தயவு செய்து விளக்கவும், "துன்மார்க்கரும் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்." சபையையும் உள்ளடக்கியதாக, எல்லோருக்கும் உள்ள இடமாக இந்த நரகம் இருக்கிறதா?

**பதில்.** முதலாவதாக, தேவனை மறக்கிற ஜனங்கள் அவர்கள் ஏற்கனவே அறிந்தவர்களாக இருக்க வேண்டும். தான் கற்றுக் கொள்ளாத எதையும் எந்த மனுஷனும் மறக்க முடியாது. பெரும்பான்மையான ஜனங்களுக்கு தேவனைப் பற்றி கற்றுக்கொள்வதற்கான சமயம் எதிர் காலத்தில் தான் உள்ளது. உண்மையான உணர்வின்படி தேவனை அறிந்தவர்கள் ஸ்பிரிங் ஃபீல்டு (SPRINGFIELD) நகரத்தில் வெகு சிலரே உள்ளனர். ஒவ்வொரு நாளும் தேவனைப்பற்றிய மேலான அறிவுக்கு வருகிறதை நீங்களும் நானும் பார்க்கிறோம். இயேசு கூறினார், "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மை அறிவதே நித்திய ஜீவன்." அந்த உணர்வில் அவரை எத்தனை பேர் அறிந்திருக்கிறார்கள்? ஒவ்வொருவரும் தான் அவரை மறக்க முடிவதற்கு முன்பு, அவரை அறிந்து கொள்ள வர வேண்டும்.

ஆனால். சங்கீதக்காரனால் குறிக்கப்படும் அந்த துன்மார்க்கர்கள் யார்? அந்த குறிப்பிட்ட வசனப் பகுதியை நாம் உற்று நோக்கி, அது எப்படி கூறுகிறது என்பதை நினைவில் கொள்ளுவோம்? எபிரேய மொழியின்படி இந்த முறையிலேயே இது வாசிக்கப்பட வேண்டும்: "துன்மார்க்கரும் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் சீயோலுக்குள் திரும்புவார்கள்." சீயோலுக்குள் இரண்டாம் தடவை செல்வதை இது அர்த்தப்படுத்துகிறது, அல்லது, இதை வேறுவிதமாகச் சொல்வோமானால், அவர்கள் இரண்டாம் மரணத்திற்கு போவார்கள். முதல் தடவையாக ஒவ்வொருவரும் சீயோலுக்குள் செல்வார்கள். அக்கிரமக்காரர் மட்டுமல்ல, ஒவ்வொருவரும்; பணக்காரன், ஏழை, கறுப்பானவர்கள், வெண்மையானவர்கள், ஆண், பெண், ஒவ்வொருவரும் சீயோலுக்குள் செல்வார்கள். ஆனால், குமாரன் அவர்களை முதலில் விட்டு விடாமல், அவர்கள் இரண்டாம் தடவை அங்கு செல்ல முடியாது. மரண நிலைமையிலிருந்து இந்த கைதிகளை விடுவிப்பது தான் ஆயிர வருஷ யுகத்தில் அவருடைய பணியாக இருக்கும் என்று நாம் அறிகிறோம். கைதிகளைப் பார்த்து அவர் கூறுவார், "உங்களைக் காண்பியுங்கள், வாருங்கள்." மேசியாவின் ஆட்சிக்காலமாகிய ஆயிரம் வருஷங்களில், அந்த எல்லா கைதிகளும் வருவார்கள். அந்த காலத்தில் நித்திய ஜீவனுக்கான தகுதியை நிரூபிக்காதவர்கள் சீயோலுக்குத் திரும்புவார்கள். இதை எளிதாக வேறுவிதமாக சொன்னால், இது இரண்டாம் மரணம் ஆகும்.

## மேலான அழைப்பு - - மற்றவர்களின் கிரீடங்களுக்குப் பேராசைப்படுதல்.

**கே** 330:1 :: **கேள்வி** **(1905) - 1 -** அழைக்கப்பட்டவர்கள் எல்லோரும் 1900ம் வருஷத்திற்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றால், நாம் மற்றவர்களின் கிரீடங்களுக்கு ஆசைப்படுகிறோம் அல்லவா? அந்த சமயத்திலிருந்து பந்தயத்தை துவக்கி இருப்பவர்களைக் குறித்து சொல்லுகிறேன்?

**பதில்.** கேள்வி குறிப்பிடுகிறது போல சகோதரன் அர்த்தப்படுத்திக் கொள்ளவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏனெனில், தேவைப்படும் எண்ணிக்கை தேர்தெடுக்கப்பட்டிருந்தால், விஷயம் அத்துடன் முடிவடைந்திருக்கும். தேர்ந்தெடுக்கப்படுதலை முடிவுக்கு கொண்டு வர, போதுமான எண்ணிக்கையினர் 1900ம் வருஷத்திற்கு முன்பு அழைக்கப்பட்டிருந்தால், மற்றவரின் கிரீடத்திற்கு நாம் ஆசைப்படுவதாக அவர் அர்த்தங்கொள்கிறார் என்று நான் நினைக்கிறேன். நாங்கள் பதிலளிக்கிறோம், இல்லை, இல்லவே இல்லை, இது தேவனுடைய கிருபையின்படியே உள்ளது., நம்முடைய விருப்பத்தின்படி அல்ல. நீங்களும் நானும் இதைச் செய்கிறேன் அல்லது அதைச் செய்கிறேன் என்பதனால் அல்ல. ஆனால், தேவன் நமக்கு சிலவற்றைக் கொடுக்க சித்தமாக உள்ளார். தேவன் தம்முடைய சொந்த வேலையை, சத்தியத்தை சிதறலாக்குவது போன்றவற்றை செய்து இருக்கிறார். அந்த அழைப்பிற்குள் வர அவர்களுக்கு தேவன் தடை செய்திருக்கிறார். அவர்கள் அந்த கிரீடத்திற்கு தகுதியில்லாதவர்களாக எண்ணப்பட்டால், அல்லது தேவ தயவு இருந்தும் அவர்கள் அப்படி நடந்தால், கிரீடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் நோக்கமாயிருக்கும் வகையைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இல்லை. இதனுடைய விளைவு எப்படி இருக்கப் போகிறது என்பதை தாம் அறிந்திராதவர் போல, தேவன் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க நோக்கமாயிருக்கிறார். ஒருவேளை தற்காலத்தில் தேவனுடைய கிருபையைப் பெறுகிறவர்கள் போதிய எண்ணிக்கையிலிருந்து, இதுவரையிலும் அர்ப்பணிப்பு ஏதும் செய்திருக்காதவனாக நான் இருப்பதாக அனுமானித்தால், நான் அவருடைய தயவு பெற்றவர்களில் ஒருவனாக இருக்குமாறு கர்த்தர் சில ஆசீர்வாதத்தை அளிக்க வேண்டும் என்று நான் மிகவும் விருப்பமுள்ளவனாக இருந்தால், முழுமையான எண்ணிக்கையும் முடிவடைந்திருக்கலாம் என்பது எனக்குத் தெரியாத நிலையில், நான் அவ்வாறு முயற்சி செய்வது பிரயோஜனமாக இராது. ஏனெனில், கிரீடத்தை மற்றவரிடமிருந்து எடுத்துக் கொள்வது போலாகும்? நான் சொல்ல வேண்டியது, "கர்த்தாவே, நான் உம்முடைய கிருபையின் ஐசுவரியங்களை அறிந்திருக்கிறேன். எண்ணிக்கை முழுமை அடைந்திருந்தாலும் அல்லது இல்லை என்றாலும், நான் என்னை உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன். நீங்கள் விரும்புகிறபடி எனக்கு கொடுங்கள். கர்த்தர் கொடுக்கிற எதுவாயிருந்தாலும், அது மிகவும் பெரிதானவையாகவே இருக்கும். எல்லா ராஜாக்களும் ராஜாக்கள் என்ற முறையில் அவர்களுடைய நிலைகளுக்கு தக்க விதமாகவே பரிசுகளை வழங்குவார்கள். மட்டமானவற்றைக் கொடுப்பது தேவனுடைய தன்மைக்கு இணக்கமாக இராது. கர்த்தர் தம்முடையவர்களாகிய ஆயிரக்கணக்கான பேர்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கப் போகிறார். நீங்கள் அவருக்கு உங்கள் இருதயங்களைக் கொடுங்கள். நீங்கள் கேட்டிருக்க முடியாத அல்லது நினைக்க முடியாத அளவுக்கு நீங்கள் அளவுக்கு அதிகமாக அபரிமிதமாகப் பெறுவீர்கள். கர்த்தருக்கு உங்களையே அர்ப்பணிப்பது, மற்றவருடைய கிரீடத்திற்கு பேராசைப்படுவதாக இருப்பதில்லை. அவர் உங்களுக்கு கிரீடத்தைக் கொடுத்தால், எடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், இது மற்ற எவருடைய கிரீடத்திற்கு ஆசைப்படுவதாக இராது.

## மேலான அழைப்பு - - நம்முடைய குடும்பங்கள் நம்மைப் பற்றி அறிந்து கொள்வார்களா?

**கே 330:2 :: கேள்வி (1909) - 2 -** நாம் நம்முடைய அழைப்பையும் தேர்ந்தெடுக்கப்படுதலையும் நிச்சயப்படுத்தி இருக்கிறோம் என்பதை நமக்குப் பின்னாக விடப்படும் நம்முடைய குடும்பத்தார் எவரும் அறிவார்களா? அதைப் எப்படி அவர்கள் அறிவார்கள்?

**பதில்.** அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். இது நமது பரலோக பிதா கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நம் மீது கொண்டிருக்கும் அவருடைய கிருபையின் ஐசுவரியங்களைப் பற்றி சிலவற்றை தெரியச் செய்வதைப் போல இருக்கும். சங்கீதப் புஸ்தகத்தில் வேதாகமம் சொல்கிறது, "சீயோனைக் குறித்து இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்." இதற்கு என்ன அர்த்தம்? இது பரலோக சீயோனைக் குறித்து, முதலாம் உயிர்த்தெழுதலில் பிறக்கப் போகிறவர்களைக் குறித்துச் சொல்லப்படுகிறது என்று நான்

நினைக்கிறேன். நம்முடைய கர்த்தராகிய இயேசு திரைக்கு அப்பால் பிரவேசித்ததை நாம் அறிகிறதைப் போல, நம்முடைய நண்பர்களும் நம்முடைய குடும்பத்தாரும் நம்முடைய உயிர்த்தெழுதலையும், சீயோனில் பிறந்ததையும், திரைக்கு அப்பால் நாம் பிரவேசித்திருந்ததையும் அறிவார்கள்.

## பெரும்பாதை - கட்டாயப்படுத்தப்படுமா?

**கே** 330:3 :: **கேள்வி** (1912) - 3 - வற்புறுத்துதல் அல்லது வலுக்கட்டாயப்படுத்தல் பிரயோகப்படுத்தப்பட்டிருந்தால், பரிசுத்த பெரும்பாதையில் நடப்பதாகக் கருதலாமா?

**பதில்.** பரிசுத்த பெரும்பாதை இன்னும் இருக்கவில்லை. ஆகவே, இன்னும் இதில் எவரும் நடக்கிறதில்லை. இது தயாராகும் வரையில் யாரும் அந்த பாதையில் நடக்க முடியாது. ராஜாதி ராஜா காரியங்களை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, தற்கால ஒழுங்கு முறைகளை தூக்கியெறிந்து, மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரையில், அப்படிப்பட்ட பெரும்பாதை இருக்கப் போவதில்லை. பிறகு பரிசுத்த பெரும்பாதை இருக்கும். அப்பொழுது, நீதிமான்கள் அதில் மேலே ஏறிச்செல்வார்கள்.

இப்பொழுது நெருக்கமான வழியும், விசாலமான வழியும் மட்டுமே உள்ளன. செங்குத்தானதும் கரடுமுரடானதுமான இயேசுவின் காலடிகளில் நடக்க விரும்புகிறவர்களாகிய அவர்களுக்கு மட்டுமே நெருக்கமான வழி உள்ளது. வலுக்கட்டாயப்படுத்துவது என்பது கருத்து அல்ல. இது தாமாக முன்வந்து செலுத்தும் பக்தியும், இயேசுவின் காலடிகளில் நடக்க விருப்பமும் உடையதாயிருக்க வேண்டும், அல்லது இது ஏற்றுக்கொள்ளத்தக்கதே அல்ல.

திரள் கூட்டத்தார் கட்டாயப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட அனுபவங்களைப் பெறப்போகிறவர் களாயிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் செயல்படுவதற்காக வற்புறுத்தப்படுகிறதில்லை. ஆனால், அவர்கள் தாங்களே முடிவு எடுப்பதில் வற்புறுத்தப்படுகிறார்கள். ஒரு படகிற்குள் செல்ல ஒரு மனுஷனைக் கட்டாயப்படுத்துவதற்கும், அங்கே போகும் விருப்பத்தை அவனுக்குள் ஏற்படுத்தும் சில குறிப்பிட்ட பாதிப்புகளைக் கொண்டு வருவதற்கும் இடையே உள்ள விஷயத்தை நீங்கள் பார்க்கலாம். உபத்திரவத்திலிருந்து தப்புவதற்காக கர்த்தருக்கு என் முதுகை நான் திருப்புகிறேனா? அல்லது கர்த்தருடைய வழியை நான் எடுத்துக் கொள்கிறேனா? அழுத்தத்தின் காரணமாக கர்த்தருடைய வழியை எடுக்கத் தேர்ந்தெடுக்கிறவர்கள் கூட ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள். அடுத்த யுகத்தில் உலகத்தாருடைய பரிசுத்த பெரும்பாதை எப்பொழுது திறக்கப்படுகிறதோ, அவர்களுக்காக தேவன் ஏற்பாடு செய்திருப்பது பற்றிய சத்திய அறிவை எல்லோரும் அடைவதற்கு வற்புறுத்தப்படுவார்கள். தவறு செய்பவர்கள் திருந்துவதற்குரிய விதத்தில் தண்டிக்கப்படுவார்கள். ஆனால், மனுக்குலத்தார் பிறகு பரிசுத்த பெரும்பாதை வழியாகச் செல்ல இயக்கப்படுவார்கள். அல்லது கட்டாயப்படுத்தப்படுவார்கள் என்று அனுமானிப்பது உண்மைக்கு புறம்பானது ஆகும்.. பாதையில் மேல்நோக்கி செல்லும் எல்லோரும் தங்கள் சக்தியைப் பிரயோகப்படுத்துவார்கள்.. ஏனெனில் இது ஒரு மேல் நோக்கிச் செல்லும் பாதை ஆகும். நித்திய ஜீவன் பெற இருக்கும் எல்லாரையும் பற்றிய பிதாவினுடைய உணர்வை நம்முடைய இரட்சகர் வெளிப்படுத்தினார், “உண்மையாய்த் தொழுது கொள்ளு கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்.”

## பெரும்பாதை - இருப்புக்கோல் உபயோகப்படுத்துதல்.

**கே** 331:1 :: **கேள்வி** (1913) - 1 - பரிசுத்த பெரும்பாதையில் நடக்க யாரேனும் கட்டாயப்படுத்தப்படுவாரா அல்லது வற்புறுத்தப்படுவாரா?

**பதில்.** பரிசுத்த பெரும்பாதை தற்போது இருக்கவில்லை; ஆகவே, சுவிசேஷ யுகத்தில் அதில் யாரும் நடக்கிறதில்லை. ராஜாதி ராஜா காரியங்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, தற்கால ஒழுங்கு முறைகளை தூக்கியெறிந்து, பரலோக ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வரையில்

அத்தகைய பெரும்பாதை தயார் செய்யப்பட்டு, அதில் நீதிமான்கள் நடக்க முடியும். சுவிசேஷ யுகத்தில், நெருக்கமான வழி மற்றும் விசாலமான வழி என்று இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. (மத் 7:13,14.) இதில் முதலாவது குறிப்பிட்டது, செங்குத்தானதும் கரடுமுரடானதுமான பாதை ஆகும். இயேசுவின் காலடிகளில் நடக்க விரும்புகிறவர்களாக உள்ள பாதை ஆகும். பின்னால் குறிக்கப்பட்டுள்ளது, அழிவை நோக்கிச் செல்லும் பாதை ஆகும். மனுக்குலம் கல்லறைக்கு விரைவாகப் போகும் விசாலமான பாதை ஆகும்.

எஜமானரின் காலடிகளில் **ஏற்றுக்கொள்ளத்தக்கவிதமாக** நடக்கிற அவர்கள் மனப்பூர்வமாக அப்படிச் செய்ய வேண்டும். தாமாகவே முன் வந்து பக்தி செலுத்துவது தான் அவர்களின் இயல்பு ஆகும். கட்டாயப்படுத்துவது என்பது இல்லவே இல்லை என்பது தான் கருத்து ஆகும். சிறுமந்தை இந்த நெருக்கமான வழியில் இப்படித் தான் ஓடுவார்கள்; ஆனால், விசேஷித்த வழியில் செல்வதற்காக இல்லாமல், அவர்கள் எந்த வழியைத் தொடர வேண்டும் என்பதை **தாங்களே முடிவு செய்வதற்கு** உதவியாக திரள் கூட்டத்தார் பெறப்போகும் அனுபவங்கள் இருக்கும். ஒரு வண்டியில் ஏறிச் செல்ல ஒருவரை **கட்டாயப்படுத்துவதற்கும் அவ்வாறு செய்வதற்கான விருப்பத்தை** அவருக்குள் ஏற்படுத்தும் சில குறிப்பிட்ட பாதிப்புகளை கொண்டு வருவதற்கும் இடையே வித்தியாசமுள்ளது.

அடுத்த யுகத்தில், உலகத்தாருடைய பரிசுத்த பெரும்பாதை திறக்கப்பட்ட பிறகு (ஏசாயா 35:8.), அவர்களுக்காக தேவன் ஏற்பாடு செய்திருப்பது பற்றிய சத்திய அறிவை எல்லோரும் அடைவதற்கு வற்புறுத்தப்படுவார்கள். தவறு செய்பவர்கள் திருந்துவதற்குரிய விதத்தில் தண்டிக்கப்படுவார்கள். ஆனால், மனுக்குலத்தார் பிறகு பரிசுத்த பெரும்பாதை வழியாகச் செல்ல இயக்கப்படுவார்கள் அல்லது **கட்டாயப்படுத்தப்படுவார்கள்** என்று அனுமானிப்பது உண்மைக்கு புறம்பானது ஆகும். பாதியில் **மேல்நோக்கிச்** செல்லும் எல்லோரும் **தங்கள் சக்தியைப் பிரயோகப்படுத்துவார்கள்.** ஏனெனில் இது ஒரு மேல்நோக்கிச் செல்லும் பாதை ஆகும். நித்திய ஜீவன் பெற இருக்கும் எல்லோரையும் பற்றிய பிதாவினுடைய உணர்வை நம்முடைய இரட்சகர் வெளிப்படுத்தினார். அவருடைய வார்த்தைகள் இவைகளே, “உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.”

## பரிசுத்த ஆவி - பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக எந்த அர்த்தத்தில் பெற்றார்கள்?

**கே 332:1 :: கேள்வி (1908) - 1 -** “அவர்கள் மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று யோவான் 20:26ல் சொல்லியிருக்கிறபடி, சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாகவே பரிசுத்த ஆவியை எந்த அர்த்தத்தில் பெற்றார்கள்?

**பதில்:** இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது, கொஞ்ச காலத்திற்கு முன்பாக, ஊழியத்தின் துவக்கத்தில் இது செய்யப்பட்டிருக்கலாம் என்று உணர்த்துவதாகத் தோன்றுகிறது. இதற்கு மாறாக, நான் அதை அறியவில்லை. நான் அங்கே இருக்கவில்லை. ஆனால் யோவான் இதை இங்கே பதிவு செய்த நிலையில், கொஞ்ச காலத்திற்கு முன்பாக, இயேசுவின் ஊழியத்தின் துவக்கத்தில் தம்முடைய நாமத்தினால் அவர் சீஷர்களை அனுப்பிய சமயத்தில் இது நடந்தது என்பது உண்மை என்று நான் நினைக்கிறேன். அந்த சமயத்தில் தான் அவர் அவர்கள் மேல் ஊதி: “பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்” என்று கூறி, அவர்களை அனுப்பினார் என்று நினைக்கிறேன். அவர்கள் சென்ற போது, அவருடைய ஆவியில், அவருடைய வல்லமையில் அவர்கள் சென்றார்கள். அவருடைய நாமத்தினால் அவருடைய வல்லமையை செயற்படுத்தி, வியாதிகளை சொஸ்தப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தி, அதிசயத்தக்க பல கிரியைகளைச் செய்தனர். ஆகவே அவர்கள் மேல் ஊதியதும், அவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுத்ததும் அந்த சமயத்தில் இந்த அர்த்தத்தில் தான் நடந்தது என்று நான் அனுமானிக்கிறேன். இதற்கு

என்ன அர்த்தமாக இருக்கும்? பெந்தெகொஸ்தேயில் சபையின் மீது பரிசுத்த ஆவி வந்தது, சபையை தாம் ஏற்றுக்கொண்டதற்கான பரலோக பிதாவின் வெளிப்பாடாக இருந்தது. கல்வாரியில் இயேசு தம்முடைய பலியை செலுத்தி முடிக்கும் வரை - அவர் உன்னதத்திற்கு ஏறி நமக்காக தேவனுக்கு முன்பாகத் தோன்றும் வரைக்கும் இது ஒத்திவைக்கப்பட்டது. தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டார் என்பதற்கும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, ஆவியில் ஜநிப்பிக்கப்பட்ட தேவனுடைய குமாரர்களாகத் தங்களைக் கணக்கிடப்படுவதற்கும் இது சீஷர்களுக்கு ஒரு சாட்சியமாக இருந்தது. முதலாவது, அவர்கள் மேல் செலுத்தப்பட்ட ஆவி அவருடைய ஆவி, அவருடைய வல்லமை ஆகும். அவர் ஆவியை அபரிமிதமாகப் பெற்றிருந்தார்; அந்த ஆவியை வியாதிகளை சொஸ்தப்படுத்துவதற்காக தாமே உபயோகப்படுத்தினார். ஏனெனில் அந்த வல்லமை அவர் மேல் இப்படியாக வைக்கப்பட்டிருந்தது; ஆகவே இந்த வல்லமையை சீஷர்களுக்கு அளித்து, தம்முடைய நாமத்தினால் தம்முடைய பிரதிநிதியாக அவர்களை அனுப்பினார்.

## மனுக்குலத்தார் - உரிமைகளும் சலுகைகளும் - உரித்தானவை.

**கே 332:2 :: கேள்வி (1908) - 2 -** நமது மனுஷீக உரிமைகளும் சலுகைகளும் என்ன?

**பதில்.** நீங்களும் நானும் மற்ற எல்லோரும் உரிமைகள் மற்றும் சலுகைகள் அனைத்தையும் பலியிடுவதற்காக ஒப்புக்கொடுக்கத் திட்டமிடுகிறோம் என்ற கருத்து, இந்த கேள்வியைக் கேட்ட நபரின் மனதில் இருக்கும் என்று நான் அனுமானிக்கிறேன். இவைகள் என்ன? இதில் எடுத்துக்காட்டாக பயன்படும் விதத்தில் ஒன்றை இப்பொழுது நான் நினைக்கிறேன். சிறிது காலத்துக்கு முன்பு நான் படுக்கை வசதி கொண்ட காரில் இருந்தேன். அப்போது நடுஇரவில் சுமை கூலியாள் (PORTER) ஒருவரும் சக பயணி ஒருவரும் உரையாடலில் ஈடுபட்டு, அயர்ந்து தூங்காத மற்ற எல்லோரும் விழித்துக் கொள்ளும் அளவுக்கு சத்தமாக பல்வேறு விஷயங்களைப் பேசிகொண்டிருந்தார்கள். அந்த சுமை கூலியாளின் கவனத்தை ஈர்த்து, அவர் தன் தொழிலை சரியாக செய்யவில்லை என்றும், அவர் தான் செய்வதைத் தவிர்க்காவிட்டால், நிறுவனத்திடம் அவரைப் பற்றி தகவல் தெரிவிப்பேன் என்று சொல்லி, என்னுடைய உரிமையையும் சலுகையையும் உபயோகப்படுத்தினேன். அது என்னுடைய உரிமை; அது என்னுடைய சலுகை; அவர் பிறகு சில திருத்தங்களைச் செய்தார். அவரைப் பற்றி தகவல் தெரிவிப்பது தொடர்பாக நான் என்னுடைய சலுகைகளைக் கைவிட்டேன். இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும். இதைப் போன்று வாழ்க்கையின் விஷயங்களில் ஆயிரக்கணக்கில் வித்தியாசமான முறைகளில் இதை நீங்கள் பிரயோகப்படுத்த முடியும். உங்களுக்கு உரிமைகள் இருக்கின்றன; ஒவ்வொருவருக்கும் உரிமைகள் உள்ளன. ஒவ்வொரு சமயத்திலும் உங்களுடைய உரிமைகளின் மேல் ஜனங்கள் ஏறி மிதிப்பதை நீங்கள் காண்பீர்கள். ஒருவேளை உள்நோக்கமின்றி தற்செயலாக மற்றவர்களின் உரிமைகளை மிதிக்கலாம். மற்றவர்களுடைய உரிமைகளின் மீது நாம் மிதிக்கக் கூடாது என்பதை பார்த்துக்கொள்வது உங்களுக்கும் எங்களுக்கும் உரிய கடமை ஆகும்; மிகச் சிறந்த நன்னெறி வழிகளுக்கு நாம் கீழ்ப்படிய விரும்புகிறோம். அவர்கள் நமக்குச் செய்ய வேண்டும் என்பதையே மற்றவர்களுக்கு நாம் செய்ய வேண்டும். ஆனால், நன்னெறி வழிகளின்படியே அவர்கள் நமக்குச் செய்தாக வேண்டும் என்று வலியுறுத்துவது தேவையில்லாதது ஆகும். நியாயத்தை கோருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அந்த உரிமைகளை நீங்கள் துறந்து விடலாம். இந்த விஷயத்தின் தொடர்பாக, இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் ஒரு சிறிய பாடத்தை நானே கற்றுக்கொண்டு, ஓரளவு தீர்மானம் செய்திருக்கிறேன்; அதை இன்னும் நிரந்தரமான தீர்மானமாக நான் செய்திருக்கவில்லை. நான் ஒரு தீர்மானத்தை அல்லது பொருத்தனையை செய்ய நினைத்தால், கொஞ்ச காலத்திற்கு முயற்சி செய்து, அது எப்படி செயல்படுகிறது என்பதைப் பார்த்து, இது நிரந்தரத் தீர்மானமாகச் செய்வதற்கு உகந்ததாய் இருக்குமா அல்லது இல்லையா என்பதை வழக்கமாக நான் அதைப் பற்றி மிகவும் யோசிப்பேன். அருமையான நண்பர்கள் சிலரைப் போல பொருத்தனைகளைப் பற்றி அதிகமாக பயப்படமாட்டேன். ஆனால் பொருத்தனைகள் பலவற்றை நான் செய்திருக்கிறேன். நான் மேலும் சிலவற்றை செய்வேன் என்று நம்புகிறேன். வயதான மனுஷன் மேல் எந்த

இடத்தில் மேம்படுத்த முடியும் என்று நான் கண்டுபிடிக்கும் போது, நான் சொல்வேன் : "இங்கே அவரைச் சுற்றி வேறொரு நாடாவை வைத்து இறுகக் கட்ட வேண்டும். இது நல்ல பிடிமானத்தில் இருக்க முடியும் என்று நீங்கள் கண்டால், அதை உறுதியாக்கி வலுவாகப் பொருத்தனையாக்க வேண்டும். அது எப்போதும் உங்களுக்கு உதவியாக இருக்கும்; நீங்கள் அதை வேறொரு சமயத்தில் முயற்சி செய்யலாம் என்று திறந்த நிலையில் அப்படியே விட்டு விட்டால், அந்த விஷயம் ஒவ்வொரு சமயமும் வரும் போது, அதை உங்கள் மனதில் சண்டையிட வேண்டியிருக்கும். ஆனால் ஒரு முறை சண்டையிட்டு வெற்றி கொள்வீர்களானால், இது சரியான விஷயம் என்று நீங்கள் உணர்வு பெற்றவுடன், அதில் நிலைத்திருக்க முடிவு எடுங்கள். அல்லது, அப்போஸ்தலர் கூறும் விதமாக சரீரத்தைக் கீழ்ப்படுத்தி அதை புதையுங்கள் - "என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்படுத்துகிறேன்." ஆகவே, சரீரத்தின் எந்த பகுதியாவது கல்லறையிலிருந்து வெளிப்படுவதை நாம் காணும் போது அதை மறுபடியும் புதையுங்கள், அதை கீழே தள்ளிவிட்டு, அதின் மேல் இன்னும் கொஞ்சம் புழுதியைத் தூவுங்கள். கர்த்தர் என் மீது வர அனுமதிக்கும் எதைப் பற்றியும் அவருடைய கிருபையின் உதவியோடு, முணுமுணுப்பு அல்லது முறையீடு ஒருபோதும் செய்வதில்லை என்று இந்த விஷயத்தைப் பற்றி சில வருஷங்களுக்கு முன்பு கர்த்தரிடத்தில் ஒரு தீர்மானம் அல்லது பொருத்தனை செய்வது குறித்து நான் எண்ணிக்கொண்டு இருந்தேன். இது சரியானது என்று நான் நினைத்தேன். புகார் செய்ய எனக்கு என்ன உரிமை இருக்கிறது? கர்த்தருடைய கரத்தில் ஆசீர்வாதங்களைப் பெறுகிறவனாய் இருக்கும் நான், மகிழ்ச்சியாக இராத சிலவற்றை எனக்குக் கொடுப்பதை அவர் சரியானதாகப் பார்த்தால், அவற்றை நான் மறுக்க முடியுமா? இல்லை. அப்பொழுது முணுமுணுக்கவோ அல்லது முறையீடு செய்யவோ எனக்கு உரிமை இல்லை. ஆகவே, நான் கூறினேன்: "உம்முடைய கிருபை என் மீது வருவதற்கு அனுமதிக்கும் எதைப் பற்றியும் ஒருபோதும் முணுமுணுக்கவோ அல்லது முறையீடு செய்யவோ மாட்டேன் என்று இந்த பொருத்தனையை உமது உதவியினாலும் உமது இரக்கத்தினாலும் செய்கிறேன்." இப்பொழுது, எனக்குத் தெரிந்த வரை அந்த பொருத்தனையை எப்பொழுதும் கைக்கொண்டு இருக்கிறேன். நான் அதை செய்ததற்காக பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதைப் போன்று நல்லதாக வேறு ஒன்றை நான் கண்டால், இன்றே அதை நான் செய்வேன். இந்த சுமை கூலியாளைப் பற்றி பிறகு நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது, அவரை எப்படி கோபமாக கடிந்து கொண்டேன் என்பதை எண்ணும் போது, அது சரியானதாகவே இருந்தது. அதில் ஒரு நியாயம் இருந்தது. ஆனால் இதை நான் சிந்தித்தேன், இப்பொழுது, அந்த சுமை கூலியாள் என் மீது கொஞ்ச காலத்திற்கு காழ்ப்புணர்ச்சி கொண்டிருப்பார் என்பதை நான் எப்படி அறிந்து கொள்ள முடியும்? ஒருவேளை சத்தியம் அவரிடத்தில் வரவேண்டியிருந்தது என்று வைத்துக் கொள்வோம். அவர் சொல்லுவார், "அந்த மனுஷன் தான் என்னை கடுமையாக திட்டினார். அறிவிற்கு ஒத்ததாகவும், நியாயமானதாகவும் இருந்தாலும், அவரிடம் உள்ள எதையும் நான் விரும்புகிறதில்லை; ஏனெனில் அங்கே நடந்த விஷயத்திற்கு என்னைப் பொறுப்பாளியாக்கினார்." ஆனால், சத்தியத்தைப் பெறுவதிலிருந்து அவரை அது விலகி இருக்கச் செய்யும். நான் அவரிடத்தில் அதையும் பேசாமல் இருந்திருந்தால் நல்லது. எல்லா விஷயங்களிலும் இதைப் பிரயோகப்படுத்துவது நல்ல கோட்பாடு ஆகும். நான் ஒருபோதும் முணுமுணுக்க மாட்டேன் என்ற இந்த தீர்மானம் எனக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாய் இருந்து வருகிறது. முனகுவதும் வேலை செய்வதும், உறுமுவதும், காரியங்களைப் பற்றி புகார் செய்வதுமாக ஜனங்களில் அநேகரை நான் பார்க்கிறேன். அவர்கள் பெரும் தவறு செய்கிறதாக நான் நினைக்கிறேன். அவர்கள் அவைகளைப் பற்றி உறுமிய பிறகு, அவர்களின் சுமைகள் அனைத்தும் இறுகியதாகவே இருக்கும். அவர்கள் அவற்றைத் தொடர்ந்து மோசமானதாக்கிக் கொள்கிறார்கள். நம் மேல் வர அனுமதிப்பதில் கர்த்தர் மகிழ்ச்சி அடைகிறார் என்றால், இந்த விஷயம் பற்றி அவருடைய ஞானத்திற்கு விரோதமாக முணுமுணுக்க நான் முயற்சிக்க மாட்டேன் என்றும், இது கர்த்தருடையது என்று ஏற்றுக்கொள்வேன் என்றும் கூறிக்கொள்வதால் நாம் நலம் அடைகிறோம் என்பதை நான் காண்கிறேன். இன்று பிற்பகலில் நான் என்னுடைய காலை உடைத்துக் கொண்டால், நான் முணுமுணுப்பேனா? இம்மியளவும் இல்லை. என் வாயிலிருந்து முணுமுணுப்பு வெளிவருவதை உங்களில் யாரும் கேட்க முடியாது. வேறு ஏதும் நிகழ்ந்தாலும்

நான் முணுமுணுக்க மாட்டேன். நான் முணுமுணுப்பதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது? முணுமுணுப்பதினால் எனக்கு நல்லது என்ன நடக்கும்? தேவனுடைய சித்தம் செய்யப்படுவது தான் என்னுடைய விருப்பம் ஆகும். அவர் நன்மையை ஒதுக்கித் தள்ள மாட்டார். அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு எதுவும் நடப்பதை அனுமதிக்க மாட்டேன் என்று கூறுகிறார். இன்று பிற்பகலில் நான் என்னுடைய காலை உடைத்துக் கொள்வது நல்லது என்று கர்த்தர் நினைப்பாராகில், நான் அதை உடைத்துக் கொள்வேன் என்று நம்புகிறேன். கர்த்தர் நமக்கு எது சிறந்தது என்று பார்க்கிறாரோ, அதையே நாம் விரும்புகிறோம். ஆகவே, இதைப் பற்றி முறையீடு செய்யவோ, முணுமுணுக்கவோ நமக்கு ஒன்றும் கிடையாது. இஸ்ரயேல் புத்திரர்களின் ஒன்றாக இது இருந்தது என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அவர்கள் முதலில் முணுமுணுத்து, முறையீடு செய்தார்கள். பிறகு இது கர்த்தருக்கு விரோதமாக வழி வகுத்தது. ஆகவே, நீங்கள் முணுமுணுக்க ஆரம்பிக்கும் போது, கர்த்தருடைய இணக்கத்திலிருந்து வெளியேற ஆரம்பிக்கிறீர்கள். ஆகவே நான் எனக்குத் தானே சொல்லிக் கொண்டேன், மற்ற ஜனங்கள் எனக்கு என்ன செய்தார்கள் என்பது பற்றி முணுமுணுக்க மாட்டேன் என்ற தீர்மானம் அல்லது பொருத்தனையை நான் செய்து கொள்வேன் என்று நினைக்கிறேன். அவர்கள் எனக்கு கெட்டது ஏதும் செய்தால், நான் முணுமுணுக்க மாட்டேன்; நான் அதைப் பிடித்துக் கொண்டு சொல்ல மாட்டேன்: "நான் உங்களுக்கு சவால் விடுகிறேன், ஐயா, அது ஒரு பொய்." நான் அதைச் செய்யத் தேவை இல்லை. நான் முணுமுணுக்கவோ அல்லது அவருக்கு விரோதமாக புகார் செய்யவோ தேவை இல்லை. அவர் அவருடைய வழியில் செல்லட்டும்; கர்த்தர் அவருடன் நடவடிக்கை மேற்கொள்ளட்டும். நான் என்ன செய்வேன்? நான் முயற்சித்து என்னால் முடிந்த வரை அதைத் தாழ்மையாக எடுத்து கொள்வேன். அதிலிருந்து நல்ல பாடத்தை, பொறுமை, விடாமுயற்சி, சுயக்கட்டுப்பாடு வாயிலாகப் பெற்றுக்கொள்வேன். அந்த தீர்மானத்திலிருந்து எந்த அளவுக்கு ஆசீர்வாதம் உள்ளது என்பதை நான் அறியவில்லை. யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் ஒருபோதும் முணுமுணுக்க மாட்டேன் என்ற தீர்மானம் அல்லது பொருத்தனையை நான் செய்து கொண்டால், அது எனக்கு நன்மை பயக்கும் என்பது எனது எண்ணம் ஆகும். நான் இன்னும் இதை முழுமையாக செய்திருக்கவில்லை. ஆனால், நான் கண்டிப்பாக செய்வேன் என்று நினைக்கிறேன். என்னைப் பற்றி நீங்கள் விரும்புகிறபடி எதையும் சொல்ல முடியும். - - - நான் உங்களிடம் திரும்பி எதையும் சொல்ல மாட்டேன் என்று நினைக்கிறேன்.

## மனுஷ சுபாவம் - - இது அனுதாபத்தை ஆசைப்படுகிறதா?

**கே 334:1 :: கேள்வி (1908) - 1 -** மற்றவர்களிடமிருந்து அனுதாபம் பெற ஆசைப்படுவது மனுஷ சுபாவத்தின் ஒரு பங்காக உள்ளதா? அப்படி இருந்தால், மற்றவர்களிடம் நம்முடைய கஷ்டங்களை சொல்வதைத் தவிர்ப்பது, கிறிஸ்துவின் சரீரத்தின் மற்ற அங்கங்களிடம் கூட சொல்லாமல் இருப்பது நம்மை கர்த்தருடன் நெருக்கமான உறவுக்கு கொண்டு வந்து, நம்மை அவருடைய புயத்தில் மட்டுமே முற்றிலும் நாம் சாய்ந்து கொள்ள காரணமாக அமைகிறதா?

**பதில்.** நான் பதிலளிக்கிறேன், "கேள்வியின் முதல் பகுதிக்கு, ஆம். ஒவ்வொருவரும் தன்னால் முடியும் அளவுக்கு தன்னுடைய பாரத்தை சுமக்க நாட வேண்டும் என்றும், முடிந்த வரையில் தன்னுடைய சொந்த பாரங்களை மட்டும் சுமப்பதற்கு நாடாமல், மற்றவர்களுடைய பாரங்களையும் சுமக்க நாட வேண்டும் என்று அப்போஸ்தலர் ஆலோசனை கூறுகிறார். யாராகிலும் சொந்த பாரங்களை உடையவராயிருந்து, அவற்றைச் சுமக்க முயற்சி செய்து, அவற்றிற்கு கர்த்தருடைய உதவியை நாடுகிறவராகவும், பிறகு மற்றவர்களை நாடி, அவர்களுடைய பாரங்களுக்கு உதவி புரிய அவர்களைச் சென்றடைகிறவர்கள், தங்களுடைய சொந்த பாரங்கள் பெருமளவில் இலகுவாகிறதைக் காண்பார்கள். இந்த வழியில் செல்பவர்கள் ஆசீர்வாதம் பெறுவார்கள். ஆகவே, நம்மில் ஒவ்வொருவரும் முடிந்த வரையில் நமது சொந்த பாரங்களைச் சுமக்க நாடுவதும், பிறகு மற்றவர்களுக்கு உதவி செய்வதும், நமது சொந்த விஷயம் பற்றி அதிகம் நினைக்காமல் இருப்பதும் தான் சரியான மனப்பாங்கு ஆகும். நாம் அனைத்துப் பிரயாசங்களையும், அனைத்துக் கஷ்டங்களையும், அனைத்துப் பாரங்களையும்

உடையவர்களாயிருக்கிறோம் என்று கற்பனை செய்யாமல், மற்ற ஜனங்களில் எவ்வளவு பேர் கஷ்டங்களை உடையவர்களாயிருக்கிறார்கள் என்பதை கவனித்தால், அவர்களில் பலர் உங்களை விட அதிகமான கஷ்டங்களை உடையவர்களாயிருப்பதை நீங்கள் காண்பீர்கள். ஆனால் அதற்கு முன்னால், உங்களுடைய சொந்த விஷயங்களைப் பார்த்தால், அவைகள் பெருமளவில் இருப்பதாகத் தோன்றும். நீங்களும் நானும் மற்றவர்களிடமிருந்து ஒருபோதும் அனுதாபத்தை பெறமாட்டோம் என்று இதற்கு அர்த்தமாகாது. ஆனால், முன்பு இருந்ததை விட, அனுதாபத்தை நாம் நாடுகிறவர்களாக இருக்கமாட்டோம்; நாம் நம்முடையவைகளைச் சுமக்க முயற்சிக்க வேண்டும். ஒருவேளை கர்த்தர் நமக்கு சில அனுதாபங்களைக் கொடுப்பதற்கு நாம் அதை அடையாத நிலையில், வேறு ஒருவரை அனுப்புவார். கர்த்தர் சிறந்தது என்று பார்க்கும் வகையில், அனுதாபம் நமக்கு வரும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சரீரத்தின் பிரதான தலையாக இருக்கிறார் என்பதையும், சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் அவருடைய மேற்பார்வையிலும் கவனிப்பிலும் இருக்கிறது என்பதையும் நீங்கள் நினைவு கொள்ளுங்கள்; உங்களுக்கு விரலில் புண் இருந்தால், விரல் என்ன செய்யும்? காலைப் பார்த்து முறையீடு பண்ணுமா? இல்லை. மற்ற கையைப் பார்த்து முறையீடு பண்ணுமா? இல்லை, நல்லது, விரல் என்ன செய்யும்? புலன் உணர்வு நரம்புகள் மூளைக்கு செய்தியனுப்பும், “நான் காயமடைந்திருக்கிறேன்.” மூளை மற்ற கைக்கு செய்தி அனுப்புகிறது, “அந்த விரலுக்கு உதவி புரிய செல்.” இப்படியாக நாம் பார்க்கிறோம், நம்முடைய கஷ்டங்களைச் சொல்லுவதற்கு நமது கர்த்தர் ஒருவரே இருக்கிறார். உதவிக்காக அவரை நோக்கிப் பார்க்க வேண்டியவர் களாயிருக்கிறோம். பிறகு, நமக்குத் தேவையாயிருப்பதை எதிர்பார்க்கிறோம். இது சரீரத்தின் சக அவயவங்களிடமிருந்து வரலாம். சரீரத்தின் சக அவயவங்களாக, நாம் தலைக்கு பதிலளிக்க நாடும் சுபாவத்தை உடையவர்களாக கண்டிப்பாக இருக்க வேண்டும். தலை நாம் ஒருவர் மற்றொருவருடன் அனுதாபமாயிருக்கச் செய்விப்பார் என்பதை நாம் அறிந்தவர்களாய், அவருடைய நாமத்தில் ஒருவருக்கொருவர் கொடுத்து, இப்படியாக நல்லதைச் செய்ய முயற்சி மேற்கொண்டு, ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யும் வாய்ப்புக்களை நோக்குபவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய சொந்த சுமைகளைத் தாங்க, நமக்கு முடியும் வரை மிகச் சிறந்ததைச் செய்து, அனுதாபம் கொள்வதிலும், உதவிபுரிவதிலும், மற்றவர்களுக்கு முடிந்த வரையில் பாரங்களைச் சுமப்பதிலும், நாம் மிக அதிக ஆசீர்வாதங்களையும்,, மிக அதிக சமாதானத்தையும், மிக அதிக சந்தோஷத்தையும் நாம் பெறுவதற்கு இதுவே நல்ல வழியாகும்.

## தனித்துவம் - ஆயிர வருஷத்தில்.

**கே** 335:1 :: **கேள்வி** **(1913) - 1 -** ஒவ்வொரு தனிப்பட்டவரின் தனித்துவம் ஆயிர வருஷ யுகம் முழுமையிலும், அதற்குப் பிறகும் தொடர்ந்து தக்க வைக்கப்படுமா என்பதை தயவு செய்து விளக்கமாகக் கூறவும்.

**பதில்.** ஒவ்வொரு தனிப்பட்டவரின் தனித்துவமும் (அடையாளம்) பாதுகாக்கப்படும் என்று நான் புரிந்து கொள்கிறேன், அதாவது, இரண்டாம் மரணத்திற்குள் போகிறவர்களைத் தவிர, மற்ற எல்லோருடைய தனித்துவம் பாதுகாக்கப்படும். இதை வெளிப்படுத்தும் எந்த வேதாகம வசனத்தை நான் அறிவதாக என்னால் சொல்ல இயலாது; இது வெறும் தர்க்கரீதியான முடிவு ஆகும். தனிப்பட்டவர்கள் என்ற முறையிலேயே தேவன் நம்மிடம் தொடர்பு கொள்ளுகிறார்.

மரத்துண்டுகள் அல்லது உலோகம் அல்லது அறிவுத்திறன் இல்லாத ஏதேனும் ஒன்று என்ற முறையில் தேவன் நம்முடன் செயல்தொடர்பு கொள்வதில்லை. ஆனால், சரீரத்துடன் சொந்த அறிவுத்திறன் கொண்ட ஒரு தனிப்பட்ட நபர் என்ற முறையிலேயே, தேவன் நம்மை நபர்களாக அடையாளம் காண்கிறார். ஆகவே, இது எப்பொழுதும் இப்படியே இருக்கும் என்று நாம் நம்புகிறோம். தற்காலத்தை விட வருங்காலத்தில் காரியங்கள் மோசமானதாய் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றதில்லை. ஆனால், பூரணமானது எப்போது வருகிறதோ, முழுமையில்லாதிருக்கிற தற்கால காரியங்கள் அப்புறப்படுத்தப்படும்.

## அழியாமை - - வெளிச்சத்துக்கு எப்பொழுது கொண்டுவரப்படும்?

**கே** 335:2 :: **கேள்வி** **(1908) - 2 -** கர்த்தர் அழியாமையை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது, அவருடைய உயிர்த்தெழுதலுக்கு முன்பாகவா அல்லது பிறகா?

**பதில்.** சுவிசேஷத்தின் வழியாக அவர் ஜீவனையும் அழியாமையையும் வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருக்கிறார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த வார்த்தையின் முழுமையான உணர்வை வைத்துப் பார்க்கும் போது, இதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது அவருடைய வாழ்க்கையா அல்லது அவருடைய மரணமா அல்லது அவருடைய உயிர்த்தெழுதலோ அல்ல. சுவிசேஷம் தான் அதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது; கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சமயத்தில் இந்த சுவிசேஷத்தை அப்போஸ்தலர்கள் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்த பிறகே புரிந்து கொண்டனர். இதை உணர்த்தும் விதமாக, நம்முடைய கர்த்தர் சொன்ன குறிப்பிட்ட சில விஷயங்கள் இருந்தன. ஆனால் அந்த விஷயத்தை இன்னும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அந்த விஷயம் அவர்களிடமிருந்து இன்னும் மறைக்கப்பட்டு, பெந்தெகொஸ்தேவுக்கு பிறகு வரையிலும் அது வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படவில்லை. எல்லா மனுக்குலமும் தேவனுடன் இறுதியாக இணக்கமுற்று வருவதற்கான நம்பிக்கை மட்டும் இல்லாமல், இதைவிட பெரிதான, இதைவிட அதிசயமான வேறொரு நம்பிக்கை, அது தான் அழியாமை, கிறிஸ்துவின் சரீரமாகிய, கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைக்கு உள்ளது என்பதை அவர்கள் அப்போது உற்று நோக்க ஆரம்பித்தார்கள். ஆகவே, கிறிஸ்து தம்முடைய செய்தியில் - - இந்த செய்தியில் அவருடைய மரணம் மையமாகவும், உயிர்த்தெழுதல் ஒரு பங்காகவும் இருந்தது. இந்த பெரிதான சுவிசேஷம், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை மையமாகக் கொண்டிருந்தது - - இந்த பெரிதான சுவிசேஷ செய்தி, அதைப் பார்க்க முடிகிற எல்லோருக்கும் ஜீவன் மற்றும் அழியாமை என்ற இரண்டைப் பற்றியுமான வெளிச்சத்தைக் கொண்டு வருகிறது. அந்த வெளிச்சம் வந்த உடனேயே, "பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்." என்ற சாட்சியத்தை நாம் நமது மனக்கண்ணில் பார்க்க முடியும். சபையின் அழியாமை பற்றிய குறிப்பில் அங்கே ஒரு சாட்சியத்தை நாம் பார்க்க முடியும்; அனைத்து உலகத்தாருக்காக, அவர்கள் எல்லோரும் ஜீவனை, திரளாக நிறைந்துள்ள ஜீவனையும் உடையவர்களாயிருக்க அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். அனைத்து மனுக்குலத்தாருக்குமான ஜீவனைப் பற்றிய பொதுவான சாட்சியம் உள்ளது. ஆனால், இதை தெளிவான முறையில் பெற்றுக்கொள்வதற்கு பெந்தெகொஸ்தே நாளில் அளிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதம் தேவைப்படுகிறது. நமது கர்த்தர் சொல்லியிருந்ததும், தம்முடைய சொந்த வாழ்க்கையின் அனுபவங்களில் எடுத்துக்காட்டி யிருந்ததுமான இந்த விஷயங்களைக் குறித்த நமது புரிந்து கொள்ளும் அறிவின் கண்களைத் திறப்பதற்கு பரிசுத்த ஆவி தேவைப்படுகிறது.

## அழியாமை - இதில் விசுவாசம் உள்ளவருக்கு கிறிஸ்துவில் அங்கமாயிருக்கும் எதிர்பார்ப்பு இருக்குமா?

**கே** 336:1 :: **கேள்வி** **(1908) - 1 -** ஆத்துமாவின் அழியாமையிலும், நித்திய வேதனையின் கொள்கையிலும் விசுவாசமாக இருப்பவர், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாவதற்கு உறுதி வாய்ந்த எதிர்பார்ப்பில் இருக்க முடியுமா?

**பதில்**. இந்த கேள்வியை கருத்தில் கொள்ளும்போது, நீங்களும் நானும் அறிந்துள்ளபடி, கடந்த காலத்தில் இந்த ஜனங்களில் பரிசுத்தவான்கள் இருந்தனர் என்பது என் நினைவில் உள்ளது; இருப்பினும், இவர்கள் தவறான கொள்கைகளைக் கடைபிடித்தனர். உதாரணமாக, நித்திய வேதனையை விசுவாசிப்பவராகவும், சில வகையான படிவத்தில் ஆத்துமாவின் அழியாமையை விசுவாசிப்பவராகவும் ஜான் வெஸ்லி இருந்தார் என்றால், மேற்கண்ட விவரிப்பை \உள்ளடக்கியதாய் இருக்கும் வகுப்பைச் சேர்ந்தவராக அவர் இருந்திருப்பார் என்பதில் நான்

சிறிதும் ஆச்சரியப்படவே மாட்டேன். ஆகவே, தேவனுடைய திட்டத்தைப் பற்றி அதிகமான இருளில் ஒரு நபர் இருந்தும், கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையான அங்கமாகவும், உண்மையாக பலி கொடுப்பவராகவும் - சொல்லர்த்தமாக எப்படிப் பார்த்தாலும், ஒரு உண்மையான விசுவாசியாக இருந்ததற்கான சாட்சியம், குறைந்த பட்சம், கடந்த காலத்தில் இருந்தது என்று நான் பெரும்பாலும் நினைக்க ஏதுவாகிறது. நான் மேலும் சொல்வது, எனினும் இன்று பெரிதான வெளிச்சம் இந்த உலகத்தில் வந்திருக்கிறது என்ற விசித்திரமான நிலையில் இன்று நாம் இருக்கிறோம். ஆகவே, இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஜனங்களின் மேல் பெரிதான பொறுப்பு இருக்கிறது. நமது கர்த்தர் அவருடைய காலத்தில் சொல்லிய விதமாக, உங்களுக்கு ஞாபகமிருக்கும், அவர்கள் மத்தியில் அவர் வந்திருக்காவிட்டால், அவர்களுடைய இருதயங்களில் வெளிச்சம் பிரகாசித்திருக்காவிட்டால், இந்த பொறுப்பை அவர்கள் கொண்டிருக்க வேண்டியிருக்காது. இவைகள் துல்லியமாக அதே வார்த்தைகளாக இருக்கிறதில்லை. ஆனால், அது தான் கருத்து ஆகும். ஆகவே இந்த நிலைமை இன்று இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். தம்முடைய ஜனங்களுக்கு அதிகரிக்கும் வெளிச்சத்தை நம்முடைய நாளில் கொண்டுவருவதிலும், இதை நமது கவனத்திற்கு கொண்டு வருவதிலும் கர்த்தர் மகிழ்ச்சியாக இருக்கிறார். இது நமக்கு வந்திருக்காவிட்டால், இதை ஒருபோதும் நாம் அடைந்திருக்கமாட்டோம் என்ற நிலையில், அது நம்மிடம் வந்த பிறகு, சத்தியத்தைக் குறித்த தொடர்பாக, நமக்கு பொறுப்பு ஒரு அளவுக்கு உள்ளது. இந்த நிலைப்பாட்டில், இப்பொழுது பிரகாசித்துக் கொண்டிருக்கும் மெய்யான ஒளி, அதைப் பெற்றுகொள்ளக் கூடிய உண்மையான மனப்பாங்குடன் இருக்கும் எல்லோருக்கும் வழங்கப்படும் என்பதை நாம் அனுமானிக்கலாம். வேறுவிதமாக சொன்னால், நாத்தான்வேலைப் பற்றி முதல் வருகையில் இயேசு. “இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்.” என்று கூறினார். பிறகு, கர்த்தரை விசுவாசிப்பது, அவனுக்கு மிகவும் எளிதான காரியம் என்று நாத்தான்வேலிடம் இந்த விஷயத்தை தெளிவாக்கினார். ஆகவே, இந்த நிலைமை இன்று இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதாவது, கபடம் இல்லாத உத்தம இஸ்ரவேலன் எங்கேயாகிலும் இருந்தால், அங்கே கர்த்தர் சத்தியத்தை மிக வெளிப்படையாகவும், மிக தெளிவாகவும், மிக எளிதாகவும் அறியப்பண்ணுவதால், அந்த நபர் அதைப் பார்க்கவும், அதை பாராட்டவும், அதை அனுபவிக்கும் விதமாக நாம் எதிர்பார்க்கலாம். சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாத இடம் எங்கேயோ, அங்கே அந்த நபர் உத்தம இஸ்ரவேலனாக இல்லை அல்லது அவர் கபடமற்றவராக இல்லை என்றும், குறைந்த பட்சம், இதனுடன் சம்பந்தப்படுத்தலாம். நாம் தீர்ப்பு செய்கிறவர்கள் அல்ல. ஆனால், சத்தியம் தான் தீர்ப்பளிப்பதைச் செய்கிறது. அவருடைய வார்த்தை தீர்ப்புச் செய்யும் என்று கர்த்தர் குறிக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். ஆகவே, அவருடைய வார்த்தை சபையில் இன்று நியாயத்தீர்ப்புச் செய்கின்றது என்று நாம் நம்புகிறோம். காலப்போக்கில் அகில உலகத்தையும் அவருடைய வார்த்தை நியாயம் தீர்க்கும். ஆனால், அவருடைய சத்திய வார்த்தை இப்பொழுது தீர்ப்பாகவும், ஆவியாகவும், வல்லமையாகவும் செயல்படுகின்றது. அவருடைய “அறுவடை காலத்தில்” உண்மையான கோதுமை மணிகளைச் சேகரிக்கவும் களைகளிலிருந்து அவற்றைப் பிரித்தெடுக்கவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சத்தியமாகிய அரிவாள் இது தான். ஆகவே, நம்முடைய சொந்த மனங்களில் குறிப்பிடத்தக்க அளவில் சோதனைகளை ஏற்படுத்தாமல், கர்த்தர் இந்த பணியை செய்வதைக் குறித்து நாம் திருப்தி அடைகிறோம். ஆனால், எங்கேயாகிலும் கபடம் இல்லாத உத்தம இஸ்ரவேலன் இருந்தால், கர்த்தர் அவனை தற்கால சத்தியத்தைப் பாராட்டியுணரும் விதமாக கர்த்தர் வழி நடத்துவார் என்பது வெறுமனே நமது எதிர்பார்ப்பு ஆகும்.

## அழியாமை - யார் மட்டும் அழியாமையை பெறுவார்கள்?

**கே 337:1 :: கேள்வி (1913) - 1 -** இந்த வேத வாக்கியம் யாரைக் குறிப்பதாக உள்ளது? “ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறார்.” 1தீமோ 6:16.

**பதில்.** இந்த பத்தி பலவித அர்த்தங்களைத் தெரிவிக்கும் விதமாக உள்ளது. அதாவது, இது வழங்கப்பட்டிருக்கிற முறையைப் பார்க்கும் போது, இரண்டு வேறுபட்ட பார்வைகளை எடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது. இது பரலோக பிதாவைக் குறிக்கிறது என்று யாராவது கோருவதாக இருந்தால், இந்த விஷயத்தில் விசேஷித்த கருத்து வேறுபாடு எதையும் அவரோடு நாம் கொள்ளமாட்டோம். நாம் ஏற்கனவே தெரிவித்த வண்ணமாக, இது எதைக் குறிக்கிறது என்ற நமது சொந்த பார்வையைத் தெரிவிக்கும் போது, இது நமது கர்த்தர் இயேசுவைக் குறிக்கிறது என்று இன்னும் நம்புகிறோம். இது பிதாவைக் குறித்தால், அவருக்கு மட்டுமே அழியாமை உள்ளது என்று அர்த்தமாகிறது. அப்படியானால், கர்த்தர் இயேசுவுக்கு அழியாமை இல்லை என்பதை அது உணர்த்துவதாக உள்ளது. ஆனால் வேதாகமம் அவருக்கு அழியாமை உள்ளது என்று தெரிவிக்கிறது. அப்பொழுது, இதை கர்த்தர் இயேசுவுக்கு பிரயோகப்படுத்தி, அவர் மட்டும் அழியாமை உள்ளவர் என்று கூறினால், இது பரலோக பிதாவை அழியாமை உள்ளவராக இருப்பதிலிருந்து அவரைத் துண்டித்து விடாது. ஏனெனில், அப்போஸ்தலர் விளக்குவது போல, ஒவ்வொரு விதிமுறையிலும், கூற்றிலும் தேவன் எப்போதும் விதிவிலக்கானவர். அவர் எப்போதும் தவிர்க்கப்பட்டவர்.

## அபூரணம் - - மன்னிப்பு கூறுதல்.

**கே** 337:2 :: **கேள்வி (1909) - 2 -** ரோமருக்கு பவுல் எழுதின நிருபம, 7ம் அதிகாரம், 15ம் வசனத்தில், இந்த வார்த்தைகளைப் பார்க்கிறோம், "எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்." நியாயப்பிரமாணத்தின் கீழ் இருப்பவர்கள் அதனுடைய தேவைகளை அனுசரிப்பதின் இயலாமையைக் குறிக்கிறதா? அல்லது சுவிசேஷ யுகத்திலும், தற்காலத்திலும் நமது பரம பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு குறைபாடுள்ள முயற்சிகளை மேற்கொள்ளும் நம்மை இது குறிக்கிறதா? வேறு வார்த்தைகளில் சொன்னால், நம்முடைய குறைபாடான வழிகளுக்கு இதை உபயோகப்படுதற்கான உரிமை நமக்கு உள்ளதா?

**பதில்.** நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த யூதர்கள் மற்றும் எல்லோரையும் பற்றியும் அப்போஸ்தலர் பேசினார் என்று நான் புரிந்து கொள்ளுகிறேன். மாம்சீக குறைபாடு காரணமாக, தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் அவர்கள் அனுசரிக்க முடியாததை, அவர்கள் விரும்பினார்கள் அல்லது அனுமதித்தார்கள். தேவனுடைய பூரணமான நியாயப்பிரமாணத்தை நீங்கள் கவனியுங்கள். நம்முடைய மாம்சத்தில் பூரணத்துவம் வாசமாயிராததால், நாம் எண்ணம், வார்த்தை, செயல் ஒவ்வொன்றிலும் கடைபிடிக்க இயலாமலிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நம்முடைய தலைகள் கிட்டத்திட்ட உருக்குலைந்து உள்ளன. இவை செய்ய வேண்டியதை செய்ய இயலாது என்பதை புதிய சிருஷ்டி காண்கிறது. நீங்கள் பூரணராகலாம், ஆனால், நீங்கள் அப்படி இல்லை என்பதை நீங்கள் அறிகிறீர்கள். பிறகு எப்படி நம்முடன் தேவன் செயல்படுவார்? ஏனெனில் நம்முடைய குறைபாடுகளை அவர் கிருபையாக மறைத்து விடுகிறார். நாம் எதிர்த்துப் போராடும் ஒவ்வொரு விஷயத்திலும், கிறிஸ்துவின் பலியின் பலன்களைக் கொண்டு அவர் மறைத்து விடுகிறார். நாம் நியாயப்பிரமாணத்தை பூரணமாகக் கடைபிடித்தால், அப்பொழுது கிறிஸ்து மரணமடைந்தது விருதாவாயிருக்கும். ஏனெனில், அப்போஸ்தலர் கூறிய வண்ணமாக, "நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே." ஆனால், கிறிஸ்து நம்மை நீதிமானாக்குவதற்கும் நமக்காக மரிப்பதற்கும் கிறிஸ்து வருவது நமக்குத் தேவையாயிருந்தது. ஆகவே இந்த மொழி நடையை யூதர்களுக்காக உபயோகப்படுத்தினாலும், கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நமக்காகவும் குறிக்கப்படுவதாய் இருக்கிறது. நாம் நமது பலவீனங்களைப் பார்த்துக் கொண்டு, "ஓ, நான் அநேக பலவீனங்களைக் கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, இந்த வகையில் எங்களை மன்னியுங்கள்." என்று சொல்வதாக இதை பொருள் கொள்ளக்கூடாது. இல்லை, கிறிஸ்துவின் நீதியின் அங்கி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலிருந்து கறைபடாமல் அதை காத்துக் கொள்ள வேண்டும் என்பது வேதாகம கட்டளை ஆகும். நாம் இருந்திருக்கக்கூடாத நம்முடைய நடத்தையினால் அல்லது அவசர வார்த்தையினால் அங்கியில் கறைபட வாய்ப்பு உள்ளது.

அங்கியை நாம் பெற்ற பிறகு, கிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவங்களையும், அசல் (மூலமுதலான) பாவத்தை மட்டுமல்ல, இந்த குறைபாடுகளிலிருந்தும் கூட சுத்திகரிப்பு செய்கிறது என்பது வேதாகம உத்தரவு ஆகும். நாம் தவறு செய்த பிறகு, நம்முடைய சுத்திகரிப்பிற்காக கர்த்தருடைய ஏற்பாட்டை நாம் உடனே நாட வேண்டும். இப்படியாக, அந்த கறை நீக்கப்பட்டு, பிறகு நமது அங்கி மறுபடியும் சுத்தமாகும். நீங்கள் கர்த்தரிடம் சென்று, இந்த பலனுக்காக அவரை வேண்டி, தவறு செய்திருக்கிறேன் என்று ஒப்புக்கொண்டு அவருடைய மன்னிப்பைக் கோரி, தேவைப்படும் ஒவ்வொரு சமயமும் உதவிக்காக கிருபையின் சிங்காசனத்திற்கு நீங்கள் வர வேண்டும். உங்கள் கறை நீக்கப்படும். பிறகு, அதை கறைபடியாத வண்ணம் காத்துக் கொள்ள வேண்டும்.

வேதாகமம் தெரிவிக்கும் திரள் கூட்டத்தை உள்ளடக்கிய பெருமளவிலான அருமையான நண்பரகள் உள்ளனர்; அவர்கள் ஒரு கறையைப் பெற்றவுடன், நான் அந்த கறையை விரும்பவில்லை என்று கூறுவார்கள். பிறகு வேறு ஒன்றை, மேலும் வேறு ஒன்றை பெறுவார்கள். அப்பொழுது யாராவது ஒருவர் கூறுவார், “நீங்கள் உங்கள் அங்கியில் நிறைய கறைகளைப் பெற்றிருக்கிறீர்கள்.” அதற்கு அவர்கள் சொல்வார்கள், “ஆம், நான் கண்டிப்பாக பெற்றிருக்கிறேன் என்று ஊகிக்கிறேன்.” ஆகவே, அவர்கள் அவற்றிற்கு பழக்கமாகி விடுகிறார்கள். அவர்கள் நிறைய கறைகளை உடையவர்களாகி, அவற்றை நீக்குவது கஷ்டமான காரியமாயிருக்கிறது. ஆகவே, நீங்களும் நானும் செய்ய வேண்டியது என்னவென்றால், முடிந்த வரையில் தரநிலைக்கு நெருக்கமாய் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் கர்த்தரிடம் மட்டும் போகாமல், நீங்கள் யாருக்கு தவறு செய்திருக்கிறீர்களோ, உங்கள் பெற்றோர், மனைவி, கணவன், சகோதரன், நண்பன் அல்லது எதிரி யாராயிருந்தாலும், அவரிடம் நீங்கள் தவறை சரி செய்து விட வேண்டும். இதை ஜெபத்தில் கர்த்தரிடத்தில் கொண்டு போய், உங்கள் சார்பாக விலையேறப்பெற்ற இரத்தத்தைப் பிரயோகிக்க அவரைக் கேளுங்கள்.

## சாற்றப்படுதல் (IMPUTATION) - - நீதி.

**கே** 338:1 :: **கேள்வி** (1911-Z) - 1 - கிறிஸ்து தம்முடைய நீதியை அவருடைய சரீர அங்கங்களுக்கு சாற்றுகிறாரா?

**பதில்.** நமது கர்த்தர் தம்முடைய நீதியை சுமத்துகிறார் என்று நாம் சொல்லும் போது, அவர் பிரதான ஆசாரியராக தம்முடைய சொந்த நீதியைக் கொடுக்கிறார் என்று நாம் எண்ணக்கூடாது. ஆனால், நமது சார்பாக தமது மனுஷீக பலனை சுமத்துகிறார். எந்த அளவிலும் மரண தண்டனைக்கான எதுவும் இல்லாத நிலையில், கிறிஸ்து இயேசு மனுஷனாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த போது, அவருடைய பலியில் ஒரு பலன் (மேன்மை) இருந்தது. கர்த்தரால் ஒப்புகொடுக்கப்பட்ட பூமிக்குரிய ஜீவனின் உரிமைகள் அவருடைய வரவில் சேர்ந்திருந்து, மனுக்குல உலகத்திற்கான சீர்பொருந்துதலின் வல்லமையை, அவர்களுடைய மறு உருவாக்கத்திற்கான வல்லமையை அவருக்கு அளித்தன. ஆனால், அந்த பலியின் பலனை உலகத்துக்கு கொடுப்பதற்கு முன்பு, நம்முடைய குறைபாடுகளை மூடுவதற்காக, இது **நமது** நீதிமானாக்கப்படுதலுக்கு அடிப்படையாக அமைக்கப்பட்டது. இதை நமக்காக சீர்பொருந்துதலில் உபயோகப்படுத்தப்பட்டிருக்க முடியும். ஆனால், இந்த யுகத்தில் அப்படிச் செய்வது தேவனுடைய திட்டத்தில் இல்லை. ஆகவே, இயேசுவின் பலன் அர்ப்பணிக்கிற விசுவாசிகளுக்கு சுமத்தப்பட்டு அவர்களுடைய குறைபாடான மண்பாண்டங்களின் கறைகளும், தெரியாமல் செய்கிற மீறுதல்களும் அவர்களின் ஓட்டம் முடியும் வரையிலும் மறைக்கப்படுகின்றன.

## சாற்றப்படுதல் - கிறிஸ்துவின் பலன்.

**கே** 338:2 :: **கேள்வி** (1911-Z) - 2 - “கிறிஸ்துவின் சாற்றப்படும் பலன்” என்ற சொற்றொடருக்கு என்ன அர்த்தம்?

**பதில்**. "கிறிஸ்துவின் சாற்றப்படும் பலன்" பற்றி பேசும்போது, அவருக்கு **சொந்த பலன், அவர் ஒருபோதும் கொடுத்திராத சொந்த நீதியை உடையவராயிருந்தார். அவருடைய சொந்த நீதி அவருக்குத் தேவைப்படுகிறது.** இந்த அர்த்தத்தில் தான், நீதி பறிக்கப்படாமல் இருந்தால் ஒழிய, அவருடைய நீதியை அவர் நமக்கு கொடுக்க முடியாது என்று சொல்லலாம். அவருடைய ஜீவனின் உரிமை பற்றிய விஷயத்திலும் அதே போன்று தான் உண்மையாகும். அவர் ஜீவனோடு இருப்பதற்கு உரிமை உண்டு. அவர் நமக்கு செலுத்துவது அந்த ஜீவனின் உரிமை இல்லை; அது அவருக்கே தேவைப்படுகிறது. அவருடைய சொந்த பலன் அவருக்குத் தேவைப்படுகிறது. பிறகு, "ஆயிர வருஷ யுகத்தில் மனுக்குலத்திற்கு அவர் கொடுப்பார் என்றும், சுவிசேஷயுகம் முழுவதும் அவர் ஜீவனின் உரிமையையும், நீதியையும் சபை மீது சுமத்துகிறார்" என்று நாம் எந்த அர்த்தத்தில் இவ்வாறு சொல்கிறோம்: **ஒரு மனுஷனாக வாழ்வதற்குரிய சலுகை அல்லது உரிமை கொண்ட மனுஷனாகிய கிறிஸ்து இயேசு என்ற முறையில்,** அவருடைய கீழ்படிதலுக்கான பரிசாக உள்ள அவருடைய பலனாகிய அவருடைய மனுஷீக ஜீவனின் உரிமையை அவர் மனுக்குலத்துக்குக் கொடுப்பார். **நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்ததினால் அந்த உரிமை அவருக்குக் கிடைக்கப்பெற்றது.** (ரோமர்.10:5; கலா.3:12.) இப்பொழுது, அவர் உன்னதத்திலே உயர்த்தப்பட்டு, தெய்வீக சுபாவத்தில் பங்கு பெற்றார். மனுஷீக ஜீவனின் உரிமையும், **அந்த உரிமையுடன் செல்லும்** நீதியும் அவருக்கு இனி தேவை இல்லை. அவர் இப்பொழுது மிகவும் திருப்தியுற்று தம்முடைய தற்கால நிலையில் முழுமை பெற்றிருக்கிறார். காலப்போக்கில், மனுஷீக ஜீவனின் உரிமையையும், அந்த உரிமையுடன் செல்லும் சுமத்தப்படும் நீதியையும், பூமிக்குரிய பலியின் பலனையும் அவர் உலகத்தாருக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. இதில் சபைக்கு தற்காலத்தில் அவர்களின் குறைபாடுகளை சரி செய்வதற்கு போதுமானதாக அவர் செலுத்துகிறார். ஆகவே, நம்முடைய பலிகள் அவர் மூலமாக பரிசுத்தமாக எண்ணப்பட்டு, தேவனிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் விதமாக, நாம் அவரில் முழுமையாக இருக்கிறோம்.

## பலன் சாற்றப்படுதல் - சாற்றப்படும் பலியின் மேன்மை (பலன்) எதை விடுவிக்கிறது?

**கே** 339:1 :: **கேள்வி** (1911-Z) - 1 - முற்றிலும் தோல்வியுற்று, இரண்டாம் மரணத்தில் இறக்கும் நபர் விஷயத்தில், அவர் தோல்வியடையும் சமயத்திலா? அல்லது அவர் உண்மையில் இறக்கும் சமயத்திலா? சுமத்தப்பட்ட பலியின் பலன் எப்பொழுது அவரிடமிருந்து விடுவிக்கப்படும்?

**பதில்.** கிறிஸ்துவின் வழியாக பிதாவிடத்தில் வருகிறவர்களுக்கு அவருடைய பலன் சுமத்தப்படுகிறது. கிறிஸ்துவின் பூமிக்குரிய பலனை நிராகரிக்கிறவர்கள், அவர்கள் நிராகரித்த அந்தக் கணத்திலிருந்து பலனை உடையவர்களாக இருக்கமாட்டார்கள். கர்த்தரை நிராகரித்த அந்தக் கணமே, அவர்களிடமிருந்து அனைத்து பலனும் விடுவிக்கப்படுகிறது, உரிமை பறிக்கப்படுகிறது, அகன்று விடுகிறது. அந்தக் கணத்தில் அவர்கள் உண்மையில் சாக வேண்டும் என்று அர்த்தம் கொள்ள வேண்டியதில்லை. ஆனால், அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுகிறார்கள்; அதாவது, **இரக்கத்தின்** கரங்களை **விட்டு** வெளியேறி, **நீதியின்** கரங்களுக்குள் செல்கிறார்கள். ஜீவனுள்ள தேவனுடைய பிரசன்னத்தின் முன்பாகவும், நீதியின் முன்பாகவும், பூரணமில்லாமல் யாரும் நிற்க முடியாது என்பதை நாம் அறிகிறோம். மீட்பின் பலியை நிராகரிக்கிறவர்கள் பாவத்தைப் பற்றிய உணர்வை அவர்கள் இனிமேல் பெற்றிருக்கவில்லை என்று தோன்றுகிறது. இது, "கலியாண வஸ்திரத்தை" களைந்தது போல மனுஷனைப் பற்றிய உவமையில் எடுத்துக்காட்டப்படுகிறது. அவன் அதை நிராகரித்த அந்தக் கணமே, அது அவனுடையதாக இல்லை என்பதை நாம் எவ்விதத்திலும் அறிந்து கொள்ளலாம்.

## பலன் சாற்றப்படுதல் - பாஸ்டர் ரசலின் பார்வை.

**கே** 339:2 :: **கேள்வி** (1912-Z) - 2 - கீழ்கண்ட மேற்கோள் சம்பந்தமாக நீங்கள் உங்கள் மன நிலையை மாற்றிக் கொண்டுள்ளீர்களா? டாண் புஸ்தகம், வால்யூம் 1, பக்கம் 232, பாரா 1ல், நாம் பின்வருமாறு படிக்கிறோம்: நம்முடைய பாவங்களை அவர் தம்மிடம் சுமத்தப்படுவதற்கு சம்மதித்தார். நம்முடைய தண்டனையை நமக்காகத் தாங்கிக் கொண்டு, அவர் பாவியைப் போல, நம் சார்பாக அவர் மரணமடைந்தார்." வால்யூம் 5, பக்கம் 109, வாக்கியம் 23ல், மேலும் நாம் படிக்கிறோம்: "அவர்களுக்கு சுமத்தப்படவில்லை; ஆனால், மரத்தில் அவருடைய சரீரத்தில் நம்முடைய பாவங்களைத் தாங்கிக் கொண்ட அவரிடம் சுமத்தப்பட்டது." வால்யூம்5, பக்கம் 444, பாரா 2ல், நாம் படிக்கிறோம், "அவர்களுடைய மீறுதல்களை அவர்களிடம் சுமத்தாமல், அவரிடம் அவைகளை சுமத்தி, தேவன் கிறிஸ்துவுக்குள் உலகத்தார் தம்முடன் ஒப்புரவாகும்படி செய்தார்."

**பதில்.** கிறிஸ்துவின் ஊழியம் பல்வேறு நிலைப்பாடுகளில் வெளிப்படுத்தப்படுகிறது. சில நிலைப்பாடுகள் ஒருவகையான திருத்தங்களுடனும், சில வேறு வகையாகவும் காண்பிக்கின்றன. சில மனுஷீக பார்வையிலும், சில தெய்வீகமாகவும் இந்த விஷயத்தைத் தெரிவிக்கின்றன. அனைத்து வேதாகம விஷயங்களில் உண்மையான கருத்தைப் பெறுவது தான் நமக்கு தேவை ஆகும்.

தேவனுடைய பார்வையில் மனுஷ பாவம் இயேசுவினால் சுமத்தப்படுகிறது. அதாவது, மரண தண்டனையிலிருந்து மனுஷனை விடுவிப்பதற்கு உரிய விலைக்கிரயத்தைச் செலுத்துவதற்கு, பாவியின் பிரதிநிதியாக அவர் அளிக்கப்பட்டார். இப்படியாக, சர்ப்பம் கம்பத்தின் மேல் உயர்த்தப்பட்டது போல, தேவன் கிறிஸ்துவை உருவகப்படுத்துகிறார். இவ்விதமாக, அவர் பாவமறியாதவராயிருந்தும் நமக்காக பாவமாக்கப்பட்டார் - - - அவர் ஒரு பாவ நிவாரண பலி.

இந்த விஷயத்தை வேறொரு நிலைப்பாட்டில் பார்த்தால், மனுஷீக பார்வையிலிருந்து பார்த்தால், நம்முடைய பலவீனத்தைச் சரி செய்வதற்காக அவருடைய பலியின் பலனை, நமது எஜமான் நம் மீது சுமத்த வேண்டிய தேவையை உணர்ந்து, நம்முடைய சொந்த பலவீனங்களையும், குறைபாடுகளையும் நாம் பார்க்கிறோம். இவ்விதமாக, ஒரு பார்வையிலோ அல்லது வேறொன்றிலோ நாம் தெரிவித்தாலும், உண்மைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாகவே இருக்கின்றன. **பாவத்திற்காக** அவர் மரித்த போது, நமது பாவங்கள் இயேசுவிற்கு எதிராக எண்ணப்பட்டன. நாம் தேவனிடத்தில் நம்மை ஒப்புக்கொடுக்கும் போது, கிறிஸ்துவின் நீதி நம்மிடத்தில் சுமத்தப்படுகிறது. நம்முடைய மகா இரட்சகரான பிரதான ஆசாரியர் நம்முடைய பலவீனங்களைச் சரி பண்ணுகிறார்.

## பலன் சாற்றப்படுதல் - யாரால்?

**கே** 340:1 :: **கேள்வி** (1916-Z) - 1 - மீட்பின் பலன் சாற்றப்பட்டால், இதை யார் சாற்றுகிறார்? நீதி சாற்றப்பட்டால் யாரால் இது சாற்றப்படுகிறது?

**பதில்.** அவர்களுடைய முழுமையான அர்ப்பணிப்பின் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ், அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு தம்முடைய சொந்த பலனை நமது கர்த்தர் இயேசு சாற்றுகிறார். ஆனால், இந்த "சாற்றப்படுதல்", தெய்வீக நீதியுடன் கூடிய ஒத்துழைப்பு மற்றும் முழுமையான அங்கீகாரத்துடன் உள்ளது. - - - வேறு வழியில் இல்லை. இயேசுவைப் பின்பற்ற விரும்புகிற ஒருவருக்கு மீட்பின் பலனை சாற்றுவதை, தெய்வீக நீதியின் பேரில், பரலோக பிதாவின் பேரில், அப்படிப்பட்டவருக்கு **நீதி** சாற்றப்படுவதாக வெளிப்படுத்தலாம். நாம் படிக்கிறோம், "தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்." ரோமர் 8:33.

## பலன் சாற்றப்படுதல் - பழைய ஏற்பாட்டு போதனை.

**கே** 340:2 :: **கேள்வி** (1916) - 2 - கிறிஸ்துவின் பலன் சாற்றப்படுதல் பழைய ஏற்பாட்டில் மாதிரிகளாகவும் நிழல்களாகவும் காண்பிக்கப்பட்டுள்ளனவா?

**பதில்.** இது நேரிடையாக போதிக்கிறதா என்பதை நான் அறியவில்லை. ஆசரிப்புக் கூடார நிழல்கள் புத்தகத்தில், இது மாதிரி விஷயத்தைப் போதிக்கும் பல விவரங்கள் நமக்கு உள்ளன. ஆனால், நேரிடையாக நாம் அறியவில்லை.

## பலன் சாற்றப்படுதல் - அர்த்தம்.

**கே 340:3 :: கேள்வி (1916) - 3 -** "பலன் சாற்றப்படுதல்" என்ற வார்த்தையின் பொருளை தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** "பலன் சாற்றப்படுதல்" என்ற வார்த்தை "மற்றவருக்குப் பொருந்தச் செய்தல்" என்பதை தெரிவிக்கிறது. மற்றவரிடம் இல்லாத ஒன்றிற்காக செய்வது. இது நேரிடையாகக் கொடுக்கும் பரிசு அல்ல. ஆனால், "பலன் சாற்றப்படுதல்" என்ற முறையில், "பலன் சாற்றப்படுதல்" என்ற வார்த்தையை விளக்குவது கடினமான காரியம் ஆகும். நாம் இதை சிறந்த முறையில் எடுத்துக்காட்ட முடியும். எனக்கு 1000 டாலர்கள் தேவைப்பட்டு, அதற்காக உங்களைக் கேட்டால், - - அது நடக்காது. நாம் ஒருபோதும் கேட்க மாட்டோம். (சிரிப்பு). அந்த எடுத்துக்காட்டை நான் மாற்றுவது நல்லது என்று அனுமானிக்கிறேன். ஜான் ஸ்மித்துக்கு 1000 டாலர்கள் தேவைப்பட்டது என்றும், ஹென்றி பிரௌன் 1000 டாலர்கள் வைத்திருந்தார் என்றும் அனுமானிக்கலாம். ஹென்றி பிரௌன் அந்த பணத்தை உபயோகத்திற்குக் கொடுக்க முடியும். இருப்பினும், அவர் தனக்குத் தானே சொல்லிக்கொண்டார்., "நான் அவருக்கு 1000 டாலர்கள் கொடுக்கப்போவதில்லை என்று நினைக்கிறேன்." தான் ஏற்பாடு செய்வதாக அவரிடம் வாக்குறுதி செய்கிறார். அவருடைய கடன் உறுதி பத்திரத்தை எனக்கு கொடுக்கட்டும். நான் அவருடைய பத்திரத்தில் ஆமோதித்துக் கையெழுத்திடுவேன். அவர் சென்று வங்கியில் கடன் வாங்கட்டும். நீங்கள் அவருடைய கடன் உறுதி பத்திரத்தில் ஆமோதித்துக் கையெழுத்திட்டால், அவருடைய பத்திரத்திற்கு நீங்கள் 1000 டாலர்கள் பொறுப்பு சுமத்திக் கொள்கிறீர்கள். ஜான் அதை எடுத்துக் கொண்டு வங்கி செல்கிறார். எல்லாம் சரியாக இருக்கிறது. இப்பொழுது 1000 டாலர்கள் மதிப்பு; இதற்கு முன்னால் ஒரு பைசா கூட மதிப்பு இல்லை. ஆகவே, இந்த சுவிசேஷ யுகத்தில் பிதாவிடம் வர முடிகிறதற்கு குறிப்பிட்ட விதிமுறைகள் உள்ளன. அதே விதிமுறைகள் வாயிலாகவே இயேசு வந்தார். அதனால் நீங்கள் ஜீவ பலியாக மாறுவீர்கள். நீங்கள் சொல்கிறீர்கள்: "நான் ஜீவ பலியாக இருக்க மிகவும் விரும்புகிறேன். தேவனே, இயேசு செய்தது போலவே, நானும் செய்ய விரும்புகிறேன்" என்று நீங்கள் சொல்கிறீர்கள். தேவன் கூறுவார்: "உங்களுடைய வாக்குறுதிக்கு ஒரு பைசா கூட மதிப்பு இல்லை. ஏன் இல்லை. ஏன், நீங்கள் குறைபாடுகளின் கற்றையாக இருக்கிறீர்கள். உங்களை நான் மிகவும் நன்றாக அறிவேன். நீங்கள் ஒன்றும் செய்ய இயலாது. உங்களுக்காக பொறுப்பு ஏற்றுக்கொண்டு கையெழுத்திட நீங்கள் இயேசுவை அணுகுங்கள். அவர் உங்களுக்கு பரிந்து பேசுகிறவராய் இருந்து, உங்களுக்காக இந்த விஷயத்தை எடுத்துக்கொள்ளட்டும்." ஆகவே, நீங்கள் இயேசுவிடம் செல்கிறீர்கள். அன்புள்ள கர்த்தரே, நீங்கள் எனக்காக பிதாவிடம் பரிந்துபேசுகிறவராக இருக்கிறீரா? இந்த விதிமுறைகளின் கீழ் நான் வந்து, என்னுடைய சரீரத்தைப் பரிசுத்தமாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் ஒப்படைக்க முடியும் விதமாக, நீங்கள் எனக்காக ஏற்பாடு செய்ய முடியுமா? அதைச் செய்ய நீங்கள் உதவ முடியுமா? அது சிலவற்றைப் பொருத்து உள்ளது. ஓ, உங்களிடம் விதிமுறைகள் உள்ளனவா? ஆம், மிகவும் கண்டிப்பான விதிமுறைகள். நீங்கள் பாவத்திற்கு எதிராக உங்கள் முதுகைத் திருப்ப வேண்டும். நான் செய்திருக்கிற பிரகாரமாகவே நீங்கள் விசேஷித்த உடன்படிக்கைக்குள் பிரவேசிக்க வேண்டும். அது முற்றிலுமாக உங்களை ஒப்புக்கொடுக்கும் பலியின் உடன்படிக்கை. நீங்கள் சொல்கிறீர்கள், நான் அதைச் செய்ய விரும்புகிறேன். மிகவும் நல்லது, நீங்கள் என்னுடைய சீஷராயிருங்கள். நான் உங்களுக்கு பரிந்துபேசுகிறவராக இருந்து, மற்றதைப் பார்த்துக் கொள்கிறேன். நான் உங்களுக்கு விதித்திருக்கிறபடி, அந்த வழிகளை நீங்கள் பின்பற்றுங்கள். அனைத்திலும் சரியாக வெளிவருவீர்கள். நான் உங்களுக்காக பொறுப்பேற்றுக் கொள்கிறேன். உங்களுக்காக இயேசு எப்படி பொறுப்பேற்றுக் கொள்வார்? - இந்த முறையில் - ஆதாமுக்கும் அவனுடைய அனைத்து இனத்திற்கும் பொருந்தக் கூடிய அந்த ஒத்தவிதமான விலைக்கிரயத்தை, அந்த ஜீவனின் உரிமையை இயேசு உடையவராய் இருக்கிறார். நீங்களும்

நானும் ஆதாமின் இனத்தைச் சேர்ந்தவராயிருக்கிறதால், அந்த பெரும் காரணத்தினாலேயே, நாம் பிறந்த அந்தக் கணத்திலிருந்தே வாரிசு உரிமையைப் பெற்றோம். இந்த இரட்சிப்பின் திட்டத்தை வைத்திருக்கும் தேவனுடைய முக்கியமான நோக்கமே, மனுக்குலத்திற்கு ஜீவனைக் கொடுப்பது தான் என்று முன்னமே வேதாகமம் சொல்லுகிறது. உங்களுக்கு எனக்கும் இதில் ஆர்வம் உள்ளது. ஏனெனில் நாம் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறோம். இதைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிந்தால், மனுஷீக பூரணத்துவம், சீர்பொருந்துதலுக்குத் திரும்பும் சலுகையை நாம் பெற்றவர்களாகிறோம்; பிதாவின் கரத்தில் இயேசு வைத்திருக்கிறதில் அவையெல்லாம் உள்ளடக்கியிருக்கிறது. நீங்கள் சீர்பொருந்துதலை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் அவர் யாருக்கும் அதை இன்னும் அளிக்கவில்லை. மனுக்குலம் அனைத்திற்கும் சீர்பொருந்துதல் இனி நடக்கும் என்று அவர் சொன்னார். காலப்போக்கில் எது வருகிறதோ அதை நீங்களும் நானும் வெறுமனே பார்ப்போம். உலகத்தாரிடமிருந்து பிரிந்து, தனிப்பட்ட வேறொரு திட்டத்தின் அம்சத்தை தேவன் வைத்திருக்கிறார் என்று நாம் பிறகு அறிந்தோம். இது தான் இராஜ்யத்தில் இயேசுவுடன் இருப்பவர்களாக, மணவாட்டி வகுப்பாராக இருக்க, அவருடைய நாமத்திற்காக அவர் ஜனங்களை ஒரு வகுப்பாராக தேர்ந்தெடுக்கிறார். எந்த விதிமுறைகளின் அடிப்படையில் என்பதை இப்பொழுது நாம் பார்ப்போம். அவர் இருந்தது போலவே நாம் இருந்து, அவருடைய காலடிகளில் நடக்க வேண்டும். பிதாவுடன் நமக்காக பரிந்துபேசுகிறவராக அவர் இருப்பார். இதற்கு நாம் சம்மதித்து நம்முடையவை எல்லாவற்றையும் ஒப்புகொடுக்க வேண்டும். நாம் எதை ஒப்புகொடுப்போம்? உங்களுக்கு என்ன இருக்கிறதோ அவற்றை ஒப்புகொடுங்கள். சிலர் பத்து வருஷங்கள் மற்றும் சிலர் பத்து நாட்களடங்கிய ஜீவன் மற்றும் மேலும் சில. மிகவும் ஆரோக்கியமுள்ள சரீரம் அல்லது மிகவும் வியாதியுள்ள சரீரத்தை நீங்கள் ஒப்புகொடுக்க வேண்டும். உங்களுக்கு என்ன உள்ளது என்பது பொருட்டல்ல; உலகத்தில் பெரும் செல்வாக்கு அல்லது செல்வாக்கு இல்லாமை, உங்களுக்கு எதுவெல்லாம் இருக்கிறதோ, உங்களை அப்படியே ஒப்புக்கொடுங்கள். ஆனால், உங்களுக்கு இருக்கிற எல்லாவற்றையும் - ஒன்றும் பின்னாக விட்டு வைக்க கூடாது. - இயேசு செய்த விதமாக, நீங்கள் அர்ப்பணிப்பு செய்கிற போது, நேரம், செல்வாக்கு, பணம் ஒவ்வொன்றும் அகன்று போகிறது. இயேசுவின் சீஷனாகவும், அவரைப் பின்பற்றுகிறவனாகவும் இருப்பதற்கு செயல்பட வேண்டும் என்பதைத் தான் நாம் சம்மதித்திருக்கிறோம். ஆனால், நாம் பிதாவிடம் வருகிற போது, நாம் மிகவும் நன்றாக நடக்கவில்லை என்பதைக் கண்ட பிறகு, நாம் சொல்கிறோம்: “இதை அவர் ஏற்றுக்கொள்வாரா? இல்லை; அது இல்லை. இது எப்படி சரியாகும்?” நல்லது, இயேசு கூறுகிறார்: “நான் பிதாவிடம் ஒரு கணக்கு வைத்திருக்கிறேன். அது சீர்பொருந்துதலை காலப்போக்கில் அளிக்கும் உரிமை ஆகும். அந்த சீர்பொருந்துதல் உங்களையும் உள்ளடக்கியதாகும். நல்லது, காலப்போக்கில் உங்களுக்குக் கொடுக்கப் போவதெல்லாவற்றையும் இப்பொழுது உங்கள் மேல் சுமத்துவதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். - நீங்கள் உங்கள் வசம் இப்பொழுது என்ன இருக்கிறதோ, அதை நீங்கள் கொடுங்கள். உங்களுக்கு காலப்போக்கில் என்ன வருகிறதோ, அதை உங்கள் சார்பில் கொடுக்கிறேன். ஆகவே, இவையெல்லாம் பூரணத்துவத்தில் உங்களுடையதாக இருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்.” எடுத்துக்காட்டு: ஒவ்வொரு தனிப்பட்டவரும் அவரவர் வரும்போது இயேசு செயல்படுவார் என்று நாம் நினைக்கக்கூடாது. அவர் உன்னதத்திற்கு ஏறிய போது, “நமக்காக” பிதாவின் முன்னிலையில் பிரசன்னமான போது, இயேசு செய்த முறை இதுவே. “நாம்” என்பவர்கள் யார்? இவர்கள் சபை வகுப்பாராகப் போகிற எல்லோரும் ஆவர். 1900 வருஷங்களுக்கு முன்பாக உங்களுக்கும் எனக்கும் இயேசு பிதாவிடம் தோன்றினார். பரிசுத்த சபை என்பது தேவனுடைய பார்வையில் ஒரு சபை ஆகும். அவரால் முன்னரே முடிவு செய்யப்பட்டதும், முன்குறிக்கப்பட்டதுமான சபை ஆகும். தேவன் இயேசுவை முன்னரே அறிந்தார் என்றும், இயேசு நம்மை முன்னறிந்தார் என்றும் வேதாகமம் சொல்லுகிறது. இப்பொழுது, இயேசு சபை முழுவதுக்கும் உடனடியாக தோன்றினார் என்றால், நம் எல்லோருக்கும் மீட்பின் பலனை சுமத்தி, பொறுப்பேற்றுக் கொண்டார் என்ற பொருளில் தான் அவர் பலனை செலுத்தினார்.

நான் வங்கியாளரிடம் சொல்கிறேன், “எனக்கு 1000 டாலர்கள் உள்ளன. அதை அப்படியே வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்; நான் கடனுறுதி பத்திரத்தில் பொறுப்பேற்றுக் கொள்ளும்

விதமாக கையெழுத்திடப் போகிறேன். 1000 டாலர்களுக்குரிய கடனுறுதி பத்திரத்தில் கையெழுத்திடப் போகிறேன். அந்த பத்திரம் இருக்கும்போது, இது அநேக நபர்களுக்காக இருக்கிறது; எஸ் & கம்பெனி, ஆர் & கம்பெனி, மற்றும் அநேக நபர்கள். என்னுடைய வைப்பு தொகையில் உங்களுக்கு பலன் இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் கடனுறுதிக்காக கையெழுத்திட்ட இந்த பத்திரத்தின் பலன் இது தான். பத்திரக் கடன் திருப்பிச் செலுத்தாத வரையில், அந்த வைப்புத் தொகையில் ஒரு பொருளாதார தடை உள்ளது. இதை வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாது. பொருளாதார தடை என்பது ஒரு இடர்ப்பாட்டை அர்த்தப்படுத்துகிறது. எழுதிக் கொடுத்த பத்திரம் முழுமையாக பாதுகாப்பளிக்கிறது. பணம் அளிக்கப்படவில்லை. ஆனால் இது ஒரு கடனுறுதி பொறுப்பு ஆகும். கர்த்தர் உடனடியாக சபை முழுவதற்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டார். ஆகவே அவர் முதலாவதாக சபைக்கு பலனை சுமத்துகிறார். பிறகு உலகத்தாருக்கு செலுத்துகிறார். சபைக்கு இப்பொழுது தேவைப் படுகிறதில்லை; பலியில் அவருடன் நாம் சேரப் போகிறோம். பூமிக்குரிய ஜீவனை அவர் நமக்காக ஏன் கொடுக்க வேண்டும்? நாம் சீர்பொருந்துதலை விரும்புகிறதில்லை. நாம் மேலான எதிர்பார்ப்பை நோக்குகிறோம்; ஆவிக்குரிய ராஜ்யம் - மகிமை, கனம், அழியாமை. இது நமது பலியை அவருக்கு ஏற்றவிதமாக இருக்கச் செய்தது.

## அவதாரம் - நம்பிக்கை.

**கே 342:1 :: கேள்வி (1911) - 1 -** ஆத்துமா மாம்சீக சரீரத்துக்கு திரும்புவதான மறு அவதாரத்தை நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்.** நான் நம்பவில்லை. சொல்லர்த்தமாக எப்படிப் பார்த்தாலும், இது முற்றிலும் தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பாக உள்ளது என்று நம்புகிறேன்.

## தூபவர்க்கம். - தேவனுக்கு சுகந்த வாசனையாக நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்.

**கே 342:2 :: கேள்வி (1911) - 2 -** பிரதான ஆசாரியனால் எரிக்கப்படும் தூபவர்க்கம் மற்றும் இது அடையாளப்படுத்துகின்ற மனுஷனாகிய கிறிஸ்துவின் பூரணத்துவம், பிரதான ஆசாரியருடைய சரீர அங்கங்களாகிய ஆசாரியர்களால் இவைகள் செலுத்தப்பட்டிருக்கின்றன என்று புரிந்து கொள்ளலாமா? அப்படி இருந்தால், இது எப்படி காண்பிக்கப்படும்?

**பதில்.** தூபவர்க்கம் இரண்டாம் முறையாக செலுத்தப்பட்டது என்று லேவியராகமத்தில் எவ்வித குறிப்பும் இல்லாததால், இது இரண்டு முறைகள் செலுத்தப்பட்டது என்பது சாத்தியமற்றது ஆகும். இயேசுவின் மரணம் மூலமாக ஏற்பட்ட பாவ நிவாரணத்தினால் சபையின் பலி ஏற்றுக்கொள்ளத்தக்கதாகி, அது மரணம் வரை தொடர்ந்து செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், இந்த அங்கங்கள் இறுதியில் மகிமையை அடைவார்கள் என்பது தான் இதன் கருத்து ஆகும். “நமது கர்த்தர் உலகத்தில் எப்படி இருந்தாரோ, அப்படியே நாமும் இருக்கிறோம்.” அவர் நாளுக்கு நாள் கீழ்ப்படிதலை எப்படி நடப்பித்தாரோ, அப்படியே நாமும் நாளுக்கு நாள் கீழ்ப்படிதலை நடப்பிக்கிறோம். அவருடைய விஷயத்தில் ஆவியின் அன்பு, வைராக்கியம் எப்படி செயலில் நிரூபித்துக்காட்டப்பட்டதோ, நம்முடைய விஷயத்திலும் அப்படியே இருக்க வேண்டும். இல்லையெனில் அவருடைய சரீர அங்கமாயிருக்க நாம் அனுமதிக்கப்பட மாட்டோம்.

அவர் செலுத்திய தூபம், ஒரு குறிப்பிட்ட அர்த்தத்திலும், ஒரு குறிப்பிட்ட அளவிலும், அவருடைய சரீரமாகிய சபை முழுவதையும் குறிக்கின்றது என்று நாம் சொல்லலாம். தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக, உலக அஸ்திபாரத்திற்கு முன்னதாக, அவருடைய அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படப் போகிறவர்களுக்கு முன்னோடியாகவும், பிரதிநிதியாகவும், பரிந்துபேசப்போகிறவருமாய் இருந்தார். ஆகவே, அவர் தம்முடைய சொந்த பூரணத்துவத்தை

ஒப்படைக்கையில், அவருடைய அங்கங்கள் என்ற முறையில், அவருடைய மீட்பின் பலன் நம்முடைய பூரணத்துவத்துக்காக சுமத்தப்படுகிறதாய் இருக்கிறது.

இரண்டாம் தடவை தூபவர்க்கம் செலுத்தப்பட்டது குறித்து எதுவும் சொல்லப்படாததால், மேலும் நாம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் தனிப்பட்டவர்களாக போகிறதில்லை என்பதால், அவருடைய சரீரத்தின் அங்கங்கள் என்ற முறையில், உலகத்தாருக்குக் கெட்ட வாசனையாக இருந்தாலும், "தேவனுடைய சுகந்த வாசனையாக **கிறிஸ்துவுக்குள்**" நாம் இருக்கிறோம் என்று பாதுகாப்பாகச் சொல்ல முடிகிறது. "ஆதலால் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து, நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்." "நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்." (எபே.5:1,2.; 2கொரி.2:15; வெளி.8:3,4.) ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." இப்படிப்பட்ட பலிகள் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்." எபி 13:15,16.

## தூபவர்க்கம் - கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா.

**கே** 343:1 :: **கேள்வி** **(1913) - 1 -** கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்தில் எடுத்துக்கொண்டு போகும்போது, காளையின் இரத்தத்துடன் செய்தது போல, தூபவர்க்கம் எடுத்துச் செல்லப்பட்டதா?

**பதில்.** இந்த முறையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது சரியானதாகவே இருக்குமென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நமது கர்த்தரின் சொந்த பலியின் சொந்த பலனை, தூபவர்க்கம் அடையாளப்படுத்துகிறது என்று நான் நினைக்கிறேன்; இது சுகந்த வாசனையாக மேலே எழும்பி, அதின் புகை திரைக்கு அப்பால் நுழைந்து, கிருபாசனத்தை மூடியது. அங்கே தங்கியிருந்த சுகந்த வாசனை, நறுமணம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிறகு அணுகுவதற்கான முழு உரிமையையும் பிரதான ஆசாரியனுக்கு கொடுக்கிறது என்று நான் புரிந்து கொள்ளுகிறேன். வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வதற்கும், வெளியே வருவதற்கும் மேலும் அதிகப்படியான தூபவர்க்க காணிக்கை தேவைப்படவில்லை. கூடுதலான தூபவர்க்கம் பற்றி ஏதும் சொல்லப்படவில்லை என்பதை வெறுமனே நான் அறிகிறேன். மேலும் கூடுதலாகத் தேவைப்படவில்லை என்று நான் பார்க்கிறேன்.

## மனநிலை பாதிப்பு - சகோதரர்கள்.

**கே** 343:2 :: **கேள்வி** **(1909) - 2 -** முழுவதுமாக அர்ப்பணித்த சகோதரர்களில் பலர், பொதுவாக இறப்பதற்கு சிறிது காலத்திற்கு முன்பு, பித்துப் பிடித்த நிலைக்கு வழுக்கி விடுகிறார்கள். தெளிந்த முறையில் இந்த சமயத்தில் வளர்ச்சி பெறும்விதமாக இருக்க வேண்டிய தெளிந்த புத்தியுள்ள ஆவியை இது எப்படி பாதிக்கிறது?

**பதில்.** எனக்கு தெரியாது. இதைப் பற்றி நான் கேள்வியுற்றதில்லை. சத்தியத்தில் யாரையும் பைத்தியமாக்கும் விதமாக எதுவும் இருக்கும் என்று நான் நினைக்கக்கூடாது. தெளிந்த புத்தியுள்ள ஆவி என்று கர்த்தரின் ஆவியைப் பற்றி அப்போஸ்தலர் பேசுகிறார். இந்த விஷயத்தைப் பற்றி ஆழமாகப் போனால், வாழ்க்கையின் மற்ற நம்பிக்கைகளிலும் திட மனநிலை இல்லாத சில நபர்களை நாம் பார்க்கிறோம். சாம்ராஜ்ய மாநிலமான நியூயார்க் மாநிலத்தின் நிலையை கவனித்துப் பாருங்கள். மாநிலத்தில் இருபத்து ஐயாயிரம் பேர்களுக்கு மேல் மனநிலை புகலிடங்களில் இருக்கிறார்கள் என்று நான் பார்க்கிறேன். அதாவது, நூற்று ஐம்பது பேர்களில் ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருக்கிறார். நியூயார்க் மாநிலத்தில் நம்மவர்களைப் போலவே, பிரஸ்பைடேரியன், கத்தோலிக்கர்கள், மெதடிஸ்டுகள் இருக்கிறார்கள்.

நூற்று ஐம்பது பேரில் ஒருவராக இருப்பவரை நாம் ஒப்பிட முடியும் என்று நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்? வெளியிலுள்ளவர்களை விட, சத்தியத்தில் உள்ளவர்களில் மிக குறைவானவர்களே சமநிலையற்ற மனது உடையவர்களாயிருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இதற்கு எதிர்மாறாக நீங்கள் எதுவும் கண்டால், அது எனக்குத் தெரிவிக்கப்பட்டால், நான் மகிழ்ச்சி அடைவேன். எவ்வளவு பேர் புத்தி சரியில்லாதவர்கள் என்பது எனக்குத் தெரியாது. தற்காலிகமாக மனநிலை குலைந்து போன காலப்பகுதிகள் வாழ்க்கையில் இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் அறிவர். இது போன்ற அனுபவத்தை பெற்றிருக்காத மிகக் குறைவான குடும்பங்கள் உள்ளன. அவர்களில் சிலர் சத்தியத்திலுள்ள ஜனங்களாக இருந்தால், இது ஒன்றும் புதிதல்ல. டைஃபாய்டு காய்ச்சல் உடைய ஒருவரைப் பற்றி நான் நினைக்கிறேன். அவர் சித்த பிரமை அல்லது மன நிலை பாதிக்கப்பட்டார். சத்தியத்திற்குள் இருப்பவர்களில் அதிகமானோர் மனநிலை சரியில்லாமல் போகிறவர்களாக நான் அறிகிறதில்லை. ஆனால், இது போன்று ஏதாவது உங்களுக்குத் தெரிந்தால், எனக்குத் தெரிவிக்கப்பட்டால் நான் மகிழ்ச்சியுறுவேன்.

## மனநிலை பாதிப்பு - சத்தியம்.

**கே 343:3 :: கேள்வி (1909) - 3 -** இது தெளிந்த புத்தியுள்ள ஆவியை எப்படி பாதிக்கிறது?

**பதில்.** இது பாதிக்கும் என்றே நான் நினைக்கவில்லை. நான் மனநிலை பாதிக்கப்படுகிறதாக உணரவில்லை. நீங்கள் அந்த வழியில் நோக்குகிறதில்லை. என்னுடைய மனது ஒவ்வொரு வருஷமும் மென்மேலும் நன்றாகச் சமநிலைப்பட்டு வருகிறது என்று நம்புகிறேன். உங்களுக்கும் அப்படியே இருக்கும் என்று நான் நம்புகிறேன். நம்மில் யாருக்காவது மனங்களில் பதற்றமடையவோ அல்லது குழப்பமடையவோ காரணம் இருந்திருக்குமானால், பல வருஷங்களுக்கு முன்பு நாம் கொண்டிருந்த எண்ணமே ஆகும். அதாவது, நம்முடைய நண்பர்களும், அயலாரும், குழந்தைகளும், பரிசுத்தவான்களாக மரித்திராதவர்கள் அனைவரும் நேரடியாக நித்திய வேதனைக்குள் சென்று கொண்டிருந்தார்கள் என்ற நினைப்பு தான் காரணம் ஆகும். உங்களுடைய மனசு ஒருவேளை வழி விலகிப்போயிருந்த சமயம் அதுவாயிருக்கும், தண்டனையாக நித்திய வேதனை இல்லை என்பதும், மரணம் தான் தண்டனை என்றும், நாம் கண்டுபிடித்திருக்கிறோம். கிறிஸ்து நித்திய ஜீவனைக் கொண்டுவருவதற்காக எல்லோருக்காகவும் மரித்தார் என்று பிறகு அறிந்து கொள்ளுகிறோம். - இது ஒருவரை பைத்தியமாக்குகிறது என்றால், அவருடைய மனதின் செயற்பாட்டை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. சத்தியத்தில் இருக்கும் ஒருவர் தன்னுடைய மனதின் சம நிலையை இழக்கிறார் என்றால், அதற்கு காரணம் அவருடைய குடும்ப வம்சாவளியில் ஏதாவது இருக்கும் என்று நான் புரிந்து கொள்கிறேன்.

நாம் இந்த சத்தியத்திற்குள் வந்த உடனேயே, அவர் நமக்கு மனதளவிலான சீர்பொருந்துதலை நமக்குக் கொடுப்பார் என்றும், நமக்கு தலை வலி போன்று எதுவும் இனி மேல் இருப்பதில்லை என்று நமது கர்த்தர் சொல்லவில்லை. ஆனால் அவர் நமக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம் இராஜ்யத்தின் வாக்குத்தத்தம் ஆகும். நம்முடைய பழைய மாம்சம் இறந்து போகும் போது, நம்முடைய ஓட்டத்தை நாளுக்கு நாள் முடிக்க நாம் முயற்சிக்கும் போது, சத்தியத்தின் ஆசீர்வாதம் நம்மை அதிக சந்தோஷம் அடையவும், அதிக சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அடையவும் அவர் நோக்கமுள்ளவராயிருக்கிறார்.

## காப்பீடு - குறுகிய கால காப்பீடு ஆவணங்களை எடுத்துக்கொள்வது சரியானதா?

**கே 344:1 :: கேள்வி (1912) - 1 -** மரணமடையும் போது அல்லது ஐந்து வருஷ காலக்கெடு கழிந்த பிறகு பெறக்கூடிய ஐந்து வருஷ காப்பீட்டு ஆவணம் எடுப்பது சரியானதா? இப்படி எடுப்பது பயனுள்ளதா?

**பதில்.** இங்கு இங்கிலாந்தில் உங்களுடைய காப்பீட்டுக் கழகங்களின் நிலைமையைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், அமெரிக்காவில் பல நல்ல கழகங்கள் நமக்கு உள்ளது என்று நான் அறிவேன். பல தருணங்களில் வங்கிகளைப் போலவே, அவைகள் வலிமைமிக்கதாக உள்ளன. வேறு சில சந்தர்ப்பங்களில் வங்கிகளை விட வலிமையான பிடிப்பு உள்ளதாக இருக்கின்றன. இந்த கழகங்களில் சில மலிவான காப்பீடு வெளியிடும் போக்கில் உள்ளன. ஒருவன் தன் குடும்பத்திற்கு வைத்துப்போகக்கூடிய காப்பீட்டில் விட்டு வைப்பது மிகவும் நல்லது. ஏனெனில், காப்பீட்டுக் கழகத்தில் காப்பீடு இருப்பது வங்கியில் இருப்பது போல பாதுகாப்பானதாகும். நம்முடைய வாழ்க்கையை காப்பீடு செய்வது சரியானதா? இது மனுக்குலத்திற்கு பெரும் ஆசீர்வாதமாக உள்ளது என்று நான் சொல்லுகிறேன். எனினும், கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொள்வதற்குப் பதிலாக, காப்பீட்டுக் கழகங்களில் நம்பிக்கை கொள்ளவேண்டாம். உலகத்துக்குரியவைகளில் மூழ்கியிருக்கும் அப்பாவிகளான சிலர் தங்களுடைய அனைத்து நம்பிக்கைகளையும் வங்கிகளிலும், காப்பீட்டுக் கழகங்களிலும் பங்கு சந்தைகளிலும் வைத்திருக்கிறார்கள். இவைகள் நொறுங்கிப் போகிறபோது, அவர்களுடைய எளிய நம்பிக்கையும் தானே இழந்து போகிறது. நாம் நமக்கு ஏற்பாடு செய்வதற்காக நாடுவதில்லை. ஆனால், நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும், வாழ்வில் நமக்குப் பிறகு வாழ இருப்பவர்களுக்கும் உதவி புரியும் ஒவ்வொரு வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக்கொள்ள நாட வேண்டும். உங்களுடைய பணத்தை எங்கே வைப்பு செய்வது? எந்த வங்கியில் போட வேண்டும்? அது எனக்குத் தெரியாது. ஆகவே, நான் உங்களுக்கு சொல்லமாட்டேன். உங்களுடைய பொக்கிஷத்தை “பூச்சியும் துருவும் கெடுக்காத இடத்தில்” வைக்க வேண்டும் என்பது தான் கர்த்தருடைய அறிவுரை ஆகும். உறுதியும் நிச்சயமுமான ஒரு முதலீட்டை மட்டும் அறிவேன். “திருடர்கள் கன்னமிட்டுத் திருடாத இடம்”. எஜமானருடைய வார்த்தைகளைப் போல நல்ல அறிவுரை எதையும், என்னால் கொடுக்க இயலாது, கொடுக்கவும் முயற்சிக்க மாட்டேன். நான் வெறுமனே சில சாடைக் குறிப்புகளையும், ஆலோசனைகளையும் மட்டும் சொல்லி இருக்கிறேன். ஆனால் இது என்னால் முடிந்த வரை இறுதியாகவும், முடிவுக்குரியதாகவும் பதிலளிக்கக் கூடிய கேள்வி அல்ல.

## காப்பீடு - குறுகிய கால காப்பீடு ஆவணம் நல்ல முதலீடா?

**கே** 344:2 :: **கேள்வி** (1912) - 2 - இறக்கும் போது பெறக்கூடிய ஐந்து வருஷ காப்பீடு ஆவணம் எடுப்பது பயனுள்ளதாயிருக்குமோ?

**பதில்.** பேராபத்து எனக்கே வரும் என்று மிக நிச்சயமாக நான் உணருகிறேன். என்னுடைய சொந்த அனுபவம் சில வகையான பேராபத்தில் ஒருவேளை முடிவடையலாம். அதனால் என்னுடைய மனைவி மற்றும் என்னுடைய சகோதரிக்காக ஏதேனும் வைத்துப் போக வேண்டி, நான் விபத்து நிறுவனங்களில் சிறிய காப்பீடு ஆவணங்களை எடுத்திருக்கிறேன். இது தனிப்பட்ட விஷயம். யாரிடமும் சொல்லாதீர்கள்.

## ச.வே.மா.ச. - சுய பாணியில் சத்திய ஜனங்கள்.

**கே** 345:1 :: **கேள்வி** (1913) - 1 - சர்வ தேச வேதமாணவர்கள் தங்களை சத்திய ஜனங்கள் என்று சொல்லிக்கொள்ளும் போது, தேவனுடைய சத்தியத்தை அவர்கள் மட்டுமே புரிந்து கொள்கிறார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்களா?

**பதில்.** இந்த விஷயத்தை அந்த படிவத்தில் நான் சொல்கிறதில்லை. எந்த காரியத்திலும் நாங்கள் சத்தியத்தை முன்னிறுத்துகிறவர்களாகவும், நாங்கள் சத்தியத்தை நேசிக்கிறவர் களாகவும், சத்தியத்திற்காக எங்களுக்கு உள்ள எதையும் பலி கொடுப்பவர்களாக இருக்கிறோம் என்பதே என் கருத்து ஆகும். நாங்கள் சத்தியத்திற்கு முன்பாக மத நம்பிக்கைகளையும், மரபு வழி முறைகளையும் வைக்கிறதில்லை. நாங்கள் எந்த மத உட்பிரிவு அல்லது கட்சிக்காக சத்தியத்தைத் தியாகம் செய்கிறதில்லை. ஆனால், சத்தியத்திற்காக, கட்சி, பிரிவு மற்றும் எங்களைக் கூட தியாகம் செய்கிறவர்களாய் இருக்கிறோம். ஏனெனில், தேவன் சத்தியத்தை

தம்முடைய சொந்த பிரதிநிதியாக வைத்திருக்கிறார். ஆகவே, இயேசு தம்முடைய வார்த்தையில் இதை "நானே சத்தியம்" என்று வெளிப்படுத்தியிருக்கிறார். சத்தியத்திற்காக நாங்கள் நிற்கையில், கர்த்தருக்காகவே நாங்கள் நிற்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், நான் சொல்வது, இந்த "சத்தியம்" என்ற வார்த்தை சில சமயங்களில் தவறுக்கு வேறுபாடு காண்பிக்கும் விதமாக உபயோகப்படுத்தப்படுகிறது. நம்முடைய கடந்த கால அனுபவங்களை உற்று நோக்கும் போது, நாம் திரளான தவறுகளை கடை பிடித்து வந்திருக்கிறோம். இப்பொழுது நாம் அறிவு வளர்ச்சியிலும், சத்திய வளர்ச்சியிலும் நம்மைக் காணும்போது, அந்த நிலைப்பாட்டிலிருந்து தான் விஷயத்தைப் பேச வந்திருக்கிறோம்; இதற்கு மத உட்பிரிவுக்கான உணர்வு கொடுக்கப்படுகிறதில்லை. இந்த பதம் என்னால் கொடுக்கப்படவில்லை. ஆனால், இந்த பெயர், சத்தியத்தை நேசிக்கும் அந்த சத்திய ஜனங்களின் மத்தியில் முளைத்திருக்கிறது. இந்த பொதுவான புகழுரையில் எல்லா ஜனங்களையும் வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

## ச.வே.மா.ச. - சபை பிரிவு இணைப்புகள் (DENOMINATIONAL AFFILIATIONS).

**கே 345:2 :: கேள்வி (1913) - 2 -** சர்வ தேச வேதமாணவர் சங்க பிரசங்கிமார்கள் அனைவரும் சபை பிரிவுகளின் இணைப்புகளை ஏன் கைவிடுமாறு பகிரங்கமாக அறிவுரை கூறுகின்றனர்.?

**பதில்**. அவர்கள் அப்படிச் செய்வதாக எனக்குத் தெரியாது. அருமையான நண்பர்களே, சபை பிரிவுகளின் தடைகளை உடைத்தெறிவது தான் சரியானது என்பதையே நாங்கள் கடைப்பிடிக் கிறோம். அதாவது, இந்த வேறுபாடுகளுள்ள மதக்கோட்பாடுகளின் தடுப்பு வேலிகளில் சில அநேக நூற்றாண்டுகளாகவும், சில தடைகள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவும் நிலவி, கிறிஸ்தவ மக்களை கிட்டத்தட்ட பிரித்து வைக்கின்றன. சில சபை பிரிவுகள் உயரமான தடுப்பு வேலிகளையும், மற்றவைகள் தாழ்வான வேலிகளையும் கொண்டுள்ளன. ஆனால், இவைகள் தங்களுடைய மனப்போக்குகளில் பிரிவுத்தன்மை கொண்டவையாகவே உள்ளன. தேவனுடைய ஜனங்கள் இந்த தடுப்புகளைத் தாண்டி, ஒன்றாக சேர நாங்கள் அறிவுரை கூறுகிறோம். வேதாகமத்தைக் கற்றுக்கொள்வதில் ஒன்றாக சேருங்கள். இந்த மத கோட்பாடுகள் எல்லாம் நிறைய மரமுளைகள் கீழே ஊன்றப்பட்டு, அவைகளுடன் நாம் சங்கிலிகளால் நம்மையே கட்டிக்கொண்டு இருக்கிறோம். இவற்றிலிருந்து ஏன் விடுபடுகிறதில்லை? நாம் பாடுகிறோம், "உம்முடைய வெளிச்சத்தையும் சத்தியத்தையும் அனுப்புங்கள், ஓ, கர்த்தாவே, அவைகள் எங்களுடைய தலைவர்களாக இருக்கட்டும்." ஆனால் இதைப் பின்பற்ற இயலவில்லை. ஏனெனில் மதக்கோட்பாடு என்னும் முளையில் கட்டப்பட்டிருக்கிறோம். அந்த முளையிலிருந்து வெளியே வந்து, வெளிச்சத்தைப் பின்பற்றிச் செல்வோம். அது தேவனுடைய வழி என்பதை நாம் நம்புகிறோம். இந்த சபை பிரிவுகளிலுமுள்ள கிறிஸ்தவ மக்களைப் பற்றி அன்பில்லாத எதையும் நாங்கள் சொல்லுகிறதில்லை. மதக்கோட்பாடுகளுக்கு எதிரானவைகளை நாங்கள் சொல்லுகிறோம். ஏனெனில் அவைகள் நமக்கு பெருமளவில் தீங்கிழைத்திருக்கின்றன. மற்றவர்களுக்கு இன்னும் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கின்றன. எல்லா மதக் கோட்பாடுகளும் நொறுக்கப்பட்டால், ஒன்றாக சேர்ந்து தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்வதற்கு ஜனங்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்து, நாளடைவில் பெரிதான முன்னேற்றம் ஏற்படும்.

## ச.வே.மா.ச. - விசேஷமான வேதாகமம்.

**கே 345:3 :: கேள்வி (1913) - 3 -** சர்வ தேச வேதமாணவர் சங்கம் தமக்கென்று சொந்தமான வேதாகமம் வைத்துள்ளதென்பதும், அது மற்றவைகளிலிருந்து வித்தியாசமானது என்பதும் உண்மையா?

**பதில்.** நாங்கள் வித்தியாசமான வேதாகமம் வைத்திருக்கிறோம் என்று அருமையான சில ஜனங்கள் நினைக்கின்றனர். ஏனெனில், நாம் வேதாகமத்தின் சில பகுதிகளை மேற்கோள்

காட்டும் போது, வேதாகமத்தில் அவர்கள் அறியாத பகுதியாக நிரூபணமாகிறது. ஒரு பெண் என்னிடம் கூறியதை நான் நினைக்கிறேன், “என்னுடைய கணவர் இறந்த பிறகு, என்னைப் பார்ப்பதற்கு என்னுடைய பாஸ்டர் வந்தார்.” சர்வ தேச வேதமாணவ சங்கத்தின் சகோதரனான அவளுடைய கணவர் இறந்து விட்டார். அவளுடைய மெதடிஸ்டு பாஸ்டர் அவளிடம் கூறினார், “உங்களுடைய கணவர் வித்தியாசமான மதத்தைச் சேர்ந்தவர் அல்லவா? அப்படித் தானே;” அவள் சொன்னாள், “சில விஷயங்களில் மற்றவர்களிலிருந்து அவர் வித்தியாசமான நம்பிக்கை கொண்டிருந்தார்.” பாஸ்டர் கேட்டார், “அவர் நம்பிய அந்த விஷயங்கள் என்ன?” அவள் கூறினாள், “வருங்காலத்தில் கிறிஸ்துவின் ஆயிர வருஷ அரசாட்சியில், அனைத்து உலக மனுக்குலத்தாருக்கு சீர்பொருந்துதலின் வாய்ப்பு கிடைக்கும் என்பது அவர் நம்பிய விஷயங்களில் ஒன்றாகும். அவர்கள் இப்பொழுது செய்து கொண்டிருப்பதற்கு நேர் மாறாக, அவர்கள் பாவத்திலிருந்தும்,, மரணத்திலிருந்தும் அப்போது வெளியே வருவார்கள். வேதாகமம் இதை சீர்பொருந்துதல் என்று அழைக்கிறது. என்னுடைய கணவர் இதை விசுவாசித்தார்.” பாஸ்டர் கூறினார், “வேதாகமத்தில் இதுபோன்று ஒன்றும் இல்லை.” அவள் கூறினாள், “அப்படி இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.” அவர் சொன்னார், “நீங்கள் சொல்வது தவறு.” அவள் அமைதலாக பதில் கூறினாள், “வேதாகமத்தில் இருப்பதை நான் கண்டு பிடிக்க முடியும் என்று நினைக்கிறேன். அவர் அதைக் குறியிட்டு வைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.” அவள் பார்த்து, அவரிடம் புத்தகத்தைக் கொடுத்தாள். குறியிட்டு வைத்திருந்த அப் 3:19-21ம் வசனங்களை அவர் திறந்து பார்த்து படித்தார். அவர் கூறினார், “இது எந்த மாதிரியான வேதாகமம்? பிறகு, புத்தகத்தின் முகப்பைப் பார்த்தார். அங்கே, அமெரிக்கன் வேதாகம சங்கம் என்றிருப்பதை பார்த்தார். பிறகு, கூறினார், “நல்லது, வேதாகமத்தின் அந்த பத்தியை இதற்கு முன்னால் நான் ஒருபோதும் கவனித்ததில்லை.”

மற்ற பல பத்திகளுக்கும் அப்படியே. அங்கே இருக்கக்கூடிய சில விஷயங்களை நாம் அறிந்ததில்லை. நாம் அனுமானித்திருக்கும் பல விஷயங்கள் அங்கே இருப்பதே இல்லை. வித்தியாசமான வேதாகமம் எதையும் நாங்கள் வைத்திருக்கவில்லை. எனினும், ஒன்று சொல்ல வேண்டும்: வேதாகமத்தின் விசேஷமான பதிப்பு ஒன்றை நாங்கள் வைத்திருக்கிறோம். அது பொதுவான கிங் ஜேம்ஸ் பதிப்பு ஆகும். ஆனால், வேதாகமத்தின் பல பத்திகள் மற்றும் அவற்றின் ஓரளவு விளக்கங்கள் அடங்கிய தொகுப்புக்களை காவற் கோபுரம் மற்றும் வேதாகம பாடங்களிலிருந்து சேகரித்து, வேதாகமத்தின் பின்னால் சேர்த்திருக்கிறோம். சிலர் இதை காவற் கோபுர வேதாகமம் என்று அழைக்கலாம். ஆனால், இதை வேதமாணவர்கள் பதிப்பு என்று நாங்கள் அழைக்கிறோம். ஏனெனில், வெவ்வேறு பாடங்களின் பேரில் வேதாகமம் எப்படி கற்பிக்கிறது என்பதைக் கவனித்துப் பார்ப்பதற்கு இது உதவியாக இருக்கிறது.

## ச.வே.மா.ச. - இது எவ்விதம் சர்வ தேச சங்கம்?

**கே** 346:1 :: **கேள்வி** (1913) - 1 - உங்களுடைய வேதமாணவர் சங்கம் எப்படி சர்வ தேச அளவில் உள்ளதாகக் கோருகிறது?

**பதில்.** இது சர்வ தேச அளவில் உள்ளது என்பது தான் காரணம் ஆகும். நமது சங்கம் தன்னுடைய அறுதிமொழியின்படி (CHARTER), இது இங்கிருந்து இயங்கினாலும், இங்கிலாந்தில் லண்டனில் இதன் தலைமை இடத்தைக் கொண்டிருக்கிறது. இது காவற் கோபுர வேதாகமம் & பிரசுர சங்கத்தின் துணைச் சங்கங்களில் ஒன்றாக இருக்கிறது. காவற் கோபுர வேதாகமம் & பிரசுர சங்கம், ஊழியத்தின் பல்வேறு பகுதிகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட பல துணை சங்கங்களின் தலைமையாக இருக்கிறது. மெதடிஸ்டு சபைக்கு எப்ஒர்த் லீக், லேடிஸ் எய்டு சொசைட்டி, எனக்குத் தெரியாத மற்ற பல சொசைட்டிகள் உள்ளன. இவைகளெல்லாம் மெதடிஸ்டு சபையைச் சேர்ந்தவையே. உலகத்தின் எல்லா பகுதிகளிலும் இது இயங்குகிறதால், நம்முடைய சொசைட்டி சர்வ தேச அளவில் உள்ளது.

## ச.வே.மா.ச. - மற்ற வகுப்புகளுடன் உறவு.

**கே 346::2 :: கேள்வி (1913) - 2 -** வேத மாணவர்களின் ஸ்பிரிங்ஃபீல்டு வகுப்புடன், பாஸ்டன் அல்லது ப்ருக்ளின் வகுப்புகளுக்கு என்ன தொடர்பு உள்ளது?

**பதில்.** இந்த வகுப்புகள் எல்லாம் தனிப்பட்டவைகள். உலகத்தின் பல பகுதிகளில் கிறிஸ்தவர்கள் கொண்டிருப்பதைப் போல, இவர்கள் இரக்கம் மற்றும் சகோதரத்துவம் கொண்ட தார்மீக உறவு முறையை உடையவர்களாயிருக்கிறார்கள். "உங்களுடைய எஜமானர் ஒருவரே, கிறிஸ்து." கிறிஸ்துவின் பள்ளியில் நாங்கள் எல்லோரும் வேதமாணவர்கள்.

## ச.வே.மா.ச. - இதன் அலுவலர்களின் தேர்தல்.

**கே 346:3 :: கேள்வி (1913) - 3 -** மதச்சார்பற்றவர்கள் கோரும் விதமாக, வேதமாணவர் சங்கம் தன்னுடைய வகுப்பு தலைவர்களையும் அலுவலர்களையும் எப்படித் தேர்ந்தெடுக்கிறது?

**பதில்.** தேர்தல் நடத்த முடிவதற்கு ஒரே வழிமுறை அல்லது வழிமுறை, சமய பிரிவுகளில் மட்டும் இருப்பதில்லை. உதாரணமாக, ஸ்பிரிங்ஃபீல்டு வேத வகுப்பார் தங்களுக்கு ஊழியம் செய்வதற்கு தகுதியான சிலரை, ஆதிச்சபை செய்த விதமாகத் தேர்ந்தெடுக்கின்றனர். வேதாகமம் பரிந்துரைக்கிற முறையில், கைகளை உயர்த்தி தேர்தல் நடக்கிறது. தேர்ந்தெடுக்கப்படுகிறவர், அவர்கள் பெயரிடப்படும் விதமாக மூப்பர் அல்லது போதகர் ஆகிறார்.

## ச.வே.மா.ச. - நம்முடன் கற்றுக்கொள்ளும் மற்றவர்கள்.

**கே 347:1 :: கேள்வி (1913)** நான் ஒரு கத்தோலிக்கர். சர்வ தேச வேதமாணவர் சங்க வகுப்புகளில் பாடம் கற்றுக்கொள்வதற்கு என்னுடைய சபையுடனான என் இணைப்பைத் துறந்து விட வேண்டும் என்பது தேவையா?

**பதில்.** இல்லவே இல்லை. இந்த வகுப்புகளில் எவ்வளவு எண்ணிக்கையிலும் நீங்கள் பங்கு பெறுவதற்கு வரவேற்கப்படுகிறீர்கள். அவர்கள் மேல் அடமானம் வைக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறதில்லை. லூத்தரன், மெதடிஸ்டு, பாப்டிஸ்டு, கத்தோலிக்கர் அல்லது எந்த பிரிவு சபையாயிருந்தாலும், கர்த்தருடைய ஆவியில் நீங்கள் வந்து சத்தியத்தை அறிந்து கொள்ள வந்தீர்கள் என்றால், நீங்கள் பரிபூரணமாக வரவேற்கப்படுகிறீர்கள்.

## ச.வே.மா.ச. - அங்கத்தினர் பட்டியல்.

**கே 347:2 :: கேள்வி (1913) - 2 -** ஒருவர் சர்வ தேச வேதமாணவர் என்றழைக்கப்படும் உரிமையைப் பெறுவதற்கு முன்பு, அவர் என்ன உத்தியோகம் செய்ய வேண்டிய தேவை இருக்கும்? முழுமையான பட்டியலில் எத்தனை பேர் உள்ளனர்?

**பதில்.** அங்கத்தினராவதற்கு எந்த தகுதியும், எந்த கெடுபிடிகளும், எந்த சங்கேத வார்த்தைகளும் கிடையாது. நல்லொழுக்கம் உடைய எந்த நபரும் எந்த நேரத்திலும் எங்கள் கூடுகைகளுக்கு வரவேற்கப்படுகிறார்கள். இந்த பல்வேறு கூடுகைகளில் எவ்வளவு எண்ணிக்கையில் கலந்து கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஸ்பிரிங்ஃபீல்டு வகுப்பு அல்லது வகுப்புகளில் எத்தனை பேர் கலந்து கொள்கின்றனர் என்று எனக்குத் தெரியாது. ஸ்பிரிங்ஃபீல்டில் எத்தனை வகுப்புகள் நடைபெறுகின்றன என்பது எனக்குத் தெரியாது. ஆனால், நியூயார்க் நகரத்தில் நாற்பது அல்லது ஐம்பது வகுப்புகள் இருக்கிறது போல, ஸ்பிரிங்ஃபீல்டில் குறைந்த பட்சம் அரை டஜன் வகுப்புகளாவது இருக்கும் என்று ஊகிக்கிறேன். பொதுவான முறையில், ஒரு மதிப்பீடாக 100,000 பேர்கள் இருக்கலாம் என்று சொல்கிறேன். ஒருவேளை இந்த வகுப்புகளுக்கு அதிகமானோர் 200,000 பேர்கள் கலந்து கொள்ளலாம். சமீபத்தில் தென் இந்தியாவில் இப்பொழுது 3000 பேர்கள் அங்கே வகுப்புகளில் கலந்து கொள்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டது என் நினைவுக்கு வருகிறது. அந்த விகிதத்தில் பார்த்தால், முழுமையாக கலந்து கொள்வோரின் எண்ணிக்கை 2,50,000 அளவுக்கு வரலாம்.

## ச.வே.மா.ச. - அமைப்பின் விரிவு.

**கே** 347:3 :: **கேள்வி** **(1913) - 3 -** சர்வ தேச வேதமாணவர் சங்கம் தன் பொது ஊழியத்தை எத்தனை வருஷங்களாக நடத்தி வருகின்றது?

**பதில்.** இந்த பொது ஊழியம் கடந்த நாற்பது வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. தற்காலத்தில் உள்ளது போல் அந்த உத்வேகத்துடனோ அல்லது அதே எண்ணிக்கையிலோ இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த வகுப்புகள் நாற்பது வருஷங்களாக இயங்கி வருகின்றன. இந்த வகுப்புகளில் சில, சுமாராக, 1900 வருஷங்களாக இருந்து வருகின்றன என்று சொல்லுவதற்கு எங்களை மன்னியுங்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த வகுப்புகளில் சில அப்போஸ்தலர் காலத்தில் இருந்தன. இருண்ட யுகங்களிலும் இது போன்ற வகுப்புகள் இருந்தன என்பதில் எங்களுக்கு சந்தேகம் இல்லை. ஆனால், இவைகள் சபை சரித்திரத்தில் குறிக்கப்பட்டதாக நீங்கள் பார்க்க முடியாது. ஏனெனில், சபை வேதாகமத்தைப் புறக்கணித்து, மதக்கோட்பாடுகளைப் பின்பற்றியது. துல்லியமான வரலாறு நமக்கு கிடைத்திருந்தால், பதினெட்டு நூற்றாண்டுகளாக வேதமாணவர்கள் இருந்திருப்பதை நாம் கண்டிருக்க முடியும்.

## ச.வே.மா.ச. - - சபை இணைப்பிற்கான தொடர்பு.

**கே** 347:4 :: **கேள்வி** **(1913) - 4 -** சபை இணைப்பு பற்றிய கேள்வியில் சர்வ தேச வேத மாணவர் சங்கத்தின் நிலைப்பாடு என்ன?

**பதில்.** சபை இணைப்பு என்பது சரியான காரியம் என்றே நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், இந்த விஷயத்தில் கர்த்தருடைய வார்த்தையை எடுத்துக் கொள்கிறோம். “கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்.” இதைத் தான் நாங்கள் வாதிடுகிறோம். நாங்கள் சொல்வது, “பாப்டிஸ்டு, சீஷர் சபை, லூத்தரன், மெதடிஸ்டு, பிரெஸ்பைடேரியன் அல்லது கத்தோலிக்கர் யாராயிருந்தாலும், மதக்கோட்பாடுகளாகிய தடுப்பு வேலிகளை நீக்கிப் போடுங்கள், நாம் எல்லோரும் ஒன்றாக இணையலாம்.” நாங்கள் விவரித்திருக்கிற இது போன்ற சபை இணைப்பிற்கும் (UNION), நாங்கள் அதிகம் கேள்விப்படுகிற கூட்டமைப்பிற்கும் (FEDERATION), வித்தியாசம் உள்ளது. இந்த கூட்டமைப்பு வேதாகமத்திற்கு பொருந்தியது அல்ல. இது சிறிதளவிற்கு வெற்றி அடையும் என்று வேதாகமம் சொல்லுகிறது. ஆனால், இதைக் கண்டனம் செய்கிறது.

## ச.வே.மா.ச. - - எல்லா சபை பிரிவுகளிலிருந்தும் தனித்து உள்ளது.

**கே** 348:1 :: **கேள்வி** **(1913) - 1 -** மற்ற சபை பிரிவுகளிலிருந்து சர்வ தேச வேதமாணவர் சங்கம் தனித்து இருப்பதற்கு காரணம் என்ன?

**பதில்.** சர்வ தேச வேதமாணவர் சங்கம் எந்த சபை பிரிவுகளிலிருந்தும் தனித்திருக்கவில்லை. எந்த சபை பிரிவிலிருந்தும் எந்த நேரத்திலும், எல்லோரையும் எந்த வகுப்புக்கும் வருவதற்கு வரவேற்கிறோம். நாங்கள் யாரிடமும் தனித்திருக்கவில்லை. நாங்கள் கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சென்று கூட்டங்கள் ஏன் நடத்துவதில்லை.? அவர்கள் எங்களைக் கூப்பிடுகிறதில்லை. எபிஸ்கோபல் சபைக்கு ஏன் போகிறதில்லை? அவர்கள் எங்களைக் கூப்பிடுகிறதில்லை. பாப்டிஸ்டு சபைக்கு ஏன் போகிறதில்லை? அவர்களும் எங்களைக் கூப்பிடுகிறதில்லை. நாம் எல்லோரையும் வரச்சொல்லி, பொது இடங்களில் நம்முடைய கூட்டங்களை நடத்த முயற்சிக்கலாம். அது எல்லா பிரிவுகளிலுள்ள மக்களுக்கு இலவசமாக இருக்கும். உதாரணமாக, இந்த அழகான மண்டபம் ஜூலை 20ம் தேதி வரை நாங்கள் வைத்திருக்கிறோம். யூதர்களும் புற ஜாதிகளும், எல்லா சபை பிரிவுகளிலுமுள்ள ஜனங்களும் இங்கே வருவதற்கு முழு உரிமை உள்ளது. அவர்கள் அழைக்கப்படுகிறதாக உணரலாம். நாங்கள்

தனித்திருக்கவில்லை. எல்லா பிரிவுகளிலுமுள்ள ஜனங்களுக்கு நாங்கள் சொல்கிறோம்: “எங்களுடன் வாருங்கள், நீங்கள் எதனுடனும் இணையத் தேவையில்லை.”

## ச.வே.மா.ச. - புதிய பிரிவு.

**கே** 348:2 :: **கேள்வி** (1913) - 2 - இது மட்டும் தான் உண்மையான சபை என்று சர்வ தேச வேதமாணவர் சங்கம் நடிக்கிறதா? ஒரு புதிய சபை பிரிவை உருவாக்குவதற்கு முயற்சி செய்கிறீர்களா?

**பதில்.** அருமையான நண்பர்களே, வேதாகம சபை தான் உண்மையான சபை ஆகும். இந்த ஒரே உண்மையான சபையைத் தவிர வேறு ஏதும் ஒருபோதும் இருந்ததில்லை. மற்றவைகள் அனைத்தும் பொய்யானவை. நான் வேறு சபையை உருவாக்கியிருந்தால், பொய்யான வேறு ஒரு சபையை நான் உருவாக்கியதாகும். இது எங்களுடைய உள்நோக்கமே அல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்காக அர்ப்பணித்த ஜனங்கள் எல்லோரும் பரலோகத்தில் பேரெழுதபட்ட ஜீவனுள்ள தேவனுடைய சபையைச் சார்ந்தவர்களாயிருக்கிறார்கள் என்று வேதாகமம் முன்னிறுத்தும் நோக்கத்தையே சர்வ தேச வேதமாணவர் சங்கம் கடைபிடிக்கிறது. சர்வ தேச வேதமாணவர் சங்கம் மற்ற சபை எதையும் அங்கீகரிக்கிறதில்லை. இந்த சங்கத்தில் உள்ளவர்கள் தான் சபையை உள்ளடக்கியவர்கள் என்று இது சொல்லவில்லை. பலதரப்பட்ட சபைகளிலுள்ள உண்மையான கிறிஸ்தவர்கள் அனைவரும் விழித்துக்கொள்ள வேண்டும் என்பதையே இந்த சங்கம் கண்டுணர்கிறது. நாங்கள் அவர்களை சத்தியத்திற்குள்ளாக விழித்தெழுவதற்கு முயற்சி செய்கிறோம். இந்த உண்மையான கிறிஸ்தவ ஜனங்கள் தேவனுடைய வார்த்தையின் மெய்யான வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், அவர்கள் நம்பிக்கைக் கேடு கொண்டவர்களாய் விழுந்து போகும் ஆபத்து உள்ளது என்பதை சர்வ தேச வேதமாணவர் சங்கம் கண்டுணர்கிறது. ஆகவே, வேதாகமத்தைக் கற்றுக்கொள்ள எல்லா கிறிஸ்தவ ஜனங்களையும் வரவழைத்து, இவ்விதமாக கிறிஸ்துவின் சபையில் முழுவதுமாக இணைய சங்கம் முயற்சி செய்கிறது.

## ச.வே.மா.ச. - பேர்ச்சபையை விட்டு இதில் ஏன் சேர வேண்டும்?

**கே** 348:3 :: **கேள்வி** (1914) - 3 - சகோதரர் ரசல் அவர்களால் அளிக்கப்பட்ட தற்கால சத்தியத்தில் நான் இசைவுடன் இருந்து, ஆனால், ஒரு சபையில் பல வருஷங்களாக தொடர்ந்து இருந்து வந்தால், சர்வ தேச வேதமாணவர் சங்கத்திற்குள் வந்து சேர்வதால் நான் என்ன லாபம் அடைவேன்?

**பதில்.** உங்களைப் பயன்படுத்துவதால் அல்லது சொசைட்டிக்குள் நீங்கள் இருப்பதால், அவர்கள் லாபம் ஈட்டுகிறார்கள் என்று நான் கூறலாமா? நான் அவரிடம் என்ன சொல்ல வேண்டும்? அவர் நல்ல மனசாட்சியை லாபமாக பெறுவார். ஏன், நல்ல மெதடிஸ்டுகள், பிரெஸ்பைடேரியன்கள், பாப்டிஸ்டுகள், லூத்தரன்கள் அல்லது கத்தோலிக்கர்கள் இல்லையா? மெய்யாகவே இருக்கிறார்கள். சர்வ தேச வேதமாணவர் சங்கத்தை விட பரந்த மனப்பான்மையுள்ள அஸ்திபாரம் இந்த உலகத்தில் எதுவும் இல்லை என்று நான் நம்புகிறேன். சபை பிரிவுகளைக் கருத்தில் கொள்ளாமல், தேவனுடைய பரிசுத்தவான்கள் எல்லோரையும் வேறு எந்த சபைப்பிரிவைச் சார்ந்த ஜனங்களை விட நாங்கள் அதிகமாக அங்கீகரிக்கிறோம்.

பேர்ச்சபையை விட்டு ச.தே.வே.சங்கத்தில் யாராவது ஏன் சேர வேண்டும்? முதலாவதாக, மற்ற எந்த இடத்திலும் சேருவது போல சர்வ தேச வேதமாணவர் சங்கத்தில் நீங்கள் வர முடியாது. நீங்கள் எளிதாக வெளியே போக முடியாது. அவர்கள் உங்களை உள்ளே வரவேற்கத் தேவையில்லை. நீங்கள் விடுவிக்கப்பட்ட உடனேயே நீங்கள் வேதமாணவராக ஆகிவிடுகிறீர்கள். - இது நாள் வரையிலும் இருந்த கஷ்டம் என்னவெனில், உங்கள் மனது கட்டப்பட்டிருந்தது. வேதாகமத்தை எப்படி கற்றுக்கொள்வது என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் அதற்குப்

பயப்படுகிறீர்கள். நீங்கள் விடுவிக்கப்பட்ட உடனேயே, நீங்கள் சர்வ தேச வேத மாணவர் சங்க அங்கத்தினராகிறீர்கள்.

இப்போது நீங்கள் சொல்கிறீர்கள், நான் இருக்கும் இடத்திலேயே ஏன் தங்கிவிடக்கூடாது? உங்களுக்காக முடிவு பண்ணுவது எனக்கு உரியது அல்ல. நீங்கள் எங்கே இருக்கிறீகளோ, அங்கேயே தங்கி விட தேவன் சொல்லுகிற சத்தத்தை நீங்கள் கேட்டதாக நினைத்தால், தேவனுடைய சத்தத்தை எல்லாவிதத்திலும் பின்பற்றுங்கள். ஆனால், நம்மில் சிலருக்கு, விஷயம் இந்த வழியில் உள்ளது. (நீங்கள் பேர்ச்சபையிலேயே தங்கி விடுகிறீர்களா அல்லது வெளியே வருகிறீர்களா என்பதை ஒவ்வொரு மனுஷனுடைய மனசாட்சிக்கு விசாலமும் திறந்த நிலையிலும் அதை விட்டு விடுகிறேன் என்பதை நீங்கள் பாருங்கள். ஒருவருடைய ஓட்டம் பற்றி முடிவு செய்வதை சொல்லும் வார்த்தை ஏதும் என்னிடத்தில் இல்லை.) என்னால் சொல்ல முடிந்தது எல்லாம் இது தான்.; உதாரணமாக, நான் ஒரு கத்தோலிக்கராக இருக்கும் வரையிலும், என்னுடைய அயலார் மற்றும் நண்பர்கள் அனைவராலும், கத்தோலிக்க சபையின் கொள்கை மீது நம்பிக்கை கொண்டிருப்பவராகவும், ஆதரவளிப்பவராகவும் நான் அறியப்படுவேன். அவர்களுடைய உபதேசங்களில் ஏதாவது என்னுடைய மனதிற்கு இணக்கமாய் இராவிட்டால், அந்த சபையை நான் நேர்மையாக அடையாளப்படுத்தவில்லை என்ற முறையிலும், அதை விட்டு விலக வேண்டும் என்பதில் எனக்குள்ளே நேர்மையுள்ளவனாக இருப்பதற்காகவும், கத்தோலிக்க சபையிலிருந்து விலகி விடுவது என்னுடைய கடமை ஆகும். ஏன்? ஏனெனில் அந்த ஜனங்களிடம் நான் போய், முழுவதுமாக திருப்தி அடைந்துள்ளேன் என்று இனி என்னால் சொல்ல முடியாது. அதனுடைய கொள்கைகளை இனி நான் நம்புவதில்லை. அந்த காரணத்தினாலேயே, மிக குறைவான பிரெஸ்பைடேரியன்கள், பிரெஸ்பைடேரியன் மத நம்பிக்கைகளை விசுவாசிக்கிறார்கள். மற்ற சபைகளிலும் அப்படியே உள்ளது. ஆகவே, அதே விதிமுறையை அவர்கள் எல்லோரும் பிரயோகப்படுத்தினால், பல்வேறு சபைகளில் எல்லாம் உடனடியாக ஜனத்தொகை குறைந்து, அவர்களுடைய அங்கத்தினர்களை இழக்கும் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் ஜனங்கள் கூறுவார்கள், “நான் அந்த மதக்கோட்பாட்டை நம்புகிறதில்லை; நான் எனக்கும், தேவனுக்கும்,, என்னுடைய சக நண்பர்களுக்கும் இனி நேர்மையாக இருக்க முடியாது.”

பிறகு என்ன நடக்கும்? இது மிக அற்புதமானது. எப்படி? இப்படி எல்லோரும் செய்தால், அவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி வருவார்கள். கிறிஸ்தவர்களைத் தவிர யாரும் இருக்க மாட்டார்கள். பிறகு அவர்கள் யாராக இருப்பார்கள்? சர்வ தேச வேதமாணவர் சங்கத்தினராக இருப்பார்கள்.

## ச.தே.மா.ச. - வேண்டிக்கேட்பது, ஜெபிப்பது, நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல்.

**கே 349:1 :: கேள்வி (1914) - 1 -** அருமையான பாஸ்டர் ரசல் அவர்களே, உங்களுடைய பெரும் கொடைத்தன்மை பற்றி நான் மிகவும் ஆர்வம் உள்ளவன். அதில் ஒரு சிறிய பங்கு எனக்கு கிடைக்கும் விதமாக சலுகை பெற்றால், நான் மகிழ்ச்சி அடைவேன். ஊழியத்தில் உதவியாயிருக்க இத்துடன் இணைத்திருக்கும் காசோலையை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா? அதை நீங்கள் பயன்படுத்த முடியுமா?

**பதில்.** அந்த காசோலை 2700 டாலர்களுக்காக உள்ளது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது இல்லையா என்பது தான் இந்த கேள்வி. என் அருமையான சகோதர சகோதரிகளே, நான் கூறுவது, பணம் எதுவும் எப்போதும் வற்புறுத்திக் கேட்பதில்லை. பயன்படுத்தக்கூடிய பணம் அனைத்தும் நன்கொடைகளாக கொடுக்கப்படுபவைகளே. விதிமுறைகளின்படி, ஊழியத்திற்காகக் கொடுப்பவர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள் இல்லை. ஆனால், நிறைய ஜனங்கள் ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏதேனும் செய்ய விருப்பப்படுவது போல, தங்களுடைய சொந்த ஆத்துமாக்கள் ஆசீர்வதிக்கப்படுவது போன்ற உணர்வை

பெறுகிறார்கள். ஆகவே, கொஞ்சம் பணத்தை இந்த முறையில் கொடுக்கிறார்கள். சில நேரங்களில் வேறு முறைகளில் கொடுத்து, இது ஏதோ ஒரு வழியில் உபயோகப்படுத்தப்பட ஆசைப்படுகிறார்கள்.

உதாரணமாக, நான் ஆஸ்பரி பார்க்கில் இருக்கும் போது, ஒரு நாள் எனக்கு ஒரு கடித உறை கொடுக்கப்பட்டது. அதைத் திறக்க எனக்கு நேரம் இல்லாததால், நான் வெறுமனே என்னுடைய சட்டைப் பையில் போட்டுக் கொண்டேன்; ஆனால், சில நேரத்திற்குப் பிறகு ஒரு செய்தியாளரிடம் நான் பேசிக்கொண்டு இருந்தேன். அவர் ஊழியத்தைப் பற்றியும், எப்படி ஆதரவு தரப்படுகிறது போன்றவற்றைக் குறித்தும் பேசிக்கொண்டு இருந்தேன். இது தாமாக முன் வந்து செய்யும் நன்கொடைகளால் ஊழியம் நடக்கிறது என்று அவரிடம் விளக்கினேன். இந்த ஊழியத்தில் நான் நாற்பது வருஷங்களாக இருந்திருக்கிறேன், இருந்தாலும், ஒருபோதும் பணம் சேகரித்தலைச் செய்ததில்லை. கர்த்தரால் அளிக்கப்படும் எந்த பணமும் எங்களுடைய திறமைக்கும், தீர்மானத்துக்கும், நாங்கள் அறிந்துள்ள புத்திசாலித்தனத்துக்கும் ஏற்ப உபயோகப்படுத்தியிருக்கிறோம். கர்த்தரைத் துதிக்கும் விதமாக அவர் தாம் அளிக்கும் பணத்தை உபயோகப்படுத்தக்கூடிய ஞானத்தைக் கொடுக்குமாறு அவரை வேண்டுகிறோம். இந்த பணம் படிப்படியாக தொடர்ந்து வருகிறது. நாங்கள் ஜனங்களிடமிருந்து பணத்தை ஒருபோதும் வேண்டிக் கேட்டதில்லை. தேவனிடமும் கேட்டதில்லை. நாங்கள் பணத்திற்காக ஜெபிக்கிறதில்லை. மேலும், எவ்வளவு அதிகமாக அல்லது எவ்வளவு குறைவாக உள்ளது என்று கர்த்தரிடம் சொல்வதில்லை என்பதெல்லாம் சிலருக்கு விசித்திரமாகத் தோன்றும். ஆனால், என் அருமையான நண்பர்களே, எங்களுடைய தேவன் கஜானாவைப் பற்றியெல்லாம் தெரிந்திருப்பவர். அவரிடம் சொல்லி என்ன பிரயோஜனம்? நான் அறிவதை விட வரவு செலவு கணக்கு பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும். அந்த ஊழியத்திற்கு எவ்வளவு செலவு பண்ண வேண்டும் என்று தேவனுக்கு நான் சொல்லப் போவதில்லை. அந்த பங்கை அவர் பார்த்துக் கொள்வார். எங்களுடைய கவனிப்பின் கீழ் ஏதேனும் வருவதாயிருந்தால், அது எங்களுடைய பணியாளர் பணி மற்றும் மேற்பார்வை பணி மட்டுமே. அங்கே தான் எங்களுடைய பொறுப்புணர்வு ஆரம்பமாகிறது. அதை புத்திசாலித்தனமாகவும், நன்றாகவும் செய்தால், அது கர்த்தரை நிறைவு செய்யும்.

நான் செய்தியாளரிடம் கூறினேன், "இந்த விதிமுறையைத் தான் நாங்கள் பின்பற்றுகிறோம். தேவன் பணம் அளிப்பதை நிறுத்துவதைப் பொருத்து, அந்த அளவுக்கு ஊழியம் சரிவடையும். ஏனெனில், நாங்கள் கேட்க மாட்டோம். **ஆனால் அவர் எதை அனுப்புகிறாரோ, அதை நாங்கள் பயன்படுத்துவோம்.** அந்த செய்தியாளர் சந்தேகமாய் இருப்பது போலத் தோன்றியது. நான் கூறினேன், "என்னுடைய சட்டைப்பையில் இப்பொழுது என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது." நான் சில கடிதங்களை என்னுடைய சட்டைப்பையிலிருந்து வெளியே எடுக்கும் போது, இந்த உறையைப் பார்த்தேன். பிறகு கூறினேன், "இங்கு இருப்பதை நான் ஆய்வு செய்து பார்க்கவில்லை." நான் அதைத் திறந்து, இருபது டாலர் நோட்டுகள் ஐந்து இருப்பதைப் பார்த்தேன். அவர் விழிகள் பிதுங்கிப் பார்த்தார். அந்த கடித உறையில், **"சகோதரியிடமிருந்து அருமையான போட்டோ டிராமாவிற்கு"** என்று எழுதியிருந்தது. எல்லாம் அவ்வளவு தான். ஆனால், அருமையான சகோதர சகோதரிகளே, இது கதையைச் சொல்லுகிறது. ஆகவே, இந்த அருமையான சகோதரிக்கு நன்றி கூறுவோம். எஜமானரின் புகழ்ச்சிக்கு இந்த பணத்தை விவேகத்துடன் செலவு செய்ய முயற்சிப்போம்.

எல்லா கேள்விகளும் இதைப் போல பதில் சொல்வதற்கு எளிதாக இருந்தால், என் அருமையான நண்பர்களே, எனக்கு எந்த கஷ்டமும் இருக்காது.

## ச.தே.வே.ச. - பாபிலோனின் ஆவி.

**கே 350:1 :: கேள்வி (1915) - 1 -** சர்வ தேச வேதமாணவர் சங்கத்தின் தலைமை அலுவலகம், ப்ரூக்ளினிலிருந்து வெளியிடப்படும் முறைமைகளை ஒத்துழைப்பதில், அந்த முறைமைகளை உன்னிப்பாக ஆராயாமல் இருப்பது, பாபிலோனின் ஆவியைக் காண்பிப்பதாக இருக்கிறதா?

**பதில்.** இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தங்கள் சொந்தத் தீர்ப்பையே உபயோகப்படுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். யாராவது ஒருவர் மோசமான "கொடுக்கினால் தாக்கப்பட்டிருந்தால்", அவர் தம்முடைய பாதுகாப்பில் மிக அதிகமாக இருக்க வேண்டும். ஒருவர் "கொடுக்கினால் தாக்கப்பட்டிருக்கவில்லை" என்றால், அவர் தம்முடைய பாதுகாப்பில் அதிகமான அளவு சரியாக இருக்கிறதில்லை. இந்த விஷயத்தில் உங்கள் சொந்தத் தீர்ப்பை உபயோகப்படுத்துவது தான் சரியாக இருக்கும். ப்ரூக்ளினிலுள்ள தலைமையகத்தைப் பொருத்த வரையில், அங்கே உள்ள ஊழியத்தைப் பற்றி என்னுடைய சொந்த அடையாளத்தில் நான் சொல்ல முற்படுவது: ஒவ்வொன்றும் என்னுடைய மேற்பார்வையின் கீழ் உள்ளது. என்னுடைய மனசாட்சிக்கு விரோதமாக அங்கேயிருந்து எதுவும் வெளிப்படாது. ஆனால் நீங்கள் **உங்களுடைய** மனசாட்சிகளை உபயோகப்படுத்த வேண்டும். அங்கே ப்ரூக்ளின் அலுவலகத்தில் விவேகமும் திறமையும் உள்ள பல சகோதரர்கள் இருக்கிறார்கள். அப்படியிருந்தும், நான் உயிரோடு இருக்கிற வரையிலும், தற்போதைய ஏற்பாட்டில், அவர்கள் என்னுடைய பொதுவான மேற்பார்வையில் என்னுடைய உதவியாளர்களாக இருக்கிறார்கள். பல வருஷங்களுக்கு முன்பு என்னுடைய சொத்தை சொசைட்டிக்கு மாற்றிக் கொடுக்கும் போது, இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. இது வெளிநாடுகளில் நடக்கும் சொசைட்டியின் ஊழியத்துக்கும் பொருந்தும்.

## ச.தே.வே.ச. - பாபிலோனைப் பற்றிய உண்மையான பொருள் விளக்கம்.

**கே 350:1 :: கேள்வி (1915) - 2 -** சர்வ தேச வேதமாணவர் சங்க தலைமையகம் வெளியிடும் முறைமைகள் எங்களால் புரிந்து கொள்ளப்படவோ அல்லது அங்கீகரிக்கப்படவோ இல்லையென்றால், வெளி.18:4ம் வசனத்தை நாங்கள் பிரயோகப்படுத்தலாமா? "அவளை விட்டு வெளியே வாருங்கள், என் ஜனங்களே." அப்படி என்றால் எப்படி?

**பதில்.** சர்வ தேச வேதமாணவர் சங்கம் பாபிலோனை ஒரு பகுதியாக காண்பிக்க முடியுமானால், நாம் எல்லோரும் அதை விட்டு கண்டிப்பாக வெளியே வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாம் எல்லோரும் ஒரே பக்கத்தில் வெளியே வந்தால், நாங்கள் பிறகு எங்கே இருப்போம்? எல்லோரும் ஒரே பக்கத்திற்கு வெளியே வந்தால், நாம் நெருக்கமாகவே ஒன்றாக இருப்போம்.

"பாபிலோன்" என்ற வார்த்தை "குழப்பம்" என்று தெரிவிக்கிறது. வெளி.18:4ல் இது, தேவனுடைய விஷயங்களையும், மனுஷருடைய விஷயங்களையும் கலவையாக்குவதைக் குறிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. ரோமன் கத்தோலிக்க சபையின் முழுமையான செல்வாக்கின் கீழ், ஐரோப்பா முழுவதும் ராஜ்யங்கள் அடிபணிந்த ஒரு காலம் இருந்தது. ரோமன் கத்தோலிக்க சபையில் கிறிஸ்தவம் இருந்த அளவுக்கு, கிறிஸ்தவத்தின் பாதிப்பு அந்த அளவுக்கு அந்த ராஜ்யங்களுக்குள் வந்தது.

உலகத்தில் இருந்த ஒரே சபையாக ரோமன் கத்தோலிக்க சபை இருந்த ஒரு காலம் உண்டு என்று அழுத்தமாக சொல்வது நல்லது. அச்சமயத்தில் அந்த சபைக்குள் இருப்பதும், அச்சபையாளராக இருப்பதை விட சிறப்பானதாக வேறு எதையும் ஜனங்கள் அறியவில்லை. இல்லையென்றால் அவர்கள் வேறு எங்கே இருந்திருப்பார்கள்? பிறகு, சபை மேலாண்மையில் உயர்ந்த பதவியிலிருந்த சபை அலுவலர்கள் ரோம ராஜ்யத்துடன் இணைப்பு கொள்வதில் வெற்றியடைந்தார்கள்; மேலும் ரோமச்சபை இதனுடைய வாரிசானது. பிறகு, ரோமச்சபை எல்லா தேசங்களையும் அதிகாரம் செலுத்தத் தொடங்கி, இந்த ஆட்சி அல்லது அந்த ஆட்சியின் ஜனங்களைப் பார்த்துச் சொல்லத் தொடங்கியது: "உங்கள் ராஜா எங்களுடன் இணக்கமாக இல்லை. நீங்கள் வேறு ஒருவரை தேர்ந்தெடுக்க முடியும்." பிறகு, ஒரு புரட்சி உண்டாகும். இந்த மாற்றங்களுக்கு போப்பு மற்றும் கத்தோலிக்க சபையினர் பின்னணியில் இருந்தார்கள். அந்த முறையில் தான் இது ஆரம்பித்தது. அங்கு தான் உலகத்துக்கும் பேர்ச்சபைக்கும் கள்ளத்தனமாக கலியாணம் நடைபெற்றது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இப்போது இது படிப்படியாக மாறி வருகிறது. சில நாடுகளில் சபையும் ராஜ்யமும் முழுமையாக பிரிவடைந்துள்ளன. ஆனால், இந்த மாற்றம் ஆஸ்திரியா-ஹங்கேரியில் ஏற்பட்டிருக்கவில்லை. ரோமன் கத்தோலிக்க சபையின் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்குள் ஜனங்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்தையும் சபை செய்ய வேண்டியுள்ளது. இங்கிலாந்தில் அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இங்கிலாந்து சபையின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். பிரபுக்கள் அவையின் (HOUSE OF LORDS) அங்கத்தினர்களாக சபை பிஷப்புகள் இருக்கிறார்கள். இதைப் போன்றே ஜெர்மனியிலும் சுவீடனிலும் இருக்கிறது. அவர்களுடைய அரசாங்கமும், தேவனுடைய அரசாங்கமும் ஜனங்களுடைய மனங்களில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் காரியங்கள் இருப்பதை தேவன் “பாபிலோன்” என்று அழைக்கிறார் - பாசாங்கு செய்யும் கிறிஸ்தவ சபை உலக அரசாங்கங்களுடன் விவாகம் செய்கிறது. இவைகள் கிறிஸ்தவ அரசாங்கங்கள் என்று தவறாக அழைக்கப்படுகின்றன. அவைகள் கிறிஸ்தவத்தைச் சார்ந்தது அல்ல. இந்த அரசாங்கங்கள் யுத்த சமயங்களில் கிறிஸ்துவின் ஆவியை வெளிப்படுத்துகிறதில்லை. இந்த அரசாங்கங்கள் எல்லாவற்றிலும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த அரசாங்கங்கள் கிறிஸ்தவத்தைச் சார்ந்தது இல்லை. காரியங்கள் இந்த நிலைமையில் இருப்பதற்கு பேர்ச்சபை பொறுப்பாய் இருந்திருக்கிறது. இந்த நிலைமை ஜனங்களின் மனங்களை திசை திருப்பியிருக்கிறபடியால், அவர்களுடைய தற்போதைய ஓட்டம் சரியானதாக இருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். கிறிஸ்து இப்போது ஆட்சி செய்கிறார் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களுடைய மனங்களில் அரசாளும் ராஜாக்களும் பாராளுமன்றமும் பூமியில் தேவனை அடையாளப்படுத்துகிறதாக இருக்கிறது. இவையெல்லாவற்றிலிருந்து நம்மை கர்த்தர் பிரித்திருக்கிறார்.

பாபிலோனின் ஆவி வேறு ஒரு வழியில், உதாரணமாக, மெதடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பைடேரியன் போன்ற புரோட்டஸ்டாண்டு சபைகளில் தன்னை வெளிப்படுத்துகிறது. அவர்கள் உலகத்தின் ஆவிக்கு தீய வழியில் துணை போகிறார்கள். அவர்கள் பணக்காரர்களைக் கவனித்து, பணக்காரகளுடன் ஊழியம் செய்து, சபையில் அவர்களுக்கு பதவிகளைப் பெற வைக்கிறார்கள். இவ்விதமாக, ஆவிக்குரிய தன்மையை விட பணத்தையே அடையாளம் காண்கிறார்கள். பல விஷயங்களில் சபையை பணமே வழி நடத்துகிறது. மெய்யான சபை இயங்குவதற்கு இது அடிப்படை அல்ல. எல்லாவற்றையும் விட சுதந்திரமாக இருக்கும் பாப்டிஸ்டு சபை உட்பட, அவைகள் எல்லாவற்றுடனும் தொடர்புடையதாக ஒரு முறைமை உள்ளது.

பாப்டிஸ்டுகள் சொல்வார்கள், “நாங்கள் எந்த அடிமைத்தனத்திலும் இல்லை. எங்கள் மீது சபையின் கட்டுப்பாடு எதுவுமே இல்லை.” பாபிலோனின் ஆவி சபைக்குள் நுழைந்து விட்டிருக்கிறது என்பதை அவர்கள் உணராமல் இருக்கிறார்கள். இங்கு பாப்டிஸ்டுகளின் சபைக்கூட்டம் உள்ளது என்று அனுமானிப்போம். சபைக்கூட்டம் என்ற முறையில், அவர்கள் தங்கள் சொந்த பாஸ்டரை அவர்களுடைய சொந்த விஷயங்களை கவனிப்பதற்காக அழைக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட பாஸ்டர், சகோதரர் A அவர்களுக்கு ஊழியம் செய்ய வரவழைக்கப்படுகிறார். ஆனால், அவர் அந்த சபைக்கூட்டத்தின் பாஸ்டராக அவசியம் நியமிக்கப்பட வேண்டும். ஆகவே, அவரை நியமிப்பதற்காக, வேறு பாப்டிஸ்டு பாஸ்டர்களை - சகோதரர் B, சகோதரர் C மற்றும் சகோதரர் D ஆகியவர்களை அழைக்கிறார்கள். ஆனால், நியமிப்பதற்காக அழைக்கப்பட்ட பாஸ்டர்களுடன் சகோதரர் A மிக நன்றாக ஒத்து வருபவராக இருக்கவில்லை. ஆகவே, அவர்கள் கூறுகிறார்கள், “சகோதரர் A ஐ நாங்கள் நியமிக்க மாட்டோம். அவர் ஒழுங்கற்றவர்.” சபைக்கூட்டத்தார் கேட்கிறார்கள், “நீங்கள் அவரை நியமிக்க முடியாதா?” அதற்கு அவர்கள் பதிலளிக்கிறார்கள், “சகோதரர் A க்கு விரோதமாக எங்களுக்கு எதுவுமே இல்லை; ஆனால் நாங்கள் அவரை நியமிக்கமாட்டோம்.” ஆகவே, பிரசங்கிமார்கள் விதிமுறைகளை தங்களிடம் வைத்திருக்கிறார்கள். ஜனங்கள் அதை அறிவதில்லை.

பிரசங்கிமார்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று பாப்டிஸ்டுகள் உங்களுக்குச் சொல்வார்கள். ஆனால், பிரசங்கிமார்களின் ஒப்புதல் இல்லாமல், பாப்டிஸ்டுகள் எந்த காரியத்தையும் செய்ய முடியாது; இதை அவர்கள் அறிவதாகத் தோன்றவில்லை. தேவன் அங்கே அமைதியாக இருக்க முடியாதபடி, அவர்கள் அதிகாரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு எந்த மனுஷர்களும் போய் மற்ற மனுஷர்களை நியமிக்க தேவன் ஒருபோதும் அதிகாரம் வழங்கவில்லை. தேவனே நியமிக்கிறார். கர்த்தர் பாஸ்டர் ஒருவரை நியமிக்கிறாரா அல்லது அழைக்கிறாரா என்பதை, சபை தன் சிறந்த கணிப்பின்படி முடிவு செய்ய வேண்டும். இந்த நியமனம் எல்லாம் பாபிலோனியத்தனமாக, ஜனங்களைக் கையாளுவதற்கான இயந்திர வகைகளாக உள்ளன. இவையெல்லாம் அரசியல் போலவே செய்யப்படுகிறது.

இப்படியிருந்தாலும், "பழமைவாதம்" என்றழைக்கப்படும் பிரிவுகள் எல்லாவற்றைக் காட்டிலும், பாப்டிஸ்டுகள் ஓரளவு சுதந்தரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். பணம் கொடுக்கும் சலுகையைத் தவிர, மெதடிஸ்டு சபையின் ஜனங்களுக்கு எந்த சுதந்திரமும் இல்லை. அவர்கள் அனுபவிக்கிற பிரதான சுதந்திரம் இதுவே. தலைமைத் தாங்குகிற மூப்பர்களின் ஒத்துழைப்புடன் பிஷப்புகள் ஆட்சி செய்கிறார்கள். ஒவ்வொரு வருடாந்திர மாநாட்டில் தலைமைத் தாங்குகிற மூப்பரும் பிஷப்பும் எந்த பாஸ்டர் இங்கே போக வேண்டும், எவர் அங்கே போக வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறார்கள். எந்த பாஸ்டர் தலைமைத் தாங்குகிற மூப்பரிடம் ஒத்துப்போகவில்லையோ, அவர் 400 டாலர்கள் சம்பளம் கிடைக்கக்கூடிய கிராமப்புறத்திற்கு செல்ல வேண்டும். மூப்பருடன் ஒத்துப்போகிறவர்கள் திறமை இல்லாதவர்களாயிருந்தாலும், 1000 டாலர்கள் அல்லது அதிகமாக சம்பளம் கிடைக்கும் இடத்திற்கு அனுப்பப்படுவார்கள். இதை என்னிடம் சொல்லக்கூடிய பல பாஸ்டர்கள் எனக்கு உண்டு. இதைப் பற்றி அவர்கள் புகார் செய்வார்கள்; ஆனால், அந்த வேலையை ஒட்டுமொத்தமாக விட்டு விட்டு வெளியே வர விரும்ப மாட்டார்கள். கிறிஸ்து விடுவிக்கும் விதமான சுதந்திரம் இதுவல்ல. இது ஒரு அமைப்பாக இருக்கிறதை நான் உணருகிறேன். இந்த அமைப்பு எப்படி இருக்கிறது என்பதை நான் உங்களுக்கு சொல்கிறேன். தலைமை தாங்கும் மூப்பர்களை பிஷப்புகள் கட்டுப்படுத்துகிறார்கள். இவர்களின் கீழ், தலைமை தாங்குகிற மூப்பர்கள் பிரசங்கிமார்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். ஆகவே, இவையெல்லாம் சபைவகுப்பு தலைவர்கள் வரையில் நடக்குகிறது. இவர்களிலிருந்து தலையானவர் அல்லது முதன்மையானவர் ஒருவர் அவர்களுக்கு உண்டு. அவர்கள் மனுஷரின் தலைமையை கொண்டுள்ளனர். பொதுச்சபை (GENERAL CONFERENCE) உச்ச அதிகாரம் படைத்தது.

அப்படியே, பிரெஸ்பைடேரியன் சபை விஷயங்களை முடிவு செய்யும் அதிகாரம் உள்ள பொது மன்றம் (GENERAL ASSEMBLY) என்ற முறையில் தலைமை உள்ளது. இவையெல்லாம் இந்த உலகத்தின் போக்குப்படியாக உள்ளது. சர்வ தேச வேதமாணவர் சங்க நண்பர்களிடையேத் தவிர, கிறிஸ்துவின் எளிமையை பொதுவாக எங்கும் காண முடியாதபடி உள்ளது. அங்கே இது மிகவும் பொதுவாக உள்ளது. தேவனுடைய வார்த்தை கூர்ந்து கவனிக்கப்படுகிறது. காரியங்கள் தவறாக நடக்கும் போது, அவர்கள் அதை கவனத்தில் கொள்வதற்குக் கற்றுக்கொள்கிறார்கள். எல்லோருக்கும் விஷயத்தின் எளிமை வெளியரங்கமாக இருக்கும்.

ஒரு சந்தர்ப்பத்தில் சீர்திருந்திய சபையின் (REFORMED CHURCH) பாஸ்டர் என்னை சந்தித்தார். நான் என்னுடைய சபையை எவ்விதம் கையாளுகிறேன் என்று அறிய அவர் ஆசைப்பட்டார். நான் அவரிடம் கூறினேன், "சகோதரனே, எனக்குச் சபை இல்லை." அவர் கூறினார், "நான் என்ன சொல்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்." நான் பதில் கூறினேன், "நான் என்ன சொல்கிறேன் என்பதையும் நீங்கள் அறிய வேண்டும் என்று விரும்புகிறேன். ஒரே ஒரு சபை மட்டுமே உள்ளது என்று நாம் உரிமை கோருகிறோம். நீங்கள் அந்த சபையைச் சார்ந்தவர் என்றால், நீங்கள் எங்கள் சபையைச் சார்ந்தவர்." அவர் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார். பிறகு அவர் சொன்னார், "உங்களுக்கு ஒரு அமைப்பு உண்டு. அங்கே எத்தனை அங்கத்தினர்கள் உள்ளனர்?" நான் பதிலளித்தேன், "நான் சொல்ல இயலாது; நாங்கள் அங்கத்தினர் பட்டியல் ஏதும் வைத்துக் கொள்ளுகிறதில்லை. அவர்களுடைய பெயர்கள் பரலோகத்தில்

எழுதப்பட்டிருக்கின்றன." அவர் கேட்டார், "உங்கள் தேர்தலை எப்படி நடத்துகிறீர்கள்?" நான் கூறினேன், "நாங்கள் தேர்தலை அறிவிப்போம்; அர்ப்பணித்தவர்களும், இந்த தோழமை அல்லது சபைக்கூட்டத்தில் சந்திக்கும் வழக்கமுடைய தேவனுடைய ஜனங்கள் யாரேனும் அல்லது எல்லோரும், சபைக்கூட்டத்தின் மூப்பர்களாகவும் உதவியாளர்களாகவும் கர்த்தர் யாரை விருப்பம் கொள்கிறார் என்ற தங்கள் கணிப்பை வெளிப்படுத்தும் சலுகைகையைப் பெறுகிறவர் களாக இருக்கிறார்கள்." அவர் கூறினார், "இது எளிமையாகத் தான் இருக்கிறது." நான் மேலும் கூறினேன், "நாங்கள் சம்பளம் கொடுக்கிறதில்லை; ஜனங்கள் சண்டை போட்டுக்கொள்ள எதுவும் இங்கு இல்லை; நாங்கள் பணம் வசூலிப்பதை ஒருபோதும் செய்வதில்லை." அவர் கேட்டார், "உங்களுக்கு பணம் எப்படி கிடைக்கிறது?" நான் பதிலளித்தேன், "டாக்டர், இப்பொழுது எளிதான உண்மை எது என்பதை நான் உங்களுக்குச் சொன்னால், அதை நம்புவது உங்களால் முடியாத ஒன்றாகும். ஜனங்கள் இந்த வழியில் ஆர்வம் கொண்டிருக்கும் போது, அவர்கள் நாசியின் கீழ் வைக்கப்படும் எந்த கூடையையும் பார்க்கமாட்டார்கள். ஆனால், செலவுகள் இருக்கிறதை அவர்கள் பார்ப்பார்கள். அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்ளுவார்கள்: இந்த கூட்டத்திற்கு ஏதேனும் செலவு ஆகுமே; தூரமான இடங்களில் வசிப்பவர்களுக்காக கூட்டங்களுக்கு இடையில் இலவச சாப்பாடு பரிமாறப்படுகிறது, இந்த காரியத்திற்கு நான் எவ்விதம் சிறு தொகையை கொடுப்பேன், எந்த வழியில்?" "நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் - பச்சைக்கொம்பு? (அனுபவம் இல்லாதவராக) என்று தாம் நினைப்பது போல, என் மீது அவர் பார்வையை செலுத்தினார். நான் கூறினேன், "இப்பொழுது, டாக்டர் ..., நான் உங்களிடம் வெளிப்படையான உண்மையைச் சொல்கிறேன், அவர்கள் இந்த கேள்வியையே என்னிடம் கேட்கிறார்கள், 'நான் எந்த முறையில் இந்த நோக்கத்திற்காக ஒரு சிறிய தொகையை நான் செலுத்த முடியும்?' ஒருவர் ஆசீர்வாதம் பெற்றவராக, ஏதோ வசதி கொண்டவராய் இருக்கும் போது, கர்த்தருக்காக இதை உபயோகப்படுத்த விரும்புகிறார். அவரிடத்தில் வசதி ஒன்றுமில்லையென்றால், அவரை ஏன் துன்புறுத்த வேண்டும்?

ஒருவர் சர்வ தேச வேதமாணவராயிருந்தால், ஒரு அமைப்பு என்ற முறையில், அதிலிருந்து வெளியே வருவதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் போயிருக்காத எதிலிருந்தும் வெளியே வர முடியாது. ஒருவர் காவற் கோபுர வேதகமம் & பிரசுர சொசைட்டி காரியங்களில் ஆர்வம் கொண்டிருந்து, பாபிலோனுக்குள் எப்படி அவர் நுழைந்தார் என்று யாராவது எனக்கு சொல்ல முடியுமா? அவர் எப்படி குதித்து வெளியே போகிறார் என்று அவர் எனக்குக் காண்பித்தால், நானும் அவருடன் குதித்து விடுவேன்.

## இஸ்ரயேல் - எகிப்து மற்றும் அசீரியாவுடன் மூன்றாவதாக.

**கே 353:1 :: கேள்வி (1906) -** ஏசாயா 19:24ம் வசனத்தை விளக்கவும்: "அக்காலத்திலே இஸ்ரயேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாக பூமியின் நடுவில் ஆசீர்வாத மாயிருக்கும்."

**பதில்.** இது வருங்காலத்துக்குரிய ஒரு உருவகம் என்று நாம் நம்புகிறோம். இன்னும் நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் அவற்றின் அனைத்து விபரங்களையும் தெரிவிப்பதாகவும், ஆழமாகவும் பார்க்கும் எதிர்பார்ப்பு இருக்கக்கூடாது. மற்ற இவைகளுடன் இஸ்ரயேல் எந்த முறையில் ஒன்றாக இருக்கப்போகிறது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், கர்த்தர் இங்கே மூன்று நாடுகளைப் பற்றி மட்டும் பேசவில்லை. ஆனால், அவர் எசேக்கியேல் புத்தகத்தில் எகிப்து, சோதோம் மற்றும் இஸ்ரயேல் பற்றி பேசும் போது, இந்த மூன்று நாடுகள் எல்லாவற்றிற்கும் ஆசீர்வாதம் கொடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டுகிறார். இந்த தீர்க்கதரிசனம், நிறைவேறிய பிறகு அதிகமாக புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலேயே கர்த்தர் கொடுத்தி ருக்கிறார் என்று தோன்றுகிறது. ஆகவே, கிறிஸ்து தொடர்பான தீர்க்கதரிசனங்கள், அவைகள் நிறைவேறி முடியும் வரைக்கும் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதை நீங்கள் பார்க்கலாம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தொடர்பான கிட்டத்தட்ட எல்லா தீர்க்கதரிசனங்களும் அவைகள் நிறைவேறி முடியும் வரைக்கும் பார்க்கப்படவில்லை.

## இஸ்ரயேல் - துரத்துண்டவர்கள்.

**கே 353:2 :: கேள்வி (1909) - 2 -** (ஏசாயா 11:12) "ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரயேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்." இஸ்ரயேலில் துரத்துண்டவர்களையும் யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களையும் பற்றி பேசும் போது, தீர்க்கதரிசி யாரைக் குறிப்பிடுகிறார்?

**பதில்.** அருமையான நண்பர்களே, உங்களுக்கு நினைவிருக்கும், பத்து கோத்திரங்களின் வரலாற்றில் அவர்கள் பிரிந்த காலத்தில், பத்து கோத்திரங்கள் 'இஸ்ரயேல்' என்றும், யூதா மற்றும் பென்யமீன் என்ற இரண்டு கோத்திரங்கள் 'யூதா' என்றும் அறியப்பட்டன. பத்து கோத்திரங்கள் சிறையிருப்புக்குக் கொண்டு போகப்பட்டன. பிறகு இரண்டு கோத்திரங்கள் சென்றன. நீண்ட காலத்திற்குப் பிறகு, யாரெல்லாம் தன் சொந்த நாட்டிற்கு திரும்பச்செல்ல விருப்பப்படுகிறார்களோ, அவர்கள் அவ்விதம் செய்யலாம் என்ற பிரகடனத்தை கோரேஸ் செய்ய வேண்டும் என்று தேவன் ஏற்பாடு செய்தார். எல்லா கோத்திரங்களிலுமிருந்து சிலர் பாலஸ்தீனாவிற்கு திரும்பிச் சென்றனர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவர்களில் பெரும்பாலோர் யூதா மற்றும் பென்யமீன் கோத்திரங்களிலிருந்து வந்தனர். அந்த சமயத்திலிருந்து, அவர்கள் அனைவரும், "இஸ்ரயேலர் எல்லோரும்" என்று அறியப்பட்டனர். நமது கர்த்தர் இஸ்ரயேலைப் பற்றி பேசும் போது, எருசலேமில் வசித்த அவர்கள் முழுமையான பன்னிரண்டு கோத்திரங்களைக் குறிக்கிறவர்கள் என்ற உண்மையை அங்கீகரித்தார். ஒரு இடத்தில், மத் 10:5,6ல் நமது கர்த்தர் சொன்னார், "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்." பத்து கோத்திரத்தார் உலகத்தில் எங்கேயோ காணாமற் போனார்கள் என்று சிலர் சொல்வது போன்ற தவறுக்குள் நாங்கள் விழ மாட்டோம். இல்லை. அவர்கள் பாபிலோனுக்கு அகதிகளாகக் கொண்டு போகப்பட்ட போது, இஸ்ரயேலர்கள் என்ற அவர்களுடைய உறவு முறையை இழக்கும் அளவுக்கு அங்கே இருந்த ஜனங்களுடன் கலந்து விட்டனர். இப்பொழுது தற்காலம் வரையில் நாம் வந்திருக்கிறோம்; நாம் யூதர்கள் என்று அறிகிறவர்கள் பெரும்பாலும் யூதா குடும்பத்தையும், ஆனால் சிலர் எல்லா கோத்திரங்களையும் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். மேலும், விருத்தசேதனத்தைப் புறக்கணிக்கிற எந்த யூதனும் அந்த நாட்டின் அங்கமாகக் கருதப்பட்டதில்லை. பாபிலோனியர்களுடன் கலந்திருந்த ஜனங்கள் தேவனுடைய பார்வையில் இஸ்ரயேலர்களாக அது முதற்கொண்டு கருதப்படவில்லை. இன்று விருத்தசேதனத்தை அனுசரிக்கிற ஜனங்களாகவும், இஸ்ரயேலர்கள் என்று அழைக்கப்படுகிறவர் களாகவும் இருப்பவர்கள் 'யூதர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இப்பொழுது இன்றைய நாளில், விஷயம் நமக்குத் தெளிவு பெற்றிருக்கிறது. யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களையும், இஸ்ரயேலில் துரத்துண்டவர்களையும் பற்றி நாம் என்ன சொல்ல வேண்டும்? இந்த அறிவிப்பு வெறும் இரண்டு கோத்திரங்களை மட்டும் குறிக்காமல், இஸ்ரயேலர்கள் அனைவரையும் குறிப்பதாகவே நான் அனுமானிக்கிறேன். ஆனால், தவறான புரிந்து கொள்ளுதலுக்கு எதிராக காத்துக்கொள்வதற்கே, இரண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இஸ்ரயேல் குடும்பத்தாரைப் பற்றியும் யூதா குடும்பத்தாரைப் பற்றியும் புதிய உடன்படிக்கையுடன் பேசும் போதும் இதே மாதிரி தான் இருக்கிறது. இரண்டு குடும்பத்தார் மட்டும் இருந்தது போல இல்லாமல், ஆசீர்வாதம் இரண்டு கோத்திரங்களுக்கு மட்டும் அல்லது பத்து கோத்திரங்களுக்கு மட்டும் என்று இல்லாமல், எல்லோருக்கும் உள்ளது என்பதை அந்த நாளில் வாழ்ந்திருந்த அவர்களுக்குத் தெரியும். இது தான் என்னுடைய உட்கருத்து ஆகும். **துரத்தப்படுதல் மற்றும் சிதறடிக்கப்படுதல்** என்பது நடைமுறையில் ஒன்று தான். அவர்கள் எல்லோரையும் ஒரே ஜாதியாகவே அவர் எண்ணுவார்.

## இஸ்ரயேல் - கூட்டிச் சேர்க்கப்படுதல்.

**கே 354:1 :: கேள்வி 1909) - 1 -** பாலஸ்தீனாவுக்கு திரும்பி வருகிற யூதர்களைப் பற்றி சில கருத்துக்களை எங்களுக்கு தயவு செய்து கூறவும். அவர்கள் எவ்வளவு எண்ணிக்கையில் திரும்ப வருகிறார்கள்? வழக்கமாயிருந்தபடி இல்லாமல், தேசம் அதிக உற்பத்தி வளம் உள்ளதாக இருக்கிறதா?

**பதில்.** யூதர்கள் மிகவும் விரைவாக திரும்பிப்போய்க் கொண்டிருக்கவிலை. ஆனால், அவர்கள் திரும்பிப் போவதற்கு ஆயத்த வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள். தேசம் அதிகமாக உற்பத்தி திறன் பெற்று வருகின்றது. பாலஸ்தீனா மேல் ஒருவகையான கட்டுப்பாடு கொண்டிருக்கும் புதிய துருக்கி அரசாங்கம், பழைய துருக்கி அரசாங்கம் இருந்ததை விட, யூதர்களுக்கு அதிக சாதகமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. வெகு நாட்களாக இந்த வழியில் ஏதேனும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

டாண் புத்தகங்களில் பாலஸ்தீனாவுக்கு யூதர்கள் திரும்புவதைப் பற்றி நாங்கள் சுட்டிக்காட்டும் போது, அவர்களே அதைக் கண்டுபிடிக்கவில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கும். எங்களுடைய எதிர்பார்ப்பு சாய்ந்திருந்த அளவுக்கு, அது வேகமாக வரவில்லை. பாலஸ்தீனாவில் யூதர்கள் மறுபடியும் நிலைப்படுத்தப்பட வேண்டும். இந்த தேசத்திலிருந்து எல்லா யூதர்களும் திரும்பப் போகிறார்கள் என்று அர்த்தம் இல்லை. ஏனெனில் இங்கே பலர் நன்கு திருப்தி அடைந்துள்ளனர். “பழமைவாதிகள்” என்று அழைக்கப்படுகிறவர்கள் அங்கே போவதற்கு வாய்ப்பு உள்ளது. அவர்களுடைய இருதயங்கள் எருசலேமை நோக்கித் திரும்பியிருக்கின்றன. அந்த தேசம் அவர்களுக்குத் திறக்கப்படும் போது, ரஷ்யா தங்கள் நாட்டிலிருந்து அவர்களை வெளியேற்றி விடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பிறகு, பெரும் எண்ணிக்கையில் அவர்கள் திரும்பிப் போவார்கள்.

## இஸ்ரயேல் - அவர்கள் விழுகை, புறஜாதிகளின் ஐசுவரியம்.

**கே 355:1 :: கேள்வி (1909) - 1 -** (ரோமர் 11:12.) “அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும்.” அவர்களுடைய “நிறைவு” எப்பொழுது இருந்தது அல்லது இருக்கப் போகிறது? இது என்னவாயிருக்கும்?

**பதில்.** புதிய உடன்படிக்கையின் கீழ் தம்முடைய வாக்குத்தத்தத்தின் நிறைவை இஸ்ரயேலுக்கு தேவன் கொடுக்கும் போது, இந்த யுகத்தின் முடிவை இங்கு அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார் என்று நான் புரிந்து கொள்ளுகிறேன்.

இப்போது, தேவனுடைய நடைமுறைகள் கடந்த காலத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக உருவாக்கப்பட்டிருந்தால், சீர்பொருந்துதலின் காலங்களில் உலகமனைத்திற்கும் செல்லக்கூடிய தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பற்றி நாம் என்ன எதிர்பார்க்கிறோம்? பரலோகம் மற்றும் பூமிக்குரிய வித்து மூலமாக, தேவன் ஆபிரகாமுக்குத் தெரிவித்தபடியே, பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்பதை நாம் எதிர்பார்க்க முடியும்.

## இஸ்ரயேல் - இயேசுவை அடித்தல்.

**கே 355:2 :: கேள்வி (1909) - 2 -** இயேசுவின் வார்த்தைகளை தயவு செய்து விளக்கவும்: “அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து, என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு, தன் உடன் வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி..” மத். 24:48,49.

**பதில்.** இந்த யுகத்தின் முடிவில் கர்த்தர் உபயோகப்படுத்தும் ஒரு குறிப்பிட்ட ஊழியக்காரன், இதை ஒரு வகுப்பார் அல்லது ஒரு தனிப்பட்ட நபர் என்று நீங்கள் எப்படி அழைக்க விரும்பினாலும், அந்த ஊழியக்காரன் பொல்லாதவனாக நிரூபிக்கப்பட்டு, கர்த்தருடைய உறவை இழந்தால், பிறகு அந்த ஊழியக்காரன் கர்த்தரிடத்தில் அவன் கொண்டிருந்த உறவிலிருந்து

துண்டிக்கப்படுவான். அவன் விலக்கப்பட்டு, பொறுப்பிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான ஒரு சாட்சியம் இதுவே: அவன் தன் உடன் வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, கர்த்தரின் பிரசன்னத்தை மறுப்பான். இது அப்படி இருக்கும் என்று இது சொல்கிறதில்லை. "அவன் **அப்படியிருந்தால்**" என்றே சொல்கிறது. இது உணர்த்துவது என்னவெனில், கர்த்தர் ஒரு ஊழியக்காரனைத் தேர்ந்தெடுக்கும் போது, அவன் கர்த்தருடைய கிருபையிலும் அவருடன் இணக்கமாகவும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தான் இது இருக்கிறது. அவன் அப்படி இருக்காவிட்டால், அப்பொழுது இப்படியாக நிலைமை தொடரும்.

## இஸ்ரயேல் மற்றும் யூதா - உடன்படிக்கை தொடர்பு.

**கே** 355:3 :: **கேள்வி** (1911) - 1 - இஸ்ரயேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் தேவனுடன் உடன்படிக்கையின் உறவில் எப்பொழுது இருப்பார்கள்?

**பதில்.** மேசியா தம் மகிமையில் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபித்த உடனேயே, புதிய உடன்படிக்கை மூலமாக, இந்த உடன்படிக்கையின் உறவுக்குள் இஸ்ரயேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் வருவார்கள். அந்த உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்படும். அவர் மேலான பலிகளை ஏற்கனவே ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார். இதை அவர் திறம்பட நிறைவேற்றி முடிப்பார்; சீக்கிரமே அவர் இரத்தத்தை எடுத்துக் கொண்டு கிருபாசனத்தின் மேல் தெளிப்பார். பிறகு, இதற்கு அடுத்த வரிசைக்கிரமத்தில் வருவது, ஜனங்களுக்காக "தெளித்தல்" அல்லது "ஆசீர்வாதம்" ஆகும். இந்த ஏற்பாட்டின் கீழ் முதலாவதாக இஸ்ரயேலும் யூதாவும் வருகிறார்கள்; இந்த பெரும் ஆசீர்வாதத்தில் முதல் பங்கை அவர்கள் பெறுகிறார்கள். இது இஸ்ரவேலுக்கு மட்டுமோ அல்லது யூதாவுக்கு மட்டுமோ அல்ல, இவர்கள் ஒன்றாகவே பெறுகிறார்கள். இவர்களிடமிருந்து இந்த ஆசீர்வாதங்கள் பூமியிலுள்ள எல்லா வம்சங்களுக்கும் போய்ச் சேரும்.

## இஸ்ரயேல் - "ஏழத்தனை" சிட்சை - ஆசீர்வாதம்.

**கே** 355:4 :: **கேள்வி** (1915) - 4 - ஆபேலின் நாள் முதல் நமது கர்த்தரின் நாள் வரைக்கும் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தத்திற்காக தண்டனை கி.பி. 70ம் வருஷத்தில் யூதர்கள் மேல் வந்தது என்றால், இந்த யுகம் முழுமையிலும் அவர்கள் சிட்சைகளுக்கு உள்ளாகி வந்திருப்பதை நீங்கள் எப்படி விளக்க முடியும்?

**பதில்.** அவர்களுடைய கைகளில் நமது கர்த்தரின் மரணம் இருக்கும் சமயத்தில் யூதர்கள் சொன்னதை நாம் அறிவோம்: "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக". இயேசுவின் மரணத்திற்கான பொறுப்பை அவர்கள் மட்டும் தாங்கி கொள்ள விரும்புகிறோம் என்று இல்லாமல், அவர்களுடைய சந்ததியும் கூட இதைத் தாங்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்களுடைய பொதுவான இருதய நிலைமையையும், இந்த ஜனங்கள் என்ன செய்வார்கள் என்பதையும் சந்தேகத்திற்கு இடமின்றி தமது முன்னறிவின்படியே, தேவன் அவர்களுடைய "ஏழத்தனை" கிருபை இழப்பை ஆரம்பித்திலேயே திட்டமிட்டிருந்தார். லேவியராகமத்தில் மோசேயினால் இதை பதிவு செய்துமிருந்தார். (லேவி 26:18-45). அவர்களுடைய உடன்படிக்கைக்கு எதிரான அவர்களின் மீறுதலுக்காக மனந்திரும்பாவிட்டாலும், அவர் திரும்ப திரும்பக் கொடுத்த தண்டனைகள் அவர்களை சீர்திருத்தத் தவறினால், அவர்கள் மேல் "ஏழத்தனை" தண்டனையையும், ஒழுங்கையும் கொண்டு வருவார் என்று தேவன் அறிவித்திருந்தார்.

வேதாகம காலக்கணக்கில் "காலம்" என்பது ஒரு வருஷத்தை அடையாளப்படுத்துகிறது. யூத கணக்கிடுதலின்படி ஒவ்வொரு வருஷமும் 360 நாட்களைக் கொண்டதாகும். இவ்விதமாக அடையாளமான ஏழு வருஷங்கள் சொல்லர்த்தமான 2520 வருஷங்களடங்கிய காலப்பகுதியைக் குறிக்கிறது. எருசலேம் அழிக்கப்பட்டு, தேசம் முழுவதும் பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்ட வருஷமாகிய கிமு 606ல் இந்த ஏழு காலங்கள் அல்லது ஏழு அடையாளமான வருஷங்கள் ஆரம்பமானது. தேசம் 70 வருஷங்கள் வெறுமையாக்கப்படும் என்று முன்னறிவிக்கப்பட்டதும்

இந்த சமயத்தில் தான் ஆரம்பமானது. (எரே.25:8-12; 2நாளா.36:14-22.) நாம் புரிந்து கொண்டபடி இந்த ஏழு காலங்கள் அப்போதிலிருந்து தொடர்ந்து வருகிறது, அல்லது செப்டம்பர் 21ம் தேதி வரை இருக்கும்.

இஸ்ரயேலின் மேல் இருந்த இன்னலின் நீண்ட காலப்பகுதியில், உலக அரசாங்கம் என்ற முறையில் அவர்கள் என்ன செய்ய முடியும் என்பதைக் காண்பிக்கும் விதமாக புறஜாதிகளுக்கு ஒரு வாய்ப்பை கர்த்தர் கொடுத்திருக்கிறார். தேவன் தம்முடைய உடன்படிக்கையின் ஜனங்களிடம் தங்களுடைய கடந்த கால நடைமுறைகளைவிட மிகவும் வித்தியாசமாக "இந்த காலங்களில்" அவர் செயல்படுவார் என்பதை தேவன் தெரிவித்திருந்தார். அவர் அவர்களுக்கு எதிராக நடந்து, அவர்களை புறமதத்தினர் (புறஜாதிகள்) மத்தியில் சிதறப்பண்ணுவார். அவர்களுடைய எதிரிகளின் ஆளுகைக்கு கீழ் இருப்பார்கள். கர்த்தர் முன்னறிவித்ததற்கு முழுமையான இணக்கமாக, "ராஜா இல்லாமல்". மற்ற ஜாதியினரால் யூதர்கள் உண்மையாகவே அப்போதிருந்தே ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பது வரலாற்றிலுள்ள விஷயம் ஆகும். இந்த அனுபவம் இஸ்ரவேலுக்கு சாதகமாயில்லாதது போலவே, சாதகமாகவும் இருந்தது. இந்த சிட்சை வெறுமனே அவர்களுடைய பாவங்களுக்காக மட்டும் இருந்திருக்கவில்லை. அவர்களுடைய நன்மைக்காக, கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த ஒரு அனுபவமாகவே இருந்து வந்திருக்கிறது.

## நான் இன்னல் அடைவதற்கு முன்பே வழி தவறிப் போனேன்.

இந்த "ஏழு காலங்கள்" பகுதியில், அப்போது யூதர்கள் கடுமையான உபத்திரவத்தையும் ஒழுங்கையும் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு யுகத்திலும் தேவனுடைய ஜனங்கள் எல்லோருக்கும், அவர்களுடைய திருந்துதலுக்கும் வளர்ச்சிக்கும், சிலருக்கு அதிகமாகவும் சிலருக்கு குறைவாகவும் சிட்சைகள் தேவைப்பட்டிருக்கின்றன. தேவன் ஆவிக்குரிய இஸ்ரவேலைப் பார்த்து சொல்கிறார், "தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீரகளே (போலி)." (எபி 12:8.) மாம்சீக இஸ்ரயேலாகிய ஊழியக்காரரின் குடும்பத்துடனும் அதே விதமாக இருந்து வருகிறது. ஏனெனில், அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்களாக இருந்தார்கள். ஆகவே அவர்களுடன் செயல்பட்டார். இந்த 2520 வருஷங்களாக அவர் உண்மையில் அனுபவங்களைக் கொடுத்திருக்கிறார். நன்மையானதைச் செய்யும் நோக்கில் உள்ளவர்களுக்கு அந்த அனுபவங்கள் சாதகமாயிருப்பதை நிரூபிக்கும். இயேசு வந்த போது, அவர்கள், ஜனங்கள் என்ற முறையில் உலகத்திலேயே மிகவும் பரிசுத்தமானவர்களாக இருந்தனர் என்ற அளவில், அந்த கசப்பான அனுபவங்கள் அவ்வளவு சாதகமாய் இருந்ததை நிரூபித்தன. அந்த காலக்கட்டத்தில், இந்த "ஏழு காலங்களில்" ஒரு சிறு பகுதியில் மட்டுமே அவர்கள் கஷ்டம் அனுபவித்திருந்தனர்.

ஆகவே, நமது கர்த்தர் மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களால் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதில், யூதர்களில் 500 பேர்கள் இயேசுவை மேசியா என்று நம்புவதற்கு தயாராகி, ஏற்றுக்கொண்டார்கள். பிறகு சீக்கிரமாக, பெந்தெகொஸ்தேக்குப் பிறகு, உடனே விசுவாசித்தவர்கள் பல ஆயிரக்கணக்கில் இருந்தனர். இவர்கள் கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. இந்த மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இஸ்ரயேலரில் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ஒழுங்கு முறையிலான அனுபவங்கள் வழியாக அவர்கள் பிரவேசித்திருக்காவிட்டால், இது போன்ற நிலமை இருந்திருக்காது. இந்த அனுபவங்கள் எல்லாம், அவர்களை புறஜாதிகளிலிருந்து தனியாகக் காத்துக்கொள்ளவும், பூமியின் எந்த ஜனங்களுடனும் கலவாமல் காத்துக் கொள்ளும் வகையில் இருந்தனர்.

பாபிலோன், மேதியா-பெர்சியா, கிரேக்கம் மற்றும் ரோம சாம்ராஜ்யம் போன்ற பல்வேறு அரசாங்கங்களில் யூதர்கள் வளம் பெற்றிருந்தார்களானால், அவர்கள் அந்த மற்ற ஜனங்களுடன் ஒன்றுக்குள் ஒன்றாக கலந்து, யூதர்கள் என்பதை ஒட்டுமொத்தமாக இழந்திருப்பார்கள். கி.பி.70ல்

தீத்துவின் கீழ் அவர்களுடைய தேசீய கவிழ்ப்பு நடந்ததைத் தொடர்ந்தும், அவர்களின் வளம் அப்படியே இருந்தது என்பது தான் உண்மை.

உலகத்தில் மற்றவர்களிலிருந்து தனித்துக் காத்துக் கொள்ளும் விதமாக, தேவனுடைய கிருபையினால் யூதர்கள் இந்த சுவிசேஷ யுகம் முழுவதுமாக இந்த மாதிரியான உபத்திரவங்களை தொடர்ந்து பெற்றுக்கொண்டிருந்தனர். அவர்களுடைய முழுமையான சீர்பொருந்துதலின் கிருபை வரும் நேரத்தில், கர்த்தருடைய ஊழியத்தில் மேன்மையாக ஆயத்தப்படுவதற்கு, பணிவு நிலையில் அவர்களுடைய மனங்கள் காத்துக் கொள்ளப்பட்டிருந்தன.

தகுந்த நேரம் வரும்போது, மற்றெந்த ஜாதியினரை விட இராஜ்யத்திற்கு அதிகமாக இஸ்ரயேலர்கள் ஆயத்தமாயிருப்பார்கள் என்பது நம்முடைய எண்ணம் ஆகும். அவர்கள் பிரவேசித்திருந்த கஷ்டங்கள் வாயிலாகவும், நியாயப்பிரமாணத்திற்கு அவர்களின் கீழ்ப்படிதல் போன்றவைகளால், இராஜ்யத்திற்கு அவர்கள் ஆயத்தம் பண்ணப்பட்டிருப்பார்கள். ஆகவே, அவர்களுடைய சோதனைகள் மற்றும் இன்னல்கள் நிறைந்த நீண்ட காலப்பகுதியை வெறுமனே உபத்திரவம் என்றும், தண்டனை என்றும் நாம் கருதக்கூடாது. யூதர்களின் இறுதியான நன்மைக்காக, புறஜாதியாரின் ஆளுகை முடிவடையும் வரைக்கும், அவர்கள் புறஜாதியாரால் மிதிக்கப்படுவார்கள்.

## இஸ்ரயேலரின் விசேஷித்த திரும்பக் கூட்டிச்சேர்க்கப்படுதல்.

சுவிசேஷ சபை முழுமை பெற்ற உடனேயே, தேவனுடைய கிருபை யூதர்களுக்குத் திரும்ப வரும் - திரும்புதல் என்பது முழுமையான அர்த்தத்தில் - என்று பவுல் அப்போஸ்தலன் நமக்குக் கூறுகிறார். “புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் (புறஜாதிகள் நாடுகளிலிருந்து சபையின் முன்குறிக்கப்பட்ட முழுமையான எண்ணிக்கை சேர்க்கப்படும் வரைக்கும்), இஸ்ரயேலில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். சீயோனிலிருந்து (மகிமையடைந்த சுவிசேஷ சபை, ஆவிக்குரிய சீயோன்) மீட்கிறவர் (கிறிஸ்து, தலையும் சரீரமும்) இயேசுவும் அவருடைய மணவாட்டியும் வந்து, அவபக்தியை யாக்கோபை (மாம்சீக இஸ்ரயேலை) விட்டு விலக்குவார் என்றும், நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும் போது, இதுவே நான் அவர்களுடன் செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. ரோமர் 11:1-33.

இஸ்ரயேலர்களின் பாவங்களையும், சுவிசேஷ சபையை உள்ளடக்கியவர்களின் பாவங்களையும் உலகத்தார் அனைவரின் பாவங்களையும் எடுத்துப் போடும் நோக்கத்தை தேவன் கொண்டிருந்தார். இந்த காரணத்திற்காகவே கிறிஸ்து வெளிப்பட்டார். இதற்காகவே அவர் மரணமடைந்தார். இராஜ்யத்திற்குக் கீழ்ப்படிந்து, மன்னிப்பாகிய பரலோக பரிசை ஒவ்வொருவரும் கண்டுணரும் நிலையில், உலகத்தார் அனைவரின் பாவங்கள் நீக்கப்படுதல் அல்லது விலக்கப்படுதல் முன்னேற்றம் பெறும்.

நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளை இன்னும் கடைப்பிடித்து, தேவன் பேரில் விசுவாசமாயிருக்கும் பழமைவாதிகளான யூதர்கள் இந்த புது யுகத்தின் ஆசீர்வாதங்களை முதலாவது பெறுவார்கள். “சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் (சபையினிமித்தம்) பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளுதலைக் (மாம்சீக தெரிந்து கொள்ளுதலை) குறித்து, அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களா யிருக்கிறார்கள்.” ஆகவே, கிபி 70ம் வருஷத்தில் யூதர்களுடைய கவிழ்க்கப்படுதலுடன் கூட இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் யூதர்கள் இன்னலுக்கு உள்ளான இந்த நிலைமை, உண்மையில் தேவனிடமிருந்து வந்திருக்கும் கிருபை ஆகும். மேசியாவின் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்காக யூதர்களை தயார் செய்வது, சிட்சையின் “ஏழு காலங்கள்” முழுவதிலும் இந்த ஜனங்கள் பிரவேசித்திருக்கும் அனைத்து உபத்திரவங்களும் இறுதியாக அவர்களுடைய நன்மைக்காகவே இருந்து வந்திருக்கிறதைக் காணமுடிகிறது. இராஜ்யத்தில் முதலாவதாக இருக்கப் போவது சபையாகும். மாம்சீக இஸ்ரயேலர் தங்கள் தலைமையில் முற்பிதாக்களுடன்

இரண்டாவதாக இருப்பார்கள். அதைத் தொடர்ந்து இஸ்ரயேலர்களின் அங்கங்களாகி எல்லா ஜாதிகளும் தெய்வீக கிருபை மற்றும் ஆசீர்வாதத்திற்குள் வருவார்கள். நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக எல்லோரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

## யேகோவா - - அல்பாவும் ஒமெகாவும் .

**கே 358:1 :: கேள்வி (1908) - 1 -** "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்". இந்த வசனம் எதை போதிக்கிறது?

**பதில்.** இந்த வசனத்தைப் பற்றி நாம் இப்போது விளக்கமளிப்பதை விட, மில்லியனியல் டாண் வேத பாடங்களின் ஐந்தாம் வால்யூமில் முழுவதுமாகக் கையாண்டிருக்கிறோம். அங்கே இந்த கேள்விக்கு மிகவும் குறிப்பிட்ட அளவில் உங்களுக்கு பதில் கொடுத்திருக்கிறோம். இருப்பினும், நாங்கள் ஆலோசனை சொல்வது என்னெவெனில், "ஆதியும் அந்தமும்" என்பதில், ஒருவர் அந்தமாயிருக்கிறார் என்பது முடிவடையப் போகிறார் அல்லது மறையப் போகிறார் என்று கருத வேண்டிய அவசியம் இல்லை. நமது பரலோக பிதாவைப் பற்றி நாம் சொல்லும் போது, சொல்லர்த்தமாகப் பார்க்கும் போது, எல்லா விஷயமும் அவருடன் துவங்கி, அவருடன் முடிவடைகிறது என்ற விதத்தில், அவர் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார், அல்லது, இதை வேறு விதமாகச் சொன்னால், அவர் எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருக்கிறார். தெய்வீகத்தில், சர்வ வல்லமையில் ஒவ்வொன்றையும் அறிந்துணரலாம். உதாரணமாக, இந்த வசனத்தை நமது கர்த்தராகிய இயேசுவுக்கு பொருந்தி வரச் செய்யலாம். அவர் ஒரு இடத்தில் குறிக்கப் பட்டிருக்கிறபடியே, தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார் என்று சொல்லலாம். அதாவது, அவர் தேவன் சிருஷ்டித்த முதல் சிருஷ்டியும், தேவன் சிருஷ்டித்த கடைசி சிருஷ்டியுமாக இருக்கிறார். அவரை அல்லாமல், தேவன் ஒருபோதும் எதையும் நேரிடையாக சிருஷ்டிக்கவில்லை. தெய்வீக முகவராக, தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்தும் அவர் மூலமாயும் அவராலேயும் படைக்கப்பட்டன.

## யேகோவா - அவருடைய ஆவி என்றைக்கும் போராடுவதில்லை.

**கே 358:2 :: கேள்வி (1909) - 2 -** ஆதி.6:3ல் நாம் வாசிக்கிறோம்: "அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சம் தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்." கர்த்தருடைய ஆவி மனுஷனுடன் போராடுவது எப்பொழுது நின்று போகும்?

**பதில்.** இந்த வசனம் குறித்து நான் முன்பு கொண்டிருந்ததிலிருந்து சற்று வித்தியாசமான கருத்து என்னுடைய மனதில் இருக்கிறது. இந்த இரண்டும் இன்னும் போராடிக் கொண்டிருக்கின்றன. நான் என்ன நினைக்கிறேன் என்பது பற்றி இன்னும் நான் அறியவில்லை.

## யேகோவா - அவருடைய சுதந்தரம்.

**கே 358:3 :: கேள்வி (1909) - 3 -** எபே.1:18ம் வசனத்தில் (DIAGLOTT) உள்ள வேதவாக்கியப் பகுதியை விளக்க அன்புடன் வேண்டுகிறேன். "தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், - - நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்". தேவன் எல்லாவற்றையும் உடையவராகவும் எல்லாவற்றையும் வழங்குபவருமாய் இருக்கும் போது, அவர் எப்படி சுதந்தரத்தைப் பெற்றவராய் இருக்க முடியும்? அருமையான சகோதரரே, இது தான் கருத்து - சத்திய ஜனங்களால் பல்வேறு அபிப்பிராயங்கள் சொல்லப்படுகிறதால், இதைப் பற்றிய விளக்கத்தை நாங்கள் பெறுவதற்கு விரும்புகிறோம்.

**பதில்.** "சுதந்தரம்" என்ற வார்த்தை தான் கேள்வியின் மையக்கருத்தாகத் தோன்றுகிறது. கர்த்தரின் சுதந்தரமாக சபை எந்த விதத்தில் இருக்கிறது? அவர் உடையவராயிருக்கிறார், அதாவது, அவர் உடையவராயிருக்க வந்திருக்கிறார் என்ற பொருளில் இங்கே இந்த சொல் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்; ஏனெனில், "எனக்கு அதிகாரம் உள்ளது. எனக்கு அடிபணியுங்கள், ஏனெனில் நீங்கள் என்னுடையவர்கள்" என்று சொல்லி, கர்த்தர் நம்மைப் பிடித்து வைத்திருக்கிறார் என்ற கோணத்தில், அவர் நம்மை உடையவராய் இருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். இல்லை, குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை நமக்குக் கொடுத்து, அந்த வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்வதற்கு நம்மை அனுமதித்து, அவர் நம்மை உடையவராய் இருக்கிறார். நாம் அவற்றைப் பிடித்துக் கொண்டால், அவர் நம்மை சொந்தமாக்கி, உடையவராக்கிக் கொள்வார். நாம் அவருடையவர்களாயிருப்போம். அப்போஸ்தலர் கூறும் விதமாக, நம்முடைய புரிந்துகொள்ளும் கண்களை அல்லது இருதயங்களைத் திறந்து வைத்துக் கொள்வது அவசியம் ஆகும். அப்படி இருந்தால் நாம் அறிந்து உணரலாம். அதன் பிறகு, கர்த்தர் நம்மை தேவனுடைய சுதந்திரமாக்கிக் கொள்வார், அல்லது, அவர் வேறொரு இடத்தில் சொன்னது போல, விசேஷித்த பொக்கிஷமாக்கிக் கொள்வார்.

உலகம் முழுவதும் தேவனுக்கு சொந்தம் என்று ஒரு கண்ணோட்டத்தில் கூறலாம். இருப்பினும் அதை விட்டுக் கொடுத்துள்ளார். அவர் உலகத்தை விலைக்கு வாங்கவும், ஆயிர வருஷ யுகத்தின் முடிவில் அதைத் திருப்பிக் கொடுக்கவும் இயேசுவை அனுமதித்திருக்கிறார். யாருடைய இருதயங்கள் சரியான மனப்பாங்கில் இருக்கிறதோ, அவர்களுக்கு விசேஷித்த கிருபைகளை அளித்து, அவர்களை தம்முடையவர்களாக்கிக் கொள்வதற்காக, இந்த சுவிசேஷ யுகத்தில் அவர்களைக் கண்டு பிடிக்க விசேஷித்த அழைப்பை விடுத்துக் கொண்டிருக்கிறார். பிறகு அவர் ஒரு புதிய தளத்தில், முன்னாளில் அங்கீகரிக்காத ஒரு தளத்தில் ஒரு புதிய சுதந்தரத்தை உடையவராக இருப்பார்.

## யேகோவா - அவருடைய முறைமைகளைக் கேள்வி கேட்டல்.

**கே** 359:1 :: **கேள்வி** **(1911) - 1 -** முழுவதுமாக அன்பாக இருக்கும் தேவன் தம்முடைய குமாரனை சிலுவையில் அறையப்பட ஏன் அனுமதித்தார்? பரிபூரணமான தேவன் என்ற முறையில், அவர் தம்முடைய குமாரன் சிலுவையிலறையப்பட வேண்டிய அவசியமில்லாமல், வேறு ஏதாவது திட்டத்தை அவர் ஏன் உருவாக்கவில்லை?

**பதில்.** நல்லது, என் அருமையான நண்பர்களே, இதன் உள்ளே போவதற்கு இது ஒரு பெரிய கேள்வி ஆகும். பொதுவான முறையில் தீமை அனுமதிக்கப்படுவதை இதில் உட்படுத்த வேண்டும். இது மட்டுமே நம்மை ஒரு மணி நேரமாவது எடுத்துச் செல்லும். அடுத்த செப்டம்பர் போன்ற சமயத்தில் வாராந்திர பிரசங்கத்திற்காக ஒரு தலைப்பு உள்ளதாய் உங்களில் நம்முடைய வாராந்திர பிரசங்கங்களைப் பின்பற்றுகிறவர்கள் பார்ப்பார்கள். அந்த பிரசங்கத்தில் தீமை ஏன் அனுமதிக்கப்பட்டது என்ற இந்த கேள்விக்கு உரிய பதிலை நீங்கள் காண்பீர்கள், அல்லது, நீங்கள் விரும்பினால், "தேவன் தீமையை ஏன் அனுமதித்தார்" என்ற பாடத்தின் மேல், வேதாகம பாடங்களின் முதலாம் வால்யூமில் ஒரு அத்தியாயத்தை நீங்கள் பார்க்கலாம். தேவன் தமது குமாரனை தீமையைத் தாங்கவும், மரணத்தை அடையவும், வலியினால் வேதனைப்படவும், துயரத்தை அனுபவிக்கவும் ஏன் அனுமதித்தார் என்பதை அந்த அத்தியாயம் விவரிக்கிறது. அவர் உங்களை துயரம் அனுபவிக்க ஏன் அனுமதித்தார்? அவர் தம்முடைய ஜனங்களில் எவரையும் வலி, துயரம் அல்லது மரணத்தை அனுபவிக்க ஏன் அனுமதித்தார்? இதற்கான காரணமெல்லாம் அந்த திசையில் தான் இருக்கின்றது? தேவன் பேரில் தவறு கண்டு பிடிக்காமல், அவர் வேறு ஏதாவது செய்திருக்க வேண்டும் என்று நாம் அறிகிறோம் என்று அவரிடம் சொல்லாமல், இந்த பாடத்தை சரியான மனப்பாங்குடன் அணுக வேண்டும். நமது பூமியை உண்டாக்கியவர், நம்மை உண்டாக்கியவர், எல்லாவற்றையும் உண்டாக்கியவரான மாபெரும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை நாங்கள் நம்புகிறோம் என்று சொல்ல வேண்டும். அவர் நீதி, ஞானம், அன்பு, வல்லமையின் உருவகமாகவே இருக்கிறார் என்பதை நாம்

விசுவாசிக்கிறவர்களாக, அந்த நிலைப்பாட்டிலிருந்து, அவர் என்ன சொல்கிறார், அவர் இதை ஏன் செய்கிறார் என்பதைக் காண, வேதாகமத்தை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். இது ஏன் என்று பார்க்க நம்மால் ஒருபோதும் முடியாவிட்டால், இது தேவனுடைய ஞானத்தில் குறைபாடு உள்ளது என்று சொல்லாமல், நம்முடைய சொந்த பகுத்தறியும் திறனின் குறைவாகவே நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். ஏனெனில், நமது சிருஷ்டிகரை தீர்ப்பு செய்யும் அளவிற்கு நாம் உயர்ந்தவர்கள் அல்ல. நமது மனங்கள் போதிய அளவு விசாலாமானதாய் இருந்தால், சரியானதும், நீதியானதும், உண்மையானாதும், நல்லதுமாக ஒருங்கிணைக்கும் அவருடைய வழிகளை சந்தேகத்திற்கிடமின்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## யேகோவா - எல்லாவற்றிற்கும் ஆக்கியோன்.

**கே** 359:2 :: **கேள்வி** (1911) - 2 - அனைத்து நல்லவைகளுக்கும், பரிபூரணத்திற்கும் உருவகமாகவே தேவன் இருந்தால், அவருடைய சிருஷ்டிப்பு, சுபாவங்கள் மற்றும் கூறுகள் தொடர்பான தொடக்க நிலையின் கருத்துப்படிவத்திலிருந்து முற்றிலும் ஒவ்வொன்றிற்கும் ஆக்கியோனாகவே அவர் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஆனால், நல்லவராக, ஒவ்வொன்றிற்கும் ஆக்கியோனாக இருக்கும் தேவன், பாவத்திற்கும் ஆக்கியோனாக இருக்க வேண்டும்.

**பதில்.** இது எப்படிப்பட்ட அதிசயமான தர்க்கமாகும்! இதில் வேதாகமத்தின் எந்த வார்த்தையும் இல்லை. வேதாகமக் கேள்விகளையே நான் கேட்கிறேன். வேதாகமம் சொல்கிறது, “அவர் கிரியை உத்தமமானது.” தேவன் பாவத்தின் ஆக்கியோன் அல்லது குறையுள்ள எந்த காரியத்தின் ஆக்கியோன் என்று குறிப்பாக எதுவும் உணர்த்தப்படுகிறதில்லை. அவர் பாவத்தின் ஆக்கியோன் அல்ல. அவர் பாவத்தைக் கண்டித்தார். அவர் பாவத்தை உருவாக்கி, பிறகு பாவத்திலிருந்து நம்மை மீட்பதற்காக தம்முடைய குமாரனை கொடுத்தார் என்று நீங்கள் அனுமானிக்கிறீர்களா? சர்வ வல்லமை உள்ள தேவன் பாவத்திற்கு ஆக்கியோன் என்றும், பிறகு தம்முடைய சொந்த கிரியைகளுக்கு எதிராக செயல்படுகிறார் என்று நாம் நினைத்தால், அது எவ்வளவு அபத்தமானது. அருமையான நண்பர்களே, உள்ளார்ந்த, நியாயமான விளக்கம் கொள்வோம்.

## யேகோவா - தேவனைப் பார்த்தல்.

**கே** 360:1 :: **கேள்வி** (1911) - 1 - ‘அவர்கள் தேவனைப் பார்த்தார்கள்’ என்று யாத்திரராகமம் சொல்வதுடன் ‘தேவனை எந்த மனுஷனும் கண்டிருக்கவில்லை’ என்று தீமோத்தேயு நிருபம் சொல்வதை ஒப்பிட்டு தயவு செய்து விளக்கம் கூறவும்.

**பதில்.** தீமோத்தேயு நிருபத்தில் தேவனை மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அவரை ஒரே பேறான குமாரன் வெளிப்படுத்தினார். தேவனுடைய உருவத்தை மனுஷரில் ஒருவரும் ஒருபோதும் பார்த்ததில்லை என்று இப்பொழுது பவுல் அப்போஸ்தலன் அர்த்தப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் பல்வேறு சமயங்களில் அவர் எப்படி காணப்பட்டிருக்கிறார் என்றும், எப்படி அவர் தம்மைக் காண்பித்திருக்கிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு, பிதாவின் மிகவும் துல்லியமான பிரதிதிநிதியாக இருந்தது போல, அவருடைய பிரதிநிதிகள் வழியாக அவர் காணப்பட்டார். உதாரணமாக, சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட போது, மோசே கர்த்தரைப் பார்த்தார், அதாவது, கர்த்தருடைய விசேஷித்த ஏவலராக கர்த்தருடைய தூதனை மோசே பார்த்தார். ஒரு இடத்தில் தூதன் என்று சொல்லப்படுகிறது. வேறொரு இடத்தில் கர்த்தர் என்று சொல்லப்படுகிறது. கருத்து ஒன்று தான், அதாவது, ஆவியின் சிருஷ்டியை எந்த மனுஷனும் பார்க்க முடியாது. ஆனால், கர்த்தருடைய தூதன் மனுஷனாகத் தோன்ற முடியும். மனுஷர்களுடன் கூடி உரையாட முடியும்.

## யேகோவா - - பூமியிலே சிருஷ்டிப்புக்கு முன்பு தேவனுடைய பணி.

**கே 360:2 :: கேள்வி (1911) - 2 -** பூமியின் சிருஷ்டிப்புக்கு முன்பு, சிருஷ்டிப்பின் நித்தியத்தின் போது தேவன் என்ன செய்து கொண்டிருந்தார்?

**பதில்.** இப்பொழுது, இந்த கேள்விக்கு பதில் அளிக்கக்கூடியவராக ஜான் கால்வின் இருந்திருப்பார். இது எனக்கு அப்பாற்பட்டது; இதைத் தவிர: இதற்கு அப்பாற்பட்ட சில விஷயங்களை உங்களுக்கு நான் சொல்ல முடியும். யோவான் 1:1ல் வேதாகமம் சொல்கிறது, ஆதியிலே லோகோஸ் (LOGOS) இருந்தது. அந்த லோகோஸ் - வார்த்தை - தேவனிடத்திலிருந்தது. அந்த லோகோஸ் தேவனாயிருந்தது; இது தான் ஆதியிலே தேவனோடு இருந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. உலகம் உண்டாவதற்கு முன்பு, பிதாவுடன் இருந்த போது, அவர் மனுஷனாவதற்கு முன்பு, மனுஷீக நிலைக்கு முன்பு இருந்த கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய விவரிப்பு தான் இங்கே உள்ளது. தேவனுடைய சிருஷ்டிப்பில் அவர் ஆதியாக இருந்தார் என்றும், பிறகு அவர் மூலமாக தூதர்களும் மற்றவைகளெல்லாம் உண்டாக்கப்பட்டன என்றும் வேதாகமம் கூறுகிறது. இப்பொழுது, லோகோசுக்கு முன்பு என்ன இருந்தது என்பது எனக்குத் தெரியாது. நமது பரலோக பிதாவுக்கு ஆதி இல்லை என்று வேதாகமம் வெறுமனே தெரிவிக்கிறது. இதை ஆழமாகப் பார்க்கும் அளவுக்கு என்னுடைய தலை பெரியதாக இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நமது எண்ணத்தின் எல்லை வரம்புகளை நீங்களும் நானும் நன்கு கண்டுணர்ந்து கொள்ளும் விதமாக சில விஷயங்கள் உள்ளன. நீங்கள் எளிதாக கிரகிக்கும்படி வேறொரு எடுத்துக்காட்டு நீங்கள் விரும்பினால், அது இது தான்: நான் ஒரு கல்லை எறிகிறேன் என்றும், அது என்றென்றும், என்றென்றும் போய்க்கொண்டு இருப்பதாக நான் அனுமானித்தால், - - அது எங்கே தரை இறங்கும்? அது போய்க்கொண்டே இருந்தால், அது தரை இறங்காது, அப்படித் தானே? நல்லது, இது என்றென்றும் போய்க்கொண்டே இருந்தால், விண்வெளியின் முடிவை அடைய முடியுமா? இல்லை. விண்வெளியின் முடிவை நீங்கள் அடைய முடியாது. ஏனெனில், விண்வெளிக்கு முடிவு இல்லை. வரம்புக்கு உட்படாத விண்வெளியை நீங்கள் கற்பனை செய்ய முடியாது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். விஷயம் என்ன? ஏன், நம்முடைய தலைகள் அவ்வளவு பெரிது அல்ல. இந்த விஷயங்களில் சிலவற்றை நாம் கவனிப்பதற்கு தேவையான செய்திகளை நாம் பெற்றிருக்கவில்லை. சர்வ வல்லமையுள்ள நமது சிருஷ்டிகர் சம்பந்தமான எந்த விஷயமும் வரும்போது, நாம் மிகவும் கீழானவர்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அவர் வெளிப்படுத்தியிருக்கிற அளவுக்கு மட்டுமே நாம் அறிய முடிகிறது - அவர் வெளிப்படுத்தியிராத எதையும் நாம் அறிந்து கொள்ள இயலாது.

## யேகோவா - ஆதியும் அந்தமும்.

**கே 360:3 :: கேள்வி (1912) - 3 -** "கர்த்தராகிய நான் தானே; நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே." ஏசாயா 41:4; ஏசாயா 44:6; இந்த அறிக்கையை தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** நல்லது, கண்டுணரப்படக்கூடியவர் தேவன் ஒருவர் மட்டும் தான் என்று இந்த வசனம் பொருள் கொள்கிறது என்று நான் அனுமானிக்கிறேன். மற்றவை அனைத்தும் மறதிக்குள்ளாகிப் போகின்றன. இறுதியில் தேவன் ஒருவரே இருப்பார். ஆகவே, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு கர்த்தராகிய இயேசு பரலோக பிதாவுக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் என்று இயேசு சொன்ன போது, பரலோக பிதாவின் முதன்மைத் தன்மை கர்த்தர் இயேசுவினால் கண்டுணரப்படுகிறது.

## யேகோவா - - சத்தம் என்பதின் அர்த்தம்.

**கே 361:1 கேள்வி (1913-Z) - 1 -** ஆதாம் மற்றும் ஏவாளைப் பற்றிச் சொல்லப்படுகிறது: "அவர்கள் தேவனாகிய யேகோவாவின் சத்தத்தைக் கேட்டார்கள்." யேகோவாவின் "சத்தம்" என்பதற்கு என்ன அர்த்தம்?

**பதில்.** மனுஷீக நிலைக்கு முன்பு நம்முடைய கர்த்தராகிய இயேசுவை இது குறிக்கிறது என்று நாங்கள் அனுமானிக்கிறோம். லோகோஸ் ஒரு தேவன். (god) தேவனுடைய லோகோஸ், வார்த்தை, சத்தம், தேவனுடைய பிரதிநிதியாக மனுஷனுடன் தொடர்பு கொண்டா**ர்.**

## யேகோவா - - முன்பாக நம்முடைய நிலைப்பாட்டை உறுதி செய்வது.

**கே** 361:2 :: **கேள்வி** (1913-Z) - 2 - தேவனுக்கு முன்பாக நமது நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்வதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா?

**பதில்**. யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார், "நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருந்து". (1யோவான் 3:21.) ஜீவனுக்கடுத்த காரியங்களில் நாம் தேவனுக்குப் பிரியமாயிருக்கிறோமா அல்லது இல்லையா என்பதை அறிய, நம்மையும், நம்முடைய முன்னேற்றத்தையும் அளந்து பார்க்க ஆரம்பிக்க வேண்டுமானால், அவருடைய குடும்பத்திற்குள் நாம் வருவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்குமா என்பதை முதலாவது நாம் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும். தேவ சித்தத்தைச் செய்வதற்கு, நம்மை முழுமையாக அர்ப்பணிப்பு செய்திருக் கிறோம் என்று நாம் அறிந்தால், அடுத்த கேள்வி எழுகிறது. தேவ சித்தத்தை எந்த அளவுக்கு நான் **அறிகின்றேன்**? எந்த அளவுக்கு அதைச் **செய்ய** நான் நாடுகின்றேன்? என்னுடைய ஜீவனை எனக்கு பிரியமாயிருக்க எண்ணாமல், என்னுடைய நேரம், பலம், செல்வாக்கு மற்றும் எனக்கு உண்டாயிருக்கிற எல்லாவற்றையும் என்னுடைய சிறந்த திறமைக்குத் தக்கவாறு நான் தியாகம் செய்கின்றேனா? பொதுவான முறையில் இந்த ஓட்டத்தைத் தான் நாம் பின்பற்றி வருகிறோம் என்று நாம் கண்டால், நாம் பெருமளவில் திருப்தி அடைவதற்கு எல்லா காரணமும் உள்ளது.

பிறகு, "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ 3:12.) என்பது தான், எதிர்பார்க்கக்கூடிய விஷயம் என்பதை நாம் கண்டு கொள்கிறோம். ஆவியின் சாட்சியத்தை நாம் பெறவில்லை என்று நாம் கண்டால், நமக்கு துன்பம் ஏதும் இல்லையென்றால், நாம் நம்முடைய வெளிச்சத்தைப் பிரகாசிக்க விடவில்லை. இந்த நிலை நம்மை மூடத்தனமாக எதற்கும் வழி நடத்தக்கூடாது. ஆனால், அவருடைய ஊழியத்தில் நம்முடைய ஜீவனை ஒப்படைக்கிறோமா என்பதை நாம் நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தற்காலத்தில் நாம் எந்த துன்பத்தையும் காணாவிட்டால், இது நமக்கு குழப்பத்தைத் தருவதற்கு காரணமாயிருக்க வேண்டும்.

நாம் துன்பங்களை கண்டால், நம்முடைய துன்பங்கள் நாம் செய்திருக்கிற ஏதோ தவறினால் உண்டானதில்லை என்பதையும், மற்ற மனுஷர்களின் விஷயங்களில் தேவையற்று ஈடுபடுகிறதினால் உண்டானவையில்லை என்றும் ஆனால், சத்தியத்திற்குள்ளாகவும், சகோதரர்களுக்காகவும் நாம் துன்பப்படுகிறோம். என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் வந்திருக்கிறோம் என்ற இந்த சாட்சியங்களை நாம் உடையவர்களாயிருந்தால், அவருடைய சித்தத்தை அறியவும், செய்யவும் கற்றுக்கொள்கிறவர்களாயிருந்தால், இந்த பாதையில் நாம் சோதனைகளையும் கஷ்டங்களையும் உடையவர்களாயிருக்கிறோம் என்றும், இப்படியாக, சரியான முறையில் பயிற்றுவிக்கப் படுகிறோம் என்றால், அவருடைய உண்மையான ஜனங்களாக நாம் நம்மை எண்ணிக் கொள்ளலாம்.

## எருசலேம் - - நம்மெல்லோருக்கும் எப்படி தாயானவள்?

**கே 361:3 :: கேள்வி (1912) - 3 -** கலா. 4:;26. "மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லோருக்கும் தாயானவள்." "நாம்" என்பது யார்? ஆவிக்குரிய எருசலேம் எப்படி நம்மெல்லோருக்கும் தாய்?

**பதில்.** வேதாகமம் இந்த உருவகத்தை அடிக்கடி உபயோகப்படுத்துகிறது. இது அங்கு குடியிருப்பவர்களுக்கு எல்லாம் தாயாக இருப்பதாக, ஒரு நகரத்தைக் குறிக்கிறது -- "எருசலேமும் அவளுடைய குமாரத்திகள், சோதோமும் அவளுடைய குமாரத்திகள்," போன்றவை. ஆகவே, தேவன் வெளிப்படுத்துகிறார், "எருசலேம் நம்மெல்லோருக்கும் தாயானவள்." பரிசுத்தவான்களின் குடியுரிமை பரலோகத்தில், பரலோக எருசலேமில் உள்ளது. இது முதலாம் உயிர்த்தெழுதல் வரைக்கும் கட்டப்படாது." ஆனால், நாம் விசுவாசத்தினால் முன்னோக்கிப் பார்த்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலைமையையும், அங்கே நமது குடியுரிமையையும் பற்றி பேசுகிறோம். ஆபிரகாமின் மனைவியாகிய சாராளினால் புதிய எருசலேம் அடையாளப்படுத்தப்படுகிறது. புதிய எருசலேம் நம்முடைய உடன்படிக்கை ஆகும். இதன் கீழ் ஆவிக்குரிய ஈசாக்கின் அங்கங்களாக, கிறிஸ்துவின் புதிய சிருஷ்டிகளாக இருக்கிறோம்.

இதே உடன்படிக்கையின் கீழ் சபை வளர்ச்சி பெறுகிறது. - தாயாக கிறிஸ்து - நாம் அவருடைய அங்கங்கள். அவருடையது பலியின் உடன்படிக்கையாகும், "பலியினாலே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்." சங். 50:5. மனுஷனாகிய கிறிஸ்து இயேசு பிதாவுடன் உடன்படிக்கை செய்தார். இது அவருடைய மாம்சீக பலியை, அவருடைய பூமிக்குரிய சுபாவத்தை அர்த்தப்படுத்துகிறது. இந்த பலிக்கு வெகுமதியாக, உலகத்தை ஆசீர்வதிக்கும் உயர்ந்த மேசியாவாக உள்ளடக்கி, "தேவதூதர்களுக்கு மேலாக", தெய்வீக சுபாவத்தின் புதிய சிருஷ்டியாக பிதா அவரை ஏற்படுத்தினார். இயேசு பிதாவின் திட்டத்தை செய்து முடித்து, அவருடைய மீட்பின் பலனை, அவரை மாதிரியாக இப்பொழுது பின்பற்றி அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து, அதே பலியின் உடன்படிக்கையை செயற்படுத்துகிறவர்களுக்குச் சுமத்துகிறார். நாம் உண்மையாக இருந்தால், உலகத்தை ஆசீர்வதிப்பதில் மேசியாவின் மாபெரும் பணியில் நாம் பங்கு பெற்று, புதிய எருசலேமாக ஆயிர வருஷ இராஜ்யமாக இருப்போம் - - விசுவாசத்தினால் இதனுடைய பிள்ளைகளாக இருப்போம். இப்பொழுதும் கூட, நம்முடைய குடியுரிமை பரலோகத்தில் இருக்கிறது.

## எருசலேம் - நம்மெல்லோருக்கும் தாய்.

**கே 362:1 :: கேள்வி (1913-Z) - 1 -** "மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லோருக்கும் தாயானவள்." கலா.4:26. இந்த வசனத்தில் "நாம்" என்பது யாரை அர்த்தப்படுத்துகிறது? ஆவிக்குரிய எருசலேம் "நம்மெல்லோருக்கும் தாய்" என்பது எப்படி?

**பதில்.** அப்போஸ்தலன் இங்கு உருவகமான பேச்சை உபயோகப்படுத்துகிறார். இது வேதாகமத்தில் பொதுவாகக் காணப்படுகிறது. இதில் ஒரு நகரம், அதில் குடியிருப்பவர்களின் தாயாகக் குறிக்கப்படுகிறது; உதாரணமாக, "எருசலேமின் குமாரத்திகள்", "சீயோனின் குமாரத்திகள்", "சோதோமும் அவளுடைய குமாரத்திகளும்" போன்றவை. "நாம்" என்ற வகுப்பார் தேவனுடைய பரிசுத்தவான்களை அர்த்தப்படுத்துகிறது. பரிசுத்தவான்களின் குடியுரிமை பரலோகத்தில் உள்ளது - பரலோக எருசலேமில் உள்ளது. இது முதலாம் உயிர்த்தெழுதல் வரையிலும் கட்டப்படாது. விசுவாசத்தினால் நாம் முன்னோக்கிப் பார்த்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலைமையையும், அதில் நமது குடியுரிமையையும் பற்றி பேசுகிறோம். அதே உடன்படிக்கையின் கீழ் சபை வளர்ச்சி பெறுகிறது - கிறிஸ்துவைப் போல தாய்; நாம் அவருடைய அங்கங்கள்; அவருடையது பலியின் உடன்படிக்கை ஆகும். "**பலியினால்** என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்." (சங் 50:5.) மனுஷனாகிய கிறிஸ்து இயேசு பிதாவுடன் உடன்படிக்கை செய்தார். இது அவருடைய **மாம்சீக** பலியை, அவருடைய **பூமிக்குரிய சுபாவத்தை** அர்த்தப்படுத்துகிறது. இந்த பலிக்கு வெகுமதியாக, உலகத்தை ஆசீர்வதிக்கும் உயர்ந்த மேசியாவாக உள்ளடக்கி, "தேவ தூதர்களுக்கு மேலாக", தெய்வீக சுபாவத்தின் புதிய சிருஷ்டியாக பிதா அவரை ஏற்படுத்தினார். இயேசு பிதாவின் திட்டத்தை செய்து முடித்து அவருடைய மீட்பின் பலனை, அவரை மாதிரியாக இப்பொழுது பின்பற்றி, அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து, அதே பலியின் உடன்படிக்கையை செயற்படுத்துகிறவர்களுக்குச் சுமத்துகிறார். நாம் உண்மையாக இருந்தால், உலகத்தை

ஆசீர்வதிப்பதில் மேசியாவின் மாபெரும் பணியில் நாம் பங்கு பெற்று, புதிய எருசலேமாக, ஆயிர வருஷ இராஜ்யமாக இருப்போம் - - விசுவாசத்தில் **இதனுடைய பிள்ளைகளாக இருப்போம். இப்பொழுதும் கூட நம்முடைய குடியுரிமை பரலோகத்தில் இருக்கிறது**.

## இயேசு - - யோசேப்பின் குமாரன் அல்ல.

**கே 362:2 :: கேள்வி (1907) - 2 -** பரிபூரணமும் பரிசுத்தமுமான மூலம் மற்றும் சுபாவத்திலிருந்து யோசேப்பையும் மரியாளையும் உபயோகப்படுத்தி, இயற்கையான முறையில் பூரண மனுஷனாக இயேசுவை தேவன் அதிசயத்தக்க விதமாக பிறப்பிக்கச் செய்தார் என்று புதிய ஏற்பாட்டில் முதல் அதிகாரம் நம்மை முடிவு செய்ய வழி வகுக்கிறதா?

**பதில்.** நான் பதிலளிக்கிறேன், இல்லை. இந்த முறையில் இது எதையும் போதிக்கிறதில்லை. இந்த முறையில் இது போதிக்கிறதாக எனது மனதுக்கு தோன்றுகிறதுமில்லை. இயேசு யோசேப்பு மற்றும் மரியாளுடைய குமாரன் என்றால், நீங்களும் நானும் இருப்பது போல வரும் வெறும் ஆதாமின் குமாரனாகவே இயேசு இருந்திருப்பார். நீங்களும் நானும் இருப்பதைப் போல, ஆதாமின் பாவத்தை சுதந்தரித்திருப்பதைப் போலவே, அவரும் இருந்திருப்பார். நீங்களும் நானும் இருப்பதைப் போலவே, அவரும் மரண தண்டனையின் கிழ் உள்ளவராகவே இருந்திருப்பார். மரண தண்டனையின் கீழ் இருந்தால், அவர் தம்மையே இரட்சித்துக் கொள்ள இயலாதவராயிருப்பார். சபிக்கப்பட்ட மூலஸ்தானத்திலிருந்து வரும் ஜீவனைக் கொண்டிராத ஒருவர் தான், இரட்சகராக இருக்க வேண்டும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. ஆனால், வேதாகமம் கூறுவது போல, இயேசுவின் ஜீவன் பிதாவிடமிருந்தே வந்தது. அவர் தாமே கூறுவது போல, உலகம் உண்டாகிறதற்கு முன்பே, அவர் பிதாவுடன் இருந்தார். யோவான் சுவிசேஷம் முதல் அதிகாரத்தில் கூறுவது போல, “ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.” இங்கே நமது கர்த்தர் மனுஷீகத்திற்கு முந்தைய நிலையில் இருந்தது உறுதியாக்கப்படுகிறது. பிதாவுடன் தமக்கு இருந்த மகிமையை விட்டு, தம்மை தாழ்த்தி, தூதர் சுபாவத்துடன் நிற்காமல், பவுல் அப்போஸ்தலன் கூறும் விதமாக, மனுஷ சுபாவத்திற்கு இறங்கி வந்து, மனுஷனிடத்தில் அல்ல, ஸ்திரீயினிடத்தில் பிறந்தார். அவர் உலகத்தை இரட்சிப்பதற்காக நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்தார். ஆகவே, வேதாகமத்தின்படி, அனைத்து விஷயங்களும் ஒன்றாக இணைந்துள்ளன. நாம் யோசேப்பை இதற்குள் கொண்டு வந்தால், எல்லா விஷயத்தையும் பாழாக்கி விடுகிறோம். இயேசுவினுடைய பிறப்பில் யோசேப்பின் பங்கு ஏதும் இருப்பதாக எந்த கண்ணோட்டத்தில் பார்த்தாலும், இயேசு உங்களுடைய இரட்சகராகவும், என்னுடையவராகவும் இருக்க முடியாது. இந்த கேள்வியைக் கேட்டவர் வேதாகம பாடங்கள் ஐந்தாம் வால்யூமில் “மாசில்லாதவர்” என்ற அதிகாரத்தைப் படிக்குமாறு நான் ஆலோசனை கூறுகிறேன்.

## இயேசு - உயிர்த்தெழுதலிலிருந்து மனுஷ சுபாவமா அல்லது தேவ சுபாவமா?

**கே 363:1 :: கேள்வி (1908) - 1 -** கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, நமது கர்த்தர் மனுஷனாக இல்லை என்றும், அவருடைய இரண்டாம் வருகையில் மனுஷனாக இருக்க மாட்டார் என்றும் சொன்னால், அப்.17:31ம் வசனத்தை நாம் எப்படி புரிந்து கொள்ள முடியும்? அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்”?

**பதில்.** நான் பதிலளிக்கிறேன், “மனுஷன்” என்ற சொல் வேதாகமத்தில் பல்வேறு அர்த்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, “இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து” என்று அப்போஸ்தலர் கூறுகிறார். “இருதிறத்தார்” என்றால் என்ன? நல்லது, உதாரணமாக, தேவனுடைய கிருபை பெற்ற ஜனங்களாக யூதர்கள் இருந்தனர். ஆயத்தமாக இருந்த எல்லோரையும், மணவாளனாக அவரை ஏற்றுக்கொள்ளும் இருதயம்

கொண்டவர்களையும் அவர் எடுத்துக் கொண்டார். அவர் அவர்களைத் தாமே ஏற்றுக்கொண்டார். “அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளை களாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். பிறகு, இந்த யுகம் முழுவதிலும் ஒரு சிறு மந்தையை புறஜாதிகளிடமிருந்து எடுத்தார். இந்த இருதிறத்தார்களும் ஒரு புதிய மனுஷனாக உண்டாக்கப்படுகிறார்கள். இதற்கு அவர் தலையாக இருக்கிறார், - - - அவருடைய சரீரமாகிய சபைக்கு இயேசு கிறிஸ்து தலையாக இருக்கிறார்; ஆகவே, இந்த புதிய மனுஷன் மூலமாகவே தேவன் உலகத்தை நீதியாக நியாயந்தீர்ப்பார்.

## இயேசு - கிறிஸ்துவானார்.

**கே** 363:2 :: **கேள்வி** (1909) - 2 - இயேசு எப்போது கிறிஸ்துவானார்? அவருடைய சரீரத்தின் உண்மையான அங்கங்களாக நாம் எப்போது ஆகிறோம்? இது நமது ஜெநிப்பிக்கப்படும் சமயத்திலா அல்லது உயிர்த்தெழுதலிலா?

**பதில்**. இயேசு அர்ப்பணிக்கும் சமயத்தில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார். ஆகவே, தேவன் அவரை அங்கீகரித்து கூறினார், “இவர் என்னுடைய நேச குமாரன், இவருக்குச் செவி கொடுங்கள்.” ஆனால், இது தகுதி காணும் காலம் (PROBATION) ஆகும். உங்களுக்கு நினைவு இருக்கும், அவர் தோட்டத்தில் இருக்கும் போது, தம்மை மரணத்திலிருந்து காப்பாற்றக்கூடிய தேவனுடன் வலுவான கதறல்களுடனும் கண்ணீரோடும் தம்மை அர்ப்பணித்தார். தாம் தோல்வியுற்றால், இது நித்திய மரணம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் மரித்ததிலிருந்து எழுந்திருக்கிற வரைக்கும், இந்த சொல்லின் முழு அர்த்தமாய் பார்த்தால், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து என்ற ஸ்தானத்திற்கு அவர் முழுமையாக வரவில்லை. மரித்ததிலிருந்து அவருடைய உயிர்த்தெழுதல் மூலமாக அவர் அதிகாரம் கொண்டவராய் தேவனுடைய குமாரன் என்று பிரகடனப்படுத்தப்பட்டார்.

எங்கள் நிலை இதுவே. நாங்கள் உடன்படிக்கை செய்திருக்கிற காரணத்தினால், பரிசுத்த ஆவியை நாங்கள் பெறுகிறோம். நாங்கள் உண்மையுள்ளவர்களாயிருந்தால், நாங்கள் அவையெல்லாவற்றையும் பெறுவோம். ஆனால் உண்மையுள்ளவர்களாக இல்லாவிட்டால், நாங்கள் எல்லாவற்றையும் இழப்போம். அவருடைய உயிர்த்தெழுதலின் பங்கு அல்லது அதிகாரத்தினால், நாமும் கூட தேவனுடைய குமாரர்களாவோம்.

## இயேசு - மனுஷீகத்துக்கு முன் நிலைமை.

**கே** 364:1 :: **கேள்வி** (1909) - 1 - இயேசு தம்முடைய மனுஷீகத்துக்கு முன் இருந்த நிலையை எப்பொழுது அறிந்தார்?

**பதில்.** எனக்குத் தெரியாது; அவர் நமக்கு சொல்லவில்லை. அவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறார் என்று நாம் வெறுமனே படிக்கிறோம். “பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்திலே எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்” என்று இயேசு சொன்னதையும் கூட நாம் அறிவோம். மறுபடியும் அவர் நிக்கொதேமுவிடம் கூறினார், “பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?’ தேவன் அவருக்கு இந்த அறிவை எப்படி கொடுத்தார்? இது வெளிப்படுத்தப்படவில்லை, ஆனால், என் மனதுக்கு உதவியாக இருக்கும் என்ற முறையில், உங்களுக்கு ஒரு யோசனையை சொல்ல முடியும். உயிர்த்தெழுதலின் மாற்றத்தைப் பெறக்கூடிய நம்முடைய நேரம் வரும்போது, புதிய சிருஷ்டிகளாக நாம் இருப்போம். அது பழைய பூமிக்குரிய சரீரமாயிராமல், புதிய ஆவிக்குரிய சரீரமாக இருக்கும். அப்போது இந்த தற்கால வாழ்க்கையின் காரியங்களை நாம் எப்படி ஞாபகத்தில் கொள்வோம்?

தேவனுக்கு புதிய சரீரத்தைக் கொடுக்கும் வல்லமை உள்ளது என்பதும், இந்த மூளையில் இப்பொழுது எது சேமித்து வைக்கப்பட்டிருந்தாலும், அந்த மூளையின் மடிப்புகளின் மேல் உணர்வுகளை அறியும் வல்லமை கூட தேவனுக்கு உள்ளது என்பதும், தவிர, நீங்கள் இப்பொழுது வேறு எதையும் கற்பனை செய்ய முடியாது. அப்பொழுது, புதிய நிலையில் இந்த தற்கால எண்ணங்கள் அனைத்தையும் நாம் விரிவாகப் பெற்றிருப்போம். ஆகவே, நமது கர்த்தர் இயேசுவை இந்த பூமிக்குரிய நிலைக்கு கொண்டு வரும் போது, தேவன் இயேசுவினுடைய மனுஷீக நிலைமைக்கு முன் இருந்த அறிவு அல்லது நினைவுகளை திரும்ப அறியும் விதத்தில் தேவன் அவருடைய மூளையில் பதிவு செய்து அல்லது உணரும் திறனைக் கொடுத்திருப்பார். ஒன்றை அனுமதிக்க வேண்டுமானால், மற்றதை அனுமதிக்க வேண்டும்.

## இயேசு - மீட்பாக மனுஷன் மற்றும் மத்தியஸ்தர்.

**கே 364:2 :: கேள்வி (1909) - 2 -** மனுஷனாகிய கிறிஸ்து இயேசு மீட்கும் பொருள் என்று ஜனங்களிடம் சொல்கிறோம். ஏனெனில், பவுல் 1தீமோ.2:6ல் அவ்விதம் சொல்கிறார்; தகப்பனாகிய ஆதாமுக்கு தகுந்த விலைக்கிரயமாக அல்லது மீட்கும் பொருளாக வேறு எந்த மனுஷனும் இருக்க முடியாது. இதே காரணத்தினால், மனுஷனாகிய கிறிஸ்து இயேசு தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக இருக்கிறார் என்று நாம் ஜனங்களிடம் சொல்ல முடியுமா? ஏனெனில், பவுல் 1தீமோ.2:5ல் அவ்விதம் சொல்கிறார்.

**பதில்.** நிச்சயமாக, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்கிறார் என்று நான் எப்போதும் சொல்கிறேன். பிறகு, மேலும் நாம் சொல்லலாம்? தேவ ஏற்பாட்டில் அவருடைய சரீரமாகிய சபைக்கு தலையாக மனுஷனாகிய கிறிஸ்து இயேசு எண்ணப்படுகிறார். கிறிஸ்து தலையாகிய இயேசுவும் அவருடைய சரீரமாகிய சபையுமாக இருக்கிறார். ஆகவே, இருவரும் மத்தியஸ்தராக இருக்கிறார்கள். இருவரும் ஆசாரியராக இருக்கிறார்கள். இருவரும் நியாயாதிபதியாக இருக்கிறார்கள். இருவரும் ராஜாவாக இருக்கிறார்கள். ஏனெனில், நாம் எல்லோரும் கிறிஸ்து இயேசுவில் ஒன்றாக இருக்கிறோம். அவருடைய சரீரமாகிய சபைக்கு தேவன் அவரை தலையாகக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் அங்கங்களாயிருக்கிறோம். ஆகவே, கிறிஸ்துவின் சரீரம் என்ற முறையில் நாம் அவருடன் பாடுபட்டால், கிறிஸ்துவின் சரீரமாகிய நாமும் கூட அவருடன் ஆளுகை செய்வோம். நாமும் கூட கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் என்ற முறையில், அவருடன் மரித்தால், நாமும் அவருடனே ஜீவிப்போம். ஆகவே, மாம்சத்தில் கிறிஸ்து என்பவர் மரணம் அடையும் காலம் வரைக்கும் இருந்த இயேசு, அவர் உயிர்த்தெழுந்த பிறகு பெந்தெகொஸ்தே நாளிலும், அதைத் தொடர்ந்து, அவருடைய அங்கங்களாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் எல்லோரும் மாம்சத்தில் கிறிஸ்துவாக இருக்கிறார்கள். கிறிஸ்து மாம்சத்தில் இருக்கிற காரணத்தினால் தான், இங்கு நீங்களும் நானும் இன்று சந்திக்கிறோம். இது ஒரே சரீரம், ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன், ஒரே பிதா, உலகத்தில் சரீரம் இருக்கிறது. இயேசு கூறினார், “நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும்”, நீங்கள் முன்பே இருந்தீர்கள், ஆனால், உங்களிடம் குறிப்பிட்ட தனித்துவங்கள் இருந்ததால், பிதா உங்களை இழுத்துக்கொள்ள வழி வகுத்தது. இயேசு கூறினார், “பிதா இழுத்துக் கொள்ளுகிற ஒருவனை நான் புறம்பே தள்ளுகிறதில்லை”.

## இயேசு நியாயப்பிரமாணம் கைக்கொண்டது அல்லாமல், பூரண மனுஷ ஜீவன்.

**கே 365:1 :: கேள்வி (1909) - 1 -** நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டது அல்லாமல், இழந்ததை நமக்குத் தருவதற்கு மீட்கும் பொருளாக இயேசு பூரண மனுஷ ஜீவனையும், அதனைத் தொடரும் உரிமைகளையும் சலுகைகளையும் இயேசு உடையவராய் இருக்கவில்லையா?

**பதில்.** ஒரு மனுஷனுக்கு இரட்டை ஜீவனுக்கான உரிமை இல்லை. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கு மேலாக யாரும் எதையும் செய்ய முடியாது. உங்களுக்கு நினைவிருக்கும், நியாயப்பிரமாணம் இதைத் தான் சொல்கிறது, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக." தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்த இயேசுவைத் தவிர, அதிகமாக நீங்கள் ஒன்றும் செய்ய இயலாது. பூரண மனுஷன் என்கிற முறையில் பூரண ஜீவனை அவர் பெற்றிருந்தார். ஆனால், அவர் சோதிக்கப்பட வேண்டியதாயிருந்தது. மூன்றரை வருஷ காலப்பகுதியில் அவருடைய சோதனையானது, மரணத்திற்குள்ளான அவருடைய அர்ப்பணிப்பின் சோதனையாகவும் அல்லது நிரூபணமாகவும் இருந்தது. அவர் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு இருந்தார். அதே சமயத்தில் தம்முடைய ஜீவனை பலியிட்டுக் கொண்டு இருந்தார். தகப்பனாகிய ஆதாம் பூரணமாக இருந்து, ஜீவனோடு இருப்பதற்கு உரிமை கொண்டிருந்தான். ஆனால், அவன் சோதிக்கப்பட தேவை இருந்தது. நியாயப்பிரமாணத்தைக் கைகொண்டது, இயேசு ஒரு பூரண மனுஷன் என்பதை மட்டுமே நிரூபித்தது. இது பூரண மனுஷனுக்குரியதைத் தவிர, கூடுதலான உரிமைகள் எதையும் இது அவருக்குக் கொடுக்கவில்லை.

## இயேசு - பிறகு இயேசு கேள்வி கேட்பவராக மாறினார்.

**கே 365:2 :: கேள்வி** **(1910-Z) - 2 -** இயேசு யாருடைய குமாரன்?

**பதில்.** மேன்மையான போதகர் பரிசேயர்களிடம் கேட்டார், "மேசியாவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்?" அவர்கள் பதில் கூறினார்கள், "அவர் தாவீதின் குமாரன்." பிறகு, போதகர் வினவினார், "அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே (தீர்க்கதரிசனமாக) அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே? தாவீது அப்போது அவரை ஆண்டவர் என்று அழைத்தால், அவர் தாவீதின் குமாரன் என்பது எப்படி?"

இந்த கேள்வி பரிசேயர்களுக்கு நிச்சயமாக அதிக ஆழமானதாக இருந்திருக்கும். மேன்மையான போதகர் அவர்களுடைய கேள்விகள் அனைத்திற்கும் பதில் அளிக்க முடியும். ஆனால், அவருடைய கேள்விகளுக்கு பதிலளிக்க அவர்களால் முடியாது. மேசியா மாம்சத்தின்படி தாவீதின் வம்சாவளியில் பிறந்தார் என்பதும், ஆனாலும் மாம்சத்தில் இருந்த மேசியாவில் தேவனுடைய நோக்கங்கள் முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை என்பதையும் எவ்வளவு அழகான முறையில் தெளிவாக நாம் பார்க்கிறோம் - - அதாவது, அவர் தம்முடைய மாம்சத்தை பலியாக ஒப்புக்கொடுத்து, எல்லா தூதர்களுக்கும் துரைத்தனங்களுக்கும் வல்லமைகளுக்கும் மேலாக, மகிமையும் கனமும் அழியாமையும் உள்ள தளத்திற்கு மரித்த நிலையிலிருந்து எழுப்பப்பட்டார். இயேசுவின் மாம்சீக நாட்களில் அவர் தாவீதின் குமாரனாக இருந்தார். ஆனால், அவருடைய மகிமையில் அவர் தாவீதின் ஆண்டவராக இருந்து, உரிய காலத்தில் மரித்த நிலையிலிருந்து உயிர்த்தெழுதலை மட்டுமல்லாமல், மேசியாவின் இராஜ்யத்தில் பங்கு பெறும் ஆசீர்வாதங்களையும் அவர் மூலமாக தாவீது பெறுவார் என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். மாம்சத்திலுள்ள மேசியாவின் தகப்பன் இவ்விதமாக மகிமையிலுள்ள மேசியாவின் குமாரனாகிறார். இவருடைய பூமிக்குரிய ஜீவன் தாவீதை உள்ளடக்கிய அனைத்து உலகத்தாருக்கும் மீட்கும் பொருளாக இருக்கிறது. இப்படியாக, "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்." (சங் 45:16) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## பூமியிலுள்ள பிரபு ஒருவர் மூலம் ஒரு எடுத்துக்காட்டு.

பெர்லினில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஒரு கர்னல் அவருக்கு அறிமுகமில்லாத ஒரு வாலிப அதிகாரியை சந்தித்தார். அந்த அதிகாரிக்கு பிரகாசமாகப் பதிக்கப்பட்ட ஒரு பெரிய பதக்கம் மட்டும் அலங்காரமாய் இருந்தது. அந்த கர்னல் வினவினார், "லெஃப்டினன்ட், நீங்கள் என்ன அணிந்திருக்கிறீர்கள்?" அந்த வாலிபன் பணிவாக பதிலளித்தார், "கர்னல், இது ஒரு பதக்கம்." கர்னல் பதிலளித்தார், "இது போன்ற ப்ருஷ்யாவின் (PRUSSIA) பதக்கம் எதையும் நான் அறிந்தது இல்லை." அந்த வாலிபன் கூறினார், "இது ஒரு ஆங்கில பதக்கம், கர்னல்." "இந்த உலகத்தில் இதை உனக்கு யார் கொடுத்தது?" என்று கர்னல் கேட்டார். "என்னுடைய பாட்டி" என்று பதில் வந்தது. அந்த வாலிபன் தன்னுடன் விளையாட்டாக பேசுகிறான் என்று அந்த வயதான கர்னல் நினைத்தார். கர்னல் வினவினார், "உன்னுடைய பாட்டி யார்?" இதற்கான பதில் கர்னலுக்கு பெரும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்தது. 'இங்கிலாந்தின் ராணி விக்டோரியா." இங்கே ஒரு பிரபு மறைமுகமாக இருக்கிறார். அவ்விதமாகவே, மகிமை பொருந்திய மேன்மையான ராஜாவாகிய இயேசு மறைமுகமாக இருக்கிறார். "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை." யோவான் 1:10.

## இயேசு - ஓய்வு நாளில் கல்லறையில் இளைப்பாறினார்.

**கே 366:1 :: கேள்வி (1910) - 1 -** ஓய்வு நாள் முழுவதும் கல்லறையில் நமது இரட்சகரின் இளைப்பாறுதலில் குறிப்பிடத்தக்க அம்சம் ஏதும் உள்ளதா?

**பதில்.** இது சம்பந்தமாக குறிப்பிடும்படியாக எந்த ஒன்றையும் நான் ஒருபோதும் நினைத்ததில்லை. அப்படி இருக்கலாம், ஆனால், என் மனதுக்கு அப்படி ஒருபோதும் தோன்றியது இல்லை. அவர் மூன்றாம் நாளில் இளைப்பாற வேண்டியிருந்தது. அவர் வாரத்தின் முதலாம் நாளில் இளைப்பாற வேண்டியிருந்தது. ஏனெனில், வாரத்தின் முதலாம் நாள் சரியான முறையில் ஒரு புதிய துவக்கத்தை, ஒரு புதிய யுகத்தை அடையாளப்படுத்துகிறது அல்லது உருவகப்படுத்துகிறது. ஏழாம் நாள் என்பது ஒரு பழைய யுகம் அல்லது காரியங்களின் ஒழுங்கு முறைமைகள் - அவருக்கு பூமிக்குரிய ஒழுங்கு முறைமைகள் - முடிவுக்கு வருவதைக் குறிக்கிறது. ஆகவே, வாரத்தின் முதலாம் நாள் இளைப்பாறுவது, அவர் புதிய சிருஷ்டியாக எழுவதை, அதாவது புதிய ஒழுங்கு முறைமைகளின் துவக்கத்தை சரியாகக் குறிப்பதாய் இருக்கிறது. ஆனால், ஓய்வு நாளைப் பற்றியும், மற்றதை விட அதிகமாக அந்த ஒரு நாளை கல்லறையில் இயேசு ஏன் கழித்தார் என்பதைப் பற்றிய எந்த எண்ணமும் ஒருபோதும் எனக்கு வந்ததில்லை.

## இயேசு - பிரிக்கப்படுவதற்கு முன்பு ஆதாமும் ஏவாளும்.

**கே 366:2 :: கேள்வி (1910) - 2 -** தன்னிடமிருந்து ஏவாள் பிரிக்கப்படுவதற்கு முன்பு இருந்த ஆதாம், அல்லது, தன்னிடமிருந்து ஏவாள் பிரிக்கப்பட்டு, பாவம் நுழையாததற்கு முன்பு இருந்த ஆதாம் - இவற்றில் மனுஷனாகிய கிறிஸ்து யாரைப் போல இருந்தார்?

**பதில்.** எனக்குத் தெரியாது. வேறு யாருக்கும் தெரியாது. இந்த விஷயத்தில் நமக்கு வித்தியாசம் ஏதும் இருக்கிறதாக நான் நினைக்கவில்லை. தன்னிடமிருந்து ஏவாள் பிரிக்கப்படுவதற்கு முன்பாக அவனுடைய பூரண நிலையிலிருந்த ஆதாமைப் போல, அல்லது, அவனிடமிருந்து ஏவாள் பிரிக்கப்பட்ட பிறகு இருந்த பூரண நிலையில் இருந்த ஆதாமைப் போல - இவற்றில் எந்த வழியில் நமது கர்த்தர் பூரண நிலையில் இருந்தார் என்று நமக்கு சொல்லுவதற்கு நிச்சயமாக வேதாகமத்தில் ஏதும் குறிக்கப்படவில்லை. இதற்கு பதிலளிக்கக்கூடிய விதமாக வேதாகமத்தில் ஒன்றுமில்லை என்று நான் அறிகிறேன். எந்த வழியில் இது இருந்தாலும், வித்தியாசம் எதுவும் இல்லை என்று நான் உணருகிறேன். மீட்கும் விலைக்கிரயம் போதுமானதாக கிறிஸ்துவில் இருந்தது. ஏனெனில், எப்படியிருந்தாலும், அவர் தலையாக இருந்தார். ஆதாமிடமிருந்து ஏவாள் பிரிக்கப்பட்ட பிறகு, வெறும் ஆதாமைப் போல

இயேசு இருந்தால், அவர் பொறுப்புள்ள ஒருவராகவே இருந்தார். ஆதாமிலிருந்து ஏவாள் பிரிக்கப்படுவதற்கு முன்பு இருந்த ஆதாமைப் போல இயேசு இருந்தால், அவர் அப்போதும் பொறுப்புள்ளவராகவே இருந்தார்.

## இயேசு - நமது கர்த்தர் பிதாவின் தற்சொரூபம்.

**கே 366:3 :: கேள்வி (1910-Z) - 3 -** எபி.1:3ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, தேவனுடைய தற்சொரூபமாக இயேசு எப்பொழுது இருந்தார்?

**பதில்.** அவர் உலகத்திற்குள் வருவதற்கு முன்பு நமது கர்த்தராகிய இயேசு, பிதாவின் தற்சொரூபமாக நிச்சயமாக இருந்தார்; அப்படியிருந்தும், மகிமையை விட்டு அவர் மனிதனானார் - “அவர் தம்மைத் தாமே தாழ்த்தி”. இந்த நிலைப்பாட்டில் தான் அவர் ஜெபித்தார்: “பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.” அவர் மனுஷனாக இருக்கும் போது, நமது கர்த்தர் மனுஷ சுபாவத்தின் மகிமையைப் பெற்றிருந்தார், ‘மனுஷனாகிய கிறிஸ்து இயேசு” - - தேவனுடைய சாயலில் பூரண மனுஷன். எனினும், மேலே உள்ள வசனப்பகுதியில், அப்போஸ்தலரின் மேற்கோளில், இயேசுவின் மனுஷீகத்திற்கு முந்தைய நிலைமையை அல்லது பூரண மனுஷனாக அவருடைய பூமிக்குரிய மகிமையைக் குறிக்கவில்லை. ஆனால், அப்போஸ்தலர் தெரிவிப்பது போல, உயிர்த்தெழுதலில் அவர் பெற்ற மகிமையைக் குறிக்கிறது. “ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்.” (பிலி 2:9,10.) இந்த குறிப்பிட்டக் காலத்தை தான் அப்போஸ்தலர் கூறுகிறார் என்று நாம் நம்புகிறோம்.

அவர் பரலோக மகிமையை விட்ட பொழுதோ, அல்லது, அவர் தம்முடைய அர்ப்பணிப்பை செய்த பிறகோ, அல்லது, சிலுவையில் மரணமடைந்தபோதோ, அவர் நம்முடைய பாவங்களை சுத்திகரிக்கத் துவங்கினார் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. இந்த பாடுகள் எல்லாவற்றிலும் நமது கர்த்தர் பெரிதும் உயர்த்தப்படுவதற்கான அவருடைய தகுதியை மெய்ப்பித்துக் காட்டிக்கொண்டு இருந்தார். நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த பிறகு, மனுஷீக ஜீவனையும், பூமிக்குரிய சுபாவத்தையும் பூமிக்குரிய உரிமைகளையும் நமது கர்த்தர் அகற்றிப் போட்டார். இவைகளை எல்லாம் அவர் பாவத்தினால் விட்டுக்கொடுக்கவில்லை. ஆகவே, அவருடையவைகளை அவர் கொடுத்து விட்டார். அவர் ‘உன்னதத்திற்கு ஏறிய’ போது, அவர் தம்முடைய இந்த பலனை அவரைப் பின்பற்றுபவர்களாகிய நம்முடைய பாவங்களுக்கு பாவநிவாரணமாக நீக்கிப்போட அல்லது சுத்திகரிப்பதற்காக அளித்தார். இது பெந்தெகொஸ்தே நாளில் மேல்வீட்டில் காத்திருந்தவர்களுக்கு மட்டும் அல்லாமல், இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் இதே வகுப்பாரைச் சேர்ந்த எல்லோருக்கும், “தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களின்” எண்ணிக்கை முழுமையடையும் வரைக்கும் இயேசுவின் மீட்பின் பலன் அளிக்கப்படும்.

## இயேசு - அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்.

**கே 367:1 :: கேள்வி (1911) - 1 -** நாம் குறியீட்டை அடைவதற்கு முன்பாக அவருடைய அடிச்சுவடுகளை எந்த உணர்வில் நாம் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும்?

**பதில்.** உங்களுக்கு நினைவு இருக்கும். பல்வேறு எண்ணங்களையும், பல்வேறு கட்டங்களையும் கொண்ட இராஜ்யத்தைக் குறிக்க, பல்வேறு உவமைகள் உள்ளன. ஒரு உவமை பரலோக இராஜ்யம் இதைப் போல உள்ளது என்றும், மற்ற உவமை அதைப் போல உள்ளது என்றும், வேறொரு உவமை வேறொன்றைப் போல உள்ளது என்றும் கூறுகின்றன. இதைப் போன்று, ஆசரிப்புக் கூடாரம் பற்றி ஒரு கோணத்திலிருந்து ஒரு பார்வையையும், மற்ற கோணத்திலிருந்து வேறு பார்வையையும், இன்னும் வேறொரு கோணத்திலிருந்து வேறொரு பார்வையையும் நீங்கள் பெறலாம். இவைகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் வித்தியாசமாக

இருக்கும். ஆனால், அனைத்தும் ஒரே கட்டிடத்தின் உருவகங்களாக இருக்கின்றன. ஆகவே, இராஜ்யத்தைப் பற்றிய இந்த பல்வேறு உருவகங்கள், இனி வரக்கூடிய தேவனுடைய இராஜ்யத்தைக் குறிப்பனவாக இருந்து, இது உலகத்தை ஆளப்போவது, பாவத்தை அகற்றி மனுஷீகத்தை உயர்த்தப்போவது ஆகியவற்றை வெவ்வேறு கோணங்களில் அடையாளப் படுத்தும் விதமாக இருக்கின்றன. இது தற்போதுள்ள சபை, அல்லது, இது மகிமையுள்ள சபை போன்றவை, இராஜ்ய அனுபவங்களின் பல்வேறு கட்டங்களாக உள்ளன. ஆகவே, இந்த கேள்விக்கான பதில்: நமது கர்த்தரின் அடையாள அனுபவங்களில் ஒன்று, அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பது ஆகும். அவர் கூறுகிறார், "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல." நாம் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும். அது ஒரு உருவகம். நாம் பாவிகளாக இருக்கையில், அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கிறோம் என்று எந்த கோணத்திலும் சொல்லப்படவில்லை. எந்த பாவியும் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க அழைக்கப்படுவதில்லை. முதலில் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும்; அவன் சீஷனாக ஆவதற்கு முன்பு பாவநிவாரண இரத்தத்தின் கீழ் அவன் முதலில் வர வேண்டும்.

## இயேசு - அவருடைய மரணத்திற்கு பொறுப்பு.

**கே 367.2 :: கேள்வி (1911) - 2 -** இயேசுவைக் கொன்றது யார், யூதர்களா அல்லது புறஜாதிகளா?

**பதில்.** நாங்கள் பதிலளிக்கிறோம், இயேசுவை யூதர்கள் கொன்றனர். பிலாத்துவும், ரோமர்களாயிருந்த அவனுடைய சிப்பாய்களும் அவரை சிலுவையில் அறைந்தார்கள் என்ற விஷயத்தில் குறிப்பிடும்படியாக ஒன்றுமில்லை. ஒரு மனுஷன் தூக்கிலிடப்பட்டான் என்று அனுமானித்தால், அந்த மனுஷனை எது கொன்றது? தூக்குக் கயிற்றை இழுத்த மனுஷனா? ஏன், ஒருவேளை, ஒரு பார்வையில் கயிறாகக் கூட இருக்கலாம். வேறொரு பார்வையில் கயிற்றை இழுத்த மனுஷனாக இருக்கலாம். இதற்குப் பின்னால் தண்டனையை நிறைவேற்ற கட்டளை கொடுத்த நீதிமன்றம் இருந்தது. இப்போது, இயேசுவை சிலுவையில் அறையப்படுவதற்கு காரணமாக இருந்தது எது? பேதுரு அப்போஸ்தலன் மிக அழுத்தமாகக் கூறுகிறார். பெந்தெகொஸ்தே நாளில் அவருடன் பிரசன்னமாய் இருந்த சிலரிடம் குற்றஞ்சாட்டுகிறார். "யூதர்களாகிய நீங்கள் அவரை ஒப்புக்கொடுத்து, பொல்லாத கைகளினால் ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள்" என்று அவர் கூறினார். அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்றார்கள். பரிசுத்தவானாகிய பேதுரு கூறினார், "உங்கள் பாவங்கள் நிவிர்த்தியாகும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள். நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினால் இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்." பரிசுத்தவானாகிய பவுல் ரோம சிப்பாய்களைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. பிலாத்து வெறுமனே சட்டம் மற்றும் ஒழுங்கின் பிரதிநிதியாக இருந்தான். பிரதான ஆசாரியன், வேதபாரகர் மற்றும் பரிசேயர்களால் கோரிக்கை விடப்பட்ட போது, அவன் சட்ட ஒழுங்கைக் காத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இது தான் தேவை என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். இந்த நிலைமைகளுக்கு அவன் அடிபணிந்து, ரோம பேரரசனுக்கு எதுவும் அறிவிக்க முடியவில்லை. நான் யூதர்களுக்கு விரோதமாக இருக்கிறேன் என்று நீங்கள் என்னை புரிந்து கொள்ளமாட்டீர்கள். தேவனுடைய கிருபையினாலும், தேவனுடைய சித்தத்தினாலும் இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டியிருந்தது. இதற்கு வெளியே வேறு எந்த வழியும் இருக்கவில்லை. இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதே அந்த வழியாகும். யாரை சிலுவையில் அறைகிறோம் என்பதை யூதர்கள் அறிந்திருக்கவில்லை. ஸ்தேவானை கொலை செய்வதில் உதவி புரிந்த பவுலை விட சிறிதளவும் அதிகமாக யூதர்கள் குற்றஞ்சாட்டப்பட வேண்டியதில்லை. அதே சூழ்நிலைகளில் நான் யூதனாய் இருந்திருந்தால், நான் அதையே செய்திருக்கலாம். நான் சொல்லமுடியாது.

## இயேசு - மனுஷ குமாரன் என்று அழைக்கப்படுதல்.

**கே 368:1 :: கேள்வி** **(1911) - 1 -** அவர் மனுஷ குமாரன் என்று ஏன் அழைக்கப்பட்டார்?

**பதில்.** அவர் அழைக்கப்படும் அவருடைய பெயர்களில் இது ஒன்று என்று நாங்கள் பதில் கூறுகிறோம். மிகவும் அதிகமான பெயர்கள் உள்ளன. அவற்றில் இது ஒன்று; இது மிகவும் சரியான ஒன்றாகும். தேவன் மனுக்குலத்திற்கு பூமியைக் கொடுக்க ஏற்பாடு செய்த போது, அவர் அதை தகப்பனாகிய ஆதாமுக்குக் கொடுத்தார் என்பது உங்களுக்கு நினைவு இருக்கும். சுதந்தரவாளியாகக்கூடிய ஒரு குமாரனை ஆதாம் எதிர்பார்த்திருந்தான். ஆதாமின் குமாரர்கள் எல்லோரிலிருந்து, அந்த சுதந்தரத்தை உரிமை கொள்ள முடிந்தவர் ஒருவரும் இல்லை. அவனுடைய சொந்த கீழ்ப்படியாமையின் காரணமாக, அவன் தன்னுடைய உரிமையை தானே இழந்தான். அவனுடைய எல்லா பிள்ளைகளும் பூரணமில்லாதவர்கள் - அவர்களில் ஒருவரும் அந்த சுதந்தரத்தை உரிமை கொள்ள இயலவில்லை. எந்த மனுஷனாவது, எந்த காலத்திலாவது, முன்னுக்கு வந்து, தெய்வீக சட்டத்தை பூரணமாக்கிக் கொள்ள முடிந்தால், தகப்பனாகிய ஆதாம் தன் கீழ்ப்படியாமைக்கு முன்னர் கொண்டிருந்த எல்லா சுதந்தரத்தையும் கோரும் உரிமையையும் பெற்றிருப்பான்.

ஆனால், உரிய காலத்தில், பிதாவிடம் தமக்கு இருந்த மகிமையை விட்டு, நமது கர்த்தர் பூமிக்கு வந்தார். மாம்சமாக உருவாக்கப்பட்டார். மாம்சத்திற்குள் வரவில்லை, ஆனால், அவர் மாம்சமாக உருவாக்கப்பட்டார். அப்போதைக்கு அவர் மனுஷனாக இருந்தார். ஆகவே, அவர் மனுஷனாகிய கிறிஸ்து இயேசு என்று வேதாகமம் சொல்கிறது. தாம் ஏற்கனவே கொண்டிருந்த ஆவியின் சுபாவமாகிய மகிமையையும் கனத்தையும் தாமே அகற்றிக் கொண்டார். மனுஷனாக உருவாக்கப்பட்டார். அந்த அளவுக்கு அவர் தம்மையே தாழ்த்திக் கொண்டார். அவர் மனுஷ குமாரனாக இருந்தார். தெய்வீக சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தவராகி, பூமிக்குரிய சுதந்தரத்தை கோரினார். இது அவருடையதாய் இருந்தது. மனுஷ குமாரனாக அந்த சுதந்தரத்திற்கான அவருடைய உரிமையை இவ்விதமாக ஸ்தாபித்த பிறகு, ஆதாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் விலைக்கிரயமாகப் போவதற்காக, அந்த சுதந்தரத்தைக் கொடுத்து விட்டார்.

## இயேசு - மனுஷனும் மத்தியஸ்தரும்.

**கே 368:2 :: கேள்வி** **(1911) - 2 -** மனுஷனாகிய கிறிஸ்து இயேசு எல்லோருக்காகவும் மீட்கும் பொருளாகத் தம்மையே கொடுத்ததினால், இதே இயேசுவை புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நாம் எப்படி சொல்ல முடியும்?

**பதில்.** இந்த கேள்வியின் கருத்தை தெரிந்து கொண்டேன் என்று நான் நிச்சயமாக சொல்ல முடியாது. கேள்வி கேட்டவர் இவ்விதமாக அர்த்தம் கொண்டிருக்கலாம், "இயேசு மீட்கும் பொருள் மற்றும் மத்தியஸ்தர் என்று இரண்டையும் உடையவராய் எப்படி இருக்க முடியும்?' இது தான் கருத்து என்றால், பதில் இதுவே: அவர் ராஜாவாகவும், ஆசாரியராகவும், நியாயாதிபதியாகவும், மத்தியஸ்தராகவும் இருக்கப் போகிறார். தற்காலத்தில் கூட, அவர் நமக்கு பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார். அவர் பல பதவிகளை நிரப்புகிறார். ஆகவே, பாவநிவாரண நாளின் நிழலில், அவர் காளையாக நிழலாகக் குறிக்கப்பட்டார். அதே சமயத்தில், அவர் காளையை சங்கரித்த ஆசாரியராகவும் நிழலாகக் குறிக்கப்பட்டார். ஆகவே, அருமையான நண்பர்களே, நீங்கள் பாருங்கள், அவர் மீட்கும் பொருளாகவும், மத்தியஸ்தராகவும் இரண்டு விதமாக இருக்கிறார் என்ற உண்மைக்கு எதிரான விவாதமாக இது இருக்க வேண்டியதில்லை.

மேலும், கேள்வி கேட்டவர், இந்த அர்த்தம் கொண்டவராக இருக்கலாம், "ஒரே இயேசு மீட்கும் பொருளாக எப்படி இருப்பார்? அவரே மத்தியஸ்தராகவும் எப்படி இருப்பார்?" நான் பதில் கூறுகிறேன்: நமது கர்த்தருடைய பெயர்களில் இயேசு ஒரு பெயர்; இது குறிப்பாக அவருடைய மாம்சீக அல்லது பூமிக்குரிய நிலைமையைத் தெரிவிக்கிறது. மனுஷன் என்ற முறையில் அவர் இயேசுவாக இருந்தார். இருப்பினும், இந்த பெயரால் மகிமையில் இருக்கும் கர்த்தரை வேதாகமம் அடையாளம் காண்பிக்கிறது. உதாரணமாக, சீஷர்களிடம் பேசிய தூதர்கள் இவ்வாறு கூறினர்,

"இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்." மேலும், "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று தர்சு பட்டண சவுலிடம் இயேசு பேசும் போது, சபையை இயேசுவின் அங்கங்களாகவே அடையாளப்படுத்துகிறார்.

## இயேசு - இதே இயேசு.

**கே 369:1 :: கேள்வி (1911) - 1 -** "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" போன்றவை, ஆதாமுக்காக தம்மையே மீட்கும் பொருளாகக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்துவைக் குறிக்காமல், யோர்தானில் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சிருஷ்டியைக் குறிப்பதாய் இருக்கிறதல்லவா - இதற்கு என்ன அர்த்தம்?

**பதில்.** அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்காத போது, அவர்கள் இன்னும் மனுஷர்களாக இருக்கும் போது, "இந்த இயேசுவானவர்" என்ற சொற்றொடர் அப்போஸ்தலர்களிடம் சொல்லப்பட்டது. இந்த நிலையில் அவர்கள் ஆவிக்குரிய விஷயங்களை புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருந்தனர். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்றும், அவர் முன்பு இருந்ததை விட வேறு ஏதோ வகையில் அவர் மாற்றம் அடைந்திருக்கிறார் என்றும், அவர் காற்றைப் போல வருவதும், போவதும், தோற்றமளிப்பதும், மறைந்து போவதுமான காரியங்களால் நிரூபித்துக் காட்டியது, அப்போஸ்தலர்களுக்கு ஒரு மாபெரும் பாடமாக அமைந்தது. ஆனாலும், அவர்கள் இன்னும் அந்த விஷயத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாய் இருந்தனர். அவர்கள் இன்னும் தொடக்கப் பள்ளியிலுள்ள குழந்தைகளைப் போல இருந்து, ஏதேனும் கற்றுக்கொள்ள முயற்சித்தனர். கர்த்தருடைய வருகையைப் பற்றி அவர்களிடம் சொல்லும் போது, கர்த்தருடைய இரண்டாம் வருகை எந்த முறையில் இருக்கும் என்பது பற்றிய எந்த விவரங்களையும் தூதன் சொல்லவில்லை. ஆனால், இது எளிமையான வெற்று உண்மையாக இருந்தது. இந்த இயேசுவானவர் - இவர் அதே இயேசுவா, புதிய சிருஷ்டியான இயேசுவா, அல்லது, பழைய சிருஷ்டியான இயேசுவா? நல்லது, நான் பதில் கூறுகிறேன், இயேசு என்பது மனுஷனுடைய பெயர்; இயேசு என்பது புதிய சிருஷ்டியின் பெயர்; இயேசு என்பது இன்னும் அவருடைய பெயராக இருக்கிறது. அவர் வரும்போது, அவர் இன்னும் இயேசுவாக இருப்பார். ஆகவே, வெளிப்படுத்தல் ஆகமத்தில் உள்ள பாடத்தில் தம்மைப் பற்றி வெளிப்படுத்தும் போது, உங்களுக்கு நினைவிருக்கும், அவர் சொல்கிறார், "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்." அவர் ஒருவரே. மரித்தது புதிய சிருஷ்டி அல்ல. இது பழைய சிருஷ்டியே; ஆனால் அவர் தம்முடைய சொந்த தனித்துவத்தை பாதுகாத்து வைத்திருக்கிறார். அவர் தம்மை அதே இயேசுவாக இந்நாள்வரை தக்க வைத்துக் கொண்டிருக்கிறார். சுபாவத்தில் மாற்றம் இருக்கிறது. ஆனால், அவர் அதே இயேசு தான். இந்த மாற்றம் அடைந்த இயேசு, உயிர்த்தெழுதலின் இயேசு ஆவார். இந்த இயேசு ஆவியில் பிறந்தவர். இந்த இயேசு காற்றைப் போல வரமுடியும். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது எப்படி போனாரோ அதே மாதிரியாக வருபவர், இந்த இயேசு தான். உலகத்தாருக்கு தெரியாத முறையில் அவர் போனார்; வெகு அமைதலாகவும், இதைப் பற்றி யாரும் அறியாதபடியும் அவர் போனதை உலகம் பார்க்காமல் இருந்தது மாதிரி, அவர் வரும்போது, அதே மாதிரி அவர் வருவதை உலகம் பார்க்காது.

## இயேசு - இன்றும், நேற்றும், என்றைக்கும் மாறாதவர்.

**கே 369:2 :: கேள்வி (1911) - 2 -** தயவு செய்து இந்த வசனத்தை விளக்கவும்: இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்."

**பதில்.** இந்த வசனம் வேதாகமத்தில் வேறு எந்த வசனத்துடனும் முரண்பாடாக இருப்பதாக நாங்கள் புரிந்து கொள்ளவில்லை; வேதாகமத்தின் எல்லா பகுதிகளையும் எல்லாவற்றுடன்

இணக்கமுறச் செய்யும் விதத்தில் விளக்கம் அளிக்க வேண்டியதில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய மாற்றங்களை அனுபவித்திருந்தார். இது நமக்குத் தெளிவாக்கப்பட்டுள்ளது. அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் வெறும் மனுஷனாகிய இயேசுவாக இருந்தார்; அவர் யோர்தானில் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட இயேசுவாக இருந்தார். அவருடைய உயிர்த்தெழுதலில் அவர் ஆவியில் பிறந்தவராக இருந்தார். ஆனால், அவர் அதே இயேசு தான், அபிஷேகம் பண்ணப்பட்டவர். "நேற்றும், இன்றும், என்றும்" என்ற சொற்றொடரின் முக்கியத்துவம் என்னவென்றால், அவர் மனுக்குலத்துடன் அதே பதவி, அதிகாரம் மற்றும் உறவு முறையுடன் இருக்கிறார். அதே குணம், அதே இரக்கம், அதே அன்புடன் இந்நாள் வரைக்கும் இருக்கிறார். அவர் தம்முடைய குணத்தை எந்த வகையிலும் எந்த அளவிலும் மாற்றியதில்லை.

## இயேசு - - மனுஷனாக என்றைக்கும் வாழ முடியுமா?

**கே** 370:1 :: **கேள்வி** (1911) - 1 - நியாயப்பிரமாணத்தை ஒவ்வொரு விஷயத்திலும் கீழ்ப்படிந்துள்ள மனுஷனாகிய இயேசு குறைபாடுள்ள இந்த பூமியில் என்றைக்கும் ஜீவனோடு இருக்க முடியுமா?

**பதில்.** மனுஷன் என்ற முறையில் தம்முடைய ஜீவனை அர்ப்பணிக்காதிருந்தால், அவருடைய ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட இந்த முழுமையாக சரணடைதலை அடைந்திராவிட்டால், முதலாம் ஆதாமுக்கு உரிய அனைத்து மனுஷீக உரிமைகளையும் அவர் பெற்றிருப்பார். ஏனெனில் முதலாம் ஆதாமின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளக்கூடியவராக இயேசு ஒருவரே இருந்தார். ஆகவே, முதலாம் ஆதாம் என்னவெல்லாம் உரிமை பெற்றிருந்தாரோ, தெய்வீகத் தீர்ப்பை கோரியிருந்திருக்க முடியுமோ, இயேசு கோரியிருப்பார். ஏனெனில், முதலாம் பூரண மனுஷனுடைய இடத்தை அவர் எடுத்துக் கொண்டார். இதற்கு என்ன அர்த்தம்? அவர் சொல்லியிருக்கலாம், "இப்பொழுது, பிதாவே, இங்கே நான் இருக்கிறேன். நான் உமது நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள நோக்கமாயிருக்கிறேன். உமது நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டும் இருக்கிறேன். இப்பொழுது, உமது நியாயப்பிரமாணத்தின்படி, நான் நித்திய ஜீவனைப் பெறும் தகுதிக்குள்ளாகிறேன். அதாவது, எல்லா காரியங்களும் மிக நேர்த்தியாகப் பெறுவதற்கு கூட நான் தகுதி பெற்றிருக்கிறேன் என்று அர்த்தமாகிறது. நீர் ஆதாமுக்குப் பூரணமுள்ள ஏதேனையும், அங்கே எல்லாவற்றையும் நேர்த்தியாகக் கொடுத்தீர். இப்பொழுது எனக்காக நீர் வைத்திருப்பதைச் சுற்றிப் பார்க்கிறேன். ஏனெனில் உமது நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு அதில் எதையும் மீறவில்லை." பிறகு, இது பிதாவின் கடமைகளில் ஒரு பங்காக இருக்கிறது - - இந்த முறையில் நான் சொல்லலாமா, கடமை? - - பிதாவினுடைய சொந்த நியாயப்பிரமாணத்தின்படி, அவருடைய சொந்த ஏற்பாட்டின்படி - - இயேசுவுக்கு எந்த வகையிலும் அசௌகரியப்படாதபடிக்கு ஏதோ ஒரு பரதீசை, தகுதியான நல்ல இடம் ஒன்றை ஏற்பாடு செய்வது பரலோக பிதாவின் கடமையில் ஒரு பங்காக இருந்திருக்கும். ஏனெனில், பாவமுள்ள சந்ததியைச் சார்ந்த குறைபாடுகளுடன் பூரணமாக இருக்கும் அவர் உள்ளாக்கப்பட அவசியமில்லை. ஆனால், இது போன்று எதுவும் நடக்க முடியாது. ஏனெனில் தம்முடைய முப்பதாம் வயதில் பூரண மனுஷனான உடனே, அவர் தம்முடைய சரீரத்தை ஜீவபலியாக உடனடியாக அளித்தார். அங்கே அவர் தம்முடைய பூமிக்குரிய உரிமைகளை, தாம் கேட்டிருக்க வேண்டிய எல்லாவற்றையும் பிதாவின் காலடிகளில் தாமே முன் வந்து ஒப்படைத்தார். "உமது சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது." பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒவ்வொறையும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன். வேதாகமத்தில் அங்கே உள்ள அனைத்தும் ஆட்டுக்குட்டியிலும், காளையிலும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. பிதாவின் திட்டத்தில் பல்வேறு பலிகளும் அவர் தொடர்பானவையாக இருந்தன - - "இங்கே நான் இருக்கிறேன், மரணபரியந்தம் கூட உம்முடைய சித்தத்தைச் செய்ய தயாராக இருக்கிறேன்." ஆகவே, அவர் ஒரு தடவையிலேயே பூமிக்குரிய உரிமைகள் எல்லாவற்றையும் கொடுத்து விட்டார். ஆகவே, அடுத்த முறை அவர் வேறு எதையும் கோர முடியாது. எல்லாம் போய் விட்டன.

## இயேசு - - பரிபூரண மனுஷனாக குறைபாடுள்ள பூமியில் வாழ்வது.

**கே** 370:2 :: **கேள்வி** **(1911) - 2 -** பரிபூரண மனுஷனாக இயேசு குறைபாடுள்ள உலகத்தில் என்றைக்கும் வாழ முடியுமா?

**பதில்.** இதே கேள்வியைத் தான் இதற்கு முன்பு நாம் பார்த்தோம். மனுஷ சுபாவத்திற்கான அவருடைய உரிமையை அவர் தொடர்ந்து தக்க வைத்திருந்தால், மரணத்திற்குள்ளான தம்முடைய அர்ப்பணிப்பை செய்யாமலிருந்தால், நமது கர்த்தர் பரதீசைப் பெற்றுக் கொள்வதற்கான முழு தகுதியையும் பெற்றிருப்பார். பரலோக பிதா சந்தேகமின்றி இதை அளித்திருப்பார். அது தான் நியாயப்பிரமாணத்தின் வாக்குத்தத்தம் ஆகும் - - "அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்." - பாவமுள்ள அல்லது அதிருப்தியான நிலையில் வாழாமல், சரியான நிலைமைகளில் வாழ்வான்.

## இயேசு - - அவருக்கு பரதீசைக் கொடுப்பதற்கான பிதாவின் கடமையுணர்வு.

**கே** 371:1 :: **கேள்வி** **(1911) - 1 -** பிதா அவருக்கு ஒரு பரதீசை ஏற்பாடு செய்திருக்கலாம் என்று நீங்கள் தெரிவித்தீர்கள். இந்த நித்திய ஜீவனை அவர் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருந்திருப்பதற்கு முன்னதாக, பூமியிலிருந்து சாபம் முழுவதுமாக நீக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நான் புரிந்து கொள்ள முடியுமா?

**பதில்.** இல்லை. நமது சகோதரனின் கேள்வி இது தான், "பாவம் இல்லாத பரதீசு இல்லத்தை இயேசுவுக்குக் கொடுப்பது போன்றவற்றை, நியாயப்பிரமாணத்தின்படி, பிதா செய்வதற்கு கடமையுணர்வு கொண்டிருந்தாரா? அதாவது, பூமி முழுவதும் பூரணமாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை இது உணர்த்துகிறதா என்று சகோதரன் அறிய ஆசைப்படுகிறார். இல்லை, நான் பதிலளிக்கிறேன், தேவன் ஆதாமுக்கு பரதீசு நிலைமையைக் கொடுத்த போது, இந்த உலகம் அனைத்தும் சாதகமற்ற நிலைமையில் தான் இருந்தது. தேவன் கிழக்கே ஏதேனில் வெறும் ஒரு பரதீசை ஆயத்தம் பண்ணினார். தேவன் இயேசுவுக்கு வேறு இடத்தை ஏற்பாடு செய்திருக்க முடியும்.

## இயேசு - மனுஷீகத்திற்கு முன்பாக இருந்த நிலை.

**கே** 371:2 :: **கேள்வி** **(1911) - 2 -** கிறிஸ்து மனுஷனாவதற்கு முன்பாக இருந்த நிலையை ஞாபகம் கொண்டிருப்பாரா?

**பதில்.** தெளிவாக அவர் ஞாபகம் கொண்டிருப்பார். உலகம் உண்டாயிருக்கிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும் என்று பிதாவிடம் இயேசு ஜெபம் பண்ணிய போது, இந்த விஷயத்தைப் பற்றிய அறிவு அவரிடம் எப்படி இல்லாமல் இருந்திருக்க முடியும் என்று என்னால் பார்க்க முடியவில்லை. இந்த மாதிரி அவர் பேசியிருக்கும் போது, இந்த மகிமையை அவர் ஞாபகம் கொண்டிருக்காவிட்டால், இது இசைவில்லாமல் தோன்றுகிறது. பிறகு ஒரு கேள்வி எழுப்பப்படலாம், ஒரு மனிதனாக அவர் மகிமையின் தளத்தின் ஒருபோதும் இல்லாத போது, இந்த மகிமையை இயேசு எப்படி ஞாபகத்தில் கொண்டிருக்க முடியும்? இது எப்படி என்று நாம் அறியவில்லை; நாம் வெறுமனே அனுமானம் செய்ய முடியும். என்னுடைய அனுமானம் என்னவென்றால், நம்முடைய கர்த்தர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, உன்னதமான விஷயங்கள் அவருக்கு வெளிப்பட்ட பிறகு, ஏதோ ஒரு வகையில் இது அவருக்கு ஆவிக்குரிய விஷயங்களின் ஞாபகத்தையும் நினைவுகளையும் கொடுத்திருக்கும். இதை நாம் மனதில் ஆழமாக பதிய வைக்க இயலாது. ஏனெனில், அப்படிப்பட்ட ஆவிக்குரிய நிலையை நாம் ஒருபோதும் பெற்றதில்லை. நம்முடைய புதிய நிலைமையில் மேன்மையான சுபாவத்தை, ஆவியின் சுபாவத்தை நாம் அடையலாம் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்ததை நாம்

அறிவோம். அப்போது, நமக்கு இப்பொழுது இருக்கிறதை விட, முற்றிலும் வேறுவிதமான சரீரமாயிருக்கும் போது, பழைய சரீரம் பெற்றிருந்த ஞாபகங்களின் அடையாளக்குறிகள் புதிய சரீரத்தில் இருக்காது; இருப்பினும், தேவன் எப்படியோ அல்லது வேறுவிதமாகவோ, நமது அறிவுக்கு எட்டியபடி, ஏதாவது அற்புதமான வழியில் நமது அறிவை மாற்றி, வருங்காலத்தில் தற்காலத்திய விஷயங்களை ஞாபகத்தில் கொள்ளவும், நம்முடைய தற்கால அனுபவங்களின் முழு அறிவையும் பெறச் செய்வார்; இல்லையென்றால், நம்முடைய தற்கால வாழ்வுகள் நடைமுறையில் நமக்கு பிரயோஜனமாயிராது; வாழ்வின் எல்லா அனுபவங்களும் இழக்கப்பட்டு விடும். ஆகவே, நமது கர்த்தராகிய இயேசுவுடன் இருப்போம். மற்ற எல்லா ஜனங்களைத் தாண்டி அவர் அறிவைப் பெறவில்லையா? அவர் மனுஷீகத்திற்கு முன்பு இருந்த நிலைமைப் பற்றிய அறிவை அவர் பெற்றிருக்க வேண்டுமல்லவா? நாங்கள் அப்படியே நினைக்கிறோம். இல்லையென்றால், முழுவதுமாக வெற்றி பெற்றவராய் இருந்திருக்க முடியாது. ஏனெனில், வேதாகமம் அதிகமான வார்த்தைகளில் தெரிவிக்கிறது, "என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்." தகப்பனாகிய ஆதாம் அந்த அறிவைப் பெறவில்லை. ஆகவே, தகப்பனாகிய ஆதாம் தோல்வியை அடைந்தார். தகப்பனாகிய ஆதாம் கொண்டிராத அறிவை நமது கர்த்தர் உடையவராயிருந்தார். இந்த மேம்பட்ட அறிவு அவருடைய விசுவாசத்திற்கு பெரும் உதவியாக இருந்தது என்று வேதாகமம் உணர்த்துகிறது. அவருடைய அறிவினால், தாசனாகிய நீதிபரர் அநேகரை நீதிமான்களாக்க முடிந்தது.

## இயேசு - ஒரே பேறானவர் (ஜெநிப்பிக்கப்பட்டவர்) மற்றும் முதல் சிருஷ்டிப்பு.

**கே 371:3 :: கேள்வி (1911) - 3 -** 'தேவனுடைய ஒரேபேறான குமாரன்' என்று இயேசு அழைக்கப்படுகிறார். இந்த சொற்றொடர், தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதியாக அவர் இருந்ததைக் குறிக்கிறதா? அல்லது, யோர்தானில் அவருடைய அர்ப்பணிப்பைக் குறிக்கிறதா? இது யோர்தானின் அர்ப்பணிப்பைக் குறிக்கிறதாயிருந்தால், அவருடைய ஜெநிப்பிக்கப் படுதலுக்கும், நம்முடைய அர்ப்பணிப்பின் போது ஆவியின் சுபாவத்திற்கு நாம் ஜெநிப்பிக்கப் படுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**பதில்.** நமது கர்த்தர் ஆதியில் இருந்ததை இது குறிக்கிறது என்று நான் புரிந்து கொள்கிறேன். அவர் ஒருவரே தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட குமாரனாக இருந்தார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார். அவர் அனுப்பப்படுவதற்கு முன்பு, தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருந்தார். தேவன் அவரை அனுப்பிய பிறகு, அவர் மாம்சமாக உருவாக்கப்பட்டார். அவர் மாம்சமாக உருவாக்கப்பட்ட பிறகு, அவர் முப்பது வருஷங்கள் வளர்ந்தார். தம்முடைய அர்ப்பணிப்பைச் செய்தார். அப்பொழுது, ஆவியின் சுபாவத்தில் அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார்; என்னுடைய புரிந்து கொள்ளுதலின்படி, சகல காலத்திலும் தேவனுடைய ஒரேபேறான குமாரனாக அவர் இருந்தார்.

## இயேசு - மோசேக்குள் மூழ்குதல்.

**கே 372:1 :: கேள்வி (1911) - 1 -** மோசேக்குள் அமிழ்த்தப்பட்ட மனுஷனாக இயேசு இருந்தாரா?

**பதில்.** இஸ்ரயேல் ஜாதி முழுவதும் மோசேக்குள் மூழ்கியிருந்தது. மோசே யூத ஜாதி முழுமைக்கும் மத்தியஸ்தராக அல்லது பிரதிநிதியாக இருந்தார். தொங்கிக் கொண்டிருக்கும் மேகமும், கடல் ஒவ்வொரு பக்கமும் இருக்க, செங்கடல் வழியாக அவர்கள் பிரவேசிக்கும் போது, யூத ஜாதி முழுவதும் மோசேக்குள் மூழ்கியிருந்தனர். இது தான் மோசேக்குள்ளான அவர்களுடைய மூழ்குதல் ஆகும். கிறிஸ்து யூத ஜாதியைச் சேர்ந்தவரானதால், நிச்சயமாக அவர் மோசேக்குள்ளாக மூழ்கியிருந்தார். அவர் மோசேக்கு பொறுப்புடையவராயிருந்தார். அவர்

மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு பொறுப்புள்ளவராக இருந்தார். மற்ற எந்த யூதனைப் போல, துல்லியமாக, குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லாமல், நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் இயேசு பொறுப்பு வாய்ந்தவராக இருந்தார். அவருக்கும் புறஜாதிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் போலவே, அவருக்கும் மற்ற யூதர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசமும் இருந்தது. அவர் பூரணமுள்ளவராக இருந்தார். மனுக்குலத்தின் அனைத்து சந்ததியும் குறைபாடு உள்ளவர்களாய் இருக்கின்றனர். அவரால் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள முடிந்தது. மனுக்குல சந்ததியில் எவரும் நியாயப்பிரமாணத்தைக் கைகொள்ள முடியவில்லை. அவர் பூரணமுள்ளவராய் இருந்த காரணத்தால், அவர் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடிந்தது. மோசே கொடுத்த அந்த மேன்மையான நியாயப்பிரமாணத்தை நாம் கைக்கொள்ள முடியாது. ஏனெனில், நாம் எல்லோரும் குறைபாடு உள்ளவர்கள். ஆகவே, நம்முடைய குறைவை சரி செய்ய நமக்கு ஒருவர் தேவைப்பட்டார்.

## இயேசு - ஜீவ உரிமைகள்.

**கே** 372:2 :: **கேள்வி** **(1911) - 2 -** அர்ப்பணிப்பு செய்தபோது, இயேசு தம்முடைய ஜீவ உரிமைகளைக் கொடுத்து வைத்துவிட்டார் (lay down) எனில், அவரது உயிர்த்தெழுதலில் அவர் இன்னமும் அவற்றை எப்படிப் பெற்றிருக்கிறவராகக் காணப்பட முடியும்?

**பதில்.** நாம் ஆங்கில மொழியினை இதுவரையிலும் சரிவர கற்றிராததாகத்தான் தோன்றுகின்றது அல்லது நாம் வெவ்வேறு பள்ளிகளில் பயின்றவர்களாகவும், வெவ்வேறு அகராதிகளைப் பெற்றிருந்தவர்களாகவும் தோன்றுகின்றது - ஏனெனில் இந்த ஒரு கருத்தினை, மனதில் ஒரேமாதிரியான சிந்தனையுடைய கர்த்தருடைய ஜனங்கள், வெவ்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தி வெளிப்படுத்துகிறவர்களாகக் காணப்படுகின்றனர். இப்பொழுதும் ஜீவ- உரிமைகளைக் கொடுத்து வைத்தல் (lay down life rights) என்றால் என்ன?

இயேசு தம்மை அர்ப்பணிக்கையில், "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்" என்று கூறினபோது, அவர் எதை ஒப்படைத்தார்? அவர் தமது சித்தத்தை ஒப்படைத்தார். அவருடைய சித்தத்தில் எவைகளெல்லாம் உள்ளடங்குகின்றன? அவருக்குச் சம்பவிக்கவிருக்கும் அனைத்தையும் - அவரது ஜீவனையும், எல்லா வகையான அவரது உரிமைகள் அனைத்தையும், அவரது சித்தமானது உள்ளடக்கினது; அவர் தம்முடைய முழுச்சித்தத்தை, தமது முழு இருதயத்தைத் தேவனுக்குக் கொடுத்தபோது, அது அனைத்தையும் உள்ளடக்கினதாக இருந்தது. அப்படியானால் அவரிடத்தில் ஜீவ-உரிமைகள் எஞ்சி காணப்படவில்லையா? இருதயமானது அவருக்கு எஞ்சி காணப்பட்டது மற்றும் சிலுவையில் "முடிந்தது" என்று சத்தமிடுவது வரையிலும் ஒப்படைப்பதற்கு அவரிடம் அந்த ஜீவன் எஞ்சியிருந்தது; ஆகையால் அவர் ஒருவிதத்தில் அவருடைய ஜீவனை ஒப்படைக்கவில்லை மற்றும் அவர் இன்னொரு விதத்தில் அதை ஒப்படைத்தவராகவே இருந்தார். பிதாவின் சித்தமாக இருக்கும் எதற்கும் தாம் தடைச் சொல்வதில்லை என்றும், பிதாவின் சித்தம் என்னவாக இருப்பினும், தாம் அதைச் செய்வார் என்றும் ஒப்புக்கொண்ட விதத்தில், அவர் அதைக் கொடுத்து வைத்தவராய் இருந்தார். இந்த விதத்தில் அவர் தம்முடைய அனைத்தையும் அர்ப்பணம் பண்ணினார். ஒரு பொருளை கொடுத்து வைப்பது (lay down) என்பது ஒரு காரியமாகவும், அதனைப் பயன்படுத்திடுவது (apply) என்பது இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது. என்னுடைய தொப்பியை இங்கு ஏதோ ஒரு இடத்தில் கழற்றி வைக்கின்றேன் (Lay Down) என்று வைத்துக்கொள்ளலாம், ஆனால் அதற்கென்று அது என்னுடைய தொப்பியல்ல என்றாகாது, அப்படித்தானே? என்னுடைய தொப்பி இப்பொழுது எங்கே காணப்படுகின்றது என்றுகூட எனக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் என்னுடைய தொப்பியை நான் கழற்றி வைத்துள்ளேன்; இனிமேல் அந்த தொப்பிக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றாகாது. அந்த தொப்பியை நான் யார் வசத்தில் கொடுத்து வைத்திருக்கின்றேனோ, அவர் உங்களிடத்திற்கு அதைக் கொடுக்கும்படிக்கு அவரிடம் நான் கூறக்கூடாது என்றும் இல்லை. நான் அதைக் கழற்றி வைத்து விட்டேன்; இன்னொருவர் வசத்தில் அதைக் வைத்திருக்கின்றேன்; அவர் உங்களிடத்திற்கு

அதைக் கொடுக்கும்படிக்கு என்னால் அவரிடம் சொல்லிட முடியும். இப்படியாகத் தான் நமது கர்த்தராகிய இயேசுவும் தமது முழு ஜீவியத்தையும் பிதாவின் கரத்தில் வைத்தவராக, ஒன்றையும் விட்டுவிடாமல் ஒவ்வொரு விஷயத்திலும் பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக தாம் ஆயத்தமாயும், விருப்பமாயும் இருப்பதாகத் தெரிவித்தார். பிதாவின் சித்தப்படி சோதனைகளும், அனுபவங்களும் அவருக்குக் கடந்து வந்தது.; இறுதியானது சிலுவையின் மரணம் ஆகும் மற்றும் அவர் உண்மையுள்ளவராய் இருந்தார்; அவர் எதற்கும் மறுக்கவில்லை, கடைசி மட்டும் தம்முடைய ஜீவனைக் கொடுத்து வைக்கும்படியாக அனுமதித்து, கொடுத்து வைத்திடும் வேலையினை நிறைவேற்றினார்; ஆனால் அந்த ஜீவனுக்கான உரிமை அவருக்கில்லை என்றாகாது; அவர் தம்முடைய ஜீவனைத் துறந்துவிடவில்லை. ஒரு பொருளைக் கீழே வைப்பது அல்லது அதை ஒருவர் வசத்தில் ஒப்புவிப்பது என்பது துறந்துவிடுவதாகாது. ஆகையால் இயேசு பெற்றிருந்ததும், பிதாவிடம் அவரால் ஒப்புவிக்கப்பட்டதுமான இந்த ஜீவ உரிமைகளானது, அவரால் துறக்கப்படவில்லை, மாறாக அதைக் கொடுத்து விடுவதற்கென்று (Give it away) அவர் இன்னமும் அதை வைத்து வைத்திருக்கின்றார். கொடுத்துவிடுவதற்கென்று அவர் ஒருவேளை இந்த ஜீவ-உரிமைகளைப் பெற்றிருக்கவில்லையெனில், இந்த உரிமைகள் மீது அவருக்கு ஒருவேளை எந்த அதிகாரமும் இல்லையெனில், இவைகளுக்கடுத்த எந்த உரிமைகளும் அவருக்கு, ஒருவேளை, இல்லையெனில், அவரால் ஒருபோதும் உலகத்தினுடைய இரட்சகராகிட முடியாது; ஏனெனில் இந்த ஜீவ-உரிமைகளைத் தான் அவர் தியாகமாக ஒப்புக்கொடுத்திட்டார் அல்லது பொல்லாத மனிதர்களினால் கல்வாரியில் வைத்துத் தம்மிடமிருந்து எடுக்கத்தக்கதாக அனுமதித்திருந்தார்; இந்த ஜீவனுக்கான உரிமைகள் தான் உலகத்திற்கு அவசியமானவையாகும் மற்றும் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் மாபெரும் மத்தியஸ்தரென, அதைப் புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின் கீழ் மனுக்குலத்தின் உலகத்திற்குக் கொடுத்துவிடுவதற்கு அவர் நோக்கம் கொண்டுள்ளார். இந்த ஒரு நோக்கத்திற்காகத்தான், உலகத்திற்கு அவர் இந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளைக் கொடுத்துவிடத்தான், அவர் ஒரு இராஜ்யத்தைப் பெற்றிருக்க தேவன் ஏற்பாடு பண்ணினார்; கிறிஸ்து உலகத்தை ஆளவும், அவர்களுக்குப் போதிக்கவும், அவர்களுக்காக அவர் கொடுத்துவிடவிருக்கின்றதை, அவரது நிபந்தனைகளின் கீழ், அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகத்தக்கதாக, அவர் என்ன கொடுத்துவிடவிருக்கின்றார் என்பதைக் குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்குள்ளாக அவர்களை அவர் கொண்டுவரவும் தேவன் ஏற்பாடு பண்ணினார்.

## இயேசு ஜீவ உரிமைகளைக் கொடுத்தல்.

**கே 373:1 :: கேள்வி (1911) - 1 -** யோர்தானிலும், பெந்தெகொஸ்தே நாளிலும் இயேசுவினால் எப்படி தம்முடைய ஜீவிக்கும் உரிமைகளை, இருமுறை கொடுக்க இயலும்?

**பதில்.** பெந்தெகொஸ்தே நாளில் அவர் ஜீவ-உரிமைகள் எதையும் கொடுக்கவில்லை. அவர் யோர்தானில் தமது ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்துவிட்டார்/ஒப்புக்கொடுத்துவிட்டார். பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக அவர் தமது ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்துவிடும் காரியத்தினைக் கல்வாரியில் நிறைவேற்றி முடித்தார்; அவர் அங்கு தம்மைக் கொடுத்து வைத்துவிடும் காரியத்தினை நிறைவேற்றி முடித்தார்; ஆனால் இப்படியாக அவர் தம்மைக் கொடுத்து வைத்துக்கொண்டிருக்கும் காரியமானது, புண்ணியத்தினைப் பயன்படுத்திடும் காரியத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். இந்த ஒரு காரியமே சில மனங்கள் கிரகித்துக்கொள்வதற்கு மிகவும் சிரமமான காரியமாய்த் தென்படுகிறது. ஏன் என்று எனக்குப் புரியவில்லை. என்னுடைய மனதிற்கு இது எளிமையாகப் புரிந்துகொள்ளப்படுகின்ற காரியமாய் இருக்கின்றது. ஆனால் நமது கர்த்தர் அர்ப்பணிப்பின்போது தம்முடைய ஜீவனைக் கொடுத்து வைக்க ஒப்புக்கொடுத்ததற்கும், அதைக் கல்வாரியில் உண்மையாகவே நிறைவேற்றி முடித்ததற்கும் மற்றும் புண்ணியத்தினை “மகா பரிசுத்த ஸ்தலத்தில்” அவர் பயன்படுத்துவதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தினைக் காண்பது என்பது சில மனங்களுக்கு மிகவும் சிரமமான காரியமாய் இருக்கின்றது. இது விஷயத்தில் உங்களுக்கு உதவிச்

செய்யத்தக்கதாக நான் ஒரு பூமிக்கடுத்த உதாரணத்தைப் பயன்படுத்த இருக்கின்றேன்; இதோ, அது என்னவெனில்: உங்களிடத்தில் சொத்து ஒன்று இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் அதைப் பத்தாயிரம் டாலர்களுக்கு நீங்கள் விற்றுள்ளீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். "பத்தாயிரம் டாலர்களுக்கென்று எனக்கொரு விசேஷித்த நோக்கம் அல்லது தேவை இருக்கின்றது மற்றும் அந்தச் சொத்தை விற்றுவிடுகிறேன்." என்று நீங்கள் சொல்லுகின்றீர்கள். முதலாவதாக நீங்கள் கிரயப்பத்திரம் (sale deed) கொடுப்பதாக முகவரிடம்/காரியஸ்தரிடம் ஒப்பந்தம் போட்டுக்கொள்வீர்கள். இக்காரியமானது யோர்தானில் நமது கர்த்தரினால் பண்ணப்பட்ட உடன்படிக்கை காரியத்திற்கு ஒத்திருக்கின்றது. கொஞ்சக் காலம் கழித்து, அதாவது ஒரு மாதம் கழித்து, நீங்கள் கிரயப்பத்திரத்தில் கையெழுத்திடுவீர்கள் - அச்சொத்தின் மீதான உங்கள் விருப்பம் யாவற்றையும் விட்டுவிட்டு, பத்தாயிரம் டாலர்களைப் பெற்றுக்கொண்டு, அதை வங்கியில் வைப்புத் தொகையாகப் (deposit) போட்டு விடுவீர்கள் வங்கியில் அந்தப் பணம்தான், அந்தச் சொத்தை விற்றதன் பலனாகக் காணப்படுகின்றது. அந்தப் பணம் (வங்கியில் இருப்பினும்) அது இன்னமும் உங்களுடையது தான்; சொத்தை விற்றுக்கிடைக்கும் பலனைக்கொண்டு ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படியாக, அச்சொத்தை நீங்கள் விற்றிருக்கின்றீர்கள்; மற்றும் அந்தப் பலன், வங்கியில் காணப்படும் பத்தாயிரம் டாலர்களாகும். சில குறிப்பிட்ட காரணத்திற்குப் பயன்படுத்தும்படி அந்தப் பணத்தை எடுக்கத்தக்கதாக, வங்கிக்கு நீங்கள் காசோலைக் கொடுத்திடலாம் அல்லது வேண்டுகோள் விடுத்திடலாம்.

இந்த நான்கு கட்ட காரியங்களானது, நமது கர்த்தருடைய நான்கு செயல்களுக்கு ஒத்திருக்கின்றது. காரியக்காரனிடத்தில் ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவது போன்று நமது கர்த்தர் முதலாவதாகத் தம்முடைய அர்ப்பணிப்பை ஏறெடுத்தார்.

கிரயப்பத்திரத்தில் கையெழுத்திடப்பட்டு, கிரயத்தினை நிறைவேற்றுவது போன்று நமது கர்த்தர் இரண்டாவதாகக் கல்வாரியில் காரியத்தினை நிறைவேற்றி முடித்தார்.

பணமானது வங்கியில் வைக்கப்பட்டிருக்கும் கணக்கில் வந்தடைவது போன்று, மூன்றாவதாக நமது கர்த்தர் தம்மை பிதாவின் கரங்களில் கையளித்துவிட்டார் - "உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்." என்றார்.

வங்கியில் காணப்படும் பணத்தை நீங்கள் வைப்புத்தொகையாக வைத்திருப்பது அல்லது பயன்படுத்துவதுபோன்று, நான்காவதாக நமது கர்த்தர் பிதாவின் கரங்களில் காணப்பட்ட அந்தப் புண்ணியத்தினைக் கிரயமாக (DEPOSIT) வைத்திருந்தார் அல்லது அதைப் பயன்படுத்துவார். அது உங்கள் கணக்கில் காணப்படும். உங்களால் மாத்திரமே காசோலையைக் கொடுக்க முடியும். இதுபோலவே நமது கர்த்தருடைய புண்ணியமும் பிதாவின் கரங்களில் தம்முடைய சொந்த கணக்கிலேயே காணப்பட்டது மற்றும் அவராலும் காசோலைக்கொத்த காரியத்தைச் செய்யலாம் மற்றும் அந்தப் புண்ணியத்தைச் சாற்றிடலாம். மற்றும் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று அவர் புண்ணியத்தினை நமக்கு சாற்றியுள்ளார். மேலும் அது நமக்குச் சாற்றப்பட்டுள்ளதற்கு ஆதாரம், பெந்தெகொஸ்தே நாளின்போது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் சில அங்கத்தினர்கள் மீது ஆசீர்வாதம் கடந்துவந்ததில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

## இயேசு - அவர் மூன்று தடவைகள் பிறந்தாரா?

**கே 374:1 :: கேள்வி (1912) - 1 -** நமது கர்த்தர் இயேசு கிறிஸ்து மூன்று தடவைகள் பிறந்தார் என்று பேசுவது சரியானதா? முறையானதா? கொலோ.1:15; லூக்.2:11; வெளி.1:5.

**பதில்.** நமது கர்த்தரைப் பற்றி இப்படி பேசுவது சரியில்லை என்று நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. "பிறப்பு" என்ற வார்த்தை கிட்டத்தட்ட நெகிழ்வுத் தன்மை கொண்டது. இயேசு சிருஷ்டிக்கப்பட்டார் அல்லவா? ஆம். அப்படியானால், நல்லது. பிறப்பு, சிருஷ்டிப்பு, இரண்டும் என் மனதுக்கு ஒரே மாதிரியாகவே உள்ளது. ஜெநிப்பிக்கப்படுதல் என்பது ஜீவனின்

துவக்கம் ஆகும். அந்த ஜீவனின் துவக்கம் உச்ச நிலைக்கு எடுத்துச் செல்லப்படுவது, பிறப்பு அல்லது ஜீவன் முழுமை அடைவதை அர்த்தப்படுத்துகிறது. ஆதி காலத்தில் பிதாவின் "ஒரேபேறானவராக" இயேசு ஜீவனைப் பெற்றார். இந்த கேள்வியில் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களில் குறிக்கப்பட்டுள்ள முதலாவது பிறப்பு இதுவே. இயேசு ஒரு குழந்தையாக வந்தார். இந்த பிறப்பு பற்றிய விவரிப்பு மேலே உள்ள இரண்டாவது வசனத்திலுள்ளது. பிறகு, மரித்தோரிலிருந்து அவர் ஜீவனோடு வந்தார். இப்படியாக, மூன்றாவது வசனம் பதிலளிக்கப்படுகிறது. பல்வேறு வார்த்தைகள் தெரிவிக்கப்பட்டாலும், அவை ஒவ்வொன்றிலும் ஒரே கருத்து தான் உள்ளது. வித்தியாசம் எல்லாம் இதுவே.

## இயேசு - அவர் பிராகாரத்தில் ஜெநிப்பிக்கப்பட்டாரா?

**கே** 374:2 :: **கேள்வி** **(1912) - 2 -** இயேசு பிராகாரத்தில் ஜெநிப்பிக்கப்பட்டாரா?

**பதில்.** இயேசுவின் ஜெநிப்பிக்கப்படுதலும் மற்றவர்களைப் போலவே தான் இருந்தது. மாம்சீகத்தின்படி, அவர் பிராகாரத்தில் இருந்தார். அவருடைய அர்ப்பணிப்பு நிகழ்ந்த அந்த கணமே, அவர் முதலாம் திரைக்கு அப்பால் பிரவேசித்தார். பரிசுத்த ஆவி அவர் மேல் வந்த கணமே, அவர் புதிய சிருஷ்டியானார். இயேசுவின் அர்ப்பணிப்பு வெளிப்படையாக அவர் தண்ணீருக்கு கீழே போகும் முன்பே இருந்தது. அவருடைய அர்ப்பணிப்பை அவர் செய்து, ஏற்றுக்கொள்ளப்பட்டதால், பரிசுத்த ஆவியை அவருக்குக் கொடுத்து, தாம் ஏற்றுக்கொண்டதை தேவன் சுட்டிக்காட்டினார். ஆனால், அவர் அதைப் பெற்ற உடனேயே, புதிய சிருஷ்டியாக முதலாம் திரைக்கு அப்பால் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தார். ஆகவே, பிறகு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட அந்த கணத்திலிருந்து ஆசாரியராக, அவருடைய பணியின் பங்கை செய்வதற்கு பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தார். இருப்பினும், காளையினால் அடையாளப் படுத்தப்பட்ட அவருடைய மாம்சம் பாளயத்திற்கு புறம்பே எடுத்துச் செல்லப்பட்டது. அவர் புதிய சிருஷ்டியாக இருந்தார் - - எல்லா நேரத்திலும் அவர் "பரிசுத்த ஸ்தல" நிலைமையில் இருந்தார். ஒவ்வொரு நாள் பகலிலும், ஒவ்வொரு நாள் இரவிலும், விழித்தாலும், அல்லது தூங்கினாலும் - - எல்லா சமயத்திலும் அவர் பரிசுத்த ஸ்தல நிலைமையில் இருந்தார். ஏனெனில், இந்த நிலைமை தான் புதிய சிருஷ்டியினால் அடையாளப்படுத்தப்படுகிறது.

## இயேசு - நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தது.

**கே** 375:1 :: **கேள்வி** **(1912-Z) - 1 -** இயேசு நியாயப்பிரமாணத்தை குற்றமற்ற முறையில் கடைப்பிடித்திருந்தால், இருப்பினும், அவருடைய பலியின் உடன்படிக்கையின் சில அம்சங்களில் தவறியிருந்தால், மனுஷ மீட்பிற்கான நிலை எப்படி இருக்கும்? அவர் பலியின் உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிவதில் தவறி இருந்த போதிலும், இவ்விதமாக மகிமை, கனம், மற்றும் அழியாமை - தெய்வீக சுபாவம் பெறத் தவறினால், நியாயப்பிரமாண உடன்படிக்கையை பூரணமாகக் கைக்கொண்டதினால், மனுக்குலத்தின் மீட்பின் விலைக்கிரயம் செலுத்தப் பட்டிருக்குமா? அப்படி இல்லையென்றால், ஏன் இல்லை?

**பதில்.** இந்த கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளின் கீழ், இயேசுவைப் பொருத்த வரையில், மீட்பு பற்றிய அனைத்து விஷயமும் தோல்வி அடைந்திருக்கும். அவருடைய மரணம், மனுஷனை மரண தண்டனையிலிருந்து மீட்டிருக்க முடியாது. உண்மையில், இந்த கேள்வி, மீட்பு பற்றி முழுவதும் தவறான பாதையை அனுமானமாகக் கொண்டுள்ளது. இயேசுவின் மரணம் மீட்பின் **பலி** ஆகும். ஆதாம் மற்றும் அவனுடைய கீழ்ப்படியாமையினால் இழந்த எல்லாவற்றையும் மீட்கும் நோக்கத்திலேயே அந்த **பலியின் மரணம்** இருந்தது. என்று சொல்லலாம். ஆனால், மீட்கும் **பலி** என்பது ஒரு விஷயம், மீட்கும் **விலைக்கிரயத்தை** செலுத்துவது வேறொரு விஷயம் ஆகும். உதாரணமாக, தம்முடைய பணியை பூரணமாக செய்தார். இதற்கு தெய்வீக அங்கீகாரம் இருந்தது; மீட்பின் விலைக்கிரயம் ஒப்படைக்கப்பட்டது. இது பிதாவுக்கு திருப்தியாக இருந்தது. அந்த மீட்பின் பலியில் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய

விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்காக இயேசுவுக்கு பரிசு அளிக்கப்பட்டது; ஆனால், அந்த பலியின் **மதிப்பு**, அனைத்து உலகத்தின் பாவங்களுக்கு ஈடு அல்லது திருப்தி செய்வதற்கு போதுமான அளவு இருந்த நிலையில், அது இன்னும் பிரயோகிக்கப்படவில்லை.

அந்த பலியின் பலன் தேவ நீதியின் கைகளில் உள்ளது. தேவனுடைய நேரம் வந்த உடனேயே, அனைத்து உலகத்தின் பாவங்களுக்காக பிரயோகப்படுத்தப்படும். ஆனால், அந்த நேரம் இன்னும் வந்திருக்கவில்லை. நீதியின் பார்வையில் கூட, உலகம் இன்னும் மீட்கப்படவில்லை. ஆகவே நாம் வாசிக்கிறோம், "உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது", எல்லோரும் "கோபாக்கினையின் பிள்ளைகள்". (1யோவான் 5:19; எபே 2:3.) மீட்கும் விலைக்கிரயம் பிரயோகிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், உலகம் பொல்லாங்கனுடைய கரங்களில் இருக்காது. மேலும், கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் இனி இருக்கமாட்டார்கள்.

தெய்வீக கண்டனத்திலிருந்து உலகத்தை விடுவித்துக் காப்பதற்கும், உலகத்தை இயேசுவின் பக்கமும், ஆசீர்வாதம் பெற அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதின் பக்கமும் திருப்புவதற்கு இவையெல்லாம் அல்லது இவற்றில் ஏதேனும் நடப்பதற்கு முன்பு, உலகத்தின் பாவங்களுக்காக மீட்பின் விலைக்கிரயமாக, இயேசுவின் பலியின் பலன் பிரயோகிக்கப் படுவதற்கு முன்னர், தெய்வீக திட்டத்தின்படி, வேறொரு விஷயம் கண்டிப்பாக செய்யப்பட வேண்டும். "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையின்" தெய்வீக சுபாவத்திற்கு அழைக்கப்படுதல், ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் ஜெநிப்பிக்கப்படுதல் போன்றவை தான் வேறொரு விஷயம் ஆகும். (எபி.12:23.) இந்த பணி தான் சுமார் பத்தொன்பது நூற்றாண்டுகளாக நடந்து வருகின்றது. இவையெல்லாம் முடிவுற்ற உடனேயே, சாத்தான் கட்டப்பட்டு, புதிய யுகம் ஆரம்பமாகி, மகிமையுள்ள இரட்சகர் உயர்த்தப்பட்டு தம்முடைய மணவாட்டி வகுப்பாருடன் தம்முடைய ஆயிர வருஷ அரசாட்சியை தொடங்கி வைப்பார். இதற்காகத் தான் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து, மிகுந்த ஆவலாய் காத்துக்கொண்டிருக்கிறது. ரோமர் 8:22,19.

இவ்விதமாகப் பார்க்கும் போது, யோர்தானில் தம்முடைய அர்ப்பணிப்பின் சமயத்தில் துவங்கி, கல்வாரியில் நிறைவடைந்த நமது கர்த்தருடைய சோதனை **இரண்டு மடங்கு** இருந்தது. இந்த இரண்டு சோதனைகள் ஒரே நேரத்தில் முன்னேற்றமடைந்தது. இவற்றில் ஏதாவது ஒன்றில் தவறினாலும் அனைத்தும் இழந்து விடும். மனுஷீக நிலையில் ஒரு மனுஷனாக நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்தவர் என்ற முறையில், அவர் நியாயப்பிரமாணத்தை **ஒவ்வொரு குறிப்பிட்டவிஷயத்திலும்** கைக்கொள்வதற்குக் கடமைப் பட்டுள்ளார். இதில் தவறும் போது மரணம் உண்டாகும். பலியின் உடன்படிக்கையில் பிரவேசித்திருந்த புதிய சிருஷ்டி என்ற முறையில், தேவ கிருபையின் மேலதிகாரங்களுக்கு இணக்கம் பெறும் வகையில், தாம் கொண்டிருந்த ஒவ்வொன்றையும், தம்முடைய ஜீவனையும், தம்முடைய உரிமைகளையும் கீழ்ப்படிதலுடன் தாமாக முன்வந்து பலியிடுவதற்கு நமது கர்த்தர் பொறுப்புணர்வு கொண்டிருந்தார். "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ" (யோவான்.18:11.) நிறைவில் தவறினால், பலி முழுவதும் அவருக்கு ஒன்றுமில்லாமல் போயிருக்கும். தம்முடைய கடந்த கால அனுபவங்கள் மற்றும் விசுவாசம் அனைத்தினால் **எதுவுமே** சாதித்திருக்க முடியாது.

அவருடைய ஊழியத்தின் மூன்றரை வருஷங்களில் பலியிடுவதில் நமது கர்த்தரின் உண்மை, யோர்தானில் அவர் பெற்றிருந்த பூரணத்துவத்துடன் கூடுதலாக எதையும் சேர்க்கவில்லை. பலியைத் **துவங்குவதற்கு**, அவர் பூரணமுள்ளவராகவும், ஏற்றுக்கொள்ளத்தக்க பலியாகவும் இருந்தார். அந்த பூரணத்துவத்தையும், அந்த ஏற்றுக்கொள்ளுதலையும் பிதாவுடன் "மரணபரியந்தம் உண்மையுடன்" இருந்து, அவர் வெறுமனே **தக்க வைத்துக்கொண்டார்**. ஆகவே, அவர் தற்போதுள்ள உயர்வை அடைந்துள்ளார். அவர் உலகத்தாருடைய இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராகத் தயாராக இருக்கிறார். இந்த யுகத்தின் முடிவில், சரியான சமயத்தில் முழு உலகத்தின் பாவங்களைப் போக்குவதற்குப் பிரயோகிப்பதற்காக, அவர் தம்முடைய பலியின் பலனை நீதியின் கைகளில் தயாராக வைத்திருக்கிறார்.

உலகத்தாரைப் போல இல்லாமல் வேறு வழியில் நமது கர்த்தரின் மரணத்தின் பலன்களில் சபை பங்கு கொள்கிறது. மாம்சீகத்திலிருக்கும் சபையின் பலவீனங்களையும் குறைகளையும் மறைக்கும் விதத்தில், இரட்சகரின் பலன் **விசுவாசத்தின்** காரணமாக சபையின் மேல் **சுமத்தப்படுகிறது**. இப்படியாக, மாம்சத்திலிருக்கும் சபையை பரிசுத்தமும் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையிலும் பிதாவிடம் இரட்சகரால் அளிக்கப்படுவதற்காக, அவர் தம்முடைய பலியின் பலனை சபையின் மீது சுமத்தி, தமது சொந்த பலியின் பலனில் ஒரு பங்காக ஏற்றுக்கொள்ளப்படும்படி செய்கிறார். "**அவரோடே** கூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்", "கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்", "நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பது", "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்தில் நிறைவேற்றுகிறேன்." (2தீமோ.2:12; ரோமர் 8:17; ரோமர் 12:1; கொலோ.1:24.) தேவன் முன்குறித்து, வாக்குத்தத்தம் செய்தபடி, மனுக்குலத்தை உயர்த்தி ஆசீர்வதிக்கும் மேன்மையான பணியில் ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கங்களாக இப்பொழுது தகுதி பெற்றுக்கொண்டிருக்கும் சபைக்கு அளிக்கப்படும் அழைப்புகளில் சில இவைகள் தான்,

## இயேசு - நித்திய ஜீவன்.

**கே 376:1 :: கேள்வி (1912-Z) - 1 -** மனுஷனாக பூரணத்துவம் பெற்ற நேரத்தில் இயேசு நித்திய ஜீவனைப் பெற்றாரா அல்லது அவர் நித்திய ஜீவனுக்குத் தகுதியாக குறிக்கப்படுவதற்கு முன்பு, பூரண மனுஷனாக சோதனையில் அவர் உள்ளாக்கப்படுவது அவருக்கு அவசியமா?

**பதில்.** தெய்வீக நியாயப்பிரமாணத்தின்படி, இந்த பிரமாணத்தின் கீழ் இயேசு பிறந்தார். ஆதாமின் பரிபூரணம் அவனுக்கு எப்படி நித்திய ஜீவனை அர்த்தப்படுத்தியதோ, அப்படியே இயேசுவின் பரிபூரணம் அவருடைய நித்திய ஜீவனுக்குரிய தகுதியை நிரூபணம் செய்தது. ஆதாம் படைக்கப்பட்ட போது தேவனுடன் உடன்படிக்கையின் தொடர்பில் இருந்தான். கீழ்ப்படியாமையினால் அந்த உடன்படிக்கையை ஆதாம் முறித்த போது, அந்த தெய்வீக உடன்படிக்கையினால் தேவனுடையதாயிருந்த ஜீவ உரிமையை ஆதாம் **இழந்தான்**. அதைப் போன்று, பூரண மனுஷனாக இயேசு தேவனுடன் உடன்படிக்கையின் தொடர்பில் இருந்தார். மனுஷன் என்ற முறையில், **பாவத்தினால்** மட்டுமே அவர் அவருடைய ஜீவ உரிமையை விட்டுக்கொடுத்திருக்க முடியும், அல்லது, **இல்லையெனில்**, ஜீவ உரிமையை பலியினால் விட்டுக்கொடுத்திருப்பார்- - **பலியினாலேயே** அவர் இதைச் செய்தார்.

## இயேசு - பூரணராய் இருந்த போது.

**கே 377:1 :: கேள்வி (1912-Z) - 1 -** இயேசுவின் வாழ்க்கையில் பூரண மனுஷனாக எந்த காலப்பகுதியில் இருந்தார்?

**பதில்.** அவர் எப்பொழுதும் பூரணராய் இருந்தார். ஆனால், அவர் பரிபூரண **மனுஷனாக** அவருடைய வாழ்வின் 30ம் வருஷம் வரையிலும் பூரண மனுஷனாகவில்லை. ஆதிகாலத்தில் "அவர் தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியாக இருந்தார்." (வெளி. 3:14.) அவர் பாவமற்றவராக, ஆவியின் தளத்தில் பூரணமுள்ளவராக, - - பிதாவுக்கு அடுத்தபடியாக இருந்தார். அவர் தம்மைத் தாமே தாழ்த்திய போது, தேவ திட்டத்திற்கு இணக்கமாகவும், அவர் மனுஷருடைய இரட்சகராகவும், இழந்தவற்றைத் திரும்ப அளிப்பவராகவும் இருக்க வேண்டி, அவர் தம்முடைய பூரணத்துவத்தையும், தம்முடைய பாவமில்லாத தன்மையையும் இன்னும் தக்க வைத்திருந்தார். அவர் கன்னிகையினிடத்தில் பிறந்த போது, அவர் இன்னும் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் இருந்தார்." அவர் பூரணமுள்ள குழந்தையாக இருந்தார். அவர் மனுஷனாக வளர்ந்தபோது, அவருடைய பூரணத்துவம் தக்க வைக்கப்பட்டிருந்தது. அவர் ஒரு பரிபூரண சிறுவனாக இருந்தார். பரிபூரண வாலிபனாகவும்,

இறுதியில் பரிபூரண மனுஷனாகவும் இருந்தார். இவ்விதமாக நாம் படிக்கிறோம், "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்."

## இயேசு - அவருடைய பூரணத்துவம்.

**கே 377:2 :: கேள்வி (1913) - 2 -** பால்பாகுபாடற்ற நிலையில் இல்லாமல், ஆதாம் இருந்ததைப் போல இயேசு பூரண மனுஷனாக எப்படி இருக்க முடியும்?

**பதில்.** இந்த உலகத்தில் இந்த கேள்விக்கு யாராலும் பதில் கூற முடியாது. ஏனெனில், இந்த விஷயத்தில் விபரம் ஏதும் இல்லை. ஓரளவு தூதர்களின் வரிசை ஒழுங்கில் ஆதாம் முதலில் படைக்கப்பட்டான் என்ற உண்மையை வேதாகமம் நமக்கு அளிக்கிறது. அதாவது, அவன் தன் சொந்த வகையில் பிறப்பிக்க முடியாதிருந்தது. ஆனால், சந்ததி உண்டாக வேண்டும் என்ற நோக்கத்தில், தேவன் அவனை இரண்டு நபர்களாகப் பிரித்து, அவனுடைய பக்கத்திலிருந்து தாய் ஏவாளை எடுத்தார். இப்படியாக, ஆதாம் இரண்டு நபர்களாகி, ஒரே மனுஷனால் எல்லோரும் வர வேண்டும் என்பதற்காக, ஆதாம் இரண்டு பேர்களாகி பூமியை ஜனங்களால் நிரப்பினான். தன்னுடைய பக்கத்திலிருந்து ஏவாள் எடுக்கப்படுவதற்கு முன்பு இருந்த தகப்பனாகிய ஆதாமைப் போல இயேசு இருந்தாரா? அல்லது, அதற்கு பிறகு இருந்த ஆதாமைப் போல இருந்தாரா என்பதற்கு இன்று யாரும் பதில் சொல்ல இயலாது. அவ்வாறு செய்வதற்கு நமக்கு அவசியமும் இல்லை. ஏனெனில், நாம் எல்லோரும் திருப்தியடைந்திருக்கிறோம் என்று நிச்சயிக்கிறேன்.

## இயேசு - அவருடைய பெயர்களில் ஒன்று.

**கே 377:3 :: கேள்வி (1913) - 3 -** தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று இயேசு ஏன் அழைக்கப்படுகிறார்?

**பதில்**. யோவான் சுவிசேஷத்தின் முதலாம் அதிகாரத்தில், கர்த்தர் இயேசுவின் மனுஷீகத்திற்கு முன்பு இருந்த நிலையைப் பற்றி அப்போஸ்தலர் விவரிக்கிறார். அவர் கூறுகிறார், "ஆதியிலே லோகோஸ் இருந்தது (வார்த்தை அல்லது தூதுவர் அல்லது வாய் கருவி), அந்த லோகோஸ் தேவனிடத்திலிருந்தது, அந்த லோகோஸ் தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." யோவான் அவருடைய மகிமையை பிதாவினுடைய ஒரேபேறானவரின் மகிமைக்கு ஏற்றதாகக் கண்டார். பரலோக பிதா அவர் ஒருவரை மட்டும் படைத்தார் என்றும், சகலமும் அவரால் உண்டாக்கப்பட்டது என்றும் இந்த அதிகாரம் தெரிவிக்கிறது. அவர் தாமே பிதாவின் சிருஷ்டியாக இருந்தார். இதைத் தொடர்ந்து சிருஷ்டிப்பின் மற்ற பணி அனைத்திற்கும், பிதாவின் தீவிர காரியஸ்தராக இருந்தார். இது வேதாகமத்தில் மற்றெல்லா அறிக்கைகளுக்கும் ஒத்தவிதமாக உள்ளது. தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியாக இருந்தார். அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாக இருந்தார். பிதா சிருஷ்டித்த ஒருவர் அவரே. அவர் மூலமாக சகல சிருஷ்டிப்பும் தொடர்ந்தது. ஆகவே, அப்போஸ்தலர் கூறுகிறார், "பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு. அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்."

## இயேசு - - மனுஷீக ஜீவ உரிமைகளுக்கு சோதனை.

**கே 378:1 :: கேள்வி (1914) - 1 -** இயேசு மனுஷ ஜீவனுக்கான உரிமையை அவருடைய பிறப்பு முதல் முப்பது வயது வரைக்கும் நிரூபித்தாரா? அல்லது, முப்பது வயதிலிருந்து சிலுவை வரையிலும் மனுஷ ஜீவனுக்கான உரிமையை அவர் நிரூபித்தாரா?

**பதில்.** ஒரு பரிபூரண சிறுவனாயிருப்பதற்கான உயரிய தரத்தில், நமது கர்த்தர் இயேசு ஒரு சிறுவனாக வாழ்ந்தார் என்பதில் சந்தேகம் கொள்ள நமக்கு காரணம் ஏதும் இல்லை. ஆகவே, அவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் என்று வேதாகமத்தில் நாம் படிக்கிறோம். அது சிறுவனுக்கு எளிதாக இருந்தது. அவர் வளர்ச்சி அடைந்து கொண்டு, முழு மனுஷனாகும் வரை தொடர்ந்தார். முப்பது வயது வரையிலும் அவர் முழுமையான ஆண்மையை அடையவில்லை. இந்த வழி நெடுக அவர் நிச்சயமாக நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவராக இருந்தார். அந்த நியாயப்பிரமாணத்தில் மீறுதல் எதுவும் அவரை நேரடியாக கிட்டத்தட்ட சேதப்படுத்தியிருக்கும். ஆனால், ஜீவனுக்கான அல்லது மரணத்திற்கான சோதனைக்கு உள்ளாக்கப்படுவது குறித்து நமது கவனத்திற்கு கொண்டுவரப்படும் நேரம், அவர் முப்பது வயதில் தம்மையே ஒப்புக்கொடுத்த சமயத்திலிருந்து தான், ஜீவனுக்கான அல்லது மரணத்திற்கான சோதனைக்கு அவர் உள்ளாக்கப்படுவது குறித்து விசேஷித்த விதமாக நமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நேரம் ஆகும். நமது கணிப்பைப் பொருத்தவரையில், இந்த சமயத்தில் தான், நியாயப்பிரமாணத்திற்கு முன்பாகவும், அவருடைய பலியின் உடன்படிக்கைக்கு முன்பாகவும் இயேசு சோதனைக்குள் இருந்தார் என்று நாம் சொல்கிறோம்.. ஆனால், அவருடைய வாழ்க்கையின் முந்தைய வருஷங்கள் அனைத்திலும், சந்தேகத்துக்கிடமின்றி, அவர் அவருடைய ஞானத்திலும் பூரணத்துவத்திலும் மேன்மையான தரத்தில் வாழ்ந்திருந்தார்.

## இயேசு - மீட்கும் விலைக்கிரயம்.

**கே** 378:2 :: **கேள்வி** **(1916-Z) - 2 -** ஆதாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் தம்மையே மீட்பின் கிரயமாக அளிப்பதற்குரிய தகுதியை இயேசு முப்பதாம் வயதில் பெற்றிருந்தாரா? அல்லது ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததிக்கு மீட்கும் விலைக்கிரயமாக அவருடைய பலி ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பாக, அவர் சொந்தமாக பாடு அல்லது சோதனையைப் பெற வேண்டியது அவசியமாக இருந்ததா?

**பதில்.** மனுஷனுடைய மீட்பின் விலைக்கிரயமாக, அவருடைய சரீரத்தை “பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக “ஒப்புக்கொடுப்பதற்கு திறனுடையவராகவும், தகுதி பெற்றவராகவும்” தம்முடைய முப்பதாம் வயதில் இயேசு இருந்தார். இதை அவர் செய்து முடித்தார். தேவன் அந்த காணிக்கையையும் பலியையும் ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணி, தம்முடைய அங்கீகரிப்பைத் தெரிவித்தார். இதனால், இயேசு மரணபரியந்தம் தம்மை அர்ப்பணித்திருந்த கீழ்ப்படிதலான பலிக்கு வெகுமதியாக, இந்த முறை தேவ சுபாவத்திற்கு அவர் இயேசுவை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

இருந்த போதிலும், மனுஷனுக்கு ஈடாக ஒருவர் சோதனைக்குள்ளாக்கப்படும் தேவை தேவனுடைய ஏற்பாட்டில் புறக்கணிக்கப்படவில்லை. இரண்டு சோதனைகள் அல்லது பாடுகள் ஒரே சமயத்தில் தொடர்ந்தது. இரண்டும் தேவைப்பட்டன. ஒரு மனுஷனாக தேவனுடைய நியாயப்பிரமாணத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட நீதியின் கோட்பாடுகளுக்கு உண்மையா யிருக்க அவர் நிரூபிக்க வேண்டும். இல்லையென்றால், ஆதாமுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் தகுதியான ஈடாக அல்லது மீட்பாக அவர் இருக்க முடியாது. அவர் தம்முடைய சொந்த கணக்கில், தெய்வீக சுபாவத்திற்கு தம்மை தகுதியுள்ளவராக நிரூபிக்க, புதிய சிருஷ்டி என்ற முறையில் இயேசுவுக்கு சோதனைகள் தேவைப்பட்டன. இயேசு தம்முடைய பலியின் உடன்படிக்கையை உண்மையாக நிறைவேற்றுவதால் மட்டுமே, அவருடைய பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலில் தெய்வீக சுபாவம் பூர்த்தி அடையும். ஆகவே, அவர் உடன்படிக்கை செய்தவிதமாக பலியை செலுத்தத் தவறியிருந்தால், அவர் முழுவதுமாக தோல்வி யடைந்திருப்பார். அவருடைய உயிர்த்தெழுதலில் வந்த தெய்வீக மகிமை, கனம், மற்றும் அழியாமையாகிய பெரும் வெகுமதியை அவர் பெற்றிருக்கமாட்டார். பரிசுத்தவானாகிய பவுல் அறிவிப்பது போன்று, “ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, - - எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.” (பிலி.2:9.) நியாயப்பிரமாணத்தின்

நிழல்களிலும் தீர்க்கதரிசனங்களிலும், "புஸ்தகத்தில் எழுதியிருக்கிற" எல்லாவற்றிற்கும் பணிந்து, பிதாவினுடைய சித்தத்தைச் செய்வதில் தம்மைத் தாமே உண்மையாகப் பலியிடும் முறைகளிலேயே நம்முடைய கர்த்தர் இயேசுவின் முழுமையான சோதனையும் இருந்தது. அவருடைய பலியின் உடன்படிக்கையை கைக்கொள்ளத் தவறியிருந்தால், தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்படும் பலனைப் பெறுவதில் தோல்வியடைவது மட்டுமல்ல, ஆனால் அவர் ஒவ்வொன்றையும் - - தம்முடைய ஜீவனையும் கூட இழந்திருப்பார்.

ஆனால், அவருடைய பலியின் உடன்படிக்கையைக் கைக்கொள்வது, புதிய சிருஷ்டி என்ற முறையில் நமது கர்த்தர் மேல் உள்ள பொறுப்பு ஆகும். மனுஷன் என்ற முறையில் அவர் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டிய பொறுப்பு அவர் மேல் உள்ளதைக் கூட அர்த்தப்படுத்துகிறது. ஏனெனில், அவருடைய உடன்படிக்கையின் கீழ் அவரிடத்தில் தேவைப்படும் விஷயங்கள் நியாயப்பிரமாணத்துக்கு இணக்கமாகவே இருந்தன. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்வது என்பது அவர் நியாயப்பிரமாணத்தைக் கைகொள்வதை அர்த்தப்படுத்துகிறது. இதற்கும் மேலாக, நியாயப்பிரமாணம் கேட்காத அவருடைய உரிமைகள் மற்றும் விருப்பங்களையும் பலி செலுத்தப்பட வேண்டியிருந்தது.

## யூதர்கள் - - அவர்களைப் பற்றிய நமது மனப்பாங்கு.

**கே 379:1 :: கேள்வி (1907) - 1 -** ஏசாயா 40:1,2. "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமின் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்." இது தற்காலத்தில் யூதர்களின் மேலான நமது மனப்பாங்கிற்கு பொருந்துவதாக நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்.** எருசலேமிடம் ஆறுதலாக பேசுவது நமக்கு சரியானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், எருசலேம் முதலில் செவிகொடுக்கப்போகிறது என்று இது உணர்த்துவதாக நான் நினைக்கவில்லை. இப்பொழுது யூதர்களிடம் ஆறுதலான அநேக நல்ல விஷயங்களை நாங்கள் பேசியிருக்கிறோம். டாண் புத்தக இரண்டாம் வால்யூமில் இந்த பாடத்தைப் பற்றி என்ன எழுதியிருக்கிறது என்பதை நீங்கள் கருத்தில் கொண்டால், யூதர்களுக்கு வருங்காலத்தில் என்ன நம்பிக்கை என்பதும், இந்த வேதாகம வசனத்திற்கே, மூன்றாம் வால்யூமும் எபிரேய நிருபத்தின் உண்மையான விளக்கக் குறிப்பாக நாங்கள் நம்புவதும், ஆசரிப்புக் கூடார நிழல்களை சொல்லும் எபிரேய நிருப வாசகங்களில் உள்ளதுமான புத்தகமும் கவனத்தை ஈர்க்கின்றன. இவற்றில் எபிரேயர்களிடம் இந்த ஆறுதலான வார்த்தைகளைப் பேச நாங்கள் முயற்சி செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். ஆனால், இது அவர்கள் மேல் அதிக அளவில் முத்திரை பதித்திருக்கிறதா என்பதை நாங்கள் பார்க்கவில்லை - ஒருவேளை சிறிதாயிருக்கலாம் - நாங்கள் அறியவில்லை. ஆகவே, காலம் வருகிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றும், எக்காளம் சத்தமாகவும், நீண்டும் ஒலிக்கிற வரைக்கும், கேட்கிற காது இல்லாதவர்கள் காத்திருக்க வேண்டும்.

## யூதர்கள் - - அவர்களுடன் தேவன் எப்படி செயல்தொடர்பு கொள்வார்?

**கே 379:2 :: கேள்வி (1909) - 2 -** யூதர்கள் எந்த நடைமுறையில் அல்லது வழியில் தேவனால் தொடர்பு கொள்ளப்படுவார்கள்?

**பதில்.** இது குறித்து என்னுடைய அனுமானத்தை மட்டுமே சொல்ல முடியும். மகா உபத்திரவ கால முடிவில் மற்ற மனுக்குலத்தாரைப் போலவே யூதர்களும் திரளான உபத்திரவத்திலும் பொதுவான துன்பத்திலும் இருப்பார்கள். உபத்திரவம் முடிவடையும் காலத்தில், முற்பிதாக்கள் யூதர்கள் மத்தியில் தோன்றுவார்கள், அவிசுவாசமுள்ள யூதர்களிடத்தில் அல்ல, ஏனெனில் மேசியாவுக்காக ஆவலாய் காத்திருக்கக்கூடிய, உண்மையாகவே அக்கறையுடன் இருக்கும்

யூதர்கள் சிலர் இருப்பார்கள், மற்றும் இது போன்ற உணர்வு உடையவர்களுக்கு மேசியா தம்மை வெளிப்படுத்துவார் என்று நான் அனுமானிக்கிறேன். அவர் அவர்களுக்கு தம்மை அறிந்து கொள்ளுமாறு செய்யும் போது, அவர்கள் விசுவாசிப்பார்கள். பிறகு ஒரு அயலான் காணப்படுவான் - பிறகு மற்ற யூதர்களும் அவர்களிடம் சேர்க்கப்படுவார்கள். விசுவாசிக்காத நிறைய யூதர்கள், ஒருவேளை புறஜாதியாருடன் இருப்பார்கள். இஸ்ரவேலின் மேல் ஆசீர்வாதம் வருவதை அவர்கள் பார்க்கும் போது, ஆசீர்வாதத்தைப் பெற அவர்களும் விரும்புவார்கள். அவருடன் இணக்கமாக இருக்கிறவர்களுக்கு தேவனுடைய சகல ஆசீர்வாதங்களும் இருக்கும்.

## யூதர்கள் - அவர்களிடம் முதலாவது இயேசு அனுப்பப்பட்டார்.

**கே 379:3 :: கேள்வி (1910) - 3 -** “அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்கு களிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அனுப்பினார்.” தயவு செய்து விளக்கம் கூறவும்.

**பதில்.** “உங்களிடத்திற்கே” - இது யூதர்களைக் குறிக்கின்றது. தேவனுடைய ஆசீர்வாதங்கள் முதலில் யூதர்களுக்கும், பிறகு புறஜாதியார்களுக்கும் கிடைக்கும். இயேசு மரணமடைந்த பிறகு, யூதர்களுக்கு இருந்த மூன்றரை வருஷ கிருபையில், எழுபது வாரங்கள் முடிடையும் வரையில், சுவிசேஷம் புறஜாதியாருக்கு சென்றடையவில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கும். பிறகு, முதல் புறஜாதியான கொர்நெலியு தேவனுடன் கிருபைக்குள்ளாக வந்தார். ஆகவே, இந்த மூன்றரை வருஷங்கள் முடியும் வரையில் இது புறஜாதியாருக்குப் போகாது என்று பேதுரு சொன்னது சரியாக இருந்தது.

## யூதர்கள் - பவுலின் நாட்களில் எண்ணிக்கை.

**கே 380:1 :: கேள்வி (1911) - 1 -** ஆதிச்சபைக்கு பத்தாயிரத்துக்கு மேற்படாத அளவில் யூதர்கள் ஒருவேளை வந்திருக்கலாம் என்று கொஞ்ச காலத்திற்கு முன்பு நீங்கள் கூறினீர்கள். பரிசுத்தவானாகிய பவுலின் ரோமருக்கு எழுதின நிருபம் பதினொன்றாம் அதிகாரத்தைப் படிக்கும் போது, அவர் எலியாவின் காலத்தில் 7000 பேர்கள் குறிப்பிடுவதை நாம் கவனிக்கிறோம். பிறகு, மேலும் சொல்லுகிறார், “அப்படிப் போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது.” “அப்படிப் போல இக்காலத்திலேயும்” என்ற இந்த சொற்றொடர் மீதியான ஏழாயிரம் பேரைக் குறிக்கிறது என்று விளக்கம் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்.** இல்லை. நான் அந்த அளவு திறனாய்வு செய்கிறதில்லை. காலப்போக்கில் நாம் பரிசுத்தவானாகிய பவுலைக் கேட்போம். அவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

## யூதர்கள் - - மீட்பு இல்லாமல் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டால், நித்திய ஜீவன் பெறுவது எப்படி?

**கே 380:2 :: கேள்வி (1912) - 2 -** மீட்பு இல்லாமல் நியாயப்பிரமாணத்தை யூதர்கள் கைக்கொண்டால், தேவன் அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க முடியுமா?

**பதில்.** தேவன் யூதர்களுக்கு உண்மையில் எதையும் மர்மமான முறையில் அளிக்கவில்லை. அவர்களிடம் தாம் உள்நோக்கம் கொண்டிருந்ததை தேவன் அவர்களுக்கு நடைமுறையில் சொல்லியிருந்தார். அவர்கள் அவருடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டால், அவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் என்பதே அந்த உள்நோக்கம் ஆகும். இது ஒவ்வொருவருக்கும், எவருக்கும் உள்ள சலுகை அளிப்பு ஆகும். எனினும், அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு உதவி புரிய யாரோ ஒருவர் தேவைப்பட்டது. ஆதாமின் காலத்திலிருந்து அனைத்து உலகத்திற்கும் கொடுத்தபடியே, அதே உள் நோக்கத்தையே

கர்த்தர் இஸ்ரயேலுக்குக் கொடுத்திருந்தார், அதாவது, “என்னுடைய நியாயபிரமாணத்தைக் கைக்கொள்ளுங்கள். நீங்கள் என்றைக்கும் ஜீவனோடு இருப்பீர்கள்.” ஜீவனைப் பெற வேண்டுமானால், ஒவ்வொருவரும் அவருடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். நீங்களும் நானும் அவருடைய நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும். எனினும், நாம் எழுத்திலும் படிவத்திலும் அந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டியவர்களாக இல்லை. ஆனால், நமது செயல் திறனுக்கேற்ற அளவில், அந்த நியாயப்பிரமாணத்தை ஆவியில் கைக்கொள்ள வேண்டும். நியாயப்பிரமாணத்தின் முழு அர்த்தமும் நம்மில் நிறைவேறுகிறது. இது இந்த மாற்றத்துடன், “நமது செயல் திறனுக்கேற்ற அளவில்” ஏற்றுக்கொள்ளப்படுகிறது, ஏனெனில் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக நாம் இருக்கிறோம். எனினும், யூதர்கள் மீட்பின் விலைக்கிரயம் இல்லாமல் தேவனால் நீதிமான்களாக்கப்படவில்லை. இது வெறும் உள்நோக்கமாகவே இருந்தது. வெறும் சலுகை அளிப்பதாகவே இது இருந்தது. அவர்களுடைய நியாயப்பிரமாணத்தை அவர்கள் கைக்கொண்டால் (அவர்கள் தங்களால் செய்யமுடியும் என்று பெருமை கொண்டார்கள்), அவர்கள் ஜீவனைப் பெறுவார்கள் என்று பொதுவான முறையில் தேவன் வரையறுத்திருந்தார். ஆனால், **விளைவு** என்னவாயிருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இல்லை, நான் சொல்லுகிறேன், நாம் அறிந்திருக்கிறது போல, தேவன் யூதர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கவில்லை. ஏனெனில், தேவனுக்கும் நீதிக்கும் முன்பாக எல்லோரும் குற்றமுள்ளவர்களாக இருந்தனர். இன்னும் திருப்திப்படுத்தப்படவில்லை.

## யோசேப்பு - நிழல்களாக அவருடைய சகோதரர்கள்.

**கே 380:3 :: கேள்வி (1909) - 3 -** யோசேப்பு வகுப்பார் அவருடைய சகோதரர்களான பென்யமீன் வகுப்பாருக்கு அறியப்படும் போது, அந்த இணை காலத்தில் எப்பொழுது நாம் வாழ்வோம்?

**பதில்.** நல்லது, இது அனுமானமான பதிலாக மட்டும் இருக்கும். ஏனெனில் இந்த கேள்விக்கு திட்டவட்டமாக வேதாகமத்தில் எதுவுமில்லை. பென்யமீன் வகுப்பார் - திரள் கூட்டம், மற்றும் யோசேப்பு வகுப்பார் - சிறு மந்தை; இவ்விரண்டு வகுப்பாரும் ஒருவருக்கொருவர் மகா உபத்திரவ காலத்தில் அறிந்து கொள்ளப்படுவார்கள் என்பது நமது அனுமானம் ஆகும். வெளிப்படுத்தல் ஆகமம் 19ம் அதிகாரத்தில் திரளான ஜனங்கள் பாபிலோன் விழுந்த பிறகு பார்ப்பார்கள் என்று நாம் படிக்கிறோம். நீதியின் பார்வையில் கர்த்தரால் புறக்கணிக்கப்படுதலைக் குறிக்கும் பாபிலோனின் விழுகைக்கும், எந்திரக்கல் போன்று அமிழ்ந்து போவதைக் குறிக்கும் உண்மையான விழுகைக்கும் வித்தியாசம் உள்ளது. வெளிப்படுத்தல் ஆகமம் 19ம் அதிகாரத்தில் மேலும் நாம் வாசிக்கிறோம், திரள் கூட்டத்தார் சொன்னார்கள், “நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்கு துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்.” பாபிலோனின் விழுகையைக் குறித்து அவர்கள் களிகூர்ந்தார்கள். யோசேப்பு வகுப்பாரை அறிந்து கொண்டு, இந்த பென்யமீன் வகுப்பார் களிகூருகிறார்கள். - இது சிறு மந்தை மறுரூபமான பிறகு, திரள் கூட்டத்தார் ஓரளவு உபத்திரவத்தில் இன்னும் இருக்கும் நிலையில், அவர்கள் சிறு மந்தையை கண்டுணர்வார்கள்.

## யூபிலி - ஆயிர வருஷ யுகம் மற்றும் பூமியின் மேன்மை.

**கே 381:1 :: கேள்வி (1905) - 1 -** பூமியின் விசேஷித்த யூபிலி எப்பொழுது துவங்குகிறது? அது ஆயிர வருஷத்திலிருந்து எப்படி வேறுபடுகிறது?

**பதில்.** இல்லை. இது நிழலின் தொடர்ச்சியாக இல்லை. நாம் விசேஷித்த யூபிலி காலத்தில் இருக்கிறோம். அப்படியானால், நாம் சீர்பொருந்துதலை காண்கிறதில்லையே என்று நீங்கள் வினவலாம்? நல்லது, இது நிழலாக எப்படி இருந்தது? இது நடு இரவில் ஆரம்பித்து, காரியங்களை தன்னுடையதாக்கிக் கொண்டதா? ஜனங்கள் இதை அறியவில்லை. ஆனால்,

ஆசாரியர்கள் குறிப்பிட்ட வெள்ளியிலான எக்காளங்களை ஊதி, ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினார்கள். நாம் இப்பொழுது அந்த நிழலுக்கான பொருளின் காலத்தில் இருக்கிறோம். நீங்கள் உங்களுடைய சுற்றுப்புறத்தில் சத்தியத்தின் வெள்ளி எக்காளங்களை ஊதுகிறீர்கள். நான் என்னுடையதை ஊதுகிறேன். யூபிலியைப் பிரகடனப்படுத்துங்கள்.

## யூபிலி - தேசம் தன்னுடைய ஓய்வு நாட்களைக் கைக்கொள்ள வற்புறுத்தப்பட்டது.

**கே 381:2 :: கேள்வி (1911-Z) - 2 -** வேதாகம பாடங்களின் இரண்டாம் வால்யூமில் உள்ள அத்தியாயத்தில், சிறையிருப்பில் இருந்த இஸ்ரயேலர்கள், அவர்கள் முன்பு அனுசரித்திராத ஓய்வு நாட்களை அனுசரிக்குமாறு வற்புறுத்தப்பட்டார்கள் என்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் வால்யூமில் இந்த ஓய்வு நாட்கள் யூபிலிகள் என்று ஏன் அழைக்கப்படுகின்றன?

**பதில்.** வேத பாடங்களின் இரண்டாம் வால்யூம் சொல்கிறது என்னவென்றால், பாபிலோனில் இருக்கும் போது, அவர்களுடைய ஓய்வு நாட்களை கைக்கொள்ள யூதர்கள் வற்புறுத்தப்பட்டார்கள் என்று சொல்லாமல், யூதர்கள் பாபிலோனில் இருந்த போது, தேசம் இந்த ஓய்வு நாட்களை கைக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது என்று குறிப்பிடுகிறது. தேவன் அவ்விதமே சொல்லுகிறார். (2நாளா 36:20,21.) யூபிலி வருஷத்தில் **தேசம் இளைப்பாற வேண்டும்** என்று யூதர்களுக்கு கட்டளையிடப்பட்டது. மற்ற மனுக்குலம் போலவே, ஓரளவு சுய நலம் காரணமாக, அவர்கள் தங்கள் தீர்வைகள் செலுத்துவதில் பின்தங்கி விடுவது போன்றவைகளுக்கு அவர்கள் பயந்தனர். ஆகவே, அவர்கள் அந்த யூபிலிகளை சரியாகக் கைக்கொள்ளவில்லை. அவர்கள் சிறையிருப்புக்குப் போகும் வரையிலும், இஸ்ரயேலர் பத்தொன்பது யூபிலிகளைக் கைக்கொண்டிருந்தனர்; மற்றும் தேவன் அவர்களிடம் பெரிதாக அதிருப்தி அடைந்திருந்தார். அவர் கூறினார், “நீங்கள் தேசத்தைப் பெற்றிருந்த போது, தேசம் ஓய்வு நாட்களை சரியாக அனுசரிக்கவில்லை. நீங்கள் ஓய்வு நாட்களை சரியாகக் கைக்கொள்ளவில்லை.” நாம் இங்கே யூதர்களைக் குற்றப்படுத்தவில்லை. தேவன் இப்படிப்பட்ட கட்டளையை அமெரிக்கா அல்லது வேறு எந்த நாட்டின் மீது வைத்திருந்தால், இதை வெகு சிலரே கைக்கொள்வார்கள்..

நியாயப்பிரமாணத்தின்படி, ஒவ்வொரு ஏழாம் வருஷத்திலும் ஓய்வு வருஷம் வந்தது. ஏழு மடங்கு ஏழு வருஷங்களை எண்ண வேண்டுமென்று ஜனங்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். பிறகு, ஐம்பதாம் வருஷம் யூபிலி வந்தது. இவ்விதமாக, இரண்டு ஓய்வு நாட்கள் ஒன்றாக வந்தன. அதில் ஒன்று, ஐம்பதாம் வருஷம் விசேஷித்த யூபிலி வருஷம் ஆகும். யூதர்கள் இந்த ஓய்வுகளை அரை மனதுடனே கைக்கொண்டார்கள். ஆகவே, தேசம் தன்னுடைய ஓய்வுகளை சரிவர நிறைவேற்றும் வரைக்கும், அவர்களுடைய தேசத்திலிருந்து அவர்களை தேவன் வெளியேற்றி, எதிரிகளின் கையில் கொடுத்தார். இந்த காலக்கணக்கு அம்சங்களின் முழுமையான அர்த்தத்தை யூதர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஏனெனில், யூதர்கள் இந்நாள்வரைக்கும் புரிந்து கொள்ளவில்லை. யூதன் புரிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் நினைத்திருந்தால், யூதன் அறிந்து கொண்டிருந்திருப்பான். ஆனால், இந்த காலக்கணக்கு அம்சங்கள் முதன்மையாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்காக இருந்தன. தேவன் இஸ்ரவேலையும், சகல உலகத்தையும் தேவன் ஆசீர்வதிக்கும் காலத்தை நமக்குக் காண்பிப்பதற்காக, 70 என்ற எண் குறிக்கப்பட்டிருந்தது. நேரம் வரும்போது, அப்பொழுது யூதர்கள் தங்களுடைய ஓய்வுகளையும், சிறையிருப்பையும், எல்லா விஷயங்களின் நிறைவேறுதலையும் புரிந்து கொள்வார்கள். ஆனால், இந்த செய்தியை, யூதர்கள் மற்றும் மற்ற உலகத்தாரைக் காட்டிலும் மேலான மூல ஆதாரத்தை, ஆவிக்குரிய ஆதாரத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

## யூதாஸ் - இயேசுவைக் காட்டிக் கொடுத்தல் கடமையா?

**கே 382:1 :: கேள்வி (1905) - 1 -** இரட்சகரை ஒருவன் காட்டிக் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கையில், தன்னுடைய கடமையைச் செய்ததற்கு, யூதாஸ் எப்படி கண்டனத்துக்குள்ளானான்?

**பதில்.** அவன் அந்த கடமையை செய்ய வேண்டியிருந்தது பற்றி வேதாகமம் சொல்வதாக எந்த இடத்தையும் நான் அறியவில்லை. விஷயம் வெறுமனே இதுவே: நம்முடைய கர்த்தர் எருசலேமுக்குச் செல்லும் போது பெரும் சத்தம் இருந்தது; ஆகவே பிறகு, ஜனங்கள் சத்தமிடாவிட்டால், கல்லுகளே கூப்பிடும் என்று நமது கர்த்தர் கூறியது சொல்லப்பட்டிருக்கிறது போலவே, நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்படுவார் என்று தீர்க்கதரிசனம் கூறியது. யூதாஸின் பங்கில் இது கட்டாயம் அல்ல. அவனிடம் பிசாசு இருந்தது என்றும், அவன் திருடன் என்றும் வேதாகமம் சொல்கிறது. யூதாஸின் பேரில் நான் எந்த இரக்கமும் வீணாக கொள்ளவில்லை.

## யூதாஸ் - இறுதி சோதனை.

**கே 382:2 :: கேள்வி (1909) - 2 -** யூதாஸின் சோதனை இறுதியானதா?

**பதில்.** எனக்குத் தெரியாது. “அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்.” என்று எழுதியிருப்பதற்கு அதிகமாக எதையும் சொல்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. உயிர்த்தெழுதலில் அவன் வாய்ப்பு உடையவனாயிருந்தால், அது எப்படி நலமாயிருக்கும் என்று நான் அறியவில்லை.

யூத ஜாதியினரில் மற்றவர்கள் பெற்றிராத நிலையில், ஒரு குறிப்பிட்ட பார்வையில், யூதாசும் மற்ற சீஷர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார்கள் என்று நாம் அறிகிறோம். கர்த்தர் அவர்கள் மேல் அவருடைய ஆவியை வைத்து, அசுத்த ஆவிகள் மற்றும் சகல வியாதிகளின் மேல் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து அவருடைய பிரதிநிதிகளாக அவர்களை அனுப்பினார். அவர்களுக்குள்ளாகவும், அவர்கள் மூலமாகவும் செயற்படுத்தப்பட்ட இந்த அதிகாரம், மற்ற யூதர்களைக் காட்டிலும் மேலாக ஒவ்வொரு வழியிலும் அவர்களுக்கு வல்லமையையும், நன்மையையும் கொடுத்தது. ஆனால், தேவன் யூதாசுக்கு வருங்காலத்தில் ஏதேனும் வைத்திருந்தால், அதற்கு எந்த ஆட்சேபனையும் நான் செய்வதை நீங்கள் பார்க்க மாட்டீர்கள். அதை தேவன் செய்வதற்கு நான் வெகு அதிகமாக மரியாதை உடையவனாய் இருக்கிறேன்.

## நியாயத்தீர்ப்பு - கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக எல்லாரும் வெளிப்படுதல்.

**கே 382:3 :: கேள்வி (1907) - 3 -** “ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.” இந்த வசனத்தை நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டும்?

**பதில்.** ஒரு கோணத்தில் பார்க்கும் போது, நாமெல்லாரும் இப்பொழுது கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாகவே நின்று கொண்டிருக்கிறோம். நாம் சோதனையில் இருக்கவில்லையா? ஆம், சபையை சோதிக்கிற அவர் யார்? பிதாவின் பிரதிநிதியாக இயேசுவுக்கே எல்லா நியாயத்தீர்ப்பும் உறுதியாக்கப்பட்டுள்ளது. நீங்கள் என் சத்தத்தைக் கேட்காவிட்டால், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் என்று அவர் பல்வேறு சபைகளுக்கு எவ்விதம் சொல்கிறார் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். அவர் சபையை நியாயந்தீர்த்துக் கொண்டு இருக்கிறார், நீங்கள் பார்க்கலாம். அவர் லவோதிக்கேயா சபைக்கு வரும்போது அவர் சொல்கிறார், “இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்.” நியாயந்தீர்க்குதலும், சோதனையும் இப்பொழுது நடந்து கொண்டு இருக்கின்றன. “நீங்கள் என் சத்தத்தைக் கேட்டால், நான் பிரவேசித்து உங்களோடே போஜனம் பண்ணுவேன்.” ஆகவே, கர்த்தர்

தம்முடைய ஜனங்களை இக்காலம் வரையில் நியாயந்தீர்த்துக் கொண்டு இருக்கிறார். நாம் கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கிறோம். அவர் நம்முடைய போதகரும், பயிற்றுவிப்பவரும், ஒழுங்கமைப்பாளருமாக இருக்கிறார். திருத்தங்கள் பெறுவதற்கு நமக்கு தேவை ஏற்படும் போது, பிதாவின் பிரதிநிதியாக இயேசு அந்த விஷயத்தைக் கவனிப்பார்.

## நியாயத்தீர்ப்பு - மரித்தோர் நியாயந்தீர்க்கப்படுதல்.

**கே 383:1 :: கேள்வி (1908) - 1 -** உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க தயாராக இருக்கும் அவரிடத்தில் யார் கணக்கு கொடுப்பார்கள்? ஏனெனில், இதற்காகவே, மரிக்கிறவர்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அவர்கள் மாம்சத்திலிருக்கிற மனுஷர் போலவே நியாயந்தீர்க்கப்படலாம், ஆனால் தேவனைப் பொருத்தவரையில் அவர்கள் ஆவியின்படி இருக்கிறவர்கள்."

**பதில்.** இங்கே நான் புரிந்துள்ளபடி, கூடியவரை சுருக்கமாகச் சொல்கிறேன். நீங்களும் நானும் மற்றும் உலகத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் எல்லோரும், மனுஷர்களின் கணிப்பின்படி மாம்சத்தில் இருக்கிறபிரகாரம் நியாயந்தீர்க்கப்படுகிறோம், மற்றும் அவர்கள் மாம்சீகப் பார்வையிலிருந்து நம்மை கவனிக்கிறார்கள்; மற்றும் அவர்கள் சொல்கிறார்கள், "நல்லது, உள்ளே எப்படியிருக்கிறார்களோ, அப்படியே வெளிப்புறத்திலும் நல்லவர்களாகவே இருக்கிறார்கள்." தேவன் தேர்ந்தெடுத்திருக்கிறவர்களில் அநேகர் சிறப்புமிக்கவர்கள் அல்ல, புத்திசாலிகள் அல்ல, அறிஞர்கள் அல்ல. தேவன் நம்மை இவ்விதம் நியாயந்தீர்க்கிறதில்லை என்பது வேதாகம அறிவிப்பிற்கு ஏற்றுக்கொள்ளும் விதமாக இருக்கிறது. கிறிஸ்துவினிடத்தில் வந்திருக்கிறவர்களாகவும், அவருடைய கிருபையை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களாகவும், அவருடைய பலியின் மேல் விசுவாசம் உள்ளவர்களாகவும், அவரிடம் தங்களையே அர்ப்பணித்தவர்களாகவும் இருக்கிற நம்மை, தேவன் மாம்சத்தின்படி இல்லாமல், ஆவியின்படி நியாயந்தீர்க்கிறார் என்று அப்போஸ்தலர் நம்மிடம் கூறுகிறார். மாம்சத்தின்படி மனுஷர்களை நியாயந்தீர்ப்பது ஒரு காரியம்; ஆனால், ஆவியின்படி நியாயந்தீர்க்கப்படுதல் என்பது வேறொரு காரியம் ஆகும். ஆகவே, நம்முடைய விஷயம் அவருடைய கைகளில் இருக்கிறது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். உயிரோருக்கிறவர்களையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கக் கூடியவராயிருக்கிற அவரிடத்தில் கணக்கு கொடுக்க நாம் எல்லோரும் தயாராக இருக்க வேண்டும். அதற்காக தேவனுக்கு நாம் நன்றி செலுத்துவோம் - மாம்சத்தின்படி அல்ல, ஆனால் ஆவியின்படியே.

## நியாயத்தீர்ப்பு - பயத்தோடே எதிர்பார்க்குதல்.

**கே 383:2 :: கேள்வி (1911) - 2 -** "நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்." இந்த விஷயத்தில், பயப்படு கிறவர்கள் யார்? பாவம் செய்திருக்கிறவர்களா அல்லது நியாயத்தீர்ப்பை எதிர்பார்க்கிறவர்களா?

**பதில்.** இந்த பகுதி எபி.10:27ல் காணப்படுகிறது. மனப்பூர்வமாய் பாவம் செய்யும் சிலரைப் பற்றி அப்போஸ்தலர் பேசுகிறார். அவர்கள் நியாயத்தீர்ப்பை பயத்துடன் எதிர்பார்ப்பதும், தேவனுடைய விரோதிகளாக பட்சிக்கும் கோபாக்கினையைத் தவிர, அவர்களுக்கு வேறெதுவும் மீதி இருப்பதில்லை என்று அப்போஸ்தலன் கூறுகிறார். இந்த நபர்கள் தங்களுடைய தவறுதல்களை தாங்களாகவே உணர்ந்து, தேவனிடத்திலிருந்து அவர்களுடைய பிரிவை உணர்கிறார்களா என்பதைப் பற்றி அப்போஸ்தலர் கூறவில்லை. அவர் சொன்னதை விட நாம் புத்திசாலிகள் அல்ல. இப்படி இருக்கும் என்று அவர் வெறுமனே சொன்னார். அவர்கள் இதைப் புரிந்து கொண்டால், அவர்களுக்கு எதுவும் மீதியிருப்பதில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தை மறுதலித்து அவரை வெட்கப்படுத்தியவர்களுக்கு, அழிக்கப்படுவது தவிர அவர்களுக்கு வேறொன்றும்

மீதியிருப்பதில்லை - தேவனுடைய விரோதிகளாக, அவர்களைப் பட்சிக்கும் கோபாக்கினையே இருக்கும்.

## நியாயத்தீர்ப்பு - என்னை நியாயந்தீர்க்கிறவர் கர்த்தரே.

**கே** 383:3 :: **கேள்வி** **(1912-Z)** ஒருவர் புகையிலை உபயோகிப்பதில் அடிமையாகி, அதன் அருவருப்பை உணரத் தொடங்கி, அதை விட்டு விடுவதாக தீர்மானம் பண்ணி, குறிப்பிட்ட காலம் வரை அதை உபயோகிப்பதிலிருந்து தவிர்த்து, ஆனால், பிறகு அதை அவ்வப்போது உபயோகப்படுத்துவதை திரும்பத் துவங்கி, இப்படியாக இந்த விஷயத்தில் ஜெயங்கொள்ளாவிட்டால், ஆவி விருப்பங்கொண்டாலும், மாம்சீக பலவீனம் உள்ள நிலைமை - இது கிரீடத்தை இழப்பதற்கும், இப்படிப்பட்டவர் பின்னுக்குத் தள்ளப்பட்டு திரள் கூட்டத்தாராவதற்கும் காரணமாகிறதா? - அல்லது இது இரண்டாம் மரணத்திற்கு வழி நடத்துமா?

**பதில்.** புகையிலை உபயோகிப்பது மிகவும் அருவருப்பான பழக்கம்; மற்ற பழக்கங்கள் சில ஜனங்களால் அருவருப்பாகக் கருதப்படும், மற்ற ஜனங்களால் அவ்வாறு கருதப்படுவதில்லை. வேதாகமம் வரையறுக்காத எதையும் நாம் வரையறுக்க வேண்டியதில்லை. விக்கிரகங்களுக்கு படைக்கப்படும் மாமிசம் அல்லது புகையிலையை மெல்லுவது அல்லது, இது போன்ற எந்த விஷயங்களிலும் மற்றவர்களைத் தீர்ப்பு செய்வது தேவனுடைய ஜனங்கள் எவருக்கும் உரியது இல்லை. வாழ்க்கையில் தூய்மையை ஒருவருக்கொருவர் ஊக்குவிக்க வேண்டும். நாம் புரிந்து கொண்டுள்ளபடி, புகையிலை பழக்கத்தை அல்லது காப்பி குடிக்கும் பழக்கத்தை அல்லது மார்ஃபின் பழக்கம் (வலி மருந்து) போன்றவைகளைக் கட்டுப்படுத்தாவிட்டால், யாரும் மரணத்திற்கான கண்டனத்திற்கு உள்ளாக்கப்படமாட்டார்கள். ஒவ்வொருவரும் எப்படி போராடுகிறார்கள் என்பதை தேவன் ஒருவரே அறிகிறார்; நாளுக்கு நாள் இறுதி வரை தைரியமாக போராடுகிற அவர்களை தேவன் ஒருவரே அறிகிறார். அதைத் தீர்ப்பளிப்பதற்கு நாம் தகுதியானவர்கள் இல்லை. பரிசுத்தவானாகிய பவுல் கூறுகிறார், “ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது. நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை - என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே.” (1கொரி.4:3,4.) இரண்டாம் மரணத்திற்கு தகுதியுள்ளவர்கள் என்று நாம் நம்மையே அவசரமாய் நியாயந்தீர்க்க வேண்டாம். நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களா அல்லது இல்லையா என்பதை தேவனிடம் விட்டு விடுவோம். இந்த பார்வையுடன், ஊக்கமாக முயற்சிக்கவும், நம்மை நம்பிக்கை இழக்கச் செய்யாமலும் அல்லது மற்றவர்களை நம்பிக்கை இழக்கச் செய்யாமலும் இருப்பது நம்முடைய கடமை ஆகும். அவர்களை நிலை நிறுத்தவும், பெரிதான ஊக்கமடைய அவர்களுக்கு உதவி புரியவும், பெரிதான பக்திவைராக்கியத்துடனும் நமது கர்த்தருடைய ஊழியத்தில் இருப்பதும் நம்முடைய கடமை ஆகும்.

## நியாயத்தீர்ப்பு - இதற்கும் விமரிசனத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம்.

**கே** 384:1 :: **கேள்வி** **(1912) - 1 -** “நீதியுள்ள நியாயத்தீர்ப்பு” மற்றும் “விமரிசனம்” இவற்றுக்கு இடையில் எப்படி வித்தியாசப்படுத்த முடியும்?

**பதில்.** நாம் “நீதியின்படி தீர்ப்பு செய்ய வேண்டும்” என்று கர்த்தர் சொல்கிறார். மறுபடியும் கூறப்படுகிறது, “காலத்துக்கு முன்னே தீர்ப்புச் சொல்லாதிருங்கள்.” அப்பொழுது, நீதியுள்ள தீர்ப்பு என்பது என்ன? நீதியுள்ள தீர்ப்பு என்பது சரியான முடிவை அடைவது ஆகும். நமக்கு எப்படி முடியும்? இருதயத்தை நாம் படிக்க முடியுமா? நாம் அறியவில்லை என்பது வேதாகமத்தின் பதில் ஆகும். ஆகவே, இருதயத்தை நியாயந்தீர்க்க முயற்சிக்கக் கூடாது. நல்லது, நாம் மற்ற ஒவ்வொருவருடைய இருதயத்தை, எண்ணங்களை அல்லது நோக்கங்களை நாம் நியாயந்தீர்க்க முடியாவிட்டால், நாம் எப்படி நியாயந்தீர்க்க முடியும்?

நாம் மற்ற ஒருவருடைய நடத்தையை நியாயந்தீர்க்க முடியும். நீங்கள் ஏதாவது செய்யும் போது, நான் உங்களைப் பார்த்தால், நான் சொல்லலாம், “சகோதரனே அல்லது சகோதரியே, தேவனுடைய வார்த்தைக்கு மாறாக, ஏதோ நீங்கள் செய்கீறீர்கள். அது கெட்ட பலனை கொண்டு வருகிறது.” அந்த நபர், “சகோதரர் ரசல், நான் செய்வது தவறு என்று எனக்குத் தோன்றவில்லை” என்று சொன்னால், நான் அந்த சகோதரனுடைய இருதயத்தை கண்டனம் செய்யவோ அல்லது தீர்ப்பளிக்கவோ கூடாது. ஆனால், நல்ல நடத்தைக்கும், கெட்ட நடத்தைக்கும் இடையே நாம் கணித்து, சரியான நேரம் மற்றும் சரியான இடத்தில் அவருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். இதை அத்துடன் அங்கேயே விட்டு விட வேண்டும். குற்றம் செய்பவரிடம் அதன் பலனை எடுத்துக் காண்பித்து, அவருக்கு வேண்டுகோள் மட்டுமே செய்ய வேண்டும். மேலும் சொல்லலாம்: உங்கள் இருதயத்திற்குள் உற்றுப் பார்த்து, உங்கள் எண்ணம் சரியானதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். ஒருவருடைய இருதயத்தை நியாயந்தீர்ப்பதற்கு நமக்கு உரிமை இல்லை என்பதற்கும், நடத்தையை நியாயந்தீர்ப்பதற்கு உரிமை உள்ளது என்பதற்கும் வித்தியாசம் உள்ளது. ஆனால், மற்றவருடைய நடத்தையைப் பற்றிய நமது தீர்ப்பு எப்பொழுதும் சரியாக இருக்கும் என்று இதற்கு அர்த்தம் இல்லை.

நாம் ஒரு சகோதரனிடம் வந்து சொல்கிறோம், “உங்கள் நடத்தை தவறாக இருக்கிறது என்று தோன்றுகிறது. நீங்கள் நல்லது செய்ய விரும்புகிறீர்கள் என்று நான் நிச்சயிக்கிறேன். நீங்கள் விளக்கம் கூற முடியுமா?” அவர் விளக்கம் அளிக்கக்கூடியவராக இருந்து, நாம் கெட்டது என்று நினைத்திருக்கிற போது, இதனுடைய பலன் நல்லதாக உள்ளது என்று நமக்கு அவர் எடுத்துக் காண்பிக்கலாம். நாம் நம்முடைய சகோதரரை கண்டனம் செய்கிறவர்களாக இருக்கக் கூடாது. ஆனால், அவருடைய கருத்தைப் பெறுவதற்கு நாம் அவரிடம் நேரிடையாக செல்ல வேண்டும். நாம் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், இது எங்களுக்கு எப்படித் தோன்றுகிறது என்று சொல்லி, அவருடைய சொந்த இருதயத்தின்படி, தீர்ப்பு செய்ய கேட்டுக் கொள்ள வேண்டும்.

## நியாயத்தீர்ப்பு - நீதி மற்றும் விமரிசனம்.

**கே 385:1 :: கேள்வி (1913-Z) - 1 -** “நீதியின்படி தீர்ப்பு” மற்றும் “விமரிசனம்” இரண்டிற்கும் இடையே எப்படி நாம் வேறுபாடு செய்ய வேண்டும்?

**பதில்.** கர்த்தர் சொல்கிறார், “தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்.” (யோவான் 7:24.). பரிசுத்தவானாகிய பவுல் சொல்கிறார், “கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்.” (1கொரி.4:5.) பிறகு கேள்வி எழுகிறது, “நீதியின்படி தீர்ப்பு” என்பது என்ன? **“நீதியின்படி தீர்ப்பு” என்பது “சரியான முடிவு” ஆனால், நாம் இருதயத்தைப் படிக்க முடியாதவர்களாக இருப்பதால், சரியான முடிவை நாம் எப்படி வழங்க முடியும்? நாம் மற்ற ஒருவருடைய இருதயத்தை படிக்க முடியாதவர்களாய் இருப்பதால் அவர்களை தீர்ப்புச் செய்ய முயற்சிக்கக்கூடாது என்று வேதாகமம் பதிலளிக்கிறது.**

நாம் மற்ற ஒவ்வொருவருடைய இருதயங்களையும், எண்ணங்களையும், விருப்பங்களையும் நியாயந்தீர்க்க முடியாவிட்டால், நாம் என்ன நியாயந்தீர்ப்போம்? நாம் மற்ற ஒவ்வொருவருடைய **நடத்தையை** நியாயந்தீர்க்கலாம் என்பது வேதாகமத்தின் பதில் ஆகும். கர்த்தருடைய ஜனங்களில் ஒருவர் செய்வது ஏதேனும் சரியானதாக இல்லை என்று நாம் பார்த்தால், நாம் சொல்லலாம், “அருமையான சகோதரனே, (அல்லது சகோதரியே), தேவனுடைய வார்த்தைக்கு மாறாகவும், கெட்ட பலனை வரவழைப்பது போன்று உங்களுடைய நடத்தை இருப்பதாகத் தோன்றுகிறது.” அந்த நபர், “நான் தவறு செய்வதாகத் தோன்றவில்லை” என்று பதில் சொன்னால், நாம் அவருடைய இருதயத்தை நியாயந்தீர்க்கவோ அல்லது கண்டனம் செய்யவோ கூடாது. ஆனால், நல்ல நடத்தைக்கும் கெட்ட நடத்தைக்கும் இடையே நாம் கணித்து, சரியான நேரம், மற்றும் சரியான இடத்தில் அவருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். இதை அங்கே அத்துடன் விட்டு விட வேண்டும்.

ஒருவருடைய **இருதயத்தை** நியாயந்தீர்ப்பதற்கு நமக்கு **உரிமை இல்லை** என்பதற்கும், **நடத்தையை** நியாயந்தீர்ப்பதற்கு **உரிமை** உள்ளது என்பதற்கும் வித்தியாசம் உள்ளது. ஆனால், மற்றவருடைய நடத்தையைப் பற்றிய நமது தீர்ப்பு எப்பொழுதும் சரியாக இருக்கும் என்று இதற்கு அர்த்தமில்லை. நாம் எல்லோரும் தவறுகள் செய்வதற்கு உட்பட்டவர்கள்.

நாம் ஒரு சகோதரனிடம் வந்து சொல்கிறோம், "அன்புள்ள சகோதரரே, உங்கள் நடத்தை தவறாக இருக்கிறது என்று தோன்றுகிறது. நீங்கள் நல்லது செய்ய விரும்புகிறீர்கள் என்று நான் நிச்சயிக்கிறேன். நீங்கள் விளக்கம் கூற முடியுமா?" அவர் விளக்கம் அளிக்கக்கூடியவராக இருந்து, நாம் கெட்டது என்று நினைத்திருக்கும்போது, இதனுடைய பலன் நல்லதாக உள்ளது என்று நமக்கு எடுத்துக் காண்பிக்கலாம். நாம் அந்த விஷயத்தை தவறாக புரிந்து கொண்டிருக்கலாம். நம்முடைய சகோதரனை கண்டனம் செய்கிறவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், அவரிடம் நேரிடையாக சென்று, அவருடைய கருத்தைக் கேட்க வேண்டும். இது எங்களுக்கு எப்படி தோன்றுகிறது என்று சொல்லி, அவருடைய சொந்த இருதயத்தின்படி தீர்ப்பு செய்ய கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது.

## நியாயத்தீர்ப்பு - - இஸ்ரவேலரின் ஆசாரியர்கள் நிழலாக மரித்தார்கள்.

**கே** 385:2 :: **கேள்வி** (1915) - 2 - தயவு செய்து எபி. 9:27ம் வசனத்தை விளக்கவும்: "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே."

**பதில்.** இங்கே இதை விளக்குவதற்கு நான் எடுத்துக் கொள்ளும் நேரத்தை விட, வேதாகம பாடங்களில் இது ஒருவேளை நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற விஷயத்தை மூன்று முதல் ஐந்து நிமிஷங்களுக்குள்ளாக விளக்கம் கூறுவது கடினமாகும். ஏனெனில், இது பற்றிய முழு கருத்தும் ஜனங்களின் தலைகளில் தலைகீழாகவும், பின்னாக மூலையில் தள்ளப்பட்டதாகவும் இருக்கிறது. ஜனங்கள் மரிக்கும் போதுள்ள நேரத்தை இது குறிப்பதாக அவர்கள் எல்லோரும் நினைக்கின்றனர். அப்போஸ்தலர் பவுல் எபிரேய நிருபத்தில் இந்த அறிக்கையில் நிழல் மற்றும் பொருள் பற்றிய பாடத்தை அளிக்கிறார். யூத ஆசாரியர்கள் ஒவ்வொரு வருஷம் செய்யும் பணியை இயேசுவின் பணியோடு பவுல் ஒப்பிடுகிறார். இந்த பூமிக்குரிய ஆசாரியர்கள் எவ்விதம் பரிசுத்தஸ்தலத்திற்குள்ளும், பிறகு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் சென்றார்கள் என்பதைச் சொல்கிறார். ஆசாரியன் தன்னுடன் காளையின் இரத்தத்தை எடுத்துச் சென்றான். பிறகு வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தை எடுத்துச் சென்றான். அவன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றான். இரண்டாம் திரைக்குள் தூபவர்க்க மேகம் பிரவேசித்து, கிருபாசனத்தை மூடிய பிறகு, பரலோகத்தை அடையாளப்படுத்துகிற மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் சென்றான்.

நமது கர்த்தர் இயேசு தம்மையே காளையைப் போல ஒப்புக்கொடுத்தார் என்பது தான் இதன் பொருள் ஆகும். காளை, இயேசுவை ஒரு மனிதனாகக் குறிக்கிறது. வெள்ளாட்டுக்கடா மனுஷ சுபாவத்திலுள்ள சபையைக் குறிக்கிறது. பிரதான ஆசாரியனாக இயேசு காளையை சங்கரித்தார்; ஞானஸ்நானத்தில் அவர் தம்முடைய மனுஷீகத்தை பலியாக ஒப்புக்கொடுத்தார். நிழலான ஆசாரியன் தன்னுடைய இரண்டு கைகள் நிறைய தூபவர்க்கத்தை எடுத்து, தூபவர்க்க பலிபீடத்தின் மேல் அக்கினியில் பொடியாக்கினான் - - அது நம்முடைய கர்த்தரின் மூன்றரை வருஷ ஊழியத்தைக் குறிக்கிறது. தூபவர்க்கம் அக்கினியில் விழுகிறது, இயேசு ஜீவனுக்குரிய பாடுகளுக்கு உள்ளாக்கப்படும் போது அவருடைய மகிமையான குண நலன்களை அடையாளப்படுத்துகிறது. எவ்விதத்திலும் அவருடைய விசுவாசம் சுகந்த வாசனையை வழங்கியது.

சாத்தான் சோதனையுடன் அவரிடம் வந்த போது, அவருடைய விசுவாசம் தேவனுக்கு சுகந்த வாசனையின் காணிக்கையாக இருந்தது. இயேசு தாம் அளிப்பதாக ஏற்றுக்கொண்டிருந்ததை கொடுக்காமல் தவிர்ப்பதற்கு, அவரிடம் சாத்தான் ஆலோசனை கொண்டிருந்த போது, அந்த சோதனையை புறம்பே தள்ளிவிட்டு, அத்துடன் செய்வதற்கு

ஒன்றுமில்லாமல் பண்ணினார். "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ" என்பது தான் அவர் எப்போதும் கொண்டிருந்த உணர்வு ஆகும். அவர் தம்முடைய ஓட்டத்தை கல்வாரியில் முடிக்கும் முன்பாகவே, சுகந்த வாசனை அவருக்கு முன்பே சென்று, தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றியது. பொருளாக பார்க்கும் போது, சிலுவையில் அவருடைய மரணம், அக்கினியில் விழுந்த தூபவர்க்கத்தின் கடைசி தூள் ஆகும். பிறகு, நமது பிரதான ஆசாரியர் திரைக்குக் கீழே மரணத்திற்குள்ளானார். திரைக்குக் கீழே பகுதிகளான மூன்று நாட்கள் இருந்து, மூன்றாம் நாளிலே திரைக்கு அடுத்த பக்கத்தில் எழுந்தருளினார். இது தான் அவருடைய உயிர்த்தெழுதல். அவர் ஆவியின் சிருஷ்டியாக, திரையின் ஆவிக்குரிய பக்கத்தில் அவர் எழுந்தார். பிறகு, நாற்பது நாட்கள் கழித்து, சபையின் சார்பில் பாவநிவாரண இரத்தத்தை பரலோகத்தில், மகா பரிசுத்த ஸ்தலத்தில் கிருபாசனத்தின் மீது அவர் தெளித்தார்.

யூத பிரதான ஆசாரியன் இது போன்று ஒன்றை நிழலாக செய்தார் என்பதை சபை கவனிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் இங்கு முயற்சி செய்கிறார். யூத பிரதான ஆசாரியன் ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இரத்தம் இல்லாமல் செல்லவில்லை. இந்த இரத்தம் ஒவ்வொரு விஷயத்திலும், பிரதான ஆசாரியனுடைய இரத்தத்தை - அவனுடைய ஜீவனை - அடையாளப்படுத்துகிறது. ஒவ்வொரு பிரதான ஆசாரியனும், பாவநிவாரண நாளில் திரையின் கீழே பிரவேசிக்கிற போது, மரணத்தினால் பாதிக்கப்படும் ஆபத்துக்கு உள்ளாகிறான். அவன் தேவனுடைய தேவைகளுக்கு ஏற்ப பூரணமாக செய்திருக்காவிட்டால், அவன் திரையின் கீழ், சீலைக்கு அப்பால் பிரவேசிக்க முயற்சித்திருந்தால், அவன் இறந்திருப்பான். பிதாவின் சித்தத்தை இயேசு பூரணமாக செய்திருக்காவிட்டால், இது அவருக்கு மரணம் ஆகியிருக்கும்.

பிறகு, அப்போஸ்தலர் தெரிவிக்கிறார், "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் (*நிழலாக, திரைக்கு கீழே பிரவேசிப்பது*), அதற்கு பின்பு நியாயத்தீர்ப்படைவதும் *(அல்லது முடிவு எட்டுவதும்)* மனுஷருக்கு ***(மனுஷ-ஆசாரியருக்கு*** - இதன் கருத்தை கிரகிக்க) நியமிக்கப் பட்டிருக்கிறபடியே. காளையின் பலியில் ஆசாரியர்கள் தங்கள் மரணத்தை அடையாளப் படுத்துகிறார்கள். திரைக்கு கீழே அதனுடைய இரத்தத்தை எடுத்துச் சென்றார்கள். ஆசாரியன் இதை பூரணமாகச் செய்திருக்காவிட்டால், அவன் மரணம் அடைந்திடுவான். காளை ஆசாரியனை அடையாளப்படுத்துகிறது. அவன் இதை பலியிட்ட பிறகு, இரத்தத்துடன் இரண்டாம் திரைக்குக் கீழே பிரவேசித்தான். "மரணத்துக்குப் பிறகு நியாயத்தீர்ப்பு." இங்கு மனுக்குலத்தின் மரணம் பற்றி எந்த குறிப்பும் இல்லை. ஆனால், அவர்களுடைய பலியை செலுத்தும் இந்த ஆசாரியர்களை மட்டுமே குறிக்கிறது. இயேசு மரித்தார். இரண்டாம் திரைக்குள்ளே பிரவேசித்தார். மூன்றாம் நாளில் எழுப்பப்பட்டார். நிழலாக பிரதான ஆசாரியன் தன்னுடைய பலியை செய்து, இரண்டாம் திரைக்கு அப்பால் பிரவேசித்து, கிருபாசனத்தில் இரத்தத்தைத் தெளித்த பிறகு, அவன் வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தான்.

நமது கர்த்தர் இயேசு, பிரதான ஆசாரியர், ஜனங்களை ஆசீர்வதிக்க இன்னும் வெளியே வரவில்லை. இதன் பொருள் மிகப் பெரிய விஷயம் ஆகும். இயேசு திரையின் கீழ் பரலோக பரிசுத்த ஸ்தலத்திற்குள் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே சென்றார். உலகத்தாரை ஆசீர்வதிக்க அவர் இன்னும் தோன்றவில்லை. ஆனால், "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காக **காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு** இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." இந்த கேள்விக்கான பதிலை, இங்கே நான் கொடுக்க முடிந்த குறுகிய நேரத்தில், இது தான் நான் சிறப்பாக செய்ய முடியும் விதத்தில் உள்ளது.

## நியாயத்தீர்ப்புகள் - ராஜாக்களையும் மேன்மக்களையும் கட்டுதல்.

**கே 386:1 :: கேள்வி (1916) - 1 -** சங் 149ம் அதிகாரம் 8ம் வசனம் சொல்கிறது, "அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும் இந்தக் கனம் அவருடைய

பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்." இது தற்காலத்திற்கு உரியதா? அப்படியானால், இது எவ்விதம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறது?

**பதில்.** இந்தப் பாடத்தைப் பற்றியே சொல்வதற்கு காவற் கோபுரத்தில் (Z1914, பக்கம் 135, பாரா 3, பத்தி 1) ஏற்கனவே சில விஷயத்தை நாம் பெற்றிருக்கிறோம். இந்த கட்டுரையை நிச்சயம் படிப்பது நன்றாயிருக்கும். கர்த்தருடைய ஜனங்கள் திரைக்கு இந்த பக்கத்தில் உலகத்தாருக்கு முன்பாக ஏதோ ஒரு வழியில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருப்பார்கள். வேதாகமம் சொல்கிறது, "பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து". இது பரலோகத்தில் களிகூருவதைக் குறிக்கிறது என்று நாங்கள் முன்பு நினைத்தோம். ஆனால், மகிமையில் களிகூருவது, திரைக்கு இந்தப் பக்கத்திலேயே உண்டு என்று நாம் இப்பொழுது பார்க்கிறோம். சங்கீதக்காரன் தொடர்ந்து சொல்கிறார், "தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள்." பரிசுத்தவான்கள் தங்கள் படுக்கைகளின் மேல் இருந்து கொண்டு, அவர்கள் கைகளில் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் வைத்திருப்பார்கள் என்று அவர் தெரிவிக்கிறார். விசுவாசத்தைப் பொருத்த வரையில், படுக்கை என்பது சிரமமில்லாத நிலைமையைக் குறிக்கிறது. நாம் திரைக்கு அந்தப் பக்கத்தில் நிச்சயம் சிரமமில்லாமல் இருப்போம். ஆனால், திரைக்கு இந்தப் பக்கத்தில், விசுவாசத்தில் சிரமம் இல்லாமல் இருப்போம் என்பது வெளிப்படையாக அர்த்தமாகிறது. இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்பது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது. இது கண்டிப்பாக **இங்கே** அர்த்தமுள்ளதாயிருக்கிறது; ஏனெனில், இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தினால் அங்கே யாரும் எதையும் வெட்டப் போவதில்லை. இது நிச்சயம் இங்கே நடப்பதாக இருக்கிறது. பரிசுத்தவான்கள் தங்களுடைய விசுவாசத்தில் இளைப்பாறிக் கொண்டு, கூர்மையாகவும் வல்லமையாகவும் உள்ள தேவனுடைய வார்த்தையைப் பெற்றிருக்கிறவர்களாக, அந்த சத்தியத்தை எதிர்க்கும் ஒவ்வொன்றையும் எதிர்க்க திராணியுள்ளவர்களாக இருப்பதையே, பரிசுத்தவான்களின் கைகளில் இருக்கிற இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை அர்த்தப்படுத்துகிறது. இவையெல்லாம் திரைக்கு இந்தப் பக்கத்தில் இருப்பவைகளாக இருக்கின்றன. எழுதப்பட்டிருக்கிற நியாயத்தீர்ப்புகளை செயற்படுத்துகிற பரிசுத்தவான்கள் இவர்களே. எப்படி? நான் எல்லா விவரங்களையும் கொடுக்க இயலாது. நாம் அந்த நேரத்தை அடையும் போது, திரளான விவரங்கள் சந்தேகமில்லாமல் இருக்கும். கர்த்தர் நமக்குக் கொடுக்கக்கூடியவற்றில் எந்த பங்கையும் எடுத்துக் கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும். அவர் தம்முடைய ஜனங்கள் எல்லோருக்கும் ஒரு பங்கை அளிப்பார்.

இந்த நியாயத்தீர்ப்பு எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை சற்று பிறகு பார்ப்போம். யோர்தான் நதி நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. நியாயத்தீர்ப்பு செய்யும் விதமாக, அப்படிப்பட்ட வழியில் சத்தியத்தை பயன்படுத்துவது, யோர்தானை அடிப்பதைக் குறிப்பதாக இருக்கலாம். எலியா இந்தப் பட்டயத்தைக் கையாளுவார். விவரங்கள் கொடுக்கப்படவில்லை. ஆனால் கர்த்தரின் வழிநடத்துதல்களை நாம் கவனிப்பதற்காக இது நம்மிடத்தில் விடப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் கர்த்தர் நம்முடைய கண்களை அன்பாக திரையிட்டிருக்கிறார். யோர்தான் வரையிலும் எலியா சென்றடைந்ததையும், அங்கே அவர் செய்த முக்கியமான வேலையைப் பற்றியும் ஏதேனும் விசேஷித்த முக்கியத்துவம் இருப்பதைப் பற்றி நாம் இதுநாள் வரையில் ஒருபோதும் யோசித்திருக்கவில்லை. ஆனால், நாம் 1914ல் யோர்தானுக்கு சென்றோம் என்று இப்பொழுது நாம் பார்க்கிறோம். அங்கே எலியாவும் எலிசாவும் நின்று பேசிக்கொண்டிருந்தது போல, இப்பொழுது நாம் செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் சிறிது நேரம் பேசின பிறகு, எலியா தன்னுடைய சால்வையை முறுக்கினான். இது எலியா வகுப்பாருக்குக் கொடுக்கப்படும் ஏதேனும் விசேஷித்த அதிகாரத்தைக் குறிப்பதாக வெளிப்படையாகத் தெரிகிறது; பிறகு அவன் தண்ணீரை அடித்தான். இது எதை அர்த்தப்படுத்துகிறது என்று நாங்கள் தினந்தோறும் கவனித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொன்றும் அந்த அடித்தலுக்கு வழி நடத்தியது. இதற்கு ஆயத்தப்படுத்துவதற்காகவே ஒவ்வொரு விஷயமும் முன்னோக்கிச் சென்றது. முன்னாக நடந்திருக்கிறது எதுவும் இதற்கு வழியை ஆயத்தம் பண்ணுவதற்காக மட்டுமே உள்ளது என்பதை இப்பொழுது நாம் பார்க்கிறோம். சால்வையை முறுக்குவது எதை அடையாளப்படுத்துகிறது என்பதை நான் தினமும் கவனித்துக் கொண்டு இருக்கிறேன். இது

திரளான பணத்தைக் கையாளுவதை அர்த்தப்படுத்துவது போன்று தோன்றுகிறது. எவ்வித சால்வை வந்தாலும், நாம் அதை முறுக்குவதற்கு முயற்சிக்கிறோம். இந்த அடித்தல் நாகரீக உலகம் முழுவதையும் பாதிக்கலாம். இந்த அடித்தலின் பாதிப்பை அவர்கள் உணரப் போகிறார்கள். நாம் தயாராக இருப்போம்.

## நீதி - - எப்பொழுது திருப்தியுறும்?

**கே** 387:1 :: **கேள்வி** (1908) - 1 - நீதி இன்னும் திருப்திபடுத்தப்படவில்லையா? இல்லையெனில் எப்பொழுது திருப்திபடுத்தப்படும்?

**பதில்.** அருமையான நண்பர்களே, நீதி என்பது தேவனுடைய பிரதிநிதியாகும். தேவன் அன்பாயிருக்கிறார் என்று சொன்னால், அது அவருடைய தன்மையின் சாராம்சத்தையேக் குறிக்கிறது. அவர் தம்மைக் குறிக்கும் போது, நீதியின் நிலையிலிருந்து அவர் தம்மை உருவகப்படுத்துகிறார், “நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்.” ஆகவே, நீதியின் திருப்தி என்பது தேவனுடைய திருப்தி என்று உணரப்படுகிறது. தேவன் இப்பொழுது திருப்தி அடைந்திருக்கிறாரா? எந்த முறையில்? தேவன் தம்முடைய சொந்தத் திட்டத்தைப் பொருத்த வரையில், திருப்தி அடைந்திருக்கிறாரா என்று அவரை பற்றி பேசினால், நிச்சயம் திருப்தி அடைகிறார்; அவர் திட்டத்தை உருவாக்கினார்; ஆனால் இதுவரை நீதியைப் பொருத்த மட்டில், தம்முடைய தன்மையின் இந்த பல்வேறு குணநலன்களை தனித்தனியாக வெளிப்படுத்தப்படுவதற்கு அனுமதித்திருக்கிறார். உதாரணமாக, தேவ நீதி செயல்படுவதின் கீழ், கர்த்தர் முதன்மூல தண்டனையை அறிவித்தார், “நீங்கள் சாகவே சாவீர்கள்.” ஆறாயிரம் வருஷங்களுக்கு மேலாக நமது சந்ததி, அந்த நீதியின் தண்டனையின் கீழ் இருந்திருக்கிறது. இன்னும் அது இருந்து கொண்டு இருக்கிறது. உலகம் முழுவதின் மரணத்தை நீதி அழைக்கின்றது. இதன் காரணமாகவே, உலகம் முழுவதும் மரணமடையும் உலகமாக இருக்கிறது. நல்லது, தேவன் தம்முடைய நீதியை திருப்திப்படுத்துவதற்கு ஏற்பாடு ஏதும் செய்திருக்கிறாரா? ஆம், நாம் பதிலளிக்கிறோம். உலகத்தை தாம் அன்பு கூருகிறதாக தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். அவருடைய நீதி உலகத்தை தண்டிக்கிறதாயிருந்தாலும், அதிலிருந்து மீள தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். அதற்கான வழி என்ன என்பதை நமக்கு அவர் காண்பித்திருக்கிறார். அதாவது, நமது கர்த்தர் இயேசு வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறார். இதற்கு இயேசு செய்தது என்ன? நாங்கள் பதிலளிக்கிறோம், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்தார். யாருடைய பாவங்களுக்காக அவர் மரித்தார்? நான் பதில் கூறுகிறேன், அவர் இதை யாருக்கும் ஒதுக்கீடு செய்வதற்கு முன்பாக மரித்தார். இயேசு மரித்த பிறகு, இது யாருக்கும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதன் பிறகு என்ன? மூன்றாம் நாளில் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார். பிதா தம்முடைய சொந்த வல்லமையினால் மரித்தோரிலிருந்து அவரை எழுப்பினார். நாற்பது நாட்கள் கழித்து, அவர் உன்னதத்திற்கு ஏறிப்போனார். எதற்காக? யாருக்காகவோ தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாகத் தோன்றினார். ‘யாருக்காகவோ தோன்றுவது’ என்பது எதை அர்த்தப்படுகிறது? இதே முறையில் தான், வழக்கறிஞர் ஒருவர் உங்களுக்காக நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதியின் முன்பாக தோன்றுகிறார். நீங்கள் அவரை உங்கள் வழக்குரைஞராக செயல்படும்படி நியமித்தால், அவர் உங்களுக்காக நீதிமன்றத்திற்கு முன்பாகத் தோன்றுவார். இப்பொழுது, நான் குற்றம் செய்தவனாக இருக்கலாம். அவர் எனக்காகத் தோன்ற மாட்டார். அவர் எனக்கு நண்பனாகக் கூட இருக்கலாம் அல்லது குறைந்தபட்சம் அவர் எனக்கு உதவிபுரிந்தவராய் இருக்கலாம்; நான் அவரை நியமித்திருக்காவிட்டால், அவர் என்னுடைய வழக்கறிஞராக இருக்க மாட்டார். நான் அவரை நியமிக்காவிட்டால், அவர் எனக்காக நீதிமன்றத்தில் தோன்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவராக இல்லை. இப்பொழுது, நமது கர்த்தர் இயேசு உன்னதத்திற்கு ஏறிய போது, அவர் நமக்காக பிதாவின் பிரசன்னத்திற்கு முன்பாகத் தோன்றினார். “நாம்” என்பது யார்? “நாம்” விசுவாசிகள், விசுவாசக் குடும்பத்தாராகிய நாம். அவர் உலகத்தாருக்காக தோன்றவில்லையா? இல்லை. அவர் ஆதாமுக்காகத் தோன்றவில்லையா? இல்லை. அவர் தோன்றவில்லை. நல்லது, எல்லோருக்காகவும் தோன்றுவதற்கு போதுமான அளவு மீட்பின் பலன் அவரிடம் இல்லையா?

இருக்கிறது. பலனில் குறைவு இல்லை, அவரிடம் திரளான பலன் உள்ளது! மனுக்குலத்தின் எந்த ஒரு அங்கத்திற்கும் ஒரு பலி தேவையாக இருந்தது. இயேசுவின் மரணத்தைத் தவிர, மனுக்குலத்தின் எந்த ஒரு அங்கமும் தேவனுடன் இணக்கமுற முடியாது. ஆனால், உங்களுடைய பாவங்களுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் இணக்கமடையச் செய்வது தேவனுடைய திட்டத்தில் இருந்ததாக அனுமானித்தால், அதை செய்வதற்கு சாத்தியமாக, இயேசுவின் முழுமையான மரணமும் தேவைப்பட்டிருக்கும், அப்படியில்லையா? நான் தனியாக இருந்தால், என்னுடைய பாவநிவாரணத்திற்காக, இயேசுவின் மீட்பின் பலன் முழுவதும் எடுக்கப்பட்டிருக்கும். இதைச் செய்வதற்கு இதைவிட குறைவாக ஏதுமில்லை. ஆகவே, ஆதாமுக்காக பாவநிவிர்த்திப் செய்யப்பட்டிருந்தால், இதற்கு எல்லாமும் தேவைப்பட்டிருக்கும். ஆனால், ஒரு மனுஷனுடைய கீழ்ப்படியாமையின் மூலமாக எல்லாரும் மரணமடைந்ததினால், ஆயிரம் பேர்களுக்கோ அல்லது நூறாயிரம் பேர்களுக்கோ அல்லது பத்து லட்சம் பேர்களுக்கோ அல்லது மனுக்குல அங்கங்கள் அனைத்திற்கும், ஆதாமுக்காகவும் தம்முடைய இரத்தத்தைப் பிரயோகப்படுத்துவதற்கு மீட்பின் விலைக்கிரயத்தை செலுத்திய அந்த ஒரே நபருக்கு இது சாத்தியமாக இருக்கிறது. அவர் தேர்ந்தெடுக்கும் எத்தனை பேர்களுக்காகவும் அவர் தோன்ற முடியும். அவர் ஒருவருக்கு அல்லது எல்லோருக்கும் தம்முடைய பலியின் பலனை பிரயோகிக்க முடியும்; ஆனால், அவருடைய பலியை விட குறைவாக ஏதும் யாருக்கும் செய்ய முடியாது. எல்லோருக்கும் அவருடைய பலியை விட அதிகம் தேவை இல்லை. இப்பொழுது, அவர் யாருக்காக தோன்றினார்? அவர் விசுவாசக் குடும்பத்தாருக்காகத் தோன்றினார். இந்த விஷயத்தை எடுத்துக் காட்டுவதற்கு நமக்கு எங்கேயாவது ஏதேனும் உள்ளதா? லேவியராகமம் 9ம் அதிகாரத்தில், ஆசரிப்புக் கூடார நிழல்களில், இந்த விஷயத்தையே காண்பிக்கிறது என்று நான் பதிலளிக்கிறேன். பிரதான ஆசாரியன் தன்னையே அடையாளப்படுத்தும் காளையை ஒப்புக்கொடுத்த பிறகு, பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றான். அவன் யாருக்காகத் தோன்றுவான்? அவன் தனக்காகவும், தன்னுடைய சரீரத்திற்காகவும், தன்னுடைய குடும்பத்திற்காகவும் தோன்றினான். அவன் தன்னுடைய சொந்த சரீரத்தின் அங்கங்களான சொந்த குமாரர்களுக்காக, ஆசாரியர்களுக்காக, லேவிக்கோத்திரமாகிய தன்னுடைய சொந்த கோத்திரத்துக்காகத் தோன்றினான். இவர்கள் எல்லோருக்காவும் அவன் இரத்தத்தைத் தெளித்தான். இது ஏற்றுக்கொள்ளப்பட்டதா? ஆம். யாருக்காகா? இதை யாருக்கு அவர் பிரயோகப்படுத்தினாரோ, அவர்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் யாருக்காக இதை பிரயோகப்படுத்தினாரோ, அவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கர்த்தர் இயேசுவை மீட்கும்பொருளாக நாம் பார்க்கும் போது, இதை எல்லோருக்கும் பயன்படுத்தியிருக்கலாம் என்று நாம் பார்க்கிறோம். ஆனால், இது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய விதமாக செய்யப்படவில்லை. இது அவருடைய அங்கங்களுக்கு, அவருடைய வீட்டாருக்கு மட்டும் பிரயோகப்படுத்தப்பட்டது. இப்பொழுது கிறிஸ்துவுடன் இவ்விதமாக இருக்கிறது. அவர் தம்முடைய பலியின் பலனை நமக்காக, விசுவாசக் குடும்பத்தாருக்காக, எல்லா விசுவாசிகளுக்காக பிரயோகப்படுத்தினார். இந்த விசுவாசிகளுக்கு மத்தியில் அர்ப்பணித்தவர்கள், அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறார்கள். அவர் நமக்காக இதைப் பிரயோகப்படுத்தினார். இதன் விளைவு என்ன? நம்மை பொருத்த வரையில், நீதி திருப்திப்படுத்தப்பட்டது தான் விளைவு. நாம் எப்படி அறிகிறோம்? ஏனெனில், கர்த்தர் இயேசு நம்முடைய பாவங்களுக்காக சமரசம் செய்திருக்கிறார் என்று வேதாகமம் கூறுகிறது. பிதாவே நம்மில் அன்புகூருகிறார் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது. இரத்தத்தின் மூலமாக நாம் தேவனை அணுக முடியும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது. யார் அணுக முடியும், பாவிகளா? இல்லை, நல்லது, யார்? **விசுவாசிகள்** நெருங்கலாம். பாவத்திற்கு புறம்பாக தங்கள் முதுகை யார் திருப்பியிருக்கிறார்களோ, அவர்கள் விசுவாசக் குடும்பத்தின் அங்கங்களாக ஆகியிருக்கிறார்கள். அவர்கள் அவருடைய இரத்தத்தின் மூலமாக பிதாவை நெருங்கலாம். மற்றவர்கள் இரத்தத்தின் மூலமாக தேவனை நெருங்க முடியாது; அவர்கள் அப்படி இருக்க வேண்டும் என்பது நோக்கமில்லை. இந்த குறிப்பிட்ட வகுப்பாருக்கு மட்டுமே அவர் தம்முடைய இரத்தத்தை பிரயோகப்படுத்தினார். இப்பொழுது, இரண்டாவது நடவடிக்கை என்ன? நாங்கள் பதிலளிக்கிறோம், இரண்டாவது நடவடிக்கை நிழலில் கூட காண்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்

நமக்காகத் தோன்றிய பிறகு, அவர் நம்மில் தோன்றினார். அதாவது, அவர் இந்த அர்ப்பணித்தவர்களை தம்முடைய சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொண்டார். நிழலில் கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடாவாக இருக்கிற அவர்களை ஏற்றுக்கொண்டார். அவர்கள் அவர்களுக்குச் சொந்தமாக இனி மேல் இல்லை. “நீங்கள் மாம்சத்துக்குட்டவர்களாயிராமல்”. அவர் தம்முடன் உடன்-பலி செலுத்துகிறவர்களாக ஏற்றுக் கொள்கிறாரோ, அவர்கள் எல்லோரும் முதலாவது அவர்களுடைய சொந்த தனித்தன்மையை விட்டு விட வேண்டும். “நீங்கள் மரித்தீர்கள்”. இப்பொழுது ஒரு கருத்து உள்ளது. நம்முடைய அருமையான நண்பர்களில் திரளான பேர்கள் பலவித அபிப்பிராயத்தில் உள்ளனர் என்று நான் நினைக்கிறேன். “நீங்கள் மரித்தீர்கள்” என்பதை அவர்கள் பார்க்கிறதில்லை. **“நீங்கள்”** என்பது இல்லை; நீங்கள் ஒரு பொருட்டாகவே இல்லை. அருமையான நண்பர்களில் சிலர் கூறலாம், “சகோதரர் ரசல், நாங்கள் பலி செலுத்துகிறதில்லையா?” இல்லவே இல்லை; பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடாவை சங்கரித்தான்; வெள்ளாட்டுக்கடாவுக்கு தான் சங்கரிக்கப்படுதலில் செய்வதற்கு ஒன்றுமில்லை; மாம்சத்தின்படி நீங்களும், மாம்சத்தின்படி நாங்களும் தேவனிடத்தில் பலியாக நம்மை ஒப்புக்கொடுக்கும் போது, அது அந்த வெள்ளாட்டுக்கடாவினால் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த வெள்ளாட்டுக்கடா எவ்வித பலியையும் செய்கிறதில்லை. ஆகவே, நீங்கள் பலியிடுதலை செய்திருக்கவில்லை, நீங்கள் இப்பொழுது பலியிட்டுக் கொண்டிருக்கவில்லை. நீங்கள் உங்கள் சொந்த இரத்தத்தை ஒப்படைக்கப் போகிறதில்லை. அது போன்று எதுவும் இல்லை. நீங்கள் வெறுமனே உங்களை கர்த்தரிடத்தில் ஒப்படைத்தீர்கள்; உங்களுடைய தனித்துவம் உடனேயே இழந்து விட்டது; நீங்கள் மரித்தீர்கள், வெள்ளாட்டுக்கடா கொல்லப்பட்ட போது, அது நீங்கள் ஒரு பழைய சிருஷ்டியாக, மரிக்கிற ஒரு மனுஷனை அடையாளப்படுத்துகிறது. இனி மேல் என்ன? “இனி கிறிஸ்துவுக்கென்று பிழைத்திருக்கிறோம்.” கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக இருக்கிறோம். இது தான் நான் கொண்டிருக்கிற ஒரே நிலைப்பாடு; நீங்கள் கொண்டிருக்கிற ஒரே நிலைப்பாடு இதுவே. ஏனெனில் நாம் சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறோம். சரீரத்தின் எந்த அங்கங்கள் பலியிடுதலைச் செய்கிறது? நான் பதிலளிக்கிறேன், இது தலை தான். உங்களுடைய அறிவுத்திறன் எல்லாம் உங்கள் தலையில் இருக்கிறது. ஆகவே, சபையின் தலையாகிய இயேசு கிறிஸ்துவிடம் உள்ளது. சபையின் அனைத்து விருப்பமும் தலையில் உள்ளது. பலியிடுதலில் சபையின் அனைத்துப் பொறுப்பும் தலையாகிய கிறிஸ்துவில் உள்ளது; பலியிடுதலில் உதவி செய்ய கை அல்லது வேறு ஏதாவது அங்கத்தை அவர் பயன்படுத்தலாம். ஆனால், முழு பணியையும் செய்கிறவர் தலையாகிய பிரதான ஆசாரியரான அவரே. நாம் வெறுமனே, தனிப்பட்டவர்களாக மறைந்திருக்கிறோம்; பலியிடுவதில் நாம் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. அவருடைய சரீர அங்கங்கள் என்ற முறையில், தலையுடன் நாம் செய்வது ஒன்று உண்டு, அதாவது, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக, நாம் அவருடன் ஒத்துழைக்க வேண்டும். கர்த்தருடைய சரீரத்தில் உங்களுடைய சிறு விரல் இருப்பதாக அனுமானித்தால், அது கர்த்தருக்கு விரோதமாக இருக்கிறது என்று உருவகமாகப் பேசினால், அந்த சரீரத்தில் அது இனி மேல் இருப்பதற்கு உரிமை இல்லை. ஆனால், அந்த சிறு விரல் தலையுடன் இணக்கமாக இருந்தால், தலை இயக்குகிற எல்லாவற்றையும் இது செய்யும்; ஆனால் அந்த சிறு விரல் மாம்சத்தின்படி இருக்கவில்லை; இது ஒரு **புதிய சிருஷ்டியாக** கிறிஸ்துவின் சரீரத்தில் என்னுடைய அங்கத்தை அடையாளப்படுத்துகிறது. ஆகவே, இந்த எண்ணத்தைப் பெறுங்கள். இந்த முழு விஷயமும் உங்கள் முன்பாக நேராகி விடும். ஆதியும் அந்தமுமாக இது எல்லாம் கிறிஸ்துவின் பலி ஆகும். இந்த நல்ல பணியைத் துவக்கிய அவர் இதை முடிப்பார். எல்லா பணியும் கிறிஸ்துவைச் சார்ந்தது. அவர் மத்தியஸ்த பணியைத் துவங்குவதற்கு, தலை மத்தியஸ்தராக இருக்கிறார். முதலாம் வருகையில் மத்தியஸ்தம் பண்ணும் பணியை அவர் ஆரம்பித்தார் என்பதின் பொருள் என்னவென்றால், அவர் பிறகு செய்து கொண்டிருந்ததற்கு அடிப்படையாக இந்த பணியை அவர் துவக்கினார். உலகத்துடனான புதிய உடன்படிக்கையின் அடிப்படையாக, அவர் தம்முடைய சொந்த ஜீவனை கொடுத்துக் கொண்டிருந்தார். அடுத்த யுகத்திற்கான மத்தியஸ்தம் செய்யும் பணிக்கு இதுவே அடிப்படை; அவர் தம் சொந்த ஜீவனைக் கொடுத்தார். அப்படிச் செய்த பிறகு, இந்த சுவிசேஷ யுகத்தில் அவருடைய சரீரத்தின் அங்கங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார், ஆனால் அவர் இன்னும் தலையாக இருக்கிறார். முழு

சரீரமும் வளர்ந்து கொண்டு இருக்கிறது. நீங்கள் விரும்பினால், கிறிஸ்து பெரும் ஸ்தானத்தில் வளர்ந்து கொண்டு இருக்கிறார். இது பெரும் கிறிஸ்து - தலையாகிய கிறிஸ்து மற்றும் பிதாவின் சித்தத்தினால் அந்த தலையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கங்கள்; ஆகவே, கல்வாரியில் பணியைத் தொடங்கிய அதே பெரும் கிறிஸ்து தான் ஆயிர வருஷ யுகத்திலும் பணியைச் செய்வார். சிலுவையில் தம்முடைய பலியுடன் பணியைத் துவக்கி, இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் செயற்படுத்திக் கொண்டு. அவர் ஏற்றுக்கொள்கிறவர்களை மாம்சத்தில் பலியிட்டுக் கொண்டிருக்கிறவர் அதே பெரும் கிறிஸ்து தான். சுவிசேஷ யுகம் முழுவதிலும் அவர் பலியிட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய பலியை முடிக்கவில்லை. அவர் தம்முடைய பலியை முடிக்கிற வரைக்கும், முழு பாவநிவாரணத்தை, முழு காணிக்கையை செய்ய மாட்டார். உங்களுக்கு நினைவிருக்கும், நிழலில், வெள்ளாட்டுக்கடாவைக் கொன்ற பிறகு, பிரதான ஆசாரியன் அதனுடைய இரத்தத்தை எடுத்து, பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு வந்து, பிறகு உடனடியாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றான். அருமையான நண்பர்களே, அந்த வெள்ளாட்டுக்கடாவைக் கொல்வதற்கும், அதனுடைய இரத்தத்தை உள்ளே எடுத்துச் செல்வதற்கும் இந்த சுவிசேஷ யுகத்தில் 1800 வருஷங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால், இது அவருடைய சொந்த இரத்தமாகும், ஏனெனில், ஞாபகத்தில் கொள்ளுங்கள், “நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல்”. இதனுடன் எந்த பணியும் செய்வதற்கு முன்பாக, எல்லாம் ஒப்படைக்கப்பட்டு விட வேண்டும். நீங்கள் முழுவதுமாக ஒப்படைத்து, அவற்றிலிருந்து நீங்கப்பெறாவிட்டால், அவர் இதை ஏற்றுகொள்ளமாட்டார். ஆகவே, நீங்கள் இன்னும் உங்களுடனே பிடித்து வைத்துக் கொண்டிருந்தால், நீங்கள் அவருடையவராக இருக்கவில்லை. அவருடைய சரீரத்தின் அங்கமாகவே இருக்கவில்லை. கர்த்தரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்திருக்கிறவர்கள் அவர்களே. அனைத்தும் அவருடைய கைகளில் இருக்கிறது என்றும், இது அவருடைய இரத்தம் என்பதைக் கண்டுணர்கிறவர்கள் அவர்களே. அவர்களுக்காக அவர் கிரியை செய்கிறார். இறுதியாக, அவர் அதை ஒப்படைக்கிறார், உங்களுடைய இரத்தமாக அல்ல, நீங்கள் அதை காணிக்கையாக்குகிறதில்லை, மேன்மையான பிரதான ஆசாரியரைத் தவிர. அந்த காணிக்கை நடைபெறும் போது, அவருடைய சரீரத்தின் அங்கமாக நீங்கள் அவரில் இருக்கலாம். ஆனால் இந்த முழு பொறுப்பு, இந்த முழுமையான பலியின் மீட்பு சபையின் தலையைச் சார்ந்ததாயிருக்கிறது. அவர் உங்களை பிதாவின் முன்பு நிறுத்தி, பலியின் மீட்பை காணிக்கையாக்கும் போது, அது அவருடைய சொந்த பலி ஆகும். நீங்கள் அவரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கங்களாக வெறுமனே சேர்ந்து கொள்கிறீர்கள். பிறகு, இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் நீதியின் முன்பாக முழுவதுமாக காணிக்கையாக்கப்படுகிறது. பிறகு என்ன? நமக்கு எது சொல்லப்படுகிறது? நீதிக்கு காணிக்கை யாக்கப்பட்ட உடன், சகல உலகத்தார் கிறிஸ்துவினிடத்தில் திரும்புவார்கள். அவர்களுடன் என்ன செய்ய வேண்டும்? அவர் அவர்களுடன் எதைச் செய்ய விரும்புகிறாரோ, அதைச் செய்ய வேண்டும். நல்லது, அவர்களுடன் அவர் எதைச் செய்ய விரும்புகிறார்? அருமையான நண்பர்களே, தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்கள் மற்றும் அன்பின் இரக்கங்கள் எல்லாவற்றினாலும் ஆயிர வருஷ ஆட்சியில் இயேசு வெளிப்படுவார் என்று வேதாகமம் சொல்கிறது. உலகத்தார் அங்கே செல்வதற்கு வழி நடத்தும்; தேவ நீதியைப் பொருத்த வரையில் நீதி அங்கே திருப்திப்படுத்தப்படும். நீதி உலகத்தாரை மனந்திரும்பச் செய்து, கிறிஸ்துவிடம் திரும்பச் செய்வதில் திருப்தி அடைந்த உடனேயே, இந்த பாவ ஆளுகை அனைத்தும், மரணமும் முடிவுக்கு வரும். இது இப்பொழுது தொடருகிறது. ஏனெனில் நீதி இன்னும் திருப்திப்படுத்தப்படவில்லை. ஏனெனில் உலகத்தார் இன்னும் மனந்திரும்பப்படவில்லை. பலி இன்னும் முடிவடையாத காரணத்தினால், உலகத்தார் இன்னும் திரும்பவில்லை; கடைசி அங்கம் தன்னுடைய ஓட்டத்தை முடிக்காத வரையிலும், கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கம் கிறிஸ்துவுடன் பாடுகளை அனுபவித்து, அவருடைய பாடுகளில் பங்காளிகளாக்கப்படாத வரையிலும், தேவனுடைய நீதிக்கு முன்பாக இந்த காணிக்கை நடைபெறாது. உலகத்தார் கிறிஸ்துவிடம் மாற்றப்படுவது நடக்காது. இப்பொழுது, இந்த விஷயத்தை உங்கள் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். நீதியின் திருப்தியடைதலைப் பற்றி முழுமையாக விஷயம் தெளிவாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். திருப்தி அடைதல் என்பது ஒன்றே; இது நீண்ட

காலத்துக்கு முன்பே இது செய்யப்பட்டிருக்க வேண்டும்; இது இன்னும் செய்யப்படவில்லை. இது இன்னும் முடிவடையவில்லை. எல்லாவற்றிற்கும் அடிப்படையான நமது கர்த்தருடைய பலி கல்வாரியில் முடிந்தது. ஆனால் அவர் தம்முடைய சரீரமாகிய சபையுடன் செயல்படக்கூடிய இடையிலுள்ள பணியை உடனே துவக்கினார். அவர் இந்த இடைப்பட்ட கிருபையின் பணியை உங்களிலும், என்னிலும், இந்த விசுவாச வகுப்பாரிலும் அவர் முடிக்கவில்லை. ஆனால், காலப்போக்கில் இதை முடிப்பார். முதலாம் பலியை காணிக்கையாக்கிய அதே பிரதான ஆசாரியர் இரண்டாம் பலியை காணிக்கையாக்குவார். அது உலகத்தாரின் மாற்றத்தைக் கொண்டு வரும்.

## நீதி - எப்பொழுது திருப்தி அடையும்?

**கே 391:1 :: கேள்வி (1909) - 1 -** 1தீமோ 2:5,6ல் நாம் வாசிக்கிறோம், "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே." நீதி கோருகிறவைகள் இந்த தற்காலத்தில் திருப்தி செய்யப்படுகிறதா?

**பதில்.** உலகம் பாவத்தின் கீழ் இருக்கிறது என்பதையும், நீதியானது பாவியிடம் பிடிமானமாய் இருப்பதில் திருப்திப்படுத்தப்படுகிறது என்பதையும் தவிர, உலகத்தாருக்கு விரோதமாக நீதி கேட்பவைகள் எல்லாம், இந்த தற்காலத்தில் திருப்திப்படுத்தப்படவில்லை. ஆகவே, நீதி திருப்தியடைந்துள்ளது என்று நாம் கோரலாம். ஆனால் பாவியை போக அனுமதித்து, பாவி நித்திய ஜீவனைப் பெறச்செய்வதற்கு நீதி திருப்திப்படுத்தப்படவில்லை.

நல்லது, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்ற இந்த வசனம் எதைக் குறிக்கிறது? ஏன்? அருமையான சகோதரனே, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஏதேனும் கொடுப்பதும், பிறகு அதைப் பிரயோகப்படுத்துவதும் இரண்டு வித்தியாசமான காரியங்கள். நாங்கள் ஒன்றை எடுத்துக்காட்டாகச் சொல்கிறோம்: பசிபிக் கரையோரத்தில் ஸ்காண்டிநேவியர்கள் எல்லோரும் கல்வி பயில கல்லூரி ஒன்றைக் கட்டுவதற்கு ஜான் ஸ்மித் பத்து லட்சம் டாலர்களைக் கொடுத்தார் என்று நாம் சொல்லலாம். பத்து லட்சம் டாலர்களைக் கொடுப்பது ஒரு காரியம், கட்டிடத்தைக் கட்டுவது வேறு ஒரு காரியம், கட்டிடத்தில் ஜனங்களைச் சேர்ப்பது ஒரு விஷயம், அவர்கள் உள்ளே சென்ற பிறகு, அவர்களுக்கு கல்வி கற்க வைப்பது இன்னும் வேறு ஒரு காரியம் ஆகும். அவர் பத்து லட்சம் டாலர்களை கொடுத்த போது, ஒரு நோக்கத்திற்காக அவர் அதைக் கொடுத்தார். ஆகவே, இயேசு மரணம் அடைந்த போது, எல்லோருக்கும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார். தேவன் ஏற்கனவே குறியீடு செய்த நோக்கத்தின்படி, அதிலிருந்து ஏதும் மாறாத விதமாக, உரிய காலத்தில் நிரூபிக்கப்படும்.

## நீதி - திருப்தி Vs கிறிஸ்துவின் மரணம்.

**கே 392:1 :: கேள்வி (1910) - 1 -** "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்" பாவிகளுடன் நீதி திருப்திப்படுகிறதில்லை என்ற கருத்துடன், இதை தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** அந்த முறையில் தெரிவிப்பது தவறு. பாவத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவில் தேவனுடைய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கிற பாவிகளுடன் நீதி திருப்திப்படுத்தப்படுகிறது. அது தான் "நாம்" வகுப்பார். இப்படிப்பட்டவர்கள் மனப்பூர்வமான பாவிகளாக இல்லாததால், இனிமேல் பாவிகளாக அவர்கள் இருக்கிறதில்லை. நீங்கள் மனப்பூர்வமான பாவியாக இருக்கின்ற வரையிலும், , நீங்கள் உலகத்தின் பங்காக இருக்கிறீர்கள். நீங்கள் பாவத்தை விட்டு விலகி, அவருக்கு அருகில் ஈர்க்கப்பட்ட பிறகு அவர் உங்களிடம் நெருங்கி வந்தார். நீங்கள் பரிந்து பேசுகிறவர்கள் வழியாக பிதாவிடம் வந்தீர்கள் என்பதைத் தவிர, அவர் இன்னும் உங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

## நீதி - ஒரு பகுதிக்கு மட்டும் பலன் பிரயோகிக்கப்படுதல்.

**கே 392:2 :: கேள்வி (1910) - 2 -** கண்டனத்திற்குள்ளான சந்ததியில் ஒரு பங்கு பேர்களுக்கு மட்டும் மீட்பின் பலனைப் பிரயோகிப்பதற்கு, தொடர்ந்து வேறு ஏதும் பிரயோகம் பண்ணப்படாத நிலையில், தேவ நீதி ஏற்றுக்கொள்ளுமா? அப்படி இருந்தால், நீதியின் இந்த கொள்கையைத் தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** இது ஒரு தவறான கருத்து ஆகும். இதை நாங்கள் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். நமது கர்த்தர் தம்முடைய பணியை முடித்த நேரத்திலிருந்து, மீட்பின் பலி நீதியின் கைகளில் ஏற்கனவே இருந்தது. அவருடைய மீட்பின் பலன் சபைக்கு மட்டும் சுமத்தப்பட்டுள்ளது என்பதைத் தவிர, **சொல்லர்த்தமாகப் பார்த்தால், மீட்பின் பலி இன்னும் எவருக்கும் பிரயோகிக்கப்படவில்லை. பலனை பிரயோகப்படுத்துவதற்கும், பலனை சுமத்துவதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது.** மேன்மையான பிரதான ஆசாரியர் மனுக்குல உலகத்துக்குக் கொடுக்கப்போவது என்பது 'அவருடைய பலன் சுமத்தப்படுதல்' இல்லை. ஆனால், கிறிஸ்துவின் மரணத்தினால் கிடைக்கப்பெற்ற, அல்லது, விலைக்கிரயம் பண்ணப்பட்டதான ஆதாமினால் இழந்தவற்றை எல்லாம் உலகம் திரும்பப் பெற்றுக்கொள்ளும். ஆனால், இது சபைக்கு அல்ல. சீர்பொருந்துதலை நாம் பெறுகிறதில்லை. கிறிஸ்து ஒப்புடைத்த விஷயங்களை நாம் பெறுகிறதில்லை. அவற்றை அவர் உலகத்தாருக்குக் கொடுப்பார். சீர்பொருந்துதலின் ஆசீர்வாதங்களைப் பெற நாம் அழைக்கப்படவில்லை. கிறிஸ்துவுடன் பலியிடுவதற்கும், பாடுபடும் சலுகையைப் பெறுவதற்கும் அழைக்கப்படுகிறோம். நம்முடைய சரீரங்கள் பூரணமாக இல்லை என்பது தான் ஒரே வித்தியாசம். ஆகவே, பிதாவிடம் நாம் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில், நம்முடைய பலவீனங்களை சரிசெய்வதற்காக அவருடைய பலன் போதுமான அளவு சுமத்தப்படுவதற்கு நமக்கு பரிந்து பேசுகிறவராயிருக்க, நமது பிரதான ஆசாரியரை நாம் கேட்க வேண்டும்.

## நீதி - சுவிசேஷ யுகத்திலும் ஆயிர வருஷ யுகத்திலும் அனுபவம்.

**கே 392:3 :: கேள்வி (1911) - 3 -** ஆயிர வருஷ யுக அனுபவமில்லாமல், தீமையின் அனுபவத்தை மட்டும் மனுக்குலத்திற்குக் கொடுத்திருப்பது நீதியுடன் இணக்கமாயிருக்குமா?

**பதில்.** ஆம், நீதி என்பது என்ன என்று நாங்கள் அறிந்து கொண்ட வரையில், நீதியின் வழிமுறைகளில் சரியாக நாங்கள் பகுத்துணர முடிந்தபடி, இது சரியென்று நான் நினைக்கிறேன். உதாரணமாக நாம் சொல்ல முடியும், ஒரு நாய்க்கு எதிர்கால வாழ்வு பற்றிய எவ்வித எதிர்பார்ப்பும் கிடையாது. நாயின் வாழ்க்கை கரடுமுரடும், தடுமாற்றமுமான அனுபவத்திற்கு இணையாகச் சொல்லப்படுகிறது. யாரோ ஒருவர் சொல்கிறார், "அவர் நாயின் வாழ்வை நடத்தியிருக்கிறார்." இது மிகவும் நேர்த்தியான வாழ்க்கை என்பதை அவர் அர்த்தப் படுத்தவில்லை. இந்த நிலையில் நாய்களை வாழ அனுமதித்து, அவைகளுக்கு அநியாயம் இழைக்கப்படும் விதமாக தேவன் நாய்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்று நாம் சொல்ல முடியுமா? அவைகளுடைய நிலைமைக்கு, நல்ல முறையில் பொருந்தும் விதமாக அவைகள் மகிழ்ச்சியுடன் இருக்கும் நாளையும் பெற்றிருக்கின்றன. எலும்புக்காக போட்டி போடுவதிலும் கூட, அவைகளுடைய மகிழ்ச்சிகரமான நேரங்கள் அவைகளுக்கு உண்டு. மனுஷனைப் பொருத்த வரையில், தேவனுடைய சட்டத்திற்கு விரோதமான பாவம் அவன் மேல் மரண தண்டனையை வருவித்தது. பிறகு, அந்த மரணம் அவனுக்கு விரோதமாக இயக்கமுறுவது போலவே, மற்ற மிருக சிருஷ்டிப்பு எல்லாவற்றிலும் இதே நிலை இருக்கிறது. தேவன் அவனிடம் எதுவும் கடன்பட்டிருக்கவில்லை. மனுஷனுடைய மீட்பிற்காக எதுவும் செய்வதற்கு தேவனுடைய பங்கில் பொறுப்பு ஏதுமில்லை. இவ்வுலகத்தில் உள்ள பாவம், பேரழிவு, உபத்திரவம், வலி, துயரம் ஆகியவை தேவன் அளித்தது அல்ல. ஆனால், மனுஷனுடைய பாவம் அவன் மேல் இவைகளைக் கொண்டு வந்தது. ஆகவே, மனுக்குலத்திற்கு எதுவும் செய்வதற்கு நீதியின் பங்கில் எவ்வித கடமை, பொறுப்பு கிடையாது. தேவன் ஏதாவது செய்திருக்கலாம் என்றும், தேவ நீதி அவிசுவாசமாக கைவிட்டு விட்டதையும் உணர்த்தும் விதமாக, இந்த பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை அனுமதிக்கக்கூடிய தற்கால ஒழுங்குமுறைகளில் எதுவும் கிடையாது.

மனுஷனுடைய மீட்பு, சீர்பொருந்துதல் போன்றவைகளில் தேவன் செய்ய இருப்பதெல்லாம், முழுமையான இரக்கத்திலும், முழுமையான கிருபையிலும் மட்டுமே. அவனுக்கு விரோதமாக நீதி வேண்டுகிற தேவையோ அல்லது கோரிக்கையோ அல்ல.

## நீதி - இது கோரப்பட்டதா?

**கே 393:1 :: கேள்வி (1913) - 1 -** தேவ நீதி தகப்பனாகிய ஆதாமுக்காக ஒரு பலி தேவை என்று கோரியதா?

**பதில்.** தேவ நீதி எதுவும் தேவை என்று கோருவதில்லை. எதுவும் தேவை என்று காத்திருக்காமல், தேவ நீதி ஆதாமிடம் நடவடிக்கை மேற்கொண்டது. - "ஆதாம், நீ சாகவே சாவாய்." நீதி காத்திருப்பதே இல்லை. நீதி இந்த 6000 வருஷங்களாக காத்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் தேவனுடைய அன்பு செயல்பட ஆயத்தமாகும் போது தேவ அன்பு, நீதியுடன் கணக்கிட வேண்டியிருந்தது. தேவ அன்பு சொல்லியது, "இதோ இங்கே மனுஷ குடும்பம் உள்ளது. அவர்களுக்கு ஆசீர்வாதத்தை வரவழைப்பதே என்னுடைய நோக்கம் ஆகும்; இப்பொழுது அவர்கள் தெளிவான அறிவிற்கும், திரும்பி வருகிறதற்கான வாய்ப்புக்கும் கொண்டு வரப்பட்டால், துயரங்கள், கண்ணீர், பெருமூச்சு, அலறல், அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆகியவை அவர்களில் பலருக்கு பயன்படுமாறு செய்யப்படலாம் என்று நான் நம்புகிறேன்". திரும்புகிறதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்குக் கொடுப்பது தான் தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. ஆனால் தேவன் அந்த அன்பான நோக்கத்தை செயற்படுத்தும் போது, தம்முடைய சொந்த ஏற்பாடுகளின்படி, தம்முடைய சொந்த நீதியின் தண்டனையை கைக்கொள்ளுவதும், தம்முடைய சொந்த நீதியின் தண்டனையை சரி செய்யும் விதத்தில் ஒரு மாற்றீடு ஏற்பாடு செய்வதும் தேவையாக இருந்தது. நீதி எதையும் கோருவதாக இதற்கு அர்த்தம் இல்லை. இங்கே நான் இந்த கைக்குட்டையை வைத்திருக்கிறேன். ஆகவே ஆதாமுக்கு ஒரு மாற்றீடாக எதையும் நீதி கேட்பதில்லை; நீதி சொல்லுகிறது, "ஆதாம் எனக்கு உண்டு". ஆனால் அன்பு சொல்லும் போது, "உன்னுடைய கையிலிருந்து ஆதாமை வெளியே எடுத்து, அவன் நித்திய ஜீவனுக்குள் வருவதற்காக மேலும் வாய்ப்பு கொடுக்க விரும்புகிறேன்." நீதி சொல்லுகிறது, "நீ ஆதாமை என்னுடைய கையிலிருந்து வெளியே எடுத்தால், அதில் வேறு ஒன்றை வை. ஆகவே, தேவன் அந்த தேவையைச் செய்து, எல்லாருடைய மீட்கும் விலைக்கிரயமாக நீதிபரராகிய இயேசு கிறிஸ்துவை அளித்தார்.

## நீதி - அநீதிக்காக நீதி.

**கே 393:2 :: கேள்வி (1914) - 2 -** நீதி தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரம். குற்றமுள்ளவர் விடுவிக்கப்படுவதற்கு குற்றமற்றவர் பாடுபட நீதி எப்படி அனுமதிக்கிறது?

**பதில்.** இந்த கேள்வியைக் கேட்டவர் வேதாகம பாடங்கள் ஐந்தாம் வால்யூமை படிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுவது தான் இந்த கேள்விக்கான என்னுடைய சரியான பதில் ஆகும். அவர் வேறு எந்த வழியிலும் யோசிக்க அல்லது பார்க்க முடியாத விதமாக, அங்கே அனைத்தையும் அவர் தெளிவாகப் பெற முடியும். இதை அவர் முழுவதுமாக வாசித்த பிறகு, அவர் எப்படி காணப்படுவார் என்பதை நாங்கள் பார்க்க ஆசைப்படுகிறோம். சுருக்கமாகச் சொன்னால்: தேவனுடைய நீதி நமது கர்த்தர் இயேசுவின் மேல் எதையும் வற்புறுத்தவில்லை. நம்முடைய பாவங்களுக்காக மரணமடைவதற்கு நமது கர்த்தர் இயேசுவை தேவ நீதி வற்புறுத்தியிருக்க முடியாது; ஆனால், வேதாகமம் கூறுகிறது, நீதிக்கு முழு இணக்கமாகவும், அன்புக்கு முழு இணக்கமாகவும் தேவன் தமது குமாரனுக்கு முன்பாக பெரிதானதும் மகிமையானதுமான உள்நோக்கத்தை நிர்ணயித்து, இதைத் தேர்ந்தெடுப்பதையோ அல்லது பாராமுகமாய் இருப்பதையோ திறந்த நிலையில் விட்டு விட்டார். குமாரன் அந்த உள்நோக்கத்தை ஏற்றுக்கொள்ளத் தேர்ந்தெடுத்தார் என்றும், அந்த உள்நோக்கத்தை ஏற்றுக்கொண்டு அவர் தம்மையே மீட்கும் பொருளாகக் கொடுத்தார். கிறிஸ்துவைப் பொருத்த

வரையில் இது தாமாக முன்வந்து செய்த காரியம் ஆகும். ஆனால், பிதாவின் உள்நோக்கம் இதுவாக இருந்தது: குமாரன் தம்முடைய அன்பையும், கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்த, பரலோக தளத்தை விட்டு, மனுஷனாக பூமிக்குரிய தளத்திற்கு வரும் அளவுக்குத் தம்மையே தாழ்த்தி மனுஷனுடைய சார்பாக, தம்மையே முழுவதுமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, இந்த பூமிக்குரிய சுபாவத்தை மனுஷீக நலனுக்காக பலியிடும் வகையில் ஒப்புக்கொடுத்தாரானால், தேவன் அன்பின் இந்த செயல் விளக்கங்கள் அனைத்தையும் மெச்சி, இதற்கு வெகுமதி அளிப்பார். தேவன் இதற்கு வெகுமதி அளித்தார் என்று வேதாகமம் சொல்கிறது! பரிசுத்தவானாகிய பவுல் பேசும்போது இதே முறையில் சொல்கிறார், "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து". சிலுவையை சகிப்பதோ அல்லது அவமான நிந்தனையோ அவர் மேல் திணிக்கப்படவில்லை என்பதை குறித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவர் தம்முடைய சொந்த தற்காப்புக்குக்காக தூதர்களின் லேகியோன்களை அழைக்க முடியும். இவைகளில் ஒரு சிறிதாகிலும் அவர் வற்புறுத்தப்படவில்லை. ஆனால், அவருக்கு முன்பாக நிலைநிறுத்தப்பட்ட சந்தோஷம், இராஜ்யம் பற்றிய விஷயத்தில் தேவன் அவருக்குக் கொடுத்த வாக்குத்தத்தம், மனுக்குலத்திற்கான ஆசீர்வாதம், மேலும் தம்முடைய சொந்த மகிமை, இவையெல்லாவற்றினிமித்தம், அவர் சிலுவையை சகித்து, அவமானத்தை எண்ணாமல் இருந்தார். அப்போஸ்தலர் கூறுகிறார், "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." பரலோகத்திலுள்ளவைகள் ஏற்கனவே முழங்காலிட்டுப் பணிந்து, அவரை கர்த்தாதி கர்த்தர் என்று அறிக்கையிட்டுள்ளன. பூமிக்குரியவைகள் ஆயிர வருஷ யுகத்தில் அவரிடம் முழங்கால் யாவும் முடங்கி அடிபணியும்.

## நீதி - உடன்சுதந்தரவாளியாவதற்கு அடிப்படை.

**கே** 394:1 :: **கேள்வி** **(1916-Z)** **- 1 -** இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறின போது, நீதியுடன் அவரால் முழுவதுமாக இணக்கம் அடைந்திராவிட்டால், கிறிஸ்துடன் யாரும் உடன்-பலி செலுத்துபவராக எப்படி இருக்க முடியும்?

**பதில்.** சகல உலகத்தின் பாவங்களுக்கு திருப்தி செய்யும் விதமாக, போதுமான மீட்பின் பலன் கொடுத்து வைக்கப்பட்டுள்ளது. இப்படி வைப்பு செய்யப்பட்டுள்ள வலிமையின் காரணமாக, பலியினால் உடன்படிக்கை செய்த கர்த்தர் இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுடன் விசேஷித்த உடன்படிக்கையின் உறவுக்குள் வந்துள்ள சந்ததியின் இந்த அங்கங்களை விடுவிப்பதற்கு, நீதி பூரணமாக இணக்கமுறச் செய்யப்பட்டுள்ளது.

## நீதி - திருப்தி அடைதல்.

**கே** 394:2 :: **கேள்வி** **(1916-Z) - 2 -** இயேசு பரலோகத்திற்கு ஏறின போது, அவர் நீதியை திருப்திப்படுத்தினாரா?

**பதில்**. நீதி எப்பொழுதும் திருப்தி செய்யப்பட்டுள்ளது. நீதி தனக்கு **சமமானதைப்** பெறாத வரைக்கும் ஒரு போதும் **போகவிடாது**. உதாரணமாக, மீறுதல் காரணமாக ஆதாம் மரண சாபத்திற்குள்ளாக்கப்பட்ட போது, நீதி திருப்தி செய்யப்பட்டது. ஆதாமையும் அவனுடைய சந்ததியையும் அந்த பாவத்திற்காக பிடித்து வைத்திருப்பதில் நீதி இதுவரையிலும் திருப்தி அடையப் பெற்றிருக்கிறது. சபை தற்கால நிலைகளுக்குள் பிரவேசிக்க அனுமதிப்பதில் நீதி இப்பொழுது திருப்தி அடைந்துள்ளது. ஏனெனில், சபையின் தேவைகளுக்குச் சமமாகவும், அதிகமாகவும் நீதியின் கைகளில் முழுவதுமாக ஒரு வைப்பு (DEPOSIT) உள்ளது. நீதியின் கைகளில் மீட்பின் விலைக்கிரயம் முழுவதுமாக **செலுத்தப்படுகிற வரைக்கும்**, மனுக்குலத்தை

விடுவிக்க நீதி திருப்தி அடையாது. சபை முழுமை பெற்று மகிமை அடைந்த பிறகு இது நடக்கும்.

## நீதி - திருப்தி அடைதல்.

**கே 395:1 :: கேள்வி (1916-Z) - 1 -** நீதி திருப்தியடைவது எப்போது? எப்படி?

**பதில்.** இந்த கேள்விக்கு மேலே பதில் கொடுக்கப்பட்டுள்ளது.

## நீதிமானாக்கப்படுதல்- ஆயிரவருஷ யுகமுடிவில் உலகத்தார் நீதிமானாக் கப்படுதல்.

**கே 395:2 :: கேள்வி (1907) - 2 -** உலகத்தார் நீதிமான்களாக்கப்படுவது ஆயிர வருஷ யுகத்தின் துவக்கத்திலா அல்லது முடிவிலா?

**பதில்.** உலகத்தார் ஆயிர வருஷ யுக முடிவில் நீதிமான்களாக்கப்படுவார்கள் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். வேதாகமத்தை நாங்கள் புரிந்து கொண்டபடி, தேவன் சபையுடன் செயல் தொடர்பு கொள்வது போல உலகத்தாருடன் அவருடைய செயல்தொடர்பு இருக்கப் போவதில்லை. இப்பொழுது, தனிப்பட்டவர்களாக விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாக இப்பொழுது எண்ணப்படுகிறார்கள். குறித்துக் கொள்ளுங்கள், அவர்கள் நீதிமான்களாக்கப் படுகிறதில்லை, ஆனால் நீதிமான்களாக **எண்ணப்படுகிறார்கள்.** “நீதிமான்களாக்கப்படுதல்” என்ற சொல்லுக்கு “சரி செய்யப்படுதல்” என்று அர்த்தமாகும். உங்கள் சரீரம் சரியாக இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னுடைய சரீரம் சரியாக இல்லை என்பதை நான் அறிவேன். கர்த்தர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறது, சரீரத்தை சரி பண்ணவில்லை அல்லது உங்கள் தலையில் அவயவங்களை சரியாக சமநிலைப்படுத்தவில்லை, உங்களுக்கு பூரணத்துவம் அளிக்கவில்லை. ஆனால், அவர் உலகத்தாருடன் செயல்தொடர்பு கொள்ளும் போது, அவர் அவர்களுடன் இவ்விதம் செயல்தொடர்பு கொள்ளமாட்டார். வேதாகமம் சுட்டிக்காட்டுவது போல, உலகத்தாருடன் செயல்தொடர்பு கொள்ளும் போது, அது உண்மையாக நீதிமானாக்கப்படுதலாக இருக்கும். ஆயிர வருஷ யுகத்தில். “இப்பொழுது விசுவாசத்தினால் நீங்கள் நீதிமான் களாக்கப்படுகிறீர்கள்” என்று ஜனங்களிடம் சொல்வதற்குப் பதிலாக, செய்தி இப்படி இருக்கும்: “இந்த இராஜ்யத்தின் சட்டத்திற்கு இப்பொழுது நீங்கள் கீழ்ப்படிவீர்கள் மற்றும் நீங்கள் கீழ்ப்படிந்தால், நீங்கள் வளர்ச்சிக்கான படிகளில் பின்னாக, பின்னாக, பின்னாக படிப்படியாக பூரணத்துவத்திற்கு முன்னேறிச் சென்றால், ஆயிர வருஷத்தின் முடிவை நோக்கிப் போகும் போது, நீங்கள் பூரணத்துவம் பெற்று நீதிமான்களாவீர்கள். அவர்கள் நீதிமான்களாக்கப் படுவதில்லை. ஆனால், அவர்கள் நீதிமான்களாவார்கள். ஆகவே, உலகத்தாரை உண்மையான பூரணத்துவத்திற்கு திரும்பக் கொண்டு வருவது தான், தேவனுடைய உள்நோக்கம் ஆகும்.

## நீதிமானாக்கப்படுதல் - Vs இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கப்படுதல்.

**கே 395:3 :: கேள்வி (1909) - 3 -** “இயேசுவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்படுதல்” மற்றும் “உடன்படிக்கையின் இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கப்படுதல்” - இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** கிறிஸ்துவின் இரத்தம் அல்லது மரணம் பாவத்திற்கான தண்டனையை செலுத்தியது என்றும், தேவனுடைய கிருபையினால் பெந்தெகொஸ்தே நாள் முதல் அந்த இரத்தம் பிரயோகப்படுத்துதலை யாரெல்லாம் பெற்று, இதனுடைய நிபந்தனைகளுக்கு கீழ் வருகிறார்களோ, அந்த விசுவாசக் குடும்பத்தார் என்று நாம் உணருகிறோம் என்ற அர்த்தத்தில் தான் இயேசுவின் இரத்தம் மூலமாக நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். தற்காலத்தில் இது சபை வழியாக கடந்து செல்லப்பட்டு, பிறகு இஸ்ரயேல் வழியாக இறுதியில் மனுக்குல உலகத்துக்கு சென்றடையும். ஆனால் மீட்பின் பலன் அனைத்தும் கிறிஸ்துவின்

இரத்தத்திலிருந்து தான் முன்னே தொடர்கிறது. இது மனுஷ சுபாவத்துக்கு நம்மை நீதிமான்களாக்குகிறது. யாரும் ஆவியின் சுபாவத்துக்கு நீதிமான்களாக்கப்பட்டதில்லை, அல்லது, நீதிமானாக்கப்படுதல் வழியாக இதைக் கொடுத்ததில்லை. "நீதிமானாக்கப்படுதல்" என்பது "சரி பண்ணப்படுதலை" அடையாளப்படுத்துகிறது. சகல உலகமும் கண்டனம், அநியாயம், அநீதியின் கீழ் உள்ளது. பூரணமுள்ள ஆண்கள் மற்றும் பெண்களாக தேவனிடத்திற்குத் திரும்ப அவர்களுக்குத் தேவைப்படுவது "நீதிமானாக்கப்படுதல்" ஆகும். இந்த யுகத்தில், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மீதான விசுவாசம் மூலமாக அவர்கள் நீதிமான்களாக எண்ணப்படுகிறார்கள்.

இப்பொழுது, இந்த கேள்வியின் மறுபகுதி: உடன்படிக்கையின் இரத்தம் மூலமாக பரிசுத்தமாக்கப்படுவது என்பது என்ன? நாம் புதிய உடன்படிக்கையின் இரத்தம் மூலமாக பரிசுத்தமாக்கப்படுகிறோம். ஏனெனில், இது புதிய உடன்படிக்கையின் உறவுக்குள் வரும் வாய்ப்பு அல்லது சலுகை, கிறிஸ்துவின் பலியுடனான உறவுக்குள் வரும் சலுகை ஆகும். எப்படி? இயேசு உங்களையும் என்னையும் அழைக்கிறார். நம்மை, நம்முடைய ஜீவன்களை ஜீவ பலியாக, தேவனிடம் பரிசுத்தமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் அர்ப்பணிப்பதற்கு இயேசுவின் இரத்தம் மூலமாக இப்பொழுது நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். எதற்காக, ஏன் இதை நாம் செய்ய வேண்டும்? அவருடைய பாடுகளில் அவருடைய பலியில் நாம் பங்கு பெறுவதற்கு, அவருடைய மாம்சத்தில் இப்பொழுது அங்கங்களாகும் பங்கை பெறுவதற்கு, மற்றும் பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்க, இஸ்ரயேலுடன் தொடர்புடையதும், புதிய உடன்படிக்கையை முத்தரிப்பதுடன் தொடர்புடைய வகையில், நம்முடைய ஜீவனை அல்லது நம்முடைய இரத்தத்தை அவருடன் ஒப்புக்கொடுப்பதில் பங்கு பெறுவதற்காகவே நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இது மிக முக்கியமான கேள்வி ஆகும். இதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேனா என்று நிச்சயமாகக் கூற முடியவில்லை. இதைத் தெளிவாகப் பார்க்காதவர்கள் எல்லோரும் உங்களுடைய கைகளை தயவு செய்து உயர்த்துங்கள். (ஒருவரும் கைகளைத் தூக்கவில்லை). நல்லது, நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால் இந்த கேள்வியை வலியுறுத்தும் வகையில் இது முக்கியத்துவம் உள்ளதாக இருப்பதால், நான் சொல்கிறேன், நீதிமானாக்கப்படுதல் இயேசுவின் இரத்தம் மூலமாக வருகிறது. புதிய உடன்படிக்கையை முத்தரிப்பதற்கு நம்முடைய இரத்தத்தை ஊற்றுதல் அல்லது பழைய சரீரம் மரணமடைதல் தொடர்பாக, அவருடன் பாடுபடும் நமது சலுகையின் வழியாக, "பரிசுத்தமாக்கப்படுதல்" வருகிறது. புதிய உடன்படிக்கை முத்தரிக்கப்படாவிட்டால், அப்பொழுது நீங்களும் நானும் இயேசுவுடன் நம்முடைய ஜீவன்களை ஒப்படைக்கும் வாய்ப்பு இருக்காது.

## நீதிமானாக்கப்படுதல் - அர்ப்பணிக்க மறுத்தல்.

**கே 396:1 :: கேள்வி (1909) - 1 -** ஒரு நபர் நீதிமானாக்கப்பட்டு, சத்தியத்தையும், நீதியையும் நேசித்து, பரலோக பிதாவை மகிழ்விக்க விரும்பி, பிறகு தற்கால சத்தியத்தையும், நீதிமானாக்கப்படுதலுக்கும், பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும், பொதுவாக யுகங்களைப் பற்றிய தேவனுடைய ஏற்பாட்டை புரிந்து கொண்டு, பிறகு வேண்டுமென்றே அர்ப்பணிக்க முடிவெடுக்காமல், ஆனால் மனுஷீக தளத்தில் இருப்பதற்கு திருப்தி அடைபவராக இருந்தால், அப்படிப்பட்டவர் மாம்சீகத்தின் பலவீனங்களை ஜெயங்கொள்ளுகிறதற்கு முயற்சித்து, கர்த்தருடைய உதவியைக் கேட்டால், இந்த அளவுக்கு அவர்கள் வந்த பிறகு, அவர்களுடைய ஜெபங்களுக்கு கர்த்தர் செவி கொடுப்பாரா? கர்த்தர் அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்வார்? நீதிமானாக்கப்படும் நிலையில் எவ்வளவு காலம் அவர்கள் இருப்பார்கள்?

**பதில்.** விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது, இந்த தற்காலத்தில் தேவன் ஏற்படுத்தி இருக்கும் "நீதிமானாக்கப்படுதல்" இது ஒன்றே. "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" என்பது, அந்த நபர் சரியானவர் அல்லது பூரணமானவர் என்று எண்ணப்படுகிறார் என்று தான் அர்த்தம். இப்படி நீதிமான்களாக எண்ணப்படுவதை

ஏற்படுத்தியிருக்கும் தேவனுடைய நோக்கம், ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தன்னையே அர்ப்பணிக்கும் வாய்ப்பைக் கொடுப்பதற்காக உள்ளது. இப்படியாக, கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் சரீர அங்கமாக, அவருடன் உடன்-பலியாக வேண்டும் என்பதற்காக இந்த வாய்ப்பு உள்ளது. இதன் விளைவாக, இந்த நீதிமானாக்கப்படுதல் பொதுவாக இந்த உலகத்தாருக்கான விஷயம் அல்ல. ஆனால் இது நம்முடைய கர்த்தருடன் பலியிடுவதற்கான நோக்கத்துடன் தேவனை அணுக விருப்பம் கொண்டிருக்கிறவர்களுக்கு மட்டுமே. ஒருவர் கர்த்தரிடம் தன்னை அர்ப்பணிக்க முடிவு செய்யாவிட்டால், அந்த முடிவுக்கு வந்த நேரம் முதற்கொண்டு, அந்த நபர் இந்த அறிவினால் அவர் பெற்றிருந்த நன்மையும், அதை உபயோகப்படுத்த அவர் விரும்பாததினால், தேவனுடைய கிருபையைப் பெற்றிருந்தது வீணாகிறது. கர்த்தர் விரும்பிய நன்மை இல்லாததால், கர்த்தருடைய பார்வையில் அந்த நபர் இந்த வகுப்பாரிலிருந்து புறம்பாக்கப்படுவதாகக் கருதப்படுகிறார். அந்த நபர் தற்காலத்தில் தேவனுடைய விசேஷித்த ஏற்பாட்டிலிருந்து முழுவதுமாக வெளியே தன்னை விடுவித்துக் கொள்கிறார் என்று நான் நினைக்கிறேன். மனுக்குல உலகத்துடன் இணைந்து சீர்பொருந்துதலுக்கான வாய்ப்பை அவர் இன்னும் பெறுகிறார். இந்த தற்காலத்தில் குறைந்த வாய்ப்பையும் குறைந்த சலுகையையும் பெற்றவர்கள் போல, அந்த நபர் அடுத்த யுகத்திலும் நன்றாக செயல்படமாட்டார் என்பது எங்களுடைய கருத்து ஆகும். அதிக வெளிச்சம் பெற்றவர்கள் அதற்கு ஏற்ப அதிக பொறுப்பு உடையவர்களாகிறார்கள். அதிக வெளிச்சத்தை யார் தள்ளிவிடுகிறார்களோ அதற்கேற்ப அவர்களுக்கு அதிக அடிகளை எதிர்பார்க்கலாம்.

## நீதிமானாக்கப்படுதல் - விசுவாசம் மூலமாக.

**கே** 397:1 :: **கேள்வி** (1910-Z) - 1 - ஆயிர வருஷ யுகத்தில் புறஜாதிகளில் எவரும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுவார்களா?

**பதில்.** விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் தற்காலத்திற்கு உரியது. நம்முடைய இரட்சிப்பு - சபையின் இரட்சிப்புக்குரியது. இது தான் "விசுவாசத்தினால் இரட்சிப்பு" என்றழைக்கப்படுகிறது. இதற்கு வேறுபடுத்தி காட்டும் விதமாக, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ், யூதர்களுடைய யுகத்தில் கிரியைகளினால் வரும் இரட்சிப்பு யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டது. விசுவாசத்தினால் வரும் இரட்சிப்புக்கு மாறாக, புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் கீழ், கிரியைகளினால் வரும் இரட்சிப்பு அடுத்த யுகத்தில் யூதர்களுக்கும், உலகத்தாருக்கும் வழங்கப்படும். வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்த சுவிசேஷ யுகத்தில் மட்டுமே பூரணத்துவத்தின் இடத்தை விசுவாசம் எடுத்துக்கொள்கிறது. தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருந்திருக்காவிட்டால், நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கைக்கொண்டு, தேவனுக்கு முன்பாக எந்த யூதனும் நீதிமானாக இருந்திருக்க முடியாது என்பது நிச்சயம் உண்மை ஆகும். இதற்கு சமமான உண்மை என்னவென்றால், ஒருவன் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டும், மற்றும் எல்லோருக்கும் அப்போது தெரியும் விதமாக இருக்கும் ஏற்பாடுகளுடன் இணக்கமாகவும் இருந்தால் ஒழிய, புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டின் கீழ் யாரும் நீதிமான்களாக்கப்படமாட்டார்கள். எனினும், இது விசுவாச - இரட்சிப்பை உருவாக்காது, **விசுவாசத்தினால்** வரும் இரட்சிப்பை உண்டாக்காது; ஆனால் இது **கிரியைகளினால்** வரும் இரட்சிப்பு - நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்.

யூதயுகத்தில் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் யூதர்களை இரட்சிக்க இயலவில்லை. ஏனெனில் அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்களுடைய சீரழிவிலிருந்து அவர்களைத் தூக்கி வெளியே கொண்டு வர திறமையான மத்தியஸ்தர் வழியாக ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் இந்த ஏற்பாடு எதிர்காலத்தில் இஸ்ரயேலர் அனைவருக்கும் ஆயிர வருஷ யுகத்தில் இந்த ஏற்பாட்டின் கீழ் வரக்கூடிய எல்லோருக்கும் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த கிரியைகளைச் செய்து முடிக்க இயக்கப்படுவார்கள். அவர்களுடைய சீரழிவிலிருந்து வெளியே வர உதவி செய்யப்படுவார்கள். ஆகவே நாம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் படிக்கிறோம்: சமுத்திரம்

தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. ஆயிர வருஷ யுகத்தில் எல்லோரும் மாபெரும் வெண் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பார்கள். அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே நியாயத்தீர்ப்பு அடைவார்கள்; அவர்கள் தங்களுடைய **கிரியைகளுக்குத்** தக்கதாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். இப்பொழுது நம்மைப் பற்றிய வேறுபட்ட அறிக்கை என்னவெனில், நம்முடைய **கிரியைகளின்படி** நாம் நியாயந்தீர்க்கப்படுகிறதில்லை. ஆனால் நம்முடைய **விசுவாசத்தின்படியே** நியாயந்தீர்க்கப் படுகிறோம். ஆகவே அப்பொழுது, ஆயிர வருஷ யுகத்தில் விசுவாசமும் கிரியைகளும் இருக்கும். சுவிசேஷ யுகத்தில் விசுவாசமும் கிரியைகளும் இருக்கின்றன. ஆனால் ஆயிர வருஷ யுகத்தின் விசுவாசம் மெச்சத்தக்க அளவில் குறைவானதாகும். ஏனெனில் ஒவ்வொன்றும் மிகத் தெளிவாகவும் எளிதில் நம்பக்கூடிய விதமாக இருக்கும். ஆகவே அப்பொழுது **விசுவாசத்திற்கு** விசேஷித்த வெகுமதி அளிக்கப்படுவதில்லை., ஆனால் **கிரியைகளினால்** அளிக்கப்படுகிறது. இந்த யுகத்தில், விசுவாசம் மிகவும் முக்கியமான ஸ்தானத்தை எடுத்துக் கொள்கின்றது. நம்முடைய கிரியைகளின்படி நாம் வெகுமதி பெறுகிறதில்லை. ஏனெனில் வெகுமதி பெறுவதற்கு நம்மிடம் ஏதுமில்லை. ஆனால் **விசுவாசத்திற்குத்** தான் வெகுமதி அளிக்கப்படுகிறது.

விசுவாசமும் கிரியைகளும் இரண்டு யுகங்களுக்கும் உரியவை. ஆனால் ஒரு யுகத்தில் **விசுவாசத்திற்கு** வெகுமதி அளிக்கப்படுகிறது. மற்ற யுகத்தில் **கிரியைகளுக்கு** வெகுமதி அளிக்கப்படும். ஒரு யுகத்தில் ஒருவர் தகுதியுள்ளவரா அல்லது தகுதியற்றவரா என்பதற்கான தேர்வு அல்லது மதிப்பளவாக **விசுவாசம்** இருக்கிறது. மற்ற யுகத்தில், நித்திய ஜீவனுக்கு தகுதியா அல்லது தகுதி இல்லையா என்பதற்கான தேர்வு அல்லது மதிப்பளவாக **கிரியைகள்** இருக்கின்றன.

புறஜாதிகள் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள், கிரியைகளினால் அல்ல என்று கலாத்.3:8ம் வசனம் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் காண்பிப்பதாகத் தோன்றுகிறது. ஆகவே இந்த சுவிசேஷ யுகத்தில் விசுவாசத்தினால் குறிப்பிட்ட புறஜாதியினரை தேவன் நீதிமான்களாக்குவது போன்று, விசுவாசத்தினால் சில யூதர்களையும் கூட நீதிமான்களாக்க அவர் நோக்கம் கொண்டார் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார் என்ற அர்த்தத்தில் தான், மேற்கண்ட வசனம் சுவிசேஷ யுகத்திற்கு உரியதாக்குகிறது என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். புறஜாதிகள் ஒருபோதும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் கீழ் இருந்ததில்லை. ஆனால் சுவிசேஷ ஏற்பாட்டின் கீழ் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.

## நீதிமானாக்கப்படுதல் - முற்பிதாக்கள் மற்றும் சுவிசேஷ யுகத்தில் நீதிமான்களாக்கப்பட்டவர்கள்.

**கே 398:1 :: கேள்வி (1910) - 1 -** முற்பிதாக்கள் அவர்களுடைய நாட்களில் நீதிமான் களாக்கப்பட்ட நிலைமையில் இருந்ததற்கும், இந்த சுவிசேஷ யுகத்தில் அர்ப்பணிப்புக்குப் போகாதவர்களின் நீதிமான்களாக்கப்படுதலின் அளவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?

**பதில்.** ஒருவர் அர்ப்பணிப்பு செய்தார், மற்றவர் செய்யவில்லை என்று நாங்கள் பதில் அளிக்கிறோம். பாவத்திலிருந்து திரும்பிய நேரத்திலிருந்து நாம் நீதிமான்களாக்கப்படும் நிலைமையில் இருக்கிறோம். ஆனால் நாம் எதுவரைக்கும் போயிருக்கிறோமோ, அந்த பகுதி அளவுக்கு மட்டுமே நீதிமான்களாக்கப்படுதல் உள்ளது. நீங்கள் சிடி ஹாலுக்கு (CITY HALL) போய்க் கொண்டு இருக்கிற மாதிரி இது உள்ளது. நீங்கள் எங்கே போய்க்கொண்டு இருக்கிறீர்கள்? என்று நாங்கள் கேட்கிறோம். ஆம், சிடி ஹாலுக்குப் போகிறேன். சில நேரத்திற்குப் பிறகு, நாம் கேட்கிறோம், இன்னும் போய்க்கொண்டு இருக்கிறீர்களா? ஆம், நான் அங்கே இல்லை. இது போன்று தான் நீதிமானாக்கப்படுதல் இருக்கிறது. நீங்கள் புறப்படுகிறீர்கள், இறுதி முனை வரைக்கும் நீங்கள் போய்க்கொண்டே இருக்கிறீர்கள்., அல்லது, உங்கள் நீதிமானாக்கப்படுதல் முழுமை அடையாது. தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே காரியம் முழுமையான அர்ப்பணிப்பு

ஆகும். முற்பிதாக்கள் அர்ப்பணிப்பு செய்தார்கள். தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டார். அவர் கூறினார், "அவர்கள் பூரணமாக சரீரங்களைப் பெற்றிருந்தார்களானால், அவர்கள் தவறு எதையும் செய்திருக்கமாட்டார்கள். அவர்கள் பூரணமுள்ள சரீரங்களை உடையவர்களாயிருந்தார்கள் என்பது போல அவர்களை எண்ணியிருப்பேன். வருங்கால எதிர்பார்ப்பு நோக்கத்தில் மட்டுமே, அவர்கள் வாழ்க்கையில் நீதிமான்களாக்கப்பட்டு இருந்தனர். 'உரிய காலத்தில்' அவர்கள் பெறுவார்கள். இயேசு 'அக்கிரமத்தை நிவிர்த்தி' செய்த பிறகு, அவர்கள் நீதிமானாக்கப்படுதலின் பலனைப் பெற்று, மனுஷீகத்தின் பூரணத்துவத்தை உயிர்த்தெழுதலில் பெறுவதற்கு முன்பாக, உரிய காலம் வரைக்கும் அவர்கள் காத்திருக்க வேண்டும்.

## நீதிமானாக்கப்படுதல் - கடந்த காலத்தில் குமாரத்துவத்தின் (SONSHIP) அடிப்படை.

**கே 398:2 :: கேள்வி (1910) - 2 -** நீதிமானாக்கப்படுதல் பற்றிய தெளிவான வெளிச்சம் மற்றும் மற்ற வேதாகம வாக்கியங்களினால், நீதிமொழியில் குறிக்கப்பட்டுள்ள குமாரத்துவம் எதற்கு அடிப்படையாக இருக்கிறது? "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா."

**பதில்.** இந்த சுவிசேஷ யுகத்தில், அருமையான நண்பர்களே, தேவன் குமாரர்களை அழைத்துக் கொண்டு இருக்கிறார். சுவிசேஷ யுகத்தின் முழுமையான பணி இதுவே. ஆதாம் ஆதியில் குமாரனாக இருந்தான். ஆனால் அவன் தோல்வி அடைந்து, அவனுடைய பரலோக பிதாவுக்கு உண்மையில்லாதவனாகி விட்டான். தேவனுடைய குமாரன் என்று இனிமேல் அழைக்கப் படுவதற்கு தகுதியில்லாதவனாகி, மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டான். ஆகவே நீங்களும் நானும் அந்த சாபத்தின் பங்குதாரராக எல்லோரும் பிறந்தோம். ஆகவே அவருடைய குமாரர்கள் என்று அழைக்கப்படுவதற்கு நாம் தகுதியில்லாதவர்களாக இருந்தோம். இறுதியாக, மேசியாவின் ஆட்சியில் உலகத்தார் அனைவரும் குமாரர்களாக திரும்ப வருவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்கு தேவன் நோக்கமாயிருந்தார். இப்போது, இந்த தற்காலத்தில், கேட்கிறதற்கு காது உள்ளவர்களாகவும், அவர்கள் கேட்கும்போது அதை மெச்சிப்பாராட்டும் இருதய முள்ளவர்களாகவும் இருக்கிற விசேஷித்த வகுப்பாருக்கு ஒன்றை தேவன் முன்மொழிந் திருக்கிறார். எத்தனை பேர் கேட்கிறதற்கு காது உள்ளவர்கள் என்று பார்க்க அவர் அழைத்துக்கொண்டு இருக்கிறார். பலர் அழைக்கப்படுகிறார்கள். பலர் அழைப்பைக் கேட்கிறார்கள். ஆனால், இதைக் கேட்கும் போது, இந்த அழைப்புக்கு மறுமொழி கூற அநேகர் மறுக்கிற காரணத்தால், கொஞ்சம் பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சிலர் தங்களையே வெறுத்து, நீதியின் பாதையில் நடக்க தேவன் விரும்புகிறார். ஜனங்களில் பெரும்பாலோர் இந்த அழைப்பைக் கேட்டு, சொல்கிறார்கள், "காலப்போக்கில் நான் இதற்கு கவனம் செலுத்துவேன் என்று நினைக்கிறேன்". ஆனால் முதலில் கொஞ்ச காலத்திற்கு பாவத்தை ருசிக்கிறார்கள், ஆகவே, அழைப்பு அவர்களைக் கடந்து சென்றுவிடுகிறது. இது கடந்து போயிருக்கும் போது அவர்கள் இதை மறுபடியும் கேட்கிறார்களா அல்லது இல்லையா என்பது வேறு ஒரு கேள்வி ஆகும். சிலர் அதைக் கேட்கும் போது வேறுவிதமான மனநிலையில் இருக்கின்றனர். அவர்கள் இதைப் பாராட்டி, இதைப் பிடித்துக் கொள்கிறார்கள். இப்படியாக, அவர்கள் பிடித்துக் கொண்டு இருக்கும் அளவுக்கு ஏற்ப, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் பாவத்திலிருந்து திரும்பிய உடனேயே, அவர்கள் நீதியை நோக்கித் திரும்புகிறார்கள். நீதி என்பது என்ன? 'நீதிமானாக்கப்படுதல்' என்பது தான் நீதி. இந்த இரண்டு வார்த்தைகளையும் ஒன்றாக நினைத்து, ஒரே விஷயத்தையே அர்த்தப்படுத்துகிறது என்றால், 'நீதிமானாக்கப்படுதல்' என்பது என்ன என்று அறிவதில் உங்களுக்கு உதவி செய்யும் விதமாக உங்களுக்கு ஒன்று உள்ளது. 'நீதிமானாக்கப்படுதல்' என்ற சொல், எது நேர்மையாக உள்ளதோ அதை அர்த்தப்படுகிறது. ஆகவே, ஜீவனுள்ள தேவனை சேவிப்பதற்கு பாவத்தை விட்டு திரும்பும் போது, அது தான் மாற்றம் - பாவத்திலிருந்து நீதியின் வழிக்குத் திரும்புதல். அது தான் நீதிமானாக்கப்படுதலின் அளவு. இருதயம் சரியான மனப்பாங்கில் தேவனை நோக்கி வரும்போது, தேவன் உங்களிடம் நெருங்கி வந்தார். கர்த்தர் கூறினார், "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." நீங்கள் கர்த்தரை நெருங்கி வந்தால், அவர் உங்களை நோக்கி சிறிது

நெருங்கி வந்தார். நீங்கள் இப்பொழுது எல்லா நேரத்திலும் நீதிமானாக்கப்பட்ட நிலையில் இருந்தீர்கள். அதாவது, அறுதியான உணர்வில், உங்களுடைய நீதிமானாக்கப்படுதல் பூரணமாகவோ அல்லது நீதியாகவோ இல்லை. ஆனால், பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்பிய நிலைமையை தேவன் அங்கீகரிக்கிறார். ஆகவே நாம் அதை நீதிமானாக்கப்படுதல் என்று அழைக்கிறோம், அல்லது, முடிவாக நீதிமானாக்கப்படுதலை அடையும் நிலைக்கு இந்த நிலைமை வழி நடத்துகிறது. தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளும் இந்த நிலைமையில் நீங்கள் எவ்வளவு காலம் இருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது நீண்ட காலமோ அல்லது குறுகிய காலமோ, நீங்கள் தேவனுடைய குமாரர்களில் ஒருவராக இருப்பதற்கு, மேற்குறிப்பிட்ட குமாரனாகும் நிலைக்கான என்ன நிபந்தனைகள் என்று - அதாவது, நீங்கள் நீதியை வெகுவாக நேசித்து, அக்கிரமத்தை வெகுவாக வெறுத்து, தவறுகளுக்கு எதிராக நீதி மற்றும் சத்திய ஊழியத்தில் உங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதை தேவன் உங்களுக்குக் காண்பித்திருக்கிறார். இப்பொழுது ஒவ்வொருவரும் ஜீவனை ஒப்புக்கொடுக்க விரும்புகிறதில்லை. பாவத்தின் இன்பங்கள், உலகம் மற்றும் பூமிக்குரிய பொருட்கள், நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைத் துறந்து விட விரும்புகிறதில்லை - எஜமானருடைய பாதபடிகளைப் பின்பற்ற தயாராக எல்லோரும் இருப்பதில்லை; ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு இயேசுவின் வார்த்தைகள் வந்தன. “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து (தன்னுடைய சுய சித்தத்தை ஒப்புக்கொடுத்து), தன் சிலுவையை எடுத்துக் கொண்டு (பூமிக்குரிய விருப்பங்கள் உட்பட பலியிட வேண்டும் என்ற உணர்வுடன்), என்னைப் பின்பற்றக்கடவன்.” இதில் தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஒருவர் தன்னால் முடிந்தவரை அந்த இடம் வரை வந்திருக்கிறார். இப்பொழுது அவர் எஜமானருடைய வார்த்தைகளைக் கேட்கிறார். அவர் முதலாவது பாவத்திலிருந்து விலகிய போது, அவர் சீஷராக விரும்புகிறார். அவர் தேவனிடத்திற்கு, அவருடைய நீதியின் தர அளவிற்கு நெருங்கி வர ஆரம்பித்தார். அவர் குமாரனாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இறுதி சோதனை என்ன என்பதை கர்த்தர் அவருக்குக் காண்பிக்கும் போது, அந்த இடம் வரை அவர் இப்பொழுது வந்திருக்கிறார். ஒரு நிபந்தனை இல்லாமல், அவர் குமாரனாகவோ அல்லது ஜீவனுக்குள் நீதிமானாக்கப்பட்டவராகவோ இருக்க முடியாது. அவர் சீர்பொருந்துதல் போன்றவற்றை விரும்பினால், தேவன் கூறுகிறார், நான் அதற்கு, காலப்போக்கில், மேசியாவின் ஆட்சியில் உலகத்திலுள்ள மற்ற எல்லோருக்காகவும் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்த வழி பிரகாசிக்கிற வழி, அங்கே அறிவு இருக்கும். ஆனால் நீங்கள் இப்பொழுது வர விரும்பினால், ஒரே வழி திறந்துள்ளது. “ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது.” இது இந்த மரண நிலையிலிருந்து உங்களை வெளியே எடுக்கும் நெருக்கமானதாகவும், ஒரே ஒரு வழியாகவும் உள்ளது. நீங்கள் புறப்பட்ட போது இந்த வாசலைப் பார்த்திருந்தீர்களானால், நீங்கள் நுழைந்திருக்கமாட்டீர்கள். ஆனால் நீங்கள் ஒரு குறிப்பிட்ட தூரம் வந்தவுடன், அவர் குமாரனாவதற்குரிய நிபந்தனைகளை உங்களுக்குக் காண்பிக்கிறார். தேவன் காண்பிக்கும் நிபந்தனைகளில், அதாவது, தன்னைத் தான் வெறுத்தல், தன் சிலுவையை எடுப்பது, அவரைப் பின்பற்றுவது ஆகியவற்றில் ஒரு இம்மியளவும் குறைப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. பிறகு இந்த நிபந்தனைக்கு வந்து, நீங்கள் கூறலாம், “உம்முடைய சித்தத்தைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.” அப்பொழுது அவர் என்ன சொல்லுவார்? பவுல் ரோமர் 12:1ல் நம்மிடம் கூறுகிறார்: என்னுடைய சகோதரரே, கிறிஸ்துவுடன் அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரவாளிகள் ஆவதற்கு, இது மிகவும் ஆசீர்வாதமான விஷயம். இது மாபெரும் வாய்ப்பு, இப்போது இதற்குள் வருவது ஒரு மகத்தான சலுகையாகும். இதை உலகம் அறிகிறதில்லை. ஆனால், நீங்கள் நீதியின் மேல் பற்றுதல் வைத்திருக்கும் உணர்வின் காரணமாக, இது நீங்கள் அறிவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பு, விதிமுறைகள், நிபந்தனைகள் பற்றி சிலவற்றை நீங்கள் அறிவதற்கு தேவன் கிருபையளித்திருக்கிறார். இப்பொழுது, காலடி எடுத்து வையுங்கள்; ஆகவே அவர் கூறுகிறார், “சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு (நீங்கள் அவரை

நெருங்கிக் கொண்டிருக்கும் போது, இந்த இரக்கங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறீர்கள்), உங்களை வேண்டிக் கொள்கிறேன்," நீங்கள் பெற முடிவது இந்த ஒரே வழி தான்.

இதில் என்ன தத்துவம் உள்ளது? நல்லது, இப்பொழுது, இந்த தத்துவத்தை அனுபவிக்காதவர்கள் இந்த உண்மையை அனுபவிக்க முடியாது என்று நாங்கள் சொல்லவில்லை. மீட்பு மற்றும் அது எதை அடையாளப்படுத்துகிறது என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருக்காத போது, அதன் தத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ளாமல் இருந்தாலும், நீங்கள் அதனுடைய நன்மைகளை அனுபவித்தீர்கள். தேவனையும் அவருடைய திட்டத்தையும் இப்பொழுது அறிந்திருக்கிற முறையில், நான் தேவனை அறிவதற்கு முன்பு, நீங்கள் தேவனுடைய குமாரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டீர்கள். நான் கர்த்தரிடம் என்னுடைய இருதயத்தைக் கொடுத்திருந்தேன். அவர் குமாரனாகும் ஆவியை எனக்குக் கொடுத்திருந்தார். ஆகவே, தத்துவ அறிவு எதுவும் இல்லாமல், நான் அவரை அப்பா, பிதா என்று அவரைப் அழைத்தேன். தத்துவத்தை நான் அறிந்து கொள்ள முடிவதற்கு முன்பாக, நான் அர்ப்பணிப்பு செய்ய வேண்டியிருந்தது. ஆனால் இப்போது, இந்த நாளில் கர்த்தர் தம்முடைய ஜனங்களின் மேல் தவறுகளின் சுழற்காற்றை வீசவும், அவருடைய புத்தகத்தைக் கட்டுக்கதை என்று அழைக்கவும், அவருடைய வசனத்தை வெளிச்சம் பெறச்செய்வதற்கு உயர் விமரிசனங்களையும் கர்த்தர் அனுமதிக்கும் போது, இப்பொழுது கர்த்தரிலும் அவருடைய வல்லமையிலும் நாம் வலிமையாக இருக்கும் விதத்தில், அவர் நமக்கு சிலவற்றைக் கொடுக்கிறார். கர்த்தர் இயேசு மாபெரும் மீட்பர் என்ற பாவநிவாரணத்தின் தத்துவத்தையும் அவருடைய வார்த்தையையும் புரிந்து கொள்ள அவர் அனுமதிக்கிறார். நீங்கள் ஏற்கனவே மரணத்திற்குள்ளான கண்டனத்தில் இருக்கிறீர்கள் என்பதையும், உங்கள் மனதில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதைத் தவிர, வேறெதையும் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு உங்களுக்கு ஒன்றுமில்லை என்பதை நீங்கள் உணருகிறீர்கள். அவர் தேவனுடைய குமாரன், மனுக்குலத்தின் இரட்சகர் என்றும், இதுவே அவரில் உங்களுடைய விசுவாசத்தின் அடிப்படை என்றும் நீங்கள் உணர்ந்த உடன், நீங்கள் உங்கள் சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தீர்கள். உங்களுடைய இரட்சகர் உங்களுடைய, என்னுடைய பரிந்துபேசுகிறவராக முன்வந்தார். பிறகு, உங்களுடைய மற்றும் என்னுடைய பலி, இதனுடைய குறைபாடுகளுடன் தேவனிடம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அவருடைய மீட்பின் பலன் சுமத்தப்பட்டதினால், இது அவர்களை அவருடைய பார்வையில் பரிசுத்தமுள்ளவர்களாக்கியது. அவர் தம்முடைய பலனை சுமத்திய அந்தக் கணமே, பிதா உங்களை ஏற்றுக்கொள்ள முடிகிறது. பிறகு அவர் உங்களை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாக, பரிசுத்த ஆவியை அளிக்கிறார். நீங்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறீர்கள், நீங்கள் புதிய சிருஷ்டிகளாக இருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய நீதிமானாக்கப்படுதலின் உச்சத்தைப் பெற்றிருக்கிறீர்கள். ஒவ்வொன்றும் இதை நோக்கி வழி நடத்துகிறது. நீங்கள் ஒப்படைத்த அந்தக் கணம் அதுவே. இயேசு அதன் மீது பலனை சுமத்தினார், பிதா அதை ஏற்றுக்கொண்டார். இப்பொழுது, "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா." என்ற இந்த முழுமையான கருத்திற்கு இது இணக்கமாக உள்ளது. நாம் பாவத்திலிருந்து விலகிய அந்தக் கணமே, சொந்தக்காரர்கள் என்ற முறையில் குமாரர்களாக நாம் நடத்தப்படுகிறோம். ஏனெனில், நாம் குமாரர்களாக இருக்க விரும்பினோம். அவர் குமாரர்களைப் போலவே நம்மிடம் செயல்தொடர்பு கொள்கிறார். நீங்களும் நானும் இன்று இருப்பது போல, ஒருவர் நம்மை இங்கு சந்தித்து, கர்த்தரிடம் பாவத்திலிருந்து விலக நாடினால், அவர்கள் முழுமையான அர்ப்பணிப்பைச் செய்திருக்காவிட்டாலும். நாம் அவர்களை சகோதரன் அல்லது சகோதரி என்று கூறுகிறோம். அவர்கள் விசுவாசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். ஆனால், அவர்கள் அர்ப்பணிப்பை செய்யும் வரைக்கும், முழுமையான அர்த்தத்தில், அவர்கள் குமாரர்களாக இல்லை. அவர்கள் இறுதி படியை எடுத்து, கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, தேவனுடைய பிள்ளைகளாக அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுதலை நாம் பார்க்கும் போது, நாம் மகிழ்ச்சி அடைகிறோம். பிறகு, அவர்கள் துவங்கிய காரியம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் அவர்கள் பாதை முழுவதிலும் குமாரர்களாக நடத்தப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் விருப்பம் கொண்டு மகிமையான தர அளவினை நெருங்குகிறார்கள்.

**நீதிமானாக்கப்படுதல் - தற்காலிகமாயுள்ளது பற்றி எடுத்துக்காட்டு.**

**கே 400:1 :: கேள்வி (1911) - 1 -** தற்காலிக நீதிமான்களாக்கப்படுதல் பற்றியும், இன்றிமையாத நீதிமானாக்கப்படுதலை பற்றியும் தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** பாவத்தின் பக்கம் நமது முதுகைத் திருப்பி, ஏக்கத்துடன் ஆசை கொண்டு, இருதயத்தில் நல்ல உள்நோக்கங்களுடன் தேவனை நோக்கித் திரும்பும் அந்தக் கணமே, நாம் தற்காலிகமாக நீதிமான்களாக்கப்படுகிறோம். பாவத்தில் அமிழ்ந்து, மாம்சத்தின்படி நடந்து கொண்டு இருக்கும் ஒருவர் இங்கே இருக்கிறார். அவர் கேட்டு, இது தவறான பாதை என்ற புரிதலுக்கு வருகிறார். அவர் தம்மிடம் நெருங்கி வர தேவன் விரும்புகிறார். ஆகவே அவர் மாற்றம் அடைகிறார், மனந்திரும்புகிறார். இப்பொழுது தேவனை நோக்கிப் பார்த்து, அந்த திசையை நோக்கி காலடிகளை வைக்கிறார். மாம்சத்தின் அருவருப்புகளைக் களைந்து, மிகவும் ஒழுங்கான வழியில் நடக்கப் போராடுகிறார். அவர் குடிகாரராக இருந்திருந்தால், அவர் தம்முடைய கோப்பையை ஒதுக்கித் தள்ளிவிடுகிறார். அவர் வேறு ஏதாவது இழிவான கிரியை உடையவராயிருந்தால், அந்த இழிவுச் செயல்களைத் தள்ளிவிடுகிறார். அவர் தேவனிடம் நெருங்கி வர நாடுகிறார். இப்பொழுது, அவரை நோக்கி கர்த்தருடைய மனப்பாங்கு எப்படியிருக்கும்? கர்த்தர் சொல்கிறார், “தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.” ஆகவே அவர் சிறிது அருகே செல்கிறார். இப்பொழுது அந்த நபர் எந்த சுபாவத்தில் இருக்கிறார்? அவர் நீதிமானாக்கப்பட்ட சுபாவத்தில் இருக்கிறார் என்று அவரைப் பற்றி நாம் பேசுகிறோம். ஏன் அப்படி? நீதிமானாக்கப்படுதல் என்பது ‘நேர்மையானது’ என்று அர்த்தம். அவர் முழுவதும் நேர்மையானவராக இன்னும் இருக்கவில்லை. ஆனால் அவர் இந்த சுபாவத்தில் இருக்கிறார்; அவர் நேர்மையாக இருப்பதை நோக்கிச் சென்றடைவதை முயற்சிக்கிறார். அவர் அங்கே தற்காலிகமாக இருக்கிறார், நீதிமானாக்கப்பட்ட நபர் என்று பேசும் வகையில் இருக்கிறார்; அவர் நேர்மையாக நடக்க நாடுகிறார். ஆகவே அவர் அருகில் வருகிறார். அவர் அருகில் வரும் போது, கூறுகிறார், “கர்த்தாவே, இப்போது நான் மிக அருகில் வரவும், உம்முடைய பிள்ளையாக இருக்கவும் விரும்புகிறேன்.” நல்லது, கர்த்தர் கூறுகிறார், “இப்பொழுது இந்த அருகாமையில் வந்திருக்கிறீர்கள்; எது அவசியம் என்பதை நான் விளக்குவேன்.”

“கர்த்தாவே, இயேசுவில் உடன் சுதந்தரவாளிகளாக இருப்பதற்கு நீர் ஏற்பாடு செய்திருக்கும் மகிமையின் சுதந்தரத்தில் பங்கு பெறவும், உம்முடைய ஆவியைப் பெறவும் உம்முடைய பிள்ளையாக முற்றிலும் இருப்பதற்கு என்ன நிபந்தனைகள் உள்ளன என்பதை அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.”

கர்த்தர் பதிலளிக்கிறார், “நல்லது, அவைகள் மிகவும் கடுமையான விதிமுறைகள்; அவைகள் மிகவும் கண்டிப்பான விதிமுறைகள். நீங்கள் உங்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு எஜமானரைப் பின்பற்றுங்கள். என்னுடைய ஊழியத்தில், நீங்கள் வைத்திருக்கிற எல்லாவற்றையும், ஜீவன் உட்பட, ஒப்புக்கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். உண்மையான உணர்வில், இப்படியாக மட்டுமே என்னுடைய பிள்ளைகளாக முடியும். ஏனெனில், இப்பொழுது நான் அழைத்துக் கொண்டிருக்கிற வகுப்பார் இது ஒன்றே.

அந்த நபர் கூறுகிறார், “நல்லது, கர்த்தாவே, நான் பலி கொடுக்கவும், மரணத்துக்குள்ளாக அர்ப்பணிப்பு செய்யவும் கவலைப்படமாட்டேன். ஆனால், நான் சரியானதையேச் செய்ய விரும்புகிறேன். நான் நல்லதைச் செய்தால் - - “.

கர்த்தர் கூறுகிறார், “நல்லது, ஆனால் நீங்கள் நல்லதைச் செய்ய முடியாது; நீங்கள் உங்களுடைய சொந்த மாம்சத்தில் பூரணத்துவமாக இருக்க முடியாது. நீங்கள் சரியானதாக இருக்க முடியாது; நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் நீங்கள் என்னை ஒருபோதும் நெருங்க முடியாது. ஏனெனில், நியாயப்பிரமாணத்தின் செயல்களால் எந்த மாம்சமும் நீதிமானாக்கப்பட முடியாது.”

“கர்த்தாவே, நல்லது, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாத பட்சத்தில், நான் எப்படி நீதிமானாக்கப்பட முடியும்?”

“நீங்கள் நீதிமானாக்கப்படுவதற்கு ஒரே ஒரு வழி மட்டும் தான் உள்ளது. அது மேன்மையுள்ள பரிந்துபேசுகிறவரின் மீட்பின் பலன் மூலமாக நடக்கும்.”

“கர்த்தாவே, நல்லது, அவர் எனக்கு பரிந்துபேசுகிறவராக இருப்பாரா?”

“நீங்கள் உங்களிடமுள்ள எல்லாவற்றையும் முழுவதுமாக சரணடையக்கூடிய இடத்திற்கு நீங்கள் வந்தால், அவர் உங்களுக்குப் பரிந்துபேசுகிறவராயிருப்பார்.”

“நல்லது, அவர் எனக்கு வேறு எதுவும் செய்ய மாட்டாரா?”

“ஓ, ஆம், அவர் உலகத்தில் மற்ற எல்லோருக்கும் இருப்பது போல, அவர் உங்களுடன் செயல்தொடர்பு கொள்ள தயாராக இருக்கிறார்; புதிய உடன்படிக்கை ஏற்பாட்டின் கீழ் உங்களுடைய மத்தியஸ்தராக இருக்க அவர் தயாராக இருக்கிறார். ஆதாம் இழந்ததும், ஆதாம் பெற்றிருந்ததுமானவற்றில், தேவனுடன் பரிபூரணமும் இணக்கமுமான முறையில் அவர் உங்களுக்கு சீர்பொருந்துதலை கொண்டு வர தயாராக இருக்கிறார்.”

“ஆனால் கர்த்தாவே, நான் இப்பொழுது வருவதற்கு விரும்புகிறேன்.”

“நல்லது, நான் உங்களுக்கு இப்பொழுது வெளியிட்ட அழைப்பு இல்லாமல், நீங்கள் இப்பொழுது வர இயலாது. அழியாததும், கறையில்லாததும், தேய்வுறாததும், பரலோகத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறதுமான சுதந்தரத்திற்கு தேவனுடைய சுதந்தரவாளிகளாகவும் இருக்க, கிறிஸ்துவில் தேவனுடைய பெரிதான அழைப்பு என்று சொல்லப்படுகிற அழைப்பை நான் வெளியிட்டுள்ளேன். இந்த பரலோக அழைப்பு ஒன்று தான் இப்பொழுது திறந்த நிலையில் உள்ளது. இந்த பரலோக அழைப்பு, கர்த்தரிடத்தில் உங்களுடைய ஜீவனை முழுவதும் அர்ப்பணிக்கவும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் பின்பற்றவும் கோருகிறது. இந்த அடி எடுக்க இப்போது நீங்கள் விரும்பாவிட்டால், அந்தப் பக்கம் நில்லுங்கள்.”

இந்த நேரம் வரைக்கும் இது தற்காலிகமாக நீதிமானாக்கப்படுதலாக இருந்து வருகிறது என்பதை நீங்கள் கவனியுங்கள். இப்பொழுது அவர் அறிவுடையவராக - இந்த இடம் வரை வந்திருக்கிறார். கர்த்தருக்கு அவரிடம் தேவைப்படுவதை அவர் அறிந்திருக்கிறார். அவர் அர்ப்பணிப்பிற்காக அடி எடுத்து வைத்தால், அவர் ஒரு புதிய சிருஷ்டியாக ஆவியில் ஜெநிப்பிக்கப்படுவார்; இது தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் கடைசி எண்ணிக்கை முடியும் வரைக்கும் தொடரும். ஆனால் அவர் இதைச் செய்யாவிட்டால், அப்போது அவருடைய தற்காலிக நீதிமானாக்கப்படுதல் அகன்று விடுகிறது. இது பிடிமானத்தில் இல்லை; இது உறுதியாக்கப்படவில்லை; இது உண்மையானதாகவோ அல்லது முக்கியமானதாகவோ செய்யப்படவில்லை. இந்த விசுவாசம் - நீதிமானாக்கப்படுதல் உண்மையாகவும் இன்றியமை யாததாகவும் செய்யப்படுவதற்கு ஒரே வழி அர்ப்பணிப்பு ஆகும்.

இப்போது அவர் அர்ப்பணிப்பு செய்கிறதாக அனுமானிக்கவும். “இப்பொழுது, கர்த்தாவே, நான் உட்கார்ந்து கிரயத்தை எண்ணினேன். உம்முடைய விதிமுறைகளை ஏற்றுக்கொள்வதாக முடிவு செய்திருக்கிறேன்; நான் என் முழு இருதயத்தையும் நான் வைத்திருக்கிற ஒவ்வொன்றையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். என்னை முழுமையாக சரணடையச் செய்கிறேன். கர்த்தாவே, உம்முடைய வழிகளில் இதை உபயோகியுங்கள்.” இப்பொழுது, அந்த அர்ப்பணிப்பைச் செய்த பிறகு, மேன்மை பொருந்திய பரிந்துபேசுகிறவர் அவருடைய சொந்த பரிந்துபேசுகிறவராகிறார். அவர் அந்த நபருடைய கறைகளை மூடும் விதமாக அவருடைய மீட்பின் பலனை சுமத்துகிறார். ஆகவே பிதாவினால் அவருடைய அர்ப்பணிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த முறையில் தான், அவருடைய நீதிமானாக்கப்படுதல் வலிமையூட்டப்படுகிறது, முழுமையாக்கப்படுகிறது. இது ஜீவனுள்ள நீதிமானாக்கப்படுதலாகிறது. அவர் ஜீவனுக்குள்ளாக நீதிமானாக்கப்படுகிறார். பிறகு, ஜீவனுக்குள்ளாக நீதிமானாக்கப்பட்ட

அந்தக் கணமே, அவர் அந்த நீதிமானாக்கப்பட்ட ஜீவனை தேவனுக்கு ஏற்ற வகையில் ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கிறார். இந்த ஜீவனுள்ள அர்ப்பணிப்பை தேவன் ஒரு பலியாக கிறிஸ்துவின் வழியாக ஏற்றுக்கொள்கிறார்; அது தான் அந்த நீதிமானாக்கப்படுதலை வலுவூட்டுகிறது. இந்த இடம் வரையிலும் இது இன்றியமையாததாகச் செய்யப்படவில்லை; இது வெறும் தற்காலிகமான ஒன்று ஆகும். அவர் சரியான திசையில் சென்று கொண்டு இருக்கிறார். அவர் முடிவெடுக்க வேண்டிய அந்த இடம் வரைக்கும், தேவன் அவரை பொறுமையோடு நடத்தி உற்சாகப்படுத்துகிறார். அவர் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்க தீர்மானித்தால், அப்பொழுது மேன்மையான பரிந்துபேசுகிறவர் அவருடைய நீதிமானாக்கப்படுதலை வலுவூட்டுகிறார். விசுவாசத்தினால் அவர் பூரணமுள்ளவர் என்று அங்கீகரிக்கப்பட்டு, விசுவாசத்தினால் அவர் தம்மையே ஒப்புக்கொடுப்பதாக அவர் அங்கீகரிக்கப்படுகிறார். தேவன் அந்த பலியை ஏற்றுக்கொள்கிறார்.

இப்பொழுது, அடுத்த யுகத்தில், உலகத்தாரைப் பொருத்த வரையில், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் இல்லை, ஆனால், கிரியைகளினால். உங்களுக்கு நினைவிருக்கும், உலகத்தார் அவர்களுடைய நியாயத்தீர்ப்பின் நாளில் வருவதைப் பற்றி வெளிப்படுத்தல் ஆகமம் கூறுகிறது, நாம் வாசிக்கிறோம், “யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீப்படைந்தார்கள்.”

தேர்வு, அப்போது கிரியைகளாக இருக்கும். இப்பொழுது தேர்வு விசுவாசமாக இருக்கும். இப்பொழுது ஏன் கிரியைகள் இல்லை? ஏனெனில் நீங்கள் பூரணமாக கிரியை செய்ய இயலாது. ஏன் இல்லை? ஏனெனில் நீங்கள் குறைபாடுள்ள சரீரத்தைப் பெற்றிருக்கிறீர்கள். ஏனெனில் தேவன் இந்த முறையில் தான் தற்காலத்தில் செயல்தொடர்பு கொள்கிறார். - குறைபாடுள்ள சரீரங்களில் பூரணமான மனங்களையும், அவருடைய சித்தத்திற்கு அடிபணிகிற பூரணமான விருப்பங்களையும் உடையவர்களுடன் தேவன் தொடர்பு கொள்கிறார். இப்படியாக, அவர் புதிய சித்தத்தை, புதிய மனதை அவர் ஈர்க்கிறார். புதிய சிருஷ்டியாக நீதிமானாக்குகிறார், அர்ப்பணிப்பை ஏற்றுக்கொள்கிறார். இவ்விதமாக இந்த காரியம் வலுவூட்டப்படுகிறது. ஆனால், அடுத்த யுகத்தில், ஆயிரம் வருஷங்கள் முழுமையிலும், உலகத்தார் கொஞ்சம் கொஞ்சமாக மேல் நோக்கி வந்து, பூரணத்துவத்தை அடைவார்கள். ஒவ்வொரு நாளும் அதிகமாக நீதிமானாக்கப்படுவார்கள், அதிகமாக நீதிமானாக்கப்படுவார்கள். மேலும் அதிகமாக நீதிமானாக்கப்படுவார்கள். ஒவ்வொரு நாளும் நேர்மைக்கு அருகாமையில் அதிகமதிகமாய் இருப்பார்கள். ஆகவே அவர்கள் படிப்படியான நீதிமானாக்கப்படுதலுக்கு நெருங்கி வருவார்கள். சரியான நேரத்தில் அந்த நேரத்தில் இருக்கும் ஒவ்வொருவரும், தேவனுடன் இணக்கமாக இருக்க நாடுபவர்கள் தற்காலிகமாக நீதிமான்களாக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறார்கள்; ஆனால், இந்த நீதிமானாக்கப்படுதல் நம்முடையதைப் போல அதே வழியில் அடையாது. அவர் தம்முடைய குறைபாடுகளிலிருந்து படிப்படியாக வெளியே வந்து, அவர் எப்பொழுது முழுமையாக பூரணத்துவம் பெறுகிறாரோ, அப்பொழுது தான் அவர் உண்மையில் நீதிமானாக்கப்படுகிறார். பிறகு அவர் சரியாகவும், குறைபாடற்றும் வைக்கப்பட்டு, அந்த நிலைமையில் அவர் ஆயிரம் வருஷங்களின் முடிவில் இருக்கும் போது, மத்தியஸ்தர் அப்போது இடையில் வந்து அந்த நேர்மையும் பூரணமுமான நபரை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு அனுமதிக்கிறார். அவர் பிதாவிடம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருந்து, பிறகு தேர்வுகளில் நிலை நிற்க அவர் விரும்புகிறாரா அல்லது இல்லையா என்பதைப் பார்க்க, அவர் சோதனையில் நிற்க வேண்டும். ஆதாம் பூரணமாக இருந்து, தேவனுடன் இணக்கமாக இருந்து, தேர்வுக்கு உட்பட்டது போல, மனுக்குல உலகம் முழுவதும் அவர்களுடைய பூரண நிலையில் ஒரு தேர்வுக்கு உட்படுத்தப்படுவார்கள். ஆகவே, வெளிப்படுத்தல் ஆகமத்தில் வாசிக்கிறோம், இயேசு பிதாவிடம் இராஜ்யத்தை ஒப்படைத்த பிறகு, ஆயிரம் வருஷங்கள் முடிந்த பிறகு, மத்தியஸ்தர் இடையில் வெளியேறிய பிறகு, கடற்கரை மணலத்தனை போன்ற எண்ணிக்கையில், முழு பூமியின் மேல் வாசம் பண்ணும் எல்லோரையும் சாத்தான் சோதிக்கும் விதமாக, சாத்தான் விடுதலையாக்கப்படுவான். இந்த சபலத்திற்கு பணிகிறவர்கள், இருதயத்தில் சரியான நிலைமையில் இல்லாதவர்கள். அவர்களுக்கு தேவன் மேலும் எந்த வாய்ப்பும் கொடுக்க

மாட்டார். அவர்கள் தாங்கள் எப்போதும் விரும்பிய அனைத்து ஆசீர்வாதங்களையும் உடையவர்களாயிருந்தார்கள். அந்த நேரத்தின் சபலத்தை எதிர்த்து நிற்பவர்கள் நித்திய ஜீவனுக்குத் தகுதியுள்ளவர்களாக, தேவனால் முழுவதுமாக அங்கீகரிக்கப்பட்டு, நித்திய நிலைமைக்குள் செல்லும் வாயிலை அடைவார்கள்.

## நீதிமானாக்கப்படுதல் -- கிபி 1881க்கு முன்பு. சுவிசேஷ யுக கிருபை படிப்படியாக முடிவடைதல்.

**கே** 403:1 :: **கேள்வி** (1911-Z) - 1 - சிறுமந்தைக்குள்ளாக இறுதியாக இருக்கப் போகிறவர்கள் அனைவரும் கிபி 1881 அக்டோபருக்கு முன்பாக நீதிமானாக்கப்படும் நிலையிலிருப்பது அவசியம் என்று யூத இணைகள் மூலமாக, வேதாகம வாக்கியங்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ போதிக்கிறது என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா?

**பதில்.** இல்லை. இந்த விஷயத்தை நாங்கள் அவ்விதம் புரிந்து கொள்ளவில்லை.

## நீதிமானாக்கப்படுதல் - அர்ப்பணிப்பில் முழுமை பெறுகிறது.

**கே** 403:2 :: **கேள்வி** (1912-Z) - 2 - நீதிமானாக்கப்படும் போது அல்லது அர்ப்பணிக்கும் போது, எப்பொழுது நாம் ஒலிவ மரத்தில் ஒட்ட வைக்கப்படுகிறோம்?

**பதில்.** இரண்டும். அதாவது, 'நீதிமானாக்கப்படுதல் அர்ப்பணிப்பில் முழுமை பெறுகிறது'. ஒருவர் தன்னை அர்ப்பணித்திருக்காவிட்டால், அவர் தன்னுடைய நீதிமானாக்கப்படுதலை முடிக்கவோ, முழுமையாக செய்திருக்கவோ முடியாது. நாம் நீதி அல்லது நேர்மையை நோக்கித் திரும்பும் போது, அநீதியிலிருந்து விலகும் போது, நமது நீதிமானாக்கப்படுதல் துவங்குகிறது. நாம் அர்ப்பணிப்பை நோக்கித் தொடர்ந்து முன்னேறும் போது, நாம் அதிகமாக நேர்மைக்கு அருகில், அதிகமாக நீதிமானாக்கப்படுதலைப் பெறுகிறோம். ("சரியாக இருப்பது" தான் நீதிமானாக்கப்படுதல் என்று அர்த்தமாகும்.) நம்முடைய நீதிமானாக்கப்படுதல் முழுமையான அர்ப்பணிப்பு வரை முன்னேறும் போது, அப்போது தான் நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுகிறவர்களாகவும், யோவான் 15ம் அதிகாரத்தில் கர்த்தரால் உருவகப்படுத்தப்பட்ட திராட்ச செடியின் கிளைகளாகவும் நாம் அங்கீகரிக்கப்படுகிறோம். **ஆவிக்குரிய** கிளைகள் மட்டுமே இந்த "ஒலிவ மரத்தில்" ஒட்ட வைக்கப்படுகின்றன.

இந்த கேள்வி சந்தேகத்திற்கிடமின்றி ரோமர்.11:17ம் வசனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நல்ல வேர்களை உடைய ஒலிவ மரத்தை யூத ஜாதி அடையாளப்படுத்துகிறது என்று அப்போஸ்தலர் நமக்கு சொல்கிறார். ஆபிரகாமுடன் செய்யப்பட்ட திட்டவட்டமான வாக்குத்தத்தத்தை ஒலிவமர வேர் அடையாளப்படுத்திகிறது. "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதி.12:3.) இந்த வாக்குத்தத்தமானது பிறகு கிளைகளை பிறப்பிக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு தனிப்பட்ட யூதனும் இந்த ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் தொடர்புடையதாக உரிமை கோரினான். அவிசுவாசத்தினால் இந்த கிளைகளில் பல முறித்துப் போடப்பட்டன என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். நமது இரட்சகரின் ஊழியத்துடன் ஆரம்பித்து, எருசலேம் அழிவடைந்ததுடன் முடிவடைந்த நாற்பது வருஷ காலப்பகுதி தான் இந்த கிளைகள் முறித்துப் போடப்பட்ட காலம் ஆகும்.

அந்த காலப்பகுதியில், தகுதியில்லாத எல்லா கிளைகளும் முறித்துப் போடப்பட்டன. தங்கியிருக்க தகுதியுள்ளவர்கள் "வார்த்தையினால் தண்ணீர் கழுவுதலின் மூலம் சுத்திகரிப்பு" அடைந்தார்கள். இவர்கள் மோசேயிலிருந்து கிறிஸ்துவுக்கு மாற்றம் அடைந்து பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார்கள். யூத கிளைகள் முறித்துப் போடப்பட்டதிலிருந்து, புறஜாதிகளிடமிருந்து கிளைகளை தேவன் சேகரித்துக் கொண்டு இருக்கிறார். அந்த **முறித்துப் போடப்பட்ட கிளைகளுக்குப்** பதிலாக நாம் ஒட்ட வைக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். இவ்விதமாக நீங்களும் நானும் ஒலிவ மரத்திற்குள் ஒட்ட வைக்கப்படலாம். சுபாவத்தின்படி

கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் அந்நியர்களாகவும் இருந்த நாம், ஆசீர்வாதம் வர இருக்கிற உண்மையான ஒலிவ மரத்தில் இப்பொழுது ஒட்ட வைக்கப்படுகிறோம்.

அந்த ஒலிவ மரத்தில், அந்த திராட்ச செடியில், கிறிஸ்துவுக்குள் ஒட்ட வைக்கப்பட்டால், அவரில் **தரித்திருப்பது** தான் நாம் அடுத்து செய்ய வேண்டிய காரியம் ஆகும். சில குறிப்பிட்ட தேர்வுகள் பிரயோகப்படுத்தப்படுகின்றன. அந்த தேர்வுகளுக்கு ஒத்திருக்காதவர்கள் அதில் தரித்திருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆனால், அவர்கள் துண்டிக்கப்படுவார்கள். திராட்ச செடியைப் பற்றி மேன்மையான போதகர் கூறினார், “ஏனெனில் கனி கொடாதிருக்கிற செடி எதுவோ அதை அவர் (பிதா) அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்.” (யோவான் 15:2.) ஆகவே, **கனி கொடுக்கிற** கிளைகளுக்கு சீரமைத்தலையும், கிளை நறுக்கி திருத்தம் செய்தலையும் நாம் பெறுகிறோம். நல்ல திராட்சத் தோட்டக்காரனின் பாதுகாப்பிலும், நல்ல நிலைமையிலும் நாம் இருக்கிறோம் என்பதில் களிப்படைகிறோம். மெய்யான திராட்ச செடியில் நாம் தரித்திருந்தால், நாம் மீதியுள்ள சபையாருடன் மகிமையடைந்து, மேசியாவின் இராஜ்யத்தை உள்ளடக்கியவர்களாக இருக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. பிறகு இந்த இராஜ்யம் மாம்சீக இஸ்ரயேலர்களை ஆசீர்வதிக்கும். மாம்சீக இஸ்ரயேலர்கள் வழியாக பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

## நீதிமானாக்கப்படுதல் - தற்காலத்திய பார்வை.

**கே 404:1 :: கேள்வி (1913-Z) - 1 -** சபையின் நீதிமானாக்கப்படுதல் குறித்து உங்களுடைய பார்வைகளை மாற்றிக் கொண்டிருக்கிறீர்களா? வேதாகம பாடங்கள் வால்யூம் 1ல் இந்த பாடத்தின் மேல் சொல்லப்பட்டிருக்கிறவைகள் இனிமேல் உங்களுடைய கருத்தைக் குறிக்காதா?

**பதில்.** நிச்சயமாக அல்ல! அப்படி எங்களுக்கு இருந்தால், அந்த வால்யூமை நாங்கள் வெளியிட்டு விநியோகிப்பதை ஏன் தொடருகிறோம்? “நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்.” ஆகவே, எங்களுடைய நீதிமானாக்கப்படுதல் பாடம் கர்த்தருக்குப் பிரியமான ஜனங்களில் பலருக்கு தினமும் தெளிவுபடுத்துகின்றது. அவர்களால் ஏற்கனவே பகுத்துணராத நீதிமானாக்கப்படுதலின் அம்சங்கள் இப்பொழுது மிகவும் தெளிவாக உள்ளன. உதாரணமாக, கடந்த காலத்தில் பலர் பார்க்கத் தவறினார்கள். சிலர் இன்னும் பார்க்கத் தவறுகிறார்கள். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் ஒரு படிப்படியாக நடக்கும் செயல்முறையாகும். விசுவாசத்தின் ஒவ்வொரு படியும் நம்மை உச்சக்கட்டத்திற்கு அருகாமையில் கொண்டு வந்தது. ஆனால் நமது கீழ்ப்படிதலினாலும், கர்த்தருக்கு அர்ப்பணிப்பில் முழுமையாக சரணடைதலினாலும் நம்முடைய விசுவாசம் இதனுடைய பூரணத்துவத்தை வெளிப்படுத்தும் வரைக்கும், இந்த உச்சக்கட்டம் முழுமை அடையாது. பிறகு நமது மேன்மை பொருந்திய பரிந்துபேசுகிறவர் நம்முடைய அர்ப்பணித்த சரீரங்களை ஏற்றுக்கொண்டு, தம்முடைய மீட்பின் பலனை அவர்களிடத்தில் சுமத்தி, பரலோக பிதாவினிடத்தில் - நீதியின் பார்வையில் அவர்கள் முற்றிலும் நீதிமான்களாக்கப்பட்டார்கள். பிறகு, பரலோக பிதா பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்து அந்த முழுமையாக நீதிமானாக்கப்பட்ட ஆத்துமாவை ஏற்றுக்கொண்டார். அது முதற்கொண்டு, அந்த நபர் புதிய சிருஷ்டியாகவும், ஆவியின் தளத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்ட குமாரனாக இருந்தார்.

விசுவாசத்தின் வளர்ச்சிக்கான இந்த காலப்பகுதியில், நீதிமானாக்கப்படுதல் படிப்படியாக நெருக்கமுற்று, அந்த நபர் தேவனுடைய கிருபையை அதிகமதிகமாய் உடையவராய் இருந்தார். ஆனால், கடைசி படி எடுத்த உடனே, மனுஷ சுபாவத்தில் முழுவதுமாக நீதிமானாக்கப்பட்டு - பூமிக்குரிய தளத்தில் குமாரனாக ஆனார். அவர் **ஒரு கணம் மட்டுமே** அங்கே இருந்தார். பிறகு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் பூரணப்படுத்தப்பட்டவருடைய பலியின் ஏற்றுகொள்ளப்படுதலை அதிகாரத்துடன் வெளிப்படுத்துகிறது.. பிறகு, புதிய சிருஷ்டியாக அவரைத் துவங்க வைத்தது.

## தற்காலிக மற்றும் உண்மையான குமாரத்துவம் (SONSHIP).

இவையெல்லாம் யுகங்களைப் பற்றிய வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தளம் N பல்வேறு படிகளில் நீதிமானாக்கப்படும் நிலையைக் குறிக்கின்றது. இவ்விதமாக, ஆபிரகாமும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த மற்றவர்களும் தங்களுடைய விசுவாசத்தினால் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட்டனர். அவர்கள் ஜீவனுக்குள் நீதிமான் களாக்கப்படவில்லை, குமாரத்துவத்திற்கும் கூட அவர்கள் நீதிமான்களாக்கப்படவில்லை. அவர்கள் தேவனுடைய நட்பு, கிருபை மற்றும் மேற்பார்வையான பாதுகாப்பில் நீதிமான் களாக்கப்பட்டனர். பிறகு, இயேசு மரித்து, உயிர்த்து, ஏறி, சபையின் சார்பாக தம்முடைய மீட்பின் பலனை பிரயோகப்படுத்தினார். அவருடைய அடிச்சுவடுகளில் முழு அர்ப்பணிப்பில் நடக்க விருப்பமுள்ளவர்களான இந்த வகுப்பார் எல்லோருக்கும் அவர் பரிந்துபேசுகிறவரானார். அவருடைய மீட்பின் பலி சுமத்தப்படுதல், ஒவ்வொருவருடைய நீதிமானாக்கப்படுதலின் பணியை உள்ளடக்கியதாய் இருக்கிறது. அதனால் அந்த நபருடைய பலியை ஏற்றுக்கொள்ளவும், அவரை புதிய சிருஷ்டியாக ஜெநிப்பிக்கவும் தேவனால் முடிகிறது.

தேவனுடன் இணக்கமாயிருப்பதற்கு அவருடைய விருப்பம் மற்றும் விசுவாசம் காரணமாக, ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று குறிக்கப்படுகிறார். இதைப் போன்றே யோவான் ஸ்நானகனைப் பற்றியும் படிக்கிறோம், “மணவாளனுடைய தோழனோ - - - மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்.” “ஊழியக்காரன்” என்ற சொல் வேதாகமத்தில் விசேஷமாக மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழே உள்ள யூதர்களைக் குறிப்பதாகவே உள்ளது. அந்த உடன்படிக்கையினால் அவர்கள் தேவனுடைய பாதுகாப்பையும், ஆசீர்வாதத்தையும் அனுபவித்தார்கள். அவருடைய ஊழியக்காரர்களாக அனுமதிக்கப்பட்டார்கள். ஆபிரகாமைப் போலவே பலர் தேவனுடைய நண்பர்களாக இருந்தும், குமாரத்துவத்திற்குரிய சகல சலுகைகளுக்கும் முழுவதுமாக தகுதியுடையவர்களாயிருந்தும், அவர்கள் குமாரர்களாக அங்கீகரிக்கப்படுவதற்கு தேவனுடைய ஏற்பாட்டுடன் இணக்கம் இல்லாமல் இருந்தது. “குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்” என்று அப்போஸ்தலர் விளக்கம் அளிப்பது போன்று, பாவமும் மரணமும் நீக்கப்படும் வழியை கிறிஸ்துவின் பலி திறந்தது வரைக்கும், யாரும் தெய்வீக குமாரத்துவத்தைப் பெற முடியாது.

இதைப் போலவே, தேவனுடைய பிள்ளைகளாக இப்போதும் கூட நம்முடைய நிலைப்பாடு தற்காலிகமானதாகவே இருக்கிறது. தேவனுடைய அன்பில் நாம் உறுதியாக நின்றிருந்தால், நாம் அவருடைய குமாரர்களாக தரித்திருப்போம். உரிய காலத்தில் பூரணத்துவம் பெறுவோம். ஆனால் யாரேனும் மனதார பாவத்திற்கும் அதன் சேவைக்கும் பின் வாங்கிப் போனால், அவன் தன்னுடைய குமாரத்துவத்தின் உரிமையை இழந்து போவான். அவனுடைய பெயர் ஜீவ புஸ்தகத்திலிருந்து எடுத்துப் போடப்படும். பிதாவுடன் பரிந்துபேசுகிறவர் அவனை அங்கீகரிப்பதை நிறுத்தி விடுவார். அவன் குமாரனுடன் நிலைநிற்பதில்லை. அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கமாக, அவனுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள வேறு ஒருவர் அனுமதிக்கப்படுவார்.

இவ்விதமாக அப்போஸ்தலர் அறிவிக்கிறார், “இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாக **கருவில்** இருக்கிறோம், இனி நாம் எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும், அவர் வெளிப்படும் போது **(நமது மீட்பர், நமது தலை)** அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.” (1யோவான்.3:2.) அதாவது, நம்முடைய தற்போதைய குமாரத்துவம் தற்காலிகமானது. நம்முடைய தகுதிகாண் பருவ சோதனையைக் கடந்த பிறகு, உண்மையான குமாரத்துவம் ஆரம்பமாகும். அவர்களுடைய விசுவாசம் மற்றும் உண்மையினால் ஏற்றுக்கொள்ளப்படுவதை நிரூபிக்கும் பலர், மகிமையான உயிர்த்தெழுதல் மாற்றத்தினால், முழுமையான உணர்வில் குமாரர்களாக்கப் படுவார்கள். இப்படியாக, அவர்கள் அர்ப்பணிப்பின் முழு காலத்தையும் கடக்கும் வரைக்கும், யாரும் N தளத்திற்கு முழுமையாக வந்தடைய மாட்டார்கள் என்று பார்க்கிறோம். ஆகவே

அவர்கள் ட தளத்தை அடையும் வரையில் யாரும் குமாரத்துவத்தை முழுமையாகப் பெற மாட்டார்கள்.

## “மேலான உயிர்த்தெழுதல்”

முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தீர்க்கதரிசிகள் போன்றவர்கள் (எபி11:38-40.) தேவனுடைய குமாரர்கள் என்ற பாணியில் இருக்க முடியவில்லை. அவ்வாறு அவர்கள் பெயரிடப்படவும் இல்லை. அவர்கள் அந்த நிலைக்கு அல்லது அந்த பெயருக்கு தகுதியில்லாதவர்கள் என்ற காரணத்திற்காக அல்ல. இது குறித்து அப்போஸ்தலர் நமது கவனத்தை ஈர்க்கிறார். அவர்கள் “தேவனைப் பிரியப்படுத்தினார்கள்” என்றும் இருதயத்தின் பூரணத்துவத்தில் குறைவு ஏதுமிருந்தால் அவரை எதுவும் பிரியப்படுத்தாது என்றும் அப்போஸ்தலர் நம்மிடம் உறுதிப்படுத்துகிறார். பாவநிவாரண இரத்தம் அவர்கள் சார்பாக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்பது தான் அவர்களை குமாரர்களாக ஏற்றுக்கொள்வதில் தடையாக இது ஒன்று தான் இருந்தது. முற்பிதாக்கள் “மேலான உயிர்த்தெழுதலின்” அனுபவத்திற்குள்ளாகும் போது, அவர்கள் பூரண மனுஷர்களாக வருவதை நாம் புரிந்து கொள்வோம். பாவம் செய்வதற்கு முன் இருந்த ஆதாமைப்போல அவர்கள் பூரணமுடைய வர்களாக இருப்பார்கள். மனங்கள், இருதயங்கள் மற்றும் விருப்பங்களில் வளர்ச்சி பெற்று, பயிற்சி பெற்று, சோதிக்கப்பட்டு, தேவனிடம் விசுவாசத்தை நிரூபிக்கிறவர்களாக இருப்பார்கள். அந்த பூரணமான நிலையில் மேசியாவின் ஆட்சியில் மனுக்குலம் அனைத்தும் கீழ்ப்படி தலினால் எவற்றை அடைவார்கள் என்பதற்கு மாதிரிகளாக இருப்பார்கள்.

அவர்களுடைய உயிர்த்தெழுதல் நடக்கும் அந்தக் கணமே, இந்த பூரண மனுஷர்கள் ஆதாம் பெற்றிருந்ததைப் போல, தேவனிடத்தில் வருவதற்கான அதே வலிமையைப் பெறுவார்கள். அவர்கள் ஆதாம் இருந்ததைப் போலவே, தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படுவதற்கு முழுமையான உரிமை பெற்றிருப்பார்கள்; ஆனால், **ஒரு விஷயத்தைத்** தவிர, அதாவது, இந்த முற்பிதாக்கள் மற்ற மனுக்குலத்தாரைப் போலவே, புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தரின் கைகளில், அவருடைய மேசியா இராஜ்யத்தின் ஆயிர வருஷங்களில் இருப்பார்கள். வேதாகம வாக்கியங்களின்படி, அந்த காலப்பகுதியின் முடிவு வரையிலும் பிதாவிடம் அவர் இராஜ்யத்தை ஒப்படைக்க மாட்டார்.

ஆகவே, கிறிஸ்துவின் ஆட்சியின் முடிவு வரைக்கும், முற்பிதாக்கள் பிதாவுடன் குமாரர்களாக நேரிடையாக செயல்தொடர்பு கொள்வதில்லை. அவரிடம் குமாரர்களாக நேரிடையான அங்கீகரிப்பும் கிடையாது. ஆயிர வருஷ முடிவில் அவர் எல்லாவற்றையும் பிதாவிடம் ஒப்படைப்பார். பிதாவே எல்லாவற்றிலும் எல்லாமுமாகவும் இருப்பார். எல்லோரும் நேரிடையாக அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள். எனினும், ஆயிரம் வருஷங்களில் கிறிஸ்துவின் மத்தியஸ்த ஏற்பாடுகளில் முற்பிதாக்கள் பூரணப்படுவார்கள். மற்ற எல்லோரும் அவர்கள் பூரணப்படுதலை அடையும் அளவுக்குத்தக்கதாக, சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள். ஏனெனில், ‘இந்த உலகத்தின் அதிபதி’ சாத்தானுடையதும், பாவம் மற்றும் மரணமுமான ஆளுகையின் கீழ் அவர்கள் இனி இருக்கமாட்டார்கள். ஆனால், ஜீவாதிபதியின் கீழ், ஜீவனுக்குள்ளான அவருடைய நீதியின் ஆட்சியின் கீழ் இருப்பார்கள்.

## நீதிமானாக்கப்படுதல் - வீணாக பெறுவது.

**கே 406:1 :: கேள்வி (1913) - 1 -** நீதிமானாக்கப்பட்டவர்கள் அர்ப்பணிப்புக்குள் போகாவிட்டால், சீர்பொருந்துதலில் இது அவர்களுக்கு மேலானதா அல்லது மோசமானதா? மோசமானதாக இருந்தால், எப்படி?

**பதில்.** அர்ப்பணிப்புக்குள் செல்லாதவர்கள் எவரும் நீதிமானாக்கப்படுவதில்லை. நீதிமானாக்கப்படுதலை நோக்கி அடி எடுத்து வைப்பவர்களாக இருக்கிறார்கள்; அதாவது, அவர்கள் நீதிமானாக்கப்படும் சுபாவத்திற்குள்ளாக வருகிறார்கள். அவர்கள் தேவனுக்கு அருகில்

நெருங்குகிறார்கள். ஆனால், அவர்கள் தங்களை முழுவதும் சரணடையச் செய்யும் அந்த இடத்திற்கு வரும் வரைக்கும், பிதாவின் குமாரனுடைய மரணத்தின் வாயிலாக தேவனிடம் மன்னிப்பு பெற்று சமரசம் கொண்டவர்களாக அவர்கள் எண்ணப்படும் இடத்தை அடையாமல் இருக்கிறார்கள். உதாரணமாக, இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் ராஜரீக ஆசாரியத்துவதற்காக உள்ளது. நீங்கள் எல்லோரும் உங்களுடைய அழைப்பின் ஒரே நோக்கத்திற்காக அழைக்கப்படுகிறீர்கள். சிலர் நீதிமான்களாக்கப்படுதலுக்கு அழைக்கப்படுகிறார்கள் என்றும், பிறகு மற்ற சிலர் பரிசுத்தமாக்கப்படுதலுக்கு அழைக்கப்படுகிறார்கள் என்பதற்காகவும் அல்ல. ஆனால், தற்போது நடைபெறும் ஒரே அழைப்பு இதுவே. இயேசு மரித்து, மீட்பிற்கு ஏற்பாடு செய்திருப்பதால், தேவன் அந்த வழியை திறந்துவிட்டிருக்கிறார். விருப்பமாயிருக்கும் எவரும் தேவனிடத்தில் நெருங்கி வரலாம். கேட்கிறதற்குக் காதுள்ளவனாகவும், புரிந்து கொள்பவனாகவும் இருந்தால், விருப்பமாயிருக்கிற எவரும் இப்பொழுது பிதாவை அணுகலாம். இந்த விஷயத்தைப் பற்றிய தேவனுடைய உருவகத்தை ஆசரிப்புக் கூடாரத்தில் கவனியுங்கள். ஆசரிப்புக் கூடாரத்தை அணுகுபவர்கள் கொஞ்ச தூரத்தில் இருக்கலாம். அவர்கள் கதவு, வாயிலுக்கு வரும் போது, அங்கே அவர்கள் முதலாவதாக சித்திர வேலைப்பாடு உள்ள வாயிலைப் பார்க்கிறார்கள். இது அடையாளப்பூர்வமாக பாவங்கள் மன்னிக்கப்படுவதின் தேவையைப் பற்றிய குறிப்பிட்ட பாடங்களை உருவகமாகக் கொள்கிறது; அவர்கள் வாயிலைத் தாண்டி, அவர்களுக்கு முன்பாக நேராக பலிபீடம் நிற்பதைப் பார்க்கிறார்கள். அந்த பலிபீடம் குறிக்கும் கிறிஸ்துவின் பலியினால் அவர்கள் நம்பிக்கை வைக்காவிட்டால், அவர்கள் இன்னும் முன்னேறிச் செல்ல முடியாது என்பதை அர்த்தப்படுத்துகிறது. அவர்கள் இன்னும் செல்வதற்கு நல்ல தைரியம் கொண்டவர்களாயிருந்தால், அவர்கள் மேலும் நெருக்கமாக நீதிமான்களாக்கப் படுபவர்களாக - முழுவதுமாக நீதிமான்களாக்கப்பட்டவர்களாக அல்ல - ஆனால், மிகவும் நெருக்கமாக நீதிமான்களாக்கப்பட்டவர்களாய் பலிபீடத்தைக் கடக்கிறார்கள். அவர்கள் அதிகமதிகமாக நீதிமான்களாக்கப்படும் நிலைக்கு வெகு அருகில் நெருங்கி வருகிறார்கள். பிறகு அவர்கள் சிறிது அப்பால் செல்கிறார்கள். மாம்சீக அசுத்தங்களை - வனாந்திர அசுத்தங்களைக் கழுவுவதற்காக வைக்கப்பட்டுள்ள தண்ணீர் நிரப்பப்பட்டுள்ள தொட்டியை அவர்கள் பார்க்கிறார்கள். அவர்கள் சொல்கின்றனர், “நான் இப்பொழுது இருக்கிறதை விட சுத்தமாக இருக்க விரும்புகிறேன்.” அதாவது, மாம்சத்தின் சில அசுத்தங்களை விலக்கிப்போடப் போகிறேன் என்று அர்த்தமாகும். அதிகமதிகமாக தெளிவாக அவர்கள் பார்க்க வந்திருக்கும் தெய்வீக நீதியின் பிரமாணங்களுடன் அதிகமாக நெருங்கி இணக்கமாய் இருப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்று அர்த்தம் ஆகும். பிறகு, இறுதியாக அவர்கள் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு நேராக வருகிறார்கள். உருவகத்தின்படி, அங்கே அவர்கள் கர்த்தருடையவர்களாயிருந்தால், அவர்கள் கட்டப்படுகிறார்கள் - வாசலுடன் கட்டப்பட்டிருக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், வெள்ளாட்டுக்கடா கொண்டு வரப்பட்டு, ஆசரிப்புக் கூடார வாசலில் கட்டப்பட்டிருக்கிறது - அது வெளியே உள்ள வாசலில் (பிராகார வாசல்) அல்ல; ஆனால் ஆசரிப்புக் கூடார வாசலிலேயே கட்டப்பட்டிருக்கிறது. அதாவது, ஜீவ பலியாக உங்களுடைய சரீரம் காணிக்கையாக இருப்பதை அர்த்தப்படுத்துகிறது. அந்த வெள்ளாடு சாகவில்லை, ஆனால் அது அங்கே கட்டப்பட்ட போது, வெள்ளாடு உயிரோடு இருந்தது. நீங்கள் சுபாவத்தின்படி வெள்ளாடுகளில் ஒன்றாக கட்டப்பட்டு, அல்லது அர்ப்பணிக்கப்பட்டு, அல்லது கர்த்தரிடம் கட்டப்பட்டு, உங்களுடைய சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதை இது அடையாளப்படுத்துகிறது. இப்பொழுது, பிரதான ஆசாரியர் செய்வதைத் தவிர வேறெதுவும் செய்ய இயலாது. இதற்கு அடுத்தபடி என்னவெனில், பிரதான ஆசாரியர் வந்து அதைக் கொன்று, வெள்ளாட்டுக்கடாவை பலியாக ஏற்றுக்கொள்வது தான். இது கர்த்தருக்குள்ளான உங்களுடைய அர்ப்பணிப்பு, இது பிரதான ஆசாரியர் வழியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை அர்த்தப்படுத்துகிறது. உங்கள் சொந்த வெள்ளாட்டுக்கடாவை நீங்கள் நேரிடையாக சங்கரிக்கிறதில்லை. ஆனால் நீங்கள் உங்களை கர்த்தரிடத்திற்குக் கொண்டு வந்து, கர்த்தரிடம் உங்களை காணிக்கையாக்குகிறீர்கள். அவர் அந்த வெள்ளாட்டுக்கடாவை தம்முடைய பங்காகவும் தம்முடைய பலியின் பங்காகவும் ஏற்றுக்கொள்கிறதினால் தான், இது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில், அவருடைய பாவ நிவாரணத்தின் பலியின் பலனினால் நீதிமானாக்கப்படுவதற்கான அவருடைய பலியாக இருக்கும்

காரணத்தினால், இது பிதாவினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது. அவருடைய பலிகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்படியாக, நேசிக்கிறவரிடம் நாம் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம். நம்முடைய பலி ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தக் கணமே, நாம் இனி வெள்ளாட்டுக்கடாவாக இல்லாமல், பிரதான ஆசாரியரின் அங்கங்களாக கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். ஆனால், எல்லா பணிகளிலும் அதிகாரமுடையவராயிருக்கும் பிரதான ஆசாரியரின் பங்காக நாம் இப்பொழுது எண்ணப்படுகிறோம். ஆகவே நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாக இருக்கிறோம். நீங்கள் அங்கங்களாயிருக்கும் இந்த கிறிஸ்து தான் அந்த மாபெரும் பிரதான ஆசாரியராக நிழலாக்கப்பட்டிருந்தார். அவருடைய தலையில் வந்த அபிஷேக எண்ணெய் இயேசுவின் மேல் வந்த பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. அதைத் தொடர்ந்து, அது வஸ்திரங்களின் ஓரங்களில் வழிந்தோடி வந்து, இப்படியாக அவருடைய சரீரத்தின் அங்கங்களாக அவர் ஏற்றுக்கொள்கிறவர்கள் எல்லோரையும் உள்ளடக்கி, அல்லது ஏற்பு தெரிவித்து, அல்லது ஆவியில் ஜெநிப்பிக்கப்படுவதாக இருக்கிறது. பிறகு, இதுவே நம்முடைய நீதிமானாக்கப் படுதலின் முழுமை ஆகும். இதைப் பற்றி நாம் நினைக்கும் போது, இது மிகவும் அதிர்ஷ்டமான ஏற்பாடாக இருக்கிறது. ஏனெனில், நாம் உண்மையில் அர்ப்பணிப்பு ஏதும் செய்திருப்பதற்கு முன்பே, நாம் தேவனிடத்தில் முதலாவது வந்து, தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், கிறிஸ்துவின் மீட்பின் பலன் நம் மீது சுமத்தப்பட்டால், நமக்கு வருங்காலத்தில் தேவைப்படும் போது, மேலும் எதுவும் இருக்காது. ஏனெனில் கிறிஸ்துவின் பலன் ஒரு தரம் சுமத்தப்பட்டால், மேற்கொண்டு சுமத்தப்படுவதற்கு வேறு ஒன்றும் இருக்காது. வேறு வார்த்தைகளில் சொன்னால், நமது பாவங்களுக்காக இயேசு மரித்த போது, உங்களுக்கு ஒரு பங்கும், எனக்கு ஒரு பங்கும் இருந்தது. நீங்கள் உங்கள் பங்கைப் பெறும் போது, இது இரண்டாம் தடவையாக ஒருபோதும் அதைப் பெறமாட்டீர்கள். நீங்கள் அதைப் பெற்ற பிறகு, அது உங்களுடைய கடமையாயிருப்பதால், அந்த பங்கை துஷ்பிரயோகம் பண்ணினால், உங்களுக்கு இரண்டாம் பங்கு கிடைக்கப் போவதில்லை. கிறிஸ்து மறுபடியும் மரிக்கமாட்டார். மரணம் இனி அவர் மேல் ஆளுகை செலுத்த முடியாது. மனுக்குல குடும்பத்தின் சார்பாக, அவர் தம் மீட்பின் பலனை ஒரு முறை மட்டுமே சுமத்துகிறார். நீங்கள் உங்கள் பங்கைப் பெறுகிறீர்கள்; மற்ற ஒவ்வொருவரும் அவரவருடைய பங்கை பெறுகின்றனர். இதனுடைய கருத்து என்னவென்று நீங்கள் பார்க்கலாம்: தேவன் நம்மை ஏற்றுக் கொண்டு, நீதிமானாக்கி, இவ்விதமாக கிறிஸ்துவின் பலனைக் கொடுத்து, நாம் நம்முடைய பலியை செலுத்தாமலிருந்தால், பிறகு நாம் எதிர்காலத்துக்குரிய எல்லா சலுகைகளையும் இழக்கிறோம்; கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கீழ் அவன் பெறக்கூடியதற்கான வருங்கால ஜீவன் பேரில் அப்படிப்பட்ட நபர் நம்பிக்கை கொள்ள முடியாது. ஆகவே, நாம் அனுகவும், நீதிமானாக்கப்பட்ட சுபாவத்தில் இருக்கிறோம் என்று நாம் பேசிக்கொள்ளும் விதமாகவும், நம்முடைய குடும்பங்கள் நீதிமானாக்கப்படும் சுபாவத்தில் இருக்கும் விதமாகவும் தேவன் அன்பாக இந்த விஷயத்தை ஏற்படுத்துகிறார். இதன் உணர்வு என்னவென்றால், நாம் தேவனுக்கு அருகில் நெருங்கி, அவருடைய ஏற்பாடுகளை பரிவிரக்கத்துடன் உணர்ந்து, தேவன் அளித்திருக்கிற பெரிதான பரிமாற்றத்தை முழுமை செய்யவும், பெரிதான அடிகளை எங்கு எடுக்க வேண்டும் என்பது குறித்து அதிகதிகமாக யோசனை செய்ய வேண்டும், அதாவது, உங்களுடைய சரீரங்களை ஜீவ பலியாகவும், பரிசுத்தமாகவும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் காணியாக்க வேண்டும். குறித்த நேரத்திற்குள் நீங்கள் இதை காணிக்கையாக்கினால், அப்பொழுது இது பிதா ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும். இது ஏற்றுக்கொள்ளப்பட்டக் கணமே, இது உங்களுடைய ஜெநிப்பிக்கப்படுதலின் நேரமாக இருக்கின்றது; பிறகு நீங்கள் புதிய சிருஷ்டியாக இருக்கின்றீர்கள். ஆகவே, இடையே ஒரு கணம் தான் உள்ளது; மாம்சீகத்தின்படி, நீங்கள் நீதிமானாக்கப்படும் அதே கணத்தைத் தொடர்ந்து, அடுத்த கணமே நீங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகிறீர்கள். ஏனெனில், நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, கிறிஸ்து நம்மை ஒப்புக்கொடுக்கும் வகையில், தேவன் நம்மில் யாரையும் ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கிறார். நீங்கள் தயாராக இருக்கும் அந்த கணத்திலேயே இயேசு செய்கிறார். அவர் கூறுகிறார், “என்னுடைய சீஷனாக எந்த மனுஷனும் இருக்க வேண்டுமானால், நான் அவனுக்குப் பரிந்துபேசுகிறவராக இருக்க தயாராக இருக்கிறேன். நீங்கள் என்னுடைய சீஷனாக இருக்க விரும்பினால், உன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா.”

## நீதிமானாக்கப்படுதல் - கிறிஸ்துவின் அங்கி.

**கே 408:1 :: கேள்வி (1913) - 1 -** ஆசரிப்புக் கூடார நிழல்கள் புத்தக பக்கம் 21, பாரா 3 சொல்லுகிறது: "நாம் பார்க்கிறோம், விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தத்தை நோக்கி நம்முடைய முதல் பலியாக, நம்முடைய கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடன் சமாதான நிலைமைக்கு நம்மை கொண்டு வருகிறது." (ரோமர் 5:1.) நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் போது அல்லது கிறிஸ்துவின் நீதியினால் மறைக்கப்படுவதாக எண்ணப்படும் போது, நாம் தேவனிடத்திற்கு ஒரு அடி அருகாமையில் இருக்கிறோம், ஆனால் இன்னும் பிராகாரத்தில் மனுஷீக நிலையில் இருக்கிறோம்." "கிறிஸ்துவின் நீதியினால் மறைக்கப்படுதல்" என்பது எதைக் குறிக்கிறது? இது அங்கியைப் பெறுவதைக் குறிக்கிறதா?

**பதில்.** "நீதிமானாக்கப்படுதல்" என்பது "சரி செய்தல்" என்று அர்த்தமாகும். இது சுபாவ மாற்றத்தை அடையாளப்படுத்தவில்லை. ஏற்கனவே இருந்த சுபாவத்தை சரி பண்ணுகிறது என்பதை மட்டுமே குறிக்கிறது. நமது கர்த்தரைப் பற்றிய விஷயத்தில், அவருடைய விசுவாசத்தின் தேர்வில் அல்லது அவருடைய சோதனையில் முழுவதுமாக நீதிமானாக்கப்பட்டது, அவர் நீதிபரர் என்பதையும், பூரணத்துவம் கொண்டவர் என்பதையும் நிரூபணம் செய்தது; ஆனால் நம்முடைய விஷயத்தில், நாம் எல்லோரும் பாவிகள், ஒருவரும் உண்மையுள்ளவர்கள் அல்ல, நீதியுள்ளவர்கள் அல்ல, இல்லை, ஒருவரும் இல்லை என்பதை நாம் கண்டுணருகிறோம்; ஆகவே பலி செலுத்துவதில் நாம் ஏதேனும் செய்ய முடிவதற்கு முன்பாக, நாம் தேவனை அணுகும் போது, நாம் நீதிமானாக்கப்பட வேண்டும், அதாவது சரி செய்யப்பட வேண்டும்; நம்முடைய பாவங்களும் குறைபாடுகளும் உண்மையாகவோ அல்லது எண்ணப்படும் விதத்திலோ விலக்கப்பட வேண்டும். இப்படியாக விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட வேண்டும். உலகத்தார் அவர்களுடைய நீதிமானாக்கப்படுதலை அடுத்த யுகத்தில் பெறுவார்கள். ஆனால் அது விசுவாசத்தினால் அல்ல, உண்மையான விதத்தில் நடக்கும். அவர்களுடைய நீதிமானாக்கப்படுதல் படிப்படியாக நடக்கக்கூடியது. அவர்கள் இராஜ்யத்தின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் மனதளவிலும், நடத்தையிலும், உடலளவிலும் அதிக அளவில் தெளிவான பூரணத்துவம் ஆயிரம் வருஷங்கள் முடிவு வரைக்கும் அடைவார்கள். அப்போது மனுஷீக பூரணத்தை அடையும் போது, அவர்கள் உண்மையாகவும், பூரணமாகவும் நீதிமானாக்கப்படுவார்கள். இது விசுவாசத்தினாலாகும் நீதிமானாக்கப்படுதல் அல்ல. ஆனால் எஜமானர் உலகத்தாருக்காக அந்தக் காலப்பகுதியில் ஏற்பாடு செய்யப் போகும் கிரியைகளின் செயல்முறையாகும். ஆனால் சபை விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறது. இது நாம் நீதிமான்களாக கணக்கிடப்படும் விதமாக இருக்கிறது; இது நாம் எண்ணப்படும் விதமாக இருக்கிறது. நாம் உண்மையாகவே நேர்மையாக்கப்படவோ அல்லது பூரணத்துவமாக்கப்படவோ இல்லை. நாம் வெறுமனே பூரணராக எண்ணப்படுகிறோம். நமது குறைகளை சரி பண்ணி, கர்த்தர் தமது மீட்பின் பலனை நம் மீது சுமத்துகிறார். அது சரியானது அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று நம்மை உள்ளடக்குகிறது. என்ன நோக்கத்திற்காக? இந்த சுவிசேஷ யுகத்தின் நோக்கத்திற்காகவே. இந்த சுவிசேஷ யுகத்தின் நோக்கம் என்ன? நாம் தேவனுக்கு பரிசுத்தமும் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கலாம். தேவனுக்கு அருகில் வர அனுமதிக்கப்பட்டால், ஒருவருக்கு இது ஒன்றே நோக்கமாயிருக்கும். அனைத்து உலகமும் தேவனுக்கு அருகில் அனுமதிக்கப்படும் தேவனுடைய காலம், இராஜ்யம் நடைபெறும் காலப்பகுதி ஆகும். நம்முடைய மனுஷீக உரிமைகளையும், விருப்பங்களையும் தள்ளி விட்டு, நமது ஜீவன்களை ஒப்புக்கொடுப்பதற்கு விருப்பமுள்ளவர்களாக இருக்கும் நமக்காக, எஜமானர் பலியிடப்பட்டது போல, நாமும் பலியிடப்பட வேண்டும் என்று ஆசைப்படுகிற நமக்கு ஒரு புதிய வழியை இப்பொழுது அவர் திறந்து வைத்திருக்கிறார். முதலாவது நீதிமானாக்கப்படுதல் மூலமாகவும், இரண்டாவது அந்த நீதிமானாக்கப்பட்ட நபர் அல்லது சரீரம் ஏற்றுக் கொள்ளப்படுதல் மூலமாகவும், நமக்காகத் திறக்கப்பட்ட புதிய வழியில் பிரவேசிக்கிறோம். நாம் முதலாவது நீதிமானாக்கப்படாவிட்டால், தேவன் நம்மை பலியாக ஏற்றுக்கொள்ளமாட்டார். இப்பொழுது, நாம் ஒரு வருஷத்திற்கோ, பத்து வருஷங்களுக்கோ அல்லது பத்து மாதங்களுக்கோ

நீதிமான்களாக்கப்பட வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் முதலாவது நீதிமானாக்கப்படுதல் வர வேண்டும். ஏனெனில் குறைபாடுள்ள பலியை தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார். கிறிஸ்துவின் நீதி சுமத்தப்படுதலினால் நாம் சரி பண்ணப்பட வேண்டியிருக்கிறது. கிறிஸ்து தம்முடைய மீட்பின் பலனை சுமத்தியவுடனே, அடுத்த கணமே, அடுத்த நிமிஷமே, பிதா நமது பலியை ஏற்றுக்கொண்டு, நமக்கு பரிசுத்த ஆவியைக் கொடுத்து, நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் என்று நமக்கு சுட்டிக்காட்டுகிறார். ஆசரிப்புக் கூடாரத்தை எடுத்துக் கொண்டால், ஆசாரியர்களைத் தவிர யாரும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. நாம் எப்போதும் உள்ளே போக அனுமதிக்கப்படுகிறோம் என்றால், தேவன் நம்மை ஆசாரியர்களாக ஏற்றுக்கொள்வது தான் காரணம் ஆகும். அவர் ஏற்படுத்தியிருக்கும் தேவைகள் மற்றும் விதிமுறைகளை நாம் அனுசரித்தால், அவர் நம்மை ஆசாரியர்களாக ஏற்றுக்கொள்வார். அவர் அருகில் வர விரும்புகிறார் என்பதை நாம் அறிகிற காரணத்தினால், வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி, “தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்”, நாம் தேவனுக்கு அருகில் நெருங்கி வர முயற்சிக்கிறோம். நாம் பிராகார வாசலுக்கு வந்து, அதைத் தாண்டி கவனிக்கும் போது, நமது நீதிமானாக்கப்படுதலைப் பற்றி நமது சார்பாகப் பேசக்கூடிய வெண்கல பலிபீடத்தைப் பார்க்கிறோம். ஏனெனில் பலிபீடம் என்பது எப்பொழுதும் பலியை அடையாளப்படுத்துகிறது. நாம் பலிபீடத்தை நோக்கும் போது, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்ற உண்மையை நாம் நம்பி ஏற்றுக்கொள்கிறோம் என்பதை இது தெரிவிக்கிறது. அதை நம்பாதவர்கள் எல்லோரும் வெளியே இருப்பதாகக் குறிக்கப்படுகிறார்கள்; உள்ளே நுழைகிற எல்லோரும், தங்களுடைய பாவங்களின் மன்னிப்பிற்காக நமது கர்த்தரின் மரணத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் தேவனுக்கு அருகில் நெருங்குகிறோம். தண்ணீர் தொட்டியை அடையும் வரை நாம் போகிறோம். கூடாரத்தில் நுழைவதற்கு முன்பு, கழுவுவதற்கும், சுத்தப்படுத்துவதற்கும், கைகளையும் கால்களையும் கழுவுவதற்கும் இந்த தொட்டியில் தண்ணீர் உள்ளது. ஆசாரியத்துவத்தின் கொஞ்ச பேர்களில் ஒருவராக வேண்டுமென நாம் விரும்பினால், மாம்சீகத்தின் அழுக்கை நாம் களைய வேண்டும் என்பதை இது தெரிவிக்கிறது. ஆனால், நாம் இன்னும் தேவனிடத்திற்கு நெருங்கிக் கொண்டு இருக்கிறோம். நாம் பிராகார வாசலில் நுழைந்து, பலிபீடத்தைப் பார்த்து, அவருடைய மன்னிப்பை ஏற்றுக்கொண்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கொண்ட அந்த நேரம் முதற்கொண்டு, நாம் நீதிமானாக்கப்படும் நிலையில் இருக்கிறோம் என்று கூறப்படுகிறோம்; நாம் சரியான திசையில் போய்க்கொண்டு இருக்கிறோம். நாம் ஒவ்வொரு அடி எடுத்து முன்னேறும் போது, தேவனிடம் அதிகமாக சமரசம் அடைந்து கொண்டு, ஆசரிப்புக் கூடார வாசலில் வந்து சேருகிறோம். அங்கே நிழலாக குறிக்கப்படுவதின்படி, கர்த்தரிடம் நம்முடைய முழுமையான அர்ப்பணிப்பை அடையாளப்படுத்தி வெள்ளாட்டுக்கடா கட்டப்பட்டது. இப்பொழுது நாம் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். பிரதான ஆசாரியர் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு வெளியே வந்து, தம்முடைய கையை வெள்ளாட்டுக்கடாவின் மேல் வைத்து அதை சங்கரிக்கும் போது இது நிறைவேற்றப்படுவதாகக் குறிக்கப்படுகிறது. அவர் தம்முடைய கையை வெள்ளாட்டுக்கடாவின் மீது வைப்பது, இதை ஒரு பலியாக, தம்முடைய பலியின் ஒரு பங்காக, அவர் ஏற்றுக்கொள்கிறார். அதாவது, அவர் தம்முடைய மீட்பின் பலனை நம் மீது சுமத்தியிருக்கிறார். ஏனெனில், இந்த பலனை அவர் சுமத்தாமல், அவர் ஒப்புக்கொடுப்பதை துவங்க முடியாது. கைகளை ஆட்டுக்கடாவின் மீது வைப்பது, அவருடைய மீட்பின் பலனை சுமத்துவதை அடையாளப்படுத்துகிறது. “சங்கரிப்பது” என்பது, நமது அர்ப்பணிப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதை அடையாளப்படுத்துகிறது. இவைகள் எல்லாம் நாம் நுழைவதற்கு முன்னால் நடக்கிறது. புதிய சிருஷ்டியைப் பெறுவதற்கு முன்பாக நடக்கிறது. ஆனால், அவர் அதைச் செய்த கணமே, அவருடையவர்களாக எண்ணப்பட்டு, அவர் நம்மை அவருடைய சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொள்கிறார். அவருடன் முதல் இடமாகிய பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறோம். அங்கே அப்போஸ்தலர் கூறுகிறார்: பரலோகத்தில் கிறிஸ்துவுடன் நாம் ஒன்றாக உட்காருகிறோம். நாம் ஏற்கனவே பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். அங்கே பொன் குத்துவிளக்கின் வெளிச்சத்தின் சலுகையையும், பொன்தூப பீடத்தினால் குறிக்கப்படும் ஜெபத்தின் சலுகைகளையும், சமூகத்து அப்ப

மேஜையினால் குறிக்கப்படும் ஆவிக்குரிய ஆகாரத்தை அனுபவிக்கும் சலுகைகளையும் பெறுகிறோம். பலிபீடத்தில் பலியை ஏற்றுக்கொண்டு, தண்ணீர் தொட்டிக்கு வந்து மாம்சீகத்தின் அழுக்கை கழுவவும், நம்மை சுத்திகரிக்கவும் முடியும் அளவுக்கு செய்து, கர்த்தரிடத்தில் வருவதற்கு நம் பங்கில் எல்லாவற்றையும் செய்த பிறகு, ஆசரிப்புக் கூடார வாசலுக்கு வந்து, இங்கே நம்மை கட்டி, அர்ப்பணிப்பு செய்து, "உங்களுடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுங்கள்" என்று அப்போஸ்தலர் கூறும் விதமாக, நம்மையே ஒப்புக்கொடுக்கிறோம். ஆனால், நாம் நம்மையே சங்கரித்துக் கொள்வதில்லை; நாம் நம்மையே பலி செலுத்துகிறதில்லை; அவர் எல்லா பலியையும் செய்கிறார். ஒவ்வொருவரும் பலிகளை செலுத்துகிறதில்லை. நாம் ஆசாரியர்களாக இருக்கவில்லை. நாம் வெறுமனே வெள்ளாட்டுக்கடாவினால் அடையாளப்படுத்தப்படுகிறோம். வெள்ளாட்டுக்கடா தன்னையே பலியிட முடியாது. பிரதான ஆசாரியரே வெள்ளாட்டுக்கடாவை பலி செலுத்தினார். சபையுடன் உள்ள செயல்தொடர்புகள் எல்லாவற்றிலும் அவர் பிதாவின் முகவராக இருப்பதால், நேசிக்கப்படுகிறவருக்குள்ளாக நாம் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம்.

## நீதிமானாக்கப்படுதல் - யாரால்?

**கே 410:1 :: கேள்வி (1916) - 1 -** நீதிமானாக்கப்படுதலை செய்வது யார் - - யேகோவா அல்லது இயேசுவா?

**பதில்.** யேகோவா மற்று இயேசு இருவருமே நீதிமான்களாக்குகிறார்கள். "தேவனே, அவர்களை நீதிமான்களாக்குகிறவர்." (ரோமர் 8:33.) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இயேசுவின் இரத்தத்தில் விசுவாசத்தின் மூலமாக நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். தேவனுடைய நீதிமானாக்கப்படுதல் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக அளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இரத்தத்தை அல்லாமல், எவருக்கும் தேவனுடைய நீதிமானாக்கப்படுதல் அளிக்கப்படவில்லை. எவரும் நீதிமானாக்கப்படுவதற்கு முன்பு, கிறிஸ்து முதலில் மரணமடைய வேண்டியது அவசியமாயிருந்தது. அப்போஸ்தலரும் இதையே கூறுகிறார், "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு" (எபி.2:9.) இயேசுவுக்கு முன் வாழ்ந்தவர்கள், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், தற்காலிக நீதிமானாக்கப் படுதலுக்கு மேலாக எதையும் பெறவில்லை. இந்த உண்மையான நீதிமானாக்கப்படுதல், இயேசு சிலுவையில் எதைச் செய்தாரோ அதைச் சார்ந்தே இருக்கிறது.

தேவனே நீதிமானாக்குகிறவர்; ஏனெனில் கண்டனம் செய்தவர் தேவனே. ஆதாமை சோதனைக்கு உட்படுத்தியவர் இயேசு அல்ல. ஆதாம் இயேசுவுக்கு எதிராகவோ அல்லது இயேசுவின் எந்த பிரமாணத்திற்கு எதிராகவோ பாவம் செய்யவில்லை. ஆனால் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக, தேவனுடைய நீதிக்கு எதிராக ஆதாம் பாவம் செய்தான். ஆகவே தேவ நீதி முதலில் திருப்திப்படுத்தப்படாமல் அவன் நீதிமானாக்கப்பட முடியாது. நீதிமானாக்கப் படுவதற்கு முன்பாக, நாம் குறிப்பிட்ட நிலைமைக்கு நாமே வர வேண்டும். பிறகு பிதாவுடன் பரிந்துபேசுகிற ஒருவர், நீதிபரர் கிறிஸ்து நமக்கு வேண்டும். இந்த ஊழியத்திற்காக தேவன் நியமித்திருக்கிற மேன்மை பொருந்திய பிரதான ஆசாரியர் தான் இந்த பரிந்துபேசுகிறவர். இந்த பிரதான ஆசாரியரின் பாவநிவாரண பணியின் அடிப்படையில் தான் தேவன் நம்மை ஏற்றுக்கொள்கிறார்.

## நீதிமானாக்கப்படுதல் - சட்ட அடிப்படையில்.

**கே 410:2 :: கேள்வி (1916) - 2 -** உண்மையான நீதிமானாக்கப்படுதல் இல்லாமல் சட்டப்பூர்வமான நீதிமானாக்கப்படுதல் இருக்க முடியாது என்று சமீபத்தில் உங்கள் பேனாவிலிருந்து வெளிவந்த எழுத்துக்கோவையில் சொல்லப்படுகிறது. இது எப்படி உண்மை ஆகும்? சபையின் நீதிமானாக்கப்படுதல் தற்போது சட்டப்பூர்வமாக இல்லையா, அவர்களின் பூரணமாக எண்ணப்படுதல் உண்மை இல்லையா?

**பதில்.** எழுதப்பட்டிருக்கிற அறிக்கை சரியானது தான். ஆனால் கேள்வி கேட்டவர் இவ்விஷயத்தைப் பற்றி சரியான பார்வையைப் பெற்றிருக்கவில்லை. கேள்வி கேட்டவரின் மனதில் உள்ள தவறு இது தான்: புதிய சிருஷ்டி நீதிமானாக்கப்படுகிறது என்று அவர் நினைக்கிறார். ஆனால் புதிய சிருஷ்டிக்கு நீதிமானாக்கப்படுதல் தேவை இல்லை. ஒருபோதும் இதற்கு தேவை இருந்ததில்லை. புதிய சிருஷ்டி எந்த தவறும் செய்திருக்கவில்லை. இது, பாவியாக இருந்த அந்த பழைய மனுஷன் தான். இவன் பாவ மனப்பாண்மைகளை சுதந்தரித்திருந்து, சாபத்திற்குள்ளாகி இருந்தவன் ஆவான். இந்த பழைய மனுஷனுக்கு தான் புதிய சிருஷ்டியாவதற்கு முன்பு நீதிமானாக்கப்படும் தேவை இருந்தது; இந்த நீதிமானாக்கப்படுதல் உண்மையான ஒன்றாக இருக்க வேண்டும் - - நேர்மையானதாக இருக்க வேண்டும். நாம் **நீதிமான்களாக்கப்படுகிறோம்**. - நாம் **எதிர்பார்ப்பது** போன்று அல்ல; ஆனால் நீதிமான்களாக்கப்பட்டவுடன் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம்.

இது ஒரு உண்மையான பரிமாற்றம் ஆகும். தனிப்பட்டவர்களாக நாம் ஒவ்வொருவரும் நம்முடைய முழுமையான அர்ப்பணிப்புடன் நம்மை நமது கர்த்தருடைய கைகளில் ஒப்புக்கொடுத்த அந்த சமயத்தில் தான் இது நடந்தது. அந்த சமயத்தில் இயேசு நம்மை ஏற்றுக்கொண்டார். இது உண்மையானதாகும் - இதைத் தொடர்ந்து தேவன் மரித்தவர்களாகவே நம்மை எண்ணுகிறார் என்ற அளவிற்கு இது உண்மையாக உள்ளது. தேவன் சீர்பொருந்துதலுக்கான எந்த உரிமையும் நாம் கொண்டவர்களாகவோ, அல்லது, வேறு மனுஷீக முறையிலான எதுவும் இருப்பதாகவோ நம்மை இனிமேல் அங்கீகரிக்கிறதில்லை. வேதாகமம் கூறுகிறது, "நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது." புதிய சிருஷ்டியைக் குறித்து தான் இங்கு சொல்லப்படுகிறது. புதிய சிருஷ்டிக்கு நீதிமானாக்கப்படுதல் தேவையில்லை. நீதிமானாக்கப்பட்டது பழைய சிருஷ்டியே. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறது தான் இது நீதிமானாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான சாட்சியம் ஆகும். இதிலிருந்து உங்களுடைய பழைய ஜீவன் மரித்திருக்கிறது. உங்களுடைய புதிய ஜீவன் ஆரம்பித்திருக்கிறது. புதிய ஜீவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. அந்த புதிய ஜீவனுடன் மட்டுமே தேவன் செயல்தொடர்பு கொள்ளுவார்.

கர்த்தருடைய ஏற்பாடுகளில், அவர் மற்ற விஷயங்களில் ஈடுபட்டிருக்கும் வரைக்கும், ஒவ்வொருவரும் காத்திருக்க வேண்டியது போல, அவர் ஒவ்வொருவரையும் தனிப்பட்டவர்களாக நீதிமானாக்குகிறதில்லை. இந்த முழு விஷயமும் முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. நமது மீட்பர் துவக்கத்திலேயே ஒரே முறை நமக்கு மீட்பின் பலனை சுமத்தினார். அந்த ஒரு செயலில் நாம் எல்லோரும் அடையாளப்படுத்தப்படுகிறோம். அவர் நமக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமான போது, முழு சபையும் உள்ளடக்கியிருந்தது. (எபி 9:24.) அந்த நேரத்தில் சுமத்தப்பட்ட பலன் முழு சபைக்கும் போதுமானதாயிருந்தது. அந்த பலனினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். நாம் அந்த நிபந்தனைகள், விதிமுறைகளுக்கு இணங்கியிருந்தால், இந்த பலன் சுமத்தப்படுதலில் நம்முடைய பங்கை நாம் பெறுகிறோம். இந்த முறைகளிலேயே பிரதான ஆசாரியர் நம்முடன் செயல்தொடர்பு கொள்கிறார். இது துவக்கத்தில் ஒரு தடவை மட்டும் கொடுக்கப்பட்ட பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம் போலவே இருக்கிறது. சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்துவினிடத்தில் எப்போது வருகிறாரோ, அவருடைய பங்கைப் பெறுவார். ஒருவர் எப்பொழுது தலையுடன் சரியான விதத்தில் தொடர்புள்ளதாயிருக்கிறாரோ, அவர் தம்முடைய அபிஷேகத்தின் பங்கைப் பெறுகிறார். நீங்கள் கிறிஸ்துவின் சரீர அங்கமாயிருக்கிறீர்கள். அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்தினரின் ஆசீர்வாதங்களில் உங்களுடய பங்கை பெறுங்கள். இவ்விதமாக, சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்தில் முழு சபைக்காக பிரதான ஆசாரியாரால் செலுத்தப்பட்ட மீட்பின் பலன், ஒவ்வொருவரும் தன்னுடைய சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும் போது, ஒவ்வொரு தனிப்பட்டவரையும் நீதிமானாக்கும் வழியில் தானே இயங்கும்விதமாக செயல்படுகிறது.

## நீதிமானாக்கப்படுதல் - அர்ப்பணிப்புடன் உள்ள தொடர்பு.

**கே.**411:1:: **கேள்வி** **(1916) - 1 -** அர்ப்பணிப்பிற்கு முன்பு விசுவாசிகள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள் என்று சொல்வது சரியா, அல்லது, அவர்கள் வெறுமனே நீதிமானாக்கப்படுதலை நெருங்குகிறார்களா?

**பதில்.** அவர்கள் நீதிமானாக்கப்படுதலை நெருங்குகிறார்கள். பிராகாரத்தில் தற்காலிகமாக நீதிமானாக்கப்படுதலின் இந்த படிகள் அவரை அவருடைய நீதிமானாக்கப்படுதலை வலுவூட்டும் இலக்கை நோக்கி வழி நடத்துகிறது. இயேசு ஆசரிப்புக் கூடார வாசலில் நீதிமானாக்குகிறார்; ஆனால் அவர் வெறுமனே மாம்சீக அழுக்கை எடுத்துப் போட்ட ஒரு நபரை நீதிமானாக்க மாட்டார். அவர் கூடார வாசலுக்கு வந்து தன்னை அதில் கட்டி, தேவனுடன் உடன்படிக்கை செய்யும் போது மட்டுமே, அவர் முழுமையாக நீதிமானாக்கப்பட முடியும். வாசலில் இருக்கும் போது, அங்கே பிரதான ஆசாரியர் தம்முடைய நீதியை அவரிடம் சுமத்துவதற்கும், கிறிஸ்துவின் சரீர அங்கமாக அவரை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறார்.

ஒருவர் பிராகார வாசலில் நுழைந்து வெண்கல பலிபீடத்திற்கு வந்த உடனேயே, கர்த்தர் அவரை நீதிமானாக்கினால், அந்த நீதிமானாக்கப்படுதலுக்கு நிச்சயமாக ஏதாவது நோக்கம் இருக்க வேண்டும். ஒருவரை சொற்படி கேட்கும் விதத்தில் இணக்கமாக அல்லது பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு தயாராக இருக்கச் செய்வது தான் நீதிமானாக்கப்படுதலின் நோக்கம் ஆகும். ஆகவே, அவர் வெண்கல பலிபீடத்தில் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியை பெற வேண்டுமானால், அவருடைய **பூமிக்குரிய** வாய்ப்புகள் அல்லது சலுகைகள் அனைத்தும் விலகி விடும். அவர் வெளியே போய்விட விரும்பலாம் - அநேகர் செய்வதைப் போல - ஆனால், உறுதியான நீதிமானாக்கப்படுதல் நடந்திருந்தால், இது மிகவும் காலம் கடந்ததாகிறது. தேவனுடன் உடன்படிக்கை செய்யும் நிலைக்கு வராத எவரும் தன்னுடைய சீர்பொருந்துதலின் உரிமைகளை ஒப்புக்கொடுத்திருக்கவில்லை. அவருடைய அர்ப்பணிப்பு வரைக்கும் இந்த உரிமைகளுக்கான வாய்ப்புகள் இன்னும் வருங்காலத்தில் ஆயிர வருஷ யுகத்தில் உள்ளது. ஆனால், இந்த அர்ப்பணிப்பைச் செய்து, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எவரும் எதிர்கால யுகத்தில் மனுஷீக தளத்தில் சீர்பொருந்துதல் அல்லது வேறெதுவும் ஒருபோதும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகவே கிருபையினால் ஒருவர் தற்காலிக நீதிமானாக்கப்படுதலில் இந்த படிகள் அனைத்தையும் எடுத்திருந்து, கர்த்தருடைய சீஷனாக வேண்டுமென்று அவர் விரும்பி, தீர்க்கமாக முடிவெடுத்து, அவர் உட்கார்ந்து, இதன் விலைக்கிரயத்தைக் கணக்கிட்ட பிறகு, உண்மையாகவே சொல்லுகிற வரையிலும் கர்த்தர் யாரையும் அங்கீகரிக்கமாட்டார். அவர் இந்த முடிவெடுக்கும் நிலைக்கு வரும் வரைக்கும், கர்த்தர் அவருடன் கிரியை செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் அவர் தேவனுடன் உடன்படிக்கை செய்யும் முறையில் கூடார வாசலில் தன்னைக் கட்டிக்கொண்டால், அப்போது கர்த்தர் அவரை தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அவருடைய நன்மைக்காக ஒவ்வொன்றையும் இணக்கமாக ஒன்று சேர்த்து செய்வார் - ஆனால் அவர் அந்த படியை எடுக்காத வரைக்கும் அல்ல.

## நீதிமானாக்கப்படுதல் - பிராகாரம்.

**கே 412:1 :: கேள்வி (1916) - 1 -** வனாந்தரத்திலுள்ள ஆசரிப்பு கூடாரத் தொடர்பாக, நீதிமானாக்கப்படுதல் பிராகாரத்தில் காணப்படுகிறதா? அப்படியானால், எப்படி?

**பதில்.** நாம் அழைக்கிற "தற்காலிக நீதிமானாக்கப்படுதல்" என்பது, பிராகாரத்தில் காண்பிக்கப்படுகிறது. இந்த அறை பிராகாரம் என்று இப்பொழுது அனுமானிப்போம்: அந்த கதவுகள் வழியாக நுழைந்து அந்த எதிர்புறம் கடைசியில் ஆசரிப்புக் கூடாரம் உள்ளது; இந்த பக்க கடைசியில் இந்த சுவர்களுக்குப் பதிலாக சுற்று முழுவதும் வெண்மையான திரைகள் உள்ளன; இங்கே எதிரில் வலது புறத்தில் வெண்கல பலிபீடம் நமக்கு உள்ளது. பிராகார நிலைமைக்குள் வருகிற எவரும், கர்த்தரிடம் அருகில் வருவதற்கு தனக்கு விருப்பம் இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும். அதற்குப் பின்னால் உள்ள பகுதியை, பரிசுத்தம் அல்லது பரிசுத்தங்கள் என்று தேவன் குறிப்பிடுகிறார். தேவனைத் தேடுகிற நபர், வாயிலில் நுழைந்து

அருகில் வந்து, வெண்கல பலிபீடத்தை அடைகிறார். அவர் இந்த பலிபீடத்தைப் பார்த்து, அது எதை அர்த்தப்படுத்துகிறது என்று நோக்குகிறார். அவர் பாவி என்றும், பாவத்திற்கான பலியின் மூலமாக அல்லாமல், தேவனைச் சேருவதற்கு எந்த வழியும் இல்லை என்பதை அவருக்கு இந்த பலிபீடம் அர்த்தப்படுத்துகிறது. பாவத்திற்கு நிவாரணம் செய்வதற்கு பலி அவசியம் என்பதை அவர் கண்டுணர்கிறார். அதைப் பார்த்து அவர் கூறுகிறார், "நான் இங்கே நிற்க விரும்பவில்லை, ஆனால் பளபளப்பான வெண்கலத் தொட்டியிடம் செல்கிறேன். வனாந்தரத்தின் தீட்டுகளை, முக்கியமாக கைகள் மற்றும் கால்களில் உள்ளவற்றை கழுவும் நோக்கத்திற்காக தொட்டியில் தண்ணீர் உள்ளது.

இங்கே தண்ணீர் தொட்டியில் அவர் கழுவுகிறார். இப்படியாக பலிபீடத்தின் மேல் பலியைப் பார்த்த பிறகு, கழுவி சுத்தம் செய்வதின் அவசியத்தை அவர் கண்டுணர்கிறார். அவர் கூறுகிறார், "பிராகாரத்தின் வெளியே மனுக்குல உலகத்துடன் பொதுவாக என்னிடத்தில் வருகிற பாவத்திலிருந்தும் தீட்டுகளிலிருந்தும் என்னை சுத்திகரித்துக் கொள்வதின் அவசியத்தை நான் பார்க்கிறேன்." தண்ணீர் தொட்டியில் கழுவுதல் என்பது, அவர் தம் சுத்திகரிப்புக்கு நிச்சயமாக கொஞ்சம் செய்ய முற்படுகிறார் என்று அர்த்தமாகிறது. இது தான் சரியான மன நிலை ஆகும். இந்த மன நிலை அவருக்கு இருக்காவிட்டால், வெண்கல பலிபீடத்தின் மேல் உள்ள இரத்தம் அவருக்கு பிரயோஜனமாக இருக்கிறதில்லை. தீட்டுப்படுத்துகிறதும் தவறானதுமான ஒவ்வொன்றிலுமிருந்து வார்த்தையிலும், எண்ணத்திலும், செயலிலும் சுத்திகரிக்கப்படுவதற்கு, மாம்சீக அழுக்கிலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கு அவர் விரும்புகிறார் என்பதை, தண்ணீர் தொட்டியிடம் போகிறதின் மூலமாக அவர் காண்பிக்கிறார். தண்ணீர் தொட்டியில் மாம்சீகத்தின் அசுத்தங்களை தம்மிடத்திலிருந்து அகற்றிய பிறகு, அவர் தேவனிடம் இன்னும் நெருங்கி வர விரும்புகிறார். அவர் திரைச்சீலை வரை வர முடியும், மிகவும் அருகில் அல்ல. ஏனெனில், முதலாம் திரை விருப்பத்தின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது. விருப்பத்தின் மரணம் என்பது, ஒருவர் பூமிக்குரிய ஒவ்வொரு ஆசைகளையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க விருப்பமாயிருக்கிறதை அர்த்தப்படுத்துகிறது. அவர் இதைச் செய்யாவிட்டால், அவர் மேற்கொண்டு செல்ல முடியாது. இந்த நேரம் வரையிலும் அவர் தம்முடைய சொந்த விருப்பத்தின் கட்டுப்பாட்டில் மிக அதிகமாக இருந்திருக்கலாம். ஆனால் அவருடைய சொந்த விருப்பம் அவரைக் கட்டுப்படுத்துகிற போது, அது திருப்திகரமாயில்லை. இப்பொழுது தேவனுடன் இணக்கமாக இருக்கவும், அவருடைய சித்தத்தைச் செய்யவும் அவர் விரும்புகிறார்.

தம்முடைய சித்தத்தை விட தேவனுடைய சித்தம் மேலானது என்பதை போதுமான அளவிற்கு அவர் அறிந்துள்ளார். தேவனுடைய சித்தத்தை அவர் விரும்புகிறார் என்பதில் இப்பொழுது நிச்சயமாக இருக்கிறார். தன்னுடைய வாழ்க்கையில் தேவ சித்தத்தைச் செய்வதற்கு ஏதாவது விலைக்கிரயம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை இந்த நிலையில் அவர் கண்டுபிடிப்பார். ஆகவே அவர் உட்கார்ந்து விலைக்கிரயத்தைக் கணக்கிட தேவனுடைய வார்த்தையினால் அவர் இயக்கப்படுகிறார். இதன் விலைக்கிரயம் என்ன? உலகத்துடன் கொண்ட நட்பாக இருக்கலாம். உலகத்துடன் கொண்ட அவருடைய நட்பின் தொடர்பு துண்டிக்கப்படும். ஏனெனில் அவர் இருக்கப் போவதை விட, அவர்கள் வாழ்வில் எளிதான ஓட்டத்தையே விரும்புவார்கள். அவர் மிகவும் நல்லவர் என்றும், எல்லா காரியங்களும் மிகவும் நல்லவையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்றும், அவர்களுடைய வழியில் அவர் ஒத்து வர மாட்டார் என்றும் அவர்கள் கூறுவார்கள். அவர் அவர்களுக்கு மிகவும் நல்லவராக இருக்கிற காரணத்தால், தற்போது அவர்கள் அவரிடமிருந்து துண்டித்துக் கொள்வார்கள். அவருடைய தோழமை இனி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்காது. ஏனென்றால், அவர்கள் வித்தியாசமான முறைகளில் செயல்படுகிறார்கள். அவர் ஒழுக்கக்கேடான மொழி பேசும் சில ஜனங்களோடு ஏற்கனவே நட்பு கொண்டிருந்திருக்கலாம். அவர்களிடமிருந்து அவர் விடுபட வேண்டும். ஏனெனில் அவர் கர்த்தருடன் உறவு முறையில் இருக்க விரும்புகிறார். அவர் அவர்களுடன் தொடர்பு கொள்ளமாட்டார் என்று நிச்சயமாக இதற்கு அர்த்தம் இல்லை; ஆனால், அவருடைய தோழர்களாக இருக்க அவர் விரும்பவில்லை, அவர்களும் அவருடைய தோழமையை விரும்ப மாட்டார்கள் என்று அர்த்தமாகிறது.

இப்படியாக, இந்த சுத்திகரிப்பு செய்முறை நடக்கிறது; அவருடைய மனதிலும், இருதயத்திலும், அவருடைய நடத்தையிலும் இது தொடர்கிற போது, காலப்போக்கில் அவர் சொல்வார், “எந்த கிரயம் கொடுத்தாவது, நான் கர்த்தருடையவராக இருப்பேன். அவருடையவராக முழுவதும் நாம் மாறினால், அவர்களுக்கு பெரிதான கிருபையும். சலுகைகளும் அல்லது ஆசீர்வாதங்களும் அவர் வைத்திருக்கிறார் என்று நான் புரிந்து கொள்கிறேன். நான் கர்த்தரின் பக்கம் இருக்க விரும்புகிறேன் என்பதையும், அன்பு, நன்மை மற்றும் உண்மையான காரியங்களுக்கு நிலை நிற்பது போன்றவைகளை போதுமான அளவில் தெரிந்து கொள்ள அறிந்திருக்கிறேன்.”

இதன் பிறகு அவர் செய்ய வேண்டிய காரியம், அவர் வாசல் தூணில் தம்மையே கட்ட வேண்டும் என்பது தான். அவர் தன்னையே கட்டுப்படுத்திக் கொண்டு, தன்னுடைய சொந்த சுதந்தரத்தை ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. இது மிகவும் கஷ்டமான பொறுப்பேற்பு பணி ஆகும். ஆம், ஆனால், அவருடைய விருப்பமாகிய சுதந்தரத்தை ஒப்புக்கொடுப்பது அவசியமாகிறது. அவர் சொல்லுவார், “இனி முதற்கொண்டு, கர்த்தருடைய விருப்பத்தைத் தவிர எனக்கு ஏதுமில்லை. இனிமேல் தேவனுடைய விருப்பம் தான் எனக்கு முதலிடமாக இனி இருக்கப்போகிறது என்று நான் சம்மதிக்கிறேன். “நான் இதைச் செய்வேன் என்று முடிவு செய்திருக்கிறேன்” என்று நீங்கள் சொல்கிறீர்களா? அப்படியானால், தேவனுடன் உடன்படிக்கை செய்வதற்கு நீங்கள் உங்களையே கட்டுகிறீர்கள். தேவனுக்கு முழுவதுமாக உங்களையே ஒப்புக்கொடுங்கள். கர்த்தரைப் போல, சொல்லுங்கள், இனி என்னுடைய சித்தத்தின்படி அல்ல, ஆனால் உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது.” இதை நீங்கள் செய்யும் போது, ஆசரிப்புக் கூடார வாசலில் உங்களை நீங்களே கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள்.

பிறகு பிரதான ஆசாரியர் வெளியே வந்து மாம்சத்தின்படி உங்களைக் கொல்கிறார். நிழலில், பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடாவை எடுத்து, அதன் கழுத்தை அறுக்கிறான். அந்தக் கணமே அது மரிக்கிறது. மேன்மை பொருந்திய பிரதான ஆசாரியரின் செயல், தேவன் உங்கள் அர்ப்பணிப்பை ஏற்றுக்கொள்கிறார் என்பதைக் குறிக்கிறது. அந்த அதே நிமிஷத்தில் நீங்கள் ஜெநிப்பிக்கப்படுகிறீர்கள். கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாகிறீர்கள். இப்பொழுது கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக நீங்கள் எண்ணப்படுகிறீர்கள். புதிய சிருஷ்டியாக, நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாயிருக்கிறீர்கள். ஆனால் மாம்சத்தின்படி, நீங்கள் மரித்த வெள்ளாட்டுக்கடா. நிழலில், பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடாவின் கொழுப்பை எடுத்து பிராகாரத்திலுள்ள பலிபீடத்தின் மேல் தகனிப்பதற்கு போடுகிறான். ஆட்டுக்கடாவின் இரத்தம் ஜீவன் ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறிக்கிறது. இது தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. ஒப்புக்கொடுப்பதற்கு என்னிடம் நான் அதிகமாக வைத்திருந்ததில்லை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், சீர்பொருந்துதலின் ஆசீர்வாதத்திற்குரிய நீங்கள் வைத்திருக்கும் உங்கள் உரிமை அனைத்தையும் நீங்கள் ஒப்புக்கொடுத்த போது, உங்களால் கொடுக்க முடிந்த எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்துவிட்டீர்கள். பிரதான ஆசாரியன் காளையின் இரத்தத்தைச் செய்தது போலவே, வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் எடுத்துச் சென்று கிருபாசனத்தின் மேல் தெளித்தான்.

பிராகாரத்திலுள்ள பலிபீடத்தின் மேல் கொழுப்பைப் போட்டு தகனிக்கக்கடவன்; மற்றவைகள் எல்லாம் பாளயத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு, பாளயத்துக்குப் புறம்பே அக்கினியில் சுட்டெரிக்கப்பட்டது. எத்தகைய நாற்றத்தை இது உண்டாக்கும்! உங்களுடைய ஜீவன் உலகத்தாருக்கு எப்படி காட்சியளிக்கிறது என்பதை அது காண்பிக்கிறது. அப்போஸ்தலர்களுக்கு இருந்ததைப் போலவே, இது அசுத்தமும், பூமியிலிருந்து துடைத்தெடுக்கப்படுவதுமாகக் கருதப்படுகிறது. இயேசு முதலாவதாக பாளயத்துக்குப் புறம்பே சென்றார். சுட்டெரிக்கப்பட்ட இடத்தைப் பரிசுத்தப்படுத்தினார். அப்போஸ்தலர்களும் வெளியே சென்றார்கள். சுவிசேஷ யுகம் முழுவதும் தேவனுடைய ஜனங்களாகிய பரிசுத்தவான்கள் அனைவரும் “பாளயத்துக்குப் புறம்பே எரிக்கப்பட்டுள்ளனர்.” அது தான் நமக்கு நல்ல விஷயம். நாம் கிறிஸ்துவுடன் பாளயத்துக்குப் புறம்பே செல்ல வேண்டும் என்பது பிரதான ஆசாரியரின்

கட்டளைகள் ஆகும். உங்களுடைய உறவினர்களில் சிலர் அந்த சுட்டெரிக்குதலைச் செய்யலாம். ஏனெனில் மாம்சத்தின்படி, நீங்கள் அங்கே தான் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

ஆவிக்குரிய விதத்தில் புதிய சிருஷ்டியாக நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? அந்த புதிய ஜீவன் சுட்டெரிக்கப்படுவதற்கு அல்ல. இது வெள்ளாட்டுக்கடாவின் மாமிசம் தான் சுட்டெரிக்கப்படுவதற்காக பாளயத்திற்குப் புறம்பே போகிறது. நீங்கள் புதிய சிருஷ்டியாக இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருக்கிறீர்கள். நீங்கள் எல்லாவிதமான சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் ஆவியில் பெற்றுள்ளீர்கள் - உங்கள் மாமிசத்தின் சுட்டெரிக்கப்படுதல் நடக்கிற போது, அதே சமயத்தில் அனைத்து புரிதல்களிலும் தேவ சமாதானம் நிலவி, உங்கள் இருதயத்தை ஆட்கொள்ளும். அப்போஸ்தலன் "பாளயத்திற்கு புறம்பே சுட்டெரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது" - - பிலிப்பு நாட்டு ஜெயிலில் - - இயேசுவில் விசுவாசத்தை உள்ளாகக் கொண்டு, அவர் அருமையான நேரம் உடையவராக இருந்தார். அந்த அளவுக்கு அதிகமாக, அவர் தேவனை துதித்துப் பாடினார். நீங்கள் மிகவும் சோதனைக்குள்ளான அனுபவங்கள் சிலவற்றைப் பெறலாம். அதே சமயத்தில் தேவனை நோக்கி துதித்துப் பாடவும் உங்களால் முடியும் (உங்களுடைய அயலாருக்கு தொந்தரவு கொடுக்காத விதத்தில்!). கிறிஸ்துவுடனே கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம் என்று வேதாகமம் உறுதி கூறுகிறது. ஆகவே நாம் நம்முடைய பாடுகளில் சந்தோஷம் அடையலாம் - முட்டாள்தனத்திற்கான பாடுகள் அல்ல - கர்த்தருக்கும் சத்தியத்திற்கும் நாம் கொண்ட விசுவாசம் மற்றும் உண்மையின் காரணமாக உள்ள பாடுகள் ஆகும். இப்படிப்பட்ட அனைத்து பாடுகளும் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. கர்த்தருக்குள்ளான சந்தோஷங்கள் சிலவற்றை நாம் பெற முடிகிற இடமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் தேவ சமூகத்து அப்பங்களை நாம் பெற்றிருக்கிறோம். தூபவர்க்க பீடத்தின் அனுபவங்களோடுங்கூட, பொன் குத்துவிளக்கின் வெளிச்சத்தை அனுபவிக்கிறோம்.

இப்பொழுது, பிராகார வாயிலில் நுழைந்து, பிராகாரத்திற்குள் வந்து, வெண்கல பலிபீடத்தைக் கடந்தது முதல், ஆசரிப்புக் கூடார வாசலில் அவர் வருகிற வரைக்கும், நீதிமானாக்கப்படுதலில் விசுவாசிகளின் எல்லா அனுபவங்களையும் பிராகாரம் அடையாளப் படுத்துகிறது. அந்த தனிபட்ட நபர் முதல் படியை எடுக்க ஆரம்பிக்கிறது, தற்காலிக நீதிமானாக்கப்படுதல் ஆகும். பிராகார வாயில் வழியாக வெண்கல பலிபீடத்தைக் கடக்கிறது. அவர் தேவனுக்கு அருகில் நெருங்க ஆரம்பிக்கிறார். அவர் தண்ணீர் தொட்டியில் கழுவும் போது, அவர் இன்னும் அருகாமையில் வருகிறார். ஆசரிப்புக் கூடார வாசலில் தன்னையே கட்டும் போது, மேலும் அருகில் நெருங்குகிறார். அவர் இதைச் செய்திருக்கிற போது, **அவர்** செய்ய முடிந்த ஒவ்வொன்றையும் செய்திருக்கிறார். இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனால் அடையாளப்படுத்தப்படுகின்ற கர்த்தரால் அடுத்த காரியம் செய்யப்பட வேண்டும். நிஜமான பிரதான ஆசாரியர் உங்களை தம்முடைய சரீரத்தின் அங்கமாக அங்கே ஏற்றுக்கொள்கிறார். பிதாவின் சமூகத்தில் உங்களை ஏற்றுக்கொள்ளத்தக்க விதமாக ஒப்புக்கொடுக்கிறார்; பிதா உங்களை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியை உங்களுக்கு அளிக்கிறார். நீங்கள் புதிய சிருஷ்டியாகிறீர்கள். இந்த நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தப்படுத்துதல் மற்றும் ஜெநிப்பிக்கப்படுதல் அனைத்தும் உடனே செய்யப்படுகிறது. தற்காலிக நீதிமானாக்கப்படுதலின் செய்முறை சிலரிடம் மிகவும் மெதுவாக இருக்கும். பாபிலோனின் கொள்கைகள் மற்றும் பொய்யான உபதேசங்களின் காரணமாக, அடிக்கடி அவர்கள் மிகவும் மெதுவாக முன்னேறுகிறார்கள். அவர்கள் உள்ளேயும் வெளியேயும் அலைந்து, கண்ணாமூச்சி விளையாடி, எவ்விதமான சரியான படிகள் எடுக்க வேண்டும் என்பதை உணராமல் இருப்பார்கள். எவ்விதமான நிலைமை! இவையனைத்திலும் நாமே இருந்தோம். என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் இருந்தோம்; என்ன செய்ய வேண்டுமென்று மற்ற எவரிடமும் சொல்ல முடியாமல் இருந்தோம். ஆனால் இப்பொழுது மிகவும் தெளிவாகத் தெரிய வருகிறது. தற்காலிக நீதிமானாக்கப்படுதல் பற்றித் தொடர்புள்ள பல்வேறு படிகள் அனைத்தும் மிகத் தெளிவாகத் தெரிகிறது; ஏனெனில் விஷயங்கள் தெளிவாக வெளிப்பட தேவனுடைய நேரம் வந்துள்ளது. இப்பொழுது நாம் மிகவும் குறுகிய காலத்தில் தண்ணீர் தொட்டிக்கு ஓடி, மாம்சீக அசுத்தத்தைக் கழுவி, கூடார வாசலில் நம்மை கட்ட முடியும்.

ஏனெனில் இதை எப்படிச் செய்வது என்று நாம் அறிகிறோம். இந்த காலத்தில் வாழ்வது எவ்வளவு ஆசீர்வாதமானது!

## நீதிமானாக்கப்படுதல் - அடிப்படை.

**கே 415:1 :: கேள்வி (1916-Z) - 1 -** விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் ஒருவர் மீது சுமத்தப்படுவது மீட்பின் பலனா அல்லது நீதியா?

**பதில்.** “விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்” என்ற சொற்றொடரை தகுதியாக்கும் தேவை இங்கே நமக்கு உள்ளது. ஏனெனில் வேதாகமத்தில் இந்த பதம் இரண்டு வித்தியாசமான உட்பொருள்களைக் கொண்டுள்ளது. உதாரணமாக, விசுவாசத்தினால் ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான் என்று நாம் படிக்கிறோம். ஆனால் இது, சபை விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறது என்ற அர்த்தத்தில் நிச்சயமாக இல்லை! தேவனுடன் உறவு கொள்ளுவதற்கும், வாக்குத்தத்தத்தைப் பெறுவதற்கும், எதிர்காலத்தில் தேவன் நோக்கமாயிருந்த குறிப்பிட்ட காரியங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், தெய்வீக தர மதிப்பீட்டில் தன்னுடைய விசுவாசத்தை செயல்முறையில் மெய்ப்பித்துக் காட்டுவதற்கும் ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டார். ஆபிரகாம் தன்னுடைய சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, ஆதாமுக்காக மீட்பராக ஆவதற்கு, அல்லது, **மெச்சத்தக்க (MERITORIOUS) பலியை எந்த அர்த்தத்திலும்** செலுத்துவதற்கு அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற உணர்வில் அவர் நீதிமானாக்கப்படவில்லை. இயேசு மரணமடைந்த பிறகு, உன்னதத்தில் ஏறி “நமக்காக பிதாவின் சமூகத்தில்” - சபைக்காக - தம்முடைய மீட்பின் பலனை சுமத்துகிறவரைக்கும் யாரும் இவ்விதமாக நீதிமானாக்கப்பட்டிருக்க முடியாது.

## நீதிமானாக்கப்படுதல் - ஒழுங்குமுறை - அர்ப்பணிப்பு.

**கே 415:2 :: கேள்வி (1916-Z) - 2 -** நீதிமானாக்கப்படுதல் அல்லது அர்ப்பணிப்பு, இதில் எது முதலில் நடைபெறுகிறது? ஏன்?

**பதில்.** “அர்ப்பணிப்பு” என்ற சொல்லுக்கு இணைத்திருக்கக்கூடிய அர்த்தத்தைப் பொருத்து இது உள்ளது. அர்ப்பணிப்பை இரண்டு வித்தியாசமான பார்வைகளில் வேதாகமம் காண்கிறது; முதலாவது தனிப்பட்டவரின் அர்ப்பணிப்பு; இரண்டாவது, இந்த அர்ப்பணிப்பை கர்த்தர் இயேசு கிறிஸ்து ஏற்புடையதாக்குதல், மற்றும் பிதாவினால் இதனுடைய அங்கீகரிப்பு; கர்த்தருடைய சித்தத்தைச் செய்ய தனிப்பட்டவர்களின் அர்ப்பணிப்பு, அவருடைய சொந்த விருப்பம் முழுமையாக சரணடைதல் என்று ஆசரிப்புக் கூடார வாசலில் வெள்ளாட்டுக்கடா கட்டப்படுவதாக நிழலால் அடையாளப்படுத்தப்படுகிற இவைகள் நீதிமானாக்கப்படுதலுக்கு முன்னதாக நடக்கின்றன, இரண்டாவது படி இதுவே. அதாவது, பிதாவினால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னால், ராஜரீக ஆசாரியத்துவ அங்கங்களாவதற்கு விருப்பமாயிருப்பவர்களுக்கு, நமது கர்த்தர் இயேசு கிறிஸ்து பரிந்துபேசுகிறவராக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகவே அவர்கள் தங்களையே அர்ப்பணிப்பு செய்வதும், உடனடியாக பரலோக பிதா இவர்களை அர்ப்பணிப்பு செய்யப்பட்ட நபர்களாக ஏற்றுக்கொண்டு இந்த உடன்படிக்கையின் ஏற்பாட்டில் உள்ளடக்கிய எல்லா உரிமைகளையும் சலுகைகளையும் கொடுக்கும் அர்த்தத்தில் பிதாவின் இந்த செயலைத் தொடர்ந்து, கர்த்தர் இயேசு கிறிஸ்து தம்முடைய மீட்பின் பலனை அவர்கள் மேல் சுமத்தி நீதிமான்களாக்குகிறார்.

## நீதிமானாக்கப்படுதல் - பழைய பாவங்களுக்காக .

**கே 416:1 :: கேள்வி (1908) - 1 -** ஆதாமுக்குள்ளான நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்ததால், நீதிமானாக்கப்படுதலில் நாம் நம்முடைய கடந்த கால அனைத்திற்கும் தேவனுடன் சமாதானமாயிருக்கிறோம் என்பதை அது உணர்த்துகிறதா?

**பதில்.** ஆம் என்றும், இல்லை என்றும் இவ்விதம் பதிலளிக்கிறேன்: இது உங்களுடைய விசுவாசத்தின்படி இருக்கிறது. தேவன் இப்பொழுது என்ன சொல்கிறாரோ, அது வெறுமனே விசுவாசத்தின் அடிப்படையிலானதாகும். விசுவாசத்தை செயற்படுத்த முடியாதவர்கள் தற்கால ஆசீர்வாதங்களைப் பெற முடியாது. இந்த யுகத்தில் தேவன் கொடுக்கும் ஒவ்வொன்றும் விசுவாசத்தின்படியே உள்ளது. விசுவாசத்தை செயற்படுத்துகிறவர்களுக்கே கொடுக்கப்படுகிறது. சில ஜனங்கள் விசுவாசத்தை செயற்படுத்த முடியாதவர்களாக இருப்பதை நீங்கள் பார்க்கலாம். அவர்கள் விசுவாசத்தை செயற்படுத்தாவிட்டால், தற்காலத்தில் ஆசீர்வாதங்களை அவர்கள் பெற முடியாது. அவர்கள் விசுவாசத்தை செயற்படுத்த முடியாத காரணத்தினால், நரகத்துக்குப் போக வேண்டுமா? நரகத்திற்குப் போவதைப் பற்றி நாங்கள் பேசுகிறதில்லை; நாங்கள் நித்திய வேதனையைப் பற்றி பேசுகிறதில்லை. தற்காலத்தில் விசுவாசத்தை செயற்படுத்த முடியாதவர்களுக்கு இது தெய்வீக ஏற்பாடு இல்லை என்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். தேவனுக்கு நன்றி. ஆனால் உரிய காலத்தில், ஆயிர வருஷ யுகத்தில், கண்ணால் பார்ப்பதற்கு ஏற்ப அவர்கள் நடத்தப்படுவார்கள். இப்பொழுது அவர்கள் விசுவாசத்தை செயற்படுத்த முடியாவிட்டால், காலப்போக்கில் ஆயிர வருஷ யுகத்தில், பார்வை அடைவதற்கு அவர்கள் ஒரு வாய்ப்பை பெறுவார்கள். நீங்களும் நானும் இப்பொழுது விசுவாசக் கண்ணுடன் பார்க்கிறதை, அவர்கள் அப்போது பார்ப்பார்கள். தேவனுடைய வார்த்தையினால் விசுவாசக் கண் இயக்கப்படுகிறது. விசுவாசக் கண்ணையும், விசுவாச காதுகளையும் உடையவர்களுக்கு இப்பொழுது விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. ஏனெனில் இந்த உலகத்திலிருந்து இப்பொழுது தேவன் அழைக்கிற இந்த வகுப்பார், இந்த விசுவாச வல்லமையுடன் கேட்கவும் பார்க்கவும் செய்கிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் தேவன் அவர்களுடன் செயல் தொடர்பு கொள்ளும் போது, அந்த நேரம் வரைக்கும் காத்திருக்க விடப்படுகிறார்கள்.

குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போகும் காலம் வருகிறது என்று அப்போஸ்தலனும் தீர்க்கதரிசியும் எப்படி தெரிவித்தார்கள் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். தேவனுக்கு நன்றி! விசுவாசம் கொண்டவர்களுக்கு மட்டுமே இது இல்லை. ஆனால், இப்பொழுது தற்கால சலுகை, விசுவாசம் உடையவர்களுக்கு மட்டுமே உள்ளது. ஏனெனில் கிறிஸ்துவுடன் இருக்கப்போகும் சிறு மந்தையாகிய தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பினரை தேவன் இப்போது சேர்த்து வருகிறார். அவர் விசுவாசத்தை செயற்படுத்தாவிட்டால், இந்த ஸ்தானத்திற்கு எவரும் தகுதியாக இருக்கமாட்டார்கள். ஆகவே இந்த வகுப்பார் மட்டும் இப்பொழுது பெற முடியும் என்று, இந்த விஷயத்தை இப்படிப்பட்ட முறையில் விட்டு விடுகிறார். “உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்.” விசுவாசக் குறைவினால், அல்லது, வேறு ஏதாவது குறைவினால் பார்க்க முடியாதவர்களாகவும், கேட்க முடியாதவர்களாகவும் இருக்கும் மற்றவர்களுக்கு, வேறுவிதமான முறையில் தேவன் ஆசீர்வாதம் வைத்திருக்கிறார். இப்பொழுது நீங்கள் விசுவாசத்தை செயற்படுத்துவதாக அனுமானித்தால், உங்களுக்கு என்ன விளைவு உண்டாகும்? நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசத்தை செயற்படுத்த முடிந்து, கிறிஸ்து மரித்திருக்கிறார் என்று அறிந்து, அதை முழுவதுமாக நம்பி ஏற்றுக்கொண்டால், அப்பொழுது அந்த பலியின் பலனால் உள்ளடக்கப்பட்டவர்களில் நீங்களும் ஒருவர் என்பதை உணரும் சலுகை உங்களுடையதாகும்; நீங்கள் அவருடைய பலியின் ஆளுகைக்குட்பட்டால், இப்போதிலிருந்து தேவனுடைய பார்வையில் மாம்சத்தின்படியான என்னுடைய எல்லா கறைகளும், குறைபாடுகளும் கிறிஸ்துவின் பலியின் பலனால் மறைக்கப்படுகிறது என்பதையும், அவைகளே எனக்கு விரோதமாக தேவன் இருத்திக்கொள்ளமாட்டார் என்பதையும் நீங்கள் உணருவது உங்களுடைய இன்பமாக இருக்கிறது. ஆனால் நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள், நீங்கள் விசுவாசத்தை செயற்படுத்தும் காலம் வரையிலும் மட்டுமே அது உங்களுடையது. இரவுக்கு முன் விசுவாசத்தை நீங்கள் இழந்தால், அதனுடன் கூடிய நீதிமானாக்கப்பட்ட அனைத்தையும் நீங்கள் இழந்திருப்பீர்கள். ஏனெனில் இது நீதிமானாக்கப்படுவதாக எண்ணப்படுவது மட்டுமே; இது உண்மையான நீதிமானாக்கப்படுதல் இல்லை; நீங்கள் உண்மையில் குறைபாடுகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும் விடுபடவில்லை. அவைகள் வெறுமனே மறைக்கப்படுகின்றன.

உங்களுடைய விசுவாசம் காரணமாக, கர்த்தர் அவற்றை மறைக்கிறார். உங்கள் விசுவாசம் அகன்றால், நீங்கள் முன்பு இருந்த அதே இடத்திற்கு துல்லியமாகத் திரும்புவீர்கள். ஆகவே இந்த தற்காலத்தில், விசுவாசத்திற்கு ஏற்ப இது உங்களிடம் இருக்கும். இவ்விதமாக, கர்த்தர் படிப்பு சொல்லிக் கொடுக்கப்படுபவர்களுக்கு, அதாவது, கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கும் விசுவாசக் குடும்பத்தாருக்குப் போதிக்கிறார். கிறிஸ்துவில் முழுமையான நம்பிக்கையும் விசுவாசமும் உள்ள அவருடைய பார்வையின் முக்கியத்துவத்தை கிறிஸ்து போதிக்கிறார். நம்முடைய பாவங்கள் மறைக்கப்படுகிறது என்றும், நாம் இதைப் பெறுவதற்கு விரும்புகிறோம் என்று அவர் நம்மிடம் சொல்லும் போது, அப்பொழுது அவருடைய ஆசீர்வாதம் நம்மிடம் ஏன் இருக்க வேண்டும்? இதற்கு வருங்காலத்திலும் கடந்த காலத்திலும் உள்ள உங்களுடைய பாவங்கள் எல்லாம் மறைக்கப்படுகின்றன என்று அர்த்தம் இல்லை. அப்படியானால், எது மறைக்கப்படுகிறது? ஆதாமின் வழியாக, உங்களுடைய பெற்றோர் வழியாக உங்களுக்கு வருகிற எல்லா பாவங்களும் மறைக்கப்படுகின்றன என்று நான் பதிலளிக்கிறேன். ஆனால், பரம்பரை அல்லது பலவீனம் சார்ந்ததாயிராமல், இது தவறு என்று அறிந்தும், சொந்தமாக மனப்பூர்வமாக எதை நீங்கள் செய்தாலும், அது நீங்கள் இன்னும் கணக்கு காட்ட வேண்டியுள்ளது. இப்பொழுது, நிச்சயமாக பரம்பரை மற்றும் பலவீனம் மறைக்கப்படுவதாய் உள்ளது. கிட்டத்திட்ட உங்களுடைய எல்லா கறைகளும், பலவீனங்களும் மறைக்கப்படும் என்று நான் நம்புகிறேன். ஆனால் பரம்பரை வழியாக நீங்கள் அடைந்திருக்கும் இந்த பலவீனங்கள், மற்றும் அறியாமையினால் செய்தவைகள் அல்லாமல், நீங்கள் மனப்பூர்வமாக எந்த அளவில் செய்திருந்தாலும், அவற்றிற்கு நீங்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறீர்கள். அவைகளுக்காக இன்னும் ஏதோ வகையில் அடிகள் வாங்க வேண்டியிருக்கும். இந்த முறையில் தான் இதை நான் புரிந்து கொள்கிறேன். இன்று, அல்லது, வேறு ஏதாவது சமயத்தில், புத்திசாலித்தனமாக அறிந்தும், மனப்பூர்வமாகவும் நீங்கள் பாவம் செய்தால், உங்களை விட தேவன் நன்றாகவே கவனித்துச் செய்வார். உங்கள் பாவத்தில் சில பங்கு அறியாமையின் காரணமாகவோ அல்லது உங்களுடைய பரம்பரை பண்பைச் சார்ந்ததாகவோ இருந்தால், அவை எல்லாவற்றிற்கும் அவர் வரவு வைத்துக் கொள்வார். அதற்கு நீங்கள் கணக்கு கொடுக்க வேண்டியதில்லை. ஆகவே அப்போஸ்தலன் கூறுகிறார், “நான் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை.” அவர் கூறுகிறார், நான் உங்களால் தீர்ப்பைப்பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது. என்னைப் பற்றி நீங்கள் என்ன அறிவீர்கள்? நீங்கள் என் இருதயத்தைப் படிக்க முடியாது. உங்களில் ஒருவரால் நான் தீர்ப்புப் பெறுவது எனக்கு அற்ப காரியமாயிருக்கிறது. ஆம், என்னைக் குறித்து நான் தீர்ப்பு சொல்லமாட்டேன். கர்த்தர் ஒருவர் தான் முடிவு செய்கிறவர். நீங்கள் செய்திருக்கிறவைகளில் எவ்வளவு மனப்பூர்வமாக செய்தது, எவ்வளவு அறியாமையினால் செய்தது என்பதை கர்த்தர் துல்லியமாக அறிவார். அந்த நியாயமான ஏற்பாட்டுடன், அறியாமையினால் இருந்த ஒவ்வொன்றையும், பரம்பரை பண்பினால் வந்த ஒவ்வொரு கூறுகளையும் கிறிஸ்துவில் விசுவாசம் வழியாக அவர் மறைப்பார். அதைப் பொருத்த வரையில் தூய்மையான பதிவில் அவர் இருப்பார். நீங்கள் மனப்பூர்வமாக வேண்டுமென்றே செய்தால், அந்த அளவுக்கு மட்டும் கணக்குக் கொடுக்கவும், பொறுப்பேற்கவும் நீங்கள் நிற்க வேண்டும். இது நமக்கு எவ்வளவு ஆறுதலாக உள்ளது, மற்றும், எவ்வளவு தடையாக உள்ளது. ஒவ்வொன்றிற்கும் மன்னிப்பு உண்டு என்று ஒருவேளை கத்தோலிக்கர்களில் சிலரும், ஒருவேளை புரோட்டஸ்டாண்டுகளில் சிலரும், இந்த பெரும் தவறை செய்வதாகத் தோன்றுகிறது. கத்தோலிக்கர்கள் சொல்கின்றனர், நாங்கள் பாதிரியாரிடம் சென்று இதை அறிக்கையிடுகிறோம். இது எந்த விஷயமாக இருந்தாலும், எல்லாம் முடிந்து விடும். ஒரு மனுஷன் இரண்டு பன்றிகளை திருடி இருந்தான் என்று நான் கேள்விப்பட்டேன். அவன் பாதிரியாரிடம் சென்று அறிக்கையிட்டு, கூறினான், நான் உங்களுக்கு அவைகளில் ஒன்றை அன்பளிப்பாக கொண்டு வந்திருக்கிறேன். பாதிரியார் அவனுக்கு மன்னிப்புக் கொடுத்த பிறகு, அவைகளை அவரிடமிருந்து அவன் தான் திருடியிருக்கிறான் என்பதைக் கண்டு பிடித்தார். ஆகவே, அவன் ஒரு பன்றியைப் பொருத்த வரையில் உண்மையாக இருந்தான். இதை உண்மை கதை என்றோ, அல்லது, நமது கத்தோலிக்க நண்பர்களுக்கு விரோதமான பிரதிபலிப்பாக இதை நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நமது பரம பிதாவிடம் மன உறுதியற்று, ஊசலாடும்

விதமாக எதையும் செய்ய இயலாது என்பதை வெறுமனே எடுத்துக்காட்டவே இதைக் கூறினேன். ஏனெனில் பிதா நம்முடைய விஷயங்கள் அனைத்தையும் அறிவார், அவர் ஒரு வகையான பாவங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். ஆதாமிலிருந்து வந்த எல்லாவற்றிற்கும், அறியாமை மற்றும் பரம்பரை பண்பு எல்லாவற்றிற்கும் இலவசமாக, முழுமையாக, இரக்கத்தினால் ஏற்பாடு செய்திருக்கிறார். இதற்கு நாம் கிரயம் எதுவும் செலுத்த வேண்டியதே இல்லை. ஆனால், ஒவ்வொரு செயலுக்கும், ஒவ்வொரு எண்ணத்திற்கும், ஒவ்வொரு வார்த்தைக்கும் நமக்கு சொந்த பொறுப்பு உள்ளது என்பதை நாம் கண்டிப்பாக உணர வேண்டும். அந்த எண்ணம் உங்கள் மனங்களில் நீங்கள் பெற்றால், அது உங்களை மிகவும் ஜாக்கிறதையாக இருக்கச் செய்யும். கடந்த கால பாவங்களின் மன்னிப்பு வழியாக கிறிஸ்து நமக்கு எவ்வளவு தான் செய்திருந்தாலும். நாம் செய்யும், நினைக்கும், பேசும் ஒவ்வொன்றிற்கும் நம்முடைய பங்கில் பொறுப்பு இருக்கிறது.

## நீதிமானாக்கப்படுதல் - சட்டப்பூர்வமாகவும் உண்மையாகவும்.

**கே 417:1 :: கேள்வி (1916) - 1 -** சட்டப்பூர்வமானதும், உண்மையானதுமான நீதிமானாக்கப் படுதலைப் பற்றி காவற் கோபுர செப்டம்பர் 15ம் தேதி பத்திரிகை பக்கம் 281 கட்டுரையில் இந்த அறிக்கை உள்ளது: “இது சட்டப்பூர்வமானதும், அதே நேரத்தில் உண்மையானதுமாயிருக்கிறது.” இங்கே சொல்லப்படும் கருத்து, நமது நீதிமானாக்கப்படுதல் உண்மையானது என்றும், எண்ணப்படுவது அல்ல என்றும் அர்த்தப்படுத்துகிறதா?

**பதில்.** இதைத் தான் நாங்கள் சொல்ல முயற்சி செய்தோம். ஆனால் இதை வெளிப்படையாக சரியாக சொல்வதில் வெற்றி பெறவில்லை. தேவனுடைய ஜனங்கள் எல்லோரும் இதை புரிந்து கொள்வார்கள் என்று எங்களால் சொல்லமுடியவில்லை.

## நீதிமானாக்கப்படுதல் - பாஸ்டர் ரசலின் பார்வைகள் மாற்றம் அடையவில்லை.

**கே 418:1 :: கேள்வி (1916) - 1 -** 6ம் வால்யூம், ஆசரிப்புக் கூடார நிழல்கள் புத்தகம், மற்றும் செப்டம்பர் 15, 1916ம் வருஷ காவற் கோபுர பத்திரிகை ஆகியவற்றில் உள்ள கட்டுரைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இவைகள் இணக்கமாய் இருக்கின்றனவா? நீதிமானாக்கப்படும் விஷயத்தில் சகோதரர் ரசல் தம்முடைய பார்வைகளை மாற்றிக் கொண்டுள்ளாரா?

**பதில்.** சகோதரர் ரசல் நீதிமானாக்கப்படுதல் பற்றி தம்முடைய பார்வைகளை மாற்றிக் கொள்ளவில்லை. “நீதிமானாக்கப்படுதல்” என்பது நீதிமானாக்கப்படுதல் ஆகும். அது நீதிமானாக்கப்படுதலாகவே எப்போதும் இருந்து வருகிறது. இது எப்போதும் நீதிமானாக்கப் படுதலாகவே இருக்கப்போகிறது. சகோதரர் ரசல் தமக்காகவோ, மற்ற எவருக்காகவோ நீதிமானாக்கப்படுதலை மாற்றிக்கொள்ள முடியாது. நீதிமானாக்கப்படுதல் என்றால் ‘சரி பண்ணுவது’, ‘உண்மையாக்குவது’ என்று அர்த்தமாகும். உதாரணமாக, நம்முடைய கைகளில் ஒரு ஜோடி தராசு தட்டுகள் இருந்தால், அவற்றில் ஒரு பக்கத்தில் ஏதாவது பொருளை வைத்தால், பிறகு அதே நிறையுள்ள வேறொரு பொருளை மற்ற பக்கத்தில் வைத்தால், நாம் தராசு தட்டுகளை சமநிலைப்படுத்துகிறோம். இது தான் நீதிமானாக்கப்படுதலின் கருத்துக்கான அடிப்படையாகும் - சமநிலைப்படுத்தல். இந்த கருத்தை மனுக்குல உலகத்தின் மேல் பிரயோகம் பண்ணுங்கள். நீங்களும் நானும் மற்றும் சகல மனுஷ சந்ததியும் சம நிலையிலிருந்து வெளியே இருப்பார்கள். ஆதாமின் உண்மையான சமநிலை என்பது பரிபூரண மனது ஆகும். அவன் செய்ய முடிந்த அளவுக்கு மேல் தேவனுக்கு தேவை இல்லை. ஆகவே ஆதாம் சமநிலையிலுள்ள மனுஷனாக இருந்தான். பாவிகளிலிருந்து விலகி இருந்ததால், சரி பண்ணுவதற்காக நீதிமானாக்கப்படுதல் எதுவும் அவனுக்குத் தேவையில்லை. இயேசுவும் அப்படியே இருந்தார். “அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்.” என்பது எந்த உணர்விலும் தவறானதல்ல. ஆகவே சமநிலைப்படுத்தும் தேவை இல்லாமலிருந்தது., ஆகவே, “நீதிமானாக்கப்படுதல் அல்லது “சரி பண்ணப்படுதல்” தேவையில்லாமல் இருந்தது. அவர் சரியாக

**இருந்தார்**. தவறாக இருப்பது அல்லது சம நிலையில் இல்லாமல் இருப்பதற்கு மட்டும் நீதிமானாக்கப்படும் தேவை இருந்தது. ஆதாமிற்குள் சகல உலகத்தாரும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு, தராசுகளில் வைக்கப்பட்டு, இல்லாமை காணப்பட்டு, பிறகு நீதியுள்ள நியாயாதிபதியினால் மரண தண்டனை அடைந்தனர். ஜீவனுக்குத் தகுதியில்லாதவர்களாக ஆதாமுக்குள் அனைவரையும் தேவன் தீர்ப்பளித்தார். அவர் தம்முடைய மனதை ஒருபோதும் திருத்திக் கொள்ளவோ அல்லது மாற்றவோ மாட்டார். அப்படியானால் எப்படி அவர் உலகத்தை ஆசீர்வதிப்பார் என்று நீங்கள் கேட்கலாம்? இந்த கண்டனம் அனைத்தும் ஒரு மனுஷனுடைய கீழ்ப்படியாமையினால் வந்தது என்றும், பிறகு ஆதாமின் பிள்ளைகளுக்கு வழி வழியாக வந்து, ஆதாமில் துவங்கிய இந்த சரி பண்ணப்படாத நிலைமை, இந்த சம நிலை இல்லாமைக்கு எல்லோரும் ஆளாக்கப்பட்டார்கள் என்று தேவன் நமக்குச் சொல்லுகிறார். நாம் சமநிலை இல்லாத மனதுடனும் சரீரத்துடனும் பிறந்தோம். நாம் தவறு இழைத்தோம் என்ற உணர்வில் நாம் இதற்கு பொறுப்புடையவர்களாக இருக்கிறதில்லை. ஆனால், அந்த தவறுக்கு நாம் பொறுப்பு இல்லாதவர்களாக இருந்தாலும், இன்னும் நாம் தவறானவர்களாக இருக்கிறோம். இதற்குப் பொறுப்பாக ஆதாம் ஒருவர் இருக்கிறார். ஒரு மனுஷனால் பாவம் வந்ததால், மனுஷனால் மரணமும் வந்தது. நாம் இந்த மரண நிலையைக் கொண்டு வரவில்லை. நாம் இதில் பிறந்தோம். ஜீவனுக்குத் தகுதியில்லாத இந்த அதிருப்திகரமான நிலைமையில் நாம் பிறந்தோம். நாம் நீதிமான்களாக்கப்பட வேண்டும் அல்லது சரி பண்ணப்பட வேண்டும் என்று தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆதாமைப் பொருத்த வரையில், அவன் தேவனுடன் சரி பண்ணப்பட வேண்டும், இல்லாவிட்டால் அவன் நித்திய ஜீவனை ஒருபோதும் பெற முடியாது. தேவனிடத்தில் ஆதாம் ஏற்றுக்கொள்ளப்படும் விதமாக, நீதிமானாக்கப்படுதல் வழியாக ஆதாமுக்கு கிறிஸ்து சிலவற்றை செய்வார். ஆதாமிற்காகவும், சகல மனுக்குல சந்ததிக்காகவும் கிறிஸ்து என்ன செய்வார்? அவர் ஆதாமுக்கும் சந்ததிக்கும் என்ன செய்யப் போகிறாரோ, அதிலிருந்து வித்தியாசமாக சபைக்கு செய்யப்போவது இருக்கிறது. ஆயிர வருஷ யுகத்தில் அவர் ஆதாமையும் சந்ததியையும் பூரணமடையச் செய்வார். கீழ்ப்படுகிறவர்கள் அனைவரும் தங்களுடைய திறமைகள், சக்திகளைக் கொண்டு, பூரணமாக சமநிலைப்படுத்தப்பட்டு, விழாமல் தேவனுடன் இணக்கமாக இருப்பது, இயேசு அவர்களுடன் இருந்து வரும் ஆயிர வருஷ முடிவு காலத்தில் நடக்கும். எனினும் அவர்கள் அவருடன் விருப்பமாகவும் ஒத்துழைப்புடனும் இருக்க வேண்டும். இயற்கையாக வளைந்து கொடுப்பதற்கு மாறாக எந்த மனுஷனுடைய மனதையும் வற்புறுத்த தேவன் விருப்பம் கொள்ளமாட்டார். ஆனால் அவர்கள் விரும்பினால், ஏதேனில் இழந்து போன பூரணத்துவத்திற்கு தேவன் அவர்களுக்கு உதவி புரிந்து, முழுமையான திரும்ப பெறுதலின் சலுகையை அளிப்பார். இந்த முறையில் தான் உலகத்தார் நீதிமான் களாக்கப்படுவார்கள், அல்லது, சரி பண்ணப்படுவார்கள். ஆறாம் வால்யூமில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே நீதிமானாக்கப்படுதல் ஆசரிப்புக் கூடார நிழல்களிலும், இருபது தடவைகள் காவற் கோபுர பத்திரிகைகளிலும் கற்பிக்கப்பட்டுள்ளது. இவைகள் ஒவ்வொன்றிலும் ஒரே மாதிரி தான் உள்ளது. எனினும், இந்த நீதிமானாக்கப்படுதல் சபைக்கு வித்தியாசமாக பிரயோகிக்கப்படுகிறது. ஏனெனில் தேவனுடைய மாபெரும் திட்டத்தில் சபை உலகத்தாரி டமிருந்து தனித்து இருக்கிறது. அதன் விளைவாக, அவர்களுக்கு நீதிமானாக்கப்படுதல் வித்தியாசமான வழியில் ஏன் வருகிறது? தேவன் உங்களையும் என்னையும் உலகத்தாரை நீதிமான்களாக்குவது போல அதே வழியில் நீதிமான்களாக்கினால், அவர் நம்மை பூரண மனுஷர்களாக உண்டாக்குவார். எனினும், அவர் நம்மை பூரணராக்கவில்லை. ஏனெனில் நம்முடைய மாம்சம் நாம் கர்த்தரிடத்தில் நமது இருதயங்களைக் கொடுத்த போது இருந்த விதமாகவே இருக்கிறது. மாம்சத்தில் நாம் குறைபாடுள்ளவர்களாக இருப்பதுவே, நாம் மாம்சத்தில் நீதிமானாக்கப்படவில்லை என்று நிரூபிக்கிறது. அப்படியானால், அவர் நம்மை எப்படி நீதிமான்களாக்குகிறார்? நிழலின் அடிப்படையில் நாம் பார்த்தால், தேவன் நம்முடைய இந்த கறைகளைத் தமது பார்வையிலிருந்து மறைப்பது போல, சபையினரின் கறைகளை மறைக்கும் நோக்கத்துடன், இயேசுவின் மீட்பின் பலன் சபையின் மீது சுமத்தப்படுகிறது, அல்லது, கணக்கிடப்படுகிறது, அல்லது, எண்ணப்படுகிறது என்று பார்க்கிறோம். இப்படியாக கிறிஸ்துவின் பலன் நம் மீது சுமத்தப்படுவதால் அல்லது மறைக்கிறதால், தேவன் நம்மை பலிகளாக

ஏற்றுக்கொள்ள முடிகிறது. நாம் பாவிகளாக இருக்கும் வரையில், அவர் நம்மை பலிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஜீவ பலிகளாக நம்முடைய சரீரங்களை ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு, ஜீவனுக்குரிய உரிமை நமக்கு அளிக்கப்பட வேண்டும். நாம் இதைப் பெறாவிட்டால், நாம் எதையும் கொடுக்க இயலாது. ஆகவே நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட வேண்டும். ஆயிர வருஷ யுகத்தில் ஒருவர் உண்மையாகவே பூரணமாக்கப்படுவதற்கும், இந்த யுகத்தில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். நாம் விசுவாசத்தினால் இந்த நீதிமானாக்கப்படுதலை உடையவர் களாயிருக்கிறோம். இது நம்முடன் துவங்குகிறது. நாம் மகிமை அடைந்திருக்கும் போது, "மிகவும் தாமதம்! மிகவும் தாமதம்! என்ற சத்தம் இருக்கும். நாம் எப்போது புறப்பட்டிருக்கிறோம்? பாவத்தின் மீது நமது முதுகைத் திருப்பி, தேவனைச் சார்ந்து எப்போது நாம் உணரத் தொடங்கினோமோ, அப்போது தான் புறப்பட்டோம். 'மாற்றமடைதல்' என்பது 'திரும்புதல்' ஆகும். நாம் பாவம் மற்றும் உலகத்தின் இயற்கையான வழியில், ஒரு திசையில் சென்று கொண்டிருந்தால், தேவனையும் சத்தியத்தைப் பற்றியும் சில விஷயங்களை நான் கேட்டு, தேவன் பாவிகளைத் திரும்ப தம்மிடம் வரவழைக்க விரும்புகிறார் என்பதையும், இந்த பாடங்களில் கொஞ்சம் அறிவைப் பெறுவதற்கு வந்தால், நான் என்ன செய்வேன்? நான் சுற்றித் திரும்பி நீதியின் பக்கம் சென்றிருப்பேன். பிறகு மாற்றமடைகிறேன், அல்லது, சுற்றித் திரும்புகிறேன். இந்த சுற்றித் திரும்புவது, நாம் பரிசுத்தவான்களாகிறோம் என்று அர்த்தப்படுவதில்லை. ஓ, இல்லை! நீங்கள் சுற்றித் திரும்பியதால், நீங்கள் பரிசுத்தவான்கள் அல்ல. நீங்கள் தேவனைத் தேட விரும்பிய காரணத்தால், நீங்கள் சுற்றித் திரும்பினீர்கள். 'எதிர்பாராதவிதமாக நீங்கள் அவரைப் பார்க்கலாம்." தவறான வழியிலிருந்து சுற்றித் திரும்பி, சரியான வழியில் செல்ல விரும்பிய போது, நாங்கள் தேவனைப் பார்த்தோம். சரியான பாதையில் நடக்கத் துவங்கிய போது, அவரை நாங்கள் பார்த்தோம். பிறகு நாங்கள் பாவத்தையும் இழிவான பழக்கங்களையும் களைவதை நோக்கி நாங்கள் அடி எடுத்து வைத்தோம். ஏனெனில் இவைகள் கண்டிப்பாக விலக்கிப்போடப்பட வேண்டும். ஆகவே நாங்கள் மாம்சத்தின் அசுத்தத்தை எங்களிடமிருந்து அகற்றிப்போடத் துவங்கினோம். நாங்கள் முயன்று கொண்டே இருந்து, கூறினோம், "நாங்கள் தேவனுக்கு அருகில் நெருங்க விரும்புகிறோம்." இறுதியாக நாங்கள் முழுமையாக தேவனை அடைவதற்கு விரும்புகிறோம் என்று கூறினோம். நாங்கள் கிறிஸ்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும், அவர் எங்களை நீதிமான்களாக்குவார் என்றும், பிதாவிடம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக அவர் எங்களை செய்வார் என்றும் நாங்கள் கேள்வியுற்றோம். நான் எப்படி கிறிஸ்துவுடன் பரிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்? நீங்கள் மரியாதை செலுத்தத் துவங்க வேண்டும். வேதாகமம், வேதாகம பாடங்கள், நண்பர்கள், பிரசுரங்கள் போன்றவைகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய சீஷராக ஆவதற்கு, இயேசுவிடம் உங்களையே முழுவதுமாக சரணடைய வேண்டும் என்ற புரிந்து கொள்ளுதலைப் பெற வேண்டும். இப்படி நீங்கள் செய்யக் கற்றுக்கொண்டால் கர்த்தரிடம் வருகிறீர்கள். அவர் அப்பொழுது உங்களை நீதிமானாக்கி ஏற்றுக்கொண்டு, உடனடியாக பிதாவிடம் உங்களை ஒப்புக்கொடுக்கிறார். பிதா உங்களுக்கு பரிசுத்த ஆவியை அளித்து, அவருடைய சம்மதத்தைச் சுட்டிக்காட்டுவார். இப்படியாக, நீங்கள் ஆவிக்குரிய ஜீவனுக்குள் ஜெநிப்பிக்கப்படுகிறீர்கள்- பிதாவுடன் மாபெரும் பரிந்துபேசுகிறவர், பிதாவின் நாமத்தினால் உங்களை ஏற்றுக்கொண்ட உடனேயே, வரிசைக்கிரமத்தில் அடுத்து செய்யப்படுவது, நீங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுவது தான். அந்த நேரம் வரைக்கும் நீங்கள் நீதிமானாக்கப்படும் செய்முறையில் இருந்தீர்கள். நீங்கள் நீதிமானாக்கப்படுவதற்கு சரியான திசையில் திரும்பியிருக்கிறீர்கள். தேவன் உங்களிடம் மகிழ்ச்சியாக இருப்பதற்கான நீதிமானாக்கப்படும் நிலைமைக்கு நீங்கள் சற்று அருகாமையில் வந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் முதலாவது திரும்பும் வரைக்கும் உங்களுக்கு செவிகொடுக்கமாட்டார். நீங்கள் இந்த வழியில் போய்க்கொண்டிருந்தால், நீங்கள் எப்போதும் நீதிமானாக்கப்படுதலை நோக்கி முன்னேறுகிறீர்கள். முன்னால் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நீதிமானாக்கப்படுதலின் முனை வரைக்கும் உங்களை வழி நடத்துகிறது. இது ஆசரிப்புக் கூடாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதா, அப்படியானால், எப்படி? தேவனுக்கு முன்பாக நிற்பதை அடையாளப்படுத்தும் விதமாக, தேவனை நெருங்க விரும்பக்கூடிய வெளியில் இருக்கும் ஒரு

இஸ்ரயேலன் முதலாவது பிராகாரத்தைச் சுற்றியிருக்கும் வெள்ளைத் திரையைப் பார்க்கிறான். பிராகார வாசலுக்குள் செல்ல வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்கிறான். அழைப்பினால் அவன் பிரவேசித்து, வெண்கல பலிபீடம் மற்றும் அங்கே பலி செலுத்தப்படும் இடத்திற்கு வருகிறான். அவன் பாவத்திலிருந்து திரும்புகிறான் என்பதையும், தேவனை நெருங்க ஆசைப்படுகிறான் என்பதையும் இது குறிக்கிறது. இந்த பலிபீடமும், பலியும் பாவிக்காக தேவனுடைய ஏற்பாட்டை அடையாளப்படுத்துகின்றது. உங்களை நல்ல முறையில் வரவழைக்கவும், நடத்தவும் முடியக்கூடிய வகையில் அவர் ஒரு பலியை உருவாக்குகிறார். அந்த வழியிலேயே நாம் தேவனிடம் சென்றோம். பிறகு அவன் தாமிர தொட்டிக்கு கடந்து சென்றான். அதில் தண்ணீர் உள்ளது. தண்ணீர் சத்தியத்தையும், சுத்திகரித்தலையும் கூட அடையாளப்படுத்துகிறது. தண்ணீர் தொட்டிக்கு செல்லும் ஒவ்வொருவரும் மாம்சீக அசுத்தத்தில் கொஞ்சம் அகற்றிப் போடுகிறார்கள். இதன் விளைவாக, சுத்தமும் மேன்மையுமுள்ள நிலையைப் பெறுகிறார்கள். நாம் முதலாவது தேவனிடம் சென்று, பிறகு மாம்சீக அழுக்கை விலக்க முடியுமா? ஒருபோதும் கிடையாது. இப்பொழுது நீங்கள் தேவனிடம் செல்கிறீர்கள். உங்களிடமிருந்து அழுக்கை நீங்கள் விலக்கிப் போடுவதற்கு உங்களுடைய சக்தியில் ஒவ்வொன்றையும் செய்யக்கூடிய விருப்பத்தை காண்பிப்பது, உங்களுக்கு மிகவும் சரியானது ஆகும். இது தண்ணீர் தொட்டியினால் அடையாளப்படுத்தப்படுகிறது. பிறகு, நீங்கள் இன்னும் அப்பால் சென்று, முதலாம் திரைக்கு அருகில் நெருங்கி, வினவுகிறீர்கள், இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? நான் இப்பொழுது மேலும் போய், ஆசாரியனாக விரும்புகிறேன். தேவன் இப்பொழுது ஆசாரியர்களுக்காக அழைக்கிறார் என்று நான் அறிகிறேன். அது நீங்கள் பலி செலுத்துபவராக இல்லாவிட்டால், நீங்கள் ஆசாரியனாக முடியாது. நீங்கள் ஆசாரியனாவதற்கு ஏதேனும் நம்பிக்கை இருக்குமானால், நீங்கள் பலி செலுத்த வேண்டும். பலி செலுத்துவதற்கு உங்களுக்கு ஆசாரியர் வேண்டும். இயேசு தான் அந்த ஆசாரியர். வெள்ளாட்டுக்கடா கட்டப்பட்டது போல, பலி செலுத்தப்படுவதற்கு முன்பு, ஆசரிப்புக் கூடார வாசலில் நீங்கள் முதலில் கட்டப்பட வேண்டும். உங்கள் விருப்பத்தை - உங்களுக்கு இருக்கும் எல்லாவற்றையும் முழுமையாக உங்களையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பதற்காக, நீங்கள் உங்களைக் கட்டிக்கொள்ளுங்கள். ஆசரிப்புக் கூடார வாசலில் வெள்ளாட்டுக்கடா கட்டப்படுவது, உங்களுடைய அர்ப்பணிப்பையும் என்னுடைய அர்ப்பணிப்பையும் அடையாளப்படுத்துகிறது. அர்ப்பணிக்கப்பட்ட வெள்ளாட்டுக்கடா பிரதான ஆசாரியரால் சங்கரிக்கப்படுகிறது. நம்மை கொல்கிறவர் பிரதான ஆசாரியரே. அவர் இதைச் செய்கிறார். அவர் உங்களை ஏற்று, சங்கரிப்பு அல்லது பலி நடந்த உடனேயே, அந்தக் கணமே அவர் உங்களை நீதிமானாக்குகிறார். கிறிஸ்துவின் பலியின் பலன் உங்கள் மீது சுமத்தப்படுவதற்கு முன்பு, தேவன் உங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார். பிறகு நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, புதிய சிருஷ்டியாகிறீர்கள். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த புதிய சிருஷ்டி தான், கிறிஸ்துவின் அங்கமாக, இரண்டாம் திரைக்கு அப்பால் செல்கிறார். வெள்ளாட்டுக்கடா ஒருபோதும் திரைக்கு அப்பால் போகாது. வெள்ளாட்டுக்கடாவும் உள்ளே போனதில்லை. காளையும் உள்ளே போனதில்லை. காளையும் வெள்ளாட்டுக்கடாவும் மாம்சத்தைக் குறிக்கின்றன. மாம்சம் ஒருபோதும் உள்ளே போகாது. புதிய சிருஷ்டி தான் உள்ளே போகிறது. கர்த்தர் உங்களை ஏற்றுக்கொண்ட உடனே, நீங்கள் நீதிமானாக்கப்படுகிறீர்கள். அந்த கனத்தில் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, பிரதான ஆசாரியரின் சரீரத்திற்குள் வருகிறீர்கள். நீங்கள் அந்த சரீரத்தில் இருக்கிறபடியால், நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறீர்கள். அடுத்து, மரணம் வரைக்கும் உண்மையாயிருக்க வேண்டும். மரணத்தில் இரண்டாம் திரைக்கு அப்பால் பிரவேசிப்பீர்கள்.

இந்த நீதிமானாக்கப்படுதல் எங்கே வருகிறது என்பதை இப்பொழுது நீங்கள் பார்க்கிறீர்கள். இது பல்வேறு வழிகளில் விவரிக்கப்படலாம். ஆனால், இது ஒரே துவக்கம், ஒரே பலி அவசியம். ஒரே அர்ப்பணிப்பு அவசியம். விலையேறப்பெற்ற இரத்தத்தில் ஒரே நீதிமானாக்கப்படுதல்.

## இராஜ்யம் - இராஜ்யத்தின் புத்திரர் புறம்பாக்கப்படுதல்.

**கே 421:1 :: கேள்வி (1906) - 1 -** மத் 8:12ம் வசனத்தை தயவு செய்து விளக்கவும். அநேகர் கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலுமிருந்து வந்து, பரலோக இராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருக்கும்போது, இராஜ்யத்தின் புத்திரர் எப்படி புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள்?

**பதில்.** இராஜ்யத்தின் பூமிக்குரிய புத்திரர்களுடன் பூமிக்குரிய இராஜ்யத்தைப் பற்றி இங்கே இயேசு விவரிக்கிறார் என்று நான் பதிலளிக்கிறேன். அவர்கள் அவரை புறம்பாக்கிப் போட்டதால், அவர்கள் புறம்பாக்கிப் போடக்கூடிய காலம் வரும் என்று இயேசு அவர்களிடம் கூறுகிறார். அவர் அவர்களிடம் ஆவிக்குரிய விஷயங்களை விவரித்தார். புதிய ராஜ்யத்தின் பரலோகம் மற்றும் பூமிக்குரிய பகுதிகளின் வித்தியாசத்தைப் பற்றி விளக்க முயற்சிக்கவில்லை; அவர் அப்படிச் செய்வது சரியானதாக இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் இன்னும் ஜெநிப்பிக்கப்படவில்லை. அவர் ஆவிக்குரிய விஷயங்களைப் போதித்திருந்தால், அவர்கள் ஆவிக்குரிய விஷயங்களை உணர்ந்து பாராட்டியிருக்க முடியாது. ஆகவே கர்த்தர் தமது மூன்றரை வருஷ ஊழியத்தில் ஜனங்களிடம் போதித்தவைகள் எல்லாவற்றிலும், ஆவிக்குரிய விஷயங்களை அவர்களுக்குப் போதிக்க முயற்சிக்கவில்லை. அவர் அவர்களுடன் வெறுமனே இயற்கையான விஷயங்களையே போதித்தார். இயற்கைக்குப் புறம்பானவைகள் உவமைகளிலும் மறைபொருள்களிலும் தெரிவிக்கப்பட்டன. இந்த செய்திகளைப் பெற்றுக்கொள்ள முடிந்த அவருடைய சீஷர்களிடம் இயேசு கூறினார், “காலம் வரும்போது, இதன் விளைவாக பிதாவிடம் செல்கையில், பரிசுத்த ஆவி வந்து, இந்த விஷயங்களை அவர்கள் அறிந்து கொள்வார்கள் - மற்றவர்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள். ஆகவே யாருக்கு இவைகள் அறிவிக்கப்பட்டதோ, யார் அவரைத் தள்ளிவிட்டார்களோ, அவர்கள் இராஜ்யத்தின் பூமிக்குரிய மற்றும் பரலோகத்துக்குரிய பிரிவுகளை முழுமையாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ளும் நோக்கத்திற்காக இவைகள் தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் நிலைப்பாட்டில், அவர்களுடைய அளவில் அவர் அவர்களுடன் பேசுவது தான் சிறந்த முறை ஆகும். அதாவது, பூமிக்குரிய பிரிவு அல்லது பரலோகத்துகுரிய பிரிவு என்பதைப் பற்றி எதுவும் சொல்லாமல், ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு இராஜ்யத்தில் இருப்பார்கள் என்றார். அவர்கள் இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரிவில் இருப்பார்கள் என்பதை வேதாகமத்தின் மற்ற பகுதிகளிலிருந்து நாம் அறிகிறோம். ஆனால், கர்த்தர் விஷயங்களை விளக்கிக் கூறவோ அல்லது அந்த பாடத்தின் அம்சத்தைக் குறித்து விவரிக்கவோ முயற்சி மேற்கொள்ளவில்லை. ஆனால், அவர்கள் இராஜ்யத்தில் இருப்பார்கள் என்று வெறுமனே கூறினார். இந்த “மற்றவர்கள்” தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜாதியாக இருப்பதினால், அவர்கள் எதிர்பார்த்த விதமாக, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன் இராஜ்யத்தில் தோழர்களாக இருப்பதற்குப் பதிலாக, அவர்கள் தங்களை புறம்பாக்கப்பட்ட நிலையில் காண்பார்கள். அழுகையும், பற்கடிப்பையும் அவர்கள் எப்போது பெறுவார்கள்? கர்த்தரைப் புறம்பாக்கிப் போட்ட அவர்கள், தங்கள் ஜாதியின் மேல் பெரும் உபத்திரவக்காலம் வருகிறதைக் கண்டார்கள். அந்த அறிவிப்பின் ஒரு பகுதிக்கு மிகவும் பொருந்துவதாக இருக்கிறது. காலப்போக்கில், அவர்கள் வந்து, விழிப்புற்று, தாங்கள் செய்த பெரும் தவறு என்ன என்பதையும், தீர்க்கதரிசி அவர்களைப் பற்றி உரைத்ததையும், அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்த்து அவருக்காக புலம்புவார்கள் என்று தங்களைப் பற்றி அவர் கூறியதைக் கண்டு பிடிப்பார்கள்.

## இராஜ்யம் - ஆவிக்குரியதா அல்லது பூமிக்குரியதா?

**கே 421:2 :: கேள்வி (1909) - 2 -** நமது கர்த்தர் இராஜ்யத்தைப் பற்றி தம்முடைய உவமைகளில் பேசும் போது, அவர் ஆவிக்குரிய பகுதியைக் குறித்து எப்போதும் பேசுகிறாரா?

**பதில்.** “நீங்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபை காண்பீர்கள்” என்று சொன்ன விஷயத்தில், அவர் வெளிப்படையாக பூமிக்குரிய இராஜ்யத்தைப் பற்றி பேசினார். இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரிவில் ஆயிர வருஷ சிங்காசனத்திற்கு முன்பாக, செம்மறியாடுகளும் வெள்ளாடுகளுமாகிய மனுக்குலத்தார் சேர்க்கப்படுவார்கள் என்ற செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள்

உவமையைத் தவிர, வேறு எந்த உவமையும் பூமிக்குரிய பிரிவைக் குறிப்பதாக எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால், வல்லமையும் அதிகாரமும் தொடரக்கூடிய ஆவிக்குரிய இராஜ்யத்தையே நமது கர்த்தர் பொதுவாக இராஜ்யம் என்று குறிக்கிறார்.

## இராஜ்யம் - மேசியாவிடம் தொடர்புள்ளது.

**கே 422:1 :: கேள்வி (1910-Z) - 1 -** மேசியாவின் இராஜ்யம் மற்றும் அந்த இராஜ்யத்தின் பணி என்று சொல்லப்படுவதற்கான உங்களுடைய புரிந்து கொள்ளுதலை சுருக்கமாக தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** மேசியாவின் இராஜ்யம் ஆவிக்குரியதாகவும், மனுஷர் காணக்கூடாததாகவும் இருக்கும் என்பது எங்களுடைய புரிந்து கொள்ளுதல் ஆகும். இருப்பினும், நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசனங்களிலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பெரிய காரியங்களை நிறைவேற்றி முடிப்பதற்கான வல்லமை அனைத்தும் கொண்டதாக இராஜ்யம் இருக்கும். மனுஷர் காணமுடியாத விதமாக அவரால் ஸ்தாபிக்கப்படும் சாம்ராஜ்யம், அதே மாதிரி காணக்கூடாத சாத்தானின் சாம்ராஜ்யத்தின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளும். மகிமையின் ராஜா இருளின் அதிபதியை மாற்றுவார். முழுமையான மனுஷ பூரணத்தில் உயிர்த்தெழுப்பப்படும் ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகளும் மேசியாவின் பூமிக்குரிய முகவர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருப்பவர்களில் முக்கியமானவர்கள். இதுவரை பிதாக்களாக அவர்கள் இருந்ததற்குப் பதிலாக, மேசியாவின் குமாரர்களாக இருப்பார்கள். அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பார். (சங்.45:16.) இந்த இராஜ்யத்துடன் யூத ஜாதி விரைவாக இணையும். இறுதியாக ஒவ்வொரு தேசமும் மேசியாவுடன் இணக்கமாக வரும். “நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனால்” ஸ்தாபிக்கப்படும் இஸ்ரயேலின் புது உடன்படிக்கையின் கீழ் எல்லா ஜனங்களும் வருவதற்கு சலுகை பெறுவார்கள். எரே.31:31-34; மல்.3:1-3.

“உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல்” என்று யூதர்கள் அடையாளம் காணும் மகிமையுள்ள மேசியா. (தானி.12:1.) முகமதியர்களும் எதிர்பார்க்கின்றனர். அவர்கள் அவரை கடந்த கால முகமதுவுடன் அடையாளம் காண்கின்றனர். ஃப்ரீ மேசன்கள் (FREE MASONS) பிரிவினரும் அதே மகிமையுள்ள பிரமுகரையே எதிர் பார்க்கின்றனர். அவர்களுடைய பாரம்பரியங்களில் மாபெரும் மாஸ்டர் மேசன் என்று ஈராம் அபீஃப்பை (HIRAM ABIFF) அடையாளம் காண்கின்றனர். இதே மாபெரும் மேசியாவை மிகாவேல், பிரதான தூதர், பொருளான மெல்கிசெதேக், ராஜாவும் ஆசாரியருமானவரை, “ஏற்ற காலங்களில் விளங்கி வரும் சாட்சியாக, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்துவை” நாங்கள் அடையாளம் காண்கிறோம். (1தீமோ.2:5,6.) ஆனால், இந்த மாபெரும் ராஜா தம்முடைய மகிமையில் தோன்றி, இஸ்ரயேலுடன் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது, தீர்க்கதரிசிகளால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடியே, அவர் சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவராக இருப்பார். (ஆகாய்.2:7.) அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். பிறகு, அவர் யார் என்பதும் ஆபிரகாமின் வித்து மற்றும் தாவீதின் வம்சத்துடன் அவரை எவ்விதம் அடையாளம் காண்பது என்று, பரலோகத்திலும் பூலோகத்திலும் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். இப்பொழுது இல்லை, ஆனால் ராஜா நீதியாக ஆட்சி செய்யும் போது, சகரியாவின் தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவத்தை எல்லாரும் முழுமையாக புரிந்து கொள்ளுவார்கள். (சகரி.12:7-10.) மேசியா தாம் வெளிப்படுத்தும் நாளில் சத்தியத்தைக் காண்பிப்பார் என்பதில் திருப்தி அடைவோம். தேவனுடைய உடன்படிக்கை மற்றும் அவருடைய உறுதி மொழியின்படி, ஆபிரகாமின் வித்து வழியாக நிறைவேற்றப்போகும் எல்லா ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் மாபெரும் பணியையும், மகிமையின் மேசியாவையும் குறித்து யூதர்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் சுட்டிக்காட்டுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

## இராஜ்யம் - கற்பனைகளில் சிறிதான ஒன்றை மீறுதல்.

**கே 422:2 :: கேள்வி (1911) - 2 -** மத்தேயு ஐந்தாம் அதிகாரம் பத்தொன்பதாம் வசனத்தில் கிறிஸ்து, “இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக இராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக இராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்” என்று கூறும்போது. அவர் எந்த பிரிவு மற்றும் ஜனங்களைக் குறித்துச் சொல்கிறார் என்பதை தயவு செய்து எங்களுக்குக் கூறவும்.

**பதில்.** பரலோக இராஜ்யம் என்ற வார்த்தை இரண்டு வெவ்வேறான உணர்வுகளில் பேசப்படுகிறது. ஒரு அர்த்தத்தில், பரலோக இராஜ்யம் தற்போது இல்லை. தேர்ந்தெடுக்கப்படும் அனைவரின் எண்ணிக்கை முழுமை பெற்று, எல்லோரும் மகிமையின் மாற்றத்திற்குள்ளாகும் போது உள்ள பரலோக இராஜ்யத்திற்கு நாம் காத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், வேறு ஒரு அர்த்தத்தில், நீங்களும் நானும் இப்பொழுது பரலோக இராஜ்யமாக இருக்கிறோம். இந்த உலகத்தில் இராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறவர்களாக நாம் இருக்கிறோம். நாம் இப்பொழுது ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், சொந்த ஜனமாயும் இருக்கிறோம் என்று பேதுரு அப்போஸ்தலனால் குறிக்கப்படுகிறோம். அவர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்கள் என்பது நிச்சயமில்லாத போதும், நானும் இருப்பேன் என்பது நிச்சயமில்லாத போதும், இன்னும் இந்த முறையிலேயே பேசப்படுகிறோம். இந்த அர்த்தத்தில், சபை முழுவதுமே பரலோக இராஜ்யம் என்று பேசப்படுகிறது. ஆகவே, இயேசு கூறினார், உங்களுக்கு நினைவிருக்கும், பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்கிறார்கள். வருங்கால பரலோக இராஜ்யம் அப்பொழுது பலவந்தம் பண்ணப்படுகிறதில்லையா? இல்லை, ஆனால், இயேசு அந்த இராஜ்யத்தை அடையாளப் படுத்தினார். இயேசு பலவந்தமாய் பாடுபட்டார். இந்த இராஜ்யத்தை அவருடைய சீஷர்கள் அடையாளப்படுத்தினார்கள். அவர்கள் பாடுபட்டார்கள். பலவந்தம் பண்ணுகிறவர்கள் அவர்களை கட்டாயப்படுத்தி எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் கர்த்தரின் மரணத்திற்கும், சபை சிதறடிக்கப்படுவதற்கும் காரணமாய் இருந்தார்கள். அப்படியே, இந்த வேத வசனத்திலும் கூட, சபை வகுப்பாரில் எவரேனும் தேவனுடைய கற்பனையில் எதையாவது குறைவாகச் செய்கிறாரோ, அவர் தன்னை குறைவாக்கிக் கொள்கிறார், அல்லது, கர்த்தருடைய ஜனங்களில் அந்த அளவுக்கு குறைவாகக் கருதப்படுவார்கள். எவரேனும் கர்த்தருடைய கற்பனைகளுக்கு மாறாக எதையாவது செய்தால் அல்லது போதித்தால், அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும், தெய்வீக நியமனம் என்று நாம் நம்பும் எதையும் - தேவனுடைய ஏற்பாடு அல்லது சித்தத்திற்கு எந்த விதத்தினாலும் விரோதமாய்ப் போனால், அதன் காரணத்தினால் நாம் அவரை குறைவாக எண்ண வேண்டும். அவர் கற்பனைகளை மீறுகிறவராகவும், மற்றவர்களிடம் அப்படிச் செய்யுமாறு போதிக்கிறவராகவும், தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துபவராக இருந்தால், அவரை இராஜ்யத்தில் குறைவானவராக எண்ணுங்கள். எவர்கள் தேவனுடைய சித்தத்தைப் போதிக்கிறாரோ, தேவனுடைய சித்தத்தின்படி செய்ய முயற்சிக்கிறாரோ, அவர்களை மேன்மையானவர்களுக்குள்ளாக எண்ணுங்கள். அது தான் சபைக்கு அப்போஸ்தலரின் அறிவுரை ஆகும். சபையில் மூப்பர் சகோதரர்களையும், உதவியாளர்களையும் தேர்ந்தெடுக்க நீங்கள் விரும்பினால், இயேசுவின் பாதச்சுவடுகளில் அதிகமாக உங்கள் மத்தியில் நடப்பவர்களைக் கவனியுங்கள். தேவனுடைய ஏற்பாடுகளில் அதிக நெருக்கமாக உங்கள் மத்தியில் நடப்பவர்களைக் கவனித்து, அந்த மாதிரியானவர்களைத் தேர்வு செய்யுங்கள். ஊழியத்திற்கு இந்த தகுதிகளை உடையவர்கள் சபையின் ஊழியக்காரராக இருக்கட்டும். தேவனுடைய சித்தத்தை அவர்கள் செய்யும் அளவுக்குத் தக்கதாக அவர்கள் குறைவானவர்களாகவும் மேன்மையானவர்களாகவும் இருப்பார்கள். இதைக் கண்டுணர உங்களுக்கும் எனக்கும் உள்ள சரியான அளவுகோல் இதுவே.

## இராஜ்யம் - பிதாவின் பக்கம் திரும்புதல்.

**கே 423:1 கேள்வி (1911) - 1 -** கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் பதினைந்தாம் அதிகாரத்தைப் படிக்கும் போது, சகலத்தையும் தமக்கு கீழ்ப்படுத்தின பிதாவுக்கு சகலத்தையும்

கிறிஸ்து ஒப்புக்கொடுப்பார் என்பது, சாத்தான் கொஞ்சக்காலம் விடுதலையாக்கப்படும் போது அவன் உலகத்தை மயக்கலாம் என்று நாம் படிக்கிற வெளிப்படுத்தல் ஆகமம் இருபதாம் அதிகாரத்தில் குறிக்கப்படும் “கொஞ்சக்காலத்திற்கு” முன்னதாக இது நடக்குமா அல்லது பிறகு நடக்குமா?

**பதில்.** இது முன்னதாக நடக்கும் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆயிரம் வருஷங்கள் முடிவுற்ற போது, கிறிஸ்து பிதாவிடம் இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். சாத்தான் ஆயிரம் வருஷங்கள் கட்டி வைக்கப்படுவான். ஆகவே இந்த ஆயிரம் வருஷங்கள் முழுவதும், தீமை தடுக்கப்படும், சாத்தான் கட்டப்படுவான், கிறிஸ்து முழுவதுமாக மீட்கும் பணியை செய்வார். அவருடைய பணியை முடித்த பிறகு, அவர் இராஜ்யத்தை பிதாவிடம் ஒப்படைப்பார். பிறகு பூரணராயிருக்கும் மனுக்குலத்தார் அனைவரும் பிதாவின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள். அப்பொழுது நீங்கள் சொல்வீர்கள், “பிதாவின் கட்டுப்பாட்டில் இருப்பதற்கும் குமாரனுடைய கட்டுப்பாட்டில் இருப்பதற்கும் இடையே என்ன வித்தியாசம் உள்ளது? அவர்கள் வித்தியாசமான சட்டங்களைக் கொண்டுள்ளவர்களா? இல்லை, சட்டத்தில் எந்த வித்தியாசமும் இல்லை. ஆயிரம் வருஷங்களில் எந்த சட்டத்தை இயேசு செயல்படுத்தப் போகிறாரோ, அதே சட்டத்தைத் தான் ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு பிதா செயல்படுத்துவார். ஆகவே, இயேசு தெய்வீக இரக்கத்தைக் குறிக்கும் விதமாக நிற்கிறார். அல்லது பிரதிநிதியாக இருக்கிறார்; தெய்வீக நீதிக்கும் பாவிக்கும் இடையே அவர் மத்தியஸ்தராக நிற்கிறார்; பாவியை மீட்டிருப்பதின் தகுதியினால் மத்தியஸ்தராக அவர் நிற்கிறார். ஆகவே, இந்த நிலையில், அவர் பிதாவின் இரக்கத்தை அடையாளப்படுத்துகிறார். இப்பொழுது, தேவன் முன்னோடியாக இருந்து, அவரே இரக்கத்தை செயற்படுத்தியிருந்தால், அவர் தம்முடைய நீதியை ஒதுக்கி வைத்திருக்க வேண்டியிருக்கும். தேவன் அதைச் செய்ய விரும்பவில்லை. அவ்வப்போது அவர் நீதியைத் தள்ளி வைத்தாரானால், அவர் காரியங்களின் ஒழுங்கு முறையை அழித்து, தவறான ஆவியைப் பயிரிடுவதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு தூதன் சொல்லுவதாக அனுமானிக்கலாம், “இப்பொழுது, பரலோக பிதாவே, நான் பாவம் செய்திருக்கிறேன்; இந்த விஷயத்தை பாராமுகமாய் இருங்கள்.” பிதா சொல்வதாக அனுமானிக்கலாம், “மிக நல்லது, நான் பாராமுகமாய் இருப்பேன்.” பிறகு, காலப்போக்கில் வேறொரு தூதன் சொல்லுவான், “நல்லது, பரலோக பிதாவே, நான் பாவம் செய்திருக்கிறேன்; தயவு செய்து இந்த விஷயத்தில் பாராமுகமாய் இருங்கள்.” காலப்போக்கில் தூதர்களிடையே இப்படிச் சொல்வது ஒரு நாகரீகமாகி விடும், “மன்னிப்பதற்காக இன்னும் என்னுடைய முறையை நான் பெற்றிருக்கவில்லை.” தேவன் இது போன்ற எவ்விதமான செயல்முறையை முன்மொழிந்ததில்லை. அவர் தம்முடைய எல்லா சிருஷ்டிகளையும் பூரணமாக்குகிறார்; நாம் படிக்கும் விதமாக, அவருடைய வேலை பூரணமானது. அவர்களை பூரணராக உருவாக்கிய பிறகு, அவர்கள் பூரணத்தைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். ஆகவே, அவர் குறைபாட்டுக்கு சலுகை எதுவும் உண்டாக்குவதில்லை. மனுஷனைப் பற்றிய விஷயத்தில், பாவத்தின் இந்த மார்க்கத்தை அனுமதித்து, இயேசு மனுஷனை மீட்பார் என்பதை முன்னதாகவே ஏற்பாடு செய்தார். இவ்விதமாக அவர் மனுஷனை மரணத்திற்குள்ளாக கண்டனம் செய்து, பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை அனுமதித்து, அவருடைய நீதி மன்னிப்பளிக்காமல், பிறகு அவர்களுடைய மீட்பின் பலி நீதிக்குத் தேவையாக இருந்ததால், தம்முடைய குமாரனை மீட்பராக அனுப்பி, இவைகள் எல்லாம் தூதர்களுக்கு ஒரு பெரும் பாடமாக இருந்தது. இது பெரும் பாடமாக நமக்கு இருக்கிறது. இது மனுக்குலத்திற்கு பெரும் பாடமாக இருக்கப்போகிறது. தேவன் அசட்டையாக இருக்கிறதில்லை; “நீங்கள் கீழ்ப்படியாமல் இருக்காதீர்கள்” என்று தேவனுடைய வார்த்தை கண்டுணர வேண்டிய விஷயமாகும். நமது பிதா அசட்டையாக இருக்கிறவர் அல்ல. “நல்லது, பிதா என்னை மன்னிப்பார்; இது ஒரு விஷயம் அல்ல.” என்று நீங்கள் சொல்ல முடியாது. தேவன் இந்த விஷயத்தில் கவனக்குறைவாக இருந்தால், வெகு திரளான ஜனங்கள் மத்தியில் பாவம் பொதுவான ஒன்றாக இருக்கும். அவர்களிடம் செயல்தொடர்பு கொள்வதில், தமது சித்தத்தைப் பின்பற்றுவதில் அவர் கவனமின்மையாக இருந்தால், பாவியிடம் அவர் அலட்சியமாக இருப்பதாகும். பாவம் என்பது மிகவும் பொதுவான ஒன்றாகும். இது உண்மையில்

ஒரு அழைப்பாகவே உள்ளது. ஆனால் பாவத்தின் மேல் தேவன் ஒரு தடையை நியமித்திருக்கிறார். இது ஒவ்வொரு நபருக்கும் கெடுதி என்றும், நீதியாயிருப்பது ஆசீர்வாதம் என்றும், பாவமுள்ள ஒன்றையும் அவர் அனுமதிக்கமாட்டார் என்றும் கூறுகிறார். பிறகு, இதை மனுஷனுடைய விஷயத்தில் எடுத்துக்காட்டுகிறார். அவர் பாவத்தைத் தொடர அனுமதித்து, பிறகு ஒரு மீட்பரை அளிக்கிறார். அந்த மீட்பர் மனுக்குலத்துடன் செயல்தொடர்பு கொண்டு, அவர்களுக்கு உதவி செய்து, ஆயிரம் வருஷங்களுக்கு மத்தியஸ்தராக இருக்க தேவன் அனுமதிக்கிறார். இதில் அவர் எதுவும் பங்கு கொள்ளவில்லை. மத்தியஸ்தர் அவர்களை முழுவதுமாக பூரணத்துவத்திற்கு கொண்டு வரும் வரைக்கும், ஆயிரம் வருஷங்களில் அவர்கள் எல்லோரும் மத்தியஸ்தருடைய பாதுகாப்பில் இருக்கிறார்கள். ஆனால், ஆயிரம் வருஷங்களின் முடிவில், அவர்கள் பூரணமடைகிறார்கள். அவர்களுக்கு இனிமேல் மத்தியஸ்தர் தேவைப்படாது. ஒரு பூரண மனுஷனுக்கு மத்தியஸ்தர் தேவைப்படுகிறதில்லை. ஒரு பூரணமான தூதருக்கு மேலானவருக்கு மத்தியஸ்தர் தேவைப்படுவதில்லை, அல்லது ஆதாமுக்கு மேலாக மேலானவராக இருப்பவர் எவருக்கும் மத்தியஸ்தர் தேவைப்படுவதில்லை - - அந்த அளவுக்குத் தேவை இல்லை. ஏனெனில், கிறிஸ்துவின் ஆட்சியில் ஆயிரம் வருஷங்களின் முடிவில் இந்த பூரணமடைந்த மனுஷர் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆளுகையுடனும், நீதியின் ஆளுகையுடனும் இருந்ததைப் போன்ற அனுபவம் ஆதாமுக்கு இருக்கவில்லை. தேவனுடைய நற்குணத்தைப் பார்த்திருக்கிறவர்களாக, மற்றும் பிறகு இப்பொழுது அவர்கள் தங்களுடைய நடத்தையில் முழுவதுமாக உறுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதில் சந்தேகம் இல்லை. ஆகவே, பிறகு இடையிலிருந்து மத்தியஸ்தர் வெளியேறுகிறார். இது எதைத் தெரிவிக்கிறது? மனுக்குலத்தார் வெளிப்படையான, மாசற்ற நீதியின் பக்கம் திரும்புவார்கள் - அதிகமாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை; தேவன் நேர்மையாகச் செய்வதை, ஒவ்வொன்றிலும் துல்லியமாக நேர்மையுடன் செய்வதையே அவர்களிடம் எதிர்பார்க்கிறார். எந்தவிதமான சலுகையும் அல்ல; அவர்கள் தவறாக சென்றால், சரி பண்ணுவதற்கு வழி ஏதும் இல்லை. அவர்கள் தெய்வீக சட்டத்தை சிறிதளவாகிலும் வரம்பு மீறினால், இதை அவர்கள் தெரிந்தே செய்கிறார்கள் என்று அர்த்தமாகும். அவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள் என்பதை அர்த்தப்படுத்துகிறது. எனினும், குமாரன் இந்த விஷயத்தில் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று நாம் புரிந்து கொள்ளுகிறவர்களாக இல்லை. சாத்தானையும், அந்த சமயத்தில் தவறுடன் அவனோடு சென்றவர்களையும் அழிப்பதற்கு தேவனிடமிருந்து வானத்தின் அக்கினி கீழே வந்து அழித்துப்போடும் என்று வெளிப்படுத்தல் ஆகமம் சொல்கிறது. இது நீதியிடமிருந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இருந்தாலும், இவை எல்லாவற்றிலும், கர்த்தர் இயேசு மற்றும் அவருடன் இணைந்துள்ள அவருடைய சரீரமாகிய சபையும் பிதாவின் முகவராக இருப்பார்கள்; ஆனால் ஒரு விஷயத்தில், மத்தியஸ்தராக தமது சொந்த முயற்சியில் அவர் செயல்பட்டார். அதன் காரணமாக அவர் தமது விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால், அவருடைய மீட்பு வழியாக அவரிடம் வரும் உலகத்தாரை அவர் ஆள வேண்டியிருக்கிற இந்த உரிமையைப் பெற்றார். ஆனால் அந்த பணி முடிகிறபோது, அவர் இந்த உலகத்திற்கு வருவதற்கு முன்பு இருந்த விதமாக, யேகோவாவின் பிரதிநிதியாக இந்த பிரபஞ்சத்தில் தம்முடைய தீவிரமான நடவடிக்கைகளைத் திரும்பத் தொடருவார். உலகத்தின் சிருஷ்டிப்பின் போது, தூதர்களின் சிருஷ்டிப்பின் போது, அவர் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார் - சகலமும் அவரால் உண்டாக்கப்பட்டது; அதே மாதிரி ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு, பிதாவுடன் தம்முடைய உறவைத் தொடரும் போது, செய்யப்போகிற எல்லா காரியங்களிலும் அவர் பிதாவின் முகவராக இருப்பார். ஆகவே, சாத்தானையும் மற்றவர்களையும் அழிப்பது, மற்றும் இந்த விஷயத்தின் மேற்பார்வையை உடையவராக இருக்கப்போவது கர்த்தர் இயேசு என்று நான் கருதுகிறேன். இது குறித்து உருவகமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மத்தேயு சுவிசேஷம் இருபத்து ஐந்தாம் அதிகாரத்தின் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் உவமை, நம்மை வருங்காலத்துக்கு கொண்டு செல்கிறது. அது சாத்தானும் அவனோடு இணைகிறவர்கள் அக்கினிக்கடலில் போடப்படுவார்கள். இதுவே இரண்டாம் மரணம் ஆகும்.

## இராஜ்யம் - மேசியாவின் இராஜ்யம் ஆவிக்குரியது.

**கே** 425:1 :: **கேள்வி** (1912-Z) - 1 -

மேசியாவின் இராஜ்யம் என்பதற்கு என்ன அர்த்தம்?

**பதில்.** மேசியாவின் இராஜ்யம் ஆவிக்குரியதாகவும், மனுஷர் காணக்கூடாததாகவும் இருக்கும் என்பது எங்களுடைய புரிந்து கொள்ளுதல் ஆகும். இருப்பினும், நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசனங்களிலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பெரிய காரியங்களை நிறைவேற்றி முடிப்பதற்கான வல்லமை அனைத்தும் கொண்டதாக இராஜ்யம் இருக்கும். மனுஷர் காணமுடியாத விதமாக அவரால் ஸ்தாபிக்கப்படும் சாம்ராஜ்யம், அதே மாதிரி காணக்கூடாத சாம்ராஜ்யத்தின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளும். மகிமையின் ராஜா இருளின் அதிபதியை மாற்றுவார். முழுமையான மனுஷ பூரணத்தில் உயிர்த்தெழுப்பப்படும் ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகளும் மேசியாவின் பூமிக்குரிய முகவர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருப்பவர்களில் முக்கியமானவர்களாக இருப்பார்கள். இதுவரை **பிதாக்களாக** அவர்கள் இருந்ததற்குப் பதிலாக, மேசியாவின் குமாரர்களாக இருப்பார்கள். அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பார். (சங்.45:16.) இந்த இராஜ்யத்துடன் யூத ஜாதி விரைவாக இணையும். இறுதியாக ஒவ்வொரு தேசமும் மேசியாவுடன் இணக்கமாக வரும். "நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனால்" ஸ்தாபிக்கப்படும் இஸ்ரவேலின் புது உடன்படிக்கையின் கீழ் எல்லா ஜனங்களும் வருவதற்கான சலுகை பெறுவார்கள். எரே.31:31-34; மல்கியா.3:1-3.

"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல்" என்று யூதர்கள் அடையாளம் காணும் மகிமையுள்ள மேசியா. (தானி.12:1.) முகமதியர்களும் அவரை எதிர்பார்க்கின்றனர். ஆனால் அவர்கள் அவரை கடந்த கால முகமதுவுடன் அடையாளம் காண்கின்றனர். ஃப்ரீ மேசன்கள் (FREE MASONS) பிரிவினரும் அதே மகிமையுள்ள பிரமுகரையே எதிர்பார்க்கின்றனர். அவர்களுடைய பாரம்பரியங்களில் மாபெரும் மாஸ்டர் மேசன் என்று ஈராம் அபீஃப்பை (HIRAM ABIFF) அடையாளம் காண்கின்றனர். இதே மாபெரும் மேசியாவை மிகாவேல், பிரதான தூதர், பொருளான மெல்கிசெதேக், ராஜாவும் ஆசாரியருமானவரை, "ஏற்ற காலங்களில் விளங்கி வரும் சாட்சியாக, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்துவை" நாங்கள் அடையாளம் காண்கிறோம். (1தீமோ.2:5,6.) ஆனால், இந்த மாபெரும் ராஜா தம்முடைய மகிமையில் தோன்றி, இஸ்ரவேலுடன் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது, தீர்க்கதரிசிகளால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடியே, அவர் சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவராக இருப்பார். (ஆகாய்.2:7.) அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். பிறகு, அவர் யார் என்பதும் ஆபிரகாமின் வித்து மற்றும் தாவீதின் வம்சத்துடன் அவரை எவ்விதம் அடையாளம் காண்பது என்றும், பரலோகத்திலும் பூலோகத்திலும் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். இப்பொழுது இல்லை, ஆனால் ராஜா நீதியாக ஆட்சி செய்யும் போது, சகரியாவின் தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவத்தையும் (சகரி.12:7-10.) மற்றும் சங்கீதம் 22:16ம் வசனத்தையும் **எல்லாரும்** முழுமையாக புரிந்து கொள்ளுவார்கள். மேசியா தாம் வெளிப்படுத்தும் நாளில் சத்தியத்தைக் காண்பிப்பார் என்பதில் திருப்தி அடைவோம். தேவனுடைய உடன்படிக்கை மற்றும் அவருடைய உறுதி மொழியின்படி, ஆபிரகாமின் வித்து வழியாக நிறைவேற்றப்போகும் எல்லா ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் மாபெரும் பணியையும், மகிமையின் மேசியாவையும் குறித்து யூதர்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள் **எல்லோருக்கும்** சுட்டிக்காட்டுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

## இராஜ்யம் - பலன் தருவது.

**கே 426:1 :: கேள்வி (1912) - 1 -** சில விதைகள் முப்பதாகவும், சிலது அறுபதாகவும் சிலது நூறாகவும் பலன் தந்தது என்று உவமையில் கர்த்தர் சொன்ன போது, இந்த வகுப்பார் சபையைச் சேர்ந்தவர்களா அல்லது திரள் கூட்டத்தையா?

**பதில்.** அவர் சொல்லவில்லை. ஆவியின் கனிகளைப் பிறப்பிக்கும் வகையில், பலன் அளிக்கக்கூடியவர்கள் அனைவரையும் இது குறிக்கிறது என்று நான் அனுமானிக்கிறேன். மிகவும் உயர்ந்த தர நிலையில் வந்திருப்பவர்கள் நூறு மடங்கு பலன் அளிக்கிறவர்கள்; அறுபது மடங்கு

பலனளிக்கிறவர்கள் அதே வகுப்பைச் சார்ந்தவர்களாக குறிக்கப்படலாம்; ஆனால், மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது என்று படிக்கும் விதமாக, இராஜ்யத்தில் மிகவும் உயர்ந்த அளவில் பிரகாசிக்கமாட்டார்கள். முப்பது மடங்கு பலனளிப்பவர்கள் ஒருவேளை திரள்கூட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். இவர்கள் கர்த்தருடைய ஆவியில் அந்த அளவிற்கு பெரிதாக வளர்ச்சி அடையாதவர்களாக இருக்கலாம். எந்த ஒரு நிகழ்விலும் அவர்கள் எல்லாரும் ஆவியின் கனிகளைப் பிறப்பிப்பார்கள். புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் என்ற இரண்டு வகுப்பார்களைப் போலவே அவர்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் கன்னிகைகள் - எல்லாரும் பரிசுத்தரும் தேவனிடம் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.

## இராஜ்யம் - ஆயிர வருஷ ஆட்சியில் பிள்ளைகள் பிறப்பார்களா?

**கே 426:2 :: கேள்வி (1913) - 2 -** ஏசாயா 65:23ம் வசனத்தில், முக்கியமாக கடைசிப் பகுதி யாரைக் குறிக்கிறது என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள்? “அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடே கூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்.”

**பதில்.** வெளிப்படையாக, இது மனுஷ வகுப்பாரைக் குறிக்கிறது. இது இராஜ்யத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. அங்கே அவர்களுக்கு குழந்தைகள் இருப்பார்களா என்று வினவினால், மனுஷ குடும்ப விஷயங்களை துண்டிப்பது படிப்படியாக நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது. உடனடியாக இருக்காது. கொஞ்ச காலத்திற்கு உறவு முறைகள் இருக்கலாம். அவர்கள் பூரணத்துவத்திற்கு நெருங்கி வர, “கொள்வினையும் கொடுப்பினையும் இல்லை” என்ற நிலையில், இந்த நிலைமை படிப்படியாக அகற்றப்படும். ஆகவே இந்த வசனம் ஆயிர வருஷ யுகத்தின் ஆரம்பக் கட்டத்தைக் குறிப்பதாக நான் நம்புகிறேன்.

## இராஜ்யம் - இன்னும் சந்தேககத்திற்கிடமாக கருத்து.

**கே 426:3 :: கேள்வி (1915) - 3 -** இராஜ்யம் எப்பொழுது ஸ்தாபிக்கப்படும் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்?

**பதில்.** நல்லது, அருமையான நண்பர்களே, ஸ்தாபிக்கப்படுதலை நான் அடையும் போது, நான் தெரிந்து கொள்வேன்! (சிரிப்பு) ஸ்தாபிக்கப்படுதலை நான் அடையும் போது, நான் என்னுடைய “மறுரூபத்தை” பெறும்போது இது இருக்கும். ஆவிக்குரிய சுபாவத்திற்கு நீங்கள் உங்களுடைய “மறுரூபத்தை” பெறும்போது, இது இருக்கும். திரைக்கு அப்பால், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் போது, நீங்கள் ஒவ்வொருவரும் ஸ்தாபிக்கப்படுவீர்கள். இராஜ்ய வகுப்பாரில் பெரும்பாலோர் ஏற்கனவே திரைக்கு அப்பால் பிரவேசித்திருக்கின்றனர் என்று நாங்கள் நம்புகிறோம். வேதாகமத்தை நாங்கள் புரிந்துள்ளபடி, இந்த சுவிசேஷ யுகத்தின் நித்திரை அடைந்த பரிசுத்தவான்கள் எல்லாரும் கிபி 1878 வசந்த காலத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டு திரைக்கு அப்பால் பிரவேசித்தார்கள். இதை நாங்கள் நிச்சயமாக விசுவாசத்தினால் புரிந்து கொள்ளுகிறோம். அவ்விதம் நம்புவதற்கு பொருத்தமான சாட்சியங்கள் இருக்கின்றன என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால், அப்பொழுது இராஜ்யம் முழுவதுமாக ஸ்தாபிக்கப்பட்டது என்று நாங்கள் நம்பவில்லை. அந்த பரிசுத்தவான்கள் மகிமை அடைந்தவர்களாக, தங்களுடைய மகிமையின் ஆவியின் சரீரங்களை உடையவர்களாக இப்போது இருக்கிறார்கள்; ஆனால் அவர்களுடைய ஆவியின் சரீரங்கள் இராஜ்யத்தை உள்ளடக்கியதாக இருக்கவில்லை. இராஜ்யம் என்பது ஆளும் வல்லமை கொண்டதாகும். தற்போதைய ஒழுங்கு முறையின் பெரிதான அழிவு வருவதற்கு முன்பாக இயேசு தம்முடைய பெரும் வல்லமையை தாமே எடுத்துக் கொண்டு ஆளுகை செய்வார். இந்த அழிவுக்கு ‘அர்மகெதோன்’ என்று அர்த்தம். மகா உபத்திரவ காலத்தின் கடைசிப் பகுதியான ‘அர்மகெதோன்’ நடக்கும் நேரத்தில், வேதாகம வகுப்பார் அனைவரும் ஒருவேளை அவர்களுடைய கர்த்தரின் மகிமையில் இருப்பார்கள். இருப்பினும், நிச்சயமாக அறிவதற்கு போதுமான அளவு விவேகமுள்ளவர்களாக நாங்கள் இருக்கவில்லை.

கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கங்களாக இன்னும் கொஞ்ச காலத்திற்கு இருக்க வாய்ப்பு உள்ளது என்று காவற் கோபுர பத்திரிகையில் நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். சங்கீதக்காரனுடைய வார்த்தைகளை நீங்கள் நினைவுகூருங்கள்: "பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள் - - அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்". (சங்.149:5-9.) இது களிப்படைவதைத் தெரிவிக்கிறது. இதுவரைக்கும் இந்த பக்கத்தில் நடைபெறுவதாகத் தோன்றுகிறது. இது ஜாதிகளை வெட்டும் இந்த நேரத்தில், சில பரிசுத்தவான்கள் இன்னும் மாம்சத்தில் இருந்து அதிகாரத்தை செலுத்துவார்கள். ஆனால் நமக்குத் தெரியாது. அந்த வழியில் தான் இது தோன்றுகிறது. நமது "மறுரூபம்" நடப்பதற்கு முன்பு, அந்த அர்த்தத்தில் தான் நம்மில் சிலர் ஸ்தாபிக்கப்படுவோம். ஏனெனில், அவர்கள் "**புறஜாதிகளிடத்தில்** பழி வாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டுவார்கள். எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்துவார்கள் - - இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" என்று தீர்க்கதரிசி சொல்கிறார். இந்தக் கனம் இன்னும் நம்மிடம் வரவில்லை. நீங்கள் எந்த ராஜாக்களையும் கட்டவில்லை, நானும் கட்டவில்லை. இது எதை அர்த்தப்படுத்துகிறது என்று நாங்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருக்கிறோம். இது நிறைவேறும் வரைக்கும் தீர்க்கதரிசனத்தை தெளிவாகப் புரிந்து கொள்வதை நாம் எதிர்பார்க்க முடியாது.

முதலாம் வருகையைத் திரும்பிப் பாருங்கள், காலம் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறித்தீரும் வரைக்கும் அவைகள் புரிந்து கொள்ளப்படவில்லை. மரித்தோரிலிருந்து கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு, சீஷர்களுடனும் இதே நிலை இருந்தது. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இயேசு அவர்களுக்கு தீர்க்கதரிசனங்களை விளக்கும் போது அவர்கள் புரிந்து கொண்டார்கள். நடக்கப் போவதற்கு முன்பு அவர் அவர்களுக்குச் சொல்லிய போது, அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இந்த காரியங்களைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அப்போது உரிய நேரம் அதுவாக இல்லை. ஆகவே, அதே போன்று தான் நம்முடனும் இருக்கிறது. நிறைவேறுதலின் மத்தியில் நாம் இருக்கிற வரைக்கும் நாம் புரிந்து கொள்ளமாட்டோம். ஒரு கேள்விக்குறியுடன் இப்போதைக்கு இதை விட்டு விடுவது நல்லது.

## இராஜ்யம் - விலையுயர்ந்த முத்து.

**கே 427:1 :: கேள்வி (1915) - 1 -** "பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது." அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்." (மத்.13:45,46.) இந்த முத்து என்னவாக இருக்கிறது?

**பதில்.** தேவனுடைய இராஜ்யத்தைக் குறிக்கிற இந்த உவமையின் முத்து பற்றி மிகவும் சரியாக நாம் புரிந்து கொள்ளலாம். நீங்களும் நானும், எல்லா நண்பர்களும் சிலவற்றை விற்க, கொடுத்து விட, சிலவற்றை பரிமாற்றம் செய்ய அறிவுடையவர்களாயிருக்கிறோம். நீங்கள் என்ன கொடுக்கிறீர்கள்? நீங்கள் எவ்விதமான பரிமாற்றங்களை செய்கிறீர்கள்? நல்லது, பிள்ளைகளாக நாம் நம்முடைய நேரத்தை அறிவுக்காக பரிமாற்றம் செய்ய கற்பிக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நாம் நமது வர்த்தகத்தை இளமையிலேயே துவக்கினோம். நம்முடைய நேரங்களை, நம்முடைய நிமிஷங்களை, நம்முடைய கவனத்தை வர்த்தகம் செய்து, வழிமுறைகளையும் மற்றும் அறிவையும் பெறுகிறோம். நாம் வயதானவர்களாக வளரும் போது, நாம் கூறினோம், "வர்த்தகம் வழியாக இப்போது நாம் சிலர் ரொட்டி செய்து விற்பவராகவும், சிலர் கணக்கர்களாகவும், மற்றவர்கள் உடுப்பு அல்லது தொப்பி செய்து விற்பவர்களாகவும், மற்றவர்கள் சலவை செய்யும் பெண்களாகவும், வர்த்தகத்தில் ஈடுபடுகிறவர்களாக, நம்முடைய நேரத்திற்கு பரிமாற்றமாக பணம் பெற்றோம். ஒருவர் கூறுகிறார், "நான் வக்கீலாகப் போகிறேன். நான் பணம் சேர்த்து, பிறகு ஒரு மோட்டார் வாகனம் வாங்க முடிகிறவனாக இருப்பேன்." மோட்டார் வாகனம் முதலில் வருகிறது, நீங்கள் அறிவீர்கள் (சிரிப்பு) - - நான் எனக்குச் சொந்தமாக ஒரு வீடு வாங்கி, முக்கியமானவராகி, நல்ல பெயருடையவனாகுவேன். பிறகு, நான் என்னுடைய குடும்பத்தார்களுடன் வெளியே செல்லும் போது, "திருவாளர் - - - மிக நன்றாக யோசித்திருக்கிறார்" என்று ஜனங்கள் சொல்லுவார்கள். இதுவே அவர்களுக்கு முன்னால் பலர்

முன்னிறுத்தியிருக்கும் பரிசு ஆகும். இந்த முத்தைத் தான் வாங்க விரும்புகிறார்கள். இதற்காகவே அவர்கள் வாழ்கிறார்கள். இந்த பரிசை அடைவதற்கு, அவர்கள் தங்களுடைய நாட்களையும், மணிகளையும், நிமிஷங்களையும் செலவழித்து, பணம் சேர்ப்பதற்கு தங்களுடைய வர்த்தகத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதைத் திட்டமிடுகிறார்கள்.

மற்றவர்கள் வேறுவிதமான பரிசை தங்களுக்கு முன்பாக முன்னிறுத்துகிறார்கள். ஒருவர் கூறுகிறார், "நான் ஒரு பெரிய மருத்துவராக விரும்புகிறேன்." ஆகவே அவர் மருத்துவ கல்லூரிக்கு செல்கிறார், "அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய அறுவை சிகிச்சை நிபுணர்களில் ஒருவராகுவேன், இது தான் என்னுடைய லட்சியம்" என்ற நினைப்பில், அவருடைய கல்வியைப் பெறுவதற்கு கடுமையாக உழைக்கிறார். ஆகவே இதை அடைவதற்காக அனைத்து சக்தியையும் பிரயோகப்படுத்தி, அந்த வரிசையில் தன்னுடைய நேரத்தை செலவழிக்கிறார். வேறு நபர் கூறுகிறார், "நான் பெரிய இசைக் கலைஞனாக வர விரும்புகிறேன். நான் எல்லாவற்றைக் காட்டிலும் இசையை அதிகமாக நேசிக்கிறேன்." இந்த பெரும் கலையில் தேர்ச்சி பெறுவதற்காக அவருடைய நேரத்தையும், சக்தியையும், பணத்தையும் அவர் செலவழிக்கிறார். இசைக்காகவே அனைத்தும் செல்கிறது. ஏனெனில் இது அவருடைய ஒரு லட்சியமாகவே இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு நபரும் சரியாக, வாழ்வில் ஏதேனும் லட்சியம் உடையவராய், அதை நோக்கி உழைக்கின்றனர்.

ஒரு பிள்ளைக்கு அதனுடைய வாழ்வில் ஏதேனும் லட்சியம் கொண்டிருக்க இளமையிலேயே கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்; பெற்றோர்களின் ஞானத்திற்கு ஏற்ப, பிள்ளைக்கு கிட்டத்தட்ட பொருத்தமானதாகவும், கிட்டத்தட்ட மதிப்பு வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். ஏதேனும் தகுதியான விஷயத்திற்காக வேலை செய்யும் விதமாக, ஒவ்வொரு பிள்ளையும் நல்ல லட்சியம் உடையதாக இருக்க வேண்டும். சரியாக வழி காட்டும் நல்ல பெற்றோர் அல்லது ஆசிரியர்கள் இல்லாத பிள்ளைகள், தங்கள் வாழ்வு மூலமாக சரியான ஆசீர்வாதம் பெறக்கூடாதவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் பிள்ளையின் மனது உணர்வு கொண்டு, வேறு எதிலாகிலும் பயிற்சி மேற்கொள்ள ஆசைப்படும். பதினாறு வயது துவக்கத்தில் இருக்கும் இளம்பெண் சொல்லக்கூடும், "நான் ஒரு பேச்சாளர் அல்லது இசைக்கலைஞரின் மனைவியாக ஆசைப்படுகிறேன்." வாலிபன் சொல்வான், "நான் புத்திசாலியானவளும் வெற்றிகரமாய் செய்து முடிக்கும் திறனுள்ளவளுமாகிய ஒரு பெண்ணை மணக்க விரும்புகிறேன்." இப்பொழுது, பெற்றோர்கள் சரியானதும் உயர்ந்ததுமான லட்சியத்தை மனதில் ஆழமாக ஜாக்கிரதையுடன் பதிய வைக்கும் நேரம் இதுவாகும். அவ்விதம் செய்தால் பிள்ளைகள் வாழ்வில் உண்மையான ஆசீர்வாதத்தைத் துவக்கத்திலேயே பெறத் துவங்குவார்கள்.

கர்த்தரிடத்தில் நாம் வருவதற்கு முன்பாக, ஒன்று அல்லது அதற்கு மேலான இந்த வித்தியாசமான லட்சியங்களை அல்லது அபிலாஷைகளை நாம் உடையவராயிருக்கலாம். சில மிகவும் மதிப்பு வாய்ந்த லட்சியங்களாகவும், சில குறைவான மதிப்புடையதாகவும் இருக்கலாம். வாழ்வில் லட்சியங்கள் ஏதும் இல்லாமல் இருப்பதை விட, இந்த லட்சியங்கள் யாவும் மேலானதாக இருக்கிறது. ஒரு நபர் லட்சியம் இல்லாமலும், எந்த குறிப்பிட்ட விஷயத்தையும் அடையும் நோக்கம் இல்லாமலும் இருக்கும் போது, அவரோ அல்லது அவளோ தான் செய்ய முடிவதில் எதையும் மிகவும் நன்றாக செய்யக் கூடாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நாம் கிறிஸ்துவிடம் வருகிற போது, சுவிசேஷத்தைப் பற்றியும், இப்போது திறக்கப்பட்டுள்ள ஆச்சரியமான, மேலான அழைப்பு பற்றியும் அறிந்து கொள்ள வருகிறோம். எல்லாவற்றிலும் சீரும் சிறப்புமிக்க லட்சியத்தை நாம் பெறுகிறோம். பெருமதிப்பு கொண்ட, "இந்த விலையேறப்பெற்ற முத்து" பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதை விலைக்கு வாங்க நமக்கு இருந்த எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறோம். மற்ற எல்லா முத்துக்களும் - பெரிய மருத்துவர், பெரிய கலை நிபுணர், பெரிய இசைக் கலைஞர் அல்லது பணிப்பெண் அல்லது வேறு ஏதாவது ஒருவராக இருக்கும் முத்து - இவைகளெல்லாம் பெரிதும், ஆச்சரியமானதும், விலையேறப்பெற்றதுமான இந்த மேன்மையான முத்தை ஒப்பிடும் போது, அற்பமும் முக்கியத்துவம் இல்லாததுமாயிருக்கிறது!

இந்த மேன்மையான முத்து என்ன? இந்த மேன்மையான பெரிதான அழைப்பு? என்னுடைய அருமையான சகோதரர்களே, இந்த சுவிசேஷம் நமக்கு முன்னாக நிறுத்தியிருக்கிற முத்து இதுவே. உங்களுக்கும் எனக்கும் பங்கு அளிக்கப்படுகிற தேவனுடைய இராஜ்யம் தான்

இந்த "விலையுயர்ந்த முத்து". இப்படிப்பட்ட முத்தை நாம் பெற முடியுமா? இதற்கு என்ன அர்த்தம்? இதற்கு அர்த்தம்: மகிமை, கனம், அழியாமை, தெய்வீக சுபாவம், கிறிஸ்துவுடன் உட்காருதல்! இந்த மகிமைகளெல்லாம் வெறுமனே ஒரு பகுதியை மட்டும் பெறுகிறதில்லை. நாம் முழுமையாக பெறுகிறோம், அல்லது, எதுவுமில்லை. இராஜ்யத்திற்குள் நுழைதல் என்பது, "பூமியிலுள்ள சகல வம்சங்களையெல்லாம்" இயேசுவுடன் ஆசீர்வதிக்கும் பங்கை பெறவும், அவருடைய எதிர்கால மகிமை மற்றும் கனத்தில் பங்கு பெறுவதும் தான் அர்த்தம் ஆகும். இது தான் விலையுயர்ந்த முத்து ஆகும்.

நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரியின் இந்த உவமையில் நமது கர்த்தர் இந்த விஷயத்தை மிக அழுத்தமாக உருவகப்படுத்தியிருக்கிறார். நீங்களும் நானும், மற்ற ஒவ்வொருவரும் நேரத்தையும் செல்வாக்கையும் பரிமாற்றம் செய்து ஏதேனும் மதிப்பு மிகுந்ததைத் தேடுகிறோம். ஆனால் இந்த **ஒரு பொருளை,** எல்லா முத்துக்களிலும் தெரிந்தெடுக்கப்படக்கூடிய இதை நாம் பார்க்க வரும்போது, நாம் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவர்களாக, இதைப் பெறுவதற்காக நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் விற்பதற்கு நாம் பெரு மகிழ்வு கொள்ளுகிறோம். நீங்கள் சொல்கிறீர்கள், "நான் இதற்காக என் வசம் உள்ள எல்லாவற்றையும் கொடுப்பேன்." பிறகு கர்த்தர் சொல்கிறார், "இந்த மேன்மையான முத்தைப் பெறுவதற்குத் தேவையான பணம் இதுவாக இருக்கிறது." "இதைவிட சற்று குறைவான தொகையாக இருக்கலாமென்று விரும்புகிறேன்" என்று நீங்கள் சொல்வீர்களானால், கர்த்தர் சொல்லுவார், "அப்பொழுது நீங்கள் அதைப் பெற முடியாது. இது உங்களுக்கு இருக்கிற எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும்." இயேசு தமக்கு இருந்த எல்லாவற்றையும் கொடுத்தார். நம்மில் எவருக்கும் இருந்ததைக் காட்டிலும் மிகவும் அதிகமாக அவர் பெற்றிருந்தார். ஆகவே உலக மதிப்பீட்டின்படி நாம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நாம் பெற்றிருக்கிற எல்லாவற்றையும் நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆயிரக்கணக்கான மில்லியன் டாலர்களுக்கு மேலான மதிப்பு கொண்ட முத்தை நாம் பெறுகிறோம். அதுவும், சொல்லப்போனால், வெறும் அற்பமான கொஞ்சம் காசுகளைக் கொடுத்து முத்தைப் பெறுகிறோம்! அதிகமாக கொடுப்பதற்கு உங்களிடம் ஏதுமில்லை; நம்மில் எவருக்கும் இல்லை! ஆனால் நமது தேவன் கூறுகிறார், "இந்த மேன்மையான முத்து விற்பனைக்காக உள்ளது. இதைப் பாராட்டும் மன நிலை பெற்றிருப்போர் எவரும் இதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, அருமையான சகோதரர்களே, நாம் விரும்பினால் இந்த ஆச்சரியமான முத்தை நாம் பெறுவதற்கான நம்முடைய ஆசீர்வாதமான சலுகையாக இது உள்ளது.

## இராஜ்யம் - இராஜ்யத்தின் சுதந்திரர்கள்.

**கே 429:1 :: கேள்வி (1916) - 1 -** இராஜ்யத்தின் சுதந்திரர்களாகப் போகிறவர்கள் எந்த மாபெரும் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளும்படி எதிர்ப்பார்க்கப்படுகின்றனர்?

**பதில்.** (1) நீதியினைக் குறித்தச் சரியான, முழுவதுமாக உணர்ந்துகொள்ளுதல் ஆகும் மற்றும் உங்களை அன்புகூருவதுபோன்று அயலார்களை அன்புகூருதலாகிய பொன்னான பிரமாணம் முன்வைக்கும் காரியங்களுக்கு இசைவாய் வர பிரயாசம் எடுப்பதன் வாயிலாக நீதியினைக் குறித்த அந்த உணர்ந்துகொள்ளுதலை வெளிப்படுத்துவதாகும்..

(2) மேலும் அன்பு, அனுதாபம், மனதுருக்கம், இரக்கம் குறித்த படிப்பினைகளாகும். நம்மைக் குறித்து, நமது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகள் குறித்து நாம் எவ்வளவுதான் கடுமையாய், **இம்மியும் பிசகாமல்** காணப்பட்டாலும்கூட, நாம் மற்றவர்கள் விஷயத்தில் **இம்மியும் பிசகாத எதிர்ப்பார்ப்பினைக்** கொண்டிருக்கக்கூடாது; மாறாக நமது இரட்சகர் போன்று, அவர்கள் **கொடுக்கப்** பிரியப்படும் எதையும் அவர்களிடமிருந்து **பெற்றுக்கொள்வதற்கு** விருப்பமுடையவர்களாய் நாம் காணப்பட வேண்டும்.

(3) இது கிறிஸ்துவோடு பாடுபடுவதை, அவருடைய **பாடுகளில் ஐக்கியம்** கொண்டிருத்தலைக் குறிக்கின்றதாயிருக்கும். இது நமது கர்த்தரோடுகூட, வரவருக்கும் அவரது இராஜ்யத்தில் இராஜாக்களென, ஆசாரியர்களென, நியாயாதிபதிகளென, நாம் செய்யவிருக்கும் வேலைக்கு நம்மைப் பொருத்தமானவர்களாக மற்றும் தகுதியானவர்களாக்க விலையேறப்பேற்றப் படிப்பினைகளை நாம் கற்றுக்கொள்வதைக் குறிக்கின்றதாயிருக்கும்.

மகிமையின் சபையாக இருக்கப்போகின்றவர்கள் யாவரும், தேவனுடைய அன்பான குமாரனின் சாயலாக வேண்டுமென்று - தங்கள் இருதயங்களில் கிறிஸ்துவின் நிருபத்தினை எழுதப்பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் முன் குறித்துள்ளார் எனப் பரிசுத்த. பவுல் அடிகளார் எழுதிட்ட போது, இவர் கிறிஸ்துவின் குணலட்சணங்கள் நம் இருதயங்களில் பதியப்பெற்றிருக்க வேண்டியதின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினவரானார். (உரோமர் 8:28-30), இவர்களது சரீரங்களானது எவ்வளவுதான் பூரணமற்றவைகளாக இருப்பினும், இவர்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்பக் காணப்படும் விஷயங்களில் எவ்வளவு பூரணமற்றவர்களாக இருப்பினும், அந்தக் கொள்கைகள் திவ்விய நியமங்களின்படியானவைகளாகக் காணப்பட வேண்டும். கொள்கைகளை நிறைவேற்றும் விஷயத்தில் பாடுபடுவதில் மகிழத்தக்கதாக, அந்தக் கொள்கைகளுடன் நாம் இணக்கமாய்க் காணப்பட வேண்டும்.

## முத்தமிடுதல் - வரைமுறையற்ற முத்தம்.

**கே 429:2 :: கேள்வி (1909) - 2 -** சத்தியத்தில் உள்ள சகோதரிகள் மத்தியில் வரைமுறையற்ற முத்தம் பரிந்துரைக்கத்தக்கதா?

**பதில்.** நல்லது, இந்த பாடத்தில் சில சட்டங்களை நான் கொடுப்பதாக இருந்தால், சிலருடைய உரிமைகளின் மீது ஆழமான பாதிப்பை நான் ஏற்படுத்த நேரிடும். ஆனால் நான் சட்டம் விதிப்பவர் அல்ல, வெறுமனே சட்டத்தின் விளக்கம் கூறுபவர் மட்டுமே, அவ்வளவே. சில ஜனங்கள் இதை விரும்பலாம்., சில சகோதர்கள் விரும்பாமல் இருக்கலாம்; ஆகவே இந்த விஷயத்தில் அன்பு மட்டுமே சட்டமாக இருக்க வேண்டும். இது நம்மை மிகவும் ஜாக்கிரதையாகவும், யோசனை மிக்கதாகவும் வழி நடத்த வேண்டும். முத்தமிடப்பட விரும்பும் சகோதரிகளில் ஒருவராக நான் இருந்தால், அவர்கள் அப்படி இல்லாவிட்டால், நான் அதை குற்றமாக எடுத்துக் கொள்ள மாட்டேன். தவிர, முத்தமிடுதல் வியாதிகளைப் பரப்புவதாக விஞ்ஞானிகள் நமக்குத் தெரிவிக்கின்றனர். ஆகவே இது மிகவும் விவேகமான நடவடிக்கை அல்ல. சட்டத்தின்படி, நல்லதும், இதயப்பூர்வமானதான கைக்குலுக்குவது போதுமானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் யாரேனும் முத்தமிட விரும்பினால், தடைபண்ண வேதாகமத்தில் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சகோதரிகள் ஒருவருக்கொருவர் முத்தமிடுவதற்கும், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் முத்தமிடுவதற்கும் இடையே இருப்பது அன்பின் சட்டம் ஒன்றே.

## பாஷை - சுத்தமான பாஷை என்பது என்ன?

**கே 430:1 :: கேள்வி (1909) - 1 -** “நான் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்”(செப்:3:8,9.) என்று சொல்லுகிற வேதாகம வசனம் எதை அர்த்தப்படுத்துகிறது?

**பதில்.** “சுத்தமான பாஷை” என்பது **சுத்தமான முறை** - தேவனுடைய திட்டத்தின் சுத்தமான முறையை அர்த்தப்படுத்துவதாக நாம் புரிந்து கொள்கிறோம். உலகம் இந்த முறையை இப்பொழுது அறியவில்லை. சுத்தமான முறை என்பது என்ன என்பதை நாம் மட்டும் அறிகிறோம். இது நமக்கு ஜீவனையும், மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வந்திருக்கிறது. உரிய காலத்தில் அவர்கள் எல்லாரையும் புதிய முறைக்கு மாறப்பண்ணுவார். - இப்போது நடந்து கொண்டிருக்கும் பிதற்றலை அவர்கள் கேட்கமாட்டார்கள். ஒருவர் கூறுகிறார், “நீங்கள் தண்ணீருக்குள் கண்டிப்பாக போக வேண்டும் என்று நான் நம்புகிறேன்.” - - மற்றொருவர் கூறுகிறார், “இது இலவசமான தயவு”. ஜனங்கள் சுத்தமான முறையை உடையவர்களாக இல்லை. இந்த மகா உபத்திரவ காலத்திற்குப் பிறகு, உலகம் முழுவதும் அடிபணியும் போது, அப்பொழுது அவர் ஜனங்களை சுத்தமான முறைக்கு மாறப்பண்ணுவார். அவர்கள் மெதடிஸம் அல்லது வேறு எந்த அமைப்புக்கும் ஊழியம் செய்யமாட்டார்கள். ஆனால் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமானவரை சேவிப்பார்கள்.

## கடைசி நாட்கள் - இந்த யுகத்தின் முடிவு.

**கே 430:2 :: கேள்வி (1916) - 2 -** நாம் கடைசி நாட்களில் இருக்கிறோமா?

**பதில்.** நான் அறியவில்லை. நான் கண்டிப்பாக அறிய வேண்டுமானால், இது தான் என்னுடைய கடைசி நாள்; அப்படியானால். கடைசி நாளில் நான் இருக்கிறேன். நாம் கடைசி நாட்களில் இருக்கிறோமா என்பது, இந்த சொற்றொடர் வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது போல, கேள்வி கேட்கிறவர் அர்த்தங் கொள்கிறாரா? அவர் அப்படித்தான் அர்த்தங் கொண்டால், அது சரியான கருத்து ஆகும். “கடைசி நாட்கள்” என்று இந்த வார்த்தையை வேதாகமம் உபயோகப்படுத்துவது, இந்த யுகத்தின் முடிவையும், புதிய யுக துவக்கத்தையும் குறிப்பதாக உள்ளது. ஏனெனில் இந்த யுகம் பெரும் குழப்பத்துடன் கடந்து போவதாகவும், புதிய ஒழுங்கு முறை கொண்டுவரப்படுவதாகவும் உள்ளது. ஆகவே ஒரு யுகம் சுட்டெரிக்கப்படுகிறது, அல்லது, அழிக்கப்படுவதைக் குறிக்கிறது. மற்றொரு யுகம் புதிய வானங்களையும் புதிய பூமியையும் கொண்டுவரப்படுவதைக் குறிக்கிறதாக உள்ளது. புதிய வானங்கள் என்பது சபை மகிமையில் இருக்கப் போகிறதையும், புதிய பூமி என்பது புதிய சமூக ஒழுங்குமுறை அல்லது காரியங்களின் நிலைமையைக் குறிக்கிறதாகவும் உள்ளது. நாம் பழைய ஒழுங்குமுறையின் கடைசி நாட்களிலும் புதிய யுகம் மலரும் காலத்திலும் இருக்கிறோம்.

## நியாயப்பிரமாணம் - நெருங்குண்டு செத்தவைகளுக்கு விலகியிருத்தல்.

**கே 430:3 :: கேள்வி (1909) - 3 -** நெருங்குண்டு செத்ததிற்கும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும் விலகியிருக்க வேண்டும் என்று பரிசுத்தவானாகிய பவுல் ஏன் கட்டளையிடுகிறார்?

**பதில்.** இது பவுலின் கட்டளை இல்லை. ஏனெனில் அவர் அப்படி கட்டளையிடவில்லை. நியாயப்பிரமாணத்தின் எல்லா விதிமுறைகளும் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டன, புறஜாதிகளுக்கு அல்ல. ஆனால் கிறிஸ்து வந்த வரைக்கும், அவைகளால் யூதர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். பிறகு எருசலேமிலிருந்து சிலர் வந்திருந்த போது, ஒரு தர்க்கம் உண்டாகி, புறஜாதிகள் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டுமென்றும், நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் கூறினர். பிறகு, “பவுல் இதை நமக்குச் சொல்கிறார், மற்றவர் வேறு ஒன்றை நமக்குச் சொல்கிறார்” என்று சிலர் சொன்னார்கள். ஆகவே, புறஜாதிகளின் மேல் யூதர்களுடைய நியாயப்பிரமாணம் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்பதை உறுதி செய்ய அவர்கள் பொதுச்சங்கத்தைக் கூட்டினார்கள். யாக்கோபு தலைவராக இருந்ததையும், தேவனுடைய கிருபையான வழி நடத்துதல்களை அவர் கவனித்திருந்ததையும், புறஜாதிகளுக்கு முதலாவதாக எப்படி சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது என்று பேதுரு சொன்னது பற்றியும் உங்களுக்கு நினைவு இருக்கும். புறஜாதிகளின் மீது கட்டாயமான சட்டங்கள் ஏதுமில்லை என்றும், அவர்கள் மீது எதுவும் திணிக்கக்கூடாது என்றும் அப்போஸ்தலர்களின் ஆலோசனை சங்கம் முடிவெடுத்தது! ஆனால் அவர்கள் மீது இதை ஒரு பரிந்துரை போல செய்யுமாறு ஏவலாம் என்று அவர்கள் சொன்னார்கள்: நெருங்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும் விலகியிருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார்கள். இந்த சிபாரிசை அவர்கள் ஏன் செய்தார்கள்? ஏனெனில் அந்த சமயத்தில் அறிவுரை கூறுவது விவேகமான விஷயமாக இருக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். வேசித்தனத்திற்கு விலகியிருப்பது தேவனுடைய சித்தத்திற்கு எப்பொழுதும் இணக்கமாய் உள்ளது என்பதை நாம் அனுமானிக்கலாம். ஆனால் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் பொருத்த வரையில், விக்கிரகம் என்பது ஒரு கல் துண்டு அல்லது மரக்கட்டையைத் தவிர ஒன்றுமில்லை. இது இறைச்சியைப் பாதிக்கிறதில்லை. ஆனால் இந்த இறைச்சிக்கு ஏதாவது ஏற்பட்டிருந்தது என்றும், இது பாதிப்பு அடைந்துள்ளது என்றும் எந்த நபராவது நினைத்தால், அவர் அதை சாப்பிட்டால், தேவனை அவர் அவமரியாதை செய்கிறார். அப்பொழுது பவுல் சொன்னார், “உங்களிடத்தில் பலவீனமானவர் யாரேனும் இருந்து, இதைப் புசிப்பது தவறு என்று நினைத்தால், பலமுள்ளவர்களாக இருக்கிறவர்கள் அப்படிப்பட்ட நபரிடம் மனமுவந்து தாழ்ந்து போகக்கடவர்கள்.”

பிறகு, நெருங்குண்டு செத்தவைகளைப் பொருத்த வரையில், யூதர்களின் மத்தியில் இது ஒரு வழக்கம் ஆகும். ஏனெனில் இரத்தம் என்பது ஜீவனுக்குரிய நிழல் அல்லது அடையாளமாக இருந்தது. நெருங்குண்டு செத்த எதையும் புசிக்கக் கூடாது என்று தேவன் யூதர்களுக்குக் கட்டளையிட்டார். இதை ஏன் அறிவுறுத்தினார்கள் என்று அப்போஸ்தலர்கள் தெரிவிக்கவில்லை.

ஆனால் இதை அறிவுறுத்தவே செய்தார்கள். புறஜாதிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் நியாயப்பிரமாணத்தில் ஒன்றுமில்லை என்று அவர்கள் தெரிவித்த பிறகு அறிவுறுத்தினார்கள்.

## நியாயப்பிரமாணம் - தானாய் இறந்து போனதைப் புசித்தல்.

**கே 431:1 :: கேள்வி (1912) - 1 -** "தானாய் இறந்து போனாதொன்றையும் புசிக்க வேண்டாம்; உங்கள் வாசல்களில் இருக்கிற பரதேசிக்கு அதைப் புசிக்கக் கொடுக்கலாம், அல்லது, அந்நியனுக்கு அதை விற்றுப்போடலாம்; நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனங்கள்." தயவு செய்து இதை விளக்கவும்.

**பதில்.** இது என்ன சொல்கிறதோ இதைத் தான் அர்த்தப்படுகிறது என்று எனக்குத் தோன்றுகிறது. இது யூதர்களுக்குச் சொல்லப்பட்டது, நமக்கு அல்ல. பிரத்யேகமாகக் கொல்லப்படாமல், சாப்பிடத் தடைபண்ணப்பட்டவைகளின் மாமிச உணவைத்தவிர, ஒரு மிருகம் மரணத்திற்குள்ளாக்கப்படாமல் தானாய் செத்ததாயிருந்தாலும் அது உணவிற்கு தகுதி உள்ளதாகும். உதாரணமாக, யூதர்களுக்கு வகுத்துரைக்கப்பட்ட முறையில் கொல்லப்படாமல், ஒரு மிருகம் சிக்குண்டு, நெருக்கப்பட்டு தானே செத்ததாகவோ அல்லது செங்குத்து சரிவிலிருந்து கீழே விழுந்து இறந்ததாகவோ இருக்கலாம். அந்த மாமிசம் நன்றாகவே இருக்கலாம்; இது வியாதியையோ அல்லது மரணத்தையோ விளைவிக்காததாக இருக்கலாம். ஆகவே, நியாயப்பிரமாணத்திற்கு கீழ் வராத ஒரு நபருக்கு இதைக் கொடுப்பதோ அல்லது விற்பதோ அவருக்கு சேதம் விளைவிப்பதாக இருக்காது.

## நியாயப்பிரமாணம் - எப்போது முடிவுக்கு வந்தது?

**கே 431:2 :: கேள்வி (1916) - 2 -** நியாயப்பிரமாணத்திற்கு இயேசு எப்போது முடிவு கொண்டு வந்தார்? யோர்தானிலா அல்லது கல்வாரியிலா?

**பதில்.** "நியாயப்பிரமாணத்திற்கு முடிவு கொண்டு வருதல்" என்ற இந்த சொற்றொடர் தவறாக புரிந்து கொள்ளப்படுவதற்கு சாதகமாக உள்ளது. பலவித பார்வைநோக்குகளில் இந்த கேள்வியைப் பார்க்கலாம். இந்த சொல்லின் மிக முக்கியமான அர்த்தத்தில் பார்க்கும் போது, இயேசு ஒருபோதும் நியாயப்பிரமாணத்திற்கு முடிவு கொண்டு வரவில்லை. நியாயப்பிரமாணம் பிதாவினுடைய நியாயப்பிரமாணம் ஆகும். இயேசு வருவதற்கு முன்பே இது இருந்தது. இது இன்னும் இருக்கிறது. இது எப்போதும் இருக்கும். இயேசு இதற்கு முடிவு கொண்டு வரவில்லை. ஒருபோதும் இதற்கு முடிவு கொண்டு வரமாட்டார். சுருக்கமாகத் தொகுத்துரைக்கப்படும் தேவனுடைய நியாயப்பிரமாணம் இதுவே: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக." அந்த நியாயப்பிரமாணம் எப்போது முடிவுக்கு வரும்? ஒருபோதும் அல்ல! ஒருபோதும் அல்ல! நாம் ஒவ்வொரு நாளும் இதை உணர்ந்து பாராட்டும் விதமாக சிறிது சிறிதாக நெருங்குகிறோம். அவர் யோர்தானில் அல்லது கல்வாரியில் அல்லது வேறு எந்த சமயத்திலும், அந்த நியாயப்பிரமாணத்திற்கு ஒருபோதும் முடிவு கொண்டுவரவில்லை. அப்படியானால், அந்த சொற்றொடருக்கு என்ன அர்த்தம்? அந்த நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில், தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேலருடன் உடன்படிக்கை செய்தார். அந்த உடன்படிக்கை தான் அடிக்கடி நியாயப்பிரமாணம் என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் இது நியாயப்பிரமாண - உடன்படிக்கையாக இருந்தது. அதன் விளைவாக உடன்படிக்கை என்ற வார்த்தை உருவானது. ஏனெனில் உடன்படிக்கை மற்றும் நியாயப்பிரமாணம் மிக நெருக்கமாக சம்பந்தப்பட்டதாகவும், வலுவான தொடர்புடையதாகவும் இருந்த காரணத்தினால், நியாயப்பிரமாணத்தைக் குறிக்கும் போது, உடன்படிக்கை என்ற சொல் சில சமயங்களில் உபயோகப்படுத்தப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலான உடன்படிக்கையை உள்ளடக்கியவிதமாக, நியாயப்பிரமாணம் என்ற சொல் உபயோகப் படுத்தப்பட்டது. இந்த அர்த்தத்தில் இயேசு நியாயப்பிரமாணத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தார்., அதாவது, நியாயப்பிரமாண உடன்படிக்கையை அல்லது நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்ட உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டு வந்தார். அவர் இந்த உடன்படிக்கையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தார். இருந்தாலும், நியாயப்பிரமாண - உடன்படிக்கையை முழுவதுமாக ஒரு முடிவுக்கு அவர் கொண்டு வரவில்லை. ஏனெனில், என்னுடைய புரிதலின்படி, யூதர்கள் அந்த நியாயப்பிரமாண - உடன்படிக்கைக்குக் கீழ் இன்னும்

இருக்கிறார்கள். இதன் விளைவாக, குறிப்பிட்ட ஆசீர்வாதங்கள் வர வேண்டியிருக்கிறது. அவர்கள் நியாயப்பிரமாண - உடன்படிக்கையின் கண்டனப் பகுதியில் இருக்கிறார்கள். ஆனால் இது மரித்திருந்தால், இதனுடைய கண்டன பகுதியில் அவர்கள் இருக்க முடியாது. ஆகவே இயேசு இந்த உடன்படிக்கையின் கீழ் யூதர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த தயவுகள், சலுகைகள், வாய்ப்புகள் ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வந்தார். எப்படி? இதனுடைய பொறுப்புகள் அனைத்தையும் தாமே நிறைவேற்றி, இதை கைக்கொள்பவருக்கு நியாயப்பிரமாணம் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த காரியங்களுக்கு, தாமே தேவனுடைய சுதந்தரராக ஆனார். யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டிருந்தார்களானால், இந்த ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரர்களாவதற்கான வாய்ப்பு அனைத்தும் யூத ஜாதிக்கு இருந்திருந்தது. ஆனால் அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைகொள்ளத் தவறினார்கள்; ஆனால் இயேசு உள்ளே வந்து, அதனுடைய எல்லா தேவைகளையும் கைக்கொண்டு, நியாயப்பிரமாணம் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த ஆசீர்வாதங்களின் சுதந்தரவாளியும் வாரிசுமானார். மற்றவர்களைப் பொருத்த வரையில், அந்த ஆசீர்வாதங்களை அவர் முடிவுக்கு கொண்டு வந்தார். அந்த நேரத்திலிருந்து எந்த யூதனும் உள்ளே வர இயலாது. இயேசு எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டார். யூதர்கள் சாபத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும், ஆனால் ஆசீர்வாதங்களை அல்ல. அவருடைய சீஷர்களாகிற எல்லாருடனும் இந்த ஆசீர்வாதங்களைப் பிரித்துக் கொள்கிறார். நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு அவர் சுதந்தரித்த சுதந்தரம் அனைத்திற்கும் நாம் அவருடன் உடன்-சுதந்தரவாளிகளானோம். நியாயப்பிரமாணத்தை நாம் கைக்கொள்ள முடியவில்லை. ஆனால் இயேசு இதைக் கைகொண்டு, இதனுடைய ஆசீர்வாதங்களை ஜெயங்கொண்டார். ஆகவே இப்பொழுது நாம் (யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இருசாராரும்) கர்த்தராகிய இயேசுவின் மேல் கொண்ட விசுவாசம் மூலமாக, மாம்சீக இஸ்ரயேலருக்குப் பண்ணப்பட்ட எல்லா வாக்குத்தத்தங்களின் உடன்-சுதந்தரவாளிகளாகவும், அவருடைய சரீரத்தின் அங்கங்களாகவும் இப்பொழுது ஆகியிருக்கிறோம். நாம் உள்ளே வந்து, எல்லா விஷயங்களையும் நம் வசம் பெற்றுகொள்ளுகிறோம். யூதர்களுக்கு இருந்த குறிப்பிட்ட பொறுப்புகளைத் தவிர, யூதர்கள் மேல் இருந்த அவ்வித தேவைகளையே இயேசு அப்பொழுது முடிவுக்கு கொண்டு வந்தார். பிறகு, புதிய ஏற்பாட்டின் கீழ், பழையவற்றின் தேவைகளிலிருந்து அவர்கள் விடுதலை பெறுகிறார்கள். உதாரணமாக, அப்போஸ்தலர்கள் வந்தவுடன், அவர்கள் நுழையும் விதமாக, புதிய வாய்ப்பை உண்டாக்கும் போது, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் தேவைகள் அவர்கள் மேல் இனி கட்டுப்படுத்தவில்லை. அந்த புதிய வாய்ப்பு அவர்கள் புதிய ஏற்பாட்டின் கீழ் வருவதற்கு ஏதுவாக இருந்தது. அப்போஸ்தலர்கள் இயேசுவின் சீஷர்களாவதைத் தேர்ந்தெடுத்ததினால், மேலானவைகளுக்கு - தேவனிடம் - ஜீவனுடையவர்களாயிருப்பதற்காக, பழைய ஏற்பாட்டின் பழைய காரியங்களுக்கு அவர்கள் மரித்தவர்களானார்கள்.

## நியாயப்பிரமாணம் - சாசனம் எழுதியவர்.

**கே 432:1 :; கேள்வி (1909) - 1 -** (பழைய) நியாயப்பிரமாண உடன்படிக்கையை எழுதியவர் யார்? “ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே, மரண சாசனம் உறுதியாகும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே.” (எபி.9:16,17.)

**பதில்.** இந்த வார்த்தைகளை இங்கே உபயோகப்படுத்தின அப்போஸ்தலரின் வாதம், நமது கர்த்தர் இயேசுவையே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டதாகும். அவர் நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் பற்றி எதுவும் கூறவில்லை. நியாயப்பிரமாணத்தின் மத்தியஸ்தராக மோசே, ஒரு வரம்புக்குட்பட்டு, சாசனம் எழுதியவராக இருந்தார் என்றும், அவருடைய மரணம் நியாயப்பிரமாணத்தின் கீழ் காளைகள் மற்றும் ஆட்டுக்கடாக்கள் அங்கே காணிக்கையாக்கப் படுதலாக அடையாளப்படுத்தப்பட்டது என்றும் தவறுதலாக நாம் அனுமானிக்க வேண்டாம். இது ஒரு நிழலான உடன்படிக்கையாக மட்டும் இருந்தது. பலிகள் நிழலான பலிகளாக மட்டுமே இருந்தன. இது மோசேக்கு உரித்ததாக இருந்திருந்தால், இந்த பலிகள் மோசேயை அடையாளப்படுத்தியிருந்தன என்ற உணர்வில் தான் நமது எண்ணம் இருந்திருக்கும்.

ஆனால், புதிய உடன்படிக்கையின் சாசன கர்த்தாவாக இயேசுவைப் பற்றி பேசும் போது, அப்போஸ்தலரின் வார்த்தைகளின் அழுத்தம் மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய

ஒன்றாகும். இங்கே இது கேள்வி சம்பந்தப்பட்டதாக இல்லாவிட்டாலும், நீங்கள் விரும்பினால், சிலருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, இந்த வரிசையில் சில வார்த்தைகளைக் கூடுதலாகச் சொல்கிறேன். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்கிற எந்த இஸ்ரயேலனுக்கும், பூரண மனுஷனுக்குச் சொந்தமான அனைத்து ஆசீர்வாதங்களையும், உரிமைகளையும், சலுகைகளையும் தேவன் அளித்திருந்தார் என்ற எண்ணத்தை நாம் பெற வேண்டும். இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டது முதற்கொண்டு கிறிஸ்துவின் காலம் வரைக்கும் வாழ்ந்த எந்த யூதனும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடிந்திருந்தால், ஆதாம் இழந்திருந்த அனைத்தையும் பெற்றுகொள்ளும் உரிமையை அடைந்திருப்பான். பூரண மனுஷனாக இருந்திருப்பதை அவன் நிரூபித்திருப்பான். ஆகவே, அந்த உடன்படிக்கையின் கீழ் அனைத்தையும், ஆதாம் வைத்திருந்த அனைத்தையும் பெறக்கூடிய உரிமையைப் பெற்றிருப்பான்; அவன் ஆதாமின் இடத்தை எடுத்துக் கொள்வதற்கு தகுதியுடையவனாக இருந்திருப்பான். ஆனால், நமக்குத் தெரியும், உண்மையாகவே நியாயப்பிரமாண உடன்படிக்கை பதினாறு நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்தது. ஆனால் ஒரு யூதனும் நியாயப்பிரமாணத்தைக் கைகொள்ள முடியாமல் இருந்தான். ஆகவே பவுல் கூறினார், “எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.” ஆனால், பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாகவும், ஆயத்தமாக்கப்பட்ட ஒரு சரீரத்தில், ஒரு விசேஷித்த சரீரத்துடன் உலகத்திற்குள் வந்த நமது கர்த்தர் இயேசு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடிந்தவராகவும், கைக்கொண்டவராகவும் இருந்தார். இவ்விதமாக நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, பூரணராக தம்மை நிரூபித்து, மனுக்குலத்தை ஆளுகை செய்யக்கூடியவராக இருந்தார். அவர் இதைச் செய்தாரா? இல்லை. ஏன் இல்லை? ஏனெனில் பிதா ஒரு விரிவானதும் ஆழமானதுமானத் திட்டத்தை வைத்திருந்தார். இது என்ன? கர்த்தராகிய இயேசு பூரண மனுஷராகக் கூடிய தம்முடைய தகுதியை மெய்ப்பித்துக் காட்டியதோடு அல்லாமல், நிரூபித்துக் காட்டிய பிறகு, மரணத்தில் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கும் விதமாக, அந்த பூரண ஜீவனையே பலியிட்டார். பிறகு, அவருடைய கீழ்ப்படிதலுக்கு வெகுமதியாக, “தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்” என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. பிறகு, அவர் எல்லா பலனையும், எல்லா நற்பண்பையும், பூரண மனுஷ சுபாவத்தையும், மதிப்பு அனைத்தையும் தம் வசம் வைத்திருந்தார். தாம் விரும்பும் வகையில் நேர்மையுடன் செய்வதற்கு, பூரண மனுஷனின் பூரண உரிமைகள் அனைத்தும் அவருடைய கைகளில் இருந்தன. இதை அவர் என்ன செய்தார்? மனுக்குலம் அனைத்திற்கும் அவர் பிரயோகப்படுத்தியிருக்க முடியும், அல்லது, அவர் ஆதாமிற்கோ அல்லது மனுக்குலத்தில் எந்த எண்ணிக்கையுள்ளவர்களுக்கும் பிரயோகப்படுத்தியிருக்கலாம். அவர் என்ன செய்தார்? நல்லது, யூத ஜாதிக்கு சாதகமாக அவர் இதைப் பிரயோகித்திருப்பார் என்று நாம் இயற்கையாக எதிர்பார்த்திருந்தோம் - நீங்கள் கவனியுங்கள், அவர் கொடுத்து விடுவதற்கு ஏதோ ஒன்றை வைத்திருந்தார். அவர் மரணமடையப் போனார்; அவர் இந்த பூமிக்குரிய உரிமைகளை ஒப்புக்கொடுப்பதாக இருந்தார். அவர் சாசன கர்த்தாவாக இருந்து, அவருடைய பூமிக்குரிய ஜீவனை பலியில் ஒப்புக்கொடுக்கப் போவதை அடையாளப்படுத்திய ஒரு உயிலை உருவாக்கப் போனார். அவற்றை யாரிடம் கொடுத்தார்? நாம் எதிர்பார்த்திருந்த விதமாக அவர் யூதர்களிடத்தில் கொடுக்கவில்லை. இயேசு தம்முடைய இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையை முத்திரை போடவில்லை. இதை அவர் என்ன செய்தார்? தேவனை மதித்து, நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின் கீழ் வருகிறவர்களாகிய நமக்காக, கிறிஸ்து உன்னதத்திற்குப் ஏறி, பிதாவின் சமூகத்தில் தோன்றினார். அவர் முழுவதுமான அந்த பலனை சபைக்கு பிரயோகப்படுத்தினார். அவர் அந்த உடன்படிக்கையை முத்திரை போடவே இல்லை.

இதை அவர் சபையில் எப்படி பயன்படுத்தப்போகிறார்? நிழலான காளை இயேசுவை அடையாளப்படுத்துகிறது என்று வேதாகமம் காண்பிக்கிறது. அந்த பிரதான ஆசாரியர் காளையின் இரத்தத்தை எடுத்து தமக்காகவும், அவருடைய விசுவாசக் குடும்பத்தாருக்காகவும், உண்மையும் சரியான அர்த்தத்துடனும் சொன்னால், அவரைச் சேர்ந்தவர்கள் எல்லாருக்காகவும் கிருபாசனத்தின் மேல் தெளித்தார். இவர்களுக்காகவே, அப்பொழுது அவர் தம்முடைய ஜீவனுக்குரிய ஜீவனின் பலனை கொடுத்தார். அவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவனை கொடுக்கவில்லை. அவர் அவர்களுக்கு அழியாமையைக் கொடுக்கவில்லை. ஆனால் அவர் எதை அளிக்க வேண்டியிருந்ததோ அதை மட்டும் கொடுத்தார். அவர் அளிப்பதற்கு ஆவிக்குரிய ஜீவன்

அவரிடம் இல்லை. ஏனெனில் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டதால் அவர் பெற்றிருந்த பூமிக்குரிய உரிமைகளை மட்டுமே அவர் எவர் ஒருவருக்கும் அளிக்க முடியும். ஆகவே, அவர் உன்னதத்திற்கு ஏறிய போது, அவருடைய போதனைகளுக்கு இணக்கமாக, குறிப்பிட்ட ஸ்திரமான நிலை கொள்ளும் விசுவாசிகளுக்கு அந்த உரிமைகளை அளித்தார். அதாவது, அவருடைய சீஷராக வேண்டுமானால், அவன் தன்னுடைய சிலுவையை எடுத்து, அவரைப் பின்பற்றி வர வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே நீதிமானாக்கப்படுதலின் முழு பயனும் வரும். தங்களுடைய அர்ப்பணிப்பைச் செய்வதில் தவறின மற்றவர்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தவைகளின் முழுமையான பயன்களைப் பெறுவதில் தோல்வி அடைவார்கள். ஆனால், சரியான மன நிலையில் வருகிறவர்களுக்கு, **அவர்கள் தங்களுடைய ஜீவன்களை ஒப்புக்கொடுப்போம் என்ற நிபந்தனையில்,** கிறிஸ்துவின் பலியின் பலன் அவர்கள் மேல் சுமத்தப்படும். வேறு வார்த்தைகளில் சொன்னால், அவரால் கொடுக்க வேண்டியிருந்த ஒரே விஷயமான பூரண மனிதத்துவ ஆசீர்வாதங்கள் மற்றும் முழுமையான சீர்பொருந்துதலின் உரிமைகளை நமக்கு அளிக்கிறார். பலியில் அவருடன் நாம் நம்முடைய ஜீவன்களை ஒப்புக்கொடுக்கிறோம் என்ற நிபந்தனையின் பேரில், அவர் உங்களுக்கும் எனக்கும் நீதிமானாக்கப்படுதலை இலவச பரிசாக அளிக்கிறார். அதைச் செய்யாத எவரும் இந்த வகுப்பாரில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

விசுவாசம் முதலாவது வருகிறது. இது மற்ற ஆசீர்வாதங்களுக்கும் வாய்ப்புகளுக்கும் ஒரு குறிப்பிட்ட அறிமுகமாக இருக்கிறது. ஆனால், இதைத் தொடர்ந்து அர்ப்பணிப்பு வரைக்கும் இது ஒரு நிலையான விஷயமாக ஆகிறதில்லை. பிறகு இது மாற்றம் அடையாததாயிருக்கிறது. தேவன் தம்முடைய ஆவியை அங்கீகாரமாகக் கொடுத்த பிறகு, தூதர்களோ அல்லது தேவனோ இதை மாற்ற முடியாது. நீதிமானாக்கப்படுதலைப் பெறும் எல்லோரும், பிறகு அவர்களுடைய அர்ப்பணிப்பில் பரிசுத்த ஆவியைப் பெற்றதும், அவர்கள் கர்த்தருடைய ஜனங்களாக முத்திரிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட அனைவரும் கிறிஸ்துவின் மரணத்தில் அவருடன் எண்ணப்படுகின்றார்கள். அவைகள் தான் நிபந்தனைகள், அவைகள் தான் விதிமுறைகள். சிறுமந்தையின் அங்கங்களாக இருந்தால், அவர்கள் அவருடன் மரணத்திற்குள்ளாகக் கண்டிப்பாக போக வேண்டும் அல்லது திரள் கூட்ட அங்கங்களாக இருந்தால், அவர்களும் கூட மரணத்திற்குள்ளாகப் போக வேண்டும் - இவர்களுக்கு வேறு ஏதுமில்லை. ஆனால், அர்ப்பணிப்பு செய்கிறவர்கள் எல்லோரும் தொடர்ந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில்லை. ஆகவே அவர்கள் அதற்கு வெகுமதியைப் பெறுகிறதில்லை. சிலர் பின்வாங்கிப் போகிறார்கள். அவர்கள் மகா உபத்திரவத்தின் வழியாக வரும் திரள் கூட்டத்தார் என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. கர்த்தருடைய நாளில் அவர்களுடைய ஆவி இரட்சிக்கப்படும்படி, அவர்களுடைய மாம்சம் அழிக்கப்படுகிறது. தேவன் சபைக்குக் கொடுக்கிற சீர்பொருந்துதலின் ஆசீர்வாதம் தங்குவதற்காக இல்லை; இல்லை, ஒரு சிறு துளியும் அல்ல. ஆனால் இதைப் பெற்றவுடன், இது சபை வழியாகக் கடந்து, இனி வரும் உபயோகத்திற்காகக் கடந்து போகிறது. கிறிஸ்து சிந்திய அதே இரத்தம் தான் சபைக்குப் பிரயோகிக்கப்பட்டது. இதுவே சபையைக் கடந்து போகச் செய்கிறது. ஆகவே இந்த யுகத்தின் முடிவில், துவக்கத்தில் இருந்ததிலிருந்து எவ்வளவு அதிகமாக பிரயோகிக்க முடியுமோ அதைச் செய்கிறது. சபைக்குக் கொடுக்கப்பட்ட முழுமையான பலன் தான் இது. சபை இந்த நீதிமானாக்கப்பட்ட ஜீவன்களையும் பூமிக்குரிய உரிமைகளையும் ஒப்புக்கொடுத்து, திரைக்கு அப்பால் பிரவேசித்திருக்கும் போது, புதிய உடன்படிக்கை முத்திரிக்கப்படும். இதனுடைய பலன்கள் உலகம் முழுவதற்கும் பயன்படுத்தப்படும்.

ஆகவே, புதிய உடன்படிக்கையின் சாசன கர்த்தாவாக இயேசு இருக்கிறார். அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த போது, அந்த உடன்படிக்கையை மத்தியஸ்தம் பண்ணும் பார்வையிலேயே இது இருந்தது. ஆனால் இதை உடனடியாக செய்வதற்குப் பதிலாக, பிதாவின் திட்டத்திற்கு இணக்கமாக, அவர் முதலாவது தங்களுடைய சரீரத்தின் அங்கங்களாவதற்கும், நம்முடைய ஜீவன்களை ஒப்புக்கொடுக்கும் பணியில் அவர்களுடன் பங்கு கொள்கிறவர்களாகவும், இந்த சாசனத்தில் பகிர்ந்து கொள்கிறவர்களாகவும் இருப்பதற்காக அவருடைய சபையை கூட்டிச் சேர்க்கின்றார்.

உங்களுடைய இரக்கத்தினாலே அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்று பவுல் ரோமருக்கு எழுதின நிருபம் 11ம் அதிகாரத்தில் நமக்கு கூறுகிறார்: இது பிதாவினுடைய இரக்கமாகவும், கர்த்தராகிய இயேசுவின் இரக்கமாகவும் இருக்கிறது. ஆனால் இது கிறிஸ்துவின் வழியாகவும்

மேலும் சபையின் வழியாகவும் பிதாவினுடைய இரக்கமாக இருக்கிறது. பூமியிலுள்ள அனைத்து வம்சங்களும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறும் வரைக்கும், அவருடைய இரக்கம் தொடர்ந்து செல்லும்.

## லாசரஸ் - உவமை, இதன் அடிப்படை.

**கே 435:1 :: கேள்வி (1909) - 1 -** நமது கர்த்தருடைய உவமைகள் அனைத்தும் குறிப்பிட்ட நிஜங்களை எடுத்துரைப்பதாகவே உள்ளன என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. "ஐசுவரியவானும் லாசருவும்" பற்றியது எப்படி? இது கற்பனையை அடிப்படையாகக் கொண்டதா?

**பதில்.** இந்த முறையில் இந்த விஷயத்தை நான் ஒருபோதும் நினைத்திருந்ததில்லை. நான் அறியவில்லை. ஆனால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அங்கே இது இருக்கிறது. ஒருவர் இதை நிஜம் என்று எடுத்துக் கொண்டால், அவர் கடினமான மூளையை உடையவராயிருக்கிறார். ஒவ்வொரு பொருளும் நிஜமாக இருந்தால் உவமை முழுவதும் எவ்வளவு அபத்தமாக இருக்கும் என்பதை சகோதரர் ரசல் பிறகு எடுத்துக் காண்பிக்க ஆரம்பித்தார். ஒரு ஐசுவரியவான் சாப்பிடுவதற்குப் போதுமான அளவு உள்ளவனாகவும், இரத்தாம்பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்தவனாக இருந்த காரணத்தினால் மட்டுமே, அவன் கடும் வேதனை அனுபவிக்க எப்படி அனுப்பப்பட்டான்? இப்படி இருக்குமானால், நாம் சாப்பிடுவதற்குப் போதுமான அளவு உடையவர்களாக, சுத்தமான சட்டையையும், சிலர் இரத்தாம்பரமும் அணிகிறவர்களாக இருக்கும் காரணத்தினாலேயே, நம்மில் பலர் கடும் வேதனைக்குப் போக வேண்டியிருக்கும் என்று சகோதரர் ரசல் கூறினார். மேலும் லாசரு விஷயத்தில், அவன் பருக்கள் நிறைந்தவனாய், ராஜாவினுடைய வாசலருகே கிடந்த காரணத்தினால், அவன் பரலோகத்திற்கு சென்றான். இவற்றை சொல்லர்த்தமான நிஜங்களாக எடுத்துக் கொண்டால், ஆபிரகாமின் புயங்கள் விரைவில் பருக்கள் நிறைந்த ஜனங்களால் நிறைந்திருக்கும். அவர் மிகவும் திரளானவர்களைத் தாங்க முடியாதவராக இருப்பார்.

## லேவியர் - திரள் கூட்டத்தாரால் குறிக்கப்படுதல்.

**கே 435:2 :: கேள்வி (1910) - 2 -** லேவியர்கள் எந்த முறையில் திரள் கூட்டத்தாராகக் குறிக்கப்படுகிறார்கள்?

**பதில்.** நல்லது, நேற்று இதற்கு நான் பதிலளித்தேன் என்று நினைக்கிறேன். நான் மறுபடியும் சொல்கிறேன்: இரத்தத்தின் கீழ் இருந்த முதற்பேறானவர்களைத் தவிர, எல்லாரையும் சங்காரத் தூதன் சங்கரித்தபோது, பிரித்தெடுக்கப்பட்ட இந்த முதற்பேறானவர்கள் அனைவரும் பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையாக அடையாளப் படுத்தப்பட்டார்கள். இஸ்ரயேலில் முதற்பேறானவர்களான இவர்களுக்குப் பதிலாக தேவனுடைய வழிகாட்டுதலின்படி, பின்னர் லேவி கோத்திரத்தார் முழுவதும் தேவனுடையவர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்; ஆகவே லேவி கோத்திரத்தார் முழுவதும் விசுவாசக் குடும்பத்தார் அல்லது முதற்பேறானவர்களின் சபையைக் குறிக்கிறார்கள். அந்த லேவி கோத்திரத்தில் ஒரு குறிப்பிட்ட விசேஷித்த குடும்பம் அல்லது வகுப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. இவர்கள் தான் ஆசாரியத்துவ குடும்பமாக இருந்தனர். இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகப் போகும் மணவாட்டியான முதற்பேறானவர்களின் சபையாக, விசுவாசக் குடும்பத்தாரின் அந்த பகுதியின் பிரதிநிதியாக இருந்தனர். இவர்களைத் தவிர மீதியுள்ள முதற்பேறானவர்களின் சபை லேவியருக்கு ஒப்பாகவும், இந்த லேவியர்கள் பொருளாக திரள் கூட்டத்தாருக்கு ஒப்பாக இருக்கிறார்கள். இவர்கள் ஆசாரியர்களான சிறுமந்தையைப் பின்பற்றிப் போகிறவர்களாகவும், ஆவிக்குரிய தளத்தில் ஊழியக்காரர்களாகவும் இருப்பார்கள்.

## லேவியர்கள் - பரலோக சுதந்தரம் அவர்களுடையது.

**கே 435:3 :: கேள்வி (1912-Z) - 3 -** நிழலில் காண்பிக்கப்பட்டிருப்பது போல, பொருளான லேவியர்கள், தேசத்தில் சுதந்தரம் பெறாவிட்டால், அவர்களுக்குரிய பரிசு என்னவாயிருக்கும்?

**பதில்.** லேவியின் முழு கோத்திரமாகிய நிழலான லேவியர்களில் ஒரு பகுதியாக ஆசாரியர்களின் சிறிய கூட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. சீனாய் வனாந்தரத்தில் கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக லேவியர்களை நியமித்தார். (எண்.3:11-16.), இந்த லேவி கோத்திரத்தார் இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களை அடையாளப்படுத்தினார்கள். இவர்கள் முதற்பேறானவர்களின் சபைக்கு நிழல் (எபி 12:23.) - ஆவிக்குரிய வகுப்பாருக்கு நிழல் என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

நிழலில், லேவி கோத்திரம் முழுவதும் தேசம் சொந்தமாக வைத்துக் கொள்வதிலிருந்து துண்டிக்கப்பட்டது. தேசத்திற்கான உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. மற்ற கோத்திரங்களுக்குள்ளாக தேசம் பங்கிடப்பட்டது. ஆனால் லேவியர்கள் மத்தியில் அல்ல. பொருளான லேவியர்கள் பூமிக்குரிய சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று தேவன் இவ்விதமாக நிஜத்தை நிழலாகக் குறித்தார். சுவிசேஷ யுக சபையார் அனைவரும் பரலோக நிலைமைக்கு அழைக்கப்படுகிறவர்கள். ஆகவே மனுஷர்களாக அவர்களுடைய பூமிக்குரிய உரிமைகளிலிருந்து துண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் புதிய சிருஷ்டிகளாக பரலோக உரிமைகளைப் பெற்றுக்கொள்வார்கள். தேவன் நம்மை "பரிசுத்த அழைப்புக்கு", "பரம அழைப்புக்கு", "மேலான அழைப்புக்கு" அழைத்திருக்கிறார் என்று அப்போஸ்தலன் கூறுகிறார். 2தீமோ.1:9; எபி.3:1; பிலி.3:14.

லேவி கோத்திரம் ஆசாரிய வகுப்பார் மற்றும் லேவி அல்லது ஊழியம் செய்யும் வகுப்பார் என்று இரண்டு வகுப்பார்களாகப் பிரிக்கப்பட்டனர். பொருளாக, ஆவியின் தளத்தில் இரண்டு வகுப்பார்கள் இருக்கின்றனர் - கிறிஸ்துவையும் சபையையும் உள்ளடக்கிய ராஜரீக ஆசாரியத்துவம், அவருடைய மணவாட்டி; மேலும் ஊழியஞ்செய்யும் வகுப்பார், "கன்னிகைகள், அவளைப் பின்பற்றி வரும் அவளுடைய தோழிகள்". இவர்கள் மகிழ்ச்சியுடன் ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பவர்கள். இவர்கள் மணவாட்டி வகுப்பாருக்குள் நுழைவதற்குத் தேவையான உயர்ந்த தரநிலைக்கு வராதவர்களாயிருப்பதால், "சித்திரத்தையலாடை தரித்தவர்களாய்" ராஜாவிடம் கொண்டு வரப்படும் மணவாட்டி வகுப்பாரில் இருப்பதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுகிறதில்லை. இருந்தாலும், அவர்கள் பாவம் மற்றும் எல்லா தீமைகளிலிருந்து ஜெயங்கொள்ளுகிறதைச் சுட்டிக்காட்டும் விதமாக, குருத்தோலைகளைப் பிடிக்கத் தகுதியுள்ளவர்களாக, அவர்கள் எல்லாரும் சீர்மிகு நடத்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும். சங்.45:13-15; வெளி.7:9-17.

## லேவியர்கள் - பாவநிவாரண நாளில் பிராகாரத்தில் இருப்பது.

**கே 436:1 :: கேள்வி (1913) - 1 -** பாவநிவாரண நாளில் லேவியர்கள் பிராகாரத்தில் இருக்க முடியுமா? லேவியர்கள் பாளய நிலைமையில் குறிக்கப்படுகிறார்களா? அல்லது பிராகார நிலைமையிலா?

**பதில்.** பாவநிவாரண நாளில் லேவியர்கள் பிராகாரத்தில் இருப்பது பற்றி ஏதேனும் சொல்லப்படுகிறதாக எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் அங்கே இருந்திருப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று நான் நினைக்கிறேன். பிராகாரத்தில் இருப்பதிலிருந்து அவர்களுக்கு தடை ஏதும் இருந்தாக எனக்கு நினைவு இல்லை. லேவியர்கள் இரண்டு உருவகங்களில் அடையாளப்படுத்தப்படுகிறதை நாம் பார்க்கிறோம். நாம் தேவனை நெருங்கும் போது, தேவனை நோக்கியவாறு நாம் லேவிய அணுகு முறையை கடைபிடிக்கிறோம். எந்த விதமான ஊழியத்தையும் செய்ய விரும்புகிறோம். உங்களுக்கு ஒரு பங்கு வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் ஏதாவது செய்யவேண்டியிருக்கும் போது, "ஆம்" என்று சொல்லுகிறீர்கள். "நீங்கள் அர்ப்பணிப்பு செய்திருக்கிறீர்களா, சகோதரனே?" இந்த சகோதரன் சொல்லலாம், "இல்லை, அர்ப்பணிக்கவில்லை." ஆனால் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதில் நான் பரிவிரக்கம் கொண்டவனாக இருக்கிறேன். அர்ப்பணிப்பு செய்து பலியிட்டுக் கொண்டிருப்பவர்களிடம் அந்த சகோதரன் தொடர்பு உடையவராயிருக்கிறார் என்று உருவகப்படுத்திச் சொல்லலாம். அவர் இறுதியாக லேவி வகுப்பாராக இருப்பவர்களில் ஒருவராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இறுதியாக லேவி வகுப்பாராக இருக்கப் போகிறவர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கையும் உள்ளது. அவர்கள் கர்த்தருடன் உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். இதை முழுவதுமாகக் கைக்கொள்வதில் தவறியிருக்கிறார்கள். ஆனால்,

தற்காலத்தில் உடன்படிக்கை செய்யும் எல்லோரும் ஆசாரியர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். தற்காலத்தில் இதில் வித்தியாசம் காணும் விதமாக லேவி வகுப்பார் என்று ஒன்று இல்லை. ஒருவர் கர்த்தருடைய பணியில் பரிவிரக்கம் கொண்டு, உள்ளே வந்து, தற்போதைக்கு அல்லது தற்காலிகமாக இத்தகைய பரிவிரக்க பணியைச் செய்தால் அவர் லேவியரின் இடத்தைப் பற்றிக் கொள்வார். ஆகவே, இந்த அர்த்தத்தில், நாம் தேவனுடைய ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டு, நம்முடைய முழுமையான அர்ப்பணிப்பைச் செய்யும் நேரம் வரைக்கும், லேவியரின் ஸ்தானத்தில் நாம் இருப்பதாக சொல்லிக்கொள்ளப்படலாம்.

## லேவியர் - பொருளான லேவியர்களும் அவர்களுடைய பணியும்.

**கே 436:2 :: கேள்வி (1915) - 2 -** லேவியர்களின் பொருளாக அடையாளப்படுத்தப் படுகிறவர்கள் யார்?

**பதில்.** யூத ஆசாரியர்களின் பொருளாக, பிரதான ஆசாரியராக இயேசுவும், அவருக்குக் கீழே ஆசாரியர்களாக “சிறுமந்தை” சபையும் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். லேவியர்களின் பொருளாக, இறுதியில், திரள் கூட்ட வகுப்பார் இருக்கிறார்கள். மணவாட்டி வகுப்பாருடன் அவர்களுடைய உறவு, “அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்” என்று குறிக்கப்படுகிறது. (சங்.45:14.) கற்பிப்பதும் குணப்படுத்துவதுமே பிரதான ஆசாரியருடைய ஊழியமாக இருக்கிறது. கடந்த காலங்களில், பிரதான ஆசாரியனுடைய பாவநிவாரண பணிக்குப் பிறகு, வியாதிகளை சொஸ்தப்படுத்துவதும், ஜனங்களுக்கு அறிவுரைகள் கொடுப்பதும் பிரதான ஆசாரியனுடைய ஊழியமாக இருந்தது. ஆசாரியர்கள் பிரதான ஆசாரியனின் வழிகாட்டுதலுடன் இணைந்து செயல்படுவார்கள். பிறகு, இந்த மாபெரும் ஊழியத்தின் முக்கியத்துவம் குறைந்தவைகளைச் செய்ய லேவியர்கள் வந்தார்கள். ஆகவே, ஆயிர வருஷ யுகத்தில் பெரும் ஊழியத்தை திரள் கூட்ட வகுப்பார் செய்வார்கள் என்று நாம் புரிந்து கொள்கிறோம் - சபையைப் போல அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல, ஆனால் இரண்டாம் பட்சமான பணி, மதிப்புடையதாக இருந்தாலும், அதிகமாக ஊழியக்காரர்களின் பணிக்கு ஒத்தவிதமாக இருக்கும்.

நம்முடைய எண்ணத்தில், அவர்களுடைய ஊழியம் இவ்விதமாக இருக்கலாம்: மேன்மையான ஆசாரியர்களின் எண்ணிக்கை, ஒப்பிட்டுப் பார்க்கும் போது குறைவாக இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள் - 144000 பேர்கள் மட்டுமே. இந்த எண்ணிக்கையை ஆதாமிலிருந்து உள்ள உலக ஜனத்தொகையுடன் ஒப்பிடும் போது - இருபது ஆயிரம் மில்லியன்கள் - மணவாட்டி வகுப்பாரின் ஒவ்வொரு அங்கத்திற்கும் பெருமளவில் உலகத்தார் அநேகர் இருப்பார்கள். வெளிப்படையாக, அந்த எண்ணிக்கையை விட பல மடங்கு அதிகம் தேவைப்படுகிறது. ராஜரீக ஆசாரியத்துவத்தின் ஒவ்வொரு தனிப்பட்டவரும் நிர்வாகம் செய்வது மற்றும் அறிவுறுத்துவது போன்ற கனத்தைப் பெறுகிறவர்களாக இருப்பார்கள். இந்த ஊழியம் எல்லாவற்றின் தொடர்பாக, திரள் கூட்டத்தார் அவர்களின் கருவிகளாகவும், உதவியாளர்களாகவும் இருப்பார்கள் என்று நாம் புரிந்து கொள்கிறோம்.

நாம் இதை விளக்குவோம்: நிர்வகிக்கப்படக்கூடிய ஒரு பெரும் நகரத்தில் திரளான எண்ணிக்கையில் ஜனங்கள் இருக்கிறார்கள். அந்த நகரத்திற்குத் தலைவராக ஒரு மேயர் இருக்கிறார். பிறகு அடுத்தபடியாக, காவல் கண்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள். பிறகு பல ஆயிரக்கணக்கான காவலர்கள் உள்ளனர். காவல் கண்காணிப்பாளர்கள் வெளியே போய் ஒவ்வொன்றையும் கவனிக்க முயற்சி செய்யமாட்டார்கள். ஆனால் காவலர்கள் தங்கள் முறைப்படி, தெரு மூலைகளில் இருப்பார்கள். அவர்கள் தெருக்கள் குறுக்கிடும் இடங்களில் போக்குவரத்தைக் கவனித்துக் கொள்கிறார்கள். நெரிசலான தெருக்களில் பாதசாரிகள் மீது வாகனங்கள் இடித்து விடாதவாறு, சட்டம் வரம்பு மீறப்படாமல் பார்த்து, தேவைப்படுகிற கைதுகளை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். இந்த காவலர்கள் காவல் கண்காணிப்பாளர்களிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்கள். இப்படியாக நகரத்தின் நிர்வாகம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட முக்கியமான விஷயங்கள், மற்ற எவரும் செயல்படாத வண்ணம், மேயரிடம் நேரிடையாக வருகின்றன. இப்போது, இவை அனைத்தும் நமது உருவகத்தில், மேயருக்கு ஒத்தவிதமாக, மாபெரும் ஆட்சியாளர் அல்லது ராஜாதி ராஜாவாக இயேசு எப்படி இருப்பார் என்பதை ஒருவிதமான எடுத்துக்காட்டாகத் தெரிவிக்கிறது. காவல் கண்காணிப்பார்களுக்கு ஒத்தவிதமாக, மணவாட்டி வகுப்பாராகிய பரிசுத்தவான்கள் அனைவரும்

சிற்றரசர்களாக இருப்பார்கள். அவர்கள் ஆட்சி செய்பவர்களாகவும், ஆசாரியர்களாகவும், அதிகாரம் உடையவர்களாகவும் - இரண்டு பட்டணங்கள் அல்லது ஐந்து பட்டணங்கள் அல்லது பத்து பட்டணங்களை ஆளுகிறவர்களாக, இயேசு இந்த விஷயத்தை உவமையாக அடையாளப்படுத்திய விதமாக இருப்பார்கள். (லூக்.19:17.) ஆனால் 'இவைகளை ஆளுவார்கள்' என்பது, ஒவ்வொரு விஷயத்திலும் தனிப்பட்ட ஆய்வை மேற்கொள்ளுவார்கள் என்று அர்த்தப்படுகிறது. யாரோ ஒருவர் மற்றவரை சுடப்போவதாக அனுமானிப்போம். ஆட்சி செய்யும் கண்காணிப்பாளர்கள் குற்றம் செய்கிற ஒவ்வொருவரைப் பற்றிய அளவை கவனத்தில் கொள்ள முடியாது. ஏனெனில் ஒரே சமயத்தில் பலர் குற்றம் செய்ய முயற்சிப்பார்கள். ஆகவே இந்த ஒவ்வொன்றையும் கவனிப்பதற்கு பலர் தேவைப்படுவதாக இருக்கிறது.

இதைப் போலவே தான் இப்பொழுது பரிசுத்தவான்களிடம் உள்ளது. சபையின் ஒவ்வொருவரும் பரிசுத்த தூதர்களால் பாதுகாக்கப்படுகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் ஆவிகளாயிருக்கிறார்கள் அல்லவா?" (எபி.1:14.) நம்முடைய விருப்பங்களை அவர்கள் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். நாம் சரியான வழியில் இல்லாவிட்டால் நமக்குத் தெரிவிக்கிறார்கள். தீமையினின்று நம்மைக் காக்கிறவர்களாக, நமக்கு ஆசீர்வாதங்களையும் உதவிகளையும் நமக்குக் கொடுக்கிறார்கள். தவறான நடத்தைக்கான அறிவிப்பாக இருந்தால், குறிப்பிட்ட அடிகளும் தண்டனைகளும் நமக்குக் கொடுக்கப்படுகின்றன.

ஆகவே, "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்." (சங்.34:7.)

அடுத்த யுகத்தில் உலகத்துடன், மணவாட்டியின் கீழ் திரள் கூட்ட வகுப்பார் வழியாக கர்த்தருடைய வல்லமை அடையாளப்படுத்தப்படும். முழு ஜனங்களைக் கவனித்துக் கொள்வதற்காக, மாபெரும் காவல் படை இருக்கும். அவர்களுக்கு பெரிய வேலை இருக்கும்; ஏனெனில், "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை" - இராஜ்யம் - என்று தேவன் உத்தரவாதம் அளிக்கிறார். (ஏசாயா.11:9.) அது கவனமுள்ள மேற்பார்வையை அர்த்தப்படுத்துகிறது. ஆம், உண்மையிலேயே! அவர்கள் தவறான கிரியைகளை எப்படி தடை செய்வார்கள்? ஒரு நபர் தேவதூஷணம் அல்லது அவதூறு பேசப் போகும் நிலையில், அவருடைய நாவு உடனடியாக பக்கவாதத்தினால் அசைவற்றதாகிவிடும். மிகவும் எளிது! காவலர் குறிப்பிட்ட இடத்தில் அந்தக் கனமே இருப்பார்! குற்றம் செய்கிறவர் தீங்கு செய்திருப்பதும், பிறகு அவரைத் தண்டிக்கும் வரையில் காத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் குற்றம் செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்காதபடி, அவர் பிடிக்கப்பட்டு, குற்றம் செய்ய முயற்சித்ததற்காக தண்டிக்கப்படுவார்.

நீங்கள் கேட்கலாம், "சகோதரர் ரசல், நன்மை செய்ய முயற்சிப்பவர்கள் எப்படி இருப்பார்கள்?" நல்ல செயல்களை, அன்பான செயல்களை செய்யும் ஒவ்வொருவருக்கும் பெரும் ஆசீர்வாதம் இருக்கும். அவர்கள் ஆசீர்வாதத்தை உடனடியாகப் பெறுவார்கள். இராஜ்யத்தின் சட்டங்களுக்கு இசைவாக வருகிறவர்கள் எல்லாரும், ஆயிரம் வருஷங்கள் முழுவதிலும் விருப்பமுள்ளவர்களும் கீழ்ப்படிகிறவர்களும் திரும்ப சீர் பொருந்தும் நிலை வரைக்கும் உயர்வு பெற்று, மேலும் உயர்வு பெற்றுக்கொண்டு இருப்பார்கள். தேவன் இப்பொழுது ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிற முகமைகள் வழியாக இது நடக்கும் - - பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து, மற்றும் அவருக்குக் கீழே ஆசாரியர்கள், ராஜாக்கள், நியாயாதிபதிகளாகிய சபை; மணவாட்டி வகுப்பாரின் கீழ் திரள் கூட்ட வகுப்பார் உலகத்தாருக்குப் பயிற்றுவிப்பவர்களாக இருப்பார்கள். பிறகு பூமிக்குரிய தளத்தில், குறிப்பிட்ட திறனாய்வு மற்றும் இயக்குதல் பணிகளைச் செய்யவும், ராஜ்யத்தின் நிலைமைகளை மனுக்குலத்திற்கு தெரிவிக்கப் போகிறவர்கள் முற்பிதாக்கள் ஆவர். இவர்கள் மனுஷர்களாகவும், மனுஷர்கள் பார்க்கக்கூடியவர்களாகவும், காண முடியாத ஆவிக்குரிய வழிகாட்டுபவர்களின் கீழ் ஊழியஞ்செய்வார்கள்.

மனுக்குலத்தின் இருபது ஆயிரம் மில்லியன்கள் ஜனத்தொகையை கையாளுவதற்காக உள்ள மாபெரும் ஏற்பாடு இவைகள்! இது நேர்த்தியாக இருக்கிறதல்லவா? கல்லறையிலிருந்து எல்லோரும் எழுப்பப்படும் போது பெரும் திரளாக இருப்பார்கள். இதற்கு வேதாகம வசனம் உள்ளதா? யாரேனும் ஒருவர் கேட்கலாம். ஆம், இது சரியாகவே உள்ளது. இது இவ்வாறு சொல்கிறது: "உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியில் நடக்கும் போது பூச்சக்கரத்துக் குடிகள்

நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (ஏசாயா.26:9.) கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அப்பொழுது எல்லாவிடத்திலேயும் இருக்கும். தவறு ஏதும் திட்டமிடப்பட்ட உடனேயே, - செய்யாத நிலையில், ஆனால், திட்டமிட்டால் - தண்டனை உடனடியாகவும் நிச்சயமாகவும் தொடரும். தவறு செய்யும் சபலம் இருக்கலாம், ஆனால் அதைத் தடுத்தால், அது பாவம் இல்லை. ஆனால் திட்டமிட்டும், நோக்கத்துடனும் உள்ள எந்த தீமையும் துரிதமான பிரதிபலனை சந்திக்கும். நாம் புரிந்துள்ளபடி, நன்மை செய்யும் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதங்களையும், வேண்டுமென்றே தீமை செய்யும் ஒவ்வொருவருக்கும் தண்டனையும் கொண்டு வரக்கூடிய விதமாக பூமியெங்கின் மேலும் சட்டம் அமையப்பெறும்.

கிறிஸ்துவின் மணவாட்டி எண்ணிக்கை 144000 பேர்களாக இருப்பதால், இந்த வகுப்பாரில் உள்ள ஒவ்வொரு அங்கமும் 144000 பேர்களை, அதாவது 144000 x 144000 = 20,736,000,000 பேர்களை (இருபது பில்லியன்கள், எழுநூற்று முப்பத்தாறு மில்லியன்கள்) கவனித்துக் கொள்வார்கள் என்று நினைப்பது பொருத்தமாயிருக்கும். வெளிப்படையாக, கவனிக்கப்பட வேண்டியவர்களின் சரியான எண்ணிக்கையை - - என்னால் நன்றாக உறுதி செய்ய முடியவில்லை. இப்போது, மணவாட்டி வகுப்பார் ஒவ்வொருவருக்கும் கவனிப்பதற்கான 144000 பேர்கள் இருப்பார்கள் என்பது பெருந்திரளாக இருக்கும். ஆகவே, திரள் கூட்டத்தார் மற்றும் முற்பிதாக்களின் பணியின் தேவையை நாம் பார்க்க முடிகிறது.

## ஜீவன் - எப்படி பூரணத்துவம் பெறுவர்?

**கே 438:1 :: கேள்வி (1909) - 1 -** குறைபாடுள்ளவர் எப்படி பூரணமான ஜீவனை அடைய முடியும்?

**பதில்.** எவரேனும் பூரணமான ஜீவனைப் பெற்றுகொள்ளத் தவறினால், அவர்கள் இரண்டாம் மரணம் அடைவார்கள். இது தான் என்னுடைய புரிந்து கொள்ளுதல். இது தான் தேவனுடைய சட்டம் என்றும், சட்டத்தின் தர நிலைக்கு வருபவர்களைத் தவிர, வேறு எவரும் பிதாவிடம் ஏற்றுகொள்ளப்படுவதில்லை என்றும் நான் புரிந்து கொள்கிறேன். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக." இதுவே கர்த்தர் ஏற்றுக்கொள்வதற்கு சிறிதளவும், எளிதானதுமான கீழ்ப்படிதல் ஆகும். நீங்களும் நானும் அந்த தர நிலைக்கு வராவிட்டால், நீங்களும் நானும் பூரண ஜீவனைப் பெற மாட்டோம். நாம் எப்படி அதைச் செய்ய முடியும்? ஆயிர வருஷ யுகத்தில், உலகம் முழுவதும் அந்த தர நிலையை அடையுமா? ஆம், ஆயிர வருஷ யுகத்தின் பணி அதுவே. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள தகுதியுள்ள ஒவ்வொருவரும் பூரணத்துவத்திற்கு தகுதியுள்ளவர்களாவார்கள். தேவன் வித்தியாசமான தர நிலைகளை உடையவரல்ல. இது தான் சிருஷ்டிப்பின் தர நிலை ஆகும். இந்த பூரணத்துவத்தைப் பெறாத தூதர் எவருக்கும் கர்த்தருடன் நித்திய ஜீவன் அளிக்கப்படமாட்டாது. மனுக்குல உலகத்தைப் பொருத்த வரையில், தேவனிடத்திலும், அவர்களுடைய அயலாரிடத்திலும் முழுமையான அன்பின் தர நிலையை அவர்கள் அடைய வேண்டும். ஆனால், நீங்கள் கூறலாம், நாம் இங்கே சரியான வடிவமைப்பில்லாத தலைகளுடன் இருக்கிறோம் - **நாம்** எப்படி அங்கே அடைய முடியும்? நீங்கள் உங்கள் மாம்சத்தின்படியான சோதனையில் இருக்கவில்லை. நீங்கள் புதிய சிருஷ்டியாக சோதனையில் இருக்கிறீர்கள். நாம் புதிய சிருஷ்டிகளாக நம்முடைய பாடங்களைக் கற்றுக்கொள்ளாவிட்டால், நேரம் வரும்போது, பட்டம் பெறுவதற்கு தகுதி இல்லாதவர்களாகி விடுவோம். நம்மில் இந்த பண்பு வளர்ச்சி பெற கர்த்தரை அனுமதிக்காவிட்டால், ஜீவனுக்கான எந்த தளத்திலும் நாம் தகுதியில்லாதவர்களாகப் இருப்போம். குறிப்பிட்ட கொள்கைகளை தேவன் வகுத்திருக்கிறார். நாம் நித்திய ஜீவனைப் பெற வேண்டுமானால், இந்த கொள்கைகளின் அடிப்படையில் நாம் செயல்பட வேண்டும். அவர் மாம்சீகத்தின்படி நம்முடன் செயல்தொடர்பு கொள்வதில்லை, அவர் ஆவியின்படியே தொடர்பு கொள்கிறார். நம்முடைய இருதயங்கள், நம்முடைய விருப்பங்கள், நம்முடைய எண்ணங்கள், நம்முடைய முயற்சிகள் அனைத்தும் தேவனிடமும், நம்முடைய உடன்சிருஷ்டிகளுடனும் உள்ள பூரண அன்பை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். என்னுடைய குறைபாட்டினால் நான் ஏதாவது அன்பற்ற வகையில் செய்வதாக அனுமானிக்கவும். புதிய சிருஷ்டி இதைக் கண்டுபிடித்த உடனேயே, புதிய சிருஷ்டியாக நான் போய், அதை கட்டாயம் சரிபண்ண வேண்டும். ஆனால், நீங்கள் சொல்கிறீர்கள், "என்னுடைய இருதயத்தின் கர்வம் இதை செய்ய விடாதிருந்தால்".

அப்படியானால், தேவன் கவனித்துக் கொண்டிருக்கிற நபர் நீங்கள் அல்ல. நீங்கள் எதையாவது ஒழுங்கற்ற முறையில் செய்து, ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரியின் மேல் கோபங்கோண்டால், தேவனிடம் சென்று உங்கள் தவறை அறிக்கையிடுங்கள். நீங்கள் முழுமையாக அவருடையவராக இருந்தால், அவருக்கு மகிழ்வளிக்கும் விதமாக நீங்கள் அந்த காரியங்களைச் செய்ய விரும்புவீர்கள். அந்த கொள்கையை நிலைநிறுத்துங்கள்; என்னுடைய இருதயம் எந்த அளவுக்கு தேவனிடம், தேவனுடைய வார்த்தையிடம் மற்றும் நீதியுடன் உண்மையாக இருக்கிறது? நாம் சுபாவமான மனுஷர்களாக இருக்கிற போது, இந்த குறைபாடுகளை ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறோம். ஒரு சமயம் அலெகினி நகரத்தில் (ALLEGHENY) தீமையைப் பற்றி பிரசங்கித்த பிறகு, தேவனுடைய சித்தத்திற்கும், அவருடைய வார்த்தையின் கண்டிப்புகளுக்கும் எப்படி மாறாக இருக்கிறது என்று காண்பிக்கும் விதமாக, ஒரு குறிப்பிட்ட சகோதரி, என்னுடைய கையைக் குலுக்கிச் சொன்னார், "சகோதரர் ரசல், நீங்கள் அதைப் பிரசங்கித்தது எனக்கு மிக மகிழ்ச்சி. ஏனெனில் இதுவே எனக்குத் தேவைப்படுகிறது." என்னுடைய கையை அவர் விலக்குவதற்கு முன்பாகவே, அவர் தீமையை பேச ஆரம்பித்தார். அந்த பரிதாபமான சகோதரி தன்னால் முடிந்த வரை நல்லது செய்கிறார். அந்த பரிதாபத்துக்குரிய சகோதரி படிப்படியாக கற்றுக்கொள்வார் என்று நான் நினைத்தேன். அவர் தான் கேட்டிருந்த விஷயங்களை அங்கீகரித்தார். அவர் அதை முற்றிலுமாக பிரயோகப்படுத்துகிறதாக நினைத்தார். சில சமயங்களில் சில சகோதரர்களும், சகோதரிகளும் உயர்வான கொள்கைகளில் சிலவற்றை மதித்துப் பாராட்டாமல் இருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். தேவன் உலகத்தில் அற்பமானவர்களைத் தான் தெரிந்தெடுத்திருக்கிறார் என்று அப்போஸ்தலன் கூறுவதை நினைவு கூருங்கள். அவர்கள் எல்லாரும் அற்பமானவர்கள் அல்ல - தேவனுடைய ஜனங்களில் சிலர், உலகத்தில் மிகவும் உன்னதமானவர்களாக இருக்கிறார்கள். ஆனால், "வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." ஆனால், பிரதானமாக அற்பமானவர்கள் - நீங்கள் உங்களுக்குள்ளே சில அற்பமானவர்களைக் கொண்டிருக்கவில்லை என்று அதிக நிச்சயமாக இருக்காதீர்கள். உங்களுடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் பழைய சிருஷ்டியிலிருந்து விடுபடும் அனுகூலம் பெற்றுக் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்தால், அவர்கள் மீது மிக்க மகிழ்ச்சியுடனும் அனுதாபத்துடனும் இருங்கள். தேவன் அற்பமாயிருக்கும் பழைய சிருஷ்டியைத் தான் ஏற்றுக்கொண்டார். இருதயத்தில் மாற்றமடையும் தயவுடன், புதிய சிருஷ்டி எது நல்லது என்றும், எது தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றதாக இருக்கும் என்பதையும் அதிகமதிகமாக நிரூபிக்கிறது. சில சமயங்களில், பூஜ்யத்திலிருந்து ஆரம்பிக்கும் அளவுகோலை உதாரணமாகச் சொல்லுங்கள். பூரணமுள்ள மனுஷனுக்குச் சொந்தமான பூரணத்துவத்தில் சிலர் 40, சிலர் 50, சிலர் 20, 30 மற்றும் சிலர் பத்தில் ஒரு பங்கு மட்டுமே உள்ளவர்களாக இருப்பார்கள். இப்பொழுது, அவர்கள் எப்போது அர்ப்பணிக்கிறார்களோ, அவர்கள் எப்படி இருந்தாலும், கர்த்தர் அவர்களை எடுத்துக்கொள்ள சம்மதிக்கிறார். அவர் அவர்களுக்குப் போதுமான தயவை அளிக்கிறார். ஒருவர் ஐம்பது அல்லது எழுபது மதிப்பெண்களாக மதிப்பிடப்படுகிறார், அல்லது இங்கே ஒருவர் முப்பது மதிப்பெண்கள் மட்டுமே உடையவராயிருக்கிறார் என்று அனுமானிக்கலாம். கர்த்தர் மற்றவரை எழுபது மதிப்பெண்களாக சரிபண்ணுவார். அவருடைய தயவு போதுமானது - அவர் தாம் ஏற்றுக்கொள்கிற ஒவ்வொருவரின் தேவைகளுக்குப் போதுமான அளவில் சரிபண்ணுவார். கர்த்தருடைய தயவு போதுமானதாகவும் ஒவ்வொரு குறைபாட்டையும் சரி செய்யும். உங்களுடைய இருதயம் அல்லது எண்ணம் என்ன என்று அவர் உங்களைக் கணிப்பார். உங்களுடைய விருப்பம் 90 அல்லது 50 மதிப்பெண்கள் என்ற அளவில் கண்டிப்பாக இருக்கக்கூடாது. உங்களுடைய எண்ணம் நூறு மதிப்பெண்கள் குறியளவிலே இருக்க வேண்டும். தேவனுடைய சித்தத்தை நீங்கள் உங்களின் அதிகமான திறனுடன் செய்தால், உங்களுக்கு நூறு மதிப்பெண்கள் என்ற அளவில் கணக்கிடப்படும். நீங்கள் அவருடையவர்களாக, அவருடன் முழுமையான உறவுடன் இருப்பீர்கள். அந்த நூறு மதிப்பெண்கள் என்பது பூரணமான இருதயத்தைக் குறிக்கிறது. கர்த்தர் உலகத்தாரிடம் எதிர்பார்க்கிறதை விட, நம்மிடம் அதிகமாக எதிர்பார்க்கிறார். நாம் அவரை நம்முடைய முழு மனதோடும் முழு வல்லமையோடும் அவரை அன்புகூருவதையும், நம்மைப் போலவே பிறரை அன்புகூருவதையும் அவர் எதிர்பார்க்கிறார். ஆனால், அவர் இதை உலகத்தாரிடமும் எதிர்பார்க்கிறார். அவர் எப்படி அதிகம் கேட்கலாம் என்று நீங்கள் கூறலாம். அவர் உங்களிடமும் என்னிடமும் அதிகம் கேட்கிறார். எப்படி? இயேசு கூறினார், "நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்ற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." நீங்கள் உங்களுக்குச் செய்வது போலவே, உங்கள் அயலாரிடமும் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் உங்களுக்கு இருக்கிற

எல்லாவற்றையும் கொடுத்துவிடவோ அல்லது உங்கள் சொந்த விருப்பத்தைத் தியாகம் செய்யவோ, அல்லது, உங்களுக்கு எதுவும் இல்லாமல் இருக்கவோ வேண்டியதில்லை. ஆனால் இது கர்த்தருடைய சீஷர்களிடம் வரும்போது, இது வித்தியாசமான விஷயமாக இருக்கிறது. இது நமது கர்த்தருடைய ஜீவ பலியை அர்த்தப்படுத்துகிறது. அவர் நம்மை நேசித்தது போல நாம் மற்றவர்களை நேசிக்க வேண்டும். அந்த ஏற்பாட்டுக்கு நீங்கள் பிணைக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் பலி செலுத்துபவராக இல்லையென்றால், சிறுமந்தையில் நீங்கள் ஒருவராக இருக்க முடியாது. சிறு மந்தையிலிருக்கும் ஒவ்வொருவரும் பலி செலுத்திகிற ஆசாரியராக இருக்கிறார். ஆகவே ராஜரீக ஆசாரியத்துவத்தைச் சேர்ந்தவரானால், நீங்கள் பலி செலுத்துகிறவர்களாக இருக்கிறீர்கள்.

## ஜீவன் - ஆயிர வருஷ முடிவில்.

**கே 440:1 :: கேள்வி (1910) - 1 -** ஆயிர வருஷ யுகத்தின் முடிவில் தூய்மையாக்கப்பட்ட மனுஷீகம் நித்திய ஜீவனை (ETERNAL LIFE) பெற்றுக்கொள்ளுமா, அல்லது, நீடித்த ஜீவனை (EVERLASTING LIFE) பெற்றுக்கொள்ளுமா?

**பதில்.** கேள்வி கேட்டவர் அனுமானிப்பது போல், அதே துல்லியமாக, “நீடித்த” மற்றும் “நித்திய” என்ற இந்த பதங்கள் வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்படவில்லை என்று நான் பதிலளிக்கிறேன். நீங்கள் இவைகளுக்கு இடையே வேறுபாட்டை உண்டாக்குவதாக இருந்தால், வேதாகமத்தின் பொதுவான கருத்து “நித்திய ஜீவன்” என்று இல்லாமல், “நீடித்த ஜீவன்” என்றே தோன்றுகிறது. ஆனால் பெரும்பாண்மையான ஜனங்கள் இவைகளுக்கு இடையே வித்தியாசம் எதுவும் செய்கிறதில்லை. “நித்திய ஜீவன்” என்று அவர்கள் சொன்னால், ஜீவன் எப்போதும் நீடிக்கும் என்று அவர்கள் அர்த்தம் கொள்கிறார்கள். அவர்கள் “நீடித்த ஜீவன்” என்று சொன்னால், ஜீவன் எப்போதும் நீடிக்கும் என்றே அவர்கள் இதையும் அர்த்தப்படுத்துகிறார்கள்; ஆகவே, அவர்களுடைய சொல் பொருள் விளக்கம் சரியாகவே உள்ளது. ஆனால், “நித்திய ஜீவன்” என்ற வார்த்தையுடன், “அழியாமையுள்ள ஜீவன்” என்று பொருள் கொள்ளும் விதமாக ஏதேனும் கூடுதலாகச் சேர்த்தால், அப்போது அது தவறு ஆகும். மனதில் அந்த அர்த்தத்துடன் இதை உபயோகப்படுத்தினால், அது சரியானது அல்ல; உலகத்தார் அழியாமையைப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை; ஆனால் உலகத்தார் நீடித்த ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள், அல்லது, இந்த சொல்லின் அர்த்தத்தில், நித்திய அல்லது முடிவில்லாத ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள்.

## ஜீவன் - மனுஷனாகிய இயேசுவினால் மற்றும் இயேசு கிறிஸ்துவினால் பெறப்பட்டது.

**கே 440:2 :: கேள்வி (1916) - 2 -** மனுஷனாகிய இயேசு பெற்றிருந்த அதே ஜீவனை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பெறுகிறாரா?

**பதில்.** கேள்வி கேட்டவர் மனதில் என்ன நினைக்கிறார் என்பது பற்றி எங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஜீவன் அனைத்தும் ஒன்றே என்று முதலாம் வால்யூமில் நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஜீவன் என்பது ஜீவன். தேவன் ஜீவன் உடையவராயிருக்கிறார். தூதர்கள் ஜீவன் உடையவர்களாக இருக்கிறார்கள்; மனுஷனுக்கு ஜீவன் உண்டு. மிருகங்களுக்கு ஜீவன் உண்டு. பறவைகளுக்கும், மீன்களுக்கும் ஜீவன் உண்டு. ஆகவே நிச்சயமாக, இயேசு முன்பு பெற்றிருந்ததைப் போல, அவர் அதே ஜீவனைப் பெற்றார். சுபாவம் வித்தியாசமானது. ஆகவே தேவன் தெய்வீக தளத்தில் அல்லது சுபாவத்தில் ஜீவன் உடையவர். கேரூபீன்கள் தங்களின் சொந்த தளத்தில் ஜீவன் உடையதாக இருக்கின்றன. தூதர்கள் தங்களுடையதிலும், மனுஷன் தன்னுடையதிலும், மிருகங்கள் போன்றவைகள் தங்களுடையவைகளிலும் ஜீவன் உடையதாய் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தன்னுடைய சுபாவத்தின்படியே ஜீவன் உண்டு. இயேசு முன்பு இருந்த அதே தளத்தில் அதே சுபாவமும், ஜீவனும் உடையவராக இயேசு இப்பொழுது இருக்கிறார் என்று கேள்வி கேட்டவர் அனுமானித்தால், நாங்கள் “இல்லை” என்று பதிலளிக்கிறோம். “அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.” அவர் ஆவியின் சுபாவத்துடன் ஆவியின் சிருஷ்டியாக இருந்தார். ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, ஆவியின் ஜீவனைப் பெற்றார். அதற்கு மாறாக, அவர் மனுஷனாகிய இயேசுவாக இருந்த போது, அவர் மனுஷ பலத்துடனும் மனுஷ ஜீவனுடனும்

மனுஷ சுபாவத்தை உடையவராக இருந்தார். லாகோஸ் அல்லது தேவனுடைய வார்த்தையாக, அவர் ஆவியின் ஜீவனைப் பெற்றிருந்தார். அதற்குப் பிறகு, அவர் தம்மை பலியிட உலகத்திற்கு வந்தார். அவர் தம்மை பலியிட்டபோது, பிதா அவருக்குச் செய்யச் சொல்லியிருந்த பணியை செய்து முடித்திருந்தார். பிறகு பிதா அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். இயேசு இந்த மாற்றத்தை பல்வேறு வடிவங்களில் தோன்றி, வித்தியாசமான சுபாவத்தில் தாம் ஆவியின் சிருஷ்டியாக இருப்பதை வெளிப்படுத்தினார். அவர் தம்மை மனுஷனாக வெளிப்படுத்தவில்லை. ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, ஆவியின் சிருஷ்டியாக வெளிப்படுத்தினார். அதே சமயத்தில் மனுஷ சுபாவத்திலிருந்து தேவ சுபாவத்திற்கு மாறியதைக் காண்பித்தார்.

## நித்திய ஜீவன் - கடைசி சோதனை இதை முடிவு செய்யும்.

**கே 441:1 :: கேள்வி (1912-Z) - 1 -** சீர்பொருந்துதல் நித்திய ஜீவனுக்கான உரிமையை உள்ளடக்கியதா?, அல்லது, ஆயிர வருஷ யுக முடிவில் வரக்கூடிய இறுதி சோதனையினால் நித்திய ஜீவனுக்குரிய உரிமை தீர்மானிக்கப்படுகிறதா?

**பதில்.** ஆதாமுக்கு முதலில் பூரணத்துவம் கொடுக்கப்பட்டது. அவன் கீழ்ப்படிதலுள்ளவனாக இருந்தால், அவனுடைய பூரணத்துவத்தின் தகுதியினாலே அவன் தொடர்ந்து ஜீவனோடிருக்கும் உரிமையைப் பெற்றிருந்தான். ஆனால் தேவன் ஆதி தகப்பனாகிய ஆதாமை சோதிப்பது பொருத்தமானது என்று பார்த்தது போல, மனுஷ குடும்பத்தையும் சோதிக்கப்போகிறார். இராஜ்யம் பிதாவிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, இந்த ஜீவ உரிமைகளை அடைவதற்கு அவர்களுடைய தகுதியை சோதித்து, அவர்களை எப்போதும் ஜீவனோடு வைப்பதற்காக இந்த சோதனை இருக்கும். மனுக்குலத்தை பூரணத்துவத்திற்கு கொண்டு வருவதற்காக ஆயிர வருஷங்களடங்கிய கிறிஸ்துவின் ஆட்சி இருக்கும். அந்த ஆட்சியின் முடிவில், பூரணத்துவம் அடைந்திருப்பவர்கள் பிதாவிடம் ஒப்படைக்கப்படுவார்கள். நிறைவேற்றி முடிக்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருந்த எல்லாவற்றையும் புதிய உடன்படிக்கை அவர்களுக்காக செய்து முடித்திருக்கும். ஆனால் தேவனுடைய நித்திய ஜீவனின் முழுமைக்கு அவர்கள் தகுதியானவர்கள் என்று தீர்மானிப்பதற்கு முன்பு, ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்களாகவும், இடையே எந்த மத்தியஸ்தரும் இல்லாமல் எல்லோரும் சோதிக்கப்படுகிறதை தேவன் பார்ப்பார். அந்த சோதனை முக்கியமானதாகவும், நீதியாகவும் இருக்கும் என்பதை நாம் நிச்சயிக்கிறோம்.

## ஜீவன் அளிப்பவர் - ஆவிக்குரிய தகப்பனும் தாயும் பூமிக்குரிய பிள்ளைகளுடன்.

**கே 441:2 :: கேள்வி (1905) - 2 -** கிறிஸ்து ஜீவன் அளிப்பவராகவும், தாயாக சபையும் இருக்குமானால், சீர்பொருந்தும் வகுப்பாராகிய பிள்ளைகள் எப்படி மனுஷ சுபாவத்தில் இருக்க முடியும்?

**பதில்.** பூமியைப் பொருத்த வரையில் இது சுவீகாரம் எடுப்பதாகும். அவர்கள் ஆதாமின் பிள்ளைகளாக இருந்தனர். ஆதாமின் வழியாக அவர்கள் இழந்ததற்குப் பதிலாக, கிறிஸ்து அவர்களுக்கு ஜீவனை அளிக்க விருப்பம் தெரிவிக்கிறார். நாம் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கும் அர்த்தத்தில் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுடைய வாக்குத்தத்தம், ஆதாமினால் இழந்ததைத் திரும்பப் பெறுதலைச் சார்ந்ததாகும். இரண்டாம் ஆதாம், முதலாம் ஆதாமின் இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. உலகத்தாருக்காக கிறிஸ்துவின் ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது. இல்லையென்றால், அவர்களுக்கு வேறு எதுவுமே இருந்திருக்காது.

## ஜீவன்-உரிமைகள் - எப்போது ஒப்புக்கொடுக்கபட்டது?

**கே 441:3 :: கேள்வி (1911) - 3 -** நாம் நம்முடைய ஜீவ உரிமைகளை எப்போது ஒப்புக்கொடுத்தோம், அர்ப்பணிப்பிலா, அல்லது, மரணத்திலா?

**பதில்** நாம் நம்முடைய ஜீவ உரிமைகளை அர்ப்பணிப்பில் ஒப்புக்கொடுக்கிறோம். நீங்கள் ஒப்புக்கொடுப்பதில் முக்கியமானது இதுவே. உங்களிடம் இருக்கிறதை ஒப்புக்கொடுக்கிறீர்கள்.

உங்களிடம் இருப்பது மிகக் குறைவு - எவர் ஒருவரிடம் இருப்பதும் மிகக் குறைவு. ஆனால் இயேசுவின் மூலமாக பூமிக்குரிய ஜீவ உரிமைகளை மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் தேவன் அளிக்க கிறிஸ்துவில் ஏற்பாடு செய்திருக்கிறார். இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து, மனுக்குலத்திற்கான சீர்பொருந்துதலின் தேவனுடைய திட்டத்தைப் புரிந்து கொள்ளும் நேரத்திலிருந்து, இந்த ஜீவனுக்குரிய உரிமைகள் உங்களைச் சார்ந்ததாக எண்ணப்படுகிறது. நீங்கள் உங்களிடம் சொல்லலாம், நான் என்னிடம் சொல்லிக் கொள்ளலாம், "ஓ, எனக்கு இப்பொழுது குறுகிய கால ஜீவன் உள்ளது, உண்மையில் இது மிகவும் குறுகிய கால ஜீவன். ஆனால் எதிர்காலத்தில் மனுஷ ஜீவனை நான் உடையவனாக இருக்கும் விதமாக மீட்பர் வழியாக தேவனுடைய ஏற்பாடு இருக்கிறது. தேவனுடைய இரக்கத்தினால், இப்பொழுது மீட்பின் பலன் என் மீது சுமத்தப்படும். எனக்கு உள்ள எல்லாவற்றையும் நான் ஒப்புக்கொடுப்பேன். இப்பொழுது எனக்கு இருக்கும் உரிமை எதுவோ, அதை நான் ஒப்புக்கொடுக்கிறேன். நான் என்னுடைய மனுஷ சுபாவத்தை செயல்படுத்தி, கிறிஸ்துவின் பலியின் பொதுவான பலன் மூலமாக, ஒரு மனுஷனாக என்னுடைய உரிமைகளைக் கோரினால், என்னுடைய இந்த உரிமைகள் அனைத்தும் எனக்குச் சொந்தமாகும்." ஆகவே நாம் அர்ப்பணிக்கும் அந்தக் கணமே, நம்முடைய ஜீவ உரிமைகளை - எதிர்காலத்தில் வரக்கூடிய தற்போதைய ஜீவனை - நாம் ஒப்புக்கொடுக்கிறோம். இயேசு தம்முடைய ஜீவ உரிமைகளை எப்பொழுது ஒப்புக்கொடுத்தார், யோர்தானிலா, கல்வாரியிலா, அல்லது, பெந்தெகொஸ்தேயிலா? இயேசு தம் ஜீவ உரிமைகளை யோர்தானில் ஒப்புக்கொடுத்தார். அவர் எல்லாவற்றையும் பிதாவின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். "உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், - - புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது." அவர் எதையும் வைத்திருக்கவில்லை.; அனைத்தும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## ஜீவ உரிமைகள் - அவைகள் பலியிடப்பட்டதா?

**கே 442:1 :: கேள்வி (1911-Z) - 1 -** கர்த்தர் மனுஷனாவதற்கு முன்பு, அவர் ஆவியின் சிருஷ்டியாக இருந்த போது, என்ன உரிமைகளை வைத்திருந்தார்? அவர் மனிதனான பிறகு அந்த உரிமைகள் என்னவாயிற்று?

**பதில்.** பூமிக்குரிய உரிமைகள் மற்றும் பூரணத்துவத்திற்காக, பரலோக உரிமைகள் மற்றும் பூரணத்துவத்தை பரிமாற்றம் செய்து, ஐசுவரியமுள்ளவராக இருந்த நமது கர்த்தர் நமக்காக தரித்திரரானார். (2கொரி 8:9.) இந்த பரிமாற்றம் பலி இல்லை, காணிக்கை இல்லை. ஏனெனில் இது மீட்பாக மாறின மனுஷனாகிய கிறிஸ்து இயேசு தான் பலியாக இருந்தார். அவர் மனுஷனாவதற்கு முன்பு இருந்த உரிமைகளை அவர் பலியிட்டார் என்று வேதாகமத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு இவைகளை விலக்கினார். எபி.12:2.

மனிதனுக்குத் தேவைப்படும் உரிமைகள் பூமிக்குரிய உரிமைகள், மனுஷீக உரிமைகள் ஆகும். அவர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனை பலியிட்டதின் மூலமாக, இயேசு அந்த உரிமைகளை மீட்கிறார். ஆவியின் சிருஷ்டியாக இருக்கும் போது, ஆவிக்குரிய உரிமைகளை அவர் பலியிட்டிருக்க முடியாது. ஏனெனில் மரணத்திற்குள்ளாக கண்டனம் பண்ணப் பட்டவர்களாக ஆவியின் சிருஷ்டிகள் யாரும் இல்லை. அவர் மீட்பதாக இருந்தவர், மனுஷனாகிய ஆதாம் ஆவார். "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1கொரி 15;21,22.

## ஜீவனுக்குரிய உரிமைகள் Vs மீட்பின் பலன்.

**கே 442:2 :: கேள்வி (1911-Z) - 2 -** கிறிஸ்துவின் மீட்பின் பலனை உலகத்தின் பாவங்களுக்காக ஒதுக்கி வைப்பதற்கும், கிறிஸ்து தம் ஜீவ உரிமைகளை உலகத்தின் பாவங்களுக்குக் கொடுப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?

**பதில்.** மனுஷீக தள வரிசையில் நமது கர்த்தரின் நீதி அவர் மனுஷனாக இருந்த நிலையுடன் தொடர்புள்ளதாயிருந்தது. இப்பொழுது மனுஷனுடையதைப் போல அவர் நீதி உடையவராக

இல்லை. நீதியின் பார்வையில், பிதாவின் பார்வையில் அவர் வெறுமனே அந்த நீதியின் வரவு உடையவராக இருக்கிறார். இந்த பலன் உரிய காலத்தில் உலகத்தாருக்காக பயன்படும் வகையில் ஒதுக்கப்படுகிறது. ஆனால் இந்த பலன் சுவிசேஷ யுகத்தில் சபைக்கு கடனாக வழங்கப்படுகிறது.

இயேசு மரணமடைந்த அந்த நேரம் வரைக்கும் மனுஷீக ஜீவ உரிமைகள் அவருக்குத் தேவைப்பட்டன. அவர் இறக்கும் போது பிதாவின் ஏற்பாட்டிற்கு இணங்க, அவர் பிதாவிடம் ஒப்படைத்தார். அவர் கூறினார், "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ." (யோவான் 18:11.) அவர் மனுஷனாக இருந்த போது, அந்த ஜீவ உரிமைகள் உபயோகிப்பதற்கு அவருடையதாயிருந்தது. ஆனால் இப்பொழுது அவைகள் அவருக்குத் தேவைப்படுகிறதில்லை; ஏனெனில் அவர் மேலான உரிமைகளை உடையவராயிருக்கிறார். ஆனால் மனுஷ ஜீவனுக்கு அவர் **உரிமை** உடையவராயிருக்கிறார். இது **தமக்கு சொந்தமாகத்** தேவைப்படுகிறதில்லை. - - ஆனால் **மனுக்குல உலகத்துக்குக் கொடுப்பதற்காக இது அவருக்குத் தேவைப்படுகிறது.** உலகத்தார் விரும்பினால் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளலாம்.

கர்த்தரை அவருடைய சொந்த தனித்தன்மை அடிப்படையில் பார்க்க வேண்டும். எல்லாவற்றிற்கும் முதலாக, அவர் ஆவியின் சிருஷ்டியாக இருந்தார். இரண்டாவதாக, அவர் மாம்சமானார் - பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார். மூன்றாவது, அவரிடமிருந்து பூமிக்குரிய ஜீவனை எடுத்துவிட **அனுமதித்து**, தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். - - பிலி 2:9.

மகிமையுள்ள நபர் மனுஷ குலத்துக்காக குறிப்பிட்டக் காரியங்களைச் செய்ய தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். **அந்த காரியங்களைச் செய்யும் அதிகாரம், அவருக்குத் தேவைப்படாத பூமிக்குரிய ஜீவனின் உரிமையை அவர் இன்னும் உடையவராயிருக்கிறார்** என்ற அடிப்படையில் தான் உள்ளது. இதை அவர் தம்மிடம் வைத்துக் கொண்டு, **ஆயிர வருஷ யுகத்தில்,** புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளுடன் இணக்கமாக வரக்கூடிய **உலகத்தாருக்கு** படிப்படியாகக் கொடுப்பார். அந்த பலனில் ஒரு பங்கை இப்பொழுது அவருடைய அங்கங்களாக விரும்புகிறவர்களுக்கு, அவர்களுடைய குறைகளை மூடி, அவர்களுடைய பலிகளை பிதாவுக்கு ஏற்ற வகையில் இருப்பதற்காக சுமத்துகிறார்.

கிறிஸ்துவின் **பலன் பிதாவின் சித்தத்தை செய்வதில்** இருக்கிறது. இந்த பலனுக்கு திரைக்கு அப்பால் உள்ள புதிய சிருஷ்டியை பரிசாக அளித்தார். அந்த **பலன் இன்னும் தொடர்கிறது.** கிறிஸ்து மனுக்குலத்துக்குச் செய்யும் எதையும் தவிர, தேவனுடைய பார்வையில் அவர் **சொந்த** பலனை எப்போதும் உடையவராக இருக்கிறார். ஆகவே, அவர் **தம்முடைய பலனை அப்படியே கொடுத்து விட்டார்** என்று நாம் கருத வேண்டாம். அப்படியிருந்தால், அவருக்கு பலன் இல்லாத நிலையில் இருப்பார். ஆனால் தம்முடைய வெகுமதியைப் பெற்ற பிறகு, தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, அவர் மனுஷ ஜீவ உரிமையை உடையவராயிருக்கிறார். இது தான் தேவனுடைய பார்வையில் பலன் என்ற காரியமாக இருக்கிறது. இந்த மதிப்பு, ஆதாம் மற்றும் அவனுடைய பிள்ளைகளின் மீட்புக்காக உள்ளது - அதாவது, அவருடைய **விலைக்கிரயமாக** உள்ளது. **இந்த பலன்** உலகத்தாருக்காக சீக்கிரத்தில் உபயோகப்படுத்துவார். **இதை** நமக்காக இப்பொழுது சுமத்திக் கொண்டு இருக்கிறார்.

## ஜீவ-உரிமைகள் - நாம் அவைகளை உண்மையாகவே பலியிடுகிறோமா?

**கே** 443:1 :: **கேள்வி (1911-Z) - 1 -** ஆசாரியர்கள் தங்களுடைய பூமிக்குரிய ஜீவ உரிமைகளை பலியிடுகிறார்களா?

**பதில்.** பூரணமாக இருக்கிறவர்களுக்கு மட்டுமே தேவன் நித்திய ஜீவனைக் கொடுக்க நோக்கமாயிருப்பதால், ஆதாமின் சந்ததியாராகிய நாம் எல்லோரும் குறையுள்ளவர்களாக இருப்பதால், பலியிடுவதற்கு ஜீவ உரிமைகள் நமக்கு இல்லை. ஆனால், இயேசு நமக்குப் பரிந்து பேசுகிறவராகத் தோன்றினார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களாவதற்கு விரும்பி, இவ்விதமாக அவருடைய பலியிலும், பிறகு அவருடைய இராஜ்யத்தின்

மகிமைகளிலும் அவருடன் பங்காளிகளாவதற்கு நமக்கு உதவி புரியும் நோக்கத்துடன் இயேசு இருக்கிறார்.

இதை நாம் செய்ய முடிவதற்கு, அவர் நம்முடைய கறைகள் மற்றும் குறைபாடுகள் அனைத்தையும் ஈடு செய்வதற்கு, அவருடைய பலனில் போதுமானதை நமக்காக சுமத்தி சரி பண்ணுவதில் நோக்கமாயிருக்கிறார். ஆனால் நமது கர்த்தரால் நமக்கு சுமத்தப்பட்ட இந்த பலனை நாம் ஒப்புக்கொடுப்பதில்லை. நம்முடைய பலவீனங்களை சரி பண்ணுவதற்கு நம்முடைய மேன்மையான பரிந்துபேசுகிறவராக இருப்பதற்கு நம்முடைய முழு பங்கு விசுவாசம் ஆகும். குறைபாடாக இருப்பதை அவர் சரி செய்து, பிறகு பலியில் நமக்குக் கொடுக்கிறார். இந்த பலியை பிதா ஏற்றுக்கொள்கிறார். **உண்மையில்** பலியிடுவதற்கு ஒருபோதும் எந்த ஜீவ உரிமைகளும் நமக்கு இருந்ததில்லை.

## ஜீவ-உரிமைகள்: புதிய உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படுவது.

**கே** 443:2 :: **கேள்வி** **(1911-Z) - 2 -** கல்வாரியில் இறக்கி வைத்த ஜீவ உரிமைகள் ஆயிர வருஷ யுகத்தில் எங்கே இருக்கும்?

**பதில்.** மேன்மையான மீட்பரின் 'ஜீவ உரிமை' என்று நாம் பேசுவது, நாம் புரிந்து கொண்டபடி, பாவநிவாரண இரத்தத்தினால் அடையாளப்படுத்தப்படுகிறது. நிழலின்படி, இந்த நிஜமான பாவநிவாரண நாளின் முடிவில், மனுக்குல உலகம் முழுமையின் சார்பாக, பாவநிவாரண இரத்தம் நீதிக்குச் செலுத்தப்பட்டு, அவர்கள் சார்பாக ஏற்றுக்கொள்ளப்படும் - அதாவது, "அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக" என்று அப்போஸ்தலன் தெரிவிக்கிறார். (எபி 2:17.) ஜனங்கள் தங்களுடைய மரண சாபத்திலிருந்து விடுபட்ட உடனேயே, அவர்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத் துவங்கும் நிலையில் இருப்பார்கள், ஆனால் இதற்கு முன் அல்ல. மாபெரும் பிரதான ஆசாரியராக, நமது கர்த்தர் சுவிசேஷ யுக முடிவில் ஆபிரகாமின் வித்தாகிய மாம்ச இஸ்ரயேலருக்கும் தேவனுக்கும் இடையே ஒரு புதிய உடன்படிக்கையை பாவநிவாரண இரத்தத்தினால் முத்திரிக்கும் பணியை மேற்கொள்ளுகிறார்; அவர் "தம்முடைய சரீரமாகிய சபையுடன்" சேர்ந்து அந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நிற்கும் பணியை மேற்கொள்கிறார். அந்த பிரமாணத்திற்கு முழுவதும் இணக்கமாக வருகிறவர்கள் அனைவரும் நித்திய ஜீவனை அடைவார்கள். உலகத்தார் சீர்பொருந்துதலின் சலுகைகளைப் பெறுவார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணும் உடன்படிக்கையின் ஏற்பாடுகளை அந்த ஆயிரம் வருஷங்கள் முழுவதிலும் மத்தியஸ்தர் வெறுமனே நிறைவேற்றுவார். இந்த வாய்ப்புகளை அவர்கள் பிரயோஜனப்படுத்திக் கொண்டால், நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

அந்த சமயத்தில், மீட்பர் என்ற முறையில் நம்முடைய கர்த்தரின் கைகளிலிருந்து மனுஷ ஜீவ உரிமை கடந்து போயிருக்கும். ஆகவே மனுஷன் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவன் தெரிவித்த எல்லா விஷயங்களுக்கும் உத்திரவாதமாக புதிய உடன்படிக்கையிலே அனைத்தும் குறிக்கப்பட்டிருக்கின்றன. கல் இருதயம் கொண்ட மனுக்குலம் சதையுள்ள இருதயத்திற்கு இடங்கொடுக்கும். இந்த உடன்படிக்கையின்படி நடப்பவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள். ஆயிர வருஷ யுகத்தில், நமது கர்த்தரால் இறக்கி வைக்கப்படும் ஜீவ உரிமைகளை அடையாளப்படுத்தும் புதிய உடன்படிக்கை பிரமாணத்தை அனுசரிக்கத் தவறிய எவரும் திருந்தும் நோக்கத்தோடு வேதனைக்குள்ளாவார்கள். இவ்விதமான ஏற்பாட்டினால், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து ஆயிரம் வருஷங்களில் ஆசீர்வாதங்களை அளிப்பார். இந்த சுவிசேஷ யுகத்தில், உலகத்தின் மீட்புக்காக, உலகத்தின் பாவங்களுக்கு மீட்பின் விலைக்கிரயமாக, நமது கர்த்தர் நீதியுடன் கொடுப்பதற்காக ஜீவ உரிமையை தம்முடைய சொந்த கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கிறார். இந்த யுகத்தின் முடிவில் அவர் இந்த உரிமையை மொத்தமாகச் சேர்க்கும் போது, முன்பு காண்பித்த விதமாக, நீதி அதை கைவிட்டு விடும்; மனுக்குலம் அதைப் பெற்றுக்கொள்ளும்.

## ஜீவ-உரிமைகளுக்கான - தேவை.

**கே 444:1 :: கேள்வி (1911-Z) - 1 -** தம் வசத்தில் ஒருவேளை பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளைப் பெற்றிருக்கவில்லையெனில், அவரால் உலகத்திற்கான நித்திய பிதாவாக முடியுமா?

**பதில்.** ஒருவேளை நமது கர்த்தராகிய இயேசு ஆயிரவருட ஆளுகையின்போது ஆதாமிற்கும் அவரது சந்ததிக்கும் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை கொடுத்துவிடுவதற்கென, அந்த உரிமையினைச் சொத்தாகப் பெற்றிருக்கவில்லையெனில், அவரைக் குறித்து அந்த சந்ததியின் பிதா என்று கூறமுடியாது. கொடுத்துவிடுவதற்கென்று ஜீவனை - பூமிக்குரிய ஜீவன் ஒன்றை அவர் பெற்றிராதது வரையிலும், அவரால் மனுக்குல சந்ததியை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது.

## ஜீவ-உரிமைகள் - மீட்பின் பலனுடன் ஒப்பிடுதல்.

**கே 444:2 :: கேள்வி (1912) - 2 -** இயேசுவின் ஜீவன்-உரிமைகளுக்கும், இயேசுவின் பலனுக்கும் என்ன வித்தியாசம் உள்ளது?

**பதில்.** இந்த கேள்வியை எழுதியவரின் மனது மற்றும் பார்வையைப் பொருத்து பதில் உள்ளது. ஏற்கனவே சொன்ன விதமாக, இயேசு இந்த பலனை வைத்திருக்கிறார். ஆனால் அவர் தம்முடைய பலனை யாருக்கும் ஒருபோதும் கொடுக்கிறதில்லை. அவர் தேவனுடைய குமாரன் என்ற முறையில் தம்முடைய பலனை அவர் அளிக்கிறதில்லை. இந்த உணர்வில் அவர் தம் பலனை கொடுத்து விட்டிருந்தால், அவர் தமக்காக எதுவும் வைத்திருப்பது இல்லையாகும். இந்த கேள்விக்குள் இருக்கும் எண்ணம் சரியாக இருக்கலாம். அவர் செலுத்தி, கல்வாரியில் முடித்த பலி அவருக்கு விசேஷித்த காணிக்கையாக இருக்கிறது. இதன் காரணமாக, இந்த மேலான சுபாவத்தை அவர் பெற்றார். அவர் பூமிக்குரிய சுபாவத்தை ஒப்புக்கொடுத்தார். இது அவர் சார்பில் ஒரு சொத்தாகக் கணக்கிடப்படுகிறது. இவை அனைத்தும் “சுபாவம்” என்ற சொல்லை உபயோகப்படுத்துவதைப் பொருத்து இருக்கிறது. இந்த பூமிக்குரிய சுபாவம் அல்லது ஜீவனை அவர் ஒப்புக்கொடுத்தார். இயேசு இந்த உலகத்தை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தயாரான உடனேயே, இந்த சுபாவம் அல்லது ஜீவனை உலகம் முழுமைக்கும் விலைக்கிரயமாகக் கொடுப்பதே உள்நோக்கமாக இருக்கிறது. ஆனால் இது இன்னும் நடக்கவில்லை. “உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது.” இன்னும், இயேசு தம்முடைய பலனைப் பிரயோகப்படுத்தியிருக்கிறார் என்று சிலர் நமக்குச் சொல்லுகிறபடி இருப்பின், உலகம் இன்னும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. சரியான நேரம் வரும்போது, அவர் தம்முடைய பெரும் அதிகாரத்தை எடுத்துக் கொள்வார். ஆசீர்வதிக்க அவர் தயாராகும் போது, மனுக்குலம் அனைத்தும், மாம்சம் அனைத்தின் சார்பாக, அவர் அப்பொழுது தம்முடைய மீட்பின் பலனை, அல்லது, அவருடைய பூமிக்குரிய ஜீவனை - உரிமைகளின் பலனைப் பிரயோகப் படுத்துவார். பிறகு இராஜ்யம் எல்லா ஆசீர்வாதங்களின் வழித்தடத்தின் மூலமாக இருப்பதால், “மாம்சமான அனைவருக்கும்” ஆசீர்வாதங்கள் வர ஆரம்பிக்கும். உலகத்தாருக்கு இது இன்னும் பிரயோகிக்கப்படவில்லை. இன்னும் அவர்கள் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். ஆனால், அவருடைய பலன் பிரயோகிக்கப்பட்ட பிறகு, அவர்கள் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள். பிறகு அவர்கள் எல்லோரும் கிறிஸ்துவினிடம் திரும்புவார்கள். பிறகு நீதி இயேசுவை மட்டுமே பார்க்கும், மனுக்குலத்தைப் பார்க்கவே பார்க்காது. பிறகு அந்த நேரத்தில் தேவனுடைய சமூகம் முன்பாக நிற்க முடிகிறபடி அவர் மனுக்குலத்தைச் செய்திருக்கிறபடியால், ஒரு ஆயிரம் வருஷங்களின் முடிவில், இயேசு விலகிச் சென்று, எல்லா ஜனங்களையும் அவருடைய பிதாவின் கரங்களில் ஒப்படைப்பார்.

## ஜீவ-உரிமைகளானது இயேசுவினால் சபைக்குச் சாற்றப்பட்டுள்ளதா?

**கே 445:1 :: கேள்வி (1912) - 1 -** ஜீவ-உரிமைகளை இயேசு சபைக்கு தரிப்பித்துள்ளதாக/சாற்றியுள்ளதாக தாங்கள் போதிக்கின்றீர்களா?

**பதில்.** உண்மையில் அப்படித்தானே! இயேசு இரண்டு ஜீவ-உரிமைகளை உடையவராயிருந்தார். மனிதனென ஜீவிப்பதற்கான உரிமை ஒன்றினை அவர் பெற்றிருந்தார். அவர் தாமே முன்வந்து தம் ஜீவனைக் கொடுத்து வைக்க அவர் தமது பூமிக்குரிய ஜீவனை கொடுத்து வைத்திட்டார். (lay down) அது அவரிடமிருந்து பறிமுதல் (forfeit) செய்யப்படவில்லை. அதை அவர் திவ்விய

ஏற்பாட்டிற்கு இசைவாக மரணபரியந்தம்" கொடுத்துவைத்திட்டார். (lay down) அவரால் கொடுத்துவைக்கப்பட்ட அது இன்னமும் அவருடையதே. உதாரணத்திற்கு என்னுடைய புத்தகத்தை நான் இங்கே மேஜையில் வைத்துள்ளேன் என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் அது கொஞ்ச நேரம் மேஜையிலேயே இருக்கட்டும்; எனினும் அது இன்னமும் என்னுடையதே. மற்றும் நான் திரும்பிவந்து, மீண்டும் எனது புத்தகத்தை எடுத்துக்கொள்வதற்கு முழு உரிமையுடையவனாக இருக்கின்றேன். அப்படித் தானே? இயேசு தமது ஜீவனைப் பறிகொடுக்கவில்லை. அவர் தாமே முன்வந்து தம் ஜீவனைக் கொடுத்துவைக்க மாத்திரமே செய்தார். "அதைக் கொடுத்துவைப்பதற்கும் மற்றும் மறுபடியுமாய் வந்து பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரம் காணப்படுகின்றது." மரணத்திலிருந்து அவர் உயிர்த்தெழுவதற்கான வேளை வந்தபோதோ, அவர் திவ்விய தளத்தில் தேவனுடைய குமாரனென உயர்தளத்தில் ஜீவனைப் பெற்றுக்கொண்டார். அது அவர் தமது ஜீவனை ஒப்புகொடுத்ததற்கான வெகுமானம் ஆகும். இது "வெகுமான ஜீவனாகும்". இது அவருக்கான தேவனுடைய அன்பளிப்பாகும். இது மரணம் வரையிலுமான அவரது கீழ்ப்படிதலுக்கான வெகுமானம் ஆகும். பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை அவர் இன்னமும் உடையவராயிருந்தார். ஆனால் வெகுமதியாக அவருக்குத் திவ்விய ஜீவன் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திவ்விய ஜீவனை அவர் பெற்றவராயிருக்க, பூமிக்குரிய ஜீவனுக்கான அந்தப் பூமிக்குரிய உரிமையையும்கூட அவர் உடையவராயிருந்தார் மற்றும் அதை அவர் விருப்பம் போல் கையாள முடிந்தவராய்க் காணப்பட்டார். அது தேவனுடைய கரங்களில் காணப்பட்டது; "பிதாவே, உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்." இதை அவர் யார் யாருக்கேனும் பயன்படுத்தினாரா? இல்லை! இயேசு திவ்விய ஜீவனுக்கான உரிமையினை உடையவராயிருந்தது போன்று, அவர் தம்முடைய பூமிக்குரிய உரிமைகளையும் இன்னமும் உடையவராயிருந்தார். பூமிக்குரிய ஜீவனுக்கான தம்முடைய உரிமைகளை அவர் உலகத்திற்குக் கொடுத்துவிடுவதற்கு நோக்கம் கொண்டுள்ளார். பூமிக்குரிய ஜீவனுக்கான இந்த உரிமைகளை ஆதாமுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் வழங்குவதே, இந்த ஏற்பாடுகளைப் பண்ணினதற்கான தேவனுடைய நோக்கமாகக் காணப்படுகின்றது. ஆனாலும் இப்பொழுதல்ல! அவர் இப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய சபையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கின்றார். இயேசுவின் மூலமாய் பிதாவினிடத்திற்கு வருகிற நம் அனைவருக்கும், இயேசு "உத்தரவாதமாகிறார்." இப்படியே அவர் - தங்கள் சரீரங்களை "ஜீவபலிகளாக" ஒப்புக்கொடுத்துள்ள அனைவருக்கும் இருக்கின்றார். இவர்களைத் "தம்முடைய சொந்த புண்ணியத்தின் வாயிலாக ஏற்றுக்கொண்டு நிறுத்துகின்றார். புண்ணியத்தினால் சாற்றப்படுவதற்கும் (imputation), அது கொடுத்துவிடப்படுவதற்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது. ஒருவேளை நீங்கள் என்னிடம் பணம் கொஞ்சம் கேட்க, மற்றும் நான் உங்களுக்குக் காசோலை ஒன்றின் பின்னால் சம்மதம் எழுதிக்கொடுத்தால், அந்த காசோலையை நீங்கள் வங்கியில் சமர்ப்பித்து, அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இப்படியே இயேசுவின் புண்ணியத்தினுடைய விஷயத்திலும் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லலாம். அவர் தமது பூரண முழுமையினுடைய புண்ணியத்தினை நமக்குத் தரிப்பிக்கின்றார் அல்லது சாற்றுகின்றார். மற்றும் இப்படியாக நாம் நம்மைத் தேவனுக்கு முன்பு பரிசுத்தமான, ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான நிலைமையில் ஒப்புக்கொடுத்திடலாம்.

## ஜீவ-உரிமைகள் - ஆதாமுக்கு ஏதேனும் உள்ளதா?

**கே 446:1 :: கேள்வி (1912) - 1 -** ஆதாமுக்கு தற்போது ஜீவ உரிமைகள் ஏதேனும் உள்ளதா?

**பதில்.** இல்லை, உண்மையான பொருளில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கொஞ்சம் பேர்களைத் தவிர, ஆதாமுக்கோ அல்லது அவனுடைய பிள்ளைகள் எவருக்கும் தற்போது ஜீவ உரிமைகள் கிடையாது. "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்". கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய நிபந்தனைகளின் கீழ் வந்திருக்கிறவர்களைத் தவிர, ஜீவன்-உரிமைகள் யாருக்கும் இல்லை. முற்பிதாக்களுக்குக் கூட இன்னும் ஜீவன்-உரிமைகள் இல்லை. உரிய நேரம் வரும் போது, இவர்கள் முதலாவதாக ஆசீர்வாதங்களைப் பெறுபவர்களாகவும், தேவனுடன் இணக்கமாக வருகிறவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் ஆயிரம் வருஷங்களின் முடிவு வரையில் அவர்களுடைய ஜீவன்-உரிமைகளைப் பெறமாட்டார்கள். இந்த ஆயிரம் வருஷங்களின் முடிவில் எல்லோரும் அவர்களுடைய ஜீவன்-உரிமைகளைப் பெறுவார்கள். நம்மைத் தயார் செய்வதில் கர்த்தர் இயேசுவின் பங்கு இருந்தது. ஆனால் நியாயாதிபதியாகிய

தேவன் ஒருவரே நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். அவருடைய பிள்ளைகளாகப் போகிறவர்கள் எல்லோருக்கும் அவர் பிதாவாக இருக்கிறார். ஆகவே ஆதாமுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் தற்போது ஜீவன்-உரிமைகள் கிடையாது. அதற்கான ஏற்பாடு மட்டும் நடந்து இருக்கிறது. மகத்தான திட்டம் நிச்சயமாக வெளிப்பட்டு, வளர்ச்சி பெற்று நிறைவேற்றப்படும். "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே" என்ற வார்த்தைகளின் சத்தம் வெளிப்பட்டவுடனே, அந்த நேரம் வரும். அப்பொழுது இணக்கமாக இருப்பவர்கள் தங்களுடைய ஜீவன்-உரிமைகளைப் பெறுவார்கள். ஆதாம் தற்போது ஜீவன்-உரிமைகள் பெற்றிருக்கவில்லை, ஆனால் அவனுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்கும் அந்த நேரம் வந்து கொண்டு இருக்கிறது என்று மறுபடியும் நான் சொல்கிறேன்.

## ஜீவ-உரிமைகள் - ஆதாமினுடையது சபைக்கு சுமத்தப்படுகிறதா?

**கே 446:2 :: கேள்வி (1912) - 2 -** ஆதாமினுடைய ஜீவன்-உரிமைகள் சபைக்கு சுமத்தப்படுகிறது என்று எந்த பொருளிலும் சொல்வது சரியாக இருக்குமா?

**பதில்.** இல்லவே இல்லை. சுமத்துவதற்கு ஆதாம் ஜீவன்-உரிமைகளை உடையவனாக இல்லை. அனைத்தும் இழக்கப்பட்டு விட்டன. ஜீவன்-உரிமைகள் ஒரு துகள் கூட ஆதாமுக்கு விடப்படவில்லை. ஆகவே, சுமத்துவதற்கோ, அல்லது, யாருக்கும் கொடுப்பதற்கோ அவனிடம் ஒன்றுமில்லை. ஆகவே தன்னிடம் ஒன்றுமில்லாத நிலையில், அவன் மற்ற எவருக்கும் அவைகளை சுமத்த முடியாது என்பது நிச்சயத்தன்மையாக உள்ளது.

## ஜீவ-உரிமைகள் Vs ஜீவன்

**கே 446:3 :: கேள்வி (1913) - 3 -** நம்முடைய கர்த்தர் மனுக்குலத்திடமிருந்து சாபத்தை எடுத்து விட்டு, ஆதாமில் இழந்த ஜீவன் மற்றும் ஜீவன்-உரிமைகள் மனுக்குலத்தாருக்குத் திரும்பவும் பெற்றுத்தரப்படும் என்று சொல்லுவது சரியா? அல்லது, ஆதாமின் பாவத்தின் மூலமாக இவைகள் எப்போதும் இழக்கப்பட்டு விட்டன என்றும், இரண்டாம் ஆதாமாக, கிறிஸ்து மனுக்குலத்திற்கு ஜீவனையும், ஜீவன்-உரிமைகளையும் கொடுப்பார் என்று சொல்வது மிகவும் சரியா?

**பதில்.** இது எந்த முறையில் சொன்னாலும் மிகச் சிறிய வித்தியாசத்தைக் கொண்டுள்ளதாக நான் நினைக்கிறேன். இந்த விஷயத்தை உயிர்த்தெழுதல் போன்றும், அல்லது, புதிய சிருஷ்டிப்பு போன்றும் நாம் பேசலாம். ஒரு பொருளில், இது உண்மையாக ஒரு புதிய சிருஷ்டிப்பு ஆகும். வேறொரு பொருளில், அங்கே முன்பு இருந்தவைகள் இப்போது எழும்பிக் கொண்டு இருக்கின்றன என்றும் கூறலாம். ஒரு பார்வையில், ஆதாமில் இழந்தது திரும்பி கொடுக்கப்பட இருக்கிறது. வேறொரு பார்வையில், ஆதாம் தன்னுடையதை எப்போதும் இழந்து விட்டான். ஆகவே, இது முழுவதும் நாம் பார்க்கும் பார்வையைப் பொருத்து உள்ளது.

## ஜீவ-உரிமைகள் - ஜீவிப்பதற்கான உரிமை.

**கே 446:4 :: கேள்வி (1916-Z) - 4 -** "ஜீவிப்பதற்கான உரிமை" மற்றும் "ஜீவ-உரிமைகள்" ஆகிய வார்த்தைகள் அர்த்தப்படுத்துவது என்ன? இவ்விரண்டு பதங்களுக்கு இடையிலான வித்தியாசம் என்ன?

**பதில்.** தேவனுடன் இசைவாய்க் காணப்படுவதன் மூலம் ஜீவிப்பதற்கான உரிமையினை ஒருவர் பெற்றுக்கொள்ளலாம்; காரணம் தம்முடைய அறிவுடைய சிருஷ்டிகள் யாவும், தம்முடைய திவ்விய பிரமாணங்களுக்கும், அதன் நிபந்தனைகளுக்கும் இசைவாய் ஜீவிக்கும் பட்சத்தில், தொடர்ந்து ஜீவிக்கலாம் என்று தேவன் ஏற்பாடு பண்ணியிருந்தார். ஆகையால் ஜீவிப்பதற்கான உரிமை என்பது ஆரம்பத்தில் தகப்பனாகிய ஆதாமினால் அனுபவிக்கப்பட்ட சிலாக்கியமாய்க் காணப்படுகின்றது. அவர் ஜீவிப்பதற்கான உரிமை ஒன்றினைப் பெற்றவராயிருந்தார் மற்றும் அவர் பாவம் செய்யாதிருந்தாரானால், அந்த உரிமையானது அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருக்காது. இயேசும்கூட ஜீவிப்பதற்கான உரிமை ஒன்றினைப் பெற்றிருந்தார். உலகத்திற்குள் வருவதற்கு முன்பு மாத்திரமல்லாமல், மனிதனாகிய

இயேசுவான பிற்பாடும், அவர் அந்த உரிமையினை உடையவராயிருந்தார். அந்த உரிமையின் காரணமாகத் தான் அவரால் தம்முடைய ஜீவனை ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்காகப் பலியாய்க் கொடுத்து வைக்க முடிந்தது. ஞானஸ்நானத்தின்போது அவர் தம்முடைய அர்ப்பணிப்பைப் பண்ணின பிற்பாடு, அவர் ஒரு மனிதனாக ஜீவிக்கும் உரிமை இல்லாதவராயிருந்தார்; காரணம் என்னவெனில், ஜீவிப்பதற்கான அந்த உரிமையினை அவர் விட்டுக்கொடுத்துவிட்டவராகக் காணப்பட்டார். ஆனால் ஏதோ சில திவ்விய பிரமாணத்தை மீறுவதன் மூலமோ, அல்லது தம்முடைய ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை மீறுவதன் மூலமோ தவறாதது வரையிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு புதுசிருஷ்டியென ஜீவிப்பதற்கான உரிமையினை உடையவராயிருந்தார். மனுக்குலத்தின் உலகமானது, ஆயிரவருட யுகத்திற்குப் பிற்பாடு, பூரணத்தை அவர்கள் அடைந்த பிற்பாடு, அவர்கள் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவர்களை அவரும் ஏற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்கள் ஜீவிப்பதற்கான உரிமையினை உடையவர்களாய் இருப்பார்கள். தகப்பனாகிய ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக ஆரம்பத்தில் பெற்றிருந்த ஜீவனுக்கான அதே உரிமையினை மனுக்குலம் பெற்றுக்கொண்டவர்களாய் இருப்பார்கள்.

**"ஜீவ-உரிமைகள்"**. இந்த வார்த்தையானது வெவ்வேறு விதங்களில் நாம் பயன்படுத்தக் கூடியவர்களாய் இருப்போம். இவ்வார்த்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தி, அவர் ஜீவ-உரிமைகளை உடையவர் என்று சொல்லுகையில், அவர் ஒரு மனிதனாக தம்முடைய ஜீவனை அர்ப்பணம் பண்ணினபோது, அவர் அந்த ஜீவனைப் பறிகொடுப்பதற்கு ஏதுவாய் உண்மையில் ஏதும் செய்திடவில்லை என்று நாம் சொல்லலாம். அதை ஒப்புக்கொடுத்து வைக்க (lay down) அவர் சம்மதித்திருந்தார். அது நியாயமாய் அவருடையதாகும்; இல்லையேல் மறுபடியும் அந்த உரிமைகளை மற்றவர்களுக்குப் பயன்படுத்துவதற்கென்று அவற்றைப் பெற்றிராதவராகக் காணப்பட்டிருந்திருப்பார், அவரது தனிப்பட்ட நீதியினால் அந்த உரிமையினை அவர் தக்கவைத்துக்கொண்டவராய் காணப்பட்டார். ஆகையால் மனுஷீக ஜீவனுக்கான உரிமை ஒன்றினை அவர் இன்னமும் உடையவராகவே இருக்கின்றார்; காரணம் தம்மிடமிருந்து எடுக்கப்படும்படிக்கு அனுமதித்ததான இந்த ஜீவனை அவர் பறிகொடுத்து இழந்து போகவில்லை. அவருக்கென்று தனிப்பட்ட விதத்தில் இப்பொழுது மனுஷீக ஜீவனோ அல்லது ஜீவ-உரிமையோ தேவைப்படாது என்றபோதிலும், மனித ஜீவிக்கான ஜீவ-உரிமைகளை அவர் இன்னமும் உடையவராய் இருக்கின்றார். அவருக்கென்று இந்த ஜீவ-உரிமைகள் தேவைப்படாததற்கான காரணம், அவர் மேலான ஒன்றைப் பெற்றுக்கொண்டவராக இருக்கின்றார் மற்றும் அவரால் ஒரே நேரத்தில் இரண்டு ஜீவன்களைப் பயன்படுத்த முடியாது. அவர் திவ்விய ஜீவ-உரிமைகளை உடையவராய் இருக்கின்றார்; ஆனால் அவர் இன்னமும் இந்த மனுஷீக ஜீவ-உரிமைகளைத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றார்; மேலும் இதை அவர் ஆதாமுக்காகவும், அவர் வாயிலாக இழந்துபோகப்பட்டதுமான அனைத்திற்காகவுமான முழுமையான ஈடாக, விலைக்கிரயமாகப் பயன்படுத்திப் பகிர்ந்தளிக்கவிருக்கிறார்.

## லாகோஸ் - லாகோசின் சுபாவம்.

**கே 447:1 :: கேள்வி (1906) - 1 -** இயேசு மாம்சத்தில் வருவதற்கு முன்பு, தேவ சுபாவம் உடையவராக இல்லை என்பதை நிரூபிக்க நமக்கு வேதாகமத்தில் என்ன இருக்கிறது?

**பதில்.** இதற்கான ஆதாரம் மறுபக்கத்தில் இருக்கிறது என்று நான் பதிலளிக்கிறேன். அவர் மாம்சமாவதற்கு முன்பு இயேசு தேவ சுபாவத்தைப் பெற்றிருந்தார் என்பதை நிரூபிக்க நமக்கு வேதாகமத்தில் என்ன உள்ளன? அவர் மாம்சத்தில் வருவதற்கு முன்பு, தேவ சுபாவத்தைப் பெற்றிருந்தார் என்று நிரூபிப்பதற்கு வேதாகம வசனங்கள் இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆனால், அவர் தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருக்கவில்லை என்று தர்க்க ரீதியாக நாங்கள் நிரூபிக்க முடியும். இந்த விஷயத்தில் விவாத பொருத்தம் இதுவே: எல்லா சுபாவங்களிலும் மிகவும் மேன்மையானது தேவ சுபாவம் ஆகும். இது அழியாமை ஆகும். இது பாடுபடவோ அல்லது மரணமடையவோ முடியாது. இதற்கு எந்த உதவியும், வாழ்வாதாரமும் தேவையில்லை. இப்பொழுது, நாம் தேவ சுபாவம் என்று புரிந்து கொள்ளும் அழியாமையை நமது கர்த்தர் இயேசு பெற்றிருந்தாரானால், பிறகு அவர் மரணமடைந்திருக்க முடியாது. அவர் மரணமடையாவிட்டால், அவர் இந்த உலகத்திற்கு வருவதில் என்ன பயன் இருந்திருக்கும்?

ஆகவே அவர் தேவ சுபாவத்தைப் பெற்றிருந்ததில்லை என்பது இந்த விஷயத்தின் வாதத்திற்குப் பொருத்தமாக உள்ளது என்பதை நீங்கள் பார்க்கலாம். அவர் தேவ சுபாவத்தைப் பெற்றிருந்தார் என்பதைக் காண்பிப்பதற்கு வேதாகமத்தில் ஒன்றும் இல்லை. ஆகவே இந்த சுபாவம் பிதா அவருக்கு பெரிதான ஆசீர்வாதமாகவும் வெகுமதியாகவும் கொடுத்தார் என்று புரிந்து கொள்வது நமக்கு சரியானது தான். வேதாகமம் குறிப்பிட்டுச் சொல்கிறது: தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி - ஆதலால் - தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். இப்போது, நமது கர்த்தர் எல்லா சுபாவங்களிலும் மிகவும் மேன்மையான தெய்வீக சுபாவத்தை முன்பே பெற்றிருந்தாரானால், மரணபரியந்தம் கீழ்ப்படிந்த பிறகு, பிதா எல்லாவற்றிற்கும் மேலாக அவரை எப்படி உயர்த்தியிருக்க முடியும்? இது அவர் முன் இருந்த நிலைக்கு வெறுமனே திரும்பிக்கொண்டு வருவதற்காக இருக்கும். இது மேலான உயர்வாக இருக்காது. அவர் கீழ்ப்படிந்தவராக இருந்ததால், பிதா அவரை எல்லாவற்றிற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

## அரைகள் - உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு.

**கே 448:1 கேள்வி (1910-Z) - 1 -** இந்த வசனம் எதைக் குறிக்கிறது?

**பதில்.** பழங்காலங்களில் தொங்கும் வஸ்திரங்கள் அவர்கள் அணிந்திருக்கும் போது, அரைக்கச்சைகள் இரண்டு நோக்கங்களுக்காகத் தொடர்ந்து அணியப்பட்டன. முதலாவதாக, இது அவர்களுடைய வஸ்திரங்களை இறுகக் கட்டுவதற்காக இருந்தது. உதாரணமாக, சில சமயங்களில் நாம் பாடுகிறோம், "உன்னைச் சுற்றி உன்னுடைய மணவாட்டி அங்கிகளை இறுகக் கட்டு." ஆகவே இந்த அரைக்கச்சை, வஸ்திரங்களை அவற்றின் சரியான இடத்தில் அல்லது, நிலையில் வைத்திருக்க உதவுகிறது. ஆகவே, அவைகள் தோற்றத்தில் ஒழுங்கின்மையாகவோ, அல்லது, நழுவி, கீழே விழுவதாக இருக்காது. பிறகு இரண்டாவதாக, தீவிரமாக வேலை செய்யும்போது, அரைகளில் ஏற்படும் பாதிப்புக்கு, அரைக்கச்சை உபயோகப்படுத்தப்பட்டது. உதாரணமாக, ஒருவர் விறுவிறுப்பான தொழில் செய்யும் போது, ஒரு பாரமான எடையைத் தூக்கும் போது, அல்லது, பாரமான சுமையைத் தூக்கிச் செல்லும் போது, அல்லது, பந்தயத்தில் ஓடும்போது அடிவயிற்றின் தசைநார்கள் செயல்படுவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

நாம் பேசும்போது கூட, அடிவயிற்று தசைகள் சுருங்குவதை நாம் பார்க்கிறோம். இவ்விதமாக இது நமது குரலுக்கு அதிக விசை மற்றும் வலிமை கொடுப்பதாக இருக்கிறது. உடல் உழைப்பு சம்பந்தமான எதிலும் இப்படியாகவே இருப்பதைப் பார்க்க முடிகிறது. இந்த தசைகள் ஒப்பீட்டளவில் திடமாக இருக்கும். ஆகவே தொழிலாளர்கள் மத்தியில் இன்று கூட, இடை வார் (BELT) அணிவது வழக்கமாக இருக்கிறது. அவர்கள் முக்கியமாக கடினமான வேலை செய்யும் போது, அவர்கள் தங்கள் இடை வாரில் வேறு ஒரு முடிச்சு போட்டால், அதாவது, இதை இன்னும் கொஞ்சம் இழுத்து, இடுப்பைச் சுற்றிலும் சிறிது இறுக்கமடையச் செய்யும் போது, அடிவயிற்று தசைகளைத் தாங்கவும், குறைந்த சோர்வில் அதிக வேலையை செய்து முடிக்க உதவுவது இதன் நோக்கமாக இருக்கிறது. அவர்கள் ஓய்வாக இருக்கும் போது, அவர்கள் இடை வாரை தளரச் செய்வார்கள்.

அப்போஸ்தலரின் விசேஷித்த எண்ணமாக இது இருப்பதாக இங்கே தோன்றுகிறது. "உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு". சரீரத்தில் இருக்கிற அரைகள் செயல்படுவதற்குரிய முக்கிய பங்கு உள்ளது. அவைகளைத் தேகப்பயிற்சி செய்யும் நேரத்தில், அல்லது, தேவைப்படும் போது வலுவடையச் செய்ய வேண்டும். அப்படியே நமது மனங்களுக்கும் செய்ய வேண்டும். கர்த்தருடைய ஜனங்களாக இருக்க பக்தியுடன் நம்மை ஈடுபடுத்திக் கொள்பவர்களாகிய நாம், இந்த ஊழியத்தைச் செய்வதற்கு, நமது மனங்கள் வலுவடைய வேண்டும் என்பதை உணருகிறோம். நல்ல தைரியத்துடன் இருக்க நமக்குத் தேவைப்படுகிறது. களைப்பாக இருக்கும் எல்லா மன நிலைக்கு எதிராக நாம் வலுப்படுத்திக் கொள்வது நமக்குத் தேவையாக இருக்கிறது.

நமது மனங்களின் அரைகளைக் கட்டுவதற்கு நாம் மேற்கொள்ளும் போது, நடவடிக்கையில் முன்னேறிச் செல்ல நாம் தீர்மானிக்கிறதைக் குறிக்கிறது. ஓய்வையும்

தளர்ச்சியையும் தள்ளி வைத்து விட்டு, இப்பொழுது நாம் ஒரு முக்கியமான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதால், நம் வசமாயிருக்கும் எல்லா வலிமையும் தேவைப்படுகிறது என்பதை நாம் உணருகிறோம். கர்த்தர் நமக்கு அவருடைய ஊழியர்கள், அவரை பின்பற்றுகிறவர்கள் என்ற முறையில் அளித்திருக்கும் வாய்ப்புகளைப் பற்றிய விஷயத்தில், ஒரு கிறிஸ்தவன் தன்னால் நிறைவேற்ற முடிகிற எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு, கர்த்தருடைய ஊழியத்தில் **தன் ஜீவனை ஒப்புக்கொடுக்கும்** மகத்தான பணி அவனுக்கு முன்பாக உள்ளது. நம்முடைய கணக்கு விபரத்தை சமர்ப்பிக்க நம்மை அவர் கூப்பிடும் போது, நல்ல அறிக்கையை கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நாம் சொல்லலாம், "இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே, அவைகளைக் கொண்டு வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன், அல்லது, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே, வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தேன்".

## அன்பு - அகேப் (AGAPE) Vs பிலதெல்பியா.

**கே 448:2 :: கேள்வி (1909) - 2 -** பிலதெல்பியாவை விட அதிக அன்பை (AGAPE) சேர்க்க வேண்டும் என்று நாம் சொல்லப்படும் போது, நாம் சகோதரர்களிடம் பிலதெல்பியாவை விட உயர்ந்த வடிவிலான அன்பு உடையவர்களாக இருக்க வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துகிறதா?

**பதில்.** அகேப்' அன்பு என்பது, பரந்த அளவிலான அன்பைக் குறிக்கிறதாக நான் புரிந்து கொள்கிறேன். பிலதெல்பியா அன்புடன் நாம் அன்பு கூருகிறோம். ஏனெனில் அவர்கள் சகோதரர்கள் ஆவார்கள். நாம் அவர்களுடைய தனித்தன்மைகளை அன்புகூராமல் இருக்கலாம், அவர்களுடைய எல்லா அம்சங்களையும் அன்பு கூராமல் இருக்கலாம். ஆனால், அவர்கள் கறுப்பு அல்லது வெள்ளை, அடிமை அல்லது சுயாதீனர் - எப்படியிருந்தாலும் அவர்களை சகோதரர்களாக அன்பு கூருகிறோம். ஏனெனில் அவர்கள் சகோதரர்கள், ஒரே பந்தயத்தில் தோழர்கள். ஆகவே அகேப் அன்பை நாம் பெறுகிறோம் என்றால், நாம் மற்ற எல்லோரையும் அன்புகூருகிறோம் என்பதை இது அர்த்தப்படுத்துவதாய் இருக்கிறது.

## அன்பு - பூரண அன்பாகிய குறியீட்டை அடைதல்.

**கே 449:1 :: கேள்வி (1909) - 1 -** பரம அழைப்புக்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் அன்பின் இலக்கினை அடைய வாய்ப்புள்ளதா மற்றும் அது எப்படி?

**பதில்.** ஒவ்வொரு மனுஷ ஜீவியினாலும் அந்த இலக்கினை அடைய முடியும் மற்றும் சிறுமந்தையிலோ அல்லது திரள்கூட்டத்திலோ அல்லது திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதம்பெறும் வகுப்பாரிலோ உள்ள அங்கத்தினனென நித்திய ஜீவனை அடைய ஒவ்வொருவனும் எந்த ஒரு ஜீவ தளத்திலும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் யார் ஒருவரும் - - பூரண அன்பின் இலக்கிற்கு அல்லது இந்நிலைக்கு வந்தாக வேண்டும், ஏனெனில் இப்படி இல்லாத யாருக்கும் தேவன் நித்திய ஜீவனைக் கொடுக்கிறதில்லை. அன்பின் பிரமாணம் என்பது தேவனால் அங்கீகரிக்கப்படும் மிக அடிப்படையான காரியமாகும். ஆவியின்படி நீங்கள் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள் மற்றும் யூதன் மாம்சத்தில் செய்ய வேண்டியவைகள் அனைத்தையும் நீங்கள் ஆவியில் செய்து ஜீவிக்கும்படிக்குக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். "உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், ஆத்துமாவோடும் மற்றும் உன் முழுப்பலத்தோடும் அன்புகூருவாயாக" என்று எழுதப்பட்டிருப்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். "இதைவிடக் குறைவாகச் செய்தால், போதாதா?" என்று நீங்கள் கேட்கலாம். இல்லை என்பதே பதில். "ஓ! ஆனால் எனக்கு மாம்சத்தின் பெலவீனங்கள் காணப்படுகின்றன மற்றும் நான் செய்யவேண்டிருப்பவைகளை என்னால் செய்ய இயலவில்லை" என்று நீங்கள் சொல்லலாம். நம்மைக் கர்த்தர் இப்பொழுது நம்முடைய மாம்சத்தின்படி நியாயந்தீர்க்காமல், நம்முடைய இருதயத்தினுடைய உணர்வுகளின் அடிப்படையில் நியாயந்தீர்த்துக்கொண்டிருக்கிறார் என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். ஒருவேளை உங்கள் முழு ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடுமுள்ள கர்த்தருக்கான அன்பினால் உங்கள் இருதயம் நிறைந்து காணப்படுமானால் - - அப்போது நீங்கள் பூரண இலக்கினுடைய அந்த அம்சத்தை எட்டியிருக்கின்றீர்.கள் நீங்கள் விரும்பினாலும்,

இதைக்காட்டிலும் அதிகமாய்ச் செய்ய முடியாது மற்றும் குறைவாயும் நீங்கள் செய்யக்கூடாது. உங்கள் இருதயம் இப்படியாக இல்லையெனில், நீங்கள் சிறுமந்தையின் அல்லது திரள்கூட்டத்தின் அங்கத்தினராய் இருப்பதில்லை; மாறாக இத்தகையவர்கள் இரண்டாம் மரணத்திற்குள் செல்கின்றவர்களாய் இருப்பார்கள். அனைவருமே இந்தத் தரநிலையைத் தங்கள் இருதயங்களில் எட்டிட வேண்டும்; இல்லையேல் அவர்கள் இரண்டாம் மரணத்தில் மரித்துப்போகின்றவர்களாய் இருப்பார்கள்.

"உன்னை நீ அன்புகூருவதுபோன்று, உன் அயலானையும் அன்புகூருவாயாக" எனும் இரண்டாம் கற்பனையைக் குறித்து என்ன சொல்வது? இது மனுக்குல தொடர்புடையதாகும்

எவ்வாறு? வியாபாரத்தில் அயலானிடமிருந்து இலாபம் ஈட்டிக்கொள்ள வேண்டுமா அல்லது அவனைச் சாதகமாய்ப் பயன்படுத்தி, இலாபம் ஈட்டிக்கொள்ள வேண்டுமா? இல்லை. அயலான் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புவீர்களோ, அப்படியாகவே நீங்களும் நடத்த வேண்டும். ஆனால் அதற்கென்று நீங்கள் அயலானை நியாயந்தீர்க்க வேண்டும் என்றாகாது. ஒருவேளை உங்கள் அயலான் தன்னுடைய வயல், உங்கள் வயலைக் காட்டிலும் சிறந்தது என்று எண்ணுவானானால், மற்றும் நீங்கள் வியாபாரம் ஒன்றைச் செய்வீர்களானால், நீங்கள் இருவருமே உங்கள் கண்களைத் திறந்து வைத்து, காரியத்திற்குள் செயல்படுங்கள்; ஆனாலும் உங்கள் அயலானின் சூழ்நிலையை உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திவிடுதல் என்பது அன்பான செய்கையாய் இராது. சபை இதைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்ய வேண்டும். எப்படி? அது பின்வருமாறு, என் அன்பு சகோதரனே: நியாயப்பிரமாணமனது உங்களிடத்தில் ஒருபோதும் பலியினை எதிர்ப்பார்க்கிறதில்லை, உங்களை நீங்கள் அன்புகூருவதுபோன்று உங்கள் அயலானை நீங்கள் அன்புகூர மாத்திரமே எதிர்ப்பார்க்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் இதைக் காட்டிலும் அதிகமானதையே பிதாவானவர், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாய் இருப்பவர்களிடத்தில் எதிர்ப்பார்க்கின்றார்; அதாவது உங்கள் பூமிக்குரிய உரிமைகளை நீங்கள் பலிசெலுத்தவும், அவற்றைக் கையளித்துவிடவும் அவர் எதிர்ப்பார்க்கின்றார். இயேசு அப்படியே செய்தார் மற்றும் அவர் செய்த காரியமானது, நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்த்ததைக் காட்டிலும் அதிகமான செய்கையாய் இருந்தது. அவர் தம்முடைய பூமிக்குரிய உரிமைகளையும், அவரின் நலனுக்கடுத்தவைகளையும் பலியில் கொடுத்துவிட்டார். "நாங்கள் எங்கள் பூமிக்குரிய நலன்களைப் பலி செலுத்துகின்றோம்; அவை விலையேறப்பெற்றவைகளென நாங்கள் கருதுகிறதில்லை" என்று நீங்கள் சொல்லலாம். அது சரிதான்; அவைகளை நீங்கள் பலிசெலுத்தியாக வேண்டும்.

## அன்பு - அன்பை எப்படி வெளிப்படுத்துவது?

**கே 449:2 :: கேள்வி (1913) - 2 -** இங்கிலாந்தில் உள்ள அன்பான சகோதரர்கள் மற்றும் விசேஷமாக லண்டனில் உள்ளவர்கள் உங்களை அன்புகூருகிறோம். இதை உங்களிடம் அதிகமாக திறம்பட வெளிப்படுத்துவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா?

**பதில்.** உங்களுக்கு நினைவிருக்கும், கர்த்தர் கூறினார், "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." என்னுடைய அருமையான நண்பர்களே, நாம் அவருடைய அன்பில் இவ்விதமாக நிலைத்திருந்தால், நாம் பிதாவினுடைய அன்பில் நிலைத்திருப்போம்.

நான் உங்களை அன்பு கூறுகிறேன். நீங்கள் அதை அறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உங்களை அன்பு கூறுகிறேன். இந்த அன்பு கிறிஸ்துவின் மணவாட்டி அங்கங்கள் எல்லோரிடமும் பரஸ்பரம் இருக்கிறது. வேறு விதமாக இருக்க இயலாது. அவரால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களை அன்புகூராமல், நம்மை ஜெநிப்பித்த அவரை நாம் எப்படி அன்புகூர முடியும்? (1யோவான்.5:1.) எஜமானரின் ஆவியில் அதிகமதிகமாக ஒருவருக்கொருவர் அதிகமதிகமாக அன்பு கூர வேண்டும். மற்ற ஒவ்வொருவருடனும் நமது அன்பு முற்றிலும் முழுமை அடையும் போது, திரைக்கு அப்பால் நாம் எல்லோரும் பூரணமடையும் வரைக்கும் நாம் இதைச் செய்ய வேண்டும்.

## அன்பு -என்ன ஆதாரம்?

**கே 450:1 :: கேள்வி (1913) - 1 -** நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறோம் என்பதற்கும், நாம் தேவனுடைய குமாரர்களாக இருக்கிறோம் என்பதற்கும் முக்கியமான ஆற்றல்மிக்க ஆதாரம் என்ன?

**பதில்.** இது சம்பந்தமாகவே அப்போஸ்தலர் நமக்கு சரியாகச் சொல்லுகிறார், "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்". அருமையான நண்பர்களே, அது மிகவும் அத்தியாவசியமான சோதனை ஆகும். நாம் மனதில் இருத்திக்கொண்டு, நன்றாக செயல்பட வேண்டும். சகோதரர்களிடம் நாம் அன்புகூருவதை இழந்தால், அது ஒரு சாதகமான அடையாளம் இல்லை. அவர்கள் நிறம், பாலினம், அல்லது வாழ்வின் அந்தஸ்து, பணக்காரர் அல்லது ஏழை, அடிமை அல்லது சுயாதீனர் என்று எப்படியிருந்தாலும், தேவனுடைய மற்ற குமாரர்கள் எல்லாரையும் நீங்கள் அன்புகூர வேண்டும் என்பது சிறந்த அடையாளம் ஆகும். நாம் அனைவரும் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். கர்த்தரின் குடும்ப ஒவ்வொரு அங்கமும் அவருடைய குடும்பத்தின் ஒவ்வொரு மற்ற அங்கத்திற்கும் உண்மையாக இருக்க வேண்டும். நாம் எஜமானரின் ஆவியை உடையவர்களாக இருக்க வேண்டும். இதை அடைவதற்கு தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறவர்கள் எல்லோரையும் நாம் அன்புகூர வேண்டும். "பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்." (1யோவான் 5:1.)

## அன்பு - பூரணமானது, பயத்தை புறம்பே தள்ளும்.

**கே 450:2 :: கேள்வி (1913-Z) - 2 -** இந்த வசனத்தில் எந்த வகையான பயம் குறிக்கப்பட்டுள்ளது, "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்." - - (1யோவான் 4:18.)

**பதில்.** நிச்சயமில்லாத்தன்மையினால் பிறப்பிக்கப்படும் மன நிலை தான் பயம். நாம் பயப்பட வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. சில விஷயங்களுக்கு நாம் பயப்படத் தேவையில்லை. எதிராளியானவன் மனுஷ சந்ததியின் விழுந்த நிலைமையை சாதகப்படுத்திக் கொண்டு, அவர்களை பயத்துக்குள்ளாக்குகின்றான். எல்லோரும் சுபாவத்தில் பாவிகளாக இருக்கிறார்கள் என்பதை மனுக்குலம் உள்ளுணர்வாக அறிகின்றனர். பாவத்திற்கு தண்டனை உள்ளது. பாவத்தின் விளைவாக உள்ள இந்த பயத்தை சாதகமாக்கிக் கொண்டு, எதிராளி தேவனைப் பற்றி பயங்கரமான நிலையை அவர்களிடத்தில் சிறிது சிறிதாகப் புகட்டுகிறான். தேவன் அநியாயமாக இருப்பவர் என்றும், பாவத்திற்கும் பாவிக்கும் அவருடைய செயல்கள் கடுமையாக இருக்கும் என்றும், இவர்களுக்காக நித்திய வேதனை உள்ள இடத்தை ஆயத்தம் செய்திருக்கிறார் என்றும் அவர்களுடைய குறைபாடுள்ள மனங்களில் உருவகம் செய்திருக்கிறான்.

நாம் தேவனைப் பற்றிய தெளிவான அறிவுக்கும், இந்த பிரபஞ்சத்தை அவர் கட்டுப்படுத்தும் கொள்கைகளையும் படிப்படியாக அறிய வரும் போது, நாம் இந்த சரியில்லாத பயத்தை விட்டு விடுவோம். இதற்குப் பதிலாக, தேவனைப் பற்றிய அன்பும், அவர் நம் மேல் வைத்திருக்கும் அன்பின் உணர்வும் நமக்கு வரும். அவர் மனுக்குலத்தை அன்பு கூருவதையும், அவர்கள் நித்திய ஜீவனை அடைவதற்கான வாய்ப்பை பெறுவதற்காக அவர் செய்திருக்கும் ஏற்பாட்டையும் நாம் கிரகிக்கும் அளவைப் பொருத்து, நாம் அவர் மேல் கொள்ளும் அன்பு பெருகுகிறது. நாம் அவரை பூரணமாக அன்புகூரும் நிலைக்கு வந்திருக்கும் போது, பயங்கரம் என்ற உணர்வின் எல்லா பயமும் புறம்பே தள்ளப்படுகிறது. எனினும், நம்முடைய அறிவும், அன்பும் தேவனுக்கு வெறுப்பூட்டும்படி பயத்தை புறம்பே தள்ளிவிடக்கூடாது. ஏனெனில் **சரியான பயம்** (பக்தி) ஒருபோதும் புறக்கணிக்கப்படக்கூடாது. பக்தியுடன் கூடிய அன்பு அதிகம் இருந்தால், சரியான பயம் அதிகம் உடையவர்களாக நாம் இருப்போம். ஒருவர் தம் மேல் அன்புகூர்ந்து, பாராட்டும் ஒரு சகோதரனையோ அல்லது அயலானையோ உள்ளத்தில் புண்படுத்துவதற்கு பயப்படாமல் இருப்பாரா? நமது நீதியும் ஞானமும் அன்பும் கொண்ட தேவனைப் புண்படுத்துவதற்கு நாம் மிக அதிகமாகப் பயப்பட வேண்டும் அல்லவா?

"பூரணமான அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" என்ற கொள்கையானது, கணவனுக்கும் மனைவிக்கும் இடையில், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே இயங்க வேண்டும்.

அவர்கள் பூரண அன்பு கொண்டவர்களாக இருந்தால், மனைவி தன்னுடைய கணவனுக்குப் பயப்பட்டால், அவள் தான் இருக்கும் விதமாக இல்லாமல், சந்தோஷமாக இருக்க முடியாது. அப்படியே, பெற்றோர்களில் ஒருவருக்கோ அல்லது இருவருக்கும் பயப்படுகிற பிள்ளைகள், உண்மையான ஏற்ற பாசத்துடன் பெற்றோர்களிடம் அன்புகூர முடியாது. ஒவ்வொருவரும் மற்றவரை உள்ளத்தால் புண்படுத்தவோ அல்லது குற்றஞ்சாட்டவோ கூடாது. தம்முடைய விவேகமுள்ள சிருஷ்டிகள் அனைவரும் தேவன் பிரியப்படுகிற பூரண அன்பை உடையவர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும்.

## லூசிஃபர் - அவனுடைய முந்தைய வேலை.

**கே 451:1 :: கேள்வி (1913) - 1 -** தேவனுடைய பூமியின் சிருஷ்டிப்பு அல்லது சிருஷ்டிப்பின் இராஜ்யத்திற்கு மேற்பார்வை அல்லது கண்காணிப்பு லூசிபருக்குக் கொடுக்கப்பட்டதற்கான விவரம் வேதாகமத்தில் ஏதாவது உள்ளதா?

**பதில்.** மனுஷீகம் அல்லது பூமி விஷயத்தில் எல்லை அல்லது அதிகார வரம்பு கொடுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டும் விதமாக வேதாகமத்தில் எதுவும் இல்லை என்பதை நாம் அறிகிறோம்.

## இச்சை - அர்த்தம் மாறியுள்ளது.

**கே 451:2 :: கேள்வி (1905) - 2 -** "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி" - "இச்சை" என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

**பதில்.** "இச்சை" என்ற நமது வார்த்தையின் அர்த்தம் பெருமளவிற்கு மாறியுள்ளது. கிரேக்க மொழியில் இதற்கு மிகவும் பரந்த அளவில் அர்த்தம் உள்ளது. இன்று இந்த சொல், ஒழுக்கக் கேடான ஆசைகளை, மாம்சீக இச்சைகளை அர்த்தப்படுத்தும் விதத்தில் கட்டுப்படுத்தப்படுகிறது. மூலத்தில் இந்த சொல் பூமிக்குரிய ஆசைகள் எதையும் அர்த்தப்படுத்துவதாக இருந்தது - உதாரணமாக, "அதிகாரத்திற்கு இச்சைப்படுவது".

## மனுஷன் - மனுஷனாகிய கிறிஸ்து இயேசு.

**கே 451:3 :: கேள்வி (1910) - 3 -** 1தீமோ.2:5,6ல் உள்ள வார்த்தைகள், "மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" என்று யாரை நாம் புரிந்து கொள்ளுகிறோம்?

**பதில்.** என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு சபையைக் குறிக்கிறதில்லை என்று நான் பதிலளிக்கிறேன். தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு, நான் புரிந்து கொண்டபடி, மனுஷனாக இருந்த நமது கர்த்தர் இயேசுவை நேரடியாகச் சுட்டிக்காட்டுகிறது. ஞானஸ்நானத்தில் அங்கே தம்மை ஒப்புக்கொடுத்தார். தேவன் அவரை அங்கே தேவனுக்கும் உலகத்திற்கும் இடையே மத்தியஸ்தராக ஏற்றுக்கொண்டார். அங்கே அவர் மத்தியஸ்த பணியை செய்தார் என்பதற்காக அல்ல; இல்லை, இல்லவே இல்லை. ஆனால் அங்கே அவர் மத்தியஸ்தர் ஆனார். அவர் குழந்தையாக, மத்தியஸ்தராக பிறந்தார் என்பது உண்மை தான். ஆனால் அப்பொழுது, அவ்வாறு அவர் அங்கீகரிக்கப்படவில்லை. அவர் அர்ப்பணிப்புக்குப் பிறகு மத்தியஸ்தராக தேவனால் அங்கீகரிக்கப்பட்டார். இவரில் தான் நான் பெருமகிழ்வு கொள்கிறேன். ஏன்? அவர் பிரதான ராஜாவாக, பிரதான ஆசாரியராகப் போகிறவர். அவர் ராஜாவாகவும் ஆசாரியராகவும் அவர் என்ன செய்வார்? அவர் தேவனுக்கும் உலகத்துக்கும் இடையே மத்தியஸ்தம் பண்ணுவார். அவர் வெற்றிகரமாக மத்தியஸ்தம் பண்ணுவாரா? ஓ, ஆம், "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும் - - - உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்." இவர் மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக தம்முடைய நிலையை எப்பொழுதும் தொடருவாரா அல்லது ஏதாவது அர்த்தம் கொள்ளும் விதத்தில், அவர் சபையுடன் இதை பங்கு கொள்வாரா? தேவனுடைய வார்த்தையின்படி, உலகத்தின் மத்தியிலிருந்து

சபையாகிய ஒரு சரீரம் கூட்டிச் சேர்க்கப்படுகிறது. இது அவருடைய ராஜரீகத்தில் பங்கு கொள்கிறது. அவருடைய அபிஷேகம் அவருடைய சரீர அங்கங்களின் மேல் இறங்கி, அவருடைய சிங்காசனத்தின் மேல் ராஜாக்களாக அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள். பிரதான ஆசாரியனாகிய ஆரோனுடைய சிரசின் மேல் தைலம் ஊற்றப்பட்டு, அவனுடைய அங்கியின் மேலிருந்து கீழே ஓரம் வரை இறங்குகிறதாக சங்.133ம் அதிகாரத்தில் உருவகப்படுத்தியது போல, மாபெரும் பிரதான ஆசாரியராக அவருடைய அபிஷேகத்தில் அவருடைய சரீரமாகப் பங்கு பெறுகிறார்கள். இது கிறிஸ்துவின் சரீரம் முழுவதும் அபிஷேகம் பண்ணப்படுகிறதை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் கிறிஸ்துவாக அல்லது மேசியாவாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், "அபிஷேகம்" என்ற வார்த்தை "கிறிஸ்துவை" அர்த்தப்படுத்துகிறது. ஆகவே, "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஏனெனில் நீங்கள் அந்த அபிஷேகம் பண்ணப்பட்டவரின் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள். மத்தியஸ்தராக அபிஷேகம் பண்ணப்பட்டால், அப்பொழுது நீங்கள் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும்கூட அபிஷேகம் பண்ணப்படுகிறீர்கள். ஆகவே, நீங்கள் ஆயிர வருஷ யுகத்தில் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் மேலான பணியைச் செய்யப் போகும் மாபெரும் மத்தியஸ்தரின் அங்கங்களாக அவருடன் பங்கு பெறுவீர்கள்.

## வெளிப்பாடுகள் - தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்.

**கே 452:1 :: கேள்வி (1915) - 1 -** மாம்சத்தில் தேவனுடைய வெளிப்பாடாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட வகுப்பார் இருக்கிறார்களா?

**பதில்.** தகப்பனாகிய ஆதாமின் மாம்சத்தில் தேவன் வெளிப்பட்டார். ஏனெனில் அவருடைய சொந்த சாயலில் அவர் மனுஷனை உண்டாக்கினார். (ஆதி.1:26; ஆதி.5:1; ஆதி.9:6.) மனுஷன் பாவம் செய்ய உண்டாக்கப்படவில்லை. விழுகையினால் மனுக்குலத்திற்கு பாவம் வந்தது என்று வேதாகமம் விளக்குகிறது. நமது எண்ணங்களின் கணிப்புகளைக் கோணலாக்கியும் புரட்டியும், பாவமும் சுயநலமும் வருவதால், இப்பொழுது, "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10.) என்று வேதாகமம் தெரிவிக்கிறது. தேவன் மாம்சமானவராக இல்லாவிட்டாலும், அவர் மனுஷனை மாம்சத்தில் தம்முடைய சொந்த சாயலில் உருவாக்கினார். மாம்சத்தில் தேவனுடைய வெளிப்பாடாக ஆதாம் இருந்தான். அப்படியே இயேசுவும் பிதாவுடன் தமக்கிருந்த பரலோகத்துக்குரிய, ஆவிக்குரிய மகிமையை விட்டு உலகத்தில் வரும்போது, அவர் மாம்சத்தில் தேவனுடைய வெளிப்பாடாக இருந்தார்.

தேவன் நிச்சயமாக, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு எல்லா மனுஷ மாம்சீகத்தில் வெளிப்படுத்தப்படுகிறார்; ஆனால் தேவனுடைய மூல சாயலின் அளவு விகிதம் இழந்து போயிருக்கிறது. மனுஷர்கள் தேவனுடைய சாயலில் இருக்கிறதில்லை - மாம்சத்தில் தேவனுடைய வெளிப்பாடாக இருக்கிறதில்லை. ஆனால், நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறதினால், நாம் புதிய சிருஷ்டிகளானால், அப்போஸ்தலர் தெரிவிக்கிறபடி, நாம் புதிய சிந்தை உடையவர்களாக இருக்கிறோம். நமது சிந்தைகள் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படுகிறது; நம்முடைய விருப்பங்கள் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய விருப்பத்தை தேவனுடைய சித்தத்திற்கு சரணடையச் செய்வதின் காரணமாக, அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார், நாம் தெளிந்த புத்தியுள்ள ஆவியை படிப்படியாகப் பெறுகிறோம். நாம் தெளிந்த சரீரங்களை உடையவர்களாக இல்லை, ஆனால் நமது சிந்தைகள் தேவனுடைய சிந்தையுடன் இணக்கமாக இருக்கிற காரணத்தால், அதிகமதிகமாக தெளிந்தவைகளாகின்றன. தேவனுடைய சிந்தை தெளிந்த சிந்தை ஆகும். நம்முடைய சிந்தை அவருடைய சிந்தைக்கு கீழ்ப்படிதலாக இருக்கும் போது, நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாகிறோம். கர்த்தருடைய ஆவியினால் வழி நடத்தப்படுகிற எவரும் கர்த்தருடைய சிந்தை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு முன்பு இருந்ததை விட, அவர்களுடைய மாம்சத்தில் தேவன் மிக அதிகமாக வெளிப்படுவார். இந்த புதிய சிந்தை, கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ளும்.

ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் கர்த்தருடைய ஆவியைப் பெறும் அளவு விகிதத்தைப் பொருத்து, வளர்ச்சி பெற்று, தன்னுடைய சிந்தையில் அதிகமதிகமாக தெளிவு பெறுகிறான் என்று

சொல்வது மிகவும் பொருத்தமான அறிக்கை என்று நாம் பார்க்கிறோம். அவன் தேவனுடைய நேச குமாரனின் நகலாக படிப்படியாக மாறி, இவ்விதமாக பிதாவின் நகலாகிறான். கிறிஸ்துவின் சாயலில் வளரும் கிறிஸ்தவன் மாம்சத்தில் தேவனுடைய வெளிப்பாடாக அதிகமதிகமாக ஆகிறான். (2தீமோ.1:7; எபி.1:3.)

## வாசஸ்தலம் - ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுதல் அல்லது ஸ்தலத்திற்கு சீஷர்களை ஆயத்தம் பண்ணுதல்.

**கே 452:2 :: கேள்வி (1909) - 2 - (யோவான்.14:2.)** “என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்குக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.” கிறிஸ்து சீஷர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிறாரா? அல்லது, அந்த ஸ்தலத்துக்கு அவர்களை ஆயத்தம் பண்ணுகிறாரா?

**பதில்.** என்னுடைய மனதில் இந்த உருவகம் தான் உள்ளது. நமது பரலோக பிதா தம்முடைய திட்டத்தில் அநேக வெவ்வேறு ஏற்பாடுகள் அல்லது பகுதிகளை உடையவராயிருக்கிறார். கேரூபீன்களின் ஒழுங்கு முறை அல்லது துறை, சேராபீன்கள் என்று வேறு ஒரு ஒழுங்கு முறை மற்றும் தூதர்களுக்கான ஒரு ஏற்பாடு என்று இருக்கின்றன. பூமிக்குரிய மனுஷ ஏற்பாட்டில் மனுஷனுக்காக இது உண்டாக்கப்பட்டது. ஆனால், தேவன் வளர்ச்சி செய்ய விரும்பும் புதிய சிருஷ்டிக்காக தேவனுடைய பிரபஞ்சத்தில் இன்னும் ஸ்தலம் இருக்கவில்லை. ஆகவே நமது கர்த்தர் கூறினார், “ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்”. “அவரோடே கூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்” என்று வாசிக்கிறது போல, நாம் அவரோடே கூட பிரவேசிக்க முடியுமாறு செய்திருக்கிறார். அவர் அப்போது தம்முடைய பலனை புதிய உடன்படிக்கையின் கீழ் யூதர்களுக்கு பிரயோகித்திருந்தால், ஆசீர்வாதம் அந்த வழியில் சென்றிருக்கும். நமக்கு எந்தவிதமான இடமும் இல்லாமல் போயிருக்கும். ஆனால் அவர் நமது சார்பில் பலனை பிரயோகம் பண்ணினார். அவருடன் பலியிடுவதற்கான சந்தர்ப்பத்தையும், அவருடைய உன்னத சுபாவத்தில் பங்கு பெறுவதையும் நமக்கு அளித்திருக்கிறார். அந்த ஸ்தலத்திற்காக நம்மை ஆயத்தப்படுத்தியும் வருகிறார் என்பதும் உண்மையாகும்.

## வாசஸ்தலங்கள் - பிதாவின் வீட்டில் அநேகம் உள்ளன.

**கே 453:1 :: கேள்வி (1911) - 1 -** “என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு”. இதற்கு அர்த்தம் என்ன?

**பதில்.** நமது பிதாவின் வீடு, விரிவான பொருளில் பார்க்கும் போது, பிரபஞ்சத்தையும், அவருடைய பெரிய குடும்பத்தின் வெவ்வேறு அங்கங்களையும் குறிக்கிறது. அவருடைய பெரிய குடும்பத்தின் ஒரு பகுதியை தூதர்களின் தளத்தில் வைத்திருக்கிறார். எத்தனை உள்ளது என்று நாம் அறியவில்லை; அவருடைய குடும்பத்தில் சேராபீன்கள் மற்றும் கேரூபீன்களாகிய வேறொரு பகுதி உள்ளது. அவர்களைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. ஆவிக்குரிய குடும்பத்தில் மற்ற பகுதிகள் தேவனுக்கு உண்டு என்பதை பவுல் அப்போஸ்தலன் குறிப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இந்த வித்தியாசங்கள் என்ன என்பதைப் பற்றி நாம் அறியவில்லை. இது வெளிப்படுத்தப்படவில்லை; ஆனால் ஆவியின் தளத்தில் நமது பரலோக பிதாவின் குடும்பத்தில் வித்தியாசமான ஒழுங்கு முறைகள் அல்லது தரவரிசைகள் உள்ளன என்று வெறுமனே அறிகிறோம். இவையல்லாமல் ஆவியின் தளத்தில் சபை இருக்கப்போகிறது. பிறகு, அவருடைய மனுக்குல குடும்பத்தின் மற்றொரு பகுதியும் அவருக்கு உள்ளது. இப்பொழுது, இந்த வித்தியாசமான குடும்பங்கள் அனைத்திற்கும் தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். அவர்களுடைய தளம், நிலை மற்றும் நிலமை அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படியே, மனுக்குலத்திற்கு தேவன் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்; பூமி மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது புதிய காரியமாக உள்ளது, கர்த்தர் இயேசு வந்து சபையை அழைத்திருக்கிறார். அவருடன் சபை புதிய சிருஷ்டியாக உருவாகியுள்ளது. புதிய சிருஷ்டிக்கு தளம் இல்லை; இது முற்றிலும் புதிய சிருஷ்டியாக இருக்கப்போகிறது. ஆகவே இந்த புதிய சிருஷ்டிப்பிற்கு முதற்பேறானவரான நமது எஜமானர், அவருடைய அங்கங்களாக, நாம் விசுவாசிகளாக

இருந்தால், அவர் நமக்கு முன்பாகப் போய், நமக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவார் என்று அவர் உன்னதத்திற்கு ஏறிப்போன போது நமக்குச் சொல்லிவிட்டுப் போனார். அந்த ஸ்தலம் தெய்வீக சுபாவத்தில் இருக்கும் என்று அந்த ஸ்தலம் எப்படி இருக்கும் என்பதை நமக்கு சொல்கிறார். தேவன் நமக்கு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார் என்றும், இவைகளினால் - இந்த வாக்குத்தத்தங்கள் நம்மில் விருப்பமாகவும், தேவனுக்கு சந்தோஷமாக இருக்கும்படி கிரியை செய்யும் - திவ்விய சுபாவத்துக்கு நாம் பங்குள்ளவர்களாய் இருப்போம். திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாயிருக்கும் எல்லோருக்கும் பிதாவின் வாசஸ்தலத்தில் இடம் இருக்கும். பிதாவின் இருப்பிடத்திற்கு அடுத்தபடியாக - - பிதா, குமாரன், மணவாட்டி-ஆட்டுக்குட்டியானவரின் மனைவி, பிறகு இவர்களுக்கு கீழே மற்ற எல்லா ஒழுங்கு முறையினரும் இருப்பார்கள்.

## மாரா - மாராவின் தண்ணீர் மதுரமாதல்.

**கே 453:2 :: கேள்வி (1910-Z) - 2 -** மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால், இஸ்ரயேலர் குடிப்பதற்கு ஒன்றுமில்லாத போது, மோசே ஒரு குறிப்பிட்ட மரத்தை வெட்டி ஓடையில் போட்டான் என்றும், இவ்விதமாக தண்ணீர் மதுரமானது என்ற விஷயத்தில் நிழலான முக்கியத்துவம் எதுவாக உள்ளது?

**பதில்.** ஆதாமின் பாவத்தின் விளைவாக, தேவனுடைய ஜனங்களுக்கு நிரந்தரமான இளைப்பாறுதலில் பங்கு பெற எதுவுமில்லை. நியாயப்பிரமாண ஏற்பாடுகளிலிருந்து நாம் சொல்வோமானால், தேவனுடைய ஜனங்களாக இருக்க விருப்பம் உடையவர்கள், உலகத்தை விட்டு விலகி வந்தவர்கள் பெருமளவில் அதிருப்தியைக் கண்டார்கள். இது கண்டனத்தை மட்டுமே வருவித்தது. எனினும், உரிய காலத்தில் நமது கர்த்தர் இயேசுவின் மரணத்தை தேவன் ஏற்படுத்தி, அவருடைய மரணத்தினால் அல்லது மரணம் வாயிலாக - மீட்பின் பலியினுடைய செய்தி மூலமாக - இந்த உண்மை செய்தியை, இந்த தண்ணீரை குடிக்கிறவர்கள் அதனுடைய உவர்ப்பு சுவையை காணமாட்டார்கள்.

இது தற்காலத்திற்கு ஒத்துவரும் வகையில் பொருத்தமான ஒன்றாக இருக்கிறது என்று நாம் சொல்லலாம். இருண்ட யுகத்தில் ஜீவத்தண்ணீர் மிகவும் மாசுபட்டதாயிருந்தது. அதன் விளைவாக விரும்பத்தகாதவையாக இருந்தது. நாம் கர்த்தருடைய திருவசனங்களாகிய தண்ணீரிடத்தில் வந்து, அவைகள் உவர்ப்பாகவும், அசுத்தமாகவும், குமட்டல் வருவதாகவும், முழுமையில்லாமலும் இருக்கிறதைக் காணும்போது, நமது கர்த்தர் இயேசு மரணத்தில் பலியிட்டதின் காரணமாயிருக்கும் மேலான மீட்பின் கொள்கையை கடந்த காலத்தில் பார்த்திருப்பதை விட மிகவும் தெளிவாக கர்த்தர் தம்முடைய கிருபையினால் இப்பொழுது காண்பித்திருக்கிறார். இங்கு தான் தெய்வீக அன்பு மற்றும் இரக்கத்தின் வெளிப்பாடு இருந்தது. இந்த சத்தியம் வரப்பெற்று, இருண்ட யுகத்தின் செய்தி சுத்திகரிக்கப்பட்டதால், இதில் புத்துணர்வுடனும், மகிழ்ச்சியுடனும் பங்கு கொள்ள முடிகிறது.

இது ஒரு பொருத்தமான தொடர்பு உடைய நோக்கத்துடன் இருந்ததா என்பது பற்றி நாம் அறியவில்லை. ஆனால் இந்த விஷயம், நாம் இவ்விதம் பிரயோகப்படுத்தும் நோக்கம் உள்ளதாக இருக்கிறதா அல்லது இல்லையா என்று எப்படி இருப்பினும், இதிலிருந்து சில பாடங்களை நாம் குறைந்த பட்சம் பெற்றுக் கொள்ள முடியும்.

## இலக்கு: திரள் கூட்டம் மற்றும் சிறுமந்தை.

**கே 454:1 கேள்வி (1910) - 1 -** திரள் கூட்டத்தினால் அடையப்பெறும் இலக்கிற்கும், சிறுமந்தையினால் அடையப்பெறும் இலக்கிற்கும் இடையில் வித்தியாசம் உள்ளனவா?

**பதில்.** நீதி மற்றும் நியாயம் முன்வைத்திடும் காரியங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதற்கு மாத்திரம் சிறுமந்தையினர் அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இராமல், இன்னுமாக தேவனுடைய சித்தத்தைத் தாங்கள் செய்ய வேண்டும் என்று நீதியானது கட்டளையிட்டாலும், அல்லது இல்லாவிட்டாலும், எப்படியேனும் அவர் சித்தத்தைத் தாங்கள் செய்வதாகவும் இவர்கள் தேவனிடம் ஒப்புக்கொண்டுள்ளனர். நீதியானது கட்டளையிடுகின்ற அல்லது கட்டளையிட

முடிகின்ற காரியத்திற்கும் அதிகமானதையே நீங்கள் பலிசெலுத்திட வேண்டும். இப்படியாகவே நமது கர்த்தர் இயேசு விஷயத்திலும் காணப்பட்டது. இயேசு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று நீதியானது கட்டளையிடலாம், ஆனாலும் அவர் தம் ஜீவனைப் பலிசெலுத்திட வேண்டும் என்று நீதியினால் கட்டளையிட முடியாது. ஒவ்வொரு மனுஷரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கின்றார். ஆனாலும் நாம் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக செலுத்திட வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறதில்லை. அது ஓர் அழைப்பாகும். தம்முடைய பிரமாணத்தினைக் கைக்கொள்ளுவதற்கு அவர் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறதில்லை. நீங்கள் பிரமாணத்தினைக் கைக்கொள்ளவில்லையெனில், இன்னென்ன விளைவு உண்டாகும் என்றே அவர் கூறியுள்ளார். இது என் நியமம் என்கிறார். நம்முடைய தேவனாகிய கர்த்தரை நம் முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் அன்புகூர வேண்டும் என்றும் உள்ள இந்த நியமத்தினைக் தேவன் எனக்கும், உங்களுக்கும் முன்பாக வைத்துள்ளார். “நம்மால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாதே” என்று நீங்கள் சொல்லலாம் மற்றும் இவர்களும் அன்பு எனும் தரநிலையை, நியமத்தை எட்டியாக வேண்டும். இந்த நியமம் நம்முடைய மாம்சத்தைப் பொருத்தமட்டில் கைக்கொள்ள முடியாதுதான்; ஆனால் நம் மனங்களிலும், இருதயங்களிலும் அதைக் கைக்கொள்ளலாம். நாம் இப்படியாகச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதில் குறைவுபடுதல் என்பது, தேவனுடைய பிரமாணத்தினைக் கைக்கொள்வதில் குறைவுபடுதலாகும் மற்றும் எவ்வகையான நித்திய ஜீவனுக்கும் நாம் அபாத்திரர்களாகக் காணப்பட்டுவிடுவோம். இப்படியாகவே திரள்கூட்டத்தாரின் விஷயத்தில் காணப்பட வேண்டும். இவர்கள் தேவனுடைய பிரமாணமாகிய இந்த நியமத்தைக் கைக்கொள்ளுவதில் குறைபட்டவர்களாய் இருக்கக்கூடாது. இதைக்காட்டிலும் அதிகமானவைகளைச் செய்திடுவதற்கு இவர்கள் ஒப்புக்கொண்டிருந்தனர் மற்றும் இவர்களும் அன்பு எனும் தரநிலையை, நியமத்தை எட்டியாக வேண்டும். இந்த நியமமே, அடுத்த யுகத்தில் உலகத்திற்கான நியமமாகும் மற்றும் அப்போது இந்த நியமத்தை/தரநிலையை அடைய உலகத்தார் கடமைப்பட்டிருப்பார்கள். அவர்கள் ஆயிரவருட காலங்களில் அந்தத் தரநிலையை அடையவில்லையெனில், ஆயிர வருடங்களின் முடிவில் அவர்கள் நித்திய ஜீவனை அடையமாட்டார்கள். அருமை நண்பர்களே, அப்போது உலகமானது நல்ல ஜனங்களைப் பெற்றிருக்கும். அவர்கள் நல்ல ஜனங்களாய் இருப்பார்கள் என்று நான் எண்ணுகின்றேன். இயேசு தம் வேலையை முடிக்கும்போது, அனைத்தும் நலமாய் இருக்கும் மற்றும் தேவனுடைய வல்லமையின் அருமையான வெளிப்பாடாய் மனுக்குலம் காணப்படும் மற்றும் மனுக்குலத்தார் தேவபக்தியுள்ளவர்களாய்க் காணப்படுவார்கள்.

## இலக்கினின்று விழுந்துபோய்த் திரள்கூட்டத்தினராகுதல்.

**455:1 :: கேள்வி (1910) - 1 -** பூரண அன்பின் இலக்கினை அடைந்துள்ளவர்களும், தப்பறையினால் தங்களையே குருடாக்கிக்கொண்டவர்களுமான சத்தியத்திலுள்ள ஜனங்களில் யாரேனும் திரள்கூட்டத்தினராகக் கூடுமா?

**பதில்.** நான் புரிந்திருக்கிறவரைத் தேவனுடைய ஜனங்களில் யாராய் இருப்பினும் சரி - அதாவது தற்கால சத்தியத்தில் இருப்பவர்கள் மாத்திரம் இல்லாமல், தேவனுடைய ஜனங்களில் யாராய் இருப்பினும் சரி - பூரண அன்பின் இலக்கு என்று நாம் அழைக்கின்றதான குணலட்சண வளர்ச்சிக்கான இலக்கினை அடைந்தவர்களாய் இருக்கையில், அவர்கள் பூரண அன்பின் இலக்கிலேயே தங்கள் நிலையைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றும், இலக்கை அடைந்த பிற்பாடு, அவர்களை அலைக்கழிக்கும் பிரச்சனைகளினாலும், சோதனைகளினாலும் இலக்கினின்று நகன்று தள்ளிப் போய்விடாதபடிக்கு இருக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நான் அறிந்திருக்கிறவரை இவர்களில் சிலர் தற்காலிகமாக இலக்கிலிருந்து நகர்ந்து விடுபவர்களாய் இருப்பார்கள் மற்றும் தேவனுடைய கிருபையினால் குணமடைபவர்களாய் இருந்து, இன்னமும் பரிசைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாகக் கர்த்தரால் கருதப்படும் பாத்திரங்களாய் இருப்பார்கள். ஆனால் சிலர் இலக்கினின்று முழுமையாய்த் தவறான மனநிலைக்கு அல்லது நடத்தைக்குள் விலகிப்போய், மரணத்திற்கேதுவான பாவம் செய்து, எவ்விதமான எதிர்காலமும் இல்லாமல் போவதும் உண்டு. இன்னும் சிலர் பூரண அன்பின் இலக்கை அடைந்த பின்னர், உரிய வைராக்கியம் கொண்டிராமல்

இருப்பார்கள், மற்றும் இவர்கள் இலக்கை விட்டு விலகாமல் இருப்பினும், கர்த்தருடைய வைராக்கியமுள்ள பின்னடியார்களெனத் தங்கள் நிலையைத் தக்கவைத்துக்கொள்ள தவறிப்போய், திரள்கூட்ட வகுப்பினராகக் கருதப்படுவார்கள்.

## இலக்கு அல்லது பந்தய சாலை – போராடுவதற்கு முன்னதாகவே முடித்தல்.

**கே** 455:2 :: **கேள்வி** (1908) - 2 - சபை போர்வீரர்களெனப் போராடத் துவங்குவதற்கு முன்னதாகவே தங்கள் ஓட்டத்தை நிறைவு செய்ய வேண்டும் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றனவா அல்லது சந்தோஷத்தோடு முடிக்கத்தக்கதாக நாம் ஓட்டத்தை ஓடிக்கொண்டிருக்கையில், முடிவுவரை நாம் போராடிட வேண்டுமா?

**பதில்.** வெவ்வேறு கருத்துக்களை நம் மனங்களுக்கு முன்வைத்திடும் வெவ்வேறு வேதவாக்கியங்கள் காணப்படுகின்றன. இக்காரியத்திற்கு அநேகம் பக்கங்கள் இருக்கின்றன; எப்படி நாம் இங்கு இருக்கும் கட்டிடத்தை வெவ்வேறு கோணங்களில் படம் பிடிப்போமோ, அதுபோலவேயாகும். நாஷ்வில்லியில் (NASHVILLE) உள்ள அரங்கம் எப்படி இருக்கும் என்று நீங்கள் கேட்கலாம். இதோ, அதை இங்கு நின்றும், இதோ அங்கு நின்றும் அதன் காட்சியினைப் படம் பிடிக்கலாம். அவைகள் வெவ்வேறு புகைப்படங்களாக இருப்பினும், அவை அனைத்துமே அந்த அரங்கத்தினுடைய படங்களாகவே இருக்கும். பின்னர் நீங்கள் கட்டிடத்திற்கு வெளியே போய்நின்று முன்பக்கத்தைப் படம் பிடிக்கலாம் மற்றும் பின்னர் அதன் பக்கங்களில் போய், பக்கவாட்டில் படம் பிடிக்கலாம் மற்றும் பின்புறம் போய், பின் புறத்தைப் படம் பிடிக்கலாம். இப்படியே கர்த்தரும், அப்போஸ்தலர்களும் நமக்குக் கொடுத்திருக்கின்றனர் - தேவன் தம் பரிசுத்த ஆவியின் மூலம், இந்தப் பல்வேறு வழிகளின் வாயிலாகச் சத்தியத்தின் மற்றும் ஜீவியத்தினுடைய நமது அனுபவங்களில் காட்சிகளை/படங்களைப் பல்வேறு கண்ணோட்டங்களில் கொடுத்திருக்கின்றார். அவைகளில் ஒன்று நம்மை ஓட்டத்தில் ஓடுபவர்களெனச் சித்தரிக்கின்றது. நீங்கள் ஏதோ ஒன்றிற்காகவே தான் ஓடிட வேண்டும். நீங்கள் என்றென்றுமாய்த் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்து, பின்னர் ஓட்டத்தினுடைய இறுதி தருணத்தில் மரித்துப்போகிறதில்லை. சில இடங்களில் வேதவாக்கியங்களானது - - நாம் தொடர்ந்து ஓடிட வேண்டும் என்றும், நம்முடைய கிறிஸ்தவ ஓட்டம் என்பது சில விஷயங்களில் ஓட்டப்பந்தயத்திற்கு ஒத்திருக்கிறது என்றும், அதில் சரியானவைகளைச் செய்திடுவதற்கான நம் பிரயாசத்தினை நாம் ஒருபோதும் நிறுத்திடக்கூடாது என்றும் முன்வைப்பது உண்மையாய் இருப்பினும், நாம் ஓர் இலக்கை நோக்கியே ஓடிட வேண்டும் எனும் மிகச் சரியான கருத்தை விவரிக்கும் மற்றுமொரு காட்சியும் உள்ளது. இதோ, அங்கு இருக்கிற அந்த மேஜை தான் இலக்கு என்று வைத்துக்கொள்ளுங்கள். சரி, இலக்கு என்றால் என்ன? நாம் அடையவேண்டும் எனும் விதத்தில் ஏன் அது இலக்காய் இருக்கின்றது? நான் அந்த இலக்கை நோக்கி ஓடுகின்றேன் என்று வைத்துக்கொள்வோம். நான் இங்கயே, பாதித் தூரத்திலேயே நின்றுவிடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இந்தப் பாதித் தூரத்திற்குமேல் நான் வரவேயில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள்; அப்படியானால் நான் ஒருபோதும் இலக்கை அடையவில்லை என்பதாக இருக்கும். அநேக நல்ல ஜனங்கள் இலக்கை ஒருபோதும் அடையவில்லை என்று நான் எண்ணுகின்றேன். இலக்கு என்பது எது என்று நாம் காண்பது முக்கியமாகும். அப்போதுதான் நாம் ஞானமாய் ஓடுகிறவர்களாகவும், காற்றில் சிலம்பம் பண்ணுகிறவர்களாக மாத்திரம் காணப்படாதவர்களாகவும் இருக்க முடியும். உங்களால் எவ்வளவு பிரயாசம் எடுக்க முடியும் என்பதல்ல, மாறாக அந்த பிரயாசத்தை ஒரு நோக்கத்திற்காக வேண்டி நீங்கள் ஏறெடுக்க வேண்டும்; ஏதோ ஒன்று அடையப்பட வேண்டும்; ஏதோ ஒன்று பற்றிக்கொள்ளப்பட வேண்டும். குறிக்கோளின்றி ஓடுகிற நபர், ஏதோ ஒரு சாலையில் ஓடித்திரிகிறவராய் இருப்பார். “எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?” என்று அவனிடம் கேட்கப்பட்டால், “எனக்குத் தெரியாது” என்பது அவன் பதிலாயிருக்கும். அவனால் தொடர்ந்து பலத்தோடு ஓடிக்கொண்டிருக்க முடியாது; ஆனால் ஒரு பாதையில் போக வேண்டும் என்று அவன் அறிவானானால், நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட தொடங்குமிடத்திலிருந்து துவங்க வேண்டும் என்றும், ஓடுவதற்கு எத்தனை நிமிடங்கள் தேவையெனப் பார்க்க வேண்டும் என்றும் அறிவானானால், அப்போது அவன் தன் பார்வைக்கு முன் ஓர் இலக்கைப் பெற்றிருப்பான்; மனதிற்கு முன்பாக நோக்கம் ஒன்றினைப் பெற்றிருப்பான் மற்றும் இப்படி இருக்குமானால், அவனால் நன்கு ஓட முடியும். இலக்கை அடைந்துவிட்டோமெனில், நாம் என்ன செய்யவேண்டும்? சகலத்தையும் செய்து

முடித்தவர்களாய் நிற்க வேண்டும் - இலக்கில் நிற்க வேண்டும்; அதை விட்டு விலகி ஓடாதீர்கள். இலக்கிலேயே நிற்பது கடினமான காரியமா? ஆம்! நீங்கள் இலக்கை வந்தடைந்த பின்னர், அதினின்று உங்களை விலகச்செய்திடுவதற்கு அநேகமான பிரயாசங்கள் மேற்கொள்ளப்படும். இலக்கை அடைவதிலிருந்து உங்களைத் தடைபண்ணினதைக் காட்டிலும், இலக்கினின்று உங்களை விலகிப்போகப்பண்ணுவதற்கே எதிராளியானவன் கடினமாய் முயற்சி செய்வான். நீங்கள் இலக்கை வந்து அடைந்த பின்னர், கடுமையான போராட்டமானது உங்கள் மீது கடந்து வரும். இலக்கை வந்து அடைவதற்கு முன்னதாக ஒரு குறிப்பிட்ட அளவிலான பாதுகாப்பு உங்களுக்குக் காணப்படும்; ஆனால் இலக்கை வந்து அடைந்த பிற்பாடு, அங்குதானே நீங்கள் உங்களுக்கான கடுமையானப் பரீட்சைகளை அடைவீர்கள். “தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துக்கொள்ளுங்கள்” என்பது இன்னொரு காட்சியாகும்/கோணமாகும். எங்கிருந்து சர்வாயுதவர்க்கம் கிடைக்கும்? தேவவசனத்திலிருந்து ஆகும். நீங்கள் நிற்கத்தக்கதாக இந்த ஆயுதங்களை, தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக்கொள்ளுங்கள். ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கையில், அதைத் தரித்துக் கொள்வதற்குப் போதுமான நேரம் கிடைப்பதற்கு முன்னதாகத் தாக்கப்பட்டுப் போகாதபடிக்கு, கர்த்தர் ஒரு குறிப்பிட்ட அளவிலான கிருபை மற்றும் பாதுகாப்பைக் கொடுத்தருளுவார்; அதைத் தரித்துகொள்ளத்தக்கதாக நியாயமான காலப்பகுதியை அவர் தருகின்றார். திராணிக்குமேலாகத் தாக்கப்படுவதற்கு அவர் அனுமதிக்கிறதில்லை. ஆகையால் அதைத் தரித்துக்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் கிடைக்கப்பெறுகின்றது. ஆயுதவர்க்கங்களைத் தரித்தாயிற்று; அடுத்து என்ன? அடுத்து போர்புரியுங்கள். நாம் ஓட வேண்டியதான இலக்கு என்ன என்று நீங்கள் கேட்கின்றீர்கள். என் அருமை நண்பர்களே, அது என்னவெனில் - - தேவன் அங்கீகரிக்கக்கூடிய குணலட்சணத்திற்கான ஒரு குறிப்பிட்ட இலக்கு இருக்கின்றது மற்றும் அதற்குக் குறைவான எதையும் அவர் அங்கீகரிக்கிறதில்லை. மற்றும் நீங்கள் அந்தக் குணலட்சணத்தைப் பெற்றிருக்கவில்லையெனில், உங்களால் இராஜ்யத்தில் காணப்பட முடியாது. எவைகள் இருந்தாலும் பரவாயில்லை, தேவன் இராஜ்யத்திற்குள் ஏற்றுக்கொள்வார் என்ற காரியமே கிடையாது. அவர் ஒரு குறிப்பிட்ட தரநிலையை/அளவுகோலை நிர்ணயித்திருக்கின்றார் மற்றும் அந்தத் தரநிலையை அடைவதற்கு உங்களுக்கும் எனக்கும் அனுகூலம் பண்ணியிருக்கின்றார். அவர் எல்லா உதவியும் பண்ணுவதாக வாக்களித்துள்ளார். ஆனால் அந்தத் தரநிலையை அடையும் விஷயத்தில் நீங்களும், நானும் ஆர்வமும், பிரயாசமும், நாட்டமும் வெளிப்படுத்திட விரும்புகிறார். நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள தரநிலை என்ன? அதில் எவ்வளவு குறைந்தபட்சம் செய்திடலாம் என்று கேட்கின்றீர்களா? இல்லை, இது கருத்தல்ல. நம்மால் முடிந்த அனைத்தையும் செய்திடுவதற்கும் மற்றும் அதிகமாய்ச் செய்திடுவதற்குமான வாஞ்சை நம்மிடம் இருக்க வேண்டும்; நாம் செய்து முடித்தவைகளில் ஒருபோது திருப்திக்கொள்ளக்கூடாது. ஒரு குறிப்பிட்ட தரநிலை இருப்பதையும், அதில் நீங்கள் குறைவுபட்டால் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்பதையும் நீங்கள் உடனே காணலாம். ஏனெனில் தேவன் அதைக்குறித்து தீர்மானித்து வைத்திருக்கின்றார். உரோமருக்கு எழுதின எட்டாம் அதிகாரத்தில் :தேவன் முன்குறித்துள்ளார்” என்னும் அப்போஸ்தலன் பவுலினுடைய உறுதியான வார்த்தைகள் உங்களுக்கு ஞாபகமிருக்கும் - “முன்குறித்திருக்கிறார்” என்பது பலமான வார்த்தையாகும். தேவன் எதை முன்குறித்தார்? சிறுமந்தையினராய் இருப்பவர்கள் யாவரும் தம்முடைய குமாரனுக்கொத்த சாயலில் காணப்பட வேண்டும் என்றும், அப்படித் தம் குமாரனுடைய சாயலில் இல்லாதவர்கள் இராஜ்யத்தில் காணப்பட முடியாது என்றும் முன்குறித்திருக்கின்றார். தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலே, அந்த இலக்காய் இருக்கின்றது. தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாய் இருக்கும் இலக்கை வந்தடையாத வரைக்கும் நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்க முடியாது என்று தேவன் முன்தீர்மானித்துள்ளார்; மேலும் அந்த இலக்கை நீங்கள் வந்தடைந்து, அந்நிலையைத் தக்கவைத்துக்கொள்வீர்களானால், நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருப்பீர்கள். ஆகவே இலக்கு என்பது மிகவும் முக்கியமானதல்லவா? ஒருகாலத்தில் தெளிவற்ற நிலையில் வேதாகமத்தை வாசிப்பதினால், நாம் இலக்கையும் சரி, மற்றவைகளையும் சரி பார்க்கவே இல்லை. கண்மூடிக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருந்தோம். தேவன் என்ன சொல்லியிருக்கின்றார் என்பதை நாம் அறியாமல் இருந்தோம். தேவன் என்ன சொல்லியிருக்கின்றார் என்று நாம் போதுமான அளவுக்குக் கவனம் செலுத்தாமல் இருந்தோம். நாம் கத்தோலிக்க மறைக்கல்வி நூல்களை (CATECHISM) வாசித்திருந்தோம் மற்றும் அவைகளினால் குழம்பியிருந்தோம். தேவன் தம் வார்த்தைகளில் என்ன சொல்லியிருக்கிறார் என்று காணும் ஒரு காலக்கட்டம் வந்தது மற்றும் தேவன் கிறிஸ்துவை மாதிரியாகவும்,

முன்மாதிரியாகவும் நமக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் அனைவரும் கிறிஸ்துவைப் போன்று காணப்பட வேண்டும் என்று நான் சொல்ல வருகின்றேனா என்று கேட்கின்றீர்களா? ஆம்! நாம் அனைவரும் கிறிஸ்துவுக்கு ஒத்திருக்க வேண்டும். ஆனால் கிறிஸ்து பூரணமானவராய் இருந்தார்; நாம் அனைவருமே பூரணர்களாக இருக்க வேண்டுமா என்று கேட்கின்றீர்களா? என் அருமை சகோதரனே, மாம்சத்தின்படி கிறிஸ்துவைப் போன்று இருக்க வேண்டும் என்று நான் இக்கேள்வியில் சொல்லவில்லை; எந்த விதத்தில் கிறிஸ்துவைப் போன்று என்று நான் இதுவரையிலும் சொல்லவில்லை; அது பின்வரும் விதத்திலேயாகும்: நமது கர்த்தர் இயேசு பரிபூரணமாய்க் காணப்பட்டார் மற்றும் நீங்கள் அபூரணர்கள் மற்றும் நானும் அபூரணமானவன்; நம்மால் மாம்சத்தில் கிறிஸ்துவைப் போன்று ஒருபோதும் காணப்பட முடியாது; இப்படியான விதத்தில் கர்த்தர் நம்மைச் சோதிக்கிறதில்லை; அவர் பின்வருமாறு கூறுகின்றார்: "நீங்கள் மாம்சத்தில் இல்லை; மாறாக ஆவியில் காணப்படுகின்றீர்கள்; அப்படியானால் கிறிஸ்துவின் ஆவியானது உங்களில் வாசமாயிருக்கும்." அவர் உங்களை மாம்சத்தின்படியாக இல்லை, மாறாக ஆவியின்படியாகவே நியாயந்தீர்க்கிறார். நம்முடைய மாம்சத்தின் காரியமென்ன? உங்கள் மாம்சமானது நீதிமானாக்கப்பட்டதாகக் கருதப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் புண்ணியமானது உங்களுக்கு மாம்சத்தின்படியாகச் சாற்றப்பட்டு, அந்தக் குறைகள், நிலைமைகள் அனைத்தையும் மூடுகின்றதாய் இருக்கின்றது; கிறிஸ்துவுக்கும் மற்றும் மாம்ச பூரண நிலைமைக்கும், மாம்சத்திலுள்ள உங்கள் அபூரண நிலைமைக்கும் இடையில், அவரது பலியின் புண்ணியமானது இந்தக் குறைவுகளை மூடத்தக்கதாக, உங்களுக்கும், எனக்கும் சாற்றப்பட்டுள்ளது. உங்கள் மாம்சமானது உண்மையில் அபூரணமாக இருக்க, உங்கள் மாம்சமானது பூரணப்படுத்தப் பட்டதாகக் கருதப்பட்டுள்ளதை உங்களால் காணமுடியவில்லையா? நம்மை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க முடிகிறவர்களாக நம்மை ஆக்குவதே, இப்போது நாம் தேவனால் பூரணர்களாகக் கருதப்படுவதற்கான நோக்கமாகும். கறைதிரை இல்லாதது, குறைவுகளற்றதுமான பலிகளை அல்லாமல், மற்றப்படி வேறெந்த பலிகளும் தேவனுடைய பலிபீடத்தில் வரக்கூடாது என்பதே தெய்வீக சித்தமாய் இருக்கின்றது. கறைதிரையற்றதும், குறைவற்றதுமான தேவ ஆட்டுக்குட்டியாக நம் கர்த்தர் இயேசு காணப்பட்டார் மற்றும் அவர் அங்கீகரிக்கப்பட்டார். உங்களுக்கும், எனக்கும் மாம்சத்தில் கறைதிரைகள் மற்றும் குறைவுகள் காணப்படுகின்றன மற்றும் இவற்றோடு நாம் பலிபீடத்தினிடத்திற்கு வரமுடியாது என்று கர்த்தர் சொல்லுகின்றார். நாம் என்ன செய்வது? நாம் அவைகளை ஒழிக்க வேண்டுமே. எப்படி? அவைகள் அனைத்தும் மூடப்பட வேண்டும். நமக்காக எது அவற்றை மூடிடும்? விசுவாசத்தின் வாயிலாய் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியமானது சாற்றப்படுகின்றது மற்றும் செயல்படுத்தப் படுகின்றது. இது அந்தக் குறைவுகள் அனைத்தையும் முடிவிடும். இதனால்தான் நாம் தேவனுடைய பலிபீடத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றோமா என்று என்னிடம் கேட்கின்றீர்களா? அதுதான் முக்கிய கருத்து. என் அன்பு சகோதரர்களே, இதைத்தான் அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகின்றார்: "அப்படியிருக்க, சகோதரரே, (அவர் உங்கள் பாவங்களை மன்னித்து, இந்த மூடலை உங்களுக்குக் கொடுத்துள்ளபடியால்) நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (உரோமர் 12:1) "பரிசுத்தமான" ஜீவபலியா என்று கேட்கின்றீர்களா? ஆம்! பரிசுத்தமான ஜீவபலிதான். நம்மைப் பரிசுத்தமாக்கத்தக்கதாக நாம் என்ன செய்திருக்கின்றோம்? உங்களைப் பரிசுத்தமாக்கும் காரியத்தினைக் கிறிஸ்து செய்தார். "பரிசுத்தம்" எனும் வார்த்தையின் அர்த்தம் "முழுமை அல்லது நிறைவு ஆகும்." கிறிஸ்துவினால் தரிக்கப்படுகின்ற நீதியானது, நம்மைப் பாவத்திலிருந்து, குறைவுபட்ட நிலையிலிருந்து நம்மை முழுமையானவர்களாக, பூரணமானவர்களாகக் கருதப்படும் நிலைக்கு கொண்டுவருகின்றது. ஆகவே அப்போஸ்தலன் இனிமேல் நீங்கள் மாம்சத்தின்படியானவர்கள் இல்லை, மாறாக, நீங்கள் ஆவியின்படியான வர்களாக இருக்கின்றீர்கள் என்றும், மனித கண்ணோட்டத்தில் நீங்கள் இல்லை என்றும், கர்த்தருக்கான புத்தியுள்ள ஆராதனையென அந்த மனுஷீகத்தினை நீங்கள் பலி செலுத்தியுள்ளீர்கள் என்றும், இதுமுதற்கொண்டு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதுசிருஷ்டிகளென நீங்கள் உங்களைக் கருதிக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றார். இப்பொழுதோ கிறிஸ்து இயேசுவில் புதியதாய் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதான புதுசிருஷ்டி, கிறிஸ்துவினுடையப் சரீரத்தின் அங்கத்தினன், பழைய மனுஷனிடமிருந்து, முற்றிலும் வேறுபட்டவனாக இருக்கின்றான்; ஆகவே இந்த கண்ணோட்டத்திலிருந்து அப்போஸ்தலன் தன்னைக்குறித்து, "பழைய மனுஷனாகிய நான்" என்றும், "புதிய மனுஷனாகிய நான்" என்றும்

பேச முடிகிறவராய் இருக்கின்றார். அவர் "நான்" என்று சொல்லுகின்றார், எனினும் "நானல்ல" என்றும் கூறுகின்றார். இங்கு தான் பழையதும் புதியதும் காணப்படுகின்றது. இங்கு தான் பழைய பவுலும், புதிய பவுலும் காணப்படுகின்றனர். மாம்சத்தின்படியான பழைய பவுல் மரித்துள்ளதாகக் கருதப்பட்டுள்ளார். ஆவியின்படியான புதிய பவுல் உயிரோடு இருப்பதாகக் கருதப்படுகின்றார். ஆகவே நாம் நம்முடைய பலிகளை ஏறெடுக்க முடிகிறதும் மற்றும் புதுசிருஷ்டிகளென நாம் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாய் இருக்கிறதும் மற்றும் நல்ல போராட்டம் போராடுகிறதும், மற்றும் ஜெயங்கொள்வதும் மற்றும் வழி முழுவதிலும் கர்த்தரினால் நாம் உதவப்படுவதுமே நம்முடைய மகிமையான நிலைமையாய் இருக்கின்றது. ஆனால் புதுசிருஷ்டிகளென நாம் இந்த நிலைக்கு வர வேண்டும்; நாம் நின்றுவிடக்கூடாது; தேவனுடைய பிரியமான குமாரனுக்கொத்த சாயலாகிய இலக்கு என்ற ஒன்று இருக்கின்றதெனத் தேவன் புதுசிருஷ்டிகளாகிய நம்மிடத்தில் கூறுகின்றார். நீங்கள் இலக்கினை வந்து அடைந்துவிட்டீர்களா? "என் மரணத்தறுவாயின்போதே இலக்கை அடைவேன்; இதற்கு முன்னதாக அடைய நான் எதிர்பார்க்கிறதில்லை" என்று ஒருவர் சொல்லலாம். "மரணமடைவதற்கு முந்தைய நாட்களைவிட, மரணத்தறுவாயின்போதே நீங்கள் இலக்கை நெருங்கியிருப்பீர்கள் என்று எதன் அடிப்படையில் நீங்கள் எண்ணுகின்றீர்கள் என்று கேள்வி கேட்கப்பட்டால், - - பதில் இருப்பதில்லை. இந்த இலக்கு என்பது, குணலட்சணத்திற்கான இலக்காய் இருக்கின்றது என்றும், குணலட்சணத்தின் விஷயத்தில் நீங்களும் நானும் அந்த இலக்கை வந்தடைய வேண்டும் என்றும் நான் கூறுகின்றேன். என்ன சொல்லுகின்றீர்கள்? என்று நீங்கள் கேட்கலாம். இதோ இவ்விதத்திலாகும்: கிறிஸ்துவின் குணலட்சணம் எது? எவ்விதத்தில் அவர் பலி ஒன்றை ஏறெடுத்தார்? பின்வரும் விதத்திலாகும்: "அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்." (எபி.10:7.) இதுவே அவர் நிலைப்பாடாகும் - பிதாவின் சித்தத்திற்கு முழுமையான அர்ப்பணிப்பாகும்; இதற்குக் குறைவானதல்ல. நீங்களும், நானும் இந்நிலைக்கு வர வேண்டுமா என்று கேட்கின்றீர்களா? ஆம்! என்று பதிலளிக்கிறேன். சரி, பிதாவின் சித்தம் என்ன? நாம் இருதயத்தின்படி ஒத்திருக்க வேண்டும் என்பதும், கண்டிப்பாக மாம்சத்தின்படி ஒத்திருக்க வேண்டும் என்று இல்லை என்றாலும், நம்மால் முடிந்த மட்டும் மாம்சத்தின்படி ஒத்திருக்க முயற்சிக்க வேண்டும் என்பதும், இருதயத்தில் அவர் சித்தத்தைக் கைக்கொண்டிட வேண்டும் என்பதும் பிதாவின் சித்தமாகும். உங்கள் தேவனாகிய கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் நீங்கள் அன்புகூர வேண்டும் என்பது அவர் சித்தமாய் இருக்கின்றது. இந்நிலைக்கு நாம் வர முடியுமா என்று கேட்கின்றீர்களா? முடியும் என்று நான் எண்ணுகின்றேன். கர்த்தரும் இப்படியாகவே எண்ணுகின்றார். நம்முடைய மனங்களில் இந்நிலையினை நாம் அடைந்திட முடியும். "என் மனதில் தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கிறேன்; என் மாம்சத்தைக்கொண்டு கொஞ்சம் பாவப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கின்றேன்; ஆனால் மாம்சம் மரித்ததாகக் கருதப்பட்டுள்ளது. மற்றும் கர்த்தர் மாம்சத்தின்படி நியாயந்தீர்க்கிறதில்லை" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். நாம் கிறிஸ்துவினுடைய மனதை உடையவர்களாக இருப்போமானால், நாம் மாம்சத்தில் நம்மால் முடிந்ததைச் செய்வோம்; அதைக் கர்த்தருடைய சித்தத்திற்கு இசைவாய்க் கீழ்ப்படுத்தி வைப்பதற்கு முயன்று கொண்டிருப்போம். ஆனால் நாம் மாம்சத்தின்படியாக நியாயந்தீர்க்கப்படுகிறதில்லை; மாறாக, ஆவியின்படி, புதுசிருஷ்டியின்படி நியாயந்தீர்க்கப்படுகின்றோம். ஆகையால் அருமையான நண்பர்களே: உங்கள் மனதைக்கொண்டு தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்யுங்கள் - உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு மனதோடும், உங்கள் முழு ஆத்துமாவோடும், உங்கள் முழுப்பெலத்தோடும் செய்யுங்கள். இப்படிச் செய்வீர்களானால், நீங்கள் இலக்கில் காணப்படுகின்றீர்கள். "உங்களை நீங்கள் அன்புகூருவதுபோன்று, உங்கள் அயலாரை அன்புகூருகின்றீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால், - - நீங்களோ: "ஆம்! நான் அனைவரையும் அன்புகூருகின்றேன் மற்றும் அனைவருக்கும் நன்மை செய்ய விரும்புகின்றேன் மற்றும் இதில் பிரியமாய் இருக்கின்றேன்" என்கிறீர்கள். "அப்படியானால் சகோதர சகோதரிகளை அன்புகூரும் நிலைக்கு உண்மையில் வந்துவிட்டீர்களா? என்று உங்களிடம் கேட்கப்பட்டால்,, - - நீங்களோ: "ஆம்!" என்கிறீர்கள். "தேவனை அன்புகூருகின்றீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால், - - "ஆம்!" என்கிறீர்கள். "முழு மனுக்குலத்தையும் அன்புகூருகின்றீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால் - - "ஆம்!' என்கிறீர்கள். "யாருக்கேனும் தீங்கு செய்ய வேண்டும் என்று தோன்றுகின்றதா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால் - - "இல்லை" என்கிறீர்கள். "ஏதேனும் தவறு செய்ய உங்களுக்குத்

தோன்றவில்லையா அல்லது தவற்றைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லையா? என்று கேட்கப்பட்டால் - - "இல்லை" என்கிறீர்கள். "நீங்கள் சகோதரரை அன்புகூருகின்றீர்களா? அவர்களுக்கு நன்மை செய்யப்படுவதைப் பார்க்க விரும்புகின்றீர்களா? என்று உங்களிடம் கேட்கப்பட்டால், - - நீங்கள் "ஆம்!" என்கிறீர்கள். நீங்கள் இலக்கில் இருக்கின்றீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். இதைத்தான் கர்த்தர் இலக்காக வைத்திருக்கின்றார். இதைத்தான் கிறிஸ்துவும் செய்தார். அவர் உலகத்தை அன்புகூர்ந்து, அதற்காகத் தம்மையே கொடுத்துவிட்டார். அவர் பிதாவை அன்புகூர்ந்து, பிதாவின் சித்தத்தைச் செய்வதில் தம் ஜீவனையே கொடுத்துவிட்டார். அவர் சீஷர்களை அன்புகூர்ந்தார்; அவர்களைத் தம்முடையவர்களென அவர் அன்புகூர்ந்தபடியால், முடிவுபரியந்தம் அவர்களை அன்புகூர்ந்தார். ஆகையால் இப்படியே நம் ஆவியும் காணப்பட வேண்டும் மற்றும் அனைவரையும் அன்புகூருகிற நிலைமைக்கும், உங்கள் சத்துருக்களை அன்புகூருகிற நிலைமைக்கும் நீங்கள் வருகிற மாத்திரத்தில், நீங்கள் இலக்கில் வந்து நிற்கின்றீர்கள். உங்கள் சத்துருக்களை நீங்கள் அன்புகூருவது கடினமான காரியமாகும், ஆனாலும் உங்கள் சத்துருக்களை நீங்கள் அன்புகூர வேண்டும்; "உங்களை இழிவாய் நடத்துகிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்." என்று கர்த்தர் சொல்லியிருக்கின்றார் உங்கள் சத்துருக்களை அன்புகூரும் நிலையினை நீங்கள் அடையவில்லையெனில், நீங்கள் பரிசை வென்றுதரும் இலக்கில் இல்லை; ஏனெனில் குறைவான தரநிலையை உடைய எவரும் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரில் காணப்படுகிறதில்லை. இவர்கள் அனைவரும் தேவனுடைய பிரியமுள்ள குமாரனுக்கொத்த சாயலாக வேண்டும் மற்றும் இதுவே இலக்காகும். நீங்கள் இந்நிலைக்கு இன்னும் வரவில்லையெனில், ஓடுங்கள்; உங்களால் முடிந்தமட்டும் வேகமாய் வந்து சேருங்கள். ஜீவியத்தில் அனைத்தையும் விட்டுவிட்டு, அந்நிலைமைக்கு வந்துவிடுங்கள். "என்னால் ஒரே ஒரு நபரை அன்புகூர முடியவில்லை; செய்ய விரும்புகின்ற நிலைமைக்கு உங்கள் இருதயத்தைக்கொண்டு வந்துவிடுங்கள். அவன் சத்துருவாவான் மற்றும் அவன் என்னைக் குறித்து இன்னென்ன விதமாய்ப் பேசியிருக்கிறான்" என்று நீங்கள் சொல்லலாம். அவன் பேசினதையோ அல்லது செய்ததையோ ஒருபோதும் பொருட்படுத்தாதீர்கள். நீங்கள் உங்களுக்காக ஜீவிக்கவில்லை, அப்படித்தானே? நீங்கள் கர்த்தருக்காய் ஜீவிக்கின்றீர்கள். "அனைத்துப் பொல்லாப்புகளையும், பொறாமைகளையும், தீயதாயுள்ள அனைத்தையும் உங்கள் இருதயத்தினின்று களைந்துபோடுங்கள்; சத்துருக்களை அன்புகூருகின்ற மற்றும் அவர்களுக்கு நன்மை செய்ய விரும்புகின்ற நிலைமைக்கு உங்கள் இருதயத்தைக்கொண்டு வந்துவிடுங்கள்" என்று கர்த்தர் கூறுகின்றார். இதுவே இலக்கை வந்தடைவதாகும். இலக்கை வந்து அடைந்த பின்னர், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதில் நில்லுங்கள்! :அங்கு நிற்க வேண்டுமா? அது சுலபந்தானே!" என்று எண்ணுகின்றீர்களா? கொஞ்சம் காத்திருங்கள்; அங்குக் கொஞ்சம் நின்றுகொண்டு, பின்னர் பாருங்கள். பல்வேறு வழிகளில் உங்களை எதிராளியானவன் தாக்குவான் மற்றும் அவன் உங்களைப் பல்வேறு வழிகளில் தாக்குவதற்குக் கர்த்தர் அனுமதித்திடுவார். உங்கள் சத்துக்களை அன்புகூருவதற்கும் எதிர்மாறாக நீங்கள் செய்யத்தக்கதாக, எதிராளியானவன் பல்வேறு காரியங்களைச் செய்வான். கிறிஸ்துவின் மகிமையான இந்தத் தரநிலையினின்று உங்கள் மனம் திசைமாறத்தக்கதாக அவனால் முடிந்த அனைத்தையும் செய்வான். இலக்கை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது இருந்த தாக்குதல்களைக் காட்டிலும், இலக்கை வந்து அடைந்த பிற்பாடே நீங்கள் பல்லாயிர விதங்களில் தாக்கப்படுவீர்கள்; ஏனெனில் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிற காலப்பகுதியில், கர்த்தர் உங்களைப் பாதுகாத்துக்கொண்டிருந்தார் மற்றும் "உங்கள் திராணிக்கு மேலாகச் சோதிக்கப்படுவதற்கு உங்களை நான் அனுமதிக்கிறதில்லை" என்று கூறியிருந்தார். ஆனால் நீங்கள் இலக்கை வந்து அடைந்த பிற்பாடு, நீங்கள் நிற்க திராணி திராணியுடையவர்களாய் இருப்பீர்கள். உங்கள் திராணி என்னவென்று அவர் அறிவார் மற்றும் உங்கள் திராணியின் அளவுக்கேற்ப உங்களைச் சோதிக்க விரும்புகின்றார்; ஏனெனில் அந்த தெரிந்துகொள்ளப்பட்டு, மகிமைப்படுத்தப்படும் வகுப்பாரில் காணப்படும் அனைவரும் முழுமையாய்ச் சோதிக்கப்பட வேண்டும் மற்றும் நிரூபிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் தேவனுக்கும், சகோதரருக்கும் நேர்மையாய் இருக்கின்றார்கள் எனவும், உயர்ந்த, சிறந்த விதத்தினாலான அன்பைப் பெற்றிருக்கின்றார்கள் எனவும் நிரூபிக்கப்பட வேண்டும்.

## விவாகம் - கணவனின் பணத்தை செலவு செய்தல்?

**கே 459:1 :: கேள்வி (1909) - 1 -** மனைவியானவள் தனக்குச் சொந்தமாயிருக்கும் பணத்தை, அவளது கணவனுடைய விருப்பங்களுக்கு மாறாக பயன்படுத்தும் உரிமை பெற்றிருக்கின்றாளா?

**பதில்.** ஒருவேளை கணவன் கர்த்தருடனான உறவில் நிறைவாயும், முழுமையாயும் காணப்பட்டு, மனைவியும் இப்படியாகவே காணப்படுவாளானால், அப்பொழுது பிரச்சனை இருப்பதில்லை மற்றும் இங்கு எழும்பியுள்ளதான இக்கேள்வியானது எழும்புவதில்லை. ஆனால் காரியங்கள் எப்போதும் இப்படியாக இருப்பதில்லை; மேலும் எனது எண்ணம் பின்வருமாறு: கூட்டங்கள் மற்றும் பொதுவாய் நிலவிவரும் வழக்கத்தின்படி ஒரு கணவன் மனைவியை விவாகம் பண்ணுகையில், அவளைத் தனது பங்காளியாக நடத்த ஒப்பந்தம்பண்ணுகின்றார்; மேலும் கணவனானவன், மனைவியின் உரிமையின் கீழ்க்காணப்படும் சொத்துக்கள் விஷயத்தில் ஏதேனும் விசேஷித்த ஒப்பந்தம் இருந்தால் தவிர, மற்றப்படி சொத்துக்களைப் பொருட்படுத்தாமலேயே, அவளை இப்படி நடத்த ஒப்பந்தம்பண்ணுகின்றார். இப்படியான சொத்து ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றாலும், புருஷன் அவளைத் தன் துணைவியாக எடுத்துக்கொண்டுள்ளார்; அதுவும் அவள் வசத்தில் காணப்படும் சொத்துக்கள் எதையும் பொருட்படுத்தாமல் அவளைப் பராமரிப்பதற்குரிய பொறுப்பாளியாகின்றார் என்று புரிந்துகொள்ளலாம். இது கணவன் மற்றும் மனைவிக்கிடையே நியாயமான ஒப்பந்தங்களும் நிலவுவதையும்கூட அர்த்தப்படுத்துகின்றதாய் இருக்கும்; ஒருவேளை கணவன் வியாதிப்பட்டால், குடும்பத்தின் தேவைகளை மனைவி ஒருவேளை சந்திக்க வேண்டுமெனில், மனைவியானவள் தன் வழிவகைகளைப் பயன்படுத்துவது மாத்திரமல்லாமல், ஒருவேளை அவளுக்கென்று குடும்பம் இல்லாமல் இருக்கையில, தன்னைப் பாதுகாக்க வேண்டிய கணவனும் சரீர ரீதியில் பலவீனப்பட்டு இருக்கையில், கணவனுக்காக எவ்வகையான தேவைகளுக்குமென்று பணிவிடைச் செய்வதற்கும் அவள் தன் ஜீவியத்தையே ஒப்புக்கொடுத்துவிடுவதும் அவளுக்குரிய சிலாக்கியமாகும்.

ஆனால் இப்படியான தேவை ஏதுமில்லையெனில், மேலும் கணவன் தனக்கும், மனைவிக்குமெனத் தேவைகளைத் திரளாய்ச் சந்திக்க முடிகிறவராய் இருப்பாரெனில், மனைவியின் உரிமையினுடைய கீழ்க்காணப்படும் எதுவும் அவருக்கு அவசியமில்லையெனில், - - மனைவிக்குத் தனிப்பட்ட விதத்தில் வந்துள்ளதான அந்தப் பணத்திற்கு, தான் உக்கிராணக்காரியாக இருப்பதாக மனைவி எண்ண வேண்டும் என்றும், கர்த்தரிடத்திலும் அவள் பொறுப்பு ஒன்றினைப் பெற்றிருக்கின்றாள் என அவள் உணர வேண்டும் என்றும், அவள் கணவன் அவளோடு ஒத்துழைக்க வேண்டும் என்றும் நான் எண்ணுகின்றேன்.

## விசுவாசிகளுக்கு - திருமணத்தில் ஏற்புடைமை.

**கே 459:2 :: கேள்வி (1909) - 2 -** மில்லியனியல் டாண் பத்திரிக்கையில் விசுவாசிகளுக்கு திருமண உறவின் ஏற்புடைமை என்பது பற்றிய உங்களது கண்ணோட்டம் என்ன?

**பதில்.** அருமையான நண்பர்களே, இதில் நாம் எந்த ஒரு நிலைப்பாட்டினையும் எடுத்துக்கொள்கிறதில்லை. இக்காரியமானது மற்றவர்கள் முடிவெடுக்கும் காரியமாய் இராமல், மாறாக தனிப்பட்ட நபர்கள் முடிவெடுக்க வேண்டிய காரியமாயிருக்கின்றது. நீங்கள் திருமணம்பண்ணிட வேண்டும் என்றோ, நீங்கள் திருமணம் பண்ணிக்கொள்ளக்கூடாது என்றோ சொல்லிடுவதற்கான உரிமை எனக்கில்லை. அது உங்கள் காரியமாகும்; அது என் காரியமுமில்லை., வேறு யாருடைய காரியமுமல்ல. மில்லினியல் டாண் பத்திரிக்கையானது அப்போஸ்தலனாகிய பவுலினால் 18-நூற்றாண்டுகளுக்கு முன்னதாகச் சொல்லப்பட்டவைகளை மாத்திரமே சொல்லுகின்றது: அதாவது "விவாகம்பண்ணுகிறவன் நன்மை செய்கின்றான்; விவாகம்பண்ணாதவனும் அதிக நன்மை செய்கிறான்" என்று கூறுகின்றது. ஒருவேளை இப்பொழுது இரா முழுக்க பேசிட்டாலும், அப்போஸ்தலன் கூறியவைகளோடுகூடச் சேர்த்துக் கூறிடுவதற்கு நான் எண்ணுகிறதில்லை; அப்படிச் செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை அல்லது அவர் பேசினதை மாற்றிக் கூறிட எனக்கு விருப்பமும் இல்லை. மற்றவர்களுடைய இந்த விஷயத்தில் உங்களுக்கோ, எனக்கோ தலையிடுவதற்கு உரிமையும் இல்லை. ஒருவேளை அவர்கள் நம்முடைய சிறுபிள்ளைகளாக இருப்பார்களானால், அப்போது அறிவுரை வழங்கிடுவதற்கான உரிமையினை நாம் பெற்றிருப்போம். ஒருவேளை அவர்கள் சிறுபிள்ளைகளாக இருப்பார்களானால், அவர்கள் வளருவது வரையிலும் அவர்களுக்கு நாம்

வழிகாட்டிடுவோம் என்று அவர்களிடம் சொல்லிடுவதற்கான உரிமையினை நாம் பெற்றிருப்போம்; ஆனால் அவர்கள் வயது வந்தவர்களாகுகையில், பெற்றோர்கள் அறிவுரைக்கூறி அவர்களைக் குறுக்கிட்டுக்கொண்டிருக்கக்கூடாது. இந்த விஷயத்தில் அநாவசியமாய்த் தலையிடுவதற்கு முயலும் யார் ஒருவனும், தனக்குத்தானே, பிரச்சனையை மாத்திரம் கொண்டுவருகிறவனாய் இருப்பான். தேவன் விட்டுவிடுவது போன்று, நாமும் காரியத்தினை அவர்களிடத்திலேயே விட்டுவிடுவோமாக.

## விவாகம் - இது மனுஷனை கொடுங்கோலன் என்று உள்ளடக்குகிறதா?

**கே 460:1 :: கேள்வி (1909) - 1 -** ஒருவர் வீட்டிற்கு தலைவனாக இருப்பதால் குறிப்பாக விவாகத் தொடர்பான விஷயத்தில் அவர் ஒரு கொடுங்கோலனாக அவசியம் இருப்பார் என்ற எண்ணம், மனுக்குலத்தாரின் மத்தியில் இருப்பதைப் போலவே, சகோதரர்களிடையேயும் அதிகமாக நிலவி, முரண்பட்ட பாதிப்பை ஏற்படுத்துவது ஏன்?

**பதில்.** இது அடிக்கடி நிலவுவதற்கான காரணம் என்னவெனில், இது அடிக்கடி நிகழ்வது தான். இவ்வளவு தான் நான் சொல்ல முடியும். எனினும், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் எல்லோரும் கிறிஸ்துவின் மனதை உடையவர்களாக இருக்கிறார்கள். இது கொடுங்கோண்மை போன்ற எதையும் தவிர்க்கவே செய்யும். கொடுங்கோண்மையாக இல்லாத சிலவற்றை கொடுங்கோண்மை என்று ஒருவேளை அழைக்கப்படலாம். கர்த்தர் அவரை செயற்படுத்தச் செய்யும் அதிகாரம், அன்பின் அதிகாரம் ஆகும் என்பதை எவரும் கற்றுக்கொள்ள வேண்டும். வேதாகம பாடங்களில் 6ம் வால்யூமில் உள்ள எங்களால் முடிந்த அறிவுரையை நாங்கள் உங்களுக்கு தருகிறோம். நாங்கள் கொடுங்கோண்மை போன்ற எதையும் அங்கீகரிப்பதில்லை. பொதுவாக மிகச் சிறந்த வழி உள்ளது; அந்த வழி மிகச் சிறந்த வழி. அந்த வழி கொடுங்கோண்மையாக இருக்கிறதில்லை.

## விவாகம் - எல்லாவற்றிலும் கனமுள்ளது.

**கே460:2 :: கேள்வி(1910-Z) - 2 -** இந்த இறுதி நாளில் முழுவதும் அர்ப்பணிக்கப்பட்டவர்களாக உரிமை கோருகிறவர்களின் விவாகம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? காவற் கோபுர பத்திரிகையில் விவாகத்தின் தகுதி உடைமையைப் பற்றிய காலத்திற்கேற்ற ஒரு குறிப்பு மிக நன்றாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். சிலர் தங்களுடைய சிறிதான எல்லாவற்றிலும் தியாகம் செய்வதற்கான தங்களுடைய சலுகையை பலர் புரிந்து கொள்வதில்லை என்றே தோன்றுகின்றது.

தாமதமாக இருந்தாலும், காவற் கோபுர பத்திரிகையை நிச்சயம் ரசித்துப் படித்திருக்கிறேன். திரள் கூட்டத்தைப் பற்றிய விளக்கங்கள் மற்றும் மகிமையான அர்ப்பணிப்பு என்ன என்று விஷயங்கள் நான் என்னுடைய சிறிதானவைகள் எல்லாவற்றிலும் முழுமையான அர்ப்பணிப்பை நான் செய்து, என்னுடைய மேல் விசாரிப்பில் விசுவாசமுள்ளவனாக இருக்கிறேனா, இல்லையா என்பதை எனக்கு நானே சில ஜாக்கிரதையான சுய பரிசோதனைகள் மற்றும் அதிக ஊக்கமான ஜெபங்கள் வாயிலாகச் செய்ய முடிந்தது. கர்த்தருக்குள் உங்கள் சகோதரன்.

**பதில்.** அருமையான சகோதரனே, உங்களுடைய உணர்வுகளை நான் மிகவும் ஏற்றுக்கொள்கிறேன். காலம் குறுகியதாயிருக்கிறபடியால், அர்ப்பணிப்பைச் செய்த எல்லாரும் தங்களுடைய அன்பையும், உண்மையையும் நிரூபிக்கும் விதமாக, ராஜாவின் ஊழியத்திற்காக ஒவ்வொரு திறமையும், ஒவ்வொரு தருணமும் உங்களுக்குத் தேவைப்படுகிறது. அநேக விவாகங்கள் ஆவிக்குரிய விதத்தில் அனுகூலமற்றதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் அப்படி இருந்திருக்கிறார்களா என்பது நமக்குத் தெரியாது.

எனினும், இந்த விஷயத்தில் நமக்கு விருப்பம் தேர்வு செய்வது எதுவுமில்லை. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது என்று கர்த்தருடைய வார்த்தை தெளிவாகத் தெரிவிக்கிறது. ஆகவே, விவாகத்தைத் தடைபண்ணுவது நேரிடையாகவோ, மறைமுகமாகவோ அவருடைய எல்லை வரம்புக்குள் இல்லை. சபைக்கு தேவ ஆவியில் ஏவப்பட்ட போதனையாளரான

பரிசுத்தவானாகிய பவுலின் வார்த்தைகளுக்கு கவனத்தை ஈர்ப்பதில் நாம் மிகவும் சலுகை பெற்றவர்களாக இருக்கிறோம். இவருடைய கண்டிப்பான அறிவுரைகள் நம் எல்லாருக்கும் பல சமயங்களில் ஆசீர்வாதத்தை வரவழைத்திருக்கின்றன. அவர் கூறுகிறார், "விவாகம் பண்ணுகிறவன் நன்றாக இருக்கிறான். விவாகம் பண்ணாமல் இருக்கிறவன் அதைவிட நன்றாக இருக்கிறான்."

ஆகவே, நம்முடைய பங்கில், அப்போஸ்தலருடைய அறிவுரையைச் சுட்டிக்காட்டுவதில் திருப்தியுற்று, இந்த விஷயத்தை அருமையான நண்பர்களின் கரங்களிலேயே விட்டு விடுவோம். சில சந்தர்ப்பங்களில் இந்த பொதுவான விதியை பிரயோகப்படுத்த முடியாது என்பதை மறக்க வேண்டாம். கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தில், அவர் அல்லது அவளுடைய சொந்த கணிப்புக்கும் குற்றத்தீர்ப்புகளுக்கும் இசைவாக தீர்மானிக்க வேண்டும். "நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள்." (ரோமர் 14:13.)

## விவாகம் - உயிர்த்தெழுதலில்.

**கே 461:1 :: கேள்வி (1911-Z) - 1 -** தற்காலத்தில் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உள்ள பரஸ்பர அன்பு, பூமி மற்றும் பரலோகம் இரண்டிலும் எப்பொழுதும் தொடரும் வண்ணமாக கர்த்தரால் உறுதிப்படுத்தப்படப்போகிறது என்ற விஷயம் தேவனுடைய திட்டத்திலிருந்து நீங்கள் பெற முடியுமா?

**பதில்.** நாங்கள் பதிலளிக்கிறோம், இல்லை. விவாகம் என்ற ஏற்பாட்டை மிகவும் விசேஷித்த நோக்கத்திற்காக தேவன் நியமித்திருக்கிறார். இது மனுஷ குடும்பத்துக்கு மட்டுமே உள்ளது. தகப்பனாகிய ஆதாமிலிருந்து தாயாகிய ஏவாள் பிரித்தெடுக்கப்பட்டது, **அவனுடைய விலா எலும்புகளில் ஒன்றிலிருந்து அவள் உண்டாக்கப்பட்டதின்** நோக்கம், ஒரு சந்ததியை உருவாக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. ஒருவரை ஒருவர் ஒன்றானவராக அங்கீகரித்து, இந்த இருவரும் ஒன்று சேர்வது தான் விவாகத்தை அர்த்தப்படுத்துவதாக உள்ளது. ஆகவே, அப்போஸ்தலர் கூறுகிறார், "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்."

தேவனுடைய திட்டத்தில், ஆவியின் தளத்தில் **ஆண்** மற்றும் **பெண்** என்று எந்தவிதமான ஏற்பாடும் இல்லை. கலை தயாரிப்புகளில் **ஆண்** தூதர்கள் இருக்கிறதில்லை; ஆனால், வேதாகமத்தின்படி **பெண்** தூதர்கள் இருக்கவில்லை. சபையில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக இருப்பதினால், தூதர்கள் பெண்களாக இருப்பார்கள் என்று திரளான கலைஞர்கள் அனுமானித்திருக்கிறார்கள் என்பது காரணமாக இருக்கலாம். ஆனால் இந்த முழு கருத்தும் தவறானதாகும். ஏனெனில், தூதர்கள் மனுக்குலத்திலிருந்து முழுவதுமாக தனிப்பட்ட அமைப்பு முறை கொண்ட சிருஷ்டிகள் ஆவர். மனுஷன் ஒருபோதும் தூதனாக இருந்ததில்லை. மனுஷன் பூமியைச் சார்ந்தவன், பூமிக்குரியவன். அவன் பூமியின் ராஜாவாகிய ஸ்தானத்திலிருந்து விழுந்து சிதைந்து போனான். மேசியா மனுக்குலத்தை ஆளும்போது, பாவம் மற்றும் சீரழிவிலிருந்து விடுதலையாக்கி, மனுஷீக பூரணத்துவத்திற்கு திரும்ப கொண்டு வருவது தான் தேவ நோக்கமும் வாக்குத்தத்தமுமாய் இருக்கிறது. அப்.3:19-21.

தூதர்கள் இருக்கிறதைப் போன்று ஆவியின் சிருஷ்டிகளாகும் ஒரே வகுப்பார் சபை வகுப்பார் மட்டுமே. ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் இவர்களுக்கு உயிர்த்தெழுதலில் சுபாவ மாற்றம் கொடுக்கப்படும். அப்போஸ்தலர் கூறுகிறார், "நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்-- "ஏனெனில், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது." (1கொரி 15:51,50." ஆகவே, மணவாட்டி மட்டுமே அவளுடைய கர்த்தரிடத்தில் பங்கு பெறும் முதலாம் உயிர்த்தெழுதல், உலகத்தாரின் உயிர்த்தெழுதலிலிருந்து வேறுபட்டது ஆகும். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்களைப் பற்றி நாம் படிக்கிறோம், "இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்." (வெளி.20:6.) மாம்சமும் இரத்தமும் அந்த ராஜ்யத்தின் பங்காக இருக்க

முடியாது. ஆகவே அவர்கள் எல்லாரும் மாற்றம் அடைய வேண்டும். இயேசு ஆவியின் சுபாவத்திலிருந்து மனுஷ சுபாவத்திற்கு மாறுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சபை மனுஷ சுபாவத்திலிருந்து ஆவியின் சுபாவத்திற்கு மாற்றமடைய வேண்டும். ஏனெனில், அவர்கள் "அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிக்கிறார்கள்." (1யோவான்.3:2.) அவருடைய மகிமையிலும், அவருடைய மணவாட்டியாக இருப்பதிலும் பங்கு பெறுகிறார்கள். சபை இவ்விதமாக மாற்றம் அடையும் போது, **ஆண்** மற்றும் **பெண்** என்ற தனித்துவங்கள் அனைத்தும் அழிக்கப்படும். ஏனெனில் தூதர்களிடையே ஆண் அல்லது பெண் என்று இல்லை. மகிமையடையும் சபையில் இப்படி இருக்காது என்று வேதாகமம் நமக்கு சொல்கிறது. ஆவியின் சிருஷ்டிகளின் பூரணத்துவம் ஒன்றாயிருக்கும்... எல்லோரும் பாலினபாகுபாடு இல்லாமல் ஒரே மாதிரி இருப்பார்கள்.

மனுக்குலத்தைப் பொருத்த வரையில்: மனுக்குலம் பூரணத்துவம் அடையும் போது, அனைவரும் பாலின பாகுபாகு இல்லாதவர்களாயிருப்பார்கள் என்று மனுக்குலத்திற்கு தேவனுடைய ஏற்பாடு இருக்கிறது என்பதை வேதாகமம் தெளிவாகச் சுட்டிக்காட்டுவதாக நாம் நினைக்கிறோம். அதாவது, ஆயிர வருஷ யுகத்தின் முடிவில், எல்லோரும் படிப்படியாக பூரணராக்கப்பட்ட பிறகு, ஒவ்வொரு பாலினமும் தங்களுடைய வளர்ச்சியில், மற்ற பாலினத்தின் அதிகமான தன்மைகளை எடுத்துக் கொண்டிருக்கும்; அந்த யுகத்தில் பெண் தன்னுடைய பெண்மையின் நளினங்களுடன் படிப்படியாக ஆண்களுக்கு இருக்கும் தன்மைகளைச் சேர்த்துக் கொள்வாள். அப்படியே ஆண் தன்னுடைய ஆண்மை தன்மைகளுடன் பெண்ணுக்குச் சொந்தமான மனது மற்றும் உடலின் மெல்லிய உணர்வுகளையும் பண்புகளையும் எடுத்துக் கொள்வான். இவ்விதமாக, விலா எலும்பினால் அடையாளப்படுத்தப்பட்ட அவனிடத்திலிருந்து முன்பு எடுக்கப்பட்டதை மனுஷன் திரும்ப பெறுவான். ஆகவே அப்பொழுது எல்லாம் பூரணத்துவமாய் இருக்கும்; அவர்கள் விவாகம் செய்வதுமில்லை, விவாகத்துக்குட்படுவதுமில்லை. ஏனெனில், இந்த வகையில் "தேவதூதருக்கு ஒப்பானவர்களாக" இருப்பார்கள். லூக்.20:34-36.

## விவாகம் - ஆயிர வருஷ யுகத்தில்.

**கே 462:1 :: கேள்வி (1911) - 1 -** ஆயிர வருஷ யுகத்தில் விவாகம் செய்வதும், விவாகத்திற்குட்படுவதும் இருக்குமா?

**பதில்.** ஆயிர வருஷ யுகத்தில், அந்த ஆயிரம் வருஷங்களில் தேவ தூதர்கள் விவாகம் செய்யமாட்டார்கள் அல்லது விவாகத்திற்குட்பட மாட்டார்கள். அவர்கள் ஒருபோதும் விவாகம் செய்திருக்கவில்லை மற்றும் அவர்கள் அப்போது விவாகம் செய்யமாட்டார்கள், மற்றும் சபை விவாகம் செய்யாது அல்லது விவாகத்திற்குட்படாது. ஏனெனில் இந்த வகையில் அவர்கள் தேவதூதர்களுக்கு ஒப்பானவர்களாக, பாலின தனித்துவம் இல்லாமல் இருப்பார்கள். மனுக்குலத்தைப் பொருத்த வரையில், வேதாகமம் அதை தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறதில்லை. அந்த யுகத்தை அடைகிற எவரும், அல்லது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலை அடைந்த எவரும் விவாகம் பண்ணமாட்டார்கள் அல்லது விவாகத்துக்குட்பட மாட்டார்கள் என்று வேதாகமம் நமக்கு சொல்கிறது. உயிர்த்தெழுதலை அடைவது என்பது வளர்ச்சியடைந்து கொண்டிருந்து முழுமையான உயிர்த்தெழுதலை அவர்கள் அடைகிறதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், ஒரு நபர் கல்லறையிலிருந்து விழித்தெழுப்பப்பட்ட அந்தக் கணமே உயிர்த்தெழுதல் நடக்கவில்லை, ஆனால் அவருடைய உயிர்த்தெழுதல் வெறுமனே துவங்கியிருக்கிறது என்றும், ஒவ்வொரு படியும் முழுமையான பூரணத்துவத்தை நோக்கி முன்னேறிச் சென்று, அவர் முழுமையாக பூரணராகும் வரைக்கும் உயிர்த்தெழுதலில் அதிகமானதைப் பெறுகிறார். அதன் பிறகு அவருடைய உயிர்த்தெழுதல் முழுமை அடைகிறது; அவர் பாவம், குறைபாடு மற்றும் மரணத்திலிருந்து வெளியே எழுப்பப்படுகிறார். இப்பொழுது, முழுமையான வளர்ச்சியை அடைந்த போது, முழுமையாக எழுப்பப்பட்ட பிறகு, அவர்கள் விவாகம் செய்யமாட்டார்கள், அல்லது, விவாகத்திற்கு உட்படமாட்டார்கள். ஆயிர வருஷ யுகத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றி நான் உங்களுக்கு அனுமானமாகவே சொல்ல முடியும். ஏனெனில் வேதாகமத்தில் இந்த பாடம் குறித்து எதுவுமில்லை. இந்த விஷயம் படிப்படியாக குறைவின் மேல் குறைவு பெற்றதாகி விடும் என்பது என்னுடைய அனுமானம் ஆகும். இது வெறும் அனுமானம் மட்டுமே. நான் என்னுடைய அனுமானத்திற்கும், வேதாகமம் சொல்வதற்கும் இடையில் வேறுபாட்டை செய்திருக்கிறேன்.

## கலியாண விருந்து - எப்பொழுது மற்றும் இது என்ன?

**கே 462:2 கேள்வி (1906) - 2 -** மணவாட்டியின் தோழிகளான கன்னிகைகள் அழைக்கப்படும் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து அல்லது கலியாணஞ்சார்ந்த விருந்து எதை உள்ளடக்கியது? இது எப்பொழுது நடைபெறும்?

**பதில்.** நாங்கள் பதிலளிக்கிறோம். இது ஒரு உருவகம் ஆகும். அழைக்கப்படுதல், மணவாளன் வருதல் மற்றும் கலியாணத்திற்குப் போகுதல், மற்றும் கலியாணம் நடைபெறுதல் ஆகியவை உள்ளன. கிறிஸ்து மற்றும் சபை இடையில் ஐக்கியம் இவ்விதமாக அடையாளப்படுத்தப் படுகிறது. இது எப்போது நடைபெறும்? சரீரத்தின் கடைசி அங்கம் தன்னுடைய ஓட்டத்தை நிறைவு செய்திருந்து, கர்த்தருடைய மகிமையில் மறுரூபம் அடையும் போது நடைபெறும், பிறகு இந்த கலியாணம் முழுமை பெறும். அதாவது, இந்த ஐக்கியம் முழுமை அடையும். அவர்களுக்கு இரவு விருந்து இருக்குமா? கத்திகள், முள் கரண்டிகள் மற்றும் நாற்காலிகளுடன் உட்கார்ந்து, சாப்பிடுவதற்கு அவர்களுக்கு ஏதாவது இருக்குமா? இல்லை. அந்த மாதிரி விருந்து அல்ல. அருமையான நண்பர்களே, இந்த மாநாட்டில், கத்திகள் மற்றும் முள் கரண்டிகள் இல்லாமல் இங்கே நமக்கு விருந்து உள்ளது. தேவனுடைய வார்த்தை மற்றும் சத்தியத்தில் நமக்கு விருந்து உள்ளது. நமது கர்த்தர் இதை மேன்மையான காலத்தின் ஆசீர்வாதமாகவும், மேன்மையான விருந்தாகவும் அடையாளப்படுத்துகிறார். இது என்ன என்று நமக்குத் தெரியாது. விவரிக்கும் சக்திக்கு அப்பாற்பட்ட சிறப்பான ஒன்று இருக்கிறது என்று வெறுமனே ஒரு பரிந்துரையாக, பூமிக்குரிய காரியங்களிலிருந்து எடுக்கப்பட்ட சில உருவகங்களை அவர் நமக்குக் கொடுக்கிறார். அங்கே யார் இருப்பார்கள்? கிறிஸ்துவின் மணவாட்டி அங்கே இருப்பாள், மணவாளன் அங்கே இருப்பார், மணவாட்டியைப் பின்பற்றிச் செல்லும் தோழிகளாகிய கன்னிகைகள் அங்கே இருப்பார்கள். அவர்கள் திரள் கூட்டத்தார் என்று குறிக்கப்படுகிறார்கள். அவர்கள் ராஜாவுக்கு முன்பாக கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள் என்று தீர்க்கதரிசி சொல்கிறார்.

தேவனுடைய மகிமையான ஆசீர்வாதங்களிலும் கிருபைகளிலும் ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்கு பெறுவதற்கும் திரள் கூட்டத்தார் அழைக்கப்படப் போகிறார்கள். தேவனுக்கு நன்றி. இதனால் தற்காலத்தில் அவர்களின் சோதனைக்கும் இன்னல்கள் எல்லாவற்றிற்கும் ஈடு செய்து, அவர்கள் இருதயங்களை களிகூரச்செய்யும்.

## விவாகம்: தடை பண்ணுதல், மாமிசம் விலக்குதல்.

**கே 463:1 கேள்வி (1911) - 1 -** "விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்த பொய்யர் கட்டளையிடுவார்கள்." தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** இது மிகவும் நல்லது என்று நான் நினைக்கிறேன். தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் நன்றாக உள்ளது. எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் ஒருபோதும் விவாகம் பண்ண தடை பண்ணுவதில்லை. எவராவது அப்படி நினைத்திருந்தால், அது தவறாகும். விவாகம் பண்ணுகிறவன் நன்றாக இருக்கிறான். விவாகம் பண்ணாதிருக்கிறவன் அதை விட நன்றாக இருக்கிறான் என்று அப்போஸ்தலருடன் வெறுமனே சொன்னேன். மாமிசம் விலக்கப்படுவது குறித்து, உங்களுக்கு எந்த அளவுக்கு நல்லது என்பதையும், எந்த வகை உங்களுக்குச் சிறந்ததாக ஏற்றுக்கொள்கிறது என்பதை நீங்களே கணித்துக் கொள்ளுங்கள்.

## மரியாள் - மரியாளுக்கு அதிக கனம் ஏன் காண்பிக்கப்படவில்லை.

**கே 463:2 :: கேள்வி (1911) - 2 -** உங்கள் வகுப்புகளில் நடக்கும் கூட்டங்களில் அங்கத்தினர்கள் நமது கர்த்தரின் தாயாருக்கு அதிக கனம் ஏன் காண்பிக்கிறதில்லை? தேவன் மிக உயர்வாக கனம் பண்ணிய ஸ்திரீ?

**பதில்.** தேவனுடைய ஜனங்கள் எவரும் இயேசுவின் தாயாகிய மரியாளின் மீது எவ்வித அவமதிப்பையும் காண்பிக்க விரும்பமாட்டார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படி

அவர்கள் செய்தால், அவர்கள் மிகப் பெரும் தவறைச் செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். எனினும், சிலர் தன்னுணர்வற்ற நிலையில் குறைவான மதிப்பை செலுத்தி வருகிறார்கள் - அப்படிச் செய்வதாக அவர்கள் நினைக்கிறதில்லை - ஆனால் கத்தோலிக்க நண்பர்கள் மரியாளை அவருடைய குமாரனைப் போல அதே அளவுக்கு கிட்டத்தட்ட மேன்மையுள்ளவராகச் செய்வதைக் காணும் போது, இயற்கையாகவே கடும் மனமாற்றம் வந்து விடுகிறது. இது விஷயத்தில் வேறு பார்வையை எடுக்கும் சாய்வுத் தன்மை இயற்கையாக வந்து, மரியாள் அப்படிப்பட்டவர் அல்ல, போன்றவைகளை சொல்லும் நிலை ஏற்படுகிறது. இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு சரியான மரியாதை கொடுப்பதில் குறைவு என்று தோன்றுவதற்கான அறிக்கை ஏதும் நான் தருவதற்கு இந்த ஒரு வழி தான் இருக்கிறது. கிறிஸ்தவர்கள் அனைவரும் மரியாளுக்கு மிக உயர்வாக கனம் செய்ய வேண்டும். நான் அவருக்கு மிக உயர்வாக கனம் பண்ணுகிறேன் என்று நிச்சயிக்கிறேன். தேவன் அவரை மிக உயர்வாக கனம் பண்ணுகிறார் என்று நான் நினைக்கிறேன். தேவன் கனம் பண்ணும் ஒவ்வொருவரையும், அவர் ஆணாக அல்லது பெண்ணாக இருந்தாலும் கனம் பண்ண விரும்புகிறேன். ஆகவே மரியாளின் விஷயத்தில், அவரைக் கனம் பண்ணுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் மிகவும் நேர்த்தியான, உயர்ந்த பண்புள்ள பெண்ணாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் கர்த்தர் அவரை ஒருபோதும் பயன்படுத்தியிருக்க மாட்டார். அவர் மாசற்றவராக பிறந்தார், அவர் பாவம் இல்லாதவராக பிறந்தார் என்ற கத்தோலிக்கர்களின் கோட்பாட்டை நாங்கள் பதிவு செய்வதில்லை. அப்படியிருந்திருந்தால், அவர் பூரணத்துவமுள்ள பெண்ணாக இருந்திருப்பார். இயேசு பூரணமுள்ளவராக பிறந்தார் என்பதைக் குறிப்பதற்காகவே கத்தோலிக்கர்கள் இவ்விதம் கூறுகிறார்கள் என்று நான் அனுமானிக்கிறேன். அவருடைய தாயாரும் பூரணமாயிருக்கத் தேவைப்படுகிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இதில் அவர்கள் சுபாவம் பற்றிய கொள்கையை கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். முதலாவதாக, மரியாள் பூரணமாக பிறக்க முடியாது. ஏனெனில் அவருடைய தந்தை பூரணமானவர் அல்ல என்பதால் மரியாள் பூரணமான ஜீவனைத் தொடங்கவில்லை. இரண்டாவதாக, அவர் மாசற்றவராக இருக்க முடியாது. இயேசுவின் விஷயத்தில் அவர் பூரணமுள்ளவராக பிறக்க முடியும். ஏனெனில் அவருடைய ஜீவன் பரிசுத்தமுள்ள தகப்பனிடமிருந்து வந்தது. மரியாளின் மீது வந்த பரிசுத்த ஆவியின் மூலமாக, பிள்ளைக்கு ஜீவன், தனித்தன்மை, ஆத்துமா கொடுக்கப்பட்டது. தகப்பன் ஜீவனை கொடுக்கிறவர் என்பதையும், தாயார் ஜீவனுக்கு ஊட்டமளிக்கிறவர் என்ற உண்மையை நமது மனங்களில் தீவிரமாக வரையறுத்துக் கொள்கிறோம். கர்த்தர் ஜீவனைத் தக்க வைத்துக் கொள்ளும் விதமாக தேவையான ஊட்டத்தை அளிக்கவும், பிறப்பு கொண்டு வருவதும் தான் மரியாள் கர்த்தரிடம் செய்ய வேண்டியிருந்தது. மரியாளின் பங்கு அதுவாக இருந்தது. சந்தேகமின்றி தேவன் நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுத்தார்.

## மனுஷ ரூபமெடுத்தல் - கெட்ட ஆவிகள் Vs பரிசுத்தவான்கள்.

**கே 464:1 :: கேள்வி (1909) - 1 -** கெட்ட ஆவிகளான பிசாசுகள் சபையில் மாம்சத்தில் போதகர்களாகத் தோன்றி பரிசுத்தவான்களை ஏமாற்ற முடியுமா?

**பதில்.** நாங்கள் சில நிமிஷங்களில் இதற்கு பதிலளிக்க முடிகிறதை விட, இந்த பாடத்திற்கான துண்டு பிரதி மிகவும் நன்றாக இருக்கும். எனினும், இது பற்றி சுருக்கமாக கூறுகிறோம்: “காவலிலுள்ள ஆவிகள்” என்று பேதுருவால் குறிக்கப்படும் இந்த கெட்ட ஆவிகள் ஜலப்பிரளய காலத்தில் தண்டிக்கப்பட்டவைகள். இவைகள் முன்பு அனுபவித்திருந்த சலுகைகள் தடைபண்ணப்பட்டிருக்கின்றன - ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, இவைகள் மனுஷ ரூபம் எடுக்க அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, நியாயத்தீர்ப்பின் அந்த மாபெரும் நாள் **வரைக்கும்** வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது. **“வரைக்கும்”** என்ற வார்த்தை, அந்த நேரத்தை நாம் அடையும் போது, இந்த கட்டுப்பாடுகள் தகர்க்கப்படுகின்றன என்று உணர்த்துவதாகத் தோன்றுகிறது.

அவர்களுடைய தடைகளிலிருந்து தேவன் அவர்களை விடுவிப்பார் என்பது எங்களுடைய கருத்து அல்ல, ஆனால், அவருடையதாயிராமல், வித்தியாசமான முறையில் மனுஷ ரூபம் எடுப்பதை அவர்கள் கண்டு பிடித்து தங்களையே ஏமாற்றிக் கொள்ள தேவன் அவர்களை அனுமதிப்பார். இதைத் தான் ஆவியுலக கோட்பாளர்கள் உரிமை கோருகின்றனர். எனினும்

இதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அவர்களைத் தனியாக விட்டு விடுகிறேன். ஆவியுலக கோட்பாளர்களின் கூட்டங்களில் ஒன்றுக்கு எந்த அளவு பணத்திற்காகவும் போக மாட்டேன்.

நீங்கள் பயப்படுகிறீர்களா?

இல்லை. நான் அவர்களிடம் பயப்படவில்லை. ஆனால் கர்த்தரிடம் பயப்படுகிறேன். அவர்களுடன் நான் அதையும் செய்யக்கூடாது என்று கர்த்தரிடம் எனக்குள்ள பயபக்தி கூறுகிறது. அவர்களுடைய கூட்டங்களிலும், மறுரூபங்களிலும், வெளிப்பாடுகளிலும் தங்களை இணைத்துக் கொள்பவர்கள் பெரும் ஆபத்துக்கு உட்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆவிகளுடன் கூட்டாக இணையும் ஊடகங்களை நான் குறை கூறவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏனெனில் எனக்குத் தெரிந்த வரையில் சில ஊடகங்கள் உண்மையாக இருக்கின்றன. அவைகள் உண்மையாக வேலை செய்கின்றன. அவைகள் இறந்த நபர்களின் ஆவிகளுடன் தொடர்பு கொள்வதாக **நினைக்கின்றன.** அவைகளின் வேலை **அவர்களுக்கு** உண்மையாகத் தோன்றுகின்றன என்று நான் சொல்கிறேன். மரணமடைந்தவர்களின் ஆவிகள் போல கெட்ட ஆவிகள் மறைமுகமாக செயல்பட்டு இவ்விதம் மனுக்குலத்தை ஏமாற்றுகின்றன. ஒரு மனுஷன் இறந்தால், அவன் எப்போதும் உயிரோடு இருக்கிறான் என்ற கோட்பாட்டை உயிரோடு தக்க வைக்கின்றன. புறசமய உலகத்தார் அனைவரையும் அவைகளுடைய ஆளுகையின் கீழ் வைத்திருக்கின்றன. ஆகவே இவைகளை வணங்குகிறவர்கள் பேய்களை வணங்குகிறார்கள் என்று பவுல் கூறுகிறார். பிறகு பேய்களின் சில கொள்கைகளைப் பற்றி பேசுகிறார். இவைகள் எல்லாம் சபைக்கு பயங்கர கேடு விளைவிப்பதாக இருக்கின்றன. அவைகள் தேவனுடைய ஜனங்களை ஏமாற்றுவதில் இன்பம் அடைகின்றன. ஜலப்பிரளயத்தின் நாட்களில் அவர்கள் மீது தேவன் போட்டிருந்த தடைகளை உடைத்திருக்கிறோம் என்று நினைக்கின்றன. பிறகு இந்த எண்ணத்துடன் தேவனைச் சுற்றி வருவதற்கு வழியைக் கண்டு, ஜலப்பிரளயத்தின் நாட்களில் செய்தது போல மனுஷ ரூபம் எடுப்பார்கள். எங்களுடைய ஆவியுலக கோட்பாடுள்ள நண்பர்கள், நான் அவர்களுடன் நட்புடன் இருக்கிறேன் என்பதற்காக அல்ல, ஆவியுலக கோட்பாடுள்ளவர்களால் ஏமாற்றப்படும் ஜனங்கள் எல்லாரும் என்னுடைய நண்பர்கள். இந்த மாயத்தோற்றத்தின் கீழ் இல்லாதவர்கள் இன்னும் அதிகமாக என்னுடைய நண்பர்கள் - ஆவியுலக கோட்பாடுள்ள நமது நண்பர்கள் இந்த வல்லமை வளரும் என்றும், அவர்கள் மனுஷ ரூபத்தில் தெருக்களில் நடக்கப் போவதாக எதிர்பார்க்கிறார்கள். அந்த வல்லமையை அவர்கள் பெற்றால், அது என்னை ஆச்சரியமடையச் செய்யாது. அந்த நேரம் வரைக்கும் அவர்கள் அந்தகார சங்கிலிகளினால் கட்டப்பட்டிருக்கிறார்கள். இந்த நூற்றாண்டுகளின் அனுபவத்தில் பாவத்தின் மூலத்தை அவர்கள் பார்த்திருக்கிறதினாலும், தேவனையும் அவருடைய நீதியையும் பார்த்திருக்குதலும் அவர்களுக்கு தேவையான பாடத்தைக் கற்பித்திருக்கிறதா என்று அவர்களை ஓரளவு சோதிக்கும்படியாக தேவன் இதில் கண்ணிமைக்கிறார். தேவனுடைய திட்டத்தைச் சுற்றி வளைப்பதாக நினைப்பதற்கு, தேவன் அவர்களை இதைச் செய்ய அனுமதிக்கிறார். இந்த யுகம் அல்லது உலகத்தின் முடிவில் மகா உபத்திரவ காலத்தைக் கொண்டு வருவதில் அவர்களுக்கு பங்கு உண்டு என்பதற்காகவும் அவர்களை அனுமதிக்கிறார்.

பரிசுத்தவான்களை ஏமாற்ற சபையில் போதகர்களாக மாம்சீக சரீரத்தில் அவர்கள் தோன்றுவார்களா? கர்த்தர் கூறினார் - - சகோதரர் ரசல் சொல்லும் எதையும் விட, கர்த்தர் சொன்னதை வைத்துக் கொள்வது மிகவும் மேலானதாக இருக்கிறது - - இது சாத்தியமாக இருந்திருந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட பரிசுத்தவான்களையும் அவர்கள் ஏமாற்றுவார்கள். ஆனால் பரிசுத்தவான்களைத் தவிர **மற்ற ஒவ்வொருவரையும்** ஏமாற்றுவதற்கு சாத்தியம் உண்டு. ஆகவே, பரிசுத்தவான்களாயிருப்பதும், கர்த்தருக்கு மிக அருகில் இருப்பதும் மிகவும் முக்கியம் ஆகும்.

## மத்தியஸ்தர் - செம்மறியாடுகள் அல்லது வெள்ளாடுகள்

**கே 465:1 :: கேள்வி (1909) - 1 -** ஆயிர வருஷ யுகத்தில் செம்மறியாடுகள் வகுப்பாருக்கு மத்தியஸ்தர் தேவையில்லை - வெள்ளாடுகள் வகுப்பாருக்கு மட்டும் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**பதில்.** அந்த கருத்தை நான் ஏற்றுகொள்ளவில்லை. உலகம் முழுவதும் மத்தியஸ்தரின் கீழ் உள்ளது என்று வேதாகமம் சொல்கிறது. மத்தியஸ்தராகிய தம்முடைய சரீரத்தைத் தவிர, மற்ற ஒவ்வொரு நபரும் இதில் அடங்குவார். இவர்களுக்கு இடையே மத்தியஸ்தர் வந்து நிற்பார். ஆயிர வருஷ யுகம் முழுவதிலும் அவர்கள் எல்லாரும் மத்தியஸ்தரின் கீழ் இருப்பார்கள். ஆயிர வருஷ யுகம் முடிகிற வரையில் தேவனுக்கும் உலகத்துக்கும் நடுவில் தொடர்பு இருக்காது. உண்மையில் - உலகத்தார் தங்களுடைய கிரியைகளினால் நீதிமான்களாக்கப்படுவார்கள். சபை வேறுவிதமான நிலைமையில் உள்ளது. கிறிஸ்துவின் ஆயிர வருஷ இராஜ்யம் நிறுவப்படும் போது, உலகத்தார் எல்லோருடனும் செயல்தொடர்பு கொண்டு உயிர்த்தெழுதல் மற்றும் சீர்பொருந்துதல் மூலமாக - ஆதாமுக்கு முன்பு இருந்த எல்லாவற்றையும் பெறவும் - ஆதாம் இழந்த எல்லாவற்றையும் பெறவும் - அவர்களை மேல் நோக்கி வரச்செய்வார் - இந்த பூரணத்துவம் உள்ள நிலைமையில் அவர்கள் எல்லோரும் பிதாவிடம் ஒப்படைக்கப்படுவதற்கு ஆயத்தம் பண்ணப்படுவார்கள். ஆயிர வருஷ யுகம் நடக்கும் போது, அவர் உலகத்தாரை பிதாவிடம் ஒப்படைக்க மாட்டார். ஏனெனில் பிதா அவரை உலகத்தாரின் நியாயாதிபதியாகவும், அவர்களின் ராஜாவாகவும, அவர்களின் மத்தியஸ்தராகவும் நியமித்தார். ஒவ்வொன்றும் இதை மையமாகவே கொண்டுள்ளது. ஏனெனில் கிறிஸ்துவும் சபையும் ஒன்றாக இருக்கிறார்கள். இது உலகத்தாரின் நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கிறது. நீதிமானாக்கப்படுதல் என்பது சரியாக்குதல் - நேர்மையாக்குதல் என்று அர்த்தமாகும். ஆதாம் துவக்கத்தில் எப்படி இருந்தான்? அவன் நீதிமானாக இருந்தான். அவன் பாவம் செய்த போது, நீதியில்லாதவனாகி விட்டான். அவன் பூரணமில்லாதவனாகி விட்டான். அவன் விழுந்து விட்டான். அனைத்தும் கீழ்ப்படியக்கூடிய இடமாகிய பூரணமான இடத்திற்கு தூக்கிவிடப்படுவது தான் நீதிமானாக்கப்படுதல் என்று அர்த்தம் பெறுகிறது. இதைத் தான் கிறிஸ்து உலகம் முழுவதற்கும் செய்யப் போகிறார். ஒவ்வொருவனும் அவனவனுடைய கிரியைகளினால் நீதிமானாக்கப்படுவார்கள். ஆகவே ஆயிர வருஷ முடிவில் உலகம் முழுவதும் அந்த நிலைமையை அடையும் போது, அவர்கள் பிதாவிடம் ஒப்படைக்கப்படுவார்கள். எந்த மனுஷனும் இப்பொழுது பிதாவிடம் ஒப்படைக்கப்படுவதாக இருந்தால், இது அவனுடைய அழிவையே குறிக்கும். ஆனால் மத்தியஸ்தரினால் உலகத்தார் கொண்டுவரப்பட்டு, பூரணமுள்ளவர்களாக பிதாவிடம் ஒப்படைக்கப்படும் போது, அவர்களுக்கு மத்தியஸ்தர் தேவைப்படாது. ஏனெனில் அவர்கள் உண்மையிலேயே நீதிமானாக்கப்படுவார்கள் - வெறுமனே எண்ணப்படமாட்டார்கள். ஆகவே ஆயிர வருஷ யுகத்தில் வெள்ளாடுகளுக்கு மட்டும் மத்தியஸ்தர் தேவைப்படவில்லை, செம்மறியாடுகளுக்கும் மத்தியஸ்தர் தேவைப்படுகிறது. இதற்கு காரணம் என்னவெனில், உலகத்தில் சிலர் செம்மறியாடுகளாக இருப்பார்கள் என்று தேவன் பார்த்ததால், அவர் இந்த ஏற்பாட்டை செய்தார். இந்த ஏற்பாட்டில் பயன்பெறாமல் போகிறவர்கள் வெள்ளாடுகளாக இருந்து அழிக்கப்படுவார்கள். நாம் கற்பிக்கப்பட்டபடி, செம்மறியாடுகள் அல்லது வெள்ளாடுகளாக எப்படி இருந்தாலும் உலகத்தார் பிதாவுடன் எந்த செயல்தொடர்பும் கொள்ளமாட்டார்கள் - ஆயிர வருஷ யுகத்தின் முடிவில் தான் அவர்கள் பிதாவுடன் தொடர்பு கொள்வார்கள்.

## மத்தியஸ்தர் - Vs பரிந்து பேசுகிறவர்.

**கே 466:1 :: கேள்வி (1909) - 1 -** மத்தியஸ்தர் மற்றும் பரிந்து பேசுகிறவர் - - எந்த வகையில் அவர்கள் ஒரே மாதிரி இருப்பார்கள் - - எந்த வகையில் அவர்கள் வேறுபடுவார்கள்?

**பதில்.** "மத்தியஸ்தர்" என்ற வார்த்தை நமது ஆங்கில மொழியில் உபயோகப்படுத்தும் போது, வேதாகமத்தில் உபயோகப்படுத்துவதற்கு மாறாக, வித்தியாசமான விதத்தில் நம்முடைய பொதுவான பேச்சு வழக்கில் உபயோகப்படுத்தப்படுகிறது. அதாவது, நீங்கள் சில சமயங்களில் கூறலாம், "எங்களுடைய வீட்டில் மத்தியஸ்தரைப் போன்ற விதமாக ஒரு ஸ்தானத்தை நான் எடுத்துக் கொள்கிறேன். அதாவது, எல்லா கஷ்டங்களும் என் வழியாக சரி செய்யப்படுகிறது. "இந்த வார்த்தையை உபயோகப்படுத்துவதில் இது ஒரு வழி ஆகும். ஆனால் இது வேதாகம வழி அல்ல. வேதாகமத்தில் "மத்தியஸ்தர்" என்ற சொல் ஒவ்வொரு முறையும் பயன்படுத்தும் போது உடன்படிக்கையுடன் தொடர்புள்ளதாகவே இருக்கிறது. நான் கடந்த காலத்தில் இதை எப்போதும் அப்படி பயன்படுத்தியதில்லை. வேதாகமம் இந்த சொல்லை எப்போதும் உடன்படிக்கையுடன் தொடர்புபடுத்தியே உபயோகப்படுத்தி வந்தது என்பதை கவனிக்காமல், இந்த சொல்லை தளர்வாகவே பயன்படுத்தியிருக்கிறேன். கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக

இருக்கிறார். ஆகவே இதைக் கட்டுப்பாடான விதத்திலேயே பயன்படுத்துவேன். நான் வேறு ஏதாவது எழுதியிருப்பதைப் பார்த்தால், இது ஒரு எதிர்பாராத பிழை என்பதையும், இதற்கு உள்நோக்கம் இல்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஒரு மத்தியஸ்தர் இரண்டு கட்சிக்காரர்களுக்கும் இடையில் நின்று இருதரப்பினருக்கும் நீதி செய்யப்படுகிறதைப் பார்க்க வேண்டும். நீங்களும் நானும் ஒரு வீடு கட்டுவதாக அனுமானிக்கலாம். நீங்கள் இதை 15000 டாலர்களில் கட்டுவதாக சம்மதித்து, விதிகளும் நிபந்தனைகளும் உருவாக்கப்படுகின்றன. இது போன்ற விஷயத்தில் "மத்தியஸ்தர்" ஒருவரை வைத்துக் கொள்வது வழக்கமாகும். இது மாதிரியான ஒப்பந்தத்தில், "மத்தியஸ்தர்" என்பது "கட்டிட கலைஞர்" என்று வழக்கமாக சொல்லப்படுகிறது. பிறகு, ஒரு கட்டிட கலைஞரை - மத்தியஸ்தரை - வைத்துக் கொள்கிறோம். வீட்டு வரைபடங்களையும் நிபந்தனைகளையும் அவர் உருவாக்குகிறார். நீங்கள் அந்த விவரக்குறிப்புகளை ஏற்றுக்கொள்கிறீர்கள். மறுபடியும், எந்த வர்த்தக நடவடிக்கைகளிலும், ஏதாவது காரணத்திற்காக நீங்கள் ஒன்றை கவனத்திற்கு கொண்டு வந்தால், அதற்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் அதற்கு கட்டுப்பட வேண்டியவர்களாகிறீர்கள். இப்பொழுது, அது நமக்கு இடையில் ஒரு உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் ஆகும். மத்தியஸ்தர் எங்கே? சட்டம். இரண்டு கட்சிகள் பற்றிய காரியங்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொன்றும் சரியாக இருக்கின்றதா என்று மத்தியஸ்தர் பார்க்கிறார். கிறிஸ்து உலகத்தை இரட்சித்திருக்கிறார். குறிப்பிட்ட ஆசீர்வாதங்களை அளிக்கும் விஷயத்தில் அவர் மத்தியஸ்தராக இருக்கப்போகிறவர். இந்த மத்தியஸ்தர் வழியாக உலகத்தின் இந்த ஜனங்களை எடுத்து, ஏற்றுக்கொள்ள சம்மதிக்கிறார். கிறிஸ்து இந்த உலகத்தை பூரணத்துக்குக் கொண்டு வர சம்மதிக்கிறார் - அவர் தேவனுக்கும் அவர்களுக்கும் இடையில் நிற்கிறார். அவர் அவர்களுக்கான பிரதிநிதியாக இருக்கிறார். அவர் அவர்களுக்கும் யேகோவாவுக்கும் இடையில் நிற்க முடியும். அவர் தாம் ஏற்கனவே செய்த பலியின் தகுதியினால் அவர்களுக்கு எல்லா உதவியையும் செய்யமுடியும். உலகத்தாரை நிச்சயப்படுத்தி, தேவனுக்கு உறுதிமொழி அளித்து, புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நிறைவேற்றுகிறார். யுகத்தின் முடிவில், ஆதாமினால் இழந்த பூரணத்துவத்தைத் திரும்ப பெறச் செய்து, அவர்களை பூரணமுள்ளவர்களாக பிதாவிடம் ஒப்படைப்பார். பரிந்து பேசுகிறவர் **உங்களுடைய** வழக்கறிஞராக இருக்கிறார் - அவர் மற்ற நபருடைய வழக்கறிஞர் அல்ல - அவர் உங்கள் பக்கம் இல்லாமல் வேறு எந்த பக்கமும் ஒருபோதும் இருக்க மாட்டார். அவர் நீதிமன்றத்திற்குள் செல்வதற்கு உரிமை கொண்டிருக்கிறார். நீங்கள் நீதிமன்றத்திற்கு எந்த நேரத்திலும் போக முடியாது. ஆனால் உங்களுக்காக ஆஜராக ஒரு வழக்கறிஞர் உங்களுக்கு கண்டிப்பாக வேண்டும். உங்களுக்கு நல்ல நிலையும் சுதந்தரமும் உண்டு. நீங்கள் நீதிமன்றத்தால் கண்டனம் செய்யப்படவில்லை, ஆனால் நம்முடைய சட்டங்களில் முழுவதும் பழக்கமுள்ள ஒரு வக்கீலை நீங்கள் கண்டிப்பாகப் பெற வேண்டும். ஒரு வழக்கறிஞர் மத்தியஸ்தர் அல்ல, அவர் நீதிமன்றத்தில் உங்கள் பிரதிநிதியாக இருக்கிறார். அப்படியே, சபை பிதாவுடன் ஒரு வழக்கறிஞரை வைத்திருக்கிறது. "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." அவர் நமக்காக என்ன சொல்லுவார்? நாம் குறைபாடுகளை உடையவர்களாயிருக்கிறோம் என்றும், ஆனால் நம்முடைய இருதயங்கள் சரியானவையாக உள்ளதை அவர் அறிகிறார் என்றும், இவர்கள் கனிவாக நடத்தப்படுவதற்கு தகுதியானவர்கள் என்றும் பிதாவிடம் எடுத்துரைக்கிறார். அவருடைய இரத்தத்தில் விசுவாசத்தின் மூலமாக நாம் பாவ மன்னிப்பு பெறுகிறோம்.

## மத்தியஸ்தர் Vs மகிமையடைந்த கிறிஸ்து.

**கே 467:1 :: கேள்வி (1909) - 1 -** மகிமை அடைந்த கிறிஸ்து தம்முடைய கைகளில் சகல அதிகாரத்துடன் "மனுஷனாகிய" மத்தியஸ்தராக இருப்பார் என்று எந்த வேதாகம வசனத்தின் அடிப்படையில் நீங்கள் கூறுகிறீர்கள்?

**பதில்.** ஒரு மனுஷன் மத்தியஸ்தர் என்று நாங்கள் எப்போதும் கூறுவதில்லை. மத்தியஸ்தர் மகிமையடைந்த கிறிஸ்துவின் புதிய சிருஷ்டியாக இருக்கிறார். மனுஷனாக இயேசு மத்தியஸ்தராக இருக்க முடியாது. புதிய உடன்படிக்கையை முத்திரிப்பதற்கு தம்முடைய இரத்தத்தை அல்லது மீட்பின் பலனை உபயோகப்படுத்துவதற்கான உரிமையை உடையவராக இருப்பதற்கு முன்பாக, அவர் தம்முடைய மனுஷீகத்தை பலியாக ஒப்புக்கொடுக்க

வேண்டியிருந்தது இந்த முத்திரிப்பு இல்லாமல் புதிய உடன்படிக்கை இருக்க முடியாது, மத்தியஸ்தரும் இருக்க முடியாது. ஆகவே மத்தியஸ்தர் உயிர்த்தெழப்பட்ட கர்த்தராக அவசியம் இருக்க வேண்டும். ஆகவே மாம்சத்தில் இருக்கும் சபை புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கவில்லை. தலை மற்றும் சரீரம் இரண்டும் திரைக்கு அப்பால் பிரவேசித்திருக்க வேண்டும். பிறகு ஆவியின் தளத்தில் மீட்பின் பலன் அனைத்தும் நிச்சயமாக தலையை மையமாக வைத்து, அவர்கள் அவருடன் மத்தியஸ்தர்களாக இருப்பார்கள். இது நான் உங்கள் முகத்தைப் பார்க்கும் போது, நான் உங்கள் கைகளிடம் பேசுவதில்லை. நான் உங்கள் கால்களைப் பார்த்து, அவைகளிடம் பேசுவதில்லை, அல்லது, சரீரம் இல்லாத உங்கள் தலையை பார்த்துப் பேசுவதில்லை. ஆனால் நான் தலையுடன் பேசுகிறேன், அப்படிச் செய்யும் போது, உங்கள் சரீரமும் உள்ளடக்கியதாகவே இருக்கிறது. ஆகவே கர்த்தர் இயேசு தலையாக இருக்கிறார். அவர் இந்த சுவிசேஷ யுகத்தில் இப்பொழுது ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கும் சரீரத்தைப் பெறுவார். இந்த முழு சரீரம் தான் ஆயிர வருஷ யுகத்தில் அவருடன் மத்தியஸ்தராக இருக்கும். பிறகு அது மத்தியஸ்தம் பண்ணுகிற இராஜ்யமாக இருக்கும். கிறிஸ்துவின் சரீரம் முழுமையடைந்து, மத்தியஸ்த இராஜ்யம் துவங்கும் வரைக்கும் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்யும் பணி இருக்க முடியாது. பிறகு இது ஆயிரம் வருஷங்கள் முழுவதும் நீடித்து, பிறகு மத்தியஸ்த இராஜ்யம் முடிவுக்கு வரும். ஏனெனில் அப்போது, கிறிஸ்து வெறும் தலையாகிய இயேசுவாக இல்லாமல், அவருடைய சரீரமாகிய சபையாக இருந்து, பிதாவிடம் இராஜ்யத்தை ஒப்படைப்பார்.

## மத்தியஸ்தர் -மனுஷனாகிய கிறிஸ்து இயேசு.

**கே 467:2 :: கேள்வி (1913) - 2 -** "தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் மனுஷனாகிய கிறிஸ்து இயேசு ஒருவரே." மனுஷனாகிய கிறிஸ்து இயேசு மத்தியஸ்தர் என்ற இந்த அறிவிப்பின் தொடர்பாக புதிய சிருஷ்டியாகிய கிறிஸ்து விவரிக்கப்படுவதில், உங்கள் கருத்தை மேலும் தயவு செய்து விளக்கவும்.

**பதில்.** அப்போஸ்தலரின் வார்த்தைகள் இவைகளே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவர். இவர் உரிய காலத்தில் எல்லோரும் நீதிமான்களாக்கப்படுவதற்கு மீட்பாக தம்மையே ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு ஆவார். இவரே இந்த மத்தியஸ்தர் இயேசு. இவர் மத்தியஸ்த பணியை இன்னும் செய்யவில்லை என்ற அர்த்தத்தில் இல்லை; இந்த பணியை செய்யப் போகும் நோக்கத்தில் அவர் இருக்கிறார். உதாரணமாக எடுத்துக் கொண்டால், இங்கு ஜனாதிபதி வில்சன் இருந்தார். ஆனால் அவருடைய பதவி ஏற்பு விழா இன்னும் வந்திருக்கவில்லை. அவர் தேர்ந்தெடுக்கப்போவதாக தெரியும் நிலையில், அப்பொழுது அவரை ஜனாதிபதியாகிய வில்சன் என்று அவரைப் பற்றி பேச முடியும். அவர் பதவி ஏற்கப்படவில்லை. இருந்தாலும் அவர் ஜனாதிபதி என்று சிலர் சொல்லலாம். ஆனால் அவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏற்கனவே அவர் வாக்களிக்கப்பட்டிருக்கிறார். அதைப் பற்றி எந்த கேள்வியும் இல்லை. அவர் ஜனாதிபதியாக வரப்போகிறவர். அப்படியே இயேசுவின் விஷயத்தில், மனுஷனாகிய கிறிஸ்து இயேசு தம்மையே ஒப்புக்கொடுத்தார் என்று அப்போஸ்தலர் பின்னாகப் பார்த்துச் சுட்டிக்காட்டுகிறார். மத்தியஸ்தராக தம்முடைய பணியை துவங்கி இருக்கிறார். ஏனெனில் தம்முடைய பலிகளை கொல்வது, மத்தியஸ்தராக அவருடைய முதல் பணியாக இருக்கிறது. அங்கே அவர் தம்முடைய சொந்த பலியைப் பொருத்த வரையில், இந்த பணியை ஏற்கனவே செய்திருக்கிறார். அவருடைய சபையை அடையாளப்படுத்தும் வெள்ளாட்டுகடாவின் பலிகளை 1800 வருஷங்களாக கொன்று கொண்டிருக்கிறார். அவருடைய சரீரத்தின் அங்கங்களாகிய வெள்ளாட்டுக்கடா வகுப்பாரை கொல்லும் இந்த பணியை இந்த 1800 வருஷங்கள் அனைத்திலும் செய்து கொண்டு வருகிறார். இந்த காலம் முழுமையிலும் அவர் மத்தியஸ்தராக இருக்கிறார். அந்த புதிய உடன்படிக்கையின் முத்திரிக்கும் அதிகாரமாக உபயோகப்படுத்தப்போகிற பாவநிவாரண இரத்தத்தைப் பெறுவதற்கு "மேலான பலிகளை" கொல்லும் இந்த பணி அனைத்தும் முடியப்போகும் வரையிலும் இது தொடரும். இயேசுவும் மாம்சத்தில் இருக்கும் அவருடைய சரீரமும் இந்த எல்லா பலிகளையும் கவனித்துக் கொள்வது புதிய சிருஷ்டி ஆகும். பலியிடுதலின் பணியை அவர் முடித்திருக்கும் போது, அப்போது அவர் பலியின் வஸ்திரங்களை கழற்றி விட்டு, பிரதான ஆசாரியன் மகிமையும் நேர்த்தியுமான வஸ்திரங்களை அணிந்தது போல, கிறிஸ்து அவருடைய மகிமையின் வஸ்திரங்களை அணிந்து

கொள்வார். அப்பொழுது, அனைத்து பணியையும் செய்து முடித்திருப்பார். சகல ஜனங்களையும் ஆசீர்வதிக்க தயாராக இருப்பார். தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே நிற்கிற அந்த மேன்மையான மத்தியஸ்தரால் பூமியிலுள்ள எல்லா வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்.

## மத்தியஸ்தர் - - யார்?

**கே 468:1 :: கேள்வி (1916) - 1 -** 1தீமோ.2:5,6ம் வசனங்களை தயவு செய்து விளக்கிக் கூறவும். மத்தியஸ்தர் யார்?

**பதில்.** அருமையான நண்பர்களே, இந்த பாடத்தை விவரமாக எடுத்துரைக்க எடுத்துக்கொள்ள வேண்டிய எண்ணம் இல்லை என்று நான் அனுமானிக்கிறேன். ஏனெனில் இந்த ஒரு பாடத்திற்கு, நம்முடைய மீதமாயிருக்கிற நேரம் முழுவதையும் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இது 5ம் வால்யூமில் முற்றிலும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே மற்ற கேள்விகளுக்கு சரியான பங்கு கொடுக்கும் விதத்தில், இதற்கான பதிலை சுருக்கமாகச் சொல்லுவோம்: "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு ஒருவரே." இது இயேசுவை தனிப்பட்ட நபராகச் சுட்டிக்காட்டுகிறது. அவர் தம்மை ஒப்புக்கொடுத்த போது, அவர் ஒருவராக இருந்தார். அவருடைய சரீர அங்கங்கள் இருக்கவில்லை. அவர் எல்லோருக்கும் மீட்கும் பொருளாகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். அந்த மீட்கும் பணி தான் எல்லாவற்றிற்கும் அடித்தளமாக இருந்தது. முதலாவது வேலையை இயேசு தனியாக செய்தார். இந்த மீட்கும் பொருளில் நாம் ஏதும் கொடுப்பதற்கு உங்களுக்கும் எனக்கும் ஒன்றுமில்லை. ஏனெனில், ஒரு பூரண மனுஷனுக்குப் பரிமாற்றமாக ஒரு பூரண மனுஷனின் ஜீவன் கொடுக்கப்பட்டது. நீங்களும் நானும் எல்லோரும் முதலாம் மனுஷனின் அங்கங்களாகவும், அவன் காரணமாக, கண்டனம் பண்ணப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். ஆகவே நாம் நம்முடைய சகோதரனுக்கு எவ்விதமான அர்த்தத்திலும் மீட்பைக் கொடுக்க இயலாது. இயேசு இன்னும் மத்தியஸ்தராக இருக்கவில்லை. புதிய உடன்படிக்கையை அறிமுகப்படுத்தும் காலம் வரைக்கும் அவர் மத்தியஸ்தராக இருக்க மாட்டார். இருப்பினும், வேறொரு அர்த்தத்தில், பெத்லகேமில் குழந்தையாக பிறந்த போதே, அவர் மத்தியஸ்தராக இருக்கிறார். "இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்." ஆனால் அவர் பிள்ளையாக இராஜ்யத்தை எடுத்துக் கொண்டிருக்கவில்லை. அவர் வளர்ச்சி அடைந்து, அர்ப்பணிப்பில் தம்மை ஒப்புக்கொடுத்து, அர்ப்பணிப்பை மரணத்தில் நிறைவேற்றும் வரையிலும் அவர் ராஜாவாகும் உரிமை பெறவில்லை. இருப்பினும், அவர் பிள்ளையாக ராஜாவைப் போன்று மத்தியஸ்தராகவும் அவர் தீர்க்கதரிசனமாகப் பேசப்படுகிறார். இயேசு வருவதற்கு முன்பு, தேவன் தாம் புது உடன்படிக்கை பண்ணுவேன் என்று கூறினார். எரே.31:31. கர்த்தர் யூதர்களுக்கு சொன்னார், "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்." - - நான் அவர்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, கல்லான இருதயத்தை எடுத்துப் போடுவேன். இவையெல்லாம் புதிய உடன்படிக்கையின் பணியாக இருக்கப்போகிறது. இது துவக்கத்தில் இஸ்ரயேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் இருந்து, பிறகு பூமியின் வம்சங்கள் அனைத்திற்கும் நீட்டிக்கப்படும். இஸ்ரயேலின் குடும்பமும் யூதர்களின் குடும்பமும் இக்காலத்தில் தேவனுடைய கிருபையிலிருந்து விலகியிருக்கின்றன.

கர்த்தரால் குறிக்கப்பட்ட விசேஷித்த புது உடன்படிக்கை "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்." இந்த பலியின் உடன்படிக்கை தான் இப்பொழுது கணக்கிடப்படுகிறது. இந்த பரிசுத்தவான்களில் முதல்வராக இருந்து, அர்ப்பணித்து, பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தவர் இயேசு ஆவார். அவர் நீங்களும் நானும் நம்முடைய சரீரங்களை அவர் ஏற்றுக்கொள்ளும் விதமாக வழியைத் திறந்தார். இது தற்காலத்திய பணி ஆகும். இந்த கூட்டத்தார் எல்லோரும் மேன்மையான மத்தியஸ்தரின் அங்கங்களாக இருக்கப்போகிறவர்கள். ஒரே மத்தியஸ்தர். சரீரம் இன்னும் முழுமையாகவில்லை. இயேசு மட்டும் திரைக்கு அப்பால் சென்றிருந்தார். அவர் தலையாக இருந்தார். தேவன் இயேசுவை எழுப்பினார். அவர் நம்மையும் இயேசுவின் மூலம் எழுப்புகிறார். ஆகவே கிறிஸ்துவின் முழு சபையும் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும்

எல்லாவற்றிலும் அவருக்கு செவி கொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற் கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்." அந்த பெரிய தீர்க்கதரிசி தான் ஆயிர வருஷ யுகத்தின் மேன்மையான மத்தியஸ்தர் என்று நாம் பார்க்கிறோம். தேவனுக்கும் மனுஷனுக்கும், அதாவது, மனுக்குல உலகத்தாருக்கும் இடையில் புதிய உடன்படிக்கை இருக்கும். இயேசு முதலாவதாக எழுப்பப்பட்டார்; அந்த வார்த்தைகளை அப்போஸ்தலர் எழுதும் போது, இயேசு ஒருவராக மட்டும் இருந்தார். இப்பொழுது, கிறிஸ்து இயேசுவின் சரீர அங்கங்கள் தலையுடன் எழுப்பப்படுகிறார்கள். மகிமையில் கிறிஸ்துவின் அங்கங்களாக நாம் எதிர்பார்க்கிறோம். பிறகு மத்தியஸ்தர் முழுமை அடைவார். மத்தியஸ்தரின் பணி ஆரம்பமாகும்.

## சாந்தம் - Vs தாழ்மை.

**கே 469:1 :: கேள்வி (1913) - 1 -** சாந்தம் மற்றும் தாழ்மை இடையே என்ன வித்தியாசம் உள்ளது?

**பதில்.** "சாந்தமாயிருப்பது" என்பது "கற்பிக்கத்தக்கது" ஆகும். "தாழ்மையாயிருப்பது" என்பது "கர்வமில்லாதிருப்பது" ஆகும். இப்பொழுது ஒரு மனுஷன் பெரிய ஆசிரியராக இருக்கலாம், கல்விமானாக இருக்கலாம், மிகவும் சாந்தமுள்ளவராக இருக்கலாம்; ஆகவே, எந்த நபரும் அவரிடம் வர முடிந்து, சொல்லலாம், "இங்கே எனக்கு ஒரு விஷயம் உள்ளது, இதைப் பாருங்கள்." அவர் போதுமான அளவுக்கு சாந்தமுள்ளவராக இருந்தால், அவர் சொல்லுவார்,"நான் இதைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளேன்." அவர் அப்படி இருக்காவிட்டால், அவர் சொல்லுவார்: "என்னிடம் வருவதற்கு உங்களுக்கு எப்படி எண்ணம் வந்தது! நான் ஒரு பேராசிரியர்" - உயர்ந்த பண்புகள் கொண்ட சில ஜனங்களை சில சமயங்களில் சந்தித்திருக்கலாம். அவர்கள் மிகவும் சாந்தமும், கற்பிக்கத்தக்கவர்களாகவும், கற்றுக்கொள்ள தயாராக இருக்கிறவர்களாகவும், எப்போதும் சத்தியத்தின் பின்னால் இருந்திருப்பார்கள். அவர்கள் சொல்வார்கள், "எல்லாவற்றையும் நான் அறியவில்லை. நான் சிறு பிள்ளையிடமிருந்து கற்றுக் கொள்வேன்." புத்தியுள்ள மனுஷன் எவனும் சிறு பிள்ளையிடமிருந்து ஏதாவது கற்றுக்கொள்ளலாம். ஆனால், சாந்தமாக இருக்காதவர்கள் எங்கேயும் கற்றுக்கொள்வதற்கு கஷ்டமாக இருக்கும். ஆகவே சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அதிகம் பெறுவார்கள்; அவர்கள் கற்றுக் கொள்வதற்கு கர்வப்படாமல் இருப்பார்கள்.

இப்போது "தாழ்மையாக இருப்பது" என்பது உங்களுடைய பட்டங்கள் அல்லது உங்களுடைய அறிவு அல்லது வேறு எதுவாக இருந்தாலும், அவற்றையெல்லாம் தாழ்மையான முறையில் அணிந்து கொண்டு, தற்பெருமை பேசாமல், வேறு எந்த வழியிலும் அணி வகுக்காமல், மயிலைப் போல கர்வத்துடன் நடந்து செல்லாமல், உங்களுடைய பிரகாசமான சிறகுகள் எல்லாவற்றையும் காண்பிக்காமலும் இருக்கிறீர்கள். வான்கோழி சேவல்கள் போன்றவர்கள் தாழ்மையாக இருக்கிறதில்லை. அவர் கர்வம் கொண்டவர்.

## கூட்டங்கள் - பயண ஊழியர்களின் கூட்டங்கள், விளம்பரங்கள் செய்தல் போன்றவை.

**கே 469:2 :: கேள்வி (1907) - 2 -** பயண ஊழியர்களின் கூட்டங்கள் தொடர்புடைய விஷயத்தில் உங்களுடைய அறிவுரை என்ன? அறுவடையின் இந்த காலப்பகுதியில் விளம்பரத்திற்காகவும், மண்டப வாடகைக்காகவும், அதிகமான பணத்தை செலவழிப்பது பரிந்துரைக்கத்தக்கதாக உள்ளதா? அல்லது, ஏற்கனவே விசுவாசத்தில் இருக்கிறவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப விசேஷித்த முறையில் அதிகம் ஊழியஞ்செய்வது மேலானதா? இந்த விஷயத்தில் பயண ஊழியர் எந்த அளவுக்கு செயல்படுவார்?

**பதில்.** அருமையான நண்பர்களே, கடைசி கேள்விக்கு முதலாவதாக பதில் அளிக்கிறேன். பயண ஊழியர் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்க முற்படவே கூடாது என்பது தான் என்னுடைய கருத்து ஆகும். இது பயண ஊழியர்களின் காரியம் அல்ல. நாங்கள் காவற் கோபுர அலுவலகத்திலிருந்து தான் இந்த விஷயங்களில் பெரும்பாலானவற்றை இயக்குகிறோம். அங்கு

முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகளின் திட்ட வரைவை பயண ஊழியர்கள் நிறைவேற்றி முடிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். பயண ஊழியர்களென அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரியமானது அவர்கள் அப்படிச் செய்வதற்குப் பிரியப்படுகிறார்கள் என்பதை உணர்த்துகின்றது. இது அடிமைத்தனத்தை குறிப்பதாகாது.. ஆனால் ஊழியர்களை அந்த நிபந்தனைகளின் கீழ் பயண ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தெய்வீக மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதான அந்த விதிமுறைகளை அங்கீகரித்து, அதைச் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆகவே பயண ஊழியர்கள் இந்த விஷயத்தில் அவர்களாக ஏதேனும் செய்வதற்கு ஒன்றுமில்லை. பயண ஊழியர்கள் இப்படிச் செய்வதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒருவேளை அப்படி யாராவது செய்திருப்பார்களேயானால், அவர்கள் கவனக்குறைவாகச் செய்திருப்பார்கள் என்று நான் அனுமானிக்கிறேன்.

எந்த அளவுக்கு விளம்பரங்கள் பண்ணப்படுவது சரியாய் இருக்குமென்பது தொடர்பாக நான் கூறிடுவது என்னவெனில்: இவ்விஷயத்தை நண்பர்களின் கரங்களிலேயே நாம் விட்டு விட விரும்புகின்றோம். பயண ஊழியர்களுடைய வருகைகளின் விஷயத்தில் உங்களது விருப்பத்திற்கு ஏற்ப அதிகமாய் விளம்பரங்கள் அல்லது கொஞ்சமாய் விளம்பரங்கள் கொடுங்கள். அதை உங்களது உக்கிராணத்துவத்தின் ஒரு பாகமாகக் கருதிக்கொள்ளுங்கள்; அதை நீங்கள் செய்ய வேண்டும். சொசைட்டியானது மற்றொரு பாகத்தைச் செய்கின்றது. அதாவது பயண ஊழியர்களை அனுப்பி வைத்தல், அவரது செலவுகள் முதலானவைகளைப் பார்த்தல் ஆகியவற்றைச் செய்கின்றது; மற்றும் பயண ஊழியர் மற்றொரு பாகத்தைச் செய்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாகத்தினைச் செய்வார்களானால், அனைத்துமே நேர்த்தியாய்ச் செய்யப்படும். ஆகையால் இது ஒவ்வொரு சாராரும், கர்த்தருடைய சித்தம் எதுவென்று தான் பகுத்தறிந்து நம்புகின்றார்களோ, அதைச் செய்திடுவதற்குரிய பொறுப்பினை ஒவ்வொரு சாராரிடத்திலேயே விட்டுவிடுகின்றதாய் இருக்கின்றது.

அதிகமான பொதுக்கூட்டங்கள் காணப்பட வேண்டாம் என்பது எங்களுடைய அறிவுரையாய் இருக்கின்றது; ஏனெனில் பயண ஊழியர்களுடைய இத்தகைய வருகைக்கான விசேஷித்த நோக்கம், விசுவாச வீட்டாருக்கு ஊழியம் புரிவதேயாகும் மற்றும் பொது ஜனங்கள் மத்தியிலான ஊழியங்களானது, விசுவாச வீட்டாருக்கு மிகவும் பிரயோஜனமாய் எப்போதும் காணப்படுகிறதில்லை. ஆகையால் பொது மற்றும் தனிப்பட்ட கூட்டங்கள் இரண்டுமே காணப்படுகையில், பொதுக்கூட்டங்களானது (PUBLIC MEETINGS) அனைத்து நேரத்தையும் எடுத்துக்கொள்ளாதபடிக்கும், விசுவாச வீட்டாருடைய விசேஷித்த நலனுக்கடுத்த காரியங்களுக்கெனப் பாதி நேரம் அல்லது பாதிக்கும் மேலான நேரமாகிலும் கொடுக்கும்படிக்கு நாம் எப்போதும் வலியுறுத்துகின்றோம்.

## கூட்டங்கள் - சிறு எண்ணிக்கையுள்ள வகுப்பு தொடர்பாக.

**கே 470:1 :: கேள்வி (1909) - 1 -** மூன்று அல்லது நான்கு பேரை எண்ணிக்கையாகக் கொண்டிருக்கும் வகுப்பிற்கு, நீங்கள் பெரோயா ஆராய்ச்சியை பரிந்துரைப்பீர்களா அல்லது டாண் ஆராய்ச்சியைப் பரிந்துரைப்பீர்களா?

**பதில்.** இரண்டையும் பெற்றிருப்பது நலமாயிருக்கும் என்று கருதுகிறேன்.. நமக்கு அநேகம் வாய்ப்புகள் காணப்படுகின்றபடியால், ஒன்றோடு நிறுத்திக் கொள்ள வேண்டாம். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் என்பது அநேகமாகப் பொதுவான கூடுகைகளுக்கு சிறந்ததாகவும், கொஞ்சம் ஒழுங்காயும் காணப்படும் மற்றும் டாண் ஆராய்ச்சி வகுப்புகளை மாலையில் பெற்றிருங்கள்.

இது விஷயத்தில் ஒருவரும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்ளை மறந்து விட வேண்டாம் என்று அறிவுரை வழங்குகின்றேன். ஏனெனில் அவைகள் சபை பெற்றிருக்கும் மிகவும் பிரயோஜனமான கூட்டங்கள் மத்தியில் அடங்குபவைகளாகக் காணப்படுகின்றன. எந்த அளவுக்கு அவைகள் அதிகமாய்ச் செய்யப்படுகின்றதோ, அவ்வளவாய்ச் சபையாருடைய ஆவிக்குரிய நிலைமையானது நலமார்ந்து காணப்படுவதை நாம் பொதுவாகப் பார்க்க முடிகின்றது மற்றும் இதன் காரணமாக, முடிந்தமட்டும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களை மறவாமல் இருங்கள் மற்றும் பல வருடங்களுக்கு முன்பாக நடந்தவைகளைச் சாட்சியாகப் பகரும் தவற்றினையும்

செய்யாதிருங்கள். ஒரு வாரத்திற்கென்று ஒரு தலைப்பைப் பெற்றிருங்கள் மற்றும் முடிந்தமட்டும் அத்தலைப்புத் தொடர்பாகவேயுள்ள சாட்சிகளையும் கொண்டிருங்கள் என்று நாம் யோசனை தெரிவிக்கின்றோம். சில இடங்களில் சபையார் வாராந்தர பிரசங்கங்களை, ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களுக்கான இவைகளின் அடிப்படையில் சாட்சிகொடுப்பதற்கு முயற்சிக்கின்றனர் மற்றும் இப்படியாக அப்பாடத்தினை வாரம் முழுவதும் மனதில் பெற்றிருக்கையில், சபையார் அப்பாடத்திற்கு இசைவான சில அனுபவங்களைக் குறித்துக் கவனித்திருப்பார்கள். நியூயார்க்கிலுள்ள சபையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் கொடுக்கப்படும் தூதை, சபையார் வாராந்தர ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டத்திற்கான பாடப்பொருளாக எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் பிற்பாடு அவர்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், திங்கட்கிழமையிலும், செவ்வாய்கிழமையிலும் மற்றும் புதன்கிழமையிலும் - நான்கு நாட்களாக தங்கள் அனுபவங்களைப் பாடப்பொருளின் அடிப்படையில் கவனிக்கின்றனர். ஒருவேளை தலைப்பு, 'பொறுமை'யைக் குறித்தது என்றால், தாங்கள் எந்தளவுக்குப் பொறுமையினை வளர்த்திருக்கின்றனர் என்று கவனித்துக் கொள்வார்கள் மற்றும் பொதுவாகவே அவ்வேளையில் அது தொடர்பான ஏதோ ஒரு அனுபவம் காணப்படுவதையும் காண்பார்கள். புதன்கிழமைக் கூட்டத்திற்குப் பிற்பாடு, அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை வரை அதே எண்ணங்களை மனதில்கொண்டு காணப்பட்டு, இவ்விதமாய் எப்போதும் அதை மனதில் கொண்டவர்களாய் இருக்கின்றனர். இதில் ஒரு அனுகூலம் என்னவெனில், இது நம் அனைவரையும் அப்போது வரையிலான நம் நிலவரம் குறித்து அறியும் நிலைக்கு கொண்டுவருகின்றதாய் இருக்கிறது. கிறிஸ்தவ அனுபவம் தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் நோக்கமின்றிச் சென்றுகொண்டிக்க, அதுவும் நீங்கள் நோக்கமின்றிச் சென்றுகொண்டிப்பதை அறியாதவர்களாய்க் காணப்பட்டு, இப்படியே ஒருநாள் முழுவதும் வீணாகிப்போயிருக்கும் என்பதை நீங்கள் அனைவரும் உங்களது அனுபவங்களில் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் எண்ணுகிறேன்; ஆகையால் இந்த அனுபவங்களைக் கவனிப்பதின் மூலம் நாம் தேடுபவைகளை அவற்றில் காணலாம். இப்படியாக உங்கள் மனதிற்கு முன்பாக நீங்கள் எதையும் நிறுத்தி கொள்ளவில்லையெனில், உங்களுக்கு இத்தகைய அனுபவம் காணப்படாது மற்றும் கர்த்தர் உங்களை எப்படிப் பராமரித்தார் அல்லது உங்களுக்கு என்ன அனுபவங்கள் காணப்பட்டது என்பவற்றை அறியாமல் காணப்படுவீர்கள். இவைகள் மிகவும் பிரயோஜனமாய் இருப்பதை நாம் கண்டுகொண்டோம்.

## கூட்டங்களுக்கான ஒழுங்கு.

**கே 471:1 :: கேள்வி (1910) - 1 -** ஒரு சபையில் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு கூட்டங்களும், மீதி வாரத்தில் இரண்டு கூட்டங்களும் இருக்க, அதாவது ஏழு நாட்களில் நான்கு கூட்டங்கள் காணப்படுகையில், அக்கூட்டங்களை நடத்திடுவதற்கு என்ன ஒழுங்கு முறையை நீங்கள் பரிந்துரைக்கின்றீர்கள் மற்றும் அவர்களுக்கு என்ன ஆராய்ச்சிகளை, எந்த அளவில் பரிந்துரைக்கின்றீர்கள்?

**பதில்.** வாரத்தின் நடுப்பகுதி, சாட்சிக்கூட்டத்தினை - துதிப்பதற்கும், கிறிஸ்தவ ஐக்கியத்திற்கும் மற்றும் ஒருவரோடொருவர் நெருங்கிக் கொள்வதற்குமான கூட்டத்தினைப் பெற்றிருப்பதற்கான நல்ல காலப்பகுதியாகக் காணப்படும் என்பது என்னுடைய அறிவுரையாய்க் காணப்படுகின்றது. சாட்சி மாத்திரமல்ல, இக்கூட்டங்களில் அடையப்பெறும் அனுதாபத்துடன் கூடிய இருதயத்தின் ஒன்றிணைதலே நினைவுகூரப்பட வேண்டும். பிற்பாடு நாம் பரிந்துரைத்துள்ளபடி பெரோயா ஆராய்ச்சிகளானது நல்லதாய்க் காணப்படும் என்று எண்ணுகின்றேன். பின்னர் சபையில் காணப்படும் வழிவகையைச் சார்ந்து பொதுப் பிரசங்கத்தினைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது நலமானதா அல்லது இல்லையா என்பது பார்க்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் அப்படிப் பெற்றிருப்பதே சரியானதாய்க் காணப்படும் மற்றும் மற்ற சந்தர்ப்பங்களில் அது மிகவும் ஞானமற்றக் காரியமாய்க் காணப்படும் என்று எண்ணுகின்றேன். போதிப்பதற்குத் தகுதி வேண்டும் என்றும், போதகசமர்த்தனாய்க் காணப்படுபவர்கள் மாத்திரமே போதகத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், போதகசமர்த்தனாய்க் காணப்படாதவர்கள் போதிப்பதற்கு முற்படாமலிருந்து, பெரோயா ஆராய்ச்சி போன்றவற்றில் ஈடுபடுவது நலம் என்றும் நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமெனக் கருதுகின்றேன். பெரோயா ஆராய்ச்சி வகுப்பிலும்கூடப் போதிப்பதற்கான திறமை அதிகம் வேண்டியிருக்கின்றது மற்றும் சபையாரின் பதில்களை வெளிக்கொணர்வது எப்படியென்று வழி நடத்துபவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது

அவசியமாய் இருக்கின்றது. இத்தகைய கூட்டங்களின் அம்சங்கள் தொடர்பாகக் குறிப்பாய்த் தெரிவிக்கத்தக்கதாக நான் உள்ளே வந்து, ஆலோசனை வழங்குவது எனக்குத் தகுதியாய் இருக்குமென்று நான் கருதுகிறதில்லை. சாட்சிக்கூட்டம் ஒன்றினை வாரத்திற்கு ஒருமுறை பெற்றிருப்பது நலமாயிருக்குமென்று கருதுகின்றேன். சபையாருடைய மிகுந்த ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கேதுவான விதத்தில் சில பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் காணப்பட்டிருக்கின்றன மற்றும் இது குறித்துத் தெரிவித்திட சபையார் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் ஒருவேளை தேவைப்படும் பட்சத்தில், தங்களுக்கு மிகவும் சுவாரசியமாகவும், மிகவும் பிரயோஜனமாகவும் எது காணப்படும் என்று அவர்கள் வெவ்வேறு விதங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்; மேலும் மூப்பர்களும், உதவிக்காரர்களும் சபையாரை ஆதிக்கம் செய்யவோ மற்றும் அவர்களை ஆளுவதற்கோ முயற்சிக்காமல் காணப்பட்டு, கர்த்தருடைய ஆவி வழிநடத்துகின்ற விதத்தில் சபையாருக்கு உதவவும், அவர்களை ஆதரிக்கவும் செய்யும்படிக்கு நான் விசேஷமாய் அறிவுரை வழங்குகிறேன்.

## கூட்டங்கள் - சாட்சிக்கூட்டங்கள்.

**கே 471:2 :: கேள்வி (1910) - 2 -** இது நீங்கள் பரிந்துரைத்ததான முதலாம் கூட்டம் தொடர்புடைய கேள்வியாகும். ஒவ்வொரு இடமாகப் போய்வருகையில் சகோதரர்கள் அதைச் சரியாய்ப் புரிந்துகொள்ளாததைக் காண்கிறேன். அவர்கள் ஒரு தலைப்பைத் தெரிந்துகொண்டு அதைச் சாட்சிக்கூட்டத்திற்கான தலைப்பாகக் கலந்தாய்வு பண்ணுகின்றனர். இது சரியான கருத்தாகுமா அல்லது சரியான கருத்து எது?

**பதில்.** சாட்சிக்கூட்டம் தொடர்பாக: சாட்சிக்கூட்டம் என்றால் என்ன? அலிகெனியிலுள்ள நண்பர்களுக்கான நம்முடைய பரிந்துரையென அந்த ஒரு கூட்டத்தில் நான் முன்பு குறிப்பிட்டிருந்தது என்னவெனில் - அவர்கள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பிரசங்கத்தினை / செய்தியினை அவ்வாரம் முழுவதும் சிந்திப்பதற்கான விதையென மனதில் பெற்றிருக்க வேண்டும்; பின்னர் அவர்கள் சாட்சிக்கூட்டத்திற்கெனப் புதன்கிழமை மாலையன்று கூடிவருகையில், அவர்கள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடம் தொடர்புடைய அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள்; இதனால் தாங்கள் ஞாயிற்றுக்கிழமையன்று கேட்டுக்கொண்டவைகளின் பிரயோஜனம் அனைத்தையும் மற்றும் அப்பாடத்தோடு பின்னிப்பிணைந்துள்ள தங்கள் சொந்த அனுபவங்களின் பிரயோஜனம் அனைத்தையும் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் அவைகள் புதன்கிழமை இரவின்போது, அவர்கள் மனதில் மிக முழுமையாகக் காணப்படும். மேலும் புதன்கிழமை இரவன்று அவர்கள் கூடிவருகையில், காய்கறிக்கடைக்காரனோடோ, அல்லது இறைச்சிக் கடைக்காரனோடோ அல்லது தங்களது தொழிலிலோ அல்லது தனிப்பட்ட ஆராய்ச்சியிலோ அவர்கள் பெற்றுக்கொண்ட ஆராய்ச்சியின் ஜீவியத்தின் அனுபவங்கள் அல்லது நிகழ்வுகள் எதுவாயினும், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பிரசங்கப்பாடம் தொடர்புடையதாகச் சுவாரசியமாய்க் காணப்படும் எதுவாகிலும் - அதுவே அவர்களது கிறிஸ்தவ அனுபவம் தொடர்புடையதாக அவர்கள் பகிர்ந்திடும் சாட்சியாய் இருக்கும்; ஒருவேளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடம் தொடர்பாக அவர்கள் எந்த அனுபவத்தையும் பெற்றிருக்கவில்லையெனில் அவர்கள் சொல்ல விரும்பும் எதுவும் பகிரப்படலாம்; ஆனாலும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடமானது இருதயத்தில் பதியப்பெற்று என்றென்றும் நிலைத்திருக்கத்தக்கதாக, அப்பாடம் சம்பந்தமான அனுபவங்கள் பகிரப்படுவது விரும்பத்தக்கவையாகும். புதன்கிழமை மாலைக்கூட்டத்திற்குப் பிற்பாடு, அதே சிந்தனைகளானது அடுத்த ஞாயிறு வரை மனதில் தொடர்ந்து சிந்தித்துக்கொள்ளப்படலாம்; இப்படியாக வாரம் முழுவதும் சிந்தனைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு, அவை முழுமையாக மெல்லப்பட்டு, ஜீரணமாகின்றது. இப்படியான விதத்திலேயே அக்கூட்டம் பிரயோஜனமாய்க் காணப்படுகின்றது. ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு, அதை கலந்தாராய்வது சாட்சிக்கூட்டமே அல்ல. சாட்சி என்பது ஒரு பாடம் சம்பந்தப்பட்ட தன்னுடைய சொந்த அனுபவத்தை ஒருவர் பகிர்ந்துகொள்வதாகும்.

## கூட்டங்கள் - சகோதரர்கள் இல்லாதபோது நடத்துவதற்கான வழிமுறை.

**கே 472:1 :: கேள்வி (1910) - 1 -** ஒரு சிறிய சபையார் மத்தியில் தலைமைத்தாங்க சகோதரன் யாருமில்லையெனில், பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளில் அல்லது ஆசரிப்புக்கூடார ஆராய்ச்சி

வகுப்புகளில் போதிப்பதற்காகக் கையாளப்பட வேண்டிய வழிமுறை என்ன? அதாவது சபையாருக்கு வழிநடத்தும் சகோதரர் யாருமில்லாத ஒரு சந்தர்ப்பத்தில் ஆகும்.

**பதில்.** சபையாருக்கு வழிநடத்தும் சகோதரன் யாருமில்லை என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

**கேள்வி:** சகோதரர்கள் இல்லாமல் சகோதரிகள் மாத்திரமே காணப்படுகின்ற வகுப்பாய் இருக்கின்றதானால், என்ன செய்ய வேண்டும்?

**பதில்.** சகோதரன் இல்லாமல் அதைச் செய்ய வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். சகோதரர் அவர்களே, இம்மாதிரியான கேள்வி ஒன்றிற்கு ஆறாம் தொகுதியில் நான் ஏற்கனவே யோசனையாகத் தெரிவித்திருப்பது என்னவெனில், அவர்கள் விரும்புவார்களானால் தொகுதியின் ஆசிரியர் அத்தொகுதியினால் அங்கு அவர்களோடுகூடக் காணப்படுவதாகக் கருதிக் கொள்ளப்படலாம்.

**கேள்வி-2:** ஒரு சகோதரி கேள்விக் கேட்பது தகுதியானதா?

**பதில்.** நிச்சயமாக. சகோதரிகள் தொடர்பான ஒரே கருத்து என்னவெனில்: இது ஒரு சகோதரி, சகோதரிகளுக்குக் கற்பிக்கக்கூடாது என்று சொல்லுகிறதில்லை. மாறாக பவுலோ: “உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை” என்று கூறுகின்றார். இது அவள் குழந்தைகளுக்கும், சகோதரிகளுக்கும் போதிக்கக்கூடாது என்று சொல்லுகிறதில்லை, மாறாக கிறிஸ்துவின் சபையில் புருஷர்களும், ஸ்திரீகளும் காணப்படுகையில் அவள் போதிப்பது என்பது தகுதியற்றதாகவும், தலையாய் இருக்கிற கிறிஸ்து புருஷனால் அடையாளப்படுத்தப்படுகிறதும் மற்றும் சரீரமாகிய சபை ஸ்திரியானவளில் அடையாளப்படுத்துகிறதுமான காட்சிக்கும், நிழலுக்கும் இசைவற்றதாய் இருக்கும் என்றும், ஸ்திரீயானவள் போதிப்பது என்பது சபையானவள் கிறிஸ்துவுக்குப் போதிக்கிறதைக் குறிப்பதாக இருக்கும் என்பதினால் தகுதியற்றதாய் இருக்கும் என்றும் அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆகையால் இதை தெய்வீக சித்தம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார் மற்றும் நாம் அதைக் கடைபிடிக்கின்றோம். ஆனால் ஒரு சகோதரி கேள்விக் கேட்டுக் கூட்டத்தைத் துவக்கி, ஜெபம் ஏறெடுப்பதும் நிச்சயமாகவே முற்றிலும் சரியானவைகளாக இருக்கின்றன.

## கூட்டங்கள் - சந்திக்க வந்திருக்கும் சகோதரர் சபையாருக்குக் கூட்டத்தை நடத்துதல்.

**கே 472:2: :: கேள்வி (1910) - 2 -** சந்திக்க வந்திருக்கும் சகோதரர் ஒருவர், அவர் சந்திக்க வந்திருக்கையில் சபையாருக்குக் கூட்டத்தை நடத்தும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படலாமா?

**பதில்.** சொசைட்டியால் பயண ஊழியர்களென அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்லது சபையாருக்கு விசேஷமாய் அறிமுகம் பண்ணப்பட்டவர்கள் தவிர, மற்றபடி சந்திக்க வந்திருக்கும் சகோதரனிடம் இப்படிக் கேட்பது என்பது நல்லதாய் இருக்காது என்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது; ஏனெனில் அது ஒரு வழக்கமாக உருவாகிவிடும். மேலும் இரண்டாவதாக, கூட்டத்தை யார் நடத்துவது என்பதைத் தீர்மானிக்கும் ஸ்தானத்தில் மூப்பர் வைக்கப்படவில்லை. மாறாக அவரும்கூட கூட்டத்தை நடத்தும்படிக்கு நியமிக்கப் பட்டிருக்கின்றார்; ஒருவேளை இத்தகைய ஒரு சகோதரனைச் சபையார் விரும்புவார்கள் என்று மூப்பர் நிச்சயமாக உணருவாரானால், பின் அவர் தனி மனிதச் சிறப்புகள் யாவற்றையும் தாழ்த்தி, அத்தகைய ஒரு சகோதரன் அத்தருணத்தில் பேசுவதைக் கேட்பதற்குச் சபையார் விரும்புகின்றார்களா, இல்லையா என்று கேட்டுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வது என்பது அக்காரியம் தொடர்பான பொறுப்பினைச் சபையாரின் கரங்களில் வைப்பதாகவும், உறவுகள் முறிபடுவது ஏதேனும் இருக்குமாயின் அதிலிருந்து விடுதலையடைவதாகவும், மற்றும் சபையாரைச் சில சமயங்களில் பிரச்சனைக்குள்ளாக்காமல் தப்புவிக்கச் செய்கிறதாகவும் இருக்குமென்று நான் கருதுகின்றேன். சந்திக்க வருகைத் தந்திருக்கும் எந்தவொரு சகோதரனுக்கும் முன்னுரிமை எப்போதும் கொடுக்கப்படுகிற காரியமானது வழக்கமாய்க் காணப்படுமானால் அது அனுகூலமற்றதாகவே இருக்கும்; ஏனெனில் வருகை தந்திருக்கும்

அந்தச் சகோதரனைச் சபையார் தேர்ந்தெடுத்திருக்கவில்லை. மாறாக தேர்ந்தெடுக்கப் பட்டவரையே தேர்ந்தெடுத்திருந்தார்கள்; ஆகையால் சபையாரால், வழிநடத்துபவருக்கு ஏதேனும் விசேஷித்த சுயாதீனம் கொடுத்திருந்தாலொழிய, மற்றப்படி தங்களுக்கு யார் கூட்டத்தை நடத்திட வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் ஒருவர் நடத்திடலாமா அல்லது இல்லையா என்பதை அச்சபையாரே கூறவேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

## கூட்டங்கள் - மூப்பர்கள் அல்லாமல், மற்றவர்கள் கூட்டங்களை நடத்துதல்.

**கே 473:1 :: கேள்வி (1910) - 1 -** சபையில் மூப்பர்கள் அல்லாத வேறே சகோதரர்கள் கொஞ்சம் தலைமைத்தாங்கி நடத்துவதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

**பதில்.** சபையே இதை தீர்மானித்திட வேண்டும். இக்காரியம் சபையினிடத்திற்கே விட்டுவிடப்பட வேண்டும். ஒரே ஒரு மூப்பரை ஒருவேளை சபை தான் தெரிந்து கொண்டுள்ளதென்றால், அப்பொழுது அது சபையினுடைய பொறுப்பாகின்றது; அதாவது இது மூப்பர்களுக்கான தகுதியுடையவர்களென வேறு எவரையும் சபை கண்டுபிடிக்கவில்லை என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் மூப்பரோ தனக்குச் சபையாரைக்காட்டிலும் நன்கு தெரியும் என்று கூறி, யாரையாகிலும் நியமிப்பது என்பது சபையின் கணிப்பைக் குறைத்து மதிப்பிடுவதாக இருந்துவிடும். ஏனெனில் மூப்பர்களுக்கான தகுதி உடையவர்களென வேறு எவரும் இருப்பதாகக் கண்டுபிடிக்கவில்லையென்றே சபை கூறியுள்ளது. அந்த ஒரு மூப்பரை மாத்திரம் தேர்ந்தெடுத்தபோது, சபை இப்படியாகக் கூறியிருந்தது. ஆனால் சபையானது, நாங்கள் ஒரு மூப்பரை மாத்திரமே தேர்ந்தெடுப்போம், ஆனால் அந்த மூப்பனார் தனது கணிப்பைப் பயன்படுத்தி, சபையிலிருந்து மற்றச் சில சகோதரர்களை முன்கொண்டுவருவதற்கும், அவர்களைப் பல்வேறுவிதங்களில் அவர் பயன்படுத்துவதற்கும் அல்லது அவர்கள் திறமைக்கு ஏற்ப ஊழியம் புரிந்திடுவதற்கு அவர் அழைப்பதற்கும் நாங்கள் விரும்புகின்றோம் என்று கூறியிருந்ததானால், இத்தகைய ஒரு பொறுப்பை, சபையே அந்த மூப்பனாருக்குக் கொடுத்தவர்களாய் இருக்கின்றார்கள் மற்றும் சபை தனக்குக்கொடுத்துள்ளதை மாத்திரமே அந்த மூப்பனார் பயன்படுத்தலாம் மற்றும் இதற்கு மேலாக எதையும் செய்யக்கூடாது. இம்மாதிரியான சூழ்நிலையில் சபையார் மற்றவர்களை உதவிக்காரர்களாய்த் தெரிந்துகொண்டு, சபையின் மூப்பரை நோக்கி: உங்களால் முடிந்த மட்டும் இந்த உதவிக்காரர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்பதாகத் தயவுகூர்ந்து கருதுங்கள். ஏனெனில் இவர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்படுவதற்கும், ஒருவேளை போகப்போக சபையின் சில முக்கியமான ஊழியங்களுக்குக் கொண்டுவரப்படுவதற்குமெனச் சில தகுதிகள் இவர்களிடத்தில் காணப்படுவதை எங்களால் பார்க்க முடிகின்றதாக நாங்கள் எண்ணியே, இவர்களை உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுத்தோம் என்று கூறுவதும் தகுதியாயிருக்கும். உதவிக்காரருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்பவர்கள், தங்களுக்கு நல்ல நிலையைச் சம்பாதித்துக் கொள்கின்றார்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார்; அதாவது உதவிக்காரர்களென அல்லது உணவின் விஷயத்திலோ அல்லது வேறு ஏதாகிலும் விஷயத்திலோ விசாரிப்பதிலும், சேவிப்பதிலும் ஊழியர்களென உண்மையாய் இருப்பதன் மூலம் இவர்கள் சபைக்கடுத்த ஊழியம் புரிவதற்குரிய சரியான ஆவியை வெளிப்படுத்து கிறவர்களாகவும், இன்னும் மற்ற ஊழியங்களுக்கான பொறுப்புத் தங்களிடத்தில் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்படலாம் என்பதையும் வெளிப்படுத்துகின்றவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் பழங்களையோ அல்லது பாலையோ அல்லது வேறு ஏதாகிலும் உணவையோ பரிமாறுவதன் மூலம், சபையாருக்கு ஊழியம் புரிந்திட ஓர் உதவிக்காரர் வெட்கப்படுவாரானால், அவர் உதவிக்காரராய் இருப்பதற்கு தகுதியற்றவர் மற்றும் மூப்பராய் இருப்பதற்கு ஆபத்தானவராகவும் இருப்பார்.

## சிறிய எண்ணிக்கையுள்ள சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டங்கள்.

**கே 473:2 :: கேள்வி (1910) - 2 -** புதிதாக ஆரம்பித்துள்ள சிறிய எண்ணிக்கைக் கொண்ட சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டமாக இருக்குமென நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்?

**பதில்.** புதிதாய் ஆரம்பமாகும் வேதமாணவர்கள் அடங்கிய ஒரு சிறு சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டமாக நாம் எதைக் கருதுவோம்? சகோதரர்களே, வாரம் ஒரு முறை ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களைப் பெற்றிருப்பதையே மிக முக்கியமான கூட்டங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்று நான் கருதிடுவேன். ஆனால் இப்படியான எண்ணம் அருமையான நண்பர்கள் அனைவருக்கும் உதித்திருக்காது என்று நான் அறிவேன்; ஆனாலும் உங்களுக்குப் பிரயோஜனம் உண்டாக்கத்தக்கதாக பிட்ஸ்பர்கில் எங்களுக்குக் கிடைத்த அனுபவத்தை உங்களுக்குக் கூறுகின்றேன். சுமார் முப்பது அல்லது இருபது வருடங்களுக்கு முன்னதாக, சபைக்கு ஆவிக்குரிய ரீதியில் அதிகமாய்த் தேவை காணப்படுகின்றது என்பதைத் தெளிவாய்ப் பார்த்தேன் மற்றும் மற்ற வகையான போஷாக்குகள் சிலவற்றை உட்கொள்வதற்குப் பதிலாக, பலமான ஆகாரத்தை உட்கொள்வதற்கான தீவிரமான விருப்பம் காணப்பட்டதையும் நான் கண்டேன்; மேலும் துதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் மற்றும் விசேஷமாய்ச் சாட்சி பகர்வதற்குமான கூட்டம் ஒன்றிற்காக ஒவ்வொரு வாரமும் ஓர் இரவினை - அதாவது நான் பரிந்துரைத்தபடி புதன்கிழமை மாலை வேளையை அவர்கள் ஒதுக்கிக் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்குமென நான் கருதுவதாக, அவர்களிடத்தில் கூறினேன்; அது நாம் முந்தைய காலங்களில், பல்வேறு சபை பிரிவுகளில் காணப்பட்டபோது சாட்சிக் கூறிவந்திருக்கும் வழக்கத்தின்படியாக இராமல், மாறாக சாட்சியானது புதியதாகவும் சமீபத்தில் நடந்ததாகவும் அவ்வாரத்தின் அனுபவங்களாகவும் இருப்பவைகளாகக் காணப்படும்படிக்கும், அவை கடந்த காலங்களின் அனுபவங்களுடைய சாட்சியாயிராதபடிக்கும் நான் பரிந்துரைத்தேன். அந்த வாரத்தில் நமக்கு என்ன அனுபவங்கள் காணப்பட்டன? ஞாயிற்றுக்கிழமையின் பாடமானது நம்முடைய ஜீவியத்தில் எத்தகைய தாக்கம் கொண்டிருந்தது? அவைகளை நாம் எவ்வளவுக்கு நடைமுறைப்படுத்த முடிந்தது? அப்பாடங்கள் தொடர்புடைய அனுபவங்களில் - நாம் ஜெயித்தோமா அல்லது தோல்வியைத் தழுவினோமா என்பது பற்றின சாட்சியாயிருக்கும்படிக்கு நான் பரிந்துரைத்தேன். பிட்ஸ்பர்கின் நண்பர்கள் இதைக் குறித்து அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்பதை என்னால் காணமுடிந்தது; இது சிறந்த வகையான ஒரு கூட்டமாக இருக்குமோ என்று ஐயம் கொண்டார்கள்; இக்கூட்டம் மிகவும் சலிப்புண்டாக்கும் என்றும், இரசனையற்று இருக்கும் என்றும், எல்லாவற்றையும் ஒரு வாரத்தில் கூறி முடித்த பிற்பாடு, அதையே மறுபடியுமாக அடுத்த வாரத்திலும் திரும்பக் கூறவேண்டுமே என்றும் அஞ்சினார்கள். அவர்கள் கருத்தினை - அதாவது புதிதான, சமீபத்திய சாட்சிகளைப் பகரும் கூட்டமெனும் கருத்தினைக் கிரகித்துக்கொள்ளவில்லை; எனினும் உங்களது ஊழியக்காரன் மற்றும் பேச்சாளராகிய என்னை மதிப்பதின் காரணமாக, நான் அறிவுறுத்தினவைகளுக்கு இசைவாக அவர்கள் வாக்குகள் அளித்தனர்; அதாவது கொஞ்சக்காலம் அல்லது மூன்று மாதங்கள் ஆகிலும் அக்கூட்டத்தினைப் பெற்றிருப்பதாகவும், ஒவ்வொரு புதன்கிழமை இரவன்று வேறு எதையுமல்ல, மாறாக சாட்சிக்கூட்டத்தினையே பெற்றுக்கொள்வார்கள் என்றும், மற்றும் அந்தவொரு குறிப்பிட்ட காலத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடைபெற்றபோது சபையார் பெருமளவில் அக்கூட்டத்தினை விரும்பும் நிலைக்கு வந்தடைந்திருந்தனர்; எனினும் மிக அதிகமான ஆவலைக் கொண்டவர்களாக அவர்கள் இன்னும் காணப்படவில்லை; ஆனால் ஒரு வருடம் தாண்டினபோது, அவர்கள் மிகவும் விருப்பம் அடைந்தவர்கள் ஆனார்கள் மற்றும் ஒருவேளை ஒரு வாரத்தில் எந்தக்கூட்டத்தை நடத்தாமல் விட்டுவிடலாம் என்று கேட்கப்பட்டால், பிட்ஸ்பர்க் சபையாரின் அருமையான நண்பர்களில் அநேகர் மற்றக் கூட்டங்கள் யாவற்றையும் இழக்கவும், தங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருப்பதாகத் தங்களால் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ளதான சாட்சிக்கூட்டத்தினைப் பற்றிக்கொண்டவர்களாயும் இருப்பார்கள் என்பதில் எனக்கு நிச்சயமே. இதுவே மற்ற அநேகருடைய அனுபவமாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன் மற்றும் உங்களில் அநேகர் இது குறித்து ஆரம்பத்தில் சிந்தித்தவைகளுக்கு நேர்மாறாகவே பின்னர் ஏற்பட்ட அனுபவம் காணப்பட்டிருக்கும் என்று நான் அறிவேன். இப்படியாகவே உங்களுக்கும் காணப்படும் என்று நான் நம்புகிறேன்; சாட்சிக்கூட்டங்களானது சமீபக்கால சாட்சியங்கள் அடங்கியதாக இருக்குமாயின், சாட்சிக்கூட்டங்களில் நாம் ஒருவர் இன்னொருவருடன் தொடர்பு கொள்கையில் ஒருவகையான ஆவிக்குரிய விருந்து காணப்படுகின்றது மற்றும் வழிநடத்துனர் கேள்விகளை எழுப்புவதின் மூலமும், ஒவ்வொருவனும் தனது வாய்ப்பு வருகையில் தனது சாட்சியினைச் சொல்ல அனுமதிப்பதின் மூலமும் கூட்டத்தினைச் சுவாரசியமாக்கிடலாம். இதை அவர் ஒரு முனையிலிருந்து துவங்கி கலந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் சாட்சிப்பகருவதற்கான வாய்ப்பினை அளித்திடலாம்; இப்படியாக அவர்கள் அனைவரும் சாட்சியினை மதித்து உணர்ந்திடமுடியும்

மற்றும் இது அவர்கள் இருதயங்கள் அனைத்திற்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருகிறதாய் இருக்கும்.

இப்பொழுது இரண்டாவதாக அடுத்த மிக முக்கியமான கூட்டமாகப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புக் காணப்படும் என்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது. ஏன்? ஏனெனில் இக்கூட்டத்தில் ஒருவேளை நல்லதொரு வழிநடத்துனர் இருப்பாரானால் சபையாருக்கு மிகவும் சுவாரசியமமாய்க் காணப்படும் விதத்தில் கேள்விகள் கொண்டுவரப்படலாம். இதற்கே வழிநடத்துனர் காணப்படுகின்றார். காரியங்களை வெளிக்கொண்டுவரும் விஷயத்தில் வழிநடத்துனருக்கு ஆர்வம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சபையார் வழிநடத்துபவர் இல்லாமலேயே நடத்திக் கொள்ளலாம் மற்றும் முழுவதுமாக, தானே அனைத்தையும் பேசிடும் ஒரு வழிநடத்துபவர் சிறந்த வழிநடத்துபவர் அல்ல. மாறாக மற்றவர்களை இக்கூட்டத்தில் பேச வைக்க முடிபவரே சிறந்ததொரு வழிநடத்துனர் ஆவார். தான் போதுமான அளவு பதில்களைப் பேசிடவில்லையென்றும், தான் அதிகமாய்ப் பேசிட வேண்டும் என்றும் வழிநடத்துனர் எண்ணிடும் அபாயம் காணப்படுகின்றது. இது கொஞ்சம் இலட்சியங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; அநேகமாகக் கொஞ்சம் பெருமை இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அவன் மந்தைக்கு நன்மை செய்திட வேண்டும் என்றுள்ள தனது வாஞ்சையில், தனது தனித்துவங்கள் அனைத்தையும் மற்றும் பெருமை, இலட்சியங்கள் அனைத்தையும் அழித்துப்போட வேண்டும்; மற்றும் யாரொருவர் சபையாரைக் கேள்விகளினால் ஆர்வப்படுத்தி மற்றும் சுவாரசியம் அடையச் செய்து மற்றும் அவர்கள் யாவரிடமிருந்தும் பதிலை வரவழைத்து, இப்படியாக கேள்வி மற்றும் பதில் குறித்த முழுமையான புரிந்துகொள்ளுதலை அடையப்பண்ணி மற்றும் சபையாரிடமிருந்து கேள்விக்கான பதிலைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பதில்களைச் சுருக்கிக் கூறுகின்றாரோ அல்லது புத்தகத்திலிருந்து பதில்களை வாசிக்கின்றாரோ அல்லது சிறந்த ஏதேனும் விதத்தில் பதிலைச் சுருக்கமாகக் கூறுகின்றாரோ - அவரே சிறந்த / வெற்றிகரமான வழிநடத்துபவர் ஆவார் மற்றும் அவர்களே வெற்றிகரமான சபையாராகக் காணப்படுவார்கள்; காரணம் அவர்கள் பாடத்தைப் புரிந்து கொண்டவர்களாகவும் மற்றும் அவற்றை உணர்ந்து கொண்டவர்களாகவும் காணப்படும் நிலைக்குள் கடந்து வந்தவர்களாயிருப்பார்கள். ஆனால் உங்களுக்குச் சரியான வழிநடத்துபவர் இல்லையெனில் காரியமானது முற்றிலும் வேறொரு காரியமாகக் காணப்படும். ஒருவேளை அவர் அக்கூட்டத்தின் நேரம் முழுவதிலும் பேச வேண்டும் என்று விரும்பினால் அல்லது கேள்விக்கான பதிலைச் சபையாரிடமிருந்து வெளிக்கொணர்வது எப்படி என்று அறியாதவராய் இருந்தாரானால், அவர் இத்தகைய ஒரு கூட்டத்திற்கு தகுதியான வழிநடத்துனர் அல்ல. இந்தப் பாகமே எப்படிச் செய்யப்பட வேண்டுமென்று கற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஒருவேளை நம்மில் எவரேனும் கடந்த காலங்களில் இதில் வெற்றிகரமாய்க் காணப்படவில்லையெனில், ஜனங்களை எப்படி ஆர்வமூட்டுவது, கேள்வியை இந்த ஒரு விதத்தில் மற்றும் அந்த ஒரு விதத்தில் முன்வைத்திடுவதற்கும் மற்றும் அவர்களைச் சுவாரசியப்படுத்திடுவதற்கும் அவர்களைப் பயமுறுத்தாமல் இருப்பதற்கும் கற்றுக் கொள்வோமாக. சிலர் வேறுவிதத்தைக் கையாண்டு பின்வருமாறு கூறிடுவதைக் குறித்து நான் அறிவேன். அதாவது, “உங்களது பாடம் உங்களுக்குப் புரியவேயில்லை; நீங்கள் இப்பாடத்தினைப் படிக்கவில்லை” என்று கூறுகின்றனர். குழந்தைகள் போல் அச்சுறுத்தப்படுவதற்குச் சபையார் அங்கு வரவில்லை; அவர்கள் கர்த்தருடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளென அங்கும் காணப்படுகின்றனர்; அவர்கள் கூட்டத்திற்கு வந்திருக்கின்றனர் மற்றும் அவர்களுக்கு உதவி பண்ணப்படவேண்டும்; அவர்களில் சிலருக்குப் படிப்பதற்குப் போதுமான நேரம் இருந்திருக்கவில்லை. அடுத்தக் கூட்டம் வருகையில் தாங்கள் கேள்விகளுக்கான பதிலைக் கொஞ்சம் அறிந்திருக்கத் தக்கதாக தாங்கள் ஆயத்தமாய்க் காணப்படவேண்டும் என்றும், “எனக்குப் பதில் தெரியாது” என்று கூறிடக்கூடாது என்றும் அவர்கள் எண்ணத்தக்கதாகச் செய்திடுங்கள். பாருங்கள், காரியத்தினைக் கையாளுவதற்கு வேறே வழி காணப்படுகின்றது. வழிநடத்துனராக - “உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படிக்கு ஜாக்கிரதையாய் இரு” என்று அப்போஸ்தலன் கூறுவது போல, கூட்டத்திற்கான வழிநடத்துனர் கற்றுவர வேண்டும். பவுல் சபையார் அனைவருக்குமாக எழுதவில்லை, ஒரு வழிநடத்துனனாகிய தீமோத்தேயுவுக்கு அவர் இவற்றை எழுதியுள்ளார். “நீ வெட்கப்படாத ஊழியக்காரனாகவும், உன்னைத் தேவனுக்கு முன்பாக நிற்கும்படி ஜாக்கிரதையாய் இரு.” காரியத்தினைச் சரியாகவும், நிதானமாய்ப் பகுத்துப் போதித்தும், வெளிக்கொண்டுவர வேண்டும் மற்றும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப்

போதிப்பது மாத்திரமல்ல. பாடம் தொடர்புடைய விஷயத்திலும் அனைத்தையும் வெளிக்கொண்டு வரவேண்டும். பாருங்கள், இவையனைத்தும் ஒரு வழிநடத்துனனின் சரியான வழிமுறையின் ஒரு பாகமாய் இருக்கின்றது. வழிநடத்துனன் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் எப்படி தன்னால் இதை நன்கு செய்யமுடியும் என்று பார்க்க வேண்டும்; எப்படி அனைத்துக் கேள்விகளின் விஷயத்திலும் சபையார் யாவரோடும் தான் ஒத்துணர்வு காணப்பட வேண்டும் மற்றும் அவர்களிடமிருந்து தன்னைப் பிரித்துக் காண்பிக்காமலும் மற்றும் அவர்களைக் கீழானவர்கள் போல் நடத்தாமல், மாறாக சகோதரர்கள் என நடத்துவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். யார் சகோதரர்களில் ஒருவரெனச் சரியாய் நடந்துகொள்கின்றார்களோ அவர்களே மந்தை மத்தியில் மிகுந்த செல்வாக்குடையவர்களாய் இருப்பார்கள் என்று நீங்கள் கண்டுகொள்வீர்கள். நீங்களும் சகோதரர்கள் தான். நாம் அனைவரும் ஆடுகளல்லவா? நிச்சயமாகவே. நாம் மேய்ப்பர்களாகக் காணப்பட்டு, மேய்க்கும் வேலையினை மாத்திரம் செய்பவர்களல்ல, மாறாக நாமும் ஆடுகளில் உள்ளடங்குபவர்களாகக் காணப்படுகின்றோம். கர்த்தருக்காக மந்தையினுடைய அவரது பிரதிநிதிகளெனப் பேசிடுவதற்கான சிலாக்கியத்தினை அவர் நமக்குக் கொடுத்துள்ளார் என்ற காரியமானது, நாம் இன்னமும் ஆடுகளாயிருக்கின்றோம் என்ற உண்மையினை மாற்றுகிறதில்லை. நாம் மந்தையையோ அல்லது தேவனுடைய சுதந்திரத்தையோ இறுமாப்பாய் ஆளுகிறவர்களல்ல. நாம் இன்னமும் ஆடுகளாகவும், ஆட்டினுடைய சுபாவத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டியவர்களாகவும் மற்றும் அதை வெளிப்படுத்த வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றோம். ஆகையால் இரண்டாம் முக்கியமான கூட்டம் பெரோயா ஆராய்ச்சி வகுப்பாய் இருக்குமென்று நான் கருதுகின்றேன். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளானது பல்வேறு வகைகளாகக் காணப்படக்கூடியவைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உதாரணத்திற்கு வாட்ச் டவரில் ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைக்கும் உரிய அநேகக் கேள்விகளையுடைய பெரோயா ஆராய்ச்சித் தொடரினை நாம் வழங்கி வருகின்றோம். அநேகம் சபையார்கள் அப்பாடங்களுடன் இசைவுடன் வராமல் பின்தங்கிக் காணப்படுவதை நான் காண்கின்றேன். இவர்கள் தவறு செய்வதாக நான் கருதுகிறேன். இவர்களில் சிலர் என்னிடம், “சகோதரர் ரசல் அவர்களே, நாங்கள் ஐந்தாம் தொகுதியிலேயே பின்தங்கி நின்றுகொண்டிருக்கின்றோம். நாங்கள் முன்னேறி வந்துகொண்டிருக்கின்றோம்” என்று கூறுவதுண்டு. அது அவர்கள் காரியம்; நான் குற்றம் கண்டுபிடிக்கப் போகிறதில்லை; குற்றம் கண்டுபிடிப்பதும் எனக்கடுத்த காரியமல்ல. அது சபையாருடைய காரியமாகும்; அவர்கள் இப்படித்தான் பெற்றிருக்க விரும்புகிறார்கள் என்றால், தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும். அவர்களின் விருப்பப்படியே அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கட்டும்; ஆனால் அவர்கள் ஊர்வலத்தோடு கூடவே நடந்துவரும்படிக்கு நான் அறிவுறுத்துகின்றேன். நடன குழுவினரோடுகூட நடப்பதில் சில பயங்கள் காணப்படுகின்றது. உங்கள் நடைச் சீராக இருக்கும் மற்றும் அனைத்தும் நன்றாய் இயங்கும். இசைக்குழு முன்னே செல்கின்றது மற்றும் நீங்கள் அனைவரும் ஒருசேர சென்றுகொண்டிருக்கின்றீர்கள். கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அனைவரும் எங்குக் காணப்பட்டாலும் இந்தப் பாடத்தின் விஷயத்தில் ஒன்றுபோல் போய்க்கொண்டிருக்கின்றனர் என்று காண்பது அருமையாக உள்ளது.

அநேகமாக அது மனவுணர்ச்சியின் காரியம் தான், அநேகமாக அதற்கு எந்த உண்மையான முக்கியத்துவமும் இல்லை; எனினும் மனவுணர்வின் அடிப்படையிலான ஒவ்வொரு சிறு காரியமும் அந்தக் காரியத்தில் அதன் தாக்கத்தையும், செல்வாக்கையும் பெற்றிருக்கும். நீங்கள் எந்தப் பாடம் வரை வந்திருக்கின்றீர்களோ, அதற்கும் புதியதாய் வெளியிடப்பட்டுள்ள பாடத்திற்கும் இடையிலான பாடங்களை நீங்கள் விட்டுவிடுங்கள் என்பது என்னுடைய ஆலோசனையாய் இருப்பதில்லை. மாறாக அந்த இடைப்பட்ட பாடங்களை, இன்னொரு மாலை வேளையில் கூடிப் பார்த்துக்கொள்ளுங்கள் என்பதேயாகும். தற்போதுள்ள பாடத்துடன் துவங்குங்கள் மற்றும் ஐந்தாம் தொகுதியை நீங்கள் முடிப்பது வரையிலும் மற்ற மீதிப்பாடத்தை இன்னொரு கூட்டத்தில் பாருங்கள். இதை ஒரு நல்ல ஆலோசனையாகக் காண்பீர்கள் என்று நாம் நம்புகின்றேன். சகோதரர் ரசலோ அல்லது வேறு யாரோ ஆணையிட முடியாது. கர்த்தருடைய சித்தம் என்று நீங்கள் கருதிடும் எதையும் செய்திடுங்கள். வேறு விதமாய் நீங்கள் செய்யும்படிக்குக் கர்த்தர் விரும்புவதாக நீங்கள் கருதுவீர்களானால் அதையே செய்திடுங்கள். மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபையார் என்ன செய்ய வேண்டும் என்று சகோதரர் ரசலால் தீர்மானிக்க முடியாது என்றும், சபையார் என்ன செய்ய வேண்டும்

என்று சபையாரிலுள்ள யாரோ ஒருவரால் தீர்மானிக்கப்பட முடியாது என்றும், சபையாரே தங்களுக்காகத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக.

மேலும் அருமையான சகோதரர்களில் சிலர் கவனிக்கத் தவறும் ஒரு முக்கியமான காரியம் காணப்படுகின்றது என்று நான் கருதுகின்றேன். இவர்கள் ஆளுகிற கண்ணோட்டத்தில் மூப்பத்துவத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து மிகவும் அதிகமாய் எண்ணிக்கொள்கின்றனர். இது இயல்பு தான்; இப்படித்தான் காணப்படும்; ஆனால் அதை அடக்கி வைத்துக்கொள்ளுங்கள்; பழைய மனுஷன் எழும்பிடுவதற்கு முயன்றுகொண்டிருப்பவனாக இருக்கின்றான்; அவனை அடக்கி வையுங்கள்; நாம் அனைவரும் புதுசிருஷ்டிகளென ஒரு நிலையில் காணப்படுகின்றோம் மற்றும் "நாம் புதுசிருஷ்டிகளென இங்குள்ள கர்த்தருடைய மந்தை அனைவரும், இச்சபையாரிலுள்ள அனைவரும், நான் கருத்துக்களைப் பெற்றிருப்பது போல அவர்களும் அவர்களது கருத்தினை வெளிப்படுத்திட நான் விரும்பிட வேண்டும்; நாம் அனைவருமே உரிமையைப் பெற்றிருக்கின்றோம்" என்று கூறிட வேண்டும். மேலும் நீங்கள் செய்பவைகளுக்கு எதிராக சபையார் எதிர்ப்பதில்லை மற்றும் நீங்கள் அவர்களது சுயாதீனங்களையும், உரிமைகளையும் கவனித்துக் காத்துக்கொள்வீர்களானால், இதை அவர்கள் மதித்துணர்வார்கள், மற்றும் நீங்கள் ஒருவேளை அவர்களது அறிவுரையைக் கேட்பீர்களானால், இதை அவர்கள் மதித்துணர்வார்கள். புரூக்கிளின் சபையாரின் மூப்பர், சபையாரை ஆதிக்கம் செய்ய ஒருவேளை முற்படுவாரானால், மூப்பருக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில், புரூக்கிளின் சபையாரைக் காட்டிலும் வேறு எந்தவொரு சபையாரும், எந்தவொரு மூப்பருக்கும் அதிகமாய்க் கீழ்ப்படிவார்கள் என்று நான் எண்ணுகிறதில்லை. ஆனாலும் புரூக்கிளினிலும் சரி, பிட்ஸ்பர்கிலும் சரி, எப்போதேனும் சகோதரர் ரசல், சபையாரை ஆதிக்கம் செய்ய முயன்றதுண்டோ? அவர் அறிந்திருக்கிற வரை ஒருபோதும் இப்படியாக அவர் செய்ததில்லை. அவர் இப்பொழுது எப்படி உங்களுக்கு ஆலோசனை கொடுத்துக்கொண்டிருக்கின்றாரோ அது போலவே, அவர் அவர்களுக்கும் ஆலோசனை கொடுத்திருந்திருக்கிறார்; எந்தவொரு விதத்திலும் கட்டாயப்படுத்த முற்பட்டதில்லை, மாறாக சபையாருக்கு விவரங்கள் அளித்த பிற்பாடு சபையாரைத் தங்கள் பகுத்துணர்வின்படி வாக்களிக்கச் செய்து மற்றும் அக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் சபையாருடைய தீர்ப்பே கர்த்தருடைய தீர்ப்பு என்று ஏற்றுக்கொள்ளவும் மாத்திரம் செய்திருக்கின்றார்.

## கூட்டங்கள் - புதிய வகுப்புகள் (EXTENSION WORK) உருவாக்கிடும் வேலைக்கான எண்ணிக்கை.

**கே 476:1 :: கேள்வி (1911) - 1 -** சமீபத்தில் வெளிவந்த வாட்ச் டவரின் பத்திரிகையில், ஆறு கூட்டங்களைக் கொண்டதான வேதாகம புதிய வகுப்புகளை உருவாக்கிடும் வேலையானது எந்த ஒரு பட்டணத்திலும் நடத்தப்படலாம் என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாம் கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேரே ஆர்வமுடையவர்களாக வருகிறார்களெனில், ஆறு கூட்டங்களையும் ஒரே இடத்தில் நடத்தப்பெறுவது நலமானதாக இருக்குமா?

**பதில்.** இல்லை என்றே நான் பதிலளிக்கின்றேன்; ஒருவேளை ஜனங்கள் யாரும் வரவில்லையெனில், நான் கூட்டங்களைத் தொடருவதில்லை. நீங்கள் மாத்திரம்தான் கூட்டத்தில் கலந்துகொள்பவராகக் காணப்படுகின்றீர்களானால், கூட்டத்தினை நடத்தாதீர்கள். எத்தனை பேர்கள் கலந்துகொண்டால் கூட்டத்தை நடத்தலாம் என்பதை நீங்கள் முடிவு செய்யவேண்டும்.

## கூட்டங்கள் - புரூக்கிளினிலுள்ள மூப்பர்கள் கூட்டங்களை நடத்துவதற்கென உதவிக்காரர்களை நியமித்தல் தொடர்பாக.

**கே 477:1 :: கேள்வி (1911) - 1 -** புரூக்கிளினிலுள்ள சபையிலுள்ள மூப்பர்கள், சபையாருடைய தேர்ந்தெடுத்தல் முதலானவைகள் இல்லாமலேயே வகுப்புகளை நடத்துவதற்கென்று உதவிக்காரர்களை நியமிப்பதுண்டா?

**பதில்.** அது மேய்ப்பதற்கான வேலையாகக் கருதப்படுகிறது மற்றும் அது மூப்பர்களுக்கான வேலையல்ல. புரூக்கிளினிலுள்ள சபையாருக்கான மூப்பர்களில் ஒருவர் கூட்டங்களைப்

பார்த்துகொள்வதற்குரிய பொறுப்பினை பெற்றவராய் இருக்கின்றார் மற்றும் இது விஷயத்தில் அவர் மேய்ப்பருக்கு உதவியாளராகக் காணப்படுகின்றார் மற்றும் மேய்ப்பரது ஒப்புதலின் பேரில் அவ்வப்போது இந்த ஒரு வேலைக்கு என்றும், அந்த ஒரு வேலைக்கு என்றும் உதவிக்காரர் ஒருவர் தெரிந்து கொள்ளப்படுகின்றார். இதுவே மேய்ப்பரைத் தேர்ந்தெடுப்பதற்கான நோக்கமாகக் கருதப்படுகின்றது, அதாவது, சபையாருடைய தேவைகளை மேற்பார்வையிட்டு, தேவைக்கேற்ப இங்குமங்குமாய்த் தேவையைப் பூர்த்தி செய்வதாகும். ஆனாலும் இப்படித் தெரிந்தெடுக்கப் படுபவர்கள் சபையாரினால் மூப்பர் தெரிந்தெடுக்கப்படுவது போன்று, ஒரு ஊழியத்திற்கென்று நிரந்தரமாய் நியமிக்கப்படுவார்கள் என்பதாக இல்லை. அது ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்குரிய தற்காலிகமான காரியம் மாத்திரமே மற்றும் உதவிக்காரர் பரீட்சித்துப் பார்க்கப்படத்தக்கதாக ஒரு வாய்ப்பளிக்கும் காரியம் மாத்திரமேயாகும்.

## உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா?

**கே 477:2 :: கேள்வி (1912) - 2 -** மிகவும் திறமிக்கவர்களாய்க் காணப்படுகையில், உதவிக்காரர்களை மூப்பர்களுக்குப் பதிலாகக் கூட்டங்களை நடத்தும்படிக்குக் கேட்டுக்கொள்வது சரியான காரியமாக இருக்குமா?

**பதில்.** எதிர்மாறாகவே எங்களது கருத்துக் காணப்படுகின்றது. அதென்னவெனில் மூப்பர்கள் என்பவர்கள் வழிநடத்துனர்களாய் இருக்கும்படிக்கு விசேஷமாய்த் தெரிந்துகொள்ளப் பட்டவர்களாக இருக்கின்றனர் என்பதும், உதவிக்காரர்கள் என்பவர்கள் தேவைகளைப் பூர்த்திச் செய்யத்தக்கதாக மாத்திரமே கூட்டங்களை நடத்திடுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதும் எங்களது கருத்தாய் இருக்கின்றது. இது வேதவாக்கியங்களின் மாதிரியைப் பின்பற்றுவதாகும். உதவிக்காரருக்குரிய ஊழியத்தில், ஊழியம் புரியும் ஓர் உதவிக்காரன் தனக்கென நல்ல நிலையை அடைவான் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். அதாவது ஒருவேளை சபையில் ஆவிக்குரியதல்லாத (TEMPORAL) காரியங்களில் அவர் உண்மை யுள்ளவராய் இருந்தாரானால், சபைக்கடுத்த நலன்களைப் பார்த்துக்கொள்வதில் உண்மை யாகவும், நேர்மையாகவும் காணப்படுவாரானால், அவர் இப்படியாகத் தன்னை பொருத்தமான நபர் என்று வெளிப்படுத்திச் சபையாருடைய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் நல்ல நிலையை அடைவார் மற்றும் சபையாரும் பிற்பாடு அவரை மூப்பராக நியமிப்பதற்கான கண்ணோட்டத்தில் அவரைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கிடையில் மூப்பர் கலந்துகொள்ள முடியாத தருணங்களும் உண்டாகும் மற்றும் இது உதவிக்காரர்களைப் பரீட்சித்துப்பார்ப்பதற்கான நல்வாய்ப்பாய் அமைகின்றது. இது அனைத்துச் சபைகளிலும் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கருதுகின்றேன். மூப்பர்கள் என்பவர்கள் சபையில் மூத்த சகோதரர்களாக இருக்கின்றனர்; வயதில் கண்டிப்பாய் அல்ல, மாறாக விசேஷமாய் ஆவிக்குரியவற்றிலே ஆகும். அவர்கள் எவ்வளவு தான் வயதானவர்களாக அல்லது இளையவர்களாக இருந்தாலும் சரி, குணலட்சணத்தில் ஆவிக்குரிய முதிர்ச்சி என்பதே அவர்களது தகுதியாய் இருக்கின்றது. மூப்பர்களுடைய வேலையின் ஒரு பாகம் என்னவெனில் சபையாருடைய நலனுக்கடுத்தவைகளை அவர்கள் பார்த்துக்கொள்கையில், அவர்கள் இளையச் சகோதரர்களைக் கண்டுபிடிக்கவும், அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் நாட வேண்டும் மற்றும் அவர்களுக்குத் திறமையிருக்குமானால், அவர்கள் மூப்பராகிடுவதற்கு ஆயத்தமாகத்தக்கதாக முன்னே கொண்டுவர வேண்டும். சில தருணங்களில் யாரோ ஒருவர் சில திறமைகளைப் பெற்றவர்களாய்க் காணப்பட்டு, தங்கள் ஊழியத்தைப் பங்குபோட்டுக் கொள்வார்கள் என்ற பொறாமையான எண்ணங்கள் மூப்பர்களின் சார்பில் காணப்படுவதை நான் பார்த்திருக்கின்றேன். இத்தகைய ஆவியானது ஆண்டவருக்குப் பிரியமற்றதாகவும், அந்த மூப்பருக்கு அனுகூலமற்றதாகவும் காணப்படும்; காரணம் தனக்குத் தீங்கு விளைவிக்காத நிலையில் அவனால் தன்னல நாட்டமுள்ள ஆவியினைப் பெற்றிருக்க முடியாது. தன்னலத்தை நாடுபவனாக இராமல் சபையாருடைய நலனுக்கடுத்தவைகளை நாடுவதே அவனது பொறுப்பாய் இருக்கின்றது. ஊழியம் புரிவதற்குத் திறமையுடைய எச்சகோதரனும் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். வேலையானது செய்யப்படாமல் கைவிடப்படுமோ என்று பயப்படாதீர்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதாக எந்த ஒரு திறமையைப் பெற்றிருக்கும் ஒவ்வொருவனும் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் புரிவானாக; கர்த்தர் மற்றவர்களுக்கானவைகளைப் பார்த்துக்கொள்வார். நம்மைப்பார்க்கிலும் மிகவும் திறமிக்க விதத்தில் ஊழியம் செய்ய முடிகிறவர்கள் யாரையேனும்

நாம் காண்போமானால், தேவனுக்காகச் சிறப்பான விதத்தில் அவர்களால் ஊழியம் புரியப்படுவது குறித்து நாம் சந்தோஷங்கொள்ள வேண்டும். போதுமான வேலை இல்லாமல் போய்விடும் என்ற எந்த அபாயமும் இல்லை. புதிய வகுப்புகளை உருவாக்கும் ஊழியங்களும் மற்றும் நூற்றுக்கணக்கான வேறுவிதங்களிலுள்ள மற்ற ஊழியங்களும், வேலையாட்களை அழைத்துக் கொண்டிருக்கிறன. நாம் தாழ்மையான ஆவியைப் பெற்றிருப்பதற்கு ஏற்ப தேவன் நம்மை பயன்படுத்துவார்.

## கூட்டங்கள் - போதகர்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கப்படுதல்.

**கே 478:1 :: கேள்வி (1913) -1 -** குறிப்பிட்ட ஆராய்ச்சிகளுக்கென்று தனி மனிதச் சிறப்பின் அடிப்படையில் இல்லாமல், மாறாக அத்தகைய ஆராய்ச்சிக்கென்று திறமையுடையவர் என்ற அடிப்படையில் ஒரு போதகருக்கான விருப்பத்தினை ஒருவர் பெற்றிருப்பது தவறான இருதய நிலைமையாகுமா?

**பதில்.** அது தவறான இருதய நிலைமையென்று நான் கருதுவதில்லை. போதகரென விசேஷித்த தாலந்து உடையவர்களாகச் சிலர் காணப்படுவார்கள். அதிகளவிலான அறிவுரைகளைக் கொடுக்கும் ஒருவரை ஒருவர் விரும்பிடலாம். இதில் தவறான இருதய நிலைமை காணப்படுவதாக எனக்குத் தெரியவில்லை; ஆனாலும் சபையார் தங்களது தேர்ந்தெடுத்தல்களில் விசேஷித்த தகுதியுடையவர்களையும், போதகசமர்த்தனாக இருப்பவர் களையும் சகோதரர்கள் மத்தியில் கண்டுபிடிக்க நாடிட வேண்டும் என்று நான் சொல்லுவேன்; ஏனெனில் இது அப்போஸ்தலர் கூறுவது போல மூப்பருக்கான தகுதிகளில் ஓர் அம்சமாய்க் காணப்படுகின்றது மற்றும் போதகசமர்த்தனாய் இல்லாதவர் தேர்ந்தெடுக்கப்படவே கூடாது. எனினும் வித்தியாசம் வேண்டும் என்கிற கருத்துத் தொடர்ந்து நிலவும்; ஆகையால் இந்த பல்வேறு வழிநடத்துபவர்களை மாறி மாறி வழங்கிடுவதே, நண்பர்களுக்கான எங்களது ஆலோசனையாகவும், புரூக்கிளினின் எங்களது நடைமுறையாகவும் இருக்கின்றது; உதாரணத்திற்கு ஒரு வகுப்பைக் குறிப்பிட்ட காலம் வரைக்கும் நடத்தி வரும் ஒருவர், இன்னொரு வகுப்பிற்கு மாற்றப்படலாம் மற்றும் பின்னர் இன்னொரு வகுப்பிற்கு மாற்றப்படலாம்; இப்படியாகச் சுற்றிச் சுற்றி மாற்றப்படும்போது அனைத்து வகுப்புகளுக்கும் சிறந்த மற்றும் சாதாரணமான / அனைத்து வகையான ஊழியங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

## கூட்டங்கள் - உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா?

**கே 478:2 கேள்வி (1914) - 2 -** எங்கள் சபையாரில் பெரும்பாண்மையானவர்கள் எங்களது உதவிக்காரரில் சிலர் அவ்வப்போது ஜெபக்கூட்டங்களை நடத்துவதற்கு விரும்புகின்றனர். ஆனால் உதவிக்காரர்கள் கூட்டங்களைத் தலமைத்தாங்கி நடத்துதல் என்பது வேதவாக்கியங்களுக்குப் புறம்பானது என்றும், வேறு யாருமல்ல, மூப்பர்களே தலைமைத்தாங்கி நடத்திட வேண்டும் என்றும், எங்களது மூப்பர்களில் சிலர் கூறுகின்றனர். அவர்கள் சொல்வது சரிதானா?

**பதில்.** வேதாகம அதிகாரத்தினிடத்திற்கே திரும்பிச்சென்று பாருங்கள். வேதாகமத்தில் ஆதிசபையினுடைய உதவிக்காரர்களில் சிலர் நல்ல கிறிஸ்தவ வேலைகளைப் புரிந்ததாக நாம் பார்க்கின்றோம். உதவிக்காரன் ஸ்தேவான் மற்றும் உதவிக்காரன் பிலிப்பு மற்றும் இன்னும் மற்றவர்களை இப்படியாகக் காண்கிறோம். இவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல.

ஆகையால் வேறுயாருமல்ல, மூப்பர் மாத்திரம் கூட்டத்தினை தலைமைத்தாங்கி நடத்திட வேண்டுமென்று கூறினதில், மூப்பர்கள் அல்லது சபையார் தவறிழைத்துள்ளதாக எங்களது கணிப்பில் காணப்படுகின்றனர் என்று நாம் சொல்லிடுவோம். இச்சபையார் முன்வைத்திட்ட யோசனையானது மிகவும் நல்லதொரு திட்டம் என்று நாம் கருதுகின்றோம் மற்றும் சபையாரே இதைத் தெரிவித்துள்ளனர் என்ற காரியமானது இதனை சரியானதாகவும் மற்றும் தகுதியானதாகவும் ஆக்கிற்று. உதவிக்காரர்கள் ஓர் ஊழியத்திற்கு என்று தெரிந்தெடுக்கப்படுகின்றனர் மற்றும் "உதவிக்காரருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையை அடைவார்கள்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். எதில் நல்ல

நிலை? வேலை தொடர்புடைய விஷயத்தில் சுயாதீனம் ஆகும். அவர்கள் ஒரு விசேஷித்த வகை வேலைக்கு என்று தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்; ஆனால் ஒருவேளை அவர்கள் மற்றத் தாலந்துகளைப் பெற்றிருப்பதை வெளிப்படுத்துவார்களானால், அவைகளைப் பயன் படுத்தும்படிக்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் மற்றும் சபையார் படிப்படையாக அறியவர வேண்டும் மற்றும் சமயம் வாய்க்கையில் அவர்களை மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒருவேளை அவர்களுக்கு எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லையெனில் சபையாரும் அவர்களைக் குறித்து ஒருபோதும் அறிந்துகொள்ளமாட்டார்கள்.

சபையார் தாங்கள் செய்யவேண்டிய சரியான காரியத்தையே தெரிவித்துள்ளனர் மற்றும் அவர்கள் இன்னும் ஒருபடி மேல்சென்று, பொருத்தமானது என்று காண்கிறதற்கு ஏற்ப, கூட்டத்தினை நடத்திடுவதற்கு அல்லது ஒழுங்குப்படுத்திடுவதற்கு உதவிக்காரர் அடிக்கடி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறிடலாம் மற்றும் இந்த இளையச் சகோதரர்கள் தங்களது தாலந்துகள் மற்றும் ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்துவதில் அவர்களுக்கு உதவிபுரிவதற்கு மூப்பர்கள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்; ஒருவேளை மூப்பர்கள் இவர்களை மூப்பராகிவிடுவதற்கான தாலந்துடையவர்களாய்க் காண்பார்களானால் தேர்ந்தெடுத்தலின் போது, "நான் இந்த சகோதரனுக்கு மற்றும் அந்த சகோதரனுக்கு முன்மொழிகின்றேன்; இவர் மிகவும் உண்மையுள்ள உதவிக்காரராக இருந்திருக்கின்றார் மற்றும் இவரை நான் இப்பொழுது மூப்பராக முன்மொழிகின்றேன்" என்று கூறிடுவது முற்றிலும் சரியான காரியமாய் இருக்கும். இப்படியாக மூப்பர் ஒருவர் கூறிடுவது என்பது மிகவும் அருமையான காரியமாய் இருக்கும். தனது இளையச் சகோதரன் முன்னுக்கு வருவதற்கென இவர் உதவி செய்திட வேண்டியவராய் இருக்கின்றார்.

எப்போதுமே நிறைய வேலை இருக்கின்றது. மிக அதிகமாய் மூப்பர்களைப் பெற்றிருப்பதில் அச்சம் அடையாதீர்கள். "அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு." களம் இறங்குங்கள் மற்றும் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள் மற்றும் நீங்கள் முயற்சித்துக் கொண்டிருப்பதைத் தேவன் பார்க்கையில் அவர் உங்களுக்கு மற்றக் கதவுகளைத் திறந்தருளுவார்.

## கூட்டங்கள் - மூப்பர்கள் விசாரணை சங்கத்தில் அமர்தல்.

**கே 479:1 :: கேள்வி (1960) - 1 -** மூப்பர்கள் விசாரணை சங்கத்தில் அமர்வதுபோல் காணப்படுவதும் மற்றும் ஒழுங்கற்ற விதத்தில் நடப்பவர்களாகத் தென்படுபவர்கள், மூப்பர்கள் முன்பு ஆஜராகும்படிக்கும் அழைக்கப்படுவதும் மூப்பர்களுக்குத் தகுதியான காரியமாய் இருக்குமா? அல்லது மத்.18:15-18 வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான கர்த்தருடைய ஆலோசனையானது பின்பற்றப்பட வேண்டுமா?

**பதில்.** குறிப்பிடப்பட்டிருக்கும் வேதவாக்கிய பகுதியில் இடம்பெறும் கர்த்தருடைய கட்டளைக்கு இசைவாய்க் காரியமானது கையாளப்பட வேண்டும். என்று மேற்காணப்படும் கேள்வியின் வாயிலாய் வெளிப்படும் யோசனையை நான் அங்கீகரிக்கிறேன். மூப்பர்கள் சங்கத்தாரோ அல்லது வேறு எவரோ அந்நிய காரியங்களில் தலையிடுகிறவர்கள் ஆகிடுவதற்குக் கர்த்தருடைய வார்த்தை அங்கீகரிக்கிறதில்லை. இப்படிச் செய்வது என்பது பரிசுத்த விசாரணையின் போதிருந்த இருண்ட யுகங்களின் பழக்கங்களுக்குத் திரும்புவதாக இருக்கும் மற்றும் பரிசுத்த விசாரணையை மேற்கொண்டவர்கள் கொண்டிருந்த அதே ஆவியினை நாமும் வெளிப்படுத்துகிறவர்கள் ஆகிடுவோம். கர்த்தர் காரியத்தினை எளிமையான விதத்தில் வைத்துள்ளார் மற்றும் அதனை நாம் மேலும் சிறப்பாக்கிட முடியாது. "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம் செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்" என்று வேதாகமம் கூறுகின்றது. இதுவே காரியத்தின் முடிவாக இருக்க வேண்டும். ஒருவேளை இதனால் பலன் உண்டாகவில்லையெனில் வேத வாக்கியங்களானது அடுத்தக்கட்ட நடவடிக்கையைத் தெரிவிக்கின்றது. "அவன் செவிகொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு வா" என்று நாம் வாசிக்கின்றோம். ஒருவேளை தவறு செய்தவர் இந்த இரண்டு அல்லது மூன்று பேரின் புத்திமதிக்குச் செவிகொடுத்துத் தனது தவறான செய்கையை நிறுத்திக்கொள்வாரானால், அதுவே

காரியத்தின் முடிவாயிருக்கும். அவருக்கு ஏதேனும் வகை தண்டனை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோ அல்லது கொடுப்பதற்கு முற்படுவதோ நமக்கு அடுத்தக் காரியமல்ல. “கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்” என்று கூறும் அவருடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஒருவேளை தவறு செய்தவற்குத் தண்டனை ஏதேனும் அவசியப்படுமானால், கர்த்தர் அதை அவருக்குக் கொடுப்பார் என்று நாம் நம்பிட வேண்டும் மற்றும் இக்காரியத்தினை நம்முடைய சொந்தக் கரத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது. நாம் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக்கொள்ள வேண்டும். நாம் தவறு செய்தவரை, தவறு செய்வதிலிருந்து நிறுத்திட முற்படுவதே நமக்கடுத்த காரியமாகும். ஆனால் ஒருவேளை தவறு செய்தவர் தொடந்து தவறு செய்துகொண்டும், மனந்திரும்பாமலும் காணப்பட்டால் மற்றும் ஒருவேளை காரியமானது போதுமான அளவுக்கு முக்கியமானதாய்க் காணப்படுமாயின், அப்பொழுது காரியமானது சரிச்செய்யப்படத்தக்கதாக நாம் சபையாருடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். (மத்.18:15-18.)

சிறு அல்லது அற்பத்தனமான காரியங்கள் எதையும் நாம் சபையின் முன்னிலையில் கொண்டு வரக்கூடாது. என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதான இவ்வகையான காரியங்களானது, நான்கில் மூன்று பகுதி கண்டுகொள்ளாமல் விட்டுவிடப்பட வேண்டியவைகளாகவும், அவைகள் விஷயத்தில் எதுவுமே செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லாதவைகளாகவும் காணப்பட்டுள்ளது. எனினும் சில விவகாரங்களில் காரியங்களானது, தனிப்பட்ட நபரைத் தாண்டி முழுச்சபையாரையும் சம்பந்தப்படுத்தும் அளவிற்குள்ள விவகாரங்களாகக் காணப்படும் இம்மாதிரியான நிகழ்வுகளில், காரியத்தினைத் தனிப்பட்ட விதத்தில் கையாளுவது கூடாத காரியமாய் இருக்கும். அப்போது மூப்பர்கள் குழு (COMMITTEE) ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அவர்களில் ஒருவர் இவ்விவகாரத்தைப் பார்த்துக்கொள்வதற்கும், தவறானது தடுக்கப்பட முடியுமா அல்லது சரிசெய்ய முடியுமா? என்று பார்த்துக்கொள்வதற்கும் என்று ஏற்பாடு பண்ணப்படவேண்டும். காரியமானது தனிப்பட்ட நபரைத் தாண்டி கடந்துசெல்கிறதினால் தேவனுடைய வார்த்தைக்கு மிஞ்சி எங்களுக்கு எந்த ஆலோசனையும் இல்லை. பாபிலோன் போல் ஆகிடாமலிருப்பதற்கும், விசாரணைகள் நடத்திடாமல் இருப்பதற்கும், கவனமாய் இருப்போமாக; தேவனுடைய வார்த்தை நமக்கும் போதுமானதாய் இருக்கின்றது மற்றும் நாம் அதைக் கவனமாய்க் கைக்கொண்டு இப்படியாகக் குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

## கூட்டங்கள் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கடமைகள்.

**கே 480:1 :: கேள்வி (1916) - 1 -** அதிகம் எண்ணிக்கையுள்ள சபையில், மூப்பர்கள் ஊழியத்தில் முழுமையாய் ஈடுபட்டிருக்க மற்றும் உதவிக்கார்கள் அனைவரும் கூடத் தங்கள் வாய்ப்புகளுக்கு ஏற்ப முழுமையாய் ஊழியம் செய்துகொண்டிருக்க, (அதே சபையில்) வழிநடத்துகிறவர்கள் இல்லாமல் ஒரு கூட்டமானது இன்னமும் காணப்படுகின்றதென்றால், மூன்று மூப்பர்கள் அடங்கிய அச்சபையின் வழிநடத்துபவர்களின் குழுவானது (COMMITTEE), சத்தியத்தில் தெளிவானவராக, வழிநடத்துபவராக செயல்படுவதற்குத் தகுதியுடையவராக குழுவின் அங்கத்தினரால் அறியப்பட்டிருக்கும் ஒரு சகோதரனை, சபையார் மத்தியிலிருந்து உதவியாளராக (ASSISTANT) நியமிப்பது சரியாக இருக்குமா?

**பதில்.** இம்மாதிரியான சூழ்நிலையின் கீழ் இப்படிச் செய்வது சரியானதாகக் காணப்படும் என்று நான் எண்ண வேண்டியவனாய் இருக்கின்றேன். கூட்டங்களை வழிநடத்துவதற்குத் தகுதியுடைய மூப்பர்களின் எண்ணிக்கையைச் சபையார் முடிவு பண்ணுவது சரியான காரியமாய் இருக்கும். எனினும் போதுமானவர்கள் இல்லையெனில் குழுவானது, அச்சூழ்நிலைக்குத் தகுதியானவர் என்று கருதும் யாரையேனும் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கும். எனினும் அவசரமான சூழ்நிலைகளைத் தவிர, மற்றபடி சபையார் நிர்ணயித்த எண்ணிக்கையை அவர்கள் தாண்டி விடக்கூடாது. சாதாரணமான சூழ்நிலைகளில், நியமிக்கப்பட்ட மூப்பர்களே கூட்டங்கள் அனைத்தையும் தலைமை தாங்கி நடத்திட வேண்டும்; ஆனால் சில சந்தர்ப்பங்களில் தகுதியுடைய உதவிக்காரர் ஒருவர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அவசரமான சந்தர்ப்பத்தின் போது, வழிநடத்துவதற்கு நியமிக்கப்படலாம். ஆனால் தகுதி வாய்ந்த மூப்பர்களின் எண்ணிக்கையைச் சபையாரே நியமித்திட வேண்டும் என்பதும், சாதாரணமான சந்தர்ப்பங்களில் மூப்பர்களே

கூடுகைகளை ஒழுங்குப்படுத்திட வேண்டும் என்பதும் நன்கு மனதில் நினைவுகொள்ளப்பட வேண்டும். அவசரமான சந்தர்ப்பங்களே ஒழிய மற்றப்படி, மூப்பர்களே செய்திட வேண்டும்.

## கூட்டங்களுக்கான ஏற்பாடுகள்.

**கே 480:2 :: கேள்வி (1916) - 2 -** அதிக எண்ணிக்கையில் காணப்படும் ஒரு சபையில், மற்றவர்களுக்கு வேலையில் ஒரு குறிப்பிட்ட பாகத்தினை - அதாவது கூட்டங்களுக்காக ஏற்பாடு பண்ணுதல், கூட்டங்களுக்கான நேரம் மற்றும் இடத்தை நிர்ணயித்தல் மற்றும் பல்வேறு கூட்டங்களுக்கான கூட்டத்தலைவர்களை / வழிநடத்துபவர்களை நியமித்தல் போன்ற வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பது தகுதியானதாய் இருக்க - இம்மாதிரியான வேலைகளானது, சபையின் மேற்பார்வையாளர்களென மூப்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களால் மாத்திரமே செய்யப்பட வேண்டுமா அல்லது மூப்பர்களோடுகூட உதவிக்காரர்களும் இக்கடமைகளை நிறைவேற்றிட வேண்டுமா?

**பதில்.** இம்மாதிரியான காரியங்களில் கர்த்தருடைய வார்த்தையானது நமக்கு அதிகளவிலான சுதந்திரத்தைக் கொடுத்துள்ளதாய் இருக்கின்றது. மூப்பர்களுடைய வேலை என்னவாகக் காணப்பட வேண்டும் என்றும், உதவிக்காரர்களின் வேலை என்னவாகக் காணப்படவேண்டும் என்றும் கர்த்தருடைய வார்த்தைகளானது குறிப்பாய்த் தெரிவிக்கிறதில்லை. அது சௌகரியத்திற்கே பெரிதும் விடப்பட்டுள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். சபையினுடைய ஆவிக்குரிய வேலைகளை - கூட்டங்களை மற்றும் இவ்வகையான அனைத்தையும் மூப்பர்கள் பொறுப்பேற்றுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இவர்கள் பொதுவில் பேசுவதற்குத் தகுதியான சகோதரர்களாகக் காணப்பட வேண்டும். அப்போஸ்தலன் கூறுவது போன்று இவர்கள் "போதகசமர்த்தனாய்க்" காணப்பட வேண்டும்; சிலர் பொதுவிடங்களில் பேசிடுவதற்குரிய போதக சமர்த்தகர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் அவர்கள் அம்மாதிரியான வேலைக்கு என்று நியமிக்கப்பட வேண்டும்; சிலர் ஒரு சிலருக்குப் போதிப்பதற்குப் போதகசமர்த்தனாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இவர்கள் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளுக்கும் மற்றும் இல்லத்தில் நடைபெறும் கூட்டங்களுக்கும் என்று நியமிக்கப்பட வேண்டும். போதகசமர்த்தன் என்ற வார்த்தைக்குப் பரந்து விரிந்த அர்த்தம் கொடுக்கப்பட வேண்டும். அது மேடையில் நின்று சொற்பொழிவாற்றுதலை மாத்திரம் குறிக்கிறதில்லை. மாறாக எந்தவொரு விதத்தில் போதிப்பதற்குத் திறமையுடையவராய் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தாங்கள் மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது தாங்கள் பொதுவிடங்களில் பேசிட வேண்டும் என்று குறிப்பதாகச் சிலர் எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் அது அப்படியல்ல. போதகசமர்த்தனாய் இருப்பது என்பது பொதுவிலும் மற்றும் தனிமையிலும் போதிப்பதாகிய இரண்டையும் உள்ளடக்கிக் காணப்பட வேண்டும்; சிலருக்கோ பொதுவிடங்களில் (PUBLIC WORK) போதிக்கும் பணி மற்றும் மற்றவர்களுக்கோ ஒரு சிலருக்குப் போதிக்கும் பணியும் (PRIVATE WORK) கொடுக்கப்பட வேண்டும், எனினும் அனைவரும் போதகசமர்த்தனாய்க் காணப்பட வேண்டும்.

மூப்பர்கள் அனைத்துக் கூட்டங்களையும் நடத்திட வேண்டும்; ஏனெனில் அனைத்துக் கூட்டங்களும் ஆவிக்குரியதாகக் காணப்படுகின்றன. ஒரு நபர் மூப்பராய்க் காணப்படுவதற்குத் தகுதியற்றவராய் இருப்பாரெனில், அப்படியானால் அவர் கூட்டங்களுக்கான கூட்டத்தலைவராகக் காணப்படுவதற்கும் தகுதியற்றவர் ஆவார். உதவிக்காரர்கள் என்ன செய்ய வேண்டும்? உதவிக்காரன் என்ற வார்த்தையின் அர்த்தம், ஊழியக்காரன் ஆகும் மற்றும் இது எவ்வகையான வேலையையும் புரிய முடிகிற ஒருவரைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு வாயிற்காவலருக்குக் காணப்படும் வேலை போன்ற வேலை அவருக்குக் கொடுக்கப்படலாம் அல்லது புத்தகங்களின் நிர்வகிப்பானது அவரிடத்தில் ஒப்படைக்கப்படலாம் அல்லது தன்னார்வ ஊழியங்களுக்கடுத்த பொறுப்பானது அவரிடத்தில் ஒப்படைக்கப்படலாம். அநேகம் வேலைகள் உதவிக்காரர்களிடத்தில் ஒப்படைக்கப்படலாம் மற்றும் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் இம்மாதிரியான வேலைகளை நன்கு செய்திடலாம். ஆகையால் அவர்களால் நன்கு செய்ய முடிகிற குறிப்பிட்ட வேலைகளை அவர்களுக்குக் கொடுங்கள். தொழிலதிபர்களாய்க் காணப்படும் சகோதரர்கள், போதகசமர்த்தனாய் இல்லையென்றாலும், உதவிக்காரர்களெனச் சில சமயம் பயன்படுத்தப்படலாம். இம்மாதிரியான ஒருவர், மூப்பரால் செய்ய முடிகிற அளவிற்குத் தன்னார்வ ஊழியங்களைச் செய்ய முடியாதவராய் இருப்பினும், அவரிடம் இவ்வேலைக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, அவ்வேலைக்குத் தலைவரென நியமிக்கப்படலாம். இந்த

வேலையானது மூப்பர்களுக்குக் கொடுக்கப்படக்கூடாது; ஏனெனில் மூப்பர்கள் ஈடுபட்டுக் காணப்படுவதற்கு ஆவிக்குரிய வகையான வேலை போதுமான அளவில் காணப்படுகின்றன.

இப்பொழுது உதவிக்காரர்கள் மற்றும் மூப்பர்கள் ஒன்றுகூடுவது குறித்தக் காரியத்திற்கு வரலாம். மூப்பர்கள் தங்களது கூட்டங்கள் அனைத்திலும் உதவிக்காரர்களை வரவேற்பது என்பது மிகவும் நல்லதொரு ஏற்பாடு என்று நான் கருதுவேன்; ஏனெனில் நல்ல உதவிக்காரர் என்பவர், தனக்கு ஒப்படைக்கப்பட்ட பல்வேறு கடமைகளில் உண்மையாய்க் காணப்படுவதின் வாயிலாக, அங்கீகரிக்கப்படத்தக்கவராகவும், “தனக்கென்று நல்ல நிலையை அடைபவராகவும்” அதாவது சுதந்தரத்தின் நல்ல நிலையை அடைபவராகவும் காணப்படுகின்றார். (1தீமோ.3:13). மேலும் அவர் மூப்பர் ஆக்கப்படுவதற்குரிய வாய்ப்பினை எதிர்நோக்கினவராகவும், மூப்பருடைய வேலைக்குரிய வளர்ச்சியினையும், மேம்பாட்டையும் வெளிப்படுத்துகிறவராகவும் காணப்பட வேண்டும். உதவிக்காரர்கள் செய்வதற்கென்று ஒரு வேலை உள்ளது. அவர்கள் மூப்பர்களுக்கு மாத்திரம் வேலை புரிகிறவர்களாய்க் காணப்படாமல், அவர்கள் சபையாருக்கும் கூட வேலை புரிகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். எப்படி மாநாடு சம்பந்தப்பட்ட விஷயத்தில் அநேகம் வேலைகள் காணப்படுகின்றதோ, அதுபோலவே சபையாருக்கான வேலையில் அநேகம் வேலைபிரிவுகள் காணப்படுகின்றன. மாநாடுகளுக்கென்று ஆயத்தப்பணிகள் அநேகம் காணப்படுகின்றன; அதாவது, அறைகளை ஏற்பாடு செய்தல், இதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல், மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் தேவைகளைச் சந்தித்தல் முதலானவைகளாகும்.

மாநாடு தொடர்புடைய விஷயத்தில் ஒரு குழு (COMMITTEE) நியமிக்கப்பட்டு வருகின்றது என்பதில் ஐயமில்லை மற்றும் இந்த குழுவில் மூப்பர்களும் மற்றும் அலுவல் காரியங்களைப் பார்த்துகொள்பவர்களும், இருவருமே காணப்படுவது நலம். இவ்வேலையினை மூப்பர்களே செய்துகொள்ளலாம் அல்லது உதவிக்காரர்கள் செய்துகொள்ளலாம். வேலையினை செய்வதற்குரிய திறமையுள்ளவர்களின் மீது இவ்வேலையானது சார்ந்துள்ளது. சில சகோதரர்களுக்கு அதிக அளவிலான திறமைகள் காணப்படுகின்றன மற்றும் சிலர் மிகக் குறைவான திறமைகளைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர். உதாரணத்திற்கு செய்தித்தாள் வேலை காணப்படுகின்றது. ஒருவேளை ஓர் உதவிக்காரன் தகுதியுடையவராகக் காணப்படுவாரானால், அவர் இந்த வேலையைச் செய்திடலாம்.

ஆவிக்குரிய காரியங்களுக்கான பொறுப்பு, மூப்பர்களின் கரங்களிலேயே காணப்படுகின்றது. எருசலேமுக்குப் போகையில் அப்போஸ்தலனாகிய பவுல் மிலேத்து பட்டணத்தில் தங்கி, எபேசு பட்டணத்திலுள்ள சபையின் மூப்பர்கள் வரும்படியாக அழைத்தனுப்பினார். அவர் அவர்களிடம்: “உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.” (அப்.20:28.) என்று கூறினார். இவர்களுடைய வேலை தேவனுடைய மந்தையை மேய்ப்பதாகும். உதவிக்காரர்கள் மற்றவகையான வேலைகளைச் செய்திடலாம். மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுடைய கூட்டங்கள் அனைத்திலும் மூப்பர்கள் ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தினுடைய பொறுப்பினை எடுத்துகொள்ள வேண்டும். உதவிக்காரர்களோ ஆவிக்குரியதல்லாத (TEMPORAL) காரியங்களுக்கடுத்த பொறுப்பினை எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் ஆவிக்குரியதல்லாத காரியங்களுக்கடுத்தவைகளில் ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்கிட வேண்டும். இத்தகைய ஒருங்கிணைந்த கூட்டத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசனை வழங்கிட வேண்டும். ஒருவர் அலுவல் காரியங்களுக்கடுத்தவைகளில் ஆலோசனையைக் கொடுத்துக் கொள்ளலாம் மற்றும் இன்னொருவர் ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்தவைகளில் ஆலோசனையைக் கொடுத்துக்கொள்ளலாம். இறுதி வாக்கும் பொறுப்பும் மூப்பர்களிடத்திலே காணப்பட்டாலும்கூட, வாக்கெடுப்பதற்குரிய நேரத்தில் உதவிக்காரர்களுடைய எந்த யோசனைகளையும் மூப்பர்கள் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியாய்க் காணப்படவேண்டும். தகுதியுள்ள உதவிக்காரர்களின் கரங்களில், சபையாருடைய ஆவிக்குரியதல்லாத காரியங்களானது காணப்பட்டாலும், அவர்களுக்கு இவற்றிற்கடுத்த ஆலோசனை வழங்கிடுவதற்கு மூப்பர்கள் திறமிக்கவர்களாய்க் காணப்பட வேண்டும். வாக்கானது பரஸ்பரமானதாகக் காணப்பட வேண்டும்; முடிவு மூப்பர்களின் பொறுப்பில் இருக்கும்.

நீங்கள் மற்ற அனைத்துக் கூட்டங்களினின்றும், உங்களது அலுவல் கூட்டங்களைப் பிரித்துக் கொண்டுள்ளீர்கள் என்று நான் புரிந்து கொள்கின்றேன். அது நல்லதே. பொதுவாகவே அலுவல் கூட்டங்களானது மற்றக் கூட்டங்களிலிருந்து பிரித்துக்கொள்ளப்பட வேண்டும். சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்கள் முழுவதையும் மூப்பர்களின் கரங்களிலேயே விட்டுவிடாதீர்கள்; ஏனெனில் அவர்கள் கூட்டங்களைத் தாங்களாகவே நடத்தி விடக்கூடும். குறிப்பிட்ட காரியங்களைச் சபையாரின் கரங்களில் வைத்துகொள்ளுங்கள்; ஏனெனில் அநேகக் காரியங்கள் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களிடத்தில் விடப்படுவது நலமாயினும், சபையினுடைய காரியங்கள் அனைத்திற்குமான பொறுப்பானது, இறுதியில் சபையாருடைய கரங்களிலேயே காணப்படுகின்றது.

## கூட்டங்கள் - உதவிக்காரர்கள் வாக்களித்தல்.

**கே 482:1 :: கேள்வி (1916) - 1 -** இத்தகைய (அலுவல்) கூட்டங்களில், கேள்விகளின் விஷயத்தில், உதவிக்காரர்கள் வாக்களிப்பது சரியா? அல்லது இது மேற்பார்வையாளர்களாகிய மூப்பர்களிடத்தில் விட்டுவிடப்பட வேண்டுமா? ஒருவேளை மூப்பர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உதவிக்காரர்கள் இருக்கையில் மற்றும் அனைவரும் வாக்களிக்க வேண்டுமானால், பின்னர் மூப்பர்களுக்குப் பதிலாக உதவிக்காரர்கள் சபையினுடைய அலுவல் காரியங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கலாமா?

**பதில்.** மூப்பர்கள் ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்க வேண்டியவர்களாகவும், வாக்களிக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர்; ஆனால் கூட்டங்களின் எண்ணிக்கையைச் சபையார் தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சரியாய் நடத்தப்படுவதற்கும், கலந்துகொள்ளப்படுவதற்கும் ஏதுவான எண்ணிக்கையிலுள்ள கூட்டங்களைப் பெற்றிடுங்கள். இன்னொரு கூட்டத்தைக்கூட கூட்டிக்கொள்ளும் விஷயத்தில், ஒப்புதலளிக்க விருப்பம் இல்லாதவர்களாய்ச் சிலர் காணப்படலாம்; ஆனால் மற்றவர்களுடைய சௌகரியத்தையும், வளர்ச்சியையும் கருத்தில் எடுத்துக் கொள்வது நலமாயிருக்கும். கூடுதலாக ஒரு கூட்டத்தைப் பெற்றிடுவது உங்களுக்கு அவசியம் இல்லாமல் காணப்படலாம், ஆனால் அது அவர்களுக்கு அவசியமாய் இருக்கும். ஆகவே சபையாருடைய நபர்களின் வளர்ச்சிக்கு அவசியமானது என்று சபையாரால் கருதப்படும் எண்ணிக்கையிலான கூட்டங்களைப் பெற்றிருப்பதற்கு ஒப்புதலளிப்பது நலமானதாய் இருக்கும்.

புரூக்கிளினில் ஒருவேளை கூடுதலாகக் கூட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் ஏற்பட்டால், அது குறித்தத் தகவல் சில சமயங்களில் எனக்கும் மற்றும் சில சமயங்களில் மற்றவர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விஷயத்தினைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, எத்தனை பேர் அக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்று அறிந்துகொள்ள முற்படுவோம். கலந்துகொள்வதற்குப் போதுமான எண்ணிக்கையானவர்கள் காணப்படாதது வரையிலும் நாம் கூட்டத்தினைக்குறித்து பரிந்துரைக்க மாட்டோம். கலந்துகொள்வதற்கென ஏழு அல்லது எட்டு பேர் இல்லாத வரையிலும் ஒரு புதியக்கூட்டத்தினைக் குறித்துப் பரிந்துரைப்பதற்கு நாம் சிந்திப்பது இல்லை மற்றும் இப்படியாகக் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை பதினைந்தாக உயரும் என்றும் நாம் எதிர்பார்ப்போம். ஆனால் ஒருவேளை எண்ணிக்கை முப்பதை எட்டும்போது, ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் நன்கு வளர்ச்சியடையத்தக்கதாகக் கூட்டத்தினை இரண்டாகப் பிரித்திடுவது குறித்து நாம் சிந்திப்போம். இயல்பாகவே மந்த நிலையில் காணப்படுபவர்களாகக் கர்த்தருடைய ஜனங்களில் சிலர் காணப்படுகின்றனர் மற்றும் அதிக எண்ணிக்கையானவர்கள் காணப்படுகையில் இத்தகையவர்கள் கவனிக்கப்படாமல் காணப்படுவார்கள்; ஆனால் குறைவான எண்ணிக்கையில் காணப்படும் போது இத்தகையவர்கள் மிகுந்த கவனத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் இது அவர்களது வளர்ச்சிக்கு ஏதுவானதாய்க் காணப்படும்.

## கூட்டங்கள் - துணைவிதிகளைப் பயன்படுத்தல்.

**கே 482:2 :: கேள்வி (1916) - 2 -** அலுவல் கூட்டங்கள் முதலானவைகளை நிர்வகிப்பதற்குரிய துணைவிதிகள் சிலவற்றை லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள சபையார் ஏற்படுத்திக்கொள்ள நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

**பதில்.** சகோதரர்களில் சிலர் துணைவிதிகள் அல்லது சட்டங்களுக்கு மிகவும் ஆர்வம் கொண்டவர்களாய் இருக்கின்றனர். சில விதிகள் நிச்சயமாகவே அவசியமாக இருக்கின்றன; ஏனெனில் அவைகள் இல்லையெனில் நாம் ஒழுங்கின்மையுடையவர்களாய் இருப்போம்; எனினும் அன்பு மற்றும் நீதியின் பிரமாணத்தை நாம் கைக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு பிரமாணங்கள் விசேஷமாய்க் கைக்கொள்ளபட்டால், இவை கிட்டத்தட்ட அனைத்தையுமே ஒழுங்குப்படுத்துகிறதாக இருக்கும். எனினும் நீதியானது எப்போதும் முதலாவதாக இடம்பெற வேண்டும். நான் எல்லா விஷயத்திலும் உங்களிடத்தில் நீதியுடன் காணப்பட வேண்டும். எனினும் உங்களிடத்தில் நான் பதிலுக்கு நீதியை எதிர்பார்த்து வற்புறுத்திடக்கூடாது. எனினும் நீதிக்கு குறைவாக எதையும் எனக்குச் செய்திடுவதற்கு நீங்கள் விரும்பிடக்கூடாது மற்றும் நானும் நீதிக்குக் குறைவாய் எதையும் உங்களுக்குச் செய்திடக்கூடாது. மேலும் நான் கண்டிப்பாய் நீதியைச் செய்ய வேண்டியவனாய் இருப்பினும், அதை நான் உங்களிடத்தில் எதிர்பார்த்திடக்கூடாது; உங்களிடத்தில் குறைவாகவே நான் எதிர்பார்த்திடலாம். நீதி மற்றும் அன்பு எனும் இந்த இரண்டு துணைவிதிகள் செயல்பாட்டில் இருக்கையில் நமக்கு மிக அதிகப் பிரமாணங்கள் தேவைப்படாது. மிக அதிகமாய்த் துணைவிதிகளை நாம் பெற்றிருக்கலாம்; ஆனால் இவ்விரண்டு பிரமாணத்தையும் மனதில் உறுதியாய்ப் பெற்றிருக்கையில், இவைகள் அநேக சந்தர்ப்பங்களில் உதவி செய்கிறதாய் இருக்கும்.

## கூட்டங்களின் வகை.

**கே 483:1 :: கேள்வி (1916) - 1 -** எவ்வகைக் கூட்டங்கள் மிகவும் பிரயோஜனமான வைகளாகக் காணப்படும்?

**பதில்.** இது சந்தர்ப்பங்களைச் சார்ந்ததாகக் காணப்படும். நாங்கள் அறிந்ததிலேயே மிகவும் பிரயோஜனமான கூட்டமாய்க் காணப்படுவது பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளாகும். மிகவும் பிரயோஜனமாய்க் காணப்படாத சில அரிதான சந்தர்ப்பங்களும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலையில் பிரசங்கக் கூட்டமானது மிகவும் பிரயோஜனமாகக் காணப்படும்; சில சமயங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு பிரசங்கக் கூட்டங்களானது காணப்படுகின்றது. எனினும் இவை அபூர்வமான சந்தர்ப்பங்களிலேயே ஆகும். பொதுவாக பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளிலிருந்தே மிகுந்த பயன் கிடைக்கின்றது என்று நாம் கருதுகின்றோம்; காரணம் இந்த வகுப்புகளுக்கு ஒவ்வொரு நபரும் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும், தனது பதில்களைக் கூறவும் வேண்டியுள்ளது. நான் குறிப்பாய் ஆலோசனை கொடுக்க நோக்கம் கொள்ளவில்லை, மாறாக பொதுவான விதத்திலேயே கொடுத்து, நான் இங்குக் கூறுபவைகளை ஒவ்வொரு சபையாரும், அவர்களுக்குரிய விதத்தில் நடைமுறைப்படுத்திடுவதற்கு விட்டுவிடுகிறேன்.

நாம் எத்தனை கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது எந்த வகையான கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று வேதாகமமானது எதுவும் தெரிவிப்பதில்லை. இக்காரியமானது தெளிந்த புத்தியுள்ள ஆவியினால் தீர்மானிக்கப்படத்தக்கதாக விடப்பட்டுள்ளது. சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுடைய பிரயோஜனம் மற்றும் நன்மைக்குறித்து மனதில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். நாம் "ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்." அதிகமான கூட்டங்கள் தேவை என்று சிலர் எண்ணலாம். ஒருவேளை மிக அதிகமாய்க் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவார்களானால், எத்தனை பேர்களுக்கு என்று கூட்டமானது முதலில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்ததோ, அந்த எண்ணிக்கையைவிட, கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையானது படிப்படியாகக் குறைந்துப்போய், அதைத் தொடர்ந்து நடத்த முடியாதளவுக்குப் போவதைப் பார்க்கலாம். ஞாயிற்றுக்கிழமையில் மூன்று கூட்டங்கள் நடத்தப்படுவது போதுமானதாயிருக்கும் என்பது எனது கருத்தாகும். ஆனால் ஒவ்வொருவரும் இதில் சிந்திக்க வேண்டும் மற்றும் பின்னர் சந்திப்பதற்கும், செயல்படுவதற்கான அதே சுயாதீனமும், சிலாக்கியங்களும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுவதாக இதுவே சரியானதும், நியாயமானதுமாகும். நீதி என்கிற இந்தக் கருத்தானது, ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் காணப்படவேண்டும்; ஏனெனில் நீதியானது தேவனுடைய சிங்காசனத்திற்கான ஆதாரமாய் இருக்கின்றது மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவ நடத்தையினுடைய ஆதாரமாய்க் காணப்படவேண்டும். சொல்லப்போனால் நாம் செய்யும் அனைத்திற்கும் நீதியானது ஆதாரமாய்க்

காணப்படவேண்டும். சபையாரில் யாரேனும் ஐந்து கூட்டங்களைப் பெற்றிருக்க விரும்புவார்களானால், நான்: “சரி, ஆனால் என்னால் அனைத்துக்கூட்டங்களிலும் கலந்துகொள்ள முடியாது. எனினும் உங்களுக்கு ஐந்து கூட்டங்கள் வேண்டும் என்றும், அவற்றில் போதுமானவர்கள் நன்கு கலந்துகொள்வார்களென எண்ணுகின்றீர்கள் என்றும் இருந்ததால், நான் ஐந்து கூட்டங்களுக்கென வாக்களித்திடுவேன் என்பேன்.

## கூட்டங்களின் எண்ணிக்கை.

## கே 483:2 :: கேள்வி (1916) - 2 -

முற்பகல் 10:30 மணி - காவற் கோபுரத்தில் ஞாயிறு பள்ளி வகுப்பு பாடம்.

பிற்பகல் 13:30 காவற் கோபுர பாட கட்டுரை.

பிற்பகல் 15:00 பிரசங்கங்கள்.

பிற்பகல் 19:00 பெரியன் (BEREAN) பாடங்கள் 6ம் வால்யூம்.

சிலர் இன்னும் அதிகமாய்க் கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்; சிலர் நாம் மிக அதிகமாய் இப்போது கூட்டங்களைப் பெற்றிருக்கின்றோம் என்று கூறுகின்றனர்; சிலர் ஒரு தூதிற்குப் பதிலாக நாம் இரண்டு தேவதூதுகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். இது விஷயத்தில் சபையாருடைய சிறந்த நலனுக்கடுத்தவைகள் தொடர்பான உங்களது கருத்தென்ன?

**பதில்.** ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு சபையாரும் தங்களுக்கெனத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் மிக அதிகமாய்க் கூட்டங்களைக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. இந்த ஒரு சந்தர்ப்பத்தில், ஏற்கனவே நடத்தப்பட்டுவரும் கூட்டங்களின் எண்ணிக்கையினைக் கூட்டிடுவதற்கு நாம் விருப்பங்கொள்ளக்கூடாது. ஒருவேளை நான் அவ்விடத்தில் காணப்பட்டு, இவ்விஷயம் தொடர்பாக வாக்களித் திருப்பேனாகில், ஐந்திற்குப் பதிலாக மூன்று கூட்டங்களைப் பெற்றிருப்பதற்கு நான் விருப்பம் கொண்டிருப்பேன். உங்களால் முடியுமானால் நான்கைக் கொண்டிருக்கலாம். ஒவ்வொரு வருக்கும் வேறுபட்டுக் காணப்படும் என்றாலும், கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது பிள்ளைகளுக்கான பூலோகக் கடமைகளைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் இளைப்பாறுதலுக்கும் மாற்றத்திற்கும் வேண்டிபிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதான இந்த ஒரு நாளில் கர்த்தருடைய ஜனங்கள், சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது குழந்தைகளுக்கு எதையாகிலும் செய்யக் கடமைப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள்.

சத்தியத்தில் இல்லாதவராகவும் ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே இல்லத்தில் காணப்படுபவராகவும் காணப்படும் கணவன், தனது மனைவி அந்த நாளில் மிகவும் வெளியே ஆக்கிரமிக்கப்பட்டுக் காணப்படுவதைக் காண்கையில், அவள் அவரைப் புறக்கணிக்கின்றது போன்று அவருக்குத் தோன்றிடும் மற்றும் நீங்களும் இதைப் போன்ற சந்தர்ப்பங்களில், இதே பார்வையினைக் கொண்டிருப்பீர்கள்; மேலும் சத்தியத்தில் காணப்படாத மனைவி ஞாயிற்றுக்கிழமைகளிலும்கூடத் தனது கணவனை அவ்வளவுக்குக் காணமுடியாத அளவுக்கு, அவர் நாள் முழுவதும் கூட்டங்களிலேயே காணப்படுவாரெனில் அவள், அவருடனான எந்த ஐக்கியத்தினையும் பெற்றிருக்க முடியாது. நிச்சயமாகவே இது சரியாய் இருக்காது. நம்முடைய கணவன்மார்களிடத்தில் அல்லது நம்முடைய மனைவிமார்களிடத்தில் நமக்குப் பூமிக்குரிய வகையான பூலோகக் கடமைகள் காணப்படுகின்றது மற்றும் இவைகளை நாம் கவனியாமல் காணப்படக்கூடாது.

ஒருவேளை சபையார் ஞாயிற்றுக்கிழமைகளில் மிக அதிகமான எண்ணிக்கையில் கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், சில சமயங்களில் ஒரு நபர் எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளாமல் காணப்படுவது ஞானமான காரியமாய் இருக்கும். தன்னால் தனது முழு நாளினையும் கர்த்தருக்கென்று கொடுக்க முடியும் நபர் விஷயத்திலுங்கூடத் தனது நேரத்தினை, தான் எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்ற காரியமானது, அந்நபரின்

கரங்களிலேயே காணப்படுகின்றது. அவன் தனது நாளில் ஒரு பகுதியைத் தன்னார்வ ஊழியத்திற்கென்றும் மற்றும் இன்னொரு பகுதியை வேறொரு வேலையினுடைய ஒரு பாகத்திற்கென்றும் மற்றும் கொஞ்சம் பகுதியை பெரோயா ஆராய்ச்சிக்கென்றும், கொஞ்சம் பகுதியைப் பிரசங்கிப்பதற்கென்றும் செலவிட விரும்புகின்றவனாய்க் காணப்படுவான். இது விஷயத்தில் அவன் தனது சொந்தப் பகுத்தறிதலை முடிந்தமட்டும் பயன்படுத்திட வேண்டும். ஒருவேளை சபையார் நான்கு கூட்டங்களுக்கு அதிகமானக் கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், அது ஞானமாய்க் காணப்படாது; மற்றும் ஒருவேளை இந்தக் கூட்டங்கள் அனைத்திற்கும், அனைவரும் வரமுடியும் என்றாலும், “உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக” எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். பக்திவிருத்திக்கு ஏதுவான கூட்டங்கள் விஷயத்திலும், மற்றக் காரியங்கள் விஷயத்திலும் மிதமாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய பலம் எல்லைக்குட்பட்டது என்று நாம் நினைவில் கொண்டிட வேண்டும்; மற்றும் நம்மைச் சார்ந்திருப்பவர்களுக்கு - நம்முடைய கணவன், நம்முடைய மனைவி, நம்முடைய பிள்ளை, நம்முடைய அயலார்கள், நம்முடைய உறவினர்களுக்கு நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அனைவருக்குமென்று நாம் சில கடமைகளைப் பெற்றவர்களாகக் காணப்படுவோம்; அதிலும் பிரதானமாய் விசுவாச வீட்டாருக்கும் மற்றும் நம்முடைய குடும்பத்தாருக்கும் என்று கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்; ஏனெனில் இவர்களே முதலாவதாகக் காணப்படுகின்றனர்.

## மெல்கிசேதேக்கு - யார்?

### கே 484:1 :: கேள்வி (1908) - 1 - மெல்கிசேதேக்கு யார்?

**பதில்.** மெல்கிசேதேக்கு ஒரு ஆசாரியராகவும், ராஜாவாகவும் ஒரே சமயத்தில் இருந்தார் என்று வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. அவர் ஆபிரகாமின் நாட்களில் வாழ்ந்த நபராக இருந்தார். அவர் சாலேம் என்ற பட்டணத்தைச் சார்ந்தவராகக் குறிக்கப்படுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இதற்கு “சமாதானம்” என்று பொருள்விளக்கம் சொல்லப்படுகிறது. இது சமாதானத்தின் நகரம் ஆகும். அந்த நகரத்தின் ராஜாவாக அவர் இருந்தார். சமாதான இராஜ்யத்தின் பிரதிநிதித்துவமாக சாலேம் நகரம் இருந்தது என்றும், அந்த ராஜா, தம்முடைய இராஜ்யத்தின் மகிமையிலிருந்த நமது கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் நிழலாக இருந்தார் என்று ஊகிக்கப்படுகிறது. அந்த இராஜ்யத்தில் நமது கர்த்தர் சமாதான பிரபு அல்லது சமாதான ராஜாவாக இருப்பார். ஆசாரியர் என்ற முறையில் மெல்கிசேதேக்கு பலிகளை செலுத்தவில்லை; அவர் மகிமையடைந்த ஆசாரியராக இருந்தார். ஆகவே யூத ஆசாரியனான ஆரோன் தன்னுடைய பலியிடும் வேலையில் நமது கர்த்தரை அடையாளப்படுத்துகிறான்; மெல்கிசேதேக்கு நிழலாக மகிமையடைந்த ஆசாரியராக, ஆளுகிற ஆசாரியராக நமது கர்த்தரை அடையாளப்படுத்துகிறார். வேறு வார்த்தைகளில் சொன்னால், இங்கு இரண்டு நிழல்கள் உள்ளன; ஒரு நிழல், கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை, கிறிஸ்துவின் பாடுகளை, கிறிஸ்துவின் பலியை, தம்முடைய பலியின் பலனை பிதாவிடம் அளிப்பதை அடையாளப்படுத்துகிறது. இவையெல்லாம் ஆரோன் மூலம் நிழலாக இருக்கின்றன; பிறகு, ஆசாரியர்களான ஆரோனின் குமாரர்கள் சபையாருக்கு நிழலாக்கப்படுகிறார்கள். பலியிடுதலில் இவர்களுடைய பங்கு, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதாகும். ஆனால் மெல்கிசேதேக்குவின் ஆசாரியத்துவம், மனுக்குலத்தார் அனைவரையும் ஆசீர்வதிக்கவும் சமாதான இராஜ்யத்தை நிறுவக்கூடிய திறனும் விருப்பமும் கொண்டு, மகிமையின் இராஜ்யத்தின் மகிமையடைந்த கிறிஸ்துவையும் சபையையும் அடையாளப்படுத்துகிறது. இந்த ஆயிர வருஷ இராஜ்யத்தில் மனுக்குலம் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும். மெல்கிசேதேக்கைப் பற்றி மிகவும் குறைவாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மெல்கிசேதேக்கு நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவராயிராமல் இருப்பதாக அப்போஸ்தலர் நமக்குத் தெரிவிக்கிறார். மெல்கிசேதேக்கு எப்போதும் பிறக்கவே இல்லை அல்லது எப்போதும் இறக்கவே இல்லை என்று அர்த்தப்படுத்துவதாக நாம் அப்போஸ்தலனைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், ஆசாரியர் என்ற முறையில் அவர் நிழலாக இருந்தார். ஆரோனுடைய ஆசாரியத்துவம்

ஒரு குமாரனிலிருந்து மற்றொருவனுக்கு வம்சாவளியாக வந்தது போல இல்லாமல், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் அவருடைய பெற்றோர்களிடத்திலிருந்து வரவில்லை. ஆனால் அவருடைய ஆசாரியத்துவம் மூலமுதலான ஆசாரியத்துவம் ஆகும். மெல்கிசேதேக்கின் இந்த ஆசாரியத்துவத்தில் அவர் பெற்றோர்களை உடையவராய் இருந்ததில்லை. இந்த ஆசாரியத்துவத்தில் அவருக்குப் பிள்ளைகள் இல்லை; அவருடைய ஆசாரியத்துவத்திற்கு காலத்தின் எந்த துவக்கமும் இல்லை. காலத்தின் எந்த முடிவும் இல்லை; இப்படியாக அவர் கிறிஸ்துவின் நிழலாக இருந்தார்; கிறிஸ்துவின் ஆசாரியத்துவப் பணி ஆயிர வருஷ இராஜ்யத்தின் புதிய ஒழுங்கு முறையின் ஆசாரியத்துவமாக உள்ளது. இது வரம்புக்கு உட்பட்டதாக இல்லை. இது பரம்பரை வழியாக அவரிடம் வந்து சேரவில்லை, அல்லது, ஒருவரிடமிருந்து மற்றவருக்கு வரும் முறையிலும் இல்லை. இவ்விதமாக, மெல்கிசேதேக்கு ஒரு நிழலாக இருந்தார்.

சகோதரன் ஹாரீசன்: நான் மேலும் ஒரு கேள்வியைக் கேட்கலாமா? இந்த கேள்வி மிகவும் சமீப காலத்தில் என்னிடம் கேட்கப்பட்டது. நீங்கள் கூறியிருக்கிறதை வெகுவாகப் பாராட்டுகிறேன், ஆனால் யூத ஜனங்கள் தங்கள் பதிவேடுகளில் மிகவும் கண்டிப்பாகவும் கவனமாகவும் இருப்பார்கள் என்பதும், மெல்கிசேதேக்கின் பிறப்பு, அவருடைய பெற்றோர்கள் அல்லது அவருடைய ஆசாரியத்துவம் பற்றி எந்த பதிவும் செய்யப்படவில்லை என்ற உண்மையை நாம் கண்டுணரும் போது, இது நமக்குப் பாதுகாப்பானதாக இருக்கவில்லையா? அவர் நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் உடையவராயிராமல் இருப்பதாக கூறும் வேதாகமத்தின் சிறிதளவு விளக்கமாக அங்கே வந்திருக்கிறதல்லவா? யூதர்கள் தங்களுடைய வம்சாவளிகள் மற்றும் காலக்கணக்கு பதிவுகளில் மிகவும் சரியாக இருந்தார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். நீங்கள் விரும்பினால், இந்த கருத்துக் குறித்த செய்தியை நான் விரும்புகிறேன்.

சகோதரர் ரசல்: நாங்கள் அறிந்தவரையில், ஒவ்வொரு நபரின் பிறப்பைப் பற்றி பதிவை வைத்துக் கொள்வதாக யூதர்கள் பாசாங்கு செய்யவில்லை. ஒருவேளை அவ்விதமான பதிவுகள் இருந்திருக்கலாம். ஆனால் அவைகள் எல்லாம் வேதாகம பதிவுகளின் பகுதியாக அமையவில்லை. அவர்களுடைய எல்லா ஆசாரியர்களின் பதிவுகளையும் வைத்துக்கொள்ள கடமைப்பட்டவர்களாயிருந்தனர். இதன் காரணமாக, நம்முடைய எபிரேய நண்பர்கள் இன்று ஆசாரியத்துவத்தை உடையவர்களாக இருக்க முடியவில்லை. ஏனெனில் இந்த பூமியில் ஒரு யூதனும் தான் ஆரோனின் வழியாக ஆபிரகாமின் வித்து என்று நிரூபிக்க முடியாது. அவன் ஆபிரகாமின் வம்சாவளியில் உள்ளவன் என்று உரிமை கோரலாம். ஆனால் ஆரோனின் வழியில் உள்ளவன் என்று அவன் நிரூபிக்க முடியாது. ஆரோனுடைய குமாரர்களாக யார் இருக்கிறார்கள் என்று எந்த யூதனும் இன்று அறியவில்லை; ஆகவே அவர்கள் தங்களுடைய தேசத்தைத் திரும்பப் பெற்று, ஒவ்வொன்றும் திரும்பும் நிலையில், அவர்கள் தங்களுடைய ஆசாரியத்துவத்தைத் திரும்ப ஸ்தாபிக்க முடியாது. ஏனெனில் கர்த்தருடைய பலிபீடத்தில் ஊழியம் செய்யும் ஒவ்வொரு ஆசாரியனும் ஆரோனுடைய சந்ததியைச் சேர்ந்தவன் என்று அவனுடைய வம்சாவளியைக் காண்பிக்க முடிகிறவனாக இருப்பது தேவைப்படுகிறது. எனினும், மெல்கிசேதேக்குக்கு இது உரித்தாகாது. ஏனெனில் அவர் முற்றிலும் வேறு ஆசாரியத்துவ முறையைக் கொண்டவராக இருந்தார். இதை அப்போஸ்தலன் மெல்கிசேதேக்கை அறிமுகப்படுத்தும் போது, தம்முடைய விவாதத்தில் வெறுமனே இவ்விதம் காண்பிக்கிறார்: “கிறிஸ்து புதிய முறைமையைச் சார்ந்தவர் என்று யூதர்களாகிய உங்களுக்கு நான் சொல்லும் போது, நீங்கள் நம்பாதவர்களாய் இருக்கிறீர்கள். (நான் பொழிப்புரையாகச் சொல்கிறேன் என்று நினைக்கிறேன்) நீங்கள் கூறுகிறீர்கள், அவருடைய பதிவேடு எங்கே? அவர் லேவி கோத்திரத்தின் ஆரோனுடைய குமாரனாக தம்மை காண்பிக்க முடியவில்லை என்றால், அவர் ஆசாரியராக இருக்கமுடியாது. ஆனால், எபிரேயர்களாகிய உங்களுக்கு நான் பதிலளிக்கிறேன். தேவன் வேறொரு உவமையைக் கொடுத்தார் என்று உங்களுக்குச் சொல்கிறேன். மெல்கிசேதேக்கைத் திரும்பிப் பாருங்கள்; அவர் லேவிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு ஆதாரம் எதுவும் நீங்கள் வைத்திருக்கிறீர்களா? இல்லை. லேவி கோத்திரம் துவக்கம் பெறுவதற்கு முன்னதாகவே

மெல்கிசேதேக்கு வாழ்ந்தார். மெல்கிசேதேக்கு லேவியுடன் எந்த உறவும் கொண்டிருந்தார் என்பதற்கான ஆதாரம் எதுவும் உங்களுக்கு உண்டா? இல்லை. அப்போது, வேறு ஒரு ஆசாரியத்துவம் இருந்தது. மெல்கிசேதேக்கின் இந்த மற்றொரு ஆசாரியத்துவம், ஆரோனின் ஆசாரியத்துவத்தை விட மேலான முறைமையைக் கொண்டதாக இருந்தது என்பதை நீங்கள் பார்க்க நான் விரும்புகிறேன். ஏனெனில் மாம்சீகத்தின்படி, ஆரோனுடைய தகப்பனாகிய ஆபிரகாம், ஆசாரியராகிய மெல்கிசேதேக்குக்கு தசம பாகம் கொடுத்தான். அவன் தசம பாகம் கொடுக்கும் போது, ஆபிரகாமின் அரைக்குள் ஆரோன் இருந்தான். ஆரோனுடைய ஆசாரியத்துவத்தை விட, மெல்கிசேதேக்கின் முறைமை மேலானது என்ற தேவனுடைய நிலைப்பாட்டை இது காண்பிக்கிறது. இங்கே, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி கிறிஸ்து ஆசாரியராக இருக்கிறார் என்று நான் உங்களுக்கு சொல்கிறேன். இது தான் அப்போஸ்தலனின் வாதம் ஆகும். இது மேன்மையான முறைமை ஆகும். இயேசு ஆசாரியராவதற்கு ஆரோனுடைய கோத்திரத்தில் கண்டிப்பாக வரவேண்டும் என்று நான் நிரூபிக்க வேண்டுமென யூதர்களாகிய நீங்கள் கேட்கிறீர்கள். இந்த மேன்மையான ஆசாரியத்துவத்துடன் ஆரோனுடைய கோத்திரம் செய்வதற்கு ஒன்றும் இல்லை. மெல்கிசேதேக்கு இதனுடைய நிழலாக இருந்தார். கிறிஸ்து தான் பொருள் ஆவார். பதிவு ஏதும் இல்லை என்பதால் இதனுடன் எதுவும் செய்யமுடியும் என்று நான் நினைக்கவில்லை.

## நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்க வேண்டும்?

**கே 486:1 :: கேள்வி (1911) - 1 -** ஏன் நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுக்கின்றீர்கள்?

**பதில்.** ஏனெனில் அது நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாய் இருக்கின்றது. மேலும், "புசித்து - - பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறும்போது, கர்த்தருடைய ஜனங்களானவர்கள், தாங்கள் மறுரூபமடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து, திரைக்கு அப்பால் அவரோடுகூட மேலானவைகளில் பங்கெடுப்பதற்கான காலம் வரையிலும், கர்த்தருடைய மரணத்தைத் தங்களுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் அனைத்திற்குமான அஸ்திபாரம் என்று நினைவுகூருவது சரியானது என்று நாம் புரிந்து இருக்கின்றோம். இதை இன்னொரு நோக்கத்திற்காகவும் நாம் செய்கின்றோம். கர்த்தருடைய இராப்போஜனமானது, நமது அருமை மீட்பருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் மாத்திரம் அடையாளப்படுத்தாமல், நம்முடைய பங்கெடுத்தலையும்கூட அடையாளப்படுத்துகின்றது என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது; ஏனெனில் அப்போஸ்தலன், "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா? அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா!" என்று கூறுகின்றார். (1கொரி.10:16; திருவிவிலியம்) வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில், இந்த இராப்போஜனத்தில் பங்கெடுப்பவர்கள், தாங்கள் இயேசுவோடுகூட, அவரது பாடுகளிலும், அவரது மரணத்திலும் பங்காளிகளாக இருப்பதை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர் என்றே அப்போஸ்தலன் கூறுகின்றார். நாம் அதே சரீரத்திலுள்ளவர்களாய் இருக்கின்றோம். ஆகையால் நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, இப்பொழுது அவரோடுகூடப் பாடுபடுவது என்பது நம்முடைய தற்போதைய கடமையின் பாகமாக இருக்கின்றது.

## நினைவுகூருதல் இராப்போஜனம் - புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துதல்.

**கே 486:2 :: கேள்வி (1911) - 2 -** கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதாக, புதிய ஏற்பாட்டில் "(புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசம்" (WINE) என்ற வார்த்தையானது எங்கு இடம்பெறுகின்றது?

**பதில்.** புளிப்பேற்றப்பட்ட திராட்சரசம் (WINE) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் அறியேன். திராட்சப்பழரசம் (FRUIT OF THE WINE) என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது, மற்றும் எவரேனும் திராட்சப்பழரசம் ((FRUIT OF THE WINE) என்பது, திராட்சப்பழச்சாறு (GRAPE JUICE) என்று கருதிடுவதற்கு விரும்புவார்களானால், நான் இதற்கு மறுப்புத் தெரிவிப்பதில்லை; இதுவே நினைகூருதலுக்குப் பொருத்தமானது என்றும், புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைக் (WINE) காட்டிலும் சிறந்தது என்றும் நான் எண்ணுகின்றேன்.

## நினைவாற்றல் - வேதவாக்கியங்களில் பொறுப்புணர்வு கொள்ளுதல் - ஜெயங்கொள்ளுதல்.

**கே 486:3 :: கேள்வி (1911) - 3 -** ஜெயங்கொள்ளுகிற வகுப்பாராவதற்கும், நமது நம்பிக்கைக்கான காரணத்தை ஒவ்வொருவரிடமும் சொல்ல முடியும் விதமாக, நமக்குத் தேவைப்படுகின்ற வேதவாக்கியங்களை நாம் நினைவில் கொள்ளுவதற்கான பொறுப்பு உடையவர்களாக இருப்பது அவசியமா?

**பதில்.** இல்லை. என் அருமையான சகோதரனே, இது தான் தேர்வு என்றால், நம்மில் அநேகர் தோல்வி அடைவார்கள் என்று நினைக்கிறேன். நமக்கு இது போன்ற எந்த கருத்தும் இல்லை. நீங்கள் அந்த விஷயங்களில் ஏன் நம்பிக்கை கொள்கிறீர்கள் என்பதை கர்த்தருடைய வார்த்தைகளில் தங்கள் நினைவிலிருந்துத் திரும்பச் சொல்ல முடிந்தவர்களாக இருந்தாலும், அல்லது, வேறு ஏதாவது வழியில் இதைச் சொல்வதாயிருந்தாலும், நீங்கள் இதை ஏன் நம்புகிறீர்கள் என்பதற்கான அடிப்படைக் காரணத்தைக் காண்பிக்க முடிகிறவர்களாய் இருப்பீர்கள். ஆகவே, நீங்கள் கர்த்தருக்கு உண்மையான விசுவாசிகளாக இருந்து, அவருடைய வார்த்தையைக் கற்றுக்கொள்வதைத் தான் கர்த்தர் எதிர்பார்க்கின்றார். இது எங்களுடைய மதபோதனை புத்தகத்தில் (CATECHISM) இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்" என்று வெறுமனே சொல்லக்கூடாது. அது ஒரு நிரூபணமாக இருக்காது, அல்லது இது வேதாகமத்தில் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன் என்று சொல்லுவதற்கான நிரூபணமாகவும் இருக்காது; ஆனால், இதைக் கண்டுபிடித்து, குறித்துக் கொண்டு, நீங்கள் என்ன நம்புகிறீர்கள் என்பதில் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

## பலன் - பலியிடப்படும் ஜீவன் அல்லது கீழ்ப்படிதல்.

**கே 487:1 :: கேள்வி (1910) - 1 -** நம்முடைய பரிந்துபேசுகிறவராக நமது சார்பில் கிறிஸ்து பிரயோகிக்கும் பலன், அவருடைய பலியிடப்பட்ட ஜீவனின் பலனா அல்லது அவருடைய பரிபூரண கீழ்ப்படிதலின் பலனா?

**பதில்.** என்னுடைய அருமையான நண்பர்களே, இரண்டும் ஒன்றே. பரிபூரண கீழ்ப்படிதல் அவருடைய ஜீவனின் பலிக்கு அவரை வழிநடத்தியது. ஆகவே அவருடைய பலியிடப்பட்ட ஜீவன், பிதாவின் சித்தத்திற்கு அவருடைய பரிபூரண கீழ்ப்படிதலுக்கான சாட்சியமாக இருந்தது. அந்த பலியின் பலன் அவருடைய கணக்கில் வரவாக இருக்கின்றது. இந்த பலனை அவர் அகில உலகத்தாருக்கும் இறுதியாக மீட்பின் விலைக்கிரயமாக கொடுக்கப் போகிறார். அகில உலகத்தாரும் சீர்பொருந்துதலைப் பெறுவார்கள்; அவர் உங்களையும் என்னையும் தம்முடைய சொந்தமாக ஏற்றுக்கொள்ளும் போது, உங்களுடைய பலியின் மீதும், என்னுடைய பலியின் மீதும் இப்போது அந்த பலியின் பலனை சுமத்துகிறார்.

## பலன் - எல்லோருக்கும் பிரயோகிக்கப்படுதல்.

**கே 487:2 :: கேள்வி (1911) - 2 -** கிறிஸ்துவின் பலன் முழுவதும் விசுவாசக் குடும்பத்தாருக்கு முதலாவதாகப் பிரயோகிக்கப்படுவதும், பிறகு மனுக்குல உலகத்தாருக்கு அதில் ஏதேனும் பிரயோகிக்க முடியும் விதமாக அனைத்துப் பலனும் திரும்ப வருவிக்கப்படுதலும் ஏன்

அத்தியாவசமாகிறது? வேறு வார்த்தைகளில் சொன்னால், பலனில் ஒவ்வொன்றுக்கும், அதாவது, சபைக்கு ஒரு பகுதியும் உலகத்தாருக்கு ஒரு பகுதியும் ஒரே சமயத்தில் ஏன் உபயோகப்படுத்தப்படுவதில்லை?

**பதில்.** நல்லது, நான் ஏற்கனவே முயற்சித்திருக்கிறதை விட தெளிவாக நான் இதைச் செய்ய முடியுமா, இல்லையா என்பதை நான் அறியவில்லை. நான் அப்படிச் செய்வதில் எப்போதும் தோல்வி அடைவேன் என்று பயப்படுகிறேன். இதைத் தெளிவாக எப்படிச் செய்ய முடியும் என்று நான் அறியவில்லை. கேள்வி கேட்டவர் இந்த வழியில் இது இருப்பதில் அதிருப்தியுற்றால், ஏன் என்று கண்டுபிடிப்பதற்கு இதை அவர் கர்த்தரிடம் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். அந்த விஷயங்கள் நிலையானவை என்று நான் அனுமானிக்கிறேன். ஏனெனில் தேவன் அவைகளை அவ்விதம் உறுதியாக நிலைநாட்டியிருக்கிறார். நாம் கற்பனை செய்திருப்பதற்கு மாறாக தேவன் விஷயங்களை ஏன் நிலைநிறுத்துகிறார் என்று அறிய நாம் விரும்பினால், ஜெபத்தில் கண்டிப்பாக அவரிடம் போய் நம்மை திருப்தியடையச் செய்ய அவரைக் கேட்க வேண்டும். அவருடைய வழியில் நாம் அதிகமாக அதிருப்தி அடைந்தால், அவர் ஆயிர வருஷ யுகம் வரையிலும் நம்மை ஒருவேளை தள்ளி நிற்கச் சொல்லுவார். பிறகு இதைப் பற்றி அனைத்தையும் அப்பொழுது அவர் நமக்கு உண்மையாகக் காண்பிப்பார். இந்த கேள்விக்கு சுருக்கமாக பதிலளிப்பதானால், இவர்கள் இரண்டு வேறுபட்ட வகுப்பார்களாக இருக்கிறார்கள் என்று நான் சொல்கிறேன்; சபை ஒரு வகுப்பார் மற்றும் உலகத்தார் மற்றொரு வகுப்பார்; அந்த இரண்டு வகுப்பார்களிடத்தில், பாவ நிவாரண நாளில் பலன் பிரயோகிக்கப்படுவது தனித்தனியாகவும், வேறுபாடு உள்ளதாகவும் இருக்கிறது. இப்போது சபை நீதிமானாக்கப்படுவதற்காக, கிறிஸ்துவுடன் பலி செலுத்துவதில் சபை பங்கு கொள்வதற்காக, கிறிஸ்துவின் பலியின் பலனில் ஒரு பகுதி உபயோகப்படுத்துவதற்கு சபைக்கு கொடுக்கப்பட்டால், அந்த அளவு பலன் முழுமையான தொகையில் குறைந்திருக்கிறது என்று நாம் சொல்லலாம். அங்கே ஒரு மில்லியன் டாலர்கள் அளவிலுள்ள தொகை இருக்கிறதாக அனுமானித்து, அதிலிருந்து ஒரு லட்சம் டாலர்களை நீங்கள் வெளியே எடுத்து, வேறு எதற்காவது இதை பயன்படுத்துவதாக அனுமானித்துக் கொள்ளலாம். ஒரு லட்சம் டாலர்கள் வெளியே இருப்பதால், மீதமுள்ள தொகையை நீங்கள் ஒரு மில்லியன் டாலர்கள் என்று அழைக்க முடியாது. ஏனெனில் ஒரு மில்லியன் டாலர்களிலிருந்து ஒரு லட்சம் டாலர்கள் குறைவாக இருக்கிறது. இப்பொழுது கிறிஸ்து சபைக்குக் கொடுத்துக் கொண்டிருப்பது, ஒவ்வொருவரின் குறைபாடுகளையும் சரி பண்ணுவதற்குப் போதுமானவையாக உள்ளது. இது பலியின் பலனில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்கிறது; பலன் முழுவதும் இதற்கு தேவைப்படுவதில்லை; பலனில் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் எடுத்து, அதனால் நம்முடைய பலவீனங்களுக்கு ஈடு செய்யும் இந்த சலுகையை நாம் பெற்றிருக்கிறோம். சுமத்தப்படும் பலனை உபயோகப்படுத்தும் இந்த பணியை சபை முழுமையாக செய்து முடிக்கும் வரையில், பலனின் முழுமையான அளவு அங்கே இருக்கிறதில்லை. இப்பொழுது என்ன வித்தியாசம் உள்ளது? ஆயிரம் வருஷங்களில், மத்தியஸ்த மகா நாளில், சீர்பொருந்துதலின் இந்த ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் கர்த்தர் ஏன் கொடுக்கப் போகிறார்? பலன் அனைத்தும் உலகத்தாருக்குக் கொடுக்கப்பட இருக்கிறது; அவர் இதில் அவர்களுக்கு ஒரு பகுதியைக் கொடுக்கப் போகிறதில்லை, ஆனால் சீர்பொருந்துதல் என்ற பொருளில் இது எல்லாவற்றையும் அவர் கொடுக்கப் போகிறார். ஆனால் உலகத்தாரின் சார்பாக, நீதியைத் திருப்திப்படுத்துவதற்கு முழு தொகையும் அவருக்குத் தேவைப்படுகிறது. அப்பொழுது, சீர்பொருந்துதலின் முழுமையான பயனும் உலகத்தாருக்குக் கிடைக்கும். சபை ஒட்டுமொத்தமாக ஒரு தனி வகுப்பாராக இருப்பது போன்று உள்ளது. அவர் உலகத்தாருடன் செயல் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு சீர்பொருந்துதலை அளிக்கிறார். அவர் நமக்கு சீர்பொருந்துதலை அளிக்கிறதில்லை. நாம் சீர்பொருந்துதலைப் பெறுகிறதில்லை. அவர் வெறுமனே சபையை சரி பண்ணி, உங்களுக்கும் எனக்கும் பலனை சுமத்தி, தேவனுடைய பார்வையில் போதுமான அளவு திருப்திகரமாக நம்மை உண்டாக்குகிறார்; ஆனால் உலகத்தாரின் சார்பாக பலனை உரித்தாக்கும் போது, பலன் முழுவதும் அவருக்குத் தேவைப்படுகிறது. ஏனெனில் சீர்பொருந்துதலின் அடிப்படையில், அதில் ஏதும் பின்னாகத் தக்க வைக்கப்படாமல், உலகத்தாருக்காக அவருடைய ஜீவன் அனைத்தையும்

அவர் ஒப்புக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது இது தெளிவாக இல்லையென்றால், இதை எப்படி தெளிவாக்குவது என்பதை நான் அறியவில்லை.

## பலன் - ஆதாமுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது?

**கே 488:1 :: கேள்வி (1911-Z) - 1 -** ஆதாம் தன்னிச்சையான மற்றும் நுண்ணறிவான பாவியாக இருந்து, தனியாகத் தண்டிக்கப்பட்டான். அவன் மேல் தண்டனை செயற்படுத்தப்பட்டு, இன்றளவும் அந்த தண்டனையின் கீழ் அவன் இருக்கிறான். இப்போது அவனுக்கு ஏதுமில்லை, மற்றும் அவன் ஒன்றுமில்லை. ஆகவே இந்த கண்டனம் செய்யப்பட்ட நிலைமையிலிருந்து அவன் விடுதலை பெற கிறிஸ்துவின் பலன் எவ்வளவு தேவைப்படுகிறது?

**பதில்.** ஆதாம் சோதனைக்குட்படுத்தப்பட்டு குற்றவாளி என்று கண்டு, மரண தண்டனை அளிக்கப்பட்டது. அந்த தண்டனையின் கீழ் மரணத்திற்குள்ளாக்கப்பட்டு, சொல்லர்த்தமாகப் பார்த்தால், அவனுடைய பொறுப்புகளை ஒழுங்குநிலைப்படுத்துவதற்கு அவன் ஒன்றும் செய்திருக்கவில்லை. அவனை விடுதலையாக்கவும், வேறொரு சோதனைக்கு அவனை அனுமதிக்கவும், முழுவதும் திருப்திகரமான **மீட்பின் விலைக்கிரயம்** தேவைப்படுகிறது. பொதுவான முறையில், இது மனுக்குல குடும்பத்தார் அனைவருக்குமான உண்மையாகவே இருக்கிறது. சபை மற்றும் நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ள யூத ஜாதியினைத் தவிர, ஆதாமின் புத்திரர்களாகிய நாம் எல்லோரும் **தனிநபர்களாக இல்லாமல் ஒரு இனம்** என்ற முறையிலேயே செயல்தொடர்பு கொள்ளப்படுகிறோம்.

இப்பொழுது சபைக்கு பலன் செலுத்தப்படுவது போன்று, ஆயிர வருஷ யுகத்தில் கிறிஸ்துவின் பலன் யாருக்கும் சுமத்தப்படாது. ஏற்றுக்கொள்ளப்படத்தக்க பலிகளாக நம்மை காணிக்கையாகச் செலுத்தும் விதமாக - இந்த விசேஷித்த நோக்கத்திற்காக மீட்பின் பலன் நமக்குச் சுமத்தப்படுகிறது. ஆயிர வருஷ யுகத்தில் ஒருவரை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகச் செய்வதற்கு மற்றவருடைய நீதி யாருக்கும் தேவைப்படுவதில்லை. மாறாக அகில உலகத்தாரும் **ஒருவர்** போல செயல்தொடர்பு கொண்டு, மேன்மை பொருந்திய மத்தியஸ்தராக, தீர்க்கதரிசியாக, ராஜாவாக கிறிஸ்து அவர்களுக்காக நீதியைத் திருப்திப்படுத்துகிறார். நீதியைத் திருப்திப்படுத்திய பிறகு, மனுக்குல உலகத்தாரை இவ்விதம் விலைக்கிரயமாக வாங்கிய பிறகு, புதிய உடன்படிக்கையின் மேன்மை பொருந்திய மத்தியஸ்தர் இதை நடைமுறைக்கு கொண்டு வருவார். புதிய உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேலுடன் ஆசீர்வாதம் துவக்கம் பெறும்; இதுகாறும் காண்பிக்கப்பட்டபடி, மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கமும் பரிபூரணத்திற்கு வருவதற்கான வாய்ப்பு பெறும்.

கேள்வியின் உண்மையான சாராம்சத்தைப் பெறுவதற்கு, இந்த விஷயத்தை நாம் வேறொரு வடிவத்தில் வைத்து, சொல்லுவோம்: ஆதாம் சுவிசேஷ யுகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவனாக இருந்தால், நாம் புரிந்து கொண்டவிதமாக, சுவிசேஷ யுக சலுகைக்கு அவன் தகுதியுள்ளவனாக இருந்திருக்க முடியாது - கர்த்தர் சபையுடன் செயல்படும் விதமாக, ஆதாமுடன் செயல்படுவதற்கு தேவனுடைய ஏற்பாடு இணக்கமாய் இருந்திருக்கவில்லை. ஏனெனில் அவன் தனிப்பட்டவனாகக் கண்டனம் செய்யப்பட்டதால், அவன் தன்னை பலியாக அளிக்க அவன் **எதுவும்** பெற்றிருக்கவில்லை. அதற்கு மாறாக, நாம் ஒப்படைப்பதற்கு ஒன்று இருக்கிறது. - "உங்களுடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்படையுங்கள்". நம்முடைய சரீரங்கள் கறையுள்ளவைகளாக இருக்கும் நிலையில், இருப்பினும் நாம் சில வல்லமைகளை உடையவர்களாய் இருக்கிறோம். நமக்கு இருக்கும் சரீரங்களை வலுக்கட்டாயமாக சமர்ப்பிக்க விரும்புகிறோம். இது தான் நம்முடைய எதிர்பார்ப்பு - கிறிஸ்துவுடன் நாம் பாடுபட அனுமதிக்கப்பட்டால், அவருடைய மகிமையில் பங்குபெறுகிறவர்களாகிறோம்.

அப்போஸ்தலர் கூறுகிறார், "நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? - - உங்கள் சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1கொரி.6:19,20.) நாம் ஏதோ ஒன்றை உடையவர்களாயிருக்கிறோம் என்பதை இது உணர்த்துவது போல் இருக்கிறது.

தேவனுடைய திட்டத்தின் மையமாகவும், நமது மீட்பராகவும் கிறிஸ்துவை நாம் கண்டுணர்ந்தவுடன், நம்முடைய ஜீவன் மற்றும் சரீரங்களை அவருடைய ஊழியத்திற்காக அர்ப்பணித்து தேவனை மகிமைப்படுத்தும்படியாக, பாவத்தை நிராகரிக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஆனால் நாம் ஆதியில் பாவியாக இருந்திருந்து, நாம் ஆதியில் முதலாவதாகத் தண்டிக்கப்பட்டிருந்தால், நாம் ஒப்படைக்க முடியும்விதமாக நமக்குச் சொந்தம் என்று அழைத்துக்கொள்ளும்படி நாம் பெற்றிருக்க வேண்டும் என்று நாம் எதையும் பார்க்கிறதில்லை.

## பலன் - Vs நீதி

**கே 489:1 :: கேள்வி (1911-Z) - 1 -** நம்முடைய கர்த்தரின் நீதிக்கும் அவருடைய பலனுக்கும் இடையில் நீங்கள் என்ன வேறுபாடு செய்ய முடியும்?

**பதில்.** நமது கர்த்தர் மனுஷனாக இருந்த போது, அவர் சோதனைக்குள்ளாக்கப்பட்டிருந்த போது, அவருடைய நீதி என்பது அவருடைய சரியான கிரியை, அவருடைய சரியான நடத்தை, அவருடைய பூரண பண்பு ஆகும். "பலன்" என்பது தெய்வீக பாராட்டு, மற்றும் அந்த பண்பு, சரியான கிரியை பற்றிய தெய்வீக கணிப்பு ஆகும். அவர் மனுஷனிலிருந்து மறைந்த பிறகு, நமது கர்த்தர் மனுஷனாக நீதியை வைத்திருக்கவில்லை. அவர் தமது அர்ப்பணிப்புக்கு முன்பும், பிறகு தக்க வைத்திருந்ததுமான அந்த நீதி, தேவனுடைய பார்வையில் பலனை உள்ளடக்கியதாய் இருந்தது. அந்த பலன் இப்பொழுது சபைக்கு சுமத்தப்படுகிறது. இது சீக்கிரத்தில் அகில உலகத்தின் பாவங்களை அகற்றிப் போடப்படுவதற்காக அவரால் உபயோகப்படுத்தப்படப் போகிறது. இந்த பலன் போதுமானதாக இருக்கிறது; ஏனெனில் ஒரு மனுஷன் மரணமடையத் தண்டிக்கப்பட்டான்; மற்றொரு மனுஷன் ஜீவனுக்குத் தகுதியுள்ளவராக்கப்பட்டார். ஆகவே இந்த பலன், மரணத்திற்குத் தகுதியில்லாத ஜீவனை ஒப்புக்கொடுப்பதின் இந்த விலைக்கிரயம், தேவனுடைய ஏற்பாட்டில் அவருடைய கையில் தாம் பயன்படுத்தும் விதமாக உள்ளது.

## பலன் - திரைக்கு கீழே பிரவேசிக்கும் போது சபை எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளுமா?

**கே 489:2 :: கேள்வி (1912-Z) - 2 -** திரைக்குக் கீழே பிரவேசிக்கும் போது, கிருபாசனத்தின் மேல் வைப்பதற்கு கிறிஸ்துவின் பலன் எல்லாவற்றையும் சபை தன்னுடைய கையில் வைத்திருக்குமா?

**பதில்.** இல்லை. பிரதான ஆசாரியனின் கீழ் உள்ள ஆசாரியர்களுக்கு பாவநிவாரண நாளின் இரத்தத்தை கிருபாசனத்தின் மேல் தெளிப்பதற்கான எவ்வித பணியும் இல்லாதது போல, பாவநிவாரணத்திற்காக சபை செய்வதற்கு ஒன்றுமில்லை.

இந்த விஷயத்தின் சரியான பார்வை என்று நாங்கள் நம்புவது இதுவே: பிரதான ஆசாரியராகிய இயேசு உன்னதத்திற்கு ஏறி, தம்முடைய பலனை சபைக்கு சுமத்தினார். பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதத்திற்காக "மேல்வீட்டில்" காத்திருந்தவர்கள், தேவனுக்கு முன்பாக பலிகளாக அவரால் ஏற்றுக்கொள்ளப்பட விரும்பும் விதமாக தங்களை ஒப்படைத்திருந்தனர். அவர்கள் தங்களை பலியிடவில்லை, அவர்கள் பலியாக தங்களை வெறுமனே ஒப்படைத்தனர். இவ்விதமாக நாம் வாசிக்கிறோம், "சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவபலியாக **ஒப்புக்கொடுக்க** வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்". ஒப்புக்கொடுத்தல் என்ற விஷயம் நம்முடையது, கர்த்தருடையது அல்ல; பலியாக ஒப்புக்கொடுப்பதை ஏற்றுக்கொள்வது முழுவதுமாக கர்த்தருக்கு உரியதாகும் - பிரதான ஆசாரியரின் வேலை. நமது மாம்சத்தை பலியாக ஏற்றுக்கொண்டவுடன், நாம் மனுஷர்களாக இருப்பதிலிருந்து மறைத்து, இதிலிருந்து தேவன் மற்றும் மற்ற ஒவ்வொருவரின் பார்வையிலும்,

பிரதான ஆசாரியரின் - அபிஷேகம் பண்ணப்பட்டவரின் ஜீவனுள்ள அங்கங்களாக நாம் இருக்கிறோம்.

பெந்தெகொஸ்தேயின் ஒப்படைத்தலின் வழியாக பிரதான ஆசாரியர் சபை முழுவதையும் ஏற்றுக்கொண்டார். வேதவாக்கியங்களின் இணக்கமாக, கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கம் பூரணப்பட்டு, திரைக்கு அப்பால் பிரவேசிக்கும் வரை, நாம் வந்திருக்கும் இந்த தயவு அல்லது கிருபை திறந்தே இருக்கும். திரைக்கு அப்பால் செய்யும் வேலை ஆசாரியர்களாகிய நமக்கு உரியது இல்லை. பிரதான ஆசாரியர் காளையின் இரத்தத்தைத் தெளித்தது போன்று, கர்த்தருடைய ஆட்டுக்கடாவின் இரத்தத்தைத் தெளிப்பது அவருடைய பணி ஆகும். “மணவாட்டி” என்ற உருவம், பலியை பற்றிய எந்த எண்ணமும் முற்றிலுமாகக் களையப்பட வேண்டியதாயிருக்கிறது. இது மீட்பர் மற்றும் மணவாளனுடன் வெறுமனே இணைந்திருக்கிறது. பலி சம்பந்தமான எல்லா விஷயங்களைப் பொருத்த வரையில், ஆசாரியர்கள் என்ற உருவம் சபைக்கு உரித்தாக்கப்படுகிறது.

## பலன். Vs அங்கி அல்லது வஸ்திரம்.

**கே** 490:1 :: **கேள்வி** (1912-Z) - 1 - அர்ப்பணிப்பு வரையிலும் கிறிஸ்துவின் பலன் வஸ்திரத்துடன் அல்லது அங்கியுடன் ஒப்பிட முடியாது என்பது சரியாக இருக்குமா?

**பதில்.** அங்கி என்பது ஒரு “மூடும் பொருள்” ஆகும். உவமையிலுள்ள கலியாண வஸ்திரம் மாம்சீக குறைபாடுகள் அல்லது கறைகளை மூடுவதற்காக கர்த்தருடைய ஜனங்களுக்கு சுமத்தப்படும் கர்த்தரின் பலனை அடையாளப்படுத்துகிறது. தன்னுடைய கர்த்தராகிய இயேசுவின் தலையை அங்கீகரிக்கும் வருங்கால மணவாட்டியாக, சபையை இந்த வஸ்திரம் கவனத்தில் கொள்கிறது. வேறொரு உருவகம்: ஆசாரியத்துவத்தை எடுத்துக்காட்டும் விதமாக, வெள்ளை அங்கிகள் மற்றும் தொப்பிகள் அல்லது குல்லாய்களை அணிந்திருக்கும் சபையின் அங்கத்தினர்களை அடையாளப்படுத்துகிறது. இந்த உருவத்தில், ஆசாரியர்கள் சரீர அங்கங்கள் அல்லது சகோதரர்களைக் குறிக்கிறது. மேலும், அவர்கள் தனித்தன்மையானவர்கள் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் இயேசுவின் தலைமைக்குக் கீழே அடிபணிகிறவர்களாக இருக்கிறார்கள். சபையின் குறைபாடுகளை மறைக்கவும், சபையை ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் செய்வதற்கு சபையின் மேல் சுமத்தப்படும் கிறிஸ்துவின் நீதியாகிய அங்கி, உயிர்த்தெழுதலில் சபை தன்னுடைய சொந்த நீதியான அங்கியாக மாறுதல் அடைகிறது அல்லது மாறுவதற்கு இடங்கொடுக்கிறது. நமது கர்த்தர் இயேசு வெள்ளை வஸ்திரம் தரித்தவராகக் குறிக்கப்படுவது போல, மணவாட்டி மெல்லிய வஸ்திரம், “பரிசுத்தவான்களின் நீதிகள்” தரித்தவளாய் உருவகப்படுத்தப்படுகிறாள். சுமத்தப்பட்ட இந்த அங்கி நம்முடைய மாம்சீக கறைகளையும், குறைபாடுகளையும் தற்காலத்தில் வெறுமனே மூடுகின்றது.

உயிர்த்தெழுதலில் தேவன் நமக்கு கொடுக்கும் புதிய சரீரம் தன்னில் தானே பூரணமாயிருக்கும். அதற்கு இயேசுவின் பலன் சுமத்தப்படுவது தேவை இல்லை. இயேசுவின் உயிர்த்தெழுந்த சரீரம் போல, முதலாம் உயிர்த்தெழுதலில் பெறப்போகும் ஆவியின் சரீரம் பூர்த்தியானதாகவும், முழுமையானதாகவும், பூரணமானதாகவும் இருக்கும். கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் நம்முடைய மாம்சீக குறைபாடுகளை மறைப்பதற்காக சுமத்தப்பட்டது.

புதிய வஸ்திரம் சித்திர வேலைப்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. தற்காலத்தில் இயேசுவின் சாயலாக, ஆவியில் பூரணத்துவமான சுபாவத்தில் வளர்ச்சி பெறுவதற்கான முயற்சிகளை இந்த உருவகம் உள்ளடக்கியதாய் இருக்கிறது. நாம் படிக்கும் விதமாக, “இது (புதிய சிருஷ்டி, ஆத்துமா) பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரம் விதைக்கப்படும் (இயேசுவின் பலன் சுமத்தப்படுவது தேவைப்படுகிறது). ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.” (தன்னுடைய முழுமையான சொந்த பலனை கொண்டுள்ளதாய் இருக்கிறது).

## பலன் - பங்குபோடப்படுகிறதா?

**கே 490:2 :: கேள்வி (1912-Z) - 2 -** மனுஷ குடும்பத்தின் எந்த தனிப்பட்டவரின் பாவங்களுக்கும் கிறிஸ்துவின் முழுமையான பலனுக்குக் குறைவானது போதுமானதா யிருக்காது என்று நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளீர்கள். முதற்பேறானவர்களின் சபையை உள்ளடக்கியிருக்கும் பல்வேறு தனிநபர்கள் மற்றும் வருங்காலத்தின் சீர்பொருந்துதல் வகுப்பார்கள் அடங்கிய தனிநபர்கள் ஆகியவர்களின் மத்தியில் இந்த பலன் பங்கிடப்படுகிறது என்பதை நாம் எப்படி நினைக்க முடியும்?

**பதில்.** மனுக்குலம் அனைத்தின் ஆதாமின் பாவங்கள் எல்லாவற்றிற்காகவும் முழுமையான திருப்தியை கிறிஸ்துவின் முழுமையான பலன் நீதியின் கரங்களில் வைக்கப்படுவது, நீதி பெறுவதற்கு உத்திரவாதம் அளிக்கிறது. இது அந்த பலன் குறிப்பிட்ட நோக்கத்திற்கு ஒதுக்கி வைக்கப்படுவதற்கு முன்பாகவே நடக்கிறது. உலகத்தின் ஒரு பங்காக சபை இருப்பதால், சபைக்கு பலியின் பலன் போதுமான விலைக்கிரயமாக இருக்கிறது. ஆகவே குறைபாடுகளையும் பலவீனங்களையும் சரிபண்ணுவதற்கு, இயேசுவின் பலன் மற்றும் நாமத்தினால் வரும் ஒவ்வொருவருக்கும் அவருடைய பலனில் போதுமானதை தேவனால் சுமத்த முடியும். இவ்விதமாகவே, இந்த சபை முழுமைக்கும் நடக்கிறது - “முதற்பேறானவர்களின் சபை”; உலகத்தாரிடமிருந்து பிரிந்து, தனியாக சபைக்கு இந்த பலன் “சுமத்தப்படுதல்”, சபையின் மாம்சீக குறைபாடுகளை சரிபண்ணுவதற்கு அந்த பலனை பொறுப்புள்ளதாக்கி, நீதிமானாக்கப்பட்ட நிலையில் ஒப்படைப்பதற்கு இந்த வகுப்பினரை அனுமதிக்கிறது. ஆகவே இது ஏற்றுக்கொள்ளப்படும் பலியாகிறது.

ஆனால் இது சபைக்கு வெறுமனே சுமத்தப்படுகிறது அல்லது கடனாக வழங்கப்படுகிறது. ஏனெனில் கிறிஸ்துவின் பூமிக்குரிய உரிமைகளை வைத்துக் கொள்ள சபை விரும்புகிறதில்லை. சபை இவை எல்லாவற்றையும் பலியிடவும், இப்படியாக இயேசுவின் மாதிரியைப் பின்பற்றவும் விரும்புகிறது. பிரதான ஆசாரியர் ஒப்படைக்கும் போது, சபையின் பலி ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதாக சரிபண்ணுவதற்கு, அவருடைய பலனை போதுமான அளவுக்கு மேன்மை பொருந்திய பிரதான ஆசாரியர் சபைக்கு சுமத்துகிறார். முதற்பேறானவர்களின் சபையின் அனைவரும் ஆவிக்குரிய சுபாவத்தின் வெகுமதிகளைப் பெற்ற பிறகு, பிரதான ஆசாரியராகிய இயேசுவின் பலன் அவர்களைப் பொருத்த மட்டிலும் விடுவிக்கப்படும் - இயேசு உன்னதத்திற்கு ஏறிய போது இருந்த மாதிரி, விலைக்கிரயம் மறுபடியும் நீதியின் கரங்களில் முழுவதுமாக வந்து சேருகிறது.

## இராணுவ பணி - இது சம்பந்தமான நமது நிலைப்பாடு.

**கே 491:1 :: கேள்வி (1916) - 1 -** இராணுவ பணி மற்றும் இது போன்றவற்றின் தொடர்பாக நாம் எடுக்கும் நிலைப்பாடு என்ன?

**பதில்.** நல்லது, இந்த கேள்விக்கு நாம் ஏற்கனவே பதிலளித்திருக்கிறோம். என்னுடைய கருத்தின்படி, கர்த்தர் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்ற முறையில், இராணுவ பணிக்கு நாம் எவ்வித உரிமையும் கொண்டிருப்பவர்களாக இருக்கவில்லை. இதிலிருந்து நாம் வெளியே வரமுடியுமானால், இதிலிருந்து நாம் வெளியே வர முடியும் என்று நினைக்கிறேன், சமாதானத்தின் கோட்பாடுகளுக்கு நாம் உண்மையாக இருந்து, பூமிக்குரிய அரசாங்கத்திற்காகப் போராட வேண்டியதில்லை. நாம் அதற்குள்ளாகப் போகாமல் வேறுவிதமாக பாடுபடலாம். ஆனால், வேறொரு நாளில் என்னிடம் கேள்வி கேட்கப்பட்டபடியே, யாரேனும் கேட்பதாக அனுமானித்தால், நம்முடைய அயலார்கள் மற்றும் நண்பர்கள் தொடர்பாக நாம் எவ்விதமான நிலைப்பாடு எடுக்க முடியும்? நாம் கூறுகிறோம், இராணுவ அமைப்புகள் இருப்பது தவறு என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இப்பொழுது நமது நண்பர்களில் சிலர் பதிலளித்தார்கள், “இது தவறானது என்று நாங்கள் நினைக்கிறோம்; எந்த இராணுவமும் படை வீரர்களும்

இருக்கக்கூடாது". **என்னுடைய பதில் வித்தியாசமானதாக இருக்கும்.** இந்த பழைய உலகத்திற்கு இராணுவங்களை வைத்திருப்பது தேவைப்படுகிறது, பயிற்சியளிக்கப்பட்ட மனுஷர்களை வைத்திருக்கத் தேவைப்படுகிறது. இந்த உலகம் தன்னுடைய சொந்த பாதுகாப்பிற்காக இது தேவைப்படுகின்றது. நான் மாநிலத்தின் ஆளுநராக இருந்தால், மாநிலத்தைக் காப்பாற்றுவதும், சட்டத்தையும் ஒழுங்கு சம்பந்தமான ஒவ்வொன்றையும் காப்பாற்றுவது என்னுடைய கடமை என்று நான் நினைக்கிறேன். மாநிலம் அல்லது நாடு எழும்பி, தவறு நிகழ்வதை ஒழித்துக்கட்டுவது அவசியம் என்றிருந்தால், அதைச் செய்து முடிப்பது என்னுடைய கடமை என்று நான் நினைக்கிறேன். எந்த ஆளுநரும் அதே மாதிரி காரியத்தைச் செய்தால், நான் குற்றஞ்சாட்ட மாட்டேன். தன்னுடைய மாநிலத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்கு துப்பாக்கியை எடுக்கும் எந்த மனுஷனையும் நான் குற்றஞ்சாட்ட மாட்டேன். போராடுவதற்கு நாடு தகுதியுள்ளது என்று அவன் நினைக்காவிட்டால், அவன் வேறு ஒரு நாட்டுக்குச் செல்ல வேண்டும். மற்ற எந்த நாட்டைப் போலவும் இந்த நாடு நன்றாக உள்ளது என்று அவன் நினைத்தால், அவன் அங்கேயே தங்கியிருக்க வேண்டும். உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருக்கும் நீங்களும் நானும், "இந்த அரசாங்கத்தின் கொள்கைகள் மிகவும் சிறப்பானதாகவும், மிகவும் விவேகமானதாகவும் இருக்கின்றன என்றும், நாம் உன்னதமான நாட்டில் இருக்கிறோம்" என்று நினைக்கிறோம். எல்லையைத் தாண்டி கனடாவில் உள்ள நமது நண்பர்களைப் பற்றியும், அவர்களுடைய கொள்கைகள் நல்லவைகளாகவும், பொதுவான முறையில் நல்ல நோக்கத்துடனும் இருப்பதாக கிட்டத்தட்ட அதே மாதிரி தான் சொல்வோம். ஆகவே தங்களுடைய நாட்டிற்காகப் போராட விரும்பும் ஜனங்களை நாங்கள் குற்றஞ் சொல்ல மாட்டோம். நம்முடைய நிலைப்பாட்டிற்கும், அவர்களுடைய நிலைப்பாட்டிற்கும் உள்ள வித்தியாசம் இதுவே: இந்த நாட்டின் குடிமக்களாயிருப்பதிலிருந்து நாம் மறைந்துள்ளோம். அந்த புதிய இராஜ்யத்திற்கு நாம் உண்மையுள்ளவர்களாகவும், நமது ராஜாவின் கட்டளைகளுக்கு இணக்கமாயிருக்கவும் இந்த நிலைப்பாட்டை நாம் எடுக்க வேண்டியிருப்பது தேவனுடைய இராஜ்யத்திற்கான விசுவாசத்திற்குத் தேவைப்படுகிறது. இந்த நாட்டிலும், கனடாவிலும் வேறு எங்கிருந்தாலும் நாம் வெளிநாட்டினராகவும் அந்நியர்களாகவும் இருக்கிறோம். ஆனால் உலகம் இதைப் புரிந்து கொள்ளாது. நீங்கள் இங்கே பிறந்தவர்கள் என்று அவர்கள் சொல்வார்கள். நாம் நமது நோக்கங்களை அறிவித்து, வேறு நாட்டில் சேர்ந்து இருக்கிறோம். ஆகவே, கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்த நாட்டில் இருந்தால், அவரை ஒரு அமெரிக்கன் என்று வரைவு செய்ய வற்புறுத்தப்படமாட்டார். இது எந்த நாட்டின் நீதிமன்றங்களுக்கும் போதுமானதாக இருக்கிறது. இந்த நபர்கள் தெய்வீக நாட்டிற்கு முழுமையான பற்றுறுதி கொடுத்திருப்பவராக இருந்தால், இதுவே அவர்களைப் போரில் கலந்து கொள்ளாமலிருக்க எந்த அரசாங்கத்திற்கும் போதுமான பதிலாக இருக்க வேண்டும். சில இடங்களில் இது அங்கீகரிக்கப்படுகிறது.

## ஆயிரவருஷ யுகம் - அங்கே பிள்ளைகள் இல்லை.

**கே 492:1 :: கேள்வி (1910) - 1 -** "அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்.; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்." ஏசாயா.65:20ம் வசனத்தின் அறிக்கை எதைக் குறிக்கிறது?

**பதில்.** இது ஆயிர வருஷ யுகத்தில் விவரிக்கப்படும் காலத்தைச் சார்ந்ததாயிருக்கிறது. அப்பொழுது தற்காலத்திய குறுகிய கால அளவுள்ள வாழ்க்கை கடந்த கால விஷயமாகி விடும் என்று நான் நினைக்கிறேன். குறைந்த நாட்களில் இறக்கும் குழந்தைகள் இனி இறக்க மாட்டார்கள். இரண்டாம் மரணத்திற்குள் இறக்கிற, தேவனால் சபிக்கப்பட்ட நூறு வயதுள்ளவனாய் இறக்கிற பாவியானவன், புதிய ஒழுங்கு முறையின் கீழ் பிள்ளையாக இருப்பான்; இதே நிலைமை தான் ஜலப்பிரளயத்திற்குப் முன்பு இருந்தது. அப்பொழுது வாழ்க்கையின் சராசரி வயது 600 வருஷங்களிலிருந்து 900 வருஷங்களாக இருந்தது; அப்பொழுது 100 வயதில் மரித்திருந்தவர்கள் நடைமுறையில் பிள்ளைப்பிராயத்திலேயே இருந்திருப்பார்கள். ஏனெனில் விதிமுறையின்படி அவர்கள் நூறு வயதாகும் வரையில் அவர்கள் முழுவதும்

வளர்ச்சி பெற்ற ஆண்கள் மற்றும் பெண்களாக அங்கீகரிக்கப்படவில்லை. உங்களுக்கு ஞாபகம் இருக்கும், இந்த முற்பிதாக்களில் அநேகர் அறுபதிலிருந்து தொண்ணூறு மற்றும் நூறு வயதாகும் போது அவர்கள் முதல் பிள்ளையைப் பெற்றிருந்தனர். சிலர் திருத்த முடியாதவர்களாய், தேவ காரியங்களின் ஒழுங்குமுறையை எதிர்க்கிறவர்களாய் இருக்கும் சிலர் நூறு வயதுக்கு முன்னதாகவே இறக்கலாம். ஆனால் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் சோதனை காலமாக நூறு வருஷங்களைக் கொடுப்பதில் தேவன் நோக்கங்கொண்டு, நமக்கு உத்திரவாதம் அளிக்க விருப்பமாயிருக்கிறார் என்பது பொதுவான முறையில் என்னுடைய எண்ணமாக இருக்கிறது. எனினும், அவர்களில் சிலர் தற்கால ஜீவனில் குறிப்பிட்ட அளவு சோதனையை ஒருவேளை பெற்றிருப்பவர்களாக இருக்கலாம். அப்படியிருந்தால், அங்கே எவ்வளவு சோதனை காலத்தைப் பெறுவார்கள் என்பதில் இது வித்தியாசத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்; நாம் அறியவில்லை; நாம் அங்கே இருக்கும் போது, பார்ப்பதற்கு அந்த காலம் போதுமானதாயிருக்கும்; நாம் அந்த ஓட்டத்திற்குள் அடையும் வரை, நிறைவு பெறாத பாலங்களைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டாம்.

## அற்புதங்கள் - இயேசுவின் நாமத்தினால்.

**கே 492:2 :: கேள்வி (1908) - 2 -** மாற்கு.9:38-40ம் வசனங்களை விளக்கவும்: "அப்பொழுது, யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால் அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு, அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்."

**பதில்.** இதை விட அதிகமாக இதை எப்படி தெளிவாக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இது எப்படிச் சொல்லுகிறதோ, அப்படியே நாம் நம்ப வேண்டியவர்களாகவும், இதற்கு விளக்கம் தேவையில்லை என்றும் நான் நினைக்கிறேன். இதை நாம் விளக்கினால், இதை புறம்பாக விளக்கமளிக்க ஏதுவாகும்; ஏனெனில் இதற்கு மேலும் தெளிவாக விளக்க முடியாது. இயேசுவின் நாமத்தில் எந்த நபராவது ஒரு அற்புதத்தைச் செய்தால், இதற்கு நாம் அவருடன் குறுக்கீடு செய்யவோ அல்லது தடுக்கவோ கூடாது; "நீ எங்களுடன் வரவில்லை என்பதால் நாங்கள் உன்னைப் பற்றி தீமையாக பேசுவோம் அல்லது உன்னைத் தடுப்போம் அல்லது நிறுத்துவோம் என்று நாம் சொல்லக்கூடாது. இதை நாம் கர்த்தரிடம் விட்டு விட வேண்டும். கர்த்தர் அவரைத் தடை பண்ண விரும்பினால், அவர் அவரைத் தடை பண்ணுவார். அவரை தடுப்பது உங்களுடைய அல்லது என்னுடைய வேலை அல்ல. நாம் நம்மைக் கவனித்துக் கொள்ள முயற்சிப்பதும், நம்மால் முடியும் அளவுக்கு எஜமானருக்கு அருகில் இருக்கவும், நம்முடைய இருதயங்களை நம்மால் முடிந்த வரை சத்தியத்தில் தெளிவாக வைத்துக் கொள்ளவும், நம்மை குழப்பமுறச் செய்யும் ஒவ்வொரு விஷயத்தையும் தவிர்க்க வேண்டும்; ஒரு சகோதரன் அல்லது சகோதரி நாம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விஷயத்தைக் கொண்டிருந்தால், நாம் அவர்களைத் தனியாக விட்டு விட வேண்டும். போதிப்பது அல்லது வேறு ஏதாவது விஷயங்களை அவர்கள் செய்து கொண்டிருந்தால், நல்ல பணியே செய்து கொண்டிருந்தால், இதை கர்த்தருடைய நாமத்தில் செய்து கொண்டிருந்தால், அப்பொழுது நாம் நம்முடைய கைகளை விலக்கிக் கொண்டு, அவர்களுக்கு எதிராக எதுவும் பேசாமல் இருப்பது மிகவும் நல்லது. மற்றவர்கள் தாங்கள் விரும்பும் வண்ணம் பேசுகிறவர்களாகவும், செய்கிறவர்களாகவும் இருக்கட்டும்; பிறகு சிலர் சொல்லலாம், "நல்லது, சகோதரர் ரசல், கிறிஸ்தவ விஞ்ஞானிகள் எப்படி? அவர்கள் அற்புதங்கள் செய்கிறார்கள், அவர்கள் அப்படி இல்லையா? ஆவியுலக தொடர்புள்ளவர்கள், அவர்கள் அற்புதங்களைச் செய்கிறார்கள், அவர்கள் அப்படி இல்லையா? அவர்களில் சிலர். மர்மோன்ஸ் (MORMONS) சில அற்புதங்களைச் செய்கிறார்கள், அவர்கள் அப்படிச் செய்கிறதில்லையா? ஆம், "நல்லது, இவர்கள் எல்லோரும் இயேசுவின் நாமத்தில் அவர்களுடைய அற்புதங்களைச் செய்கிறார்கள், இல்லையா." இல்லை, நாம் பதிலளிக்கிறோம், அவர்கள் அப்படிச் செய்கிறதில்லை. "ஏன்? அவர்கள் எல்லோரும்

இயேசுவை ஏற்றுக்கொள்வதாகக் கூறுகிறார்கள்; கிறிஸ்தவ விஞ்ஞானிகளும் கூட கிறிஸ்துவை முன்பாக வைத்து, "**கிறிஸ்தவ**" விஞ்ஞானிகள் என்கின்றனர். அவர்கள் செய்கிறதை நான் அறிகிறேன், என் அருமையான சகோதரனே, கிறிஸ்தவன் என்று சொல்வது ஒரு விஷயம், கிறிஸ்தவனாக எண்ணுவது வேறொரு விஷயம், கிறிஸ்தவன் என்று அர்த்தங்கொள்வது வேறொரு விஷயம் ஆகும். இப்பொழுது, மற்றவர் கர்த்தருடன் இணக்கமாக இருக்கிறாரா அல்லது இல்லையா என்று ஆராய முற்பட்டால், நீங்களும் நானும் நமது மனங்களுக்கு முன்பாக இந்த ஒரு மிக எளிய முறையை இருத்திக்கொண்டால், இதை ஒவ்வொரு தடவையும் உபயோகப்படுத்தும் போது, நமக்கு மனங்கள் தெளிவாகி, நம்மை மறுபடியும் உபயோகப் படுத்தும்படி செய்யும். பகட்டான போலி மரபுரைகள் சிறிதும் பேசுபவர்களாக நாம் இருக்கக்கூடாது: நீங்கள் ஜெபம் பண்ணும் போது, நீங்கள் உட்காருவதில்லை, ஆகவே நான் உங்களுடன் வணங்கமாட்டேன், அல்லது, நீங்கள் கீர்த்தனைகளைப் பாட விரும்புகிறீர்கள், நான் சங்கீதங்களைப் பாட விரும்புகிறேன். ஆகவே நாம் ஒன்றாக வணங்க முடியாது. நாம் இது போன்ற வேறுபாடுகளை பண்ண முடியாது. நாங்கள் சிலுவை உள்ள சர்ச்சில் சந்திக்க விரும்புகிறோம் என்று சிலர் சொன்னால், நாங்கள் வேறு வகையான அறையில் சந்திக்க விரும்புகிறோம் என்று மற்றவர்கள் சொன்னால், இந்த ஒவ்வொன்றுமே கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் பிரிவினை உண்டாக்குவதற்கு அடிப்படையாக இருக்கக்கூடாது. நாம் சரியானது என்று நினைப்பதற்கு மாறாக வேறு வகையான கட்டிடத்தில் சந்திக்க விரும்புகிற காரணத்தால், அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல என்று நாம் சொல்ல முடியாது. நாம் மிகவும் சரியானது என்று நினைப்பதற்கு மாறாக, வேறுவிதமாக உடைகளை சிலர் அணிந்து கொள்ள விரும்பினால், அந்த காரணத்திற்காக அவர்கள் மீது குற்றம் கண்டுபிடிப்பவர்களாக நாம் இருக்கக்கூடாது. அவர்கள் இந்த தனித்துவங்களை எல்லாம் உடையவர்களாக, உண்மையான கிறிஸ்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் மிகவும் வெளிப்படையாக, முக்கியத்துவமில்லாத விஷயங்களாக இருக்கும் சில காரியங்களுக்குக்கூட செல்வார்கள். நான் சொல்லுவேன், உதாரணமாக, இங்கு ஒரு மனுஷன் புகையிலை உபயோகிக்கிறவராக இருக்கிறார் என்றால், அவர் புகையிலை உபயோகிக்கிற காரணத்தால் அவர் கிறிஸ்தவர் இல்லை என்று நான் சொல்லலாமா? அவர் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார் என்பதற்கு அவர் சாட்சியாக இருக்கிறார் என்றால், நான் எவ்விதத்திலும் அவர் கிறிஸ்தவர் இல்லை என்று சொல்ல முடியாது. கர்த்தர் அவருக்கு எல்லாவிதமான சுத்திகரிப்பு வேலையை இறுதியாக எப்படி நடத்தி, வெளிப்புறமாக மட்டுமில்லாமல், உட்புறமாகவும் சுத்திகரிப்பு செய்வதை காண்பிப்பார் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நான் உள்ளான சுத்திகரிப்புப் பற்றி பேசுவேன். வெளிப்புற சுத்திகரிப்பு பற்றி நான் எந்த குறிப்புகளையும் செய்யமாட்டேன். அவருடைய வெளிப்படையான பெலவீனம் அல்லது குருட்டுத்தன்மையைப் பற்றிய விஷயத்தில் அவருடைய உணர்வையும், அவருடைய கருத்தையும் புண்படுத்தும் விதத்தில் செய்யமாட்டேன். நான் அதை அவரிடமும், அவருக்குக் கற்பிப்பதற்கு தேவனுடைய கிருபையுடனும் விட்டு விடுவேன். ஒருவருடைய உணவு ஏற்பாடுகளில் அவர் எதை உண்பது, குடிப்பது அல்லது அவர் எதை அணிந்து கொள்வது போன்றவைகளில் ஈடுபடுவதற்கான முயற்சி ஏதும் செய்வதில்லை என்பதற்கு உதாரணமாக டாண் புத்தகங்களில் நீங்கள் கவனித்திருப்பீர்கள். இருப்பினும், இந்த வழிமுறைகளில் சத்தியத்தை அதிகமான பேர்கள் பெற்றிருப்பதற்கான அநேக சாட்சியங்களை நாம் உடையவர்களாயிருக்கிறோம். ஒரு சகோதரர் என்னிடம் ஒருமுறை வந்ததைப் பற்றி நான் நினைக்கிறேன். அவர் கூறினார், "சகோதரர் ரசல், என்னுடைய முழு வாழ்க்கையையும் அதிகம் பாதித்திருக்கும் அளவுக்கு மில்லியனியல் டாண் புத்தகங்களில் என்ன இருக்கிறது என்பதை நீங்கள் எனக்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். நான் எபிஸ்கோபல் சபையைச் (EPISCOPALIAN) சேர்ந்தவனாக இருந்தேன். அதற்கு முன்பு காங்கிரகேஷன் சபையைச் (CONGREGATIONALIST) சேர்ந்தவனாக இருந்தேன்; ஆனால் எபிஸ்கோபல் சபையின் அங்கமாக, சில விஷயங்களில் மிகவும் உறுதியான கருத்து கொண்டும், மற்றவைகளில் அந்த அளவுக்கு இல்லாதவனாகவும் இருந்தேன். உண்மையான சபை என்பது எபிஸ்கோபல் சபை என்பதில் நான் மிகவும் உறுதியுள்ளவனாக இருந்தேன். மற்ற எல்லா பிரிவுகளின் மேல் எனக்கு எவ்வித அனுதாபம் கொண்டிருக்க முடியவில்லை. சபை விழாக்கள் மற்றும் பண்டிகைகள் சம்பந்தப்பட்ட

விஷயங்களில் நான் மிகவும் உறுதியுள்ளவனாக இருந்தேன். அவர்களுடன் செய்வதற்கு நான் எதுவும் வைத்துக்கொள்வதில்லை. ஆனால் ஒயின், சிகரெட் மற்றும் புகையிலை எடுத்துக்கொள்வது அல்லது, பணம் இல்லாத போது நண்பருடன் சீட்டு விளையாடுதல் போன்ற விஷயங்களில் நான் சிறிதளவும் தயங்குவதில்லை; அவ்வாறு செய்வது மிகவும் சரியானது என்று நான் நினைத்தேன்; அதைப் பற்றி கேள்வி கேட்பது எனக்கு எப்போதும் தோன்றியதே இல்லை. என்னுடைய நண்பர்கள் என்னிடம் புகையிலையைப் பற்றி இதைப் படியுங்கள், ஒயினைப் பற்றி அதைப் படியுங்கள், மற்ற விஷயங்களைப் பற்றி அதைப் படியுங்கள் என்று கூறுவது வழக்கம். நான் அவர்களிடம் அந்த விஷயங்களை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்றும், நான் என்ன செய்து கொண்டு இருக்கிறேன் என்பதை நான் அறிந்திருக்கிறேன் என்றும், ஆகவே என்னைத் தனியாக விடுங்கள் என்றும் கூறினேன்; ஆனால் நான் மில்லியனியல் டாண் புத்தகங்களைப் படித்த போது, என் மேல் முழுவதுமாக ஒரு மாற்றம் வந்தது; முதலாவதாக நான் ஒயினையும், சீட்டு விளையாடுவதையும் விட்டு விட்டேன்; பிறகு காலப்போக்கில் என்னுடைய கையில் சிகரெட் இருந்தது. ஒரு நாளைக்கு பத்து சிகரெட்டுகளை உபயோகப்படுத்தும் வழக்கம் உடையவனாக இருந்தேன். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டிருக்கும் போது, நான் ஒரு காப்பீட்டு கழகத்திற்கு (INSURANCE COMPANY) பயணம் சென்ற போது, அவர்கள் அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொண்டார்கள். செலவுகளில் ஒரு பகுதியாக சிகரெட்டுகளும் கருதப்பட்டது - அவ்விதமாக சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டது - பத்து செண்ட் விலையுள்ள ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டிருக்கும் போது நான் நினைத்தேன், இப்பொழுது, வில்லியம், தேவனுடைய மகிமைக்காக புகை பிடிக்கப் போகிறாயா? நான் அந்த கேள்வியைத் தீர்மானிக்க எடுத்துக்கொண்ட நேரத்திற்கு முன்னதாகவே, தீக்குச்சி எரிந்து முடிந்தது; நான் மற்றொரு தீக்குச்சியைப் பற்ற வைத்தேன்; அது எரிந்து முடிவதற்கு முன்பாக, தேவனுடைய மகிமைக்காக நான் சிகரெட்டைப் புகைக்க முடியாது என்று முடிவு செய்தேன். ஆகவே நான் இதை புகையிலை சாம்பல் கலத்தில் போட்டு விட்டேன். பிறகு, நரம்புகளைத் தூண்டும் வகையான பசி கொண்டவனாய், நேர்த்தியாக வெட்டப்பட்ட புகையிலைத் துண்டுகள் சிலவற்றை என்னுடைய வாயில் போடப்போகும் நேரத்தில் நான் சொல்லிக்கொண்டேன், தேவனுடைய மகிமைக்காக ஒருவேளை நான் இதைச் செய்ய முடியும், இது சிகரெட்டிலிருந்து வித்தியாசமான ஒன்றாகும்! நான் வெறுமனே நினைத்தேன், இப்பொழுது, நான் செய்ய முடியுமா? பிறகு நான் அதை புகையிலை சாம்பல் கலத்தில் போட்டு விட்டேன். அதிலிருந்து என்னுடைய வாயில் சிகரெட் அல்லது புகையிலை எதுவும் நான் வைத்திருக்கவில்லை. ஆகவே இந்த வேலை என் சரீரம் முழுமைக்குள்ளும் சென்றிருக்கிறது. இப்பொழுது இதற்கு என்ன அர்த்தம்? பிறகு நான் மில்லியனியல் டாண் புத்தகங்களுக்குள் சென்று, புகையிலை, சிகரெட், ஒயின் மற்றும் சீட்டுக்கட்டு ஆகியவற்றைப் பற்றி ஏதேனும் சொல்லுகிறதா என்று, நான் கண்டுபிடிக்க முடியுமா என்று உற்றுக் கவனித்தேன். ஆனால் இதைப் பற்றி ஒரு வார்த்தையும் இல்லை. இப்பொழுது, அது எப்படி வந்து என்னைப் பாதித்தது என்று என்னிடம் சொல்லுங்கள். இந்த கருத்தில் சரியாக உள்ள மற்ற விஷயங்கள் எல்லாம் எவ்வித பாதிப்பையும் உண்டாக்கவில்லை. “ஏன்”, நான் கூறினேன், “சகோதரனே, தோட்டக்காரன் வருஷத்தின் வசந்த காலத்தில் கிளைகளை வெட்டுவதற்கு ஒப்பாக மற்ற விஷயங்கள் இருந்தன. அவர் ஒரு பழத்தோட்டத்தை பராமரித்து வருகிறார். அவர் இறந்து போன கிளைகளை அகற்றிப் போடுவதற்கு இந்த நறுக்கிகளை (CLIPPERS) வைத்திருக்கிறார். அவர் இங்கே ஒரு கிளையையும், அங்கே ஒரு கிளையையும் கத்தரித்து, மரத்தை சரிபண்ணுகிறார். அவர்கள் புகையிலை, மதுபானங்கள், சீட்டுக்கட்டுகள் போன்றவைகளைப் பற்றிய சிறு பிரசுரங்களை உங்களுக்குக் கொடுக்கும் போது, அவர்கள் இதைத் தான் செய்ய முயற்சிக்கிறார்கள். பிறகு, மில்லியனியல் டாண் வேதாகமச் சட்டங்களைப் பின்பற்றி, மரத்தின் வேரில் கோடாரியை வைக்கிறார்கள். மரம் முழுவதும் உடனே கீழே விழுந்து விடுகிறது. அவர் கூறினார், “அது தான் இது; இதை நான் பார்க்கிறேன்; அர்ப்பணிப்பு தான் இதைச் செய்கிறது. ஆகவே இது இந்த கேள்விக்கு இணக்கமாய் இருக்கிறது. நமது நண்பராகிய கிறிஸ்தவ விஞ்ஞானியிடம் வரும் போது, அவர்கள் இந்த அற்புதங்களைச் செய்கிறார்கள் மற்றும் அவைகளை கிறிஸ்துவின் நாமத்தினால் செய்கிறார்கள் என்று அவர் நம்மிடம் கூறுகிறார். நாம் இந்த விஷயத்தை உற்றுநோக்கிப் பார்க்கிறவர்களாய்,

இது உண்மையில் கிறிஸ்துவின் நாமத்தினால் செய்யப்படுகிறதா என்று சொல்கிறோம்? நாம் கூறுகிறோம், இல்லை, இது **கர்த்தர் இயேசு கிறிஸ்துவின்** நாமத்தினால் இல்லை. இது வேறு எந்த கிறிஸ்துவாக இருக்கலாம். ஏனெனில் அநேக பொய் கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நமது கர்த்தர் இயேசுவைப் பற்றி திருமதி எட்டி (Mrs.EDDY) கூறிய சில வார்த்தைகளை சமீபத்தில் காவற்கோபுரத்தில் உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம். அவருடைய எதிர்ப்பாளரிடம் அவருடைய சொந்த பதிலிலிருந்து எடுக்கப்பட்ட அவருடைய சொந்த வார்த்தைகள், மனுஷனாகிய இயேசு எப்போதாவது வாழ்ந்தாரா அல்லது இல்லையா என்பது பற்றிய அவரது கோட்பாட்டில் மிக மிகச் சிறிய வித்தியாசத்தை உண்டாக்குவதாக இருக்கிறது. அவர் வாழ்ந்திராமல், வேத வாக்கியங்களின்படி, நம்முடைய பாவங்களுக்கு மரித்திராமல் இருந்திருந்தால் அப்பொழுது அவருடைய வல்லமையின் மூலமாகவும், அவருடைய மரணத்தின் மூலமாகவும் உயிர்த்தெழுதலினால் வருங்கால ஜீவனை நாம் எப்போதும் பெற்றிருக்க மாட்டோம். ஒரு நபரை கர்த்தருக்குள் நம்முடைய சகோதரனாக ஏற்றுக்கொள்வதில், இது எந்த கிறிஸ்து என்பதிலும், இந்த அற்புதங்கள் எந்த கிறிஸ்துவின் நாமத்தினால் செய்யப்படுகின்றன என்பதிலும் மிகப் பெரிய வித்தியாசத்தை இது உண்டாக்குவதாக இருக்கிறது. **ஒரு** கிறிஸ்துவின் நாமத்தில் அற்புதங்களைக் கோருகிறவர்கள், ஆனால் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்து, தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்ட நமது கர்த்தர் **இயேசு கிறிஸ்துவை** மறுதலிக்கிறவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் அல்ல. விரைவில் எது மேலானது என்பதை நாம் கண்டுணர்கிறோம். அவர்கள் நம்முடைய கிறிஸ்துவை கொண்டிருக்கவே இல்லை., அவர்கள் மற்ற கேள்விகளில் நம்முடன் இணக்கமாய் இருக்கிறார்களா அல்லது அவை எல்லாவற்றிலும் மாறாக இருந்தாலும், அவர்கள் இயேசுவையும், நம்முடைய பாவங்களுக்கான அவருடைய மரணத்தின் விலைக்கிரயத்தையும், நித்திய ஜீவனுக்காக அவரில் விசுவாசம் கொள்கிறவர்களாக, அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாடுகிறவர்களாக இருந்தால், அவர்கள் நம்மைப் பின்பற்றுகிறவர்களாக அல்லது நம்மைப் பின்பற்றாதவர்களாக இருந்தாலும், அவர்கள் நம்முடைய சகோதரர்கள் ஆவர்; அவர்கள் நம்மைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தால், அவர்கள் சரியான பாதையில் சென்று கொண்டு இருக்கிறார்கள் என்று நாம் நினைக்கிறோம். நாம் அதிகமாக சந்தோஷம் அடைகிறோம். நாம் நினைக்கும் பாதையில் அவர்கள் சென்று கொண்டு இருக்கிறார்கள் என்பது சரியானதாகும்.

இந்த எடுத்துக்காட்டில் குறிக்கப்படுகின்ற இந்த மனுஷன் மகிழ்ச்சியுடன் சீஷர்களைப் பின்பற்ற விரும்புகிறவராய் இருந்திருந்தால், கர்த்தரில் அவருடைய நிலைப்பாடு பற்றிய விஷயத்தில் மேலான சாட்சியமாகவே இருந்திருக்கும். இருப்பினும் அவர் இயேசுவின் நாமத்தில் நல்ல வேலையைச் செய்து கொண்டிருந்தால், சீஷர்கள் அவரை எதிர்க்க வேண்டியதில்லை; அவர்கள் அவருக்கு இடைஞ்சல் செய்யவோ அல்லது அவருடைய வழியில் தடை பண்ணவோ வேண்டியதில்லை. நீங்கள் அவருக்கு விளக்கம் அளிக்கவும், இன்னும் மேலான வழியில் அவருக்கு உதவி புரியவும் வாய்ப்புப் பெற்றால், நல்லது, ஆனால் அவரை எதிர்க்காதீர்கள். மனதில் இருத்திக் கொள்ளுங்கள், இந்த உரையில், “இயேசு” என்ற வார்த்தை “நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கிறவர்” என்று அர்த்தம் ஆகும். பாவங்கள் எதுவும் இருக்கின்றன என்பதில் திருமதி. எட்டி நம்பிக்கைக் கொண்டிருக்கவில்லை. பாவத்திற்கு தண்டனை இல்லை என்று அவர் கூறுகிறார். வேத வாக்கியங்கள் அறிக்கையிடுகின்றன, பாவத்தின் சம்பளம் மரணம்; ஆனால் பாவமும் இல்லை, மரணமும் இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அவர்களுடைய இரட்சகராக நம்முடைய இயேசு அப்பொழுது எப்படி இருக்க முடியும்? அவர்களுக்கு எந்த இரட்சகரும் தேவைப்படுகிறதில்லை; அவர்கள் எதையும் இழந்திருக்கவில்லை என்று கூறுகின்றனர். அவர்கள் எதையும் பெறப்போவதில்லை என்று சொல்கின்றனர். இந்த விஷயத்தைப் பற்றிய உண்மையான அறிவைப் பெற்றிருக்கிறவர்களைப் பொருத்தமட்டில், இது கிட்டதட்ட சரியானதாகவே இருக்கிறது என்று நாம் நம்புகிறோம். ஆனால் இதை நாம் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். புறசமயத்தினர் குருடராயிருக்கிறது போலவே, கிறிஸ்தவ விஞ்ஞானிகள், மர்மோன்கள் ஆகியவர்களில் அதிகமான பேர்கள் மற்றும் ஆவியுலகத் தொடர்பாளர்களும் **இந்த உலகத்தின் தேவனால் குருடராக்கப்பட்டிருக்கிறார்கள்.** வருங்காலத்தில் புறசமயத்தினருக்கு இருக்கும் வாய்ப்பு போன்று, அவர்களுக்கும் வாய்ப்பு

இருக்கும் என்று நாம் நம்புகிறோம். கர்த்தருடைய வார்த்தையின்படி நம்முடைய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இதுவே.

## அற்புதங்கள் - கிறிஸ்தவம் வல்லமையின் மூல ஸ்தானம்.

**கே** 495:1 :: **கேள்வி** (1911) - 1 - பூரணமான மனுஷன் என்ற முறையில், பூமியின் கூறுகளின் மேல் ஆளுகையுள்ள காரணத்தினால், ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்த அற்புதத்தை கிறிஸ்து செய்தார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்.** இல்லை. நான் நம்பவில்லை. ஒரு பூரண மனுஷன் ஒரு அப்பத்தினால் ஐயாயிரம் பேர்களுக்கு பரிமாற முடியும் என்று நான் நினைக்கவில்லை. இது மனுஷ வல்லமையாகவே நான் கருதவில்லை. தேவனுடைய ஊழியத்திற்கு அவசியமான எதையும் செய்வதற்கும், சபையை நிர்மாணிப்பதற்கும், அந்த நேரத்தில் ஜனங்களுக்குக் கற்பிப்பதற்கும் பரிசுத்த ஆவியை பெற்றிருந்த காரணத்தினால், அவர் கொண்டிருந்த வல்லமையினால் இது நடந்தது என்று நான் கருதுகிறேன். ஆகவே இது மனுஷ வல்லமையின் எடுத்துக்காட்டாக இருக்கவில்லை. ஆனால் மற்றொரு சமயத்தில் இயேசு சொன்ன விதமாக, “நான் தேவனுடைய விரலினாலே” - வேறு வார்த்தைகளில் கூறினால், சிறிய அளவில் தேவனுடைய வல்லமையாக இருக்கிறது. “கை” என்பது வல்லமையைக் குறிக்கிறது என்பதை நீங்கள் பார்க்கலாம். ஆகவே சிறிய விரல், வல்லமையில் ஒரு மிகச் சிறிய பங்கைக் குறிக்கிறது. ஆகவே இயேசு கூறினார்: நான் தேவனுடைய விரலினால் இதைச் செய்தால், தேவனுடைய வல்லமையை ஒப்பிடும் போது, இவைகள் மிகவும் சிறியவைகளாய் இருக்கின்றன; தேவன் அதிகமாய் செய்ய முடிகிறவராய் இருக்கிறார்”.

## தவறுகள் - அற்பமானவைகளைத் திருத்திக்கொள்வது.

**கே** 496:1 :: **கேள்வி** (1913) - 1 - முக்கியத்துவமில்லாத அற்பமான சிறு தவறுகளையும் பிழைகளையும் திருத்திக்கொள்வது தார்மீக முறையில் நம்மைப் பிணைக்குமா?

**பதில்.** தவறு மற்றும் பிழையின் தன்மையைப் பொருத்து இது உள்ளது. மிகவும் அற்பமான சில பிழைகள் திருத்தப்பட வேண்டியதாய் இருக்கின்றன; சில விஷயங்கள் அற்பமானவை களாகத் தோன்றும், இருந்தாலும் அவைகள் திருத்தப்படாவிட்டால், சில சகோதரர்கள் அல்லது சகோதரிகளுக்கு இது ஒரு பெரும் அளவாக இருக்கும். ஆகவே ஒவ்வொரு விஷயத்தையுமே பொதுவான முறையில் திருத்திக் கொள்வதற்கான சாய்வு மனப்பாண்மை இருக்க வேண்டும். தீவிரமான நிலைக்குச் சென்று, “நான் உங்களைப் புண்படுத்தியிருக்கிறேனா? சகோதரனே, என்னுடைய வார்த்தையினால் நான் உங்களைப் புண்படுத்த வேண்டும் என்ற எண்ணமே எனக்கு இருந்ததில்லை, சிறிதளவும் கூட இல்லை.” என்று சொல்ல வேண்டும். இதை வெளிப்படையாகத் தெளிவாக்குவதில் நீங்கள் நிச்சயமாய் இருக்க வேண்டும். அந்த விஷயம் எவ்வளவு தான் அற்பமாய் இருந்தாலும், எல்லா இடையூறுகளையும் வழியிலிருந்து விலக்கிப் போட நாம் விரும்ப வேண்டும். இதற்கு மாறாக, என்னிடத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிற விஷயங்களில், சில நேரங்களில் விஷயம் மிகவும் கொடூரமான ஒன்றாக இருக்கும் - சாதாரண விஷயமாக இருப்பதில்லை. உதாரணமாக, மிகவும் கொடிய தன்மையுடைய, தன்னுடைய சொந்த கருத்திலும் மிகவும் கொடிதான ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு சகோதரி எனக்கு எழுதினாள், “சகோதரர் ரசல், இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? இதைப் பற்றி என்னுடைய கணவனிடம் நான் சொல்லட்டுமா?” “வேண்டாம், உங்களுடைய கணவனிடம் இதைப் பற்றி சொல்ல வேண்டாம்” என்று நான் அவளிடம் கூறினேன். “நீங்கள் எனக்கு எழுதியிருக்கிறதை அவர் அறிவதினால் அவருக்கு பெருமளவில் தீங்கு விளைவிக்கும். இதை அறிவதால் அவருக்கு நன்மை ஏற்படும் விஷயமாயிருந்தால், அவரிடம் சொல்வதற்கு நானே உங்களுக்கு அறிவுரை கூறியிருப்பேன்; ஆனால் இந்த விஷயத்தில், அதைப் பற்றி உங்களுடைய கணவனிடம் நீங்கள் சொல்லக்கூடாது என்பது என்னுடைய அறிவுரை ஆகும். ஏனென்றால், இது

அவரைக் காயப்படுத்துவதாக இருக்கும், மேலும் வாழ்க்கையின் மீதமுள்ள காலப்பகுதியில் உங்களுடைய சொந்த சந்தோஷமின்மைக்கு வழி வகுக்கும். இப்பொழுது இந்தக் கடிதத்தை முத்திரையிட்டு நீங்கள் வைத்திருங்கள். அந்த விஷயத்தைப் பற்றி நீ என்னிடம் சொல்லவில்லை என்று அவர் எப்போதாவது சொல்லும்படியான நேரம் வரும்போது, நீங்கள் எனக்கு எழுதியதைப் பற்றிச் சொல்லவேண்டும். நான் உங்களுக்கு அறிவுரை கூறியதைப் பற்றி உங்கள் கணவனிடம் சொல்லவேண்டும். அந்தக் கடிதத்தை அவர் படிக்கட்டும். ஆகவே நான் இதை வெறுமனே குறிப்பிடுகிறேன், நீங்கள் உங்களுக்குத் தெரிந்தவற்றை எல்லாம் சொல்லவேண்டும் என்று இதற்கு அர்த்தம் அல்ல" என்று நான் கூறினேன்.

உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக கூறுகிறேன். கூட்டத்திற்கு ஒரு சமயம் வந்திருந்த ஒரு சகோதரனை நினைக்கிறேன். அவர் வந்து கொண்டிருந்ததை நான் அறிந்தேன். ஒஹையோவில் (OHIO) சிறையில் இருந்திருந்த கைதி என்று எனக்குத் தெரியும்; சிறையில் கைதிகளாக இருந்த அதிக எண்ணிகையிலுள்ள நபர்கள் வெளியே வந்து, தேவனுக்காக சிறப்பான நடத்தையுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள்; அவர்களில் இவர் ஒருவர். அவர் சிறையில் இந்த சத்தியத்தைப் பெற்றார். அவரை நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர் யாரிடமும் தான் ஒரு கைதியாக இருந்ததைப் பற்றிச் சொல்லுவார் என்று ஒரு நிமிஷம் கூட நான் நினைத்ததில்லை. நான் கூட்டத்திற்கு வந்து சேர்ந்த நேரத்தில், அரை டஜன் எண்ணிக்கையில் சகோதரர்கள் அவரைச் சந்தித்தனர். அவர் அவர்களிடம், "நான் சிறையிலிருந்து சமீபத்தில் தான் வெளியே வந்தேன்" என்று கூறினார். நான் உடனே அவரிடம் சொன்னேன், "ஏன், சகோதரனே, அது தவறு; அதைப் பற்றி அடுத்த வார்த்தை சொல்ல வேண்டாம்." பிறகு அங்கிருந்த ஒருவரை அனுப்பி, "அந்த சகோதரனைப் பற்றி எதுவும் குறிப்பிட வேண்டாம்." என்று மற்றவர்களுக்கு சொல்லுமாறு கூறினேன். ஏன், அவரைப் பொருத்த வரையில், தன்னைப் பற்றி வெளிப்படையாக அறிக்கையிட்டு, நான் தவறு இழைத்தேன், நான் ஒரு பாவி என்று சொல்வது அவரில் மிகவும் கனமுள்ளதாய் இருக்கும்; ஆனால், நான் செய்வது போல மனுஷ சுபாவத்தை அறிந்து, அரை டஜனுக்கு அதிகமான ஜனங்கள் அந்த சகோதரனிடத்தில் மறுபடியும் நம்பிக்கை வைக்கமாட்டார்கள்; அவர் அதை தவிர்க்க இயலாது. ஜனங்களினூடே இந்த வகையான கீற்று ஓடுகின்றது. ஆனால் என்னிடம் அது உண்மை அல்ல. அவர் சிறையிலிருந்தவர் என்றிருந்தாலும், கிறிஸ்துவின் புதிய சிருஷ்டியாக இருக்கும் எவரைப் போலவும் நான் அந்த சகோதரனை நம்புகிறேன். அவர் இப்பொழுது ஒரு வகுப்பின் மூப்பராக, மிகவும் கனம் பொருந்தியவராக, நேர்த்தியான சகோதரனாக இருக்கிறார்; அவருக்கு எதிராக எதுவும் இருக்கவில்லை; ஆனால் எந்த ஒரு உண்மையான காரணமும் இல்லாமல், எப்படியாவது இது அவருக்கு விரோதமாக இருந்திருக்கும். ஆனால் ஜனங்கள் தவிர்க்க முடியாத அளவிற்கு, அவர்களின் வக்கிரமான மனது காரணமாய் இருந்திருக்கும்.

## பணம் - வங்கி பாதுகாப்பு.

**கே 497:1 :: கேள்வி (1910) - 1 -** வங்கியில் பணம் எவ்வளவு காலத்திற்கு பாதுகாப்பாக இருக்கும்?

**பதில்.** வங்கியிலிருந்து நீங்கள் பணம் எடுக்கும் வரைக்கும் அல்லது வங்கி "வெடிக்கும்" வரைக்கும், இந்த பாடத்தின் மேல் இதற்கு மேல் நிச்சயமாக நான் பதில் சொல்ல முடியும் என்று நான் நினைக்கவில்லை. சில வங்கிகள் மற்றவைகளை விட சீக்கிரத்தில் உடைவதற்கு வாய்ப்பு உள்ளது. - அந்த அளவுக்கு நான் யூகிப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்; இது மிகவும் கடினமான கேள்வி ஆகும். நான் இத்துடன் விட்டு விட வேண்டுமென்று நினைக்கிறேன்.

## பணம் - எப்படி முதலீடு செய்வது?

**கே 497:2 :: கேள்வி (1912) - 2 -** சீக்கிரம் எதிர்காலத்தில் வங்கிகள் அனைத்தும் சீர்க்குலைவிற்குள்ளாகிப்போகும் என்பதை அறிந்திருக்கிற நிலைமையிலும், அதே சமயம்

நமக்கும், நம்மைச் சார்ந்திப்பவர்களுக்குமான தேவைகளை நாம் சந்தித்தாக வேண்டிய நமது பொறுப்பை நாம் உணர்ந்திருக்கும் நிலைமையிலும், மூன்று மாதத்திற்குள்ளாக திரும்ப எடுக்க முடியாத விதத்தில் பணத்தை முதலீடு செய்வதற்கான ஞானமான வழிமுறை என்று நீங்கள் கருதுவது என்ன? மற்றும் நாம் பெற்றிருப்பவைகளுக்கு நாம் நல்ல உக்கிராணக்காரர்களாய்க் காணப்படத்தக்கதாக இந்தப் பணத்தை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து ஏதேனும் யோசனைகள் கூற முடியுமா?

**பதில்.** நீங்கள் வைத்திருக்கும் எல்லாப் பணத்தையும் எப்படி பயன்படுத்துவது என்பது குறித்துச் சொல்லவேண்டுமா? அதுதான் கேள்வியா? நீங்கள் பெற்றிருக்கும் அல்லது பெற்றுக்கொள்ளப்போகும் பணம் அனைத்தையும் எப்படிப் பயன்படுத்துவது என்பதைவிட அதிகமாய் என்னால் சொல்லமுடியும். ஆனால் அவற்றை நான் சொல்லப்போவதில்லை. இக்கேள்வியிலும் ஒரு நல்ல கருத்து காணப்படவே செய்கின்றது. ஒருவேளை குடும்பத்தின் தகப்பன் அல்லது குடும்பத்தின் தாய் சத்தியத்தில் இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். - - குடும்பத்தின் இந்தக் கடமைகள் தொடர்புடைய விஷயத்தில் அவனுடைய கடமை மற்றும் அவனது நடத்தை எப்படியாக இருக்க வேண்டும்? இப்பொழுதும் மற்றும் இது முதற்கொண்டும், வீட்டின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கில் தனக்கிருக்கும் கொஞ்சம் பணத்தைக்கொண்டு நிலக்கரியைத் தேவைக்காய் நிரப்பி வைத்துக்கொள்ள பார்த்துக்கொள்ளுங்கள் என்பது என் அறிவுரையாகும். இப்படிச் சேமித்து வைப்பது என்பது பெலவீனமான விசுவாசத்திற்கான வெளிப்பாடாய் இருக்காதா என்று நீங்கள் கேட்கலாம்; இல்லை என்றே நான் சொல்லுவேன்; ஏனெனில் நாம் நம்முடைய பங்கினைச் செய்தாக வேண்டும். தற்கால சூழ்நிலைகளின் கீழ் கெட்டுப்போகாத வகையிலுள்ள சில வகையான உணவுகளைப் போதுமான அளவுகள் சேமித்துவைத்துக் கொள்வது தவறாய் இருக்காது. தகரப் பெட்டியில் (Tin) அடைக்கப்பட்டுள்ள இறைச்சிகள், தகரப்பெட்டியில் அடைக்கப்பட்டுள்ள பழங்கள் மற்றும் இன்னும் இதுபோலச் சிலவற்றைக் கையிருப்பில் வைத்துக்கொள்ளுங்கள் என்று நான் யோசனை கூறுகிறேன். பயறு வகைகள் சிலவற்றையும் கையிருப்பில் வைத்துக்கொள்ளலாம். உங்களுக்குக் கையிருப்பில் வைத்துக்கொள்வதற்குத் தோன்றிடும் பொருட்களை அதிகமாய்ச் சேமித்து வைக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளுங்கள். இப்படிக் கையிருப்பில் பொருட்களை வைத்துக்கொள்வது என்பது எவ்விதத்திலும் தேவன் நம்மை எப்போதேனும் மறந்துபோய்விடுவார் எனும் அச்சத்தையோ அல்லது சந்தேகத்தையோ நாம் பெற்றிருக்கின்றோம் என்பதாகாது. பணம் மற்றும் சொத்துக்களைப் பொறுத்தமட்டில், ஒருவேளை நல்ல அயலகத்தார் மத்தியில் சிறு வீடு ஒன்றைப் பெற்றிருப்பேனாகில், அதை வைத்துக்கொள்வதற்கும் ஏதுவான சூழ்நிலை இருக்குமாகில், சத்தியத்தில் இல்லாத மனைவிக்கும், குடும்பத்திற்கும் வேண்டி, அந்த வீட்டை நான் வைத்துக்கொள்வதினால், என் நோக்கங்கள் எப்போதும் நன்மைக்கேதுவானதாகவே இருந்தது என்று என் மரணத்திற்குப் பின்னர் காணப்படும் என் குடும்பத்தாருக்கு வெளிப்படும். வரவிருக்கும் உபத்திரவ காலத்தில் சூறையாடப்படும் பெரிய வீடுகளுக்குப் பதிலாகச் சிறு வீட்டினைப் பெற்றிருங்கள். உங்களுக்கு வழிகாட்டுதலாய் இருக்குமென்று இத்தகைய குறிப்புகளை (hint) நாங்கள் கொடுக்கின்றோம்.

## மோசே - சர்ப்ப வடிவத்தை தேர்ந்தெடுத்தற்கான காரணம்.

**கே 497:3 :: கேள்வி (1911) - 3 -** வனாந்தரத்தில் இஸ்ரயேல் புத்திரர்களுக்கு சர்ப்பத்தை உயர்த்திய போது, மோசே சர்ப்பத்தின் வடிவத்தை ஏன் தேர்ந்தெடுத்தார்?

**பதில்.** இதை மோசே தேர்ந்தெடுத்தார், ஏனெனில் அவர் தேவனுக்கு கீழ்ப்படிதலுள்ளவராக இருந்தார். தேவன் அவரை அவ்வாறு செய்யச் சொன்னார்.

## மோசே - மத்தியஸ்தர் பதவியின் காலம்.

**கே 498:1 :: கேள்வி (1911) - 1 -** மத்தியஸ்தராக மோசே எவ்வளவு காலம் இருந்தார்?

**பதில்.** நியாயப்பிரமாண உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும் வரை நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராக மோசே இருக்கிறார்; இன்று நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராக மோசே இருக்கிறார். இதற்கு வேறே எந்த மத்தியஸ்தரும் கிடையாது. அவர் நிறைவேற்றிய மத்தியஸ்த பணி இன்று வரை நன்றாகவே நிலைநிற்கின்றது. நாட்டின் செயலாளர் அமெரிக்க நாட்டிற்கும் பிரிட்டன் நாட்டிற்கும் இடையில் ஒப்பந்தம் செய்தால், அந்த ஒப்பந்தத்தை செய்து முடித்தவராக அவர் எவ்வளவு காலம் இருப்பார்? அந்த ஒப்பந்தம் நிலைநிற்கும் வரையிலும், அந்த ஒப்பந்தத்தைச் செய்தவர் அவர் தான். அதே போன்று, மோசே இன்னும் அந்த மத்தியஸ்தராகவே இருக்கிறார், அல்லது, தேவனுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையில் அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையை செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் அவரே. நியாயப்பிரமாணம் இன்னும் நடைமுறையில் உள்ளது. ஆகவே, மோசே இறந்து விட்டாலும், அந்த நியாயப்பிரமாணத்தின் மத்தியஸ்தராக அவர் இன்னும் இருக்கிறார். இதே கருத்தைத் தான் நமது கர்த்தர் சொல்லும் போது, வெளிப்படுத்தினார். “மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும் போது இந்நாள் வரைக்கும் - - -.” மேலும், உங்களுக்கு ஞாபகம் இருக்கும், வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று இயேசு கூறினார். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராக மோசே இன்னும் அந்த ஆசனத்தை உடையவராயிருக்கிறார். அவருக்குப் பிறகு வந்து, நிலை நின்று அந்த ஒழுங்குமுறைகளின் பிரதிநிதித்துவம் உள்ளவர்களாக இருந்தவர்கள் மோசேயினால் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

## மோசே - யேகோவாவின் நிழல்.

**கே** 498:2 :: **கேள்வி** (1913) - 2 - தேவனுடைய நிழலாக மோசே எந்த முறையில் இருந்தார்?

**பதில்.** தேவனுடைய வாய்க்கருவியாக அல்லது பிரதிநிதியாக மோசே இருக்க வேண்டும் என்று தேவன் கூறினார்: “நீ ஆரோனுக்குத் தேவனாய் இருப்பாய்.” அதாவது, மோசே ஆரோனுக்குத் தேவனைப் போல இருந்து, ஆரோன் எதைச் சொல்ல வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்பதை மோசே ஆரோனுக்கு சொல்ல வேண்டும். இந்த அர்த்தத்தில் தான், மோசே தேவனைப் போன்று இருப்பான் என்று அவர் கூறினார்.

## துக்கங்கொண்டாடுதல் - ஆரோனுடைய இரண்டு குமாரர்களுக்காக.

**கே** 498:3 :: **கேள்வி** (1908) - 3 - கர்த்தருக்கு முன்பாக அந்நிய அக்கினியை சந்நிதியில் கொண்டு வந்த ஆரோனுடைய இரண்டு குமாரர்களுக்காக புலம்ப, இஸ்ரயேலின் ஆசாரியர்கள் ஏன் அறிவுறுத்தப்பட்டார்கள்?

**பதில்.** கேள்வியை எழுதியவர் வெளிப்படையாகத் தவறு செய்திருக்கிறார் என்று நான் பதிலளிக்கிறேன். அவர்கள் **புலம்பக்கூடாது** என்று அறிவுறுத்தப்பட்டார்கள். கர்த்தருடைய ஜனங்கள், சிலர் திரள் கூட்டத்தாருக்குள்ளும், மற்றவர்கள் இரண்டாம் மரணத்திற்குள்ளும் செல்வார்கள் என்ற உண்மையினால் நாம் கலக்கமடைய அல்லது துயரமடையக் கூடாது என்ற அடிப்படையில், கர்த்தருடைய ஜனங்கள் தேவனுடைய ஏற்பாட்டுடன் முழுவதும் இணக்கமாய் இருக்க வேண்டும் என்பதையே இது குறிப்பிடுகிறது என்று நான் நினைக்கிறேன். இந்த விஷயத்தில் தேவன் இருதயத்தை அறிகிறவர் என்றும், மனுஷ குமாரர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தவறு இழைக்கமாட்டார் என்பதையும், தேவனுடைய நிலைப்பாட்டில் அவர் நியாயமானத் தீர்ப்பை உடையவராய் இருக்கிறவர் என்ற நம்பிக்கையை நாம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நாமோ அல்லது வேறு எந்த நபரோ கர்த்தரையும் அவருடைய தர நிலையையும் ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால், தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஏற்பாடு செய்திருக்கும் ஆசீர்வாதங்களை அவர்கள் பெறுவதை தாம் விரும்புகிறதில்லை என்பதை நாம் உணருகிறவர்களாய், கர்த்தருடன் நாமும் கூட முழுவதுமாக இணக்கமாய் இருக்க வேண்டும். நான் அவ்விதமே எனக்காகவும் உணருகிறேன். நான் சிறுமந்தையில் அல்லது திரள் கூட்டத்தில்

ஆசீர்வாதம் பெறாமல், ஆனால் இரண்டாம் மரணத்திற்குள்ளாகப் போக வேண்டும் என்று தேவன் தம்முடைய ஞானத்தில் கண்டு, முடிவு செய்வாரானால், "கர்த்தருடைய சித்தத்தின்படியே நடக்கக்கடவது, கர்த்தர் நல்லதையே அறிவார்" என்று நான் சொல்லும்விதமாக உணருவேன். நான் புகார் செய்ய மாட்டேன். இந்த விஷயம் குறித்து நான் துக்கம் கொள்ளமாட்டேன். நான் சிறுமந்தையில் பங்கு பெறுவதற்கான தகுதியில் கணக்கிடப்படுவதற்கு ஊக்கமாய் உழைப்பேன். இந்த விஷயத்தில் தெய்வீக ஆணைக்கு முழுவதுமாக கீழ்ப்படியும் விதத்தில் மனப்பாங்கு உடையவர்களாக இருக்க நாம் எல்லோரும் உழைக்க வேண்டும் என்று நினைக்கிறேன். பரிசுத்தவான்கள் வருங்காலத்தில் பரலோகத்தின் கொத்தளங்களைக் கவனிப்பார்கள் என்றும், மற்றும் அவர்கள், தங்கள் பெற்றோர்கள், குழந்தைகள், சகோதரர்கள், சகோதரிகள் போன்றவர்கள் அச்சம் தருகிற நித்திய சித்திரவதையில் இருப்பதைப் பார்ப்பார்கள் என்றும், பிறகு சுற்றித் திரும்பி தேவனைத் துதிப்பார்கள் என்றும் சகோதரர் யோனத்தான் எட்வர்ட் கூறிய அறிக்கையிலிருந்து இது மிகவும் வித்தியாசமானதாய் இருக்கின்றதை நீங்கள் பார்க்கிறீர்கள். எந்த சிருஷ்டியையும் கடும் சித்திரவதைக்குள்ளாக்குவதற்காக நாம் தேவனைத் துதிக்க இயலாது; நாம் அதை மெச்சிக்கொள்ள முடியாது. ஆனால் மாம்சீகத்தின்படி நாம் மிகவும் அருமையாக அன்புகூரும் ஒருவர் சிறுமந்தைக்குள் செல்வதற்கு தகுதி இல்லாதவர் என்று தேவன் தம்முடைய ஞானத்தில் முடிவு எடுத்தால், "அவருக்கு எது நல்லது என்று தோன்றுவதை கர்த்தர் செய்யட்டும்; அவருடைய வழி பூரணமானது என்பதை நாம் அறிகிறோம்" என்று நாம் சொல்லும் வண்ணம், தேவ சித்தத்தை நாம் பாராட்டுகிறவர்களாய் இருக்க வேண்டும். ஆசாரியத்துவத்திலிருந்து பிரிக்கப்பட்டு - கர்த்தர் அழித்த அவர்களுக்காக ஆரோனும் அவனுடைய உண்மையுள்ள குமாரர்களும் இந்த நிழலில், புலம்புவதற்கு ஏன் அனுமதிக்கப் படவில்லை என்பதற்கான காரணம் இது தான் என்று நான் நினைக்கிறேன்.

## துக்கங் கொண்டாடுதல் - ஆரோன் மற்றும் எலெயாசார்.

**கே** 499:1 :: **கேள்வி** (1911) - 1 - "மோசே ஆரோனையும் எலெயாசார், இத்தாமார் என்னும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் சாகாதபடிக்கும், சபையனைத்தின் மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்துப் போடாமலும், உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரயேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காகப் புலம்புவார்களாக." இது எதைக் குறிக்கிறது?

**பதில்:** கர்த்தர் கொளுத்தின அக்கினியானது, தேவ ஏற்பாட்டிற்கு கீழ்ப்படியாமலிருந்து வந்த அந்த ஆசாரியர்களின் அழிவினால் தேவனுடைய கோபம் பற்றி எரிவது குறிக்கப்பட்டது என்று நாம் சொல்லலாம். இஸ்ரயேல் ஜனங்கள் அனைவரும் இந்த விஷயம் குறித்து புலம்பி, சரியான முறையில் சொல்ல வேண்டியிருந்தது: "நாங்கள் எப்படி வருத்தப்படுகிறோம், நாங்கள் எப்படி விசனப்படுகிறோம், ஆசாரியக் குடும்பத்தார் எவருடனும் தேவன் தம்முடைய அதிருப்தியை இவ்விதமாக வெளிப்படுத்துவது தேவையாக இருந்து வருகிறது." ஆனால் ஆரோனும் அவனுடைய குமாரர்களும் புலம்பக்கூடியவர்களாக இல்லை. ஏனெனில் அவர்கள் பிரத்யேகமாக கர்த்தருடைய ஊழியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இருந்ததால், அவர்கள் மீதியான மற்ற ஜனங்களிடமிருந்து பிரத்யேகமாகப் பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தனர்; அவர்களுடைய சகோதரர்கள் கொல்லப்பட்டிருந்த விஷயத்தில், தேவனுடைய ஆணையை மதிப்புக் குறைவாக தவறாக புரிந்துகொள்ளும் விதமாக எதையாவது வெளிப்படையான முறையில் தெரிவிக்காத வகையில், அவர்கள் தேவனுடன் அவ்விதமாக முழுமையான அளவில் இணக்கமாய் இருக்க வேண்டியிருந்தது. ஆரோனும் அவனுடைய குமாரர்களும் புலம்பினார்கள் என்றால், அவர்களின் செயல் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்வது போல இருக்கும்; இந்த மாதிரி எண்ணத்திற்கு இடங்கொடுப்பதாக இருக்கக்கூடாது. அங்கே அவர்கள் நீதியின் ஊழியக்காரர்களாக இருந்தனர். தேவன் அவர்களுடைய சகோதரர்களைக் கொல்லுவதற்கு அவர்களைக் கூப்பிட்டிருந்தால், அவ்வாறு செய்வது அவர்களுடைய கடமையின் ஒரு பங்காகவே இருந்திருக்கும்; ஆகவே அக்கிரமம் செய்கிறவர்கள் மேல் தேவன்

நீதியாய் செயல்பட்டிருப்பதைக் குறித்து எவ்விதமான புலம்பலும் செய்யக்கூடியவர்களாக இருக்கக்கூடாது.

## கொலைகாரன் - காயீனுக்கான பிரமாணம்.

**கே 499:2 :: கேள்வி (1916) - 2 -** ஆதி.9:6ம் வசனம் கூறுகிறது, "மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனால் சிந்தப்படக்கடவது." தன்னுடைய சகோதரனாகிய ஆபேலை கொலை செய்த காயீனுக்கு எதிராக இந்த பொதுவான சட்டம் ஏன் செயல்படுத்தப்படவில்லை?"

**பதில்.** காயீனுடைய இரத்தத்தை சிந்துவதற்கு நிறைய மனுஷர்கள் இருக்கவில்லை. அவனுடைய சொந்த தகப்பனும் தாயும் இதைச் செய்வது மிகவும் கடினமாயிருந்திருக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு மரணத்திற்கு போதுமான துயரத்தை அவர்கள் பெற்றிருந்தனர். கொலை செய்த ஒருவனுடைய இரத்தம் சிந்தப்பட வேண்டும் என்பது கடமையாக இருந்தது என்று இந்த வசனம் அர்த்தப்படுத்துவதாக நான் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இவ்விதமான போக்கு நியாயமானதாக இருந்தது. கொலை செய்தவன் மேல் மரண தண்டனையை செயற்படுத்துவதை தேவன் அங்கீகரிக்கிறார்.

## முறுமுறுத்தல் - உவமையில் யார்?

**கே 500:1 :: கேள்வி (1909) - 1 -** (மத்.20:11-13.) "(பணம்) வாங்கிக் கொண்டு, வீட்டெஜமானை நோக்கி: - - முறுமுறுத்தார்கள்." முறுமுறுத்தவர்கள் யாரை அடையாளப்படுத்துகிறது? ஒவ்வொரு மனுஷனும் பெற்ற வெகுமதி என்ன?

**பதில்.** அருமையான நண்பர்களே, இது ஒரு உவமை. எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. இதற்கான வழி முற்றிலும் இது அல்லது அது என்று நீங்களோ அல்லது நானோ சொல்ல இயலாது. கர்த்தர் விளக்கம் அளிக்காத எந்த உவமையையும் பற்றிய விஷயத்தில், நாம் சிறப்பாக செய்ய முடிவது என்னவென்றால், நம்முடைய முடிவு அனுமதிக்கும் அளவுக்கு நெருக்கமாகப் பிரயோகப்படுத்தலைச் செய்ய வேண்டும்; பிறகு இதனுடைய அர்த்தத்தின் நம்முடைய பார்வையாக இதை நாம் தற்காலிகமாக வைத்துக்கொள்ளலாம். இதை ஒவ்வொருவரும் செய்வதற்கான உரிமை உள்ளது.

இந்த உவமையில், "பணம்" என்பது எதைக் குறிக்கிறது? ஒரு மணி நேரம் மட்டும் அல்லது ஒரு நாள் முழுவதும் வேலை செய்த அந்த வேலையாட்களுக்குக் கொடுக்கப்படும் வெகுமதி ஆகும்; இது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெகுமதி ஆகும். இந்த சுவிசேஷ யுகம் முழுமையிலும் தேவனுடையவர்களாக இருக்கும் அனைவருக்கும் அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற வெகுமதி என்ன? அவர் நித்திய ஜீவனை நமக்காக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்பதை நான் அறிவேன். கர்த்தர் தம்முடையவர்களாக இருப்பவர்களுக்கு கொடுக்கும் வெகுமதியை பணம் அடையாளப்படுத்துகிறது. இது சிறுமந்தை வகுப்பாருக்கு மட்டுமல்லாமல் திரள் கூட்டத்தாருக்கும் உள்ளது என்று நினைப்பதற்கு சாய்வு கொண்டிருக்கிறேன். "மகிமையிலே நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்" என்று அப்போஸ்தலர் கூறும் விதமாக, ஒரே மாதிரி இல்லாத மற்ற விஷயங்கள் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களுக்குக் கொடுக்கப்படும். கர்த்தரைப் பின்பற்றுகிற சிலர் மற்றவர்களை விட அதிகம் பெறுவார்கள் என்பதை இது உணர்த்துகிறது.

நமது கர்த்தரின் உவமைகளில் வேறொன்றில் ஒருவன் தன்னுடைய பத்து ராத்தல்களைப் பயன்படுத்தி, பத்து ராத்தல்கள் அதிகமாக லாபம் பெற்று அவற்றை அதிகரித்தான் என்றும், "நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால், பத்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு" என்றும், அப்படியே ஐந்து மற்றும் இரண்டு ராத்தல் உள்ளவர்களுக்கும் கூறினார். இருப்பினும்

அவர்கள் எல்லாரிடமும், “உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரர்கள்” என்று கூறினார். ஆனால் அவர்கள் வெவ்வேறு வெகுமதிகளைப் பெற்றார்கள். ஆகவே இவ்விஷயங்களையெல்லாம் ஒருமித்து வைத்துப் பார்த்தால், நீங்களும் நானும் வருங்காலத்தில் அடையப் போகும் வெகுமதியில் பாகுபாடுகளை உண்டாக்குவார் என்று நான் நினைக்கிறேன். எனினும், நம்முடைய தகுதிக்கு மேலானதாக அல்லது நாம் கேட்க முடிந்திருப்பதற்கும் அதிகமாகப் பெறுவோம் என்பதால் நாம் முழுமையாக திருப்தி அடைவோம்.

“பணம்” என்பது எல்லோருக்கும் பொதுவான ஒன்றாக குறிக்கப்படுகிறதையும், அது மகிமை, கனம், அழியாமையைக் குறிக்கிறதில்லை என்பதையும் நீங்கள் பார்க்கவும்; ஆனால் இது நித்திய ஜீவனை அடையாளப்படுத்துகிறது.

அவர்கள் எதற்காக முறுமுறுத்தார்கள் என்பது பற்றி நான் திருப்திகரமாக விளக்கமளிக்க முடியாதவனாய் உள்ளேன். நான் எனக்குள்ளே முறுமுறுத்துக் கொண்டிருக்கவில்லை, ஆனால் இன்னும் ஒரு பணம் (PENNY) கூட நான் பெற்றிருக்கவில்லை. நித்திய ஜீவனைப் பெறுபவர் ஏன் முறுமுறுக்க வேண்டும் என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. எல்லோரும் ஒரே மாதிரியாகப் பெறுவார்கள் என்று ஒருவேளை புரிந்து கொள்ளக்கூடாது என்று நான் ஆலோசனை மட்டும் சொல்கிறேன். இது நிறைவேறும் போது, இதை நாம் அப்பொழுது பார்க்க முடியும். எந்த தீர்க்கதரிசனமும் அது நிறைவேறும் வரையிலும் புரிந்து கொள்ளப்படுகிறதில்லை என்பதை நீங்கள் அறியுங்கள். அதே மாதிரி தான், நமது கர்த்தர் பெத்லகேமில் பிறப்பார் என்று அவரைப் பற்றிச் சொல்லப்பட்ட போது, அது புரிந்து கொள்ளப்படவில்லை. ஆனால் அது நிறைவேற்றப்பட்ட போது, நாம் பின்னாகத் திரும்பிப் பார்த்து, தெளிவாகப் பார்க்க முடிந்தது. தீர்க்கதரிசனம் வெறும் ஆர்வத்தைத் திருப்திபடுத்துவதற்காகக் கொடுக்கப்படுகிறதில்லை; ஆனால் இது நிகழ இருக்கும் விஷயங்களை தேவன் முன்னறிந்திருக்கிறார் என்பதைக் காண்பிப்பதாக உள்ளது. தேவனுக்கு தம்முடைய கிரியைகள் அனைத்தும் தெரிந்திருக்கின்றன. அவருடைய விருப்பத்தின் ஆலோசனைப்படியே அவை அனைத்தும் செயற்படுத்தப்படுகின்றன.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@